வெளியீடு : 14-07-2022 Issued: 14-07-2022

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, மார்ச் 24, 2020— தொகுதி 78— பாகம் 1

Tuesday the 24th March 2020—Volume 78—Part 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

24–3–2020

உள்ளடக்கம்

பாகம்-1*

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	xiii-xviii
Governor and Council of Ministers	xix-xxiv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xxv-xxix
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxxi-xli
1. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—	1-22
(அ) கொரோனா வைரஸ் நோய், வாழ்வாதாரம் பாதிக்கப்படுவோருக்கு சிறப்பு நிவாரண உதவி அளித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை	1-4
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	1-4
(ஆ) தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் அன்னாரின் சிலை அமைத்தல், பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி உயர்த்துதல் மற்றும் “மக்களின் தந்தை” திரு. ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் குறித்த செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை	4-5
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	4-5

* 1573 முதல் 2949 வரையிலான பக்கங்கள் பாகம் 2-ல் இடம் பெற்றுள்ளன.

பக்கங்கள்

1. **விதி 110-ன்கீழ் அறிக்கைகள்**—தொடர்ச்சி

(இ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் சிறுசேரியில் இயற்கைப் பூங்கா, சென்னைக்கு அருகில் மாநல்லூரில் மின்சார வாகனப் பூங்கா மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தரவு மையப் பூங்காக்கள் உருவாக்குதல் உள்ளிட்ட தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 5-7

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 5-7

(ஈ) சென்னையில் புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம், கோயம்புத்தூர் வட்டம், கல்லப்பாளையத்தில் தனியார் தொழிற்பூங்கா அமைத்தல் மற்றும் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 7-8

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 7-8

(உ) உயர் ரக பொலி காளைகள் உற்பத்தி செய்தல் மற்றும் தூத்துக்குடி, தேனி மாவட்டங்களில் பால் பண்ணைகள் நிறுவுதல் உள்ளிட்ட பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 8-9

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 8-9

பக்கங்கள்

1. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஊ) கொரோனா வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளை அறிவித்தல், ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்த புதிய '108' அவசர கால ஊர்திகள் வாங்குதல், Robotic அறுவை சிகிச்சை மையம் நிறுவுதல், வான்வழி அவசர கால சேவை தொடங்குதல் உள்ளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 9-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 9-10

(எ) தொன்மைவாய்ந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளுதல், திருக்கோயில் குளங்கள் தூர் வாருதல், இலவச திருமணங்கள் நடத்தி வைத்தல், 'திருக்கோயில்' தொலைக்காட்சி தொடங்குதல், திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு புதிய மலைப்பாதை அமைத்தல், மருதமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு மின்தூக்கி அமைத்தல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்ய வசதிகள் உள்ளிட்ட இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 11-13

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 11-13

பக்கங்கள்

1. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(ஏ) நெல் ஜெயராமன் நினைவாக திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் "பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்" அமைத்தல், காவேரி டெல்டா விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் சேவைகள் வழங்குதல், மின்னணு வர்த்தக தளம் உருவாக்குதல், நாகப்பட்டினம் மாவட்டம், வடுவாஞ்சேரியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் உள்ளிட்ட வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 14-17

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 14-17

(ஐ) மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்கள் அமைத்தல் மற்றும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடுதல் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 18

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 18

(ஒ) மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்குதல், சென்னை, சேப்பாக்கம், 'எழிலகம்' வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துதல், "தமிழ் நிலம்" மென்பொருள் உருவாக்குதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 18-20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 18-20

பக்கங்கள்

1. **விதி 110-ன்கீழ் அறிக்கைகள்**—தொடர்ச்சி

(ஓ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுத் தொகை மற்றும் ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியுதவியை உயர்த்துதல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 20-21

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 20-21

(ஔ) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் குறித்த தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 21

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 21

(அஅ) தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்திற்கு 'டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகம்' எனப் பெயரிட்டு, திருவுருவச் சிலை நிறுவுதல் குறித்த உயர் கல்வித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 22

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 22

2. **அறிவிப்புகள்**—

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல் 22-23

TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.) 438

(இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் 453-467

3. அறிக்கைகள் அளித்தல்— 23, 27-29

(அ) மதிப்பீட்டுக் குழு 23

திரு. என்.டி. வெங்கடாசலம் 23

(ஆ) பொதுக் கணக்குக் குழு 27-28

திரு. ஆர். நடராஜ் 27-28

(இ) பொது நிறுவனங்கள் குழு 28

திரு. எஸ். செம்மலை 28

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு 28-29

எஸ்.டி.கே. ஜக்கையன் 28-29

(உ) அரசு உறுதிமொழிக் குழு 29

ஐ.எஸ். இன்பதுரை 29

4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—

திரு. உ. தனியரசு 24-27

*திரு. சே. கருணாஸ் 61-64

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 — 30

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 30

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020 — 439

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 439

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி — 31-60, 65-438

(அ) கோரிக்கை எண் 22– காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) — 32-33

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) — 33-34

(இ) கோரிக்கை எண் 38 – பொதுத் துறை — 34-35

(ஈ) கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம் — 35

(உ) கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை — 35

(ஊ) கோரிக்கை எண் 16 – நிதித் துறை — 36

(எ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை — 36

(ஏ) கோரிக்கை எண் 36 –திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை — 37

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஐ) கோரிக்கை எண் 50 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் 37-38

(ஒ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை 38-39

(ஓ) கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை 40-42

(ஔ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை 42-44

(அஅ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை 44-45

(அஆ) கோரிக்கை எண் 41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை 45-46

(அஇ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு 46

(அஈ) கோரிக்கை எண் 29 – சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) 46-47

(அஉ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) 47

(அஊ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) 48

(அஎ) கோரிக்கை எண் 8 – பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) 48-49

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அஏ) கோரிக்கை எண் 44 – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை 49-50

(அஐ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 50-52

(அஒ) கோரிக்கை எண் 25 – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) 52-54

(அஓ) கோரிக்கை எண் 48 –போக்குவரத்துத் துறை 54-55

(அஔ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 55-56

(ஆஅ) கோரிக்கை எண் 46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) 56-57

(ஆஆ) கோரிக்கை எண் 18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை) 57-59

(ஆஇ) கோரிக்கை எண்47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) 59-60

பக்கங்கள்

6. **மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 32-34, 100-103, 105-107, 385-423

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 34-38, 346-385

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 38-39,107, 324-342

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 342-346

*மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் 40-42, 92-100, 289-324

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு 43, 273-289

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் 44-46, 80, 258-273

*மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன் 46-47, 232-243

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 47-48, 219-232

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி 48, 204-219

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின் 49-50, 75-76, 135-139, 193-204

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் 50-52, 183-193

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் 52-55, 168-183

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி 55-56, 160-168

*மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் 56-57, 139-160, 243-258

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. க. பாஸ்கரன் 57-59, 130-135

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன் 59-60, 107-130

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் 65-82

டாக்டர் V.P.B. பரமசிவம் 83-92, 104-105

7. கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற துறைப் பணியாளர்களுக்கு கரவொலி எழுப்பி நன்றி தெரிவித்தல்— 65

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 65

8. அரசினர் தீர்மானங்கள்—

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 439-440

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 440

(ஆ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல் 448-451

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 449, 450

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல் 468

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 468

		பக்கங்கள்
9.	**அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**	440-448
	(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020	440-442
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	440-442
	(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	442-444
	மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு	442,443
	(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020	444-446
	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	444,446
	(ஈ) தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	446-448
	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	446,448
10.	**அரசினர் தனித் தீர்மானம்—**	
	மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டத்திற்கு (மையச் சட்டம் 16/2011) அரசமைப்புச் சட்டப் பிரிவு 252(1)–ன்படி ஏற்பளித்தல்	451-452
	மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்	451-452
11.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	468-486
12.	**இணைப்புகள்—**	
	பாகம் 1	487-1571
	பாகம் 2	1573-2949

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் - திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

2. துணை முதலமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

3. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:**

வனம்

4. பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**

பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

5. **கூட்டுறவுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்
6. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்
7. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்
8. **மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)
9. **சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்
10. **உயர் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

11. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு மற்றும் சிறப்பு முயற்சிகள்

13. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

14. உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**

கைத்தறி மற்றும் துணிநூல்

16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**

கால்நடை பராமரிப்பு

17. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம்

20. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு, பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம்

21. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்

23. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

24. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள்

25. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம்

26. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

27. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

28. தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:**

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்பொருளியல்

29.	**கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்
30.	**இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள்
31.	**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports
2.	**Deputy Chief Minister**	..	**The Hon. Thiru O. Panneerselvam:** Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
3.	**Minister for Forests**	..	**The Hon. Thiru Dindigul C. Sreenivasan:** Forests
4.	**Minister for School Education, Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru K.A. Sengottaiyan:** School Education, Youth Welfare and Sports Development Department

5.	**Minister for Co-operation**	.. **The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
6.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act
7.	**Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme**	.. **The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme
8.	**Minister for Fisheries and Personnel & Administrative Reforms**	.. **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training)
9.	**Minister for Law, Courts & Prisons**	.. **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons, Mines & Minerals
10.	**Minister for Higher Education**	.. **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology

11. **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme**	..	**The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme
12. **Minister for Industries**	..	**The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control and Special Initiatives
13. **Minister for Environment**	..	**The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control
14. **Minister for Food & Civil Supplies**	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
15. **Minister for Handlooms & Textiles**	..	**The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles
16. **Minister for Animal Husbandry**	..	**The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Animal Husbandry
17. **Minister for Health & Family Welfare**	..	**The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

18. **Minister for Agriculture**	..	**The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
19. **Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press
20. **Minister for Revenue and Disaster Management & Information Technology**	..	**The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies, Disaster Management and Information Technology
21. **Minister for Tourism**	..	**The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation
22. **Minister for Commercial Taxes**	..	**The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act
23. **Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

24. Minister for Rural Industries	..	**The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries
25. Minister for Labour	..	**The Hon. Dr. (Tmt.) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board
26. Minister for Transport	..	**The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
27. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Tmt. V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
28. Minister for Tamil Official Language & Tamil Culture	..	**The Hon. Thiru K. Pandiarajan:** Tamil Official Language & Tamil Culture and Archaeology
29. Minister for Khadi & Village Industries Board	..	**The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan
30. Minister for Hindu Religious & Charitable Endowments	..	**The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments

31. Minister for Backward Classes & Minorities Welfare	..	**The Hon. Tmt. S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்#

திரு. பி.எம். நரசிம்மன்

திரு. எஸ்.பி. சண்முகநாதன்

திரு. சு. ரவி

திரு. இரா. குமரகுரு

திரு. சு. குணசேகரன்

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

7-1-2020 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	..	சிறப்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் [இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை]
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல்.	..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் [இணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை]
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர் (பொது நிறுவனங்கள் குழு)
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்.	.. தலைமை நிருபர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல்.	..	தலைமை நிருபர்
திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ.	..	தலைமை நிருபர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	..	சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	..	சார்புச் செயலாளர்

xxx

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அம்பேத்குமார், திரு. எஸ்.	.. வந்தவாசி (செ.வ.)
2.	அம்மன் கே. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் தெற்கு
3.	அரசு, டாக்டர் ஆர்.டி.	.. செய்யூர் (செ.வ.)
4.	அரவிந்த் ரமேஷ், திரு. எஸ்.	.. சோழிங்கநல்லூர்
5.	அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி.	.. கோயம்புத்தூர் வடக்கு
6.	அலெக்சாண்டர், திரு. வீ.	.. அம்பத்தூர்
7.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
8.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
9.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
10.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
11.	அன்பழகன், திரு. ஜெ.	.. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
12.	அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
13.	ஆடலரசன், திரு. ப.	.. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
14.	ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ.	.. நத்தம்
15.	ஆறுக்குட்டி, திரு. வி.சி.	.. கவுண்டம்பாளையம்
16.	ஆறுமுகம், திரு. பா.	.. கந்தர்வகோட்டை (செ.வ.)
17.	ஆஸ்டின், திரு. எஸ்.	.. கன்னியாகுமரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

18.	இதயவர்மன், திரு. L.	.. திருப்போரூர்
19.	இரத்தினசபாபதி, திரு. ஏ.	.. அறந்தாங்கி
20.	இரவிச்சந்திரன், திரு. கே.எஸ்.	.. எழும்பூர் (செ.வ.)
21.	இராமசாமி, திரு. கரி.	.. காரைக்குடி
22.	இராமச்சந்திரன், திரு. ஆர்.டி.	.. குன்னம்
23.	இராமச்சந்திரன், திரு. எம்.	.. ஒரத்தநாடு
24.	இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	.. அருப்புக்கோட்டை
25.	இராமலிங்கம், திரு. கே.வி.	.. ஈரோடு மேற்கு
26.	இராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	.. மதுரை வடக்கு
27.	இராஜா, திரு. எஸ்.ஆர்.	.. தாம்பரம்
28.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் வடக்கு
29.	இராஜேந்திரன், திரு. சி.வி.	.. பர்கூர்
30.	இன்பசேகரன், திரு. பி.என்.பி.	.. பெண்ணாகரம்
31.	இன்பதுரை, திரு. ஐ.எஸ்.	.. ராதாபுரம்
32.	ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல்.	.. ஆற்காடு
33.	ஈஸ்வரன், திரு. எஸ்.	.. பவானிசாகர் (செ.வ.)
34.	உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
35.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
36.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
37.	எடப்பாடி கே. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
38.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
39.	கடம்பூர் ராஜு, திரு.	.. கோவில்பட்டி

40.	கணேசன், திரு. வெ.	.. திட்டக்குடி (செ.வ.)
41.	கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
42.	கந்தசாமி, திரு. ப.	.. சூலூர்
43.	கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
44.	கருணாஸ், திரு. சே.	.. திருவாடனை
45.	கருப்பணன், திரு. கே.சி.	.. பவானி
46.	கலைச்செல்வன், திரு. V.T.	.. விருத்தாசலம்
47.	கஸ்தூரி வாசு, திருமதி வி.	.. வால்பாறை (செ.வ.)
48.	காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
49.	காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
50.	கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
51.	கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
52.	கார்த்திக், திரு. நா.	.. சிங்காநல்லூர்
53.	காளிமுத்து, திரு. வி.எஸ்.	.. தாராபுரம் (செ.வ.)
54.	கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (செ.வ.)
55.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (செ.வ.)
56.	கீதா, திருமதி ம.	.. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
57.	கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
58.	குணசேகரன், திரு. சு.	.. திருப்பூர் தெற்கு
59.	குமரகுரு, திரு. இரா.	.. உளுந்தூர்பேட்டை
60.	கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
61.	கோவிந்தராசு, திரு. மா.	.. பேராவூரணி
62.	சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
63.	சக்திவேல், திரு. எ.பி.	.. சேலம் தெற்கு

64.	சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (செ.வ.)
65.	சண்முகநாதன், திரு. எஸ்.பி.	.. ஸ்ரீவைகுண்டம்
66.	சண்முகம், திரு. அ.	.. கிணத்துக்கடவு
67.	சண்முகம், திரு. சி.வி.	.. விழுப்புரம்
68.	சண்முகையா, திரு. செ.	.. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
69.	சதன் பிரபாகர், திரு. நி.	.. பரமக்குடி (செ.வ.)
70.	சத்திய நாராயணன், திரு. ப.	.. தியாகராய நகர்
71.	சத்யா, திருமதி ப.	.. பண்ருட்டி
72.	சத்யா, திரு. S.A.	.. ஓசூர்
73.	சந்திரசேகரன், திரு. சி.	.. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74.	சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
75.	சந்திரசேகர், திரு. இரா.	.. மணப்பாறை
76.	சந்திரபிரபா, திருமதி மு.	.. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
77.	சம்பத், திரு. எம்.சி.	.. கடலூர்
78.	சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (செ.வ.)
79.	சம்பத்து, திரு. கோ.	.. சோளிங்கர்
80.	சரவணக்குமார், திரு. க.சு.	.. பெரியகுளம் (செ.வ.)
81.	சரவணன், திரு. எஸ்.எஸ்.	.. மதுரை தெற்கு
82.	சரவணன், டாக்டர் ப.	.. திருப்பரங்குன்றம்
83.	சரஸ்வதி, திருமதி பொன்.	.. திருச்செங்கோடு
84.	சரோஜா, டாக்டர் வி.	.. ராசிபுரம் (செ.வ.)
85.	சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வா.)
86.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (செ.வ.)

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

87.	சிவசுப்பிரமணி, திரு. வே.பொ.	.. மொடக்குறிச்சி
88.	சின்னதம்பி, திரு. ஆர்.எம்.	.. ஆத்தூர் (செ.வ.)
89.	சின்னப்பன், திரு. P.	.. விளாத்திகுளம்
90.	சின்னராஜ், திரு. ஓ.கே.	.. மேட்டுப்பாளையம்
91.	சீத்தாபதி, திருமதி பெ.	.. திண்டிவனம் (செ.வ.)
92.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
93.	சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
94.	சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
95.	சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
96.	சுப்ரமணி, திரு. பெ.	.. தருமபுரி
97.	சுரேஷ் ராஜன், திரு. என்.	.. நாகர்கோவில்
98.	செங்குட்டுவன், திரு. டி.	.. கிருஷ்ணகிரி
99.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிச்செட்டிபாளையம்
100.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி
101.	செந்தில் பாலாஜி, திரு. V.	.. அரவக்குறிச்சி
102.	செம்மலை, திரு. S.	.. மேட்டூர்
103.	செல்லூர் கா. ராஜு, திரு.	.. மதுரை மேற்கு
104.	செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ்.	.. தென்காசி
105.	செல்வம், திரு. கு.க.	.. ஆயிரம் விளக்கு
106.	செல்வராசு, திரு. எம்.	.. முசிறி
107.	செழியன், முனைவர் கோவி.	.. திருவிடைமருதூர் (செ.வ.)
108.	சேகரன், திரு. கே.வி.	.. போளூர்
109.	சேகர், திரு. C.V.	.. பட்டுக்கோட்டை

110.	சேகர், திரு. R.D.	.. பெரம்பூர்
111.	சேகர்பாபு, திரு. பி.கே.	.. துறைமுகம்
112.	சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு.	.. ஆரணி
113.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	.. லால்குடி
114.	தங்கப்பாண்டியன், திரு. சௌ.	.. ராஜபாளையம்
115.	தங்கமணி, திரு. பி.	.. குமாரபாளையம்
116.	தங்கம் தென்னரசு, திரு.	.. திருச்சுழி
117.	தமிமுன் அன்சாரி, திரு. எம்.	.. நாகப்பட்டினம்
118.	தமிழ்ச்செல்வன், திரு. ரா.	.. பெரம்பலூர் (செ.வ.)
119.	தனபால், திரு. ப.	.. அவினாசி (செ.வ.)
120.	தனியரசு, திரு. உ.	.. காங்கேயம்
121.	திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
122.	திராவிடமணி, திரு. மு.	.. கூடலூர் (செ.வ.)
123.	தினகரன், திரு. டிடிவி	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
124.	துரை. கி. சரவணன், திரு.	.. புவனகிரி
125.	துரைக்கண்ணு, திரு. இரா.	.. பாபநாசம்
126.	துரைமுருகன், திரு.	.. காட்பாடி
127.	தூசி கே. மோகன், திரு.	.. செய்யாறு
128.	தென்னரசு, திரு. கே.எஸ்.	.. ஈரோடு கிழக்கு
129.	தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (செ.வ.)
130.	நடராஜன், திரு. அ.	.. பல்லடம்
131.	நடராஜ், திரு. ஆர்.	.. மயிலாப்பூர்
132.	நந்தகுமார், திரு. ஏ.பி.	.. அணைக்கட்டு

133.	நரசிம்மன், திரு. பி.எம்.	.. திருத்தணி
134.	நல்லதம்பி, திரு. அ.	.. திருப்பத்தூர்
135.	நாகராஜன், திரு. எஸ்.	.. மானாமதுரை(செ.வ.)
136.	நாராயணன், திரு. வெ.	.. நாங்குநேரி
137.	நிலோபர் கபில், டாக்டர் (திருமதி)	.. வாணியம்பாடி
138.	நீதிபதி, திரு. பா.	.. உசிலம்பட்டி
139.	நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
140.	நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி மேற்கு
141.	பரமசிவம், டாக்டர் V.P.B.	.. வேடசந்தூர்
142.	பரமேஸ்வரி, திருமதி மு.	.. மணச்சநல்லூர்
143.	பலராமன், திரு. ப.	.. பொன்னேரி (செ.வ.)
144.	பவுன்ராஜ், திரு. எஸ்.	.. பூம்புகார்
145.	பழனி, திரு. கே.	.. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
146.	பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை மத்தி
147.	பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
148.	பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
149.	பன்னீர்செல்வம், திரு. வி.	.. கலசப்பாக்கம்
150.	பாண்டி, திரு. ச.	.. முதுகுளத்தூர்
151.	பாண்டியராஜன், திரு. க.	.. ஆவடி
152.	பாண்டியன், திரு. கே.ஏ.	.. சிதம்பரம்
153.	பாரதி, திரு. பி.வி.	.. சீர்காழி (செ.வ.)
154.	பாஸ்கரன், திரு. க.	.. சிவகங்கை
155.	பாஸ்கர், திரு. கே.பி.பி.	.. நாமக்கல்

156.	பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
157.	பிரகாஷ், திரு. ஒய்.	.. தளி
158.	பிரபு, திரு. அ.	.. கள்ளக்குறிச்சி (செ.வ.)
159.	பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
160.	புகழேந்தி, திரு. சு.	.. மதுராந்தகம் (செ.வ.)
161.	பூங்கோதை, டாக்டர் (திருமதி)	.. ஆலங்குளம்
162.	பூண்டி கி. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
163.	பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	.. திருப்பத்தூர்
164.	பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
165.	பெரியண்ணன் அரசு, திரு.	.. புதுக்கோட்டை
166.	பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
167.	பென்ஜமின், திரு. பா.	.. மதுரவாயல்
168.	பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169.	பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170.	மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
171.	மணிகண்டன், டாக்டர் எம்.	.. இராமநாதபுரம்
172.	மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்
173.	மதிவாணன், திரு. உ.	.. கீழ்வேளூர் (செ.வ.)
174.	மருதமுத்து, திரு. அ.	.. கெங்கவல்லி (செ.வ.)
175.	மனோகரன், திரு. அ.	.. வாசுதேவநல்லூர் (செ.வ.)
176.	மனோ தங்கராஜ், திரு. த.	.. பத்மநாபபுரம்
177.	மனோரஞ்சிதம், திருமதி நா.	.. ஊத்தங்கரை (செ.வ.)

178.	மனோன்மணி, திருமதி ப.	..	வீரபாண்டி
179.	மஸ்தான், திரு. கே.எஸ்.	..	செஞ்சி
180.	மாசிலாமணி, டாக்டர் இரா.	..	மயிலம்
181.	மாணிக்கம், திரு. கி.	..	சோழவந்தான் (செ.வ.)
182.	முத்தமிழ்செல்வன், திரு. ர.	..	விக்கிரவாண்டி
183.	முருகன், திரு. பி.	..	வேப்பனஹள்ளி
184.	முருகுமாறன், திரு. என்.	..	காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
185.	முருகையா பாண்டியன், திரு. ஆர்.	..	அம்பாசமுத்திரம்
186.	முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம்.	..	கடையநல்லூர்
187.	மூர்த்தி, திரு. கே.எஸ்.	..	பரமத்தி-வேலூர்
188.	மூர்த்தி, திரு. பி.	..	மதுரை கிழக்கு
189.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	..	ஆலங்குடி
190.	மைதீன்கான், திரு. டி.பி.எம்.	..	பாளையங்கோட்டை
191.	மோகன், திரு. எம்.கே.	..	அண்ணா நகர்
192.	ரகுபதி, திரு. எஸ்.	..	திருமயம்
193.	ரங்கநாதன், திரு. ப.	..	வில்லிவாக்கம்
194.	ரவி, திரு. சு.	..	அரக்கோணம் (செ.வ.)
195.	ராசேந்திரன், திரு. சபா.	..	நெய்வேலி
196.	ராதாகிருஷ்ணன், திரு. வி.	..	மயிலாடுதுறை
197.	ராமர், திரு. எ.	..	குளித்தலை
198.	ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என்.	..	ஜெயங்கொண்டம்
199.	ராமு, திரு. அ.	..	குன்னூர்
200.	ராஜலெட்சுமி, திருமதி வி.எம்.	..	சங்கரன்கோவில் (செ.வ.)

201.	ராஜவர்மன், திரு. M.S.R.	.. சாத்தூர்
202.	ராஜா, திரு. சி.	.. சங்கரி
203.	ராஜா, திரு. டி.ஆர்.பி.	.. மன்னார்குடி
204.	ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர்.	.. அந்தியூர்
205.	ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி.	.. சிவகாசி
206.	ராஜேந்திரன், திரு. சு.	.. அரியலூர்
207.	ராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
208.	ராஜேஷ் குமார், திரு. செ.	.. கிள்ளியூர்
209.	லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ்.	.. திருநெல்வேலி
210.	லோகநாதன், திரு. கோ.	.. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
211.	வரலட்சுமி, திருமதி ம.	.. செங்கல்பட்டு
212.	வளர்மதி, திருமதி சீ.	.. ஸ்ரீரங்கம்
213.	வாகை சந்திரசேகர், திரு.	.. வேளச்சேரி
214.	விருகை V.N. ரவி, திரு.	.. விருகம்பாக்கம்
215.	வில்வநாதன், திரு. அ.செ.	.. ஆம்பூர்
216.	விஜயகுமார், திரு. க.நா.	.. திருப்பூர் வடக்கு
217.	விஜயதரணி, திருமதி எஸ்.	.. விளவங்கோடு
218.	விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர்.	.. கரூர்
219.	விஜய பாஸ்கர், டாக்டர் சி.	.. விராலிமலை
220.	விஜியகுமார், திரு. கே.எஸ்.	.. கும்மிடிப்பூண்டி
221.	வீரமணி, திரு. கே.சி.	.. ஜோலார்பேட்டை
222.	வெங்கடாச்சலம், திரு. என்.டி.	.. பெருந்துறை
223.	வெங்கடாஜலம், திரு. கோ.	.. சேலம் மேற்கு

224.	வெல்லமண்டி ந. நடராஜன், திரு.	.. திருச்சிராப்பள்ளி கிழக்கு
225.	வெற்றிவேல், திரு. ச.	.. ஓமலூர்
226.	வேலு, திரு. எ.வ.	.. திருவண்ணாமலை
227.	வேலுமணி, திரு. எஸ்.பி.	.. தொண்டாமுத்தூர்
228.	ஜக்கையன், திரு. எஸ்.டி.கே.	.. கம்பம்
229.	ஜெயக்குமார், திரு. டி.	.. இராயபுரம்
230.	ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா.	.. மடத்துக்குளம்
231.	ஸ்டாலின், திரு. மு.க.	.. கொளத்தூர்
232.	ஸ்டாலின் குமார், திரு. செ.	.. துறையூர் (செ.வ.)
233.	நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி)	.. நியமனம்
234.	வெற்றிடம்	.. திருவொற்றியூர்
235.	வெற்றிடம்	.. குடியாத்தம் (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. விஜய் நாராயன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 11, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 24, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்."

ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பார். அவரை, நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கொரோனா வைரஸ் நோய், வாழ்வாதாரம் பாதிக்கப்படுவோருக்கு சிறப்பு நிவாரண உதவி அளித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

நேற்று 23–3–2020 அன்று தனிமைப்படுத்துதல் என்ற முறையை தீவிரப்படுத்த நான் பல்வேறு அறிவிப்புகளை இந்த அவையில் வெளியிட்டேன். அவற்றிற்கிணங்க, நேற்று மாலை விரிவான அறிவிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், பிரிவு 144–ன்கீழ், சென்னையில் காவல் ஆணையர் அவர்களும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க உள்ளார்கள். இவ்வாணைகள் அனைத்தும் இன்று (24–3–2020) மாலை 6 மணி முதல் அமலுக்கு வருகின்றன.

இதனால் தினக் கூலிகள், விவசாயக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், டாக்ஸி ஓட்டுநர்கள், கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், முதியோர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் சிரமங்களை உணர்ந்து, அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்து, 3,280 கோடி ரூபாய் மதிப்பிலான பின்வரும் சிறப்பு நிவாரண உதவிகளை வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிடுகிறேன்:

1. அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் 1,000/– ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கு உரித்தான ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பொது விநியோகக் கடைகளில் கூட்டத்தைத் தவிர்க்க இந்நிவாரணம் டோக்கன் முறையில், ஒதுக்கப்பட்ட நாளிலும், நேரத்திலும் விநியோகிக்கப்படும். இந்த 1,000/– ரூபாய் நிவாரணம் மற்றும் விலையில்லாப் பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள், இதற்கான வலைதளத்தில் மின்னணு முறையில் அல்லது செயலியில் பதிவு செய்துகொள்ளலாம்.

2. குடும்ப அட்டைதாரர்கள் மார்ச் மாதத்திற்கான ரேஷன் பொருட்களை வாங்க தவறியிருப்பின், ஏப்ரல் மாதத்திற்கான பொருட்களுடன் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் ஓட்டுநர் நல வாரியத்தில் உள்ள ஆட்டோ தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்புத்

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தொகுப்பாக தலா 1,000/– ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெய்யும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தற்போது தமிழ்நாட்டில் சிக்கித் தவிக்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்த கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களை, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொழிலாளர் வாரியங்கள் அடையாளம் கண்டு, அவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ சமையல் எண்ணெய் இலவசமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அம்மா உணவகத்தின் மூலமாக சூடான, சுகாதாரமான உணவு தொடர்ந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. எந்த வசதியும் இல்லாதோர், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்திலேயே, சூடான, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென தேவைக்கேற்ப பொது சமையல் கூடங்கள் அமைக்க சென்னை மாநகர ஆணையருக்கும், பிற மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அங்கன்வாடி மையங்களில் உணவருந்தும் முதியோர்களுக்கு தேவையான உணவினை, அவர்கள் வசிக்கும் இடங்களில் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. பதிவு செய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் 1,000/– ரூபாயுடன் கூடுதலாக 1,000/– ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், இந்த மாதத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாட்களுக்கான ஊதியம், சிறப்பு ஊதியமாக அவற்றோடு கூடுதலாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் பின்வரும் அறிவிப்புகளை அளிக்க நான் அனுமதி கோருகிறேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

செய்தித் துறையில் 3 அறிவிப்புகள், தொழில் துறையில் 6 அறிவிப்புகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் 3 அறிவிப்புகள், பால் வளத் துறையில் 5 அறிவிப்புகள், வேளாண்மைத் துறையில் 19 அறிவிப்புகள், தகவல் தொழில்நுட்பத் துறையில் 2 அறிவிப்புகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் 7 அறிவிப்புகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் 6 அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சித் துறையில் 1 அறிவிப்பு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் 6 அறிவிப்புகள், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் 23 அறிவிப்புகள், உயர் கல்வித் துறையில் 1 அறிவிப்பு. மொத்தம் 82 அறிவிப்புகள். மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளின் விவரங்களை நான் ஏற்கெனவே தங்களிடம் அளித்துள்ளேன். அவை அனைத்தையும் இந்த அவையில் நான் படித்ததாக ஏற்று அவைக் குறிப்பில் பதிவுசெய்துகொள்ளுமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு மீதமுள்ள அறிவிப்புகள் படித்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகின்றன என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் அன்னாரின் சிலை அமைத்தல், பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி உயர்த்துதல் மற்றும் "மக்களின் தந்தை" திரு. ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் குறித்த செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், நமது மாநிலம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், மணிமண்டபங்கள், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கி, பராமரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தன் தளபதியாக மட்டுமல்லாமல், மகனாகவும் நினைத்துப் போற்றிய, திருநெல்வேலி

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சீமை தந்த தீரம் மிக்க சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன். தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள அன்னாரின் மணிமண்டபத்தில், பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, முழுவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. பணிக் காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட மருத்துவ நிதி உதவி 50 ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக 1–8–2018 அன்று முதல் உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டேன். இம்மருத்துவ நிதி உதவி 2 இலட்சம் ரூபாயாக தற்போது உயர்த்தி வழங்கப்படும்.

3. தூத்துக்குடி மக்களால் “மக்களின் தந்தை” எனப் போற்றப்படுபவரான ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் அவர்களின் சேவையைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான நவம்பர் 15 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அச்சமயம் தூத்துக்குடி, பாளையங்கோட்டை சாலையில் உள்ள அன்னாரது சிலைக்கு, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படும்.

(இ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் சிறுசேரியில் இயற்கைப் பூங்கா, சென்னைக்கு அருகில் மாநல்லூரில் மின்சார வாகனப் பூங்கா மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தரவு மையப் பூங்காக்கள் உருவாக்குதல் உள்ளிட்ட தொழில் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொழிற் பூங்காவில், முதற்கட்டமாக சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவ மூலப் பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஏதுவாக மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் நிறுவனத்தால் 770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். மருந்து உற்பத்திக்குத் தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

வசதிகளுடன் குறிப்பாக, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை, மூலப் பொருட்கள் சேகரிப்பு நிலையம், உலர் மற்றும் குளிரூட்டு நிலையம், நவீன ஆய்வக வசதிகள், கிடங்குகள், அவசரகால நடவடிக்கை மையம் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கியதாக இப்பூங்கா இருக்கும்.

2. சிப்காட் சிறுசேரி, நாவலூர் ஏரியினைத் தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், கரையினை உறுதிப்படுத்தி, நடைபாதை வசதி, சைக்கிள் பாதை வசதிகளுடன் பூந்தோட்டத்துடனான இயற்கைப் பூங்கா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன்மூலம் சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் பொது மக்களும் பயனடைவர்.

3. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தங்குதடையின்றி தண்ணீர் வழங்கும்பொருட்டு, கெலவரப்பள்ளி அணைக்கட்டிலிருந்து நீரைப் பெற்று, அந்நீரை சுத்திகரித்து ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள சுமார் 355 தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம், 110 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

4. தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில், சென்னைக்கு அருகில் சிப்காட் மாநல்லூர் தொழிற்பூங்காவில் மின்சார வாகனப் பூங்கா ஒன்று 148 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும். இத்தொழிற்பூங்கா அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மின்சார வாகன உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப ஆய்வு மையம், சோதனை மையம், கிடங்கு வசதி மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

5. சிப்காட் நிறுவனம் புதிதாக அமைக்கவுள்ள மாநல்லூர், செய்யாறு, மணப்பாறை, தேனி, மணக்குடி மற்றும் சக்கரக்கோட்டை ஆகிய தொழிற்பூங்காக்களில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) நிதி உதவியுடன் 2,934 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

6. வணிகம் மற்றும் நிறுவன தகவல்களைச் சேமித்தல், மீட்டெடுத்தல், தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகளைச்

செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில் நிறுவனங்கள் அமையும் வகையில், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில், 500 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தரவு மைய பூங்கா ஒன்றினை டிட்கோ உருவாக்கும். இப்பூங்காவில் செயல்பாட்டுக்கு வரும் தொழில் நிறுவனங்கள்மூலம் சுமார் 3,500 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். நவீன யுகத்தின் பெரும் சொத்தாகக் கருதப்படும் தகவல் தரவுகளுக்கான தொழில் பூங்கா தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதன்மூலம், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு மேலும் முன்னேற்றம் அடைந்திடும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னையில் புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம், கோயம்புத்தூர் வட்டம், கல்லப்பாளையத்தில் தனியார் தொழிற்பூங்கா அமைத்தல் மற்றும் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன மானியம் வழங்குதல் குறித்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைமூலம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புத்தாக்கங்கள் மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் (Innovation and Knowledge based firms) செயல்பாடுகளை ஆதரித்து, புத்தொழில்கள் உருவாக்கும் நோக்கத்துடன், உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வணிகச் சூழலுடன்கூடிய ஒரு புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம் (Startup and Innovation City) சென்னையில் 350 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசின் பங்களிப்புடன் தனியார் தொழிற்பூங்கா உருவாக்கும் திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கல்லப்பாளையம் கிராமத்தில் 116.24 ஏக்கர் பரப்பளவில், 20 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில், கொடிசியாமூலம் ஒரு புதிய தனியார் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு அரசின் மானியமாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

3. தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை–2019–ன் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் மற்றும் மின்சாரம் ஏற்றும் கட்டமைப்புக்குத் தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்ய தொடங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் வரை, 25 சதவீதம் சிறப்பு மூலதன மானியமும், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் வரை, தகுதி வாய்ந்த இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 20 சதவீதம் வரை, கூடுதல் சிறப்பு மூலதன மானியமும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) உயர் ரக பொலி காளைகள் உற்பத்தி செய்தல் மற்றும் தூத்துக்குடி, தேனி மாவட்டங்களில் பால் பண்ணைகள் நிறுவுதல் உள்ளிட்ட பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறையின்மூலம் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. பால் உற்பத்தித் திறன் அடிப்படையின்மூலம் பிறந்த கிடாரிகளின் வம்சாவழி சோதனை திட்டத்தின்மூலம் 20.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 180 உயர் ரக பொலி காளைகள் உற்பத்தி செய்யப்படும்.

2. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு தரமான பசுந்தீவனம் அளிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, 25 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு விவசாயிகளின் பட்டா நிலங்கள் கண்டறியப்பட்டு, அதில் பசுந்தீவன புல் பயிரிட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்மூலம் 37.50 கோடி ரூபாய் மானியத்தில் வேளாண் உள்ளீடுகள் வழங்கப்படும். மேலும், அந்நிலங்களில் 50 கோடி ரூபாய் மானியத்தில் 'பிரதம மந்திரி கிரிஷி சின்ஜாயி யோஜனா' திட்டத்தின்கீழ் நுண்ணீர் பாசன வசதிகள் செய்து தரப்படும்.

3. தூத்துக்குடி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன்கூடிய புதிய பால் பண்ணை, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

4. தேனி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன்கூடிய புதிய பால் பண்ணை 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

5. அதிகரித்து வரும் தயிர், மோர், லஸ்ஸி, பன்னீர் போன்ற பால் உப பொருட்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திருவண்ணாமலை, மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணைகளில் பால் உபபொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை மேம்படுத்த 119.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) கொரோனா வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளை அறிவித்தல், ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்த புதிய '108' அவசர கால ஊர்திகள் வாங்குதல், Robotic அறுவை சிகிச்சை மையம் நிறுவுதல், வான்வழி அவசர கால சேவை தொடங்குதல் உள்ளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1. கொரோனா வைரஸ் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், சார்ஸ் போன்ற தொற்று நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனையாக, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும், மூன்று மண்டல அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையும், கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் சானடோரியம் ஆகிய மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கும், சென்னை கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து

நிலையத்திலுள்ள ஆய்வகத்தை Bio Safety Level–III நிலைக்கு மேம்படுத்துவதற்கும் 110 கோடி ரூபாய் செலவிடப்படும்.

2. பொது மக்களுக்கு அவசர காலங்களில் உயிர் காப்பதில் சிறப்பாக சேவை செய்து வரும் 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் வலுப்படுத்துவதற்காக, நடப்பாண்டில் 500 புதிய அவசர கால ஊர்திகள் 125 கோடி ரூபாய் செலவில் வாங்கி, வழங்கப்படும்.

3. கிராமப்புற வளரிளம் பெண்களுக்கிடையே தன் சுத்தத்தை ஊக்குவிக்க மாதவிடாய் கால தன் சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 37.47 கோடி ரூபாய் செலவில் நகர்ப்புறத்தில் பயிலும் பள்ளி மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும், அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சை பெறும் பெண்களுக்கும் சானிடரி நாப்கின் வழங்கப்படும்.

4. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் கடினமான அறுவை சிகிச்சைகளை துல்லியமாகவும், விரைவாகவும், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறப்பான சிகிச்சை அளிக்கவும் நவீன Robotic அறுவை சிகிச்சை மையம் 34.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

5. ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை உடனடி சிகிச்சை மேற்கொள்ள துரிதமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக வான்வழி அவசர கால சேவை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

6. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள இராணிப்பேட்டை வருவாய் மாவட்டத்திற்கு, புதிய சுகாதார மாவட்டம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

(எ) தொன்மைவாய்ந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளுதல், திருக்கோயில் குளங்கள் தூர் வாருதல், இலவச திருமணங்கள் நடத்தி வைத்தல், 'திருக்கோயில்' தொலைக்காட்சி தொடங்குதல், திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு புதிய மலைப்பாதை அமைத்தல், மருதமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு மின்தூக்கி அமைத்தல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்ய வசதிகள் உள்ளிட்ட இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. தொன்மை வாய்ந்த 55 திருக்கோயில்களில் அதன் தொன்மை மாறாமல் பாதுகாத்திட, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 100 திருக்குளங்கள் 26.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து தூர்வாரி, படித்துறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.

3. நிதி வசதி மிக்க 50 திருக்கோயில்களில் 4 கோடி ரூபாய் செலவில் ஏழை, எளிய மற்றும் நலிவடைந்த 10,000 இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்படும்.

4. 8.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'திருக்கோயில்' என்ற பெயரில் தொலைக்காட்சி தொடங்கப்படும்.

5. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள 1,000 கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

7. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மலைப்பாதை அமைக்கப்படும்.

8. மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் தூக்கி அமைக்கப்படும்.

9. திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டப்படும்.

10. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த மண்டல அலுவலகங்கள், 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்படும்.

11. ஒரு கால பூஜை, 214 திருக்கோயில்களுக்கு 2.14 கோடி ரூபாய் மதிப்பீடில் விரிவுபடுத்தப்படும்.

12. 31–7–2019 வரை 5 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து பணி நிறைவு செய்த சுமார் 2,000 தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை தகுதியின் அடிப்படையிலும் காலிப் பணியிடங்களை கணக்கில் கொண்டும் காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்யப்படும்.

13. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் துறை நிலையிலான ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

14. 9 முதுநிலை திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு 16.43 கோடி ரூபாய் செலவில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்படும்.

15. அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக 176.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய பெருந்திட்டம் தயாரிக்கப்படும். முதற்கட்டமாக 80.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

16. புதியதாக 9.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 இணை ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 19 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

17. புதியதாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 17 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

18. திருக்கோயில்களில் 3.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நகை சரிபார்ப்புப் பிரிவில் 50 கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், 4 பணியிடங்கள் நிலை உயர்த்தப்படும்.

19. திருக்கோயில்களில் புதியதாக 117 ஆய்வர் பணியிடங்கள் மற்றும் 117 அலுவலக உதவியாளர் பணியிடங்கள் 12.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்.

20. திருக்கோயில்களின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் 14.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் ஆணையர் முதல் செயல் அலுவலர் நிலை–4 வரை 205 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

21. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதை கடந்து ஓய்வு பெற்ற கிராம கோயில் பூசாரிகள் ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், ஓய்வூதியம் பெறுவதற்கான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதற்கான கூடுதல் செலவினம் 4.64 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

22. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் ஆண்டு வருமானம் 10 இலட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள 331 திருக்கோயில்களில் தூய்மை மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக நடப்பு ஆண்டில் 100 திருக்கோயில்களில் தூய்மை குறித்தான நிலையான இயக்க நடைமுறையைப் (Standard Operating Procedure) பின்பற்றி திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும்.

23. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் ஆண்டு வருமானம் ரூ.10 இலட்சத்திற்கும் மேல் உள்ள 331 திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்வதற்கு வசதிகள் செய்து தரப்படும். முதற்கட்டமாக 100 திருக்கோயில்களில் நிலையான இயக்க நடைமுறையைப் பின்பற்றி திட்டம் தயாரித்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 24

(ஏ) நெல் ஜெயராமன் நினைவாக திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் 'பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்' அமைத்தல், காவேரி டெல்டா விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் சேவைகள் வழங்குதல், மின்னணு வர்த்தக தளம் உருவாக்குதல், நாகப்பட்டினம் மாவட்டம், வடுவாஞ்சேரியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல் உள்ளிட்ட வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களின் நலனுக்காகவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பரப்பளவை அதிகரிக்கும் நோக்கத்தில், 25,000 ஏக்கர் தரிசு நிலங்களைக் கண்டறிந்து, சாகுபடிக்கு ஏற்றதாக அந்நிலங்களைச் சீர்திருத்தி, உழவுப் பணி மேற்கொண்டு, வறட்சி தாங்கி வளரும் பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் வழங்க 10.40 கோடி ரூபாய் வழங்கப்படும்.

2. காவேரி டெல்டா மாவட்டங்களில் 44–ம், மற்ற மாவட்டங்களில் 81–ம் என மொத்தம் 125 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டப்படும்.

3. நடப்பாண்டில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தருமபுரி, திருப்பூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள திட உயிர் உர உற்பத்தி மையங்கள் 12.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்கி, திரவ உயிர் உர உற்பத்தி மையங்களாக மாற்றப்படும்.

4. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் உள்ள கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்க, புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துத் தரவும், ஏற்கெனவே உள்ள 2 விதை சுத்திகரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்தி நவீனப்படுத்தவும், நடப்பாண்டில் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.

5. நெல் ரகங்களின் பாதுகாவலர் மறைந்த திரு. நெல் ஜெயராமன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில், 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்" அமைக்கப்படும்.

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

6. தமிழ்நாட்டில் காய்கறி மற்றும் பழங்கள் அதிகம் சாகுபடி செய்யப்படும் 250 வட்டாரங்களில், நடப்பாண்டில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாற்றங்கால் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

7. தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

8. பசுமைக்குடில் சாகுபடி, நிழல்வலை குடில் சாகுபடி, பந்தல் சாகுபடி, நிலப்போர்வை மற்றும் சொட்டு நீர்ப் பாசனம் உள்ளிட்ட நவீன தோட்டக்கலை தொழில் நுட்பங்களை டெல்டா மாவட்ட விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தி, வருமானத்தை உயர்த்திட, காவேரி டெல்டா மாவட்டங்களில் 7,500 ஏக்கர் பரப்பளவில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.

9. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் வெற்றிலை பயிருக்கான சிறப்பு மையம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

10. நடப்பு ஆண்டில், இயற்கைப் பண்ணைய முறையில் கீரை வகைகள், தக்காளி, கத்திரி, வெண்டை, முட்டைகோஸ் மற்றும் காலிபிளவர் போன்ற காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்யும் முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி ஊக்குவிக்க 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

11. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், திருவாரூர் மாவட்டம், மூங்கில்குடி கிராமத்தில் நன்னிலம் அரசு விதைப் பண்ணையில், 10 ஏக்கர் பரப்பளவில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரிசி சார்ந்த உணவு பதப்படுத்தும் தொகுப்பு அமைக்கப்படும்.

12. உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான நவீன சந்தை வசதிகளும், இடுபொருட்கள் விற்பனை மையமும், பல்உணவு முற்றம், சிப்பம் கட்டும் அறை, குளிர்பதனக் கிடங்கு, வணிகத் தொடர்பு மையங்கள் ஆகியவை கொண்ட ஒருங்கிணைந்த வேளாண் வணிக மாதிரி அங்காடிகள், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சிதம்பரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

13. மின்னணு வர்த்தகத்தின் பயன்களை விவசாயிகள் பெறுவதற்கும், அவர்களின் விளைபொருட்களை தேசிய அளவில் வர்த்தகம் செய்ய உகந்த சூழ்நிலையை தமிழ்நாட்டில் உருவாக்கவும், 50 கோடி ரூபாய் செலவில் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், மின்னணு வர்த்தக தளம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இதுவரை தமிழ்நாட்டில் 165 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2020–2021 ஆம் ஆண்டில் மேலும் 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்க மாநில அரசு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கும்.

15. தூத்துக்குடி மாவட்டம், புதூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில், சிவப்பு மிளகாய் அரவை செய்து சிப்பம் கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் இயந்திரம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, நீலகிரி மாவட்டம், அனிக்கோரை மற்றும் சுள்ளிக்கூடு ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் காய்கறிகளுக்கு மதிப்புக் கூட்டும் இயந்திரம், கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கிப்பாளையம் மற்றும் பிச்சனூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில், பல்வகை காய்கறி மற்றும் பழங்களை ஆழ்நிலை உறைய வைத்தல் மற்றும் உலர்வித்தல் இயந்திரங்கள், திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி மற்றும் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் புளிக்கூழ் மற்றும் புளி விதைப் பசை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் வெங்காயம் பதப்படுத்தும் இயந்திரம் போன்ற இரண்டாம் நிலை பதப்படுத்தும் இயந்திரங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

16. காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தேவையான அதிக சக்தி கொண்ட 20 டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 10 நிலம் சமன் செய்யும் கருவிகள், 10 ரோட்டா பட்லர் என்ற சேறு கலக்கும் கருவிகள், 51 வைக்கோல் கூட்டும் கருவிகள், 5 நெல் தானிய உலர்த்திகள் மற்றும் 10 ஹேரேக் நெல் அறுவடை இயந்திரங்கள் ஆகியவை 7 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த

வாடகைக்கு வழங்கப்படும். மேலும், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் 20 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை அமைத்திட 2 கோடி ரூபாயும், கரும்பு அறுவடைக்கேற்ற 2 இயந்திர வாடகை மையங்கள் அமைத்திட ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயும், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களைக் கொண்டு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை பண்ணை அளவிலேயே மதிப்புக்கூட்டும் வகையில், 50 இயந்திரங்களுக்கு 75 இலட்சம் ரூபாயும், பாசனத்திற்கான மின் தேவையினைப் பூர்த்தி செய்திடும் வகையில் சூரிய சக்தியால் இயங்கும் 1,000 பம்பு செட்டுகளை விவசாயிகளின் நிலங்களில் நிறுவிட 23 கோடியே 70 இலட்சம் ரூபாய், என மொத்தம் 35 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் பொறியியல் சேவைகள் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

17. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 50–வது ஆண்டு நிறைவடைந்த சிறப்பைப் போற்றிடும் வகையில், பழமையான கட்டடங்களைப் புதுப்பிக்கவும், நினைவு மண்டபம் கட்டவும், விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் கருத்துக் காட்சிகளும், கருத்தரங்குகளும் நடத்துவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 29 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கும்.

18. பல்வேறு நாடுகள் பின்பற்றி வரும் தொழில்நுட்பங்களை நமது விவசாயிகள் காணவும், அவற்றைக் கடைப்பிடிக்கவும் ஏதுவாக, வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்ல 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

19. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் உயர் மகசூல் பெறும் பொருட்டு, புதிய பயிர் ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சிப் பணியை வலுப்படுத்தும் வகையில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வடுவாஞ்சேரி கிராமத்தில் புதிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று 200 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்கீழ் உருவாக்கப்படும். இதற்காக நடப்பாண்டில் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 24

(ஐ) மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்கள் அமைத்தல் மற்றும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடுதல் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், 30 விழுக்காடு பங்களிப்பை அளித்து நாட்டின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இத்துறையின்மூலம் தமிழ்நாடு செய்துள்ளதாக இந்திய மின்னணு தொழிற்சாலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், இத்துறை சுமார் 40 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து பின்வரும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:

1. உலகெங்கும் உள்ள மின்னணு உற்பத்தித் தொழில்களின் முதலீட்டை தமிழ்நாட்டில் ஈர்க்கும் விதமாக, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் 4 இடங்களில் மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைக்கும்.

2. பொது மக்கள் இணைய வழியில் பாதுகாப்பான பணப் பரிமாற்றம் செய்யவும், பல்வேறு தரப்பிலிருந்து தொடுக்கப்படும் இணையவழி தாக்குதல்களை எதிர்கொள்ளவும், பொது மற்றும் தனியார் தரவு உட்கட்டமைப்புகளைப் பாதுகாத்திடவும் வழிவகை செய்யும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடப்படும்.

(ஒ) மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்குதல், சென்னை, சேப்பாக்கம் 'எழிலகம்' வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துதல், "தமிழ் நிலம்" மென்பொருள் உருவாக்குதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

1. நிருவாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38–வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும்.

2. தமிழ்நாட்டின் 13 முக்கிய அரசுத் துறைகளின் துறைத் தலைவர் அலுவலகங்கள் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள 'எழிலகம்' வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. இப்பழமையான கட்டடத்தின் பராமரிப்புச் செலவு மிக அதிக அளவில் ஏற்படுகிறது. எனவே, அதே இடத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும். இக்கட்டடம் அருகில் உள்ள பாரம்பரிய கட்டடங்களுக்கு நிகராக கட்டப்படும்.

3. கடந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சங்கரன்கோவில், குடியாத்தம், ஸ்ரீபெரும்புதூர், வாணியம்பாடி மற்றும் அரக்கோணம் ஆகிய 5 கோட்டங்களுக்கு 16.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும். அதேபோன்று, திருவெண்ணைநல்லூர், கல்வராயன்மலை, கலவை, கே.வி. குப்பம், குன்றத்தூர், வண்டலூர் மற்றும் சோளிங்கர் ஆகிய 7 வட்டங்களுக்கு 28.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும்.

4. பழுதடைந்த வருவாய்த் துறை கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்ற அடிப்படையில், சென்னை வடக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, செங்கல்பட்டு மற்றும் சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும். அதேபோல, கள்ளக்குறிச்சி, ஆற்காடு, வாலாஜா, விளாத்திகுளம், திருச்செந்தூர், சாத்தான்குளம், பொன்னேரி, நன்னிலம், மன்னார்குடி மற்றும் குடியாத்தம் ஆகிய 10 வட்டாட்சியர் அலுவலகங்கள் 37.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். மேலும், கறம்பக்குடி, பொன்னமராவதி, இராமேஸ்வரம், முதுகுளத்தூர், வாலாஜா, மேட்டூர், சேலம் (மேற்கு), தூத்துக்குடி, ஆம்பூர், திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி, திருவெறும்பூர் மற்றும் மணப்பாறை ஆகிய 14 வருவாய் வட்டாட்சியர்களுக்கு 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டித் தரப்படும். இது தவிர, 180 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் 39.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

5. 11–7–2017 அன்று இதே சட்டப் பேரவையில் நான் அறிவித்தபடி, பேரிடர்களின்போது மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தனியாக பேரிடர் மீட்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்த, உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களைக் கொள்முதல் செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சாதாரண மக்களும் எளிதாகக் கையாளும் வகையில், இணைய வழியாக நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் கிடைக்க வகை செய்ய "தமிழ் நிலம்" என்ற ஒரு மென்பொருள் உருவாக்கி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நில ஆவணங்களைப் புதுப்பித்தல், இணைய வழியாக சொத்து தொடர்பான வில்லங்க விவரங்கள் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

7. நவீன நில அளவை கருவிகளான பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவை கருவிகள் கொண்டு முன்னோடியாக கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த உத்தேசித்துள்ள நிலையில், முதற்கட்டமாக 40.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஓ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுத் தொகை மற்றும் ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியுதவியை உயர்த்துதல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி

மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, 6 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் 48.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்.

3. பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு, தொழில்முனைவோர், நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுயஉதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாட்கோமூலம் செயல்படுத்தப்படும்.

4. 10 ஆண்டுகளுக்கு மேலான, 80 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகள் தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

5. தற்போதுள்ள விலைவாசியினைக் கருத்தில்கொண்டு, ஆதி திராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்டுவரும் நிதியுதவி 2,500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

6. ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் வகையில் அனைத்து வசதிகளுடன்கூடிய 24 சமுதாயக் கூடங்கள் 14.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஔ) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் குறித்த தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எஞ்சிய 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் நிதி வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அஅ) தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்திற்கு 'டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகம்' எனப் பெயரிட்டு திருவுருவச் சிலை நிறுவுதல் குறித்த உயர் கல்வித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மாணாக்கர் சேர்க்கையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி சாதனை படைத்த மாண்புமிகு அம்மாவை சிறப்பிக்கும் வகையில், தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்திற்கு 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா வளாகம்' என்று பெயரிட்டு, அவ்வளாகத்தில் மாண்புமிகு அம்மாவின் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. அறிவிப்புகள்

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள்/ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக 2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 13 முதல் 21 வரையிலான 9 அறிக்கைகள், பொதுக் கணக்குக் குழுவின் 129 முதல் 152 வரையிலான 24 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் 112 முதல் 119 வரையிலான 8 அறிக்கைகள், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 8 மற்றும் 9 ஆகிய இரண்டு அறிக்கைகள் மற்றும் அரசு உறுதிமொழிக் குழுவின் 77–வது அறிக்கை ஆகியவை, பேரவைக்கு அளித்தவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும் என்பதனையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்றைய 24–3–2020 நிகழ்ச்சிநிரலில் அவைமுன் வைக்கப்படும் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 25 அறிவிக்கைகள், 21 ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள், அவற்றின் மென்பொருள் நகல் ஆகியவை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட குழுக்களின்

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பட்ட அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்திலே வைக்கப்பட்டுள்ளன.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கொரோனா வைரஸ் மூலமாக எந்த நோய் பரவினாலும் ஓர் உயிர்ப் பலிகூட நிகழாத வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து ‘தமிழக மக்களைக் காப்பேன்’ என்று சூளுரை ஏற்று, சத்தமில்லாமல் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற, இரட்டை இலையினுடைய ஓரிலையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், இரட்டை இலையின் இன்னோர் இலையாக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், என்னுடைய பணிவார்ந்த வணக்கத்தினைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 13 முதல் 21 வரையிலான 9 அறிக்கைகளை இந்தக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளித்து, அமர்கிறேன். (குறுக்கீடு)

4. விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள். சொல்லுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் முழுக்க கோரோனா தொற்றுநோய் மிக வேகமாகப் பரவி வந்தாலும், உலகத்தில் வேறு எந்த அரசும் எடுத்திட முடியாத அளவிற்கு தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்து, உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்கின்ற மகத்தான அரசு (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அம்மா அவர்களுடைய கனவுகளை நனவாக்குகின்ற அரசு நமது மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசு. இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற எத்தனையோ சமூக நலத் திட்டங்களை, எவ்வளவோ இயற்கை பேரிடர்களையெல்லாம் தாங்கி நின்ற அரசு. வர்தா புயல் என்றாலும், ஒகி புயல் என்றாலும், உலகம் கண்டிராத மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு என்றாலும், ஓர் உயிரைக்கூட இழக்காமல், ஒரு மனிதனின் கண்களில்கூட நீர் வராமல் அவர்களின் கண்களை இமை காப்பதுபோல் தாய்த் தமிழ்நாட்டைக் காத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களுடைய அரசு. துறைதோறும் போர்முனையில் வீரர்கள் எப்படி தேசத்தைக் காப்பாற்றுவார்களோ, அப்படி தமிழர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்து வந்தாலும் அத்தனையையும் எதிர்கொண்டு முறியடித்து தாய்த் தமிழ்நாட்டைப் பாதுகாத்து, பாதுகாத்து (மேசையைத் தட்டும் ஒலி) வளர்த்தெடுத்து 8 கோடி தமிழ் சமூகம் மட்டுமல்ல, உலகம் முழுக்க பரவி வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் பேரன்பைப் பெற்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களுடைய அரசு. மாண்புமிகு துணை முதலமைச்சரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், துறை சார்ந்த அதிகாரிகளும் தங்களுடைய குடும்பத்தை நேசிப்பதைவிட இந்த நாட்டை, தான் ஏற்றிருக்கிற பொறுப்பை அதிக அளவில் நேசிக்கின்ற கடமையுணர்வைக் கொண்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

2020 மார்ச் 24] [திரு. உ. தனியரசு]

நாம் அறிந்தவரையில், இந்த கொரோனா தொற்றுநோய் குறித்து, 24 மணி நேரமும் உலகத்தில் நடப்பவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி, நம்முடைய நாட்டில், மக்கள் எப்படி விழிப்போடு இருக்க வேண்டும், தற்காப்பாக இருக்க வேண்டுமென்று இந்த அரசு அறிவுறுத்துகின்றது. நாம் எடுக்கின்ற நிருவாக நடவடிக்கையை இன்று இந்தியாவும், உலகமும் வியந்து பார்த்து பாராட்டுகின்ற வகையிலே செயல்படுகிற அரசு, இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் 24 மணி நேரமும் மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவைப் பெற்று சிறப்பாக இயங்குவதைப் பார்க்கின்றோம். நாம் எல்லோரும் சிறப்பாக இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நெருக்கடியில் ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தைப் போக்குவதற்கு சாதாரண எளிய மக்கள், உழைக்கின்ற மக்களெல்லாம் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வார்களென்று எதிர்க் கட்சிகள் கேள்வி கேட்பதற்கு முன்பாகவே, 1,000 ரூபாயை சிறப்பு உதவித் தொகையாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அறிவித்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்கள்.

அதேபோல ரேஷன் அரிசியை மார்ச் மாதத்தில் நாம் பெற்றிருக்கலாம். ஒருவேளை இந்த நெருக்கடியில், பதட்டத்தில் அவர்களுக்கான உணவுப் பங்கீட்டைப் பெற முடியவில்லையென்றாலும்கூட, மார்ச் மாதத்திற்கான தொகுப்பையும் சேர்த்து ஏப்ரல் மாதத்திலேயும் பெற்றுக்கொள்ளலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற ஓர் இனிய, நம்பிக்கையான செய்தியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது அறிவித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்காக மட்டுமல்ல, தமிழ்நாட்டை நம்பி வாழ வந்த இலட்சக்கணக்கான பிற மாநில தொழிலாளர்களுடைய துன்பத்தை, துயரத்தை, பசியைப் போக்கிட அவர்களுக்கும் உரிய ஏற்பாடுகளை, உதவிகளைச் செய்த அரசு, இந்த அரசு.

இன்னும் கூடுதலாக, உலகத்தில் அல்லது இந்தியாவில் வேறெந்த மாநிலமும் அறிவித்திராத ஒரு சிறப்பு அறிவிப்பை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது என்னவென்றால், பொது உணவுக் கூடங்களை அமைத்து, சுவையான உணவைச் சமைத்து, உணவைக் கொண்டுவந்து, பசியாய் இருக்கிறவர்களுக்கெல்லாம் தருகின்ற

[திரு. உ. தனியரசு] [2020 மார்ச் 24

அரசு, உலகத்தில் எந்த இடத்தில் இருக்கின்றது? அதுபோல் சீனாவிலும் இல்லை. ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது. மக்கள் பசிக்கு, சோற்றுக்கு என்ன செய்வார்கள்? இப்பொழுது காய்கறி, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மளிகைக் பொருட்களைத் தேடி மக்கள் அலைகின்றார்கள் என்கின்ற செய்தியை நாம் பார்க்கின்றோம். ஆனால், தமிழ்நாட்டில் உணவுக்காக அல்லது உணவுப் பொருட்களுக்காக நாம் யாரும் முண்டியடித்து அலைய வேண்டியதில்லை. பசி என்ற வார்த்தையே இல்லாமல் இலவச அரிசியைத் தந்த அரசு; இப்பொழுது இலவசமாக உணவையும் சமைத்துத் தருகின்ற பொது உணவுக்கூடத்தையும் அறிவித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் அவர்களுக்கு சிறப்பு ஊதியம் உள்ளிட்ட 82 பல்வேறு அறிவிப்புகளை, அதைக்கூட ரொம்ப பெருந்தன்மையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வோர் அறிவிப்பையும் அறிவித்து அது ஊடகங்களில் வெளியாகி, பல்வேறு செய்தித்தாள்களில் வெளியாகி நாட்டு மக்கள் பார்த்து மகிழ வேண்டுமென்ற விருப்பமிருந்தாலும்கூட, நேரத்தின் அருமை கருதி, மக்களின் நல்வாழ்வுக்காக, வாழ்வாதாரங்களுக்காக அறிவிக்கப்பட வேண்டிய 82 அறிவிப்புகளைக்கூட அறிவித்ததாகப் பதிவு செய்துகொண்டு, என்னுடைய அறிவிப்புகளைப் பதிவு செய்கின்றேன் என்கின்ற பெருந்தன்மையோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்பைச் செய்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமல்ல, இந்தியாவில், உலகத்தின் அரசுகளுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற அரசு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். உள்ளிட்ட அமைச்சரவையின் நிருவாகம் மிகச் சிறந்த ஓர் அரசிற்கு வழிகாட்டுதலாக, மக்களை நேசிப்பதற்கு ஓர் இலக்கணமான அரசாக, புரட்சித் தலைவர், புரட்சித் தலைவியினுடைய கனவை நனவாக்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில் கொரோனா மட்டுமல்ல, எந்தவிதமான தொற்று நோயையும் எதிர்த்துப் போராடுகின்ற ஆற்றல் (மேசையைத் தட்டும் ஒலி) தாய்த் திருநாட்டிற்கு உண்டு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய அரசுக்கு உண்டு என்பதை நிலைநாட்டுகின்ற

வகையில் இந்த அறிவிப்பைச் செய்திட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய தலைதாழ்ந்த பணிவான நன்றியைப் பரிசாக்கி ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் சார்பாக என் நன்றியைப் பதிவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிக்கைகள் அளித்தல்—தொடர்ச்சி

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், அவையோர் எல்லோரையும் வணங்குகின்றேன். இன்று காவல் துறையின் மானியக் கோரிக்கைமீதான விவாதம்.

"கண்துஞ்சார், பசி நோக்கார், கருமமே கண்ணாயினார்" என்றும்,

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்"

என்ற வள்ளுவர் வழியிலும்,

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று தன்னலமின்றிப் பணியாற்றும் காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை, ஊர்க்காவல் படை களப் பணியாளர்களை வணங்கி, பாராட்டி, மகிழ்கின்றேன்.

"விதியின் சுழற்சிகளே, நாம் வெற்றுக் காகிதமே,
அதிசயம், இதை மனிதர் மறந்தே ஆட்டம் போடுவதேன்,
சதிஏதும் இதில் இல்லை, மனிதன் சபலத்தின் பரிசே,
கதிஇனி நம் கையில், அதைக் கழுவும் முறைகளினில்,
கூட்டம் கூடாதீர், கைகள் குலுக்கி நொறுக்காதீர்,
பதுவாய் கும்பிட்டு நகருங்கள், எவரையும் கூடித் தழுவாதீர்,
ஆட்டம்மிகப் போட்டீர் போதும், அடங்கும் வேளை இது,

[திரு. ஆர். நடராஜ்] [2020 மார்ச் 24

அன்பால் அனைவரையும் மனதால் அணைக்கப் பழகுங்கள்
அச்சம் கொள்ளாதீர், பதிலாய், அக்கறை கொள்ளுங்கள்
மச்சம் எவர்க்கோதான், நாம் வெறும் மனிதர் மறவாதீர்
கச்சை கட்டுங்கள், நமது முதலமைச்சர்போல
கச்சை கட்டுங்கள், (மேசையைத் தட்டும் ஒலி)
புதிய களத்தில் இறங்குங்கள்,
கச்சை கட்டுங்கள், புதிய களத்தில் இறங்குங்கள்,
காளி இருக்கின்றாள், நம்பி கடமையாற்றுங்கள்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான நூற்று இருபத்தொன்பதாவது முதல் நூற்று ஐம்பத்து இரண்டாவது வரையிலான 24 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பன்னிரெண்டு முதல் நூற்று பத்தொன்பது வரையிலான 8 அறிக்கைகளை குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் உறுப்பினர் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். இன்றையதினம் உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸைத் தடுக்கின்ற வகையிலே, இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையில், அற்புதமான நடவடிக்கைகளை எடுத்து

2020 மார்ச் 24] [திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்]

வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருக்கின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது மற்றும் ஒன்பதாவது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல் வந்தாலும், வெள்ளம் வந்தாலும், எந்த வகையில் இடர் வந்தாலும், தன் நாட்டு மக்களின் கண்களில் கண்ணீர் வருகிறதென்றால், அதைத் துடைப்பதற்கு ஓர் இதயம் இருக்கிறதென்றால், ஓடோடி வருகிறவரென்றால், அது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ‘கண்ணீரைத் துடைப்பதற்கு நான் இருக்கிறேன்’ என்று ஓடோடி வந்து துயர் துடைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கே! நாட்டு மக்களுக்குத் துயர் வருகின்றபோது இந்த மக்களாட்சி மணிமண்டபத்திலே நின்று மக்களுக்காகப் பேசுவதை விட்டுவிட்டு ஓடோடிச் சென்றவர்கள் எங்கே! நாட்டு மக்களுக்கு, நம் குடிமக்களுக்கு, குடும்பங்களுக்கு ரூ.1,000/– தருகின்ற நம்முடைய அருள்நேசர், ஆயிரத்தில் ஒருவரின் அன்புத் தம்பி, (மேசையைத் தட்டும் ஒலி) அரிசி தருகின்ற நம்முடைய அன்னபூரணியினுடைய வழித்தோன்றல், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, அவருக்குத் துணை நிற்கின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்து ஏழாவது அறிக்கையை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு உவகையோடு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(இ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

(ஈ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

(உ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(ஊ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

(எ) கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

(ஏ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(ஐ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(ஒ) கோரிக்கை எண் 27–தொழில் துறை

(ஓ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

(ஔ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

(அஅ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அஆ) கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(அஇ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(அஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(அஉ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(அஊ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(அஎ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்

(அஏ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(அஐ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(அஒ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அஓ) கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை

(அஔ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(ஆஅ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஆஇ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசால், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறித்து விரிவான விளக்கங்களை கிட்டத்தட்ட பேரவை நடைபெற்ற ஒவ்வொரு நாளிலும் அளித்திருக்கின்றேன். கொரோனா வைரஸ் குறித்து, நமது மாநிலத்தில் வசிக்கின்ற எந்தவொரு மக்களும் எந்த வகையிலும் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை நானும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களும் விரிவாக எடுத்துக் கூறி வந்தோம். இருப்பினும், இங்கிருந்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர், பீதியைக் கிளப்புகின்ற வகையில், பேரவையிலும், அதேபோன்று வெளியிலும் தொடர்ந்து பேசி வந்தனர். பேரவையை ஒத்திவைக்க வேண்டும், பேரவையை விரைவில் முடிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்து வந்தனர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களோடு கலந்துபேசி, அதனடிப்படையில் நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக் குழு கூடி, ஒரு முடிவினை எடுத்து, அம்முடிவு பேரவையால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிலுவையிலிருந்த ஏனைய மானியக்

கோரிக்கைகள் இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,437,99,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.431,50,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,25,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆ யத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.373,77,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.31,90,69,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய மானியக் கோரிக்கைகளும் தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர்களால் முன்மொழியப்பெற்ற பின்னர், அவர்களது துறைகள் குறித்து தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, அவற்றையும் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்கள் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.

(இ) கோரிக்கை எண் 38-பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38– பொதுத் துறை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிறுவனத் தலைவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், கட்சியையும், கழகத்தையும், ஆட்சியையும், காவல் தெய்வமாக இருந்து எங்களை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.482,12,44,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 487 முதல் 616 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஈ) கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.66,42,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(உ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.47,10,38,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

முற்பகல் 10–25

(ஊ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,169,60,35,000/–, மூலதனக் கணக்கில் ரூ.500,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.126,46,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(எ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,655,73,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.364,20,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,169,25,02,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஏ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.319,73,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஐ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.35,142,74,33,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை, நிதித் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒ) கோரிக்கை எண் 27-தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை உலகளவில் உற்பத்தி மையமாக மாற்றி, தொலைநோக்குடன் கொள்கைகள் பல வகுத்து, அதனைச் செவ்வனே செயல்படுத்தி "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று முனைப்புடன் வாழ்ந்து, இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவராக உருவெடுத்து, 21 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிக்காட்டிய பெருமைக்குரிய எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் குடியில் பிறந்து குடிமராமத்துத் திட்டம், அத்திக்கடவு–அவினாசித் திட்டம், சரபங்கா நீரேற்றுத் திட்டம் மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் போன்ற பல திட்டங்களை அறிவித்து, மேலும், காவேரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்து, உணவு தானிய உற்பத்தியில் மாநிலத்தின் நீடித்த, நிலையான வேளாண் வளர்ச்சிக்கும், தொடர் தேசிய விருதுக்கும் வித்திட்டு, ஏர் உள்ள காலம் வரை வேளாண் குடிமக்களின் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தின்

@ 617 முதல் 894 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் III, IV, V, VI மற்றும் VII ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நிதிநிலையை மாற்றார் வியக்கும்வண்ணம் செம்மைப்படுத்தி வழங்கி, மக்கள் நலத் திட்டங்கள் பல செயல்படுத்தி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் இயக்கத்திற்குப் பாதுகாவலராக இருந்து, கழகத்தை கண்ணுங்கருத்துமாக கட்டிக் காத்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு, இக்கழகம் இரும்புக் கோட்டையாகத் திகழ்வதற்கு காரணமாக இருந்து வரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10–30

சங்கரி மண் தந்த இவ்வவையின் நாயகர், நடுநிலை தவறாது அவைக்கு நாளொரு தீர்ப்பை வழங்கி வரும், மதிப்பிற்கும், மரியாதைக்கும், போற்றுதலுக்கும், வணக்கத்துக்குமுரிய இயக்கத்தின் மூத்த முன்னோடி மாண்புமிகு சபாநாயகர் அவர்களை வணங்குகின்றேன்.

கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடியான தமிழர்தம் உயர் பண்பாட்டை எடுத்துக்கூறும் வகையில், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றை உலகுக்கு மீண்டும் உரக்கக் கூறும் விதமாக உலகத் தமிழர்களை இணைக்கும் 'யாதும் ஊரே' என்ற புதியதோர் உறவுப் பாலத்தை நியூயார்க் நகரில் துவக்கி, புதிய வரலாறு படைத்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை@ பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,716,53,00,000/–, மூலதனக் கணக்கில் ரூ.20,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.100,25,14,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 895 முதல் 990 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(ஓ) கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை@ பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,950,10,14,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,911,53,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்க இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரே ஆண்டிலே 11 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்புதலைப் பெற்று ஒரு மகத்தான வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறார்கள். இந்த 11 மருத்துவக் கல்லூரிகள்மூலம் இந்திய வரலாற்றிலேயே யாரும் செய்யாத அளவிற்கு ஒரே ஆண்டிலே 1,650 எம்.பி.பி.எஸ். இடங்களை இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி, ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியும் வருங்காலத்தில் ஒளிரக்கூடிய, மிளிரக்கூடிய, ஏழையெளிய தமிழ்நாட்டு மாணவர்கள் பயன்பெறக்கூடிய வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே செயல்படும் இந்த ஆட்சியிலே மருத்துவர்கள், செவிலியர்கள், paramedical staff என 33,124 பேருக்கு பணி நியமனங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வழங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு மத்திய அரசு கொரோனா வைரஸ் தொற்றை ஒரு பேரிடராக அறிவிக்கை செய்துள்ள இந்தப் பதற்றமான

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 991 முதல் 1243 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சூழ்நிலையில்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு கொரோனா தடுப்புப் பணிக்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒவ்வொரு நாளும் உற்றுநோக்கி, அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். கொரோனா தொடர்புடைய பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், அனைத்து மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், காவல் துறை, பேரிடர் மீட்புத் துறை, உள்ளாட்சித் துறை, கல்வித் துறை மற்றும் வருவாய்த் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளைச் சார்ந்த பணியாளர்களும் தங்களுடைய உயிரை துச்சமெனக் கருதி, இரவு பகலாக முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்தக் கோரிக்கைக்கு ஏற்ப களத்திலே நின்று இன்றைக்கும் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய, இனி என்றைக்கும் பணியாற்றக்கூடிய அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரு நிமிடத்தில், ஒரேயொரு கவிதை வடிவிலான ஒரு கருத்தை நான் இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன்.

நமது சேவைகளால் வெல்லட்டும் மனிதம்! வீழட்டும்
 உயிர்க்கொல்லி!
அழித்தொழிப்போம் உயிர்க்கொல்லியை! 'கொரோனா'
உலகை நடுங்க வைக்கும் ஒற்றைச்சொல்!
உலகமே பதறிக் கிடக்கிறது.
கண்ணுக்குத் தெரியாத இந்த
உயிர்க்கொல்லியின் வேகத்திற்கு எதிராக
துணிந்து நிற்பது மட்டுமல்ல,
உணர்வால் ஒன்றுகூடி
ஒவ்வொருவரும் இடைவெளிவிட்டு,
தூர நிற்பதே சாலச் சிறந்தது.

முற்பகல் 10–35

வெள்ளிக்கிழமை நள்ளிரவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அதிகாலை ஒரு மணிக்கு நான் அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனைக்கு ஆய்வுக்குச் சென்றபோது, அங்கே காற்றுப் புகாத கவச உடையுடன் முகக்கவசத்தையும், தன்னுடைய முகத்திலே அணிந்திருந்த மருத்துவரை நான்

கனிவோடு 'உங்களுக்கு ஏதாவது சிரமம் இருக்கிறதா?' என்று கேட்டேன். அங்கே முகக்கவசத்துடன் முழுக் கவச உடை அணிந்த மருத்துவர் ஒருவர் சொன்னார், 'சேவை செய்வதே எங்கள் பணி, மனதார செய்கின்றோம்'. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த மருத்துவர், 'ஒரேயொரு சிரமம். இந்தக் கவச உடை அணிந்துள்ளதால் தாகத்திற்கு எங்களால் தண்ணீர் குடிக்க முடியவில்லை' என்று சொன்னார். I was emotional. என் கண்களிலே கண்ணீர் நிறைந்தது. மகத்தான மருத்துவ சேவை கண்டு நான் மலைத்துப் போனேன். இதையெல்லாம் உணர்ந்து நாம் விழிப்போடு இருக்கவும், மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பிலே அறைகூவல் விடுக்கின்றோம். அசுரத்தனமான வேகத்தில் பணியாற்றினால் மட்டுமே ஒவ்வொரு உயிருக்கும் பாதுகாப்பு அளிக்க முடியும் என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அன்போடு 'தம்பி, நேற்று என்ன நடந்தது, தம்பி, இன்று என்ன செய்கின்றாய், தம்பி, இன்னும் என்ன வேண்டும், இந்த அரசு இன்னும் மக்களுக்காக என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டு அன்புக் கட்டளையிடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவாகப் பேசுகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவான அறிக்கைகளை வெளியிடுகின்றார். மக்கள் நலன் காக்க மகத்தான உத்தரவுகளை ஒவ்வொரு கணப்பொழுதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பிறப்பித்துக்கொண்டிருக்கிறார். இந்தக் கொரோனா தடுப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னை இன்னும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார். ஊண், உறக்கமின்றி, காலநேரம் பாராது, கணப்பொழுதும் ஓயாது, சுற்றிச் சுழன்று மகத்தான சேவை செய்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர். மெச்சுகிறேன் நம் மருத்துவத் துறையை, நெஞ்சார நெகிழ்ந்து பாராட்டுகின்றேன். நம் சேவைகளால், வெல்லட்டும் மனிதன், வீழட்டும் இந்தக் கொரோனா உயிர்க்கொல்லி என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஔ) கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 5, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், 8–வது வள்ளல், பேரறிஞர் அண்ணாவின் இதயக் கனி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்குத் தந்த கொடை புரட்சித் தலைவி அம்மா! கழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதங்களில் என் விழியில் கசியும் கண்ணீரால் என் வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன். அம்மாவின் மறைவுக்குப் பிறகு அச்சத்தில் கிடந்த தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் உச்சத்தில் நிறுத்தி, டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக பிரகடனம் செய்த உலகத் தமிழினம் போற்றும் முதல்வனே, உழவினம் காத்த உழவனே, கழனிகளின் நாயகன், காவேரி உரிமை காத்த தாயவன். 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற அம்மாவின் தாரகமந்திரத்தின்படி பொற்கால ஆட்சி நடத்திவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை காவேரி காப்பாளராக, உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழர்களும் வாழ்த்தி வணங்குகிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் சொல்லி, அம்மா அமைத்துக் கொடுத்த ஆட்சித் தேருக்கு அச்சாணியாகத் திகழும் தேனி தந்த திருமகன், பெரியகுளம் தந்த பெரிய பலம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கங்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையை சொற்சிலம்பம் ஆடுகின்ற நிலமாக்கி, சுவைகுன்றா களமாக்கி, சாதுரியத்தோடு இப்பேரவையை வழிநடத்தும் அவிநாசி மண் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை@ பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,387,31,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.376,41,77,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.130,75,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 1244 முதல் 1571 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அ)அ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டிலே நீர், நிலம், காற்று ஆகிய இயற்கையை தெய்வமாக வணங்குகிற மக்கள் உண்டு. கடவுளின் திருவுருவச் சிலையை, சிலையாக வடித்து, தெய்வமாக வணங்குகிற மக்கள் உண்டு. புனித சிலுவையை தெய்வமாக வணங்குகிற மக்கள் உண்டு. புனித பிறையை தெய்வமாக வணங்குகிற மக்கள் உண்டு. ஆனால், தன்னைத் தலைமை தாங்கி நல்வழிப்படுத்திய பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களையும், தமிழர்குல சாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் இறைவனாக இதயத்திலே நிறுத்தி, பூஜித்து வணங்கிவருகின்ற தொண்டர்கள் அகிலத்தில் உண்டென்றால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றிலேதான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மகராசித் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், பாரத ரத்னா புரட்சித் தலைவர் அவர்களையும் தெய்வமாக இதயத்திலே நிறுத்தி, உலகத்திலேயே ஒரு தொண்டர் கட்சியையும், ஆட்சியையும் தலைமை தாங்கி சரித்திரம் படைக்கின்ற சாதனையை இந்த அன்னை தமிழகத்திலே படைத்திருக்கின்றார்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 மனிதர்கள் சேர்ந்து சிந்திப்பதை ஒருவர் சிந்தித்தால் அவர்தான் அறிஞர். 100 அறிஞர்கள் சேர்ந்து சிந்திப்பதை ஒருவர் சிந்தித்தால் அவர்தான் மேதை. 100 மேதைகள் சேர்ந்து சிந்திப்பதை ஒருவர் சிந்தித்தால் அவர்தான் ஞானி. 100 ஞானிகள் சேர்ந்து சிந்திப்பதை ஒருவர் சிந்தித்தால் அவர்தான் தலைவர். இதய தெய்வம் அம்மாவிற்குப் பிறகு கழகத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர்களாக உருவெடுத்திருக்கிற நம் பாசமிகு அண்ணன்மார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி காப்பாளராக இவ்வுலகமே, விவசாய சமுதாயமே வணங்குகிற மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களையும்,

இன்றைக்கு மனிதநேய காப்பாளராக விளங்கும் தாய்த் தமிழ் வணங்குகிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், இந்தச் சட்டமன்ற மாண்பின் காப்பாளராக விளங்கும், எல்லோரும் வணங்குகிற மாண்புமிகு சபாநாயகர் அவர்களையும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களையும் வணங்கி, என் உயிரினும் மேலான இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழர்குல சாமி அம்மா அவர்களை கண்ணீரால் வணங்குகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் தொடர்ந்து பேசும் நல்வாய்ப்பினை இந்தச் சாமானியனுக்கும் வழங்கிய அந்தத் தெய்வத் தலைவியை மீண்டும் ஒருமுறை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை@ பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.153,86,89,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஆஆ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை@@ பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1573 முதல் 1653 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1654 முதல் 1801 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ரூ.6,999,06,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.114,00,72,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஇ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 51– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,370,16,36,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)@ பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.141,50,12,000/–, மூலதனக் கணக்கில் ரூ.206,88,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஉ) கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)@@ பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.480,39,53,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1802 முதல் 1926 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1927 முதல் 1956 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XIV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(அஊ) கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)@ பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.406,45,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஎ) கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை), மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)@@ பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.31,11,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1957 முதல் 1981 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 1982 முதல் 2076 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XVI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஏ) கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் அனைத்தும் தந்து, ஆக்கபூர்வ சிந்தனை கொண்டு, அளவற்ற அக்கறையால் அனைவருக்கும் ஆதரவாய், அனைத்திற்கும் ஆதாரமாய், அகிலம் போற்றும் அன்பெனும் ஆலயமே! அம்மா எனும் தெய்வமே! உமை முதற்கண் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எளிமையிலும் எளிமை, புதுமையிலும் புதுமை, வலிமையிலும் வலிமை, சேலம் தந்த இனிமை, தனது சாணக்கியத் தன்மையால், எண்ணிலடங்கா திட்டங்கள், ஏற்றமிகு நடவடிக்கைகள், தினந்தோறும் சாதனைகள், துறைதோறும் விருதுகள், சங்க காலமும் மிஞ்சிடும் ஆட்சி, எங்கள் சாமானியரின் சாதனை ஆட்சி! உட்கட்டமைப்பில் முதலாவது, பொதுப் பாதுகாப்பில் முதலாவது, பொதுச் சுகாதாரத்தில் இரண்டாவது, சுற்றுச்சூழலில் மூன்றாவது, மனித வளத்தில் ஐந்தாவது, ஒட்டுமொத்தத்தில் ஒன்றாவது என மாநில வரிசையில் அனைத்து மாநிலங்களையும் புறந்தள்ளி, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை வழியில் அயராது உழைத்து, எதிலும் தமிழகம் முதலிடம், வளர்ச்சிப் பாதையில் தனியிடம், அதுதான் எடப்பாடியாரின் மானுடம், மக்கள் மனங்களில் என்றென்றும் தனியிடம் என மீத்தேன் பூமியை மீட்டெடுத்து, காவேரியில் தடம் பதித்து, வளர் விவசாயம் காத்திட்ட காவேரி காப்பாளரே! நாடு போற்றும் நல் ஆளுமை நாயகரே, எங்கள் புரட்சி முதல்வரே, தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 10–45

அமைதியிலும் அன்பு, பொறுமையிலும் பண்பு, பணிவிலும் மாண்பு, புன்னகையே தன் வாழ்வு என தாயைக் காத்த தனயனாய், அன்னைத் தாயின் வரம் பெற்று, தென்னையைப்போல் நிமிர்ந்து

நிற்கும் தெளிந்த நற்சிந்தனையுடைய தலைவர் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்.

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்"

என்ற குறளின்படி, உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவுநிலைமையாம் என்ற பொருளுக்கேற்ப வழுவாது நிற்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை@ பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.575,71,91,000/–, மூலதனக் கணக்கில் ரூ.31,65,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஐ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உழைப்பவரே உயர்ந்தவர்' என்ற பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கருத்துப்படி, நம் தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகவும், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், எண்ணற்ற நல்ல பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள்.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2077 முதல் 2178 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XVII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், அமைப்புசாரா தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் என அனைத்துப் பிரிவு தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் நல்வாழ்வு பெற நலத் திட்ட உதவிகள் பலவற்றையும் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவினைப் போற்றுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பிய சரித்திரத்தின் சிறப்பியாக, விண்ணும் மண்ணும் அதிரவே வெற்றிகள் குவித்த நெப்போலியன் போனபார்ட் ஆஸ்திரியாவை வென்றான். ஆஸ்பெர்லிட் எனும் இடத்தில் பிரஸ்யா, பிரிட்டன், ரஷ்யா என்று கூட்டு சேர்ந்து வந்த மொத்தப் படைகளையும் கொத்தோடு வீழ்த்தி, கொடிநாட்டி நின்றான். ஐரோப்பாவின் பெரும்பகுதி அவன் வசமானது. அதைக்கண்டு, இங்கிலாந்தின் பிரதமர் வில்லியம்பிட், 'ஐரோப்பிய தேசப் படத்தை சுருட்டி வைத்துவிடுங்கள், இனி அதற்கு அவசியம் இல்லை' என்று அறிவித்தார். ஆம், அதுபோன்ற நிகழ்வு, நாளை வரும் தேர்தலில், நற்றமிழ் பூமியில் நடைபெறுவது நிச்சயம். எதிர்க்கட்சிகளின் கொடிக்கு இனி அவசியம் இல்லை என (மேசையைத் தட்டும் ஒலி) அதனை மூலையில் சுருட்டி வைத்து முடக்குகின்ற வரலாற்றை, உழவன் வீட்டில் உதித்த புதல்வன், உலகத் தமிழினம் போற்றும் ஒப்பில்லா முதல்வர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் எழுதத்தான் போகிறார்.

கைராசி முதல்வராக, கடமையில் குன்றாத காவலராக, இரவு பகல் பாராத, இமை துஞ்சா உழைப்பால் இந்தியாவின் தலைசிறந்த மாநிலம் தமிழகம் என்கின்ற ஈடில்லா பெருமையை ஈட்டி வந்த இந்தப் புன்னகை போராளியின் போர்க்கோலம், கழகத்தை ஏழாம் முறை அரியணையில் அமர்த்தும். ஏழாவது முறை மட்டும் அல்ல; தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் ஆட்சியே மலரும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாகத் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதலிடத்திற்குக் கொண்டு வந்த சாதனை நாயகன், காவேரி டெல்டா பூமியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு சட்டம் கொண்டு வந்த விவசாயிகளின் விடிவெள்ளி, 'மலர்ந்த முகமே வாழ்வின் இன்பம்' என்று மகாகவி பாரதியார் சொன்னதைப்போல, என்றும் புன்னகை மாறாத பொலிவோடு காட்சி தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார்

அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கும், கட்சிக்கும், எந்நாளும், எப்போதும் துணை நிற்கும் மாற்றாரும் போற்றும் மனிதநேயப் பண்பாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், இந்தப் பேரவையை அமைதி வழியில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக நடத்திச் செல்லும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் மற்றும் இங்கு அமர்ந்துள்ள அனைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னுடைய துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை@ பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,573,11,36,000/–, மூலதனக் கணக்கில் ரூ.77,06,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஓ) கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்– நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2179 முதல் 2286 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XVIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நீதிநெறி நின்று, நீதி வழுவா ஆட்சி புரிந்த மனுநீதிச் சோழனுக்கு நிகராக நடுநிலையோடு இந்த அவையை வழிநடத்தும் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். இமய மலையையே உருவாக்குவோம் எனத் தமிழ் இதயங்களைப் பாழ்படுத்தியவர்கள் மத்தியில், ஏழைகளின் துயர் துடைத்தலே தலையாயப் பணி என்று தடம் பதித்து, அதில் எங்களைப் பயணம் செய்ய வைத்த பொன்மனச் செம்மல், பாரத ரத்னா, எங்கள் ஆசான் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'பற்றாமல் பற்றி நின்ற அறிவுப் பசியென்னும் தீப்பிணிக்கு கற்றோரும் வியக்கும் வண்ணம்' ஏழைப் பெண்களுக்கு மடிக்கணினி கொடுத்து, அகிலத்தில் புரட்சி செய்தவர் எங்கள் மாபெரும் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வற்றாத பேரன்பால் படிக்க வகை, வகையாய் பொருள் தந்து, நற்றாய் எங்கள் அம்மா, 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்த சிறந்த மங்கையர் திலகம் எங்கள் அம்மா. 'பெற்றால்தான் தாயா என்று பேதலித்து நின்றோமே' என கையறு நிலை கவிதை பாட வைத்து நம்மைப் பிரிந்து மெரினாவில் துயிலும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எளிய அணுகுமுறை, உயர்ந்த எண்ணம், ஓய்வில்லா உழைப்பு; கம்பனும், பாரதியும், பாரதிதாசனும், கண்ணதாசனும் கவிதைகளால் இலக்கியங்களை அகழ்ந்தெடுத்தனர். தொன்மை மரபுகளை, தொலைந்த பண்பாடுகளை அகழ்ந்தெடுத்து வைத்த இடம் கீழடி. அதற்கு உற்ற துணையாகவும், தத்துவம் யாவும், தமிழ்மொழியானது போல சத்தியம் செய்வேன், எங்கள் அண்ணன் எடப்பாடியார்தான் 'மக்கள் தலைவன்' என்று. தமிழ்த் தாயின் தாய்ப் பால் உண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் வீரம் கொண்டு, மாநிலங்களிலேயே முதலிடம் கொண்டு, முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக தமிழகத்தை ஆள்கிறார் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

முகமிழந்து போனாலும், முகவரியைத் தொலைத்தாலும், முதுமையில் வீழ்ந்தோர்க்கும் முத்தான திட்டங்களால் மிளிர்கிறார், ஒளிர்கிறார் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) டெல்டாவை 'உல்டா'வாக்கியவர்கள் மத்தியில், விவசாயிகளின் காவலனாய், காவேரி காப்பாளனாய் திகழ்கிறார் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்துவந்த வழியில், இந்தத் திக்கற்ற பறவைகளுக்கு

கருணை நிழல் காட்டும் வேடந்தாங்கலாய் விளங்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியத் தாயின் மைந்தனின் வழிநின்றும், அன்னை சந்தியா பெற்றெடுத்த அரும்புதல்வியின் நெறி நின்றும், எங்கள் தங்க மகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

'அதியமானுக்கும், அவ்வைக்கும் இடையே இருந்த அன்பும், நட்பும்', 'கோப்பெருஞ்சோழனுக்கும், பிசிராந்தையாருக்கும் இடையே பொங்கி வழிந்த பாசமும் நேசமும்' என்பதைப்போல அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும், அண்ணன் ஈ.பி.எஸ். அவர்களும் எங்களைச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள். அம்மாவின் ஆட்சியை தொய்வின்றி கொண்டுசென்று, எதிரிகளுக்கு ஏமாற்றத்தைத் தந்து, புதிய சரித்திரமாய் திகழ்பவர்கள் எங்கள் அண்ணன்மார்கள் இருவரும். (மேசையைத் தட்டும் ஒலி) தேனி தந்த தங்கம், தென்னாட்டுச் சிங்கம், தமிழர்களின் வீரம் காத்த 'ஜல்லிக்கட்டு' நாயகன் எங்கள் துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)@ பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.408,01,30,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஓ) கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2287 முதல் 2346 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XIX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“போக்குவரத்துத் துறை@ பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,756,15,95,000/–, மூலதனக் கணக்கில் ரூ.192,00,07,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.768,10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(அஔ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் உயிர் காக்க தன்னுயிர் பேணாத தமிழகத்து தூய்மைப் பணியாளர்கள், செவிலியர்கள், மற்றும் மருத்துவர்களின் பாதம் தொட்டு பணிந்து வணங்குகிறேன். அவர்கள் இன்று முதல் மனிதர்கள் அல்ல; மண்ணுலகம் காக்க வந்த மகாத்மாக்கள். அவர்களுக்கு ஒட்டுமொத்த தமிழகத்தின் சார்பாக ஓராயிரம் நன்றிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஒளிவிளக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், தமிழர் குலசாமி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அம்மா அவர்களின் ஆண் உருவம் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், பண்பின் பாசறை அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், அறத்தின் நாயகன் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், எனக்கு வாழ்வில் வழிகாட்டிய அனைத்து அமைச்சர்

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2347 முதல் 2445 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாசம், நேசம் கலந்த வணக்கத்தைப் பணிவோடு சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை@ பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,735,74,18,000/–, மூலதனக் கணக்கில் ரூ.353,53,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஆ.அ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடி முதல் அழகன்குளம் வழியாக ஆதிச்சநல்லூர் வரை அகழ்வாய்வுகள், Harvard முதல் Houston வரை தமிழிருக்கைகள், Paris முதல் Durban வழியாக Chicago வரை உலகத் தமிழ் மாநாடுகள் என்று உலகெங்கும் தமிழ்க்கொடியை பறக்கவிட்ட, அதேபோல தமிழ்ப் பல்கலைக்கழகம், இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம், உலகத் தமிழ் ஆட்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம் ஆகிய கட்டமைப்புகளுக்கு உயிர் தந்து தமிழ் மொழி, தமிழ்க் கலை, தமிழ் பண்பாடு அனைத்தும் புத்துயிர் பெற அடித்தளமிட்ட புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் இந்தத் துறைகளுக்குப் புத்துயிர் தந்த

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2446 முதல் 2504 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர், காவேரி காப்பாளன் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் ஜல்லிக்கட்டு நாயகன் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)@ பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,82,99,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஆஆ) கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

***மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளந்தி சனங்களின் விழிநீர் துடைக்க வந்த வேதா இல்லத்து விலாசம்; பொன்னந்திப் பொழுதாக புனல் காலை விடியலாக மண்ணுலக தமிழர்களின் மலர்ச்சிக்கு தன்னையே தந்துழைத்த தாயுருவ தெய்வம்; சிறுமை கண்டு பொங்கிய சிங்கம்; செப்பு கலக்காத எங்கள் சொக்கத் தங்கம்; கோடி வருடம் கடந்தாலும், வாழும் மக்களின் நாடி நரம்புகளில் ‘அம்மா’ எனும் ஒற்றைச் சொல்லால் உயிர் வாழ்கிற ஒப்பில்லா உறவு; (மேசையைத்

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2505 முதல் 2718 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXII ஆக அச்சிடப்பட்டுள்ளன.

தட்டும் ஒலி) புழுதிகளில் உழுதுகொண்டிருந்த என் போன்ற எளியவர்களையும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு அழைத்து வந்த பொக்கிஷம்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மண்ணுள்ள காலம் வரை மறக்க முடியா மகராசி; 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்னும் பொன்மொழியைப் பதித்து போன போயஸ் தோட்டத்து புகழரசி, நான் வணங்கும் இதய தெய்வம், அம்மா உறைந்திருக்கும் வங்கத்து கடல் நோக்கி என் வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மகராசி வழி வந்த முகராசிக்காரர், மனம்விட்டு பேசுகின்ற மழலைச் சிரிப்புக்காரர், (மேசையைத் தட்டும் ஒலி) கருணைத் தாய் வழி நடக்கும் கைராசிக்காரர், கடல் அளவே இடராயினும், எதனையும் ஒரு கை பார்த்துவிடுகிற கடின உழைப்புக்காரர், எங்கள் மானாவாரி மண்ணுக்கும் வைகை குண்டாறை வரவழைத்து, வறண்ட பூமிக்கும் வசந்த காலத்தை வரவு வைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கழனியின் நாயகன், காவேரி காப்பாளன், கண்மாய் குளங்களைத் தூர் வாரி கரிகாலன் காலத்தை கண்முன்னே நிறுத்திய குடிமராமத்து வேந்தன், உழவினத்தைக் காத்திட உழவன் வீட்டில் உதித்த முதல்வன், உலகெங்கும் வாழும் தமிழர்களையெல்லாம் ஆச்சரியப்பட வைத்த எளிமை சாமானியன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களே! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிய நாட்டுத் தங்கம், பதறாத பண்பின் அங்கம், மகராசியின் மகுடத்தை முகராசியோடு மூன்று முறை சுமந்த மக்கள் தொண்டன், (மேசையைத் தட்டும் ஒலி) விண்முட்டும் அதிகாரம் தன்மட்டில் இருந்தாலும் தலைக்கனம் இல்லா இலக்கணம், வளர்தமிழ் பூமிக்கு வாடிவாசல்களைத் திறந்துவிட்ட வரலாற்று நாயகன், கழகத்தின் பரதன், கழக அரசின் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே, காட்டாற்று வெள்ளமாக ஓடிவரும் நீரையெல்லாம் வாய்க்கால்களை வகுத்து கழனிக்குச் சேர்க்கிற ஒரு விவசாயி போல, சொற்போர் நடக்கும் இச்சபைக்கு சுவை கூட்டி, இப்பேரவையை தெள்ளிய நதிபோல தன் திறமையால் வழிநடத்தும் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், கண்ணனுக்கு குசேலனாக, ராமனுக்கு குகனாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு துணை நின்று இப்பேரவையை வழிநடத்தும் மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்,

சிவகங்கை தொகுதி மக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)@ பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.221,04,27,000/– க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை, வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

(ஆஇ) கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்னும் சொல்லில் அகிலத்தைக் காத்து அன்பும், அருளும் இணை பிரியாததாக இருந்த தமிழ்நாட்டின் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து, அம்மா அவர்களின் சீரிய பாதையில் தொடர்ந்து நடைபோட்டு, மூன்று ஆண்டுகளில் முத்தாய்ப்பான திட்டங்களாலும், வெளிநாடுகளின் முழுமையான முதலீடுகளாலும், தமிழகத்தைத் தொழில்மயமாக மாற்றிக்காட்டி, உண்மையை மட்டுமே உரக்கப் பேசி, ஊருக்கு உழைத்து வரும் உழவர் குலத்தின் ஒளிவிளக்கே, காவேரி டெல்டா மாவட்டங்களை சிறப்பு பாதுகாப்பு வேளாண் மண்டலமாக அறிவித்து, காவேரி

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2719 முதல் 2815 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

காப்பாளராகவும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு இளைஞர்களை மருத்துவர்களாக உருவாக்க ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளைத் தந்து தமிழகத்தை உயர் கல்வியில் உயர்த்தி நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தோளோடு தோள் சேர்ந்து பாடுபடும் ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்கி இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)@ பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.278,16,88,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்படவில்லை.

மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இன்று இருபத்து ஏழு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இருபத்து ஏழு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பாகம் 2-ல் 2816 முதல் 2916 வரையிலான பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இணைப்பு XXIV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

4. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், சொல்லுங்கள்.

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைச் சொல்; உறுதியாய் சொல்; இறுதிவரை சொல் என்று வாழ்ந்து, இன்றைக்கும் பஞ்சபூதங்களில் ஒன்றாக வாழ்ந்துகொண்டிருக்கும் என் தெய்வத் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை வணங்குகிறேன். என்னைப் போன்ற சாமானியர்களெல்லாம் இந்த இடத்தில் இருக்க முடியும் என்ற ஒரு சூழலை உருவாக்கிக் கொடுத்து, நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பதிவு செய்ததைப் போல், படுக்க இடமில்லாமல் இருந்த என்னை, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்தின் அடுக்குமாடிக் குடியிருப்பில் அமர வைத்து அழகு பார்த்த புரட்சித் தலைவி அம்மா, எங்களுக்கான, என் சமூகத்திற்கான அடையாளத்தை கொடுத்த, எங்களுக்கான முகவரியைக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை நன்றியோடு நினைத்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை; உலகமே நடுங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் மருத்துவத் துறையில், பண்பட்ட வளர்ச்சியடைந்த இத்தாலி போன்ற நாடுகளெல்லாம் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றன. இந்த ஒரு சூழ்நிலையிலே, கொரோனா நோயைப் பொறுத்தவரை குறிப்பாக தமிழகத்தினுடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலான நமது சுகாதாரத் துறை, இந்தியாவிற்கே முன்னோடியாக விளங்கி வருகிறது. இன்றைக்கு உண்மையைச் சொல்ல வேண்டுமேயானால் படித்தவர்கள், பாமரர்கள், ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல், அனைத்து மக்களாலும் உண்மையாக ஆத்மபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முதல்வராக, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய சாதுர்யமான செயல்பாடுகளாலும், தனக்கு வரக்கூடிய இடர்பாடுகளையெல்லாம் தனது அனுபவத்தின் மூலமாகவும், அதிகாரிகளின் ஆலோசனைகளின் மூலமாகவும், அந்தந்தத் துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களின் ஆலோசனைகளின்படியும், அனைவரையும் மதித்து, அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு, உடனடியான முடிவுகளை

எடுத்து, இன்றைக்கு இந்தக் கொரோனாவை ஒழிக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே இந்தியாவிற்கே முன்னோடியான ஒரு மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிப்படிகளை மேலும் மேலும் எடுத்து வைத்துக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் சார்ந்த என் முக்குலத்தோர் புலிப்படை சார்பாக மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

அதே தருணத்தில் நேற்று இரவு 12 மணி இருக்கும்; ஒருவர் எனக்கு தொலைபேசியில் அழைக்கிறார். சுங்கச்சாவடிகளிலெல்லாம் மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பயணிக்கக்கூடிய மக்கள் எல்லாம் 3 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு நின்று கொண்டிருக்கிறார்கள் என்று ஒருவர் சொன்னவுடன், நான் உடனடியாக அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உதவியாளரிடத்தில் சொன்னேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய உதவியாளரிடத்திலும் சொன்னேன். அடுத்த நிமிடம் அந்த இடத்திலிருந்து பேசியவர் எனக்கு தொலைபேசியில் மறுபடியும் தொடர்பு கொண்டு, "அண்ணா அவர்கள் பஸ்களை எல்லாம் நிறுத்தாமல் தனி வழியில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள், உடனே அந்தப் போக்குவரத்து நெரிசல் சரி செய்யப்பட்டுவிட்டது" என்று சொன்னார். நேற்று இரவு 12 மணிக்கு நான் தொடர்பு கொண்டபோது நடந்த ஒரு விஷயம் இது. (மேசையைத் தட்டும் ஒலி)—ஆக, யார் சொல்கிறார்கள் என்ற பார்வையில்லாமல்—இந்தக் கொரோனாவால் ஒரே ஓர் உயிரைக்கூட இந்தத் தமிழகத்தில் நாங்கள் பலி கொடுக்க மாட்டோம்; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக எதையும் இழப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்தார்கள். அந்த சூளுரை வார்த்தை ஜாலம் அல்ல; அதனை செயல் வடிவமாகக் காட்டிக்கொண்டிருக்கிறார் மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்கள். அவருக்கு உறுதுணையாக இருக்கிறார் நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் என்பதை நான் இந்த மன்றத்தில் பதிவு செய்கின்றேன். இதே தமிழகத்தில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஏன் இங்கே இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகள் உட்பட அனைவரும் இந்த இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக

இருக்கக்கூடிய இந்தத் தருணத்தைத்தான் நான் நினைத்துப் பார்க்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல், நான் இல்லாவிட்டாலும், எனக்குப் பிறகு 100 ஆண்டுகளானாலும் அழியாத, உடைக்க முடியாத, ஓர் எஃகுக் கோட்டையாக இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்று சொன்னாரே, அது நடக்கும் என்பதை மாண்புமிகு முதல்வருடைய நடவடிக்கைகள் இன்றைக்கு இந்த உலகத்திற்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கின்றன என்பதுதான் நிசப்தமான ஒரு உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்லது செய்கிறார் என்று சொன்னால், அதைப் பாராட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் ஒரு நல்லது செய்கிறார் என்று சொன்னால், அதைப் பாராட்ட வேண்டும். ஒருவர் பாராட்டினால், உடனே அவர் ஏதோ அங்கே petition கொடுத்திருக்கிறார்; ஏதோ வேலை கொடுத்திருக்கிறார்; ஏதாவது file கொடுத்திருப்பார்; அதனால்தான் அவரைப் புகழ்ந்து பேசுகிறார் என்ற கீழ்த்தரமான சிந்தனை உள்ளவர்களும் இன்றைக்கு இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, இதே மன்றத்திலே, எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த தலைவர்களெல்லாம் அன்றைக்குச் சொன்னது இன்றைக்கு எனக்கு நினைவுக்கு வருகிறது. 'நாங்கள் எதிர்க்கட்சிதான், எதிரிக் கட்சி அல்ல' என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், தேசத்திலே இப்பேர்ப்பட்ட ஒரு பிரச்சினை இருக்கின்ற தருணத்திலே, இந்த ஜனநாயக நாட்டிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக ஒன்றுசேர்ந்து, 'மக்களைப் பாதுகாக்கக்கூடிய ஓர் அரசுக்குத் துணையாக நாங்களும் இருப்போம்' என்று சொல்லக்கூடியதுதானே உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியும்! அதைவிடுத்து, இன்றைக்கு அரசியலுக்காக, இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, மக்களுக்கு ஓர் அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சிலர் செயல்படுகிறார்கள் என்பது வருந்தத்தக்கதுதான். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தவரை, கொட்டும் மழையிலே இறங்கி அன்னதானத்தை துவங்குவது முதற்கொண்டு, என்னைப் போன்றவர்களை ஒரு சகோதரனாக, ஒரு தம்பியாக,

ஒரு மகனாக அரவணைத்துச் செயல்படுகிறார். இந்த மன்றத்தில் இந்தப் பதவிக்கு அம்மாவால் எப்படி நான் வந்தேனோ, அம்மா இல்லாததால், அப்படி மீண்டும் நடக்காது என்ற சந்தேகம் எனக்குள் வந்துவிட்டதால் 'நான், இனிமேல் இதற்குள் வரவில்லை, இந்தப் பதவி எனக்குத் தேவையில்லை' என்று சொன்னபொழுது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து, ஒரு தகப்பனாகக் கண்டித்தார். 'இந்தப் பதவி அம்மா கொடுத்தது, எதற்காகவும் இந்தப் பதவியை விட்டுக்கொடுத்து விடாதே' என்று எனக்கு அறிவுரை சொன்னபோது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை ஒரு தந்தையாகத்தான் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிகழ்வை நான் நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இன்றைக்கு, இந்த இக்கட்டான சூழ்நிலையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய அறிவிப்புகளின் வாயிலாக தொழிலாளிகள், நடைபாதை வியாபாரிகள், ஏழையெளிய மக்களின் நலனைக் கருதி, குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு ரூ.1,000/– வழங்கி அனைவருக்குமான நலனைப் பாதுகாக்கக்கூடிய அரசாக, இன்று அல்ல, என்றைக்குமே அம்மா அவர்களுடைய அரசுதான் முழுமையாக மக்கள் பக்கம் நிற்கும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மேலும், தன்னுடைய நடவடிக்கைகளின் மூலமாக எடுத்துரைக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வாழ்க பல்லாண்டு! வளர்க உங்களுடைய தொண்டு! என வாழ்த்துகிறேன். 'தனித்திருப்போம், விழித்திருப்போம்' என்று சொன்னார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல் இந்தக் கொரோனா வைரஸின் தாக்குதலிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்கு தமிழக மக்களே, 'தனித்திருங்கள், விழித்திருங்கள், தனித்திருப்போம், விழித்திருப்போம், தமிழக முதலமைச்சர் அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளையும் கட்டிக்காப்போம், அவர் சொல்கின்ற உறுதிமொழிகளை மனதிலே ஏற்றுக்கொண்டு, கொரோனாவை தடுத்தெறிவோம், விரட்டியடிப்போம்' என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

7. கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற துறைப் பணியாளர்களுக்கு கரவொலி எழுப்பி நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் தொற்று நோய்த் தடுப்புப் பணிகளில் அர்ப்பணிப்போடு தங்களை ஈடுபடுத்தி, பணிபுரிகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதற்குத் துணையாகச் செயல்படுகின்ற பிற துறைப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி, நன்றி தெரிவிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பினர்.)

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ந்து சிவந்த கதிரவன் நிறத்தை ஈந்து சிவந்த கரத்தால் பெற்றவர்; 7½ கோடி தமிழக மக்களின் உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்; கல்லறைக்குள்ளே இருந்தாலும் உலகத்தாரின் கவனத்தை இன்றைக்கும் தன்மீது ஈர்த்துக் கொண்டிருப்பவர்; ஏழைகளின் இதய வேந்தன்; வாழும்போதே வரலாறாக வாழ்ந்து காட்டியவர்; அண்ணாவின் இதயக் கனியாக அண்ணா உருவாக்கிய இயக்கத்தின் ஆணி வேராக, 'தொண்டனே இயக்கம், இயக்கமே தொண்டன்' என்ற வரலாற்றை உருவாக்கி, கழகப் பொருளாளராகப் பணியாற்றியபோது தி.மு.க.–வின் ஊழல்களை எதிர்த்தும், குடும்ப அரசியலை எதிர்த்தும் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் தேதி திருக்கழுக்குன்றத்தில் கேள்விக் கணைகளைத் தொடுத்ததன் விளைவாக 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார் புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 17 அன்று மக்களின் நல்லாதரவோடு, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இயக்கம் தொடங்கப்பட்ட 10 மாத காலத்திற்குள்ளாக, திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தல் நடைபெற்றது. தேர்தல் களத்தில் அன்றைக்கு ஆட்சி அதிகாரத்திலே இருந்த தி.மு.க.–வையும், மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திக் காட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மாபெரும் சக்தியை இந்த நேரத்திலே நினைத்துப் பார்த்து, புகழ்ந்து பேசி மகிழ்ச்சியடைகிறேன்.

முற்பகல் 11–15

1977–ல், மக்கள் ஆதரவோடு கழகத்தின் ஆட்சியை அமைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மூன்று முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தான் மறையும் வரை செயின்ட் ஜார்ஜ் கோட்டைப் பக்கம் கருணாநிதி வராமல், துரத்தித் துரத்தி விரட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை நினைத்துப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதேபோல், 1984 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் அப்போலோ மருத்துவமனையில் படுத்துக்கொண்டு, தமிழகத்தின் பொதுத் தேர்தலைச் சந்தித்து, படுத்துக்கொண்டே வெற்றிபெற்ற ஒரே தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதனை இந்த நேரத்தில் நான் பக்தியுணர்வோடும், நன்றியுணர்வோடும் பகிரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவிற்குப் பின்னால், மனித நேயம் கொண்ட மக்கள் தலைவி, அன்னை தெரசாவே வீடு வந்து வாழ்த்திய போயஸ் தோட்டத்துப் பொன் மாதா, வாழும் போதே வரலாறாக வாழ்ந்து காட்டிய வள்ளலின் வாரிசு, எங்களின் அன்பு தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பிளவுபட்ட இயக்கத்தை ஒன்றாக்கி, இழந்த சின்னத்தை மீண்டும் பெற்று, கழகத்தை எதிரிகளாலும், துரோகிகளாலும் வீழ்த்த முடியாத எஃகுக் கோட்டையாக, இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய இயக்கமாக மாற்றிக் காட்டிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை நினைத்து மகிழ்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன். 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியே இல்லாமல், 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு, 37 தொகுதிகளை வென்று காட்டி, உலக வரலாற்றில் தனியிடம் பிடித்த

அம்மா அவர்களை நினைத்து மகிழ்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரகடனம் செய்தார்களே! 'எனக்குப் பிறகும் இந்த இயக்கமும், ஆட்சியும் நூறாண்டுகள் இருக்கும்' என்றாரே! அப்படிப்பட்ட தெய்வீக வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில் இயக்கத்தையும், ஆட்சியையும் தலைமையேற்று வலுவோடும், வலிமையோடும், பொலிவோடும், போற்றுதலோடும் நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற நல்லாட்சி நாயகன், மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்ததற்குப் பிறகு, கட்சியை மட்டும் காக்கவில்லை, தன்னுடைய சாதுர்யத்தால், சகிப்புத்தன்மையால், பொறுமையால், நிருவாகத் திறமையால் அம்மா அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சியையும், கட்சியையும் இன்று வரை அயராது காத்துவருகிற அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், காவேரி காப்பாளர், விவசாயிகளின் விடிவெள்ளி, உழவர் மகன், அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் பாண்டி நாட்டுத் தங்கம், பண்பாளர், ஜல்லிக்கட்டு நாயகர், கழக ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு அண்ணன் திரு. O.P.S. அவர்களுக்கும் நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, 'இந்த ஆட்சி 3 நாள்தான் நீடிக்கும்' என்றார்கள். '30 நாட்கள்தான் நீடிக்கும்' என்றார்கள். '3 மாதங்கள் நீடிக்கும் என்றால் ஆச்சரியம்தான்' என்று சொன்னார்கள். 'சொடுக்குப் போடுவதற்குள் இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவேன்' என்று இந்த அவையின் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "நீ கடப்பாரையை எடுத்துக் குத்தினாலும் இந்த ஆட்சியை ஒன்றும் செய்ய முடியாது" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஆண்டுகளைத் தாண்டி, 4 ஆம்

ஆண்டில் மாண்புமிகு அண்ணன் E.P.S., மாண்புமிகு அண்ணன் O.P.S. ஆகியோர் தலைமையில் ஆட்சியும், கட்சியும் இன்றைக்கு இந்தியாவே பாராட்டத்தக்கவகையில், சிறப்பான முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, 'நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல'. இந்த இயக்கத்தை உருவாக்கிய தலைவனுக்கு என்று சரித்திரம் இருக்கிறது. இயக்கத்தையும், ஆட்சியையும் எஃகுக் கோட்டையாக மாற்றிய சாதனைத் தலைவி அம்மாவிற்கு என்று வரலாறு இருக்கிறது. எனவே, இந்த இயக்கத்தையும், ஆட்சியையும் யாரும், எவரும் எளிதில் நெருங்கிவிட முடியாது. இந்த ஆட்சியின் மீதும், இயக்கத்தின் மீதும் உள்ள தூசியைக்கூட எவராலும் தொடக்கூட முடியாது என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப, பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து, நீக்கி, செயலாற்ற வல்லவரே, செயல்திறன் படைத்தவர் என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்கணமாகி, நிதி ஆதாரங்களை வெகுவாகப் பெருக்கி, அனைத்துத் துறைகளுக்கும் அதனை ஒதுக்கித் தந்து, நாட்டை வளம் பெறச் செய்து, எதிர்வந்த இன்னல்களையும், இடையூறுகளையும் பொடிப்பொடியாக்கி, துடைத்தெறிந்து, மக்கள் நலன் ஒன்றையே மனதில் கொண்டு செயலாற்றி, தமிழ்க்குடியை மேலும் மேலும் முன்னேற்றவும், தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக நிலை நிறுத்திடவும், மறைந்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், தனது வாழ்க்கை முழுவதையும் தமிழக மக்களுக்கே ஈந்து, அரும்பாடுபட்டு, பெரும் பெருமையைப் பெற்றார்கள்.

முற்பகல் 11–20

"மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்னும் இலட்சிய முழக்கத்தோடு மக்களுக்குத் தொண்டு செய்வதையே தனது வாழ்நாள் கடமை எனக்கொண்டு, இரவு பகல் பாராமல், ஓய்வென்பதே இன்றி செயலாற்றி, தமிழக மக்களின் இதயங்களில் என்றும் நீங்கா இடம்

பிடித்த, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் உழைப்பிலும், தியாகத்திலும் பூத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் தலைமையேற்று சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைக் காத்தல், குற்றத் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, போக்குவரத்து பராமரிப்பு ஆகியவற்றில் கண்காணிப்பு கேமராக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கண்காணிப்பு கேமரா பதிவுகள் குற்றவாளிகளை இனங்காண்பதில் பிறழ்வற்ற சாட்சியாகின்றன. எனவே, கண்காணிப்பு கேமராக்கள் காவல் துறையின் மூன்றாவது கண்ணாகக் கருதப்பட்டு, சென்னை பெருநகர் முழுவதும் 50 மீட்டர் இடைவெளியில் நிர்மாணிக்க பெரும் முயற்சி எடுக்கப்பட்டதற்கு நான் நெஞ்சார்ந்த பாராட்டுகளை மாநகர காவல் துறைக்கு உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர், வியாபாரிகள் நலச் சங்கங்கள் உதவியுடன் 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான கண்காணிப்பு கேமராக்கள் சென்னை மாநகரில் நிறுவப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கண்காணிப்பு கேமராக்கள் காரணமாக பல கொடுங்குற்றங்கள், முக்கியமாக, செயின் பறிப்பு உள்ளிட்ட குற்றங்கள் தடுக்கப்பட்டுள்ளன. நடைபெற்ற குற்றங்களும் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால், கண்காணிப்பு கேமராக்கள் குற்றவாளிகளுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தி, குற்றங்கள் கணிசமான அளவு குறைந்துள்ளன. சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ரவுடி கோஷ்டியினரின் நடவடிக்கை கண்காணிக்கப்பட்டு, பாதுகாப்பு பிரிவின்கீழ் தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறது. நிபந்தனைகளை மீறி குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மேலும், தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடுபவர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

இந்தியாவிலேயே தமிழகம்தான் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பில் முதலிடம் பெற்றுள்ளது. அதிலும், குறிப்பாக சென்னை மாநகரம் முதலிடம் பெற்றுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்து, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் சென்னை பெருநகர காவல் துறை

பெரும் கவனம் செலுத்தி வருகிறது. மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக "அம்மா ரோந்து வாகனம்" மற்றும் "தோழி" என்ற அமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய குற்ற ஆவண காப்பகம் (NCRB) 2018–க்கான குற்றவியல் சம்பந்தமான புள்ளிவிவரங்களை ஒப்பீடு செய்து ஜனவரி 2020–ல் அறிக்கை வெளியிட்டது. சென்னை பெருநகரம் பெண்களுக்கு பாதுகாப்பான இடம் என 2017–க்கான அறிக்கையை வெளியிட்டபோது தெரிவித்ததை, 2018–க்கான அறிக்கையிலும் வெளியிட்டு மீண்டும் உறுதி செய்துள்ளது.

சீன அதிபர் இந்தியா வந்தபோது பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடுதான் எனத் தேர்வு செய்து, இங்கே பாரதப் பிரதமரும், சீன அதிபரும் இரண்டு நாட்கள் மாமல்லபுரத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்களே! இது தமிழக சட்டம்–ஒழுங்கிற்கு ஓர் எடுத்துக்காட்டு; தமிழகம் ஒரு சிறந்த மாநிலம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பெருகிவிட்டதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சென்ற வாரம் இம்மாமன்றத்தில் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தமிழகத்தில் குண்டுகள், ஏன், கோலிக் குண்டுகளைக்கூட காண முடிவதில்லை. இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் பலூன்கள்கூட வெடிப்பதற்குப் பயப்படுகின்றன.

மதுரை தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேலுச்சாமியின் வீட்டின்மீது வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இதை யார் வீசினார்கள் என்று புலனாய்வு செய்தபோது தி.மு.க.–வைச் சார்ந்த வேலுச்சாமியின் குடும்ப உறுப்பினர்களே, சொத்துப் பிரச்சினை காரணமாக வெடிகுண்டு வீசியுள்ளார்கள் என்பது தெரிய வந்தது. எனவே, வெடிகுண்டு வீசுவது என்பது தி.மு.க.–வின் கலாச்சாரமாகும். பிரியாணிக் கடையில் பிரியாணிக்காக தகராறு செய்தது தி.மு.க., பியூட்டி பார்லர் சென்று அங்கே பணியாற்றும் பெண்களை அடித்து உதைத்தது தி.மு.க., இவற்றை எல்லாம் மறந்துவிட்டு, ஊருக்குத்தான் உபதேசம் என்பதைப் போல மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் இங்கே சட்டம்–ஒழுங்கைப் பற்றிப் பேசுகிறார்கள்.

தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தபொழுது, 2006–2011–லே சிவகங்கை நகர் மன்ற தலைவரை உட்கட்சி பகை காரணமாக

ரிமோட் குண்டு வைத்து தகர்த்தது தி.மு.க. ஆட்சியிலேதான். சென்ற ஆண்டு திருநெல்வேலியிலே தி.மு.க.–வைச் சேர்ந்த பொதுக் குழு உறுப்பினர் சீனியம்மாள் என்பவருடைய மகனால் முன்னாள் மேயர் உமா மகேஸ்வரியும், அவருடைய கணவரும், வீட்டு வேலைக்காரப் பெண்ணும் கொல்லப்பட்டார்கள். அதற்கு அங்கே துக்கம் விசாரிக்கச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், அண்ணா தி.மு.க. ஆட்சியிலே பெண்களுக்கு பாதுகாப்பே இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஆனால், அந்தக் கொலையைச் செய்தது தி.மு.க.–வின் பொதுக் குழு உறுப்பினர் சீனியம்மாளின் மகன் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்னும் மறைந்த மாமேதை, மக்கள் தலைவி மனித புனிதவதி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையை பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

நிதிநிலை அறிக்கை 2020–2021–ன்படி, அரசினுடைய மொத்த வரவு என்பது 1,91,880.88 கோடி ரூபாய். மொத்த செலவு என்பது 2,16,932.51 கோடி ரூபாய். வருவாய்ப் பற்றாக்குறை 25,071.53 கோடி ரூபாயாக இருந்தாலும், இந்த நிதி பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பின், முன் மதிப்பீடுகள் அடிப்படையில் 3 சதவீதத்திற்குள் உள்ளது.

இந்திய துணைக் கண்டத்தில் சிறந்த ஆட்சிக்கான நல் ஆளுமை விருதை, மத்திய அரசிடமிருந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் பெற்று சரித்திர சாதனை படைத்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரின் நல் ஆளுமைத் திறன், சிறந்த நிருவாகம் ஆகியவை மென்மேலும் பரிணாமம் பெற்று வருகின்றன.

சட்டம்–ஒழுங்கைப் பேணிக்காத்தல், உட்கட்டமைப்பு வசதிகள், வேளாண்மைத் துறை, மருத்துவத் துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரத் துறை, சமூக நலத் துறை ஆகிய துறைகள்மூலம் தொடர்ந்து மத்திய அரசின் விருதுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு பெற்று வருகிறது. 'உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி தரும்' மாண்புமிகு அம்மாவின் அரசு, வரலாற்றில் முதன்முறையாக

124 விருதுகளை மத்திய அரசிடம் தொடர்ந்து பெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைத் துறையில், உணவு தானிய உற்பத்தியில் ஆறு வருடங்களாக சாதனை படைத்து, 'கிருஷி கர்மான்' விருதை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பெற்று வருகிறது. அதற்காக வேளாண்மைத் துறையின் அலுவலர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரை இல்லாத வகையில், மருத்துவத் துறையில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை அமைக்க அனுமதிபெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரை நான் பாராட்டுகிறேன். அனுமதி பெற கடும் முயற்சிகளை மேற்கொண்ட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அனுமதி பெறப்பட்ட மருத்துவக் கல்லூரிகளுக்கு எல்லாம் இன்றைக்கு நிதி ஒதுக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோர் நேரில் சென்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளனர்.

மாண்புமிகு அம்மாவின் நல்லாசியோடு, தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக மாற்றப்பட்டுவிட்டது. கடந்த 2006–2011 ஆட்சிக்காலத்தில் மின்வெட்டு காரணமாக, 2011–ல் ஆட்சியைப் பறிகொடுத்தது தி.மு.க. என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். ஆனால், அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் 'மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டுவோம்' என்று சொன்னார்கள், சொல்லியபடியே இன்று தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக மிளிர்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் ஒரு விவசாயி; விவசாயிகளின் விடிவெள்ளி; விவசாயிகளின் இன்னல்களை அறிந்த விவசாயி என்பதால் கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்தை

நிறைவேற்றிட தீவிரமான முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறார். மாண்புமிகு தமிழக அமைச்சர்களான மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் ஆகியோர் ஆந்திரா மற்றும் தெலுங்கானா முதலமைச்சர்களை நேரடியாகச் சென்று சந்தித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தனர். இதன்மூலம் தமிழகத்தை நீர் மிகை மாநிலமாக மாற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொங்கு மண்டலத்தின் முக்கிய பிரச்சினையான பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்திற்குச் சென்று, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, கேரள முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் ஆகியோரால் தனித்தனியாக, பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனத் திட்டத்திற்கு என்று ஒரு குழுவும், பாண்டியாறு–புன்னம்புழா பாசனத் திட்டத்திற்கு ஒரு குழுவும் என இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, குழுக்கள் வெற்றிகரமாக பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கின்றன. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் குறித்த பேச்சுவார்த்தை விரைவில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் என்ற செய்தியை இந்த அவை விரைவில் அறியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மேலும், பொள்ளாச்சி பகுதிகளிலே பெய்கின்ற மழைநீரைச் சேமித்து வைப்பதற்காக பல தடுப்பணைகளைக் கட்டுவதற்கு இந்தாண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் கிணத்துக்கடவு சுற்று வட்டார விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டெல்டா மாவட்ட விவசாயிகளின் அரை நூற்றாண்டுக்கும் மேலான கோரிக்கையான, டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, காவேரி

டெல்டா பகுதியினை "பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக" அறிவித்து, அதற்கான அரசாணையையும் மாண்புமிகு கவர்னர் அவர்களின் ஒப்புதலோடு உடனடியாக வெளியிட்டு, இன்றைக்கு "காவேரி காப்பாளராக" மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்.

வெள்ள உபரி நீரினை மேட்டூர் அணையிலிருந்து சேலம் மாவட்டத்திலுள்ள வறண்ட குளங்களுக்கும், ஏரிகளுக்கும் திருப்பிவிடுவதற்கான "சரபங்கா" நீரேற்று பாசனத் திட்டத்தை 565 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனுமதியளித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

"நடந்தாய் வாழி காவேரி" திட்டத்திற்காக 11,250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதனிலை திட்ட அறிக்கை இந்திய அரசின் நீர் வள ஆதார அமைச்சகத்திற்கு கொள்கை ரீதியான ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பாசன விவசாய நவீனமயமாக்கல் திட்டம் 2,962 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

கொங்கு மண்டல மக்களின் நீண்ட கால கோரிக்கையான அத்திக்கடவு–அவினாசி நீர்ப் பாசனத் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெற்றுள்ளது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை 7,677 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறைக்காக 23,161.54 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 18,540.12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தில் சட்டம்–ஒழுங்கில் முதலிடம் பெற்று, தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 8,876.57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தீயணைப்புத் துறைக்காக 405.68 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், பொள்ளாச்சி வட்டத்தில் உற்பத்தியாகும் தென்னை நாரில், பெருமளவு சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலமாக மத்திய, மாநில அரசுகளுக்கு அந்நியச் செலாவணி மூலமாக வருமானம் கிடைத்து வருகிறது. தற்போது, சீன நாட்டில் கொரோனா வைரஸ் பரவியுள்ள காரணத்தினால், கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டாரப் பகுதிகளில் உற்பத்தியாகும் தென்னை நார், சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. Containers–ல் load ஏற்றப்படாமல், அப்படியே நிறுத்தப்பட்டுள்ளன. இத்தொழிலைச் சார்ந்த சிறு, குறு தொழிலதிபர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனுதவியைப் பெற்றுத்தான் இத்தொழிலை நடத்தி வருகிறார்கள். தென்னை நார் ஏற்றுமதி நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டதால், வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தவணை மற்றும் வட்டித் தொகையினைச் செலுத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். மேலும், இத்தொழிலைச் சார்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றி சிரமப்பட்டு வருகிறார்கள். மேலும், மத்திய அரசு, பொள்ளாச்சி பகுதியை சிறப்புப் பொருளாதார மண்டலமாக, அதாவது கயிறு உற்பத்தி செய்யும் தொழில் (Coir Industries) செய்வதில் Special Economic Zone ஆக சென்ற வாரம் அறிவித்துள்ளது. எனவே, இதுகுறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டாரப் பகுதிகளில் சுமார் 750–க்கும் மேற்பட்ட தென்னை நார் மற்றும் நார் கழிவு சார்ந்த தொழிலகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின்மூலம் ஆண்டிற்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் தென்னை நாரும் (Coir fibre), 11,40,000 மெட்ரின் டன் தென்னை நார் கழிவும் (Coir pith) உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னை நார் உற்பத்தியில் 90 சதவிகிதம் சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்சமயம் ஜனவரி 12 ஆம் தேதி முதல் சீனாவிலிருந்து ஏற்றுமதி கோரி வர வேண்டிய தென்னை நார் ஆர்டர்கள் கொரோனா வைரஸ் நோய் பாதிப்பு காரணமாக முழுமையாக வரப்பெறவில்லை. தற்போது சுமார் 1 இலட்சம்

மெட்ரிக் டன் தென்னை நாரும், 1 இலட்சம் மெட்ரிக் டன் மூலப் பொருளாகவும், பாதி முடிக்கப்பட்ட நிலையிலும் தேங்கியுள்ளன. கடந்த நவம்பர் மாதம் 2019 ஆம் ஆண்டு மத்தியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படாத காரணத்தினால் தொழில் முனைவோர்கள் வங்கியில் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த இயலாத நிலையில் 49 விழுக்காடு கடன்கள் வாராக் கடனாக NPA–Non–Performing Assets ஆக ஆகிவிட்டன. எனவே, வங்கிக் கடனைச் சீரமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, இதுபோன்ற எதிர்பாராத சூழ்நிலையில் தென்னை நார் மற்றும் நார்க் கழிவு சார்ந்த தொழில்கங்களின் வங்கிக் கடனை மறுசீரமைப்பு செய்துகொடுப்பது நல்ல தீர்வாக இருக்கும். தற்போது சீன நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பு சீரடைந்து வருவதால் கூடியவிரைவில் சீன நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். எனவே, ஏற்றுமதி செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டவுடன், தென்னை நார் மற்றும் நார்க் கழிவுகளைச் சார்ந்த தொழிலகங்களுக்கு அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே, கடந்த கஜா புயலின்போது தஞ்சை, புதுக்கோட்டை, நாகை, தேனி போன்ற மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட 66 கயிறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.2 கோடியே 33 இலட்சம் நிதியினை தாயுள்ளத்தோடு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றினார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தென்னை நார் மற்றும் நார்க் கழிவு சார்ந்த தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் என்றென்றும் பாதுகாப்பு அரணாகத் திகழும் என்பதனை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.வி. நரசிம்மன்): மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நன்றி. தென்னை நார் தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள பொள்ளாச்சி வட்டாரத்தில் அடிக்கடி தீப்பற்றிக்கொள்ளக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலை உள்ளது. சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கிணத்துக்கடவு பகுதிக்கு ஒரு Fire Station கேட்டேன். தயாள மனம் கொண்ட நம்முடைய

முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு தீயணைப்பு நிலையத்தைக் கொடுத்தார்கள். அது போதாது. இன்னும் ஆனைமலையிலும், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கெடிமேடு என்ற இடத்தினையும் சேர்த்து, இரண்டு பகுதிகளிலும் இரண்டு Fire Stations அமைத்துக் கொடுத்தால், கயிறு தொழிற்சாலைகளில் தீ விபத்து ஏற்பட்டால் உடனுக்குடன் தடுப்பதற்கான வாய்ப்பாக அமையும் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'–ல் பட்டியலிடப்பட்ட பல திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய உட்கட்டமைப்புத் திட்டத்தில் (NIP) தமிழ்நாட்டில் 8.58 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 179 திட்டங்கள் மத்திய அரசின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறைக்கு 11,894.48 கோடி ரூபாயும், கூட்டுறவுத் துறைக்கு பயிர்க் கடன் வழங்க 11 ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

'அள்ளிக்கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்தப் பூந்தோப்பு
வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை இது நான்குமறை தீர்ப்பு'

மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் தலைவி, மாணிக்கத் தலைவி, மாசற்ற தலைவி, புரட்சித் தலைவி, போயஸ் தோட்டத்து பொன்மாதா, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவான, தமிழ்நாட்டில் குடிசைகள் இல்லாத நகரங்களை உருவாக்குவது என்ற இலட்சியத்திற்கேற்ப, 2014–2015 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 17,774.77 கோடி ரூபாய் செலவில் 5,53,244 வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சி வீட்டு வசதி AHP பிரிவின்கீழ் 1,32,000 அடுக்குமாடி குடியிருப்புகள் 13,677.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்காக நான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டம் 12,301 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். 1,620 கோடி ரூபாய் செலவில் கோவை விமான நிலையம் முதல் உப்பிலிபாளையம் வரையுள்ள அவினாசி சாலை நெடுகிலும் 10.1 கி.மீ. நீளத்திற்கு

உயர்த்தப்பட்ட சாலை அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான முயற்சிகளை மேற்கொண்ட நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 15,850.54 கோடி ரூபாய். இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கிணத்துக்கடவிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஒரு சாலை பல்லடம் சாலையில் சென்று இணைகின்றது. அந்தச் சாலையின் இருமருங்கிலும் பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. அந்தச் சாலையை 10 மீட்டர் அகலத்திற்கு விரிவாக்கித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–40

மாண்புமிகு அம்மாவின் அரசு எரிசக்தித் துறைக்கு 20,115.58 கோடி ரூபாயும் ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டுமென்பதற்காக, வரலாற்றில் இல்லாத வகையில் பள்ளிக் கல்வித் துறைக்கு 34,181.73 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு உயர் கல்வித் துறைக்கு 5,051.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, உயர் கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே அதிகமாக உள்ள மாநிலம் தமிழகம் என்கின்ற சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, அதிக கல்லூரிகளைத் தொடங்கிய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் அரசும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும்தான் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 15,863.38 கோடி ரூபாய்; தொழில் துறைக்கான ஊக்கத் தொகை 2,500 கோடி ரூபாய்; கைத்தறி மற்றும் ஜவுளித் துறைக்கு 1,224.25 கோடி ரூபாய்; சமூக நலத் துறைக்கு 5,935.13 கோடி ரூபாய்; இப்படி பல்வேறு துறைகள்தோறும் திட்டங்கள் தீட்டப்பட்டு, தீட்டப்படுகின்ற திட்டங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஒதுக்கப்படுகின்ற நிதி திட்டங்களுக்கும், பயனாளிகளுக்கும் சென்றடைகின்றதா

என்று கண்காணிக்கின்ற ஆற்றல்மிக்க முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு நிருவாகத்தை மக்களிடம் மேலும் நெருக்கமாகக் கொண்டு செல்வதற்கு 2019 ஆம் ஆண்டில் மட்டும் முன்னெப்போதும் இல்லாத அளவில் 5 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. 2011 முதல் அம்மாவின் அரசு 16 புதிய வருவாய்க் கோட்டங்கள், 92 புதிய வருவாய் வட்டங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நேரத்தில் அவைக்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு முதலமைச்சரோடு நான் திருவனந்தபுரம் சென்றிருந்தபோது, மதியம் உணவருந்திவிட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறையில் ஓய்வாக இருந்தபோது, கேரள முதலமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சரைத் தேடி வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு அமர்ந்துகொண்டு, ‘உங்களுடைய ஆட்சி கிராமப்புற மக்களைச் சென்றடைவதில் மிகச் சிறப்பாக இருக்கின்றது’ என்று பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ‘கிராம மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் உங்களுடைய அரசு செய்துகொண்டிருக்கிறது. உங்களுடைய குடிமராமத்துப் பணியை நீங்கள் எவ்வாறு செயல்படுத்துகிறீர்கள் என்பதையெல்லாம் எனக்கு ஒரு குறிப்பு அனுப்பிக் கொடுங்கள்’ என்று கேரள மாநிலத்தினுடைய, மார்க்சிஸ்ட் கட்சியினுடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்ட அந்த நினைவுகளை இங்கே இந்த அவைக்குத் தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக என்னுடைய வேண்டுகோளாக வேளாண்மை நிறைந்த பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வேளாண் குடிமகன் என்ற வகையில், வேளாண் பொது மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியில் பொள்ளாச்சி வருவாய் கோட்டத்திற்குட்பட்ட பொள்ளாச்சி, வால்பாறை, முன்பு பொள்ளாச்சி வருவாய்க் கோட்டத்திலிருந்த உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கி தனியாக, உங்கள் பெயர் நீடித்து நிலைத்து நிற்க, பொள்ளாச்சி மாவட்டத்தை புதியதாக அமைத்துத் தர வேண்டுமென்று எனது பகுதி மக்கள் மற்றும் தொகுதி மக்கள்

சார்பாகவும், 1972 ஆம் ஆண்டு முதல் இந்தக் கழகத்தினுடைய தொண்டனாக, இயக்கத்தில் ஒரு சாதாரண தொண்டனாக இருந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கரம் பிடித்து வளர்ந்து, புரட்சித் தலைவி அம்மாவின் கரம் பிடித்து வளர்ந்த ஓர் சாதாரண தொண்டனான என்னுடைய இந்த வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, செயல்படுத்தித் தருவார்களா என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சென்னை மாநிலத்தில் முதன்முதலில் 13 மாவட்டங்கள் இருந்தன. நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் புரட்சித் தலைவரும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும் 10 புதிய மாவட்டங்களை உருவாக்கி சரித்திரம் படைத்தார்கள். அவர்களின்வழி வந்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரே ஆண்டிலே 5 புதிய மாவட்டங்களை உருவாக்கித் தந்து புதிய சரித்திர சாதனையைப் படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணை சபாநாயகர் அவர்கள் வைத்த கோரிக்கையானது, கொள்கை முடிவுகளால் எடுக்க வேண்டிய முடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகராட்சி அமைக்கப்பட்டு, வரும் 22 ஆம் தேதியோடு 100 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. 100 ஆண்டு நிறைவு பெறும் பொள்ளாச்சி நகராட்சியைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளெல்லாம்

இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஜமீன்ஊத்துக்குளி, சூலீஸ்வரன்பட்டி, மாக்கினாம்பட்டி, சின்னாம்பாளையம், புளியம்பட்டி, ஆச்சிப்பட்டி, முத்தூர் போன்ற பகுதிகளெல்லாம் பொள்ளாச்சி நகரத்தோடு இணைந்துவிட்டன. இவையெல்லாம் சேர்ந்தபிறகு ஜனத்தொகை இரண்டு இலட்சத்திற்கும் மேலாக கூடிவிட்டது. எனவே, நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு வரவிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுடைய நினைவகத்திற்கு திறப்பு விழா காண வருகின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு இலட்சம் ஜனத்தொகையுடைய பொள்ளாச்சி நகராட்சியை மாற்றி, மாநகராட்சியாக அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி நகராட்சி நூற்றாண்டு விழா கொண்டாடவுள்ள இந்த நல்ல நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'எதற்கும் இல்லை' என்று சொல்லாத வள்ளல் எம்.ஜி.ஆர். அவர்களின் வழி வந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் பாடம் பயின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.100 கோடியை பொள்ளாச்சி நகராட்சிக்கு சிறப்பு நிதியாக ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்று, உதிரத்தில் வீரத்தை உணவாக ஊட்டிய மன்னாதி மன்னனின் மாசறு இயக்கம் அண்ணா தி.மு.க., (மேசையைத் தட்டும் ஒலி) 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை' என்ற அப்பர் பெருமானின் பாசுரத்தை அமுதாகப் பிசைந்தூட்டி, துச்சப் பகையை மிச்சமின்றித் துடைத்தெறியும் வித்தையைக் கற்றுத் தந்த வீரத் திருமகளின் வேக இயக்கமிது; பள்ளியிலும் பந்தியிட்டு, ஆலயத்திலும் அன்னமிட்டு, பசிப்பிணியைத் துடைத்தெறிந்த பார் போற்றும் இயக்கமிது; மரத்தடி வகுப்புகளை மடிக்கணினி வகுப்புகளாக்கி, மாணவர்க்கு மேன்மை தரும் மகத்தான இயக்கமிது; பாமரர்க்கும் பூமரத்தோடு பசுமை வீடு எழுப்பி, பச்சிளம் குழந்தைக்கும் பரிசுப் பெட்டகம் அனுப்பி, ஈகைக்கே இலக்கணமும் எழுதிட்ட இயக்கமிது, தாலிக்குத் தங்கம் தந்து, தமிழுக்குத் தலைசிறந்த அங்கம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாடிவாசல் திறந்துவிட்டு, வரலாற்றை நடத்தித் தந்து, வாகைக்கே அர்த்தத்தை வடித்திட்ட இயக்கமிது! (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி உரிமையை வென்றெடுத்த ஆட்சி இது, முல்லைப் பெரியாறு உரிமையைக் காக்க மோதுகிற இயக்கமிது, நெய்வேலிக்கு வேலி போட்ட நிகரில்லா இயக்கமிது, (மேசையைத் தட்டும் ஒலி) நீதிக்குத் தலை வணங்கி, நெறியாக்கும் இயக்கமிது, சட்டம் ஒழுங்கில் சமரசம் காட்டாது, சாதிக்கும் இயக்கமிது, மின்வெட்டு இருட்டிலிருந்து மீட்டெடுத்த இயக்கமிது, மேலாண்மை வாரியம் காவேரிக்கு அமைத்து, பேராண்மை காத்திட்ட பெருமைமிகு இயக்கமிது, காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவித்த வீரமிகு இயக்கமிது. (மேசையைத் தட்டும் ஒலி) பிளாஸ்டிக்கை ஒழித்த இயக்கமிது, பெருவுடையார் ஆலயத்திற்கு குடமுழுக்கு நடத்திய இயக்கமிது, பெரும்பான்மை மக்கள் மதிக்கின்ற இயக்கமிது, சிறுபான்மையின மக்களை மனதில் நிறுத்தி துதிக்கின்ற இயக்கமிது, ஒற்றுமையால் உயர்ந்தோங்கி செழிக்கின்ற இயக்கமிது, ஒன்றரைக் கோடி தொண்டர்களை உயிராய் மதிக்கின்ற இயக்கமிது, (மேசையைத் தட்டும் ஒலி) ஈரிலை இயக்கமிது, ஈகைக்கே இலக்கணமிது, நூறாண்டு ஆனாலும் தமிழகத்தை ஆளப்போகும் சாஸ்வத இயக்கமிது, சத்தியமாய் நடக்குமிது எனக் கூறி, வரும் 2021–லும் மீண்டும் அம்மாவின் அரசே (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் தலைமையில் சிறப்பாக அமையும். அம்மாவின் இலட்சியம், 'எனக்குப் பின்னால் நூறாண்டு காலம் இந்த ஆட்சியும், கட்சியும் தமிழக மக்களுக்குச் சேவை செய்யும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்ன அம்மாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் இரட்டை சகோதரர்களாக, அன்புள்ள மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும், அன்புள்ள மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும், உங்கள் வெற்றிப் பயணத்தைத் தொடருங்கள், உங்கள் பயணத்தின் சிப்பாய்களாக, உங்களுடைய உயிர்த்துடிப்பு மிக்க தம்பிமார்களாக, (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குப் பின்னால் நாங்கள் ஓடோடி வருவோம்; எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓட வைப்போம்; வெற்றி என்பது நம்முடைய வரலாறாக அமையும் என்று சொல்லி, தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்று எங்கள் உதிரத்தில் வீரத்தை உணவாக ஊட்டிய மன்னாதி மன்னன், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவது யாதொன்றும் இல்லை' என்ற அப்பர் வாக்கிற்கிணங்க, துச்சப் பகையை மிச்சமென்று துடைத்தெறியும் வித்தை கற்றுத் தந்த வீரத் திருமகள், எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஏர் உள்ளவரை உங்கள் பேர் நிலைக்கின்ற' வகையிலே, 'வயல் உள்ளவரை உங்கள் வரலாறு நிலைக்கின்ற' வகையிலே, காவேரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த எடப்பாடி தந்த எங்கள் அன்புக்குரிய அண்ணா, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி மீட்ட காவியத் தலைவரின் தவப் புதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு நாயகன், பணிவுக்கே பணிவைச் சொல்லித் தந்திருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். ஐயா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தினை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு வாய்ந்த இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளிலே பேசுகின்ற ஒரு நல்வாய்ப்பினை வழங்கியிருக்கிறீர்கள். உள்ளபடியே என்னுடைய முதல் பணியாக உலகெங்கும் இருக்கின்ற இலட்சோபலட்சம் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக, தங்கள் உயிரையும் துச்சமென மதித்து, இரவு—பகல் பாராது அரசுக்கு உறுதுணையாக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகள், வருவாய்த் துறை மற்றும் நகராட்சி ஊழியர்கள் என அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் இந்த அவையின் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்தில் சமர்ப்பித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

உள்ளபடியே மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பற்றி பல்வேறு நேரங்களிலே நாம் பேசியிருந்தாலும்கூட, பல நல்ல சாதனைகளைச் சொல்வதற்கு என்னுடைய மனம் துடித்தாலும், நேரத்தின் அருமை கருதி, இன்று மிக முக்கியமான ஒரு நிகழ்வாக, ஓர் அசாதாரண சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிற கொரோனா வைரஸ் நோய் தொடர்பாக நமது அரசாங்கம் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதைப் பற்றிய பல்வேறு நிகழ்வுகளைப் படிப்படியாக நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன்.

முதற்கட்டமாக, எந்தவொரு அரசும், எந்தவொரு மாநில அரசும், ஏன் எந்தவொரு நாடும் செய்யாத வகையிலே, சீனாவிலே முதன்முதலாக இந்தக் கொரோனா வைரஸ் தொற்று ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி கிடைத்தவுடனேயே, நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இந்த வியாதி தமிழ்நாட்டிலே வந்தால், எவ்வாறெல்லாம் தயாராக வேண்டும் என்று ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியதுதான் உண்மையான வரலாறு. அவ்வாறு அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த வைரஸின் வீரியத்தைப் புரிந்துகொள்ளாமல் காலதாமதம் செய்ததன் விளைவாகத்தான், தற்போது உலகம் முழுவதும் இத்தனை அச்சுறுத்தல்களை, இத்தனை உயிரிழப்புகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது மிகையாகாது. தேவையான உபகரணங்கள், தேவையான ventilators இருக்கின்றனவா என்று பல்வேறு ஊடகங்களிலேகூட கேட்டார்கள். ஊடகங்களுக்கும் சரி, எதிர்க்கட்சிகளுக்கும் சரி, அதைப் பற்றிய அச்சமே தேவையில்லை என்று நான் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், கிட்டத்தட்ட 3 மாதங்களுக்கு முன்பாகவே தேவைப்படுகிற procurement of ventilators, N95 masks, triple layered masks, ICU–விற்கென தனியாக beds என அனைத்தையும் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட TNMSC மூலமாக நம்முடைய அரசாங்கம் order செய்து, அவையனைத்தையும் தருவிக்கின்ற தருவாயிலே இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், வைரஸ் வேகமாகப் பரவத் தொடங்கியவுடனேயே entry point screening என்று சொல்லக்கூடிய, 4 international entry points, அதாவது airports and seaports அனைத்திலும் screening செய்ததன்மூலம் சுமார் இரண்டரை இலட்சம் நபர்களை நாம் screening செய்திருக்கிறோம். அந்தத் தொற்று பரவாமல் தடுப்பதற்கான முதற்கட்ட முயற்சியாக அவ்வாறு செய்யப்பட்டது. ஏனென்றால், நமது மாநிலத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று அனைத்துமே imported cases–தான். எதுவுமே இங்கே உருவானது அல்ல. அவ்வாறு imported cases, international airports மூலமாக வந்தவுடனேயே அவர்களை முழுமையாக quarantine செய்து, அவர்களுக்கென்று பிரத்யேகமாக அமைக்கப்பட்ட கட்டடங்களுக்குள்ளாக அவர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டன.

உதாரணமாக, ஒரு நபர் international airport–லிருந்து வெளியே சென்று, 2, 3 நாட்களுக்குப் பிறகு அவராகவே வந்தபோது, epidemiological link என்று சொல்லக்கூடிய வகையில், அந்தப் பாதிக்கப்பட்ட நபர் அந்த சில நாட்களில் யார் யாரையெல்லாம் சந்தித்தாரோ, யாருடனெல்லாம் தொடர்பு கொண்டாரோ, அவர்கள் அத்தனை பேரையும் இரண்டே நாட்களில் trace செய்து, 1 case–க்கு சுமார் 92 பேர், மற்றொரு case–க்கு 161 பேர் என அத்தனை நபர்களையும் trace செய்து, அவர்களையும் quarantine செய்த நிகழ்வெல்லாம் நிச்சயமாக இந்த அரசினுடைய, இந்தத் துறையினுடைய துடிப்பான செயல்பாட்டை நன்றாக இங்கே வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அற்புதமான நல்ல பணிகளை இந்த நேரத்திலே நான் சொல்ல வேண்டும். இந்த மருத்துவத் துறை சார்ந்த இந்த emergency–க்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு வேகமாக, துடிப்போடு ஒரு மருத்துவரைப்போல பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் யோசித்தபோது எனது நினைவுக்கு வந்தது ஒரேயொரு விஷயம்தான். ஏனென்றால், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டபோது, எதற்காகப் போகிறார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்று நிறைய

பேர் யோசித்திருப்பார்கள். ஆனால், நாங்கள் யோசித்ததெல்லாம் ஒன்றேயொன்றுதான். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.–க்குப் பிறகு, தமிழ்நாட்டினுடைய நலனுக்காக வெளிநாடு சென்ற ஒரே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக நல்ல பல திட்டங்களைக் கொண்டு வருவார்கள் என்று சொன்னோம். அவர் இங்கிலாந்து சென்று முதலில் பார்த்தது international level–ல் No.1 ஆக இருக்கக்கூடிய Epidemiology and Disease Control Centre–ஐத்தான். இதுபோன்ற வைரஸ் கிருமிகளுக்கான ஆராய்ச்சிகளை நடத்தி, அந்த வைரஸ் தொற்றுகளையெல்லாம் எப்படித் தடுக்க வேண்டுமென்று, தலைசிறந்த நல்ல சாதனைகளை செய்து கொண்டிருக்கின்ற ஒரு மிகப் பெரிய Institute–ஐத்தான் முதன்முதலில் சென்று இங்கிலாந்தில் பார்த்தார்கள். அந்த Institute–டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. இதுபோன்ற தொற்று வியாதிகள் வந்தால் எப்படி நாம் தடுக்க வேண்டுமென்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். நம்முடைய மாநிலத்திலே இதுபோன்ற ஒரு நிகழ்வுகூட ஏற்படக் கூடாது. அதற்கு முன்னெச்சரிக்கையாக தமிழ்நாட்டினுடைய தலைமகன் என்ற முறையிலேதான் தயாராக இருக்க வேண்டுமென்று வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில்கூட மருத்துவம் சார்ந்த அந்த விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்டு வந்ததன் விளைவாகத்தான் இன்று இத்தனை வேகமாக, கிட்டத்தட்ட இன்றோடு 10 ஆய்வுக் கூட்டங்களை தனிப்பட்ட முறையிலே நடத்தியிருக்கிறார்கள். அப்பொழுதிலிருந்தே அந்த ஆர்வம் அவருக்கு வந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களை, அனுதினமும் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவும் சரி, 2–30 மணிக்கு மேலாகவும் சரி ஒவ்வோர் இடத்திற்கும் நேரிலே சென்று பார்க்க வேண்டுமென்று அனைத்துத் துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களோடு அனுப்பி வைத்ததோடு மட்டுமல்லாமல், 2–30 மணியாகிவிட்டால் நீங்கள் பொது மக்களுக்கு உண்மை நிலவரத்தை எடுத்துச் சொல்லுங்கள், என்ன நடந்து கொண்டிருக்கிறது? இந்தக் கொரோனா வைரஸால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் விளக்கமாகச் சொல்லி அவர்களுடைய அச்சத்தைப் போக்க வேண்டுமென்று ஓர் அற்புதமான செய்தியைச் சொன்னார்கள்.

முற்பகல் 11–55

பாதிக்கப்பட்டவர்களைக் கண்காணிப்பதற்குத் தேவையான lab facilities இன்றைக்கு இந்தியாவிலேயே இரண்டே

மாநிலங்களில்தான் அதிகமாக இருக்கின்றன. ராஜஸ்தானுக்கு அடுத்து தமிழ்நாட்டில் மட்டும்தான் இன்றைக்கு அதிகமான lab facilities–ஐ நாம் வைத்திருக்கிறோம். எத்தனை பேரை வேண்டுமானாலும் நாம் இன்றைக்கு test செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், 7 இடங்களிலே நமது அரசின் சார்பாகவும், 2 இடங்களிலே தனியார் சார்பாகவும் இந்த labs–ஐ வைத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நிறைய ஊடகங்களிலிருந்து, 'ஏன் testing குறைவாக செய்கிறீர்கள்' என்று கேட்டார்கள். அது மருத்துவர்களுடைய, துறையினுடைய பிரச்சினை. இருந்தாலும் ஊடக நண்பர்களுக்கு நான் அன்போடு சொல்கிறேன். நாம் follow செய்து கொண்டிருப்பது—National Institute of Epidemiology மற்றும் ICMR உடைய guidelines–ஐத்தான் நாம் follow செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் யாரை test செய்யச் சொல்கிறார்களோ, அவர்களை நாம் உடனடியாக test செய்கிறோம். 16 ஆம் தேதி ஓர் ஆணை வருகிறது. அதுவரை அவர்கள் சொன்ன அந்த ஆணையில் 'travel செய்துவிட்டு வந்தவர்கள், contact இருக்கிறவர்கள், symptoms இருக்கிறவர்கள் தவிர travel history இல்லாதவர்களுக்கு செய்ய வேண்டாம்' என்று சொல்கிறார்கள். 16 ஆம் தேதிக்குப் பிறகு உடனடியாக இந்தச் சூழ்நிலையை மாற்றி, அங்கிருக்கிற ஆராய்ச்சியாளர்கள் நமக்குத் தகவல் கொடுக்கிறார்கள். 'Severe acute respiratory disturbance–அதிகமான நுரையீரல் சார்ந்த நோய்வாய்ப்பட்டவர்களையும் சேர்த்து நீங்கள் செய்யுங்கள்' என்று சொன்னார்கள். உடனடியாக நாம் அதையும் increase செய்கிறோம். தேசிய அளவிலான அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடிய ஒரு protocol–ஐ follow செய்து நாம் அதைச் செய்கிறோம். Lab facilities–ஐ அற்புதமான வகையிலே செய்து கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக, சரியான நேரத்திலே நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்பு என்பது உள்ளபடியே பல்லாயிரக்கணக்கான உயிர்களை இன்று பாதுகாத்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அதுதான் அந்த 144 தடை உத்தரவை இன்று 6–00 மணியிலிருந்து மார்ச் 31 ஆம் தேதி வரைக்கும் அவர் விடுத்திருப்பது உள்ளபடியே சரியான நேரத்திலே எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிற அற்புதமான முடிவென்று சொன்னால், அது மிகையாகாது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பார்த்து நன்றி சொன்னார்கள். மிகவும் நன்றி. இன்றைக்கு இந்த முடிவு என்பது மற்ற நாடுகளும்,

மாநிலங்களும் எடுக்கத் தவறுகின்ற நிலையிலே, இந்த முடிவைத் துணிச்சலாக எடுத்ததோடு மட்டுமல்லாமல், நான் உள்ளே வரும்போது யோசித்துக் கொண்டே வந்தேன். இன்று 144 தடை உத்தரவு போட்டு விட்டார்களே, நம் மக்களுக்கான வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுமோ, என்ன மாதிரியான விளைவுகள் இருக்குமோ, உணவுக்கு என்ன செய்வார்கள், அவர்களுக்கு ஏதேனும் ஓர் உதவி வேண்டுமோ என்று என் எண்ணத்திலே வினாவை வினவிக் கொண்டு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளத்திலிருந்து விடையை இந்த மாமன்றத்திலே உதிர்த்துக் கொண்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'உணவு தயாரிப்பதற்கு அங்கன்வாடியை பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கெல்லாம் உதவித்தொகை வழங்குங்கள்' என்று அற்புதமான அறிவிப்புகளை இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் அறிவிப்பாக இந்த அவையிலே வழங்கியதெல்லாம் இந்த அரசாங்கம் தமிழ்நாட்டு மக்களுக்காக, அவர்களுடைய பாதுகாப்பிற்காக இரவு, பகலாக கண் துஞ்சாது உழைப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத்தான் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

இத்தனை சாதனைகளையும் மக்களுக்காகச் செய்திருக்கின்ற அரசின் சார்பாக ஒரு மருத்துவர் என்ற முறையிலே, ஒரு மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே இந்த மன்றத்தின் வாயிலாக நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு அன்பான சில வேண்டுகோள்களையும், சில தகவல்களையும் நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், அரசு தன்னுடைய கடமையை முழுமையாகச் செய்திருப்பதாக நான் உணர்கிறேன். பொது மக்களாகிய நீங்கள் நினைப்பதைவிட இந்த வைரஸின் வீரியம் அதிகமானது என்பதைத் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும். வளர்ந்த நாடுகளையே அது இன்று சுழற்றியடித்திருக்கிறது. SARS வைரஸைவிட இது அதிக வேகமாகப் பரவக்கூடிய தன்மையுடையது. It is highly infective-நாடுகளுக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளக்கூடிய தன்மை கொண்டது. It is highly mutant-Italy–யில் ஒரு மாதிரி இருக்கும். China–வில் ஒரு மாதிரியாக இருக்கும். இந்தியாவில் வேறு மாதிரி முகம் காட்டலாம். மருத்துவர்களால் மருந்து கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தலாம். இத்தகைய ஒரு சிரமத்தை நமக்குக் கொடுக்கக்கூடிய ஒரு கொடிய வைரஸ். இது இன்று தெய்வாதீனமாக நம்முடைய முயற்சியின்பேரிலே இந்தியாவிலே 483 பேருக்கு infect ஆகியிருந்தாலும், இன்று நம்முடைய தமிழ்நாட்டிலே வெறும் 12

பேர்களுக்கு imported cases என்ற முறையில் பாதித்திருக்கிறது. அதை முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளே நாம் வைத்திருக்கிறோம். ஆனால், இதே நிலைமை நீடிக்க வேண்டுமென்று நாம் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம். Italy–யிலே இதேமாதிரி 3–வது வாரத்தில் 400 cases இருந்தன. ஆனால், 4–வது, 5–வது வாரங்களில் அது 10 மடங்காக உயர்ந்து 4,000 cases ஆக மாறியது. அவர்கள் செய்வதறியாது திகைத்தார்கள். என்ன காரணமென்று பின்னோக்கிச் சென்று பார்த்தோம். இதுதான், இந்த ஊரடங்கு உத்தரவை அவர்கள் சரியாகப் பின்பற்றவில்லை. North Italy–யில் அடைக்கிறார்கள். எல்லோரும் South Italy–க்குப்போய் அங்கே குடிபெயர்ந்து அந்த வேலைகளைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆக, ஒரு தவறான, முழுமையாகக் கடைபிடிக்கப்படாத ஊரடங்கு உத்தரவின் காரணமாக, இந்தத் தொற்று என்பது அதிகமாக மாறிவிட்டதென்று சொன்னால், அது மிகையாகாது. ஏனென்றால், இன்றுவரைக்கும் நாம் community–களுக்குப் பரவ விடாமல் செய்திருக்கிறோம். இந்த community spread என்று ஆகிவிட்டால், நிச்சயமாக இதனுடைய பாதிப்பு அதிகமாகி இருக்கும் என்பதை இந்த அவையின் மூலமாக நான் நாட்டு மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏனென்றால், நமது உடம்பை அந்த virus–க்குக் கொடுத்தால்தான் அது, அதிலிருந்து பரவி அடுத்தடுத்த நபருக்குப் போகும். நமது உடலை அதற்குக் கொடுக்காமல் நாம் உள்ளேயே இருந்தோமென்று சொன்னால், நிச்சயமாக அந்த virus பரவுவதை நம்மால் தடுக்க முடியும். நீங்கள் இதை ஒரு போர் மாதிரி பார்க்க வேண்டும். இந்த corona virus எதிர்ப்பு என்பதை ஒரு போராகப் பார்க்க வேண்டும். இந்த corona virus என்பது ஒரு எதிரி. கண்ணுக்குத் தெரியாத எதிரி. கண்ணுக்குத் தெரிந்தாலாவது நல்லபடியாக அதைச் சரிசெய்து விடலாம். கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் நாம் போர் தொடுக்கிறோம். இந்தப் போரிலே போராளிகளாக, வீரர்களாக களமிறங்கியிருப்பது மக்கள். நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த virus–ஐ எதிர்த்து மக்கள்தான் அந்தப் போர்க்களத்திற்குள்ளே செல்கிறீர்கள், அந்த virus–ஐ வீழ்த்துவதற்கு உங்களை நிராயுதபாணியாக உள்ளே அனுப்பாமல், அற்புதமான 3 ஆயுதங்களை இந்த அரசாங்கம் கொடுத்து உங்களை அனுப்புகிறது.

நண்பகல் 12–00

ஆயுதம் Number one. ஊரடங்கு, Isolation–தனிமைப்படுத்துதல். இந்த ஊரடங்கு உத்தரவை இன்னும் கடினமான வார்த்தையில்

சொல்ல வேண்டுமென்று சொன்னால் lockdown. எங்கேயுமே நாம் வெளியே செல்லக் கூடாது, வீட்டிலேயே இருக்க வேண்டும். இரண்டாவது ஆயுதம், கைகளை 10–லிருந்து 15 முறை கழுவுங்கள். உங்கள் கைகளை முகத்திற்கு அருகிலோ, மூக்குக்கு, வாய்க்கு அருகிலோ கொண்டு செல்லாதீர்கள். Number three. மூன்றாவது ஆயுதம், உங்களுடைய வீட்டிலிருக்கும்போதுகூட, social distance என்று சொல்லக்கூடிய, அந்த இடைவெளியை நீங்கள் தயவுசெய்து பின்பற்றுங்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வீட்டில் இருக்கின்றபோது, நீங்கள் உங்களுக்காக மட்டும் இல்லை. உங்களை ஆளாக்கி, உழைத்து, வளர்த்து, ஒரு நல்ல நிலையிலே உட்கார வைத்து, இன்று அந்த வீட்டில் ஓய்விலிருக்கின்ற முதியவர்கள், தாத்தாக்கள், பாட்டிகள் உங்களுடைய தந்தையர்கள், அவர்களெல்லாம் இந்த பாதிப்பிற்குள்ளாவதற்கான அபாயம் இருக்கிறது. அவர்களுக்காக நீங்கள் இதைப் பின்பற்றுங்கள். இந்த உலகத்தை உங்கள் வாயிலாகப் பார்ப்பதற்கு ஆவலோடு காத்திருக்கின்ற மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்காக அதை நீங்கள் செய்யுங்கள். இருபது ஆண்டுக் காலம், முப்பது ஆண்டுக் காலம் உங்களோடு பயணித்து, உங்களுடைய இன்பத்திலும், துன்பத்திலும் பங்கெடுத்து, இன்றைக்கு diabetes, hypertension வந்து, இந்த இரண்டு வியாதி இருப்பதனால் எனக்கு கொரோனா வந்துவிடுமே என்று பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்ற உங்களுடைய உற்ற துணைக்காக, நீங்கள் இதை strict ஆக, நிச்சயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த ஆணையை, நீங்கள் ஆணையாக ஏற்றுக்கொண்டாலும் சரி, கட்டளையாக ஏற்றுக்கொண்டாலும் சரி, பிடித்துச் செய்தாலும் சரி, பிடிக்காமல் செய்தாலும் சரி, இந்த நாட்டிற்காக, உங்கள் வீட்டிற்காக இதை நீங்கள் கடைப்பிடித்தே ஆக வேண்டும் என்பதை என்னுடைய அன்பு வேண்டுகோளாக இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மக்கள் எல்லோருமே இந்த quarantine என்பதைப் பார்த்து பயங்கரமாக பயப்படுகின்றனர். நிச்சயமாக அது நமக்கு நாமே கொடுக்கும் ஒரு பாதுகாப்பு. வெளிநாட்டிலிருந்து அல்லது கேரளாவில் இருந்து ஒருவர் வந்துவிட்டால், அவரை நீங்கள் ஏதோ தீண்டத்தகாதவரைப்போல் பார்க்கக் கூடாது. நீங்களே உடனடியாக முன்வந்து அவர்களை hospital–க்கு அழைத்துச் செல்லுங்கள். அவர்களுக்கு என்ன மாதிரியான விஷயங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொடுங்கள். அங்கேயிருக்கின்ற VAO–க்கு, இந்த மாதிரி பாதிக்கப்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள்,

இந்த நாட்டிலேயிருந்து வந்திருக்கிறார்கள் என்று ஒரு information கொடுங்கள். நீங்கள் அவர்களை ஊரைவிட்டே காலி செய்வதிலேயே குறியாக இல்லாமல், அவர்களுக்கு என்ன மாதிரியான உதவிகள் தேவையோ அதைச் செய்து மனதளவிலே நீங்கள் அவர்களை தைரியப்படுத்தி, அவர்களுக்கு உற்ற துணையாக இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மிகவும் சிரமம் என்னவென்றால், எல்லோரும் வீட்டிற்குள்ளேயே இருப்பது என்பது பெரிய கஷ்டம் என்று நினைக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், நாம் எல்லோரும் இந்த அவசர உலகத்தில் வேலைக்குப் பின்னாலேயும், பணத்திற்குப் பின்னாலேயும் ஓடிக்கொண்டிருக்கிறோம். எனக்குத் தெரிந்து குழந்தைகளோடும், மனைவிமார்களோடும் time spend செய்கிற நேரம் மிகவும் குறைந்துபோய்விட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியாவது உங்கள் பிள்ளைகளினுடைய ஆசைகள் என்ன, பாசங்கள் என்ன, அவர்களின் தேவை என்ன என்பதை அருள்கூர்ந்து உட்கார்ந்து கேளுங்கள். விடுபட்ட சொந்தங்களுக்கெல்லாம் தொலைபேசி மூலமாகவே பேசி உங்களுடைய உறவுகளை மேம்படுத்திக்கொள்ளுங்கள். இந்த நேரத்தை நீங்கள் பயனுள்ளதாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், நம்முடைய மருத்துவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இப்போது சிங்கப்பூரில் என்ன செய்தார்களோ, அதைத்தான் நம் மருத்துவர்களும் follow செய்ய வேண்டும். ஏனென்றால் இந்த நோய்க்கெதிராகப் போராடக்கூடிய முக்கியமான போர்க்கருவி நீங்கள்தான். ஏனென்றால், நீங்கள் தொய்வடைந்துவிடக் கூடாது. நீங்கள் பாதிப்புக்குள்ளாகிவிடக் கூடாது. அதனால், தயவு செய்து Out Patients–ஐ mask இல்லாமல் பார்க்காதீர்கள். Emergency ஆக mask இல்லாமல் வரக்கூடியவர்களுக்கு mask கொடுத்து வைத்தியம் பாருங்கள். இரண்டு மீட்டர் distance வைத்துக்கொள்ளுங்கள். அந்த symptomatic patient சென்ற பிறகு, அவர் உட்கார்ந்த இடம், இருக்கை, உங்கள் stethoscope உட்பட அத்தனையையும், நீங்கள் கிருமிநாசினியை வைத்து சுத்தம் செய்துவிட்டு, அடுத்த patient–ஐ உள்ளே வரச் சொல்லுங்கள். அதேபோன்று, isolation ward–க்கு போகும்போது, full PPE kit இல்லாமல் போகாதீர்கள். Personal Protective Equipment kit இல்லாமல் தயவுசெய்து நீங்கள் போக வேண்டாம். ஏனென்றால், அந்த மாதிரி போகும்போது, உங்களுக்கு பாதிப்பு வராவிட்டாலும்கூட,

நீங்கள் carrier ஆகி வெளியில் சமுதாயத்திற்கு அந்த வியாதியைக் கொண்டுசென்றுவிடக் கூடாது. ஆகவே, அருள்கூர்ந்து, இன்றைக்கு மருத்துவர்கள் நமக்கு மிக மிக முக்கியம். எப்படி உங்களுடைய தியாகம் முக்கியமோ, அதுபோல, உங்களுடைய உடல் நலமும் இந்த அரசாங்கத்திற்கு முக்கியம். ஆகவே, நீங்களும் மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு நான் இதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அநேகமாக அதற்கு ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுப்பார்கள். ஏனென்று சொன்னால், இன்றைக்கு bed–க்காக isolation வேண்டுமென்பதற்காக நிறைய மருத்துவமனைகளிலே 25 beds அல்லது 30 beds நாம் ஒதுக்கி வைப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்படுவதாக அறிகிறேன். அதுபோன்று beds isolate செய்யும்போது தனி Block ஆக இருக்கிற இடங்கள், ஒரு மருத்துவமனையிலே தனி Block ஆக கிடைத்தால் நல்லது. ஏனென்றால், ஒரே Block–க்குள்ளே இந்த room, அந்த room என்று செய்தால், அது பரவுவதற்கான வாய்ப்பிருக்கும். உதாரணத்திற்கு பெரு மருத்துவமனைகளில் 'A' Block, 'B' Block, 'D' Block என்றிருக்கும். அந்த மாதிரி, ஒரு 'D' Block–ஐ மட்டும் தனியாக isolate செய்து வைத்துவிட்டோமென்றால் நிச்சயமாக அந்தத் தொற்று சிறிது குறைவாக இருக்கும். அதையும், பொது மக்கள், எவ்வாறெல்லாம் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்பதையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்னும் சிறப்பாக விளக்கினார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும் என்பதையும் இந்த அவையின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மருத்துவர் என்ற காரணத்தினால் பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதேபோல அரசின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பில் எடுக்கப்பட்டு வரக்கூடிய நடவடிக்கைகளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய அந்த நடவடிக்கைகளுக்கு பொது

மக்கள் எந்த அளவிற்கு ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்ற அவசியத்தையும் அழகாக, மருத்துவர் என்ற முறையில் இந்தச் சட்டமன்றத்தில் அவர் வலியுறுத்தியிருக்கிறார். ஒரு சில நிமிடங்கள் மட்டும் எடுத்துக்கொண்டு, ஒரேயொரு புள்ளிவிவரத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் கணத்திற்கு கணம், நிமிடத்திற்கு நிமிடம், முழுவதும் அதே சிந்தனையில் இருந்து, இன்று என்ன செய்ய வேண்டும், இன்னும் என்ன செய்ய வேண்டும், அடுத்து என்ன செய்ய வேண்டும், அதற்கடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைத் தொடர்ந்து யோசித்து, சிந்தித்து உடனடியாக தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களோடு கலந்தாலோசித்து, புதிய புதிய அறிவிப்புகளை, புதிய புதிய உத்தரவுகளை யாருக்காக பிறப்பித்துக் கொண்டிருக்கிறார்? இந்த நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த தமிழினத்திற்கு இந்த நோய்த் தொற்று வந்துவிடக் கூடாது என்பதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதைத்தான் அது காட்டுகிறது. அதற்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த நடவடிக்கைக்கு, அரசினுடைய இந்த அறிவிப்புகளுக்கு, அரசினுடைய இந்த உத்தரவுகளுக்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் மாண்புமிகு முதலமைச்சர் இப்படி சொல்கிறார்? இந்த நோய் முதலில் 70 நாடுகளில், 80 நாடுகளில், 100 நாடுகளில் பரவியிருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு ஒட்டுமொத்தமாக உலக அளவில் 186 நாடுகளில் இந்த நோய் பரவியிருக்கிறது. உலகத்தையே மிகப் பெரிய அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. உலகத்தில் 186 நாடுகளில் பரவியிருக்கிறது. இன்றுவரை பரிசோதனை செய்யப்பட்டதில், 3,32,970 cases–ல் positive ஆகியிருக்கிறார்கள். Corona virus–ல் பாதிக்கப்பட்டவர்கள் 3,32,970 பேர். இந்த corona virus ஆல் 14,510 பேர் இறந்திருக்கிறார்கள். இத்தாலியில் ஒரே நாளில் 500–க்கு மேற்பட்டவர்கள் இறக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்தியாவில் 443 cases. 1, 2, 3 என்று வந்தது இப்பொழுது 443 cases. Death cases இந்தியாவில் 9. இந்த நோய் எவ்வளவு வேகமாகப் பரவுகிறது என்பதற்கு ஒரேயொரு கருத்தைச் சொல்கிறேன். பொது மக்கள்

எந்த அளவுக்கு விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த நிலை என்பது Wuhan–ல் முதலில் 250 cases இருந்தன. 15 நாட்களில் 13,000 ஆனது. அடுத்த 15 நாட்களில் 61,000 ஆகிவிட்டது. அடுத்த 15 நாட்களில் 81,000 ஆகிவிட்டது. இத்தாலியில் நோய் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். Zero இருந்தது, 3 இருந்தது, 4 இருந்தது, 15 நாட்களில் 3,000 ஆக இருந்தது, அடுத்த 15 நாட்களில் 41,000 வந்துவிட்டது. ஈரானில் தொடர்ந்து நோய் பாதிப்பு இல்லை, சைபர், சைபர், சைபர் என்று புள்ளிவிவரம் போட்டவர்கள், 2,922 என்ற ஒரு புள்ளிவிவரம் வெளியிட்டார்கள். அடுத்த 15–வது நாளில் 18,000 cases என்ற புள்ளிவிவரம் வந்துவிட்டது. அமெரிக்காவில் சைபராக இருந்தது, 11 ஆக இருந்தது, 15 ஆனது, அதன்பின் 129 என்று எண்ணிக்கை சொன்னார்கள். நாங்கள் safe ஆக இருக்கின்றோம் என்று சொன்னார்கள். வல்லரசு நாடான அமெரிக்காவையே அச்சத்தில் ஆழ்த்தக்கூடிய அளவுக்கு பத்தே நாட்களில் 10,442 cases வந்துவிட்டன. அதிவேகமாக, விரைவாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல community spread–சமூகத்தில் நோய்த் தொற்று, மின்னல் வேகத்தில் பரவுகிறது. எல்லோரையும் பாதிக்கிறது. மிகப் பெரிய அச்சம். வயதானவர்களுக்கு, co–morbidity–ல் இருப்பவர்களுக்கு இறப்பு நேரிடுகிறது. இந்த உலகத்திலுள்ள அத்தனை நாடுகளில் இருக்கக்கூடிய நிலைமைகளை எல்லாவிதமான seriousness உடன், அச்சமாக, பதட்டமாக எதிர்நோக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு உணர்ந்த காரணத்தினால்தான், இந்த 144 போன்ற தடை உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல இது அரசினுடைய உத்தரவு. இதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இன்றைக்கு 12,519 பேர் foreign–லிருந்து travel செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் home quarantine–ல் இருக்க வேண்டுமென்று அரசு சொல்கிறது. மிகவும் பணிவாகச் சொல்கிறோம், அன்பாகச் சொல்கிறோம், சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி வணங்கிக் கேட்டுக்கொள்கிறோம். உங்களிடமிருந்து community spread வந்துவிடக் கூடாது. உங்களிடமிருந்து உங்கள் மனைவிக்கு வந்துவிடக் கூடாது. அரசின் அக்கறைதானே! உங்களிடமிருந்து உங்கள் கணவனுக்கு வந்துவிடக் கூடாது. உங்களிடமிருந்து உங்கள் பையனுக்கு வந்துவிடக் கூடாது. உங்களிடமிருந்து உங்கள் driver–க்கு வந்துவிடக் கூடாது. அதற்காகத்தான் ‘home quarantine–ல் இருங்கள், இருங்கள்’

என்று அரசு தொடர்ந்து வலியுறுத்துகிறது. இப்பொழுது அரசின் உத்தரவுப்படி நீங்கள் home quarantine–ல் இருந்தே ஆக வேண்டும். காவல் துறை உங்களைக் கண்காணிக்கும். நீங்கள் வெளியில் வரக் கூடாது. Home quarantine–ல் 14 நாட்கள் இருக்க வேண்டுமென்று உலக சுகாதார நிறுவனம் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக 14 + 14, 28 நாட்கள் நீங்கள் வீட்டில் இருந்தே ஆக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது கட்டாயம் என்பது அரசின் உத்தரவு. அதை மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதில் அரசு தெளிவாக இருக்கிறது. காரணம் community spread வந்துவிடக் கூடாது என்பதுதான். அவரிடமிருந்து ஒருவருக்குக்கூட வந்துவிடக் கூடாது என்பதுதான்.

ஒரேயொரு செய்தி, டெல்லியிலிருந்து வந்த ஒருவருக்கு அந்த நோய் தாக்கம் positive என்று கண்டுபிடித்துவிட்டோம். இரவு–பகல் போராடி அவரோடு பேசியவர்கள், அவரோடு coupe–ல் வந்தவர்கள், டீ சாப்பிட்டவர்கள், saloon–ல் வேலை பார்த்தவர்கள், அவர் வீட்டில் இருந்தவர்கள், பக்கத்து வீடு, எதிர் வீடு என எல்லோரையும் மொத்தம் 193 பேரை trace செய்கிறோம். 193 பேரும் எனக்கு வந்துவிடுமோ, உனக்கு வந்துவிடுமோ என்ற பதட்டம், பயம், அச்சத்தில் இருக்கிறார்கள். மிகப் பெரிய சவாலான விஷயம். இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு இவ்வளவு வேகமாக, இவ்வளவு துரிதமாக அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகளை வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசு பொது மக்களைப் பார்த்துக்கொள்கிறது. மாண்புமிகு முதலமைச்சர், 'எச்சரிக்கையாக இருங்கள், கவனமாக இருங்கள், மிகவும் சரியாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்கிறார். 'இன்னும் என்ன செய்ய வேண்டுமென்று' கேட்கிறார்கள். மக்கள் செய்ய வேண்டிய ஒரேயொரு விஷயம், ஒத்துழைப்பு. 'நான் வீட்டில் இருக்கின்றேன், நீங்களும் வீட்டில் இருங்கள். நான் வீட்டில் இருக்கின்றேன், நீங்களும் வீட்டில் இருங்கள். வீட்டிலேயே இருங்கள். விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள், வெளியில் போகாதீர்கள், travel செய்யாதீர்கள்'.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தயவுசெய்து எதிர்மறையான கருத்துகளுக்கோ, எதிர்மறையான பேச்சுகளுக்கோ, விவாதத்திற்கோ, இதை இப்படிச் செய்திருக்கலாமோ, இதை அப்படிச் செய்திருக்கலாமோ, இதை

2 நாட்களுக்கு முன்னாடி சொல்லியிருக்கலாமோ, 2 நாட்கள் late ஆகச் சொல்லியிருக்கலாமோ என்ற பேச்சுக்கெல்லாம் இடமில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு மிகப் பெரிய அச்சம். உலக வல்லரசு நாடுகளையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிற ஒரு மிகப் பெரிய விஷயத்திற்கு அரசு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறது. அரசு இயங்குகிறது மக்களுக்காக! 'மக்கள், நீங்கள் இயங்க வேண்டாம், நீங்கள் வீட்டில் இருங்கள், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'. Government is functioning. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தலைமைச் செயலகத்திலிருந்து நான் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டேயிருக்கிறேன். மருத்துவர்களுக்கு என்ன வேண்டும்? செவிலியர்களுக்கு என்ன வேண்டும்? எத்தனை masks வேண்டும்? மருத்துவமனைக்கு என்ன வசதி வேண்டும்? மருத்துவருக்கு என்ன facility வேண்டும்? என்ன equipment வேண்டும்? எவ்வளவு நிதி வேண்டும் போன்ற விவரங்களைக் கேட்டு, கேட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். 60 கோடி ரூபாயோ, 500 கோடி ரூபாயோ, இன்னும் எத்தனை கோடி தேவையோ அனைத்தையும் செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள், இந்த அரசும் தயாராக இருக்கிறது. பொது மக்களிடமிருந்து நாங்கள் ஒத்துழைப்பை மட்டும்தானே கேட்கிறோம். 'ஒத்துழைப்புக் கொடுங்கள், வீட்டிலேயே இருங்கள், கவனமாக இருங்கள், வெளியே வராதீர்கள், ஒருவரிடமிருந்து ஒரு மீட்டர் தள்ளி இருங்கள், யாரிடமும் பேசாதீர்கள், விலகி நில்லுங்கள், holiday mood–க்கு போகாதீர்கள்' என்றுதான் கேட்கிறோம்.

Voluntary serious curfew என்று அழகாகச் சொல்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் சொன்னார்கள். Voluntary serious curfew, நீங்களாகவே முன் வந்து, மக்களாகவே முன்வந்து ஊரடங்குக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

தற்போது எல்லா அமைச்சர்களும், 'எங்களுடைய மாவட்டத்திற்கு என்ன செய்ய வேண்டும்' என்று கேட்கிறார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், 'என்னுடைய தொகுதிக்கு என்ன செய்ய வேண்டும்' என்று கேட்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் மக்களுடைய நலனுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உலக நாடுகளை உலுக்கி இருக்கின்ற விபரீதத்தை உணர்ந்து, இந்த நோய்க்கான வைரஸ் பரவுகின்ற வேகத்தை உணர்ந்து, அதனால் ஏற்படும் பாதிப்பை உணர்ந்து, ஒரே நாளில்

ஏற்படக்கூடிய மரணங்களை உணர்ந்து, community spread மூலம் பரவிவிட்டால், அதற்குப் பிறகு ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து, வளர்ந்த நாடுகளிலே தற்போது ICU–ல் bed இல்லை, இடமில்லை என்ற நிலையை உணர்ந்து, பொது மக்கள் இந்த நேரத்தில் மிகப் பெரிய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக home quarantine என்று சொல்லக்கூடிய வீட்டிலேயே இருக்க வேண்டும் என்ற விஷயத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவுக்கு தயவுசெய்து நாம் அத்தனை பேரும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியது அவசியம். நாம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும், மற்றவர்களை ஒத்துழைப்பைக் கொடுக்கச் செய்வதும் அவசியம் என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பரமசிவம் அவர்கள் பேசியபோது, மருத்துவமனை பற்றிக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், minute to minute உத்தரவு போட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அதை நாம் சிரமேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றோம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், பரிவுடன் 'என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறீர்கள்?' என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் உத்தரவிற்கிணங்க, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் 300 படுக்கைகள் கொண்ட வசதியை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

அதேபோன்று, நிறைய பேர் testing facililty பற்றிக் கேட்டார்கள். தற்போது, Vellore CMC–க்கு testing facility வாங்கிக் கொடுத்துவிட்டோம், அப்பல்லோவிற்கு testing facility வாங்கிக் கொடுத்துவிட்டோம். தனியார் மருத்துவமனைகள் 25 சதவிகித bed facility–ஐ ஒதுக்கித் தர முன்வர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அனைத்து மருத்துவமனைகளும் முன்வந்திருக்கின்றன. மருத்துவர்கள், செவிலியர்கள், paramedical பணியாளர்கள் என அனைவரும் பணியில் இருக்கிறார்கள். தடை உத்தரவில், 'செவிலியர்கள் வர வேண்டும், மருத்துவர்கள் வர வேண்டும், அங்கேயே தங்க வேண்டும், அங்கேயே தங்கி, அங்கேயே துவைத்து, அங்கேயே பணியாற்ற வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது. 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை இயங்கிக் கொண்டேயிருக்கிறது. ஆக, மக்களுக்காக இந்த அரசு இயங்குகிறது, கட்டுப்பாட்டு அறை இயங்குகிறது, அரசு

எதையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது. உங்களின் ஒவ்வோர் உயிரும் பாதுகாக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மக்களிடமிருந்து ஒன்றே ஒன்றைத்தான் கேட்கின்றோம், அன்போடு கேட்கின்றோம், பணிந்து கேட்கின்றோம், 'தயவு செய்து நீங்கள் வீட்டை விட்டு வெளியே வராதீர்கள். Home quarantine, வீட்டிலேயே இருங்கள், தனித்து இருங்கள், சமூகத்தோடு தொடர்பு கொள்ளாதீர்கள்'. இதையெல்லாம் யாருக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்? யாருக்காக இந்த அரசு சொல்கிறது? உங்களுடைய நலனுக்காக, உங்களுக்கு நோய்த் தொற்று வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறது.

Abroad–ல் mask அணிந்த ஒவ்வொருவருடைய முகத்திலும், mask அணிந்ததால் ஏற்பட்ட scar இருக்கிறது, அந்த அழுத்தம் இருக்கிறது. ஒரு செவிலியர் 8 மணி நேரம் தொடர்ந்து mask அணிந்திருந்தார் என்றால், அவருடைய முகத்திலிருந்து அந்த mask–ஐ கழற்றவே முடியாத அளவிற்கு scar ஏற்படுகிறது, காயம் ஏற்படுகிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, Personal Protective Equipment–ஐ முகக் கவசத்தை, full time–மும், அணியும்போது, அவர்கள் அவசரத்திற்கு எப்படிப் போவார்கள்? அவர்கள் எப்படித் தண்ணீர் குடிப்பார்கள்? அதுபோன்று தற்போது துறை பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, தூய்மைப் பணியாளர்கள் உட்பட அனைவரும் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, ஏற்படும் ஆபத்தை மனதில் வைத்துக்கொண்டு, நாளைக்கு ஏதாவது ஓர் ஆபத்து ஏற்பட்டால், 'நம்மை ventilator–ல் போட்டுவிடுவார்களே' என்ற ஆபத்தை உணர்ந்து, நீங்கள் இதனால் ஏற்படும் அச்சத்தை மனதில் கொண்டு, தயவுசெய்து நீங்கள் வீட்டில் தனியாக இருக்க வேண்டும், அரசு சொல்வதைக் கேட்க வேண்டும், அவசியம் கேட்க வேண்டும். இது இந்த அரசினுடைய வேண்டுகோள் அல்ல; அரசினுடைய உத்தரவு, அரசினுடைய வலியுறுத்தல், அரசினுடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அன்பான, பணிவான வேண்டுகோள் என்பதனை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உலகத்தையே அச்சுறுத்தக்கூடிய கொரோனா வைரஸின் ஆபத்தை உணர்ந்து, இதனுடைய வேகத்தை உணர்ந்து, இதனுடைய பரவுதலை உணர்ந்து, இது எவ்வளவு வேகமாகப் பரவுகிறது என்பதையெல்லாம் உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைக்கு நீங்கள் ஒத்துழைப்புக்

கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, மக்கள் நல்வாழ்வுத் துறையில், தமிழ்நாடு முழுவதும் மருந்துகள் இருப்பில் தயாராக வைத்திருக்கிறோம், treatment modalities–ல் prepared ஆக இருக்கிறோம், safety equipments–ல் prepared ஆக இருக்கிறோம், படுக்கைகளினுடைய எண்ணிக்கையில் prepared ஆக இருக்கிறோம், ventilators வசதியில் prepared ஆக இருக்கிறோம், எல்லாவிதத்திலும் prepared ஆக இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இராஜீவ் காந்தி மருத்துவமனையில் தற்போது இருக்கக்கூடிய அந்த நோயாளிகள் உள்ளிட்ட 12 பேரில், மதுரையிலுள்ள ஒரே ஒருவர் மட்டும், 10 ஆண்டுகளாக co–morbidity–நுரையீரலுக்கான நோய், uncontrollable diabetes மற்றும் hypertension இருப்பதால், ஆபத்தான நிலையில் இருக்கிறார். மற்ற எல்லோருமே நலமோடு இருக்கிறார்கள். அந்தளவுக்கு நம்முடைய மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'அந்த patient எப்படியிருக்கிறார், ஈரோடு patient எப்படியிருக்கிறார், திருநெல்வேலியில் எப்படியிருக்கிறார்கள், கோயம்புத்தூரில் எப்படியிருக்கிறார்கள்' என்று தினந்தோறும் கேட்கிறார்கள்.

அரசு எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் மக்கள் நலனுக்காக, உங்கள் ஒவ்வொருவருடைய நலனுக்காக எடுக்கப்படுகிறது. இது உயிர் சம்பந்தப்பட்ட விஷயம், இது life saving சம்பந்தப்பட்ட விஷயம். ஆக, உங்கள் உயிர் காக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் தயவுசெய்து ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று மீண்டும், மீண்டும், மீண்டும், மீண்டும் நான் பணிவோடு, அன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். 100 ஆண்டுகளில் இதுபோன்ற நிலை தமிழகத்திற்கு, ஏன் உலகத்திற்கே வந்தது இல்லை. உலகத்தில் இதுபோன்ற pandemic வந்தது இல்லை.

பிற்பகல் 12–15

ஒரே நோய், ஒரே நேரத்தில் உலகையே உலுக்குவதற்குத்தான் Pandemic என்று சொல்கிறோம். உலகமே இன்றைக்கு பயந்து போயிருக்கிறது. உலகம் முழுவதும் இன்றைக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. இந்தியா முழுவதும் அச்சுறுத்தல் இருக்கிறது. தமிழ்நாடு அரசு, தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் well in advance ஆக எடுத்திருக்கிறது. அதனால், மீண்டும் ஒரு முறை

எதிர்மறையான கருத்துகளுக்கு இடமளிக்காமல், விவாதத்திற்கு இடமளிக்காமல், மற்றவர்கள் இதைச் செய்திருக்கலாம், அதைச் செய்திருக்கலாம் என்று ஒவ்வொருவரும் பேசுவதைத் தவிர்த்து, எல்லோரும் உணர்வில் ஒன்று கூடி, கூட்டமாகக் கூடுவதில்லை, உணர்வில் ஒன்றுகூடி, சமூகத்திலிருந்து விலகி நின்று, இந்த நோய் எதிர்ப்புப் பணிகளில் அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி, அரசு எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு, மக்களைக் காப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மக்கள் நல்வாழ்வுத் துறை, 24x7, 24 மணி நேரமும் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவோடு தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக, தெளிவாக இந்த நோயினுடைய தன்மையைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தடுக்கின்ற பணிகளைப் போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதற்கு, பொது மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 6–00 மணி முதல் மாவட்ட எல்லைகள் அனைத்தும் மூடப்பட்டுவிடுகின்றன. அதற்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இந்தக் கொரோனா வைரஸ் தொற்று நோயைப் பொறுத்தவரையில் அது வேகமாகப் பரவக்கூடிய ஒரு நோய். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கிட்டத்தட்ட 186 நாடுகளிலே இந்த நோய் பரவியிருக்கின்றது. ஆகவே, இந்த நோயினுடைய தாக்கத்தினை அறிந்து, பொது மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். மாவட்ட எல்லைகள் மூடப்படுவது மட்டுமல்ல, பொது மக்கள்

தங்கள் வீட்டிலேயே இருந்து, தங்களை தனிமைப்படுத்தி, இந்த நோயைத் தடுக்கின்ற பணிக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அத்தியாவசியப் பணிகளுக்கு மட்டும் பொது மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லலாம். கூட்டம் கூடுவதைத் தவிர்க்க வேண்டும். அதேபோல, நோய் அறிகுறி தென்பட்டால், உடனடியாக மருத்துவர்களைச் சந்தித்து, பரிசோதனை செய்து, அந்த நோயினுடைய தன்மையை அறிந்து, அவர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கின்றோம். இது ஒரு கொடிய நோய், இது ஒரு தொற்று நோய். ஆகவே, இந்த நோய் வந்தவர்கள், பிறரிடம் பேசுவதோ, தொடர்பு வைத்துக்கொள்வதோ கூடாது. இது வேகமாகப் பரவக்கூடிய நோயாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் தங்களை முழு பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு முழு பரிசோதனை செய்து கொண்டால்தான் மற்றவர்களுக்கு அந்த நோய் பரவாமல் தடுக்க முடியும். அந்த நோய் வருவதற்குண்டான அறிகுறிகள் அவர்களுக்குத் தென்பட்டால், உடனடியாக மருத்துவர்களைச் சந்தித்து, மருத்துவமனையிலே சேர்ந்து சிகிச்சை பெற்று குணமடையலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், அரசு முழு மூச்சுடன் செயல்படுகிறது. இன்றைக்கு வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளைப் பரிசோதனை செய்து, அந்தப் பரிசோதனையிலே நோய் கண்டறியப்பட்டால், அவர்களைத் தனிமைப்படுத்தி, உரிய சிகிச்சை அளித்து, குணமடையக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கின்றோம். இதில் பாதிக்கப்பட்ட ஒருவர்கூட, நம்முடைய மருத்துவர்கள் தகுந்த சிகிச்சையளித்த காரணத்தினாலே இன்றைக்கு குணமடைந்திருக்கின்றார். ஆகவே, பாதிக்கப்பட்டவர்கள் அச்சப்பட தேவையில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கென்று தனி ward அமைக்கப்பட்டு, மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. அதனால், பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனையிலே சேர்ந்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–20

அதேபோல, எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இதைக் குறிப்பிடுகின்றேன். சில நபர்கள் காய்ச்சலுக்கு இருக்கின்ற மாத்திரைகளை உட்கொள்கின்ற காரணத்தினால், அந்தப் பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் சில நபர்கள் பெங்களூருவிலிருந்து வந்து இறங்கி, நம்முடைய மாநிலத்திற்கு வந்துவிடுகிறார்கள். அதோடு, வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள், இந்தியாவில் உள்ள பிற விமான நிலையங்களிலிருந்து இறங்கி நம் மாநிலத்திற்கு வந்துவிடுகிறார்கள். அவர்களை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி, பிற மாநிலங்களிலிருந்து, வெளிநாட்டிலிருந்து விமானம் மூலமாக இறங்கி வந்து வீட்டிலே இருந்தாலும், உடனடியாக அருகில் இருக்கின்ற மருத்துவமனைக்குச் சென்று, தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை அரசு தனிமைப்படுத்துகின்றது. அவர்களும் மற்றவர்களோடு தொடர்புகொள்ளாமல் இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். இதற்காக, 24 மணி நேரமும் இயங்கக்கூடிய கட்டுப்பாட்டு அறையை அரசு உருவாக்கியிருக்கின்றது. ஏதாவது, நோய் அறிகுறி தென்பட்டால், உடனடியாகக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொடர்புகொண்டு, அவர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். இதையெல்லாம் இவ்வளவு வலியுறுத்திச் சொல்வதற்கு காரணம், இந்த நோய் வந்துவிட்டால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். 'வரும்முன் காப்போம்' என்ற அடிப்படையிலே, பொது மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பரமசிவம் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். அதாவது, இந்த நோய் வந்துவிட்டால் என்னென்ன நடக்கும் என்பதைப் பற்றியும், நோய் வராமல் இருப்பதற்காக அரசு மூலமாக எடுத்து வருகின்ற தடுப்புப் பணிகள் என்னவென்பது பற்றி விளக்கமாகவும், மேலும், தடுப்புப் பணிகளுக்கு மக்கள் எப்படி ஒத்துழைக்க வேண்டுமென்ற விவரத்தைப் பற்றி தெளிவாகவும் சொன்னார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், தினந்தோறும் அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது பற்றியும், இதில், யார், யார் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்? அவர்களுக்கு என்னென்ன சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன என்பது

குறித்த விவரங்களையும் உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், வேகமாக, துரிதமாக இன்றைக்கு, இந்த நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும் சிகிச்சைப் பிரிவில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனையின் தூய்மைப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு ஒரு மாத ஊதியம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கொரோனா வைரஸால் தொற்று நோய் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றவர்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு இன்றைக்கு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் இவர்களெல்லாம் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். அருகில் இருந்தாலே இந்த நோய் தொற்றிக்கொள்ளும் என்று அச்சப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில், தன்னையும், தன் உயிரையும் பொருட்படுத்தாமல், அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் அனைவரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவப் பணி என்பது ஓர் உன்னதப் பணி; மகத்தான பணியாகும். அந்த மகத்தான பணியை சிரமேற்கொண்டு, அச்சம் இல்லாமல், நோய்வாய்ப்பட்டிருக்கின்ற அந்த நபருக்கு உரிய முறையிலே சிகிச்சை அளித்து, குணமடையச் செய்து, இன்றைக்கு மகிழ்ச்சியோடு வீடு திரும்புகின்ற காட்சியைப் பார்க்க வேண்டுமென்று இரவு, பகலாகப் பணியாற்றுகின்ற மருத்துவர்களை நாங்கள் மனமார, உளமாரப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்ற அனைவரையும் நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, அரசு எடுத்து வருகின்ற தடுப்புப் பணிகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று, நான் மீண்டும், மீண்டும் அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், உரையை முடியுங்கள். தங்களுடைய

தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை மட்டும் வைத்து, உரையை முடியுங்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்வுபூர்வமாகவும், உருக்கமாகவும் மக்களின் நலனுக்காக கோரிக்கை விடுத்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நிச்சயமாக, தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்காகவும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும் நீங்கள் இட்ட கட்டளையை, அன்புக் கட்டளையாக ஏற்று, நிச்சயமாக வழிமொழிந்து, அவர்கள் அதைப் பின்பற்றுவார்கள் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை மட்டும் வைத்து, நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியில் இருக்கின்றபோதே இறக்க நேரிடுகின்றபோது, அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்குகின்ற நிதி 2 இலட்சம் ரூபாயாக இருக்கின்றது. ஆக, இந்த 15–வது சட்டமன்றப் பேரவையில் எதிர்பாராத விதமாக, அதிகமான எண்ணிக்கையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்திருக்கின்றார்கள். அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த நிதியை உயர்த்தித் தர வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை வைக்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமாக இப்போது 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படுகின்ற ஓய்வூதியத்தையும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து சற்று உயர்த்தி வழங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், வயது முதிர்ந்தவர்கள் மருத்துவப் படியை அதிகமாகப் பயன்படுத்துகின்றார்கள். இப்போது, அந்த மருத்துவப் படி ரூ.30 ஆயிரமாக இருக்கிறது. அதையும் உயர்த்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இந்த விவாதத்திற்குள் நுழையும் முன்பாகவே, சென்னையிலே மானிய விலையிலே அவர்களுக்கு வீடு வழங்குவது குறித்த ஓர் அறிவிப்பை அறிவிக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரு பரீட்சார்த்த முயற்சியின் அடிப்படையிலே, அருள்கூர்ந்து நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்துபேசி விரைவிலே அந்த நல்ல அறிவிப்பையும் எங்களுக்குத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் துறையிலே மூன்றாவது தலைசிறந்த மாநிலமாக இன்று தமிழ்நாடு இருக்கின்றது. தொழில் துறை ஏற்றுமதியிலே இந்தியாவினுடைய கால் பங்கினை முழுமையாக அடைந்து, பல நல்ல நிறுவனங்களை தமிழ்நாட்டின் பக்கம் இழுத்து இன்று சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்கள் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேடசந்தூரில் ஒரு சிப்காட் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளையும் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனைக்குத் தேவையான கூடுதல் கட்டடத்தை அருகில் இருக்கின்ற Court complex–ல் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஏனென்றால், இப்பொழுது புதிதாக ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வந்துவிட்டது. அந்த Court complex–ஐ மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மருத்துவமனைக்குப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேலவை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி இங்கே பேசியிருக்கின்றார். அதில் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகின்றேன். சட்டமன்ற உறுப்பினர்கள்

பதவியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு தற்போது ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. அது 1–4–2020 முதல் ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.20,000/– 1–7–2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அது 1–4–2020 முதல் ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

சட்டமன்றப் பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களின் சட்டமுறை வாரிசுதாரர்களுக்கு மாத குடும்ப ஓய்வூதியமாக ரூ.10,000/– 1–7–2017 முதல் வழங்கப்பட்டு வருகிறது. அது 1–4–2020 முதல் ரூ.12,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 கோடியே 21 இலட்சத்து 80 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

ஒவ்வொரு நிதியாண்டிலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 1–7–2018 முதல் ரூ.30,000/– மருத்துவப் படி வழங்கப்பட்டு வருகிறது. அது 1–4–2020 முதல் ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 கோடியே 82 இலட்சத்து 40 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

சட்டமன்ற பேரவை/மேலவை முன்னாள் உறுப்பினர்களுக்கு 1–3–1995 முதல் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கு முன்னாள் உறுப்பினர்களுக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் 1–4–1997 முதல் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் உறுப்பினர் தனியாகவோ, வாழ்க்கைத் துணையுடனோ அல்லது உதவியாளருடனோ இலவச பயணம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டது.

தற்போது குளிர்சாதன இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்துகளில் பயணம் செய்யவும் தங்களை

அனுமதிக்க வேண்டுமென்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் இதே கோரிக்கை வரப்பெற்றுள்ளது. எனவே, அவர்களின் கோரிக்கையை ஏற்று, இனி படுக்கை வசதி கொண்ட குளிர்சாதன பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மேலவை உறுப்பினர்கள் மட்டும் படுக்கை வசதியுடன் இலவச பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அவர்களது வாழ்க்கைத் துணை அல்லது உதவியாளர் குளிர்சாதன பேருந்துகளில் இருக்கை வசதியுடன் மட்டும் இலவச பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்பதைத் தங்கள் வாயிலாக பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வேலாயுதம்பாளையத்தில் 275 ஏக்கர் நிலத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம்–SEZ உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிச்சயமாக, சிப்காட்மூலம் அந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தேனி மாவட்டத்தில் தொப்பகுண்டு, பூமாலைகுண்டு மற்றும் உப்பார்பட்டி பகுதிகளிலே 475 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் உணவு உற்பத்தி செய்வதற்குண்டான உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான நடவடிக்கையை சிப்காட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கை எண் 47-இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறநானூற்றுத் தாயாய் புதுவுலகம்

தந்து மக்கள் நலம் காக்கும் மாதரசியாய் எம் வாழ்க்கைக்கு முகவரி தந்திட்ட முழுமதியாய், வானுறையும் தெய்வமாய் வாழும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடும் மூன்றாண்டுகளில் முத்தாய்ப்பான திட்டங்களாலும் வெளிநாடுகளின் முழுமையான முதலீடுகளாலும் எவரும் திணறும் புரட்சியைக்கூட பலரும் வியக்கும் வகையில் தமிழகத்தை தொழில்மயமாக மாற்றிக் காட்டிய அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் வழிகாட்டுதலோடும் இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையைச் சமர்ப்பிக்கிறேன்.

ஊன் உருகி உள்ளொளி பெருக உணரும் மொழியால் ஓதினால்தானே இறைவன் உணர்ந்ததை உள்ளம் உணரும் ஆதிக் குடியின் அடையாளமாய் செம்மாந்து நிற்கும் சோழனின் வானுயர்ந்த புகழ் மகுடமாய் விளங்கும் தஞ்சை பிரகதீசுவரர் திருக்கோயிலில் உலக மொழிகளின் மூத்த மொழியில் குடமுழுக்கை நிகழ்த்திக் காட்டிய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களையும் மற்றும் பிற மாமன்ற உறுப்பினர்களையும் வணங்கி, இந்து சமய அறநிலையத் துறையின் முத்தாய்ப்பான பணிகளை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்பணியாய் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கென ஏழைகளுக்கு கேட்காமலே கொடுக்கும் வள்ளலாய், பசிப்பிணி போக்கும் அமுத சுரபியாய், ஆலயங்கள்தோறும் தேவைக்கேற்ப தேடித் தேடி அன்னதானத் திட்டம் தொடங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் விவசாயிகளின் தோழனாகவும், தமிழ்நாட்டின் மண்ணைக் காப்பதோடு உழவர்களையும் காத்து, சிறப்பு வேளாண் பாதுகாப்பு மண்டலம் அறிவித்து தமிழக மக்களின் பாதுகாவலனாகச் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் திருக்கோயில்களில் திருப்பணிகள் சிறப்பாக மேற்கொண்டு பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் மகத்தான வழிகாட்டுதல்களை இந்து சமய அறநிலையத் துறைக்கு வழங்கி, திருக்கோயில் பாதுகாப்புத் திட்டங்களை மேம்படுத்தி வரும் இந்த ஆட்சியில் நான் அமைச்சராக பணியாற்றுவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

மலைபோல பிரச்சினை வந்தாலும், தூசு போல பறந்து போகும் முகராசி கொண்ட ஏழைகளின் பங்காளன், விவசாயிகளின்

தோழன், தொழில்முனைவோரின் வழிகாட்டியாக இருந்து அரசைக் காத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறையில் ஆகம விதிகளின்படி திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதில் அறநிலையத் துறை பிற மாநிலங்களுக்கே முன்னோடியாக திகழ்ந்து வருகிறது என்பதை இந்த அவையில் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரின் தோளோடு தோள் சேர்த்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபடும், ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையை நடுநிலையோடு வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஆரணி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், முதன்மைச் செயலாளர், ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கைக்குப் பாத்திரமாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்த வழியில் செல்வதால் வானதேவதையாய் நின்று அவர்கள் வாழ்த்த, திருக்கோயில்களில் முறையாக திருப்பணிகள், வழிபாடுகள், புனரமைப்புகள், திருவிழாக்கள் என முறைசெய்து காக்கப்படுகிறது. அஞ்சாமல் வஞ்சகம் செய்து ஆளுமை செய்தவர்களுக்குப் பாடம் புகட்டியதை பக்கத்திலிருந்து பார்த்துள்ளோம். கத்துக்குட்டிகளிடம் களம் காணுவது பெரிய பாரமல்ல. வித்தை காட்டுகிற வீணர்கள் மத்தியில் வெற்றி அரசாக வலம் வருவதில் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், அண்ணன் OPS அவர்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்துவிட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் அமைச்சராக ஐந்தாவது முறை

துறையின் மானியக் கோரிக்கையின் மீது பதிலுரையாற்ற எனக்கு வாய்ப்பளித்து, என்னை என்றும் காக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் அடிபிறழாமல் ஆட்சி செலுத்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைக்குள் செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் சமுதாய வரலாறு மற்றும் கலைப் பண்பாட்டின் தொன்மைச் சான்றுகளாகவும், நடைமுறைச் சமுதாயத்தை ஆற்றுப்படுத்தும் மையமாகவும், வாழும் கலையாக நிற்கும் நமது திருக்கோயில்களின் திருப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கடந்த கால வரலாற்றில் இல்லாத அளவிற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் ஆளுகையில், கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 1,843 திருக்கோயில்களில் ரூ.142.18 கோடி செலவில் திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. "விழவு மேம்படு மூதூர்" என இலக்கியங்கள் பாராட்டும் தமிழ்நாட்டை "உழவு மேம்படு பேரூர்" ஆக மாற்றியதைப்போல் தமிழ்நாட்டு திருக்கோயில்கள் அனைத்தையும் விழாக்கோலம் கொண்ட காட்சியாய் எக்காலமும் காணும் வகையில் மிளிரச் செய்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். அந்த வகையில் தெளிவான நல்ல பல திட்டங்களை வகுத்தளித்து, நாடே போற்றும்வண்ணம் பாரம்பரியம் மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பக்தர்களின் தேவையை உணர்ந்து தேவைப்படும் இடங்களுக்கெல்லாம் தெளிவான புதிய திட்டங்களால் காலத்திற்கேற்றவாறு கடந்த மூன்று ஆண்டுகளில் 66 திருக்கோயில்களுக்கு 11 அன்னதானக் கூடங்கள், 7 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம், 5 பக்தர்கள் தங்கும் விடுதிகள், 3 திருமண மண்டபங்கள், 2 ஆய்வுக் கூடங்கள் மற்றும் நூலகங்கள், வணிக வளாகம், திருக்கோயில் மண்டபங்கள் என கட்டடங்கள் மட்டும் 63.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கருத்தியல் தெய்வங்களையும், குலமரபு சார்ந்த வழிபாட்டுத் தெய்வங்களையும் சமநிலையில் வைத்து அதற்குத் தேவையான திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்தும் நோக்கில்

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணிகளுக்கென கடந்த மூன்று ஆண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும் திருக்கோயில்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 2,147 திருக்கோயில்களின் திருப்பணிக்கு, ரூ.21.47 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 3,019 திருக்கோயில்களின் திருப்பணிக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூ.30.19 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. திருப்பணிகளோடு மக்கள் பிணிகளையும் களைவது ஓர் அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். அந்த வகையில் பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளமும் சுரக்க, வாழ்க பல்லாண்டு என வாழ்த்தி பசிப்பிணி தீர்த்தல் ஒன்றே தவப்பெரும் நல்லறம் என்று சாற்றினார். தனி மனிதனுக்கு உணவில்லை என்கிற நிலையில்லாமல் செய்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்ட அன்னதானத் திட்டம், தமிழ்நாட்டில் மொத்தம் 754 திருக்கோயில்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தற்போது இதனை விரிவுபடுத்தி கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் மேலும் 15 திருக்கோயில்களில் அன்னதானக் கூடங்கள் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் 64 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் நாள்தோறும் பயன்பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை எனப்படும் காட்டினைக் கொன்று மருதம் எனப்படும் நாடாக்கி, நாட்டில் குளந்தொட்டு வளம் பெருக்கி அக்காலத்தில், அதனை வெட்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் சட்டங்கள் இயற்றி காத்தமையை அறிகிறோம். குடிநீருக்காகவும் தீர்த்தத்திற்காகவும் பராமரிக்கப்பட்ட திருக்குளங்களின் தொன்மையைக் கருதி இன்றும் மழைநீர் சேகரிப்பைச் செயல்படுத்தி திருக்கோயில் திருக்குளங்கள் அனைத்தும் ஒவ்வொரு பருவகாலத்திலும் தொடர்ந்து சீரமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் மட்டும்

143 திருக்குளங்கள் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமைகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்கூடும் வீதியில் தேரோடும் திருவிழாக்கள் நிறைந்தது தமிழகம். பண்பாட்டுப் பாரம்பரியத்தையும், தொன்மைச் சிறப்பையும் காலம் கடந்து நினைவூட்டி வருவது திருக்கோயில்களின் திருவிழாக்கள்தான். இந்தத் திருவிழாவின் திருவீதி உலாதான் திருவிழாவாக நடத்தப்பட்டு மக்களிடையே இறையுணர்வை வளர்த்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 35 திருத்தேர்கள் ரூ.16.15 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெய்ப்பொருள் காண்பது சமயங்களின் முதன்மை நோக்கமாகும். இதனை எட்ட வைக்கும் முயற்சியில் திருமுறைகளும், பாசுரங்களும், எண்ணற்றவை உள்ளன. சித்தர்களும், ஞானிகளும் சமாதி அடைந்த திருத்தலங்களும் எண்ணற்றவை. இதன் மாட்சிமை கருதி காலந்தோறும் ஆத்மார்த்தம் உணர்ந்து ஆண்டவனைக் காண வாழ்வியலில் விலகிச் சென்றவர்களுக்கும் ஆன்மீகப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு உறைவிடமாகவும், உய்விடமாகவும் திருக்கோயில்கள் விளங்குகின்றன. இறைவனின் திருவருளால் வாழ்வியல் களம் கண்டு வென்றவர்கள் பூரிப்பில் தந்த புலமும், நேர்ச்சைகள் நிறைவேறிய பலர் பொன்னும், பொருளும், புவியும் தேரும், களிரும் நல்கி பெருகிய திருக்கோயில்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகள் திருக்கோயில்களின் வழிபாட்டுப் பெருமைக்கு வித்திட்டன. இதன் தொன்மை மாறாமல் பாதுகாக்க மக்கள் தந்துகொண்டிருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாய், இதன் தேவையுணர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளில் 480 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 3,591.76 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்து மீட்டு, திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்பிலிருந்து மட்டும் 1,179.26 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள், 288 கிரவுண்டு, 1,567 சதுர அடி பரப்பளவுள்ள மனைகள், 125 கிரவுண்டு 899 சதுர அடி பரப்புள்ள கட்டடங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு மட்டும் ரூ.945.52 கோடியாகும்.

கொடையாளர்களின் உள்ளுணர்வை நிறைவேற்றுவதும் அரசின் தலையாயக் கடமைகளில் அடங்கும். திருக்கோயில் சொத்து மற்றும் வீடுகளில் குடியிருப்போருக்கு பல ஆண்டுகளாக வாடகை உயர்த்தப்படாமலேயே இருந்தது. தற்போது திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் கூடுதல் வசதி மற்றும் திருக்கோயில் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு காலத்திற்கேற்றவாறு நியாய வாடகை நிர்ணயித்து கோயிலின் வருவாயைப் பெருக்க முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் அந்தந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புகளின் சந்தை மதிப்பீடு மற்றும் சார்-பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பீட்டின்படி, நியாய வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படும்போது கடந்த காலங்களில் உள்ள பழைய வாடகையை விட பல மடங்கு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுகிறது. நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாய வாடகை அதிகம் எனக் கருதினால் பாதிக்கப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்து தீர்வு காண சட்டத்தில் வாய்ப்பு உள்ளது என்பதையும் மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்ட நகர்ப் பகுதியின் இடங்களை பெரிய பெரிய வணிக நிறுவனத்தார்களும், தொழில் அதிபர்களும், வாடகைக்குப் பெற முனைகின்றனர். அதில் தற்போது கோயில் தலங்கள் உள்ள கிராமப்புற பகுதிகள் கூட சுற்றுலாத் தலமாக நகரமயமாகி வருகிறது. அதனால் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பிற தேவைகள் அதிகரித்து வருகின்றன. ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட திருக்கோயிலைச் சுற்றியுள்ள இடங்கள் மற்றும் நகர்ப்புறத்தின் பிரதான இடங்கள் காலியிடங்களாக இருப்பினும் அரசின் கொள்கை முடிவாக தனியாருக்கு வழங்க இயலாது என அறிவித்ததனால் துறைக்கு எதிரான விமர்சனங்கள் அதிகம் எழுகின்றன.

திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துகள் மற்றும் நிலங்களை தனியார் அமைப்புகளுக்கு நியாய வாடகை மற்றும் குத்தகை நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது. இதுபோல் இனிவரும் காலங்களில் அரசின் பயன்பாட்டிற்குக்கூட தேவையான நிலங்களை வாடகை அல்லது குத்தகைக்கு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் சொத்துகள் எந்த சூழ்நிலையிலும் தனிநபர்களுக்கு நிரந்தர விற்பனைக்கு இடமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கொங்கு

நாட்டின் தங்கமாய் வந்த அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வழிகாட்டுதலில் பல கோடி சொத்துகள் காப்பாற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தின் பண்பாட்டு நாகரிகச் செழுமையினை எடுத்துக்காட்டுவது சிற்பமும், ஓவியமும் தாங்கிய பண்டைக்கால கோயில்களே ஆகும். எத்தனை கட்டுமான முன்னேற்றங்கள் இருந்தும் அக்கால மன்னர்களின் உள்ளக்கிடக்கையைக் கருத்தில் கொண்டு, அதன் கலையைப் பேணிக் காக்கும் முயற்சியில் தொன்மை மாறாமல் இன்றளவும் கோயில்கள் பராமரிக்கப்படுவது பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாகும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் தொன்மையோடு காலத்திற்கேற்றவாறு, பக்தர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. அதிலும் தொன்மைமாறாமல் புதிய திட்டங்களையும் இணைத்து செயல்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளில் 10 ஆயிரம் சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்களை, நிதி வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம்மூலம் ரூ.2.50 கோடி மதிப்பில் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8–5–2017 அன்று துவக்கி வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நிதி வசதியற்ற 241 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தேவார, திருவாசகம் ஓதுவதைக் கண்காணித்து வருவதற்காகவே 'தேவாரநாயகம்' என்ற உயர்நிலை அலுவலர் ஒருவரை நியமித்து, தேவார திருவாசகங்கள் மற்றும் திவ்யப் பிரபந்தங்கள் திருக்கோயில்களில் தேனிசையாய் ஒலித்தது என்பதை கல்வெட்டுச் செய்தி பகர்கிறது. நாளும் சாத்திரங்களாலும், தோத்திரங்களாலும் புகழ்ந்து பாடி உலகம் உய்ய வேண்டப்பட்டு வருகிறது. வைணவக் கோயில்களில் திருவாய்மொழி, திருமங்கையாழ்வாரின் பாசுரங்களையும், குலசேகர ஆழ்வாரின் பாசுரங்களையும் சாற்றுமுறை செய்துவர பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதன் அருமையைப் போற்றும்விதமாக திருமுறைப் பயிற்சிகளும், திவ்யப் பிரபந்த வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அத்தோடு நாதஸ்வர இசைப் பயிற்சி, திருக்கோயில்களுக்குத் தேவையான கைவினைப் பொருள் உற்பத்தி செய்யும் கைவினைஞர்களுக்கான சிறப்புப்

பயிற்சி, திருக்கோயில் பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி போன்ற பல்வேறு சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய உயிரினங்களும் நம் அன்புக்கு உரியவைதான் என்ற உயர்ந்த உன்னதக் கருத்தின் அடிப்படையில், பிற உயிரினங்களிடத்தும் அன்பும் கருணையும் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருக்கோயிலிலுள்ள யானைகளின் மன நலமும் உடல் நலமும் பேணிப் பாதுகாத்திட, இயற்கை வளமும் நீர் வசதியும் உடைய இயற்கைச் சூழ்நிலையில் உயிர்ச்சத்தான உணவும், புரதச் சத்து மிகுந்த கலவை உணவும் வழங்கி யானைகளுக்கு நலவாழ்வு முகாம் நடத்தி அன்பு காட்டி வந்தார்கள். அதைத் தொடர்ந்து 2003–ல் தொடங்கி, ஒவ்வோர் ஆண்டும் நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் முதுமலை, தெப்பக்காடு பகுதிகளில் நடத்தப்பட்டு, 2011 முதல் தற்பொழுது வரை ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன்மூலம் யானைகள் முகாமில் பங்கேற்று பயனடைந்து திருக்கோயில்களில் யானைகள் புத்துணர்ச்சியோடு வலம் வருகின்றன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதி மற்றும் சாலை வசதிகளால் எளிதாக பயணிக்கும் வழக்கம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் புனித யாத்திரையும் வளர்ந்துள்ளது. அதனால் பக்தர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, சிரமப் பரிகாரத்திற்கான திருப்பணிகளில், கடந்த மூன்று ஆண்டுகளில் 15 திருக்கோயில்களில் ரூ.5.58 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையால் மேலாண்மை செய்யப்படும் கல்வி நிறுவனங்களில் 6 கல்லூரிகள், 36 பள்ளிக்கூடங்கள், நாதஸ்வரம், வேத ஆகமம், தேவாரம், ஓதுவார் பயிற்சிப் பள்ளி என பிற பயிற்சி நிறுவனங்கள் 12 என மொத்தத்தில் 54 கல்வி நிறுவனங்கள் உள்ளன. இவை இந்து சமய அறநிலையத் துறையால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரியும், குற்றாலம் அருள்மிகு பராசக்தி மகளிர் கல்லூரியும் ஒட்டுமொத்த சாதனைகள் மற்றும்

சிறந்த செயல்பாடுகளுக்காக பல்கலைக்கழக நிதிநல்கை குழுவின் 'A' தரச் சான்று பெற்றுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு காஞ்சிபுரத்தில் 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரிய சேவைதரும் தேவராஜசுவாமி திருக்கோயிலின் அத்திகிரி வரதர், அனந்தசரஸ் எனும் திருக்குள நீருக்கடியிலிருந்து எழுந்தருளி 48 நாட்கள் அத்திவரத பெருமாளின் அரிய சேவைக் காட்சியைக் கண்டோம். பட்டும் படையும் கண்ணைப் பறிக்க, மண்ணும் விண்ணும் போற்றும் மாதவா, 42 ஆண்டுகள் அனந்தசரசில் இருந்தாலும் 48 நாட்களில் மக்கள் பெற்ற வரம் எத்தனையோ! அரிய சேவை கண்டால் போதுமென வந்தவர் பலர், பூமிதனில் நிற்கக்கூட இடமில்லாமல் நெருக்கடியில் திரும்பியவர் பலர், தன்னுருக் குலைந்தாலும் மீள மாட்டேன் என வரதரின் திருவடி காண காத்துக்கிடந்தவர் பலர் மறுநாள்வரை புறநகர் தங்கி வந்தவருக்கும் மொழி, தேசம் எல்லாம் கடந்து வந்தவர்கூட பல நாள் காத்துக் கிடந்து காணும் நிலையில் ஒளிர் முகம் கொண்ட அத்திகிரியாரை எதிர்முகம் வந்தவரெல்லாம் எப்பொழுது பார்த்தீர் என உணர்வின் உச்சத்தால் வினவியவர் பலர். அனைவருக்கும் முறைசெய்து அருள் பெற வைத்த பெருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களைச் சாரும். இதற்கு முன்பு, 1854, 1892, 1937, 1979 ஆகிய ஆண்டுகளில் கண்ட தரிசனக் காட்சியைவிட 4.50 இலட்சம் பக்தர்கள் ஒவ்வொரு நாளும் எந்தக் கோயிலிலும் முன்பில்லாத அளவிற்குத் திரண்ட காட்சி மிகையாகப் பேசப்பட்டது. இதனைத் தமிழ்நாடு அரசு லாவகமாகக் கையாண்டு, சிறப்பான ஏற்பாடுகளை செய்து, சீர்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை சார்பாக, ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவற்றின் கருத்துகளை பக்தர்களிடையே பரப்பும் நோக்கில் திருப்பாவை பண்ணோடு பாடும் போட்டி, திருவெம்பாவை பண்ணோடு பாடும் போட்டி, திருப்பாவை கட்டுரைப் போட்டி, திருவெம்பாவை கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் புதிய திருமண மண்டபத்தில் 13–1–2020 அன்று மாவட்ட அளவில் தேர்வானவர்களைக் கொண்டு நடைபெற்ற மாநில அளவிலான பாவை விழா போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பெற்ற 36 மாணவ, மாணவிகளுக்கு

ரூ.2.10 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாமன்னன் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட 1,000 ஆண்டுகளைக் கடந்த தஞ்சை பெரிய கோயில் திருக்குடமுழுக்கு வெகு விமரிசையாக திருமுறைகளாலும், திருமந்திரத்தாலும் 89 ஓதுவார்கள் முழங்க, அவர்களோடு பக்தர்களும் போற்றி போற்றி என நெக்குருகி நின்று, தெய்வத் தமிழ் ஓங்கி ஒலித்தது இராஜராஜ சோழன் காலத்தைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. இந்நிகழ்வு பக்தர்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது இந்த அரசுக்குத் தனிப்பெருமையாகும்.

மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக புதிதாக ரூ.16 கோடி மதிப்பில் கட்டப்பட்ட அதிநவீன திருமண மண்டபம் 10–1–2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திருமண மண்டபம் திறந்து வைக்கப்பட்ட ஓராண்டுக்குள் 30 திருமணங்கள் மற்றும் சுபநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 500 நபர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவருந்த கூடம் மற்றும் 100 நபர்கள் அமரக்கூடிய வகையில் முக்கிய பிரமுகர்களுக்கான உணவுக்கூடத்துடன் நகரின் முக்கிய பிரதான பகுதியாக பசுமை வழிச் சாலை இரயில் நிலையம் அருகில் மிக பிரம்மாண்டமாக 200 இலகு ரக வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் காலத்திற்கேற்றவாறு திட்டமிட்டுக் கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களின் திருப்பணிகள், குடமுழுக்குகள், திருவிழாக்கள் என தொடர்ந்து ஆகம விதிகளின் அடிப்படையில், முறையாக திருக்கோயில்கள் நிருவகிக்கப்பட்டு முறை செய்து வருவதால், அதன் பெருமையினைக் கருதி விருதுகளும் பெற்றுள்ளன. சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தும் தரமான சேவை மேம்பாட்டுக்காக–

1. சங்கரன்கோவில், அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுக்கான நெய்வேத்தியம் மற்றும் பிரசாதம் மிகவும் சுகாதாரமாக தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதைப் பாராட்டி fssai வழங்கிய BHOG சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

2. சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 46–வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் பங்கேற்று, சிறப்பாக அரங்கு அமைத்ததற்காக "ஒட்டுமொத்த சிறந்த அரங்குக்கான" விருதினை "Outstanding Pavilion Award" இந்து சமய அறநிலையத்

துறை பெற்றுள்ளது. இவை இத்துறையின் சிறப்பான சேவைக்குச் சான்றுகளாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் வழிகாட்டுதலில் சிறந்த அறப்பணிகளால் திருக்கோயில்களும், அறநிலையங்களும் மிளிருகின்றன. 'மக்களால் நான் மக்களுக்காக நான்' என்று பணி செய்து, மக்கள் மனதில் தெய்வத் தாயாய் மாறிய மாண்புமிகு அம்மா அவர்கள் புது உலகம் தந்து, மக்கள் நலங்காக்கும் மாதரசியாய் எம்மை ஆட்பணித்து, முகவரி தந்திட்ட இதய தெய்வத்தின் பாத மலர்களில் மீண்டும் ஒருமுறை என் நன்றிகளைக் காணிக்கையாய்ச் செலுத்தி இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள 28 திருக்கோயில்களில் ரூபாய் பதின்மூன்று கோடியே முப்பத்தொன்பது இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை, ஆரணி வட்டம், சம்பூவராயநல்லூர், அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டிலும், செய்யாறு வட்டம், திருமால்பாடி, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும், கலசப்பாக்கம் வட்டம், பழங்கோயில் அருள்மிகு பாலகங்காதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், முள்ளிப்பட்டு, அருள்மிகு ஆபத்சகாய ஈஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், துருகம், அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், அத்திமலைப்பட்டு, அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், அக்கூர், அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம்,

சின்னப்புத்தூர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், காட்டுக்காநல்லூர், அருள்மிகு இராமநாதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி வட்டம், பூசிமலைக்குப்பம், அருள்மிகு விநாயகர் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், செங்கம் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு ரிஷபேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு அனுமந்தராயர் திருக்கோயிலில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி, அருள்மிகு கில்லா சீனிவாசப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், சேமங்கோட்டை, அருள்மிகு வில்லாயுதமுடையார் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், வாழைப்பந்தல், அருள்மிகு கஜேந்திர வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 47 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மெதூர், அருள்மிகு பார்வதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 46 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருவாமத்தூர், அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஏர்வாடி, அருள்மிகு திருவழுதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 67 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், அருள்மிகு உத்தமலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், நல்லூர், அருள்மிகு விசாலாட்சி உடனமர் விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ஆதனூர், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், வரஞ்சுரம் கிராமம், அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், அருள்மிகு பவானீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், பல்லடம், அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், பல்லடம், அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலில் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், செஞ்சேரி மலை, அருள்மிகு மந்திரகிரி வேலாயுத சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அவளிவநல்லூர்,

அருள்மிகு சாட்சிநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும், நீடாமங்கலம் வட்டம், முன்னாவல்கோட்டை, அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதி/பொதுமக்கள் பங்களிப்பு/துறை நிதி/உபயதாரர் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள இரண்டு திருக்கோயில் திருக்குளங்கள் ரூபாய் முப்பத்தொன்று இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி செப்பனிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல், அருள்மிகு கருநெல்லிநாதர் திருக்கோயில் திருக்குளம் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், நார்த்தாம்பூண்டி, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருக்குளம் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டிலும் பிற திருக்கோயில் நிதி மற்றும் பிற நிதியிலிருந்து செப்பனிடப்படும்.

3. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள ஐந்து திருக்கோயில்களில் ரூபாய் இரண்டு கோடியே ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் மண்டபங்கள் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், செங்கம்பூண்டி, அருள்மிகு சித்தாதூர் மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம், செய்யாறு வட்டம், புரிசை, அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம், செய்யாறு வட்டம், முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் பொங்கல் மண்டபம், போளூர் வட்டம், அ.கோ.படைவீடு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் பொங்கல் மண்டபம், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் புதிய முடிகாணிக்கை மண்டபம் திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

4. திருக்கோயில்களில் சுவாமிக்கு நெய்வேத்தியம் படைத்திடவும், சேவார்த்திகளுக்கு பிரசாதம் வழங்கிடவும், இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் முப்பத்திரண்டு இலட்சம் மதிப்பீட்டில் மடப்பள்ளிகள் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், செங்கம்பூண்டி, அருள்மிகு சித்தாதூர் மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம், தோப்புத்துறை, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டிலும் மடப்பள்ளி திருக்கோயில் நிதி/ உபயதாரர் நிதியிலிருந்து கட்டப்படும்.

5. திருக்கோயில்களின் பாதுகாப்பு கருதி திருக்கோயிலில் ரூபாய் இருபத்திரண்டு இலட்சம் மதிப்பீட்டில் திருமதிற்சுவர் புனரமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மாமல்லபுரம், அருள்மிகு ஸ்தலசயன நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் திருமதிற்சுவர், ஆணையர் பொது நல நிதியிலிருந்து புனரமைக்கப்படும்.

6. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி நான்கு திருக்கோயில்களில் ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், தும்பூர், அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், மரக்காணம் வட்டம், கீழ்ப்புத்துப்பட்டு, அருள்மிகு அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோழிக்குத்தி, அருள்மிகு வானமுட்டிப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், திருக்குவளை வட்டம், எட்டுக்குடி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், அடிப்படை வசதிகள் திருக்கோயில் நிதி/ஆணையர் பொது நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

7. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் நலன் கருதி அவர்கள் இளைப்பாறுவதற்கு வசதியாக தங்கும் விடுதி/ஓய்வுக் கூடம் நான்கு திருக்கோயில்களில் ரூபாய் மூன்று கோடியே எண்பத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், கோலியனூர், அருள்மிகு புத்துவாயம்மன் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 170 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் வட்டம், பருவதமலை, அருள்மிகு மல்லிகார்ஜுனசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், திருக்கருகாவூர், அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்கள் தங்கும் விடுதி/ஓய்வுக் கூடம், திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

8. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும்பொருட்டு, இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் அறுபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வசதிகள் செய்து தரப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், கீழ்ப்புத்துப்பட்டு, அருள்மிகு அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் நிதி/உபயதாரர் நிதியிலிருந்து குடிநீர் வசதிகள் செய்துதரப்படும்.

9. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள நான்கு திருக்கோயில்களில் திருத்தேர் திருப்பணி ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம்,

திருவத்திபுரம், அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி, அருள்மிகு கில்லா சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருகண்டீஸ்வரம், அருள்மிகு நடனபாதேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், நாமக்கல், அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆணையர் பொது நல நிதி/திருக்கோயில் நிதிலிருந்து திருத்தேர் செய்யப்படும்.

10. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் திறந்தவெளி உணவக வளாகம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி உணவக வளாகம் ஆணையர் பொது நல நிதி/திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

11. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள ஐந்து திருக்கோயில்களில் ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபங்கள் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், திருவாமத்தூர், அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 250 இலட்சம் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காங்கேயநல்லூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 190 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அ.கோ.படைவீடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூபாய் 250 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின், உபகோயிலான திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 153 இலட்சம்

மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம், திருவரங்கம் வட்டம், குமாரவயலூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 150 இலட்சம் மதிப்பீட்டிலும், திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து திருமண மண்டபங்கள் கட்டப்படும்.

12. அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென ரூபாய் நான்கு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக் கூடங்கள் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதூர் செங்கம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கலசப்பாக்கம் வட்டம், பருவதமலை, அருள்மிகு மல்லிகார்ஜுனசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், செய்யாறு வட்டம், சேராம்பட்டு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், எலத்தூர்மோட்டூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், சித்தலூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், சங்கராபுரம் வட்டம், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், கீழ்ப்புத்துப்பட்டு, அருள்மிகு அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், தும்பூர், அருள்மிகு நாகம்மன் திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு தில்லை காளியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும், புதிய அன்னதானக் கூடங்கள் திருக்கோயில் நிதி மற்றும் ஆணையர் பொது நல நிதியிலிருந்து கட்டப்படும்.

13. இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் செயல் அலுவலர் மற்றும் ஆய்வர் அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகர் மற்றும் வட்டம், ஜாகீர்

ஆலயங்களில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் செயல் அலுவலர் அலுவலகம், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி, திருக்கோவிலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஆகிய இடங்களில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் சரக ஆய்வர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு தில்லை கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் செயல் அலுவலர் அலுவலகம் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

14. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களின் திருத்தேர் பாதுகாப்பின் அவசியத்தை கருதி ரூபாய் அறுபத்தேழு இலட்சம் மதிப்பீட்டில் ஐந்து திருக்கோயில்களில் தேர்க்கொட்டகை அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தேசூர், அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரணி நகர் மற்றும் வட்டம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், காமக்கூர், அருள்மிகு சந்திரசேகர சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், அழகிய மணவாளம் கிராமம், அருள்மிகு பிள்ளையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், அயன்பேரையூர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆணையர் பொது நல நிதியிலிருந்து தேர்க்கொட்டகை அமைக்கப்படும்.

15. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள மூன்று திருக்கோயில்களில் ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சம் மதிப்பீட்டில் இராஜகோபுரம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், சேவூர், அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், கொளத்தூர், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், தோப்புத்துறை, வேதாரண்யம், அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 68 இலட்சம்

மதிப்பீட்டிலும், உபயதாரர் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து இராஜகோபுரம் கட்டப்படும்.

16. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள மூன்று திருக்கோயில்களில் ரூபாய் இரண்டு கோடியே பத்து இலட்சம் மதிப்பீட்டில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான அனுப்பானடி தெப்பக்குளம் அருகில் உள்ள இடத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம் முனுகப்பட்டு, அருள்மிகு பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், சேத்பட் வட்டம், ஆவணியாபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

17. இந்து சமய அறநிலையத் துறை நிருவகிக்கும் பள்ளி மற்றும் கல்லூரியில் ரூபாய் ஐந்து கோடியே இருபத்துமூன்று இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மேலையூர், பூம்புகார் கல்லூரியில் (தன்னாட்சி) ரூபாய் 1 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சாமனாபுரம், அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் கோவில் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 3 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டிலும், பள்ளி/கல்லூரி மேம்பாட்டு மைய நிதி, பொது நல நிதி/உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதிமூலம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

18. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள மலைமேல் அமைந்துள்ள இரண்டு திருக்கோயில்களுக்கு ரூபாய் மூன்று கோடி மதிப்பீட்டில் மலைப்பாதை சீரமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையம் வட்டம், பல்லாக்காபாளையம் கிராமம், பெரிய காப்பிரா மலை, அருள்மிகு அப்புச்சிசாமி திருக்கோயிலில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மலைப்பாதை திருக்கோயில் நிதி/பிற திருக்கோயில் நிதியிலிருந்து சீரமைக்கப்படும்.

19. பாரம்பரிய வடிவமைப்பில் ரூபாய் தொண்ணூற்று ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் மின்விளக்குகள் பொருத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலின் நான்கு மாட வீதிகளிலும் ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டில் பாரம்பரிய வடிவமைப்பில் மின் விளக்குகள் உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து பொருத்தப்படும்.

20. அன்னதானம் நடைபெறும் மூன்று திருக்கோயில்களில் பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வழங்கப்பட்டு வரும் அன்னதானப் பயனாளிகளின் எண்ணிக்கை 500–லிருந்து 700 ஆக உயர்த்தப்படும். கோயம்புத்தூர் மாவட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் அமாவாசை தினத்தன்று வழங்கப்பட்டு வரும் அன்னதானப் பயனாளிகளின் எண்ணிக்கை 300-லிருந்து 500 ஆக உயர்த்தப்படும். காரமடை, அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் தற்பொழுது தினசரி 100 பயனாளிகளுக்கு அன்னதானம் வழங்கப்படுவதை வாராந்திர சனிக்கிழமை மற்றும் விசேஷ நாட்களில் 200 பயனாளிகளாக உயர்த்தி வழங்கப்படும்.

21. இந்து சமய அறநிலையத் துறையின் நூல்கள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் பதிப்பித்து வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆகம நூலான “உத்ரகாமிக ஆகமம்”, குமாரதந்திரம்

மற்றும் சிவன், பெருமாள், அம்பிகை, விநாயகர், முருகர் போன்ற தெய்வங்களின் மீதான போற்றி நூல்கள் ஆகியவை ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மறுபதிப்பு செய்து அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் வழங்கி திருக்கோயில்களில் தமிழ் வழிபாடு ஊக்குவிக்கப்படும். பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்யப் பிரபந்தம், சித்தர் பாடல்கள், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவருட்பா, திருப்புகழ் என பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட பாடப்பட்ட தெய்வத்தமிழ் நூல்களை மக்கள் அனைவரும் பயன்படுத்தத்தக்க வகையில், மலிவு விலையில் செம்பதிப்பாக பதிப்பித்து வெளியிடுவதுடன், ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மின்னூல்களாக தரவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்படும். சமஸ்கிருத மொழியில் வெளியிடப்பட்டுள்ள சைவ ஆகமங்களான காரணம், மகுடம், வாதுளம், சுப்ரபேதம் மற்றும் வைணவ ஆகமங்களான வைகானசம், பாஞ்சராத்ரம் ஆகிய ஆகம நூல்கள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில், முதன் முதலாக தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அச்சு நூலாகவும், மின்னூலாகவும் வெளியிடப்படும். தமிழ் மொழியில் உள்ள பூர்வகாமிகாகமம் மீண்டும் செம்பதிப்பு நூலாக திருக்கோயில் நிதியிலிருந்து மறுபதிப்பு செய்யப்படும்.

22. தமிழர் சமய நெறியிலும், தமிழ் மெய்யியலிலும் சமத்துவக் குரலாய் ஒலித்த சித்தர்களை சிறப்பிக்கும் வகையில் சித்தர்கள் விழா

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்து சமய அறநிலையத் துறை ஆண்டுதோறும் தமிழ்ச் சமய மரபின் அருளாளர்களைப் போற்றும் வகையில், சேக்கிழார், திருஞானசம்பந்தர், ஔவையார், தாயுமானவர், திருவள்ளுவர், அருணகிரிநாதர், கோச்செங்கட்சோழ நாயனார், ஆழ்வார்கள் என பல அருளாளர்களைப் போற்றி விழா நடத்தி வருகிறது. தமிழர் சமய நெறியிலும், தமிழ் மெய்யியலிலும் சமத்துவக் குரலாய் ஒலித்தவர்கள் சித்தர்கள். மரபின் அடிப்படையில் சித்தர்கள் பதினெட்டுப் பேர் என்று சொல்லப்பட்டாலும், அவர்தம் எண்ணிக்கை அதிகம். சித்தர்கள், எண்பெரும் சித்திகளை அடையப் பெற்றவர்கள். தமிழர்களின் பெருமைமிகு சமய ஞானிகளான சித்தர்களைப் போற்றும் வகையில், இந்த ஆண்டு முதல் ஆண்டுதோறும் திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் சித்தர்கள் விழா மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறப்பாக நடைபெறும்.

23. திருக்கோயில்களில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் யானைப் பாகன் மற்றும் உதவிப் பாகன் ஆகியோரைப் பணி நிரந்தரம் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள சில திருக்கோயில்களில் உள்ள யானைகளைப் பராமரிக்கும் பாகன் மற்றும் உதவிப் பாகன் ஆகியோர் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் முழு நேரப் பணி கடினமானதாகவும், ஆபத்தானதாகவும் இருப்பதால், அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது. எனவே, யானைப் பாகன் மற்றும் உதவிப் பாகன் பணியிடங்களை ஏற்படுத்தி, தகுதியின் அடிப்படையில், திருக்கோயில் நிதியிலிருந்து காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்யப்படும்.

24. ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்களில் பணிபுரியும் நாதஸ்வரம், தவில் மற்றும் தாளம் போன்ற இசைவாணர்களுக்கான ஊதியம் உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்களில் பணிபுரியும் நாதஸ்வரம், தவில் மற்றும் தாளம் போன்ற இசைவாணர்களுக்கு முறையே வழங்கப்படும் மாத ஊதியத் தொகை மைய நிதியிலிருந்து ரூபாய் 1,500/–, ரூபாய் 1,000/– மற்றும் ரூபாய் 750/–லிருந்து முறையே ரூபாய் 4,500/–, ரூபாய் 3,000/– மற்றும் ரூபாய் 2,250/–ஆக உயர்த்தி வழங்கப்படும்.

25. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு உதவி ஆணையர் நிலையில் இரண்டு பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் உதவி ஆணையர் நிலையில் கூடுதலாக இரண்டு பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

26. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிரந்தரப் பணியாளர்களின் (துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்) வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியத் தொகை உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவரும் குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,000/–லிருந்து ரூபாய் 1,500/– ஆக உயர்த்தப்படும். இதற்கான செலவினம், நிதி வசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் செய்து மேற்கொள்ளப்படும்.

27. இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 இயற்றப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைந்ததை சிறப்பிக்கும் வகையில் "வைர விழா" நடத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 இயற்றப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், இதனை சிறப்பிக்கும் வகையில் "வைர விழா" நடத்தப்படும். மேலும், வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கம் மற்றும் கலந்தாய்வுக் கூட்டங்கள் ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூபாய் 25 இலட்சத்தில் நடைபெறும். இதன்மூலம் உரிய வழிமுறைகள் கண்டறியப்பட்டு தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, திருக்கோயில் நிருவாகம் மற்றும் துறையின் நிருவாகம் மேம்படுத்தப்படும்.

கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளந்தி சனங்களின் விழிநீர் துடைக்க வந்த வேதா இல்லத்து விலாசம்; பொன்னந்தி பொழுதாக புனல் காலை விடியலாக மண்ணுலக தமிழர்களின் மலர்ச்சிக்கு தன்னையே தந்துழைத்த தாயுருவ தெய்வம்; சிறுமை கண்டு பொங்கிய சிங்கம், செப்பு கலக்காத எங்கள் சொக்கத் தங்கம்; கோடி வருடம் கடந்தாலும் வாழும் மக்களின் நாடி நரம்புகளில் அம்மா எனும் ஒற்றை சொல்லால் உயிர் வாழ்கிற ஒப்பில்லா உறவு; புழுதிகளில் உழுதுகொண்டு

இருந்த என் போன்ற எளியவர்களையும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு அழைத்து வந்த பொக்கிஷம்; இந்த மண்ணுள்ள காலம் வரை மறக்க முடியா மகராசி; 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்னும் பொன்மொழியைப் பதித்துப்போன போயஸ் தோட்டத்து புகழரசி; நான் வணங்கும் இதய தெய்வம் அம்மா உறைந்திருக்கும் வங்கத்து கடல் நோக்கி என் வணக்கங்களை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மகராசி வழி வந்த முகராசிக்காரர்; மனம் விட்டு பேசுகிற மழலைச் சிரிப்புக்காரர்; கருணைத் தாய் வழி நடக்கும் கைராசிக்காரர்; கடலளவே இடராயினும் எதனையும் ஒரு கை பார்த்துவிடுகிற கடும் உழைப்புக்காரர்; எங்கள் மானாவாரி மண்ணுக்கும் வைகை குண்டாறை வரவழைத்து வரண்ட பூமிக்கும் வசந்த காலத்தை வரவு வைக்கும் கழனிகளின் நாயகன்; காவேரிக் காப்பாளன்; கண்மாய் குளங்களைத் தூர்வாரி கரிகாலன் காலத்தை கண்முன் நிறுத்திய குடிமராமத்து வேந்தன்; உழவினத்தைக் காத்திட உழவன் வீட்டில் உதித்த முதல்வன்; உலகெங்கும் வாழும் தமிழர்களை எல்லாம் ஆச்சரியப்பட வைத்த எளிமைச் சாமானியன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கும், பாண்டி நாட்டுத் தங்கம்; பதறாத பண்பின் அங்கம்; மகராசி மகுடத்தை முகராசியோடு மூன்று முறை சுமந்த மக்கள் தொண்டன்; விண்முட்டும் அதிகாரம் தன்மட்டில் இருந்தாலும் தலைக்கனம் இல்லா இலக்கணம்; வளர்தமிழ் பூமிக்கு வாடிவாசல்களைத் திறந்துவிட்ட வரலாற்று நாயகன்; கழகத்தின் பரதன்; கழக அரசின் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், காட்டாற்று வெள்ளமாக ஓடிவரும் நீரையெல்லாம் வாய்க்கால்கள் வகுத்து கழனிக்கு சேர்க்கிற ஒரு விவசாயிபோல சொற்போர் நடக்கும் இச்சபைக்கு சுவை கூட்டி இப்பேரவையை தெள்ளிய நதிபோல தன் திறமையால் வழிநடத்தும் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், கண்ணனுக்கு குசேலனாக, ராமனுக்கு குகனாக மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு துணை நின்று இப்பேரவையை வழிநடத்தும் மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சிவகங்கை தொகுதி மக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் பல்வேறு தொழில்களின் முன்னோடியாகத் திகழ்கிறது. அதனால் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் பெருகி நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தின்மூலம் கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்ட பணிகளைச் செய்துள்ளது:

- சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் ரூபாய் 30 இலட்சம் செலவில் திரவ சோப்பு மற்றும் ஷாம்பு தயாரிக்கும் அலகு நிறுவப்பட்டுள்ளது.

- மதுரை மாவட்டம், மதுரை மேலமாசி வீதியில் உள்ள கதரங்காடி ரூபாய் 80 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- சென்னை குறளகம் பிரதான கதரங்காடியில் பட்டுப் புடவைகள் விற்பனை செய்திட ரூபாய் 9 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் குளிரூட்டப்பட்ட பட்டு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

- மத்திய கதராணைக் குழுவின் நிதியுதவியுடன் கடலூர் மாவட்டம், கடலூரில் கதரங்காடி ரூபாய் 22 இலட்சத்து 82 ஆயிரத்தில் புனரமைக்கப்பட்டுள்ளது.

- மத்திய கதராணைக் குழுவின் நிதியின்கீழ் ரூபாய் 14 இலட்சம் செலவில் திருநெல்வேலி கதரங்காடி புனரமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டு வந்த மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை ரூபாய் 5 ஆயிரம் வீதம் 12 ஆயிரத்து 52 குடும்பங்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடும் சர்வோதய சங்கங்களுக்கு வணிக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூபாய் 30 கோடி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்கள் நலன் கருதி தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் செயல்பட்டு வருகிறது. பனை மரம், தமிழ்நாட்டின் மரம் என்பதால் அதனைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களுக்கு பல்வேறு மூலிகைகள் கொண்டு கருப்பட்டி சேர்த்து சுக்குக்காபி தயார் செய்யப்பட்டு பொது இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு துறைக்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

1. ரூ.8.00 இலட்சம் செலவில் திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சோப்பு அலகுகளில் தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரம் நிறுவப்படும்

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சோப்பு அலகுகளில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 8.00 இலட்சம் செலவில் தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரம் நிறுவப்படும்.

2. ரூ.5.00 இலட்சம் செலவில் வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தச்சுக் கருமார அலகுகளில் புதிய இயந்திரங்கள் நிறுவப்படும்

வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தச்சுக் கருமார அலகுகளில் உற்பத்தியினை அதிகரிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 5.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் நிறுவப்படும்.

3. ரூ.25.00 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி பேட்டை தச்சுக் கருமார அலகில் நவீன இயந்திரங்கள் நிறுவப்படும்

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி பேட்டை தச்சுக் கருமார அலகில் உற்பத்தியினை அதிகரிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 25.00 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் நிறுவப்படும்.

4. ரூ.25.00 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டம், மயிலாடி சோப்பு அலகு கட்டடம் புனரமைக்கப்படும்

கன்னியாகுமரி மாவட்டம், மயிலாடி சோப்பு அலகு கட்டடம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 25.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

5. ரூ.20.00 இலட்சம் செலவில் கதர் உற்பத்தி பணிகளில் ஈடுபடும் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் புள்ளிவிவரங்களைக் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்படும்

கதர் கிராமத் தொழில் வாரிய கதர் உற்பத்தி அலகுகளில் உற்பத்தி பணி செய்யும் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் குறித்த புள்ளிவிவரங்களைக் கணக்கெடுக்கும் பணி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 20.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

6. ரூ.50.00 இலட்சம் செலவில் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் நேபாளி தறி உற்பத்தி மையங்களை நவீனப்படுத்தி புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்

கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் நேபாளி தறி உற்பத்தி மையங்கள் ரூபாய் 50.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தி புனரமைக்கப்படும்.

7. ரூ.40.00 இலட்சம் செலவில் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் கதர் தயாரிப்புகளுக்கு கதர் சின்னம் இடும் பணி மேற்கொள்ளப்படும்

கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் கதர் தயாரிப்புகளை தனித்துவமிக்க பொருளாக இணையவழி சந்தையில் அறிமுகப்படுத்தி விற்பனையினை அதிகரிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 40.00 இலட்சம் செலவில் சின்னம் இடும் பணி மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

8. ரூ.3.60 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் கடலூர் மாவட்ட மண்டல பனை பொருள் பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள பனைவெல்ல உற்பத்தி அலகு புனரமைக்கப்படும்

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க கடலூர்

மாவட்ட மண்டல பனை பொருள் பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள பனைவெல்லம் உற்பத்தி அலகு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 3.60 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

9. ரூ.6.00 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்ட பனை பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் 100 பனைத் தொழிலாளர்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படும்

திருநெல்வேலி மாவட்ட பனை பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் 100 பனைத் தொழிலாளர்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 6.00 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பட்டு வளர்ச்சித் துறை குறித்த அறிவிப்புகளை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான பட்டு வளர்ச்சித் துறைக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

பட்டு வளர்ச்சித் துறை

1. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2020–2021 ஆம் ஆண்டில் ஓர் ஏக்கருக்கு ரூ.10,500 வீதம் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 3 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

2. மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவித்தொகை வழங்குதல்

2020–2021 ஆம் ஆண்டில் 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

3. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும் மற்றும் தரத்தினை உயர்த்திடவும் புழு வளர்ப்புக் குடில்கள் அமைப்பதற்கு ஒவ்வொன்றிற்கும், அதன் பரப்பிற்கேற்ப முறையே ரூ.63,000 அல்லது ரூ.82,500 அல்லது ரூ.87,500 வீதம் 2020–2021 ஆம் ஆண்டில் 800 பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 6 கோடியே 48 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்குதல்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம், உற்பத்தித் திறன் அதிகரித்திட 2020–2021 ஆம் ஆண்டில் 1,000 விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

5. சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

2020–2021 ஆம் ஆண்டில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட அளவில் 36 மாவட்டங்களில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ.25,000, ரூ.20,000, ரூ.15,000 பரிசும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூ,1,00,000, ரூ.75,000,

ரூ.50,000 பரிசுகள் வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 23 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

6. அரசு ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்துதல்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யும் ஐந்து ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்திட, 2020–2021 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

7. சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

2020–2021 ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் மற்றும் டான்சில்க், காஞ்சிபுரத்தில் அதிக அளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு மாநில அளவில் முறையே 1,00,000/– ரூபாய், 75,000 ரூபாய், 50,000 ரூபாய் என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

8. பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நிலையினை வலுப்படுத்த உதவியளித்தல்

தரமான கச்சாப் பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டு நூலின் உற்பத்தியினை அதிகரிக்கவும் மற்றும் பட்டு நூற்பிற்கு பிறகு பெறப்படும் கழிவுகளை மதிப்புக் கூட்டிடும் வகையிலும் 479.608 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் 372.737 இலட்சம் ரூபாய் மானியத் தொகையில் மத்திய அரசின் பங்குத்தொகை 252.835 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. அதற்கான மாநில அரசின் பங்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1 கோடியே 19 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

9. விதைக்கூடுகள் உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்குதல்

தரமான விதைக்கூடுகள் உற்பத்தி செய்யும் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 250 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் 187.50 இலட்சம் மானியத் தொகையில் மத்திய அரசின் பங்குத்தொகை 125 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. அதற்கான மாநில அரசின் பங்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

10. பட்டுத் தொழிலில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்குதல்

பட்டுத் தொழிலில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 147.90 இலட்சம் ரூபாய் மதிப்பில் உதவித்தொகை வழங்கி திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் 133.95 இலட்சம் மானியத் தொகையில் மத்திய அரசின் பங்குத்தொகை 96.135 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. அதற்கான மாநில அரசின் பங்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 37 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. கைவினைஞர்கள் சந்தை நடத்த நிதியுதவி அளித்தல்

கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் மற்றும் பொதுமக்கள் கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதியாக 2020–2021 ஆம் ஆண்டு நாட்டின் முக்கிய பெருநகரங்களில் சந்தை (Craft Bazaar) நடத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

2. மதுரையில் புதிய விற்பனை நிலையம் அமைத்தல்

தமிழ் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் தலைசிறந்த நகரமான மதுரையில் இயங்கிவரும் பூம்புகார் விற்பனை நிலையம் வாடகைக்

கட்டடத்தில் இயங்கி வருவதால், மதுரையில் உள்ள தமிழ்நாடு கைத்திற தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில் நவீன வசதிகளுடன்கூடிய ஓர் அழகிய விற்பனை நிலையத்தினை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

3. மாமல்லபுர நகர்ப்புற கண்காட்சி திடலில் கூட்டரங்கு அமைத்தல்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், மாமல்லபுரத்தில் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் கைவினைஞர்களின் நலத்திற்காக நகர்ப்புற கண்காட்சி திடல் அமைத்துள்ளது. இக்கண்காட்சித் திடல் ஒரு சர்வதேச சுற்றுலாத் தலமாக இருப்பதாலும் மற்றும் சென்னைக்கு மிக அருகில் உள்ளதாலும் ஒரு கூட்டரங்கை (சுமார் 6,000 சதுர அடி பரப்பளவில்) அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரம் போற்றும் சத்துணவுத் திட்டம் தந்து, பசியில்லாத தமிழ்நாட்டைப் படைத்துக் காட்டி, அன்னை தமிழுக்கு பல்கலைக்கழகம் அமைக்க ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தந்து, தமிழில் கையெழுத்து இடும் வழக்கத்தைக் கொண்டு வந்தும், திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்தும், தமிழ் மொழி வளர்ச்சியில் தனிப்பெரும் பங்காற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களின் பொற்பாதம் பணிந்து, சரித்திரம் என்பது இவருக்காக மட்டும்தான், தன் பக்கங்களை காத்திருந்து வரிகளாக உள்ளடக்கி வரலாறே வரலாறு படைத்திருக்கிறது.

காலம் தந்த கொடையாக, தமிழ்நாட்டு மக்களின் குடையாக வாழ்ந்து, மறைந்தும் மறையாமலும் மக்கள் உள்ளங்களில் காவல்

தெய்வமாய் நீங்கா இடம் பிடித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொழுது வணங்குகிறேன்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனும் மகாகவி பாரதியாரின் இலட்சியத்தை போற்றி வருகின்ற தமிழ்நாட்டின் சாதனைச் செல்வர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவரோடு தோளோடு தோள் நின்று அம்மாவின் அரசை அவனியில் புகழும் அளவிற்கு தன்னுடைய உழைப்பை நல்கி வருகிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, துறை சார்ந்த மானியக் கோரிக்கையை மன்றத்தில் வைத்திட விழைகிறேன்.

என்னுடைய வாழ்வின் பெருமிதமாகவும், பெரும் பேறாகவும் நான் கருதுவது என்னவென்றால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது வழிகாட்டுதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு, தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு மற்றும் தொல்லியல் துறை ஆகிய துறைகளை எனக்கு அளித்ததுதான். சீரும் சிறப்புமாக இந்தத் துறைகள் மிளிரவேண்டும் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு. அதுமட்டுமின்றி, தமிழக மக்களே வியந்து பார்க்கும் அளவிற்கு, இத்துறைகள் வளரவேண்டும், மிளிரவேண்டும் என்று எதிர்பார்த்துதான் நானும் இப்பதவியை முன்னெடுத்தேன்.

‘எடுத்த காரியம் யாவிலும் வெற்றி, எங்கு நோக்கிலும் வெற்றி மற்றாங்கே’ என்பது போல, எந்த சிந்தனையிலும் தனித்த முடிவு, எந்த ஆய்விலும் அறிவார்ந்த பாதை என்பதற்கேற்ப கடந்த மூன்றாண்டுகளாக தமிழ் வளர்ச்சியையும், தமிழ்ப் பண்பாட்டையும் எனது இரு விழிகளைப் போல போற்றிப் பாதுகாத்தேன் என்று சொன்னால், அது மிகையாகாது.

நான் எந்தப் பணியை செய்யத் தொடங்கினாலும், இயல்பாகவே அதன் அடி நாதங்களையும், ஆழ வேர்களையும் அறிந்துகொள்வதில் வேட்கையுடையவன். நான் மேலாண்மைக் கல்வியிலே ஊறித் திளைத்திருந்தாலும், தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு, தொல்லியல், அருங்காட்சியகங்களின் சிறப்பு போன்றவற்றையெல்லாம்

எடுத்தாளும்போது யாம் பெற்ற இன்பம் பேரின்பமாகும். இன்றைக்குக்கூட என் நண்பர்கள் எல்லோரும் 'நீ சிறந்த பதவியில் உள்ளாய்' என்று சொல்வார்கள். ஆனால், மேற்சொன்ன துறைகளின்மீது உள்ள தீராக்காதல் மட்டுமே எனக்கு பேரின்பமாய்த் தெரிகிறது. நாம் தனித்திருந்தாலும், விழிப்பாக நம் பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும் என்ற அறிவுப்பசியில் இருக்க வேண்டும் என்பதே நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய வரிகளாகும்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே! எனக்குப் பெரிய திருப்தி என்னவென்றால், உலகமே இன்று திரும்பிப் பார்க்கும் அளவிற்கு தமிழ்ப் பண்பாடு உலகமே போற்றும் பண்பாடு என்று "கீழடி நம் தாய்மடி" என்று சொல்லுமளவிற்கு நமது நீண்ட பாரம்பரியத்தைப் பறைசாற்றுகிறது. அதேபோல இந்தியா முழுவதும், ஏன் உலக நாடுகள் அனைத்திலும் நமது தாய்மொழி எல்லோராலும் பேசப்படவேண்டும், புரிந்துகொள்ளப்படவேண்டும் என்பதற்காக அம்மாவின் அரசு தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர்மையம் ஆகியவற்றைத் தோற்றுவித்து, சிறப்பாகச் செய்து வருகிறது தமிழ் வளர்ச்சித் துறை.

ஆங்கிலத்தில் எவ்வளவு சொற்கள் உள்ளன, கிரேக்க மொழியில் எவ்வளவு சொற்கள் உள்ளன, பிரெஞ்சு மொழியில் எவ்வளவு சொற்கள் உள்ளன என யாரை கேட்டாலும் சொல்வார்கள். ஆனால், அம்மாவின் ஆட்சியில் தமிழில் எவ்வளவு சொற்கள் உள்ளன; தமிழ் மொழியின் வண்ணம், தமிழ் மொழியின் எண்ணம் ஆகியவற்றையெல்லாம் அளந்து பார்க்கும் அளவிற்கு அமைந்ததுதான் 'சொற்குவை' திட்டமாகும்.

அம்மாவின் அரசு பல்வேறு விருதுகளை தமிழ் வளர்ச்சித் துறைக்காகவே ஏற்படுத்தி, இன்று செல்லுமிடமெல்லாம், புலவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், இசைவாணர்கள் அம்மாவின் அரசு வாழ்க! வாழ்க! அண்ணன் எடப்பாடியார் புகழ் வெல்க! வெல்க! என வாழ்த்தி மகிழ்கிறார்கள்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே! இன்றைய நாள், கவிச்சக்கரவர்த்தி கம்பருடைய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. பத்தாயிரம் பாடல்களை எழுதிய அக்கவிச்சக்கரவர்த்தியின் புகழ் போல உலகம் யாவையும் தாம்உளவாக்கலைப் போல நம்முடைய அம்மாவின் அரசு, எண்ணற்ற திட்டங்களை வகுத்து, சீரிய வகையில்

செய்து வருகிறோம் என்பதற்கு ஒரு சான்று சொல்லவேண்டுமெனில், சென்ற ஆண்டு பத்தாவது உலகத் தமிழ் மாநாடு அமெரிக்காவில் சிகாகோ நகரில், கொண்டாடியபோது அங்கிருக்கும் மாபெரும் பேராசிரியர் ஜார்ஜ் ஆர்ட் என்னை அரவணைத்து சொன்னார், நான் படித்தது ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில், நான் இருப்பது கலிபோர்னியாவில் உள்ள பர்கிலேயில், நாம் இப்போது சந்திப்பது சிகாகோவில். இது எவ்வளவு பெருமையென்றால் உங்கள் அம்மாவின் அரசு வந்தபோதுதான் 'ஹார்வேர்டு பல்கலைக்கழகத்திற்கென்று ஒரு செந்தமிழ் இருக்கை ஏற்படுத்துவேன்' என்று கூறி, அதை நிறைவேற்றினார். மாண்புமிகு அண்ணன் துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்கள், கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் ஹூஸ்டன் நகரத்திற்குச் சென்று வந்த பிறகு, கம்பன் வரிகளிலேயே சொல்ல வேண்டுமென்றால், 'எடுத்தது கண்டார், இற்றது கேட்டார்' என்பது போல, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்திற்கு ரூ.1 கோடி வழங்கி அங்கேயும் தமிழ் இருக்கை அமைத்திட ஆணையிட்டார்கள். தமிழால் எத்திசையும் புகழ் மணக்க என்று சொல்வது போல, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களது அரிய முயற்சியால் அம்மா விரும்பிய தமிழ்த்தாய் சிலையும் அதுசார்ந்த, ஓர் அற்புதமான அருங்காட்சியகமும், நமது மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்தின் பொலிவோடு இடம் பெறப்போகிறது நண்பர்களே!

அண்மையில் "தமிழால் அனைவரும் இணைவோம்" என்பதற்கேற்ப தமிழ்நாட்டில் உள்ள பிறமொழியில் ஆங்கிலத்தினூடே இணைந்துள்ள ஊர்ப் பெயர்களையெல்லாம் நனிசிறந்த தமிழ்மொழியால் அணிகலனாகச் சூட்டியுள்ளோம். அண்மையில் தமிழ் ஆட்சி சட்டமொழி வாரம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பெருமுயற்சியாலும், ஊக்கத்தாலும் நமது வாழ்வின் பேரொளிகளாக விளங்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரில் ரூ.1 கோடி வைப்புத்தொகையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு அறக்கட்டளை நிறுவியுள்ளோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரிலும், அதே வண்ணம் ஒரு ஆய்வு அறக்கட்டளை நிறுவ இருக்கிறோம். புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில்தான் தமிழ் அறிஞர்களை போற்றும் அரசு என்பதற்குச் சான்றாக, மாபெரும் அறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியுள்ளோம். முதன்முறையாக விருதுகளை

வழங்குவதிலும், நூல்களை நாட்டுடமையாக்குவதிலும் விளம்பரம் வாயிலாக விண்ணப்பங்களைப் பெறுவது மட்டுமின்றி, தகுதி, விகுதிகளுக்கேற்ப நானே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் வழிகாட்டுதல்மூலம் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து இன்னார் விருது பெறவேண்டும் என்று கூறி, விருதுகளை வாரி வழங்கி வருகிறது அம்மாவின் அரசு.

செல்வங்களில் உயர்ந்த செல்வங்களை தன்னகத்தே வைத்திருக்கும் தமிழ்நாட்டின் கலைப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் என்ற பெருமையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசிகளாலும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களின் அறிவுறுத்தலாலும், வழிகாட்டுதலிலும் தொல்லியல் துறை என்ற ஒரு துறையை உருவாக்கி, முக்கியத்துவம் அளித்து, கலைப் பண்பாட்டுத் துறையுடன் இணைத்து, சீர்மையுடன் பணிகளை ஆற்றி வருகிறோம்.

இன்றைக்கு சென்னை மாநகரத்தில் உள்ள அருங்காட்சியகத்தினைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து சென்ற வண்ணம் இருப்பதற்குக் காரணம், லண்டன், பிரான்சு அருங்காட்சியகங்களுக்கு நிகராக, தமிழ்நாட்டின் பிற அருங்காட்சியகங்களைவிட, நம்முடைய சென்னை அருங்காட்சியகம், சீரும் சிறப்புமாக பொலிவோடு, பெருமையாக விளங்குவதே ஆகும்.

நாம் செல்லும் இடமெல்லாம், இன்றைக்கு அரசு இசைக் கல்லூரிகள், அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசு சிற்பக் கலைக் கல்லூரிகள் இவைகளையெல்லாம் சீரும், சிறப்புமாக நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது.

நம்முடைய தமிழ்நாட்டில் இயல் இசை நாடக மன்றம் மூலமாக கலைமாமணி விருதுகளை நாம் பல கலைஞர்களுக்கு அண்மையில் வழங்கி இருக்கிறோம். அதற்கான மூல நிதியினை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கிய பெருமை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாரையே சாரும். அவ்வண்ணமே மறைந்த மூத்த கலைஞர்களுக்கான குடும்பப் பராமரிப்பு உதவித் தொகையினை வழங்கிய பெருமை தயாள குணம் கொண்ட மாண்புமிகு அண்ணன் எடப்பாடியாரையே சாரும் என்பதை நான் பெருமையோடு உணர்கிறேன்.

அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு இருப்புக் குறைவாக உள்ள 18 அரிய நூல்களை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக மறுபதிப்பு செய்வது கலைப் பண்பாட்டுத் துறையையே சாரும். உலகிலேயே முதல் முறையாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழ்நாடு இயல் இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கிய பெருமை நமது கலை பண்பாட்டுத் துறையையே சாரும்.

அப்பல்கலைக்கழகத்தில் இன்றைக்கு பலர் பட்டம் பெற்று, சிறந்த கலைஞர்களாக பீடுநடை போடுவதில் நம்முடைய அம்மாவின் அரசு பெருமை கொள்கிறது. தமிழ் பிராமி கல்வெட்டுகளை படித்துப் பொருள் அறிவதிலும், சிந்து சமவெளி கல்வெட்டுகளைப் படிப்பதிலும் நிபுணத்துவம் பெற்ற பத்மஸ்ரீ ஐராவதம் மகாதேவன் பெயரில் பண்டைய தமிழ்ப் பண்பாடு மரபு பன்னாட்டு கருத்தரங்கை நம்முடைய கலைப் பண்பாட்டுத் துறை சீரும் சிறப்புமாக நடத்துகிறது.

வருங்கால தலைமுறையினரின் நலனுக்காக தமிழ்நாட்டின் நிறுவனங்களிடமுள்ள ஓலைச்சுவடிகள் அனைத்தையும் முறையாகப் பாதுகாப்பதற்காக கலைப் பண்பாட்டுத் துறை வாயிலாக மாநில அளவிலான சுவடிகள் குழுமத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். மக்கள் அதிகமாக வரும் திருவிழாக் காலங்களில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, டேனிஷ்கோட்டை போன்ற முக்கிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகங்களில் வெளிநாட்டு பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் தமிழ் மரபு சார் கலை நிகழ்ச்சிகளை நம் கலைப் பண்பாட்டுத் துறையும் இசைக் கல்லூரியும் ஒருங்கே நடத்துகிறது. என்னுடைய தலைமையில் தென்னக கலைப் பண்பாட்டு மையம், மைய அரசிடமிருந்து நிதி நல்கைகளைப் பெற்று, கலைப் பண்பாட்டுத் துறையோடு கலைப் பாலமாக திகழ்ந்து வருவதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் தலைமையில் கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள் தொல்லியல் துறை தகத்தகாயமாக மிளிர்கிறது என்று உலகமே பாராட்டும் வண்ணம் திகழ்கிறது. அண்மையில் நான் பிரான்சு சென்றபோது "யுனெஸ்கோ மாமன்றத்தினர் தமிழக கலைப் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து

பணியாற்றுவதில் பெருமை கொள்கிறோம்'' என்று யுனெஸ்கோ தலைவர் என்னிடம் பகிர்ந்தார். அதன்மூலம் நம்முடைய அம்மாவின் அரசு சீரும் சிறப்புமாக பெருமை கொள்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்க் குலத்தைக் காப்பதற்கும், தமிழ் மொழியை வளர்ப்பதற்கும் வாராது வந்த மாமணியாய் வந்து, வரலாறு போற்றும் திட்டங்களைத் தந்து, தொட்ட இடம் துலங்க வரும் தாய்க்குலமாகி தொட்டில் குழந்தைத் திட்டத்தால் சேய்களும் உறவாகி, நாளும் பொழுதும் நற்றமிழ் நலனுக்கு உழைத்ததனால் எல்லோரும் புகழ நல்லோர்கள் வாழ்த்த நடக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி.

தமிழ் மண்ணில் பார் புகழும் எழில் காட்சி, இது நம் தாய் வழியில் நடக்கின்ற அரசாட்சி. மக்களுக்காகவே அனைத்தும் எனும் தாரகமந்திரத்தை சிரமேற்கொண்டு, அல்லும் பகலும் ஓயாமல் உழைத்து வருகின்ற காவேரிக் காப்பாளர், தமிழினத்தின் பாதுகாவலர், மொழியையும் நாட்டையும் இரண்டு கண்களாக கருதுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் கருணையும், கடமையும் தன்னகத்தே கொண்டு, கடமை வீரராக மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசமிக்க தொண்டராக விளங்கும் ஏறு தழுவலின் நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஆன்றவிந்த சாதனையாளர், அஞ்சா நெஞ்சர், நேர்மையும் வாய்மையும் கொண்டு பேரவையை நடத்துகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த ஆவடி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் 40 பேருக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண் திருச்சிராப்பள்ளியிலும், நக்கீரருக்கு ஒரு நினைவுத் தூண் மதுரை மாவட்டம், திருமங்கலம் திரளி கிராமத்திலும், கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு நினைவுத் தூண் சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையிலும் என மொத்தம் 4 நினைவுத் தூண்கள் இவ்வாண்டு நிறுவப்பட தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சமும் நினைவுத் தூணிற்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மலர்தூவிச் சிறப்புச் செய்ய தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்கப் புலவர்களை நினைவுகூரும் வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் நினைவுத் தூண்கள் நிறுவி ஆண்டுதோறும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரிக்கு ஒரு நினைவுத் தூணும், திருச்சிராப்பள்ளியில் சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் 40 பேருக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூணும், மதுரை மாவட்டம், திருமங்கலம் திரளி கிராமத்தில் நக்கீரருக்கு ஒரு நினைவுத் தூணும், சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ஒரு நினைவுத் தூணும் என 4 நினைவுத் தூண்கள் அமைத்திட தொடராச் செலவினமாக ரூபாய் 80 இலட்சமும், இந்நினைவுத் தூண்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்க்கவிஞர் நாளான ஏப்ரல் 29 ஆம் நாளன்று மலர் தூவி சிறப்புச் செய்திட ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 81 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சிறந்த நூல் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் இரண்டாம் பரிசாக ரூபாய் 20,000/– மற்றும் இரண்டாம் பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.5,000/– வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்படி 33 வகைப்பாடுகளின்கீழ் ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் முதல் பரிசு ரூ.30,000/– மற்றும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் இரண்டாம் பரிசாக ரூபாய் 20,000/– மற்றும் இரண்டாம் பரிசு பெறும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு

ரூ.5,000/– வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சத்து 25 ஆயிரம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நிதியுதவி வேண்டி வரப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு இத்திட்டத்தின்கீழ் தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூபாய் 7 இலட்சத்து 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. குறள் பரிசுத் திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 70–லிருந்து 111 ஆக உயர்த்தி, ஆண்டுக்குக் கூடுதலாக ரூபாய் 4 இலட்சத்து 10 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குறள் பரிசுத் திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 70–லிருந்து 111 ஆக உயர்த்தப்படும். மாவட்டத்திற்கு 3 பேர் வீதம் 37 மாவட்டத்திற்கு மொத்தம் 111 பேருக்குக் குறள் பரிசுத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 10 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

5. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிவரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து இளந்தமிழர் இலக்கிய விருதும், விருதுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரமும் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இளம் வயதிலிருந்து (30–க்குள்) தமிழுக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிவரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில், மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தெரிவு செய்து இளந்தமிழர் இலக்கிய விருது என்ற பெயரில் புதிய

விருது தோற்றுவிக்கப்படும். விருதுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் மற்றும் தகுதியுரை வழங்கிப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பெறுவர். விருதுத் தொகை ரூபாய் 10 ஆயிரம், தகுதியுரை, பொன்னாடை மற்றும் பிற செலவினங்களுக்கு ரூபாய் 10 ஆயிரம் என 37 மாவட்டத்திற்கும் மொத்தம் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 40 ஆயிரம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைப் பொதுப் பணித் துறை வாயிலாக மேற்கொள்ள ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறையால், ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டுவரும் 9 தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கும் மாலை அணிவிப்பு நிகழ்ச்சி நாளன்று துணிப் பந்தல், நெகிழி நாற்காலிகள், சிவப்புக் கம்பள விரிப்பு, சிலைக்கு வண்ணம் பூசுதல், சிலையைச் சுற்றிப் பூந்தொட்டிகள் வைத்தல் மற்றும் சுத்தம் செய்தல் போன்ற பணிகள் பொதுப் பணித் துறை வாயிலாக மேற்கொள்ளப்படும். இதற்கென ஒரு சிலைக்கு ரூபாய் 20 ஆயிரம் வீதம் 9 சிலைகளுக்கும் மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 80 ஆயிரம் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. ஆட்சிமொழிக் கருத்தரங்கம், தமிழ்மன்றப் போட்டிகள், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை ஆகியவற்றிற்குக் கூடுதலாக ரூபாய் 19 இலட்சத்து 80 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு அலுவலர்களுக்கு மாவட்டந்தோறும் நடத்தப்பட்டுவரும் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்குத் தற்போது வழங்கப்படும் தொகை ரூபாய் 20 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்த ஒரு மாவட்டத்திற்குத் தற்போது வழங்கப்படும் சில்லரைச் செலவினத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து

ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை நடத்திட தற்போது வழங்கப்படும் தொகை ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாக இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 19 இலட்சத்து 80 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

8. எல்லைக் காவலர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 4,500/–லிருந்து ரூபாய் 5,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 4,500/–லிருந்து ரூபாய் 5,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 16 இலட்சத்து 44 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

9. எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்க்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2,500/–லிருந்து ரூபாய் 3,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்க்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 2,500/–லிருந்து ரூபாய் 3,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சத்து 22 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

10. தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 3,500/–லிருந்து ரூபாய் 4,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 3,500/–லிருந்து ரூபாய் 4,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 59 இலட்சத்து 64 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

11. தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 2,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை ரூபாய் 2,000/– லிருந்து ரூபாய் 2,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 34 இலட்சத்து 50 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

12. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2,500/–லிருந்து ரூபாய் 3,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 2,500/–லிருந்து ரூபாய் 3,500/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 71 இலட்சத்து 88 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

13. திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் வெளியிட ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழக அரசால் வெளியிடப்பட்ட திருக்குறள் அரபு மொழிபெயர்ப்பு நூல் உலக அளவில் மாபெரும் அங்கீகாரத்தையும் தமிழின் பெருமையை உயர்த்துவதாகவும் அமைந்தது. இதனைக் கருத்தில்கொண்டு திருக்குறள் அரபு மொழியில் இசையுடன் ஒலிப்பதிவு செய்து வெளியிடத் தொடராச் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

14. கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாகத் திங்கள்தோறும் ரூபாய் 3,000/– வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பிற மாநிலங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. அவ்வகையில் கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழ் பயிலும் 15 மாணவர்களுக்குத் திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூபாய் 3,000/– வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 95 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

15. மாவட்டந்தோறும் 10 பள்ளிகளில் தமிழ் மன்றம் தோற்றுவிக்க ரூபாய் 22 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இளம் வயதிலேயே மாணவர்களிடையே தமிழின்மீது பற்று ஏற்படுத்தும் வகையில் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கும் வகையில் தமிழ் மன்றம் தோற்றுவிக்கப்படும். அவ்வகையில் தமிழ் நாட்டிலுள்ள 37 மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு 10 பள்ளிகள் வீதம் தமிழ் மன்றம் தோற்றுவிக்கப்பட்டு, ஒரு பள்ளிக்கு ரூபாய் 6 ஆயிரம் வீதம் வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 22 இலட்சத்து 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

16. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்மூலம் சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்திச் செயற்படுத்திட ரூபாய் 4 இலட்சத்து 21 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 37 கல்லூரி மாணவர்களுக்குச் சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம் முதல் கட்டமாகச் சென்னையில் உள்ள 20 கல்லூரிகளிலிருந்து 10 மாணவர்கள் வீதம் 200 பேர் தெரிவுசெய்யப்படுவர். இதில் ஒரு பிரிவுக்கு 50 மாணவர்கள் வீதம் 4 பிரிவாகப் பிரிக்கப்பட்டு, இவர்களுக்கு 4 நாட்கள் சொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்படும். பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சொற்குவை மாணவத் தூதுவர் எனச் சான்றிதழ் வழங்கப்படும். இம்மாணவர்கள்மூலம் அவர்கள் பயிலும் கல்லூரியில் உள்ள மற்ற மாணவர்களுக்கும் சொல்லாக்கப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 4 இலட்சத்து 21 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

17. கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் வகையில் 'சொல்லின் தாய்' என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலைச்சொல்லாக்கத்தில் சிறந்து விளங்கும் கல்லூரி மாணவர்களைப் பாராட்டும் வகையில் 'சொல்லின் தாய்' என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து அகரமுதலித் திட்ட இயக்ககத்தின்மூலம் வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 மாவட்டத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்து தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது 'சொல்லின் தாய்' விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் தகுதியுரை வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 70 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

18. பிற மொழிக் கலப்பில்லாமல் தூய தமிழிலேயே பேசுவோரைப் பாராட்டும் வகையில் தூய தமிழ்ப் பற்றாளர் என்ற பெயரில் புதியதாக விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடைமுறை வாழ்க்கையிலும், பேச்சு வழக்கிலும், பிற மொழிக் கலப்பில்லாமல் தூய தமிழிலேயே பேசுவோரை ஊக்கப்படுத்தும் வகையில் தூய தமிழ்ப் பற்றாளர் விருது அகரமுதலித் திட்ட இயக்ககம்மூலம் வழங்கப்படும். இதற்கென மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 மாவட்டத்திற்குத் தெரிவுசெய்து தமிழ் அகராதியியல் நாள் விழாவில் தூய தமிழ்ப் பற்றாளர் விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். விருது பெறுபவர்க்கு விருதுத் தொகையாக ரூபாய் இருபதாயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்விருதுக்கென தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

19. தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி மற்றும் அச்சு ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் தூய தமிழ் ஊடகம் என்ற பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, தூய தமிழைப் பயன்படுத்தும் காட்சி மற்றும் அச்சு ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் தூய தமிழ் ஊடக விருது ஆண்டுதோறும் அகரமுதலித் திட்ட இயக்ககம்மூலம் தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது வழங்கப்படும். ஆண்டுதோறும் ஒரு காட்சி ஊடகத்தையும் ஒரு அச்சு ஊடகத்தையும் தெரிவு செய்து தூய தமிழ் ஊடக விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். விருதுத் தொகையாக ஒரு ஊடகத்திற்கு ரூபாய் 50 ஆயிரம் வீதம் வழங்கப்படும். இவ்விருதுக்கென தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

20. பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் 'நற்றமிழ்ப் பாவலர் விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தங்களின் கவிதைப் படைப்புகளில் (மரபுக் கவிதை, புதுக் கவிதை) பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும், புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் 'நற்றமிழ்ப் பாவலர் விருது' ஆண்டுதோறும் தமிழ் அகராதியியல் நாள் விழாவின்போது இரண்டு பேருக்கு வழங்கப்படும். இவ்விருது பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூ.50 ஆயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்விருதுக்கென தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

21. துறைசார் சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம் ஆண்டுதோறும் நடத்திட ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சொற்குவைத் திட்டத்தின்கீழ் துறை வாரியாக வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தி, பல துறை சார்ந்த கலைச் சொற்களைத் தொகுத்துச் சொற்குவையில் சேர்த்தல். இதன்பொருட்டுத் துறைசார் சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம் ஆண்டுதோறும் நான்கு முறை நடத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

22. தமிழ்க் கலைக் கழகக் கூட்டச் செலவினத் தொகை உயர்த்தி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்க் கலைக் கழகம் மாதம் இருமுறை கூடி, மாதம் ஒன்றுக்கு 1000 கலைச்சொற்களை வடிவமைக்கும் இலக்குடன் செயற்பட்டு வருகிறது. ஒரு கூட்டத்திற்கான செலவினத் தொகை ரூ.1,500/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கென கூடுதலாக ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 4 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

23. தமிழர் வாழ்முறைப் பண்பாட்டு அகராதி உருவாக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழர் வாழ்முறைப் பண்பாட்டில் உள்ள அனைத்துச் சொற்களையும் திரட்டி அவற்றிற்கான பொருள் விளக்கப் படங்களுடன் தமிழர் வாழ்முறைப் பண்பாட்டு அகராதி இரண்டு ஆண்டுக் கால அளவில் அகர முதலித் திட்ட இயக்ககம்மூலம் உருவாக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 75 ஆயிரம் மற்றும் தொடராச் செலவினமாக ரூபாய் 75 ஆயிரம் என மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

24. ஒருபொருட் பன்மொழி அகராதி வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒருபொருளைத் தரும் அல்லது ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள் தமிழ் மொழியின் சிறப்பாகும். இன்றைய தலைமுறைக்குத் தமிழ்மொழி வளத்தினை உணர்த்தி அவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒருபொருட் பன்மொழி அகராதி அகர முதலித் திட்ட இயக்ககம்மூலம் உருவாக்கி எழுதுபொருள் அச்சுத் துறை வாயிலாக ஓராண்டுக் கால அளவில் அச்சிட்டு வெளியிடப்படும்.

25. வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி ரூபாய் 12 இலட்சம் செலவில் வெளியிடப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, தமிழ்நாட்டில் ஒரு பகுதியில் வழங்கும் சொல், வேறு ஒரு பகுதியில் வழங்காதது மட்டும் அல்ல, நாளடைவில் வட்டார வழக்குச் சொற்கள் அடுத்த தலைமுறைக்குப் புரியாமல் போய்விடும் என்பதனால் அச்சொற்களைப் பதிவு செய்யும்வண்ணம் தமிழ்நாட்டின் பகுதிகளைச் சென்னை மண்டலம், சேலம் மண்டலம், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருநெல்வேலி மண்டலம், மதுரை மண்டலம், கோயம்புத்தூர் மண்டலம் என 6 மண்டலங்களாகப் பகுத்து, அப்பகுதிகளுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து அப்பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்களைப் பொருளுடன் தொகுத்து, ஒரே தொகுதியாக வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி என்ற பெயரில் அகரமுதலித் திட்ட இயக்ககம்மூலம் 2 ஆண்டுக் கால அளவில் வெளியிடப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சம் மற்றும் தொடராச் செலவினமாக ரூபாய் 6 இலட்சம் என மொத்தம் ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

26. திருக்குறள் களஞ்சியம் மற்றும் மின் தகவல் மையம் ரூபாய் 10 இலட்சம் செலவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகெங்கும் நடைபெற்றுவரும் திருக்குறள் சார்ந்த ஆய்வுப் பணிகள், மொழிபெயர்ப்புகள், நீதிக் கதைகள், நாடகங்கள், கூத்துகள், இசை போன்ற அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளும்படியான, திருக்குறள் களஞ்சியம் மற்றும் மின் தகவல் மையம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

27. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் மற்றும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தில் அமைந்துள்ள காட்சிகளைப் பார்வையாளர்கள் அவர்களது செல்பேசி வாயிலாகவே இசையுடன் காட்சி விளக்கத்தை தமிழ்/ ஆங்கிலத்தில் தானாக அறிந்துகொள்ள வசதியை ரூபாய் 5 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் மற்றும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் ஆகியவற்றில் அமைந்துள்ள காட்சிகளை வருகைதரும் பார்வையாளர்களே அவர்களது செல்பேசி வாயிலாக இசையுடன் காட்சி விளக்கத்தை (Augumented reality) தமிழ்/ஆங்கிலத்தில் அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரமும், தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

28. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதைய்யர் சுவடிகள் ஆய்விருக்கை ரூபாய் 1 கோடி செலவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்க நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சு வடிவில் பதிப்பித்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதைய்யர் அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உ.வே. சாமிநாதைய்யர் சுவடிகள் ஆய்விருக்கை நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

29. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு (ம) வளாக மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள புரட்சித் தலைவர் நூற்றாண்டு ஆய்வு நூலக உள்கட்டமைப்பு மேம்படுத்துதல், அண்ணா கருத்தரங்கக் கூடத்திற்கு இருக்கைகள் வாங்குதல், அலுவலகப் பயன்பாட்டிற்குப் புதிய இருசக்கர வாகனம் வாங்குதல், கண்காணிப்புக் கருவிகள் அமைத்தல், தானியங்கி மின்னாக்கி வாங்குதல், ஒளிரும் நியான் விளக்குப் பெயர்ப் பலகைகள் அமைத்தல் போன்றவற்றிற்குத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

30. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாகத் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆய்வுத் திட்டம் ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும்பொருட்டு, இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, போர்னியா போன்ற நாடுகளில் நம் முன்னோர்களின் தாக்கம் பற்றியும், அந்நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை பற்றியும், பண்பாட்டுச் சின்னங்கள், தமிழ் மொழி அறிவின் தேவை பற்றியும் அறிந்து, பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிக்கவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், மலேசியப் புத்ரா பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

31. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் புதியதாக மின்மாற்றிகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1985 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இரண்டு உயரழுத்த மின்மாற்றிகள் (250 கிலோ வோல்ட் ஆம்பியர்) மின் பாதுகாப்புக் கருதிப் புதிதாக மாற்றியமைக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

32. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துறைபோகிய அறிஞர்களின் ஆய்வுப் பேருரைத் தொடர் ரூபாய் 3 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழாய்விற்கும், தமிழகத்திற்கும், சமூகத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில், உலகளவில் உயராய்வில் ஈடுபட்டும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியும் சாதனை புரிந்துள்ள பேரறிஞர்களின் புதிய கருத்துகளையும், ஆய்வு அனுபவங்களையும் கல்வியாளர்கள், மாணவர்கள் பெறும்பொருட்டு மொழி, இலக்கியம், மொழியியல், கலை, இசை, நாடகம், வரலாறு, தொல்லியல்

பண்பாடு, அறிவியல் தொழில்நுட்பம், சமூக மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அண்மைக்கால ஆய்வுகள் எனப் பல துறை சார்ந்த பொருண்மைகளில் துறைபோகிய அறிஞர்களின் ஆய்வுப் பேருரைத் தொடர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும். இந்திய அளவில் ஒருவரும், பன்னாட்டு அளவில் ஒருவரும் என ஆண்டுக்கு இரண்டு உரை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 3 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

33. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள்–ஆசிரியர்களுக்கான இலக்கிய–இலக்கணப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் ரூபாய் 44 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புலம் பெயர்ந்த இந்தியத் தமிழர் வாழும் நாடுகளான ரியூனியன் தீவு மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள இளந்தமிழ் மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழ்ப் பயிற்சியும், தமிழ்ப் பண்பாடு மற்றும் கலைப் பயிற்சிகளையும் மேலும் பகுதி நேரத் தமிழ்ப் பள்ளிகளில் தமிழைக் கற்பித்துவரும் முறையாகத் தமிழைப் பயிலாத ஆசிரியர்களுக்கும் இலக்கிய–இலக்கணப் பயிற்சி மற்றும் தமிழிசைப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 44 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

34. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உலகத் தரத்தில் நாடகத் துறையின் கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 29 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களின் நாடகக் கல்வி ஆர்வத்தைத் தூண்டும்வகையில் உலகிலேயே முதுகலை நாடகக் கல்வியைத் தாய்மொழி தமிழில் வழங்கும் ஒரே துறை தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறையாகும். இத்தகைய முதுகலை நாடகக் கல்வியைப் படித்து அறிந்துகொள்வது என்பதைவிட முழுக்க முழுக்கச் செய்முறை சார்ந்த புலம் என்பதால் மேடைப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள், அரங்க நிருமாணப் பொருள்கள், உடை வடிவமைப்புப் பொருள்கள், இசைக் கருவிகள், அரங்க ஒளி விளக்கு, அரங்க ஒலிக் கருவி, நடிப்பிற்கான துணைக் கருவிகள்

இவையே அடிப்படையான தேவைகளாக உள்ளன. இவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் மரபுவழி நாடகக் கலை வகுப்புகள் தொடங்கப்பெற்றுக் காணொலிக் காட்சி வழி உலகளாவிய அளவில் கொண்டு செல்வதற்கு நாடகத் துறையின் கட்டமைப்பின் வசதிகள் மேம்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமும், தொடராச் செலவினமாக ரூபாய் 28 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

35. தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்லூரி 2020–2021 ஆம் கல்வி ஆண்டு முதல் ரூபாய் 39 இலட்சத்து 28 ஆயிரம் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களைக் கொண்டு 2020–2021 ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 26 இலட்சத்து 28 ஆயிரமும், தொடராச் செலவினமாக ரூபாய் 13 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

36. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்மூலம் மண்டபம் கடல்சார் நீரகழாய்வு மையம் ரூபாய் 2 கோடியே 23 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்ப் பல்கலைக்கழகக் கடல்சார் தொல்லியல் துறைமூலம் இராமேஸ்வரம் அருகில் உள்ள மண்டபத்தில் 1990–1991 ஆம் ஆண்டுவரை இயங்கி வந்த நீரகழாய்வு மையத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்குத் தமிழக அரசு தொல்லியல் துறை, தேசியக் கடலகழாய்வு நிறுவனம் (NIO, Goa) தமிழ்நாடு அரசுப் பொதுப் பணித் துறையின் மரபுசார் பாதுகாப்புக் கட்டமைப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து வல்லுநர் குழுவை அமைத்து அறிவுரைகளைப் பெற்றுச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 23 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் 2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும்.

37. மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாளை ஆண்டுதோறும் நிறுவனர் நாளாகக் கொண்டாடப்படவும் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகச் சுற்றுச் சுவர் உயர்த்திக் கட்டவும் ரூபாய் 1 கோடியே 77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாள் உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும். மேலும், உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் சுற்றுச் சுவர் உயர்த்தி அமைக்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 75 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

38. தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திட ரூபாய் 22 இலட்சத்து 76 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் உட்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்தும் வகையில் அலுவலகப் பயன்பாட்டிற்கு 28 கணினிகள் மற்றும் அதன் துணைப் பாகங்கள், 5 அச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 22 இலட்சத்து 76 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமானியருக்கும் சரித்திர அங்கீகாரம் கொடுத்த அரசியல் உலகின் ஆளுமைமிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களை நானும், என் குடும்பமும் என்றும் எங்கள் இல்லத்திலும், உள்ளத்திலும் இறைவனாய் வைத்து வணங்குகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவு கூர்மையால் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் முதலிடம் நோக்கி அழைத்துச் சென்று கழகத்தையும், ஆட்சியையும் கம்பீரத்தோடு வழிநடத்தும் கருணைகொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், முதல்வரின் நல்லெண்ண செயல்களுக்கு என்றும், எப்போதும் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமைமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சீர்மிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நல்லெண்ண கருத்துகளை நாள்தோறும் வழங்கும் எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் அம்மாவின் ஆசியோடு என் வணக்கத்தைப் பணிந்து பதிவுசெய்து பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மக்களின் முன்னேற்றமே இத்துறையின் முதன்மை நோக்கமாகும்.

கல்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடுஅல்ல மற்றை யவை'

என்ற வள்ளுவர் நெறிப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை கல்வியில் ஏற்றம்பெறச் செய்ய இவ்வரசு 1,135 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளையும், பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 320 பள்ளிகளையும் சிறப்போடு நடத்தி வருகிறது.

உதவித்தொகை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேசம் சிறப்போடு விளங்க ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்றார் காந்தி. கல்விக்கு செய்கின்ற உதவியே ஒரு தேசத்திற்கு மனிதன் செய்யும் மகத்தான பணி என்றார் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர். அவ்வகையில், இத்துறையில் பல்வேறு வகையான உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

போஸ்ட்-மெட்ரிக் உதவித்தொகை, ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை, மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு உதவித்தொகை, முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான உதவித்தொகை, முழுநேர ஆராய்ச்சி படிப்பிற்கான உதவித்தொகை, பராமரிப்பு படிகள், கற்பிப்பு கட்டணச் சலுகை, பெண் கல்வி ஊக்கத் தொகை, சிறப்புப் பரிசுத் திட்டம் என்று பல்வேறு வகையான உதவித்தொகைகள்மூலம் ஆரம்பப் பள்ளி முதல் உயர் கல்வி வரை தொய்வு இல்லாமல் இம்மக்கள் பெறுவதற்கு அச்சாணியாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.4,109.53 கோடி நிதியில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.3,457.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் பல்வேறு தேர்வுகளில் பங்கெடுத்து வெற்றிவாகை சூடவும், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் படிப்பதற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 2020–2021 ஆம் நிதியாண்டில் ரூ.13.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறேன்.

விடுதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையின்மூலம் 320 உண்டி, உறைவிடப் பள்ளிகளும், 43 பழங்குடியினர் நல விடுதிகளும், 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதியும், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் பழங்குடியினர் நல மாணவர்களுக்காக நடத்தப்படும் SFRD தொண்டு நிறுவனப் பள்ளியும் இத்துறையின் சாதனைக்குச் சான்றாக அமைகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020–2021 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க இவ்வரசு ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதேபோல, ஈமச் சடங்கிற்கு நிதியுதவி வழங்கிட ரூ.4.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பிற்காக கூடுதல் காவல் துறைத் தலைவரின்கீழ், தனிப் பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், சிறப்பு தனியுறு நீதிமன்றங்களும்

செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஆதி திராவிட எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், 11 சிறப்பு எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000/– வழங்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக தமிழக அரசு ஆதி திராவிடர்களின் அரணாகச் செயல்பட்டு வருகிறது.

பழங்குடியினர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை மேம்படுத்திடவும், அவர்கள் பொருளாதார முன்னேற்றம் பெறவும் இவ்வரசு தங்குதடையில்லா கல்வி உதவித்தொகை வழங்கி வருகின்றது. மேலும், பழங்குடியினர் நல துணைத் திட்டத்தின்மூலம் வீடு கட்டித் தருதல், தேனீ வளர்ப்பு, வன உரிமைச் சட்டம் செயல்படுத்துதல், பள்ளிக் கட்டடங்கள் சரிபார்த்தல், ஆழ்துளைக் கிணறு சரிபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழங்குடியினருக்கு வழங்கப்படும் ஜாதி சான்றிதழின் மெய்த்தன்மையினைச் சரிபார்க்க கூர்நோக்குக் குழு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

தாட்கோ

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வில் நம்பிக்கை விதைகளை விதைத்து, அவர்களை சொந்தக் காலில் நிற்க வைக்க அவர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய வழிவகை செய்வதுதான் தாட்கோவின் நோக்கம். தாட்கோ மூலமாக மானியத்துடன்கூடிய கடன் திட்டங்கள், பயிற்சி, திறன் மேம்பாடு, கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு, குடிமைப் பணி எழுதுவோருக்கு நிதியுதவி என்று பல்வேறு செயல்பாடுகளை தாட்கோ செய்து இம்மக்களின் வாழ்வில் கலங்கரை வெளிச்சமாக ஒளி வீசுகிறது.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் ஏற்றங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்தி, அவர்கள் நாளும், நாளும் உயர்ந்து, சிறகை விரித்து சிகரம் தொட கல்வி, விடுதி, உதவித்தொகைகள், வேலைவாய்ப்பு, கலை இலக்கிய மேம்பாடு, திறன் பயிற்சிகள், நிதியுதவி என்று திட்டங்களைத் தீட்டி, சட்டங்களை வகுத்து, சாதனைகள் புரிந்து, சரித்திரம் படைக்க வழிவகை செய்கிறது என்பதே உண்மை என்பதை நிறைவாக தெரிவித்து, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. தொகுப்பூதியத்தில் பணிபுரிந்துவரும் பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களை சிறப்பு காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டுவருதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி, உறைவிடப் பள்ளிகளில் ரூ.3,000/– தொகுப்பூதியத்தில் பணிபுரிந்துவரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த 651 பகுதிநேர துப்புரவுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.6,300/– அடிப்படை ஊதியம் பெறும்வகையில் சிறப்பு காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டுவரப்படுவார்கள். இத்திட்டத்தினால் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த 651 துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயனடைவார்கள். மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.4.12 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

2. பழங்குடியின மாணவ, மாணவியருக்கான விடுதிகள் கட்டுதல்

பழங்குடியின மாணவ, மாணவியர் அவர்களது வாழ்விடங்களை விட்டு கல்வி பயிலும் பள்ளிகளின் அருகே பாதுகாப்புடன் தங்கி கல்வி பயில ஏதுவாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாமக்கல் மாவட்டம், முள்ளுக்குறிச்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 300 மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக ரூ.5.00 கோடி மதிப்பில் ஒரு விடுதியும் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 50 மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காக ரூ.1.50 கோடி மதிப்பில் மற்றொரு விடுதியும் ஆக மொத்தம் ரூ.6.50 கோடி செலவில் இரு விடுதிகள் கட்டப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.6.50 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

3. விடுதிகளுக்கு நவீன ஈர அரவை இயந்திரங்கள் வழங்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிற்றுண்டி வழங்கிடும்பொருட்டு 10 ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட ஈர அரவை இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால்,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக, 150 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 43 பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் 57 பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிகள் என மொத்தம் 250 விடுதிகள் மற்றும் பள்ளிகளுக்கு தலா ரூ.40,000/– வீதம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன ஈர அரவை இயந்திரங்கள் வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1 கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

4. பதின்ம வயதில் உள்ள விடுதி மற்றும் பள்ளி மாணவியர் மற்றும் அவர்தம் தாய்மார்களுக்கு உளவியல் நிபுணரைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தற்போதைய சூழ்நிலையில், பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் பாலியல் தொல்லைகள் மற்றும் அவர்களுக்கெதிரான வன்கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 565 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவியர் மற்றும் அவர்தம் தாய்மார்களுக்கு தொழில்முறை உளவியல் நிபுணரைக் கொண்டு, மாணவியரின் பாதுகாப்பு, பெண்களின் உடல் நலன், விழிப்புணர்வு குறித்த கலந்தாய்வு மற்றும் நல்வழி ஆலோசனை வகுப்புகள் ரூ.23 இலட்சம் செலவில் நடத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.23 இலட்சம் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

5. விடுதி மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், பெண் குழந்தைகளின் பாதுகாப்பில் மிகவும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 63 மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.94 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

6. விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 10 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

7. கல்லூரி மாணவர் விடுதி மாணாக்கருக்கு மருத்துவ முகாம் அமைத்து உடல் நலம் பேணுதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் சமூக, பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரை மருத்துவ ரீதியாக பாதுகாத்து அவர்களது உடல் நலனைப் பேணுவதில் அக்கறை கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 181 ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதிகள் மற்றும் 2 பழங்குடியினர் நல கல்லூரி மாணவர் விடுதிகளில் ஒரு விடுதிக்கு ஓர் ஆண்டுக்கு தலா ரூ.3,000/– வீதம் மொத்தம் ரூ.5.50 இலட்சம் செலவில் மருத்துவ முகாம்கள் அமைத்து மாணாக்கரின் உடல் நலன் காக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.5.50 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

8. விடுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை முறையாகப் பராமரித்திடும் விடுதிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்துறை விடுதிகளைத் தொடர்ந்து நல்லமுறையில் சுத்தமாகப் பராமரித்து, விடுதி மாணாக்கரை நல்வழிப்படுத்தும் கடமை உணர்வு கொண்ட விடுதிக் காப்பாளர்களை ஊக்கப்படுத்திடும்பொருட்டு, முதல் பரிசாக ரூ.3 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.2 இலட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1 இலட்சம் என மொத்தம் ரூ.6 இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்தொகை விடுதிகளின் பராமரிப்பு, உட்கட்டமைப்பு மேம்பாடு, மாணவர்களின்

விளையாட்டு உடல் நலன் தொடர்புடைய செலவிற்காகப் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.6 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

9. பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளைப் பராமரித்தல்

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் 312 பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளிகள் மற்றும் 43 விடுதிகளில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தலா ரூ.20,000/– வீதம் மொத்தம் ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.71 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

10. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவியினை உயர்த்தி வழங்குதல்

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் இன கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டு சங்கத்தால் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி ரூ.40,000/– மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்நிதியாண்டிலிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

11. தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் இரு கல்லூரி விடுதிகள் கட்டுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதிதாக துவக்கப்பட்ட தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியருக்காக கல்லூரி மாணவர் விடுதி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதி என இரு விடுதிகள் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.1.46 கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

12. பழங்குடியினர் உண்டி, உறைவிடப் பள்ளி மாணாக்கரின் ஆங்கில மொழிப் புலமையை அதிகரித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 312 பழங்குடியினர் நல உண்டி, உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கரின் ஆங்கில மொழிப் புலமையை அதிகரித்திடும்பொருட்டு அவர்களுக்கு ரூ.4.34 கோடி மதிப்பீட்டில் சிறப்பு ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.4.34 கோடி மாநிலத் திட்டக் குழு நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** நீதி நெறி நின்று, நீதி வழுவா ஆட்சிபுரிந்த மனுநீதிச் சோழனுக்கு நிகராக நடுநிலையோடு இந்த அவையை வழிநடத்தும் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இமய மலையையே உருவாக்குவோம் என தமிழ் இதயங்களைப் பாழ்படுத்தியவர்கள் மத்தியில், ஏழைகளின் துயர்துடைத்தலே தலையாயப் பணி என்று, தடம் பதித்து, அதில் எங்களைப் பயணம் செய்ய வைத்த பொன்மனச் செம்மல், பாரத ரத்னா, எங்கள் ஆசான் புரட்சித் தலைவரை வணங்குகிறேன். பற்றாமல் பற்றி நின்ற, அறிவுப் பசியென்னும் தீப்பிணிக்கு, கற்றோரும் வியக்கும் வண்ணம், ஏழைப் பெண்களுக்கு மடிக்கணினி கொடுத்து, அகிலத்தில் புரட்சி செய்தவர் எங்கள் மாபெரும் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். வற்றாத பேரன்பால், படிக்க வகை வகையாய் பொருள் தந்த நற்றாய் எங்கள் அம்மா. 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து சிறந்த மங்கையர் திலகம் எங்கள் அம்மா. பெற்றால்தான் தாயா என்று பேதலித்து நின்றோமே, என கையறு நிலையில் கவிதை பாடவைத்து, நம்மைப் பிரிந்து மெரினாவில் துயிலும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

எளிய அணுகுமுறை, உயர்ந்த எண்ணம், ஓய்வில்லா உழைப்பு, கம்பனும், பாரதியும், பாரதிதாசனும், கண்ணதாசனும் கவிதைகளால் இலக்கியங்களை அகழ்ந்தெடுத்தனர். தொன்மை மரபுகளை, தொலைந்த பண்பாடுகளை, அகழ்ந்தெடுத்து வைத்த இடம் கீழடி, அதற்கு உற்ற துணையாகவும், தத்துவம் யாவும், தமிழ் மொழியானது போல சத்தியம் செய்வேன் எங்கள் அண்ணன் எடப்பாடியார்தான் மக்கள் தலைவன் என்று. தமிழ்த்தாயின் தாய்ப்பால் உண்டு, தமிழர்களின் வீரம் கொண்டு, மாநிலங்களிலேயே முதலிடம் கொண்டு, முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக தமிழகத்தை ஆள்கிறார் இன்று எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

முகமிழந்து போனாலும், முகவரியைத் தொலைத்தாலும், முதுமையில் வீழ்ந்தோர்க்கும், முத்தான திட்டங்களால் மிளிர்கிறார், ஒளிர்கிறார் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். டெல்டாவை "உல்டா"வாக ஆக்கியவர்கள் மத்தியில், விவசாயிகளின் காவலனாய், காவேரி காப்பாளனாய் திகழ்கிறார் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்து வந்த வழியில், இந்த திக்கற்ற பறவைகளுக்கு கருணை நிழல் காட்டும் வேடந்தாங்கலாய் விளங்கும், சத்தியத் தாயின் மைந்தனின் வழிநின்றும், அன்னை சந்தியா பெற்றெடுத்த அரும்புதல்வியின் நெறிநின்றும், ஆட்சிபுரியும் எங்கள் தங்க மகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

பாரிக்கும், கபிலனுக்கும் இடையே இருந்த 'கேண்மையும் கிழமையும்', அதியமானுக்கும் அவ்வைக்கும் இடையே இருந்த 'அன்பும் நட்பும்', கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இடையே பொங்கி வழிந்த 'பாசமும் நேசமும்' என்பதைப்போல அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும், ஈ.பி.எஸ். அவர்களும் எங்களைச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள். அம்மாவின் ஆட்சியை தொய்வின்றி கொண்டு சென்று, எதிரிகளுக்கு ஏமாற்றத்தைத் தந்து புதிய சரித்திரமாய் திகழ்பவர்கள் எங்கள் அண்ணன்மார்கள் இருவரும்.

தேனி தந்த தங்கம், தென்னாட்டுச் சிங்கம், தமிழர்களின் வீரம் காத்த ஜல்லிக்கட்டு நாயகன், எங்கள் துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

1(அ). மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களுக்கு ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்

Construction of own building and formation of Driving Testing Track for the Motor Vehicles Inspectors (Unit) Offices

போக்குவரத்துத் துறையில் உள்ள மொத்தம் 58 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களில் 7 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்கள் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் தேர்வு நடத்தும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, பொது கழிவறை, போக்குவரத்து விதிகளை விளக்கும் பயிற்சி மையம், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம், ஓட்டுநர் தேர்வுத் தளம் போன்ற வசதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களில் இல்லை. மேலும், சொந்தக் கட்டடங்கள் கட்டுவது அரசுக்கு வாடகையை மிச்சப்படுத்துவதுடன், அவை அரசின் சொத்தாக அமையும். எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன்கூடிய ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு பின்வரும் அலுவலகங்களுக்கு போதுமான அளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் ரூ.1,157.20 இலட்சங்கள் தேவைப்படுகிறது.

1.	மேலூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகம்	மதுரை மாவட்டம்	ரூ.253.00 இலட்சங்கள்
2.	பட்டுக்கோட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகம்	தஞ்சாவூர் மாவட்டம்	ரூ.301.40 இலட்சங்கள்
3.	மண்மங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகம்	கரூர் மாவட்டம்	ரூ.301.40 இலட்சங்கள்
4.	அரவக்குறிச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகம்	கரூர் மாவட்டம்	ரூ.301.40 இலட்சங்கள்
	மொத்தம்		**ரூ.1,157.20 இலட்சங்கள்**

1(ஆ). வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்

Construction of own building and formation of Driving Testing Track for the Regional Transport Offices

போக்குவரத்துத் துறையில் உள்ள மொத்தம் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 54 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றில் 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள் காத்திருப்பு அறை, பழகுநர் உரிமம் தேர்வு நடத்தும் அறை, ஓட்டுநர் உரிமம் வழங்கும் அறை, பதிவறை, பொது கழிவறை, போக்குவரத்து விதிகளை விளக்கும் பயிற்சி மையம், வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம், ஓட்டுநர் தேர்வுத் தளம் போன்ற வசதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இல்லை. மேலும், சொந்தக் கட்டடங்கள் கட்டுவது அரசுக்கு வாடகையை மிச்சப்படுத்துவதுடன், அவை அரசின் சொத்தாக அமையும். எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன்கூடிய ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு பின்வரும் அலுவலகங்களுக்குப் போதுமான

அளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் நாமக்கல் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்ட ரூ.417.20 இலட்சங்கள் தேவைப்படுகிறது.

குமாரப்பாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை தரம் உயர்த்துதல் முன்னிட்டு பகுதி அலுவலகத்திற்கான சொந்தக் கட்டடத்தை விரிவாக்கம் செய்து ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன்கூடிய கட்டடமாக கட்டும் பணிக்கு ரூ.280.47 இலட்சங்கள் தேவைப்படுகிறது.

1.	நாமக்கல் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	நாமக்கல் மாவட்டம்	ரூ.417.20 இலட்சங்கள்
2.	குமாரப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	நாமக்கல் மாவட்டம்	ரூ.280.47 இலட்சங்கள்
	மொத்தம்		**ரூ.697.67 இலட்சங்கள்**

1(இ). போக்குவரத்துத் துறை ஆணையர்/மாநிலப் போக்குவரத்து அதிகாரி/சாலை பாதுகாப்பு ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் போக்குவரத்து ஆணையரகத்திற்கு சென்னை கிண்டியில் சொந்தக் கட்டடம் கட்டுதல்

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 58 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும், 12 இணை மற்றும் துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து அலுவலகங்களும், 21 சோதனைச் சாவடி அலுவலகங்களும் ஆக மொத்தம் 180 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், இவ்வலுவலகங்களில் 102 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அதன் தலைமை அலுவலகமாகப் போக்குவரத்து ஆணையரகம் தற்போது வருவாய் நிருவாக ஆணையரகக் கட்டுப்பாட்டில் உள்ள எழிலகத்தில் இயங்கிவருகிறது. இப்போக்குவரத்து ஆணையரகத்தில் போக்குவரத்து ஆணையர் தலைமையில் ஒரு கூடுதல் போக்குவரத்து ஆணையர், மூன்று இணைப் போக்குவரத்து ஆணையர்கள், மூன்று துணைப் போக்குவரத்து ஆணையர்கள், மூன்று உதவி செயலர்கள், தலைமை கணக்கு அலுவலர், உதவி இயக்குநர் (கணக்குகள்), கணக்கு

அலுவலர், புள்ளியியல் உதவி இயக்குநர், 15 நேர்முக உதவியாளர்கள் மற்றும் 115 பணியாளர்கள் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் அமைக்கப்பட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவின் அறிவுரைகளின் பேரில் சாலைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பணிகளை சிறப்புடன் செயல்படுத்தவும், தற்போது இயங்கிவரும் போக்குவரத்து ஆணையர் அலுவலகம், சாலைப் பாதுகாப்புப் பிரிவு, உலக வங்கி (சாலைப் பாதுகாப்பு) ஆலோசகர் மற்றும் அதன் சார்ந்த பணியாளர்கள் போன்றவற்றிற்கு தகுந்த இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சாலைப் பாதுகாப்பு தொடர்பான கூட்டங்களை நடத்தவும் சொந்தக் கட்டடம் அவசியமாகிறது. தேசிய அளவில் சாலை விபத்தினையும், அது தொடர்பாக ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்ததற்காகவும் முதல் இடத்தைப் பெற்றதற்காக மத்திய போக்குவரத்து மற்றும் தரைவழிச் சாலை அமைச்சகம் தமிழக அரசிற்கு சிறப்பு விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. இப்பணிகளை இன்னும் செவ்வனே மேற்கொள்ள சென்னை கிண்டியில் புதிய கட்டடம் ரூ.36.00 கோடி மதிப்பீட்டில் கட்டுவது அவசியமாகிறது.

தொடராச் செலவு—ரூ.3,600 இலட்சங்களில்

2(அ). கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல்

பெருகிவரும் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டும், கள்ளக்குறிச்சி மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிதாக தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகமாக இயங்கும் கள்ளக்குறிச்சியினை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. அவ்வாறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்தப்படும்பட்சத்தில், கள்ளக்குறிச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கெனவே உள்ள கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்ன சேலம் ஆகிய தாலுகாக்களுடன், புதிதாக உதயமான கல்வராயன்மலை தாலுகாவும் உள்ளடங்கும்.

புதிதாக உருவாக்கப்பட உள்ள கள்ளக்குறிச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் உள்ள போக்குவரத்து

வாகனங்களின் எண்ணிக்கை 11,919 ஆகும். இப்பகுதியில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கை 7,67,189 ஆகும்.

எனவே, பெருகிவரும் வாகனங்களின் அடிப்படையிலும், பொதுமக்கள் மற்றும் நிருவாக வசதிக்காகவும், கள்ளக்குறிச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. இதற்கான செலவின விவரங்கள் பின்வருமாறு:

தொடரும் செலவினம்	– ரூ.64.10 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	– ரூ.21.23 இலட்சங்களில்
மொத்தம்	**– ரூ.85.33 இலட்சங்களில்**

2(ஆ). திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல்

பெருகிவரும் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டும், திருப்பத்தூர் மாவட்டம், வேலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிதாக தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகமாக இயங்குவதை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. அவ்வாறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்தப்படும்பட்சத்தில், திருப்பத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கெனவே உள்ள திருப்பத்தூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஆகிய தாலுகாவும் உள்ளடங்கும்.

புதிதாக உருவாக்கப்பட உள்ள திருப்பத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் உள்ள போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 3,202 ஆகும். இப்பகுதியில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கை 1,15,840 ஆகும்.

எனவே, பெருகிவரும் வாகனங்களின் அடிப்படையிலும், பொதுமக்கள் மற்றும் நிருவாக வசதிக்காகவும், திருப்பத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. இதற்கான செலவின விவரங்கள் பின்வருமாறு:

தொடரும் செலவினம்	–	ரூ.64.10 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.21.23 இலட்சங்களில்
மொத்தம்	–	**ரூ.85.33 இலட்சங்களில்**

2(இ). திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல்

பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்து வாகனங்கள், போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டும், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் உடுமலைப்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்திற்கு இடையே உள்ள தூரம் ஆகியவற்றின் அடிப்படையிலும், அனுமதிச் சீட்டு தொடர்புடைய பணிகள் மற்றும் பிற போக்குவரத்துத் துறை தொடர்பான பணிகளை பொதுமக்கள் சிரமமின்றி மேற்கொள்ள திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா பகுதியில் உடுமலைப்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது.

புதிதாக உருவாக்கப்பட உள்ள உடுமலைப்பேட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் உள்ள போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 6,741 ஆகும். இப்பகுதியில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கை 4,19,247 ஆகும்.

அவ்வாறு தரம் உயர்த்தும்பட்சத்தில், தாராபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் தாராபுரம் தாலுகா மட்டும் மற்றும் உடுமலைப்பேட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் உடுமலைப்பேட்டை மற்றும் மடத்துக்குளம் தாலுகாக்களும் உள்ளடங்கும்.

எனவே, பெருகிவரும் வாகனங்களின் அடிப்படையிலும், பொதுமக்கள் மற்றும் நிருவாக வசதிக்காகவும், உடுமலைப்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. இதற்கான செலவின விவரங்கள் பின்வருமாறு:

தொடரும் செலவினம்	–	ரூ.64.10 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.21.23 இலட்சங்களில்
மொத்தம்	–	**ரூ.85.33 இலட்சங்களில்**

2(ஈ). நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் அமைந்துள்ள குமாரப்பாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல்

பெருகிவரும் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டும், நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையம் தாலுகாவில் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது.

புதிதாக உருவாக்கப்பட உள்ள குமாரப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குள் உள்ள போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 6,739 ஆகும். இப்பகுதியில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கை 2,83,000 ஆகும்.

இதற்கான செலவின விவரங்கள் பின்வருமாறு:

தொடரும் செலவினம்	–	ரூ.64.10 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.21.23 இலட்சங்களில்
மொத்தம்	–	**ரூ.85.33 இலட்சங்களில்**

3. தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து தாம்பரம் (மேற்கு) மற்றும் தாம்பரம் (கிழக்கு) அலுவலகங்களாக உருவாக்குதல்

பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் போக்குவரத்து வாகனங்கள், போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டும், காஞ்சிபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் என பிரித்ததற்கு இணங்க, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து பல்லாவரம் தாலுகா மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வண்டலூர் தாலுகாவை உள்ளடக்கியும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அனுமதிச் சீட்டு தொடர்புடைய பணிகள் மற்றும் பிற போக்குவரத்துத் துறை தொடர்பான பணிகளை பொதுமக்கள்

சிரமமின்றி மேற்கொள்ள புதிதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தாம்பரம் (கிழக்கு) என உருவாக்குதல் அவசியமாகிறது.

அவ்வாறு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தாம்பரம் (கிழக்கு) உருவாக்கும்போது அவ்வலுவலகக் கட்டுப்பாட்டில் வண்டலூர் மற்றும் பல்லாவரம் தாலுகாக்களில் உள்ள மக்கள் பயனடைவார்கள். இப்பகுதியில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கை 3,21,003 ஆகும். போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 28,563, போக்குவரத்து அல்லாத வாகனங்களின் (non–transport) எண்ணிக்கை 2,87,317 ஆகும். மொத்த வாகன எண்ணிக்கை 3,15,880 ஆகும்.

எனவே, பெருகிவரும் வாகனங்களின் அடிப்படையிலும், பொதுமக்கள் மற்றும் நிருவாக வசதிக்காகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தை நிருவாக நலன் கருதி காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் என பிரித்ததன் அடிப்படையில் தாம்பரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து தற்போதைய அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தாம்பரம் (மேற்கு) என்றும், புதிதாக தோற்றுவிக்கப்பட இருக்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தாம்பரம் (கிழக்கு) என்று புதிய அலுவலகத்தை உருவாக்குதல் அவசியமாகிறது. இதற்கான செலவின விவரங்கள் பின்வருமாறு:

தொடரும் செலவினம்	–	ரூ.105.92 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.35.23 இலட்சங்களில்
மொத்தம்	**–**	**ரூ.141.15 இலட்சங்களில்**

4(அ). அமராவதி நகர் (கோவை மாவட்டம்)–த்தில் புதிதாக ஒரு போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்குதல்

உடுமலை நகரில் உள்ள சுற்றுலா வாகனங்கள் மற்றும் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் இருந்து வரும் சுற்றுலா வாகனங்களும், சரக்கு வாகனங்களும் தற்காலிக அனுமதிச் சீட்டு பெறுவதற்கு அருகில் உள்ள போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியான கோபாலபுரம் அல்லது வளந்தாயமரம் சென்று அனுமதிச் சீட்டு பெற வேண்டியுள்ளது. இதற்காக, கூடுதலாக கால விரயம் செய்து 100 கி.மீ. சென்று தற்காலிக அனுமதிச் சீட்டு

பெற்று மூணாறு பயணத்தை தொடர வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட கால விரயத்தை தவிர்ப்பதற்காகவும், பெரும்பாலான வாகனங்கள் தற்காலிக அனுமதிச் சீட்டின்றி கேரள மாநிலத்திற்கு செல்வதையும் மற்றும் கேரள மாநிலத்திலிருந்து வரும் சுற்றுலா மற்றும் போக்குவரத்து வாகனங்கள், தற்காலிக அனுமதிச் சீட்டு மற்றும் வரி செலுத்தாமல், தமிழகத்திற்கு வருவதை தவிர்த்து, அரசுக்கு வரவேண்டிய வரி மற்றும் கட்டணங்கள் வசூலித்து அரசுக்கு வருவாய் இழப்பை தடுத்து அரசிற்கு வருவாய் ஈட்டவும், உடுமலைப்பேட்டை—மூணாறு சாலையில் உள்ள அமராவதி நகர் பகுதியில் ஒரு புதிய போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்குதல் அவசியமாகிறது.

எனவே, பொதுமக்கள் சிரமமின்றி தற்காலிக அனுமதிச் சீட்டு பெற்றும், அரசிற்கு உரிய வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்தி தங்களது பயணத்தை தொடர ஏதுவாக, உடுமலைப்பேட்டை—மூணாறு சாலையில் உள்ள அமராவதி நகர் பகுதியில் ஒரு புதிய போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்குதல் அவசியமாகிறது.

தொடரும் செலவினம்	–	ரூ.30.82 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.1.73 இலட்சங்களில்
மொத்தம்	–	ரூ.32.55 இலட்சங்களில்

4(ஆ). குடியாத்தம் (வேலூர் மாவட்டம்)—த்தில் புதிதாக ஒரு போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்குதல்

குடியாத்தம்—கோலார், கர்நாடகா—பழமனேர் ஆந்திரா, சித்தூர்—ஆந்திரா சாலை வழியாக செல்லும் வாகனங்கள் தற்போது தற்காலிக அனுமதிச் சீட்டு பெற வேண்டி சேர்க்காடு மற்றும் காட்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள போக்குவரத்து சோதனைச் சாவடிகளுக்கு சென்று தற்காலிக அனுமதிச் சீட்டு பெற வேண்டிய நிலை உள்ளது. இதனால் சுற்றுலா வாகனங்கள் தற்காலிக அனுமதி பெறாமலேயே ஆந்திரா மாநிலத்திற்கு தப்பிச் செல்லும் பாதையில் செல்ல வாய்ப்புள்ளதை கருத்தில் கொண்டும், அவ்வாறு சுற்றுலா செல்லும் வாகனங்கள் அருகிலுள்ள போக்குவரத்து சோதனைச் சாவடியில் செல்ல வேண்டி கூடுதலாக கால விரயம் மற்றும் எரிபொருள் விரயம் ஏற்படுவதைத் தடுக்கவும் குடியாத்தம்—சித்தூர் ஆந்திரா

மாநில சாலையில் புதிதாக ஒரு போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்கும்பட்சத்தில் சுற்றுலா வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச் சீட்டு பெறுவதன்மூலம் அரசிற்கு கட்டணம் மற்றும் வரி மூலமாக வருவாய் ஈட்ட இயலும்.

எனவே, பொது மக்கள் சிரமமின்றி தற்காலிக அனுமதிச் சீட்டு பெற்றும், அரசிற்கு உரிய வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்த தங்களது பயணத்தைத் தொடர ஏதுவாக குடியாத்தம்–சித்தூர் ஆந்திரா மாநில சாலையில் ஒரு புதிய போக்குவரத்துத் துறை சோதனைச் சாவடியை உருவாக்குதல் அவசியமாகிறது.

தொடரும் செலவினம்	–	ரூ.30.82 இலட்சங்களில்
தொடராச் செலவினம்	–	ரூ.1.73 இலட்சங்களில்
மொத்தம்	–	ரூ.32.55 இலட்சங்களில்

5. போக்குவரத்துத் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்தும்பொருட்டு போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மற்றும் மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாய அலுவலகங்களுக்குக் கணினி அச்சுப் பொறி, ஸ்கேனர், தடையில்லா மின்சாரம் வழங்கும் சாதனம் (UPS)

போக்குவரத்துத் துறையின் தலைமையிடமான போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மற்றும் மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஆகிய அலுவலகங்களில் உள்ள அனைத்துப் பணிகளும் கணினி மற்றும் மின்னாளுமையின்மூலம் மேற்கொள்ளப்படுவதால், இவ்வலுவலகங்களின் அனைத்துப் பணிகளும் தங்குதடையின்றி மேற்கொண்டு அதன் செயல்பாட்டினை மேம்படுத்தும்பொருட்டு போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மற்றும் மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாய அலுவலகங்களுக்குக் கணினி, அச்சுப் பொறி, வருடுபொறி, (Scanner) தடையில்லா மின்சாரம் (UPS) மற்றும் மாநில அளவிலான தரவு விவரங்கள் அறிய (Procurement and Commissioning of Mirror Server) ஆகியவற்றினை ரூ.56.33 இலட்சங்கள் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

தொடராச் செலவினம்	–	ரூ.56.33 இலட்சங்களில்

6. தேசிய நெடுஞ்சாலைகளில் அதிக சாலை விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கவும், அதிக வேகமாக செல்லுதல் மற்றும் போக்குவரத்து விதிமீறல் குற்றங்களைத் தடுக்கவும் தானியங்கி புகைப்படிக் கருவிகள் மற்றும் பதிவெண் பலகை கண்டறியும் கேமராக்கள் அமைத்தல்

உச்ச நீதிமன்ற சாலை பாதுகாப்பு குழுவின் வழிகாட்டுதலின்படி 2016 ஆம் ஆண்டின் உயிரிழப்புகள் 2020 ஆம் ஆண்டிற்குள் 50 சதவிகிதம் குறைக்கப்பட வேண்டும் என்ற இலக்கை நோக்கி தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு 2019 ஆம் ஆண்டு வரை 39% உயிரிழப்புகள் குறைந்துள்ளது. இதற்கு மத்திய அரசு தமிழகத்திற்கு விருது வழங்கி கௌரவித்துள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டிற்குள் 50% இலக்கினை அடையவும் அதன் பிறகு விபத்துகளையும், உயிரிழப்புகளையும் குறைக்கும் விதத்தில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. அதன் முதல்கட்டமாக அதிக வேகத்தில் இயங்கும் வாகனங்களையும், சாலைப் பாதுகாப்பு விதிமீறல்களை கண்டறியும் விதத்தில் தற்போது செங்கல்பட்டு முதல் திருச்சி வரை 280 கி.மீ.–க்கு 56 இடங்களில் தானியங்கி பதிவு எண் பலகையைப் படம்பிடிக்கும் கேமராக்கள் பொருத்த ரூ.22.43 கோடி செலவில் அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகளவு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குச் சொந்தமான சாலைகளில் (நான்கு வழி/ஆறு வழி) நடைபெறுகிறது. எனவே, இதனைக் கவனத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள சாலை விபத்துகள் அடிக்கடி நிகழும் தேசிய நெடுஞ்சாலைகளில் (மொத்தம் 1470.20 கி.மீ.) ANPR கேமராக்கள் படிப்படியாக பொருத்துவது அவசியமாகிறது.

இவ்வாறு கேமராக்கள் பொறுத்துவதனால், வாகனங்கள் அதிக வேகத்தில் செல்லுதல், சீட் பெல்ட் அணியாமல் செல்லுதல், கைப்பேசியில் பேசிக் கொண்டே வாகனத்தை இயக்குதல், தலைக்கவசம் இல்லாமல் இரு சக்கர வாகனத்தை இயக்குதல் போன்ற இன்னும் பல விதிமீறல்களைக் கண்டறிந்து நடவடிக்கைகளை எடுக்க ஏதுவாகும்.

அவ்வாறு அமைக்கும்பட்சத்தில், வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து விதிகளை மீறாமல் பாதுகாப்பாக வாகனங்களை இயக்க விழிப்புணர்வும், விபத்தில்லா தமிழகத்தை உருவாக்க நடவடிக்கையும் மேற்கொள்ள இயலும்.

தொடராச் செலவினம் – ரூ.11776.30 இலட்சங்களில்
(117.76 கோடி)

போக்குவரத்துத் துறை

1. கோத்தகிரியில் புதிய பணிமனை அமைத்தல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட் ஊட்டி மண்டலம் கோத்தகிரியில் இக்கழகத்திற்குச் சொந்தமான 1.52 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று ஒரு புதிய பணிமனை கட்டப்படும்.

2. கன்னியாகுமரியில் பேருந்து நிலையத்தை நவீனப்படுத்துதல்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்க்கு சொந்தமான கன்னியாகுமரி பேருந்து நிலையம் பழுதடைந்து வசதிகள் குறைவாக உள்ள காரணத்தால், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி பேருந்து நிலையம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும். இதற்கான நிதியானது நகர்ப்புற மற்றும் வீட்டு வசதித் துறையின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து பெறப்படும்.

3. மின்னணு வருகைப் பதிவேடு (Bio–Metric Attendance) அறிமுகப்படுத்துதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அனைத்து தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், கோட்ட அலுவலகங்கள், கிளைகள் மற்றும் பணிமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் தினசரி வருகையினைப் பதிவுசெய்யும்பொருட்டு மின்னணு வருகைப்பதிவு முறை (Bio–Metric Attendance) அறிமுகப்படுத்தப்படும்.

4. பேருந்துகளில் நவீன தானியங்கி ஒலி அறிவிப்பு அறிமுகப்படுத்துதல்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்ட பேருந்துகளில் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்ட நவீன தானியங்கி ஒலி அறிவிப்பினைத் தொடர்ந்து இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் அடுத்த பேருந்து நிறுத்தம் மற்றும் பேருந்து நிலையங்களின் பெயர்களை பயணிகள் முன்னரே அறிந்துகொள்ளும் வகையில் நவீன தானியங்கி ஒலி அறிவிப்பு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டமானது பொது மற்றும் தனியாரின் பங்களிப்போடு நடைமுறைப்படுத்தப்படும். இதன்பொருட்டு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

5. மருத்துவரீதியாக பணி விலக்கம் (Medical Discharge) அனுமதிக்கப்பட்ட போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்குதல்

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துக் கழகங்களில் பணியிலிருந்து மருத்துவ ரீதியாக பணி விலக்கம் அனுமதிக்கப்பட்ட போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மற்றும் அவர்தம் மனைவிக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கப்படும்.

6. சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிப் போர் தியாகிகள் அவர்தம் வாரிசுதாரர்களுடன் செல்லும் உதவியாளர் ஒருவருக்கு (One Attendant) கட்டணமில்லா பயண அட்டை வழங்குதல்

சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிப் போர் தியாகிகள் அவர்தம் வாரிசுதாரர்கள், அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 60 வயதிற்கு மேற்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழிப் போர் தியாகிகள் அவர்தம் வாரிசுதாரர்கள் உடன் செல்லும் உதவியாளர் ஒருவருக்கு (One Attendant) கட்டணமில்லா பயண அட்டை வழங்கப்படும்.

7. நாடகம் மற்றும் கிராமியக் கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை கட்டணமில்லாமல் எடுத்துச் செல்ல அனுமதி வழங்குதல்

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நாடகம் மற்றும் கிராமியக் கலைஞர்களுக்கு ஏற்கெனவே 50 சதவிகித கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்படி கலைஞர்கள் தங்கள் வாத்தியக் கருவிகளை

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தையும், கழகத் தொண்டர்களையும் கண்ணின் இமையாக காத்திட்ட பேராற்றல்மிக்க, பெருமைக்குரிய நம் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவினைப் போற்றுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாகத் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதலிடத்திற்குக் கொண்டு வந்த சாதனை நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கும், கட்சிக்கும் எந்நாளும் எப்போதும் துணை நிற்கும் மாற்றாரும் போற்றும் மனிதநேயப் பண்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்து, தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் தொழில் அமைதி நிலவினால்தான் தொழில்கள் பெருகும். அதிக அளவில் தொழிற்சாலைகள் வரும், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். அந்த வகையில் தமிழகத்தில் தொழில் அமைதி பூரணமாக நிலவி வருவதை மக்கள் அனைவரும் அறிவார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் 7,911 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக 1,92,691 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர எண்ணற்ற நல்ல பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்து செயல்படுத்தினார்கள். அந்த வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசை மிகச் செம்மையாக இப்போது வழி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும் தொழிலாளர்கள் நலனில் கூடுதல் அக்கறை கொண்டு நல்ல பல திட்டங்களையும், நலத் திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு அம்மா

அவர்களின் ஆட்சியில் கடந்த 9 ஆண்டுகளில் அமைப்புசாரா நல வாரியங்களில் 23,67,333 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 38,17,099 பயனாளிகளுக்கு ரூ.1,333.52 கோடி தொகை நலத் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை மரணத்திற்கான நிதி உதவி ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், ஈமச்சடங்கிற்கான நிதி உதவி ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/–ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறந்த நிருவாகத் திறனில் இந்திய அளவில் முன்னோடி மாநிலமாக திகழ்வதோடு பல பன்னாட்டு தொழிற்சாலைகள் அமையப்பெற்று, இந்திய மாநிலங்களில் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளில் முன்னிலை வகிக்கிறது. இம்மாநிலம் மின்னணு, தோல் மற்றும் மருந்து பொருட்கள் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது. அதிக எண்ணிக்கையில் தகுதி மற்றும் திறன் வாய்ந்த மனித வளம் மற்றும் மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் அரசின் நேர்மறையான அணுகுமுறை கொண்ட இம்மாநிலத்தில் 21,65,489 தொழிலாளர்களுடன் 45,385 தொழிற்சாலைகள் இயங்கி வருவதால் முதலீட்டாளர்களுக்கு இணக்கமான தொழில் சூழல் மிக்க மாநிலம் தமிழ்நாடு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மறுசீரமைக்கப்பட்டு வேலைநாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் பணிகளை மேற்கொண்டு வருகிறது. போட்டித் தேர்வர்கள் UPSC, Group I, II, Bank Exam, SSC Exam போன்ற தேர்வுகளை எழுதுவதற்கு மெய்நிகர் கற்றல் வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 22–2–2019 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 42,456 நபர்கள் பதிவு செய்துள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 9 ஆண்டுகளில் 10,00,994 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற 89 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், 488 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் மட்டும் 28 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 181.29 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த தொலைநோக்குத் திட்டம் 2023–ல் 2 கோடி இளைஞர்களுக்கு திறன்பயிற்சி வழங்கி தமிழகத்தை திறன்மிகு தமிழகமாக உருவாக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். அதன்படி தமிழக இளைஞர்கள் திறன்பயிற்சி பெற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் 85,65,878+ நபர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதிகளை 10 தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 220 தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்மூலம் வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் வழியில் இப்போதும், எப்போதும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக நம் கழகமும் ஆட்சியும் இருக்கும் என்பதில் யாருக்கும் எந்தவித சந்தேகமும் தேவையில்லை. மக்களுக்கு என்றும் நேசக்கரம் நீட்டும் அரசுதான் அம்மாவின் அரசு என்பதற்கு

- வக்ஃபு வாரியத்திற்கான நிருவாக மானியத்தை ரூ.2.00 கோடியில் இருந்து ரூ.2.50 கோடியாக உயர்த்தியது.

- ஹஜ் கமிட்டிக்கு நிருவாக மானியத்தை ரூ.30 இலட்சத்தில் இருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தியது.

- இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் செய்யாத சாதனையாக ஹஜ் பயணிகளுக்கு ரூ.6.00 கோடி மானியம் வழங்கியது.

- 2020–2021 நிதிநிலை அறிக்கையில் பள்ளிவாசல்களுக்கான பராமரிப்புத் தொகை ரூ.60 இலட்சத்தில் இருந்து ரூ.5.00 கோடியாக உயர்த்தியது.

பட்ஜெட் கூட்டத் தொடரின்போது விதி 110–ன்கீழ்,

- உலமா ஓய்வூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்படும் எனவும்,

- ஹஜ் பயணிகளின் வசதிக்காக ரூ.15 கோடி செலவில் ஹஜ் இல்லம் கட்டப்படும் எனவும்,

- உலமாக்களுக்கு 50 சதவீத மானியத்தில் புதிய இருசக்கர வாகனங்கள் வழங்கவும்

மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட முத்து முத்தான முக்கிய அறிவிப்புகளே சான்றாகும். இந்த ஆட்சியின்மீது எத்தனை அவதூறுகள் கூறி, உண்மைக்கு மாறான பிரச்சாரம் செய்தாலும் மக்கள் அதனை ஏற்க மாட்டார்கள். அதற்குச் சான்று விக்கிரவாண்டி, நாங்குநேரி இடைத்தேர்தல்களில் பெற்ற மகத்தான வெற்றி மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் பெற்ற வெற்றியும் ஆகும் என்பதைத் தெரிவித்து, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. தொழிலாளர் துணை ஆணையர் (பணியமைப்பு மற்றும் பொது) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் (சட்டம்) ஆகியோருக்கு 2 புதிய வாகனங்கள் வழங்குதல்

Provision of 2 New Vehicles to Deputy Commissioner of Labour (Establishment and General) and Deputy Commissioner of Labour (Law)

தொழிலாளர் துணை ஆணையர் (பணியமைப்பு மற்றும் பொது) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் (சட்டம்) ஆகிய அலுவலர்கள் பணி நிமித்தமாக பல்வேறு அலுவலகங்களுக்குச் செல்ல ஏதுவாக மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 21.11 இலட்சம் ரூபாய் செலவில் 2 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

2. திருப்பூர், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள் கட்டுதல்

Construction of Integrated Labour Office complex at Tiruppur, Ramanathapuram and Tiruvannamalai Districts

திருப்பூர், இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 8.52 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

3. தொழிலாளர் ஆணையரகம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களுக்கு சென்னை, அண்ணா நகரில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

Construction of office building for the Commissionerate of Labour and its Subordinate offices at Anna Nagar in Chennai

தொழிலாளர் ஆணையரகம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களுக்கு சென்னை, அண்ணா நகரில் உள்ள தொழிலாளர் அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் காலியாகவுள்ள இடத்தில் புதிய அலுவலகம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

4. அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு அரசு வினைத்திறன்மிக்க தொழிலாளர் செயலியை செயல்படுத்துதல்

Implementation of Arasu Smart Labour App for the benefit of Unorganized Workers and the Public

தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள சமையல் தொழிலாளர்கள், குழாய்ச் சீரமைப்பாளர்கள் (Plumbers), மின் வினைஞர்கள் (Electricians) உள்ளிட்ட பல்வேறு தொழிலாளர்களின் சேவைகளை பொது மக்கள் எளிதாக பெற்று பயனடையும் வகையிலும், அமைப்புசாரா தொழிலாளர்களின் ஊதியத்தில் பெருமளவு இடைத்தரகர்களுக்கு தரகாக சென்றடைவதைத் தவிர்க்கும் வகையிலும், அரசு வினைத்திறன்மிக்க தொழிலாளர் செயலி (Arasu Smart Labour App) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 30 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

5. அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் பொது மக்கள் பயனடைவதற்காக அம்மா ஓட்டுநர்கள் செயலியை செயல்படுத்துதல்

Implementation of Amma Drivers App for the benefit of unorganized Drivers and the Public

தனியார் தானி (Auto) மற்றும் வாடகைச் சீருந்து (Taxi) செயலியை இயக்குபவர்கள், பொது மக்கள் செலுத்தும் கட்டணத்தில் பெருமளவு தொகையை ஓட்டுநர்களிடமிருந்து தரகாக (Commission) வசூலிக்கின்றனர். அமைப்புசாரா ஓட்டுநர்கள், அதிக தரகு, பயணங்களை இரத்து செய்தல், சேவை வழங்குபவர்களின் தவறான கட்டண நடைமுறைகள் போன்றவற்றால் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இதனைத் தவிர்க்கும்பொருட்டு, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள அமைப்புசாரா ஓட்டுநர்கள் பயன் பெறுவதற்காகவும், நகர்ப்புறம் மட்டுமல்லாமல், கிராமப்புறம் மற்றும் தொலைதூரப் பகுதிகளிலுள்ள மக்கள் பயனடைவதற்காகவும், பாதுகாப்பு அம்சங்களுடன்கூடிய அம்மா ஓட்டுநர்கள் செயலி (Amma Drivers App) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 30 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

6. அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலன் காத்திட நலத் திட்ட உதவியாக பாதுகாப்புப் பெட்டகம் வழங்குதல்

Provision of Safety Kit to protect the welfare of Unorganised Drivers

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர் நல வாரியத்தில் பதிவுசெய்துள்ள அமைப்புசாரா ஓட்டுநர்களின் நலன் காக்க முதற்கட்டமாக 20,000 ஓட்டுநர்களுக்கு தலா ரூ.2,000/– மதிப்பில் சீருடை, காலணிகள், முதலுதவிப் பெட்டி மற்றும் தீயணைப்பான் (Fire Extinguisher) அடங்கிய பாதுகாப்புப் பெட்டகம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 4 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

7. மதுரையில் இயங்கிவரும் ஏழு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல்

Construction of Integrated office building for seven offices of Directorate of Industrial Safety and Health at Madurai

மதுரையில் வெவ்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் 7 அலுவலகங்களுக்கென மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 5.56 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

8. சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரு இடங்களில் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்கள் தேவையான பணியிடங்களுடன் உருவாக்குதல்

Creation of Offices of Regional Joint Director (Employment) with necessary staff at two more places namely Salem and Tirunelveli

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் பணிகளை மேம்படுத்திடும் வகையில் தற்போது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் செயல்பட்டுவரும் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்களுடன் கூடுதலாக சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இரு மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்கள் தேவையான பணியிடங்களுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 82 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக உருவாக்கப்படும்.

9. தன்னார்வ பயிலும் வட்டங்கள்மூலம் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்த வழங்கப்பட்டுவரும் தொகையினை உயர்த்துதல் மற்றும் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்பவர்களுக்கு பகிரலை (Wi–Fi) வசதிகளுடன்கூடிய வகுப்பறைகள் அமைத்தல்

Enhancement of funds provided for free coaching classes conducted through the study circles and to provide Wi–Fi enabled classroom for the aspirants of competitive examinations

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள ஊக்குவிக்கவும், தன்னார்வ பயிலும் வட்ட வகுப்புகளின் தரத்தை மேம்படுத்தவும், தகுதிபெற்ற

ஆசிரியர்கள்மூலம் வகுப்புகள் நடத்தவும் மற்றும் மேம்பட்ட பாடக்குறிப்புகள் வழங்குவதற்கும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு வழங்கப்பட்டுவரும் ரூ.1 கோடி தொகையினை ரூ.2 கோடியாக உயர்த்தியும், கூடுதலாக மேம்படுத்தப்பட்ட வசதிகளை அளிக்க பகிரலை (Wi–Fi) வசதிகளுடன்கூடிய வகுப்பறைகள் அமைக்க ரூ.1.08 கோடியும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மொத்தம் 3.08 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவங்குதல்

Starting of New Government Industrial Training Institute at Gummidipoondi in Thiruvallur District

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவுசெய்யும் வகையிலும், தொழிற்சாலைகளில் திறன்மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடுசெய்யவும் கூடுதலாக அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொண்டு, நடப்பாண்டில் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் விடுதியுடன்கூடிய புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 15.07 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்.

11. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து செல்லும் பயிற்சியாளர்கள் உயர் கல்வியைத் தொடரும் வகையில் அவர்களது தகுதிக்கேற்ப 10 ஆம் வகுப்பு அல்லது 12 ஆம் வகுப்புக்கு இணையான கல்விச் சான்றிதழ்கள் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்குதல்

Equivalence to ITI certificate on par with SSLC & HSC to ITI trainees through School Education Department for further continuance of their Higher Studies

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து செல்லும் திறன்பெற்ற பயிற்சியாளர்கள் மேற்படிப்பினை தொடரும்பொருட்டு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புக்கு இணையான சான்றிதழ்கள்

தேவைப்படுகின்றன. இத்தேவையினைப் பூர்த்தி செய்திடும் வகையில் இனிவரும் காலங்களில் 8 ஆம் வகுப்பு முறையாகப் பயின்று தொழிற்பயிற்சி நிலையங்களில் இரண்டு ஆண்டுகள் தொழிற்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றவர்களுக்கும் 8 ஆம் வகுப்பு முறையாக பயின்று தொழிற்பயிற்சி நிலையங்களில் ஓராண்டு தொழிற்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழும் மற்றும் ஓராண்டு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழும் ஒருங்கே பெற்றவர்களுக்கும் 10 ஆம் வகுப்புக்கு இணையான சான்றிதழும், 10 ஆம் வகுப்பு முறையாகப் பயின்று தொழிற்பயிற்சி நிலையங்களில் இரண்டு ஆண்டுகள் தொழிற்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றவர்களுக்கும், 10 ஆம் வகுப்பு முறையாகப் பயின்று தொழிற்பயிற்சியினை ஓராண்டு தொழிற்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழும், ஓராண்டு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழும் ஒருங்கே பெற்றவர்களுக்கு 12 ஆம் வகுப்புக்கு இணையான கல்விச் சான்றிதழும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படும்.

12. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.500/–லிருந்து ரூ.750/– ஆக உயர்த்தி வழங்குதல்

Enhancement of monthly stipend to the trainees of Government ITIs from Rs.500/– to Rs.750/–

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையிலும், பெருகிவரும் செலவினங்களைக் கருத்திற்கொண்டும், இந்த ஆண்டு முதல் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகையானது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.500/–லிருந்து ரூ.750/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

13. திறன் பயிற்சி திட்டங்களை மாவட்ட அளவில் சீரிய முறையில் செயல்படுத்திட தருமபுரி, நீலகிரி, கரூர் மற்றும் தேனி ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் துவங்குதல்

Creation of District Skill Training Offices in four Districts namely Dharmapuri, The Nilgiris, Karur and Theni for implementing District level skill training programmes in more effective manner

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்திடவும், திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் வழங்கப்படும் பயிற்சிகளை நெறிப்படுத்தவும் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 26 மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்களுடன் தருமபுரி, நீலகிரி, கரூர் மற்றும் தேனி ஆகிய நான்கு மாவட்டங்களில் புதிதாக திறன் பயிற்சி அலுவலகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2.86 கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும்.

14. சென்னை, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்

Construction of own building for Offices of Regional Joint Director (Training) at Chennai, Salem and Villupuram

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் செயல்படும் ஏழு மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சென்னை, சேலம் மற்றும் விழுப்புரம் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

15. தொழிற்பயிற்சி நிலையம்–உலக திறன் போட்டிகளுக்கான திறன் பயிற்சி மையங்கள் (I–WISH) அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஆறு தொழிற்பயிற்சி நிலையங்களில் அமைத்தல்

To establish ITI–World Skill Innovation & Skill Hub (I–WISH) at ITIs of Ambattur, North Chennai, Guindy, Madurai, Coimbatore and Chengalpattu

அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் திறனை மேம்படுத்தி உலக அளவில் திறன் போட்டிகளில் வெற்றிபெறும்

வகையில் அவர்களை உருவாக்குவதற்கு அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் உலகத் திறன் போட்டிகளுக்கான திறன் பயிற்சி மையங்கள் (ITI–World Skills Innovation and Skill Hub (I–WISH)) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 6.09 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

16. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடத்துவதன்மூலம் தொழிற்கல்விக்கு தர அடையாளம் வழங்குதல்

Branding of Industrial Training by conducting Convocation for Graduates of Government Industrial Training Institute

தொழிற்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்து மக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் தொழிற்பயிற்சி நிலையங்களில் வெற்றிகரமாக பயிற்சியினை நிறைவுசெய்யும் பயிற்சியாளர்களுக்கு பட்டமளிப்பு விழா மற்றும் தொழிற்பயிற்சி குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட ஒவ்வோர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.1 இலட்சம் என்ற வீதத்தில் 90 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் அனைத்தும் தந்து ஆக்கபூர்வ சிந்தைகொண்டு அளவற்ற அக்கறையால் அனைவருக்கும் ஆதரவாய் அனைத்திற்கும் ஆதாரமாய், அகிலம் போற்றும் அன்பெனும் ஆலயமே அம்மா எனும் தெய்வமே! உமை அடிபணிந்து வணங்குகிறேன்!

மக்கள் நலனே குறிக்கோளாய், மக்களைச் சுற்றிய எண்ணங்களாய், மக்களை மையப்படுத்திய செயல்பாடுகளாய், மக்கள் கொண்ட நம்பிக்கையாய், மகத்தான மக்கள் சக்தியாய், மானுடம் போற்றும் மாதரசியே! வாழ்வாங்கு, வாராதுவந்த வாஞ்சை நெஞ்சமே, வறியோரின் வாழ்வே, வாழ்வு தந்த வள்ளலே, இணையில்லா இரக்கமே, ஈடில்லா ஈகையே, ஈர நெஞ்சத்தின் நேசமே, இறைக்கு ஈடான எங்கள் இதய தெய்வமே! காலத்தை வென்று என்றும், என்றென்றும் எங்கள் உயிரில் கலந்து வாழும், அம்மா தங்களை மீண்டும் மீண்டும் போற்றி வணங்குகிறேன்!

இதய தெய்வத்தின் வெற்றிப்பாதையில் இம்மியளவும் வழி விலகாது, சோதனைகள் எதிர்கொண்டு, சாதனைகள் பல கண்டு, புயல்வேகப் பணி செய்து, செயல்வேகம் முறை செய்து, தொய்வின்றி இயங்கிடும் எங்கள் இமயமே, சிலுவம்பாளைய சிகரமே ஏரி குளம் தூர் வாரி நீர்நிலைகள் நிலைமாறி, நீர்த்தேக்கங்கள் நிரம்பி நிற்க, வற்றாத கொள்ளளவாய் வழிந்தோட, கரிகாலன் மறுஉருவாய் குடியானவர்களின் குடிகாத்த குடிமராமத்து நாயகரே! மீத்தேன் பூமி மீட்டெடுத்து, காவேரியைத் தடம்பதித்து, வளர் விவசாயம் காத்திட்ட காவேரிக் காப்பாளரே! எண்ணிலடங்கா திட்டங்கள், ஏற்றமிகு நடவடிக்கைகள், தினந்தோறும் சாதனைகள், துறைதோறும் விருதுகள், சங்கக்காலமும் மிஞ்சிடும் ஆட்சி—எங்கள் சாமானியரின் சாதனை ஆட்சி!

உட்கட்டமைப்பில் முதலாவது, பொதுப் பாதுகாப்பில் முதலாவது, பொதுச் சுகாதாரத்தில் இரண்டாவது, சுற்றுச்சூழலில் மூன்றாவது, மனிதவளத்தில் ஐந்தாவது, ஒட்டுமொத்தத்தில் ஒன்றாவது—என மாநில வரிசையில் அனைத்து மாநிலங்களையும் புறந்தள்ளி, அன்னை வழியில் அயராது உழைத்து, எதிலும் தமிழகம் முதலிடம், வளர்ச்சிப் பாதையில் தனியிடம், அதுதான் எடப்பாடியாரின் மானுடம், மக்கள் மனங்களில் என்றென்றும் தனியிடம், எளிமையிலும் எளிமை, புதுமையிலும் புதுமை, வலிமையிலும் வலிமை, சேலம் தந்த இனிமை, தனது சாணக்கிய தன்மையென நாடுபோற்றும் நல்ஆளுமை நாயகரே, எங்கள் புரட்சி முதல்வரே, தங்களைப் பணிந்து வணங்குகிறேன்!

அமைதியிலும் அன்பு, பொறுமையிலும் பண்பு, பணிவினிலும் மாண்பு, புன்னகையே தன் வாழ்வு – என தாயைக் காத்த தனயனாய், அன்னைத் தாயின் வரம் பெற்று, தென்னையைப் போல் நிமிர்ந்து நிற்கும், தெளிந்தநற் சிந்தனைத் தலைவர்! அன்னை கண்ட அன்பு

மனம், கொள்கை ஒன்றே கொண்ட குணம், கழகம் காக்கும் ஆலமரம், தொண்டர்களின் ஆசை முகம், தென்பாண்டி சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகர், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் பணிந்து வணங்குகிறேன்!

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

என்ற குறளின் உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுநிலைமையாம் என்ற பொருளுக்கேற்ப வழுவாது நிற்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் பணிந்து வணங்கி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த எனது மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மக்களையும் பணிந்து வணங்கி, எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் "சிறு தொழில் துறைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை நம் தமிழ்நாடு எய்திட, இலட்சியத்துடனும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் என உறுதியாகக் கூறுவதில் பெருமை கொள்கிறேன்" என அறிவித்துள்ள தமது கொள்கை முழக்கத்தின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கு தனிக்கவனம் செலுத்தி, சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தொலைநோக்கு மற்றும் அதனடிப்படையிலான நடவடிக்கைகள் மற்றும் அம்மா அவர்களின் நல்வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் பெருமைக்குரிய செயல்பாடுகளின் பயனாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை, 18–3–2020 வரையிலான கடந்த 9 ஆண்டுகளில், 15 இலட்சத்து 67 ஆயிரத்து 826 நிறுவனங்களின் புதிய பதிவுகள், 2.24 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் 97 இலட்சத்து

42 ஆயிரத்து 429 புதிய வேலைவாய்ப்புகள் என்ற சாதனை வளர்ச்சியை எட்டியுள்ளதையும், தமிழ்நாட்டின் MSME துறை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டு வருவதையும் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பிற மாநிலங்கள் பின்பற்றத்தக்க, நாட்டிலேயே மிகச் சிறந்த வெற்றிகரமான, MSME Portal மூலம் 20–3–2020 வரை 37 ஆயிரத்து 211 வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய, 1,937.59 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 971 புதிய தொழில் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும், பதிவாகும் விண்ணப்பங்களில் சுமார் 90 விழுக்காட்டிற்கும் மேலான விண்ணப்பங்களுக்கு குறித்த நேரத்தில் உரிய தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலீட்டு மானியம், NEEDS திட்டம் மற்றும் UYEGP திட்டங்களின்கீழ் வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு கிட்டத்தட்ட இரட்டிப்பாக்கி உள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் 29–2–2020 வரை, மூலதன மானியம், பின்முனை வட்டி மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மதிப்புக் கூட்டப்பட்ட வரி மானியம், மின்னாக்கி மானியம், படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் பாரதப் பிரதமர் அவர்களின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ், மொத்தம் 93 ஆயிரத்து 481 தொழில் முனைவோர்களுக்கு, 1,794.95 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், NEEDS திட்டத்தின்கீழ், 29–2–2020 வரை 3,602 படித்த முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் தொழில் தொடங்க, 359.63 கோடி ரூபாய் அரசின் மானியமாக வழங்கப்பட்டு, 16 ஆயிரத்து 833 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையும் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் ஜவ்வரிசி தொழிலுக்கு சிறந்த பொற்காலத்தை ஏற்படுத்தித் தந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் சேகோசர்வ் தொழிற்கூட்டுறவு சங்கத்தில்

12–12–2018 அன்று தொடங்கி வைக்கப்பட்ட புதிய மின்னணு ஏல வசதி உள்ளிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளின்மூலம் இச்சங்கத்தின் ஆண்டு விற்பனை கடந்த ஆண்டைக் காட்டிலும், கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்து 12–3–2020 அன்று, 1,000 கோடி ரூபாய் என்ற சாதனை அளவை எட்டியுள்ளதை இப்பேரவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குத் தேவையான புதிய தொழிற்பேட்டைகள், தொழிற் குழுமங்கள், பொது வசதி மையங்கள் ஆகியவற்றை உருவாக்குவது, தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பது மற்றும் மேம்படுத்துவது என உட்கட்டமைப்புப் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 9 ஆண்டுகளில் 36 புதிய தொழிற்பேட்டைகளை அறிவித்து, இதுவரை, மொத்தம் 1,212.88 ஏக்கர் பரப்பளவிலான 24 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, சிறப்பாகச் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் முனைப்பாக முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பான விரிவான விவரங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் தரப்பட்டுள்ளதை இப்பேரவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு,

- உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள்
- சிறப்பான சட்டம்–ஒழுங்குப் பராமரிப்பு
- பொது மற்றும் தொழில் அமைதி
- சிறந்த ஆற்றல்மிக்க மனித வளம்
- தொழில் தொடங்குவதற்கு இணையம் வழியான எளிமையான நடைமுறை
- முழுவதும் கணினிமயமாக்கப்பட்ட இணையம் சார்ந்த செயல்பாடுகள்
- வளர்ச்சிக்கான இடர்ப்பாடுகள் உடனுக்குடன் களையப்படுதல்

என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உருவாக்குவது, ஊக்கப்படுத்துவது மற்றும் மேம்படுத்தி வருவதோடு, மேற்படி காரணிகள் அனைத்தையும், ஒருங்கே கட்டமைத்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உகந்ததொரு சூழலை உருவாக்கியுள்ளதையும் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் 2018–2019 ஆம் ஆண்டறிக்கையின்படி, நமது மாநிலம் நாட்டிலேயே மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்டுள்ளதையும் மற்றும் உத்யோக் ஆதார் பதிவுகளில், இந்திய அளவில் இரண்டாம் இடத்தில் உள்ளதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைதல் அமைச்சகத்திடம் இருந்து தொழில் சூழல் கட்டமைப்பாளர் பிரிவின் 2019 ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில்முனைவோர் விருதினை 9–11–2019 அன்று பெற்றுள்ளதையும், அது நாட்டிலேயே இவ்விருதைப் பெற்ற ஒரே அரசு சார்ந்த நிறுவனம் என்பதையும் இப்பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கிடும் மூன்றாவது சிறந்த மாநிலமாக மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 26–2–2020 அன்று விருது பெற்றுள்ள வரலாற்றுச் சிறப்பினை இப்பேரவைக்கு மிகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஒளியேற்றி காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்து, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளமைக்கு விவசாயச் சங்கங்களின் சார்பில் திருவாரூரில் கடந்த 7–3–2020 அன்று தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகின்றபோது, பசுவின் கறந்த பாலானது தயிர், மோர், வெண்ணெய், நெய் என பல்வேறு நிலைமாற்றம் பெற்று, படிப்படியாக நிலை உயர்ந்து, மக்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் பயன் தருவதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். அதற்கு உதாரணமாக, பசுமடியில் இருந்த பால், எப்படி நெய்யாக

மாறுவதற்கு ஒவ்வொரு நிலையாகக் கடந்து வந்த பாதையைப்போல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு, பாலோடு நின்றுவிடும், தயிரோடு சென்றுவிடும், மோரோடு மடிந்துவிடும், வெண்ணெய்யோடு முடிந்துவிடும் என ஏளனம் பேசினார்கள். குறிப்பாக, தூண்டுகோலாக இருப்பவர்களே, தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தபோதும், துவண்டுவிடாமல் அனைத்தையும் எதிர்கொண்டு, இன்று மக்கள் போற்றும் நல்லரசாக வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், மக்கள் கொடுத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தத் தவறி, பசுவின் மடியில் கறந்த பாலை, தயிர், மோராக, வெண்ணெய்யாக, நெய்யாக என அடுத்தடுத்த நிலைகளுக்குக் கொண்டு செல்லாமல், பாலை தானே காய்ச்சிக் குடித்துவிட்டு, தன்னலத்தோடு செயல்பட்டவர்களுக்கு மத்தியில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இன்று மக்கள் தந்த இந்த நல்ல வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தி, நாள்தோறும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைத் தந்து, மக்கள் இதயங்களில் இடம்பெற்று, மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளதைப் பொறுக்காமல் அவதூறு பரப்பி வருகிறார்கள். இருந்தபோதும், அவற்றையெல்லாம் எதிர்நீச்சல் போட்டு, எவ்வித அரசியல் பின்புலமும் இல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்களிடம் அரசியல் மற்றும் அரசு நிருவாகப் பாடம் பயின்று மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் காத்த இயக்கத்தையும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசையும் தூக்கி நிறுத்தி, தனது செயல்பாடுகளால் அதை நிரூபித்துக்காட்டியுள்ளார்கள். "மாபெரும் வெற்றி என்பது, ஒரே நாளில் படைக்கின்ற அற்புதம் அல்ல. அது, சிறு சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை" என்பார் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுபோல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இன்று படிப்படியாக பல திட்டங்களைத் தந்து மாபெரும் வெற்றியைப் பெற்று சாதனை படைத்து வருகிறது.

ஓர் அரசு இயந்திரம் எப்படி இயங்க வேண்டுமோ, அதைவிட சுறுசுறுப்பாகவும், வேகமாகவும் நம்முடைய அரசு இயங்கி வருகிறது. உதாரணமாக, தேக்கமில்லா கோப்புகள், யாரும் எந்நேரமும் சந்திக்கின்ற வாய்ப்புகள், எளிதில் அணுகும் பண்பாடு, எதிலும் விரைந்து செயல்படும் நிலைப்பாடு, அரசில் இல்லை தலையீடு, நம் நாட்டில் நாடி வரும் முதலீடு 2021–லும் தொடரும் நம் அம்மா ஆட்சி– அதற்கு எடப்பாடியாரின் சாதனைகளே நற்சாட்சி என்று கூறி,

‘தாய்வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓரிடம் நின்று நேர்வழி சென்றால்
நாளை நமதே
இந்த நாடும் நமதே’

என்ற இலட்சியத்தோடு எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் துவங்கத் தேவையான ஒப்புதல்கள் பெறுவதிலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு விலக்கு அளித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கவும், முதலீட்டினை ஈர்க்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சில குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாட்டில் புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில்களை நிறுவி செயல்படுத்துவதற்குத் தேவையான ஒற்றைச் சாளர தகவின் பகுதியாக உள்ள துறைகளிடமிருந்து பெறப்பட வேண்டிய ஒப்புதல்கள் பெறுவதிலிருந்து மூன்று வருட காலத்திற்கு சுய சான்றிதழ் அளிப்பதன் அடிப்படையில், விலக்கு அளிக்கப்படும். இவ்வாறு விலக்கு அளிக்கப்படும் நிறுவனங்கள், தங்களுக்குத் தேவையான அனைத்து ஒப்புதல்களையும் சுய சான்றிதழ் ஒப்புகை அளித்த தேதியிலிருந்து மூன்றாம் ஆண்டு முடிவிற்கு பின் ஓராண்டிற்குள் பெற வேண்டும். இதற்காக தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் 2018–ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

2. புதிய குறுந்தொழில் நிறுவனங்களுக்கு, மதிப்புக் கூட்டு வரி மானியத்திற்கு (VAT Reimbursement Subsidy) ஈடாக, கூடுதலாக 10 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்குதல்

சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டதன் காரணமாக, ஏற்கெனவே, நடைமுறையில் இருந்த, மதிப்புக் கூட்டு வரி

மானியத்திற்கு (VAT Reimbursement Subsidy) ஈடாக, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நிறுவப்படும் புதிய குறுந்தொழில் நிறுவனங்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இயந்திர தளவாடங்களின் மதிப்பில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள 25 விழுக்காடு மூலதன மானியத்துடன் கூடுதலாக 10 விழுக்காடு மூலதன மானியம் (ஆண்டொன்றிற்கு 2% வீதம் 5 ஆண்டுகளுக்கு) அதிகபட்சமாக நிறுவனம் ஒன்றிற்கு ரூ.2.50 இலட்சம் வரை வழங்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த ரூ.13.30 கோடி செலவிடப்படும்.

3. ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியும் நெகிழிப்பொருட்களின் மீதான தடையின் விளைவாக, அப்பொருட்களை உற்பத்தி செய்துவந்த நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியும் நெகிழிப்பொருட்களின் (One time use and throwaway plastic) மீதான தடையின் விளைவாக, நெகிழிப்பொருட்களான பேப்பர் கோப்பைகள், பாலீத்தீன் பைகள், நெய்யப்படாத பைகள் (Non–woven), நெகிழி தாளாலான தட்டுகள், அதிக அடர்வு கொண்ட பைகள், குறையடர்வு பாலீஎத்திலீன் பூசப்பட்ட பலகைகள், நெகிழி குவளைகள் போன்ற பொருட்களை உற்பத்தி செய்துவந்த குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அந்நிறுவனங்களுக்கு நிவாரணம் அளித்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1–1–2019 அன்றைய நிலவரப்படி நிலுவையில் உள்ள வங்கிக் கடன் தொகையில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக நிறுவனம் ஒன்றிற்கு ரூ.50 இலட்சம் வரை (ஏற்கெனவே வழங்கப்பட்ட முதலீட்டு மானியத்துடன் சேர்த்து) பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இதனை நடைமுறைப்படுத்த ரூ.15 கோடி செலவிடப்படும்.

4. 15 மாவட்டத் தொழில் மையங்களுக்கு ஐ.எஸ்.ஓ. தரச்சான்று 9001:2015 பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, தொழில்முனைவோர்களுக்கு வழங்கப்படும் சேவையை மேம்படுத்திட திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சி, வேலூர், கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்ட தொழில் மையங்களுக்கு ரூ.26 இலட்சம் செலவினத்தில் ஐ.எஸ்.ஓ. தரச்சான்று 9001:2015 பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்குப் புதிய நான்கு சக்கர வாகனங்கள் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு ரூ.1.26 கோடி மதிப்பீட்டில், பழுதடைந்த பழைய நான்கு சக்கர வாகனங்களுக்குப் பதிலாக 18 புதிய நான்கு சக்கர வாகனங்கள் (ஈப்பு) கொள்முதல் செய்து மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு வழங்கப்படும்.

6. தொழில் வணிகத் துறையில் பணிபுரியும், அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு கைப்பேசி சிம் அட்டை வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழில் வணிகத் துறையில் உள்ள 134 அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு அலுவலக தொடர்பு பயன்பாட்டிற்காக கைப்பேசியில் CUG (நெருங்கிய உபயோகிப்பாளர் குழு–Closed User Group) திட்டத்தில் பயன்படுத்தப்படும் சிம் அட்டை வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த ஆண்டொன்றிற்கு ரூ.2.83 இலட்சம் செலவிடப்படும்.

7. சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வுக் கூடத்தினை ரூ.70 இலட்சம் அரசு நிதியுதவியில் புத்தாக்கம் மற்றும் நவீனமயமாக்குதல்

சென்னை கிண்டியில், சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வுக் கூடம் (MICAL) 5–12–1964 முதல் ரூ.50 இலட்சம் பங்குத்தொகையை மூலதனமாகக் கொண்டு 315 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில், ரூ.4.75 இலட்சம் உறுப்பினர் பங்குத் தொகையும் ரூ.21 இலட்சம் அரசு பங்கு தொகையும் உள்ளது.

கடந்த டிசம்பர் 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது இச்சங்கத்தின் பெரும்பான்மையான

கருவிகள் கடுமையாக சேதமுற்றதால் இச்சங்கத்தால் வழங்கப்படும் சேவைகள் பாதிக்கப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மேற்கண்ட சங்கத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில், அரசு நிதியுடன் Air Handling Unit (AH Unit) அமைத்து ஆய்வக புத்தாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

8. சென்னை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தங்க நகை குழுமங்களுக்கான 3 பொதுவசதி மையங்கள் ரூ.33.10 கோடி திட்ட மதிப்பீட்டிலும், தேனி மாவட்டத்தில் பசுமை ஏலக்காய் குழுமம் ரூ.14.26 கோடி திட்ட மதிப்பீட்டிலும் மத்திய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள்—குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE—CDP) கீழ் அமைத்தல்

குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் போட்டித்திறன் வளர்த்தல் ஆகியவற்றை உயர்த்திடும் வகையில் குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் தங்க நகை குழுமங்களுக்கு முறையே ரூ.10.32 கோடி, ரூ.7.48 கோடி மற்றும் ரூ.15.30 கோடி மதிப்பீட்டிலும், தேனியில் பசுமை ஏலக்காய் குழுமம் ரூ.14.26 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பாக ரூ.4.73 கோடி வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் 4,100 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் பயனடையும். மேலும், 14,000 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

9. கோயம்புத்தூர் மாவட்டத்தில் நெகிழி மறுசுழற்சி குழுமம் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உப்புக் குழுமம் ரூ.3.18 கோடி திட்ட மதிப்பீட்டிலும் தமிழ்நாடு அரசின் பொது உற்பத்திக் கட்டமைப்பு வசதித் திட்டத்தின்கீழ் அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசின் பொது உற்பத்தி கட்டமைப்பு வசதித் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் நெகிழி மறுசுழற்சி குழுமம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.3.18 கோடி திட்ட மதிப்பீட்டில் உப்புக் குழுமம்

அமைக்கப்படும். இத்திட்டங்களுக்கு அரசின் பங்களிப்பாக ரூ.4.73 கோடி வழங்கப்படும். இத்திட்டத்தின்மூலம் 329 குறுந்தொழில் நிறுவனங்கள் பயனடையும். மேலும், 1,500 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள்.

10. கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், பூலுவாப்பட்டி கிராமத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.4.52 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம் பூலுவாப்பட்டி கிராமத்தில், சுமார் 10 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூ.4.52 கோடி திட்ட மதிப்பீட்டில் (நில மதிப்பு ரூ.202 இலட்சம் மற்றும் மேம்பாட்டு நிதி ரூ.250 இலட்சம்) தொழிற்பேட்டை சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் அமைக்கப்படும். இதன்மூலம் 120 தொழில்மனைகள் உருவாக்கப்படும். மேலும், சுமார் 2,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள். இத்திட்டம் மைய அரசின் மானியம் ரூ.150 இலட்சம் மற்றும் சிட்கோ நிறுவன நிதி ரூ.302 இலட்சத்துடன் செயல்படுத்தப்படும்.

கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தமாய் மக்களை ஈர்த்து காவியம் ஆனவர்; கண்களை விட்டு அகலாத ஓவியம் ஆனவர்; பொன்மனச் செம்மல் மக்கள் திலகம், கழக நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன்.

தொட்டது துலங்கும் தங்கக் கரங்களுக்கு சொந்தக்காரர்; கண் பட்டது விளங்கும் பொன் மனத்தின் உடைமையாளர்; இயக்கத்தை காத்து நின்று, வழிநடத்திக் கொண்டிருக்கும் புண்ணியத் தாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாங்கனி மாவட்டம் தந்த மாமணி என அனைத்து மக்களும் ஆதரிக்கும் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன்.

அன்பாலும், அமைதியாலும் அவையை நடத்தி, அனைவருக்கும் சம வாய்ப்பு அளித்து, அவையை நடத்திவரும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், உங்கள் வீட்டுப் பிள்ளையாக என்றென்றும் என்னை எண்ணி, கழகத்தின் தூதுவனாய், சிவகாசி சட்டமன்றத் தொகுதியின் காவலனாய் என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த சிவகாசி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்து, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை சார்பான மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் பால் வளத் துறையின் சாதனைகள் சிலவற்றை, திட்டங்கள் பலவற்றை இந்த அவைக்கு எடுத்துக் கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

கடந்த 9 ஆண்டுகால அம்மா அவர்களின் ஆட்சியில் ரூபாய் 956.50 கோடி மதிப்பீட்டிலும், இந்த ஆண்டில் 2020–2021–ல் ரூபாய் 470 கோடி அளவிற்கும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று தமிழகத்தில், கூட்டுறவு அமைப்புகளின்கீழ் 9,988 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும், இவற்றில் மொத்தம் 20 இலட்சத்து 21 ஆயிரம் உறுப்பினர்களும், 4 இலட்சத்து 3 ஆயிரத்து 175 பால் வழங்கும் உறுப்பினர்களும் உள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 20 இலட்சத்து 67 ஆயிரம் லிட்டராக இருந்த தமிழ்நாட்டின் பால் கொள்முதல் அளவு 2019–2020–ல் நாளொன்றுக்கு 33 இலட்சத்து 84 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளது.

கடந்த மே மாதம் 2017–ல் நாள் ஒன்றுக்கு 21.02 இலட்சம் லிட்டராக இருந்த நுகர்வோருக்கான பால் விற்பனை, தற்போது ஜனவரி மாதம் 2020–ல் 22.80 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

ஜனவரி 2020–ல், பால் பொருட்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.36.22 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டு, புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில் ஜனவரி 2020 வரை ரூ.613.24 கோடியாக உயர்ந்து பால் பொருட்கள் விற்பனையில் சாதனை செய்யப்பட்டுள்ளது.

பால் பொருட்கள் ஏற்றுமதி செய்வதில், சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் ஆகிய நாடுகளுக்கு இதுவரை ரூ.2 கோடியே 38 இலட்சம் மதிப்புள்ள 4 இலட்சத்து 8 ஆயிரத்து 72 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ஆவின் விற்பனை வருவாய் 2019–2020 ஆம் ஆண்டில் ஜனவரி 2020 வரை, 5 ஆயிரத்து 770 கோடியாக உயர்ந்துள்ளது.

ஈரோடு ஒன்றியத்தில் ரூ.50 இலட்சம் செலவில் அதிநவீன நெய் நிரப்பும் தானியங்கி இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

விழுப்புரம் ஒன்றியத்தில் குல்ஃபி ஐஸ்கிரீம் தயாரிக்கும் வசதிகள் மற்றும் குளிர்பதன வசதிகளை மேம்படுத்த ரூ.1.00 கோடியில் இயந்திரங்கள் நிறுவி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

103 பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு ரூ.2.00 கோடி செலவில் பால் கலப்படம் கண்டறியும் கருவி வழங்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 2020 வரை 14 ஆயிரத்து 355 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 396 கோடி மதிப்புள்ள 15 ஆயிரத்து 238 மெட்ரிக் டன் பால் பவுடர், 8 ஆயிரத்து 880 மெட்ரிக் டன் வெண்ணெய், 4 ஆயிரத்து 201 மெட்ரிக் டன் நெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கால்நடைத் தீவன உற்பத்தி படிப்படியாக உயர்ந்து 2020–ல் மாதம் ஒன்றுக்கு 5,000 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

கால்நடைத் தீவன விற்பனை 2019–2020–ல் மாதம் ஒன்றுக்கு 8 ஆயிரம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.

19–8–2019 முதல் பசும்பால், லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 உயர்த்தப்பட்டு, ரூ.32 ஆகவும், எருமை பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.6 உயர்த்தப்பட்டு, ரூ.41 ஆகவும் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாற்றி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நல நிதிமூலம் பிப்ரவரி 2020 வரை 193 நபர்களுக்கு ரூ.2 கோடியே 29 இலட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இணையம் மற்றும் 25 மாவட்ட ஒன்றியத்தைச் சார்ந்த ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு 16–12–2016 முதல் உயர்த்தி ரூ.4,000/– ஆகவும் மற்றும் குடும்ப நல ஓய்வூதியம் ரூ.250/– உயர்த்தி, ரூ.2,000/– ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2019–2020–ல், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் திருநெல்வேலி, ஈரோடு மற்றும் திருச்சி ஒன்றியங்களின் பால் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக ரூ.8.60 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், திருச்சி, சேலம் மற்றும் சென்னை ஆகிய பால் பண்ணைகளை நவீனப்படுத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் ரூ.379.29 கோடிக்கான 4 திட்டங்களை மேற்கொள்ள ரூ.303.42 கோடிக்கு நபார்டு வங்கிமூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இரண்டிற்கு மேற்பட்ட மாவட்டங்களைக் கொண்ட ஒன்றியங்களைத் தனியாகப் பிரித்து நாமக்கல், திருப்பூர், திருவண்ணாமலை, கடலூர், திருச்சி, தேனி, தூத்துக்குடி மற்றும் தருமபுரி என புதிதாக 8 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் மிகவும் பெருமையோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனை மேல் சாதனை படைத்து, புதிய சரித்திரம் உருவாக்கும் மக்களின் இந்த அரசினால், மாண்புமிகு அம்மா அவர்களின் தியாகத்தாலும், உழைப்பாலும் உருவான மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைத் தொடர்ந்து 2021–லும் இரட்டை இலையே வெற்றி பெறும். இனி எப்பொழுதும் கழகமே ஆட்சிப் பீடம் ஏறும். இந்த ஒளி தீபம் வெற்றிச் சுடராய் பிரகாசிக்கும் என்று கூறி, எனது பதிலுரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. முழுவதும் தானியங்கி முறையில் இயங்கும் நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் மற்றும் பால் உபபொருட்கள் தயாரித்து சிப்பமிடும் பிரிவு நாளொன்றுக்கு 10,000 லிட்டர் உற்பத்தித் திறனில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஆவின் நிறுவனம் பலவிதமான மதிப்புக் கூட்டப்பட்ட பால் உப பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

அதில் நொதியூட்டப்பட்ட பால் பொருட்களான யோகர்ட், சுவையூட்டப்பட்ட யோகர்ட், கப் தயிர், புரோபயோடிக் தயிர், லஸ்ஸி, புரோபயோடிக் லஸ்ஸி, மோர், குல்பி மற்றும் புரோபயோடிக் பானங்களின் தேவை அதிகமிருப்பதால், அவற்றின் உற்பத்தியை அதிகரித்து, தமிழகம் முழுவதும் அவற்றின் விற்பனையை அதிகரித்து நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட முழுவதும் தானியங்கி முறையில் இயங்கும் நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் மற்றும் பால் உபபொருட்கள் தயாரித்து சிப்பமிடும் பிரிவு விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

2. பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ மற்றும் அவசர சிகிச்சை உள்ளிட்ட சேவைகள் அளிக்க 155 நடமாடும் அலகுகள் ரூ.9.87 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

கூட்டுறவு அமைப்பில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவும், பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ மற்றும் இனப்பெருக்கம் உள்ளிட்ட சேவைகளை அவர்கள் இல்லத்திலேயே வழங்கவும், அதன் வாயிலாக விவசாயிகள் பலன் பெறவும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பண்ணைகளுக்கே சென்று வழங்க ஏதுவாக, தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் 155 நடமாடும் கால்நடை மருத்துவ அலகுகள் ரூ.9.87 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நடப்பாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3. பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்வதற்காக 1.66 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 8,000 எண்ணிக்கையிலான துருவுறா பால் கேன்கள் மற்றும் 75 எண்ணிக்கையிலான தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் ரூ.358 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்

கிராம அளவில், தூய பால் உற்பத்தியை விரைவாக நடைமுறைப்படுத்தவும், சுகாதார முறையில் பாலை கொள்முதல் செய்வதற்காகவும் காஞ்சிபுரம்–திருவள்ளூர், ஈரோடு, சேலம், விழுப்புரம், வேலூர், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் தேனி ஆகிய 8 மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த 1.66 இலட்சம் பால் ஊற்றும் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 3,555 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட 8,000 எண்ணிக்கையிலான துருவுறா பால் கேன்களும், பால் கறவை செய்யும் தொழிலாளர்களின் வேலைப் பளுவினை குறைக்கவும், பாலின் ஆரம்ப தரத்தை மேம்படுத்திடவும், வேலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஒன்றியங்களைச் சார்ந்த 75 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 75 எண்ணிக்கையிலான தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் ரூ.357.50 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வழங்கப்படும்.

4. பாலின் ஆரம்பத் தரத்தை நிலைப்படுத்தவும், பாலின் காப்புத் திறனை அதிகரிக்கவும் 4 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 43,200 விவசாயிகள் பயனடையும் வகையில் 27 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூ.9.86 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

கிராம அளவில், பாலின் ஆரம்பத் தரத்தை நிலைப்படுத்தவும், பாலின் காப்புத் திறனை அதிகரிக்கவும், பால் கொள்முதல் செய்யும் மையங்களிலேயே பாலின் போக்குவரத்து செலவு மற்றும் போக்குவரத்தின்போது கலப்படம் மற்றும் பால் குறைவு ஏற்படுவதைத் தடுக்கவும், பால் கொள்முதல் செய்யும் மையங்களிலேயே பாலைக் குளிர வைக்க வேண்டியது

அவசியமாகிறது. இதற்காக சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 43,200 விவசாயிகள் பயனடையும் வகையில் மொத்தம் 27 மொத்த பால் குளிர்விப்பான்கள் ரூ.9.86 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

5. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு முன்மாதிரி ஆய்வகமாக மாநில அளவிலான மைய பால் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் சென்னை, மாதவரம் பால் பண்ணையில் நிறுவப்படும்

பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் தரத்தை உறுதி செய்யவும், பால் மற்றும் பால் பொருட்களில் கலப்படத்தைக் கண்டறியவும் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் (NPDD) 2019–2020–ன்கீழ் மாநில இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு முன்மாதிரி ஆய்வகமாக அமையும்வகையில் நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி பால் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்திடவும், பாலில் கலந்துள்ள வேதிப் பொருட்கள் உள்ளிட்ட நச்சுப் பொருட்களை முறையாக ஆய்வு செய்திடவும், மில்க்கோ ஸ்கேன் FT–1 உள்ளிட்ட பல்வேறு நவீன உபகரணங்கள் சென்னை மாதவரம் பால் பண்ணையில் மாநில அளவிலான மைய பால் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் (State Central Quality Control Laboratory) ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

6. இணையத்தின் 4 பால் பண்ணைகள் மற்றும் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பண்ணைகளின் பால் பரிசோதனைக் கூடங்கள் தலா ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் நவீன பால் பரிசோதனைக் கருவிகள் ரூ.17.85 கோடியில் தரம் உயர்த்தப்படும்

பால் கொள்முதல் செய்யும் ஆரம்ப நிலையிலிருந்து, தொடர்ந்து பல்வேறு நிலைகளில் பாலின் தரப் பரிசோதனை மேற்கொண்டு, தரமான பால் மற்றும் பால் உப பொருட்கள், சுகாதாரமான மற்றும்

பாதுகாப்பான முறையில் நுகர்வோருக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் சென்னை பெருநகரின் 4 தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 17 மாவட்ட கூட்டுறவு பால் பண்ணைகளின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.85 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.17.85 கோடி செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மில்கோ ஸ்கேன் FT–1 உபகரணம் வழங்கப்படும்.

7. சென்னை பெருநகர பகுதிகளில் முன்னோட்ட நடவடிக்கையாக 20 குளிரூட்டுப்பட்ட வாகனங்கள், 300 பால்புட்டி குளிர்விப்பான்கள், 10 குளிர்வு அறைகள் மற்றும் 2,000 வெப்பத்தடுப்புப் பெட்டிகள் முதலிய தொடர் குளிர்வுநிலை பராமரிக்கும் வசதிகள் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

பால் மற்றும் பால் உப பொருட்களின் காப்பு நேரத்தை அதிகரிக்கவும் மற்றும் அதன் புத்துணர்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவும், தற்போதுள்ள தொடர் குளிர்வுநிலை அமைப்பினை மேம்படுத்த வேண்டியதை கருத்தில்கொண்டு, நுகர்வோர்களுக்கு தரமான மற்றும் புத்துணர்வான பால் மற்றும் பால் உப பொருட்கள் வழங்கிடவும், சென்னை பெருநகர பால் விற்பனை அமைப்பை மேம்படுத்தும்பொருட்டு மொத்தம் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் 20 எண்ணிக்கை குளிரூட்டுப்பட்ட வாகனங்கள், 300 எண்ணிக்கை பால்புட்டி குளிர்விப்பான்கள், 10 எண்ணிக்கை குளிர்வு அறைகள் மற்றும் 2,000 எண்ணிக்கை வெப்பத்தடுப்புப் பெட்டிகள் ஆகியவை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மேம்படுத்தப்படும்.

8. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால் விற்பனையை அதிகரிக்கவும், தொடர் குளிர்வுநிலை அமைப்பை மேம்படுத்தவும், 3 எண்ணிக்கை குளிர்பதன அறைகள், 2 எண்ணிக்கை குளிரூட்டப்பட்ட வாகனங்கள் போன்ற வசதிகள் ரூ.134 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

கன்னியாகுமரி மாவட்டத்தில், மார்த்தாண்டம், களியக்காவிளை மற்றும் கண்டன்விளை பகுதியில் பால் விற்பனையை அதிகரிக்கவும், தொடர் குளிர்வு அமைப்பை மேம்படுத்துவதன்மூலம் நுகர்வோர்கள்

தரமான மற்றும் புத்துணர்வான பால் பெற்று பயனடையும்பொருட்டும் தலா 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 பால் குளிர்வு அறைகள் மற்றும் பாக்கெட் பால் விநியோகம் செய்ய இரண்டு குளிர்பதன வாகனங்கள் ரூ.134 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வாங்கப்படும்.

9. மதிப்புக் கூட்டப்பட்ட பால் உப பொருட்களான பால்பேடா, மைசூர்பா மற்றும் நறுமண பால் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும்பொருட்டு, உபகரணங்களுடன்கூடிய உற்பத்தி அலகு ஒன்று மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ரூ.250 இலட்சம் செலவில் நிறுவப்படும்

மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் விற்பனை அதிகரித்து கூடுதல் வருவாய் ஈட்டும்பொருட்டு நாளொன்றுக்கு 50 கிலோ பால்பேடா உற்பத்தியை 200 கிலோவாக அதிகரிக்கவும், நாளொன்றுக்கு 100 கிலோ மைசூர்பா உற்பத்தியை 300 கிலோவாக அதிகரிக்கவும், தானியங்கி வெட்டும் இயந்திரம் மற்றும் நாளொன்றுக்கு 1,000 பாட்டில் நறுமணப் பால் உற்பத்தியை 5,000 பாட்டில்களாக அதிகரிக்க தானியங்கி அலகு ஒன்று கட்டமைக்கவும், ரூ.250 இலட்சம் மதிப்பீட்டில் உற்பத்தி அலகு ஒன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஏற்படுத்தப்படும்.

10. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தரமான பால் உற்பத்தி மற்றும் பால் உப பொருட்களை நுகர்வோர் சந்தைக்கு வழங்க தானியங்கி சுத்திகரிப்பு கருவி மற்றும் பால் சமன்படுத்தும் இயந்திரம் ரூ.200 இலட்சம் செலவில் நிறுவப்படும்

ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தரமான பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையின் சந்தை பங்களிப்பு அதிகரித்திடவும், ஒன்றியத்தின் விற்பனை வருவாயை அதிகரித்திடவும், தரம் மேம்படுத்தப்பட்ட பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை செய்ய ஏதுவாக, 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு அளவில் தானியங்கி சுத்திகரிப்பு

கருவி ஒன்றும், 20 ஆயிரம் லிட்டர் பால் சமன்படுத்தும் கருவி ஒன்றும் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

11. திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால் கையாளும் திறனை அதிகரிக்க ரூ.220 இலட்சம் செலவில் 10 ஆயிரம் லிட்டர் வெண்ணெய் பிரிக்கும் இயந்திரம், ஒரு மணி நேரத்திற்கு 800 கிலோ தொடர் வெண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் குளிர்சாதன வசதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்

திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பால் கையாளும் திறனை அதிகரிக்கவும், ஒன்றியத்தின் வருவாயை உயர்த்தும் வகையில் தானியங்கி சுத்திகரிப்புடன்கூடிய 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட வெண்ணெய் பிரிக்கும் கருவி, ஒரு மணி நேரத்திற்கு 800 கிலோ வெண்ணெய் தொடர் உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் சாய்தள அமைப்பு குளிர்சாதன வசதி ஆகியவை ரூ.220 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

12. 10,000 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 4 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் தலா ரூ.2,000 மதிப்பில் பால் கலப்படம் கண்டறியும் அலகு ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில், பால் கொள்முதல் செய்யும் ஆரம்ப நிலையிலேயே, தூய்மையான பாலை கொள்முதல் செய்து தரமான பாலை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களுக்கு வழங்குவதற்கு வழிவகுக்கவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு சட்டம், 2006–ன்படி, தரத்தில் மட்டுமல்லாமல், இந்திய தர அளவைச் சட்டம் (ISI) மற்றும் கோடக்ஸ் (Codex) தரங்களின் அடிப்படையில் பாலில் கலப்படங்கள் அல்லது இரசாயன கலப்பட பொருட்கள் கலந்துள்ளனவா என்பதை உற்பத்தியாளர்கள் அளவிலேயே கண்டறிய 10,000 சங்கங்களுக்கு இரசாயனங்கள் அடங்கிய ஒவ்வொன்றும் ரூ.2,000 மதிப்புள்ள உபகரணப் பெட்டிகள் மொத்தம் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கொள்முதல் செய்து வழங்கப்படும்.

13. சேலம், புதுக்கோட்டை, திருச்சி, கரூர் மற்றும் ஈரோடு ஆகிய 5 சரக துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களுக்கு ரூ.350 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்

தமிழ்நாடு முழுவதும் பால் வளத் துறையின்கீழ் 29 மாவட்ட துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அவைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தரும் வகையில் சேலம், புதுக்கோட்டை, திருச்சி, கரூர் மற்றும் ஈரோடு மாவட்ட ஒன்றியங்களில் 2,500 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் 1.50 இலட்சம் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் சேலம், புதுக்கோட்டை, திருச்சி, கரூர் மற்றும் ஈரோடு ஆகிய 5 துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களுக்கு தலா ரூ.70 இலட்சம் மதிப்பில் மொத்தம் ரூ.350 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

14. தமிழ்நாடு முழுவதும் தற்போது செயல்பட்டுவரும் 500 பாலகங்கள் மற்றும் அமைக்கப்பட உள்ள 500 பாலகங்கள் ஆக மொத்தம் 1,000 ஆவின் பாலகங்களுக்கு அச்சுப் பொறியுடன்கூடிய கணக்கீட்டு இயந்திரம் மற்றும் அது தொடர்பான மென்பொருள் ரூ.390 இலட்சம் செலவில் வழங்கப்படும்

சென்னையில் உள்ள நவீன பாலகங்களில் கணக்கீட்டு இயந்திரங்கள் உள்ளதைப்போன்று ஆவின் பாலகங்களில் கணக்குகளை முறையாகப் பராமரிக்கவும், இணையதளம்மூலம் விற்பனை சார்ந்த நடவடிக்கைகளை எளிதாக்குவதுடன் மேக மென்பொருளுடன் இணைக்கப்பட்ட அச்சுப் பொறியுடன்கூடிய 1,000 கணக்கீட்டு இயந்திரம் மற்றும் அது தொடர்பான மென்பொருள் ரூ.390 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழகத்தில் உள்ள ஆவின் பாலகங்களில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

15. மாவட்ட பால் ஒன்றியங்களுக்கிடையே மற்றும் மாவட்ட ஒன்றியங்களிலிருந்து சென்னை பெருநகர பால் பண்ணைகளுக்கு பால் போக்குவரத்து மேற்கொள்வதில் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில் இணையத்திற்காக 10 பால் டேங்கர்கள் மற்றும் மாவட்ட பால் ஒன்றியங்களுக்காக 13 பால் டேங்கர்கள் ஆக மொத்தம் 23 பால் டேங்கர்கள் ரூ.8.85 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்

மாவட்ட ஒன்றியங்களின் தேவைக்குப்போக மீதமுள்ள உபரி பாலைப் பதப்படுத்தி சென்னை பெருநகரின் தேவைக்காக இணைய பால் பண்ணைகளுக்கு தங்குதடையின்றிக் கொண்டு வருவதற்காக ஆவின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும்வகையில் இணையத்திற்கென தலா ரூ.44 இலட்சம் மதிப்பில் முப்பதாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 பால் டேங்கர்கள் ரூ.440 இலட்சம் மதிப்பிலும், 7 மாவட்ட ஒன்றியங்களுக்கு 13 பால் டேங்கர்கள் ஒன்பதாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் டேங்கர் ஒன்று ரூ.32.49 இலட்சம் வீதம் 9 பால் டேங்கர்கள் ரூ.292.41 இலட்சம் மதிப்பிலும், பதினைந்தாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் டேங்கர் ஒன்று ரூ.38.17 இலட்சம் வீதம் 4 பால் டேங்கர்கள் ரூ.445.09 இலட்சம் மதிப்பிலும், ஆக மொத்தம் 23 பால் டேங்கர்கள் ரூ.8.85 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கொள்முதல் செய்யப்படும்.

16. நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய பால் பண்ணையில் புதிய பாலாடைக் கட்டி உற்பத்திப் பிரிவு ரூ.13.14 கோடி செலவில் நிறுவப்படும்

கால்சியம், கொழுப்பு, புரதம் மற்றும் வைட்டமின் B12 ஆகியவற்றுடன் துத்தநாகம், பாஸ்பரஸ் மற்றும் ரைபோப்ளேவின் போன்ற சத்துக்கள் அடங்கிய பாலாடைக் கட்டி விற்பனை சந்தையில் மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களைத் தொடர்ந்து தமிழகத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் தேவையைப் பூர்த்தி செய்வதில் முன்னோடியாகத் திகழும் ஆவின், தற்போது பாலாடைக் கட்டி சந்தையிலும் கால்பதிக்க திட்டமிடப்பட்டு ரூ.13.14 கோடி செலவில் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ஒரு புதிய பாலாடைக் கட்டி உற்பத்திப் பிரிவு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நிறுவப்படும்.

17. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றிய அலுவலகங்களில் பணிபுரிந்துவரும் 500 பணியாளர்களுக்கு அவர்கள் பணிசார்ந்த தொழில்நுட்ப மற்றும் மேம்பாட்டுத் திறன் பயிற்சிகள் ரூ.70 இலட்சம் செலவில் வழங்கப்படும்

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களை சார்ந்த பால் கொள்முதல், விற்பனை, நிருவாகம், கணக்கு, திட்டங்கள், தரக் கட்டுப்பாடு போன்ற பிரிவுகளில் பணிபுரிந்துவரும் 500 பணியாளர்களின் அவர்தம் பணித் தொடர்பான சமீபத்திய தொழில்நுட்ப மற்றும் மேம்பாட்டுத் திறன் குறித்து தெரிந்துகொண்டு அவர்களது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ளவும், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடப்பு ஆண்டில் சுமார் ரூ.70 இலட்சம் செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அளிக்கப்படும்.

18. உதகமண்டலத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையில், ஓர் உயர் மரபு சார்ந்த நாட்டின கன்றுகள் உற்பத்தி அலகு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

உதகமண்டலத்தில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையில் தூய ஜெர்சி பசுக்களைப் பராமரிப்பதற்குப் பதிலாக தொற்று நோய்கள் மற்றும் மரபு சார்ந்த முரண்பாடுகள் இன்றி இருக்கும் சாகிவால், சிவப்பு சிந்தி, காங்ரெஜ் மற்றும் தார்பார்க்கர் போன்ற நாட்டின வகை பசுக்களைப் பராமரிக்கவும் அவைகளின்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கிடேரி கன்றுகள் இனப்பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதோடு கூட்டுறவு அமைப்பில் உள்ள முன்னோடி பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலைக்கு வழங்கவும், உதகமண்டலம், கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையில் இந்த உயர் ரக மரபு சார்ந்த நாட்டினக் கன்று உற்பத்திப் பிரிவு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்படும்.

19. சென்னை பெருநகர பால் விற்பனை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 100 எண்ணிக்கை ஆழ் உறைபதன மற்றும் குளிர் சாதன வசதி இணைந்த பெட்டிகள் ரூ.1.15 கோடி மதிப்பிலும், 55 எண்ணிக்கை ஐஸ்கிரீம் சாப்டி உபகரணம் ரூ.82.50 இலட்சம் மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.197.50 இலட்சம் மதிப்பீட்டில் விற்பனை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் விற்பனையை மேம்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய விற்பனை நிலையங்களில் பிரீமியம் ஐஸ்கிரீம் மற்றும் புதிய வகை பால் உப பொருட்களை நன்றாக காட்சிப்படுத்தும்பொருட்டு 100 எண்ணிக்கை ஆழ் உறைபதன மற்றும் குளிர்சாதன வசதி இணைந்த பெட்டிகள் (350 லி./350 லி.) ஒன்றின் விலை ரூ.1.15 இலட்சம் மதிப்பில் மொத்தம் ரூ.115 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவவும், மேலும், புதிய மென்மையான ஐஸ்கிரீம் விரும்பும் நுகர்வோர்களைக் கவரும்வண்ணம், 55 எண்ணிக்கை ஐஸ்கிரீம் சாப்டி உபகரணங்கள் மொத்தம் ரூ.82.50 இலட்சம் மதிப்பிலும், ஆக மொத்தம் ரூ.197.50 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஏற்படுத்தப்படும்.

20. கன்னியாகுமரி மாவட்டம், மயிலாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்

கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் மயிலாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அச்சங்கத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் நோக்கத்திலும் பால் உற்பத்தி மற்றும் பால் கொள்முதலை அதிகரிக்கும் வகையிலும், மயிலாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு புதிய அலுவலகக் கட்டடம் ரூபாய் 20.00 இலட்சம் மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டப்படும்.

21. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கரூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் கட்டித் தரப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கரூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏதுவாக கரூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென, ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டித் தரப்படும்.

22. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம், ரூ.2.00 கோடி செலவில் கட்டித் தரப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏதுவாக கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியதிற்கென, ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டித் தரப்படும்.

23. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் கட்டித் தரப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏதுவாக, திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென, ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டித் தரப்படும்.

24. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் கட்டித் தரப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பணிகளைத் திறம்பட

மேற்கொள்வதற்கு ஏதுவாக, தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென, ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கட்டித் தரப்படும்.

25. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு நிருவாக அலுவலகக் கட்டடம், பால் குளிர்வு அறை மற்றும் திருச்செங்கோட்டில் பால் விற்பனை அலுவலகக் கட்டடம் ரூ.7.00 கோடி செலவிலும், திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு நிருவாக அலுவலகக் கட்டடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.3.49 கோடி செலவிலும் ஆக மொத்தம் ரூ.10.49 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மற்றும் திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏதுவாக நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கென நாமக்கல் பால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம், பால் குளிர்வு அறை ஆகியன அமைக்கவும், திருச்செங்கோட்டில் பால் விற்பனை அலுவலகக் கட்டடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளவும், ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் ஒன்றியத்தின், வீரபாண்டி பால் பண்ணை வளாகத்தில் ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் ரூ.3.49 கோடி செலவிலும், ஆக மொத்தம் ரூ.10.49 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஏற்படுத்தப்படும்.

கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் இருப்பிடமாய், ஆல விருட்சமாய், இயக்கத்தின் கவசமாய், ஈகை குணம் கொண்டு, உரிமைக் குரல்

எடுத்து, ஊழல்களைத் தடுத்து, எதையும் தாங்கும் இதயத்தோடு, ஏழைகளின் ஏந்தலாய், ஐயத்தைப் போக்கி, ஒன்பதாவது வள்ளலாய், ஓய்வறியா உழைப்போடு, ஔவையின் சொல் நடந்து, எஃகு இதயம் கொண்டு, நாளெல்லாம் நல்லாட்சி தந்த பெரியார்–அண்ணா–எம்.ஜி.ஆர். ஆகியோரின் ஓர் உருவம் எங்கள் அம்மாவை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு தேசத்தின் கொள்கை முரசே, எம்.ஜி.ஆரின் புகழைப் பரப்பிய வெற்றி முரசே, அ.இ.அ.தி.மு.க.–வின் நம்பிக்கை முரசே, ஊனின்றி, உறக்கமின்றி, உறங்கா விழி கொண்டு, தாய் காத்த அரசை தப்பாமல் காத்துவரும் அம்மாவின் செல்லப் பிள்ளை, கழகத்தின் அன்புப் பிள்ளை, சாமானிய மனிதர்களின் அடையாளமாய், தமிழகத்து மனித உயிர்களையும், விவசாயத்துப் பயிர்களையும் காத்த சாதனைச் செம்மலாய், கொரோனாவிற்கு சிம்மசொப்பனமாய், சரித்திர மனிதராய் விளங்கும் ஏழைகளின் முதல்வர் எங்கள் ஐயா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிமைக்கு ஓர் அடையாளமாய், சிரிப்புக்கு ஓர் அடையாளமாய், தேனீ போல சுறுசுறுப்பு, பெரிய குளம்போல பெரிய மனம் படைத்த மனிதநேயப் பண்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.

பாரம்பரிய சிறப்போடு இச்சபையை நடத்திவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனது ஜோலார்பேட்டை தொகுதி மக்களுக்கும் மற்றும் என்னை ஆளாக்கி அம்மாவிடம் அடையாளம் காட்டிய மாவட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அடலேறுகளுக்கும் எனது அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்து, எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

வணிக வரிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மொத்த வருவாயில் வணிக வரித் துறையின் பங்கு 80 சதவிகிதத்திற்கும் மேலாகும். ஆனால், வணிக வரித் துறையின் நிருவாகச் செலவு 0.50 சதவிகிதமே ஆகும். இவ்வாறு அரசிற்கு நிதிச் சுமையை ஏற்படுத்தாமல் சிக்கனமாகச் செலவு செய்து, அதிகப்படியான வருவாயை ஈட்டிக் கொடுக்கும் துறை, வணிக வரித் துறையாகும்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் நிதித் தன்னாட்சியை நிலைநிறுத்தும்பொருட்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள வலியுறுத்தினார். அவற்றில் மிக முக்கியமானது, இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் வரி வருவாய் இழப்பீட்டினை 14 சதவிகித வளர்ச்சி விகிதத்தில் முதல் 5 ஆண்டுகளுக்கு மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். முதலில் இச்சட்டம் அமல்படுத்தப்படுவதை எதிர்த்தாலும், பிறகு மாண்புமிகு அம்மா அவர்களால் முன்னிறுத்தப்பட்ட கோரிக்கைகளை GST மன்றம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப GST சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவந்து, சட்டத்தை 1–7–2017 முதல் அமல்படுத்தியதால் அம்மாவின் அரசு தற்போது இச்சட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தி மாநிலத்தின் வரி வருவாயினை கீழ்க்கண்டவாறு பெருக்கியுள்ளது.

2019–2020 (29–2–2020) வரை வரி வருவாய் 86,363.51 கோடி ரூபாய் ஆகும். 2018–2019 ஆம் ஆண்டு இதே காலகட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகை 78,214.85 கோடி ரூபாய் (கூடுதல் 8,148.66 கோடி ரூபாய்). வருவாய் வளர்ச்சி 10.42 சதவிகிதம் ஆகும். இன்றைய நிலையற்ற பொருளாதார சூழ்நிலையிலும் வரி வசூல் 10.42 சதவிகித வளர்ச்சியை எட்டியுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பின், இந்த புதிய வரி முறைகளின் தேவைகளுக்கேற்ப துறையின் பல்வேறு பிரிவுகள் 1–6–2019 முதல் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. புதியதாக ஈரோட்டில் ஒரு புதிய வணிக வரி கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரி விதிப்பு அலுவலகமும் சம அளவில் வணிகர்களைக் கொண்டிருக்கும் வகையில் வரி விதிப்பு வட்டங்களின் எல்லைகள் சீரமைக்கப்பட்டு, வரி விதிப்பு வட்டங்களின் எண்ணிக்கை 329–லிருந்து 338 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

VAT சட்டத்தின்கீழ் 6,38,356 வணிகர்கள் பதிவு பெற்றிருந்தனர். முழுமையாக கணினிமயமாக்கப்பட்டதன் (TSP–Total Solution Project) விளைவாக எந்தவித சிரமமுமின்றி, இன்றளவில் 10,66,447 வணிகர்கள் GST பதிவு பெற்று வணிக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

GSTN எனப்படும் Goods and Services Tax Network என்ற பொது வலைதளம் ஏற்படுத்தப்பட்டு அவ்வலைதளம்மூலம் வணிகம் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரி செலுத்துவோரது தகவல்கள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களுக்கு இடையேயான சரக்குப் போக்குவரத்திற்கு 1–4–2018 முதலும், மாநிலத்திற்கு உள்ளேயான சரக்குப் போக்குவரத்திற்கு 2–6–2018 முதலும் மின்னணு வழிப்பட்டி (E–Way Bill) உடன் கொண்டு செல்லும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, ரூ.1,00,000/–க்கும் அதிகமான மதிப்புள்ள மாநிலத்திற்குள்ளேயான சரக்குப் போக்குவரத்திற்கும், ரூ.50,000/–க்கும் அதிகமான மதிப்புள்ள மாநிலத்திற்கு இடையேயான சரக்குப் போக்குவரத்திற்கும் மின்னணு வழிப்பட்டி (e–way bill) அவசியம். நூறு விதமான சரக்குகளை மின்னணு வழிப்பட்டி முறையில் மாநிலத்திற்குள் எடுத்துச் செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் குறு, சிறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை மின்னணு வழிப்பட்டியின்றி, உரிய வரிப் பட்டியுடன் (Tax invoice) மட்டும் மாநிலத்திற்குள் தடையில்லாமல் எடுத்துச் செல்ல முடிகிறது.

மத்திய மற்றும் மாநில அரசின் பிரதிநிதிகளைக் கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி மன்றம் இதுவரை 39 கூட்டங்களை நடத்தியுள்ளது. இதில் தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, 39 பொருட்கள் மற்றும் 11 சேவைகளுக்கான வரி விலக்கு மற்றும் வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 61 பொருட்கள் மற்றும் 6 சேவைகள் தொடர்பான தமிழகத்தின் கோரிக்கைகள்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென GST மன்றம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இடைமாநில வர்த்தகத்தின்மீது மத்திய அரசால் வசூலிக்கப்படும் IGST வரியில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் உள்ள தமிழகத்தின் பங்குத் தொகையினை விரைந்து வழங்கிட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். நிலுவையாக உள்ள GST இழப்பீட்டுத் தொகையையும், GST இழப்பீட்டுத் தொகையானது, சட்டத்தின்படி 5 ஆண்டுகளுக்கு முழுமையாக வழங்கிட வேண்டும் என்பதும் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

வணிகர்களின் நலனை முன்னிறுத்தி, தமிழக அரசால் துவங்கப்பட்ட தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் வாயிலாக குடும்ப நல உதவி, மருத்துவ நல உதவி, தீ விபத்து நிவாரணம் போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென வாரியத்தின் தொகுப்பு நிதியானது அம்மாவின் அரசால் 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1864 ஆம் ஆண்டு, பொது மக்களின் சொத்து பரிமாற்றங்கள் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக துவங்கப்பட்ட மிகப் பழமையான முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை 156 ஆண்டுகளாக பொது மக்களுக்கு நிறைவான சேவையை அளித்து வருகிறது. துவங்கப்பட்ட வருடத்தில் 1,26,374 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.1,45,000/– வருவாயை ஈட்டியது. 2019–2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2020 வரை 23.72 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வாயிலாக சுமார் ரூ.10,122 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக சுமார் 25 இலட்சம் ஆவணங்களைப் பதிவு செய்தும், சுமார் 25 இலட்சம் வில்லங்க சான்றிதழை வழங்கியும் இத்துறை செயல்பட்டு வருகிறது. இது தவிர திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் ஆகியவற்றினை இத்துறை பதிவு செய்து, அதற்குரிய கட்டணங்களையும் வசூலித்து வருகிறது.

மாநில தலைமையிடத்தில் பதிவுத் துறைத் தலைவர், 4 கூடுதல் பதிவுத் துறை தலைவர்கள், ஒரு துணை பதிவுத் துறைத் தலைவர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வரும் இத்துறை 9 பதிவு மண்டலம் மற்றும் 50 பதிவு மாவட்டங்களை உள்ளடக்கியது. இதில் 578 சார்–பதிவாளர் அலுவலகங்கள் அடங்கும். இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, சொத்துப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்யும்போது நிர்ணயிக்கப்பட்ட சந்தை மதிப்பு வழிகாட்டிக்கு ஏற்ப முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சந்தை மதிப்பு வழிகாட்டி நிர்ணயம் செய்ய பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலும் துணை மதிப்பீட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 1–4–2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட சந்தை மதிப்பு வழிகாட்டி அதிகபட்சமாக இருந்ததால், தேர்தல் வாக்குறுதி அளித்ததற்கு ஏற்ப 9–6–2017 முதல் மாநிலம் முழுவதற்குமான சந்தை மதிப்பு வழிகாட்டியை 33% குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறை அலுவலகங்களுக்கு ஒரு ஆண்டிற்கு சுமார் 1.5 கோடி மக்கள் வருகை புரிகின்றனர். இவர்களுக்கு விரைவாகவும், நிறைவாகவும் சேவை செய்யும்பொருட்டு, நவீன தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி Star 2.0 (Web Based Software) TCS நிறுவனத்தின்மூலம் உருவாக்கப்பட்டு, செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.177.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. Star 2.0 என்ற புதிய மென்பொருள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 12–2–2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. பொது மக்கள் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்களைத் தாங்களே தயாரித்துக் கொள்வது, குறிப்பிட்ட நேரத்தில் ஆவணப் பதிவு, பதிவின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஆவணதாரரின் கைபேசிக்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்புவது, சான்றிட்ட ஆவண நகல், வில்லங்கச் சான்று ஆகியவற்றை மின்னஞ்சல்மூலம் பெறுவது, ஆவணப் பதிவிற்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை இணையதளம் வாயிலாகச் செலுத்துவது போன்ற எளிய நடைமுறைகள் இந்தப் புதிய மென்பொருளின் சிறப்பம்சம் ஆகும். பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் அலுவலகங்கள் நிறைந்தது பதிவுத் துறை. ஆதலால், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கும் அனைத்து வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், 2011–2012 முதல் 2019–2020 ஆம் ஆண்டுவரை ரூ.179.90 கோடி செலவில் 234 கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டு, 192 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு அலுவலகச் செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 42 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டடங்களில் பொது மக்களுக்குத் தேவையான வாகன நிறுத்துமிடம், அமருமிடம், கழிப்பறை வசதி மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக சாய்தளம் ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில்தான் அதிகளவிலான சார்–பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. எனவே, புதியதாக சார்–பதிவாளர் அலுவலகம் நிறுவத் தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது. போலி முத்திரைத்தாள் புழக்கத்தினை அறவே தடுத்திடும் நோக்கத்துடன் முத்திரைத் தீர்வையினை செலுத்த மாற்று வழியாக வங்கி வரைவோலைமூலம் செலுத்திடும் வசதி, இணையவழி செலுத்திடும் வசதி, மின்னணு முத்திரையிடும் வசதி (e–stamping) ஆகியவை

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. e–stamping நடைமுறை மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட நிறுவனமான Stock Holding Corporation of India Limited மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. e–stamping முறை தற்போது சென்னை மண்டலத்தின் அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இம்முறை மாநிலத்தின் இதர மாநகராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், முத்திரைத்தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் பதிவுத் துறைக்கு செலுத்த வேண்டிய பிற கட்டணங்களை இணையவழி, Credit மற்றும் Debit Cardமூலம் செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளதை அனைவரும் நன்கு அறிவார்கள். அதிலும், மக்களுக்கு பணியாற்றக்கூடிய மனிதர்களை ஜோலார்பேட்டை மக்கள் தங்கள் வீட்டுப் பிள்ளையாக பாவிப்பார்கள் என்பதைக் கடந்த பல ஆண்டுகளாக நான் நன்கறிவேன். என்னைத் தங்கள் வீட்டுப் பிள்ளையாக பாவிக்கக்கூடிய எனது தொகுதி மக்களுக்கும், வேலூர் ஒருங்கிணைந்த மாவட்ட மக்களுக்கும், என் நெஞ்சம் நிறைந்த நன்றியை இந்த நல்ல வேளையில் பதிவு செய்து, எல்லாம் விதிவசம் என்று வீழ்ந்துவிடாமல், கழகத் தொண்டனுக்கு புது உத்வேகத்தைக் கொடுத்து, அம்மாவின் வழியில், அண்ணன்மார்கள் நாங்கள் இருக்கிறோம் என்று அ.இ.அ.தி.மு.க. கோட்டையில், எந்த ஓட்டையும் வீழ்ந்துவிடாமல், நம்மைப் பார்த்து பழி சொல்பவர்களை எல்லாம் இன்று நம் வழி வருபவர்களாக மாற்றிய பெருமை மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களுக்கே உண்டு. ஓட்டு வளர்ச்சியை மட்டும் கணக்கில் கொள்ளாமல், நாட்டு வளர்ச்சியை நலத்தில் கொண்டு, தமிழகத்தை தலைநிமிரச் செய்து வள்ளல்கள் பாரி–காரி–ஓரி வழியில் நின்று, ஓர் அணியில் சென்று ஒற்றுமையாய் உழைத்திடுவோம். அடுத்து வரும் ஆண்டும், இரட்டை இலை ஆண்டு, அடுத்து வரும் ஆண்டும் இரட்டை இலை ஆண்டு என்கிற உறுதியோடு, புதுமைகள் படைத்திட, புரட்சிகள் செய்திட, 234 தொகுதிகளையும் வென்றிட சபதம் ஏற்போம். நாம் எதிரிகளால் வீழ்த்தப்படும் தட்டாம்பூச்சி அல்ல, அம்மா அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட பட்டாம்பூச்சிகள் என்கின்ற அடையாளத்தைத் தந்திருக்கும் மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களின் அனுமதியோடு, எனது துறைக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. ஈரோட்டில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகப் பெருமக்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய கட்டடங்கள் கட்டுவது அரசின் நோக்கமாகும். எனவே, ஈரோடு இணை ஆணையர் (வணிக வரி) மற்றும் (நுண்ணறிவு), துணை ஆணையர் (நுண்ணறிவு), உதவி ஆணையர் (நுண்ணறிவு), மேல்முறையீட்டு துணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி), உதவி ஆணையர் (வணிக வரி), திண்டல் மற்றும் கொடுமுடி ஆகிய அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோட்டில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக புதிய கட்டடம் கட்டப்படும்.

2. விருதுநகரில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

விருதுநகர் துணை ஆணையர் (வணிக வரி) மற்றும் வரிவிதிப்பு அலுவலகங்கள் இயங்கி வரும் கட்டடம் பழுதடைந்துள்ள நிலையில் புதிய கட்டடம் கட்டுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே, பணியாளர்கள் மற்றும் வணிகப் பெருமக்கள் நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விருதுநகரில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில் வணிக வரி அலுவலக புதிய கட்டடம் கட்டப்படும்.

3. தூத்துக்குடியில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

தூத்துக்குடியில் துணை ஆணையர் (வணிக வரி) மற்றும் வரிவிதிப்பு அலுவலகங்கள் இயங்கி வரும் கட்டடம் பழுதடைந்துள்ள நிலையில் புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே, பணியாளர்கள் மற்றும் வணிகப் பெருமக்கள் நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தூத்துக்குடியில் ரூ.5.06 கோடி மதிப்பீட்டில் வணிக வரி அலுவலக புதிய கட்டடம் கட்டப்படும்.

4. பெருந்துறையில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

பெருந்துறை மற்றும் சென்னிமலை உதவி ஆணையர் (வணிக வரி) அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருந்துறை மற்றும் சென்னிமலை வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருந்துறையில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக புதிய கட்டடம் கட்டப்படும்.

5. குடியாத்தத்தில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

குடியாத்தம் (கிழக்கு) மற்றும் (மேற்கு) வரிவிதிப்பு அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுவது இன்றியமையாததாகும்.

எனவே, குடியாத்தம் (கிழக்கு) மற்றும் (மேற்கு) வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குடியாத்தத்தில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக புதிய கட்டடம் கட்டப்படும்.

6. சென்னை எழும்பூர் மற்றும் நுங்கம்பாக்கம் வரிவிதிப்பு அலுவலகங்கள் செயல்படும் கட்டடத்தினைப் புதுப்பித்தல்

எழும்பூர் மற்றும் நுங்கம்பாக்கம் வரிவிதிப்பு அலுவலகங்கள் எழும்பூரிலுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. பழுதடைந்துள்ள இக்கட்டடத்தினைப் புதுப்பிப்பதற்கான தேவை எழுந்துள்ளது.

எனவே, பணியாளர்கள் மற்றும் வணிகர்கள் நலன் கருதி, எழும்பூர் மற்றும் நுங்கம்பாக்கம் வரிவிதிப்பு அலுவலகங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.53.38 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

7. ஈரோட்டில் வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் அமைத்தல்

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஈரோடு வணிக வரி கோட்டத்தில் ஈரோடு, கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய வணிக வரி மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வட்டார பயிற்சி நிலையம் அமைத்தல் அவசியமானதாகும்.

வணிக வரித் துறை அலுவலர்களின் பணித்திறன் மேம்பட, சிறந்த முறையில் பயிற்சியினை வழங்கிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வணிக வரித் துறை அலுவலர்களுக்கு ரூ.49.62 இலட்சம் மதிப்பீட்டில் ஈரோட்டில் புதிய வட்டார பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.

8. சென்னை கிழக்குக் கோட்டத்தைச் சார்ந்த வரிவிதிப்பு அலுவலகங்கள் செயல்படும் கட்டடத்தினைப் புதுப்பித்தல்

சென்னை (கிழக்கு) கோட்டத்தை சார்ந்த வரிவிதிப்பு அலுவலகங்கள் மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. பழுதடைந்துள்ள இக்கட்டடத்தினை புதுப்பிக்க வேண்டியுள்ளது.

எனவே, பணியாளர்கள் மற்றும் வணிகப் பெருமக்கள் நலன் கருதி, சென்னை (கிழக்கு) கோட்டத்தை சார்ந்த 13 வரிவிதிப்பு அலுவலகங்கள் செயல்படும் கட்டடம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.7.93 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

9. பத்து சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதியதாக கட்டடம் கட்டுதல்

பதிவுத் துறையின் சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு ஆவணப் பதிவிற்காக வரும் பொதுமக்களின் தேவைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது இந்த அரசின் குறிக்கோளாகும்.

அதனடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பத்து இடங்களில் ரூ.11.00 கோடி மதிப்பீட்டில் சார்–பதிவாளர் அலுவலகங்கள் புதியதாக கட்டப்படும்.

10. கோயம்புத்தூரில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டுதல்

கோயம்புத்தூரில் மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) மற்றும் (தணிக்கை) மற்றும் இணை ஒன்று சார்–பதிவாளர் அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டடம் பழுதடைந்துள்ளது. எனவே, நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

பொதுமக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூரில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை புதிய அலுவலக வளாகம் கட்டப்படும்.

11. தேனியில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகம் கட்டுதல்

பெரியகுளம் மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) மற்றும் (தணிக்கை), இணை ஒன்று சார்–பதிவாளர் மற்றும் தேனி சார்–பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவை தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

இந்த அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.3 கோடி மதிப்பீட்டில் தேனியில் நவீன வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை புதிய அலுவலக வளாகம் கட்டப்படும்.

12. கோயம்புத்தூர் துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுதல்

கோயம்புத்தூரில் உள்ள துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகம் அமைந்துள்ள கட்டடம் பழுதடைந்துள்ளது. இதற்கு மாற்றாக நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்ட வேண்டியுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூரில் துணைப் பதிவுத் துறைத் தலைவர் முகாம் அலுவலகத்திற்கு ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.

13. பதிவுத் துறை அலுவலகங்களுக்கு கணினி மற்றும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வழங்குதல்

ஸ்டார் 2.0 மென்பொருள்மூலம் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட திட்டம் செம்மையாக செயல்பட, கணினி மற்றும் உபகரணங்களைப் பதிவுத் துறை பயிற்சி நிலையம், தணிக்கை மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், சீட்டு நடுவர் அலுவலகங்கள், மண்டல உதவிப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் மற்றும் உயர் நீதிமன்றத்திலுள்ள சிறப்பு அரசு வழக்கறிஞர் அலுவலகம் ஆகியவற்றிற்கு வழங்கிட வேண்டும்.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் 22 கணினிகள், 54 நகல் எடுக்கும் இயந்திரங்கள், தலா ஒரு காணொலிக் காட்சி கருவி மற்றும் ஐ–பேட் ஆகியவை வழங்கப்படும்.

14. சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு வருகை தரும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு சக்கர நாற்காலிகள் வழங்குதல்

புதியதாக கட்டப்படும் அனைத்து சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக சாய்தள மேடை அமைக்கப்படுகின்றது.

வருகை தரும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் நோக்குடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 200 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.16.70 இலட்சம் மதிப்பீட்டில் சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.

15. ஆவணதாரர்களை ஆதார் அடிப்படையில் உறுதி செய்யும் நடைமுறையை அறிமுகப்படுத்துதல்

சார்–பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பதிவின்போது ஆவணதாரர்களின் மெய்த்தன்மையை உறுதிபடுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனை மேலும் செம்மைப்படுத்தும் விதமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆவணதாரர்களின் மெய்த்தன்மையை ஆதார் அடிப்படையில் விரல் ரேகை பதிவு வழியாக உறுதி செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படும்.

16. பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை இணைய வழிமூலம் வழங்குதல்

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஒளிவருடல்மூலம் சேமித்து மின்னணுமயமாக்கும் பணி நீலகிரி, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் நிறைவடையவுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நீலகிரி, கரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திலும் முன்னோடி திட்டமாக பதிவுச் செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் இணையதளம் வழியாக மட்டுமே வழங்கும் நடைமுறை செயல்படுத்தப்படும்.

17. பதிவுத் துறையில் தணிக்கைப் பணியை நிகழ்நிலை (online) மூலமாக மேற்கொள்ளுதல்

சார்—பதிவாளர்களால் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் சரியான விகிதத்தில் வசூலிக்கப்படுவதை உறுதி செய்ய மாவட்டப் பதிவாளர்களால் தணிக்கை செய்யும் நடைமுறை செயல்பாட்டில் உள்ளது.

தணிக்கைப் பணியை மேலும் செம்மைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஸ்டார் 2.0 மென்பொருள் வழியாக நிகழ்நிலை (online) தணிக்கை செய்யும் புதிய நடைமுறை மேற்கொள்ளப்படும்.

18. மணமகன் மற்றும் மணமகள் ஆகியோர் இருப்பிடம் அமைந்துள்ள சார்—பதிவாளர் அலுவலகங்களிலும் திருமணத்தைப் பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்துதல்

நமது மாநிலத்தில், திருமணம் நடைபெறும் இடத்தின் எல்லைக்குட்பட்ட சார்—பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே திருமணத்தைப் பதிவு செய்ய முடியும்.

இதனை எளிமைப்படுத்தும் நோக்குடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, மணமகன் மற்றும் மணமகள் இருப்பிடம் அமைந்துள்ள சார்–பதிவாளர் அலுவலகங்களிலும் திருமணத்தை பதிவு செய்யும் புதிய வசதியை ஏற்படுத்தும் விதமாக, தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009–ல் திருத்தம் செய்யப்படும்.

19. சங்கங்களால் கோர்வை செய்யப்பட வேண்டிய விவரங்களின் தாமதத்தைப் பொறுத்தருளும் (Delay Condonation) அதிகாரத்தைப் பரவலாக்கல்

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற சங்கங்களால் கோர்வை செய்யப்படும் ஆவணங்களில் உள்ள தாமதமானது 3 ஆண்டுகள் வரையில் மாவட்ட பதிவாளராலும், 3 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 5 ஆண்டுகள் வரையில் பதிவுத் துறைத் தலைவராலும், 5 ஆண்டுகளுக்கு மேல் உள்ள நேர்வுகளில் அரசு அளவிலும் பொறுத்தருளப்படுகிறது.

இதனை மேலும் பரவலாக்கும் விதமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 10 ஆண்டுகள் வரை மாவட்டப் பதிவாளராலும், 10 ஆண்டுகளுக்கு மேல் மற்றும் 20 ஆண்டுகள் வரையில் பதிவுத் துறைத் தலைவராலும், 20 ஆண்டுகளுக்கு மேல் உள்ள நேர்வுகளில் அரசு அளவிலும் தாமதம் பொறுத்தருளப்படும்.

கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணுலக மாந்தரின் வாழ்வினை வளமாக்கி, நீங்காப் புகழ் பெற்று, விண்ணுலகோருக்கு விருந்தினராகத் திகழும் மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். யாரிடத்திலும், எதற்காகவும் என் மக்கள் கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்குவேன் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுகளை தப்பாது நிறைவேற்றும் அருமை அண்ணன் எடப்பாடியார், அருமை அண்ணன் ஓ.பி.எஸ். ஆகியோரின் இணைகரத்து நல்லாட்சி இமை துஞ்சாது உழைக்கிறது. இருபெரும் தலைவர்களையும், நடுநிலை தவறாமல்

பேரவையை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் இருகரம் கூப்பி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா இல்லாத வாழ்க்கை பூங்காற்று இல்லாத பூங்கா, நீரில்லாத அருவி, கனியில்லாத மரம், கவிதையில்லாத இலக்கியம். சுற்றுலா என்பது மனமகிழ்விற்காகவும், ஓய்விற்காகவும், பயணம் மேற்கொள்ளுதல் ஆகும். வழக்கமான வாழ்க்கைச் சூழலில் இருந்து விலகி, ஆரவாரமற்ற சூழலில் ஓய்வு எடுக்கவும், வணிகம் அல்லது இதர காரணங்களுக்காக தனது இடத்திற்கு தொடர்பில்லா இடங்களுக்குப் பயணித்து, அங்கு ஓராண்டிற்குக் குறைவாகத் தங்கி இருப்பவர்களை சுற்றுலாப் பயணிகள் என்று உலகச் சுற்றுலா அமைப்பு வரையறுத்துள்ளது. திறந்த மனதுடன் சுற்றுலா செல்பவர்கள் இனிய அனுபவங்களுடன் திரும்பி வருகிறார்கள். சுற்றுலாவினால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, கலைஞர்களுக்கு வாய்ப்பு, தொல்லியல் சின்னங்களுக்குப் பாதுகாப்பு, வணிகர்களுக்கு வர்த்தகம், பொது மக்களுக்குக் கட்டமைப்பு வசதி, அரசுக்கு அந்நியச் செலாவணி, நாடுகளிடையே நட்புறவு ஏற்படுகிறது.

தமிழகம் குளிர்ந்த மலைச்சாரல்களையும், படர்ந்து விரிந்த கடற்கரைகளையும், மரகதச் சோலைகளையும், மலைக்க வைக்கும் கோபுரங்களையும், பல்வேறு விதமான வன உயிரினங்களையும், சரித்திரப் புகழ்வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களையும் தன்னகத்தே கொண்டு பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினை தேசிய மற்றும் உலகளவில் சிறப்பும், முன்னுரிமையும் பெற்ற ஒரு சுற்றுலா வளாகமாக மேம்படுத்துதல், தமிழ்நாட்டில் புதிய சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல், தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் கலாச்சார பாரம்பரியம், நினைவுச் சின்னங்களிலுள்ள கட்டடக் கலையின் சிறப்புகளைக் காட்சிப்படுத்தி பிரபலப்படுத்துதல், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து சுற்றுலாவினை மேம்படுத்துதல், சுற்றுலா தொழில் துறையில் தொழில் வாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், நாட்டின் அந்நியச் செலாவணியினைப் பெருக்குதல் முதலியன தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் குறிக்கோள்களாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஐந்து ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறேன். 2019 ஆம் ஆண்டில் 4,948 இலட்சத்து 64 ஆயிரம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 68 இலட்சத்து 66 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஓய்வறைகள், கழிவறைகள், அணுகுசாலைகள், உடை மாற்றும் அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர், வழிகாட்டும் பலகைகள், மின் விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு ரூ.496.88 இலட்சமும், அணுகுசாலை அமைப்பதற்கு ரூ.143.82 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மைய அரசின் சுற்றுலா நிதி உதவியுடன் சுதேஷ் தர்ஷன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கடற்கரை சுற்றுலாத் தலங்களான சென்னை, மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, தெற்குறிச்சி மற்றும் குலசேகரப்பட்டினம் ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுத்து ரூ.74.58 கோடி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, நிலச்சீரமைப்பு, மின் விளக்கு வசதி அமைத்தல், பொதுக் கழிப்பிடங்கள், கண்காணிப்பு கோபுரங்கள் அமைத்தல், நடைபாதை மேம்பாடு, கண்காணிப்பு கேமரா பொருத்துதல், தகவல் பலகைகள், முதலுதவி வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் (IDIPT–TN–T4) தொகுதி–4 திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொகுதி–4 திட்டத்தில் கட்டுமானம் மற்றும் பொருட்கள் கொள்முதல் ஆகியவை அடங்கிய ரூ.250 கோடியிலான 14 துணைத் திட்டப் பணிகள் அடங்கியுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத் தலங்களிலும் ஓட்டல்கள் நிறுவுதல், பல்வேறு வகையான சுற்றுலாக்களை நடத்துதல், படகுக் குழாம்கள் நடத்துதல், இந்திய சுற்றுலா மற்றும் தொழில்

பொருட்காட்சியை நடத்துதல் ஆகிய சுற்றுலாச் சேவைகளை வழங்கிடும் நோக்கத்துடன், 30–6–1971 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின்கீழ், 53 தொடர் தங்கும் விடுதிகளும், 15 சொகுசுப் பேருந்துகளும் உள்ளன. இவற்றில் சில ஓட்டல்கள் குத்தகைக்கு விடப்பட்டும், மற்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தாலும் நிருவகிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா செல்வது ஒரு மகிழ்ச்சியூட்டக்கூடிய அனுபவம். அதனை அனுபவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான பல்வேறு சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. முழு சுற்றுப்பயண நிகழ்வும் ஒரு நல்ல அனுபவத்தை பயணிகளுக்கு வழங்குவதற்காக 15 உயர்தர சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு 38 வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இந்த சுற்றுலாக்களில் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு– மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானதாகும்.

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களை உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாப் பயணிகள் அறியும் வகையில், முக்கிய சுற்றுலாத் தலங்களின் தகவல்கள் ஒலி மற்றும் ஒளி அமைப்புக் காட்சியுடன் தெரியும் வண்ணம் இணையதளம் (www.tamilnadutourism.org) உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா அம்சங்கள், முக்கிய விழாக்கள், தங்கும் இடங்கள், பயண வழி மற்றும் சுற்றுலா நிகழ்வுகள் ஆகியன இணையதளத்துடன் இணைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத் திட்டங்களை முன்கூட்டியே திட்டமிடும்வண்ணம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் இயங்கும் அனைத்து ஓட்டல்களுக்கும் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் கண்காணிப்பு கேமரா வசதி செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை, புறப்பாடு மற்றும் இதர பயன்பாடுகள் ஆகியவற்றை அந்தந்த ஓட்டல்களில் கணக்கீடு செய்ய "ஓட்டல் நிருவாக மென்பொருள்" (Hotel Management System) நிறுவப்பட்டு தலைமை அலுவலகம்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு அரசின் 30 விழுக்காடு பங்கு ஈவுத் தொகையான ரூ.3.12 கோடிக்கான காசோலை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது. 2018–2019 ஆம் ஆண்டிற்கான பங்குத் தொகை 8–11–2019 அன்று வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு வசதிகளை ஏற்படுத்தியும், மேம்படுத்தியும் இங்குள்ள சுற்றுலாத் தலங்களை மகிழ்வுடன் சுற்றுலாப் பயணிகள் கண்டு இன்புற, தமிழ்நாடு சுற்றுலாத் துறை வழிவகை செய்து வருகிறது. சுற்றுலாத் தொழில் புரிவோரின் சேவைகளை ஊக்குவிக்க, தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடத்தும் விளம்பர முகாம்களிலும், சந்தைகளிலும் அவர்களைப் பங்குகொள்ள வைக்கிறது. மிகுந்த போட்டியுள்ள இன்றைய உலகத்தில் திட்டமிட்ட இலக்குகளை அடைய அனைத்து புதிய யுத்திகளையும் சுற்றுலாத் துறை தொடர்ந்து கையாளும்.

வருகின்ற விருந்தினரைப் போற்றி, சுற்றுலாத் தலங்களின் தூய்மையைப் பேணி, பயணிகளிடம் வாய்மையைக் கடைப்பிடித்து, நம் தமிழகம் உலகத்தின் ஒப்பற்ற சுற்றுலாத் தலமாக சிறந்து விளங்க பாடுபடுவோம். நம் மாநிலத்தின் மகத்துவம் உணர்வோம், சுற்றுலாவினால் சமத்துவம் வளர்ப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

சுற்றுலாத் துறை

1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்

* அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணாக்கர்களுக்கு பல்வேறு சுற்றுலாத் தலங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

* அந்தந்த மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் குறித்து அறிந்து கொள்ளுதல்.

* பின்வரும் காலங்களில் சுற்றுலா செல்வதற்கு ஊக்குவிக்க ஏதுவாக அமையும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அவர்களது சொந்த மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களைக் கண்டு மகிழ சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டது. எனவே, இவ்வாண்டும் பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, சுற்றுலாத் துறைமூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம், 32 மாவட்டங்களுக்கு, மொத்தம் 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

2. 2020 ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினைக் கன்னியாகுமரியில் (மாநில அளவில்) கொண்டாடுதல்

ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு, சுற்றுலா குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக கொண்டாடி வருகிறது.

உலக சுற்றுலா தினம், தமிழகத்தின் ஏதேனும் சுற்றுலா சிறப்பு வாய்ந்த மாவட்டத்தில் மாநில அளவிலான விழாவாக கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு, உலக சுற்றுலா தின மாநில அளவிலான விழாவினைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டாட ரூபாய் 25.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

3. சேலம் மாவட்டம், அம்மாபேட்டை குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்

குமரகிரி மலையின்மீது அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சுமார் 500 ஆண்டுகள் பழமையானது. இத்திருக்கோயில் சேலத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில், அம்மாபேட்டையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுமார் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்/பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இக்கோயிலுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மலைப்பாதை அமைத்தல், காட்சி

கோபுரம் மற்றும் அடிப்படை வசதிகள் அமைக்க 500.00 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

4. தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தைப் புதுப்பித்தல்

தென்காசி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சிக்குச் சொந்தமான கலைவாணர் கலையரங்கம் 3–9–1968 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கலையரங்கம் குற்றாலம் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்கட்டடம் கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது. குற்றாலத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் சாரல் திருவிழா 7 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இவ்விழா நாட்களில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விழாவின்போது இலட்சக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குற்றாலத்திற்கு வருகை புரிகின்றனர். எனவே, குற்றாலத்தில் உள்ள கலைவாணர் கலையரங்கத்தைப் புதுப்பிக்க 400.00 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

5. தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கும் சங்கரன்கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கழுகுமலை அமைந்துள்ளது. இத்தலம் மிகப் பழமையான கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என கல்வெட்டுகள்மூலம் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். கழுகுமலை சுமார் 344 அடி உயரம் கொண்டது. இந்த மலையில் அமைந்துள்ள கோயில் கருவறையும் அர்த்தமண்டபமும் மலையைக் குடைந்து செதுக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள கழுகுமலைக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 100.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி, கழிவறை வசதி, மலையடிவாரத்தில் இருந்து கோயிலுக்குச் செல்லும் பாதையில் படிக்கட்டுகள் மற்றும் பாதுகாப்புக் கைப்பிடிகள் அமைத்தல் போன்ற சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. கன்னியாகுமரி, மதுரை, உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய சுற்றுலாத் தலங்களில் வார இறுதி நாட்களில் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்துதல்

சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் விதத்திலும், பாரம்பரிய மற்றும் கலாச்சார சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காகவும், ஒவ்வொரு வார இறுதி நாட்களில் கன்னியாகுமரி, மதுரை, உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய சுற்றுலாத் தலங்களில் தமிழகத்தின் பல்வேறு கிராமிய மற்றும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். நான்கு சுற்றுலாத் தலங்களில் 24 வாரங்களுக்கு மொத்தம் 96 நிகழ்ச்சிகள் நடத்தப்படும். ஒரு நிகழ்ச்சிக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 96.00 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

7. சென்னை தீவுத்திடல் ஓட்டல் தமிழ்நாடு, திறந்தவெளி உணவகத்தில் சமையலறையை நவீனமயமாக்குதல்

சென்னை தீவுத்திடலில் ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம் அமைந்துள்ளது. இந்த உணவகத்திலிருந்து நகரில் உள்ள அரசு துறைகள் நடத்தும் கூட்டங்களுக்கு மற்றும் பணிஓய்வு விழாவிற்கு உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படுகின்றன.

தீவுத்திடல் ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகத்தில் உள்ள சமையலறையை நவீனமயமாக்குதல், சமையலறை கட்டுதல் மற்றும் வெப்பம் வெளியேற்றும் வசதி அமைக்கும் பணிகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

8. ஓட்டல் தமிழ்நாடு, காஞ்சிபுரத்தில் 10 அறைகளை மேம்படுத்துதல்

காஞ்சிபுரம் தென்னிந்தியாவின் தொன்மையான நகரம். இந்துக்களின் புனித யாத்திரை தலமும் ஆகும். இங்குள்ள எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கைலாசநாதர் ஆலயம் சிவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. உலகளந்த பெருமாள் கோயில், ஏகாம்பரேஸ்வரர் கோயில் ஆகிய பழமையான கோயில்களுடன் விளங்கும் பெருமை வாய்ந்த தலம் ஆகும்.

காஞ்சிபுரம், ஓட்டல் தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ஓட்டல் தமிழ்நாடு காஞ்சிபுரத்தில் உள்ள 23 அறைகளில் 10 அறைகள் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

9. ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரில் 10 அறைகளைப் புனரமைத்தல்

தஞ்சாவூர் சோழப் பேரரசின் மிகவும் பழமையான நகரம். தஞ்சாவூரில் பெரிய கோயில் என்று அழைக்கப்படும் பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது.

தஞ்சாவூருக்கு ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்றனர். தஞ்சாவூரில் ஓட்டல் தமிழ்நாடு பாரம்பரிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு ஓட்டல் தமிழ்நாடு தஞ்சாவூரில் உள்ள 32 அறைகளில் 10 அறைகள் ரூபாய் 7.50 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டன.

தற்பொழுது ஓட்டல் தமிழ்நாடு, தஞ்சாவூரில் 10 குளிரூட்டப்பட்ட அறைகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

10. ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் சமையலறையை மேம்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி என்று அழைக்கப்படும் திருச்சி மாநகர் தமிழ்நாட்டின் மையப் பகுதியில் அமைந்துள்ள புகழ்மிக்க ஓர் ஆன்மிக தலமாகும். இங்கு பிரசித்திபெற்ற மலைக்கோட்டை கோயில், ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் மற்றும் சமயபுரம் ஆகிய கோயில்கள் உள்ளன.

ஓட்டல் தமிழ்நாடு, திருச்சியில் உள்ள உணவகத்தை (Banana Leaf) குத்தகைதாரர் நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2016 ஆம் ஆண்டு பெற்று, தற்பொழுது உணவகத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துவதால் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் சமையலறை மேம்படுத்தப்படும்.

11. ஓட்டல் தமிழ்நாடு, பிச்சாவரத்தில் உணவகம் மற்றும் சமையலறையை மேம்படுத்துதல்

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்துக்கு அருகே வங்கக் கடலை ஒட்டிய பகுதி பிச்சாவரம். பிச்சாவரத்தில் அலையாத்திக் காடுகள் (சதுப்பு நிலக் காடுகள், மாங்குரோவ் காடுகள்) அமைந்துள்ளன. இங்குள்ள காடுகள் உலகின் இரண்டாவது பெரிய அலையாத்திக் காடுகள் ஆகும்.

ஓட்டல் தமிழ்நாடு, பிச்சாவரத்தில், குத்தகைதாரர் சாரதா ராம் நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் 20–6–2019 அன்று பெறப்பட்டது. தற்பொழுது, ஓட்டல் தமிழ்நாடு, பிச்சாவரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் செயல்பட்டு வருகின்றது.

எனவே, ஓட்டல் தமிழ்நாடு, பிச்சாவரத்தில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் உணவகம் மற்றும் சமையலறை மேம்படுத்தப்படும்.

12. ஏற்காடு இளைஞர் விடுதியை மேம்படுத்துதல்

ஏற்காடு, தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள கோடை வாழிட நகராகும். இது கிழக்குத் தொடர்ச்சி மலைத் தொடரில் சேர்வராயன் மலையில் அமைந்துள்ளது. ஏற்காடு கடல் மட்டத்தில் இருந்து 5,326 அடி உயரத்தில் உள்ளது. இதை ஏழைகளின் ஊட்டி என்றும் அழைப்பர்.

ஏற்காடு இளைஞர் விடுதி கடந்த 2009 ஆம் ஆண்டு ஏற்கெனவே புனரமைக்கப்பட்டது. தற்பொழுது, ஏற்காடு இளைஞர் விடுதி ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

13. ஓட்டல் தமிழ்நாடு, ஒகேனக்கல் முதல் தளத்தில் குளிர்சாதன வசதியுடைய 13 அறைகளை மேம்படுத்துதல்

ஒகேனக்கல் அருவி, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள காவேரி ஆற்றில் அமைந்துள்ள புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகும். இது தருமபுரியில் இருந்து 46 கி.மீ. தொலைவிலும், பெங்களூருவில் இருந்து 180 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

ஓட்டல் தமிழ்நாடு, ஒகேனக்கல் 12 ஆண்டுகளுக்கு முன்பு மேம்படுத்தப்பட்டது. தற்பொழுது, முதல் தளத்தில் உள்ள குளிர்சாதன வசதியுடைய 13 அறைகள் மற்றும் கழிவறைகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

14. ஓட்டல் தமிழ்நாடு, கிருஷ்ணகிரியில் தார்ச் சாலை அமைத்தல்

கிருஷ்ணகிரி, பெங்களூருவில் இருந்து 90 கி.மீ. தொலைவிலும் ஓசூர் மற்றும் தருமபுரியில் இருந்து 45 கி.மீ தொலைவிலும் உள்ள நகராட்சி ஆகும். ஓட்டல் தமிழ்நாடு, கிருஷ்ணகிரியில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தார்ச் சாலை அமைக்கப்பட்டது.

எனவே, ஓட்டல் தமிழ்நாடு, கிருஷ்ணகிரியில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்படும்.

15. ஓட்டல் தமிழ்நாடு, ஓசூரில் 4 குடில்களைப் புனரமைத்தல்

ஓசூர் வட்டம், ஓசூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் ஒன்றியம் ஆகியவற்றின் நிருவாக தலைமையிடம் ஓசூர். இங்கு புகழ் பெற்ற ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் ஆலயம் உள்ளது.

ஓட்டல் தமிழ்நாடு, ஓசூர் கடந்த 2010 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. தற்போது இங்குள்ள 14 குடில்களில் 4 குடில்கள் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

16. ஓட்டல் தமிழ்நாடு (அலகு–1), மதுரையில் 8 அறைகளை மேம்படுத்துதல்

வைகை ஆறு பாய்ந்து வளம் சேர்க்கும் பெருமைவாய்ந்த பண்டைக்கால மாநகரம் மதுரை. இங்கு விண்ணை எட்டும் அளவிற்கு அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலில் 14 வண்ணக் கோபுரங்கள் காட்சியளிக்கின்றன. காந்தி நினைவு அருங்காட்சியகம், 17 ஆம் நூற்றாண்டின் திருமலை நாயக்கர் மஹால், திருப்பரங்குன்றம் முருகன் கோயில் மற்றும் கள்ளழகர் கோயில் ஆகியவை மதுரையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் இதர அம்சங்களாகும்.

ஓட்டல் தமிழ்நாடு, மதுரை (அலகு–1)–ல் உள்ள 8 அறைகள் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

17. ஓட்டல் தமிழ்நாடு, குற்றாலத்தில் பழைய உணவகத்தை இரண்டு அறைகளாக மாற்றுதல்

தென்காசி மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் 160 மீ. உயரத்தில் அமைந்துள்ளது குற்றாலம் பேரூராட்சி. சிற்றாறு நதிக்கரையில் உள்ள குற்றாலம் அருவி ஒரு முக்கிய சுற்றுலா ஈர்ப்பாக உள்ளது.

ஓட்டல் தமிழ்நாடு, குற்றாலத்தில் உள்ள பழைய உணவகம் ரூபாய் 17 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு அறைகளாக மாற்றப்படும்.

18. ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் தரைத்தளத்தில் 12 அறைகள் புனரமைத்தல் மற்றும் 24 அறைகள் மேம்படுத்துதல்

கன்னியாகுமரி இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள மாவட்டம். கன்னியாகுமரி பல்வேறு சிறப்புகள் வாய்ந்த சுற்றுலாத் தலமாகும்.

ஓட்டல் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் புனரமைப்பு பணிகள் கடந்த 2001 மற்றும் 2008 ஆம் ஆண்டு நடைபெற்றன. தற்போது, ரூபாய் 42.50 இலட்சம் மதிப்பீட்டில் 24 அறைகள் மேம்படுத்தப்படும். மேலும், ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளத்தில் உள்ள 12 அறைகளில் குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகள் புனரமைக்கப்படும்.

19. ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூரில் 15 அறைகளைப் புனரமைத்தல்

கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இங்கு அமைந்துள்ள சிறுவாணி அருவி, மருதமலை முருகன் கோயில், ஈஷா யோகா தியான நிலையம் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம் ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர்.

ஓட்டல் தமிழ்நாடு, கோயம்புத்தூர் நகரத்தின் மையப் பகுதியில் 44 அறைகளுடன் அமைந்துள்ளது. இங்கு சுற்றுலாப் பயணிகளின் தங்கும் வசதியை மேம்படுத்த 15 அறைகள் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், கலை பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் துறைகளுக்கான அறிவிப்புகளை வெளியிடுவார்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான கலை பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் துறைகளுக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

கலை பண்பாட்டுத் துறை

1. ஜவகர் சிறுவர் மன்றங்களின் திட்ட அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கலையாசிரியர்களின் தொகுப்பூதியத்தினை உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னையில் செயல்படும் ஜவகர் சிறுவர் மன்ற மையங்களில் பகுதி நேர கலையாசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்படும் மாத தொகுப்பூதியம் ரூ.4,000/–த்திலிருந்து ரூ.5,000/– ஆகவும், மாவட்ட/விரிவாக்க மையங்களில் பணிபுரியும் பகுதி நேர கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் மாத தொகுப்பூதியம் ரூ.3,000/–த்திலிருந்து ரூ.4,000/– ஆகவும், ஊரக ஜவகர் சிறுவர் மன்றங்களில் பணியாற்றும் பகுதி நேர கலையாசிரியர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படும் மாத தொகுப்பூதியம் ரூ.2,000/–த்திலிருந்து ரூ.3,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கென கூடுதலாக ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.25.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. ஓவிய–சிற்பக் கலைஞர்களுக்கு வழங்கப்படும் கலைச்செம்மல் விருது தொகை மற்றும் விருதாளர்களின் எண்ணிக்கையினை உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் ஓவியம் மற்றும் சிற்பக் கலைத் துறைகளின் மரபு வழி (Traditional) மற்றும் நவீன பாணி (Contemporary) கலைப் பிரிவுகளில் புகழ்பெற்ற அரிய சாதனைபுரிந்த வல்லுநர்களைப் பாராட்டும் வகையில், தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறையால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் கலைச்செம்மல் விருது தொகை ரூ.50,000/–த்திலிருந்து ரூ.1.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், விருதாளர்களின் எண்ணிக்கை 2–லிருந்து 6 ஆக உயர்த்தப்படும். இதற்கென விருது தொகைக்கு ரூ.6.00 இலட்சமும், விழாச் செலவினங்ளுக்கு ரூ.1.50 இலட்சமும் என ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மண்டலக் கலை பண்பாட்டு மையம் தோற்றுவித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டுத் துறையின் கலைப் பணிகளை சிறப்புற மேற்கொள்ளும் வகையில், காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டங்களைப் பிரித்து, வேலூரை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு மண்டலக் கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூ.36.00 இலட்சமும், தொடராச் செலவினமாக ரூ.14.00 இலட்சமும் என மொத்தம் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. கலை பண்பாட்டு இயக்ககத்தில் இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டு இயக்ககத்தில், இயக்குநர் மற்றும் இணை இயக்குநருக்கு அடுத்த நிலையில் கண்காணிப்பாளர்கள் மட்டுமே உள்ளதால், கல்வியகங்களின் பாடத் திட்டம் மற்றும் தேர்வுகளைக் கண்காணித்தல், பாடநூல்களை அச்சிடுதல், ஆசிரியர்களின் தரத்தினையும், மாணவர்களின் கல்வித் தரத்தினையும் அவ்வப்போது ஆய்வு செய்தல் மற்றும் துறையின் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் புதியதாக ஏற்படுத்தப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.19.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. கிருஷ்ணகிரி, சீர்காழி மற்றும் சிவகங்கை மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கிருஷ்ணகிரி, சீர்காழி மற்றும் சிவகங்கை மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் பயிற்சியும், மாவட்ட

ஜவகர் சிறுவர் மன்ற வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இசைப் பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் மன்றத்தில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, கிருஷ்ணகிரி, சீர்காழி மற்றும் சிவகங்கை மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக ரூ.330.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தமிழக பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து வளர்த்திடும் வகையில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்து மாவட்டங்களில் மாவட்டக் கலை மன்றங்கள் தொடங்குதல் மற்றும் மாவட்டக் கலை மன்றத்தின் கலைப் பணிகளுக்கு நல்கை வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான கலைஞர்கள் மற்றும் இளைஞர்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்தவும், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின்கீழ் 5 மாவட்டக் கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அம்மாவட்டக் கலை மன்றங்களை மேம்படுத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 மாவட்டங்களுக்கு தொடரும் செலவினமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. மாவட்டக் கலை மன்றம்மூலம் வழங்கப்படும் மாவட்டக் கலை விருதுகள் எண்ணிக்கையினை உயர்த்துதல் மற்றும் புதிய மாவட்டங்களில் மாவட்டக் கலை மன்றம்மூலம் கலை விருதுகள் வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்ட ஆட்சியரின் தலைமையில் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்கள்மூலம் ஆண்டுதோறும் வழங்கப்படும் மாவட்டக் கலை மன்ற விருதுகளின் எண்ணிக்கையினை 5–லிருந்து 10 ஆக உயர்த்தியும், இதற்காக 32 மாவட்டங்களுக்குக் கூடுதலாக ரூ.1,35,000/– வீதம் ரூ.43.20 இலட்சமும், புதியதாக உருவாக்கப்பட்ட தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 கலைஞர்களுக்கு மாவட்டக் கலை மன்ற விருதுகள் வழங்கிட,

மாவட்டம் ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சம் வீதம், 5 மாவட்டங்களுக்கு ரூ.10.50 இலட்சம் எனக் கூடுதலாக ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினமாக ரூ.53.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் புதிய பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள் தொடங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இசைக் கல்லூரிகளில் பரதநாட்டிய இளங்கலை பட்டப் படிப்பும், திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் வயலின் இளங்கலை பட்டப் படிப்பும், நட்டுவாங்கம் மற்றும் நாட்டுப்புறக்கலை பட்டயப் படிப்புகளும், கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரியில் தவில் மற்றும் நாதஸ்வரம் பட்டயப் படிப்புகளும் துவங்கப்படும். இதற்கென தொகுப்பூதியத்தில் 8 பணியிடங்களைத் தோற்றுவித்திட தொடரும் செலவினமாக ரூ.14.00 இலட்சமும், இசைக் கருவிகள் மற்றும் அறைகலன்களை கொள்முதல் செய்திட தொடராச் செலவினமாக ரூ.8.00 இலட்சமும் என ஒட்டுமொத்தமாக ரூ.22.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. கலை பண்பாட்டு இயக்ககத்தின் இணை இயக்குநர் பயன்பாட்டிற்கு புதிய வாகனம் வாங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டு இயக்ககத்தின் இணை இயக்குநரின் அலுவலகப் பயன்பாட்டிற்கு புதிய பொலிரோ சீருந்து வாங்கிட தொடராச் செலவினமாக ரூ.9.00 இலட்சமும், ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகனப் பராமரிப்பு செலவினங்களுக்காக தொடரும் செலவினமாக ரூ.3.50 இலட்சமும் என ஒட்டுமொத்தமாக ரூ.12.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. கலை பண்பாட்டுத் துறை அலுவலர்களுக்கு மடிக்கணினி வாங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் காஞ்சிபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மண்டலக் கலை பண்பாட்டு மையங்களில் பணிபுரியும் மண்டல உதவி இயக்குநர்களின்

அலுவலகப் பயன்பாட்டிற்காக மடிக்கணினிகள் வாங்கிட தொடராச் செலவினமாக ரூ.2.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. கலை பண்பாட்டு இயக்ககம் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகங்களில் காட்சிப்படுத்தும் பலகை அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழக அரசால் கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக நடத்தப்படும் கலை விழாக்கள் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்களில் நடைபெறும் கலை விழாக்கள் குறித்த செய்திகளைப் பொது மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலும், கலைஞர்கள் மற்றும் பொது மக்கள் பயனடையும் வகையிலும், காட்சிப்படுத்தும் பலகைகள் அமைப்பதற்கு சென்னை கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு ரூ.1.50 இலட்சமும், 7 மண்டலக் கலை பண்பாட்டு மைய அலுவலகங்களுக்கு தலா ரூ.50,000/– வீதம் ரூ.3.50 இலட்சமும் என ஒட்டுமொத்தமாக தொடராச் செலவினமாக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் ஒலி, ஒளி நூலகம் மற்றும் மின்னியல் நூலகம் (Digital Library) அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒலி, ஒளி நூலகம் (Audio Video Library) அமைத்திட கல்லூரி ஒன்றிற்கு ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.20.00 இலட்சமும், மின்னியல் நூலகம் (Digital Library) அமைத்திட கல்லூரி ஒன்றிற்கு ரூ.2.50 இலட்சம் வீதம் ரூ.10.00 இலட்சமும் என ஒட்டுமொத்தமாக தொடராச் செலவினமாக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, இயல், இசை, நாடகம், நாட்டியம் மற்றும் கிராமியம் ஆகிய கலை விழாக்கள் நடத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இயல், இசை, நாடகம், நாட்டியம் மற்றும் கிராமியம் போன்ற

கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வாழ்வாதாரங்களைப் பெருக்கும் நோக்கில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, இயல், இசை, நாடகம், நாட்டியம் மற்றும் கிராமியக் கலை விழாக்களை நடத்திட கலை ஒன்றிற்கு ரூ.10.00 இலட்சம் வீதம், 5 கலைகளுக்கு தொடரும் செலவினமாக, ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக ஒவ்வோர் ஆண்டும் இரண்டு புதிய நாடகங்களையும், இரண்டு புதிய நாட்டிய—நாடகங்களையும் தயாரித்து மேடையேற்றம் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்ப் பண்பாட்டினையும், தமிழ் இலக்கியக் காட்சிகளையும், தமிழர்களின் வீரத்தினையும் வெளிப்படுத்தும் விதமாக வரலாறு, புராண, சமூக நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திடவும், தமிழ் கலைகள், இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டை மையக் கருத்தாகக் கொண்டு, தமிழில் இரண்டு புதிய நாடகங்களும், இரண்டு புதிய நாட்டிய—நாடகங்களும் தயாரித்து மேடையேற்றம் செய்வதற்கும், ஒவ்வொரு நாடகத்திற்கும் தலா ரூ.1.50 இலட்சம் வீதம் நான்கு நாடகத்திற்கு தொடரும் செலவினமாக ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

15. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக செயல்படுத்தப்படும் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்திற்கான தொகையினை உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக கர்நாடக இசையில் குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைத் துறைகளில் திறம்படைத்த புத்திளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.10.00 இலட்சம் தொகை ரூ.20.00 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கென கூடுதலாக தொடரும் செலவினமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

16. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளான நவம்பர் திங்கள் 13 ஆம் தேதியில் அவரது இரு நாடகங்களை நடத்தி, அவரது நினைவைப் போற்றிடும் வகையில் அரசு விழாவாகக் கொண்டாடுதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக நாடகத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளான நவம்பர் 13 ஆம் தேதியினை அரசு விழாவாகக் கொண்டாடும் வகையில், அவரது இரு நாடகங்களை நடத்திட, நாடகம் ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் இரு நாடகங்களுக்குத் தொடரும் செலவினமாக ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, கருத்தாழமிக்க கலைகள் சார்ந்த தகுதியுள்ள நூல்களைப் பதிப்பிக்க நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக நூல் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 5 நூல்களைப் பதிப்பிக்க தொடரும் செலவினமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

18. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் நடப்பாண்டு முதல் சித்ரா பௌர்ணமி விழா கொண்டாடுதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இசை மற்றும் கவின்கலைகள் குறித்து பொது மக்களிடையேயும், இசை அறிஞர்களிடையேயும் விழிப்புணர்வு ஏற்படுத்திட தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் சித்ரா பௌர்ணமி விழாவினை மூன்று நாட்கள் கொண்டாடுவதற்குத் தொடரும் செலவினமாக ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

19. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்தவும், ஆராய்ச்சி தொடர்பான அறிய விடயங்களை ஆவணப்படுத்துதல், ஆவணப் படம், குறும் படம் தயாரித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசை சம்பந்தமான ஆராய்ச்சிகள், சங்க காலம் முதல் தற்காலம் வரையிலான இசை மற்றும் நடனம், ஓவியம் மற்றும் இதர கவின் கலைகளின் பரிணாம வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகளின் இசை குறித்த கண்டுபிடிப்புகள், முதுகவின் கலைப் படிப்பிற்கான காட்சிவழி தொடர்பு மற்றும் ஓவியம் குறித்த ஆவணப் படங்கள், குறும் படங்கள் தயாரித்திட தொடரும் செலவினமாக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அருங்காட்சியகங்கள் துறை

1. சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்கம் மற்றும் மானிடவியல் கூடங்களை உள்ளடக்கிய கலையரங்க தொகுப்புக் கட்டடத்தை முழுமையாக மேம்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்க தொகுப்பு பாரம்பரியக் கட்டடத்தை முழுமையாக மீட்டுருவாக்கி, மேம்படுத்தப்பட்ட கலையரங்க உள்ளமைப்பு மற்றும் மானிடவியல் காட்சிக்கூடங்களைப் புதிய உள்ளமைப்புகளுடன் சிறப்புற வடிவமைக்க, தொடராச் செலவினமாக ரூ.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் புதிய நிருவாகக் கட்டடத்தைக் கட்டி, உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக பயன்பாட்டிற்காக தற்போதைய நிருவாகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய நிருவாகக் கட்டடம் கட்டுவதற்கும் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும், தொடராச் செலவினமாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள ஒரு பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி பாரம்பரிய உணவகம் அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள ஒரு பழைய பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி பாரம்பரிய சூழல் மற்றும் உட்கட்டமைப்பு கொண்ட உணவகம் ஒன்றினை உருவாக்க, தொடராச் செலவினமாக ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சென்னை அரசு அருங்காட்சியக பாந்தியன் (முதன்மை) கட்டடத்தை (1780) முழுமையாக மீட்டுருவாக்கி புவியமைப்பியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் தொல்லியல் காட்சிக்கூடங்களை மேம்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியக முதன்மை கட்டடமான பாந்தியன் கட்டடத்தை (1780) முழுமையாக மீட்டுருவாக்கி புவியமைப்பியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் தொல்லியல் காட்சிக் கூடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதுப்பொலிவுடன் காட்சியமைப்பதற்கான திட்ட மதிப்பீடான ரூ.30 கோடியை ஆண்டுக்கு ரூ.10 கோடி வீதம் மூன்றாண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. அருங்காட்சியகங்கள் துறையின்கீழ் செயல்படும் அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியக படிவ வளாகத்தின் (Fossil bed) இரு பக்கங்களில் சுற்றுச் சுவர் அமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரியலூர் புதை உயிரி படிவ அருங்காட்சியகத்தின் புதை உயிரி படிவங்களைக் கொண்ட 17.27 ஹெக்டர் நிலப்பகுதியின் வடக்கு எல்லையில் சுற்றுச் சுவர் அமைத்து பாதுகாக்க, ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. (1) சேலம், (2) கன்னியாகுமரி மற்றும் (3) விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தலா 50 சென்ட் இடத்தில் புதிய கட்டடம் கட்டி அருங்காட்சியகத்தை மாற்றியமைத்தல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சேலம், கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 50 சென்ட் அரசு நிலத்தில் புதிய கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மாற்றி அமைப்பதற்காக, தொடராச் செலவினமாக ரூ.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தொல்லியல் துறை

1. மத்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் அருங்காட்சியக மானியத் திட்டத்தின்கீழ் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தினை ரூ.8.27 கோடி மதிப்பில் மேம்படுத்துதல்

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களை தொல்லியல் விதிமுறைகளின்படி, பழமை மாறாமல் பாதுகாத்து, அவற்றை வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதற்கு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். இந்த உயரிய நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில், உலகப் புகழ் பெற்ற மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை வளாகத்திலுள்ள அகழ்வைப்பகத்தின் காட்சிக் கூடங்களை தொல்லியல் நெறிமுறைகளின்படி மேம்படுத்தும் பணிகள், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மத்திய மாநில பங்கீட்டுத் திட்டத்தின்கீழ், 80 சதவீதம் மத்திய அரசு பங்கீடாக ரூ.6.62 கோடி மற்றும் 20 சதவீதம் மாநில அரசு பங்கீடாக ரூ.1.65 கோடி ஆக மொத்தம் ரூ.8.27 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமான தஞ்சாவூர் மாவட்டம், மராட்டா தர்பார் மண்டபத்தில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் ரூ.6.25 கோடி மதிப்பில் மூன்று ஆண்டுத் திட்டமாக மேற்கொள்ளுதல்

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமான தஞ்சாவூர் அரண்மனை

வளாகத்தில் அமைந்துள்ள மராட்டா தர்பார் மண்டபத்தில் 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மராட்டியர் கால சுவர் ஓவியங்கள் உள்ளன. இச்சுவர் ஓவியங்களைப் பழமை மாறாமல் பாதுகாத்திடவும், தர்பார் மண்டபத்தின் கட்டடப் பகுதிகளை மறுசீரமைப்பு செய்யும் பணிகளுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் 2022–2023 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டு கால பணிகளுக்கு ரூ.6.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமான நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியிலுள்ள கவர்னர் மாளிகை பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் ரூ.4.03 கோடி மதிப்பில் இரண்டு ஆண்டுத் திட்டமாக மேற்கொள்ளுதல்

2019–2020 ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியிலுள்ள கவர்னர் மாளிகை “பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாக” அறிவிக்கப்பட்டுள்ளது. டேனிஷ் கட்டடக் கலை பாணியில் வடிவமைக்கப்பட்ட இம்மாளிகையினை தொல்லியல் நெறிமுறைகளின்படி பழமை மாறாமல் மறுசீரமைப்பு செய்து பாதுகாத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் 2021–2022 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுக் கால பணிகளுக்கு, தொடராச் செலவினமாக ரூ.4.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபினை வெளிக்கொணரும் வகையில், தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள தொடர் செலவினமாக வழங்கப்படும் ரூ.2 கோடியினை ரூ.3 கோடியாக உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்துவதன்மூலம், தமிழ்நாட்டின் சிறந்த பண்பாட்டு மரபினை அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டுக் காட்ட இயலும் என்ற வகையில், முறையான தொடர் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக, ஏற்கெனவே

வழங்கப்பட்டுவரும் தொடரும் செலவினமான ரூ.2 கோடியினை ரூ.3 கோடியாக உயர்த்தி இந்நிதியாண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. இரண்டு ஆண்டு முதுநிலைப் பட்டயக் கல்வி வழங்கும் வகையில் கல்வெட்டியல், தொல்லியல் பயிற்று நிறுவனக் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்தல்

தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையில், 1974 ஆம் ஆண்டு முதல் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் 'கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் ஓராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பை நடத்தி வருகிறது. இங்கு ஒவ்வோர் ஆண்டும், முதுநிலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 256 மாணவர்கள் இப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர். தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. மேலும், கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் வருங்கால தொல்லியல் அலுவலர்களை உருவாக்கும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தற்போது உள்ள ஓராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பினை, இரண்டு ஆண்டு கால முதுநிலைப் பட்டயப் படிப்பாக மாற்றியமைக்கவும், கல்வெட்டியல், தொல்லியல் பயிற்று நிறுவனக் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்திடவும் 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் தொடரும் செலவினமாக ரூ.59 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. தொல்லியல் துறையில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் வகையில், தனி அகழாய்வுப் பிரிவு ஒன்றினை உருவாக்கவும், தற்போதுள்ள பாதுகாப்பு மற்றும் நிருவாகப் பிரிவுகளை வலுப்படுத்தவும் 24 கூடுதல் பணியிடங்களைத் தோற்றுவித்தல்

தொல்லியல் அகழாய்வுகள் புதையலைத் தேடும் பணியல்ல. அது விடை தெரியாக் கேள்விகளுக்கான உண்மையைத் தேடும் தொடர் பயணம். தொல்பொருட்களை அறிவியல் முறைப்படி வகைப்படுத்தி பொருள்கொள்வதன்மூலம் மனிதனின் பரிணாம வளர்ச்சியை உலகிற்கு உணர்த்த இயலும். தொல்லியல் அகழாய்வுகளில் கண்டறிதல் முதல் பொருள் விளக்கம் அறிதல் வரை பல்வேறு தொழில்நுட்பத் திறன்கள் தேவைப்படுகின்றன. பல்வேறு வரலாற்றுத் தரவுகளைக் கண்டெடுத்து, வருங்கால சந்ததியினருக்கு

கொண்டுசேர்க்கும் வகையில் தொல்லியல் துறையில் தனி அகழாய்வுப் பிரிவு தோற்றுவிக்கவும், துறையின் பொறியியல் பிரிவு, மற்றும் நிருவாகப் பிரிவுகளை வலுப்படுத்தும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல்லியல் துறையில் தனி அகழாய்வுப் பிரிவு ஒன்றினை உருவாக்கவும், தற்போதுள்ள பாதுகாப்பு மற்றும் நிருவாகப் பிரிவுகளை வலுப்படுத்தவும் 24 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ.170 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் கட்டடக் கலை, கட்டமைப்புகளைத் துல்லியமான அளவீடுகளுடன் ஆவணப்படுத்துதல், தொல்பொருட்கள் மற்றும் பாறை ஓவியங்கள் மின்பதிப்பாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்

பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல், மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் நடத்துதல், கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல், அகழ்வைப்பகங்களை அமைத்தல் போன்ற நோக்கங்களுக்காக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சான்றுகளை முறையாக ஆவணப்படுத்திட முதற்கட்டமாக 5 வரலாற்றுச் சின்னங்கள், 1000 தொல்பொருட்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள 79 பாறை ஓவியங்களை மின்பதிப்பாக்கம் செய்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டு ரூ.21 இலட்சம் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு ரூ.21 இலட்சம் ஆக மொத்தம் ரூ.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. தொல்லியல் துறையின் 20 சார் அலுவலகங்களை நவீனப்படுத்திட கணினிகள், அச்சுப்பொறி இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அகண்ட அலை வரிசை இணைய இணைப்பு (நிலையான இணைய நெறிமுறை) வசதிகள் ஏற்படுத்துதல்

தொல்லியல் துறை ஆராய்ச்சி சார்ந்த துறையாகும். பல்வேறு தொழில்நுட்ப பிரிவுகளின்மூலம் தொல்லியல், வரலாறு, கல்வெட்டு, பாதுகாப்பு, அகழ்வைப்பகங்கள் என விரிவடைந்து,

மாநிலத்தில் உள்ள 20 மாவட்டங்களில் சார் அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலுவலகங்களை முழுமையாக நவீனப்படுத்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, துறையின் தலைமை அலுவலகம் மற்றும் 20 சார் அலுவலகங்களுக்குக் கணினிகள், அச்சுப்பொறி இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அகண்ட அலை வரிசை இணைய இணைப்பு (நிலையான இணைய நெறிமுறை) வசதிகள் மேற்கொள்ளப்படும். இதற்கான 2020–2021 ஆம் நிதியாண்டு ரூ.37.50 இலட்சம் தொடராச் செலவினமாகவும், ரூ.2.50 இலட்சம் தொடரும் செலவினமாகவும் ஆக மொத்தம் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் காவல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் 50 பணியாளர்களுக்கு நிலை ஊதியம் வழங்குதல்

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 92 பாதுகாக்கப்பட்ட சின்னங்களை தொன்மை மாறாமல் பாதுகாப்பது மிக அவசியமாகும். வரலாற்றுச் சின்னங்களை சேதப்படுத்துதல், ஊறு விளைவித்தல், ஊனப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை தவிர்க்க ஏதுவாக, காவல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள, 2018–2019 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகளின்கீழ் 50 வரலாற்றுச் சின்ன பாதுகாவலர்களுக்கு நிலை ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம் வெளிமுகமைமூலம் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று மீதமுள்ள பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் புதியதாக 50 வரலாற்றுச் சின்ன பாதுகாவலர்களுக்கு நிலை ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம், 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் வழங்க, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடரும் செலவினமாக, ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முதற்கட்டமாக 156 தொல்லியல் மரபு மன்றங்கள் தொடங்குதல்

தொல்லியல் துறையில் தற்போது நடைபெற்றுவரும் களப் பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப்

பராமரித்தல், தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வுப் பணிகள் மேம்படுத்துதல், அகழ்வைப்பகம் நிறுவுதல், கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் பொருளுணர்தல் போன்ற ஆய்வுப் பணிகளுடன் மாணவர்களிடையே நமது பன்முகம் கொண்ட வளமையான பண்பாட்டினைக் கொண்டு சேர்த்திட சிறப்பு கவனம் அளித்திடும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக 119 கல்வி மாவட்டங்களிலுள்ள ஒரு பள்ளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10,000/– வீதமும் மற்றும் மாவட்டத்திற்கு ஒரு கல்லூரிக்கு ரூ.20,000/– வீதம் 37 கல்லூரிகளில் ஆக மொத்தம் 156 தொல்லியல் மரபு மன்றங்கள் (Heritage Clubs) தொடங்கிட தொடரும் செலவினமாக, ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

1. தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் புதிய கூட்டரங்கு கட்டுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேனி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தினுள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர்

அலுவலர்கள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதற்கும், மக்கள் குறைதீர்க்கும் கூட்டம், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்றவாறு சுமார் 300 நபர்கள் பங்குபெறும் வகையில் ரூ.3.54 கோடியில் புதிய கூட்டரங்கு கட்டப்படும்.

2. சமூகம் சார்ந்த பேரழிவு அபாய மேலாண்மை

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தனி மனிதர்களுக்கு ஏற்படும் பேரழிவு அபாயங்கள் மற்றும் உயிர் இழப்புகளைக் குறைப்பதற்கும், வாழ்வாதார கட்டமைப்புகளுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கும் தமிழக அரசு முழு முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சமூகப் பங்களிப்பை வலுப்படுத்துவதற்காக, CBDRM கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறைத் திட்டமாக உருவாக்கப்பட உள்ளது. சமூகம் சார்ந்த பேரழிவு அபாய மேலாண்மையானது சமுதாயத்தின் பங்களிப்போடு அபாயங்கள் மதிப்பிடுதல், உத்திகள் உருவாக்குதல் மற்றும் அபாயத் தடுப்பு மற்றும் தணிப்புத் திட்டத்திற்கான செயல் திட்டம் உருவாக்குதல் போன்றவற்றின்மூலம் சமூகத்தின் திறன்களை மேம்படுத்தி பேரிடர்களை முழுமையான ஆயத்த நிலையுடன் எதிர்கொள்ள வழிவகை செய்யும். சமூகம் சார்ந்த பேரழிவு அபாய மேலாண்மைக்கு ரூ.5 கோடி வழங்கப்படும்.

3. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகப் பணியமைப்பு மூன்று உதவி கணினி ஆய்வாளர்கள் (Assistant System Analyst) பணியிடங்கள் உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பல்வேறு செயல்பாடுகளை இணையதள வசதிமூலம் உருவாக்கி திறம்படி நிருவகிப்பதற்கு, பல்வேறு அமைப்பு முறைகளிலிருந்து தகவல்களைச் சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், நிருவாகம் முடிவெடுக்கும் முயற்சிகளுக்கு உதவும் அறிக்கையை அவ்வப்போது உருவாக்கவும், இ—அலுவலகப் பயன்பாடுகளை நிருவகிப்பதற்கும், கிராம அளவில் இருந்து தகவல்கள் இணையதளம்மூலம் உள்ளீடு செய்யப்பட்டு, ஒரே தகவல் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் உள்ளீடு செய்யப்படுவதைத் தவிர்ப்பதன்மூலம், தேவையான அறிக்கையை ஒவ்வோர் உயர்மட்ட அளவில் உறுதிப்படுத்துவதன்மூலம் நேரம்

சேமிக்கப்படுவதுடன் நிருவாகத்திற்குத் தேவையான அறிக்கைகளை எந்த ஒரு நேரத்திலும் ஆய்வுக் கூட்டங்களின்போதும், மக்கள் சார்ந்த திட்டங்கள் தொடர்பான முடிவுகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

ஆகையால் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்பாடுகளை மேலும் திறம்பட நிருவகிக்க மூன்று உதவி கணினி ஆய்வாளர்கள் (வருவாய் நிருவாகம்–1, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்–1 மற்றும் பேரிடர் மேலாண்மை–1) பணியிடங்களை தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆலோசனையுடன் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலமாகவோ அல்லது நேரடி ஆட்சேர்ப்பு மூலமாகவோ அல்லது மற்ற அரசுத் துறைகளில் பணியாற்றுபவர்களின் (Deputation) வாயிலாகவும் ஆண்டொன்றிற்கு ரூ.13.58 இலட்சம் செலவில் நியமனம் செய்திடப்படும்.

4. நில நிருவாகம் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரகங்களுக்கு சட்டப் பிரிவு மற்றும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை வழக்குகளை கண்காணிக்கும்பொருட்டு சட்ட ஆலோசகர் நியமனம் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையரகம் ஆகிய மூன்று அலுவலகங்களுக்கும் பொதுவாக சட்டம் பயின்ற கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலையில் ஒரு சட்ட ஆலோசகரை நியமித்து, அரசாணை (நிலை) எண் 582, வருவாய்த் துறை, நாள் 31–12–2014–ல் அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி பணியிடத்தினை குற்றவியல் இயக்குநர் அலுவலகத்திலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் நிரப்பிடவும், வருவாய் நிருவாக ஆணையரின் கட்டுப்பாட்டில் பணிபுரியவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதால், தனியாக சட்டப் பிரிவு ஒன்று நில நிருவாக ஆணையர் அலுவலகம் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் அலுவலகத்திற்கு உருவாக்கப்படும். நீதிமன்ற வழக்குகளைக் கவனத்துடன் கையாள சட்ட ஆலோசகரின்கீழ்

பணிபுரிய ஒரு கண்காணிப்பாளர், ஓர் உதவியாளர் மற்றும் ஒரு தட்டச்சர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

மேலும் மற்றுமொரு சட்ட ஆலோசகர் பணியிடத்தை மதுரை மாவட்டத்தில் உருவாக்கி, சட்டம் பயின்ற கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலையில் பணியமர்த்தி, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளைக் கண்காணித்து அரசின் நலன் பாதுகாக்கப்படும்.

இதனால் அரசுக்கு ஆண்டிற்கு ரூ.26,00,000/– (ரூபாய் இருபத்தாறு இலட்சம் மட்டும்) கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்படும்.

5. புதுக்கோட்டை மாவட்டத்தில் பாரம்பரியமிக்க புராதனக் கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் மறு கட்டுமானம் செய்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் பாரம்பரியமிக்க புராதனக் கட்டடங்களில் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருமயம், கீரனூர் மற்றும் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் பொதுப் பணித் துறையின் நிதியிலிருந்து புனரமைத்து, மறுகட்டுமானம் செய்து பாதுகாக்கப்படும்.

6. வருவாய்த் துறையில் பழைய கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் 50 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களுக்கு மாற்றாக ரூபாய் 8 கோடி செலவில் அலுவலக அறை, தங்கும் அறை, சமையற்கூடம், உணவருந்தும் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகள் உள்ளடங்கிய புதிய கட்டடங்களைக் கட்டித் தருதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசின் நலத் திட்டங்கள் எளிதில் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும், வருவாய்த் துறையில் பழுதடைந்த நிலையில் இருக்கும் கிராம நிருவாக அலுவலர் கட்டடங்களுக்குப் பதில் புதிய கட்டடங்களைக் கட்டித் தர வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், தமிழகத்தில் பழுதடைந்த நிலையில் இருக்கும் 50 கிராம நிருவாக அலுவலகங்களுக்குப் பதில் ரூ.8 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

புதியதாக கட்டப்பட உள்ள கிராம நிருவாக அலுவலர் கட்டடமானது அலுவலக அறை, தங்கும் அறை, சமையற்கூடம், உணவருந்தும் அறை மற்றும் கழிவறை வசதிகளுடன் இருக்கும்.

7. நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவு ஏற்படும் பகுதிகளை ஆராய்ந்து நீண்டகாலத் தணிப்புப் பணிகளைத் திட்டமிடல்

நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவு தொடர்ச்சியாக ஏற்படுகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை மற்றும் வட கிழக்குப் பருவமழைக் காலத்தில் நிலச் சரிவு ஏற்பட்டது. நிலச் சரிவுகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிலச் சரிவு ஏற்படும் பகுதிகளை ஆராய்ந்து தொடர்ந்து முன்னெச்சரிக்கைகள் வழங்கிடவும், மண்ணியல் மண்நுட்பப் பொறியியல் நிலம் மற்றும் நீர்ப்பயன்பாடு ஆகிய நிலச் சரிவு ஏற்படா வண்ணம் நீண்ட காலத் தணிப்புப் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்திடவும், ரூ.50 இலட்சம் செலவில் (Geology Geo Technical Engineering Land and Water use) பல்துறை வல்லுநர்கள் உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8. நுண் மண்டலங்கள் அடிப்படையில் சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் பூகம்பம் குறித்த ஆய்வு மேற்கொள்ளல்

பூகம்பப் பாதிப்புக்குள்ளாகும் இடங்கள் கடந்த கால பூகம்ப நிகழ்வுகள் மற்றும் பிராந்தியத்தின் டெக்டோனிக் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றன.

நில அதிர்வு மண்டலம்–III–ன்கீழ்வரும் சென்னை மாநகருக்கான பூகம்ப நுண் மண்டலத்தைப் பற்றிய விரிவான ஆய்வு ஏற்கெனவே அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரிடர் மேலாண்மை மையத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அடுத்தகட்ட ஆய்வுப் பணி நில அதிர்வு மண்டலம்–III–ன்கீழ்வரும் சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 7 அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரிடர் மேலாண்மை மையம் ஆகியவற்றின் கூட்டு செயல்பாட்டுடன் மேற்கொள்ளப்படும்.

9. அரசு நிலங்களின் குத்தகைத் தொகையை பகுத்தாய்வு செய்தல்

வருவாய் நிலை ஆணை 24A–ன்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்கள் தற்காலிக அடிப்படையில் வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் சுமார் 956 இனங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குத்தகை இனங்களில் வணிகமற்ற நோக்கத்திற்கு ஆண்டு குத்தகைத் தொகை நில மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்திற்கு 14 விழுக்காடு நில மதிப்பும் வசூல் செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் நில மதிப்பு பன்மடங்கு உயர்ந்துள்ள நிலையில், பெரும்பாலான குத்தகைதாரர்கள், குத்தகைத் தொகை அதிகமாக உள்ளது என கருதி நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்து, தடை ஆணை பெற்றுள்ளதால், குத்தகை வசூல் செய்ய இயலாமல் நிலுவைத் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. இதனால், அரசுக்கு மிகுந்த தணிக்கை இழப்பு ஏற்படுவதுடன் மாநிலக் கணக்காயரின் தணிக்கைத் தடையும் ஏற்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசின் வருவாய் இழப்பை சரி செய்வதற்கும், குத்தகைத் தொகையை நிலுவையின்றி செலுத்துவதை ஊக்குவிப்பதற்காகவும் குத்தகைதாரர்களின் நிதிச் சுமை மற்றும் நிலங்களின் விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, அரசு நிலங்களின் ஆண்டு குத்தகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்படும்.

10. நிலம் கையகப்படுத்தும் நேர்வுகளில் ஒப்புதல் அளிக்கும் அலுவலரின் அதிகார வரம்பை உயர்த்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிலம் கையகப்படுத்தும் செயல்முறைகளில் உள்ள தாமதத்தை தவிர்ப்பதற்காகவும், மேலும் நில எடுப்பு நடவடிக்கையினை எளிதாக்குவதற்காகவும், நிலம் கையகப்படுத்தும் நடைமுறைகளை சீரமைப்பது தொடர்பாக அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அதிகார வரம்பினை மாற்றியமைக்க, 2017 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுதல் மற்றும் ஒளிவு மறைவின்மை

மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான ஒப்புதல் அளிக்கும் அதிகார வரம்பு சரியீடுக்கு மட்டும் ரூபாய் 1 கோடி வரை எனவும் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உள்ளிட்ட சரியீடுக்கு ரூபாய் 2 கோடி வரை எனவும் நிர்ணயிக்கப்படும். ரூபாய் 1 கோடிக்கு மேல் மற்றும் 10 கோடிக்குக் குறைவான சரியீடு வழங்கவும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உள்ளிட்ட சரியீடு ரூபாய் 2 கோடியிலிருந்து 20 கோடிவரை தீர்ப்பாணை பகர்வதற்கு ஒப்புதல் அளிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படும். ரூபாய் 10 கோடிக்கு மேல் உள்ள சரியீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உள்ளிட்ட சரியீடு ரூபாய் 20 கோடிக்கு மேல் உள்ள இனங்களில் தீர்ப்பாணை பகர்வதற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் நில நிருவாக ஆணையருக்கு வழங்கப்படும். இதனால் தற்போதுள்ள நடைமுறையான வரைவுத் தீர்ப்பாணைக்கு அரசின் ஒப்புதல் கோரும் அவசியம் இராது.

11. ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் அரசுத் துறைகளுக்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளித்தல்

வருவாய் நிலை ஆணை எண் 23 மற்றும் 23A–யின்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்கள் மத்திய மற்றும் மாநில அரசின் துறைகளுக்கு நிலமாற்றம் செய்யப்படுகிறது. நடைமுறையிலுள்ள விதிகளின்படி ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கும் மற்றும் காவல் துறையின் காவல் நிலையம்/ காவலர் குடியிருப்பு, காவலர் பயிற்சி முகாம் மற்றும் மைதானம், போக்குவரத்துத் துறையில் வட்டார போக்குவரத்து அலுவலகம் போன்ற மாநில அரசுத் துறைகளுக்குத் தேவையான குறைந்தபட்ச நிலப் பரப்பினை மாவட்ட ஆட்சியர் அளவில் சம்பந்தப்பட்ட துறையைக் கலந்தாலோசித்து நில மதிப்பு வரம்பின்றி முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது நிருவாக நடைமுறையை எளிதாக்கும் வகையில் அரசு புதிய கோணத்தில் ஆராய்ந்து, பொது நோக்கங்களுக்குத் தேவைப்படும் நேர்வுகளில், ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களுக்கும் முன் நுழைவு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். (அரசின் பரிசீலனையில் உள்ளது) இருப்பினும், ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களைப்

பொறுத்தவரை சம்பந்தப்பட்ட துறையின் தடையின்மை/ கருத்திசைவு பெற்று அதனடிப்படையில் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட வேண்டும். மத்திய அரசுத் துறைகளைப் பொறுத்தவரை முன்நுழைவு அனுமதி அரசளவிலேயே வழங்கப்பட வேண்டும். இது மாநிலத்தின் திட்டங்கள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதைத் துரிதப்படுத்தும்.

12. ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் பொதுத் துறை நிலங்களுக்கு முன்நுழைவு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளித்தல்

வருவாய் நிலை ஆணை எண் 24–ன்கீழ் அரசு புறம்போக்கு நிலங்கள் மத்திய மற்றும் மாநில அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி, ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்கள் முறையான நில உரிமை மாற்ற ஆணையை எதிர்நோக்கி தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு மட்டும் முன்நுழைவு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நில உரிமை மாற்ற இனங்களில் சம்பந்தப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்கள் பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் வருவதால் அவர்களது கருத்திசைவினைப் பெற்ற பின்பே முடிவெடுக்கவேண்டியுள்ளதால், திட்டங்களை நிறைவேற்ற மிகுந்த காலதாமதமும், விலையேற்றமும் ஏற்படுகிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்தகைய இடர்பாடுகளைக் களையவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்விதமாகவும், நிருவாகத்தை எளிய முறையில் கையாளும் வகையிலும், மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு நில உரிமை மாற்றம் கோரப்படும் நேர்வுகளில், அவற்றின் அவசியம் கருதி ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் முன்நுழைவு அனுமதி வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டு, இதுபோன்ற நேர்வுகளில் முன்நுழைவு நாளில் நிலவும் சந்தை மதிப்பு வசூல் செய்யப்பட வேண்டும். மேலும், ஆட்சேபகரமான புறம்போக்கு இனங்களில் சம்பந்தப்பட்ட துறையின் தடையின்மை/கருத்திசைவு பெற்று

முன்நுழைவு அனுமதி வழங்கப்பட வேண்டும். மத்திய அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இனங்களுக்கு முன்நுழைவு கோரப்படும் நேர்வுகளில் அரசளவில் மட்டுமே முடிவெடுக்கப்பட வேண்டும்.

13. நிலச் சீர்த்திருத்தச் சட்டப் பிரிவு 37–A–ன்கீழ் அனுமதி வழங்கும் முறையை, எளிதாகவும் விரைவாகவும் வழங்குவதற்காக இணையவழிமூலம் விண்ணப்பிக்கும் முறையை செயல்படுத்துதல்

சட்டப் பிரிவு 37A–ன்படி எந்தவொரு தொழில் மற்றும் வணிக நிறுவனமும் உச்சவரம்புக்கு மேல் உள்ள நிலங்களை வாங்குவதற்கும் அல்லது வாங்கிய நிலத்தினை வைத்துக்கொள்வதற்கும் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும். அத்தகைய விண்ணப்பங்கள் எழுத்துமூலமாக உரிய விவரங்களுடன் இருத்தல் வேண்டும். விதி 56(1)–ன்படி எந்தவொரு தொழில் மற்றும் வணிக நிறுவனமும் உச்சவரம்புக்குமேல் உள்ள நிலங்களை வாங்குவதற்கும் அல்லது வாங்கிய நிலத்தினை வைத்துக்கொள்வதற்கும் அரசு வருவாய்த் துறைக்கு எழுத்துமூலமாக படிவம் 36–ல் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

அரசு விண்ணப்பத்திலுள்ள நிலங்களுக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிபந்தனையின்பேரில் அனுமதியோ அல்லது அனுமதி மறுத்தோ உத்தரவிடலாம். அவ்வாறு அனுமதி வழங்கும் உத்தரவில் மிகையாக உள்ள அனுமதி அளிக்கப்பட்ட நிலங்களின் விவரம் இருக்கும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிலச் சீர்திருத்தச் சட்டப் பிரிவு, 37A–ன்கீழ் அனுமதி வழங்கும் முறையை, எளிதாகவும் விரைவாகவும் வழங்குவதற்காக இணையதளத்தின் வழியாக விண்ணப்பிக்கும் முறை செயற்படுத்தப்படும்.

14. ஒரே இடத்தில் தொகுப்பாக உள்ள பூமிதான நிலங்கள் விவசாயத்திற்கு தகுதியற்றதாக உள்ள நிலையின் காரணமாக விநியோகம் செய்யப்படாமல் உள்ளன. அத்தகைய நிலங்கள் பூமிதான வாரியத்தின் ஆலோசனையின்பேரில் சமூகக் காடுகளாகவோ அல்லது மழைநீர் சேகரிப்புக் குளங்களாகவோ பயன்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, அரசு நிலங்களைப் பாதுகாப்பது தொடர்பாக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதில் பூமிதான நிலங்களை உள்ளாட்சி நிறுவனங்களுக்கோ, பொது காரணங்களுக்காகவோ அல்லது சமூகக் காடுகளுக்கோ ஒதுக்கீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது. இதனால், பூமிதான நிலங்கள் சட்டத்திற்குப் புறம்பான ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்கப்படுவதுடன், நிலத்தடி நீரை மேம்படுத்தவும் பசுமையாக்குதலுக்கும் வழிவகுக்கும்.

பூமிதான இயக்கத்தின்மூலம் 28,049.98 ஏக்கர் நிலங்கள், தானமாகப் பெறப்பட்டு, இதில் 20,522.93 ஏக்கர் பரப்பளவு விநியோகிக்கப்பட்டு, மீதமுள்ள 7,527.05 ஏக்கர் நிலங்கள் விநியோகிக்கப்படாமல் உள்ளன.

ஒரே இடத்தில் தொகுப்பாக உள்ள பூமிதான நிலங்கள் விவசாயத்திற்குத் தகுதியற்றவையாக உள்ள நிலையின் காரணமாக விநியோகம் செய்யப்படாமல் உள்ளதால் அத்தகைய நிலங்கள் பூமிதான வாரியத்தின் ஆலோசனையின்பேரில் சமூகக் காடுகளாகவோ அல்லது மழைநீர் சேகரிப்புக் குளங்களாகவோ பொது நலனுக்காகப் பயன்படுத்தப்படும்.

15. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி நிலையத்தில் ரூ.224 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் நில அளவைப் பயிற்சி நிலையம் 1988 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இங்கு பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 150 அலுவலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், நில அளவை செய்வதற்கு உரிமம் வழங்கும் பொருட்டு, கட்டுமானப் பொறியியலில் பட்டயம் பெற்ற 100 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.224 இலட்சம் செலவில் இப்பயிற்சி மையத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

16. நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை இயக்ககம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களின் உட்கட்டமைப்புகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிலையுயர்த்தப்பட்டு மேம்படுத்தப்படும்

நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறையின் இயக்ககம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களின் உட்கட்டமைப்பு

வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேம்படுத்த தேவையான வசதிகளான CCTV கேமரா பொருத்துதல், சிறிய கட்டட மற்றும் மின்னிணைப்பு வேலைகள், மரச் சாமான்களை மாற்றுதல் போன்ற பணிகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

17. தமிழ்நாடு நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறை சார்ந்த புகைப்பட மற்றும் நில அளவைக் கருவிகள் குறித்த நிரந்தரக் காட்சி அரங்கம், சென்னை நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்ககத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நில அளவை மற்றும் நில வரித் திட்டப் பணிகள் தொடர்பான நிரந்தரக் காட்சி அரங்கம் ஒன்று ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்ககத்தில் நிறுவப்படும். இதில், நில அளவை குறித்த நினைவுச் சின்னங்கள், பெருமுக்கோண நிலையங்கள், புராதன நில அளவைக் கருவிகள், பழமையான நில ஆவணங்கள் மற்றும் நில அளவை முறைகள் குறித்த புகைப்படங்கள் போன்றவை பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்படும்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை

1. தரவு மைய பூங்கா

தமிழகத்தில் குறிப்பாக சென்னையில், பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது தரவு மையங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சென்னையில் 14.8 Tbps கடல்வழி கேபிள் அதிவேக அலைக்கற்றை வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் மற்ற பகுதிகளுடன் சென்னையை இணைக்கும்வகையில் அமைந்துள்ள இவ்வசதியைப் பயன்படுத்தி, தரவு மையங்கள் அமைத்திடவும், முதலீட்டை ஈர்த்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை, சோழிங்கநல்லூரில் உள்ள எல்கோசெஸ்சில் 6 ஏக்கர்

நிலப் பரப்பில் 3 இலட்சம் சதுர அடியில் சுமார் ரூ.250 கோடி மதிப்பீட்டில் தரவு மைய பூங்கா ஒன்று தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்படும்.

2. தமிழ்நாட்டிற்கான தரவுக் கொள்கை

அரசுத் தரவுகளைப் பேணிப் பாதுகாத்து வைப்பதே இத்தரவுக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசுத் தரவு சேமிப்பு, தரவு மீட்டெடுப்பு, தரவுப் பகிர்வு மற்றும் தரவுப் பாதுகாப்புத் தொடர்பான விதிகள் மற்றும் நெறிமுறைகள் வகுக்கப்படுவதோடு, இக்கொள்கையை அனைத்துத் துறைகளும் பின்பற்றுமாறும் அறிவிக்கப்படும்.

3. அரசுப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு அடிப்படைக் கணினிக் கல்வியிலிருந்து வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திலான கணினிப் பயிற்சிகள் வரை அவரவர் துறையில் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

இவை தவிர அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக வழங்கப்படும் பல்வேறு இணையவழி சேவைகள் தொடர்பான பயிற்சி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிராம நிருவாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், பஞ்சாயத்து செயலாளர்கள் மற்றும் இதர மாவட்ட அலுவலர்களுக்குப் பயிற்சிக் கூட்டாளர்மூலம் ரூபாய் 10 கோடி செலவில் வழங்கப்படும். இப்பயிற்சித் திட்டம் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் நிதி ஆதாரத்தின்மூலம் செயல்படுத்தப்படும்.

4. பகிர்மான உட்கட்டமைப்புக்கான மெய்நிகர் சேவையகம்

மெய்நிகராக்கத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டு, அரசுத் துறைகளுக்காக 'பகிர்வு சேவையகக் கட்டமைப்பு' ஒன்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்படும். வலைதள சேவை, கைப்பேசி செயலி மற்றும் இதர பயன்பாடுகளுக்குத்

தேவையான குறைந்த மற்றும் மிதமான கணக்கீட்டு ஆற்றலை இம்மெய்நிகர் சேவையகம் பூர்த்தி செய்யும்.

மேலும், சேவையகத்தின் திறன் விரிவாக்கத்தால் பொதுமக்களுக்குக் குறைந்த பொருட்செலவில் சிறந்தமுறையில் அரசின் சேவைகளை வழங்க இது உதவும்.

5. கல்வி நிறுவனங்கள்தோறும் கணித் தமிழ்ப் பேரவை

நிறுவனங்கள்தோறும் கணித் தமிழ்ப் பேரவை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் 2016 முதல் தமிழகத்தில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் 200 கணித் தமிழ்ப் பேரவைகள் தொடங்கப்பட்டு, அவை திறம்பட செயலாற்றி வருகின்றன.

கணித் தமிழ் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை இளைஞர்களிடம் கொண்டுசெல்லும் உயரிய நோக்கில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயர் கல்வித் துறையின் துணையுடன் தமிழகத்தில் உள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளிலும் கணித் தமிழ்ப் பேரவைகள் தொடங்கிடத் தேவையான நடவடிக்கைகள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

6. 'கணித் தமிழ்' மின்னிதழ் (e–Magazine on KaniTamil)

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பரப்புரைப் பணிகளை மேம்படுத்தும் வகையில், கணித் தமிழ் வளர்ச்சியில், தமிழ் இணையக் கல்விக் கழகம் ஆற்றிவரும் பணிகள், கணித் தமிழ் வளர்ச்சியில் உலகெங்கும் உள்ள தமிழ் அமைப்புகளின் பங்களிப்புகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், கணித் தமிழ் வளர்ச்சியை ஊக்கப்படுத்த தமிழக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் போன்றவற்றை கணித் தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் "கணித் தமிழ் மின்னிதழ்" ஒன்று திங்கள்தோறும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

மாநிலத்திலுள்ள கணித் தமிழ்ப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்மின்னகம் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

7. தமிழ் இணையக் கல்விக் கழக தரவுச் சேவையகங்களை மாநில தரவு மையத்தில் நிறுவுதல்

தமிழ் இணையக் கல்விக் கழகம் 2000 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் கடந்த 20 ஆண்டுகளாக கணித் தமிழ் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்துவருகிறது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையவழிப் பாடத் திட்டங்கள், உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள், மின் நிகண்டு, மின் நூலகம், விரிதரவு, மின் அகராதி, இணையதளங்கள் போன்றவற்றின் தரவுகள் தற்போது தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் நிறுவப்பட்டுள்ள தரவுச் சேவையகத்திலேயே தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இத்தரவுச் சேவையகத்தின் தரவு சேமிப்பின் அளவை அதிகரித்திடும் வகையிலும், தரவுப் பாதுகாப்புக்காகவும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்துத் தரவுகள் மற்றும் தரவுச் சேவையகங்கள் மாநிலத் தரவு மையத்தில் நிறுவப்படுவதுடன், தரவுகளைப் பேரழிவிலிருந்து காத்திடும்வகையில், அதன் பிரதிகள் பேரிடர் தரவு மீட்பு மையத்தில் பாதுகாக்கப்படும்.

8. உயர் கல்வி ஆசிரியர்களுக்கு வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பங்களில் (Emerging Technologies) பயிற்சி

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (Block chain), இயந்திரக் கற்றல் (Machine Learning), மேகக் கணினியம் (Cloud Computing), இணையப் பாதுகாப்பு (Cyber Security) போன்ற புதிய தொழில்நுட்பங்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இப்புதிய தகவல் தொழில்நுட்பங்களில் ஆசிரியர்களின் பயிற்றுவிக்கும் திறனை மேம்படுத்திடும் நோக்கில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வளர்ந்துவரும் தகவல்

தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி ஐ.சி.டி. அகாடமி (I.C.T. Academy) மூலம் அளிக்கப்படும். இத்திட்டம் ஐ.சி.டி. அகாடமி நிறுவனத்தின் உறுப்பினர் திட்ட நிதி ஆதாரத்தின்மூலம் செயல்படுத்தப்படும்.

9. பட்டதாரி மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் பணிபுரியும் திறனை மேம்படுத்த வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் பயிற்சி

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுவரும் புரட்சி, தொழில் துறையில் பல புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி உள்ளதுடன், பல்வேறு தொழில்களின் செயல்படும் முறையையும் மாற்றியுள்ளது. இதன்காரணமாக தொழில் துறையில் ஏற்படும் புதிய வேலைவாய்ப்புகளில் தொழில்நுட்பம் சார்ந்த திறன் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் நிறுவனங்களின் நுழைவுநிலை வேலைகளுக்கு தெரிந்தெடுக்கப்படுபவர்கள் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), நம்பிக்கை இணையம் (Block Chain), இயந்திரக் கற்றல் (Machine Learning), மேகக் கணினியம் (Cloud Computing), இணையப் பாதுகாப்பு (Cyber Security) போன்ற புதிய தொழில்நுட்பங்களில் திறன் உடையவர்களாக இருப்பது அவசியமாகிறது.

எனவே, மாநிலத்தில் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்பு இறுதியாண்டில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது வேலை பெறும் திறனை அதிகரிக்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஐ.சி.டி. அகாடமிமூலம் வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், கிராம சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம் (RSETIs) மற்றும் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா திட்ட நிதியின்மூலம் செயல்படுத்தப்படும்.

10. கேபிள் டி.வி. தொலைக்காட்சி நல வாரியம் மறு சீரமைப்பு மற்றும் பெயர் மாற்றம்

கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும்வகையில் நலத் திட்டங்களைச் செயல்படுத்த கேபிள் டி.வி. தொலைக்காட்சித் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதனை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, “தமிழ்நாடு கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியம்” என பெயர் மாற்றம் செய்து புதுப்பித்து புதிய அலுவல் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள் கொண்ட நல வாரியம் அமைக்கப்படும்.

கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், எட்டாவது வள்ளல், பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்கு தந்த கொடை, புரட்சித் தலைவி அம்மா. கழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் பொற்பாதங்களில் விழி கசியும் கண்ணீரால் என் வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன். அம்மாவின் மறைவுக்குப் பிறகு, அச்சத்தில் கிடந்த தமிழகத்தை அனைத்து துறைகளிலும் இன்று உச்சத்தில் நிறுத்தி டெல்டா மாவட்டங்களைப் ‘பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக’ பிரகடனம் செய்த உலகத் தமிழினம் போற்றும் முதல்வனே, உழவினம் காத்த உழவனே!

கழனிகளின் நாயகன், காவேரி உரிமை காத்த தாயவன், ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற அம்மாவின் தாரக மந்திரத்தின்படி பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். அம்மா அமைத்துக் கொடுத்த ஆட்சித் தேருக்கு அச்சாணியாக திகழும் தேனி தந்த திருமகன், ‘பெரியகுளம் தந்த பெரிய பலம்’ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கங்களைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையை சொற்சிலம்பம் ஆடுகிற நிலமாக்கி சுவைகுன்றா களமாக்கி, சாதுரியத்தோடு வழிநடத்தும் அவிநாசி மண் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இப்பேரவையின் தூய பணிகளுக்கு துணை நின்று தொண்டாற்றும் துணை சபாநாயகர் பொள்ளாச்சியார் அவர்களுக்கும், அன்றலர்ந்த மலர் போல அமர்ந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் எனை ஈன்றெடுத்த தெய்வங்கள் தாய், தந்தையரை வணங்கி, எனை

தொடர்ந்து மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக்கிய எனது பாபநாசம் தொகுதி மக்களுக்கும் என் உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் நன்றி மறந்தாலும் உழவன் நன்றி மறக்க மாட்டான். இதனை 2021–ல் நன்றி மறக்காதவன் விவசாயி என்பதை சத்தியமாய் நாட்டுக்குச் சொல்லி எடப்பாடியாரின் கரங்களில் இந்தத் தமிழ்நாட்டை நிச்சயமாக மக்கள் மீண்டும் தரக் காத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஏதுவாக விவசாயிகளின் பாதுகாவலர், காவேரி காப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவேரி டெல்டா பகுதியினைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையில் வரலாற்றுச் சாதனையாக அமைந்துள்ளது என்பதைப் பெருமையுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலில், தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி, கடந்த 2011–2012 முதல் 2018–2019 வரை உள்ள எட்டு ஆண்டுகளில் ஆறு முறை 100 இலட்சம் மெட்ரிக் டன்னை கடந்து சாதனை படைத்துள்ளது. மத்திய அரசின் சிறந்த விருதான கிருஷி கர்மான் விருது தமிழக அரசிற்கு 5 முறை கிடைத்துள்ளது. வேளாண்மையில் எடுத்த முக்கிய கொள்கை முடிவுகளுக்காக 'அகில உலக வேளாண் விருது', 2019 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. நுண்ணீர் பாசனத் திட்டத்திற்காக "ஸ்கோச்" வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது. நீடித்த மானாவாரி வேளாண்மைக்கான சிறப்புத் திட்டம், கூட்டுப்பண்ணையம், பண்ணைக் குட்டைகளுக்கான "ஸ்கோச்" சான்றிதழும் நமது மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் தரும் பிரதம மந்திரி கிசான் நிதி உதவித் திட்டத்தில் 37 இலட்சத்துக்கும் அதிகமான வேளாண் குடும்பங்களை இணைத்து, இதுவரை 2 ஆயிரத்து 469 கோடி ரூபாய்க்கும் மேல் உதவித் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் 27 இலட்சத்து 18 ஆயிரம் ஏக்கர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையும், மேலும், 11 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நேரடி நெல் விதைப்பு முறையும் மேற்கொள்ளப்பட உள்ளன. 2019–2020 ஆம்

ஆண்டில், ஒட்டுமொத்த வேளாண் பயிர்களின் சாகுபடிப் பரப்பில் 7.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. “வித்தே விளைச்சலுக்கு ஆதாரம்” என்ற அடிப்படையில் 26 ஆயிரத்து 261 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. யூரியா உரத்துக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு நிலவியபோது, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகளுக்குத் தடையின்றி உரங்கள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளில் நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கத்தின்கீழ், 803 கோடி ரூபாய் மதிப்பில் 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் நில மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2020–2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலைக்கத்தக்க மானாவாரி இயக்கம், 7 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. கூட்டுப்பண்ணையத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 6 ஆயிரம் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் மானியத்தில், வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் நடப்பு ஆண்டில் 57 கோடியே 85 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 5 ஆயிரத்து 600 பண்ணைய அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020–2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் “தொட்டது துலங்கும், கை பட்டது விளங்கும்” என்பதற்கு சான்றாக, பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சி மண்ணில் துவக்கப்பட்ட குடிமராமத்துப் பணி திட்டம் வரலாறு படைத்துள்ளது. தமிழ்நாட்டில் நுண்ணீர்ப் பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்பட்டு, 4 இலட்சத்து 86 ஆயிரத்து 615 ஏக்கர் பரப்பில், ஆயிரத்து 993 கோடியே 64 இலட்சம் மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் இதுவரை, ஆயிரத்து 994 கோடி ரூபாய் காப்பீட்டுக் கட்டண மானியமாக மாநில அரசால் செலுத்தப்பட்டு 2016–2017 முதல் இதுவரை 7 ஆயிரத்து 959 கோடியே 70 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை, 38 இலட்சத்து 67 ஆயிரத்து 12 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மக்காச்சோளப் பயிரில் அமெரிக்கன் படைப்புழுவைக் கட்டுப்படுத்த 47 கோடியே 66 இலட்சம் ரூபாய் முழு மானியத்தில் ஒட்டுமொத்த மருந்து தெளிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மக்காச்சோள சாகுபடியில் இந்த ஆண்டு உயர் விளைச்சல் பெறப்பட்டுள்ளது. தமிழக வேளாண்மைத் துறையில் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்திட 12 ஆயிரத்து 620 கிராம ஊராட்சிகளில் உழவர்–அலுவலர் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் காய்கறி உற்பத்தியினை அதிகரிக்க ஐந்து வகையான காய்கறி விதைகள் அடங்கிய 12 இலட்சம் காய்கறி தளைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2020–2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது. 13 தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் இதுவரை 10 இலட்சத்து 6 ஆயிரம் லிட்டர் நீரா பானம் உற்பத்தி செய்யப்பட்டு, நீரா மற்றும் நீரா பானம் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் சுமார் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 17 ஆயிரத்து 500 சூரியசக்தி பம்புசெட்டுகள் ரூபாய் 472 கோடியே 85 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளன. வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 350 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்க 220 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மின்னணு வேளாண் சந்தைத் திட்டத்தில் தமிழ்நாட்டில் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இணைக்கப்பட்டு, மேலும் 40 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் 176 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட உள்ளன. தேசிய அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் இதுவரை 8 உணவுப் பதப்படுத்தும் தொகுப்புகளுக்கு மத்திய அரசின் அனுமதி பெற்று திட்ட செயலாக்கம் துவங்கப்பட உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் 2019–2020 ஆம் ஆண்டு 13 புதிய பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தந்த தங்கம், கொங்கு நாட்டுச் சிங்கம், விவசாயிகளின் பாதுகாவலர், காவேரி காப்பாளர், விவசாயிகளிடையே புத்துணர்ச்சியைப் புகுத்தி வேளாண்மையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நூறு ஆண்டுகள்

செய்ய வேண்டிய சாதனையை மூன்று ஆண்டுகளில் செய்து முடித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், தேனி தந்த திருமகன், பெரியகுளத்தின் பெருமை எங்களின் பாசமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் பணிவான நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அயராது உழைத்த வேளாண்மைத் துறையின் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. காவேரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, உடனடியாக சட்டம் நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வரலாற்றுச் சாதனையைப் போற்றி நினைவுகூரும் வகையில், தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் "நினைவு வளைவு" அமைக்கப்படும்

காவேரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, உடனடியாக சட்டம் நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வரலாற்றுச் சாதனையைப் போற்றி நினைவுகூரும் வகையில், அனைத்து விவசாயச் சங்கங்களின் சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் "நினைவு வளைவு" அமைக்க கோரிக்கை வைத்தனர்.

விவசாயச் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, கல்லணையில் "நினைவு வளைவு" அமைக்கப்படும்.

2. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படியும், சிறு, குறு, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளை ஒன்றிணைத்து உருவாகும் விவசாயக் குழுக்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டில் சமுதாய ஆழ்துளைக் குழாய்க் கிணறு, பம்பு செட்டுகளுடன்கூடிய நுண்ணீர்ப் பாசன வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும்

அரியலூர், கடலூர், கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை,

திருவள்ளூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறு, குறு, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளின் நலனுக்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சமுதாய ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து, சூரியசக்தி பம்புகள்மூலம் பாசன நீர் இறைத்து, நுண்ணீர்ப் பாசன முறைகளை அமைத்து, சாகுபடிப் பணியினை ஊக்குவிப்பதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. வன விலங்குகளால் பயிர்கள் பாதிக்கப்படாமல் இருக்க, விவசாயிகள் சூரிய சக்தி மின் வேலியினை அமைப்பதற்கு 2020–2021 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

விளைநிலங்களில் காட்டுப்பன்றி, காட்டெருமை, குரங்கு, யானை போன்ற பல்வேறு வன விலங்குகளால் பயிர்கள் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சூரிய சக்தியால் இயங்கும் மின் வேலிகளை மானிய விலையில் அமைப்பதற்காக 2020–2021 ஆம் நிதியாண்டில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. ஆங்காங்கே விளையும் குறைந்த அளவு காய்கறிகளை ஒன்று திரட்டி, முதன்மை பதப்படுத்தும் நிலையங்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக, 2020–2021 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் செலவில் 150 காய்கறி சேகரிப்பு மையங்கள் அமைக்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளை ஆர்வலர் குழு மற்றும் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைத்து, அவர்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு 150 காய்கறி சேகரிப்பு மையங்கள், வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகள் 2020–2021 ஆம் ஆண்டில் நான்கு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

5. சென்னைவாழ் மக்களின் வசதிக்காக 2020–2021 ஆம் ஆண்டில் கதீட்ரல் சாலையில் செங்காந்தள் பூங்கா எனும் புதிய பூங்கா 5 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பல்வேறு பசுந்தாவரங்களோடு பொழுதுபோக்கு அம்சங்களுடன் வடிவமைக்கப்படும்

சென்னைவாழ் மக்கள் பொழுதுபோக்கிற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செம்மொழிப் பூங்கா உருவாக்கப்பட்டு, வெற்றிகரமாக இயங்கி வருகிறது. அதிகரித்துவரும் சென்னைவாழ் மக்களின் தேவைக்காக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் செம்மொழிப் பூங்காவிற்கு எதிரில் பசுமையான சூழ்நிலையில் பல்வேறு அம்சங்களைக் கொண்டு செங்காந்தள் பூங்கா ஐந்து கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்படும்.

6. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்ட விளைபொருட்களுக்கு சென்னையில் விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்த, சென்னைக்கு அருகில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் 2020–2021 ஆம் ஆண்டில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான வர்த்தக மையம் 15 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் சென்னைவாழ் மக்களுக்கு கிடைக்க வழிசெய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் 4.12 ஏக்கரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான விற்பனை மையம் அமைக்கப்படும். இம்மையத்தில், கிடங்குகள், குளிர்பதன வசதிகள் தரம் பிரித்து வரிசைப்படுத்துவதற்காக இடவசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கித் தரப்படும்.

7. கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, 2020–2021 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை திறம்பட நிருவகிப்பதற்குப் புதிதாக கள்ளக்குறிச்சி விற்பனைக் குழு தோற்றுவிக்கப்படும்

கள்ளக்குறிச்சி தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டதாலும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஆண்டு முழுவதும் வரத்து

இருப்பதாலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை திறம்பட நிருவகிப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் விழுப்புரம் விற்பனைக் குழு, விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி விற்பனைக் குழு என இரண்டாகப் பிரிக்கப்படும்.

8. தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து வெங்காயம் கிடைக்கும் வகையில், வெங்காய சாகுபடிப் பரப்பையும், உற்பத்தியையும் அதிகரிப்பதற்கு 2020–2021 ஆம் ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும்

ஆண்டு முழுவதும் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டாலும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வெங்காயத்தின் உற்பத்தி குறைந்து, விலை உச்சத்திற்கு செல்கிறது. இந்த இடைவெளியைக் குறைத்து, வெங்காய சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் வெங்காய சாகுபடிப் பரப்பையும், உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

9. முருங்கை சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, 2020-2021 ஆம் ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும்

வறட்சியைத் தாங்கி வேகமாக வளரக்கூடிய முருங்கையின் இலைகள், பூக்கள், காய்கள், விதைகள் உட்பட அனைத்துப் பகுதிகளும், மருத்துவக் குணம் வாய்ந்தவை. தற்பொழுது முருங்கை இலைத்தூள், பென் ஆயில், முருங்கை தேயிலைத் தூள், காப்ஸ்யூல்கள் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிமூலம், முருங்கை விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டி வருகின்றனர். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் 35,000 எக்டர் பரப்பளவில் முருங்கை சாகுபடியினை ஊக்குவிக்கும் திட்டம் ஐந்து கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

10. விவசாயிகளுக்குத் தரமான காய்கறி விதைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர்கள்மூலம் நாற்றங்கால் மற்றும் காய்கறி விதை உற்பத்தித் திட்டம் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

தற்போது காய்கறிகளுக்கான தேவை அதிகரித்து வருகிறது. காய்கறி சாகுபடியில் விதைகளுக்கான செலவு பெரும்பங்கு

வகிப்பதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வணிக ரீதியாக விவசாயிகளே விதை மற்றும் நாற்றுக்களை உற்பத்தி செய்யும் திட்டத்தினை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி, 2020–2021 ஆம் ஆண்டில், 330 மெட்ரிக் டன் காய்கறி விதைகளை உற்பத்தி செய்வதற்காக 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. கரும்பு விவசாயிகளுக்கு உதவும் வகையில் கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் 10 இடங்களில் அமைப்பதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக, முன்னோடி விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்மூலம் கரும்பு சாகுபடிக்கேற்ற 10 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கப்படும்.

இம்மையங்கள் திறம்பட இயங்கும்வகையில், வேளாண்மைப் பொறியியல் துறை, சர்க்கரை ஆலை மற்றும் முன்னோடி விவசாயிகள், தொழில்முனைவோருடன் இணைந்து முத்தரப்பு ஒப்பந்தம் செய்யப்படும்.

12. வேளாண் விளைபொருட்களின் தரத்தை மேம்படுத்தி, மதிப்புக் கூட்டுவதற்காக அறுவடைக்குபின் செய்நேர்த்தி தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் மானியத்தில் விநியோகிப்பதற்காக 2020–2021 ஆம் நிதியாண்டில் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்

வேளாண் விளைபொருட்களின் தரத்தை மேம்படுத்தி, மதிப்புக் கூட்டுவதற்காக, பருப்பு உடைக்கும் சிறிய இயந்திரங்கள், சிறுதானியங்களில் உமி நீக்கும் இயந்திரம், எண்ணெய் செக்குகள், பழம் மற்றும் காய்கறிகள் கழுவும் இயந்திரங்கள், அரவை இயந்திரங்கள், சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் இயந்திரங்கள் மற்றும் உலர்த்திகள் உள்ளிட்ட பல்வேறு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை இயந்திரங்களை மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

13. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு போதிய பயிற்சியளிப்பதற்காக, 2020–2021 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள மாநில வேளாண் விற்பனை வாரிய வளாகத்தில் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கென தனியாக பயிற்சி நிலையம் 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்

தனித்தனியாக சாகுபடி செய்து வரும் விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக மாற்ற தமிழ்நாடு அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவ்வுழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல், வணிகத் திட்டம் தயாரித்தல் மற்றும் வர்த்தக செயல்பாடுகள் குறித்து பயிற்சிகள் அளிப்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வளாகத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கென்றே தனியாக ஒரு பயிற்சி மையம் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

14. புதிதாக துவங்கப்பட்ட சேத்தியாதோப்பு மற்றும் குறிஞ்சிப்பாடி போன்ற தெரிவு செய்யப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருள் வரத்து அதிகரிக்க 2020–2021 ஆம் ஆண்டில் சந்தைக் கட்டணத்திலிருந்து 25 சதவிகிதம் விலக்கு அளிக்கப்படும்

புதிதாகத் துவங்கப்பட்ட சேத்தியாதோப்பு மற்றும் குறிஞ்சிப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வேளாண் விளைபொருட்களின் வணிகத்தினை மேம்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சந்தைக் கட்டணத்தில் 25 சதவீதம் விலக்கு அளிக்கப்படும். இதன்மூலம் இந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் அதிக வணிகர்கள் மறைமுக ஏலத்தில் பங்கேற்பார்கள் என்பதால், இப்பகுதி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

15. குறைந்த போக்குவரத்து செலவில் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்காக முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், குளிர்பதன மற்றும் சேமிப்புக் கிடங்குகள் இனிவரும் காலங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை சார்ந்த சந்தையாக அறிவிக்கப்படும்

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை விற்பனைத் துறையில் இயங்கும் அனைத்து முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், குளிர்பதன கிடங்குகள், சேமிப்புக் கிடங்குகள் இனிவரும் காலங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை சார்ந்த சந்தைகளாக அறிவிக்கப்படும். இதன்மூலம் இடைத்தரகர்கள், போக்குவரத்து செலவினங்கள் குறையும் என்பதோடு, விளைபொருட்கள் வீணாவதும் குறையும். மேலும், விளைபொருட்களுக்கு நல்ல விலையும் கிடைக்கும்.

16. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைப் பகுதியில் சுவைதாளித மற்றும் மருத்துவப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, 2020–2021 ஆம் ஆண்டில் சுவைதாளித மற்றும் மருத்துவப் பயிர் தோட்டம் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்

தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைப் பகுதி நறுமண மற்றும் சுவைதாளிதப் பயிர்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. வளமிகுந்த இப்பகுதியில், பல்வேறு நறுமணப் பயிர்களும், மருத்துவக்குணம் கொண்ட பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கொல்லிமலைப் பகுதியின் சிறப்பினை மேலும் மேம்படுத்துவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் கொல்லிமலைப் பகுதியில் ஒரு கோடி ரூபாய் செலவில் சுவைதாளிதப் பயிர்கள் மற்றும் மருத்துவக்குணம் கொண்ட பயிர்கள் சார்ந்த தோட்டம் ஒன்று அமைக்கப்படும்.

17. திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலைப் பகுதியில் உள்ள பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2020–2021 ஆம் ஆண்டில் ஜவ்வாது மலையில் ஒரு கோடி ரூபாய் செலவில் தேனீப் பூங்கா உருவாக்கப்படும்

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலைப் பகுதியில் உள்ள பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் ஜவ்வாதுமலையில் ஒரு கோடி ரூபாய் செலவில் தேனீப் பூங்கா உருவாக்கப்படும். இதன்மூலம், இங்கு வாழும் பழங்குடியின மக்களின் வருமானம் உயர்வதோடு, இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் உற்பத்தியும் அதிகரிக்கும்.

18. தமிழ்நாட்டு மாணவர்களிடையே, தோட்டக்கலை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கல்வி நிறுவனங்களில் தோட்டக்கலை தொழில்நுட்பங்களைப்பற்றி மாணவர்களுக்கு பயிற்றுவிக்க ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தோட்டக்கலை தொடர்பாக தமிழ்நாட்டு மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் தோட்டக்கலை இளநிலை பட்டதாரிகள், ஓய்வுபெற்ற அலுவலர்கள்மூலம் மாணவர்களுக்கு தோட்டக்கலை பற்றிய பல்வேறு தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்படும். இதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

19. தென்னையில் தேங்காய் பறிக்கும் பணியினை இயந்திரமயமாக்குவதற்கு டிரக்மூலம் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்தை செயல் விளக்கம் செய்து காண்பிப்பதற்கு 2020–2021 ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்

தென்னை மரங்களில் தேங்காய் பறிப்பதற்கு, திறமையான வேலையாட்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தேங்காய் பறிக்கும் பணியினை இயந்திரமயமாக்குவதற்கு டிரக் மூலம் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரத்தை 10,000 தென்னை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிப்பதற்கு, 2020–2021 ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

20. கரும்பு பயிரில் காய்ந்த சோகைகளை நீக்குவதற்கு 2020–2021 ஆம் நிதியாண்டில் மினி டிராக்டருடன்கூடிய 5 கரும்பு சோகை நீக்கும் இயந்திரங்கள் 38 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண் பொறியியல் துறைமூலம் கொள்முதல் செய்யப்பட்டு, குறைந்த வாடகையில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும்

கரும்புப் பயிரின் அடிப்பகுதியில் உள்ள தேவையில்லாத காய்ந்த சோகைகளை நீக்கும் பணி மிகவும் சிரமமானது என்பதால், இப்பணியினை இலகுவாக்குவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் மினி டிராக்டருடன்கூடிய ஐந்து கரும்பு சோகை நீக்கும் இயந்திரங்கள் 38 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல்

செய்யப்பட்டு குறைந்த வாடகையில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

21. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முந்திரி விவசாயிகளின் நலனுக்காக, 2020–2021 ஆம் ஆண்டில் அடர் நடவு முந்திரி சாகுபடி திட்டம் 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் பாரம்பரியமாக முந்திரி சாகுபடி செய்யப்படும் கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முந்திரி விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில் 2,500 ஏக்கர் பரப்பில் முந்திரி அடர் நடவு சாகுபடித் திட்டம் 6 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

22. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமான காவேரி டெல்டா பகுதியில் நவீன வேளாண் உத்திகளை விளக்கும் மாபெரும் கண்காட்சி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமான டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் ஆராய்ச்சி தொடர்பான நவீன உத்திகளை விவசாயிகளுக்கு விளக்கும் வகையில், மாபெரும் கண்காட்சி ஒன்று 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

23. புதியதாக உருவாக்கப்பட்ட தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக, இம்மாவட்டங்களில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக மண் பரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப்படும்

புதியதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையம் துவங்குவதற்கு ஏற்கெனவே சென்ற ஆண்டில் உரிய ஆணை வழங்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி, செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய நான்கு மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக மண் பரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

24. விவசாயிகளுக்குத் தரமான இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக பல்வேறு ஆய்வகங்களுக்குப் புதிய கட்டடங்களும், மறுசீரமைப்புப் பணிகளும் 6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு தரமான இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் ஆண்டில், மதுரை மற்றும் இராமநாதபுரம் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், கடலூர், திருச்சி, திருப்பூர் மற்றும் கரூர் ஆகிய மண் பரிசோதனை நிலையங்கள், தூத்துக்குடி பூச்சிக்கொல்லி ஆய்வகத்திற்கு புதிய கட்டடமும், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், காஞ்சிபுரம் பூச்சிக்கொல்லி ஆய்வகம், தருமபுரி உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் புதுக்கோட்டை உயிர் உர உற்பத்தி மையத்தில் மறு சீரமைப்புப் பணி மேற்கொள்வதற்கும் 6 கோடி ரூபாய் செலவிடப்படும்.

25. எண்ணெய்ப்பனை விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும்வகையில், 2019–2020 ஆம் ஆண்டில் ஆலைகளுக்கு எண்ணெய்ப்பனை குலைகளை வழங்கிய விவசாயிகளுக்கு ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் சந்தை தலையீட்டு விலை வித்தியாசத் தொகையாக வழங்கப்படும்

எண்ணெய்ப்பனை பழக்குலைகளில் சந்தை விலை ஏற்ற இறக்கத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எண்ணெய்ப்பனை சாகுபடியாளர்களின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கும் வகையில், 2019–2020 ஆம் ஆண்டில் எண்ணெய்ப்பனை குலைகளை ஆலைகளுக்கு வழங்கிய விவசாயிகளுக்கு சந்தை தலையீட்டு விலை வித்தியாசத் தொகையினை வழங்குவதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

26. பயிர்களில் மகசூலை அதிகரிக்க, மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள சாம்பல் சத்துக்களை கரைத்து பயிருக்கு அளிக்கும் புதிய உயிர் உரம் மற்றும் அசோபாஸ் உயிர் உர உற்பத்திக்காக 2020–2021 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் நிதியினை இவ்வரசு ஒதுக்கும்

மண்ணில் பயிருக்கு கிடைக்காத நிலையில் உள்ள சாம்பல் சத்தினைக் கரைத்து பயிருக்குக் கொடுக்கும் வகையில் புதிய

உயிர் உரங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சாம்பல் சத்தினைக் கரைத்து கொடுக்கும் (Potassium Mobilizing) உயிர் உரமும், தழை, மணிச்சத்துக்களை வழங்கும் உயிர் உரங்களை ஒருங்கிணைத்து அசோபாஸ் என்ற உயிர் உரமும் ஒரு இலட்சம் லிட்டர் திரவ வடிவில் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 2020–2021 ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

27. பல்வேறு பயிர்ப் பாதுகாப்பு முறைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பருத்தி விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக 2020–2021 ஆம் ஆண்டில் 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

பருத்தியில் சாகுபடி செலவினை குறைத்து, உற்பத்தியை உயர்த்துவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பல்வேறு பயிர்ப் பாதுகாப்பு முறைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை பருத்தி விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக, 2020–2021 ஆம் ஆண்டில் எட்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கங்கள் நடத்தப்படும்.

28. அனைத்து மாவட்டங்களிலும் மலர் கண்காட்சி, காய்கறி கண்காட்சி மற்றும் பழக் கண்காட்சிகள் நடத்துவதற்கும், தோட்டக்கலையில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்குவதற்கும் 2020–2021 ஆம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

மலர், காய்கறி மற்றும் பழ அலங்காரம் மக்களுக்கு ஒரு காட்சி விருந்தாக இருப்பதோடு, மனதிற்கு புத்துணர்ச்சி அளிப்பதாகவும் உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து மாவட்டங்களிலும் மலர் கண்காட்சி, காய்கறி கண்காட்சி மற்றும் பழக் கண்காட்சிகள் நடத்துவதற்கும், தோட்டக்கலையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட மற்றும் மாநில அளவில் விருதுகள் வழங்குவதற்கும் 2020–2021 ஆம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

29. தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2020–2021 ஆம் ஆண்டில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 4 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வண்டல் மண் படிவைக் குறைப்பதற்கும், மண் அரிமானத்தைத் தடுப்பதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–2021 ஆம் நிதியாண்டில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டுமானப் பணிகளும், நில மேம்பாட்டுப் பணிகளும் 4 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

30. விவசாயிகளுக்குத் தேவையான முக்கிய விவரங்களை உடனுக்குடன் பெற்று விரைந்து நடவடிக்கை எடுப்பதற்காக கணினி சார்ந்த தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய வேளாண் தகவல் பிரிவு மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்படும்

வேளாண்மையில் முக்கிய தகவல்களை உடனுக்குடன் பெற்று விரைந்து நடவடிக்கை எடுப்பதற்காகவும், அரசு, பல்கலைக்கழகம் மற்றும் ஊடகங்களுக்கு வேளாண் சார்ந்த தகவல்களை முழுமையாக வழங்குவதற்கும், ஊடகங்களில் வரும் செய்திகளுக்கு உடனுக்குடன் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், உழவன் செயலி மற்றும் அக்ரிஸ்நெட் வலைதளத்தை மேலும் மேம்படுத்திடவும், பல்வேறு விளம்பர சாதனங்கள் மூலமாக வேளாண் தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கணினி சார்ந்த தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய வேளாண் தகவல் பிரிவு மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்படும்.

31. விதைப் பரிசோதனை அலுவலர்கள் தங்கள் பணியினை செம்மையாக மேற்கொள்வதற்கு 2020–2021 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றிவரும் விதைப் பரிசோதனை அலுவலர்களுக்குப் புதிய வாகனம் வழங்குவதற்கு அரசு 56 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்யும்

தற்போது, மாநிலத்தில் 29 விதைப் பரிசோதனை நிலையங்கள் 7 விதைப் பரிசோதனை அலுவலர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு விதைப் பரிசோதனை அலுவலரும் 3 முதல் 5 விதைப் பரிசோதனை நிலையங்களை நிருவகித்து வருகிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, விதைப் பரிசோதனை பணிகளை செம்மையாக மேற்கொள்வதற்கு, இவ்வலுவலர்களுக்கு புதிய ஈப்பு வாகனங்கள் 56 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எனது கனவுகள் நனவாகும்வரை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வலிமையான, சக்திவாய்ந்த, வளர்ச்சியான, ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்குவோம். இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற அந்தஸ்த்தை தமிழ்நாடு அடைந்து, மக்கள் மகிழ்ச்சியான, நிம்மதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே என் கனவு!"

என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மருத்துவப் புரட்சி

ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதன்மூலம் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவு. இந்தக் கனவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது அயராத உழைப்பின்மூலம் உண்மையாக்கியுள்ளார். ஒரே ஆண்டில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒப்புதல் பெற்றது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அயராத உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்படும்போது, பொதுவாக 100 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். ஆனால், தற்போது தொடங்கப்படும் இந்த 11 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்குமே துவக்க நிலையிலேயே 150 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு அனுமதி பெற்றிருப்பது நம் முதல்வர் அவர்களின் மகத்தான சாதனையாகும். இதன்மூலம் 1,650 M.B.B.S. இருக்கைகள் ரூ.3,995.23 கோடி செலவில் உருவாக்கப்படும். ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுவதனால் மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் உட்பட தோராயமாக 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இதனால் 11 மருத்துவக் கல்லூரிகளிலும் தோராயமாக 11,000 பணியிடங்கள்

உருவாக்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்படும். எனவே, புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் செயல்படும் அரசு இந்தியாவிலேயே தமிழகத்தில் ஒரு மருத்துவப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையல்ல.

உடல் உறுப்பு தானம்

தமிழக அரசு உடல் உறுப்பு தானத்தில் தொடர்ந்து சிறந்து விளங்கியதற்கான மத்திய அரசின் தேசிய விருதினை 5–வது முறையாகப் பெற்று, மீண்டும் ஒரு சாதனையைப் படைத்துள்ளது.

சுகாதாரக் குறியீடு

ஒரு நாட்டினுடைய சுகாதாரத் துறையின் மேம்பாட்டை, சுகாதாரக் குறியீடுகள் மூலமே அளவீடு செய்ய முடியும். மாண்புமிகு அம்மா அவர்கள் நமது சுகாதாரக் குறியீடுகளை அண்டை மாநிலங்களோடு ஒப்பிடாமல், வளர்ந்த நாடுகளுக்கு மேலான நிலையை எய்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருவார்கள்.

தமிழகத்தில் MMR - ஒரு இலட்சம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 55 ஆகவும், IMR - ஆயிரம் உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு 16 ஆகவும் உள்ளது. இதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை சுகாதாரத் துறை தொடர்பாக வகுத்துள்ள மில்லினியம் வளர்ச்சி இலக்குகள் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை இந்தியாவில் உள்ள மற்ற பல மாநிலங்களைக் காட்டிலும் முன்னதாக தமிழ்நாடு அடைந்துள்ளது.

பணியாளர்கள்

இதுவரை தமிழ்நாடு மருத்துவத் தேர்வாணையத்தின்மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள், இயன்முறை மருத்துவர்கள், கதிர்வீச்சு நுட்புனர், மருந்தாளுனர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் உட்பட 33,124 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள்

மத்திய அரசு, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை ஒரு பேரிடராக அறிவிக்கை செய்துள்ள நிலையில், 'வருமுன் காப்போம்' என்ற முதுமொழிக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

தலைமையின்கீழ் இயங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு தொடர் பாதுகாப்பு, முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று குறித்து மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஒவ்வொரு நாளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு தேவையான முடிவுகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைத் தவிர, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்க அரசு இயந்திரம் முழுமையாக முடுக்கி விடப்பட்டுள்ளது.

கொரோனா தொடர்புடைய பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள அரசு மருத்துவர்கள், அரசு செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், காவல் துறை, பேரிடர் மீட்புத் துறை மற்றும் தொடர்புடைய பல துறைகளைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் தங்கள் உயிரை துச்சமெனக் கருதி, தங்களை முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் இரவும் பகலும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு அரசுக்கு நற்பெயரையும், நன்மதிப்பையும் ஏற்படுத்தி வருகிறார்கள். இவர்களின் அர்ப்பணிப்பு உணர்வை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதுவரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 560 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகளில் 9,266 படுக்கைகள் கொரோனா வைரஸ் சிகிச்சைக்கு தேவையான தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகளாக மாற்றப்பட்டுள்ளன. தேவைக்கு ஏற்ப இந்த எண்ணிக்கை மேலும் உயர்த்தப்படும். மேலும், தமிழகத்தில் உள்ள பெரிய தனியார் மருத்துவமனைகளில் 750 படுக்கை வசதிகளை கொரோனா வைரஸ் சிகிச்சைக்கான தனி படுக்கை வசதிகளாக மாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. படுக்கை வசதிகளை ஏற்படுத்தும்போது, தீவிர சிகிச்சை வசதிகளை உருவாக்குவதற்காக 560 வெண்டிலேட்டர்கள், மானிட்டர்கள், அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், 500 தீவிர சிகிச்சை படுக்கை வசதிகளை ஏற்படுத்தத் தேவையான மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. கொரோனா வைரஸ் சிகிச்சைக்குத் தேவையான அனைத்து மருந்துகளும் போதிய அளவு கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் உள்ளன.

கொரோனா தொற்று நோய் சிகிச்சைக்குத் தேவைப்படும் பணியாளர்கள், கூடுதலாக 500 மருத்துவர்கள், 1,000 செவிலியர்கள், 1,500 ஆய்வக நுட்புனர்களை உடனடியாக தேர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஒரு அமைச்சராகவும், பொறுப்புள்ள மருத்துவராகவும் களத்தில் நின்று ஆய்வு செய்கிறேன்.

தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் பிரிவுகள், சிகிச்சை முறைகள், சுத்தம் ஆகியவை குறித்து வழிகாட்டி நெறிப்படுத்துகிறேன். அசுரத்தனமான வேகத்தில் பணியாற்றினால் மட்டுமே ஒவ்வோர் உயிருக்கும் பாதுகாப்பு என்பதால் ஊன் உறக்கமின்றி கால நேரம் பாராது, கணப்பொழுதும் ஓயாது, சுற்றிச் சுழன்று மகத்தான சேவை செய்கிறது நமது தமிழக அரசு.

மனிதம் எனும் மகத்தான சக்தியை வீழ்த்த எந்தவொரு உயிர்க்கொல்லியாலும் முடியாது என்பதை மலைபோல் நம்புகிறேன். மெச்சுகிறேன் நம் மருத்துவத் துறையை! நெஞ்சார நெகிழ்ந்து பாராட்டுகிறேன்! நம் சேவைகளால் வெல்லட்டும் மனிதம்! வீழட்டும் உயிர்க்கொல்லி!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. நல் உற்பத்தி முறையில் (Current Good Manufacturing Practice) பாம்புக் கடி சிகிச்சைக்கு தேவையான மருந்தினை தயாரிப்பதற்கு ஏதுவாக சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலைய நஞ்சு முறிவுத் துறைக்கு 57.33 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நல் உற்பத்தி முறையில் (Current Good Manufacturing Practice) பாம்புக் கடி சிகிச்சைக்குத் தேவையான மருந்தினைத் தயாரிப்பதற்கு ஏதுவாக, சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலைய நஞ்சு முறிவுத் துறைக்கு 57.33 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

2. 300 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 85 துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு தேசிய தர உத்தரவாத சான்றும், 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தேசிய தரச் சான்றிதழும் பெற 100.81 கோடி ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 300 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 85 துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு தேசிய தர உத்தரவாத சான்றும் (National Quality Assurance Standards), 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு தேசிய தரச் சான்றிதழும் பெற (National Accreditation Board of Hospitals) 100.81 கோடி ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 240 துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, அனைவருக்கும் நலவாழ்வுத் திட்ட மையங்களாக 48 கோடி ரூபாய் செலவில் மாற்றி அமைக்கப்படும்

கிராமப்புற மக்களின் நோய்களை உடனுக்குடன் கண்டறிந்து சிகிச்சை அளிக்க 'அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 240 துணை சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அனைவருக்கும் நலவாழ்வுத் திட்ட மையங்களாக 48 கோடி ரூபாய் செலவில் மாற்றி அமைக்கப்படும்.

4. 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 34 டிஜிட்டல் எக்ஸ்ரே (Digital X–Ray) கருவியும், 47 மாவட்டத் தலைமை மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு எக்ஸ்ரே (X–Ray with Computed Radiography) கருவியும் 35.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 34 டிஜிட்டல்

எக்ஸ்ரே (Digital X–Ray) கருவியும், 47 மாவட்டத் தலைமை மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு எக்ஸ்ரே (X–Ray with Computed Radiography) கருவியும் 35.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

5. 24 மாவட்டங்களில் உள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள் 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 24 மாவட்டங்களில் உள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடங்கள் 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

6. 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் Laminar Air Flow வசதி கொண்ட நவீன அறுவை அரங்கம் 9 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராயப்பேட்டை, எழும்பூர் மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல் நிறுவனம், விழுப்புரம், தேனி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் Laminar Air Flow வசதி கொண்ட நவீன அறுவை அரங்கம் 9 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

7. பேறுகால இறப்பைத் தடுக்கும் விதமாக 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிக்கலான கர்ப்பிணிகளைக் கண்காணிப்பதற்கு 10 படுக்கைகள் கொண்ட உயர் சிகிச்சை சிறப்பு வார்டு (High Risk Antenatal Ward) 24 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பேறுகால இறப்பைத் தடுக்கும் விதமாக 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிக்கலான கர்ப்பிணிகளைக் கண்காணிப்பதற்கு 10 படுக்கைகள் கொண்ட உயர் சிகிச்சை சிறப்பு வார்டு (High Risk Antenatal Ward) 24 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

8. 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மத்திய தொற்று நீக்க சேவைகள் துறை (Central Sterile Services Department) 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மத்திய தொற்று நீக்க சேவைகள் துறை (Central Sterile Services Department) 20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

9. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை (TAEI) திட்டத்தின்கீழ் துறையூர், வேதாரண்யம் மற்றும் மேலூர் ஆகிய மூன்று துணை மாவட்ட மருத்துவமனைகளில் மூன்றாம் நிலை ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை மையங்கள் 18.42 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் தலைக்காயங்களால் ஏற்படும் பின்விளைவுகளை உணர்ந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை (TAEI) திட்டத்தின்கீழ் துறையூர், வேதாரண்யம் மற்றும் மேலூர் ஆகிய மூன்று துணை மாவட்ட மருத்துவமனைகளில் மூன்றாம் நிலை ஒருங்கிணைந்த அவசர சிகிச்சை மையங்கள் 18.42 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

10. வயது முதிர்ந்தோர் மற்றும் படுக்கையில் உள்ள நோயாளிகளின் நலன் காக்க, 385 வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு இரண்டு சமுதாயம் சார்ந்த பணியாளர்களுக்கு (Community Based Health Worker) 15.30 கோடி ரூபாய் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வீடு சார்ந்த நீண்டகால சேவை வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வயது முதிர்ந்தோர் மற்றும் படுக்கையில் உள்ள நோயாளிகளின் நலன் காக்க, 385 வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு இரண்டு சமுதாயம் சார்ந்த பணியாளர்களுக்கு (Community Based Health Worker) 15.30 கோடி ரூபாய் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, வீடு சார்ந்த நீண்டகால சேவை வழங்கப்படும்.

11. 23 மாவட்டங்களிலுள்ள 47 வட்டாரங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு 50 புதிய குடியிருப்புகள் 13.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 23 மாவட்டங்களிலுள்ள 47 வட்டாரங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு 50 புதிய குடியிருப்புகள் 13.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

12. மனிதவள சுகாதார மேம்பாட்டு நிலையம், விழுப்புரம், பொது சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல பயிற்சி மையம், மதுரை ஆகியவற்றின் உள்கட்டமைப்பு 12 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மனிதவள சுகாதார மேம்பாட்டு நிலையம், விழுப்புரம், பொது சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையம், மதுரை ஆகிய மூன்று பயிற்சி நிலையங்களின் உள்கட்டமைப்பு 12 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

13. மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கும், நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் 11.45 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்

மருந்து கட்டுப்பாடு இயக்குநர் தலைமை அலுவலகம் மற்றும் அதன்கீழ் சென்னையில் உள்ள நான்கு மண்டல அலுவலகங்களுக்குத் தற்போதுள்ள கட்டடத்தில் போதிய இடவசதி இல்லை. இதனை உணர்ந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருந்து கட்டுப்பாடு இயக்குநரகத்திற்கும், அதன்கீழ் உள்ள நான்கு மண்டல அலுவலகங்களுக்கும் 11.45 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

14. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 10 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் 11.02 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பி.கே. கார்டன், பெரம்பூர், வி.ஆர்.என். கார்டன், பெருமாள்பேட், சி.எஸ்.நகர், வரதராஜபுரம், முகப்பேர் மேற்கு, சேத்துப்பட்டு, பெரியார் நகர் மற்றும் மீர்சாய்புபேட்டை ஆகிய பத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 11.02 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

15. காசநோய் இல்லா தமிழகம் 2025-ஐ உருவாக்க 18 மாவட்டங்களுக்கு நடமாடும் எக்ஸ்ரே வாகனங்கள் 10.80 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

தமிழ்நாட்டில் காசநோயை 2025 ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் ஒழித்து, காசநோய் இல்லா தமிழகம் 2025-ஐ உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருவாரூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 18 மாவட்டங்களுக்கு நடமாடும் எக்ஸ்ரே வாகனங்கள் 10.80 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

16. எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான அனாதை மற்றும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட குழந்தைகள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மூலதன நிதிக்கு மேலும் 10 கோடி ரூபாய் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான அனாதை மற்றும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட குழந்தைகள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மூலதன நிதிக்கு மாநில அரசு நிதியிலிருந்து மேலும் 10 கோடி ரூபாய் வழங்கப்படும். இந்த மூலதன நிதியின் வட்டித் தொகையிலிருந்து இக்குழந்தைகளின் கல்வி மற்றும் சத்தான உணவிற்கு நிதி உதவி வழங்கப்படும்.

17. நோயாளிகளின் நலன் மேம்பட 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபயிற்சி, யோகா பயிற்சி மற்றும் அக்குபிரசர் அடங்கிய சுகாதாரப் பூங்கா ஒரு கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

இந்திய முறை மருத்துவ சிகிச்சையினை ஊக்குவிக்க, அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு நடவடிக்கையாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நோயாளிகளின் நலன் மேம்பட 20 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் நடைபயிற்சி (Pebble Walk Path), யோகா பயிற்சி மற்றும் அக்குபிரசர் அடங்கிய சுகாதாரப் பூங்கா (Health and Wellness Hubs) நிறுவப்படும்.

18. அனைத்து 73 சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு சிகிச்சை மையங்களுக்கும் 9.79 கோடி ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்/மாவட்ட தலைமை மருத்துவமனைகள்/வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் 73 சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவுகள் செயல்படுத்தப்படுகின்ற, அனைத்து 73 சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு சிகிச்சை மையங்களுக்கு 9.79 கோடி ரூபாய் செலவில் மருத்துவக் கருவிகள் வழங்கப்படும்.

19. மலைவாழ் பகுதிகளில் இயங்கும் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 9.79 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைவாழ் பகுதிகளில் இயங்கும் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 9.79 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

20. 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், தலைக்காய சிகிச்சை சேவையை வலுப்படுத்த தலைக்காயம் மற்றும் அவசரகால சிகிச்சைக்காக தனியாக புதிய பிரிவு 9.65 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தலைக்காய சிகிச்சை சேவையை வலுப்படுத்த, தலைக்காயம் மற்றும் அவசரகால சிகிச்சைக்காக ஒரு கூடுதல் பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் எற்படுத்தப்பட்டு, தனியாக புதிய துறை 9.65 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

21. 20 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 37 எலும்பு மூட்டு நுண்துளை சிகிச்சை (Arthroscopy) கருவி 9.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, கோயம்புத்தூர், தருமபுரி, ஐ.ஆர்.டி பெருந்துறை, செங்கல்பட்டு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 20 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு எலும்பு மூட்டு நுண்துளை சிகிச்சைக் (Arthroscopy) கருவி 9.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

22. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் 10 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் ஹப் மற்றும் ஸ்போக் (Hub and Spoke Model) வகையில் பக்கவாத மேலாண்மை (Stroke Management) அமைப்பு 9.15 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அருப்புக்கோட்டை, கோவில்பட்டி, குழித்துறை, பத்மநாபபுரம், இராஜபாளையம், சிவகாசி, தென்காசி, திருச்செந்தூர், விருதுநகர் மற்றும் சங்கரன்கோவில் மாவட்ட துணை மருத்துவமனைகளில் ஹப் மற்றும் ஸ்போக் வகையில் (Hub and Spoke Model) பக்கவாத மேலாண்மை (Stroke Management) அமைப்பு 9.15 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

23. 11 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 66 அரசு துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கும் அல்ட்ரா சோனோகிராம் கருவிகள் 8.26 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், பொள்ளாச்சி, உசிலம்பட்டி, பெரம்பலூர், காரைக்குடி, கும்பகோணம், கோவில்பட்டி, சங்கரன்கோவில், மணப்பாறை, கள்ளக்குறிச்சி, திண்டுக்கல் ஆகிய 11 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், ஜெயங்கொண்டம், வால்பாறை, கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், பாலக்கோடு, கொடைக்கானல், ஒட்டன்சத்திரம், பழனி, வேடசந்தூர், கோபிச்செட்டிபாளையம், சத்தியமங்கலம், பெருந்துறை, பவானி, கிருஷ்ணராயபுரம், சைதாப்பேட்டை, மதுராந்தகம், குழித்துறை, தேன்கனிக்கோட்டை, ஓசூர், மேலூர், பேரையூர், சோழவந்தான், திருமங்கலம், சீர்காழி, வேதாரண்யம், குமாரபாளையம், ராசிபுரம், ஆலங்குடி, கீரனூர், திருமயம், முதுகுளத்தூர், ராமேஸ்வரம், ஓமலூர், ஆத்தூர், பாபநாசம், பட்டுக்கோட்டை, பேராவூரணி, போடிநாயக்கனூர், கம்பம், பொன்னேரி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், அம்பாசமுத்திரம், கடையநல்லூர், நாங்குநேரி, தாராபுரம், காங்கேயம், அவினாசி, உடுமலைப்பேட்டை, நன்னிலம், திருத்துறைப்பூண்டி, முசிறி, ஸ்ரீரங்கம், துவாக்குடி, குடியாத்தம், சோளிங்கர், வாணியம்பாடி, வேலூர் பெண்ட்லேண்டு, திருக்கோவிலூர், விழுப்புரம், சாத்தூர், சிவகாசி, பூதபாண்டி ஆகிய 66 அரசு துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கும் அல்ட்ரா சோனோகிராம் கருவி 8.26 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

24. 20 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் 8 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாநகராட்சியிலுள்ள அருள்தாஸ்புரம், வில்லாபுரம், திடீர் நகர், சேலம் மாநகராட்சியிலுள்ள தாதகாபட்டி, குகை, என்.ஜி.ஜி.ஓ. காலனி, பழைய சூரமங்களம், அம்மாபேட்டை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலுள்ள காமராஜ் நகர், இருதயபுரம், திருவானைகோவில், திருவண்ணாமலை நகராட்சியிலுள்ள சென்ட்ரல் கீழ்நாத்தூர், பூந்தமல்லி நகராட்சியிலுள்ள பருத்திப்பட்டு, ராணிப்பேட்டை நகராட்சியிலுள்ள ராணிப்பேட்டை, ஆற்காடு

நகராட்சியிலுள்ள ஆற்காடு, நாமக்கல் நகராட்சியிலுள்ள சீத்தாராம்பாளையம், விருதுநகர் நகராட்சியிலுள்ள விருதுநகர், தருமபுரி நகராட்சியிலுள்ள தருமபுரி, தேனி நகராட்சியிலுள்ள பொம்மையகவுண்டம்பட்டி ஆகிய 20 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் 8 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

25. அதிக பிரசவங்கள் நிகழும் 30 சீமாங்க் மையங்களுக்கு கூடுதலாக, 68 மகப்பேறு மருத்துவர், 67 மயக்கவியல் மருத்துவர் மற்றும் 59 குழந்தைகள் நல மருத்துவப் பணியிடங்கள் 7.77 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் தற்போது 126 அரசு மருத்துவமனைகளில் சீமாங்க் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதிக பிரசவங்கள் நிகழும் 30 சீமாங்க் மையங்களுக்கு கூடுதலாக, 68 மகப்பேறு மருத்துவர், 67 மயக்கவியல் மருத்துவர் மற்றும் 59 குழந்தைகள் நல மருத்துவர் பணியிடங்கள் 7.77 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

26. சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள நரம்பியல் துறைக்கு நோயாளிகளின் சிகிச்சைக்கு பிரத்யேகமாக பைபிளேன் கேத்லேப் (Bi–Plane Cath Lab) கருவி 7.50 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள நரம்பியல் துறைக்கு நோயாளிகளின் சிகிச்சைக்கு பிரத்யேகமாக பை–பிளேன் கேத்லேப் (Bi–Plane Cath Lab) கருவி 7.50 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

27. சென்னை ஓட்டேரி அரசு திருவட்டீஸ்வரர் நெஞ்சக மருந்து நிலையம், தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை மற்றும் மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனைகளில் நெஞ்சக நோய் மறுவாழ்வு மையம் 6.66 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

சென்னை ஓட்டேரி அரசு திருவட்டீஸ்வரர் நெஞ்சக மருந்து நிலையம், தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை மற்றும் மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனைகளில் நெஞ்சக நோய் மறுவாழ்வு மையம் 6.66 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

28. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஸ்கேன்மூலம் (Antenatal Scan) பரிசோதனை செய்யும் மருத்துவ அலுவலர்களுக்கு 6.41 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணிப் பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஸ்கேன்மூலம் (Antenatal Scan) பரிசோதனை செய்யும் மருத்துவ அலுவலர்களுக்கு 6.41 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

29. 8 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 6.40 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமேஸ்வரம், சிவகங்கை, தாந்தோனி, அவனியாபுரம், அரிசிப்பாளையம், அரியலூர், லூர்தம்மாள்புரம், பாத்திமாநகர் ஆகிய 8 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 6.40 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

30. அரசு கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தை மருத்துவமனைக்கு கூடுதலாக இரண்டு தளங்கள் 6.17 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் குழந்தை மருத்துவமனைக்கு கூடுதலாக இரண்டு தளங்கள் 6.17 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

31. ஈரோடு மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைக்குப் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் 6 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஈரோடு மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைக்குப் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் 6 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

32. குருதி பரிமாற்றம் அதிகம் நடைபெறும் 5 இரத்த வங்கிகளில் இரத்த பரிமாற்றம்மூலம் பரவும் நோய்க் கிருமிகளை (Transfusion Transmitted Infections) தானியங்கிமூலம் சோதனை செய்யும் வசதி ஹப் மற்றும் ஸ்போக் (Hub and Spoke) வகையில் 6 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குருதி பரிமாற்றம் அதிகம் நடைபெறும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கும் இரத்த வங்கிகளில் இரத்த பரிமாற்றம்மூலம் பரவும் நோய்க் கிருமிகளை (Transfusion Transmitted Infections) தானியங்கிமூலம் சோதனை செய்யும்வசதி ஹப் மற்றும் ஸ்போக் (Hub and Spoke) வகையில் 6 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

33. கிராமப் பகுதிகளில் செயல்படும் 48 இந்தியமுறை மருத்துவ மருந்தகங்கள் 5.89 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிராமப் பகுதிகளில் செயல்படும் 48 இந்தியமுறை மருத்துவ மருந்தகங்கள் 5.89 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

34. சென்னை, அண்ணாநகர் அரசுப் புறநகர் மருத்துவமனைக்குப் புதிய என்டோஸ்கோபி கருவி 5.30 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, அண்ணாநகர் அரசுப் புறநகர் மருத்துவமனைக்குப் புதிய என்டோஸ்கோபி கருவி 5.30 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

35. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சைத் (TAEI) திட்டத்தின்கீழ், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தலைக்காய சிகிச்சை மையங்கள் 4.79 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சைத் (TAEI) திட்டத்தின்கீழ் ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், புதுக்கோட்டை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விழுப்புரம், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தலைக்காய சிகிச்சை மையங்கள் 4.79 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

36. தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் 11 அரசு மருத்துவமனைகளில் ஹப் மற்றும் ஸ்போக் முறையில் (Hub and Spoke) ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையம் (Comprehensive Poison Management Centre) 4.40 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒருங்கிணைந்த நச்சு மேலாண்மை ஒப்புயர்வு மையம் (Comprehensive Poison Management Centre) தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, புதுக்கோட்டை, திருவாரூர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரியலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், கும்பகோணம், அறந்தாங்கி, மன்னார்குடி ஆகிய மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகள், மயிலாடுதுறை, விராலிமலை, தஞ்சாவூர் ராஜா மிராசுதார் ஆகிய மாவட்ட துணை மருத்துவமனைகளில் ஹப் மற்றும் ஸ்போக் முறையில் (Hub and Spoke) 4.40 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

37. அமைப்புசாரா மற்றும் இடம் பெயரும் தொழிலாளர்களுக்கு சிறப்பு மருத்துவருடன் திரை மூலம் காணொலி சிகிச்சை மேற்கொள்ள டெலிமெடிசன் (Telemedicine) வசதிகளுடன்கூடிய நடமாடும் மருத்துவ ஊர்திகள் 3.86 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்

அலுவலகத்திற்கும் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பணிபுரியும் அமைப்புசாரா மற்றும் இடம் பெயரும் தொழிலாளர்களுக்கு சிறப்பு மருத்துவருடன் திரை மூலம் காணொலி சிகிச்சை மேற்கொள்ள டெலிமெடிசன் (Telemedicine) வசதிகளுடன்கூடிய நடமாடும் மருத்துவ ஊர்திகள் 3.86 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

38. மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம், 1940 மற்றும் அதன் பிரிவுகள் 1945 மற்றும் மருத்துவ சாதனங்கள் விதிகள், 2017 ஆகியவற்றைத் திறம்பட அமல்படுத்த, 10 புதிய மருந்து கட்டுப்பாடு மண்டல அலுவலகங்கள் 3.79 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம், 1940 மற்றும் அதன் பிரிவுகள், 1945 மற்றும் மருத்துவ சாதனங்கள் விதிகள், 2017 ஆகியவற்றைத் திறம்பட அமல்படுத்த 10 புதிய மருந்து கட்டுப்பாடு மண்டல அலுவலகங்கள் 3.79 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

39. மாதவிடாய் (Menopause) நின்ற பெண் நோயாளிகளுக்கு எலும்பு தாது அடர்த்தி சோதனை செய்ய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் டெக்ஸா ஸ்கேன் (DEXA Scan) 3.70 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாதவிடாய் (Menopause) நின்ற பெண் நோயாளிகளுக்கு எலும்பு தாது அடர்த்தி சோதனை செய்ய சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி, தஞ்சாவூர், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, தமிழ்நாடு பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, சென்னை ஓமந்தூரார் “பி பிளாக்” அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் டெக்ஸா ஸ்கேன் (DEXA Scan) கருவி 3.70 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

40. சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் இருதய இமேஜிங் துறைக்கு நவீன கருவிகள் வழங்கி ஒப்புயர்வு மையம் 3.64 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கு இருதய இமேஜிங் துறையில் நவீன கருவிகள் வழங்கி ஒப்புயர்வு மையம் 3.64 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

41. கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாரில் உள்ள அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் மருந்துகள் உற்பத்திக்காக 3.50 கோடி ரூபாய் செலவில் மருந்தகம் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாரில் உள்ள அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் மருந்துகள் உற்பத்திக்காக 3.50 கோடி ரூபாய் செலவில் மருந்தகம் ஏற்படுத்தப்படும்.

42. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை (TAEI) திட்டத்தின்கீழ் 15 துணை மாவட்ட மருத்துவமனைகளில் கலப்பு உயர் தீவிர சிகிச்சைப் பிரிவு (Hybrid High Dependency Unit) 3.25 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எடப்பாடி, குமாரபாளையம், ஜெயங்கொண்டம், அருப்புக்கோட்டை, மேட்டுப்பாளையம், கொடைக்கானல், பழனி, பவானி, ஸ்ரீபெரும்புதூர், ஓசூர், மயிலாடுதுறை, விராலிமலை, ஓமலூர், சங்ககிரி மற்றும் திருத்தணி ஆகிய 15 துணை மாவட்ட மருத்துவமனைகளில் கலப்பு உயர் தீவிர சிகிச்சைப் பிரிவு (Hybrid High Dependency Unit) 3.25 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

43. மூலிகைப் பயிர் விளைவிப்பதை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமைக்கு 3.06 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மூலிகைப் பயிர் விளைவிப்பதை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு

தோட்டக்கலை மேம்பாட்டு முகமைக்கு 3.06 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

44. பெருநகர சென்னை மாநகராட்சியில் கொடுங்கையூர், முகலிவாக்கம், ஆதம்பாக்கம் மற்றும் திருவான்மியூர் ஆகிய நான்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் 3.04 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் கொடுங்கையூர், முகலிவாக்கம், ஆதம்பாக்கம் மற்றும் திருவான்மியூர் ஆகிய நான்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் 3.04 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

45. பழனி மற்றும் எடப்பாடி துணை மாவட்ட மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புகள் 3 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பழனி மற்றும் எடப்பாடி துணை மாவட்ட மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புகள் 3 கோடி ரூபாய் செலவில் வலுப்படுத்தப்படும்.

46. காஞ்சிபுரம், தென்காசி, சீர்காழி, விருதுநகர் மற்றும் செய்யாறு மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளில் கண் பிரிவு மற்றும் அறுவை அரங்கம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம், தென்காசி, சீர்காழி, விருதுநகர் மற்றும் செய்யாறு மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளில் கண் பிரிவு மற்றும் அறுவை அரங்கம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

47. தமிழ்நாட்டில் யுனானி மற்றும் ஆயுர்வேதா படிப்பில் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பு 3 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் யுனானி மற்றும் ஆயுர்வேதா படிப்பில் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பு 3 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

48. 8,713 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 2,220 பகுதி சுகாதார செவிலியர்கள் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கான கடன் தொகை வழங்க அரசு ஒதுக்கீடு உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 8,713 கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் 2,220 பகுதி சுகாதார செவிலியர்கள் இரு சக்கர வாகனம் வாங்குவதற்கான கடன் தொகை வழங்க அரசு ஒதுக்கீடு உயர்த்தப்படும்.

49. மேட்டுப்பாளையம் மற்றும் பட்டுக்கோட்டை அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு புதிய சி.டி. ஸ்கேன் கருவி 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேட்டுப்பாளையம் மற்றும் பட்டுக்கோட்டை அரசு வட்ட மருத்துவமனைகளுக்கு புதிய சி.டி. ஸ்கேன் கருவி 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

50. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணி இயக்ககத்தில் செயல்பட்டுவரும் தொழில்சார் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பிரிவு, 2.84 கோடி ரூபாய் செலவில் சர்வதேச அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு, உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்த செயல்பாட்டு மையமாக உருவாக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணி இயக்ககத்தில் செயல்பட்டு வரும் தொழில்சார் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பிரிவு, 2.84 கோடி ரூபாய் செலவில் சர்வதேச அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு, உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்த செயல்பாட்டு மையமாக உருவாக்கப்படும்.

51. 73 சிறப்பு பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளில் SAANS என்னும் நிமோனியா குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 2.81 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 73 சிறப்பு பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளில் SAANS

என்னும் நிமோனியா குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 2.81 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

52. திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் Micro Vascular மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு 2.66 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் Micro Vascular மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு 2.66 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

53. 9 தாய் (TAEI) மையங்களுக்கும், சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கும் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சைக் கருவி (C–Arm) மற்றும் மேஜைகள் 2.53 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 9 தாய் (TAEI) மையங்களுக்கும், சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கும் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சைக் கருவி (C–Arm) மற்றும் மேஜைகள் 2.53 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

54. 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 2.46 கோடி ரூபாய் செலவில் USG with ECHO Probe கருவி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 2.46 கோடி ரூபாய் செலவில் USG with ECHO Probe கருவி வழங்கப்படும்.

55. தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் நபர்களுக்கு கவனிப்பு மற்றும் சிகிச்சை வழங்க 34 புதிய இளைப்பாறுதல் மையங்கள் (Drop–in–Centres) 2.41 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் நபர்களுக்கு கவனிப்பு

மற்றும் சிகிச்சை வழங்க 34 புதிய இளைப்பாறுதல் மையங்கள் (Drop–in–Centres) 2.41 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

56. சென்னை, எழும்பூர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையம் 2.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, எழும்பூர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி மையம் 2.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

57. செங்கல்பட்டு மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்கான மருத்துவக் கருவிகள் 2.28 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு உயர் சிகிச்சைக்கான மருத்துவக் கருவிகள் 2.28 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

58. சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் Peritoneal டயாலிசிஸ் பிரிவு 2.20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் Peritoneal டயாலிசிஸ் பிரிவு 2.20 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

59. மக்களின் தொற்றா நோய்களைக் கண்டறியும் திட்டம் (Population based screening) மேலும் 1,993 துணை சுகாதார நிலையங்களுக்கு 2.09 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களின் நோய்களைக் கண்டறியும் பொருட்டு அவர்களின் வீட்டிற்கே சென்று உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்று நோய், காச நோய், தொழுநோய் ஆகிய தொற்றா நோய்களைக் கண்டறியும் சிகிச்சை திட்டம் மேலும் 1,993 துணை சுகாதார நிலையங்களுக்கு 2.09 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

60. 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 4 சார் நிலையங்கள் மற்றும் 17 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு மருத்துவமனை நிருவாக அலுவலர்கள் (Hospital Administrators) 2.05 கோடி ரூபாய் செலவில் நியமிக்கப்படுவார்கள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 24 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 4 சார் நிலையங்கள் மற்றும் 17 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு மருத்துவமனை நிருவாக அலுவலர்கள் (Hospital Administrators) 2.05 கோடி ரூபாய் செலவில் நியமிக்கப்படுவார்கள்.

61. சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரைப்பை மற்றும் குடல் சார்ந்த (Gastroenterology) துறைக்கு Enteroscopic Unit Capsule கருவி 2.04 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரைப்பை மற்றும் குடல் சார்ந்த (Gastroenterology) துறையில் Enteroscopic Unit Capsule கருவி 2.04 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

62. பக்கவாத (Paraplegic) நோயாளிகள் மற்றும் முதுகுத்தண்டு காயம் (Spinal Injury) உள்ள நோயாளிகளுக்கு சென்னை, ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனை, மதுரை, சேலம், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த சேவை மையம் (Comprehensive Day Care Service) 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பக்கவாத (Paraplegic) நோயாளிகள் மற்றும் முதுகுத்தண்டு காயம் (Spinal Injury) உள்ள நோயாளிகளுக்கு சென்னை, ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனை, மதுரை, சேலம், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த சேவை மையம் (Comprehensive Day Care Service) 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

63. அனைத்து மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகள் உட்பட 107 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகளுக்கு 1.95 கோடி ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகள் உட்பட 107 அரசு மருத்துவமனைகளில் உள்ள இரத்த வங்கிகளுக்கு 1.95 கோடி ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்.

64. 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் இளம் தளிர் நோய் எதிர்ப்பு பெட்டகம் 1.93 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் பள்ளி சிறார் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் இளம் தளிர் நோய் எதிர்ப்பு பெட்டகம் 1.93 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

65. சென்னை, எழும்பூர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருந்துவமனையின் மகப்பேறு பிரிவுகள் 1.79 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, எழும்பூர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருந்துவமனையின் மகப்பேறு பிரிவுகள் 1.79 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.

66. கண் பார்வை குறைபாடு உள்ள அனைவருக்கும் 1.75 கோடி ரூபாய் செலவில் இலவசமாக மூக்குக் கண் கண்ணாடி வழங்கப்படும்

தமிழ்நாடு அரசு கண் கண்ணாடி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கண் பார்வை குறைபாடு உள்ள அனைவருக்கும் 1.75 கோடி ரூபாய் செலவில் அனைவருக்கும் இலவசமாக மூக்குக் கண் கண்ணாடி வழங்கப்படும்.

67. 63 துணை மாவட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை நாற்காலி மற்றும் உபகரணங்கள் 3.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 63 துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை நாற்காலி மற்றும் உபகரணங்கள் 3.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

68. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு கால்போஸ்கோபி கருவி (Colposcopy Equipment) 1.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளுக்கு கால்போஸ்கோபி கருவி (Colposcopy Equipment) 1.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

69. 781 அரசு மருத்துவமனைகளில் சானிடரி நாப்கின் வெண்டிங் கருவி 1.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 781 அரசு மருத்துவமனைகளில் சானிடரி நாப்கின் வெண்டிங் கருவி (Vending Machine) 1.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

70. மூளையில் ஏற்படும் இரத்தக் கசிவை ஒளிக்கதிர் இல்லாமல் கண்டுபிடிக்க, சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கு Infrared தொழில்நுட்பம் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மூளையில் ஏற்படும் இரத்தக் கசிவை ஒளிக்கதிர் இல்லாமல் கண்டுபிடிக்க, சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கு Infrared தொழில்நுட்பம் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

71. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 1.50 கோடி ரூபாய் செலவில் அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 1.50 கோடி ரூபாய் செலவில் அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் வழங்கப்படும்.

72. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்கள் வீட்டிற்குச் செல்ல 1.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்கள் வீட்டிற்குச் செல்ல 1.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகன வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

73. நிலவேம்பு குடிநீர் விநியோகம் செய்து மக்களிடையே விழிப்புணர்வு 1.45 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

டெங்கு, வைரஸ் காய்ச்சல் போன்றவற்றிற்கு சிகிச்சை அளிப்பதில் நிலவேம்பு குடிநீர் முக்கியப் பங்கினை ஆற்றி வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நிலவேம்பு குடிநீர் விநியோகம் செய்து மக்களிடையே விழிப்புணர்வு 1.45 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

74. தலசிமியா, சிக்கில்செல், இரத்தசோகை ஹீமோகுளோபினோபதி நோய்களுக்கான பரிசோதனை அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிரசவத்திற்கு முன்னதாக 1.44 கோடி ரூபாய் செலவில் செய்யப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தலசிமியா, சிக்கில்செல், இரத்தசோகை ஹீமோகுளோபினோபதி நோய்களுக்கான பரிசோதனை அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிரசவத்திற்கு முன்னதாக 1.44 கோடி ரூபாய் செலவில் செய்யப்படும்.

75. திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள கமலா நேரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையமாக 1.40 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள கமலா நேரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற சமுதாய சுகாதார நிலையமாக 1.40 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

76. ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு 1.40 கோடி ரூபாய் செலவில் உயர் நவீன மருத்துவ கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு 1.40 கோடி ரூபாய் செலவில் உயர் நவீன மருத்துவ கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்.

77. பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு சுயபாதுகாப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் 1.35 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு சுயபாதுகாப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் 1.35 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

78. பெண் கருக்கலைப்பைத் தடுக்க கலந்தாய்வு மற்றும் சுகாதாரக் கல்வி அரங்கம் 25 சீமாங்க் மையங்களில் கட்டப்படும் மற்றும் குடும்ப நபர்கள் மற்றும் உறவினர்களுக்கு விழிப்புணர்வு 1.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெண் கருக்கலைப்பைத் தடுக்க கலந்தாய்வு மற்றும் சுகாதாரக் கல்வி அரங்கம் 25 சீமாங்க் மையங்களில் கட்டப்படும் மற்றும் குடும்ப நபர்கள் மற்றும் உறவினர்களுக்கு விழிப்புணர்வு 1.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

79. அரியலூர், வேலூர் மற்றும் கரூர் ஆகிய 3 மாவட்டங்களில் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் பயிற்சி 1.17 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், வேலூர் மற்றும் கரூர் ஆகிய 3 மாவட்டங்களில் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் பயிற்சி 1.17 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

80. வழக்கமான தடுப்பூசி திட்டத்தில் சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கு Cold Chain உபயோகிப்போர் பயிற்சி 1.15 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வழக்கமான தடுப்பூசி திட்டத்தில் சுகாதாரத் துறைப் பணியாளர்களுக்கு Cold Chain உபயோகிப்போர் பயிற்சி 1.15 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

81. அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக ஆன்லைன் மருத்துவக் கருவிகள் மேலாண்மை அமைப்பு (Online Equipment Management System) 1.10 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை நிருவகிக்க ஆன்லைன் மருத்துவக் கருவிகள் மேலாண்மை அமைப்பு (Online Equipment Management System) 1.10 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

82. மதுரை, வேலூர் மற்றும் தஞ்சாவூரில் உள்ள நோயுற்ற பச்சிளம் குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு சுவாசக் கோளாறு உள்ள குழந்தைகளை மேலாண்மை செய்ய நைட்ரிக் ஆக்ஸைடு அமைப்பு மற்றும் வெண்டிலேட்டர்கள் 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, வேலூர் மற்றும் தஞ்சாவூரில் உள்ள நோயுற்ற பச்சிளம்

குழந்தை பராமரிப்புப் பிரிவுகளுக்கு சுவாசக் கோளாறு உள்ள குழந்தைகளை மேலாண்மை செய்ய நைட்ரிக் ஆக்ஸைடு அமைப்பு மற்றும் வெண்டிலேட்டர்கள் 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

83. சேலம், திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நடமாடும் கண் மருத்துவ சேவை 90 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம், திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நடமாடும் கண் மருத்துவ சேவை 90 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

84. தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தோல் வங்கி 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய இரண்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தோல் வங்கி 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

85. காசநோய் இல்லா தமிழகம்–2025 திட்டத்தின் ஒரு பகுதியாக கன்னியாகுமரி, திருவண்ணாமலை மற்றும் வட சென்னை ஆகிய இடங்களில் மறைமுக காசநோய் தொற்றுப் பரிசோதனை மற்றும் சிகிச்சை மேலாண்மை நடவடிக்கை 85 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காசநோய் இல்லா தமிழகம்–2025 திட்டத்தின் ஒரு பகுதியாக கன்னியாகுமரி, திருவண்ணாமலை மற்றும் வட சென்னை ஆகிய இடங்களில் மறைமுக காசநோய் தொற்றுப் பரிசோதனை மற்றும் சிகிச்சை மேலாண்மை நடவடிக்கை 85 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

86. தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்ட தொடக்கநிலை சிகிச்சை மையங்களில் Sensory Therapeutic பூங்கா 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஆறு மாவட்ட தொடக்கநிலை சிகிச்சை மையங்களில் Sensory Therapeutic பூங்கா 84 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

87. 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த ஹீமோகுளோபினோபதி நோயை மேலாண்மை செய்யும் வசதி 1.62 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு, திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, தஞ்சாவூர், விழுப்புரம், கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த ஹீமோகுளோபினோபதி (Hemoglobinopathy) நோயை மேலாண்மை செய்யும் வசதி 1.62 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

88. விழுப்புரம், சேலம், மதுரை, சென்னை ஆர்.எஸ்.ஆர்.எம்., எழும்பூர் மகளிர் மருத்துவமனை மற்றும் அரசு கஸ்தூரிபாகாந்தி மருத்துவமனை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில் செயல்முறை ஆய்வகங்கள் (Simulation Lab) 75 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம், சேலம், மதுரை, சென்னை ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு நோயியல் மற்றும் அரசு மகளிர் மருத்துவமனை மற்றும் சென்னை அரசு கஸ்தூரிபாகாந்தி மகளிர் மற்றும் சிறார் மருத்துவமனை ஆகிய 5 அரசு மருத்துவமனைகளில் செயல்முறை ஆய்வகங்கள் (Simulation Lab) 75 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

89. அனைத்து 34 மாவட்ட தொடக்க நிலை மையங்களுக்கும் இயன்முறை சிகிச்சை மற்றும் தொழில் சிகிச்சைக்காக (Physiotherapy and Occupational Therapy Equipment) கருவிகள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து 34 மாவட்ட தொடக்க நிலை மையங்களுக்கும் இயன்முறை சிகிச்சை மற்றும் தொழில் சிகிச்சைக்காக கருவிகள் (Physiotherapy and Occupational Therapy Equipment) 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

90. திருவாரூர் மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர் சேவைப் பிரிவுக்கு கூடுதல் கட்டடம் 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவாரூர் மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர் சேவைப் பிரிவுக்கு கூடுதல் கட்டடம் 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

91. பெருநகர சென்னை மாநகராட்சியில் ராதாகிருஷ்ணன் நகர், புளியந்தோப்பு, அயனாவரம், மீர்சாகிப்பேட்டை, வடபழனி மற்றும் அடையாறு ஆகிய 6 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு லேப்ரோஸ்கோப்பி கருவி 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் ராதாகிருஷ்ணன் நகர், புளியந்தோப்பு, அயனாவரம், மீர்சாகிப்பேட்டை, வடபழனி மற்றும் அடையாறு ஆகிய 6 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு லேப்ரோஸ்கோப்பி கருவி 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

92. சென்னை சேத்துப்பட்டு அரசு நெஞ்சக மருத்துவமனையில் நெஞ்சக நோய் புனர்வாழ்வு மையம் (Pulmonary Rehabilitation Centre) 64 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

பணியிடங்களில் தொழிலாளர்களுக்கு தொழில்சார்ந்த நுரையீரல் நோய்கள் ஏற்படுகின்றன. இவர்களுக்காக மாண்புமிகு

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை சேத்துப்பட்டு அரசு நெஞ்சக மருத்துவமனையில் நெஞ்சக நோய் புனர்வாழ்வு மையம் (Pulmonary Rehabilitation Centre) 64 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

93. 42 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு 63 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 42 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள அறுவை அரங்குகளுக்கு 63 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவிகள் வழங்கி வலுப்படுத்தப்படும்.

94. 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஓர் அரசுத் துணை மாவட்ட மருத்துவமனையில் ஒருங்கிணைந்த பாலூட்டும் தாய்மார்கள் சேவை (தாய்ப்பால் வங்கிகள்) 58 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிவகங்கை, விழுப்புரம், திருவண்ணாமலை, தூத்துக்குடி, புதுக்கோட்டை ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மயிலாடுதுறை அரசுத் துணை மாவட்ட மருத்துவமனையில் ஒருங்கிணைந்த பாலூட்டும் தாய்மார்கள் சேவை (தாய்ப்பால் வங்கிகள்) 58 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

95. சென்னை மனநல நிலையத்தில் டிஜிட்டல் பயிற்சிக்காக ஹப் போன்று, Virtual Knowledge Network 48 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மனநல நிலையத்தில் டிஜிட்டல் பயிற்சிக்காக ஹப் போன்று, Virtual Knowledge Network 48 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

96. பல் மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்களுக்குத் தேசிய வாய் புற்றுநோய் கண்டறியும் திட்டம் குறித்து 47 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பல் மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்களுக்குத் தேசிய வாய் புற்றுநோய் கண்டறியும் திட்டம் குறித்து 47 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

97. சென்னை மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் சிறார் மருத்துவமனை, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் உள்ள நோயுள்ள பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையங்களுக்கு Amplitude Integrated EEG 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் சிறார் மருத்துவமனை, சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் உள்ள நோயுள்ள பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையங்களுக்கு Amplitude Integrated EEG 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

98. சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கு எக்ஸ்ரே Contrast–வுடன் கூடிய டிஜிட்டல் மேமோகிராபி (Digital Mammography) கருவி 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனைக்கு எக்ஸ்ரே Contrast–வுடன் கூடிய டிஜிட்டல் மேமோகிராபி (Digital Mammography) கருவி 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

99. 11 மாவட்டங்களில் அதிக பிரசவங்கள் நிகழும் 22 ஆரம்ப சுகாதார நிலையங்களில் E Partograph with Comprehensive Care Sheet Display 45 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 11 மாவட்டங்களில் அதிக பிரசவங்கள் நிகழும் 22 ஆரம்ப சுகாதார நிலையங்களில் E Partograph with Comprehensive Care Sheet Display 45 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

100. உணவுப் பாதுகாப்பு குறித்து தகவல் கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்மூலம் 45 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உணவுப் பாதுகாப்பு குறித்து தகவல் கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள்மூலம் 45 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்தப்படும்.

101. செவிலியர்களுக்கு பேறுகால மருத்துவ பாடத் திட்டம் (Mid Wifery Curriculum) குறித்து 41 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செவிலியர்களுக்கு பேறுகால மருத்துவ பாடத் திட்டம் (Mid Wifery Curriculum) குறித்து 41 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

102. சென்னை மாவட்டத்தில் 50 சுகாதார நிலையங்களுக்கு காற்று மூலம் பரவும் நோய்களை (Airborne Infection Control) கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் 39 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மாவட்டத்தில் 50 சுகாதார நிலையங்களுக்கு காற்று மூலம் பரவும் நோய்களை (Airborne Infection Control) கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் 39 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

103. முன்னோடித் திட்டமாக மூன்று இடங்களில் சமுதாய வானொலி நிலையம் (Community Radio Station) 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முன்னோடித் திட்டமாக மூன்று இடங்களில் சமுதாய வானொலி நிலையம் (Community Radio Station) 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

104. சென்னை அரசு மனநலக் காப்பகத்தில் உள்ள மனநலப் பிரிவில் தோட்டக்கலை செயல்பாடுகள் 13 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். பின்னர் இந்தத் திட்டம் மற்ற மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு மனநலக் காப்பகத்தில் உள்ள மனநலப் பிரிவில் தோட்டக்கலை செயல்பாடுகள் 13 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். பின்னர் இந்தத் திட்டம் மற்ற மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

105. மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு மாணவர்களுக்கு நவீன வசதிகளுடன் கலந்தாய்வு மையம், பயோமெட்ரிக் விரல் பதிவு, வெப் கேமராவுடன் முக அங்கீகாரம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் வீடியோகிராப் ஆகியவை 13 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் முதுநிலை பட்டப் படிப்பு மாணவர்களுக்கு நவீன வசதிகளுடன் கலந்தாய்வு மையம், பயோமெட்ரிக் விரல் பதிவு, வெப் கேமராவுடன் முக அங்கீகாரம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் வீடியோகிராப் ஆகியவை 13 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

106. 6 இலட்சம் ரூபாய் செலவில் தேசிய காசநோய் திட்டத்தின்கீழ் மூன்று மாவட்டங்கள் காசநோய் இல்லா மாவட்டமாக சான்று பெற நடவடிக்கை எடுக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

தேசிய காசநோய் திட்டத்தின்கீழ் 6 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று மாவட்டங்கள் காசநோய் இல்லா மாவட்டமாக சான்று பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

107. தொழில்சார்ந்த சுகாதாரம் தொடர்பாக நியமன அலுவலர்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி 5 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொழில்சார்ந்த சுகாதாரம் தொடர்பாக நியமன அலுவலர்களுக்கும், உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் பயிற்சி 5 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

108. மாநிலம் முழுவதும் கல்லூரி மாணவர்கள், போக்குவரத்துப் பணியில் உள்ள காவலர்கள் உட்பட 2,700 காவலர்கள், நெடுஞ்சாலைப் பாதுகாப்புப் பணியில் உள்ள 500 காவலர்கள், தீயணைப்புத் துறையில் 500 நபர்கள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் உள்ள 300 மீட்புப் பணியாளர்கள் அனைவருக்கும் உரிய முகமைகள் வழியாக முதலுதவிப் பொறுப்பாளர் பயிற்சி வழங்கப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலம் முழுவதும் கல்லூரி மாணவர்கள், போக்குவரத்துப் பணியில் உள்ள காவலர்கள் உட்பட 2,700 காவலர்கள், நெடுஞ்சாலைப் பாதுகாப்புப் பணியில் உள்ள 500 காவலர்கள், தீயணைப்புத் துறையில் 500 நபர்கள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் உள்ள 300 மீட்புப் பணியாளர்கள் அனைவருக்கும் உரிய முகமைகள் வழியாக முதலுதவிப் பொறுப்பாளர் பயிற்சி வழங்கப்படும்.

கோரிக்கை எண் 27–தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழகத்தை உலகளவில் உற்பத்தி மையமாக மாற்றி, தொலைநோக்குடன் கொள்கைகள் பல வகுத்து, அதனைச் செவ்வனே செயல்படுத்தி “மக்களால் நான், மக்களுக்காகவே நான்”

என்ற முனைப்புடன் வாழ்ந்து, 20 ஆம் நூற்றாண்டின், இந்தியாவின் ஈடு, இணையற்ற தலைவராக உருவெடுத்து, 21 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டிய பெருமைக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வேளாண் குடியில் பிறந்து, குடிமாரமத்து திட்டம், அத்திக்கடவு—அவிநாசி திட்டம், சரபங்கா நீரேற்றுத் திட்டம் மற்றும் நீர் மேலாண்மை போன்ற திட்டங்களை அறிவித்து, மேலும், காவேரி டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்து, உணவு தானிய உற்பத்தியில், மாநிலத்தின் நீடித்த நிலையான வேளாண் வளர்ச்சியில் தொடர் தேசிய விருதுக்கு வித்திட்டு, ஏர் உள்ள காலம் வரை வேளாண் குடிமக்களின் மனதில், நீக்கமற நிறைந்திருக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

மாநிலத்தின் நிதி நிலையை மாற்றாரும் வியக்கும் வண்ணம் செம்மைப்படுத்தி, மக்கள் நலத் திட்டங்கள் பல செயல்படுத்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்திற்குப் பாதுகாவலராக இருந்து, கழகத்தை கண்ணும் கருத்துமாகக் கட்டிக்காத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு, இக்கழகம் இரும்புக் கோட்டையாகத் திகழ்வதற்குக் காரணமாய் இருந்துவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

சங்கரி மண் தந்த இந்த அவையின் நாயகர், நடுநிலை தவறாது, அவைக்கு நாளும் நல்ல தீர்ப்பையே வழங்கிவரும், மதிப்பிற்கும், மரியாதைக்கும், எங்கள் அன்பிற்கும் உரிய இயக்கத்தின் மூத்த முன்னோடி, மாண்புமிகு சபாநாயகர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியான' தமிழர்தம் உயர் பண்பாட்டை எடுத்துக் கூறும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றை உலகுக்கு மீண்டும் உரக்கக் கூறும் விதமாக, உலகத் தமிழர்களை இணைக்கும் "யாதும் ஊரே'' என்ற புதியதோர் உறவுப் பாலத்தை நியூயார்க் நகரில் துவக்கி, புதிய வரலாறு படைத்திருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி, எனது பதிலுரையை துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கூறும் நல் உலகம், சங்க காலத்திலிருந்தே கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து, சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுடன் சிறப்பான வணிகம் மற்றும் சீர்மிகு பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தது என்பதை, சங்க கால இலக்கியம் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் நமக்கு உறுதிப்படுத்தியுள்ளன. கடல் கடந்து, பல நாடுகள் சென்று வணிகம் செய்து வரவேண்டும் என்றால், தமிழ்நாட்டில் உள்நாட்டு வணிகம், அன்றே அத்துணை சிறப்பாகச் செழித்து ஓங்கி இருந்தது என்பதை அறியலாம். முசிறி எனும் துறைமுகப்பட்டினத்தில் கிரேக்க மற்றும் ரோமாபுரி நாட்டைச் சேர்ந்த வணிகர்கள், சேர நாட்டு மிளகைப் பெற, பொன்னைக் கொண்டு வந்து வழங்கியதை "யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி" என்று அகநானூறு குறிப்பிடுகிறது. காவேரிப்பூம்பட்டினத்தில், பல மொழி பேசும் பன்னாட்டு வணிகர்கள் வந்து, வர்த்தகம் செய்ததைப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. தமிழ்ச் சமுதாயம் தொன்றுதொட்டு, தொழில் மற்றும் வணிகம் ஆகியவற்றில் சிறந்ததொரு இடத்தைப் பெற்றதற்கு, இவைகளே சான்றுகளாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகிய இரண்டும், அம்மாநிலத்தின் தொழில் மற்றும் உற்பத்தி சார்ந்த வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இந்திய மாநிலங்களில், சில மாநிலங்கள், சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் முன்னணி பெற்றும், சில மாநிலங்கள், பொருளாதார வளர்ச்சியில் முன்னணி பெற்றதாகவும் உள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ நோக்கி இந்த அரசு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை (Inclusive Growth) உறுதி செய்து முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தியப் பொருளாதாரம், 2024 ஆம் ஆண்டில், 5 டிரில்லியன் US Dollar என்ற இலக்கை அடைவதற்கு நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சி, ஒரு உந்துசக்தியாகப் பங்காற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சியில் முன்னணியில் உள்ள தமிழ்நாடு, வேளாண்மை, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள், கனரக பொறியியல் பொருட்கள் உற்பத்தி, பெட்ரோலியம் மற்றும்

இரசாயனப் பொருட்கள், பார்மாசூட்டிகல், Hardware and Software, தகவல் தொழில்நுட்பம், மின்சாரம், சுற்றுலா போன்ற பலதரப்பட்ட துறைகளில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய மாநிலங்களில், பெரிய மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாடு, தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் முதலிடம், வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் முதலிடம், சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் எண்ணிக்கையில் முதலிடம், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் முதலிடம், மோட்டார் வாகன உற்பத்தியில் முதலிடம், இந்தியப் பொருளாதாரத்தில் இரண்டாவது இடம், தகவல் தொழில்நுட்பத்தில் மூன்றாவது இடம், ஏற்றுமதியில் மூன்றாவது இடம், அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, தொழில் தொடங்க உகந்த மாநிலம். சட்டம் ஒழுங்கு முற்றிலும் பாதுகாக்கப்பட்ட மாநிலம். மிகை மின்சாரம் உள்ள மாநிலம். திறன்வாய்ந்த மனித வளம் நிறைந்த மாநிலம். சமூக–பொருளாதார சீர்திருத்தங்களில் முன்னணி மாநிலம். சாலை வசதி, இருப்புப் பாதை வசதி, துறைமுகம் மற்றும் விமான சேவைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் நிறைந்த மாநிலம். இதனால் உலகின் மிகச் சிறந்த Fortune 500 நிறுவனங்களில், 62 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. உலகின் தலைசிறந்த செல்போன் நிறுவனமான Apple, தனது i–Phone–ஐ, சீனாவில் தயாரித்து வந்தது. தற்போது, தமிழ்நாட்டில் தனது உற்பத்தியைத் துவக்கி, உலகெங்கும் ஏற்றுமதி செய்து வருகிறது. மின்னணு துறையில், தமிழகம் தலைசிறந்த இடத்தைப் பெற்றுள்ளதற்கு இதுவே சான்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூரில் இயங்கி வந்த நோக்கியா நிறுவனம், மத்திய அரசின் வரி கொள்கையின் காரணமாக மூடப்பட்டது. இந்நிறுவனம் எதிர்கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்து மீண்டும் அதே இடத்தில், அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையில், புதிய தொழிற்சாலையை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும், நமது பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டனர். தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சியின் காரணமாக பின்லாந்து நாட்டைச்

சேர்ந்த சால்காம் என்ற நிறுவனம், நோக்கியா நிறுவனத்தின் ஒரு பகுதியைக் கையகப்படுத்தி, ரூபாய் 1,800 கோடி முதலீட்டில் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில், மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள உள்ளது.

மேலும், வேலூர் மாவட்டம், காட்பாடியில் செயல்பட்டு வந்த, குறிப்பாக மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தொகுதியில் உள்ள தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனம் (டெல் நிறுவனம்) பாரத மின்னணு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட தொழில் நிறுவனங்கள்கூட, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தொடர் முயற்சிகளால், செயல்படத் தொடங்கியுள்ளன. இது நமது முதலமைச்சர் அவர்களின் சிறந்த ஆளுமைக்கு ஒரு சான்றாகவும், தமிழ்நாட்டின் தொழில் துறை வரலாற்றில் ஒரு "புதிய சகாப்தம்" ஆகவும் விளங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் போட்டிகள் நிறைந்த இந்த உலகில், தொழில் துறை பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளது. 2019–2020–ல், ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்த நிலை, இந்தியப் பொருளாதாரத்தையும் பாதித்தது. குறிப்பாக, உற்பத்தித் துறைகளை இது வெகுவாகப் பாதித்தது. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பான பொருளாதார அணுகுமுறைகளின் காரணமாக, 2019–2020 ஆம் நிதியாண்டில், இந்திய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதமான 5%–ஐவிட, அதிகமாக தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, SGDP 7.27% ஆக உள்ளது, இது தமிழ்நாட்டின் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு சான்றாகும் என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி, தொழில் மாசினைக் குறைத்து, பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து, புதிய கண்டுபிடிப்பு வாயிலாக குறைந்த விலையில், தரமான பொருட்கள் உற்பத்தி செய்யும், நான்காம் தலைமுறை, INDUSTRY 4.0 என்ற தொழில் அணுகுமுறையைக் கடைபிடிக்க, மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் அரசு ஊக்குவித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உலகமயமாக்கல் மற்றும் பொருளாதார–தாராளமயமாக்கல் கொள்கையை, இந்திய அரசு நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 1992–ல், New Industrial Policy, 2003–ல், Revised Industrial Policy and IT Policy, 2012–ல், Vision 2023–ம், 2014–ல், Automobile & Auto components Policy மற்றும் Bio–Tech Policy–ம் கொண்டுவரப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் 2018–ல் Startup Policy, 2018–ல், Single Window Portal System, 2018–ல், Business Facilitation Act & Rules, 2019–ல் Revised IT Policy, 2019–ல், Aero Space & Defence Policy, 2019–ல், Electric Vehicle Policy, 2019–ல் High Level Committee போன்ற பல்வேறு தொழில் கொள்கைகள் வெளியிடப்பட்டதன் காரணமாக, வளர்ந்து வரும் உலகத் தொழில்நுட்பத்திற்கேற்ப, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பீடுநடை போட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 2015–ல் முதற்கட்டமாக GIM நடத்தப்பட்டு, அதில் போடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் ரூபாய் 2.42 இலட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. அவற்றில் 71 திட்டங்கள்மூலம், ரூபாய் 69,849 கோடி முதலீடும், 1,82,486 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மற்ற மாநிலங்களில் செயல்பாட்டு விகிதம் 30 முதல் 40 சதவிகிதம் மட்டுமே உள்ள நிலையில், தமிழ்நாட்டின் செயல்பாட்டு விகிதம் 72.44 சதவிகிதமாக உள்ளது. இதில், வணிக உற்பத்தியைத் துவக்கியுள்ள Saint Gobain, Amway, Growthlink Overseas, Takasogo, Kone Elevators, Samsung, Microsoft Corporation, MRF Ltd., போன்ற பெரிய நிறுவனங்களும் அடங்கும்.

2015 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட அல்கிராபி நிறுவனம், சுற்றுச்சூழலுக்கு உகந்த BS–SIX பெட்ரோ கெமிக்கல் உற்பத்தியை தூத்துக்குடியில் 49 ஆயிரம் கோடியில் துவக்க உள்ளது. அதன்மூலம் 3,000 நபர்களுக்கு நேரடியாகவும், 10,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 2019–ல், GIM வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதில் போடப்பட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், ரூபாய் 3,00,501 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது. அவற்றில் 59 நிறுவனங்கள் ரூபாய் 16,739 கோடி முதலீட்டில், வணிக உற்பத்தியைத் துவக்கி, 82,794 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன. 209 திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. இதன் செயல்பாட்டு விகிதம் 88.15% அடைந்துள்ளதால், GIM–2019 மாபெரும் வெற்றியடைந்துள்ளது. CPCL, Hyundai, Foxconn, Adhani Group, PSA France Car Company, Eicher Motors போன்ற பெரிய நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, TIDCO மற்றும் DLF நிறுவனம் ரூபாய் 5,000 கோடி முதலீட்டில், 70,000 IT துறையினருக்கு வேலைவாய்ப்புடன் “Down Town தரமணி” என்ற IT Park–க்கு 23–1–2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. Ford நிறுவனத்தின், Research & Development Centre சோழிங்கநல்லூரில் 26 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்டு, 6–2–2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. GIM அல்லாமல், CEAT டயர் நிறுவனம், ரூபாய் 4,000 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புடன், காஞ்சிபுரம் மாவட்டம், மதுரமங்கலத்தில், 18 மாதங்களில் உருவாக்கப்பட்டு, 12–2–2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நிறுவனங்கள் செய்யும் முதலீட்டின் அளவு மற்றும் வழங்கும் வேலைவாய்ப்புகளின் அடிப்படையில், ஊக்கத் தொகையை (Investment Promotion Subsidy) தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. 2020–2021 ஆம் நிதியாண்டில், இதற்காக, ரூபாய் 2,500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொழில்முனைவோர்களுக்கு ஊக்கமளிப்பதுடன், புதிய தொழில்கள், தமிழ்நாட்டில் துவங்குவதற்கு ஏதுவாக அமைந்து, தமிழகத்தை மேலும் வலுவான பொருளாதார வளர்ச்சிக்குக் கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நேரடி முதலீட்டினை (FDI) ஈர்ப்பதில், தொடர்ந்து பல ஆண்டுகளாக தமிழ்நாடு, முன்னிலை பெற்ற மாநிலமாக இருந்து வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, ஏப்ரல் 2006 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வந்த மொத்த அந்நிய நேரடி முதலீடு ரூபாய் 25,415 கோடி மட்டுமே. அது சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் சுமார் ரூபாய் 5,083 கோடியாக இருந்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஏப்ரல் 2011 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில் வந்துள்ள மொத்த அந்நிய நேரடி முதலீடு ரூபாய் 1,56,183 கோடி; அது சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 17,849 கோடி ஆகும். Defence Industrial Corridor திட்டத்தில் இராணுவ தளவாடங்கள் உற்பத்தி செய்யும் L&T, MBDA மிசைல் சிஸ்டம்ஸ் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, கோவையில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் முதலீடுகள் செய்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின்போது, 41 தொழில் நிறுவனங்களுடன் ரூபாய் 8 ஆயிரத்து 835 கோடி மதிப்பீட்டில், 35,520 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதன்முதலில், தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர, வெளிநாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட முதல்வர், எடப்பாடியார் அவர்களே!

மேலும், Haldia பெட்ரோ கெமிக்கல் நிறுவனத்தால் ரூபாய் 50,000 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த BS–SIX பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையை, 5,000 நபர்களுக்கான வேலைவாய்ப்புடன், கடலூரில் நிறுவ கொள்கை அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்தியத் தூதரகம் மற்றும் Business Leaders Forum ஆகியவற்றுடன் இணைந்து, துபாயில் நடத்திய முதலீட்டாளர்கள் சந்திப்பில் 5 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டன. இதில், ரூபாய் 3 ஆயிரத்து 750 கோடி முதலீடும், 10,800 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 1,000 கோடி முதலீட்டில் DP World திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. KGM Dubai–M auto Electric திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக முதலீட்டாளர் சந்திப்பிற்குப் பின்னர், கடந்த ஓராண்டில் மட்டும், 64 புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் ரூபாய் 19,936 கோடி முதலீட்டில் 86,337 நபர்களுக்கு வேலைவாய்ப்புடன் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"புதிய பாதையை உண்டாக்கிடுவோம்
இடையூறுகள் யாவையும் நொறுக்கிடுவோம்
இளைய வல்லமையே ஒன்று சேருவோம்
புதிய இந்திய நாடு உருவாக்கிக் காட்டுவோம்"

என்ற பாரதியின் கனவினை நனவாக்கும் வகையில், படித்த இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக மட்டும் இல்லாமல், பிறருக்கு வேலை வழங்கும் தொழில்முனைவோர்களாக இருக்க வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசின் நோக்கமாகும். அதனால்தான் TIIC நிறுவனம்மூலம் NEEDS எனப்படும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் 6 சதவீத வட்டி மானியத்துடன் மிகக் குறைந்த வட்டியில் குறு, சிறு தொழில்முனைவோருக்கு கடன் வழங்கும் திட்டம், மூலதனக் கடன், இயந்திர நிதியுதவி போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், காட்சிக்கு எளியவராக, கடுஞ்சொல் அற்றவராக, எளிதில் அணுகக்கூடிய முதல்வராக உள்ள காரணத்தால், தொழில்முனைவோர் தமிழ்நாட்டை நாடி வருகின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட Tamil Nadu Business Facilitation Act and Rules, 2018–ன்படி தொழில் நிறுவனங்கள் பெறவேண்டிய 37 அனுமதிகளை, 13 துறைகளிடமிருந்து ஒற்றைச் சாளர முறை எனப்படும் Single Window Portal மூலமாக குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் பெற்றுக் கொள்ளலாம். இதன் செயல்பாடுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர் மட்டக் குழுவால் (High Level Committee for Single Window Clearance) தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு தொழில் திட்டங்களின் செயல்பாட்டு நிலையை ஆராய்ந்து தடைகள் ஏதும் இருப்பின், உடனுக்குடன் களையப்பட்டு அனைத்து அனுமதிகளும் வழங்கப்படுகின்றன. மேலும், Green Category தொழிற்சாலைகளுக்கு Direct CTO மற்றும் நில வகைப்பாட்டுக்கு உண்டான அனுமதியை Single Window Clearance–ல் வாங்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சீனா, தென் கொரியா, ஜப்பான், UAE, இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய நாடுகளின் முதலீடுகளை ஈர்க்கும்பொருட்டு, தனி Country Desk, Guidance–ல் அமைக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின், இடர்பாடுகளைக் களையும்பொருட்டு, “BIS–BUDDY'' தொழில் நண்பன் என்ற இணையதளம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் தங்கள் குறைகளை இந்த Helpline மூலம் பதிவு செய்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாடு, தேசிய அளவில் ஏற்றுமதியில், மூன்றாம் நிலையில் உள்ளது. 2018-2019-ல் தமிழ்நாட்டின் ஏற்றுமதி மதிப்பு, 30.525 பில்லியன் அமெரிக்க டாலர். இது இந்திய ஏற்றுமதியில் 9.25%. மோட்டார் வாகன ஏற்றுமதி 37.6%, ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதி 30.8%, தோல் பொருட்கள் ஏற்றுமதி 46.4%, மின்னணு பொருட்கள் ஏற்றுமதி 25.7% என தமிழ்நாடு தொடர்ந்து ஏற்றுமதியில் முன்னணி வகிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாகனக் கொள்கைக்குப் பிறகு ஏத்தர் எனர்ஜி (Ather Energy) என்ற நிறுவனம், ரூபாய் 650 கோடி முதலீட்டில் ஓசூரிலும், யங் வா டெக் இந்தியா என்ற நிறுவனம், ரூபாய் 69 கோடி முதலீட்டில் சென்னையிலும், மாலே எலக்ட்ரிக் டிரைவர் என்ற நிறுவனம் ரூபாய் 50 கோடி முதலீட்டில் கோவையிலும், மின்சார வாகனம் மற்றும் Lithium ion battery தயாரிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

மேலும், L.M.W., Roots Industries, Data Patterns, EASAT Radars, Salem Aerospace Engineers, Titan Industries போன்ற பல நிறுவனங்கள் ரூபாய் 700 கோடி அளவில் பாதுகாப்புத் தளவாட உற்பத்தியில் முதலீடு செய்துள்ளன. மகேந்திரகிரியில் ISRO–வின் திரவநிலை எரிவாயு ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. ISRO நிறுவனத்தின் தலைவர், திரு. சிவன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் ISRO செயற்கைக்கோள் ஏவுதளத்தை நிறுவ தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையில் உள்ள விமான ஓடுதளத்தில், ஆள் இல்லா விமானப் பரிசோதனை, விமான ஓட்டுநர் பயிற்சி மையம், சிறிய விமான வடிவமைப்பு, பரிசோதனை ஓட்டம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஐ.ஐ.டி. மூலம் ஆராயும் பணியில் டிட்கோ நிறுவனம் இணைந்து செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, தொழில் முதலீடு, முதலீடுகளை ஈர்த்திடும் திறன், சுற்றுச்சூழல், கல்வி, வேலைவாய்ப்பு, மனிதவளம், சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, உள்கட்டமைப்பு வசதி, மின்சாரம், சேவை ஆகிய பலதரப்பட்ட காரணிகளை ஆய்வு செய்து வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இந்தியாவின் முதன்மை பெற்ற மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருந்து வருகிறது. மத்திய அரசின் நல்லாட்சி குறியீட்டில் தமிழ்நாடு முதல் இடம். இந்தியா டுடே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வெளியிட்ட State of States என்ற ஆய்வின்படி, தமிழ்நாடுதான் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலம். Frost and Sullivan என்ற சர்வதேச நிறுவனம் 2019 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி குறியீட்டில் தமிழ்நாட்டிற்கு முதல் இடம் அளித்துள்ளது. NCAER பொருளாதார ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி, பொருளாதார குறியீட்டில், தமிழ்நாடு இரண்டாவது இடம். NITI Aayog ஆய்வின்படி நிலையான வளர்ச்சி குறியீட்டில், தமிழ்நாடு இரண்டாம் இடம். NITI Aayog's Innovation Index 2019–ல் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடம். Public Affairs Centre ஆய்வின்படி தமிழ்நாடு இரண்டாம் இடம். India Skill Report 2019–ன்படி தமிழ்நாடு இரண்டாவது இடம். தொழில் துறையில் செய்யப்பட்ட முதலீடு மற்றும் உற்பத்தியில், தமிழ்நாடு மூன்றாம் இடம்.

மேற்கூறிய ஆராய்ச்சி முடிவுகளின்படி, இந்தியாவிலே மிகச் சிறப்பாக செயல்படும் தொழில் வளர்ச்சி பெற்ற மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (SIPCOT) சிப்காட் நிறுவனம் அனைத்து வசதிகளுடன்கூடிய கட்டமைப்புடன் 33,775 ஏக்கர் நிலப் பரப்பளவில், 7 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 15 மாவட்டங்களில் 23 தொழில் பூங்காக்களை உருவாக்கி,

ரூபாய் 1,14,419 கோடி அளவிலான முதலீடுகளை ஈர்த்து, சுமார் 6.48 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பல்வேறு தொழில் பூங்காக்களில், 4,457 ஏக்கர் தொழில் மனை ஒதுக்கீட்டிற்குத் தயார் நிலையில் உள்ளது.

காஞ்சிபுரம்–வைப்பூர்–மாத்தூர்–நெமிலி–மாம்பாக்கம் மற்றும் மதுரை மாவட்டத்தில் நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராணிப்பேட்டை மாவட்டத்தில் பனப்பாக்கம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் நிலை–III, குருபரபள்ளி நிலை–II மற்றும் III, தருமபுரி தொழில் பூங்கா Phase–I, இராமநாதபுரம் மாவட்டத்தில் மணக்குடி, தேனி மாவட்டத்தில் தப்பக்குண்டு, விருதுநகர் மாவட்டத்தில் குமாரலிங்காபுரம் மற்றும் முத்துலிங்காபுரத்தில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 100 ஏக்கர் நிலம் வைத்துள்ள தனியார் நில உடமைதாரர்களுடன் இணைந்து கூட்டாண்மை முறையில் தொழிற்பூங்காக்களை உருவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது வழங்கப்படும் சலுகைகள், இத்தொழில் பூங்காக்களுக்கும் பொருந்தும். நிலையான தொழில் வளர்ச்சிக்கு, ஏழு தொழிற் பூங்காக்களை பசுமைப் பூங்காக்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழில் முதலீட்டாளர்கள் GIS Mapping மற்றும் Geo Database வாயிலாக சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள மனைகளைப் பார்வையிடலாம். தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு, வல்லம்–வடகால் பகுதியில் 6,000 பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 384.61 கோடி மதிப்பீட்டில் குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவைக்காக 45 MLD திறன் கொண்ட TTRO Plant 29–11–2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிட்கோ நிறுவனம் சென்னை–பெங்களூரு Industrial Corridor, சென்னை–கன்னியாகுமரி Industrial Corridor, கொச்சி–கோயம்புத்தூர்–பெங்களூரு Industrial Corridor மற்றும் Defence Industrial Corridor ஆகிய திட்டங்களுக்கான முகமை நிறுவனமாகச் செயல்படுகிறது. Ponneri Industrial Township Area Development Authority–யுடன் இணைந்து பொன்னேரி தொழில் முனையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான உடன்பாடு மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 21–2–2020 அன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. வயலூரில் பாலிமர் தொழில் பூங்காவை 265 ஏக்கர் நிலப் பரப்பில், ரூபாய் 216 கோடி திட்ட மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனம் அமைக்கவுள்ளது.

ஆவடி–பட்டாபிராமில், ரூபாய் 235 கோடி முதலீட்டில் IT Park–க்கு கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது. IT துறையைச் சார்ந்த சுமார் 5,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்யும் பணியை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL) நாளொன்றுக்கு 1,180 டன் காகிதக்கூழ் உற்பத்தியும், ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் காகிதத்தையும் உற்பத்தி செய்கிறது. திருச்சி மாவட்டம், மொண்டிப்பட்டியில் ஆண்டுக்கு 2 இலட்சம் டன் காகித அட்டையை உற்பத்தி செய்கிறது. மேலும், ரூபாய் 1,100 கோடியில் மரக்கூழ் தயாரிக்கும் ஆலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1–11–2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆலையின் திடக்கழிவு, சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைக் கொண்டு 900 டன் சிமெண்ட் தயாரிக்கப்படுகிறது. TNPL நிறுவனம் 2,580 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 3,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டின் மொத்த வருவாய் ரூபாய் 3,698 கோடியாக இருக்கும் எனவும், வரிக்கு முன் இலாபம், ரூபாய் 286 கோடியாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் (TANCEM) 10 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் புதிய ஆலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1–11–2019 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. தற்போது, 7 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தி செய்கின்ற மொத்த சிமெண்ட்டில் 70% RD Department–க்கு வழங்கப்படுகிறது. 31–12–2019 வரை, சிமெண்ட் மூட்டை ரூபாய் 190 வீதம், 46 இலட்சத்து 76 ஆயிரத்து 364 மெட்ரிக் டன் அம்மா சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு, 15 இலட்சத்து 43 ஆயிரத்து 216 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உப்பு நிறுவனம் (TANSALT) 5,236 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்து வருகிறது. 31–12–2019 வரை அம்மா உப்பு 1 இலட்சத்து 20 ஆயிரத்து 438 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டம் (Modernisation) மற்றும் 5 சர்க்கரை ஆலைகளில் மேற்கொள்ளப்பட்ட இணைமின் திட்டம் (Co–generation Project) முடிவுற்று தற்போது பயன்பாட்டில் உள்ளது. இதனால் சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் மேம்பட்டுள்ளது. 2017–2018 ஆம் அரவைப் பருவம் முதல் வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணய முறையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 2018–2019 ஆம் அரவைப் பருவத்திற்கு 96 ஆயிரத்து 113 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு, ரூபாய் 93 கோடியே 13 இலட்சம் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஏற்ப தளராத முயற்சியுடன் தமிழ்நாட்டின் சிறப்பை தரணியெங்கும் எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் தொழில் துறை திசையெங்கும் வெற்றி முழக்கம் ஒலிக்கச் செய்து நாளும் புதிய வரலாறு படைக்கும் என உறுதியளித்து, இந்த மானியக் கோரிக்கை பணிகளுக்கு எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த தொழில் துறை அரசு முதன்மைச் செயலாளர், அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் எனது உதவியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு 2020–2021 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. வழிகாட்டி நிறுவனத்தால் தமிழ்நாடு மண்டலத் தொலைத்தொடர் திட்டம் (Regional Outreach Programme) தொடங்குதல்

வழிகாட்டி நிறுவனம் தற்போது சென்னையில் இயங்குகிறது. தொழிலகங்களுடனும் வர்த்தகச் சங்கங்களுடனும் இணைந்து பணியாற்றும் வகையில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் விதமாக, கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, "தமிழ்நாடு மண்டலத் தொலைத் தொடர் திட்டம்" (Regional Outreach Programme) வழிகாட்டி நிறுவனத்தால் தொடங்கப்படும். இத்திட்டம் ரூபாய் 60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். தொழிலகங்களுக்கான பராமரிப்பு ஆதரவினையும், விரிவாக்க திட்டங்களுக்குத் தேவையான ஆதரவினையும் பெற்றிட இந்தத் திட்டம் உதவும். மேலும், தொழிலகங்கள் சந்தித்துவரும் சிக்கல்களைப் புரிந்துகொண்டு, அவற்றிற்குத் தீர்வு காணும் விதத்தில் வர்த்தகத் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலக அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பணி புரிந்திடவும், உள்ளூர் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு அனுமதிகளை எளிதாகப் பெற்றிடவும், மாவட்டங்களில் புதிய முதலீட்டாளர்களை ஈர்த்திடவும் இத்திட்டம் உதவும்.

2. புதிய ஏற்றுமதி கொள்கை (Export Policy) வகுத்தல்

இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலம் தமிழ்நாடு ஆகும். ஜவுளி, மோட்டார் வாகனங்கள், தோல், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு இனங்களில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஏற்றுமதி சந்தைகளை மேலும் ஊக்குவிப்பதற்காகவும், ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு புதிய ஏற்றுமதி கொள்கை வகுக்கப்படும்.

3. சிப்காட் தொழிற்பூங்காக்களில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV cameras) நிறுவுதல்

சிப்காட் நிறுவனத்தால் அதன் அனைத்து தொழிற்பூங்காக்களிலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டு கண்காணிக்கப்படும். இக்கண்காணிப்பின்மூலம் சிப்காட் தொழிற் பூங்காக்களில் பணிபுரிபவர்கள் குறிப்பாக மகளிரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திடவும், வாகனப் போக்குவரத்தினைக் கண்காணித்திடவும், பொது இடங்களில் கழிவுநீரை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழலை மேம்படுத்திடவும் வழிவகை செய்யப்படும்.

4. தொழிற்சாலைகளுக்கு நீடித்த தொழில் நீர் வழங்குதல்

சிப்காட் நிறுவனம், தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் தடையில்லாமல் நீர் வழங்க கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலைகள், கழிவுநீரைச் சுத்திகரித்து தொழில் நீராக மாற்றும் ஆலைகள், தொழிற்சாலைகளில் நீர் சுழற்சித் திட்டங்கள், மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மற்றும் நிலத்தடி நீர் அதிகரிப்பு செய்யும் திட்டங்கள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 'தமிழ்நாடு தொழில் நீர் நிறுவனம்' (Tamil Nadu Sustainable Industrial Water Company Ltd., (TANSIWCO) என்ற புதிய துணை நிறுவனத்தை நிறுவும். இந்தத் துணை நிறுவனமானது ரூபாய் 20 கோடி பங்குத் தொகையுடன் உருவாக்கப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

5. சிப்காட் தொழிற்பூங்காக்களில் நீர்வள ஆதாரங்கள் மேம்படுத்துதல்

சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தி நிலையான தண்ணீர் வசதியை ஏற்படுத்தும்பொருட்டு, சென்னை இந்திய தொழில்கல்வி நிறுவனத்தின் (IIT) துணை நிறுவனமான Centre for Urbanization Buildings and Environment (CUBE) வாயிலாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள 120 நீர்நிலைகளை மேம்படுத்திடவும்,

கழிவுநீர் மறுசுழற்சி அடிப்படையில் நன்னீராக மாற்றவும், மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தி, திட்டமிட்டுப் பயன்படுத்தவும் தேவையான ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

6. புதுயுகச் சூழலுக்கு உகந்த நான்காம் தலைமுறை தொழில் முறைக்கான (Industry 4.0) மையம் அமைத்தல்

நான்காம் தலைமுறை தொழில் முறைகளை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கும் சூழலில், உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்பாடுகளில் தானியங்கி முறைகளும், தரவு பரிமாற்ற முறைகளும் அதிகளவில் பயன்படுத்தப்படும் நிலை உருவாகி வருகிறது. Cyber–Physical System எனப்படும் இணையமும் இயல்பும் இணைந்த முறை, தொழில்களுக்கான உருப்பொருட்களின் இணையம் (Industrial Internet of Things), மேகக்கணினியம், புலப்பாட்டு கணினியம் (Cognitive Computing), செயற்கை நுண்ணறிவு என பல நவீன முறைகளும் இதில் அடங்கும். மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப, நான்காம் தலைமுறை தொழில் முறைகள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்திட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உயர் தரத்திலான ஒரு தொழில்நுட்ப மையத்தை சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்கள் அமைக்கும். உற்பத்தித் துறை மையமாக விளங்கிவரும் தமிழ்நாடு புதுயுகச் சூழலுக்கு ஏற்ப முன்னேறிச் செல்ல இத்திட்டம் ஒரு முக்கிய படிக்கல்லாக அமையும்.

7. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் உள்ள வான்வெளி பூங்காவில் பல தள உற்பத்தி வளாகம் (Multi–Floor Manufacturing Complex) ஒன்றை ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைத்தல்

உயர் தொழில்நுட்ப பொறியியல், வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய சிறந்த இடமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. இத்துறை சார்ந்த தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பிரிவுகளை அமைக்க அனைத்து வசதிகளுடன்கூடிய தொழில் வளாகங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு, டைடல் பார்க் நிறுவனம், திருப்பெரும்புதூரில் உள்ள வான்வெளி பூங்காவில் 12 ஏக்கர் நிலப் பரப்பில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா

அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு பலதள உற்பத்தி வளாகத்தை பல கட்டங்களில் அமைக்கும். முதற்கட்டமாக, 60,000 சதுர அடி பரப்பளவில் சுமார் ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

8. கள்ளக்குறிச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் புதிய கிளை அலுவலகம் ஒன்று திறக்கப்படும்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கினை அதிகரிக்கும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கழகத்தின் புதிய கிளை அலுவலகம் ஒன்று கள்ளக்குறிச்சியில் திறக்கப்படும். இந்தப் புதிய கிளை அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புதிய தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து, அங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சமநிலை மண்டல வளர்ச்சியினை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும்.

9. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் ஓர் ஆரம்பப் பள்ளியை ரூபாய் 3.70 கோடி செலவில் நிறுவுதல்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தனது அடுக்கு காகித அட்டை ஆலையில் பணிபுரியும் ஊழியர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் ஆலையின் அருகில் உள்ள கிராம மக்களின் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஓர் ஆரம்பப் பள்ளியை ரூபாய் 3.70 கோடி செலவில் 10.78 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவும். முதற்கட்டமாக, 14 வகுப்பறைகளுடன்கூடிய ஸ்மார்ட் வகுப்புகள் நிறுவப்படும். இந்த மாதிரி ஆரம்பப் பள்ளியில் சுமார் 300 மாணவர்களுக்கு எல்.கே.ஜி. முதல் 5 ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படும். மாணவர்களிடையே புத்தக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க நவீன வசதிகளுடன்கூடிய நூலகம் இப்பள்ளியில் அமைக்கப்படும்.

10. செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிய உதிரி உருளை ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்தல்

செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு அரவை நேர இழப்பினை தவிர்த்து ஆலையின் திறனை மேம்படுத்த ஏதுவாக, ஒரு புதிய உதிரி உருளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 23 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

11. செங்கல்வராயன் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளுக்கு பொதுவான உதிரி கொதிகலன் நீரேற்றும் பம்பு ரூபாய் 87 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்தல்

செங்கல்வராயன் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளின் இணைமின் உற்பத்தி நிலையங்களின் அரவை நேர இழப்பைத் தவிர்த்து ஆலையின் திறனை மேம்படுத்த ஏதுவாக, இரண்டு ஆலைகளுக்கும் பொதுவாக ஒரு புதிய உதிரி கொதிகலன் நீரேற்றும் பம்பு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 87 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கனிமத் துறை குறித்த அறிவிப்புகளை வெளியிடுவார்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, 2020-2021 ஆம் ஆண்டிற்கான கனிமத் துறை குறித்த புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமையடைகிறேன்.

அறிவிப்புகள்

கனிமத் துறை

1. புவியியல் மற்றும் சுரங்கத் துறை தலைமை அலுவலகத்திற்கு ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுதல்

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகமானது 1983 ஆம் ஆண்டு கிண்டி தொழிற்பேட்டை

வளாகத்தில் துவங்கப்பட்டு, பணியாளர் மற்றும் கனிம நிருவாகப் பிரிவு, துரப்பணப் பிரிவு, ஆய்வுக்கூடம், அருங்காட்சியகம் மற்றும் நூலகம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு, 50 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடத்தில் போதுமான இடவசதியின்றி 91 சென்ட் நிலப் பரப்பில் இயங்கி வருகிறது. இத்துறையின் பணியாளர்கள் மற்றும் நிருவாக நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போதுள்ள பழைய அலுவலகக் கட்டடத்திற்கு பதிலாக, அதே இடத்தில் 40,000 சதுர அடியில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய 7 அடுக்குமாடிக் கட்டடம் ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் பணியாளர் கட்டமைப்பினை வலுப்படுத்த ஆண்டிற்கு ரூபாய் 5 கோடி செலவில் புதிய பணியிடங்கள் உருவாக்குதல்

புவியியல் மற்றும் சுரங்கத் துறை 1983 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டபோது ஆண்டு கனிம வருவாய் ரூபாய் 2 கோடியாக இருந்தது. கனிம நிருவாகத்தில் தொடர்ந்து எடுக்கப்பட்ட பல்வேறு சீரிய நடவடிக்கைகளால், 2018–2019 ஆம் நிதியாண்டில் கனிம வருவாய் ரூபாய் 1,186 கோடியாக உயர்ந்துள்ளது. இத்துறை கனிம நிருவாகப் பணிகளைக் குறைந்தபட்ச பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. பணியாளர் கட்டமைப்பினை வலுப்படுத்தி கனிம நிருவாகத்தினை சீரிய முறையில் செயல்படுத்தும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கென புதிதாக 26 தொழில்நுட்பப் பணியிடங்கள் உட்பட சுமார் 120 புதிய பணியிடங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5 கோடி தொடர் செலவினத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் தற்போது தொடர் பணி நீட்டிப்பு பெற்று வரும் 222 பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக மாற்றுதல்

புவியியல் மற்றும் சுரங்கத் துறை 1983 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, பிறகு பல்வேறு அரசாணைகள்மூலம் உருவாக்கப்பட்ட 442 தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியிடங்களில் 222 பணியிடங்கள் பணி நீட்டிப்பு பெறும்

இனங்களாக தொடர்வதால், இப்பணியிடங்களுக்கு ஆண்டுதோறும் பணியிட தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, துறையின் பணியாளர் நலன், நிருவாக நலன் கருதியும் மற்றும் இப்பணியிடங்களின் அவசிய தேவையினைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் தற்போதுள்ள 222 பணி நீட்டிப்பு பெற்றுவரும் இனங்கள் நிரந்தரப் பணியிடங்களாக மாற்றி அமைக்கப்படும்.

4. விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை கிராமத்தில் தொன்மையான கல்மரப் படிமங்களைப் பாதுகாக்கும் நோக்கில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புவியியல் பூங்கா (Geo Park) அமைத்தல்

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை கிராமத்தில் சுமார் 2 கோடி வருடங்களுக்கு முன்பு உருவான தொன்மையான கல்மரப் படிமங்கள் உள்ளன. அவை கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் புவியியல் துறை ஆய்வாளர்களுக்கு அவற்றின் தொன்மை மற்றும் உருவான சூழல் குறித்து ஆய்வு மேற்கொள்ள பெரிதும் பயன்படும். இந்த அரிய படிமங்களை ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாகப் பேணி பராமரித்திடும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 5 கோடி திட்ட மதிப்பீட்டில் அப்பகுதியில் புவியியல் பூங்கா (Geo Park) ஒன்று அமைக்கப்படும்.

5. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ரூபாய் 4 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுதல்

கனிம நிருவாக நலன் கருதி நான்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 4 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் கட்டப்படும்.

6. தேசிய கனிம அகழாய்வு அறக்கட்டளை மற்றும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு மேற்கொள்ள தலைமையகத்திற்கு 2 புதிய ஜீப்புகள் வாங்குதல்

தேசிய கனிம அகழாய்வு அறக்கட்டளை நிதியின்மூலம் மேற்கொள்ளப்படும் கனிம அகழாய்வுப் பணிகள் மற்றும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் ஆகியவற்றை தணிக்கை மேற்கொண்டு, அவற்றின் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தி, மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டு செல்லும் நோக்கோடு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 20 இலட்சம் செலவினத்தில் தலைமையகத்திற்கு 2 புதிய ஜீப்புகள் வாங்கப்படும்.

7. கனிம நிருவாகம் தொடர்பான தகவல்களை மின்னணு வடிவமாக்கல்

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் கனிம நிருவாகத்தினை திறம்பட மேற்கொள்ள கனிம குத்தகைகள், கனிம வருவாய் போன்ற தகவல்களை மின்னணு வடிவமாக்கி தகவல் பரிமாற்றத்தினை எளிமையாக்கும் நோக்கோடு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 10 இலட்சம் செலவில் கனிம நிருவாகம் தொடர்பான தகவல்கள் மின்னணு வடிவமாக்கப்படும்.

8. புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

கனிம நிருவாகச் சட்டம் மற்றும் விதிகளை நடைமுறைபடுத்துதல், மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் கனிம அகழாய்வுப் பணிகளை நிருவகித்தல் போன்ற பணிகளைத் திறம்பட மேற்கொள்ள 10 தலைமையிட புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் 10 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

9. மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை மின்னணு இணைய பயன்பாட்டின்கீழ் கண்காணிக்க திட்டம் செயல்படுத்துதல்

மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம், சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் அமைந்துள்ள பகுதி மற்றும் அப்பகுதிவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக 1,524 நலத் திட்டங்கள் ரூபாய் 409 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களை சிறந்த முறையில் கண்காணித்து, அவற்றினை விரைந்து செயல்படுத்தி, மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாகக் கொண்டு செல்லும்பொருட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு இணைய பயன்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

10. இந்திய அருமணல் நிறுவனத்துடன் (IREL) இணைந்து கூட்டாண்மை நிறுவனத்தை உருவாக்கி, தமிழக கடற்கரையோரப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் தாதுமணல் கனிமத்தினைப் பிரித்தெடுத்து, சந்தைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்

தமிழ்நாடு கனிம நிறுவனம், IREL நிறுவனத்தோடு இணைந்து தாதுமணல் வர்த்தகத்தில் ஈடுபட உள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாதுமணல் கனிமங்கள் உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு கனிம நிறுவனம், IREL உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, ஒரு கூட்டாண்மை நிறுவனத்தை தொடங்கி, தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கப்பெறுகின்ற தாதுமணல் கனிமங்களைப் பிரித்தெடுத்து சந்தைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணின் மணிபோல தமிழ் மண்ணைக் காத்து, எண்ணில் அடங்காத திட்டங்களை வார்த்து, பொற்கால ஆட்சி

தந்தவர், எதிர்ப்போரையெல்லாம் வென்றவர், தனக்குப் பின்னாலும் தமிழ்நாடு காக்க, பசிப்பிணி போக்க, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா என்னும் புண்ணியத் தாயை தந்துவிட்டுப் போனவர் (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கெல்லாம் வழிகாட்டியானவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். ‘அண்ணா’, புரட்சித் தலைவர் ‘எம்.ஜி.ஆர்.’ என்னும் மூன்றெழுத்து சரித்திரத்தை பொன்னேட்டில் எழுதி திராவிடத்துப் பெருமைகளை புத்தொளியாய் ஜொலிக்க வைத்த புரட்சிகளின் வம்சம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) முழுதான வெற்றிகளால் கழகத்தை முன்னெடுத்து முடிசூட்டிய முத்தமிழின் முரசம் அம்மா. பத்தாண்டு காலம் இந்த பைந்தமிழ் பூமியின் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் பாக்கியத்தை எனக்கு வரமாகத் தந்திட்ட நான் வணங்கும் தெய்வம், நம்மையெல்லாம் வாழ வைக்கும் தெய்வம், நம்மையெல்லாம் வழி நடத்தும் காவல் தெய்வம், வங்கத்துக் கடலோரம் மீளாத் துயில் கொண்டு உறங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆத்மா நிறைந்திருக்கும் ஆலயத்தை நோக்கி வணங்கி, கண்ணீர் கசியும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் மக்கள் நலத் திட்டங்களை அச்சுப் பிசகாது நிறைவேற்றி, சாதனை படைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பிற்கினிய அருமை அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலை தவறாமல் நற்பணியாற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அரசினுடைய கொறடா அவர்களே, மாண்புமிகு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய இணையில்லா மக்கள் நலத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதாலும், அம்மா அவர்களின் வழியில் மேலும் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதாலும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு இன்று புடம்போட்ட தங்கம்போல ஜொலித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அரைக்க அரைக்க மணக்கும் சந்தனம்போல, எதிர்க்கட்சிகள் எதிர்க்க எதிர்க்க ஏறுமுகமாக உயர்ந்து கொண்டிருக்கிறது மாண்புமிகு அம்மா

அவர்களது அரசு என்பதை இப்பேரவைக்கு மிகுந்த பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எல்லோர்க்கும் வழிகாட்ட நான் இருக்கிறேன்
இங்கு வந்தாரை வரவேற்கக் காத்திருக்கிறேன்"

என்று பாடினார் புரட்சித் தலைவர். இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த நமது தொப்புள்கொடி உறவுகளான இலங்கைத் தமிழர்களின் நலனைப் பேணிக் காப்பதில் பெரும் அக்கறைகொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு கைகொடுக்கும் தெய்வமாகத் திகழ்ந்தார். இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கட்டுப்பாட்டில் வருகின்ற தமிழக பொதுத் துறை மகத்தான பணிகளை, இன்றைக்கு சரித்திர சாதனைகளைப் படைத்து வருகிறது. தமிழகத்தில் 107 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 18,834 குடும்பங்களைச் சேர்ந்த 59,428 இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனைக் காக்கும் வகையில் அவர்களுக்கு உயர்த்தப்பட்ட பணிக் கொடை, கல்வி உதவித் தொகைத் திட்டம், மகளிர் மற்றும் பெண் குழந்தைகள் நலனுக்காக திருமண திட்டம் உட்பட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் வசித்துவரும், மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்ந்திட, கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு, 2019–2020 ஆம் ஆண்டில் மட்டும் 1,016 மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.33,93,000 வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைகள் வெளியிட்டிருக்கின்றார்கள்.

வெளிநாடு செல்லும் தமிழர்கள் பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்படாதவண்ணம் வரையறைக்குட்பட்ட சட்ட உதவிகள் அளித்தல், மருத்துவ செலவு மேற்கொள்ளுதல், இடர்பட்டோரை மீட்டு அழைத்து வருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2019–2020 ஆம் நிதியாண்டில், பிப்ரவரி திங்கள் வரை பல்வேறு இன்னல்களுக்கு ஆளான 156 தமிழர்களை வெளிநாடுகளிலிருந்து அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், வெளிநாடுகளில் இறந்த 97 தமிழர்களின் பூத

உடல்கள் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளுக்காக கடந்த 2019–2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி திங்கள் வரை ரூ.38,15,194/– செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு நடவடிக்கையாக கோவிட்–19 கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலால், தாயகம் திரும்ப விரும்பிய தமிழகத்தைச் சார்ந்த சுற்றுலாப் பயணியர் மற்றும் மாணவர்கள் சுமார் 500 பேர் மத்திய அரசின் உதவியுடன் இதுவரை மீட்டு வரப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் கொரோனா தொற்று பரவாமல் தடுப்பதற்காக உணவை மறந்து, உறக்கத்தைத் துறந்து தங்களது அரும் உழைப்பை அனுதினமும் அர்ப்பணித்து வரும் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை மற்றும் இதர அரசுத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எடுத்துவருகின்ற நல்ல பல நடவடிக்கைகளுக்கு இந்த மாமன்றம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது.

முன்னாள் படை வீரர்கள் நலன். ஓய்வு பெற்ற முப்படை வீரர்களின் மறுவாழ்விற்காகவும், மறு பணியமர்த்துவதற்காகவும், எண்ணற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியும், ஏற்கெனவே உள்ள திட்டங்களுக்கு புது மெருகேற்றியும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. கொடி நாள் நிதி வசூலில் தொடர்ந்து நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் படை வீரர்கள், ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரை 83 நபர்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் நிரந்தரப் பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (TEXCO). அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப, தனித்திறன் வாய்ந்த முன்னாள் படைவீரர்களைக் கொண்டு சிறப்புப் படைப் பிரிவுகளை உருவாக்கி, தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கழகம் சேவை புரிந்து வருகிறது. தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தேவைக்கேற்ப “மின் திருட்டைத் தடுக்கும் படை” ஒன்றை

உருவாக்கி, அடிப்படையில் மின்நுணுக்கம் அறிந்த 215 முன்னாள் படை வீரர்கள் பணியமர்த்தப்பட்டு, அவர்கள்மூலம் ரூ.190.40 கோடி அளவிற்கு மின் திருட்டு தடுக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவு. பொது மக்களுடைய கோரிக்கைகள்/குறைகளுக்கு சீரிய முறையில் தீர்வு காண்பதற்கு முதலமைச்சரின் தனிப் பிரிவு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 2,36,814 மனுக்களில் 2,04,185 மனுக்களும், இணையதளம் வழியாகப் பெறப்பட்ட 72,742 மனுக்களில், 63,487 மனுக்களும் இதுவரை தீர்வு செய்யப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொது (தேர்தல்கள்) துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு ஜனநாயக நாடு என்பதை அடையாளம் காட்டுவதே தேர்தல்தான். நேர்மையாக நடக்கும் தேர்தல், அதுதான் மக்கள் விரும்பும் மாறுதல். அத்தகைய மாறுதலை ஏற்படுத்தும் தேர்தலை நடத்திட, பொதுத் (தேர்தல்கள்) துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்களையும், இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கான தேர்தல்களையும் அரசின் பொதுத் (தேர்தல்கள்) துறை நடத்துகிறது. தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் தேர்தல் தொடர்பான அனைத்துப் பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தல்கள் ஆகியவற்றை சட்ட விதிகளுக்குட்பட்டு, நியாயமாகவும், சுதந்திரமாகவும் அமைதியான முறையிலும் நடத்தி முடித்து தமிழகம் பெருமை பெற்றுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

முறையான தேர்தல் நடைபெறுவதற்கு அடிப்படையாக விளங்குவது வாக்காளர் பட்டியல் ஆகும். 1–1–2020–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட சிறப்பு சுருக்க முறை திருத்த இறுதி வாக்காளர் பட்டியல் 14–2–2020 அன்று வெளியிடப்பட்டது. இந்த வாக்காளர் பட்டியலின்படி, தமிழ்நாட்டில் தற்போது உள்ள பொது வாக்காளர்களின் எண்ணிக்கை 6,13,06,638. பணித்

தொகுதி வாக்காளர்களின் எண்ணிக்கை 70,918. ஆக மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6,13,77,556.

இந்திய தேர்தல் ஆணையம் குறிப்பிடும் கால அட்டவணையின்படி, எதிர்வரும் 1–1–2021 அன்றுள்ளபடி 18 வயது அடைந்தோரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளும் வகையில், வாக்காளர் பட்டியல் சுருக்கத் திருத்தப் பணி, நடப்பு ஆண்டின் இறுதி காலாண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணியை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முனைப்புடன் மேற்கொள்ளவுள்ளது.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் இயந்திரமும் தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகள் அற்ற வாக்காளர் பட்டியலைக் கொண்டு செயல்படவும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மிகப் பொறுப்பான இந்தக் குறிக்கோளை அடைவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேவையான முழு ஒத்துழைப்பினையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக மாண்புகளையும், மரபுகளையும் காப்பாற்றுவதில் எப்பொழுதுமே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தவறுவதில்லை. யாருடைய உரிமைகளையும் தடுக்கின்ற வகையில் செயல்பட்டதுமில்லை. அந்த வகையில்தான் தமிழக சட்டமன்றம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை குறித்த மானியக் கோரிக்கைகள் குறித்து அவையில் விவாதம் நடத்தப்படுவதில்லை என்பது மரபு. ஆகவே, அந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பைப் பொறுத்தவரையில், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் அறைகளுக்கும் புதிய தொலைக்காட்சி, புதிய குளிர்சாதனக் கருவிகள் மற்றும் R.O.

கருவிகள் ரூ.2 கோடியே 73 இலட்சத்து 40 ஆயிரத்து 370 செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பில், பிரதான நுழைவாயிலுக்கு எதிரில் ஒரு வரவேற்பறை, குடியிருப்பு வளாகத்தைச் சுற்றிலும் paver block பதித்தல் மற்றும் 4 குடியிருப்புத் தொகுப்புகளிலும் புதிய மின்தூக்கிகள் மாற்றுதல், உப வசதிக் கட்டடத்தின் மேல் தளத்தில் கூடுதலாகக் கட்டடம் கட்டுதல், இந்தியன் வங்கியின் மேல் தளத்தில் கூடுதலாக ஒரு தளம் கட்டுதல், பேருந்து நிறுத்தக் கொட்டகை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.5 கோடியே 28 இலட்சத்து 82 ஆயிரத்து 627 செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீத்தடுப்புச் சாதனங்கள் மற்றும் தானியங்கி தீயணைப்புக் கருவிகள் ரூ.3 கோடியே 79 இலட்சத்து 5 ஆயிரத்து 535 செலவில் பொருத்தப்பட்டு வருகின்றன. விடுதி வளாகத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக முன்னாள் இராணுவத்தினர் பணியமர்த்தப்பட்டு காவல் பணி செய்து வருகின்றனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு அருகில் Walkers' Track உடன்கூடிய பூங்காக்கள் மற்றும் அதன் ஒரு புறத்தில் உள் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பணிகளை ரூ.4.29 கோடி செலவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நிதித் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்காக 2020–2021 ஆம் ஆண்டு செலவுகளுக்காக மானியக் கோரிக்கைகள் ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், சட்டமன்றப் பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 27 மானியக் கோரிக்கைகள் அந்தந்தத் துறை அமைச்சர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், 27 மானியக் கோரிக்கைகள் இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நிதித் துறை மானியக் கோரிக்கை எண் 16–ன்கீழ் வருவாய்க் கணக்கில் 1,169.60 கோடி ரூபாய், மூலதனக் கணக்கில் 500 கோடி ரூபாய் மற்றும் கடன் கணக்கில் 126.46 கோடி ரூபாய்க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களால் சட்டமன்றப் பேரவையில் துறை சார்ந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. 2020–2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்புகள், மக்களின் வரவேற்பைப்பெறும் வகையில் அமைந்துள்ளன. பல மக்கள் நலத் திட்டங்களைச் சீரும் சிறப்புமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. எனினும், எதிர்பாரா நிகழ்வுகளால் சட்டமன்றப் பேரவையின் முழு அலுவல் காலத்தை நாம் சுருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய பாதிப்பை ஏற்படுத்தி, உலக சுகாதார நெருக்கடி நிலையை உருவாக்கியுள்ள கொரோனா வைரஸ் தொற்று நோய்ப் பரவல் இந்தியாவையும் பாதித்துள்ளது. கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக நாடு முழுவதும் 80 மாவட்டங்களைத் தனிமைப்படுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த 80 மாவட்டங்கள் பட்டியலில் தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு மாவட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இரயில், பஸ் போன்ற பொது போக்குவரத்துக்கு மார்ச் 31 ஆம் தேதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஊரடங்கும் அமலில் இருக்கும். இத்தகைய சீரிய நடவடிக்கைகளால் தமிழக அரசு கொரோனா வைரஸ் பரவலைத் தடுத்து வருகிறது. அரசின் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் சிறப்பான ஒத்துழைப்பையும் நல்கி வருகின்றனர். ஆனாலும், தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அடைப்பு போன்ற கட்டுப்பாடு நடவடிக்கைகளால் தொழில் துறையின் வளர்ச்சி பாதிப்படைந்துள்ளது. தமிழகத்தின் தொழில் நகரங்களான சென்னை, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், மதுரை, தூத்துக்குடி போன்ற நகரங்களில் இயங்கும் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. உற்பத்தியான ஜவுளி, பனியன், இயந்திரப் பொருட்களை வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடிவதில்லை. வெளிநாட்டுச் சரக்குப் போக்குவரத்து இல்லாததால், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. வாகனப் போக்குவரத்தும் அறவே குறைந்துள்ளது. இக்காரணங்களால், பொருளாதாரத்தில் பொதுவான ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பிற்பகல் 12–45

2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், இறுதித் திருத்த நிதியொதுக்கமும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. Corona virus போன்ற வைரஸ் தொற்றுநோய்ப் பரவலையும், அதனால் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கத்தையும் யாராலும் எதிர்நோக்க முடியாது. தொழிற் துறைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், அதனைச் சார்ந்திருக்கும் அரசின் முக்கிய வருவாய் இனங்களான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி, விற்பனை வரி, நிறுவன வரி, உற்பத்தி வரி மற்றும் முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுத் தொகை வரவுகள் பாதிப்படைய வாய்ப்புள்ளது. அரசின் வரி அல்லாத வருவாய் வரவுகளிலும் கொரோனா வைரஸின் தாக்கத்தால் குறைவு ஏற்படலாம். இத்தகைய அசாதாரணமான சூழ்நிலையிலும், அரசின் மக்கள் நலத் திட்டங்களையும், மூலதனச் செலவுகளையும் எவ்விதக் குறைவுமின்றி செயல்படுத்த மாநில அரசுக்கு மிகுந்த பொறுப்பும், கடமையும் உள்ளது. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும், முன்னெச்சரிக்கை முயற்சிகளையும் எவ்வித தொய்வுமின்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்னெடுத்துச் செய்வதற்கு, மாநில பேரிடர் நிதியம் உட்பட மாநில அரசின் பிற நிதி ஆதாரங்களிலிருந்தும் நிதி வழங்கப்படும். கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள தொழில் துறையின் வளர்ச்சியில் சுணக்கத்தைப் போக்கி, மீண்டும் வளர்ச்சி உண்டாக்கும் வகையில், அனைத்துத் துறைகளின் வளர்ச்சித் திட்டங்களையும் அரசு செயல்படுத்தும். வளர்ச்சிக்கு வித்திடும் நடவடிக்கைகளுக்காகவும், திட்டங்களுக்காகவும் எவ்விதமான நிதிக் குறைவும் இல்லாமல், நிதிநிலை அறிக்கையில் கணிக்கப்பட்ட அதே அளவிலான செலவினங்களை மேற்கொள்ளவும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு எவ்வித மாற்றமுமின்றி நிதி ஆதாரங்களை வழங்கவும், தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் பல சாதனைகளைப் புரிந்து, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்து வருவதன் காரணமாக, தமிழ்நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புகளும் அதிகமாக உள்ளது. வளர்ந்துவரும் இந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி ஆதாரங்களின்

தேவையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இத்தேவைகளை மாநில அரசு தனது சொந்த வருவாய் வரவுகளிலிருந்துதான் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வரி வருவாய் வரவுகளில் மாநில அரசின் சொந்த வருவாய் 68 சதவிகிதமாகவும், சொந்த வரி வருவாய் 60 சதவிகிதமாகவும் உள்ளது. எனவே, மீதமுள்ள 32 சதவிகிதம் மட்டுமே மத்திய அரசிடமிருந்து நிதிப் பகிர்வாகப் பெறப்படுகிறது. சொந்த வரி வருவாயிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில், மாநில அரசிற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. மேலும், 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமல்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்பு முறைக்குப் பிறகு, மாநில அரசுகளின் வரிவிதிப்பு அதிகாரங்கள் மேலும் குறைந்துள்ளன. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வசூலில், பிற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டுள்ள போதிலும், மத்திய அரசிடமிருந்து 7,517 கோடி ரூபாய் அளவிலான ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வருவாய் (IGST) மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) இழப்பீட்டிற்கான நிலுவைத் தொகையை தமிழ்நாடு பெற வேண்டியுள்ளது.

பதினைந்தாவது நிதி ஆணையம்

திரு. என்.கே. சிங் தலைமையிலான பதினைந்தாவது நிதி ஆணையம் தனது முதல் அறிக்கையை மாண்புமிகு குடியரசுத் தலைவரிடம் டிசம்பர், 2019 அன்று சமர்ப்பித்தது. ஆணையத்தின் முதல் அறிக்கையுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கையும் 1 பிப்ரவரி, 2020 அன்று பாராளுமன்றத்தின் முன்பு வைக்கப்பட்டது. அனைத்து மிகை வரி மற்றும் மேல் வரி வருவாய்களையும் நிதிப் பகிர்விற்குள் கொண்டுவருவதன்மூலம் செங்குத்து வரிப் பகிர்வு சதவிகிதத்தை 42 சதவிகிதத்திலிருந்து அதிகரிக்க வேண்டுமென மாநிலங்கள் முயற்சிக்கையில், மத்திய வரிகளின் பகிர்ந்தளிக்கக்கூடிய நிதிப் பகிர்வில், மாநிலங்களினுடைய பங்கு சதவிகிதத்தை 42 சதவிகிதத்திலிருந்து 41 சதவிகிதமாகக் குறைக்க ஆணையம் பரிந்துரைத்துள்ளது. தமிழ்நாட்டிற்கான இடைப்பட்ட பங்கினை 4.023 சதவிகிதத்திலிருந்து 4.189 சதவிகிதமாக உயர்த்திப் பரிந்துரைத்திருந்தாலும், இன்னும் மாநிலத்தின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. இது தொடர்பான திருத்திய விழுமியக் குறிப்புகளை விரைவில் 15–வது நிதிக் குழுவிற்கு தமிழ்நாடு அரசு அளிக்கும்.

பல்வேறு சவால்களைச் சந்தித்து வந்த போதிலும், மாநில அரசு திறம்படவும், சிறப்பாகவும் மக்கள் நலத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தி வருவதுடன், தமிழ்நாடு நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டம், 2003–ன் விதிமுறைகளுக்குட்பட்டு, நிதிப் பற்றாக்குறையை மூன்று சதவிகிதத்திற்குள்ளாகவும், நிலுவைக் கடன்களை 25 சதவிகிதத்திற்குள்ளாகவும் பராமரித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, நுட்பமாக நிதிநிலையை மேலாண்மை செய்துவருகிறது என்பதை இம்மாமன்றத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதிநிலைமை பொறுப்புடைமையைக் கடைப்பிடிக்கும் அதேவேளையில், மக்கள் நலப் பணிகளைத் தொய்வின்றி சிறப்பாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு இந்தியாவிற்கே முன்னுதாரணமாக விளங்குகின்றது என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023—'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023', பகுதி–2 ஆவணத்தில் 15,00,000 கோடி ரூபாய் அளவிலான 217 திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. இந்த 217 தொலைநோக்குத் திட்டங்களில், இரயில்வே, துறைமுகங்கள் மற்றும் வானூர்தி துறைகளில் 2,33,523 கோடி ரூபாய் மதிப்பில் 27 திட்டங்கள் மத்திய அரசால் செயல்படுத்தப்பட வேண்டும்.

மீதமுள்ள 190 திட்டங்களை மாநில அரசு, அதன் முகவரமைப்புகளின் மூலமாகவும், தனியார் துறை பங்களிப்புடனும் செயல்படுத்தி வருகிறது. இந்த 190 திட்டங்களில், 129 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 18 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தும் நிலையில் உள்ளன. 7 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம். 'சின்னஞ்சிறு குருவிக்கும் ஒரு கூடு இருக்கிறது. ஆனால் நாங்கள் குடியிருக்க ஒரு வீடு இல்லையே!' என்று தவித்த மக்களின் ஏக்கத்தைத் தீர்த்திட, 'அனைவருக்கும் வீடு' என்ற இலக்கை அடைந்திட, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சிறப்புடன்

செயல்பட்டு வருகிறது. இலட்சக்கணக்கான தமிழக மக்கள் சொந்த வீடு என்றும், சொந்த மனை என்றும் காணுகின்ற கனவை நனவாக்குவதில் வாரியம் பேருதவி புரிந்துவருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு முதல், தற்போது மார்ச் 2020 வரை, கடந்த 9 ஆண்டுகளில் மொத்தம் 33,237 குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. தற்போது, சென்னை மற்றும் இதர நகரங்களில், 7,556 குடியிருப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளின் பணிகள் ரூ.2,388.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை சோழிங்கநல்லூர், கோயம்பேடு தெற்காசிய விளையாட்டு கிராமம், நந்தனம் புதிய கோபுரத் திட்டப் பகுதி ஆகிய இடங்களில் மொத்தம் 597.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,520 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள், கோவை கவுண்டம்பாளையம், சென்னை தாடண்டர் நகர் ஆகிய இடங்களில் ரூ.974.94 கோடி மதிப்பீட்டில், 3,739 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மற்றும் ஈரோடு, சென்னை எர்ணாவூர் ஆகிய இடங்களில் ரூ.1,274.48 கோடி மதிப்பீட்டில், 7,949 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் மிக விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வாரியத்திற்குச் சொந்தமான ரூ.854.12 கோடி மதிப்பீட்டிலான 153.69 ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை ஒட்டியுள்ள திருமழிசையில் 311.05 ஏக்கர் நிலப்பரப்பில் துணைக்கோள் நகரம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதன்படி திருமழிசை துணைக்கோள் நகரம் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன் முதற்கட்டமாக, 122.99 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ.245.70 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் முடிவுற்றிருக்கின்றன.

மேலும், இத்திட்டப் பகுதியில் 20 ஏக்கர் நிலப் பரப்பில், பேருந்து நிறுத்தம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள நிலப் பரப்பில், ஒரு பகுதியில் பன்னடுக்கு

மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கும், மற்றொரு பகுதியில் மனை மேம்பாடு செய்வதற்கும் திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இத்திட்டம் விரைவில் முடிவடையும் என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரின் விரிவாக்கப் பகுதியில் தோப்பூர்–உச்சப்பட்டியில் 573.83 ஏக்கர் நிலப் பரப்பில், ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.289.03 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வசதிகளுடன் 9,550 மனைகளின் மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதற்கட்டமாக 490.51 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ.247.04 கோடி மதிப்பீட்டில் 6,580 மனைகள் மேம்படுத்தப்பட்டு, விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல, புதுக்கோட்டை, முள்ளூர் கிராமத்தில், புதிய துணைக்கோள் நகரம் அமைக்க திட்டமிடப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 1,584 பல்வகை மனைகளுக்கான திட்டம் ரூ.56.31 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்பட உள்ளது என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நெற்குன்றம், பாடிக்குப்பம் மற்றும் வில்லிவாக்கத்தில் அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.728.31 கோடி மதிப்பீட்டில், 1,576 பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சென்னை, அம்பத்தூர் அருகே அயப்பாக்கத்தில் ரூ.141.05 கோடி மதிப்பீட்டில், அரசு ஊழியர்களுக்கு 408 குடியிருப்புகள் கட்டவும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் அதன்கீழ் இயங்கிவரும் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சென்னை, பாடிக்குப்பத்தில் 182 குடியிருப்புகள் ரூ.90.00 கோடி மதிப்பீட்டில் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தில் மனைகளும், வீடுகளும் பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் வாரியத்திற்கு கட்ட வேண்டிய தவணைத் தொகை தவறிய காரணத்தால், அதற்கான அபராத வட்டி, முதலுக்கான வட்டி என

வட்டித் தொகை சுமையாகச் சேர்ந்துவிட்ட நிலையில், இந்த வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்து தாங்கள் விற்பனைப் பத்திரம் பெற்றிட உதவிட வேண்டுமென அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு அம்மா அவர்கள், வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் இவர்களுக்கு உதவி விற்பனைப் பத்திரம் வழங்கிட ஆணையிட்டார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை உள்ளத்தால், வட்டித் தள்ளுபடி திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை, கடந்த 9 ஆண்டுகளில் 20,972 ஒதுக்கீடுதாரர்கள் விற்பனைப் பத்திரம் பெற்றுப் பயனடைந்துள்ளனர் என்பதை இப்பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 31–3–2020 வரை நடைமுறையில் இருந்த இந்த வட்டிச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளாத ஒதுக்கீடுதாரர்கள் இந்தச் சலுகை பெறும் திட்டத்தின் கால அவகாசத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று விடுத்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, அத்தகைய 19,406 ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெறும் வகையில் 30–9–2020 வரை மேலும் 6 மாத காலத்திற்கு இத்திட்டத்தை நீட்டித்து, ஒதுக்கீடுதாரர்கள் பயன்பெற்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு வகை செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் சென்னை மாநகரின் வணிக வளாகத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, பல்வேறு புதுமைத் திட்டங்களை வீட்டு வசதி வாரியம் செயல்படுத்த முனைந்துள்ளது. சென்னையில் பிரதான இடமான பீட்டர்ஸ் காலனியில், 3.84 ஏக்கர் நிலப் பரப்பில் அதிக தரைப் பரப்பு குறியீட்டுடன் ரூ.487 கோடி தோராய மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிகளைக் கொண்ட அலுவலக மற்றும் வணிக வளாகத்தை கட்டவும், சென்னை கோயம்பேடு அருகே அரும்பாக்கத்தில் 7.14 ஏக்கர் நிலப் பரப்பில் 304 குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் உள்ளடங்கிய பன்னடுக்குமாடி கட்டடத்தினை ரூ.697 கோடி மதிப்பீட்டில் உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், சென்னை மாநகருக்கு ஒரு புதிய அடையாளத்தை உருவாக்கும் வகையில், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பட்டினப்பாக்கத்தில் 25.16 ஏக்கர் நிலப் பரப்பில் மாபெரும் வர்த்தக மையம், உணவு விடுதிகள், கடைகள் மற்றும்

பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட வணிக வளாகம் உள்ளடங்கிய 'மெரினா வணிக நகரம்' கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை நந்தனத்தில் சென்னையின் முக்கிய குறியீடாக விளங்கும் வகையில் நிதி நகரம் மற்றும் பன்னாட்டு நிதி மையம் ஆகியவற்றிக்கான தமிழ்நாடு வர்த்தக மையம் ஒன்றை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, நந்தனம் பகுதியில் அண்ணா சாலையின் இருமருங்கிலும் அமைந்துள்ள மொத்தம் 4.96 ஏக்கர் நிலப் பரப்பில் 4.88 தரைப்பரப்பு குறியீட்டினைப் பயன்படுத்தி 11 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பில் ரூ.588 கோடி தோராய மதிப்பீட்டில் சிறப்பு செயலாக்கம் சாதனம்-Special Purpose Vehicle மூலம் இதனைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கனவு காணுங்கள்' என்று சொன்னார் முன்னாள் குடியரசுத் தலைவர் மறைந்த திரு. அப்துல் கலாம் அவர்கள். பொதுவாகவே, கனவு காணாத மனிதர்களே இல்லை. இன்று தமிழ்நாட்டிலே சிலருடைய கனவு முதலமைச்சராக வேண்டுமென்பது. அது பகல் கனவு. பலிக்காத கனவு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எல்லா மக்களுக்கும் பொதுவாக ஒரு கனவு இருக்கும். அதுதான், 'சொந்தமாக ஒரு வீடு வேண்டும்' என்பது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் 'சொந்தமாக ஒரு வீடு வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்" என்பது இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் கனவு. அம்மா அவர்களின் கனவை நிறைவேற்றும்விதமாக வீட்டு வசதி திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது வீட்டு வசதித் துறை.

குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு வீட்டு வசதியினை வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழ்நாட்டில் உள்ள நகரங்களை குடிசைகளற்ற நகரங்களாக உருவாக்க புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்டதுதான் தொலைநோக்குத் திட்டம். அந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மைய அரசின் நிதி மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரத்தினைக் கொண்டு அனைவருக்கும் வீட்டு

வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்மூலம் தமிழகத்தில் 13.91 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான வீடுகள். வாரியம் தொடங்கப்பட்ட ஆண்டுகளில் தலா 200 சதுர அடி முதல் 300 சதுர அடி பரப்பளவில் மட்டுமே வீடுகள் கட்டப்பட்டு வந்தன. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு ஆணையிட்டபடி, 400 சதுர அடி பரப்பளவு கொண்ட தரை ஓடுகள் பதிக்கப்பட்ட குடியிருப்புகள் தற்போது கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டின் மதிப்பு ரூ.10 இலட்சம் முதல் ரூ.12 இலட்சமாகும்.

பிற்பகல் 1–00

வருகிற 2020–2021 ஆம் நிதியாண்டில் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், மழைநீர் வடிகால்கள், குடிநீர் வசதிகள் போன்ற பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தினை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திவரும் முதன்மை மாநிலங்களுள் ஒன்றாக இன்றைக்கு தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ், 2014–2015 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2020 ஆம் ஆண்டு வரையில், 7.25 இலட்சம் குடியிருப்புகள் 32,867.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதுவரை 1,49,271 குடியிருப்புகள் கட்ட மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பீடு 15,414.47 கோடி ரூபாயாகும். இவற்றுள், 46,307 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுவரை, இப்பணிகளுக்காக 3,308.70 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிற்கும் மாநில அரசால் 7 இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் திட்டம். இத்திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு 325 சதுர அடி கட்டடப் பரப்பிற்குக் குறையாமல் வீடு கட்ட 2.10 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை, 5,75,798 வீடுகள் 17,453.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 1,32,461 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கென 4,101.69 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 41 ஆண்டு பணிகளைவிட, இந்த 9 ஆண்டுகளில்தான் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அதிகம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1970 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையுள்ள 41 ஆண்டுக்காலத்தில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை 1.11 இலட்சம் மட்டுமே ஆகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, திட்டமிட்டுச் செயலாற்றியதன்மூலம் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, இந்த 9 ஆண்டுக் காலத்தில், வரலாறு காணாத அளவில், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 2.42 இலட்சம் ஆகும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான திட்டச் செலவினம் 9,279.70 கோடி ரூபாயாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன் பல்வேறு இடங்களில் கட்டப்பட்ட பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிதாக அவர்கள் முன்பிருந்த அளவைவிட கூடுதல் பரப்பளவில் அதிக வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், 2019–2020 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பற்ற நிலையிலுள்ள 22,575 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடிக்க, தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, மறுகட்டுமானம் செய்ய 2,257.50 கோடி ரூபாய் செலவில் மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

சென்னை நகரில் கூவம், அடையாறு போன்ற நீர்நிலைப் புறம்போக்குகளில் வசித்துவரும் மக்கள், அங்கிருந்து பாதுகாப்பான அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு மறுகுடியமர்வு செய்யப்படுகிறார்கள். சென்னை நதி நீர் சீரமைப்பு அறக்கட்டளை (Chennai Rivers Restoration Trust) சென்னை மாநகராட்சி,

பொதுப் பணித் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து அடையாறு மற்றும் கூவம் ஆற்றங்கரையோரங்களில் வசித்து வந்த, 16,216 குடும்பங்கள், மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளார்கள். 2020–21 ஆம் ஆண்டு நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் 60,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 30 கோடி ரூபாய் செலவில் சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் பழுது நீக்குதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள். அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தேவைப்படும் பழுது நீக்குதல் மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக 2019–2020 ஆம் ஆண்டில் 32.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 15.60 கோடி ரூபாய் செலவில் பணிகள் முடிவடைந்துள்ளன. ஏனைய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், வருகிற 2020–2021 ஆம் நிதியாண்டில் 30 கோடி ரூபாய் செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன், வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளாக வாய்ப்புள்ள நீர் வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்போர், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் இடம் பெயர்ந்த பணியாளர்களுக்கு, நகர்ப்புற ஏழை, எளியவர்களுக்கான நிலைக்கத்தக்க வீட்டு வசதி மற்றும் உறைவிட திட்டத்தின்கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் 500 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவியுடன் 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வீட்டு வசதியும், மண்டல திட்டமிடல் பணிகளும் 2020–2021 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நீங்கலாக, மாநிலத்திலுள்ள மற்ற நகர்ப் பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற திட்டங்களை வீட்டு வசதித் துறை சார்ந்த நகர் ஊரமைப்பு இயக்ககம் தயாரித்து செயல்படுத்துகிறது. மனைப் பிரிவு மற்றும் கட்டடங்களுக்கு அனுமதி வழங்கி, உள்ளாட்சி அமைப்புகளுக்குத்

தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அளித்திடும் பணிகளையும் மேற்கொண்டு, நகர்ப்புறங்கள் அழகாக அமைந்திட வழிவகுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தினை விதைத்தால் தினை விளையும், வினை விதைத்தால் வினைதான் விளையும்" என்று சொல்வார்கள். தமிழக அரசியலில் நாங்கள் 'உண்மை' என்ற தினையை விதைத்தோம். 'வெற்றி' எனும் தினையை நாங்கள் அறுவடை செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் 'தவறான பிரச்சாரம்' என்ற வினையை விதைத்தார்கள். 'தோல்வி' என்ற வினையை இன்றைக்கு அவர்கள் அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் விரக்தியடைந்து மக்கள்மீது கோபப்படுகிறார்கள். எங்கள் மீதும் கோபப்படுகிறார்கள், குமுறுகிறார்கள், கொந்தளிக்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது ''அடுத்த வீட்டுக்காரி பிள்ளை பெற்றாள் என்று அம்மிக் குழவியை எடுத்து இடித்துக்கொண்டாளாம் பக்கத்து வீட்டுக்காரி'' என்ற பழமொழிதான் என் நினைவுக்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தன்னை வளர்த்தவர்க்கு தென்னை பலன் கொடுப்பதுபோல, எங்களை எவ்வளவு விமர்சித்தாலும் எங்களை நம்பிய தமிழக மக்களுக்கு நாங்கள் பலன் கொடுத்துக்கொண்டே இருப்போம் என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது மக்கள் மனைப் பிரிவு மற்றும் கட்டட அனுமதி தொடர்பான விதிமுறைகள் குறித்த ஆலோசனைகளைப் பெறுவதற்காக, நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மலைவாழ் இடங்களான ஊட்டி மற்றும் கொடைக்கானலிலும் மற்றும் மலையிடப் பகுதிகளிலும் அமையும் கட்டடம் மனைப் பிரிவு போன்றவற்றிற்கு மலையிட பாதுகாப்புக் குழுமத்தின் (Hill Area Conservation Authority) அனுமதி பெறுவதில் கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகளை எளிமைப்படுத்தி, உள்ளூர் அலுவலகங்களிலேயே திட்ட அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. மேலும் திட்டமில்லா பகுதிகளில் அமையும் கட்டடம் மற்றும் மனைப் பிரிவு உத்தேசங்களுக்கு மலையிடப் பாதுகாப்பு குழுமத்தின் முன்னனுமதி பெறுவதற்கு மாநில அளவிலான அலுவலர்களின் தடையின்மைச் சான்று

பெறுவதை மாற்றி, மாவட்ட அளவிலான சான்று பெற்றால் போதுமானது என்ற நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டு விரைவில் அனுமதி அளிப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள அனுமதியற்ற மனைப் பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துதல் சிறப்புத் திட்டத்தின்கீழ் 4–5–2017 முதல் 28–2–2020 வரை 4,48,194 மனைகளுக்கு வரன்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசுக்கு ரூ.1,235.67 கோடி வருவாயும் ஈட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொடைக்கானல் உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கான மறுஆய்வு முழுமைத் திட்டத்திற்கு 6–3–2019 அன்று மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் மறுஆய்வு ஒப்புதல் அளிக்கப்பட்டது. நில உபயோகம் மற்றும் கட்டட விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்பட்ட சுமார் 250 கட்டடங்கள் மூடி முத்திரையிடப்பட்டன. அவ்வாறு மூடி முத்திரையிடப்பட்ட, விதிமீறிய கட்டடங்களை விதிகளை நிறைவு செய்யும் வகையில் மாற்றியமைக்க உரிமையாளர்களுக்கு கால அவகாசம் வழங்கும் வகையில், அரசாணை வெளியிடப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் வேலூர், ஓசூர், சேலம், திருநெல்வேலி, நாகர்கோவில், விழுப்புரம், திருப்பூர், கும்பகோணம், கடலூர், திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் போன்ற பத்து கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள் விரிவாக்கம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், கோவில்பட்டி, இராசபாளையம், கோபிசெட்டிப்பாளையம், தருமபுரி, செங்கல்பட்டு, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, தேனி அல்லிநகரம், அரக்கோணம் மற்றும் ஊட்டி ஆகிய பத்து தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள், கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் காங்கேயம், நெல்லியாளம், கீரனூர், கீழக்கரை, காயல்பட்டினம், விக்கிரமசிங்கபுரம், ஜெயங்கொண்டம், பேரணாம்பட்டு, வெள்ளக்கோவில், வேதாரண்யம், ஜோலார்பேட்டை மற்றும் தேனி மாவட்டம், கூடலூர் ஆகிய 12 நகராட்சிப் பகுதிகளை புதிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், 1200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, 30 நாட்களுக்குள் அனுமதி வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் நடுத்தர மக்கள் எளிதில் அனுமதி பெற்று பயன்பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு இச்சட்டப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சீரான வளர்ச்சியை உருவாக்குவதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கப்பட்டது.

சென்னை மாவட்டத்தையும் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சார்ந்த ஒரு சில பகுதிகளையும் உள்ளடக்கி, தற்போது 1189 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சிறப்பான சேவையினை மக்களுக்கு ஆற்றி வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, நகர்ப் பகுதிகளில் நிலவிவரும் அதிகப்படியான நிலத்தின் மதிப்பைக் கருத்தில்கொண்டு நடுத்தர மற்றும் நலிந்த வருவாய்ப் பிரிவினர், நகர்ப் பகுதிகளில் வீடுகள் வாங்கி பயன்பெற்றிடும் வகையில் அனுமதிக்கப்பட்ட தளப் பரப்பு குறியீட்டை 1.5 லிருந்து 2.0 ஆக உயர்த்தியுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் ஒரு சமச்சீரான பாதுகாப்பான நகர்ப்புறங்கள் மற்றும் ஊரகங்கள் அமைவதை உறுதிசெய்யும் வகையில் 4–2–2019 முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டட விதிகள், 2019 அமல்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் குறைந்த அகலம்கொண்ட சாலைகளையொட்டிய மனைகளில் பொது மக்கள் பயன்பெறும் வகையில், அதிக தளங்களுடன்கூடிய கூடுதல் குடியிருப்புகளைக் கட்டிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,000 சதுர அடிக்கு குறைவாக உள்ள குடியிருப்புக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பகிர்ந்தளிப்பை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எங்குமில்லாத திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகத்தில் அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, தற்போதுள்ள மழைநீர் சேகரிப்பு முறைகளை வலுப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும், திட்ட ஆலோசகரால் பரிந்துரைக்கப்பட்ட பரிந்துரைகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி விதிகள் மற்றும் கட்டட விதிகள் 2019–ல் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொது மக்கள் திட்ட அனுமதி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க மற்றும் விரைந்து பரிசீலனை செய்ய ஏதுவாக, தனியாக இணையதளம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வெளிப்படையாகவும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள்ளும் திட்ட அனுமதியினை பொது மக்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது திட்டங்கள் மக்களுக்கானவை, எங்களது செயல்பாடுகள் வெளிப்படையானவை, நாங்கள் மக்களோடு பயணித்துக் கொண்டிருக்கின்றோம், மக்கள் எங்களோடு பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதையில்தான், எங்களது ஒவ்வொரு மணித் துளியும் மக்கள் சேவையில்தான்.

"Government of the people, by the people, for the people" என்ற Abraham Lincoln சொன்ன வார்த்தைகள் உலகப் புகழ் பெற்றவை, அதையும் தாண்டி புகழ்பெற்றது "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன வார்த்தைகள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று மக்களைப் பார்த்து அம்மா அவர்களின் விசுவாசத் தொண்டர்களாகிய நாங்கள், "உங்களால் நாங்கள், உங்களுக்காகவே நாங்கள்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்றோம். திட்டங்களைச் சிந்திப்பதற்குமுன், நாங்கள் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறோம். மக்களின் மகிழ்ச்சியைப் பற்றிச் சிந்திக்கிறோம்.

இப்பொழுது தேர்தல்களில் எங்களுக்குக் கிடைக்கும் வெற்றிகள் எல்லாம் மக்கள் கொடுத்தவை. அதற்குக் காரணமாக இருந்த திட்டங்கள், மக்களுக்கு எங்கள் அம்மா கொடுத்தவை.

இதன் அடிப்படையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை பல்வேறு மகத்தான சாதனைகளைப் படைத்திருக்கின்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 3,665 சிறப்பு கட்டடங்களுக்கும், 567 பன்னடுக்கு மாடிக் கட்டடங்களுக்கும் மற்றும் 545 மனைப் பிரிவுகளுக்கும் திட்ட அனுமதி வழங்கியுள்ளது.

அனுமதியற்ற மனைப் பிரிவுகளில், மனைகளை வாங்கியோரின் நலன்களைக் காக்கும் நோக்கிலும், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் வகையிலும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மனை வரன்முறைத் திட்டத்தின்படி பிப்ரவரி 2020 முடிய 5,101 அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கொள்கை ரீதியான ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை, கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தின் அருகில் 7.62 ஏக்கர் பரப்பளவில் ரூ.5.63 கோடி செலவில் கனரக வாகனம் நிறுத்தும் தளம் கட்டப்பட்டு சுமார் 250 கனரக வாகனங்கள் நிறுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் 20 கோடி ரூபாய் செலவில் அடித்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய 2,000 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 50 சீருந்துகள் நிறுத்தும் வசதிகளுடன்கூடிய வாகன நிறுத்தும் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கோயம்பேட்டில் உள்ள சென்னைப் புறநகர் பேருந்து முனையத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில் வடக்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக, மாதவரத்தில் பேருந்து முனையம் 95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.

தென் மாவட்டங்களிலிருந்து சென்னையை நோக்கிவரும் புறநகர்ப் பேருந்துகளால் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு, கிளாம்பாக்கத்தில் சுமார் 393.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்ட நிருவாக ஒப்புதல்

அளிக்கப்பட்டு, 22–2–2019 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக திருமழிசை– குத்தம்பாக்கத்தில் சுமார் 20 ஏக்கர் நிலப் பரப்பளவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும நிதி மற்றும் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டண நிதியினைக் கொண்டு புறநகர் பேருந்து முனையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயம்பேட்டில் 6,600 சதுர மீட்டர் பரப்பளவில் கீழ்த்தளம், தரைத்தளம், இரண்டு மேல் தளங்கள் கொண்ட தானியக் கிடங்கு 21.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னைப் பெருநகர் பகுதியின் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நெறிபடுத்தும் நோக்குடன், வண்டலூரிலிருந்து மீஞ்சூர் வரையிலான 62.3 கி.மீ. வெளிவட்டச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக வண்டலூரிலிருந்து நெமிலிச்சேரி வரை சுமார் 29.65 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளி வட்டச்சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இரண்டாம் கட்டமாக நெமிலிச்சேரியிலிருந்து மீஞ்சூர் வரை உள்ள 33.10 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலையின் கட்டுமானப் பணி விரைவில் முடிவடைய உள்ளது.

கோயம்பேட்டில் 105 கோடி ரூபாய் செலவில் இந்திய பசுமை கட்டட விதிகளின்படி தங்கத் தரத்தில் (Gold rating) மூன்று கீழ்த்தளங்கள், வாகன நிறுத்தும் தளம், 9 தளங்கள் கொண்ட பன்னடுக்கு அலுவலகக் கட்டடம், 17,500 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19–2–2020 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பிற்பகல் 1–15

சென்னை, ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் ஆலந்தூர் பேருந்து நிறுத்தத்தை இணைக்கும் நடைபாதை மேம்பாலம், நகரும் படிக்கட்டுகள் மற்றும் மின்தூக்கி வசதியுடன் சுமார் ரூ.7 கோடி செலவில் கட்டப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும நிதி உதவியுடன் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தின் அருகில் சுமார் ரூ.400 கோடி செலவில் உலகத் தரத்தில் மத்திய சதுக்கம் அமைக்க சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள 53 கிராமங்களில் உரிய சாலை வலையமைப்பு, குறைந்த பயண நேரம், திறன்மிகு போக்குவரத்து சுழற்சி ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில், வளர்ச்சித் திட்டத்திற்கு இணையாக, "சாலைவழி பின்னல் திட்டம்" தயாரிக்கப்பட்டு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி என்பது அனைவருடைய அடிப்படைத் தேவையாகும். ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வீட்டு வசதியினைப் பெறும்போது இடைத்தரகர்களிடமிருந்தும், நியாயமற்ற வணிகர்களின் சுரண்டல்களுக்கும் ஆட்படக் கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு கூட்டுறவு இயக்கம் செயல்பட்டுவருகிறது. தற்போது தமிழ்நாட்டில் 715 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் கிராமப்புற மக்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களின் வீட்டு வசதித் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருகின்றன. நிதி வசதி பெற இயலாத மக்கள் வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்மூலம் ஏற்கக்கூடிய வட்டி விகிதத்தில் வீட்டு வசதிச் சங்கங்கள் கடன்களை வழங்குகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாய் கொடுத்த வாக்குறுதியை கைகள் மறக்கின்றன"—இது ரஷ்யப் பழமொழி. தமிழ்நாட்டிலே இது எதிர்க்கட்சியினருக்கு மட்டுமே பொருந்துகின்ற பழமொழி. 'சொன்னதையும் செய்வோம், சொல்லாததையும் செய்வோம்' என்று சொன்னவர் எங்கள் அம்மா. இன்று நாங்களும் அதைத்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய சமுதாயம் அமைப்பதற்காக அரும்பணி ஆற்றியவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களும். அவர்கள் சமுதாய மேம்பாட்டிற்காக, பொருளாதார வளர்ச்சிக்காக ஓயாமல் உழைத்தார்கள். நாங்கள் தமிழக மக்களைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறோம். அவர்களுக்கு சிறப்பான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2009 ஆம் ஆண்டில் புதிய கடன்கள் வழங்க தடையாணை விதிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தத் தடை தளர்த்தப்பட்டது. அதன்படி, சட்டமன்றத்தில் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, 5–6–2013 முதல் 29–2–2020 வரை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்மூலம் 8,273 உறுப்பினர்களுக்கு ரூ.338.48 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் சிறப்பான நடவடிக்கைகளினால் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தமிழகத்தில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. பல்வேறு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நிலையான வளர்ச்சி ஏற்பட்டு, தற்போது 151 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ரூ.42.34 கோடி இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு வளர்ச்சி சார்ந்த திட்டங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதன் மூலமாக மத்திய அரசின் தனியார் அமைப்புகள் மற்றும் முன்னணி ஊடகங்கள் மேற்கொண்டுவரும் மாநிலங்களின் செயல்பாடுகள் குறித்த மதிப்பீட்டு ஆய்வுகளில், தமிழகம் முன்னணியில் விளங்குவதற்கு திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை துணைபுரிகிறது. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட நல்லாட்சிக்கான தர வரிசையில், தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2019–ல் பெங்களூருவில் உள்ள பொது விவகாரங்கள் மையம் மேற்கொண்ட மதிப்பீட்டு ஆய்வில், பொது விவகாரங்கள் குறியீடு சீர்திருத்த நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதில் தமிழகம் சிறந்த மாநிலம் என்ற விருதினைப் பெற்றுள்ளது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'இந்தியா டுடே' என்ற பத்திரிகை 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முன்னேறி வரும் மாநிலங்களில் தமிழகம் சிறந்த மாநிலம் எனத் தொடர்ந்து இரண்டாவது முறையாக தமிழக அரசைப் பாராட்டியுள்ளது என்பதையும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாநிலம் எய்துவதற்கும், உலக அளவில் முன்னேறிய நாடுகளுக்கு இணையாக நம்முடைய மாநிலத்தை இடம்பெறச் செய்வதற்கும் இத்துறை அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் NITI Aayog என்ற அமைப்பு டிசம்பர், 2019–ல் வெளியிட்ட மாநிலங்களின் தர வரிசைப் பட்டியலில் தமிழகம் முன்னணியில் உள்ளது. மாநிலத்திலுள்ள பின்தங்கிய வட்டாரங்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள்மூலம் 2013–2014 முதல் இதுவரை 739 திட்டங்களுக்கு ரூ.567.06 கோடி வழங்கப்பட்டுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுக்கான 2016–2017 முதல் பிப்ரவரி 2019 வரை 1,950 திட்டங்களுக்கு ரூ.286.74 கோடி வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி, பொதுத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் நிதித் துறை ஆகிய 3 துறைகள் சார்ந்த அறிவிப்புகளையும் மொத்தமாக அறிவிப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியை வேண்டுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையினை ஏற்று, பொதுத் துறை சார்ந்த 12 அறிவிப்புகளையும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்ந்த 27 அறிவிப்புகளையும், நிதித் துறை சார்ந்த 10 அறிவிப்புகளையும் நான் இந்த அவையிலே அறிவித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவேற்றம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்கு சென்னையில் சொந்தமாக குடியிருப்புகளைக் கட்டித் தருமாறு நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்களும் அதே கோரிக்கையை இன்றையதினம் பேரவையில் வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடன் கலந்தாலோசித்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக விதிமுறைகளுக்குட்பட்டு சென்னையில் சொந்தக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கைகள் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காவி உடை ஞானி' என்றும், 'கர்ம யோகி' என்றும் இப்பூவுலகமே போற்றிய வீரத் துறவி சுவாமி விவேகானந்தர், குமரிக் கடல்முனைக்கு வந்து தவமிருந்து முடித்துவிட்டுச் செல்லும்போது, தெற்கிலிருந்து புறப்படும் ஒளி வெள்ளம், இந்த இந்தியத் திருநாட்டுக்கே ஒளி காட்டும் என்று சொன்னார்கள். இந்த உலகுக்கு ஆன்மீக ஒளி காட்டிய அந்த மகான் சொன்னதைப் போலவே, இந்திய தேசத்திற்கு அரசியல் ஒளி காட்டி, வழிகாட்டியவர் தியாக ஒளிச் சுடர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் என்னும் ஒளி வெள்ளம் காட்டிய வழியில், அம்மா அவர்களின் உழைப்பிலும், தியாகத்திலும் பூத்த மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, இந்தியத் திருநாட்டிற்கே முன்னோடியாய், முதன்மையானதாய் வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. தமிழகம் எதிலுமே முன்னோடிதான். பகுத்தறிவை இப்பாரதத்திற்கே முன்மொழிந்தது தமிழகம்தான். சமூக நீதி, இட ஒதுக்கீடு, இனமானம், மொழி உணர்வு, சாதிமதம் கடந்த சமத்துவம் இவையனைத்திலும் இந்தியாவிற்கே வழிகாட்டும் மாநிலம் நமது தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸுக்கு முதல் சிகிச்சை என்பதுகூட, ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது கட்டி அணைப்பதையும், கைக்குலுக்குவதையும்

முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு, கரம்கூப்பி வணங்குகிற தமிழகத்தின் பண்பாடுதான் கொரோனாவிற்கான முதலுதவி என்கிறது உலக சுகாதார நிறுவனம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் தமிழகத்தின் பெருமை, தமிழர்களின் பெருமிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி, முல்லைப் பெரியாறு என்றெல்லாம் நமக்கான ஜீவாதார உரிமைகளை சாத்வீக முறையிலும், ஜனநாயகத்தின் வழியிலும், சட்டத்திலான நீதிமன்ற முறையீடுகளிலும் போராடி வெற்றிபெற்று மீட்டுத் தந்தவர் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய அந்த இலட்சியப் பாதையில், மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்து வந்த புண்ணிய பாதையில், காவேரி டெல்டா பகுதியினை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள், அங்கே அச்சுறுத்திக் கொண்டிருந்த ஹைட்ரோ–கார்பன் திட்டத்தின்மூலம் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று மக்கள் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த நிலையை மாற்றி, காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எவ்வாறு தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளைப் பெற்றுத் தந்தார்களோ, அதைப்போலவே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற அருமை அண்ணன் மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடந்து வந்த பாதையில் இன்றைக்கு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை மீட்டுத் தந்ததும், அம்மாவின் வழியே! அம்மாவின் ஆன்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இந்தியாவிற்கே முறைகளைச் சொல்லிக் கொடுத்து முன்னோடி மாநிலமாகத் திகழும் தமிழகம் பேரறிஞர் அண்ணாவின் அறிவுச் செறிவோடும், பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த புரட்சித் தலைவரின் கனிவோடும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் போர்க்குணத்து துணிவோடும் இன்றைக்கும் தமிழகம் முதலிடம். இனி என்றைக்கும் அதுவே முதலிடம் என்கிற

பெருமிதத்தோடு தமிழகம் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வெற்றியை ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணம் வகுத்து நிற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உருவாக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதனை மட்டற்ற பெருமையோடு இந்த மாண்புமிக்க பேரவையில் எடுத்துரைத்து, குன்றாத புகழ் படைத்த அம்மாவின் அரசுதான், குறை என்பதே இல்லாத அம்மாவின் ஆட்சிதான் 2021–லும் இந்த புனித ஜார்ஜ் கோட்டையில் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி முரசு கொட்டும் என்பதனைச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியும், எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இயக்கமும், இன்னும் நூறாண்டு காலம் நிலைபெற்றுத் தொடருமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவையில் எங்கள் அம்மா கட்டளையிட்டுச் சொன்ன கடைசி சூளுரையைப்போல, இந்தத் தமிழ் மண்ணை வெற்றிகள் சூழ அம்மாவின் அரசே இன்னும் நூறாண்டுகள் ஆளும், ஆளும் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நான் அளித்திருக்கின்ற இந்த விளக்கத்தினை ஏற்று, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள்

பொதுத் துறை

1. சிந்தாதிரிப்பேட்டை அரசு விருந்தினர் இல்லம் ரூ.15 கோடி செலவில் புதுப்பித்து கட்டப்படும்

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை அரசு விருந்தினர் இல்லம் 1983 ஆம் வருடத்தில் கட்டப்பட்டது. தற்போது, அறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் பழுதடைந்து உள்ளன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அரசுப் பணி நிமித்தமாக சென்னைக்கு வருகை தரும் இளநிலை அரசு அலுவலர்கள் தங்குவதற்கு ஏதுவாக போதிய இடமின்றி வெளியிடங்களில் தங்குகின்றனர். எனவே, தலைநகருக்கு அலுவல் நிமித்தமாக வரும் இளநிலை அலுவலர்கள்

தங்குவதற்கு ஏதுவாக பழுதடைந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு அதே இடத்தில் புதிய அடுக்குமாடிக் கட்டடம் ரூபாய் 15 கோடி செலவில் புதிதாக கட்டப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு அரசு

2. தலைமைச் செயலகத்திற்கு எதிரே உள்ள வாகன நிறுத்தும் இடம்/நுழைவு அனுமதி உள்ளிட்ட வசதிகள் மேம்படுத்தப்படுதல்

தலைமைச் செயலகத்திற்கு வருகைதரும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் அவர்தம் வாகனங்களை நிறுத்திட போதிய இடவசதி தலைமைச் செயலகத்தினுள் இல்லாததால், தலைமைச் செயலகத்தின் எதிரே அமைந்துள்ள வாகன நிறுத்துமிடம் ரூபாய் 75 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். மேலும், அலுவல் காரணமாக தலைமைச் செயலகத்திற்கு வருகைதரும் பொது மக்கள் எளிதில் நுழைவு அனுமதி பெற்றிட மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திட ஏதுவாக ரூபாய் 1 கோடி செலவில் மென்பொருள் உள்ளிட்ட புதிய கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு அரசு

3. உதகமண்டலம், தமிழகம் அரசு விருந்தினர் இல்லத்தில் புதிய கட்டமைப்புகள் ஏற்படுத்துதல்

உதகமண்டலம், தமிழகம் அரசு விருந்தினர் இல்லத்தில், விருந்தினர் உபசரிப்பு தரத்தினை மேம்படுத்திட, சமையலறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்காக ரூபாய் 50 இலட்சம் செலவில் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு அரசு

4. வெளிநாடுவாழ் தமிழர் குடியேற்றம் குறித்து கணக்கெடுப்பு

வெளிநாடுவாழ் தமிழர் நலனுக்காக புதிய திட்டங்கள் ஏற்படுத்திட ஏதுவாக, வெளிநாடு செல்லும் தமிழர்களின் எண்ணிக்கை மற்றும் குடியேற்றம் உள்ளிட்ட இதர விவரங்கள் அறிந்திட தமிழக மக்கள் மத்தியில் கணக்கெடுப்பு எடுப்பது அவசியமாகின்றது. இதற்காக தகுதியுள்ள உயர் கல்வி நிறுவனங்களைப் பயன்படுத்தி ரூபாய் 60 இலட்சம் செலவில் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு அரசு

5. முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகள் அசாதாரண நிகழ்வுகளில் ஏற்படும் இறப்பில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.50,000/–ஆக உயர்த்தி வழங்கல்

முகாம்வாழ் இலங்கை அகதிகள், அசாதாரண நிகழ்வுகளில் உயிரிழக்கும்போது தற்போது அளிக்கப்படும் நிவாரணத் தொகையான ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு இலங்கைத் தமிழர் நிவாரண நிதி

6. முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகள் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கல்

இலங்கை அகதிகள் முகாம்களில் வசித்துவரும் பெண்கள் சுய உதவிக் குழுக்களாக அமைந்து சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகின்றனர். 290 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.10,000/– 2012–ல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குழுக்கள் தர மதிப்பீடு செய்யப்பட்டு, அவர்தம் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரம் மேலும் உயர ஏதுவாக தகுதியுள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.50,000/– வழங்கப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு இலங்கைத் தமிழர் நிவாரண நிதி

7. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கென சொந்தக் கட்டடம் ரூ.19.00 கோடி செலவில் அமைத்தல்

பாதுகாப்புப் படை பணியிலிருந்து நடுத்தர வயதில் ஓய்வுபெறும் இராணுவ வீரர்களை ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு அரசு நிறுவனங்களில் மறுபணியமர்த்திவரும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (TEXCO) சென்னை, சைதாப்பேட்டையில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் பணியாற்றிவரும் 8,596 முன்னாள் படைவீரர்கள் நலனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கென சொந்தக் கட்டடம் சென்னையில் ரூ.19.00 கோடி செலவில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து அமைக்கப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

8. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 3,053 பேருக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர நிதியுதவிகள் ரூபாய் 2.95 கோடி கூடுதல் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்

முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுவரும் கீழ்க்காணும் மாதாந்திர நிதியுதவிகள் மற்றும் மொத்த மானியம் உயர்த்தி வழங்கப்படும்:

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப் படும் தொகை ரூ.	உயர்த்தப் பட்ட நாள்	உயர்த்தி வழங்க உத்தேசிக் கப்படும் தொகை ரூ.
1.	60 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் படைவீரர் மற்றும் கைம்பெண்களுக்கான முதியோர் உதவித் தொகை	3,000/–	1–8–2019	4,000/–
2.	மருத்துவ நிதியுதவிகள் (புற்றுநோய், கண் பார்வையற்றோர், பக்கவாதம், மனவளர்ச்சி குன்றியவர் களுக்கான நிதியுதவி)	5,000/–	1–8–2019	7,000/–
3.	கண் கண்ணாடி மற்றும் காது கேட்கும் கருவி போன்ற செயற்கை உபகரணங்கள் பெறுவதற்கான மொத்த மானியம்	3,000/–	1–4–2015	4,000

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

9. திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூபாய் 3.52 கோடி செலவில் படைவீரர் மாளிகை கட்டப்படும் திருவண்ணாமலை மாவட்டத்தில்

முன்னாள் படைவீரர் நலத் துறைக்குச் சொந்தமான 1,045 சதுர மீட்டர் நிலத்தில், முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் பயன்பாட்டிற்காக படைவீரர் மாளிகைக் கட்டடம் 775.62 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.3.52 கோடி செலவில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

10. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்கள் வீடு கட்டுவதற்கு/வாங்குவதற்கு பெறும் கடன் தொகைக்கு ரூபாய் ஒரு இலட்சம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு ரூ.3.00 கோடி செலவினத்தில் சுமார் 300 நபர்கள் பயன் பெறுவர். தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 1,400 படைவீரர்கள் ஒவ்வோர் ஆண்டும் படை பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தில் அவில்தார் படைத்தரம் மற்றும் அதற்கு இணையான படைத்தரம் வரையிலானோர் மிகுதியாக உள்ளனர். இப்படைவீரர்களின் சொந்தமாக வீடு கட்டும் கனவினை நனவாக்கிட அவர்கள் வங்கியிலிருந்து பெறும் கடன் தொகையில் ரூ.1.00 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படும். இம்மானியம் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட முப்படைகளில் அவில்தார் மற்றும் அதற்கு இணையான படைத்தரம் வரையிலான முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு 2020–2021 ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

11. மாவட்ட நிருவாகத்தின் உதவியுடன் நடத்தப்படும் பாதுகாப்புப் படைகளின் ஆட்சேர்ப்பு முகாமிற்காக மேற்கொள்ளப்படும் செலவினம் வழங்குதல்

தமிழ்நாட்டில், மண்டல இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலரால் ஒவ்வோர் ஆண்டும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் படைப் பணியில் சேருவதை ஊக்குவித்திடும்பொருட்டு மாவட்ட நிருவாகம்மூலம் இராணுவ ஆட்சேர்ப்பு முகாம் நடத்திட மேற்கோள்ளப்படும் செலவினத்தில் ஒரு முகாமிற்கு ரூ.6.00 இலட்சம் வழங்கப்படும். மொத்த செலவினம் ரூ.30.00 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

12. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து போன்ற தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்கு உதவித்தொகை

தமிழ்நாட்டில் 8,500 முன்னாள் படைவீரர்கள் வேலைவாய்ப்பிற்கென பதிவு செய்துள்ளனர். முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் வேலைவாய்ப்பு பெறும் தகுதியை அதிகரிக்கும்பொருட்டு, தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வித் துறையின்மூலம் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி பெறும், முப்படைகளில் இளநிலை படை அலுவலர் படைத்தரம் வரையிலான முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கீழ்க்காணும் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படும்:

வ. எண்	பயிற்சி விவரம்	வழங்கப்படும் உதவித்தொகை
1.	தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு கீழ்நிலை பயிற்சி	ரூ.3,000/–
2.	தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு மேல்நிலை பயிற்சி	ரூ.5,000/–
3.	தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து கீழ்நிலை பயிற்சி	ரூ.7,000/–
4.	தமிழ் மற்றும் ஆங்கிலம் சுருக்கெழுத்து மேல்நிலை பயிற்சி	ரூ.10,000

இத்திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு ரூபாய் 15.63 இலட்சம் செலவினத்தில் சுமார் 250 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் பயன் பெறுவர்.

நிதி ஆதாரம்—தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

நிதித் துறை

1. புதிய மாவட்ட கருவூலங்களை ஏற்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு,

கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் தென்காசி ஆகிய 5 மாவட்டங்களில் புதிய மாவட்ட கருவூலங்கள் துவங்கப்படும்.

2. தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் சார்–கருவூலத்திற்கு சுமார் 2,769 சதுர அடி பரப்பளவில் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சார்–கருவூல கட்டடம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சுமார் 2,769 சதுர அடி பரப்பளவில் 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சார்–கருவூல கட்டடம் கட்டப்படும்.

3. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சார்–கருவூலம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் சார்–கருவூலம் ஆகியவற்றிற்கு புதிய சார்–கருவூல கட்டடம் கட்டப்படும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சார்–கருவூலம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் சார்–கருவூலம் ஆகியவற்றிற்கு முறையே 3,258 சதுரடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் மற்றும் 1,864 சதுரடி பரப்பளவில் 1.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சார்–கருவூல கட்டடங்கள் கட்டப்படும்.

4. மின் சுற்று தொலைக்காட்சி (CCTV கேமரா) நிறுவுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 2 சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்ட கருவூலங்கள் மற்றும் 243 சார்–கருவூலங்களில் மின் சுற்று தொலைக்காட்சி (சிசிடிவி கேமரா) நிறுவப்படும்.

5. கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் தணிக்கை தகவல் மேலாண்மை முறை திட்டத்தின்கீழ் மடிக்கணினிகள் வழங்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தணிக்கை தகவல் மேலாண்மை முறை திட்டத்திற்கு 45 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக 100 மடிக்கணினிகள் வழங்கப்படும்.

6. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உடனிகழ்த் தணிக்கைப் பிரிவுகள் தோற்றுவித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆவடி, நாகர்கோவில் மற்றும் ஓசூர் மாநகராட்சிகளில் துணை இயக்குநர் தலைமையில் உடனிகழ்த் தணிக்கைப் பிரிவுகள் தோற்றுவிக்கப்படும்.

7. மாநில அரசுத் தணிக்கைத் துறையில் தணிக்கையாளர்களுக்கு தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு குறித்த பயிற்சி அளித்தல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில அரசுத் தணிக்கைத் துறை தணிக்கையாளர்களுக்கு தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வில் (Data Management and Analytics) கட்டமைப்பு உருவாக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

8. மாநில அரசுத் தணிக்கைத் துறை தணிக்கை மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்களின் பெயர் மற்றும் தணிக்கை மேற்கொள்ள ஆணையிடப்பட்ட அரசாணைகள் தொகுப்பு வெளியிடுதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில அரசுத் தணிக்கைத் துறை தணிக்கை மேற்கொள்ளும் அனைத்து நிறுவனங்களின் பெயர் மற்றும் தணிக்கை மேற்கொள்ள ஆணையிடப்பட்ட அரசாணைகள் தொகுப்பு (Consolidated Audit mandate for Audit table Institutions) வெளியிடப்படும்.

9. மாநில அரசுத் தணிக்கைத் துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் துறைகளின் தணிக்கையை வலுப்படுத்தும் வகையில் ஒரு குழு அமைத்து புதிய செயல் திட்டம் உருவாக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில அரசுத் தணிக்கைத் துறையின் பணி மற்றும் கடமைகள் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் துறைகளின் தணிக்கையை (Departmental

Audit) வலுப்படுத்தும் வகையில் ஒரு குழு அமைத்து புதிய செயல் திட்டம் உருவாக்கப்படும்.

10. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில் மாநில அரசுத் தணிக்கைத் துறை சார்பாக செயல்படும் ஆய்வர் பணியிடத்தினை உதவி இயக்குநர் பணியிடமாக மேம்படுத்துதல்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில் இத்துறை சார்பாக செயல்படும் ஆய்வர் பணியிடம் உதவி இயக்குநர் பணியிடமாக மேம்படுத்தப்படும்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

1. சென்னையில் 92 குடியிருப்பு அலகுகள் ரூ.55.40 கோடி மதிப்பீட்டில் சுய நிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும்.

2. சென்னை, நெற்குன்றத்தில் 570 குடியிருப்பு அலகுகள் ரூ.419.56 கோடி மதிப்பீட்டில் சுய நிதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும்.

3. திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ரூ.15.40 கோடி மதிப்பீட்டில் 286 மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

4. வேலூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் 135 மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

5. சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் ரூ.19.16 கோடி மதிப்பீட்டில் 277 மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

6. மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள தத்தநேரி, எல்லிஸ் நகர் மற்றும் உச்சப்பட்டி ஆகிய கிராமங்களில் 13.44 கோடி மதிப்பீட்டில் 425 மனைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

7. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2,102 மனைகள் ரூ.117.20 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

8. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 978 மனைகள் ரூ.36.16 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேம்படுத்தப்படும்.

9. சென்னையில் பெசன்ட் நகர், திருவான்மியூர் மற்றும் சி.ஐ.டி. நகர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ரூ.139.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

10. கோயம்புத்தூரில் உள்ள குறிச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ரூ.13.74 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டப்படும்.

11. திருச்சி, வராகநேரியில் சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் 180 குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும்.

12. பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஏற்படுத்தப்படும்.

13. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின்கீழ் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி, சென்னை மற்றும் இதர நகரங்களில் 10,758 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,131.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

14. சென்னை, திருமங்கலம் பகுதியில் 0.40 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் 50,000 சதுர அடி கொண்ட வணிக வளாகம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

15. 2020–2021 ஆம் ஆண்டில் தொடக்க கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்மூலம் ரூ.150 கோடி கடன் வழங்கப்படும்.

16. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும்பொருட்டு இரண்டு மண்டல அலுவலகங்கள் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் துவங்கப்படும்.

17. சென்னையில் குன்றத்தூரில் 52 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

18. சென்னை, பூவிருந்தவல்லியில் 8 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

19. சென்னை, பெருங்களத்தூரில் 28.20 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவுத் திட்டம் ஏற்படுத்தப்படும்.

20. நகர் ஊரமைப்புத் துறையால் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 75 முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

21. திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

22. தென்காசி மற்றும் தேனி ஆகிய தனித்த உள்ளூர் திட்டப் பகுதிகள் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகளாக மாற்றப்படும்.

23. புவிசார் தகவலமைப்பு (GIS) ஆய்வகம் ரூ.1.00 கோடி செலவில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும நிதியின்மூலம் உருவாக்கப்படும்.

24. நகர் ஊரமைப்பு துறையின் 5 மாவட்ட அலுவலகங்களான புதுக்கோட்டை, விருதுநகர், தேனி, நீலகிரி, நாமக்கல் ஆகியவற்றிற்கு ரூ.35 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

25. மாநில முழுமைக்கும் திட்ட அனுமதி வழங்க ஒற்றைச் சாளர (Single Window) நிகழ்நிலை வசதி உருவாக்கப்படும்.

26. கோயம்பேடு மொத்த அங்காடி வளாகத்திற்குள் 20,000 சதுர அடி பரப்பளவு கொண்ட காலியிடத்தில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதி கொண்ட பன்மட்ட வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்படும்.

27. வெளிவட்டச் சாலையின் திறனை முழு அளவில் பயன்படுத்த ஏதுவாக வெளிவட்ட சாலையை ஒட்டியுள்ள 50 மீ. அகல விரிவு நிலப் பகுதி மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

அதாவது எதற்கும் அஞ்சாமை, வறியோருக்கு மனமுவந்து கொடுத்து உதவுதல், அனைத்திலும் கற்றுத் தேர்ந்த வளன், எப்போதும் ஊக்கத்துடன் செயல்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் ஒரு நல்ல அரசனுக்கு இருக்க வேண்டிய குணநலன்களாகும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணுக்கு இமை காவல்; மொழிக்கு இலக்கணம் காவல்; கடலுக்குக் கரை காவல்; பயிருக்கு வேலி காவல்; உடலுக்கு உயிர் காவல்; மண்ணுக்கு மரம் காவல்; சேய்க்குத் தாய் காவல்; நாட்டுக்கு இராணுவம் காவல் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியதைப்போன்று, மக்களுக்குக் காவலாய் இருந்துவரும் காவல் துறையினர் "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் கொள்கைகளைத் தாரகமந்திரமாகக் கொண்டு அல்லும் பகலும் அயராது செயல்பட்டு அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்கேதுவாக மாநிலத்தில் பொது அமைதியைப் பராமரித்து, மத நல்லிணக்கத்தைப் பேணிக் காத்து, குற்ற நிகழ்வுகள் நடைபெறுவதைத் தடுத்து, தமிழ்நாட்டை அமைதி தவழும் ஒரு பூந்தோட்டமாக திகழச் செய்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் செயல்பாடுகளைப் பாராட்டியும், காவல் துறை மக்களுக்கு மேலும் பயன்படும் வகையில் பணியாற்றுவது குறித்தும் பேசினார்கள். "எதிரிகள் தாக்கித் தாக்கி தங்கள் வலுவை இழக்கட்டும்; நீங்கள் தாங்கித் தாங்கி வலுவைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுப்படி, எதிரிகள் நம்மைத் தாக்கத் தாக்க, நாம் அவற்றைத் தாங்கி, தாங்கி பலம் பெற்று வருகிறோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'குறைகள் குறைய வேண்டும், நிறைகள் நிறைய வேண்டும் என்கிற அடிப்படையிலே எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது' என்று கூறினார். அவர்களின் வழியிலே இவ்வரசும் செயல்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கும், சமத்துவத்திற்கும், வளர்ச்சிக்கும் உத்தரவாதம் அளித்து, இருப்பவர், இல்லாதவரிடையே இடைவெளியைக் குறைத்து, சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதும், பொது அமைதியைப் பராமரித்து, தனி மனித பாதுகாப்பை உறுதிசெய்வதும் ஒரு அரசின் தலையாய கடமையாகும். இத்தகைய கடமையைப் பூர்த்தி செய்வதில் காவல் துறையின் பங்கு மகத்தானதாகும்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலை மற்றும் ஆதாயக் கொலை குற்றங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் 2005 ஆம் ஆண்டு இறுதியில், கொலை மற்றும் ஆதாயக் கொலை வழக்குகள் 1,440 ஆக இருந்தன. இவ்வழக்குகள் 2010 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் இறுதியில் 1,868 ஆக உயர்ந்தன. ஆனால், தற்போது 2019 ஆம் ஆண்டு இறுதியில் இவ்வழக்குகள் 1,745 ஆக குறைந்துள்ளன. அதாவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒவ்வோராண்டும் 5.9 சதவிகிதம் கூடிவந்த இவ்வழக்குகள், கடந்த 9 ஆண்டுகளில் ஒவ்வோராண்டும் 0.7 சதவிகிதம் குறைந்து வந்துள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இவ்வழக்கில் 29 மாநிலங்களில் தமிழ்நாடு 7–வது இடத்திலும், குற்ற விகிதத்தில் 13–வது இடத்திலும்தான் உள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையில் நடைமுறையில் உள்ள பல்வேறு சட்டங்களின்கீழ், ஒவ்வொரு மாநிலத்தில் தாக்கலாகும் வழக்குகளை வன்குற்றங்கள், உடல் சம்பந்தமான குற்றங்கள், சொத்து சம்பந்தமான குற்றங்கள், பெண்களுக்கெதிரான குற்றங்கள், இதர குற்றங்கள், மொத்த குற்றங்கள் என வகைப்படுத்தி, மொத்த வழக்குகள் மற்றும் குற்ற விகிதத்திற்கான தரவரிசை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி வன்குற்றங்களைப் பொறுத்தவரையில், உத்தரப் பிரதேச மாநிலத்தில் அதிகப்படியாக 65 ஆயிரத்து 185 வழக்குகளும், நமது அண்டை மாநிலமான கர்நாடகாவில் 17 ஆயிரத்து 616 வழக்குகளும் மற்றும் கேரளாவில் 13 ஆயிரத்து 133 வழக்குகளும் தாக்கலாகியிருந்த நிலையில், தமிழ்நாட்டில் 11 ஆயிரத்து 654 வழக்குகள் மட்டுமே (மேசையைத் தட்டும் ஒலி) தாக்கலாகி, தமிழ்நாடு 12–வது இடத்தில்தான் உள்ளது.

இதேபோன்று வன்குற்றங்கள் குற்ற விகிதத்தில் தேசிய சராசரியான 31.9 புள்ளிகளைவிட நமது மாநிலம் 16.5 புள்ளிகள் குறைவாக உள்ளது. பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நமது மாநிலம் 27–வது இடத்தில், அதாவது கடைசியில்தான் உள்ளது.

உடல் சம்பந்தமான குற்றங்களைப் பொறுத்தவரையில், பீகார் மாநிலத்தில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 429 வழக்குகள் தாக்கலாகியிருந்த நிலையில், தமிழ்நாட்டில் இக்குற்றங்களின்கீழ் 58,168 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இதில், தமிழ்நாடு 6–வது இடத்தில்தான் உள்ளது. குற்ற விகிதத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தேசிய சராசரி குற்ற விகிதத்தைவிட, 1.2 புள்ளிகள் குறைவாகப் பெற்று, பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது 11–வது இடத்தில்தான் உள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சொத்து சம்பந்தமான மொத்த குற்றங்களைப் பொறுத்தவரையில், மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகப்படியாக ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 597 வழக்குகளும், நமது அண்டை மாநிலமான கர்நாடகாவில் 29 ஆயிரம் வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் 26 ஆயிரத்து 303 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு 8–வது இடத்தில்தான் உள்ளது.

இதேபோன்று, குற்ற விகிதத்தில் தேசிய சராசரியைவிட 11 புள்ளிகள் குறைவாக உள்ளது. இவ்விகிதத்தில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடு 16–வது இடத்தில்தான் உள்ளது.

இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களைப் பொறுத்தவரையில், கடந்த 2018 ஆம் ஆண்டு நமது மாநிலத்தில் ஒரு இலட்சத்து 85 ஆயிரத்து 912 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. ஆனால், மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகப்படியாக 3 இலட்சத்து 46 ஆயிரத்து 291 வழக்குகளும், உத்தரப் பிரதேசத்தில் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 355 வழக்குகளும், நம்மைவிட சிறிய அண்டை மாநிலமான கேரளாவில் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 958 வழக்குகளும் தாக்கலாகி உள்ளன. இவ்வழக்கில் தமிழ்நாடு 6–வது இடத்திலும், குற்ற விகிதத்தில் 7–வது இடத்திலும் உள்ளது. தமிழ்நாட்டில் தாக்கலான மொத்த இந்திய தண்டனைச் சட்ட வழக்குகளில் 63 ஆயிரத்து 920 வழக்குகள், 34.38 சதவிகிதம் சாலை விபத்து வழக்குகளாகும். இவ்வழக்குகளை நீக்கிவிட்டு, மற்ற வழக்குகளைக் கணக்கில்

கொண்டால், தமிழ்நாட்டில் தாக்கலான வழக்குகளின் எண்ணிக்கை பிற மாநிலங்களைவிட மிகவும் குறைவாகவே உள்ளது.

மொத்த குற்றங்களைப் பொறுத்தவரையில், கடந்த 2018 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 5 இலட்சத்து 85 ஆயிரத்து 157 வழக்குகளும், மகாராஷ்டிராவில் 5 இலட்சத்து 15 ஆயிரத்து 674 வழக்குகளும், கேரளாவில் 5 இலட்சத்து 12 ஆயிரத்து 167 வழக்குகளும் தாக்கலாகியிருந்த நிலையில், தமிழ்நாட்டில் 4 இலட்சத்து 99 ஆயிரத்து 188 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரதட்சணை மரணங்களைப் பொறுத்தவரையில், கடந்த தி.மு.க. ஆட்சியின் இறுதியில், 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற வரதட்சணை மரணங்கள் 165 ஆகும். ஆனால், தற்போது 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற வரதட்சணை மரணங்கள் 28 மட்டுமே ஆகும். தி.மு.க. ஆட்சியில் தாக்கலான இவ்வழக்குகளை 2019 ஆம் ஆண்டு வழக்குகளோடு ஒப்பிடுகையில், 83 சதவிகிதம் குறைந்துள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின்படி, 2018 ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தில் அதிகப்படியாக 2,444 வழக்குகளும், தென் மாநிலங்களில் கர்நாடகாவில் 200 வழக்குகளும், தெலுங்கானாவில் 186–ம், ஆந்திரப் பிரதேசத்தில் 140 வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் 55 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. இவ்வழக்குகளில் தமிழ்நாடு 29 மாநிலங்களில், 17–வது இடத்தில்தான் உள்ளது. அதேபோன்று, குற்ற விகிதத்திலும் 19–வது இடத்தில்தான் உள்ளது.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் கடத்தல் வழக்குகளைப் பொறுத்தவரையில், கடந்த 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் இறுதியில் இவ்வழக்குகள் 1,464 ஆக இருந்தன. மாண்புமிகு அம்மாவின் அரசில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் 728 ஆகக் குறைந்துள்ளன. இவ்வழக்குகளை 2010 ஆம் ஆண்டு வழக்குகளோடு ஒப்பிடுகையில் 50.3 சதவிகிதம் குறைந்துள்ளன. தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையின்படி பெண் கடத்தல் வழக்குகள் அதிகபட்சமாக உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் 15,381 வழக்குகளும், தென் மாநிலங்களில் கர்நாடகாவில் 1,240 வழக்குகளும், தெலுங்கானாவில்

1,121 வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மிகக் குறைவாக 896 வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. இதில் தமிழ்நாடு 17–வது இடத்திலும், குற்ற விகிதத்தில் 26–வது இடத்திலும்தான் உள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களைத் தடுப்பதிலும், தாக்கலான குற்றங்களில் எதிரிகளைக் கண்டுபிடித்து கைது செய்வதிலும், களவுபோன பொருட்களை எதிரிகளிடமிருந்து மீட்பதிலும் காவல் துறையினர் மிகுந்த அக்கறை காட்டி, செயல்பட்டு வருகின்றனர். கடந்த 9 ஆண்டுகளாக கொலை உள்ளிட்ட சொத்து சம்பந்தமாக தாக்கலான 1,99,663 வழக்குகளில், 1,38,963 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதாவது, 70 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் களவுபோன 66 சதவிகித சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

காவல் துறையினர் குற்றத் தடுப்பு மற்றும் சட்டம்–ஒழுங்கு பராமரிப்புப் பணிகளில் சிறப்பாகச் செயல்பட்டுவருவதுடன், மாநிலத்தில் தடைசெய்யப்பட்ட அடிப்படைவாத இயக்கங்களின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயங்கரவாதச் செயல்கள் நடக்காமல் பார்த்துவருகின்றனர். காவல் துறையினர் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு மத நல்லிணக்கத்தைப் பேணிக் காத்தனர். தற்போது மத்திய அரசு கொண்டுவந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்தும், மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு போராட்டங்களுக்கு காவல் துறையினர் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு மற்றும் மத ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படாமல் பார்த்து வருகின்றனர். தமிழக காவல் துறையினர் அடிப்படைவாத இயக்கங்களின் உலகளாவிய தொடர்புகள் குறித்து கண்காணித்து வந்தபோது, அடிப்படைவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் சில தேவாலயங்களைக் குறி வைத்துள்ளது குறித்தும், தாக்கலுக்கு தேதி நிர்ணயித்தது குறித்தும் நுண்ணறிவு தகவல்களைச் சேகரித்து, அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் மத்திய உளவுப் பிரிவினருக்கு அளித்ததுடன், அவ்வியக்கத்துடன் தொடர்பிலிருந்த சிலரைக் கைது செய்யவும் உதவியாக இருந்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகள் குறித்து துல்லியமான விவரங்களை ஆராய உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை விபத்து புள்ளிவிவர மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விபத்து ஏற்படுவதற்கான காரணங்களை துல்லியமாக ஆராய்ந்து, அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துவருகிறது. 2016 ஆம் ஆண்டு நடந்த மொத்த விபத்துகளை, 2019 ஆம் ஆண்டு நடந்த விபத்துகளுடன் ஒப்பிடும்போது விபத்துகள் குறைந்து 6,693 ஆக உயிரிழப்புகளும் குறைந்துள்ளன. அரசு மேற்கொண்டுவரும் இத்தகைய நடவடிக்கைகளினால் நமது மாநிலம் வாகன விபத்துகளைக் குறைப்பதிலும், வாகன விபத்தில் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைப்பதிலும் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்துவருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 3 ஆண்டுகளாக மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து அளித்துவரும் அறிவுரைகளினாலும், ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினாலும் இச்சாதனை சாத்தியமாகியுள்ளது. இது மாநிலத்தில் முன்பு எப்போதும் நிகழாத ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

காவல் துறையின்மீது எதற்கெடுத்தாலும் குறை கூறும், குற்றம் சுமத்தும் எதிர்க் கட்சியினருக்கு அரசின் சாதனைகள் சிலவற்றை இத்தருணத்தில் எடுத்துக்கூறினால் அது ஏற்புடையதாக இருக்கும். உதாரணத்திற்கு சில சாதனைகளைக் குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையில் மாமல்லபுரத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபர் ஆகியோரிடையே நடைபெற்ற சந்திப்பு நிகழ்ச்சியின்போது, காவல் துறையினர் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொண்டு, வருகின்ற தலைவர்களுக்கு உயர் பாதுகாப்பு வழங்கி, இரண்டு நாட்கள் நடந்த அந்த நிகழ்ச்சிகள் எந்த ஒரு சிறு அசம்பாவிதமுமின்றி நடந்து முடிந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் சீன அதிபர் உட்பட அனைத்துத் தரப்பினரும் வெகுவாகப் பாராட்டினர். நமது காவல் துறை உள்ளிட்ட அனைத்துத் துறையினரின் சீரிய செயல்பாட்டுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதையும், நமது மாநிலத்திற்கு கிடைத்த பெரும் பாராட்டு என்பதையும் இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதேபோன்று காஞ்சிபுரத்தில் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற்ற அருள்மிகு அத்திவரதர் வைபவத்தின்போது, பக்தர்கள்

சிரமமின்றி அருள்மிகு அத்திவரதரை தரிசிக்க, தொடர்ந்து 48 நாட்கள் இரவு—பகல், வெயில், மழை என்று பாராமல் மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து காவல் துறையினர் பணியாற்றியது மக்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா டுடே குழுமத்தின் சார்பில் 2019 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆய்வில், பெரிய மாநிலங்களிடையே அனைத்து காரணிகளிலும் சிறப்பாகச் செயல்பட்டதற்காகவும் மற்றும் சட்டம்—ஒழுங்கை சிறந்த முறையில் மேம்படுத்தியதற்காகவும் தமிழ்நாடு முதலிடம் பெற்றது; விருது பெற்றது குறிப்பிடத்தக்கது. மேலும், இதேபோன்று, கடந்த 2018 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு அனைத்து வகைகளிலும், overall performance, சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பதிலும் மற்றும் சுற்றுலாத் துறையிலும் முதலிட விருதுகளைப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—40

தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறை திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்காக விருது பெற்றது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் 2016—2017 மற்றும் 2017—2018 ஆகிய ஆண்டுகளின் புள்ளிவிவர அறிக்கையின்படி, இந்தியாவில் பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த மெட்ரோ நகரங்களில் சென்னை முதல் நகரமாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற பிற நகரங்களில் கோயம்புத்தூர் முதல் நகரமாகவும் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசம் மாநிலம் லக்னோவில் நடைபெற்ற 62—வது அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டிகளில் பங்கேற்ற தமிழக காவல் துறையினர் 4 தங்கம், 5 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களையும், புலன் விசாரணையில் ஒட்டுமொத்த championship பட்டத்தையும், 3 சுழற்கோப்பைகளையும் வென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், புதுதில்லியில் நடைபெற்ற 67—வது அகில இந்திய காவல் தடகளப் போட்டிகளில் தமிழ்நாடு அணி 3 தங்கப் பதக்கங்களையும், 2 வெள்ளிப் பதக்கங்களையும், 2 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று, இரண்டாவது இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவல் துறையில் இருந்து வரும் பல்வேறு நலத் திட்டங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டவைதான். அவற்றுள் சிலவற்றைப் பட்டியலிட்டு நான் கூறுவதிலிருந்து, அது உண்மை என்பது தெரிய வரும்.

காவல் துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் திட்டம்; காவல் ஆளிநர்கள் அணிந்து வந்த அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை, shoe மற்றும் socks; காவல் துறையினரின் பல்வேறு சிரமங்கள், ஆபத்துகளை உணர்ந்து அவர்களுக்கு இடர் படி; 1991 ஆம் ஆண்டு காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறைக்கென தனியாக சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்; 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் துவங்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இக்கழகத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டு, பின்னர் 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மீண்டும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் ஆரம்பிக்கப்பட்டது; (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலேயே முதன்முதலாக 13–4–1992 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையம் துவக்கி வைக்கப்பட்டது; அதிமுக்கிய நபர்களின் பாதுகாப்புப் பணிக்காக சிறப்பு பாதுகாப்புப் படை துவக்கப்பட்டது; 1993 ஆம் ஆண்டு சிறப்பு இலக்குப் படை ஏற்படுத்தப்பட்டது; 1994 ஆம் ஆண்டு கடலோர பாதுகாப்புக் குழுமம் ஏற்படுத்தப்பட்டது; மாநில நெடுஞ்சாலைகளில் ரோந்துப் பணிக்காக நெடுஞ்சாலை ரோந்து முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

காவல் துறையில் பணிபுரியும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பணிச் சுமையால் ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க பெங்களூருவிலுள்ள NIMHANS நிறுவனத்துடன் இணைந்து காவல் நிறைவாழ்வு பயிற்சி அளிக்கப்படுகிறது; தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை துவங்கப்பட்டது; கணினிவழிக் குற்றங்கள் பெருகி வருவதைச் சமாளிக்க காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டது; இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு துவங்கப்பட்டது; காவலர்களின் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க இலவசமாக வருடம் ஒரு முறை முழு உடல் மருத்துவப் பரிசோதனை திட்டம்; காவல் துறையினருக்கு

ஆயுதப் படை மையங்களில் புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன; நான் குறிப்பிட்டது ஒரு சில உதாரணங்கள் மட்டுமே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் காவல் துறை மேம்பாட்டிற்காக இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை முழுவதும் கூற நேரம் இல்லாமல், முக்கியமானவற்றை மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். இதிலிருந்து எந்த ஆட்சி காவல் துறையின்மீது அக்கறை கொண்டுள்ள ஆட்சி என்பது நன்கு புலப்படும், தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு பல்வேறு வசதிகளை அளிக்கவும், நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் நிதி ஒதுக்கீடு அவசியம் என்பதை அறிந்த எனது அரசு, காவல் துறைக்கான நிதியை கடந்த 9 ஆண்டுகளாக, ஒவ்வோராண்டும் அதிகரித்து, ஒதுக்கி வருகிறது. கடந்த 2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது, காவல் துறையினருக்கு 2,962 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருந்த நிலையில், இந்நிதி படிப்படியாக உயர்த்தப்பட்டு, இவ்வாண்டு 8,826.57 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியைவிட, இந்த நிதி சுமார் 3 மடங்கு அதிகம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்ற கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 3,044.36 கோடி ரூபாய் செலவில் 562 காவல் நிலையங்களும், 19,203 காவலர் குடியிருப்புகளும், 346 அலுவலகங்கள் மற்றும் இதர கட்டடங்களும் என மொத்தம் 20,111 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, காவல் துறையின் செயல்பாட்டில் இருந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

தமிழ்நாடு காவல் துறையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 31–12–2019 வரை மொத்தம் 38,222 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாகவும், 1,528 நபர்கள் உதவி ஆய்வாளர்களாகவும், 133 நபர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம்மூலம் 969 உதவி

ஆய்வாளர்கள் மற்றும் 8,372 இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தேர்வுகள் முடிவுற்று, தகுதியானவர்கள் பணியில் சேர்ந்தவுடன் காவல் துறையில் உள்ள காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை 2,582 ஆக வெகுவாகக் குறையும். அதாவது, இது மொத்தப் பணியிடத்தில் 2 சதவிகிதம் மட்டுமே ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது காவல் துறையின் வரலாற்றில் முன்பு எப்போதும் இல்லாத ஒரு சாதனை ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 2011 ஆம் ஆண்டு பதவியேற்றபோது, காவல் துறையில் சுமார் 19.5 சதவிகித காலிப் பணியிடங்கள் இருந்தன. இதிலிருந்து இவ்வரசு, காவல் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு கொடுத்து வந்துள்ள முன்னுரிமையை அறிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தவும், குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து, கைது செய்வதற்கும், காவல் நிலையச் செயல்பாடுகள் வெளிப்படையாக அமைவதற்கும் ஏதுவாக மாநிலத்தில் 1,092 காவல் நிலையங்களில் சி.சி.டி.வி. கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 475 காவல் நிலையங்களில் கேமராக்கள் நிறுவ நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதேபோன்று, பொது இடங்களில் 29–2–2020 வரை 4 இலட்சத்து 46 ஆயிரத்து 425 கேமராக்கள் நிறுவப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து நவீன தொலைதொடர்பு வசதிகளுடன் மாநில தலைமை காவல் கட்டுப்பாட்டு அறை ஒன்று என்னால் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், காவல் துறைக்கு பல்வேறு நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வசதிகள் செய்து தரப்பட்டதுடன், ஏற்கெனவே இருந்த பல்வேறு படிகள் உயர்த்தப்பட்டுள்ளன. உதாரணமாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவித் திட்டத்தின்கீழ் இயற்கை எய்தும் காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக

உயர்த்தப்பட்டது. காவல் துறையினருக்கான அகில இந்தியப் பணித் திறன் போட்டியில் வெல்பவர்களுக்கு பண வெகுமதி பன்மடங்கு உயர்த்தப்பட்டது. சிறப்பு இலக்குப் படை, வெடிகுண்டு செயலிழக்கும் செயல் பிரிவு காவலர்கள், பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு பராமரிப்புப் படி ரூ.3,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தப்பட்டது. இடர் படி, காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை ரூ.400/–லிருந்து ரூ.800/– ஆகவும், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் முதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரை ரூ.450/–லிருந்து ரூ.900/– ஆகவும் உயர்த்தப்பட்டது. சிறப்பு இலக்குப் படையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் முதல் காவலர்கள் வரை கடின பணிப் படி மாதம் ரூ.900/– வழங்கப்பட்டது. எதிர்பாராத செலவினங்களுக்கான நிதியாக மாதம் ஒன்றுக்கு இலகு வகைக் காவல் நிலையங்களுக்கு ரூ.3,000/–, நடுத்தரக் காவல் நிலையங்களுக்கு ரூ.5,000/– மற்றும் கடினக் காவல் நிலையங்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.7,000/– வழங்கப்பட்டு வருகிறது.

வீர, தீரப் பணிகளுக்கு, தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கங்களுடன் மாதாந்திரப் படி ரூ.300/–லிருந்து ரூ.900/– ஆக உயர்த்தப்பட்டது. நக்சலைட் சிறப்புப் பிரிவில் பணிபுரியும் காவல் ஆளிநர்களுக்கு இடர் படி ரூ.3,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தப்பட்டது. ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்டு வந்த ஊதியம் ரூ.150/–லிருந்து ரூ.560/– ஆக உயர்த்தப்பட்டது. பணிக் காலத்தில் மரணமடையும் காவல் துறையினரின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அவர்களின் நேரடி வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில், அவரவர் தகுதிக்கேற்ப பணியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாகப் பணிபுரிந்துவரும் காவல் துறையினர், மக்கள் நலன் காக்கும் அரசில், வரையறுக்கப்பட்டுள்ள தங்கள் பணிகளை ஏழை, பணக்காரர்கள் என்று விகிதாச்சாரம் பார்க்காமல் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள காவல் நிலையங்களுக்கு வரும் பொது மக்களை அன்புடன் நடத்தி, அவர்களின் குற்றங்களைக் களைவதுடன், தங்கள் பணிகளை செவ்வனே மேற்கொண்டு, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுடன், தனி மனித பாதுகாப்பிற்கு உத்தரவாதமாக இருக்க வேண்டும். ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களின் கூற்றிற்கேற்ப, மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றைப் பூர்த்தி செய்வதுடன், திறமையாகவும், நேர்மையாகவும், வேகமாகவும் செயல்பட்டு அனைவருக்கும் முன்னுதாரணமாக விளங்கக்கூடிய நிருவாகத்தை அளிப்பது என்ற நோக்குடன் இந்த அரசு கடமையாற்றி வருகிறது. அரசுக்கும், பொது மக்களுக்கும் பாலமாக விளங்கி வரும் காவல் துறை, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வரும் இந்த அரசுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும்.

வீணையின் நரம்புகள் தனித்தனியே இருந்தாலும், அவற்றை விரல்களால் மீட்டுகின்றபோது ஒரே இசையை எழுப்புவதுபோல, (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் இம்மாமன்றத்தில் அமர்ந்திருக்கும் நீங்கள் ஒத்துழைப்புத் தருவதுடன், உரிய ஆலோசனை வழங்கி, மாநில வளர்ச்சிக்கு உதவ முன்வர வேண்டுமென்று உங்கள் அனைவரையும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், காவல் துறையினருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இவ்வரசு தொடர்ந்து செய்து தந்து, அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை. 1908 ஆம் ஆண்டு Madras City Fire Brigade என்ற ஓர் அமைப்பாகத் துவங்கி, இன்று 346 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுடன் நாட்டிலேயே தொன்மைவாய்ந்த, பழமையான மிகப் பெரிய, திறமைவாய்ந்த ஒரு தனித் துறையாக இத்துறை விளங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை நவீனமயமாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 159 கோடியே 22 இலட்சம் ரூபாய் மட்டுமே. ஆனால், 2020–2021 ஆம் ஆண்டு இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 405 கோடியே 68 இலட்சம் ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

மக்கள் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, கடந்த ஓராண்டில் மட்டும் 15 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் துவங்கப்பட்டன. கடந்த ஆண்டில் தீயணைப்பு மற்றும்

மீட்புப் பணிகள் துறை, 25,068 தீ விபத்து அழைப்புகளை ஏற்று, 325.59 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களையும், 48 மனித உயிர்களையும் காப்பாற்றியது. அதேபோல, 26,392 மீட்புப் பணி நிகழ்வுகளில் 4,015 மனித உயிர்களை இடர்பாடுகளிலிருந்து மீட்டு, காக்கும் பணி எங்கள் பணி என்பதற்கேற்ப இத்துறை செயலாற்றி வருகிறது. 20–2–2020 அன்று மாதவரத்தில் உள்ள இரசாயன கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தை பல மணிநேரம் ஓய்வின்றி போராடி கட்டுப்படுத்தினர். தீ அருகிலுள்ள இடங்களுக்குப் பரவாமல் தடுக்கப்பட்டது. அதிகரித்துவரும் பொது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும், வருங்காலத்தில் நிகழக்கூடிய அனைத்துவிதமான பேரிடர்களை எதிர்கொள்ளத்தக்க வகையிலும் இத்துறையின் செயல்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு, களம் நோக்கிச் செல்கின்றோம். வெற்றிக்கு அழகு வேகம். அதை எங்களுக்கு கற்றுத் தந்தவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ‘கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தத்தில் வெல்வது எப்படி?’ அதையும் கற்றுத் தந்த வீரத் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பயணம் அதை நோக்கித்தான். கண் துஞ்சாது பணியாற்றும் கடமையே எங்கள் உயிர் மூச்சு. வெற்றியின் இலக்கே எங்கள் இலட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி) சதிகளை வெல்லும் சக்தியைக் கொடுத்திருக்கும் தாயின் தயவால் எதிரிகளின் சூழ்ச்சி எங்களிடம் எடுபடாது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகள் நம்மை எப்போதும் வென்றதும் இல்லை; அவர்களை வீழ்த்தாமல் நாம் எப்போதும் விட்டதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வரப்போகும் 2021 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், நாம் பெறப் போவதும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) பொன் எழுத்துகளால் பதிக்கப் போகும் வெற்றி, சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) பொன் எழுத்துகளால் பதிக்கப் போகும் வெற்றி, சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் வெற்றி, நமது வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்களும் காவல் துறையின் பணியினை அங்கீகரிக்கும் வகையில், அவர்கள் மேலும் சிறப்பாகப் பணிபுரிய தேவையான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, எனது பதிலுரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையின் புதிய அறிவிப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன். மற்ற அறிவிப்புகளையெல்லாம் நான் இந்த

அவையில் படித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

காவல் துறை

காவல் ஆளிநர்களுக்கு மிகைப் பணி ஊதியம் 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வீர, தீரச் செயலுக்கான கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல். ஒரு புதிய காவல் மாவட்டம் மற்றும் 2 உட்கோட்டங்கள் அமைத்தல். 10 புதிய காவல் நிலையங்கள் அமைத்தல். மூன்று காவல் நிலையங்களின் தரத்தை உயர்த்துதல். காவல் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள். முகாம் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் காவல் துறையினருக்கான குடியிருப்புகள் என 50 புதிய கட்டடப் பணிகள், 908 புதிய வாகனங்கள் வாங்குதல் போன்ற 95 அறிவிப்புகள் 775.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தடய அறிவியல் துறைக்கான அறிவிப்புகள். சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதிய நான்கு பிரிவுகளை உருவாக்குதல். சேலம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகிய காவல் ஆணையரகங்களுக்கு தலா ஒன்றும் மற்றும் சென்னை காவல் ஆணையரகத்திற்கு இரண்டு என மொத்தம் 6 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் என ஐந்து அறிவிப்புகள் 28.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகளில், பணியாளர்களின் பதவித் தரத்தை உயர்த்துதல், இரண்டு வான் நோக்கி உயரும் ஊர்திகள் வாங்குதல், வீர வணக்கம் நினைவுச் சின்னம் அமைத்தல், பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல், 10 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டுதல், 11 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தோற்றுவித்து, ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தின் நிலையினை உயர்த்துதல் உள்ளிட்ட 12 அறிவிப்புகள் 71.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நேரத்தின் அருமை கருதி, காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை சுருக்கமாக நான் தற்போது தெரிவித்துள்ளேன். இத்துறையின் அறிவிப்புகள் அனைத்தையும், நான் அவையில் படித்ததாக ஏற்று, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமாய்த் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

காவல் துறை

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
1.	**காவல் பணியாளர் மற்றும் அதிகாரிகள் நலன்**	
	காவல் ஆளிநர்களின் மிகை நேரப் பணிக்கான மதிப்பூதியம் (ETR) ரூ.200–லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்படும்	**ரூ.160.34 கோடி**
	புது டெல்லியில் உள்ள த.சி.கா. 8–வது அணியில் பணிபுரியும் அனைத்து காவல் அதிகாரிகள்/ஆளிநர்கள், அமைச்சுப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற ஊழியர்கள் (சமையலர், முடிதிருத்துவோர், சலவையாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள்) அனைவருக்கும் நீலகிரி மாவட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் குளிர்காலப் படியைப்போல ஒவ்வொரு வருடமும் நவம்பர் முதல் பிப்ரவரி வரை ஒரு மாத அடிப்படை ஊதியத்தில் 10 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.1,500/– என 4 மாதங்களுக்கு வழங்கப்படும். (டெல்லி அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.)	**ரூ.69.18 இலட்சம்**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
	ஊர்க் காவல் படையினருக்கு ஒரு வருடத்திற்கு கூடுதலாக இரண்டு மாத அழைப்பு நாள்கள் வழங்குவதற்கான ஒப்பளிப்பு	**ரூ.10.50 கோடி**
	காவல் ஆளினர்கள் பணியின்போது வீர, தீர செயல்களில் ஈடுபட்டு மரணமடைவதும், படுகாயமடைவது மற்றும் ஊனமடையும்போது வழங்கப்படும் கருணைத் தொகை உயர்த்தி வழங்கப்படும்	
	1. மரணமடைபவர்களுக்கு ரூ.10 இலட்சம்–ரூ.15 இலட்சம்	
	2. நிரந்தர/மொத்தமாக ஊனமுற்றவர்களுக்கு ரூ.4 இலட்சம்–ரூ.8 இலட்சம்	
	3. மருத்துவக் காரணங்களுக்காக ஒரு கண், கால் விரல்பகுதி, விரல்கள் போன்ற பகுதி துண்டிக்கப்பட்டவர்களுக்க ரூ.2 இலட்சம்–ரூ.5 இலட்சம்	
	4. துப்பாக்கி சூட்டில் ஒன்றிணைந்த பல உடல்பகுதிகள் சேதமடைதல்/உடைபடுதலுக்கு வழங்கப்படும் உதவி தொகை ரூ.1 இலட்சம்–ரூ.3 இலட்சம்	
	5. சிறுகாயங்களுக்கு வழங்கப்படும் உதவி தொகை ரூ.10 ஆயிரம்–ரூ.20 ஆயிரம்	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
2.	**காவல் மாவட்டம் மற்றும் உட்கோட்டங்கள் உருவாக்குதல்**	
	1. சென்னை பெருநகர் பூந்தமல்லியில் புதிய காவல் மாவட்டம் உருவாக்கப்படும்	**ரூ.49.06 இலட்சம்**
	2. திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் புதிய காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும்	**ரூ.47.10 இலட்சம்**
	3. நீலகிரி மாவட்டத்தில் மேட்டுப்பாளையம், காரமடை, அன்னூர், பில்லூர் அணை மற்றும் சிறுமுகை காவல் நிலையம் உள்ளடக்கிய மேட்டுப்பாளையம் புதிய காவல் உட்கோட்டம் உருவாக்கப்படும்	**ரூ.48.16 இலட்சம்**
3.	**10 புதிய காவல்/7 போக்குவரத்து/10 புறக்காவல் நிலையங்கள் உருவாக்குதல்**	
	1. மதுரை மாநகரம், கோச்சடையில் புதிய கனவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.6.08 கோடி**
	2. மதுரை மாநகரம், அனுப்பானடியில் புதிய கனவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.6.08 கோடி**
	3. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் புதிய மிதவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.3.70 கோடி**
	4. திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் புதிய இலகுவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.2.15 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
5.	தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் காவல் நிலையத்தைப் பிரித்து மாட்லம்பட்டி புதிய மிதவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.3.70 கோடி**
6.	கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் காவல் நிலையத்தைப் பிரித்து களமருதூர் புதிய இலகுவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.2.16 கோடி**
7.	விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் காவல் நிலையத்தைப் பிரித்து அரசூர் புதிய இலகுவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.2.18 கோடி**
8.	சென்னை பெருநகர காவல், T–4 மதுரவாயல் காவல் நிலையம் மற்றும் T–13 குன்றத்தூர் காவல் நிலையம் ஆகியவைகளைப் பிரித்து வானகரம் காவல் நிலையம் மற்றும் திருமுடிவாக்கம் காவல் நிலையம் என இரண்டு புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்படும்	**ரூ.19.66 கோடி**
9.	பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுக்கா காவல் நிலையத்தைப் பிரித்து அம்மாபாளையம் புதிய மிதவகை காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.3.69 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
	10. மதுரை மாநகரில் அண்ணாநகர், கூடல்புதூர், திருநகர் மற்றும் மாட்டுத்தாவணி ஆகிய 4 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உருவாக்கப்படும்	**ரூ.5.52 கோடி**
	11. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு போக்குவரத்துக் காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.1.34 கோடி**
	12. தென்காசி மாவட்டம், புளியங்குடி போக்குவரத்துக் காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.1.34 கோடி**
	13. கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி போக்குவரத்துக் காவல் நிலையம் உருவாக்கப்படும்	**ரூ.1.34 கோடி**
	14. மாநில நெடுஞ்சாலைகளில் இயங்கிவரும் சுங்கச்சாவடி-களுக்காகப் புதிதாக 10 புறக்காவல் நிலையங்கள் உள்ளடக்கிய காவல் நிலைங்கள் உருவாக்கப்படும்	**ரூ.12.21 கோடி**
4.	**காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துதல்**	
	1. 12 புறக்காவல் நிலையங்கள் முழுநேர காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்	**ரூ.21.49 கோடி**
	2. காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் இயங்கிவரும் கன வகை காவல் நிலையம் மெட்ரோ வகை காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்	**ரூ.6.61 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
	3. மதுரை மாவட்டத்திலுள்ள பெருங்குடி, அகஸ்டின்பட்டி, சாப்டூர், கீழவளவு, காடுபட்டி, அப்பன்திருப்பதி, மேலவளவு ஆகிய உதவி ஆய்வாளர் நிலையில் உள்ள காவல் நிலையங்கள் ஆய்வாளர் நிலையிலான காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்	**ரூ.1.06 கோடி**
5.	**ஆயுதப்படைக்கு புதிய படைப்பிரிவு உருவாக்குதல்**	
	1. சேலம் மாநகர ஆயுதப்படையில் ஒரு தலைமையகப் படைப்பிரிவும், 2 செயல் படைப்பிரிவுகளும் 186 பணியாளர் எண்ணிக்கை கொண்டு உருவாக்கப்படும்	**ரூ.14.29 கோடி**
	2. கரூர் மாவட்ட ஆயுதப்படைப் பிரிவில் கூடுதலாக ஒரு செயல் படைப்பிரிவு 62 பணியாளர் எண்ணிக்கை கொண்டு உருவாக்கப்படும்	**ரூ.4.76 கோடி**
6.	**காவல் துறையில் புதிய பதவிகள் உருவாக்குதல்**	
	1. தருமபுரி மாவட்டத்தில் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) பதவி உருவாக்கப்படும்	**ரூ.26.90 இலட்சம்**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
2.	சென்னை காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (அலுவலக தானியங்கல் மற்றும் கணினிமயமாக்கல்) பதவி உருவாக்கப்படும்	**ரூ.29.49 இலட்சம்**
3.	6 மாநகரங்களில் (திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி) 53 சட்டம்–ஒழுங்கு மற்றும் புலனாய்வு (குற்றம்) பிரிவு காவல் ஆய்வாளர்கள் பதவி உருவாக்கப்படும்	**ரூ.11.74 கோடி**
4.	தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி நகர உட்கோட்டத்தில் ஒரு புதிய போக்குவரத்து காவல் ஆய்வாளர் பதவி உருவாக்கப்படும்	**ரூ.28.72 இலட்சம்**
5.	கரூர் மாவட்டத்தில் தாந்தோணியில் காவல் நிலையத்தில் ஒரு புதிய காவல் ஆய்வாளர் பதவி உருவாக்கப்படும்	**ரூ.21.16 இலட்சம்**
6.	காவல் உட்கோட்டங்களில் 248 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்	**ரூ.16.09 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
7.	**நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை முறைமை மற்றும் சிறப்பு நுண்ணறிவு அலகுகள் உருவாக்குதல்**	
	1. கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை முறைமை உருவாக்கப்படும் (போக்குவரத்து சாலை பாதுகாப்பு நிதியம்) (சீர்மிகு நகரம்–தகவல் தொழில்நுட்பம்)	**ரூ.75 கோடி**
	2. திருப்பூர் மாநகரம், திருநெல்வேலி மாநகரம், சேலம் மாநகரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகரங்களில் சிறப்பு நுண்ணறிவு அலகுகள் (SIC) உருவாக்கப்படும்	**ரூ.7.56 கோடி**
8.	**புதிய கட்டடங்கள் கட்டுதல்**	
	1. ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு நகர காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்டப்படும்	**ரூ.1.08 கோடி**
	2. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்டப்படும்	**ரூ.1.15 கோடி**
	3. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்டப்படும்	**ரூ.1.01 கோடி**

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
4.	சென்னை பெருநகரம், புழல் சரகம், காவல் உதவி ஆணையாளர் முகாம் அலுவலகம் கட்டப்படும்	**ரூ.3.24 கோடி**
5.	கன்னியாகுமரி மாவட்டம், மதுவிலக்கு அமல் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு அலுவலகக் கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.59 கோடி**
6.	சென்னை பெருநகரம், அடையாறில் 3 மற்றும் கோட்டூர்புரத்தில் 8 உதவி ஆணையாளர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.5.76 கோடி**
7.	திருச்சி மாநகரகத்தில் பணிபுரியும் 8 காவல் உதவி ஆணையாளர் களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.3.64 கோடி**
8.	தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் 1 ஆய்வாளர், 5 சார்பு ஆய்வாளர் மற்றும் 40 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.9.51 கோடி**
9.	புதுக்கோட்டை மாவட்டம், மழையூரில் 2 சார்பு ஆய்வாளர் மற்றும் 27 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.5.77 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
10.	கோயம்புத்தூர் மாநகரம், வி.எச் ரோட்டில் 96 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.17.03 கோடி**
11.	சிவகங்கை மாவட்டம், பள்ளத்தூரில் 1 ஆய்வாளர், 3 சார்பு ஆய்வாளர் மற்றும் 58 காவலர்/ தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.10.07 கோடி**
12.	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் 128 காவலர்/ தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.22.30 கோடி**
13.	சென்னை பெருநகரம், புதுப்பேட்டையில் உள்ள குதிரைப்படைக்கு 4 சார்பு ஆய்வாளர், 32 குதிரை படை வீரர்கள் மற்றும் 10 குதிரை பராமரிப்பாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.8.66 கோடி**
14.	தெற்கு அவிநாசிபாளையம் 1 ஆய்வாளர், 3 சார்பு ஆய்வாளர் மற்றும் 46 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்	**ரூ.9.74 கோடி**
15.	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மேற்கு காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.54 கோடி**
16.	கன்னியாகுமரி மாவட்டம், கொட்டிக்கோடு காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.08 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
17.	திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.05 கோடி**
18.	இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.06 கோடி**
19.	திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.22 கோடி**
20.	இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் துறைமுக காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.11 கோடி**
21.	திருப்பூர் மாவட்டம், தெற்கு அவிநாசிபாளையம் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.42 கோடி**
22.	திருநெல்வேலி மாவட்டம், மானூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.43 கோடி**
23.	செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.44 கோடி**
24.	திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.03 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
25.	நாகப்பட்டினம் மாவட்டம், பெரம்பூர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.95 இலட்சம்**
26.	புதுக்கோட்டை மாவட்டம், மழையூர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.94 இலட்சம்**
27.	திருப்பூர் மாவட்டம், வீரபாண்டி காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.2.44 கோடி**
28.	நாமக்கல் மாவட்டம், வெப்படை காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.25 கோடி**
29.	தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் காவல் நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும்	**ரூ.28 இலட்சம்**
30.	சென்னை பெருநகரம், இ3 தேனாம்பேட்டை காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.4.58 கோடி**
31.	கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.95 இலட்சம்**
32.	இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.81 இலட்சம்**
33.	திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.22 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
34.	வேலூர் மாவட்டம், குடியாத்தம் போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.1.09 கோடி**
35.	விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.91 இலட்சம்**
36.	கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் போக்குவரத்து கட்டுப்பாட்டு நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.95 இலட்சம்**
37.	திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.96 இலட்சம்**
38.	திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.81 இலட்சம்**
39.	ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.77 இலட்சம்**
40.	ஈரோடு மாவட்டம், ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.77 இலட்சம்**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
41.	திருப்பூர் நகரம், திருப்பூர் மத்திய காவல் நிலையம் மற்றும் தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	ரூ.2.67 கோடி
42.	திருச்சிராப்பள்ளி மாநகர அமர்வு நீதிமன்ற காவல் நிலையம் மற்றும் கன்டோண்மென்ட் போக்குவரத்து காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	ரூ.2.97 கோடி
43.	திருச்சிராப்பள்ளி மாநகர கோட்டை (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	ரூ.3.51 கோடி
44.	சென்னை பெருநகரம், மண்ணடியில் B2 எஸ்பிளனேடு காவல் நிலையத்திற்கு புதிய பன்னடுக்கு கட்டடம் மற்றும் W11 அனைத்து மகளிர் காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	ரூ.3.30 கோடி
45.	சென்னை, அசோக் நகர் காவலர் பயிற்சி கல்லூரி வளாகத்தில் சிலை தடுப்பு காவல் நிலையம், புதிய கட்டடம் கட்டப்படும்	ரூ.1.25 கோடி

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
46.	கரூர் மாவட்டத்தில் இயங்கிவரும் க்யூ பிரிவு, தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும்	**ரூ.3.10 கோடி**
47.	புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கு மாவட்ட காவல் அலுவலகக் கட்டடம் கட்டப்படும் (14 கோடி X 5)	**ரூ.70 கோடி**
48.	திருநெல்வேலி மாநகரம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப் படைகளுக்கு ஒருங்கிணைந்த புதிய நிருவாகக் கட்டடம் கட்டப்படும்	**ரூ.7.90 கோடி**
49.	தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் ஒருங்கிணைந்த இணையதள குற்ற வளாகம் மூன்று அடுக்கு கட்டடமாக (தரைதளம்+2 மாடி) 8,000 சதுர அடி நிலப்பரப்பில் 21,000 சதுர அடி கட்டட பரப்பளவில் புதிய கட்டடம் கட்டப்படும்	**ரூ.11.26 கோடி**
50.	குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ள விசாரணை அறை புதிய வசதிகளுடன் புதுப்பித்து வழங்கப்படும்	**ரூ.99.83 இலட்சம்**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
9.	புதிய வாகனங்கள் வாங்குதல் காவல் துறையில் வாகன வசதியை மேம்படுத்துவதற்காக 918 கழிவு வாகனங்களுக்கு பதிலாக புதியதாக 908 மாற்று வாகனங்கள் வாங்கப்படும் (கார் 57, ஈப்பு ஊர்தி 32, பெரிய ஈப்பு ஊர்தி 48, பேருந்து 4, சிறிய பேருந்து 18, வேன் 172, இருசக்கர வாகனம் 525, லாரி 31, கைதிகளுக்கான வாகனம் 2, மீட்பு ஊர்தி 18, பிக்கப் வேன் 1)	**ரூ.70.14 கோடி**
10.	**புதிய உபகரணங்கள் வாங்குதல்**	
	1. சிறப்புப் பிரிவுகளுக்கு (குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு மற்றும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு) 96 கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் கொள்முதல் செய்யப்படும்	**ரூ.55.22 இலட்சம்**
	2. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு மற்றும் சிலை திருட்டு தடுப்புப் பிரிவு ஆகியவற்றிலுள்ள 151 புலன் விசாரணை அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்படும்	**ரூ.60.85 இலட்சம்**

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
	3. த.சி.கா. முதலாம் அணி, திருச்சி மற்றும் இரண்டாம் அணி, ஆவடி ஆகிய இடங்களில் உள்ள காவலர் மருத்துவமனைகளின் வசதிகளை மேம்படுத்த நவீன மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்	**ரூ.35 இலட்சம்**
	4. 11 சரகங்கள் மற்றும் 7 ஆணையரகங்களுக்கு, எடுத்துச்செல்லத்தக்க ஊடுகதிர் உடமை கருவி வாங்கப்படும்	**ரூ.2.70 கோடி**
	5. காஞ்சிபுரம் மாவட்டம், ஒத்திவாக்கத்திலுள்ள தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளிக்கென சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கான கருத்துரு	**ரூ.70.76 இலட்சம்**
11.	**காவல் நிலைய எல்லை வரையறை செய்தல்**	
	கோயம்புத்தூர் மாவட்டம், 8 ஊராட்சி தாய் கிராமங்களில் உள்ள 24 குக்கிராமங்களை நெகமம் காவல் நிலையத்திலிருந்து பிரித்து சுல்தான்-பேட்டையில் புதியதாக திறக்கப்பட்டுள்ள காவல்நிலையத்துடன் இணைக்கப்படும்	
12.	**புதிய பிரிவுகள் உருவாக்குதல்**	
	சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், மதுரை மற்றும் திருநெல்வேலி காவல் ஆணையரகங்களில் போக்குவரத்து திட்டமிடல் மற்றும் சாலைப் பாதுகாப்புப் பிரிவுகள் உருவாக்கப்படும்	**ரூ.3.52 கோடி**

வ. எண்		மதிப்பீட்டுத் தொகை
13.	**பழுதுபார்த்தல் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்குதல்**	
	சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.25 கோடியில் இருந்து ரூ.50 கோடியாக உயர்த்தப்படும்	**ரூ.25 கோடி**
14.	**உள்சுற்று கண்காணிப்பு கேமரா பொருத்துதல்**	
	1. 400 எண்ணிக்கையிலான சிசிடிவி கேமராக்களை கோயம்புத்தூர் மாநகரில் பொருத்துதல்	**ரூ.17 கோடி**
	2. 1200 எண்ணிக்கையிலான சிசிடிவி கேமராக்களை திருப்பூர் மாநகரில் பொருத்துதல்	**ரூ.12 கோடி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

1. **பணியாளர் நலன்**

 1. தீயணைப்புத் துறை பணியாளர்களை 15 மற்றும் 25 ஆண்டுகள் பணி முடித்தவுடன் அடுத்த பதவிக்கு தரம் உயர்த்துதல்

 2. சிறைத் துறை சீர்திருத்தம் மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறையினருக்கான பணி நிபந்தனைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள், நவீனமாக்குதல் குறித்து அரசால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள நான்காவது காவல் ஆணையத்தால் பரிசீலனை செய்யப்படும்

 3. மெரினா மீட்பு நிலையத்தில் 17 தீயணைப்போர் உயிர் காப்பாளர்களுக்கு இடர்பாட்டுப் படி ஒரு மாதத்திற்கு ரூ.6,000/- என உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.12.24 இலட்சம் செலவாகும்.

4. 39 மாவட்டத் தலைமையக தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையங்களுக்கு உதவி மாவட்ட அலுவலர் அந்தஸ்தில் முதன்மை நிலைய அலுவலர் பதவிகள் ரூ.3.98 கோடி செலவில் புதிதாக உருவாக்குதல்

5. பணியின்போது மரணமடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் அல்லது காயமடையும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்குதல்

வ. எண்	உதவித் தொகை விவரம்	தற்போது வழங்கப்படும் தொகை	உயர்த்தி வழங்கப்படும் தொகை
1.	பணியாற்றும்போது உயிரிழப்பு	ரூ.10 இலட்சம்	ரூ.15 இலட்சம்
2.	நிரந்தர ஊனம்	ரூ.4 இலட்சம்	ரூ.8 இலட்சம்
3.	20 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட காயம் அல்லது பிற காயங்கள்	ரூ.2 இலட்சம்	ரூ.4 இலட்சம்
4.	20 சதவிகிதத்திற்கும் குறைவான அல்லது பிற காயங்கள்	ரூ.1 இலட்சம்	ரூ.3 இலட்சம்
5.	சாதாரண காயங்கள்	ரூ.10,000/–	ரூ.20,000/–

2 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடம் கட்டுதல் (Construction of New Buildings)

(I) கீழ்க்கண்ட 10 இடங்களில் உள்ள தீயணைப்பு மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் ரூ.2,316.28 இலட்சம் செலவில் கட்டப்படும்

1. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தீயணைப்பு நிலையம் ரூ.99.44 இலட்சம் செலவில் கட்டப்படும்

2. தென்சென்னை மாவட்டம், கிண்டி தீயணைப்பு நிலையம் ரூ.350.00 இலட்சம் செலவில் கட்டப்படும்

3. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தீயணைப்பு நிலையம் ரூ.306.51 இலட்சம் செலவில் கட்டப்படும்

4. மதுரை மாவட்டம், கள்ளிக்குடி தீயணைப்பு நிலையம் ரூ.170.61 இலட்சம் செலவில் கட்டப்படும்
5. கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தீயணைப்பு நிலையம் ரூ.121.55 இலட்சம் செலவில் கட்டப்படும்
6. கடலூர் மாவட்டம், அலுவலகம் மற்றும் கடலூர் தீயணைப்பு நிலையம் ரூ.494.12 இலட்சம் செலவில் கட்டப்படும்
7. தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி தீயணைப்பு நிலையம் ரூ.263.00 இலட்சம் செலவில் கட்டப்படும்
8. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை தீயணைப்பு நிலையம் ரூ.198.00 இலட்சம் செலவில் கட்டப்படும்
9. வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை தீயணைப்பு நிலையம் ரூ.163.00 இலட்சம் செலவில் கட்டப்படும்
10. வேலூர் மாவட்டம், ஒடுக்கத்தூர் தீயணைப்பு நிலையம் ரூ.150.05 இலட்சம் செலவில் கட்டப்படும்

(II)

1. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.276.86 இலட்சம் செலவில் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டுதல்.
2. பூம்புகாரில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்பு ரூ.300 இலட்சம் செலவில் கட்டுதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. **புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைத்தல்**

புதியதாக 11 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தின் நிலையினை உயர்த்துதல். அவை தொடர் செலவினம் ரூ.840.00 இலட்சம், தொடராச் செலவினம் ரூ.600.00 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட இடங்களில் திறக்கப்படும்

1. ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்
2. திங்கள் நகர், கன்னியாகுமரி மாவட்டம்
3. ஊத்துக்குளி, திருப்பூர் மாவட்டம்
4. இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்
5. கோவைப்புதூர், கோயம்புத்தூர் மாவட்டம்
6. தேனி மாவட்டம், சின்னமனூர்
7. திருச்சிராப்பள்ளி மாவட்டம், வையம்பட்டி
8. கடலூர் மாவட்டம், குமராட்சி
9. நாகப்பட்டினம் மாவட்டம், வாய்மேடு
10. திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார்
11. கள்ளக்குறிச்சி மாவட்டம், நயினார்பாளையம்
12. விருதுநகர் மாவட்டம், சிவகாசி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தின் நிலையினை உயர்த்துதல்

4. **புதிய ஊர்திகள்**

1. திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு 54 மீட்டர் கொண்ட இரண்டு வான்நோக்கி உயரும் ஊர்திகள் தலா ரூ.15 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும் (15X2 = ரூ.30 கோடி)

2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையத்தில் உள்ள தீயணைப்பு ஊர்தி மிகவும் பழுதடைந்துள்ளதால் ரூ.42 இலட்சம் செலவில் புதிய ஊர்தி வழங்கப்படும்.

5. தீயணைப்பு வீரர்களின் வீர வணக்க நினைவுச் சின்னம், தலைமையகத்தில் ரூ.25.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்

6. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மாணவ, மாணவிகள் படை சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் (ஒரு இலட்சம் மாணவ, மாணவிகள்) ரூ.2 கோடி செலவில் உருவாக்குதல். சின்னம் மற்றும் தொப்பி அரசு செலவினத்தில் வழங்கப்படும்.

தடய அறிவியல் துறை

Sl. No.	Announcement Details	Total outlay	Provision required for the year 2020–2021
1.	துணை இயக்குநர் பணியிடத்தை இணை இயக்குநர் பணியிடமாகத் தரம் உயர்த்துதல்	40,000	40,000
2.	சென்னையில் உள்ள தடய அறிவியல் துறை பிரதான ஆய்வகத்தை சர்வதேச தரத்திற்கு இணையாக "தடய அறிவியல் சீர்மிகு மையமாக மேம்படுத்துதல்"	13,43,00,000	13,43,00,000
3.	சென்னை பிரதான ஆய்வகம் மற்றும் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் செயல்பட்டுவரும் கணினி தடயவியல் பிரிவுகளின் திறனை மேம்படுத்துதல்	2,38,74,000	2,38,74,000

4. சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் (i) மரபணு ஆய்வுப் பிரிவு உருவாக்குதல் (ii) குருதி வடிநீரியல் பிரிவு உருவாக்குதல் (iii) ஆவண ஆய்வுப் பிரிவு உருவாக்குதல் (iv) கணினி தடயவியல் பிரிவு உருவாக்குதல்	10,05,49,000	10,05,49,000
5. சேலம், திருச்சி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகிய காவல் ஆணையரகங்களுக்கு நான்கு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையரகத்திற்கு கூடுதலாக இரண்டு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் உருவாக்குதல்	2,90,00,000	2,90,00,000
மொத்தம்	**28,77,63,000**	**28,77,63,000**

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று நடைபெற்றுள்ள துறைகள் சம்பந்தமாக வெட்டுத் தீர்மானங்களை வழங்கியுள்ளனர். அவர்கள் இன்றைக்கு அவைக்கு வரவில்லை. எனினும், அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களிலுள்ள கருத்தினை அரசு கருத்தில்கொள்ளும். எனவே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் சார்பாக நானும் மற்றும் இதர துறைகளின் சார்பாக மாண்புமிகு அமைச்சர்களும் சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரமின்மைக் காரணமாக இங்கே மாண்புமிகு அமைச்சர்கள் வழங்கியுள்ள பதிலுரை மற்றும் அறிவிப்புகள் அனைத்தையும் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை).

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,437,99,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.431,50,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,25,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை).

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.373,77,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.31,90,69,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 38-பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.482,12,44,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.66,42,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.47,10,38,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. "நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,169,60,35,000/–, மூலதனக் கணக்கில் ரூ.500,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.126,46,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(எ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.4,655,73,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.364,20,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,169,25,02,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஏ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.319,73,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஐ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.35,142,74,33,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஓ) கோரிக்கை எண் 27-தொழில் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை.

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,716,53,00,000/–, மூலதனக் கணக்கில் ரூ.20,00,02,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.100,25,14,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஓ) கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 19 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,950,10,14,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,911,53,23,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஔ) கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,387,31,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.376,41,77,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.130,75,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஉ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.153,86,89,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

(அஊ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.

"வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,999,06,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.114,00,72,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஇ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,370,16,36,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஈ) கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை).

"சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.141,50,12,000/–, மூலதனக் கணக்கில் ரூ.206,88,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஉ) கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை).

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.480,39,53,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஊ) கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை).

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.406,45,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரித்

துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அள) கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை).

"பால்வளம் (கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.31,11,16,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஏ) கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை.

"குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.575,71,91,000/–, மூலதனக் கணக்கில் ரூ.31,65,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

(அஐ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,573,11,36,000/–, மூலதனக் கணக்கில் ரூ.77,06,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஓ) கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை).

“இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.408,01,30,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஓ) கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை.

“போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,756,15,95,000/–, மூலதனக் கணக்கில் ரூ.192,00,07,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.768,10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஔ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை.

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,735,74,18,000/–, மூலதனக் கணக்கில் ரூ.353,53,81,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆஅ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை).

"தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,82,99,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும்

தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ.ஆ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை).

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.221,04,27,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

பிற்பகல் 2–15

(ஆஇ) கோரிக்கை எண் 47-இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.278,16,88,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

@ 24-3-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்திப் பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2020) மற்றும் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2020) ஆகியவை இன்றே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்” என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

@ 16-3-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–20

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2020), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2020), மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 16-3-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2020), மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2020 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 24

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று 2019–2020 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பது குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–25

2020 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று 2019–2020 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. மதிப்பீட்டுக் குழு
2. பொதுக் கணக்குக் குழு
3. பொது நிறுவனங்கள் குழு
4. பேரவை விதிகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே, 195(2), 203(3), 211(3) மற்றும் 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2021 வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது.

2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று, 2019–2020 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற, அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல், மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.

[2020 மார்ச் 24

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “2018–2019 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்று 2019–2020 ஆம் ஆண்டிற்கும் நீட்டிக்கப்பெற்ற

1. அவை உரிமைக் குழு
2. சட்ட விதிகள் ஆய்வுக் குழு
3. அரசு உறுதிமொழிக் குழு
4. அவைக் குழு
5. மனுக்கள் குழு
6. பேரவை நூலகக் குழு
7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 227(2), 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(iv) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 231(2)–னை தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரை பணியாற்ற வேண்டும்” என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

அவை உரிமைக் குழு, சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2021 வரை ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது. அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

10. அரசினர் தனித் தீர்மானம்

மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டத்திற்கு (மையச் சட்டம் 16/2011) அரசமைப்புச் சட்டப் பிரிவு 252(1)-ன்படி ஏற்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட 1994 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் சட்டமானது (மையச் சட்டம் 42/1994) இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மூலம் தமிழ்நாடு மாநிலத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதாலும்;

கோவா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்றங்களின் அவைகளினால் இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) கூறினைப் பின்பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பேரில், நாடாளுமன்றத்தினால் மேற்சொன்ன சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதாலும்;

கோவா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களினால் நிறைவேற்றப்பட்ட மேற்சொன்ன தீர்மானங்களைப் பின்பற்றி நோய் தீர்க்கும் நோக்கங்களுக்காக மனித உறுப்புகளையும், திசுக்களையும் அகற்றி எடுத்தல், சேமித்து வைத்தல் மற்றும் மாற்றிப் பொருத்துதல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கும், மனித உறுப்புகளையும், திசுக்களையும் வணிக ரீதியில் ஈடுபடுத்தி வருகின்ற நடவடிக்கைகளை

தடுப்பதற்கும் 2011 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டமானது (மையச் சட்டம் 16/2011) நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டது என்பதாலும்;

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுப் பொருள் குறித்து இந்தியா முழுவதிலும் ஒரே சீரான சட்டத்தினைப் பெறுவது விரும்பத்தக்கது என இந்தச் சட்டமன்றம் கருதுகின்றது என்பதாலும்;

அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி அதற்கென தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுவதன் வாயிலாக மேற்சொன்ன சட்டத்தினை ஏற்றுக்கொள்வதன்மூலம், மேற்சொன்ன சட்டத்தினை தமிழ்நாடு மாநிலத்தில் செயல்முறைக்கு கொண்டு வருவது விருப்பத்தக்கதாக இருப்பதாக இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தோன்றுகின்றது என்பதாலும்;

இப்போது, இந்திய அரசமைப்பின் 252 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துகையில், 2011 ஆம் ஆண்டு மனித உறுப்புகளை மாற்றிப் பொருத்துதல் (திருத்தச்) சட்டத்தினை (மையச் சட்டம் 16/2011) தமிழ்நாடு மாநிலம் ஏற்றுக்கொள்வதாக இந்தச் சட்டமன்றப் பேரவை, இதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை நிறைவேற்றிய அலுவல்கள். பாமரனும் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தைப் பகிர்ந்தளித்து, எளியோரது கரத்திலும் வலிமைமிக்க அதிகாரம் வந்து அமர, ஜனநாயக சக்தியை சகலருக்குமாக்கி, சரித்திரம் படைத்திட்ட புதுமைகளின் குவியல், அகம் நிறைய கனவோடு, முகம் நிறைய கவலையோடு, புலராதோ விடியல் என போராடும் ஏழையர்க்கு, புதுப்பாதை தந்திட்ட புரட்சிகளின் விடியல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நல்ல மரம் எப்படி கொத்துக் கொத்தாய் பூத்து, குலை குலையாய்க் காய்த்து, கனிகளைக் கொடுக்கிறதோ, அதுபோல இனிய எண்ணங்கள்மூலம், சீரிய முறையில், சிறப்பாகச் செயலாற்றி தன் ஓய்வறியா உழைப்பால், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால், எளியோர்களிடம் காட்டும் பாசத்தால், திட்டமிட்டு உழைக்கும் செம்மைத் திறத்தால், பழுத்த, சுவையான கனி போன்ற திட்டங்களை, நித்தம் நித்தம் தமிழக மக்களுக்கு வழங்கும் ஆற்றல் படைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அர்ப்பணிப்புடன் செயல்பட்டு, ஆரவாரமின்றி திட்டமிட்டு, மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை சிந்தனையிலிட்டு, அன்பு, எளிமை, பொறுமை என நற்குணங்களை ஒருங்கே பெற்று, தமிழர்தம் வாழ்வுக்கு வலுவிட்டு, உரம் சேர்க்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிந்தனைகளுக்கு, செயல் வடிவங்களுக்கு, ஆக்கத்தை, ஊக்கத்தை, உற்சாகத்தை அளித்து, உறுதுணையாக இருந்து, திறம்படச் செயலாற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அருமைச் சகோதரர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள். தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளே, ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 24

பதினைந்தாவது பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 6–1–2020 அன்று தொடங்கி 9–1–2020 வரையும், இரண்டாவது கூட்டம் 14–2–2020 அன்று தொடங்கி 20–2–2020 வரையும் நடைபெற்றுள்ளது. மூன்றாவது கூட்டம் 9–3–2020 அன்று தொடங்கி இன்று (24–3–2020) வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இக்கூட்டத் தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	– 21 நாட்கள்
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	– 1 நாள் (7–1–2020)
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	– 107 மணி 34 நிமிடங்கள்

6–1–2020 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் மற்றும் பதிலுரை

நடைபெற்ற மொத்த நாட்கள்	– 3 நாட்கள்
உரையாற்றிய உறுப்பினர்கள்	– 15 பேர்
உரையாற்றிய நேரம்	– 8 மணி 51 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	– 7 பேர், பேசிய நேரம் 3 மணி 14 நிமிடம்
எதிர்க்கட்சியினர்	– 8 பேர், பேசிய நேரம் 5 மணி 37 நிமிடம்

எதிர்க்கட்சியினருக்குக் கூடுதலாக 2 மணி 23 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் – 1 மணி 28 நிமிடம்

பிற்பகல் 2–35

நிதி அலுவல்கள்—

2020–2021 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட அறிக்கையை 14–2–2020 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.

வரவு–செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற நாட்கள்–4 நாட்கள்.

பங்கேற்ற உறுப்பினர்கள்	– 15 பேர்
உரையாற்றிய நேரம்	– 7 மணி 39 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	– 7 பேர்
பேசிய நேரம்	– 2 மணி 09 நிமிடம்
எதிர்க்கட்சியினர் பேசியவர்கள்	– 8 பேர்
பேசிய நேரம்	– 5 மணி 30 நிமிடம்

எதிர்க்கட்சியினருக்குக் கூடுதலாக 3 மணி 21 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்– 1 மணி 7 நிமிடம்.

மானியக் கோரிக்கைகள்—

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள் – 11

உரையாற்றிய உறுப்பினர்கள்	– 58
உரையாற்றிய நேரம்	– 28 மணி 10 நிமிடம்
அதில் ஆளுங்கட்சியினர்	– 32 பேர்
பேசிய நேரம்	– 11 மணி 53 நிமிடம்
எதிர்க்கட்சியினர்	– 26 பேர்
பேசிய நேரம்	– 16 மணி 17 நிமிடம்

எதிர்க்கட்சியினருக்குக் கூடுதலாக
பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்ட நேரம் – 4 மணி 24 நிமிடம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது
பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக
பதிலளித்த நேரம் – 1 மணி 39 நிமிடம்

தனது பொறுப்பிலுள்ள துறைகள்
மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான
விவாதங்களிலும் உறுப்பினர்களின்
கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் விளக்கம்
அளித்த நேர்வுகள் – 51 நிமிடம்

மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய
மொத்த நேரம் – 10 மணி 44 நிமிடம்

வெட்டுத் தீர்மானங்கள்—

(துணை மானியக் கோரிக்கை உட்பட)

வரப்பெற்றவை	–	8,906
அனுமதிக்கப்பெற்றவை	–	8,326
அவையில் முன்மொழியப்பெற்றவை	–	1,401

வினாக்கள்—விடைகள்—

20–7–2019 முதல் 24–3–2020 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்– 22,589

அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	–	102
அனுமதிக்கப்பெற்றவை	–	18,326
உடுக்குறியிட்டவை	–	1,843
உடுக்குறியிடாதவை	–	7,011
குறுகிய கால வினாக்கள்	–	3

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

அனுமதிக்கப்பெற்றவற்றில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு அனுமதிக்கப்பெற்ற வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள் பெயர்களை பேரவையின் அனுமதியுடன் பதிவு செய்துகொள்கிறேன்.@

உடுக்குறியிட்ட வினாக்கள்—

எட்டாவது கூட்டத் தொடரின்போது அவையில் விடையளிக்கப்பட்டவை	–	165.
மொத்த துணை வினாக்கள்	–	486.

எட்டாவது கூட்டத்தொடரில் அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்கள்.

தலா 2 வினா கேட்ட 35 மாண்புமிகு உறுப்பினர்கள் முதலிடத்திலும், தலா 1 வினா கேட்ட 92 மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டாமிடத்திலும் உள்ளனர். நேரமின்மை காரணமாக பேரவையின் அனுமதியோடு அவர்களுடைய பெயர்களை இணைப்பாக பதிவு செய்துவிடுகிறேன்.@@

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர், பதிலளித்த வினாக்களின் எண்ணிக்கை–16. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களும் தலா 15 வினாக்களுக்கு விடையளித்திருக்கிறார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 14 வினாக்களுக்கு விடையளித்துள்ளார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 13 வினாக்களுக்கு விடையளித்துள்ளார்கள். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் 11 வினாக்களுக்கு விடையளித்துள்ளார்கள்.

@ பாகம் 2-ல் 2917 ஆம் பக்கத்தில் இணைப்பு XXV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ பாகம் 2-ல் 2918 முதல் 2949 வரையிலான பக்கங்களில் இணைப்பு XXVI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 24

வினாக்கள்—விடைகள்—

எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள்	– 17
வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள்	–15
நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம்	– 7 மணி 15 நிமிடம்

உடுக்குறியிடாத வினாக்கள்—

அவைமுன் வைக்கப்பெற்றவை	– 500

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை	– 4
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்தவை	– 2
உரையாற்றிய உறுப்பினர்கள்	– 11 பேர்
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	– 1 மணி 4 நிமிடம்

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்டு பதிலளித்த நேர்வுகள்	– 25
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்தவை	– 7
உரையாற்றிய உறுப்பினர்கள்	– 44
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	– 4 மணி 50 நிமிடம்

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை	– 821
கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை	– 159
அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை	– 6

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 2–40

இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாளும் மகத்தான திட்டங்களை மக்களுக்குத் தந்து சாதனை படைத்து வருகிறார்கள். நீர்நிலைகளைப் பாதுகாக்கும் குடிமராமத்துப் பணிகளாக இருந்தாலும் சரி, குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதாக இருந்தாலும் சரி, அப்பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் கவனமுடன் செயல்பட்டு வருபவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 19–2–2020 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்த கவன ஈர்ப்பு விவாதத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆழ்துளைக் கிணறுகள் எவ்வளவு வேண்டுமானாலும் அனுமதித்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்க குறிப்பால் ஆணையிட்டு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பதிலளிக்கச் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாண வழி சொல்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—

அவையில் எழுப்பப்பெற்றவை	–	1
உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை	–	1

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை	–	23
நிறைவேற்றப்பெற்றவை	–	23

அரசினர் தனித் தீர்மானம்—

வரப்பெற்றவை	–	2
நிறைவேற்றப்பெற்றவை	–	2

விதி 110–ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்—

மொத்தம் அளிக்கப்பெற்றவை	–	34
மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை	–	34

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 24

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றம் பெற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசால் எடுக்கப்பட்டுவரும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளினால் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குதல் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் நடைபாதை வியாபாரிகளுக்குக் கூடுதலாக மேலும் ஆயிரம் ரூபாய் வழங்குதல் உட்பட, 3,280 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு நிவாரண உதவிகள் வழங்கிடும் வகையில் சிறப்பான அறிவிப்புகளைச் செய்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றும்வகையில் 82 புதிய அறிவிப்புகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள். நேரத்தின் அருமை கருதி, அனைத்து அறிக்கைகளின் முக்கிய அம்சங்கள் அவையின் அனுமதியோடு நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.[@]

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—

பொதுக் கணக்குக் குழு	–	62
பொது நிறுவனங்கள் குழு	–	26
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு	–	1
அரசு உறுதிமொழிக் குழு	–	3
மதிப்பீட்டுக் குழு	–	12
மனுக்கள் குழு	–	6
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	–	3

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	–	98
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	–	260

@ பாகம் 2-ல் 2921 முதல் 2948 வரையிலான பக்கங்களில் இணைப்பு XXVII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள் வருகை—

6–1–2020 முதல் 24–3–2020 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகைபுரிந்த உறுப்பினர்கள் பட்டியலில் 42 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். நேரமின்மை காரணமாக பேரவையின் அனுமதியோடு அவற்றைப் பதிவு செய்துகொள்கிறேன்.

1. திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
2. திரு. பா. ஆறுமுகம்
3. திரு. சி.வி. இராஜேந்திரன்
4. திரு. ஐ.எஸ். இன்பதுரை
5. திரு. எஸ். ஈஸ்வரன்
6. திரு. ப. கந்தசாமி
7. திருமதி ம. கீதா
8. திரு. ஆ. கோவிந்தசாமி
9. திரு. மு. சக்ரபாணி
10. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
11. திருமதி ப. சத்யா
12. திரு. சி. சந்திரசேகரன்
13. திருமதி மு. சந்திரபிரபா
14. திரு. வே. சம்பத்குமார்
15. திரு. கோ. சம்பத்து
16. திருமதி கு. சித்ரா
17. திரு. ஆர்.எம். சின்னதம்பி
18. திரு. P. சின்னப்பன்
19. திரு. S. செம்மலை
20. திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்
21. திரு. ரா. தமிழ்ச்செல்வன்
22. திரு. உ. தனியரசு
23. திரு. தூசி கே. மோகன்
24. திரு. கே.எஸ். தென்னரசு
25. திரு. ஆர். நடராஜ்
26. திரு. அ. நடராஜன்
27. திரு. பி.எம். நரசிம்மன்

28. திரு. ப. பலராமன்
29. திரு. எஸ். பவுன்ராஜ்
30. திரு. கே. பழனி
31. திரு. வி. பன்னீர்செல்வம்
32. திரு. அ. மருதமுத்து
33. திருமதி நா. மனோரஞ்சிதம்
34. திருமதி ப. மனோன்மணி
35. திரு. கி. மாணிக்கம்
36. திரு. வி. ராதாகிருஷ்ணன்
37. திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்
38. திரு. விருகை V.N. ரவி
39. திரு. க.நா. விஜயகுமார்
40. திரு. கோ. வெங்கடாஜலம்
41. திரு. ச. வெற்றிவேல்
42. திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம்	–	9,165
ஆண்கள்	–	7,398
பெண்கள்	–	1,767

நூலகம்—

எட்டாவது கூட்டத் தொடரின்போது சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	– 201
வழங்கப்பெற்ற நூல்கள்	– 451
இவ்வாண்டு புதியதாக வரப்பெற்ற நூல்கள்	– 16

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	– 380
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	– 5,969

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை – 999

தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை – 301

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே என்னுடைய அறைக்கு வந்து மிகுந்த ஈடுபாட்டுடனும், உற்சாகத்துடனும் அன்றைய அலுவல்கள் குறித்த விவரங்களைக் கேட்டுப்பெற்று, பேரவை நடவடிக்கைகள் சிறப்பாக அமைய எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள்.

பிற்பகல் 2–45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அனைத்து நாட்களும் அவைக்கு வந்திருந்து, கேள்வி நேரம் உட்பட அனைத்து விவாதங்களிலும் கலந்துகொண்டு, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உன்னிப்பாக செவிமடுத்து, எந்தத் துறையைப் பற்றி உறுப்பினர்கள் உரையாற்றினாலும், அந்தத் துறை குறித்த அனைத்து திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து உடனுக்குடன் உரிய விளக்கங்களை அளித்துள்ளார்கள். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் அமைச்சர்கள் பதிலுரையின்போது, பதிலுரையை முழுமையாக, கூர்ந்து கவனித்து பேரவை நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் விவாதிக்கப்படும் பொருளிலிருந்து விலகிச் சென்று அல்லது அவை மரபுக்கு அப்பாற்பட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றபோதெல்லாம், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள், தனக்கே உரித்தான அமைதியான பாணியில் அவையின் விதிமுறைகள் மற்றும் மரபுகளைச் சுட்டிக்காட்டி தனது கருத்துகளை மென்மையாகவும், அதே சமயம் ஆணித்தரமாகவும் முன்வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவாதங்கள்

[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 24

உரிய வகையில் நடைபெற்று குறித்த காலத்திற்குள் முடிவடையவும், அவையின் அலுவல்கள் தடையில்லாமல் நடைபெறுவதற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் எனக்கு பெரிதும் உதவியுள்ளார்கள். பேரவையை செம்மையாக நடத்துவதிலே எனக்கு பேருதவியாக இருந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் விவாதங்களிலே சிறப்பாகப் பங்கேற்கவும் உதவி புரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கரி. இராமசாமி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, 9–4–2020 வரை பேரவைக் கூட்டம் நடைபெறுவதாக முடிவு செய்யப்பட்டு, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. கொரோனா வைரஸ் சம்பந்தமாக பேரவை உறுப்பினர்கள் சிலர் இங்கே சில சந்தேகங்களை எழுப்புவதற்கு முன்னரே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரவைச் செயலாளரை அழைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அமரக்கூடிய இருக்கைகள், மேசைகள் ஆகியவற்றில் சானிடைசர் என்று சொல்லப்படுகின்ற கிருமிநாசினி கொண்டு முழுவதுமாக துடைத்திடவும், வெளியிலே உள்ள வராண்டாக்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் கிருமிநாசினி தெளித்திடவும், உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தியதற்கிணங்க, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கையிலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அலுவலக அதிகாரிகளை அழைத்துப் பேசி, உடனடியாக பேரவை வளாகங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகளை வழங்கி உடனடியாக நடவடிக்கைகள் எடுத்திட உத்தரவிட்டதன் அடிப்படையில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர்

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

உரிய நடவடிக்கை எடுத்தனர். உள்ளாட்சித் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகளும் மிகவும் வேகமாகச் செயல்பட்டு, காலை முதல் பேரவைக் கூட்டம் முடியும் வரை, பேரவை வளாகங்களில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டார்கள். எதற்காக இதனை இப்போது சொல்கிறேன் என்றால், தமிழகத்திலே உள்ள எவரும் பாதிக்கப்படக் கூடாது என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அனைத்து இடங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும், மக்களின் பிரச்சினைகளை, கோரிக்கைகளை எடுத்துரைக்கக்கூடிய மன்றமாக உள்ள சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தவித அச்சமும் இல்லாமல் முழு ஈடுபாட்டோடு பேரவைப் பணிகளில் கலந்துகொள்ள வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதற்காகவே இதனை நான் குறிப்பிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை வளாகத்தினை மிகவும் பாதுகாப்பாக வைத்திட உரிய நடவடிக்கை எடுத்திட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோன்று உள்ளாட்சித் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், அலுவல் ஆய்வுக் குழு கூடி, 31–3–2020 வரை நிகழ்ச்சிநிரலை வகுத்துத் தந்தது. அதற்குப் பின்னர், மீண்டும் அலுவல் ஆய்வுக் குழு கூடி இன்றைக்குள் பேரவை நடவடிக்கைகளை முடிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்து, பேரவையும் அதனை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு 27 மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதேபோன்று, இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனைத்து மானியக் கோரிக்கைகளும் விவாதிக்கப்பட்டே வாக்கெடுப்பிற்கு விடப்பட்டுள்ளன. ஆகவே, எந்த வகையிலும் மரபை மீறக் கூடாது என்கிற எண்ணத்தின் அடிப்படையில்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்து, அதற்கேற்ப இன்றையதினம் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

பிற்பகல் 2–50

நேற்றைக்கு பேரவை நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்யப்பட்டவுடன் அனைத்து மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் உடனடியாக பேரவைச் செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்கிற ஒரு நிலை ஏற்பட்டு, அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவரின் அலுவலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அவர்களும், அதேபோல தலைமைச் செயலாளர் அவர்களும் மிகுந்த ஈடுபாட்டோடு அதிலே கவனம் செலுத்தி, நேற்றைக்கு இரவுக்குள் அனைத்து மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகளையும் அளித்துள்ளனர். அதற்காக மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அனைத்துத் துறை செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியை பேரவையின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொள்கை விளக்கக் குறிப்புகள் நேற்றைக்கு இரவு கிட்டத்தட்ட 11–35 மணி வரையில் பேரவைச் செயலகத்தால் பெறப்பட்டன. அதற்குப் பின்னர் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க பேரவைச் செயலக அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து நெடுநேரம் பணியாற்றியுள்ளனர். அதற்குப் பின்னர் 27 மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக இன்று விடியற்காலை 4–00 மணி வரை பேரவைச் செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளும் ஓய்வில்லாமல் உழைத்திருக்கிறார்கள். ஒரு சில அதிகாரிகள் இங்கேயே தங்கியிருந்து, அதிகாலையில் வீட்டிற்குச் சென்றுவிட்டு, மீண்டும் காலை 6–00 மணிக்கெல்லாம் அலுவலகத்திற்கு வந்து பணிகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். கொரோனா வைரஸ் ஒரு பக்கம், மிகுந்த வேலைப் பளு இன்னொரு பக்கம், அத்தனையையும்

2020 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

பொருட்படுத்தாமல், மிகச் சிறப்பாகச் செயல்பட்ட பேரவைச் செயலாளர் மற்றும் பேரவைச் செயலக அதிகாரிகள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்திலே பேரவையின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த எட்டாவது கூட்டத் தொடரின் அலுவல்கள் நிறைவேற எல்லா வகைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்து, மிகச் சிறந்த முறையில் உதவிபுரிந்த பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களுக்கும், பேரவை சிறப்புச் செயலாளர், கூடுதல் செயலாளர்கள் உள்ளிட்ட பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும், பொதுப் பணித் துறைமூலம் ஒலிப்பெருக்கி வசதி செய்து கொடுத்த பொறியாளர்களுக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகளை தினமும் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய அனைத்து Watch and Wards–க்கும் பேரவையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற ஓர் உயரிய இலட்சியத்தை தன்னுள்ளே நிலைநிறுத்தி, அந்த இலட்சியத்தின் நினைவாகவே வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, அந்த இலட்சியம் நிறைவேற தன்னையே வருத்தி, அல்லும்பகலும் அயராது உழைத்து, அந்த இலட்சியத்தில் வெற்றி கண்டு, எங்கள் மனங்களில் மட்டுமல்ல, தமிழர் ஒவ்வொருவர் மனதிலும் நீங்கா இடம்பெற்று, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–54 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. (i) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (நான்காம் திருத்தம்) விதிகளின் சில விதித்துறைகள் 24.9.2019 அன்று முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை

2020 மார்ச் 24]

(நிலை) எண் 144–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 145–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–5)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 146–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–6)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 147–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (v) 31.12.2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/1099(e–5)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 148–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vi) 7.3.2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/212(g–1)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 149–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vii) 7.3.2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/212(g–4)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 151–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (viii) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–14)/2017

ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 152–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ix) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 153–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (x) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–16)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 154–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xi) 25.1.2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/100(b–4)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 155–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xii) 29.3.2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/269(c–5)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 156–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiii) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) கீழ் செலுத்தத்தக்க மாநில வரியிலிருந்து அறிவிக்கையின் இணைப்பில் உள்ள அட்டவணையிடப்பட்டுள்ள திட்டச் செயற்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை முகமைக்கு வழங்கும் அனைத்து சரக்குகளுக்கும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்து 30.9.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 150–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (xiv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பொது அதிகார அமைப்பில் ஈடுபடுத்தப்பட்ட மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் அல்லது வணிக நடவடிக்கைகள் சரக்குகள் வழங்குதல் என்றோ, சேவை வழங்குதல் என்றோ கருதப்படாது என்று அறிவித்தது குறித்து 30.9.2019 ஆம்

2020 மார்ச் 24]

நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 157–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

56. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஒன்பதாம் முறை இடர்ப்பாடுகளை நீக்குதல்) ஆணையினை இயற்றியது குறித்து 4.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 185–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

57. (i) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளின் 48 ஆம் விதியின் துணை விதி (4)–ன்படி பொருள் விவரப்பட்டியை தயாரிக்கும் நோக்கத்திற்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொது சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் மின்னணு நுழைவாயில்களை அறிவித்தது குறித்து 17.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 192–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (எட்டாவது திருத்த) விதிகளை இயற்றியது குறித்து 17.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 191–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) ஒரு நிதியாண்டில், நூறு கோடி ரூபாய்க்கு அதிகமாக ஒட்டுமொத்த விற்றுமுதல் கொண்ட பதிவு செய்யப்பட்ட நபர்கள், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது அவை இரண்டினையும் பதிவு செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு வழங்குவதைப் பொறுத்தவரை 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதி 48–ன் துணை விதி (4)–ன் அடிப்படையில் பொருள் விவரப்பட்டியல் தயாரிக்க வேண்டிய பதிவு செய்யப்பட்ட நபர்களின் ஒரு வகையினர் என அறிவித்தது குறித்து 17.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 193–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (நான்காம் திருத்தம்) விதியின் வழிவகைகள் 1.4.2020 அன்று முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து 17.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 194–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (v) ஒரு நிதியாண்டில், ஐநூறு கோடி ரூபாய்க்கு அதிகமாக ஒட்டுமொத்த விற்றுமுதல் கொண்ட பதிவு செய்யப்பட்ட நபரால், பதிவு செய்யப்படாத நபருக்கு வழங்கப்படும் பொருள் விவரப்பட்டியலில்

குயிக் ரெஸ்பான்ஸ் கோடினை (QR Code) கொண்டிருத்தல் வேண்டும் என அறிவித்தது குறித்து 17.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 195–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

58. (i) 23.1.2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)CTR/79(h–1)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 30.12.2019 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 199–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 23.1.2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)CTR/79(h–1)/2018 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 13.1.2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 11–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

59. (i) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 2.1.2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 1–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 2.1.2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 2–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) 29.6.2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–16)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 2.1.2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 3–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

2020 மார்ச் 24]

60. தமிழ்நாடு மாநிலத்தில் எதிர் இலாபமீட்டுவதை கண்காணிப்பதற்கு மாநில அளவிலான ஒரு குழுவினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளைக் கொண்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஏற்படுத்தியது குறித்து 11.2.2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 28–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

61. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவல் நடத்துகை ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 18.3.2019 ஆம் நாளிட்ட எண் தமிஒஆ/அநஒ/1–2–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், (i) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான முன்கணித்தல், திட்டமிடல் மற்றும் விலக்கத் தீர்வு மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து 1.3.2019 ஆம் நாளிட்ட எண்தமிஒஆ/மு&தி காற்றாலை & சூரிய சக்தி/21–1–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (விலக்கத் தீர்வு அமைப்புமுறை மற்றும் தொடர்புடைய பொருட்கூறுகள்) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து 1.3.2019 ஆம் நாளிட்ட எண் தமிஒஆ/விதீஅ&தொ.பொ/22–1–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

63. 31 மார்ச், 2021 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு, நூறு சதவீத பருத்தியால் நெய்யப்பட்ட வெண் பனியன் அரைக்கை சட்டைகளை திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு சிறப்பு காவல் பெண்கள் பனியன் உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட்டிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளித்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 30.07.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 232–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2020 மார்ச் 24

64. 2018–2019 ஆம் ஆண்டு மாநில தீவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தீவனப்பயிர் விதைகளை, துறைப் பண்ணைகள் அல்லது தமிழ்நாடு கால்நடை மற்றும் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் அல்லது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பண்ணைகள் அல்லது தேசிய விதைகள் நிறுவனம் அல்லது ஏனைய ஏதேனும் அரசு நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளித்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 29.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 337–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

65. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிற்கு தேவையான தேயிலைத்தூளை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திடம் சம்பந்தப்பட்ட சிறைக் கண்காணிப்பாளர்கள் நேரடியாக தேவைக்கோரிக்கை வைப்பது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 9.1.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 7–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

66. அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் குடும்பங்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள துருப்பிடிக்கா இரும்பினாலான மூன்று இனங்கள் கொண்ட பாத்திரங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்குவதற்காக சேலம், மத்திய விற்பனைப் பிரிவின் திருவாளர்கள் இந்திய உருக்கு ஆணையத்திடமிருந்து (ஸ்டீல் அதாரிட்டி ஆஃப் இந்தியா) கொள்முதல் செய்வதற்கு அனுமதித்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 29.1.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

67. பசுமைக்கால நிதியின்கீழ் "பள்ளிக்கரணை சதுப்பு நில மறுசீரமைப்பின் வாயிலாக நகர்ப்புற சூழல் அமைப்புகளில்

2020 மார்ச் 24]

பருவநிலை மாற்றத்தை சிறப்பாக எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துதல்" திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதற்காக, சென்னையிலுள்ள திருவாளர்கள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஆலோசனை பணிகள் (NABCONS) சேவைகளை பெறுவது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 1.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 308–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

68. சேலம் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவை செயல்படுத்துவதற்கு முன் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிப்பதற்கு திருவாளர்கள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஆலோசனை பணிகளை (NABCONS) ஈடுபடுத்துவது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 10.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 316–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

69. விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திண்டிவனம், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, ஈரோடு, கடலூர், சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு திருவாளர்கள் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஆலோசனை பணிகளை (NABCONS) ஈடுபடுத்துவது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 29.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 338–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

70. ஒப்பந்த ஆவணத்திலுள்ள தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து சிறப்பான வட்டி வீதத்தில் போதிய முதலீட்டை ஈர்ப்பதற்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தை சிறந்த தொழிற்முறை சேவையை வழங்கும் நிறுவனமாக மாற்றுவதற்கு ஏதுவாக மதிப்பீட்டு சேவைகளை

அளிக்கும் ஒரு மதிப்பீட்டு முகமையாக திருவாளர்கள் கிரிசில் (CRISIL) நிறுவனத்தை நியமித்தது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 22.11.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 369–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு உள்கட்டமைப்பு திட்டங்கள், கருத்துருக்கள் தயாரித்தல், திட்ட மதிப்பீடு, பொது தனியார் கூட்டாண்மை திட்டங்களுக்கான ஏல ஆவணங்களின் மதிப்பீடு குறித்து வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் இந்திய உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தை (India Infrastructure Finance Company Limited) ஆலோசகராக அல்லது கலந்துரையாளராக நியமித்தது குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(bb)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 9.1.2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 8–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

72. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 9 மற்றும் 10 பிரிவுகளிலிருந்து விலக்களித்து தமிழ்நாடு மாநிலத்தில் பொது விநியோக அமைப்புமுறையின்கீழ் தங்கு தடையின்றி தொடர்ந்து புழுங்கல் அரிசி வழங்குவதற்காக தெலுங்கானா மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து 3.00 இலட்சம் மெட்ரிக் டன் புழுங்கல் அரிசியை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிருவாக இயக்குநருக்கு அனுமதி அளித்தது குறித்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(a)–ன்கீழ், நிதி (சம்பளங்கள்)த் துறையால் 11.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 318–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

73. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் மற்றும் கலந்தாலோசனைகளை அரசுத் துறை முகமைகள், சட்டப்படியான அமைப்புகள், மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மாநில தன்னாட்சி அமைப்புகளின் சார்பில், தொகை செலுத்தப்பட்டதன்

2020 மார்ச் 24]

பேரில் பெறுவதற்கான முகமையாக செயல்படுவதற்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 3(3)–ன்கீழ், தமிழ்நாடு மின் ஆளுகை முகமையை நியமித்தது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையால் 30.10.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 340–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

74. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 11.7.2019 ஆம் நாளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ4)த் துறையின் அரசாணை (நிலை) எண் 103–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/2017) 45 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

75. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 6.1.2020 ஆம் நாளிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ4)த் துறையின் அரசாணை (நிலை) எண் 14–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/2017) 45 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

76. (i) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை “நிலைமாற்ற பகுதி” என அறிவித்தது குறித்தும்; (ii) 5.2.2020 ஆம் நாளிலிருந்தும் மற்றும் அந்நாள் முதற்கொண்டும், அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதியை, பொன்னேரி தொழில் நகரியப் பகுதி என அறியப்படும் என குறிப்பிட்டது குறித்தும்; (iii) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் v/1920) பிரிவுகளும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டு பொன்னேரி தொழில் நகரியப் பகுதிக்குப் பொருந்தும் என அறிவித்தது குறித்தும் மற்றும் (iv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு பொன்னேரி தொழில் நகரியப்பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்பினை ஏற்படுத்தியது குறித்தும் 6.1.2020 ஆம் நாளிட்ட

[2020 மார்ச் 24

தொழில் (எம்ஐஇ.1) துறையின் அரசாணை (நிலை) எண் 1–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1997 ஆம் ஆண்டு தொழில் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1997) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

77. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 17.6.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 75–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

78. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 6.8.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 112–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

79. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 7.8.2019 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 114–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

80. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆண்டறிக்கை மற்றும் விளக்கமளிக்கும் குறிப்பு. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2014) 12 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

81. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் ஆண்டறிக்கை மற்றும் விளக்கமளிக்கும் குறிப்பு. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2014) 12 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

82. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

2020 மார்ச் 24]

83. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

84. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

85. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை மற்றும் ஆண்டு கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

86. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

87. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

88. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

89. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

90. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

91. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட்

நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

92. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

93. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

94. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

95. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

96. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

97. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

98. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு

குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

180.2016–2017 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை (தமிழ்–ஆங்கிலம்)

181. 2017–2018 ஆம் ஆண்டிற்கான சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆண்டுக் கணக்குகள் – தணிக்கை அறிக்கை. (தமிழ்)

182. மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

183. மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

184. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

185. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

186. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

187. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

188. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

189. மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

190. மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை (பெருந்தொழில்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

[2020 மார்ச் 24

191. மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை (சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

192. மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

193. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

194. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

195. மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

196. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

197. மானியக் கோரிக்கை எண் 29–சுற்றுலா (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

198. மானியக் கோரிக்கை எண் 29–கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

199. மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

200. மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

201. மானியக் கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

202. மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2020 மார்ச் 24]

203. மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

204. மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

205. மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

206. மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

207. மானியக் கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ்)

208. மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

209. மானியக் கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

210. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய செயல்முறைத் திட்டம், 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

211. மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (ஆங்கிலம்)

212. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (ஆங்கிலம்)

213. மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (ஆங்கிலம்)

214. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கைத்தறி

மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

215. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

216. எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

217. மதிப்பீட்டுக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2018–2020)

218. மதிப்பீட்டுக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2018–2020)

219. மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2018–2020)

220. மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2018–2020)

221. மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2018–2020)

222. மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2018–2020)

223. மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2018–2020)

224. மதிப்பீட்டுக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2018–2020)

225. மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

226. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

227. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2018–2020)

228. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

2020 மார்ச் 24]

229. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2018–2020)

230. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2018–2020)

231. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2018–2020)

232. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2018–2020)

233. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. (2018–2020)

234. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2018–2020)

235. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (2018–2020)

236. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

237. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. (2018–2020)

238. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

239. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2018–2020)

240. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2018–2020)

241. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது அறிக்கை. (2018–2020)

242. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2018–2020)

243. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2018–2020)

244. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2018–2020)

245. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து எட்டாவது அறிக்கை. (2018–2020)

[2020 மார்ச் 24

246. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

247. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பதாவது அறிக்கை. (2018–2020)

248. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

249. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2018–2020)

250. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பன்னிரெண்டாவது அறிக்கை. (2018–2020)

251. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதின்மூன்றாவது அறிக்கை. (2018–2020)

252. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினான்காவது அறிக்கை. (2018–2020)

253. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினைந்தாவது அறிக்கை. (2018–2020)

254. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினாறாவது அறிக்கை. (2018–2020)

255. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினேழாவது அறிக்கை. (2018–2020)

256. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினெட்டாவது அறிக்கை. (2018–2020)

257. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பத்தொன்பதாவது அறிக்கை. (2018–2020)

258. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2018–2020)

259. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

260. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்து ஏழாவது அறிக்கை. (2018–2020)

இணைப்பு I

(34 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

I. முன்னுரை

சட்டத்தை அமல்படுத்துதல், குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், பொது ஒழுங்கு மற்றும் அமைதியைப் பராமரித்தல் ஆகியவற்றை மையப்படுத்தி காவல் துறையின் செயல்பாடு அமைந்துள்ளது. உயிர், உரிமை மற்றும் உடமை ஆகியவற்றின் பாதுகாப்பிற்கு காவல் துறையே பொறுப்பானதாகும். செயல்திறன் மிக்க காவல் துறையின் சேவையே வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவதாகும். நன்கு பயிற்சி பெற்ற, சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு வேண்டிய திறமைகளை தன்னகத்தே கொண்ட, ஒரு படைப் பிரிவு என்ற நிலையிலிருந்து உருமாறி, காவல் துறை ஒரு சேவைப் பிரிவு என்ற நிலையில் சமூகத்தின் தேவைகளை நன்குணர்ந்து மனிதாபிமானத்துடனும், மக்களுடன் நட்புணர்வுடனும் அரசின் தொலைநோக்கு இலட்சியங்களுக்கு ஒத்திசைவுடன் பணியாற்றி வருகிறது.

II. நிருவாக அமைப்பு

காவல் துறையில் 1-2-2020 இன்படி, ஏற்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 1,24,864 ஆகும். தமிழ்நாடு அரசின் உள் துறையின்கீழ் காவல் துறை இயங்கி வருகிறது. காவல் துறை தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), மாநில காவல் துறையின் தலைவராவார். தமிழக காவல் துறையின் அமைப்பு முழுமையும் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல காவல் துறைத் தலைவரின்கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்கள், காவல் துறை துணைத் தலைவரின் தலைமையில் 11 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும், 7 ஆணையரகங்கள் உள்ளன. அவற்றில் கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் சென்னை பெருநகர காவல் துறை மற்றும் மதுரை மாநகர காவல் துறையும் இதர 5 ஆணையரகங்கள் காவல் துறைத் தலைவர் தலைமையிலும் இயங்கி வருகின்றன.

[2020 மார்ச் 24

2 இரயில்வே காவல் மாவட்டங்கள் உட்பட, 33 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. 248 காவல் உட்கோட்டங்கள், காவல் உதவி கண்காணிப்பாளர்கள் அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் உள்ளன. 1,346 சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்கள், 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 238 போக்குவரத்துக் காவல் நிலையங்கள், 27 புறக்காவல் நிலையங்கள் மற்றும் 29 போக்குவரத்து புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

காவல் துறையில் உள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகள், குறிப்பிட்ட முக்கியப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவை, நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, குற்றம், பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு, சிறப்பு செயலாக்கப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை, தொழில்நுட்பப் பிரிவு, சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு, காவலர் பயிற்சி, இரயில்வே, ஆயுதப் படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு மற்றும் மாநில குற்ற ஆவணக் காப்பகம் போன்றவையாகும்.

III. சட்டம்-ஒழுங்கு

ஒரு மாநிலத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பான சூழல் நிலவும்போது அங்கு தொழில், வணிகம் மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றில் கணிசமான முதலீடுகளை ஈர்க்க முடியும். எனவே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பொது அமைதி பராமரிப்பு என்பது முக்கிய ஊக்கக் காரணியாகும். பெரும்பாலும், தமிழ்நாட்டில் அமைதியான சூழலே நிலவி வருகிறது. அவ்வப்போது, பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி, அரசியல் கட்சிகள், சாதி, வகுப்புவாத மற்றும் இதர இயக்கங்கள் பல்வகையான போராட்டங்கள் நடத்தியபோதும், வன்முறைக்கு இடம் தராத வகையிலும், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையிலும், பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையிலும் அப்போராட்டங்களைக் காவல் துறையினர் திறமையாகக் கையாண்டனர்.

இந்த ஆண்டில், தங்களது பல்வகைப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் மற்றும் சில திட்டங்களை அமல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பல்வேறு அரசியல் கட்சிகள், விவசாயச்

2020 மார்ச் 24]

சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள் மற்றும் பிற அமைப்பினர் மாநிலம் முழுவதிலும் சுமார் 23,000 போராட்டங்களை நடத்தினர். தனிப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினர், மேற்படி போராட்டம் நடத்துபவர்களின் திட்டங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கத்தக்க பயனுள்ள தகவல்களைச் சேகரித்து சுமார் 17,000 விழிப்பூட்டுத் தகவல்களை உகந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் கள அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தனர். இது தவிர, அனைத்து முக்கியமான நிலவரங்கள் குறித்தும் அரசாங்கத்திற்கு உடனுக்குடன் தகவல் தெரிவிக்கப்பட்டு, இது தொடர்பாக 6,120 அறிக்கைகள் அனுப்பப்பட்டு உள்ளன. இப்பிரிவினர் எடுத்த சீரிய முயற்சிகளின் காரணமாக அனைத்துப் போராட்டங்களும், சட்டம்-ஒழுங்குப் பராமரிப்பிற்கு எந்தவிதமான குந்தகமும் நிகழாமல் அமைதியாக நடைபெற்று முடிந்தன.

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், எந்தவிதமான பெரிய சட்டம்-ஒழுங்கு பிரச்சினையின்றி அமைதியாகவும், நியாயமான முறையிலும் நடைபெற்று முடிந்தன.

புதிய ஓய்வூதியத் திட்டத்தைத் திரும்பப் பெறுதல், ஜேக்டோ-ஜியோ நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டதற்காக அரசு ஊழியர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் திரும்பப் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜேக்டோ-ஜியோ 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்திய வேலைநிறுத்தம் மற்றும் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்திய போராட்டங்கள் ஆகிய அனைத்தும் பெரியதாகப் பரவுவதற்கு எந்த இடமும் தராமல் பயன்மிக்க வகையில் கையாளப்பட்டன.

23-6-2019 அன்று ஹைட்ரோகார்பன் மற்றும் மீத்தேன் எடுக்கும் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மற்றும் டெல்டா மாவட்டங்களைப் பாதுகாக்கப்பட்ட விவசாய மண்டலமாக அறிவிக்க வலியுறுத்தியும், "காவிரி பாதுகாப்பு கூட்டு இயக்கம்" மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் மரக்காணத்தில் (விழுப்புரம்) இருந்து இராமேஸ்வரம் (இராமநாதபுரம்) வரை நடத்திய மனிதச் சங்கிலி போராட்டங்கள் சுமுகமாகக் கையாளப்பட்டன.

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பல்வேறு முஸ்லிம் அமைப்பினர் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370-ஐ இரத்து

[2020 மார்ச் 24

செய்ததற்குக் கண்டனம் தெரிவித்து நடத்திய போராட்டங்கள் அனைத்தும் சிறப்பாகக் கையாளப்பட்டன.

காலமுறை பதவி உயர்வு போன்றவற்றை வழங்கக் கோரி அரசு மருத்துவர் சங்கக் கூட்டமைப்பினர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நடத்திய போராட்டங்கள் மற்றும் மாநில அரசு, மத்திய அரசின் அரசாங்க மருத்துவர்களுக்கு இணையாக மாநில அரசு மருத்துவர்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நடத்தி வந்த போராட்டங்கள் மற்றும் 25-10-2019 முதல் 31-10-2019 வரை நடத்திய காலவரையற்ற வேலைநிறுத்தம் ஆகியன சுமுகமாகக் கையாளப்பட்டன.

குடியுரிமை (திருத்தம்) சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள், அனைத்து முஸ்லிம் ஜமாத்துகள், அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் சுமுகமாகக் கையாளப்பட்டன.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளான டிசம்பர் 6 ஆம் தேதியன்று உறுதியான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தும், மேற்படி பாபர் மசூதி வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் பிரச்சினைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்டிக்கொள்ளலாம் என்று வழங்கிய இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் எந்தவிதமான தாக்கமும் ஏற்படா வகையில் அமைதியாக நடந்து முடிந்தது.

தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013

இந்த அரசு, தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013-ஐ இயற்றியது. மாநில பாதுகாப்பு ஆணையம், காவல் நிருவாக வாரியம், மாநில காவல் புகார்கள் ஆணையம், மாவட்ட புகார்கள் ஆணையம் மற்றும் காவல் புகார்கள் பிரிவு, காவல் நிலைய அளவில் சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் புலனாய்வு பிரிவுப் பணிகளைப் பிரித்தல், குறிப்பிட்ட பதவிகளில் பணிபுரிய கால நிர்ணயம் செய்தல் ஆகிய புதிய அம்சங்கள் இந்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்தச் சட்டமானது, பிரகாஷ் சிங் மற்றும் பலர் (இந்திய அரசு மற்றும் பலருக்கு எதிராக) தாக்கல் செய்த ரிட் மனு (உரிமையியல்) எண் 310/1996-ல் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதலின்படி இயற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013 தமிழக அரசின் அரசிதழில் 8-11-2013 அன்று வெளியிடப்பட்டது.

2020 மார்ச் 24]

காவல் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்

2019 ஆம் ஆண்டில், காவல் பாதுகாவலின்போது மரணம் நிகழ்ந்ததாக பதினோரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 176 (1-A)-ன்படி, இவ்வழக்குகள் மீதான விசாரணை நடத்தும் பொறுப்பு நீதித் துறை குற்றவியல் நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட பதினோரு வழக்குகளும் நீதித் துறை குற்றவியல் நடுவர்களால் விசாரிக்கப்பட்டு வருகின்றன. அவர்களது அறிக்கையின் அடிப்படையில், அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். காவல் நிலைய மரணங்கள் மற்றும் சித்திரவதை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காகக் கூருணர்வூட்டுதல் மற்றும் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களைப் பாதுகாப்பதுதான் காவல் துறையினரின் கடமையே தவிர வேறு அல்ல என்ற கொள்கையில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

மேலும், காவல் பணியாளரின் தவறான நடத்தை நிகழ்வுகளில் முகாந்திரம் இருப்பதாகத் தெரிய வந்தால், பாதிக்கப்பட்ட நபரின் வாரிசுகளுக்கு அரசு சார்பில், ரூ.5 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி, இவ்வழக்குகளில் உயர் நீதிமன்ற வழிகாட்டுதல்/தேசிய/மாநில மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின்பேரில், அதிக அளவிலான இழப்பீட்டுத் தொகையும் அரசால் வழங்கப்படுகிறது.

பிரேதப் பரிசோதனை செய்வதற்கு, மருத்துவர் குழுவைப் பயன்படுத்துதல், பிரேதப் பரிசோதனையைக் காணொலிக் காட்சிமூலம் பதிவு செய்தல் போன்றவை உள்ளிட்ட எண்ணற்ற வழிகாட்டு நெறிமுறைகளைத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வகுத்துள்ளது. இத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள் தவறாமல் பின்பற்றப்படுவதோடு, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவின்பேரில், தொடர்புடைய அறிக்கைகளும் அவ்வாணையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

IV. குற்ற நிலவரம்

அ) சொத்து தொடர்பான குற்றங்கள்

தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டில், 22,700 சொத்து தொடர்பான வழக்குகளும், 2018 ஆம் ஆண்டில், 24,562

[2020 மார்ச் 24

சொத்து தொடர்பான வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 8% குறைவாகக் காணப்படுகிறது (பிற்சேர்க்கை-I). பதிவான 22,700 வழக்குகளில், 13,828 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2017-2019 ஆம் ஆண்டுகளில், பதிவான வழக்குகள் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் விளக்கப்படம்-I-ல் தரப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில், களவுபோன ரூ.172.31 கோடி மதிப்புள்ள சொத்துகளில், ரூ.114.68 கோடி சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை-II).

ஆ) இந்திய தண்டனைச் சட்ட வழக்குகள்

2019 ஆம் ஆண்டில், இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் குற்ற விகிதம் பிற்சேர்க்கை-III-ல் தரப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில், கொலை, கொலை முயற்சி, கொடூரத் தாக்குதல், வன்முறை, கலவரம் போன்ற கொடுங்குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், புலன் விசாரணையிலுள்ள வழக்குகள், பிற வழிகளில் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை-IV-ல் தரப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களுக்கான பிரதான காரணங்களாக தொடர்ந்து நிலவி வரும் குடும்பத் தகராறு, காதல் விவகாரங்கள், பாலின ரீதியிலான சம்பவங்கள், சிறு/வாய்த் தகராறு, முன்விரோதம், நிலத் தகராறு ஆகியவற்றின் விவரங்களைப் பிற்சேர்க்கை-V-ன்மூலம் அறியலாம். தடையின்றி வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டதுடன், இவ்வாறு பதிவு செய்யப்படும் வழக்குகளில், தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

இ) பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்ற தலைப்பின்கீழ், பாலியல் பலாத்காரம், வரதட்சணை மரணம், கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை, மானபங்கம் போன்ற குற்றங்களுக்காக 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 1,982 வழக்குகளும், 2018 ஆம் ஆண்டில் 1,999 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இக்குற்றங்களின் எண்ணிக்கை

2020 மார்ச் 24]

குறைந்து காணப்படுகிறது (பிற்சேர்க்கை-VI). 2017-2019 ஆம் ஆண்டுகளில் பதிவான வழக்குகள், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், புலன் விசாரணையிலுள்ள வழக்குகள், பிற வகையில் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் பிற்சேர்க்கை-VII-ல் தரப்பட்டுள்ளது. இது தவிர, பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம் (போக்ஸோ), 2012 இன்கீழ், மொத்தம் 2,396 வழக்குகள் 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர சேவை அமைப்புகளில் உள்ள மகளிர் உதவி சேவை/சிறார் உதவி சேவை மற்றும் ஆலோசனை மையங்கள் மூலமாக பொதுமக்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறார்களுக்கு அவர்களது சட்ட உரிமைகள் குறித்து கற்பித்து, விழிப்புணர்வை ஏற்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் இதுபோன்ற முயற்சிகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

(i) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்கும் பிரிவு

அரசாணை (நிலை) எண் 145, உள் (காவல்-12) துறை, நாள் 5-3-2019 இன்படி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு நடவடிக்கைகளில் மாவட்ட மற்றும் மாநகர காவல் துறையின் பணித்திறனை அதிகரித்து, அவர்கள் திறம்பட செயலாற்றவும், அவர்களுக்கு தொழில்சார் வழிகாட்டுதல்களை வழங்கவும் மற்றும் கொள்கை விவகாரங்களில் ஒருங்கிணைந்த அணுகுமுறைகளைப் பின்பற்றவும் மாநில அளவிலான பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் குறித்து பதிவு செய்யப்படும் வழக்குகளைக் கவனிக்க மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரும், 3 காவல் கண்காணிப்பாளர்களும் (சென்னை பெருநகரம் உட்பட) நியமிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து, மாவட்ட அளவில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் பிற பிரிவுகளில் பதிவு செய்யப்படும் வழக்குகளை முறையாக ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

[2020 மார்ச் 24

சிறார்களைப் பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாக்கவும், மேலும், இதில் சிறுமிகளே அத்தகைய பாலியல் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவர்களாக இருப்பதாலும், சிறார் பாலியல் குற்றவாளிகளுக்கு எதிராக 2000 ஆம் ஆண்டு தகவல் மற்றும் தொழில்நுட்பச் சட்டம் மற்றும் சிறார்கள் மீதான பாலியல் வன்முறை தடுப்புச் சட்டம்-2012 ஆகியவற்றின்கீழ் இதுவரையில் 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ii) சிறார் நட்பு அறை

உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் அமைத்துள்ள சிறார்கள் நீதி குழுக்கள் பிறப்பித்துள்ள உத்தரவுகள் மற்றும் சிறார்கள் மீதான பாலியல் வன்முறை தடுப்புச் சட்டம்-2012-ல் கூறப்பட்டுள்ள சரத்துக்கள் ஆகியவற்றுக்கு இசைந்து மாநில காவல் துறை, மாநிலம் முழுவதும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் சிறார் நட்பு அறையை உருவாக்க அரசாணை (நிலை) எண் 22, உள் (காவல்-12) துறை, நாள் 8-1-2019-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன்படி மாநிலத்தில் உள்ள 194 அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும், சிறார் நட்பு அறைகள் உருவாக்க ரூ.2.44 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தொகைக்கான நிதி ஒப்பளிப்பு இந்த நிதியாண்டில் பெறப்படும் (2019-2020). பாதுகாப்பு மற்றும் கவனம் தேவைப்படும் சிறார்கள் மற்றும் சட்டத்துடன் முரண்பாடு கொண்ட சிறார்கள் இந்த அறையில் வைக்கப்பட்டு அவர்களுக்கான நட்புரீதியான சூழல் உருவாக்கப்பட்டு, அவர்களது உரிமைகளுக்கான ஆதரவு உறுதி செய்யப்படும்.

(iii) 2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 19 மற்றும் 20

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 1982 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொளித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 14/1982) திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு சட்டம் 19 மற்றும் 20/2014 இயற்றப்பட்டது. இச்சட்டத் திருத்தம் 3-9-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண் 175-ல் வெளியிடப்பட்டது.

2020 மார்ச் 24]

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 19-ல், 1982 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 14-ன் பிரிவு 2(f)-ல் இருந்த `வழக்கமாக' (Habitually) என்ற வார்த்தை நீக்கப்பட்டது. பிரிவு 2 (bb)-ல் `கணினிசார் குற்றவாளி' (Cyber Law Offender) என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 20-ல் பிரிவு 2 (ggg)-ல், `பாலின குற்றவாளி' (Sexual Offender) என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது.

13-10-2014 முதல், தமிழ்நாடு சட்டம் 19/2014 மற்றும் 20/2014 நடைமுறைக்கு வந்தது.

V. சாலை விபத்துகள்

அ) சாலை விபத்து குறித்த புள்ளிவிவரங்கள்

2019 ஆம் ஆண்டில் தாக்கலான 9,813 உயிர் இழப்பு ஏற்படுத்தக்கூடிய சாலை விபத்துகள் உட்பட 57,228 சாலை விபத்துக்களில், 10,525 பேர் இறந்துள்ளனர். 2018 ஆம் ஆண்டில் தாக்கலான 11,375 உயிர் இழப்பு ஏற்படுத்தக்கூடிய சாலை விபத்துகள் உட்பட 63,920 சாலை விபத்துகளில், 12,216 நபர்கள் இறந்துள்ளனர். 2019 ஆம் ஆண்டில், 18.72 இலட்சம் வாகனங்கள் கூடியுள்ளன. 1-1-2020 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் 2.90 கோடி வாகனங்கள் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் வாகனங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து கொண்டே வந்தபோதிலும், சாலை விபத்துகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கு இடையேயுள்ள விகிதாச்சாரம் 2017 முதல் 2019 வரை குறைந்து வருவதையே காட்டுகிறது. அதைப்போன்றே வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் இறப்பு நிகழ்ந்த மற்றும் இறப்பு நிகழாத சாலை விபத்துகளின் எண்ணிக்கைக்கு இடையேயான விகிதாச்சாரமும் குறைந்து காணப்படுகிறது. (பிற்சேர்க்கை-VIII, IX மற்றும் X).

ஆ) சாலை விபத்து தரவு மேலாண்மை முறை

உலக வங்கியின் உதவியுடன்கூடிய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள, இந்தச் சாலை விபத்து தரவு மேலாண்மை முறை, சாலை விபத்துகள் குறித்த தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதெற்கெனப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சாலை விபத்து

[2020 மார்ச் 24

குறித்த தங்கள் துறை சார்ந்த தகவல்களைப் பதிவு செய்ய காவல் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சாலை விபத்து தரவு மேலாண்மை முறையின் மேம்படுத்தப்பட்ட சர்வர் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. (தமிழ்நாட்டில், இந்த சாலை விபத்து தரவு மேலாண்மை முறையானது காவல் துறை அளிக்கக்கூடிய தகவலின் அடிப்படையில்தான் சேகரிக்கப்படுகிறதே தவிர, அனைத்து பங்குதாரர்களும் வழங்கக்கூடிய தகவல்களை விரிவான வகையில் சேகரிக்கப்படுவதில்லை.)

இ) நெடுஞ்சாலை ரோந்து வாகன கண்காணிப்பு முறை

தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில், தற்போது 272 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாகனங்கள் அனைத்திலும் புவிசார் இருப்பிட முறைமை (GPS) கருவி பொருத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே, இவ்வாகனங்களின் இருப்பிடம் கண்காணிக்கப்படுகிறது. நெடுஞ்சாலைகளில், விபத்துகள் நிகழும்போது, இத்தகைய ரோந்து வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பணியாற்றுகின்றன. சமீபத்தில் பல்வேறு மாவட்டங்கள்/நகரங்களுக்குக் கூடுதலாக 32 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புப் பிரிவானது, இதர அமைப்பினருடன் ஒருங்கிணைந்து, சாலைப் பாதுகாப்புக் கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் போன்றவற்றை நடத்துவதோடு, ஊடகங்கள், கம்பிவடத் தொலைக்காட்சி, அர்ப்பணிப்புடன்கூடிய அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன், சாலை விதிகள் குறித்து சாலையைப் பயன்படுத்துவோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலை 45-ல், செங்கல்பட்டு முதல் திண்டிவனம் வரை 80 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஸ்பீட் டோம் கேமராக்கள்/ உள்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி வலைப்பின்னல் அமைப்பை பொருத்த ரூ.1.69 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவுற்று தற்போது செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

மையப்படுத்தப்பட்ட பணமில்லா மின்-இரசீது திட்டமானது 28-6-2019 அன்று மின்-இரசீது பி.ஓ.எஸ். சாதனங்கள்மூலம் அபராதத் தொகையை வசூலிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 750 பி.ஓ.எஸ். சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இதனோடு 2,165 மின்-பி.ஓ.எஸ். சாதனங்கள் சேர்க்கப்பட்டு, கையால் எழுதப்படும் இரசீது முறையானது படிப்படியாக அகற்றப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதிலும் போக்குவரத்துக் காவல் ஆளிநர்களுக்கு உடலில் அணியக்கூடிய கேமரா வழங்குவதற்கான கருத்துருக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

VI. காவல் துறை நவீனமயமாக்கல்

காவல் துறை நவீனமாயமாக்கல் திட்டம் என்பது மத்திய அரசால் நிதி உதவி அளிக்கப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு மானிய உதவியாக மாநில அரசுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. அதற்கு ஒப்பான மானியத்தை மாநில அரசு வழங்கி வருகிறது.

உள் துறை அமைச்சகம், காவல் துறை நவீனமாயமாக்கல் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் பங்காக ரூ.43.55 கோடியை மானிய உதவியாக அளித்துள்ளது. (மத்திய அரசின் பங்கு ரூ.26.13 கோடி + மாநில அரசின் பங்கு ரூ.17.42 கோடி).

வ. எண்	சாதனங்கள்/திட்டங்கள்	ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ.கோடியில்)
1.	**களக் காவலுக்குத் தேவைப்படும் சாதனங்கள் (335 காவல் நிலையங்களுக்கு)**	**6.63**
2.	**நுண்ணறிவுப் பிரிவுகளுக்கான இரகசிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள்**	**1.57**

3.	**35 அதிரடிப் படை பிரிவுகளுக்கு, அதிரடிப் படை பாதுகாப்புச் சாதனங்கள்**	**1.57**
4.	**குற்றம் மற்றும் குற்றங்களைக் கண்டறியும் வலைப்பின்னல் முறைக்கு (சிசிடிஎன்எஸ்) தேவையான சாதனங்கள்**	**9.06**
5.	**மாவட்ட காவல் அலுவலகங்கள்/ நகர காவல் அலுவலகங்கள்/காவல் நிலையங்களில் மின்-அலுவலக திட்டம்**	**9.24**
6.	**தடய அறிவியல் துறைக்குத் தேவையான சாதனங்கள்**	**2.43**
7.	**தகவல் சாதனங்கள் மற்றும் டி.எம்.ஆர். வலைப்பின்னல்**	**4.21**

மொத்தம் ரூ.1.96 கோடி செலவில், பொதுவான சாதனங்களான, அதிகத் தரம்வாய்ந்த விரல்ரேகைப் பதிவுக் கூடத்திற்கான சாதனம், இரயில்வே காவல் துறையில் இணையதள குற்றத் தடுப்புப் பிரிவை அமைப்பதற்காக களக் காவல் முறைமைக்கான சாதனங்கள், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் ஆயுதம் மற்றும் உத்தி முறைப் பயிற்சிக்கான சாதனங்கள், ஊர்க்காவல் படையினருக்கான காற்றடைக்கப்பட்ட இரப்பர் படகுகள், காவல் நிலையங்களுக்கான நடமாடும் பொது அறிவிப்பு சாதனம் ஆகியவற்றுக்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் மத்திய உள் துறை அமைச்சகம், 30-9-2019 நாளிட்ட தனது கடிதத்தில் "காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கான உதவிகள்" என்ற திட்டத்தின்கீழ் தற்காலிக ஒதுக்கீடாக ரூ.58.06 கோடி நிதியை (மத்திய அரசின் பங்கு ரூ.34.84 கோடி + மாநில அரசின் பங்கு ரூ.23.22 கோடி) 2020-2021 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்து, அதனோடு 40% அளவை இந்திய அரசின் உயர் அதிகார குழுவின் அனுமதிக்காக அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

2020 மார்ச் 24]

மேலும் இந்திய அரசின் மத்திய உள் துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டதன்படி, 2020-2021 ஆம் ஆண்டுக்கான மாநில செயல் திட்டத்திற்கான கருத்துரு ஒன்று ரூ.81.28 கோடி மதிப்பீட்டில் (ரூ.58.06 கோடி பிரதான திட்டத்திற்கும் மற்றும் 40% துணைத் திட்டத்திற்காகவும் ரூ.23.22 கோடி) வகுக்கப்பட்டு மாநில அரசின் மூலமாக மத்திய அரசுக்கு, இந்திய அரசின் உயர் அதிகாரக் குழுவின் அனுமதியைப் பெறுவதற்காக 27-12-2019 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

அ) ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டம்

அமைச்சுப் பணியாளர்கள் உள்ளிட்ட 1.20 இலட்சம் தமிழ்நாடு காவல் பணியாளர்களுக்கு ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டத்தினை அமல்படுத்த இந்த அரசு ரூ.3.47 கோடி ஒப்பளித்துள்ளது. இதுவரையில், 1.15 இலட்சம் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் உறுப்பினர் குறியீட்டு அட்டைகள் (SIM card) வழங்கப்பட்டுள்ளன. 2,409 நிரந்தர கம்பியில்லா தொலைபேசி சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், காவல் துறை பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் அதிகபட்சமாக ஏழு உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு உறுப்பினர் குறியீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ள இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரையில், 3.26 இலட்சம் பி.எஸ்.என்.எல். குடும்ப உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோருக்கான குறியீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆ) ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் கைபேசி செயலிகள் தரவுத்தளம்

காவல் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கைபேசி எண்கள் அவரவர் பெயரிலேயே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இந்த எண்ணைப் பயன்படுத்துவோர் தனது ஓய்வுபெறும் காலம் வரை அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். காவல் பணியாளர்கள்/ காவல் நிலையங்களுக்கான முழுமையான ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுவுக்கான கைபேசி எண்களின் தரவுத்தளத்தை ஏற்படுத்தவும், விரைவாக தரவுத்தளத்திலிருந்து

எண்ணை மீட்கவும், ஆன்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் இயங்கும் ஸ்மார்ட் போன்களில் பயன்படுத்துவதற்கென, தமிழ்நாடு காவல் துறையின் விரிவான உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு தரவுத்தளத்தை காவல் துறையில் உள்ள தொழில்நுட்பக் குழுவினரே உருவாக்கியுள்ளனர். அந்த கைபேசி செயலிகள் கூகுள் ப்ளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஸ்டோரில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தொலைபேசி எண்களை எளிதாகக் கண்டுபிடிக்கும் வகையில், அழைப்பாளரின் எண்ணை அறிந்துகொள்ளும் வசதியுடன்கூடிய ஸ்மார்ட் போன்களில் முழுமையான ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுவுக்கான தரவுத்தளத்தைச் சேமித்துக் கொள்ள இச்செயலி வழிவகை செய்கிறது.

VII. நலத் திட்டங்கள்

அ) தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடைத் திட்டம்

தமிழக காவல் துறையில், அரசிதழ் பதிவுபெறாத காவல் பணியாளர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் நலனுக்காக, அரசாணை (நிலை) எண் 1097, உள் துறை, நாள் 23-4-1957-ன்படி தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

❖ **தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரண உதவிகள்**

(1) சந்தாதாரர் இறக்க நேரிட்டால் ரூபாய் 50,000/-, சந்தாதாரரின் குடும்பத்தினர் இறக்க நேரிட்டால் ரூ.10,000/-

(2) காவல் துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, நூற்றாண்டு கல்வி உதவித் தொகையாக ரூ.7,000/-லிருந்து ரூ.15,000/- வரை வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தோராயமாக ரூ.3 கோடி பயன்படுத்தப்படுகிறது.

(3) சந்தாதாரர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ.25,000/- அவர்களது பணிக்காலம் முழுமைக்கும் சேர்த்து மூன்று முறை மட்டும் வழங்கப்படுகிறது.

(4) தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடைத் திட்டத்தின்கீழ், அதன் சந்தாதாரர்களுக்கு அதிகபட்ச நிதியுதவியாக

2020 மார்ச் 24]

ரூ.4 இலட்சம் வரை வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு, மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஆண்டிற்கு ரூ.8 கோடி வரை தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடைத் திட்ட மத்திய குழுவிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில், தோராயமாக ரூ.37 இலட்சம் தொகை தமிழ்நாடு காவல் துறை கருணைக்கொடை திட்ட மாவட்டக் குழு நிதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு, அதன்மூலம் 259 காவல் பணியாளர்கள் பயனடைந்தனர்.

ஆ) வருடாந்திர அரசு கொடையின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

(1) பரிசுத் திட்டங்கள்

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும்/நகரிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் முறையே முதல் 10 இடங்களில் தேர்ச்சி பெறும் காவல் துறை பணியாளர்களின்/அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் துவக்கப்பட்டது. இப்பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

வகுப்பு	முதலிடம்	இரண்டாமிடம்	மூன்றாமிடம்
10	ரூ.6,500	ரூ.4,500	ரூ.2,500
12	ரூ.7,500	ரூ.5,500	ரூ.3,500

2019-2020 ஆம் கல்வி ஆண்டு வரை, 672 காவல் பணியாளர்கள்/அமைச்சுப் பணியாளர்கள் பிள்ளைகளுக்கு ரூ.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித் தொகை

காவல் துறை பணியாளர்கள்/அமைச்சுப் பணியாளர்கள் பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கென சிறப்பு கல்வி உதவித் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.25,000/- அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் சரியான கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகை நான்கு வருட காலத்திற்கு

அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. 2018-2019 ஆம் கல்வி ஆண்டில், 100 மாணவர்களுக்கு ரூ.21.72 இலட்சமும், 101 மாணவர்களுக்கு ரூ.21.44 இலட்சமும், 101 மாணவர்களுக்கு ரூ.21.56 இலட்சமும் மற்றும் 101 மாணவர்களுக்கு ரூ.21.55 இலட்சமும் முறையே 1-வது, 2-வது, 3-வது மற்றும் 4-வது தவணை சிறப்புக் கல்வி உதவித் தொகையாக ஒப்பளிக்கப்பட்டது. ஆக மொத்தம், காவல் பணியாளர்களின் பிள்ளைகள் 403 பேருக்கு ரூ.86.26 இலட்சம் வழங்கப்பட்டது.

(3) கருணைத்தொகை வழங்குதல்

காவல் பணியாளர்கள் பணியின்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு அல்லது துன்பகரமான சூழ்நிலைகளில் சிக்கி உயிரிழப்பு/ ஊனம்/காயம் அடைந்தால் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள்/ இழப்புகளுக்கு ஈடுசெய்யும் வகையில் அரசால் முன்னர் வழங்கப்பட்டு வந்த கருணைத்தொகை ரூ.10,000/- முதல் ரூ.10 இலட்சம் என்பது அரசாணை (நிலை) எண் 398, உள் (காவல்-12) துறை, நாள் 25-4-2017 இன்படி கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1	**உயிரிழப்பு**	**ரூ.10 இலட்சம்**
2	**முழு ஊனம், இரு கை, கால் இழப்பு மற்றும் முழு பார்வை இழப்பு**	**ரூ.4 இலட்சம்**
3	**பணியில் ஈடுபட முடியாதவாறு ஒரு கை, கால், கண்பார்வை இழப்பு, காது கேளாமை, பாதம், விரல்கள் இழப்பு**	**ரூ.2 இலட்சம்**
4	**தீக்காயங்கள், குண்டு அடிபட்டு காயங்கள், எலும்பு முறிவு**	**ரூ.1 இலட்சம்**
5	**சிறு காயங்கள் (எல்லா பதவிகளிலும் உள்ள காவல் பணியாளர்கள்)**	**ரூ.10 ஆயிரம்**

2020 மார்ச் 24]

2019 ஆம் நிதியாண்டில், ரூ.6 இலட்சம் நிதி 4 காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(4) தமிழ்நாடு காவல் பணியாளர் காப்பீட்டுத் திட்டம்

அனைத்து பதவி நிலைகளிலுள்ள காவல் பணியாளர்கள், இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். பணியின்போது, உயிரிழப்பு ஏற்படும் காவல் பணியாளரின் சட்டப்படியான வாரிசுகளும், அவர்களால் நியமிக்கப்படும் நபர்களும், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர். இத்திட்டம், காவல் பணியாளர்கள் தங்களது பணியில் ஈடுபடும்போது, உயிரிழக்கக்கூடிய மற்றும் நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனமடையக்கூடிய விபத்துகளை உள்ளடக்கியதாகும்.

பணியின்போது உயிரிழக்கும் காவலர் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை ரூ.2 இலட்சமும், காவல் துணைக் கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை ரூ.4 இலட்சமும் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. ஊனம் ஏற்படும்போது, ஊனமுற்ற தன்மைக்கேற்ப காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில், 14 காவலர் குடும்பத்திற்கு ரூ.27.66 இலட்சம் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

(5) புதிய உடல்நல காப்பீட்டுத் திட்டம் 2016

சென்னையிலுள்ள யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் வாயிலாக, அரசுத் துறை மற்றும் அமைப்புகளில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களது தகுதியுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு உடல்நலப் பாதுகாப்பு உதவி வழங்கிடும் வகையில், அரசாணை (நிலை) எண் 202, நிதி (சம்பளம்) துறை, நாள் 30-6-2016-ன்படி புதிய உடல்நல காப்பீட்டுத் திட்டம்-2016 அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குடும்பத்திற்கு மொத்த உதவியாக ரூ.4 இலட்சம் எனவும், குறிப்பிட்ட நோய்களுக்காக ஒரு குடும்பத்திற்கு ரூ.7.5 இலட்சம் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

(6) உணவு மானியத் திட்டம்

காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளின்மூலம் வாங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கு 50% மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, அவர்களுக்கு காக்கி நிறத்தில் தனித்தன்மையான குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில், 63,205 காவல் பணியாளர்கள் காக்கி நிறக் குடும்ப அட்டைமூலம் மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

(7) புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைத்தல்

அரசாணை (நிலை) எண் 707, உள் (காவல்-14) துறை, நாள் 28-10-2011-ன்படி, காவல் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு பயனளிக்கும் வகையில், 26 ஆயுதப் படை தலைமையிடங்களிலும், 10 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை தலைமையிடங்களிலும், புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அனைத்து காவல் பணியாளர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இந்த சேவையால் பயனடைந்து வருகின்றனர்.

(8) முழு உடல் மருத்துவப் பரிசோதனை

அரசாணை (நிலை) எண் 142, உள் (காவல்-9) துறை, நாள் 24-2-2014-ன்படி, 40 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில், 95 சதவிகிதத்திற்கும் கூடுதலான காவல் பணியாளர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

தற்போது அரசாணை (நிலை) எண் 1008, உள் (காவல்-9) துறை, நாள் 20-8-2018-ன்படி, முழு உடல் மருத்துவப் பரிசோதனை செய்வதற்கான வயதுவரம்பு 40-லிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டு உள்ளது.

(9) தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகள்

பணியிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற காவல் பணியாளர்கள், தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் மற்றும் சிறைத் துறைப்

2020 மார்ச் 24]

பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். தற்போது 1,56,303 குடும்பங்கள் தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகளால் பயனடைந்துள்ளன.

(1) திருச்சியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 1 ஆம் அணி, மதுரையில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் 6 ஆம் அணி, ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பிரிவு மையம் ஆகிய மூன்று இடங்களில் தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகளை 2011 ஆம் ஆண்டு துவக்க அரசு முதல் கட்டமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்து அவை 28-3-2012 முதல் செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்தகைய சிறப்பு அங்காடிகளை 44 இடங்களில் (காவல் ஆணையரகங்கள் மற்றும் 12 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள் உட்பட 32 மாவட்டங்கள்) துவக்க 2014 ஆம் ஆண்டு ரூ.6.56 கோடி ஒதுக்கப்பட்டு, அவை 15-9-2015 முதல் செயல்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டு, புதுப்பேட்டை (எழும்பூர்) மற்றும் கொண்டித்தோப்பு ஆகிய இடங்களில் கூடுதலாக இரண்டு அங்காடிகள் துவங்க தமிழ்நாடு அரசு ரூ.15.80 இலட்சம் நிதி ஒதுக்குவதற்கு நிருவாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 19-10-2017 அன்று முதல் புதுப்பேட்டையிலும் 4-6-2018 முதல் கொண்டித்தோப்பிலும் செயல்படத் துவங்கியுள்ளது. ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் உயர் பயிற்சியகத்தில் ஓர் அங்காடியை துவக்குவதற்குத் தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு ரூ.7.9 இலட்சம் நிதி ஒதுக்கியது. அந்த அங்காடி 14-12-2018 முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசு, மாநிலம் முழுவதும் 50 காவல் அங்காடிகளைத் துவங்க அனுமதி வழங்கி உள்ளது.

(2) தமிழக காவல் துறையைப் போன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அமைச்சுப் பணியாளர்களும், சிறைத் துறை அமைச்சுப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் இச்சலுகையை அரசு நீட்டித்துள்ளது.

காவலர் அங்காடி செயலி

பயனாளிகள், தமிழ்நாடு காவல் அங்காடியில் தங்களுக்குத் தேவைப்படும் பொருட்களின் விலை மற்றும் சரக்கு இருப்பு குறித்த விவரங்களைத் தங்கள் கைபேசிமூலம் தெரிந்துகொள்ள ஏதுவாக 'காவலர் அங்காடி' என்ற கைபேசி செயலி மற்றும் www. tnpolicecanteen.com என்ற இணையதள வசதி 4-3-2019 அன்று

துவக்கப்பட்டது. இதுவரை 21,279 நபர்கள் அந்த செயலியைப் பதிவிறக்கம் செய்துள்ளனர். இதுவரை 1,56,303 பயனாளிகள் (காவல் துறை-1,37,873, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை–7,735, சிறைத் துறை-4,963 மற்றும் வனத் துறை-5,732) காவல் அங்காடிகள்மூலம் பயனடைந்துள்ளனர்.

(10) தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு வரை 128 பயனாளிகளுக்கு ரூ.3.84 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(11) கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்

காவல் பணியாளர் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால், அவரை இழந்து வாடும் குடும்பத்திலிருந்து தகுதியுடைய மற்றும் சட்டப்படியான வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்காக காத்திருப்புப் பட்டியலில் இருந்த 43 நபர்கள் இளநிலை உதவியாளர்களாகவும், 21 நபர்கள் தட்டச்சர்களாகவும், 18 நபர்கள் அலுவலக உதவியாளர்களாகவும், 5 நபர்கள் அடிப்படை அரசு ஊழியர்களாகவும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

(12) காவலர் நிறைவாழ்வுப் பயிற்சித் திட்டம்

தமிழ்நாடு காவல் ஆளிநர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனம் சார்ந்த அழுத்தங்களைப் போக்கவும், அவர்களின் தொழில்சார் திறனை மேம்படுத்தவும், பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து 'காவலர் நிறைவாழ்வுப் பயிற்சித் திட்டம்' துவங்க ரூ.10 கோடி நிதியை அரசாணை (நிலை) எண் 516 உள் (காவல்-9) துறை, நாள் 11-6-2018 வாயிலாக தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை 20-9-2018 அன்று துவக்கி வைத்தவுடன், இத்திட்டத்தின்கீழ்

2020 மார்ச் 24]

பயிற்சி அளிப்பவர்களுக்கான பயிற்சி பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தில் 29-10-2018 முதல் ஐந்து நாட்களுக்கு வழங்கப்பட்டது. இதுவரை, காவல் துறையில் உள்ள 254 முதன்மை பயிற்சியாளர்களும், 201 தனியார் ஆலோசகர்களும் இப்பயிற்சியைப் பெற்றனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் உள்ள காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு இத்திட்டம் குறித்த களப்பயிற்சி 16-11-2018 அன்று துவங்கியது. இதுவரை, 78,840 காவல் ஆளிநர்கள், அவர்தம் குடும்பத்தினர் 81,862 நபர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.

தமிழக அரசு எடுத்த புதுமையான இம்முயற்சியை வெகுவாகப் பாராட்டிய மத்திய உள் துறை அமைச்சர், மத்திய ஆயுதப் படைப் பிரிவுக்கும் (CRPF) இப்பயிற்சியை அமல்படுத்த உத்தேசித்துள்ளார்.

(13) விருப்புரிமை நிதிக்கான ஒப்பளிப்பு

காவல் துறைக்குத் தேவையான சாதனங்கள் வாங்குவது உட்பட இதர தேவைகளுக்கென காவல் துறை இயக்குநரின் விருப்புரிமை நிதியமாக ரூ.6 கோடி, இந்த அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2018-2019 வரையான காலகட்டத்தில், மாநிலத்திலுள்ள பல்வேறு பிரிவுகளுக்காக 213 செயல்முறை நடவடிக்கைகளின்மூலம் மொத்தம் 3,418 பொருட்கள் ரூ.5.5 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

VIII. பெண் காவலர்கள்

பெண்களின் புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், பெண்களின் குறைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கென பிரத்யேகமாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தினை 1992 ஆம் ஆண்டில் முதன் முதலில் இந்த அரசு அமைத்தது. தற்போது, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு காவல் உட்கோட்டத்தின்கீழ், ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள மொத்த அனைத்து மகளிர் காவல் நிலைய எண்ணிக்கையில், சுமார் 33% தமிழ்நாட்டில் உள்ளது. மேலும், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்கள் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

தமிழகத்தில் சில மாவட்டங்களில், காவல் கண்காணிப்பாளர்களாகப் பெண்களே தலைமையேற்றுள்ளனர். தொழில்நுட்பப் பிரிவில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரையிலான 706 பதவிகளில், 176 பெண் அதிகாரிகள் பணிபுரிகின்றனர். இவர்கள் காவல் துறையின் தகவல் தொடர்பு வலைப்பின்னல் சாதனங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேபோன்று, தமிழகக் காவல் துறையில் விரல்ரேகைப் பிரிவில் பணிபுரிபவர்களில், சுமார் 34 சதவிகிதத்தினர் பெண்களாவர்.

மாநிலத்திலுள்ள பெண் காவல் பணியாளர்கள், கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துதல் அல்லது குற்ற விசாரணை மேற்கொள்ளுதல் அல்லது போக்குவரத்தைச் சீர்செய்தல் போன்ற எந்தப் பணியாக இருந்தாலும், ஆண்களுக்கு இணையாக பணியாற்றுகின்றனர். இவ்வாறான, கடினமான பணிகளில் பெண்கள் தங்கள் தனித்துவத்தை நிலைநிறுத்திக்கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

IX. காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

1) நுண்ணறிவுப் பிரிவு

மாநில நுண்ணறிவுப் பிரிவானது, பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், ஒன்றிணைத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ-பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியன ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்கி வருகின்றன. மாநில நுண்ணறிவுப் பிரிவில் இரண்டு காவல் துறைத் தலைவர்கள் உள்ளனர். நுண்ணறிவுப் பிரிவு காவல் துறைத் தலைவர் (தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை), பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகிவற்றை மேற்பார்வையிட்டு வருகிறார். காவல் துறைத் தலைவர், (உள்நாட்டு பாதுகாப்பு), சிறப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் க்யூ-பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவற்றை மேற்பார்வையிட்டு வருகிறார்.

2020 மார்ச் 24]

(அ) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, இரகசிய மற்றும் மறைமுக அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்குலைக்கக்கூடிய, மத நல்லிணக்கத்தைக் குலைக்கக்கூடிய, பல்வேறு மதத்தினர் மற்றும் சாதியினரிடையே பகைமையைத் தூண்டக்கூடிய வகையிலான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் சூழ்ச்சியான செயல்கள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சேவை அமைப்புகள் உள்ளிட்ட அமைப்பு சார்ந்த அல்லது அமைப்பு சாரா நிறுவனங்களைக் கண்காணித்தல், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலான வதந்திகள், செய்திகள், கடிதங்கள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் குறித்து கண்காணித்தல், பல்வேறு அரசு சாரா அமைப்புகளின் செயல்பாடுகள், அத்தியாவசியப் பணிகளின் செயல்பாடுகள் மற்றும் அரசியல், சமூக, பொருளாதார, வகுப்புவாத மற்றும் இதர முக்கிய நிகழ்வுகள் குறித்து மக்களிடையே பரவலாக நிலவிவரும் கருத்துகள் குறித்து கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பிரிவானது, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க ஏதுவாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அந்தந்த அளவில் மேற்கொள்ளும் வகையில், சேகரித்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்து முன்கூட்டியே பகிர்ந்து வருகிறது.

(ஆ) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது தமிழகத்திற்கு வருகைதரும் அயல்நாட்டு அதிபர்கள், இதர பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதி முக்கிய/ முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு தவிர, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமின்றி, அயல்நாட்டவர் நடவடிக்கை, முக்கிய கேந்திர அமைப்புகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கடவுச்சீட்டு தொடர்பான நடவடிக்கைகளையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

2019 ஆம் ஆண்டில், 1,685 அதி மிகமுக்கிய நபர்கள் மற்றும் மிகமுக்கிய நபர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, இப்பிரிவினர் அவர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தனர்.

[2020 மார்ச் 24

குடிபெயர்தல், நுழைவு இசைவு பெற்ற அந்நிய நாட்டவர் பதிவு மற்றும் கண்டுபிடித்தல் முறை (IVFRT) 1-12-2013 முதல் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில், இணையதளம் மூலமாக 45 கருத்துருக்கள் அயல்நாட்டினரிடமிருந்து பெறப்பட்டு, இப்பிரிவு வழியாக தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குடிபெயர்தல் அதிகாரிகள் 5,056 விமானங்கள்/கப்பல்களைக் கையாண்டு, 1,77,161 அயல்நாட்டினர் வருகை மற்றும் 1,82,242 அயல்நாட்டவரின் புறப்பாடு குறித்து உரிய ஒப்புதல் அளித்துள்ளனர். 5 பணியாளர்களுக்கு இந்தியாவிற்குள் வருகைதர தற்காலிக இறங்கும் அனுமதி/வசதிகள் அளிக்கப்பட்டுள்ளது.

சீன அதிபர் மகாபலிபுரத்திற்கு (காஞ்சிபுரம் மாவட்டம்) வருகை தந்தபோது, பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகச் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டன. சீன அதிபர் சுமார் 185 கி.மீ. சாலையில் பயணம் செய்துள்ளார். சம்பந்தப்பட்ட அனைத்து முகமை அமைப்புகளுடனும் சேர்ந்து ஒருங்கிணைந்து சிறப்பான வகையில் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்துத் தரப்பிலும் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. சீன அதிபர் அவர்களும் தனது பயணத்தின்போது செய்யப்பட்ட சிறப்பான பாதுகாப்பு எற்பாடுகளுக்குப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பணிபுரியும் காவல் துறை ஆளிநர்களுக்கு, அதிமுக்கிய நபர்களின் பாதுகாப்பு, நுண்ணறிவு தகவல்கள் பரிமாற்றம் போன்ற பல்வேறு தலைப்புகளில், காவல் தனிப் பிரிவு பயிற்சிப் பள்ளி பல்வேறு வகுப்புகளை நடத்தி வருகிறது. 2019 ஆம் ஆண்டு, 21 பிரிவுகளாக நடத்தப்பட்ட 10 பயிற்சிகளில், 600 அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பயிற்சி பெற்றனர்.

திருவனந்தபுரம் தைக்காட்டில் உள்ள தென் மண்டல பயிற்சி மையம், புதுடெல்லி, துவாரகாவில் உள்ள தேசிய நுண்ணறிவு உயர் பயிற்சியகம், ஐதராபாத்திலுள்ள ராஜா பகதூர் வெங்கட்ராம ரெட்டி தெலுங்கானா மாநில காவல் உயர் பயிற்சியகம் ஆகியவற்றில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையிலிருந்து 23 அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். இந்தக் காவல் அதிகாரிகளின் பணியானது பாதுகாப்புப் பிரிவு புது செயல்பாடுகளில் மிகவும் உதவிகரமாக இருந்து வருகிறது.

2020 மார்ச் 24]

1-1-2019 முதல் 31-12-2019 வரை மத்திய நுண்ணறிவுப் பிரிவின் தொழில் பாதுகாப்பு ஆய்வுக் குழுவினர், மாநிலத்தில் முக்கிய கேந்திரங்கள் உள்ள 11 இடங்களில் நடத்திய ஆய்வின்போது, பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தங்களை இணைத்துக் கொண்டனர்.

'ஆளில்லா விமானம் முறைமையை இயக்குவதற்கான தேவைகள்' தொடர்பாக உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகம் உள்நாட்டு விமான போக்குவரத்துக்கான தேவைகளை வெளியிட்டுள்ளது. இதை 1-1-2019 முதல் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் இத்தகைய ஆளில்லா விமானங்களை இயக்க அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1-1-2019 முதல் செயல்படுத்தப்படுமென திட்டமிட்டிருந்தது, இன்னும் செயல்படுத்தப்படவில்லை. பாதுகாப்புப் பிரிவு புதுக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இதற்கான மாநில ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளாக அனைத்து முக்கிய கேந்திரங்களின் ஒருங்கிணைப்பு விவரங்களைச் சேகரித்து அவற்றை ஜியோஜேசன் படிவத்தில் தொகுத்து புதுடெல்லியிலுள்ள டிஜிஸ்கை செயலியில் தரவேற்றம் செய்துள்ள சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். அனைத்து மாவட்டங்களிலும் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி நிலைகளில் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு அந்த ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு நோக்குநிலை பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்நுட்பப் பிரிவு ஆய்வாளர்கள் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டம்/நகரில் இந்த டிஜிஸ்கை தளத்தை செயல்படுத்தும்போது அதனைக் கையாளுவதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ) முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பிற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இப்பிரிவு, பாதுகாப்புப் பிரிவுடன் 1997 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. இப்பிரிவானது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வசிக்குமிடம், சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இடங்கள், தங்கும் இடங்கள், காவலுடன் செல்லும் வண்டித்தொடர் ஆகியவற்றின்போது, 24 மணி நேரமும் தவறு ஏதும் நிகழாமல் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

[2020 மார்ச் 24

இப்பிரிவில், நெருங்கிய பாதுகாப்புக் குழுக்கள், வெடிகுண்டைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகியன அடங்கியுள்ளன.

(ஈ) திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு

அமைப்புரீதியாக செயல்படும் குற்றவாளிகளின் குழுக்கள், போக்கிரிகள், போதை மருந்துக் கடத்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல், ஆட்கடத்தல், ஹவாலா பணப் பரிமாற்றம், கள்ளநோட்டு புழக்கங்கள் போன்ற நடவடிக்கைகள் குறித்து பயனுள்ள, நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, களப் பணியாளர்களுக்கு அத்தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்ள "திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு" உருவாக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் உயிருக்கு அச்சுறுத்தும் பிற குற்றம் தொடர்பாக 2,231 விழிப்பூட்டுத் தகவல்களை இவ்வலகு அலுவலர்களுக்கு அனுப்பியதன் காரணமாக 205 வழக்குகள் இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 109 நபர்கள் குற்றவியல் விசாரணைச் சட்ட விதிகளின்கீழ் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டனர். குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் 68 போக்கிரிகள் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டனர். பிணையில் வெளிவர முடியாத 318 பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டன. 219 போக்கிரிகள் மீதான வரலாற்றுப் பதிவேடுகள் துவக்கப்பட்டன. திட்டமிட்ட குற்றங்கள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், பிரபல போக்கிரிகளைத் தக்க நேரத்தில் கைது செய்ய மாவட்ட நிருவாகத்தினர் நடவடிக்கை எடுத்தனர். இக்காலகட்டத்தில் முதல் 10 போக்கிரிகள்/குற்றவாளிகள் பிடிக்கப்பட்டனர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் சமூக விரோதிகள் மற்றும் போக்கிரிகளிடமிருந்து ஒரு 6 எம்.எம். கைத்துப்பாக்கி, 6 எஸ்.பி.எம்.எல். துப்பாக்கிகள் மற்றும் இரண்டு .22 துப்பாக்கிகள், 16 தோட்டாக்கள், டிபிபிஎல் 1 துப்பாக்கி அத்துடன் காலி கேஸ்-23, .360 துப்பாக்கி 6 மற்றும் காலி கேஸ்-84 ஆகியவற்றைக் கைப்பற்றினர். மேலும், இப்பிரிவினர் அளித்த தகவலின் அடிப்படையில் 200.840 கிலோ கஞ்சா,

2020 மார்ச் 24]

ரூ.2.4 இலட்சம் இந்திய ரூபாய் கள்ளநோட்டுகளும் கைப்பற்றப்பட்டன. சிறைவாசிகள் வழிக் காவல் குறித்து சீரிய கவனம் செலுத்தப்பட்டதால் எந்தவிதமான பெரிய குறைபாடும் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

(உ) 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

1967-1970 ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டில் நக்சலைட் நடவடிக்கைகள் தலைதூக்கியபோது, தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், தனியாக ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது. தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை-2 என்று இருந்த இப்பிரிவானது, 1976 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், `க்யூ' பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ், புலன் விசாரணை செய்யும் அதிகாரங்கள் `க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

`க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவுகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து வருவதோடு, அத்தகைய தீய சக்திகள் மாநிலத்தில் களம் அமைக்காத வகையில், அவர்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும் `க்யூ' பிரிவானது, வழக்குகளின் புலன் விசாரணைகளை மேற்கொள்வதன்மூலம், களத்தில் பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்களையும், விசாரணையையும் ஒருங்கிணைத்து சிறப்பான நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்கிறது. `க்யூ' பிரிவு, இலங்கை தமிழர்கள் தொடர்பான விவகாரங்களையும் கையாண்டு வருகிறது.

`க்யூ' பிரிவு வழக்குகளில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக இருந்து வந்த நான்கு குற்றவாளிகளை, குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைப்பினரைப் பிடிப்பதற்காக தனிப் படைகள் அமைக்கப்பட்டன. சகோதர முகமைகளுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் வழக்கமான தேடுதல் பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவோயிஸ்ட் நடமாட்டம் குறித்த தகவல்கள் பிற மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. கள்ளத்தோணியில் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவதையும்,

கடவுச்சீட்டு மோசடிகளையும் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஊ) சிறப்புப் பிரிவு

சிறப்புப் பிரிவானது, மத அடிப்படைவாத அமைப்புகளைக் கண்காணித்து வருகிறது. சிறப்புப் பிரிவானது நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்களைத் திரட்டி, அவற்றை உள்ளூர் காவல் துறையினருக்கு மேல்நடவடிக்கைக்காகப் பகிர்ந்தளித்து வருகிறது.

2) குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை (CB CID)

1906 ஆம் ஆண்டு, காவல் துறை துணைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் 37 காவல் பணியாளர்களைக் கொண்ட ஒரு சிறிய அலகாக குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தொடங்கப்பட்டது. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு உட்பட, தற்போது காவல் துறை இயக்குநர் (குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை) தலைமையின்கீழ் சுமார் 893 காவல் பணியாளர்களுடன் ஓர் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில், 37 உட்பிரிவுகளைத் தவிர, 7 திட்டமிட்ட குற்றச் செயல்கள் தடுப்புப் பிரிவுகளும், 4 கள்ள நோட்டுகளைக் கண்டறியும் பிரிவுகளும், 5 சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு, ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவு மற்றும் காவல் ஆராய்ச்சி மையம் ஆகியன இதர சிறப்புப் பிரிவுகளாகும். தமிழக அரசு, தமிழ்நாடு காவல் துறைத் தலைமை இயக்குநர் அல்லது சென்னை உயர் நீதிமன்றம் ஒப்படைக்கும் வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதே, இத்துறையின் முக்கியப் பணியாகும். இத்துறையில் ஏற்கெனவே, நிலுவையில் உள்ள 19 வழக்குகளுடன், கூடுதலாக 40 வழக்குகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில், 21 வழக்குகளில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு

அரசாணை (நிலை) எண் 998, உள் (நவீனம்) துறை, நாள் 14-8-2018-ன் மூலமாக இணையதளக் குற்றப் பிரிவை ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரத்தில் அமைப்பதற்கான ஒப்பளிப்பை அரசு வழங்கியது. மேலும் அரசாணை (நிலை) எண் 155, உள் (காவல்-1) துறை, நாள் 8-3-2019-ன் படியும் மற்றும் அரசாணை (நிலை) எண் 248, உள் (காவல்-1) துறை, நாள் 22-5-2019-ன்படி, கூடுதல் காவல்

துறை இயக்குநர் தலைமையில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவை, உருவாக்கிட ஆணைகளை வழங்கி, கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவிற்கென 3 காவல் கண்காணிப்பாளர் பதவியிடங்களுக்கும் ஒப்பளிப்பு வழங்கியது. காவல் கண்காணிப்பாளர்களின் பொறுப்புகள் பின்வருமாறு:

(1)	*காவல் கண்காணிப்பாளர் - 1*	*மாநில அளவில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவை மேற்பார்வையிடுதல் மற்றும் நிருவாகப் பணிகளை மேற்கொள்ளுதல்.*
(2)	*காவல் கண்காணிப்பாளர் - 2*	*வடக்கு மற்றும் மேற்கு மண்டலங்கள், அதனுள் அடங்கும் நகரங்களில் உள்ள கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவுகளின் பணிகளைக் கவனித்துக்கொள்ளுதல்*
(3)	*காவல் கண்காணிப்பாளர் - 3*	*மத்திய மண்டலம் மற்றும் தெற்கு மண்டலங்கள், அதனுள் அடங்கும் நகரங்களில் உள்ள கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவுகளின் பணிகளைக் கவனித்துக்கொள்ளுதல்*

கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு கீழ்க்கண்ட மூன்று நிலைகளைக் கொண்டதாகும்:

(1) சென்னை நகரில் உள்ள மாநில அளவிலான கணினிசார் குற்றத் தடுப்பு தலைமை நிலையம்.

(2) தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், திருச்சி நகரம், கோயம்புத்தூர் நகரம், மதுரை நகரம், சென்னை நகரம் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆகிய 6 இடங்களில் உள்ள கணினிசார் குற்றத் தடுப்பு மண்டல ஆய்வகங்கள்.

(3) அனைத்து மாவட்டங்கள் மற்றும் நகரங்களிலும் கணினிசார் குற்றத் தடுப்புக் காவல் நிலையங்களை அமைத்தல்.

3) குற்றப் பிரிவு

குற்றப் பிரிவானது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:

[2020 மார்ச் 24

(அ) போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு

போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது 1985 ஆம் ஆண்டைய போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தைத் திறம்பட அமல்படுத்தி, அதன்மூலம், போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் மற்றும் புழக்கத்தை முற்றிலும் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. தற்போது, மாநிலம் முழுவதும் 15 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 1,396 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,492 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், ரூ.15.39 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, 19 கொடுந்தன்மையுடைய போதைப் பொருள் குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் எண் 14/1982-ன்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

2019 ஜூன் மாதம் 26 ஆம் தேதி சர்வதேச போதை மருந்துப் பழக்கத் தீமை மற்றும் கள்ளத்தனமாகக் கடத்துதல் ஆகியவற்றிக்கான எதிர்ப்பு தினம் அனுசரித்தல்

2019 ஜூன் மாதம் 26 ஆம் தேதியன்று, `சர்வதேச போதை மருந்துப் பழக்கத் தீமை மற்றும் கள்ளத்தனமாக கடத்துதல் ஆகியவற்றிற்கான எதிர்ப்பு தினம்' சிறப்பான முறையில் அனுசரிக்கப்பட்டு, அதன் மூலமாக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதற்கு எதிராகவும், போதை மருந்துப் பழக்கத் தீமைக்கு எதிராகவும் அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவின் 15 அலகுகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அந்தந்த அலகுகளின் தலைமையிடங்களில் நடத்தின. மாவட்ட ஆட்சியாளர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், மாணவ சமூகத்தினர், கல்வி நிறுவனங்களின் நிருவாகம், போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு பணியாளர்கள், கடலோரக் காவல் படையினர், தன்னார்வ அமைப்பினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் பலர் மேற்படி தினத்தை சிறப்புற அனுசரித்து, பல்வேறு அமைப்புகளும் போதை மருந்து தீமை மற்றும் அவற்றைக் கள்ளத்தனமாக கடத்துதல் ஆகியவற்றுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை பொதுமக்களிடையே ஏற்படுத்தினர். சென்னையில் எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் முதல் ராமடா

உணவகம் வரை 3 கி.மீ. தூரத்திற்கு பேரணி ஒன்று நடத்தப்பட்டு அதில் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைத் சேர்ந்தவர்கள் சுமார் 8,000 நபர்கள் கலந்து கொண்டனர்.

(ஆ) அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு/காணொளித் திருட்டு தடுப்புப் பிரிவு

காணொளித் திருட்டைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமைச் சட்ட மீறலைக் கண்காணிக்கவும், 17-2-1995 அன்று, காணொளித் திருட்டுத்தடுப்புப் பிரிவு என்ற ஒருதனியான பிரிவு தொடங்கப்பட்டது. தற்போது, சென்னை (3 பிரிவுகள்), மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர்,

கடலூர், விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 12 இடங்களில் இப்பிரிவுகள் உள்ளன. தமிழக அரசு, காணொளித் திருட்டு தடுப்புப் பிரிவின் பெயரினை 'அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு' என மாற்றி உத்தரவிட்டது.

762 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.3.37 கோடி மதிப்பிலான திருட்டுக் குறுந்தகடுகள்/காணொளி குறுந்தகடுகள்/கணினிகள்/ கம்பிவடத் தொலைக்காட்சி விதிமீறல்கள்/ஆம்னி பேருந்துகளில் புதிய திரைப்படங்கள் காட்டுதல்/அறிவுசார் சொத்துரிமை சட்ட விதிமீறல் ஆகியன சம்பந்தமான இதர சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழ்நாடு சட்டம் எண் 14/1982-ன்கீழ் ஒருவர் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டார்.

அனைத்துப் பிரிவு அலுவலர்களுக்கும் தலைமையகத்தில், அறிவுசார் சொத்துரிமை (ஐபிஆர்) அதிகாரிகளுடனும், இந்திய இசைத் துறை (ஐஎம்ஐ) அதிகாரிகளுடனும், ஒளிப்பதிவாளர்களுடனும் இணைந்து பணியாற்ற சிறப்புப் பயிற்சி வகுப்புகளும், செறிவோடுகூடிய தொழில்நுட்ப அறிவு குறித்த பயிற்சி வகுப்புகளும் நடத்தி சிறப்பாக சட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதிய திரைப்படங்கள் இணையதளத்தில் பதிவேற்றப்படுவதற்கு எதிராக நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்த அறிக்கைகள், ஆணையர், மின் ஆளுமை, தமிழ்நாடு அரசு அவர்களுக்கு 'அவசரகால கணினி வழி நடவடிக்கை

(சிஇஆர்டிஎன்)'மூலம் தவறு செய்கின்றவர்களின் இணையதளத்தை முடக்குவதற்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

4) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு

(அ) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்களில் நிதி முறைகேடு மற்றும் கையாடல் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவாக வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு, 1971 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 59 வழக்குகள் மற்றும் பழைய வழக்குகள் உள்ளிட்டவைகளில் 66 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலகட்டத்தில் 76 வழக்குகளில் விசாரணை முடிக்கப்பட்டு, அவற்றில் 44 வழக்குகள் தண்டனையில் முடிவுற, 32 வழக்குகள் பல்வேறு தலைப்புகளின்கீழ் முடிக்கப்பட்டன. 31-12-2019 அன்றைய நிலவரப்படி 82 வழக்குகள் புலன் விசாரணையிலும், 935 வழக்குகள் நீதிமன்ற விசாரணை நிலுவையிலும் உள்ளன.

(ஆ) சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு

சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு, 1983 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது, கூடுதல் காவல் துறை இயக்குநரின்கீழ் செயல்பட்டு வருகிறது. சிலை திருட்டு தடுப்புப் பிரிவானது (1) தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு, (2) 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சிலைகள் திருட்டு, (3) மாநிலம்/மாநிலங்களுக்கு இடையேயும் தொடர்புடைய சிலைகள் திருட்டு வழக்குகள், (4) 1995 ஆம் ஆண்டைய நிலவரப்படி, ரூ.5 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு மற்றும் (5) உணர்ச்சிமிக்க தன்மையுடன்கூடிய சிலைகள் திருட்டு குறித்து மாநில அரசின் ஆணைகளின்பேரில் புலன் விசாரணை செய்து வருகிறது. மேற்படி பிரிவானது தற்போது சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவில் கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு உதவியாக, காவல் துறைத் தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

2020 மார்ச் 24]

சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு பணியாளர் எண்ணிக்கை

பணியாளர்	காவல் துணை கண்காணிப்பாளர்	ஆய்வாளர்	உதவி ஆய்வாளர்	சிஉஆ/தகா	முநிகா	2-ஆம் நிகா	ஓட்டுநர்	மொத்தம்
ஒப்பளிப்பு	1	5	3	4	3	12	1	29
தற்போது	1	5	-	6 சிஉஆ 3 தகா	-	-	-	15
காலியிடம்	-	-	3	11				14

(இ) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2

வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெறும் நிதி மோசடிகள், குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன்விசாரணை செய்யும் முக்கியப் பணியினைப் பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 (நிதி நிறுவனங்கள்) மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு, 1997 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிதி நிறுவன முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளையும் கையாண்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் இத்தகைய சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர்கள், தாங்கள் கடுமையாக உழைத்து ஈட்டிய பணத்தை மோசடியான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதிலிருந்து பாதுகாப்பதற்காக 1,330 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. அந்த முகாம்களில் பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு மற்றும் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்கள் பொதுமக்களிடம் அத்தகைய மோசடியான நிதி நிறுவனங்கள் பொதுமக்களை மோசடி செய்வதற்கு பயன்படுத்துகின்ற முறைகள் குறித்து அது சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட சிறிய குறும்படங்கள்மூலம் விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளனர். மேலும், முதலீட்டாளர்கள் விழிப்புணர்வுக்கான வீடியோ பதிவுகளும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி தகவல் சேனலில் ஒளிபரப்பப்பட்டன. மகளிர் சுய

[2020 மார்ச் 24

உதவிக் குழுக்கள், தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்போர் நல்வாழ்வு சங்கம் ஆகியோரிடையேயும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்கள் அதிகமாக குழுமுகின்ற இடங்களில் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

மேலே கூறப்பட்டவற்றை தவிர பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு, இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெறப்படும் அங்காடி நுண்ணறிவு தகவல்கள் அடிப்படையில் செயல்பட்டு, அதன்பேரில் 9 வழக்குகளைப் பதிவு செய்து, வரன்முறையற்ற திட்டங்களின்கீழ் முதலீடுகளைப் பெற்றுவரும் நிறுவனங்களுக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், கிரிப்டோ கரன்சி எனப்படும் குறியீட்டு நாணய மோசடி சம்பந்தமாக தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள சில வழக்குகளின் பிந்தைய நிலவரப்படி, அத்தகைய குறியீட்டு நாணயங்களில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதிலிருந்து எச்சரிக்கும்விதமாக பத்திரிகை குறிப்பொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு-2 அமைக்கப்பட்டதிலிருந்து, மோசடி செய்யப்பட்ட மொத்தத் தொகையான ரூ.5,278.92 கோடியில், ரூ.1,561.36 கோடி பணமானது பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் 15,69,653 நபர்களுக்கு திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், மோசடி செய்த நிறுவனங்கள்/ குற்றவாளிகளின் ரூ.1,992.23 கோடி மதிப்பிலான அசையும் மற்றும் அசையா சொத்துகள் கையகப்படுத்தப்பட்டு அவற்றின் விற்பனைப் பணமானது அது தொடர்பான சட்டச் செயல்முறைகள் முடிவுற்ற பின்னர் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

5) மாநில குற்ற ஆவணக் காப்பகம்

காவல் படையின் செயல்திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறைமையை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் மாநில குற்ற ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின்கீழ், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், குற்றச் செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியன செயல்படுகின்றன. மேலும், இது குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறைக்கான இணைப்பு அமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

(அ) காவல் கணிணி பிரிவு

காவல் கணிணி பிரிவு, 1971 ஆம் ஆண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. இதன் நோக்கம் அனைத்து குற்றம் மற்றும் குற்றவியல் தரவுகளைப் பதிவு செய்தல், புலன் விசாரணைக்கு உதவி செய்து, குற்ற ஆய்வுகள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்தல் மற்றும் அவற்றைத் தேவையானவர்களுக்கு அனுப்புதல் ஆகும். இதன் முதல் சாதனம் ஐ.பி.எம்-1440 கணினியானது பஞ்ச் கார்டு முறையில் செயல்பட்டு வந்தது. 1976 ஆம் ஆண்டு டி.டி.சி-316 சாதனமானது காவல் கணினிப் பிரிவுக்காக, காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டு, அதில் ஐ.பி.எம் முறையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் முழுவதும் ஐ.பி.எம் முறையிலிருந்து இந்தப் புதிய சாதனத்திற்கு மாற்றப்பட்டது. இந்த முறையானது டெலிபிரிண்டர்கள் மூலமாக அனைத்து மாவட்டத் தலைமையகங்களோடும் தமிழ்நாடு காவல் துறையின் வலைப்பின்னலில் இயங்கிவரும் டெலிபிரிண்டர்கள்மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

1. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை (CCTNS)

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறை (Crime and Criminals Tracking Network and Systems - CCTNS) என்ற அகில இந்திய திட்டத்தை, மாநில குற்ற ஆவணக் காப்பகம் அமலாக்கம் செய்து வருகிறது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேசிய மின்-ஆளுமைத் திட்டத்தின்கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் குறித்த தரவுகளை விரிவாகவும், ஒருங்கிணைப்பு முறையிலும் திரட்டுவது, மின்-ஆளுமைக் கோட்பாடுகளைப் பின்பற்றி காவல் துறையின் திறமை மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது, நாடு தழுவிய வலைப்பின்னல் கட்டமைப்பு உருவாக்குவது ஆகியன இம்முறைமையின் நோக்கங்களாகும். இத்திட்டமானது தமிழ்நாட்டில் உள்ள 1,541 காவல் நிலையங்கள் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதார குற்றப் பிரிவு, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை போன்ற 372 சிறப்பு அலகுகளில் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

சாட்சிகளுக்கு கைபேசி வழியாக குறுந்தகவல் அனுப்புவதற்கான வசதி

நீதிமன்றங்களிலிருந்து அழைப்பாணைகள் பெற்றவுடன் அவற்றை சாட்சிகளுக்கு கைபேசி வழியாக குறுந்தகவல்களாக அனுப்பும் வசதி குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமை (CCTNS) இயங்குதளம்மூலம் உருவாக்கப்பட்டு அத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் துவக்கி வைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நீதிமன்றம் சாட்சியை ஆஜராக அழைப்பாணை அனுப்பியவுடன், அதற்கான பதிவுகள் காவல் நிலையத்தினரால் குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமையில் பதிவேற்றம் செய்யப்படும். அம்முறைமையானது தமிழ் மொழியில் குறுந்தகவல்களைத் தயாரித்து சம்பந்தப்பட்ட சாட்சியின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்குத் தானாக அனுப்பி வைத்துவிடும். இவ்வாறு 2019 ஆம் ஆண்டில், சாட்சியங்களுக்கு 4,83,206-க்கும் அதிகமான குறுந்தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்களின் விவரம் அறியும் வசதி

மாநிலம் முழுவதும் எந்த காவல் நிலையத்திலும் கைது செய்யப்பட்ட நபர்கள் குறித்த விவரங்களைப் பொதுமக்கள் காணலாம். இவ்வசதி தமிழ்நாடு காவல் வலைதளத்தில் கிடைக்கும் வகையில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவரை (31-1-2020 நிலவரப்படி) 2,71,950-க்கும் மேற்பட்ட நபர்கள் இவ்வசதியைப் பயன்படுத்தியுள்ளனர்.

இணையதளம்மூலம் காவல் சரிபார்ப்பு சேவைகள்

தமிழ்நாடு காவல் துறை சுய சரிபார்ப்பு, வேலைவாய்ப்பு சம்பந்தமான சரிபார்ப்பு, வாடகைதாரர் சரிபார்ப்பு மற்றும் வீட்டு வேலைக்கு சேர்பவர்கள் சரிபார்ப்பு பணிகளுக்காகக் "காவல் சரிபார்ப்பு சேவைகள்" என்ற இணையவழி சேவை ஒன்றைக் குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமை இயங்குதளம்மூலம் 9-1-2019 அன்று வெற்றிகரமாக நிறுவியுள்ளது.

2020 மார்ச் 24]

இச்சேவையின்மூலம், தமிழ்நாட்டில் வாழும் நபர்கள் குறித்த விவரங்களைச் சரிபார்க்கலாம். இது தொடர்பான விண்ணப்ப மனு பொதுமக்களிடமிருந்து பெற்றவுடன், அது உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகார எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர், அந்நிலையக் காவலர் சரிபார்க்கப்பட வேண்டிய நபரின் இல்லத்திற்கு நேரில் சென்று மனுவில் அளித்துள்ள தகவல்களின்படி அவரது அடையாளம் மற்றும் முகவரி உள்ளதா என்பது குறித்து உறுதி செய்து, பின்னர் ஒப்புதல் அளிக்கும் அதிகாரி ஆய்வு செய்து, காவல் சரிசார்ப்பு அறிக்கை உடனடியாக தமிழ்நாடு காவல் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். அவ்வறிக்கையின் ஒரு பிரதி விண்ணப்பதாரரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படும். காவல் சரிபார்ப்பு அறிக்கை 15 நாட்களுக்குள் வழங்கப்படும். இவ்வாறாக, இணையவழி காவல் சரிபார்ப்பின் முழு நடைமுறையானது சம்பந்தப்பட்ட குடிமக்கள் காவல் நிலையத்திற்கு நேரில் வருகை தராமலேயே முடித்து வைக்கப்படுகிறது.

காணாமல்போன நபரைத் தேடும் முறைமை

காணாமல்போன நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத பிரேதங்கள் தொடர்பான வழக்குகளில் இணைய வழிமூலம் கிடைக்கக்கூடிய தரவுகளின் உதவியுடன் கண்டுபிடிக்க ஏதுவாக, புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவிடும் வகையில், காணாமல் போன நபரைத் தேடும் உயர்தர மென்பொருள் முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காணாமல்போன நபரைத் தேடும் முறைமையானது நிலை பாகுபாடுயின்றி அனைத்து அதிகாரிகளும் பயன்படுத்தும் வகையில், குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமையின் தரவுகளைக்கொண்டு பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத இறந்து போனவர்களின் உடல்களைச் சரிபார்த்து ஒப்பிட்டு காணாமற்போன நபர்கள் குறித்த 766 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் விளைவாக மொத்தம் 1,532 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 1,532 வழக்குகளில் மேம்படுத்தப்பட்ட காணாமல் போன நபர்களைத் தேடும் முறைமையைப் பயன்படுத்தி இதுவரை 506 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், 44 நபர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

31-1-2020 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மொத்த வழக்குகளில், 131 காணாமல் போன நபர்கள் மற்றும் 131 அடையாளம் தெரியாத இறந்து போனவர்களின் உடல்கள் (மொத்தம் 262 வழக்குகள்) இந்த ஆண்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

2. வழக்கு புலனாய்வுக்காகவும், களக் காவல் பணிக்காகவும் புலனாய்வு அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக செய்து கொடுக்கப்பட்ட இணையவழி வசதிகளின் பயன்பாட்டு நிலை

காவல் நிலைய அளவிலான அலுவலர்களுக்கு கைபேசி செயலி

இந்த கைபேசி செயலியானது, காவல் நிலைய அலுவலர்கள் வாகன சோதனைகள், ரோந்து சுற்றுக் காவல் மற்றும் பிற களக் காவல் செயல்பாடுகளில் ஈடுபடும்போது, குற்றம் மற்றும் குற்ற வகைகள் பற்றிய தகவல்களைத் தேடிப்பார்க்க இயலும், குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கு, 31-1-2020 நிலவரப்படி இந்த வசதியைப் பயன்படுத்தி 113 திருட்டுப் போன வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், 12 சந்தேக நபர்கள் குற்ற வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் (CCTNS) முறையிலான தரவுகளை பயன்படுத்தி இந்நாள்வரையில் 780 திருட்டு போன வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில், 102 திருட்டுப் போன வாகனங்கள் 2019 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவல் துறை இணையதளத்தில் குடிமக்களுக்கான சேவைகள் (31-1-2020 நிலவரப்படி) வழங்கப்பட்டு வருவதன் விவரம்

- பொதுமக்கள் முதல் தகவல் அறிக்கையைப் பார்வையிட மற்றும் பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 12,67,512 முதல் தகவல் அறிக்கைகள் பார்வையிடப்பட்டும் பதிவிறக்கம் செய்யப்பட்டும் உள்ளன.

- காணாமல் போன ஆவணங்கள் குறித்து இணையதளத்தில் புகார் தெரிவிக்கும் வசதியின்மூலம் 6,30,934 காணாமல் போன ஆவணங்கள் குறித்த அறிக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

- 2,63,97,790 குடிமக்கள் காவல் துறை இணையதளத்துக்குள் வந்து, அதன் விவரங்களைப் பார்வையிட்டும் காவல் சேவைகளைப் பயன்படுத்தியும் உள்ளனர்.

- 4,83,525 இணையதள புகார்கள் இதுவரையில் பெறப்பட்டு, அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 1,58,930 குடிமக்கள் தமிழ்நாடு காவல் குடிமக்கள் சேவை கைபேசி செயலியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

- சாலை விபத்துகளில் பாதிக்கப்படுபவர்கள் அவர்களுக்குரிய இழப்பீடுகளை விரைவில் பெறுவதற்கு ஏதுவாக சாலை விபத்து வழக்கு ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்யும் வசதியானது தமிழ்நாடு காவல் துறை இணையதளத்தில் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் ஒரு ஆவணத்திற்கு ரூ.20/- என இணையதள கட்டணம் செலுத்தும் முறைப்படி செலுத்தி அதனைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதுவரை பாதிக்கப்பட்டவர்கள் 86,431-க்கும் மேற்பட்ட ஆவணங்களை இந்த வசதியைப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்துள்ளனர்.

- இந்த வசதியானது காப்பீட்டு நிறுவனங்களுக்கும் ஒரு ஆவணத்திற்கு ரூ.100 என்கிற வகையிலும் மற்றும் தீர்ப்பாய கோரிக்கைகள் தொடர்பாக மாநில/ மாவட்ட சட்டப் பணி ஆணையங்கள் மற்றும் மாநில போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றுக்கு இலவசமாக பதிவிறக்கம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காப்பீட்டு நிறுவனங்கள் ரூ.1.16 கோடி கட்டணத்தைச் செலுத்தி இந்த வசதியைப் பயன்படுத்தி 1,05,733-க்கும் அதிகமான ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்துள்ளன. காப்பீட்டு நிறுவனங்கள் இந்த ஆவணங்கள் பதிவிறக்கத்தினைப் பயன்படுத்தி சுமார் ரூ.36.77 கோடி அளவுக்கு இழப்பீட்டு கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளனர்.

- கடவுச்சீட்டு முன்நடத்தை பதிவுக்காக விண்ணப்பித்துள்ள 10,508 விண்ணப்பதாரர்கள் குற்ற வழக்குப் பின்னணியில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

➢ குடிமக்களுக்கு முதல் தகவல் அறிக்கை, சமுதாயப் பதிவேட்டு அறிக்கை, இணையதள புகார்கள் பற்றிய முடிவுகள், இணையதள புகார்கள் பதிவு, சாலை விபத்து வழக்குகள் பதிவு, சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்புதல், குற்றவாளியின் உறவினர்களுக்குக் கைது செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவித்தல் போன்றவை சம்பந்தமாக 80.43 இலட்சம் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன. சராசரியாக ஒரு நாளைக்கு 8,432 குறுஞ்செய்திகள் குடிமக்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணினியில் குற்றவாளிகளின் வண்ண உருவப் படம் வரைதல்

இந்த முறைமையின்கீழ் 2001 முதல் 31-12-2019 வரை குற்ற வழக்குகளுடன் தொடர்புடைய 1,125 உருவப் படங்கள் வரையப்பட்டன. இந்த ஆண்டில், 24 உருவப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

6) குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமை செயலி பயிற்சி

இந்த ஆண்டில் 1-1-2019 முதல் 31-12-2019 வரை காவல் அலுவலர்கள் உள்ளிட்ட 14,105 காவல் ஆளிநர்கள் குற்றம் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறைமை செயலி பற்றிய பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

➢ 88 காவல் ஆளிநர்கள் ‘இந்தியாவில் குற்றங்கள்’ என்ற செயலி பற்றிய பயிற்சி பெற்றனர்.

➢ 39 மாவட்டங்கள் மற்றும் தனிப் பிரிவுகளைச் சேர்ந்த 961 காவல் ஆளிநர்கள் தனிப் பிரிவு மற்றும் உருவப் படம் அமைக்கும் முறைமை பற்றிய பயிற்சி பெற்றனர்.

7) தமிழ்நாடு குற்ற ஆய்வு விவரம்

மாநில குற்ற ஆவணக் கூடம் ‘தமிழ்நாடு குற்ற ஆய்வு’ என்ற தலைப்பில் ஒவ்வோர் ஆண்டும் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் குற்ற ஆய்வு விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாநில குற்ற ஆவணக் கூடம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலான மாதாந்திர குற்றப் புள்ளிவிவரங்களை

2020 மார்ச் 24]

ஒவ்வொரு மாதமும் பிரசுரித்து வருகிறது. மாநில குற்ற ஆவணப் பிரிவு சுருக்கப் பிரசுரம் 2019 டிசம்பர் மாதம் வரை வெளியிடப்பட்டுள்ளது.

"வாகன் சமன்வே" முறையின்கீழ் கண்காணிப்பு மேற்கொள்ளுதல்

2014 ஆம் ஆண்டிலிருந்து, களவுபோன மற்றும் மீட்கப்பட்ட வாகனங்கள் குறித்த விவரங்கள் வாகன் சமன்வே மென்பொருள் சாதனத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு குறிப்பிட்ட வாகனம் திருடப்பட்டுள்ளதா அல்லது மீட்கப்பட்டுள்ளதா என்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ள இயலும். நாடு முழுவதிலுமுள்ள வாகனத்தின் உரிமையாளர் விவரம் குறித்தும் காவல் துறையினர் கண்டறிய முடியும். இதனடிப்படையில், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு வாகனங்களைக் கொண்டு செல்ல சம்பந்தப்பட்ட மாவட்டம் அல்லது நகர அதிகாரிகள் தடையில்லாச் சான்று வழங்க முடியும்.

சிறையிலிருந்து விடுதலையானோர் மீதான கண்காணிப்பு

சொத்து தொடர்பான குற்றங்கள் புரிந்து சிறையிலிருந்து விடுதலையானோர் பற்றிய விவரங்கள், காலமுறைப்படி சேகரித்து தொகுக்கப்படுகின்றன. 31-1-2020 வரையான நிலவரப்படி, சிறையிலிருந்து விடுதலையான (பிணை/விடுதலை) 19,162 சொத்து தொடர்பான குற்றவாளிகள் பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான விழிப்புணர்வுத் தகவல்கள், சம்பந்தப்பட்ட ஆணையரகங்களுக்கு/ மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பப்பட்டுள்ளன.

குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவு

இப்பிரிவானது, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புலன்விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கிறது. காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவானது பல்வேறு தலைப்புகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றங்கள் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுத்து அவற்றை தேசிய குற்ற ஆவணக் கூடத்திற்கு அனுப்புகிறது.

விரல் ரேகைப் பதிவுக் கூடம்

தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம், 1895 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. இக்கூடம், உலகிலேயே மிகப் பழமையான கூடங்களில் ஒன்றாகும்.

[2020 மார்ச் 24

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அனைத்து மாவட்டக் காவல் தலைமையிடங்கள்/ ஆணையரகங்களில், தனி விரல்ரேகைப் பதிவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில், மொத்தம் 39 தனி விரல்ரேகைப் பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. மேலும், சிறப்புப் பிரிவுகளான வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆகியவற்றிலும் செயல்பட்டு வருகிறது.

விரல்ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் திகழ்கிறது. இதில், 2,04,839 தண்டனை பெற்ற நபர்களின் விரல்ரேகைப் பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கூடமானது, நீதிமன்றங்கள் மற்றும் பிற துறையினரால் வல்லுநர் கருத்துக்காக அனுப்பப்படுகின்ற ஐயத்திற்குரிய ஆவணங்களின்மீது காணப்படும் விரல்ரேகைப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்யும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தனி விரல்ரேகைப் பதிவுக்கூடப் பணியாளர்களின் பிரதான பணியானது குற்றச் சம்பவ இடங்களுக்குச் சென்று குற்றவாளிகள் விட்டுச் சென்ற தடயப் பதிவுகளைச் சேகரிப்பதாகும். இந்த விரல்ரேகைப் பதிவுகள், நீக்கம் செய்யப்படுவதற்காக வீட்டில் இருப்பவர்களின் விரல் ரேகைப் பதிவுகளோடு ஒப்பீடு செய்யப்பட்டு, மீதமுள்ள விரல் ரேகைப் பதிவுகள் நிலவரப்படுத்தப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலுள்ள விரல்ரேகைப் பதிவு பிரிவுகளோடும் நீட்டிக்கப்பட்டுள்ள விரல்ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமையின் (FACTS) 7-வது பதிப்பு தரவுதளத்தில் சரிபார்த்தல் செய்யப்படுகிறது. இந்த முறையின்கீழ் இதுவரையில் 108 பதிவுகள் அடையாளப் பொருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இப்பிரிவில் உள்ள 220 ஆளிநர்களில் 74 பெண் ஊழியர்கள் மற்றும் 146 ஆண் ஊழியர்கள் ஆவர்.

2019 ஆம் ஆண்டு தனி விரல்ரேகைப் பதிவுக் கூடத்தின் பணியாளர்கள் 3,856 நிகழ்வுகளில் சம்பவ இடத்திற்குச் சென்று, அங்கு எடுக்கப்பட்ட தடயப் பதிவுகள் குற்றவாளிகளின் பதிவுகளோடு ஒப்பிட்டு அடையாளம் காணப்பட்டு அதன்மூலம் 344 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆம் ஆண்டு நீதிமன்றம், நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவு, இரயில்வே பணி நியமன ஆணையம், பாரத ஸ்டேட்

2020 மார்ச் 24]

வங்கி, கனரக வாகன தொழிற்சாலை, இராணுவ சீருடை தயாரிப்புத் தொழிற்சாலை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை மற்றும் வருமான வரித் துறை போன்ற பல்வேறு முகமைகளிலிருந்து (பல்வகை பொறுப்பு நியமனங்களுக்காக) 97 ஆவணங்கள் விரல்ரேகை சோதனைக்கான சான்றிதழ் வழங்கும்பொருட்டு வரப்பெற்றுள்ளன மற்றும் அத்தகைய விரல் ரேகை சோதனைக்கான சான்றிதழ் வழங்குவதற்காக ரூ.42,500/- கட்டணம் வசூலிக்கப்பட்டது. மேலும், பொதுமக்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு விரல்ரேகை பதிவுச் சீட்டுகள் வழங்குவதற்குக் கட்டணமாக ரூ.1,39,500/- வசூலிக்கப்பட்டது. மேற்படி கட்டணங்கள் அனைத்தும் இணையதளம் மூலமாக வசூலிக்கப்பட்டு நேரடியாக கருவூலக் கணக்கில் செலுத்தப்பட்டது.

மேலும், விரல் ரேகைப் பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமையை 7 ஆம் பதிப்பாக அரசாணை (டி) எண் 160, உள் (நவீனம்) துறை, நாள் 19-2-2016-ன்படி தரம் உயர்த்தப்பட்டு 5-10-2018 முதல் செயலில் இருந்து வருகிறது. இம்முறையானது அனைத்து மாவட்ட விரல்ரேகைப் பதிவுப் பிரிவுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த முறையைப் பயன்படுத்தி, அன்றாட கைது விவரச் சீட்டுகள், தண்டனைக் குறிப்பாணைச் சீட்டுகள், தடயப் பதிவுகள், மாவட்டப் பிரிவுகளில் இருந்து பார்வையில் படாத குற்றவாளிகள் மற்றும் இறப்பு அறிக்கைகளைக் குறித்து வைத்தல் ஆகியவற்றையும் நிலவரப்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆண்டில் சுமார் 22,531 அன்றாட கைது விவரச் சீட்டுகளும் மற்றும் 7,626 தண்டனை விவரச் சீட்டுகளும் இந்த தரவுதளத்தின்மூலம் நிலவரப்படுத்தப்பட்டு அதன் மூலமாக 91 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, சுமார் ரூ.2.5 கோடி மதிப்புள்ள சொத்துகள் குற்றவாளிகளிடமிருந்து மீட்கப்பட்டன.

8) தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள்

ஆவடியில் உள்ள படைக்கல மையம் (ஆயுதப் படை காவல் பயிற்சி மையம்) மற்றும் சிறு ஆயுதக் கிடங்கு உட்பட, 15 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள் உள்ளன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 8-ம் அணியானது, புது தில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் சிறப்புப் பணியில் உள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள், தேர்தல் பணிகள் உட்பட பெரிய அளவிலான சட்டம் ஒழுங்குப் பாதுகாப்புப் பணிகளில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், பிற மாநிலங்களிலும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

[2020 மார்ச் 24

காவல் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக, ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் கட்டுப்பாட்டில் இரண்டு மோட்டார் வாகனப் பராமரிப்புப் பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன.

9) செயலாக்கப் பிரிவு

பல்வேறு தேவைகளுக்காக சிறப்பு பயிற்சி பெற்ற ஆளிநர்களை (அதிரடிப் படை வீரர்கள்) தயார் நிலையில் வைத்திருப்பது மற்றும் பயிற்சி அளிப்பது போன்ற தேவைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. இப்பிரிவில், தமிழ்நாடு அதிரடிப்படை, அதிரடிப்படைப் பள்ளி, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியில் உள்ள மோப்ப நாய்ப் படைப் பிரிவு ஆகியன அடங்கும்.

10) தமிழ்நாடு அதிரடிப் படை

1991 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த சிறப்பு பாதுகாப்பு குழு மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளி ஆகிய பிரிவுகள் உருவாக்கப்பட்டன. தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளி ஆகியன காவல் துறை இயக்குநர், செயலாக்கம் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அதிரடிப் படையானது, முதன்மையாக பயங்கரவாதிகளுக்கு எதிரான செயல்பாடுகளுக்காகவும் மற்றும் துல்லியமான நுண்ணறிவுத் தகவல் இருக்கக்கூடியபட்சத்தில் உண்மையான கள காவல் எதிர்மோதலுக்கும் அல்லது காவல் எதிர்மோதல் நிகழுமென்ற ஐயப்பாட்டின் பேரிலும் பயன்படுத்தப்பட்டுவரும் படையாகும்.

11) தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை

பேரிடர் மேலாண்மை நிவாரணம் மற்றும் மீட்பு ஆகியன இயற்கை மற்றும் மனிதர்களால் நிகழ்த்தப்படும் பேரிடர் காலங்களில் எந்த ஓர் அரசாங்கத்திற்கும் பெரிய கவலையளிக்கும் விஷயமாக இருந்து வருகிறது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை 2017 ஆம் ஆண்டு துவக்கப்பட்டதைத் தொடர்ந்து அது 2019 ஆம் ஆண்டு முதல் முழு அளவிலான படையாகச் செயல்பட்டு வருவதோடு, பழக்கப்படுவதற்கான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 24]

சுனாமி/வெள்ளத் தடுப்பு ஒத்திகை பயிற்சிகள் திருவள்ளூர் மாவட்டம், மணலியில் அமைந்துள்ள சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் பிற முகமைகளோடு இணைந்து 22-3-2019 அன்று நடத்தப்பட்டது.

பழக்கப்படுத்தல் பயிற்சிக்காக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினர் கண்காட்சி, செயலாக்க விளக்கம் மற்றும் பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றனர். இத்தகைய பழக்கப்படுத்தல் செயல் பயிற்சிகள் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருச்சி மற்றும் மதுரை போன்ற இடங்களில் 4-11-2019 முதல் 8-11-2019 வரை பொதுமக்களுக்கு தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைப் படை ஆளிநர்கள் அவசரக் காலங்களில் செய்துவரும் பணிகள் குறித்து விளக்குவதற்காக நடத்தப்பட்டது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் சேவைகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக்கொள்ளும்பொருட்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 13 ஆம் அணியை மறு பெயராக்கம் செய்து, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைப் படை எனக் கூடுதல் காவல் துறை இயக்குநர் செயலாக்கம் அவர்களது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படை ஆகியவற்றைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் ஆகியோர் பேரிடர் மேலாண்மைக்கான அம்சங்கள் குறித்த பயிற்சிகளை 12 கடலோர மாவட்டங்கள் மற்றும் சென்னை நகரிலுள்ள காவல் ஆளிநர்களுக்கு அளித்தனர். அதன் நோக்கம் எந்தவிதமான பேரிடரையும் எதிர்கொள்ளும் முதலாவது நபர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின் மோப்ப நாய்ப் படைப் பிரிவு

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியில் மோப்ப நாய்ப் படை பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில், நாசவேலை தடுப்புச் சோதனைகள் மற்றும் குண்டு வெடிப்பு குறித்த தொலைபேசி மிரட்டல்கள் போன்ற 1,281 நிகழ்வுகளில், மோப்ப நாய்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இத்தகைய பயிற்சிகள் மாதம் ஒன்றுக்கு இரண்டு உளவு செயல்பாட்டிற்கும் மற்றும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒத்திகைப் பயிற்சிகள் தமிழ்நாடு அதிரடிப் படையில் உள்ள துரித செயல்பாட்டுப் படை ஒவ்வொன்றுக்கும்

[2020 மார்ச் 24

செய்ய வேண்டுமென அதிகரிக்கப்பட்டது. இவை தவிர, தமிழ்நாடு அதிரடிப் படையில் உள்ள துரித செயல்பாட்டுப் படை, தேசிய பாதுகாப்புக் குழுமம் மற்றும் இதர மத்திய துணை ராணுவப் படைகளான மத்திய தொழிற்பாதுகாப்புப் படை போன்றவற்றின் ஒத்திகைப் பயிற்சியிலும் பங்கு கொள்கின்றன.

12) சிறப்பு இலக்குப் படை (STF)

பிரிவின் உருவாக்கம்

சிறப்பு இலக்குப் படையானது 1993 ஆம் ஆண்டு இந்த அரசால் கீழ்க்கண்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டது: அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளைக் கைது செய்வது, ஆ) ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கையாளுதல், இ) விமானக் கடத்தல், கடத்தல் மற்றும் பிணைத் தொகைக்காக ஆட்கடத்தல் வழக்குகளைக் கையாளுதல் மற்றும் ஈ) இயற்கைப் பேரழிவுகளின்போது உதவி புரிதல். 18-11-2004 அன்று சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு அரசு சிறப்பு இலக்குப் படையானது கீழ்க்கண்ட தேவைகளுக்காகத் தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண் 1358, உள் (காவல்-8) துறை, நாள் 6-12-2004-ன்படி ஆணை பிறப்பித்துள்ளது:

(1) வனப் பகுதி சரணாலயங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், (2) மலைவாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் (3) காடுகளைத் தீவிரவாதிகள் தங்கள் புகலிடமாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் தடுத்தல். ஈரோடு மாவட்டத்திலுள்ள புதுக்குய்யானூர் என்ற இடத்தில் நிலையாகத் தலைமையிடத்தை ஏற்படுத்தி, தகவல் தொடர்பிற்காக செயல்பாட்டுப் பிரிவு மற்றும் மறுஅஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றையும் ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் சுமார் 21,700 சதுர கிலோ மீட்டர் தூரப் பகுதி வரையிலும், சிறப்பு இலக்குப் படையினர் தங்களது செயல்பாட்டு நடவடிக்கைகளை நீட்டிப்பு செய்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றனர்.

2020 மார்ச் 24]

13) கடலோரப் பாதுகாப்புக் குழுமம்

தமிழ்நாடு, 13 கடலோர மாவட்டங்கள் மற்றும் 591 மீனவ கிராமங்களை உள்ளடக்கிய 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடலோர எல்லைப் பகுதியைக் கொண்டுள்ளது. (1) எரிபொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கடல் வழியாக கடத்துவதைத் தடுக்கவும், (2) தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும், (3) மீனவர்கள் மற்றும் போராளிகளுக்கு இடையேயான கூட்டுச் சதி உருவாவது போன்றவற்றைத் தடுக்கவும், கடலோரப் பாதுகாப்புக் குழுமம் 1994 ஆம் ஆண்டு இந்த அரசால் உருவாக்கப்பட்டது.

சமீப காலம் வரை, கடலோரப் பாதுகாப்புக் குழுமமானது கடலோரப் பகுதிகளில் சுற்றுக் காவல் மேற்கொள்ளுதல், சோதனைச் சாவடிகளில் வாகனங்களைச் சோதனையிடுதல் போன்ற தரைப் பரப்புப் பணிகளை மட்டுமே செய்து வந்தது. 6 மண்டல அலுவலகங்களும், 11 அலகுகளும், 60 சோதனைச் சாவடிகளும் அமைக்க 1994 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

கடலோர பாதுகாப்புக் குழுமம் திட்டம்-I

மத்திய அரசின் கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 12 கடல்சார் காவல் நிலையங்கள், 12 கடல்சார் புறக்காவல் மற்றும் 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. மேலும், கைத்துப்பாக்கிகள், இலகுரக இயந்திர துப்பாக்கி (LMG), இந்திய சிறு ஆயுத முறை (INSAS) துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் போன்றவற்றுடன்கூடிய 12 டன் திறன் கொண்ட 12 படகுகளையும் மற்றும் 5 டன் திறன் கொண்ட 12 படகுகளையும் இந்திய அரசு வழங்கியுள்ளது.

கடலோரப் பாதுகாப்புக் குழுமம் திட்டம்-II

இத்திட்டத்தின்கீழ், 30 கடல்சார் காவல் நிலையங்களுக்கு 12 வாகனங்கள் மற்றும் சாதனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டன. கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தின் விரைவு இடைமறி படகுகளை நிலைநிறுத்த ரூ.50 இலட்சம் செலவில் இரண்டு இடங்களில் கட்டுமானம் முடிக்கப்பட்டு, பிற இடங்களில் கட்டுமானம் நடைபெற்று வருகிறது. 10 கடல்சார் காவல் நிலையங்களுக்கான பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு காலியிடங்களை நிரப்பும் பணி நடைபெற்று வருகிறது. 19 மீட்டர் மோட்டார் படகுகள் இந்திய அரசு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

அ. படகு நிறுத்தும் இடங்களை இரண்டாம் கட்டத்தின்கீழ் கட்டுமானம் செய்தல்

ஏற்கெனவே உள்ள 9 மீனவப் படகு நிறுத்தும் இடங்களை நீட்டிப்பு செய்து/மாற்றியமைத்து ரூ.4.5 கோடி செலவில் கட்டுமானம் செய்திட தமிழ்நாடு மீன் வளத் துறைக்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் மற்றும் குளச்சல் ஆகிய இடங்களில் நிறைவு பெற்று மீதமுள்ள 7 இடங்களில் நடைபெற்று வருகிறது.

ஆ. மூன்றாம் கட்ட கடலோரப் பாதுகாப்புத் திட்டம்

மூன்றாம் கட்ட கடலோரப் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ.404 கோடி வழங்கிட கோரும் கருத்துரு ஒன்று ஏற்கெனவே தமிழ்நாடு அரசுமூலம் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கட்டணமில்லா தொலைபேசி எண் 1093 பாதிப்புக்கு உள்ளாகும் மீனவர்கள் மற்றும் கடலோரப் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களைப் பெறுவதற்காக நாள் முழுவதும் செயல்பட்டு வருகிறது. இந்த 1093 கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக 1-1-2019 முதல் 31-12-2019 வரை 80 அழைப்புகள் பெறப்பட்டு கடல்சார் காவல் பணியாளர்கள் 90 மீனவர்கள் பாதிப்பில் இருந்தபோது அவர்களையும் அவர்களது 20 படகுகளையும் மீட்டுள்ளனர்.

தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழுமமானது 10 தேசிய கடல்சார் மீட்பு செயல்பாட்டின்போது, செயல்திறன்மிக்கவர்களை அமர்த்தி எஸ்.ஏ.ஆர்., உள்ளூர் மீனவ நிருவாகத்தினரோடு ஒருங்கிணைப்பு மேற்கொண்டு மீனவப் படகுகளை மீட்டு, 36 உயிர்களையும் காப்பாற்றியுள்ளனர். இதற்காக 2018-2019 ஆம் ஆண்டுக்கான தேசிய கடல்வழி சோதனை மற்றும் மீட்பு (என்.எம். எஸ்.ஏ.ஆர்.) விருது தமிழக கடலோரப் பாதுகாப்புக் குழுமத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வாறு சீரிய முறையில் மீட்புப் பணிகளை செய்துள்ளது, கடல்வழி பாரம்பரியத்துடன் இணைந்த ஒன்றாகும். இந்த விருதானது கடலோரப் பாதுகாப்புக் குழுமத்திற்கு 18-12-2019 அன்று புதுடெல்லியில் வழங்கப்பட்டது.

கடல்சார் காவலர்கள் தீவிரமாக தமிழகத்தின் கடலோர பகுதிகளில் விரைவு இடைமறிப் படகு மற்றும் அனைத்து

2020 மார்ச் 24]

நிலப்பரப்பு வாகனப் படகுகளில் ரோந்துப் பணியை மேற்கொண்டு, கடல்சார் சூழலியல் முறை பாதுகாப்புக்குப் பெரிதும் பங்களிப்பு செய்துள்ளனர். கடல்சார் காவலர்கள் 1-1-2019 முதல் 31-12-2019 வரை மிகப் பெரிய அளவில் 264 கிலோ கஞ்சா, 1,165 கிலோ பீடி இலைகள், 6,516 கிலோ கடல் அட்டைகள் (18,300 எண்ணிக்கை) மற்றும் யானை தந்தம் ஒரு ஜோடி, 85 டெட்டனேட்டர்கள், 22 ஜெலட்டின் குச்சிகள் ஆகியவை உள்ளிட்ட பறிமுதல்கள் கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தால் செய்யப்பட்டன. அடிக்கடி இத்தகைய பறிமுதல்களைக் கடலோரக் காவல் குழுமத்தினர் செய்து வருவது குற்றவாளிகள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுத்தும், மேலும் அக்குற்றவாளிகள் கடல்வாழ் உயிரினங்களைப் பிடித்து, அவற்றைச் சேமித்து வைத்து, அங்காடியில் விற்கக்கூடிய நபர்களுக்கு விற்கும் செயல்களை தடுத்தும் வந்துள்ளனர்.

இ. கடல்வழிச் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களின் அமலாக்கம்

1-1-2019 முதல் 31-12-2019 வரை இந்திய கடவுச் சீட்டு சட்டம் 1967, வெளிநாட்டினர் சட்டம் 1946, ஆயுதச் சட்டம், 1959, வெடிமருந்துப் பொருள் சட்டம் 1908 மற்றும் இந்திய கடல்வழி மண்டல (மீன்பிடிப் படகுகள் ஒழுங்குமுறை) சட்டங்கள் 1981 ஆகிய கடல்வழிச் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களைச் சிறப்பான வகையில் அமல்படுத்தி 163 வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

ஈ. கிராம கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள்

கிராம கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள் அனைத்து கடலோர மாவட்டங்களிலும் காலமுறை தவறாது சம்பந்தப்பட்ட மண்டல/ பிரிவு அலுவலர்களால் நடத்தப்பட்டு வருகிறது. 1-1-2019 முதல் 31-12-2019 வரை 333 கடலோர கண்காணிப்புக் குழுக் கூட்டங்கள் கடலோரப் பாதுகாப்பு அலுவலர்களால் கடலோரப் பாதுகாப்பு குறித்தும் மற்றும் பிற கடலோரப் பிரச்சினைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்டு, அதன் காரணமாக கடலோரக் காவல் துறையினர் மீனவ மக்களுடன் நல்ல உறவு மேற்கொண்டு, தேவையான நுண்ணறிவு தகவல் சேகரிப்பிற்கும் ஏதுவாக அவை அமைந்திருந்தன.

[2020 மார்ச் 24

கடலோரப் பாதுகாப்புப் பயிற்சிகள்

கடலோரப் பாதுகாப்புப் பயிற்சிகள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை கடலோரப் பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகளின்போது, பாதுகாப்பு தயார் நிலையில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியவும் மற்றும் கடலோரப் பகுதிகளில் தயார் நிலையில் இருப்பதற்காகவும் நடத்தப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி "கடல் பாதுகாப்பு-19" இந்திய கடற்படையினரால் 22-1-2019 மற்றும் 23-1-2019 தேதிகளிலும், 2018-2019 ஆம் ஆண்டுக்கான சாகர் காவாச்-2 என்ற பயிற்சி இந்திய கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தினால் 18-7-2019 மற்றும் 19-7-2019 தேதிகளிலும் நடத்தப்பட்டது. 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட சிவப்புப் படை ஆளிநர்கள் வெற்றிகரமாக நீலப் படையினரைத் தடுத்து நிறுத்தினர்.

14) இரயில்வே காவல் படை

இரயில்வே காவல் படையானது, இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும் மாவட்டக் காவல் துறையினருடன் இணைந்து திறமையாகச் செயலாற்றி வருகிறது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி இரயில்வே காவல் மாவட்டங்களில், மொத்தம் 7 உட்கோட்டங்களில், 47 இரயில்வே காவல் நிலையங்களும் 10 இரயில்வே புறக்காவல் நிலையங்களும் உள்ளன.

2019 ஆம் ஆண்டு குற்றங்களைத் தடுத்தல், பயணிகளுக்கு உதவி செய்தல், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஆகியன குறித்த 50,100 அழைப்புகள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இரயில்வே வளாகங்களில் வெடிமருந்துப் பொருட்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிக்க 2 மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 4,598 வழக்குகளில், ரூ.1.3 கோடி மதிப்பிலான சொத்துகள் மீட்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் 211 சிறுமிகள் உட்பட மொத்தம் 1,558 இளஞ்சிறார்கள், சென்னை இரயில்வே காவல் மாவட்டத்தின் இரயில்வே வளாகத்திலும் மற்றும் இரயில்களிலிருந்தும் மீட்கப்பட்டு அவர்களில் 1,016 நபர்கள் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, மீதமுள்ள 542 நபர்கள் அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் மூலமாக சிறார் நல்வாழ்வுக் குழு முன்பாக ஒப்படைக்கப்பட்டனர்.

2020 மார்ச் 24]

15) சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு

1955 ஆம் ஆண்டைய குடிமையியல் உரிமை பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர்/ பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் மற்றும் 2014 ஆம் ஆண்டைய பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்பு திருத்தச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவானது தற்போது கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டில் 1972 ஆம் ஆண்டு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான உடல்ரீதியான வன்முறை மற்றும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். தற்போது, 31 மாவட்டங்கள் மற்றும் 7 ஆணையரகங்களில் உள்ள 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளின் செயல்பாட்டினைக் கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறைத் துணைத் தலைவர் மற்றும் உதவிக் காவல் துறைத் தலைவர் ஆகியோர் மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் வன்கொடுமை வழக்குகள் தாக்கலாகும் போக்கு குறைந்த வண்ணம் உள்ளது. 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் 2018 ஆம் ஆண்டு 1,238 வழக்குகளும், 2019 ஆம் ஆண்டில் 1,264 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 426 வழக்குகள் புலன்விசாரணையில் இருந்து வந்தன. 2019 ஆம் ஆண்டு 1,264 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 1,072 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 192 வழக்குகள் புலன்விசாரணையில் இருந்து வருகின்றன.

வன்கொடுமையினால் பாதிப்புக்குள்ளாகும் கிராமங்களைக் கண்டறியும் கணக்கெடுப்புப் பணியைச் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் மேற்கொள்கின்றனர். வன்கொடுமையைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது உறுதுணையாக அமைகிறது. 2019 ஆம் ஆண்டில் 899 கிராமங்கள் வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள கிராமங்களாகக் கண்டறியப்பட்டன. மாவட்டங்களில் உள்ள சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் கிராமங்களில் ஆய்வு

[2020 மார்ச் 24

நடத்தி, அங்கு ஏதாவது பிரச்சினைகள்/குறைபாடுகள் இருப்பின் அதன்காரணமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கும் மற்றும் பிறருக்கும் இடையில் அசம்பாவித நிகழ்வு எதுவும் நடைபெறாது தடுக்கும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு, மாவட்ட ஆட்சியர்கள் நிதி நிவாரணம் அளிப்பது குறித்த கருத்துருக்களையும் இப்பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

2012 முதல் 2019 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி நிவாரண உதவிகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	வருடம்	வழக்குகள் எண்ணிக்கை	பாதிக்கப் பட்டவர்கள் எண்ணிக்கை	நிவாரணத்தொகை (ரூ. கோடியில்)
1	2012	652	1120	1.89
2	2013	746	1342	3.83
3	2014	575	979	3.88
4	2015	810	1586	5.65
5	2016	736	1339	5.79
6	2017	1399	2322	14.68
7	2018	1190	1814	15.50
8	2019	1369	2219	22.50

அளவை அறிக்கை மற்றும் அரசாணை

சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பணியாளர்கள் 2012 ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரப்படி அளவை அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டுக்கு அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சுடுகாடு வசதி, சுடுகாட்டிற்கு பாதை வசதி, இணைப்பு சாலை, கூட்டு இல்லங்கள் கட்டுதல் போன்றவற்றை வன்கொடுமை பாதிப்புக்குள்ளாகக்கூடிய கிராமங்களில் அமைப்பதற்காக

2020 மார்ச் 24]

அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை முன்பாக வழங்கப்பட்டது. அதனைப் பரிசீலனை செய்த அரசு, அரசாணை (நிலை) எண் 67, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (பி.ஆர்.3) துறை நாள்: 4-6-2019-ன்படி 2018-2019 ஆம் ஆண்டுக்கும் மற்றும் அரசாணை (நிலை) எண் 113, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (பி. ஆர்.3) துறை நாள்:18-9-2019-ன்படி 2019-2020 ஆம் ஆண்டுக்கும் தலா ரூ.100 கோடியினை பட்டியலிடப்பட்ட வன்கொடுமைத் தாக்குதலுக்குள்ளாகும் கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒப்பளிப்பு வழங்கியது.

சாதி நல்லிணக்கத்தை வளர்த்தல்

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் மாவட்ட நிருவாகத்தினரால், காவல் அலுவலர்களோடு சேர்ந்து தமிழகத்திலுள்ள வன்கொடுமை பாதிப்புக்குள்ளாகக்கூடிய கிராமங்களில் சாதி நல்லிணக்க வாரம் கடைபிடிக்கப்பட்டது. அதற்காக தமிழக அரசு அரசாணை எண் 254, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வு (பி.ஏ.1) துறை நாள் 18-12-2019-ன்படி ரூ.17 இலட்சம் மட்டும் அத்தகைய சாதி நல்லிணக்க வாரத்தை அனுசரிப்பதற்காக மாவட்ட நிருவாகத்தினருக்கு ஒதுக்கீடு செய்தது.

மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு

மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் கால முறைப்படி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு, அவை சமூக நீதி மற்றும் மனித உரிமை கூடுதல் காவல் துறை இயக்குநரால் மேற்பார்வையிடப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் இவ்வகையாக மொத்தம் 63 கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டு சுமார் 1,200 காவல் அலுவலர்களுக்கு 1955 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை) தடுப்புச் சட்டத்தின் முக்கிய பிரிவுகளின்கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

[2020 மார்ச் 24

16) காவல் பணிக்கு உதவிடும் துணைப் பிரிவுகள்

(அ) மோப்ப நாய்ப் படை

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறியவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மோப்ப நாய்ப் படை செயல்பட்டு வருகிறது. சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிரடிப் படை போன்ற சிறப்புப் பிரிவுகளிலும் மோப்ப நாய்ப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பணிகளுக்காக, மாநிலத்தில் தற்போது 201 மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) குதிரைப் படை

சென்னை மற்றும் மதுரை மாநகரங்களிலுள்ள காவல் துறை குதிரைப் படையானது, பண்டிகைகள்/ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்போது கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தினவிழா போன்ற சிறப்புக்கால நிகழ்வுகளின் போதும் ஈடுபடுத்தப்படுகிறது. தற்போது, இப்படையிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை 38 ஆகும்.

17) காவலர் பயிற்சி

(அ) பயிற்சி தலைமையகம்

1896 ஆம் ஆண்டுக்கு முன்னரே வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி துவக்கப்பட்டு, பின்னர், 1905 ஆம் ஆண்டில் காவலர் பயிற்சி கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. இக்காவலர் பயிற்சி கல்லூரி 1976 ஆம் ஆண்டில் சென்னை அசோக் நகருக்கு மாற்றப்பட்டது. இக்காவலர் பயிற்சி கல்லூரி, காவல் உயர் பயிற்சியகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் செயல்பட்டு வருகிறது.

வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடியில் உள்ள பேரூரணி, திருவள்ளூரிலுள்ள ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய எட்டு நிரந்தரக் காவலர் பயிற்சி பள்ளிகளின் பயிற்சி நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தலைமையிடமாகச் சென்னை அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரி தொடர்ந்து

2020 மார்ச் 24]

செயல்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வொரு சரகம்/நகரங்களில் செயல்பட்டு வரும் 13 பணியிடைப் பயிற்சி மையங்களும், காவல் துறை இயக்குநர், பயிற்சி அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

(ஆ) தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்

காவல் உயர் பயிற்சியகமானது, உதவி ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடிய முதன்மை காவல் பயிற்சி நிறுவனமாகும்.

2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் வழங்கப்பட்ட குறுகிய கால வகுப்புகள் கொண்ட பயிற்சி வகுப்புகள் உதவி ஆய்வாளர்கள் முதல் காவல் கூடுதல் கண்காணிப்பாளர்கள் வரையிலான காவல் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் 1,645 நபர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது. இது தவிர, நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) 230 நபர்கள் மற்றும் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் (விரல் ரேகை பதிவு) 179 நபர்களுக்கும் இந்த நிறுவனத்தால் முறையே 1-3-2019 மற்றும் 4-3-2019 முதல் பயிற்சி வழங்கப்பட்டு அவர்களது பயிற்சிகள் முறையே 1-9-2019 மற்றும் 3-9-2019 ஆகிய நாட்களில் முடிவடைந்தன. அவர்களுக்கான பிரிவு உபச்சார அணிவகுப்பு தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 3-9-2019 அன்று நடத்தப்பட்டது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட 19 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் (வகை 1-அணி-X-A), 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் (வகை 1-அணி-X-B) மற்றும் 230 காவல் உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) மற்றும் 179 காவல் உதவி ஆய்வாளர்கள் (விரல்ரேகைப் பதிவு) ஆகியோருக்கான பயிற்சி தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் முறையே 14-6-2019, 1-11-2019, 1-3-2019 மற்றும் 4-3-2019 ஆகிய தேதிகளில் துவக்கப்பட்டது. இந்தப் பயிற்சியானது, காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கு முறையே 13-6-2020 மற்றும் 31-10-2020 ஆகிய தேதிகளில் முடிவடையும். மேலும், உதவி ஆய்வாளர்களுக்கான பயிற்சியானது முறையே 1-9-2019 மற்றும் 3-9-2019 ஆகிய தேதிகளில் முடிவடைந்தன.

2018 ஆம் ஆண்டில் அமைச்சுப் பணியாளர்களுக்கான 4 நாட்கள் செறிவூட்டும் பயிற்சி வகுப்புகள் பல்வேறு தலைப்புகளில் இளநிலை உதவியாளர்கள் முதல் கண்காணிப்பாளர்கள் வரையில்

[2020 மார்ச் 24

வழங்கப்படுகின்றன. 2018, ஆகஸ்ட் மாதம் முதல் துவங்கி அத்தகைய பயிற்சிகள் கால முறைப்படி ஒரு மாதத்துக்கு ஒரு முறை அளிக்கப்பட்டு வருகிறது. தோராயமாக இந்தப் பயிற்சியின்மூலம் 600 அமைச்சுப் பணியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெறுவோருக்கு முழு உடல் மருத்துவப் பரிசோதனை இலவசமாக வழங்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண் 1809, உள் (காவல்-12) துறை, நாள் 8-10-2018-ன்படி வழங்கப்பட்ட நிதி ஒப்பளிப்பின்பேரில், பெண்கள் மற்றும் சிறாருக்கு எதிரான இணையதள குற்றத் தடுப்புத் திட்டத்தின்கீழ் காவல் அலுவலர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் புலன்விசாரணை அலுவலர்கள் ஆகியோருக்கான தகுதி மேம்பாடு வகுப்புகள் 2018 டிசம்பர் முதல் துவக்கப்பட்டது. 3 வகுப்புகள் (2 மூன்று நாள் பயிற்சிகள் மற்றும் 1 ஐந்து நாள் பயிற்சிகள்) ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது. தோராயமாக இந்தப் பயிற்சியின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 3,200 காவல் அலுவலர்கள் மற்றும் நிதித் துறை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

காவல் பொதுப் பள்ளி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், ஊனமாஞ்சேரி

மேலகோட்டையூரில் காவல் பொதுப் பள்ளி ஒன்று, ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை தற்காலிகமாக தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக வளாகத்தில் செயல்பட அரசாணை (நிலை) எண் 944, உள் (காவல்-10) துறை, நாள்: 27-12-2017-ன்கீழ் அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த வருடம் ஐந்தாம் வகுப்புக்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு இதுநாள் வரையில் 65 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு தற்போது 2 ஜதை சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும், மாணவர்களுக்கு காலையில் சிற்றுண்டியும், நண்பகல் முட்டையுடன் உணவும் வழங்கப்படுகின்றன. காவல் பொதுப் பள்ளியில் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க 5 ஆசிரியர்கள் இருக்க, அவர்களில் ஒருவர் பொறுப்பு தலைமையாசிரியராக பணிபுரிந்து வருகிறார்.

மேலும், 'உங்கள் சொந்த வீடு' திட்டப் பயனாளிகள் மற்றும் இதர காவல் ஆளிநர்கள் பயன்பெறும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூரில் "காவல் பொதுப் பள்ளி" என்ற பெயரில் உண்டி உறைவிடப் பள்ளி ஒன்றை நிறுவுவதற்கும், அதன் முதற்கட்டமாக மரச் சாமான்கள், அறைகலன்கள்

2020 மார்ச் 24]

மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கும் அரசாணை (நிலை) எண் 709, உள் (காவல்-9) துறை, நாள்: 13-7-2018-ன்கீழ் ரூ.40 இலட்சம் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அப்பள்ளியினை 13-6-2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக வளாகத்தில் தற்காலிகமாக காவல் பொதுப் பள்ளி இயங்கும் வகையில் அதற்கான பொலிவுறு வகுப்பறைகளும் தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நேரடி நியமனம் செய்யப்பட்ட 27 காவல் துணைக் கண்காணிப்பாளர் (பிரிவு IX) வெற்றிகரமாக ஓராண்டு அடிப்படை பயிற்சியை முடித்த பின்னர், 30-4-2019 அன்று தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் அவர்களுக்கு வழியனுப்பி வைக்கும் அணிவகுப்பு நடைபெற்றது.

18) தொழில்நுட்பப் பணிகள்

தொழில்நுட்பப் பணிகள் பிரிவானது காவல் துறையினரின் அன்றாட செயல்பாட்டிற்குத் தேவையான தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருவதுடன், இயற்கை சீற்றங்களின்போது, கூடுதல் தகவல் தொடர்புகளை வழங்கி வருகிறது. இப்பிரிவில், (அ) தொழில்நுட்பப் பிரிவு (ஆ) செயலாக்கப் பிரிவு என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன.

தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் கணினிகளைப் பராமரித்தல், புதிய திட்டங்கள் அமலாக்கம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற பணிகளைத் தொழில்நுட்பப் பணிகள் பிரிவினர் கவனித்து வருகின்றனர். இத்தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பானது, முற்றிலும் காவல் துறையினரால் பயன்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இது தகவல் அளித்தல் மற்றும் தரவு பரிமாற்றம் ஆகியவற்றை வழங்குகிறது. தகவல் பரிமாற்றத்திற்காக, அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவல் துறையின் பிற அலகுகள் பரவலாக்கப்பட்ட வலைப்பின்னல்மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

1) மாநிலம் முழுவதும் பணமில்லா மின்னணு இரசீது முறை அமல்படுத்துதல்

சென்னை மாநகரில் போக்குவரத்து விதிமீறல்களின்போது தண்டனைகள் வழங்குவதற்காக மின்னணு முறையில் 205 இரசீது வழங்கும் கருவிகள் வாங்க அரசாணை (நிலை) எண் 620, உள் (நவீனம்) துறை, நாள்:25-6-2018-ன்கீழ் ரூ.5.37 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதனை மாநிலம் முழுவதும் அமல்படுத்துவதற்காக பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 2382, உள் (நவீனம்) துறை, நாள்: 7-12-2018-ன்கீழ் திருத்தப்பட்ட அரசாணை அதே தொகைக்காக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய தகவல் மையமானது ஆன்ட்ராய்டு கைபேசி இயங்குமுறையில் மின்னணு இரசீது செயலியையும், வலைதள இடைமுகத்தையும் வழங்கியுள்ளதுடன், அவை வாகன் சாரதி பயன்பாட்டு மென்பொருளுடன் இணைக்கப்பட்டு, போக்குவரத்து செயலாக்க முறையின் பிரதான செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இதனால் களவுபோன அல்லது காணாமல் போன வாகனங்கள் மற்றும் நாடு முழுவதுமுள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், அடிக்கடி குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவர்கள் பற்றிய விவரங்களைப் பெறவும் காவல் துறைக்கு இது உதவிகரமானதாக இருக்கும். கணினி இணைப்புக் கட்டுப்பாடு மற்றும் அதன் உபகரணங்கள் உள்ளிட்ட இதர சாதனங்களை வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 2020 மார்ச் மாதம் முடிவடையும்.

2) நுண்ணலை வலைப்பின்னலுக்கான (7-GHz) அலைக்கற்றை கட்டணத்தைத் தள்ளுபடி செய்தல்

இந்திய தொலைத்தொடர்பு துறையின் கம்பியில்லா திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவானது 7-GHz நுண்ணலை வலைப்பின்னலுக்கான அலைக்கற்றைக் கட்டணமாக ரூ.5.67 கோடி கோரியுள்ளது. 7-GHz வலைப்பின்னலானது 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட பழமையானது என்பதால், அதன் அலைவரிசை தொகுப்பை சரண் செய்து, அதற்கான அலைக்கற்றைக் கட்டணத்தை தள்ளுபடி செய்யுமாறு கம்பியில்லா திட்டம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவில் கோரப்பட்டது. இது தொடர்பாக,

இந்திய தொலைத்தொடர்புத் துறையின் செயலாளர், உறுப்பினர் (தொழில்நுட்பம்) மற்றும் புதுதில்லியிலுள்ள கம்பியில்லா திட்டம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு 7-GHz நுண்ணலை வலைப்பின்னலுக்கான அலைக்கற்றைக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்யுமாறும் கோரப்பட்டது. அதன்பேரில், அப்பிரிவானது ரூ.5.67 கோடிக்கு அலைக்கற்றைக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்ததுடன், 7-GHz கம்பியில்லா வானொலி தொலைத்தொடர்புகளைப் பயனற்றதாக்க தடையில்லாச் சான்றிதழையும் வழங்கியுள்ளது. இதன்பேரில், கம்பியில்லா வானொலி தொலைத்தொடர்புகள் அழிக்கப்பட்டு, வலைப்பின்னல் ஒப்படைக்கப்பட்டது.

3) எம்.கடவுச்சீட்டு காவல் பயன்பாட்டு மென்பொருள்

தமிழ்நாடு புதிய முயற்சிகள் தொடக்கத் திட்டத்தின்கீழ் எம்.கடவுச்சீட்டு என்று அழைக்கக்கூடிய ஸ்மார்ட் கைபேசிமூலம் கடவுச்சீட்டு வழங்கும் காவல் பயன்பாட்டு மென்பொருளை நடைமுறைப்படுத்த அரசாணை (நிலை) எண் 151, உள் (காவல்-9) துறை, நாள்: 22-2-2017-ன்கீழ் ரூ.2.92 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக கொள்முதல் ஆணை 11-10-2017 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டம் முடிவுற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 4-1-2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம், மாநில அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2 கோடி வருமானம் வருகிறது.

4) மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால செயல் உதவி மையம் அமைத்தல்

மாநிலம் முழுவதிலிருந்து 100 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டால் அந்த அழைப்பை மாநில அளவிலுள்ள ஒரு நவீன கட்டுப்பாட்டு அறையில் பெறும் வகையிலான திட்டத்தைச் செயல்படுத்த அரசு ரூ.11.43 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்பேரில், ஒரு மையம் அமைக்கப்பட்டு, அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 4-6-2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

இதேபோன்று, புதுதில்லியிலுள்ள மத்திய உள் துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்பேரில், அவசரகால செயல் உதவி மையத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 112 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டால் அந்த அழைப்புகள் அனைத்தும் சென்னை எழும்பூரிலுள்ள மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அந்த அவசரகால அழைப்புகள் அங்கிருந்து உடனடியாக இதர சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு அவற்றுடன் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. 2019, டிசம்பர் மாதம் வரை, சுமார் 53.56 இலட்சம் அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 8.98 இலட்சம் துயர்நீக்க அழைப்புகளாகும். இவை தவிர, சுகாதாரம், தீயணைப்பு, மின்சாரம், இரயில்வே, கடலோரப் பாதுகாப்பு போன்ற சுமார் 32,500 இதர துறைகளுக்கான அவசர கால அழைப்புகளும் கையாளப்பட்டுள்ளன. மேலும், இம்மையமானது காவலன் செயலியைப் பயன்படுத்தி பெறப்பட்ட சுமார் 24,000 அவசரகால புகார் அழைப்புகளையும் கையாண்டுள்ளது.

இதுவரை சுமார் 10 இலட்சம் பொதுமக்கள் காவலன் செயலியைப் பதிவிறக்கம் செய்துள்ளனர். இச்செயலியானது பெண்கள் மற்றும் முதியோர்களின் துயர்களை நீக்குவதற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் 112-இந்தியா என்ற திட்டத்தின்கீழ் கைபேசி செயலி ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டு, அவை காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறையிலுள்ள கணினி உதவியுடன் அனுப்பும் முறையுடன் 19-2-2019 அன்று இணைக்கப்பட்டு, இதர மாநிலங்களுக்கு அடிக்கடி பயணம் மேற்கொள்ளும் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறது.

5) காவல் ரோந்து வாகனங்களில் கண்காணிப்பிற்காக 10 உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் நிறுவுதல்

அரசாணை (நிலை) எண் 486, உள் (காவல்-11) துறை, நாள்: 15-6-2015 மற்றும் அரசாணை (நிலை) எண் 89, உள் (காவல்-11) துறை, நாள்:25-1-2017-ன்கீழ் இதற்காக ரூ.21.97 இலட்சம் நிதி அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. 31-1-2018

2020 மார்ச் 24]

அன்று திறந்தநிலை ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை மேற்கொண்ட பின்னர், இதுதொடர்பான கொள்முதல் ஆணை 10-5-2019 அன்று வழங்கப்பட்டது. உட்சுற்று கேமராக்கள் நிறுவப்பட்டு, சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் மார்ச் 2020-ல் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

6) தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்களுக்கான பணிசார் பயிற்சி

அரசாணை (நிலை) எண் 873, உள் (காவல்-9) துறை, நாள்: 2-12-2016-ன்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட 309 காவல் உதவியாளர் பணியிடங்களில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட 228 காவல் உதவி ஆய்வாளர்களுக்கு ஆறு மாத கால பணிசார் பயிற்சி 1-3-2019 முதல் 31-8-2019 வரை தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் வழங்கப்பட்டது. பயிற்சி முடிந்த பின்னர் அவர்கள் நியமிக்கப்பட்ட பிரிவுகளில் பணிக்கு அறிக்கை செய்து கொண்டனர்.

காவல் ஆளிநர்களுக்கான சிறப்பு அடையாள அட்டை

முப்பரிமாண விவரப் பதிவு வசதியுடன்கூடிய சிறப்பு அடையாள அட்டையை காவல் ஆளிநர்களுக்கு/ அமைச்சுப் பணியாளர்களுக்கு வழங்குவதற்காக அரசு ரூ.91.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியது. இதுவரையில் 1,03,100 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கும் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியாளர்களுக்குமாக 4,200 அடையாள அட்டைகள் விநியோகம் செய்யப்பட உள்ளன.

19) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகியவற்றை ஒழிக்கவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவானது, 96 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த அலகுகள், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937-ஐ அமல்படுத்தி வருகிறது.

[2020 மார்ச் 24

அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள், எரிசாராயம் மற்றும் சாராயப் பாக்கெட்டுகள் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு, தற்போது மாநிலத்தில் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளும், 7 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன.

எதிர்பாரா வாகனச் சோதனை மேற்கொள்ளுதல்

எரிசாராயமானது சாராயத்தின் கூடுதல் திடம் பெற்றதாகும். எரிசாராயம் என்பது ஆயத்தீர்வையின்றிக் குறைந்த விலையில் விற்பதற்காக சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படும் மதுபானமாகும். பல சமயங்களில் அத்தகைய சாராயமே சாராய சாவுகளுக்குக் காரணமாக அமைந்திடும். பொதுவாக பணியாளர்கள் மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவு ஊழியர்கள் சேகரிக்கும் தகவல்களின்பேரில் எதிர்பாரா வகையில் மேற்கொள்ளப்பட்ட வாகனச் சோதனைகள் மாநிலம் முழுவதும் நடத்தப்படுகின்றன. இதுதொடர்பாக 2019-2020 ஆண்டில், 1,34,335 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 26 லாரிகள், 3 பேருந்துகள், 3 டிராக்டர்கள், 72 வேன்கள், 366 கார்கள், 77 ஆட்டோக்கள், 9 படகுகள் மற்றும் 2,956 இருசக்கர வாகனங்கள் என மொத்தம் 3,512 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மதுவிலக்கு உதவி அழைப்பு தொலைபேசி

அரசாங்கம் மதுவிலக்கு உதவி கட்டணமில்லா தொலைபேசி எண் 10581-க்கு ஒப்பளிப்பு வழங்கி, அது 22-8-2013 முதல் அமலாக்கத் தலைமையிடத்திலுள்ள மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் அமைக்கப்பட்டது. இந்தத் தொலைபேசியானது, தகவலாளிகள் மற்றும் பொதுமக்கள் இலவசமாக கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலியான மதுபான விற்பனை ஆகியவை சம்பந்தமாக தகவல்களை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தக் கட்டணமில்லாத தொலைபேசியானது மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் கவனிக்கப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 2,085 அழைப்புகள் பெறப்பட்டு, அவற்றின்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2020 மார்ச் 24]

காந்தியடிகள் காவல் பதக்கம்

அரசாணை (டி) எண் 34, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (7) துறை, நாள்: 1-10-2019-ன்படி கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் மெச்சத்தக்க பணிபுரிந்த 5 காவல் அலுவலர்கள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான காந்தியடிகள் காவல் பதக்கமானது வழங்கப்பட்டது.

20) ஊர்க்காவல் படை

தமிழ்நாடு ஊர்க்காவல் படை அமைப்பானது, சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறையினருக்கு உதவிபுரியவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர கால நிகழ்வுகளைச் சமாளிக்கவும், 1963 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளின்படி, ஒரு தன்னார்வ குடிமக்கள் படையாக, 1963 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. போக்குவரத்தைச் சீர்படுத்துதல், கூட்டங்களைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரித்தல், மத நல்லிணக்கத்தைப் பேணுதல், உடல் ஆரோக்கியம், சுகாதாரம், போதைப் பொருட்கள் பயன்படுத்துவதன் விளைவு மற்றும் சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற முக்கியப் பணிகளில் இப்படை உதவிபுரிந்து வருகிறது. தற்போது, 142 ஊர்க்காவல் படை அணிகள் (116.5 ஆண்கள் அணி மற்றும் 25.5 பெண்கள் அணி) செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 2,805 மகளிர் ஊர்க்காவல் படையினர் உட்பட மொத்தம் 15,622 ஊர்க்காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்களில் மகளிர் பிரிவு உள்ளிட்ட ஊர்க்காவல் படையின் அலகுகள் உள்ளன.

அரசாணை (நிலை) எண் 115, உள் (காவல்-14) துறை, நாள்:19-2-2019-ன்படி ஊர்க்காவல் படையினருக்கான அழைப்புகளை மாதத்திற்கு 5 நாட்களிலிருந்து 10 நாட்களாக உயர்த்தி அவர்களுக்கான பணிப்படியை 4 மணி நேரத்திற்கு மேலாக ஓர் அழைப்பில் பணியாற்றும்போது ரூ.280 எனவும் மற்றும் 2 அழைப்புகளில் 4 முதல் 8 மணி நேரத்திற்கு பணியாற்றுகையில் ஒரு நாளைக்கு ரூ.560 எனவும் மறு நிர்ணயம் செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

X. வாகன வசதி

31-1-2020 நிலவரப்படி, காவல் துறையிலுள்ள மொத்தம் 18,630 வாகனங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

வாகனத்தின் வகை	வாகனம்	வாகன எண்ணிக்கை
கனரக வாகனங்கள்	பேருந்து/லாரி	767
மிதரக வாகனங்கள்	சிற்றுந்து/வேன்	1,873
இலகுரக வாகனங்கள்	கார்/ஜீப்	6,040
இரு சக்கர வாகனங்கள்	மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்/ ஏடிவி மோட்டார் சைக்கிள், மிதிவண்டி	9,352
இதர வாகனங்கள்	வஜ்ரா, வருண், கிரேன், கைதிகள் வழிகாவல், வாட்டர் கேனன், ஆம்புலன்ஸ், ரெக்கர், தண்ணீர் லாரி, பி.பி. கார், பிக்-அப் வேன், குதிரை மிதவை, நடமாடும் நீதிமன்றம், ஆட்டோ, நடமாடும் கழிவறை வேன், பிபி வேன், நடமாடும் கலந்தாய்வு வேன், மீட்பு வேன் போன்றவை	598
மொத்தம்		18,630

புதிய வாகனங்கள் வாங்குதல்

2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.24.53 கோடி செலவில், 157 இருசக்கர வாகனங்கள், 7 பேருந்துகள், 5 மினி பேருந்துகள், 4 இன்னோவா கார்கள், 55 நான்கு சக்கர வாகனங்கள், 31 ஸ்கார்ப்பியோ ஜீப்கள், 18 வஜ்ரா வாகனங்கள், 15 வருண் வாகனங்கள், 12 படகுகள் என மொத்தம் 304 பல்வேறு புதிய வாகனங்கள் காவல் துறைக்கு வாங்கப்பட்டு, இந்த வாகனங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களுக்கு உபயோகத்திற்காக விநியோகம் செய்யப்பட்டன.

2020 மார்ச் 24]

பயனற்றுப்போன வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல்

பயனற்றுப் போன வாகனங்களுக்குப் பதிலாக சுமார் ரூ.95.58 கோடி மதிப்பீட்டிலான 2,271 புதிய பல்வேறு வகையான வாகனங்கள் 6-3-2020 அன்று காவல் துறையினரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன.

XI. காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகமானது, காவல் துறையின் அனைத்து கட்டுமானப் பணிகள் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டுவருகிறது. காவல் துறைப் பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித்தரும் நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் உருவாக்கப்பட்டது. இக்கழகம் 1989 ஆம் ஆண்டு, அப்போதைய அரசால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர் 21-11-1991-ல் இந்த அரசால் இக்கழகத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டது.

காலப்போக்கில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகளும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இக்கழகத்தின் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. அதன் பின்னர், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல் துறைக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

"உங்கள் சொந்த இல்லம்" திட்டம்

"உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின்கீழ், மாநிலம் முழுவதும் 36,000 வீடுகள் கட்டித் தரப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். துவக்கத்தில், இதற்கான ஒரு முன்னோடித் திட்டமாக காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத் துறையினருக்கு உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின்கீழ் 2,673 வீடுகள் கட்டுவதற்காக மேலக்கோட்டையூர் கிராமத்தில் 47.60 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2,673 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 25-2-2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், கீழக்கோட்டையூரில் 52.70 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு, அதில் முன் நுழைவு அனுமதிக்கான அரசாணை (நிலை) எண் 335, நாள்: 17-9-2019-ல் வருவாய்த் துறையால் பிறப்பிக்கப்பட்டது. ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளான காவல் ஆளிநர்களுக்கான கோரிக்கை அளவை, லே-அவுட் தயாரித்தல், மாதிரி வரைபடம் மற்றும் பிரிவுக் கட்டணம் ஆகியன தற்போது நடைபெற்று வருகின்றன.

இரண்டாவதாக சிவகங்கையில், பையூர் பிள்ளைவாயல் கிராமத்தில் 201 வீடுகளும், சேலம், தாரமங்கலம் கிராமத்தில் 60 வீடுகளும் மற்றும் கந்தம்பாக்கம் கிராமம், விழுப்புரத்தில் 53 தனி வீடுகளும் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது. மேலும் இந்தத் திட்டத்தை அரியலூரிலுள்ள வாலாஜா நகரம், தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பிநாயக்கன்ஹல்லி மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள வெல்லப்பாக்கம் ஆகிய இடங்களில் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் நிலங்களைக் கையகப்படுத்தும் கருத்துருக்களைச் சமர்ப்பித்து, நிலத்திற்கான கட்டணத்தை நிர்ணயித்து, நிலத்திற்கான இறுதிக் கட்டணத்தைச் செலுத்தி, காவல் ஆளிநர்களுக்கான கோரிக்கை அளவை, லே-அவுட் தயாரித்தல் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் உறைவிடப்பள்ளி அமைத்தல்

காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் உறைவிடப்பள்ளி அமைக்கப்படுமென சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக, அரசாணை (நிலை) எண் 944, உள் (காவல்-10) துறை, நாள்: 27-12-2017-ன்கீழ் அரசு ரூ.51.15 கோடி நிருவாக ஒப்பளிப்பு செய்துள்ளது. அரசாணை (நிலை) எண் 712 உள் (காவல்-9) துறை, நாள்: 13-7-2018-ன்கீழ், முதல் கட்டமாக ரூ.5 கோடி செலவில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கும் அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இவற்றிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

காவல் நிலையங்களில் சூரிய மின்சக்தி பிரிவுகள் நிறுவுதல்

"500 காவல் நிலையங்களில் தடையில்லா மின்சாரம் கிடைப்பதற்கு சூரிய மின்சக்தி பிரிவுகள் நிறுவப்படும்" என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார். 2015-2016 ஆம் ஆண்டில் தொடங்கி 5 வருடங்களில் இத்திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு அரசாணை (நிலை) எண் 554, உள் (காவல்-10) துறை நாள்: 27-7-2015-ன்கீழ் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ரூ.3.63 கோடி செலவில் 100 காவல் நிலையங்களில் இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி, 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய வருடங்களுக்கு முறையே கட்டம்-1, கட்டம்-2 மற்றும் கட்டம்-3-ன்கீழ் 300 காவல் நிலையங்களில் சூரிய மின்சக்தி பிரிவுகள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. தற்போது, கட்டம்-4-ல் 2019-2020 ஆம் ஆண்டுக்காக 100 காவல் நிலையங்களில் சூரிய மின்சக்தி பிரிவுகள் நிறுவுவதற்காக இடங்களும் அடையாளம் காணப்பட்டு அதற்கான பணிகள் துவக்கப்படவுள்ளன.

மாநில அவசரகால நடவடிக்கை மையம்—கட்டம்-2 அவசரகால நடவடிக்கை ஆதரவு முறை உருவாக்குதல் (கட்டடம்)

மாநில அவசரகால நடவடிக்கை மையத்தை பயன்பாட்டுப் பகுதியுடன் குறைந்தபட்சம் 6,000 சதுர அடியில் இரண்டாம் கட்டமாக, பழைய காவல் ஆணையர் கட்டட வளாகத்தில் ரூ.3.6 கோடியில் கட்டுமானம் செய்ய தமிழக அரசு, அரசாணை (நிலை) எண் 6, உள் (நவீனம்) துறை, நாள்: 4-1-2019-ன்படி ஒப்பளிப்பு வழங்கியது. அந்தப் பணி நடைபெற்று வருகிறது.

XII. காவலர் பணித் தேர்வு, பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்

(அ) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றிற்குத் தகுந்த சீருடை சார்நிலைப் பணியாளர்களை

நியமிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உருவாக்கப்பட்டது. காவல் உதவி ஆய்வாளர், தொழில்நுட்பப் பிரிவு உதவி ஆய்வாளர், விரல் ரேகைப் பிரிவு உதவி ஆய்வாளர், இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர், தீயணைப்புப் படை வீரர் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை பதவிகளுக்கான பணி நியமனங்களைத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் நடத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, பாரபட்சமற்ற முறையிலும், தகுதியின் அடிப்படையிலும் பணியாளர் தேர்வை நடத்தி வருகிறது.

இரண்டாம் நிலை, காவலர் முதல் காவல் உதவி ஆய்வாளர் வரையிலான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் குழுமமானது நியாயமான முறையிலும், வெளிப்படையாகவும் பணி நியமனம் செய்து வருகிறது. உடல் தகுதி தேர்வுகளின்போது எண்ம முறை சாதனங்களைப் பயன்படுத்தி, வெளிப்படையான முறையில் தேர்வுகளை நடத்துகிறது.

(1) 2019 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் நிலைக் காவலர்கள் (ஆயுதப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்) சேர்க்கை

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஆயுதப் படைப் பிரிவு மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவுகளில் உள்ள இரண்டாம் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் தீயணைப்புக் காவலர்கள் ஆகியோருக்கான பொது சேர்க்கையை 8,826 + 62 (Backlog) காலியிடங்களுக்காக நடத்தியது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 25-8-2019 அன்று எழுத்துத் தேர்வை நடத்தி மற்றும் உடல் அளவு தேர்வு, சகிப்புத் தன்மைக்கான தேர்வு, உடல் தகுதித் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் ஆகியவற்றை 23-11-2019 அன்று நடத்தியது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலை விரைவில் அனுப்பிட இருக்கிறது. காவல் சரிபார்த்தல் மற்றும் மருத்துவ சோதனை முடிவுக்குப் பிறகு, தேர்வு செய்யப்பட்டவர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு 7 மாத கால அடிப்படைப் பயிற்சி மற்றும் ஒரு மாத நடைமுறை பயிற்சி ஆகியன 35 காவலர் பயிற்சிப் பள்ளிகள்/தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளிகளில் வழங்கப்படும்.

2020 மார்ச் 24]

(2) 2019 ஆம் ஆண்டுக்கான காவல் உதவி ஆய்வாளர்கள் (விரல்ரேகைப் பிரிவு) சேர்க்கை

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 202 காவல் உதவி ஆய்வாளர் (விரல்ரேகைப் பிரிவு) 2018 ஆம் ஆண்டுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக அறிவிக்கை ஒன்றை நாளிதழ்களில் 29-8-2018 அன்று வெளியிட்டது. எழுத்துத் தேர்வு முடித்த பிறகு உடல் தகுதித் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியன மொத்தம் 202 காவல் உதவி ஆய்வாளர்களுக்கு (விரல்ரேகை) நடத்தப்பட்டது. அதில் தகுதியான விண்ணப்பதாரர்கள் 14-2-2019 அன்று தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

(3) 2019 ஆம் ஆண்டுக்கான காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா, ஆயுதப் படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்) சேர்க்கை

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தாலுகா, ஆயுதப் படைப் பிரிவு மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் ஆகியவற்றிலுள்ள 969 காவல் உதவி ஆய்வாளர்கள் பணியிடத்தை நிரப்பிட அறிவிக்கை ஒன்றை 8-3-2019 அன்று நாளிதழ்களில் வெளியிட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள செயல் திட்டம்

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 2019 ஆம் ஆண்டுக்கான காவல் உதவி ஆய்வாளர் சேர்க்கைக்காக 11-1-2020 அன்று துறை வாரியான நபர்களுக்கும் மற்றும் 12-1-2020 அன்று பொது நபர்களுக்கும் எழுத்துத் தேர்வை நடத்தியது. எழுத்துத் தேர்வுக்கான முடிவுகளை வெளியிட்ட பிறகு இவ்வாரியம் உடல் அளவுத் தேர்வு, தாங்கும் திறன் தேர்வு, உடல் தகுதித் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் ஆகியவற்றை எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்கு நடத்தி, அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு வாய்மொழித் தேர்வு நடத்தப்பட்டு, அதன் பின்னர் இறுதியாக தற்காலிக தேர்வுப் பட்டியல் வெளியிடப்படும்.

2. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், 2020 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் நிலைக் காவலர்கள்-9,699, சிறைக் காவலர்கள்–119 மற்றும் தீயணைப்புக் காவலர்கள்-467

ஆகியோருக்கான பொது சேர்க்கைத் தேர்வுக்கான அறிவிக்கையைத் நாளிதழ்களில் வெளியிடவுள்ளது.

3. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மேலும் இனிவரும் காலத்தில் சேர்க்கைகள் நடைபெறும்போது, அதற்கான தேர்வை இணையதளம் மூலமாக நடத்த திட்டமிட்டுள்ளது.

(ஆ) பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்

1-1-2019 முதல் 31-1-2020 வரையிலான காலகட்டத்தில், 34 இந்தியக் காவல் பணி அலுவலர்கள், 195 தமிழ்நாடு காவல் பணி அலுவலர்கள் மற்றும் 573 தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் தத்தமது பணிகளில் அடுத்த நிலைக்குப் பதவி உயர்வு பெற்றனர். மேலும் இக்காலகட்டத்தில் 3,968 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், 403 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும் நிலை உயர்த்தப்பட்டனர். 292 உதவி ஆய்வாளர்கள் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றனர். 366 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்பட்டனர். 1,190 தலைமைக் காவலர்கள் உதவி ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெற்றனர். 2019 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து நேரடி பணி நியமனம்மூலம் 330 அமைச்சுப் பணியாளர்கள் காவல் துறையில் பணியில் சேர்ந்துள்ளனர்.

XIII. அகில இந்திய காவல் போட்டிகள் காவல் பணித்திறன் போட்டி 2018

தமிழ்நாடு மாநில காவல் பணித்திறன் போட்டி

ஆவடி, த.சி.கா. ரெஜிமென்டல் சென்டரில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தால் 22-9-2019 முதல் 25-9-2019 வரை நடத்தப்பட்ட மாநில காவல் பணித்திறன் போட்டியில், தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியைச் சேர்ந்த நாய் வாலி (ஜெர்மன் ஷெப்பர்டு-ஆண்) மற்றும் அதனைப் பயிற்றுவிப்பவர் முதல் நிலைக் காவலர் 51799 திரு ஜி. சுரேந்தர் ராஜ் "வெடிமருந்துப் பொருள்" பிரிவில் தங்கப் பதக்கம் வென்றனர்.

2020 மார்ச் 24]

அனைத்திந்திய காவல் போட்டிகளில் புரியப்பட்ட சாதனைகள்

2019 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய துப்பாக்கிச் சுடும் போட்டி

23-8-2019 முதல் 30-8-2019 வரை கேரளா, இடுக்கி, முட்டம் என்ற இடத்தில் 11-வது தெற்கு மண்டல துப்பாக்கிச் சுடும் போட்டிகள் [சிறிய துவார துப்பாக்கி/ கைத்துப்பாக்கிக்கானவை (என்.ஆர்.)] நடைபெற்றன. அதில் தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளியைச் சேர்ந்த திருவாளர்கள் வி.ஏ. மோகன் மற்றும் ஒய்.பிரின்ஸ் ஆகியோர் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை (ஒவ்வொருவரும் தலா 4 பதக்கங்கள்) வென்றனர்.

அகில இந்திய காவல் துப்பாக்கிச் சுடும் போட்டி 2019

வ. எண்	போட்டியின் பெயர், இடம் மற்றும் தேதி	வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை
1.	*11-12-2019 முதல் 21-12-2019 வரை புனே, வடாச்சி வாடி என்ற இடத்தில் மகாராஷ்டிரா காவல் துறை சார்பில் 10ஆவது அனைத்திந்திய காவல் அதிரடிப்படை 2019-போட்டிகள் நடைபெற்றன.*	*தமிழ்நாடு காவல் அதிரடிப் படை அணி 40 அலுவலர்கள்/ஆளிநர்களைக் கொண்டதாகும். துணை ஆணையர்1-, ஆய்வாளர்1-, உதவி ஆய்வாளர்கள்3-, தலைமைக் காவலர்கள்3-, காவலர்கள்32- ஆகியோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டனர்.*
2.	*9 ஆவது அகில இந்திய காவல் அதிரடிப்படை போட்டி 2018-அசாம் மாநிலம் திப்பு, அசாம் துப்பாக்கி பயிற்சி மையம் மற்றும் பள்ளி 3-1-2019 முதல் 9-1-2019 வரை*	*38 அதிகாரிகள் ஆளிநர்கள் (1 உதவி ஆணையர், 1 ஆய்வாளர், 2 காவல் உதவி ஆய்வாளர்கள், 3 தலைமைக் காவலர்கள் மற்றும் 31 காவலர்கள்) கொண்ட தமிழ்நாடு காவல் அதிரடிப் படை வீரர்களைக் கொண்ட குழு, மாநிலங்களுக்கு இடையே மூன்றாவது சிறந்த குழு என்ற பட்டத்தைப் பெற்றது.*

[2020 மார்ச் 24

XIV. தடய அறிவியல் துறை

தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக்கூடம் 1959 இல், மருத்துவத் துறையின்கீழ் செயல்பட்டுவந்த "வேதியியல் பரிசோதகர்களின் ஆய்வகம்" (1849), மதுவிலக்கு மற்றும் கலால் ஆய்வகம் (1886) மற்றும் காவல் துறையின்கீழ் செயல்பட்டுவந்த அறிவியல் பிரிவுகள் (1905) ஆகியவற்றை ஒருங்கிணைத்து நிறுவப்பட்டது. 1984 ஆம் ஆண்டு இந்த ஆய்வகம் தடய அறிவியல் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்துறையின் முதன்மை குறிக்கோளானது, நீதியைச் சிறந்த முறையில் நிலைநாட்ட தடய அறிவியல் சேவை புரிவதேயாகும்.

(அ) தலைமை ஆய்வகம்

இத்துறையானது மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், கணினி தடயவியல், மரபணு ஆய்வு, ஆவண ஆய்வு, கலால், வெடிபொருள் ஆய்வு, போதைப் பொருள் ஆய்வு, இயற்பியல், மதுவிலக்குப் பொருட்கள் ஆய்வு, குருதி வடிநீரியல், மற்றும் நஞ்சியல் ஆகிய 15 சிறப்பு பகுப்பாய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய தலைமை ஆய்வகத்தைச் சென்னையில் கொண்டுள்ளது. பல்வேறு சிறப்பு பகுப்பாய்வு பிரிவுகளில் இருந்து பகுப்பாய்வு செய்வதற்காக பெறப்பட்ட குற்றச் சான்றுகளை ஆவணப்படுத்த தனியாகப் புகைப்பட பிரிவு ஒன்று உள்ளது. தலைமை ஆய்வகத்தில் வரவேற்பு அறை, உபகரணங்கள் மற்றும் கிடங்கு பிரிவுகளும் உள்ளன.

(ஆ) வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள்

கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், தருமபுரி ஆகிய 10 இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(இ) நகரும் தடய அறிவியல் ஆய்வகங்கள்

புலன் விசாரணை செய்யும் காவல் அதிகாரிகளுக்கு மாவட்ட அளவில் அறிவியல் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு காவல் மாவட்டங்கள்/ ஆணையரகங்களில் ஒன்று என்கிற வீதத்தில் 34 நகரும் தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன.

2020 மார்ச் 24]

(ஈ) 2019 ஆம் ஆண்டுக்கான பகுப்பாய்வுச் செயல்பாடுகள்

(1) கொலை, பணயத் தொகைக்காகக் கடத்துதல், பயங்கரவாதிகளின் செயல்பாடுகள் ஆகியவற்றின்போது வினாவுக்குரிய பேசும் குரலை யார் பேசியது என அடையாளம் காணவும் மற்றும் குற்ற வழக்குகளில் குற்றம் புரிந்தவர்கள், சம்பவத்தோடு தொடர்புடைய தனிநபர்கள் ஆகியோரை அடையாளம் காண காணொளியின் சிறிய படக்காட்சி/காட்சித் தொகுப்பு ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதற்காக அர்ப்பணிப்புடன்கூடிய எண்ம ஒலி-ஒளி தடய அறிவியல் பிரிவு ஒன்று மொத்தம் ரூ.1.74 கோடி செலவில் அமைக்கப்பட்டது.

(2) காவல் துறையினரால் கைப்பற்றப்படும் பல்வேறு வகையான கள்ள நோட்டுக்கள் குறித்த தரவுத்தளம் ஒன்றை உருவாக்கிப் பராமரிப்பதற்காக இயற்பியல் பகுதியில் அர்ப்பணிப்புடன்கூடிய "இந்திய ரூபாயில் கள்ளநோட்டைக் கண்டறியும்" பிரிவு ஒன்று மொத்தம் ரூ.85.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

(3) பாலியல் குற்றங்களில் பாதிக்கப்படுவதிலிருந்து சிறார்களைப் பாதுகாக்கும் (போக்ஸோ) சட்டம், 2012 வழக்குகளில் சம்பந்தப்பட்ட உயிரியல் மாதிரிகளை விரைவாக ஆராய்வதற்கு ஏதுவாக நிர்பயா நிதித் திட்டத்தின்கீழ் ரூ.2.44 கோடி செலவில் பிரதான ஆய்வகத்தில் அர்ப்பணிப்புடன்கூடிய டி.என்.ஏ. பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

XV. முடிவுரை

தமிழ்நாடு காவல் துறையானது, நாட்டிலேயே பெரும் செயல்திறன்மிக்க சீருடைப் படைகளில் ஒன்று என்ற நற்பெயரினை எப்போதும் தன்னகத்தே கொண்டுள்ளது. வேகமான வளர்ச்சிக்கும் மற்றும் துரிதமான தொழில் முன்னேற்றத்திற்கும் தற்போதைய சமூக, பொருளாதார சூழ்நிலையில் அமைதி மற்றும் சகஜத்தன்மையை உறுதி செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். அத்தகைய அமைதியான சூழ்நிலையை உருவாக்கிட சட்டம் மற்றும் ஒழுங்கை சீரிய முறையில் பராமரிப்பதின் மூலமும் மற்றும் குறித்த காலத்தில் குற்றக் கண்டுபிடிப்பு மற்றும் குற்றத் தடுப்பு முறைகளை மேற்கொள்வதிலும் திறன்மிக்க காவல் படையானது முக்கியப் பங்காற்றி வருகிறது. கூடுதலாக தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய வளர்ச்சிகளின் காரணமாக தமிழ்நாடு காவல் துறை அதற்கு இணையாக பீடுநடை போட்டு அதேசமயத்தில், அக்கறை மற்றும் மனிதாபிமான தோற்றத்திற்கான அவசியத்தைக் கைவிட்டுவிடாமல் அர்ப்பணிப்புடன் தமிழ்நாடு காவல் துறை செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

பிற்சேர்க்கை-I

2017 முதல் 2019 வரையிலான சொத்து தொடர்பான வழக்குகளும், கண்டுபிடிப்பும்

வ. எண்	குற்றத்தின் தலைப்பு	2017		2018		2019	
		பதிவு*	க.பி*	பதிவு*	க.பி*	பதிவு*	க.பி*
1.	ஆதாயக் கொலை	94	90	81	69	67	62
2.	கொள்ளை	97	94	100	92	113	107
3.	வழிப்பறி (உடைமை பறிப்பு வழக்குகள் உட்பட)	# 1841	1479	2295	1809	2444	2368
4.	கன்னக் களவு	4751	2871	4516	2885	4392	2794
5.	திருட்டு	15422	10212	17570	10011	15684	8497
மொத்தம்		22205	14746	24562	14866	22700	13828

பதிவு* பதிவு செய்யப்பட்டவை


க.பி* கண்டுபிடிக்கப்பட்டவை

தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

2020 மார்ச் 24]

விளக்கப்படம் –I

சொத்து தொடர்பான குற்றங்கள் தாக்கலானவை மற்றும் கண்டுபிடிக்கப்பட்டவை 2017-2019



2017 2018 2019

- பதிவுசெய்யப்பட்டவை

o கண்டுபிடிக்கப்பட்டவை

[2020 மார்ச் 24

பிற்சேர்க்கை–II

(ரூபாய் கோடியில்)

வ. எண்	சொத்து	2017	2018	2019
1	இழக்கப்பட்ட சொத்து	144.84	143.34	172.31
2	மீட்கப்பட்ட சொத்து	96.53	95.66	114.68
3	மீட்பு சதவீதம்	67%	67%	67%

பிற்சேர்க்கை-III

2017 முதல் 2019 வரை பதியப்பட்ட இந்திய தண்டனைச் சட்ட குற்றங்கள் (தலைப்புவாரியாக)

வ. எண்	குற்றத்தின் தலைப்பு	2017	2018	2019
	சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள்			
1	ஆதாயக் கொலை	94	81	67
2	கூட்டுக் கொள்ளை	97	100	113
3	கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமியிருத்தல்	134	197	61
4	வழிப்பறி	*1841	2295	2444
5	கன்னக்களவு	4751	4516	4392
6	திருட்டு	15422	17570	15682
	கொடுங்குற்றங்கள்			
7	கொலை	1466	1488	1678
8	கொலை முயற்சி	2460	2571	2478
9	கொலை என கருதமுடியாத மரணம் விளைவிக்கும் குற்றம்	52	55	68
10	அடிதடி வழக்கு	18091	19378	19041
11	கலவரங்கள்	*1935	2240	1722

2020 மார்ச் 24]

பெண்களுக்கு எதிரான குற்றங்கள்				
12	கற்பழிப்பு	*294	*341	370
13	வரதட்சணை மரணங்கள்	48	55	28
14	மானபங்கம்	744	814	803
15	பாலியல் வன்கொடுமை	9	14	7
16	கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை	984	789	781
17	பெண் கடத்தல்	*860	* 907	728
பிற முக்கிய குற்றங்கள்				
18	ஆள் கடத்தல்	167	190	170
19	நம்பிக்கை மோசடி	157	137	154
20	தீ வைத்தல்	402	434	395
21	மோசடி	3226	3610	3289
22	கள்ளநோட்டு	53	75	69
23	மரண விபத்துகள்	15404	11844	10259
24	மரணம் ஏற்படுத்தாத விபத்துகள்	50477	52510	47524
25	பிற இ.த.ச. குற்றங்கள்	* 59670	* 63697	55786
மொத்த இ.த.ச. வழக்குகள்		178838	185908	168111
குற்ற விகிதாச்சாரம்		225.91	231.24	205.89
மக்கள் தொகை (இலட்சங்களில்)		791.60	803.95	816.49

* தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

பிற்சேர்க்கை –IV
வன்குற்ற நிகழ்வுகளும், தீர்க்கப்பட்டவைகளும்
2017 - 2019

வ. எண்	தலைப்பு	2017				2018				2019			
		பதிவு*	கு.ப.#	பு.வி.**	பி.வ. முடிப்பு#	பதிவு*	கு.ப.#	பு.வி.**	பி.வ. முடிப்பு#	பதிவு*	கு.ப.#	பு.வி.**	பி.வ. முடிப்பு#
1	கொலை	1466	1139	255	72	1488	821	622	45	1678	961	669	48
2	கொலை முயற்சி	2460	1551	806	103	2571	1157	1356	58	2478	989	1449	40
3	காயம்	18091	12467	4156	1468	19378	10559	7717	1102	19041	9355	8788	898
4	கலவரம்	1935	1019	697	219	2240	726	1145	369	1722	617	997	108
	மொத்தம்	23952	16176	5914	1862	25677	13263	10840	1574	24919	11922	11903	1094

குறிப்பு:

பதிவு* - பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. - குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை நிலுவை) (வருடம் வாரியாக)

பு.வி.** - புலன்விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ.முடிப்பு - பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) வருடம் வாரியாக

2020 மார்ச் 24]

பிற்சேர்க்கை-V

2017 முதல் 2019 வரை நடந்த கொலை நிகழ்வுகளுக்கான காரணங்கள்				
வ. எண்	காரணங்கள்	2017	2018	2019
1	குடும்பத் தகராறு	381	357	430
2	வாய்த் தகராறு	281	291	320
3	முன்விரோதம்	* 239	273	275
4	காதல் மற்றும் பாலியல் காரணங்கள்	* 229	230	251
5	பணம் கொடுக்கல் வாங்கல்	76	77	72
6	நிலத்தகராறு	108	98	118
7	குடிபோதையில் தகராறுகள்	54	49	67
8	வரதட்சணை	4	5	3
9	அரசியல் காரணங்கள்	2	0	3
10	இதர காரணங்கள்*	* 89	105	131
11	ஜாதி பாகுபாடு	3	3	3
	மொத்தம்	1466	1488	1678

(குறிப்பு: *இதர காரணங்கள் – கண்டுபிடிக்க முடியாத வழக்குகளை உள்ளடக்கியது)

* தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

[2020 மார்ச் 24

பிற்சேர்க்கை-VI

பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

வ. எண்	குற்ற வகைகள்	2017-ல் பதிவானவை	2018-ல் பதிவானவை	2019-ல் பதிவானவை
1	பாலியல் பலாத்காரம்	*294	*341	370
2	வரதட்சணை மரணம்	48	55	28
3	கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை	984	789	781
4	மானபங்கம்	744	814	803
	மொத்தம்	2070	1999	1982

* தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை-VII

பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகளும், தீர்த்துவைக்கப்பட்டவையும் (2017-2019)

வ. எண்	தலைப்பு	2017				2018				2019			
		பதிவு*	கு.ப.	பு.வி.**	பி.வ. முடிப்பு	பதிவு*	கு.ப.	பு.வி.**	பி.வ. முடிப்பு	பதிவு*	கு.ப.	பு.வி.**	பி.வ. முடிப்பு
1	பாலியல் பலாத்காரம்	#294	191	79	22	#341	167	143	28	370	159	188	23
2	வரதட்சணை மரணம்	48	38	9	1	55	27	28	0	28	19	9	0
3	கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை	984	491	289	204	789	265	451	73	781	246	458	77
4	மானபங்கம்	744	444	197	103	814	431	316	67	803	360	387	56
	மொத்தம்	2070	1164	574	330	1999	890	938	168	1982	784	1042	156

குறிப்பு:

பதிவு* - பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. - குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும்நீ திமன்ற விசாரணை நிலுவை) வருடம் வாரியாக

பு.வி.** - புலன்விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ.முடிப்பு - பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) (வருடம் வாரியாக)

தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

[2020 மார்ச் 24

2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான 'போக்ஸோ' சட்டப்படியான வழக்குகள்

வ. எண்	குற்றத் தலைப்பு	தாக்கலானவை	
		2018	2019
1.	போக்ஸோ- கற்பழிப்பு	*1457	1742
2.	போக்ஸோ- மற்றவை	* 582	654
3.	போக்ஸோ சட்டம் - மொத்தம்	2039	2396

* தரவு வேறுபாடானது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கையின் அடிப்படையிலானது.

பிற்சேர்க்கை-VIII

சாலை விபத்து வழக்குகள் 2017-2019

வருடம்	வாகன எண்ணிக்கை (இலட்சத்தில்)	சாலை விபத்துக்கள்	* கட்டம் 2 &3 இடையிலான விகிதாச்சாரம்	மரணம் சம்பவித்தவை	மரண எண்ணிக்கை	* கட்டம் 2 & 5 இடையிலான விகிதாச்சாரம்	மரணம் சம்பவிக்காதவை	* கட்டம் 2 & 8 இடையிலான விகிதாச்சாரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
2017	251.47	65562	26	15061	16157	5.99	50501	20
2018	271.41	63920	24	11375	12216	4.19	52545	19
2019	290.13	57228	21	9813	10525	3.62	47415	17

குறிப்பு: *கட்டங்கள் 4, 7 மற்றும் 9 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரங்கள், ஒவ்வொரு 10,000 வாகனங்களுக்கு என்ற வகையில்.

பிற்சேர்க்கை—IX

சாலை விபத்துக்கள் பற்றிய விவரங்கள்

வ. எண்	வருடம்	வாகனங்களின் எண்ணிக்கை	விபத்துகளின் எண்ணிக்கை	வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப விபத்துகளின் சதவிகிதம்	மரண எண்ணிக்கை	வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப மரண விகிதம்
1	*2010*	*13119713*	*64996*	*0.50*	*15409*	*0.11*
2	*2011*	*14861695*	*65873*	*0.44*	*15422*	*0.10*
3	*2012*	*16625653*	*67757*	*0.41*	*16175*	*0.10*
4	*2013*	*18286774*	*66238*	*0.36*	*15563*	*0.09*
5	*2014*	*19995382*	*67250*	*0.34*	*15190*	*0.08*
6	*2015*	*21558272*	*69059*	*0.32*	*15642*	*0.07*
7	*2016*	*23354026*	*71431*	*0.31*	*17218*	*0.07*
8	*2017*	*25147056*	*65562*	*0.26*	*16157*	*0.06*
9	*2018*	*27141431*	*63920*	*0.24*	*12216*	*0.05*
10	*2019*	*29012556*	*57228*	*0.21*	*10525*	*0.04*

[2020 மார்ச் 24

பிற்சேர்க்கை—X

மாவட்ட வாரியாக நிகழ்ந்த மொத்த சாலை விபத்துகள் மற்றும் மரணங்கள்—2019

வ. எண்	மாவட்டம்	விபத்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்புகளின் எண்ணிக்கை
1.	திருச்சி இருப்புப்பாதை	1	0
2.	சென்னை இருப்புப்பாதை	3	1
3.	நீலகிரி	172	17
4.	திருநெல்வேலி நகரம்	357	65
5.	பெரம்பலூர்	434	99
6.	திருச்சி நகரம்	517	104
7.	அரியலூர்	463	82
8.	திருப்பூர் நகரம்	704	99
9.	சிவகங்கை	977	265
10.	சேலம் நகரம்	836	109
11.	மதுரை நகரம்	866	193
12.	திருவாரூர்	869	75
13.	இராமநாதபுரம்	1013	207
14.	தேனி	943	179
15.	விருதுநகர்	994	186
16.	கரூர்	889	206
17.	கோவை நகரம்	1062	132
18.	புதுக்கோட்டை	1240	223
19.	திருவள்ளூர்	1285	248
20.	தூத்துக்குடி	1217	303
21.	கன்னியாகுமரி	1421	229

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	விபத்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்புகளின் எண்ணிக்கை
22.	நாகப்பட்டினம்	1099	172
23.	தருமபுரி	1236	167
24.	திருவண்ணாமலை	1426	291
25.	திருச்சிராப்பள்ளி	953	227
26.	மதுரை	1696	282
27.	கிருஷ்ணகிரி	1621	357
28.	திண்டுக்கல்	1743	397
29.	நாமக்கல்	1841	357
30.	தஞ்சாவூர்	1606	167
31.	கோயம்புத்தூர்	1814	456
32.	திருநெல்வேலி	1938	437
33.	சேலம்	1941	315
34.	திருப்பூர்	1976	363
35.	ஈரோடு	2024	203
36.	வேலூர்	2396	375
37.	காஞ்சிபுரம்	3146	838
38.	விழுப்புரம்	2822	442
39.	கடலூர்	2816	423
40.	சென்னை நகரம்	6871	1252
	மொத்தம்	57228	10525

இணைப்பு II

(34 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

I. முன்னுரை

இயற்கையின் மூலக்கூறுகளில் ஒன்றான "தீ" அச்சமூட்டும் சக்தியினைக் கொண்டதாகும். இது நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. சமுதாயத்தில் நாளுக்குநாள் வளர்ந்துவரும் நாகரிகம் மற்றும் அதன் மக்கள்தொகை, பெருகிவரும் பல மாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றால் தீயினால் ஏற்படும் ஆபத்து அதிகமாகியுள்ளது. சேமித்து வைக்கப்படும் எளிதில் தீப்பற்றக்கூடிய திரவங்களாகிய பெட்ரோல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்றவை தீயின் அபாயத்தினை மேலும் அதிகரிக்கின்றன. கவனமாக கையாளப்படாத நேர்வுகளில், தீயானது, அபாயகரமானது; அழிக்கும் தன்மையுடையது; பேராபத்து விளைவிக்கக் கூடியது. ஈடு செய்ய இயலாத இழப்புகள், அளவிட முடியாத அழிவுகள், சொல்லொண்ணா துன்பங்கள் ஆகியன தீ விபத்துகளால் ஏற்படுகின்றன. எனவே, தீ விபத்தைத் தடுப்பது மட்டுமின்றி தீயின் அழிவிலிருந்து உயிருக்கும், உடைமைக்கும் போதுமான பாதுகாப்பு அளிப்பதும் இன்றியமையாததாகிவிட்டது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில், ஒவ்வொரு நாளும் இரவு பகல் பாராது, தீயணைக்கும்போது ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆபத்தான மற்றும் அவசர காலங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் இத்துறையின் முயற்சி மற்றும் முனைப்பான செயல்பாடுகள் ஊடகங்கள் மற்றும் பொது மக்களின் வெகுவான பாராட்டைப் பெற்றுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சவால்களை எதிர்கொள்ள தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்விதமாக, நவீன சாதனங்கள் மற்றும் ஊர்திகளை பயன்படுத்திக் கொள்கிறது. மேலும், பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சியளித்தல், தீ அபாயம் உள்ள இடங்களில் புதிய நிலையங்கள் நிறுவுதல், கட்டடங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்கள் மற்றும்

2020 மார்ச் 24]

விதிகளின்கீழ் செயல் திறமுடைய மற்றும் ஆக்கபூர்வமான உயிர்காப்பு வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்தல், பொதுமக்களிடையே பாதுகாப்பு குறித்த கல்வி அறிவு புகட்டுதல் போன்றவற்றினை மேற்கொண்டு வருகிறது. அரசின் தொடர்ச்சியான ஆதரவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கத்தினால்தான் இந்த உயரிய செயலாக்கம் சாத்தியமாயிற்று. இத்துறையின் பணியாளர்கள் "காக்கும் பணி எங்கள் பணி" என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, தங்களது உயிரையும் துச்சமெனக் கருதி மக்களுக்கு தொடர்ந்து கடுமையாக சேவையாற்றி வருகிறார்கள்.

II. தீயணைப்புத் துறையின் வளர்ச்சி (வரலாறு)

“மெட்ராஸ் தீயணைப்புப் படை" (Madras Fire Brigade) என்ற பெயரில் 1908 ஆம் ஆண்டு சிறிய குழுவாக உருவாக்கப்பட்டு, சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்த தீயணைப்புப் படைப் பிரிவானது, படிப்படியாக வளர்ச்சியடைந்து 1945 ஆம் ஆண்டில் 55 தீயணைப்பு நிலையங்களைக் கொண்ட அமைப்பாக வளர்ச்சியடைந்தது. உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றும் இத்துறையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, 1967 ஆம் ஆண்டில், காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தீயணைப்புத் துறை புதியதாக உருவாக்கப்பட்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆகிய இருவித பணிகளை மேற்கொள்ளும் வகையில் படிப்படியாக மாற்றம் கண்டது. பொது மக்கள் சரியாக உணர்ந்து பாராட்டும் வகையில், ஒரு புதிய தோற்றத்தை அளிக்கும்வண்ணம், இத்துறையின் பெயர் "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை" என 2001 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தீயணைப்புப் பணி என்பது, பேராபத்து நிறைந்த பணி என்பதைக் கருத்தில் கொண்டு, 2000 ஆம் ஆண்டு வரை பெண்கள் தீயணைப்பு வீரர்களாக நியமனம் செய்யப்படவில்லை. பெண்களும் ஆபத்து நிறைந்த பணிகளில், பொது மக்களுக்கு சிறந்த முறையில் சரிசமமாக சேவையாற்றிட முடியும், அதுவும் குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்களை மனிதநேயத்துடன் காப்பாற்றிட பணிபுரிய முடியும் என்ற அடிப்படையில் ஆண்-பெண் பாலின பாகுபாட்டினைக் களையும்விதமாக, பெண்களை இத்துறையில் நியமிக்க 2001 ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் நாட்டிலேயே முதன் முதலாக பெண்களைத் தீயணைப்பு அலுவலர்களாக நியமிக்க உத்தரவிட்ட மாநிலம் தமிழக அரசுதான்

[2020 மார்ச் 24

என்ற பெருமையினைப் பெற்றது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகள், கடமைகள், பணியாளர் நிலை, பொறுப்புகள் மற்றும் நவீனப்படுத்துதல் ஆகியவற்றை ஆராயவும், ஆலோசனைகள் வழங்கவும் "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம்" இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாணையத்தின் ஆலோசனைகள் அரசால் ஏற்கப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டன. ஒரு நகரத்தை அடிப்படையாகக் கொண்டு தீயணைப்புப் படை என்ற ஒரு சிறிய அமைப்பாக உருவான தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, அரசு மேற்கொண்ட உறுதியான தொடர் முயற்சிகளால் மாநில அளவில் பல்வேறுவிதமான வளர்ச்சியினை அடைந்து உள்ளது. தற்சமயம், இத்துறையானது 343 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களையும், கோத்தகிரி, ஒகேனக்கல் மற்றும் மெரினா ஆகிய இடங்களில் தனிப்பட்ட 3 மீட்புப் பணி நிலையங்களையும் கொண்டுள்ளது. புதியதாக உருவாக்கப்பட்ட மெரினா மீட்புப் பணி நிலையம் தனக்கென தனித்துவம் வாய்ந்த முதன்மையான மீட்புப் பணி நிலையமாகும். கடற்கரையின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ள மெரினா மீட்புப் பணி நிலையம் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

III. சேவைகள் குறித்த ஒரு பார்வை

தீ மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதிக்கப்பட்டோரை மீட்பது இத்துறையின் இரட்டைப் பணிகளாகும். நாட்டில் உள்ள மிகவும் திறமை வாய்ந்த தீயணைப்புப் படைகளில் ஒன்றென தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை புகழ்பெற்று, தனது பெயரை நிலைநாட்டியுள்ளது. இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள், இதர பேரிடர்கள் மற்றும் விபத்துகளான கட்டட இடிபாடுகள், வெடி விபத்துகள், இரயில் விபத்துகள், சாலைப் போக்குவரத்து விபத்துகள் மற்றும் அபாயகரமான வாயுக் கசிவு போன்றவற்றால் ஏற்படும் பேரழிவுகளில் பாதிக்கப்பட்டோரை காப்பாற்றுதலும் மற்றும் அவசர உதவி புரிதலும் இத்துறையின் பணிகள் ஆகும். தேர்தல்கள், கலவரங்கள், கேளிக்கைகள், விழாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு ஆகிய காலங்களில், காவல் துறைக்கு இத்துறை உதவிபுரிந்து வருகிறது. உரிமம் வழங்குவதை முறைப்படுத்தும் வகையில், உயர் மாடிக் கட்டடங்கள், தீ அபாயம் நிறைந்த தொழிற்சாலைகள் மற்றும் பொது மக்கள் கூடுமிடங்கள் ஆகியவற்றிற்கு உரிமங்கள் வழங்க அதிகாரம்

2020 மார்ச் 24]

படைத்த பல்வேறு துறை அலுவலர்களுக்கு, இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீ பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கும் பணியையும் இத்துறை ஆற்றி வருகிறது. பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவை நடத்துவதற்கு அவ்விடங்களில், சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதனை உறுதிசெய்யும் வகையில், இத்துறையிலிருந்து தடையின்மை சான்று பெற்ற பின்னரே, அத்தகு நிகழ்ச்சிகள் நடைபெற அனுமதிக்கப்படுகின்றன.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தீத்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பணியிலும் ஈடுபட்டு வருகிறது. பொதுமக்களிடையே தீயின் அபாயம் குறித்தும் மற்றும் தீ பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்த இத்துறைக்கு பதின்மூன்று தீத்தடுப்பு குழுக்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. தீத்தடுப்பு குழுக்களானது, தீ பாதுகாப்பு தொடர்பான வழிமுறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. தீத்தடுப்பு குழுவானது தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டடங்களில் வசிப்பவர்களுக்கு ஏதேனும் அவசர நிகழ்வுகள் ஏற்படுவதற்கு முன்னர் அக்கட்டடங்களில் உள்ள தீ பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து உறுதிசெய்து கொள்வதுடன், அவற்றினை அவ்விடங்களில் குடியிருப்பவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் செயலாற்றி வருகிறது. குறும்படங்கள் உட்பட பல்வேறு பிரச்சார சாதனங்களை இத்துறை பயன்படுத்தி வருகிறது. தெருமுனை நாடகங்கள், பொம்மலாட்டங்கள் மற்றும் ஒத்திகைப் பயிற்சிகளை பள்ளி மாணவர்கள், இல்லத்தரசிகள், கிராமப்புற பெண்கள், குடிசைவாழ் மக்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கு வருகைதரும் பொது மக்கள், உயர் மாடிக் கட்டடங்கள் மற்றும் அலுவலக வளாகங்களில் உள்ளவர்கள் பயனடையும்விதமாக மேற்கொண்டு வருகிறது.

தீ பாதுகாப்பு நடவடிக்கையின் பலன் உடனடியாக அறிய இயலாது. எனினும், இது ஒரு நீண்டகால பயனை அளிக்கத்தக்க ஒன்று ஆகும். உயிர் காக்கும் உத்திகளைத் தெரிந்து வைத்திருப்பதன்மூலம், பொது மக்கள் எந்த ஒரு நேரத்திலும் தங்கள் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்ள இயலும்.

[2020 மார்ச் 24

IV. நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு

இந்தியக் காவல் பணியைச் சார்ந்த காவல் துறைத் தலைமை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலரான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இயக்குநர் தமிழக அரசின் உள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறார். தொழில்நுட்ப இனங்களில் துணை இயக்குநர் (தலைமையகம்) மற்றும் நிருவாக இனங்களில் துணை இயக்குநர் (நிருவாகம்) ஆகியோர் இயக்குநருக்கு உதவிபுரிகிறார்கள். இத்துறையானது சென்னை, வேலூர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு முறையே, வடக்கு மண்டலம், வடமேற்கு மண்டலம், மத்திய மண்டலம், மேற்கு மண்டலம் மற்றும் தென் மண்டலம் என 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஓர் இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மண்டலங்கள் 34 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்பில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் தலைமையில், மாவட்ட அலுவலரின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இத்துறையின் செயல்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருவதனைக் கருத்திற்கொண்டும், தலைமையகத்தில், தொழில்நுட்ப அலுவலரின் தனித் தன்மையான முக்கியத்துவத்தைக் கருதியும், தற்போது கூடுதல் இயக்குநர் (செயல்பாடுகள் மற்றும் பயிற்சி) மற்றும் கூடுதல் இயக்குநர் (நிருவாகம்) ஆகிய இரண்டு கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

(i) மாநில பயிற்சி மையம் மற்றும் மாநில பட்டறை

இத்துறை சென்னை தாம்பரத்தில் மாநில பயிற்சி மையம் ஒன்றை கொண்டுள்ளது. மாநில பயிற்சி மையமானது இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணி செயல்பாடுகள்) அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. பல்வேறு கட்டட

2020 மார்ச் 24]

இடிபாடு விபத்துகளில் சிக்கியவர்களைக் கண்டறிவதற்காகவும், பேரிடர் நிகழ்வுகளில் சிக்கி பாதிக்கப்பட்டோரைக் கண்டறியவும் பயிற்சி பெற்ற பல்வேறு இனம் சார்ந்த ஆறு மோப்ப நாய்கள் மாநில பயிற்சி மையத்தில் உள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மோப்ப நாய் பிரிவு கொண்ட ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தீயணைப்பு ஊர்திகளின் பழுதுகளைச் செப்பனிடுவதற்கும், பராமரிப்பதற்கும் இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணி செயல்பாடுகள்) அவர்களின் தலைமையின்கீழ் ஒரு மாநில பட்டறையும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிருவாக அமைப்புகள் குறித்த விவரங்கள் அட்டவணை-I மற்றும் II-ல் அளிக்கப்பட்டுள்ளன.

V. ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை

இத்துறையின் அடிப்படை அலகு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஆகும். பொதுவாக, ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைப்பதற்கு பின்வரும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன:

(i) 25 கி.மீ. சுற்றளவிற்குள் எந்த ஒரு நிலையமும் இருத்தல் கூடாது.

(ii) ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 50,000 மக்கள்தொகைக்கு சேவை செய்வதாக இருத்தல் வேண்டும்.

(iii) ரூபாய் 50,000/- அளவுக்கு பொருட்சேதம் ஏற்படக்கூடிய தீ விபத்திற்கான வாய்ப்புகள் உள்ள பகுதியாக இருத்தல் வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒரு நிலைய அலுவலர் தலைமையின்கீழ், இரண்டு முன்னணி தீயணைப்போர்கள், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டுநர், இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் 11 தீயணைப்போர்களுடன் செயல்பட்டு வருகிறது.

ஒரு புதிய ஓரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைப்பதற்குப் பின்வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கொண்ட அமைப்பு அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:

[2020 மார்ச் 24

நிலைய அலுவலர்	-	*1*
முன்னணி தீயணைப்போர்	-	*2*
இயந்திர கம்மியர் ஓட்டுநர்	-	*1*
தீயணைப்போர் ஓட்டுநர்	-	*2*
தீயணைப்போர்	-	*11*

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் மாவட்டவாரியான எண்ணிக்கை விவரம் அட்டவணை III-ல் அளிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதியில், தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்பு குறித்து பெறப்படும் தகவல்கள் நிலைய முன்னணித் தீயணைப்போரால் பதிவு செய்யப்பட்டவுடன், தீயணைப்பு ஊர்தி குழுவிற்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டு, தீயணைப்பு ஊர்தி சம்பவ இடத்திற்கு விரைந்து அனுப்பி வைக்கப்படுகிறது. தீயணைப்பு ஊர்தி சம்பவ இடத்தினை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போதே, தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பு உடைகளை அணிந்துகொண்டு பணியில் ஈடுபட தங்களைத் தயார் செய்து கொள்கிறார்கள். இவ்வாறாக தீ அழைப்புப் பெறப்பட்டவுடன் தீயணைப்புத் துறை ஊர்தியானது சம்பவ இடத்திற்கு விரைவில் ஒரு நிமிடத்திற்குள் அனுப்பி வைக்கப்படுகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது பேரழிவு மேலாண்மைப் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. இயற்கை இடர்பாடுகளான புயல், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்றவற்றை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் இத்துறையானது தயார்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளம் ஏற்படும் நேர்வுகளில் கண்ணாடி இழையிலான படகுகள், மிதவைப் படகுகள், உயிர் காக்கும் இரப்பர் மிதவைகள் மற்றும் உயிர் காக்கும் மேலங்கிகள் ஆகியவற்றைக் கொண்டு, காப்பாற்றும் பணியில் ஈடுபட, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட நீச்சல் வீரர்களை இத்துறை கொண்டுள்ளது. மேலும், கட்டட இடிபாடுகள், நிலச்சரிவுகள், மூடப்படாத ஆழ்துளைக் கிணறுகள், மரங்கள் விழுதல் போன்றவற்றில் சிக்குண்டவர்களைச் சிறப்பு கருவிகளைக் கொண்டு காப்பாற்ற, பயிற்றுவிக்கப்பட்ட தீயணைப்போர்களை இத்துறை கொண்டுள்ளது. எத்தகைய பேரிடர் ஏற்படினும் மக்களைக் காப்பாற்றவும் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லவும் தீயணைப்போர்களுக்கு முழுமையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. உடைக்கும் கருவி, ஸ்பெரட்டர், மின் இரம்பம் போன்ற நவீன உபகரணங்களைக்

2020 மார்ச் 24]

கொண்டுள்ளதாலும், தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுவதாலும், மண் சரிவு, வெள்ளம் மற்றும் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோரை மீட்பதற்கு பணியாளர்களின் திறன் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

VI. மனித வளம்

இத்துறையானது 7,599 களப் பணியாளர்கள் மற்றும் 347 அமைச்சுப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. மாவட்ட அலுவலர், மாநில பட்டறையின் உதவிப் பொறியாளர் (தானியங்கி), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து-தட்டச்சர் பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தீயணைப்போர் பணியிடங்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்படுகின்றன.

பல்வேறு பதவிகளில் களப் பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	பதவியின் பெயர்	பதவியின் எண்ணிக்கை
1.	இயக்குநர்	1
2.	கூடுதல் இயக்குநர்	2
3.	இணை இயக்குநர்	3
4.	துணை இயக்குநர்	4
5.	மாவட்ட அலுவலர்	35
6.	உதவிப் பொறியாளர் (தானியங்கி)	1
7.	உதவி மாவட்ட அலுவலர்	62
8.	நிலைய அலுவலர்	387
9.	நிலைய அலுவலர் (போக்குவரத்து)	172
10.	முன்னணி தீயணைப்போர்	883
11.	இயந்திர கம்மியர் ஓட்டுநர்	388
12.	தீயணைப்போர் ஓட்டுநர்	962
13.	தீயணைப்போர்	4,699
மொத்தம்		**7,599**

[2020 மார்ச் 24

தற்போது விக்கிரவாண்டியில் திறக்கப்படவுள்ள புதிய தீயணைப்பு நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 17 பணியாளர்களையும் சேர்த்து மொத்த பதவிகளின் எண்ணிக்கை 7,599-லிருந்து 7,616 ஆக உயரும். 2019 ஆம் ஆண்டிற்கு 191 தீயணைப்போர் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டிற்கு புதியதாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை 467 என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின்மூலம் இப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தீயணைப்பு மீட்புப் பணிகள் துறையில் 8 மாவட்ட அலுவலர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினரால் நேரடி நியமனம்மூலம் தேர்வு செய்யப்பட்டு, 19-9-2019 முதல் மாவட்ட அலுவலருக்கான அடிப்படைப் பயிற்சி பெற்று வருகின்றனர். 146 நிலைய அலுவலர் பதவிக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

VII. ஊர்திகள் மற்றும் கருவிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ள ஏதுவாக தீயணைப்புப் பணியாளர்களுக்கு முதுகெலும்பாக தீயணைப்பு மற்றும் மீட்பு ஊர்திகளும், உபகரணங்களும் விளங்குகின்றன. இதற்கென தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊர்திகள் மற்றும் கருவிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது:

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
1.	நீர்தாங்கி வண்டிகள்	371
2.	நோயாளர் ஊர்திகள்	58
3.	சிறிய நுரை தகர்வு ஊர்திகள்	20
4.	அவசரகால மீட்பு ஊர்திகள்	20
5.	சுழல் மேசை ஏணி ஊர்தி	1
6.	வான்நோக்கி உயரும் 104 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள்	2

2020 மார்ச் 24]

7.	திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட சுழல் மேசை ஏணி (வான் நோக்கி உயரும் ஏணி ஊர்திகள்) முறையே 37 மற்றும் 42 மீட்டர் உயரும் ஏணி கொண்ட ஊர்திகள்	2
8.	வான்நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள்	3
9.	தண்ணீர் லாரி	55
10.	மீட்பு இழுவை ஊர்தி	1
11.	நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள்	2
12.	தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் இருபுறமும் பொருத்தப்பட்ட விசை மிதிவண்டிகள்	35
13.	தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட 600 லிட்டர் கொள்ளளவு நீர் தொட்டி கொண்ட சிறிய ரக நீர்தாங்கி வண்டிகள்	5
14.	தண்ணீரை பனித் திவலைகளாக மாற்றி பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட 350 லிட்டர் கொள்ளளவு நீர்த்தொட்டி கொண்ட சிறிய ரக நீர்தாங்கி வண்டிகள்	60
15.	நவீன ரக நீர்தாங்கி வண்டிகள்	19
16.	இழுவை ஊர்திகள்	4
17.	கல்விசார் ஊர்திகள்	5
18.	பௌசர்	1
19.	ஆட்களை ஏற்றிச் செல்லும் ஊர்தி (Troop Carrier)	3
20.	கமாண்டோ வாகனங்கள்	3

[2020 மார்ச் 24

VIII. அலுவலர்/பணியாளர்களுக்கான வாகன வசதிகள்

அலுவலர்களும், பணியாளர்களும் அவசர காலத்திலும், முதன்மை பொறுப்பாளர்களாகப் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் விபத்து ஏற்பட்ட இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக, குறுகிய பதில் செயல்பாடு நேரத்தை எட்டுவதற்காக ஈப்புகள், சீருந்துகள், சிறிய பேருந்துகள், பெரிய பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற ஊர்திகள் வழங்கப்பட்டு உள்ளன. உதவி மாவட்ட அலுவலர்களும், நிலைய அலுவலர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக முறையே ஈப்புகளும், விசை மிதிவண்டிகளும் வழங்கப்பட்டு உள்ளன. அதன் முதற்கட்டமாக, 10 உதவி மாவட்ட அலுவலர்களுக்கு ஈப்புகளும், 50 நிலைய அலுவலர்களுக்கு விசை மிதிவண்டிகளும் முறையே ரூ.56 இலட்சம் மற்றும் ரூ.30 இலட்சம் செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, 4-3-2017 முதல் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேலும், இரண்டாம் கட்டமாக, 10 ஈப்புகளையும், 50 விசை மிதிவண்டிகளையும் முறையே ரூ.57.78 இலட்சம் மற்றும் ரூ.33.45 இலட்சம் செலவினத்தில் கொள்முதல் செய்வதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்ட இடங்களில் அதிக எண்ணிக்கையிலான தீயணைப்பு வீரர்களைப் படை திரட்டவும், வெள்ளத்தால் சூழப்பட்ட பகுதியில் இருந்து மீட்கப்பட்டவர்களைப் பாதுகாப்பான பகுதிக்கு அழைத்துச் செல்லவும் 7 சிறப்பு வகை ஊர்திகளை ரூ.119.00 இலட்சம் செலவில் புதுமை புத்தாக்கத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

15 ஆண்டு உழைப்புக் காலம் முடிவுற்ற நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக புதிய நீர்தாங்கி வண்டிகளை படிப்படியாக ஒப்பளிப்பு செய்ய முடிவு செய்யப்பட்டு அதன்படி, 15 நீர்தாங்கி வண்டிகளை ரூ.4.45 கோடி செலவில் கொள்முதல் செய்ய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. சென்னை மாவட்டத்தில், கோயம்பேடு; திருவள்ளூர் மாவட்டத்தில், கும்மிடிப்பூண்டி சிப்காட்; கடலூர் மாவட்டத்தில், கடலூர் சிப்காட்; ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில், பாளையங்கோட்டை ஆகிய நிலையங்களுக்கு 5 சிறிய நுரை தகர்வு ஊர்திகளை கொள்முதல் செய்வதற்கு ரூ.1.84 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

IX. வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகள்

அடுக்குமாடிக் கட்டடங்களில் தீயணைக்கும் பணிகளையும், மீட்புப் பணிகளையும் மேற்கொள்ள ஏதுவாக, ஒரு 54 மீட்டர் மற்றும் இரண்டு 104 மீட்டர் உயரம் வரை வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் முறையே ரூ.5.97 கோடி மற்றும் ரூ.39.74 கோடி செலவினத்தில் வாங்கப்பட்டு அவை 4-3-2017 முதல் பயன்பாட்டில் உள்ளன. இந்தியாவிலேயே இத்தகைய 104 மீட்டர் உயரத்தை அடையக்கூடிய வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்திகள் உள்ள முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது எனக் குறிப்பிடுவதில் மிகையில்லை. இவ்வூர்திகள் பேரிடர் காலங்களில் முக்கிய பங்கை அளிக்கின்றன. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவின்போது 104 மீட்டர் உயரம் கொண்ட வான்நோக்கி உயரும் ஊர்தி நிலைநிறுத்தப் பணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மக்களைப் பாதுகாக்க வான்நோக்கி உயரும் ஊர்தியின் கூண்டு கோபுரத்தின் உச்சி வரை எடுத்துச் செல்லப்பட்டது.

பழைய மகாபலிபுரம் சாலைக்கென ரூ.12 கோடி செலவில் 54 மீட்டர் உயரம் கொண்ட வான்நோக்கி உயரும் ஏணியுடன்கூடிய ஊர்திக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

X. சிறப்பு உபகரணங்கள்

இயற்கைச் சீற்றங்களான பெருவெள்ளம், புயல், நிலச்சரிவுகள், பூகம்பம் ஆகியவற்றில் முதன்மை பொறுப்பாளராக பணியாற்றும் தீயணைப்பு வீரர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் மனிதர்களால் ஏற்படுத்தப்படக்கூடிய பேரழிவுகளான இருப்புப் பாதை மற்றும் சாலை விபத்துகள், கட்டட இடிபாடுகள், தொழிற்சாலை விபத்துகள் ஆகிய மீட்புப் பணிகளின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்களிலிருந்து முற்றிலும் வேறானது. இம்மாதிரியான சூழ்நிலைகளில் மீட்புப் பணிகளைத் திறம்பட கையாளுவதற்கென, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்களை இத்துறை கொண்டுள்ளது:

[2020 மார்ச் 24

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
1.	கண்ணாடி இழைகளிலான விசைப் படகுகள்	8
2.	உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகளுடன்கூடிய மிதவைப் படகுகள்	86
3.	உயிர் காப்பான் மிதவை	4,694
4.	உயிர் காக்கும் சட்டை	4,692
5.	நீட்டிச் சுருக்கும் இரப்பர் விசை படகுகள்	32
6.	நீட்டிச் சுருக்கும் இரப்பர் படகு	10
7.	அனல்வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி	14
8.	பல்வகை நச்சு வாயுக்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்	4
9.	உயிரோடு உள்ள நபரைக் கண்டறியும் கருவி	9
10.	இடிபாடுகளில் சிக்கிக்கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள்	11
11.	நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள்	103
12.	மின்னாக்கியுடன்கூடிய மின் ரம்பங்கள்	114
13.	பெட்ரோலில் இயங்கும் 5 குதிரை சக்தி திறன்கொண்ட எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய மின் ரம்பங்கள்	294

2020 மார்ச் 24]

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
14.	சிமென்ட் கலவைக் கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள்	55
15.	புகை வெளியேற்றும் கருவிகள்	72
16.	முன்னும் பின்னும் இயங்கக்கூடிய ரம்பங்கள்	22
17.	எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய மின் வட்ட ரம்பங்கள்	32
18.	எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய துளையிடும் மின் கருவிகள்	50
19.	நீட்டிப்பு மற்றும் சுருங்கும் ஏணிகள்	51
20.	தீ பாதிக்காத உடைகள்	212
21.	ரசாயன பாதுகாப்பு உடைகள்	112
22.	தீ பாதிக்காத கையுறைகள்	222 ஜோடி
23.	பணியாளர் தற்காப்பு உடைகள்	4,155 ஜோடி
24.	அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள்	111
25.	மிதவைப் பம்புகள்	21
26.	நீரியல் அழுத்தத்தால் இயங்கும் கோம்பி கருவிகள்	64
27.	மின்கலனில் இயங்கும் கோம்பி கருவிகள்	6
28.	மின்மோட்டாருடன் இணைந்த மின் ரம்பங்கள்	116
29.	மின் கையுறைகள்	76 ஜோடி
30.	செறிவூட்டக்கூடிய அதிக திறன் கொண்ட கையடக்கத் தேடும் விளக்கு	936

[2020 மார்ச் 24

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
31.	ஆழ்குழாய்க் கிணறு மீட்பு உபகரணங்கள்	5
32.	பாம்பு பிடிப்பான்	335
33.	கயிறு ஏணிகள்	88
34.	கடலடி சுவாசக் கருவியுடன்கூடிய மூழ்கு தனியுடை	11
35.	மீட்பு கயிறு கருவி கலப் பெட்டி	7
36.	மூச்சுக் கருவி	504
37.	காற்று பிடிக்கும் கருவி	5
38.	தலைக்கவசம்	7,431
39.	தண்ணீர் அகற்றும் மோட்டார்	11
40.	கோம்பி கருவிகள்	44
41.	இரப்பர் கையுறைகள்	44
42.	ஹைட்ராலிக் கட்டர்	33
43.	ஹைட்ராலிக் ஸ்பெடரர்	30
44.	நீட்டிப்பு ஏணி	305
45.	ரோப் ரைடர்	3
46.	ஏணி	217
47.	ரோப் லான்ச்சர்	2
48.	நோயாளர் படுக்கை	191
49.	ஏர் லிப்டிங் பேக்	31
50.	மணிலா கயிறு 130 அடி	1,061

எந்தவிதமான அவசர நிலையையும் கையாளும் விதத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை வலுப்படுத்தி தகுதி மற்றும் திறன் வாய்ந்ததாக அமைக்க ரூ.1.00 கோடி செலவில் 50 ஆளில்லா விமானங்கள் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. எரிந்து கொண்டிருக்கும் தீ பற்றிய முக்கியமான தகவல்களைச் சேகரித்து, தீயில்

2020 மார்ச் 24]

அகப்பட்டோரை மீட்பதற்கு ஆளில்லா விமானங்கள் தீயணைப்போருக்கு உதவி புரிகிறது. மேலும், இத்தகு விமானங்கள் தீயணைப்போரால் சென்று அடைய முடியாத கடினமான இடங்களுக்குச் செல்லவும், அத்தியாவசியமான தகவல்களை வழங்குவதற்கும் உதவுகிறது. ஆளில்லா விமானங்கள் வான்வழியே தீயின் நிகழ்விடத்தை கண்டறிந்து, தகவல்களை அளிப்பதால் தீயணைப்பு பணியாளர்கள் திட்டமிட்டுச் செயல்பட இயலும். மேலும், இவ்விமானங்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்களை புகைப்படக் கருவிமூலம் கண்டறிய உதவுகிறது.

1,500 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு தற்காப்பு சாதனங்களுடன்கூடிய உடைகள் வாங்க ரூ.854 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

XI. தகவல் தொடர்பு வசதிகள்

(i) தொலைபேசி மற்றும் வான் தந்தி

எந்தவித நெருக்கடிகளுக்கும் விரைந்து செயல்படும்விதமாக விரைவான தகவல் தொடர்புகளை எளிதாக்கும்பொருட்டு ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒரு தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட தலைமையிட நிலையங்கள் மற்றும் பிற முக்கிய நிலையங்கள் அனைத்தும் '101' என்ற எண் கொண்ட கட்டணமில்லா தொலைபேசிமூலம் இணைக்கப்பட்டுள்ளது. '101' மற்றும் '102' என்ற எண்கள் கொண்ட கட்டணமில்லா தொலைபேசி இணைப்புகளைக் கொண்டு நவீனமயமாக்கப்பட்ட தீ கட்டுப்பாட்டறை சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. கட்டணமில்லா தொலைபேசிமூலம் பொதுமக்களிடமிருந்து அழைப்பு பெறப்பட்டவுடன், அதிகார எல்லைக்குட்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் எச்சரிக்கை செய்யப்பட்டு, விபத்து இடத்திற்கு ஊர்தி அதன் குழுவினருடன் அனுப்பி வைக்கப்படுகிறது. சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்கள் மற்றும் ஊர்திகள் கம்பியில்லா தந்தி தகவல்தொடர்பு வசதிமூலம் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கும் ஒருங்கிணைந்த அலைபேசி இணைப்பு (சி.யூ.ஜி.) அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்புப் படை வீரர்களுக்குத் துரிதமாக தகவல் தெரிவித்து, உரிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்திட ஏதுவாக சென்னை மாநகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள

[2020 மார்ச் 24

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு கம்பியில்லா அலைவரிசை தகவல் தொடர்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளின்போது ஆளிநர்களின் சேவை மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு ஆகியவற்றை அதிகரிக்கவும் இது உதவுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டுப்பாட்டு அறையினை நவீனப்படுத்த ரூ.6 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. எழும்பூரில் அமைக்கப்படவுள்ள இந்த நவீன கட்டுப்பாட்டு அறையில் ‘112’ அவசர கால சேவைக்கான தீ கட்டுப்பாட்டறை அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

(ii) பதில் செயல்பாடு நேரம்

பதில் செயல்பாடு நேரம் என்பது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்திறனை முடிவு செய்யும் காரணிகளில் ஒன்றாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிகழ்வுகளின்போது பதில் செயல்பாடு நேரத்தினை வெகுவாகக் குறைக்க இத்துறை தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. பதில் செயல்பாடு நேரமானது, சென்னை மாநகரில் சுமார் 6 நிமிடங்களாகவும், பிற இடங்களில் 10 நிமிடங்களுக்கு குறைவாகவும் இருக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலமும் மற்றும் திறன்வாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்களை அனைத்து மண்டலங்களுக்கும் வழங்குவதன் மூலமும் பதில் செயல்பாடு நேரத்தினை மேலும் வெகுவாக குறைக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது.

XII. துறை வலைதளம் வசதி

பொதுமக்கள் தேவையின்போது உபயோகப்படுத்தும் வகையில் முகநூல் பக்கம், இன்ஸ்டாகிராம் பக்கம் மற்றும் ட்விட்டர் பக்கம் ஆகியன பயன்பாட்டில் உள்ளன. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென http://www.tnfrs.tn.gov.in என்ற முகவரி கொண்ட வலைதளம் தேசிய தகவல்தொடர்பு மையத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலைதளம், துறையைப் பற்றிய முழுத் தகவல்களையும், அதன் செயல்பாடுகள் குறித்த விவரங்களை அளிப்பதுடன், பொதுமக்களுக்கு தீ பாதுகாப்பு குறித்து பயிற்றுவித்தல், தீ உரிம நிபந்தனைகள் குறித்த விவரங்கள் தெரிவித்தல் மற்றும் இந்திய தேசிய கட்டடங்கள் குறியீட்டுச் சட்டத்தின்கீழ் (National Building Code of India) வழங்கப்பட்டுள்ள நிலையான விதிமுறைகளின்படி, பல்வேறு

2020 மார்ச் 24]

வசிப்பிடங்களில் பின்பற்றப்பட வேண்டிய தீ பாதுகாப்பு குறித்த தகவல்களை அளிக்கும் முக்கிய பணியையும் செய்து வருகின்றது.

XIII. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் அனைத்து நிலைகளிலும் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலமுறையாக பயிற்சி அளிக்க வேண்டியதைக் கருத்தில்கொண்டு, சென்னை தாம்பரத்தில் மாநில பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையமானது, நவீன கற்பித்தல் உபகரணங்களுடன் அமையப்பெற்று தீயணைப்பு பணிகளில் நவீன கால வளர்ச்சிக்கும், யுக்திகளுக்கும் ஏற்ப தங்களைத் தயார் செய்துகொள்ளும் வகையில் தரமான புத்தாக்கப் பயிற்சியை அனைத்து பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது.

இம்மையத்தில் அளிக்கப்பட்டுவரும் பயிற்சியின் தரத்தைக் கருதி, மத்திய உள் துறை அமைச்சகம், நாகபுரி தேசிய தீயணைப்புப் பயிற்சி கல்லூரியில் பரிந்துரைக்கப்படும் பாடத்திட்டங்களை நடத்துவதற்கு அனுமதித்து, நாட்டிலுள்ள மண்டல பயிற்சி மையங்களுள் ஒன்றாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநில பயிற்சி மையத்தை அறிவித்துள்ளது. தேசிய தீயணைப்புப் பயிற்சி கல்லூரியில் பரிந்துரைக்கப்படும் சார்நிலை அலுவலர்களுக்கான பாடத் திட்டத்தின்படி, மத்திய/மாநில அரசு, இதர நிறுவனங்கள்/ இராணுவம் மற்றும் கடற்படை ஆகியவற்றால் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும் பயிற்சியாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மாநில பயிற்சி மையம் பிற மாநிலத்தைச் சார்ந்த தீயணைப்பாளர்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பொதுமக்களுக்கும் உரிய பயிற்சி அளித்து வருகிறது.

மாவட்ட தலைமையிடங்கள் அனைத்திலும் தனிப்பட்ட நபர்களுக்கு ஒரு வார காலத்திற்கு, நபர் ஒருவருக்கு ரூ.1,000/- என்ற கட்டணத்தில், அடிப்படை தீயணைப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தவகையில் 2019 ஆம் ஆண்டில் 401 தனிப்பட்ட நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் நவீன வளர்ச்சிக்கு ஏற்ப சர்வதேச அளவில் பின்பற்றப்படும் யுக்திகளுக்கு இணையாக தீயணைப்போரின் திறனை உயர்த்தும் பயிற்சி அளிப்பது மட்டும்

இத்துறையின் நோக்கமல்ல. மேலும், தீயணைப்பு, உயிர் காத்தல் மற்றும் பேரிடர் குறித்தான சமூக ஆக்கப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடிய ஆர்வம் உடைய நபர்களுக்கு, பயிற்சி அளித்து அவர்தம் திறமையை வெளிக்கொணர்வதிலும் இத்துறைக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக தற்போது செயல்பட்டுவரும் மாநில பயிற்சி மையத்தினை அனைத்து கட்டமைப்புகளும் மற்றும் உரிய நிருவாக அமைப்பும் கொண்ட ஒரு பயிற்சிக் கழகமாக உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில பயிற்சி மையத்தை உலகத்தரம் வாய்ந்த தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாநில பயிற்சிக் கழகமாக தரம் உயர்த்துவதற்கு ஏதுவாக, செங்கல்பட்டு வட்டம், காலவாக்கம் கிராமத்தில் 12.84 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, இந்நிலத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைப்பதற்கு ரூ.60.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பயிற்சிக் கழகத்தினை நிறுவுவதற்கும், அதற்கான பாடத் திட்டத்தினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்குத் தேர்வு செய்யப்படும் தீயணைப்போர்களுக்கு மாநில பயிற்சி மையத்திலும், பல்வேறு மாவட்டங்களில் தற்காலிகமாகத் துவக்கப்படும் பயிற்சி மையங்களிலும் அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் தென்மண்டல பயிற்சிக் கழகம் அமைப்பதற்கென மதுரை கிழக்கு, இடையப்பட்டி கிராமம், சர்வே எண் 79/12-ல் 4.5 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தினைச் சமூக விரோதிகளிடமிருந்தும், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் பாதுகாக்க சுற்றுச்சுவர் அமைப்பதற்கென ரூ.48.32 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

XIV. கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு

இத்துறையில், மொத்தம் 343 நிலையங்கள் (மூன்று மீட்புப் பணி நிலையங்கள் நீங்கலாக) உள்ளன. அவற்றுள் 246 நிலையங்கள் அவற்றிற்குச் சொந்தமான கட்டடங்கள் அல்லது வாடகையில்லா அரசுக் கட்டடங்களிலும், இதர 100 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் பயன்படுத்தப்படும் அதிக விலை மதிப்பு கொண்ட தீயணைப்பு ஊர்திகள்/உபகரணங்களைப் பாதுகாத்திடவும், 24 மணி நேரமும் சுழன்று பணிபுரியும் தீயணைப்பு வீரர்களுக்கு உறைவிட வசதி அளிக்கவும், ஒவ்வொரு நிலையத்திற்கும் அதற்கென

2020 மார்ச் 24]

பிரத்யேக உள்கட்டமைப்பு வசதியுடன்கூடிய கட்டட வசதிகளை ஏற்படுத்துதல் அவசியமாகும். அதற்கேற்ற கவாத்து மைதானம், ஊர்திகள் நிறுத்துமிடம், ஓய்வறை ஆகிய வசதிகளுடன்கூடிய நிலையக் கட்டடம் அமைப்பதற்கு தோராயமாக 45 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. எனவே, நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு தகுந்த இடத்தைத் தேர்வு செய்து, கையகப்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. கூடுதலாக, ஏற்கெனவே பழுதடைந்த கட்டடங்களில் இயங்கிவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கும், புதிய மாற்று கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, 2019-2020 ஆம் ஆண்டில் அரசு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களுக்குப் புதிய நிரந்தரக் கட்டடம் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது:

வ. எண்	பொருள்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)
1	தலைஞாயிறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	79.39
2	திருவாரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	174.91
3	தரங்கம்பாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	86.22
4	பீளமேடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	122.26
5	அவினாசி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	129.71
6	பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	119.30

[2020 மார்ச் 24

7	கும்பகோணம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	244.00
8	திருப்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	223.29
9	மீனாட்சி அம்மன் திருக்கோயில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	117.05
10	கெங்கவல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	121.56
11	கோயம்புத்தூர் மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	310.00
12	வேப்பேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுதல்	123.30

XV. தீத் தடுப்பு முன்முயற்சிகள்

(i) தீத் தடுப்பு

தீத் தடுப்பு நடவடிக்கை என்பது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் ஆரம்பநிலை பணியாகும். இத்தகைய தீத் தடுப்புப் பணியினை முனைப்புடன் செயல்படுத்த 13 மாவட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்களை இத்துறை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தீத் தடுப்புக் குழுக்கள் இல்லாத இடங்களில், தீத் தடுப்பு விழிப்புணர்வு பணியானது அந்தந்த இடங்களில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராமப்புறம்/நகர்ப்புறங்களில் பிரச்சாரங்களின் வாயிலாக தீத்தடுப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதன்மூலம் தீ விபத்து அபாயங்கள் குறைக்கப்படுகின்றன. தீத் தடுப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குடிசைப் பகுதிகள், பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதி ஆகிய இடங்களில்

2020 மார்ச் 24]

விரிவுரைகள் மூலமும், ஒத்திகைப் பயிற்சி மூலமும் மற்றும் தீத் தடுப்பு ஒத்திகைகள், பொருட்காட்சி, மேடை நாடகங்கள், குறும்படங்கள் ஆகியவை மூலமும் நடத்தப்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் தீத் தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் 3,094 கல்வி நிறுவனங்களிலும் மற்றும் 2,561 தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி திங்கள் 21 ஆம் நாள் "நாட்டிலுள்ள பள்ளிகளில், தேசிய அளவிலான தீ மற்றும் அவசர கால வெளியேறுதல் பயிற்சிகள் அளித்தல்" கடைப்பிடிப்பதன் ஒரு பகுதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு பள்ளியில் தீ விபத்து நேரிடும் அவசர காலங்களில் பாதுகாப்பாக வெளியேறுதல், தப்பித்துச் செல்லும் வழிகள் மற்றும் மீட்கும் வழிமுறைகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஒத்திகைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேமுறையில் ஏப்ரல் 14 முதல் 20 ஆம் தேதி வரை நடைபெறும் தீத் தடுப்பு வாரத்தில் தீவிர பரப்புரைகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சாரங்களை இத்துறை நடத்தி வருகிறது.

மேலும், இத்துறையானது, தீபாவளிப் பண்டிகையின்போது, மாநிலம் முழுவதும் பட்டாசுகளைக் கையாளுவது குறித்தும், பட்டாசு வெடித்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் பிரபல நடிகர்கள் நடித்த குறும்படங்களைத் திரையரங்குகள், தொலைக்காட்சிகளில் திரையிட்டும், பாதுகாப்புக் குறிப்புகள் அடங்கிய பிரசுரங்களை, பட்டாசு விற்பனை முகவர்கள்மூலம் நுகர்வோருக்கு சென்றடையும் வகையில் விநியோகம் செய்தும், பொதுமக்கள் கூடும் பிரதான இடங்களில் அமைந்த வணிக நிறுவனங்களில் விளம்பரப் பலகைகள் அமைத்தும், தீத் தடுப்பு பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதன்மூலமும் பொதுமக்களிடையே தீ விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதற்கென ரூ.100 இலட்சம் செலவில், 5 மண்டலங்களுக்கும் 5 கல்விசார் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

(ii) தீ பாதுகாப்புத் தன்னார்வத் தொண்டர்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்பாட்டிற்கு உறுதுணையாக மாணவர்களையும், பொதுமக்களையும் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களிலிருந்து தீ பாதுகாப்புத் தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கப்பட்டு,

[2020 மார்ச் 24

அவர்களுக்கு பல்வேறு ஆரம்பநிலை தீயணைப்பு யுக்திகள் மற்றும் மீட்பு வழிகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்துறையில் தற்போது 9,859 தன்னார்வத் தொண்டர்கள் உள்ளனர்.

(iii) தீ அபாயமுள்ள வசிப்பிடங்களில் தீத் தடுப்பு முறைகள்

இத்துறையின் மாவட்ட அலுவலரின் தலைமையில் பல்வேறு துறையினரை உள்ளடக்கிய குழு ஒன்றினால், மாவட்டத்திலுள்ள அனைத்து திரையரங்குகளும் ஆண்டிற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கை உரிமம் வழங்க அதிகாரம் உள்ள அலுவலர்களின் தக்க நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் 312 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அரசு கட்டடங்களிலும் இத்துறை தீ பாதுகாப்புத் தணிக்கை மேற்கொள்கிறது. 2019 ஆம் ஆண்டில் 4,836 அரசு கட்டடங்களில் தீ பாதுகாப்புத் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 25,127 இதர கட்டடங்களிலும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் தீ பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iv) மருத்துவமனைகளில் தீத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

கதிர்வீச்சு பொருட்கள், பிராணவாயு உருளைகள் மற்றும் எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய திரவங்கள் சிகிச்சை அளிக்கும்போது பயன்படுத்துவதற்காக மருத்துவமனைகளின் சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. நடக்க முடியாத வயது முதிர்ந்தோர், குழந்தைகள், உடல் நலிவடைந்தவர்கள், மனநலன் பாதிக்கப்பட்டோர் போன்ற நோயாளிகள் நிறைந்த மருத்துவமனைகள் அதிக அளவிலான வளாகங்களைக் கொண்டவையாக உள்ளன. நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் பலர் அவசர காலத்தில் மருத்துவமனை வளாகத்தைவிட்டு வெளியேறுவதற்கு அந்தக் கட்டடத்தின் அமைப்புமுறை மற்றும் வழிமுறைகளை அறியாதவர்கள். எனவே, மருத்துவமனைகளில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தீத் தடுப்பு நடவடிக்கையாக பின்வரும் தீத் தடுப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்கிறது:

2020 மார்ச் 24]

1. போதுமான தீயணைப்பான்கள் மற்றும் நீர்விடு குழாய்கள் அமைப்புகள் பொருத்துதல்.

2. உள்ளூரில் உள்ள தீயணைப்பு அலுவலரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப, அவரால் கூறப்படும் இடங்களில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவிகள் பொருத்துதல்.

3. தூக்குப் படுக்கை நோயாளிகளை எடுத்துச் செல்ல ஏதுவாக அறைகளுக்குச் செல்லும் நடைபாதைகள் மற்றும் வெளியேறும் வழிகளை போதுமான அளவு அகலமுடையதாக அமைத்தல்.

4. புகை உட்புகா கதவுகள் அல்லது பிரிவுகள் அமைத்தல்.

5. பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீயினால் பாதிக்கப்படாத பொருட்களால் அமைத்தல்.

6. போதுமான அவசர வழிகள் மற்றும் சரிவுகள் அமைத்தல்.

7. ஒளிரும் சைகைகள் மற்றும் தீயணைக்க பின்பற்ற வேண்டிய அறிவிப்பு அமைப்புகள் அமைத்தல்.

8. செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து தீயணைப்புக் கருவிகளைக் கையாள்வதிலும் மற்றும் பராமரிப்பதிலும் கட்டாயமாகப் பயிற்சி அளித்தல்.

9. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒத்திகைப் பயிற்சியினை முறையாக நடத்துதல்.

10. மிகப் பெரிய மருத்துவமனைகளில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கும், அவசர காலங்களில் உள்ளிருப்போருக்கு உதவி செய்வதற்கும் பயிற்றுவிக்கப்பட்ட தீயணைப்புப் பணியாளர்களை நியமித்தல்.

(v) கோடைக் காலம் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது ரோந்துப் பணியில் ஈடுபடுதல்

கோடைக் காலத்தில், உயர் வெப்பநிலை, வெளிப்புற சூடு மற்றும் அனல்காற்று போன்றவற்றால் குடிசைப் பகுதிகளில் தீ விபத்துகள் அதிக அளவில் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் ஏப்ரல், மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளைக் காலவிரயமின்றி எதிர்கொள்வதற்காகவும் மற்றும் செயல்படும் நேரத்தைக் குறைப்பதற்காகவும், தீ அபாயம் நிறைந்த பகுதிகளில் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட தீ விபத்துகளின்

அடிப்படையில் இந்த ரோந்துப் பணிகளின் இடங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. தீபாவளி பண்டிகையின்போது, மாநிலம் முழுவதும் தீ விபத்து ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் இத்துறையைச் சார்ந்த ஊர்திகள் மற்றும் பணியாளர்கள் நிலைநிறுத்தப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

(vi) காட்டுத் தீ பாதுகாப்பு

2019 ஆம் ஆண்டில், 1,330 தீ அழைப்புகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் கோடைக் காலத்தில் காட்டுத் தீயைத் தடுக்கும்பொருட்டு, மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் அனைத்து கிராமங்களிலும் பெருமளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும் 100 தன்னார்வலர்களை அணி திரட்டி, அவர்களுக்கு வனத் தீயைக் கண்காணிக்கவும், போராடவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

XVI. தீயணைப்புத் தொண்டு நாள்

ஆண்டுதோறும், ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் தீயணைப்புத் தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கி ஒரு வாரக் காலத்திற்கு தீயணைப்புத் தொண்டு நாள் நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் மும்பை துறைமுகத்தில் விக்டோரியா கப்பல் தளத்தில் ஏற்பட்ட கொடூர தீ விபத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட வெடிப்பு சிதறுதல்களால் உயிர் இழந்த தீயணைப்பு வீரர்களை நினைவுகூறும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. தீயணைப்பு தொண்டு வாரத்தில் அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காக தீ பாதுகாப்பு குறித்த பரப்புரைகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் மற்றும் வினாடி-வினா நிகழ்ச்சிகளை இத்துறை ஏற்பாடு செய்கிறது. மாநிலம் முழுவதும் மாணாக்கர்களுக்கு ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேலும், இத்துறையானது, தன்னார்வத் தொண்டர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் பெரிய அபாயகரமான தொழிற்சாலைகள் ஆகியவற்றின் உதவியுடன் இணைந்து பாதுகாப்பு குறித்த பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் ஒத்திகைப் பயிற்சிகள் நடத்தி வருகின்றன. தீத் தடுப்பு குறித்த பரப்புரைகளை செய்தித் தாள்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

XVII. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகள்

2019 ஆம் ஆண்டில் இத்துறை 25,068 தீ விபத்து அழைப்புகளில் பணியாற்றி, 48 மனித உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. ரூ.325.597 கோடி மதிப்பிலான சொத்துகள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளதுடன், 26,392 மீட்பு அழைப்புகளில் சீரிய முறையில் பணியாற்றி, 4,015 மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. கிணறு மற்றும் வெள்ளத்திலிருந்து 3,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் காப்பாற்றப்பட்டுள்ளன. தீபாவளிப் பண்டிகையின்போது ஏற்படக்கூடிய விபத்துகளைத் தடுப்பதற்குச் சென்னை நகரில், நெரிசல் மிகுந்த பாரிமுனை பகுதியில் தற்காலிக பட்டாசு விற்பனைக் கடைகள் அமைக்கத் தடை செய்யப்பட்டது. இதற்கு பதிலாக, தீவுத்திடலில் திறந்த வெளியில் கடைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

மேலும், இத்துறையானது, தீபாவளிப் பண்டிகையின்போது, பட்டாசுகளைக் கையாளுவது குறித்தும், வெடித்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் பொதுமக்களிடையே பயனுள்ள பிரச்சாரங்கள்மூலம் வலியுறுத்தி வருவதுடன், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய குழுவினருடன்கூடிய ஊர்திகள் தீ அபாயமுள்ள இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக கடந்த 2019 ஆம் ஆண்டு தீபாவளியின்போது மாநிலம் முழுவதும் 131 தீ விபத்து அழைப்புகள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

XVIII. நலத் திட்டங்கள்

(i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதி

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேம நல நிதியானது, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் துயரக் காலங்களில் நிதி உதவி அளிக்கவும் மற்றும் அவர்களது நலனை மேம்படுத்துவதற்காகவும் 1962 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

(அ) காசநோய், தொழுநோய், மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வழங்குவதற்கும்,

[2020 மார்ச் 24

(ஆ) தீயணைப்புப் பணியாளர்களின் குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கும்,

(இ) உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் மற்றும்

(ஈ) உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் உயிரிழந்துவிட்டால், அவர்களது இறுதிச் சடங்கு செலவிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில், தற்போது 5,964 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.36.68 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது:-

வ. எண்	உதவித் தொகை விவரம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	உறுப்பினர்களுடைய 78 குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக	6.80
2.	பணியாளர்களின் பிள்ளைகளில் 10-வது மற்றும் 12 வது வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் 85 சதவிகிதமும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசு. இந்த பரிசுத் தொகை உறுப்பினர்களுடைய 89 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.	2.30
3.	222 பணியாளர்கள் ஓய்வு பெற்றபோது, அடையாளத் தொகையாக அளிக்கப்பட்ட நிதி உதவி	16.70

2020 மார்ச் 24]

4.	உயிரிழந்த 155 உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவித் தொகை	10.88
மொத்தம்		36.68

2014 ஆம் ஆண்டிலிருந்து சேம நல நிதிக்கு வழங்கி வரும் மானியத்தை அரசு ரூ.12 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி உள்ளது.

இத்துறை பணியாளர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபடும்போது அவர்களுக்கு ஏற்படும் பெருந் தீக்காயங்களுக்காகச் செலவிடும் தொகையை ஈடு கட்ட ஏதுவாக “எதிர்பாரா மருத்துவ நல நிதி” என்ற திட்டத்தினை ஒவ்வோர் ஆண்டும் ரூ.50 இலட்சம் அரசு மானியத்துடன் செயல்படுத்திட ஒப்புதல் அளித்துள்ளது.

(ii) கருணைத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியின்போது வீர மரணமடையும் மற்றும் விபத்தின் காரணமாக நிரந்தர ஊனம் அடையும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்த்தி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது:

வ. எண்	உதவித் தொகை விவரம்	தற்போது வழங்கப்படும் தொகை	உயர்த்தி வழங்கப்படும் தொகை
1.	பணியாற்றும்போது உயிரிழப்பவர்களுக்கு	ரூ. 5.00 இலட்சம்	ரூ. 10.00 இலட்சம்
2.	பணியாற்றும்போது நிரந்தர ஊனம் அடைபவர்களுக்கு	ரூ. 2.00 இலட்சம்	ரூ. 4.00 இலட்சம்
3.	பணியாற்றும்போது தீக்காயம் 20% க்கும் அதிகம் மற்றும் அல்லது பிற காயங்கள்	ரூ. 1.00 இலட்சம்	ரூ. 2.00 இலட்சம்

[2020 மார்ச் 24

4.	தீக்காயம் 20% க்கும் குறைவு மற்றும் அல்லது பிற காயங்கள்	ரூ. 50,000	ரூ. 1.00 இலட்சம்
5.	சாதாரண காயங்கள்	ரூ. 10,000	-

(iii) குழுக் காப்பீட்டுத் திட்டம்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் பணியில் இருக்கும்பொழுதோ, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் ஏற்படும் விபத்தினாலோ இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்கு என அனைத்து பதவிகளிலும் உள்ள தீயணைப்புப் பணியாளர்களை உள்ளடக்கி செயல்பட்டுவரும் குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உதவி மாவட்ட அலுவலர் பதவித் தரம் வரையில் அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கும் நிவாரணத் தொகையாக தற்போது ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்படி மாவட்ட அலுவலர், துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு தற்போது ரூபாய் நான்கு இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

(iv) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின்கீழ், நியாய விலைக் கடைகள் மூலமாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு, விலையில்லா அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டொன்றுக்கு ரூ.63 இலட்சம் செலவிடப்படுகிறது.

(v) பணியாளர்களுக்கான உணவுப் படி

இதற்கு முன்னர், நிலைய அலுவலர் பதவிக்குக்கீழ் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு மட்டும், தீ விபத்து, மீட்புப் பணி அழைப்பு மற்றும் அவசர காலங்களில் பணியாளர்களை படைத்திரட்டும் பணியில் ஈடுபடும்போது (mobilization) உணவுப் படியாக சென்னையில் ரூ.200/- ஆகவும், பிற பகுதிகளில் ரூ.150/- ஆகவும் வழங்கப்பட்டு வந்தது. இந்த சலுகையை 2014-2015 ஆம் ஆண்டில், அரசு, நிலைய அலுவலர்கள், நிலைய

2020 மார்ச் 24]

அலுவலர்கள் (போக்குவரத்து) மற்றும் உதவி மாவட்ட அலுவலர்கள் ஆகியோருக்கும், நீட்டிப்பு செய்து சென்னை மாநகரத்தில் நாளொன்றுக்கு ரூ.200/- ஆகவும், பிற பகுதிகளில் நாளொன்றிற்கு ரூ.150/- ஆகவும் வழங்கி வருகிறது. இதனால் ஆண்டொன்றிற்கு ரூ.43 இலட்சம் அரசுக்குக் கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

(vi) மானிய விலையில் பொருட்கள் வாங்க சிறப்பு அங்காடிகள்

காவல் துறையில் பணிபுரியும், ஓய்வுபெற்ற மற்றும் உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்குச் சிறப்பு அங்காடிகள்மூலம் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம், 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

காவல் துறையில் உள்ளதைப் போன்று காவலர் அங்காடி வசதி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அமைச்சுப் பணியாளர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(vii) குடியிருப்புகள் கட்டுதல்

அமைச்சுப் பணியாளர்களை தவிர, இத்துறையின் அனைத்து அலுவலர்கள்/பணியாளர்களும் வாடகை இல்லா குடியிருப்பு வசதியினை பெற தகுதியுடையவர்கள் ஆவர். தற்போது மாநிலம் முழுவதற்கும் 1,329 குடியிருப்புகள் பயன்பாட்டில் உள்ளன. இவை தவிர, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 196 குடியிருப்புகள் கட்டும் பணி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் 50 பணியாளர்கள் தங்குவதற்கு (திருமணமாகாதவர்கள்), சென்னை தங்க சாலையில் ஒரு படை குடியிருப்பு கட்டப்பட்டு, 8-5-2017 முதல் பயன்பாட்டில் உள்ளது.

மேலும், 2018-2019 ஆம் ஆண்டில் சென்னை மாநகர், மணலியில் 1 படை குடியிருப்பு, 8 நிலைய அலுவலர் மற்றும் 72 தீயணைப்போர் குடியிருப்புகள், திருவாரூர் மாவட்டம், வலங்கைமானில் 2 நிலைய அலுவலர்கள் மற்றும் 15 தீயணைப்போர் குடியிருப்புகள் அதாவது

[2020 மார்ச் 24

9 நிலைய அலுவலர் குடியிருப்புகள், 87 தீயணைப்போர் குடியிருப்புகள் மற்றும் 1 படை குடியிருப்பு ஆக மொத்தம் ரூ.19.24 கோடி செலவில் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இடங்களில் குடியிருப்புகள் கட்டுவதற்கென உரிய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன:

வ. எண்	கட்டடங்கள் கட்டப்படும் இடங்கள்	தொகை (ரூ. கோடியில்)
1.	நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் 1 நிலைய அலுவலர் (ம) 12 தீயணைப்போர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	2.80
2.	நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	2.58
3.	சென்னை மாவட்டம், வேப்பேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் மற்றும் 2 நிலைய அலுவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	0.74
4.	சேலம் மாவட்டம், சங்ககிரியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் 1 நிலைய அலுவலர் மற்றும் 12 தீயணைப்போர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	2.08

2020 மார்ச் 24]

வ. எண்	கட்டடங்கள் கட்டப்படும் இடங்கள்	தொகை (ரூ. கோடியில்)
5.	தென் சென்னை மாவட்டம், துரைப்பாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் 6 நிலைய அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.	1.24

(viii) முழு உடற் பரிசோதனைத் திட்டம்

சவால் நிறைந்த சூழ்நிலைகளில் தீயணைப்புப் பணியாளர்கள் பணிபுரிந்து வருவதால், இவர்கள் நாளடைவில் நோய்கள் மற்றும் மன அழுத்தத்திற்கு உட்படுகிறார்கள். இத்தகைய பாதிப்புகளிலிருந்து இவர்களைத் தற்காக்கும் வகையில் அரசு, காவல் துறை பணியாளர்களுக்கு உள்ளதுபோல், 40 வயது முடிவுற்ற அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கும் அரசு மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி இவ்வாண்டு 865 பணியாளர்கள் இவ்வசதியினால் பயனடைந்துள்ளனர்.

XIX. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

உயிரை பணயம் வைத்து பணியாற்றிவரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களை ஊக்குவிக்கும்விதமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதக்கங்கள் மற்றும் விருதுகளை அரசு வழங்குகின்றது:

(i) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (அண்ணா பதக்கம்)

ஒவ்வோர் ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப

ஒட்டுமொத்த பரிசுத் தொகையாக ரூ.4,000/- முதல் ரூ.10,000/- வரை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். 2019 ஆம் ஆண்டில், பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்கள், 10 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சரின் வீர தீரச் செயலுக்கான பதக்கங்கள் (அண்ணா பதக்கம்) பெறுபவர்கள் மாதாந்திர பணப் பயனாக ரூ.500/- பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். 2014 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சரின் வீர தீரச் செயலுக்கான பதக்கம் (அண்ணா பதக்கம்) பெறுபவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அளித்து வந்த மாதாந்திர பணப் பயன் ரூ.500/-ஐ, ஒட்டுமொத்த வெகுமதித் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

(ii) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம்

தண்டனைகள் ஏதுமின்றி 10 ஆண்டு காலத்திற்கும் மேலாக அப்பழுக்கற்று பணிபுரியும் நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கமானது, ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளன்று, இப்பதக்கமானது முன்னணித் தீயணைப்போர்/ இயந்திரக் கம்மியர் ஓட்டுநர்/தீயணைப்போர் ஓட்டுநர்/ தீயணைப்போர் ஆகிய பதவிகளில் பணியாற்றும் 120 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறுவோர் மாதாந்திர பணப் பயனாக ரூ.200/- பெறுவர்.

(iii) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பணிப் பதக்கம்

இத்துறையில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிவரும் பணியாளர்களின் திறமையினைப் போற்றும் வகையில் இந்தப் பதக்கமானது அரசால் 2001 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் தீத் தொண்டு நாளான ஏப்ரல் 14 ஆம் நாளன்று மூன்று பதக்கங்களுக்கு மிகாமல், நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போர் ஆகியோருக்கு தலா ஒரு பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பதக்கம் பெறுபவர்களுக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் ஒட்டுமொத்த பரிசுத் தொகை ரூ.2,000/- முதல் ரூ.3,000/- வரை வழங்கப்படுகிறது. தங்களது உயிரைப் பணயம் வைத்து துணிச்சலுடனும் மற்றும் வீரத்துடனும் பணிபுரியும் பணியாளர்களை அதிக

2020 மார்ச் 24]

அளவில் அங்கீகரித்து ஊக்குவிக்கும்வண்ணம், 14 ஏப்ரல் 2018 முதல் இத்துறையைச் சார்ந்த 6 நபர்களுக்கு ஆண்டுதோறும் இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) அண்ணா வீர தீர பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று வீர தீரச் செயல் புரிந்த அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அண்ணா வீர தீர பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோர் ரூ.5,000/- மதிப்புள்ள தங்கப் பதக்கமும், சான்றிதழும் மற்றும் அண்ணா வீர தீர பதக்கத்தின்கீழ் ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் மொத்த பரிசுத் தொகை ரூ.1,00,000/-ஆகியவையும் பெறுகின்றனர்.

மேற்கூறியவை தவிர, மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:-

(i) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று சிறந்த மெச்சத்தக்க பணிக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப் பணி பதக்கம் வழங்கப்படுகிறது.

(ii) சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப் பணி பதக்கம்.

குடியரசு தினத்தன்று வழங்கப்படும் குடியரசுத் தலைவரின் மெச்சத்தக்க பணிக்கான பதக்கம் 2020 ஆம் ஆண்டில் 4 தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் வீர தீரச் செயல்களுக்கான பதக்கம் 5 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப் பணி பதக்கம் 2019 ஆம் ஆண்டு 1 தீயணைப்புப் பணியாளருக்கும், சிறந்த மெச்சத்தக்க பணிக்கான பதக்கம் 4 பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

XX. விளையாட்டுப் போட்டிகள்

ஒவ்வோர் ஆண்டும் துறைப் பணியாளர்களுக்கு என மண்டல அளவிலும் பின்னர் மாநில அளவிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தீயணைப்பு வீரர்களின் உடற் தகுதியினை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் தடகளப் போட்டிகள், இறகுப்பந்து, கைப்பந்து, கால்பந்து மற்றும் நீச்சல் உள்ளிட்ட விளையாட்டுகள் நடத்தப்படுகின்றன.

[2020 மார்ச் 24

தீயணைப்புப் பணி மற்றும் மீட்புப் பணித் திறனை பணியாளர்களிடத்தில் மேம்படுத்தும் வகையில், நீர்விடு குழாய் போட்டி, ஏணிப் பயிற்சி, கயிறு ஏறுதல், பம்பு இயக்குதல், தீயணைப்பு வாகனங்களை இயக்குதல் போன்ற போட்டிகள் பணியாளர்களிடையே உடற் தகுதி மற்றும் மன வலிமை ஆகிய திறன்களை வளர்க்கும் வகையில் நடத்தப்படுகின்றன. விளையாட்டுப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள அரசு, மண்டல விளையாட்டுப் போட்டிகளுக்கான மானியத் தொகையை ரூபாய் ஒரு இலட்சமாகவும், மாநில விளையாட்டுப் போட்டிகளுக்கான மானியத் தொகையை ரூபாய் மூன்று இலட்சமாகவும் உயர்த்தி ஒப்பளிப்பு செய்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கான மாநில விளையாட்டுப் போட்டிகள் 20-9-2019 அன்று சென்னையில் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

XXI. முன்முயற்சிகள்

பொதுமக்களின் உயிரையும், உடைமையையும் காக்கும் வகையில் ஆற்றிவரும் சேவையின் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும், துறையில் உள்ள பணியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு இந்த அரசு சில பின்வரும் முக்கிய முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:-

- பணியாற்றும்போது உயிரிழக்கும் பணியாளர்களது குடும்பத்தினருக்கு குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் நிதி உதவித் தொகை, ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- நீலகிரி மாவட்டத்தின் பயன்பாட்டிற்கு என ரூ.92.12 இலட்சம் செலவில் உரிய மீட்பு உபகரணங்களுடன்கூடிய 4 இழுவை ஊர்திகள் கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- இரண்டு துணை இயக்குநர் பதவிகள், இணை இயக்குநர் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு மேம்படுத்தப்பட்ட கம்பியில்லா மிகு உயர் அலைவரிசை தகவல்தொடர்பு கருவிகளை ரூ.32 இலட்சம் செலவினத்தில் கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

2020 மார்ச் 24]

- 5 மண்டல அலுவலகங்கள், 34 மாவட்ட அலுவலகங்கள், மாநில பயிற்சி மையம், மாநில பட்டறை மற்றும் தீ கட்டுப்பாட்டு அறை ஆகியவற்றிற்கு என இணையதள வசதியை ரூ.10.03 இலட்சம் செலவினத்தில் ஏற்படுத்தித் தர ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

- மண்டல விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மானியத் தொகையை ரூ.8000/-லிருந்து ஒரு இலட்சமாகவும் மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கான மானியத் தொகையை ரூ.30,000/-லிருந்து மூன்று இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் தீத் தொண்டு நாள் அனுசரிக்க ஏதுவாக, ஒவ்வொரு நிலையத்திற்கும் வழங்கப்படும் நிதியினை ரூ.500/-லிருந்து ரூ.3,000/-ஆக உயர்த்தி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பணியில் ஈடுபடும் தீயணைப்பு வீரர்களுக்குத் தற்காப்பு வழங்கும் வகையில் 1,000 தற்காப்பு உடைகள் ரூ.5 கோடி செலவில் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள கூடுதல் திறன்கொண்ட சிறப்பு வகை வானோக்கி உயரும் ஏணிகொண்ட ஊர்திகளை இயக்கும் பணியாளர்களுக்கு சிறப்புப் படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/-வீதம், ஆண்டிற்கு ரூ.3.60 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றிவரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சவால் நிறைந்த தீ விபத்து, இயற்கை இடர்பாடுகள் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதால் அவர்களுக்கு மாத இடர் படி தீயணைப்பாளர் முதல் உதவி மாவட்ட அலுவலர் வரை ரூ.800/- ஆகவும், மாவட்ட அலுவலர்களுக்கு ரூ.900/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

- தென் சென்னை மாவட்ட அலுவலகக் கட்டடத்துடன், உதவி மாவட்ட அலுவலர்களுக்கான அறை மற்றும் அசோக் நகர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.3.71 கோடி (சென்னை மெட்ரோ இரயில் நிருவாகத்தினரின் பங்களிப்புத் தொகை ரூ.87.85 இலட்சம் சேர்த்து) ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தாம்பரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குப் புதியதாக பெறப்பட்ட வான்நோக்கி உயரும் 104 மீட்டர் கொண்ட ஏணி ஊர்தியினை நிறுத்துவதற்கான நிரந்தரக் கட்டடம் கட்ட ரூ.1.38 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர்; சேலம் மாவட்டம், காடையாம்பட்டி; நாமக்கல் மாவட்டம், வெப்படை; ஈரோடு மாவட்டம், நம்பியூர்; திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான்; சென்னை மாவட்டம், அண்ணா நகர்; திருச்சி மாவட்டம், சமயபுரம்; விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி; காஞ்சிபுரம் மாவட்டம், மகாபலிபுரம் மற்றும் மேடவாக்கம் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.1,294.5 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு; மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.227.46 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- விழுப்புரம் மாவட்டம், திருநாவலூரில் புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.109.56 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை மாவட்டம், மெரினா கடற்கரையில் புதிய மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.81.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், பீளமேட்டில் புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.122.26 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருப்பூர் மாவட்டம், அவினாசி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.129.71 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.119.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.244.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

- திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.223.29 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மதுரை மாவட்டம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.117.05 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சேலம் மாவட்டம், கெங்கவல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.121.56 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூரில் மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.310.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை மாவட்டம், வேப்பேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.197.34 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், துரைப்பாக்கத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.120.64 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சேலம் மாவட்டம், சங்ககிரியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.208.7 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- பழைய மகாபலிபுரம் சாலைக்கென ரூ.12 கோடி செலவில் 54 மீட்டர் உயரம் கொண்ட வான்நோக்கி உயரும் ஏணியுடன்கூடிய ஊர்தி ஒன்று வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 1,500 தீயணைப்பு மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்குத் தற்காப்பு சாதனங்களுடன்கூடிய உடைகள் வாங்குவதற்கு ரூ.8.54 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

- 50 ஆளில்லா விமானங்கள் கொள்முதல் செய்ய ரூ.1.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இரு கூடுதல் இயக்குநர்கள் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டியில் புதிய தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க ரூ.109.56 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.


XXII. முடிவுரை

தீத் தடுப்பு, தீயணைப்பு, மனித உயிர்களையும், விலங்கினங்களின் உயிரையும் காப்பாற்றுதல் மற்றும் உடைமைகளுக்கு ஏற்படும் சேதத்தைத் தடுத்தல் ஆகிய பணிகளே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் இலக்காக உள்ளது. இந்தத் துறையில் நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதுமையான முயற்சிகள், செயல்படுத்தப்பட்ட திறமையான நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு "பதில் செயல்பாடு நேரத்தை" குறைத்து நல்ல பயன்களைத் தந்துள்ளது. தீத் தடுப்பு மற்றும் தீ ஆபத்துகளை அகற்ற பொதுமக்கள் மத்தியில் பெருமளவில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நல்ல பயன்களை அளித்ததோடு மட்டுமின்றி மாநிலத்தில் தீ விபத்துகளின் எண்ணிக்கையைப் பெருமளவு குறைந்துள்ளது. இத்துறை மென்மேலும் விரிவாக்கப்பட்டு, எல்லாவிதமான அவசர கால சூழ்நிலைகளிலும், பேரிடர்களையும், புதிய சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் தொடர்ந்து சீரிய பணியை ஆற்றி வருகிறது.

அட்டவ

தமிழ்நாடு தீயணைப்


நிர்வா



ணை – 1

பு மீட்புப் பணிகள் துறை

ாக அமைப்பு



குறிப்பு:– அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்தப் பதவிகளில் உள்ளோர் எண்ணிக்கையினைக் குறிப்பதாகும்.

அ

<u>மண்டலங்களின் கீழ் செயல்ப</u>

வட மண்டலம்	தீமீபநி	தீதகு	மற்றவை
1. வட சென்னை	9	1	1*
2. தென் சென்னை	12	1	1*
3. மத்திய சென்னை	10	–	–
மெரினா	1@		
4. சென்னை புறநகர்	10	–	–
5. வட மண்டலம்	–	–	2**
மொத்தம்	41+1@	2	4**

வடமேற்கு மண்டலம்	தீமீபநி	தீதகு
1. வேலூர்	16	1
2. திருவண்ணா மலை	12	–
3. காஞ்சிபுரம்	13	1
4. திருவள்ளூர்	9	–
மொத்தம்	50	2

மத்திய மண்டலம்	தீமீபநி	தீதகு
1.திருச்சிராப்பள்ளி	9	1
2. புதுக்கோட்டை	13	1
3. தஞ்சாவூர்	9	–
4. நாகப்பட்டினம்	13	–
5. கடலூர்	15	–
6. விழுப்புரம்	14	–
7. கரூர்	4	–
8. பெரம்பலூர்	6	–
9. திருவாரூர்	12	–
மொத்தம்	95	2

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ட்டவணை – II

டும் நிலையங்கள் மற்றும் இதர அலகுகள்

தெற்கு மண்டலம்

	தீமீபநி	தீதகு
1. மதுரை	14	–
2. திருநெல்வேலி	15	–
3. கன்னியாகுமரி	7	–
4. தூத்துக்குடி	10	–
5. விருதுநகர்	10	1
6. இராமநாதபுரம்	11	–
7. சிவகங்கை	6	
8. தேனி	8	–
மொத்தம்	81	1

மேற்கு மண்டலம்

	தீமீபநி	தீதகு
1. கோயம்புத்தூர்	12	1
2. ஊட்டி	3	–
கோத்தகிரி	1 @	
3. ஈரோடு	11	1
4.திருப்பூர்	8	1
5. சேலம்	14	1
6. தருமபுரி	5	1
ஒகேனக்கல்	1@	
7. கிருஷ்ணகிரி	7	–
8. திண்டுக்கல்	10	1
9. நாமக்கல்	6	–
மொத்தம்	76+2@	6

மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை **343 + 3 @**

<u>பிற நிறுவனங்கள்</u>

மாநில பயிற்சி மையம்	1
மாநிலப் பட்டறை	1
@மீட்புப் பணி நிலையம்	3@
மோப்பநாய் படை	1
இசை மேளக்குழு	1

குறிப்பு– தீமீபநி : தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு: தீத்தடுப்புக் குழு

மற்றவை:

*புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டு அறை மற்றும் வான்தந்திப் பிரிவு

[2020 மார்ச் 24

அட்டவணை – III

மாவட்ட வாரியான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்

வ.எண்	மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை
1	*அரியலூர்*	*3*
2	*சென்னை (ஒரு மீட்புப்பணிகள் நிலையம் உட்பட)*	*42*
3	*கோயம்புத்தூர்*	*12*
4	*கடலூர்*	*15*
5	*திண்டுக்கல்*	*10*
6	*தருமபுரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட)*	*6*
7	*ஈரோடு*	*11*
8	*கரூர்*	*3*
9	*காஞ்சிபுரம், செங்கல்பட்டு*	*13*
10	*கன்னியாகுமரி*	*7*
11	*கிருஷ்ணகிரி*	*7*
12	*மதுரை*	*14*
13	*நாகப்பட்டினம்*	*13*
14	*நாமக்கல்*	*6*

2020 மார்ச் 24]

15	நீலகிரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட)	4
16	புதுக்கோட்டை	13
17	பெரம்பலூர்	2
18	ராமநாதபுரம்	11
19	சேலம்	14
20	சிவகங்கை	6
21	தஞ்சாவூர்	9
22	தேனி	8
23	திருவண்ணாமலை	12
24	திருச்சிராப்பள்ளி	11
25	திருவாரூர்	12
26	திருவள்ளூர்	9
27	தூத்துக்குடி	10
28	திருப்பூர்	8
29	திருநெல்வேலி	15
30	வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்	16
31	விழுப்புரம், கள்ளக்குறிச்சி	14
32	விருதுநகர்	10
மொத்தம்		**346**

இணைப்பு III

(38ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38-பொதுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

I. முன்னுரை

மாநிலத்தின் பொது நிருவாகம் தொடர்புடைய முக்கியப் பணிகள் பொதுத் துறையால் கையாளப்பட்டு வருகிறது. இத்துறையில் கவனிக்கப்படும் முக்கியமான பணிகள்:

- ஆளுநரின் அலுவலகம் மற்றும் இல்லப் பராமரிப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சர்களின் பணி நியமனம் மற்றும் தொடர்பான பணிகள்
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அலுவலகப் பணியமைப்பு தொடர்பான பணிகள்
- அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல்
- தகைசால் பெருமக்கள் மாநிலத்திற்கு வரும்போது மரபு சீர்முறை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தல்
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு மற்றும் தென்மண்டலக் குழு உட்பட மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்
- இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களின் நிருவாகப் பணிகளைக் கவனித்தல்
- மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் நியமனம்
- சட்டம்-ஒழுங்கு பராமரித்தல்

[2020 மார்ச் 24

- தேசிய பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அந்நியச் செலாவணி பாதுகாப்பு மற்றும் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974-ஐ (COFEPOSA) நடைமுறைப்படுத்துதல்

- மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்புகொள்ளல்

- மனித உரிமைகள் குறித்த விவரங்கள், மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993-ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட பணிகள் (NHRC)

- இந்திய தரைப் படை, கப்பற்படை, விமானப் படை மற்றும் கடலோரக் காவல் படை ஆகிய இராணுவத் துறைகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்

- அயல்நாட்டவர்களைப் பதிவு செய்தல், உரிய நுழைவிசைவுடன் வருகின்ற அயல்நாட்டினருக்கு தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டித்து அனுமதித்தல், சொந்த நாட்டிற்கு திரும்பிச்செல்ல விழைபவர்களுக்கு வெளிச்செல்ல அனுமதித்தல் போன்றவற்றை அயல்நாட்டினர் சட்டம், 1946-ன்படி செயல்படுத்துதல்

- மாநிலத்தில் வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்

- வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தை நிருவகித்தல்

- சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நலப் பணிகளைச் செயல்படுத்துதல்

- முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்பட்ட மனுக்கள்மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்

- சென்னை, உதகமண்டலம் மற்றும் புது தில்லியிலுள்ள அரசு விருந்தினர் இல்லங்களை நிருவகித்தல்

2020 மார்ச் 24]

- அரசு விமானப் போக்குவரத்துப் பிரிவு சம்பந்தமான பணிகளை நிருவகித்தல் மற்றும் கவனித்தல்
- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்
- தலைமைச் செயலகக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் நிருவகித்தல்

II. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

இந்திய தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் விழாக்களை மாநில அளவில் நாட்டுப் பற்றுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொதுத் துறை செய்கிறது. ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் விழா அன்று, சென்னைக் கடற்கரையில் அலங்கார அணிவகுப்போடு, ஆடல், பாடல் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இத்துறை செய்கிறது. மேலும், சுதந்திரத் திருநாள் விழாவின்போதும், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டைக் கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைக்கும் நிகழ்ச்சிக்கான பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

மத்திய அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாளன்று, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியேற்பு செய்து வைக்கும் நிகழ்ச்சியும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

மாநில அரசின் விருதுகளான வீர, தீரச் செயலுக்கு வழங்கப்படும் அண்ணா பதக்கம், துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, விருது பெறுவோரைத் தெரிவு செய்வதற்கான பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

மேலும், மத்திய அரசால் வழங்கப்படும் விருதுகளான பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை

விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு போன்ற விருதுகளுக்கும் இத்துறையின்மூலம் பரிந்துரைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

III. அயல் நாட்டினர் சட்ட செயலாக்கம்

இந்தியாவில் தங்குவதற்கு அனுமதியுடனும் உரிய நுழைவு இசைவுடனும் வருகைபுரியும் அயல்நாட்டினருக்கு, அயல்நாட்டினர் தொடர்பான மாநில அரசால் வழங்க வேண்டிய அனைத்துப் பொருளினங்களுக்கும் பொதுத் துறையானது நடுவண் அரசிற்கு ஒரு முகமைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

இவற்றுடன், பணி காரணமாகவோ அல்லது மேற்படிப்பிற்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின்மீது அவற்றின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி அளிக்கப்படுகிறது. இச்சேவையில் ஒரு பகுதியாக சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடவடிக்கை மின்னணு பரிமாற்றம் (online) மூலம், பின்னூட்ட கருத்து தெரிவிக்கும் முறையுடன், நெறிமுறைப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கும் நடைமுறையில் கூடுதல் பொறுப்பு, குறைந்த செலவில் கையாளுவது, சிக்கலில்லாமல் விரைவான தீர்வு அளிப்பது ஆகிய அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது.

'இ-சானட்' திட்டத்தைச் செயல்படுத்துதல்

வெளிநாடுகளில் பணிபுரிவதற்குத் தேர்வாகியுள்ள இந்தியர்களின் ஆவணங்களை சான்றளிப்பு/'அப்போஸ்டில்' சேவையை முழுமையாக இணையதளம் வாயிலாக செய்வதற்காக மத்திய வெளியுறவு அமைச்சகமானது, தேசிய தகவல் மையத்தின் முழு ஆதரவோடு 'இ-சானட்' (https://esanad.nic.in/) என்ற இணையதள முகப்பினைத் தொடங்கியுள்ளது. 'இ-சானட் இணைய முகப்பு' வாயிலாகக் கிடைப்பதை உறுதி செய்கிறது அல்லது டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களை வெளிநாட்டு அரசாங்கங்கள்/நிறுவனங்களுக்கு உறுதி செய்கிறது. இதுவரை, 13 மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறை 'இ-சானட்' இணையதளத்தில் இணைந்துள்ளன.

2020 மார்ச் 24]

IV. மாநில மனித உரிமைகள் ஆணையம்

"மனித உரிமைகள்" என்ற உள்ளார்ந்த கொள்கை மனித சமுதாயத்தின் மாண்பினை காப்பாற்றும் அடிப்படையிலானது. பாகுபாடின்றி தனி மனிதர் உரிமைகளை பாதுகாக்கும் அரணாக விளங்கும் இக்கொள்கைகளை மனசாட்சியுடனும், சகோதர மனப்பான்மையுடனும் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

1948 ஆம் ஆண்டு உலகப் பிரகடனத்தினைப் பின்பற்றி பல நாடுகள் மனித சமுதாயத்தில் தற்போது மனித உரிமைகளை செயல்படுத்துவதில் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1948 ஆம் ஆண்டு உலகப் பிரகடனத்தினை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்காற்றிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இதைத் தொடர்ந்து இந்தியாவில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 28-9-1993 அன்று நிறைவேற்றப்பட்டது. சட்டப் பிரிவு 2(d)-ன்படி மனித உரிமைகள் என்பது அரசியலமைப்பு உறுதிப்படுத்தும் அல்லது இந்திய நீதிமன்றங்களால் அமலாக்கக்கூடிய சர்வதேச ஒப்பந்தங்களின் அடிப்படையிலான, தனி நபரது வாழ்வுரிமை, சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியம் ஆகிய உரிமைகளைக் குறிக்கின்றது. அவ்வுரிமைகளை நிலைநாட்டிடும்பொருட்டு, சட்டப் பிரிவு 3 மற்றும் 21-ன்கீழ் தேசிய மனித உரிமைகள் ஆணையம் மத்தியிலும், மாநில மனித உரிமைகள் ஆணையம் மாநிலத்திலும் நிறுவப்பட்டது.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993-ன் திருத்தச் சட்டம் 43/2006 மற்றும் திருத்தச் சட்டம் 19/2019-ன்படி மாநில மனித உரிமைகள் ஆணையம், தலைவரையும், இரு உறுப்பினர்களையும் கொண்ட அமைப்பாகும். இவ்வாணையம் சட்டப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, நிருவாகப் பிரிவு ஆகியவைகளை தன்னகத்தே கொண்டு செயல்படுகிறது. மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு மனித உரிமை மீறல் புகார்களை எந்த மொழியிலும் எழுதி அனுப்பலாம். கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட நபரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரும் பாதிப்பு குறித்த புகார்களை ஆணையத்துக்கு எழுதி அனுப்பலாம். அவ்வாறு பெறப்படும் புகார்கள் மற்றும் ஆணையத்தின் கவனத்துக்கு வரும் மனித உரிமை மீறல்கள் பற்றிய புகார்கள்மீது ஆணையம் தானே விசாரணை மேற்கொள்ளலாம். அரசு ஊழியர்களால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள், அவர்கள் அவற்றுக்கு உடந்தையாக இருத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறுதல்

[2020 மார்ச் 24

பற்றிய புகார்களின்மீது விசாரணை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட நபர் அல்லது அவர் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கலாம் என கருதும் புகார்களின்மீது நிவாரணம் வழங்கிட அரசுக்கு அல்லது அதிகார அமைப்பிற்கு ஆணையம் பரிந்துரை செய்கிறது. ஆணையத்தின் பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டு, அதனை ஒரு மாத காலத்திற்குள் அரசு நிறைவேற்றிடவும், அதுபற்றிய அறிக்கை அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. சம்பந்தப்பட்ட துறையால் கால நீட்டிப்பு கேட்டுக்கொள்ளப்பட்டால் ஆணையத்தால் மேலும் கால நீட்டிப்பு வழங்கப்படுகிறது.

மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட பல மாநிலங்களில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் 17-4-1997 முதல் செயல்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் டிசம்பர் திங்கள், 2019 வரை இவ்வாணையத்திற்கு 2,05,883 புகார்கள் வரப்பெற்று, அவற்றில் 1,82,772 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்த கல்வி, சட்டம், உளவியல் மற்றும் குற்றவியல் போன்ற பாடங்களை எடுத்துப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக இவ்வாணையத்தில் உள்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அம்மாணவர்கள் இவ்வாணையத்தைக் குறித்தும், மனித உரிமைகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் பற்றிய கூட்டங்கள் மற்றும் பயிலரங்குகளை நடத்தி அரசு ஊழியர்களுக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை ஆணையம் ஏற்படுத்துகிறது.

V. அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன், தாயகம் திரும்பியோர் நலன் மற்றும் தமிழ்நாட்டிற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகள் அகதிகள் மறுவாழ்வு மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நல ஆணையரகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது மற்றும் அவர்களின் நலன் பேணுவது இவ்வாணையரகத்தின் முதன்மையான பணியாகும். இலங்கையில் 1983-ல் ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப்

2020 மார்ச் 24]

பிறகு 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். 1-2-2020 ஆம் நாளைய புள்ளிவிவரங்களின்படி, 18,834 குடும்பங்களைச் சேர்ந்த 59,428 நபர்கள் மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு சிறப்பு முகாம் உள்ளிட்ட) 107 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதைத் தவிர, 29-2-2020 அன்றுள்ளபடி 34,175 இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களுக்கு வெளியில் வசித்து வருகின்றனர். முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வகையான நிவாரண உதவிகள் மத்திய மற்றும் மாநில அரசின் வகைப்பாடு நிர்ணயங்களின்படி வழங்கப்படுகிறது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நலத் திட்டங்கள்

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் கண்ணியம் மற்றும் பாதுகாப்புடன் தங்கள் வாழ்வினை மேற்கொள்ள வழிவகை செய்யும் விதமாக, மத்திய அரசு வழங்கி வரும் உதவிகளோடு கூடுதலாக தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்து நலத் திட்ட உதவிகளும் ஜூன் 2011 முதல் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பணக்கொடை மற்றும் இருப்பிட வசதிகள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ஆடை, பாய், போர்வை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கீழ்க்கண்டவாறு 4-8-2011 முதல் உயர்த்தப்பட்ட வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது:

1.	குடும்பத் தலைவர்	ரூ.1,000/-
2.	ஒவ்வொரு கூடுதல் பெரியவர் (12 வயது மற்றும் அதற்கு மேல்)	ரூ. 750/-
3.	சிறியவர்கள் (12 வயதிற்கு கீழ்)	ரூ. 400/-

[2020 மார்ச் 24

இலங்கைத் தமிழ் அகதிகள் குடும்பத்திற்கு அரிசி, சர்க்கரை, போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் பொது விநியோகத் திட்டம்மூலம் விநியோகிக்கப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் கோ-ஆப்டெக்ஸ்மூலம் இலவச துணிமணிகளும், இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இலவச போர்வைகளும் வழங்கப்படுகிறது. மேலும், முதன்முறையாக 3 வகையான சமையல் (Stainless Steel) பாத்திரங்கள் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் கழிவறை வசதிகளுக்கென ரூ.35,22,000/-மும், குடிநீர் வசதிக்கென ரூ.27,75,000/-மும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தேவைக்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

கல்வி உதவி

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படித்துவரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இவர்களுக்கு, பிற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப்போன்று சீருடைகள், மதிய உணவு, நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், பேருந்துப் பயணச் சீட்டு மற்றும் மடிக் கணினிகள் விலையின்றி வழங்கப்படுகின்றன.

இத்துடன், இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், தொழில்சார்ந்த கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில், பொதுப் பிரிவின்கீழ் கலந்தாய்வில் கலந்துகொண்டு, சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தலா ஐந்து இடங்கள் ஒதுக்கீடு செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டு, இலங்கைத் தமிழர்கள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்கள் தங்கி, தங்களது படிப்பினை தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு விடுதிகளில் டிசம்பர் 2019 வரை 18 மாணவர்கள் தங்கியுள்ளனர்.

2020 மார்ச் 24]

இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் வசித்துவரும் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர கல்வி உதவித்தொகை உயர்த்தப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பாடப் பிரிவுகளும் உள்ளடங்கியவாறு விரிவாக்கம் செய்யப்பட்டு, 28-8-2018 முதல் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

வரிசை எண்	படிப்பு	2018-2019-லிருந்து உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூ.)
1.	தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு	2,500/-
2.	இளநிலை கலை மற்றும் அறிவியல்	3,000/-
3.	முதுநிலை கலை மற்றும் அறிவியல்	4,000/-
4.	இளநிலை தொழில்சார்ந்த படிப்புகள்	5,000/-
5.	முதுநிலை தொழில்சார்ந்த படிப்புகள்	6,000/-

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 1,016 மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.33,93,000/- பெற்று பயனடைந்துள்ளனர்.

பிற நலத் திட்டங்கள்: பயிற்சி

தையல் பயிற்சி பெற்ற ஏழைப் பெண்களுக்கு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகின்றது. பெண்களை ஊக்குவிக்கும் வகையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் சுழல் நிதி "ஒரு முறை மானியமாக" 2014-2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் துயர்துடைப்பு

மாதாந்திர பணக்கொடை மட்டுமல்லாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2019-2020-ல் 6,205 நபர்களுக்கு இத்திட்டத்தின்மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்திட வழங்கப்பட்டு வந்த நிதியுதவி இவ்வரசால் ரூ.2,500/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. இதுவரை, 67 இறந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று, விபத்தின் காரணமாக இறப்பு ஏற்படின், அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுவரும் உதவித்தொகை ரூ.15,000/-லிருந்து ரூ.25,000/- ஆக 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்படுகிறது.

மகளிர் மற்றும் பெண் குழந்தைகள் நலன்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித் திட்டம்

இத்திட்டம் இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்காக நீட்டிக்கப்பட்டுள்ளது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், பட்டம்/ பட்டயம் பெற்ற பெண்களுக்கு ரூ.50,000/- உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் திருமாங்கல்யத்திற்கான 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு வரை படித்த இதர பெண்களுக்கு ரூ.25,000/- மற்றும் திருமாங்கல்யத்திற்கான 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2019-2020-ல் 19 மகளிர் பயனடைந்துள்ளனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் மற்றும் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்:

கருவுற்ற பெண்களுக்கு மகப்பேறு உதவியாக ரூ.18,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2019-2020-ல் 310 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

2020 மார்ச் 24]

அதேபோன்று, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரே ஒரு பெண் குழந்தை உள்ள குடும்பத்திற்கு ரூ.50,000/- அப்பெண் குழந்தையின் பெயரில் 20 வருடங்களுக்கு வைப்பீடு செய்யப்படுகிறது. இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/- வீதம் ஒவ்வொரு குழந்தையின்மீதும் 20 வருடங்களுக்கு அப்பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படுகிறது.

சிறப்பு முகாம்

தற்போது, தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இம்முகாமில் காவல் துறையின் எதிர்மறையான குறிப்புகள் கொண்ட மாநிலத்திற்குள் சுதந்திரமாக அனுமதிக்க இயலாத குற்றப் பின்னணி உடைய இலங்கைத் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 1-2-2020 நிலவரப்படி 43 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946, பிரிவு 3(2)(இ)-ன்கீழ் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடமாட்டம் சிறப்பு முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவர்களுக்கு தினமும் ரூ.175/- மதிப்பில் சமைத்த உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

அகதிகள் நாடு திரும்புதல்

தங்கள் சொந்த விருப்பத்தின்பேரில் அவர்தம் தாய் நாட்டிற்கு திரும்பிச்செல்ல விரும்பும் இலங்கை அகதிகளுக்கு "வெளிச்செல்" அனுமதி தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. "வெளிச்செல்" அனுமதி விரைவாக வழங்குவதற்கு எளிய நடைமுறை உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையர் அலுவலகத்தின் உதவியுடன் (UNHCR) கீழ்க்காணும் எண்ணிக்கையில் அகதிகள் இலங்கைக்கு திரும்பியுள்ளனர்.

வ. எண்	ஆண்டு	அகதிகளின் எண்ணிக்கை
1.	2014	396
2.	2015	452
3.	2016	852

[2020 மார்ச் 24

வ. எண்	ஆண்டு	அகதிகளின் எண்ணிக்கை
4.	2017	1520
5.	2018	1283
6.	2019	963
7.	2020 (ஜனவரி)	59

முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள்

29-2-2020-ன் நிலவரப்படி 13,556 குடும்பங்களைச் சேர்ந்த 34,175 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்துகொண்டு வசித்து வருகின்றனர். இலங்கைத் தமிழருக்கான விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையானது மத்திய அரசால் கணிசமாக திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலை இருந்தது. தமிழக அரசின் கருத்துருவின்பேரில், 9-1-2015-க்கு முன்னர் இந்தியாவிற்கு வந்து சுய விருப்பத்தின்பேரில் இலங்கைக்கு திரும்பிச்செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையின்மீது விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம் வாரியாக தள்ளுபடி செய்ய மாநில அரசுக்கு மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்படி விசா மற்றும் அபராதத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது. 1-2-2020 நிலவரப்படி, 1,252 நபர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

தமிழர்கள் வணிகத்தின்பொருட்டும், குடியமர்வின்பொருட்டும் தொன்றுதொட்ட காலம் முதல் அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வருடந்தோறும், பொருளாதார மேம்பாடு பெற அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்வாதாரத்திற்காகவும், பணியின் காரணமாகவும், மேற்கல்வி காரணமாகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் தங்கி இருக்கும்போது எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அழைத்து வரவும், அவர்களுக்குச் சேர வேண்டிய பணப் பயன்களைப் பெற்றுத் தரவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் உடல்களை இந்தியா கொண்டுவரவும், அந்நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களின் உதவியுடன் உரிய நடவடிக்கைகள் இத்துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) "மாவட்ட நல அலுவலராகவும் (வெளிநாடுவாழ் தமிழர்கள்)" மற்றும் ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையமாகவும் (வெளிநாடுவாழ் தமிழர்கள்)" செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

வெளிநாடுகளில் பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வரையறைக்குட்பட்ட சட்ட உதவிகள், மருத்துவச் செலவு, மீள அழைத்து வருதல், புலம் பெயரும் தமிழர்கள் அயல் நாடுகளில் சட்ட சிக்கல்களைத் தவிர்த்திட முன்பயணப் புத்தாக்கப் பயிற்சி (Pre-departure Orientation Programme) அளித்தல் மற்றும் வெளிநாடுகளில் இறந்த தமிழர்களின் உடல்களை இந்தியாவிற்குக் கொண்டுவருதல் போன்ற நடவடிக்கைகளை இந்திய தூதரகங்கள் மற்றும் மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில், பிப்ரவரி திங்கள் வரை பல்வேறு இன்னல்களுற்ற 156 தமிழர்களை வெளிநாடுகளிலிருந்து அழைத்து வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், வெளிநாடுகளில் இறந்த 97 தமிழர்களின் பூத உடல்கள் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன இந்நடவடிக்கைகளுக்காக கடந்த 2019-2020 ஆம் நிதியாண்டில், பிப்ரவரி திங்கள் வரை ரூ.38,15,194/- செலவிடப்பட்டுள்ளது.

2019, மே 12 முதல் 19 வரை நடைபெற்ற உலக கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்கள் வென்ற சென்னை, ஆவடியைச் சேர்ந்த மாணவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அம்மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட 29 நபர்கள் தாயகம் திரும்ப முடியாமல் கோலாலம்பூர் விமான நிலையத்தில் தவித்தபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, இருப்பிட வசதி, உணவு மற்றும் சென்னை திரும்ப விமான பயணச் சீட்டுகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு, 23-5-2019 அன்று பாதுகாப்பாக சென்னை திரும்பினர்.

சூடான் நாட்டிலுள்ள சீலா செராமிக் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கியவர்களுக்கு நல் மருத்துவ உதவிகள் வழங்கவும் அவர்கள்மீது தக்க கவனம் செலுத்தவும் தாய்நாட்டிற்கு திரும்ப அழைத்து வர உரிய ஆவன செய்யவும் வேண்டி மாண்புமிகு

[2020 மார்ச் 24

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம்மூலம் கோரப்பட்டது. இந்த விபத்தில் சிக்கி காயமடைந்த இருவருக்குத் தேவையான மருத்துவ வசதிகளும், ஏனையோர், அவர்கள் தங்களுடைய ஊர்களுக்குச் செல்லத் தேவையான போக்குவரத்து வசதிகளும் தமிழ்நாடு அரசினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்விபத்தில் இறந்துவிட்ட மூன்று தமிழர்களின் குடும்பங்களுக்குத் தலா 3 இலட்சம் வீதம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின்மூலம் நிதியுதவி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டது.

சுழல் நிதி

வெளிநாடுவாழ் தமிழர்கள் நலனுக்குச் செலவிடுவதற்காக சுழல் நிதியாக ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்) வழங்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை அரசு பின்னர் ஈடு செய்கின்றது. 2019-2020 ஆம் வருடம் மேற்கண்ட சுழல் நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனுக்காகச் செலவிடப்பட்டது:

வ. எண்	குறிப்பு	தொகை (ரூபாயில்)
1	மலேசியாவில் பாதிவித்த 29 தமிழர்களை மீட்டு இந்தியா கொண்டு வர செலவிடப்பட்ட தொகை	7,02,850
2	பிலிப்பைன்ஸ் நாட்டில் விபத்தில் சிக்கிக் கொண்ட திரு. பிரசாந்த் அவர்களை இந்தியா கொண்டு வர பிலிப்பைன்ஸில் உள்ள இந்திய தூதரகத்திற்கு மீள வழங்கப்பட்ட தொகை	9,80,000
3	ரஷ்யாவிலிருந்து 26 தமிழர்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக செலவிடப்பட்ட தொகை	58,700
4	துபாயிலிருந்து 9 தமிழர்களை மீட்டு சொந்த ஊருக்குக் கொண்டு வர செலவிடப்பட்ட தொகை	3,46,901

2020 மார்ச் 24]

வ. எண்	குறிப்பு	தொகை (ரூபாயில்)
5	மலேசியாவில் மருத்துவ சிகிச்சையிலிருந்த திருமதி ஜீவிதா அவர்களை இந்தியாவிற்குக் கொண்டு வர செலவிடப்பட்ட தொகை	3,38,206
6	காலஞ்சென்ற திரு. ராமச்சந்திரன் சின்னராமசாமி அவர்களின் பூத உடலை நேபாளத்திலிருந்து இந்தியாவிற்குக் கொண்டு வர நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்திற்கு மீள வழங்கப்பட்ட தொகை	1,02,185
7	திரு. மணிகண்டன் அவர்களை மலேசியாவிலிருந்து மீட்டு சென்னைக்குக் கொண்டு வர விமான பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை	19,440
8	பேங்காக்கில் இறந்த திரு. தினேஷ்குமார் அவர்களின் பூத உடலை இந்தியாவிற்குக் கொண்டு வர வழங்கப்பட்ட தொகை	1,94,243
9	ஈரானில் இருந்து 3 மீனவர்களை மீட்டு மும்பைக்கு அழைத்து வருவதற்கான விமான பயணச்சீட்டு வாங்குவதற்காகவும் மற்றும் தொடர்வண்டியின்மூலம் மும்பையிலிருந்து மதுரைக்கு அழைத்து வருவதற்காவும் செலவிடப்பட்ட தொகை	24,000
10	மலேசிய அரசால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு திட்டத்தின்கீழ் தமிழர்களை மலேசியாவிலிருந்து மீட்டு இந்தியாவிற்குக் கொண்டு வர செலவிடப்பட்ட தொகை	1,00,470
11	பல நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு திரும்பிய தமிழர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு அழைத்துச்செல்ல செலவிடப்பட்ட தொகை	50,000

வ. எண்	குறிப்பு	தொகை (ரூபாயில்)
12	5 தமிழர்களை சவூதி அரேபியாவிலிருந்து மீட்டு சென்னைக்குக் கொண்டு வர விமான பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை	1,84,550
13	சூடானில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கியவர்களை மீட்டு தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர விமான பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை	94,300
14	கனடாவில் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டுவரும் செல்வி. ஆஞ்சலின் ரிபேக்கா அவர்களைக் கண்டு திரும்பி வர அவரின் பெற்றோருக்கு விமான பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை	3,58,970
15	ஓமனிலிருந்து முதலாளியுடன் ஏற்பட்ட வேலை பிரச்சினை காரணமாக தமிழர்களை மீட்டுக் கொண்டு வர விமான பயணச் சீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை	2,60,379
	மொத்தம்	38,15,194

தாயகம் திரும்பியோர் நலன்

இந்திய வம்சாவளியை சேர்ந்த சுமார் 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும் சுமார் 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும் மற்றும் 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் தமிழ்நாட்டில், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் குடியமர்ந்துள்ளனர். தாயகம் திரும்பியோருக்கு “அனைவருக்கும் வீடு” திட்டத்தின்கீழ் பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் 500 வீடுகள் ஒதுக்கீடு செய்து, 2019-2020-ல் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைமூலம் பணிகள் மேற்கொள்ள 15-10-2019 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

ரெப்கோ வங்கி

ரெப்கோ வங்கி (தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி), இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக மத்திய அரசால் நிறுவப்பட்டு, மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய 4 தென் மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி முதன்முதலில் மெட்ராஸ் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 53/1961-ன்கீழ் 9-9-1969 அன்று பதிவு செய்யப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் 19-11-1969 முதல் துவங்கப்பட்டது. தற்போது, இந்த வங்கி பல மாநில கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 2002-ன்கீழ் பதிவு பெற்று செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி மத்திய உள் துறை அமைச்சகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது, தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளாவிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் 108 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

31-3-2019 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	முதலீட்டாளர்கள்	மூலதனத் தொகை (இலட்சங்களில்)	சதவீதம் (%)
1.	இந்திய அரசு	7,632.00	49.46
2.	தமிழ்நாடு அரசு	713.00	4.62
3.	ஆந்திரப்பிரதேச அரசு	104.77	0.68
4.	தெலுங்கானா அரசு	74.88	0.49
5.	கேரள அரசு	61.16	0.40
6.	கர்நாடக அரசு	17.47	0.11
7.	தாயகம் திரும்பியோர்	6,827.63	44.24
மொத்தம்		15,430.91	100.00

[2020 மார்ச் 24

இவ்வங்கி, தாயகம் திரும்பியோர்க்கு கல்வி உதவித்தொகை, மருத்துவ உதவித்தொகை, குறைந்த வட்டியில் கடன் திட்டங்கள், குழு காப்பீட்டுத் திட்டம், இழப்பீட்டுத் தொகை (இறுதிச் சடங்கிற்காக), ஒவ்வோர் ஆண்டும் 10 மாணவர்களுக்கான உயர் கல்விச் செலவு ஏற்பு, பழுதடைந்த வீடுகளின் சீரமைப்பு போன்ற பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை, சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தாயகம் திரும்பியோர் இந்த நலத் திட்டங்களின்மூலம் பயன் பெற்றுள்ளனர்.

தாயகம் திரும்பியோருக்கு ரெப்கோ வங்கியின்மூலம் கடந்த 5 ஆண்டுகளில் செய்யப்பட்ட உதவித்தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	வருடம்	உதவித்தொகை (ரூபாய் இலட்சங்களில்)
1.	2014-2015	303.00
2.	2015-2016	330.00
3.	2016-2017	470.00
4.	2017-2018	484.00
5.	2018-2019	618.00
6.	1.4.2019 முதல் 31.12.2019 வரை	342.00

VI. முன்னாள் படைவீரர்கள் நலன்

இந்திய இராணுவத்திற்கு இளைஞர்களை அனுப்புவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. படைப் பணிபுரிவோர் தங்களது கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வுடனும், நாட்டுப் பற்றுடனும் பணியாற்றுவதற்கு ஏதுவாக அவர்களது சீரிய பணிகளைப் பாராட்டி கௌரவிப்பதும், தங்களது குடும்பத்தினருடன் இல்லாதபோது அவர்களுடைய குடும்பங்களைக் காப்பதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் அவர்களது சொந்த ஊரில் ஓய்வுக் காலத்தை அமைதியாகவும், ஆக்கபூர்வமாகவும் வாழ்ந்திட ஆவன செய்ய வேண்டியதும் அவசியமாகும். இந்த நோக்கத்தினை நிறைவேற்றும்பொருட்டு, முன்னாள் படைவீரர் நல இயக்ககம் 1974 முதல் நிறுவப்பட்டு பொதுத் துறையின் நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 1,400 தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்கள் படைப் பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர்கள், படைப் பணிபுரிவோர் மற்றும் படைப் பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும்பொருட்டு முன்னாள் படைவீரர் நல இயக்ககம் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து வருகிறது. முன்னாள் படைவீரர் நலத் துறையில் 1,82,684 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் விதவையர்கள் பதிவு செய்துள்ளனர். தற்போது, மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களில் இவ்வலுவலகங்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. முன்னாள் படைவீரர்களுக்கு திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், முன்னாள் படைவீரர்கள் சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்கும்பொருட்டு கொடிநாள்மூலம் முன்னாள் படைவீரர் நலத் துறை நிதி திரட்டுகிறது.

முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் தலையாய திட்டங்கள் பின்வருமாறு:-

1. நிதியுதவிகள் வழங்குதல்
2. மறு வேலைவாய்ப்புகள் வழங்குதல்
3. பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல்
4. கல்வி நிலையங்களில் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கான இட ஒதுக்கீடு
5. சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி மூலமாக பல்வேறு வகை நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு நிலை கொடிநாள் நிருவாகக் குழு மற்றும் தொகுப்பு நிதியின் மாநில மேலாண்மைக் குழு ஆகியவை நிருவகிக்கப்படுகின்றன.

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் முன்னாள் படைவீரர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் நிருவகிக்கப்படுகிறது. இதன் உட்குழுவாக தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

[2020 மார்ச் 24

நிதி உதவிகள்/மானியங்கள்:

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச் சடங்கு நிதியுதவிகள் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கீழ்க்காணும் பல்வேறு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப்படும் தொகை (மாதந்தோறும்) ரூ.
அ) மாதாந்திர நிதியுதவி		
1.	இரண்டாம் உலகப்போர் (மு.ப. வீரர்) நிதியுதவி	10,000
2.	உலகப்போர் (விதவையர்) நிதியுதவி	4,000
3.	முதியோர் நிதியுதவி	3,000
4.	பக்கவாத நிவாரணம்/ காசநோயாளிகளுக்கான நிவாரணம்/ மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம் ஆகிய நிதியுதவிகள்	5,000
5.	தொழுநோய் நிவாரணம்/ பார்வையற்றோருக்கான நிவாரணம் /புற்றுநோய் நிவாரணம் மற்றும் மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான நிவாரணம்	5,000

2020 மார்ச் 24]

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தற்போது வழங்கப்படும் தொகை (மாதந்தோறும்) ரூ.
ஆ) இதர நிதி உதவிகள் (நிகழ்வுகளில்) (ஒருமுறை நிதியுதவி)		
1.	திருமண மானியம் (இரண்டு மகள்களுக்கு)	25,000
2.	ஈமச் சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்கள்)	10,000
3.	ஈமச் சடங்கு மானியம் (விதவையர்)	7,000

இரண்டாம் உலகப்போர் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில் முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.6,000/-லிருந்து ரூ.10,000/- ஆகவும், விதவைகளுக்கு ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 3,525 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்களுக்கு ரூ.12.05 கோடி செலவில் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், 9,383 முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவி மற்றும் மானியங்களாக ரூ.21,81,04,944/- வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு நிதி

தொகுப்பு நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெறும் வங்கிக் கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்கள் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.500/-லிருந்து ரூ.25,000/- வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கும் வழங்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், 2,792 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து ரூ.5,10,55,854/-க்கான நிதியுதவிகள்/ மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணி பயிற்சி காலத்தின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் தொகுப்பு நிதியிலிருந்து தொகுப்பு மானியம் (Lumpsum Grant) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

வரிசை எண்	விவரம்	தொகை ரூ.
1.	முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA/IMA/ Naval/Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	1,00,000
2.	முப்படையில் குறுகிய கால படைத் துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காக தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	50,000
3.	இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காக தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	25,000

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், 12 முன்னாள் படைவீரரின் சிறார்களுக்கு ரூ.5.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

வீர, தீரச் செயல்களுக்கான பண முடிப்பு மற்றும் படைவீரர்களின் பெற்றோர்களுக்கான போர்ப் பணி ஊக்க மானியம்

வீர, தீரச் செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்கள் பெறுவோருக்கு அரசு நிதியிலிருந்து பணமுடிப்பு வழங்கப்படுகிறது.

அ) வீர விருது பெறுவோருக்கான பணமுடிப்பு

வரிசை எண்	விருது/பதக்கம் பெயர்	4-2-2016 முதல் உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூ.)
1.	பரம்வீர் சக்ரா	25,00,000
2.	அசோக் சக்ரா	20,00,000
3.	மகாவீர் சக்ரா	15,00,000
4.	கீர்த்தி சக்ரா	12,00,000
5.	வீர் சக்ரா	10,00,000
6.	சௌரிய சக்ரா	8,00,000
7.	சேனா/நாவோ/வாயு சேனா பதக்கம் (வீர விருதுகள்)	1,00,000
8.	மென்சன்-இன்-டெஸ்பேட்ச்சஸ்	15,000

ஆ) போற்றத்தக்க சேவைப் பதக்கங்கள் பெறுவோருக்கான பணமுடிப்பு

வரிசை எண்	விருது பெயர்	4-2-2016 முதல் உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூ.)
1.	பரம் விஷிஷ்ட் சேவா பதக்கம்	75,000
2.	சர்வோத்தம் யுத் சேவா பதக்கம்	75,000

[2020 மார்ச் 24

வரிசை எண்	விருது பெயர்	4-2-2016 முதல் உயர்த்தப்பட்ட பணமுடிப்பு (ரூ.)
3.	உத்தம் யுத் சேவா பதக்கம்	40,000
4.	அதி விஷிஷ்ட் சேவா பதக்கம்	40,000
5.	யுத் சேவா பதக்கம்	25,000
6.	விஷிஷ்ட் சேவா பதக்கம்	25,000
7.	சேனா பதக்கம்	25,000

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், வீர பதக்கம் மற்றும் போற்றத்தக்க பணிக்காக பதக்கம் பெற்ற 4 நபர்களுக்கு ரூ.80,000/- பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

போர் பணி ஊக்க மானியம்

மேலும், தமது மகன்/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில், தமது ஒரே மகனை/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒட்டுமொத்தமாக ரூ.20,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன்/மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒட்டுமொத்தமாக ரூ.25,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், ரூ.19,59,200/- போர் பணி ஊக்க மானியமாக தமிழக அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

போரில் உயிர் நீத்தோருக்கான கருணைத் தொகை

போரில் மற்றும் சிவில் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின்போது உயிரிழந்த/ஊனமுற்ற படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.20/- இலட்சம் வரை கருணைத் தொகை தமிழ்நாடு அரசினால் வழங்கப்படுகிறது. மேலும், கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப் படையினருக்கும் (Central Reserve Police Force, Central Industrial Security Force, Indo-Tibetan Border Force, Border Security Force and Sashastra Seema Bal and Coast Guard) நீட்டித்து வழங்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

இரு குடும்ப ஓய்வூதியம்

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின்மூலம் குடிமைப் பணியில் (தமிழ்நாடு அரசில்) பணியாற்றிய முன்னாள் படைவீரரின் வாரிசுதாரருக்கு, இராணுவ குடும்ப ஓய்வூதியத்துடன் குடிமைப் பணிக்கான குடும்ப ஓய்வூதியம் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியம் 2-9-2016 முதல் வழங்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தற்போது, இரு குடும்ப ஓய்வூதியம் தொடர்பான 129 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 99 விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 30 விண்ணப்பங்கள் கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளன.

மறு வேலைவாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக் காலத்தினை மீதமாகக் கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் கீழ்வருமாறு இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன:

1.	பிரிவு “சி” பணியிடங்கள்	5%
2.	அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள்	10%
3.	வனக் காவலர் பணியிடங்கள்	10%
4.	வனப் பாதுகாவலர் பணியிடங்கள்	5%
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் லஸ்கர், ஓட்டுநர் மற்றும் இரவுக் காவலர்கள் பணியிடங்கள்	25%
6.	சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு “சி” பணியிடங்கள்	5%
7.	கால்நடை ஆய்வாளர்	5%

[2020 மார்ச் 24

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், மாநில அரசு/மத்திய அரசு/அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் குரூப் `சி' பிரிவில் 72 நபர்களும், குரூப் `டி' பிரிவில் 11 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில், சுய வேலைவாய்ப்பினை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுய வேலைவாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், இத்திட்டங்களின்மூலம் 473 முன்னாள் படைவீரர்களும், 4 சுய உதவிக் குழுக்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.53,17,121/- மானியமாக வழங்கப்பெற்று பயனடைந்துள்ளனர்.

கருணை அடிப்படை வேலைவாய்ப்பு

படைப் பணியில் உயிர் நீத்தோர் மற்றும் பணியின்போது போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 346 நபர்களுக்கு இதுவரையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கோயில் பாதுகாப்புப் படை

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காக கோயில் பாதுகாப்புப் படை 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோயில் பாதுகாப்புப் படையில் சிறப்பு காவல் அலுவலர்களாகப் பணிபுரிய 62 வயது வரையில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்கு மாதந்தோறும் ரூ.5,000/- லிருந்து ரூ.7,300/- ஆக தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கப்படுகிறது. 31-12-2019-ன்படி 1,055 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

2020 மார்ச் 24]

பதினைந்து (15) ஆண்டுக் கால இராணுவப் பணியினை பட்டதாரி கல்விக்கு இணையாக கருதுதல்

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இராணுவத்தில் 15 ஆண்டுக் காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் மறு வேலைவாய்ப்பிற்கு சிவில் பிரிவில் பல்கலைக்கழகத்தினரால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கு நிகரான பட்டமாகக் கருதிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாணையினால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப் படிப்பு தகுதிகளுக்கான குரூப் 'சி' பிரிவு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்கள் தேர்வு பெற வழிவகை செய்கிறது.

பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

இளைஞர்களுக்கான பயிற்சி

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் பல்வேறு பணிகளில் சேரும் எண்ணிக்கையை அதிகரிக்கும்பொருட்டு ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி இரண்டு கட்டமாக நடத்தப்பட்டது. 36 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.2.79 இலட்சம் செலவில் எழுத்துத் தேர்விற்கான முன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இளைஞர்களை நுழைவுத் தேர்விற்கு தயார் செய்யும் வகையில், பிரத்யேகமாக edu.exweletutor.com வலைதளம் ஆரம்பிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோர்களின் மகளிருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர்களின் சார்ந்தோர்களுக்கு தையற்பயிற்சி அளிக்கும்பொருட்டு, வேலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இந்த தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் விதவை/மனைவி/திருமணமாகாத மகள்/ திருமணமாகாத சகோதரிகள்/ விதவை மகள்/விவாகரத்தான மகள் மற்றும் விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத கால தையற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- பயிற்சி பெறும் மாணவிகளுக்கு பயிற்சி உதவித்தொகை நாளொன்றுக்கு ரூ.50/- ஆகவும், கச்சா பொருள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,000/- ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது.

ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், பயிற்சியாளர்களுக்கு இலவச தையல் இயந்திரம் மற்றும் பயிற்சிக்கான செலவினம் மேற்கொண்ட வகையில் 64 பயனாளிகளுக்கு ரூ.12,11,100/- வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல் படிப்பிற்கு-150, மருத்துவப் படிப்பிற்கு-10, பல் மருத்துவம்-1, செவிலியர் (இளங்கலை) படிப்பிற்கு-4, செவிலியர் பட்டயப் படிப்பிற்கு-60, ஆசிரியர் (இளங்கலை) படிப்பிற்கு ஒவ்வொரு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரியிலும்-1, ஆசிரியர் பட்டயப் படிப்பிற்கு-132, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு-80, கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டப் படிப்பிற்கு ஒவ்வொரு கல்லூரியிலும்-6, தொழிற்பயிற்சி படிப்பிற்கு ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும்-5 இடங்களும் மற்றும் இளங்கலை சட்டப் படிப்பிற்கு-1 சதவிகிதமும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

படைவீரர் மாளிகை/முன்னாள் படைவீரர் மையம்/முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும்பொருட்டு, படைவீரர் மாளிகை, முன்னாள் படைவீரர் மையம், முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம் ஆகியவை முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் திரட்டப்படும் நிதி, நல நிதிகளில் சேர்க்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், இச்சொத்துக்கள்மூலம் ரூ.2,41,96,789/- வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசிய தகவல் மையத்தின்மூலம் மின் ஆளுமைத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

2020 மார்ச் 24]

முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையரின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், கணினியில் நேரடியாக பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்கல், முன்னாள் படைவீரர்களுக்கான வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் மின் ஆளுமைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னாள் படைவீரர் நலத் துறையின் சார்பாக ஆண்டுதோறும் கொடிநாள் மலர் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது. இம்மலரில் முன்னாள் படைவீரர்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் சலுகைகள் பற்றிய விரிவான விவரம் வெளியிடப்படுகிறது.

முன்னாள் படைவீரர் நலத் துறையின் சார்பாக உள்ள திட்டங்கள் சலுகைகள் பற்றிய பிரசுரங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டு, முன்னாள் படைவீரர்களுக்கு மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் மற்றும் முன்னாள் படைவீரர் பங்களிப்பு சுகாதாரத் திட்ட மருத்துவமனைகள் (Ex-Servicemen Contributory Health Scheme Polyclinics) மூலம் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது.

படைவீரர் கொடி நாள் நிதி

படைவீரர் கொடி நாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, ஆணையர், வருமான வரி (விலக்கு), சென்னை அவர்களால் வருமான வரிச் சட்டம், 1961-ன் பிரிவு எண் 80G(5)(vi)-ன்கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வரி விலக்கு 2019-2020 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து அமலுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள், மறு வேலைவாய்ப்பு பெற முயலும் காலக்கட்டத்தில் அனைத்து உதவிகளையும் நல்குவதற்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) 1986-ல் நிறுவப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகளில் ஒப்பந்த அடிப்படையில் மத்திய மறுவாழ்வு இயக்ககம் நிர்ணயம் செய்த ஊதியம் அல்லது தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதியத்தில் முன்னாள் படைவீரர்கள் துரிதமாக பணியில் சேர இக்கழகம் உதவுகிறது. முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில்

[2020 மார்ச் 24

பதிவு செய்த முன்னாள் படைவீரர்கள் தொகுப்பிலிருந்து பல்வேறு அரசுத் துறைகள் கோரும் பாதுகாவலர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர்கள், சுற்றுலா காவலர்கள், செவிலியர் உதவியாளர்கள், தீயணைக்கும் பணியாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், காப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் மனித வள முகமையாகச் செயல்படுகிறது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சிக்காக நிகர இலாபத்தினை பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் பணி போன்ற வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், முதன்மை நோக்காக முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது. 31-1-2020 தேதிய நிலவரப்படி, 8,654 முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப தனித்திறன் வாய்ந்த முன்னாள் படைவீரர்களைக் கொண்டு சிறப்புப் படைப் பிரிவுகளை உருவாக்கி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் சேவை புரிந்து வருகிறது. தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தேவைக்கேற்ப "மின் திருட்டைத் தடுக்கும் படை" ஒன்றை உருவாக்கி அப்படையில் மின் நுணுக்கம் உள்ள 215 முன்னாள் ஹவில்தார்கள் மற்றும் முன்னாள் இளநிலை கமிஷன் அலுவலர்கள் நிலையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். இச்சிறப்புப் படையினர் ரூ.190.40 கோடி அளவிற்கு மின் திருட்டைத் தடுப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளனர்.

அதேபோல, தமிழ்நாடு சுற்றுலாத் துறையிலும் முன்னாள் ஹவில்தார்கள், இளநிலை கமிஷன் அலுவலர்கள் மற்றும் உயர் அலுவலர் நிலையில் உள்ள 31 முன்னாள் படைவீரர்களைக் கொண்ட சிறப்புப் படை செயல்பட்டு வருகிறது.

இதர நலத் திட்டங்கள்

மேலும், முன்னாள் படைவீரர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ) பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

2020 மார்ச் 24]

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரிபவர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிற்சார்ந்த செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,723, அதற்குண்டான செலவினம் ரூ.69 இலட்சமாகும்.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் விபத்து காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பும் கணிசமான வருமானம் பெறும்பொருட்டு, "தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்" இக்கழக ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு தோராயமாக ரூ.2.65 கோடி செலவில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணிபுரியும் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களின் பணி ஓய்வு வயதினை 58-லிருந்து 60 ஆக உயர்த்தி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின்மூலம் பணிபுரிந்துவரும் அனைத்து ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் “அம்மா முழு உடல் பரிசோதனை" செய்ய தலா ரூபாய் 3,000/- தொகுப்பின்கீழ் ஓமந்தூரார் அரசு பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை மற்றும் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 31-1-2020 நிலவரப்படி 1,987 முன்னாள் படைவீரர்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர். அதற்குண்டான செலவினம் ரூ.59.61 இலட்சமாகும்.

VII. முதலமைச்சரின் தனிப் பிரிவு

பொதுமக்களின் குறைகளை சீரிய முறையில் களைய முதலமைச்சரின் தனிப் பிரிவு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. முதலமைச்சரின் தனிப் பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களும் எண்ணிடப்பட்டு மனுதாரரின் பெயர், முகவரி மற்றும் கோரிக்கை விவரம் ஆகியவை பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள்/மாவட்டங்களுக்கு மேல் நடவடிக்கை தொடரும்பொருட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் கண்காணிக்கவும், துரிதப்படுத்தவும் தனி

அலுவலர், முதலமைச்சரின் தனிப் பிரிவு அவர்கள், அனைத்துத் துறைகளிலும் நியமிக்கப்பட்டுள்ள பற்றாளர்களுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பெறப்படும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதை கண்காணித்து வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளும் போதும், அலுவலகம் மற்றும் இல்லத்திலும் நேரடியாக பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுகின்றன. தலைமைச் செயலகத்தில் செயல்படும் முதலமைச்சரின் தனிப் பிரிவில் 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 2,36,811 மனுக்களில் 2,04,185 மனுக்களும், இணையதளம் (www.cmcell.tn.gov.in) வழியாகப் பெறப்பட்ட 72,742 மனுக்களில், 63,487 மனுக்களும் இதுவரை தீர்வு செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

தேர்தல்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு

இந்தியா உள்ளிட்ட மக்களாட்சி நடைபெறும் நாடுகளில், மக்கள் தங்கள் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துவதற்கு தேர்தல் சரியான வாய்ப்பாக அமைகிறது. குடிமக்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தொடர்புகொள்வதற்குரிய களத்தினை தேர்தல் அமைத்துக் கொடுக்கிறது. அரசமைப்புச் சட்டப்படியான தனித்தியங்கும் அதிகார அமைப்பான இந்தியத் தேர்தல் ஆணையம், தேர்தல்கள் நேர்மையுடனும், நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் மாபெரும் இந்தியப் பொதுத் தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 324-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில், தேர்தல் துறையின் தலைவராக தலைமைத் தேர்தல் அதிகாரி செயல்படுகிறார். 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளை தலைமைத் தேர்தல் அதிகாரி செயல்படுத்துகின்றார். மாவட்ட அளவில், பொதுத் (தேர்தல்கள்) துறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Electoral Registration Officers-EROs) மற்றும் உதவி வாக்காளர்

பதிவு அதிகாரிகள் (Assistant Electoral Registration Officers - AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Returning Officers-ROs) மற்றும் உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Assistant Returning Officers-AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (Booth Level Officers-BLOs).

வாக்காளர் பதிவு அதிகாரி என்பவர் வாக்காளர் பட்டியல்களை தயாரிப்பதற்கும், திருத்துவதற்கும் சட்டப்படி அதிகாரம் உடையவர் மற்றும் அது தொடர்பான ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் அவரே முழு பொறுப்புடையவர் ஆவார். 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 13-B-ன்படி, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் வாக்காளர் பதிவு அதிகாரிகள் இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசுடன் கலந்தாலோசித்து நியமனம் செய்யப்படுகின்றனர். பொதுவாக, குடிமைப் பணி/ வருவாய் கோட்ட அலுவலர்கள் அல்லது அதற்கு நிகரான நிலையில் உள்ளவர்கள், நடைமுறையில் அவர்களது அதிகார எல்லைகளுக்குட்பட்டு சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பதிவு அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர். 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 13-C-ன்படி, வாக்காளர் பதிவு அதிகாரிகளுக்கு அவர்களது பணிகளில் உதவிபுரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். வாக்காளர் பதிவு அதிகாரியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு, அவர்களுடைய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் அதிகாரம் பெற்றவர்களாவர்.

1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவுகள் 21 மற்றும் 22-ன்கீழ், ஒரு தொகுதியின் தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிகளை இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசு/யூனியன் பிரதேசங்களை கலந்தாலோசித்து நியமனம் செய்கிறது. தேர்தல் மேலாண்மையில் தேர்தல் நடத்தும் அதிகாரி முக்கியப் பங்காற்றுகிறார். இவர் ஒரு தொகுதியில் தேர்தலை நடத்தி உறுப்பினரை தேர்ந்தெடுக்கிறார். தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, தேர்தல் நடத்தும் அதிகாரி ஒருவர், ஒரு தொகுதி அல்லது சில சமயங்களில் இரண்டு தொகுதிகளில் தேர்தலைக் கண்காணிக்க பொறுப்புடையவராகிறார்.

2020 மார்ச் 24]

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அரசு அல்லது உள்ளாட்சித் துறைகளில் அலுவலர்களாக பணியாற்றுபவர்கள் ஆவர். அவர்கள் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 பிரிவு 13-B(2)-ன்கீழ் மாவட்டத் தேர்தல் அதிகாரியின் ஒப்புதல் பெறப்பட்டபின் வாக்காளர் பதிவு அதிகாரியால் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு வாக்குச்சாவடி நிலை அலுவலரின் ஆளுகையின்கீழ் ஒரு வாக்குச்சாவடி இருக்கும். வாக்குச்சாவடி நிலை அலுவலர், குறிப்பாக கள ஆய்வு மேற்கொண்டு வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்தம் செய்தல் ஆகியவற்றில் மிக இன்றியமையாத பங்கை வகிக்கிறார். வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் அறிக்கையினை நடைமுறையிலுள்ள விதிகளின்படி, பரிசீலனை செய்து கோரிக்கை மற்றும் ஆட்சேபணைகளின்மீது வாக்காளர் பதிவு அதிகாரி/உதவி வாக்காளர் பதிவு அதிகாரி உரிய வகையில் முடிவு செய்கின்றனர்.

இவ்வலுவலர்கள் அனைவரும் இத்துறையின் பணியாளர்கள் இல்லையெனினும், தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும்போது இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

1. 2019-2020-ன் முக்கிய நிகழ்வுகள்

1.1. 1-1-2020-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2020

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 21-ன்படி ஒவ்வொரு மக்களவை அல்லது மாநில சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் தற்காலிகமான காலியிடத்திற்கான இடைத்தேர்தலுக்கு முன்பு சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் எந்தவொரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக வாக்காளர் பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

[2020 மார்ச் 24

1-1-2020-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:

வரைவுப் பட்டியல் வெளியீடு	23-12-2019
கோரிக்கை/மறுப்புரை அளிக்க கடைசி தேதி	22-1-2020
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	14-2-2020

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வரையறையின்படி, மேற்குறிப்பிட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற சேர்த்தல்கள்/நீக்குதல்கள்/இடம்பெயர்தல் உள்ளிட்ட திருத்தங்கள் பின்வருமாறு:

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
சேர்த்தல்கள்	6,53,821	7,48,055	588	14,02,464
நீக்குதல்கள்	45,936	51,204	15	97,155
இடம் பெயர்தல் உள்ளிட்ட திருத்தங்கள்	1,06,695	1,07,027	38	2,13,760

14-2-2020 அன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி வாக்காளர்களின் விவரம் பின்வருமாறு:

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
பொது வாக்காளர்கள்	3,02,54,172	3,10,45,969	6,497	6,13,06,638
பணித் தொகுதி வாக்காளர்கள்	69,225	1693	-	70,918
மொத்தம்	3,03,23,397	3,10,47,662	6,497	6,13,77,556

2020 மார்ச் 24]

1.2. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) வைப்பதற்கான சேமிப்புக் கிடங்குகள் 30 மாவட்டங்களில் கட்டுதல்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) முறையாக மற்றும் பாதுகாப்பாக இருப்பு வைப்பதற்குரிய போதுமான சேமிப்புக் கிடங்குகளை உருவாக்குவதென இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. அதன்படி, தலைமைத் தேர்தல் அதிகாரிகளை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) பாதுகாப்பான முறையில் இருப்பு வைப்பதற்கு அனைத்து மாவட்டங்களின் தலைமை இடங்களில் தனி சேமிப்புக் கிடங்குகளை கட்டுமாறு தெரிவித்துள்ளது. அதன்படி, 30 மாவட்டங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) சேமிப்பதற்குரிய கிடங்குகளை கட்டுவதற்கு ரூ.120,87,42,000/- (ரூபாய் நூற்று இருபது கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரம் மட்டும்) மாநில அரசானது பொதுப் பணிகளுக்கான மூலதன செலவுத் தொகையின்கீழ் அனுமதித்துள்ளது. மதுரை மற்றும் சென்னை மாவட்டங்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளை (VVPATs) இருப்பு வைப்பதற்குரிய சேமிப்புக் கிடங்குகளை கட்டுவதற்குத் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.3. தேசிய வாக்காளர் தினம், 2020

இந்தியத் தேர்தல் ஆணையம், தனது நிறுவன நாளான ஜனவரி 25 ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய வாக்காளர் தினமாக 25-1-2011 முதல் கொண்டாடி வருகிறது. 2020 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட பத்தாவது தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருள் “வலிமையான மக்களாட்சிக்குத் தேர்தல் கல்வியறிவு" என்பதாகும். பெண்கள், இளைஞர்கள், மாற்றுத் திறனாளிகள், மூத்த குடிமக்கள், நூற்றாண்டைக் கடந்தவர்கள், பணித் தொகுதி வாக்காளர்கள், நலிந்த சமூகத்தினர் ஆகியோர் தங்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதை அதிகப்படுத்துதல் மற்றும்

அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தேர்தல் நடைமுறையில் அவர்கள் பங்கேற்று, வலிமையான மக்களாட்சியை உருவாக்குவதன் அவசியம் குறித்து அவர்களிடம் வலியுறுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்துதலை இக்கருப்பொருள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாண்டின் கருப்பொருளை கருத்தில் கொண்டு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் செயல்படும் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் மூலமாகத் தேர்தல் கல்வியறிவு கொண்டு செல்லப்பட்டது. முறை சார்ந்த கல்வி நிறுவன அமைப்புகளைத் தவிர்த்து, பொது மக்களுக்கு தேர்தல் கல்வியறிவைக் கொண்டு செல்லும் பொருட்டு வாக்குச்சாவடி அளவில் 'சுனவ் பாத்சாலா' என்னும் தேர்தல் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடி அமைந்துள்ள பகுதியைச் சார்ந்த பொது மக்கள் அனைவரும் இத்தேர்தல் பள்ளிகளில் உறுப்பினர்களாகலாம்.

வாக்காளர் பட்டியலில் குறிப்பாக இளம் வாக்காளர் பெயர்களைச் சேர்ப்பதை அதிகரிக்கும் நோக்கில், மாநிலம் முழுவதும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடத்தப்பட்டு, பத்தாவது தேசிய வாக்காளர் தினம் தமிழகத்தின் அனைத்து வாக்குச் சாவடி அமைவிடங்களிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும், மாநில அளவிலும் 25, ஜனவரி, 2020 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் தொடர்பாக கல்வி நிறுவனங்களிலும், அரசு தொடர்பான அமைப்புகளிலும் நடைபெற்ற நிகழ்வுகள்

தேசிய வாக்காளர் தினம், 2020-ன் ஒரு பகுதியாக, தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்திற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளாகப் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடத்த திட்டமிடப்பட்டு ஜனவரி 2020-ல் குறிப்பிட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கிடையே நடத்தப்பட்டன.

கூடுதலாக, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கென மாநில அளவிலான தேர்தல் சார்ந்த வினாடி வினாப் போட்டிகள் 23-1-2020 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடத்தப்பட்டபோது, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல கல்வி நிறுவனங்களிலிருந்தும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது, தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருளான "வலிமையான மக்களாட்சிக்குத் தேர்தல் கல்வியறிவு"

2020 மார்ச் 24]

பொறிக்கப்பட்ட அடையாள வில்லை மாநில அளவிலான வினாடி வினாப் போட்டியில் கலந்துகொண்டவர்களுக்கு அளிக்கப்பட்டது.

மாவட்ட அளவில் கொண்டாடப்பட்ட தேசிய வாக்காளர் தினம், 2020

மாநிலம் முழுவதுமுள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், மாவட்டத் தலைமையிடங்களிலும், தேசிய வாக்காளர் தினம், 2020 கொண்டாடும் வகையில், அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.1,58,64,000/- மாநில நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மாநில முழுவதுமுள்ள 30,093 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், தேசிய வாக்காளர் தினம், 2020 கொண்டாடப்பட்டது.

மாநில அளவிலான தேசிய வாக்காளர் தின விழா, 2020

மாநில அளவிலான தேசிய வாக்காளர் தின விழா, 2020 கலைவாணர் அரங்கில் 25-1-2020 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். அரசு தலைமைச் செயலாளரும், மாநில தேர்தல் ஆணையரும் கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் 2019 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொண்ட, மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஆகியோருக்கு சிறப்பான தேர்தல் உத்திகளுக்கான விருதுகளை வழங்கினார். கல்வி நிறுவனங்களில், தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் தொடர்பாக நடத்தப்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகளில் வென்றவர்களுக்கு இந்நிகழ்வில் பாராட்டும், பரிசும் அளிக்கப்பெற்றன.

தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருளை மையமாகக் கொண்டு பரிசு பெற்ற பள்ளி, கல்லூரி மற்றும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்கள் ஆகியோரால் பல்வேறு பண்பாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

26, ஜனவரி 2020 அன்று குடியரசு தினவிழா அணிவகுப்பின்போது, வாக்காளர் பெயர் சேர்ப்பு, தேர்தலில்

[2020 மார்ச் 24

வாக்களிப்பதன் அவசியம் மற்றும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, தேசிய வாக்காளர் தினம் 2020-ன் கருப்பொருளான "வலிமையான மக்களாட்சிக்குத் தேர்தல் கல்வியறிவு" என்பதைப் பறைசாற்றும் விதத்தில், இத்துறையின் சார்பில் ஒப்பனைக்காட்சி ஊர்தி இடம் பெற்றது.

1.4. வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP) திட்டம்

வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP) திட்டத்தின் ஒரு பகுதியாக, பள்ளிகளில் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் செயல்பாடுகள் ஆகஸ்டு, 2019 முதல் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டது. இதன்பொருட்டு, ரூ.65,10,000/- (ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.1,000/- வீதம்) தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் செயல்பாடுகளை மேற்கொள்ள ஏதுவாக பள்ளிகளுக்கு மாவட்ட வாரியாக வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP) நிதியிலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்டது. தேர்தல் நடைமுறைகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

1.5. பயிற்சி

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் கல்வியறிவு தொடர்பாக மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர்களுக்கான பயிற்சியானது புது டில்லியிலுள்ள மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் (India International Institute of Democracy and Election Management (IIIDEM)) தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினைத் தொடர்ந்து, பொதுத் தேர்தல் துறையானது, மாவட்ட அலுவலர்களுக்கு மண்டல வாரியாக, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் தேர்தல் கல்வியறிவு தொடர்பான பயிற்சி நவம்பர், 2019-ல் வழங்கப்பட்டது.

மாவட்ட அளவிலான மேற்கண்ட இப்பயிற்சிகளுக்குப் பின்னர், சட்டமன்றப் பேரவைத் தொகுதி அளவிலான பயிற்சிகள் மாவட்டங்களில் அளிக்கப்பட்டன.

2020 மார்ச் 24]

1.6. தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

1.6.1. வாக்காளர் உதவி எண்

இந்தியத் தேர்தல் ஆணையம் பல்வேறு தகவல் தொழில்நுட்பங்கள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடுகளை தீவிரமாக உபயோகித்து தேர்தல் நடத்தும் பணியினை செம்மையாகவும், பயனுள்ள வகையிலும் நிருவகித்து வருவதுடன் வாக்காளர்களுக்கு மேம்பட்ட தேர்தல் சேவைகளையும் வழங்கி வருகிறது. 2019 ஆம் ஆண்டு மக்களவை பொதுத் தேர்தல்களின்போது, இந்தியத் தேர்தல் ஆணையம், மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் செயல்படும் மாநில தொடர்பு மையத்துடன் (SCC) இணைந்து பணியாற்றும் வகையில் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டத் தொடர்பு மையங்கள் (DCC) அமைக்க முடிவு செய்தது. இவை 1950 என்ற தேசிய அளவிலான ஒரே எண்ணுடன் இயங்கி வருவதுடன் வாக்காளர் உதவி எண் எனவும் அழைக்கப்படுகிறது. இந்த 1950 என்ற வாக்காளர் உதவி எண் தேர்தல் தொடர்பான சேவைகளைப் பெற விழையும் குடிமக்களுக்கு “முதல் தொடர்பு மையமாக" இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தொடர்பு மையங்களும் தேவையான எண்ணிக்கையிலான PRI இணைப்புகள், கணினிகள், தொலைபேசி உதவியாளர், அச்சுப்பொறிகள் மற்றும் தரமான இணைய இணைப்பு ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளன.

2. 2020-2021-ல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நிகழ்வுகள்

2.1. 1-1-2021-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2021

1-1-2021-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட, வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்த கால அட்டவணையை, இந்தியத் தேர்தல் ஆணையம் உரிய நேரத்தில் அறிவிக்கும். இந்தச் சுருக்க முறைத் திருத்தத்துடன் விரிவான “வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" (Systematic Voters Education and Electoral Participation) (SVEEP) பிரச்சாரம் செய்யப்படுவதுடன், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள மக்களாட்சி மற்றும்

தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் இந்திய சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனத்தால் (India International Institute of Democracy and Election Management) தலைமை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25-1-2021–ல் கொண்டாடப்படும்.

2.2. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

2.2.1. தர நிலையற்ற வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை தர நிலையுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளாக மாற்றுதல்

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க, வாக்காளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண், தற்பொழுது பயன்பாட்டிலுள்ள பத்து இலக்கம் கொண்ட வாக்காளர் அடையாள அட்டை எண் வடிவத்தில் இல்லாதிருப்பின் (16 இலக்கம் கொண்டதாக இருந்தால்) அவர்களுக்குப் புதிய பத்து இலக்கம் கொண்ட PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். இந்த புதிய PVC வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் புதிய வாக்காளர் பதிவு எண் அச்சிடப்படுவதோடு குறிப்பிற்காக பழைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் அட்டையின் பின்புறம் அச்சிடப்பட்டிருக்கும். இந்த வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வாக்காளர்களுக்கு வழங்குதல் தொடர்பாக விரிவான விளம்பரம் செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு உரிய தகவலும் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் 1.39 கோடி வாக்காளர்களிடம் இத்தகைய 16 இலக்கம் கொண்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் உள்ளன. வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடும் நிறுவனம் இந்த 1.39 கோடி வாக்காளர்களின் வண்ண வாக்காளர் அடையாள அட்டைகளை அச்சிடும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வாக்காளர் அடையாள அட்டைகள் மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் மேற்பார்வையில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்மூலம் உரிய வாக்காளர்களுக்கு கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படும்.

2020 மார்ச் 24]

2.2.2 முதல் முறை வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க, முதல் முறை வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படுகிறது.

2.2.3 மாற்று வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

வாக்காளர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின்கீழ் இயங்கும் அரசு இ-சேவை மையங்களில் படிவம்-001-ஐ பூர்த்தி செய்து அதனுடன் ரூ.25/-ஐ செலுத்தி புகைப்படத்துடன்கூடிய மாற்று வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை ஆண்டு முழுவதும் பெற்றுக்கொள்ளலாம். அரசு இ-சேவை மையங்கள்மூலம் இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் தற்பொழுது வரை மாநிலம் முழுவதும் 37.71 இலட்சம் வாக்காளர்கள் அவர்களது மாற்று வண்ண வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினைப் பெற்றுள்ளனர்.

3. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00. தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38.02-ல் இடம் பெற்றுள்ளது. 2020-2021 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 1-1-2021–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல், 2021 ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக ரூ.215,50,37,000/- (ரூபாய் இருநூற்று பதினைந்து கோடியே ஐம்பது இலட்சத்து முப்பத்தேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன:

[2020 மார்ச் 24

102. தேர்தல் அதிகாரிகள்

எஎ. சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேரதல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லரைச் செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.30,35,35,000/- (ரூபாய் முப்பது கோடியே முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

எஎ. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஓர் உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஆகியவை இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுதளத்தைப் பராமரித்தல், புவியியல் குறியீட்டு முறையிலான வாக்குச்சாவடிகள் சீரமைப்பு, தேசிய வாக்காளர் தின கொண்டாட்டங்கள், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் அளிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் கடிதங்கள் அனுப்புவதற்கான அஞ்சல் கட்டணம் ஆகிய செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில்

2020 மார்ச் 24]

ரூ.127,26,28,000/- (ரூபாய் நூற்றி இருபத்தேழு கோடியே இருபத்தாறு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

எசி. மேலவைத் தொகுதிகள்

மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் ஆகிய செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.9,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. மக்களவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆகியன வேலூர், இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு வேளாண்பொருள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளிலும், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், விருத்தாசலம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவன கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குவதற்கான செலவுகள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இதர மாவட்டங்களில், இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ள நெறிமுறைகளின்படி, அரசு அலுவலக வளாகத்தில் அமையப்பெற்றுள்ள கட்டடங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4,11,31,000/- (ரூபாய் நான்கு கோடியே பதினொரு இலட்சத்து முப்பத்தொன்றாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

[2020 மார்ச் 24

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

ஏஏ. இடைத்தேர்தல்கள்

மக்களவைத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான அனைத்துச் செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்கள் கடந்த 18-4-2019 அன்று நடைபெற்றன. மேலும், தற்பொழுது தமிழ்நாட்டில் இருந்து நாடாளுமன்றத்திற்கான மக்களவையில் காலியிடம் ஏதுமில்லை. இத்துணைத் தலைப்பின்கீழ் ரூ.15,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களவை தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல்கள் தொடர்பான மொத்தச் செலவினத்தை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

ஏபி. மக்களவைக்குத் தேர்தல்

மக்களவைக்கு மட்டும் தனியாக பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 17-வது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 18-4-2019 அன்று நடைபெற்றது. தொடர்ந்து, 08. வேலூர் மக்களவைத் தொகுதிக்கான பொதுத் தேர்தல் 5-8-2019 அன்று நடத்தப்பட்டது.

வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்கள் ஊதியம், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர், ஓய்வு பெற்ற காவலர்கள், தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களுக்கான ஓட்டுநர்கள் ஊதியம், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் மற்றும் மாவட்டங்களில், சிறப்பு/தற்காலிகப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மிகை ஊதியம், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் ஏற்படுத்துவதற்கான செலவு மற்றும் இதர செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டன.

2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,00,50,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களவை பொதுத் தேர்தல் தொடர்பான அனைத்துச் செலவினங்களையும் மத்திய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மத்திய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப் பெறப்படும்.

2020 மார்ச் 24]

106. மாநில சட்டமன்றப் பேரவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. மாநில சட்டமன்றப் பேரவை

மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் பொதுத் தேர்தல்கள் மற்றும் மாநில பேரவைக்கான இடைத்தேர்தல்கள் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2021 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலுக்காக, தற்காலிக ஊழியர்களின் சம்பளம், படிகள் மற்றும் பயணப் படிகள், பிரிவு எழுத்தர்களுக்கான கூலி, கடின உழைப்பு தேவைப்படுகின்ற தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசிக் கட்டணங்கள், மிக முக்கியமான நிகழ்வுகளை புகைப்படம் எடுத்தல் போன்றவற்றுக்கான இதர சில்லரைச் செலவினங்கள், தேர்தல் பார்வையாளர்களுக்கான செலவினங்கள், வாக்குச்சாவடி வாக்குப்பதிவினை நேரடியாகப் பதிவு செய்தல் மற்றும் குறுந்தகவல்மூலம் வாக்குப்பதிவைக் கண்காணித்தல் தொடர்பான செலவினங்கள் இந்த துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். புதிய முயற்சியாக தேர்தல் நடத்தை விதிமுறைகளை செயல்படுத்தவும் மற்றும் தேர்தல் செலவுகளைக் கண்காணிக்கவும் பறக்கும் படை, வீடியோ கண்காணிப்புக் குழு, நிலையான கண்காணிப்புக் குழு மற்றும் கணக்கு மதிப்பீட்டுக் குழு போன்ற பல குழுக்கள் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்படுகின்றன. GPS அடிப்படையில் வாகன கண்காணிப்பு அமைப்பு இதற்கான செலவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின்மூலம் வாக்களிப்பது குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் நாளன்று செய்யப்படும் விளம்பரத்திற்கான செலவினம், வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்படும் தடுப்புகள் மற்றும் மின் விளக்கு வசதிகளுக்கான செலவினம், தேர்தலுக்குத் தேவையான பொருட்கள், எழுதுபொருட்களுக்கான செலவினம், “வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" பிரச்சாரத்திற்கான செலவினம், வாக்குப்பதிவு மற்றும் எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பாரத மின்னணு (BEL) நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களுக்கான உழைப்பூதியம், மத்திய துணை இராணுவப்படை மட்டுமின்றி, ஓய்வுபெற்ற காவல் அதிகாரிகள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம் ஆகியவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எரிபொருள், எண்ணெய் மற்றும் மசகுப் பொருட்களுக்கான செலவு,

[2020 மார்ச் 24

அச்சுக் கட்டணம் ஆகியவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.49,76,47,000/- (ரூபாய் நாற்பத்தொன்பது கோடியே எழுபத்தாறு இலட்சத்து நாற்பத்தேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், 10. திருவொற்றியூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதி மற்றும் வேலூர் மாவட்டம், 46. குடியாத்தம் (தனி) சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் மறைவினால் இரண்டு சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் தற்காலிக காலியிடம் ஏற்பட்டுள்ளது. காலியிடம் ஏற்பட்ட ஆறு மாதத்திற்குள் அதற்கான இடைத்தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

எபி. மாநில சட்டமன்ற மேலவை

மாநில சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.18,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான செலவினம் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3,00,19,000/- (ரூபாய் மூன்று கோடியே பத்தொன்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை மத்திய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் நிருவாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மிகப் பொறுப்பான குறிக்கோளை அடைவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பினையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அரசு வழங்கி வருகின்றது.

இணைப்பு IV

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை
கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முகவுரை:

"வாரி பெருக்கி வளம்படுத் (து) உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

- 512

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏற்றமிகு தலைமையிலான இவ்வரசு, வருவாய் தரும் வழிமுறைகளைத் திறம்பட தெரிவுசெய்து, அதனைப் பெருக்கி, அத்தகைய வருவாயை தொலைநோக்கோடு முறையான வழிகளில் பயன்படுத்தி தமிழக மக்களுக்கு நலன் பயக்கும் நல்ல பல திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

2. அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கும், அறிவிக்கும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களுக்கும் போதிய நிதியொதுக்கம் செய்யப்படுவதை நிதித் துறை உறுதி செய்கிறது. திறமையான நிதி மேலாண்மையின்மூலம் அரசின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பயன்கள் தொய்வின்றி மக்களுக்கு முறையாகச் சென்றடைவதையும், அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்துறை வழிவகுத்து வருகிறது. நிதித் துறையின் முக்கியப் பணிகள்:

1) இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 202-ன்படி சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல்;

2) மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்;

3) மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான அனைத்துக் கொள்கை முடிவுகளையும் அரசு எடுக்க உதவுதல் மற்றும் மறு ஆய்வு செய்தல்;

[2020 மார்ச் 24

4) மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதி நிலை இலக்குகளை எய்தும்பொருட்டும், துறைவாரியான நிதித் தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறைகளுக்குட்பட்டு பல்வேறு கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்;

5) வரவுகளையும், அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அரசின் வரவுக்கேற்றவாறு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்வதும், பெறப்பட்ட கடன்களை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதை உறுதிசெய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

3. பின்வரும் எட்டு துறைகள் நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவுத் தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) மாநில அரசுத் தணிக்கைத் துறை

(vii) பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

(viii) ஓய்வூதிய இயக்ககம்

தொடர் எண் (i) முதல் (vii) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50-“ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

மேலும், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் நிதித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

நிலையான வளர்ச்சி இலக்குகள்

4. கடந்த 2015 செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபை, 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள் மற்றும் 300 உலகளாவிய குறிகாட்டிகளுடன் கூடிய நிலையான வளர்ச்சி இலக்குகளை 1-1-2016 முதல் ஏற்றுக்கொண்டது. மேற்காணும் நிலையான வளர்ச்சி இலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களைச் செயல்திறன் அடிப்படையில் செயற்படுத்துவதற்காக நிதித் துறை அனைத்துத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளின் மீதான அரசின் முன்னுரிமை அடிப்படையில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்த, மேம்பட்ட பன்னாட்டு வளர்ச்சிக் கூட்டுறவுடனும், பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் நிதி ஆதாரங்களைத் திரட்டியும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அனைவரும் வங்கிக் காப்பீடு மற்றும் நிதிச் சேவைகளைப் பயன்படுத்த ஊக்கப்படுத்தவும், விரிவாக்கவும், பொருளாதார வளர்ச்சி அடைய, உள்நாட்டு நிதி நிறுவனங்களுடன் நிதித் துறை இணைந்து செயல்படுகிறது.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணம்

5. உயர் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை கொண்டு செல்வதற்கும், மாநிலத்தின் அனைத்து மக்களும் வளர்ச்சியின் பயனைத் துய்ப்பதற்கும், உள்கட்டமைப்புகளில் உத்தி சார்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாளன்று தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஓர் அரிய முயற்சியாக மேற்கொண்டார்கள். மாநில மக்களின் முறையான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை அவர்கள் பெறுவதற்காகவும், வறுமையில்லா மாநிலமாகவும், ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கள் துய்த்து வருகின்ற மாநிலமாகவும், சுற்றுச்சூழலுக்கு

பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்ற மாநிலமாகவும் உருவாக்குவதே தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் முக்கிய நோக்கம் ஆகும்.

6. தமிழ்நாட்டின் உயர் பொருளாதார ஆற்றல், மிகச் சிறந்த, தரமான மனித வளக் குறியீடுகள், அனைவருக்கும் அடிப்படை சேவைகள் கிடைக்கக்கூடிய வகையிலான உலகத் தரம்வாய்ந்த உள்கட்டமைப்பு மேம்பாடு, முதலீட்டுச் சூழல் ஒப்பீட்டளவில் ஆசியாவிலேயே சிறந்து விளங்குகிற அளவிலும், இந்தியாவில் அறிவாற்றல் மற்றும் புத்தாக்க மையமாக தமிழ்நாடு முன்னிலை வகிக்கக்கூடிய நிலையில் கணிக்கப்படுதல் போன்ற முக்கிய அம்சங்களை தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 உள்ளடக்கியுள்ளது. தமிழகத்தின் உள்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, தேவையான வசதிகளை வலுப்படுத்தும் உத்திகளை அடைவது தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023-ன் முக்கியமான நோக்கமாகும்.

7. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணம், 15,00,000 கோடி ரூபாய் அளவிலான அரசு, தனியார் மற்றும் அரசு-தனியார் கூட்டுப் பொறுப்பில் முதலீடுகள் பெற்று உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு வகைசெய்கிறது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, பகுதி-2 ஆவணத்தில் மொத்தமாக 217 திட்டங்கள் செயல்படுத்துவதற்காக அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. இந்த 217 தொலைநோக்குத் திட்டங்களில், இரயில்வே, துறைமுகங்கள் மற்றும் வானூர்தித் துறைகளில் 27 திட்டங்கள் மத்திய அரசாலும், மீதமுள்ள 190 தொலைநோக்குத் திட்டங்கள் மாநில அரசும், அதனுடைய முகமைகள் மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். மாநில அரசால் செயல்படுத்தப்பட உள்ள தொலைநோக்குத் திட்டங்களில், 129 திட்டங்களின் பணியானது ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. 18 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டும், 8 திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருவதுடன், எஞ்சியுள்ள திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)

8. தமிழ்நாடு 2012 ஆம் ஆண்டு உள்கட்டமைப்பு வளர்ச்சிச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு

2020 மார்ச் 24]

மாவட்டங்களுக்கு பாசனம், நிலத்தடிநீர் செறிவூட்டல் மற்றும் குடிநீர் வழங்குவதற்கான அத்திக்கடவு-அவினாசித் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் சில்லஹல்லா சேமிப்பு நீர்மின் திட்டம் நிலை-1 (1,000 மெகா வாட்), நெடுஞ்சாலைத் துறைக்கான 3,319 கிலோ மீட்டர் நீளச் சாலை விரிவாக்கத்துக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், சாலை இணைப்பு வசதிக்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் 2-ன்கீழ் நான்கு வழி மாநில நெடுஞ்சாலை அமைத்தல், சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம், மாநகர விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தை சென்னைப் பெருநகரப் பகுதியில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல், பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் அளவிற்கு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், ஜவுளித் தொழில் பூங்காக்களில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவுதல், சென்னை மாநகரில் விரைவுப் பேருந்துப் போக்குவரத்து ஏற்பாடு, தொழிலகத் தேவைகளுக்கென்றே சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையில் நீர் வழங்கல் கட்டமைப்பை உருவாக்குதல், சிப்காட் தொழில் துறை வளாகங்களில் நான்கு உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் அமைத்தல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அனல்மின் நிலையங்களிலும் கந்தக அமில பயன்பாடு இல்லாத உபகரணங்களை நிறுவுதல், சென்னை மெட்ரோ இரயில் பெருவழி-I நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பு, தாம்பரம் முதல் வேளச்சேரி வரை சென்னை இலகு இரயில் பயணத் திட்டம், பெரியார்–வைகை சிறிய நீர்மின் திட்டம் அமைத்தல், பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தை ஓர் அறிவியில் நகரமாக உயர்த்துதல் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள 30 மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்துதல் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக, திட்டத் தயாரிப்பு நிதியிலிருந்து சுமார் 303.96 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. இது, மாநில அரசு இந்தத் திட்டங்களுக்கு இருதரப்பு மற்றும் பன்னாட்டு முகமைகளிடம் நிதியுதவி பெறுவதற்கு வகை செய்கிறது.

9. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமானது, பிராந்திய இணைப்புத் திட்டம்-உதான் திட்டத்திற்காக, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து மார்ச் 2018 முதல் செப்டம்பர் 2019 வரையிலான காலங்களுக்கு சென்னை–சேலம் மற்றும் சேலம்–சென்னை விமான வழித்தடத்தில் விமானப் போக்குவரத்தினைச் செயல்படுத்திட, மாநிலத்தின் பங்களிப்பாக 20 சதவீத நிதியான 2.42 கோடி ரூபாயினை இந்திய விமான நிலையங்கள் பொறுப்பமைப்பிற்கு வழங்கியுள்ளது.

[2020 மார்ச் 24

10. சென்னைப் பெருநகரப் பகுதியில் உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய போக்குவரத்து முறையை நிறுவும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான நிதியினை ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகவரமைப்பிடமிருந்துப் பெறுவதில், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமானது தனது ஆக்கப்பூர்வ பங்களிப்பினை வழங்கிவருகிறது. ஆசிய வளர்ச்சி வங்கி பங்கேற்புடன், மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் தொழில் வளர்ச்சித் துறை செயல்படுத்தக் கருதியுள்ள கிழக்குக் கடலோரப் பகுதி பொருளாதாரப் பெருவழியின் இரண்டாம் நிலையான சென்னை-கன்னியாகுமரி தொழிலகப் பெருவழி மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பது தொடர்பாகவும், பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நடவடிக்கைகளை இவ்வாரியம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது. 24X7 கோயம்புத்தூர் நகர்ப்புற நீர் வழங்கல் திட்டம், சென்னை மாநகரப் பகுதியில் நுண்ணறிவுப் போக்குவரத்து முறை (ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகமையின் நிதியுதவியுடன்), சென்னை மாநகரத்தில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் (தொகுப்பு-1 மற்றும் தொகுப்பு-2), தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் மறு சீரமைப்பிற்காக, கே.எஃப்.டபில்யூ. (KfW) நிதியினைக் கோரிப் பெறுதல் மற்றும் பி.எஸ்.-VI டீசல் மற்றும் மின்சாரப் பேருந்துகளைக் கொள்முதல் செய்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்திட தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உதவி செய்துள்ளது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

11. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் ஒரு சொத்து மேலாண்மை நிறுவனமாக ஜூலை 2015-ல் நிறுவப்பட்டது. 16 கோடி ரூபாயினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் பங்கு ஈவுத் தொகையாகவும் மற்றும் இந்தியன் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கரூர் வைசியா வங்கி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளைப் பங்கு ஈவுதாரர்களாகவும் கொண்டுள்ளது. மேலும், இந்தியப் பங்குப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்றக் குழுவின் (SEBI) அனுமதி பெற்று 6,000 கோடி ரூபாய் இலக்கினை எய்தும் வகையில் 'மாற்று முதலீட்டு நிதி-வகைப்பாடு 1' என்கிற தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்தை தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

2020 மார்ச் 24]

12. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு 300 கோடி ரூபாய் முதலீடு செய்ய முனைந்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 30 கோடி ரூபாய் முதல் இழப்பு ஊக்குவிப்பு மூலதனமாக (First Loss Catalytic Capital Fund) அளித்துள்ளது. அதற்கு ஜப்பான் பன்னாட்டு ஊக்குவிப்பு முகமை (JICA) தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டம்-2-ன்மூலம் ஆதரவளித்துள்ளது. தவிர இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் 150 கோடி ரூபாய் அளவிலும் மற்றும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் தமிழ்நாடு உறைவிட நிதியம் (நிலை 2) என்கிற நிதி அமைப்பை இந்தியப் பங்குப் பத்திரங்கள் மற்றும் பரிமாற்றக் குழு (SEBI) மாற்று உள்கட்டமைப்பு நிதியின்கீழ் சமூக மேம்பாட்டு நிதி வகைப்பாடு 1 ஆகப் பதிவு செய்துள்ளது. இதன் தொகுப்பு நிதி (Corpus Fund) அளவு 3,000 கோடி ரூபாய் ஆகும். உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை தமிழ்நாடு உறைவிட நிதியத்தில் முதலீடு செய்ய ஒப்புதல் அளிக்கும் நிலையில் உள்ளன.

13. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திலிருந்து செயல்படுத்த தூத்துக்குடி மாவட்டத்தில் 60 MLD கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை, தமிழ்நாடு வர்த்தக மையம், கடற்கரை சுற்றுலாத் தளங்கள் மேம்படுத்துதல், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் ஆகிய திட்டத்தில் முதலீடு குறித்து ஆராயப்படுகிறது. அனைத்துத் துறைகளைச் சார்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களை மேம்பாடு செய்யவும், புதிய உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தவும், திட்ட அடிப்படையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியிலிருந்து தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் நிதி உதவி செய்யும்.

கருவூலக் கணக்குத் துறை

14. கருவூலக் கணக்குத் துறையானது, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்-சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலகங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலகங்களுடன் இயங்கி வருகிறது.

[2020 மார்ச் 24

15. கருவூலக் கணக்குத் துறையின் முதன்மையானப் பணிகளாவன:

1) 13 இலட்சத்திற்கும் மேலான பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்குதல்;

2) பணியாளர்களுக்கு சம்பளமில்லா கொடுவைகளான பயணப்படி, பொது வருங்கால வைப்புநிதி, முன்பணங்கள் மற்றும் பல வழங்குதல்;

3) 6 இலட்சம் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்;

4) ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத்தொகை வழங்குதல்;

5) பத்திர முகவர்களுக்கு பல்வேறு வகையான நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பது மற்றும்

6) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்குப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துதல்.

புதிய மருத்துவக் காப்பிட்டுத் திட்டம்-2016

16. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவச் சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் நான்கு இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டுக் கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து 180 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 30-6-2020 வரை சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் 2016, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டுக் கழகத்தின்மூலம் 1-7-2016 முதல் செயல்படுத்தப்படுகிறது.

2020 மார்ச் 24]

17. இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவச் சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது:

i. புற்று நோய்க்கான அறுவைச் சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்கச் சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்;

ii. கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை;

iii. சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை;

iv. விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு;

v. இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி;

vi. தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை.

18. இத்திட்டத்தில் கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு, ஒரு கண்ணிற்கு 25,000 ரூபாயாகவும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்ச வரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள 989 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவச் சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1-7-2012 முதல் 30-6-2016 வரையிலான நான்காண்டுகளில் 1,85,920 பயனாளிகள் 738.06 கோடி ரூபாய் செலவில் மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016-ன்கீழ் 31-1-2020 வரை 1,72,348 பயனாளிகள் 667.91 கோடி ரூபாய் செலவில் மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

[2020 மார்ச் 24

பட்டியல்கள் தானியங்கி முறையில் ஏற்பளிக்கும் திட்டம் (ATBPS)

19. தற்போதைய கருவூல செயல்பாடுகளான மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் கண்டறிதல் மற்றும் பட்டியல்களை ஏற்பளித்தல் போன்றவற்றில் உள்ள சிக்கல்களைக் களையும்பொருட்டும், ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும் தானியங்கி முறையில் பட்டியல்களை ஏற்பளிக்கும் திட்டத்தினை சம்பளக் கணக்கு அலுவலகங்கள், கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் 2014 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினை முழுவதுமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு இத்துறையில் உள்கட்டமைப்பு வசதிகளான கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குதல் உள்/தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருதல், அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற வசதிகள் பணியாளர்களின் வேலை தரத்தை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டத்தின்மூலம் வங்கிகள், பணம் பெறும் அலுவலர்கள், மாநிலக் கணக்காயர் ஆகியவர்களுக்குச் சிறந்த சேவை வழங்குவதை உறுதி செய்வதோடு, கண்காணிப்பிற்கும் உதவியாக அமையும்.

வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருள் (Web Payroll)

20. வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருள் பயன்பாடு தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 24,163 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருளைப் பயன்படுத்தி அலுவலகப் பணியாளர்களது சம்பளப் பட்டியல்களை தயார் செய்கின்றனர். அரசு ஊழியர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருமித்த தரவுதளத்தின் (Centralized Database) மூலம் மேலாண்மைத் தகவல் அறிக்கைகளான பணியாளர்களின் சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களையும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள், ஓய்வுபெற்றவர்கள் விவரம், விரைவில் ஓய்வு பெற உள்ள பணியாளர்களின் விவரங்கள் அவர்களுடைய தர ஊதியத்தின்படியும், பதவியின்படியும் பெறும் வகையில் வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், மனித வள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு பயனுள்ள கருவியாக அமையும்.

2020 மார்ச் 24]

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம்

21. தமிழக அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் சம்பளம் இல்லாத பணப்பட்டுவாடா மத்திய அரசின் NIC ஆல் உருவாக்கப்பட்ட ATBPS மற்றும் Web Payroll வழியாகச் செயல்படுத்தப்படுகிறது. தற்பொழுது தமிழக அரசு பட்டியல்களையும், மனித வளத்தையும் ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து முழுமையாக ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டமாகச் செயல்படுத்துகிறது.

22. இத்திட்டம் தமிழக அரசின் நிதி மற்றும் மனித வள மேலாண்மை ஒருங்கிணைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின்மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 19,000-க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின்மூலம் பட்டியலைக் கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் வருவாய் வசூல் கணக்குகளை நிகழ்நேரத்தில் (Real Time) மின்னணு வருவாயாகப் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் இடையூறின்றி உடனடியாக சேவை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மேலாண்மை போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியப்படும்.

23. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10-1-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்தாண்டு கால அளவில் 288.91 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தினை ஒரு முழுமையான தீர்வு வழங்கும் திட்டமாகச் செயல்படுத்த திருவாளர்கள் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற முகமை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்தல் ஆகிய பணிகள் வழங்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக விப்ரோ நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

24. இத்திட்டம் ஜனவரி 2020 முதல் கரூர் மாவட்டத்திலும், பிப்ரவரி 2020 முதல் சேலம், தேனி, அரியலூர், கன்னியாகுமரி

[2020 மார்ச் 24

ஆகிய மாவட்டங்களிலும், சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சம்பளக் கணக்கு அலுவலகம் (மதுரை) ஆகிய 6 அலுவலகங்களிலும் முன்மாதிரியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து வகையான பட்டியல்களும் (சம்பளம், சம்பளம் அல்லாத, ஓய்வூதியம் மற்றும் பணிப் பட்டியல்கள் ஆகியவை) இத்திட்டத்தின் மூலமாகப் பெறப்பட்டு, பயனாளிகளுக்கு ரிசர்வ் வங்கியின் இ-குபேர் (e-kuber portal) மின்தளம் வழியாகப் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. மாநில முழுவதும் மீதமுள்ள அனைத்து அலுவலகங்களில் மே 2020-க்குள் செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

புதிய கருவூலங்கள் ஏற்படுத்துதல்/கருவூலங்களுக்கு கட்டடங்கள் கட்டுதல்

25. 2011 முதல் 2020 வரையிலான கடந்த ஒன்பது ஆண்டுகளில் 37 புதிய சார் கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது மாநிலத்தில் மொத்தம் 243 சார் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், அரசு கடந்த ஒன்பது ஆண்டுகளில் 82 சார் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ஆணை வழங்கியது. அவற்றுள் 67 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள 15 சார் கருவூலங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துடன் திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டக் கருவூலங்களுக்குப் புதிய கட்டடங்களும், நிதித் துறை சார்ந்த 6 அலுவலகங்களுக்கு சென்னை நந்தனத்தில் உள்ள "அம்மா வளாகம்" நிதித் துறை கட்டடத்தில் கூடுதல் இரண்டு தளங்கள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பொது நிதி மேலாண்மை அமைப்பு

26. பொது நிதி மேலாண்மை அமைப்பின் வாயிலாக, மத்திய அரசின் நிதியுதவி பெறும் நலத் திட்டங்கள் மற்றும் மத்திய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத் திட்டங்களின் நிதி நிலையினைக் கண்காணித்தல், கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும். மேலும், மேம்பட்ட நிருவாக வசதிக்காகவும் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் பயனாளிகளுக்கு நேரடியாகச் சென்று சேரவும், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசின் ஆணைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் பொது நிதி மேலாண்மைத் திட்டத்தினை செயலாக்க, சீரிய முறையில் கருவூலம் மற்றும் கணக்குத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

27. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் கருவூலக் கணக்குத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக உள்ளது. கருவூலம், பொது நிதி மேலாண்மைத் திட்டத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இதுவரை இத்திட்டத்தின்கீழ் 51 அரசுத் துறைகளில், 152 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்மூலம் 8,730 கோடி ரூபாய் பயனாளிகளுக்கு நேரடியாக வங்கிக் கணக்குகளில் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

28. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 (த.நா.சட்ட எண் 24) நிறைவேற்றப்பட்டு 15-12-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24-8-2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

29. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014-ன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு 5-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டப்பூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம் 2014, பிரிவு 20-ன்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்பிக்க வேண்டும். அரசு அதனைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

30. தமிழ்நாடு சட்டமன்றத்தில் தணிக்கை அறிக்கையினைத் தயாரித்து சமர்பிப்பது குறித்து மாநிலக் கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016 வகை செய்கிறது.

[2020 மார்ச் 24

31. தற்போது பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
1	மாநகராட்சிகள்	15
2	நகராட்சிகள்	121
3	பேரூராட்சிகள்	528
4	மாவட்ட ஊராட்சிகள்	31
5	ஊராட்சி ஒன்றியங்கள்	385
6	பல்கலைக்கழகங்கள்	23
7	நூலக ஆணைக் குழுக்கள்	32
8	வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	23
9	தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம்	1
10	வேளாண் விற்பனைக் குழு பொறியியல் பிரிவு	3
11	கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி	1
12	உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள்	28
13	கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22 சதவீதம் முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை – 12,524	2801
14	பல்வகை நிறுவனங்கள்	12
15	தேசிய சமூக நலத் திட்டம்	32
	மொத்தம்	4,036

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

32. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு-செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு-செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும், விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதைச்

2020 மார்ச் 24]

சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், அவை எதிர்ப்பார்க்கும் பயனாளிகளின் நலனுக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனைத் தணிக்கை

33. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவீதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 ஊராட்சிகளில் ஆண்டுதோறும் 2,801 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன்நிகழ் தணிக்கை (Concurrent Audit)

34. தற்போது 14 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல் 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஓர் துணை ஆய்வாளர் அல்லது ஓர் உதவி ஆய்வாளர் அடங்கிய ஓர் குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறையை அமல்படுத்துதல்

35. அ) உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற கீழ்க்கண்ட 14 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும்

[2020 மார்ச் 24

உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றன. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுகள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவுச் சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிருவாகத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிருவாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

வ. எண்	மாநகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை)	நகராட்சிகள் (உடன்நிகழ் தணிக்கை)
1	சென்னை	காஞ்சிபுரம்
2	சேலம்	கடலூர்
3	கோயம்புத்தூர்	கரூர்
4	திருச்சி	கும்பகோணம்
5	மதுரை	புதுக்கோட்டை
6	திருநெல்வேலி	பழனி
7	தூத்துக்குடி	பொள்ளாச்சி
8	வேலூர்	ஊட்டி
9	திருப்பூர்	மறைமலைநகர்
10	ஈரோடு	தாம்பரம்
11	தஞ்சாவூர்	பல்லாவரம்
12	திண்டுக்கல்	திருவண்ணாமலை
13	ஆவடி	கொடைக்கானல்
14	நாகர்கோவில்	இராஜபாளையம்
15		கோவில்பட்டி

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

ஆ) உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாகத் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத பிற அமைப்புகளின் தணிக்கை

36. உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 106 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயல்படுத்துதல்

37. i) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்கக் குறியீடுகளைக் கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

ii) ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற

[2020 மார்ச் 24

உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் உண்மையான நிலையை அறிந்துகொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்புமுறைக் கோட்பாட்டின்படி தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்தக் கணக்கு முறையின் உள்ளடக்கம் மற்றும் நோக்கமாகும்.

iii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். வெளிப்படைத் தன்மையுள்ள இந்தப் புதிய கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு மூலதனத் திட்டங்களுக்கும் நலத் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க பல நிதி நிறுவனங்கள் முன் வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்

38. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று, கடன் வழங்கும் பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும். மேலும், தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அங்கீகாரமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே அரசாணை (பல்வகை) எண் 93, நிதி (நிதிக் குழு-IV)த் துறை, நாள் 28-3-2003-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இயல்பு நிலை கணக்குப் பதிவு (Accrual Based Accounting) அடிப்படையிலான கணக்குகள் முறைப்படி தயார் செய்யப்பட்டு ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழு, மாநில/மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

39. i) தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாகச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர கால முறை அறிக்கைமூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

ii) தணிக்கை மறுப்புரைகளுக்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, திருப்தியான விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும், தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படுகிறது.

iii) தணிக்கையின்போது தொடக்கநிலை மற்றும் இறுதிநிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

40. i) ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர் நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர் நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான 39 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 556 தணிக்கைத் தடைகள்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

ii) பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும், பேரூராட்சிகளுக்கான உயர் நிலைக் குழுக்கள் அரசாணை (நிலை)

எண் 1, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ-2), நாள் 4-1-2007-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன. 1-4-2019 முதல் 31-1-2020 முடிய மாவட்ட அளவிலான 3 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 415 தணிக்கைத் தடைகள்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

iii) அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர் நிலைக் குழு நகராட்சி நிருவாக இயக்குநரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண் 65, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22-5-2007-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. 1-4-2019 முதல் 31-1-2020 முடிய மாவட்ட அளவில் 11 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 342 தணிக்கை மறுப்புரைகள்மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பணிகள்

41. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

அ) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31-1-2020 அன்றைய நிலவரப்படி 30,834 ஓய்வூதியதாரர்கள் நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணையப் பகிர்வு நிதித் தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளைக் களைவதற்கும்,

தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இ) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண் 120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-5-1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1-8-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டத்தின்கீழ் 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 295 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 99.08 இலட்சம் ரூபாயும், குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில் 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 52 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 22.58 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஈ) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ7) துறை, நாள் 15-3-2013-ன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 1-4-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டத்தின்கீழ் 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 133 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 47.79 இலட்சம் ரூபாயும், குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தில் 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 107 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 37.45 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உ) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும், அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு

நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1-4-2019 முதல் 31-1-2020 முடிய ரூ.16.90 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

ஊ) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் 1-4-1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 17.75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 29.56 கோடி ரூபாய் மதிப்புள்ள 886 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 127 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு 12.30 இலட்சம் ரூபாய் உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

42. அரசாணை (நிலை) எண் 260, நிதி (ஓய்வூதியக் குறை தீர்ப்பு)த் துறை, நாள் 15-10-2015-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிருவாகப் பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டு முடிய 382 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. இதர உள்ளாட்சி அமைப்புகளான 14 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 495 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளையும் அதன் சரித்தன்மையினையும் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

தணிக்கை நிலை

43. கடந்த 2018-2019 ஆம் ஆண்டுக்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், 527 பேரூராட்சிகள், 9 பல்கலைக்கழகங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளன. கடந்த 2018-2019 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22 சதவீதம் சோதனைத் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றியங்களின் தணிக்கை 30-9-2020-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மற்ற நிறுவனங்களின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31-12-2020-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தணிக்கைக் கட்டணம்

44. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு மொத்தச் செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 31-1-2020 வரையிலான கேட்புத் தொகையான 2,083.30 இலட்சம் ரூபாயில் மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 1,489.24 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

45. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளில் 1-4-2019 முதல் 31-1-2020 முடிய 35,163 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 4,342.64 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் தணிக்கைத் துறை

46. சந்தானம் குழு மற்றும் நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவுத் தணிக்கைத் துறையானது 17-6-1981 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-ன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிருவாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

[2020 மார்ச் 24

47. கீழ்க்காணும் நிருவாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

வ. எண்	நிருவாகப் பதிவாளர்களின் விவரம்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
1.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	8441
2.	கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்	1353
3.	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	309
4.	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	241
5.	தலைமைச் செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்	674
6.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	747
7.	மீன் வளத் துறை இயக்குநர்	1,353
8.	கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பணிகள் ஆணையர்	109
9.	சர்க்கரைத் துறை ஆணையர்	16
10.	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	66
11.	வேளாண் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்	117
12.	பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர்	24
13.	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்	123
14.	ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர்	49
	மொத்தம்	13,622

2020 மார்ச் 24]

கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

48. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி செயல்படுவதைத் தணிக்கை செய்வதன்மூலம், உறுப்பினர்கள் அறிந்துகொள்ளும் வகையில் இத்துறை உதவியாக இருந்து வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

49. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கை நடைமுறைக்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கை மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி 25 கோடி ரூபாய்க்கு மேல் வைப்புத் தொகைகளைக் கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வத் தணிக்கை பட்டயக் கணக்காளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன்நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சட்டப்பூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்

50. சிறு பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்குத் தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. கடந்த 1-4-2019 முதல் 31-1-2020 வரையிலான காலத்தில் 2.47 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

அடிப்படை விதி 127-ன்படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கைக்கு 45 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 340, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 21-9-2012-ன்படி இத்தணிக்கைக்குக் கட்டணமாக 45 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 1-4-2019 முதல் 31-1-2020 வரையிலான காலத்தில் அடிப்படை விதி கட்டணமாக 11.17 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது.

தணிக்கை முன்னேற்ற நிலை

51. கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

வ. எண்	தணிக்கை வருடம்	மொத்தச் சங்கங்கள்	தணிக்கை முடிக்க பெற்றவை மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டவை	நிலுவைச் சங்கங்கள்
1	2014-2015	14,644	14,165	479
2	2015-2016	14,017	13,516	501
3	2016-2017	14,007	13,450	557
4	2017-2018	13,768	13,153	615
5	2018-2019	13,622	9,955	3,667

கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரையிலான நிதியாண்டிற்கு உரியதாகும். எனவே, அந்நிதியாண்டு முடிந்த பின்னரே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, 2018-2019 ஆம் ஆண்டிற்கான மொத்தமுள்ள 13,622 சங்கங்களில் 9,955 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 2019-2020 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 31-3-2020-க்கு முன்னர் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவு 81-ன்கீழ் விசாரணை நிலுவையில் உள்ளவை, வணிகக் குற்றப் புலனாய்வுத்

துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாமை மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை ஆகிய காரணங்களினால் 2018-2019 ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை முடிக்கப்படாமல் உள்ளன. இவற்றை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தனி அறிக்கைகள் (Special Reports)

52. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள்மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (31-1-2020 வரை) 37.38 கோடி ரூபாய் அளவிலான 378 தனி அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்களை பணி நியமனம் செய்தல்:

53. இத்துறை பணியிடங்களை மறுசீரமைப்பு செய்துள்ளது. காலியாகவுள்ள 1,000 துவக்க நிலை, இளநிலைக் கூட்டுறவுத் தணிக்கையாளர் பணியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நேரடிப் பணி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தணிக்கையாளர்களின் திறன் மேம்படுத்துதல்

54. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகாலப் பயிற்சிகளும், வருடந்தோறும் இரண்டு நாட்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்டம் (AIMS)

55. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை என்பது கணினி மற்றும் இணையதளத்தில் இயங்கக்கூடிய மென்பொருளாகும். இதன் மூலமாக தணிக்கைத் தொடர்பான தகவல்களான தணிக்கைத் திட்டம் சமர்ப்பித்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல், தணிக்கை அட்டவணை தயார் செய்தல், தணிக்கை முன்னேற்றம், தணிக்கையாளர்களின் நாட்குறிப்புகள் சமர்ப்பித்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல், மின்னணுத் தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல், தணிக்கைக் கட்டணம், அடிப்படை விதிக் கட்டணம் வசூல் விவரங்கள், தனி

அறிக்கை விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் இணையவலை வழியாக பெறலாம். தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை இத்துறையின் மின் ஆளுமை முயற்சிகளுக்கு அச்சாணியாக விளங்குகிறது.

சிறு சேமிப்புத் துறை

56. குடிமக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்தலே சிறு சேமிப்புத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இந்தியாவில் சிறு சேமிப்புத் திட்டங்கள் தனிநபர் வீட்டுச் சேமிப்பிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. சிறு முதலீட்டாளர்களையும் சேமிப்பு இயக்ககத்தின்கீழ் கொணர்ந்து, அதன்மூலம் அவர்களின் முதலீட்டிற்கு அதிகப் பாதுகாப்பு அளித்து, அதே நேரத்தில் முதலீட்டின் மீது கணிசமான வட்டி கிடைப்பதற்கும் உறுதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டு மக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அஞ்சல் துறையின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு சேமிப்புத் திட்டங்களை ஊக்குவிக்கும் பணியில் மாநில சிறு சேமிப்பு ஆணையரகம் ஈடுபட்டு வருகின்றது.

57. கடந்த 2015-2016 ஆம் ஆண்டு வரையில் ஒரு மாநிலத்திற்குள் திரட்டப்பட்ட நிகர சிறு சேமிப்பு வசூலானது, அந்த மாநிலத்திற்கே முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ நீண்ட காலக் கடனாக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது. எனினும், தேசிய சிறு சேமிப்பு நிதியத்தின் கடன் பெறுவதற்கு மாநிலங்களை வற்புறுத்தக் கூடாது என்ற பதினான்காம் நிதிக் குழு பரிந்துரையின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்றும், 2016-2017 ஆம் ஆண்டு முதல் சிறு சேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து மாநிலத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சிறு சேமிப்புத் திட்டங்கள்

58. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறு சேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறு சேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களின் முதல் நாளில் மாற்றியமைத்து மத்திய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

2020 மார்ச் 24]

59. இத்தகவல்கள் யாவும் தற்போது சிறு சேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-ல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன. தற்போது 1-1-2020 முதல் நடைமுறையில் உள்ள சிறு சேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் பின்வருமாறு:

வ. எண்	திட்டம்	1-1-2020 முதல் வட்டி விகிதம் (%)	வட்டி கூடுதல் கால இடைவெளி
1	அஞ்சலக சேமிப்புக் கணக்கு (POSA)	4.0	ஆண்டுக்கு ஒரு முறை
2(அ)	அஞ்சலகக் கால வைப்பு நிதி 1 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD)	6.9	காலாண்டுக்கு ஒரு முறை
(ஆ)	2 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD)	6.9	காலாண்டுக்கு ஒரு முறை
(இ)	3 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD)	6.9	காலாண்டுக்கு ஒரு முறை
(ஈ)	5 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD)	7.7	காலாண்டுக்கு ஒரு முறை
3	அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம் (PORD-5 ஆண்டுகள்)	7.2	காலாண்டுக்கு ஒரு முறை
4	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) (5 ஆண்டுகள்)	8.6	காலாண்டுக்கு ஒரு முறை
5	அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS) (5 ஆண்டுகள்)	7.6	மாதத்திற்கு ஒரு முறை
6	தேசிய சேமிப்புப் பத்திரம் NSC VIII-வது வெளியீடு (5 ஆண்டுகள்)	7.9	ஆண்டுக்கு ஒரு முறை

வ. எண்	திட்டம்	1-1-2020 முதல் வட்டி விகிதம் (%)	வட்டி கூடுதல் கால இடைவெளி
7	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்/பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF-15 ஆண்டுகள்)	7.9	ஆண்டுக்கு ஒரு முறை
8	கிஸான் விகாஸ் பத்திரம் (KVP)	7.6 (113 மாதங்களில் முதிர்வடையும்)	ஆண்டுக்கு ஒரு முறை
9	சுகன்யா சம்ரிதி கணக்கு (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்)	8.4	ஆண்டுக்கு ஒரு முறை

செல்வ மகள் சேமிப்புத் திட்டம்

60. செல்வ மகள் சேமிப்புத் திட்டம் என்ற பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத் திட்டத்தை மத்திய அரசு 3-12-2014 அன்று அறிமுகப்படுத்தியது. பத்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காக மட்டும் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டி விகிதம் 1-1-2020 முதல் 8.4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொன் மகன் பொது வைப்பு நிதி

61. செல்வ மகள் சேமிப்புத் திட்டத்திற்குக் கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் பொது வருங்கால வைப்பு நிதித் (PPF) திட்டம் “பொன் மகன் பொது வைப்பு நிதி” எனப் பெயரிடப்பட்டு இந்திய அஞ்சல் துறைமூலம் 4-9-2015 முதல் மறுபடியும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பத்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் வைப்பு நிதிக் கணக்கைத் துவக்கலாம். ஓர் ஆண்டிற்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்திற்கு 1-1-2020 முதல் வட்டி விகிதம் 7.9 சதவீதமாக வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்

62. 1-1-2020 முதல் 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்திற்கு 8.6 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும். கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதி உண்டு. கணக்கினை முன்கூட்டியே முடிக்கும்பொழுது ஓராண்டிற்குப் பிறகு 1.5 சதவீதமும், இரண்டு ஆண்டிற்கு பிறகு ஒரு சதவீதமும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

சிறு சேமிப்பு வசூல் விவரங்கள்

63. சிறு சேமிப்புத் திட்டங்களின் வாயிலாக 2013-2014 முதல் 2019-2020 வரையிலான நிதியாண்டுகளில் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

வ. எண்	நிதி யாண்டு	இலக்கு	மொத்தம்	திரும்பப் பெறப்பட்ட தொகை	நிகரம்
1	2013-14	- -	9,624.19	10,354.97	-730.78 •
2	2014-15	- -	10,936.37	12,020.49	-1,084.12 •
3	2015-16	- -	17,259.82	15,314.41	1,945.41
4	2016–17	- -	20,737.29	17,227.19	3,510.10
5	2017-18	- -	25,257.16	17,301.21	7,955.95
6	2018-19	--	31,923.58	19,511.08	12,412.50
7	2019-20 (டிசம்பர் 19 வரையில்)	--	28,984.78	16,852.34	12,132.44

(•2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலான தொகை திரும்பப் பெறப்பட்டது.)

[2020 மார்ச் 24

முகவரமைப்பு மற்றும் வெகுமதிகள்

முகவரமைப்பு

64. சிறு சேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறு சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறு சேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது, அதாவது 31-1-2020 வரை, மொத்தம் 17,152 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	முகவர்களின் வகை	மொத்த முகவர்களின் எண்ணிக்கை
1	நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS)	3,530
2	மகளிர் முகவர் திட்டம் (MPKBY)	13,622
	மொத்தம்	17,152

வெகுமதிகள்

65. ஒரு சில சிறு சேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாகத் திரட்டப்படும் முதலீடுகளுக்கு மத்திய அரசு தரகுத் தொகை வழங்குகிறது. சிறு சேமிப்பு முகவர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறு சேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வோராண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கி வருகின்றது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு, 709 முகவர்களுக்கு 9,68,000/- ரூபாய் அளவில் ரொக்கப் பரிசுகளும் கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

உலக சிக்கன நாள்

66. சிறு சேமிப்புத் துறையால் உலக சிக்கன நாள் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30 ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது. தமிழ்நாடெங்கும் சிக்கனம் மற்றும் சிறு சேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறு சேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாக களைவதிலும் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோராண்டும் உலக சிக்கன நாள் விழாவின்போதும் பொது மக்களிடையே சிறு சேமிப்புத் திட்டங்களை விளம்பரப்படுத்துவதில் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னைப் பெருநகரில் சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆணையாளரும் முக்கியப் பங்காற்றுகின்றனர். அதன்படி, மாணாக்கர்களிடையே சிறு சேமிப்பு தொடர்பான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறு சேமிப்புத் துறைமூலம் பரிசு அளிக்கப்படுகின்றது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் மாநில அளவிலான விழா சென்னையில் நடத்தப்பட்டது.

விளம்பரம்

67. சிறு சேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு, சிறு சேமிப்பு அரங்கு அமைத்தும், பொது மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில் பல்வேறு கிராமங்களில் 10.00 இலட்சம் ரூபாய் செலவில் 250 தெரு நாடகங்கள் நடத்தப்பட்டன.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

68. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் தொகுப்பு உபகரணங்கள்மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு-செலவினைத் திட்டமிடும் நோக்குடன் 1971 ஆம் ஆண்டு மத்திய வரவு-செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் தொகுப்பு வசதிகளைப் பயன்படுத்தி அரசுத் துறைகளின்

பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது. தற்போது அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்;

2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்;

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி (GPF);

4) சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ஊக்கத் தொகை வழங்குதல் (DBT).

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

69. அரசாணை (நிலை) எண் 201, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 21-5-2009-ன்படி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்/நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள்/நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டக் கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 463, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு)த் துறை, நாள் 27-12-2013-ன்படி மாநிலக் கணக்காயரால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குகள் இத்துறைக்கு 1-1-2014 அன்று மாற்றம் செய்யப்பட்டது.

70. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் வழங்கியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	பணியாளர் விவரம்	31-1-2020 அன்று வரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்
1	அரசுப் பணியாளர்கள்	4,20,621
2	நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள்/ ஊராட்சி ஒன்றியம்/நகராட்சிப் பள்ளிப் பணியாளர்கள்	1,01,063
3	உள்ளாட்சித் துறைப் பணியாளர்கள்	29,623
	மொத்தம்	5,51,307

71. கடந்த 2018-2019 ஆம் ஆண்டு வரை 4,66,867 அரசுப் பணியாளர்கள்/ நிதி உதவிப் பெறும் கல்வி நிறுவனங்கள்/ ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இறுதிக் கணக்குத் தாள் வழங்குதல்

72. அரசாணை (நிலை) எண் 59, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 22-2-2016-ன்படி, 31-1-2020 வரை 17,296 பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் இறுதிக் கணக்குத் தாள் வழங்குவதற்கு கருவூலம் மற்றும் கணக்குத் துறை பரிந்துரை செய்துள்ளது. அவற்றினைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்பளிப்பு வழங்க 17,191 பணியாளர்களுக்குரிய இறுதிக் கணக்குத் தாள்கள் கருவூலக் கணக்குத் துறைக்கு அனுப்பப்பட்டன. அதன்படி 856 கோடி ரூபாய் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

73. உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 29,623 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இணையதளம் வழியாக சந்தா பிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை

பதிவு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிலையாக்கப்படாத பணியாளர்களுக்கும் 2018-2019 ஆண்டு முடிய கணக்குத் தாள் வழங்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் (GPF)

74. அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19-4-2010-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31-1-2020 அன்றுள்ளபடி 2,08,349 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

75. அரசாணை (நிலை) எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-7-2015-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடமிருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் கருவூலம்/ சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வரவின பட்டியல்களின் அடிப்படையில் 2015-2016, 2016-2017, 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குத் தாள் தொகுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கான கணக்குத் தாள் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறுதி தொகை வழங்கும் பணிகள்

76. அரசு கடித எண் 5992/ச.ந.-4-2/2017, நாள் 12-4-2018-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் காலமான பணியாளர்களுக்கான இறுதித் தொகை வழங்கிட உரிய படிவங்கள் அரசால் வெளியிடப்பட்டு, இறுதித் தொகை வழங்கும் அதிகாரம் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. 31-1-2020 வரை 5,077 பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள்

பெறப்பட்டு சரிபார்க்கப்பட்டு 2,591 இறுதி ஒப்பளிப்பு ஆணைகள் (Final Authorization Orders) வழங்கப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத் தொகை வழங்குதல் (Direct Benefit Transfer)

77. அரசாணை எண் 191, வேளாண்மை (S1) துறை, நாள் 5-9-2019-ன்படி கரும்பு உற்பத்தியாளர்களுக்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கான சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஊக்கத்தொகை வழங்குதலுக்கான (Direct Benefit Transfer) விவரக் குறிப்பு தொகுக்கும் பணி, அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது, அதற்காக 10.00 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசுத் தணிக்கைத் துறை

78. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 3-8-1992-ன்படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையாக செயல்பட்டு வந்தது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 2019-2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் படி இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உள்தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்டத் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்தில் கொண்டு அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண் 264, நிதி (உள்ளாட்சி நிதித் தணிக்கை)த் துறை, நாள் 16-8-2019-ன்வழி மாற்றம் செய்யப்பட்டது.

தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் தணிக்கை

79. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை மாநில அரசுத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு
(I)	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2017-2018
(II)	தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்	2017-2018
(III)	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	2017-2018
(IV)	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்	2017-2018
(V)	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் (சட்டப்பூர்வமானது)	2017-2018
(VI)	தமிழ்நாடு வக்ஃபு வாரியம்	2014-2015

மேற்கண்ட சட்டப்பூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை (வ. எண் V & VI நீங்கலாக) உடன் நிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை

80. *கீழ்க்கண்ட தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்படாத* நிறுவனங்களின் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை/ நிறுவனங்கள்
(I)	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்	97,397

2020 மார்ச் 24]

தொடர் எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை/ நிறுவனங்கள்
(II)	வேளாண்மை விரிவாக்க மையங்கள்	948
(III)	எடையளவு நிறுவனங்கள்	333
(IV)	அரசால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (Govt. Institutions receiving Grants-in-Aid)	1,126
(V)	அரசிடமிருந்து உதவி பெறும் பிற நிறுவனங்கள் (Non-Govt. Institutions receiving Grants-in-Aid)	753

81. இத்துடன் கீழ்க்கண்ட திட்டங்கள்/நிறுவனங்களுக்கான தணிக்கைகள் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

i. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
ii. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
iii. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் (சமூகப் பாதுகாப்பு) திட்டம்
iv. நாட்டுப்புறக் கலைஞர் நல வாரியம்
v. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
vi. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
vii. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகைத் திட்டம்
viii. அண்ணா மேலாண்மை நிறுவனம்
ix. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகங்கள்
x. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
xi. ஆசிரியர் தேர்வு வாரியம்
xii. இதர நிறுவனங்கள்

[2020 மார்ச் 24

தணிக்கைச் சான்று

82. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

இதர பணிகள்

83. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள்/ஆய்வர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்படுகின்றன.

84. மேலும், கீழ்க்காணும் நிறுவனங்கள்/திட்டங்கள்/நிதிகளின் கணக்குகள் மீதான தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது:

i. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்

ii. தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம்

iii. குடும்பப் பாதுகாப்பு நிதி

iv. மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி

v. அரசு உதவிபெறும் பலதொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகள்

vi. அனைத்து அரசுத் துறை பணியாளர்களின் ஊதிய நிர்ணயத் தணிக்கை (வணிக வரித் துறை, பதிவுத் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளில் இத்தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது)

vii. சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் செலவினத் தணிக்கை

2020 மார்ச் 24]

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

85. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அவ்வப்போது நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறை செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

தணிக்கைக் கட்டணம்

86. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 1-4-2019 முதல் 31-1-2020 முடிய உள்ள காலத்திற்கு ரூ.206.21 இலட்சம் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

87. நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் வகையில் பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 4581 தணிக்கைத் தடைகள் கூட்டமர்வின்மூலம் நீக்கம் செய்யப்பட்டு 699.14 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மின்ஆளுமை முயற்சிகள்

88. அ) சட்டமன்றப் பேரவை (2017-2018) ஆம் ஆண்டிற்கான நிதித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி மாநில அரசுத் தணிக்கைத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் இத்துறைக்கென தனியே புதிய வலைதளம் ஒன்று உருவாக்க ரூ.6 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

ஆ) தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் இத்துறைக்கென 'தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அலகு' (Cell for Data Management and Analytics) என்ற அமைப்புக்கான மென்பொருள் ஒன்றை உருவாக்க தமிழ்நாடு புதிய கண்டுபிடிப்பு முயற்சிகள் (Tamil Nadu Innovation Initiatives (TANII)–2019-2020) மூலம் 8.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இ) இத்துறையில் செயல்படுத்தப்படும் மின் ஆளுமைத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தப்படும் வகையில் இத்துறைக்கென புதிய உதவி கணினி பகுப்பாய்நர் (Assistant System Analyst) என்ற பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

[2020 மார்ச் 24

நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் மீதான தணிக்கை (Sustainable Development Goals (SDGs))

89. நிலையான வளர்ச்சி இலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை செயல்திறன் அடிப்படையில் செயல்படுத்துவதற்காக நிதித் துறை அனைத்துத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளின் மீதான அரசின் முன்னுரிமை அடிப்படையில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பொது நிருவாகத்தின் செயல்திறன், பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் மாநில அரசுத் தணிக்கைத் துறையின் பணிகள் அவசியம். SDGs தொடர்பான தணிக்கைகளுக்கு ஒரு கட்டமைப்பை உருவாக்கவும், இது தொடர்பான தணிக்கைகளை ஒன்றிணைத்து செயல்முறைகளை உருவாக்கவும் இத்துறை முயற்சி செய்து வருகிறது. இவ்விதமான தணிக்கைகள் அரசின் அதிக செயல்திறன் மிக்க முடிவுகளுக்கு வழி வகுப்பதோடு தமிழக குடிமக்களுக்கு அரசின் மீது அதிக மதிப்பை அளிக்கும்.

90. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 2019-2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அறிவிக்கப்பட்ட படி இத்துறையில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளுக்கான சிறப்புப் பிரிவு (SDGs unit) உருவாக்கப்பட்டுள்ளது.

91. தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களில் இணக்கத் தணிக்கை மற்றும் செயல்திறன் தணிக்கை மூலமாக கீழ்க்கண்டவாறு தணிக்கைத் தடைகள் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது:

அ) தணிக்கை மேற்கொள்ளும் துறைகள்/நிறுவனங்களில் SDGs உட்புகுத்தப்பட்டுள்ளதா இல்லையா என ஆய்வு செய்தல்.

ஆ) தேசிய/மாநில அளவில் SDGs-ன் இலக்கை அடைய துறைகள் வாரியாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதா என ஆய்வு செய்தல்.

இ) தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வின் SDGs-ன்மூலம் செயல்படுத்தப்படுதல் தொடர்பாக தணிக்கை மேற்கொள்ளல்.

2020 மார்ச் 24]

ஈ) தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்கள் SDGs தொடர்பான மத்திய/மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோளின் படி இயங்குகின்றனவா? என தணிக்கை செய்தல். SDGs சரிவர இயங்கவில்லை எனில் ஆய்வாளர்கள் தங்களது மறுப்பை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உ) தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்கள் SDGs-ன் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிக்காட்டிகளின்படி நடைமுறைபடுத்தப்படுகின்றனவா? என தணிக்கை செய்தல்.

SDGs செயல்பாட்டில் துறை வாரியான இலக்குகள் மீதான தணிக்கை மேற்கொள்வது தொடர்பாக தணிக்கையாளர்களுக்கு பயனுள்ள பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

92. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை 1987 ஆம் ஆண்டு தனித் துறையாக உருவாக்கப்பட்டது.


93. இதுவரை இத்துறை கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்தது. 2018-19 ஆம் ஆண்டின் நிதித் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையினை நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 370, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள் 22-11-2019 வாயிலாக இத்துறை அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறனான 333 பதவிகளைக் கொண்டு நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தனித் துறையாகச் செயல்பட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

94. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், 9,857

[2020 மார்ச் 24

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.



பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

95. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முதன்மை நோக்கமாகும்.

பணிநிலைத் திறன்

96. இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 333 பணியிடங்களில் கூட்டுறவுத் துறையிலிருந்து 297 பணியிடங்களும், ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து 2 பணியிடங்களும் அயற்பணியில் நிரப்பப்பட்டுள்ளன.

பணியிடத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணிநிலைத் திறன் எண்ணிக்கை
இயக்குநர்	1
இணை இயக்குநர்	1
துணை இயக்குநர் (கணக்கு)	1

2020 மார்ச் 24]

பணியிடத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணிநிலைத் திறன் எண்ணிக்கை
மண்டல துணை இயக்குநர்	5
கண்காணிப்பாளர்	1
உதவி இயக்குநர்	59
முதுநிலைக் கூட்டுறவுத் தணிக்கையாளர்	224
இளநிலைக் கூட்டுறவுத் தணிக்கையாளர்	7
அமைச்சுப் பணி	9
பொது சார்நிலைப் பணி	8
அடிப்படைப் பணி	17
மொத்தம்	333

97. அரசாணை எண் 370, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 22-11-2019-ன்படி பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைத் துறையைத் தனித் துறையாக மாற்ற தற்போதுள்ள பணிநிலைத் திறனைச் சீரமைக்கவும், தற்காலிக விதிகள் உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தணிக்கை முன்னேற்றத்தின் நிலை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

98. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2018-2019 தணிக்கையாண்டிற்கான தணிக்கை நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், இணையத்தின் 2019-2020 முதல் அரையாண்டிற்கான தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இணையத்தின் 3 அலகுகளில் தணிக்கைப் பணி நிறைவு பெற்றுள்ளது. (திருவண்ணாமலை பவுடர் பிளான்ட், ஈரோடு கறவையின மேம்பாட்டுத் திட்டங்கள் (DIPA), ஈரோடு எருமையின உறைவிந்து நிலையம் (BFSS)). மேலும், மீதமுள்ள 7 அலகுகளில் (சோழிங்கநல்லூர், நீலகிரி கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணை, போக்குவரத்து அலகு, விற்பனைப் பிரிவு, அம்பத்துார், மத்திய பால் பண்ணை மற்றும் தலைமையகம்) தணிக்கை நடைபெற்று வருகிறது.

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை

99. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான சட்டப்பூர்வத் தணிக்கை நிறைவு செய்யப்பட்டு தணிக்கைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் ஒன்றியங்களின் தணிக்கைப் பணி கணக்குப் புத்தகங்கள் முழுமையாக எழுதப்படாமை, சொத்து மற்றும் பொறுப்புகள் ஒதுக்கப்படாமை மற்றும் தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கைப் பணி முடிக்கப்படவில்லை. 2019-2020 ஆம் ஆண்டிற்கான முதல் அரையாண்டுத் தணிக்கைப் பணி 17 ஒன்றியங்களில் நடைபெற்று வருகிறது.

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

100. 2018–2019 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 9,857 பிரதமச் சங்கங்களில் 7,322 சங்கங்களின் தணிக்கைப் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,535 சங்கங்களின் தணிக்கைப் பணி முன்னேற்றத்திலுள்ளது. கடந்த 5 ஆண்டுகளின் தணிக்கைப் பணி முன்னேற்ற விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	தணிக்கை ஆண்டு	மொத்தமுள்ள சங்கங்கள்	தணிக்கைச் சான்று வழங்கப் பட்டவை	நிலுவை
1	2014-2015	11,242	11,242	முடிக்கப்பட்டுள்ளது
2	2015-2016	10,785	10,785	முடிக்கப்பட்டுள்ளது
3	2016-2017	10,701	10,701	முடிக்கப்பட்டுள்ளது
4	2017-2018	9,947	9,935	12 (புத்தகங்கள் எழுதப்படவில்லை)
5	2018-2019	9,857	7,322	2,535

தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக் கட்டணம்

101. 2019-2020 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 60.89 இலட்சம் ரூபாயும் மற்றும் அடிப்படை விதி 127-ன்கீழ் 46.71 இலட்சம் ரூபாயும் தணிக்கைக் கட்டணமாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

தணிக்கை மறு ஆய்வுக் (கணக்கு) குழுக் கூட்டங்கள்

102. பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தணிக்கை மறுப்பினங்களை தீர்வு செய்வதற்காக தணிக்கை மறு ஆய்வுக் (கணக்கு) குழுக் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் 371 தணிக்கை மறுப்பினங்களின் மீதான குறை நீக்க அறிக்கைகள் தணிக்கை மறு ஆய்வுக் (கணக்கு) குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு தீர்வு செய்யப்பட்டுள்ளது.

தனியறிக்கை

103. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி உள்ளீடுகளுக்கான அனைத்து விரிவான விவரங்களும் தனியறிக்கைகள்மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை மற்றும் பால் வளத் துறை துணைப் பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக தொடர்புறுத்தப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தனியறிக்கைகளின் விவரங்கள்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கை ஆண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2014-15	-	-
2015-16	1	48.42
2016-17	1	8.82
2017-18	1	239.10
2018-19 (ஜனவரி 2020 வரை)	3	878.53

[2020 மார்ச் 24

மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கை ஆண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2014-15	5	205.60
2015-16	6	287.21
2016-17	7	83.72
2017-18	10	618.20
2018-19 (ஜனவரி 2020 வரை)	10	4,235.03

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கை ஆண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2014-15	329	921.94
2015-16	284	438.76
2016-17	400	1,312.33
2017-18	278	909.96
2018-19 (ஜனவரி 2020 வரை)	277	259.11

பயிற்சி மற்றும் மேம்பாடு

104. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்குத் துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வோராண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இணைப்பு V

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

வீட்டு வசதி என்பது உணவு மற்றும் உடைகளுக்கு அடுத்தபடியாக விளங்கும் ஓர் அடிப்படை மனித தேவையாகும். வீட்டு வசதியானது மனித நல்வாழ்விற்கு மட்டுமின்றி, வீட்டிற்கும், நாட்டிற்கும் பொருளாதார நன்மைகள் வழங்கக்கூடிய அளவிற்கு முக்கியமானதாகும். 1976 ஆம் ஆண்டு "வான்கூவரில்" நடைபெற்ற முதல் வாழ்விட மாநாடு "மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது ஒவ்வொரு மனித குடியமர்வுக் கொள்கையின் முதல் மற்றும் மிக முக்கியமான குறிக்கோள்" என்று அறிவித்தது. இந்தக் கொள்கைகள் அனைத்துத் தரப்பு மக்களிடையே எவ்வித பாகுபாடும் இன்றி அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், சுத்தமான நீர், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, பயிற்சி மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை வேறுபாடற்ற முறையில் வழங்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் விரைவான மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் இருக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையானது, நகர்ப்புற வளர்ச்சிக்கான பல்வேறு கொள்கைகளை வகுப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவதுடன் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்புகளைக் கொண்டுள்ள துறையாகவும் இருந்து வருகிறது. இத்துறை, திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்கும்போது நகர்ப்புறங்களில் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலைகளையும், வாங்கும் திறனுக்கேற்ற வீட்டு வசதித் தேவைகளையும், அதற்கான உட்கட்டமைப்புகளையும், நீடித்த மற்றும் இணக்கமான நகரமயமாதலை ஊக்குவிப்பதற்கான தேவைகளையும் கவனத்தில் கொள்கிறது.

[2020 மார்ச் 24

கிராமங்களிலிருந்து நகரப் பகுதிகளுக்கு படிப்படியாக மக்கள் இடம்பெயர்வதன் விளைவாக நகரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் விகிதாச்சாரம் படிப்படியாக அதிகரித்து நகரமயமாதல் உருவாகிறது. இத்தகைய செயல்பாடுகளால் நகரங்கள் மற்றும் மாநகரங்கள் உருவாகின்றன. மேலும், அதிக மக்கள் இப்பகுதிகளில் வாழ முற்படுவதாலும் மற்றும் பணிபுரிவதாலும் இப்பகுதிகள் பெரிதாக விரிவடைகின்றன.

நகரமயமாதலுக்கான காரணிகள் பின்வருமாறு:

i. சிறந்த வேலைவாய்ப்பின் காரணமாக மக்கள் மாநகரங்களை நோக்கி குடிபெயர்தல்

ii. நகரங்கள் மற்றும் மாநகரங்களின் எல்லைகள் அதன் அருகில் அமைந்துள்ள கிராமப்புறப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக விரிவாக்கப்படுதல்

iii. கிராமப் பகுதிகள் நகரப் பகுதிகளாக உருமாற்றம் அடைவதால் ஏற்படும் மக்கள்தொகைப் பெருக்கம்

iv. புதிய திட்டமிடப்பட்ட நகரங்களை உருவாக்குதல்

நகரமயமாதல் என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் இன்றியமையாத ஒன்றாகும். பெருநகரங்களின் துடிப்பான பொருளாதாரம், பல்வேறு வேலைவாய்ப்புகளையும், வாழ்வாதாரங்களையும் வழங்குகின்றது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)-க்கு நகரப் பகுதிகள் பெரும் பங்களிப்பதால் அதிவிகித நகரமயமாக்கலுடன் தேசிய வருமானத்தின் பங்கும் அதிகரிக்கிறது. நகரங்கள், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர்களுக்கு அதிகமான வாய்ப்புகளை வழங்குவதால், நாட்டின் வளர்ச்சியில் நகரமயமாதல் ஒரு முக்கியக் கூறாகத் திகழ்கிறது. இதன்மூலம் மாநகரங்கள், அதிக வருமானத்தை உருவாக்கவும், விரைவான உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன.

பெருநகரப் பகுதிகள், உலகத்தன்மை வாய்ந்த சிறப்பியல்புகளுடன் பல்வகைப்பட்ட மக்கள் குழுக்களைக் கொண்டுள்ளன. பெரிய அளவிலான தொழில்மயமாக்கல், தொழில்நுட்ப மேம்பாடு, சேவைத் துறைகளின் வளர்ச்சி மற்றும் மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவை துரித நகரமயமாதலுக்குக் காரணமாக அமைகிறது.

2020 மார்ச் 24]

நகரமயமாக்கல் பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறியீடாக கருதப்பட்டாலும், நகர்ப்புற அடர்த்தி மற்றும் நெரிசலின் அதிகரிப்பு வாழ்க்கை முறையின் மாற்றங்களுக்கும் இயற்கை வளங்களின் தீவிர பயன்பாட்டிற்கும் வழிவகுக்கும் என்பதால் இது பல சவால்களை முன்வைக்கிறது. நகர்ப்புறங்களில் உருவாகும் அதிக மக்கள்தொகை நெருக்கமானது, நிலம், இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் இயல்கட்டமைப்புகளுக்குக் கணிசமான அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது. நகர ஏழை மக்களே இந்நிகழ்வின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். துரிதமான நகரமயமாதலால் பெருகிவரும் குடிசைப் பகுதிகள், சமூக மற்றும் கொள்கை முடிவுகளுக்கு பெரும் சவாலாக உள்ளன. நகரப் பகுதிகளில் குடிசைப் பகுதிகள் பெருகுவதன் காரணமாக அதிகரித்து வரும் முறைசாரா தொழில் துறைகள் கிராமப் பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடி குடிபெயரும் பெரும்பான்மையான மக்களை தொடக்கத்திலேயே ஈர்த்துக் கொள்கின்றன. அவ்வாறு சமீபத்தில் குடிபெயர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய சமூகப் பொருளாதார நிலையில் வாழ்கின்றனர். எனவே, குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் வாங்கும் திறனுக்கேற்ற வீட்டு வசதியை ஏற்படுத்துதல் எந்தவொரு மக்கள் நல அரசாங்கத்தின் இயல்பான செயல்பாடாகும். எனவே, 21 ஆம் நூற்றாண்டில் தன்னிறைவான அனைவரையும் உள்ளடக்கக்கூடிய நகர திட்டமிடல், மேம்பாடு மற்றும் வாழத் தகுந்த நகரங்களை ஏற்படுத்துவது அரசின் கொள்கை மற்றும் நிருவாகத்திற்கு முக்கியப் பணியாக உருவாகியுள்ளது.

நாட்டிலுள்ள மிகப் பெரிய மாநிலங்களுள் நகர்ப்புற மக்கள்தொகை பங்களிப்பில் தமிழ்நாடு முதல் இடத்திலும், அதிக வளர்ச்சி பெறும் நகர்ப்புற மக்கள்தொகையில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில், தமிழ்நாடு 48.45 விழுக்காடு நகர்ப்புறங்களில் வசிக்கக்கூடிய மக்கள்தொகையினைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது. அதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. மொத்த மக்கள்தொகையில், மகாராஷ்டிரா மாநிலம் மற்ற மாநிலங்களை விட அதிகமாக, 5.08 கோடி நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களைக் கொண்டுள்ளது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் 4.45 கோடி மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர், அவ்வகையில் தமிழ்நாடு 3.49 கோடி நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களைக் கொண்டு, மூன்றாவது இடத்தில் உள்ளது. 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி,

[2020 மார்ச் 24

பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சிறிய, நடுத்தர மற்றும் பெருநகரங்கள் சமமாக பரவியுள்ளதும், வேலைவாய்ப்பு தேடி மக்கள் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்வதும், அனைத்து மாவட்டங்களிலும் தொழிற் பூங்காக்கள் மற்றும் வர்த்தக மையங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் தமிழ்நாட்டின் விரைவான மற்றும் பரவலான நகரமயமாக்கத்திற்கு பங்களிக்கின்றன.

மாநிலம்	நகர மக்கட் தொகை (இலட்சத்தில்)	தரம்	மொத்த மக்கட் தொகையில் நகர மக்கட் தொகையின் பங்களிப்பு விகிதம்	தரம்
தமிழ்நாடு	*349*	*3*	*48.45%*	*1*
மகாராஷ்டிரா	*508*	*1*	*45%*	*2*
குஜராத்	*257*	*6*	*43%*	*3*
கர்நாடகா	*236*	*7*	*39%*	*4*
ஆந்திரப்பிரதேசம்	*284*	*5*	*33%*	*5*
மேற்கு வங்காளம்	*291*	*4*	*32%*	*6*
மத்தியப்பிரதேசம்	*201*	*8*	*28%*	*7*
ராஜஸ்தான்	*171*	*9*	*25%*	*8*
உத்தரப்பிரதேசம்	*445*	*2*	*22%*	*9*

1991 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மொத்த மக்கள்தொகையில் 34.15 விழுக்காடு மட்டுமே நகர மக்கள்தொகையாக இருந்தது. இவ்விகிதாச்சாரம் 2011 ஆம் ஆண்டில் 14.3 விழுக்காடு அதிகரித்து 48.45 விழுக்காடாக உயர்ந்தது. 2030 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் நகர மக்கள்தொகை விழுக்காடு சுமார் 67 சதவிகிதம் இருக்குமெனவும், இவ்விழுக்காடு நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களுள் மிக உயர்ந்த அளவாக தொடர்ந்து நீடிக்கும் எனவும் முன்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

இத்தகு சூழ்நிலையில், வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கேற்ப நகர்ப்புற உட்கட்டமைப்பிற்கான அதிகரிக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அடிப்படை குடிமைச் சேவைகளை வழங்கிடவும், பல முக்கியக் கொள்கை மற்றும் நிருவாக சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நகர்மயமாகும் செயல்முறைகளை நிறுத்துவது என்பது சாத்தியமானதுமல்ல மற்றும் விரும்பத்தக்கதுமல்ல. எனவே, இச்சவால்கள் எதிர்கொள்ளப்பட வேண்டும். சிறந்த நகரமயமாதல் என்பது மாநகரங்கள் மற்றும் நகரங்களைக் குடிசைப் பகுதிகளற்றதாகவும் மற்றும் போதுமான அளவில் ஆக்கபூர்வமான வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகளை அளிக்கக்கூடியதாகவும், அவர்களது வருமானத்தின் அடிப்படையில் அல்லாமல் வாழும் அனைத்து மக்களுக்கும் நல்ல தரமான வாழ்வினை உறுதி செய்யும் வகையில் இருத்தல் வேண்டும். தேசிய மற்றும் பன்னாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு போட்டியிடும் வகையில், மாநகரங்கள் மற்றும் நகரங்களில் நல்ல உயர்தரமான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அனைத்து குடிவாழ் மக்களும் வாங்கும் திறனுக்கேற்ற தரமான வீட்டு வசதி, சுத்தமான மற்றும் சுகாதாரமான சுற்றுப்புறங்களைப் பெற வழிவகை செய்யப்பட வேண்டும். திறன் வளர்ப்பு, உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நிதி ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புப் பெருக்கம் மற்றும் நவீன பொருந்தக்கூடிய பசுமை தொழில்நுட்பங்களைப் புகுத்துதல் போன்றவை மேற்கூறிய சவால்களை எதிர்கொள்வதற்கான திறவுகோலாகும்.

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குகிறது. "அனைவருக்கும் வீட்டு வசதி, குடிநீர், துப்புரவு, ஆற்றல், போக்குவரத்து, நீர்ப்பாசனம், இணைப்பு வசதி, நல்வாழ்வு மற்றும் கல்வி ஆகிய வசதிகளை அனைவரும் பெறும் வகையில் இந்தியாவில் மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளைத் தமிழ்நாடு உருவாக்கும்" என்பது "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023"-ன் பத்து கருப்பொருட்களுள் ஒன்றாகும்.

தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஒட்டுமொத்த முதலீட்டில் மிகப் பெரும் பகுதி முக்கிய துறையான நகர உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் துறைக்குச்

[2020 மார்ச் 24

செலவிடப்படுகிறது. இவ்வரம்பிற்குள், மாநகரங்கள் மற்றும் நகரங்களைக் குடிசைப் பகுதிகளற்ற பகுதிகளாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ல் அதிமுக்கியத்துவம்வாய்ந்த திட்டங்களுள் உலகத்தரம் வாய்ந்த 10 மாநகரங்களை உருவாக்கும் திட்டமும் ஒன்றாகும்.

ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான மேம்பாட்டிற்கான இலக்குகளுடன் ஒருமித்து தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் நோக்கங்கள், கருப்பொருட்கள் மற்றும் இலக்குகள் அமைந்துள்ளன. பாதுகாப்பானதும், பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடியதும், நிலைத்திருக்கக் கூடியதுமான, மாநகரங்கள் மற்றும் மனித உறைவிடங்களை ஏற்படுத்துவது நீடித்த வளர்ச்சி இலக்கு-11-ன் நோக்கமாகும். நீடித்த வளர்ச்சி இலக்கு-11 ஆனது நகர்ப்புறங்களில் சிறந்த திட்டமிடல் மற்றும் மேலாண்மையை முன்னெடுப்பதையும் பாதுகாப்பான, போதுமான வீட்டு வசதியை உறுதி செய்வதையும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவதையும் பொதுப் போக்குவரத்து மற்றும் சாலைகள் முதலிய அடிப்படை உட்கட்டமைப்புகளையும் அளிப்பதன் வாயிலாக நிலையான மாநகரங்களை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது.

இலக்கு-11-ன்கீழ் எய்த வேண்டிய இத்துறை தொடர்புடைய குறிக்கோள்களாவன:

➢ 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதுமான பாதுகாப்பான பெறத்தக்க வகையிலான வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் அளித்தல், குடிசைப் பகுதிகளைத் தரம் உயர்த்துதல்.

➢ 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து நாடுகளிலும் ஒருங்கிணைந்த நிலைத்தன்மை கொண்ட குடியேற்றங்களுக்கான திட்டமிடலையும், மேலாண்மையையும் உள்ளடக்கிய நீடித்தத் தன்மை கொண்ட பங்களிப்புடன்கூடிய நகரமயமாதலை மேம்படுத்துதல்.

➢ தேசிய மற்றும் வட்டார வளர்ச்சிக்கான திட்டமிடலை வலுப்படுத்துவதன் வாயிலாக, நகரங்கள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்கள் ஆகியவற்றிற்கு இடையில் நேர்மறையான பொருளாதார சமூக மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புக்கு ஆதரவு அளித்தல்.

இந்திய அரசு 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான பெறத்தக்க வகையிலான வீடுகளையும், அடிப்படை வசதிகள் அளித்தலையும், குடிசைப் பகுதிகளை

2020 மார்ச் 24]

மேம்படுத்துவதையும் உறுதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட காரணிகளைக் கண்காணிப்பதன் வாயிலாக குடிசைப் பகுதியில் வாழும் அனைவருக்கும் போதுமான மற்றும் பாதுகாப்பான வீட்டு வசதியை உறுதி செய்ய இயலும்:

➢ போதுமான வீட்டு வசதிகளைப் பெற்ற குடிசைப் பகுதிகள்/ பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள குடும்பங்களின் சதவீதம்

➢ அடிப்படை வசதிகளைப் பெற்ற குடிசைப் பகுதிகளின் சதவீதம்

➢ நகரப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் மக்களின் விகிதாச்சாரம்.

மாநிலத்தில் அடையாளம் காணப்பட்ட குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு அரசுத் திட்டங்கள்மூலம் வாங்கத்தக்க விலையில் வீடுகளை வழங்குவதில் அரசு ஏற்கெனவே முன்னேற்றம் கண்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, அத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் வாயிலாக தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ல் கூறப்பட்டுள்ள இலட்சிய இலக்குகளை அடையவும், நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு-11 (SDG-11)-னை அடையவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டு செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இத்துறை தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்திற்கும், கட்டட, மனை விற்பனை மேல்முறை தீர்ப்பாயத்திற்கும் நிருவாகத் துறையாகும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களது வாங்கும் திறனுக்கேற்றவாறு வீட்டு வசதி வழங்குவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் முக்கியப் பணியாகும். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வாங்கும் திறனுக்கேற்ற விலையில் மனைகளை விற்கவும், மேலும், அவர்கள்

வீடு கட்டுவதற்கான நிதி வழங்கவும் அவ்வுறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களைக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர் மூலமாக முறைப்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களை உருவாக்க வேண்டும் எனும் மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவினை நனவாக்க மேற்கூறப்பட்ட நிறுவனங்களால் “அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம்” செயல்படுத்தப்படுகின்றது.

நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவை தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ன்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளைச் செயல்படுத்தியும் வருகின்றன. முறையான நகரமயமாக்கலை உறுதி செய்யவும், நிலப் பயன்பாட்டு முறையை ஒழுங்குபடுத்தும் நோக்கிலும், பல்வேறு நகரம் மற்றும் மாநகரங்களுக்கான மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவான அபிவிருத்தித் திட்டங்களை நகர் ஊரமைப்பு இயக்ககமும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் படிப்படியாக தயாரித்து வருகின்றன.

2. இத்துறையால் செயல்படுத்தப்பட்டுள்ள முக்கியத் திட்டங்கள்

அ) பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம்-“அனைவருக்கும் வீட்டு வசதி” (நகர்ப்புறம்)

பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், நகர்ப்புறங்களில் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம் 25-6-2015 அன்று தொடங்கப்பட்டது. நாடு சுதந்திரமடைந்த 75-வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் தருணமான 2022 ஆம் ஆண்டிற்குள் வீடில்லா அனைத்துக் குடிமக்களுக்கும் தரமான, அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய வீட்டு வசதியை வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பயனாளிகளின் தேவை மற்றும் தகுதி அடிப்படையில் பின்வரும் நான்கு வகை அம்சங்களின்கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது:

வகை-I - குடிசைப் பகுதிகளின் கள மேம்பாடு (ISSR)

வகை-II - மானியத்துடன்கூடிய கடன் திட்டம் (CLSS)

வகை-III - வாங்கும் திறனுக்கேற்ப கூட்டு முயற்சியில் வீட்டு வசதி (AHP)

வகை-IV- பயனாளி தனி வீடு கட்டுவதற்கான மானியத்துடன்கூடிய வீட்டு வசதித் திட்டம் (BLC)

2020 மார்ச் 24]

அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தினை பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மாநில அளவிலான முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படித் திட்டம், 666 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 2 கண்டோன்மென்ட்கள்) செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத் திட்டம்

இரு வேறுபட்ட நிதிக் கூறுகள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின்கீழ் சமூகத்தில் உள்ள அனைவரும் பயனடையும் வகையில், திறமையாக செயல்படும் ஒரு வீட்டு வசதி சந்தையை உருவாக்க மற்றும் திறனுக்கேற்ற வீடுகள் விநியோகத்தை அதிகரிக்க, கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வடிவமைப்பு நிதியாக 450 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்கப்படும்.

முதலீட்டுத் திட்டங்களுக்கான நிதி வசதியின்கீழ் ரூ.504.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்படவுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம் 50 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியை உலக வங்கியிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும். இத்திட்டம், திறனுக்கேற்ற வீடுகள் கிடைப்பதை விரிவாக்க, வீட்டு வசதி நிறுவனங்களை வலுப்படுத்துவதுடன், வீட்டு வசதிக் கொள்கை, நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்த வழி வகுக்கும். இத்திட்டத்தின்மூலம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உறைவிட நிதியத்திற்கு முதல்கட்ட பங்குத் தொகை வழங்கப்படும்.

இ) ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் நகர்ப்புற ஏழை எளியவர்களுக்கான பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலைக்கத்தக்க வீட்டு வசதித் திட்டம்

நகர்ப்புற ஏழை எளியவர்களுக்கான நிலைக்கத்தக்க வீட்டு வசதி மற்றும் உறைவிடத் திட்டத்தின்கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியின் 500 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவியுடன், ரூ.5,000 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மதிப்பீட்டுச் செலவில் வெள்ளத்தால் பாதிப்பிற்கு உள்ளாக வாய்ப்புள்ள நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்போர், நகர்ப்புற ஏழை மக்கள் மற்றும் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வசதியும், மாநில முழுமைக்குமான மண்டலத் திட்டமிடல் பணிகளும் 2020-2021 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.

[2020 மார்ச் 24

ஈ) மலையிட பாதுகாப்புக் குழுமப் பகுதிகளில் திட்ட அனுமதி விரைவாக வழங்கும் வகையில் ஒப்புதல் அளிக்கும் நடைமுறையை எளிமையாக்குதல்

மலையிடப் பாதுகாப்புக் குழுமப் பகுதிகளில் அமையும் கட்டடம் மற்றும் மனைப் பிரிவுகளுக்கு திட்ட அனுமதி வழங்கும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. தற்போது, அந்தந்த மாவட்டத்திலுள்ள வனம், வேளாண்மைப் பொறியியல், புவியியல் மற்றும் சுரங்கத் துறைகளின் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் (RDO) ஆகியோரின் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். இதற்கு முன் இத்தடையின்மைச் சான்றிதழ்கள் மாநில அளவிலான அலுவலர்களால் வழங்கப்பட்டு வந்தன.

சம்மந்தப்பட்ட சார்நிலை அலுவலகங்களிலிருந்து பெறப்படும் அறிக்கையைப் பொறுத்து, துறைத் தலைவர் அளவிலான தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் செயல்முறை சிறிய அளவிலான வளர்ச்சிக்குக்கூட திட்ட அனுமதி வழங்க நீண்ட காலம் மற்றும் தேவையற்ற தாமதம் ஏற்படுகிறது. தற்போது எளிமைப்படுத்தப்பட்ட செயல்முறைகளால் காலம் குறைவதுடன் விரைவான திட்ட அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்க இயலும். இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

உ) நிலச் சேர்மம் (Land pooling)

நிலத்தை வளர்ச்சிப் பணிகளுக்காக மேம்படுத்தும்போது நில உரிமையாளர்களைப் பங்குதாரர்களாகக் கொண்டு உருவாக்கப்படும் திட்டமே, நிலச் சேர்மம் அல்லது நில ஒருங்கிணைப்புத் திட்டமாகும். இத்திட்டம் கால விரயத்தை ஏற்படுத்தும் நில கையகப்படுத்தும் திட்டத்திற்கு ஒரு மாற்றுத் திட்டமாகும். விரைவான நகரமயமாதல் மற்றும் தொழில்மயமாதல் நிலையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. இது வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளை அதிகரிக்கிறது. மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும், முறையான மற்றும் கட்டுப்பாட்டுன்கூடிய நிலம் சார்ந்த வளர்ச்சிக்கும், அவ்வளர்ச்சியின் பயன்கள் நில உரிமையாளர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கும், இத்தகைய நில ஒருங்கிணைப்புத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்மொழிந்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, புதிய அத்தியாயம்-IV(A)-ன்கீழ் நில ஒருங்கிணைப்புத் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

நில ஒருங்கிணைப்பு விதிகள் இறுதி செய்யப்பட்டு வருகிறது. இந்த வரைவு விதிகள் நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இணையதளத்தில் 4 வார கால அளவில் பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைக்காக 28-2-2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து இவ்விதியானது, இறுதி செய்யப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

ஊ) மாற்றத்தக்க அபிவிருத்தி உரிமைகள் (TDR)

பொது நோக்கத்திற்காக நிலம் கையகப்படுத்தப்படும் போது ஈடாக வழங்கப்படும் இம்மாற்றத்தக்க அபிவிருத்தி உரிமைகள் சான்றினை மாநிலம் முழுமையிலும் தனியர் பயன்படுத்திக் கொள்ளவோ அல்லது மாற்றிக் கொள்ளவோ இயலும். தனியர் நிலமானது பொதுப் பயன்பாட்டிற்காக அரசால் கையகப்படுத்தப்படும்போது இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு பதிலாக, கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு உரியகுறிப்பிட்ட தளப் பரப்பினை நில உரிமையாளர்களுக்கு நில உரிமை அபிவிருத்தி சான்றுகளாக (Development Rights Certificate) வழங்கப்படுகிறது. இந்த அபிவிருத்தியின் நில உரிமையாளர் தனது சொந்த பெயரிலோ அல்லது பிறரின் பெயரில் மாற்றியோ பயன்படுத்திக் கொள்ளலாம். பண இழப்பீடு வழங்கப்படாதவர்களுக்கு மட்டுமே மாற்றத்தக்க அபிவிருத்தி உரிமை சான்றிதழ் வழங்கப்படும். தமிழ்நாடு மாற்றத்தக்க அபிவிருத்தி உரிமைகள் 2019, அரசாணை (நிலை) எண் 198, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.-4) துறை, நாள் 24-12-2019-ன்மூலம் அறிவிக்கப்பட்டு, அரசிதழ் எண் 474-ல் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதிக்கும் மற்றும் மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு நகர் ஊரமைப்புத் துறை இயக்குநரின் ஒப்புதலுடன் கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்களின் உறுப்பினர் செயலர், மண்டல துணை இயக்குநர்களால் மாற்றத்தக்க அபிவிருத்திச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

எ) தளப்பரப்பு குறியீடு (FSI) உயர்த்துதல்

குடியிருப்புகளுக்கான விலையேற்றத்தினைக் குறைக்கும் பொருட்டு, அனைத்துத் தரப்பினருக்கும் அனுமதிக்கப்படும் தளப்பரப்புக் குறியீட்டை (FSI) அரசு 1.50-லிருந்து 2.00 ஆக உயர்த்தியுள்ளது. அதைப்போன்று அணுகு சாலையின் அகலத்திற்கு ஏற்ப ஊக்கத் தளப்பரப்புக் குறியீட்டையும் (Premium FSI)

[2020 மார்ச் 24

உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 18, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 4-2-2019-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வாங்கும் திறனுக்கேற்ற குடியிருப்புக் கட்டடங்களுக்கு ஊக்கத் தளப்பரப்புக் குறியீட்டிற்கான கட்டணம் குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால், குறைந்த வருவாய் பிரிவு/பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினரின் வீட்டு வசதித் தேவைகள் பூர்த்தியாகும்.

2020-2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

வ. எண்	துறைகள்		வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	*தலைமைச் செயலகம்*	*அனுமதித்தது*	*10,08,80*	--	*161,25,00*	*171,33,80*
2.	*நகர் ஊரமைப்பு இயக்ககம்*	*சாட்டியது* *அனுமதித்தது*	*1* *568,61,13*	-- --	-- --	*1* *568,61,13*
3.	*கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர்*	*சாட்டியது* *அனுமதித்தது*	*1* *8,26,95*	-- --	-- --	*1* *8,26,95*
4.	*சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*	*அனுமதித்தது*	*115,00,00*	*159,00,00*	*3,008,00,01*	*3,282,00,01*
5.	*தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்*	*அனுமதித்தது*	*21,66,97*	*1*	--	*21,66,98*
6.	*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்*	*அனுமதித்தது*	*3,932,10,14*	*205,20,02*	*1*	*4,137,30,17*
	மொத்தம்	சாட்டியது அனுமதித்தது	**2** **4,655,73,99**	– **364,20,03**	– **3,169,25,02**	**2** **8,189,19,04**

2020 மார்ச் 24]

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சென்னை மக்களின் வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு நகர மேம்பாட்டு அறக்கட்டளை 1947 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும், மாநிலத்தின் அனைத்து மக்களின் தேவையினைக் கருத்திற்கொண்டு, வாங்கத்தக்க விலையில் வீட்டு வசதி வழங்கும் நோக்கில் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறுவப்பட்டது. "அனைவருக்கும் வீட்டு வசதி" என்பதே வீட்டு வசதி வாரியத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.


தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு வகையான திட்டங்களைச் செயல்படுத்தியதன் வாயிலாக, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாங்கத்தக்க விலையில் வீட்டு வசதியினை வழங்கும் முன்னோடி நிறுவனமாகத் திகழ்வதில் பெருமையடைகிறது. இலட்சக்கணக்கான மக்களின் சொந்த வீடு/மனை என்ற கனவை நனவாக்குவதில் உதவி புரிந்துள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நவீன கட்டுமான உத்திகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தரமான கட்டுமானத்தை உறுதி செய்கிறது. மேலும், சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு அதிக அளவிலான புறநகர் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்மாதிரி நிறுவனமாகத் திகழ்கிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பல புறநகரத் திட்டங்கள்/பெரும் நகரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை மற்றும் இதர நகரங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்காக வாங்கத்தக்க விலையில் வீட்டு வசதி வழங்கும் நோக்கில், பல தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேம்படுத்தியுள்ளது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பல புதிய துணைக்கோள் நகரங்களை உருவாக்குவதன்மூலம் விரைவான நகரமயமாதலில் உள்ள சவாலினைக் கையாள்வதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலத்தின் பல நகரங்களில் பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

1.1 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அரசால் நியமிக்கப்பட்ட தலைவர் அவர்களின் தலைமையில் மேலாண்மை இயக்குநர், செயலர் மற்றும் பணியாளர் அலுவலர், நிதி ஆலோசகர், தலைமை வருவாய் அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோரின் துணையுடன் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24


நிறுவன அமைப்புப் படம்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
தலைவர்
மேலாண்மை இயக்குநர்
இணை மேலாண்மை இயக்குநர்
செயலர்
தலைமைப் பொறியாளர் I
தலைமைப் பொறியாளர் II
நிதி ஆலோசகர்
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் I
மேற்பார்வைப் பொறியாளர் மதுரை சரகம்
மேற்பார்வைப் பொறியாளர் IMPLEMENTING CIRCLE (PMU)
மேற்பார்வைப் பொறியாளர் திட்ட செயலாக்க சரகம் (PMU)
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் II
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் III
மேற்பார்வைப் பொறியாளர் கோயம்புத்தூர் சரகம்
நிர்வாகப் பொறியாளர் மெரினா, காஞ்சிபுரம், வேலூர்
நிர்வாகப் பொறியாளர் மதுரை, திருச்சி, திருநெல்வேலி
நிர்வாகப் பொறியாளர் (PMU) திட்ட செயலாக்க கோட்டம் I, II
நிர்வாகப் பொறியாளர் (PMU) PROCUREMENT, PROJECT
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் II, V, VI CSD I, கடலூர்
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் I, III, IV, மறுகட்டுமானம்
நிர்வாகப் பொறியாளர் சேலம், கோயம்புத்தூர், திருப்பூர்
முதன்மை திட்ட அமைப்பாளர்
நிர்வாகப் பொறியாளர் திட்டம், IIFA, SQC
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (3 Nos.)
உதவி செயலர் (நிர்வாகம்), உதவி செயலர் (குடியிருப்புகள்), உதவி செயலர் (மனைகள்)
கணக்கு அலுவலர்

2020 மார்ச் 24]


1.2 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சாதனைகள்


தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுநாள் வரை மாநிலம் முழுவதும் 4,31,901 வீட்டு வசதி அலகுகள் மற்றும் மனைகள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்படுத்தியுள்ளது. இவற்றில் 1,31,293 அலகுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களுக்காகவும், 1,03,148 அலகுகள் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்காகவும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

2016-2017 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரையிலான முக்கியச் சாதனைகள்


தமிழக அரசின் வழிகாட்டுதல் மற்றும் உதவியுடன், கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கீழ்கண்ட சாதனைகளை எய்தியுள்ளது:

➢ சுயநிதித் திட்டம், மனை மேம்பாட்டுத் திட்டம், சொந்த வீடு கட்டும் திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு ஆகிய திட்டங்களின்மூலம் சென்னை மற்றும் இதர நகரங்களில் ரூ.3,182.66 கோடி மதிப்பீட்டில் 19,174 குடியிருப்பு அலகுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கியுள்ளது.





2016-2017 முதல் 2019-2020 –ஆம் ஆண்டு வரை முடிக்கப்பட்ட மனைகள்/குடியிருப்புகள்
(ஆண்டு வாரியாக)
9000
8000
7000
6000
5000
4000
3000
2000
1000
0
8890
2016-17
2017-18
2018-19
2019-2020
வருடங்கள்
மனைகள்/குடியிருப்புகள் எண்ணிக்கை

2016-2017 முதல் 2019–2020–ஆம் ஆண்டு வரை முடிக்கப்பட்ட மனைகள்/குடியிருப்புகள்
(பிரிவு வாரியாக)



[2020 மார்ச் 24


2016-17 முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை முடிக்கப்பட்ட மனைகள்/குடியிருப்புகள்
(திட்டங்கள் வாரியாக)
மனைகள்/குடியிருப்புகள் எண்ணிக்கை
9000
8000
7000
6000
5000
4000
3000
2000
1000
0
8129
940
3171
6680
354
திட்ட வகைகள்

2020 மார்ச் 24]

இதர சாதனைகள் (2016-2017 முதல் 2019-2020 வரை)

➢ தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ.1,210.98 கோடி மதிப்பீட்டிலான 6,215 குடியிருப்பு அலகுகளையும், ரூ.229.95 கோடி மதிப்பீட்டிலான 216 வணிக மனைகளையும் விற்பனை செய்துள்ளது.

➢ 17,000 குடியிருப்பு அலகுகளின் ஒதுக்கீடுதாரர்கள், 184 வணிக மனை ஒதுக்கீடுதாரர்கள் உட்பட மொத்தம் 17,184 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

➢ 17,000 ஒதுக்கீடுதாரர்களில் தகுதியுள்ள 5,980 ஒதுக்கீட்டாளர்கள் வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்கீழ் விற்பனைப் பத்திரம் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

➢ வாரியத்தின் வீட்டு வசதி மனைகள் உள்ளிட்ட வீட்டு வசதி அலகுகள் வாங்குவதில் மாற்றுத் திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு 1 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. மொத்தம் 118 மாற்றுத் திறனாளிகள் ஒதுக்கீடு பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

➢ ரூ.671.82 கோடி மதிப்பீட்டிலான 131.52 ஏக்கர் வாரிய நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

➢ தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத பணியிடங்களுக்கு 293 பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலமும், 40 பணியிடங்கள் கருணை அடிப்படையிலும் நிரப்பப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர்அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்களின் விவரம்

வ. எண்	தேதி	திட்டத்தின் பெயர்	அலகுகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்)
1.	*26-9-2019*	*சென்னை, வில்லிவாக்கத்தில் பி, சி மற்றும் டி பிரிவு அரசு ஊழியர்களுக்கான குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்*	*324*	*71.71*
		சென்னை, ராமாபுரத்தில் குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்	*384*	*78.44*
		சென்னை, இந்திரா நகரில் 60 மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் மற்றும் 9 கடைகள்	*69*	*19.87*
		ஓசூர், பகுதி-XIX-ல் மனை மேம்பாட்டுத் திட்டம்	*214*	*21.38*
2.	*9-12-2019*	*சென்னை, முகப்பேரில் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்*	*40*	*12.70*
		சென்னை, புலியூர், கோடம்பாக்கத்தில் மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்	*48*	*11.97*
		சென்னை, மந்தவெளிப்பாக்கத்தில் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்	*12*	*2.96*
		சென்னை, மகாகவி பாரதியார் நகரில் குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்	*510*	*129.50*
		மதுரை, அண்ணா நகரில் அம்மா திருமண மண்டபம்	*1*	*5.51*
3.	*19-2-2020*	*சென்னை, ஆவடி, பருத்திப்பட்டில் அம்மா திருமண மண்டபம்*	*1*	*10.19*
		மொத்தம்	**1,603**	**364.23**

2020 மார்ச் 24]

1.3 நடைபெற்று வரும் திட்டங்கள்

சுயநிதித் திட்டம், மனை மேம்பாட்டுத் திட்டம், அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் மற்றும் மறுகட்டுமானத் திட்டங்களின்கீழ், சென்னை மற்றும் இதர நகரங்களில் 7,556 வீட்டு வசதி அலகுகளுக்கான கட்டுமான/மேம்பாட்டுப் பணிகள் ரூ.2,383.42 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

முக்கியத் திட்டங்கள்

➢ சென்னை, சோழிங்கநல்லூரில் சுயநிதித் திட்டத்தின்கீழ், ரூ.226.70 கோடி மதிப்பீட்டில் 1,000 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள்.

➢ சென்னை, கோயம்பேடு தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமப் பகுதியில் சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ.300.79 கோடி மதிப்பீட்டில் 418 உயர் வருவாய்ப் பிரிவு பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள்.

➢ சென்னை, நந்தனம் புதிய கோபுர வளாகப் பகுதியில் சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ.69.72 கோடி மதிப்பீட்டில் 102 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள்.

➢ கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் திட்டப் பகுதியில் ரூ.522.00 கோடி மதிப்பீட்டில் 1,848 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள்.

➢ சென்னை, தாடண்டர் நகர் திட்டப் பகுதியில் ரூ.452.94 கோடி மதிப்பீட்டில் 1,891 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள்.

➢ சென்னை, கே.கே.நகர் திட்டப் பகுதியில் ரூ.227.26 கோடி மதிப்பீட்டில் 216 குடியிருப்புகளுடன்கூடிய பன்னடுக்கு மாடி வணிக/அலுவலகக் கட்டடம்.

➢ சேலம், எடப்பாடி திட்டப் பகுதியில் ரூ.30.36 கோடி மதிப்பீட்டில் 704 மனைகளுக்கான மனை மேம்பாட்டுத் திட்டம்.

1.4 துணைக்கோள் நகரம்

பெரு நகரங்களில் மக்கள்தொகை பெருக்கத்தால் ஏற்படும் நெருக்கடி மற்றும் கட்டுப்பாடற்ற நகர வளர்ச்சி ஆகியவற்றைத் தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கீழ்க்கண்ட

இடங்களில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய துணைக்கோள் நகரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

அ) திருமழிசை

சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள திருமழிசையில் 311.05 ஏக்கர் நிலப்பரப்பில் துணைக்கோள் நகரத் திட்டம் பகுதி வாரியாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, 122.99 ஏக்கர் நிலப்பரப்பில் மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்றுள்ளன. மேம்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் மனைகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏப்ரல் 2020 முதல் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டப் பகுதியில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பேருந்து முனையம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆ) தோப்பூர்-உச்சப்பட்டி

ஒருங்கிணைந்த இத்துணைக்கோள் நகரம் மதுரை மாநகரத்தின் விரிவாக்கப் பகுதி மற்றும் மதுரையில் கட்டப்படவுள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ளது. தோப்பூர்-உச்சப்பட்டியில் 573.83 ஏக்கர் நிலப்பரப்பில் 9,557 பல்வகை மனைகள் ரூ.289.03 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 490.51 ஏக்கர் நிலப்பரப்பில் 6,580 மனைகளுக்கான மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்றுள்ளன. இத்துணைக்கோள் நகரத்தின் மத்தியில் 25 ஏக்கர் பரப்பளவில் மத்தியப் பூங்கா, கூட்ட அரங்கம் மற்றும் வணிக வளாகம் போன்ற வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த தன்னிறைவு பெற்ற நகரியமாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ) முள்ளூர்-புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் கடந்த 14-10-2017 அன்று நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதுக்கோட்டை, முள்ளூர் கிராமத்தில் புதிய துணைக்கோள் நகரம் அமைக்க ஏதுவாக, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியின் அருகிலுள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலப்பரப்பு

2020 மார்ச் 24]

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நில உரிமை பெறப்பட்டது. இத்திட்டத்தில் ரூ.56.31 கோடி மதிப்பீட்டில் 1,584 மனைகளுக்கான மேம்பாட்டுப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

1.5 மறுமேம்பாடு

அ) தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுகட்டுமானம்

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மற்றும் வாரியத்திற்குச் சொந்தமான பழைய கட்டடங்களை இடித்துவிட்டு, மறுமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட தளப்பரப்புக் குறியீட்டினைப் பயன்படுத்துவதன் வாயிலாக கூடுதல் அலகுகளுடனான மறுகட்டுமானம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கானத் தொகை தொடக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிதியிலிருந்து செலவிடப்படும்.

சென்னையில் அமைந்துள்ள திருமங்கலம், தாடண்டர் நகர் மற்றும் கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

i) சென்னை

சென்னை, அண்ணாநகர் மற்றும் செனாய் நகரில் உள்ள 4 திட்டங்களில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுமேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசாணை (நிலை) எண் 285, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 7-12-2010-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட 4 திட்டங்களில் இருந்த அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, அண்ணாநகர் மேற்கு, திருமங்கலம் பகுதியில் 606 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், சுயநிதித் திட்டத்தின்கீழ், அண்ணாநகர் மேற்கில் 88 உயர் வருவாய் அடுக்குமாடிக் குடியிருப்புகள், செனாய் நகரில் இரண்டு இடங்களில் 348 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் 17 இடங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு அலகுகளை மறுகட்டுமானம் செய்ய

[2020 மார்ச் 24

அரசாணை (நிலை) எண் 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 29-1-2013-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டது. மொத்தம் உள்ள 17 இடங்களில், மந்தவெளிப்பாக்கம், கீழ்ப்பாக்கம் தோட்டக் காலனி, தாடண்டர் நகர் பகுதி-1 மற்றும் பகுதி-2, என். ஜி.ஓ. காலனி, ஆர்.கே.நகர், எம்.கே.பி.நகர், அசோகா காலனி மற்றும் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் ஆகிய 9 இடங்களில் உள்ள அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் முடிவுற்றன. இடமாறுதல் செய்வதன் காரணமாக அரசு ஊழியர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்கும்பொருட்டு மறுகட்டுமானத் திட்டம் பகுதி வாரியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவற்றில், சுயநிதித் திட்டத்தின்கீழ், மந்தவெளிப்பாக்கத்தில் 12 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் முடிவுற்றன. மேலும், சுயநிதித் திட்டத்தின்கீழ், கீழ்பாக்கம் தோட்டக் காலனியில் 60 உயர் வருவாய்க் குடியிருப்புகள், என். ஜி.ஓ. காலனியில் 16 உயர் வருவாய்க் குடியிருப்புகள், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில் 205 குடியிருப்புகள் மற்றும் தாடண்டர் நகரில் 1,891 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில் சுயநிதித் திட்டத்தின்கீழ் 90 குடியிருப்புகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

ii) சென்னையைத் தவிர பிற இடங்கள்

கோயம்புத்தூரில் 6 இடங்களில் உள்ள அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, மறுகட்டுமானம் செய்ய அரசாணை (நிலை) எண் 279, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 1-12-2010-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட 6 இடங்களில் இருந்த அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் அனைத்தும் இடிக்கப்பட்டுவிட்டன. இவற்றில், கோயம்புத்தூர் கவுண்டம்பாளையத்தில் 1,848 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள இடங்களில் திட்டம் செயல்படுத்தப்படும்.

2020 மார்ச் 24]

திண்டுக்கல், மதுரை, ஈரோடு, ஓசூர், திருச்சி, புதுக்கோட்டையில் இராஜகோபாலபுரம் மற்றும் அறந்தாங்கி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் செய்ய அரசாணை (நிலை) எண் 33, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22-2-2017-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட 7 இடங்களில் இருந்த குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. திண்டுக்கல், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மற்றும் ஓசூர், புதுக்கோட்டையில் அமைந்துள்ள இராஜகோபாலபுரத்தில் சுயநிதித் திட்டக் குடியிருப்புகளைக் கட்டுவதற்காக வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

தேனியில் 120 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 10, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-1-2020-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. விருதுநகரில் அமைந்துள்ள 756 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடிக்க ஏதுவாக அரசாணை (நிலை) எண் 12, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-1-2020-ன்மூலம் அரசாணை வெளியிடப்பட்டு இடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரியலூரில் அமைந்துள்ள 72 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் இடிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. அரசாணை (நிலை) எண் 11, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-1-2020-ன்மூலம் 72 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள 60 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 9, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-1-2020-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள 504 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள், சிவகங்கை மாவட்டத்தில் 376 குடியிருப்புகள், தூத்துக்குடி மாவட்டத்தில் 114 குடியிருப்புகள் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் 132 குடியிருப்புகள் ஆகியவற்றை இடிப்பதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் உரிய திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆ) வாரியக் கட்டடங்களின் மறுகட்டுமானம்

நந்தனம் புதிய கோபுரக் கட்டடத்தின் 62 வாரிய வாடகைக் குடியிருப்புகளை இடிக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டப் பகுதியில் சுயநிதித் திட்டத்தின்கீழ், ரூ.69.72 கோடி மதிப்பீட்டில் 102 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கே.கே. நகரில் இருந்த வணிக வளாகத்தினை இடிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, சுயநிதித் திட்டத்தின்கீழ் 216 குடியிருப்பு அலகுகள் மற்றும் வணிக/அலுவலக வளாகம் ரூ.227.26 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெசன்ட் நகரில் இருந்த வணிக வளாகத்தினை இடிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, சுயநிதித் திட்டத்தின்கீழ் ரூ.37.72 கோடி மதிப்பீட்டில் 32 குடியிருப்புகளுடன்கூடிய வணிக வளாகம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

சாஸ்திரி நகரில் இருந்த வணிக வளாகத்தினை இடிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, ரூ.14.71 கோடி மதிப்பீட்டில் வணிக/அலுவலக வளாகம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்ததன் அடிப்படையில், சென்னையில் அண்ணாநகர், கே.கே. நகர், நந்தனம் மற்றும் ஈரோடு சம்பத் நகர் ஆகிய இடங்களில் உள்ள பயன்படுத்த தகுதியற்ற வாரியக் கட்டடங்களை இடித்துவிட்டு, உயர்த்தப்பட்ட தரைப்பரப்புக் குறியீட்டினைப் பயன்படுத்தி புதிய திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

இ) குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளின் மறுகட்டுமானம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஈரோட்டில் அமைந்துள்ள பெரியார் நகர், பெரும்பள்ளம் ஓடை மற்றும் கருங்கல்பாளையம் ஆகிய 3 இடங்களில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூ.106.33 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1,072 குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் அனைத்து இடங்களிலும் முடிவுற்றுள்ளன.

1.6 சொந்த வீடு கட்டும் திட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கென தனியே "சொந்த வீடு கட்டும் திட்டம்" தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ், சென்னை பாடிகுப்பத்தில் 236 குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் மற்றும் வில்லிவாக்கத்தில் 324 குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் தமிழ்நாடு அரசு பி, சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்காக கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1.7 தொடங்கப்படவுள்ள புதிய திட்டங்கள்

அ) சென்னை எர்ணாவூரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள்

சென்னை, எர்ணாவூரில் 1992 ஆம் ஆண்டு மூடப்பட்ட செல்லுலார் கான்கிரிட் ஆலை இருந்த இடத்தில் 27.31 ஏக்கர் வாரிய நிலப்பரப்பில் 6,877 எண்ணிக்கையிலான குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைக் கட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் ரூ.1,168.15 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

ஆ) சென்னை அரும்பாக்கத்தில் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, சென்னை கோயம்பேடு அருகே அமைந்துள்ள அரும்பாக்கத்தில் 7.14 ஏக்கர் வாரிய நிலத்தில் 304 குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் உள்ளடங்கிய பன்னடுக்கு மாடிக் கட்டடத்தினை ரூ.697.00 கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

இ) சென்னை பீட்டர்ஸ் காலனியில் வணிக மற்றும் அலுவலக வளாகம்

கடந்த 2019-2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையின்படி, பீட்டர்ஸ் காலனியில் உள்ள 346 தமிழ்நாடு அரசு

ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, உயர்த்தப்பட்ட தரைப்பரப்புக் குறியீட்டினைப் பயன்படுத்தி மறுகட்டுமானத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதி சென்னையின் பிரதான இடத்தில் அமைந்துள்ளதால், ரூ.487.00 கோடி தோராய மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிகளைக் கொண்ட அலுவலக/வணிக வளாகத்தைக் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியின் நிலப்பரப்பு 3.84 ஏக்கர் ஆகும்.

ஈ) சென்னை பட்டினப்பாக்கத்தில் மெரினா வணிக மையம்

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பட்டினப்பாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 25.16 ஏக்கர் நிலப்பரப்பில் மாபெரும் வர்த்தக மையம், உணவு விடுதிகள், கடைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட வணிக வளாகம் உள்ளடங்கிய மெரினா வணிக நகரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த வரைவு அறிக்கை (Draft Feasibility Report) தயாரிக்க திட்ட மேலாண்மை ஆலோசகர் (Project Management Consultant) நியமிக்கப்பட்டுள்ளார்.

உ) தமிழ்நாடு வணிக மையம்-நந்தனம், சென்னை

தமிழக அரசு, சென்னையின் முக்கிய குறியீடாக விளங்கும் வகையில் நந்தனம் பகுதியில் நவீன அலுவலக வளாகங்களுடன்கூடிய நிதி நகரம்/பன்னாட்டு நிதி மையம் உருவாக்க உத்தேசித்துள்ளது. நிதி மற்றும் நிதித் துறை சார்ந்த நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றினைக் கவரும் நோக்கத்திலும், மேலும், வணிக மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றின் வியாபார செயல்பாடுகளுக்கு அடித்தளமாக அமையும் வகையிலும், தனித்துவமான ஓர் இலக்கினை கருத்திற்கொண்டு தமிழ்நாடு வணிக மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒரு முக்கிய பங்குதாரராக விளங்குகிறது. நந்தனம் பகுதியில் அண்ணாசாலையின் இருமருங்கிலும் பயன்படுத்ததக்க வகையில் அமைந்துள்ள 12.31 ஏக்கர் நிலப்பரப்பானது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு நகர நிதி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் நிதி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம்

2020 மார்ச் 24]

ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக 4.96 ஏக்கர் நிலப்பரப்பினை (தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நிலம் 3.15 ஏக்கர் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய நிலம் 1.81 ஏக்கர்) பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தும் நோக்கிலும், நீண்ட கால வருமானம் ஈட்டும் உடைமையை வீட்டு வசதி வாரியத்திற்கு உருவாக்கும் வகையிலும் மற்றும் வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றவும் மற்றும் அதனை பராமரிக்கவும் தமிழ்நாடு வணிக மையம், 4.88 தரைப்பரப்புக் குறியீட்டினைப் பயன்படுத்தி 11 இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பில் ரூ.588.00 கோடி தோராய மதிப்பீட்டில் சிறப்புச் செயலாக்க சாதனம் (SPV) மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.8 அரசுக் கட்டடங்களின் பராமரிப்புப் பணிகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகளுக்காக அரசிடமிருந்து ரூ.15.58 கோடி நிதியுதவி பெறப்பட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.9 வட்டித் தள்ளுபடித் திட்டம்

வட்டிச் சுமையால் விற்பனைப் பத்திரங்கள் பெற இயலாத ஒதுக்கீடுதாரர்களின் நிலையினைக் கருத்தில்கொண்டு, வட்டித் தள்ளுபடித் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்தி வருகிறது. கடந்த 2011-2012 முதல் 2019-2020 (பிப்ரவரி 2020) வரை மொத்தம் 20,972 ஒதுக்கீடுதாரர்கள் வட்டித் தள்ளுபடித் திட்டத்தின்கீழ், விற்பனைப் பத்திரம் பெற்று பயனடைந்துள்ளனர். ஒதுக்கீடுதாரர்கள் பயனடையும் வகையில், வட்டித் தள்ளுபடித் திட்டம் மார்ச், 2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

1.10 வருவாய் ஈட்டுதல்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 2019-2020 ஆம் நிதி ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) அடுக்குமாடிக் குடியிருப்புகள்/ வீடுகள்/மனைகள்/வணிக அலகுகள் ஆகியவற்றின் விற்பனை மற்றும் மாதாந்திர தவணை, வாடகை வசூல்மூலம் ரூ.309.55 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

[2020 மார்ச் 24

வ. எண்	பொருள்	வருவாய் (ரூ.கோடியில்)
1.	*வாடகைமூலம் ஈட்டிய வருவாய்*	*22.93*
2.	*வீட்டு வசதி அலகுகள் மற்றும் வணிக அலகுகளின் விற்பனைமூலம் ஈட்டிய வருவாய்*	*286.62*
	மொத்தம்	**309.55**

1.11 நிகழ்நிலை (Online) வசதிகள்

வாரிய வாடகைக் குடியிருப்புகளின் வாடகைத் தொகையினை நிகழ்நிலையில் செலுத்தும் வசதி கடந்த ஏப்ரல் 2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற நிகழ்நிலைமூலம் பதிவு செய்வதற்கான வசதி விரைவில் தொடங்கப்படவுள்ளது. தவணை முறைத் திட்டம்/ சுயநிதித் திட்டம் போன்றவற்றின் தவணைத் தொகையினைச் செலுத்துவதற்கான நிகழ்நிலை வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது.

பயனாளிகளிடமிருந்து நேரடியாகப் பணம் பெறும் பரிவர்த்தனை முறை வாரியத்தால் நிறுத்தப்பட்டு, எளிய முறையில் சிக்கலின்றி செலுத்திட ஏதுவாக இந்திய தேசிய தானியங்கி தீர்வகம் [Indian National Automated Clearing House (INACH)] மற்றும் இணையதளம்மூலம் மெய்நிகர் கணக்கு 'Virtual Account' வழியாக தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் [National Electronic Funds Transfer (NEFT)] மற்றும் உடனடி மொத்தத் தொகை வழங்கல் [Real Time Gross Settlement (RTGS)] வாயிலாகப் பணம் பரிவர்த்தனை செய்திடும் நிகழ்நிலை வசதி வாரியத்தின் அனைத்துக் கோட்ட அலுவலங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிமூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்களுடைய நிலுவைத் தொகை நிகழ்நிலைமூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 2019-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் அரசுத் திட்டப் பணிகள் கண்காணிப்பு செயலியினை (Government Projects Monitoring System–GPMS) நிறுவுவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கணினி மென்பொருள் வாரியத்தில் நடைப்பெற்று வரும் திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

21 ஆம் நூற்றாண்டு துரித நகரமயமாதலைக் கண்ணுற்றுக் கொண்டிருக்கிறது. நகர மையங்களில் உண்டாகும் மக்கள்தொகை நெருக்கம், கட்டமைப்பு வசதிகள் மற்றும் இயற்கை வளங்களின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்நிகழ்வினால் நகர்ப்புற ஏழை மக்கள் அதிகபட்சமாக பாதிப்புக்குள்ளாகின்றனர். நகரங்களில் முறைசாரா தொழில் துறைகளின் உருவாக்கம் காரணமாக குடிசைப் பகுதிகள் பெருகி வருகின்றன. 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 48.45 விழுக்காடு நகர மக்கள்தொகையுடன் நாட்டில் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். 13.91 இலட்சம் குடும்பங்கள் தமிழ்நாட்டின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றார்கள். இக்குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டு வசதி, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு அத்தியாவசியமாகின்றது.

“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” என்ற உன்னத குறிக்கோளுடன் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு அவர்களது வாழ்விடங்களை மேம்படுத்த, அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன்கூடிய வீட்டு வசதி வழங்குவதுடன், தன்னிறைவு பெறுவதற்கு ஏதுவாக வாழ்வாதாரப் பணிகள் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறுவப்பட்டது.


2.1 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் மாற்று) சட்டம், 1971-ன் ஆளுமையில் வாரியத் தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் இணை மேலாண்மை இயக்குநரின்கீழ் செயல்பட்டு வருகிறது. வாரியத்தின் நிருவாக அலுவலராக வாரிய செயலரும், நிதி தொடர்பான அலுவலராக நிதி ஆலோசகரும் செயலாற்றுகிறார்கள்.

[2020 மார்ச் 24

தொழில்நுட்பப் பிரிவு இரண்டு தலைமைப் பொறியாளர்கள் மற்றும் ஐந்து மேற்பார்வைப் பொறியாளர்களின்கீழ் இயங்குகிறது. மாநிலம் முழுமையும் 5 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும், சரகங்கள் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சென்னையில் 9 கோட்டங்களும், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட நகரங்களில் தலா ஒரு கோட்டமும் இயங்கி வருகின்றன. கட்டமைப்பு வடிவங்களுக்கான பணிகள் மற்றும் திட்டப் பகுதிகளில் பணிகள் நடைபெறும்பொழுது தரக் கட்டுப்பாட்டினை உறுதி செய்ய தனியாக ஒரு கட்டமைப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு பிரிவு செயல்படுகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற ஏழை எளியவர்களுக்கான பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலைக்கத்தக்க வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்த 2 மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் 4 நிருவாகப் பொறியாளர்களைக் கொண்ட ஒரு திட்ட மேலாண்மைப் பிரிவு இயங்கி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


நிறுவன அமைப்புப் படம்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
தலைவர்
மேலாண்மை இயக்குநர்
இணை மேலாண்மை இயக்குநர்
செயலர்
தலைமைப் பொறியாளர் I
தலைமைப் பொறியாளர் II
நிதி ஆலோசகர்
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் I
மேற்பார்வைப் பொறியாளர் மதுரை சரகம்
மேற்பார்வைப் பொறியாளர் IMPLEMENTING CIRCLE (PMU)
மேற்பார்வைப் பொறியாளர் திட்ட செயலாக்க சரகம் (PMU)
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் II
மேற்பார்வைப் பொறியாளர் சென்னை சரகம் III
மேற்பார்வைப் பொறியாளர் கோயம்புத்தூர் சரகம்
நிர்வாகப் பொறியாளர் மெரினா, காஞ்சிபுரம், வேலூர்
நிர்வாகப் பொறியாளர் மதுரை, திருச்சி, திருநெல்வேலி
நிர்வாகப் பொறியாளர் (PMU) திட்ட செயலாக்க கோட்டம் I, II
நிர்வாகப் பொறியாளர் (PMU) PROCUREMENT, PROJECT
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் II, V, VI CSD I, கடலூர்
நிர்வாகப் பொறியாளர் கோட்டம் I, III, IV, மறுகட்டமைப்பு
நிர்வாகப் பொறியாளர் சேலம், கோயம்புத்தூர், திருப்பூர்
முதன்மை திட்ட அமைப்பாளர்
நிர்வாகப் பொறியாளர் திட்டம், HFA, SQC
தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் (3 Nos.)
உதவி செயலர் (நிர்வாகம்), உதவி செயலர் (குடியிருப்புகள்), உதவி செயலர் (மனைகள்)
கணக்கு அலுவலர்

[2020 மார்ச் 24

2.2 குடிசைப் பகுதி மேம்பாட்டிற்கான கொள்கைகள்

தொடக்கக் காலத்தில், சென்னை உள்ளிட்ட மாநகரப் பகுதிகளில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள ஏழை மக்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய ஓலைக்கூரை வேய்ந்த குடிசைகளில் எவ்வித அடிப்படை வசதிகளின்றி, சுகாதாரக் குறைபாடுகளுடன் மிகவும் நெருக்கமான சூழலில் வசித்து வந்தனர். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மக்கள் வசிப்பிடத்திலேயே தண்ணீர், கழிவுநீரகற்றும் கட்டமைப்பு, மின் வசதி போன்ற அடிப்படை வசதிகளுடன்கூடிய நிலையான கான்கிரீட் அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதில் கவனம் செலுத்தியது.

➢ பின்னர், சாலைகள், தெரு மின் விளக்குகள், மழை நீர் வடிகால், நடைபாதைகள், பொதுக் குடிநீர்க் குழாய் போன்ற அடிப்படை வசதிகள் மற்றும் மனை உரிமத்துடன்கூடிய கள மேம்பாட்டுத் திட்டங்கள் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் பகுதி-I&II மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இக்குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு அவரவர் மனைக்கான உரிமம் வழங்கப்பட்டதுடன், வீடுகள் கட்டுவதற்கு ரொக்கக் கடன் திட்டம் மற்றும் நேரு வேலைவாய்ப்புத் திட்டம், வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டங்கள் (VAMBAY)-ன் நிதியுதவி அளிக்கப்பட்டது. நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்கள் தங்களுடைய மனைக்கான உரிமம் பெற்றதன் காரணமாக இத்திட்டம் அவர்களது பேராதரவினைப் பெற்றது.

➢ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் முன்னர் 230 சதுர அடி கட்டடப் பரப்பில் கழிவறை வசதிகளுடன் ஒரு பல்நோக்கு அறை மட்டுமே கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. வாரியம் துவங்கப்பட்ட காலம் முதல் 230 சதுர அடி வரை கட்டட உட்பரப்பு கொண்ட 36,148 குடியிருப்புகள் வாரியத்தால் கட்டப்பட்டன. மறைந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகர குடிசைப் பகுதிவாழ் ஏழைக் குடும்பங்களின் விருப்பத்திற்கேற்ற வீட்டு வசதித் தேவையினை உணர்ந்து, 230 சதுர அடி கட்டடப் பரப்பில் ஒரு

2020 மார்ச் 24]

பல்நோக்கு அறை மட்டுமே கொண்ட குடியிருப்பிற்குப் பதிலாக, 400 சதுர அடி கட்டடப் பரப்பில் ஒரு பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை, கழிவறை, குளியலறை, பயன்பாட்டுப் பகுதிகள், மின்தூக்கி வசதிகளுடன்கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டார்கள். அதற்கிணங்க தற்போது மேலே கூறப்பட்டுள்ளவாறு, குடியிருப்புகள் 400 சதுர அடி கட்டடப் பரப்பில் தண்ணீர், கழிவு நீர்க் கட்டமைப்பு மற்றும் மின் வசதியுடன் கட்டப்படுகின்றன.

➢ நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு அவர்கள் வாழ்விடங்களுக்கு அருகாமையிலேயே அவர்களது வாழ்வாதாரங்களைப் பாதிக்காத வகையிலும் மற்றும் அரசு வெற்று நிலங்களை நன்முறையில் பயன்படுத்திடும் வகையிலும் அதிகபட்ச தரைப்பரப்பளவு குறியீட்டினைப் பயன்படுத்தி அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

➢ பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளான ஆற்றங்கரைகளில் ஆரோக்கியமற்ற மற்றும் வசதிகளற்ற நிலைகளில் ஆண்டுதோறும் ஏற்படும் வெள்ளம், தீ விபத்து போன்ற இன்னல்களினால் பாதிப்புக்குள்ளாகி குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் வழங்கப்படுகின்றன.

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் அமைக்க வகை செய்யும் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ஐ வெளியிட்டார்கள். இக்குறிக்கோளினை அடைய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழே கூறப்பட்டுள்ள அணுகுமுறைகள் மற்றும் உத்திகளைக் கொண்டு பல்வேறு வீட்டு வசதி மற்றும் இதர திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது:

i) உட்கட்டமைப்பு வசதிகளுடன் களப் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்

ஆட்சேபகரத் தன்மையற்ற நிலங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் அதிக தரைப் பரப்பளவு குறியீட்டுடன் (Maximum FSI) அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, அக்குடியிருப்புகள் அப்பகுதியில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

[2020 மார்ச் 24

ii) ஒருங்கிணைந்த நகரங்கள்

ஆட்சேபகரமான பகுதிகளான ஆற்றங்கரை, சாலையோரங்கள் மற்றும் இதர பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அருகாமையில் உள்ள வெற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், அடிப்படை மற்றும் சமூக வசதிகளுடன் ஒருங்கிணைந்த நகரங்களாக அமைக்கப்படுகின்றன. இத்திட்டப் பகுதிகளில் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான தடையற்ற மின் வசதியுடன்கூடிய மின் உயர்த்தி, குடிநீர் வசதி, கழிவுநீரகற்று வசதி, மின்சாரம் மற்றும் சமூக வசதிகளான பள்ளிகள், கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், பூங்காக்கள், மதிய உணவுக் கூடங்கள், ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து நிலையம், தொழிற்பயிற்சிக் கூடம், காவல் நிலையம், சிறு கடைகள், பால் விற்பனை நிலையம், சமுதாயக் கூடம் போன்ற வசதிகள் அமைக்கப்படுகின்றன. மாற்றிடத்தில் புதிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படும் குடும்பங்கள் புதிய இடத்தில் உடனடியாக வாழ்வாதாரங்களை ஈட்டும் சிரமங்களைக் குறைக்கும் வகையில், ஒருமுறை இடமாற்றுத் தொகையாக ரூ.5,000/- (Shifting Allowance) மற்றும் வாழ்வாதாரத் தொகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.2,500/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.30,000/- ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படுகிறது. புதிய திட்டப் பகுதிகளில் வாழ்வாதாரப் பணிகள் மற்றும் அப்பகுதிக்கு ஏற்றவாறு தங்களை எளிதாக மாற்றிக்கொள்ள திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

iii) பயனாளிகள் தாமாகவே வீடுகள் கட்டுதல்

நகரப் பகுதிவாழ் ஏழைக் குடும்பங்கள் கூரை வேயப்பட்ட அல்லது ஓட்டுக் கூரையுடன்கூடிய வீடுகளில் கழிப்பிட வசதியின்றி சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களால் தங்களுக்கான வீடுகளைத் தாமாகக் கட்டிக் கொள்ள இயலவில்லை. கான்கிரீட் கூரையுடன் நிலைத்த தன்மை கொண்ட வீடுகளை அவர்கள் தாமாகவே கட்டிக் கொள்வதற்கு ஏதுவாக இக்குடும்பங்களுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

iv) சிதலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்டுதல்

காலக் கடப்பு மற்றும் மாறுபட்ட தட்பவெப்ப நிலைகளின் காரணமாக முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் சில குடியிருப்புகள் சிதலமடைந்த நிலைகளில்

2020 மார்ச் 24]

உள்ளன. அக்குடியிருப்புகள் அப்பகுதிகளில் வாழும் குடும்பங்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன. இக்குடியிருப்புகளின் பாதிப்புத் தன்மை தொழில்நுட்பக் குழுவினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சிதலமடைந்த உறுதியற்ற பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு மறுகட்டுமானப் பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இக்குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் முடிவுற்றவுடன், சிதலமடைந்த குடியிருப்புகளில் முன்னர் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பெரும்பான்மையான குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் கூடுதலாகக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, திட்டப் பகுதிகளில் வாழும் குடியிருப்புதாரர்களின் குடும்பங்களுக்கும், ஆக்கிரமிப்பு குடும்பங்களுக்கும் மற்றும் அருகாமையில் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

v) அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் ஆயுட்காலம் மற்றும் கட்டமைப்பு உறுதித் தன்மையினை மேம்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சுவர்களுக்கு வெள்ளையடித்தல், வண்ணம் பூசுதல் போன்ற பராமரிப்புப் பணிகள், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

vi) வாங்கும் திறனுக்கேற்ற வீட்டு வசதிக்கான நவீன தொழில்நுட்பங்கள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் பாதுகாப்பான, நிலைத்த மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வீடுகளை விரைந்து கட்டுவதற்கு கட்டுருவாக்க கான்கிரீட் (Pre fabricated concrete), அலுமினியம் சாரத்தினைக் கொண்ட ஒற்றைக் கட்டுமானத் தொழில்நுட்பம் (Monolithic Concrete Structure) போன்ற நவீனக் கட்டுமானத் தொழில்நுட்பங்களையும், கதவுகளுக்கு இலகு ரக சட்டம், UPVC சன்னல்கள் மற்றும் கதவு சட்டங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்துகின்றது.

vii) நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மேம்பாடு

நகர குடிசைப் பகுதிகளை வாழ்வதற்கு ஏற்றவாறு மேம்படுத்தும் வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட அலகில் சாலைகள், தெரு மின் விளக்குகள், பொது குடிநீர்க் குழாய், மழை நீர் வடிகால் போன்ற குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2020 மார்ச் 24

viii) இதர திட்டங்கள்

நகர்ப்புற குடிசைப் பகுதிவாழ் குடும்பங்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு அடைந்த பின்னரே நகர குடிசைப் பகுதி மேம்பாடு முழுமையடையும். நகர குடிசைப் பகுதிவாழ் ஏழைகள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் பொருளாதார நிலையில் தன்னிறைவு மற்றும் சுயவாழ்வாதாரம் பெறுதல் அத்தியாவசியமானதாகும். வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தன்னார்வு நிறுவனங்களுடன் இணைந்து திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பினை உறுதிசெய்ய சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்படுகின்றன.

மாநிலத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டப் பணிகளைச் செயல்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் புதிய முயற்சிகளைக் கொண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடிசைப் பகுதி வாழ்வாதாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

2.3 1970 முதல் மார்ச் 2011 வரையிலான சாதனைகள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1970 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 1.10 இலட்சம் குடியிருப்புகள்/வீடுகள் கட்டப்பட்டன. பல்வேறு மூலதனப் பணிகளுக்காக ரூ.2,148.24 கோடி செலவிடப்பட்டது. மேலும், 504 குடிசைப் பகுதிகளில் வாழும் 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2.4 கடந்த 9 ஆண்டுகளின் சாதனைகள் (2011 முதல் பிப்ரவரி 2020 வரை)

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை பல்வேறு திட்டங்களின்கீழ், 2,42,449 அடுக்குமாடிக் குடியிருப்புகள்/தனி வீடுகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைத்துள்ளது. இப்பணிகளுக்காக ரூ.9,279.70 கோடி செலவிட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 87,121 குடியிருப்புகளுக்கான பணிகள் முடிவுற்றுள்ளன.

2020 மார்ச் 24]

2011 முதல் பிப்ரவரி 2020 வரையிலான சாதனைகள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள்					மொத்தம்
		2011-16	2016-17	2017-18	2018-19	2019-20	
1.	ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்	39,986	1,056	--	--	--	41,042
2.	அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம்	6,292	--	--	--	--	6,292
3.	13-வது நிதிக் குழு மாநில சிறப்பு மானியம்	4,227	--	--	--	--	4,227
4.	சிதலமடைந்த குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல்	3,518	1,012	745	--	--	5,275
5.	மாநில நிதியுதவியின்கீழ் புதிய குடியிருப்புகள் கட்டுதல்	808	660	--	--	--	1,468
6.	சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம்	718	250	50	--	--	1,018
7.	இராஜீவ் வீட்டு வசதித் திட்டம்	3,474	885	--	--	--	4,359
8.	அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம்—அடுக்குமாடிக் குடியிருப்புகள்	--	32	2,108	8,817	35,350	46,307
9.	அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டம்—பயனாளிகளின் தலைமையிலான கட்டுமானம்—தனி வீடுகள்	--	11,306	24,934	44,450	51,771	1,32,461

வ. எண்	திட்டத்தின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள்					மொத்தம்
		2011-16	2016-17	2017-18	2018-19	2019-20	
மொத்தம்		59,023	15,201	27,837	53,267	87,121	2,42,449

2.5 1970 முதல் பிப்ரவரி 2020 வரையிலான சாதனைகள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்ட நாள் முதல் பிப்ரவரி 2020 வரை 3.52 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 504 குடிசைப் பகுதிகளில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்/தமிழ்நாடு நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களின்கீழ் 1.31 இலட்சம் குடும்பங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மேற்கூறப்பட்ட மூலதனப் பணிகளைச் செயல்படுத்த பிப்ரவரி 2020 வரை ரூ.11,427.94 கோடி செலவிட்டுள்ளது.

2.6 தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள்

அ) மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள் (2011 முதல் 2016 வரை)

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட 36 திட்டப் பகுதிகளில் ரூ.1,261.81 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 26,633 குடியிருப்புகளைத் திறந்து வைத்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	திறந்து வைக்கப் பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ.கோடியில்)
1.	*10-11-2011*	சென்னை—காசிமேடு குப்பம்	*464*	*17.73*
2.	*9-10-2012*	சூலூர்—அய்யன் திருவள்ளுவர் நகர் பகுதி-1	*108*	*2.57*

வ. எண்	திறந்து வைக்கப் பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ.கோடியில்)
3.	6-5-2013	அகில இந்திய வானொலி நிலைய நிலம், சென்னை.	3,616	139.51
4.	23-12-2013	சென்னை-ஒக்கியம் துரைப்பாக்கம், எழில் நகர்	6,000	228.60
5.		சென்னை—ஒக்கியம் துரைப்பாக்கம்	2,048	106.11
6.		சென்னை—நொச்சி நகர் (மெரினா)	628	45.39
7.		கோவை—அம்மன்குளம்	792	23.44
8.		புதுக்கோட்டை—மச்சுவாடி	96	2.60
9.		புதுக்கோட்டை-சந்தைபேட்டை	84	2.54
10.		திருநெல்வேலி—வ.உ.சி. நகர்	207	5.54
11.	23-12-2013	தூத்துக்குடி—துரைசிங் நகர்	78	2.15
12.		நாமக்கல்—எம்.ஜி.ஆர். நகர்	342	9.46
13.		ஓசூர்-எழில் நகர் பகுதி-2	192	5.10
14.		சேலம்—எருமபாளையம்	400	10.57
15.	24-2-2014	பெரும்பாக்கம்- எழில் நகர்	3,936	175.36
16.		திருச்சி—திருவரங்கம்	432	25.82
17.		ஒரத்தநாடு—அண்ணா நகர்	240	11.61
18.	27-6-2014	பெரும்பாக்கம் பகுதி-1	1,502	89.92

வ. எண்	திறந்து வைக்கப் பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ.கோடியில்)
19.		வந்தவாசி	*144*	*5.71*
20.		இராமநாதபுரம்—பட்டினம்காத்தான்	*144*	*12.18*
21.		புதுக்கோட்டை—இலுப்பூர்	*112*	*6.48*
22.	*20-7-2015*	திருச்சி—ஜெயில் பேட்டை	*288*	*15.89*
23.		தஞ்சாவூர்—பிள்ளையார்பட்டி பகுதி-2	*304*	*18.35*
24.		சிவகாசி—ஆனையூர்	*176*	*10.91*
25.		பல்லடம்—அறிவொளி நகர்	*256*	*14.15*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வ. எண்	திறந்து வைக்கப் பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ.கோடியில்)
26.	*1-3-2016*	*சென்னை-பார்த்தசாரதி நகர்*	*128*	*10.91*
27.		*சென்னை–கோட்டூர்புரம்*	*136*	*10.42*
28.		*சென்னை–சத்தியவாணி முத்து நகர்*	*392*	*33.90*
29.		*சென்னை–நேரு பூங்கா*	*288*	*23.29*
30.		*சென்னை–பிள்ளையார் கோவில் தெரு*	*32*	*2.23*
31.		*சென்னை–லாக் நகர்*	*304*	*22.93*
32.		*சென்னை–ஆண்டிமான்ய தோட்டம்*	*48*	*4.18*
33.		*சென்னை–நாவலூர்*	*2,048*	*142.12*
34.		*கோவை–மலை நகர்*	*224*	*10.97*
35.		*கோவை–சூலூர் பகுதி-2*	*240*	*6.97*
36.		*ஈரோடு–சூரியம்பாளையம்*	*204*	*6.20*
		மொத்தம்	**26,633**	**1,261.81**

ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திட்டப் பகுதிகள் (2017 முதல் பிப்ரவரி 2020 வரை)

2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட 51 திட்டப் பகுதிகளில் ரூ.1,658.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 22,907 குடியிருப்புகளைத் திறந்து வைத்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

[2020 மார்ச் 24

வ. எண்	திறந்து வைக்கப்பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ. கோடியில்)
1.	*4-3-2017*	சென்னை—அயோத்தியா குப்பம்	*712*	*56.64*
2.		சென்னை—அகில இந்திய வானொலி நிலைய நிலம்—திருவொற்றியூர்	*416*	*27.84*
3.		திருவள்ளூர்—கூடப்பாக்கம்	*1,024*	*71.44*
4.	*7-3-2017*	திருச்சி—நாகமங்கலம்	*144*	*8.76*
5.		நாகப்பட்டினம்—வெங்காய கூடைமுடைவோர் காலனி	*120*	*9.26*
6.	*8-3-2017*	மதுரை—புரட்சித் தலைவர் காலனி	*276*	*20.35*
7.		தூத்துக்குடி—சிலோன் காலனி	*147*	*10.46*
8.	*18-3-2017*	கோயம்புத்தூர்-மதுக்கரை—அண்ணா நகர்	*960*	*40.78*
9.		கோயம்புத்தூர்-கீரநத்தம்—காந்தி நகர்	*1,280*	*62.40*
10.		கோயம்புத்தூர்-மலுமிச்சம்பட்டி	*1,440*	*79.18*
11.		கோயம்புத்தூர்-வெள்ளலூர்	*2,816*	*172.00*
12.		திருப்பூர்—பல்லடம் அறிவொளி நகர்	*288*	*19.75*
13.	*11-5-2017*	கோயம்புத்தூர்-குறிஞ்சி நகர்	*160*	*10.69*
14.		கோயம்புத்தூர்-சுகுணாபுரம்	*64*	*4.33*
15.	*4-7-2017*	சென்னை-நாகூரான் தோட்டம்	*32*	*2.56*
16.		சென்னை-பி.எஸ்.மூர்த்தி நகர்	*140*	*13.37*
17.		சென்னை—நொச்சிக்குப்பம்	*536*	*48.06*

வ. எண்	திறந்து வைக்கப்பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ. கோடியில்)
18.	*4-10-2017*	நாமக்கல்—நாகராஜபுரம்	*240*	*19.54*
19.		நாமக்கல்—நில வங்கித் திட்டம் பகுதி-*4*	*192*	*15.57*
20.	*11-10-2017*	தூத்துக்குடி—இராஜீவ் காந்தி நகர்	*444*	*29.15*
21.		வேலூர்-குளவிமேடு	*192*	*15.90*
22.	*26-10-2017*	நாகமங்கலம்—எம்.ஜி.ஆர். நகர்	*512*	*37.01*
23.	*2-2-2018*	சென்னை-சேனியம்மன் கோவில்	*464*	*38.39*
24.		சென்னை—மூர்த்திங்கர் தெரு	*960*	*112.80*
25.		மதுரை—பூங்கா நகர்	*76*	*5.02*
26.	*4-5-2018*	திருநெல்வேலி—வ.உ.சி. நகர்	*432*	*23.18*
27.		ஈரோடு—முத்தம்பாளையம்-பாரதி நகர்	*256*	*21.27*
28.	*29-7-2018*	சேலம்—வெள்ளைகுட்டை ஏரி	*40*	*3.91*
29.	*16-8-2018*	தஞ்சாவூர்-பிள்ளையார்பட்டி பகுதி-*3*	*256*	*19.48*
30.		இராமநாதபுரம்-பட்டினம்காத்தான்	*256*	*21.12*
31.	*17-12-2018*	கோயம்புத்தூர்-உக்கடம் பகுதி-*1*	*1,392*	*80.54*
32.		கோயம்புத்தூர்-உக்கடம் பகுதி-*2*	*448*	*13.88*
33.		கோயம்புத்தூர்-திரு.வி.க. நகர்	*256*	*28.51*
34.	*22-2-2019*	ஈரோடு-பவானி சாலை	*448*	*35.47*
35.		வேலூர்-டோபிகானா	*224*	*18.67*
36.	*25-2-2019*	சேலம்—ஐய்யம்பெருமாள்பட்டி	*36*	*3.09*

[2020 மார்ச் 24

வ. எண்	திறந்து வைக்கப்பட்ட நாள்	திட்டப் பகுதிகளின் பெயர்	அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்டச் செலவினம் (ரூ. கோடியில்)
37.		சேலம்– கோட்டகவுண்டம்பட்டி	*216*	*18.45*
38.		ஆலம்பாளையம்-சத்யா நகர்	*256*	*22.27*
39.		நாமக்கல் நில வங்கி திட்டம் பகுதி-*III*	*960*	*76.06*
40.		கரூர்–சணப்பிரட்டி	*192*	*16.08*
41.		கோபிச்செட்டிபாளையம்- அளுக்குளி	*288*	*24.94*
42.		திருப்பூர், பாரதி நகர்	*288*	*22.57*
43.		திருப்பூர், ஜெயா நகர்	*256*	*20.23*
44.		கோயம்புத்தூர், கோவைப் புதூர்	*672*	*56.41*
45.	*19-2-2020*	சென்னை, கேசவப்பிள்ளை பூங்கா பகுதி-*I*	*864*	*71.28*
46.		சென்னை, இந்திரா காந்தி குப்பம்	*128*	*10.91*
47.		சென்னை, டோபிகானா பகுதி-*I*	*128*	*10.21*
48.		சென்னை, நல்லதண்ணீர் ஓடைக்குப்பம்	*480*	*58.80*
49.		சென்னை, மணலி புதுநகர் பகுதி-*I*	*288*	*31.68*
50.		தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நில வங்கித் திட்டம் பகுதி-*I*	*92*	*8.00*
51.		தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நில வங்கித் திட்டம் பகுதி-*II*	*120*	*10.25*
		மொத்தம்	**22,907**	**1,658.51**

2020 மார்ச் 24]

மேலும், கோயம்புத்தூரில் 8,150 சதுர அடி கட்டடப் பரப்பில் ரூ.1.72 கோடி செலவில் கட்டப்பட்ட சரகம் மற்றும் கோட்ட அலுவலகக் கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-5-2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

2.7 தொலைநோக்குத் திட்டம் 2023—குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் திட்டம்

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாட்டில் 2023-க்கு முன்னர் குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் அமைக்க வழிவகை செய்யும் தொலைநோக்குத் திட்டம்-2023 அறிவிக்கப்பட்டது. கணக்கெடுப்பு மற்றும் இணையதள வாயிலாக 13.91 இலட்சம் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னேற்ற நிலை பின்வருமாறு:

வகை		மொத்த கேட்பு	முன்னேற்ற நிலை		
			ஒப்புதல் பெறப் பட்டவை	முடிவுற்ற அலகுகளின் எண்ணிக்கை	முன்னேற்றத்தில் உள்ள அலகுகளின் எண்ணிக்கை
I &III	குடிசைப் பகுதிகளில் கள மறுமேம்பாடு (*ISSR*)/ பங்களிப்புடன்கூடிய வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் (*AHP*)	*3,89,141*	*1,49,271*	*46,307*	*27,623*
II	மானியத்துடன் கூடிய கடன் (*CLSS*)	*4,84,105*	--	--	*34,041*
IV	பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம் (*BLC*)	*5,18,363*	*5,75,798*	*1,32,461*	*3,15,734*
மொத்தம்		13,91,609	7,25,069	1,78,768	3,77,398

2.8 செயலாக்கத்தில் உள்ள பெரும் திட்டங்கள்

2020-2021 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பெரும் திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

[2020 மார்ச் 24

அ) தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் திட்டம்

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன்கீழ், அனைத்து நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன்கூடிய குடியிருப்புகள் அமைத்து, மாநிலத்தின் மாநகரங்கள் மற்றும் நகரங்களைக் குடிசைப் பகுதிகளற்றதாக மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், மைய அரசின் மானியம், மாநில அரசின் மானியம் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பினைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

மாநில முகமை நிறுவனமான தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தினை (நகர்ப்புறம்) பின்வரும் வகைகளில் செயல்படுத்தி வருகின்றது:

வகை–I&வகை–III–பங்களிப்புடன் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் (AHP)

நகரங்களில் நெருக்கமான குடிசைப் பகுதிகள் மற்றும் இதர ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்காக அவர்களின் வசிப்பிடத்திலேயே குடியிருப்புகள், மறுகட்டுமானம் (Insitu Re-construction) மற்றும் மாற்றிடங்களில் மறுகுடியமர்விற்காக குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 400 சதுர அடி கட்டடப் பரப்பளவில் சராசரியாக ரூ.10.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அடிப்படை மற்றும் சமூக மேம்பாட்டு வசதிகளுடன் கட்டப்படுகின்றன. இத்திட்டப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன:

வ. எண்	விவரம்	அலகுத் தொகை (ரூ. இலட்சத்தில்)
1	*மைய அரசின் மானியம்*	*1.50*
2	*மாநில அரசின் மானியம்*	*7.00*
3	*பயனாளிகள் பங்களிப்பு*	*1.50*
	மொத்தம்	**10.00**

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 35,350 அடுக்குமாடிக் குடியிருப்புகள் முடிவுற்றுள்ளன.

2020 மார்ச் 24]

வகை—IV- பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டுதல் (BLC)

பயனாளிகள் தாமாக தனி வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், தகுதி வாய்ந்த நகர்ப்புற குடும்பங்கள் தாமாகவே 325 சதுர அடி கட்டட உட்பரப்பிற்குக் குறையாமல் வீடுகள் கட்ட ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. வீட்டுமனை சொந்தமாக பெற்றுள்ள, ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற நகர்ப்புறக் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

2014-2015 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் (PMAY-Urban)கீழ், பயனாளிகள் தாமாகவே வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், 5,75,798 வீடுகள் ரூ.17,453.37 கோடி மதிப்பீட்டில் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 51,771 தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வகை—II-மானியத்துடன்கூடிய கடன் வசதி (CLSS)

இத்திட்டம், பொருளாதாரத்தில் நலிந்த/குறைந்த வருவாய்/ நடுத்தர வருவாய்ப் பிரிவு மக்களின் வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் வீடுகளைக் கட்டவும், வாங்கவும், அடுக்ககங்களை வாங்கவும் (மறுவிற்பனைமூலம் வாங்குதல் உட்பட) வட்டித் தொகையில் ரூ.2.67 இலட்சம் வரை வட்டிக்கான மானியம் வழங்கும் திட்டமாகும். இத்திட்டம் மைய அரசின் திட்டமாக தேசிய வீட்டு வசதி வங்கி (NHB), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (HUDCO) போன்ற மத்திய அரசின் முகமை நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கிகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்மூலம் 34,041 பயனாளிகளுக்கு ரூ.6,666.76 கோடி கடனுதவி வழங்க வங்கிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

ஆ) குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள்/அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டச் செயலாக்கத்தின் முன்னேற்ற விவரம்

2014-2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை தமிழகத்தில் உள்ள மாநகரங்கள்/நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.32,867.84 கோடி மதிப்பீட்டில் 7.25 இலட்சம் குடியிருப்புகள்/வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

இ) பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானம்

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் சிதலமடைந்த நிலையிலுள்ள 3,500 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, ரூ.280.00 கோடி செலவில் மறுகட்டுமானம் செய்யும் திட்டத்தினை அறிவித்தார்கள். அதற்கிணங்க, 3,533 குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. பழுதடைந்த நிலையிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் தொழில்நுட்பக் குழுவினரால் கண்டறியப்பட்டு வருகிறது. அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு, குடியிருப்புத் திட்டப் பகுதிகளை ஆய்வு செய்து, சென்னை மற்றும் இதர நகரங்களில் 22,575 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடிக்க பரிந்துரைத்துள்ளது. இக்குடியிருப்புகள் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், மைய அரசு மானியம், மாநில அரசு மானியம் மற்றும் பயனாளிகள் பங்கினைக் கொண்டு மறுகட்டுமானம் செய்யப்படும்.

மறுகட்டுமானம் செய்யப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதிக உட்கட்ட தரைப்பரப்பு உள்ளிட்ட புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட அம்சங்கள், அதிக வசதியான வடிவங்கள் கொண்டதாக இருக்கும்.

ஈ) மாநில நிதியுதவி பெறும் திட்டங்கள்—நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள் (EIUS)

தமிழ்நாட்டில் உள்ள நகர குடிசைப் பகுதிகளை மக்கள் நன்முறையில் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்த சாலைகள், தெரு மின் விளக்கு, குடிநீர் வசதி, மழை நீர் வடிகால், கழிவறைகள் போன்ற அடிப்படை வசதிகளை 60,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூ.30.00 கோடி செலவில் மாநில அரசின் நிதியுதவியுடன் 2020-2021 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நகரங்களில் மேற்கொள்ளப்படும்.

உ) அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 5 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டக் குடியிருப்புகளில் தரைத் தளங்கள், பால்கனி, படிக்கட்டுகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி செய்தல், மேற்கூரையில் ஓடுகள் பதித்தல், குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் கழிவறைப் பீங்கான் மாற்றுதல் போன்ற பணிகள்

2020 மார்ச் 24]

மேற்கொள்ளப்பட்டு, குடியிருப்புகளின் நிலை மேம்படுத்தப்படும். மேலும், இக்குடியிருப்புகளின் தோற்றப்பொலிவினை மேம்படுத்த வண்ணம் பூசப்படும்.

இப்பணிகள் அரசு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தப்படும். இப்பணிகளுக்காக 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.30.00 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

2.9 கஜா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டெல்டா மாவட்டங்களில் கஜா புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுமென அரசால் அறிவிக்கப்பட்டது. 3,708 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.353.78 கோடி மதிப்பீட்டில் கட்ட அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரை, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு 39.65 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்களுக்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் விரைவில் துவங்கப்படும். பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 7,547 தனி வீடுகள் கட்டப்படும். பிரதம மந்திரி வீட்டு வசதி (நகர்ப்புறம்) திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவியுடன் கூடுதலாக ரூ.90,000/- வழங்கப்பட்டு, வீடு ஒன்றிற்கு ரூ.3.00 இலட்சம் நிதியுதவி அரசால் வழங்கப்படும். பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

2.10 சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

அ) உலக வங்கியின் நிதியுதவியுடன் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் உறைவிட மேம்பாட்டுத் திட்டத்தினை ரூ.4,647.50 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்ற உலக வங்கியின் கடனுதவியுடன் ரூ.3,347.50 கோடி (500 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த முன்மொழிவுகள் மத்திய அரசின் மூலமாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாடு

[2020 மார்ச் 24

அரசின் வீட்டு வசதித் துறைக்கு உலக வங்கியிடம் கோரியிருந்த நிதியுதவிக்கான ஒப்புதல் இறுதிக் கட்ட நிலையை எட்டியுள்ளது.

இரண்டு நிதி வசதிகள்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வீட்டு வசதித் துறை வலுவூட்டல் திட்டத்தின்கீழ், சமூகத்தில் உள்ள அனைவரும் பயனடையும் வகையில் திறமையாகச் செயல்படும் ஒரு வீட்டு வசதி சந்தையை உருவாக்க மற்றும் திறனுக்கேற்ற வீடுகள் விநியோகத்தை அதிகரிக்க கொள்கை சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான வளர்ச்சிக் கொள்கை வடிவமைப்பு நிதியாக 450 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி ஒதுக்கப்பட்டு, முதற்கட்ட நிதியுதவியாக 200 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டம் மூன்று பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (i) நன்றாக செயல்படும் வீட்டு வசதி சந்தையினை ஊக்குவிக்கும் வகையில் கொள்கைகள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் (ii) திறனுக்கேற்ற வீடுகள் வழங்குவதை அதிகரிக்க முறைப்படுத்தும் சூழலை மேம்படுத்துதல் (iii) திறனுக்கேற்ற வீட்டு வசதி சந்தையில் தனியார் துறை பங்கேற்பினை அதிகரித்தல்.

முதலீட்டு திட்டங்களுக்கான நிதி வசதியின்கீழ், ரூ.504.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்படவுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம், 50 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியை உலக வங்கியிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும். இத்திட்டம், திறனுக்கேற்ற வீடுகள் கிடைப்பதை விரிவாக்க, வீட்டு வசதி நிறுவனங்களை வலுப்படுத்துவதுடன், வீட்டு வசதிக் கொள்கை, நிறுவனங்கள் மற்றும் திட்டங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்த வழி வகுக்கும். இத்திட்டத்தின்மூலம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உறைவிட நிதியத்திற்கு முதல் கட்ட பங்குத் தொகை வழங்கப்படும்.

ஆ) ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் நகர்ப்புற ஏழை எளியவர்களுக்கான பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலைக்கத்தக்க வீட்டு வசதித் திட்டம்

நகர்ப்புற ஏழை எளியவர்களுக்கான நிலைக்கத்தக்க வீட்டு வசதி மற்றும் உறைவிடத் திட்டத்தின்கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் 500 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவியுடன் ரூ.5,000.00 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மதிப்பீட்டுச் செலவில் வெள்ளத்தால் பாதிப்பிற்கு உள்ளாக வாய்ப்புள்ள நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்போர், நகர்ப்புற ஏழை

2020 மார்ச் 24]

மக்கள் மற்றும் இடம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வசதியும், மண்டலத் திட்டமிடல் பணிகளும் 2020-2021 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, 215 மில்லியின் அமெரிக்க டாலர் மதிப்புள்ள திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், திருநெல்வேலி, காரைக்குடி, தஞ்சாவூர், பள்ளிப்பாளையம், திண்டுக்கல் மற்றும் தேனியில் ரூ.431.00 கோடி செலவில் ஆறு துணைத் திட்டங்கள் 2020-2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

2.11 ஒருங்கிணைந்த நகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு

சென்னை மாநகரில் நீர்நிலைகளின் கரையோரங்களில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் ஆண்டுதோறும் ஏற்படுகின்ற மழை, வெள்ளம் மற்றும் தீ விபத்துகளால் பாதிக்கப்படுகின்றன. இக்குடிசைப் பகுதிவாழ் குடும்பங்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைக் கருத்தில்கொண்டு, ஒருங்கிணைந்த நகரங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அடையாறு, கூவம் மற்றும் இதர நீர்நிலைகளின் கரையோரங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	நீர்நிலைகளின் பெயர்	மொத்த குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களின் எண்ணிக்கை	மறுகுடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	மீதம்
1.	*கூவம்*	*14,257*	*11,818*	*2,439*
2.	*அடையாறு*	*9,539*	*4,398*	*5,141*
3.	*பங்கிங்காம் கால்வாய்*	*17,564*	*0*	*17,564*
4.	*அடையாறு ஆற்றில் கலக்கும் கால்வாய்*	*2,716*	*0*	*2,716*
5.	*கூவத்தில் கலக்கும் கால்வாய்*	*1,054*	*0*	*1,054*
	மொத்தம்	**45,130**	**16,216**	**28,914**

[2020 மார்ச் 24

குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மறுகுடியமர்வின் போது ஒருமுறை இடமாற்றுத் தொகையாக (Shifting Allowance) ரூ.5,000/-, வாழ்வாதாரத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/- வீதம் ஓர் ஆண்டிற்கு மொத்தம் ரூ.30,000/- மற்றும் பிற வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. மீதமுள்ள குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மறுகுடியமர்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

2.12 சமுதாய வளர்ச்சிப் பணிகள்

சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் உள்ள குடிசைப் பகுதிவாழ் இளைஞர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 2,700 நபர்களுக்கு ரூ.2.59 கோடி செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 2020-2021 ஆம் ஆண்டில் 340 நபர்களுக்கு ரூ.56.29 இலட்சம் செலவில் வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.13 சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (SCP) (2020-2021)

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களின்மூலம் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் செயல்படுத்த ரூ.1,137.50 கோடியும் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செயல்படுத்த ரூ.32.50 கோடியும் வரவு-செலவுத் திட்டத்தில் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நகர குடிசைப் பகுதிவாழ் மொத்த குடும்பங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த குடும்பங்களுக்கு 40,727 குடியிருப்புகள்/வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன.

2.14 மனைகள்/குடியிருப்புகளுக்கு விற்பனைப் பத்திரம் வழங்கல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள திட்டப் பகுதிகளில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள்/மனைகளில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 42,194 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விற்பனைப் பத்திரங்களும், 25,752 குடியிருப்புகளுக்கான

விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டில் குடியிருப்புகள்/மனைகளில் வசித்து வரும் 5,000 குடும்பங்களுக்கு பயனாளிகளின் ஆவணங்களை சரிபார்த்த பின்னர் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்

வீட்டு வசதி என்பது அனைவரின் அடிப்படைத் தேவையாகும். கண்ணியமான வாழ்க்கைக்கு வீட்டு வசதிக்கான வாய்ப்பை அளித்தல் அவசியமாகிறது. வீட்டு வசதியினை பெறும்போது இடைத்தரகர்களிடமிருந்தும், நியாயமற்ற வணிகர்களின் பொருளாதார சுரண்டல்களுக்கும் ஆட்படக்கூடாது என்பதை கூட்டுறவு இயக்கம் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. 1904 ஆம் ஆண்டு முதல் அதிகரித்து வரும் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் சுயசார்புடைய நிறுவனங்களாகக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் அமைந்துள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 715 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் அமைந்துள்ளன. இவற்றில் 668 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இணையத்துடன் இணைந்துள்ளன. இதில் 505 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் நகர்ப்புற மக்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும், 163 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் கிராமப்புற மக்களின் வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர்களின் வீட்டு வசதித் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்தும் செயல்பட்டு வருகின்றன.

3.1 செயல்பாடுகள்

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் முக்கிய நோக்கங்கள்:

அ) மாநிலம் முழுவதும் ஏனைய நிதி நிறுவனங்கள்மூலம் நிதிகள் பெற வசதியில்லாத மக்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்மூலம் வீடுகள் கட்டுவதற்கு ஏற்கக்கூடிய வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்குவது.

ஆ) நிலங்களைக் கொள்முதல் செய்து, அனைத்து வசதிகளுடன் மனைப் பிரிவுகள் ஏற்படுத்தி, சங்கங்களுக்குக் குறைந்த இலாபத்திலும், உறுப்பினர்கள் அதிக பயன்பெறும் வகையில் வாங்கத்தக்க விலையிலும் விற்பனை செய்தல்.

[2020 மார்ச் 24

3.2 நிதி ஆதாரம்

தொடக்கக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மாநில அளவில் தலைமை நிறுவனமாகச் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்மூலம் நிதியுதவி பெற்றும், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களிடம் வைப்பீடுகள் பெற்றும் கட்டுமானக் கடன்கள், வீடு அடமானக் கடன்கள் மற்றும் நகைக் கடன்கள் வழங்கி வருகின்றன.

3.3 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் வணிகச் செயல்பாடுகள்

கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தொடங்கப்பட்ட 1959 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மாநிலம் முழுவதும் இணையத்துடன் இணைந்துள்ள 505 நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக 3,62,662 வீடுகள் கட்டுவதற்கு ரூ.3,751.61 கோடியும், 163 கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக 8,03,772 உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ.1,120.43 கோடியும், ஆக மொத்தம் 11,66,434 வீடுகள் கட்டுவதற்கு ரூ.4,872.04 கோடி கடன் வழங்கியுள்ளது.

3.4 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் வளர்ச்சி

அரசின் கொள்கை முடிவின் அடிப்படையிலும், துறை அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினாலும், பல்வேறு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நிலையான வளர்ச்சி ஏற்பட்டு, தற்போது நன்றாக செயல்பட்டு அதன் நிகர மதிப்பு உயர்ந்துள்ளது. அதனால், இணையத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்களைச் சங்கங்கள் தவறாமல் செலுத்தி வருகின்றன. மேலும், சங்கங்களின் நிலையான வளர்ச்சிக்குத் தேவையான நிதிகளைத் திரட்டுவதற்கு வாய்ப்புள்ளது. ஆண்டுவாரியாக சங்கங்களின் செயல்பாடுகளில் முன்னேற்றம் அடைந்து வரும் சங்கங்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

வ. எண்	வருடம்	சங்கங்கள்	அலகுகள்	கடன் அனுமதித்தது தொகை (ரூ.கோடியில்)
1.	*2015-2016*	*65*	*188*	*9.20*
2.	*2016-2017*	*61*	*446*	*31.24*
3.	*2017-2018*	*138*	*537*	*30.00*

2020 மார்ச் 24]

வ. எண்	வருடம்	சங்கங்கள்	அலகுகள்	கடன் அனுமதித்தது தொகை (ரூ.கோடியில்)
4.	*2018-2019*	*140*	*1,639*	*110.73*
5.	*2019-2020*	*100*	*4,943*	*133.07*

3.5 வணிக மேம்பாடு

- அகில இந்திய அளவில் செயல்படும் அனைத்துக் கூட்டுறவு வீட்டு வசதி இணையங்களில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தனது கணக்குகளைக் கணினிமயமாக்குவதிலும், இணைப்புச் சங்கங்களின் 52,000 உறுப்பினர்கள் இணையதளம்மூலம் நிகழ்நிலையில் (Online) தமது கடன் தொகைகளைச் செலுத்தும் முறைகளை அறிமுகப்படுத்தியதிலும் முதலாவதாக உள்ளது.

- 2019-2020 ஆம் நிதியாண்டில் 100 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்மூலம் 4,943 உறுப்பினர்களுக்கு ரூ.133.07 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

- தொடக்கக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் வருவாயை அதிகரித்திட சிறப்புக் காசுக்கடன் அறிமுகப்படுத்தி, 17 தொடக்கக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு 10 விழுக்காடு வட்டி விகிதத்தில் தலா ரூ.30.00 இலட்சம் முதல் ரூ.100.00 இலட்சம் வரை ரூ.9.43 கோடியளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

- நிலுவையில் உள்ள தவணை தவறிய கடன் தொகைகளை வசூலிப்பதற்கு தமிழக அரசானது, அரசாணை (நிலை) எண் 40, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீ.கூ.ச.-1) துறை, நாள் 16-3-2015-ன்மூலம் "ஒரு முறை கடன் தீர்வு (One Time Settlement Scheme) தள்ளுபடித் திட்டத்தை" அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ், 29-2-2020 முடிய ரூ.330.00 கோடி வசூல் செய்யப்பட்டு, கடன்கள் தீர்வு செய்யப்பட்டு, 10,050 அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் ரூ.112.09 கோடி அளவிற்கு 10,050 பயனாளிகள் தள்ளுபடி சலுகை பெற்று பயனடைந்துள்ளார்கள்.

- கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பணியாற்றும் 1,188 பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் அதிகபட்சமாக ரூ.7.00 இலட்சம் வரை காப்பீடு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. 29-2-2020 முடிய 124 பணியாளர்களுக்கு ரூ.45.60 இலட்சம் இழப்பீடாக யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

3.6 எதிர்காலத் திட்டங்கள் (2020-2021)

- **ஒற்றைச் சாளர முறையில் கடன்கள்** (Single window system): கடன்கள் வழங்குவதைக் கண்காணிக்கவும், விரைவாகக் கடன்கள் வழங்குவதற்கும், “ஒற்றைச் சாளர முறை (Single window system)” அறிமுகப்படுத்தப்படும்.

- **வருவாய் ஈட்டுதல் (Revenue Generation):** சங்கங்களுக்குச் சொந்தமாக உள்ள பயன்படுத்தப்படாத நிலங்களைக் கண்டறிந்து, மக்களின் தேவைகளுக்கு ஏற்ப கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் அடுக்குமாடிக் கட்டடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் வருமானம் ஈட்டும் வகையில் கட்டப்படும்.

- **வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் (Affordable Housing):** கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், குறைந்த வருவாய் பிரிவினர்களுக்காக நகராட்சி மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள இடங்களில் நிலங்களைக் கண்டறிந்து மனைப் பிரிவுகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும். இதன்மூலம் குறைந்த வருவாய்ப் பிரிவு மக்கள் வாங்கத்தக்க விலையில் 6.5 விழுக்காடு வட்டி மானியத்துடன் “பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ்” கடன்கள் வழங்குவதற்கு வாய்ப்பாக அமையும்.

3.7 2020-2021 ஆம் ஆண்டிற்கான இலக்கு

தொடக்கக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் வசூல் மற்றும் வைப்பீடுகளிலிருந்து சங்க உறுப்பினர்களுக்கு ரூ.100.00 கோடி கடன் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

4. அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன்பணம்

அரசு, ஒரு கருணைமிகு பணியமர்த்துநராக, அரசுப் பணியாளர் (அல்லது) அவரது கணவர்/மனைவிக்கு ஏற்கெனவே சொந்தமாக உள்ள நிலத்தில் வீடு கட்டுதல், புதிதாக நிலம் வாங்கி வீடு கட்டுதல், அதாவது வீடு கட்டக்கூடிய நிலத்தை வாங்கி, அந்நிலத்தில் வீடு

2020 மார்ச் 24]

கட்டுவதற்கான கடனுதவி, தயார் நிலையில் உள்ள வீட்டை வாங்குதல் (மற்றும்) தனியார் அமைப்புகள்/தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்/கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆகியவற்றால் கட்டடப்படும் வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவற்றை வாங்க, "வீடு கட்டும் முன்பணம்" வழங்குகிறது.

4.1 இம்முன்பணம், 4 ஆண்டுகள் முறையான பணி மற்றும் அவரது உள்நுழைவுப் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்த அரசு ஊழியருக்கு, அனைத்திந்திய அலுவலர்களுக்கு ரூ.40.00 இலட்சம் மற்ற அரசு ஊழியர்களுக்கு ரூ.25.00 இலட்சம் என்ற வரையறைக்குட்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், மேற்காண் கடன் தொகையினைத் தகுதியுள்ள முன்பணத்தில் 50 விழுக்காடு என்ற வரம்பிற்குட்பட்டு, ஏற்கெனவே வீடு கட்ட பெற்ற முன்பணம், வீடு மேம்படுத்த/விரிவாக்கப் பெறப்பட்ட முன்பணம் அனைத்தும் சேர்த்து ரூ.25.00 இலட்சத்திற்கு மிகாமல், தற்போதுள்ள வீட்டை மேம்படுத்தவும்/விரிவாக்கவும் பயன்படுத்தலாம்.

4.2 மேற்காண் கடன் தொகையானது அதிகபட்சமாக 180 தவணைகளாக, முதலில் அசல் முழுவதும் பிடித்தம் செய்யப்பட்டு பின்னர் வட்டி பிடித்தம் செய்யப்படும். மேற்காண் கடன் தொகைக்கான வட்டி, மாதாந்திர நிலுவைத் தொகைக் குறைவின் (Monthly diminishing balance) அடிப்படையில் ஒவ்வொரு மாத இறுதியில் நிலுவையாக உள்ள தொகைக்கு படிவீத முறைப்படி (Slab rates) கணக்கிடப்படுகிறது.

4.3 அரசு வீட்டுக் கடன் பெற்ற ஓர் அரசு ஊழியர் பணியில் இருக்கும்போதே இறக்க நேரிட்டால், அந்த அரசு ஊழியரின் குடும்பத்துக்கு உதவி செய்யும் வகையில், "அரசுப் பணியாளர் வீடு கட்டுவதற்கான முன்பண சிறப்பு குடும்ப சேமநல நிதித் திட்டம்" என்னும் இணையற்ற திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி வீடு கட்டும் முன்பணம் பெறும் அனைத்து அரசு ஊழியர்களின் ஊதியத்திலிருந்தும் ஒவ்வொரு மாதமும், மாதாந்திர தவணைத் தொகையின் 1 விழுக்காடு பிடித்தம் செய்யப்படும். இத்தொகையானது, அரசால் ஒரு தனி நிதியாக பராமரிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஓர் அரசு ஊழியர் இறக்க நேரிட்டால், பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அவரது கணக்கில் நிலுவையிலுள்ள வீடு கட்டும் முன்பணம், அசல் மற்றும் வட்டியுடன் இந்நிதியிலிருந்து சரிசெய்து கொள்ளப்படும்.

[2020 மார்ச் 24

4.4 நடப்பு நிதியாண்டில் வீடு கட்டும் முன்பணம் அளிப்பதற்காக நிதிநிலை அறிக்கையில் ரூ.160.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, தலைமைச் செயலகப் பணியாளர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்டும் முன்பணம் வழங்குவதற்கு ஏதுவாக, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளின் மானியக் கோரிக்கையில் தனியே நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

5. தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல்

தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960, வாடகைக் குடியிருப்பு வசதிகள் குறைவாகவும், வீட்டு மனைத் தொழில் வளர்ச்சியடையாத மற்றும் சொத்துக்கள் ஒரு சிலரிடமே இருந்த காலகட்டத்தில் இயற்றப்பட்டதாகும். வீட்டு மனைத் தொழில் அதிக வளர்ச்சி அடைந்திருப்பதாலும், பரந்த அளவில் தனியார் வாடகை வீடுகள் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் இருப்பதாலும், ஏற்கெனவே இருந்த வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் காலமாற்றத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, இச்சட்டத்தினை நீக்கி, தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (TNRRRLT) சட்டம், 2017 என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. மேற்காணும் சட்டத்திற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் தமிழ்நாடு சட்டம் 42/2017 என்றும், பின்னர் திருத்தங்கள் செய்யப்பட்டு தமிழ்நாடு சட்டம் 39/2018 என்றும் வெளியிடப்பட்டது. இப்புதிய சட்டம் 22 பிப்ரவரி 2019 முதல் நடைமுறைப்படுத்த அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் விதிகள்-2019, பிப்ரவரி 22, 2019 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

5.1 வாடகைதாரர் மற்றும் உரிமையாளர் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி வாடகையை முறைப்படுத்துவதும், வாடகைதாரர் மற்றும் உரிமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைச் சமன் செய்வதும், தமிழ்நாடு சொத்து

2020 மார்ச் 24]

உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017-ன் நோக்கங்களாகும். இச்சட்டத்தின்மூலம் அனைத்து வாடகை ஒப்பந்தங்களையும் கட்டாயமாக பதிவுச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.2 ஓர் ஆற்றல் வாய்ந்த வாடகை பதிவு செய்யும் வலைதளம் (www.tenancy.tn.gov.in.) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பிப்ரவரி 22, 2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் தங்களின் வாடகை ஒப்பந்தங்களை இவ்வலைதளம்மூலம் பதிவு செய்யலாம். தமிழ்நாடு சட்டம் 3/2020-ன்மூலம் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கான காலம் 20-9-2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

5.3 வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தேவையான ஆவணங்களைக் கூர்ந்தாய்வு செய்து, தொல்லையற்ற வகையிலும், பயனீட்டாளர்களுக்கு எளிய வகையிலும், வாடகை ஒப்பந்த எண்கள் வழங்குவார்கள். சட்டப் பிரிவு 30-ன்கீழ் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வாடகை நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 32-ன்கீழ் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் மே 8, 2019 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. வாடகைத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (TNRERA)

தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) விதிகள், 2017-ஐ தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண் 112, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22-6-2017-ன்மூலம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தினை 22-6-2017 முதல் அமைத்துள்ளது.

6.1 தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் மற்றும் தீர்ப்பாயரின் உத்தரவுகளின்மீது செய்யப்படும் மேல்முறையீட்டினை விசாரித்து, தீர்ப்பு வழங்க தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தையும் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

6.2 கட்டடம் மற்றும் மனைப் பிரிவு வளர்ச்சித் திட்டங்களில் (பல்வேறு பகுதிகளாக செயல்படுத்தப்படும்பட்சத்தில் அனைத்துப் பகுதிகளும் உட்பட) மனையின் பரப்பளவு 500 சதுர மீட்டருக்குமேல் அல்லது கட்டப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 8-க்குமேல் இருக்கும் திட்டங்கள் அனைத்தும், அவற்றிற்கு திட்ட அனுமதி பெற்ற பின், விளம்பரம் அல்லது விற்பனை செய்வதற்கு முன், தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். கட்டடம் மற்றும் மனை விற்பனை முகவர்களும் குழுமத்தில் பதிவு செய்ய வேண்டும்.

6.3 தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமத்தில், கட்டடம் மற்றும் மனை விற்பனை திட்டங்கள் மற்றும் முகவர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பங்கள் மற்றும் புகார் மனுக்களை நேரடியாக மற்றும் இணைய வழி மூலமாகப் பெறுவதற்கு ஏதுவாக www.tnrera.in என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

6.4 பதிவு செய்யப்பட வேண்டிய திட்டங்கள், பதிவு செய்யப்படுவதை உறுதிபடுத்தும் விதமாக கட்டடப் பணி நிறைவுச் சான்றிதழ் வழங்கும்போது, அத்திட்டங்கள் தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட திட்டக் குழுமங்கள் வலியுறுத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. திட்டக் குழுமங்களிடமிருந்து திட்ட அனுமதி வழங்கிய விவரங்களைப் பெற்று, திட்ட மேம்பாட்டாளர்கள்/உரிமையாளர்களுக்கு அத்திட்டங்களைப் பதிவு செய்ய வேண்டி தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை ஒழுங்குமுறைக் குழுமத்திலிருந்து தாக்கீது (Notice) அனுப்பப்படுகிறது. விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

6.5 31-1-2020-ன்படி 1,386 திட்டங்கள் இக்குழுமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 1,131 முகவர்களுக்குப் பதிவு வழங்கப்பட்டுள்ளது.

6.6 குடியிருப்புகள் ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதம்மீது 145 திட்டங்கள் சம்பந்தப்பட்ட 975 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 98 திட்டங்கள் சம்பந்தப்பட்ட 462 புகார்கள் 31-1-2020-ன்படி முடித்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள புகார்கள் விசாரணையில் உள்ளன. திட்ட மேம்பாட்டாளரிடமிருந்து காலதாமதம் மற்றும் திட்டம் முடிவடையாததால் பணத்தைத் திரும்பக் கோருதல், வட்டி மற்றும் இழப்பீடு கோரி படிவம் 'N'மூலம் பெறப்பட்ட 527 புகார்களில் 294 புகார்கள் தீர்ப்பாயரால் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

6.7 அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்களை தன் அதிகார வரம்பிற்குள் உள்ளடக்கிய தமிழ்நாடு கட்டடம் மற்றும் மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், பெறப்பட்ட 117 மேல்முறையீடுகளில் 23 மேல்முறையீடுகளுக்குத் தீர்ப்பு வழங்கியும், 2 மேல்முறையீடுகள் முடித்துவைத்தும் உள்ளன. மேலும், 2 மேல்முறையீடுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. மீதமுள்ள 90 முறையீடுகள் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் விசாரணையில் உள்ளன.

7. நகர் ஊரமைப்பு இயக்ககம்

நாட்டிலுள்ள பெரிய மாநிலங்களுள் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி அதிக அளவிலான நகர மக்கள்தொகை (48.45%) கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதனால் நகரமயமாக்கலில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நகரங்கள் தமிழகத்தில் பரவலாக அமைந்துள்ளன. மக்கள் வேலைவாய்ப்புகளைத் தேடி நகரங்களில் அமைந்துள்ள தொழிற்பேட்டைகளுக்கு கிராமங்களில் இருந்து குடி பெயர்கிறார்கள். இதனால், விரைவான நகரமயமாதல் நடைபெறுகிறது. இதனை சீரிய முறையில் சரி செய்ய, நகர் ஊரமைப்புத் துறை இடம் சார்ந்த திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

நகர் ஊரமைப்பு இயக்ககமானது, நில உபயோகத் திட்டங்களைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவதன்மூலம் தமிழகத்தில் நகர்ப்புற வளர்ச்சியை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதலில் ஒரு முகமைத் துறையாகச் செயல்பட்டு வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலும், நிலையான சுற்றுச்சூழலை உருவாக்குதலும் திட்டமிடலின் முக்கிய நோக்கங்களாகும். மேலும், இத்துறை பல்வேறு துறைகளுக்கும்/மாநகராட்சிகளுக்கும்/தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போன்ற வாரியங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

7.1 நிருவாகக் கட்டமைப்பு

நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் நிருவாகக் கட்டமைப்பு பின்வருமாறு:

[2020 மார்ச் 24

நிருவாகக் கட்டமைப்பு



இயக்ககத்தின் அலுவலகங்கள்



2020 மார்ச் 24]

7.2 இத்துறையின் முக்கிய பணிகள்

➢ நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ஐ செயல்படுத்துதல் மற்றும் நிருவகித்தலில் அரசுக்கு உதவுதல்

➢ முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம், விரிவான அபிவிருத்தித் திட்டம், மண்டலத் திட்டம் மற்றும் இதர திட்டங்களைத் தயாரித்தல்

➢ திட்டக் குழுமங்கள் தயாரிக்கும் விரிவான அபிவிருத்தித் திட்டங்களின் பல்வேறு நிலைகளில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்

➢ உள்ளாட்சி அமைப்புகளுக்குத் திட்ட அனுமதி வழங்குவதில் உதவி செய்தல்

➢ கட்டடங்கள் மற்றும் வீட்டு மனைகளுக்கு அனுமதி வழங்குதல்

➢ அமலாக்க விதிமுறைகளின்மூலம் வளர்ச்சியை ஒழுங்குப்படுத்துதல்

7.3 சட்டபூர்வமான திட்டங்கள் தயாரித்தல்

அ) மண்டலத் திட்டம்

மண்டலத் திட்டமானது நிலத்தினைப் பயனுள்ள முறையில் பல்வேறு உபயோகங்களுக்காக பிரிப்பதாகும். இதன்மூலம் குடியிருப்பு வளர்ச்சியைப் பெரிய நிலப்பரப்பில் உருவாக்குகிறது. மேலும், ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள இயற்கை வளங்கள், திறன்கள் மற்றும் மூலதனங்கள் ஆகியவற்றை மண்டலத் திட்டத்தின்மூலம் முழுமையாகப் பயன்படுத்த இயலும். மண்டலத் திட்டத்தில் பெரிய அளவிலான நில திட்டமிடுதலின்போது போக்குவரத்துத் திட்டமிடுதலும் ஒருங்கிணைந்து தயாரிக்கப்படுகிறது. மண்டலங்களில் உள்ள நகரங்களுக்கிடையே வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க மண்டலத் திட்டம் உதவுகிறது. மண்டலத் திட்டத்தை உருவாக்கும் முறை பல படிநிலைகளை உள்ளடக்கியுள்ளது. அவைகள்:

- மண்டலத்தின் தற்போதைய நிலை கண்டறிதல்

[2020 மார்ச் 24

- மண்டலங்களின் எல்லை நிர்ணயம் செய்தல்
- மண்டலங்களின் தேவைகளைத் தீர்மானித்தல்
- மண்டலங்களுக்குத் திட்டம் தயாரித்தல்
- மாநிலத்தின் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு திட்டத்தைச் செயல்படுத்துதல்
- திட்டம் நடைமுறைக்குப்பின் அதை மறு ஆய்வு செய்தல்

கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்கள் உள்ளடக்கிய கோயம்புத்தூர் மண்டலத் திட்டமானது, திட்டமிடல் மற்றும் கட்டடக் கலை பள்ளி, போபால் உதவியுடன் 18,244 சதுர கி.மீ. பரப்பளவிற்கு தயாரிக்கப்படவுள்ளது. மேலும், நிலையான வளர்ச்சியை அடைவதற்கான தொலைநோக்கோடு ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (Asian Development Bank) இணைந்து மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய 20,951 சதுர கி.மீ. பரப்பளவிற்கு மதுரை மண்டலத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆ) முழுமைத் திட்டம்

முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டமானது, நகர்ப்புற வளர்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் வழிகாட்டுவதற்குமான முக்கிய கருவியாகும். இத்திட்டத்தில் விரிவான நிலப் பயன்கள் மற்றும் வளர்ச்சிக்கான விதிமுறைகள் உள்ளன. மக்களுக்கான தேவைகளை கொடுக்கப்பட்ட திட்டக் காலத்திற்குள் அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாக முழுமைத் திட்டம் அமைகிறது. முழுமைத் திட்டமானது 20 ஆண்டுகளுக்கான வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு தயாரிக்கப்படும் ஒரு நீண்ட காலத் திட்டமாகும். முழுமைத் திட்டமானது ஒவ்வொரு ஐந்து வருட கால இடைவெளியில் மறு ஆய்வு மற்றும் புதுப்பிக்கப்படுகிறது. நகரத்தின் நீடித்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டு முழுமைத் திட்டமானது தயாரிக்கப்படுகிறது. இந்தத் திட்டமானது சட்டரீதியான நிலப் பயன்பாட்டுத் திட்டமாகும். இதுவரை நகர் ஊரமைப்புத் துறையானது 123 நகரங்களுக்கான முழுமைத் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துள்ளது.

2020 மார்ச் 24]

நகர் ஊரமைப்புத் துறை புதிய மற்றும் திருத்திய முழுமைத் திட்டங்களைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் பல கட்டங்களாகத் தயார் செய்யத் தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், ஓசூர் ஆகிய ஆறு முக்கிய மாநகராட்சிகளை உள்ளடக்கி, 7,979 சதுர கி.மீ. பரப்பளவில் முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. புவிசார் தகவல் அமைப்பு (GIS) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மேலும் அரசால் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவடையும் நிலையில் உள்ளன.

இந்திய அரசாங்கமானது அம்ரூத் (Atal Mission for rejuvenation and Urban transformation) திட்டத்தின்கீழ், புவிசார் தகவல் அமைப்பு முறை அடிப்படையிலான முழுமைத் திட்டம் தயாரிக்கும்பொருட்டு ஒருதுணைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ்,

1. கடலூர்
2. காஞ்சிபுரம்
3. நாகப்பட்டினம்
4. வேளாங்கண்ணி
5. ராமேஸ்வரம்
6. நாகர்கோவில்
7. திருநெல்வேலி
8. தூத்துக்குடி
9. வேலூர்
10. ஆம்பூர்
11. சேலம்
12. திருவண்ணாமலை
13. தஞ்சாவூர்
14. திண்டுக்கல்

15. கும்பகோணம்

16. புதுக்கோட்டை

17. காரைக்குடி

18. இராஜபாளையம்

ஆகிய 18 நகரங்களுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 6,567 ச.கி.மீ. பரப்பளவை உள்ளடக்கிய மேற்படி 18 அம்ரூத் (Attal Mission for Rejuvenation and Urban Transformation) நகரங்களுக்கான அடிப்படை வரைபடம் மற்றும் நிலப் பயன்பாட்டு வரைபடம் ஆகியவை உயர் தெளிவுத் திறன் கொண்ட செயற்கைக்கோள் வரைபடத்தை பயன்படுத்தி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

15 அம்ரூத் நகரங்களுக்கான முழுமைத் திட்டங்கள் ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 நகரங்களுக்கான முழுமைத் திட்டமானது நகர் ஊரமைப்புத் துறையால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மூன்றாம் கட்டமாக, திட்ட காலம் நிறைவடைகின்ற நிலையில் உள்ள 75 திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் தயாரிப்பதற்கான பணி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7.4 உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி

உட்கட்டமைப்பு, வளர்ச்சி செயல்முறையின் முக்கிய திறவுகோலாகும். மேலும், விரைவான நகர வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல் இன்றியமையாததாகும். எனவே, முக்கிய உட்கட்டமைப்புகளான சாலைகள், பாலங்கள், குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் ஆகியன முறையான வளர்ச்சி ஏற்பட தேவையானதாகும். எனவே, இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிதி தொடங்கப்பட்டு, நவம்பர் 2019 வரை ரூ.4,067.10 கோடி வசூலிக்கப்பட்டதில் ரூ.3,871.21 கோடி மதிப்பிலான 68 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று

வாரியம், நெடுஞ்சாலைத் துறை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் பல்வேறு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் மூலமாக இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

7.5 2019–2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இதர முக்கிய செயல்பாடுகள்

அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய அலுவலகங்கள்

பொதுமக்கள் நகர் ஊரமைப்புத் துறையின் சேவைகளைப் பெறுவதற்கும், அணுகுவதற்கும் திட்ட மற்றும் திட்டமில்லா பகுதிகளை உள்ளடக்கிய மண்டல அலுவலகங்கள்/உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றை மறுசீரமைத்து அனைத்து மாவட்டங்களிலும் புதிய அலுவலகம் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

ஆ) அனுமதியற்ற மனைப் பிரிவு வரன்முறைப்படுத்தும் திட்டம்

அனுமதியற்ற மனைப் பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டமானது 4-5-2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், 16-11-2018 வரை சுமார் 46,307 மனைப் பிரிவு உரிமையாளர்கள் நிகழ்நிலை மூலமாக வரன்முறைப்படுத்த விண்ணப்பித்துள்ளனர் மற்றும் 5,87,142 எண்ணிக்கையுள்ள மனைகளை வரன்முறைப்படுத்தவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 4,48,194 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டதில், ரூ.1,235.67 கோடி வருவாய் அரசு, திட்டக் குழுமங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் பெறப்பட்டுள்ளது. திரட்டப்பட்ட வருவாயானது வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவு பகுதிகளின் கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும்.

இ) அங்கீகரிக்கப்படாத/விதிமீறிய கட்டடங்கள் வரன்முறைப்படுத்துதல்

நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–ல் திருத்தம் செய்யப்பட்டு, புதிய பிரிவு 113-C–யை சேர்த்து 1-7-2007 வரை கட்டப்பட்ட அனுமதியற்ற கட்டடங்களை வரன்முறைப்படுத்தும் புதிய திட்டமானது அரசால் அறிவிக்கப்பட்டது.

கட்டட வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை எதிர்த்து 2017-ல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் இத்திட்டத்தின்கீழ் நகர் ஊரமைப்புத் துறையானது

விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலினை செய்யலாம், எனினும் ஆணைகள் ஏதும் வழங்கக்கூடாது என ஆணை பிறப்பித்தது. அரசு இத்திட்டத்திற்கான கால அவகாசத்தை 21-6-2020 வரை நீட்டித்துள்ளது. இந்நாள் வரை சுமார் 4,316 விண்ணப்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்டுள்ளன.

8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971-ன்கீழ் சென்னைப் பெருநகர் திட்டப் பகுதிக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1975 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சென்னைப் பெருநகர் திட்டப் பகுதியானது, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, 7 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 179 கிராமங்களை உள்ளடக்கி 1,189 சதுர கி.மீ. பரப்பினைக் கொண்டுள்ளது.

8.1 நிறுவன அமைப்பு

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிருவாக அமைப்பு தற்பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. துணைத் தலைவர், உறுப்பினர்-செயலர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் ஆகியோர் குழுமத்தின் செயல் அலுவலர்கள் ஆவர்.

8.2 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 (TNCD&BR)

அரிய இயற்கை வளமான நிலப்பகுதிகளை உரிய வகையில் பயன்படுத்தும் முக்கிய குறிக்கோளுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019-ஐ தமிழக அரசு 4-2-2019-ல் அறிவிக்கை செய்தது. அனைத்துத் தரப்பு மக்களும் வாங்கத்தக்க விலையில் வீடுகள் வழங்கும்பொருட்டு, நகரின் உட்புற பகுதிகளில் மறு வளர்ச்சியை (Redevelopment) ஏற்படுத்தி நெருக்கமான வளர்ச்சியை (Higher Density) ஊக்குவிக்க ஏற்கெனவே வழங்கப்பட்ட தளப்பரப்புக் குறியீடு (FSI) மற்றும் ஊக்கத் தளப்பரப்புக் குறியீடு (Premium FSI) ஆகியவைகள் உயர்த்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 நில அபிவிருத்தி விதிகள் மற்றும் கட்டட வளர்ச்சி விதிகள் என அனைத்து விதிகளையும் உள்ளடக்கிய நிலையான ஆவணமாகத் திகழ்கிறது.

2020 மார்ச் 24]

8.3 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியச் செயல்பாடுகள்

அ) திட்டமிடுதல்

இரண்டாம் முழுமைத் திட்டம் 2026-ல் சிறப்புடன் வாழத் தகுந்த, துடிப்பான பொருளாதாரம் கொண்ட, நிலைத்த சுற்றுச்சூழலுடன்கூடிய சிறந்த வசதிகளை எதிர்காலத் தலைமுறையினருக்கு ஏற்படுத்தும் விதமாக, 'சென்னையை முக்கிய பெருநகராக' உருவாக்குவதே சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தொலைநோக்குப் பார்வை என குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முறையான மற்றும் நிலைத்த வளர்ச்சிக்காக முழுமைத் திட்டம், விரிவான வளர்ச்சித் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்டவைகளைத் தயாரிப்பது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியச் செயல்பாடுகளாகும். அதிகரித்து வரும் மக்கள்தொகை வளர்ச்சியை சமாளிக்கும் வகையிலும், நிலைத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பாகும். மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற துறைகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. பல்வேறு உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும்பொருட்டு, வளர்ச்சிக் கட்டணம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு கட்டணமாக வசூலிக்கப்படும் தொகையிலிருந்து 75 விழுக்காட்டினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பகிர்ந்தளிக்கிறது. பெருநகரப் பகுதியில் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு இயக்ககம் சிறந்த தீயணைப்புப் பாதுகாப்பு மேலாண்மையை கணினிவழி செயல்பாட்டின்மூலம் மேம்படுத்த ஏதுவாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நிதி வழங்கியுள்ளது. மக்கள்தொகைக் கணிப்பு மற்றும் 2026 ஆம் ஆண்டு வரையிலான நகரமயமாதல் கணிப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, சென்னைப் பெருநகரப் பகுதிக்காக தயாரிக்கப்பட்ட இரண்டாம் முழுமைத் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

[2020 மார்ச் 24

ஆ) சென்னைப் பெருநகரப் பகுதியில் (CMA) அமைந்துள்ள புராதனக் கட்டடங்கள்/இடங்களைப் பாதுகாத்தல்

சென்னைப் பெருநகரப் பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடக் கலைத்திறன் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள பல கட்டடங்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. இதுவரை சென்னையில் 467 கட்டடங்கள் புராதனக் கட்டடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. முதற்கட்டமாக, 164 புராதனக் கட்டடங்களுக்கான அட்டவணை அரசிதழில் வெளியிட ஏதுவாக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும், 356 கட்டடங்களுக்கு ஆவணப்படுத்தும் பணி நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள 111 கட்டடங்களுக்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ) சாலை வலைப்பின்னல் உருவாக்குதல் (Grid of Roads)

சென்னைப் பெருநகரப் பகுதியில் வேகமாக வளர்ந்து வரும் பகுதிகளில் உரிய சாலை வலையமைப்பு, குறைந்த பயண நேரம் மற்றும் திறன்மிகு போக்குவரத்துச் சுழற்சி ஆகியவற்றை உறுதி செய்யக்கூடிய வகையில், சாலை வலைப்பின்னல் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்து வருகிறது. முதற்கட்டமாக, வெளிவட்டச் சாலைக்கு அருகிலும் சென்னை பெருநகரத்தின் தெற்கு பகுதியிலும் அமைந்துள்ள துரித வளர்ச்சி அடைந்து வரும் 53 புறநகர் கிராமங்களில் சாலை வலைப்பின்னல் திட்டத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்துள்ளது. அதன்படி, 24 கிராமங்களில் சாலை வலைப்பின்னல் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட சாலை அமைப்புகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீரிக்கப்படும் மனைப் பிரிவு வரைபடங்களில் இடம் பெறச் செய்ய குழுமம் முடிவு செய்துள்ளது. 29 கிராமங்களுக்காக தயாரிக்கப்பட்ட சாலை வலைப்பின்னல் திட்டத்தை மறு ஆய்வு செய்யுமாறு விஜயவாடா கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் கல்லூரியிடம் கோரப்பட்டுள்ளது. 143 கிராமங்களுக்கான திட்ட ஆலோசனை மேற்கொள்ளும் பணி அண்ணா பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கட்டடக் கலை பள்ளியில் உள்ள திட்டமிடல் துறைக்கு வழங்கப்பட்டு, சாலை வலைப்பின்னல் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈ) சென்னைப் பெருநகரப் பகுதியில் அமைந்துள்ள தொடர் கட்டடப் பகுதியான ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி மற்றும் புரசைவாக்கம் ஆகிய பகுதிகளுக்கான மறு வளர்ச்சித் திட்டம்

இந்திய அரசின் அம்ரூத் திட்டத்தில் (Atal Mission for Rejuvenation and Urban Transformation-AMRUT) அடங்கிய உபதிட்டத்தின்கீழ் சென்னை உள்ளிட்ட 25 நகரங்களில் தலா ரூ.1.00 கோடி நிதியில் முன்மாதிரி நகரப் பகுதி திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. அம்ரூத் திட்டத்தின்கீழான நகரப் பகுதி திட்டம் (Local Area Plan) அடிப்படையில் பழைய நகரங்களுக்கான மறு வளர்ச்சித் திட்டமிடலை ஒத்ததாகும்.

இந்திய அரசின் இத்திட்டத்தின் நோக்கம் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமங்கள் தாமாக நகரப் பகுதி திட்டங்களைத் தயாரிக்கும் திறனைக் கட்டமைப்பதாகும். அம்ரூத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ரூ.1.00 கோடி நிதியைப் பயன்படுத்தி, ஜார்ஜ் டவுன் பகுதியில் 150 ஹெக்டேர் பரப்பிலான ஒரு பகுதிக்கு மாதிரி மறு வளர்ச்சி (Re-development) திட்டத்தினைச் செயல்படுத்தும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கருத்துருவிற்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் நகரத்தின் பழைய பகுதிகளுக்கு மறு வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கும் திறனைக் கட்டமைத்துக் கொள்ள உதவும்.

இத்திட்டத்தைத் தயாரிப்பதில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உதவிட பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களை பகுதி நேர ஆலோசகர்களாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியை இந்திய அரசு தமிழக அரசிற்கு வழங்கியுள்ளது.

உ) சென்னை, பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலை ஆகியவற்றிற்கு இடையேயான சாலை இணைப்புகளை மேம்படுத்தும் திட்ட அறிக்கை தயாரித்தல்

சென்னை, பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலை ஆகிய சாலைகளுக்கு இடையே சாலை இணைப்புகளை மேம்படுத்தவும், இம்முக்கிய சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், சென்னை-பழைய மகாபலிபுரம் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலை ஆகியவற்றிற்கு இடையேயான சாலை இணைப்புகளை மேம்படுத்தும் திட்ட அறிக்கை தயாரிக்க ஆலோசகரைக் கண்டறிய

[2020 மார்ச் 24

தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடம் (TNUIFSL) கோரப்பட்டது, அந்நிறுவனம் M/s.L&T உட்கட்டமைப்பு பொறியியல் நிறுவனத்தை இப்பணிக்காகத் தேர்வு செய்துள்ளது.

ஊ) அகரம்தென், கோவிலஞ்சேரி மற்றும் மாடம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கு முன்மாதிரி நகரமைப்புத் திட்டம் தயாரித்தல்

இந்திய அரசு, பெருநகரப் பகுதிகளில் உள்ள வளர்ச்சியடையாத இடங்களுக்கு நகரமைப்புத் திட்டங்கள் தயாரிப்பதை நாட்டின் அனைத்து நகரங்களிலும் செயற்படுத்தத்தக்க வெற்றிகரமான திட்டமாகக் கண்டறிந்துள்ளது. இத்திட்டங்களைத் தயாரிக்கும் திறனைக் கட்டமைக்கும் விதத்தில் அம்ரூத் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட நகரங்களுக்கு தலா ரூ.1.00 கோடி நிதியை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அகரம்தென், கோவிலஞ்சேரி மற்றும் மாடம்பாக்கம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 300 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலத்தில் மாதிரித் திட்டம் தயாரிக்க சமர்ப்பித்த கருத்துருவிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. முதற்கட்டமாக ரூ.20.00 இலட்சத்தை தமிழக அரசிற்கு வழங்கியுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆரம்பக் கட்டப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

8.4 புதிய முயற்சிகள்

அ) அங்கீகரிக்கப்படாத மனைகள்/மனைப் பிரிவு ஆகியவற்றை வரன்முறைப்படுத்துதல்

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள், 5,300 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளைக் கொள்கைரீதியான ஒப்புதல் வழங்கக் கோரி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்பி வைத்துள்ளன. இவற்றில், பிப்ரவரி 2020 வரை 5,101 அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கொள்கைரீதியான ஒப்புதலை வழங்கியுள்ளது.

ஆ)அங்கீகரிக்கப்படாத/விதி மீறிய கட்டடங்களை வரன்முறைப் படுத்துதல்

நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971-ன் பிரிவு 113-C-ன்கீழ், 1-7-2007-க்கு முன் கட்டப்பட்ட அனுமதியற்ற கட்டடங்களை

2020 மார்ச் 24]

வரன்முறைப்படுத்தும் புதிய திட்டத்தை அரசு அறிவித்தது. மேலும், 1-7-2007-க்கு முன்னதாகக் கட்டப்பட்ட அனுமதியற்ற/விதிமீறிய கட்டடங்களை வரன்முறைப்படுத்த ஏதுவாக விதிமுறைகளைச் சில நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் அரசு அறிவிக்கை செய்தது.

இத்திட்டமானது, அரசால் விதிமுறைகள் அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் மற்றும் இத்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். சென்னைப் பெருநகரப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெறப்பட்ட விண்ணப்பங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆய்வு செய்து, சிறப்பு மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்களை வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கும். மேலும், அனைத்து சாதாரண கட்டடங்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கும்.

மேற்படி கட்டட வரன்முறைப்படுத்தும் திட்டம், 2017 பிரிவு 113-C-ன்கீழ், அறிவிக்கப்பட்ட இத்திட்டத்தை எதிர்த்து மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விண்ணப்பங்களைப் பெற்றுப் பரிசீலனை செய்யலாம் எனவும், ஆனால் மறு உத்தரவு வழங்கும் வரை இறுதி ஆணை எதுவும் வெளியிடக்கூடாது எனவும், சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அதன்படி, இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அரசு, இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வதற்கான கால அளவினை 21-6-2020 வரை நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது.

8.5 திட்டப் பணிகள்

அ) புறநகரப் பேருந்து நிலையம்-கிளாம்பாக்கம் (வண்டலூர்)

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கோயம்பேடு பேருந்து நிலையம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு, தெற்கு நோக்கிச் செல்லும் புறநகர்ப் பேருந்துகளுக்காக ஒரு புதிய பேருந்து நிலையம் வண்டலூரில் அமைக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

[2020 மார்ச் 24

இத்திட்டத்திற்காக, கிளாம்பாக்கம் கிராமத்தில் ஜி.எஸ்.டி. சாலையை ஒட்டி நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட சுமார் 88.52 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலமானது தேர்வு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 241, வருவாய்த் துறை, நாள் 7-9-2016-ன்மூலம் வருவாய் துறையால் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கையின்படி, அரசாணை (நிலை) எண் 168, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 4-12-2018-ல் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22-2-2019 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியத் தொல்லியல் துறையின்கீழ் இந்த இடமானது வருவதால், தேசிய நினைவுச்சின்ன குழுமம் மற்றும் இந்திய தொல்லியல் துறை ஆகிய துறைகளிடமிருந்து தடையில்லாச் சான்று பெறப்பட்டுள்ளது. இத்திட்டமானது மார்ச் 2021-க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ) அலுவலக வளாகம், கோயம்பேடு

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கோயம்பேட்டில் ஓர் அலுவலக வளாகம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி ரூ.99.37 கோடி செலவில் பன்னடுக்கு அலுவலக வளாகம் கட்டப்பட்டு, 19-2-2020 அன்று பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இ) புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து முனையம் (முன்னர் சென்னை புறநகர் பேருந்து நிலையம்) மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து முனையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேம்படுத்துதல்

தற்போது, இவ்விரு முனையங்களிலும் பாதுகாப்புக்காகக் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு, காவல் துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கூட்டாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. கேமராக்களின் தெளிவுத் திறன் மேம்படுத்துதல் மற்றும் முகம் அடையாளம் காணும் வசதி கொண்ட புதிய கேமராக்களை ரூ.2.25 கோடி செலவில் பொருத்த கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது.

2020 மார்ச் 24]

இதன்படி இரண்டு பேருந்து முனையங்களிலும் 181 கேமராக்கள் (முகம் அடையாளம் காணும் 18 கேமராக்கள் உட்பட) பொருத்த உத்தேசிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து முனையத்தில் அமைந்துள்ள 1,2,5,6 ஆகிய நடைமேடைகள், மாநகரப் பேருந்துகள் நிறுத்துமிடம், பிரதான நுழைவுக் கட்டடம் மற்றும் இதர பொது இடங்களில் 100 அதிநவீன தெளிவுத் திறன் கொண்ட கேமராக்கள் இதுவரை பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள கேமராக்கள் இரண்டு பேருந்து முனையங்களிலும் ஜூன் 2020-க்குள் பொருத்தப்படும்.

ஈ) கோயம்பேட்டிலுள்ள மலர் அங்காடிக்கு கிழக்குப் பகுதியில் நவீன மலர் அங்காடியை விரிவுபடுத்துதல்

கோயம்பேட்டில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் மலர், கனி மற்றும் காய்கறிகளுக்கான மொத்த வணிக வளாகமானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டப்பட்டது. இந்த அங்காடி வளாகமானது அயற்பணிமூலம் அரசால் பணியமர்த்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர், முதன்மை நிருவாக அலுவலராக நியமிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இந்த வளாகத்தில், மலர் அங்காடியின் கிழக்குப் பகுதியில் காலியாக உள்ள 3 ஏக்கர் பரப்பளவுள்ள நிலப்பகுதியில், வளர்ந்துவரும் தேவையைக் கருத்தில்கொண்டு, தற்போதுள்ள மலர் அங்காடியை நவீன வசதிகளோடு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டத்தின் தோராய மதிப்பீடு ரூ.40.00 கோடியாகும். இத்திட்டமானது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியிலிருந்து நிறைவேற்றப்படும். இப்பணிக்கு, கலந்தாய்வாளர்கள் நியமிக்கப்பட்டு திட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உ) திருமழிசை-குத்தம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம்

சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வடக்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்கு மாதவரத்தில் பேருந்து நிலையம் கட்டப்பட்டது மற்றும் தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்குக் கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் கட்டப்பட்டு வருகிறது. இவைகளுடன் மேற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக திருமழிசை-குத்தம்பாக்கம் கிராமத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதி மற்றும் உட்கட்டமைப்பு & அடிப்படை வசதிக்

கட்டண நிதியினைக் கொண்டு ஒரு புறநகர் பேருந்து முனையம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு கலந்தாய்வாளர்கள் நியமிக்கப்பட்டு, இப்பேருந்து நிலையத்திற்கான உத்தேச கட்டட வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊ) மறைமலைநகர் புதுநகரில் சமுதாயக் கூடம் அமைக்கும் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதல் முழுமைத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டபடி, சென்னை நகரின் நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, மறைமலைநகர் ஒரு தன்னிறைவு பெற்ற துணை நகரமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டது. இதில், குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைகளுக்காக 19 மனைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நகரின் மையப் பகுதியில் காலியாக உள்ள 2 ஏக்கர் நிலத்தில் மறைமலைநகர் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு சமுதாயக் கூடம் கட்ட திட்டமிடப்பட்டது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

எ) சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்திலுள்ள கல்லூரி முதல்வர் குடியிருப்புக் கட்டடத்தைப் புராதனக் கட்டடம்/ கலை மையமாக புனரமைத்தல்

சென்னை மாநிலக் கல்லூரியின் முதல்வர் குடியிருப்பு கட்டடமானது தற்பொழுது பழுதடைந்த நிலையில் உள்ளது. அக்கட்டடத்தைச் சீரமைத்து புராதனக் கட்டடமாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடப் புனரமைப்பு ரூ.13.25 கோடி செலவில் தமிழ்நாடு பொதுப் பணித் துறைமூலம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதியிலிருந்து வழங்கப்படும்.

ஏ) கோயம்பேட்டில் அங்காடித் தொழிலாளர்களுக்கான இரவு தங்கும் விடுதி

கோயம்பேடு மொத்த அங்காடி வளாகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், உணவு

2020 மார்ச் 24]

விடுதியுடன்கூடிய தங்கும் விடுதி ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியானது விரைவில் தொடங்கப்படவுள்ளது. இத்திட்டமானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

8.6 போக்குவரத்துத் திட்டங்கள்

i) வெளிவட்டச் சாலை

வண்டலூரில் தொடங்கி மீஞ்சூர் வரையிலான வெளிவட்டச் சாலை திட்டமானது இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படுகிறது. இவ்வெளிவட்டச் சாலையானது, மூன்று முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள் (பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை, கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை மற்றும் திருச்சி தேசிய நெடுஞ்சாலை) ஆகியவற்றை இணைக்கும் வகையிலும், சென்னைப் பெருநகரப் பகுதியின் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நெறிப்படுத்தும் நோக்கத்துடனும் திட்டமிடப்பட்டுள்ளது. வெளிவட்டச் சாலை கட்டம்-I திட்டமானது 29.30 கி.மீ. நீளம் கொண்டு ரூ.1,089.40 கோடி செலவில் நிறைவுபெற்று, மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 28-8-2014 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. நெமிலிச்சேரியில் தொடங்கி மீஞ்சூர் வரை 33.1 கி.மீ. நீளம் கொண்ட வெளிவட்டச் சாலை கட்டம்-II ஆம் திட்டத்திற்கான செலவினம் ரூ.1,075.00 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டு, பணிகள் நிறைவுபெற்றன. இதில் 300 மீட்டர் நீளம் உள்ள பகுதி மட்டும் நீதிமன்ற வழக்கின் காரணமாக பணி நிலுவையில் இருந்தது. தற்பொழுது இறுதி விசாரணை நிறைவு பெற்று, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளதைத் தொடர்ந்து, நில உரிமையாளர்களுக்கு நீதிமன்ற ஆணைப்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வெளிவட்டச் சாலைத் திட்டம் விரைவில் முடிக்கப்பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்படும்.

வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள 50 மீட்டர் அகலமுள்ள நிலப்பரப்பைப் பயன்படுத்துவதற்காகவும், இதன் அருகிலுள்ள பகுதிகளை இணைத்து மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் காண ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆலோசகர் 5-3-2020 அன்று வரைவு இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையின் மேல் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2020 மார்ச் 24

ii) பெருந்திரள் துரித இரயில் திட்டம்-II விரிவாக்கம்

பெருந்திரள் துரித இரயில் திட்டம்-II விரிவாக்கம், வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை இரயில் நிலையம் வரை 5 கி.மீ. நீளத்திற்கு ரூ.732.89 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. புழுதிவாக்கம் மற்றும் ஆதம்பாக்கம் உயர்மட்ட இரயில் நிலையங்களை உள்ளடக்கிய 4.5 கி.மீ. நீளம் கொண்ட இரயில் பாதைக்கான கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதமுள்ள 0.5 கி.மீ. நீளம் இரயில் பாதை, நிலம் கையகப்படுத்தலை எதிர்த்து நில உரிமையாளர்கள் வழக்கு தொடர்ந்ததால் பணி நிலுவையில் இருந்தது. மாண்பமை உயர் நீதிமன்றத்தின் பல விசாரணைகள் மற்றும் இறுதி உத்தரவுகளுக்குப் பிறகு இழப்பீட்டை நிர்ணயிப்பதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளதுடன், இழப்பீட்டிற்கான இறுதி ஆணை 26-2-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 39 & 40–ல் பிறப்பித்துள்ளது. தனி நபர் தீர்ப்பாணைகள் நிறைவேற்றப்பட்டு, விரைவில் நிலம் கையகப்படுத்தப்படும். இத்திட்டம் 2021-ல் செயலாக்கத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iii) ஆலந்தூரில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் திட்டம்

ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையத்துடன் பேருந்து நிறுத்தத்தை இணைக்கும் ஆலந்தூர் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் திட்டம் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 4-2-2020 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டது.

iv) சென்னைப் பெருநகரப் பகுதிக்கான விரிவான போக்குவரத்து இயக்கத் திட்டம்

சென்னைப் பெருநகரப் பகுதிக்கான விரிவான போக்குவரத்து இயக்கத் திட்டம் அமைப்பதற்கான ஆய்வு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதியுதவியுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு 30 ஆண்டு கால போக்குவரத்து வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பல்வேறு போக்குவரத்து முதலீட்டுத் திட்டங்களைப் பரிந்துரைத்துள்ளது. இந்தப் போக்குவரத்து இயக்கத் திட்டமானது 2048 ஆம் ஆண்டு வரையிலான ஒரு போக்குவரத்து வரைபடத்தை தயாரித்துள்ளது,

இவ்வறிக்கையில் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்களாகச் சாலை மேம்பாடுகள், பேருந்து நிலையங்கள், சுரங்கப் பாதை மற்றும் உயர்மட்ட இரயில் சேவை, துணைக்கோள் நகரம், வட்டச் சாலை, பல்முனை போக்குவரத்துக் கூடம் போன்ற போக்குவரத்து முதலீடு திட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. இத்திட்டம் குறித்த ஆய்வின் பரிந்துரைகள் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

v) சென்னை விமான நிலையத்திலிருந்து செங்கல்பட்டு சுங்கச்சாவடி வரையிலான உயர்மட்டச் சாலை

சென்னை விமான நிலையத்திலிருந்து செங்கல்பட்டு சுங்கச்சாவடி வரை தேசிய நெடுஞ்சாலையில் (NH-45) நான்கு வழி உயர்மட்டச் சாலைக்கான சாத்தியக்கூறுகள் அடங்கிய இறுதி அறிக்கையை கலந்தாலோசகர் சமர்ப்பித்துள்ளார். ஆய்வு அறிக்கையானது தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு மேல்நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும்பொழுது, மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் திருத்தங்களை இணைத்து தயாரிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

8.7 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதியின்மூலம் நடைபெறும் திட்டங்கள்

கிளாம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு ரூ.393.74 கோடி நிதியினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒதுக்கியுள்ளது. மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு பார்க் டவுனில் மத்திய சதுக்கம், செனாய் நகர்—திரு.வி.க. பூங்கா ஆகிய இரயில் நிலையங்களில் உட்கட்டமைப்புகளுக்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்கெனவே வட்டியில்லா நிதியுதவி செய்துள்ளது. மேலும், சில திட்டங்களுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுக்கான குழுவிடம் நிதியைத் தருமாறு கோரியது. அக்குழுவானது 50 விழுக்காடு தொகையைத் தர இசைவு தெரிவித்துள்ளது மற்றும் மீதமுள்ள தொகை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செலவிடப்படவுள்ளது.

[2020 மார்ச் 24

9. சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் (Chennai Unified Metropolitan Transport Authority-CUMTA)

சென்னைப் பெருநகர திட்டப் பகுதியில் போக்குவரத்து முறைகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் ஆகியவற்றில் பல்வேறு துறைகள் ஈடுபட்டுள்ளன. தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளங்களை போக்குவரத்து மேம்பாட்டிற்காக திறம்பட பயன்படுத்த ஒருங்கிணைப்பு மற்றும் வழிமுறைபடுத்துதல் மிக அவசியமான ஒன்றாகும். இதைக் கருத்தில்கொண்டு, தமிழக அரசால் ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, 16-1-2019-லிருந்து செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுமத்திற்கான விதிமுறைகளும் ஜனவரி 2019-ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

9.1 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் போக்குவரத்துப் பிரிவைச் சார்ந்த தலைமைத் திட்ட அமைப்பாளர் (Urban) இந்தக் குழுமத்தின் உறுப்பினர்-செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து கீழ்க்காணும் ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளைச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது:

1. சென்னைத் தெருக்களின் வடிவமைப்பிற்கான வழிகாட்டுதல்கள் (Chennai Street Design Guidelines)
2. வாகன நிறுத்தக் கொள்கைகள் (Parking Policy)
3. பொது மற்றும் பயணிகள் குறித்த விவரங்கள் (Common Information and Passenger System)
4. பொதுப் பயணச்சீட்டு முறை (Common Ticketing System)
5. ஒருங்கிணைந்த பல்முனை போக்குவரத்து குறித்த ஆய்வு (Mutli-modal Integration)

9.2 சென்னைப் பெருநகரப் பகுதியில் போக்குவரத்து மேம்பாடுகளைச் சீரமைக்க உலக வங்கியின் உதவியுடன் ஒரு முழு அளவிலான அமைப்பை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. உலக வங்கியானது, சர்வதேச நிறுவனங்களான Transport For London (TfL) மற்றும் The Land Transport Authority of Singapore (LTS) ஆகிய நிறுவனங்களுக்கு இணையாக, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்துக் குழுமம் செயல்படுவதற்குத் தகுந்த தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது. மேலும், போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளை ஒருங்கிணைப்பதற்காகவும் மற்றும் நகரப் போக்குவரத்து நிதி அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

10. தமிழ்நாடு மாநில உறைவிட நிதி (Tamil Nadu State Shelter Fund)

அதிகரித்துவரும் நகர மக்கள்தொகைக்கு வாங்கத்தக்க வகையில் வீடுகள் வழங்குவதும் மற்றும் அடிப்படை வசதியற்ற பரவலான குடியிருப்புகள், குடிசைகள் மற்றும் குடிசைப் பகுதி போன்ற வாழ்விடங்கள் ஆகியவற்றைத் தடுக்க வழிவகைகள் காண்பதும் இன்று பெருநகரங்கள் எதிர்கொண்டு இருக்கக்கூடிய மிகப் பெரிய சவாலாக உள்ளது. தமிழகத்தின் நகர்ப் பகுதியில் வாங்கத்தக்க வகையில் தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கை சுமார் 14 இலட்சம் அலகுகளாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பொதுமக்கள் குறிப்பாக நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் பயன்பெறும் வகையில் வீட்டு வசதிகளை அளிப்பதில் அரசின் முதலீடு ஒரு மிக முக்கிய பயன்தரக்கூடியதாக அமையும்.

10.1 நகர்ப்புற ஏழை மக்களை மறுகுடியமர்த்துவதற்கான வீட்டு வசதித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக "தமிழ்நாடு அரசு மாநில உறைவிட நிதி"-ஐ ஏற்படுத்தியுள்ளது. குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் ஆகியோர்களுக்கு வாங்கத்தக்க விலையில் வீடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வீட்டு வசதிகள் வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 135, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [கு.மா-1(2)] துறை, நாள் 21-7-2017-ல் இரண்டு அடுக்குடன்கூடிய, 'உறைவிட நிதியை' அரசு ஏற்படுத்தியது. அதன்படி, ஒருவர் கட்டட வளர்ச்சி மேற்கொள்ளும்போது அவர்களிடத்தில் உறைவிடக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு, அந்நிதி உறைவிட நிதி அடுக்கு-1-ல் செலுத்தப்பட வேண்டும். உறைவிடக் கட்டணங்களை வசூலிக்கவும், தொகுக்கவும் சட்டபூர்வமான அங்கீகாரம் அளித்திடும் வகையில், ஜனவரி 2018-ல் நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. உறைவிடக் கட்டணங்கள் வசூல் செய்வதற்கான வழிவகைகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019 ஆம் ஆண்டிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில உறைவிட நிதி அடுக்கு-1-ன்கீழ் பிப்ரவரி 2020 வரை ரூ.183.20 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. உறைவிடக் கட்டணம் வசூலிக்க, அரசாணை (நிலை) எண் 31, வீட்டு வசதித் துறை, நாள் 31-1-2020-ல் அரசு அறிவிக்கை வெளியிட்டது.

[2020 மார்ச் 24

முடிவுரை

வீட்டு வசதி, மக்களின் இன்றியமையாத மற்றும் அடிப்படைத் தேவைகளுள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலத்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வீட்டு வசதித் துறையின் வளர்ச்சிக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதன்மூலம் இத்துறையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைவதற்கு தமிழக அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி, “ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வீடு” எனும் இலக்கை தமிழக அரசு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைய வெவ்வேறு வருமானப் பிரிவில் உள்ளவர்களுக்கு போதுமான உறைவிடம் வழங்கும் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தி வருகின்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VI

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முகவுரை

"தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு"

(திருக்குறள் 634)

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் "அம்மா" அவர்களின் சீரிய கனிவான தமிழகத்தை நாட்டிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கு மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதியுடன்கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டின் அனைத்துக் குறியீடுகளிலும் வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக்கூடிய முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை குறிக்கோளாகக் கொண்டு இத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல், மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம் மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்து ஆய்வு செய்தல் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் ஆரம்பகால பணிகளாக இருந்தன.

தற்பொழுது, வரவு-செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்குப் பதிலாக நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், முதன்மையான நோக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறை நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கு, வருங்காலத்தில் உலகத் தரத்திற்கு சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை அடைய மற்ற துறைகளுடன் இணைந்து செயலாற்றுகிறது. மேலும், வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள்

அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்தத் தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்துதல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகிய மாற்றங்களை உருவாக்குவதே இத்துறையின் முதன்மைப் பணியாகும்.

முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநில அளவிலான பல்வேறு துறைகள் சார்ந்த குழுவின் உறுப்பினராக இருந்து செயல்படுகிறது.

இத்துறை நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மற்றும் பிரகதிக்கான மாநில அரசின் முகமைத் துறையாகும். பிரகதியின்கீழ் (PRAGATI-Pro-Active Governance and Timely Implementation) மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடித் திட்டங்களை நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்கள் குறித்த நடப்பு நிலைகள் பிரகதி இணைய வாயிலில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மேலும், அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளையும், துறைகளிடமிருந்து பெறப்படும் பொருண்மைகள் குறித்த நடப்பு நிலையைப் பிரகதியின்கீழ் (PRAGATI) பதிவேற்றம் செய்கிறது.

மாநிலத் திட்டக் குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளுக்கான ஆலோசனைகளையும் வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி வழியாக ஆதாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்குத் திட்டச் செயலாக்கம் அளிக்கிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் மேற்பார்வையிடப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மற்றும் சில புதிய சிறப்பு முயற்சிகளாக (New Special Initiatives) முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/23-இல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030-ல் அடைய மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;

ii. வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்று மாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;

iv. நீண்டகால செயல் உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;

v. நித்தி ஆயோக் (NITI Aayog) அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

vi. தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிருவகித்தல் மற்றும் கண்காணிப்பதன் வாயிலாக தொலைநோக்குத் திட்டம் தமிழ்நாடு 2023-ன் இலக்குகளின் ஒன்றான தமிழகத்தை நாட்டிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குதல்;

vii. பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும்பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்;

viii. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றாக, 2015-2016 ஆம் ஆண்டு முதல் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;

ix. பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலாளர் அவர்களால் சீராய்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல்;

[2020 மார்ச் 24

x. பல்வேறு அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xi. மாவட்ட திட்டக் குழுவின் ஓர் அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களின் தயாரிப்பினை மேற்பார்வையிடுதல்;

xii. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xiii. இருபது அம்சத்திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம் குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் தொகுத்தல்;

xiv. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைமூலம் பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்து புள்ளிவிவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;

xv. வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாக மதிப்பீடு செய்தல்;

xvi. மாநிலத் திட்டக் குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான நிருவாக வசதிகள் செய்தல்;

xvii. சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் 'மெட்ரோ இரயில் திட்டம்' போன்ற புதிய மற்றும் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும்

xviii. புதிய சிறப்பு முயற்சிகளாக முக்கியமான உள் கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

2020 மார்ச் 24]

2.0 துறையின் செயல்பாடுகள்

2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

முகவுரை

செப்டம்பர் 2015–ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட 193 நாடுகள் இந்த உலகை 2030 ஆம் ஆண்டிற்குள் மாற்றி அமைப்பதற்காக நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அதற்கேற்ப இத்திட்டம் 1-1-2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகளானது எய்துவதற்கு இலட்சியம் நிறைந்த ஒரு முழுமையான திட்டமாகும். 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள். 300 உலகளாவிய குறிகாட்டிகளைக் கொண்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் அனைத்துப் பொருளாதார சமூக சுற்றுச் சூழலியல் மற்றும் நிருவாகம் தொடர்பான வளர்ச்சி சவால்களை தீர்ப்பதற்கான ஒரு திட்டமாகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் 5 முக்கிய கொள்கைகள்

மக்கள்

வறுமை மற்றும் பசியை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் பரிமாணங்களிலும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அனைத்து மனிதர்களும் கண்ணியத்திலும், சமத்துவத்திலும் ஆரோக்கியமான சூழலிலும் தங்கள் ஆற்றலை நிறைவேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துதல்.

புவி

புவியினை சீரழிவிலிருந்து பாதுகாக்க நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி அதன் இயற்கை வளங்களை நிலையான முறையில் நிருவகித்தல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அவசர நடவடிக்கை எடுப்பதன்மூலம் இக்கால மற்றும் எதிர்கால தலைமுறையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

செழுமை

அனைத்து மனிதர்களும் வளமான, நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதனை உறுதி செய்தல் மற்றும்

[2020 மார்ச் 24

பொருளாதார, சமூக, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை இயற்கையுடனான நல்லிணக்கத்துடன் நடைபெறுதல்.

அமைதி

பயம் மற்றும் வன்முறையற்ற அமைதியான, நியாயமான அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உருவாக்குதல். அமைதியில்லாமல் நிலைத்த வளர்ச்சியினையும், நிலைத்த வளர்ச்சியில்லாமல் அமைதியையும் எட்ட இயலாது.

கூட்டாண்மை

உலகளாவிய ஒற்றுமையை வலுப்படுத்தும் மனப்பான்மையை அடிப்படையாகக்கொண்ட நிலையான அபிவிருத்திக்கான புத்துயிர் பெற்ற உலகளாவிய கூட்டாண்மை குறிப்பாக ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களின் தேவைகள், அனைத்து நாடுகள், பங்குதாரர்கள் மக்களின் பங்களிப்பின்மூலம் இந்த வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்தத் தேவையான வழிமுறைகளைத் திரட்டுதல்.

எவர் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவருக்கும் வளர்ச்சியை உறுதி செய்தலே நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முக்கிய அம்சமாகும்.

உலக அளவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகளின் பொது மன்ற மாநாடு கூட்டப்படுகிறது. அனைத்து நாடுகளின் அடைவுகள் தரவுகள் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் 2019-இல் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியா உலக அளவில் 162 நாடுகளுக்கிடையே தரவரிசைப் பட்டியலில் 115-வது இடத்தில் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு இத்தர வரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. இதுதவிர ஒவ்வொரு நாடும் தாம் மேற்கொண்ட முயற்சிகளையும் அடைந்த முன்னேற்றத்தினையும், தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் அவையின் உயர் நிலை அரசியல் குழுவில் சமர்ப்பிக்கிறது. ஐக்கிய நாடுகளின் இம்முயற்சி உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மேற்கொண்ட முயற்சிகளை மற்ற நாடுகளுக்குத் தெரிவிக்கும் வாய்ப்பாக அமைகிறது.

2020 மார்ச் 24]

இந்தியாவும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

இந்தியாவில் இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் முகமையாக நித்தி ஆயோக் அமைப்பு செயல்படுகிறது. நித்தி ஆயோக் அமைப்பு இந்தியாவிற்கான தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கையை தயாரிக்கிறது. நித்தி ஆயோக் அனைத்து இந்திய மாநிலங்களுடன் இணைந்து நீடித்த வளர்ச்சி இலக்குகளை நம் நாடு அடைவதற்கு பல செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. 169 குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய அளவிலான 306 குறிகாட்டிகள் கண்டறியப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் அமைப்பு 2018-ல் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா அடிப்படை அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 13 இலக்குகளில் 39 குறிக்கோள்களுக்கான 62 குறிகாட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. டிசம்பர் 2019-ல் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டு அறிக்கை 2.0, 16 இலக்குகளின் 54 குறிக்கோள்களுக்கு உட்பட்ட 100 குறிகாட்டிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அறிக்கைகளிலும் தமிழ்நாடு தரவரிசைப் பட்டியலில் 3-வது இடத்தில் உள்ளது. இதற்கான தரவுகள் மத்திய அமைச்சகங்களின் இணைய வாயில்களிலிருந்தும், இரண்டாண்டு/மூன்றாண்டு/ஐந்தாண்டு கால இடைவெளிகளில் நடத்தப்படுகிற மாதிரி ஆய்வுகளிலிருந்தும் பெறப்படுகின்றன.

மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகம் பல்வேறு குறிகாட்டிகளுக்கான தரவுகளை சேகரித்து இதற்கென நிறுவப்பட்டுள்ள ஓர் இணையதளத்தில் அட்டவணைப்படுத்தி வருகிறது.

முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும், தொடர்ந்து மேம்பாடு அடைவதற்கும், தொடர்ந்த கண்காணிப்பும், கூட்டு முயற்சியும் இன்றியமையாதவை. இந்தியா நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாநிலத்தின் பங்கேற்பும் அவசியமானதாகும்.

தமிழ்நாடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

“மக்களால் நான், மக்களுக்காக நான்” என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கைபடி, நீடித்த வளர்ச்சி இலக்குகளை

நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. 2019 சுதந்திர தின உரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாடு பல்வேறு திட்டங்களின் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உறுதி பூண்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆய்வு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 28-1-2020 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்துத் துறைகளும் தத்தம் கொள்கை விளக்கக் குறிப்பில் தமக்குத் தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விளக்கமும் இடம்பெற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டனர். மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முதல் இடத்தை பெறுவதோடு, உலக அளவில் தனது தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் அனைத்துத் துறைகளும் ஒன்றிணைந்து தமது செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டது. இதற்குத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தினைக் கண்காணிப்பதற்கென்றே துறை சார்ந்த ஆய்வுக் கூட்டங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நடத்தப்படும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள், உலக நாடுகள் முழுமையாக எய்துவதற்கு, இந்தியாவும் அதனை முழுமையாக அடைய வேண்டும். இந்தியா இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழகம் அனைத்து இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடைவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்—செயல்பாட்டிற்கான அமைப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தமிழ்நாடு அரசு தகுந்த நிருவாக அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அ. அரசு தலைமைச் செயலர் தலைமையில் மற்றும் துறைச் செயலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர் அதிகாரக் குழு இதுவரை 3 முறை கூடி மாநிலத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்துள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவை மாதந்தோறும் அரசு தலைமைச் செயலரால் நடத்தப்படும் அரசு செயலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

ஆ. எட்டு கருப்பொருட்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பணிக் குழுக்கள் தொடர்புடைய துறைச் செயலர்களின் தலைமையின்கீழ் இதர துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் உயர் அதிகாரக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இப்பணிக் குழுக்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிவரன்முறைக்கேற்ப பலமுறை சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இ. 2019 ஆம் ஆண்டு நடந்த துறைகளுக்கான மானியக் கோரிக்கை விவாதங்களின்போது சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து துறைதோறும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் மாநிலத் திட்டக் குழுவிற்கு அவை குறித்த தரவுகளும், உள்ளீடுகளும் அளிப்பதற்கும் ஏதுவாக துறைகளுக்கான நீடித்த வளர்ச்சி அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஈ. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாவட்டங்கள் அடைவதை உறுதி செய்ய மாவட்டந்தோறும் இதற்கென தனி அலகுகள் ஏற்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர்களின் தலைமையில், மாவட்ட அளவிலான ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் ஒரு செயற்குழுவும், மாவட்ட நிலை அலுவலர்களைக்கொண்ட மாவட்ட அளவிலான அலகும் அமைப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்டங்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

உ. ஊராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்திட இந்த ஆண்டு முதலமைச்சரின் கிராம தன்னிறைவு வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் ரூ.100 கோடியில் 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இது கிராம அளவில் நிலவும் இடைவெளிகளை நிரப்புவதற்கு பயன்படுத்தப்படும்.

கண்காணிப்பு

உலகளாவிய குறிகாட்டிகளும், ஐக்கிய நாடுகள் அவையின் ஆண்டு அறிக்கையும், நாடுகளின் தரவரிசைப் பட்டியலும்

முன்னேற்றத்தினை அளவிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தேசிய அளவில் நிதி ஆயோக் அமைப்பு ஆண்டுதோறும் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான இந்திய குறியீட்டு அறிக்கைகள் வாயிலாக முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

எவை கண்காணிக்கப்படுகிறதோ அவையே கவனிக்கப்படுகிறது. எவை மதிப்பிடப்படுகிறதோ அவையே கவனத்தை ஈர்க்கிறது. மேலும், பங்கேற்பாளர்களிடையே போட்டியை ஏற்படுத்தி முன்னேற்றத்தினை விரைவுபடுத்த உதவி புரிகிறது என்பது கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

இணையதள கண்காணிப்புப் பலகை

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதள கண்காணிப்புப் பலகை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வடிவமைக்கப்பட்டு, பொது பயன்பாட்டிற்காக 7-11-2019 அன்று மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களால் நிறுவப்பட்டது. இது, நீடித்த வளர்ச்சி இலக்கின்கீழ் அரசின் பல்வேறு திட்டங்களின் தரவுகளின் கண்காணிப்பிற்கும் தரவுகளை காட்சியாகக் காணும் வகையிலும் தரவுகளை கையாளும் முயற்சியாகும். இந்த இணைய கண்காணிப்புப் பலகையின் வாயிலாக, இலக்குகள்/குறிக்கோள்கள்/குறிகாட்டிகள் ஆகியவற்றின் நிகழ் நேர முன்னேற்றத்தைக் காண இயலும்.

இந்த இணையதள கண்காணிப்புப் பலகையில் தொடர்ந்து தரவுகளை உள்ளீடு செய்வது அனைத்துத் துறைகளின் குறிப்பாக துறைகள்தோறும் ஏற்படுத்தப்பட்ட அலகுகளின் பணியாகும். இந்த இணையதள கண்காணிப்புப் பலகையில் துறைகள் தாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளையும் பதிவிட இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதள கண்காணிப்புப் பலகை தொடர்ந்து மெருகேற்றப்பட்டு அதிக தகவல்களை அளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்வாயிலாக அரசாங்கத்தின் கொள்கை முடிவுகள் எடுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த ஆர்வம் கொண்டோர் எளிய வகையில் ஆய்வு செய்யும் வண்ணம்

2020 மார்ச் 24]

புதுமையான காட்சிப்படுத்துதலையும், தரவுகளை தேடுவதற்குத் தேவையான கலன்களையும் கொண்டுள்ளது.

மாவட்ட அளவில் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கும் வகையில் மாவட்ட அளவிலான தரவுகளையும் அளிக்கிறது. இதனைத் தொடர்ந்து வட்டார ஊராட்சி அளவிலான தரவுகளை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மாவட்டங்கள், வட்டாரங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்தினை அளவிட ஏதுவாக இப்பணி அமையும். தற்போது, மாவட்ட, வட்டார குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்திடும் வகையிலான முதலமைச்சரின் கிராம தன்னிறைவு வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்திடும் முகமாக ஊராட்சி அளவிலான குறிகாட்டிகள் இனம் காணப்பட்டு வருகின்றன.

பன்னாட்டு ஜெர்மன் கூட்டமைப்புடன் (GIZ) இணைந்து நகர்ப்புறங்களுக்கான குறிகாட்டிகள் வரையறை இறுதி செய்யப்படும்.

பகுப்பாய்வும் அறிக்கைகளும்

பல்வேறு நிலையிலான குறிகாட்டி வரையறைகளும் அவற்றிற்கான தரவுகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, முன்னேற்றம் அடையப்பட வேண்டிய துறைகள் இனம் காணப்பட வேண்டியது இன்றியமையாததாகும். தொடர்புடைய துறைகளே இதனைச் செய்துக்கொள்ள இயலும். இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான ஒருங்கிணைப்பு மையம்மூலம் அறிக்கைகள் தயார் செய்து, தொடர்புடைய துறைகளின் முயற்சிகளுக்கு உறுதுணை புரியும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்ற அறிக்கை

பணிக் குழுக்கள் அளித்த முன்னேற்ற அறிக்கைகளின் அடிப்படையில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றம் குறித்த 2015-2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கை தயார் செய்யப்பட்டு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

[2020 மார்ச் 24

திட்டங்களை இலக்குகளுடன் ஒருங்கிணைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, அனைத்து சார்நிலைத் துறைகளில் உள்ள மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இது திட்டங்களின் தாக்கத்தை நீடித்த வளர்ச்சி இலக்கின் கண்ணோட்டத்தின் வழியே அறிந்திட வழிவகை செய்கிறது.

திறன் வளர்ப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அறிமுக நிலையிலேயே, 2017 ஆம் ஆண்டில் அனைத்துப் பணிக் குழுக்களாலும் தத்தமது உறுப்பு அலுவலர்களுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தால், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. திறன் வளர்ப்பு ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். ஏனெனில், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வு முழுமையாக புரிந்துக்கொள்ளப்பட்டு, துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களோடு ஒன்றிணைத்தல் அவசியம் என்பதால், மாவட்ட, வட்டார, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்ட இயலும்.

அனைத்துத் துறைகளும் தமக்கான தகவல் கல்வி தொடர்பு திட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த பயிற்சித் திட்டத்தினை ஒருங்கிணைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டியவை என்றாலும், அவற்றுள் சில குறிக்கோள்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், அவற்றின் தீவிரத் தன்மை மற்றும் அவற்றின்மீது உடனடியாக கவனம் செலுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்து இவை 2020 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டியவை என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் சீர்கேடு, தண்ணீர் பற்றாக்குறை, பேரிடர்களால் ஏற்படும் இழப்புகளைத் தணித்தல், சாலை விபத்துக்களால் நேரிடும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், தாவர விலங்கின வகைகளைத் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவை அதனுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

2020 மார்ச் 24]

தமிழக அரசு இவற்றிற்கு முன்னுரிமை அளித்து இதற்கான பணிகளை ஏற்கெனவே துவக்கியுள்ளது. பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து இக்குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பேரிடர் மேலாண்மை குறித்த சென்டாய் மாநாட்டு வரையறையின் வழிகாட்டுதல்படி, மாநில அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இதுபோன்று, சாலை விபத்துகளினால் நேரிடும் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மாநில குறிகாட்டிகள் வரையறை

உலக அளவிலான குறிகாட்டிகளின் (232) அடிப்படையில், நாட்டின் முன்னேற்றத்தினை அளவிடும் வகையில் தேசிய அளவிலான குறிகாட்டிகள் (306) வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத்தின் முன்னுரிமைகளை உள்ளடக்கி, மாநிலத்திற்கான தனித்துவமான குறிகாட்டிகளையும் சேர்த்து, மொத்தமாக 388 மாநில குறிகாட்டிகள், பணிக் குழுக்கள் மற்றும் பல்வேறு தொடர்புடைய துறைகளால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

தரவுகளைப் பெறுதல், பல்வேறு பணிகளுக்கான துறைகளை ஒருங்கிணைத்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஏற்படுத்தக்கூடிய நீண்ட கால விளைவுகளைக் குறித்த புரிதல் மற்றும் திட்டங்களின் விளைவுகளின் அடிப்படையில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகிய நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் உள்ள சில முக்கிய சவால்களாகும்.

தமிழகம், ஏற்கெனவே பல்வேறு துறைகளில் முன்னணியில் உள்ள சூழ்நிலையில், நீடித்த வளர்ச்சி இலக்கின் குறிகாட்டிகளின் வாயிலாக அவற்றின் செயல்பாடுகளை அளவிடுதல், வெற்றியடைந்த திட்டங்களை பகிர்தல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கினை தமிழகம் எய்துவதை உறுதி செய்திட தேவையான ஒருங்கிணைப்பினைக் கொண்டுவருதல் ஆகிய முயற்சிகளை இத்துறை மேற்கொள்கிறது.

2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

8-8-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 2-9-2014 ஆம் நாளிட்ட அரசாணை நிலை

[2020 மார்ச் 24

எண் 81-ல் ஆணை வெளியிடப்பட்டு ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் (Abdul Latif Jameel- Poverty Action Lab) (J-PAL-SA) மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையில் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும்.

அரசுத் துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்தி, நடப்பு மற்றும் புதிய திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (J-PAL-SA) தமிழக அரசிற்கு உதவி செய்து வருகிறது.

தலைமைச் செயலாளரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடந்த ஐந்து கூட்டங்களில், எட்டு முன்னோடி ஆய்வுகளும், வாய்ப்பு அறியும் ஆய்வு ஒன்றும், முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வு ஒன்றும் முடிக்கப்பட்டு விட்டன. ஐந்து சீரற்ற கட்டுப்பாட்டுச் சோதனை (RCT) மதிப்பீட்டுத் தாக்கம் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இதுபோன்று இரண்டு ஆராய்ச்சிகள் நடைபெறவுள்ளது.

புத்தாக்க முயற்சிகள் மற்றும் முன்னேற்றத்திற்கான உத்திகளின் அடிப்படையில், ஆய்வுகளில் கண்டறிந்துள்ளபடி, அவ்வாய்வுகளின் முடிவுகளும், பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுவினருக்கும் மற்றும் தொடர்புடைய துறைகளிடமும் கொடுக்கப்படுகின்றன.

தற்போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு,

2020 மார்ச் 24]

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக் கல்வி, வணிக வரி மற்றும் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் ஆகிய துறைகளுக்கு கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

- **முக்கிய சாதனைகள்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜே-பால் உடனான தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டு, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்க, மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்க பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசாங்கம் இப்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைகள்; சமூக நலன் மற்றும் சத்துணவு துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது மற்றும் அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்துகொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மைத் திட்ட (எம்.ஆர்.எம்.பி.எஸ்.) ஆய்வு, தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான திட்டத்தைச் செயல்படுத்துவதை மேம்படுத்துவதற்காக அதன் தரவு சேகரிப்பு மற்றும் மேலாண்மை முறையை வலுப்படுத்த சுகாதாரத் துறையின் பல மேம்பாடுகளுக்கு வழிவகுத்தது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஜே-பால் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் முதியோர் நிலைக்குறித்த முதற்கட்ட அடிப்படைக் குழு கணக்கெடுப்பு, மதிப்பீடுகளைக் கணக்கீடு செய்வதன்மூலம் முதியோரில் பெரும்பான்மையானோர் தனிமையில் வாழ்வதற்கான சவால்களை எதிர்கொள்ள மற்றும் தலையீடுகளை மதிப்பீடு செய்ய அரசாங்கத்தைத் தூண்டியுள்ளது. ஜே-பால் உடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் கடுமையான மதிப்பீட்டின்மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு புதுமையான கணித விளையாட்டுத் திட்டத்தை இயக்குவதன்மூலம் சிறுவயதிலிருந்தே கணிதத் திறன்களை வலுப்படுத்த பள்ளிக் கல்வித் துறை முயன்று வருகிறது. அரசு கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் அரசாங்கம் இரண்டு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டது.

[2020 மார்ச் 24

அ. நிரல் மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன்மூலம் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பை உருவாக்குதல்.

ஆ. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதற்கு நிருவாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவு பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்துதல்.

தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்தும் முன்பு அவற்றின்மீது கள ஆய்வு மேற்கொண்டும், விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும் இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J-PAL-SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது. இதுபோன்று, (J-PAL-SA) ஆராய்ச்சிக் குழுவினருடன் இணைந்து கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகளை அனைவரும் பெறத்தக்க வீட்டு வசதி, இடைநிலைக் கல்வி, ஊட்டச்சத்து ஆகிய தலைப்புகளில் நடத்துவதற்கு பிற துறைகள் திட்டமிட்டு வருகின்றன.

2.3 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29-4-2003 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 31-ல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒரு பகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது சிறப்பு முயற்சிகள் துறையின் நோக்கமாகும்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 2-11-2006 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 146-ல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை "சிறப்பு முயற்சி" திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள்

2020 மார்ச் 24]

வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வுநிலை அடைந்து விட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18-1-2007 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 10-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் “சிறப்பு முயற்சி” திட்டமாக அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

2.4 புதிய சிறப்பு முயற்சிகள்

அரசாணை நிலை எண் 23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (சி.மு.) துறை, நாள் 19-3-2018-ல் புதிய சிறப்பு முயற்சிகள் என்ற நோக்கத்திற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

புதிய சிறப்பு முயற்சிகள் தொடர்பாக கீழ்க்காணும் இரண்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1) பெரிய திட்டங்களுக்கான நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றங்களில் தற்போதைய சட்ட நடைமுறைகளால் ஏற்படும் காலதாமதத்தினை கணிசமான அளவு குறைத்தல்;

> இதன்படி நில எடுப்பு நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) சென்னைக்கு அருகாமையில் உள்ள நீர் நிலைகளை தண்ணீர் வழங்குதலுக்காக மாற்றியமைத்தல்;

> இதன்படி ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

2.5 இருபது அம்சத் திட்டம்-2006

இருபது அம்சத் திட்டமான வறுமை ஒழிப்புக்கான தொகுப்புத் திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்-2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினைக் குறைத்தல், வேலைவாய்ப்பினைப் பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப் பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம், 2006-ன்கீழ் வெவ்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து, தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டம் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. துறைகளிடமிருந்து பெறப்படும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு மத்திய அரசின் புள்ளி இயல் துறைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது காலாண்டு அறிக்கை மத்திய அரசின் புள்ளி இயல் துறைக்கு 31-1-2020 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள்/நிறுவனங்கள் பின்வருமாறு:

1. மாநில திட்டக் குழு
2. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை
3. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

2020 மார்ச் 24]

4. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் **(CMRL),** ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

3.1 மாநில திட்டக் குழு

மாநில திட்டக் குழு தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. மாநில திட்டக் குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஓர் ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு, மாநிலத்தின் பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது. மாநில திட்டக் குழு துணைத் தலைவர் அவர்களின்கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாக நியமித்து செயல்படும். அரசு தற்பொழுது மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களை நியமித்துள்ளது. அரசுச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசுச் செயலர், நிதித் துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல்சார் உறுப்பினர்களாவர். மாநில திட்டக் குழுவின் உறுப்பினர்-செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

மத்திய திட்டக் குழு, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது திட்டம் மற்றும் திட்டம் சாரா வகைப்பாடுகளைக் கைவிட்டு மத்திய திட்டக் குழு அமைப்பினை நித்தி ஆயோக் அமைப்பாக மாற்றியுள்ளது. இந்த அணுகுமுறைக்கு ஏற்ப, மாநில திட்டக் குழுவிற்குப் பதிலாக அந்த அமைப்பை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவாக (State Development Policy Council) மாற்றி திருத்தியமைப்பதற்கான செயல் நடைபெற்று வருகிறது.

3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

கொள்கை விளக்கம், கொள்கை ஒத்திசைவு, திட்டம் மற்றும் செயலாக்க அறிக்கை தயாரிப்பு, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் ஆகியவை மாநில திட்டக் குழுவின் முக்கியப் பணிகளாகும். இவற்றின் விரிவாக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

i) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும்பொழுது அனுப்புதல்;

ii) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக்

[2020 மார்ச் 24

கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்;

iii) துறைகளுக்கிடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்குமுறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்;

iv) கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும், அவற்றை செயல்படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்;

v) தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள்-2030-ல் (2020 மற்றும் 2025) குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்;

vi) தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 மற்றும் ஐக்கிய நாட்டு பொது சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2020, 2025 மற்றும் 2030-ல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிதிக் குழுவின் கால அளவு ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் துறைச்சார்ந்த செயல்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்;

vii) அரசு சார்ந்த வல்லுநர்கள் மற்றும் தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்;

viii) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின்மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில்முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்;

ix) மாநிலத்திற்குத் தேவையான குறியீடுகள் (எ.கா.) மனித வள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர

குறியீடுகள் பன்னாட்டு மற்றும் தேசிய தரத்தில் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

x) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டு வரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்த ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விளக்கங்களை அரசுக்கு வழங்குதல்;

xi) நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. மலை/வனப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்

ஈ. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் செயல்பாடுகள்

xii) இந்திய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 73 மற்றும் 74-ன்படி விரிவாக்கப்பட்ட அத்தியாவசியமான திட்டங்கள், வழிமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து கருத்துரு அனுப்புதல்;

xiii) இதேபோல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு தனித்துவமான திட்டமாகும். சமூகப் பொருளாதார வளர்ச்சியை அளவிடக்கூடிய காரணிகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைக் குறைத்து, மனித மேம்பாட்டு வளர்ச்சியை உயர்த்துவதே இதன் முதன்மைக் குறிக்கோளாகும். மேலும், மாவட்ட அளவிலும், வட்டார, நகரப் பகுதிகளிலும் மனித மேம்பாட்டு வளர்ச்சி நிலையைக் கண்காணிக்கவும், அதனை உயர்த்துவதற்கும் தேவையான திறனை வளர்த்து அனைவரும்

[2020 மார்ச் 24

பயனடையக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதும் இதன் குறிக்கோளாகும்.

தனி நபர் வருமானம், வேலைவாய்ப்பு, வறுமை, சுகாதாரம், கல்வி, பாலின சமத்துவம் ஆகிய காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய பகுதிகள் கண்டறியப்பட்டன.

- கிராமப் பகுதிகளில் பின்தங்கியவையாக 105 வட்டாரங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- மேலும், 105 பின்தங்கிய வட்டாரப் பகுதிகளில் அடங்கியுள்ள பேரூராட்சிகளும் அவற்றுள் மக்கட்தொகை அடர்த்தி அதிகமுள்ள பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் நான்கில் ஒரு பங்கு வார்டுகளில் பெரும்பான்மையாக குடிசைவாழ் மக்கள் உள்ள பின்தங்கிய பகுதிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

திட்டம் தயாரித்தல்

பின்தங்கிய வட்டாரங்களுக்கான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதற்கான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படுகின்றன. பல்வேறு மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய வட்டாரங்களில் நிலவும் பொதுப் பிரச்சினைகளுக்கான தீர்வு காண ஏதுவாக துறைகள் வாயிலாகவும் திட்டங்கள் கண்டறியப்படுகின்றன.

திட்டங்களுக்கான ஒப்புதல்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி அமைக்கப்பட்ட அதிகாரம் பெற்ற குழுவால் கடந்த 2019-2020 ஆம் ஆண்டு வரை ரூ.567.62 கோடி மதிப்பிலான 733 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த 733 திட்டங்களில், ரூ.50 இலட்சத்திற்கு மேல் 282 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் காரணிகளை மேம்படுத்துகின்றன:

2020 மார்ச் 24]

வருமானம்	*ரூ.89.37 கோடி மதிப்பீட்டில் 128 திட்டங்கள்*
வறுமை	*ரூ.73.90 கோடி மதிப்பீட்டில் 109 திட்டங்கள்*
வேலைவாய்ப்பு	*ரூ.57.18 கோடி மதிப்பீட்டில் 126 திட்டங்கள்*
கல்வி	*ரூ.70.61 கோடி மதிப்பீட்டில் 89 திட்டங்கள்*
சுகாதாரம்	*ரூ.226.08 கோடி மதிப்பீட்டில் 215 திட்டங்கள்*
பாலின சமத்துவம்	*ரூ.50.48 கோடி மதிப்பீட்டில் 66 திட்டங்கள்*

ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பண்ணையம், தையல் பயிற்சி அளித்து ஆயத்த ஆடைகள் தயார் செய்தல், சிறுதானியங்கள் பதனம் செய்தல், கயிறு தயாரித்தல், நரிக்குறவர்களுக்கு மணிமாலை தயாரிக்க நிதியுதவி அளித்தல் போன்ற திட்டங்கள் வாயிலாக அம்மக்களுக்கு வருடம் முழுவதும் வருமானத்தை பெருக்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் கல்வி பெறுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கு பிழைப்புதேடி இடம் பெயராமல் கிராமத்திலேயே அவர்களுக்கு நல்ல வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப வருமானமும் கணிசமாக உயர்ந்துள்ளது.

கிராம உட்கட்டமைப்பு வசதிகளான சாலை அமைத்தல். மேலும், அவர்களின் போக்குவரத்திற்காக சிற்றுந்து மற்றும் பாரம் சுமக்கும் வண்டிகள் ஆகியவற்றிற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இங்கு வசிக்கும் கிராம மக்கள், மருத்துவமனை, கல்வி, சந்தை மற்றும் நகர்புறங்களில் வேலைக்கு செல்வது சாத்தியமாகி உள்ளது.

மேல்நிலை வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று பொறியியல்

கல்லூரிகளிலும் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கஸ்தூரிபா காந்தி உண்டு உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்ததன்மூலம் கல்வி நிலையில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் உள்ள சிறுமிகளின் இடைநிற்றல் தவிர்க்கப்பட்டு, தற்போது அதிக சிறுமிகள் படித்து வருகிறார்கள். இதன்மூலம் அவர்கள் படிப்பதற்கு நல்ல சூழல் உருவாகியுள்ளது. அதேபோல் இந்த வசதிகள் எல்லா அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் மற்றும் வனத் துறை பள்ளிகளிலும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதால், அப்பள்ளிகளில் கணிசமான அளவில் மாணவ, மாணவியரின் சேர்க்கை அதிகமாகி உள்ளது.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்மூலம் கிராம மக்களின் நல வாழ்வினை மேம்படுத்தும்பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு அதிக அளவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராம மக்களின் சிசு இறப்பு, பேறுகால இறப்பு, இரத்த சோகை இவற்றின் விகிதம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர் மருத்துமனைக்கு அருகிலேயே தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பது மேலும் எளிதாகியுள்ளது. குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல், குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் வாயிலாக குழந்தைகளின் உடல் நல குறியீட்டுக் காரணிகள் மேம்பாடு அடைந்துள்ளன.

பெண் குழந்தைகளுக்கு கல்வி, நல வாழ்வு, இரத்த சோகையை கட்டுபடுத்துதல் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மூலமாக பாலின வேற்றுமை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

மலை/வனப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் உதவிபெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர், மலை/வனப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் ஒன்றினை (சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ்) 2017-2018 ஆம் ஆண்டில் அறிவித்துள்ளார்.

இச்சிறப்பு திட்டத்தின்கீழ் மலை/வனப் பகுதிகளின் வளர்ச்சிக்காக 2019-2020 ஆம் ஆண்டு வரை 55 திட்டங்கள் ரூ.98.03 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் வாயிலாக மலை/வனப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் வாழ்விடங்களில்

2020 மார்ச் 24]

தேவையான சாலை இணைப்பு வசதி, அடிப்படை வசதிகள், பள்ளிக்கான உட்கட்டமைப்பு வசதிகள், மதிப்பு கூட்டப்பட்ட மரம் தவிர்த்த பிற வன தயாரிப்புகள், வேளாண் பொருட்கள், மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள், பழங்குடியினர் பள்ளிகளில் இணை கல்விசார் செயல்பாடுகள், மாணவியருக்கான விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

"தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ்நாட்டை உருவாக்குவதாகும். இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 8-8-2014 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக, "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக் குழுவில் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் இடர்பாடுகளைக் களைவதற்காக பல்வேறு புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, அரசு ஏற்கெனவே நடைமுறையிலிருந்த பகுதி–II திட்டத்தினை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும்பொருட்டு, மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்காக, 2015-2016 ஆம் ஆண்டு தொடக்க நிதியாக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்தும், பிறகு தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிதியைப் பயன்படுத்தி, புத்தாக்கத் திட்டங்களைக் கண்டறிவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. மொத்தம் 320 புதுமைத் திட்டங்கள் ரூ.632.88 கோடி மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் 2019-2020 வரை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 30 துறைகள் தமிழ்நாடு புத்தாக்க நிதியின்கீழ் ஒதுக்கீடு பெற்றுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டு மாநில திட்டக் குழு ரூ.80.04 கோடி (மூன்று ஆண்டுகளுக்கு) மதிப்பில் 49 திட்டங்களுக்குப் பரிந்துரை

செய்தது. அவற்றில், 48 புதிய திட்டங்களுக்கு ரூ.79.37 கோடி (மூன்று ஆண்டுகளுக்கு) 2019-2020 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2020-2021 ஆம் ஆண்டிற்காக, மாநில திட்டக் குழு ரூ.60.58 கோடி (மூன்று ஆண்டுகளுக்கு) மதிப்பில் 9 புதிய திட்டங்களுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்காக இதுவரை 2019-2020 முதல் 2020-2021 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.21.96 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மண் ஊட்டச் சத்து அளவீட்டு முறையை மேம்படுத்த மென்பொருளை வடிவமைத்து செயல்படுத்துதல், கடலில் மீன் பன்முகத் தன்மை மற்றும் உயிர் வளத்தை மேம்படுத்துவதற்காக மீன்பிடி அழுத்தக் குறைப்பு மற்றும் ஏரி பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செயற்கை ரீப் மீன் திரட்டுதல், தமிழக மீனவ இளைஞர்களுக்கு கடற்கரை உயிர் பாதுகாவலர் மற்றும் நீர் மூழ்குபவர் பயிற்சி, பண்ணைக் குட்டைகளில் பாலித்தீன் உறைகளைப் பயன்படுத்தி குறுகிய கால நீர் நிலைகளில் வேகமாக வளரக்கூடிய மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுதல், சத்தியமங்கலம் புலிகள் சரணாலயத்தில் பாதுகாப்பிற்கான கூடு கட்டும் காலனிகள் மற்றும் வாழ்விடங்களை மீட்டெடுத்தல், அகஸ்தியர் பாரம்பரிய பூங்காவில் பண்பாடு மற்றும் இயற்கைப் பாதுகாப்பு இணைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளுக்காக இதுவரை 2019-2020 முதல் 2020-2021 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.45.16 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சணல் இழையால் உறுதிபடுத்தப்பட்ட குளிர் நிலக்கரிக் கலவையின் செயல்திறன் குறித்த ஆய்வு, பாம்புகளிலிருந்து விஷப்புரதம் பிரித்தெடுப்பதற்கான ஆய்வகம் நிறுவுதல், உலோகங்கள், காற்று, நீர், தாதுக்கள் மற்றும் கனிமங்களை பகுப்பாய்வு செய்யும் நவீன சோதனை மையம் ஒன்றினை சேலம் மண்டல ஆய்வகத்தில் நிறுவுதல், திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூர் தொழிற்பூங்காவில் சிப்காட் தொழில் புதுமை கண்டுபிடிப்பு மையங்களை நிறுவுதல், பட்டு நூற்கண்டினை மேம்பட்ட உலர்த்தியினை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல், ஜெட் தறிகளுக்கு நான்கு வண்ணங்கள் ஊடை

2020 மார்ச் 24]

செலுத்தும் மின்னணு கருவி நிறுவுதல், அச்சுப் பொறியுடன்கூடிய விற்பனை முனை இயந்திரங்கள் மற்றும் ரேடியோ அதிர்வலை அடையாள இயந்திரங்கள்மூலம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனையை எளிதாக்குதல், மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் உடல் அசைவு குறைபாடு உள்ளவர்கள் எளிதில் ஏற/இறங்க மின் தூக்கி வசதியுடன்கூடிய கதவு பொருத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் துறைகளுக்காக இதுவரை 2019-2020 முதல் 2020-2021 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.45.71 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தொடர் கவனிப்புக்கான அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் உற்பத்திக் கூடத்தை ஏற்படுத்துதல், மீசென்சைமல் ஸ்டெம் செல்களின் செக்திடோம்களைக் கொண்டு குணமாகாத காயங்களுக்குச் சிகிச்சை அளித்தல், குடல் அழற்சி நோய் மற்றும் குடல் புண் சிகிச்சைக்கான பழையசோறின் ஆய்வு, அவசர சிகிச்சை முன்னெடுப்புத் திட்டத்தின்கீழ், ராஜீவ்காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளையில் ஏற்படும் இரத்த அடைப்புகளை நீக்கும் கேத் லேப் கருவி மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல், சென்னை எழும்பூரில் உள்ள தாய்-சேய் நல மருத்துவமனையில் பிரசவ அறையை நவீனபடுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கல்வி மற்றும் இளைஞர் நலன் துறைகளுக்காக இதுவரை 2019-2020 முதல் 2020-2021 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.26.34 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் ஆவணக் காப்பக வலைதளப் பக்கம், பள்ளிகளில் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான மையம் உருவாக்குதல், அடிப்படை அறிவியலில் முதுகலை மாணாக்கர்களுக்கு கோடைக்கால பயிற்சி முகாம், தமிழ்நாடு மாணவ அறிவியலாளர்கள் மாநாடு நடத்துதல், மாற்றுத் திறனாளிகளுக்கான பகுதி மற்றும் முழுமையாக தானியங்கக்கூடிய நுண்ணறிவுள்ள புற உடற்கூடு மற்றும் செயற்கை உருவாக்கம், சாகச மற்றும் பாரம்பரிய விளையாட்டு மையம் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா மற்றும் ஏனைய துறைகளுக்காக இதுவரை 2019-2020 முதல் 2020-2021 (முதல் சுற்று) வரையிலான காலத்தில், தமிழ்நாடு

[2020 மார்ச் 24

புத்தாக்க முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.0.79 கோடி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சென்னை அரசு அருங்காட்சியத்தில் "பேசும் மரம்-இயங்கும் மாதிரி" அமைத்தல், சிறார் அருங்காட்சியகத்தில் புனை மெய்யாக்க நிகழ் காட்சியமைப்பு அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

3.1.4 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் துவங்குவதற்கு முன்னர் 1975-1976 ஆம் ஆண்டு முதலாக மத்திய அரசின் 90 சதவிகித நிதி உதவியுடனும், 10 சதவிகித நிதிக் கடன் அடிப்படையில் பெற்று பின்னர் மாநில பங்களிப்புடனும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயற்பட்டு வந்தது.

2015-2016 ஆம் மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு 2015-2016 ஆம் ஆண்டு முதல் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அறிவித்தது. மேலும், மேற்படி திட்டங்களை மாநில அரசு, தன் சொந்த மாநில நிதியிலிருந்து தொடரலாம் எனவும் அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு 2015-2016 ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில் ரூ.75 கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப் பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது நிருவாகம் மற்றும் கள ஆய்வுப் பணிகளுக்காக இரண்டு அலகுகளாக செயல்படுத்தப்பட்டு, அலகு-1 ஆனது திட்ட இயக்குனர், மலைப் பகுதி மேம்பாட்டு வளர்ச்சித் திட்டம் அவர்களைத் தலைமையாகக் கொண்டு நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் ஈரோடு ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அலகு-2 ஆனது குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில திட்டக் குழுவின் தலைமையில் திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

தமிழ்நாட்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட பகுதியானது கடல்

2020 மார்ச் 24]

மட்டத்திலிருந்து 600 மீட்டருக்கு மேலான மலைப் பகுதிகளை இலக்காகக் கொண்டுள்ளதோடு பிற திட்டங்களில் சேர்க்கப்படாத மலையடிவாரப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் நோக்கான பல்லுயிர் பரவலின் நீடித்த பயன் கருதி சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்புப் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல், உள்ளூர் சமூகத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நீடித்த வாழ்வாதாரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு சமுதாயப் பங்களிப்பை உறுதி செய்யும் விதமாக திட்ட வடிவமைப்பு மற்றும் செயல் திட்டம் உருவாக்குதல் போன்ற பணிகளை மக்களின் பங்களிப்போடுகூடிய நீர்ப்பிடிப்புப் பகுதியை அடிப்படையாகக் கொண்ட திட்ட அமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாக திறன் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மை உறுதி செய்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துவதோடு அல்லாமல், இத்திட்டத்தில் வனம், குடியிருப்புப் பகுதிக்கு அருகில் அமையப்பெறாத மண் வளம் மற்றும் நீர் வளத்திற்கு சவாலாகப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் இடைப்பட்ட பகுதியின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டமானது, நீர் மற்றும் நில வளர்ச்சிக்கும் மனித வாழ்வாதாரத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துதலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் நுண்நீர் பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்பட வேண்டிய அமைப்பு, பணிகள் மற்றும் வழிகாட்டி, அரசாணையுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது (அரசாணை நிலை எண் 40, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு.1) துறை, நாள் 4-3-2016). சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மேலாண்மைப் பணிகளைக் கவனிக்க திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மாநில அளவிலான ஒருங்கிணைப்புச் செயல் துறையாகச் செயல்பட்டு வருகிறது.

மண் வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பு, தோட்டக் கலை, வேளாண்மை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக,

உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர் வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகளை தொடர்புடைய துறைகள்மூலம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்தும் வகையிலும், மேலும், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்படும் தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், மதுரை, தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகிறது. பணியின் தன்மையானது மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வந்த திட்டப் பணிகளே ஆகும்.

மாநில அளவில் உருவாக்கப்பட்ட உயர் நிலைக் குழு இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றியும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நோக்கத்துடனும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.75 கோடி நிதி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு இதுவரை பிப்ரவரி, 2019 முடிய 1,511 திட்டங்களுக்கு ரூ.200.74 கோடி அளவிற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்காக 438 திட்டங்களுக்கு ரூ.86 கோடி அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது,

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரைவாக கண்காணிக்கும்பொருட்டு இணையதளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

3.1.5 தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

அரசாணை எண் 58, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை (மா. தி.கு.), நாள் 10-2-2011-ன்படி தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் என்ற ஒரு நிலையான வாரியம், மாநில திட்டக் குழு துணைத் தலைவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- நில வளத்தை மதிப்பீடு செய்தல், நிலக் கொள்கையை வகுப்பதில் அரசுக்கு அறிவுரைகள் வழங்குதல், மாறிவரும் நிலப் பயன்பாட்டிற்கு ஏற்ப ஓர் அறிக்கை மற்றும் சாத்தியமான முன்னுரிமைகள் போன்றவற்றைத் தயாரித்தல்;

2020 மார்ச் 24]

• மாறிவரும் சுற்றுச்சூழலின் காரணிகளான மாசு, புவி வெப்பமயமாதல் ஆகியவை குறித்து உறுதியான, அறிவியல் சார்ந்த கொள்கை குறுக்கீடுகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

• தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியமானது தரவு தளத்தை உருவாக்குவதன்மூலம் நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாக்கவும், நிருவகிக்கவும், திட்டமிடல் மற்றும் விழிப்புணர்வுத் திட்டத்திற்கு ஒரு பயனுள்ள பங்கை வகிக்கும்;

2011-2012 முதல் 2018-2019 வரை மொத்தம் 49 ஆராய்வுகளுக்கு ரூ.544.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன, அவற்றில் 42 ஆராய்வுகள் நிறைவடைந்துள்ளன. மீதம் ஏழு (07) ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனுடன் ரூ.52.16 இலட்சத்திற்கு பத்து (10) பயிலரங்கங்கள் மேலே, குறிப்பிட்டுள்ள காலவரையரைக்குள் நடத்தப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ.80 இலட்சம் இவ்வாராய்ச்சி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவை நில வளம் மற்றும் நீர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனச் சூழல் அமைப்பு, விவசாயம், வாழ்வாதாரம், காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு தணிப்பு போன்ற துறைகளுக்கு உரியவை.

2019–2020 ஆம் ஆண்டிற்கு பத்து ஆராய்ச்சி ஆய்வுகள், மூன்று பயிலரங்கங்கள் மற்றும் ஒரு கருத்தரங்கம் நடத்த ரூ.63.53 இலட்சம் மற்றும் ரூ.5.81 இலட்சம் முறையே அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், ஓர் ஆராய்ச்சி ஆய்வு அனுமதிக்கப்பட்டுள்ளது.

3.1.6 முன்னேற விழையும் மாவட்டங்கள்

முன்னேற விழையும் மாவட்டங்கள் என்ற இத்திட்டம் 2017 ஆம் ஆண்டு மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு நிதி ஆயோக்கால் நிருவகிக்கப்படுகிறது. வறுமை, கல்வி, நல வாழ்வு, ஊட்டச்சத்து மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகிய பிரிவுகளின்கீழ் 11 முக்கிய காரணிகளில் மாவட்டங்களின் நிலையினை அடிப்படையாகக்கொண்டு 115 மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டங்களாக மைய அரசால் இனங்காணப்பட்டன.

மைய அரசின் உள் துறையால், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவை என தெரிவு செய்யப்பட்ட 35 மாவட்டங்களும் இந்த 115 மாவட்டங்களில் அடங்கும்.

[2020 மார்ச் 24

இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 115 மாவட்டங்களில் தமிழகத்தில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரு மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் மற்றும் மாவட்ட ஆட்சியரின் தொடர்புமூலம் செயல்படுத்தும் இத்திட்டத்தை மைய அமைச்சகத்தின் இணைச் செயலர் நிலை மற்றும் அதற்கு மேலுள்ள நிலையிலான ஒரு மைய பற்று அலுவலர் மாவட்டங்களை மேற்பார்வையிட்டு, கள ஆய்வு மேற்கொண்டு நித்தி ஆயோக்கிற்கு அறிக்கை வழங்குவார்கள். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மைய அரசின் ஓர் அமைச்சகம் முன்னேற்றத்தினை மேற்பார்வையிடவும் வழிநடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு, மத்திய அமைச்சர் ஒருவரும் சில மாவட்டங்களுக்கு அதன் வளர்ச்சி முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும், வழிநடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தில் நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீராதாரங்கள், அனைவருக்குமான நிதி சேவைகள் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றன. மாவட்டங்களின் மாதாந்திர முன்னேற்றங்களுக்கான நிகழ்நேர விவரங்களை நேரடியாகப் பெற்றிடும் வகையிலான இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களின் முன்னேற்றங்களை அளவிட 49 முக்கிய செயல்பாட்டுக் காரணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில், பிரிவு வாரியாக மற்றும் எல்லா பிரிவுகளுக்கும் மொத்தமாகச் சேர்ந்து அடைந்த முன்னேற்றங்கள் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்படுகின்றன. மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்தும் முகமாக கடந்த மாதத்திற்கும், நிகழ்கின்ற மாதத்திற்கும் இடையேயான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் கணக்கிடப்பட்டு தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

மாநில அரசுகளும் இம்மாவட்டங்களுக்குக் கூடுதலாக உதவி வழங்குகின்றன. நம் மாநில அரசு இம்மாவட்டங்களின்

2020 மார்ச் 24]

முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அரசுச் செயலர் நிலையில் ஒரு பற்று அலுவலரை நியமித்துள்ளது. மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் தமது சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து இம்மாவட்டங்களின் முன்னேற்றத்திற்குச் செலவிட அறிவுறுத்தப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக்-ஆல் வழங்கப்படும் நிதி

இத்திட்டத்திற்கு நித்தி ஆயோக் கீழ்க்கண்ட விவரப்படி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை வழங்கும் அயல்நாட்டு நிதி வாயிலாக உதவி வழங்குகின்றது:

வ. எண்	விவரம்	ஒதுக்கீடு (ரூபாயில்)
1	*நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் செயல்படுத்துவதில் போட்டி முறையில் தரவரிசை மாவட்டங்களுக்கு 20 மாதத்திற்கு மாதம் ரூபாய் 30 கோடி வீதம் (சாளரம்-1)*	*600 கோடி*
2	*மைய அரசின் செயலர்கள் அடங்கிய அதிகாரம் படைத்த குழுவால் அனுமதிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கான சிறப்புத் திட்டங்களுக்கான நிதி (சாளரம்-2)*	*350 கோடி*
3	*இந்தியாவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, நித்தி அயோக்கில் நிருவாக வசதி, தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளை மூன்றாம் அமைப்பின் கள ஆய்வு வழியாக உறுதிசெய்தல், மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்துதல், மாவட்டம் மற்றும் அதற்கு கீழ்நிலையிலுள்ள அலுவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் (சாளரம்-3)*	*24 கோடி*
	மொத்தம்	**974** கோடி

[2020 மார்ச் 24

இத்திட்டத்தின் தமிழக மாவட்டங்களின் செயல்பாடு

ஏப்ரல் 2018-ல் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் மேற்குறிப்பிட்ட 5 துறைகளில் முன்னேற்ற நிலைக்கான ஒட்டுமொத்த மதிப்பெண் முறையே 45.6 மற்றும் 46.8 ஆகும்.

விருதுநகர் மாவட்டம், பிப்ரவரி–மார்ச் 2019 காலத்தில் அடிப்படை கட்டமைப்புப் பிரிவில் எய்திய முன்னேற்றத்திக்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாகப் பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூபாய் 3 கோடி பரிசு பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், ஏப்ரல்-மே 2019 காலத்தில் வேளாண்மை மற்றும் நீர் ஆதாரங்கள் பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாகப் பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூபாய் 3 கோடி பரிசு பெற்றுள்ளது,

இவ்விருதுத் தொகையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்பட்டு மைய பற்று அலுவலர் வாயிலாக நேரடியாக நித்தி ஆயோக்கிற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்விரு மாவட்டங்களும் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை எய்தி டிசம்பர் 2019 மாதத்தில், விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பெண் முறையே 63 மற்றும் 61.9 பெற்றுள்ளன.

3.2 பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை (DOES) மாநிலத்தின் புள்ளிவிவர நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மாநில முகமை புள்ளிவிவர நிறுவனமாக செயல்படுகிறது. வேளாண்மைத் துறை புள்ளிவிவரங்கள், தொழில் துறை, வீட்டு வசதி மற்றும் விலைப் புள்ளிவிவரம், சந்தை மற்றும் விலைப் புள்ளிவிவரம், மொத்த மற்றும் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்கள், மாநில வருவாய் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகள் போன்றவற்றுக்கான இது குறித்த தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அறிக்கைகளை வெளியிடுதல் ஆகியவை பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் முக்கிய செயல்பாடுகளாகும். தமிழக

2020 மார்ச் 24]

அரசு மற்றும் இந்திய அரசுக்கு பல்வேறு சமூகப் பொருளாதார காரணிகளை உரிய நேரத்தில் போதுமான மற்றும் நம்பகமான முறையில் சரியான நேரத்தில் தகவல்கள் அளித்து, பொருத்தமான கொள்கை முடிவுகளை எடுக்கவும், அரசினுடைய நலத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தவும் உதவுகின்றது.

3.2.1 துறையின் செயல்பாடுகள்

மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் துறை உற்பத்திக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் மற்றும் மொத்த விலைக் குறியீட்டெண் போன்ற பல்வேறு பொருளாதார அளவீடுகளுக்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு, மத்திய மற்றும் மாநில அரசுகளால் அவ்வப்பொழுது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு அவற்றிற்குரிய பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசு தேவைகேற்ப வழங்குவது இத்துறையின் முக்கியப் பணியாகும். புள்ளி இயல் துறை ஆண்டுதோறும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, பருவம் மற்றும் பயிர் அறிக்கை மற்றும் பொருளாதார நிலைகுறித்த ஆய்வு அறிக்கைகளை ஆண்டுதோறும் வெளியிடுகிறது. இது மாநில அரசுகளில் பல்வேறு துறைகளின் தரவு தேவைகளுக்கு உடனடிப் பார்வை கையேடுகளாகப் பயன்படுகிறது. புள்ளி இயல் துறையின் அறிக்கைகள் ஆராய்ச்சி நிறுவனங்களாலும், பொது மக்களாலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு துறைகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள புள்ளி இயல் துறையின் திறமையாக தொழில்நுட்பப் பணியாளர்கள் அந்தந்த அயற்பணி துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும் சமூகப் பொருளாதாரத் திட்டங்களைக் கண்காணிக்கவும், மதிப்பாய்வு செய்யவும் தங்களுடைய பயனுள்ள பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சர்வதேச அளவில், பல்வேறு நாடுகள் பொது மக்களுக்குச் சிறந்த சேவை வழங்குவதற்கான ஆதார அடிப்படையிலான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகளை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்த இலக்கை அடைய வேண்டும் என்ற நோக்கில், அரசு கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், திட்டங்கள் தீட்டுவதற்கும் தேவையான அடிப்படை விவரங்களை அளிப்பதற்காகவும் மற்றும் சேவை விநியோகத்தினை மேம்படுத்தவும் இதுபோன்ற சிறப்புச் செயலாக்கத்தினை நம்முடைய மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக புள்ளி இயல் துறையில் சில புதிய திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது.

[2020 மார்ச் 24

3.2.2 துறையின் முயற்சிகள்

1. புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் நிறுவுதல் (DAU)

பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை உலக சூழலுக்கேற்ப புள்ளிவிவரங்களை வழங்குதோடு மட்டுமல்லாமல் அத்தரவுகளை சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின்போது உருவாகும் அளவற்ற தரவுகளை ஆராய்ந்து, அவற்றின்மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளாக அளிப்பது அரிதாகிறது. எனவே, 2015-2016 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை உரையில் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து 'புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு மையம்' உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இம்மையம் தரவு அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

நவீன தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளைப் பயன்படுத்தி தொடர்புடைய தரவுகளை வழங்கி விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது. இம்மையம் மாநில அளவிலான தகவல் சேகரிப்பு இணைய முகப்பு ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக மற்றும் துல்லியமாகத் தொகுத்து தேவையின் அடிப்படையில் அரசுக்கும் பிற துறைகளுக்கும் வழங்குவது இம்மையத்தின் சிறப்பம்சமாகும்.

முன்னோடித் திட்டங்கள்

ஆரம்பத்தில், இம்மையத்தில் புள்ளி இயல் உத்தியைப் பயன்படுத்தி தீர்க்கமான மற்றும் விரிவான பகுப்பாய்வு உருவாக்கத் திட்டமிடப்பட்டது. புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் தற்போது மூன்று முன்னோடித் திட்டங்களை ஜே-பால் தெற்கு ஆசியாவுடன் இணைந்து நிறைவு செய்துள்ளது.

➢ மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கூற்றுகளின் தரவரிசைகளைப் பகுப்பாய்வு செய்தல்;

• ஐந்தாவது மாநில நிதி குழுவினால் சேகரிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தரவுகளை ஆய்வு செய்தல்;

2020 மார்ச் 24]

• காணாமல்போன நபர்களை, அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிடுவதற்கான கருவிகளை மாநில குற்ற ஆவண காப்பகத்துடன் இணைந்து உருவாக்குதல்.

கொள்கை கருத்தரங்குத் தொடர்

புள்ளிவிவரங்களைப் பகிர்தலின் அவசியம் என்பது குறித்து ஒரு கருத்தரங்குத் தொடரை இம்மையம் உருவாக்கியுள்ளது. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம், அரசுக் கொள்கை முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள், தரவுகள் பகுப்பாய்வாளர்கள் மற்றும் மற்ற பகுப்பாய்வாளர்கள் ஆகிய இதுபோன்ற பிற தரப்பினரையும் ஓர் அமைப்பின்கீழ் கொணர்ந்து, அதன்மூலம் தற்போது உள்ள தரவுகளைக் கொண்டு கொள்கைக் கேள்விகளுக்கு அரசு தகுந்த விளக்கம் அளிக்க உதவும்.

திட்டங்கள்

2019-2020 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட துறையின் விருப்பத்திற்கேற்ப மூன்று திட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மாநில குற்றப் பதிவு நிறுவனம் (SCRB)

இடஞ்சார்ந்த தரவைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தொகை ரூ.30.58 இலட்சம்/மாநில குற்றப் பதிவு நிறுவனம்மூலம் பகுப்பாய்வு செய்தல்.

ii. வணிக வரித் துறை

ஜி.எஸ்.டி. வரி சேகரிப்பை மேம்படுத்த இயந்திரம்மூலம் கற்றலைப் பயன்படுத்துதல் தொகை ரூ.39.94 இலட்சம்-வணிக வரித் துறை, புள்ளி இயல் பகுப்பாய்வு மையம் மற்றும் ஜே-பால் நிறுவனம்மூலம் பகுப்பாய்வு செய்தல்.

iii. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் மேலாண்மை தகவல் அமைப்பு-Portalமூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்தல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மற்றும் ஜே-பால் நிறுவனம்மூலம் பகுப்பாய்வு செய்தல்.

நிதி ஒதுக்கீடு

புள்ளிவிவரப் பகுப்பாய்வு மையத்தினை நிறுவவும், அதன் திறனை அடையாளம் காணவும் மற்றும் திட்டங்களை எடுக்கப்பட்ட

[2020 மார்ச் 24

துறைகளுக்கு பெரியளவு தரவுகளை பகுப்பாய்வு செய்யவும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து, அரசாணை (பலவகை) எண் 20, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறை, நாள் 26-2-2016-ல் மொத்த செலவினத் தொகையாக 2015-2016 ஆம் ஆண்டு ரூ.428.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். தனிநபர், குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியைக் கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களும் மற்றும் பொது மக்களும் உரிய நேரத்தில் தேவையான புள்ளிவிவரங்கள் இந்த ஆய்வின்மூலம் கிடைக்கப்பெறும்.

இந்த ஆய்வானது முன் அடிப்படை ஆய்வு, அடிப்படை ஆய்வு மற்றும் இறுதி நிலை என மூன்று கட்டங்களாக மூன்று ஆண்டுகள் தொடர் ஆய்வாக நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம், அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஆய்வு மையம் ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கையடக்க கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணலில் இலக்க முறையில் விவரங்களைச் சேகரிப்பதாகும்.

முன் அடிப்படை ஆய்வு/வீடுகளை பட்டியலிடும் ஆய்வு பணி நிறைவடைந்துள்ளது. சுமார் 2,40,000 குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பதிலளிக்காத வீடுகளில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தரவுகளை செம்மைபடுத்தும்/ தூய்மைப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மாவட்ட அளவிலான மதிப்பீடுகள் கணக்கிடப்படுகின்றது. அடிப்படைக் கணக்கெடுப்பிற்கான கேள்வித் தாள் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படுகிறது. இறுதி செய்யப்பட்டவுடன் இவை பிளெய்ஸ் (Blaise) மென்பொருள்மூலம் குறியிடப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான பயிற்சி அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம்மூலம் புள்ளி இயல்

2020 மார்ச் 24]

துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட உள்ளது, இவ்வாய்வில் பணிபுரியும் அலுவலர்களுக்கு திறன் வளர்ச்சிமூலம் பிளெய்ஸ் மென்பொருள்மூலம் நேர்காணல் செயல்பாடுகளின் முறை, தரவுகளின் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை எழுதுதல் ஆகியவற்றில் திறன் மேம்படுத்திக்கொள்ள உலக வங்கி அறக்கட்டளை நிதி உதவியுடன் அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத்திற்கு 1 இலட்சம் அமெரிக்க டாலர் (ரூ.75 இலட்சம்) நிதி உதவி வழங்குகிறது. இத்துறையிலிருந்து அலுவலர்கள் அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழகத்திற்கு விரைவில் செல்ல உள்ளனர்.

நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வுத் திட்டத்திற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து அரசாணை (பலவகை) எண் 19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு.) துறை, நாள் 26-2-2016-ல் மொத்த திட்டத் தொகையாக ரூ.390 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை குறித்த குழுப் பட்டியல் ஆய்வு

வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலை, உடல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக மற்றவர்களை சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உட்கொண்ட சுகாதார நிலை ஆகியவற்றை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வது இந்த குழுப் பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். வயது முதிர்ந்தோரின் சமூகப் பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்படும். மேலும், வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த தேவைப்படும் இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும்.

இந்த ஆய்வு பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (ஜே-பால் தெற்கு ஆசியா) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மூன்றாண்டுகள் தொடர் ஆய்வாக நடத்தப்படும். இந்நிறுவனமானது தொழில்நுட்ப ஆலோசகராகவும், தரக்கட்டுப்பாட்டாளராகவும் செயல்படும். இவ்வாய்வில் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பாண்கள் பற்றிய விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

[2020 மார்ச் 24

மனித வளர்ச்சிக் குறியீடு மற்றும் சார்ந்திருத்தல் விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சென்னை (பெருநகர பகுதி), திருவண்ணாமலை, தருமபுரி, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்புப் பணி ஜுலை 2018-ல் முடிவடைந்துள்ளது. சுமார் 92,000 குடும்பங்கள் இந்த ஐந்து மாவட்டங்களில் களப் பணி ஆய்வுமூலம் கண்டறியப்பட்டுள்ளன.

அடிப்படை ஆய்வுப் பணி ஜுன் 2019-ல் முடிவுற்றுள்ளது. 4,739 குடும்பங்களில் 6,294 வயது முதிர்ந்தவர்கள் உள்ளனர் என அடிப்படை ஆய்வில் உள்ள வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பில் உள்ளதாக பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை ஆய்வின்மூலம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரத் துறைமூலம் 4,496 வயது முதிர்ந்தவர்களிடமிருந்து சுகாதார அளவீடுகள் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. திட்டப் பகுப்பாய்வு மேற்கொள்ளும் பணி முடிவுபெற்றுள்ளது. அடிப்படை ஆய்வின் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது ஜே-பால் நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

நிதி ஒதுக்கீடு

2015-2016 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ் மொத்த திட்டத் தொகையாக ரூ.606 இலட்சம், அரசாணை (நிலை) எண் 21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27-2-2016-ன்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.3 வேளாண்மை புள்ளிவிவரங்கள் சேகரித்தல்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிக்கும் வேளாண்மை தொழில்களின் பங்கு தொடர்ந்து மாநிலப் பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்துறையின் முக்கிய செயல்பாடு விவசாயப் புள்ளிவிவரங்களைச் சேகரித்து அதனை பராமரிப்பதாகும். இத்துறையின் வேளாண்மை புள்ளிவிவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப் பயன்பாடு, நீர்ப் பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயக் கூலி மற்றும் விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து

விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகள் மேற்கொள்ளப் பயன்படுகிறது. இத்துறையில் பின்வரும் பல்வேறு விவசாயம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு

ஜமாபந்தியில் பயிர் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

2. பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)

பொது பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தின்கீழ் (பசலி 1429) 2019-2020 ஆம் ஆண்டு 17 முதன்மைப் பயிர்களுக்கு 9,500 பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடைப் பரிசோதனைகள் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையினரால் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில், உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகின்றது.

3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனைகள்

பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனையின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் (ஒரு ஹெக்டேருக்கு) துல்லியமாகக் கணக்கிடும்பொருட்டு இத்திட்டம் இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது.

- இத்திட்டத்தின்கீழ், முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும் மற்றும் தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைக்கோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கும் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் 720 கிராமங்களில் 1,440 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சிறுபான்மைப் பயிர்த் திட்டத்தின்கீழ் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்கள் அடங்கும். 2019-2020 ஆம் ஆண்டில், மொத்தம் 637 கிராமங்களில் 1,274 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)

2019-2020 ஆம் ஆண்டு (பசலி 1429) பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு, வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படும்போதும் விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையினரால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டுக்கு காரிப் பருவத்திற்கு 31 பயிர்களுக்கு 83,076 பரிசோதனைகளும், சிறப்புப் பருவத்தில் 4 பயிர்களுக்கு 53,144 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 34 பயிர்களுக்கு 1,12,048 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தொடர்புடைய துறையினரால் ஒத்திசைவு செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டுக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

5. தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு

ஒரு ஹெக்டேரில் தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை, காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/மாவட்ட அளவில் ஓர் ஆண்டிற்கான மொத்த உற்பத்தி

2020 மார்ச் 24]

ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை கொண்ட பசலி ஆண்டு ஆகும். 2019-2020 ஆம் ஆண்டின் ஆய்விற்காக தென்னை பயிருக்கு 380 கிராமங்கள் மற்றும் கமுகுப் பயிருக்கு 66 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

6. மழைப் புள்ளிவிவரம் சேகரிப்பு

மழைப் புள்ளிவிவரங்களானது சுமார் 627 மழைமானி நிலையங்களிலிருந்து மனித சக்தி/தானியங்கி மழைமானிமூலம் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, வனத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் மழைப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றன.

7. நீர்ப் பாசனம் மற்றும் நீர்த்தேக்கத் தரவுகள்

நீர்ப் பாசனத் தரவுகள் கீழ்க்கண்ட மூன்று தலைப்புகளில் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதாரவாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர்வாரியாக நீர் பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் தமிழ்நாட்டின் வேளாண்மைக்கு நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்குப் பயன்படும் தரவுகள். இத்தரவுகள் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகளிலிருந்து பெறப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் நீர்ப் பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

8. விவசாயக் கூலி

விவசாயக் கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாகச் சென்று சேகரிக்கப்பட்டு மதிப்பீடு கணிக்கப்படுகின்றன.

9. விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டமானது நெல் உற்பத்தியில் மூன்று பருவங்களுக்கும் (குறுவை, சம்பா மற்றும் கோடை) வழங்கப்பட்ட கூலிக்கான நெல், விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

[2020 மார்ச் 24

10. பருவமும் பயிரும் அறிக்கை

மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, நிலப் பயன்பாடு, நீர்பாசன ஆதாரங்கள், நீர்பாய்ச்சசப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சசப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும், உற்பத்தி விகிதம் ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வோர் ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு மத்திய, மாநில அரசுகள் மற்றும் இதர துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளிவிவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாய பொருளாதாரக் குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் 2017-2018 ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது.

3.2.4 மத்திய நிதி உதவித் திட்டங்கள்

பின்வரும் மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (**TRS**)

ஒவ்வோர் ஆண்டும் 20 விழுக்காடு மாதிரி கிராமங்களின் எதேச்சை அடிப்படையில் பயிர் பரப்பின் நில உபயோகப் புள்ளிவிவரங்கள் பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின்கீழ் கணக்கிடப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டு 3,476 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, பரப்பு விவரங்கள் கணிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பயிர் மேம்பாட்டுத் திட்டம் (**ICS**)

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண் அலுவலர்களால் மாநிலத்திற்கு சேகரிக்கப்படும் வேளாண் புள்ளிவிவரங்களின் மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்களால் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, அதில் காணப்படும் குறைபாடுகளை முறையாகக் களைய தக்க வழிவகைகள் ஏற்படுத்தி புள்ளிவிவரங்களின் தரத்தினை உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர்ப்

2020 மார்ச் 24]

பரப்பின் கூட்டுத் தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என ஆராய்தலும், பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

➢ வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 1970-1971 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. ஒன்பதாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு 2010-2011 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டு மூன்று கட்ட அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. 2015-2016 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் மூன்று கட்டப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. மத்திய அரசின் முதற்கட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு "பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு-தமிழ்நாட்டின் முதற்கட்ட அறிக்கை" வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளின் அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இறுதிவடிவ அட்டவணைகள் மத்திய அரசிடமிருந்து எதிர்நோக்கி உள்ளது. இந்தக் கணக்கெடுப்பின் முக்கிய காரணிகளான வேளாண் கைப்பற்றுகள், குத்தகைத் தன்மை, நிலக் கைப்பற்றுதாரார்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு தொடர்பான பயனுள்ள தகவல்களை வழங்குகிறது.

3.2.5 மாநில வருவாய் புள்ளிவிவரங்கள் மதிப்பீடு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் மாநிலத்தின் வளர்ச்சியின் நிலையைக் கணிக்க அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களைக் கணிக்கவும் அரசு நிதிநிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

1. மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின்கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட

வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011-2012 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு 2016-2017 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2017-2018 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2018-2019 ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடு மற்றும் 2019-2020 முன் மதிப்பீடு தற்காலிகம் ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும் நிலையான (2011-2012) விலையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு

(அடிப்படை ஆண்டு **2011-2012**)

(ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி				நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி			
		நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-2012) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (%)	நிலையான (2011-2012) விலையில்	வளர்ச்சி விகிதம் (%)
1	2011-2012	751486	-	751486	-	674478	-	674478	-
2	2012-2013	854825	13.75	791824	5.37	768295	13.91	709343	5.17
3	2013-2014	968530	13.30	851976	7.60	858870	11.79	750416	5.79
4	2014-2015	1072678	10.75	893915	4.92	957350	11.47	791915	5.53
5	2015-2016	1176500	9.68	967562	8.24	1057084	10.42	862437	8.91
6	2016-2017 (தி.ம.)	1302639	10.72	1036762	7.15	1171973	10.87	922084	6.92
7	2017-2018 (து.ம.)	1461841	12.22	1116334	7.68	1315577	12.25	991597	7.54
8	2018-2019 (மு.ம.)	1664159	13.84	1207526	8.17	1499331	13.97	1074145	8.32
9	2019-2020 (மு.ம.த.)	1854952	11.46	1295292	7.27	1673253	11.60	1153546	7.39

2020 மார்ச் 24]

தி.ம.–திருத்திய மதிப்பீடு; து.ம.-துரித மதிப்பீடு; மு.ம.-முன் மதிப்பீடு; மு.ம.த.-முன் மதிப்பீடு (தற்காலிகம்)

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

(ரூபாயில்)

வ. எண்	ஆண்டு	நடப்பு விலையில்	நிலையான (2011-2012) விலையில்
1	2011-2012	92984	92984
2	2012-2013	104943	96890
3	2013-2014	116236	101559
4	2014-2015	128372	106189
5	2015-2016	140441	114581
6	2016-2017 (தி.ம.)	154272	121378
7	2017-2018 (து.ம.)	171583	129328
8	2018-2019 (மு.ம.)	193750	138805
9	2019-2020 (மு.ம.த.)	214237	147696

தி.ம.–திருத்திய மதிப்பீடு; து.ம.-துரித மதிப்பீடு; மு.ம.-முன் மதிப்பீடு; மு.ம.த.-முன் மதிப்பீடு (தற்காலிகம்)

மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் 2011-2012 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011-2012-லிருந்து 2017-2018 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

2. மாநிலக் கணக்கு மற்றும் உள்ளாட்சிக் கணக்குகள்

மாநிலக் கணக்குப் பிரிவு ஆண்டுதோறும் தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை ஆவணங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வரவு-செலவு கணக்குகள், பொருளாதார மற்றும் செயல்நோக்கம் அடிப்படையில் (Economic cum Purpose

Classification) பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சிக் கணக்குகளுக்கும் பொருளாதார பகுப்பாய்வும் செய்யப்படுகிறது. நிதிநிலை அறிக்கை ஆவணங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு, மூலதன ஆக்கம் கணக்கிடுவதற்கு முக்கியப் பங்கு வகிக்கிறது.

பொருளாதார மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் 2017-2018 (கணக்குகள்) 2018-2019 (திருத்த மதிப்பீடு), 2019-2020 (திட்ட மதிப்பீடு) ஆகிய ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வரவு-செலவுக் கணக்குகள் 2018-2019 ஆம் ஆண்டிற்கு பொருளாதார மற்றும் செயல் நோக்கம் அடிப்படையில் பகுப்பாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. மூலதன ஆக்கம்

மத்திய புள்ளியியல் அலுவலகம் வழிகாட்டுதலின்படி மாநில பொதுத் துறை மற்றும் தனியார் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணக்கிடப்படுகின்றன. இவற்றின்மூலம் ஒவ்வொரு பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் பொருளாதார வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. இம்மதிப்பீடுகள் அரசிற்கு சரியான கொள்கை முடிவு எடுப்பதற்கும் நாட்டின் பொருளாதார திட்டமிடுதலுக்கும் பயன்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, 2017-2018 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் பொதுத் துறைகளுக்கான மொத்த மூலதன ஆக்கம் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.2.6 விலைவாசி மற்றும் விலைவாசி குறியீட்டெண்

➢ **அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளிவிவரம்:**

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மைப் பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வாரந்தோறும்/மாதந்தோறும் அறிக்கைகள்

2020 மார்ச் 24]

தயாரிக்கப்பட்டு பாரத ரிசர்வ் வங்கி, மத்திய தொழிலாளர் செயலகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறைத் துறை, அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிற அயற்துறைகளிடமிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

அரசின் கொள்கை முடிவு மற்றும் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு விலை விவரங்கள் பயன்படுகிறது.

- **மொத்த விலைக் குறியீட்டெண்**

வேளாண்மை மற்றும் வேளாண்மை தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் 2011-2012=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாதந்தோறும் கணித்து அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

- **தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்**

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, திருச்சி, மதுரை, குன்னூர், கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஆறு மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2001=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த மையங்களிலிருந்து சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடலூர், நாகர்கோவில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய நான்கு மாநில மையங்களுக்கு 2011=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டெண்களைக் கொண்டு அகவிலைப்படி, தினக் கூலி மற்றும் குறைந்தபட்சக் கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

- **மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)**

மாவட்ட அளவிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் திட்டங்களைப்

பரவலாக்குவதற்கும், மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்துகொள்வதற்கும், குறிப்பிட்ட மண்டலம் அல்லது மாவட்டத்திற்குரிய கொள்கைகளை வகுப்பதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் பயன்படுகிறது.

மத்திய புள்ளி இயல் அலுவலகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2019-2020-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு தமிழ்நாட்டின் மாவட்டங்களில் உள்ள 153 கிராமப்புற மையங்கள் மற்றும் 145 நகர்ப்புற மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பொருட்களின் தொகுப்பு இறுதி செய்யப்பட்டு அடிப்படை ஆண்டு விலை விவரங்கள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.2.7 சமூகப் புள்ளி இயல்

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறியவும் அதனை புரிந்துகொள்ளவும் சமூகப் புள்ளி இயல் விவர பகுப்பாய்வுகள் அடிப்படைக் கருவியாக விளங்குகின்றது. தனி மனித நிலை குறித்தும் சமூகத்தின் சூழ்நிலை குறித்தும் தனி மனிதனின் பொருளாதார நடத்தையின் மூலமும் சமூக சூழ்நிலையில் இருந்தும் அறிய முடிகிறது. சமூகப் புள்ளி இயல் ஆய்வு குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் உட்பட அனைத்துப் பிரிவுகளின் விவரங்களும் சிறப்பாக ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விவரங்களும் இவ்வாய்வின்மூலம் கணக்கிடப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களான தேசிய மாதிரி ஆய்வு, ஆண்டுத் தொழில் ஆய்வு, தொழில் உற்பத்திக் குறியீடு, வீட்டு வசதி, கட்டட புள்ளிவிவரங்கள், கைத்தறி மற்றும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

➢ **தேசிய மாதிரி ஆய்வு**

- தேசிய மாதிரி ஆய்வு என்பது இந்தியாவின் தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு, தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் தொடர்ச்சியான சுற்றுக்களில் நடத்தப்படும் மாநில அளவிலான, பெரிய அளவிலான பல தலைப்பிலான ஆய்வாகும். இந்த ஆய்வு, வெவ்வேறு துறைகளைப் பற்றிய கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை அளிக்கிறது.

2020 மார்ச் 24]

- 75-வது சுற்று தேசிய மாதிரி ஆய்வு (ஜூலை 2017 முதல் ஜூன் 2018 வரை) "வீட்டு நுகர்வோர் செலவினம், கல்வி பற்றிய உடல்நலம் மற்றும் வீட்டு சமூக நுகர்விற்கான வீட்டு வசதி சமூக நுகர்வு" பற்றிய கணக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்டது.

- 76-வது சுற்று தேசிய மாதிரி ஆய்வு (ஜூலை 2018 முதல் டிசம்பர் 2018 வரை), "குடிநீர், சுகாதாரம் மற்றும் வீட்டு வசதி நிலை மற்றும் மாற்றுத் திறனாளிகள் குறித்த ஆய்வு" ஆகியவற்றின் மீதான கணக்கெடுப்புக்கு ஒதுக்கப்பட்டது.

- தேசிய மாதிரி ஆய்வு 77-வது சுற்றில் (ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019 வரை) "நிலம் மற்றும் கால்நடை இருப்பு, விவசாயக் குடியிருப்புகளின் தற்போதைய நிலை மற்றும் கடன் மற்றும் முதலீடு" ஆகியவற்றைப் பற்றிய கணக்கெடுப்புக்கான களப் பணி முடிவடைந்துள்ளது.

- தற்பொழுது தேசிய மாதிரி ஆய்வு 78-வது சுற்றில் (ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரை) "உள்நாட்டுச் சுற்றுலா மற்றும் பல்நோக்குக் குறியீட்டு கணக்கெடுப்பு" ஆகியவற்றைப் பற்றிய கணக்கெடுப்பு துவங்கியுள்ளது.

➢ **வீட்டு வசதி மற்றும் கட்டடப் புள்ளி இயல்.**

தேசிய அளவில் வீட்டு வசதிக் கொள்கை மற்றும் வீட்டு வசதித் திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, அஸ்திவாரம், தரைபரப்புப் பகுதி, வசிக்கும் அலகுகள், குடியிருப்பு மற்றும் குடியிருப்பல்லாத அலகுகள் எண்ணிக்கை, மதிப்பீடு செலவு போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

2019-2020-ல் பொதுத் துறை திட்டப் பட்டியல் மற்றும் படிவம்-1–பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து விவரங்கள், தனியார் துறை படிவம்-2–151 நகரங்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

➢ **வீடு கட்டத் தொடங்குதலுக்கான குறியீடு**

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்ட அமைச்சகத்தின்கீழ் உள்ள தேசிய கட்டட அமைப்புமூலம்

வீடு கட்டத் தொடங்குதலுக்கான குறியீடு எனும் திட்டம் 2014–2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குறியீடு பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிய முக்கிய காரணியாக உள்ளது. மேலும், வீடு கட்டத் தொடங்கும் குறியீட்டுக் கணக்கீடானது வீட்டு வசதித் திட்டத்தில் நிகழும் மாற்றங்களையும் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழகத்தின் தேர்வு செய்யப்பட்ட 17 மையங்களில் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற புள்ளிவிவரங்கள் தேசிய கட்டடவியல் கழக இணைவு வாசல் (NBO-Portal)மூலம் இத்துறையினால் பதிவு செய்யப்படுகிறது.

➢ **கட்டடக் குறியீட்டெண்**

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களிலிருந்து (சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம்) சேகரிக்கப்படுகின்றன. அடிப்படை ஆண்டு 1999-2000=100 அடிப்படையில் கட்டடக் குறியீட்டெண் கணிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை 16 மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன.

31-3-2019 உடன் முடிவடைந்த காலாண்டிற்கு 16 மையங்களுக்கான கட்டட செலவுக் குறியீட்டெண் தொகுப்புப் பணி நடைபெற்று வருகிறது.

3.2.8 தொழிற் புள்ளிவிவரங்கள்

➢ **ஆண்டுத் தொழில் ஆய்வு**

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)-ன்கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான முதலீடு,

2020 மார்ச் 24]

கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்த தொழிற்சாலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன்மூலம் தமிழ்நாடு ஆண்டு தொழில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்கள் உற்பத்தித் துறையிலிருந்து வருமான மதிப்பீட்டினைக் கணக்கீடு, மாநில வருவாய் மதிப்பீட்டினைக் கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஆண்டுத் தொழில் ஆய்வு 2016-2017 ஆம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் ஆய்வுமூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு கூர்ந்தாய்வு செய்யும் பணி நடைபெறுகிறது.

- **தொழில் உற்பத்திக் குறியீட்டெண்**

தொழில் உற்பத்திக் குறியீட்டெண் மாநில அளவில் உள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. ஒவ்வொரு மாதமும் கனிமம் (8 வகைகள்), தொழிற்சாலை (144 வகைகள்), மின்சாரம் (1 வகை) ஆகிய துறைகளிலிருந்து அடிப்படை ஆண்டு 2011-2012-க்கு உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மாதாந்திர அறிக்கை மூன்று துறைகளிலிருந்து பெறப்படுகின்ற உற்பத்தி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கனிம உற்பத்தி விவரங்கள், கனிமம் மற்றும் சுரங்கத் துறை அலுவலகத்திலிருந்தும், மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டில்லியிலிருந்தும், தொழில் துறை உற்பத்தி விவரங்கள் 1,244 தொழிற்சாலைகளிடமிருந்து நேரடியாக உரிய படிவங்களில் பெறப்பட்டு 253 வகைகளுக்கும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த உற்பத்தி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் ஒவ்வொரு மாதமும் கணிக்கப்படுகின்றன.

ஜூலை 2019 வரையிலான திருத்திய அறிக்கை மற்றும் ஆகஸ்டு, செப்டம்பர் 2019 வரையிலான தற்காலிக அறிக்கை (அடிப்படை ஆண்டு 2011-2012) வெளியிடப்பட்டுள்ளது. ஆகஸ்டு, செப்டம்பர் 2019 மாதத்திற்கான திருத்திய அறிக்கை மற்றும் அக்டோபர், நவம்பர் 2019 மாதத்திற்கான தற்காலிக அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

- **கைத்தறித் திட்டம்**

கைத்தறித் துணிகளின் உற்பத்தி, விற்பனை, இருப்பு குறித்த காலாண்டு விவரம் மற்றும் நெசவாளர்களின் பொருளாதார நிலை குறித்த விவரங்கள் தொகுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் 164 தேர்வு செய்யப்பட்ட குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.2.9 ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு என்பது வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்கள் (பயிர் உற்பத்தி, மலை தோட்டப் பயிர், பொது நிருவாகம், இராணுவம், கட்டாய சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர) உற்பத்தி சார்ந்த அல்லது சேவைகளுடன் தொடர்புடைய அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் கணக்கிடுதல் ஆகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அமைப்புசாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் எண்ணிக்கையினை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பானது பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் மற்றும் செயல்படுத்துவதற்கும் தேவைப்படும், தொழில்முனைவோர் குறித்த தரவு, நிறுவனங்கள் குறிப்பாக அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு நிலை போன்ற பல்வேறு அடிப்படை விவரங்களை வழங்குவதாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பு மாறிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. மேலும், பொருளாதார நடவடிக்கைகளின் புவியியல் பரவல், நிறுவனங்களின் உரிமையாளர் வகை, பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குகிறது, பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதுவரை 6 பொருளாதாரக் கணக்கெடுப்புகள்

2020 மார்ச் 24]

மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசால் இதுவரை நடத்தப்பட்டுள்ள அனைத்துப் பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்குபெற்று உள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆகும்.

இந்திய அரசின் புள்ளி இயல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநில அளவில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பில் தொடர்புடைய மாநில துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் செயல்படுகிறது. பொதுப் பணி மையம் மற்றும் இந்திய மின் ஆளுமை மையமும் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பை நிறைவேற்றும் நிறுவனமாகச் செயல்படுகிறது.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் மேம்படுத்தப்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொழில்நுட்பப் பணிகள் இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பொது சேவை மையம், இந்திய மின் ஆளுமை சேவை மையம்-SPV என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. (இந்திய அரசின் அரசிதழ் எண் 1749, நாள் 13-6-2019-ன்படி).

கணக்கெடுப்புப் பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வைப் பணி (100% மேற்பார்வை) பொது சேவை மையம், இந்திய மின் ஆளுமை சேவை மையம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் 10% மேற்பார்வைப் பணி, இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இரண்டாம் நிலை மேற்பார்வைப் பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலக அலுவலர்கள், மாநில பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மற்றும் மாவட்டத் தொழில் மைய அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணி தமிழ்நாட்டில் சுமுகமாக நடைபெற அரசாணை எண் 80, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (த.வ.) துறை, நாள் 3-6-2019-ன்படி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு (DLCC)–(சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு.

[2020 மார்ச் 24

தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு-2019 களப் பணி "மாண்புமிகு தமிழக ஆளுநர்" அவர்களால் 9-10-2019 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் துவக்கி வைக்கப்பட்டு, களப் பணி மற்றும் மேற்பார்வைப் பணி அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது.

3.2.10 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. அவைகளில் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, ஆண்டு புள்ளி இயல் தொகுப்பு, பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்டப் புள்ளி இயல் கையேடு போன்ற முக்கிய வெளியீடுகள் ஆகும்.

3.2.11 புள்ளி இயல் வலுப்படுத்தும் ஆதரவுத் திட்டம் (SSS)

இந்திய புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம் (ISSP) புள்ளி இயல் வலுப்படுத்தும் ஆதரவுத் திட்டம் (SSS) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டமானது பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் செயல்பாடுகளை மாநில அளவில் ஒருங்கிணைக்க மனித வள மேம்பாட்டிற்கும் மாநில பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தமிழக அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரூ.40.76 கோடி மதிப்பீட்டிற்கு 28-9-2011-ல் ஏற்படுத்தியது. எனினும், மத்திய அரசு திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரூ.40.76 கோடியிலிருந்து ரூ.24.15 கோடிக்கு (ரூ.19.31 கோடி மத்திய அரசின் பங்கு மற்றும் ரூ.4.84 கோடி மாநில அரசின் பங்கு) இத்திட்டத்தை செயல்படுத்த மாற்றி அமைத்தது. இந்த திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி, ரூ.19.31 கோடி மத்திய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு கட்டாயம் அளிக்க வேண்டிய தொகையான ரூ.4.84 கோடியுடன், மேலும் அதிகமாக ரூ.14.52 கோடியினை கட்டுமானப் பணிக்கு வழங்கியுள்ளது.

இத்திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் மேற்படி நிதியை பயன்படுத்தி செயல்படுத்தப்பட்டுள்ளது. துறையில் செயல்படுத்தப்படும் தரவுகள்

2020 மார்ச் 24]

சேகரிக்கும் பொதுவான மென்பொருள் ஆய்வு பயன்பாட்டு தயாரித்தல், தகவல் பரிமாற்றத்திற்காக 645 சிம் கார்டுகள் பி.எஸ்.என்.எல். நிறுவனம்மூலம் வாங்குதல், ஆற்காடு மற்றும் இராசிபுரம் வட்டாரப் புள்ளி இயல் ஆய்வாளர்களின் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் மண்டல மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் கணிணி வன்பொருள் மேம்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2.12 தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்

இத்துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளிக்க வேண்டி தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டு தற்பொழுது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதரப் பணியாளர்களைக் கொண்டு 1-5-2012 முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் இயங்கிக் கொண்டு வருகின்றது. இந்நிறுவனத்தில் நடப்பு 2019-2020 நிதியாண்டில், 585 பணியாளர்களுக்கு 25 தொகுதிகளில் தகவல்நுட்பக் கருவிகள், பொருளாதார மற்றும் புள்ளிவிவர அமைப்புகளில் அடிப்படைக் கோட்பாடுகள், தொழில்நுட்பம், அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம், இத்துறையில் புதியதாக பணியில் அமர்த்தப்பட்டுள்ள புள்ளி இயல் உதவி ஆய்வாளர் மற்றும் புள்ளி இயல் உதவி இயக்குநர் ஆகிய பணியாளர்களுக்கு பொருளாதார மற்றும் புள்ளிவிவர அமைப்புகளில் அடிப்படைக் கோட்பாடுகள், தொழில்நுட்பம், தரவு பகுப்பாய்வு, அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி, அறிக்கை எழுதுதல் போன்றவைகளை உள்ளடக்கிய அறிமுகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேவை அடிப்படையிலான குறுகிய காலப் பயிற்சிகள் முறையே, வேளாண்மை மற்றும் தொழில் புள்ளிவிவரம், மாநில வருவாய் மதிப்பீட்டு முறைகள், சமூகப் பொருளாதார கணக்கெடுப்புப் புள்ளி இயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களைப் பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

3.2.13 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அடைவதற்கு சிறப்புத் தரவு சேகரிப்பு குழு இத்துறை அலுவலர்களைக் கொண்டு தரவுகளை சேகரிக்கவும் அப்பணி மேற்பார்வையிடவும் ஒரு குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு இத்துறையின் கூடுதல் இயக்குநர் பொறுப்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தரவு சேகரிப்புக் குழுமத்தின் முக்கியப் பணி நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் காரணிகள் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து தரவுகளைச் சேகரிப்பதாகும். இத்துறை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பான மாநில தரவு மையமாகவும், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான காரணிகளை கண்காணிக்கும் பணியினை செய்கின்றது.

மேலும், இந்தத் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் (TNeGA) உருவாக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களுக்கான கண்காணிப்புப் பலகைக் குழுவில் அங்கம் வகிக்கிறது. இந்தக் கண்காணிப்புப் பலகையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 7-11-2019 அன்று தொடங்கி வைத்தார்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கண்காணிப்புப் பலகையில் கொடுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அதன் காரணிகள் மற்றும் தரவு மதிப்பு, அலகு மற்றும் போக்குகளுக்கான தகவலை அளிக்கின்றது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் கண்காணிப்புப் பலகையானது அரசாங்கத்திற்கும், முடிவெடுப்பவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வியாளர்கள் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் கண்காணிப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் காட்சிப்படுத்துதல் மற்றும் தரவை ஆராயும் கருவிகள்மூலம் தரவுகளை எளிதாகப் பகுப்பாய்வு செய்ய பயன்படுகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்புப் பலகையின்மூலம் சம்பந்தப்பட்ட பயனாளர்கள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை சம்பந்தப்பட்ட துறைகள் வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் கண்காணிக்க பயன்படுத்தலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கு அல்லது குறிக்கோளை ஆராய கண்காணிப்புப் பலகையில் உள்ள தரவுகளை கருப்பொருள்

2020 மார்ச் 24]

வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள்மூலம் பயனாளர்களுக்கு காட்சிப்படுத்த முடிகிறது. பயனாளர்கள் இலக்குகளின் போக்குகளின் விவரங்களை விரல் நுனியில் உடனுக்குடன் அறிந்து கொள்ளலாம். கண்காணிப்புப் பலகை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அதிகளவு காட்சிப்படுத்தவும் பயனுள்ள உள்ளடக்கம் கொண்ட அதிக தகவலை அளிக்கவும் அவ்வப்போது மேம்படுத்தப்படுகிறது.

ஆரம்ப தரவு பதிவுப் பணிகள் இத்துறையின்மூலம் செய்யப்பட்டது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் மாநில திட்டக் குழு உதவியுடன் இத்துறை காரணிகள் தொடர்புடைய துறைகளுக்கு உள் நுழைவு சான்றுகள் உருவாக்கியுள்ளது. மேலும், அத்துறை அலுவலர்களுக்கு தங்களுடைய தரவுகளை கண்காணிப்புப் பலகையில் நேரடியாக தகவல் பதிவு செய்வதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. தரவுகளை பதிவு செய்தல், தொடர்புடைய துறைகளின் அடிப்படைப் பொறுப்பாகும். தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புப் பணியினை இத்துறை செய்கின்றது. துறைகள் தங்கள் தரவுகளைப் பகிர்தல், நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டிற்கு மத்திய அரசால் பயன்படுத்தப்பட்ட ஆய்வுத் தரவு, தரவுகளின் கால இடைவெளி, சில காரணிகளுக்குத் தரவு இல்லாமை ஆகியவை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான தரவுகளை சேகரிப்பதற்கான சில சவால்கள் என்பதால் அவற்றைக் கவனிக்க வேண்டியுள்ளது.

நவம்பர் 2019-ல் நடைபெற்ற மத்திய மற்றும் மாநில புள்ளி இயல் அமைப்புகளின் மாநாட்டிற்குப் பின்பு மாநில குறியீடு கட்டமைப்பு மாற்றியமைத்து, அதனை இறுதி செய்ய இலக்குகள் தொடர்புடைய துறைகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது. மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான குறியீடு கட்டமைப்பு தன்மையை இறுதி செய்வதற்காக மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான காரணிகளுக்குத் தரவுகள் கிடைக்கும் தன்மை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

3.2.14 பாலின வரவு-செலவு (Gender Budget)

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான வரைபடமாகும். நீடித்த நிலையான வளர்ச்சிகள் வறுமை, சமத்துவமின்மை, காலநிலை, சுற்றுச்சூழல் சீரழிவு, செழிப்பு, அமைதி மற்றும் நீதி உள்ளிட்ட உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதாகும். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு சரிநிகர் கல்வி,

[2020 மார்ச் 24

சுகாதார பராமரிப்பு, கண்ணியமான வேலை, அரசியல் மற்றும் பொருளாதார முடிவுகளில் பிரதிநிதித்துவம் வழங்குவது நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் மனித குல முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன் அளிக்கும்.

"பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்துப் பெண்கள் அதிகாரம் பெறுதல்" என்பது நிலையான வளர்ச்சி குறிக்கோள்களின் 5-வது குறிக்கோள் ஆகும்.

பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாடு நிதித் துறையில் பாலின பட்ஜெட் குழுவை உருவாக்கி, 2017-2018 ஆம் ஆண்டில் மாநில பட்ஜெட்டில் பாலின பட்ஜெட் அறிக்கையை சேர்த்துள்ளது.

நீடித்த நிலையான வளர்ச்சியின் ஒரு பகுதியாக பாலின பட்ஜெட் குறித்த ஒரு சிற்றேட்டைத் தயாரிக்க, தமிழ்நாட்டில் பெண்களை மையமாகக் கொண்ட திட்டங்களையும், அவர்களின் பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் அதற்கான செலவுகள் குறித்த புள்ளிவிவர அறிக்கைகளை பகுப்பாய்வு செய்ய இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாலின வரவு-செலவுத் திட்டம் என்பது பெண்களுக்குத் தனி வரவு-செலவுத் திட்டங்களை உருவாக்குவது அல்ல, அல்லது பெண்களின் திட்டங்களுக்கான செலவினங்களை மட்டும் அதிகரிப்பது அல்ல. ஆனால் பாலின பிரச்சினைகள் குறித்தத் திட்டங்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் அனைத்து நிலைகளிலும் திருத்த மற்றும் ஆதரவு நடவடிக்கைகளுக்கு முயற்சிப்பது என்பதையே கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாலின வரவு-செலவுத் திட்டம் வரவு-செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகளை உள்ளடக்கியது அல்லது பாலின கண்ணோட்டத்தில் கொள்கைகள் மற்றும் வரவு-செலவுத் திட்டங்களைப் பகுப்பாய்வு செய்கிறது.

3.2.15 குழந்தை பட்ஜெட்

எந்தவொரு நிதியாண்டிற்கும், அரசாங்கம் வைத்திருக்கும் குழந்தைகள் நலன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டங்களுக்கான உண்மையான உறுதிப்பாட்டை ஆராய்வதற்கான ஒரு கருவி குழந்தை பட்ஜெட் ஆகும். அபிவிருத்தி உபாயத்தை கையகப்படுத்தவும், அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள

2020 மார்ச் 24]

இடைவெளிகளை ஈடு செய்யவும் இது நமக்கு உதவுகிறது. பட்ஜெட் பகுப்பாய்வு குழந்தை நலனில் எந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண ஒருவரை அனுமதிக்கிறது. எனவே, குழந்தை பட்ஜெட் என்பது மாநில நிருவாகத்தை ஆராய்வதற்கான ஒரு கருவியாகும். சிறுவர் பட்ஜெட் பகுப்பாய்வு என்பது குழந்தைகளின் உரிமைகளை அமல்படுத்துவதில் மாநில அரசின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கு, ஒரு மதிப்புமிக்க கருவியாக மட்டுமில்லாமல் குழந்தைகள் உரிமைகள், கொள்கை திட்டமிடல் மற்றும் நிரலாக்கத்திற்கும் உதவுகிறது. எனவே, குழந்தை பட்ஜெட் குறித்த அறிக்கையை வெளியிடுவதற்கு புள்ளி இயல் துறை யுனிசெப் (Unicef) உடன் இணைந்து செயலாற்றுகிறது.

3.2.16 துறையின் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள்

➢ **வெளிப்படை அரசு தரவு தளம்**

2012-2013 ஆண்டு முதல் 2018-2019 வரையிலான தமிழ்நாடு புள்ளி இயல் கையேடுகள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) வெளிப்படை அரசு தரவு தளம் இணைய முகப்பில் (https://tn.data.gov.in/) வெளியிடப்பட்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டுக்கு முந்தைய புள்ளி இயல் கையேடுகளின் தரவைப் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் தளத்தில் மாவட்ட கையேடுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. கடைசியாக 2017-2018-க்கான மாவட்ட கையேடு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. புதியதாக சேகரிக்கப்பட்ட தரவுகளை பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

➢ **பொதுவான ஆய்வு பயன்பாட்டுக் கட்டமைப்பு மென்பொருள்**

புள்ளிவிவரங்கள் சேகரிப்பு நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது. கணினிமயமாக்கலின் காரணமாக காகித அடிப்படையிலான கேள்விகளிலிருந்து கையடக்க சாதனங்களுக்குத் துறை நகர்த்தும். இப்பணியினை நிறைவேற்ற தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலமாக இத்துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரு மென்பொருள் பொதுவான ஆய்வு பயன்பாடு கட்டமைப்பை உருவாக்கி வருகிறது. இம்மென்பொருள் தற்பொழுது சோதனை நிலையில் உள்ளது. விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மத்திய மற்றும் மாநில அரசுகள் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. 1974 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டங்களின் பயன்கள், மக்களின் கருத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறையானது மதிப்பீட்டு ஆய்வுகளைச் செய்து அரசுக்குத் தெரிவிக்கிறது. இவ்வறிக்கைகள் கொள்கை உருவாக்கத்திற்கும் மற்றும் அத்திட்டங்களை மென்மேலும் மெருகேற்றவும், நடைமுறைப்படுத்தவும் உதவுகிறது.

இத்துறையானது இதுவரை 774 மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகளை அரசுக்கு, சமூக நலம், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டு வசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் பல்வேறு துறைகளின் ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

i. மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் அயல் நாட்டு நிதி உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்

ii. 'தமிழ்நாடு–பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தைத் தயாரித்து வெளியிடுதல்

3.3.2 துறையின் நிருவாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது இத்துறைக்குத் தலைமை நிருவாகத் துறையாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் இயக்குநரகம் அனைத்து மதிப்பீடுகளையும் தன்னிச்சையாகவும் மற்றும் வழங்கப்பட்ட ஆய்வுகளை முடிப்பதற்கு முழுப் பொறுப்பு ஏற்றும் செயல்பட்டு வருகிறது.

மாநில அளவிலான இரு அமைப்புக்களான மாநில மதிப்பீட்டுக் குழு மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு இத்துறையின் ஆய்வுகளுக்கு வழிகாட்டியும், கண்காணிக்கவும் செய்கிறது.

- **மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)**

மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயல்படும் அரசுச் செயலர், நிதித் துறை, மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை முடிவு செய்கிறார். 2019-2020 ஆம் ஆண்டிற்கு பதினான்கு மதிப்பீட்டாய்வுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

- **மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)**

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். இக்குழு ஆய்வுகளின் செயல்முறைகளில் உள்ள ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது. இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் முறையியல் வடிவமைப்பையும், குறிக்கோளையும் இறுதி செய்து இக்குழு ஒப்புதல் அளிக்கிறது. மேலும், வரைவறிக்கை மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதிக்கிறது. அதற்குப் பின்னர் மதிப்பீட்டு ஆய்வுகள் இறுதி செய்யப்படுகின்றன. 2019-2020-ல் நடந்த மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் ஏழு மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைகளும் மற்றும் பதினைந்து மதிப்பீட்டு முறையியல்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3.3.3 செயல் திறன்

2019-2020-ன் தொடக்கத்தில் அளிக்கப்பட்ட 22 ஆய்வுகள் முடிக்கப்பட வேண்டியிருந்தது. கூடுதலாக 14 ஆய்வுகள் மாநில மதிப்பீட்டுக் குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 32 ஆய்வு முறையியல்களுக்கு மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்டது. தற்போது ஏழு ஆய்வுகள் முடிக்கப்பட்டு மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் முன்வைக்கப்பட்டது. நடைபெறும் 25 மதிப்பீட்டு ஆய்வுகளில் 4 ஆய்வுகள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 4 ஆய்வுகளில் ஒன்றுக்கு முறையியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

3.3.4 ஆய்வின் தொடர் செயல்முறை

மாநில மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதல் பெற்று ஆய்வுகள் வழங்கப்படுகிறது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது. பின்னர் முறையியல் தயாரிக்கப்பட்டு, மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படுகின்றது. முதன்மைக் கட்ட தரவுகள் சேகரிப்பதற்காக களப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு முன்னர் காகிதம்மூலம் சேகரிக்கப்பட்டது. தற்பொழுது வரைப்பட்டிகைக் கொண்டு மின்னணுமூலம் சேகரிக்கப்படுகின்றது. மேலும்,

உடனடியாகக் கிடைக்கபெறும் இரண்டாம் நிலை தரவுகள் இதேமுறையில் சேகரிக்கப்படுகின்றன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுக்குப் பின் சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அனுப்பப்படுகின்றன.

3.3.5 மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் வகைகள்

➢ **தேவைகள் மதிப்பீடு**

பிரச்சினைகளுக்கான வாய்ப்புகள் மற்றும் இயல்புகளை அடையாளம் காண்பது மற்றும் பிரச்சினைகளுக்குத் தேவையான சேவை வழங்கலை முடிவு செய்தல் ஆகும்.

➢ **திட்ட கோட்பாட்டு மதிப்பீட்டாய்வு**

திட்டத்தின் பின்னணியில் உள்ள நோக்கக் கூறு மேலும் திட்டத்தின் இறுதி இலக்கு மற்றும் உள்ளீடுகள் ஆகியவற்றிற்கு இடைப்பட்ட காரண வழிமுறைகளை உள்ளடக்கியதாகும்.

➢ **செயல்முறை மதிப்பீட்டு ஆய்வு**

செயல்முறை மதிப்பீட்டாய்வானது செயல் திட்டங்களுக்கான திட்டச் செயல்பாடுகள், நடைமுறைப்படுத்துதல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை ஆய்வு செய்கிறது. இத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட அனேகமாக அனைத்து ஆய்வுகளும் செயல்முறை மதிப்பீட்டாய்வை ஒரு பகுதியாகக் கொண்டுள்ளது.

➢ **தாக்க மதிப்பீட்டாய்வு**

குறிப்பிட்ட செயல்களினால் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு அத்திட்டத்தின் தாக்கம் மற்றும் முக்கிய விளைவுகளைக் கண்டறிவது தாக்க மதிப்பீட்டாய்வாகும்.

➢ **மதிப்பு செயல்திறன் பகுப்பாய்வு**

மதிப்பு செயல்திறன் பகுப்பாய்வென்பது ஒரே நோக்கத்தினை அடைய பல்வேறு திட்டங்களின் வெவ்வேறு சூழ்நிலை மற்றும் காலகட்டங்களில் செயல்படுத்த, செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்த ஒப்பீடாகும்.

2020 மார்ச் 24]

3.3.6 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA)

மத்திய அரசின் நுகர்பொருள் மற்றும் நுகர்வோர் நலத் துறையினரால் திறனடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன் தொடர் மதிப்பீட்டாய்வில் பங்கேற்று, மதிப்பீடு செய்ய மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இத்தொடர் மதிப்பீட்டாய்வானது எட்டு காலாண்டுகளாக இரண்டு ஆண்டுகள் தொடர் மதிப்பீடு கொண்டதாகும். ஒவ்வொரு காலாண்டிலும் நான்கு மாவட்டங்களில் 20 நியாய விலைக் கடைகள் மற்றும் அதன் விற்பனையாளர்கள் மற்றும் 300 பயனாளிகள் மாதிரிகளாகத் தேர்வு செய்யப்பட்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகிறது. நியாய விலைக் கடை அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு உறுப்பினர்களிலிருந்து மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறை நிவர்த்தி வழிமுறைகள் குறித்து அறியப்படுகிறது. நியாய விலைக் கடைகளுக்கான இருப்பு மற்றும் விநியோக முறை குறித்தும் நோக்கப்படுகிறது. இதற்கான கேள்வித் தாள் மத்திய அரசின் நுகர்பொருள் மற்றும் நுகர்வோர் நலத் துறையிடமிருந்து பெறப்பட்டு களப் பணி மேற்கொண்டு, மதிப்பீட்டறிக்கை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின்மூலம் அனுப்பப்படுகிறது. இதற்கான தரவுகள் மின்னணு முறையில் சேகரிக்கப்படுகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலமானது ஜூலை 2018 முதல் ஜூன் 2020 வரை எட்டு காலாண்டுகளுக்கான எட்டு அறிக்கைகள் தரப்பட வேண்டும். டிசம்பர் 2019 வரை 5 காலாண்டுகளுக்கான 5 அறிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. மார்ச் 31, 2020 ஆம் காலாண்டுக்கான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

3.3.7 மின்னணு மதிப்பீட்டு முறை

மின்னணு மதிப்பீட்டு முறையின்கீழ் இத்துறைக்கென வலைதளம் உருவாக்கப்பட்டு வன்பொருள் மற்றும் மென்பொருள் செயலிகள் வாங்கப்பட்டன. செயலிகளைப் பயன்படுத்தி வினாத் தாள் உருவாக்கம், வினாத் தாள் பதிவேற்றம் செய்தல் மற்றும் வரைப்பட்டிகை பயன்படுத்தி பணியாளர்களுக்கு களப் பணியில் விவரங்கள் சேகரித்தல் போன்றவற்றிற்கான பயிற்சி அளிக்கப்பட்டு தரமான தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வின்

திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து இத்துறையில் 14 மதிப்பீட்டு ஆய்வுகளுக்கான முதன்மைத் தரவுகள் வரைப்பட்டிகைகள் பயன்படுத்தி சேகரிக்கப்பட்டுள்ளது.

3.3.8 J-PAL-SA மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் இணைச் செயல்பாடுகள்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, ஆதார அடிப்படையிலான கொள்கை முடிவு எடுப்பதை நடைமுறைப்படுத்த மாசாச்சூசெட்சு (Massachusetts) தொழில்நுட்பக் கழகத்தின் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (J-PAL-SA) இணைந்து தொடர்ச்சியாக 2014 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

➢ J-PAL SA-ன் உதவியுடன் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, பழையத் தரவுச் சேகரிப்பு முறைகளிலிருந்து மின்னணுத் தரவுச் சேகரிப்புக்கு மாறியுள்ளது.

➢ மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு (i) மின்னணுத் தரவுச் சேகரிக்கும் மென்பொருள் விற்பனையாளரைத் தேர்ந்தெடுக்கும் குறிப்பு விதிமுறைகள் (TOR) உருவாக்குதல், (ii) மின்னணு கேள்வித் தாள் உருவாக்குதல் மற்றும் திருத்துதலுக்கான பயிற்சி வழங்குதல் மேலும் (iii) மின்னணுத் தரவுச் சேகரிப்பு மென்பொருள் உருவாக்குதல் குறித்த அறிவுரைகளை விற்பனையாளர்களுக்கு வழங்குவது முதலியவற்றில் ஒவ்வொரு படியிலும் பங்கேற்றுள்ளது.

➢ பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்கள், மின்னணு தரவு சேகரிப்பு பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. வெளி நிறுவனங்களுக்கான குறிப்பு விதிமுறைகள், ஆய்வுக் கோரிக்கைக்கான வேண்டுகோள், தொழில்நுட்பத் திறன், மதிப்பீடு மற்றும் விலை குறித்த பயிற்சிகள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

3.3.9 மதிப்பீடு வழிமுறைகள்

கொள்கை முடிவுகள் எடுப்பதற்கான மதிப்பீட்டுப் பங்கினை வலுப்படுத்த பொதுவான மதிப்பீடு வழிகாட்டியானது வடிவமைப்பு, புரிதல் மற்றும் வெளிச்செயலாக்கம்மூலம் பல்வேறு அரசுத் துறைகள் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளவும் இத்துறையின் உதவி மற்றும் சேவைகளைப் பயன்படுத்தவும் வழிகாட்டுகிறது.

3.3.10 வெளி நிறுவனங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகள்

அதிக எண்ணிக்கையிலான மாதிரிகள் மற்றும் பரவலான பகுதிகளிலிருந்தும் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளுக்கான பட்டியலிடப்பட்ட முகமைகள்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. 2016-லிருந்து 8 ஆய்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 4 ஆய்வுகள் முடிக்கப்பட்டு, 4 ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் இத்துறையில் நிலுவையிலுள்ள அனைத்து ஆய்வுகளும் 2020-2021-க்குள் முடிப்பதற்கு வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

4.0 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் என்ற உலகத்தரத்துக்கு இணையான இரயில் சார்ந்த பொதுப் போக்குவரத்து வசதியை சென்னையில் அறிமுகப்படுத்தியுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தகுந்த, வசதியான, திறன் மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும், இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் தற்போதுள்ள பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

கட்டம்-I

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-**I**-ன்கீழ், வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ. நீளத்திலான வழித்தடம்-1 மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22 கி.மீ. நீளத்திலான வழித்தடம்-2 ஆகிய இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கியது. இந்த இரண்டு வழித்தடங்களுக்கான பயணிகள் சேவை பல்வேறு கட்டங்களாக துவக்கப்பட்டு, அவற்றில் கடைசியாக 10-2-2019 அன்று துவக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு தனது நிருவாக ஒப்புதலை பிப்ரவரி 2009-ல் வழங்கியுள்ளது. இத்திட்டச் செலவு மதிப்பீடு ரூ.18,380 கோடியாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டைப் பங்கு மூலதனமாகவும், 5 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் அளிக்கின்றது. அதேபோன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டை பங்கு மூலதனமாகவும், 5.78 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் அளிக்கின்றது. மீதமுள்ள 59.22 விழுக்காடு ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசின் வெளிநாட்டுக் கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வழிவரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படுகிறது.

இத்திட்டம் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட “சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்” என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டு, மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான செயலாளரை நிருவாகத் தலைவராகவும், அவருடன் சேர்த்து ஐந்து இயக்குநர்களை மத்திய அரசு நியமித்தும் மற்றும் மாநில அரசு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து ஐந்து இயக்குநர்களை நியமித்துள்ளது. இவர்களைத் தவிர மூன்று செயல் இயக்குநர்களும், இரண்டு சுவாதீன இயக்குநர்களும் உள்ளனர்.

செலவினம்

தமிழ்நாடு அரசு 2,858 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 2834.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 2,190 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 730 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை 8,646 கோடி ரூபாயை (முதுநிலைக் கடன்) நிதி உதவியாக வழங்கியுள்ளது.

2020 மார்ச் 24]

கட்டம்-I-ன் நீட்டிப்பு—வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் /விம்கோ நகர் வரை

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்-1-ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்/விம்கோ நகர் வரையில் (9.051 கி.மீ.), 3,770 கோடி ரூபாய் செலவில் நீட்டிப்பதற்கான, தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கருத்துருவிற்கு மத்திய அரசு 15-6-2016 அன்று நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

செயல் முன்னேற்றம்

இந்த நீட்டிப்புத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் 23-7-2016 அன்று ஆரம்பிக்கப்பட்டன. அனைத்துச் சுரங்கம் தோண்டும் பணிகளும் முடிவுற்ற நிலையில், இரண்டு சுரங்கப்பாதை இரயில் நிலையங்கள், உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதிகள் மற்றும் மெட்ரோ நிலையங்கள், விம்கோ நகர் பணிமனை ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த நீட்டிப்புத் திட்டப் பணிகள் 2020 ஆம் ஆண்டு மத்தியில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செலவினம்

தமிழ்நாடு அரசு 508 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 408 கோடி ரூபாயை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 508 கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், 117 கோடி ரூபாயை சார்நிலைக் கடனாகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை 1,359.60 கோடி ரூபாயை (முதுநிலைக் கடன்) நிதி உதவியாக வழங்கியுள்ளது.

கட்டம்-I-ன் நீட்டிப்பு-விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை

மெட்ரோ இரயில் வழித்தடம்-1-ஐ சென்னை விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக அரசு

ஒப்புதலை ஜனவரி 2020-ல் அளித்துள்ளது. இவ்வறிக்கைகள் தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரிவான சாத்தியக்கூறு/விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிக்காக, திட்டம் தயாரிக்கும் நிதியிலிருந்து தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 1.20 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் II-க்கான, 118.9 கி.மீ. மொத்த நீளத்திலான ஓர் ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை 69,180 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் (M/s RITES Limited) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஜனவரி 2019-ல் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II-க்கான கீழ்க்கண்ட மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுக்கு அரசு கொள்கையளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது:

வழித்தடம்-3	*மாதவரம் முதல் சிப்காட் வரை*	*45.8 கி.மீ.*
வழித்தடம்-4	*கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலை வரை*	*26.1 கி.மீ.*
வழித்தடம்-5	*மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை*	*47.0 கி.மீ.*
	மொத்தம்	**118.9 கி.மீ.**

இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு 69,180 கோடி ரூபாயாகும். இது டிசம்பர் 2018 விலைகளின்படி நிலங்கள், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு மற்றும் மாநில வரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

2020 மார்ச் 24]

இந்த ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காகவும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறுவதற்காகவும் மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை அடங்கும்.

ரூபாய் 40,941 கோடி செலவு மதிப்பீட்டில், வழித்தடங்கள்-3 மற்றும் 5-ல் 52.01 கி.மீ. மொத்த நீளத்திலான இரண்டு முன்னுரிமை வழித்தடப் பகுதிகளைச் செயல்படுத்துவதற்கு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனுதவி 20,196 கோடி ரூபாயாகும். அலுவல் மேம்பாட்டு நிதி (Official Development Assistance) கடனுதவி 75,519 மில்லியன் ஜப்பான் யென் (சுமார் 4,770 கோடி ரூபாய்) அளவீட்டிலான முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் மத்திய அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமைக்கிடையே 21-12-2018 அன்று கையெழுத்தாகியுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II-ன்கீழ், வழித்தடம் 3-ல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67 கி.மீ.) மற்றும் வழித்தடம் 5-ல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் வரையிலுமான (16.34 கி.மீ.) மொத்தம் 52.01 கி.மீ. நீளத்திலான முன்னுரிமை வழித்தடப் பகுதிகளை 40,941 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் வெளிநாட்டுக் கடனுதவியுடனும் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை ஜனவரி 2019-ல் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடனும் வழங்குவதற்குத் தயாரான நிலையில் உள்ளது. இந்தத் திட்டம் "மாநில அரசு திட்டமாகச்" செயல்படுத்தப்பட உள்ளது.

17-7-2018 அன்று நடைபெற்ற மத்திய பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் ஆய்வுக் குழுக் (Screening Committee) கூட்டத்தில் கலங்கரை விளக்கத்திலிருந்து பூந்தமல்லி

புறவழிச் சாலை வரையிலான வழித்தடம் 4 முழுமைக்கும் ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவை நிதியுதவி அளிப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியது. அதன் பின்னர், கட்டம் II-ல் எஞ்சியுள்ள வழித்தடப் பகுதிகளுக்கு (வழித்தடம் 3-ல் சோழிங்கநல்லூர் முதல் சிப்காட் வரை (10.13 கி.மீ.) மற்றும் வழித்தடம் 5-ல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரை (30.66 கி.மீ.) முதல்நிலை திட்ட அறிக்கைகள் (Preliminary Project Reports) பொருளாதார விவகாரங்களுக்கான துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மத்தியப் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் ஆய்வுக் குழுவின் 22-1-2019 மற்றும் 14-2-2019-ல் நடைபெற்றக் கூட்டங்களில் ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவை நிதியுதவி அளிப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியது. அதன் பின்னர் மேற்கண்ட பன்னாட்டு நிதி நிறுவனங்களின் அலுவலகக் குழுக்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வருகை புரிந்து கலந்துரையாடினர். இதில் உலக வங்கி மட்டும் மெட்ரோ இரயில் திட்டப் பணிக்குக் கடனுதவி வழங்க விருப்பம் தெரிவிக்கவில்லை என்பதால், உலக வங்கியின் நிதியுதவிக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் I-ல் மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு கூட்டு முயற்சியுடன் சரிசமமான பங்களிப்புடன் நிதியுதவி வழங்கியதைப்போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், கட்டம் II-க்கு ஒப்புதல் மற்றும் நிதியுதவி வழங்கக்கோரி மத்திய அரசின் உயர்மட்ட அளவில் மாநில அரசானது கேட்டுகொண்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இலகு இரயில் இணைப்பு

தாம்பரத்தையும் வேளச்சேரியையும் இலகு இரயில் திட்டம்மூலம் இணைப்பது தொடர்பாக விரிவான சாத்தியக்கூறு அறிக்கை/விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு தமிழ்நாடு அரசு ஜனவரி 2020-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வறிக்கைகளைத் தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம்

2020 மார்ச் 24]

ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக 1.5 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

கோயம்புத்தூர் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பு

இம்மாநிலத்தின் இரண்டாவது பெரும் நகரமான கோயம்புத்தூர் நகரம் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. இந்நகரம், இரயில், சாலை மற்றும் விமானப் போக்குவரத்தினால் மாநிலத்தின் பிற பகுதிகளுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகரம், சென்னைக்கு அடுத்தப்படியாக இரண்டாவது பெரிய தொழில் நகரமாகும். கோயம்புத்தூர் நகரில் அதிகரித்துள்ள போக்குவரத்தினைக் கருத்தில்கொண்டும், நகர்ப்புறப் போக்குவரத்தில் பொதுப் போக்குவரத்தின் பங்கினை உயர்த்த வேண்டிய அவசியத்தை கவனத்தில் கொண்டும், மெட்ரோ இரயில் போன்று பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பு ஒன்றினை கோயம்புத்தூர் நகரில் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

கோயம்புத்தூர் நகரில் மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19-7-2017 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். இவ்வறிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப் பணிக்காக ஜெர்மன் நிறுவனமான கே.எப்.டபிள்யு (KfW) நிதியுதவி அளிக்கிறது.

இணைப்பு VII

(38 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

ஆரம்ப காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் குடிமைப் பணிகள் ஒழுங்குமுறைகள், 1889-ன்கீழ் மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் நிருவகிக்கப்பட்டனர். 1-7-1960 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் அமர்த்தப்பட்டு ஓய்வு பெற்றவர்களுக்கு மெட்ராஸ் ஓய்வூதியச் சட்டத்தின்கீழ் (Madras Pension Code) ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இச்சட்டத்திற்குப் பதிலாக 1-1-1979 அன்று முதல் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 நடைமுறைப்படுத்தப்பட்டது. மாவட்ட வாரியங்கள் 2-10-1960 அன்று கலைக்கப்பட்டன. இதன் விளைவாக 1-7-1960 அன்று, மாவட்ட வாரிய ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பில் பணியாற்றியவர்கள் அரசுப் பணியில் ஈர்க்கப்பட்டு, 1973 முதல் 1980 வரை பல்வேறு அரசு ஆணைகள்மூலம் ஓய்வூதிய சலுகைகள் அப்பணியாளர்களுக்கு நீட்டிக்கப்பட்டன.

2. ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்களை விரைவாக வழங்குவதை உறுதி செய்வதற்கும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும் 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககம் செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 1-3-2020 ஆம் நாள் நிலவரப்படி 7,38,168 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

2020 மார்ச் 24]

வ. எண்	விவரம்	எண்ணிக்கை
1.	*மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்*	*4,09,422*
2.	*ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள்*	*68,134*
3.	*மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள்*	*2,06,817*
4.	*ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள்*	*23,244*
5.	*கருணைத்தொகை பெறும் ஓய்வூதியர்கள் உட்பட ஏனைய ஓய்வூதியதாரர்கள்*	*30,551*
	மொத்தம்	**7,38,168**

3. இந்த மானியக் கோரிக்கையின்கீழ் அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு நிதியுதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பயன்கள் அளிப்பது தொடர்பான முக்கியமான செலவினங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகளும் அடங்கும்.

4. இந்த மானியக் கோரிக்கையின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும்பொருட்டு 35,158.84 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் (Pension):

5. (அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 20 நிறைவுற்ற அரை ஆண்டுகளாகும் (20 completed half years). முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 60 நிறைவுற்ற அரை ஆண்டுகளாகும். மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ஆ) 1-10-2017 முதல் குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம்:

6. 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அவர்களின் வயதிற்கு ஏற்ப அடிப்படை ஓய்வூதியம்/ அடிப்படை குடும்ப ஓய்வூதியத்தில் கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக/கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக 1-1-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது:

வ. எண்	ஓய்வூதியதாரர்/ குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு	கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்	**1-3-2020** அன்றுள்ளபடி எண்ணிக்கை
1.	*80 முதல் 84 வரை*	*அடிப்படை ஓய்வூதியத்தில்/ குடும்ப ஓய்வூதியத்தில் 20%*	*43,095*
2.	*85 முதல் 89 வரை*	*அடிப்படை ஓய்வூதியத்தில்/ குடும்ப ஓய்வூதியத்தில் 30%*	*15,776*
3.	*90 முதல் 94 வரை*	*அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%*	*4,027*
4.	*95 முதல் 99 வரை*	*அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%*	*756*
5.	*100 மற்றும் அதற்கு மேல்*	*அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%*	*76*
மொத்தம்			*63,730*

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்:

7. அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களுக்கும்

மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக்காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:

8. (அ) ஒவ்வொரு ஊதிய திருத்தத்திற்குப் பின்னரும், பணியில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு இணையாகவும் அகவிலைப் படியினை ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கி வருவதால், குறிப்பாக 1-1-1996 முதல் "சமமான பதவி-சமமான ஓய்வூதியம்" என்ற கொள்கையின் அடிப்படையில் ஓய்வூதியத்தை மறுநிர்ணயம் செய்யும் முறையை ஏற்றுக்கொண்ட பிறகு, ஓய்வூதியச் செலவினம் அதிவேக விகிதத்தில் உயர்ந்து வருகின்றது. அதிகரித்து வரும் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்களால் அரசின் நிதிச் சுமை தாங்க இயலாத அளவிற்கு அதிகரித்து வருவதால், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குக் கடன் வாங்குவதற்கு மட்டுமின்றி, வருவாய்ச் செலவினங்களை மேற்கொள்ள அரசு கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறது. இது உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதி ஆதாரங்களை மட்டுப்படுத்துகிறது. காலப்போக்கில் பணியாளர்களின் எண்ணிக்கை குறைவதுடன், அந்தக் குறைந்த அளவிலான பணியாளர்களுடன், அதிக அளவிலான ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதியச் செலவினங்களை ஏற்க வேண்டி உள்ளதால் தாங்க இயலாத அளவில் நிதிச் சுமை ஏற்படும்.

(ஆ) ஓய்வூதியத் திட்டத்தின் காரணமாக மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஏற்படும் நிதிச் சுமையினை கருத்தில்கொண்டு, ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு. பி.கே. பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில் மத்திய அரசு 26-6-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடனும், பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதுமையான திட்டத்தை பிப்ரவரி 2002-ல் பரிந்துரைத்தது. மத்திய அரசின் நோக்கமானது, புதியதாக அரசுப் பணியில்

சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன்கூடிய ஒரு திட்டத்தை வடிவமைப்பதோடு, அதற்கான கூடுதல் உட்கட்டமைப்பினை உருவாக்காமல், இதரப் பிரிவினர்களான, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினைச் சார்ந்த சுயதொழில் புரிபவர்கள், குறைந்த வருவாய் ஈட்டும் பிரிவினைச் சார்ந்த அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு உதவிசெய்யும் திறனைக் கொண்ட திட்டமாகும்.

(இ) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான மத்திய அரசின் முன்முயற்சியினைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதியச் செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டுவரும் பங்கேற்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.”

(ஈ) வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக 1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்களுக்கு அரசு ஆணை (நிலை) எண் 259, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 6-8-2003 வாயிலாகப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய அரசு இதுதொடர்பான விரிவான ஆணைகள் வெளியிட்ட பின்னர், ஆணைகளில் திருத்தங்கள் செய்யப்பட்டு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வகுக்கப்படும் என இந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) 1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள பணியில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாக அடிப்படை ஊதியம் மற்றும்

2020 மார்ச் 24]

அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு அதற்குச் சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகின்றது. கருவூலக் கணக்கு ஆணையரகம், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் உதவியுடன் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளைப் பராமரித்து வருகின்றன.

(ஊ) இத்திட்டத்தின்கீழ், 31-1-2020 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 5,51,307 அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 35,231 கோடி ரூபாய் ஓய்வூதிய பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

(எ) 29-2-2020 ஆம் நாள் நிலவரப்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பணி ஓய்வு பெற்றவர்கள், பணித் துறப்பு, இறந்த மற்றும் பணி முற்றுவிப்பு செய்த 17,642 பணியாளர்களுக்கு இறுதித் தீர்வுத் தொகையாக 871.24 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்:

9. அரசாணை (நிலை) எண் 260, நிதி (ஓ.கு.பி.)த் துறை, நாள் 15-10-2015 வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில் பணிபுரியும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு இதுதொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய ஓய்வூதிய முறை [National Pension System]:

10. தேசிய ஓய்வூதிய முறை 1-1-2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதிய முறைக்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (National Securities Depository Limited), மைய ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் தமிழ்நாட்டைச் சார்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்காக தமிழக அரசினால் 28-6-2017 அன்று ஒப்பந்தம்

செய்யப்பட்டது. அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 20.26 கோடி ரூபாய் தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனத்திற்கு (National Securities Depository Limited) 1-3-2020 வரை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்:

11. (அ) ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், அதிகபட்சமாக 240 நாட்களை ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) ஓய்வுபெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி ஒப்படைப்பு செய்து முழு சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(இ) ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஆகியவற்றை ஒப்படைப்பு செய்து சம்பளம் பெற அடிப்படை ஊதியத்துடன், சிறப்பு ஊதியம், அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப் படி ஆகியவற்றைச் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(ஈ) ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப் படி வழங்கப்படுகிறது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity):

12. (அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)

இருபது நிறைவுற்ற அரை ஆண்டுகளுக்கு (20 completed half years) குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறு மாத பணிக்காலத்திற்கும் 1/2 மாத

2020 மார்ச் 24]

ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுக்காலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்தத் தொகையாகும்.

(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், 1-10-2017 முதல் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

வ. எண்	**பணிக்காலம்**	**பணிக்கொடையின் வீதம்**
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு
4.	பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	**மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு**
5.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்.

(இ) ஓய்வுக்காலப் பணிக்கொடை (Retirement Gratuity)

ஒருவர் பத்து நிறைவுற்ற அரை ஆண்டுகளும் (10 completed half years) அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு நிறைவுற்ற அரை ஆண்டுக்காலத் தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது.

(ஈ) 1-1-2016 முதல் இறப்பு பணிக்கொடை/ ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Old Pension Scheme):

13. (அ) அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும்.

(ஆ) ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அலுவலர் மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு

பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும்.

(இ) அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு அவர் இறந்த பின்னர் 10 ஆண்டுகள் வரை அல்லது இறந்த ஓய்வூதியதாரரின் வயது 65 வயதை அடைந்திருந்தால் அதுவரை, இதில் எது முந்தியதோ அதுவரையில் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும்.

(ஈ) விதவை அல்லது மனைவியை இழந்த கணவனுக்கு, அவர் மறுமணம் செய்துகொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(உ) விதவை அல்லது மனைவியை இழந்த கணவர் இறப்பிற்குப் பிறகு, அவருடைய தகுதியான குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ அல்லது அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்குத் தேவையான பொருளீட்டும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(ஊ) எனினும் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருளீட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத் திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(எ) ஓய்வூதியதாரர்களின் மணமாகாத/விவாகரத்து பெற்ற/ விதவை மகள்களுக்கும், சில நிபந்தனைகளுக்குட்பட்டு

அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

(ஏ) அரசுப் பணியாளர்கள்/ ஓய்வூதியதாரர்களின் 25 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத/விதவை/ விவாகரத்தான மகள்களுக்கு குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்குவதுபோல், திருநங்கைகள்/அரவாணி குழந்தைகளை மகள்களாகக் கருதி அவர்களுக்கும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(ஐ) 1-10-2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கருணைத் தொகை (Ex-Gratia Payment):

14. பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 1-7-2019 முதல் 304 சதவீத அகவிலைப் படியும் வழங்கப்படுகிறது.

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension):

15. (அ) ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33⅓ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வுபெற்ற நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள் விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

(ஆ) ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்த பிறகு, ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதிக்கும் அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்:

16. (அ) அகவிலைப் படி

(i) ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

(ii) இராணுவ ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப் படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப்பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(iii) இராணுவத்தில் பணியாற்றிய பின் மறு வேலைவாய்ப்பு அடிப்படையில் மாநில அரசு குடிமைப் பணியில் 1-4-2003-க்கு முன்பு வேலைவாய்ப்பு பெற்ற முன்னாள் படைவீரர்களின் குடும்பத்திற்கு 2-9-2016 முதல் இரண்டு குடும்ப ஓய்வூதியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

(iv) தற்காலிக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

[2020 மார்ச் 24

(ஆ) மருத்துவப் படி

(i) 1-10-2017 முதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு 300 ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

(ii) தற்காலிக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(இ) பொங்கல் பரிசு

"C" மற்றும் "D" பிரிவுப் பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராமப் பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc pensioners of all categories) மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்தப் பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும்/பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

(ஈ) பண்டிகை முன்பணம்

அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதுபோல ஓய்வூதியதாரர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 2,000 ரூபாயிலிருந்து 2-8-2019 முதல் 4,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018:

17. (அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, 1-7-2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1-7-2018 முதல் 30-6-2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு

நிறுவனத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதிய திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன்/திருமணமாகாத மகள், வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, மாற்றுத் திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ, மணமாகாத/விவாகரத்து பெற்ற/விதவை மகள்கள் ஆகியோர்கள் இப்பயனைப் பெற, சில நிபந்தனைகளுக்குட்பட்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது:

(i) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்.

(ii) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை.

(iii) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை.

(iv) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்.

(v) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, ஆன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty).

(vi) தீக்காயங்களுக்கான சிகிச்சை.

(ஈ) மேலும், கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு, கண் ஒன்றிற்கு 20,000 ரூபாய் வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை

சிகிச்சை உதவியின் உச்சவரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(உ) இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, உடனடி கவனிப்பு தேவைப்படுகின்ற மற்றும் விபத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் பணச் செலவின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 988 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1-7-2018 முதல் 30-6-2022 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டுக் கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு ஆரம்பத்தில் செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையைவிடக் கூடுதலாகச் செலுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி உட்பட காப்பீட்டுக் கட்டணத்தை அரசு/அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும்.

(ஊ) 1-7-2014 முதல் 30-6-2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(எ) இத்திட்டம் நீட்டிக்கப்பட்ட 1-7-2018 முதல் 3-3-2020 வரை 1,06,068 பயனாளிகள் 371.92 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2020 மார்ச் 24]

(ஏ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அந்த நிறுவனங்களால், கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காமல் அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அப்படியே இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

18. 1-1-1997 முதல் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு ஓய்வூதியத்திலிருந்து மாதமொன்றுக்கு சந்தாத் தொகையாக 80 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதிக்கு ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு 7-6-2013 முதல் உயர்த்தப்பட்ட அளவாக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 1-3-2020 வரை இறந்துபோன 2,11,771 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு 760.54 கோடி ரூபாய் இத்திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்:

19. (அ) இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் 20 ரூபாய் வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 என்ற புதிய திட்டம் 1-10-2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப் பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணி அரசுப் பணியாளர்களும் விருப்பத்தின்பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு 50 ரூபாய் வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(இ) 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை 70 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

(ஈ) மேற்கண்ட திட்டங்களுக்கு ஓய்வூதிய இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு அலுவலர் ஆவார். வரவு-செலவுத் திட்டத்தில் அரசால் அனுமதிக்கப்படும் தொகையை ஓய்வு பெறும் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு, (அரசு உதவி பெறும் பள்ளிகள்/கல்லூரிகள்/ தொழில்நுட்பக் கல்லூரிகள் தவிர) அந்தந்தத் துறைகள்மூலம் தொகை வழங்கப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

2020 மார்ச் 24]

20. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்
2001-2002	*3,050.48*	*16.07*
2002-2003	*3,488.20*	*16.86*
2003-2004	*3,279.96*	*13.84*
2004-2005	*3,921.05*	*13.78*
2005-2006	*4,488.83*	*13.22*
2006-2007	*5,461.68*	*13.35*
2007-2008	*6,038.96*	*12.71*
2008-2009	*7,776.21*	*14.13*
2009-2010	*8,439.24*	*15.11*
2010-2011	*11,855.27*	*16.89*
2011-2012	*12,687.97*	*14.89*
2012-2013	*13,248.08*	*13.41*
2013-2014	*14,934.37*	*13.82*
2014-2015	*17,528.06*	*14.32*
2015-2016	*18,490.89*	*14.33*
2016-2017	*20,176.74*	*14.39*
2017-2018	*22,432.23*	*15.34*
2018-2019	*29,710.58*	*17.10*
2019-2020 (RE)	*31,028.71*	*16.17*
2020-2021 (BE)	*35,158.84*	*16.03*

மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

21. ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு தீர்வு முறை (Electronic Clearing Service)/ மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன்மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாகப் பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன் பெற வழி ஏற்படும்.

ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering):

22. (அ) ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகைப் பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணலின்போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியதாரர்களுக்காக இந்திய அரசால் தொடங்கப்பட்ட உயிர்புள்ளியியல் (Biometric) துணைகொண்ட இலக்க முறை ஜீவன் பிரமான் சேவையாகும். தற்பொழுதுள்ள ஆதார் இணைப்பினை பயன்படுத்தி, ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக ஆதார் உயிர்புள்ளியியல் சான்றளிப்பின் அடிப்படையில் அரசு முகமையினால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழ் ஒரு தகுதிவாய்ந்த சான்றிதழாக ஏற்கப்படுவதால், ஓய்வூதியதாரர்கள் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாக இச்சேவையினைப் பயன்படுத்திக்கொள்ள ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

2020 மார்ச் 24]

(ஆ)ஆதார் எண்களை ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் 100 சதவீதம் இணைக்கும் நடவடிக்கையினை அரசு தீவிரப்படுத்தி வருகிறது. இப்பணி நிறைவேற்றப்பட்டவுடன், எந்த விதமான இடர்ப்பாடுகளும் இல்லாமல் அனைத்து ஓய்வூதியதாரர்களும் ஜீவன் பிரமான் இணையதளம் வழியாகவே வாழ்வுச் சான்றிதழை உருவாக்கிப் பயன்படுத்தலாம். இதனால் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் ஓய்வூதியரின் நேர்காணலுக்கு அல்லது உரிய அலுவலரால் வழங்கப்படும் வாழ்வுச் சான்றிதழுக்கு வற்புறுத்தாமல் இணையதளம்மூலம் வாழ்வுச் சான்றிதழைப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வழிவகை ஏற்படும்.

23. இதுதவிர ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள் அனைத்தையும் எவ்விதச் சிரமமுமின்றி இதன்மூலம் மிக எளிதான முறையில் அணுக முடியும்.

ஓய்வூதியப் பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization):

24. ஓய்வூதியம் பெறும் ஆணைகளையும், பிற பதிவுகளையும் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்துக் கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்தப் பதிவுகளை மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின்னணுமயமாக்கலுக்குப் பின்னர் பதிவுகள் மற்றும் தகவல்களை நீண்ட காலம் பாதுகாப்பாக வைக்கவும், ஒரே நேரத்தில் பதிவுகளை ஓய்வூதியதாரர் உட்பட பலர் எல்லைகளைக் கடந்து பயன்படுத்தவும், பார்வையிடவும் இது வழிவகுப்பதோடு, கணினிமயமாக்குவதன் காரணமாக பதிவுகள் சிதைவு மற்றும் நிறமாற்றம் தவிர்க்கப்பட்டு, தெளிவாக மேம்பட்ட தரத்துடன் அவற்றைப் பாதுகாக்க இயலும். சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கமல் செய்திட அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஓய்வூதிய வழக்குகள், பொது வருங்கால வைப்பு நிதிப் பதிவேடு அட்டைகள் மற்றும் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளின் கோப்புகள் ஆகிய இனங்கள் மின்னணுமயமாக்கலின் இரண்டாம் கட்டத்தின்கீழ் அடங்கியுள்ளன. மேலும், முதன்மைக் கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதிய ஆவணங்களை ஸ்கேன் செய்தல், மென்பொருள் மற்றும் மனித ஆற்றல் ஆகியவற்றிற்கான செலவுகளுக்கு அரசானது 124 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிருவாக ஒப்புதலை வழங்கியுள்ளது.

[2020 மார்ச் 24

ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை (Identity Card):

25. ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) வழங்கிட அரசு ஆணையிட்டு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 16-4-2018 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டு ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அரசு இ-சேவை மையங்களில் சேவைக் கட்டணமாக ஒரு அடையாள அட்டைக்கு 30 ரூபாய் செலுத்தி ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal):

26. தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்காக பிரத்யேகமாக ஓர் ஓய்வூதியர் இணையம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 359, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 7-12-2017-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதற்கான வலைதளம் மற்றும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, 18-1-2019 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இவ்வலைதளத்தில் ஓய்வூதியதாரர்கள், தங்களது ஓய்வூதியம் பெற்ற விவரம், ஓய்வூதியம் தொகுத்துப் பெற்றதை மீளப்பெறுவது, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான விவரங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தின்மூலம் ஓய்வூதியதாரர்கள் தாங்களாகவே தங்களுக்குத் தேவையான விவரங்களைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதிய இயக்குநரகம்

27. அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(அ) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியக் குறைகளைத் தீர்த்தல்;

2020 மார்ச் 24]

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்புமூலம் தீர்த்தல்;

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்;

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்;

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995-ன்கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளைத் தீர்வு செய்தல்;

(ஊ) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிருவகித்தல் மற்றும் அதை செயல்முறைபடுத்துதல்;

(எ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி;

(ஏ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி;

(ஐ) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதரப் பயன்களின் வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநிலக் கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவுப் பணி செய்தல்;

(ஒ) அமைப்புசாரா தினக் கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிருவகித்து நிறைவேற்றுதல்.

[2020 மார்ச் 24

ஓய்வூதியதாரர்கள் குறை தீர்வு

ஓய்வூதிய இயக்ககத்தின்மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

28. பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர்/ குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் முதலமைச்சரின் தனிப் பிரிவு மூலமாகப் பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாகப் பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின்மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகள் உடனடியாகத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் தனிப் பிரிவிலிருந்து 133 மனுக்களும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 137 மனுக்களும் பெறப்பட்டு பதில் அளிக்கப்பட்டது. இது தவிர பல்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 1,119 ஓய்வூதியதாரர் குறைதீர்த்தல் மனுக்களும் தீர்வு செய்யப்பட்டன. மேலும், மனுதாரர்களின் குறைகள் தீர்க்கப்படும் வகையில் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆட்சியாளர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

29. மாவட்ட ஆட்சியாளர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதியப் பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர் அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 24]

ஓய்வூதிய அதாலத்

30. ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத், உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தில் 22-2-2002 முதல் செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள்மீது வழங்கப்படும் உத்தரவின்மீது தொடர் நடவடிக்கை எடுத்து செயல்படுத்திட ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஓய்வூதியத் துறை இயக்குநர் ஓய்வூதிய அதாலத் ஒருங்கிணைப்பு அலுவலராவார் (Nodal Officer). ஒவ்வொரு மாதமும் இந்த அதாலத் நடைபெறுகிறது. 1-1-2019 முதல் 1-3-2020 வரை 87 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 67 மனுக்கள்மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் ஓய்வூதிய சங்கங்கள் தொடர்பான கூட்டம்

31. ஓய்வூதிய இயக்குநர், ஓய்வூதியதாரர் சங்கப் பிரதிநிதிகளின் முன்னிலையில் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் மற்றும் கருவூல அலுவலர்களுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தி, ஓய்வூதியதாரர்களுக்கு கருவூலம் மற்றும் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்மூலம் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் குறைகள் தீர்க்கப்படுகின்றன.

ஓய்வூதியர்களின் கையேடு

32. ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு கையேடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணையதளத்தில் (www. tn.gov.in/dop) வெளியிடப்பட்டுள்ளது. ஓய்வூதியப் படிவங்களை இணையதளத்திலிருந்து உடனடி உபயோகத்திற்காக பதிவிறக்கம் செய்யலாம். மின் அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தைத் தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் முகவரி dop@tn.nic.in.

[2020 மார்ச் 24

ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கல்

33. குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, தொழிலாளர் சேமநல நிதித் திட்டம், 1969-ன்மூலம் வழங்கப்பட வேண்டிய இறுதித் தொகை, கணினிமூலம் பணம் பட்டுவாடா (NEFT) பயனாளிகளின் வங்கி கணக்குகளில் பணம் வரவு செய்யப்பட்டு வருகிறது.

இணைப்பு VIII

(39ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை (பெருந்தொழில்)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

இந்தியாவில் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் பயணித்துவரும் தொழில்மயமான மாநிலங்களுள் ஒன்று தமிழ்நாடு. இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் முன்னணியில் இருக்கும் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையானது, 5 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய தேசிய பொருளாதாரம் என்ற உயரிய இலக்கை அடைவதற்கான உந்து விசையாக இயங்கி வருகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4% பங்களிப்பை அளித்து, இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் உலக மற்றும் உள்நாட்டுப் பொருளாதார மந்த நிலையிலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் தனது வளர்ச்சியின் வேகத்தில் சிறிதும் தளர்வின்றி 8.17% என்ற சிறப்பான அளவில் வளர்ந்தது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்களிப்பு 32.4 விழுக்காடாகவும், இரண்டாம் நிலை தொழில் பிரிவுகளின் பங்களிப்பு 21 விழுக்காடாகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் தொழில் துறையும் வாணிபமும் நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமையைக் கொண்டவை. ரோமானியம், சீனம் மற்றும் எகிப்து நாடுகளுடன் பழந்தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை இலக்கியச் சான்றுகளும், தொல்லியல் ஆய்வுகளும், பழங்கால நாணயங்களும் உறுதி செய்கின்றன. இவ்வணிகமானது, பின்வந்த நூற்றாண்டுகளில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுமைக்கும் பரந்து விரிந்தது. காலனி ஆதிக்க காலத்தில், கிழக்கிந்திய கம்பெனியின் மொத்த ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் ஜவுளி மற்றும் கைத்தறிப் பொருட்கள் பெரும்பங்கு வகித்தன. இந்தியாவில் முற்காலத்தில் துவக்கப்பட்ட எஃகு உற்பத்தி ஆலைகளுள் ஒன்று 1830 ஆம் ஆண்டில் பரங்கிப்பேட்டையில் அமைக்கப்பட்டது என்பதும், அங்கு உற்பத்தி செய்யப்பட்ட

[2020 மார்ச் 24

எஃகு பல ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதும் பலரும் அறிந்திடாத செய்தியாகும். 19 ஆம் நூற்றாண்டின் மத்திய மற்றும் பிற்பகுதிகளில், பருத்தி ஜவுளி, சர்க்கரை மற்றும் தோல் தொழில்கள் வளர்ச்சி பெற்றன. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் காலங்களில், முதன்முதலில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும்பொருட்டு ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டது அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில்தான். அத்தகு சிறப்பான முன்னிலையைப் பெற்ற தமிழ்நாடு, பின்வந்த காலங்களில், பொறியியல், வாகன மற்றும் வாகன உதிரிபாக உற்பத்தி, இரசாயனம் மற்றும் மின்னணுவியல் போன்ற துறைகள் பலவற்றிலும் பல சதாப்தங்களாக வளர்ச்சியை விரிவாக்கி, தனது முன்னிலையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது. 1990-களில் ஏற்பட்ட பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பிறகு, தனது மனித வளத்தையே மூலதனமாக்கி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த சேவைகள் துறையில் கால் பதித்த தமிழ்நாடு இன்று அத்துறையிலும் முன்னணி மாநிலமாகத் தடம் பதித்துள்ளது. இன்று, இந்தியாவிலேயே அதிகமான தொழிற்சாலைகளையும் தொழிலாளர்களையும் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சிறப்பான வளர்ச்சி பெற்ற தொழில் சூழலையும், மோட்டார் வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள், இலகு ரக மற்றும் கன ரக பொறியியல் இயந்திரங்கள், பம்புகள் மற்றும் மோட்டார்கள், மின்னணு மென்பொருள் மற்றும் வன்பொருள் உற்பத்தி ஆகிய துறைகளில் மிகச் சிறந்த செயல்பாட்டையும் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஹூண்டாய், ஃபோர்டு, பியூஜியோ, பிஎம்டபிள்யூ, டெய்ம்லர், கேட்டர்பில்லர், அசோக் லேலண்ட், டி.வி.எஸ்., நோக்கியா, ரெனோ நிசான், ஃபாக்ஸ்கான், டெல்டா, டெல், சேல்காம்ப், சியட், மிச்சலின், எம்.ஆர்.எஃப்., கிரண்ட்போஸ் மற்றும் எல் அண்ட் டி போன்ற உலகளவில் பெயர் பெற்ற பல நிறுவனங்களும் தமது உற்பத்தித் தளங்களைத் தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

தொழிற்சாலைகளுக்கான ஆண்டு ஆய்வறிக்கை (2017-2018) குறிப்பிடும் பல்வேறு புள்ளிவிவரங்கள் தொழில் துறையில் தமிழ்நாட்டின் தன்னிகரற்ற முன்னிலையிடத்தைச் சிறப்புற பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

2020 மார்ச் 24]

(அ) தொழிற்சாலை பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை

தமிழ்நாட்டில், இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையாக 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட நபர்கள் தொழிற்சாலைகளில் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, தரவரிசையில் அடுத்து உள்ள மாநிலமான மகாராஷ்டிராவைவிட 25 விழுக்காடு அதிகமாகும்.

மாநிலம்	**பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை**	**தர வரிசை**
தமிழ்நாடு	25,23,483	முதலிடம்
மகாராஷ்டிரம்	20,07,794	இரண்டாமிடம்
குஜராத்	18,26,748	மூன்றாமிடம்
உத்தரப் பிரதேசம்	10,70,841	நான்காமிடம்
கர்நாடகா	10,65,346	ஐந்தாமிடம்

(ஆ) தொழிற்சாலைகளின் எண்ணிக்கை

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையாக 37,787 தொழிற்கூடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அதனைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்:

மாநிலம்	**தொழிற்சாலைகளின் எண்ணிக்கை**	**தர வரிசை**
தமிழ்நாடு	37,787	முதலிடம்
குஜராத்	26,586	இரண்டாமிடம்
மகாராஷ்டிரம்	26,393	மூன்றாமிடம்
உத்தரப் பிரதேசம்	15,830	நான்காமிடம்
கர்நாடகா	13,518	ஐந்தாமிடம்

[2020 மார்ச் 24

(இ) மூலதன முதலீடு

தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட மூலதன முதலீட்டில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ள விவரத்தைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

மாநிலம்	மூலதன முதலீடு (ரூபாய் இலட்சத்தில்)	தர வரிசை
குஜராத்	8,63,13,999	முதலிடம்
மகாராஷ்டிரம்	5,37,25,099	இரண்டாமிடம்
தமிழ்நாடு	4,04,48,082	மூன்றாமிடம்
கர்நாடகா	2,68,57,251	நான்காமிடம்
உத்தரப் பிரதேசம்	2,16,92,859	ஐந்தாமிடம்

(ஈ) மொத்த உற்பத்தி

தமிழ்நாடு தொழில் உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் உள்ளதைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

மாநிலம்	மொத்த உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்)	தர வரிசை
குஜராத்	13,59,97,115	முதலிடம்
மகாராஷ்டிரம்	11,99,71,795	இரண்டாமிடம்
தமிழ்நாடு	8,63,80,870	மூன்றாமிடம்
கர்நாடகா	5,28,93,789	நான்காமிடம்
உத்தரப் பிரதேசம்	5,14,63,543	ஐந்தாமிடம்

2020 மார்ச் 24]

முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இவ்வாறு முதலீடுகளை ஈர்ப்பதில் முதன்மையான இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளதற்குக் கீழ்க்காணும் காரணிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

1. நல் ஆளுகை

தமிழ்நாட்டின் நிருவாக ஆளுமை உலகத் தரத்திலானது. மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட நல் ஆளுகைக் குறியீடு, இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் சிறப்பாக நிருவகிக்கப்படும் மாநிலமாகத் தமிழ்நாட்டை அங்கீகரித்துள்ளது. மிகச் சிறந்த பொதுப் பாதுகாப்பையும், இணக்கமான தொழிலாளர் உறவுச் சூழலையும் தமிழ்நாடு உறுதி செய்துள்ளது.

2. முனைப்புமிகு மாநிலக் கொள்கை

சிறப்பான ஆழ்ந்த கொள்கைகளை உருவாக்குவதன்மூலம் முதலீட்டாளர்களைக் கவர்ந்திழுப்பதில் தமிழ்நாடு அரசு மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. 1992 மற்றும் 2003 ஆம் ஆண்டின் தொழில் துறை கொள்கைகள் முறையே ஆட்டோமொபைல் மற்றும் மின்னணு முதலீடுகளை ஈர்க்க உதவின. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 இன் குறிக்கோள்களைச் செயல்படுத்த, 2014 ஆம் ஆண்டு தொழில் கொள்கை வகுக்கப்பட்டது. இப்புதிய தொழில் கொள்கை, இணக்கமான வகையில், மிகவும் ஈர்க்கத்தக்க சலுகைகளை வழங்கியதுடன் தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதாய் அமைந்தது. இக்கொள்கை எழுப்பிய வலுவான கட்டமைப்பே 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடுகளின் வெற்றிக்கான அடித்தளமாக அமைந்தது. சரக்கு மற்றும் சேவை வரி அமலாக்கத்தினால் மாறிய வரி விகிதங்களுக்கு இசைவான வகையில் சலுகைகளை மாற்றியமைத்து வழங்குவதில் அரசு விரைந்து செயல்பட்டது. காலத்தில் எட்டப்பட்ட இம்முடிவால்தான் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3 இலட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளை ஈர்க்க இயன்றது. தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் மற்றும் ஒற்றைச் சாளர முறையின் பயனாகப் புதிதாகத் தொழில் துவங்குவது மேலும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் புதிய துறைகளில் உள்ள வாய்ப்புகளை மதிநுட்பத்துடன் கண்டறிந்த அரசு, அத்துறைகளை வளர்த்தெடுக்க புதிய கொள்கைகளையும்

[2020 மார்ச் 24

வகுத்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் மின்னூர்திக் கொள்கையானது தமிழ்நாட்டை இந்தியாவின் மின்னூர்தி மையமாக நிலைநிறுத்தும்; 2019 ஆம் ஆண்டின் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை, தமிழ்நாடு உயர்தொழில்நுட்ப செயல்பாடுகளை அடைந்திட வழிவகை செய்யும்.

3. உட்கட்டமைப்பு

முதலீட்டாளர்களுக்கு ஒப்பற்ற உட்கட்டமைப்பு வசதிகளைத் தமிழ்நாடு வழங்கி வருகிறது. நான்கு பெரிய துறைமுகங்கள், நான்கு பன்னாட்டு விமான நிலையங்கள் இங்குள்ளன. மாநிலமெங்கும் பரந்து விரிந்த சாலை மற்றும் இருப்புப்பாதைக் கட்டமைப்புகள் தடையற்ற போக்குவரத்துத் தொடர்பை உறுதி செய்கின்றன. சிறப்பான நம்பகமான மின் பாதைத் தடங்களும், பகிர்மான அமைப்புகளும் அமையப்பெற்ற மின்மிகை மாநிலம் தமிழ்நாடு. மூன்று கடல்வழி தகவல் கம்பிவடங்கள் சென்னைக்கு அருகே தரையை அடைவதால், நொடிக்கு 14.8 டெராபைட் (14.8 tbps) திறன்கொண்ட சிறப்பான அகண்ட அலைவரிசை தொடர்பை தமிழ்நாடு வழங்குகிறது. கடல்நீரைக் குடிநீராக்குதல், கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் இணைய இணைப்பு போன்ற உட்கட்டமைப்புத் திட்டங்களில் அரசு அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது. சென்னைக்கு அருகே புதிய பன்னாட்டு விமான நிலையத்தை அமைக்கும் அரசின் திட்டமும் இதில் அடுத்த முக்கியப் படிநிலையாகும். அனைத்து மாவட்டங்களும் தொழில் பெருந்தடத் திட்டங்களால் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.

4. மனித வளம்

உயர் கல்வியில், குறிப்பாக தொழில்நுட்பக் கல்வியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகும். மனித வள மேம்பாட்டுக் குறியீட்டுத் தர வரிசையில் தேசிய அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. தேசிய சராசரியைவிட மிகக் குறைவான வறுமை அளவைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் படித்த திறமையான மனித ஆற்றல் முதலீட்டாளர்களைக் கவரும் முக்கிய அம்சமாக உள்ளது.

5. நிலம்

தொழில் வளாகங்களை உருவாக்குவதில் தமிழ்நாடு நாட்டின் முன்னோடி மாநிலமாகும். தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிலத்தை பொருத்தமான விலையில் வழங்கும்பொருட்டு, தமிழ்நாடு

2020 மார்ச் 24]

தொழில் முன்னேற்ற நிறுவனம் 33,775.70 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகங்கள் மற்றும் தொழில் பூங்காக்களைக் கொண்ட மிகப் பெரிய அளவிலான நில வங்கியை ஏற்படுத்தியுள்ளது. இவை தவிர, ஜப்பானிய முதலீட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்ட மூன்று தொழில் பூங்காக்கள் உட்பட பல்வேறு தனியார் தொழில் பூங்காக்களும் உள்ளன. தொழில் துறைக்கான நிலப் பயன்பாட்டை மேலும் உகப்பாக்கிடவும் கட்டுமான இடப் பயன்பாட்டை மேம்படுத்தவும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளைக் கடந்த ஓராண்டில் அரசு மேற்கொண்டுள்ளது.

6. வலுவான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை

நாட்டிலேயே வலிமையான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளதால், பெருந்தொழில்களுக்குத் தேவையான பொருட்களைத் திறம்பட உற்பத்தி செய்து வழங்கிடும் சிறப்பான சூழல் இங்கு நிலவுகிறது. இத்தகைய வழங்குநர் நிறுவனங்கள் இங்கே அமைந்துள்ளது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மிகவும் இசைவான நிலையை உருவாக்கியுள்ளது.

தொழில் மற்றும் முதலீட்டுத் தளங்களில் இந்தியாவின் முதன்மை மாநிலம் தமிழ்நாடே என பற்பல சுதந்திரமான ஆய்வுகள் நிலைநிறுத்தியுள்ளன. இந்தியாவின் மிகப் பழமையான, தன்னாட்சி பெற்ற பொருளாதாரக் கொள்கை ஆய்வு அமைப்பான தேசிய செயல்முறைசார் பொருளாதார ஆராய்ச்சி மன்றம் (National Council for Applied Economic Research) வெளியிட்டுள்ள 2018 ஆம் ஆண்டிற்கான மாநிலங்களில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளுக்கான குறியீட்டில் (NCAER-State Investment Potential Index) தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. பொருளாதாரச் சூழல், மனித வளம், உட்கட்டமைப்பு, நிலம், அரசியல் நிலைத்தன்மை மற்றும் ஆளுகைத் திறன் உள்ளிட்ட 6 அளவுகோல்களை ஆராய்ந்து இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஃப்ரோஸ்ட் & சல்லிவன் நிறுவனம் வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டுக்கான வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவ குறியீட்டில், இந்திய மாநிலங்களின் தர வரிசையில் இரண்டாவது இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்த ஆய்வில், அனைத்து மாநிலங்களும் முதலீட்டுத் திறன், அரசாங்கத்தின் செயல்திறன், உட்கட்டமைப்பு மற்றும் மின்னணுமயமாக்கல் உள்ளிட்ட 10 அளவுகோல்களில் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழில் சூழலால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலரும் இங்கு முதலீடு செய்வதில் தொடர்ந்து ஆர்வம்காட்டி வருகிறார்கள். அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், கொரியா, ஜப்பான் மற்றும் தைவான் போன்ற நாடுகளிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு முதலீடுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்போது சீன முதலீட்டாளர்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதில் கணிசமான ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2019 வரையிலான காலக்கட்டத்தில் 31.2 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்ததன்மூலம், அந்நிய நேரடி முதலீடுகளை அதிகளவில் ஈர்ப்பதில் நான்காவது பெரிய மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 9.25 விழுக்காடு ஆகும். 2018-2019 ஆம் ஆண்டில் 30.525 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய்ததன்மூலம், இந்தியாவின் மூன்றாவது பெரிய சரக்கு ஏற்றுமதியாளராகத் தமிழ்நாடு திகழ்கிறது. வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் ஆகியவை தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் முதன்மையானவை. இந்தியாவின் வாகன மற்றும் வாகன உதிரிபாகங்கள் ஏற்றுமதியில் 37.6 விழுக்காடும், ஆடை ஏற்றுமதியில் 30.8 விழுக்காடும், காலணிகள் ஏற்றுமதியில் 46.4 விழுக்காடும், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 25.7 விழுக்காடும் தமிழ்நாட்டிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய மாநிலங்களிடையே தன்னிகரற்ற தலைமையிடத்தை நோக்கிய தமிழ்நாட்டின் பயணத்தில், தொழில் துறை வளர்ச்சி ஒரு முக்கிய உந்துவிசையாக இருந்து வருகிறது. மற்ற துறைகளுடன் ஒப்பிடும்போது, உற்பத்தித் தொழில்கள் பொருளாதார வளர்ச்சியை பன்மடங்காக பெருக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகும். உற்பத்தித் தொழில்கள் அவற்றுடன் பல்வேறு சம்பந்தப்பட்ட துறைகளில் (சுரங்கம், மின் உற்பத்தி, போக்குவரத்து, கட்டுமானம், நிதி மற்றும் சில்லறை வணிகம் போன்றவை) வேலைவாய்ப்புகள் மற்றும் முதலீடு வாய்ப்புகளைப் பெருவாரியாக உருவாக்குகின்றன. மேலும், உற்பத்தித் துறையானது அன்னிய நேரடி முதலீடுகளை ஈர்த்து, நாடு மேற்கொள்ளும் பன்னாட்டு வர்த்தகத்தில் நம் நாட்டு வருவாயை

2020 மார்ச் 24]

மிகையாக்கிடும் வல்லமையுடையது. எனவேதான், தொழில் துறையை ஊக்குவித்து புதிய முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகளுக்கு அரசு தொடர்ந்து முன்னுரிமையளித்து வருகிறது. உலகளாவிய உற்பத்தியில் எழுந்துள்ள புதிய போக்குகளான முப்பரிமாண சேர்ம உற்பத்தி, தானியங்கி முறைகள், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றை அரசு நன்கு உணர்ந்துள்ளது. நான்காம் தலைமுறை தொழில் முறைகளைத் தமிழ்நாட்டின் தொழில் நிறுவனங்கள் ஏற்றுப் பயன்படுத்த ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களுக்கும், தொழில்நுட்பப் பயன்பாடுகளால் உந்தப்படும் அதிக மூலதனச் செலவுடைய தொழில்களுக்கும் இடையேயான சமநிலையை அரசு பராமரித்து வருகிறது. வான்வெளி, பாதுகாப்பு, மின் சேமிப்பு அமைப்புகள் மற்றும் உயிரித் தொழில்நுட்பம் போன்ற உற்பத்தி மதிப்புச் சங்கிலியில் மிகுதியான ஆதாயத்தை அளிக்கும் தொழில் துறைகளை நோக்கி தமிழ்நாடு முன்னேறும் வகையில் அரசு செயலாற்றி வருகிறது. அரசு வெளியிட்டுள்ள மின்னூர்திக் கொள்கையும் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கையும் இத்திசையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கியமான முன்னெடுப்புகளாகும். சேவைத் துறையில் வளர்ந்துவரும் அதிக வளர்ச்சி வாய்ப்புள்ள நிதிநிட்பம், மென்பொருள் வழங்கு சேவைகள் (Software as a Service-SaaS), தரவு சேமிப்பு போன்ற துறைகளில் உருவாகும் புதிய வாய்ப்புகளையும் பயன்படுத்திட வேண்டும். வணிகம் புரிதலை மேலும் எளிதாக்கிடவும், புதியன புகுத்தி புத்தாக்கங்கள் செய்திடவும் உகந்த சூழலை அரசு கட்டமைத்து வருகிறது. தமிழ்நாட்டின் தொழில் துறை உத்தியானது நிலையான வளர்ச்சி இலக்குகளால் வழிநடத்தப்படுகிறது. பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் என இரண்டையும் பேணி வளர்க்கக்கூடிய சீரான, பரவலான தொழில் சூழலை உருவாக்கிட அரசு உறுதிபூண்டுள்ளது.

1. வழிகாட்டி நிறுவனம்

1.1 கொள்கை இலக்கு

வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்) தமிழகத்திற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 15-7-1992 அன்று இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம்

[2020 மார்ச் 24

தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக ரூ.4.25 இலட்சம் கோடி அளவிலான முதலீடுகளை ஈர்த்துள்ளது. தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம், 2018-ன்படி, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை/நிறுவனம் சார்ந்த தொழில் அனுமதிகளைக் கால வரம்பிற்குள் வழங்குவதற்கான சட்டபூர்வ முகமை நிறுவனமாக வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. வழிகாட்டி நிறுவனம் கீழ்க்காணும் பணிகள்மூலம், தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம் தொழில்முனைவோர்களுக்குத் தேவையான விவரங்களை வழங்குதல்.
- புதிய முதலீட்டாளர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- தேவைப்படும் அனுமதிகளை ஒரே இடத்திலிருந்து கிடைத்திட வழிவகை செய்யும் ஒற்றைச் சாளர முகமையாகச் செயல்படுதல்.
- தொழில் துறையினரின் குரலாகவும் தொழில் கொள்கை மேம்பாட்டுக்கான குரலாகவும் ஒலித்தல்.

1.2 முதலீட்டு மேம்பாடு

1.2.1 உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019

தமிழ்நாடு அரசு, புதிய முதலீடுகளை ஈர்க்கும்பொருட்டு இங்குள்ள வாய்ப்புகளை எடுத்துக்காட்ட, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 23, 24 ஆகிய நாட்களில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினைச் சென்னையில் நடத்தியது.

தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் எதிர்பார்ப்புகளையும் கடந்து இம்மாநாட்டின்மூலம், 3,00,501 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகளை ஈர்த்து 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

2020 மார்ச் 24]

வ. எண்	துறை	புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்	முதலீடு (ரூபாய் கோடியில்)
1.	தொழில் துறை	147	1,55,248
2.	வீட்டு வசதி	66	48,980
3.	எரிசக்தி	16	48,200
4.	தகவல் தொழில்நுட்பம்	11	11,974
5.	வேளாண்மை	2	2,011
6.	உயர் கல்வி	51	1,084
7.	சுற்றுலா	8	642
8.	பள்ளிக் கல்வி	3	157
	மொத்தம்	304	2,68,296
9.	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்	12,360	32,205
	மொத்தம்		3,00,501

இதில் சி.பி.சி.எல்., ஹுண்டாய், எம்.ஆர்.எஃப்., ஃபாக்ஸ்கான், அதானி குழுமம், பி எஸ் ஏ பிரான்ஸ், எய்ச்சர் மோட்டார்ஸ் ஆகிய நிறுவனங்களின் முதலீடுகளும் அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, தாய்லாந்து, சிங்கப்பூர், தைவான், சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களின் முதலீடுகளும் அடங்கும். உற்பத்தித் துறை, தகவல் தொழில்நுட்பம், வீட்டு வசதி, சுற்றுலா, எரிசக்தி, வேளாண்மை, உயர் கல்வி, பள்ளிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி போன்ற துறைகளில் இருக்கும் முதலீட்டாளர்கள், தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டனர். 12,000-க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு:

[2020 மார்ச் 24

வ. எண்	துறை	திட்டங்களின் எண்ணிக்கை	முதலீடு (ரூபாய் கோடியில்)		உற்பத்தி தொடங்கப் பட்டவை	பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளவை	தொடங்க வாய்ப்புள்ளவை
1	தொழில் துறை	147		1,55,248	18	115	14
2	வீட்டு வசதி	CMDA	42	44,598	-	42	-
		DTCP	24	4,382	-	8	16
3	எரிசக்தி	16		48,200	4	11	1
4	தகவல் தொழில்நுட்பம்	11		11,974	1	8	2
5	வேளாண்மை	2		2,011	-	2	-
6	உயர் கல்வி	Collegiate -22		155	8	14	-
		Technical -29		929	28	1	-
7	சுற்றுலா	8		642	-	5	3
8	பள்ளிக் கல்வி	3		157	-	3	-
	மொத்தம்	304		2,68,296	59	209	36
9	குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்	12,360		32,205	4,739	7,621	
	மொத்தம்			3,00,501			

இந்தத் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது. தற்போது வரை, 16,739 கோடி ரூபாய் முதலீட்டில் 85,794 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்று பொறுப்புறுதி அளித்துள்ள 59 திட்டங்கள் ஏற்கெனவே வணிக உற்பத்தியைத் துவங்கியுள்ளன. மேலும், 209 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. மொத்தமுள்ள 304 திட்டங்களில் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ள 19.40 விழுக்காடு திட்டங்கள் (59) மற்றும் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ள 68.75 விழுக்காடு திட்டங்கள் (209) என மொத்தமாக 88.15 விழுக்காடு திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன.

2020 மார்ச் 24]

ஃபாக்ஸ்கான், மேண்டோ, ஹானன், சால்காம்ப் மற்றும் ஹுண்டாய் விரிவாக்கம் போன்ற சில நிறுவனங்கள் தங்களது வணிக உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

தொழில் துறை கையொப்பமிட்ட 147 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் தற்போதைய நிலை

புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நிலை		திட்டங்களின் எண்ணிக்கை
தொழில் துறையால் போடப்பட்ட மொத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்		147
(அ)	வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ள திட்டங்கள்	18
(ஆ)	பல்வேறு நிலையில் செயல்பாட்டிலுள்ள திட்டங்கள்	115
(இ)	பணிகள் தொடங்க வாய்ப்புள்ள திட்டங்கள்	14

இவற்றில், 31 திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டு/அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்		**எண்ணிக்கை**	**பொறுப்புறுதி அளிக்கப் பட்ட முதலீடு (ரூ. கோடியில்)**	**உறுதியளிக் கப்பட்ட வேலை வாய்ப்பு**
1	வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்டவை	10	12,130	9,439
2	அடிக்கல் நாட்டப்பட்டவை	21	8,382	27,932
	மொத்தம்	31	20,512	37,371

1.2.2 தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015

தமிழ்நாடு அரசு, முதலாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் சென்னையில் நடத்தியது. 98 பெருந்தொழில் திட்டங்கள்

மற்றும் 10,073 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள் மூலமாக ஒட்டுமொத்தமாக 2,42,160 கோடி ரூபாய் முதலீடுகள்மூலம் 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டின்போது கையெழுத்திடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 71 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது 72.4 விழுக்காடு செயல்பாடு ஆகும். (அதாவது, 98 திட்டங்களில் 71 திட்டங்கள்). மேற்படி நிறுவனங்கள், தாம் உத்தரவாதம் அளித்த 1,51,710 கோடி ரூபாய் முதலீட்டில், 69,849 கோடி ரூபாய் இதுவரை முதலீடு செய்துள்ளதாகவும், இதன்மூலம் 1,82,486 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இந்த மாநாட்டின்போது, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்ட மிகப் பெரிய முதலீட்டாளரான அல் கியூப்லா அல் வாட்யா (Al Qebla Al Watya) குழுமம், தென் மாவட்டமான தூத்துக்குடியில் 49,000 கோடி ரூபாய் முதலீட்டில் தனது திட்டத்தினை விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென் மாவட்டங்களில் தொழில்மயமாக்கலை ஊக்குவிக்க அரசு அறிவித்த தொழில்களுக்கான சிறப்பு சலுகைகளின் விளைவாக இந்தத் திட்டம் வரப்பெற்றுள்ளது.

1.2.3 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பின் ஈர்க்கப்பட்டுள்ள புதிய முதலீடுகள்

2019 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிட்ட நிலையிலும் முதலீடுகளை ஊக்குவித்து தேவையான உதவிகளை அளித்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக, இன்று வரை, 22,363 கோடி ரூபாய் முதலீட்டில் 97,621 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில், மேலும் 103 புதிய தொழில் திட்டங்களைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது. இவற்றில், மாண்புமிகு முதலமைச்சரின் அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இங்கிலாந்து பயணத்தின்போது 8,835 கோடி ரூபாய் முதலீட்டில் 35,520 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. அமெரிக்காவில் நிறுவன ரீதியிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (Organizational MoUs) மேற்கொள்ளப்பட்ட 5 நிறுவனங்களுடன் வழிகாட்டி நிறுவனம் தொடர்ச்சியாக இணைந்து செயல்பட்டு வருகிறது. அமெரிக்க

2020 மார்ச் 24]


பயணத்தின்போது போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 4 திட்டங்களும், ஐக்கிய அரபு அமீரக பயணத்தின்போது போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒரு திட்டமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டுள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட மேலும் 5 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

இது தவிர, மாண்புமிகு முதலமைச்சரின் அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் இங்கிலாந்து பயணத்தின்போது, ஹால்தியா பெட்ரோகெமிக்கல் நிறுவனத்துடன், ஒரு கொள்கையளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த நிறுவனம், 50,000 கோடி ரூபாய் முதலீட்டுடன் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

1.3 ஒற்றைச் சாளர முறை


ரூபாய் 10 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளர அனுமதிகளை எளிதாக்குவதற்காக வழிகாட்டி நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையமாகச் செயல்பட்டு வருகிறது. ஒற்றைச் சாளர அனுமதிகளுக்காக www.easybusiness.tn.gov.in என்ற ஓர் இணையதள சேவையை மாண்புமிகு முதலமைச்சர் நவம்பர் 2, 2017 அன்று தொடங்கி வைத்தார். இந்த இணையதள சேவைமூலம் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் விண்ணப்பிக்கின்றன.

இந்த இணையதள சேவைமூலம் பெறப்பட்ட 132 விண்ணப்பங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:



[2020 மார்ச் 24

இந்த 132 திட்டங்களின் ஒப்புதல்களின் நிலை



1.4 புதிய முன்னெடுப்புகள்

1.4.1. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான உயர்நிலை அதிகாரக் குழு

அரசாணை நிலை எண் 168, தொழில் (MIB.2) துறை, நாள்: 19-9-2019–ன்படி, தொழில் நிறுவனங்களின் ஒற்றைச் சாளர விண்ணப்பங்கள் உள்ளிட்ட அனுமதிகளைத் துரிதப்படுத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், ஓர் உயர் நிலை அதிகாரக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இதுவரை இரண்டு கூட்டங்கள் நடைபெற்று, 36 திட்டங்களுக்கான அனுமதிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றின்மூலம் 15,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படவும் 23,000 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு அளிக்கவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலத்தில் வணிகம் புரிதல் எளிதாக்குதலை மேம்படுத்துவதற்காக, கீழ்க்காணும் கொள்கை சீர்திருத்தங்களுக்கும் உயர்நிலை அதிகாரக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

(1) பச்சை வகைப்பாடு தொழிற்சாலைகளுக்கு, இயக்குவதற்கான நேரடி இசைவாணை வழங்குதல் (Consent to Operate)

(2) திட்டம் சாராத பகுதிகளில், நிலப் பயன்பாட்டின் மறு வகைப்பாட்டினை ஒற்றைச் சாளர முறையில் வழங்குதல் மற்றும் கருதப்பட்ட ஒப்புதல்கள் (Deemed Approvals) அளிப்பதற்கு வகை செய்தல்.

2020 மார்ச் 24]

1.4.2 தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு புதிய பெயர் மற்றும் இலச்சினை

2019 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று நடைபெற்ற முதலீடு மற்றும் திறன் மேம்பாட்டு மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் என்ற பெயரை “வழிகாட்டி” என்று பெயர் மாற்றி (முதலீடு, புத்தாக்கம், உருவாக்கம் என்ற முழக்கத்துடன்) மாநிலத்தின் பண்பாடு மற்றும் வாய்ப்புகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் இந்நிறுவனத்தின் ஒரு புதிய இலச்சினையையும் இம்மாநாட்டில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

1.4.3 வழிகாட்டி நிறுவனத்தை வலுப்படுத்துதல்

ஒற்றைச் சாளர அனுமதிகளை எளிதாக்கும்பொருட்டு, வழிகாட்டி நிறுவனம், ஒரு சட்டபூர்வமான அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், இரண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடுகளுக்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் பணிச் சுமையும் அதிகரித்துள்ளது. ஆகவே, வழிகாட்டி நிறுவனம், பிற மாநிலங்களில் உள்ள முதலீட்டு மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் Invest India போன்ற நிறுவனங்களின் கட்டமைப்புகளை ஆய்வு செய்து, அதற்கேற்ப வழிகாட்டி நிறுவனத்தின் அமைப்பு மறுசீரமைக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டுள்ளது. முதலீடு ஊக்குவிப்பு, வழிகாட்டுதல் மற்றும் கொள்கை ஆதரவு போன்ற இனங்களுக்காகப் பிரத்யேகமான குழுவை உருவாக்கியுள்ளது. இவை தவிர, வெளிப்புற ஆலோசகர்களும், வணிகம் புரிதலை எளிதாக்குதல் (EoDB), புதிய ஒற்றைச் சாளர இணையதள மேம்பாடு, தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் மற்றும் கொள்கை தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதிகரிக்கப்பட்ட மனிதவளம் மற்றும் வளர்ந்துவரும் செயல்பாடுகளுக்கு ஏற்றாற்போல், நகரின் மையப் பகுதியில் ஒரு புதிய வளாகத்திற்கு இந்நிறுவனம் இடம் பெயர்ந்திடவும் ஆயத்தம் செய்து வருகிறது.

1.4.4 தொழில் நண்பன்-Biz Buddy

12-7-2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர், முதலீட்டாளர்கள் தங்களது வணிக நடவடிக்கைகளைத் தொடங்கிடவும்/அரசு நிறுவனங்களின்

அனுமதிகளைப் பெற்றிடவும் வசதியாக ஓர் இணையதளம் உருவாக்கப்படும் என்று அறிவிப்பினை வெளியிட்டார். தொழில் நண்பன் (Biz Buddy) என்ற ஓர் இணையதளத்தை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி நடைபெற்ற முதலீடு மற்றும் திறன் மேம்பாட்டு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி வைத்தார். இருமொழிகளில் இருக்கும் இந்த இணையதளம், நிறுவனங்களின் உதவி அழைப்புகளைப் பதிவு செய்திடவும், உரிய நேரத்தில் குறைகள் களையப்படவும் உதவி வருகிறது.

1.4.5 நாடுகளுக்கான அமைவுகள் (Country Desks)

12-7-2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முதலமைச்சர், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தனி கவனத்துடன் உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடும் வகையில், நாடுகளுக்கான பிரத்யேக அமைவுகள், வழிகாட்டி நிறுவனத்திலோ அல்லது வெளிநாட்டிலோ அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார். அதன்படி, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சீனா, கொரிய குடியரசு, ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய நாடுகளில் அமைவுகள் துவக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் உள்ள அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் கூட்டமைப்பு (ATEA) அமெரிக்க நாட்டுக்கான வழிகாட்டி நிறுவனத்தின் ஓர் அமைவாக செயல்பட, ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அந்தந்த நாட்டு முதலீட்டாளர்களிடமும், அரசு தூதுவர்களிடமும் தொடர்புகொண்டு, முதலீடுகளை ஈர்ப்பதற்கான பணிகளைச் செய்வதற்காக வழிகாட்டி நிறுவனத்தில், நாடுகள்வாரியாக, தனிப்பட்ட மேலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தைவான் நாட்டு அமைவுக்கு, ஒரு முழுநேர வழிகாட்டி ஊழியர் தைவானிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இவை தவிர, தலைநகர் புது தில்லியில் பல்வேறு நிறுவனங்கள், தொழில் குழுக்கள், தூதரகங்கள் போன்றவற்றோடு இணைந்து செயல்புரியும் வகையில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு அமைவும் உருவாக்கப்பட்டுள்ளது.

1.4.6 ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து தொழில்நுட்ப உதவி

ஆசிய வளர்ச்சி வங்கி, மாநிலத்தில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்காக, தொழில்நுட்ப உதவி மற்றும் ஆதரவினைத்

2020 மார்ச் 24]

தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது. ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை உருவாக்குவதே இந்தத் தொழில்நுட்ப உதவியின் நோக்கமாகும். ஆசிய வளர்ச்சி வங்கி இந்தத் தொழில்நுட்ப உதவியின் ஒரு பகுதியாக, 7 கோடி ரூபாய் வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளது.

1.5 சர்வதேச ஒருங்கிணைப்பு செயல்பாடுகள்

1.5.1 கூட்டு செயல்பாட்டுக் குழு ஒப்பந்தங்கள்

1.5.1.1 ஜப்பான்

தமிழ்நாடு அரசு அரசாணை (நிலை) எண் 15, தொழில் (எம்.ஐ.பி.2) துறை, நாள் 9-1-2012-ன்படி ஜப்பான் மற்றும் தமிழ்நாடு அரசுகளிடையேயான கூட்டு செயல்பாட்டுக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய முதலீடுகள் தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்காக இதுவரை 9 முறை இக்குழுவின் கூட்டங்கள் கூட்டப்பட்டுள்ளன.

சென்னையில் உள்ள ஜப்பானிய வர்த்தகம் மற்றும் தொழில் சபையால் கொண்டுவரப்படும் தமிழ்நாட்டில் உள்ள ஜப்பான் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்காக கூட்டங்களைத் தொழில் துறை நடத்தி வருகிறது.

ஏற்கெனவே ஜப்பான் நாட்டிலுள்ள, ஹிரோஷிமா மற்றும் கனகாவா மாகாணங்களுடன் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. மேலும், ஜப்பான் நாட்டின் ஒசாகா மற்றும் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் (METI) ஆகியவற்றுடன் இதேபோன்ற பொருளாதார ஒப்பந்தங்களில் கையெழுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.5.1.2 அமெரிக்கா

அமெரிக்க-தமிழ்நாடு வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்தவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திட வழிவகை செய்யும் விதத்திலும், அமெரிக்க நிறுவனங்கள் எதிர்கொள்ளும் முதலீட்டு தொடர்பான சவால்களைத் தீர்த்திடும் வகையிலும், அமெரிக்க–இந்தியா வர்த்தக கவுன்சிலுடன் (US-India Business Council) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

மாண்புமிகு முதலமைச்சரின் வெளிநாட்டு பயணத்தின்போது, அமெரிக்க-தமிழ்நாடு இடையே இரு தரப்புக் கூட்டாண்மை உத்திகளை மேம்படுத்தும்பொருட்டு, அமெரிக்காவில் உள்ள அமெரிக்க-இந்தியத் தொழில் உத்தி கூட்டாண்மை மன்றத்துடன் (US-India Strategic Partnership Forum-USISPF) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் கூட்டமைப்புடன் (American Tamil Entrepreneurs Network) அமெரிக்க நாட்டுக்கான அமைவாகப் பணிபுரிந்திடும் வகையில், வழிகாட்டி நிறுவனம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளது.

1.5.1.3 இங்கிலாந்து

ஆய்வு சீர்திருத்தங்கள், சொத்து மற்றும் நிலப் பதிவு, கட்டுப்பாடு தளர்வு மற்றும் வணிகம் சார்ந்த இடர்பாடுகளைக் களைந்திடுதல் போன்ற இனங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பாக, வழிகாட்டி நிறுவனம், இங்கிலாந்து அரசின் வெளியுறவு மற்றும் காமன்வெல்த் அலுவலகத்துடன் (Foreign and Commonwealth Office) இணைந்து செயல்படுகிறது.

1.5.1.4 ஐக்கிய அரபு நாடுகள்

மாண்புமிகு முதலமைச்சரின் ஐக்கிய அரபு நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணத்தின்போது, வர்த்தக உறவை வலுப்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திட வழிவகை செய்யும் வகையிலும், வணிகத் தலைவர்கள் மன்றம்-ITEC (Business Leaders Forum & ITEC, Dubai) ஆகியவற்றுடன் நிறுவன ரீதியிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.5.1.5 பிற நாடுகள்

மேலும், ஜெர்மனி மற்றும் கொரிய குடியரசுகளுடன் இதுபோன்ற ஆலோசக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1.6 வணிகம் எளிதாக்குதல் நடைமுறைகள்

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் வணிகம் செய்யும் நடைமுறைகளை எளிதாக்க மேற்கொண்டுவரும் பணிகளை ஒருங்கிணைக்கும் முகமையாக வழிகாட்டி நிறுவனம்

2020 மார்ச் 24]

செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு, தொழில் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (பதிவு மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்) மற்றும் கட்டுப்பாடுகளை எளிமையாக்கவும், தகவல் தொழில்நுட்பம்மூலம் நிருவாகப் பணியினை எளிமைப்படுத்துதல், பொறுப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிருவாகத் திறமையை மேம்படுத்துதல் போன்ற பல தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2016-ல் தர வரிசையில் 18-வது இடத்தில் இருந்த தமிழ்நாடு (ஒட்டுமொத்த மதிப்பெண் 62.80 விழுக்காடு), 2017-2018-ம் ஆண்டில், 15-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (ஒட்டுமொத்த மதிப்பெண் 90.68 விழுக்காடு). மத்திய அரசின், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையால், "சாதனையாளர்கள் பிரிவில்" தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு, 80 சீர்திருத்தங்கள் உள்ளடக்கிய வணிக சீர்திருத்தச் செயல் திட்டம் 2019-ஐ, மத்திய அரசின், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை பரிந்துரைத்துள்ளது. சீர்திருத்தம் மேற்கொண்ட சான்றுகள் காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன. இந்தத் தர வரிசை, பயனாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் அமையவுள்ளது. முடிவு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

1.7 2020-2021 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

1.7.1 இணையதள மறுசீராக்கம்

வழிகாட்டி நிறுவனம், கூடுதல் துறைகளை உள்ளடக்கி புதிய சேவைகளை சேர்க்கும் வகையில் ஒரு புதிய அதிநவீன ஒற்றைச் சாளர இணையதளத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்தும் வகையில் சாலைகள், தெரு விளக்குகள், தண்ணீர் விநியோகம் மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை அமைக்க 1971 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. சிப்காட் நிறுவனம், மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை தொழில் முதலீட்டாளர்களுக்கு உடனுக்குடன் வழங்கி, அதன்மூலம் மாநிலத்தில் முதலீட்டை ஈர்த்து வருகிறது.

[2020 மார்ச் 24

2.1 தொழிற்பூங்காக்கள் உருவாக்குதல்

சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில முன்னோடியாக செயல்பட்டு, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளில், 33,775.70 ஏக்கர் பரப்பளவில், 15 மாவட்டங்களில் ஏழு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 23 தொழிற்பூங்காக்களை உருவாக்கியுள்ளது. தற்போது செயல்பாட்டில் உள்ள தொழிற்பூங்காக்களின் விவரம்:

வ. எண்	தொழிற்பூங்காக்கள்	பரப்பளவு ஏக்கரில்
1	இராணிப்பேட்டை தொழில் வளாகம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	1420.71
2	ஓசூர் தொழில் வளாகம்	2092.50
3	புதுக்கோட்டை தொழில் வளாகம்	421.10
4	மானாமதுரை தொழில் வளாகம்	492.07
5	கும்மிடிப்பூண்டி தொழில் வளாகம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா	1490.02
6	தூத்துக்குடி தொழில் வளாகம்	2308.73
7	கடலூர் தொழில் வளாகம்	2670.71
8	இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்கா மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	1843.65
9	பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்கா	1045.89
10	திருப்பெரும்புதூர் தொழிற்பூங்கா சிறப்புப் பொருளாதார மண்டலம்	2377.09
11	சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா	782.97
12	நிலக்கோட்டை தொழில் வளாகம்	381.16
13	பர்கூர் தொழில் வளாகம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	1389.70
14	பெருந்துறை தொழில் வளர்ச்சி மையம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	2706.44
15	கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	2014.36

2020 மார்ச் 24]

வ. எண்	தொழிற்பூங்காக்கள்	பரப்பளவு ஏக்கரில்
16	ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலம்	3160.19
17	செய்யாறு தொழில் வளாகம்	2426.44
18	மப்பேடு தொழிற்பூங்கா	121.74
19	தேர்வாய்க்கண்டிகை தொழிற்பூங்கா	1127.00
20(i)	வல்லம்-வடகால் தொழிற்பூங்கா	1381.54
(ii)	வானூர்தி பூங்கா-வல்லம் வடகால்	250.00
21	குருபரப்பள்ளி தொழிற்பூங்கா	100.22
22	திண்டிவனம் தொழிற்பூங்கா (துவக்க நிலையில் உள்ளது)	694.42
23	மணப்பாறை தொழிற்பூங்கா (துவக்க நிலையில் உள்ளது)	1077.05
	மொத்தம்	33,775.70

(அ) முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு

சிப்காட் நிறுவனம், இதுவரை 2,631 தொழில் நிறுவனங்களுக்கு 21,983 ஏக்கர் தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் சுமார் 1,14,419 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்த்துள்ளதோடு, சுமார் 6.48 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தற்போது செயல்பாட்டில் உள்ள பல்வேறு தொழிற்பூங்காக்களில் 4,457 ஏக்கர் தொழில் மனை ஒதுக்கீட்டிற்குத் தயார் நிலையில் உள்ளன.

(ஆ)நில வங்கி உருவாக்குதல்

ஒன்பது புதிய தொழிற்பூங்காக்களை (விரிவாக்கம் உட்பட) உருவாக்குவதற்காக 9,486 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி கீழ்க்காணும் நிலைகளில் உள்ளன:

(1) நில எடுப்பு முடிவு பெற்றவை

திருவள்ளூர் மாவட்டத்தில் மாநல்லூர் தொழிற்பூங்கா அமைப்பதற்காக 691.86 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம் சிப்காட்

பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வும் முடிவடைந்து, தற்போது மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

(2) நில எடுப்பு முடிவடையும் தருவாயில் உள்ளவை

வைப்பூர்-மாத்தூர் தொழிற்பூங்கா-611.87 ஏக்கர் (காஞ்சிபுரம் மாவட்டம்), நெமிலி தொழிற்பூங்கா-228.87 ஏக்கர் (காஞ்சிபுரம் மாவட்டம்), திருப்பெரும்புதூர் தொழிற்பூங்கா (மாம்பாக்கம் திட்டம்)-185.22 ஏக்கர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை தொழிற்பூங்கா-1,478.53 ஏக்கர் (மதுரை மாவட்டம்) ஆகியவற்றுக்கான நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இதுவரை, 716.35 ஏக்கர் நிலம் சிப்காட் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(3) நில எடுப்பு நடவடிக்கையில் உள்ளவை

பனப்பாக்கம் தொழிற்பூங்கா-1,163.67 ஏக்கர் (இராணிப்பேட்டை மாவட்டம்), ஓசூர் தொழில் வளாகம் நிலை III-701.43 ஏக்கர் (கிருஷ்ணகிரி மாவட்டம்), குருபரப்பள்ளி தொழிற்பூங்கா நிலை II (ம) III-104.26 ஏக்கர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் தருமபுரி தொழிற்பூங்கா-1,733.40 ஏக்கர் (தருமபுரி மாவட்டம்) ஆகிய திட்டங்களுக்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரமங்கலம் தொழிற்பூங்கா-468 ஏக்கர் (காஞ்சிபுரம் மாவட்டம்), சிலாநத்தம் தொழிற்பூங்கா-406.57 ஏக்கர் (தூத்துக்குடி மாவட்டம்) மற்றும் வைபார் தொழிற்பூங்கா- 1,129.17 ஏக்கர் (தூத்துக்குடி மாவட்டம்) ஆகிய நிலங்களைக் கையகப்படுத்த அரசின் நிருவாக அனுமதி பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) தென் மாவட்டங்களைத் தொழில்மயமாக்குதல்

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பரவலான தொழில் வளர்ச்சி எற்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில், சிப்காட் நிறுவனம், இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய தென் மாவட்டங்களில் புதிதாக தொழிற்பூங்காக்களை மொத்தம் 11,575.73 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

2020 மார்ச் 24]

இராமநாதபுரம் மாவட்டத்தில் 537.52 ஏக்கர் நிலம் (மணக்குடி கிராமம்-224.65 ஏக்கர் மற்றும் சக்கரக்கோட்டை (ம) பட்டினம்காத்தான் கிராமங்கள்-312.87 ஏக்கர்) சிப்காட் வசம் உள்ளது. இவ்விரு திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேனி தொழிற்பூங்கா (தப்பகுண்டு (ம) இதர இரண்டு கிராமங்கள்)-554.98 ஏக்கர், விருதுநகர் தொழிற்பூங்கா (இ. குமாரலிங்கபுரம் மற்றும் இ. முத்துலிங்கபுரம்)-1,500.36 ஏக்கர் என மொத்தம் 2,055.34 ஏக்கருக்கான நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையம் (விரிவாக்கம்)-1,697.54 ஏக்கர் (திருநெல்வேலி மாவட்டம்), திண்டுக்கல் தொழிற்பூங்கா (வேடசந்தூர் வட்டம்)-1,645.20 ஏக்கர், தூத்துக்குடி தொழில் வளாகம் பகுதி III (விளாத்திக்குளம் வட்டம்)-5,640.13 ஏக்கர் ஆகிய திட்டங்களுக்காக மொத்தம் சுமார் 8,982.87 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான நிருவாக அனுமதி பெறும் நடவடிக்கையில் உள்ளது.

(ஈ) 50 விழுக்காடு மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு

தென் மாவட்டங்களில் புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தென் மாவட்டங்களில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட மற்றும் புதிதாக உருவாக்கும் அதன் தொழிற்பூங்காக்களில் 50 விழுக்காடு மானிய விலையில் தொழில் மனையினை ஒதுக்கீடு செய்து வருகிறது. அந்த வகையில், இதுவரை 72 தொழில் நிறுவனங்களுக்கு 233.17 ஏக்கர் தொழில் மனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) கூட்டாண்மை முறையில் தொழிற்பூங்காக்களை உருவாக்குதல்

மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சமமான தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்த ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்தபடி, சிப்காட் நிறுவனம், குறைந்தபட்சம் 100 ஏக்கர் நிலம் வைத்துள்ள தனியார் நில உடைமைதாரர்களுடன் இணைந்து கூட்டாண்மை முறையில் தொழிற்பூங்காக்களை உருவாக்கும் நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளவுள்ளது. சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழிற்பூங்காக்களுக்குத் தற்போது வழங்கப்படும் சலுகைகள் கூட்டாண்மை முறையில் உருவாக்கப்படும் தொழிற்பூங்காக்களுக்கும் நீட்டித்து வழங்கப்படும்.

[2020 மார்ச் 24

2.2 புரிந்துணர்வு ஒப்பந்த நிறுவனங்களுக்கான முகவாண்மைச் செயல்பாடு

பெருந்தொழில், சிறப்புப் பெருந்தொழில் மற்றும் உயர் சிறப்புப் பெருந்தொழில் திட்டங்களுக்கு அரசின் பல்வேறு தொகுப்பு ஊக்க நிதியுதவி சலுகைகளை வழங்கும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாக (Nodal Agency) சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. 31-12-2019 வரை, 30 தொழில் நிறுவனங்களுக்கு 11,345.37 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 17 தொழில் நிறுவனங்களுக்கு 814.21 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

புதிய முன்னெடுப்புகள்

2.3.1 தற்போது செயல்பாட்டிலுள்ள தொழிற்பூங்காக்களைப் பசுமை தொழிற்பூங்காக்களாக மாற்றுதல்

பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் சேதாரங்களைக் குறைப்பதோடு நிலையான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு சிப்காட் நிறுவனம், அதன் தொழிற்பூங்காக்களை பசுமை பூங்காக்களாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக, தற்போது செயல்பாட்டிலுள்ள சிப்காட் தொழிற்பூங்காக்கள் பெரிய (>2000 ஏக்கர்), நடுத்தர (1000–2000 ஏக்கர்) மற்றும் சிறிய (<1000 ஏக்கர்) தொழிற்பூங்காக்கள் என மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. ஏழு தொழிற்பூங்காக்களைப் பசுமை தொழிற்பூங்காக்களாக மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் இதர தொழிற்பூங்காக்கள் அனைத்திற்குமான விரிவான மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.3.2 சிப்காட் தொழிற்பூங்காக்களின் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை (Geo Database) தயாரித்தல்

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில் மனைகள் திறம்பட பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க, ஒதுக்கீடு செய்யப்படும் ஒவ்வொரு தொழில் மனையின் புவி ஆயத்தொகுப்புகளையும் சேகரித்து அதனை டிஜிட்டல் முறையில் தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. சிப்காட் தொழிற்பூங்காக்கள் அனைத்திற்கும் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping)

2020 மார்ச் 24]

மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை (Geo Database) தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி முடிந்தவுடன், தொழில் முதலீட்டாளர்கள் தொழில் மனைகளை எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் இணையதள வாயிலாகவே பார்வையிடவும், தேவைப்படும் தொழில் மனையினை தெரிவு செய்யவும் முடியும்.

2.3.3. மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு

சிப்காட் தொழிற்பூங்காக்களில் அடிப்படை மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்கள், தண்ணீர் விநியோகம், நிழல் மரங்கள் மற்றும் நிருவாகக் கட்டடம் ஆகியவற்றை முறையாகப் பராமரிக்கும்பொருட்டு, அனைத்து தொழிற்பூங்காக்களுக்கான மேற்கண்ட பணிகளைச் செய்ய குறிப்பிட்ட பழுதுபார்க்கும் உடன்படிக்கையுடன்கூடிய ஒரு விரிவான பராமரிப்புப் பணி ஒப்பந்தம்மூலம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழிற்பூங்காக்கள் பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி இல்லாமலும் (litter free) அசுத்தமில்லாமலும் (Use and throw Plastic free) பராமரிக்கப்படும்.

2.3.4 தொழிலாளர் குடியிருப்பு வசதி

சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் போக்குவரத்து நேரத்தைக் குறைக்கும் நோக்கத்தில், சிப்காட் தொழில் வளாகத்தில் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு வசதிகளை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக, திரும்பெரும்புதூரை சுற்றியுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களுக்கு உதவும் வகையில் வல்லம்-வடகால் பகுதியில் சுமார் 9.50 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த வசதி ஏற்படுத்தப்படும். 6,000 பணியாளர்கள் பயன்பெறும் வகையில் 384.61 கோடி ரூபாய் உத்தேச மதிப்பீட்டில் இத்திட்டம் உருவாக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2.3.5 வர்த்தக வசதி மையம் நிறுவுதல்

சிப்காட், சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சுமார் 2.16 ஏக்கர் நிலப்பரப்பில் 50,000 சதுர அடி பரப்பளவில் ரூ.34.81 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு வர்த்தக வசதி மையத்தினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு மத்திய

அரசு ஏற்றுமதிக்கான வர்த்தக உட்கட்டமைப்பு திட்டத்தின் (TIES) வாயிலாக 13.98 கோடி ரூபாயை மானியமாக வழங்கியுள்ளது. இவ்வர்த்தக வசதி மையத்தில், கருத்தரங்குக் கூடம், வர்த்தகத்திற்கான அலுவலகப் பகுதி மற்றும் வாகனம் நிறுத்தும் வசதி ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படும்.

2.4 நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்

2.4.1 மூன்றாம்நிலை எதிர்சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் (TTRO) வழங்கும் திட்டம்

இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம்-வடகால் ஆகிய தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு நிலையாக தண்ணீர் விநியோகிக்கும்பொருட்டு சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் (CMWSSB) கோயம்பேட்டில் 45 MLD கொள்திறன் கொண்ட மூன்றாம்நிலை எதிர்சவ்வூடு பரவல் (TTRO) முறையில் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. இந்நிலையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29-11-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டு, மேற்கூறிய ஐந்து தொழிற்பூங்காக்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகிறது.

2.4.2 கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சிப்காட் நிறுவனம் 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை ஒன்றினை 634 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம், ஏற்கெனவே சிப்காட் நிறுவனத்தின் துணை நிறுவனமான சென்னை தொழில் நீர் பயன்பாட்டு நிறுவனம் (Chennai Industrial Water Utility Company Ltd.,) மூலம் நிறைவேற்றப்படும்.

மேலும், கடலூர் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக, கடலூர் தொழிற்பூங்காவில் 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும்

2020 மார்ச் 24]

ஆலை ஒன்றினை அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளும் பணி தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டு நிறுவனத்திற்கு (Tamil Nadu Water Investment Company) வழங்கப்பட்டு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2.5 தொழிற்பூங்காக்களில் பசுமைச் சூழல்

சிப்காட் தொழிற்பூங்காக்களில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு பசுமையைப் பேணிக்காக்கவும், 2019-2020 ஆம் ஆண்டில், சிப்காட் நிறுவனம், அதன் பிள்ளைப்பாக்கம், இருங்காட்டுக்கோட்டை மற்றும் சிறுசேரி தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள திறந்தவெளி ஒதுக்கீட்டுப் பகுதிகளில் 24,750 மரக்கன்றுகளை நட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில், இதர சிப்காட் தொழிற்பூங்காக்களில் 2,07,250 மரக்கன்றுகள் நடப்படும். இம்மரக்கன்றுகளைச் சிப்காட் நிறுவனமும் அதன் ஒதுக்கீட்டு தொழிற்சாலைகளும் இணைந்து பராமரிக்கும். மேலும், திறந்தவெளி ஒதுக்கீட்டுப் பகுதிகளும் தொழில் அமைப்புகளுடன் இணைந்து பராமரிக்கப்படும்.

2.6 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், மணக்குடி கிராமத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவை 150 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 225 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனம் அமைக்கும். 30 ஜவுளித் தொழிற்சாலைகள் அமையும் வகையில் ஏற்படுத்தப்படும் இப்பூங்கா, கழிவுநீரைச் சுத்திகரித்து கடல்நீருடன் சேர்ப்பிக்கும் வசதி மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை உள்ளடக்கியதாக இருக்கும். இத்திட்டத்திற்கான கடலோர ஒழுங்குமுறை மண்டல மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி விரைவில் பெறப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.7 எளிய முறையிலான வணிகச் சூழல்

2.7.1 சேவைகளை இணையதளம்மூலம் வழங்குதல்

சிப்காட் நிறுவனம், முதலீட்டாளர்கள்/ஒதுக்கீட்டு நிறுவனங்கள், தொழிற்மனைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், ஊக்க நிதியுதவி பெறுதல், வங்கி/நிதி நிறுவனங்களுக்கான தடையின்மைச் சான்று பெறுதல், தண்ணீர், பராமரிப்பு, உள் குத்தகைக் கட்டணம், சாலை உபயோகிப்புக் கட்டணம் மற்றும் தொழில் மனைக்கான

கட்டணம் செலுத்துதல் ஆகிய சேவைகள் அனைத்தையும் இணையதளம் மூலமாகவே மேற்கொள்ளுவதற்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

2.7.2 உள்-குத்தகை மற்றும் நிருவாக மாற்றத்திற்கான விதிகளை எளிதாக்குதல்

கட்டுமானப் பகுதிகளுக்கான உள்-குத்தகைக் கட்டணங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. நிருவாக மாற்ற அனுமதி நேர்வுகளில், செலுத்தப்பட வேண்டிய தொழில் மனை வேறுபாடு கட்டணம் 50 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளதோடு, சில நேர்வுகளில் விலக்களிப்பும் செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு பெற்ற தொழில்மனையில் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள பகுதிகளில் தொழில் துவங்குவதற்கான அனைத்து வசதிகளுடன்கூடிய 'ஆயத்த தொழிற்கூடங்கள்' (Plug Play facility), கிடங்குகள் மற்றும் பல்வேறு பயனாளிகள் பயனடையும் வகையிலான தொழில் கூடங்களை ஏற்படுத்தவும் சிப்காட் நிறுவனம் அனுமதி அளித்து வருகிறது. இதன்மூலம் உபயோகப்படுத்தப்படாமல் உள்ள காலி நிலப் பகுதி மற்றும் கட்டடப் பகுதிகளை முழுமையாகப் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.8 நிதிச் செயல்பாடு

சிப்காட் நிறுவனம் தொடர்ந்து சிறப்பான நிதிநிலையில் செயல்பட்டு வருவதோடு 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து அரசுக்கு பங்கு ஈவுத் தொகையையும் வழங்கி வருகின்றது. 2018-2019 ஆம் நிதியாண்டில் 153.88 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியதோடு, இதுவரை இல்லாத உயர் அளவாக 52.12 கோடி ரூபாயை (90 விழுக்காடு) அரசுக்கு பங்கு ஈவுத் தொகையாக வழங்கியுள்ளது. 2019-2020 ஆம் நிதியாண்டுக்கான இலாபம் ரூ.170.15 கோடியாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழக அரசின் முதன்மைத் தொழில் வளர்ச்சி முகமையாகும். மாநிலத்தில் சமச்சீரான மற்றும் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்களைக் கூட்டாண்மை முறையில் டிட்கோ

2020 மார்ச் 24]

நிறுவி வருகிறது. பெரும் முதலீட்டில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பெருந்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களைத் தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு டிட்கோ வழிவகை செய்து வருகிறது.

சென்னை-பெங்களூரு தொழில் பெருந்தடம், சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருந்தடம், கொச்சி-கோயம்புத்தூர்-பெங்களூரு தொழில் பெருந்தடம் மற்றும் பாதுகாப்புத் தொழில் பெருந்தடம் ஆகிய திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாக டிட்கோ செயல்படுகிறது.

3.1 முதலீடுகள்

31-12-2019 வரை ரூ.500.62 கோடியை இரசாயனப் பொருட்கள், உரங்கள், மருந்துப் பொருட்கள், ஜவுளி, இரும்பு மற்றும் எஃகு, வாகன உதிரிபாகங்கள், உணவு மற்றும் வேளாண்மை, கொய்மலர் வளர்ப்பு, பொறியியல், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு போன்ற உற்பத்தித் துறை சார்ந்த மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், உயிரி தொழில்நுட்பப் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் போன்ற உட்கட்டமைப்பு துறை சார்ந்த பல கூட்டாண்மை நிறுவனங்களில் டிட்கோ முதலீடு செய்துள்ளது.

3.2 தொழில் பெருந்தடங்கள் (Industrial Corridors)

அனைத்து மாவட்டங்களும் தொழில் பெருந்தடத் திட்டத்தில் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள இந்தியாவின் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. இப்பெருந்தடத் திட்டங்களில் தொழில் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டச் செயல்பாடுகளைப் பல்வேறு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் முகமை நிறுவனமாக டிட்கோ விளங்குகிறது.

3.3 சென்னை-பெங்களூரு தொழில் பெருந்தடம்

இத்திட்டத்திற்காக ஒரு விரிவான ஒருங்கிணைந்த பெருந்திட்ட அறிக்கையை (Comprehensive Integrated Master Plan) ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு நிறுவனம் (Japan International Cooperation Agency) தயாரித்துள்ளது. இந்த அறிக்கை, தொழில் பெருந்தடப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்

முதலீட்டு மையங்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. இத்தொழில் பெருந்தடப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று தொழில் முனையங்களில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி தொழில் முனையமும் ஒன்றாகும்.

3.4 பொன்னேரி தொழில் முனையத் திட்டம்

பொன்னேரி தொழில் முனையம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் 21,966 ஏக்கர் பரப்பளவு கொண்ட 10 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தின் ஐந்து கிராமங்களில் உள்ள அரசு மற்றும் டிட்கோவுக்கு சொந்தமான 1,366.11 ஏக்கர் நிலத்தை முதற்கட்டமாக 'பொன்னேரி தொழில் நகரியப் பகுதி' என அறிவித்தும், பொன்னேரி தொழில் நகரியப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தை (Ponneri Industrial Township Area Development Authority) அமைத்தும், அரசாணை எண் 1, தொழில் துறை (எம்.ஐ.இ.), நாள்: 6-1-2020-ன்படி அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 21-2-2020 அன்று தமிழ்நாடு அரசு, தேசிய தொழில் பெருந்தட மேம்பாடு மற்றும் செயலாக்க கழகம் (National Industrial Corridor Development and Implementation Trust), பொன்னேரி தொழில் நகரிய மேம்பாட்டு ஆணையம் மற்றும் டிட்கோ இடையே மாநில ஒத்துழைப்பு ஒப்பந்தம் (State Support Agreement) மற்றும் பங்குதாரர் ஒப்பந்தம் (Shareholders Agreement) கையெழுத்திடப்பட்டது. பொன்னேரி தொழில் நகரியப் பகுதியில், தொழில் திட்டங்களைச் செயல்படுத்த ஒரு சிறப்பு நோக்கு நிறுவனத்தை (Special Purpose Vehicle) டிட்கோ விரைவில் ஏற்படுத்த உள்ளது. மேலும், இம்முனையப் பகுதிக்கான பெருந்திட்ட அறிக்கை (Master Plan) தயாரிப்பதற்காக ஆலோசகர் நிறுவனத்தைத் தேர்வு செய்யும் பணியினை டிட்கோவும் தில்லி மும்பை தொழில் பெருந்தட வளர்ச்சி நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன.

3.5 சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருந்தடம்

சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருந்தடத் திட்டமானது, துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்

2020 மார்ச் 24]

நோக்கில் கிழக்குக் கடற்கரை பொருளாதாரப் பெருந்தடத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பெருந்தடம், மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டமானது, உற்பத்தித் துறையில் மாநிலத்தின் பங்கை அதிகப்படுத்துதல், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்துதல் மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சியை மேலும் ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான விரிவான மேம்பாட்டுத் திட்ட அறிக்கை (Comprehensive Development Plan) தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மதுரை–திண்டுக்கல்-விருதுநகர்-தேனி, தூத்துக்குடி-திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர்-நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை-சிவகங்கை மற்றும் அரியலூர்-பெரம்பலூர் ஆகிய ஆறு தொழில் முனையங்கள் இத்திட்டத்திற்காக கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை–திண்டுக்கல்-விருதுநகர்-தேனி மற்றும் தூத்துக்குடி-திருநெல்வேலி ஆகிய இரண்டு முனையங்கள் முதற்கட்டமாக செயல்படுத்தப்படும். முதற்கட்ட திட்டத்திற்கான பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது ஏப்ரல் 2020-ல் முடிக்கப்படும். கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Development Bank) நிதியுதவி கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(i) நாள் ஒன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் (60 MLD) திறன் கொண்ட கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை, தூத்துக்குடி

(ii) மருத்துவப் பூங்கா திட்டம், செங்கல்பட்டு

(iii) நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் (20 MLD) திறன் கொண்ட கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை, மணக்குடி

(iv) ஒருங்கிணைந்த புதிய ஒற்றைச் சாளர அனுமதி இணையம்

மேலும், இத்திட்டத்தின்கீழ் ரூ.6,448.24 கோடி திட்ட மதிப்பில் 15 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் திட்டம் மற்றும் ரூ.4,987 கோடி திட்ட மதிப்பில் விருதுநகரில் 765 KV துணை மின் நிலையம் மற்றும் ஒட்டப்பிடாரத்தில் 400 KV துணை மின் நிலையம் மற்றும் இணைப்பு மின் பாதைகள் அமைக்கும் திட்டம் ஆகியவை ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிமூலம் செயல்படுத்தப்படவுள்ளன.

[2020 மார்ச் 24

3.6 கொச்சி—கோயம்புத்தூர்—பெங்களூரு தொழில் பெருந்தடம்

மத்திய அரசு, சென்னை-பெங்களூரு தொழில் பெருந்தடத் திட்டத்தை, கோயம்புத்தூர் வழியாக கொச்சி வரை விரிவுபடுத்தி செயல்படுத்துவதாக அறிவித்துள்ளது. இப்பெருந்தடத் திட்டம், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும். இதில் தருமபுரி-சேலம் முனையம் ஒருங்கிணைந்த உற்பத்தி மண்டலமாக கட்டமைக்கப்படும். இந்த முதற்கட்ட திட்ட மேம்பாட்டிற்காக தருமபுரியில் 1,700 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இம்முனையத்திற்கான பெருந்திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ஆலோசகர் நிறுவனத்தைத் தேர்வு செய்யும் பணியினை டிட்கோவும் தில்லி மும்பை தொழில் பெருந்தட வளர்ச்சி நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன.

3.7 தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் பெருந்தடம்

தமிழ்நாட்டில், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு தொழில் பெருந்தடத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்பெருந்தடத் திட்டம், பாதுகாப்புத் தளவாட புதிய உற்பத்திப் பகுதிகளை உருவாக்கவும் தொழில் உற்பத்திப் பகுதிகளை மேம்படுத்தவும் அவற்றிற்குத் தேவையான பரிசோதனை மற்றும் சான்றிதழ் வழங்கும் வசதிகள், ஏற்றுமதி வழிவகை மையங்கள், தொழில்நுட்பப் பரிமாற்ற வசதிகள் ஆகியவற்றைக் கொண்டதாகவும் உருவாக்கப்படும். இத்திட்டம் 20-1-2019 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

(i) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT-Madras) மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் டிட்கோ நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.

(ii) இதன்படி, தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு, பொதுச் சான்றிதழ் மையங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அறிவுசார் ஆலோசனைகளை சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும்.

2020 மார்ச் 24]

(iii) DRDO தனது கருத்துகள், ஆதாரங்கள் மற்றும் நிபுணத்துவத்தை வழங்கி அறிவுசார் ஆலோசகராக செயல்படும்.

(iv) இப்பெருந்தடத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர் நிறுவனத்தை நியமனம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளியை டிட்கோ நிறுவனம் கோரியுள்ளது.

(v) கூடுதல் சலுகைகள் மற்றும் மானியங்களோடு மேம்படுத்தப்பட்ட "தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை" மே 2020-ல் அறிவிக்கப்படும்.

3.8 பாதுகாப்புத் துறை தொழில் திட்டங்கள்

(i) பாதுகாப்புத் தொழில் பெருந்தடத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டபோது பாதுகாப்புத் துறை சார்ந்த பல பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மற்றும் தளவாடத் தொழிற்சாலை வாரியம் (Ordinance Factory Board), பாரத் எலக்ட்ரானிக்ஸ், பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், பாரத் எர்த் மூவர்ஸ், பாரத் டையனமிக்ஸ் மற்றும் மசகான் கப்பல் கட்டுமான நிறுவனம் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் ரூ.3,123.50 கோடி முதலீடு செய்ய உறுதியளித்துள்ளன. 31-12-2019 வரை மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் ரூ.300 கோடி அளவுக்கு முதலீடு செய்துள்ளன. மேலும், கோயம்புத்தூரில் எல்&டி, எல்.எம்.டபிள்யு, ரூட்ஸ் இண்டஸ்டிரீஸ், சென்னையில் டேட்டா பேட்டர்ன்ஸ், ஈசாட் ரேடார்ஸ், சேலத்தில் சேலம் ஏரோஸ்பேஸ் என்ஜினியர்ஸ் மற்றும் ஓசூரில் டைட்டன் இன்டஸ்டிரீஸ் போன்ற தனியார் நிறுவனங்கள் ரூ.700 கோடிக்கு இப்பெருந்தடப் பகுதிகளில் பல்வேறு முதலீடுகளைச் செய்துள்ளன. சென்னையில் 700 பொறியாளர்களைக் கொண்ட போயிங் நிறுவனத்தின் பொறியியல் மையம் செயல்பட்டு வருகிறது.

(ii) Larsen & Toubro மற்றும் பிரான்ஸ் நாட்டின் MBDA-வின் கூட்டு நிறுவனமான L&T MBDA Missile Systems Ltd., கோயம்புத்தூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஏவுகணை ஆயுதங்கள் தயாரிப்பதற்காக மத்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளது.

(iii) தமிழ்நாடு வெடிபொருள் நிறுவனம் செயல்படாமல் இருந்த தனது தொழிற்சாலையை மீண்டும் செயல்படுத்தவும் வெடி பொருட்கள் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டு தொழில்முனைவோருக்கான சிறப்பு மையம் ஒன்றினை நிறுவவும் பாரத மின்னணு (BEL) நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

(iv) பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் (BHEL) நிறுவனம் இராணிப்பேட்டையில் ரூ.200 கோடி முதலீட்டில் ஒரு வான்வெளி பிரிவை (Aerospace) நிறுவி வருகிறது.

(v) தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் ISRO-வின் செயற்கைகோள் ஏவுதளம் ஒன்றினை நிறுவிட தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.1,000 கோடி உத்தேச திட்ட மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது. தற்போது மகேந்திரகிரியில் செயல்பட்டுவரும் ISRO-வின் திரவ எரிபொருள் ஆராய்ச்சி மையமும் இப்புதிய திட்டமும் விண்வெளித் துறையில் தமிழ்நாட்டின் முதன்மையான பங்கை நிலைநாட்டுவதாக அமையும்.

(vi) வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறைக்கு மனித ஆற்றலை வழங்கும் நோக்கத்துடன் LMW நிறுவனம் Boeing நிறுவனத்தோடு இணைந்து கோயம்புத்தூரில் திறன் மேம்பாட்டு மையம் ஒன்றினை நிறுவியுள்ளது.

(vii) உளுந்தூர்பேட்டை ஓடுதளத்தை ஆளில்லா விமானப் பரிசோதனை, விமானம் ஓட்டுநர் பயிற்சி மையம் மற்றும் சிறிய விமான வடிவமைப்பு, உருவாக்கம், வர்த்தகம் மற்றும் பரிசோதனை ஓட்டம் கொண்ட விமானத் தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் பணியினைச் சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம்மூலம் டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

3.9 வானூர்தி உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம்

வானூர்தி உதிரிப் பாகங்கள் தயாரிப்பு மற்றும் வடிவமைப்புத் தொழில் சார்ந்த நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும்

2020 மார்ச் 24]

பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை, திருபெரும்புதூரில் உள்ள வானூர்தி தொழில் பூங்காவில் டிட்கோ நிறுவனம் நிறுவி வருகின்றது. இம்மையம், இத்துறை சார்ந்த தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக, உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், மின்னணுவியல் தொடர்பான வானூர்தி வளாகம், ஒரு சிறப்பு மையம், திறன் மேம்பாட்டு மையம் மற்றும் பொது சேமிப்புக் கிடங்கு போன்ற வசதிகளைக் கொண்டு அமையும். இத்திட்டத்தை டைடல் பார்க் லிமிடெட் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதற்கட்டம் 5.54 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.250 கோடி முதலீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான கட்டட வடிவமைப்பு மற்றும் பொறியியல் பணிகளுக்காக திட்ட மேலாண்மை ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிக்கான ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் மார்ச் 2020-ல் தொடங்கி அடுத்த 24 மாதங்களில் கட்டி முடிக்கப்படும்.

3.10 தற்போது செயல்படுத்திவரும் சில கூட்டாண்மை நிறுவனத் திட்டங்கள்

டைட்டன் இன்டஸ்ட்ரீஸ், டான்பேஃக் இன்டஸ்ட்ரீஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ், டைடல் பார்க், அசென்டாஸ் ஐ.டி. பார்க், டைசல் பயோ பார்க், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சென்னை வர்த்தக மையம், டான்ஃப்ளோரா உட்கட்டமைப்புப் பூங்கா, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை, டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், எல்&டி ஷிப் பில்டிங், இந்தியன் ஆயில் எல்.என்.ஜி. (LNG) போன்றவை டிட்கோ நிறுவனத்தின் முக்கியக் கூட்டாண்மை நிறுவனங்களாகும்.

3.10.1 பாலிமர் தொழில் பூங்கா

டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்களின் கூட்டாண்மை நிறுவனமான தமிழ்நாடு பாலிமர் தொழில் பூங்கா நிறுவனம், பாலிமர் பொருட்கள் உற்பத்திப் பூங்கா ஒன்றினை திருவள்ளூர் மாவட்டம், வாயலூர் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்களில் 265.66 ஏக்கர் நிலத்தில் ரூ.216 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தி

வருகிறது. இப்பூங்கா, பாலிமர் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அமைக்க ஏதுவான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இருக்கும். இத்திட்டம், மத்திய அரசின் பாலிமர் பூங்கா கொள்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் துறை ஒப்புதல் அளித்த ரூ.40 கோடி மானியத் தொகையில் ரூ.8 கோடியை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21-2-2020 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் டிசம்பர் 2020-ல் முடிக்கப்படும்.

3.10.2 டைசல் உயிரித் தொழில்நுட்பப் பூங்கா–III

டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்களின் கூட்டாண்மைத் துறை நிறுவனமான டைசல் பயோ பார்க் நிறுவனம், கோயம்புத்தூர் மாவட்டம், சோமையம்பாளையம் கிராமத்தில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தரைத்தளம் உள்ளிட்ட 14 தளங்களுடன் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 2.29 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைசல் பயோ பார்க்-III-ஐ நிறுவி வருகின்றது. இத்திட்டத்தின் தற்போதைய திட்ட மதிப்பீடு ரூ.85 கோடி ஆகும். இத்திட்டம் ஜூன் 2020-ல் முடிக்கப்படும்.

3.10.3 சென்னை புதிய பன்னாட்டு விமான நிலையம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது சென்னைக்கு அருகில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும் என அறிவித்தார். இதற்கான நடவடிக்கைகளை தொழில் துறை மேற்கொண்டு வருகிறது. புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியை டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

புதிய விமான நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக ஆலோசகர் நிறுவனத்தை தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளியை டிட்கோ வெளியிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான

தேவையான அனுமதிகள், ஒப்புதல்கள் பெறும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

3.10.4 TRIL இன்ஃபோ பார்க் லிமிடெட், தரமணி

டாடா ரியால்டி & இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனம், டிட்கோவுடன் இணைந்து சென்னை தரமணியில் 25.27 ஏக்கர் நிலத்தில் ரூ.4,213 கோடி திட்ட மதிப்பில் ஒரு ஒருங்கிணைந்த மாநாட்டு மையத்துடன்கூடிய தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை TRIL இன்ஃபோ பார்க் லிமிடெட் என்ற கூட்டாண்மை நிறுவனம்மூலம் அமைத்து வருகின்றது. மொத்தம் 4.6 மில்லியன் சதுர அடி பரப்பளவில் ஆறு தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில், 47,000 தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களும் மற்றும் தினசரி அலுவலகப் பணிகளுக்காக 5,000 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள். உள்நாட்டு வர்த்தகப் பகுதியில் மத்திய அரசின் அனுமதி பெற்று ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையம் மற்றும் தங்கும் அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது, இந்தப் பன்னாட்டு மாநாட்டு மையம் மற்றும் தங்கும் அறைகளுக்கான உள்ளலங்காரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், ஏப்ரல் 2020-ல் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.10.5 DLF இன்ஃபோ பார்க் லிமிடெட், தரமணி

DLF நிறுவனம் டிட்கோவுடன் இணைந்து சென்னை தரமணியில் 26.64 ஏக்கரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை நிறுவி வருகிறது. இப்பூங்காவில், சுமார் ரூ.5,000 கோடி திட்ட மதிப்பீட்டில் சுமார் 7 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டடங்கள் கட்டப்படும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 70,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதற்கட்டமாக, 2.5 மில்லியன் சதுர அடி பரப்பளவிலான கட்டடம் அமைப்பதற்கான பணிகளுக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-1-2020 அன்று அடிக்கல் நாட்டினார். கட்டுமானப் பணிகளை DLF நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இப்பணிகள் மார்ச் 2021-ல் நிறைவடையும்.

[2020 மார்ச் 24

3.10.6 மருத்துவப் பூங்கா

டிட்கோ நிறுவனம் மத்திய அரசுடன் இணைந்து செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மருத்துவப் பூங்கா திட்டத்தை ரூ.205 கோடி திட்ட மதிப்பில் செயல்படுத்த உள்ளது. இந்தப் பூங்கா, மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் உற்பத்தி மண்டலம், உயிரி தகவல்நுட்ப மண்டலம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மண்டலம் மற்றும் அறிவுசார் மையம் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த எச்.எல்.எல். மெடிபார்க் லிமிடெட் என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு நோக்கு நிறுவனத்தில் டிட்கோ நிறுவனம் பத்து விழுக்காடு பங்கு முதலீட்டை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட அறிக்கை ஏப்ரல், 2020-ல் தயாரித்து முடிக்கப்படும்.

3.10.7 பட்டாபிராம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா

டைடல் பார்க் சென்னை நிறுவனம், ஆவடி வட்டம், பட்டாபிராமில் 10 ஏக்கரில் முதற்கட்டமாக 5.57 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.235 கோடி முதலீட்டில் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 5,000 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். இத்திட்டத்திற்காக ASIDE நிதி ரூ.20 கோடி அளிக்கப்பட்டுள்ளது. டைடல் நிறுவனம், இத்திட்டத்திற்கான கட்டட வடிவமைப்பு மற்றும் விரிவான அறிக்கை தயாரிக்க ஆலோசகர் நிறுவனத்தை நியமித்துள்ளது. கட்டுமானப் பணிக்காக ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் மார்ச், 2020-ல் தொடங்கி அடுத்த 24 மாதங்களில் முடிவடையும்.

3.10.8 கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டல திட்டம்

டிட்கோ மற்றும் ஜிஎம்ஆர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் நிறுவனங்கள் கூட்டாக இணைந்து, ஜிஎம்ஆர் கிருஷ்ணகிரி சிறப்பு முதலீட்டு மண்டலம் என்ற கூட்டாண்மை நிறுவனத்தின்மூலம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 2,101 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலத்தை (Special Investment Region) ரூ.2,300 கோடி மதிப்பீட்டில் பல கட்டங்களாகச் செயல்படுத்த உத்தேசித்துள்ளன.

2020 மார்ச் 24]

இத்திட்டத்தின் முதற்கட்டத்தின் ஒரு பகுதி 275 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.212 கோடி திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டம், பொறியியல், வாகன உதிரிபாகங்கள் மற்றும் மின்னணுவியல் சார்ந்த தொழில் நிறுவனங்களின்மூலம் 3 ஆண்டு காலங்களில் சுமார் ரூ.500 கோடி அளவில் முதலீடுகளை ஈர்த்து, 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதற்கட்ட திட்டத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பை ஏற்படுத்த, பிரதான சாலை, ஒரு மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட தண்ணீர் சேமிப்புத் தொட்டி, தண்ணீர் குழாய் இணைப்புகள் மற்றும் வடிகால் நீர் கால்வாய்கள் ஆகியவற்றை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மார்ச் 2021-ல் முழுமையாக நிறைவடையும். இத்திட்டத்திற்காக ஒரு பிரத்யேக துணை மின் நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இம்முதற்கட்ட திட்டப் பகுதியில் சுமார் ரூ.200 கோடி அளவிலான முதலீட்டில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு நான்கு தொழில் நிறுவனங்களுடன் ஜிஎம்ஆர் நிறுவனம் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகின்றது.

3.10.9 கனரக பொறியியல் மையம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் சுமார் 700 ஏக்கர் நிலப்பரப்பில் கனரக பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி மையம் ஒன்றினை அமைக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இம்மையம் கப்பல் கட்டும் பணிக்கான துணை தொழிற்பிரிவுகள், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்பிரிவுகள், மின் மற்றும் இதர பொறியியல் தொழிற்பிரிவுகள் அமைப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்று இருக்கும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு பொன்னேரி வட்டம், காட்டூர் மற்றும் ஏப்ரஹாம்புரம் கிராமங்களில் உள்ள 250 ஏக்கர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும், 450 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கும், அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 400 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலத்திலும், இரண்டாம் கட்டம் மீதமுள்ள நிலங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது. மேய்க்கால் புறம்போக்கு நிலங்களுக்கு ஈடாக மாற்று

நிலங்கள் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், 108 ஏக்கர் பட்டா நிலங்களை நேரடி பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மாவட்ட ஆட்சியர்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.10.10 உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதியம் (Biotechnology Venture Capital Fund)

தமிழ்நாடு உயிரி தொழில்நுட்பக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம், (TNIFMC) ரூ.500 கோடியில் உயிரி தொழில்நுட்பத் தொழில் முதலீட்டு நிதியம் உருவாக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிதியத்திற்கு டிட்கோ நிறுவனம் ரூ.30 கோடியும் மற்றும் டைடல் பார்க் நிறுவனம் ரூ.20 கோடியும் தமது பங்களிப்பாக வழங்க உள்ளன. மீத பங்களிப்பான ரூ.450 கோடி வெளிச்சந்தையிலிருந்து பெறப்படும்.

இந்நிதியானது, புத்தாக்க காப்பு நிதியாக ரூ.20 கோடி (Incubator Fund) மற்றும் முதலீட்டுத் தொகுப்பு நிதியாக ரூ.480 கோடி (Corpus Fund) ஆகிய இரு பகுதிகளாக உருவாக்கப்படும். இந்த உயிரி தொழில்நுட்ப முதலீட்டு நிதியம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை ஆலோசகர் நிறுவனம்மூலம் நவம்பர் 2019-ல் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிதியம் அமைக்க செபி (SEBI) அமைப்பிடம் விரைவில் பதிவு செய்யப்பட உள்ளது.

3.11 டிட்கோ நிதிச் செயல்பாடு

டிட்கோ நிறுவனம், 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.154.29 கோடியை நிகர இலாபமாக ஈட்டி, அரசுக்கு 30 விழுக்காடு ஈவுத் தொகையாக (Dividend) ரூ.46.28 கோடியை அளித்துள்ளது. 2019-2020 ஆம் நிதியாண்டில் 31-12-2019 வரை டிட்கோ நிறுவனம் ரூ.258.05 கோடியை நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

கூட்டு செயல்பாடுகள்மூலம் தனியார் முதலீடுகளை அதிகளவில் ஈர்த்து புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஊக்க சக்தியாக டிட்கோ நிறுவனம் தொடர்ந்து சிறப்புற செயல்படும். இதுமட்டுமின்றி, டிட்கோ நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் தொழில் பெருந்தடத் திட்டங்கள்மூலம், தமிழ்நாடெங்கும் பரவலான சீரான தொழில் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

2020 மார்ச் 24]

4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளத்தை மேம்படுத்த, இந்திய கம்பெனிகளின் சட்டத்தின்கீழ், 1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் முன்னோடி மாநில நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க கடன் வழங்குவதில் இந்நிறுவனம் முன்னணியில் உள்ளது. இந்நிறுவனம் அளித்துவரும் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காடுக்கு மேலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் மொத்த நிதி உதவியில் 40 விழுக்காடு முதல் தலைமுறை தொழில்முனைவோர்களுக்கும் வழங்கப்படுகிறது.

4.1 பங்கு மூலதனம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மூலமாக ரூ.45 கோடி கூடுதல் மூலதனமாக அளித்ததன்பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் (31-12-2019) ரூ.376 கோடியிலிருந்து ரூ.421 கோடியாக உயர்ந்துள்ளது.

4.2 நோக்கம்

தமிழ்நாட்டில் உள்ள தொழில் துறை நிறுவனங்களுக்குத் தகுந்த உதவிபுரிவதில் உறுதியுடன் செயல்படும் நம்பகமான நிறுவனமாக உருவெடுத்தல்.

4.3 குறிக்கோள்

- வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு திட்டங்கள் மற்றும் செயல்முறைகளைத் தொடர்ந்து உருவாக்குதல்.
- மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமான சலுகைகள் மற்றும் சேவைகளை வழங்க தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது.
- மாநிலத்தில் காலக் கடன் பெறுவதற்கு மிகவும் உகந்த நிதி நிறுவனமாக மாறுதல்.

• குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன சூழலில் உள்ள பிற பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றி அதன்மூலம் நிறுவனத்தின் துறைசார் அறிவினைப் பெருக்குதல்.

• நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள், குறு நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைச் சென்றடையும்பொருட்டு புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல்.

இந்நிறுவனம் 31-12-2019 வரை 1,24,147 தொழில் நிறுவனங்களுக்கு 17,765.73 கோடி ரூபாய் கடனுதவி வழங்கியுள்ளது. 31-12-2019 ஆம் தேதி நிலவரப்படி, இந்நிறுவனம் வழங்கியுள்ள கடன் நிலுவைத் தொகை 1,118.34 கோடி ரூபாயாகும்.

தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவினாலும், வழிகாட்டுதலாலும் இந்நிறுவனம் 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 17 வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) ரூ.13.73 கோடி அளவிற்கு தற்காலிக நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

4.4 கடனுக்கான வட்டி விகிதம்

2019-2020 ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் 6 விழுக்காடாக உயர்த்தப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின் பயனாக குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் வழங்கப்படும் கடனுக்கான குறைக்கப்பட்ட நிகர வட்டி விகிதம் 5.95 விழுக்காடு முதல் 7.95 விழுக்காடு வரை உள்ளது.

4.5 2019-2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள்

4.5.1 சேவைத் தரத்தினை மேம்படுத்துதல்

(அ) கிளை மற்றும் கள அலுவலகங்கள் துவங்குதல்

வாடிக்கையாளர்களின் அருகாமையில் இயங்கி அவர்களுக்குத் தேவைப்படும் சேவைகளை உரிய நேரத்தில் வழங்கிடும்பொருட்டு இந்நிறுவனம் தொழில் நிறுவனங்கள் நிறைந்த பகுதிகளில் கிளை/ கள அலுவலகங்களை நிறுவ உள்ளது. இதன் முதற்கட்டமாக

2020 மார்ச் 24]

மறைமலை நகர், கும்மிடிப்பூண்டி, திருப்பெரும்புதூர் மற்றும் கடலூர் சிப்காட் தொழிற்பேட்டை ஆகிய இடங்களில் புதிய கிளை/கள அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக கள்ளக்குறிச்சி மற்றும் இராணிப்பேட்டையில் புதிய கிளை அலுவலகங்கள் துவங்கப்படும்.

(ஆ) மண்டல கடன் பரிசீலனைப் பிரிவு

கடன் பரிசீலனை மற்றும் அனுமதி பணியினைச் சீரிய முறையில் மேற்கொள்ளவும், விண்ணப்ப ஆய்வில் தாமதம் தவிர்க்கவும் "மண்டல கடன் பரிசீலனைப் பிரிவு", நிறுவனத்தின் 6 மண்டல அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் இப்பணியை மட்டுமே பிரத்யேகமாக மேற்கொள்ளும்.

(இ) இலக்கமயமாக்கல் (Digitalization)

தற்போதைய சூழலுக்கு ஏற்ப நிறுவனத்தின் திட்டங்கள், சேவைகள் மற்றும் அரசாங்கத்தின் மானியங்கள் ஆகியவற்றினைப்பற்றி தொழில்முனைவோருக்கு ஓர் எளிய இடைமுக அனுபவம் (interface experience) வழங்கும் நோக்கோடு நிறுவனத்தின் வலைதளம் (website) மறுவடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் பயன்பாட்டிற்கு எளிதான வாடிக்கையாளர் இணைய முகப்பு (Customer Portal) வழியாக பணம் செலுத்துதல், கணக்கு விவரங்கள் அறிதல், கடன் விசாரணை, வாடிக்கையாளர் கருத்து, குறை தீர்ப்பு மற்றும் கடன் விண்ணப்பங்கள் (சில திட்டங்களுக்கு) வழங்கப்படுகிறது. மானியத்திற்கான இணைய முகப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. உருவாக்கத்திற்குப்பின் இது ஒற்றைச் சாளர முகப்புடன் இணைக்கப்படும்.

(ஈ) விற்பனை யுக்திகள்

இந்நிறுவனத் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் மானியங்கள் ஆகியவற்றைப்பற்றி தொழில்முனைவோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதிக வாடிக்கையாளர்களைத் தொடர்புகொள்ளவும், விற்பனை அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில், 2019-2020 ஆம் நிதியாண்டிலிருந்து பயன்படுத்தப்படுகிறார்கள்.

இலக்கமயமான (Digitalization) வர்த்தக உலகில் புதிய தலைமுறை தொழில்முனைவோரை ஈர்க்கும்பொருட்டு இந்நிறுவனம் இணையவழி வணிக விளம்பரங்களையும் நிறுவனத்தைப் பிரபலப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

முகநூல், டிவிட்டர் போன்ற சமூக வலைதளங்களில் செய்யப்படும் விழிப்புணர்வு விளம்பரங்களின் பயனாக பல புதிய கடன் விசாரணைகள் வரப்பெற்றுள்ளன.

தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்முனைவோர் சங்கத்துடன் (TANSTIA) இந்நிறுவனம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில், இச்சங்கத்தின் உறுப்பினர்களை நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களாக அறிமுகப்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இவ்வாறு பிற தொழில்முனைவோர் சங்கங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படும்.

4.5.2 புதிய திட்டங்கள்

இந்நிறுவனம் வாடிக்கையாளர்களின் பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் கீழ்க்காணும் திட்டங்களை இந்நிதியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது:

(அ) சிறப்பு வாடிக்கையாளர் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நிதியுதவி பெற்று தொடர்ந்து சிறப்பாகச் செயல்படும் நிறுவனங்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. தொழில்முனைவோரின் பங்களிப்பு ஏதுமின்றி இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) 175 நிறுவனங்களுக்கு ரூ.61.89 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இயந்திரங்களுக்கான துரித நிதியுதவித் திட்டம்

நடைமுறையில் நன்கு செயல்படும் நிறுவனங்களுக்கு, விரிவாக்கம்/பன்முகப்படுத்துதல்/நவீனமயமாக்குதல்/பழைய இயந்திரங்களை மாற்றுதல் போன்ற காரணங்களின்பொருட்டு தளவாடங்கள்/இயந்திரங்கள் வாங்க இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், தொழில்முனைவோர் திட்ட முதலீட்டில் 10 விழுக்காடு மட்டுமே தங்கள் பங்காக அளிக்க வேண்டும். மேலும், இத்திட்டத்தில் வைப்பு நிதி பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) 35 நிறுவனங்களுக்கு ரூ.20.46 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

(இ) துளிர் திட்டம்

மாநிலத்தில் உள்ள புதிய தொழில்முனைவோருக்கு உதவும் வண்ணம் தொழில்நுட்பத் தகுதி மற்றும் அனுபவம் உள்ள தொழில்முனைவோருக்கு குறு மற்றும் சிறு நிறுவனம் துவங்குவதற்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே ரூ.50 இலட்சம் மற்றும் ரூ.3 கோடி ஆகும்.

(ஈ) மருத்துவர்கள் திட்டம்

தகுதியுள்ள மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு விரைவான முறையில் வைப்பு நிதியைப் பிணையமாக வைத்து நிதி வழங்கிட வேண்டி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.1 கோடி ஆகும்.

(உ) குறு நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கான திட்டம்

நிறுவனத்தின் இயக்குநர் குழுமம் குறு நிதி நிறுவனங்களுக்கும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கும் கடன் வழங்கும் திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இக்கடனுதவியைக் கொண்டு குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்குத் தொழில்நுட்பத்தின் உதவியோடு இந்நிறுவனங்கள் கடன் வழங்கும்.

4.6 நடைமுறையில் உள்ள இக்கழகத்தின் திட்டங்கள்

தொழில்முனைவோர்களின் பல்வேறு நிதித் தேவைகளை நிறைவு செய்ய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

4.6.1 பொது காலக் கடன்

இந்நிறுவனம், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும், உற்பத்தியைப் பன்முனைப்படுத்துவதற்கும் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

[2020 மார்ச் 24

பொது/தனி நிறுவனங்களுக்கு காலக் கடன் ரூ.30 கோடி வரையிலும், கூட்டு நிறுவனங்கள்/வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கூட்டு நிறுவனங்களுக்கு காலக் கடன் ரூ.20 கோடி வரையிலும் மற்றும் தனி உரிம நிறுவனங்களுக்கு காலக் கடன் ரூ.15 கோடி வரையிலும் வழங்கப்படுகிறது. தொழில்முனைவோரின் பங்களிப்பு மொத்தத் தொழில் மதிப்பீட்டில் 25 விழுக்காடு முதல் 33.33 விழுக்காடு வரை ஆகும். 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் கடன் அசல் தொகை திரும்பச் செலுத்த விடுமுறை காலம் வழங்கப்படுகின்றது (இந்த விடுமுறை காலத்தில் வட்டியை மட்டும் செலுத்த வேண்டும்). கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம், திட்டங்களின் அடிப்படையில், விடுமுறை காலம் உள்பட 9 ஆண்டுகள் வரை இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) 154 தொழில்முனைவோருக்கு ரூ.151.90 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.6.2 புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS Scheme)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில்முனைவோராக உருவெடுக்க உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்நிறுவனம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், தொழில்முனைவோருக்கு, தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மூலதன மானியமாக மாநில அரசு வழங்குகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன் வட்டியில் 6 விழுக்காடு சலுகையும் தொழில்முனைவோருக்கு வழங்கப்படுகிறது. தொழில்முனைவோரின் பங்களிப்பு சிறப்புப் பிரிவினருக்கு அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கு 5 விழுக்காடாகவும், மற்ற பிரிவினருக்கு 10 விழுக்காடாகவும் இருப்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின்கீழ், 31-12-2019 வரை 640 முதல் தலைமுறை தொழில்முனைவோருக்கு ரூ.312.48 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

4.6.3 உற்பத்தி/பதப்படுத்துதல்/பணி ஆணை அடிப்படையிலான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு மூலதன திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நவீன அரிசி ஆலைகள், உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்கள், நடைமுறை மூலதனத் தேவைகளுக்கான நடைமுறைக் காலக் கடன் பெறலாம். இத்திட்டம் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் அரிசி ஆலைகளிலிருந்தும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறுவனம் ஒன்றிற்கு, அதிகபட்சமாக ரூ.2 கோடி வரை கடனுதவி அளிக்கப்படுகிறது. பணி ஆணை அடிப்படையிலான (job work) நிறுவனங்களுக்கும் இதுபோன்ற நடைமுறை மூலதன திட்டத்தின்கீழ் ரூ.50 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் (31-12-2019 வரை) 9 தொழில்முனைவோருக்கு ரூ.4.43 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.6.4 எளியமுறை செயல்பாட்டுக் கடன் திட்டம்

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் (அரிசி ஆலைகள் உட்பட) நடைமுறை மூலதன தேவைகளை/கூடுதல் செயல்பாட்டு மூலதன தேவைகளை, இந்த எளியமுறை செயல்பாட்டுக் கடன் திட்டம் பூர்த்தி செய்யும். இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி வரை ஒரு நிறுவனத்திற்கு கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் (31-12-2019 வரை) 13 தொழில்முனைவோருக்கு ரூ.4.97 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.6.5 காற்றாலை/சூரியசக்தி திட்டம்

இத்திட்டத்தில் தொழில்முனைவோர்கள் காற்றாலை/சூரியசக்தி திட்டங்களை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து அதனைத் தமது தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் விற்பனை செய்யவும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் நிலம், காற்றாலை/சூரியசக்தி சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது.

4.6.6 இயந்திர நிதியுதவித் திட்டம்

நடைமுறையில் திறம்பட செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின்கீழ் கடனுதவி

[2020 மார்ச் 24

அளிக்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டினைத் தொழில்முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,347 நிறுவனங்களுக்கு ரூ.753.93 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4.6.7 போக்குவரத்து வாகனக் கடன்

பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித்தட உரிமம் உள்ள பயணிகள் சீருந்துகள், பேருந்துகள் ஆகியவை வாங்க கடனுதவி வழங்கப்படுகிறது. இதில் தொழில்முனைவோரின் பங்களிப்பு குறைந்தபட்சம் 15 விழுக்காடாகும்.

4.6.8 மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு, இத்திட்டத்தின்கீழ் மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தொழில்முனைவோரின் பங்களிப்பு 10 விழுக்காடு ஆகும். மின்னாக்கி கடன்களைத் தொழில்முனைவோர் மேலும் எளிதாகப் பெறுவதற்கேற்ப, பிணையச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

4.6.9 பட்டி நிதியுதவித் திட்டம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் குறு, சிறு மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி நிதியுதவியினை வழங்கும்பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் ஒப்பந்ததாரர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. பிணைய சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின்கீழ் இந்த பட்டி நிதியுதவித் திட்டத்தில் விரைவில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) 36 ஒப்பந்ததாரர்களுக்கு ரூ.117.13 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

4.7 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் கீழ்க்காணும் மானியங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது:

4.7.1 தமிழ்நாடு அரசின் மானியம்

(அ) குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 6 விழுக்காடு வட்டி மானியம் வழங்கும் திட்டம்

குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு குறைந்த செலவினில் நிதி வழங்கிடும்பொருட்டு, தமிழ்நாடு அரசு வழங்கும் வட்டி மானியத்தை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடன்பெறும் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு 3 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடாக உயர்த்தி 9-10-2019 அன்று தேதியிட்ட அரசாணை எண் 177, தொழில் (MIF.2) துறைமூலம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் 1-4-2019 முதல் பெறும் கடனுக்கு 6 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படும். இந்நிறுவனம் 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) 351 தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கியுள்ளது.

(ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு வட்டி மானியம் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன்பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு வட்டி சலுகை வழங்கும் அரசுத் திட்டம் 2021-2022 ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தொடக்கம் முதல் 31-12-2019 வரை ரூ.3,746.36 கோடி கடன் இந்நிறுவனத்தால் அனுதிக்கப்பட்டு, ரூ.103.45 கோடி மானியம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) இதுவரை தொழில்முனைவோர்க்கு ரூ.12.64 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

(இ) பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பின்தங்கிய வட்டாரங்களிலும், சிப்காட்/சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும் சிறப்புத் துறை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள்மீது 25 விழுக்காடு அதாவது அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டில் (31-12-2019 வரை) இந்நிறுவனம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) ரூ.17.00 கோடியை 123 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

(ஈ) பெரும் மற்றும் மிகப்பெரும் நிறுவனங்களுக்கான மானியங்கள் மற்றும் சலுகைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யாத ரூ.10 கோடி முதல் ரூ.300 கோடி அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படும் மூலதன மானியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான உட்கட்டமைப்புகளுக்கான மானியம் மற்றும் VAT + CST செலுத்திய தொகைக்கு எதிரான மென் கடன் (Soft Loan) போன்றவற்றை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினை தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண் 85, தொழில் (எம்.ஐ.எப்.2) துறை, நாள் 8-3-2019-ன்படி நியமித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 வரை) இக்கழகம் இதுவரை ரூ.118.62 இலட்சத்திற்கான மானிய அனுமதியினை வழங்கியுள்ளது.

(உ) புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட மானியம்

இந்தத் திட்டத்தின்மூலம் இந்நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் (31-12-2019 வரை) மூலதன மானியமாக ரூ.2.28 கோடியை 39 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

4.8 செயல்பாடு

இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகளான கடன் அனுமதித்தல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் 2019-2020 ஆம் நிதியாண்டின் செயல்பாடு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

2020 மார்ச் 24]

(ரூபாய் கோடியில்)

விவரம்	எய்தப்பட்ட சாதனை 2019-2020 (31-12-2019 வரை)
கடன் அனுமதி தொகை	484.47
கடன் வழங்கிய தொகை	359.71
இயக்க இலாபம் (தற்காலிகம்)	59.74
நிகர இலாபம் (தற்காலிகம்)	13.73

15 ஆண்டு இடைவெளிக்குப்பின் இந்நிறுவனம் 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுக்கு ஈவுத் தொகை வழங்கியது. பின்னர், 2016-2017, 2017-2018 ஆம் ஆண்டுகளிலும் ஈவுத் தொகை வழங்கியது. மேலும், 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.3.04 கோடி ஈவுத் தொகையை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியது.

4.9 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு

(ரூபாய் கோடியில்)

வருடம்	கடன் அனுமதி தொகை	வழங்கக்கூடிய தொகை
2020-2021	1400	1150
2021-2022	1700	1400

5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசால் 1979 ஆம் ஆண்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுதுகாகிதம் தயாரிக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின், காகித ஆலையின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 90,000 டன் திறனுடன், 1984 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம், புகளூரில் துவக்கப்பட்டது. ஆலையின் காகித உற்பத்தித் திறன் நான்கு கட்டங்களில் உயர்த்தப்பட்டு, தற்போது

[2020 மார்ச் 24

ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகிதக்கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து பல்வேறு கட்டங்களில் 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட நவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை, 2016 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 6,00,000 டன்னாக உயர்த்தப்பட்டதால், தற்போது இந்திய அளவில் காகித மற்றும் அடுக்கு காகித உற்பத்தியில் இந்நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.

இந்நிறுவனம், காகித தயாரிப்பில் உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

இந்நிறுவனம், தனது மரக்கூழ் உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப் பொருளினைப் பெறுவதற்கும் மற்றும் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கும், 2004-2005 ஆம் ஆண்டு, பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைத் துவக்கியது. இந்த மரக்கூழ் வனத் தோட்ட திட்டங்கள், விவசாயிகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 2019 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் வரையில், மாநிலம் முழுவதும் 1,63,506 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ்மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தில் 30,625 விவசாயிகள் பங்கு பெற்றுள்ளார்கள்.

இந்நிறுவனம், ஆலையின் சுயதேவைக்காக 103.62 மெகா வாட் திறன்கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 30 மெகா வாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்குக் காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், 35.5 மெகா வாட் திறன்கொண்ட இரண்டு காற்றாலைப் பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப்பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2020 மார்ச் 24]

இந்நிறுவனம், பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப பல்வேறு வகையான உற்பத்திப் பொருள்களான உயர் ரக காகிதங்கள் மற்றும் அடுக்குக் காகித அட்டைகளைத் தயாரித்து, இந்தியா முழுவதும் விற்பனை செய்துவருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 விழுக்காட்டை உலகளவில் சுமார் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம், அச்சு மற்றும் எழுதுகாகிதம் ஏற்றுமதியில் இந்திய அளவில் முதன்மையாகத் திகழ்கிறது.

இந்நிறுவனத்தில், தமிழ்நாடு அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பர நிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் வசம் உள்ளது.

5.1 2019-2020 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி மற்றும் பயன்பாட்டு அளவு

காகித உற்பத்தி	:	4,00,000 டன்
பயன்பாட்டு அளவு	:	100 விழுக்காடு
காகித அட்டை உற்பத்தி	:	1,78,553 டன்
பயன்பாட்டு அளவு	:	89.27 விழுக்காடு
சிமென்ட் உற்பத்தி	:	2,60,000 டன்
மின் உற்பத்தி	:	6012 இலட்சம் யூனிட்

5.2 2019-2020 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் மற்றும் இலாபம்

2019-2020 ஆம் ஆண்டின் மொத்த வருவாய் ரூ.3,698 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரிக்கு முந்தைய இலாபம் ரூ.286 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டின் வரிக்கு முந்தைய இலாபம் ரூ.155 கோடியாகும். 2019-2020 ஆம் ஆண்டின் வரிக்குப் பிந்தைய நிகர இலாபம் ரூ.194 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டின் வரிக்கு பிந்தைய நிகர இலாபம் ரூ.94 கோடியாகும்.

5.3 ஈவுத் தொகை

இந்நிறுவனம் பல வருடங்களாக மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தனது பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து ஈவுத் தொகையை அளித்து வருகிறது. இந்நிறுவனம் 2018-2019 ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக 75 விழுக்காடு பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம் தமிழ்நாடு அரசுக்கு ஈவுத் தொகையாக ரூ.18.33 கோடி வழங்கியுள்ளது.

5.4 ஏற்றுமதி

2019–2020 ஆம் ஆண்டில், இந்நிறுவனத்தின் அச்சு மற்றும் எழுது காகித ஏற்றுமதி 80,000 டன்னாகவும், காகித அட்டைகள் ஏற்றுமதி 2,500 டன்னாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.5 வேலைவாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2,580 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளித்து வருகிறது.

5.6 2019-2020 ஆம் ஆண்டு செயல்படுத்திய திட்டங்கள்

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அடுக்குக் காகித அட்டை ஆலையில் கூடுதலாக காகித அட்டைகளை வெட்டும் இயந்திரத்தை ரூ.9 கோடி முதலீட்டில் நிறுவியுள்ளது. இதனால் ஆலையின் காகித அட்டைகளை வெட்டும் திறன் அதிகாிக்கப்பட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் 'மை ஸ்டாம்ப்' (My Stamp) என்ற தபால் தலை 1-11-2019 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் தபால் தலை இந்திய தபால் துறையால் வடிவமைக்கப்பட்டது. இந்தத் தபால் தலையை வெளியிட்டதன்மூலம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் நன்மதிப்பும், காகித சந்தையில் வாடிக்கையாளர்களிடையே நற்பெயரும் உயர்ந்துள்ளது.

5.7 செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள்

5.7.1 நிறுவனத்தின் இரண்டாம் அலகு–ஆலை விரிவாக்கத் திட்டம்

5.7.2 அடுத்த கட்ட வளர்ச்சியாக, தமிழ்நாடு அரசு 2017-2018 ஆம் ஆண்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில்

2020 மார்ச் 24]

உள்ள அடுக்குக் காகித அட்டையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தது.

இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகத்திடம் இருந்து 4-4-2019 அன்று பெறப்பட்டுள்ளது.

தற்போது, இந்த விரிவாக்கத் திட்டம் ரூ.2,520 கோடி முதலீட்டில் இரண்டு கட்டங்களில் செயல்படுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டத்தின் முதல் கட்டம் ரூ.1,100 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும். இந்த முதற்கட்ட விரிவாக்கத் திட்டத்தில், நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன்கொண்ட மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின் ஆக்கி ஆகியவை நிறுவப்பட உள்ளன. மரக்கூழ் பிரிவினை நிறுவுவதன்மூலம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரக்கூழ் கொள்முதல் தவிர்க்கப்படும்.

மரக்கூழ் பிரிவு நிறுவப்பட்ட பின்னர், நிறுவனத்தின் கூழ்மரங்களின் தேவை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்னிலிருந்து 12 இலட்சம் டன்னாக அதிகரிக்கும். இதைக் கருத்தில்கொண்டு, 2018-2019 ஆம் ஆண்டில் இருந்து மரக்கூழ் வனத் தோட்ட திட்டத்தினை ஆண்டொன்றுக்கு 10,000 ஏக்கரில் இருந்து 25,000 ஏக்கர் நிலங்களில் பயிரிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக, புதிய காகிதம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்னாக்கியை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1-11-2019 அன்று அடுக்குக் காகித அட்டை ஆலையின் விரிவாக்கத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை துவங்குவதற்கான அடிக்கல் நாட்டினார்கள். இந்த விரிவாக்கத் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை ஜனவரி 2021-க்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை ஜனவரி 2021-க்குள் நிறைவு செய்யும் வகையில், இத்திட்டத்திற்கான முக்கிய இயந்திரங்களுக்கான கொள்முதல் ஆணைகள் திட்டமிட்டப்படி வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 24

இத்திட்டத்தின்மூலம், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

5.8 சமூகக் கூட்டாண்மைப் பொறுப்பு

நிறுவனத்தின் முந்தைய 3 ஆண்டுகளின் வரிக்கு முந்தைய சராசரி இலாபத்தில் சுமார் 2 விழுக்காடு இலாபத் தொகையினைச் சமுதாய நலப் பணிகளுக்காக இந்நிறுவனம் செலவழித்து வருகிறது. கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளைத் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்நிறுவனம், 2019-2020 ஆம் ஆண்டில் சமுதாய நலப் பணிகளுக்காக சுமார் ரூ.3 கோடி ஒதுக்கி உள்ளது.

நம்முடைய கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஜனவரி 2020-ல் நடந்த 43-வது சென்னை புத்தகக் கண்காட்சியில், தமிழ்நாடு அரசின் தொல்பொருள் துறை கீழடியைப் பற்றிய ஒரு சிறப்புக் கண்காட்சியை நடத்தியது. இந்நிறுவனம், இந்தச் சிறப்புக் கண்காட்சியில் உள்ள காட்சிப்படுத்தும் அரங்குகளுக்கு ரூ.16 இலட்சம் நிதி வழங்கி, அகழ்வாராய்ச்சியில் எடுக்கப்பட்ட பொருட்கள் கீழடியைப் பற்றிய புகைப்படங்கள் மற்றும் காணொளிப் படங்களைக் காட்சிப்படுத்த உதவி செய்தது.

5.9 விருதுகள்

1. இந்திய இயக்குநர்கள் நிறுவனம், இந்தியா நிறுவனம் காகித உற்பத்திப் பிரிவில் உள்ள பெரிய நிறுவனங்களில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு “சக்தி மேலாண்மை தங்க மயில் தேசிய விருது 2019” என்ற விருதை வழங்கியுள்ளது.

2. இந்தியப் பொறியாளர்கள் நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு “தொழில்நுட்ப சிறப்பு விருது 2019” என்ற விருதை வழங்கியுள்ளது.

6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சிமெண்ட் உற்பத்தித் துறை முக்கியப் பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக அளவில் நடைபெற்றுவரும் உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானத் துறை, வீட்டு வசதி, நெடுஞ்சாலை, எரிசக்தி,

2020 மார்ச் 24]

துறைமுகம் போன்ற துறைகளில் நிலவும் அதிக வளர்ச்சியின் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் சிமென்ட் தேவை அதிகரித்து வருகிறது. அதற்கேற்ப, புதிய ஆலைகள் நிறுவப்பட்டு தற்பொழுது ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 40 மில்லியன் டன் நிறுவன உற்பத்தித் திறனுடன், சிமென்ட் அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்களில் இந்தியாவில் மூன்றாவது மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தற்சமயம், 19 சிமென்ட் ஆலைகள் தனியார் துறையிலும் 4 சிமென்ட் ஆலைகள் பொதுத் துறையிலும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. டிட்கோ நிறுவனம் அதனிடம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றிவிட்டதைத் தொடர்ந்து, 31-12-1994 முதல் தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் தனி அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெ. டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமென்ட் ஆலை ஒன்றையும், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் மெ. டன் உற்பத்தித் திறன்கொண்ட சிமென்ட் ஆலை ஒன்றையும் இயக்கி வருகிறது. தற்பொழுது, அரியலூர் சிமென்ட் ஆலையை விரிவாக்கும் நோக்கில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் மெ. டன் உற்பத்தித் திறன்கொண்ட ஒரு புதிய ஆலை நிறுவப்பட்டு, 1-11-2019 அன்று கிளிங்கர் உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது. மேலும், டான்செம் நிறுவனம் அம்மா சிமென்ட் விற்பனைத் திட்டத்தினை மாநில முகமையாக இருந்து செயல்படுத்தி வருகிறது. டான்செம் நிறுவனத்தின் மொத்த விற்றுமுதல் (Turnover) ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.500 கோடி ஆகும்.

ஆலை விரிவாக்கத்திற்குப்பின், டான்செம் நிறுவனத்தின் மொத்த உற்பத்தித் திறன், புதிய ஆலையின் 10 இலட்சம் மெ. டன் உற்பத்தியையும் சேர்த்து ஆண்டொன்றுக்கு 17 இலட்சம் மெ. டன்னாக உயரும். இதன்மூலம், டான்செம் நிறுவனம் பல்வேறு அரசுத் துறைகளின் குறிப்பாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் சிமென்ட் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய இயலும். அத்துடன் திறந்த வெளிச்சந்தையில் நியாயமான விலையில் தரமான சிமென்ட்டினை விநியோகம் செய்ய இயலும்.

[2020 மார்ச் 24

டான்செம் நிறுவனத்தின் சிமென்ட் ஆலைகள் உற்பத்தித் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான அரியலூர் மற்றும் விருதுநகரில் அமைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகின்றது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது, டான்செம் நிறுவனம் 1,400 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 3,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகிறது.

6.1 ஆலங்குளம் சிமென்ட் ஆலை நவீனமயமாக்குதல்

உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில், ஆலங்குளம் சிமென்ட் ஆலையை நவீனப்படுத்துவதற்கு ஏற்ற சாத்தியக்கூறுகளைக் கண்டறிய, தகுதியான ஆலோசகரை நியமித்து விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

6.2 அரசுத் துறைகளுக்கு சிமென்ட் விற்பனை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொள்ளும் பணிகளுக்கு ஆண்டொன்றுக்கு 16 இலட்சம் மெ. டன் சிமென்ட் தேவைப்படுகிறது. இதில் டான்செம் நிறுவனம் தனது சிமென்ட் ஆலைகளிலிருந்து சுமார் 4 இலட்சம் மெ. டன் வழங்கி வருகிறது. அரியலூரில் புதிய ஆலை துவங்கப்பட்டுள்ளதன்மூலம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முழு சிமென்ட் தேவைகளை டான்செம் நிறுவனம் பூர்த்தி செய்ய இயலும்.

6.3 அரசு துறைகளுக்கு PCC விற்பனை

பொசலோனா போர்ட்லேண்ட் சிமென்ட் (PPC) சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்ற காரணத்தால், அரசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மற்றும் ஏனைய அரசுப் பணிகளில் PCC சிமென்ட்டை உபயோகப்படுத்துவதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளது. அதன்படி, PPC சிமென்ட்டை அரசுத் துறைகளுக்கு டான்செம் நிறுவனம் வழங்கி வருகிறது. அதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2020 மார்ச் 24]

ஆண்டு	PPC சிமெண்ட் வழங்கப்பட்ட அளவு (மெ. டன்)
2018-2019	4,09,750
2019-2020 (31-12-2019 வரை)	2,59,717

டான்செம் நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் (31-12-2019 தேதி முடிய) 1,01,791 மெ. டன் வெளிச்சந்தையில் விற்பனை செய்துள்ளது. தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் வெளிச்சந்தையில் OPC மூட்டை ஒன்று சுமார் ரூ.360/- மற்றும் PPC மூட்டை ஒன்று சுமார் ரூ.350/- என்ற விலையில் விற்பனை செய்யும் நிலையில், டான்செம் OPC மூட்டை ஒன்று ரூ.325/- மற்றும் PPC மூட்டை ஒன்று ரூ.315/- என்ற நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம் டான்செம், வெளிச்சந்தையின் சிமெண்ட் விலையை சீரான நிலையில் வைக்க உதவியாக உள்ளது.

திறந்த வெளிச்சந்தையில் விற்பனையை மேம்படுத்தவும் மற்றும் சந்தையில் தனது பங்களிப்பை அதிகரிக்கவும் கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. 342 விற்பனை முகவர்கள் மற்றும் 59 ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்
2. அண்டை மாநிலமான கேரளாவில் சிமெண்ட் விற்பனை மீண்டும் துவக்கப்பட்டுள்ளது
3. சிமெண்ட் மொத்த அளவு (Bulk cement) விற்பனையும் ஊக்குவிக்கப்படுகிறது
4. டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் விற்பனை செய்யும் முகவர்களை ஊக்கப்படுத்துவதற்கு விலைச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன

6.4 அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

சொந்த வீடு கட்டும் மக்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில், வெளிச்சந்தையில் சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.350/- வரை விற்கப்படும் நிலையில் மூட்டை ஒன்று ரூ.190/-க்கு வழங்கும் இத்திட்டம் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களால் 5-1-2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

[2020 மார்ச் 24

அனைத்து மாவட்டங்களிலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகிய துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள 501 கிட்டங்கிகள்மூலம் அம்மா சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

புதிய வீடு கட்டுவோருக்கு 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம், 1,500 சதுர அடிகள் வரை கட்டப்படும் வீடுகளுக்கு அதிகபட்சமாக 750 மூட்டைகள் வழங்கப்படுகின்றன. பழைய வீடுகளைப் புதுப்பிக்க மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்கு 10 மூட்டைகள் முதல் 100 மூட்டைகள் வரை வழங்கப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் சூரியஒளி சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் மற்றும் தனிநபர் இல்ல கழிப்பறைத் திட்டம் (தூய்மை இந்தியா) ஆகிய திட்டப் பயனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறுவர்.

அம்மா சிமெண்ட் விற்பனையைச் சிறப்பாகச் செயல்படுத்தும்பொருட்டு, மிகவும் ஒருங்கிணைக்கப்பட்ட விநியோகச் சங்கிலி மேலாண்மை அமைப்பு (Highly Integrated Supply Chain Management System) 2017 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1-4-2018 முதல் அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டத்தின் அனைத்து பரிவர்த்தனைகளும் (Online) கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

அம்மா சிமெண்ட் விற்பனைத் திட்டம் துவக்கப்பட்ட நாள் முதல் 31-12-2019 முடிய 46,76,364 மெ. டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு, 15,43,216 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

6.5 சுரங்கப் பணிகள்

டான்செம் சிமெண்ட் ஆலைகளுக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் தடையின்றி கிடைப்பதை உறுதிசெய்ய கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

(அ) 1,612.04.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

(ஆ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஆனந்தவாடி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தின் உற்பத்தியை தற்போதுள்ள அளவான ஆண்டொன்றுக்கு 2.6 இலட்சம் மெ. டன்னிலிருந்து ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் மெ. டன்னாக உயர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) அரியலூர் மாவட்டத்தில் 8.61.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள இரண்டு சுண்ணாம்பு கங்கர் சுரங்கங்களுக்கு புதிய குத்தகை உரிமம் பெறப்பட்டு சுரங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.6 சாதனைகள்

6.6.1 அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கம்

அரியலூரில் புதிய சிமெண்ட் ஆலை ரூ.809.09 கோடி மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிய ஆலையை 1-11-2019 அன்று தொடங்கி வைத்தார். இந்த ஆலை நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

6.6.2 கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR)

புதிய ஆலை விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, டான்செம் நிறுவனம் அரியலூர் மாவட்ட மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டுதல், மருத்துவமனைக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல், அரியலூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருக்கும் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், அரியலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடுதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், மழைநீர் சேகரித்தல் போன்ற பசுமை மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற சமூக வளர்ச்சித் திட்டங்களை (CSR) மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்காக டான்செம் நிறுவனம் இதுவரை சுமார் ரூ.10 கோடி செலவிட்டுள்ளது.

6.6.3 ISO தரச் சான்றிதழ்

டான்செம் நிறுவனம், தரத்திற்காக வழங்கப்படும் ISO:9001–2015 தரச் சான்றிதழை தலைமை அலுவலகத்திற்கு 26-2-2019 அன்றும் அரியலூர் ஆலைக்கு 17-7-2019 அன்றும் பெற்றுள்ளது. இதன்மூலம் சிமெண்டின் தரம் உறுதி

[2020 மார்ச் 24

செய்யப்படுவதுடன், டான்செம் நிறுவனத்தின் மதிப்பும் உயர்ந்துள்ளது. ஆலங்குளம் சிமென்ட் ஆலைக்கான ISO தரச் சான்றிதழ் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.7 வி கலெக்ட் (V Collect) முறை

அம்மா சிமென்ட் திட்டச் செயல்பாட்டை மேலும் செம்மைப்படுத்தும்பொருட்டு, கேட்பு வரைவோலை (DD) மூலம் பணம் வசூலிக்கும் முறைக்குப் பதிலாக தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT) மூலம் பணம் பெறும் “V கலெக்ட்” என்னும் மென்பொருள் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

6.8 செயல்பாடு

2019-2020 ஆம் நிதியாண்டில் (31-12-2019 முடிய), டான்செம் நிறுவனம் 3,64,180 மெ. டன் சிமென்ட் உற்பத்தி செய்து 3,56,411 மெ. டன் விற்பனை செய்துள்ளது. புதிய ஆலை உற்பத்தியைத் தொடங்கி உள்ளதால் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் மெ. டன் கூடுதலாக உற்பத்தி செய்ய இயலும்.

7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம், கீழக்கிடாரம், தனிச்சயம், மேலக்கிடாரம், மாரியூர் ஆகிய கிராமங்களில் உள்ள சுமார் 5,236 ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு அதன் வணிக ரீதியிலான தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தியைத் துவங்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவை அடங்கும். இந்நிறுவனத்தில் 53 முழுநேர ஊழியர்களும் சுமார் 1,200 பருவகால தொழிலாளர்களும் பணிபுரிகிறார்கள். இந்நிறுவனம், 300 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் “அம்மா உப்பு” என்ற வணிகப் பெயரில் பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறது. மேலும், பல்வேறு அரசுத் திட்டங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு இந்நிறுவனம் இரும்புச்

2020 மார்ச் 24]

சத்து கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு விநியோகம் செய்து வருகின்றது. இந்நிறுவனம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநில அரசுகளுக்கும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு வழங்கி வருகிறது.

7.1 குறிக்கோள்

- வேலைவாய்ப்பு மிகவும் குறைந்த பகுதியான கடலாடி வட்டத்தில் வேலைவாய்ப்பினை உருவாக்கி அப்பகுதி மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்
- இப்பகுதியில் உப்பு உற்பத்திக்கு உகந்த சூழல் நிலவுவதால் கடல் நீரைப் பயன்படுத்தி உப்பு மற்றும் உப்பின் உடன் விளைபொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்தல்
- இரும்பு மற்றும் அயோடின் சத்து குறைபாட்டினைக் கட்டுப்படுத்தி, அவற்றைக் களையும்பொருட்டு நுண்ணூட்டச் சத்துகள் அடங்கிய செறிவூட்டப்பட்ட உப்பினை நியாய விலையில் பொதுமக்களுக்கு வழங்குதல்

7.2 உற்பத்தி வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் கிராமத்தில் உற்பத்திக்கான பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது:

அ. 5,236 ஏக்கர் உப்பு நிலங்கள்

ஆ. ஒரு மணி நேரத்திற்கு 20 டன் உற்பத்தித்திறன் கொண்ட அயோடின் கலந்த கல் உப்பு ஆலை

இ. ஒரு மணி நேரத்திற்கு 3.6 டன் உற்பத்தித்திறன் கொண்ட இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆலை

ஈ. ஒரு மணி நேரத்திற்கு 7 டன் உற்பத்தித்திறன் கொண்ட சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆலை

7.3 நிறுவனத்தின் செயல்பாடுகள்

7.3.1 தொழிலக தரமுடைய உப்பு

இந்நிறுவனம், கடல்நீரைப் பயன்படுத்தி, ஆண்டிற்கு சுமார் 2 இலட்சம் டன் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்கின்றது. இவ்வுப்பு தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்

பிரதேசம் மாநிலங்களிலுள்ள முக்கியமான குளோர் அல்கலி தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், பல தனியார் உப்பு சுத்திகரிப்பு நிலையங்களும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பை உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடம் உப்பினைக் கொள்முதல் செய்து வருகின்றன.

7.3.2 செறிவூட்டப்பட்ட உப்பு வகைகள்

இந்நிறுவனம், 1990 ஆம் ஆண்டு முதல் செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்யத் தொடங்கியது. அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் அயோடின் மற்றும் இரும்புச் சத்து கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகிய உப்பு வகைகளைக் குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின், அனைவரும் அயோடின் உப்பு பயன்படுத்தும் திட்டத்தில் (Universal Salt Iodisation Programme) இந்நிறுவனம் பெரும் பங்காற்றியுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1998 முதல் 2019 ஆண்டு வரை 6,96,783 டன் அயோடின் உப்பினை விநியோகித்துள்ளது.

இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்டது) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது. 31-12-2019 வரையில் 1,965 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பை தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

7.3.3 புரோமின் தயாரித்தல்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், சௌத் இந்தியா புரோமின் அன்டு அலைடு கெமிக்கல்ஸ் (SIBAC), தூத்துக்குடி என்ற நிறுவனத்துடன் இணைந்து உப்பு உற்பத்தியில் கிடைக்கும் பிட்டர்ன் என்ற கழிவு நீரிலிருந்து புரோமின் உற்பத்தி செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு உப்பு நிறுவனம் உப்பு உற்பத்திக்குப் பிறகு கிடைக்கும் கழிவுநீரை (பிட்டர்ன்) மேற்கண்ட நிறுவனத்திற்கு புரோமின் தயாரிக்க வழங்கி வருகிறது. இதன்மூலம், ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வருவாய் ஈட்டி வருகிறது.

2020 மார்ச் 24]

7.3.4 தரச் சான்றிதழ்

இந்நிறுவனம், அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் IS7224:2006 மற்றும் IS16232:2014 அளவீட்டின்படி உற்பத்தி செய்வதற்கு அனுமதி சான்றிதழ்கள் பெற்றுள்ளது. இருவித செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்திட இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) சான்றிதழையும் பெற்றுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் தர நிருவாக அமைப்பின் தரம் மேம்படுத்தப்பட்டு தற்போது ISO9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

7.4 விற்பனை செயல்பாடுகள்

2019-2020 ஆம் ஆண்டின் விற்பனை செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வ. எண்	விவரம்	விற்பனை டன்னில் (31.12.2019 வரை)
1	தொழிலக தரமுடைய உப்பு	1,68,019
2	அயோடின் கலந்த கல் உப்பு	17,022
3	சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு	4,434
4	இருவித செறிவூட்டப்பட்ட உப்பு	1,965

ஜூன் 2014-ல் அம்மா உப்பு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து 31.12.2019 வரை 1,20,438 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2019-2020 ஆம் நிதியாண்டில், 31.12.2019 வரை 23,420 டன் செறிவூட்டப்பட்ட உப்பினை பொது விநியோகத் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 2019-2020 ஆம் நிதியாண்டில் 31.12.2019 வரை ரூ.30.41 கோடி விற்றுமுதல் செய்துள்ளது.

[2020 மார்ச் 24

7.5 தொழிலாளர் நல உதவிகள்

இந்நிறுவனத்தில் 1,200 பருவகால தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்நிறுவனம் தொழிலாளர்களுக்கு கீழ்க்காணும் நல உதவிகளை வழங்குகின்றது:

1. இந்நிறுவனத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் பணிக் காலத்தில் மரணமடைந்தால், அன்னாரின் வாரிசுதாரருக்கு ரூ.1 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது
2. தொழிலாளர்கள் பணிபுரிகின்ற இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக 5 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன
3. தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி அவர்கள் அணிவதற்காக கருப்புநிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல் துண்டு போன்றவை ஆண்டுக்கொரு முறை வழங்கப்படுகிறது
4. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன

7.6 உப்பு உற்பத்தி தொழிலுக்கான முகவாண்மை அமைப்பு

தமிழ்நாடு அரசு, அரசு ஆணை (நிலை) எண் 104, தொழில் (எம்.ஐ.எப்.2) துறை, தேதி 14-9-2018-ன்படி, தமிழகத்திலுள்ள உப்பு உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து செயல்பட முகவாண்மை அமைப்பாக தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை நியமித்துள்ளது.

உப்பு உற்பத்தியாளர்களின் பொதுவான பிரச்சினைகளைக் கேட்டு அறியவும், அதற்கான மேல்நடவடிக்கை எடுக்கவும், முகவாண்மை அமைப்பு, 2-6-2019 அன்று உப்பு உற்பத்தியாளர்களுடன் ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடத்தியது. முகவாண்மை அமைப்பு தமிழகத்திலுள்ள உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் உப்பளத் தொழிலாளர்கள் விவரங்களைச் சேகரித்து வருகின்றது.

2-8-2019 அன்று உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் உப்பை பிரதானமாக கொள்முதல் செய்யும் தொழிற்சாலையாளர்களையும் சந்திக்க வைத்து உப்பு உற்பத்தியாளர்களின் பொதுவான

2020 மார்ச் 24]

பிரச்சினைகள் மற்றும் உப்பிற்கான சந்தையினை மேம்படுத்த கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

7.7 2020-2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

(i) விற்பனை இலக்கு

வ. எண்	விவரம்	அளவு (டன்னில்)
1	தொழிலக தரமுடைய உப்பு	2,00,000
2	அயோடின் கலந்த கல் உப்பு	30,000
3	சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு	12,000
4	இருவித செறிவூட்டப்பட்ட உப்பு	7,800

(ii) தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.45 கோடி விற்றுமுதலை எட்டுவதற்காகத் திட்டமிட்டுள்ளது.

(iii) தமிழ்நாடு உப்பு நிறுவனம் தனது மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை மொத்த விற்பனையில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய முயற்சிகளை மேற்கொள்ளும்.

(iv) மத்திய உப்பு மற்றும் கடல்சார் ஆராய்ச்சி மையத்தின் ஆய்வு அறிக்கையின்படி, உப்பு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்தும்.

(v) தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு அரசாணை எண் 291, நாள் 10-8-2018-ன்படி செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தினை அரசு வழங்கியுள்ளது. இப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

8. சர்க்கரைத் துறை

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளின் சமுதாய பொருளாதார நிலையை உயர்த்துவதில் சர்க்கரைத் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், சர்க்கரை ஆலைகள், இலட்சக்கணக்கான கிராமப்புற மக்களுக்குக் கரும்பு சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில், சமீப வருடங்களாக மாறுபடும் பருவமழை, அதிகரிக்கும் கரும்பு உற்பத்தி செலவினம், பண்ணைத் தொழிலாளர் பற்றாக்குறை, புதிய மாற்றுக் கரும்பு இரகங்கள் இல்லாமை உள்ளிட்ட காரணங்களினால் சர்க்கரை உற்பத்தி வெகுவாகக் குறைந்துள்ளது. குறைந்த கரும்பு உற்பத்தி மற்றும் அதிகரித்துவரும் சர்க்கரை உற்பத்திச் செலவு ஆகிய காரணங்களினால் சர்க்கரை ஆலைகள் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்து வருகின்றன. கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்துவதன்மூலம் மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

தற்போது, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 2 சர்க்கரை ஆலைகளும் மற்றும் தனியார் துறையில் 24 சர்க்கரை ஆலைகளும் என மொத்தம் 42 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

8.1 சர்க்கரைத் துறை இயக்ககம்

சர்க்கரைத் துறை ஆணையர் சர்க்கரைத் துறையின் தலைவராகவும், மாநிலத்தின் கரும்பு ஆணையராகவும் உள்ளார். மேலும், சர்க்கரைத் துறை ஆணையர் மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் செயல் பதிவாளராகவும் உள்ளார்.

8.2 தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழ்நாட்டில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல் மற்றும் சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்தல் ஆகிய நோக்கங்களுடன் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் 1974 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.

2020 மார்ச் 24]

மேலும், தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குத் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் அல்லாத பணிகளுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் மாவட்டம், எறையூரில் உள்ள பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகியவை தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

8.3 தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம்

தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையமானது, சர்க்கரைத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் தலைமைக் கூட்டுறவு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையம், உறுப்பு சர்க்கரை ஆலைகளின் செயல்பாட்டினை எளிதாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், வேதிப்பொருட்கள், கோணிப்பைகள், சுட்டக்கல் சுண்ணாம்பு மற்றும் மசகு எண்ணெய், பேரிங்குகள் போன்றவற்றை மையப்படுத்தப்பட்ட கொள்முதல் செய்தல் மற்றும் சர்க்கரை மற்றும் உப உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்தின் அலகான உயிரியல் ஆய்வு மையமானது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் உயிர் இடுபொருட்கள் உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனமானது கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் விவசாயிகளுக்குத் தேவையான உயிர் உரங்கள் மற்றும் உயிர் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

8.4 கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள்

கரும்பு உற்பத்தித் திறன் மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக, பிரதம மந்திரி நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் குறு, சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் 100

விழுக்காடு மானியத்தையும், இதர விவசாயிகளுக்கு வழங்கப்படும் 75 விழுக்காடு மானியத்தையும் மற்றும் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க அத்தியாவசியமாகத் தேவைப்படும் கூடுதல் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.68.35 கோடி நிதியையும் பயன்படுத்தி அதிக அளவு கரும்பு சாகுபடிப் பரப்பை நுண்ணீர்ப் பாசன சாகுபடியின்கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நுண்ணீர்ப் பாசன செயல் திட்டத்தை செயல்படுத்துவதுடன் நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம், கோ-86032 மற்றும் பிற புதிய கரும்பு இரகங்களை மீட்டுருவாக்கும் வகையில், விதை இனவிருத்திப் பொருட்கள் மற்றும் திசு வளர்ப்பு நாற்றுகள் விநியோகம், சோகை தூளாக்குதல், தரமான பருசீவல் நாற்றுகள் விநியோகம், ஊடுபயிர் சாகுபடி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட கரும்பு அபிவிருத்திப் பணிகளை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் நீர்ப் பாசனத் திட்டம் ஆகியவற்றின்கீழ் வழங்கப்படும் மானியங்களைப் பயன்படுத்தி செயல்படுத்துவதற்கு விவசாயிகள் தமிழ்நாடு அரசால் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கரும்பு சாகுபடி செலவைக் குறைப்பதற்கு ஏதுவாக, கரும்பு சாகுபடியில் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் விதமாக பவர் டில்லர்கள், களை எடுக்கும் கருவி, சோகை தூளாக்கும் கருவி மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்க நிறுவனத்தின் இரகவாரியான சோதனை ஆய்வு முடிவுகளின்படி, கோ-11015 என்ற கரும்பு இரகம் தற்போதுள்ள கோ-86032 ரக கரும்பைக் காட்டிலும், 8 முதல் 12 மாத வளர்ச்சியில் கரும்பு மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானம் ஆகிய இரண்டிலும் சிறந்த இரகமாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கரும்பு இரக சாகுபடியினைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரும்பு விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலையை உரிய நேரத்தில் பெறுவதை உறுதி செய்யும்பொருட்டு,

2020 மார்ச் 24]

தமிழ்நாடு அரசினால் தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலை முறைப்படுத்துதல்) சட்டம், 2018 நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டும், இவ்விலைக் கொள்கை மாற்றத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாகவும், கரும்பு விவசாயிகள் 2016-2017 ஆம் ஆண்டு பருவத்தில் பெற்ற மாநில அரசு பரிந்துரை விலையான டன் ஒன்றுக்கு ரூ.2,750/-ஐ குறைவின்றி பெறுவதை உறுதிசெய்யும் நோக்குடனும் கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையை அறிவித்து கரும்பு விவசாயிகளுக்கு நேரடியாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதனடிப்படையில், 2017-2018 ஆம் ஆண்டு முழு அரவைப் பருவத்திற்கு ரூ.136.43 கோடியும், 2018-2019 ஆம் ஆண்டு முதன்மை அரவைப் பருவத்திற்கு ரூ.89.12 கோடியும் விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கப்பட்டது.

8.5 சர்க்கரை ஆலைகளின் செயல்திறன்

2019-2020 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 15-1-2020 வரை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகள்மூலம் 20.12 இலட்சம் மெ. டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 8.10 விழுக்காடு கட்டுமானத்துடன் 1.61 இலட்சம் மெ. டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

8.6 சர்க்கரை மற்றும் உப உற்பத்திப் பொருட்களின் விற்பனை

8.6.1 சர்க்கரை

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்தின்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 15-1-2020 வரையிலான 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.549.82 கோடி மதிப்பிற்கு 1.62 இலட்சம் மெ. டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

8.6.2 கரும்புச் சக்கை

ஆலை மற்றும் இணை மின் நிலைய இயக்கத்திற்குத் தேவையான நீராவி மற்றும் மின் உற்பத்தியினைப் பூர்த்தி செய்த பின்னர், எஞ்சிய கரும்புச் சக்கையானது காகித தொழிற்சாலை மற்றும் உயிர் ஆற்றல்

உற்பத்தி அலகுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டின் 15-1-2020 வரையிலான காலத்தில் 11,201 மெ. டன் கரும்புச் சக்கை ரூ.2.77 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

8.6.3 கரும்புக் கசண்டு

அமராவதி மற்றும் சேலம் வடிப்பாலைகளின் தேவையினைப் பூர்த்தி செய்த பின்னர் எஞ்சிய கரும்புக் கசண்டு தனியார் வடிப்பாலைகள், கால்நடைத் தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில் 15-1-2020 வரை 0.44 இலட்சம் மெ. டன் கரும்புக் கசண்டு விற்பனை செய்யப்பட்டு, ரூ.42.87 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8.6.4 வடிப்பாலைகள்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகள் 2019-2020 ஆம் நிதியாண்டில் 15-1-2020 வரை 45.05 இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்து ரூ.17.78 கோடி வருவாய் ஈட்டியுள்ளன. மேலும், 2019-2020 ஆம் நிதியாண்டில் 15-1-2020 வரை 78.90 இலட்சம் லிட்டர் எத்தனால் விற்பனை செய்யப்பட்டு, ரூ.36.12 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8.7 இணைமின் மற்றும் ஆலை நவீனமயமாக்கல் திட்டம்

10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் இணைமின் நிலையங்கள் அமைக்கவும், ஆலைகளை நவீனமயமாக்கவும் அரசு முடிவு செய்தது. செங்கல்வராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளில் இணைமின் திட்டம் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது. 2019-2020 ஆம் நிதியாண்டில் 15-1-2020 வரை, இந்த 5 ஆலைகளும் 303.74 இலட்சம் அலகு மின்சாரத்தை மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளன.

ஆலை நவீனமயமாக்கும் திட்டம் சேலம், சுப்ரமணியசிவா, தருமபுரி, கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, செங்கல்வராயன்,

2020 மார்ச் 24]

வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா மற்றும் பெரம்பலூர் ஆகிய 10 ஆலைகளில் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளது.

8.8 2020-2021-க்கான செயல் திட்டம்

2018-2019 நடவுப் பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பு 95,968 ஹெக்டேராக இருந்தது. 2019 ஆம் ஆண்டில் பெய்த நல்ல மழையளவை சாதகமாகப் பயன்படுத்தி 2019-2020 ஆம் ஆண்டு நடவுப் பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பை 1.25 இலட்சம் ஹெக்டேராக உயர்த்துவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கோ-11015 இரகத்தை கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் விரிவுப்படுத்தி சாகுபடி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது, கோ-11015 இரகம் 1,050 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள புதிய கரும்பு இரகமான கோகு 6, வேலூர் மாவட்டத்திலுள்ள களர் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஏற்ற இரகமாக இருப்பதன் காரணமாக, மேற்படி இரகத்தை வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் சாகுபடி செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

2020-2021 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில், தருமபுரி மாவட்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகியவற்றில் இணைமின் திட்டப் பணிகள் நிறைவுற்று பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

தொழில் துறை

(சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. புவியியல் மற்றும் சுரங்கத் துறை

தமிழ்நாடு வெவ்வேறு வகையான பாறை வகைகளைக் கொண்ட புவி அமைப்பினைக் கொண்டது. இவ்வகையான பாறைகளில் சுண்ணாம்புக்கல், மேக்னசைட், கிராஃபைட், வெர்மிகுலைட், பாக்சைட், இரும்புத்தாது, பழுப்பு நிலக்கரி, மோனோசைட், கார்னெட், சிலிமனைட், ரூட்டைல், ஜிர்கான், இல்மனைட், லூக்காசின் ஆகிய பெருங்கனிமங்களும், கருப்பு கிரானைட், பலவண்ண கிரானைட், களிமண், ஜிப்சம், சிலிக்கா மணல், குவார்ட்ஸ், பெல்ஸ்பார் ஆகிய சிறுகனிமங்களும் மற்றும் எண்ணெய் கனிமங்களாகிய கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

மாவட்ட கனிம அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாவட்ட பொது தகவு மையங்களில் 2019 இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கனிம அறிக்கைகள், மாவட்டத்தில் கிடைக்கும் கனிமங்கள் தொடர்பான முழுமையான விவரங்களை உள்ளடக்கியுள்ளன. தொழில்முனைவோர் இதனைப் பயன்படுத்தி கனிம உற்பத்தி செய்வதற்கும் அனுமதி பெறுவதற்கும் ஏதுவாக உள்ளது. மேலும், மாவட்ட கனிம அறிக்கைகள் அடிப்படையில், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுமம் கனிமங்களை அகழ்ந்தெடுக்க சுற்றுச்சூழல் தடையின்மை சான்று வழங்கி வருகிறது.

கனிம வருவாயை அதிகரிக்க இவ்வரசால் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளின் காரணமாக கனிம வருவாய் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. கனிமங்கள்மூலம் 2017-2018 ஆம் நிதியாண்டில் கிடைக்கப்பெற்ற வருவாய் ரூ.1,106 கோடி ஆகும். இவ்வருவாய் 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.1,186 கோடியாக உயர்ந்தது. 2019-2020 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 2019 வரை ரூ.976 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

2020 மார்ச் 24]

குவாரி நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின்மூலம் உள்கட்டமைப்பு, கல்வி, குடிநீர், சுகாதாரம், துப்புரவு, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், திறன் மேம்பாடு, நீர்ப் பாசனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகிய துறைகளில் ரூ.409.56 கோடி திட்ட மதிப்பீட்டில் 1,524 நலத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கடத்துதல் என்பது இன்றைய சமுதாயத்தில் ஒரு பெரிய சவாலாக இருந்து வருகிறது. ஆளில்லா விமானத் தொழில்நுட்பம், சுரங்கங்களைக் கண்காணிக்கும் அமைப்பு, அதாவது செயற்கைகோள்மூலம் குவாரிப் பகுதிகளைக் கண்காணித்தல் மற்றும் பறக்கும் படைகள் ஆகியவற்றின்மூலம் சமுதாயத்திற்கு ஊறுவிளைவிக்கும் சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த அரசால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) திருத்திய சட்டம், 2015-ன்படி கனிம இருப்பினை உறுதிசெய்த பின்பே கனிமங்களை அகழ்ந்தெடுக்க முடியும். பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது மற்றும் சுண்ணாம்புக்கல் கனிமங்களை அகழாய்வு செய்ய இவ்வரசு முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேசிய கனிம அகழாய்வு அறக்கட்டளை பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது மற்றும் பிளாட்டினம் வகை கனிமங்களை அகழாய்வு செய்ய 2018 ஆம் ஆண்டில் ரூ.86.67 கோடி வழங்கியது. சிமென்ட் தொழிற்சாலைகளுக்குத் தொடர்ச்சியாக சுண்ணாம்புக்கல் கிடைக்கும்பொருட்டு அரியலூர் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் கனிமத்தினை அகழாய்வு செய்ய 2019 ஆம் ஆண்டில் ரூ.6.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கனிம இருப்பு உறுதி செய்யும்பட்சத்தில் பொது ஏலம்மூலம் இப்பகுதிகளில் உள்ள கனிமங்கள் அகழ்ந்தெடுக்கப்படும். மாநிலத்தில், கிரானைட் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கில் கிரானைட் கனிமங்களைக் கொண்ட அரசு நிலங்களைப் பொது ஏலத்திற்கு கொண்டுவர இவ்வரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

1.1 நோக்கம் மற்றும் குறிக்கோள்

இத்துறையின் நோக்கமானது “கனிம மேலாண்மையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குதல்” மற்றும் குறிக்கோளானது "தொழில், சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களுக்கு உகந்த கனிம கொள்கையின் அடிப்படையில் அறிவியல்பூர்வமாக கனிமங்களை அகழாய்வு செய்தல், முறையான கனிம உற்பத்தி, கனிமங்களை பேணி பாதுகாத்தல் மற்றும் கனிம வருவாயினை அதிகரித்தல்” ஆகும்.

1.2 குறிக்கோள்கள்

(i) சுற்றுச்சூழல் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு கனிம ஆய்வுகளுக்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

(ii) சிறந்த செயல்திறன் மிக்க கனிம நிருவாகத்தின்மூலம் கனிம வருவாயைப் பெருக்குதல்.

(iii) வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

(iv) கடுமையான நடவடிக்கையின்மூலம் சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டி எடுப்பது மற்றும் கொண்டு செல்வதைத் தடுத்தல்.

(v) மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினைப் பயன்படுத்தி குடிநீர் வழங்கல், சுகாதாரம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலம், உள்கட்டமைப்பு, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன், துப்புரவு, சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, திறன் மேம்பாடு, நீர்ப் பாசனம் மற்றும் எரிசக்தி, நீர்வடிப்பகுதி மேம்பாடு போன்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

1.3 பணிகள்

(i) இத்துறையானது, இந்திய புவியியல் துறை மற்றும் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய கனிம ஆய்வுக் கழகம், குதிரைமுக் இரும்புத்தாது கழகம், தமிழ்நாடு சிமெண்ட் கழகம் (டான்செம்) மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) ஆகியவற்றுடன் இணைந்து புதிய கனிமப் படிமங்களைக் கண்டறிந்து வருகிறது.

2020 மார்ச் 24]

(ii) கனிம உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் இத்துறையானது பொதுத் துறை நிறுவனங்களான டாமின், டான்செம், டான்மேக், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் இந்தியா லிமிடெட், இந்திய அறுமணல் (இந்தியா) லிமிடெட் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குக் கனிமங்களை வெட்டியெடுக்க சலுகைகளை வழங்கி வருகிறது. இதன்மூலம் பெருங்கனிமங்களுக்கான ராயல்டி, வருடாந்திர இழப்பீடு, முடக்கு வாரி மற்றும் சிறு கனிமங்களுக்கான உரிமத் தொகை, முடக்கு வாரி, பரப்பு வாரி, செங்கல் உற்பத்திக்கான ஆண்டு கனிமக் கட்டணம் ஆகியவற்றை குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு அரசுக்கு குறிப்பிடத்தக்க வருவாய் ஈட்டப்பட்டு வருகிறது.

(iii) சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கொண்டு செல்லுவதைத் தடுக்க சேலம், விழுப்புரம் மற்றும் மதுரை மண்டலங்களில் இயங்கிவரும் பறக்கும் படைகள் சுரங்கப் பகுதிகள் மற்றும் கனிமங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைத் தொடர் சோதனைகளுக்கு உட்படுத்தி கட்டுப்படுத்தி வருகிறது.

(iv) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் பருவமழை காலங்களில் நிலச்சாரிவுகள் ஏற்பட்டு வருகிறது. இவ்விடங்களில் உள்ள புவிதொழில்நுட்ப மையங்கள் மலைப் பகுதிகளில் பலவீனமான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றினை வரைபடங்களில் குறியீடு செய்து வருகிறது. மேலும், இம்மையங்கள் இவ்வாறான இயற்கை பேரழிவுகளைத் தவிர்க்க தேவையான தொழில்நுட்பப் பாதுகாப்பு ஆலோசனைகளை மாவட்ட நிருவாகத்திற்கு வழங்கி வருகிறது. இவை தவிர, இம்மையங்கள் பொதுமக்கள் மற்றும் அரசு நிறுவனங்களிடமிருந்து கட்டுமானம் தொடர்பாக பெறப்படும் விண்ணப்பங்களைத் தகுதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுசெய்து மலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு புவிதொழில்நுட்ப அறிக்கை வழங்கி வருகிறது.

1.4 கனிம வளம், உற்பத்தி மற்றும் வருவாய்

பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள் மற்றும் எண்ணெய் கனிமங்களைத் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது.

இக்கனிமங்கள் தொடர்பான விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:-

அ. பெருங்கனிமங்கள்

(i) சுண்ணாம்புக்கல்

இது சுண்ணாம்புப் பவுடர், சிமென்ட், இரசாயனங்கள், உரங்கள் ஆகிய உற்பத்தியிலும் மற்றும் உலோகத் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது. சுண்ணாம்புக் கல் இரண்டு வகைப்படும். அவை (அ) படிக சுண்ணாம்புக் கல்: இக்கனிமம் சேலம், திருச்சிராப்பள்ளி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கிடைக்கிறது. இதன் மொத்த இருப்பு 200 மில்லியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. (ஆ) படிவ அல்லது தொல்லுயிர் சுண்ணாம்புக் கல்: இக்கனிமம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கிடைக்கிறது. இதன் மொத்த இருப்பு 670 மில்லியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சுண்ணாம்புக் கல்லினை வெட்டியெடுக்க 6,776 ஹெக்டேர் பரப்பிற்குக் குத்தகை வழங்கப்பட்டுள்ளது.

(ii) பாக்சைட்

இக்கனிமத்திலிருந்து அலுமினிய உலோகம் பிரித்தெடுக்கப்படுகிறது. பாக்சைட் கனிமம், வெப்பம் தாங்கிக் கற்கள், சிமென்ட், இரசாயனங்கள் மற்றும் வண்ணம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் மற்றும் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைகளிலும் பயன்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள சேர்வராயன் மலை மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை ஆகிய பகுதிகளில் தரமான பாக்சைட் கனிம படிவுகள் காணப்படுகின்றன. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 421 ஹெக்டேர் பரப்பளவிற்கு குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(iii) மேக்னசைட்

இது மெக்னீசியம் கார்ப்பனேட் கனிமமாகும். இவை உருக்காலையில் இளக்கியாகவும், வெப்பந்தாங்கி கற்கள், வெப்ப கட்டுப்படுத்தி, பீங்கான் தடுப்பான் மற்றும் உராய்வு பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. உலகில் உள்ள சிறந்த மேக்னசைட் கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடங்களில் சேலம் மாவட்டத்தில் உள்ள சுண்ணாம்பு மலையும் ஒன்றாகும். இதன்

2020 மார்ச் 24]

கனிம இருப்பு 40.5 மில்லியன் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 1,513 ஹெக்டேர் பரப்பளவிற்கு குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(iv) கிராஃபைட்

இயற்கையிலேயே கிடைக்கும் இப்படிக நிலை கார்பன், உலோக உலை, மின் தடுப்பான், எலக்ட்ரோடு, அணு உலை மற்றும் வார்ப்பாலை ஆகிய தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. கிராஃபைட் கனிமம் சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்களில் கிடைக்கிறது. டாமின் நிறுவனம் சிவகங்கை மாவட்டத்தில் 275 ஹெக்டேர் பரப்பில் கிராஃபைட் கனிமத்தினை குவாரி செய்து வருகிறது.

(v) வெர்மிகுலைட்

இது மஞ்சள் பழுப்பு நிறத்துடன்கூடிய மைக்கா வகையைச் சேர்ந்த கனிமமாகும். இவை மின் தடுப்பானாகவும் மற்றும் வெர்மிடைல்ஸ் தயாரிக்கவும் பயன்படுகிறது. திருப்பத்தூர் மாவட்டத்தில் டாமின் நிறுவனம் 24 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை குவாரி செய்து வருகிறது.

(vi) பழுப்பு நிலக்கரி

இது எரிபொருள் வகையைச் சார்ந்த கனிமமாகும். இக்கனிமம் நெய்வேலி, மன்னார்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் கிடைக்கிறது. இக்கனிமத்தின் மொத்த இருப்பு 34,764 மில்லியன் டன்னாக கணக்கிடப்பட்டுள்ளது. நெய்வேலி நிலக்கரி கழக இந்திய நிறுவனம் கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் 25,900 ஹெக்டேர் பரப்பில் இக்கனிமத்தினை குவாரி செய்து வருகிறது.

(vii) அணு வகை கனிமங்கள்

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கடற்கரை மணலில் அணு வகை கனிமங்களான மோனசைட், கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிலிமனைட், சிர்கான் மற்றும் லூக்காசின் ஆகியவை கிடைக்கின்றன. இக்கனிமங்களை இந்திய அறுமணல் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் குவாரி செய்து வருகிறது. கார்னெட் கனிமமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் படிவு நிலையிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில்

[2020 மார்ச் 24

பாறைகளிலும் கிடைக்கிறது. இந்திய சுரங்க அமைச்சகம் 1-3-2019 நாளிட்ட ஆணையில் கடற்கரை மணல் மற்றும் இதர இடங்களில் கிடைக்கும் அணு வகை கனிம மணலில் உள்ள மோனசைட் கனிமத்தின் செறிவினை 0.00% என நிர்ணயம் செய்துள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் அணு வகை கனிமங்களின் சுரங்கக் குத்தகையானது அணு வகை கனிமங்களின் சலுகை விதிகள், 2016 இன்படி அரசு நிறுவனம் அல்லது அரசிற்கு சொந்தமான அல்லது அரசு கட்டுப்பாட்டிலுள்ள பொது நிறுவனம் ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆ. சிறுகனிமங்கள்

(i) கிரானைட்

தமிழ்நாடு செறிவு மிக்க கிரானைட் இருப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வெட்டி மெருகூட்ட தகுதிவாய்ந்த கடினமான படிக வகைப் பாறை கிரானைட் என அழைக்கப்படுகிறது. கிரானைட் உற்பத்தியில் 1970 ஆம் ஆண்டிலிருந்து தமிழகம் முன்னிலை வகிக்கிறது. கிரானைட் கற்களைப் பல்வேறு அளவுகளில் நினைவுச் சின்னங்களாகவும், ஓடுகளாகவும் வெட்டி மெருகூட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் கணிசமான அந்நிய செலாவணியை அரசுக்கு ஈட்டித் தருகிறது. கருப்பு நிற கிரானைட் சேலம், விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கிடைக்கிறது. பலவண்ண கிரானைட் சேலம், கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது. குன்னம் பிளாக், ஜீப்ரா ஒயிட், பாரடைசோ, ரெட் வேவ், டைகர் ஸ்கின், டெசர்ட் பிரவுன் மற்றும் காஷ்மீர் ஒயிட் ஆகியவை வணிக ரீதியாக தமிழகத்தில் கிடைக்கும் மிகவும் பெயர்பெற்ற கிரானைட் வகைகளாகும். இக்கனிமத்தை குவாரி செய்ய தமிழ்நாட்டில் 2,999 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ii) ஜிப்சம்

இக்கனிமத்தினை குவாரி செய்வதற்கு கோயம்புத்தூர், பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 27 ஹெக்டேர் பரப்பில் குத்தகை வழங்கப்பட்டுள்ளது. இவை பிளாஸ்டர் ஆப் பாரீஸ் தயாரிப்பிலும் சிமெண்ட், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.

2020 மார்ச் 24]

(iii) தீக்களிமண்

இக்களிமண் வெப்பந்தாங்கி கற்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் அலங்கார ஓடுகள் தயாரிக்கவும் சிமென்ட் தொழிற்சாலைகளிலும் முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுகிறது. இவை அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 72 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(iv) சோப்ஸ்டோன்

இக்கனிமம் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 14 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கனிமம் டால்கம் பவுடர் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

(v) குவார்ட்ஸ் & பெல்ஸ்ஃபார்

இக்கனிமங்கள் சேலம், கரூர், திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கிடைக்கின்றன. இவை கண்ணாடி, வெப்பந்தாங்கி கற்கள், வார்ப்பாலை, பீங்கான், மின் சாதனம், உராய்ப்பான் மற்றும் வண்ணத் தொழிற்சாலைகளில் முக்கிய மூலப்பொருளாகப் பயன்படுகிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க மேற்கண்ட மாவட்டங்களில் 339 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

(vi) சிலிக்கா மணல்

இக்கனிமம் முக்கியமாக கண்ணாடி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் பயன்படுகிறது. இவை விழுப்புரம், நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமத்தினை வெட்டியெடுக்க 30 ஹெக்டேர் பரப்பில் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இ. எண்ணெய் கனிமங்கள்

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு

எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் (ONGC) கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவினை உற்பத்தி செய்து வருகிறது.

[2020 மார்ச் 24

ஈ. கனிம உற்பத்தி

மாநிலத்தில் ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரை உற்பத்தி செய்யப்பட்ட பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள் மற்றும் எண்ணெய் கனிமங்கள் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

(i) பெருங்கனிமங்களின் உற்பத்தி

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)
1.	பழுப்பு நிலக்கரி	1,86,44,757
2.	சுண்ணாம்புக் கல்	1,49,27,945
3.	மேக்னசைட்	52,816
4.	இல்மனைட்	25,337
5.	கார்னெட்	7,294
6.	சிர்கான்	1,939
7.	மோனசைட்	847
8.	ரூட்டைல்	827
9.	வெர்மிகுலைட்	585

(ii) சிறுகனிமங்களின் உற்பத்தி

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி	
1.	சாதாரண கற்கள்	2,28,35,088	கன.மீ.
2.	மண்/கிராவல்	42,42,201	கன.மீ.
3.	லைம்கன்கர்	2,05,685	மெ.டன்
4.	கலர் கிரானைட்	88,006	கன.மீ.
5.	குவார்ட்ஸ்&பெல்ஸ்பார்	82,280	மெ.டன்
6.	தீக்களிமண்	70,600	மெ.டன்
7.	கூழாங்கற்கள்	25,830	கன.மீ.
8.	கருப்பு கிரானைட்	7,157	கன.மீ.
9.	குவார்ட்சைட்	1,218	மெ.டன்


2020 மார்ச் 24]

எண்ணெய் கனிமங்களின் உற்பத்தி

வ. எண்	கனிமங்கள்	உற்பத்தி
1.	கச்சா எண்ணெய்	3,04,756 மெ.டன்
2.	இயற்கை எரிவாயு	79,10,00,000 கன.மீ.

உ. கனிம வருவாய்

கனிம உற்பத்தியின்மூலம் 2019-2020 ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 2019 வரை) ரூ.976 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பெருங்கனிமங்கள், சிறுகனிமங்கள் மற்றும் எண்ணெய் கனிமங்களின் வருவாய் பங்களிப்பு கீழே வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது:-



இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட முனைப்பான தடுப்பு நடவடிக்கையின் காரணமாக, இந்நிதியாண்டில் டிசம்பர் 2019 வரை உரிய அனுமதியின்றி கனிமங்களைக் கடத்திய 7,012 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அபராதமாக ரூ.12.38 கோடி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 8,165 நபர்கள்மீது குற்றவியல் வழக்கு/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. கனிமக் கடத்தலில் வழக்கமாக ஈடுபடும் 10 நபர்கள்மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

1.5 மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை

சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர 30 மாவட்டங்களில் 2017 ஆம் ஆண்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிறுவப்பட்டது. பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களைச் சார்ந்த சுரங்க/குவாரி குத்தகைதாரர்கள் இந்த அறக்கட்டளைக்கு நிதியினை வழங்கி வருகிறார்கள். இந்நிதியானது, பிரதம மந்திரி கனிஜ் ஷேத்ர கல்யாண் யோஜனா (PMKKKY) மற்றும் இதர நலத் திட்டங்கள்மூலம் குவாரி அமைந்துள்ள பகுதிகள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுரங்கம் மற்றும் குவாரி குத்தகைதாரர்களால் இவ்வறக்கட்டளை நிறுவப்பட்ட 2017 ஆம் ஆண்டிலிருந்து டிசம்பர் 2019 வரை ரூ.627 கோடி கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.


மேற்கண்ட நிதியில் குறைந்தபட்சமாக 60% நிதியை உயர் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான சுகாதாரம், குடிநீர் வழங்குதல், கல்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலம், வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன், திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு, துப்புரவுப் பணிகள், சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எஞ்சிய தொகை இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான நீர்ப் பாசன மேம்பாடு, எரிசக்தி, நீர்வடிப் பகுதி மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.


இந்நிதியிலிருந்து 31-12-2019 வரை 1,524 திட்டங்கள் ரூ.409.56 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில், 773 திட்டங்கள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. உயர் முக்கியத்துவம் மற்றும் இதர முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களின்கீழ் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் திட்ட மதிப்பீடு தொடர்பான விவரங்கள் கீழ்க்கண்டவாறு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன:-

2020 மார்ச் 24]

(i) உயர் முக்கியத்துவம் வாய்ந்த துறைகள்



(ii) இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகள்



[2020 மார்ச் 24

1.6 தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை

தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளையானது 2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பெருங்கனிம குத்தகைதாரர்கள் அரசுக்கு செலுத்தும் ராயல்டி தொகையில் 2% தொகையினை இந்நிதிக்காக வழங்கி வருகிறார்கள். இந்த அறக்கட்டளைக்கு 31-12-2019 வரை ரூ.45.96 கோடி நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியானது, விரிவான கனிம ஆய்வுகளைப் பரந்த பகுதிகளில் முக்கியமாக, அதிமுக்கியத்துவம் வாய்ந்த கனிமங்களை, மேம்பட்ட அறிவியல் தொழில்நுட்பங்கள், புவி இயற்பியல், புவி இரசாயனம், வான்வெளி கனிம ஆய்வு ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தொலைநோக்குப் பார்வையில் அகழாய்வு செய்ய பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் இந்தியக் கனிம ஆய்வுக் கழகம் மற்றும் குதிரைமுக் இரும்புத்தாது கழகம் ஆகியவற்றின்மூலம் பழுப்பு நிலக்கரி, பிளாட்டினம் வகை கனிமங்கள் மற்றும் இரும்புத்தாது ஆகிய கனிமங்களைக் கண்டறிய 2018 ஆம் ஆண்டில் ரூ.86.67 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு கனிமங்களுக்கான அகழாய்வு பணிகள் நடந்து வருகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் ரூ.6.55 கோடி செலவில் 655 ஹெக்டேர் பரப்பில் 5 சுண்ணாம்புக் கல் பிளாக்குகள் அகழாய்வு மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 4 பிளாக்குகளில் மத்திய கனிம ஆய்வுக் கழகமும், 1 பிளாக்கில் குதிரைமுக் இரும்புத்தாது கழகமும் கனிம அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேற்கண்ட பிளாக்குகளில் சுண்ணாம்புக் கனிமத்தின் இருப்பு உறுதி செய்யப்பட்டு பொது ஏலத்திற்கு கொண்டுவரப்படும்.

1.7 மாலிப்டினம்

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இந்திய கனிம ஆய்வுக் கழகம் மாலிப்டினம் இருப்பினை உறுதி செய்துள்ளது. மாலிப்டினம் இருப்பானது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 0.699 மில்லியன் டன் எனவும், தருமபுரி மாவட்டத்தில் 8.350 மில்லியன் டன் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து மாலிப்டினம் கனிமத்தின் சந்தை மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. ராயல்டி தொகை விவரம் மத்திய சுரங்க அமைச்சகத்திடமிருந்து பெறப்பட வேண்டும்.

2020 மார்ச் 24]

மேற்கண்ட விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், இம்முக்கிய கனிமத்தினை உற்பத்தி செய்ய இக்கனிம பிளாக்குகள் பொது ஏலத்திற்குக் கொண்டுவரப்படும்.

1.8 புதிய முயற்சிகள்

(i) சுரங்க கண்காணிப்பு அமைப்பு

செயற்கைக்கோள்களின்மூலம் கண்காணிக்கப்படும் இவ்வமைப்பின்மூலம் சுரங்கம் மற்றும் குவாரிகளின் குத்தகைப் பரப்பிற்கு அப்பால் 500 மீட்டர் சுற்றளவிற்குள் வழக்கத்திற்கு மாறாக நடைபெறும் எந்தவொரு சுரங்கம்/குவாரி செயல்பாடுகள் தொடர்பாக எச்சரிக்கை பெறப்பட்டு வருகிறது. இவ்வமைப்பானது சட்டவிரோத சுரங்கப் பணிகளைக் கண்டறியவும் மற்றும் தடுக்கவும் உதவுகிறது. தமிழ்நாட்டில் உள்ள சிறுகனிம குவாரிகளின் குத்தகைப் பரப்பு தொடர்பான விவரங்கள் அகமதாபாத்தில் உள்ள பாஸ்கராச்சாரியா விண்வெளி பயன்பாடுகள் மற்றும் புவிசார் தகவல் தொடர்பு நிறுவனத்தில் (BISAG) 2019 ஆம் ஆண்டில் பதிவேற்றம் செய்யப்பட்டு இந்திய செயற்கைக்கோளின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. செயற்கைக்கோள்களின்மூலம் கிடைக்கும் எச்சரிக்கையானது ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் உள்ள இந்திய சுரங்கக் கழகத்தின் தொலைவுணர்வு கட்டுப்பாட்டு அறையில் உணரப்படுகிறது. இந்த எச்சரிக்கைகள் இத்துறைக்கு அனுப்பப்பட்டு கள அலுவலர்களால் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ii) கனிமங்களை அகழாய்வு செய்தல்

சேலம் மாவட்டத்தில் மேக்னசைட் மற்றும் அரியலூர், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் சுண்ணாம்புக் கல் ஆகிய கனிமங்களை அகழாய்வு மேற்கொள்ள விரிவான கனிம ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று இம்மாவட்டங்களில் கனிம ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(iii) கிரானைட் தொழிலுக்கு புத்துயிர் அளித்தல்

மாநிலத்தில் உள்ள கிரானைட் தொழில் நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிக்கும்பொருட்டு, 1959 வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் உள்ள விதி 8-A இல் 2019 ஆம் ஆண்டு திருத்தங்கள் செய்யப்பட்டு, தற்போது கிரானைட் மெருகூட்டும்

[2020 மார்ச் 24

தொழிற்சாலை உரிமையாளர்களுடன் இதர தனி நபர்களும் கிரானைட் குவாரி பொது ஏலத்தில் கலந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்விதியினைத் திருத்தம் செய்ததன் நோக்கம் கிரானைட் ஏலத்தில் போட்டியினை உருவாக்கி அரசுக்கு அதிக வருவாய் சேர்ப்பதேயாகும். அரசு நிலங்களில் செறிவு மிகுந்த கிரானைட் கற்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதிகளைப் பொது ஏலத்திற்கு கொண்டு வருவதன்மூலம் கிரானைட் தொழிலுக்குப் புத்துயிர் அளித்து வேலைவாய்ப்பினை உருவாக்குவதுடன் அரசுக்கு அதிக வருவாய் ஈட்டப்படும்.

(iv) மின்னணு சுரங்க நிருவாகம்

சிறுகனிமங்களை மின்னணு சுரங்க நிருவாகத்தின்கீழ் கொண்டுவந்து கனிம நிருவாகப் பணிகள் எளிமைப்படுத்தப்படும்.

(v) ஆளில்லா விமானத் தொழில்நுட்பம்

குத்தகை பகுதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் குத்தகைப் பரப்பிற்கு அப்பால் குவாரி பணி மேற்கொள்ளப்படுவதைக் கண்காணிக்க ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தின்மூலம் வெட்டியெடுக்கப்பட்ட கனிமத்தின் கனபரிமாணங்களை அளவீடு செய்து சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிடமிருந்து கனிம மதிப்பினை வசூல் செய்யவும் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் இயலும்.

(vi) கனிம குத்தகை தொடர்பான தகவல்களை மின்னணு வடிவமாக்குதல்

கனிம நிருவாகத்தை திறன்பட மேற்கொள்ள, சுரங்கம் மற்றும் குவாரி குத்தகைகள் தொடர்பான விவரங்களை மின்னணு முறையில் வடிவமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. தமிழ்நாடு கனிம நிறுவனம்

கனிம வள தாதுக்களை சுரங்கப் பணிமூலம் பிரித்தெடுத்து வர்த்தகம் செய்யும் தமிழ்நாடு கனிம நிறுவனம் 100 விழுக்காடு தமிழக அரசுடைமை நிறுவனமாகும். 1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்நிறுவனம், கனிமங்களைக் கண்டறிதல், சுரங்கங்களை இயக்குதல், கிரானைட் கற்கள் மற்றும் பிற கனிமங்களான சுண்ணாம்புக் கல், குவார்ட்ஸ், வெர்மிகுலைட்,

2020 மார்ச் 24]

சிலிக்கா மணல், கிராபைட் கனிமங்களை வெட்டி எடுத்து மேம்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாகத் தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு, மதிப்பு கூட்டப்பட்ட கிரானைட் பொருட்களைத் தயாரிக்கும் மூன்று தொழிற்சாலைகள் உள்ளன. தொழிற்சாலைகளின் தேவை மற்றும் சந்தை கேட்பினைப் பூர்த்தி செய்ய தமிழ்நாடு முழுவதும் பரவலாக சுரங்க குத்தகைகளை தமிழ்நாடு கனிம நிறுவனம் பெற்றுள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம், கனிமங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான கிரானைட் கற்பலகைகள், ஓடுகள், நினைவுச் சின்னங்களை அதற்கான பிரத்யேக சந்தையில் விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்து வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் கிராபைட் தொழிற்சாலை, சென்னை மாவட்டம், எண்ணூரில் சிலிக்காமணல் தொழிற்சாலை, திருப்பத்தூர் மாவட்டம், செவ்வாத்தூரில் வெர்மிகுலைட் தொழிற்சாலைகள் உள்ளன. தமிழ்நாடு கனிம நிறுவனம் ஓர் ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகும். அதன் ஏற்றுமதி செயல்பாடு, மத்திய மற்றும் மாநில ஏற்றுமதி முகமைகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.1 மூலதனம்

(ரூ. இலட்சத்தில்)

அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மூலதனம்	100.00
நடப்பில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	2,000.00
தொடக்கத்தில் செலுத்தப்பட்ட மூலதனம்	27.50
நடப்பில் உள்ள செலுத்தப்பட்ட மூலதனம்	1,573.89

2.2 பணியாளர்கள் விவரம்

அலுவலர்கள்	42
பணியாளர்கள்	313
தொழிலாளர்கள்	409
மொத்தம்	764

2.3 நோக்கம்

கனிம வளப் பிரிவில் முதன்மையான இடத்தை அடைதல் மற்றும் இயற்கையான கனிம வளங்களைப் பாதுகாத்திடல்.

2.4 குறிக்கோள்

- தொடர்ந்து புதிய கனிம வளப் பகுதிகளைக் கண்டறிதல்.
- சுரங்கச் செயல்பாடுகளில் நவீன உத்திகளைக் கையாள்வதன்மூலம் பாதுகாப்பான வகையில் தரமான கனிம உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்.
- மதிப்பு கூட்டப்பட்ட கிரானைட் மற்றும் கனிமங்கள் ஏற்றுமதிமூலம் அன்னிய செலாவணி ஈட்டுதல்.
- பின்தங்கிய மற்றும் கிராமப்புறப் பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்.

2.5 சுரங்கக் குத்தகை விவரம்

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு மொத்தம் 75 சுரங்கக் குத்தகைகள் உள்ளன. அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

வ. எண்	கனிம வகைகள்	சுரங்கக் குத்தகை எண்ணிக்கை	பரப்பளவு (ஹெக்டேர்)
1	கருப்பு கிரானைட்	36	646.436
2	பலவண்ண கிரானைட்	31	487.980
3	சிறுகனிமங்கள் (கிரானைட் நீங்கலாக)	02	4.355
4	பெருங்கனிமங்கள்	06	282.590
	மொத்தம்	75	1,421.361

2.6 உற்பத்தி மற்றும் விற்பனை

2019-2020 ஆம் நிதியாண்டின், டிசம்பர் திங்கள் வரை தமிழ்நாடு கனிம நிறுவனம் சுமார் 1,765 கன மீட்டர் கிரானைட் கற்கள்

2020 மார்ச் 24]

உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது. பல குவாரிகள் மற்றும் சுரங்கங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி பெற, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி பெற்று பல குவாரிகள் விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

2.7 செயல் திட்டம் 2020-2021

தமிழ்நாடு கனிம நிறுவனம், வருவாயை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:-

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகாவிலுள்ள எலிக்கரடு பிட்–II கருப்பு கிரானைட் குவாரி நவம்பர் 2019–லிருந்து செயலாக்கத்தில் உள்ளது. இக்குவாரியின்மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூபாய் ஒரு கோடி வருவாய் ஈட்டப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வருவாய் பெருக்கத்திற்கு முக்கியப் பங்களித்த சிவகங்கை மாவட்டத்திலுள்ள கிராபைட் சுரங்கத்திற்காக, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வல்லுநர் மதிப்பீட்டுக் குழு, சுற்றுச்சூழல் அனுமதி வழங்க பரிந்துரை செய்துள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி கிடைத்த பின் கிராஃபைட் சுரங்கம் மற்றும் தொழிற்சாலை விரைவில் இயக்கப்படும். இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 2 கோடி வருவாய் ஈட்ட இயலும்.

(இ) அரியலூர் மாவட்டத்திலுள்ள பெரியநாகலூர் சுண்ணாம்புக் கல் சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து மார்ச் 2020 மாத இறுதிக்குள் பெறப்பட்டு, சுரங்கம் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும். இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1.50 கோடி வருவாய் ஈட்டப்படும்.

(ஈ) தமிழ்நாடு கனிம நிறுவனம் மே திங்கள் 2020-க்குள் ஆறு குவாரிகள் மற்றும் சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற்று, செயலாக்கத்திற்குக் கொண்டுவர முயன்று வருகிறது. இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2.50 கோடி வரை வருவாய் ஈட்ட இயலும்.

(உ) தமிழ்நாடு கனிம நிறுவனம் சிலிக்கா மணல் சுரங்கப் பணிகளை துவங்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. சிலிக்காமணல், சிமென்ட்டின் தரம் அறிய சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1 கோடி வருவாய் ஈட்டப்படும்.

(ஊ) மத்திய சுரங்க அமைச்சகம், தமிழ்நாடு கனிம நிறுவனத்தை "அறிவிக்கப்பட்ட முகவர்" (Notified Agency) என அறிவித்து மத்திய கனிம வள ஆராய்ச்சி குழும நிதியிலிருந்து நிதி ஆதாரம் பெற்று கனிம ஆய்வுகளை மேற்கொள்ள பணித்துள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம் வரும் 2020-2021 ஆம் நிதியாண்டில் சுண்ணாம்புக் கல் சுரங்க ஆய்வுகள் மேற்கொள்ள உள்ளது.

2.8 குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் நிருவாகம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் அனைத்து சுரங்கங்களிலும் மாசு, புகை மற்றும் அதிர்வு ஆகியவற்றைக் குறைக்கும் வண்ணம் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, சுரங்கப் பணிகளை முறையாகவும் அறிவியல் ரீதியாகவும் செவ்வனே செய்து வருகிறது. Wire Saw, Hydraulic Drillers, Excavators போன்ற நவீன இயந்திரங்களைக் கொண்டு கிரானைட் கற்களை பிரித்தெடுப்பது, வெடிபொருட்களின் பயன்பாட்டினை வெகுவாகக் குறைத்து பாறைகளை பிரித்தெடுக்க விரிவாக்க கலவைகளை (Expansive mortar) பயன்படுத்துவது போன்ற நவீன சுரங்க உற்பத்தி உத்திகளைக் கையாள்கிறது.

3. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு மேக்னசைட் (TANMAG) நிறுவனம், தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சேலம் மாவட்டத்தில் குரும்பப்பட்டி காப்புக் காட்டில் 96.34 ஹெக்டேர் (238 ஏக்கர்) பரப்பளவில் 1,19,679 மெட்ரிக் டன் மேக்னசைட் மற்றும் 98,237 மெட்ரிக் டன் டூனைட் உற்பத்தி செய்ய அரசிடம் குத்தகை பெற்று சுரங்கத்தினை இயக்கி வருகிறது.

3.1 செயல்பாடுகள்

இயந்திரங்கள்மூலம் திறந்தவெளி சுரங்க இயக்க முறையில் மிகவும் தகுதி வாய்ந்த மற்றும் அனுபவமிக்க சுரங்கப்

2020 மார்ச் 24]

பணியாளர்களைக் கொண்டு தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் சுரங்கத்தை இயக்கி வருகிறது. இந்நிறுவனம் நவீன முறையில் விஞ்ஞான ரீதியாக சுற்றுச்சூழலைப் பாதுகாத்து கனிமத்தை வெட்டி எடுக்கின்றது. மேக்னசைட் தோண்டி எடுக்கும்போது டூனைட் என்ற கனிமமும் துணை தாதுவாகக் கிடைக்கின்றது.

சுரங்கப் பணியான கச்சா மேக்னசைட் வெட்டி எடுத்தல் என்பது இடத்தைத் தேர்வு செய்தல், துளையிடுதல், வெடித்தல், வரிசைப்படி அடுக்குதல் மற்றும் கழிவை உரிய இடத்தில் சேர்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

3.2 பிரிவுகள்

இந்நிறுவனம், சுரங்கப் பிரிவு (Mines Division), சுழற் சூளைப் பிரிவு (Rotary Kiln Division) மற்றும் நிலைச் சூளைப் பிரிவு (Shaft Kiln Division) ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

3.3 உற்பத்திப் பொருட்கள்

சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கச்சா மேக்னசைட் முழுவதும் தனது சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division) மற்றும் நிலைச்சூளைப் பிரிவு (Shaft Kiln Division) ஆகிய இரு தொழிற்சாலைகளில் மூலப்பொருளாகக் கொண்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Dead Burnt Magnesite) மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite) பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது. மேக்னசைட் தோண்டி எடுக்கும்போது டூனைட் என்ற கனிமமும் துணை தாதுவாகக் கிடைக்கின்றது. இவை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்கப்படுகிறது.

3.4 பங்கு முதலீடு

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 கோடி. ஒவ்வொன்றும் ரூ.100/- மதிப்புள்ள 50,00,000 பங்குகள் ஆகும். ரூ.100/- மதிப்புள்ள 16,65,000 பங்குகள் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 16.65 கோடி ஆகும்.

3.5 2020-2021 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலைமாற்ற அமைச்சகத்தின் (MoEF&CC) அறிவுறுத்தல்படி சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி சுரங்க பணிகள் 14-4-2018 அன்று முதல் நிறுத்தி

[2020 மார்ச் 24

வைக்கப்பட்டுள்ளது. டேன்மேக் நிறுவனம் சுற்றுச்சூழல் அனுமதி பெற உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பு விதிமுறைகளை (Terms of Reference) பெற்று, 29-1-2020 அன்று பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இறுதி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை/சுற்றுச்சூழல் நிருவாகத் திட்டம், தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவிற்கு (SEIAA-TN) சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக 15-2-2020 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. உரிய அனுமதி பெறப்பட்டு சுரங்கப் பணிகள் உத்தேசமாக ஏப்ரல் 2020-ல் துவங்கப்படும்.

இந்நிறுவனம் 2020-2021 ஆம் ஆண்டில், 1,19,679 மெட்ரிக் டன் கச்சா மேக்னசைட் மற்றும் 98,237 மெட்ரிக் டன் டூனைட் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கச்சா மேக்னசைட்டைக் கொண்டு 30,000 மெட்ரிக் டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Dead Burnt Magnesite) மற்றும் 17,000 மெட்ரிக் டன் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் (Lightly Calcined Magnesite) ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது. இதன்மூலம் ரூபாய் 148.07 கோடி விற்பனை விற்றுமுதல் ஈட்ட திட்டமிட்டுள்ளது.

3.6 தேசிய கனிம ஆய்வு அறக்கட்டளை

மத்திய சுரங்க அமைச்சகம் தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை "அறிவிக்கப்பட்ட முகவர்" (Notified Agency) என அறிவித்து மத்திய கனிம வள ஆராய்ச்சிக் குழும நிதியிலிருந்து நிதி ஆதாரம் பெற்று கனிம ஆய்வுகளை மேற்கொள்ள பணித்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IX

(40 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

அத்தியாயம் - 1

முன்னுரை

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து - (குறள்-738)

"நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்."

1.1 ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் பொதுமக்களின் நலமான வாழ்வு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமான சமுதாயத்தால் மட்டுமே ஆக்கபூர்வமான பங்கினை அளிக்க முடியும். எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு, நடுநிலை நேர்மை இலக்கு, ஆற்றல், தரம் மற்றும் நோயாளிகளின் மனநிறைவு ஆகியவையே ஆற்றல்மிக்க மற்றும் பயனுறுதியுள்ள சுகாதார வசதியை நிர்ணயிக்கும் அடிப்படை அளவுகோல்களாகும். தமிழ்நாடு அரசு மேற்கண்ட அடிப்படை அளவுகோல்கள்மீது கவனம் செலுத்தி, தமிழ்நாட்டு மக்களுக்கு ஒருங்கிணைந்த மருத்துவ சேவையை வழங்கி வருகிறது.

1.2 மருத்துவத் துறையில் தமிழ்நாட்டின் சாதனை இந்தியாவிலேயே மிகச் சிறப்பானதொன்று என்பது மட்டுமல்லாமல், உலகத்தின் வளர்ந்த நாடுகளோடு ஒப்பீடு செய்யக்கூடிய ஒன்றாகும். அரசு மருத்துவமனைகளுக்கு வரும் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது என்பது அரசு மருத்துவமனைகள் பொதுமக்களுக்கு வழங்கிவரும் சேவையில் அதிகம் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாடு, மருத்துவ சேவையில் மிகச் சிறப்பாக செயல்படும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

[2020 மார்ச் 24

அனைத்து குடிமக்களுக்கும் தரமான மருத்துவ சேவை வழங்குவதை உறுதிசெய்ய அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

1.3 தமிழ்நாடு மருத்துவ சேவை வழங்குவதில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் வகுத்த மில்லினியம் வளர்ச்சி இலக்குகளைத் தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்து, சுகாதாரத் துறையில் 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே அடைய முழு முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையான மருத்துவத் தரத்தை தமிழ்நாடு அடைய வேண்டும் என்பது மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2030-ன் குறிக்கோளாகும். தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும் சிகிச்சை அளிப்பதிலும் தமிழ்நாடு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

1.4 ஒவ்வொரு குழந்தையும் உயிருடனும், நல்ல வளர்ச்சியுடன் இருப்பதையும் உறுதி செய்வதே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாகும். ஒரு நாட்டின் குழந்தைகள் நல்வாழ்வில், குழந்தை இறப்பு விகிதம் ஒரு முக்கியக் குறியீடாகும். அதேபோல், பேறுகால தாய்மார்களின் இறப்பு விகிதம், பெண்களின் சுகாதாரம் மற்றும் சமுதாயத்தில் அவர்களின் நிலையைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான குறியீடாகும். சமீபத்திய மத்திய அரசின் மாதிரி புள்ளிவிவரப்படி இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் குழந்தைகள் இறப்பு மற்றும் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

1.5 மாநிலத்தில் வழங்கப்படும் மருத்துவ சேவை முறைகள் மற்றும் நடைமுறைகளை அறிந்துகொள்ள மருத்துவ சேவைகள் முக்கியக் குறியீடாகும். தமிழ்நாட்டில் மருத்துவ சேவை முதல்நிலை, இரண்டாம்நிலை மற்றும் உயர்நிலை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசின் முயற்சிகள் தவிர, தனியார் அமைப்புகளும், மருத்துவ சேவை வழங்குவதில் அதன் பங்கை அளித்து வருகிறது.

1.6 இதன் காரணமாகவே, வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரக் குறியீடுகளை 2023 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டும் என்ற இலக்கு தொலைநோக்குப் பார்வை 2023 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

1.7 நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல், நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்மூலம் மக்கள் நலனைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது.

மாநிலத் தகவல் தொகுப்பு

1.8 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு அரசு எடுத்த முயற்சிகள் மற்றும் வலுவான கொள்கைகளின் விளைவாக, நிதி ஆயோக் வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி இலக்கு இந்தியாவின் அட்டவணை அறிக்கையில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த சில பத்தாண்டுகளாக தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதார நலவாழ்வில் குறிப்பிடும்படியான சாதனையைத் தமிழ்நாடு எட்டியுள்ளது. தமிழ்நாட்டில் மருத்துவ நிலையங்களில் 99.99 விழுக்காடு பிரசவங்கள் நிகழ்கின்றன. (மாநில தகவல் மேலாண்மைத் திட்டம் 2019). தாய்மார்கள் இறப்பு விகிதம் உயிருடன் பிறந்த ஒரு இலட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 57 ஆக உள்ளது. (மாநிலத் தகவல் மேலாண்மைத் திட்டம் 2019). இது நிலையான வளர்ச்சி இலக்கினை மிஞ்சிய சாதனையாகும். 2015 ஆம் ஆண்டில் 1,000 குழந்தைப் பிறப்புகளில் 19 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 2017 ஆம் ஆண்டில் 16 ஆக குறைந்துள்ளது. இது 2015 ஆம் ஆண்டில் 37 ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 33 ஆகவும் உள்ள தேசிய அளவிலான குழந்தை இறப்பு விகிதத்தைவிடக் குறைவானதாகும். தடுப்பூசியில் 95 விழுக்காடு அடைந்து, நிர்ணயிக்கப்பட்ட முழுத் தடுப்பூசி என்ற இலக்கை அடையும் நிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் 2016 ஆம் ஆண்டில் 1.6 ஆக உள்ள பெண்களின் கருவள விகிதம் தேசிய அளவில் சராசரியாக உள்ள 2.3-ஐ விடக் குறைவானதாகும்.

1.9 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 7.21 கோடி மக்கள்தொகையுடன் தமிழ்நாடு, நாட்டிலேயே ஏழாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் பத்தாண்டு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 15.6 விழுக்காடாக உள்ளது. மாநிலத்தில் 37 வருவாய் மாவட்டங்கள் உள்ளன. பொது சுகாதாரச் சேவையை மேலாண்மை செய்ய சென்னை மாநகராட்சி தவிர, தமிழ்நாடு 42 சுகாதார மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது சேலம் சுகாதார மாவட்டம் பிரிக்கப்பட்டு, ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 43 சுகாதார மாவட்டங்கள் உள்ளன.

அனைத்து குடிமக்களுக்கும் தரமான மருத்துவ சேவை வழங்குவதை உறுதிசெய்ய அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குவதுடன், தேசிய நலவாழ்வுக் குழுமம்/பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டங்களின் இலக்குகளை ஏற்கெனவே அடைந்துள்ளது. இத்துறையில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான பணியாளர்கள் உள்ளனர். இவர்கள், நாளொன்றுக்கு சராசரியாக 6.50 இலட்சத்திற்கும் மேலான புறநோயாளிகளுக்கும், 70,000-க்கும் மேலான உள்நோயாளிகளுக்கும் மருத்துவ சேவை அளிக்கின்றனர்.

1.10 வலுவான மற்றும் பாதுகாப்பான பொது சுகாதார சேவை நிறுவப்பட்டுள்ளதற்காக தமிழ்நாடு பாராட்டைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் பொது சுகாதாரத்திற்கு எனத் தனியாக உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் போன்று மற்ற மாநிலங்களால் தேசிய சுகாதாரக் கொள்கை 2017-ன்படி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களில் மருத்துவச் சேவையின்கீழ், பொது சுகாதார நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல் இருப்பதுபோல் அல்லாமல், தமிழ்நாட்டில் தனியாகப் பொது சுகாதார அமைப்பு உள்ளதன் விளைவாக, சமுதாய சுகாதாரச் சேவைகளில் குறிப்பிடும்படியான சாதனையை எட்ட முடிந்துள்ளது. மருந்துகள் இருப்பு மற்றும் மருத்துவப் பரிசோதனைக்காக உரிய நேரத்தில் கொள்முதல், நடைமுறை, மருந்துகள் இருப்பு ஆகியவற்றில் குறிப்பிடும்படியான பங்களிப்பைத் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் செய்துள்ளதால் இந்திய அளவில் பாராட்டைப் பெற்றுள்ளது.

1.11 மாநிலத்தில் அரசு அல்லது தனியார் அமைப்பில் உள்ள ஒவ்வொரு மருத்துவ நிலையத்திலும் சில குறிப்பிட்ட வசதிகள் இருப்பதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1997-ஐ நடைமுறைப்படுத்த தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2018 மற்றும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) விதிகள் 2018 ஆகியவை இயற்றப்பட்டுள்ளன. இதன்படி மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்வதும், குறைந்தபட்ச வசதிகளை வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

1.12 இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு

2020 மார்ச் 24]

முன்னுதாரணமாக உள்ளது. தேசிய அளவில் 2015 முதல் 2019 வரை 5 வருடங்களாகத் தொடர்ந்து விருதினைப் பெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் படிப்படியாக ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதன்படி ஏற்கெனவே ஆறு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டில் மத்திய அரசு பரிந்துரைத்த திட்டத்தின்கீழ் 100 மருத்துவப் பட்டப் படிப்பு இடங்களுக்கு 60:40 விகிதாச்சாரத்தில் நிதி உதவி என்ற அடிப்படையில் 11 மாவட்டங்களில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவ மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட 11 மருத்துவக் கல்லூரிகளையும் தலா 150 எம்.பி.பி.எஸ். இடங்களுடன் நிறுவிட தமிழ்நாடு அரசு முடிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளது. கூடுதல் இடங்களுக்கான கூடுதல் செலவினை மாநில அரசு நிதியிலிருந்து ஏற்கும்.

1.13 மருத்துவ சேவை வழங்குவதில் சில முக்கியச் சேவைகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு, பல உலக நாடுகளின் நிதி உதவியைப் பெறுவதில் முன்னிலை வகிக்கிறது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் இதற்கு ஓர் உதாரணம் ஆகும். தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தை அடுத்த 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்த, உலக வங்கி இரண்டாவது முறையாக 2,897 கோடி ரூபாய் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

1.14 தமிழக முதலமைச்சர் கடந்த ஆகஸ்டு 2019-ல் லண்டனுக்குப் பயணம் மேற்கொண்டபோது, வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிங்ஸ் மருத்துவமனை கிளையை நிறுவிடவும், தாய்-சேய் சுகாதார சேவைகள், பக்கவாதத்திற்கான அவசர சிகிச்சை, செவிலியர் சேவை சுகாதார சேவை வழங்கும் அமைப்பு போன்ற சேவைகளை மேம்படுத்த லண்டன் கிங்ஸ் கல்லூரி மருத்துவமனையுடனும், அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களின் திறமையை மேம்படுத்தவும், சர்வதேச தரத்திலான மருத்துவ சேவைகளை அவர்களுக்கு வழங்கத் தேவையான பயிற்சி அளிப்பதற்காக சர்வதேச திறன் மேம்பாட்டுக் கழகத்துடனும், கொசுவினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும், பூச்சிகளால் பரவும் நோய்களின் பரிசோதனையை வலுப்படுத்தவும், சிகிச்சைமுறை வகுக்கவும் லண்டன் ஸ்கூல் ஆப் ஹைஜீன் மற்றும் டிராபிகல் மெடிசின் (London School of

[2020 மார்ச் 24

Hygiene and Tropical Medicine) இடையேயும், மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1.15 டெங்கு, பறவைக் காய்ச்சல், கொரோனா போன்ற பூச்சிகளால் பரவும் நோய்கள் உலக அளவில் அதிகமாகக் காணப்பட்ட நிலையில் தமிழ்நாடு அவைகளைத் திறமையாகக் கையாண்டு வருகிறது.

தற்போதைய நிலவரம்

1.16 தமிழ்நாட்டில் மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் விரைவாக வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	அலகுகள்
1	அரசு மருத்துவக் கல்லூரிகள்	24
2	மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள்	50
3	தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை	1
4	தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை	1
5	மாவட்டத் தலைமை மருத்துவமனைகள்	29
6	வட்டம்/வட்டம் சாரா மருத்துவமனைகள்	273
7	ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,806
8	துணை சுகாதார நிலையங்கள்	8,713
9	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (சென்னை மாநகராட்சி உட்பட)	460

2020 மார்ச் 24]

வ. எண்	விவரம்	அலகுகள்
10	சென்னை மாநகராட்சியில் தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் புதிய நகர்ப்புற சமுதாய மையங்கள்	15
11	தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள்	10
12	தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள்	216
13	இந்திய முறை மருத்துவ மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்	1,534

1.17 சுகாதாரத் துறையின் சாதனைகள்

பின்வரும் அத்தியாயங்களில், அரசின் திட்டங்கள் குறித்து விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. சில குறிப்பிடும்படியான சாதனைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் நிகழ்ந்த குறிப்பிடும்படியான சில சாதனைகள்

சுகாதாரக் குறியீடுகள்

- தேசிய அளவில் குழந்தை இறப்பு விகிதம் 33 ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 2010-ல் 24 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம், 2017 மாதிரிப் பதிவு முறைப்படி, 2017-ல் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு 16 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்ததற்காக 2012-2013 முதல் 2014-2015 வரையிலான காலத்திற்கு மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு 489.40 கோடி ரூபாயை ஊக்க நிதியாகப் பெற்றுள்ளது.

- 2010-2012 மாதிரிப் பதிவு முறையின்படி, தமிழ்நாட்டில் 90 ஆக இருந்த "தாய்மார்கள் இறப்பு விகிதம்", கடைசியாக வெளிவந்த 2015-2017-க்கான மாதிரிப் பதிவு முறைப்படி ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 63 ஆகக் குறைந்துள்ளது. தற்போது மாநில சுகாதாரத் தகவல் மேலாண்மை அமைப்பின்

[2020 மார்ச் 24

2019 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, இது 57 ஆகக் குறைந்துள்ளது. இந்தியாவின் தற்போதைய தாய்மார்கள் இறப்பு விகிதம் 130 ஆகும்.

- மொத்த கருவள விகிதம் 1.6 ஆகும். இந்தியாவின் விகிதம் 2.3 என்று உள்ள நிலையில், தமிழ்நாட்டின் மொத்த கருவள விகிதம் இந்தியாவிலேயே மிகக் குறைவானதாகும்.

மாநில அரசின் திட்டங்கள்

- தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சுகாதார சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக, "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1,027 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள், 154 சிறப்பு சிகிச்சை முறைகள், 154 தொடர் சிகிச்சை முறைகள், 38 முழுமையான பரிசோதனை முறைகள், எட்டு சிறப்பு உயர் சிகிச்சை முறைகள் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 41.42 இலட்சம் நபர்களுக்கு 6,601 கோடி ரூபாய் செலவில், மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மருத்துவமனைகளில் 2,453.22 கோடி மதிப்பில் மக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன், மத்திய அரசின் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு, காப்பீட்டுத் தொகை ஆண்டிற்கு 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- இரண்டு இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகைக்கு மேல் தேவைப்படும் எட்டு சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு ஆகும் செலவை ஏற்பதற்காக, அரசின் பங்குத் தொகை 35 கோடி ரூபாயுடன் ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து இதுவரை 8,847 பயனாளிகள் 672.89 கோடி ரூபாய் செலவில் பயனடைந்துள்ளனர்.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம் மற்றும் அம்மா தாய்-சேய் நல பெட்டகம்: டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் 1-4-2018 முதல் 18,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

இந்தத் திட்டத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு உள்ள இரத்தசோகையைப் போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும், இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய்-சேய் நலப் பெட்டகங்கள் இரண்டு வழங்கப்படுகின்றன. இதுவரை 60.64 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் 6,033.81 கோடி ரூபாய் நிதி உதவி பெற்றுள்ளனர். மத்திய அரசின் மகப்பேறு நிதியுதவி வழங்கும் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம், மேற்கண்ட மாநில அரசின் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

- வளரிளம் பெண்களிடையே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாதவிடாய்கால சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 61 கோடி ரூபாய் செலவில் 32.79 இலட்சம் கிராமப்புற வளரிளம் பெண்களுக்கு, விலையில்லா 'சானிட்டரி நாப்கின்' வழங்கப்படுகிறது.

- "நடமாடும் மருத்துவமனை திட்டத்தின்"கீழ் கிராமப்புறங்களில் 416 நடமாடும் மருத்துவக் குழுக்களும், நகரப் பகுதிகளில் 10 குழுக்களும், கட்டுமானத் தொழிலாளர்களுக்காக 50 நடமாடும் மருத்துவக் குழுக்களும் செயல்படுகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு மாதமும் 40 முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை நடத்தப்பட்ட 16.48 இலட்சம் முகாம்களில் 11.71 கோடிக்கும் அதிகமான மக்கள் பயனடைந்துள்ளனர்.

- அரசு மருத்துவ நிலையங்களில் பிறக்கும் சுமார் 6.7 இலட்சம் குழந்தைகளின் தாய்மார்களுக்கு, பேறுகாலத்திற்குப்பின், தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உயர்த்தும் பொருட்டு, அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. நவம்பர் 2019 வரை 20.90 இலட்சம் பிரசவித்த தாய்மார்களுக்கு அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

- "அம்மா ஆரோக்கிய திட்டம்" என்பது ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் அருகாமையிலுள்ள சுகாதார மையங்களில் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்வதாகும். இத்திட்டம் தமிழகத்தில் 501 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும்

[2020 மார்ச் 24

நகர்ப்புற சுகாதார நிலையங்களில் துவங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 25 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை, 55.58 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

- "அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்", சென்னை அரசு பொது மருத்துவமனையில் 1-3-2016 முதலும், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 8-6-2018 முதலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, இந்த இரண்டு மருத்துவமனைகளிலும் 70,798 நபர்கள் உடல் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

- மருத்துவத் தகவல், ஆலோசனை, சுகாதாரம் சார்ந்த பொதுமக்கள் குறைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு காண 30-12-2013 அன்று "104" மருத்துவத் தகவல் சேவை மற்றும் தொலை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது. நவம்பர் 2019 வரை, பொது மக்களிடமிருந்து 35.24 இலட்சம் அழைப்புகள் வரப்பெற்று, மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தாய்ப்பால் வங்கிகள் துவங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் இந்திய முறை மருத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, இதற்காக செயல்படும் அரசு நிலையங்களின் உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 96.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த யோகா மையம் நிறுவப்படுகிறது. இதற்கான கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. நாட்டிலேயே இதுமாதிரியான திட்டம் முதன்முதலானதாகும்.

- மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் மருத்துவ சேவையை அங்கீகரித்து, அவர்களுக்கு உற்சாகம் வழங்கும்வகையில் விருது வழங்குதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையை சுத்தமாகப் பராமரிக்கும் அரசு மருத்துவமனைகளுக்கு விருதும் பரிசும் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் திட்டங்கள்

- ராஷ்டிரிய பால் ஸ்வஸ்த்ய கார்யக்ரம் (RBSK): 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் 30 வகையான நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க 'ராஷ்டிரிய பால் ஸ்வஸ்த்ய கார்யக்ரம்' செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் 770 நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்களும், மாநகராட்சிகளில் 35 நடமாடும் மருத்துவக் குழுக்களும், அங்கன்வாடி மையங்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்கள் மாவட்ட மற்றும் உயர்நிலை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

- '108' அவசரகால ஊர்தி சேவை: தமிழ்நாட்டில் கட்டணமில்லா '108' தொலைபேசி எண்மூலம் அவசரகால ஊர்தி சேவை 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. '108' அவசரகால ஊர்தி சேவையை வழங்க 938 அவசரகால ஊர்திகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை, 18.69 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் உட்பட, 90.60 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். 65 பச்சிளம் குழந்தைகள் அவசரகால ஊர்திகளும், 76 நான்கு சக்கர இயக்க ஊர்திகளும் பயன்பாட்டில் உள்ளன. இரு சக்கர அவசரகால ஊர்தி திட்டம் (First Responder Bike Ambulance), 41 இரு சக்கர வாகனங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- '102' இலவச வாகன வசதி வழங்கும் ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்ரம் (JSSK) திட்டம்: இத்திட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிகிச்சை பெற்ற சிசுக்கள் அனைவரும், மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு இலவசமாக அழைத்துச் செல்லும் சேவை வழங்கப்படுகிறது. நூறு விழுக்காடு கட்டணமில்லா வாகன சேவை வழங்கும் பொருட்டு, முதற்கட்டமாக சென்னை, எழும்பூர் மகப்பேறு மற்றும் நோயியல் நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில், இந்திய செஞ்சிலுவைச் சங்கம்மூலம் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இச்சேவை

[2020 மார்ச் 24

அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சேவையை கட்டணமில்லா தொலைபேசி எண் ‘102’ மூலம் பயன்படுத்தலாம்.

- ஆதரவின்றிப் பொது இடங்களில் சுற்றித்திரியும் மனநோயாளிகளை, மீட்பு வாகனங்கள்மூலம் மீட்டு, 50 படுக்கை வசதிகளுடைய அவசர பராமரிப்பு மற்றும் மீட்பு மையங்களில் சேர்க்கப்பட்டு, மருத்துவ சேவை வழங்க 10 மாவட்டங்களில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதரவின்றிச் சுற்றித்திரியும் மனநோயாளிகளை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்ப்பதற்கென தனிப்பட்ட மீட்பு வாகனங்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக இயக்கப்படுகின்றன.

- பழங்குடியினரிடையே தலசீமியா மற்றும் சிக்கில்செல் இரத்தசோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான திட்டம், தென்னிந்திய மாநிலங்களிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக செயல்படுத்தப்பட்டுள்ளது. சரியான நேரத்தில் நோய்களைக் கண்டறிவதாலும், மரபணு ஆலோசனை அளிப்பதாலும், இந்த நோய்கள் பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்குப் பரவாமல் தடுக்கப்படுகிறது.

- தொற்றா நோய்கள்: தமிழக அரசு, தொற்றா நோய்கள் தடுப்புத் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் 2013-2014 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு மருத்துவமனைகள்/அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்/நகராட்சி மருத்துவமனைகள் உட்பட 2,602 மருத்துவ நிலையங்களில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கருப்பைவாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றைக் கண்டறியும் ஆய்வுகள், சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பு சேவைகள் வழங்கப்படுகின்றன.

- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்: நாட்டிலேயே முதன்முதலாக, சுகாதாரத் துறையில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க தனியாக

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை உதவி மருத்துவர்கள், செவிலியர்கள், முடநீக்கியல் நுட்புநர், இதய வரைபட நுட்புநர், மருந்தாளுநர், கிராம சுகாதார செவிலியர்கள் போன்ற பணியிடங்களுக்கு 33,124 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- கடந்த எட்டு ஆண்டுகளில், 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221.30 கோடி ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது தவிர, 166 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, 'ஸ்கேன்' வசதி, அறுவை சிகிச்சை வசதி போன்ற வசதிகளுடன் 198.66 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 42 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்-சேய் நல மையங்கள் 19.45 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய நகர்ப்புற நலவாழ்வு குழுமத்தின்கீழ், சென்னை மாநகராட்சியில் 40 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஏனைய மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 37 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, தற்போதுள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், தரம் உயர்த்தப்பட்டு, 52 வட்ட மருத்துவமனைகள் 93.96 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவக் கல்வி

- புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவுதல்: கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாக "பி" பிளாக் கட்டடம், கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை, புதுக்கோட்டை மற்றும் கரூர் ஆகிய ஆறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், கிருஷ்ணகிரி, நாமக்கல், நாகப்பட்டினம், திண்டுக்கல், நீலகிரி, திருவள்ளூர், திருப்பூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 11 மாவட்டங்களில் மத்திய அரசு பரிந்துரைக்கும் திட்டத்தின்கீழ் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசின்

அனுமதியைப் பெற்று ஒரு சாித்திர சாதனையை இத்துறை நிகழ்த்தியுள்ளது. ஒவ்வொரு மருத்துவக் கல்லூாியிலும் 150 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் இருக்கும்.

- 3,000 கூடுதல் எம்.பி.பி.எஸ். இடங்கள் அதிகாித்தல்: கடந்த எட்டு ஆண்டுகளில், ஆறு புதிய அரசு மருத்துவக் கல்லூாிகளைத் திறந்தும் (700 இடங்கள்) ஏற்கெனவே செயல்படும் 12 அரசு மருத்துவக் கல்லூாிகளில் எம்.பி.பி. எஸ். இடங்களை அதிகாித்தும் (650 இடங்கள்) 1,350 எம்.பி.பி.எஸ். இடங்கள் அதிகாிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, மத்திய அரசு திட்டத்தின்கீழ் 11 மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூாிகள், தலா 150 இடங்களுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் 1,650 மருத்துவப் பட்டப் படிப்பு இடங்கள் அதிகாிக்கும். மொத்தமாக 3,000 எம்.பி.பி.எஸ். இடங்கள் அதிகாிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
- மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்கள் அதிகாித்தல்: கடந்த ஒன்பது ஆண்டுகளில், மருத்துவக் கல்லூாிகளில் 1,369 மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்கள் அதிகாிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, தேசிய தேர்வுகள் வாாியத்தால் 20 டி.என்.பி. (DNB) இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பிரதம மந்திாி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூாிகளில், விபத்து சிகிச்சை மையங்களுடன்கூடிய உயர்சிறப்பு மருத்துவமனை தலா 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு பாரதப் பிரதமர் அவர்களால் 27-1-2019 அன்று திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த உயர்சிறப்பு மருத்துவமனைகளுக்குக் கூடுதல் பணியாளர்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

1.18 மத்திய அரசால் அங்கீகாிக்கப்பட்ட சில சிறப்பான நடைமுறைகள் (Best Practices) கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

i. இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை: இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்பொழுதுமே மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத்

திகழ்கிறது. கடந்த ஐந்து வருடங்களாக, 2015 முதல் 2019 வரை, தமிழ்நாடு, தேசிய அளவில் சிறந்த மாநிலத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.

ii. பொது சுகாதார அமைப்பு: தமிழ்நாட்டில் மட்டுமே பொது சுகாதார அமைப்பு தனி இயக்ககத்துடன் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் ஆரம்பநிலை மருத்துவ சேவைகளை வழங்குவதுடன், நோய்த் தடுப்பு முறைகளை மேம்படுத்துவதிலும், முன்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் இது பெரும்பங்காற்றி வருகின்றது.

iii. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்: மாநிலத்தின் அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் மருந்துகள், உபகரணங்கள் மற்றும் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்க மாநிலத்தின் முன்னோடி அமைப்பாக 1995 முதல் செயல்பட்டு வருகிறது. அத்தியாவசிய மருந்துகள் இருப்பதை இது உறுதி செய்துள்ளது. அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் நோயாளிகளுக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ சேவைகளுக்கு எவ்வித செலவும் ஏற்படுவது இல்லை என்பதைப் பொது ஆய்வுக் குழுமம் (Common Review Mission) அதன் ஆய்வின்போது கண்டறிந்துள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் போன்று, தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (TAMPCOL), ஆயுர்வேதம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி மருந்துகளைக் கொள்முதல் செய்து வழங்கும் அமைப்பாக விளங்குகிறது.

iv. பிரசவிக்கும் தாய்மார்களுடன் உறவினர் உடனிருத்தல் திட்டம்: தமிழ்நாட்டில் பிரசவத்தின்போது, பிரசவ அறையில் பிரசவிக்கும் தாய்மார்களுடன் ஓர் உறவினர் உடனிருத்தல் திட்டம் 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவம் அதிகாரிப்பதற்கான சூழலை உருவாக்கியுள்ளது.

v. மகப்பேறு சுற்றுலா மற்றும் வளைகாப்பு விழா (Maternity Picnic and Bangle Ceremony): அரசு மருத்துவ நிலையங்களில் சேவையைப் பெறுவதற்கான நம்பிக்கையை வளர்க்க இந்த நிகழ்ச்சி உதவி செய்கிறது. இதனைக் கிராம சுகாதார

செவிலியர்கள் மற்றும் துணை செவிலியர்கள், மருத்துவ அலுவலர்களின் வழிகாட்டுதலின் பேரில் நடத்துகின்றனர்.

vi. மாநிலத்தில் உள்ள பெரும்பாலான சுகாதார நிலையங்களில் ஒருங்கிணைந்த இந்திய முறை மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

vii. மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது: மாவட்டங்களில் தேசிய நலவாழ்வுக் குழுமத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சுகாதாரத் திட்டச் செயல்பாட்டில் அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு விருது வழங்கப்படுகிறது.

1.19 கடந்த 2019-2020 ஆம் ஆண்டில் இந்திய அளவில் பெற்றுள்ள விருதுகள்

(i) மத்திய அரசின் தேசிய விருது: இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக 2019 ஆம் ஆண்டில் ஐந்தாவது முறையாக விருது பெறப்பட்டுள்ளது.

(ii) உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய விருதினை தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து 7-6-2019 அன்று பெற்றுள்ளது. ஸ்வஸ்த் பாரத் யாத்ரா நடத்திய மிதிவண்டி தொடர் பேரணியில் பங்கேற்ற அனைத்து மாநிலங்களில், தமிழ்நாடு சிறந்த மாநிலம் என்ற விருதினைப் பெற்றுள்ளது.

1.20 நிதி ஒதுக்கீடு

தமிழ்நாடு அரசு ஒவ்வோர் ஆண்டும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் 15,863.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் மானியக் கோரிக்கை எண் 19-ல் இயக்ககம் வாரியாக அளிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

2020 மார்ச் 24]

வ. எண்	துறையின் பெயர்	தொகை (ரூபாய் கோடியில்)
1	தலைமைச் செயலகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	14.46
2	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	1,664.67
3	மருத்துவக் கல்வி இயக்ககம்	5,623.07
4	பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்	3,612.75
5	குடும்ப நல இயக்ககம்	201.18
6	தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாக இயக்ககம்	101.57
7	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	406.08
8	தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை	33.03
9	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்	2,043.91
10	தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்	2,162.65
	மொத்தம்	15,863.37

குறிப்பு:

1. மேற்சொன்ன நிதி ஒதுக்கீடு தவிர, பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கட்டடப் பணிகளுக்காக 413.59 கோடி ரூபாய், மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை எண் 32-ல் தொழிலாளர் ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைகளுக்காக 601.08 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

1.21 இத்துறையின் செயல் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள், அறிமுக அத்தியாயத்தில் தெரிவிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. இவைகள் பற்றிய விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் - 2

வரலாறு

2.1 தென் இந்தியாவில், நோய்களைக் குணப்படுத்த முதலில் தோன்றிய நமது பழமையான சித்த மருத்துவம், இந்தியாவில் உள்ள பழைய மருத்துவ முறைகளில் ஒன்றாகும். இந்திய முறை மருத்துவங்களான சித்த மருத்துவமும், ஆயுர்வேத மருத்துவமும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சித்த மருத்துவ வளர்ச்சிக்கு பதினெட்டு சித்தர்கள் பெரும்பங்காற்றியுள்ளனர். அதனாலேயே இது சித்த மருத்துவம் என்று அழைக்கப்படுகிறது. சுஷ்ருதர் மற்றும் சரகர் ஆகிய இருவரும் ஆயுர்வேதத்தின் முன்னோடிகளாவார்கள். நவீன மருத்துவத்தின் துவக்கம் ஆங்கிலேயர்களின் வருகையுடன் தொடர்புடையதாகும்.

தோற்றம்:

- 1639 ஆம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனியின் நோயுற்ற படை வீரர்களைக் குணப்படுத்துவதற்காக, முதல் ஆங்கிலேய மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.
- 1644 ஆம் ஆண்டு நவீன மருத்துவமனையின் துவக்கம் என்று அறியப்படுகிறது. (ஒரு சிறிய மருத்துவமனையாகத் துவங்கப்பட்டு, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த புகழ்வாய்ந்த அரசு பொது மருத்துவமனையாக வளர்ந்துள்ளது.)
- 1835 ஆம் ஆண்டு நம் மாநிலத்தின் முதல் மருத்துவக் கல்லூரியான சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.
- 1883 ஆம் ஆண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, அரசு மருத்துவமனையில் ஒரு பல் மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டது.
- 1885 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை (கோஷா மருத்துவமனை) தொடங்கப்பட்டது.

2020 மார்ச் 24]

- 1923 ஆம் ஆண்டில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் தொடங்கப்பட்டது.
- 1966 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வித் துறை உருவாக்கப்பட்டது.
- 1970 ஆம் ஆண்டில் இந்திய முறை மருத்துவத் துறை உருவாக்கப்பட்டது.
- 1981 ஆம் ஆண்டில் மருந்துக் கட்டுப்பாடுத் துறை உருவாக்கப்பட்டது.
- 1981 ஆம் ஆண்டில் மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை உருவாக்கப்பட்டது.
- 1983 ஆம் ஆண்டு குடும்ப நலத் துறை உருவாக்கப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டில் பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் உருவாக்கப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1999 ஆம் ஆண்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை (தொ.அ.ஈ.) உருவாக்கப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில் திருத்திய தேசிய காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டில் மாநில நலவாழ்வுச் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் தொடங்கப்பட்டது.
- 2011 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்புத் துறை உருவாக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டில் இந்திய அரசால் தேசிய நலவாழ்வுக் குழுமம் தொடங்கப்பட்டது.
- 2016–TRANSTAN தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைக் குழு உருவாக்கப்பட்டது.

[2020 மார்ச் 24

தனிச் சிறப்புகள்:

- அதிக எண்ணிக்கையிலான அரசு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற தனித்துவத்தைக் கொண்டதோடு மட்டுமல்லாமல், அவைகளை தொடங்கிய முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.
- இம்மாநிலத்தின் முதல் மருத்துவக் கல்லூரியான சென்னை மருத்துவக் கல்லூரி இந்தியாவில் இரண்டாவதாக தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரி என்ற தனித்தன்மையைப் பெற்றுள்ளது.
- சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட எழும்பூர் கண் மருத்துவமனை, உலகத்தில் துவக்கப்பட்ட இரண்டாவது கண் மருத்துவமனை என்ற தனித்தன்மையைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் இரண்டாவது பெரிய நிலையமாகவும் தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு மன நல சேவையை வழங்கும் நிலையமாகவும் சென்னை, மனநலக் காப்பகம் விளங்குகிறது.
- உலகிலேயே, 1878 ஆம் ஆண்டு, மேரி ஆன் டாகோம்ப் ஸ்கார்லீப் என்ற ஒரு பெண்மணியை முதன்முதலாக மருத்துவக் கல்லூரி மாணவியாக சேர்த்த பெருமை மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியைச் சாரும்.
- 1903 ஆம் ஆண்டு, சார்லஸ் டினோவன் என்பவரும், இங்கிலாந்து, நெட்லே-வைச் சார்ந்த திரு.வில்லியம் பூக் லெய்ஸ்மேன் என்பவரும் இணைந்து மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் காலா–அஸார் நோயை உருவாக்கும் லெயிஷ்மானியா டினோவனி ஒட்டுயிரியைக் கண்டுபிடித்த பெருமை உள்ளது.
- மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியிலிருந்து 1912 ஆம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார்.

இத்துறை பல்வேறு பாரம்பரியமான இயக்குநரகங்களைக் கொண்டுள்ளதுடன் அவற்றின் துடிப்பான மற்றும் முனைப்பான செயல்பாடுகளின் மூலமும் அனுபவமிக்க மனிதவளத்தின் மூலமும் தனது வளமான பாரம்பரியத்தை மென்மேலும் வளர்த்துக்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 24]

அத்தியாயம் - 3

மருத்துவ நிருவாகம்

3.1 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட இயக்ககங்கள்/வாரியம் செயல்படுகின்றன:

- மருத்துவக் கல்வி இயக்ககம் - உயர்நிலை மருத்துவ சேவை மற்றும் மருத்துவக் கல்வி வழங்குவது இதன் பொறுப்பாகும்.
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் - இரண்டாம்நிலை மருத்துவ சேவை மற்றும் உரிய அலுவலர் என்ற முறையில் ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்துவது இதன் பொறுப்பாகும்.
- பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம்- நோய்கள் பரவாமல் தடுத்தல் மற்றும் பொது சுகாதாரம் வழங்குவது இதன் பொறுப்பாகும்.
- இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம் - ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி ஆகியவை அடங்கிய ஆயுஷ் சேவை வழங்குவது இதன் பொறுப்பாகும்.
- குடும்ப நல இயக்ககம் - குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான செயல்பாடுகளில் கவனம் செலுத்துகிறது.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு நிருவாக இயக்ககம் - உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயத்தில் கவனம் செலுத்துவதோடு, தொடர்புடைய மத்திய அரசு சட்டங்கள்மூலம் மருந்து ஒழுங்குமுறை மற்றும் உரிமத்தையும், நிருவாகத்தையும் இரண்டு வெவ்வேறு துறைகளின்மூலம் செயல்படுத்துகிறது.
- தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை - மாநில சுகாதாரத் துறையின் வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் பேணிக் காத்தல் இதன் பொறுப்பாகும்.
- மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் - சுகாதாரத் துறையில் பல்வேறு பணியாளர்களை விரைவாகவும், வெளிப்படையாகவும் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

[2020 மார்ச் 24

இந்த இயக்ககங்கள் தவிர, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து கீழ் இயங்கும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்குத் தேவையான (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி-ESI) பணியாளர்களை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை வழங்குகிறது.

பிற திட்டங்கள் மற்றும் முயற்சிகள்

3.2 தேசிய நலவாழ்வுக் குழுமம் - மாநில நலவாழ்வுச் சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தமிழ்நாடு தேசிய பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய்த் தடுப்புத் திட்டம், தேசிய மனநலத் திட்டம், பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாட்டுத் திட்டம், நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம், பள்ளி சிறார் நலத் திட்டம் போன்ற பல்வேறு தேசியத் திட்டங்கள் இத்துறையின்கீழ் இயங்கும் இயக்ககங்கள் வாயிலாக செயல்படுத்தப்படுகின்றன.

3.3 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் நிறைவுபெற்ற நிலையில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன், நகர்ப்புற சுகாதாரச் சேவையை வலுப்படுத்தும் பொருட்டு, மாநில அரசு 1,634 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்திற்கு மொத்தம் 2,857 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி பங்களிப்புடன் நடைபெற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த குழுமங்கள், திட்டங்கள், செயல்முறைத் திட்டங்கள் குறித்து பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

மன்றங்கள் (Councils)

3.4 தமிழ்நாட்டில் தகுதியான மருத்துவம், செவிலியர் பணி மற்றும் மருத்துவம் சார்ந்த தொழிற்கல்வி பயின்றவர்கள் பதிவு செய்யவும், அவர்களின் சேவையை முறைப்படுத்தவும் பல்வேறு சட்டங்கள்மூலம் கீழ்க்கண்ட மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

i. தமிழ்நாடு மருத்துவ மன்றம்

ii. தமிழ்நாடு பல் மருத்துவ மன்றம்

iii. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் மன்றம்

2020 மார்ச் 24]

iv. தமிழ்நாடு மருந்தக மன்றம்

v. தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் (சித்தா மற்றும் மரபுவழி மருத்துவர்கள்)

vi. இந்திய முறை மருத்துவக் கழகம் (ஆயுர்வேதா, யுனானி மற்றும் யோகா மற்றும் இயற்கை வைத்தியம்)

vii. தமிழ்நாடு ஓமியோபதி மன்றம்

viii. முடநீக்கியல் நுட்புனர்

இந்த மன்றங்கள் அனைத்தும் மத்திய மற்றும் மாநில அரசுகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டப்படியான அமைப்புகள் ஆகும்.

மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் வகைப்பாடு

3.5 மாநிலத்தில் உள்ள பல்வகை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

i. அரசு-பொது மருத்துவ நிலையங்கள்: மாநில நிதியிலிருந்து பராமரிக்கப்படும் நவீன மருத்துவம் மற்றும் இந்திய முறை மருத்துவ நிறுவனங்கள் அனைத்தும் மாநில அரசால் நேரடியாக நிருவகிக்கப்படுகின்றன. இவை மருத்துவ சேவை வழங்குவதில் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. முதல் நிலையில், சராசரியாக 5,000 மக்கள்தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற முறையில் 8,713 துணை சுகாதார நிலையங்களும், அடுத்த நிலையில் சராசரியாக 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. மாநிலத்தில் ஆரம்ப சுகாதார சேவை நிலையங்களுக்குமேல், இரண்டாம்நிலை மற்றும் உயர்நிலை மருத்துவமனைகள் அமைந்துள்ளன. இது தவிர, மாநிலத்தில் சென்னை மாநகராட்சி உட்பட, நகரப் பகுதிகளில் 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், சென்னை மாநகராட்சியில் 15 சமுதாய சுகாதார மையங்களும் செயல்படுகின்றன.

ii. அரசு-சிறப்பு மருத்துவ நிலையங்கள்: பொதுமக்களுக்கு சிறப்புச் சேவைகளை அளிக்கும் அரசுத் துறைகளான காவல் துறை உள்ளிட்ட, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் கழகங்கள்/ நிறுவனங்கள் போன்றவற்றிற்கான

மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள் போன்ற சிறப்பு மருத்துவ நிலையங்கள். 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருத்துவமனைகள் மற்றும் 216 தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மருந்தகங்களும் இதில் அடங்கும்.

iii. உள்ளாட்சி அமைப்புகளின் கீழுள்ள மருத்துவ நிலையங்கள்: இந்த மருத்துவ நிலையங்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. இவைகளில் பெரும்பாலான நிலையங்களை அரசு எடுத்துக்கொண்டதால், தற்போது ஒரு சில இடங்களில் மட்டும் குறிப்பாக கிராமப்புறங்களில் மட்டும் உள்ளன. நகர்ப்புறத்தில் பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப முதல்நிலை மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

iv. நிதியுதவியுடன் இயங்கும் தனியார் மருத்துவமனைகள்: தனியார் பங்களிப்புடனும், அரசு நிதி உதவியுடனும் செயல்படும் தனியார் மருத்துவமனைகள்.

v. நிதியுதவியின்றி இயங்கும் தனியார் மருத்துவமனைகள்: தனி நபர்களாலும், நிறுவனங்களாலும் நடத்தப்படும் மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள்.

அத்தியாயம் - 4

மருத்துவக் கல்வி

4.1 சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஏழை மக்களுக்கு சர்வதேச தரத்திற்கு இணையாக தரமான சுகாதார சேவையை மேம்படுத்துவதில் தமிழக அரசு ஒரு முன்னோடி மாநிலமாகச் செயல்படுகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அமைப்பின்கீழ் இயங்கும் இயக்குநரகங்களில் ஒன்றாக மருத்துவக் கல்வி இயக்குநரகம் 1966 முதல் செயல்படுகிறது. இது முக்கியமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்/நிலையங்கள் மூலமாக உயர்சிறப்பு மருத்துவ வசதிகளை முன்நிறுத்தி செயல்பட்டு வருகிறது. இந்த இயக்குநரகம் நவீன மருத்துவத் துறையில், புதுமையான முறையில் கல்வி கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை வழங்க உறுதி

பூண்டுள்ளது. இவ்வியக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தேர்வுக் குழு மூலமாக மருத்துவம், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு, மாணவர்கள் சேர்க்கை நடத்தப்படுகிறது.

(2) நிருவாக அமைப்பு

4.2 இம்மருத்துவ கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கிவரும் மருத்துவக் கல்லூரிகள், மருத்துவம் சாரா மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் விவரங்கள் பின்வருமாறு:-

அரசு மருத்துவக் கல்லூரிகள்	24
அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை	1
அரசு மருந்தாளுநர் கல்லூரி (பி.பார்ம்.)	2
அரசு இயன்முறை மருத்துவக் கல்லூரிகள்	2
அரசு செவிலியர் கல்லூரிகள்	5
அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்	24
மருத்துவமனைகள் மற்றும் அதனோடு இணைந்த நிலையங்கள்	36
பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை	1
மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை	4
குழந்தைகள் மருத்துவமனை	1
கண் சிகிச்சை மருத்துவமனை	1
காசநோய் மருத்துவமனை	5
மனநல மருத்துவமனை	1
புனர் வாழ்வு மருந்துகள்	1
கிங் நிலையம்	1
மருந்தகங்கள்	13
மொத்தம்	122

[2020 மார்ச் 24

மேற்கண்ட அரசு மருத்துவக் கல்லூரிகள் முதல்நிலை மருத்துவமனைகள் மற்றும் பன்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை, முதல்வர் மற்றும் இயக்குநர் தலைமையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. இவைகளை நிருவகிக்கும் பொறுப்பு மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களைச் சார்ந்தது ஆகும்.

2019-2020 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் செயல்திறன்

படுக்கைகளின் எண்ணிக்கை	38,709
புறநோயாளிகள்	3,20,43,225
உள் நோயாளிகள்	1,20,24,088
பிரசவங்கள்	1,98,872
பெரிய அறுவை சிகிச்சைகள்	3,51,729
சிறிய அறுவை சிகிச்சைகள்	7,79,787
டயாலிசிஸ் செய்யப்பட்டது	2,01,695
சி.டி. ஸ்கேன்	7,86,755
அல்ட்ரா சோனோகிராம்	11,24,213
எம்.ஆர்.ஐ. ஸ்கேன்	1,13,264

4.3 தேர்வுக் குழு:

இவ்வியக்ககத்தின்கீழ் செயல்படும் தேர்வுக் குழுவால் ஒவ்வோர் ஆண்டும் அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பட்டப் படிப்பு, பல் மருத்துவப் படிப்பு, மருத்துவப் பட்ட மேற்படிப்பு, மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு, செவிலியர் பட்ட மேற்படிப்பு போன்ற பட்டப் படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

பல்வேறு பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் பின்வருமாறு:-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்★
1.	மருத்துவப் பட்டப் படிப்பு (M.B.B.S.)	3,400
2.	பல் மருத்துவப் பட்டப் படிப்பு (B.D.S)	100
3.	செவிலியர் பட்டப் படிப்பு (B.Sc. Nursing)	250
4.	பட்டயபின் செவிலியர் பட்டப் படிப்பு (Post Basic B.Sc. Nursing)	90
5.	கதிரியியல் மற்றும் கதிர்படத் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Radiology and imaging Technology)	170
6.	கதிர் சிகிச்சை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Radio therapy Technology)	30
7.	இயன்முறை சிகிச்சை பட்டப் படிப்பு (B.P.T.)	50
8.	இருதய சுவாச மேற்பரவல் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Cardio Pulmonary perfusion Technology)	15
9.	மருந்தாக்கியல் பட்டப் படிப்பு (B.Pharm and B.Pharm (Lateral Entry)) (120 + 12)	132
10.	செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நோய்க்குறியியல் பட்டப் படிப்பு (B.Sc. BASLP)	25
11.	கண் பரிசோதனைப் பட்டப் படிப்பு (Bachelor of Optometry)	60
12.	மருத்துவம் சார்ந்த படிப்புகள் (25 பிரிவுகள்)	8,031
13.	இருதய தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Cardiac Technology)	49
14.	தீவிர பாதுகாப்புத் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Critical Care Technology)	80

[2020 மார்ச் 24

வ. எண்	பட்ட/பட்டயப் படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்★
15	இரத்த சுத்திகரிப்பு தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. DialysisTechnology)	110
16	அறுவை அரங்கம் மற்றும் மயக்கவியல் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Operation Theatre and Anaesthesia Technology)	173
17	மருத்துவ உதவியாளர் பட்டப் படிப்பு (B.Sc. Physician Assistant)	120
18	சுவாசவியல் நோய் சிகிச்சைப் பட்டப் படிப்பு (B.Sc. Respiratory therapy)	40
19	செவிலியர் பட்டயப் படிப்பு (Diploma in Nursing)	2,060
20	மருந்தாக்கியல் பட்டயப் படிப்பு (Diploma in Pharmacy)	240
21	விபத்து மற்றும் அவசர சிகிச்சை தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Accident and Emergency Care Technology)	138
22	ஆய்வக தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (B.Sc. Medical Laboratory Technology)	140
23	தொழில் முறைப் பட்டப் படிப்பு (B.O.T.)	10

(*தொடர்புடைய குழுமங்களின் ஒப்புதலுக்கேற்ப ஆண்டுக்கு ஆண்டு இடங்களின் எண்ணிக்கை மாறுபடும்).

(iii) தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்வி நிலையங்களில் உள்ள பட்ட மேற்படிப்பு மற்றும் சிறப்புப் பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2020 மார்ச் 24]

வ. எண்	படிப்புகள்	சிறப்பு பிரிவுகளின் எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள்
1.	உயர் சிறப்பு மேற்படிப்புகள் (P.G. Degree (Medical Super Specialities) DM/ MCH)	19	334
2.	பட்டய மேற்படிப்பு (PG Diploma Medical)	1	3
3.	பல் மருத்துவப் பட்ட மேற்படிப்பு (MDS)	8	42
4.	பட்ட மேற்படிப்பு (P.G. Degree) (Medical Board Specialities M.D./M.S.) *	24	1,758
5	தேசிய வாரிய பட்ட மேற்படிப்பு (D.N.B.)	1	4
6	மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு (M.Pharm.)	4	62
7	செவிலியர் பட்ட மேற்படிப்பு (M.Sc. Nursing)	5	65
8	எம்.பில்., மருத்துவ சமூகப் பணி (Clinical Social Work)	1	15
9	எம்.எஸ்சி. அணுத்திறமம் நோய் நுண்ணியியல் (Molecular Virology)	1	21

* மேலும், இந்திய மருத்துவக் கழகம், 2020-2021-ம் கல்வி ஆண்டு முதல் கூடுதலாக 161 மருத்துவப் பட்ட மேற்படிப்பு (M.D./M.S.) இடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், 2 பிரிவுகளுக்கு இந்திய மருத்துவ கழகத்திடமிருந்து அனுமதி எதிர்நோக்கப்படுகிறது.

(iv) அரசு மருத்துவ நிலையங்கள் தவிர, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், அரசுக்கு ஒப்புவிப்பு செய்து அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கை விவரம் கீழ்வருமாறு:-

வ. எண்	கல்லூரிகள்	கல்லூரிகளின் எண்ணிக்கை	இடங்கள்*
1	மருத்துவக் கல்லூரி	14	1,052
2	பல் மருத்துவக் கல்லூரி	19	1,174
3	செவிலியர் பட்டப் படிப்பு கல்லூரி (B.Sc.,)	173	6,732
4	மருந்தாக்கியல் கல்லூரி (B.Pharm.,)	64	3,292
5	பட்டய படிப்பிலிருந்து மருந்தாக்கியல் பட்டப் படிப்பிற்கான கல்லூரி (Lateral Entry)	51	360
6	இயன்முறை சிகிச்சைப் பட்டயப் படிப்பு (BPT)	31	1,176
7	தொழில் வழி சிகிச்சைப் பட்டப் படிப்பு (BOT)	4	141
8	போஸ்ட் பேசிக் செவிலியர் கல்லூரி	49	1,023

(*சம்பந்தப்பட்ட குழுமங்களின் ஒப்புதலுக்கேற்ப, ஆண்டுக்கு ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை மாறுபடும்)

4.4 மருத்துவ சேர்க்கைக்கான கொள்கை மற்றும் தேசிய தகுதி நுழைவுத் தேர்வுக்கு எதிர்ப்பு:

தமிழ்நாடு அரசு, மருத்துவம் மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு சேர்க்கைக்கான தேசிய தகுதி நுழைவுத் தேர்வுக்கான எதிர்ப்பை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

2020 மார்ச் 24]

இந்திய மருத்துவக் குழுமம் மத்திய அரசு இதழில் மருத்துவம் மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு சேர்க்கைக்கான தேசிய தகுதி நுழைவுத் தேர்வு நடத்துவது தொடர்பாக முன்பு அறிவிக்கை வெளியிட்டிருந்தது.

மத்திய அரசு இதழில் 27-12-2010 அன்று இந்திய மருத்துவக் குழுமத்தால் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கு எதிராக தமிழக அரசு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் இரு வழக்குகளை (வழக்கு எண்கள் 341 மற்றும் 342/2011) தொடர்ந்தது. அவ்வழக்கில் மாண்புமிகு உயர் நீதிமன்றம் மேற்காணும் அறிவிக்கையை நடைமுறைப்படுத்த இடைக்கால தடையாணையை வழங்கியது. பிறகு, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் தமிழக அரசினுடைய வழக்குகளையும் (டி.சி.சி. எண்கள் 110 மற்றும் 111/2012) உள்ளடக்கி கீழமை நீதிமன்றங்களில் உள்ள அனைத்து நீட் தொடர்பான வழக்குகளும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன.

மேற்படி வழக்கில் (டி.சி.சி எண்கள் 98, 110 மற்றும் 111/2012 மற்றும் பல) மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 18-7-2013 அன்று அளித்த தீர்ப்பில் இந்திய மருத்துவக் குழும விதி, 1956-ன்படி இந்திய மருத்துவ குழுமத்திற்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினை நடத்தும் அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்திருந்தது. மேற்காணும் தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டாம் என்று தமிழக அரசு கோரிக்கை அளித்தது. ஆனால், இந்திய மருத்துவக் குழுமம் 18-7-2013 அன்று வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக சீராய்வு மனு (மறுபரிசீலனை மனுக்கள் (உரிமையியல்) எண் 2159-2268/2013) தாக்கல் செய்தது. 11-4-2016-ல் தீர்ப்பு வழங்கிய மாண்புமிகு உச்ச நீதிமன்றம், தான் முன்னர் 18-7-2013 அன்று வழங்கிய தீர்ப்பினைத் திரும்பப் பெற்று, மருத்துவத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினை நடத்துவதற்கு வழிவகை செய்தது. மேலும், இவ்வழக்கினை மீண்டும் புதியதாக விசாரணை செய்வதாகவும் உத்தரவிட்டது.

மருத்துவ சேர்க்கையில் மாநில அரசினுடைய உரிமையினை நிலைநாட்டவும் ஏற்கெனவே இருந்துவரும்

சேர்க்கை நடைமுறையினைத் தொடரவும் மருத்துவ அறிவியல் இளநிலை மற்றும் பல் மருத்துவ இளநிலை படிப்புகள் சட்டம் (சட்டமுன்வடிவு எண் 7/2017) மற்றும் தமிழ்நாடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவத்தில் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம் (சட்டமுன்வடிவு எண் 8/2017) ஆகிய இரு சட்ட முன்வரைவுகள் ஒருமனதாக தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டன. மேதகு தமிழ்நாடு ஆளுநரின் ஒப்புதலுடன் இந்த இரண்டு சட்ட வரைவுகள், இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுக் கூறு 254(2)-ன்படி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைக்கப் பெறாததால் இளநிலை மருத்துவ/பல் மருத்துவ இடங்களை மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு 85% மீதமுள்ள 15% இடங்களை பிற பாடத் திட்டங்கள் படித்த மாணவர்களுக்கு ஒதுக்கி 2017-2018 இளநிலை மருத்துவ/பல் மருத்துவ சேர்க்கைக்கான குறிப்பேட்டில் அரசு ஆணையின்படி சேர்க்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட அரசு ஆணை மாண்புமிகு உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு (டி.சி.சி. எண்கள் 98, 110 மற்றும் 111/2012 மற்றும் பல) விசாரணையின்போது 12-12-2019 அன்று மேற்காணும் வழக்கினைத் திரும்பப்பெறும் உரிமையுடன் இந்திய மருத்துவக் குழுமம் விதி 1986 பிரிவு 10D-க்கு எதிராக சட்டத்திற்கு உட்பட்டு வழக்குத் தொடரலாம் என்று ஆணையிட்டது. மேலும், தமிழக அரசு தொடர்ந்த வழக்குகள் (டி.சி.சி. எண்கள் 110 மற்றும் 111/2012) வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்/தேசிய தேர்வு முகமை மற்றும் தமிழகத்தில் பின்பற்றப்படும் மாநில பாடத் திட்டம் ஆகியவற்றின் கற்பிக்கும் முறை, கற்பிக்கும் மொழி மற்றும் பாடத் திட்டங்கள் முழுவதும் வேறுபட்டுள்ளதால், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்/தேசிய தேர்வு முகமை, அவர்களின் சொந்தப் பாடத் திட்டத்தில் பொதுவான நுழைவுத் தேர்வு நடத்தப்படக்கூடாது. மேலும், பெரும்பான்மையான மாணவர்கள் கிராமப்புற

2020 மார்ச் 24]

பின்புலத்தில் இருந்து வந்து மாநிலப் பாடத் திட்டத்தின் வட்டார மொழியில் அதாவது தமிழில் படித்தவர்கள். ஆனால், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு, மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்/இந்தியப் பள்ளி சான்றிதழ் தேர்வுகள் அல்லது வேறு பாடத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படுகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டின் கிராமப்புற மாணவர்களுக்குப் பாதகமான சூழல் உருவாகிறது.

எனவே, தமிழக அரசு, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் 4-1-2020 அன்று தேசிய தகுதி நுழைவுத் தேர்வு நடத்துவதை எதிர்த்து கூடுதல் காரணங்களுடன் வழக்கு தொடர்ந்துள்ளது. தமிழக அரசு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை, கொள்கை அடிப்படையிலும் மற்றும் அனைத்து சட்ட வழிமுறைகளின்படியும் எதிர்த்து வருகிறது.

4.5 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் மருத்துவப் பட்ட மேற்படிப்பு இடங்களை அதிகரித்தல்:

மத்திய அரசு ஆதரவுத் திட்டம் - பகுதி III–ன்கீழ் (Centrally Sponsored Scheme–Phase III) புதிய மருத்துவக் கல்லூரிகளை ரூ.325 கோடி செலவில் (60:40) விகிதாச்சார அடிப்படையில் கீழ்க்கண்ட 11 மாவட்டங்களில் மத்திய அரசு புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மத்திய அரசு திட்டத்தின்கீழ் 100 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கை இருந்தாலும் மாநில அரசு கூடுதலாக 50 எம்.பி.பி.எஸ். மாணவர்கள் சேர்க்கை ஏற்படுத்தி அதற்குண்டான கூடுதல் செலவினத்தை தமிழ்நாடு அரசே ஏற்கும்.

மேற்கண்ட திட்டத்தின்படி எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கை 2022-2023-ல் தொடங்க ஆவன செய்து இருந்தாலும், மாநில அரசு 2021-2022 ஆம் கல்வி ஆண்டு முதல் எம்.பி.பி.எஸ். மாணவர் சேர்க்கையைத் தொடங்கும்.

[2020 மார்ச் 24

மாவட்டங்களின் பெயர்கள்

1) இராமநாதபுரம்	7) திருவள்ளூர்
2) விருதுநகர்	8) கிருஷ்ணகிரி
3) நீலகிரி	9) நாகப்பட்டினம்
4) திண்டுக்கல்	10) அரியலூர்
5) நாமக்கல்	11) கள்ளக்குறிச்சி
6) திருப்பூர்	

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட 3,400 எம்.பி.பி.எஸ். மாணவர் இருக்கைகளுடன் கூடுதலாக 1,650 (150 x 11 = 1,650) எம்.பி.பி.எஸ். இடங்கள் அரசுக்குக் கிடைக்கும்.

4.6 அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்:

அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம், சென்னை, அரசு பொது மருத்துவமனையில் 1-3-2016 முதல் அறிமுகம் செய்யப்பட்டு பல்வேறு தொகுப்புகளுடன் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த செலவினத்தில் மேற்கண்ட திட்டம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கணிசமாக அதிகரித்துக் கொண்டே வருவதோடல்லாமல், இதுவரை 43,065 நபர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் பரிசோதனை மற்றும் கட்டண விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

2020 மார்ச் 24]

தொகுப்பு – 1 (ரூ.1,000/-)	**தொகுப்பு – 2 (ரூ.2,000/-)**	**தொகுப்பு – 3 (ரூ.3,000/-)**
முழு, இரத்த பரிசோதனை, இ.எஸ்.ஆர்., சிறுநீரக பரிசோதனை, இரத்த சர்க்கரை அளவு பரிசோதனை, சிறுநீரக செயல்பாடு அறியும் பரிசோதனை, இரத்த கொழுப்பு பரிசோதனை, கல்லீரல் செயல்பாடு பரிசோதனை, ஹெப்படைடிஸ்-பி இரத்த பரிசோதனை, இரத்த வகை மற்றும் ஆர்.எச். பரிசோதனை, நெஞ்சக சுருள் படம் (இ.சி.ஜி.), நெஞ்சு ஊடுகதிர் படம், மிகையொலி பரிசோதனை, கருப்பை முகைப் பரிசோதனை	தொகுப்பு ஒன்றுடன் கூடுதலாக இதய மீள் ஒலி பரிசோதனை, தைராய்டு இரத்த பரிசோதனை, மற்றும் சர்க்கரை நோய் சிறப்பு பரிசோதனை, பிஎஸ்ஏ (பிராஸ்டேட் ஆண்டிஜன் செய்யப்படும்)	தொகுப்பு இரண்டுடன் கூடுதலாக கருப்பை முகைப் பரிசோதனை, மார்பக எண்ணியல் ஊடு கதிர்ப்பட பரிசோதனை, எலும்பு திறனாய்வுப் பரிசோதனை, இரத்த வைட்டமின் டி, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் பாரா தைராய்டு ஹார்மோன் பரிசோதனை ஆகியவை செய்யப்படும்.

அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 1) தங்கம் ரூ.1,000/- 2) வைரம் ரூ.2,000/- மற்றும் 3) பிளாட்டினம் ரூ.3,000/- தொகுப்புகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8-6-2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகுப்புகளுடன் கூடுதல் தொகுப்பாக அம்மா

[2020 மார்ச் 24

பிளாட்டினம் பிளஸ் தொகுப்பு–4, ரூ.4,000/- செலவில், 7-6-2019 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

அம்மா பிளாட்டினம் பிளஸ் தொகுப்பு–4 - ரூ.4,000/-	தொகுப்பு–3 மேலே குறிப்பிட்டுள்ளபடி பிளஸ் விஷன் சோதனை, கிலைக்கோமா சோதனை, பயனற்ற பிழைகள் சோதனை. விழித்திரை சோதனை வண்ணப் பார்வை சோதனை, டிரெட்மில் நுரையீரல் செயல்பாட்டு சோதனை.

ஓமந்தூரார் மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டத்தில் 18,257 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

4.7 லீனியர் ஆக்ஸிலரேட்டர் மற்றும் பெட் சி.டி. ஸ்கேன்

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசுப் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் ரூ.29.50 கோடி மதிப்பீட்டிலும், அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் ரூ.26.21 கோடி மதிப்பீட்டிலும் புதிய கதிர்வீச்சு துறை மற்றும் லீனியர் ஆக்ஸிலரேட்டர் (லினாக்) கருவி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஒரு பெட் சி.டி. ஸ்கேன் நிறுவப்பட்டுள்ளது.

அத்தியாயம் - 5

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

5.1 தமிழ்நாட்டில் இரண்டாம்நிலை மருத்துவ சேவைகளைச் செயல்படுத்துவது மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் இயக்குநர் அவர்களின் பொறுப்பாகும். மேற்கண்ட சேவைகளை 29 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 206 வட்ட மருத்துவமனைகள், 67 வட்டம் சாரா மருத்துவமனைகள், 7 மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள், 11 அரசு மருந்தகங்கள், 2 காசநோய் மருத்துவமனைகள், 7 தொழுநோய் மருத்துவமனைகள் மற்றும் 1 அரசு மனநல மருத்துவமனை மற்றும் மறுவாழ்வு மையம் வழியாக வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

மருத்துவ சேவை அமைப்பில் வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் முதல்நிலை பரிந்துரை மையங்களாகவும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், இரண்டாம்நிலை பரிந்துரை மையங்களாகவும் செயல்படுகின்றன. 104 ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு (CEmONC) மையங்கள், 110 பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையங்கள் (NBSU) மற்றும் 49 நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU) மகப்பேறு மற்றும் குழந்தை நல்வாழ்வினை மேம்படுத்த மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும் 55 தாய் நிலையங்கள் வழியாக அவசரகால மருத்துவ சேவைகள் அளிக்கப்படுகின்றன.

5.2 ஆரம்பநிலை மற்றும் உயர்நிலைக்குப் பாலமாக மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம் விளங்குகிறது. மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனை/ வட்ட மருத்துவமனை/வட்டம் சாரா மருத்துவமனைகளால் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சேவைகள்
- பேறுகால முன்கவனிப்பு மற்றும் பேறுகால பின்கவனிப்புச் சேவைகள்
- 24 மணி நேர ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு (CEmONC) மையங்கள்
- பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையங்கள் (NBSU)
- நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (SNCU)
- பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை மையம் (NICU)
- மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேறு மற்றும் மகளிர் நலம், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை, பால்வினை நோயியல், எலும்பு முறிவு, மயக்கவியல், குழந்தை நலம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், அவசரகால ஊர்தி சேவை, ஆய்வுக்கூட சேவை, தொழுநோய், காசநோய், நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்.
- தொற்றா நோய்
- விபத்து மற்றும் அவசர சிகிச்சை
- குடும்ப நலம்

- ❖ தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்
- ❖ கண்பார்வை இழப்பு கட்டுபாட்டுத் திட்டங்கள்
- ❖ காது கேளாமை தடுப்புத் திட்டம்
- ❖ மாவட்ட மன நலத் திட்டம்
- ❖ தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டம் (TAEI)
- ❖ விஷமுறிவு சிகிச்சை
- ❖ மதுபோதை மறுவாழ்வுப் புனரமைப்பு மையம்
- ❖ புற்றுநோய் சிகிச்சை சேவை
- ❖ வலி மற்றும் நோய் ஆதரவு சிகிச்சை மையம்

5.3 மருத்துவமனை மேலாண்மை தகவல் திட்டத்தின் மூலமாக மருத்துவ சேவைகளின் செயல்பாடு இயக்குநரகத்தால் கண்காணிக்கப்பட்டு தரம் மேம்படுத்தப்படுகிறது.

5.4 நிருவாக அமைப்பு

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர்		
கூடுதல் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (மருத்துவம்) - (திட்டம் (ம) வளர்ச்சி) - (ஆய்வுக் குழு) - (காசநோய்) (தொழுநோய்) - (நிருவாகம்) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர்கள் (மருத்துவம்) (சீமாங்) (சட்டம் (Act)) (தொற்றாநோய்) (காசநோய்)		
நிதிக் கட்டுப்பாட்டாளர்		
இணை இயக்குநர் நலப் பணிகள்		• மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் • வட்ட மருத்துவமனைகள் • வட்டம் சாரா மருத்துவமனைகள் மருந்தகங்கள் • மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகள் • காசநோய் மருத்துவமனைகள்/ மருந்தகங்கள் • தொழுநோய் மருத்துவமனைகள்

2020 மார்ச் 24]

நிதிக் கட்டுப்பாட்டாளர்		
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல துணை இயக்குநர்		மாவட்டக் குடும்ப நலத் திட்டம்
மருத்துவப் பணிகள் துணை இயக்குநர் (காசநோய்)		மாவட்டக் காசநோய் கட்டுப்பாடுத் திட்டம்
மருத்துவப் பணிகள் துணை இயக்குநர் (தொழுநோய்)		தொழுநோய் கட்டுப்பாடுத் திட்டம்

அத்தியாயம் - 6

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

'பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து சமுதாயத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சிகள்மூலம் நோய்களைத் தடுத்து, ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.'

6.1 தேசிய அளவில் 1923 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் முதலாவதாக தொடங்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம், மேற்சொன்ன பணிகளைச் செய்து மக்களின் நலனைக் காத்தும், மேம்படுத்தியும் வருகிறது. தொற்று நோய்கள் மற்றும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், தடுப்பூசி உள்ளடக்கிய சமூகம் சார்ந்த மகப்பேறு மற்றும் குழந்தை நலச் சேவைகளை வழங்குதல் மற்றும் குடும்ப நலம் ஆகிய மூன்றும் இந்த இயக்ககத்தைச் சார்ந்த முக்கிய நடவடிக்கைகள் ஆகும்.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, பொது மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை, 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளடங்கிய 423 மேம்படுத்ததப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளடங்கிய பெருநகர சென்னை மாநகராட்சியில்

உள்ள 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக வழங்கி வருகின்றன. மேலும் இத்துறையின்கீழ் முதல்நிலை சேவை மையங்களாக 8,713 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

6.2 இந்த இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட அமைப்புகள் செயல்படுகின்றன

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை	
துணை சுகாதார நிலையங்கள்	8,713
கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,806
நகர்ப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்	460
சமுதாய சுகாதார நிலையங்கள்	385
மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்	423
மாவட்டங்கள்	37
சுகாதார மாவட்டங்கள்	43
இதர நிலையங்கள்	
மண்டல பூச்சியியல் குழுக்கள்	9
மாவட்டப் பொது சுகாதார ஆய்வகங்கள்	31
தேசிய யானைக்கால் நோய்த் தடுப்பு நிலையங்கள்	6
யானைக்கால் மற்றும் மலேரியா சிகிச்சை நிலையங்கள்	42
ஜப்பானிய மூளைக் காய்ச்சல் கட்டுப்பாட்டு நிலையங்கள்	3
நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள்	4
பிராந்திய தடுப்பூசி சேமிக்கும் நிலையங்கள்	4
பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையங்கள்	7
துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள்	11

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

6.3 நிருவாகக் கட்டமைப்பு

இயக்குநர்

↓

கூடுதல் இயக்குநர்கள்

↓

இணை இயக்குநர்கள் (திட்டங்கள்)

↓

நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்
பணியாளர் அலுவலர் மற்றும் இணை இயக்குநர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை மற்றும் நிருவாகம்)

↓

- துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
- மண்டல பூச்சியியல் வல்லுநர்கள்
- முதல்வர்கள், மண்டல பயிற்சி நிலையங்கள் மற்றும் துணை செவிலியர் பள்ளிகள்
- நல அலுவலர்கள்


↓

- வட்டார மருத்துவ அலுவலர்கள்
- மருத்துவ அலுவலர்கள்
- ஆரம்ப சுகாதார நிலைய மற்றும் சுகாதார களப் பணியாளர்கள்
- கிராம சுகாதார செவிலியர்கள்
- சுகாதார ஆய்வாளர்கள்

6.4 2019 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மதிப்பிடப்பட்ட மக்கள்தொகை 8.15 கோடியாகும். சென்னை மாநகராட்சியுடன் சேர்த்து 43 சுகாதார மாவட்டங்கள் அமைந்துள்ளன.

2017 ஆம் ஆண்டு மாதிரிப் பதிவு முறையின்படி, மாநிலத்தின் மொத்த கருவள விகிதம் மிகக் குறைந்த 1.6 ஆகவும் குழந்தை இறப்பு விகிதம் 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 16 எனவும் உள்ளது.


6.5 **குழந்தை இறப்பு விகிதம்:** மாதிரிப் பதிவு முறையின்படி, 2017-ம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம், உயிரோடு பிறக்கும் 1,000 குழந்தைகளுக்கு 16 ஆக உள்ளது. தமிழ்நாடு குழந்தை இறப்பு விகிதம் நாட்டிலேயே குறைந்த அளவில் உள்ள மாநிலங்களில் இரண்டாம்நிலை வகிக்கிறது. குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்திட பச்சிளம் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்ற பன்முகத்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளைத் தமிழ்நாடு மேற்கொண்டு வருகிறது. உரிய நடவடிக்கைகள்மூலம் குழந்தை இறப்பு தடுக்கக்கூடிய காரணிகள் அனைத்தையும் அகற்ற வேண்டியதே குறிக்கோளாகும். 2023 ஆம் ஆண்டுக்குள் குழந்தை இறப்பு விகிதத்தை 10-க்கும் குறைவாகக் குறைப்பதென தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது.



ஆதாரம்: மாதிரி பதிவு முறை

தாய்மார்கள் இறப்பு விகிதம்:

மாதிரிப் பதிவு முறையின்படி (2015-2017) மாநிலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 63 ஆக குறைக்கப்பட்டுள்ளது மற்றும் மாநில அளவிலான ஆவணங்களின்படி 2019-2020 ஆம் ஆண்டில் 55 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 100 சதவித நிலையம் சார்ந்த பிரசவங்கள் மற்றும் முதல் மூன்று மாதத்திற்குள் 94.4 சதவிகித கர்ப்பத்தைப் பதிவிடும் மாநிலமாகவும் தமிழகம் உள்ளது.



திறன்வாய்ந்த மருந்து பகிர்ந்தளிப்பு நடைமுறை தமிழகத்தில் உள்ளதால் மருத்துவ தனிநபர் செலவுகள் பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில்தான் மிகவும் குறைவாக உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவக் குழுக்கள், பள்ளி சுகாதார குழுக்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் மாநிலம் முழுவதும் கிராமப்புறங்களை மையப்படுத்தி மருந்துகளைச் சமச்சீராக பகிர்ந்தளிப்பதால் இது சாத்தியமானது.

6.6 தேசிய சுகாதாரக் குழுமத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் இணைந்து, மாநில அரசின் பின்வரும் சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன:

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்
- ஒருங்கிணைந்த அவசர பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு சேவைகள்
- வட்டார அளவிலான அவசர பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு சேவைகள்
- மகப்பேறு காலத்தில் உறவினர் ஒருவர் உடனிருத்தல் திட்டம்
- அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24x7 மணி நேர மகப்பேறு சேவை
- மகப்பேறு காத்திருப்பு அறைகள்
- எளிதில் இரத்தம் கிடைக்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ள இரத்த வங்கி மற்றும் இரத்த சேமிப்பு நிலையங்கள்
- மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்
- அம்மா குழந்தை நலப் பாிசுப் பெட்டகம்
- அம்மா மகப்பேறு சஞ்சீவினி
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்குதல்

6.7 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஊரகப் பகுதி

தமிழ்நாட்டில் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு நோய்த் தடுப்பு மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்திட 385 ஊராட்சி ஒன்றியங்களில் 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை 1,715 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 91 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 24X7 மணி நேர பிரசவ சேவை விரிவாக்கம் செய்ய தேசிய நலவாழ்வு குழுவிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

நகரப் பகுதி

அனைத்து 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்பட்டு வருகின்றன. 24 மணிநேர மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

6.8 துணை சுகாதார நிலையங்கள்: துணை சுகாதார நிலையம் பொது சுகாதாரத் துறைக்கும் சமுதாயத்திற்கும் முதல் தொடர்பு மையமாக இருந்து வருகிறது. சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள்தொகைக்கும், மலைப் பகுதிகளில் 3,000 மக்கள்தொகைக்கும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திலும் தாய்மை துணை செவிலியர் எனப்படும் கிராம சுகாதார செவிலியர் பணிபுரிகின்றார். 3 துணை சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆண் சுகாதாரப் பணியாளரும் பணிபுரிந்து வருகின்றார். ஒரு துணை சுகாதார நிலையம் சராசரியாக 13.49 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. துணை சுகாதார நிலையங்கள் கிராமப்புற மக்களுக்கு தாய்-சேய் நலப் பணிகள் மற்றும் குடும்ப நலப் பணிகளை வழங்குகிற பொது சேவை மையமாக விளங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையங்களுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய சுகாதார நிலையங்கள், நடமாடும் மருத்துவமனைகள் மற்றும் பள்ளி நல்வாழ்வுக் குழுக்கள் உதவிபுரிகின்றன.

6.9 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்

ஊரகப் பகுதி

தற்போது 1,715 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 91 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகை/வாடகையில்லா கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

நகரப் பகுதி

தற்போது 317 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகையில்லா கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

6.10 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

அரசின் கொள்கைப்படி, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்த படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதி கொண்ட

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நவீன கருவிகளான அல்ட்ரா சோனோகிராம், இ.சி.ஜி., செமி ஆட்டோ அனலைசர் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆய்வக வசதிகள் உள்ளன. தற்போது 423 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

6.11 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்கப்பட்டு வரும் சேவைகள்:

(1) புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் சேவை, பேறுகால முன்கவனிப்பு, பிரசவம் மற்றும் பேறுகால பின்கவனிப்பு, குடும்ப நல சேவைகள்

(2) தொற்று நோய்களான வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் இதர தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளித்தல்

(3) சமுதாயம் சார்ந்த தாய்-சேய் நல சேவைப் பணிகள்

(4) தொற்று நோய்களைத் தடுத்தலும், கட்டுப்படுத்துதலும்

(5) தொற்றா நோய்களான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கான பரிசோதனை மற்றும் தொடர் நடவடிக்கைகள்

(6) பள்ளி நலக் கல்வி பணிகள் – பிறவிக் குறைபாடு, தாமத வளர்ச்சி, ஊட்டச்சத்து பற்றாக்குறை, மற்ற நோய்கள் போன்ற நான்கு வகையான நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளித்தல். இது குழந்தையின் தரமான நல்வாழ்விற்கும் நீண்ட ஆயுளுக்கும் பெரிதும் உதவிபுரிகிறது.

(7) பல்வேறு தேசிய நல்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவையாவன:

1. பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்
2. அனைவருக்கும் தடுப்பூசித் திட்டம்
3. தேசிய குடும்ப நலத் திட்டம்
4. தேசிய இரத்தசோகை நோய் தடுப்புத் திட்டம்
5. தேசிய அயோடின் குறைபாடு தடுப்புத் திட்டம்
6. தேசிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத் திட்டம்

2020 மார்ச் 24]

7. தேசிய பூச்சிகளால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம்
8. தேசிய வயிற்றுப்போக்கு நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம்
9. தேசிய காசநோய் தடுப்புத் திட்டம்
10. தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்
11. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்
12. ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத் திட்டம்
13. தேசிய பார்வை இழப்பு கட்டுப்பாட்டுத் திட்டம்
14. தேசிய புளோரோஸிஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்
15. தேசிய காது கேளாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்
16. தேசிய வைட்டமின் "ஏ" பற்றாக்குறை நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்
17. தேசிய புகையிலைக் கட்டுப்பாட்டுத் திட்டம்
18. தேசிய ஊரக நல்வாழ்வுக் குழுமத் திட்டங்கள்

8) முகாம்கள் மற்றும் களப் பணிகள்

1. போலியோ சொட்டு மருந்து முகாம்கள்
2. மிஷன் இந்திரதனுஷ் தடுப்பூசி முகாம்கள்
3. வயிற்றுப்போக்கு கட்டுப்பாடு முகாம்கள்
4. தேசிய குடற்புழு நீக்கும் திட்ட முகாம்கள்
5. வைட்டமின் "ஏ" திட்ட முகாம்கள்
6. கிராமப்புறங்களில் செயல்படுத்தும் சிறப்பு மருத்துவ முகாம்கள்
7. காய்ச்சலுக்கான சிகிச்சை முகாம்கள்
8. பள்ளி நலக் கல்வி முகாம்கள், சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்

[2020 மார்ச் 24

6.12 ஒருங்கிணைந்த நலவாழ்வு சேவைகள்; அனைவருக்குமான நலவாழ்வுத் திட்டம்

2016 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக (Pilot Project) பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 3 சுகாதார மாவட்டங்களிலும் முறையே வேப்பூர், சூளகிரி, விராலிமலை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 67 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் (வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் ஒரு சுகாதார மாவட்டத்திற்கு ஒரு வட்டம் என்ற விகிதத்தில், 39 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்தத் திட்டம் ரூ.2,474.07 இலட்ச நிதி உதவியோடு விரிவுபடுத்தப்பட்டது. அனைவருக்குமான நலவாழ்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது, ஒருங்கிணைந்த சுகாதார சேவைகளை மக்களின் வீட்டின் மிக அருகாமையில் வழங்குவதன்மூலம் அவர்களின் தனிமனித செலவினைக் குறைப்பதேயாகும். மேலும், இத்திட்டம் மக்களின் நீண்டகால சுகாதாரத் தேவைகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தில் அத்தியாவசிய சேவைகளான நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்த் தணிப்புச் சேவைகள் முழுமையாகவும், தரமாகவும் வழங்கப்படுகிறது. துணை சுகாதார நிலையங்களை வலிவுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். உலகளாவிய நலவாழ்வுத் திட்டத்தை நமது அரசாங்கம் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் மூலமாக மக்கள் பயன்பெற வழங்கி வருகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் 985 துணை சுகாதார நிலையங்கள், 716 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 214 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மத்திய அரசின் ஆதரவுடன் ரூ.9,357.47 இலட்ச (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) நிதி உதவியோடு அரசின் அறிவிப்புக்கு ஏற்ப நலவாழ்வு மையங்களாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில், 668 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 246 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மத்திய அரசின் ஆதரவுடன் ரூ.13,573.64 இலட்சம் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) நிதி உதவியோடு நலவாழ்வு மையங்களாக மாற்றப்படும்.

2020 மார்ச் 24]

தமிழ்நாட்டில் சுகாதாரம் மற்றும் நல மேம்பாட்டு நலவாழ்வு மையங்களாக மாற்றப்படுவதற்கான வழித்தடத் திட்ட அட்டவணை:

ஆண்டு	துணை சுகாதார நிலையங்கள்	கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்	மொத்தம்
2017-2018	67	14	-	81
2018-2019	918	702	214	1,834
2019-2020	796	668	246	1,710
2020–2021	667	-	-	667
மொத்தம்	2,448	1,384	460	4,292

6.13 அனைவருக்கும் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சுகாதார நலவாழ்வு சேவைகள்:

நலவாழ்வு மையங்களில் 12 விதமான ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. அவைகள் நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்த் தணிப்பு சேவைகளுக்கு தொடர்புடைய பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங்குழந்தை, குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம் (RMNCH+A), தொற்றுநோய்த் தடுப்பு, தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பல் பராமரிப்பு, மனநலம், முதியோர்கள் பராமரிப்பு, சிறுநோய் சிகிச்சை மற்றும் அவசர முதலுதவி சிகிச்சைகள், விபத்து மற்றும் அவசரகால சேவைகளாகும்.

தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்த நலவாழ்வு மையங்கள் (HWC) மிக முக்கியப் பங்கு வகிக்கும்.

6.14 நடமாடும் மருத்துவமனைத் திட்டம்: 2011-2012 ஆம் நிதியாண்டில் எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு நடமாடும் மருத்துவமனைத் திட்டம் துவங்கப்பட்டது. தற்சமயம் இத்திட்டத்தின்கீழ் 416 நடமாடும் மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நடமாடும்

[2020 மார்ச் 24

மருத்துவக் குழுவிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஓர் ஆய்வக நுட்புனர், ஓர் ஓட்டுநர் மற்றும் ஒரு துப்புரவு உதவியாளர் ஆகியோர் பணிபுரிகின்றனர். இரத்தம், சிறுநீர், சர்க்கரை வியாதி போன்ற பரிசோதனைகளைச் செய்ய சிறந்த தொழில்நுட்ப வசதிகள்கொண்ட ஆய்வகத்துடன் இயங்கி வருகின்றது. இந்த நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தின்மூலம் தொலைதூர கிராமங்களுக்கு உயர்ந்த மருத்துவ சேவை வழங்குவதுடன், சிறந்த தாய்-சேய் நலன், தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் நிரந்தர பயணத் திட்டத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றது. முகாம் நடைபெறும் இடத்தில் நாள், நேரம் குறித்த அறிவிப்பு பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்படுகின்றது. நிரந்தரப் பயண திட்டத்தின்படி ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் மாதம் ஒன்றிற்கு 40 முகாம்கள் வீதம் நடத்தப்பட்டு வருகிறது. அதிக இடர்பாடுடைய தற்காலிக குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஒரு மாத காலத்திற்கான மருந்துகள் வழங்கப்படுகிறது.

மேலும், 10 மாநகராட்சிகளில் நடமாடும் மருத்துவமனை திட்டம் ரூ.268.82 இலட்சம் செலவில் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது (5 வாகனங்கள் சென்னை மாநகராட்சிக்கும், தலா ஒரு வாகனம் திருப்பூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சி ஆகிய மாநகராட்சிகளுக்கும்). மேலும், கட்டுமானத் துறை தொழிலாளர்களுக்கு தரமான மருத்துவ சேவை வழங்க ரூ.16.398 கோடி செலவில் 50 நடமாடும் மருத்துவமனை வாகனங்கள் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

2011-2012 முதல் 2017-2018 வரை 13.2 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு 8.75 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர். 2018-2019 ஆம் ஆண்டில் 2.08 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு 1.78 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 2019-2020 (ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை) நிதியாண்டில் 1.72 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு 1.47 கோடி மக்கள் பயனடைந்துள்ளனர்.

6.15 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:

ஏழை கர்ப்பிணித் தாய்மார்களின் ஆரோக்கியத்தையும் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்துதல், கர்ப்ப காலத்தில் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்தல், குறைந்த

2020 மார்ச் 24]

எடையுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடுத்தல் போன்ற உயரிய நோக்கங்களுக்காக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதியுதவி 1-4-2018 முதல் 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக ஏற்கெனவே மாநில அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. கர்ப்பிணி பெண்களின் இரத்தசோகையைக் குறைத்திடவும், பச்சிளம் குழந்தையின் பிறப்பு எடை அதிகரிக்கவும் தேவையான இரும்புச்சத்து மருந்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய இரண்டு அம்மா தாய்-சேய் நலப் பெட்டகங்கள் மூன்றாம் மற்றும் நான்காம் மாதத்தில் வழங்க இந்த நிதியுதவித் தொகையிலிருந்து 4,000 ரூபாய் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சிறப்பான திட்டத்திற்கு 2019-2020 ஆண்டிற்கு ரூ.957.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்டத்தின் செயல்பாடு

ஆண்டு	நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)	கர்ப்பிணிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
2011–2012	660.00	515.11	6,73,093
2012-2013	716.77	639.54	6,70,313
2013-2014	716.77	652.16	6,63,623
2014-2015	667.00	658.75	6,65,240
2015-2016	667.00	621.77	6,35,225
2016-2017	667.00	609.37	6,49,904
2017-2018	675.00	640.68	7,14,718
2018-2019	957.87	895.79	7,06,792
2019-2020 நாள் 10-3-2020 வரை	957.87	842.25	7,38,519
மொத்தம்	6,685.28	6,075.42	61,17,427

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

6.16 குழந்தைகளுக்கான குடற்புழு நீக்கும் திட்டம்

தமிழக அரசு, இந்திய அரசுடன் ஒருங்கிணைந்து, தேசிய குடற்புழு நீக்கும் திட்டத்தின்மூலம் 1 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரைகள் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 1 முதல் 14 வயதுடைய குழந்தைகள், 68 சதவீத குழந்தைகள் சுகாதாரமற்ற சூழல் மற்றும் பழக்க வழக்கங்களினாலும், மண்மூலம் பரவும் புழுக்களினாலும் தொற்று ஏற்படக்கூடிய அபாய நிலையில் உள்ளனர். அதாவது, மண்மூலம் பரவும் குடற்புழுக்களான ஆஸ்காரிஸ் புழு, கொக்கி புழு, சாட்டை புழு மற்றும் பல புழுக்கள்மூலம் குழந்தைகள் மண்ணைத் தொடும்போது வெகுஎளிதில் நோய் தொற்றுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளிக்குட்பட்டு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்குதல், சுத்தமான குடிநீர், சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்துதல், சுகாதாரக் கல்வி போதித்தல், வாழ்க்கை முறைகளை மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளால், மண்மூலமாக பரவும் குடற்புழு தொற்றினால் ஏற்படும் பாதிப்புகளை வெகுவாகக் குறைக்கலாம்.

குழந்தைகள் ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கும், கல்வித்திறன் அதிகரிக்கவும், நாடு தழுவிய குடற்புழு நீக்கம் முதல் முறையாக 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் தேசிய குடற்புழு நீக்கம் தினம் பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்டு 16-ல் கடைப்பிடிக்கப்பட்டு, இதன்மூலம் 2.01 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்.

2019 ஆம் ஆண்டு இத்திட்டம் பிப்ரவரி 8 ஆம் நாள் மற்றும் விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் பிப்ரவரி 14 ஆம் நாள் நடத்தப்பட்டது. இதன்மூலம் 2.20 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்.

2019 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக ஆகஸ்டு 8 ஆம் நாள் வியாழக்கிழமை அன்றும் விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் ஆகஸ்டு 16 ஆம் தேதி அன்றும் நடத்தி முடிக்கப்பட்டது. இதன்மூலம் 2.19 கோடி குழந்தைகள் பயனடைந்தனர்.

இத்திட்டத்தில் மூன்று துறைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

2020 மார்ச் 24]

- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
- பள்ளிக் கல்வித் துறை
- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் (ICDS)

வெற்றிகரமாக தமிழகத்தில் குடற்புழு நீக்கும் திட்டம் ஆண்டிற்கு இருமுறை நடத்தப்படுவதால் ஊட்டச்சத்து குறைபாடு இரத்தசோகையைக் கட்டுப்படுத்துவதிலும் இது உதவிகரமாக அமையும்.

1. செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2016 வரை - 3,43,143
2. ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2017 வரை - 5,40,125
3. ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை - 4,48,297
4. ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை - 4,38,828
5. ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை - 4,23,974

6.17 அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம்:

பேறுகாலத்திற்குப் பின் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் சிசுக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தாய்க்கும் சேய்க்குமான ஆரோக்கியமான பழக்கங்களைத் தாய்மார்களிடையே ஏற்படுத்தவும் இந்தப் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொலைநோக்கான மற்றும் முன்னோடியான இத்திட்டம், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 12-8-2014 அன்று அறிவிக்கப்பட்டு, 8-9-2015 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. குழந்தைகளுக்கான துண்டு, உடை, படுக்கை, கொசுவலை, நாப்கின், எண்ணெய், குளியல் திரவம், குளியல் சோப்பு, சோப்பு டப்பா, நகவெட்டி, கிலுகிலுப்பை, பொம்மை, மற்றும் கை கழுவும் திரவம், குளியல் சோப்பு, சௌபாக்கிய சுண்டி லேகியம் மற்றும் பெட்டகப் பை ஆகிய 16 பொருட்கள் அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகத்தில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் மார்ச், 2019 வரை 17,70,393 தாய்மார்களுக்கு இப்பரிசுப் பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வ. எண்	வருடம்	பயனாளிகளின் எண்ணிக்கை
1	2015-2016*	3,43,143
2	2016-2017	5,40,125
3	2017-2018	4,48,297
4	2018-2019	4,38,828
5	2019-2020**	4,23,974

*- 1-9-2015 முதல் 31-3-2016 வரை

**- 1-4-2019 முதல் 29-2-2020 வரை

6.18 அம்மா ஆரோக்கிய திட்டம்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 25-8-2015 அன்று தமிழக சட்டப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் அம்மா ஆரோக்கிய திட்டம் என்ற திட்டத்தினை அறிவித்தார்கள். அம்மா ஆரோக்கிய திட்டம் என்பது ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்வதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-3-2016 அன்று இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் 400 மேம்படுத்தப்பட்ட/வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3-3-2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பிரதி வாரம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் இலவசமாக உடற்பரிசோதனை மற்றும் இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளலாம். இந்த முகாம்களில் 25 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அவையாவன:

1. உயரம் 2. எடை 3. எடை உயரம் குறியீடு (BMI) 4. இரத்த அழுத்தம் 5. குருதி செம்மை பரிசோதனை 6. இரத்த வகை பரிசோதனை 7. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 8. இரத்தத்தில் கொழுப்புச் சத்து 9. இரத்தத்தில் கிரியாட்டினின் அளவு 10. சிறுநீரில் உப்புசத்து 11. சிறுநீரில் சர்க்கரை 12. சிறுநீரில் – டெபாசிட்ஸ் 13. கருப்பைவாய் புற்றுநோய் பரிசோதனை 14. மார்பகப் புற்றுநோய் பரிசோதனை 15. வாய் புற்றுநோய் பரிசோதனை 16. பார்வைக் குறைபாடு மற்றும் கண்புரை நோய் பரிசோதனை 17. தோல்நோய் பரிசோதனை 18. மருத்துவர் மூலமான பொது உடற்பரிசோதனை

2020 மார்ச் 24]

(தேவையிருப்பின்) 19. இரத்த அணுக்கள்-மொத்த எண்ணிக்கை 20. இரத்த அணுக்கள்-வேறுபட்ட எண்ணிக்கை 21. குருதி தடவல் பரிசோதனை 22. அல்டரா சவுண்ட் பரிசோதனை (தேவையிருப்பின்) 23. ஈ.சி.ஜி (அறிகுறிகளை பொறுத்து) 24 எக்ஸ்ரே பரிசோதனை. 25. சளிப் பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள பரிசோதனைகள் வாயிலாக நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டால் அவர்களில் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் கண்ட நபர்களுக்கு தொடர்ந்து மாதந்தோறும் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படுவோருக்கு மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்படுவோருக்கு அரசு உயர் மருத்துவமனைகளான மாவட்ட மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தங்கவைத்து தொடர் சிகிச்சை அளிக்கப்படுகின்றன. அதேபோன்று அவர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

மேலும் 2017-2018 முதல் 31 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

6.19 மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்:

மாதவிடாய் கால தன்சுத்தத்திற்கான திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 27-3-2012 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது. வளரிளம் பெண்களிடையே மாதவிடாய் கால சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தன்னம்பிக்கையுடன் சமுதாயத்தில் வலம் வரவும், தரம்வாய்ந்த சானிடரி நாப்கின்களை பயன்படுத்தவேண்டும் என்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் நாடாவுடன்கூடிய நாப்கின்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு தர நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் வசிக்கும் 10 முதல் 19 வயது வரையுள்ள பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத வளர் இளம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் விலையில்லா ஆறு சானிடரி நாப்கின் கொண்ட ஒரு பை வீதம் மூன்று பைகள் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. இவ்வாறு வருடத்திற்கு 18 பைகள் (Pack)

[2020 மார்ச் 24

வழங்கப்படுகின்றன. ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 முடிய ஒவ்வொரு மாதமும் 31,83,023 பூப்பெய்திய வளரிளம் கிராமப்புற பெண்கள் பயன்பெற்றுள்ளார்கள். சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் நாடாவுடன்கூடிய நாப்கின்கள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு 6 சானிடேரி நாப்கின்கள் கொண்ட ஒரு பை வீதம் 7 பைகள் (Pack) வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 முடிய 4,23,544 பிரசவித்த தாய்மார்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ் நாடாவுடன்கூடிய விலையில்லா நாப்கின் 6 சானிடரி நாப்கின்கள் கொண்ட ஒரு பை வீதம் வருடத்திற்கு 18 பைகள் சிறைச்சாலைகளில் உள்ள பெண் கைதிகள் நலனுக்காக வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 முடிய 1,337 பெண் கைதிகள் பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் நாடாவுடன்கூடிய விலையில்லா நாப்கின் 6 சானிடரி நாப்கின்கள் கொண்ட ஒரு பை வீதம் வருடத்திற்கு 18 பைகள் சென்னை மனநல மருத்துவமனையில் உள்ள பெண் உள்நோயாளிகள் நலனுக்காக வழங்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 முடிய 1,417 பெண் உள்நோயாளிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

6.20 தேசிய அயோடின் குறைபாடு நோய்கள் தடுப்புத் திட்டம்:

மனித வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நாள்தோறும் தேவைப்படுகிற நுண் ஊட்டச்சத்து அயோடின் ஆகும். இது நாள் ஒன்றிற்கு 100-150 மைக்ரோகிராம் அளவு தேவைப்படுகிறது. இந்த அயோடின் நுண் ஊட்டச்சத்து குறைபாட்டினால் முன்கழுத்துக் கழலை, குறைந்த அறிவுத்திறன், தசைபலவீனம், கிரெடனிசம் என்று அழைக்கப்படும் மிகுதியாக தடைப்பட்டமனம் மற்றும் உடல் வளர்ச்சிக் குறைபாடு, குழந்தை இறந்து பிறப்பது, காதுகேளாமை, பேச்சுக் குறைபாடு, பெருமூளைவாதம், கருச்சிதைவு மற்றும் மனநலக் குறைபாடு ஆகிய நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

6.21 தமிழக அரசானது சாதாரண உப்பிற்குப் பதிலாக அயோடின் கலந்த உப்பை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது. அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் நோய்களின் தாக்கத்தைக் கணிப்பதோடல்லாமல் ஆய்வகங்களில் பெறப்படும் உப்பு மற்றும் சிறுநீர் மாதிரிகளை ஆய்வு செய்து உடலில்

2020 மார்ச் 24]

அயோடின் அளவு குறைவாக இருப்பது மதிப்பீடு செய்யப்படுகிறது. மேலும், அயோடின் உப்பின் பயன்பாடு குறித்த நலக் கல்வி மற்றும் விளம்பரத்தின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் தமிழக அரசு தனது கவனத்தை செலுத்துகிறது. இத்திட்டத்தின்மூலம், அயோடின் சத்து குறைபாட்டினால் அதிக பாதிப்புக்குள்ளான 21 மாவட்டங்களிலும் உப்பு மாதிரி மற்றும் சிறுநீர் மாதிரியில் இருக்கும் அயோடின் அளவு ஆகியவை ஆய்வக பரிசோதனைமூலம் பரிசோதனை செய்யப்பட்டு, தொடர்ந்து கண்காணிப்பதில் தமிழக அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் தமிழகத்திலுள்ள 5 வெவ்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து அயோடின் குறைபாடு குறித்த மதிப்பாய்வு (Survey/ Resurvey) மேற்கொள்ளப்பட்டு அதன் அளவீடுகளும் கணக்கிடப்பட்டு வருகிறது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 மற்றும் விதிகள், 2011 ஆகியவற்றின்படி கடைகளில் அயோடின் கலந்த உப்பு மட்டுமே விநியோகம் அல்லது விற்பனை செய்யப்படுகிறது.

6.22 சுகாதார சேவை தொடர்பாக, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குறைகளை, உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் பொருட்டு, 2,580 CUG (Closed User Group) கைபேசிகள், சுகாதாரத் துறையில் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கும், மாவட்ட நிலையிலுள்ள அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

6.23 பாலூட்டும் தாய்மார்களுக்கு வசதிகள்:

பசும்பால் அருந்தும் குழந்தைகளைவிட தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்கின்றனர். தாய்ப்பால் அருந்தாத பச்சிளம் குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாவதுடன் அவர்களுடைய வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. இத்தகைய குழந்தைகள் இறக்க நேரிடுகின்றன அல்லது மந்தமான குழந்தைகளாக இருக்கின்றனர். தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் அதிக நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுகின்றனர். பாலூட்டும் தாய்மார்கள், பயணத்தின்போது அவர்களின் குழந்தைகளுக்குத் தனிமையில் பாலூட்ட முடிவதால், தாய்ப்பால் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் அவர்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கும். பயணம் செய்யும் தாய்மார்கள், தனிமையில் பாலூட்டுவதற்காக 352 பேருந்து நிலையங்கள் மற்றும் முனையங்களில் தனியாக பாலூட்டும் அறைகள் 3-8-2015 முதல் செயல்படுகின்றன.

[2020 மார்ச் 24

அத்தியாயம் - 7

குடும்ப நலத் திட்டம்

7.1 தேசிய குடும்ப நலத் திட்டம் தமிழ்நாட்டில் 1956 ஆம் ஆண்டு முதல் 100 விழுக்காடு மத்திய அரசின் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் சிறப்பான சாதனையைக் கருத்தில் கொண்டு, குடும்ப நலத் திட்டம் "குறியீடு அடிப்படையிலான அணுகுமுறையிலிருந்து சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு அணுகுமுறையாக" மாறியுள்ளது. இதில் குடும்ப நலச் சேவையின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதன்மூலம், தாய்-சேய் நல சேவை மேம்படும்.


7.2 மக்கள்தொகை நலக் குறியீடுகள்:

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21 கோடியாகும். தமிழ்நாட்டின் மக்கள்தொகை பத்தாண்டு வளர்ச்சி விகிதம் 15.6 விழுக்காடு ஆகும். நாட்டின் மொத்த மக்கள்தொகையில் இது 6 விழுக்காடு ஆகும். மாநிலத்தின் மக்கள்தொகை குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	நலக் குறியீடுகள்	தற்போதைய நிலை
1	பிறப்பு விகிதம் (2017)	14.9/1000 மக்கள்தொகைக்கு
2	இறப்பு விகிதம் (2017)	6.7/1000 மக்கள்தொகைக்கு
3	மொத்த கருவள விகிதம் (2017)	1.6
4	சிசு மரண விகிதம் (2017)	16.0/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
5	மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் (2015-2017)	63/1,00,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
6	இயற்கையான வளர்ச்சி விகிதம் (2017)	0.83 விழுக்காடு

(ஆதாரம்: மாதிரி பதிவு கணக்கெடுப்பு–2017)

7.3 நிருவாக அமைப்பு:



7.4 மாநிலத்தில் வழங்கப்படும் குடும்ப நல சேவைகள்:

அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு கீழ்க்கண்ட நிரந்தர மற்றும் தற்காலிக குடும்ப நலச் சேவைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது:

- நிரந்தர குடும்ப நல கருத்தடை முறைகள்

 ஆண்களுக்கு–வழக்கமான ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை முறை மற்றும் தழும்பில்லாத நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறை.

 பெண்களுக்கு-பெண் கருத்தடை அறுவை சிகிச்சை, மினிலேப் மற்றும் லேப்ராஸ்கோபிமூலம் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சை போன்ற நிரந்தர கருத்தடை முறைகள்.

- தற்காலிக கருத்தடை முறைகள்:

 பேறுகால பின்கவனிப்பு கருத்தடை வளையம்

 வாய்வழி கருத்தடை மாத்திரை–மாலா N மற்றும் சென்ட்குரோமன் மாத்திரை (சாயா)

 ஊசிமூலம் மருந்து செலுத்தப்படும் கருத்தடை முறை– அந்தாரா

[2020 மார்ச் 24

கருத்தடை ஆணுறை – நிரோத் மற்றும் அவசரகால கருத்தடை மாத்திரைகள்

மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு – உறிஞ்சு குழாய்மூலம் கருக்கலைப்பு செய்தல், மருத்துவ முறையிலான கருக்கலைப்பு செய்தல்.

7.5 மாநிலத்தில் உள்ள குடும்ப நலச் சேவைகள் வழங்கும் மையங்கள்:

நமது மாநிலத்தில் குடும்ப நலச் சேவைகள் வழங்கும் மையங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

வ. எண்	மையங்கள்	எண்ணிக்கை
1.	அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்	1,422
2.	சமுதாய நல சுகாதார நிலையங்கள்	385
3.	நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்	460
4.	துணை சுகாதார மையங்கள்	8,713
5.	அரசு ஆரம்ப சுகாதார நிலையம்/சமுதாய நல சுகாதார நிலையங்களுடன் இணைக்கப்பட்ட ஊரக குடும்ப நல மையக் குழு	382
6.	பேறுகால பின்கவனிப்பு மையங்கள்	110
7.	நகர்ப்புற குடும்ப நல மையங்கள்	108
8.	தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்	27
9	அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்கள்	2,462

7.6 குடும்ப நல செயல்திறன் வெளிப்பாடு


7.6.1 மொத்த கருவள விகிதம் (TFR)

மொத்த கருவள விகிதம் என்பது ஒரு பெண்மணி சராசரியாக தன் பேறுகால வயதில் (15-49) ஈன்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும். தமிழ்நாட்டின் மொத்த கருவள விகிதம்

2020 மார்ச் 24]

1.6 என்ற நிலையில் உள்ளது. இது நாட்டின் பிற பெரிய மாநிலங்களுடைய மொத்த கருவள விகிதத்தைவிட மிகக் குறைந்த நிலையாகும், மேலும் இந்நிலை 2.2 என்ற தேசிய அளவிலான நிலையைவிட குறைவாகும். தமிழ்நாட்டின் மொத்த கருவள விகிதம் 1.6 என்ற இந்த நிலை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்கிறது.


மொத்த கருவள விகிதத்தின் போக்கு



7.6.2 தோராயமான பிறப்பு விகிதம்

தோராயமான பிறப்பு விகிதம் என்பது மக்கள்தொகையில் ஆயிரம் பேருக்கு ஒரு வருடத்தில் உயிருடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகும். மாதிரி பதிவுக் கணக்கெடுப்பு 2017-ன்படி தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் மக்கள்தொகையில் ஆயிரம் பேருக்கு 14.9 என்ற நிலையில் உள்ளது.


பிறப்பு விகிதத்தின் போக்கு



[2020 மார்ச் 24

7.6.3 உயர் பிறப்பு வரிசை:

உயர் பிறப்பு வரிசை என்பது மூன்று மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைப்பேறுடைய தாய்மார்களைக் குறிக்கும். தேசிய அளவில் உயர்பிறப்பு வரிசையானது 21.7 விழுக்காடாக இருக்கிற சூழலில், தமிழ்நாட்டில் உயர் பிறப்பு வரிசை 7.2 விழுக்காடாக உள்ளது. அனைத்து வட்டாரங்களிலும் உயர்பிறப்பு வரிசையைக் குறைக்கும் பொருட்டு, அத்தகைய தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு அரசு மருத்துவ நிலையங்களில் கருத்தடை முறைகளை ஏற்க சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



உயர்பிறப்பு விகிதத்தின் போக்கு

7.7 குடும்ப நலத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

7.7.1 ஆண் கருத்தடை சிகிச்சை:

ஆண்களுக்கு சாதாரணமாக செய்யும் தழும்பில்லாத நவீன ஆண் கருத்தடை சிகிச்சை முறை ஆகும். தழும்பில்லாத நவீன ஆண் குடும்ப நல அறுவை சிகிச்சையை ஏற்க ஆண்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. நவீன தழும்பில்லாத கருத்தடை சிகிச்சை முகாம்கள் 2019-2020 ஆம் ஆண்டில் 385 வட்டாரங்களில் 38.5 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்பட்டன. மேலும் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஆண்களுக்கான நவீன கருத்தடை சிறப்பு முகாம்கள் இருவார விழாவாக நடைபெற்றன. 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி வரை) 827 நபர்களுக்கு ஆண்களுக்கான கருத்தடை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

7.7.2 பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை:

மாநிலத்தில் 23 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 31 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 226 அரசு மருத்துவமனைகள், 400 ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநகராட்சிகளில் உள்ள 26 நகர நலவாழ்வு மையங்கள் மற்றும் 2,462 அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன. பேறுகால பின்கவனிப்பில் இரண்டு மற்றும் அதற்கு மேல் உயிருடன் குழந்தைகள் பெற்றுள்ள தாய்மார்கள் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்புமுன் குடும்ப நல சேவை வழங்கப்படுகிறது. குழந்தை பெற்ற தகுதியுடைய தாய்மார்களுக்கு இடைவெளியுடனான கருத்தடை சிகிச்சைகளான மினிலேப் மற்றும் லேப்ரோஸ்கோபி சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

7.7.3 பேறுகால பின்கவனிப்பு கருத்தடை வளையம் பொருத்துதல்:

பிரசவித்த தாய்மார்களுக்கு 48 மணி நேரத்தில் கருத்தடை வளையம் பொருத்த ஆலோசனை வழங்கப்பட்டு பேறுகால பின்கவனிப்பு கருத்தடை சாதனம் பொருத்தப்படுகிறது. பேறுகாலத்திற்குப் பின் கருத்தடை வளையம் பொருத்துவது குறித்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. கடந்த 2019-2020 ஆம் ஆண்டில் 1.95 இலட்சம் தாய்மார்களுக்குப் பேறுகால பின்கவனிப்பு கருத்தடை வளையம் பொருத்தப்பட்டது. மேலும் கருத்தடை வளையம் பொருத்தும் மருத்துவப் பணியாளர்களுக்கு 150 ரூபாய் ஊக்கத் தொகையும், ஏற்பாளருக்கு 300 ரூபாயும் வழங்கப்படுகிறது.

7.7.4 ஊசிமூலம் மருந்து செலுத்தப்படும் கருத்தடை முறை (அந்தாரா):

அந்தாரா என்பது ஊசிமூலம் மருந்து செலுத்தப்படும் கருத்தடை முறை ஆகும். இது பயிற்சி எடுத்த மருத்துவர்கள், செவிலியர்கள், பிரசவ தாதியர்கள்மூலம் அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி வரை) 38,495 தாய்மார்கள் அந்தாராவினால் பயனடைந்துள்ளனர்.

7.7.5 சென்ட்ரோமன் மாத்திரைகள் (சாயா)

சென்ட்ரோமன் மாத்திரைகள் என்பது அனைத்து அரசு மருத்துவ நிலையங்களிலும் பயன்படுத்தப்படும் புதிய வகையான

ஹார்மோனல்லாத மாத்திரைகள் ஆகும். இதற்கு சாயா எனப் பெயரிடப்படுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி வரை) 97,587 தாய்மார்கள் இம்முறையில் பயனடைந்தனர்.

7.7.6 மருத்துவ ரீதியான கருக்கலைப்புத் திட்டம்:

2019 ஆம் ஆண்டு மாநிலத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவ நிலையங்களில் ஏறக்குறைய 77,540 பாதுகாப்பான மருத்துவ ரீதியான கருக்கலைப்புகள் நடைபெற்றன. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, அரசு மருத்துவ நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் நவீன கருக்கலைப்பு முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

7.8 பழங்குடியினர் பகுதிகளில் தற்காலிக குடும்ப நல முறைகளைப் பலப்படுத்துதல்:

தற்காலிக முறைகளான வாய்வழி கருத்தடை மாத்திரை, அவசர கால கருத்தடை மாத்திரைகள், நிரோத் போன்ற கருத்தடை சாதனங்களை ஆஷா மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள்மூலம் பழங்குடியின மக்களுக்கு நேரடியாக வீட்டிற்கே சென்று வழங்கும் முறை ஊக்குவிக்கப்படுகிறது.

7.9 குடும்ப நலக் கருத்தடை சாதன மென்பொருள் பயிற்சி:

இந்திய அரசு, இணையதளம் வழியாக தேசிய அளவில் இருந்து ஆஷா வரை குடும்ப நலக் கருத்தடை சாதனங்கள் தொடர்பான தகவல்களை இணையதளம் வாயிலாகவும், கைபேசி வாயிலாகவும் மற்றும் குறுந்தகவல் வாயிலாகவும் பதிவு செய்யவும், கண்காணிக்கவும் மென்பொருள் தயார் செய்துள்ளது. இதற்கான பயிற்சிகள் (மருத்துவ அலுவலர்கள், மருந்தாளுநர்கள், கிராமச் சுகாதார செவிலியர்கள், நகர்ப்புற சுகாதார செவிலியர்கள்) மாநில, மாவட்ட, வட்டார அளவில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாவட்ட மற்றும் மாநில அளவில் தேவைப்படும் கருத்தடை சாதனங்களை இணையம் வழியாக தற்போது பெற்றுக்கொள்ளலாம்.

7.10 தகவல், கல்வி மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பணிகள்:

மாநிலத்தில் உள்ள தகுதிவாய்ந்த தம்பதியர்களுக்கு நிரந்தர மற்றும் தற்காலிக கருத்தடை முறைகள் குறித்து விழிப்புணர்வு

2020 மார்ச் 24]

ஏற்படுத்த, கீழ்க்காணும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

i. மக்கள்தொகைப் பெருக்கம், அளவான குடும்பத்தின் முக்கியத்துவம், பாலின சமத்துவம், பிறப்புகளுக்கிடையே போதிய இடைவெளி மற்றும் திருமண வயதை உயர்த்துதல் ஆகியவை பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 11 ஆம் நாள் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் உலக மக்கள்தொகை நாள் கொண்டாடப்படுகிறது.

ii. அளவான குடும்ப அமைப்பில் ஆண்களின் பங்கேற்பினை அதிகாிப்பதற்காக மாநிலம் முழுவதும் பொதுமக்களிடையேயும், தொழிற்சாலை பணியாளர்களிடையேயும், தழும்பில்லாத ஆண் குடும்ப நல அறுவை சிகிச்சை இரு வாரம் கொண்டாடப்படுகிறது.

iii. அளவான குடும்பத்தின் முக்கியத்துவம், பாலின சமத்துவம், பிறப்புகளுக்கிடையே போதிய இடைவெளி மற்றும் திருமண வயதை உயர்த்துதல் ஆகியவை குறித்து குடும்ப நல நாடகங்கள் வட்டார அளவில் நடத்தப்படுகின்றன.

iv. எப்.எம். வானவில் வானொலி நிலையம் வாயிலாக குடும்ப நல விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகிறது.

v. வர்த்தக பொருட்காட்சிகளில் குடும்ப நலத் திட்ட முறைகள் குறித்த விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

vi குடும்பநல முறைகளை எடுத்துரைக்கும் எல்.இ.டி. பலகைகள் அனைத்து மருத்துவமனைகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

7.11 குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டம்:

மத்திய அரசு, குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் மற்றும் இச்சேவை வழங்குபவர்களுக்கு பின்வரும் காப்பீடுப் பயன்கள் அளிக்க குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டத்தை 1-4-2013 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது:

[2020 மார்ச் 24

குடும்ப நலக் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ.2,00,000
மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 8 நாட்களிலிருந்து 30 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால்	ரூ.50,000
குடும்ப நல அறுவை சிகிச்சையினால் தோல்வி ஏற்பட்டாலோ அல்லது அறுவை சிகிச்சைக்குப் பிறகு குழந்தைப்பேறு ஏற்பட்டாலோ	ரூ.30,000
குடும்ப நல அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்களை குணப்படுத்த (மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு 60 நாட்களுக்குள்)	ரூ.25,000 மிகாமல் உள்ளபடியான செலவு
மருத்துவர்களுக்கான ஈட்டுறுதிக் காப்பீடு (ஓர் ஆண்டில் ஒரு மருத்துவருக்கு நான்கு முறைக்கு மிகாமல்)	ஒரு நீதிமன்ற வழக்குக்கு ரூ.2,00,000 வரை

7.12 மாநில மற்றும் மாவட்ட தர உறுதி குழுக்கள்:

குடும்ப நல அறுவை சிகிச்சைக்குப் பின் நிகழும் எதிர்பாராத இறப்புகள், அறுவை சிகிச்சைக்குப்பின் ஏற்படும் தோல்வி மற்றும் சிக்கல்கள் சம்பந்தமாக மேற்கண்ட குழுக்கள் ஆராய்ந்து, அவர்களுக்கு காப்பீட்டு நிதியுதவி வழங்கவும், அறுவை சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும் பரிந்துரை செய்கின்றன.

7.13 குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை:

குடும்ப நல அறுவை சிகிச்சையினை ஏற்றுக் கொண்டவர்களுக்கு ஊதிய இழப்பிற்கான இழப்பீட்டுத் தொகையைப் பின்வருமாறு அரசு வழங்குகிறது:

2020 மார்ச் 24]

ஆண்களுக்கான நவீன கருத்தடை சிகிச்சை ஏற்பாளருக்கு (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ.1,100
வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினரில் பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ.600
வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் (அரசு மருத்துவ நிலையங்களில் மட்டும்)	ரூ.250

அத்தியாயம் - 8

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

(தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

8.1 தமிழ்நாடு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது புது தில்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின்கீழ் இயங்கும் சட்டபூர்வமான அமைப்பாகும். இத்திட்டத்தின்கீழ் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 220 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும் இயங்குகின்றன.

8.2 கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரியும் தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கும் மருத்துவக் கல்லூரிகளுடன் சேர்க்கப்பட்டது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இக்கல்லூரியினை 2016-ல் தமிழக அரசிடம் ஒப்படைத்தார்.

8.3 சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களிலுள்ள நான்கு மண்டல நிருவாக மருத்துவ அலுவலர்களால் (தொ.அ.ஈ.) மாநிலத்திலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் நிருவகிக்கப்படுகின்றன.

8.4 தமிழ்நாட்டிலுள்ள 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில், சென்னை கே.கே. நகர் மற்றும் திருநெல்வேலி ஆகியன புது தில்லி தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. மீதமுள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், தமிழ்நாடு மருத்துவம் மற்றும்

ஊரக நலப் பணிகள் இயக்குநரின் (தொ.அ.ஈ.) கீழும், கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழும் இயங்குகின்றன.

8.5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு மருந்துகளும் கட்டும் துணிகளும் விநியோகிப்பதற்காக நான்கு மண்டலங்களிலும் மத்திய மருந்து கிடங்குகள் (தொ.அ.ஈ.) உள்ளன.

8.6 இத்திட்டத்தின் பணியாளர்களின் நிருவாகம், இயக்குனர் (தொ.அ.ஈ.), இணை இயக்குனர் (தொ.அ.ஈ.), துணை இயக்குனர் (தொ.அ.ஈ.) ஆகியோரால் சென்னையிலிருந்து நிருவகிக்கப்படுகின்றது. நான்கு மண்டல நிருவாக மருத்துவ அலுவலர்களுடன் (தொ.அ.ஈ.) சேர்ந்து மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் சென்னை அயனாவரம், மதுரை, சிவகாசி, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய 7 மருத்துவமனைகளுக்கு 7 மருத்துவமனைக் கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

8.7 காப்பீட்டுப் பயனாளிகளுக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் ஆரம்ப மருத்துவ வசதிகளையும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் சிறப்பு மற்றும் அதிசிறப்பு மருத்துவ வசதிகளையும் வழங்குகின்றன.

8.8 இத்துறையின் நடவடிக்கைகளின் விவரங்கள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் கொண்டுவரப்பட்டுள்ளன.

அத்தியாயம் - 9
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

9.1 தமிழ்நாட்டில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை "ஆயுஷ்" (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி) முறைகளின் செயல்பாட்டினை நிருவகித்து வருகின்றது. பல இந்திய முறை மருத்துவங்களின் ஒருங்கிணைந்த அமைப்பு ஆயுஷ் என்று அழைக்கப்படுகிறது. ஆயுஷ் முறைகளின் முக்கிய கோட்பாடே,

"நோய் வருமுன் கண்டறிதல், நோய் வருமுன் காத்தல்
மேலும் தனிமனித நலனை பேணுதல்"

என்பதே ஆகும். உடல், மனம் மற்றும் ஆன்மாவிற்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்து முழுமையாக சிகிச்சை அளிப்பதே ஆயுஷ் முறையின் தனிச் சிறப்பு.

2020 மார்ச் 24]

இந்திய முறை மருத்துவத்திலேயே சித்த மருத்துவம் மிகவும் தொன்மையானது, கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் தோன்றிய மருத்துவம் என்ற தனிச் சிறப்பையும் பெற்றுள்ளது. சித்த மருத்துவத்தின் அனைத்து குறிப்புகளுமே தமிழ் மொழியில் உள்ளது. அதனால் சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. சித்த மருந்துகளின் செயல்முறை குறிப்புகள் அனைத்தும் வாய்மொழியாக மற்றும் ஓலைச்சுவடிகளின் மூலமாக அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. இவ்வாறு சுவடிகளில் கிடைக்கப்பெற்ற சித்த மருத்துவக் குறிப்புகளை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை மின்னுருவாக்கம் செய்து, வன்தகட்டில் பதிவேற்றம் செய்து பாதுகாத்துள்ளது.

இந்திய மருத்துவத்தின் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகள் இரட்டைக் குழந்தைகளைப்போல பல ஒற்றுமை மற்றும் சில வேறுபாடுகளை கொண்டவையாகும். ஆயுர்வேத குறிப்புகள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் அமைந்துள்ளது. சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகள் இரண்டுமே ஆரோக்கிய வாழ்வியல் ஒழுக்கம், நோயின்றி வாழ்தல், உடல் நலம் பேணுதல், நோய் வருமுன் காத்தல் மற்றும் நோய்க்கான மருத்துவம் செய்தல் என்ற அடிப்படையில் தனிமனிதனை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளில் நோய் கணிப்பு என்பது வாதம், பித்தம், கபம் என்ற முக்குற்றங்களை அடிப்படையாகக் கொண்டது.

யுனானி மருத்துவம் அரேபிய நாட்டில் தோன்றியது. அதன் குறிப்புகள் அனைத்தும் உருது மொழியில் உள்ளன. யுனானி மருத்துவம் பன்னெடுங்காலமாக இந்தியாவில் பயன்பட்டு வருவதால் அது இந்தியாவில் மரபுசார் மருத்துவ முறைகளில் ஒன்றாகவே உள்ளது.

ஓமியோபதி மருத்துவம் ஜெர்மன் நாட்டில் தோன்றியது. இந்திய மருத்துவ முறைகளில் ஒன்றாகக் கருதப்படும், ஓமியோபதி மருத்துவம் உலக அங்கீகாரம் பெற்ற மருத்துவ முறையாகும்.

[2020 மார்ச் 24

யோகா மற்றும் இயற்கை மருத்துவமானது, இயற்கை முறை சிகிச்சை மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான கலை மற்றும் அறிவியல் முறையாகும். இம்மருத்துவ முறையின்கீழ், யோகாசன சிகிச்சை, உணவு முறை, நீர் சிகிச்சை, மூலிகை இணை உணவு, நுண்ணூசி மருத்துவம், தொடு சிகிச்சை முதலிய முறைகளில், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்முறை நோயைப் போக்குவதோடல்லாமல் நோயாளிக்கு ஆரோக்கியம் மற்றும் நோய் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறைப்படி ஆரோக்கியம் என்பது உடல், மனம் மற்றும் ஆன்மா இவற்றின் ஒருமைப்பாடே ஆகும்.

ஒவ்வொரு மருத்துவ முறைகளுக்கும் தனக்கென ஒரு தனிச் சிறப்பு மற்றும் வரம்புகள் இருக்கின்றன. தற்போதுள்ள மருத்துவச் சூழலில் தேவைப்படுவது நோயாளிகளுக்கு பயன்படும் வகையில் ஒரு ஒருங்கிணைந்த மருத்துவ முறை ஆகும். ஆயுஷ் அமைப்பில் உள்ள அனைத்து மருத்துவ முறைகளையும் ஒருங்கிணைத்ததில் தமிழ்நாடு ஒரு முன்னுதாரணமாக திகழ்கின்றது. இந்தியாவிலேயே ஆயுஷ் பிரிவின் ஐந்து மருத்துவப் பிரிவுகளை ஒரே கூரையின்கீழ் கொண்ட முதல் மருத்துவமனை, நம் தமிழ்நாட்டில் உள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகம் என்பதில் பெருமை அடைகிறோம். உலக மக்கள்தொகையில் 70 விழுக்காடு மக்கள் மரபுசார் மருத்துவங்களையே நம்பி இருப்பதாக உலக சுகாதார அமைப்பு கணித்துள்ளது. உலக சுகாதாரத் தேவையை நிறைவேற்றும் விதமாக, இந்தியாவிலேயே ஆயுஷ் முறை மருத்துவத்தை ஒருங்கிணைந்த மருத்துவமாக ஊக்குவிப்பதில் தமிழக அரசு முன்னோடியாக திகழ்கிறது.

நிருவாக அமைப்பு

9.2 1970 ஆம் ஆண்டு 'இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை' தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய ஐந்து வகை இந்திய மருத்துவ முறைகளில் மற்றும் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பினை அளிப்பது 1,539 மருத்துவமனைகள் மூலமாக இந்த 5 மருத்துவ முறைகளில் மக்களுக்குச் சிறந்த சிகிச்சை அளிப்பதும் இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

2020 மார்ச் 24]

ஆணையர் / இயக்குநர்
• இணை இயக்குநர் • இணை இயக்குநர், யோகா மற்றும் இயற்கை மருத்துவம் (அலுவல் வழி)
• முதன்மை அறிவியல் அலுவலர்/ இயக்குநர், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு
• அரசு சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி கல்லூரிகளின் முதல்வர்கள்
• மாநில உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்)
• அரசு பகுப்பாய்வாளர், மருந்துகள் பகுப்பாய்வுக் கூடம் (இந்திய மருத்துவம்)
• கண்காணிப்பாளர், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ முறை மருத்துவமனை, சென்னை
• மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்கள்
அரசு மருத்துவமனைகள்/ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்த அரசு சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருந்தகங்கள்/மருத்துவமனைகள்

9.3 இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் சிறப்பு அம்சங்கள்:

- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி பிரிவுகளை அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களில் தொடங்கி, மக்களுக்கு முழுமையான மருத்துவ சேவையை வழங்குவது.

[2020 மார்ச் 24

- சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய மருத்துவப் பிரிவுகளின் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு அந்தந்த மருத்துவ முறைகளில் புலமைபெற ஏதுவாக, தரமான கல்வி மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அளிப்பது.
- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் தரமான மருந்துகளை உற்பத்தி செய்யவும் மற்றும் சிறப்பான சிகிச்சை முறைகளை ஊக்குவிப்பதற்காகவும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பது.
- தற்போது இயங்கிவரும் இந்திய மருத்துவ முறைக் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்துவது.
- அனைத்து இந்திய முறை மருத்துவ முறைகளிலும் உலகத் தரம் வாய்ந்த ஒப்புயர்வு மையங்களை நிறுவுதல்.
- மக்களுக்கு தரமான மருந்து கிடைப்பதை உறுதிசெய்ய, இந்திய முறை மருந்துகள் தயாரிப்பு நிறுவனங்களை முறைப்படுத்தி, தர நிர்ணயம் செய்தல்.
- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ சேவைகள்

9.4 இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின்கீழ் உள்ள மருத்துவ நிலையங்களின் விவரங்கள் கீழே காணலாம்.

பிரிவு	மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை
சித்தா	1,080
ஆயுர்வேதா	104
யுனானி	67
யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	178
ஓமியோபதி	110
மொத்தம்	1,539

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்வி:

9.5 இந்திய முறை மருத்துவப் பிரிவுகளில் பட்டப் படிப்புகள் (BSMS/BAMS/BNYS/BUMS/BHMS) சித்தா, ஆயுர்வேதா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, ஓமியோபதி ஆகிய பிரிவுகளிலும், பட்ட மேற்படிப்புகள் M.D. (சித்தா), M.D. (ஓமியோபதி), M.D. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்), சித்தா, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய மருத்துவப் பிரிவுகளிலும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் முறையே 6 அரசு மற்றும் 30 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் அளிக்கப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	மருத்துவ முறை	அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை	சுயநிதி கல்லூரிகளின் எண்ணிக்கை
1	சித்தா	2	8
2	ஆயுர்வேதா	1	5
3	யுனானி	1	0
4	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	1	9
5	ஓமியோபதி	1	8
	மொத்தம்	6	30

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின்கீழ் செயல்படும் அரசு கல்லூரிகள் பின்வருமாறு:

- அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.
- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.
- அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.

[2020 மார்ச் 24

- அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, திருமங்கலம், மதுரை மாவட்டம்.
- அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை.
- அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

9.6 இந்தியாவிலேயே அனைத்து இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைகளுக்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளது என்ற தனிப்பட்ட பெருமையைத் தமிழ்நாடு கொண்டுள்ளது. அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளில் தற்போதுள்ள இடங்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	கல்விப் பிரிவு	சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கை விவரம்				மொத்தம்	
		அரசு		தனியார்			
		பட்டப் படிப்பு	பட்ட மேற் படிப்பு	பட்டப் படிப்பு	பட்ட மேற் படிப்பு	பட்டப் படிப்பு	பட்ட மேற் படிப்பு
1	சித்த மருத்துவம்	160	94	460	-	620	94
2	ஆயுர்வேத மருத்துவம்	60	-	250	-	310	-
3	யுனானி	60	-	-	-	60	-
4	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	60	15	750	-	810	15
5	ஓமியோபதி	50	-	620	55	670	55
	மொத்தம்	390	109	2,080	55	2,470	164

2020 மார்ச் 24]

9.7 அரசு மருத்துவ நிலையங்களில் இந்திய முறை மற்றும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் ஒருங்கிணைத்தல்

தற்போது அலோபதி முறையிலான மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அ.தொ.ஈ.க., பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (தேசிய நலவாழ்வு இயக்க நிதியுதவியுடன் செயல்படும் 475 இந்திய மருத்துவப் பிரிவுகளையும் மற்றும் 72 ஆயுஷ் நல சிகிச்சை மையங்களையும் உள்ளடக்கியது) அவை பின்வருமாறு:

	சித்தா	ஆயுர்வேதா	யுனானி	ஓமியோபதி	யோகா மற்றும் இயற்கை மருத்துவம்	மொத்தம்
மாநில வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இயங்கும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மையங்கள்						
கல்லூரிகள்	2	1	1	1	1	6
பெரிய மருத்துவமனை	3	2	1	1	1	8
மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ மனை	15	3	2	9	25	54
அ.தொ.ஈ. க. மருத்துவக் கல்லூரிகள்	1	1	1	1	1	5
பல்நோக்கு உயர் சிகிச்சை ம.ம. (ஓமந்தூரார்)					1	1
மாவட்டத் தலைமை மருத்துவமனை	31	4	3	20	30	88

[2020 மார்ச் 24

வட்ட மருத்துவமனை	191	2		8	31	232
வட்டம் சாரா மருத்துவ மனை	58	2	4			64
ஆரம்ப சுகாதார நிலையம்	406	25	14	6	2	453
முறையான மருந்தகம்	13	6		5	1	25
பழங்குடியினர் மருந்தகம்	7					7
நடமாடும் மருந்தகம்	1					1
ஊரக மருந்தகம்	45	3				48
மொத்தம்	773	49	26	51	93	992

தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் செயல்படும் மருத்துவப் பிரிவுகள்						
வட்ட மருத்துவமனை (தேசிய ஊரக நலவாழ்வுத் திட்டம்	4		1			5
ஆரம்ப சுகாதார நிலையம்	271	52	39	57	20	439
யோகா மற்றும் இயற்கை மருத்துவ மகப்பேறு மருத்துவப் பிரிவு (ஆரம்ப சுகாதார நிலையம்)					29	29
யோகா மற்றும் இயற்கை மருத்துவ மகப்பேறு மருத்துவப் பிரிவு (வட்ட மருத்துவமனை)					2	2
மொத்தம்	275	52	40	57	51	475

2020 மார்ச் 24]

ஆயுஷ் திட்டங்களின்கீழ் செயல்படும் மருத்துவப் பிரிவுகள்						
மருத்துவக் கல்வி இயக்ககக் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள்					2	2
வட்ட மருத்துவமனை	4			1	30	35
வட்டம் சாரா மருத்துவமனை	2		1			3
ஆரம்ப சுகாதார நிலையம்	26	3		1		30
முறையான மருந்தகம்					2	2
மொத்தம்	32	3	1	2	34	72
ஆக மொத்தம்	1,080	104	67	110	178	1,539

* 2019-ம் ஆண்டில் மொத்தம் 3,92,08,684 நோயாளர்கள் வெளிநோயாளிகளாகவும், 3,50,914 நோயாளர்கள் உள்நோயாளிகளாகவும் இந்திய மருத்துவ முறை மற்றும் ஓமியோபதி மையங்களில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆயுஷ் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பு

9.8 கீழ்க்காணும் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்புகள் அரசாங்கத்தின் சுய ஆதரவுத் திட்டத்தின்கீழ், அரசு ஆயுஷ் துணை மருத்துவப் படிப்புகள் பள்ளி, சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம் மற்றும் பாளையங்கோட்டை, திருநெல்வேலி அரசு சித்தா மருத்துவக் கல்லூரி வளாகம் ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன;

(1) ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு.

(2) செவிலியர் சிகிச்சை பட்டயப் படிப்பு.

இவ்விரண்டு பட்டயப் படிப்புகள், ஆயுஷ் மருத்துவப் பிரிவுகளில், முறையாகத் தகுதிபெற்ற மருந்தாளுநர் மற்றும் செவிலிய சிகிச்சையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. மேற்படி படிப்புகளுக்கான ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே வருமாறு:

வ. எண்	கல்லூரியின் பெயர்	சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கை		மொத்தம்
		ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப் படிப்பு	செவிலியர் சிகிச்சை பட்டயப் படிப்பு	
1	அரசு ஆயுஷ் துணை மருத்துவப் பள்ளி அரசு சித்த மருத்துவக் கல்லூரி வளாகம், சென்னை	50	50	100
2	அரசு ஆயுஷ் துணை மருத்துவப் பள்ளி அரசு சித்த மருத்துவக் கல்லூரி வளாகம், பாளையங் கோட்டை, திருநெல்வேலி	50	50	100
	மொத்தம்	100	100	200

9.9 மாநில மருந்து உரிமம் வழங்கும் அலுவலர் (இந்திய மருத்துவம்)

❖ மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள் 1945-ன்படி ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருந்துகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு மாநில உரிமம் வழங்கும் அலுவலர் அவர்களால் 29-11-2007 முதல் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

❖ மேலும், மாநில உரிமம் வழங்கும் அலுவலர், ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருந்துகளின் தரத்தைப் பரிசோதிக்க, அரசால் அங்கீகரிக்கப்படும் மருந்துப் பரிசோதனைக் கூடங்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலராகவும் உள்ளார்.

2020 மார்ச் 24]

- ❖ மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள் 1945-ன்படி தமிழக அரசால், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் அவர்கள் மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலராக அரசு ஆணை எண் 493, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 1-11-2019-ன்படி தரமற்ற ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருந்து உற்பத்தியாளர்களின்மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருந்துகளின் விளம்பர விண்ணப்பங்களை, விதி எண் 170 மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் விதிகள் 1945-ன்படி ஆய்வுசெய்து "தனித்துவமான அடையாள எண்" வழங்க மாநில உரிமம் வழங்கும் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- ❖ அரசு ஆணை எண் 93, நாள் 11-1-2018 முதல் மருந்து மற்றும் (ஆட்சேபணைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954 மற்றும் அதன் விதி 1955, பிரிவு 8 உட்பிரிவு (1)-ன்படி மாவட்ட மருந்தாய்வாளர்கள் (இந்திய மருத்துவம்) ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருந்துகளின் விளம்பரங்களை அவரவர் நிருவாக வரம்பிற்குள் ஆய்வு மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநில மருந்துகள் பரிசோதனை ஆய்வகம்

9.10 மாநில மருந்துப் பரிசோதனை ஆய்வகம் இந்திய மருத்துவத் துறையில் வெவ்வேறு மூலப்பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி மருந்துகளின் தரத்தை உறுதி செய்கிறது. மருந்து ஆய்வாளர்களால், 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் பிரிவு 33 G-ன்கீழ் எடுக்கப்படும் சட்டபூர்வ மாதிரி மருந்துகளின் தரத்தை சோதனை செய்வது இந்த ஆய்வுக்கூடத்தின் தலையாய பணியாகும். இந்த ஆய்வுக்கூடத்திற்கு சட்டபூர்வமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ முறையின்கீழ் வரும் மருந்துகளின் தர நிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாட்டினைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காக நவீன மற்றும் புதிய உபகரணங்கள் இந்த ஆய்வுக் கூடத்தில் நிறுவப்பட்டுள்ளன. சென்னை, மாநில மருந்துப் பரிசோதனை ஆய்வகம் (இ.ம.) அரசு பகுப்பாய்வாளரை

மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் 1940, பிரிவு 33 F(2)-ன்படி சுகாதாரத் துறை, அந்தமான் நிகோபார் தீவின் சுகாதாரத் துறையின் அரசு மருந்துப் பகுப்பாய்வாளராக சட்டபூர்வமாக பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை, சென்னை

9.11 சென்னை நகரத்தின் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக தமிழக அரசு 1970 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையைத் தொடங்கியது. தேவையான அனைத்து வசதிகளுடன் இம்மருத்துவமனை தற்போது 310 படுக்கைகள் வசதியுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய பிரிவுகளின்கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் 2019 ஆம் ஆண்டில் 4,56,445 வெளிநோயாளிகளும், 61,213 உள்நோயாளர்களும் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், வெளிநோயாளர்கள் மற்றும் உள்நோயாளர்களுக்கு சிறப்பான மற்றும் விரைவான முறையில் பல வகையான இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக உயிர்வேதியியல் ஆய்வகத்தில் புதிய Fully Automated Analyser இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் முழுவதும் புதுப்பிக்க SAAP திட்டத்தின்கீழ் ரூ.56.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.18.75 இலட்சம் தேசிய ஆயுஷ் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் மற்றும் மரத் தளவாடங்கள் வாங்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனையுடன் பிரத்யேகமாக இணைந்த மருந்துசெய் நிலையத்தின் மூலமாக சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவ நோயாளர்களுக்கு தேவையான மருந்துகள் தயார் செய்யப்படுகின்றன. 1-1-2019 முதல் 31-12-2019 வரை இம்மருத்துவமனையைச் சேர்ந்த சென்னையிலுள்ள மருந்தகங்களுக்கு சுமார் 5,256.2 கிலோ கிராம் வரை நிலவேம்புக் கசாயப் பொடி தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் வராமல் தடுக்க சென்னை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு சுமார் 2,500 லிட்டர் நிலவேம்புக் குடிநீர் 8-10-2019 முதல்

2020 மார்ச் 24]

15-10-2019 வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இம்மருந்துசெய் நிலையத்துடன் இணைந்த தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு உபகரணங்கள் மற்றும் கண்ணாடி சாமான்கள் வாங்க ரூ.18,37,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொதிகலன் நிலையம் நிறுவும் பணி முடிவுற்று மருந்துகள் தயார் செய்ய உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (TAMPCOL)

9.12 தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (டாம்ப்கால்) இந்திய மருத்துவ முறை மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளைத் தரமான முறையில் தயார் செய்து விநியோகம் செய்யும் முக்கிய நோக்கத்திற்காக 1983 ஆம் வருடம் செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் துவக்கப்பட்டது.

டாம்ப்காலின் உற்பத்தி நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் அருகில் ஆலத்தூரில் உள்ள சிட்கோ மருந்து செய்யும் வளாகத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் 144 வகையான மருந்துகளில் 88 சித்தா மருந்துகள் (65 புத்தக உரிமை மற்றும் 23 தனி உரிமை) 39 ஆயுர்வேதா மருந்துகள் (36 புத்தக உரிமை மற்றும் 3 தனி உரிமை) 17 யுனானி மருந்துகள் (14 புத்தக உரிமை மற்றும் 3 தனி உரிமை) சிறப்பான முறையில் தயார் செய்கிறது. இம்மருந்துகளை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிலையங்களுக்கும், மேலும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம், மத்திய அரசு சுகாதாரத் திட்டம் போன்றவற்றிற்கும் விநியோகித்து வருவதுடன், டாம்ப்காலின் சொந்த விற்பனையகங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது. டாம்ப்கால் ஒருங்கிணைப்பு முகமையாக இருந்து, மருந்துகள், தளவாடங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து ஆயுஷ் மையங்களுக்கு வழங்கி வருகிறது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.00 கோடி ஆகும். இக்கழகம் 2019-2020 ஆம் நிதியாண்டில் அரசு நிறுவனங்களுக்கு 1-11-2019 முதல் விற்பனை விலையில் 25 விழுக்காடு விலை குறைத்து, விற்பனை செய்ததனால் ரூ.1.25 கோடி அளவிற்கு மாநில நிதி நிலையில் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இக்கழகம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.44.17

கோடி விற்பனையையும் ரூ.3.26 கோடி நிகர இலாபம் (தணிக்கை செய்யப்படாத நிலையில்) ஈட்டும் என்று எதிர்நோக்கியுள்ளது.

இக்கழகம் 2019-2020 ஆம் நிதியாண்டில் "அம்மா மகப்பேறு சஞ்சீவி" திட்டத்தின்கீழ் கருவுற்ற தாய்மார்களின் நலன் காப்பதற்காக 11 வகையான மருந்துகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில், 23,626 பெட்டகங்களை மாநிலத்தில் செயல்படும் சித்த மருத்துவ மையங்களின் மூலமாக வழங்கி வருகிறது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் "அம்மா குழந்தைகள் நலப் பெட்டக" திட்டத்தில், சௌபாக்கிய சுண்டி லேகியம் ரூ.3.46 கோடி செலவில் வழங்கப்பட்டது.

இந்நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1.66 கோடி மதிப்புள்ள மருந்துகளைத் தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு முகமைக்கு தயாரித்து வழங்கியுள்ளது.

டாம்ப்கால் நிறுவனம் ஒரு நாளைக்கு 1,500 கிலோ நிலவேம்புக் குடிநீரை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. மேலும் டெங்கு மற்றும் பிற வைரஸ் காய்ச்சலைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இது பெரிதாய் உதவுகிறது.

இந்நிறுவனத்தின்கீழ் சென்னை, பாளையங்கோட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று இடங்களில் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், இந்நிறுவனத்தின் மருந்துகளை வியாபாரமயமாக்கும் பொருட்டு மதுரையில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு இக்கழகம் தனியுரிமை வழங்கி உள்ளது. மேலும், இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில், இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவத் துறை மருத்துவர்களைக் கொண்டு சுழற்சி முறையில் இலவச மருத்துவ ஆலோசனை, பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் பாரம்பரிய விற்பனை பொருளான மூலிகை கூந்தல் தைலம், திரிபலா சூரணம், நிலவேம்புக் குடிநீர், அஸ்வகந்தா இலேகியம், சயவனபிராஷ் இலேகியம், லிவ் 2000 குழல் மாத்திரை, மதுமேகசூரணம் மற்றும் பிறபொருள்கள், உலகத்திலுள்ள அனைத்து மக்களையும் அடையும் வகையில் மின்னணு வணிகதளம்மூலம் மற்றும் அனைத்து தகவல் தொடர்பு ஊடகங்களிலும் பிரபலப்படுத்தி விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9.13 சிறப்பம்சங்கள்

- காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தேனி மற்றும் திருவண்ணாமலையில் 50 படுக்கைகள் கொண்ட சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்துடன் இணைந்த ஆயுஷ் மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக செயல்பட உள்ளது.
- புதுக்கோட்டையில் 50 படுக்கைகள் கொண்ட சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவத்துடன் இணைந்த ஆயுஷ் மருத்துவமனை நிறுவப்படவுள்ளது.
- சித்தா மற்றும் ஆயுர்வேதத்தின் 1,082 பனை ஓலைச்சுவடிகள் இந்திய மருத்துவ இயக்ககத்தால் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- இந்திய மருத்துவ இயக்ககத்தின்கீழ் இயங்கும் முனைவர் அம்பேத்கர் மைய நூலகத்தில் உள்ள அரிய சித்த மருத்துவப் புத்தகங்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்துடன் இணைந்து மின்னுருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

தேசிய ஆயுஷ் குழுமம்

9.14 இம்மாநிலத்திற்கான மத்திய ஆயுஷ் குழுமத்தின் திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக “மாநில ஆயுஷ் சங்கம்-தமிழ்நாடு” என்ற சங்கத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ‘ஆயுஷ்’-ன் வளர்ச்சிப் பணிகள் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீட்டினைப் பகிர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 2019-2020 ஆம் ஆண்டில் SAAP மூலம் 32.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில மருத்துவத் தாவரங்கள் வாரியம்

9.15 தமிழ்நாடு மாநில மருத்துவத் தாவரங்கள் வாரியம் அரசு ஆணை எண் 104, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை,

[2020 மார்ச் 24

நாள் 6-6-2002-ன்படி துவங்கப்பட்டது. மேலும், இவ்வாரியம் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975, விதி 27-ன்கீழ் பதிவு எண் 286/2009, நாள் 26-10-2009-ன்படி பதிவு பெற்றுள்ளது. இவ்வாரியம் 11 உறுப்பினர்கள் கொண்ட பொதுக் குழு மற்றும் 7 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழுவின் ஆளுகையின்கீழ் தமிழக அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, அரசு முதன்மைச் செயலர் அவர்களின் தலைமை பொறுப்பிற்கு உட்பட்டது.

தமிழ்நாடு தாவரத் துறையின் பங்குதாரர்களாகிய விவசாயிகள், வளர்ப்பாளர்கள், சேகரிப்பாளர்கள், வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் "தமிழ்நாடு மாநில மருத்துவத் தாவரங்கள் வாரியம்" வழியாக உரிய கருத்துரு சமர்ப்பித்து மத்திய அரசின் தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்திடமிருந்து நிதி பெறுவதே இவ்வாரியத்தின் சட்டப்படியான முக்கிய நோக்கமாகும். புது தில்லி மத்திய அரசின் தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியத்திடமிருந்து ரூ.27.80 இலட்சம் மையக்கரு மானியமாக (Nucleus Centre grant) பெறப்பட்டது.

அத்தியாயம் - 10

உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை

10.1 இந்தியாவில் உணவுக் கலப்பட தடைச் சட்டம், 1954 மற்றும் உணவு தொடர்பான 7 பிற சட்டங்களையும் இரத்து செய்து உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 நாடு முழுவதும் 5-8-2011 அன்று முதல் அமல்படுத்தப்பட்டது. தமிழகத்தில் 22-12-2011 முதல் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006 மற்றும் விதிகளையும் நடைமுறைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

10.2 உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்த ஆணையர் அவர்களின் தலைமையில் மாநில அளவில் இயக்குநர் மற்றும் கூடுதல் ஆணையர், இதர அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், மாவட்ட அளவில் 32 நியமன அலுவலர்கள், 394 உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

2020 மார்ச் 24]

10.3 இந்த ஆண்டு பிப்ரவரி, 2019 முதல் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டு செயல்பட துவங்கியுள்ளது. அத்தீர்ப்பாயத்தில் தீர்ப்பாய அலுவலர் (Presiding Officer), பதிவாளர் (Registrar) மற்றும் அரசு உதவி வழக்கு நடத்துநர் (Assistant Public Prosecutor) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். 113 மேல்முறையீட்டு வழக்குகள் அத்தீர்ப்பாயத்தில் பதியப்பட்டுள்ளன.

1. உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ்

10.4 உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டத்தின்கீழ் உணவு வணிகர்களின் ஆண்டு விற்பனை கொள்முதல் 12 இலட்சத்திற்குமேல் இருந்தால், நியமன அலுவலரிடம் உரிமம் பெற வேண்டும். ஆண்டு விற்பனைக் கொள்முதல் 12 இலட்சத்திற்குகீழ் இருப்பவர்கள் உணவுப் பாதுகாப்பு அலுவலர்களிடம் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். 2019-2020 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரை 87,402 உணவு வணிகர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 3,81,290 உணவு வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2. அமலாக்க நடவடிக்கைகள்

10.5 நியமன அலுவலர்கள்/உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள், அவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவுத் தயாரிப்பு நிறுவனங்கள், சேமித்து வைக்கும் இடங்கள், விற்பனையகங்களைத் தொடர்ச்சியாக கள ஆய்வு செய்து வருகிறார்கள். 2019-2020 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 7842 சட்ட உணவு மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 1,517 உரிமையியல் வழக்குகள் உணவு வணிகர்கள்மீது பதிவு செய்யப்பட்டு, அதில் 996 வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்மூலம் ரூபாய் 1,29,39,500 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

- 723 உணவு வணிகர்கள்மீது குற்றவியல் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு அதில் 275 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்மூலம் ரூபாய் 56,30,500 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

3. புகையிலை மற்றும் நிக்கோடின் கலந்த உணவுப் பொருட்களைத் தடை செய்தல்

10.6 புகையிலையால் ஏற்படக்கூடிய புற்றுநோய்களைத் தவிர்ப்பதற்காக தமிழகத்தில் 23-5-2013 முதல் புகையிலை மற்றும் நிக்கோடின் சேர்மான பொருளாகக் கொண்ட குட்கா, பான்மசாலா மற்றும் வேறு எந்த உணவுப் பொருளையும் உற்பத்தி செய்யவும், சேமித்து வைக்கவும், போக்குவரத்து செய்யவும், விநியோகம் செய்யவும் மற்றும் விற்பனை செய்யவும் தடை விதிக்கப்பட்டு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்தடையாணை ஒவ்வோர் ஆண்டிலும் நீட்டிப்பு செய்யப்பட்டு, கடைசியாக 23-5-2019 முதல் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஜூன் 2013 முதல் ஜனவரி 2020 வரையிலான காலத்தில் ரூ. 26.12 கோடி மதிப்புள்ள 760.8 டன் (7,60,755 kg) தடை செய்யப்பட்டுள்ள குட்கா மற்றும் பான்மசாலா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையிலான காலத்தில் 38,040.9 கி.கி. எடையுள்ள ரூபாய் 2.84 கோடி மதிப்பிலான புகையிலையை சேர்மானமாக கொண்ட உணவுப் பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

4. குறை தீர்த்தல்

10.7 பொதுமக்களிடமிருந்து பாதுகாப்பற்ற, தரமில்லாத, தரம் குறைந்த, தடை செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் தொடர்பான புகார்களைத் தெரியப்படுத்த unnavupukar@gmail.com மின்னஞ்சலிலும், வாட்ஸ்அப் புகார் எண் 9444042322-ம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2017 மே மாதம் முதல் 2020 ஜனவரி மாதம் வரையிலான காலத்தில் 12,212 புகார்கள் பெறப்பட்டு 24/48 மணி நேரத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரம் புகார்தாரர்களுக்கும் தெரியப்படுத்தப்படுகிறது.

5. சிறு குற்றச் செயல்களுக்குத் தீர்வு செய்தல்

10.8 1 டிசம்பர் 2019 முதல் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், பிரிவு 30(3)-ன்படி ஆண்டுக்கு 12 இலட்சத்திற்கும் குறைவாக வருவாய் ஈட்டும் உணவு வணிகர்கள் செய்யும் குற்றங்களுக்கு ரூபாய் 25,000/- வரை அபராதம் விதிக்க 1 டிசம்பர் 2019 முதல் மாவட்ட நியமன அலுவலர்களுக்கு அதிகாரம்

2020 மார்ச் 24]

அளிக்கப்பட்டுள்ளது. 1 டிசம்பர் 2019 முதல் 31 ஜனவரி 2020 வரையிலான காலத்தில் 9.61 இலட்ச ரூபாய் வணிகர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

6. புதிய உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள்

10.9 உணவு மாதிரிகளை ஆய்வுசெய்ய ஆறு உணவுப் பகுப்பாய்வுக் கூடங்கள் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் மூன்று புதிய உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களை விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நிறுவும்பொருட்டு 2019-2020 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. வழிபாட்டுத் தலங்களில் சுத்தமான, ஆரோக்கியமான பிரசாதத்தினை வழங்க வழிவகை செய்தல்

10.10 வழிபாட்டுத் தலங்களில் (PoW) உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பின்பற்றுவதற்கும், பராமரிப்பதற்கும் ஊக்குவிக்கும் அதே வேளையில் பக்தர்கள் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பிரசாதத்தைப் பெற உறுதி செய்ய இத்திட்டம் (Blissful Hygienic Offering to God - BHOG) அமைக்கப்பட்டுள்ளது. இது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் ஒரு முன்முயற்சியாகும். உணவுப் பாதுகாப்புத் துறை இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மிகவும் ஆர்வமாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான உணவின் நோக்கம் சென்றடையவும், BHOG திட்டத்தை தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஜனவரி 31, 2020 முதல் தமிழகத்தில் உள்ள இரண்டு கோயில்களில் (சங்கரநாராயணர் கோயில், சங்கரன்கோவில் மற்றும் நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி) செயல்முறைக்கு வந்துள்ளது.

8. அனைத்து கல்வி நிறுவனங்களிலும் சுத்தமான ஆரோக்கியமான உணவினை வழங்குதல்

10.11 அனைத்து கல்வி நிறுவனங்களிலும் ஆரோக்கியமான, சுத்தமான உணவினை உட்கொள்ளும் பொருட்டு முதல் கட்டமாக 500 தொழிற்கல்லூரிகள், 1,350 கல்லூரிகள் மற்றும் பள்ளிக்கூடங்கள், 54,439 அங்கன்வாடி மையங்களிலும் விழிப்புணர்வு முகாம்கள்

மற்றும் பயிற்சி அளிக்கும்பொருட்டு ரூபாய் 90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31 ஜனவரி 2020-ம் மாதம் முதல் 5,425 கல்வி நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு ஜூன் 2020-ம் மாதத்தில் நிறைவு செய்யும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

9. உணவு பாதுகாப்புத் துறையின்கீழ் பயிற்சி மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்

10.12 54,439 அங்கன்வாடி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு உணவுப் பாதுகாப்புத் துறையின்கீழ் பயிற்சி மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல் (FoSTac) என்ற திட்டத்தின்கீழ் ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கூறிய Eat Right Campus மூலமாக FoSTaC திட்டம் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

10. விரைவான சோதனைகள்மூலம் கலப்படத்தினைக் கண்டறிதல்

10.13 கலப்படத்தினைக் கண்டறியும்பொருட்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் பணிபுரியும் 18,589 ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விரைவான சோதனைகள் (DART) மூலம் தடுக்கும்பொருட்டு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 31 ஜனவரி 2020-ல் ஆரம்பிக்கப்பட்டு மார்ச் 31, 2020-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.


11. சுகாதார மதிப்பீடு (HYGIENE RATING)

10.14 இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி உணவகங்கள் மற்றும் ஓட்டல்களுக்குச் சுகாதார மதிப்பீட்டின்கீழ் (Hygiene Rating) தணிக்கை செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஜனவரி 31, 2020 முதல் 62 உணவு வணிகர்கள் நல்ல பயிற்சியினையும், மதிப்பீட்டினையும் பெற்றுள்ளனர். இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம்

10.15 மருந்துக் கட்டுப்பாடு துறை, மருந்துக் கட்டுப்பாடு இயக்குநரைத் தலைவராகக் கொண்டு ஆணையர், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

நிருவாக அமைப்பு



10.16 மருந்துகள் மற்றும் அழகு சாதனங்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான கீழ்க்கண்ட முக்கிய சட்டங்களை அமல்படுத்தும் பொறுப்பில் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகம் உள்ளது.

i. மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம், 1940 மருந்துகள், அழகு சாதனங்கள் விதிகள் 1945 மருத்துவ சாதனங்கள் விதிகள் 2017 மற்றும் புது மருந்துகள் மற்றும் மருத்துவ ஆய்வுகள் 2019.

[2020 மார்ச் 24

ii. மருந்துகளின் விலைகள் கட்டுப்பாடு ஆணை, 2013.

iii. மருந்துகள் மற்றும் மாயாஜால தீர்வுகள் (ஆட்சேபணைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954 மற்றும் விதிகள், 1955.

இத்துறையின் அலுவலர்கள் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டம், 1985-ன்கீழ் நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

10.17 மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் அவர்கள் இம்மாநிலத்தின் மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்தின் தலைவராகச் செயல்படுகிறார். அவரே உற்பத்தி மற்றும் விற்பனைக்கான ஆங்கிலவழி மருந்து, ஓமியோபதி மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கான உற்பத்தி மற்றும் விற்பனைக்கான அனுமதி வழங்குதல் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இரத்த வங்கிகளுக்கான மத்திய அதிகாரபூர்வமான உரிமம் வழங்கும் அதிகாரி, புது டெல்லியின் அனுமதி வழங்குதலின் சம்மதத்துடன் செயல்படுகிறார்.

10.18 மருந்துக் கட்டுப்பாடு துறையின் கண்காணிப்பு பணிகள் கீழ்வருமாறு:

- மருந்துகள் தரம், பாதுகாப்பு மற்றும் தட்டுப்பாடு இல்லாமல் நோயாளிகளுக்கு கிடைப்பது, உரிய விலைகளில் மருந்துகள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றை உறுதி செய்தல்.
- அழகு சாதனங்களின் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- மருந்துகள் மற்றும் மாயாஜால தீர்வுகள் விதிகள், 1955-ன்படி தவறாக வழிநடத்தும் விளம்பரங்களை ஆய்வு செய்தல்.
- பாதுகாப்பான இரத்தம் மற்றும் இரத்தத்தின் கூறுகளைச் சேகரித்தல் மற்றும் விநியோகித்தல்.

10.19 மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்தின்கீழ் உள்ள அமலாக்கப் பிரிவு மற்றும் மருந்து ஆய்வகத்தில் உள்ள மொத்த அலுவலர்களின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

2020 மார்ச் 24]

அமலாக்கப் பிரிவு

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
1	மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர்	01
2	இணை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர்	01
3	துணை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர்	03
4	உதவி மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர்	15
5	உதவி மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் (நிருவாகம்)	01
6	முதுநிலை மருந்து ஆய்வாளர்	15
7	மருந்து ஆய்வாளர்	146
8	சட்ட ஆலோசகர்	01
9	உதவிக் கணக்கு அலுவலர்	01
10	அமைச்சுப் பணியாளர்	117
11	அலுவலக உதவியாளர்	79
12	ஓட்டுநர்	04
13	தொலைபேசி இயக்குபவர்	01
	மொத்தம்	385

மருந்து ஆய்வுக்கூடம்

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
1	அரசு பகுப்பாய்வாளர்	01
2	அரசு துணைப் பகுப்பாய்வாளர்	02
3	முதுநிலைப் பகுப்பாய்வாளர்	14
4	இளநிலைப் பகுப்பாய்வாளர்	38
5	இளநிலை நிருவாக அலுவலர்	01

[2020 மார்ச் 24

வ. எண்	பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
6	தொழில்நுட்பப் பணியாளர் நிலை-1	06
7	தொழில்நுட்பப் பணியாளர் நிலை-2	04
8	மின் பணியாளர் நிலை-1	01
9	குழாய் பொருத்துபவர்	01
10	ஆய்வகப் பணியாளர்	07
11	விலங்கியல் பணியாளர்	01
12	அமைச்சுப் பணியாளர்	10
13	அலுவலக உதவியாளர்	05
14	துப்புரவாளர்	01
15	இரவுக் காவலர் மற்றும் துப்புரவாளர்	01
	மொத்தம்	93

10.20 இயக்குநரகத்தில் பொது மக்களிடமிருந்து மருந்து மற்றும் அழகு சாதனங்கள் சம்பந்தமாகப் பெறப்படும் புகார்கள்மீது தேவையான நடவடிக்கைகளை எடுக்க சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஒரு நடமாடும் குழுவும் செயல்படுகிறது. சட்டம் மற்றும் புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதுடன், பிற மாநிலங்களின் மருந்து கட்டுப்பாடு துறையுடன் இணைந்து மாநிலங்களுக்கிடையேயான ஆய்வுகள் உட்பட சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்கிறது.

10.21 இத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்து ஆய்வுக்கூடம், பல்வேறு சில்லறை, மொத்தம் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருந்து ஆய்வாளர்களால் எடுக்கப்படும் மாதிரிகளை ஆய்வு செய்கிறது. ஊசி மருந்துகள், கிங் நிலையத்தால் (King Institute) பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

மத்திய அரசின் திட்டத்தின்கீழ் மாநில மருந்து கட்டுப்பாடு துறையை வலுப்படுத்த இரு அரசுகளின் பங்கீடுகளான 43.60 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒதுக்கீடும் மற்றும் 20 கோடி ரூபாய்க்கு

2020 மார்ச் 24]

நிதி ஒதுக்கீடு முதற்கட்டமாக மதுரை மாநகரில் உலகத்தரம் வாய்ந்த மருந்துகள் ஆய்வுக்கூடம் அமைக்க அரசாணை எண் 1752, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்-1) துறை, நாள் 25-11-2019-ல் வழங்கியுள்ளது.

10.22 தமிழ்நாட்டில் உள்ள உற்பத்தி நிறுவனங்கள், இரத்த வங்கி, இரத்த சேமிப்பு நிலையங்கள் மற்றும் விற்பனை 31-1-2020 அன்று உள்ளபடி

ஆங்கில வழி மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள்	553	இரத்த வங்கி	310	சில்லறை விற்பனை உரிமங்கள்	46,207
அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள்	181	இரத்த சேமிப்பு நிலையங்கள்	532	மொத்த விற்பனை உரிமங்கள்	16,425
ஓமியோபதி மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள்	09				

10.23 மருந்துக் கட்டுப்பாடு இயக்ககத்தின்கீழ் மேற்கொள்ளும் பணிகளுக்கான சுருக்கம் (31-1-2020 வரை)

வ. எண்	ஆய்வுகளின் விளக்கம்	ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை
1	விற்பனை நிறுவனங்களின் ஆய்வு எண்ணிக்கை	47,385
2	உற்பத்தி நிறுவனங்களின் ஆய்வு எண்ணிக்கை	1,248
3	மருத்துவமனை மற்றும் மருந்துக் கிடங்குகள் ஆய்வு எண்ணிக்கை	1,759
4	இரத்த வங்கியின் ஆய்வு எண்ணிக்கை	1,175

10.24 ஆய்வுக்காக எடுக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரங்கள் (31-1-2020 வரை)

வ. எண்	பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரம்	ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை
மாதிரி எடுக்கப்பட்டதன் மொத்த எண்ணிக்கை		7,583
1	பகுப்பாய்வுக்காக செய்த மாதிரிகள்	7,774
2	தரமற்ற மாதிரிகள்	220 இம்மாநிலம் – 54 பிற மாநிலம் - 166

10.25 உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்திவைத்த விவரம் 1-4-2019 முதல் 31-1-2020 வரை

	ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை
மொத்த விற்பனை உரிமங்கள்	18
சில்லறை உரிமங்கள்	23
மொத்தம்	41

10.26 மருந்து மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம் 1940, விதிகள் 1945, மருந்துகள் விலை கட்டுப்பாட்டு உத்தரவு சட்டம் 2013, மருந்துகள் மற்றும் மாயத்தீர்வு (ஆட்சேபணைக்குரிய–எதிர்ப்புக்குரிய விளம்பரங்கள்) சட்டம் 1954-ன் விதிகள் 1955-ன்கீழ் மற்றும் இதர சட்டங்களின்கீழ் வழக்குத் தொடர அனுமதி அளித்த விவரங்கள்

2020 மார்ச் 24]

விவரங்கள்	ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை
போலி மருந்துகள் தயாரித்து விற்றதற்காக	06 தமிழ்நாடு – 0 பிற மாநிலம் - 06
தரமற்ற மருந்துகள் தயாரித்து விற்றதற்காக	76 தமிழ்நாடு – 12 பிற மாநிலம் - 64
மருந்தாளுநரின் மேற்பார்வை இல்லாமல் விற்ற மருந்துகள்	147
மருத்துவரின் பாிந்துரை சீட்டு இல்லாமல் விற்ற மருந்துகள்	282
கையிருப்பில் உள்ள காலாவதியான மருந்துகள்	02
மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டம் 1940 மற்றும் விதி 1945-ன்கீழ் அனுமதிக்கப்பட்ட மற்ற வழக்குகள்	378
மருந்துகள் மற்றும் மாயத்தீர்வு (ஆட்சேபணைக்குாிய/ எதிர்ப்புக்குாிய விளம்பரங்கள்) சட்டம் 1954-ன் விதிகள் 1955-ன்கீழ் அனுமதிக்கப்பட்ட மற்ற வழக்குகள்	02
மருந்துகள் விலை கட்டுப்பாட்டு உத்தரவு சட்டம், 2013-ன்கீழ் அனுமதிக்கப்பட்ட வழக்குகள்	02

10.27 தற்போது இத்துறை 14 மண்டலங்களாக செயல்பட்டு வருவதைப் பலப்படுத்துவதற்காக மேலும் 32 மண்டலங்களாகப் பிரிக்க எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் நோயாளிகளின் பாதுகாப்பு மேம்படுத்தப்படும்.

[2020 மார்ச் 24

அத்தியாயம் - 11

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

11.1 தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்து துறை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைச் சார்ந்த பல்வேறு இயக்குநரகங்களின்கீழ் மாநிலம் முழுவதும் இயங்கிவரும் வாகனங்களை பிரத்யேகமாக பராமரிக்கும் பொறுப்பை வகிக்கிறது. சுகாதாரத் துறை ஊர்திகள் பிரத்யேக பராமரிப்பிற்காக 1959 ஆம் ஆண்டு ஒரு தனி கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, பின்னர் அது தனித் துறையாக மாற்றியமைக்கப்பட்டது.

11.2 துறையின் குறிக்கோள் மற்றும் செயல்பாடுகள்:

11.2.1 குறிக்கோள்:

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையைச் சார்ந்த வாகனங்கள் அனைத்தையும் நேர்த்தியாகவும், சிக்கனமாகவும் பராமரிப்பதுடன் ஒரு வலுவான குறைகளைவு திட்டத்தைச் செயல்படுத்துதல், வாகனப் பழுது நீக்கம், பராமரிப்பு, இயக்கம் மற்றும் கழித்தொதுக்கம் தொடர்பாக வாகன உபயோகிப்பாளர்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளையும் ஒரே இடத்தில் இத்துறையின்மூலம் தீர்வு காண்பதற்கு வழிவகை செய்தல்.

11.2.2 செயல்பாடுகள்:

i. மாநிலத்தில் இயங்கும் அனைத்து மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை ஊர்திகளைத் திறமையான முறையில் பராமரித்தல்.

ii. வாகன உபயோகிப்பாளர்கள் ஊர்திகள் இயக்குவதிலும், பராமரிப்பதிலும் எதிர்கொள்ளும் அனைத்து இடர்பாடுகளையும் களைய வழிகாட்டுதல்.

iii. பழுதுபார்ப்பு மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் கால அளவு நிர்ணயித்தல் மற்றும் கடைப்பிடித்தல்.

iv. அரசுக்கு சிக்கனமாக இல்லாத வகையில் இயக்கப்பட்டு பராமரிக்கப்படும், வயதுமுதிர்ந்த வாகனங்களைக் கண்டறிந்து அவற்றைக் கழிவு செய்து மின்னணு ஏல முறையில் தீர்வு செய்தல்.

2020 மார்ச் 24]

v. புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும்போதும், வாகன கட்டமைப்பு பணிகளின்போதும் வாகன உபயோகிப்பாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உரிய தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

vi. வாகன மேலாண்மை மென்பொருள் பயன்படுத்தி, வாகனங்கள் தொடர்பான தகவல்களின் களஞ்சியமாக செயல்படுதல் மற்றும் இம்மென்பொருள்மூலம் இத்துறையைச் சார்ந்த அனைத்து பணிமனைகளின் செயல்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் கண்காணித்தல்.

vii. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் வாகன ஓட்டுநர்களுக்கு அவர்களின் வாகனம் தொடர்பான தற்போதைய அறிவுத்திறனை வலுப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.

11.3 மூன்றடுக்குக் கட்டமைப்பு:

வாகனங்களைத் திறம்பட பராமரிப்பதற்காக இத்துறையில் மண்டல, மாவட்ட மற்றும் நடமாடும் பணிமனைகள் அடங்கிய மூன்றடுக்குப் பராமரிப்பு முறை பின்பற்றப்பட்டு வருகிறது. இத்துறையின் 7 மண்டலப் பணிமனைகள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ 400 ஊர்திகளைப் பராமரித்து வாகனங்களில் உள்ள பெரும்பழுது உள்ளிட்ட அனைத்து பழுதுகளையும் நிவர்த்தி செய்கிறது. இம்மண்டலப் பணிமனைகளுக்கு உதவியாக ஊர்திகளைச் சிறப்பாகப் பராமரிக்கும்பொருட்டு 9 மாவட்டப் பணிமனைகள் இயங்கி வருகின்றன. இம்மண்டல மற்றும் மாவட்ட பணிமனைகளைத் தவிர்த்து, இத்துறையின் தனித்தன்மையான 29 நடமாடும் பணிமனைகள் வாகன உபயோகிப்பாளர்களின் இடத்திற்கே சென்று காலமுறை பராமரிப்புப் பணிகள் மற்றும் தேவைப்படும் சிறு பழுதுகளை மேற்கொள்கின்றன.

11.4 சுகாதாரத் துறை வாகனப் பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டம்:

இத்துறையால் சுகாதாரத் துறை வாகனப் பராமரிப்பு உதவி மற்றும் தகவல் திட்டம் (HICORP - Health Department vehicles Information and Complaint Redressal Programme) என்ற பெயரில்,

குறைகளைவுத் திட்டம் ஒன்று வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒற்றைச் சாளர முறையிலான இக்குறைகளைவு வசதியின்மூலம் மருத்துவ அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள், வாகனங்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும் HICORP உதவி எண் 94896 21111-க்கு குறுந்தகவலாகவோ (SMS) அல்லது தொலைபேசி அழைப்பு மூலமாகவோ பதிவு செய்து பயன்பெறுகின்றனர். இந்த ஒற்றைச் சாளர முறையிலான குறைகளைவு வசதியானது வாகனங்களின் அதிகபட்ச மற்றும் சிறந்த பயன்பாட்டிற்காகத் துறையால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

11.5 செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்:

இத்துறையின் உள்கட்டமைப்பு வளங்களைக் கொண்டு, வாகன விவர மேலாண்மை மென்பொருள் ஒன்று வடிவமைக்கப்பட்டு இத்துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் உதவியுடன், அனைத்து பணிமனைகள், பண்டகசாலைகள் மற்றும் இயக்கக தொழில்நுட்பப் பிரிவுகளின் செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருளைப் பயன்படுத்தி, இத்துறையைச் சார்ந்த ஒவ்வொரு பணிமனையின் செயல்திறன் ஒவ்வொரு மாதமும் மதிப்பீடு செய்யப்படுவதுடன், செயல்திறனுக்கேற்ப பணிமனைகளுக்கு தரவரிசை அளிக்கப்பட்டு, பணிமனைகளுக்கிடையே ஆரோக்கியமான போட்டி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மென்பொருள்மூலம் முன்னேற்றம் செலுத்தவேண்டிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு அப்பகுதிகளில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

11.6 கால அளவுகள் நிர்ணயித்து கடைப்பிடித்தல்:

இத்துறையால் மேற்கொள்ளப்படும் வாகன பழுது நிவர்த்திப் பணிகள் உள்பட அனைத்து பணிகளுக்கும் கால வரம்புகள் மற்றும் காலக்கெடுகள் இத்துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நடமாடும் மருத்துவமனை ஊர்திகளுக்கு உடற்கூடு மற்றும் இயந்திர பழுது நிவர்த்திப் பணிகள் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் மேற்கொண்டு வாகனத்தை விடுவிக்க நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு 20 நாட்கள் ஆகும். அனுமதிக்கப்பட்ட வாகனங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்போது அவை வெவ்வேறு நிலைகளில் கண்காணிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் ஊர்திகள் விடுவிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

அத்தியாயம் - 12

மனிதவளம் மற்றும் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்

12.1 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர் உட்பட பலவகை காலிப் பணியிடங்களில் தகுதியான பணியாளர்களை நிரப்ப வேண்டும் என்ற நோக்கத்திற்காக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது. மாநில மக்களின் நல்வாழ்வுக்காக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பத்து இயக்ககங்களின் வாயிலாக தமது சேவையை வழங்கி முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. இந்த இயக்ககங்களால் அரசு மருத்துவமனைகளில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த 200-க்கும் மேற்பட்ட பதவிகளில் ஒரு இலட்சத்திற்கும் மேலான பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

12.2 மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களைத் தேர்வு செய்வதற்குத் தனியாக வாரியம் உருவாக்கம்:

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் உள்ள பல்வேறு பதவிகளுக்கான காலிப் பணியிடங்களை விரைவாகவும், உரிய நேரத்திலும் நேரடிப் பணி நியமனம்மூலம் நிரப்பிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் கடந்த 2012 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. நேரடி நியமனங்களை விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் வழங்குவது மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், நாளேடுகளில் விளம்பரம் செய்து, இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பங்களைப் பெற்று நியாயமான முறையில் தேர்வு செய்கிறது. தகுதியான பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பெருமுயற்சியாகக் கொண்டு, உதவி மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பப் பணியாளர்களுக்கான நேரடி பணி நியமனத்தினை, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், அப்பதவிகளுக்கேற்ப எழுத்துத் தேர்வு நடத்தியும்/ தகுதி மதிப்பெண்கள் அடிப்படையிலும் நடைமுறையில் உள்ள விதிகளின்படி இனசுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் பணியாளர்களைத் தேர்வு செய்து வருகிறது.

[2020 மார்ச் 24

12.3 மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் துவக்கப்பட்ட நாளிலிருந்து 28-2-2020 தேதி வரையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்குத் தகுதியான நபர்களைத் தேர்வு செய்துள்ளது:

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
1	உதவி மருத்துவர் (பொது)	9,352
2	உதவி மருத்துவர் (சிறப்பு)	1,943
3	தமிழ்நாடு சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, சென்னைக்கு, தேர்வு செய்யப்பட்ட	72
4	உதவி மருத்துவர் (பல்-பொது)	59
5	உதவி மருத்துவர் (பல்-சிறப்பு)	67
6	உதவி மருத்துவர் (சிறப்பு தகுதி தேர்வு)	1,151
7	உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)	101
8	உதவி மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி)	4
9	உதவி மருத்துவ அலுவலர் (ஆயுர்வேதா)	1
10	உதவி மருத்துவ அலுவலர்/ விரிவுரையாளர் தரம்-II (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்)	73
11	மருத்துவ இயற்பியலாளர்	34
12	இயன்முறை சிகிச்சையாளர் தரம்-II	126
13	செவிலியர்	11,922
14	செவிலியர் (பச்சிளம் குழந்தை சிசு பராமரிப்புப் பிரிவு)	508

2020 மார்ச் 24]

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
15	முதுநிலை விரிவுரையாளர் (விழி ஒளி ஆய்வியல்)	2
16	மருந்தாளுநர்	974
17	மருந்தாளுநர் (சித்தா)	148
18	மருந்தாளுநர் (ஆயுர்வேதா)	38
19	மருந்தாளுநர் (ஓமியோபதி)	23
20	மருந்தாளுநர் (யுனானி)	20
21	ஆய்வக நுட்புநர் தரம் - II	528
22	ஆய்வக நுட்புநர் தரம் - III	2,398
23	நுண்கதிர் வீச்சாளர்	287
24	நுண்கதிர் சிகிச்சை நுட்புநர்	25
25	பல் சுத்திகாரிப்பாளர்	1
26	கிராமச் சுகாதார செவிலியர்	2,557
27	இதய வரைபட நுட்புநர்	30
28	நோய்தீர் உதவியாளர்	114
29	செயற்கை கைவினைஞர்	62
30	மின்னணு காந்தவியல் நுட்புநர் (EEG & EMG)	12
31	செவித்திறன் ஆய்வாளர்	16
32	தொழில் சிகிச்சையாளர்	18
33	இருட்டறை உதவியாளர்	227
34	மாவுக்கட்டு நுட்புநர் தரம்-II	87
35	இதயம் மற்றும் நுரையீரல் வெப்பக்குறைப்பு இயந்திர நுட்புநர்	7

[2020 மார்ச் 24

வ. எண்	பதவியின் பெயர்	தேர்வு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
36	மயக்கவியல் நுட்புநர்	77
37	பொருத்துநர் தரம்-II	60
	மொத்தம்	33,124

12.4 2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை (பிப்ரவரி 2020 வரை) 2,389 செவிலியர்கள், 1,234 கிராமச் சுகாதார செவிலியர்கள், 1,508 ஆய்வக நுட்புநர் தரம்-III உட்பட 6,347 பணியாளர்களை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான தேர்வு செய்யப்பட வேண்டிய பல்வேறு பதவிகள் குறித்து தகுதி பெற்றவர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் இவ்வாண்டிற்கான உத்தேசமான முன்னோடி கால அட்டவணை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட 29 பதவிகளுக்கான 8,634 காலிப் பணியிடங்களுக்குக் பணியாளர்களை நடப்பாண்டில் தேர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ. எண்	பதவியின் பெயர்	பணியிடங்களின் எண்ணிக்கை
1.	உதவி மருத்துவர் (பொது)	2,516
2.	உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)	54
3.	உதவி மருத்துவ அலுவலர் (ஓமியோபதி)	5
4.	உதவி மருத்துவ அலுவலர் (ஆயுர்வேதம்)	3
5.	உதவி மருத்துவ அலுவலர்/ விரிவுரையாளர் தரம்-II (யோகா & இயற்கை மருத்துவம்)	4
6.	உணவுப் பாதுகாப்பு அலுவலர்	112
7.	செவிலியர்	1,542
8.	கிராமச் சுகாதார செவிலியர்	1,357
9.	நுண்கதிர் வீச்சாளர்	89

2020 மார்ச் 24]

வ. எண்	பதவியின் பெயர்	பணியிடங்களின் எண்ணிக்கை
10.	மருந்தாளுநர்	1,199
11.	ஆய்வக நுட்புநர் தரம்-II (உணவுப் பாதுகாப்பு)	19
12.	கள உதவியாளர்	174
13.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (பொருத்துநர்)	87
14.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (பற்றவைப்போர்)	3
15.	திறன்மிகு உதவியாளர் தரம்-II (மின் வினைஞர்)	3
16.	செவித்திறன் ஆய்வாளர்	17
17.	இருட்டறை உதவியாளர்	90
18.	பல் சுத்திகரிப்பாளர்	67
19.	பல் நலவியலாளர்	15
20.	தொழில் சிகிச்சையாளர்	10
21.	செயற்கை கைவினைஞர்	28
22.	ஆய்வக நுட்புநர் தரம்-II (த.நா.ம.சே.க)	168
23.	இதய வரைபட நுட்புநர்	21
24.	அரங்கு உதவியாளர்	175
25.	பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்)	334
26.	மருத்துவ உதவியாளர்	14
27.	நோய்தீர் உதவியாளர்	73
28.	உதவி மருத்துவர் (சிறப்பு)	410
29.	கண் சிகிச்சை உதவியாளர்	45
	மொத்தம்	8,634

[2020 மார்ச் 24

12.5 சிறப்பு மருத்துவர்களைத் தேர்வு செய்வதற்கான தனி வழிமுறை:

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், பொதுமக்களுக்குச் சிறப்பு சிகிச்சை அளிக்கும்பொருட்டு, முதுகலைப் பட்டம் பெற்ற உதவி மருத்துவர்கள் (சிறப்பு), உடனடித் தேர்வு முறையில் (Walk-in-selection) நடைமுறையில் உள்ள இன சுழற்சி மற்றும் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி தெரிவு செய்யப்படுகிறார்கள்.

12.6 அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் மிகுந்த வெளிப்படைத் தன்மையோடு விரைந்து நிரப்பி பொதுமக்களுக்கு சேவைபுரிவதை மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவ்வாரியத்தின் தேர்வுமுறை வெளிப்படைத்தன்மை உள்ளதாகவும் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பங்களைப் பெற்று, தேர்வு நடத்தி விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. மேலும், ஊரகப் பகுதியை சேர்ந்த விண்ணப்பதாரர்களும் தங்கள் விண்ணப்பங்களின் நிலையையும், தேர்வு நடைமுறை விவரங்களையும் அறிந்துகொள்ளும் விதமாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

அத்தியாயம் - 13

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

13.1 தமிழக அரசால் நிறுவனங்கள் சட்டம், 1956-ன்படி 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், (TNMSC) தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகள், மாத்திரைகள், அறுவை சிகிச்சை மற்றும் தையல் நுகர்பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, அவற்றை ஆய்வுக்குட்படுத்தி சேமித்து வழங்கி வருகிறது. பின்னாளில் இக்கழகமானது மருத்துவக் கருவிகள் கொள்முதல் மற்றும் பராமரிப்புப் பணிகளையும் செய்யும் அளவிற்குத் தனது பணிகளை விரிவாக்கி உள்ளது. மேலும் மருந்துகள், அறுவை பொருட்கள், பூச்சி கொல்லி மருந்துகள் மற்றும் கால்நடை மருந்துகளையும் வாங்க விலை ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்து தருவது மட்டுமல்லாது, கருவுற்ற பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்கள், தாய்மார்கள் மற்றும் பிறந்த குழந்தைகளுக்கு குழந்தை நலப் பரிசுப் பெட்டகங்கள்

2020 மார்ச் 24]

மற்றும் மாதவிடாய் தூய்மை திட்டத்திற்கான சானிட்டரி நாப்கின் ஆகியவற்றையும் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. மேலும், ப்ளீச்சிங் பவுடர், கிருமிநாசினி மற்றும் புயல், வெள்ளம் போன்ற பேரிடர் நேரங்களில் தேவைப்படும் மருந்துகளையும் இக்கழகம் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

இவை தவிர சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், லித்தோட்ரிப்சி, நேரியல் முடுக்கி (லீனியர் ஆக்ஸிலரேட்டர்) மற்றும் கோபால்ட் சிகிச்சைப் பிரிவு போன்ற உயர் மருத்துவ ஆய்வுக் கருவிகளை வாங்கி சேவைக் கட்டண வசூல் அடிப்படையில் இக்கழகம் பராமரித்து வருகிறது. இக்கழகம் கட்டணப் பிரிவுகளுக்கு நடைமுறை ஒத்துழைப்பு நல்குகிறது. மேலும், மருத்துவமனைகளில் தூய்மைப் பணி, உணவு வழங்குதல், உயிரி மருத்துவக் கழிவுகளை அகற்றும் மேலாண்மை மற்றும் ஆய்வக சேவைகளுக்குப் புற ஆதார அடிப்படையில் ஒப்பந்ததாரர்களை நியமனம் செய்கிறது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கொள்முதல் நடவடிக்கைகளில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்தல், கொள்முதல் நடைமுறையில் பயன்பெறுவோரின் பங்களிப்பு மற்றும் முடிவு செய்யும் உரிமை மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு குறித்த நேரத்தில் பணப் பட்டுவாடா ஆகிய அடிப்படை கொள்கைகளால், சர்வதேச அளவில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் ISO 9001:2015 தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும்.

13.2 கழகத்தின் அமைப்பு:

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் நிருவாக இயக்குனரின் தலைமையின்கீழ் மருந்துகள், மருத்துவக் கருவிகள் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் ஆகிய மூன்று முக்கிய பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர் தலைமையின்கீழ் துணைச் செயலாளர், நிதித் துறை, மருத்துவப் பணிகள் கழக நிருவாக இயக்குநர், தேசிய நல்வாழ்வு இயக்கத் திட்ட இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மற்றும் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவின் தலைமைப் பொறியாளர் ஆகியோர் இம்மருத்துவப் பணிகள் கழகத்தின் இயக்குநர் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

[2020 மார்ச் 24

13.3 மருந்துகள் மற்றும் கருவிகள் கொள்முதல் மற்றும் வழங்கல்:

இக்கழகம் மருந்துகள், அறுவை சிகிச்சை நுகர்பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்முதல், தர ஆய்வு மற்றும் வழங்கல் நடைமுறைகளுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரும்முன், அத்தியாவசிய மருந்துகள், சிறப்பு மருந்துகள், அறுவை மற்றும் தையல் நுகர்பொருட்கள் மற்றும் ஆண்டி ஹீமோஃபிளீக் மருந்துகளுக்கான மருந்துப் பட்டியலை மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், குடும்ப நலத் துறை இயக்குநர் மற்றும் மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் ஆகியோர் கொண்ட ஒரு குழு மூலமாக முந்தைய மூன்றாண்டுகளில் பயன்படுத்திய அளவுகளின் சராசரியின் அடிப்படையில் இறுதி செய்யப்படுகின்றது. மேலும், அரசு மருத்துவ நிறுவனங்களிலுள்ள வல்லுநர்களின் ஆலோசனைகளும் கேட்டறியப்படுகின்றன.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கு ஒரு முறை விலைப்புள்ளிகளை இறுதிசெய்து அத்தியாவசிய மற்றும் சிறப்பு மருந்துகளை ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைந்த விலையில் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. தற்பொழுது இக்கழகமானது 315 அத்தியாவசிய மருந்துகள், 366 மருத்துவ அறுவை மற்றும் தையல் நுகர்பொருட்கள், 517 சிறப்பு மருந்துகளை அரசு மருத்துவ நிறுவனங்களுக்காக கொள்முதல் செய்து வருகிறது.

மருந்துகள் பயன்பாட்டின் அடிப்படையில் குறைந்தபட்ச இருப்பு 3 மாதம் என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டு அதற்கேற்றாற்போல் தேவைக்கேற்ப மட்டுமே கொள்முதல் செய்து மாவட்ட வாரியாக உள்ள 32 மருந்துக் கிடங்குகளில் இருப்பு வைத்து வழங்கப்படுகிறது. மேலும், இக்கழகம் ஆண்டுதோறும் கால்நடை வளர்ப்புத் துறைக்கு 225 கால்நடை மருந்துகளைக் கொள்முதல் செய்து, பிராந்திய இணை இயக்குநரகங்களுக்கு வழங்கி வருகிறது. இக்கழகம் மாநில மற்றும் தேசிய சுகாதாரக் குழுமத்தின் நிதியுடன் வெளியிடப்படும் அரசாணைகளின் அடிப்படையில் மட்டுமே மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. இவையன்றி உலக வங்கி, ஜப்பான் கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியின் அடிப்படையிலும்

2020 மார்ச் 24]

அவர்களின் வழிமுறைகளையும், பின்பற்றி மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்து வருகிறது. மருத்துவக் கருவிகளின் மூன்றாண்டு விலையில்லா பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் உத்தரவாதமும் அதனைத் தொடர்ந்து 7 ஆண்டுகளுக்குக் குறிப்பிட்ட விலையில் வருடாந்திர பராமரிப்பு என 10 ஆண்டுகளுக்கு மருத்துவக் கருவிகளின் செயல்பாடு உறுதி செய்யப்படுகிறது.

13.4 தர உறுதி அமைப்பு:

இக்கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் மருந்துகளின் மாதிரிகள் மருந்துக் கிடங்குகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அம்மாதிரிகளிலிருந்து மருந்துவாரியாக பொது மாதிரி தேர்ந்தெடுக்கப்படுகிறது. பின்னர் மருந்துகளின் வெளியுறை முகவரி அகற்றப்பட்டு, ஒவ்வொரு மாதிரிக்கும் ஒரு மாதிரி எண் வழங்கப்பட்டு, ஒப்பந்தம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய தரச்சான்று பெற்ற பரிசோதனைக் கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்கண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தரப் பரிசோதனைக் கூடங்களில் தரதேர்ச்சி பெற்ற மருந்துகள் மட்டும் மருத்துவமனைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தேர்ச்சி பெறாத மருந்துகளின் மாதிரிகள், மறுபரிசோதனைக்காக அரசு மருந்துகள் பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இப்பரிசோதனையிலும் தேர்ச்சி பெறாத மாதிரிகளின் மொத்த தொகுதியும் நிராகரிக்கப்படுகிறது.

13.5 தகவல் தொழில்நுட்ப அமைப்பு:

பல்லாண்டுகளாக செயல்முறையில் நிரூபிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தின்மூலம் மருந்துகள் கையாளும் மேலாண்மை கண்காணிக்கப்படுகிறது. கண்காணிக்கப்படுவதுடன் வலைதளத்தின்மூலம் குறிப்பிட்ட தகவல்கள் தவிர பங்குதாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தங்கள் பரிவர்த்தனைகளைக் காண ஏதுவாக அவர்களுக்கென்று பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் வழங்கப்படுகிறது. அனைத்து விநியோகஸ்தர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நிகழ்நேர குறுந்தகவல் அனுப்புதல், கிடங்குகள் மற்றும் ஸ்கேன் மையங்களில் கண்காணிப்புக் கேமராக்களை நிறுவி தலைமை அலுவலகத்துடன் இணைத்தல் போன்ற செயல்பாடுகளால் இக்கழகத்தின் பல்வேறு பிரிவுகள் சிறப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

13.6 ஆலோசனை சேவைகள்:

இக்கழகம் ஈட்டியுள்ள அளப்பரிய அனுபவத்தால், மருந்து மற்றும் மாத்திரைகள் கொள்முதல் செய்வதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளைத் தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கி வருகிறது.

13.7 சேவை நடவடிக்கைகள்:

பொதுமக்களுக்கு உயர் நோயறிதல் மற்றும் சிகிச்சை வசதிகளை உறுதிசெய்வதற்காக, இக்கழகம் சி.டி. ஸ்கேனர்கள், எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்கள் மற்றும் லித்தோட்ரிப்சி இயந்திரங்கள் ஆகியவற்றை அரசு மருத்துவமனைகளில் குறைந்தபட்ச பயனாளிகள் கட்டண வசூல் அடிப்படையில் இயக்குகிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்குக் கட்டணமின்றிப் பயன்பெறும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

சி.டி. ஸ்கேன் கருவிகள்:

இக்கழகம் 82 அரசு மருத்துவமனைகளில், 96 சி.டி. ஸ்கேன் கருவிகளை நிறுவி குறைந்தபட்ச கட்டணமாக சாதாரண ஸ்கேனுக்கு ரூ.500/-ம், கான்ட்ராஸ்ட் ஸ்கேனுக்கு ரூ.800/-ம், 128 கூறு சி.டி. ஸ்கேனுக்கு ரூ.3,000/-ம் என சேவை கட்டணமாகவும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் கட்டணமில்லா மற்றும் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள்:

இக்கழகம் 28 அரசு மருத்துவமனைகளில், 29 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி ஸ்கேன் ஒன்றுக்கு ரூ.2500/-ம், கான்ட்ராஸ்ட்-க்கு ரூ.4,000/-ம் என சேவைக் கட்டணமாகவும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் கட்டணமில்லாமலும் இச்சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், டெலிரேடியோலஜி வசதியை அனைத்து சி.டி. மையங்கள் மற்றும் எம்.ஆர்.ஐ. மையங்களில் நிறுவி கதிர்இயக்க மருத்துவரின் அறிக்கையைத் தொலைதூரத்திலுள்ள மருத்துவமனைக்கும் விரைவாக வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறுநீரகக் கல் நீக்கும் கருவிகள் ("லித்தோட்ரிப்சி"):

சிறுநீரகக் கல் நீக்கும் கருவிகள் நான்கினை நிறுவி ஒரு முறை சிகிச்சைக்கு ரூ.4,000/- முதல் ரூ.5,000/- வரை சேவைக் கட்டணமாகவும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் கட்டணமில்லாமலும் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

நேரியல் முடுக்கி மற்றும் கோபால்ட் சிகிச்சைக் கருவிகள்:

சென்னையிலுள்ள அரசு இராயப்பேட்டை மருத்துவமனை மற்றும் தமிழ்நாடு அரசுப் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒன்று வீதம் நேரியல் முடுக்கி கருவிகளை (லீனியர் ஆக்ஸிலரேட்டர்) 2020 ஜனவரி முதல் நிறுவி பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளது. மேலும் இக்கழகம், 8 நேரியல் முடுக்கிகளை தலா ஒன்று வீதம் ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை, சென்னை, காஞ்சிபுரம், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவும் பணியைச் செய்து வருகிறது. புற்றுநோய் சிகிச்சை வழங்குவதற்கு 15 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் கோபால்ட் சிகிச்சை கருவிகளை நிறுவும் பணியைத் தொடங்கியுள்ளது.

13.8 கட்டணப் பிரிவுகளுக்கு நடைமுறை ஒத்துழைப்பு, வழங்கல்:

இக்கழகம் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மையம், எழும்பூர், மகளிர் மற்றும் மகப்பேறு குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை, கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை மற்றும் சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள கட்டணப் பிரிவுகளின் வரவு-செலவுக் கணக்குகளைப் பராமரித்து நடைமுறை ஒத்துழைப்பு நல்குவதன்மூலம் மிகவும் குறைந்த கட்டணத்தில் சிறந்த மருத்துவச் சேவைகளைப் பொதுமக்கள் பெற உதவி வருகிறது.

அத்தியாயம் - 14

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

14.1 தமிழக மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த சுகாதாரச் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA)-ன் உதவியோடு தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

[2020 மார்ச் 24

இத்திட்டம் நகர்ப்புறங்களில் உள்ள அரசு மருத்துவ நிலையங்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

14.2 திட்டக் குறிக்கோள்கள்:

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதாரச் சேவைகளின் தரத்தை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேம்படுத்துவதன்மூலம், தமிழக மக்களின் சுகாதாரத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்:

i. முக்கிய மருத்துவமனைகளுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்தல் மற்றும்

ii. தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார மனித வளத்தை வலுப்படுத்தல்.

மேலும், இத்திட்டம் கீழ்க்கண்ட இனங்களில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது:

i. இதயநாள நோய், புற்றுநோய், நாள்பட்ட சுவாச நோய்கள், நீரிழிவு போன்ற நோய்களுக்கு நவீன சிகிச்சைகள் வழங்குவதன்மூலம் தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகளை மேம்படுத்துதல்.

ii. பழைய கட்டமைப்பு வசதிகளை சீரமைத்து ‘மைய நோய் கண்டறிதல் பிரிவு’ ஆக மாற்றுவதன்மூலம் மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்த்து, அவற்றின் தரத்தை மேம்படுத்தி நீண்டகால பெருந்திட்டம் வகுத்து நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் திறமையான மருத்துவமனை நிருவாகத்தை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

iii. ஜப்பானிய மருத்துவத் தொழில்நுட்பங்களான உயர் ரக அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் நவீன கதிர் இயக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், சர்வதேச தரத்திலான அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை வடிவமைத்து செயல்படுத்தவும், இதற்காக ஒப்புயர்வுமிக்க வசதிகளை அமைத்தல் மற்றும் அந்த வசதிகளைப் பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளவும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2020 மார்ச் 24]

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை (JICA)-ன் உதவியோடு செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மொத்த தொகையான 1,634 கோடி ரூபாயில், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் கடன் பங்கு 1,388 கோடி ரூபாய் (85%) மற்றும் மாநில அரசின் பங்கு 245.6 கோடி ரூபாய் (15%) ஆகும். இந்தத் திட்டம் ஏழு ஆண்டுக்கால அளவில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:

i. உயர்நிலை அரசு மருத்துவமனைகளை, கூடுதல் வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகளுடன் தரம் உயர்த்துதல்.

ii. பாரிந்துரை மருத்துவமனைகளை நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்துதல்.

iii. இரண்டாம்நிலை மருத்துவமனைகளை கூடுதல் வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகளுடன் வலுப்படுத்துதல்.

iv. மருத்துவமனை நிருவாகத்தை வலுப்படுத்துதல்.

v. தொற்றா நோய்களுக்கான ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துதல்.

14.3 அமைவிடங்கள்:

இந்தத் திட்டம் 17 நகரங்களில் உள்ள 21 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மதுரை, சென்னை-கீழ்ப்பாக்கம், கோயம்புத்தூர், சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஈரோடு, கடலூர் மற்றும் பெரியகுளம் ஆகிய 3 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆவடி, சேலம்- அம்மாபேட்டை, திருப்பூர்-வேலம்பாளையம் மற்றும் திருநெல்வேலி-கண்டியப்பேரி ஆகிய இடங்களில் உள்ள நான்கு இரண்டாம் நிலை மருத்துவமனைகளும் இத்திட்டத்தின்கீழ் வலுப்படுத்தப்படும்.

14.4 விரிவான செயல்பாடுகள்

14.4.1 உயர்நிலை மருத்துவமனைகளை மேம்படுத்துதல் (கட்டமைப்பு-368.20 கோடி ரூபாய் மற்றும் மருத்துவக் கருவிகள் 497.41 கோடி ரூபாய்):

கட்டமைப்பைப் பொறுத்தமட்டில், மதுரை, சென்னை-கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு, பொது மருத்துவம், வாஸ்குலர், கார்டியோதொராசிக், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, சிறுநீரகம், காது-மூக்கு-தொண்டை மற்றும் குழந்தைகள் அறுவை சிகிச்சை அரங்கங்கள் உள்ளடக்கிய நவீன அறுவை சிகிச்சை மையம், ஸ்கேனிங் மற்றும் ஊடுகதிருடன்கூடிய அறுவை அரங்கம் (Hybrid OT), தலையீடு கதிரியக்க அறைகள் (IVR Rooms), அறுவை சிகிச்சைக்கு முந்தைய சிகிச்சைப் பரிவு, நோயுற்றவர்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு (SICU), அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய மயக்க தீவிர சிகிச்சை பிரிவு, இமேஜிங் மையம் மற்றும் கருத்தரங்கம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 368.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்பட உள்ளன. மேலும், மருத்துவக் கருவிகளைப் பொறுத்தமட்டில், நவீன அறுவை சிகிச்சை மையத்தில் அறுவை அரங்கத்திற்குத் தேவையான மயக்கவியல் பணி நிலையம், சி-ஆர்ம், எண்டோஸ்கோபி கருவிகள், ஊடுகதிருடன்கூடிய அறுவை அரங்கத்திற்குத் தேவையான கருவிகள் (Hybrid OT), தலையீடு கதிரியக்க அமைப்பு (IVR system), ஆஞ்சியோகிராபி அமைப்பு, இமேஜிங் மையத்திற்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி. ஸ்கேன் போன்றவை மதுரை, சென்னை-கீழ்ப்பாக்கம் மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 497.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட உள்ளது.

14.4.2 பரிந்துரை மருத்துவமனைகளை (Referral Hospitals) வலுப்படுத்துதல் (மருத்துவக் கருவிகள் 201.07 கோடி ரூபாய்):

சேலம், வேலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய 11 இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு, இமேஜிங் துறை ஊடுகதிர் பிரிவுக்கு சி.டி. ஸ்கேன், மேமோகிராபி போன்ற கருவிகள், எண்டோஸ்கோபி மையத்திற்கு கேஸ்ட்ரோ பைபர்ஸ்கோப், டியோடினோஸ்கோப், ஆபரேட்டிங் மைக்ராஸ்கோப்,

2020 மார்ச் 24]

அல்ட்ராசவுண்ட், சி-ஆர்ம், எக்ஸ்ரே போன்ற மருத்துவக் கருவிகளும், ஈரோடு, கடலூர் மற்றும் பெரியகுளம் ஆகிய 3 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு, இமேஜிங் துறைக்கு சி.டி. ஸ்கேன், டிஜிட்டல் ப்ளோரஸ்கோபி, எண்டோஸ்கோபி, கேஸ்ட்ரோ பைபர்ஸ்கோபி போன்ற கருவிகளும் அறுவை அரங்கத்திற்கு சி-ஆர்ம் கருவி, எக்ஸ்ரே பிரிவு, மயக்கவியல் பணி நிலையம் போன்றவை 201.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட உள்ளன.

14.4.3 இரண்டாம்நிலை மருத்துவமனைகளை வலுப்படுத்துதல் (கட்டமைப்பு 109.50 கோடி ரூபாய் மற்றும் மருத்துவக் கருவிகள் 51.43 கோடி ரூபாய்):

கட்டமைப்பைப் பொறுத்தமட்டில், சென்னை-ஆவடி, சேலம்-அம்மாபேட்டை, திருப்பூர்-வேலம்பாளையம் மற்றும் திருநெல்வேலி-கண்டியப்பேரி ஆகிய இடங்களில் உள்ள இரண்டாம்நிலை அரசு மருத்துவமனைகளுக்கு உள்நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைக்கு வெளிநோயாளிகள் பிரிவு, மகப்பேறு, குழந்தைகள் நலம், காது-மூக்கு-தொண்டை மற்றும் கண் மருத்துவம், ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையம் (CEmONC) நோயுற்ற பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளுக்கு (SNCU), அவசரகால பிரிவு போன்ற துறைகளுக்கு 109.50 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட உள்ளன. மருத்துவக் கருவிகளைப் பொறுத்தமட்டில், இந்த மருத்துவமனைகளுக்கு படுக்கைகள், உள்நோயாளிகள் பிரிவுகளுக்கு இன்ஃபியூசன் ஸ்டேண்டுகள், அறுவை சிகிச்சை மேசைகள், அறுவை அரங்கத்தில் மயக்கவியல் கருவிகள், புறநோயாளிகள் பிரிவில் பல் பிரிவுகள், ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மையம் (CEmONC) நோயுற்ற பச்சிளம் குழந்தைப் பராமரிப்புப் பிரிவுகளுக்கு (SNCU) கார்டியோடோகோகிராபி, ரேடியண்ட் வார்மர், வெண்டிலேட்டர், அவசரகால பிரிவுக்கு டீஃபிப்ரிலேட்டர், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி, இமேஜிங் துறைக்கு ஊடுகதிர் கருவி போன்ற மருத்துவக் கருவிகள் 51.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட உள்ளன.

14.4.4 மருத்துவமனை நிருவாகம் வலுப்படுத்தல் (20 கோடி ரூபாய்):

மருத்துவமனைகளில் 20 கோடி ரூபாய் செலவில் மருத்துவமனை நிருவாகம், மருத்துவக் கருவிகள், தொற்றா நோய்கள் மற்றும் விபத்து

காயப் பிரிவு சிகிச்சை அளித்தல் போன்றவை குறித்த பயிற்சி அளிக்கப்படும்.

14.4.5 ஆரம்ப சுகாதாரச் சேவையை வலுப்படுத்துதல் (10.90 கோடி ரூபாய்):

சென்னை மற்றும் மதுரையில் செயல்படும் மண்டலப் பயிற்சி நிலையங்களில், தொற்றா நோய்களுக்காக 10.90 கோடி ரூபாய் செலவில் நவீன ஆய்வகம் நிறுவப்பட்டு, ஆரம்ப சுகாதார சேவைப் பணியாளர்களுக்குத் தொற்றாநோய்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

அத்தியாயம் - 15

தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்

15.1 தமிழ்நாடு அரசு தமிழக மக்களின் சுகாதார தரத்தினை மேம்படுத்தும்பொருட்டு, உலக வங்கியின் துணையுடன், தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, முன்தீர்மானிக்கப்பட்ட சுகாதார சாதனை விளைவுகளின் அடிப்படையில் உலக வங்கியிடம் ஈடுதொகை பெறப்படும்.

இத்திட்டத்திற்கான கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசும், உலக வங்கியும் இணைந்து புது டெல்லியில் 4-6-2019 அன்று கையெழுத்திட்டனர். இத்திட்டம் 29-7-2019 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது.

15.2 இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு இந்திய ரூபாய் மதிப்பில் 2,857.003 கோடி (அமெரிக்க டாலரில் 410 மில்லியன்). இத்திட்டத்திற்கான உலக வங்கியின் பங்கு இந்திய ரூபாய் மதிப்பில் 1,999.902 கோடி (அமெரிக்க டாலரில் 287 மில்லியன்) ஆகும். தமிழ்நாடு அரசு 857.101 கோடி (அமெரிக்க டாலரில் 123 மில்லியன்) முதலீடு செய்ய உள்ளது. இத்திட்டத்தின் காலஅளவு 5 ஆண்டுகள் ஆகும். இத்திட்டம் உலக சுகாதார அமைப்பின் திட்டமான நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) (அனைவருக்கும், அனைத்து வயதினருக்குமான சுகாதாரத் திட்டம்) எட்டும் குறிக்கோளுடன் 5 வருடங்களுக்குச் செயல்படுத்தப்பட உள்ளது.

15.3 இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள், மேம்படுத்தப்பட்ட தரமான சிகிச்சை, தொற்றாநோய்கள் மற்றும் காயங்களுக்கான

2020 மார்ச் 24]

மேம்படுத்தப்பட்ட மேலாண்மை, பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல் ஆகியன ஆகும்.

15.3.1 திட்ட மேம்பாட்டுக் குறிக்கோளின் குறியீடுகள்

i. தரச் சான்றிதழ் (ஆரம்பநிலை, இரண்டாம்நிலை, மற்றும் மூன்றாம்நிலை) பெற்ற மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

ii. ஆரம்பநிலை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம் நிலை வசதிகளுக்கான தர மதிப்பெண்களைப் பெற்ற மருத்துவமனைகளை அதிகரித்தல்.

iii. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய்களுக்கான நோய் கண்டறிதல் திறன்களை அதிகரித்தல்.

iv. உயர் இரத்தஅழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகளின் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தத்தில் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டுக்குள் உள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

v. விபத்து மற்றும் அவசரகால சேவைகளை மேம்படுத்துதல்

vi. முன்னுரிமை மாவட்டங்களில் மகப்பேறு மற்றும் குழந்தை நலச் சேவைகளின் பயன்பாட்டை அதிகரித்தல்.

இத்திட்டம், தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மற்றும் வட்ட மருத்துவமனைகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சமூகத்துவம் செயல்படுத்தப்படுகிறது.

15.4 நிதி விடுவித்தல் முறை:

இந்தத் திட்டத்திற்கான நிதி ஆண்டுதோறும் சுகாதாரத் துறையின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் தமிழக அரசால் வழங்கப்படும். துறை இயக்குநர்கள் தங்கள் வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் நிதித் துறையிடமிருந்து நேரடியாக அவர்களால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளுக்கு நிதி பெறுவார்கள். சார்பற்ற சரிபார்ப்பு அமைப்பின் முடிவுகள் மற்றும் அறிக்கையின் அடிப்படையில், தமிழக சுகாதார சீரமைப்புத் திட்டத்திற்கு உலக வங்கியால் நிதி வழங்கப்படும்.

[2020 மார்ச் 24

அத்தியாயம் - 16

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

16.1 இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது மற்ற மாநிலங்களில் பின்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கியது.

16.2 தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் முழு நிதியுதவி மற்றும் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிகழ்வின் நான்காவது கட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று மீதான 2017-2024 தேசிய மேலாண்மைத் திட்டத்தின் வாயிலாக 2030 ஆம் ஆண்டுக்குள் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் தொற்றைப் பொதுமக்களுக்கான அச்சுறுத்தலிலிருந்து முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலான நிகழ்வுகளை மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள்மூலம் (DAPCU) கண்காணிக்கப்பட்டு வருகிறது.

16.3 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் திட்டப் பிரிவுகள் பின்வருமாறு:

1. அதீத பாதிப்புக்குள்ளாகும் மற்றும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ள குழுக்களின்மீது தீவிர கவனம் செலுத்துதல்
2. தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு சேவைகளை விரிவுபடுத்துதல்
3. முழுமையான பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை அளிக்கும் சேவைகளை வழங்குதல்
4. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் அடிப்படை சேவைகளான, பால்வினைத் தொற்று, இரத்த பரிமாற்ற சேவைகள், தகவல் கல்வி தொடர்பு, இலக்கு குறியீடுகள், துறைப்படுத்துதல் மற்றும் ஆய்வக சேவைகள் போன்ற பிரிவுகளின்மூலம் நிறுவனத் திறன் மற்றும் திட்டம் சார்ந்த தகவல் மேலாண்மை அமைப்பினை மேம்படுத்துதல்.


16.4 எச்.ஐ.வி. தாக்கத்தின் நிலை

மத்திய மற்றும் மாநில அரசின் மிகப் பெரிய ஆதரவுடன் கடந்த வருடங்களில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமானது,

2020 மார்ச் 24]

கர்ப்பிணிப் பெண்கள் மத்தியில் 2003-ல் 0.83 ஆக இருந்த தொற்று சதவீதம் 2008-ல் 0.35 குறைந்தும், 2017-ல் 0.27 சதவீதமாக இருந்த எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றின் தாக்கத்தினை மேலும் குறைத்துள்ளது.

தமிழ்நாட்டில் எச்.ஐ.வி. தாக்கத்தின் நிலை



மத்திய மற்றும் மாநில அரசுகள் குறிப்பிடத்தக்க தொடர்ந்த ஆதரவு அளித்ததால், இந்தச் சாதனையை அடைய முடிந்தது. ஆதரவற்ற அதிக பாதிப்புக்கு உள்ளாகும் குழந்தைகளுக்கான அறக்கட்டளை, திருநங்கைகளுக்கான நலச் சங்கம் மற்றும் இளைப்பாறுதல் மையம் அமைத்தல் ஆகியவை மாநில அரசின் ஈடுபாட்டிற்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது.

16.5 தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 780 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், 1,797 வசதியுள்ள ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள், 16 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை வாகனங்கள், 216 பால்வினை/பிறப்பு உறுப்பு நோய்த் தொற்று சிகிச்சைப் பிரிவுகள், 55 கூட்டுமருந்து சிகிச்சை மையங்கள், 174 இணைப்பு கூட்டுமருந்து சிகிச்சை மையங்கள், 85 இலக்கு மக்கள் திட்டம் மற்றும் 15 தொடர் பணியாளர் திட்டம் ஆகியவைமூலம் கிராம அளவில் எச்.ஐ.வி. தடுப்பு முயற்சிகளை செய்து வருகிறது.

[2020 மார்ச் 24

தேசிய நோக்கங்களான புதிய எச்.ஐ.வி. தொற்றைப் பூஜ்ஜியமாக்குதல், எச்.ஐ.வி.-யினால் ஏற்படும் ஒதுக்குதல் மற்றும் புறக்கணிப்பு இல்லாமல் செய்தல் மற்றும் எச்.ஐ.வி. தொடர்பான இறப்பை முற்றிலும் தடுத்தல் என்ற நோக்கத்தினை அடைய, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமானது வினியோக சங்கிலி மேலாண்மைத் திட்டத்தின்மூலமாக, தரவுகளை எளிதில் கையாண்டு விரிவான பகுப்பாய்வு செய்கிறது. மேலும், வட்டார அளவில் சிறப்பு கவனம் செலுத்தி புதிய உத்திகளை நடைமுறைப்படுத்தி, எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் நபர்கள் எடுத்துக்கொள்ளும் ஏ.ஆர்.டி. கூட்டுமருந்து சிகிச்சையினை எளிதாகப் பெற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கண்காணித்து அந்நபர் மாநிலம் முழுவதும் உள்ள எந்த ஓர் ஏ.ஆர்.டி. மையத்திலும் எளிதாக சிகிச்சையினைத் தொடர பல புதிய முயற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தீவிர தொடர் விழிப்புணர்வினை, பொதுமக்கள் மற்றும் கருவுற்ற தாய்மார்கள் மத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தியும், கருவுற்ற தாய்மார்களிடமிருந்து குழந்தைக்குப் புதிய எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதை பூஜ்ஜியமாக்க, தனி கவனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16.6 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (ICTCs):

- 2019-2020 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள் பொதுப் பிரிவில் (GC) 31,87,755 நபர்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களில் (AN) 9,96,548 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் 2,883 பலதரப்பட்ட சுகாதார கவனிப்பு மையங்கள் மூலமாக எச்.ஐ.வி. ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகள் வழங்கப்படுகின்றன.
- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின்மூலம் (NACO) 377 தன்னிறைவுப் பெற்ற ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (SA-ICTC) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தேசிய சுகாதாரத் திட்டத்தின்மூலம் (NHM) 403 SA-ICTC-க்கள், (FICTC) 1,797 வட்டார ஆரம்ப

சுகாதார நிலையம் மற்றும் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் (NHM) 242 FICTC பாிசோதனை மையங்கள் இந்நிதியாண்டில் விாிவுபடுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் இணைந்து 188 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பாிசோதனை மையங்களை (PPP) தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவுவதைத் தடுத்து வருகிறது. இந்த ஆண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் எச்.ஐ.வி. கூட்டமைப்புகளுடன் இணைந்து 102 ஆலோசனை மற்றும் பாிசோதனை சேவைகள் துவக்கப்பட்டுள்ளது.
- தொலைதூரம் மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு எச்.ஐ.வி. ஆலோசனை மற்றும் பாிசோதனை சேவைகளை வழங்குவதற்காக மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் சார்பில் 16 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பாிசோதனை வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

16.7 தாயிடமிருந்து குழந்தைக்கு ஏற்படும் எச்.ஐ.வி. மற்றும் கிரந்தி நோய் தொற்றை தடுத்தல் (EMTCT):

- தமிழக அரசு, கர்ப்பகாலத்தில் அனைத்து பெண்களுக்கும் பாிசோதனை செய்து பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. மற்றும் சிபிலிஸ் (கிரந்தி நோய்) தொற்றினை முற்றிலும் அகற்ற உறுதி பூண்டுள்ளது.
- தாயிடமிருந்து குழந்தைக்குத் தொற்று பரவுதலை (EMTCT) தடுக்கும்பொருட்டு தொடர்ச்சியாக தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழுள்ள (NHM) இனப்பெருக்கம் மற்றும் குழந்தை நலத் திட்டத்துடன் (RCH) இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தன் இலக்கை அடைவதற்கும் மற்றும் எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதமாக பாதிக்கப்பட்ட பெண்களின் குழந்தைகளுக்கும் மற்றும் அவாின் குடும்பத்திற்கும் ஆரம்பகால தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு, தன்னார்வ ஆற்றுப்படுத்துதல் மற்றும் இரகசிய பாிசோதனை, வாழ்நாள்

[2020 மார்ச் 24

கூட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு பாலூட்டும் பழக்கங்கள் தொடர்பான ஆலோசனைகள் குறித்து விரிவான சேவைகள் வழங்கப்படுகின்றன.

- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் (NACO) வழிகாட்டுதலின்படி வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்கள் இலக்கினை அடைய (SDG), மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளர் தலைமையில் தொடர்ந்து நடத்தி வருகிறது. குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. தடுக்கும் விதமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ், மேற்பார்வை மற்றும் மேலாண்மைக் குழு (EMTCT) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- பச்சிளம் குழந்தை நோயறிதல் (EID) திட்டம் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையத்தின் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

- பெற்றோர் சேய் மேவா தடுப்புத் திட்டத்தின்படி (PPTCT) பாதிக்கப்பட்ட பெண்களின் பிறந்த குழந்தைகளுக்கு ஆறு முதல் பன்னிரெண்டு வாரம் வரை ஏ.ஆர்.வி. (ARV Prophylaxis) நெவிரெபின் சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

- எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட அனைத்து தாய்மார்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் வாழ்நாள் கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

16.8 பால்வினை தொற்று/இனப்பெருக்க வழி தொற்று சேவைகள்

- நியமிக்கப்பட்ட பால்வினை தொற்று மற்றும் இனப்பெருக்க வழி தொற்று கிளினிக்குகள் (Designated STI/RTI Clinic – DSRC)

- 216 நியமிக்கப்பட்ட (STI/RTI) சிகிச்சையகம் (Designated STI/RTI Clinic-DSRC) தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்த சிகிச்சையகங்கள் சுகவாழ்வு மையம்/சுரக்ஷா என்று அழைக்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

- இவ்வாண்டில் (டிசம்பர் 2019 வரை) 5,29,916 பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள்.

- இம்மையங்களில் (DSRC) தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, பால்வினை தொற்று மற்றும் இனப்பெருக்க வழி தொற்று (STI/RTI) உள்ளவர்களுக்கு ஒத்தவகை நோய்குறி தொகுப்பு (Syndromic Case Management) கூட்டு மருந்து சிகிச்சை முறையில் வண்ணக் குறியீட்டு மருந்துப் பைகளில் மருந்துகள் வழங்குகின்றனர். மேலும், இந்த சுகவாழ்வு மையத்தில் புறநோயாளிகளாக வரும் அனைவருக்கும் 'சிஃபிலிஸ் மற்றும் எச்.ஐ.வி.' தொற்றிற்கான பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

- இந்நோய் தாக்கும் அபாயம் அதிகமுள்ள மக்களுக்கு (High-risk group), பால்வினை தொற்று தொடர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

16.9 இலக்குப் பணிகள் திட்டம்:

- இலக்கு பணிகள் திட்டம், மக்கள் மத்தியில் (பெண் பாலியல் தொழிலாளர்கள், ஆண் ஓரின சேர்க்கையாளர்கள், போதை ஊசி மருந்துப் பழக்கம் உள்ளவர்கள், ஓட்டுநர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் திருநங்கைகள்) எச்.ஐ.வி./பால்வினை நோய்த் தடுப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கும், நடத்தை மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான பணிகள் தொண்டு நிறுவனங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள்மூலம் நடைபெறுகிறது.

- 2019-2020 ஆம் ஆண்டில் 85 தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மூலம் 74,543 இலக்கு மக்களுக்கு (பெண் பாலியல் தொழிலாளர்கள்-41,123, ஆண் ஓரின சேர்க்கையாளர்கள் – 28,879, திருநங்கைகள் – 4,280, போதை ஊசி மருந்துப் பழக்கம் உள்ளவர்கள்-332) புலம் பெயர்ந்தோர்கள்-2,95,966 மற்றும் ஓட்டுநர்கள், அவர்களின் உதவியாளர்கள்-2,98,600 ஆகியோர்களுக்கு எச்.ஐ.வி. தடுப்புப் பணி சென்றடைந்துள்ளது.

16.10 சமூகம் சார்ந்த எச்.ஐ.வி. பரிசோதனை (Community based HIV screening):

சமூகம் சார்ந்த எச்.ஐ.வி. பரிசோதனை, உலகளாவிய கொள்கை 2030-ன்படி எச்.ஐ.வி./எய்ட்ஸ் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு செயல்படுத்தப்படுகிறது. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் சமூகம் சார்ந்த எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரிசோதனையைத் தொண்டு நிறுவனங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தொடர்பு பணியாளர்கள் திட்ட தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

16.11 தொடர்புப் பணியாளர்கள் திட்டம்:

தொடர்புப் பணியாளர் திட்டம் தமிழ்நாட்டில் முன்னுரிமை அடிப்படையில் 15 மாவட்டங்களில் பால்வினைத் தொற்று, எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் காசநோய் ஆகியவற்றைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு ஊரகப் பகுதி இலக்கு மக்கள், அபாய நடத்தை உள்ளவர்கள் மற்றும் ஓட்டுநர்கள், புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் செயல்படுத்தப்படுகிறது.

தற்பொழுது, 14 தொடர்புப் பணியாளர்கள் திட்டம் செயல்படுகிறது. ஒவ்வொரு தொடர்புப் பணியாளர்கள் திட்டமும் அவர்களுக்குரிய மாவட்டங்களில் அதிகம் எச்.ஐ.வி. பரவியுள்ள 100 கிராமங்களில் செயல்படுகிறது. இந்தத் தொடர்புப் பணியாளர் திட்டம்மூலம் 8,018 இலக்கு மக்கள் 35,819 புலம்பெயர்ந்தோர், 1,340 ஓட்டுநர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் மற்றும் 53,398 அபாய நடத்தை உள்ளவர்களுக்கு பால்வினைத் தொற்று எச்.ஐ.வி. மற்றும் காசநோய்த் தடுப்பு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 22,593 இலக்கு மக்களுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப்பட்டு அவர்களில் 17 நபர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று கண்டறியப்பட்டு ஏ.ஆர்.டி. மையங்களில் பதியப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

16.12 ஆணுறை பயன்பாடு:

பொது மக்களிடையே பால்வினைத் தொற்று மற்றும் எச்.ஐ.வி. தொற்றைத் தடுக்கும் முக்கியமான திறனுள்ள கருவியாக ஆணுறை பயன்பாடு உள்ளது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பால்வினை நோய் மையங்கள், நம்பிக்கை மையங்கள்,

2020 மார்ச் 24]

ஏ.ஆர்.டி. மையங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் (இலக்கு மக்கள் மற்றும் தொடர்பு பணியாளர்கள்) சமூகம் சார்ந்த நிறுவனங்களின் களப் பணிகள் மூலமாக 8,71,991 ஆணுறைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

16.13 தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகள் மற்றும் பெண்கள் குறுகியகால தங்கும் இல்லங்கள் மற்றும் பெண்கள் மறுவாழ்வு மையங்களில் செயல்படுத்தப்படும் எச்.ஐ.வி. மற்றும் காசநோய் தடுப்புத் திட்டம்:

- தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து வகை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கும், பெண்கள் குறுகியகால தங்கும் இல்லங்கள் மற்றும் பெண்கள் மறுவாழ்வு மையங்களில் உள்ள பெண்கள் மத்தியில் பால்வினை நோய், எச்.ஐ.வி., காசநோய் மற்றும் ஹெபடைட்டிஸ் வைரஸ் தொற்று தொடர்பான தடுப்புப் பணிகள் (விழிப்புணர்வு, பயிற்சி, ஆலோசனை, பரிசோதனை, பரிந்துரை, கவனிப்பு மற்றும் சிகிச்சை வழங்குதல்) திட்டத்தினைச் செயல்படுத்த செப்டம்பர் 2018-ல் சிறைச்சாலை மற்றும் சமூக நலத் துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஏற்படுத்தப்பட்டது.

- இதன் தொடர்ச்சியாக 43,976 சிறைவாசிகளுக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்து அவர்களில் 93 நபர்களுக்கு எச்.ஐ.வி. கண்டறியப்பட்டு, 84 நபர்களுக்கு ஏ.ஆர்.டி. பதிவு செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களில், 27,552 சிறைவாசிகளுக்கு காசநோய் பரிசோதனை செய்ததில், 19 காசநோயாளிகள் கண்டறியப்பட்டு அவர்களுக்குக் காசநோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

16.14 இரத்தப் பாதுகாப்பு

- தமிழகத்தில் இரத்தம் தேவைப்படும் நபர்களுக்குப் போதுமான, பாதுகாப்பான, தரம் வாய்ந்த இரத்தம் மற்றும் இரத்த உட்பொருட்களை அளிக்கும் நோக்கத்துடன் 309 இரத்த வங்கிகளும் (90 அரசு இரத்த வங்கிகள், 9 மத்திய அரசு இரத்த வங்கிகள் மற்றும் 210 தனியார் இரத்த வங்கிகள்) 528 இரத்த சேமிப்பு மையங்களும் (383 அரசு

மையங்கள் மற்றும் 145 தனியார் மையங்கள்) செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 2019-2020 ஆம் ஆண்டில் அரசு இரத்த வங்கிகள் வாயிலாக மட்டும் சுமார் 2,921 இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டு 2,48,005 இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. வருடாந்திர தன்னார்வ இரத்த தான முகாம் நாட்காட்டியின்படி மாநிலம் முழுவதும் தன்னார்வ கட்டணம் பெறாத இரத்த தான முகாம்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மொத்தம் உள்ள 90 அரசு இரத்த வங்கிகளில், 39 அரசு இரத்த வங்கிகள் இரத்த பகுப்பாய்வு மையங்களாக செயல்பட்டு வருகின்றன.

- இரத்த தானத்திற்குப் பிறகு தானமாகப் பெறப்பட்ட அனைத்து இரத்தம், இரத்தப் பரிமாற்றத்தின்மூலம் பரவும் 5 வகை இரத்தப் பரிசோதனைகள் (HIV, HBV, HCV, Syphilis and Malaria) மற்றும் இரத்தப் பிரிவு பரிசோதனைகள் செய்வதற்காக தனி குளிர்சாதனப் பெட்டியில் சேமித்து வைக்கப்படுகிறது. அதன் பின்னர், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின்மூலம் வழங்கப்படும் பரிசோதனைப் பொருட்கள்மூலம் (Kits) எச்.ஐ.வி. தொற்று வைரஸை கண்டறிய எலிசா (Elisa) மற்றும் ரேபிட் கார்டு (Rapid Card) முறைப்படி பரிசோதனை செய்யப்படுகிறது.

- இரத்த வங்கிகளின் தரம் மூன்று வழிகளில் அதாவது வெளிப்புற தர உத்தரவாதம், ஒவ்வொரு மாதமும் உள்தர உறுதி சேவை சரிபார்த்தல் மற்றும் நேரடி தணிக்கை ஆய்வு ஆகியவைமூலம் உறுதி செய்யப்படுகிறது.

16.15 எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களைத் திறம்பட ஈடுபடச் செய்தல்

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், எச்.ஐ.வி./எய்ட்ஸ்-உடன் வாழும் மக்கள் மற்றும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களை மாவட்ட அளவில் எச்.ஐ.வி. குறித்த திட்டம் சார்ந்த செயல்பாடுகளில் திறம்பட ஈடுபடுத்திக் கீழ்க்கண்டபடி கண்காணிக்கிறது.

- அடிமட்ட அளவில் அனைத்து சேவைகளும் கிடைப்பதை உறுதி செய்கிறது.

- மாவட்ட அளவில் எச்.ஐ.வி. தடுப்பு மற்றும் தொடர் கண்காணிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

2020 மார்ச் 24]

16.16 ஹலோ + உதவி எண் 1800 419 1800

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினைத் தொற்று குறித்த தேவையான தகவல்களைப் பொது மக்களுக்கு வழங்குதல்.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினைத் தொற்று குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்தல்
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினைத் தொற்று குறித்த தவறான கருத்துகள், கட்டுக்கதைகள் மற்றும் சந்தேகங்களைக் களைதல்
- அழைப்பாளர்களுக்கு மாவட்டந்தோறும் செயல்படும் சேவை மையங்கள் பற்றிய தகவல்களை அளித்தல்.

16.17 சட்ட உதவி மையங்கள்

- தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையக் குழுவுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் இலவச சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இத்திட்டத்தின்கீழ் 'எச்.ஐ.வி/எய்ட்ஸ்'-உடன் வாழ்வோர் மற்றும் மக்களின் சட்டம் சார்ந்த மற்றும் சட்டம் சாராத பிரச்சினைகளைக் கூட்டு மருத்துவச் சிகிச்சை மையங்களில் பணியாற்றும் முதுபெரும் ஆலோசகர்கள் மூலமாகத் தீர்த்து வைத்தல்

16.18 செஞ்சுருள் சங்கம்

- நாட்டிலேயே முன்னோடியாக, இளைஞர்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எண்ணங்கள் மற்றும் நடத்தை மாற்றத்தைக் கொண்டு வரவும், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், 2005 ஆம் ஆண்டில் செஞ்சுருள் சங்கம் தொடங்கப்பட்டது.
- தமிழகத்தில் 2,229 கலை மற்றும் அறிவியல், தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி மையங்களில் செஞ்சுருள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

16.19 வாழ்வியல் திறன் கல்வித் திட்டம்:

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் வகையில், எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுதல் மற்றும் தடுத்தல் தொடர்பான தகவல்களை 9,580 பள்ளிகளில் ஒன்பதாம் மற்றும் பதினொன்றாம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வாயிலாக நடத்தப்படுகிறது.

16.20 கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை:

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான கட்டணமில்லாத கவனிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை சேவைகள், அரசு மருத்துவமனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுமருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது.

- வழக்கமான பரிசோதனைகள், சிடி-4 பரிசோதனை, இரத்தத்தில் வைரஸ் அளவைக் கண்டறியும் பரிசோதனைகள், ஏ.ஆர்.வி. கூட்டுமருந்து, சந்தர்ப்பவாத நோய்த் தொற்றிற்கான மருந்து, பலதரப்பட்ட ஆலோசனை சேவைகள், பாிந்துரை மற்றும் இணைப்பு சேவைகள் முதலிய சேவைகள் கூட்டுமருந்து சிகிச்சை மையங்களின்மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன், எச்.ஐ.வி. தொற்றுள்ளோருக்கு யோகா பயிற்சி மற்றும் வாழ்க்கை முறையை மாற்றியமைத்ததற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

- தற்பொழுது, 1,20,800 எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுள்ளோர், 55 கூட்டுமருந்து சிகிச்சை மையங்கள் மூலமாக இலவச சிகிச்சையினை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதலாக, 174 இணைப்பு கூட்டுமருந்து சிகிச்சை மையங்கள், அவரவரின் இல்லங்களுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் மருந்து விநியோகிக்கும் மையங்களாக செயல்படுகின்றன.

- மேலும், 31 கவனிப்பு மற்றும் ஆதரவு மையங்கள், சிகிச்சையைத் தவறவிட்ட எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுள்ள நபர்களைக் கண்காணித்து சிகிச்சை அளித்தல், உளவியல் சமூக ஆதரவு மற்றும் பலவிதமான நலம்தரும் திட்டங்களுடன் இணைக்கும் சேவைகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

2020 மார்ச் 24]

16.21 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு:

1. உத்தியல் தகவல் மற்றும் மேலாண்மை முறை (SIMS)

இச்செயலி, திட்ட நிலவரங்களைக் கண்காணிக்கவும், ஒழுங்குபடுத்துவதற்கும் பயன்படுகிறது. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் அனைத்து பிரிவுகளின் (ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம், இலக்கு மக்கள், குருதி வங்கி, பால்வினை நோய்/பிறப்புறுப்பு பாதைத் தொற்று, தகவல்-கல்வி-தொடர்பு, பரிசோதனைக் கூடங்கள் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு) வாயிலாக ஒவ்வொரு மாதமும் அறிக்கைகள் இச்செயலிமூலம் பெறப்படுகிறது.

2. எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட நபர் - கூட்டு மருத்துவ தொடர்புத் திட்டம் (PALS)

- PALS பட்டியல் என்பது ஓர் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்புக் கருவியாகும். இது அனைத்து எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட நபர்களின் (கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பொது மக்கள்) விவரங்களை உட்கொண்டதாகும்.
- ஒவ்வொரு நம்பிக்கை மையம் மற்றும் ஏ.ஆர்.டி. மையங்களும் தங்களிடம் பதிவுபெற்ற எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட நபர்களின் விவரங்களை இதில் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்படுகிறது.

3. எச்.ஐ.வி. தீவிர கண்காணிப்பு (HSS):

- கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அதிக பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பிரிவினர்கள் மத்தியிலும் எச்.ஐ.வி.யின் தாக்கம் எந்த அளவு உள்ளது என்பதை அறிய செய்யப்படும் கணக்கெடுப்பு ஆகும்.
- 2018-2019 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகளிடம் இந்தக் கணக்கெடுப்பு முதன் முறையாக நடத்தப்பட்டுள்ளது.
- 1 ஜனவரி 2019 முதல் 71 மையங்கள் (ANC), 44 அதிக பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினர்கள் (HRGs) மற்றும் 3 சிறைச்சாலைகளில் எச்.ஐ.வி. தீவிர கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

[2020 மார்ச் 24

16.22 மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள்:

- o தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் திட்டங்களை முழுமையாக செயல்படுத்திடவும், மாவட்ட அளவில் உள்ள தேசிய சுகாதாரத் திட்டம், இதர அரசுத் துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் வழிகாட்டுதலோடு எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்புத் திட்டப் பணிகளை மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் செயல்படுத்தி வருகிறது.
- o எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலராகச் செயல்படும் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அவர்களால் மாவட்ட ஆட்சியாின் நெருங்கிய பங்களிப்போடு நிருவகிக்கப்படுகிறது.
- o தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில், எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகளும் மூன்று மாவட்டங்களில் இவ்வலுவலகங்கள் இல்லாமலும் உள்ளன.
- o மொத்தம் உள்ள 29 எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகளில், 27 மாவட்டங்களில் இவ்வலகுகள் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் நிதியுதவியுடனும், திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய 2 மாவட்டங்களில் மாநில அரசின் உதவியுடனும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

16.23 இளைப்பாறுதல் மையம்:

தமிழக அரசு இளைப்பாறுதல் மையங்கள் சேவைகளைப் புதுப்பித்து 32 மாவட்டங்களில் 34 இளைப்பாறுதல் மையங்கள் (சென்னையில் 73 மையங்கள்) துவங்க, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தை அனுமதித்து ரூ.2,41,06,000/- நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இளைப்பாறுதல் மையங்களின் நோக்கங்கள்:-

- தற்காப்பு தன்மையுள்ள ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகள் வழங்குதல்
- ஆதரவு குழுக் கூட்டங்கள் நடத்துதல்
- எச்.ஐ.வி. உள்ளோருக்கு உளவியல்ரீதியாக ஆதரவு வழங்குதல்

2020 மார்ச் 24]

- கவனிப்பு மற்றும் ஆதரவு சேவைகள் வழங்குவோருடன் இணைத்தல்
- அரசு நலத் திட்டங்கள் இணைத்தல்
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் அளிக்கக்கூடிய சேவைகளைப் பெறுவதற்கு சுமூகமான சூழ்நிலை உருவாக்குதல்.

16.24 சமூக நன்மைகளை ஒருங்கிணைத்தல்:

- எச்.ஐ.வி./எய்ட்ஸால் தொற்றுக்குள்ளான மற்றும் அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் நலன் கருதி தமிழக அரசால் "எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தமிழக அரசின் அறக்கட்டளை" (டிஎன்டிசிஎஏ)-க்கு ரூ.9.5 கோடி நிதி வழங்கப்பட்டு தமிழ்நாடு பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷனில் "நிதிய மூலதனமாக" வைக்கப்பட்டுள்ளது. வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து எச்.ஐ.வி./எய்ட்ஸால் தொற்றுக்குள்ளாக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி, மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்துக்காக நிதியுதவி செய்யப்படுகிறது.
- தமிழக அரசு எச்.ஐ.வி./எய்ட்ஸால் தொற்றுக்குள்ளான மற்றும் பாதிக்கப்பட்டுள்ள 1,000 குழந்தைகளுக்கு உதவிசெய்யும் நோக்கத்துடன் 2019-2020 ஆம் நிதி ஆண்டில் கூடுதலாக ரூ.5.00 கோடி சுழல் நிதியாக இந்த அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளது.
- 2019-2020 நிதி ஆண்டில், 94.85 இலட்சம் ரூபாய் 3,828 எச்.ஐ.வி./எய்ட்ஸால் தொற்றுக்கு உள்ளாக்கப்பட்ட/பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- எச்.ஐ.வி. பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்'கீழ், மாதந்தோறும் 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சுமார் 9,886 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுடன் வாழ்பவர்கள் கூட்டுமருந்து சிகிச்சை மையங்களுக்கு சென்றுவர, கட்டணமில்லா பேருந்து பயணச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொற்றுடன் வாழும் மக்களுக்கு கீழ்க்காணும் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படுகிறது:

 i. விதவை ஓய்வூதியம்

 ii. முதியோர் ஓய்வூதியம்

 iii. அந்தியோதயா அன்ன யோஜனா

 iv. மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுத் திட்டம்

அத்தியாயம் - 17

தேசிய நலவாழ்வுக் குழுமம் - தமிழ்நாடு

17.1 சுகாதார அமைப்பு மற்றும் நாட்டு மக்களின் குறிப்பாக கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களின் சுகாதார நிலை ஆகியவற்றின் தரமான முன்னேற்றம் கொண்டுவரும் நோக்கில், தேசிய நலவாழ்வுக் குழுமம் தொடங்கப்பட்டுள்ளது.

தேசிய நலவாழ்வுக் குழுமம் தனது இலக்கினை அடைவதற்கு சில முக்கியமான அம்சங்களை உள்ளடக்கி செயல்படுகிறது. அவை சமூகத்திற்குப் பொறுப்பேற்கக்கூடிய முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு இயங்கும் பொது சுகாதாரச் சேவை முறை, மனிதவள மேலாண்மை, சமூக ஈடுபாடு, பரவலாக்கல் (Decentralization), தர நிலையை (Standards) ஒப்பிட்டுச் செயல்படுத்தப்படும் தீவிரமான கண்காணிப்பு, மதிப்பாய்வு, கிராமங்கள் தொடங்கி பல்வேறு சுகாதாரத் திட்டங்களை ஒருமித்து செயல்படுத்துதல், புதிய வழிமுறைகள் நெகிழ்வுத் தன்மையுடைய நிதி உதவி மற்றும் சுகாதாரக் குறியீடுகளை முன்னேற்ற எடுக்கப்படும் பிற நடவடிக்கைகள் ஆகும்.

- தேசிய நலவாழ்வுக் குழுமம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு துணைக் குழுமங்கள் உள்ளடக்கியதாகும்:

- தேசிய ஊரக நலவாழ்வுக் குழுமம் (2005) - கிராமப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய.

- தேசிய நகர்ப்புற நலவாழ்வுக் குழுமம் (2013) - நகர்ப்புற மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய.

17.2 தேசிய நலவாழ்வுக் குழுமம்-தமிழ்நாடு

- அனைவருக்கும் தரமான சுகாதாரச் சேவையினை எளிதாகப் பயனடைய ஏதுவான வழிமுறைகளை அதிகப்படுத்தியுள்ளது.
- மத்திய, மாநில மற்றும் உள்ளூர் சுய தன்னாட்சி அமைப்புகளும் பங்களிக்கின்றன.
- ஆரம்ப சுகாதாரச் சேவைகளின் நோய்த் தடுப்பு, ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டிற்காகப் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் சமூகத்தை ஈடுபடுத்துவதற்கான ஒரு தளத்தை அமைத்தல்.
- சமத்துவம் மற்றும் சமூக நீதியை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குதல்.
- உள்ளூர் முயற்சிகளை ஊக்குவிக்க மாவட்டங்களுக்கும் சமூகத்திற்கும் நெகிழ்வுத்தன்மையை வழங்குவதற்கான வழிமுறையை நிறுவுதல்.
- ஊக்குவிப்பு மற்றும் நோய்த் தடுப்பு சுகாதாரப் பாதுகாப்பிற்கான துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குதல்.

தேசிய நலவாழ்வு குழுமம்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

- பேறுசார், மகப்பேறு, பச்சிளம் குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான மருத்துவ சேவைகள்.
- குடும்ப நலத் திட்டம்
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்
- தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்
- தேசிய யானைக்கால் கட்டுப்பாட்டுத் திட்டம்
- ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம் (ஐடிஎஸ்பி)
- தேசிய திசையன் பரவும் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் (என்விபிடிசிபி)

- தொற்றா நோய்கள், காயம் மற்றும் விபத்து
- நீரிழிவு நோய், சி.வி.டி. மற்றும் பக்கவாதம் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த தேசிய திட்டம்
- காது கேளாமைத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டம்.
- யுனிவர்சல் நோய்த் தடுப்புத் திட்டம்
- தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்
- தேசிய மனநலத் திட்டம்
- தேசிய அயோடின் குறைபாடு கோளாறு கட்டுப்பாட்டுத் திட்டம்
- தேசிய பார்வை இழப்பு தடுப்புத் திட்டம்
- தேசிய புகையிலைக் கட்டுப்பாட்டுத் திட்டம்
- தேசிய முதியோரின் சுகாதாரப் பராமரிப்புத் திட்டம் (NPHCE)

மக்களுக்கு தரமான பொது சுகாதாரச் சேவைகளை வழங்குவதிலும், சவால்களை எதிர்கொள்வதிலும் மாநில சுகாதார அமைப்பு புகழ்பெற்று விளங்குகிறது. மாநில மக்களுக்குச் சமமான, எளிதில் அணுகத்தக்க மற்றும் தரமான சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் தமிழகம் முன்னோடியாக விளங்குகிறது.

சுகாதாரக் குறியீடு இலக்குகளை அடைவதில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்த மில்லினியம் அபிவிருத்தி இலக்குகளை மாநிலம் ஏற்கெனவே அடைந்துள்ளது மற்றும் நிதி ஆயோக் வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்தி இலக்கு (SDG) இந்தியா குறியீட்டு அறிக்கையில், இரண்டாவது இடம் வழங்கப்பட்டுள்ளது. 2030 இலக்குக்கு முன்னதாக அனைத்து நிலையான அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) அடைய தமிழ்நாடு தீர்மானித்துள்ளது.

குளோபல் பர்டன் ஆஃப் டிசிஸஸ் அறிக்கை, 2016 மாநிலத்தில் நிகழும் தொற்றுநோயியல் மாற்றத்தைக் காட்டியது. தமிழ்நாட்டின் இயலாமை-சரிசெய்யப்பட்ட வாழ்க்கை ஆண்டு

2020 மார்ச் 24]

(DALY)-இது உடல்நலக் குறைவு, இயலாமை அல்லது குறுகிய கால மரணம் காரணமாக இழந்த ஆண்டுகளின் எண்ணிக்கையாக வெளிப்படுத்தப்படும் ஒட்டுமொத்த நோய்ச் சுமையின் ஒரு நடவடிக்கையாகும். இது 1990 முதல் 2016 வரை, டாலியின் முக்கிய காரணங்கள் என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் தொற்றுநோய்கள், தாய்வழி, குழந்தை பிறந்த மற்றும் ஊட்டச்சத்து நோய்களிலிருந்து தொற்றா நோய்களுக்கு (அதாவது, இஸ்கிமிக் இதயநோய், பக்கவாதம், நாள்பட்ட சிறுநீரக நோய், மனம், தசைக்கூட்டு நோய்கள், சுவாச நோய்கள்) மாறிவிட்டன.

தேசிய நலவாழ்வுக் குழுமம், தமிழ்நாடு, தொற்றா நோய்களால் ஏற்படும் சவால்களை எதிர்த்து சுகாதார அமைப்பை வலுப்படுத்த பல திட்டங்களை வகுத்துள்ளது. புற்றுநோய், நீரிழிவு நோய், இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் (NPCDCS) தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டம் (NCDs) என்பது தொற்றா நோய்களைத் தடுப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் தேசிய நலவாழ்வு இயக்கத்தில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டமாகும்.

17.3. தாய்-சேய் நலம்

17.3.1 பேறுகாலம், கர்ப்பிணிப் பெண்கள், பச்சிளங் குழந்தை, குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள் (RMNCH+A)

RMNCH+A திட்டமானது தேசிய சுகாதாரக் குழுமத்தால் மகப்பேறு சேவை, பிரசவ சேவை, அவசரகால மகப்பேறு சேவைகள் மற்றும் வளரிளம் பருவத்திற்கான சேவைகள், குடும்பநல சேவைகள் மாநிலத்தில் அனைத்து வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்காக வழங்கப்பட்டு வருகிறது.

17.3.2 ஜனனி சுரக்க்ஷா யோஜனா திட்டம்

ஜனனி சுரக்க்ஷா யோஜனா திட்டம் கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் இறப்பு விகிதத்தைக் குறைக்கும்பொருட்டு தேசிய சுகாதாரக் குழுமத்தால் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் அரசு மருத்துவ நிலையத்தில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்களுக்கும் நிதியுதவியாக நகர்ப்புறங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ரூ.600/-ம், ஊரகப் பகுதிகளில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ரூ.700/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2019-2020

நிதியாண்டில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 3,47,812 தாய்மார்கள் நேரடியாக வங்கிக் கணக்கில் பணப்பயன் பெற்றுள்ளனர்.

17.3.3 ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்ரம்

மகப்பேறு கால கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்கள், பச்சிளங் குழந்தைகள் ஆகியோருக்கான மருத்துவ சேவைக்கு ஏற்படும் மருத்துவச் செலவினைக் குறைக்கும் வகையில், தேசிய சுகாதாரக் குழுமம்மூலம் JSSK திட்டம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் கர்ப்பிணிப் பெண்கள் தங்களது மருத்துவ சேவைக்காக மருத்துவ நிலையங்கள் வந்து செல்லவும், கர்ப்ப காலங்களில் தேவைப்படும் பரிசோதனைகள், இலவசமாக பிரசவம், பிரசவ காலங்களில் இலவச உணவு மற்றும் பிரசவத்திற்குப் பின் தாய்மார்கள் பாதுகாப்பாக வீட்டிற்குச் செல்லவும் தேவையான வசதிகள் இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 4,70,300 கர்ப்பிணிப் பெண்கள் விலையில்லா மருந்துகள், உணவு மற்றும் தேவையான பொருட்கள் பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 1,41,230 கருவுற்ற தாய்மார்கள் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கும், 2,05,132 பிரசவித்த தாய்மார்கள் மருத்துவமனையிலிருந்து அவர்கள் இல்லத்திற்கும் கொண்டுசென்று விடப்பட்டுள்ளனர். இதே காலக்கட்டத்தில் 1,27,343 தாய்மார்கள் மருத்துவ நிலையங்களுக்கிடையே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறார்கள்.

17.3.4 விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் (CEmONC):

தமிழ்நாட்டில் நடைபெறும் பிரசவங்களில் 99.9% பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் நடைபெறுவதாக தேசிய குடும்பச் சுகாதார கணக்கெடுப்பு நிறுவனம் 2015-2016 ஆம் ஆண்டில் தெரிவித்துள்ளது. அவற்றுள் 60% பிரசவங்கள் அரசு மருத்துவ நிலையங்களிலும், 40% பிரசவங்கள் தனியார் மருத்துவமனைகளிலும் நடைபெற்று வருகிறது. பிரசவ நேரத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாக கவனிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் வட்டார மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய பேறுகால மற்றும் பச்சிளங் குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவ

2020 மார்ச் 24]

நிலையங்கள் மாநிலம் முழுவதும் 22 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 104 இரண்டாம்நிலை மருத்துவமனைகளில் (மாவட்டத் தலைமை மற்றும் தாலுகா மருத்துவமனைகள்) செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு உயர் மருத்துவமனைக்கு மேலும் பரிந்துரை செய்யாமல், உறுதியான அவசர சிகிச்சை வழங்கப்படுகிறது.

2015-2016 முதல் 2019-2020 வரை சீமாங்க் செயல்பாடு

விவரம்	2015-16	2016-17	2017-18	2018-19	2019-20 (Apr-Jan)
மொத்தம் அனுமதிக்கப்பட்ட தாய்மார்கள்	4,59,587	5,73,954	4,95,360	6,26,324	5,13,582
பிரசவங்கள்	2,78,124	3,21,622	3,14,408	3,47,656	3,09,176
அறுவை சிகிச்சை	1,45,351	1,68,282	1,61,396	1,84,295	1,50,469
தாய்மார்களுக்கு நடைபெற்ற இரத்தப் பரிமாற்றம்	1,22,273	1,23,981	1,20,542	1,24,705	92,426
தாய்மார்களுக்கான Scan பரிசோதனைகள்	4,93,013	5,30,476	5,08,301	6,23,046	5,38,298
அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள்	1,40,525	1,28,085	1,19,316	1,34,554	1,10,453

17.3.5 பிரசவ அறை மற்றும் கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்டம் (LaQshya):

லக்ஷ்யா என்பது பிரசவ அறை மற்றும் மகப்பேறு அறுவை அரங்கில் பிரசவத்தின்போதும் மற்றும் உடனடி பின்பேறு காலத்தில் கவனிப்பின் தரத்தையும் மரியாதைக்குரிய மகப்பேறு சேவையை வழங்கும் முயற்சியாகும்.

இத்திட்டம் 188 மருத்துவ நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 31 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 73 துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 62 சமுதாய சுகாதார மையங்கள் உள்ளடக்கியதாகும். இந்தியாவிலேயே தமிழ்நாடு தேனி, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய 3 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் லக்ஷ்யா சான்றிதழ் பெற்ற முதல் மாநிலம் ஆகும். இது தவிர 22 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்மதிப்பீட்டை முடித்துள்ளன. 7 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வெளிப்புற மதிப்பீட்டை முடித்துள்ளன.

104 இரண்டாம்நிலை மருத்துவ நிறுவனங்களில் 31 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 73 துணை மாவட்ட மருத்துவமனைகள் உள்மதிப்பீட்டை முடித்துள்ளன. 14 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 4 துணை மாவட்ட மருத்துவமனைகள் வெளிப்புற மதிப்பீட்டை நிறைவு செய்துள்ளன. இதற்காக 12 மாவட்டத் தலைமையக மருத்துவமனைகள் மற்றும் 1 துணை மாவட்ட மருத்துவமனைக்கு தேசிய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

17.3.6 சிறப்பு மருத்துவ சேவை வழங்குதல் (தாய்-சேய் நலத்திற்கான சிறப்பு மருத்துவர்கள் சேவை):

கிராமப்புறப் பகுதிகளில் தாய்-சேய் நலத்திற்காக மகப்பேறு மற்றும் மயக்கவியல் துறை சிறப்பு மருத்துவர்களின் சேவை கிடைக்கும் வகையில் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவைக்கேற்ப நியமிக்கப்படுகிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு மருத்துவர்களை நியமனம் செய்ய ஒரு நெகிழ்ச்சி நிதி வழங்கப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையிலான சிறப்பு மருத்துவர்கள் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 40,217 பிரசவங்களுக்கு சேவை செய்துள்ளனர்.

17.3.7 இரத்தசோகை முற்றிலும் இல்லாத பாரதத்தை உருவாக்கும் திட்டம்:

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணைப்படி இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

வ. எண்	வயது வரம்பு	இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்க வேண்டிய காலம்
1.	6 முதல் 59 மாதம் வரை	வாரம் இரு முறை
2.	5 வயது முதல் 9 வயது வரை	வாரம் ஒரு முறை
3.	10 முதல் 19 வயது வரை	வாரம் ஒரு முறை
4.	கர்ப்பிணிப் பெண்களுக்கு 12 வாரம் முதல் பிரசவித்து 180 நாட்கள்வரை	தினமும்

ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 6 மாதங்கள் முதல் 59 மாதங்கள் வரையிலான-2,45,721-குழந்தைகளுக்கும் 5 முதல் 10 வயதுக்குட்பட்ட 22,69,950-குழந்தைகளுக்கும் 10 முதல் 19 வயதுக்குட்பட்ட 38,19,573 குழந்தைகளுக்குப் பிறப்புக்கு முந்தைய காலத்தில் 6,86,167-தாய்மாரும் பயனடைந்துள்ளனர்.

மேலும், மாநிலம் முழுவதும் (20 வயது முதல் 30 வயது வரை) உள்ள பேறுவயது கால பெண்களுக்கு வாரம் ஒரு முறை இரும்புச் சத்து மருந்துகள் வழங்கவும் முயற்சி எடுத்து வருகிறது. 20 வயது முதல் 30 வயது வரை உள்ள 60 இலட்சம் பேறுவயது கால பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவார்கள்.

17.3.8 கர்ப்பகால நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துதல்

கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும் முதன் முதலாக தங்கள் கர்ப்பத்தைப் பதிவு செய்ய வரும்பொழுதே நீரிழிவு நோய்க்காக பரிசோதனையும் செய்யப்படுகிறது. மேலும், கர்ப்பிணிப் பெண்கள், 12-16 வாரங்களில், 24-28 வாரங்களில், 32-34 வாரங்களில் நீரிழிவு நோய்க்காக பரிசோதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 11,864 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது.

17.3.9 இரத்த வங்கிகள் மற்றும் இரத்த சேமிப்பு சேவைகள்:

தமிழ்நாட்டில் தேவைப்படும் நோயாளிகளுக்கு போதுமான, பாதுகாப்பான, தரமான இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகளை

வழங்கிட தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு தமிழ்நாடு தேசிய நலவாழ்வுக் குழுமம், இரத்தமாற்று சேவைகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது.

17.3.10 உணவுக் கட்டணங்கள்

அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சேவை பெறும் அனைத்து உள்நோயாளிகளுக்கும், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட அனைவருக்கும் இத்திட்டத்தின்கீழ் இலவச ஊட்டச்சத்து உணவு வழங்கப்படுகிறது. மருத்துவ நிலையங்களில் தங்கியிருக்கும் காலங்களில் (சுகப் பிரசவம் தரித்த பெண்களுக்கு மூன்று நாட்களுக்கும், அறுவை சிகிச்சைமூலம் பிரசவித்த பெண்களுக்கு 7 நாட்களுக்கும்) உணவு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 5,26,254 கர்ப்பிணிப் பெண்கள் கர்ப்ப காலத்திலும், 4,70,300 பிரசவித்த தாய்மார்களுக்கும் அரசு மருத்துவமனைகளில் உணவு வழங்கப்பட்டுள்ளது.

17.3.11 பேறுகால சிக்கல்கள் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் கண்காணிப்பு

பேறுகாலத்தில் சிக்கல்கள் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிப்பதுடன், உரிய பிரசவகாலத்திற்கு முன்னரே உரிய சீமாங்க் மையங்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர். மேலும், சுரக்‌ஷித் மாத்ரித்வ ஆஷ்வாஷன் (சுமன்) திட்டத்தின்மூலம் ஒவ்வொரு மாதமும் 9 ஆம் தேதி அன்று கர்ப்பிணிப் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் அரசு மருத்துவமனைகள், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறுகாலத்தில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து தீவிரமாகக் கண்காணிக்கப்படுகிறது. ஏப்ரல் மாதம் 2019 முதல் ஜனவரி 2020 வரை 34,485 பேறுகால சிக்கல் உடைய கர்ப்பிணிப் பெண்கள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெற்றுள்ளனர். மேலும் பேறுகால சிக்கல் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் சுகாதாரப் பணியாளர்களால் கீழ்க்கண்ட முறைகளில் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர். கர்ப்பிணிப் பெண்களைத் தீவிரமாகக் கண்காணிக்க வட்டார மருந்து அலுவலர் மற்றும் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்று வகையான கண்காணிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

- ✓ துணை மாவட்ட/மாவட்ட அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு மருத்துவர்கள் அவர்கள் பணியாற்றும் இடத்திற்கு அருகாமையில் உள்ள அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுடன் இணைந்து, அந்தந்த வட்டாரங்களில் உள்ள கர்ப்பிணிப் பெண்களை தீவிரமாக வாட்ஸ் அப் செயலிமூலம் (Whatsapp) கண்காணித்து வருகின்றனர்.
- ✓ அவசர காலங்களில் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மகப்பேறு மருத்துவர்கள் வட்டாரக் குழுவிற்கு வழிகாட்டுகின்றனர். அக்குழுவின் மருத்துவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. உயர்நிலை மகப்பேறு மருத்துவர், இரண்டாம்நிலை மருத்துவமனைகளையும் வழிநடத்துகின்றனர்.
- ✓ PICME மற்றும் தாய்மை செயலி உருவாக்கப்பட்டு அனைத்து வகையினரும் கையாளும்வண்ணம் மேம்படுத்தப்பட்டு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய தாய்மார்களுக்கு வண்ணக் குறியீடுகள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

17.3.12 பேறுகால மரணத்தின் முக்கிய காரணங்களைக் குறைக்க கையாளும் சிறப்பு முயற்சிகள்

- மொத்த பிறப்புக்களில் மொத்தம் 7.2 சதவிகித உயர்பிறப்பு வரிசையில் 25.4 சதவிகிதம் பேறுகால மரணத்திற்கு காரணமாக உள்ளது. இதன் காரணமாக 10,178 தாய்மார்களுக்கு குடும்பநல கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் 29,365 இடைக்கால கருத்தடை வளையம், இடைக்கால கருத்தடை ஊசி மற்றும் வாய்வழி மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- பேறுகால மரணத்திற்கு 6 சதவிகிதம் இருதய நோய் காரணமாக உள்ளது. மாநில அளவில் தமிழ்நாடு மற்றும் பேறுகால மற்றும் இருதய நோய் பதிவு (Tamil Nadu Pregnancy and Heart Disease Registry) ஏற்படுத்தப்படுகிறது. இந்தப் பதிவேட்டின்மூலம் கர்ப்பிணிப் பெண்களின் விவரம், இருதயத்தின் செயல்பாடு, சிகிச்சை முறைகள் மற்றும் கரு மற்றும் கருவுற்ற தாய்க்கு ஏற்படும் விளைவுகளைப் பற்றி விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

- சிக்கலாக்கும் உயர் இரத்த அழுத்தம் கண்டறிந்து தடுக்கவும், சிகிச்சை அளிக்கவும் மெக்னீசியம் கல்மட்ட ஊசியும், கால்சியம் கார்பனேட் கூடிய 500 மி.லி. மாத்திரைகள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்தே வழங்கப்படுகிறது.

- பேறுகால மரணங்களில் 9 சதவிகித இறப்புகள் கர்ப்ப காலத்தில் தொற்றுதலால் ஏற்படுகிறது. அனைத்து நிலையங்களிலும் ஒரு பிரசவத்திற்கு ஒரு டெலிவரி கிட் உபயோகித்தல் மற்றும் பிரசவ அறைகள் மற்றும் அறுவை அரங்கத்தை சுத்தப்படுத்தி, நோய்த் தொற்று நீக்கம் செய்து நோய்த் தொற்று தடுக்கப்படுகிறது. 4 சதவிகித கர்ப்பிணிப் பெண்களின் இறப்பிற்கு முக்கிய காரணமாக மருத்துவர் ஆலோசனையின்றி உட்கொள்ளும் கருக்கலைப்பு மருந்துகளாலும், மருத்துவர் அல்லாதவர் செய்யும் கருக்கலைப்பினாலும் ஏற்படுகின்றது. 385 வட்டாரங்களிலும் பயிற்சி பெற்ற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மூலமாக MVA முறையில் கருக்கலைப்பு மற்றும் கருக்கலைப்பு மருந்துகளாலும் பாதுகாப்பான முறையில் கருக்கலைப்பு சேவை வழங்கப்படுகிறது.

- பிரசவத்திற்குப்பின் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் "அம்மா குழந்தை நலப் பெட்டகம்" அளிப்பதன்மூலம் நோய்த் தொற்று வராமல் தடுக்கப்படுகின்றது.

- 5 சதவிகிதம் பிரசவங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட தாய்மார்களுக்கு ஏற்படுகின்றது. இதனால், 21 சதவிகிதம், பேறுகால மரணங்கள் நிகழ்கின்றன. எனவே, 30 வயதிற்கு மேற்பட்ட தாய்மார்கள் முதல் பேறுகால முன்கவனிப்பு நேரத்திலேயே உயர்கவனிப்பு தேவைப்படும் தாய்மார்களாகக் கருதப்பட்டு தொடர் கவனிப்பு அளிக்கப்படுகிறது.

- ஊசிமூலம் செலுத்தப்படும் அன்தாரா மருந்தும், வாய்வழி கருத்தடை மாத்திரைகள் சென்ட்ரோமன் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

- பதிவு செய்யவும், பார்வையாளர்கள், புலம்பெயர்ந்த தாய்மார்கள் மற்றும் பதிவு செய்யாத தாய்மார்கள் (online) பொது சேவை மையங்கள் மூலமாகவும், 102 அமைப்பு மையம் மூலமாகவும் மருத்துவமனை மூலமாகவும் முன்பதிவு செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

- பேறுகால இறப்புகளின் காரணமான இரத்தச்சோகையை (Anaemia Mukth Barath) இரும்புச்சத்து மாத்திரைகள் மற்றும் அயர்ன்சுக்ரோஸ் ஊசிகள் அளித்து கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் முதற்கொண்டு வழங்கப்படுகிறது.

- மூன்று மற்றும் 5 மாதங்கள் நிறைவுற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் அம்மா ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுகிறது.

- (Non Pneumatic Anti-Shock Garments) NASG உடைகள் மற்றும் Misoprostal மாத்திரைகள் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் பயனாளிகளுக்குப் பயன்படுத்துவதன்மூலம் பிரசவத்திற்குப் பின் அதிக உதிரப்போக்கு காரணமாக ஏற்படும் பேறுகால மரணம் தடுக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் தேசிய தொற்று நோயியல் நிறுவனம் (NIE), இந்திய மருத்துவக் கழகம் (ICMR), 60 NASG உடைகள் 55 விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- பேறுகால இறப்பின் காரணங்களை அறியவும், பேறுகால இறப்பைத் தடுக்கவும், பேறுகால இறப்பு தணிக்கை நான்கு நிலைகளில் செய்யப்படுகின்றன.

 1. ஆரம்ப சுகாதார நிலைய குழுவால் சமுதாய நிலையில் தணிக்கை.
 2. மாவட்ட அளவில் சிறப்பு பேறுகால இறப்பு தணிக்கை.
 3. மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் தணிக்கை.
 4. காணொலி கலந்துரையாடல்மூலம் தேசிய சுகாதாரக் குழுமத்தில் குழும இயக்குநர் மற்றும் பேறுகால மற்றும் குழந்தைகள் ஆணையரால் ஒவ்வொரு மாதமும் மாநில அளவிலான தணிக்கை.


17.3.13 மகப்பேறு இறப்பு விகிதம்

இந்திய அளவில் தமிழ்நாடு மாநிலம் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 63 என்ற மகப்பேறு இறப்பு விகிதத்தில் இந்தியாவில்

[2020 மார்ச் 24

பெரிய மாநிலங்களை ஒப்பிடுகையில் மூன்றாவது இடத்தில் உள்ளது. (SRS 2015 to 2017) கடந்த 20 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காகப் பல்வேறு யுக்திகள் மற்றும் திட்டங்கள் இம்மாநிலத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. மாநில சுகாதாரத் தகவல் மேலாண்மை (HMIS) அறிக்கையின்படி ஜனவரி 2020 ஆம் ஆண்டில் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 57 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. மகப்பேறு இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காகச் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், உள்கட்டமைப்பு வழங்குதல், ஊட்டச்சத்து மேம்படுத்துதல் மற்றும் சிறப்பு கர்ப்பிணிப் பெண்களைக் கண்காணித்தல் போன்ற பல்வேறு யுக்திகளைத் தமிழ்நாடு சுகாதாரத் துறை மேம்படுத்தி வருகிறது.

பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம்




ஆதாரம்: மாதிரி பதிவு முறை அறிக்கை 2017

17.4. குழந்தைகள் நலம்

17.4.1 நமது அரசின் வலுவான கொள்கைகள் மற்றும் நேர்மையான முயற்சிகளாலும் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 2010 ஆம் ஆண்டில் 1,000 உயிருள்ள பிரசவங்களில் 24-லிருந்து 2017 ஆம் ஆண்டிற்கான மாதிரி பதிவுமுறை அறிக்கையின்படி, தேசிய அளவில் 33 ஆக உள்ள குழந்தைகள் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் 16 ஆகக் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. 2010-ல் பிறப்பு விகிதம் 15.9-ல் இருந்து 2018-ல் 14.9 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள

2020 மார்ச் 24]

பெரிய மாநிலங்களில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதத்தில் தமிழகம் இரண்டாவது குறைவானதாக உள்ளது.



மருத்துவமனை அளவிலான பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு சேவைகள்

17.4.2 பச்சிளம் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் பல்வேறு நிலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

- ✓ 74 சிறப்பு பச்சிளம் குழந்தை சிகிச்சைப் பிரிவுகள், 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 50 மாவட்டத் தலைமை மற்றும் வட்ட மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளன. இதில் நோயுற்ற இளம் சிசுக்களை அனுமதித்து உயர் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்மையங்களில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை - 1,00,130 பச்சிளம் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன.
- ✓ 114 அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள 42 இரண்டாம் நிலை தாய் சேய் மையங்களில் 156 இளம் சிசு நிலைப்படுத்துதல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்களில் பிறந்த குழந்தைகளின் சிறு உபாதைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு சிறப்பு இளம்சிசு மையங்களில் ஏற்படும் நெருக்கடியைக் குறைக்கின்றன.
- ✓ குழந்தை பிறந்த உடனேயே கவனிப்பதற்கு ஏதுவாக அனைத்து பிரசவ அறைகளிலும் இளம் சிசு பராமரிப்புப் பகுதி நிறுவப்பட்டுள்ளது.

✓ சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளில் இருந்து வெளியேறும் குழந்தைகளைக் கண்காணிக்க வழக்கமாக பின் தொடர் சிகிச்சை மருந்தகம் செயல்படுத்தப்படுகிறது.

17.4.3 ஊட்டச்சத்து புனர்வாழ்வு மையங்கள்

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, எழும்பூர் குழந்தை நல மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனை ஆகிய 6 இடங்களில் ஊட்டச்சத்து புனர்வாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை வெளிநோயாளிகள் பிரிவு மற்றும் சமூக அளவிலான பரிந்துரைமூலம் கண்டறிந்து இம்மையங்களில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. பிரத்யேகமான ஊட்டச்சத்து கலவைகொண்ட உணவு, குழந்தை மருத்துவரின் வழிகாட்டுதல் மற்றும் ஊட்டச்சத்து ஆற்றுப்படுத்துனரின் உதவியுடன் சமையல் மற்றும் பொறுப்பாளர்மூலம் அளிக்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 3,014 குழந்தைகள் இம்மையங்களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர்.

17.4.4 புதிதாக பிறந்த குழந்தைகளின் பிறவி குறைபாடுகளைக் கண்டறிந்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் சிகிச்சையளித்தல்

பிரசவம் நடக்கும் அனைத்து அரசு மருத்துவமனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளிடம் பிறவி குறைபாடுகள் உள்ளனவா என 48 மணி நேரத்திற்குள் கண்டறிந்து, பதிவுசெய்து அந்த வட்டாரத்திலுள்ள நடமாடும் மருத்துவக் குழுக்களிடம் (DEIC) தெரிவிக்க வேண்டும். நோய்வாய்ப்பட்ட குழந்தைகள், குறைப்பிரசவமான குழந்தைகள், எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகள் மற்றும் பிறவி குறைபாடுடன் பிறக்கும் குழந்தைகள் அந்தந்த மாவட்டத்திலுள்ள ஆரம்பநிலை சிகிச்சை மையத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறார்கள். ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 2,87,359 பிறந்த குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 1,031 குழந்தைகளுக்குப் பிறவி குறைபாடு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பிறவி குறைபாடுகளான

2020 மார்ச் 24]

இருதய நோய், உதடு பிளவு, அன்னப் பிளவு, வளைந்த கால்கள், கண்புரை மற்றும் காது கேளாமை உள்ளிட்ட நோய்களுக்குத் தேவையான அறுவை சிகிச்சைகளும், மதி இறுக்கம் (ஆட்டிசம்) பாதிக்கப்பட்ட குழந்தைகளை உயர்நிலை மையங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, அதற்கான சிகிச்சையும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படுகிறது.

சமூக அளவிலான இளம் சிசு பராமரிப்புச் சேவைகள்

17.4.5 வீட்டளவிலான இளம் குழந்தைப் பராமரிப்பு

குழந்தை உயிருடன் இருப்பதை உறுதி செய்யவும், ஆபத்தான தருணத்தைக் கண்டறிந்து தக்க சமயத்தில் மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யவும், பிரத்யேகமாக தாய்ப்பால் மட்டுமே அளித்தல் மற்றும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் ஆலோசனை செய்யவும், கிராமச் சுகாதார செவிலியர்மூலம் வீட்டளவிலான பச்சிளம் குழந்தை பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. IMNCI முறையில் மருத்துவம் மற்றும் களப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளதால் இளம் குழந்தைகளில் உள்ள இறப்பு விகிதம் வெகுவாக குறைக்க இத்திட்டம் உதவி செய்துள்ளது. 15 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு வீட்டளவிலான குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டுள்ளது. 5 முறை பச்சிளம் குழந்தைகள் வீட்டிற்குச் சென்று கவனிக்கப்படுகின்றனர். இதற்கு சத்துணவுப் பணியாளர் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இந்த இரு மாவட்டங்களில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரையில் 1 வயதிற்குட்பட்ட 21,255 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 2020-2021-ல் மேலும் 21 சுகாதார மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்பட உள்ளது. இதன்மூலம் 2,32,303 பச்சிளங் குழந்தைகள் பயன் பெறுவர்.

17.4.6 வைட்டமின்-ஏ வழங்குதல்:-

குழந்தைகளின் உயிர்வாழ்வு, ஆரோக்கியம், உடல் மற்றும் மனவளர்ச்சிக்கு வைட்டமின்-ஏ, இன்றியமையாத ஒன்றாகும். வைட்டமின்-ஏ குறைபாடுள்ள குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புசக்தி குறைபாட்டினால் சுவாச நோய்த் தொற்று, வயிற்றுப்போக்கு மற்றும் தட்டம்மை போன்ற நோய் பாதிப்புகள் குழந்தை இறப்புக்குரிய காரணிகளாய் விளங்குகின்றது. ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின்-ஏ வழங்குவதன்மூலம், குழந்தைகள்

இறப்பு மற்றும் நோயுறுவதைத் தடுக்கலாம். ஆகஸ்ட் 2019-ல் இலக்கு மக்கள்தொகை விகிதத்தில் 98 விழுக்காடு அதாவது 58,96,935 குழந்தைப் பயனாளிகளுக்கு வைட்டமின்-ஏ அளிக்கப்பட்டது. மார்ச் 2020-ல் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வைட்டமின்-ஏ அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய குடற்புழு நீக்க நாள்

நாட்டின் ஒவ்வொரு குழந்தையையும் குடற்புழு இல்லாதவர்களாக மாற்றுவதற்கான ஒரு முன் முயற்சியே தேசிய குடற்புழு நீக்க நாள். பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலமாக 1-19 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும், குடற்புழு நீக்க மாத்திரை அளித்து அதன்மூலம் அவர்களது உடல்நலம், ஊட்டச்சத்து, தரமான கல்வி மற்றும் வாழ்க்கை முறை மேம்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 10-ம் தேதி மற்றும் ஆகஸ்ட் 10-ம் தேதி அன்று தேசிய குடற்புழு நீக்க நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 2019 ஆகஸ்ட் 10-ம் தேதி அன்று நடைபெற்ற தேசிய குடற்புழு நீக்க நாளில் 1 முதல் 19 வயதுடைய 2,19,50,571 குழந்தைகள் பயன் பெற்றனர்.

தடுப்பூசி சேவைகள்

தமிழக அரசு, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான முழுமையான நோய்த் தடுப்பூசிகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் 97 விழுக்காடுக்கு அதிகமாக, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம், தேசிய நலவாழ்வுக் குழுமத்துடன் இணைந்து சுகாதார விழிப்புணர்வு, கல்வி மற்றும் தகவல்களைப் பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தியதன்மூலம் சமுதாயத் தன்னார்வப் பங்களிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல இயலாத இடங்களுக்கு, தடுப்பூசி சேவைகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் ஒரு வாரத்திற்கு 10,000 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இச்சேவைகள் முழுமையாக அடைய உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 7,09,981 குழந்தைகள், இச்சேவையில் முழுவதுமாகப் பயன் அடைந்துள்ளனர்.

17.4.7 ராஷ்டிரிய பால் சுவாஸ்திய கார்யக்கிரம் (RBSK) (தேசிய சிறார் நலத் திட்டம்):

இத்திட்டம் புதுமையான மற்றும் மேலான குறிக்கோள் கொண்ட ஒரு புதிய திட்டமாகும். இத்திட்டம் குழந்தைகளின் உடல் நலப் பரிசோதனை மற்றும் நோய்களை ஆரம்ப நிலையில் கண்டறிந்து இடையீடு (Intervention) செய்து சிகிச்சையை அளிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. இத்திட்டம் பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய 30 வகையான நோய்களின் ஆரம்பநிலை அறிகுறிகளைக் கண்டறிந்து அதற்கேற்ற சிகிச்சையை அளிப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகள், அங்கன்வாடி மையம் மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி குழந்தைகள் இந்தத் திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். இத்திட்டம் குழந்தைகளின் உடல் நலம் காப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. பிறவிக் குறைபாடுகளான இருதய நோய், உதடு பிளவு, அன்னப்பிளவு, வளைந்த கால்கள், கண்புரை மற்றும் காது கேளாமை உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் மற்றும் மதிஇறுக்கம் (ஆட்டிசம்) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவைப்படும் நிதி உதவியும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கிடைக்கிறது.

ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் கிராமப்புறங்களில் 770 (RBSK) நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, நகர மக்களின் தேவையை நிறைவேற்ற பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 குழுக்களும், இதர நகரம் பாதிக்காமல் இருக்க 20 நடமாடும் மருத்துவக் குழுக்களும் செயல்படுகின்றன.

ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 ஆம் ஆண்டு வரை 95.72 இலட்சம் குழந்தைகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 5,97,114 குழந்தைகளுக்கு நோய் உள்ளதாக கண்டறியப்பட்டு, 4,60,729 குழந்தைகள் மேல் சிகிச்சைக்காக உயர்நிலை மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை இத்திட்டத்தின்கீழ் ஏப்ரல்-2019 முதல் ஜனவரி-2020 வரை 18,536 குழந்தைகள் அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு,

[2020 மார்ச் 24

அவர்களுள் 17,264 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கண்ணொளி காப்போம் திட்டத்தின்கீழ் 14,772 பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் 1,85,940-குழந்தைகள் கண் பார்வைக் குறைபாடு உடையவர்களாகக் கண்டறியப்பட்டு அக்குழந்தைகளுக்கு இலவசக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய சிறார் நலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களின் விவரம் (ஏப்ரல் 2015 முதல் ஜனவரி 2020 வரை)

வ. எண்	நோயின் பெயர்	நோய் இருப்பதாக கண்டறியப்பட்ட குழந்தைகள்	மருத்துவ சிகிச்சைமூலம் பயனடைந்தவர்கள்	அறுவை சிகிச்சை தேவைப்பட்டவர்கள்	அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்கள்
1	இருதய நோய்	23,355	11,955	11,314	10,679
2	முடக்கு வாத இருதய நோய்	4,668	4,253	442	429
3	வளைந்த கால்கள்	2,939	1,926	1,033	982
4	அன்னப்பிளவு	3,646	196	3,523	3,154
5	Cong. Cataract	1,007	240	764	727
6	Cong. Deafness	4,003	2,806	1,196	1,073
7	Neural Tube	410	144	264	220
	மொத்தம்	40,028	21,520	18,536	17,264

17.4.8 மாவட்ட ஆரம்ப நிலை சிகிச்சை மையம் (DEIC):

வளரும் குழந்தைகளுள் குறைபாடுகள் ஏற்படுவதைக் குறைக்கவும், ஆரம்ப நிலையிலேயே அவற்றைக் கண்டறிந்து

2020 மார்ச் 24]

தகுந்த சிகிச்சை வழங்குவதற்காக 34 மருத்துவமனைகளில் (13 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 21 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்) ஆரம்பநிலை சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்பநிலை சிகிச்சை மையங்களில் சமூகக் கல்வி தொழில்முறை மற்றும் பொருளாதார மறுவாழ்வு சேவைகள் இணைந்து வழங்கப்படுவதால் இக்குழந்தைகள் அவற்றின் பயன்களை முழுமையாக அடைகின்றனர். ஆரம்பநிலை சிகிச்சை மையங்களில் 12 பேர் கொண்ட மருத்துவக் குழு, குழந்தை நல மருத்துவரின் தலைமையில் செயல்பட்டு வருகின்றது. அனைத்து 34 ஆரம்பநிலை சிகிச்சை மையங்களும், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 முடிய 1,40,895 குழந்தைகள் 34 ஆரம்பநிலை சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

17.4.9 வட்டார அளவிலான ஆரம்பநிலை சிகிச்சை மையங்கள் (BEIC):

மாவட்ட ஆரம்பநிலை சிகிச்சை மையங்களில் (DEIC) குறைபாடு (வளர்ச்சி குறைபாடு/நரம்பு மற்றும் தசைகளில் ஏற்படும் குறைபாடு) கண்டறியப்பட்ட குழந்தைகளுக்குத் தினசரி மருத்துவ சேவை மற்றும் சிகிச்சை தேவைப்படுகிறது. ஆனால், நீண்டதூரப் பயணம், பெற்றோர்களது அன்றாட வருமானம் பாதிக்கப்படுதல் போன்ற பல்வேறு காரணங்களினால், அக்குழந்தைகள், மாவட்ட ஆரம்பநிலை சிகிச்சை மையங்களுக்கு வர இயலாத நிலையுள்ளது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, வட்டார அளவிலான ஆரம்பநிலை சிகிச்சை மையங்கள் அனைத்து 42 சுகாதார மாவட்டங்களிலும்-சுகாதார மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் அமைக்கப்படுகிறது. மாவட்ட ஆரம்பநிலை சிகிச்சை மையங்களில் உள்ள சிறப்பு மருத்துவர்கள், 15 நாட்களுக்கு ஒரு முறை வட்டார ஆரம்பநிலை சிகிச்சை மையங்களுக்குச் சென்று, அம்மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பார்கள். இதன்மூலம் இடையீட்டு மையங்களை அணுகுவது எளிமைப்படுத்தப்படுவதுடன் குழந்தைகளுக்குத் தொடர் சிகிச்சை அளிப்பது உறுதி செய்யப்படுகிறது.

17.4.10 குழந்தை இறப்பு தணிக்கை

மாவட்ட ஆட்சியரின் தலைமையில் குழந்தை இறப்பு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டு மாதந்தோறும் குழந்தை இறப்பு

தணிக்கை செய்யப்படுகிறது. மருத்துவமனை அளவிலான குழந்தை இறப்பு தணிக்கையில் வாரந்தோறும் குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் மகப்பேறு மருத்துவர் பங்கு பெறுகின்றனர். ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர், இறந்த குழந்தையின் பெற்றோர் மற்றும் பொறுப்பாளர்மூலம் விரிவான வாய்மொழி பரிசோதனை செய்து அறிக்கை தயாரிப்பார். இறந்த குழந்தைகளின் பட்டியலை மாநில அளவில் தொகுத்து விரிவாக ஆய்வுசெய்து சரிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

17.5 வளரிளம் பருவத்திற்கான சுகாதார சேவைகள்

17.5.1 வாராந்திர இரும்பு சத்து மாத்திரை அளித்தல் (WIFS)

இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும், கிராம மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள வளரிளம் பருவத்தினரிடையே இரத்தசோகையைக் கட்டுப்படுத்த செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில், பள்ளிக்குச் செல்லும் மற்றும் பள்ளிக்குச் செல்லாத வளரிளம் பருவத்திலுள்ள அனைத்து சிறுவர் சிறுமிகளுக்கு (10 முதல் 19 வயது வரை) ஆண்டுக்கு இருமுறை அளிக்கப்படும் குடற்புழு நீக்க மாத்திரையுடன் (ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட்), வாரம் ஒருமுறை ஒரு இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் நீல நிற இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை (அடிப்படை இரும்பு 100 மி.லி. மற்றும் 500 மைக்ரோகிராம் போலிக் அமிலம்) அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகிறது.

17.5.2 ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்தய கார்யக்ரம் (RKSK)

தேசிய வளரிளம் பருவத்தினர் நலப் பாதுகாப்புத் திட்டம் (RKSK), வளரிளம் பருவத்தினரது ஆரோக்கியத்தை மேம்படுத்த 19 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வளரிளம் பருவத்தினருக்கான சுகாதார மையங்கள் (Adolescent Friendly Health Clinics) 253 வட்டாரச் சுகாதார நிலையங்களிலும், 148 அரசு மருத்துவமனைகள், 19 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த வளரிளம் பருவத்தினருக்கான சுகாதார மையங்கள் 10-19 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவ ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சுகாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது. உடல் உபாதைகளுக்கு உரிய சிகிச்சையும், சமூக

2020 மார்ச் 24]

மற்றும் மனநலப் பிரச்சினைகளுக்கு தகுந்த ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. சமுதாயம் சார்ந்த திட்டங்கள், ஒத்த கல்வியாளர்கள்மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் மாணவர்கள் மத்தியில் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்திற்கான (மாதவிடாய் பிரச்சினைகள் உட்பட) தெளிவுபடுத்துதல், அணுகுமுறை மற்றும் பழக்க வழக்கங்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. வளரிளம் பருவத்தினரின் சுகாதாரக் குழுக் கூட்டம் (Adolescent Health Club) ஒவ்வொரு மாதமும் ஒத்த கல்வியாளர்களுக்குக் கிராம சுகாதார செவிலியரால், கிராம நீர் மற்றும் சுகாதாரத் துப்புரவுக் குழுவின்மூலம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிற்கும் வளரிளம் பருவத்தினருக்கு விழிப்புணர்வு மற்றும் அறிவை வளர்த்துக்கொள்ள வளரிளம் பருவத்தினரின் சுகாதார தினம் (Adolescent Health Day) கிராம நீர் மற்றும் சுகாதாரத் துப்புரவு குழுவின்மூலம் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 39,640 ஒத்த கல்வியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

17.6 வரையறுக்கப்படாத நிதி: (Untied Fund)

தேசிய ஊரக சுகாதாரக் குழுமத்தின்கீழ் (NRHM), சுகாதாரத் துறை சீர்திருத்தங்கள், செயல்பாடு, நிருவாகம் மற்றும் நிதி ஆதாரங்கள் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன்கீழ், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாயும், துணை மாவட்ட மருத்துவமனை மற்றும் சமுதாய சுகாதார மையங்களுக்கு ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாயும், ஆரம்ப சுகாதார மையங்களுக்கு ஆண்டுக்கு 1.75 இலட்சம் ரூபாயும், சுகாதாரத் துணை மையங்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் 10,000/-ம் வழங்கப்படுகிறது. இந்த நெகிழ்ச்சி நிதிகள் சிறிய சிவில் வேலைகள், உபகரணங்களின் சிறிய பழுதுபார்ப்புப் பணிகள், நுகர்பொருட்கள் மற்றும் வசதிகளைப் பராமரித்தல் மற்றும் நோயாளியின் வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு அந்தந்த நிலையங்களின் பொறுப்பான மருத்துவ அதிகாரியிடம் உள்ளன. இது அரசு மருத்துவ நிலையங்களை அணுகும் ஏழை மக்களின் அவுட்-ஆஃப்-பாக்கெட் செலவினத்தை (OOPE) குறைப்பதோடு, நோயாளியின் மனநிறைவை மேம்படுத்துகிறது.

[2020 மார்ச் 24

17.7. கிராம சுகாதாரம், நீர், துப்புரவு மற்றும் ஊட்டச்சத்துக் குழு (VHWSNC)

கிராமப்புறங்களில் தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் கிராம சுகாதாரம், நீர், துப்புரவு மற்றும் ஊட்டச்சத்துக் குழு (VHSNC) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அமைப்பதற்கான முக்கிய நோக்கம் உள்ளூர் அளவில் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்காகும். இதனால் திட்டமிடலில் பரவலாக்கலை ஊக்குவிக்கும். இந்தக் குழு சுகாதாரச் சேவைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும் தலைமைப் பண்பு வழங்குவதோடு, குறைகளைச் சரிசெய்ய ஒரு வாய்ப்பு வழங்குகிறது.

இக்குழு, கிராம சுகாதார செவிலியர், உள்ளூர் பஞ்சாயத்து தலைவர், அங்கன்வாடி ஊழியர், உள்ளூர் பள்ளி ஆசிரியர், சுகாதார ஆய்வாளர் மற்றும் சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதி ஆகியோருடன் சமுதாயப் பங்களிப்பு, பயனுள்ள தகவல்தொடர்பு மற்றும் நோய்களைத் தடுப்பதை உறுதி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிற்கும் ஆண்டுதோறும் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. இந்த நிதியை பஞ்சாயத்து தலைவர் மற்றும் கிராம சுகாதாரச் செவிலியர்களுடன் சேர்ந்து செலவழிப்பர். தமிழ்நாட்டில் சுமார் 15,015 வி.எச்.எஸ்.என்.சி.-க்கள் உள்ளன. அவை சுகாதாரச் சேவைகளின் அணுகலை முன்கூட்டியே கண்காணிக்கின்றன.

17.8 பயிற்சி

17.8.1 மருத்துவ அலுவலர்களுக்கான நிருவாகத்திறன் பயிற்சி (Managerial Skill Training for Medical Officers)

சுகாதாரப் பணியில் புதியதாக அமர்த்தப்பட்ட அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும் அனைத்து சுகாதாரத் திட்டங்களையும், நிருவாகப் பங்கு குறித்தும், அரசு மருத்துவ சேவைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் குறித்தும் 15 நாட்களுக்கு நலவாழ்வு மற்றும் குடும்ப நலப் பயிற்சி நிலையங்களில் வழங்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 6,479 மருத்துவ அதிகாரிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

17.8.2 பேறுகால மற்றும் பச்சிளம்குழந்தை பராமரிப்பு பயிற்சி (BEmONC Training - Basic Emergency Management of Obstetric & Neonatal care)

அனைத்து ஆரம்ப சுகாதார மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு, பேறுகால மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு பயிற்சி 6 நாட்களுக்கு, 6 நலவாழ்வு மற்றும் குடும்ப நலப் பயிற்சி நிலையங்களிலும் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் பயிற்சி நடத்தப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 6,110 மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

17.8.3 மருத்துவர்/செவிலியர் மற்றும் துணை செவிலியர் மற்றும் தாதியர்களுக்கு (MCH skill lab Training to Medical officers /Staff nurse/ANM) தாய் சேய் நல திறன் ஆய்வக பயிற்சி

நலவாழ்வு மற்றும் குடும்ப நலப் பயிற்சி நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ள தாய் சேய் நலத் திறன் ஆய்வகங்களில், அனைத்து மருத்துவர்/செவிலியர், துணை செவிலியர் மற்றும் தாதியர்களுக்கு பேறுசார், மகப்பேறு, பச்சிளம் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் நலன் மேம்பாட்டுத் திறன் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதனால் தாய் மற்றும் சேய்க்கு ஏற்படும் நோய்த் தாக்கம் தவிர்க்கப்பட்டு, மகப்பேறு மற்றும் சிசு மரணம் குறைப்பதற்கு வழிவகுக்கின்றது. 2012 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 4,583 மருத்துவ அதிகாரிகள் மற்றும் செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

17.8.4 விஷக்கடி மற்றும் விஷ முறிவுக்கான மேம்பாட்டு பயிற்சி (Poison management training)

ஆரம்ப சுகாதார மையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு விஷக்கடி மற்றும் விஷமுறிவுக்கான அவசர சிகிச்சை மற்றும் அவைகளை கையாளும் முறைகள் பற்றிய திறன்மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது. 2014 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 3,372 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

[2020 மார்ச் 24

17.8.5 உயிர் காக்கும் மயக்கவியல் பயிற்சி (Life Saving Anesthetic Skills-LSAS):

உயரிய மயக்க மருந்து சிகிச்சை அளிக்க, பிரசவ நேரத்தில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை இந்த உயிர் காக்கும் மயக்கவியல் பயிற்சியில் ஆண்டுக்கு 48 மருத்துவ அலுவலர்களுக்கு 24 வாரங்களில் மகப்பேறு மயக்க மருந்து பயிற்சியும் மற்றும் இருதயம், மூளை மற்றும் சுவாசம் மீட்பு பயிற்சியும் 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 2007 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்படுகிறது. இதுவரை 634 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த உயிர் காக்கும் மயக்க மருந்து பயிற்சி பெற்ற மருத்துவர்களால் 2017 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 10,203 சிசேரியன் அறுவை சிகிச்சைகள் மற்றும் 44,187 இதர அறுவை சிகிச்சைகளுக்கு, மயக்க மருந்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

17.8.6 பேறுகால அவசர சேவை பயிற்சி (Emergency Obstetrics Care - EmOC):

அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு மருத்துவர்கள் அவசரகால மகப்பேறு சிக்கல்களுக்கு பாதுகாப்பான சிகிச்சை அளிக்க, 25 வாரகால பேறுகால அவசரகால சேவைப் பயிற்சி ஆண்டுதோறும் மருத்துவ அலுவலர்களுக்கு 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 2009 ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 143 மருத்துவ அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலர்களால் 2017 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 1,954 சிசேரியன் அறுவை சிகிச்சைகள் மற்றும் 5,768 இதர சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

17.8.7 தேசிய அளவிலான சிறப்பு மையம் (NNC)

சென்னை மருத்துவக் கல்லூரியில் உள்ள தேசிய அளவிலான செவிலியர் பயிற்சிக் கல்லூரி (NNC) மாநில அளவில் ஒப்புயர்வு மையமாகத் திகழ்கின்றது. இப்பயிற்சி செவிலியர்களுக்கு கற்பித்தலை வலுப்படுத்தும் நோக்கில் அறிவு மற்றும் திறன் பயிற்சி ஆறு வாரக் காலத்திற்கு கல்லூரிகள் மற்றும் மண்டலப் பயிற்சி மையங்களில் பணிபுரியும் செவிலியர் ஆசிரியர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2020 வரை 118 செவிலியர் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

17.9. பழங்குடியினர் நலம்

17.9.1 பழங்குடியினர்/கடினமான இடங்களில் கிராம சுகாதாரத் தன்னார்வலர் சேவை:

பழங்குடி மற்றும் கடினமான இடத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ சேவை வழங்க, பழங்குடிப் பகுதி/மலைப் பகுதி/ தொலைதூரம்/கடினமான இடத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2,650 ஆஷாக்கள் (ASHA) கிராம சுகாதார தன்னார்வலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆஷாக்கள் பழங்குடியினர் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்கள் மலைப் பகுதியில் வாழும் கருவுற்ற தாய்மார்களை, துணை சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பரிசோதனைக்கும் பாதுகாப்பான பிரசவத்திற்கு ஊக்குவிக்கின்றனர்.

17.9.2 பழங்குடியினர் பகுதியில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவகால காத்திருப்பு அறை:

மகப்பேறு இறப்பினை ஆய்வு செய்யும்பொழுது, பழங்குடி தாய்மார்கள் சரியான நேரத்தில் மகப்பேறு நடைபெறும் இடத்திற்குச் செல்ல இயலவில்லை. தொலைதூரம் மற்றும் கிராமத்திலுள்ள சாலைகளை கருத்தில்கொண்டு, பழங்குடியினர் வசிக்கும் மலையடிவாரங்களில் உள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ காத்திருப்பு அறைகள் நிறுவப்பட்டுள்ளன. பிரசவகால கருத்தரிப்பு அறையில் கருவுற்ற தாய்க்கும் அவர்களது உறவினருக்கும் இலவசமாக சத்தான உணவு அவர்கள் தங்கியுள்ள காலத்திற்கு அளிக்கப்படுகிறது. 2016 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2020 வரை 10,582 மலைவாழ் தாய்மார்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளனர்.

17.9.3 பழங்குடியினர் மாவட்டங்களில் பரிந்துரை சேவைகள்:

தமிழ்நாடு, அவசரகால பராமரிப்பு மற்றும் ஆய்வு நிறுவனம் (EMRI), அவசரகால பரிந்துரை போக்குவரத்து அமைப்பினைப் பெற்றுள்ளது. எளிதில் அணுக முடியாத பழங்குடியினர் பகுதிகளுக்குச் செல்லும்பொருட்டு, தொலைதூரம் பயணம் செய்ய ஏற்றவாறு ஒரு அவசரகால ஊர்திக்கு உரிய அனைத்து மருத்துவ உபகரணங்களும் அடங்கிய நான்கு சக்கர இயக்கம் கொண்ட சிறிய வாகனம், கண்டறியப்பட்டுள்ள 76 மையங்களிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன.

17.9.4 மலைவாழ் மருத்துவ சேவைத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் மலைவாழ் மக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள், மருந்ுகள், அறுவை சிகிச்சை மற்றும் உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது. இத்திட்டமானது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம், துணை இயக்குநர் சுகாதார நலப் பணிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கிடையே ஒப்பந்தம் செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் பழங்குடி மக்களிடையே சுகாதாரத் தேடலை அதிகப்படுத்தி, அவர்களின் மருத்துவச் செலவினையும் வெகுவாகக் குறைத்துள்ளது. 2016 ஆம் ஆண்டு முதல் 5,497 மலைவாழ் மக்கள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெற்றுள்ளனர்.

17.9.5 பழங்குடியின ஆற்றுப்படுத்துனர்கள்:

பழங்குடியினர் மாவட்டங்களில் உள்ள 10 அரசு மருத்துவமனைகளில், பழங்குடியின ஆற்றுபடுத்துனர்கள் (Tribal Counsellors) நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் சுகாதாரத் துறைக்கும் பழங்குடி மக்களிடையே தூதராகச் செயல்படுவர். இவர்கள் அரசு மருத்துவ நிலையத்தில் சுகாதார ஆர்வலராக சேவை புரிந்து மருத்துவ சேவை பற்றிய விழிப்புணர்வைப் பழங்குடியின மக்களிடையே ஏற்படுத்தி, அச்சமூகத்தையே சுகாதாரமாகவும், ஆரோக்கியமாகவும் வாழ வழிவகை செய்கின்றனர்.

17.9.6 ஹீமோகுளோபினோபதீஸ் (Hemoglobinopathies) தடுப்புத் திட்டம்

தென்னிந்திய மாநிலங்களிலேயே, தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக பழங்குடியினரிடையே தலசீமியா மற்றும் சிக்கிள்செல் இரத்தசோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஹீமோகுளோபினோபதீஸ் என்னும் நோய் தடுக்கக்கூடிய மரபணு நோயாகும். இந்நோயின் தீவிர நிலையில் இயலாமை மற்றும் மரணத்தையும்கூட விளைவிக்கும். அனைத்து தலசீமியா மேஜர் குழந்தைகள் உயிர் வாழ்வதற்கு 2-3 வாரத்திற்கு ஒருமுறை இரத்தப் பரிமாற்றம் செய்யப்பட வேண்டும், சிக்கிள்செல் அனிமியா நோயிலும் இரத்த பரிமாற்றம் செய்யப்படுகிறது.

சரியான நேரத்தில் நோய்களைக் கண்டறிவதாலும் மரபணு ஆலோசனை கொடுப்பதாலும், இந்த நோய்கள் பெற்றோரிடமிருந்து

2020 மார்ச் 24]

பிள்ளைகளுக்குப் பரவாமல் தடுக்கப்படுகிறது. தேசிய நலவாழ்வுக் குழுமம் - தமிழ்நாடு மற்ற சுகாதாரத் துறைகளுடன் இணைந்து X மற்றும் XII ஆம் வகுப்பு பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையே மற்றும் 14 வயதுக்கு மேல் உள்ள, பள்ளிக்குச் செல்லாத, திருமணம் ஆகாத வளர் இளம் பருவத்தினரிடையேயும், ஹீமோகுளோபினோபதி (Hemoglobinopathy) (சிக்கிள்செல் மற்றும் தலசீமியா) நோயினைக் கண்டறியும் திட்டத்தினை 13 மாவட்டத்தில் உள்ள 30 வட்டாரங்களில் நவம்பர் 2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் படிப்படியாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், முதல் கட்டமாக இந்நோயினைக் கண்டறிய CBC NESTROFT மற்றும் SOLUBILITY என்ற பரிசோதனைகள் பழங்குடியினர் நடமாடும் மருத்துவ மையங்கள் மூலமாகவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இறுதிப் பரிசோதனையை உறுதிசெய்ய அரசு மருத்துவக் கல்லூரிகளில் HPLC மூலம் கண்டறியப்படுகிறது.

மரபணு கண்டறியப்பட்ட நிலையில் குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு மரபணு ஆலோசனை, மாவட்ட ஆரம்பத் தலையீட்டு மையங்களில் வழங்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு முதல் 21,399 குழந்தைகள் இந்த நோய்க்காகப் பரிசோதிக்கப்பட்டு, நோய்த் தன்மைக்கான விழுக்காடு 9.7 ஆக உள்ளது என அறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விரிவுபடுத்த தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தபடுவதன்மூலம் வருங்காலத்தில் இந்த நோய்களின் தாக்கம் குறைவதோடு, எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் ஹீமோகுளோபினோபதி நோய் இல்லாத நிலை உருவாகும்.

17.9.7 தமிழ்நாட்டில் 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதிஸ் நோயாளிகளுக்கான பராமரிப்பு மையங்களை நிறுவுதல்:

ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதிஸ் நோயினால் பாதிக்கப்பட்ட சிறார் மற்றும் பெரியோருக்கு தொடர் கவனிப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் வகையில், பராமரிப்பு மையங்கள் கீழ்க்கண்ட 5 பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

1. அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8. (Nodal Centre)

2. அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்

3. அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி

4. அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை

5. அரசு தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி

இதனால் தலசீமியா மற்றும் ஹீமோபிலியா நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியோருக்கான இரத்தம்/காரணிகள் மாற்று மற்றும் சிலேஷன் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தப் பராமரிப்பு மையங்கள்மூலம் சிக்கிள்செல்/தலசீமியா குழந்தைகள் மற்றும் ஹீமோபிலியா நோயாளரைச் சிறப்பாகக் கண்காணிக்க முடியும். 2018 ஆம் ஆண்டு முதல் 2,655 நோயாளிகளுக்கு இரத்த மாற்று மற்றும் 1,835 நோயாளிகளுக்கு காரணி மாற்று கிடைக்கப்பட்டுள்ளது.

17.10. நடமாடும் மருத்துவப் பிரிவு

17.10.1 கிராமப் பகுதிகளில் நடமாடும் மருத்துவக் குழு

மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் தொலைதூர, மலை/பழங்குடிப் பகுதி மற்றும் சென்றடைய முடியாத பகுதிகளில் நடமாடும் மருத்துவப் பிரிவு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு வாகன ஓட்டுனர், ஓர் உதவியாளர், ஒரு செவிலியர், ஓர் ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் கொண்டு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு குழுவினரும் தலா 42 கிராமங்களை முன் பயணத் திட்டத்தின்படி கண்டு சேவை புரிகின்றனர்.

ஆய்வக தொழில்நுட்ப வல்லுனரால் சில அடிப்படை ஆய்வகப் பரிசோதனைகள், கர்ப்பகாலக் கவனிப்பு, விடுபட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல், பிறந்த குழந்தைகளுக்கு நோய் கண்டறிதல்; ஐந்து வயதுக்குட்பட்டோருக்கான பராமரிப்பு, பால்வினை நோய்க்கான சிகிச்சை; வளர் இளம் பிள்ளைகளுக்கு ஆலோசனை, அங்கன்வாடி குழந்தைகளுக்கான சிகிச்சை; சிறு நோய்

காயங்களுக்கான சிகிச்சை; தொற்றா நோய் மருந்துகள் வழங்குதல், குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனைகள்; காய்ச்சல் முகாம் போன்ற சேவைகள் நடமாடும் மருத்துவக் குழுவினால் வழங்கப்படுகின்றன. 2011 முதல் டிசம்பர் 2019 வரை மட்டும் 12 கோடி மக்கள் 16,82,979 முகாம்கள்மூலம் பயனடைந்துள்ளனர்.

17.10.2 மலைவாழ்/பழங்குடியினர் பகுதி நடமாடும் மருத்துவ சேவைகள்

மலை மற்றும் கடினமான இடத்திலுள்ள நடமாடும் மருத்துவ சேவைகளை வலுப்படுத்த கூடுதலாக 20 நடமாடும் மருத்துவக் குழுக்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து 13 மாவட்டத்திலுள்ள மலைவாழ் வட்டாரத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த மலைவாழ் நடமாடும் மருத்துவக் குழுவில் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர், ஓர் ஆய்வக நுட்புனர், ஒரு ஓட்டுனர் ஆகியோர் உள்ளனர். நோய்களுக்கான சிகிச்சை, மகப்பேறு பரிசோதனை, இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. மருந்துகளும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த நடமாடும் மருத்துவக் குழுவால் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தப்பட்ட மாணவர்களுக்கும் ஹீமோகுளோபினோபதீஸ் மரபணு என்ற இரத்த நோய்க்கான சிறப்பு ஆய்வகப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2020 வரை மலை பகுதியில் 8,93,723 புறநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

17.11. தேசிய தர உத்தரவாதத் திட்டம் (National Quality Assurance Standards)

17.11.1 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் உள்ள சேவை குறைபாடுகளை சரி செய்வதும், உள் மதிப்பீடு, மாநில மதிப்பீடு மற்றும் தேசிய அளவிலான மதிப்பீடுகள் ஆகிய மூன்றுநிலை மதிப்பீடுகளால் கண்காணிப்பட்டு நோயாளிகளின் எதிர்ப்பார்ப்புகளை ஈடுசெய்வதும் தேசிய தர உத்தரவாதத் திட்டத்தின் (NQAS) நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சுகாதாரச் சேவை வழங்குதல், நோயாளி உரிமைகள், உள்ளீடுகள், ஆதரவு சேவைகள், மருத்துவப் பராமரிப்பு, தொற்றுக் கட்டுப்பாடு, தர மேலாண்மை மற்றும் விளைவு ஆகிய எட்டு பரந்த பகுதிகள்மூலம் தர மதிப்பீடு செய்யப்படுகிறது. இம்மதிப்பீட்டின் தகுதிமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மருத்துவமனைக்கு

ரூ.10,000 ஒரு படுக்கை வசதி வீதம் பரிசு சான்றிதழ் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. தொடர்ந்து அதற்கடுத்த இரண்டு ஆண்டுகள் இதே வழிகாட்டுதல்களின்படி மதிப்பீட்டு செய்து அரசு மருத்துவமனைக்கு பரிசு தொகை வழங்கப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில், 3 மாவட்ட தலைமையக மருத்துவமனைகள், 12 துணை மாவட்ட மருத்துவமனைகள், 14 சமூக சுகாதார மையங்கள் மற்றும் 18 ஆரம்ப சுகாதார மையங்களுக்கான அரசு (NQAS) தேசிய தர உத்தரவாத திட்டத்தின் (NQAS) தேசிய அளவிலான சான்றிதழைப் பெற்றுள்ளது.

17.11.2 காயகல்ப்-Kayakalp விருது திட்டம்: மருத்துவமனை வசதி பராமரிப்பு, சுகாதாரம், கழிவு மேலாண்மை, தொற்றுக் கட்டுப்பாடு, நோயாளர்களின் ஆதரவு சேவைகள், சுகாதார மேம்பாடு மற்றும் எல்லை சுவருக்கு அப்பால் தூய்மை ஆகிய ஏழு அளவுகோல்மூலம் தூய்மை மேம்படுத்தி அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய வசதிகளின் தரத்தை உறுதிசெய்து பரிசு வழங்கும் திட்டம் ஆகும். இத்திட்டம் அனைத்து அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்டாரச் சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம், ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதும், அதற்கென அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகளை அங்கீகரிப்பதாகும். 2019-2020 ஆம் நிதி ஆண்டில், மாநிலத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் காயகல்ப் விருது திட்டம் செயல்படுத்தப்பட்டு, கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களுக்கு மதிப்பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது:-

மருத்துவமனை வகை	காயகல்ப் மதிப்பீட்டில் பங்கேற்ற மருத்துவமனை	காயகல்ப் மதிப்பீட்டில் 70%-க்கு மேல் பெற்ற மருத்துவமனைகள்
அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகள்	31	30
வட்டார மருத்துவமனைகள்	140	129
வட்டாரச் சுகாதார நிலையங்கள்	253	208

2020 மார்ச் 24]

ஆரம்ப சுகாதார நிலையங்கள்	606	455
சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் மற்றும் துணைச் சுகாதார மையங்கள்	200	167

17.11.3 நமது மருத்துவமனை (Mera Aspitaal) திட்டம்:

நமது மருத்துவமனை (Mera Aspitaal) திட்டம் என்பது தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) அடிப்படையிலான அமைப்புகளைப் பயன்படுத்தி நோயாளர்களின் கருத்துகளைச் செயல்படுத்தும் ஓர் அமைப்பாகும். இந்தப் பயன்பாட்டின் இறுதிக் குறிக்கோள், நோயாளிகளை மையமாகக் கொண்ட பராமரிப்புச் சேவைகளை வழங்குவதும், சுகாதார வசதிகளில் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதும் ஆகும். இத்திட்டத்தின்கீழ், நோயாளர் திருப்தி அளவுகோல் மதிப்பீட்டின் அடிப்படையில் அரசு மாவட்ட மருத்துவமனைகள் தரவரிசை செய்யப்படுகிறது. நோயாளர்களின் திருப்தி மதிப்பெண் (நிதியாண்டு 2018-2019) அடிப்படையில் தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது மாநில சுகாதார நிலையங்களின் செயல்திறனில் சிறந்த மாவட்ட அரசு மருத்துவமனையாக, நாமக்கல் மாவட்ட மருத்துவமனை கடந்த இரண்டு ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளது.

17.12. தொற்றா நோய்த் தடுப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் சிகிச்சை தொற்றா நோய்களுக்கான சிகிச்சைத் திட்டம்:

தொற்றா நோய் கண்டறியும் திட்டமானது முன்னோடித் திட்டமாக தமிழகத்தில் உள்ள அனைத்து 32 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்கீழ் (NHM) தேசிய புற்றுநோய், நீரிழிவு, இரத்தநாள நோய்கள் மற்றும் பக்கவாத நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுத் திட்டமாக (NPCDCS) செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்/நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்/அரசு மருத்துவமனைகள்/அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உட்பட 2,516 அரசு மருத்துவ நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 30 வயதும் அதற்கு மேற்பட்டோருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கருப்பைவாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்க்காக, நோய் கண்டறியும் ஆய்வுகள், சிகிச்சை

மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகிய சேவைகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்காக 29 மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளை (ICUs) வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காகத் தொற்றா நோய்த் திட்டத்தின்கீழ் ரூ.71.67 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொற்றா நோய்களுக்காக அரசு மருத்துவ மைய அளவிலான நோய் கண்டறிதல் செயல்பாடு

இத்திட்டத்தில், 2012 ஜூலை முதல் ஜனவரி 2020 வரை, தனி நபர்களுக்குப் பரிசோதனை செய்யப்பட்டவர்கள் மற்றும் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

உயர் இரத்த அழுத்தம்	பரிசோதனை செய்யப்பட்டவர்கள்	7,09,80,952
	கண்டறியப்பட்டவர்கள்	58,09,418
நீரிழிவு நோய்	பரிசோதனை செய்யப்பட்டவர்கள்	5,71,93,274
	கண்டறியப்பட்டவர்கள்	24,54,037
கருப்பைவாய்ப் புற்றுநோய்	பரிசோதனை செய்யப்பட்டவர்கள்	2,20,73,440
	கண்டறியப்பட்டவர்கள்	5,94,739
மார்பகப் புற்றுநோய்	பரிசோதனை செய்யப்பட்டவர்கள்	2,73,00,521
	கண்டறியப்பட்டவர்கள்	2,77,944

17.12.1 மாநில மற்றும் மண்டல அளவில் புற்றுநோய் மையங்கள் வலுப்படுத்துதல்:

காஞ்சிபுரம் காரப்பேட்டையில் இயங்கிவரும் அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை, நவீன தரத்துடன்கூடிய மாநில புற்றுநோய் மையமாக, புற்றுநோய் பராமரிப்பில் உயர் சிகிச்சை, ஆய்வு மற்றும் கல்வி மையமாக தரம் உயர்த்தபட்டு

2020 மார்ச் 24]

வருகிறது. சென்னை, அடையாறு புற்றுநோய் மையம், மாநில அளவில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் உயர் சிகிச்சை மையமாக செயல்பட்டு வருகிறது. மேலும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.60 கோடி செலவில் நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. புற்றுநோய் பராமரிப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக ஏற்கெனவே உள்ள பழைய 10 கோபால்ட்-60 அலகுகள் மாற்றப்படுவதோடு, 4 புதிய கோபால்ட்-60 அலகுகள் மற்றும் 11 உயர்தர லீனியர் ஆக்சிலேடர் அலகுகள் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

17.12.2 மாவட்ட அளவில் புற்றுநோய்க்கான கீமோதெரபி சிகிச்சை மையங்கள்:

புற்றுநோய்க்கான கீமோதெரபி சிகிச்சை மையங்கள், திருவண்ணாமலை, கரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், இதர மாவட்டங்களில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

புற்றுநோய் உறுதி செய்யப்பட்ட நோயாளிகளின் சிகிச்சை முறையானது மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புற்றுநோய் குழுவால் (Tumour Board) திட்டமிடப்பட்டு முதற்கட்ட கீமோதெரபி அங்கேயே வழங்கப்படும். அதற்குப் பிறகு, தேவைப்படும் தொடர் கீமோ சிகிச்சை (Chemotherapy Cycles) மாவட்ட அளவிலான மருத்துவமனைகளில் பயிற்சி அளிக்கப்பட்ட மருத்துவர் மற்றும் செவிலியர்மூலம் வழங்கப்படும். புற்றுநோயாளிகள் குறிப்பிட்ட இடைவெளியில் தொடர் கீமோதெரபி சிகிச்சைக்கும், நோய் கண்டறிந்து சிகிச்சை தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மீண்டும் மீண்டும் அணுக மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால், அவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு செலவினங்களுக்கு (Out of Pocket Expenditure) உள்ளாகின்றனர். மேலும், சிலர் இதனால் சிகிச்சையைத் தொடராமல் விட்டுவிடுவதை இத்திட்டத்தின்மூலம் தவிர்க்கலாம்.

[2020 மார்ச் 24

17.12.3 இலவச நோய் குறியியல் சேவைகள்:

இத்திட்டத்தின்கீழ் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் திசுப் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய நோய் குறியியல் ஆய்வகங்கள் கடலூர், திண்டுக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

17.12.4 மக்கள்தொகை சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த பரிசோதனை மற்றும் தொடர் கவனிப்பு

தேசிய புற்றுநோய், நீரிழிவு, இரத்தநாள நோய்கள் மற்றும் பக்கவாத நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ், சமூகத்தில் உள்ள அனைத்து மக்களையும் வீடு வீடாகச் சென்று கணக்கிடுவது தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மற்றொரு குறிப்பிட்ட தலையீடு ஆகும். இதற்குப் பொறுப்பான பெண் சுகாதார தன்னார்வலர்/கிராமச் சுகாதார தன்னார்வலர்/அங்கன்வாடி பணியாளர் வீடு வீடாகச் சென்று கணக்கீடு செய்வதற்கும், தொற்றா நோய் மற்றும் ஆபத்து காரணிகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நவீன பரிமாணம் பயன்படுத்தி உயர் இரத்த அழுத்தத்திற்கான திரை இரத்த அழுத்தம் எந்திரம் மற்றும் 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் குளுக்கோ மீட்டரால் நீரிழிவு நோயினையும் கண்டறிய பயன்படுத்தப்படுகின்றனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் என அழைக்கப்படும் கள செயல்பாட்டாளர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்மூலம் (TNCDW) அடையாளம் காணப்பட்டு அவர்களுடைய கள அளவிலான நடவடிக்கைகளுக்கு அவர்களுக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை வழங்கப்படும்.

குடியிருப்புகளில் உயர் இரத்த அழுத்தம்/நீரிழிவு நோய் உள்ளது என சந்தேகிக்கப்படும் 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள், அந்நோயினை உறுதிப்படுத்தப்படுவதற்காக அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டு, அவர்களின் தொடர் சிகிச்சைக்காக பின்தொடரப்பட்டு கண்காணிக்கப்படுவர். 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்கள் கர்ப்பப்பைவாய் மற்றும் மார்பகப் புற்றுநோய் பரிசோதனைக்கு அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் செல்லத் தூண்டப்படுகிறார்கள். வாய்வழி புற்றுநோய், காசநோய், தொழுநோய் மற்றும் மனநலம், நாள்பட்ட சிறுநீரக

2020 மார்ச் 24]

நோய் மற்றும் நாள்பட்ட தடுப்பு நுரையீரல் நோய் ஆகியவற்றுக்கு சந்தேகிக்கப்படும் நபர்களையும் இந்தக் கள செயல்பாட்டாளர்கள் கண்டறிவார்கள். கணக்கெடுப்பைத் தவிர, 18-லிருந்து 29 வயதுக்குட்பட்டவர்களுக்கான சமூக அடிப்படையிலான மதிப்பீட்டு சரிபார்ப்புப் பட்டியலைப் பயன்படுத்தி கள செயல்பாட்டாளர் ஓர் இடர் மதிப்பீட்டை மேற்கொள்வார்கள். இந்த இடர் மதிப்பீட்டில் அதிக பாதிப்பைக் கொண்டவர்களைப் பரிசோதனைக்காக அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள். மேலும் அவர்கள் குழு ஆலோசனை மற்றும் சமூகத்தில் பல்வேறு தொற்றா நோய்க்கான நோயாளிகள் ஆதரவு குழுக்களையும் உருவாக்குவார்கள்.

தற்போது 6 மாவட்டங்களில் (புதுக்கோட்டை, பெரம்பலூர், கிருஷ்ணகிரி, கரூர், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர்) மக்கள்தொகை அடிப்படையிலான தொற்றா நோய் பரிசோதனை நடந்து வருகிறது. மேலும், 1,732 பெண் சுகாதார தன்னார்வலர்களுடன் 35 அங்கன்வாடி பணியாளர்கள் தொகுதிகள் (மொத்தம் 2,034 துணை சுகாதார நிலையங்கள்) மற்றும் மீதமுள்ள மாவட்டங்களில் ஒரு சுகாதார பகுதி மாவட்டத்திற்கு 302 அங்கன்வாடி பணியாளர் திட்டம் 2 மாநகராட்சிகளிலும் (திருநெல்வேலி கோயம்புத்தூர்) மற்றும் விரிவுபடுத்தபட்ட சென்னை மாநகராட்சி (GCC)-யின், 30 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) பகுதியில், நான்கு கள செயல்பாட்டாளர்களை ஈடுபடுத்தி மொத்தம் 284 கிராம சுகாதாரத் தன்னார்வலர், ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் பகுதியில் நான்கு கள செயல்பாட்டாளர்களை ஈடுபடுத்துவதன்மூலம் அனைத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும் உள்ளடக்கிய முழு விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சி (GCC) உட்பட தமிழகத்தில் மீதமுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் இந்ததிட்டம் அளவிடப்படும்.

2020 ஜனவரி வரை, மொத்தம் 63,01,536 நபர்கள் உயர் இரத்த அழுத்தத்திற்கும், 58,72,654 நீரிழிவு நோயாளிகளுக்கும் பரிசோதிக்கப்பட்டனர். முறையே உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கு 5,63,768 மற்றும் 4,41,262 பேர் சந்தேகிக்கப்பட்டனர். மேலும், இதை உறுதிப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிந்துரைக்கப்பட்டனர். அவர்களில் 43,343 நபர்கள் உயர் இரத்த அழுத்தத்திற்கும் 34,761 பேர் நீரிழிவு நோய்க்கும் சிகிச்சையளிக்கப்பட்டனர். கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் பரிசோதனைக்கு 5,33,300 பெண்களையும்,

[2020 மார்ச் 24

ஆரம்ப சுகாதார நிலையங்களில் மார்பகப் புற்றுநோயைத் பரிசோதனையிடுவதற்காக 5,29,860 பெண்களையும் கள செயல்பாட்டாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 91,609 நபர்கள் வாய்வழிப் புற்றுநோயைப் பரிசோதிக்க பரிந்துரைக்கப்படுகிறார்கள். கள செயல்பாட்டாளர்களால் 143 காசநோய் மற்றும் 27 தொழுநோயாளர்களைக் கண்டறிந்து சிகிச்சையளிக்க முடிந்தது.

17.13 அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் (U.H.C)

- ஒருங்கிணைந்த நலவாழ்வு சேவைகள்; உலகளாவிய நலவாழ்வுத் திட்டம் 2016 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக (Pilot Project) பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 3 சுகாதார மாவட்டங்களிலும் முறையே வேப்பூர், சூளகிரி, விராலிமலை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 67 துணைச் சுகாதார நிலையங்கள் மற்றும் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் (வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட) வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் ஒரு சுகாதார மாவட்டத்திற்கு ஒரு வட்டம் என்ற வீதத்தில், 39 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்தத் திட்டம் ரூ.2,474.07 இலட்ச நிதி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டது.

- உலகளாவிய நலவாழ்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கம், ஒருங்கிணைந்த சுகாதாரச் சேவைகளை மக்களின் வீட்டின் மிக அருகாமையில் வழங்குவதன்மூலம் அவர்களின் தனிமனித செலவினைக் (OOPC) குறைப்பதேயாகும். மேலும், இத்திட்டம் மக்களின் நீண்டகால சுகாதாரத் தேவைகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தில் அத்தியாவசிய சேவைகளான நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்த் தணிப்பு சேவைகள் முழுமையாகவும், தரமாகவும் வழங்கப்படுகிறது. துணைச் சுகாதார நிலையங்களை வலுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். உலகளாவிய நலவாழ்வுத் திட்டத்தை நமது அரசாங்கம் அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் மூலமாக மக்கள் பயன்பெற வழங்கி வருகிறது. துணைச் சுகாதார நிலையங்களை வலுப்படுத்துவது என்பது அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

2020 மார்ச் 24]

- 2018-2019 ஆம் ஆண்டில் 985 துணைச் சுகாதார நிலையங்கள், 716 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 214 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மத்திய அரசின் ஆதரவுடன் ரூ.9,357.47 இலட்சம் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) நிதி உதவியில் அரசின் அறிவிப்புக்கு ஏற்ப நலவாழ்வு மையங்களாக செயல்பட்டு வருகின்றன. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் மாநிலத்தில், 668 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 246 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மத்திய அரசின் ஆதரவுடன் ரூ.13,573.64 இலட்சம் செலவில் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்) நலவாழ்வு மையங்களாக மாற்றப்படும்.

தமிழ்நாட்டில் சுகாதாரம் மற்றும் நல மேம்பாட்டு நலவாழ்வு மையங்களாக மாற்றப்படுவதற்கான வழித்தடத் திட்ட அட்டவணை:

ஆண்டு	துணை சுகாதார நிலையங்கள்	கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள்	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்	மொத்தம்
2017-2018	67	14	-	81
2018-2019	918	702	214	1,834
2019-2020	796	668	246	1,710
2020–2021	667	-	-	667
மொத்தம்	2,448	1,384	460	4,292

- நலவாழ்வு மையங்களில் 12 விதமான ஒருங்கிணைந்த சுகாதாரச் சேவைகள் வழங்கப்படுகின்றன. அவைகள் நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாடு, நோய் நீக்கம், மறுவாழ்வு மற்றும் நோய்த் தணிப்புச் சேவைகளுக்குத் தொடர்புடைய பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங் குழந்தை, குழந்தைநலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம் (RMNCH+A), தொற்றுநோய்த் தடுப்பு, தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பல் பராமரிப்பு, மனநலம், முதியோர்கள் பராமரிப்பு, சிறு நோய் சிகிச்சை மற்றும் அவசர முதலுதவி சிகிச்சைகளையும் விபத்து மற்றும்

அவசரகால சேவைகளை உள்ளடக்கியதாகும். தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதாரச் சேவைகளை மேம்படுத்த நலவாழ்வு மையங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கும்.

17.14 நோயாளிகள் ஆதரவுக் குழு

நோயாளிகளின் ஆதரவுக் குழு தொற்றா நோய்களுக்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ளும் நோயாளிகளுக்கான சமூக அளவில் ஏற்படுத்தப்படும் ஓர் அமைப்பு அல்லது இடையீடு ஆகும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ள இச்சீரிய திட்டமானது பொதுவாக காணப்படும் தொற்றா நோய்கள், குறிப்பாக, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை எடுத்துக் கொள்ளும் நோயாளிகளை சமூக அளவில் குழுவாக ஒருங்கிணைத்து, மாதந்தோறும் தவறாமல் சிகிச்சை எடுத்துக்கொள்ளவும், நோயைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் வழிவகுக்கிறது. இக்குழுவில் பங்குபெறும் நோயாளிகள், தொற்றா நோய்களுக்கான சிகிச்சையை மேற்கொள்வதில் தாம் காணும் பிரச்சினைகள் மற்றும் சவால்களைக் கலந்தாலோசிப்பதோடு அல்லாமல் நோய் மற்றும் சிகிச்சை சார்ந்த தமது அனுபவங்களை ஒவ்வொருவருடனும் பகிர்ந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. முன்னோடித் திட்டமாக 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கடலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம் செயல்படும் சுகாதார வட்டாரங்களில் தொடங்கப்பட்டது. தற்போது தமிழகத்தில் உள்ள அனைத்து பிற மாவட்டங்களிலும் 'அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு 47 சுகாதார வட்டாரங்களில் நோயாளிகள் ஆதரவுக் குழுக்களை அமைத்து விரிவுபடுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நடமாடும் மருத்துவக் குழுக்கள் தமது தினசரி பயணத் திட்டத்தின்படி செல்லும் கிராமங்களில் 'நோயாளிகள் ஆதரவுக் குழு' கூட்டத்தையும் ஒருங்கிணைந்து நடத்தும் பிற கிராமங்களில் நோயாளிகள் ஆதரவுக் குழு அமைப்பானது நலவாழ்வு மையங்களில் நடைபெறும் செயல்பாடுகளில் ஒன்றாக ஒருங்கிணைத்து நடத்தப்படும். நோயாளிகள் ஆதரவுக் குழுக் கூட்டத்தை ஒருங்கிணைப்பதில் வீடுகள்தோறும் தொற்றா நோய்கள் கண்டறியும் மகளிர் சுய உதவிக் குழுவை சார்ந்த பெண் சுகாதாரத் தன்னார்வலர் சமூக அளவில் முக்கிய பங்கு வகிப்பர். இக்குழு சார்ந்த கூட்டத்திற்கு ஊக்கத் தொகையாக ஒரு குழு சந்திப்பிற்கு ரூ.250 வீதம் அந்தந்த நோயாளிகள் ஆதரவுக் குழுவின் தலைவருக்கு நடமாடும் மருத்துவக் குழுக்கள் (அ) சுகாதார மற்றும் நலவாழ்வு மையத்தின் மூலமாக

2020 மார்ச் 24]

வழங்கப்படும். இதற்கான செலவினத்தை நிபந்தனையற்ற நிதித் தொகையிலிருந்து மேற்கொள்ளலாம்.

17.15 தேசிய அளவிலான நோய் ஆதரவு சிகிச்சைத் திட்டம்

நோய் ஆதரவு சிகிச்சையின் முதன்மையான நோக்கம் உயிரை பாதிக்கக்கூடிய மற்றும் வாழ்நாளைக் குறைக்கக்கூடிய நோய்களினால் பாதிக்கப்பட்ட சிறியவர் மற்றும் பெரியவர்களின் பாதிப்பைக் குறைத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஆகும். நோயாளிகளின் குடும்பத்தினரை இச்சிகிச்சை முறையில் பங்கேற்க செய்வதும் இதில் உள்ளடங்கும்.

தமிழ்நாட்டில் 7% மக்களுக்கு இந்த சிகிச்சை தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். 2016–2019 வரை அனைத்து மாவட்டங்களிலும் நோய் ஆதரவு சிகிச்சைத் திட்டம் 26 மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வட்டார அளவில் சமூக அளவிலான நோய் ஆதரவு சிகிச்சைப் பயனாளிகளின் வீடுகளில் அளிக்கப்படும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஒவ்வொரு சுகாதார வட்டாரத்திற்கும், ஒரு பயிற்சி அளிக்கப்பட்ட 'சமூக நோய் ஆதரவு' சிகிச்சை செவிலியர் படுக்கையிலேயே உள்ள மற்றும் இறக்கும் தருவாயில் இருக்கும் நோயாளிகளுக்கு அவர்தம் வீடுகளிலேயே சென்று நோய் ஆதரவு சிகிச்சை சேவைகளை செய்து வருகின்றனர்.

ஜூன் 2018 முதல் ஜனவரி 2020 வரை சமூகம் சார்ந்த நோய் ஆதரவு சிகிச்சை அனைத்து சுகாதார மாவட்டங்களில் (HUD) உள்ள 210 சுகாதார வட்டாரங்களில் (Blocks) செயல்படுத்தப்பட்டுள்ளது, வீட்டிலேயே சென்று வழங்கப்படும் நோய் ஆதரவு சிகிச்சையில் 58,955 நோயாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

17.16 அமைப்பு தொழிலாளர்களுக்கான தொழில்சார் சுகாதாரச் சேவைகள்

தமிழகத்தில் முறைசாரா தொழிலாளர்களின் பங்கு 93 சதவிகிதம் (மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2011) என்ற அளவில் உள்ளது. அவர்கள் பல்வேறு தொழில் சார்ந்த நோய்களால் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், சிலிக்கோஸிஸ் (Silicosis), ஆஸ்பெஸ்டோஸிஸ் (Asbestosis), காது கேளாமை,

எரிச்சலுடன்கூடிய தோல் வியாதி (Irritant Dermatitis), ஸ்பாண்டிலிசிஸ் (Spondylosis) போன்ற பல்வேறு குறிப்பிட்ட தொழில்சார்ந்த நோய்களினாலும் பாதிக்கப்படுகின்றனர். தொழில்சார் நோய்கள் குணமாக்க இயலாத நிலையை அடைவதால், ஆரம்ப நிலையிலேயே அவற்றைக் கண்டறிந்து, சிகிச்சையளித்தல் இந்நோய்களைக் கையாள்வதற்கு முறையான வழியாகும்.

அனைத்து 385 வட்டாரச் சுகாதார மையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அமைப்புசாரா துறை ஊழியர்களுக்கான தொழில்சார் சுகாதாரச் சேவைகளை அந்தந்த நடமாடும் மருத்துவமனைகள்மூலம் செயல்படுத்த, 2019 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நடமாடும் மருத்துவமனைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் முறைசாரா தொழிலாளர் பணிபுரியும் இடங்களைப் பார்வையிடுகின்றனர். கூடுதலாக ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின் ஒரு வேலை நாளில் தொழிலாளர்களுக்குத் தொழில்சார் சுகாதாரச் சேவைகளை வழங்குகின்றனர். ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 83,091 முறைசாரா தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்டு, அவர்களில் 7,604 நபர்களுக்கு தொழில்சார் நோய்கள் உள்ளது கண்டறியப்பட்டு, உயர் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு மாவட்ட அளவிலான மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

கட்டுமானத் தொழிலாளர்ளுக்குத் தொழில் சார்ந்த சுகாதாரச் சேவைகள் வழங்கும்பொருட்டு 50 நடமாடும் மருத்துவக் குழுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான நிதி ஆதாரம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் அளிக்கப்பட்டு தேசிய நலவாழ்வுக் குழுமத்தால் செயல்படுத்தபட்டுள்ளது.

17.17 முதியோர் பராமரிப்பு

1. தமிழ்நாட்டில் ஆயுள் அதிகரிப்பு மற்றும் பிறப்பு விகிதம் குறைதல் ஆகிய மக்கள்தொகை சார்ந்த மாற்றங்களினால் 60 வயதும் அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கை சமூகத்தில் கூடிக்கொண்டு இருக்கும் நிலையைக் காண்கிறோம். 2011 மக்கள்தொகை அடிப்படையில் தமிழகத்தில் 10.4 சதவிகிதத்தினர் முதியோராக உள்ளதை அறிகிறோம். இது தேசிய அளவிலான சராசரி அளவான 8.6 சதவிகிதத்தைவிடக் கூடுதலாக உள்ளது. முதியோர்களைச் சார்ந்த இதுபோன்ற பல்வேறு காரணங்களை முன்னிட்டு முதியோருக்கென்று ‘பிரத்யேகமான சேவைகளை’ வழங்கும் வகையில் தேசிய முதியோருக்கான சுகாதாரத் திட்டம், தேசிய நலவாழ்வுக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

17.17.1 தேசிய மூப்பியல் மையம்:

சென்னை முதியோர்களுக்கான 200 படுக்கைகள் வசதிகளுடன்கூடிய விரிவான சுகாதாரச் சேவையினை வழங்கும்பொருட்டு மத்திய அரசு தமிழக அரசுடன் இணைந்து தேசிய மூப்பியல் மையத்தினைக் கிண்டியில் உள்ள கிங் நோய்த் தடுப்பு மருந்து வளாகத்தில் அமைத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

17.17.2 சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், மண்டல மூப்பியல் மையம்:

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூப்பியல் துறை மண்டல மூப்பியல் மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த மையத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டவருக்கு உயர் சிகிச்சை, ஆராய்ச்சி, மனித வள மேம்பாடு ஆகியவற்றை வழங்கி வருவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு நிலையிலுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சி சாதனங்களை மேம்படுத்தல், தகவல் கல்வி தொடர்பு சாதனங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

17.17.3 மருத்துவக் கல்லூரி/மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் முதியோருக்கான சிகிச்சை:

தேசிய முதியோர் சுகாதாரத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், விழுப்புரம், வேலூர், தருமபுரி, காஞ்சிபுரம் (செங்கல்பட்டு), கன்னியாகுமரி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, தேனி, திருவாரூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை ஆகிய 18 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், அரியலூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நாமக்கல், நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருவள்ளூர், திருப்பூர், பெரம்பலூர், விருதுநகர், நீலகிரி ஆகிய 13 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன.

17.17.4 தேசிய முதியோர் சுகாதாரத் திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான மருத்துவமனைகளில் வழங்கப்படும் முதியோருக்கான சேவைகள் பின்வருமாறு:

1. முதியோருக்கான புறநோயாளிகள் பிரிவு சேவைகள் வாரம் முழுவதும் வழங்குதல்.

[2020 மார்ச் 24

2. புறநோயாளிகள் பிரிவு, மருந்தகம், ஆய்வகப் பரிசோதனை மற்றும் ரேடியாலஜி சோதனையில் முதியோருக்கு தனிவரிசை

3. 20 படுக்கைகள் கொண்ட சறுக்கல் இல்லாத தரை, கைப்பிடி மற்றும் நவீன மேற்கத்திய கழிப்பறைகள் ஆகிய வசதிகளுடன் முதியோருக்கான உள் நோயாளிகளுக்கான சிகிச்சைப் பிரிவு.

4. முதியோர்களுக்கான இயன்முறை மருத்துவப் (ஃபிஸியோதெரபி) பிரிவு.

5. முதியோர்களுக்காக 1 வென்டிலேட்டருடன்கூடிய 4 தீவிர சிகிச்சைப் படுக்கைகள் (ICU cots)

2019 ஏப்ரல் முதல் 2020 ஜனவரி வரை முதியோருக்கான சிகிச்சைப் பிரிவில் பயன்பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

புறநோயாளிகள் பிரிவில் பயன்பெற்ற முதியோர்களின் எண்ணிக்கை	5,73,897
மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை	27,912
புனர்வாழ்வு சேவை பெற்றவர்களின் முதியோர்களின் எண்ணிக்கை	88,484
ஆய்வகப் பரிசோதனை மேற்கொண்ட முதியோர்களின் எண்ணிக்கை	7,21,795

5. வட்டார அளவில்: தமிழகத்தில் உள்ள 385 வட்டார நிலையங்களில் ஒரு வட்டாரச் சுகாதார நிலையத்திற்கு ஓர் உடற்பயிற்சி நிபுணர் என்கிற விகிதத்தில் 385 உடற்பயிற்சி நிபுணர் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

17.18 மூன்றாம் பாலினத்தவர்கள்

மூன்றாம் பாலினத்தவர்களின் உடல்நலம் சார்ந்த குறிப்பிட்ட தேவைகளுக்காக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை ஆகியவற்றில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பல்நோக்கு சிறப்பு மருத்துவ மையம் நிறுவப்பட்டுள்ளது. சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பல்நோக்கு சிறப்பு மருத்துவப் பிரிவு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இயங்கி வருகிறது. ஜூன் 2019 முதல் ஜனவரி 2020 வரை, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையிலுள்ள மூன்றாம் பாலினத்தவருக்கான சிறப்பு மருத்துவ மையத்தில் புறநோயாளிகளாக பயன்பெற்ற 220 நபர்களில் 12 நபர்களுக்குப் பாலின மாற்று அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது.

17.19-தேசிய வாய் சுகாதாரத் திட்டம் (NOHP)

மக்களின் முழுமையான ஆரோக்கியம், நலவாழ்வு மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கு வாய் சுகாதாரம் மிகவும் முக்கியமானது. பற்கள் மற்றும் வாய் சுகாதாரத்தைப் பாதுகாக்கவில்லையெனில் ஒரு மனிதனின் முழு உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும். தமிழக மக்களிடையே பல் மற்றும் வாய் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், தேசிய நலவாழ்வுக் குழுமம் - தமிழ்நாடு (NHM - TN), 2015-2016 ஆம் ஆண்டில் தேசிய வாய் மற்றும் பல் சுகாதாரத் திட்டம் (NOHP) தொடங்கப்பட்டது. இப்போது இது தமிழ்நாட்டில் உள்ள 42 சுகாதார மாவட்டங்களிலும் (HUD) செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களாலும் எளிதாக அணுகக்கூடிய, மலிவு மற்றும் தரமான பல் மருத்துவ சேவைகளை வழங்க தமிழ்நாடு நலவாழ்வுக் குழுமம், மாநிலம் முழுவதும் ஆரம்ப மற்றும் இரண்டாம்நிலை மருத்துவ மையங்களில் 389 பல் மருத்துவ மையங்கள் நிறுவியுள்ளது. பல் மருத்துவ சேவைகளை வழங்குவதற்கான கட்டடங்கள், உபகரணங்கள், பொருட்கள் மற்றும் நுகர்பொருட்களை உள்ளடக்கிய போதுமான உள்கட்டமைப்பை NHM - TN வழங்கி வருகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை, தமிழக மக்களிடையே மொத்தம் 57,92,461 நோயாளிகள் வாய்ப் புற்றுநோய்க்கான பரிசோதனை செய்யப்படுகிறது. இப்போது இந்தத் திட்டத்தின் அடுத்த கட்டமாக, தமிழக மக்களிடையே பல் பராமரிப்பு மற்றும் மருத்துவ சேவைகளை விருத்தி செய்யவும், மேம்படுத்தவும் NHM-TN, 88 கூடுதல் பல் மருத்துவ மையங்கள் நிறுவப்படவுள்ளன.

[2020 மார்ச் 24

17.20 வாய் புற்றுநோய் கண்டறியும் திட்டம்

தமிழகத்தில், வாய் புற்றுநோயின் சுமை மிக அதிகமாக உள்ளது. இது நோயுற்ற தன்மை மற்றும் இறப்புக்கு பெரிதும் வழிவகுக்கிறது. வாய் புற்றுநோய்க்கான முக்கிய ஆபத்து காரணிகள் HPV, புகையிலை, மது அருந்துதல் மற்றும் பின்தங்கிய மக்களிடையே நோய் விகிதங்கள் அதிகமாக உள்ளன. வாய்வழி புற்றுநோய் பெரும்பாலும் தாமதமான கட்டத்தில் கண்டறியப்படுகிறது. இதன் விளைவாக மோசமான முன்கணிப்பு மற்றும் குறைந்த வாழ்வு விகிதம் ஏற்படுகிறது. எனவே, ஆரம்ப காலத்திலேயே நோய் கண்டறிதல் மிக முக்கியமானது.

தேசிய நலவாழ்வுக் குழுமம் (NHM–TN), இந்தியாவிலேயே முதன்முறையாக வாய் புற்றுநோய்த் தடுப்பை ஊக்குவிப்பதற்கும் ஆரம்ப காலத்திலேயே வாய் புற்றுநோயைக் கண்டறியவும், 2016 ஆம் ஆண்டில் வாய் புற்றுநோய் பரிசோதனைத் திட்டம் தொடங்கி செயல்படுத்தப்படுகிறது. இந்த புதுமையான திட்டம், NHM-TN-ன்கீழ் உள்ள பல் மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்கள் வாய் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அறிகுறிகள் உள்ளவர்களை அடையாளம் காண்பதற்கும், ஆபத்து காரணிகளைப் பற்றி விவரிப்பதற்கும், வாழ்வில் மாற்றத்தை ஊக்குவிப்பதற்கும், ஆரம்ப அறிகுறிகளைக் கண்டறிவதற்கும், நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் துணைபுரிகின்றனர். இத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து (அக்டோபர் 2016), 2020 ஜனவரி வரை சுமார் 57,92,461 நபர்கள் வாய் புற்றுநோய் அல்லது புற்றுநோய் அறிகுறிகளுக்காக பரிசோதிக்கப்பட்டனர். இதில் சுமார் 253 நோயாளிகள் புற்றுநோய் அறிகுறிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டு மற்றும் அதற்கான சிகிச்சையும் தொடங்கப்பட்டுள்ளது.

17.21 பிரதம மந்திரி தேசிய கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரிப்புத் திட்டம்

தமிழ்நாட்டில், அரசு மருத்துவமனைகளில் 927 கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரிப்புக் கருவிகள் உள்ளன. (0.8%) நோயாளிகள் இறுதிக்கட்ட சிறுநீரக நோயால் (ESRD) பாதிக்கப்பட்டுள்ளனர். தேசிய நலவாழ்வுக் குழுமம் தமிழ்நாடு (NHM-TN), ESRD நோயாளிகளுக்குத் தேவையான கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த

2020 மார்ச் 24]

சுத்திகரிப்பு சிகிச்சையை இலவசமாக 2016 ஆம் ஆண்டு முதல் தேசிய கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரிப்புத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், 24 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 89 அரசு மாவட்டம் மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகள், 5 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 121 மையங்களில் 927 கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் தற்போது இலவச சேவைகளை வழங்குகின்றன. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை, தமிழ்நாட்டில் ESRD உள்ள 4,367 நோயாளிகளுக்கு சுமார் 2,58,608 கூழ்மப் பிரிப்பு மற்றும் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

17.22 மாவட்ட மனநலத் திட்டம்:

மாவட்ட மனநலத் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி தமிழ்நாடு முதன்மை நிலை வகிக்கின்றது. சென்னையில் உள்ள மனநலப் காப்பகம், மாவட்ட மனநலத் திட்டத்தைச் செயல்படுத்த தலைமை மையமாக செயல்படுகிறது. அனைத்து வட்டார மருத்துவமனைகளிலும் பிரத்யேக மனநல மருத்துவரால், குறிப்பிட்ட நாட்களில் (சுற்றுப்பயணத் திட்டத்தின்படி) மனநல சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 4,50,630 மனநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

17.22.1 மாநில மனநல ஆணையம்:

மனநல சட்டம், 2017-ன் பிரிவு 74-ன்படி, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, 13 மனநல மறுஆய்வு வாரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாரியம் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரால் தலைமை தாங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் பிரதிநிதி, ஒரு மனநல மருத்துவர், ஒரு மருத்துவர் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட இரு நபர்கள் அல்லது மனநோயாளிகளை பராமரிப்பவர் அல்லது மனநோயால் பாதிக்கப்பட்ட நபர்களின் அமைப்புகள்/அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதி ஆகியோர் இவ்வாரியத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

மனநல மறுஆய்வு வாரியத்தின் செயல்பாடுகள்:-

o ஆதரிக்கப்பட்ட சேர்க்கைகளை மறுஆய்வு செய்தல்.

o முன்கூட்டிய உத்தரவுகளைப் பதிவு செய்தல் மற்றும் மறுஆய்வு செய்தல்.

o பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதியை நியமித்தல்.

o மனநல நிபுணர்கள் மற்றும் மனநல நிறுவனத்திற்கு எதிரான ஆட்சேபணைகளை ஆய்வு செய்தல்.

o மனநலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் தகவல்களைப் பாதுகாப்பது குறித்து முடிவு செய்தல்.

o சிறைச்சாலைகளில் உள்ள மனநோயாளிகளைப் பார்வையிடுதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகும்.

தமிழ்நாடு மாநில மனநலக் கொள்கை மற்றும் செயல்படுத்தும் கட்டமைப்பு 4-7-2019 அன்று வெளியிடப்பட்டது.

- ஆதரவின்றி அலைந்து திரியும் மனநல நோயாளிகளுக்காக 50 படுக்கைகளுடன்கூடிய அவசரப் பராமரிப்பு மற்றும் மீட்பு மையம், வேலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, தேனி மாவட்டத் தலைமை மருத்துவமனை, புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனை, திருப்பூர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய 7 மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம் சிகிச்சை, தங்கும் வசதி, மறுவாழ்வு, தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் அவர்களுடைய குடும்பத்துடன் மீண்டும் இணைத்தல் ஆகிய சேவைகளை அரசு சாரா அமைப்புகள்மூலம் செயல்படுத்துகின்றது. இம்மையங்களில் அக்டோபர் 2018 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 585 மனநோயாளிகள் சிகிச்சை பெற்று, அதில் 232 நபர்கள் சிகிச்சைக்குப் பின்னர் தங்கள் குடும்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

- அனைத்து மாவட்டத்திலும் உள்ள பிரத்யேக மீட்பு வாகனம்மூலம் மனநோயாளிகள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அக்டோபர் 2018 முதல்

ஜனவரி 2020 வரை மொத்தம் 661 மனநோயாளிகள் இச்சேவையின்மூலம் பயன் பெற்றுள்ளனர்.

- குடி மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களுக்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிக்க 30 படுக்கை வசதியுடன் போதை மறுவாழ்வு மையம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 4,061 நபர்களுக்கு மறுவாழ்வு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- நோயின் உலகளாவிய சுமை, ஐ.ஹெச்.எம்.இ. அறிக்கை 2016, டாலிக்கு 3-வது முக்கியக் காரணம் சுயதீங்கு (4.3-விழுக்காடு) என்று கூறுகிறது. தற்கொலை விகிதத்தைக் குறைப்பதற்காக, தமிழக அரசு, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பராமரிப்புத் திட்டத்தின்மூலம், சுயதீங்கு மேற்கொண்டவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி பெற்ற உளவியலாளர்கள்மூலம் ஆற்றுப்படுத்தல் சேவை வழங்குகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை சுயதீங்கு மேற்கொண்ட 85,474 நபர்கள், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பராமரிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் 22,502 நபர்களுக்கு 18 மாதத்திற்கு ஆற்றுப்படுத்தல் சேவை வழங்கப்பட்டுள்ளது.

- விழுப்புரம், திருவண்ணாமலை, நீலகிரி, திருவள்ளூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, பெரம்பலூர், காஞ்சிபுரம், கடலூர் ஆகிய 10 மாவட்டங்களில் அரசு சாரா நிறுவனங்களுடன் மாவட்ட மனநல திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர்களை வீடுதோறும் சென்று கண்டறிதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் அரசாங்க சலுகைகளைப் பெற்றுத் தருதல் ஆகிய சேவைகளை அரசு சாரா நிறுவனங்கள் வழங்குகிறது.

17.23 தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமம்: (National Urban Health Mission)

- 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பெரிய நகரங்களில், தமிழ்நாட்டில் 48.4 விழுக்காடு நகர்ப்புற

[2020 மார்ச் 24

மக்கள்தொகையுடன் அதிகமான நகர்ப்புற மக்கள் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர்.

- தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமத்தின் குறிக்கோளானது, நகர்ப்புற ஏழை மக்கள் அனைவருக்கும் சமமானதாகவும், அவர்கள் எளிதில் அடையக்கூடியதாகவும், பொது சுகாதாரக் சேவை கிடைக்கப் பெறுவதாகும்.

- தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமம் தனது இலக்கினை அடைய கீழ்க்காணும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:-

- நகர்ப்புறங்களில் பின்தங்கிய பகுதியில் வாழும் ஏழை மக்களின் பல்வேறு வகையான சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு, ஒவ்வொரு நகரத்திற்கும் அதன் தேவையின் அடிப்படையில் சுகாதாரச் சேவை வழங்குதல்.

- வேகமாக வளர்ந்துவரும் நகர்ப்புற மக்களின் சுகாதாரம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள நிலையங்கள் வழிமுறை மற்றும் மேலாண்மை அமைப்புகள் அமைத்தல்.

- சமூகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் கூட்டுசேர்ந்து, சுகாதார நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றில் ஈடுபாட்டுடன் செயல்படுதல்.

- நகர்ப்புற ஏழைகளுக்கு அத்தியாவசிய ஆரம்ப சுகாதாரச் சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

- தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமத்தின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு நகர்ப்புற ஏழை மக்களின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 11 மாநகராட்சிகள் மற்றும் 50,000-க்கும் மேல் வசிக்கும் 75 நகராட்சிகளில் 420 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவியுள்ளது.

2020 மார்ச் 24]

பொருளடக்கம்		
வ. எண்	வசதி விவரங்கள்	நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை
1	பெருநகர சென்னை மாநகராட்சி	140
2	10 இதர மாநகராட்சிகள்	154
3	இதர நகராட்சிகள்	126
	மொத்தம்	420

- கூடுதலாக ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார நலவாழ்வு சேவை வழங்கப்படுவதுடன், தேசிய நகர்ப்புற நலவாழ்வுக் குழுமம், சிறப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

1. சிறப்பு மருத்துவ முகாம்
2. நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து நாள்
3. நடமாடும் நகர மருத்துவக் குழு
4. நகர்ப்புற பல்நோக்கு சிறப்பு மருத்துவம் (பாலி கிளினிக்)
5. மகளிர் ஆரோக்கியக் குழு (MAS)

1. சிறப்பு மருத்துவ முகாம்:

நகர்ப்புறத்தில் உள்ள ஏழை எளிய மற்றும் வறுமை நிலையில் உள்ள மக்களின் நோய்க் குறைபாடுகளை அவர்களின் குடியிருப்பு அருகாமையிலேயே சென்று சிறப்பு மருத்துவ முகாம்களின் வாயிலாக சிறப்பு மருத்துவர்கள் (மகப்பேறு, இருதய நோய், நீரிழிவு நோய், மனநல மருத்துவம் மற்றும் பல் மருத்துவம்), செவிலியர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்களைக் கொண்டும், மாதத்திற்கு மூன்று வீதம், ஒரு முகாமுக்கு ரூ.10,000/- வீதம் ஒதுக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 2019-2020 நிதியாண்டில் 11,340 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இந்த முகாம்களில் 23,95,634 நோயாளிகள் (ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை) பயன்பெற்றுள்ளனர்.

[2020 மார்ச் 24

2. நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து நாள்:

நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து முகாம் நடத்தப்படுகிறது. இச்சேவை நகர்ப்புற சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்களுடன் இணைந்து சமூக அமைப்பாக பிரதி மாதந்தோறும் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் நடைபெறுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 13,347 நகர்ப்புற நலவாழ்வு ஊட்டச்சத்து நாட்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 4,96,942 வளர் இளம்பெண்கள் மற்றும் தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர்.

3. நடமாடும் நகர மருத்துவக் குழு

குடிசைப் பகுதிவாழ் மக்கள், புலம்பெயர்ந்து வாழும் மக்கள், முறைசாரா தொழிலாளர்கள் ஆகியோருக்காக (பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஐந்தும், கோவை, மதுரை, திருப்பூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய 5 மாநகராட்சிகளுக்கு தலா ஒன்றும்) என மொத்தம் 10 நடமாடும் நகர மருத்துவக் குழுக்கள் அமைக்கப்படும்.

4. நகர்ப்புற பல்நோக்கு சிறப்பு மருத்துவம் (பாலி கிளினிக்)

96 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாலை 4-30 முதல் 8-30 மணி வரை சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு, பல்வகை சிகிச்சை நடவடிக்கைகளை "சிறப்பு மருத்துவரைக் கொண்ட வெளிநோயாளர் சேவை" ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது மருத்துவம், குழந்தைகள் நலம், பல் மருத்துவம், கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், தோல் சிகிச்சை, மனநல மருத்துவம், எலும்பியல் மற்றும் இயன்முறை மருத்துவம் ஆகிய சிறப்பு சேவைகள் அனைத்தும் வாரந்தோறும் குறிப்பிட்ட நாட்களில் வழங்கப்பட்டு வருகிறது. இச்சேவை இணையவழி செயலிமூலம் கண்காணிக்கப்படுகிறது. ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 3,82,418 நபர்கள் இந்த சிறப்பு மருத்துவம்மூலம் பயன் அடைந்துள்ளார்கள்.

5. மகளிர் ஆரோக்கியக் குழு (MAS)

மகளிர் ஆரோக்கியக் குழுவானது 50 முதல் 100 குடியிருப்புகள் கொண்ட நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குடிசைவாழ் சமூக மக்களை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்


2020 மார்ச் 24]

துணைகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகிறது. 11 மாநகராட்சிகளில் 3,324 மகளிர் ஆரோக்கியக் குழுக்கள் ஒப்பளிக்கப்பட்டு அவைகள் அப்பகுதியில் சுகாதாரம், நடத்தை பரிமாற்ற மேம்பாடு, சமூகக் குறைபாடுகளைக் கண்டறியும் கட்டமைப்பு ஆகியவைகளை பொறுப்பேற்றுக் கொள்கின்றன.

17.24 தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்புத் திட்டம் (TAEI)

முகவுரை:

சாலை விபத்து மற்றும் பிற காயங்கள் உள்ளிட்ட அவசர நோய்கள் தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளைக் குறைப்பதில் அரசு அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் அவசர சிகிச்சை அமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே, தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்புத் திட்டத்தை (TAEI) 2017 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆறு முக்கிய மருத்துவ அவசரங்கள் கவனம் செலுத்தப்படுகிறது.



[2020 மார்ச் 24

நோக்கம்:

நீடித்து நிலைக்கக்கூடிய அவசர சிகிச்சை அமைப்பை உருவாக்குவது

குறிக்கோள்கள்:

- காயம் தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் பாதியாகக் குறைப்பது
- பக்கவாதம் தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் மூன்றில் ஒரு பங்கு குறைப்பது
- மாரடைப்பு தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் மூன்றில் ஒரு பங்கு குறைப்பது
- தீக்காயம் தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் மூன்றில் ஒரு பங்கு குறைப்பது
- விஷம் மற்றும் சுயதீங்கு தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் மூன்றில் இரு பங்கு குறைப்பது
- குழந்தைகள் அவசரங்கள் தொடர்பான இறப்பு மற்றும் இழப்புகளை 2023-க்குள் பாதியாகக் குறைப்பது.

தாய் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள்:

தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்புத் திட்டமானது சில முக்கியச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தியது மற்றும் தமிழக அவசர சிகிச்சை அமைப்பில், நோயாளிகள் கவனிப்பில் முக்கிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. ஏற்கெனவே இருந்த அவசர சிகிச்சை அறையை (Casualty Room) அவசர சிகிச்சைத் துறையாக (Emergency Department) மாற்றப்பட்டுள்ளது. பின்வருவன அவசர சிகிச்சைத் துறையின் முக்கிய தொகுதிகளாகும்:

- ஆய்வகம் மற்றும் கதிரியக்க சேவைகளை உள்ளடக்கிய அவசர சிகிச்சை அறை (Emergency Room)
- கலப்பு உயர்தீவிர சிகிச்சைப் பிரிவு (HHDU)
- அவசர அறுவை சிகிச்சை அரங்கம் (EOT)
- ஆலோசனை மற்றும் புனர்வாழ்வு அறை

2020 மார்ச் 24]

2019-2020-ல் செயல்படுத்தப்பட்ட செயல்பாடுகள்:

- 60 மேம்படுத்தப்பட்ட உயிர்மீட்பு ஊர்தி வழங்கப்பட்டு, அவசர ஊர்திகள் அமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் அவசர சிகிச்சைப் பிரிவுகள் (PREM units) உருவாக்கப்பட்டுள்ளன.
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின்கீழ் 32 அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் கட்டடங்கள் மறுசீரமைப்பு செய்து, உயர் ரக உபகரணங்கள் வழங்கி, கலப்பு உயர்தீவிர சிகிச்சை பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.
- அவசர சிகிச்சையை வலுப்படுத்தும் வகையில், 80 தாய் மருத்துவ நிலையங்களில், 41 நிலையங்களுக்கு 542 கூடுதல் மருத்துவப் பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளனர்.
- அரசு தாலுகா மருத்துவமனை, ஆம்பூர் மற்றும் அரசு தாலுகா மருத்துவமனை, பாபநாசம் ஆகிய இடங்களுக்கு அவசர சிகிச்சை உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்தப்பட்டுள்ளன.
- நடமாடும் செயற்கை சுவாசக் கருவிகள், 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வைக்கப்பட உள்ளன.
- அவசர சிகிச்சை அறைகளுக்குள்ளேயே ஆய்வக வசதிகள் கிடைப்பதற்கு, 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மருத்துவ (POCT) உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விழுப்புரம், புதுக்கோட்டை, தருமபுரி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு, TAEI-MI திட்டத்தின்கீழ் புதிய கேத் லேப் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு நடமாடும் சி.டி. ஸ்கேன் வழங்கப்பட்டுள்ளது.
- இருபது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு, C-ARM உபகரணங்கள் வழங்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

- கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருக்கும் தீக்காய சிறப்பு மையம், கூடுதல் கட்டடம் மற்றும் உயர் ரக உபகரணங்களால் வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- 55 அரசு மருத்துவமனைகளில், அவசர பாதுகாப்புச் சேவை (Hotline services) அமைக்கப்பட்டுள்ளது.
- சுகாதாரப் பணியாளர்களுக்கு, 5 மண்டல தாய் பயிற்சி மையங்களில் பின்வரும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன:
- ஐந்து நாள் தாய் செயல் முன்னேற்றப் பயிற்சி (TSG) 632 மருத்துவர்கள் மற்றும் 1,005 செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒருநாள் குழந்தைகள் அவசர சிகிச்சைப் பயிற்சி (PEMC) 228 மருத்துவர்கள் மற்றும் 262 செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இரண்டு நாள் குழந்தைகள் மேம்படுத்தப்பட்ட உயிர்மீட்பு பயிற்சி (PALS) 606 மருத்துவர்கள் மற்றும் 735 செவிலியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒருநாள் பக்கவாத மேலாண்மைப் பயிற்சி (SCRIPT) 129 மருத்துவர்கள், 47 செவிலியர்கள் மற்றும் 25 கதிரியக்க நுட்புனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு நாள் மாரடைப்பு சிகிச்சைப் பயிற்சி (TAEI-MI) 69 மருத்துவர்கள், 110 செவிலியர்கள் மற்றும் 3 கேத் லேப் நுட்புனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2019-20-ல் தாய் திட்டத்தின் சாதனைகள்:

- **அவசர சிகிச்சை ஊர்திகளின் வருகைநேரம் குறைப்பு:**

 இயங்குநிலை சார்ந்த அவசர ஊர்திகள் வழங்கியதன் விளைவாக, கிராமப் பகுதிகளில் 16.81 நிமிடங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அவசர ஊர்திகள் சென்றடைகிறது. நகர்ப்புறங்களில், 2018-ல் 13.48 நிமிடங்களாக இருந்த வருகை நேரம், 2019-ல் 12.70 நிமிடங்களாக குறைக்கப்பட்டுள்ளது. பெருநகரங்களில், 2018-ல் 8.36 நிமிடங்களாக இருந்த வருகைநேரம் 2019-ல் 7.56 நிமிடங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

- **சாலை விபத்து இறப்பு விகிதம் குறைப்பு:**

 நீடித்து நிலைக்கக்கூடிய முன்னேற்றக் குறியீடுகளை (SDG) 2030-க்குள் அடையவும், விபத்து, காயம் தொடர்பான இறப்பு, இழப்புகளைப் பாதியாகக் குறைக்கும் மாநில அரசின் குறிக்கோளை அடையும்பொருட்டு, அரசு மிகவும் கவனமாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த 2017-ல் சாலை விபத்து தொடர்பான இறப்புகள் 16,517-ஆக இருந்தது. 2019-ல் ஜனவரி முதல் நவம்பர் மாதங்களில், 9,797-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

17.25 நோய் கண்டறிதலுக்கான இன்றியமையாத சேவைகள் அமைப்பு (EDSS)

நோய் கண்டறிதலுக்கான அத்தியாவசிய ஆய்வக சேவைகள் திட்டம் (EDSS) என்ற புதிய முயற்சியைத் தமிழக அரசு, 273.14 கோடி ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த 2019-2020 ஆம் ஆண்டில் தொடங்கியது. நோயாளிகளின் சொந்த செலவினங்களைக் (Out of Pocket Expenditure) குறைப்பதற்கும், அனைத்து மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களிலும் அனைத்து விதமான பரிசோதனைகள் மேற்கொள்வதற்கும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைய அரசு மருத்துவமனைகளிலுள்ள ஆய்வகங்களை வலுப்படுத்தவும், அவற்றை Hub and Spoke மாதிரிமூலம் இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் திருவள்ளூர் மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை Hub மருத்துவமனையாகவும், திருவள்ளூர் மாவட்டத் தலைமை மருத்துவமனை மற்றும் 11 மாவட்டத் துணை மருத்துவமனைகள் Spoke மருத்துவமனைகளாகவும் உள்ளன. நோயாளிகளின் மாதிரிகளை "Hub and Spoke model" மூலம், தூதுவரால் (Messenger) கொண்டு செல்லப்படுகிறது. இந்நாள் வரை சுமார் 3,500 மாதிரிகள் இந்த முன்னோடித் திட்டத்தில், பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளன. முன்னோடி மாவட்டத்தில் பெற்ற வெற்றியின் அடிப்படையில், இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

17.26 மாவட்ட மருத்துவமனைகளில் டி.என்.பி. திட்டம்:

மாவட்ட மருத்துவமனைகளில் சேவையை உயர்த்தவும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் பாலமாகச் செயல்படவும் டி.என்.பி. பட்டயப் படிப்புத் திட்டம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தேசிய நலக் குழுமத்தினால் தொடங்கப்பட்டது. 10 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் 2 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், 40 டி.என்.பி. பட்டயப் படிப்புகளுக்கான இடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அரசு புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஈரோட்டில் உள்ள அரசு தலைமையக மருத்துவமனை ஆகியவற்றில் 5 அவசர மருத்துவ இடங்களுடன் அங்கீகாரம் பெற்ற 2 மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். தற்போது, டி.என்.பி. - அவசர மருத்துவம் பிற மாவட்டத் தலைமை மருத்துவமனை களுக்கு விரிவுபடுத்தும் முயற்சியில் 13 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் தேசிய தேர்வு வாரியத்துடன் அங்கீகாரம் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன. இது விபத்து மற்றும் அவசரகால முயற்சிகளுக்கு பயிற்சி பெற்ற அவசர மருத்துவ ஆலோசகர்களைப் பெற உதவியாக இருக்கும்.

17.27 சுகாதார தகவல் மேலாண்மைத் திட்டம் (HMIS)

17.27.1 முன்னுரை

அரசு மருத்துவ நிலையங்களில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளின் தரம் மேம்படுத்தப்படும். தமிழக அரசு சுகாதாரத் தகவல் மேலாண்மைத் திட்டத்தை கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் மூன்று பகுதிகள் உள்ளன.

1. மருத்துவமனை மேலாண்மைத் திட்ட மென்பொருள்மூலம் நோயாளிகளுக்கு பதிவுச் சீட்டு வழங்குவது, மருந்துகளைப் பாிந்துரைப்பது போன்ற மருத்துவமனையின் தினசாி பணிகள் மற்றும் இதர சில சேவைகள் கணினிமூலம் செயல்படுத்தப்படுகின்றன. மருத்துவ மற்றும் ஊரக நல இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் 263 மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்வி

இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் 49 மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. உலகளவில் செயல்படுத்தப்படும் மருத்துவ மேலாண்மைத் திட்டங்களில் இந்தத் திட்டம் பெரியது ஆகும்.

2. தகவல் மேலாண்மைத் திட்டம்:- இந்தத் திட்டம்மூலம் மருத்துவமனையின் புறநோயாளிகள், உள்நோயாளிகள், அறுவை சிகிச்சைகள், குழந்தைப் பிறப்பு, தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் போன்ற அனைத்து தகவல்களும் பதிவு செய்யப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு நிருவாகத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் 2,285 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 309 அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

3. கல்லூரி மேலாண்மைத் திட்டம் மற்றும் பல்கலைக்கழக தன்னியக்கமாக்கல் திட்ட மென்பொருள்மூலம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் அனைத்து கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை, பதிவெண் வழங்குதல், தேர்வுச் சீட்டு, மதிப்பெண் பட்டியல், தேர்வு முடிவுகள் வெளியிடுதல், சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிகள் சிறப்பாக செய்யப்படுகின்றன.

17.28 புதிய திட்டங்கள்

(1) இணையவழி குடும்பப் பதிவேடு

தமிழகத்தில் வசிக்கும் அனைத்து குடும்பங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பொது மற்றும் உடல்நலத் தகவல்கள் இம்மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு பிளாக் செயின் எனும் புது தொழில்நுட்பம்மூலம் பாதுகாக்கப்பட உள்ளது. இத்தகைய தகவல்கள் பல்வேறு அரசு திட்டங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட உள்ளன. மேலும் பொதுமக்கள் குறித்த தகவல்கள் மிக இரகசியமாக நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் பாதுகாக்கப்பட உள்ளன.

(2) தொலைதூர மருத்துவ சேவை

இம்மென்பொருள் தொலைதூரத்திலும் பல்வேறு சுகாதாரத் திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்திட உதவுகின்றது. நோயாளிகள்

[2020 மார்ச் 24

இத்தொடர்பு முறைமூலம் சுகாதாரப் பணியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களை தொடர்புகொண்டு, நோய்க்கான ஆலோசனைகள் மற்றும் தேவையான மருந்து பரிந்துரைகளைப் பெற்று அருகிலுள்ள மருத்துவமனைகளில் மருந்துகளை எளிதில் பெற முடியும். வாட்ஸ்அப் செயலி மற்றும் குரல்பதிவு போன்ற முறைகளையும் இம்மென்பொருள்மூலம் பயன்படுத்த இயலும்.

(3) தகவல் மேலாண்மைத் திட்ட தரநிலை

மென்பொருள், தரவுப் பரிமாற்றங்கள், தரவுகளின் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு போன்றவற்றிற்குத் தமிழக அரசு தர நிர்ணயம் செய்து தகவல் மேலாண்மைத் திட்டத்தினைச் சிறப்புற நடத்திட உத்தேசித்துள்ளது. இதன்மூலம், தமிழகத்தில் தரவுகளைப் பல ஆண்டுகளுக்குப் பாதுகாக்கவும் மேலும் இதற்கு உதவும் மென்பொருட்களின் தரத்தினை அவ்வப்போது உயர்த்திடவும் முடியும்.

(4) ஒருங்கிணைந்த தகவல் பரிமாற்ற தளத்தினை மேம்படுத்துதல்

தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த சுகாதாரத் தகவல் திட்டத்தின்மூலம் அனைத்து சுகாதாரத் திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. பல்வேறு சுகாதாரத் திட்டங்களின் ஒருங்கிணைப்பு சுகாதாரத் தகவல் மென்பொருட்களின் ஒருங்கிணைப்புக்கு உதவும்.

(5) தகவல் தொழில்நுட்ப அமைப்பு அணுகுமுறை

அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிருவாக அலுவலகங்களுக்கும் தேவையான கணினிகள் மற்றும் இணையவழி இணைப்புகள் வழங்கி சுகாதாரத் தகவல் மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துதல் வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் தேவையான பயிற்சியினை வழங்க வேண்டும்.

17.29 தமிழ்நாடு மாநில பார்வை இழப்புக் கட்டுப்பாட்டு இயக்குநர்

நமது மாநிலத்தில் தேசிய பார்வை இழப்புத் தடுப்புச் சங்கத்தின் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு பார்வை இழப்புத் தடுப்புச் சங்கமும், 32 மாவட்டப் பார்வை இழப்பு தடுப்புச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை தேசிய நலக் குழுமம் தமிழ்நாட்டின் ஒரு பிரிவாக செயல்பட்டு வருகிறது. 23 அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனைகள், 32 அரசுத் தலைமை மருத்துவமனைகள், 50 அரசு மருத்துவமனைகள் மற்றும் 61 தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகள்மூலம் 2,33,411 கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு செயற்கை IOL பொருத்தப்பட்டுள்ளது. 19 கண் வங்கிகள்மூலம் 8,360 கண்கள் தானமாக பெறப்பட்டு, அதில் 40 சதவிகித கண்கள், கருவிழி மாற்று அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 27,88,302 பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 1,11,417 குழந்தைகளுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து குழந்தைகளுக்கும் பிறப்பின்போது உள்ள பிறவிக் குறைபாடுகளுக்கான பரிசோதனை மற்றும் குறைந்த எடையுடன் பிறந்த பச்சிளங்குழந்தைகளுக்கு "ரெட்டினோபதி ஆஃப் பிரிமெச்சூரிட்டி"-க்கான (ROP) விழித்திரை பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக 7 பிரேத்யேக கையடக்க விழித்திரை புகைப்படக் கருவி (RETCAM) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு (மண்டல கண் மருத்துவ இயல் நிலையம் மற்றும் அரசு கண் மருத்துவமனை சென்னை, அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சேலம், அரசு இராஜாஜி மருத்துவமனை மதுரை, அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) ரூபாய் 126 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

கண் நீர் அழுத்த நோய், சர்க்கரை நோயினால் ஏற்படும் விழித்திரை பாதிப்பு மற்றும் மாறுகண் கோளாறினால் ஏற்படும் பாதிப்பிற்கு அரசு சாரா தொண்டு நிறுவன கண் மருத்துவ மனைகளான அரவிந்த் கண் மருத்துவமனை, ஸ்ரீ காஞ்சி காமகோட்டி மருத்துவமனை, சங்கர நேத்ராலயாமூலம் அரசு கண் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு தேசிய கண் பார்வை இழப்புத் தடுப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்க்கரை நோயாளிகளுக்கு விழித்திரை பரிசோதனை செய்வதற்காக 27 கையடக்க விழித்திரை புகைப்பட கருவி நான்கு மாவட்டங்களுக்கு (சேலம், வேலூர், கடலூர், திருநெல்வேலி) ரூபாய் 300 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொலைதூர கண்ணியல் வலைதளம் மற்றும் மாவட்டம்தோறும் ஒரு காணொலி கண் சிகிச்சை மையம் ஆகியவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால்

ரூபாய் 567 இலட்சம் செலவில் துவக்கி வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

நவீன கண் மருத்துவம் சார்ந்த கருவிகள் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், அரசு மருத்துவமனைகளுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம்மூலம் ரூபாய் 1,120 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 8,039 நோயாளிகள் அரசு மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றனர். அதன் மதிப்பு சுமார் ரூபாய் 869 இலட்சம் ஆகும். விருத்தாசலம், வாணியம்பாடி, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, திண்டிவனம், கடலூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் புதிதாக கண் அறுவை அரங்கம் மற்றும் கண் வார்டுகள் ரூபாய் 525 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் திருப்பூர், பழனி, திருச்செந்தூர் ஆகிய அரசு மருத்துமனைகளில் புதிதாக கண் அறுவை அரங்கம் மற்றும் கண் வார்டுகள் ரூபாய் 180 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

கண் சிகிச்சைக்கான மிகச் சிறந்த மண்டல மையத்தை சென்னையில் உருவாக்குவதற்கு ரூபாய் 65.6 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இதேபோல், தஞ்சாவூரில் ஒரு மண்டல கண் சேவை மையம் உருவாக்குவதற்கு, ரூபாய் 16.47 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன. அனைத்து மக்களிடமும் கண்தானம், சர்க்கரை நோய் விழித்திரை பாதிப்பு, கண்புரை நோய், நீர் அழுத்த நோய், வைட்டமின் 'ஏ' பற்றாக்குறை போன்றவற்றிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக விளக்கப்படங்கள், பொது ஊர்வலங்கள், கண்காட்சிகள், போட்டிகள், தொடர்கல்வி நிகழ்ச்சிகள், மருத்துவர்களுக்கும், கண்ணியல் சார்ந்த ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பள்ளிக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் தேவைக்கு ஏற்ப இலவச கண் கண்ணாடிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு திருவள்ளூர், சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு ஊர்தியுடன்கூடிய நடமாடும் கண் பரிசோதனை மையம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தென்காசி, காஞ்சிபுரம், சீர்காழி, விருதுநகர் மற்றும் செய்யாறு அரசு மருத்துவமனைகளில் புதிய கண் அறுவை அரங்கம் மற்றும் கண் வார்டுகள் ரூபாய் 300 இலட்சம்

செலவில் கட்டப்பட உள்ளது. மேலும், அரசு மருத்துவமனைகளுக்குப் புதிய கண் சிகிச்சை கருவிகள் ரூபாய் 95 இலட்சம் செலவில் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம்மூலம் வழங்கப்படவுள்ளன.

அத்தியாயம் - 18

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

18.1 தமிழக அரசு ஒவ்வொரு குடிமகனுக்கும் அவர்கள் விரும்பியவாறு மருத்துவ வசதிகள் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 11-1-2012 முதல் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/- ரூபாய்க்கும் குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டம் சிறப்பாக ஐந்து ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு மகத்தான சேவையை அளித்துக் கொண்டு இருப்பதால், இத்திட்டம் 11-1-2017 முதல் மேலும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மத்திய அரசின் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தைத் தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் 23-9-2018 முதல் ஒருங்கிணைத்துள்ளது.

18.02 11-1-2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- காப்பீட்டுத் தொகை – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை ஒருங்கிணைத்த பின்பு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு உள்ளது.
- சிகிச்சை முறைகள் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு அனுமதிக்கப்பட்ட மொத்தம் 1,450 மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகள். (154–சிறப்பு சிகிச்சை முறைகள்–154 தொடர் சிகிச்சை முறைகள்–38–முழுமையான பாிசோதனை முறைகள்–மற்றும் 8 உயர்சிறப்பு சிகிச்சை முறைகள் உட்பட)

- இம்மாநிலத்தில் 6 மாதங்களுக்கும் மேலாக வசிக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (Migrants), தொழிலாளர் நலத் துறைமூலம் சான்றளிக்கப்பட்டு இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.
- மாநில அரசாங்கத்தால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்படுகிறார்கள்.
- ஏற்கெனவே உள்ள காப்பீட்டு அடையாள அட்டை தொடரப்படுகிறது. மேலும், மின்னணு முறையில் அடையாள அட்டையினை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட இணையதளம்மூலமாக பதிவிறக்கம் செய்து அச்சடித்துக் கொள்ளலாம்.
- மத்திய அரசின் தர அளவுகோல்கள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் அங்கீகாரிப்புக் குழு (NABH) வரையறுத்த ஆரம்பநிலை தர நிர்ணயம், அரசு மருத்துவமனைகள் உட்பட அனைத்து மருத்துவமனைகளுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- குறைந்த மருத்துவத் தகவல் ஆவணங்களை (Minimal Electronic Health Record) வலைதளத்தில் பயனாளிகள் பார்வையிடலாம்.
- இத்திட்டத்தில் 1,008 மருத்துவமனைகள் (258 அரசு மருத்துவமனைகள் மற்றும் 750 தனியார் மருத்துவமனைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

18.3 குறைகள் தீர்த்தல்:

இத்திட்டத்தில் குறைகள் தீர்க்கும் வழிமுறைகள் கணினியில் நேரடி தொடர்புமூலம் கண்காணித்தல் மற்றும் குறுஞ்செய்தி ஒப்புகை உட்பட நன்கு நிறுவப்பட்டுள்ளது. திட்டம் தொடர்பான அனைத்து விவரங்கள் மற்றும் புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 3993-ஐ மக்கள் பயன்படுத்தலாம். மாநில மற்றும் மாவட்டக் கண்காணிப்பு மற்றும் குறைதீர்க்கும் குழுக்கள் குறைகளைத் தீர்க்க அமைக்கப்பட்டுள்ளன.

18.4 செயல்திறன்:

11-1-2012 முதல் 10-2-2020 வரை (5 வருடம்) 41.88 இலட்சம் பயனாளிகள் ரூ.6,690.53 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில், அரசு பொது மருத்துவமனைகள்

2020 மார்ச் 24]

2,509.54 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் 19.20 இலட்சம் பயனாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. (நோய் கண்டறியும் பரிசோதனை உட்பட)

18.5 சிறப்பு சிகிச்சைகள் வாரியாக, அனுமதி அளிக்கப்பட்ட விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது: (11-1-2012 - 10-2-2020)

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை ரூபாய்
1	சிறுநீரக நோய் சிகிச்சை – டயாலிசிஸ்	6,75,944	540.44
2	இருதய ஸ்டெண்ட் சிகிச்சை	77,890	523.71
3	இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை	37,915	357.50
4	இருதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை	27,656	295.72
5	புற்றுநோய் – கதிர்வீச்சு சிகிச்சை	1,28,410	295.55
6	முழங்கால் மூட்டுமாற்று அறுவை சிகிச்சை	43,807	286.41
7	பிறவி இருதய கோளாறு சிகிச்சை	30,880	240.06
8	எலும்பு முறிவு சிகிச்சை	1,24,653	225.93
9	சிறுநீரக கல் அறுவை சிகிச்சை	1,20,163	222.88
10	புற்றுநோய் கீமோதெரபி சிகிச்சை	4,24,317	206.43
11	பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை	1,44,501	200.92
12	முதுகுத் தண்டுவட அறுவை சிகிச்சை	50,193	170.41

[2020 மார்ச் 24

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை ரூபாய்
13	மாரடைப்பு மருத்துவ சிகிச்சை	69,065	163.70
14	புற்றுநோய் சிகிச்சை	46,832	145.28
15	இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை	15,461	112.84
16	கண் விழித்திரை அறுவை சிகிச்சை	76,071	109.31
17	கருப்பை நீக்கம் அறுவை சிகிச்சை	64,938	103.49
18	இரத்தக் குழாய் அறுவை சிகிச்சை	41,488	103.30
19	காதொலி கருவி	1,24,525	99.94
20	இரைப்பை குடல்வழி அறுவை சிகிச்சை	38,441	94.44
21	உடலுறுப்பு சீரமைப்பு அறுவை சிகிச்சை	46,796	90.02
22	சீரற்ற இருதய துடிப்பு மருத்துவ சிகிச்சை	10,579	73.52
23	நரம்பியல் அறுவை சிகிச்சை	15,957	67.92
24	காது வால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை	3,926	65.80
25	பக்கவாத மருத்துவ சிகிச்சை	36,193	64.20
26	புராஸ்டெட் அறுவை சிகிச்சை	26,693	59.42
27	கருப்பை புற்றுநோய் நீக்கம் அறுவை சிகிச்சை	18,950	45.75

2020 மார்ச் 24]

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை ரூபாய்
28	சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை	2,853	44.62
29	மகளிர் நோய் அறுவை சிகிச்சை	18,859	43.50
30	ஊடுகதிர் சிகிச்சை முறைகள்	8,218	41.88
31	மார்பகப் புற்றுநோய் சிகிச்சை	20,312	40.21
32	இரத்த புற்றுநோய் சிகிச்சை	47,370	38.80
33	தீக்காய சிகிச்சை	14,102	34.79
34	லேபராஸ்கோபி மூலமாக (நுண்துளை) கர்ப்பப்பை நீக்கம் அறுவை சிகிச்சை	19,248	28.34
35	மூளை புற்றுநோய் சிகிச்சை	4,632	26.32
36	இரைப்பை குடல்வழி மருத்துவ சிகிச்சை	9,535	25.41
37	தைராய்டு அறுவை சிகிச்சை	11,713	24.35
38	கண்நீர் அழுத்த அறுவை சிகிச்சை	15,447	18.13
39	குழந்தைகள் பிறவிக் கோளாறு அறுவை சிகிச்சை	4,663	15.10
40	எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை	764	13.58
41	புற்றுநோய் அறுவை சிகிச்சை	4,848	10.54
42	சர்க்கரை நோயால் விழித்திரைபாதிப்புக்கான அறுவை சிகிச்சை	19,505	9.07

[2020 மார்ச் 24

வ. எண்	சிறப்பு சிகிச்சைகள்	ஒப்புதல் எண்ணிக்கை	ஒப்புதல் தொகை ரூபாய்
43	டெங்கு அபாய இரத்த அழுத்தக் குறைவு சிகிச்சை	7,456	9.06
44	உடல் மருத்துவ மறுவாழ்வு (PMR)	1,444	8.70
45	குழந்தைகள் கண்புரை அறுவை சிகிச்சை	4,942	7.59
46	வலிப்புநோய் அறுவை சிகிச்சை	675	6.84
47	கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை	268	4.83
48	மாறுகண் திருத்த அறுவை சிகிச்சை	3,190	3.66
49	உடல்எடை குறைப்பு அறுவை சிகிச்சை	153	2.64
50	கர்ப்பம் சம்பந்தமான கருப்பை நீக்கம் அறுவை சிகிச்சை	974	2.28
51	இரத்த குறைபாடு (தலசீமியா) சிகிச்சை	4,442	2.11
52	நுரையீரல் மாற்று மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை	74	1.47
53	ஸ்டெம்செல் மாற்று அறுவை சிகிச்சை	64	0.89
54	குழந்தைகள் கண் அழுத்த நோய் அறுவை சிகிச்சை	159	0.23
55	இதர நோய்கள்	6,35,275	979.44
மொத்தம்		33,83,429	6409.24

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

18.6 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, அறுவை சிகிச்சைக்குப் பின்னர் நோய்த் தடுப்பு சிகிச்சை உட்பட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காது வால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை, இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புல மூளைத் தண்டு உள் வைப்பு அறுவை சிகிச்சை போன்ற உயர்சிறப்பு அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் தொகுப்பு நிதி (Corpus fund) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு நிபுணர் குழுவால் மேற்குறிப்பிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

18.7 இதுவரை தொகுப்பு நிதியிலிருந்து 8,847 பயனாளிகளுக்கு, (10-2-2020 அன்று வரை) சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

வ. எண்	சிறப்பு அறுவை சிகிச்சைகள்	பாரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை ரூ.
1.	கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை	615	1,30,61,00,000
2.	சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை	2,886	1,12,17,85,860
3.	காது வால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை	4,177	3,03,61,71,800
4.	எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை	1,024	96,02,93,732
5.	இருதய மாற்று அறுவை சிகிச்சை	99	19,57,50,000
6	நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை	16	4,59,50,000

[2020 மார்ச் 24

வ. எண்	சிறப்பு அறுவை சிகிச்சைகள்	பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை ரூ.
7	நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை	11	2,82,00,000
8	செவிப் புல மூளைத் தண்டு உள் வைப்பு அறுவை சிகிச்சை	19	3,46,58,280
	மொத்தம்	8,847	672,89,09,672

18.8 சிறப்பு மருத்துவ முகாம்கள்:

ஜனவரி 2012 முதல் ஜனவரி 2020 வரை 46,135 முகாம்கள் (மருத்துவ முகாம்கள், மருத்துவமனை முகாம்கள் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்கள்) நடத்தப்பட்டன. இதில், 66,28,252 பயனாளிகள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டுள்ளனர்.

18.9 பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தினைத் தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்:

பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தில் சமூகப் பொருளாதார, சாதிவாரியான கணக்கெடுப்புப் பட்டியலின்படி (SECC), தமிழ்நாட்டில் 77.81 இலட்சம் குடும்பங்களுக்கு மத்திய அரசின் பங்களிப்பாக 60 விழுக்காடு பிரிமியம் தொகை வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

அத்தியாயம் - 19

"108" - அவசரகால ஊர்தி சேவை

19.1 தமிழ்நாட்டில் கட்டணமில்லா '108' தொலைபேசி எண் மூலம் அவசரகால ஊர்தி சேவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சேவை அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக கிடைக்கிறது. மேலும், அனைத்து 108 அவசரகால ஊர்தியில் முறையான முதலுதவி சிகிச்சைகளை அளிக்க பயிற்சி பெற்ற அவசர கால மருத்துவ நுட்புனர் (EMT) ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

19.2 அவசரகால ஊர்தி நிறுத்திவைக்கும் இடங்கள்:

மக்கள்தொகை, அதிகமாக உள்ள இடங்கள் விபத்து அதிகம் ஏற்படும் இடங்கள், மலைப்பகுதி மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளின் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள 37 மாவட்டங்களிலும் '108' அவசரகால ஊர்திகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. தற்போது மாநிலத்தில் 941 அவசரகால ஊர்திகள் அடிப்படை உயிர் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட உயிர்ப் பாதுகாப்பு மற்றும் பச்சிளம் குழந்தைகள் உயிர்ப் பாதுகாப்பு ஆகிய சேவைகளுக்காகச் செயல்பட்டு வருகின்றன. மலைப்பகுதிகள் மற்றும் கடின பாதைகள் இருக்கும் இடங்களில் அவசர சிகிச்சை அளிக்கும் விதத்தில் 76 நான்கு சக்கர இயக்க விசை கொண்ட அவசரகால ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. கூடுதலாக 4 வி.வி.ஐ.பி. அவசரகால ஊர்திகள் மற்றும் 41 இரு சக்கர அவசரகால வாகனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாகனங்களின் எண்ணிக்கை

வ. எண்	ஊர்திகளின் வகைகள்	எண்ணிக்கை
1.	அடிப்படை அவசரகால ஊர்தி	738
2.	மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதி கொண்ட அவசரகால ஊர்தி	62
3.	பச்சிளங் குழந்தைகளுக்கான அவசரகால ஊர்தி	65

[2020 மார்ச் 24

வ. எண்	ஊர்திகளின் வகைகள்	எண்ணிக்கை
4.	நான்கு சக்கர இயக்க அவசரகால ஊர்தி	76
5.	மொத்த ஊர்திகள்	941
6.	வி.வி.ஐ.பி. அவசரகால ஊர்திகள்	4
7.	இருசக்கர அவசரகால வாகனங்கள்	41

19.3 அவசர கால மருத்துவ உதவி வகைகள்

அவசர கால நிகழ்வுகளின் வகை	விழுக்காடு
பிரசவம் தொடர்புடையவை	23.30
சாலை விபத்துகள்	16.28
தீவிர வயிற்றுவலி	7.84
இதயநோய் தொடர்புடையவை	5.54
சுவாசம் தொடர்புடையவை	4.30
விஷம் தொடர்புடையவை	4.23
தாக்குதலில் காயமுற்றவர்கள்	3.23
வலிப்பு நோய்	2.38
பச்சிளம் குழந்தைகள்	1.99
தற்கொலை முயற்சி	0.61
மற்றவை	30.38
மொத்தம்	100.00

19.4 சிறப்பு நிகழ்வுகள் (2019 ஏப்ரல் முதல் ஜனவரி 2020 வரை)

- மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த 99,285 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளனர்.
- பழங்குடியினர் பகுதிகளில் வழங்கப்பட்ட அவசரகால

2020 மார்ச் 24]

மருத்துவ சிகிச்சையின்மூலம் 54,595 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

- சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்ட 22,167 பச்சிளம் குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.

19.5 இச்சேவையின்கீழ் பயன்பெற்ற நபர்களின் விவரம் மற்றும் இதர விவரங்கள்

வகைப்பாடு	2016-2017	2017-2018	2018-2019	2019 ஏப்ரல் முதல் ஜனவாி 2020 வரை
மொத்த பயனாளிகள்	10,50,998	12,87,445	13,01,546	11,02,528
கர்ப்பிணித் தாய்மார்கள்	2,40,827	3,22,868	3,24,932	2,56,861
சாலை விபத்து	2,19,310	2,28,549	2,45,049	1,79,485
பிற அவசர பயனாளிகள்	5,90,861	7,36,028	7,31,565	6,66,182
மலைவாழ் மக்கள் பயனடைந் தவர்கள்	45,103	64,457	62,562	54,595
பச்சிளம் குழந்தைகள்	20,584	20,343	21,518	22,167
தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டு உயிர் காப்பாற்றப் பட்ட நபர்கள்	97,845	72,344	81,642	99,285

19.6 பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர ஊர்தி:

இந்தியாவில் முதன்முறையாக பச்சிளம் குழந்தைகளுக்கான அவசர ஊர்தி ஜூன் 2011 அன்று துவங்கப்பட்டது. பச்சிளம்

[2020 மார்ச் 24

குழந்தைகளுக்கான அவசர மருத்துவ உதவி, பொது அவசரகால மேலாண்மை சிகிச்சை சேவையில் கொண்டுவரப்பட்டது. பிறந்த முதல் 28 நாட்கள் வயதுடைய குழந்தைகளுக்கு மட்டும், அவசரகாலங்களில் அவசர சிகிச்சை அளிப்பதற்காக, இவ்வூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையம்/ அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை தேவைப்படும்போது அவர்களை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைந்துள்ள பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை மையங்களுக்கு இவ்வூர்திகள்மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இந்த ஊர்திகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர் காக்கும் கருவிகளாகிய இன்குபேட்டர் மற்றும் சிரஞ்சி பம்ப் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. மேலும், பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை முறைகளில் பயிற்சி பெற்ற அவசரகால மருத்துவ நுட்புனர் ஒருவர் இந்த ஊர்தியில் பணிபுரிகிறார். இந்த ஆண்டில் மட்டும் 22,167-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இச்சேவையினால் பயனடைந்துள்ளனர். தற்போது தமிழ்நாடு முழுவதும் 65 ஊர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன.

19.7 அவசர கால சிகிச்சை மையம்:

சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களைக் கொண்டு செல்லும்போது மருத்துவமனை அதிக தூரத்தில் இருக்கும்பட்சத்தில் அத்தகைய நபர்களுக்கு உரிய அவசர சிகிச்சை அளித்து அவர்களது உடல்நிலையை நிலைநிறுத்த அவசர சிகிச்சை மையம் தாம்பரம், பாடியநல்லூர், ஈஞ்சம்பாக்கம், வேப்பூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் நிறுவப்பட்டுள்ளது. இந்த மையங்களில், சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்படுவர். மூன்று படுக்கை வசதி கொண்ட இம்மையங்களில், மருத்துவர் மற்றும் செவிலியர் 24 மணி நேர அவசரகால சிகிச்சை அளிக்கின்றனர். இம்மையங்களில் வெண்டிலேட்டர், டெஃபிபிரில்லேடர் போன்ற உயரிய உயிர் காக்கும் கருவிகள் மற்றும் மருந்துகள் உள்ளன.

19.8 இருசக்கர அவசரகால ஊர்தி மற்றும் நடமாடும் மருத்துவப் பெட்டகம்:

இரு சக்கர அவசரகால ஊர்திகள் சேவை, 8-2-2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இவ்வூர்திகளில் இருக்கும் முதலுதவிப் பெட்டகம், கையில் எளிதில் கொண்டு செல்லக்கூடியதாகவும்,

2020 மார்ச் 24]

அவசரகால தேவை உள்ள இடத்தில் எளிய முறையில் விரைவில் செயல்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். இருசக்கர ஊர்திகள் ஓட்ட, ஓட்டுநர் உரிமம் உள்ள அவசரகால மருத்துவ உதவியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த சேவை மூலமாக 61,327 பேர் பயனடைந்துள்ளனர். மேலும் இச்சேவையை தமிழ்நாட்டில் உள்ள பெருநகரப் பகுதிகளுக்கு விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

19.9. 104 தொலைபேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

இச்சேவை 24 மணி நேர சேவையாகும். இச்சேவையின் வாயிலாக பொதுமக்களுக்கு உடல்நலம் குறித்த அறிவுரைகள், தகவல்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. மேலும் அரசாங்கத்தின் நலத் திட்டங்கள் பற்றிய தகவல்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

- மருத்துவர்கள் மற்றும் சுகாதார வல்லுநர்களைக் கொண்டு தேவையான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சுகாதாரம் சம்பந்தமான தகவல்களை வழங்குதல்.

- மகப்பேறு கால சிரமங்களை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்கு உரிய மகப்பேறு மருத்துவ வசதிகள் அமைந்துள்ள மருத்துவமனைகள் குறித்து தகவல் அளிக்கப்படும்.

- அரசு சேவைகள் குறித்த விவரங்கள் - முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி சேவை பற்றிய விவரங்கள் வழங்கப்படும்.

- ஊட்டச்சத்து குறித்த ஆலோசனைகள் மற்றும் தற்கொலை எண்ணம் உள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

- சுகாதார சேவைகள் வழங்குவதில் ஏதேனும் குறைகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் இருந்தால் பொதுமக்கள் இச்சேவையின் வாயிலாக பதிவு செய்யலாம்.

- தொடங்கிய நாள் முதல் ஜனவரி 2020 வரை 1,503,124 மக்கள் பயனடைந்துள்ளனர்.

19.10 ஜனனி சிசு சுரக்க்ஷா சேவை:

ஜனனி சிசு சுரக்ஷா சேவை இந்திய செஞ்சிலுவை சங்கம் வாயிலாக 102 இலவச தாய் சேய் நல ஊர்திகள் சேவை, அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்கள் மற்றும் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயுற்ற குழந்தைகளை இலவசமாக அவர்கள்

[2020 மார்ச் 24

இல்லத்திற்கு கொண்டு சேர்க்கும் சேவையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சேவை தொடங்கிய நாள் முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 6,17,045 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். தற்போது தமிழ்நாடு முழுவதும் இலவச தாய் சேய் நல 161 ஊர்திகள் இயங்கி வருகின்றன.

19.11 இலவச அமரர் ஊர்தி சேவை:

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடல் தமிழகத்தில் உள்ள எந்தப் பகுதிக்கும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இவ்வூர்திகள்மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இச்சேவையின்மூலம் விபத்து, இயற்கை பேரிடர் மற்றும் பேரழிவுக் காலங்களில் இறந்தோரது உடல்கள் அரசு மருத்துவமனைக்குப் பிரேத பரிசோதனைக்குக் கொண்டு செல்லப்படுவதோடு, அதற்குப் பின்னர் அவர்களின் இல்லத்திற்கும் கொண்டு சேர்க்கப்படுகிறது. மேலும், இச்சேவையைப் பயன்படுத்தி 300 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும் இடங்களுக்குக் கட்டணமின்றி இரயில்மூலம் உடல்கள் வெளி மாவட்டத்திற்கும் மற்றும் பிற மாநிலங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. தொடங்கிய நாள் முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 7,33,119 இறந்தோரது உடல்கள் இலவசமாக அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 151 ஊர்திகள் இச்சேவையின்கீழ் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில் இவ்வூர்திகளின் எண்ணிக்கை 180 ஆக அதிகரிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம் - 20

தொற்று நோய்கள்

20.1 தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு எப்போதும் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. தொற்று நோய்களைத் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும், சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணுதல், தடுப்பூசி மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை முக்கிய உத்திகள் என்பதால் அவை சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொற்று நோய்கள் கொசு, நீர், உணவு, காற்று மற்றும் மேற்பரப்பில் உள்ள பாக்டீரியாமூலம் பரவுகிறது. ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின்மூலம் மாநிலத்தில் ஏற்படும் தொற்று நோய்களின் நிலைமை 24 மணி நேரமும்

2020 மார்ச் 24]

தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. தொற்றுநோய்கள் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தி தக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு அண்டை மாநிலங்களிலிருந்து சிகிச்சைக்கு வருபவர்கள் பற்றிய தகவலும் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின்மூலம் அந்தந்த மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் அதிவிரைவு நோய்த் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

20.2 தடுப்பூசியினால் தடுக்கப்படும் நோய்கள்:

தடுப்பூசியினால் தடுக்கப்படும் நோய்களான காசநோய், போலியோ, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், மஞ்சள் காமாலை, H இன்புளூயன்ஸா - நிமோனியா மற்றும் மெனிஞ்ஜிடிஸ், இரணஜன்னி, தட்டம்மை, ரூபெல்லா, ரோட்டா வைரஸ் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் (தொற்றுநோய் பரவக்கூடிய 13 மாவட்டங்கள்) நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

20.3 தடுப்பூசித் திட்டம்:

அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களும், பச்சிளம் குழந்தைகளும் தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டும். தடுப்பூசித் திட்டத்தின் கொள்கையானது, தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களின் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதத்தைக் குறைத்தல் ஆகும். தமிழ்நாட்டில், ஆறு நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசித் திட்டம் 1978-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம் 1985 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆண்டுதோறும் சுமார் 10.44 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 9.53 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர். கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேற்றின்போது ஏற்படும் இரணஜன்னியை தடுப்பதற்காக ஆண்டுதோறும் இரணஜன்னி தொண்டை அடைப்பான் தடுப்பூசி அளிக்கப்படுகிறது. இம்மாநிலம் தடுப்பூசி போடுவதில் 95 சதவீத சாதனையைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. 2019-2020 ஆம்

ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை), காசநோய்த் தடுப்பூசி, போலியோ சொட்டு மருந்து, பெண்டாவேலண்ட், தட்டம்மை போன்ற தடுப்பூசிகள் போடுதல் முறையே 97%, 100%, 100% மற்றும் 99.5%. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர் தடுப்பூசித் திட்டத்தால், பச்சிளம் குழந்தைகள் மற்றும் தாய்க்கு ஏற்படக்கூடிய இரணஜன்னி, கக்குவான் இருமல் போன்ற நோய்கள் தமிழ்நாட்டில் மறைந்துவிட்டன. கடந்த 16 ஆண்டுகளாக போலியோ இல்லாத நிலை தக்கவைக்கப்பட்டுள்ளது. தொண்டை அடைப்பான் மற்றும் தட்டம்மை நோய் பரவுவதும் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

20.4 போலியோ சிறப்பு முகாம்

தடுப்பூசித் திட்டம் சிறப்பாக நடைபெற்றதாலும், 1995-1996 ஆம் ஆண்டு முதல் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெறுவதாலும், தமிழ்நாட்டில் போலியோ நோய் அறவே ஒழிக்கப்பட்டது. கடந்த 16 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் போலியோ நோய் இல்லாத நிலை உள்ளது. உலக சுகாதார நிறுவனம், 2015 ஆம் ஆண்டு போலியோ வைரஸ் வகை 2 முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளது. இது போலியோ நோய் ஒழிப்பில் மிகப் பெரிய வெற்றிப் படிகட்டாகும். இதன் தொடர்பாக ஏப்ரல் 25, 2016 முதல் தமிழ்நாட்டில் ட்ரைவேலண்ட் OPV பதிலாக பைவேலண்ட் OPV அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூடுதலாக IPV தடுப்பூசியும், தடுப்பூசி அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது உலக சுகாதார நிறுவனம், அக்டோபர் மாதம் போலியோ வைரஸ் வகை 3 முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. 31-10-2019 அன்று, இந்தியா பல்ஸ் போலியோ 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடியது. 2020 ஆம் ஆண்டில், ஒரு சுற்று பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் 19-1-2020 அன்று நடைபெற்று முடிந்தது.

20.5 ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம்

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயமுள்ள 13 மாவட்டங்களான கடலூர், விழுப்புரம், விருதுநகர், மதுரை, திருவாரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கரூர் மற்றும் திருவள்ளூரில் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. (ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி 2 தவணைகளாக, 9-12 மற்றும் 16-24 மாதம் உள்ள குழந்தைகளுக்கு)

2020 மார்ச் 24]

20.6 சிறப்பு மிஷன் இந்திரதனுஷ்

மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம், டிசம்பர் 2014-ல் சிறப்பு தடுப்பூசி முகாம் மூலமாக தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கையை 2020 ஆம் ஆண்டுக்குள் 65 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்த மிஷன் இந்திரதனுஷ் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சிறப்பு முகாமில் தேசிய தடுப்பூசித் திட்டத்தின்மூலம் இரண்டு வயதுக்குட்பட்ட தடுப்பூசி பெறாத மற்றும் விடுபட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் பயன் அடைவர். இதுவரை, மிஷன் இந்திரதனுஷ் திட்டத்தின்மூலம் 6 சுற்றுகள் நடந்து முடிந்துள்ளன. தீவிர மிஷன் இந்திரதனுஷ் திட்டம் 2.0, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் (நான்கு சுகாதார மாவட்டங்களான விருதுநகர், சிவகாசி, இராமநாதபுரம் மற்றும் பரமக்குடி) 4 சுற்றுகளாக டிசம்பர் 2019 முதல் மார்ச் 2020 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

20.7 தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி (Measles – Rubella Vaccination)

தேசிய தடுப்பூசித் திட்ட நிபுணர்கள் குழு (National Technical Advisory Group on Immunisation) பரிந்துரையின்படி, தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோயை ஒழிக்கும் நோக்கில் 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட 1.7 கோடி குழந்தைகளுக்கு முகாம் அடிப்படையில் தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி (Measles–Rubella Vaccination Campaign) 6-2-2017 முதல் 31-5-2017 வரை வழங்கப்பட்டது. மேலும், தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி, தேசிய தடுப்பூசி அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

20.8 ரோட்டா வைரஸ் சொட்டு மருந்து (Rota virus)

தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரோட்டா வைரஸ் சொட்டு மருந்து சேலத்தில் 17-9-2017 அன்று துவங்கப்பட்டது. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி, பெண்டாவேலண்ட் மற்றும் போலியோ மருந்துகளுடன் ரோட்டா வைரஸ் சொட்டு மருந்து குழந்தைகளுக்கு 6, 10 மற்றும் 14-வது வாரத்தில் 5 சொட்டுகள் வாய் வழியாக வழங்கப்படுகிறது.

20.9 பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாடுத் திட்டம்

தற்சமயம் மாநிலத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பல வகையான முயற்சிகளைச் செய்லபடுத்தி, கொசு மற்றும் நோய் பரப்பும் பூச்சிகள் ஒழிப்புப் பணியை செய்து வருகிறது. தேசிய நலவாழ்வுக் குழுமத்தின்

[2020 மார்ச் 24

ஒரு பகுதியான பூச்சிகளால் பரவும் நோய்களுக்கான தேசிய கட்டுப்பாடுத் திட்டம் இந்த முயற்சிகளுக்கு உதவி செய்கிறது.

20.10 டெங்கு

'ஏடிஸ்' (Aedes) கொசுக்களால் பரப்பப்படும் டெங்கு காய்ச்சல், தொற்றுநோயாகப் பெருக வாய்ப்புள்ள ஒரு வைரஸ் நோயாகும். காய்ச்சல், தலைவலி, தசை வலி, மூட்டு வலி, தோலில் சிவப்புப் புள்ளி, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை டெங்கு காய்ச்சலின் அறிகுறிகளாகும். இந்நோய்த் தொற்று காரணமாக, டெங்கு இரத்தக் கசிவு காய்ச்சல், நோயாளியின் இரத்தக் குழாய்களில் மிகப் பெரிய பாதிப்பினை உருவாக்கி, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அமையும்.

டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு இரத்தக் கசிவு காய்ச்சல் டெங்கு 1, 2, 3 மற்றும் 4 என்ற நான்கு வகை டெங்கு வைரஸால் ஏற்படுகிறது. இவை ஒன்றோடொன்று தொடர்புடையதாகும். ஒரு வகை டெங்கு காய்ச்சல் வந்தவர்களுக்கு ஆயுள் முழுவதும் இவ்வைரஸ் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். ஆனால், இது மற்ற வகை டெங்கு வைரஸ்களுக்கான எதிர்ப்பு சக்திகளாக அமையாது.

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டில் இருந்தபோதிலும், அண்மைக்காலங்களில், நூற்றுக்கும் மேலான நாடுகளில் டெங்கு காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தியாவில் பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் டெங்கு காய்ச்சல் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் 'டெங்கு' மற்றும் 'சிக்குன்குனியா' காய்ச்சல் கண்டறிய, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மண்டல பூச்சியியல் குழுக்கள், ஓசூர் நோய் பரப்பி கட்டுப்பாடு மையம், கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் கிண்டி கிங் நிலையத்தில் அமைந்துள்ள தலைமை ஆய்வுக்கூடம் உட்பட, 30 ஆய்வு மையங்கள் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், மற்ற மாவட்ட மருத்துவமனைகளுக்கும் இவ்வசதி மாநில அரசால் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. தற்போது, மாநிலத்தில் மொத்தம் 125-க்கும் மேற்பட்ட 'எலிசா' பரிசோதனை மையங்கள் உள்ளன.

பொது சுகாதாரத் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து, கொசு உற்பத்தியாகும் இடங்களை, குறிப்பாக தண்ணீர் தேங்கக்கூடிய உடைந்த பாத்திரங்கள், உபயோகப்படாத டயர், உபயோகப்படாத பிளாஸ்டிக் குவளை, உடைந்த பாட்டில்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து, அவைகளை அப்புறப்படுத்தி டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

2020 மார்ச் 24]

டெங்கு வைரஸ் ஏடிஸ் கொசுக்களில் உள்ளதா எனக் கண்டறியும் வசதி நாட்டிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து நோய் பரவாமல் தடுக்கப்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் டெங்கு மற்றும் காய்ச்சல் கண்டவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவை விவரணையாக்கம் செய்யப்பட்டு தினமும் எச்சரிக்கை செய்யப்பட்டு, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

டெங்கு

வ.எண்	**வருடம்**	**பாதிக்கப்பட்ட நபர்கள்**	**இறப்புகள்**
1	2015	4,535	12
2	2016	2,531	5
3	2017	23,294	65
4	2018	4,486	13
5	2019	8,527	5
6	2020 **(11.3.2020)**	1,425	0

20.11 சிக்குன்குனியா

'சிக்குன்குனியா' காய்ச்சல் 'ஏடிஸ்' கொசுக்கள்மூலம் மனிதருக்கு பரவும் ஒரு வகை வைரஸினால் ஏற்படுகிறது. அரசால் மேற்கொள்ளப்பட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகளால் சிக்குன்குனியா நோயின் பாதிப்பு மிகவும் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 284 நபர்களுக்கும், 2019 ஆம் ஆண்டில் 623 நபர்களுக்கும், நடப்பாண்டில் (31-1-2020) 68 நபர்களுக்கும் சிக்குன்குனியா நோய் கண்டறியப்பட்டது. டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தும் பணிகளோடு சிக்குன்குனியா நோய்த் தடுப்புப் பணிகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன.

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்
1	2015	329
2	2016	86
3	2017	131
4	2018	284
5	2019	623
6	2020 (11.3.2020)	157

20.12 மலேரியா

மலேரியா நோய், பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (பி.வைவாக்ஸ்), பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரம் (பி.பால்சிபாரம்), பிளாஸ்மோடியம் மலேரியே (பி.மலேரியே) மற்றும் பிளாஸ்மோடியம் ஓவேல் (பி.ஓவேல்) போன்ற ஒட்டுண்ணிகளால் பரவும் நோயாகும். அனாபீலிஸ் வகை கொசு கடிப்பதால் மனிதரிடையே இந்த நோய் பரவுகிறது. தொற்று கண்ட கொசு மனிதர்களைக் கடித்த பின்னர் 10 முதல் 14 தினங்களில் மலேரியா நோய் ஒட்டுண்ணி உடலில் உருவாகிறது. இந்த ஒட்டுண்ணிகள் மனிதருள் பிரவேசிக்கும்போது அதன் வாழ்க்கைச் சுழற்சியால் பல தொடர் மாறுதல்களை அடைகின்றன. இந்த ஒட்டுண்ணி தனது ஒட்டுமொத்த வாழ்க்கைச் சுழற்சியையும் மனித உடம்பில் கல்லீரல் செல்களிலும், சிவப்பணு செல்களிலும் வாழ்ந்து முடிக்கின்றன. மனிதரைப் பாதிக்கும் மலேரியா ஒட்டுண்ணிகள், இந்தியாவில் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (பி.வைவாக்ஸ்) மற்றும் பிளாஸ்மோடியம் பால்சிபாரம் (பி.பால்சிபாரம்) பொதுவாக காணப்படுகிறது. பிளாஸ்மோடியம் பால்சிபாரம் ஒட்டுண்ணியின் தாக்கமே மிகக் கொடிய மலேரியா நோயாக உருவெடுக்கிறது.

தேசிய மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 1953 முதல் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டம் பல்வேறு காலகட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு, தற்சமயம் 2016 முதல் 2030-க்குள் இந்தியாவிலிருந்து மலேரியா பரவுவதை நிரந்தரமாக நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

இதன் தொடர்ச்சியாக மத்திய அரசு மூலமாக நடப்பாண்டில் தமிழகத்தில் மலேரியா நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தும் விதமாக 5,53,374 கொசு வலைகள் (பூச்சி மருந்து தோய்க்கப்பட்டவை) பெறப்பட்டுள்ளன. அவை மலேரியா நோய் பாதிப்பு காணும் மாவட்டங்களில் வழங்கப்பட உள்ளன.

மலேரியா காய்ச்சல் கண்டோரின் எண்ணிக்கை தொடர்ந்து மாநிலத்தில் குறைந்து வருகிறது. இருப்பினும், தமிழ்நாட்டில் சென்னை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சில நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் மலேரியாவின் தாக்கம் தற்போதும் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் மலேரியா காய்ச்சல் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,049 ஆக இருந்தது. நடப்பாண்டில் (11-3-2020) 91 நபர்கள் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்சமயம் உள்ளாட்சி அமைப்புகளால் விரிவான முறையில் எடுக்கப்பட்டுள்ள கொசு ஒழிப்புப் பணிகள், டெங்கு தடுப்பு நடவடிக்கைக்காக மட்டுமின்றி கொசுக்களின்மூலம் பரவும் மற்ற நோய்களைத் தடுக்கவும் உதவி வருகிறது.

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்புகள்
1	2015	5,587	0
2	2016	4,341	0
3	2017	5,444	0
4	2018	3,787	0
5	2019	2,049	0
6	2020 (11.3.2020 வரை)	91	0

20.13 யானைக்கால் நோய்

தமிழ்நாட்டில், 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள் தற்சமயம்

43 நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படுகிறது. 25 கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் 44 இரவுநேர ஆய்வகங்கள் தற்போது இயங்கி வருகின்றன. 'டையீத்தைல் கார்பமைசின் சிட்ரேட்' (DEC) மாத்திரை வழங்கும் முறை, மக்கள் திறன் மருந்து அளிக்கும் திட்டத்தின்கீழ், 1996 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் முதன் முறையாக முன்னோடித் திட்டமாகத் துவங்கப்பட்டது. பின்னர் ஒட்டுமொத்த 'டையீத்தைல் கார்பமைசின் சிட்ரேட்' மாத்திரை வழங்கும் திட்டம், 1997-1998 ஆம் ஆண்டு அனைத்து யானைக்கால் நோய் பாதித்த மாவட்டங்களிலும் வழங்கப்பட்டது. ஒட்டுமொத்த DEC மற்றும் Albendazole மாத்திரை அளிக்கும் திட்டம் அனைத்து யானைக்கால் நோய் பாதித்த மாவட்டங்களிலும் 2014–ல் நிறைவேற்றப்பட்டது, யானைக்கால் நோய் பரவியுள்ள பெரும்பான்மையான மாவட்டங்களில் யானைக்கால் நுண்புழு விகிதம் ஒரு விழுக்காட்டிற்கும்கீழ் காணப்பட்டதால், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, நோய்த் தொற்று பரவல் மதிப்பீட்டுப் பணி 20 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்த மாத்திரை வழங்கும் திட்டத்திற்குப் பின் கண்காணிப்புப் பணி இம்மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. வெளிமாநிலங்களிலிருந்து பணிக்காக வரும் மக்களைப் பரிசோதித்தல், நோய் பரப்பிகளின் அடர்த்தி கண்காணிப்புப் பணி, 5 முதல் 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு யானைக்கால் நோய் ஒட்டுண்ணி உள்ளதா என்பதைக் கண்டறிதல், விரைவீக்க அறுவை சிகிச்சை, யானைக்கால் நோய் உள்ளதா எனக் கணக்கெடுத்தல் மற்றும் யானைக்கால் நோய் பாதிப்பு பாதம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யானைக்கால் பராமரிப்புக்காக பிளாஸ்டிக் குவளை, பருத்தித் துண்டு, சோப்பு, மருந்துகள் போன்றவை கொண்ட மேலாண்மைப் பெட்டகம் அளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மாநில அரசு, நான்காம்நிலை யானைக்கால் நோயாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் 8,023 நோயாளிகள் பயனடைந்து வருகின்றனர். இதற்காக அரசு ரூ.9.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

20.14 கொசுவினால் பரவும் நோய்களைத் தடுக்க பன்முக அணுகுமுறை

- கொசு உற்பத்தியைத் தடுப்பது தொடர்பாக மக்களின் பங்கு குறித்த குறும்படங்கள் மற்றும் தகவல் விளம்பரங்களைக் கொண்ட தொடர் செய்திகள் வெளியிடுதல், நலக் கல்வி

மற்றும் தொடர்பு முகாம்கள் மூலமாக கொசுப் புழு உற்பத்தியைத் தடுக்க, மக்கள் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள் மற்றும் தொற்று நோய்களைக் குறைக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி மக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துதலை உறுதி செய்தல்.

- நோய்களுக்கான சிறப்பு சிகிச்சை வழங்க தேவையான வசதிகள் அருகாமையில் உள்ள சுகாதார நிலையத்தில் இருப்பதை உறுதி செய்தல், நோய் கண்டறிந்து சிகிச்சை வழங்கும் வசதிகளான 'எலிசா' நோய் கண்டறியும் மையம், செல் எண்ணிக்கை கண்டறிதல், மருந்துகள், இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகள் போன்ற வசதிகள் எளிதில் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

- பூச்சியியல் கண்காணிப்பு நடவடிக்கை, சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் போதிய ஆட்களைப் பணியமர்த்துதல், தேவையான உபகரணங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியும், கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிந்து அதனை ஒழிக்கவும் வழிவகைகள் செய்தல்.

- காய்ச்சல் அதிகமாக காணப்படும் இடங்களுக்கு மருத்துவக் குழு மற்றும் துரித செயல்பாட்டுக் குழுவை அனுப்பியும், சிறப்புக் காய்ச்சல் சிகிச்சை பிரிவுகளை அருகில் உள்ள மருத்துவமனைகளில் உருவாக்கியும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- காய்ச்சல் முகாம்கள் நடத்துதல்.

- ஒரு வட்டாரத்திற்கு 10 நபர்கள் வீதம் சுகாதாரத் துறை மூலமாகவும், 20 நபர்கள் வீதம் ஊரக வளர்ச்சித் துறை மூலமாகவும் பணி அமர்த்துதல், கூடுதலாக 10 நபர்கள் வீதம் நகரப் பஞ்சாயத்து மூலமாகவும், 250 வீடுகளுக்கு 1 நபர் வீதம் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் மூலமாகவும் கூடுதல் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டு, கொசு பல்கிப் பெருகும் இடங்களைக் கண்டறிந்து அழித்தொழிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்.

- பூச்சித் தடுப்புப் பணிகளுக்கென போதுமான உபகரணங்களை வழங்குதல்.

- போலி மருத்துவர்கள்மீது நடவடிக்கை மற்றும் மருத்துவரின் பரிந்துரையின்றி மருந்துகள் விற்பதைத் தடைசெய்தல்.
- பாரம்பரிய இந்திய முறை மருந்துகளான நிலவேம்புக் குடிநீர், மலைவேம்புக் குடிநீர் மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்ற இயற்கை முறை மருந்துகள் கிடைக்கச் செய்தல்.
- அதிக பிரச்சினைக்குரிய இடங்களைக் கண்டறிந்து, அங்கு பல்வேறு துறைகளின் பன்முகத்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வு நடத்தி கள அளவில் பூச்சிகளால் பரவும் நோய்களைத் தொடர்ந்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

20.15 அண்டை மாநிலங்களின் ஒருங்கிணைப்பு

அண்டை மாநிலங்களின் எல்லையில் உள்ள நம் மாவட்டப் பகுதிகள் மற்றும் அண்டை மாநிலப் பகுதிகளில் ஏற்படும் நோய் பரப்பிகள்மூலம் பரவும் நோய்களின் தாக்கம் பற்றிய விவரங்கள் பகிர்தல் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளுதல் குறித்து ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்படுகிறது.

20.16 ஜப்பானிய மூளைக் காய்ச்சல்

நாட்டில் கடந்த பல வருடங்களாகவே உயிரின வாழ்க்கைச் சூழல், கொள்ளை நோயியல் சிக்கல்களால், ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் மிகப் பெரிய பொது சுகாதாரப் பிரச்சினையாக உருவாகி உள்ளது.

ஜப்பானிய மூளைக் காய்ச்சல், விலங்குகளிலிருந்து மனிதனுக்கு கொசுக்கள்மூலம் பரவும் வைரஸ் நோயாகும். இயற்கை ஒட்டுண்ணிகளாக செயல்படும் விலங்குகள், பறவைகள் மற்றும் பன்றி ஆகியன இவ்வகை வைரஸ்களுக்கு உறைவிடமாக உள்ளது. நோய் பரவும் சுழற்சியில், பன்றிகள் மற்றும் பறவைகளில், இவ்வகை வைரஸ் பெருகுவதால், இவை 'வைரஸ் பெருக்கி விருந்தோம்பி' என அழைக்கப்படுகின்றன.

இவ்வகை வைரஸ், இயற்கை விருந்தோம்பிகளான பன்றி மற்றும் பறவைகளில் எவ்வித நோய்த் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. 'கியூலெக்ஸ்' கொசுக்கள் இவ்வைரஸ் பரவலுக்கான முக்கியக் காரணமாக உள்ளது.

2020 மார்ச் 24]

தமிழகத்தில் பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், விருதுநகர், மதுரை, புதுக்கோட்டை, கரூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய 13 மாவட்டங்களில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்காணும் மாவட்டங்களில் ஒன்று முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முகாம் முறையில் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி போடப்பட்டது. பின்னர் வழக்கமான தடுப்பூசிகளுடன் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசியும் போடப்படுகிறது. முதல் தவணை 9 ஆம் மாதத்திலும், இரண்டாம் தவணை 16-24 மாத குழந்தைகளுக்கும் இம்மாவட்டங்களில் தடுப்பூசி வழங்கப்படுகிறது.

ஜப்பானிய மூளைக் காய்ச்சல் பரப்பும் கொசுக்களை கட்டுப்படுத்த நோய் பாதிப்புள்ள அனைத்து மாவட்டங்களும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் உள்ளதாக சந்தேகப்படும் கிராமங்களில், முதிர் கொசுக்கள் சேகரிக்கப்பட்டு அவ்வைரஸ் உள்ளதா எனக் கண்டறியப்பட்டு, அதன் விவரம் விவரணையாக்கம் செய்யப்பட்டு அந்தப் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. புகை மருந்து அடிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து அரசு தலைமை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் முக்கிய தனியார் மருத்துவமனைகளில் தீவிர மூளை அழற்சி நோய் அறிகுறிகளுக்கான கண்காணிப்பு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நோய் அறிகுறிகளைக் கண்டறியும் பரிசோதனைகளுக்குக் கீழ்க்காணும் மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்:

- கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிண்டி
- கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
- அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி, விழுப்புரம்
- அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்
- அரசு மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை

[2020 மார்ச் 24

- அரசு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி
- அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்

தீவிர மூளை அழற்சி நோய் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் தேவைப்படும் மேல் சிகிச்சைக்கு, தீவிர குழந்தைகள் கண்காணிப்பு மையம் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். தற்சமயம், இந்நோய் கட்டுக்குள் இருந்து வருகிறது. இருப்பினும், இந்நோய்க்கான தடுப்பூசித் திட்டம் மற்றும் நோய் அறிகுறி கண்காணிப்புப் பணிகள் தீவிரமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்புகள்
1	2015	53	0
2	2016	51	0
3	2017	127	0
4	2018	147	0
5	2019	201	1
6	2020 (11.3.2020)	50	0

20.17 லெப்டோஸ்பைரோஸிஸ்

லெப்டோஸ்பைரோஸிஸ் என்னும் நோயானது விலங்குகளில் காணப்படும் நோய் ஆகும். இது அரிதாகவே மனிதனுக்குப் பரவுகிறது. மழைக்காலங்களில் தேங்கும் நீர்நிலைகளில் எலிகளின் சிறுநீர் மூலமாக லெப்டோஸ்பைரோஸிஸ் நோய்க் கிருமிகள் கலக்கின்றன. அந்த நீர்நிலைகளில் விவசாய வேலைகளில் ஈடுபடுவோர் செல்லும்போது இந்நோய்த் தொற்று ஏற்படுகிறது. ஆகையால், இந்நோய் தொழில் சார்ந்த நோய் என்று அழைக்கப்படுகிறது.

உரிய நேரத்தில் பரிசோதனை, சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும். பரிசோதனைகள்மூலம் இந்நோய்த் தொற்று உறுதி செய்தல் மற்றும் பரிசோதனைக்கான

2020 மார்ச் 24]

பயிற்சி அளித்தல் போன்றவை மாநிலத்தின் தலைமையிடத்தில் இயங்கும் 'லெப்டோஸ்பைரோஸிஸ்' பரிசோதனை மையத்தில் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் (தனுவாஸ்), மாதவரம், சென்னை மற்றும் அனைத்து மாவட்ட சுகாதார ஆய்வகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் இந்நோய் பரவுவதை முன் தடுக்கலாம். 2019 ஆம் ஆண்டில் 849 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் (11-3-2020) 141 நபர்கள் மட்டுமே லெப்டோஸ்பைரோஸிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வ. எண்	வருடம்	பாதிக்கப்பட்ட நபர்கள்	இறப்புகள்
1	2015	1,284	0
2	2016	1,216	0
3	2017	1,080	1
4	2018	693	2
5	2019	849	0
6	11.3.2020	141	0

20.18 பன்றிக் காய்ச்சல் (AH1N1)

பன்றிக் காய்ச்சல் ஒருவகை இன்புளூயன்ஸா காய்ச்சலாகும். உலக சுகாதார நிறுவனம் பன்றிக் காய்ச்சல் பரவலை, உலகளாவிய தொற்று என்ற நிலையிலிருந்து மாற்றி, இது "பருவகால காய்ச்சல்" (Seasonal flu) என்று அறிவித்தது. விழிப்புணர்வு மற்றும் முறையான கை கழுவுதல் பயிற்சி மட்டுமின்றிப் பொது சுகாதாரத் துறையில் போதுமான அளவு Tami Flu மருந்துகள் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 2 இலட்சம் தடுப்பூசிகள் சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்குவதற்காக கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. கூடுதல் கவனம் எடுத்து நோயாளிகளின் உறவினர்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. எளிதில் பாதிக்கப்படக்கூடிய கர்ப்பிணிப்

[2020 மார்ச் 24

பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள், நாள்பட்ட நோய் உடையவர்களுக்கு சிறப்புக் கவனம் அளிக்கப்படுகிறது.

20.19 தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம், மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டமாகும். தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தும் முறை மற்றும் உத்திகள் மைய அரசால் உருவாக்கப்பட்டு, இத்திட்டம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களால் செயல்படுத்தப்படுகிறது. தொழுநோய் மைக்கோபாக்டீரியம் லெப்ரே எனும் கிருமியால் உண்டாகக்கூடிய தொற்று நோய். இந்நோய் பொதுவாக தோலையும், சில நரம்புகளையும் பாதித்து உடலில் பல்வேறு அறிகுறிகளைத் தோன்றச் செய்யும். இந்நோய்க்கான அடைவுக் காலம் (Incubation Period) தோராயமாக 5 முதல் 7 வருடங்கள் ஆகும். கிருமிகளின் அளவைப் பொறுத்து தொற்றும் மற்றும் தொற்றா வகை என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. நிரந்தர உடல் ஊனம் ஏற்படுவதற்குத் தொழுநோய் காரணமாக அமைகிறது. நரம்புகள் பாதிக்கப்படும் முன்னரே இந்நோயைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளித்தால்தான் தொழுநோயால் உடல் ஊனம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

தொழுநோய் சிகிச்சை

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம், 1983 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. கூட்டு மருந்து சிகிச்சையின்மூலம் தொழுநோயை முற்றிலும் குணப்படுத்த முடியும். நோய் சமுதாயத்தில் பரவுவது பெருமளவு தடுக்கப்படுகிறது. இந்தச் சிகிச்சையில் ரிபாம்சின், க்ளோபாசமின், டாப்சோன் ஆகிய மருந்துகள் நோயைக் குணப்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிருமி குறைந்த வகைக்கு ஆறு மாத சிகிச்சையும், கிருமி மிகுந்த வகை நோய்க்கு ஒரு வருட சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

20.20 கடந்து வந்த பாதை

1955–தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1983–தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் துவக்கப்பட்டது

2020 மார்ச் 24]

1983–கூட்டு சிகிச்சை ஆரம்பம்

1991–அனைத்து மாநிலங்களிலும் கூட்டு மருந்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது

2005–தொழுநோய் கட்டுப்பாடு நிலை அடையப்பட்டது

2017–ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு முகாம் தொடங்கப்பட்டது

2018-ஸ்பர்ஷ் தொழுநோய் ஒழிப்பு முகாம் நடத்தப்பட்டது

20.21 புதிய முயற்சிகள்

1983–ல் பத்தாயிரம் மக்கள் தொகைக்கு 118 நோயாளிகள் என்ற எண்ணிக்கை கூட்டு மருந்து சிகிச்சையின் மூலமாக படிப்படியாகக் குறைந்தது. 2005-ல் மாநில அளவில் பத்தாயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்ற நிலையை அடைந்தது. மேலும், கடந்த 10 ஆண்டுகளில் தொழுநோயுறும் வீதம் மற்றும் புதிய நோய் நிகழ்வுகள் ஏற்படாமல் ஒரே நிலையில் இருந்ததைக் கருத்தில்கொண்டு அரசு பல புதிய பலன் தரக்கூடிய திட்டங்களை வகுத்து, புதிய நோயாளிகள் எண்ணிக்கையையும், ஊனமுற்றோர் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

- வீடுதோறும் சென்று தொழுநோய் கணக்கெடுக்கும் பணி 18 மாவட்டங்களில் நடைபெற்றதில், 815 புதிய நோய் பாதித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

- மகாத்மா காந்தியின் நினைவுதினத்தை அனுசரிக்கும் பொருட்டு 2020 ஆம் வருடம் ஜனவரி 30 ஆம் தேதி நாடு முழுவதும் உலக தொழுநோய் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நமது மாநிலத்தில் 12,826 கிராமங்களில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு உறுதிமொழி எடுக்கப்பட்டது. ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு முகாமினையொட்டி நடைபெற்ற இரு வார நடவடிக்கையின்போது நமது மாநிலத்தில் நோய் பாதித்த 476 நபர்கள் கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

- தொழுநோய் ஊனத்தால் பாதிக்கப்பட்ட 86 புதிய நோயாளிகளின் சுற்றுப்புறங்களில் நோய் கண்டுபிடிப்புப் பணியில் 7 புதிய நோய் பாதித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர் தொழுநோயால் 186 புதிய

[2020 மார்ச் 24

நோய் பாதித்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

- தொழுநோய் பாதித்தவரின் குடும்ப நபர்கள் மற்றும் அருகில் வசிப்போர்க்கு நோய் வராமல் தடுக்கும் விதமாக ரிபாம்சின் மருந்து ஒரு முறை மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை 28,456 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

- கிராமம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் 3,355 நபர்களிடம் கள ஆய்வு செய்ததில், 186 புதிய நோய் நிகழ்வுகள் கண்டறியப்பட்டுள்ளன.

- ஊனத் தடுப்பு மற்றும் மருத்துவ மறுவாழ்வு

புனரமைப்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை	150
சுய பராமரிப்புப் பெட்டகம் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	15,954
சிறப்பு காலணிகள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	9806
நோய்த் தடுப்பாற்றல் எதிர்வினை மற்றும் நரம்புத் தளர்வு சிகிச்சை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	290
மாதாந்திர ஓய்வுதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை	10,500

20.22 மாவட்ட மற்றும் மாநில அளவிலான தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகள்

மாநில அளவிலான தொற்றுநோய் கட்டுப்பாட்டு குழு மற்றும் பொது சுகாதார நோய்த் தடுப்புக் கண்காணிப்பு அமைப்பு ஆகியன கொள்ளைநோய் தடுப்பிற்கான ஒட்டுமொத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளை அனைத்து அரசுத் துறைகளுடன் இணைந்து மேற்கொள்கிறது. மாவட்ட அளவில், அந்தந்த மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் வயிற்றுப்போக்கு போன்ற நோய் பரவல் ஏற்படும்போது தண்ணீர்த் தொட்டிகளைத் தொடர்ந்து சுத்தம் செய்தல், தண்ணீர் மாதிரிகளை ஆய்வு செய்தல், கழிவுநீர் தேக்கத்தைத் தடுத்தல், திறந்த திடக்கழிவு மேலாண்மை

2020 மார்ச் 24]

போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நோய் பரவல் தடுக்கப்படுகிறது. தொடர் கொசுப்புழுத் தடுப்பு நடவடிக்கைகள், சுற்றுப்புறச் சுகாதார மற்றும் உடல்நலம் பேணுதல் ஆகியவை மாவட்டங்களில் உள்ள உள்ளாட்சிகள், சுகாதாரத் துறை, ஏனைய தொடர்புடைய அரசுத் துறைகள் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் மேற்கொள்வதன்மூலம், தொற்று நோய்களுக்கான தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தமிழகத்தில் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவிலான தொற்றுநோய்க் கட்டுப்பாடு ஒருங்கிணைப்பு குழுத் தலைவராகச் செயல்படும் மாவட்ட ஆட்சியர், நோய் மேலும் பரவாமல் இருக்கவும், பெருமளவில் பாதிப்பு ஏற்படுத்தாவண்ணம் கண்காணிப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்யவும், அவ்வப்போது தொற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி சீரான இடைவெளிகளில் ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறார். இந்தத் தொற்றுநோய்க் கட்டுப்பாடு ஒருங்கிணைப்புக் குழு, மற்ற தொற்றுநோய்கள், தண்ணீரால் பரவும் வயிற்றுப்போக்கு, பன்றிக் காய்ச்சல், இன்புளூயன்சா போன்ற மற்ற தொற்றுகள், வெறிநாய்க்கடி போன்ற நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளைக் கண்காணித்து, இத்தகைய நோய்களை முழுவதுமாக கட்டுப்படுத்துகிறது. அவ்வப்போது இந்நோய்கள் காணப்படும் சமயங்களில் அவற்றிற்கு முற்றிலும் சிகிச்சை அளிக்கப்பட்டு மக்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாவண்ணம் உறுதி செய்யப்படுகிறது.

20.23 கொரோனா வைரஸ் நோய் - 2019

அண்மையில் வெளிப்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய் 25 நாடுகளில் பன்னாட்டு பொது சுகாதார அவசரத்தை ஏற்படுத்திய பெரும் பரவலான தொற்று என உலக சுகாதார நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, இந்நோய் தொடர்பான தேசிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை வலிமைப்படுத்தி வருகிறது. சீனா, ஹாங்காங், சிங்கப்பூர், ஜப்பான், தாய்லாந்து மற்றும் தென்கொரிய நாடுகளில் இருந்து வருகைபுரியும் பயணிகள் அனைவரும் அனைத்து சர்வதேச விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்திய அளவில் 22 விமான நிலையங்களில் இப்பரிசோதனை

[2020 மார்ச் 24

தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தமிழகத்தில், சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில் இப்பரிசோதனை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தற்போதைய கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கண்டிப்பான சுகாதார அறிவுரைகள் அரசால் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் தும்மும்போதும், இருமும்போதும் கைக்குட்டை/துண்டு ஆகியவற்றால் முகப் பகுதியை மூடிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அடிக்கடி கைகளைச் சோப்பு மற்றும் தண்ணீரால் கழுவிக்கொள்ள வேண்டும். சீனா போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் பரவியுள்ள நாடுகளிலிருந்து வருகை புரிந்தோரின் பயண விவரங்களைச் சேகரித்து, இந்தியாவில் அவர்கள் வீட்டில் அல்லது மருத்துவமனையில் தங்களைத் தாங்களே 28 நாட்களுக்கு தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். நாட்டில் கொள்ளை நோயாக உருவெடுக்கும் நிலையை உணர்ந்த அரசு, தமிழ்நாடு பொது சுகாதார சட்டம், 1939-ன்படி அறிவிக்கப்பட்ட நோய்களில் ஒன்றாக கொரோனா வைரஸ் நோயையும் அறிவித்துள்ளது.

20.24 ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம்

ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், கொள்ளை நோய் பரவலை முன்கூட்டியே கண்டறியவும், கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும், நவம்பர் 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டம் மார்ச் 2010-ல் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது. பன்னிரண்டாம் திட்ட காலத்தில் தேசிய மாநில நல்வாழ்வு இயக்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

- துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமுதாய சுகாதார நிலையங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆகிய நிலையங்களிலிருந்து நோய் நிகழ்வு ஏற்படும் பகுதிகளின் தீவிர கண்காணிப்பு குறித்த தகவல்களைச் சேகரித்து வாராந்திர அறிக்கை பெறப்படுகிறது. நோய் தொடர்பானது (S) நோய்க்கான காரணம் (P) மற்றும் ஆய்வக அறிக்கைகள் (L) ஆகிய படிவங்களில் நோய் வரையறைகளை நிர்ணயம் செய்து அறிக்கை பெறப்படுகிறது. தற்போது 90 சதவீதத்திற்கும்

2020 மார்ச் 24]

மேலான மாவட்டங்களில் இணையதளம் (www.idsp.nic.in) மூலமாக அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. இந்த வாராந்திர அறிக்கைகள் மாநில/மாவட்ட அளவிலான தீவிர நோய்க் கண்காணிப்பு மையங்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. எப்பொழுதெல்லாம் நோய் பரவல் அதிகம் காணப்படுகிறதோ அப்போது துரித செயல்பாட்டுக் குழு நோய் பரவலுக்கான காரணத்தை அறிந்து நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துகிறது. இந்த நோய் பரவல் குறித்த தகவல்கள் உடனடியாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்படுகிறது.

தொற்றுநோய் கண்காணிப்பு வலைதளம் (CDSP)

தமிழ்நாட்டில் உள்ள 12 மாநகராட்சிகளில் ஏற்படும் கொள்ளை நோய் தன்மையுள்ள தொற்று நோய்களை வலைதளம்மூலம் கண்காணிப்பதற்காக "தொற்றுநோய் கண்காணிப்பு வலைதளம்" 2018 ஆம் ஆண்டு மாநில திட்டக் குழுவின் "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்" நிதியில் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் தொற்றுநோய் குறித்த தகவல் சேகரிப்பை எளிமையாக்கி குறைந்தபட்ச நிகழ் நேரத்தில் பெறுவதே ஆகும். மேலும், இதன்மூலம் தொற்றுநோய் குறித்த தானியங்கி எச்சரிக்கைகளை புவியியல் தகவல் முறைமையின்மூலம் விடுத்து உரிய நேரத்தில் தேவையான பொது சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாகும். மேலும், இந்த வலைதளம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்ய சாத்தியமான ஒன்றாகும்.

இந்திய அரசு, ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்திற்குப் பதிலாக ஒருங்கிணைந்த சுகாதார தகவல் வலைதளத்தை உருவாக்க முற்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளம் என்பது மத்திய அரசின் அனைத்து மின்னணு ஆட்சிமுறை தரநிலைகள், தகவல் தொழில்நுட்பம், தரவுகளை உள்ளடக்கிய ஒரு வலைதளம்மூலம் செயல்படுத்தப்பட்ட மின்னணு தகவல் முறைமை ஆகும். இதன்மூலம் நவீன முறையில் புவிசார் தகவலுடன் இணைத்து, கொள்ளை நோய் கட்டுப்படுத்துவதில் உதவுகிறது. "தொற்றுநோய் கண்காணிப்பு வலைதளம்" மற்றும் "ஒருங்கிணைந்த சுகாதார தகவல் தளம்" ஆகியவை இணைந்து தமிழ்நாட்டில் தொற்றுநோய்க் கண்காணிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் திறனை அதிகரித்துள்ளது.

[2020 மார்ச் 24

20.25 ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் இயங்கும் மாவட்டப் பொது சுகாதார ஆய்வகங்கள்

நவீன மருத்துவத்தில் ஆய்வகப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டே நோய்கள் வராமல் தடுத்தல், நோய்களைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. மருத்துவமனை சார்ந்த மற்றும் சமூகம் சார்ந்த மருத்துவ சேவைகளில் பொது சுகாதார ஆய்வகங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாவட்டப் பொது சுகாதார ஆய்வகங்களின் பங்கு

- மாவட்டங்களில் ஏற்படுகின்ற கொள்ளைநோயை ஆய்வு செய்து விரைவாக உறுதி செய்வதற்காக மாதிரிகளைச் சேகரித்தல், ஆய்வகத்திற்குக் கொண்டு செல்லுதல் மற்றும் ஆய்வு மேற்கொள்வதற்கான அமைப்பை உருவாக்குதல்.
- அரசு ஆய்வகங்களில் இருந்து பெறப்படும் ஆய்வு அறிக்கைகளை ஆராய்ந்து எங்கேனும் அதிகப்படியான நோய் பாதிப்பு உள்ளதைக் கண்டறிதல்.
- அனைத்து மருத்துவ மையங்களிலும் உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை நெறிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- நிலையான இயக்க நடைமுறைகளை (Standard Operating Protocol) பின்பற்றி தர நிர்ணயிக்கப்பட்ட ஆய்வக சேவைகள் அளித்தலை உறுதிசெய்தல். உள் மற்றும் வெளித்தர உத்தரவாதம் திட்டம் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளது (EQAS)
- அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் செயல்படும் ஆய்வகங்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி உதவி மற்றும் அதன் இயக்கத்தை மேற்பார்வை இடுதல்.
- அறுவை சிகிச்சை மையங்களில் மாதிரியை ஆய்வு செய்வதன்மூலம் மருத்துவமனை சார்ந்த நோய்த் தொற்றுகளைக் கட்டுப்படுத்துதல்.
- குடிநீரில் நுண்ணுயிரியல் ஆய்வு செய்வதன்மூலம் தீவிர வயிற்றுப்போக்கு ஏற்படாமல் தடுத்தல்.

2020 மார்ச் 24]

20.26 பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறை அமைப்பின்கீழ் இயங்கும் பன்னாட்டு பொது சுகாதார அவசர சார்பு அமைப்பு

உலகளாவிய அளவில் அசாதாரணமான பொது சுகாதார அவசர நிலை ஏற்படும் தருணத்தில் இவ்வமைப்பு கீழ்க்குறிப்பிட்ட நடைமுறைகளைத் தீர்மானிக்கிறது:-

அ) உலகம் முழுவதும் பரவுகிற வாய்ப்புள்ள எபோலா வைரஸ் காய்ச்சல், ஜிகா வைரஸ் காய்ச்சல் போன்ற நோய்கள் தொடர்பான பொது சுகாதார இடர்ப்பாடுகள் குறித்த தகவல்களை நாடுகளுக்கிடையேயும், மாநிலங்களுக்கிடையேயும் பரிமாறிக் கொள்ளுதல்

ஆ) பன்னாட்டு பொறுப்புணர்வை உணர்த்தி ஆற்றல் வாய்ந்த ஒருங்கிணைப்புப் பணிகளை நாடுகளுக்கிடையே உருவாக்குதல்

20.27 பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறை அமைப்பின்கீழ் குறிப்பிடத்தக்க நோய்கள் (2005)

பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறை அமைப்பின்கீழ் (2005) பின்வரும் நான்கு நோய்கள் தொடர்பான அனைத்து நோயாளிகள் குறித்த தகவல்கள் உலக சுகாதார நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படுகிறது:-

i. பெரியம்மை

ii. 'போலியோமைலிட்டிஸ்' (Poliomyelitis due to wild-type poliovirus)

iii. 'சார்ஸ்' (SARS)

iv. 'இன்புளுயன்சா' (Cases of human influenza caused by a new subtype)

உலக சுகாதார நிறுவனத்தால் மஞ்சள் காய்ச்சல் உள்ள பகுதியென கண்டறியப்பட்ட இடங்களிலிருந்து, இடம்பெயரும் பயணிக்கு தடுப்பூசி போடவேண்டியது அவசியமானதாகும். தமிழ்நாட்டில், இரண்டு பன்னாட்டுத் தடுப்பூசி நிலையங்கள் உள்ளன. ஒன்று சென்னை-கிண்டி கிங் நிலையம் ஆகும். இங்கு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தடுப்பூசிகள் போடப்படுகிறது. மற்றொரு இடம் துறைமுக சுகாதாரக் கழகம், சென்னையில் உள்ளது. இங்கு திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் தடுப்பூசிகள் போடப்படுகிறது.

விமான தளம் மற்றும் துறைமுகம் ஆகிய இடங்களில் பன்னாட்டுப் பயணிகள் இடம்பெயரும் போதெல்லாம், உலக சுகாதார நிறுவனத்தால் பட்டியலிடப்பட்ட நோய்கள் பரவாமல் தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூச்சிகளால் பரவும் நோய்கள் பல்கிப் பெருகாமல் கட்டுப்படுத்த, தொடர் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் விமான தளத்திலும், துறைமுகத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20.28 துப்புரவு மற்றும் சுகாதாரம்

காற்று/அன்றாட உபயோகப் பொருட்கள், நீர், உணவு, பூச்சிகள் மற்றும் விலங்குகள்மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுத்து கட்டுப்படுத்துதலில் சுத்தம் மிக முக்கியமான ஒரு கூறாகும். பன்றிக் காய்ச்சல் போன்ற நோயைக் கட்டுப்படுத்திட கை கழுவுதல் குறித்த எளிய தகவல்கள், சுற்றுப்புறச் சுகாதாரம், கொசு பெருக்கத்தைத் தடுத்தல், கொசுமூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுத்தல் போன்ற தகவல்கள் இதன்மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

இதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- ☐ கை கழுவுதல்/கை சுத்தம்
- ☐ சுவாசமண்டல சுத்தம்
- ☐ தன் சுத்தம்/இனப் பெருக்க உறுப்பு சுத்தம்
- ☐ குடற்புழு நீக்கம்
- ☐ சுற்றுப்புற சுகாதாரம்/திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை
- ☐ பல துறைகளின் ஒருங்கிணைந்த தீவிர நடவடிக்கைகள் மற்றும்
- ☐ இவ்வியக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற பிறரின் பங்களிப்பை ஊக்குவித்தல்

20.29 நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள் - நீர் தர சோதனை:

சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. நீர் பகுப்பாய்வு ஆய்வகங்கள், குடிநீர் மாசுபடுவதைத் தடுத்திட, பலதரப்பட்ட நீர் நிலைகளிலிருந்து நீர் மாதிரிகளைப் பெற்று ஆய்வு செய்கின்றன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்துடன் இந்த ஆய்வகங்கள் இணைந்து, தொழிற்சாலைக் கழிவுகளை ஆய்வு செய்ய

2020 மார்ச் 24]

உதவுவதுடன், தொழிற்சாலைகளால் ஏற்படும் நீர்மாசுகளைத் தடுத்து கட்டுப்படுத்திட கள ஆய்வுகளை மேற்கொள்கின்றன. மேலும், உள்ளாட்சி அமைப்புகள், தமிழ்நாடு குடிநீர் வாரியம், நகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் ஆகியனவும் நீர் மாசுக் கட்டுப்பாட்டுப் பணிகளைத் தனித்தனியே மேற்கொள்கின்றன.

20.30 24x7 கொள்ளைநோய் தகவல் மையம்

கொள்ளை நோய்த் தடுப்புக் கட்டுப்பாட்டு மையம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் அலுவலகத்தில் செயல்படுகிறது. பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சுகாதாரம் மற்றும் கொள்ளைநோய் குறித்த தகவல்களைப் பதிவிட தொடர்பு மையமாக விளங்குகிறது. தொலைபேசி எண்கள் 044-29510400, 044-29510500 மற்றும் 9444340496, 8754448477.

(i) பொதுமக்கள், ஊடகங்கள், அரசு அலுவலர்கள், செய்தித்தாள்கள்மூலம் கொள்ளைநோய் பரவல் குறித்த தகவல்கள் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட/மாநில அளவிலான அலுவலர்களுக்கு, குறித்த காலத்தில் தகவல்கள் அனுப்பப்பட்டு நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அனைத்து சுகாதார மாவட்டங்களிலிருந்து தீவிர வயிற்றுப்போக்கு நோய்கள், காலரா, காய்ச்சல் குறித்த தகவல்கள் பெறப்பட்டு, (மின்னஞ்சல், குறுஞ்செய்தி, தொலைபேசிமூலம்) சம்பந்தப்பட்ட துணை இயக்குநர்களுக்கு தகவல்களை அனுப்பி, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

(iii) நில நடுக்கம், வெள்ளம் மற்றும் பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய்கள் பற்றிய தகவல் பெற்று தக்க நடவடிக்கைக்காக அனுப்பும் பணியும் இந்த மையம் மூலமாக செய்யப்படுகிறது.

20.31 முழுமை சுகாதார முயற்சி

இந்தியாவில், தமிழ்நாடு "முழுமை சுகாதார முயற்சியை" பின்பற்ற தொடங்கி இருக்கும் முதல் மாநிலமாகும். இந்த முயற்சியின்கீழ், மனிதர்கள் சுகாதாரம், விலங்குகள் சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரம் ஆகியவை, நோய்கள் பற்றி கருத்து பரிமாற்றம் செய்ய ஒரு குடையின்கீழ் விவாதிக்கப்படுகின்றன. இது,

[2020 மார்ச் 24

குறிப்பாக விலங்குகள் மற்றும் பூச்சிகளால் மனிதர்களுக்கு பரவும் வியாதிகள், அந்தந்த துறைகளின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்க, ஆராய்ந்து படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

அத்தியாயம் - 21

21.1 திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம்

இந்தியாவில் காசநோய் அச்சுறுத்தலை முற்றிலும் குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய்த் தடுப்புத் திட்டமானது 2020 ஆம் ஆண்டு முதல் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. "தேசிய திறன் வாய்ந்த திட்டம்" செயல்படுத்தக்கூடிய கால கட்டமான 2017-2025 ஆம் ஆண்டுகளில், காசநோய் ஒழிப்புத் திட்டமானது, அதன் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய அனைத்து வசதிகளையும் வழங்கி வருகின்றது.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் குறிக்கோள்கள்

குறிக்கோள்கள்	அடிப்படை	இலக்கு		
	2015	2020	2023	2025
புதிதாக உருவாகும் காசநோயாளிகள் எண்ணிக்கையைக் குறைத்தல் (1 இலட்சம் மக்கள்தொகைக்கு)	217	142	77	44
காசநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் (1 இலட்சம் மக்கள்தொகைக்கு)	32	15	6	3
காசநோயால் பாதிக்கப்படும் நோயாளிகளின் குடும்பத்தினர் இந்நோய்க்கு செலவிடும் தொகையைப் பூஜ்ய சதவீதத்திற்குக் கொண்டு வருதல்	35%	0%	0%	0%

2020 மார்ச் 24]

21.2 தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டமானது அரசு மற்றும் தனியார் துறையில் காசநோயாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு இலவசமாக சிகிச்சை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. காசநோயாளிகளுக்கு (Drug Sensitive) அவர்களின் உடல் எடைக்கேற்ப தினந்தோறும் அவர்களுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வசதியானது தனியார் மருத்துவர்களிடம் சிகிச்சைபெறும் காசநோயாளிகள் விரும்பினால் அவர்களுக்கும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21.3 மாநிலத்தில் இத்திட்டத்தில் உள்ள கட்டமைப்பு மற்றும் வசதிகளின் நிலை பின்வருமாறு:

மாநில காசநோய் பயிற்சி மையம் (STDC)	1
மாவட்ட காசநோய் மையங்கள் (DTCs)	35
காசநோய் அலகுகள் (TU)	461
காசநோய் நுண்ணோக்கி மையங்கள் (DMCs)	1984
இடைநிலை பாிந்துரை மையங்கள் (IRL)	2 - (சென்னை - மதுரை)
திட சளி வளர்ப்பு மற்றும் மருந்துக்கு கட்டுப்படாத காசநோயை கண்டறியும் (C&DST) ஆய்வுக்கூடங்கள் (IRL தவிர)	2 - (திருச்சி மருத்துவக் கல்லூாி மற்றும் வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூாி)
இரண்டாம் நிலை காசநோய் மருந்துக்கு கட்டுப்படாத காசநோயைக் கண்டறியும் திரவ சளி வளர்ப்பு ஆய்வுக்கூடங்கள்	2 – (சென்னை IRL, மதுரை IRL)
Cartridge Based Nucleic Acid Amplification Testing (CBNAAT) ஆய்வுக் கூடங்கள்	68 + 2 (நடமாடும் ஆய்வுக்கூடங்கள்)
பன்மருந்து எதிர்ப்பு சிறப்பு சிகிச்சை மையங்கள் (DRTBC) (MDR TB Wards)	7
மாவட்ட பன்மருந்து எதிர்ப்பு சிகிச்சை மையங்கள் (DDRTBC) (MDR TB Wards)	31

21.4 கண்டறியப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கண்காணிப்பது மற்றும் அறிவிப்பது:

- கடந்த 2019 ஆம் ஆண்டில் 1,10,529 காசநோயாளிகள் "நிக்ஷைஷ" (NIKSHAY) என்ற இணையதளத்தின்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

- மேலும், தனியார் மருத்துவர்களும் இந்த "நிக்ஷைஷ" (NIKSHAY) என்ற இணையதளத்தின்மூலம் காசநோயாளிகளைக் கண்டறிந்து அறிவிக்க உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 25,305 தனியார் மருத்துவமனைகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

- அதேபோல் "நிக்ஷைஷ அவுசதி" (NIKSHAY AUSHADHI) எனும் மென்பொருள்மூலம் காசநோய் மருந்துகளின் விநியோகம் மற்றும் விவரங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

21.5 பன்மருந்து எதிர்ப்புக் காசநோய் திட்ட மேலாண்மை (PMDT):

- பன்மருந்து எதிர்ப்புக் காசநோய் திட்ட மேலாண்மையின்கீழ், பன்மருந்து எதிர்ப்புக் காசநோயாளிகளைக் கண்டறிந்து தரமான சிகிச்சை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- "சிபிநாட்" (CBNAAT) எனும் நவீன கருவியுடன்கூடிய ஆய்வுக்கூடம் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட்டு ரிபாம்பிசின் (Rifampicin) மருந்துக்கு, எதிர்வினையாற்றும் காசநோயைக் கண்டறிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- இடைநிலை பரிந்துரை மையங்களில் பன்மருந்து எதிர்ப்பு காசநோயாளிகளைக் கண்டறிய MGIT-(Mycobacterium Growth Indicator Test), பரிசோதனை, திட சளி வளர்ப்பு பரிசோதனை (Solid Culture test) சளி வளர்ப்பு மற்றும் மருந்து உணர்திறன் பரிசோதனை (Culture & Drug Sensitivity Test) போன்ற சிறப்பு பரிசோதனைகள் செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- அனைத்து மாவட்டங்களிலும் பன்மருந்து எதிர்ப்பு காசநோயாளிகளுக்கான தனி வார்டுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

- இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் பன்மருந்து எதிர்ப்பு காசநோயாளிகளுக்கு பிடாகுலின் மற்றும் டிலாமனைடு எனும் புதிய மருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- மேலும், காசநோய் மருந்துக்கு தீவிர எதிர் வீரியமிக்க காசநோயாளிகளுக்கு (Extensively Drug Resistant TB Cases) சிகிச்சை அளிக்க தாம்பரம், சென்னை-ஓட்டேரி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

21.6 காசநோய் – எச்.ஐ.வி. சேவைகள்:

எச்.ஐ.வி. பாதிக்கப்பட்டவர்களுக்கு, காசநோய் பாதிப்பு என்பது எச்.ஐ.வி. இல்லாத மற்ற நோயாளிகளுக்கு ஏற்படும் காசநோய் பாதிப்பைவிட 16-லிருந்து 27 மடங்கு அதிகம். இதனைக் கருத்தில்கொண்டு அனைத்து எச்.ஐ.வி. நோயாளிகளுக்கும் காசநோய் பரிசோதனையும், அனைத்து காசநோயாளிகளுக்கும் எச்.ஐ.வி. பரிசோதனையும் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டு	காசநோயாளிகளில் எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப்பட்டவர்கள்	எச்.ஐ.வி. – காசநோய் பாதிப்புக்குள்ளானவர்கள்
2018	75,662	3,047
2019	78,811	3,456

21.7 குழந்தைகளுக்கான காசநோய் சிகிச்சை:

- 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், காசநோயாளிகளுடன் இருக்கும்போது காசநோய் தொற்று மற்றும் அதனால் இறப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் காசநோயாளிகளோடு இருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் காசநோய் உள்ளதா என்று பரிசோதிக்கப்படுகிறது. அவ்வாறு பரிசோதிக்கும்போது காசநோய் இருந்தால், அக்குழந்தைகளுக்கு அவர்களின் உடல் எடையைப் பொறுத்து, தினந்தோறும் காசநோய் மருந்துகள் வழங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

- காசநோயாளிகளின் குடும்பத்தில் இருக்கும் 6 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், அவர்களுக்கு காசநோய் தொற்று ஏற்படாமல் இருக்க ஐசோனியாசிட் (IPT) மருந்து வழங்கப்படுகிறது.

21.8 காசநோயாளிகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும் திட்டம்:

- காசநோய்க்கும் ஊட்டச்சத்து பற்றாக்குறைக்குமிடையே இரு வழிகளில் தொடர்புள்ளன. காசநோய் வந்தால் ஒருவருடைய ஊட்டச்சத்து நிலையைக் குலைத்துவிடும். அதேசமயம் ஊட்டச்சத்து பற்றாக்குறை இருந்தால் காசநோயை மிகவும் மோசமடையச் செய்துவிடும்.
- எனவே, அரசு மற்றும் தனியார் மருத்துவர்களிடம் சிகிச்சைபெறும் அனைத்து காசநோயாளிகளுக்கும், அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்திட மாதந்தோறும் ரூபாய் 500 "நிக்ஷய் போஷன் யோஜனா" (NIKSHAY POSHAN YOJANA) எனும் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டு அனைத்து காசநோயாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடி பயனாளர் பரிமாற்ற முறையின்மூலம் (DIRECT BENEFIT TRANSFER) செலுத்தப்படுகிறது. இதுவரை ரூ.16,11,29,500/- பயனாளிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஊட்டச்சத்து உதவித் தொகையானது காசநோயாளிகள் தொடர்ந்து காசநோய் மருந்துகளை எடுத்துக்கொள்வதற்கு உறுதுணையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் பூரண குணமடைய உதவியாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

21.9 காசநோயாளிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக, தனியார் துறையினை ஈடுபடுத்துதல்:

- தனியார் நெஞ்சக மருத்துவர்களை ஈடுபடுத்தி, அவர்களிடம் சிகிச்சைபெறும் காசநோயாளிகளை அறிவிக்கை செய்ய தமிழ்நாட்டில் 2018 ஆம் ஆண்டு 'காசநோய் ஒழிப்புக்கான கூட்டு முயற்சி' என்ற திட்டம் தொடங்கப்பட்டது.
- இதன் ஓர் அங்கமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள ஐந்து காசநோய் மாவட்டங்களில் தனியார் அமைப்பு மருத்துவர்கள் மற்றும் தனியாரிடம் சிகிச்சைபெறும் காசநோயாளிகளைப்

2020 மார்ச் 24]

பொது-தனியார் ஆதரவு அமைப்புமூலம் இணைந்து, "காசநோய் இல்லா சென்னை திட்டம்-2023" தொடங்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக 21 மாவட்டங்களில் இச்சேவை செயல்படுத்தப்பட்டுள்ளது.

21.10 புதிய முயற்சிகள்:

- தமிழகத்தில் தொடர்ந்து காசநோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், தேசிய திறன் வாய்ந்த திட்டத்தின் நான்கு மிக முக்கிய தூண்களான கண்டுபிடித்தல்-சிகிச்சையளித்தல்-தடுத்தல்-கட்டமைத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, "காசநோய் இல்லா தமிழகம்-2025" எனும் புதிய உத்தி அனைத்து மாவட்டங்களிலும் துவங்கப்பட்டுள்ளது.
- CBNAAT எனும் நவீன காசநோய் கண்டறியும் கருவியுடன்கூடிய நடமாடும் வாகனம் மற்றும் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி பொருத்தப்பட்டுள்ள நடமாடும் வாகனம் ஆகியவற்றின் உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் தீவிர காசநோய் கண்டுபிடிக்கும் முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- சிறைச்சாலைகள் மற்றும் சுவதார், உஜ்வாலா போன்ற அரசு இல்லங்களில் இருப்பவர்களுக்கு காசநோய் மற்றும் எச்.ஐ.வி. உள்ளதா என்று கண்டறியும் முகாம் நடைபெற்று வருகிறது.

21.11 காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசின் நலத் திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காசநோய்க்கு சிகிச்சைபெறும் அனைத்து உழவர்களுக்கும் சிகிச்சை முடியும் வரை மாதந்தோறும் ரூபாய் 1,000/- ஓய்வூதியமாகத் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

அத்தியாயம் - 22

22.1 தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்

தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் 2007 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின்கீழ் மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையம் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சிகரெட் (ம) இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டப் பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சட்டப் பிரிவு-4,5,6 மற்றும் 7).

தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் புகையிலை தடுப்பு மையங்கள் வெவ்வேறு கட்டங்களில் 10 கீழ்க்கண்ட மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. அவையாவன: விழுப்புரம், காஞ்சிபுரம், மதுரை, கோயம்புத்தூர் திருச்சி, புதுக்கோட்டை, கடலூர், திருப்பூர், திருநெல்வேலி மற்றும் நாகப்பட்டினம்.

22.2 அக்டோபர் 2, 2008 முதல் 29-2-2020 வரையிலான மாநில மற்றும் மாவட்ட புகையிலைக் கட்டுப்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

1. COTPA 2003 தீவிர செயலாக்கம்: (சட்டப் பிரிவுகள் 4,5,6 மற்றும் 7-ன்கீழ்)

(i) சட்டமீறல் செய்தவர்களின் எண்ணிக்கை : 2,31,906

தண்டனையாக வசூலித்த தொகை ரூ.4,20,30,537/-

2. பயிற்சி:

a. நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை: 1,196

b. பயிற்சி அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை: 70,776

3. பள்ளி செயல்பாடு:

மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அதன் விளைவாக புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள் என அறிவிக்கப்படுதல்:

i. புகையிலையில்லா பள்ளிகள் என அறிவிக்கப்பட்டவை: 13,080

ii. புகையிலையில்லா கல்லூரிகள் என அறிவிக்கப்பட்டவை: 1,344

2020 மார்ச் 24]

4. புகையிலை பழக்கத்திலிருந்து விடுபடுதல்:

விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் புகையிலை பழக்க விடுபடு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் பயிற்சி பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:

பயிற்சி அளிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர்கள் எண்ணிக்கை	684
பயிற்சி அளிக்கப்பட்ட ஆற்றுப்படுத்துனர்களின் (counsellors) எண்ணிக்கை	53
பயிற்சி அளிக்கப்பட்ட NCD செவிலியர்கள் எண்ணிக்கை	148
நல தன்னார்வலர்கள் எண்ணிக்கை	78

5. தகவல் கல்வித் தொடர்பு:

நல முகாம்கள்—உலக புகையிலை ஒழிப்பு தினம் கொண்டாட்டங்கள், ஊர்வலம், விழிப்புணர்வுப் பிரச்சார வாகனம், மனிதசங்கிலி, கையெழுத்து இயக்கம், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், புகையிலை பயன்பாட்டிற்கு எதிரான உறுதிமொழி ஏற்றல், போன்றவைகளாகும்.

22.3 புகையிலையில்லா பொது இடங்கள்:

- புகையிலையில்லா கிராமங்கள்
- புகையிலையில்லா தூதரகங்கள்
- புகையிலையில்லா சென்னை மற்றும் புறநகர் காவல் நிலையங்கள்
- புகையிலையில்லா சிறைச்சாலைகள், போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் வாகனங்கள்
- புகையிலையில்லா தமிழக அஞ்சலகங்கள்
- புகையிலையில்லா கல்வி நிறுவனங்கள், மருத்துவக் கல்லூரிகள்/பல் மருத்துவக் கல்லூரி/ மருத்துவமனைகள்/ ஆரம்ப சுகாதார நிலையங்கள்

- புகையிலையில்லா அரசு கட்டடங்கள்
- புகையிலையில்லா உணவு விடுதிகள்/வணிக வளாகங்கள்
- புகையிலையில்லா திரையரங்குகள்
- புகையிலையில்லா தொழிற்சாலைகள்

22.4 எலக்ட்ரானிக் சிகரெட் தடை செய்தல்:

தமிழ்நாட்டில் சமீபத்திய முன்னேற்றமாக புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தில் எலக்ட்ரானிக் சிகரெட் (E-Cigarettes) தடை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி எலக்ட்ரானிக் சிகரெட் தயாரிப்பு, விற்பனை (ஆன்-லைன் வர்த்தகம் உட்பட), விநியோகம், வர்த்தகம், காட்சிப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், பயன்பாடு, இறக்குமதி, விளம்பரம் ஆகிய அனைத்திற்கும் விதிக்கப்பட்ட தடை அரசால் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அத்தியாயம் - 23

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

23.1 இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் 1987 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (சென்னை) சட்டத்தின்படி 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பெயர் பின்னாளில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்று மாற்றப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள மிகப் பெரிய மருத்துவப் பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். தற்போது இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்வி நிறுவனங்களில் 1,04,371 மாணவர்கள் பயின்று வருகின்றனர். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தனது கட்டுப்பாட்டின்கீழ் மருத்துவம், பல் மருத்துவம், ஆயுஷ், மருந்தாக்கியல், செவிலியர் படிப்பு மற்றும் பல்வேறு பிற துணை மருத்துவக் கிளைகளில் 643-க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் தரமான கல்வி மற்றும் மருத்துவம், பல் மருத்துவம், மருத்துவம் சார்ந்த படிப்பு மற்றும் ஆயுஷ் படிப்புகளில் பயன்பாட்டு ஆராய்ச்சி என்ற இரட்டைக் குறிக்கோள்களைத் தன்னகத்தே அமைத்துக் கொண்டு செயல்படுகிறது.

2020 மார்ச் 24]

23.2 தமிழ்நாட்டில் உள்ள ஒரே மருத்துவப் பல்கலைக்கழகம், அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி, மருந்தாக்கியல் கல்லூரி, செவிலியர் கல்லூரி, இயன்முறை சிகிச்சை கல்லூரி, தொழில்வழி சிகிச்சை கல்லூரி மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கான கல்லூரிகள் துவங்க உரிமம் வழங்கும் மற்றும் மேற்படி படிப்புகளுக்கான பட்டங்களை வழங்குகிறது.

இப்பல்கலைக்கழகத்தின் கல்வி சார்ந்த மற்றும் நிருவாகப் பணிகள் கால வரம்பிற்குட்பட்டதாக உள்ளன. 2019 ஆம் ஆண்டில் சராசரியாக 11,700-க்கும் மேற்பட்ட தகுதிச் சான்றிதழ்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. சுமார் 1,347 மாற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

23.3 2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகள்

23.3.1 தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் பிரேசில் நாட்டின் மேட்டோ கிராஸ்ஸோ ஃபெடரல் பல்கலைக்கழகத்துடன் சர்வதேச கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார பாிமாற்றம் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 7-10-2019 அன்று எட்டப்பட்டுள்ளது.

23.3.2 நீண்டநாள் நோய்களுக்கான மூலிகை மருத்துவ ஆய்வு, கருந்தரங்கங்களை நடத்துதல் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் திறன் பரிமாற்றம் போன்ற நோக்கங்களுக்காக தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

23.3.3 பொது சுகாதாரம் இதழியலில் முதுகலை பட்டயப் படிப்பு புதியதாக துவங்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய படிப்புமூலம் இளம் ஆர்வலர்களுக்கு சுகாதார மேம்பாடு தொடர்பான உத்திகள் கற்பிக்கப்படும். அதன்மூலம் பொது சுகாதார செய்திகள் மற்றும் கட்டுரைகளில் தரம் மேம்பட வழி வகுக்கும்.

23.3.4 மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க வேண்டும் என்பதற்காக இந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு

[2020 மார்ச் 24

முயற்சிகளை எடுத்து வருகிறது. அவற்றில் ஒன்று பல்கலைக்கழக தேர்வுகளின் தரத்தை மேம்படுத்தவும், தேர்வு முறைகேடுகளைத் தடுக்கவும் மாநிலம் முழுவதும் உள்ள கல்லூரிகளில் நடைபெறும் தேர்வுகளைத் துணைவேந்தர் அறையிலிருந்தே கண்காணிக்கும் நிகழ்நேர கண்காணிப்பு (Surveillance/Live Monitoring) வசதி இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு பிப்ரவரியில் மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு நடந்த தேர்வுகளை முதலில் 35 மருத்துவக் கல்லூரிகளில் கண்காணிக்கப்பட்டன. இந்தக் கண்காணிப்பு முறை பிற படிப்புகளுக்கு விரைவில் விரிவுபடுத்தப்பட உள்ளது.

23.3.5 தேர்வு மற்றும் விடைத்தாள் மதிப்பீட்டின் தரத்தினை உயர்த்துவது, வினாத்தாள்கள் தயாரித்தலிலிருந்து தேர்வுகளின் முடிவினை வெளியிடுவது வரை கடுமையான மற்றும் தவறுகளுக்கு இடமளிக்காத செயல்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. விடைத்தாள்கள் இணையவழியில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதனால், விடைத்தாள்களை தவறாகக் கையாளப்படுவது தவிர்க்கப்படுவதோடு, விரைவாகவும், சிறப்பாகவும் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வது உறுதி செய்யப்படுகிறது. இத்தகைய வழிமுறைகளின் தரத்தினை மென்மேலும் உயர்த்துவதன்மூலம், மேம்பட்ட கல்வியினை வழங்க முடியும். இவ்வாறு வலுவான தரமான அமைப்பினை ஏற்படுத்தியுள்ளதால், நம் நாட்டிலுள்ள பிற பல்கலைக்கழகங்களும், இதர கல்வி நிறுவனங்களும், அவர்களது நிறுவனங்களில் இத்தகைய அமைப்பினை ஏற்படுத்த இந்த பல்கலைக்கழகத்தின் உதவியை நாடி வருகிறது.

23.3.6 பல்கலைக்கழகத்தின் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் ஒரு கூடுதல் வழிமுறையாக பொதுமக்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களைக் கொண்டு 15 நாட்களுக்கு ஒரு முறை பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சியில், பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று பொது சுகாதாரத்தில் முக்கியத்துவம் பெற்ற நோய்கள் குறித்த விளக்கங்களை பெறுவதுடன் தங்களது ஐயங்களைப் போக்கி தெளிவு பெறுகின்றனர்.

2020 மார்ச் 24]

23.3.7 21-12-2019 அன்று நடைபெற்ற மனித உரிமைகள் குறித்த ஒரு நாள் அடிப்படை பயிற்சி வகுப்பில் மாநில மனித உரிமைக் கழகத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். மருத்துவச் சட்டம், சட்டம் சார்ந்த மருத்துவம் மற்றும் மரபணு மருத்துவ தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மாநிலத்தின் பிற பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

23.3.8 சுற்றுச்சூழல் மேம்பாட்டில் பல்கலைக்கழகம் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடாக 27-9-2019 அன்று நடைபெற்ற சர்வதேச மரம் நடும் தினம்-2019 அன்று 50 மரக்கன்றுகள் பல்கலைக்கழக வளாகத்தில் நடப்பட்டன. மேலும், நோய்களிலிருந்தும் நுண்கிருமிகள் தொற்றில் இருந்தும் மரங்களைப் பாதுகாக்க பல்கலைக்கழகத்தில் உள்ள மரங்களின் தண்டு பகுதிகளில் சுண்ணாம்புக் கலவை பூசும் பணி பல்கலைக்கழகத்தின் தன்னார்வப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. இது தவிர, இயற்கை வழி நலவாழ்வு மேம்பாடு என்னும் நோக்கத்திற்காக மூலிகைத் தோட்டம் ஒன்று நம் நாட்டு மூலிகைகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

23.3.9 வளர்ந்து வரும் உலகில் கருத்துத் திருட்டு பெரும் சவாலாக உள்ளது. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தினால், கருத்துத் திருட்டை எளிதாக செய்ய இயலுகிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க இப்பல்கலைக்கழகம் உறுதிபூண்டுள்ளது. பல்கலைக்கழகம் அறிவுசார் சொத்திற்கு உரிய பாதுகாப்பினை அளிப்பதோடு மட்டுமல்லாமல், உரிய அங்கீகாரம் அளிக்கவும் திட்டம் வகுத்துள்ளது. இதன்மூலம் ஆய்வுப் பணிகள் பலப்படுத்தப்படுவதோடு பல்வேறு புதிய ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளிக்கிறது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு துறைகள் கடந்த ஆண்டில் நல்ல செயல்திறன் பதிவுகளைப் பெற்றுள்ளன.

23.4 பரவு நோயியல் துறை

2019-2020 கல்வியாண்டில் பரவு நோயியல் துறை தனது சிறப்பான பணிகளை இன்னும் ஊக்கத்தோடு தொடர்ந்தது. பொது சுகாதாரத்தில் ஆர்வமுள்ள பத்திரிகையாளர்களுக்குப்

பயன்படும் விதத்திலும், சுகாதாரம் தொடர்பாக ஏராளமாக வெளிவரும் செய்திகளின் தரத்தை மேம்படுத்தவும் ஒரு சிறப்பான முயற்சியாகப் பொது சுகாதார இதழியல் துறையில் ஓர் ஆண்டு முதுகலை பட்டயப் படிப்பு துவங்கப்பட்டது. இந்த முதுகலை பட்டயப் படிப்பு வளர்ந்துவரும் ஊடகவியலாளர்களைப் பொது சுகாதாரத் துறையில் தனித்திறன் பெறவும், பொது சுகாதாரத்தில் முறையாகப் பயிற்சியளிக்கப்பட்டால் மேலும் பல ஊடக பதிப்புகள் தனியாகப் பொது சுகாதாரத்துக்கென்றே வெளிவரவும் வழிவகுக்கும். அதுமட்டுமின்றி, பொது சுகாதாரம் குறித்த செய்திகள் மற்றும் கட்டுரைகளின் தரம் மேம்பாடடையும் நீண்டகால பயனாக பொதுமக்களின் நலவாழ்வு தரம் அதிகரிப்பதில் இது ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

23.5 பரிசோதனை மருத்துவத் துறை

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள பரிசோதனை மருத்துவத் துறை, எச்.ஐ.வி. பரிசோதனையில் ஆய்வகத்திற்கான தேசிய தரச் சான்றிதழ் (National Accreditation Board for Laboratories) மே 2021 வரை அங்கீகாரம் பெற்றுள்ளது. இத்துறையின் தேசிய குறிப்பு ஆய்வகம் (National Reference Laboratory) எச்.ஐ.வி. சென்டினல் கண்காணிப்பு சோதனை மையங்களில் ஏற்றதாக கண்டறியப்பட்டுள்ளது.

23.6 நோய் எதிர்ப்புத் துறை

ஜிகா, டெங்கு மற்றும் சிக்குன்குனியா வைரஸ் பரிசோதனைக்கான ஐ.சி.எம்.ஆர். (ICMR) நோடல் ஆய்வு மையமாக நோய் எதிர்ப்புத் துறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆய்வகம் தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் இணைப்பு பெற்ற கல்லூரி (Affiliated Colleges) மற்றும் இணைப்பு பெறாத கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கான வழக்கமான பயிற்சித் திட்டங்களை இத்துறை நடத்துகிறது. இந்த ஆய்வகம் தமிழ்நாட்டின் உறுப்பு மாற்று ஆணையத்தால் (Transplant Authority, Government of Tamil Nadu) சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய சோதனைகளைச் செய்வதற்கான மையமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

23.7 மருத்துவக் கல்வி மற்றும் பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை

மருத்துவக் கல்வி மற்றும் பாடத் திட்ட மேம்பாட்டுத் துறையின் குறிக்கோள், சிறப்பாக கட்டமைக்கப்பட்ட பாடத் திட்டங்களை உருவாக்குவதேயாகும். இது மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த பட்டதாரிகளுக்கு அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும்

மனப்பான்மை ஆகியவற்றை வழங்கும். கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான செயலில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளின் பாடத் திட்டத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான அணுகுமுறைகளைச் செயல்படுத்துதல். இந்தத் துறை, பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு இணையான துணை நிபுணத்துவம் வாய்ந்த பகுதிகளை மையமாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட கால படிப்புகளை வழங்குகிறது. அவை பல்கலைக்கழகம் வழங்கும் தற்போதைய நிபுணத்துவம் உள்ளடக்கிய துணைக் குழுக்களை உருவாக்குகின்றன.

23.8 மருத்துவ மரபியல் துறை

மருத்துவ மரபியல் துறை, நோய் கண்டறியும் சேவைகளையும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும், பயன்பாட்டுக்கான ஆராய்ச்சிகளையும் மேற்கொள்கிறது. மரபியல் துறையில் மரபணு பரிசோதனை மற்றும் அது குறித்து ஆலோசனைகளையும் அளிக்கப்படுகிறது. இத்துறையில், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து புறநோயாளிகளுக்கு மரபணு பரிசோதனை செய்து உரிய ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

23.9 சித்த மருத்துவத் துறை

பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத் துறை, அங்கீகரிக்கப்பட்ட சித்த மருந்துகளைத் தர நிர்ணயம் செய்யும் ஆய்வகம் ஒன்றை நிர்மாணித்து, பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளில் பயிலும் முதுகலை மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிகளுக்கான பயன்பாட்டுக்காகச் செயல்பட்டு வருகிறது. சித்த மருத்துவ முனைவர் பட்டத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட மையமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

23.10 குருதியேற்றுத் துறை

குருதியேற்றுத் துறையில் இந்திய மருத்துவக் கவுன்சில் அங்கீகாரம் பெற்ற எம்.டி. பட்ட மேற்படிப்பு 2005 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இத்துறையின்கீழ் உரிமம் பெற்ற இரத்த வங்கி இயங்கி வருகிறது. இத்துறை புதுடெல்லி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின்கீழ் மண்டல பயிற்சி மையம் என அடையாளம் கண்டுள்ளது. இதன்மூலமாக தன்னார்வ இரத்த தான முகாம்கள் நடைபெற்று வருகின்றன. ஒற்றை நன்கொடையாளர் பிளேட்லெட்டுகள் தயாரிப்பதற்கான வசதியும் உள்ளது.

[2020 மார்ச் 24

23.11 மாணவர்கள் நலப் பிரிவு

இப்பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு மற்றும் தொடர் மருத்துவக் கல்வி மேம்பாட்டு திட்டங்களுக்கான அங்கீகார மையம் நிறுவப்பட்டுள்ளன. ஆகையால் மருத்துவ முதுகலை பட்டப் படிப்பு மாணவர்களின் தரநிலை சர்வதேச அளவில் முறையாகப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பல்கலைக்கழகம் இணைப்பு கல்லூரிகளுக்குத் தொடர் மருத்துவக் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கான நடவடிக்கைகளுக்கு, நிதியுதவி அளித்து ஊக்குவிப்பு செய்கின்றது.

பல்கலைக்கழகத்தில் நன்கு நிறுவப்பட்ட விளையாட்டுக் குழு உள்ளது. இது விளையாட்டு மானியங்களை வழங்குவதன்மூலம் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்களிடையே விளையாட்டு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.

23.12 மண்டல மருத்துவ நூலகம்

இப்பல்கலைக்கழகம், மாணவர்கள் நூலகத்தை எளிதில் அணுகுவதன்மூலம் கற்றலுக்கு உகந்த சூழ்நிலையை வழங்குகிறது. மேலும், வளாகத்தில் மருத்துவ மாணவர்களின் சொந்தப் புத்தகங்களை வாசிக்கவும் இடமளிக்கிறது. மருத்துவப் புத்தகக் கண்காட்சி 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டு மருத்துவம் சார்ந்த புதிய பதிப்புகளைப் பரிந்துரைத்தனர். எஸ்ப்ராக்ஸி (Ezproxy) என்ற மென்பொருள்மூலம் நூலகத்தால் உருவாக்கப்பட்ட பயனர் பெயர் (User name) மற்றும் கடவுச்சொல்லைப் (Password) பயன்படுத்தி, மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் தங்கள் கல்லூரியிலிருந்தோ அல்லது தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது எந்த இடத்திலிருந்தும் எல்லா நாட்களிலும் மின்-இதழ்களைப் பயன்படுத்த மின்-கூட்டமைப்பை பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. முதுகலை மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் சமர்ப்பித்த விளக்கங்கள் மின் களஞ்சியத்தின்மூலம் திறந்த அணுகலாக வழங்கப்படுகின்றன. மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் கட்டுரைகளைத் தேடவும், படிக்கவும், பதிவிறக்கவும் செய்யலாம். இவ்வாறாக மிக உயர்ந்த நெறிமுறைகளையும், தொழில் சார்ந்த தர நிலைப்பாடுகளையும்

2020 மார்ச் 24]

கொண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் உயர்ந்த தரத்தைப் பேணி மருத்துவக் கல்வி வளர்ச்சியில் பங்களிப்பு செய்து வருகிறது.

அத்தியாயம் - 24
சில முக்கியச் சட்டங்கள்

24.1 தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2018

தமிழ்நாடு அரசு, முன்னோடியாக மருத்துவ நிறுவனங்களை முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டத்தை 1997 ஆம் ஆண்டு இயற்றியது. மத்திய அரசு, 2010 ஆம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை 19-8-2010 அன்று இயற்றி, வரைவு மாநில விதிகள் மாதிரியை மாநிலங்கள் பரிசீலிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் மாநில அரசுக்கு அனுப்பி வைத்தது. மேற்கண்ட இரண்டு சட்டங்களின் ஷரத்துகளை ஆராய்ச்சி அறிக்கை அளிக்க 3-12-2012 அன்று வல்லுனர் குழு அமைக்கப்பட்டது. வல்லுநர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997-க்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இவ்வியக்கத்தின் மூலமாக இதுவரை இயக்குநரகத்தால் 34,516 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 15,127 மையங்கள் ஆய்வுக்குப்பின் பதிவு செய்யப்பட்டுள்ளன.

24.2 கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செய்தல்) சட்டம், 1994:

கருவுறுதலுக்கு முன் மற்றும் கருவுறுதலுக்குப்பின் கருவின் பாலினத் தேர்வை தடை செய்தல் சட்டம், 1994-இந்திய பாராளுமன்றத்தினால் இந்தியாவில் பெண் கருக்கொலையினைத் தடுப்பதற்காகவும், குறைந்துவரும் பாலின விகிதத்தை தடுத்து நிறுத்தவும் இயற்றப்பட்டதாகும்.

[2020 மார்ச் 24

மாநிலம் முழுவதும் இச்சட்டம் முனைப்புடனும் சீரிய முறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கருவின் பாலினத்தைத் தெரிவிக்கும் ஸ்கேன் மையங்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பாலின விகிதம் 912-லிருந்து 931 ஆக உயர்ந்து உள்ளது. தமிழகம் முழுவதும் பெண் கருக்கொலைக்கு எதிராக 443 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இச்சட்டம் குறித்த தகவல்கள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கருத்தரங்கம் அனைத்து மாவட்ட உரிய அலுவலர்களைக் கொண்டு இணை இயக்குநர்களுக்கு, ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்பட்டு வருகிறது.

24.3 மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைச் சட்டம், 1994

மனித உறுப்புகளை நீக்குதல், சேமித்து வைத்தல் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்தல் ஆகியவற்றை வரன்முறைப்படுத்திடவும், வியாபார நோக்கில் மனித உறுப்புகள் உபயோகிப்பதைத் தடுப்பதற்கும் மத்திய அரசால் மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைச் சட்டம், 1994-ல் இயற்றப்பட்டது. தமிழகத்தில், இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள மருத்துவமனைகளில் மட்டுமே மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இச்சட்டத்தின்கீழ் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மாநிலப் பொறுப்பு அலுவலர் ஆவார். மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின்கீழ் பதிவுரிமை கோரும் மருத்துவமனைகள், அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவ வல்லுநர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. வல்லுநர்கள் அளிக்கும் ஆய்வறிக்கை அடிப்படையில், குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள மாநிலப் பொறுப்பு அலுவலர் பதிவுரிமை வழங்குகிறார். இந்தச் சட்டத்தில் பதிவு செய்துள்ள மருத்துவமனைகள் மட்டுமே உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யலாம். சிறுநீரகம், இருதயம், கல்லீரல், நுரையீரல், இருதய வால்வு மற்றும் எலும்பு மஜ்ஜை போன்ற பல்வேறு மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்குத் தமிழ்நாட்டில் 19 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும், 139 தனியார் மருத்துவமனைகளும் இச்சட்டத்தின்கீழ் பதிவுரிமை

2020 மார்ச் 24]

பெற்றுள்ளன. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளைச் செய்யும் மருத்துவமனைகள் மூன்று மண்டலங்களாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டு, ஒரு மண்டலத்தில் நிகழும் உறுப்பு தானம் அந்த மண்டலத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

வடக்கு மண்டலம்-சென்னை மற்றும் சுற்றுப்புறம், வேலூர்

தெற்கு மண்டலம்-திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில்

மேற்கு மண்டலம்-கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம்.

மூளை இறப்பு ஏற்பட்டவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழ்நாடு தொடர்ந்து இத்திட்டத்தில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உள்ளது.

தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் செய்தவர்கள் மற்றும் தானம் செய்யப்பட்ட உறுப்பு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

	அக்டோபர் 2008 முதல் டிசம்பர் 2019 வரை
நன்கொடையாளர்கள்	1,324
இதயம்	553
நுரையீரல்	490
கல்லீரல்	1,225
சிறுநீரகம்	2,395
கணையம்	27
சிறுகுடல்	3
கைகள்	2
பல்வேறு உள் உடல் உறுப்புகள்	1
மொத்த முக்கிய உறுப்புகள்	4,696
தோல்	135

	அக்டோபர் 2008 முதல் டிசம்பர் 2019 வரை
கருவிழி	2,013
இதய வால்வுகள்	842
இரத்தநாளங்கள்	2
எலும்பு	77
முதுகுத் தண்டு மற்றும் டிஸ்க் திசு	21
வயிற்று மடல்	1
மொத்தம்	7,787

24.4 தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939:

இந்தியாவிலேயே, பொது சுகாதாரத்திற்காகத் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939 என்ற ஒரு சட்டத்தை இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1941, 1944 மற்றும் 1958 ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு, 1970 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. பொது சுகாதாரச் சட்டம், 1939-ன் முக்கியக் குறிக்கோள்கள், சுற்றுப்புற சுகாதாரம் பேணுதல், தொற்றுநோய் தடுத்தல், தூய உணவு மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தை நல நடவடிக்கைகள் ஆகியனவாகும். மீண்டும் மீண்டும் தோன்றும் நோய்கள், உணவு உற்பத்தியில் தொழிற்சாலைகள் பெருக்கம், பாலினப் பிரச்சினைகள், வளரிளம் பருவத்தினர், முதியோர் பிரச்சினைகள் போன்ற சமூகம் சார்ந்த பிரச்சினைகளினால் மாறுபட்டுவரும் வாழ்க்கை முறைகளால் ஏற்படும் சுற்றுப்புற மாசு, ஓசோன் வாயு படலத்தில் உள்ள இடைவெளி, குறைந்துவரும் பசுமை, கதிரியக்க தாக்கம் போன்றவற்றை எதிர்கொள்ள, பொது சுகாதாரச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உணவுக் கலப்படத்தைத் தடை செய்ய முதன்முதலாக உணவுக் கலப்படத் தடைச் சட்டம், 1918-ஐ இயற்றிய பெருமையும் தமிழ்நாட்டைச் சாரும். இச்சட்டம் மத்திய அரசின் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954 இயற்றப்படும் வரை செயல்பாட்டில்

2020 மார்ச் 24]

இருந்தது. மத்திய அரசு தற்போது உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம் சட்டம், 2006 மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகள், 2011-ஐ இயற்றி, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954-ஐ இரத்து செய்துள்ளது.

24.5 பிறப்பு இறப்பு பதிவு முறை

பிறப்பு மற்றும் இறப்பு என்பவை ஒரு தனிமனிதனின் வாழ்வில் முக்கியமான இரண்டு நிகழ்வுகளாகும். இந்த நிகழ்வுகளைப் பதிவு செய்வது சட்டப்படி ஒரு தனிநபரின் அடையாள ஆதாரமாக விளங்குவதுடன், மக்கள்தொகைக் கணக்கெடுப்பதற்கான முக்கியமான அடிப்படை தகவல்களை அளிக்கிறது.

பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை, பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம், 1969-ன்படி கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பதிவுச் சட்டம் தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகள், 2000-ன்படி மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, தமிழ்நாட்டின் முதன்மைப் பிறப்பு இறப்புப் பதிவாளர் ஆவார். மாநிலம் முழுவதும் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தை அமல்படுத்திடும் அதிகாரம், முதன்மைப் பிறப்பு இறப்புப் பதிவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிறப்பு மற்றும் இறப்புகளை அவை நிகழ்ந்த இடத்திலேயே 21 நாட்களுக்குள் பிறப்பு இறப்புப் பதிவாளரிடம் பதிவுசெய்வது கட்டாயமாகும். மேற்குறிப்பிட்ட 21 நாட்களுக்குப் பின், தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதி 2000-ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி பிறப்பு இறப்புப் பதிவுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. 37 மாவட்டங்களில் உள்ள 16,498 பிறப்பு இறப்புப் பதிவு மையங்கள்மூலம் அரசின் பல்வேறு துறைகளான சுகாதாரம், வருவாய், நகராட்சி நிருவாகம், மாநகராட்சி மற்றும் பேரூராட்சியைச் சார்ந்த பிறப்பு இறப்புப் பதிவாளர்களால் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிறப்பு இறப்புப் பதிவுகள், சம்பந்தப்பட்ட துறை பதிவாளர்களால் வெவ்வேறு மென்பொருள்களில் பதிவு செய்யப்பட்டு வந்தன. பொது சுகாதாரத் துறையால் உருவாக்கப்பட்ட ஒரே சீரான CRS

மென்பொருள் 1-1-2018 முதல் மாநிலம் முழுவதும் பயன்படுத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 9,38,344 பிறப்புகளும், 6,29,441 இறப்புகளும் பிறப்பு இறப்பு மென்பொருளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அறிமுகப்படுத்தப்பட்ட வசதிகள்

- 1-1-2018 முதல் crstn.org என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு இறப்புகளுக்கான சான்றிதழ்களைப் பொதுமக்கள் இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

- ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகள், அரசு தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அரசு மருத்துவமனைகளில் நிகழும் பிறப்புகளை உடனடியாக பதிவு செய்து பிரசவித்த தாய்மார்கள் மருத்துவமனையைவிட்டு செல்லும் முன் இலவச பிறப்பு சான்றிதழ் வழங்கிட பொது சுகாதாரத் துறையின் பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் பிறப்பு இறப்புப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- பிறப்பு இறப்புப் பதிவாளரின் இ-கையொப்பத்துடன்கூடிய சான்றிதழ்கள் ஆரம்ப சுகாதார நிலையம், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

- வாக்காளர் பட்டியலில் இருந்து இறந்தவரின் பெயரை நீக்கம் செய்திட CRS மென்பொருளில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் தேர்தல் ஆணையத்திற்குப் பகிர்வு செய்யப்பட்டு வருகிறது.

மாதிரி பதிவுத் திட்டம் 2017-ன்படி

- ➢ பிறப்பு விகிதம் 14.9, இறப்பு விகிதம் 6.7 மற்றும் சிசு மரண விகிதம் 16.0.

2020 மார்ச் 24]

24.6 சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம், (COTPA), 2003:

புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டை குறைப்பதற்காகவும், புகையிலைப் பொருட்கள் உபயோகிப்பதனால் விளையும் தீமைகளிலிருந்து இளைஞர்கள் மற்றும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவும், புகைபிடிப்பவரின் அருகில் இருப்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கவும், சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் (விளம்பரம் தடை செய்தல் மற்றும் தொழில் வணிக ஒழுங்குமுறை விதிகள், உற்பத்தி, வழங்குதல் மற்றும் பகிர்வு) தடைச் சட்டம், 2003 மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் புகையிலைப் பொருட்களின் தேவைகள் மற்றும் விநியோகத்தைத் தொடர்ச்சியாக குறைப்பதற்கான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இச்சட்டம் அனைத்து புகையிலைப் பொருட்களுக்கும் பொருந்தும். இந்தியா முழுவதற்கும் இச்சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின் (COTPA) முக்கிய விதிகள் கீழ்க்கண்ட சட்டப் பிரிவுகளை உள்ளடக்கியது:

- பிரிவு 4: பொது இடங்களில் புகை பிடிப்பதைத் தடை செய்தல்

- பிரிவு 5: சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் பற்றி நேர்முகமாகவோ மறைமுகமாகவோ விளம்பரம் செய்வதற்குத் தடை செய்தல். சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்களை ஊக்கப்படுத்துவது மற்றும் பரிந்துரை செய்வதைத் தடை செய்தல்.

- பிரிவு 6 (a): 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதைத் தடை செய்தல்.

- பிரிவு 6 (b): கல்வி நிறுவனங்களைச் சுற்றி 100 கெஜம் சுற்றளவிற்கு புகையிலைப் பொருட்கள் விற்பதைத் தடை செய்தல்.

[2020 மார்ச் 24

- பிரிவு 7: சட்ட எச்சரிக்கைகளை (புகையிலைப் பொருட்கள் உறைகள்மீது புகைப்படத்துடன்கூடிய எச்சரிக்கை உட்பட) தவறாமல் அச்சிடுதல்.
- பிரிவு 7(5): புகையிலைப் பொருட்களின் உறைகள் மீது, தார் மற்றும் நிக்கோட்டின் அளவு குறிப்பிடுதல்.

அத்தியாயம் - 25
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

25.1 பொது சுகாதாரம்

தமிழ்நாடு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக பல புதுமை முயற்சிகளை மாநில, தேசிய மற்றும் உலக நாடுகள் உதவியுடன் தற்போது செயல்படுத்தி வருகிறது.

i. தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ், மாநில திட்டக் குழுவின் நிதி உதவியுடன், மாவட்டப் பொது சுகாதார ஆய்வகங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கிண்டி ஆகிய இடங்களில் தீவிர மூளை அழற்சி நோயைக் கண்காணிக்கும் ஒரு புதுமையான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

ii. 'சிடிசி'-இந்தியா (Centre for Disease Control-India) - நிதியுதவி அளிக்கும் திட்டங்கள்:

- சென்னை தேசிய தொற்றுநோய் நிலையம் 'சிடிசி'-இந்தியா நிதியுதவியுடன், நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த, திருவள்ளூர் மாவட்டம் மாதிரி மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- 'சிடிசி'-இந்தியா நிதியுதவியுடன், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் குளோபல் ஹெல்த் செக்யூரிட்டி அஜென்டா திட்டத்தின்மூலம் நுண்ணுயிர் எதிர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 'சிடிசி'-இந்தியா நிதியுதவியுடன், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் தீவிர காய்ச்சல் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2020 மார்ச் 24]

- காஞ்சிபுரம் மற்றும் கடலூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் தேசிய தொற்றுநோய்க் கட்டுப்பாடுத் திட்ட நிதியுதவி மூலம், உலகளவில், உணவுமூலம் பரவும் நோய்கள் தடுப்பு நெட்வொர்க் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

- தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளும் ஆராய்ச்சிக்கு அடித்தளமாக உள்ளன. இங்கு பணியாற்றும், பயிற்றுவிக்கும் அலுவலர்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடுகின்றனர். இவை மருத்துவத்தின் நோக்கத்தை மேற்கொண்டு விரிவடையச் செய்ய உதவுகின்றன.

25.2 பயிற்சி மற்றும் தொடர் சுகாதாரக் கல்வித் திட்டம்:

பயிற்சி மற்றும் பணியிடைப் பயிற்சி தொடர் கல்வியானது இத்துறையில் பணியில் இருப்பவர்களுக்கும், பணியில் சேருவதற்கு முன்பாகவும் அனைத்து சுகாதார அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கும் எட்டு பயிற்சி நிறுவனங்களின்மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. அவை, பொது சுகாதாரப் பயிற்சி நிலையம், பூந்தமல்லி, நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், எழும்பூர், நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், மதுரை, மனிதவள மேம்பாட்டு நிறுவனம், சேலம், மனிதவள மேம்பாட்டு நிறுவனம், விழுப்புரம், நோய்பரப்பிகள் கட்டுப்பாட்டு மையம், ஓசூர், கிருஷ்ணகிரி, மண்டலப் பொது சுகாதாரப் பயிற்சி மையம், திருவரங்குளம், புதுக்கோட்டை மற்றும் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைப் பயிற்சி நிலையம், காந்திகிராமம், திண்டுக்கல் மூலமாகவும் மற்றும் பதினொரு தாய்மை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மூலமாகவும் நடத்தப்படுகிறது. இவற்றுள், பூந்தமல்லியில் உள்ள பொது சுகாதார நிறுவனம், புது தில்லி தேசிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பயிற்சி நிறுவனத்தின் தேசிய துணைப் பயிற்சி நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2019-2020 காலகட்டத்தில் 17,072 மருத்துவம் மற்றும் இதர பணியாளர்களுக்கும் மேற்படி பயிற்சி நிலையங்கள்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

[2020 மார்ச் 24

25.3 தேசிய சுகாதாரக் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்க்காணும் பயிற்சிகள் மேற்கண்ட பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. திறன்மிகு பிறப்பு பற்றிய பயிற்சி (SBA), பிரசவதிறன் பயிற்சி (EMONC, 6 மாதம்), மருத்துவ அலுவலர்களுக்கான உயிர்காக்கும் மயக்கவியல் பயிற்சி (LSAS, 6 மாதம்), திறன்மிகு ஆய்வகப் பயிற்சி, ஒருங்கிணைந்த குழந்தைகளுக்கான நோய்கள் பற்றிய பயிற்சி, தடுப்பூசிப் பயிற்சி, ஒருங்கிணைந்த நோய்தடைகாப்பு மற்றும் கண்காணிப்புப் பயிற்சி, கணினிப் பயிற்சி மற்றும் தேசிய சுகாதார ஒருங்கிணைப்பு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. கர்ப்பகாலத்தில் கருவிலேயே சிசுக்களுக்கு உண்டாகும் பிறவிக் குறைபாட்டினைக் கண்டறியும் அல்ட்ராசோனாகிராம் பயிற்சியானது ஆரம்ப சுகாதார நிலையங்களில் அரசு மருத்துவ அலுவலர்களுக்கு அரசு மற்றும் தனியார் ஒருங்கிணைப்பின்மூலம் நடத்தப்படுகின்றது. தற்போது, 2018 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 60 நபர் வீதம் இம்மாநிலத்தில் இயங்கி வரும் 11 துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி அளித்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அரசு சேவை இல்லங்களில் பயின்ற மாணவிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படுகின்றனர். 2019-2020 காலகட்டத்தில் பயிற்சிப் பள்ளிகளில் 660 பணியாளர்களுக்கும் மேற்படி பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரை, தனியார் நிறுவனங்களால் துவக்கப்படும் துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு தேர்வுக் குழுமத் தலைவராக அரசு நியமனம் செய்துள்ளது. அதன்படி 2017-2018, 2018-2019 மற்றும் 2019-2020 கல்வி ஆண்டுகளில் 47 தனியார் அறக்கட்டளைகள்/ பயிற்சி நிறுவனங்கள் தாய்மை துணை செவிலியர் பயிற்சி பள்ளிகளைத் துவக்கிட அனுமதி வழங்கப்பட்டது. தனியார் நிறுவனங்களால் துவக்கப்படும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்)/சுகாதார ஆய்வாளர்/துப்புரவு ஆய்வாளர் பயிற்சிப் பள்ளிகளுக்கு, பொது சுகாதாரம் (ம) நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரை, தேர்வுக் குழுமத் தலைவராக அரசு நியமனம் செய்துள்ளது. அதன்படி, 2017-2018, 2018-2019 மற்றும்

2020 மார்ச் 24]
2019-2020-ன் கல்வி ஆண்டுகளில் 55 தனியார் அறக்கட்டளைகள்/ பயிற்சி நிறுவனங்களுக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்)/சுகாதார ஆய்வாளர்/துப்புரவு ஆய்வாளர் பயிற்சிப் பள்ளிகளை துவக்கிட அனுமதி வழங்கப்பட்டது.

25.4 பலநோக்கு சுகாதாரப் பணியாளர் (ஆண்) பயிற்சி

மதுரை மற்றும் ஓசூர் மண்டலப் பயிற்சி நிறுவனங்களின்மூலம் படிப்படியாக 296 பல்நோக்கு சுகாதார ஆண் பணியாளர்களுக்கு ஒரு மாத பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஓசூர் மண்டலப் பயிற்சி நிறுவனத்தில் 40 ஆய்வக நுட்புனர் நிலை-III-க்கு ஒரு வருட பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்குப் பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளராக இத்துறையில் பதவி உயர்வு வழங்கப்படும். மேலும், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் பணியாற்றிய 6 நபர்களுக்கு பலநோக்கு சுகாதார ஆண் பணியாளர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, பூந்தமல்லி பொது சுகாதார நிறுவனத்தில் நகராட்சி நிருவாகத் துறையைச் சேர்ந்த 10 துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு ஒரு வருட துப்புரவு ஆய்வாளர் பயிற்சி தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவ நிலையங்கள்மூலம் பொதுமக்களுக்கு மருத்துவ சேவை வழங்க அரசு ஒதுக்கும் நிதி ஒதுக்கீடு கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மாநில அரசு, மக்கள் அனைவருக்கும் தரமான சுகாதார சேவை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது என்பது இதன்மூலம் தெரிகிறது. அனைத்து மக்களுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் பல முன்னோடித் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாகத் திகழ்கிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையான மருத்துவ சேவையைத் தமிழ்நாட்டு மக்கள் பெறவேண்டும் என்ற நோக்கத்தில், மத்திய மற்றும் மாநில அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் திட்டங்கள் அனைத்தும் அர்ப்பணிப்புடன் பொதுமக்களுக்கு நிறைவு அளிக்கும் வகையில், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இணைப்புகள் X

(43 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021

முன்னுரை

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

(திருக்குறள்: 1031)

(பொருள்: உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத்தொழிலே சிறந்தது.)

தமிழ்நாடு, அகில இந்திய அளவில் 11-வது மிகப் பெரிய மாநிலமாகவும், அதிக மக்கள் தொகை கொண்ட 6-வது மாநிலமாகவும் விளங்குகிறது. வேளாண்மையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதன்மூலம் வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கும் குறிக்கோளுடன் இதற்கான கொள்கைகளையும், நவீன வழிமுறைகளையும் வகுத்து சரி விகித ஒப்பற்ற நிலையான வளர்ச்சி அடைய மாநில அரசு முயன்று வருகிறது. விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் "உணவுப் பாதுகாப்பை" உறுதி செய்யவும், தமிழ்நாடு 2023-க்கான தொலைநோக்கு கொள்கை (Tamil Nadu Vision 2023), உணவு தானிய இயக்கம், மாவட்ட வேளாண் திட்டம், மாநில வேளாண் திட்டம் மற்றும் வேளாண் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டம் போன்றவற்றை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலமாகவும், மாவட்ட மற்றும் மாநில நீர்ப்பாசனத் திட்டம் போன்றவற்றைப் பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டம் மூலமாகவும் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்தகைய நடவடிக்கைகள், திட்டங்களை வகுத்து செயல்படுத்தவும், ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளவும், இடர்பாடுகளை உரிய உத்திகள்மூலம் திறன்படக் களையவும் இன்றியமையாததாக உள்ளன.

2020 மார்ச் 24]

வேளாண் துறையின் தோற்றம்

இந்திய பஞ்ச ஆணையம், 1880-ன் பரிந்துரையின்படி, வேளாண்மைக்கென ஒரு தனித் துறை 1882 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 1904 ஆம் ஆண்டு வேளாண்மை இயக்குநரை தலைவராகக் கொண்டு தேவையான பணியாளர்களுடன் வேளாண்மைத் துறை தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. பொதுக் கல்வித் துறையின்கீழ் இருந்த வேளாண்மைக் கல்லூரியானது 1905 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையின்கீழ் சேர்க்கப்பட்டு, இன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற தனிப்பட்ட அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் பல மாவட்டங்கள் மற்றும் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து, வேளாண்மைத் துறையின் நிருவாக அமைப்பிலும் பல்வேறு மாற்றங்கள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வேளாண்மை

தமிழ்நாடு 130.33 இலட்சம் எக்டர் மொத்த நிலப்பரப்பு கொண்டது. இது அகில இந்திய புவியியல் பரப்பில் 4 சதவீதம் ஆகும். பூகோள அமைப்பால் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்ப மண்டலத்தின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு) தமிழ்நாடு சுமார் 6 சதவீதத்தைக் கொண்டுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டின் தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் ஆய்வு அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் 32.44 இலட்சம் வேளாண் குடும்பங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது (ஆதாரம்: மத்திய அரசின் வேளாண் புள்ளியியல் விவரம், 2018). 2015-2016 ஆம் ஆண்டின் 10-வது வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் 59.73 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்து வருகின்றனர். மொத்த நிலவுடைமைதாரர்களில் 93 சதவீதம் சிறு (2 எக்டர்) மற்றும் குறு (1 எக்டர்) விவசாயிகளாவர். இவர்கள் 62 சதவீத நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்கின்றனர். மீதமுள்ள 7 சதவீத இதரப் பெரு விவசாயிகள் 38 சதவீத நிலப்பரப்பில் சாகுபடி செய்து வருகின்றனர். தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பளவான 0.75 எக்டர் என்பது நாட்டின் சராசரி நிலவுடைமையான 1.08 எக்டருக்கு மிகக் குறைவானதாகும்.

[2020 மார்ச் 24

2018-2019 ஆம் ஆண்டின் புள்ளியியல் அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் நிலப் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.1: நிலப் பயன்பாடு 2018-2019 (இறுதி செய்யப்படாதது)

வ. எண்	விவரம்	பரப்பு (இலட்சம் எக்டர்)	% மொத்த நிலப்பரப்பிற்கு
1	காடுகள்	21.57	16.55
2	நிகர சாகுபடி பரப்பு (*)	45.82	35.16
3	இதர மரப்பயிர்கள் சாகுபடி நிலங்கள்	2.26	1.73
4	நிரந்தர மேய்ச்சல் நிலங்கள்	1.08	0.83
5	நடப்பு தரிசு நிலங்கள்	10.47	8.03
6	இதர தரிசு நிலங்கள்	19.30	14.81
7	பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள்	3.23	2.48
8	வேளாண்மைத் தவிர இதர உபயோகத்திலுள்ள நிலங்கள்	22.02	16.90
9	சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்கள்	4.58	3.51
	மொத்த நிலப்பரப்பு	130.33	100.00
	பயிரிடு திறன் (%)		124

(*) மொத்த பயிரிடும் பரப்பு (56.72 இலட்சம் எக்டர்) மற்றும் ஒருமுறைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (10.90 இலட்சம் எக்டர்)-க்குள்ள வேறுபாடு (ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு)

2020 மார்ச் 24]

நிலப் பயன்பாட்டில் தமிழ்நாட்டின் நிலை

தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 130.33 இலட்சம் எக்டர் ஆகும். 1970 ஆம் ஆண்டுகளில் 7.05 இலட்சம் எக்டராக இருந்த சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்களின் பரப்பு 2018-2019 ஆம் ஆண்டில் 4.58 இலட்சம் எக்டராக குறைந்து, கடந்த 40 முதல் 50 ஆண்டுகளில் சுமார் 2.47 இலட்சம் எக்டர் குறைந்துள்ளது. பயரிடுவதற்கேற்ற தரிசு நிலங்களின் பரப்பு 1970 ஆம் ஆண்டுகளில் 4.17 இலட்சம் எக்டராக இருந்தது. 2018-2019 ஆம் ஆண்டில் 3.23 இலட்சம் எக்டராக குறைந்துள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் 5.31 இலட்சம் எக்டராக இருந்த இதர தரிசு நிலங்களின் பரப்பு 2018-2019 ஆம் ஆண்டில் 19.30 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது. ஆனால் 80-களில் 16.18 இலட்சம் எக்டராக இருந்த நடப்புத் தரிசு 2018-2019 ஆம் ஆண்டில் 10.47 இலட்சம் எக்டராக குறைந்துள்ளது. பாசன நீரை திறன்பட பயன்படுத்தியதாலும், நுண்ணீர்ப் பாசனம் போன்ற நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்களை மேற்கொண்டதாலும் இறவை சாகுபடி பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல், மழைநீர் சேகரிப்புத் தொழில்நுட்பங்கள் போன்றவற்றுடன் நீரை சிக்கனமாக பயன்படுத்தும் முறைகளுடன்கூடிய நுண்ணீர்ப் பாசனத்தின்மூலம் இத்தகைய நடப்புத் தரிசு பரப்பினைக் கணிசமாகக் குறைக்க இயலும். 1970 ஆம் ஆண்டுகளில் 61.36 இலட்சம் எக்டராக இருந்த நிகர சாகுபடி பரப்பு, 2018-2019 ஆம் ஆண்டில் 45.82 இலட்சம் எக்டராகக் குறைந்துள்ளது. வேளாண்மை இல்லாத இதர பயன்பாடு, அதிகரித்துவரும் நகரமயமாதல் மற்றும் தொழில்மயமாதல் போன்றவை நிகர சாகுபடி பரப்பு குறைவதற்கு காரணமாகும். எனவே, தற்போது உள்ள பாசன முறைகளை நவீனப்படுத்தியும், சொட்டுநீர்ப் பாசனம் உள்ளிட்ட திறன்மிகு பாசனநீர்ப் பயன்பாட்டு முறைகளாலும் இருபோக மற்றும் முப்போக சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1970 ஆம் ஆண்டுகளில் 121.53 சதவீதமாக இருந்த பயிரிடு திறன் 2018-2019 ஆம் ஆண்டில் 124 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அகில இந்திய அளவில் 6 சதவீத மக்கள்தொகை கொண்ட தமிழ்நாட்டில் 3 சதவீத நீர் ஆதாரம் மட்டுமே உள்ளது. இம்மாநில நீர் ஆதாரம் மழை நீரையும், அண்டைய மாநிலங்களில் அணைகளிலிருந்து திறந்து விடப்படும் நீரையும் சார்ந்துள்ளது. மாநிலத்தில் தனிநபருக்கு கிடைக்கும் ஆண்டு சராசரி நீர் அளவு

[2020 மார்ச் 24

அகில இந்திய அளவான 2,200 கன மீட்டருடன் ஒப்பிடுகையில் 900 கன மீட்டர் ஆகும். எனவே, மாநில அரசு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குவதோடு நுண்ணீர்ப் பாசனம் மற்றும் திருந்திய நெல் சாகுபடி, திருந்திய பயறு வகைகள் சாகுபடி, இயந்திர நடவு, கோடை உழவு போன்ற பாசனநீர் சேமிப்பு தொழில்நுட்பங்களைப் பரவலாக்குவதன்மூலம் திறன்மிகு பாசனநீர் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

மழையளவு

தமிழ்நாட்டின் சராசரி மழையளவு 947.4 மி.மீ. ஆகும். இது அகில இந்திய சராசரி மழையளவுடன் (1,200 மி.மீ.) ஒப்பிடுகையில் மிகக் குறைவாகும். குளிர்காலம் (ஜனவரி-பிப்ரவரி), கோடைகாலம் (மார்ச்-மே), தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்டம்பர்) மற்றும் வடகிழக்கு பருவம் (அக்டோபர்-டிசம்பர்) ஆகிய 4 பருவ காலங்களில் முறையே 3%, 14%, 36% மற்றும் 47% மழை பெறப்படுகிறது. பெறப்படும் மழையளவைப் பொறுத்தே குறிப்பிட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் சாகுபடியும், பயிர் வளர்ச்சியும் நிர்ணயிக்கப்படுகிறது. உரிய காலத்தில் பெறப்படும் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையும் சீரான இடைவெளியில் பெறப்படும் மழையளவும் வேளாண் உற்பத்தியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அதிக அளவு மழை பெறப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கப்பெறும் சராசரி (947.4 மி.மீ.) மழையளவிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. (குறைந்தபட்சம்-545.1 மி.மீ. (2016); அதிகபட்சம்-1,313.5 மி.மீ. (2008)).

பாசனத் திறன்

இம்மாநிலத்தின் நிலத்தடி நீரையும் சேர்த்து மொத்த நீர் ஆதாரம் 46,540 மில்லியன் கன மீட்டராகும். இதில் 95 சதவீதத்திற்கும் அதிகமான அளவு முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்பரப்பு பாசனநீர் (ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற பிற மாநிலங்களில் இருந்து பெறப்படும் நீர் உட்பட) 24,864 மில்லியன் கன மீட்டராக உள்ளது. (ஆதாரம்: http://tnenvis.nic.in/Database/TN-ENVIS_791.aspx) ஆகவே, நிலத்தடிநீர் மட்டுமே தற்போது வேளாண் வளர்ச்சிக்கு மாற்று ஆதாரமாக உள்ளது. எனினும், பல்வேறு பகுதிகளில் தற்போது உள்ள நிலத்தடிநீர்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2020 மார்ச் 24]

ஆதார நிலை மிகவும் குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் உள்ள 429 குறுவட்டங்களில், 38% குறுவட்டங்களில் மட்டுமே நிலத்தடிநீர் ஆதாரம் போதுமானதாக உள்ளது.

பாசனநீர் ஆதாரம்

மாநிலத்தின் பல்வேறு பாசனநீர் ஆதாரங்கள்மூலம் பயன்பெறும் நிகர பாசன பரப்பளவு விவரம் (2018-2019) பின்வருமாறு:

அட்டவணை 1.2: நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு (2018-2019) (இறுதி செய்யப்படாதது)

பாசன ஆதாரம்	எண்ணிக்கை (எண்கள்)	நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்)	நிகர பாசன பரப்பு சதவீதம்
கால்வாய்கள்	2,248	6.36	24.80
ஏரிகள்	41,124	3.22	12.55
கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்	18,69,660	16.03	62.49
இதர பாசனம்	133	0.04	0.16
மொத்தம்		**25.65**	**100.00**

ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு

கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் சாகுபடி செய்யப்படும் பரப்பு 62 சதவீதமாகவும், கால்வாய்கள்மூலம் 25 சதவீதமாகவும், ஏரிகள்மூலம் 13 சதவீதமாகவும் உள்ளது.

பாசனநீர் ஆதார பயன்பாட்டு நிலை

1970-1971 ஆம் ஆண்டில் 34% ஆக இருந்த கால்வாய் பாசனப் பரப்பு 2018-2019 ஆம் ஆண்டில் 24.80% ஆக குறைந்துள்ளது. இதேபோல 1970-1971 ஆம் ஆண்டில் ஏரிப் பாசனப் பரப்பு 35% ஆக இருந்து 2018-2019 ஆம் ஆண்டில் 12.55% ஆக குறைந்துள்ளது. இதற்கு மாறாக, 1970-1971 ஆம் ஆண்டில் 30% ஆக இருந்த

[2020 மார்ச் 24

கிணற்று நீர்ப்பாசனப் பரப்பு 2018-2019 ஆம் ஆண்டில் 62.49% ஆக உயர்ந்துள்ளது. இதர பாசனப் பரப்பு குறைந்துகொண்டே வருகிறது.

நிகர சாகுபடி பரப்பில், நிகர பாசனப் பரப்பு 1990-1991 மற்றும் 2005-2006 ஆண்டுகளைத் தவிர்த்து பிற ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இதேபோல, மொத்த சாகுபடிப் பரப்பில் மொத்த பாசனப் பரப்பும் அதிகரித்துள்ளது. 1970-1971 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் மொத்த சாகுபடி பரப்பில், மொத்த பாசனப் பரப்பு 46.20% மற்றும் 56.12% என்ற அளவில் உள்ளது.

தமிழ்நாட்டின் வேளாண் தட்பவெப்ப மண்டலங்கள்

நிருவாகப் பிரிவு உள்ளிட்ட மழையளவு, பாசன வசதி, மண் வகை, பயிர் சாகுபடி, இதர பௌதீக, சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலை அடிப்படையில் தமிழ்நாடு ஏழு தட்பவெப்ப மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

அட்டவணை 1.3: தமிழ்நாட்டின் வேளாண் தட்பவெப்ப மண்டலங்கள் (2018-2019) (இறுதி செய்யப்படாதது)

வ. எண்	வேளாண் தட்பவெப்ப மண்டலம்	மாவட்டங்கள்	மண் வகை	சராசரி மழையளவு (மி.மீ.)
1.	வடகிழக்கு மண்டலம்	காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை	செம்மண், களிமண், கடலோர உவர் வண்டல் மண்	1,105
2.	வடமேற்கு மண்டலம்	தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் (பகுதி)	சுண்ணாம்பு அற்ற செம்மண், சுண்ணாம்பு அற்ற பழுப்பு மண், சுண்ணாம்பு மிக்க கரிசல் மண்	875

2020 மார்ச் 24]

வ. எண்	வேளாண் தட்பவெப்ப மண்டலம்	மாவட்டங்கள்	மண் வகை	சராசரி மழையளவு (மி.மீ.)
3.	மேற்கு மண்டலம்	ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, கரூர் (பகுதி), நாமக்கல் (பகுதி), திண்டுக்கல், பெரம்பலூர், அரியலூர் (பகுதி)	செம்மண், கரிசல் மண்	715
4.	காவேரி டெல்டா மண்டலம்	தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர் (பகுதி), அரியலூர் (பகுதி), புதுக்கோட்டை (பகுதி), கடலூர் (பகுதி)	செம்மண் (புதிய டெல்டா), வண்டல் மண் (பழைய டெல்டா)	984
5.	தெற்கு மண்டலம்	மதுரை, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி	கடலோர வண்டல், கரிசல் மண், செம்மண், அடர் செம்மண்	857
6.	அதிக மழைபெறும் மண்டலம்	கன்னியாகுமரி	கடலோர உவர் வண்டல், அடர் செம்மண்	1,420
7.	மலைப் பிரதேச மண்டலம்	நீலகிரி மற்றும் கொடைக்கானல் (திண்டுக்கல்)	செம்மண்	2,124

[2020 மார்ச் 24

காவேரி டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது:

காவேரி டெல்டா பகுதி தமிழ்நாட்டின் அரிசி உற்பத்தி மையமாக கருதப்படுகிறது. இந்தப் பகுதிகள் மாநிலத்தில் உணவு தானியங்கள் மற்றும் பிற விவசாய விளைபொருட்களின் உற்பத்தியில் பெரும்பங்கு வகித்து மாநிலத்தின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்கிறது. விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் தன்னிறைவான வாழ்க்கைத்தரத்தை பன்முக விவசாய நடவடிக்கைகள் உறுதி செய்கின்றன. டெல்டா மண்டலத்தைப் பாதுகாப்பதற்காகவும், மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், நீர்வளங்களை மேம்படுத்துதல், நீர்சேமிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல், மண்ணின் தரத்தை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ஆகியவற்றின்மூலம் வேளாண் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகவும், வேளாண் தொழிலாளர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9-2-2020 அன்று தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் முழுவதும் மற்றும் புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களின் சில பகுதிகளும் "பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக" அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டப் பேரவையில் 19-2-2020 அன்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு "தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டம், 2020" இயற்றப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் 21-2-2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1. வேளாண்மை

1.1. வேளாண் சாதனைகள் கண்ணோட்டம்

வேளாண் பிரிவுக்கு புத்துயிரூட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக பின்வரும் சாதனைகள் அடையப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் கடந்த 8 ஆண்டுகளில் 6 முறை உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உற்பத்தி செய்து சாதனை அடையப் பெற்றுள்ளது.
- பல்வேறு வேளாண் பயிர்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தியமைக்காக தேசிய உயர் விருதான "கிருஷி கர்மான்" விருதினை 7 ஆண்டுகளில் தமிழ்நாடு 5 முறை பெற்றுள்ளது. (2 முறை–ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தி; 1 முறை– சிறுதானியங்கள் உற்பத்தி; 1 முறை-பயறு உற்பத்தி; 1 முறை-எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தி).
- கூட்டுப் பண்ணையத் திட்டம் என்னும் புதிய திட்டம் குறு, சிறு விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக செயல்படுத்தப்படுகிறது. இதில் உழவர் ஆர்வலர் குழுக்கள் உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. 30,000 உழவர் ஆர்வலர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 6,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு, 110 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 10 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- "நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்", தமிழ்நாட்டிலுள்ள மானாவாரி விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும் மானாவாரிப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காகவும் 2016-2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி விவசாய நிலங்களை உள்ளடக்கிய 1,000 தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், மழைநீர்

[2020 மார்ச் 24

சேகரிப்பு அமைப்புகள், கிராம அளவிலான வாடகை இயந்திர மையங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மற்றும் மானாவாரி விவசாயிகளின் கால்நடைகளுக்கான ஊட்டச்சத்து, இனவிருத்தி மற்றும் பால்மடி சுகாதாரம் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- நுண்ணீர்ப் பாசனம்மூலம் திறன்மிகு நீர்ப்பாசன முறையை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு தேசிய அளவில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதற்காக தமிழ்நாடு அரசு கூடுதல் மானியம் வழங்கி குறு, சிறு விவசாயிகளுக்கு 100% மானியமும், இதர விவசாயிகளுக்கு 75% மானியமும் தொடர்ந்து வழங்கி வருகிறது. மேலும், குழாய் மற்றும் கிணற்றுப் பாசனம் பெறும் பகுதிகள் முழுவதிலும் படிப்படியாக நுண்ணீர்ப் பாசன முறையைக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

- கரும்பில் அதிக பரப்பளவை நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவர நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தில் இதுவரை மானியம் வழங்கப்படாத இதர முக்கிய பாகங்களுக்கும் மாநில அரசு கூடுதல் மானியம் வழங்கி ஊக்குவித்து வருகிறது.

- பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இதுவரை, ரூ.1,994 கோடி காப்பீட்டுக் கட்டண மானியமாக மாநில அரசால் காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.7,702.46 கோடி இழப்பீட்டுத் தொகையாக 37,31,476 விவசாயிகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கூட்டுப் பண்ணையம், "நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்" மற்றும் "நுண்ணீர்ப் பாசனம்" போன்ற முன்னோடி திட்டங்களை செயல்படுத்தியமைக்காக 2019-2020 ஆம் ஆண்டில் "ஸ்கோச் குழுமத்தின் தகுதிச் சான்றிதழை" தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

- "2019-க்கான உலக வேளாண்மை விருதில்" சிறந்த வேளாண் மாநிலத்திற்கான விருதினை தமிழ்நாட்டிற்கு உணவு மற்றும் வேளாண்மைக்கான இந்திய குழுமம் வழங்கியுள்ளது.

2020 மார்ச் 24]

- இரண்டு முறை சிறந்த மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட உழவன் கைபேசி செயலி உழவர்களுக்குத் தேவையான 16 முக்கிய சேவைகளை வழங்கி இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு பயனுள்ளதாக விளங்குகிறது.
- இந்திய வணிகர் கூட்டமைப்பும் தகவல் தொழில்நுட்பத் துறையும் வேளாண் துறையின் செயலியின் சிறப்பு குறித்து பாராட்டுகளைத் தெரிவித்துள்ளன.
- மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், உழவன் செயலியை பாராட்டி தேசிய அளவில் இதனைப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

துறையின் நோக்கங்கள் மற்றும் அணுகுமுறைகள்:

உற்பத்தி நிலை மற்றும் இலக்கு

வேளாண் துறை, விவசாயிகள் சார்ந்த வேளாண் தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, நேரடி நெல் விதைப்பு, திருந்திய பயறு வகைகள் சாகுபடி, சிறுதானியங்கள் மற்றும் ஊட்டமிகு சிறுதானியங்களுக்கான மேலான உழவியல் முறைகளுடன் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம், கூட்டுப் பண்ணையம், நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம், சிக்கன நீர் உபயோகத்திற்கான நுண்ணீர்ப் பாசனத்தை பெருமளவில் செயல்படுத்துதல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் காரணமாக வேளாண் பயிர்களில் உற்பத்தி உயர்ந்து வருகிறது. வேளாண் பயிர்களின் உற்பத்தி நிலை பின்வருமாறு:

அட்டவணை 1.4: வேளாண் பயிர்களின் உற்பத்தி நிலை மற்றும் இலக்கு (இலட்சம் மெட்ரிக் டன்)

வ. எண்	பயிர்	2017-2018	2018-2019 (இறுதி மதிப்பீடு)	2019-2020 (திட்டம்)	2020-2021 இலக்கு
1.	அரிசி	66.38	61.32	72.00	75.00

[2020 மார்ச் 24

வ. எண்	பயிர்	2017-2018	2018-2019 (இறுதி மதிப்பீடு)	2019-2020 (திட்டம்)	2020-2021 இலக்கு
2.	சிறுதானியங்கள்	35.19	37.07	36.00	42.00
3.	பயறு வகைகள்	5.56	5.51	7.00	8.00
மொத்த உணவு தானியங்கள்		**107.13**	**103.90**	**115.00**	**125.00**
4.	கரும்பு**	171.53	170.96	230.00	240.00
5.	எண்ணெய் வித்துக்கள்	10.38	9.41	12.84	13.52
6.	பருத்தி (இலட்சம் பொதிகள்)*	4.386	3.20	4.57	4.80

* உற்பத்தி இலட்சம் பொதிகள்; பொதி ஒன்றுக்கு 170 கிலோ

** கரும்பு உற்பத்தி (மெ.டன்/எக்டர்)

ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு

2020-2021 ஆம் ஆண்டின் உற்பத்தி இலக்கினை அடைவதற்கான அணுகுமுறைகள்:

2020-2021 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கினை அடைவதற்கு செயல்படுத்தப்படும் அணுகுமுறைகள் பின்வருமாறு:

அ. நெல் உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்:

1. பாசனநீர் மற்றும் மனிதத் திறன் மேம்பாட்டு தொழில்நுட்ப முறைகளான திருந்திய நெல் சாகுபடி, நேரடி விதைப்பு மற்றும் இயந்திர நடவு போன்றவற்றை கடைப்பிடித்தல்.

2. பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களுக்கேற்ற புதிய உயர் விளைச்சல் இரகங்களை பயிரிடுதல்.

2020 மார்ச் 24]

3. 'வேளாண் சூழல் அமைப்பு பகுப்பாய்வின்' மூலம் பயிர்நோய் மேலாண்மை.

4. குறைந்த உற்பத்தித் திறனுள்ள பகுதிகளில் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் மண்வளப் பாதுகாப்பு.

5. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின்மூலம் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து அறிவுரை வழங்குதல்.

6. உழவர் ஆர்வலர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகியவற்றின் தொழில்முனைவுச் செயல்பாட்டினை ஊக்குவித்தல்.

7. பயிர் அறுவடைக்குப் பிந்தைய இழப்பு மேலாண்மை.

ஆ. சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்:

1. தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்ற நிலங்களாக மாற்றுதல்.

2. சொட்டுநீர்ப் பாசனத்தின்மூலம் திறன்மிகு நீர் பயன்பாடு.

3. புதிய இரகங்கள் மற்றும் சந்தைக்கேற்ற இரகங்களை அதிகளவில் உற்பத்தி செய்தல்.

4. குறைந்த உற்பத்தி திறனுள்ள பகுதிகளில் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் மண்வளப் பாதுகாப்பு.

5. அதிக நீர்த் தேவையுள்ள பயிர் சாகுபடிக்கு மாற்றாக குறைந்த நீர்த் தேவை உள்ள பயிர் சாகுபடியினை தீவிரப்படுத்துதல்.

6. இயந்திர விதைப்புமூலம் வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினைப் போக்குதல்

7. மக்காச்சோளப் பயிரில் படைப்புழு மேலாண்மை.

8. பறவைகள் மற்றும் மிருகங்களிடமிருந்து பயிர்களைக் காத்தல்.

இ. பயறு உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்

1. தரமான உயர் விளைச்சல் இரக விதை உற்பத்தி மற்றும் சான்று விதைப் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

[2020 மார்ச் 24

2. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மைக்கு உயிர் உரம், நுண்ணூட்டக் கலவை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயறு ஒன்டர் (TNAU Pulses Wonder) பயன்படுத்துதல்.

3. 2 சதம் டிஏபி கரைசல் தெளிப்பதை ஊக்குவித்து பயறு மகசூலைப் பெருக்குதல்.

4. துவரை நடவு சாகுபடியை ஊக்குவித்தல்.

5. செயல்விளக்கம்மூலம் பயறு உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பரவலாக்குதல்.

6. ஊடுபயிர்/வரப்புப் பயிர் சாகுபடி முறைகளை ஊக்குவித்து வேளாண் பயிர்களில் கூடுதல் வருமானம் பெற வழிவகுத்தல்.

7. உயர் தொழில்நுட்பங்களை மேற்கொண்டு திருந்திய பயறு சாகுபடிமூலம் பயறு வகைகளின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.

ஈ. எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்

1. 10 வருடத்திற்குட்பட்ட புதிய உயர்விளைச்சல் இரகங்களின் விதை உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவித்து விதை விநியோகத்தை அதிகப்படுத்துதல்.

2. விதைப்புக் கருவி (Seed Drill) மூலம் வரிசை விதைப்பை (Line Sowing) ஊக்குவித்தல்.

3. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தல்.

4. நிலக்கடலை சாகுபடிக்கு ஜிப்சமும், எள் சாகுபடிக்கு மாங்கனீசு சல்பேட்டும் உபயோகித்து உற்பத்தியை உயர்த்துதல்.

5. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நிலக்கடலை ரிச் (TNAU Groundnut Rich) உபயோகித்து நிலக்கடலை உற்பத்தியைப் பெருக்குதல்.

6. நிலக்கடலை அறுவடை இயந்திரம் உபயோகித்தலை ஊக்குவித்தல்.

2020 மார்ச் 24]

உ. கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்

1. பழைய இரகங்களுக்கு மாற்றாகவும், சர்க்கரை கட்டுமானத்தை அதிகரிக்கவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் புதிய வல்லுநர் விதைகளை உபயோகித்தல்
2. நோயற்ற திசு வளர்ப்பு நாற்றுகளை விநியோகித்தல்
3. பரு சீவல் நாற்று நடவு முறையினை ஊக்குவித்தல்
4. கரும்பில் பயறு வகைகளை ஊடுபயிராக சாகுபடி செய்ய மானியம் வழங்குதல்
5. பூச்சிகளைக் கட்டுப்படுத்த உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்ளுதல்
6. கரும்புத் தோகையை தூளாக்கி உரமாக்க மானியம் வழங்குதல்
7. நுண்ணீர்ப் பாசனத்தை ஊக்குவிக்க கூடுதல் நிதியுதவி வழங்குதல்

ஊ. பருத்தி உற்பத்தியை அதிகரிக்க உத்திகள்

1. உயர் விளைச்சல் இரக பருத்தி விதை உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்குதல்
2. நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடலை ஊக்குவித்தல்
3. ஒளிச்சேர்க்கையினை அதிகரிக்க இலைவழி உரமாக மெக்னிசியம் சல்பேட் தெளித்தல்
4. களை மற்றும் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முக்கிய இடுபொருட்களுக்கு மானியம் வழங்குதல்
5. அடர் நடவுமூலம் 25 சதவீத உற்பத்தியை அதிகரித்தல்
6. பருத்தியில் ஊடுபயிராக பயறு வகைச் சாகுபடியை ஊக்குவித்தல்

2020-2021 ஆம் ஆண்டிற்கான பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

விரைவு இயக்க அணுகுமுறைமூலம் அதிகமான உற்பத்தியை அடைய அனைத்து உயர் மகசூல் தொழில்நுட்பங்களையும்

பின்பற்றி, உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியைக் குறைக்கவும், அதிகளவில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கவும் உணவு தானிய உற்பத்தி இயக்கம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் பிரிவில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக, வேளாண்மைத் துறையால் வகுக்கப்பட்ட உழவர் சார்ந்த வேளாண் உத்திகளான திருந்திய நெல் சாகுபடி, நேரடி நெல் விதைப்பு முறை, திருந்திய பயறு வகை சாகுபடி, சிறுதானியங்களுக்கான மேம்பட்ட வேளாண் உத்திகள், ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான இயக்கம் மற்றும் நுண்ணீர்ப் பாசனம் போன்றவற்றை சிறப்பாக செயல்படுத்தியதோடு சாதகமான பருவமழை மற்றும் நீர்த்தேக்கங்களில் போதுமான நீர் இருப்பு ஆகியவற்றின் காரணமாக உணவு தானிய உற்பத்தி 2019-2020 ஆம் ஆண்டில் 115 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 1.5: கடந்த 4 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி

பயிர்	உணவு தானிய உற்பத்தி			
	2016-2017	**2017-2018**	**2018-2019 (இறுதி மதிப்பீடு)**	**2019-2020 (திட்டம்)**
அரிசி	35.54	66.38	61.32	72.00
சிறுதானியங்கள்	13.45	35.19	37.07	36.00
பயறு வகை	3.39	5.56	5.51	7.00
மொத்த உணவு தானியங்கள்	**52.38**	**107.13**	**103.90**	**115.00**

2020-2021 ஆம் ஆண்டில் சாதகமான பருவமழை கிடைப்பதை எதிர்பார்த்து, தமிழ்நாடு அரசு, 125 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை அடையவும் இதர பயிர்களில் அதிக உற்பத்தியைப் பெறவும் திட்டமிட்டுள்ளது. உழவர்களுக்கு உகந்த அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்பதாலும் குறித்த காலத்தில்

2020 மார்ச் 24]

இடுபொருட்களும், தொழில்நுட்பங்களும் விவசாயிகளிடம் சென்றடைவதை உறுதி செய்வதாலும் இந்த இலக்கை அடைய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 1.6: 2020-2021 ஆம் ஆண்டிற்கான திட்டம்

வ. எண்	பயிர்	பரப்பு (இலட்சம்/ எக்டர்)	உற்பத்தி (இலட்சம்/ மெ.டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்)
1	அரிசி	18.75	75.00	4000
2	சிறுதானியங்கள்	9.50	42.00	4421
3	பயறு வகைகள்	9.50	8.00	842
மொத்த உணவு தானியங்கள்			**125.00**	
4	எண்ணெய் வித்துக்கள்	5.40	13.62	2522
5	பருத்தி (*)	1.90	4.80	430
6	கரும்பு (**)	2.00	240.00	120
	மொத்தம்	**47.05**		

* உற்பத்தி இலட்சம் பொதிகள்; பொதி ஒன்றுக்கு 170 கிலோ

** கரும்பு உற்பத்தி (மெ.டன்/எக்டர்)

வேளாண்மையில் முழுமையான வளர்ச்சியினை அடையப் பின்வரும் உத்திகள் மேற்கொள்ளப்படும்.

1. விதை மாற்று விகிதத்தை (Seed Replacement Rate) அதிகரித்து விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

2. விவசாயிகளுக்குத் தரமான இடுபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.

[2020 மார்ச் 24

3. சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் அணுகுமுறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆகிய தொழில்நுட்பங்களை அதிக பரப்பளவில் பின்பற்றுதல்.

4. மண் பரிசோதனை அடிப்படையிலான மண் வளக் குறியீட்டின் அடிப்படையில் பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கான பரிந்துரைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவித்தல்.

5. அங்கக வேளாண் அணுகுமுறைகளால் மண் வளத்தை மேம்படுத்துதல், மண்புழு உரம் தயாரித்தல், புளூரோட்டஸ் காளான்மூலம் உரம் தயாரித்தல் மற்றும் பசுந்தாள் உரமிடுதல் போன்றவற்றை ஊக்குவித்தல்.

6. நுண்ணீர்ப் பாசனத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதோடு நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க கோடை உழவு, திருந்திய நெல் சாகுபடி, இயந்திர நடவு, திருந்திய பயறு சாகுபடி, திருந்திய கரும்பு சாகுபடி போன்ற நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களைப் பெருமளவில் ஊக்குவித்தல்.

7. நவீன தொழில்நுட்பங்களை ஏற்று செயல்படுத்துதல், இடுபொருட்கள் விநியோகம், இயந்திரமயமாக்குதல்மூலம் விவசாயிகளின் பணிச்சுமையை குறைத்தல், வேளாண் உற்பத்திப் பொருட்களை ஒன்று திரட்டுதல், சிறந்த விலை நிர்ணயத்திற்காக மதிப்புக் கூட்டலில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றின்மூலம் பண்ணை வருமானத்தை அதிகரிக்க குறிப்பிட்ட பயிர்களுக்கென தனிக் குழுக்களை உருவாக்க விவசாயிகளை ஒருங்கிணைத்தல்.

8. உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிகப் பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க குறிப்பிட்ட இடத்திற்கேற்ற பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களை செயல்படுத்துதல்.

9. மானாவாரி நில விவசாயத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைகளான நீர்சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினைப் பெருமளவில் செயல்படுத்துதல், மானாவாரி நிலத்திற்கு ஏற்ற வேளாண் இயந்திரங்களை எளிதில் அணுக உதவுதல்,

சிக்கன நீர் பயன்பாடு, மானாவாரி நிலப்பரப்பில் சாகுபடி, பசுமைப் போர்வை கொண்டுவருதல் மற்றும் கால்நடை சுகாதாரப் பராமரிப்பு நடவடிக்கைகள்மூலம் குடும்ப வருமானத்தை அதிகரித்தல், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டல் ஆகியவற்றின்மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.

10. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், பல்வகைப்படுத்துதல், மண்வள மேம்பாடு, பண்ணை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு கால்நடை வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற சகோதரத் துறை நடவடிக்கைகளுடன் பயிர் சாகுபடியை ஒருங்கிணைக்கும், ஒருங்கிணைந்த பண்ணை நடைமுறைகளை பெருமளவில் ஊக்குவித்தல்.

11. கூட்டுப் பண்ணையத் திட்டத்தின் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பண்ணை மற்றும் மதிப்புக் கூட்டல் இயந்திரங்கள் வழங்குதல், பண்ணை இயந்திரங்களை குத்தகைக்கு விடுதல், நுண்ணீர்ப் பாசனக் கருவிகள் மற்றும் வேளாண் இடுபொருட்களை விற்பதற்கான உரிமம், குடிமராமத்து பணிகள், மழைநீர் சேமிப்பு அமைப்புகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவற்றின்மூலம் பண்ணைசாரா வருமான வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதால் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.

12. தொழில்நுட்பங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்கு வேளாண்மையின் அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து தகவல் தொழில்நுட்பத்துடன்கூடிய விரிவாக்க சேவை வழங்குதல்.

13. உழவன் செயலியிலுள்ள "எனது பண்ணை வழிகாட்டி" சேவையின்மூலம் விவசாயிகள் விதைப்பு முதல் அறுவடை வரை செய்ய வேண்டிய உழவியல் முறை பற்றிய நிகழ்நேர தீர்வுகளை வழங்குதல்.

14. பூச்சி மற்றும் நோய் பாதிப்புகளுக்கு உரிய பரிந்துரையை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின்மூலம் உழவன் செயலியில் வழங்குதல்.

[2020 மார்ச் 24

15. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்துவதன்மூலம் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் வருமான இழப்பிலிருந்து மீள விவசாயிகளுக்குக் கை கொடுத்தல்.

1.2. பருவகால நிலை மற்றும் பயிரிடும் வாய்ப்புகள்:

தமிழ்நாட்டின் விவசாயம் பெரும்பாலும் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவத்தில் பெறப்படும் மழையின் அளவைப் பொறுத்தே அமைகிறது. மேட்டூர் அணையின் நீர் இருப்பு மற்றும் ஒரே சீரான பருவமழை டெல்டா பகுதிகளில் 2019-2020 ஆம் ஆண்டில் சிறந்த விளைச்சலைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மழையளவு மற்றும் வேறுபாடு விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 1.7: 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மழையளவு

வ. எண்	பருவம்	மழையளவு (மி.மீ.)			வேறுபாடு சதவீதம்	
		இயல்பு	2018	2019	இயல்பு	2018
1	குளிர் காலம் (ஜனவரி-பிப்ரவரி)	31.3	16.7	4.9	-84.3	-70.7
2	கோடை காலம் (மார்ச்-மே)	128.5	154.1	50.8	-60.5	-67.0
3	தென் மேற்குப் பருவம் (ஜீன்-செப்டம்பர்)	341.9	282.9	396.3	+15.9	+40.1
4	வட கிழக்குப் பருவம் (அக்டோபர்-டிசம்பர்)	445.7	336.5	453.5	+1.8	+34.8
	மொத்தம்	947.4	790.2	905.5	-4.4	+14.6

(ஆதாரம்: இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை)

2020 மார்ச் 24]

1.3. பயிர் நிலை:

மண் வகை, மழைப் பொழிவு, நீர்ப்பாசன முறை, பயிரிடும் முறை மற்றும் பிற சமூக-சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பொறுத்து நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பிற பயிர்களான பருத்தி மற்றும் கரும்பு ஆகியவை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்படுகின்றன. இருப்பினும், பருவமழை தொடங்குதல், அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர் இருப்பு மற்றும் போதுமான நிலத்தடி நீர்நிலை ஆகியவையே வெற்றிகரமான சாகுபடிக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

1.3.1. நெல்

தமிழ்நாட்டில் வேளாண்மை, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மக்களின் வாழ்வாதாரத்தின் முக்கிய அம்சமாகவும் உள்ளது. வேளாண் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான சிறந்த மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்ப முயற்சிகளை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மக்களின் பிரதான உணவாக அரிசி இருப்பதனால் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரிசி முக்கிய பங்கு வகிக்கிறது. மொத்த பயிர் சாகுபடிப் பரப்பில் 30 சதவீதம் நெல் பயிரிடப்படுகிறது. மாநிலத்தின் மொத்த பாசனப் பரப்பில் 50 சதவீதம் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நெற்பயிர் சாகுபடியின் இயல்பான பரப்பு 17.58 இலட்சம் எக்டர் மற்றும் இயல்பான உற்பத்தி 63.30 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். நெற்பயிரானது கார்/குறுவை/சொர்ணவாரி (ஏப்ரல்-ஜுலை), சம்பா/தாளடி/ பிசானம் (ஆகஸ்டு-நவம்பர்) மற்றும் நவரை/கோடை (டிசம்பர்-மார்ச்) ஆகிய மூன்று பருவங்களில் பயிரிடப்படுகின்றன. மொத்த நெற்பயிர் சாகுபடிப் பரப்பில் 36 சதவீதப் பரப்பில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், அரியலூர் மற்றும் கடலூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் 17.21 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 61.32 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அடையப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் இரண்டாம் முன்மதிப்பீட்டின்படி, 18.04 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 63.08 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அடையப்படும் என

[2020 மார்ச் 24

மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் 18.75 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி மேற்கொண்டு 75 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.8: நெல் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி (முதல் 10 மாவட்டங்கள்) 2018-2019

வ. எண்	மாவட்டங்கள்	பரப்பு (இலட்சம் எக்டர்)	வ. எண்	மாவட்டங்கள்	அரிசி உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)
1	திருவாரூர்	1.887	ww1	தஞ்சாவூர்	6.834
2	தஞ்சாவூர்	1.856	2	திருவாரூர்	6.564
3	நாகப்பட்டினம்	1.682	3	நாகப்பட்டினம்	5.681
4	கடலூர்	1.334	4	கடலூர்	4.996
5	இராமநாதபுரம்	1.256	5	விழுப்புரம்	4.962
6	விழுப்புரம்	1.105	6	திருவண்ணா மலை	3.908
7	திருவண்ணாமலை	0.970	7	திருவள்ளூர்	3.809
8	திருவள்ளூர்	0.889	8	திருநெல்வேலி	3.620
9	திருநெல்வேலி	0.830	9	காஞ்சிபுரம்	3.282
10	புதுக்கோட்டை	0.749	10	திருச்சிராப்பள்ளி	2.337

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு; இறுதி செய்யப்படாதது)

வேளாண் மண்டலங்களுக்கான உயர் விளைச்சல் நெல் இரகங்கள், நீர் வளப் பாதுகாப்பு, மனிதத் திறன் மேம்பாடு, குறைந்த பாசன நீரில் நேரடி நெல் விதைப்பு, திருந்திய நெல் சாகுபடி மற்றும் பாரம்பரிய நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்க விருதுகள் போன்ற உத்திகளைப் பின்பற்றி, அரிசி உற்பத்தியினை அதிகரிக்க மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

1.3.1.1 உயர் விளைச்சல் நெல் இரகங்கள்

உயர் விளைச்சல் இரகங்களின் தரம், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன், நெல்லின் சந்தை மதிப்பினை இறுதிசெய்யும் காரணியாக

2020 மார்ச் 24]


விளங்குகிறது. எனவே, உரிய நேரத்திலும், குறைந்த விலையிலும் தரமான உயர் விளைச்சல் இரகங்களின் விதைகளை வேளாண் பெருமக்களுக்கு கிடைப்பதை அரசு உறுதி செய்து வருகிறது.

அட்டவணை 1.9: பருவம் வாரியாக சாகுபடி மேற்கொள்ளப்படும் பிரபலமான நெல் இரகங்கள்:

பருவம்	இரகங்கள்
கார்/குறுவை/ சொர்ணவாரி	கோ-51, ஏடிடீ-36, ஏடிடீ-37, ஏடிடீ-43, ஏடிடீ (ஆர்)-45, ஏஎஸ்டி-16, ஐஆர்-50, டிகேஎம்-9, டிபிஎஸ்-5
சம்பா/தாளடி/ பிசானம்	பிபிடி-5204, சிஆர்-1009, சிஆர்-1009 (சப்1), என்எல்ஆர்-34449, ஏடிடீ-38, ஏடிடீ-39, டிகேஎம்-13, கோ (ஆர்)-50, ஜேஜிஎல்-1798, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, சுவர்ணா சப்-1, டிஆர்ஒய்-3
நவரை/கோடை	கோ-51, ஏடிடீ-36, ஏடிடீ-37, ஏடிடீ-43, ஏடிடீ (ஆர்)-45, ஏஎஸ்டி-16, ஐஆர்-50, டிகேஎம்-9


2019-2020 ஆம் ஆண்டில் வரைபட வடிவத்தில் பருவம் மற்றும் இரக வாரியான நெல் சாகுபடி பரப்பு விவரம்.

நெல் சாகுபடி பரப்பு—கார்/குறுவை/சொர்ணவாரி பருவம்




[2020 மார்ச் 24

நெல் சாகுபடி பரப்பு—சம்பா/தாளடி/பிசானம் பருவம்



நெல் சாகுபடி பரப்பு—நவரை/கோடை பருவம்



2020 மார்ச் 24]

1.3.1.2. புதிய நெல் இரகங்கள்

புதிதாக வெளியிடப்பட்டுள்ள நெல் இரகங்களை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. 2019 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட இரகங்களான மித நறுமணமுடைய மத்திய கால விஜிடி 1 (VGD 1) இரகம் மற்றும் குறுகிய கால ஏடிடீ 53 (ADT 53) இரகங்கள் 2020-2021 ஆம் ஆண்டில் விதைப் பெருக்கத்திற்காகவும் விநியோகத்திற்காகவும் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யப்படும்.

2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இரகங்களான வறட்சியினைத் தாங்கக்கூடிய குறுகிய கால கோ 53 (Co 53) மற்றும் மத்திய கால ஏடிடீ 54 (ADT 54) இரகங்கள் மத்திய அரசின் அறிவிக்கைக்குப் பின்னர் விதை உற்பத்தி மற்றும் பரவலாக்கம் மேற்கொள்ளப்படும்.

1.3.1.3. நீர்வளப் பாதுகாப்பு மற்றும் மனிதத் திறன் மேம்பாடு தொழில்நுட்பங்கள்

திருந்திய நெல் சாகுபடி (System of Rice Intensification)

உற்பத்தித் திறனும் பாசன நீரின் பயன்பாட்டுத் திறனும் அதிகரிப்பதோடு குறைந்த பணி ஆட்கள் மற்றும் இடுபொருட்கள்மூலம் பயிர் சாகுபடி செலவினை 25 முதல் 30 சதவீதம் வரை குறைக்க வழிவகை செய்யும் தொழில்நுட்பம் திருந்திய நெல் சாகுபடி முறையாகும்.

இத்தொழில்நுட்பத்தின் முக்கிய அம்சங்கள்

- தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல்/வீரிய ஒட்டு நெல் இரகங்கள் ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை அளவில் 1 சென்ட் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்தல்.
- நடவு வயலை நன்கு சமன்செய்தல், 14 நாள் வயதான நாற்றுக்களை 22.5 செ.மீ. x 22.5 செ.மீ. இடைவெளியில் குத்துக்கு 1-2 நாற்றுகள் வீதம் சதுர முறையில் நடவு செய்தல்.
- நீர் மறைய நீர் கட்டுதல்.
- கோனோவீடர் கருவியைக் கொண்டு நடவு செய்த 10 ஆம் நாள் முதல் பத்து நாட்களுக்கு ஒருமுறை வீதம் நான்கு முறை களையெடுத்தல்.

[2020 மார்ச் 24

o தேவையின் அடிப்படையில் தழைச்சத்தினை இடுதல்.

திருந்திய நெல் சாகுபடி முறை 2019-2020 ஆம் ஆண்டில் 10.78 இலட்சம் எக்டரில் செயல்படுத்தப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிலும் திருந்திய நெல் சாகுபடி முறையில் 11 இலட்சம் எக்டரில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.10: திருந்திய நெல் சாகுபடி பரப்பு 2019-2020

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)
1	தஞ்சாவூர்	1.306
2	விழுப்புரம்	1.125
3	திருவண்ணாமலை	1.040
4	திருவாரூர்	0.858
5	கடலூர்	0.857
6	நாகப்பட்டினம்	0.814
7	திருவள்ளூர்	0.610
8	திருநெல்வேலி	0.572
9	காஞ்சிபுரம்	0.493
10	திருச்சிராப்பள்ளி	0.379
11	புதுக்கோட்டை	0.366
12	வேலூர்	0.328
13	மதுரை	0.302
14	ஈரோடு	0.226
15	கிருஷ்ணகிரி	0.179
16	அரியலூர்	0.175
17	சேலம்	0.152
18	சிவகங்கை	0.135
19	தூத்துக்குடி	0.121
20	தருமபுரி	0.119
21	விருதுநகர்	0.110
22	கரூர்	0.101

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)
23	நாமக்கல்	0.090
24	திருப்பூர்	0.079
25	கன்னியாகுமரி	0.070
27	தேனி	0.061
26	திண்டுக்கல்	0.055
28	பெரம்பலூர்	0.051
29	கோயம்புத்தூர்	0.006
30	இராமநாதபுரம்	0.003
	மொத்தம்	**10.783**

1.3.1.4. நேரடி நெல் விதைப்பு முறை (Direct sowing)

பாசனநீர் பயன்பாட்டுத் திறன் மற்றும் நடவு முறையைவிட விரைவான பயிர் முதிர்ச்சி போன்ற நன்மைகளைக் கொண்ட மாற்று சாகுபடி முறையான நேரடி நெல் விதைப்பு முறை, 2019-2020 ஆம் ஆண்டில் 4.14 இலட்சம் எக்டர் பரப்பளவில் பரவலாக்கப்பட்டது. இத்தொழில்நுட்பம் 2020-2021 ஆம் ஆண்டில் 4.5 இலட்சம் எக்டர் பரப்பளவில் பரவலாக்கம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.11: நேரடி நெல் விதைப்பு (முதல் 10 மாவட்டங்கள்)-2019-2020

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)
1	இராமநாதபுரம்	1.271
2	திருவாரூர்	0.735
3	நாகப்பட்டினம்	0.674
4	சிவகங்கை	0.542
5	புதுக்கோட்டை	0.410
6	கடலூர்	0.183
7	தஞ்சாவூர்	0.093
8	விருதுநகர்	0.077
9	காஞ்சிபுரம்	0.041
10	திருவள்ளூர்	0.024

நேரடி நெல் விதைப்பினைப் பரவலாக்கும்பொருட்டு விவசாயிகளை ஊக்குவிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-8-2019 அன்று உழவு மானியம் வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கும் உள்ளூர்ப் பாசன வசதி கொண்ட டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கருக்கு ரூ.600/- வீதம் 5 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு ரூ.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் உழவு மானியம் வழங்கப்பட்டது.

குறைந்த அளவு விதையினைப் பயன்படுத்தி பயிர் எண்ணிக்கையினைப் பராமரிக்கும்பொருட்டு விதைப்புக் கருவியின்மூலம் நேரடி நெல் விதைப்பு 2019-2020 ஆம் ஆண்டில் 17,956 எக்டர் பரப்பளவில் ரூ.2.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1.3.1.5. நெல் இயந்திர நடவிற்கான மானியம் (Assistance for Machine Transplantation)

குறைந்த பணி ஆட்கள், பயிர் எண்ணிக்கை பராமரிப்பு மற்றும் அதிகத் தூர்களுடன் உற்பத்தித் திறன் அதிகரிப்பு போன்ற பயன்களை உடைய நெல் நடவு இயந்திரம்மூலம் இளம் நாற்று நடும் தொழில்நுட்பம் 2019-2020 ஆம் ஆண்டில் 40,000 எக்டர் பரப்பளவில் ரூ.20.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1.3.1.6. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (National Agriculture Development Programme)

2019-2020 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக உயர் விளைச்சல் தரக்கூடிய சான்று விதை உற்பத்திக்கான ஊக்கத்தொகை, சான்று நெல் விதைகள், நெல் நுண்ணூட்டக் கலவை, உயிர் உரங்கள் ஆகியவற்றிற்கான விநியோக மானியம், களைக்கொல்லி உபயோகத்திற்கான உதவித்தொகை, இயந்திர நெல் நடவிற்கான மானியம், விதைப்பு கருவியின்மூலம் நேரடி நெல் விதைப்பிற்கான உதவித்தொகை, உழவர் ஆர்வலர் குழுக்கள் அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்மூலம் திருந்திய நெல் சாகுபடி முறையினை அல்லது

இயந்திர நடவினை பரவலாக்கம் செய்வதற்கான மானியம், கோனோ களையெடுக்கும் கருவி மற்றும் நகரும் உலர் களங்களுக்கான (தார்பாலின்கள்) மானியம் ஆகியவற்றிற்காக ரூ.40.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டமானது 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.1.7. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம்-அரிசி (National Food Security Mission-Rice)

சாகுபடி பரப்பினை அதிகரித்தல், உற்பத்தித் திறனை உயர்த்துதல், தனிப்பட்ட பண்ணை உற்பத்தித் திறன் மற்றும் மண்வளத்தினை நிலைப்படுத்தி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு மாவட்டங்களான புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களான, தொகுப்பு செயல்விளக்கங்கள், பயிர் திட்டம் சார்ந்த செயல் விளக்கங்கள், உயர் விளைச்சல் தரக்கூடிய சான்று பெற்ற விதைகள் விநியோகம், உற்பத்தித் திறனை உயர்த்தும் இடுபொருட்கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள், பம்ப்செட் மற்றும் பயிர் திட்டம் சார்ந்த பயிற்சிகள் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.11.29 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.1.8. நெற்பயிரில் பூச்சி மேலாண்மை

நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ஆனைக்கொம்பன் ஈ மற்றும் புகையான் தாக்குதலைக் கண்டறிந்து அவற்றினைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியதோடு உரிய நடவடிக்கைகளையும் எடுத்தது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஆனைக்கொம்பன் ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்த எக்டருக்கு ரூ.500 வீதம் 16,400 எக்டர் பரப்பளவிற்கு ரூ.82 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

[2020 மார்ச் 24

அரசின் சீரிய முயற்சியினால், நெற்பயிரில் பூச்சியின் தாக்குதல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளில் சராசரி உற்பத்தி உறுதி செய்யப்பட்டது.

1.3.2. சிறுதானியங்கள்:

சிறுதானியங்கள் அனைத்துவித பருவ நிலைகளையும் தாங்கி வளரக்கூடியதாகும். குறைந்த மழையளவு மற்றும் மண் வளம் குன்றிய வறட்சி மற்றும் மித வறட்சி பகுதிகளிலும் நன்கு வளரும் தன்மையுடையது. சிறுதானியங்கள் மற்ற உணவு தானியங்களைவிட அதிக அளவு ஊட்டச்சத்துக்களை கொண்டவை. சிறுதானியங்கள் உணவு மற்றும் கால்நடை தீவனங்களுக்காக அதிக அளவில் பயிரிடப்படுகிறது. கலப்புப் பண்ணைய விவசாய முறைகளில் சிறுதானியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்றைய பருவகால சூழ்நிலைகளுக்கு, சிறுதானியங்கள் மிகச் சிறந்த மாற்றுப் பயிராகும். சிறுதானியமான மக்காச்சோளம், ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களான சோளம், கம்பு, ராகி மற்றும் இதர குறுதானியங்களான குதிரைவாலி, வரகு, தினை, சாமை மற்றும் பனிவரகு ஆகியவை தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கிய சிறுதானியப் பயிர்களாகும்.

அட்டவணை 1.12: தமிழ்நாட்டில் சிறுதானியங்கள் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்கள்:

வ. எண்	பயிர்	மாவட்டங்கள்
1	சோளம்	சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கரூர், திருப்பூர், நாமக்கல், திண்டுக்கல், விருதுநகர், தேனி.
2	கம்பு	விழுப்புரம், தூத்துக்குடி, மதுரை.
3	ராகி	தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம்.
4	மக்காச்சோளம்	நாமக்கல், சேலம், திருப்பூர், ஈரோடு, தேனி, பெரம்பலூர், அரியலூர், திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, கோயம்புத்தூர்.
5	குதிரைவாலி	மதுரை, விருதுநகர்.

வ. எண்	பயிர்	மாவட்டங்கள்
6	வரகு	கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர்.
7	சாமை	வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி.
8	தினை	சேலம், கடலூர், நாமக்கல்.
9	பனிவரகு	சேலம்.

அட்டவணை 1.13: 2018-2019 ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறுதானிய பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

வ. எண்	பயிர்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்)
1	மக்காச்சோளம்	3.905	28.344	7257
2	சோளம்	3.859	4.645	1204
3	கேழ்வரகு	0.786	2.560	3257
4	கம்பு	0.469	1.180	2517
5	சாமை	0.142	0.238	1680
6	வரகு	0.015	0.028	1898
7	தினை	0.007	0.003	472
8	இதர சிறுதானியங்கள்	0.059	0.081	1358
	மொத்தம்	**9.242**	**37.079**	

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு))

அட்டவணை 1.14: சிறுதானியங்கள் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் (10 முதன்மை மாவட்டங்கள்) 2018-2019

வ. எண்	மாவட்டம்	பரப்பளவு (எக்டர்)	வ. எண்	மாவட்டம்	உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)
1	சேலம்	93,145	1	பெரம்பலூர்	4.665
2	நாமக்கல்	86,523	2	சேலம்	4.344
3	தூத்துக்குடி	76,692	3	தூத்துக்குடி	4.264
4	திண்டுக்கல்	74,219	4	விருதுநகர்	2.970
5	பெரம்பலூர்	63,089	5	திண்டுக்கல்	2.484
6	திருப்பூர்	57,539	6	கிருஷ்ணகிரி	1.855
7	தருமபுரி	53,860	7	திருச்சிராப்பள்ளி	1.764
8	திருச்சிராப்பள்ளி	52,056	8	விழுப்புரம்	1.613
9	கிருஷ்ணகிரி	51,976	9	திருப்பூர்	1.610
10	விருதுநகர்	47,808	10	ஈரோடு	1.362

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

அட்டவணை 1.15: தமிழ்நாட்டில் பயிரிடப்படும் சிறுதானிய இரகங்கள்

வ. எண்	பயிர்	இரகங்கள்
1.	மக்காச்சோளம்	கோ (எச்) எம் 4, கோ (எச்) எம் 5, கோ (எச்) எம் 6, என்.கே 6240, ஆன்கூர் 3034, ஆர்.ஐ.எல் 009, எஸ் 6668
2.	சோளம்	கோ (எஸ்) 30, கோ (எஸ்) 28, கே 12, கே 11, சிஎஸ்வி 20

2020 மார்ச் 24]

வ. எண்	பயிர்	இரகங்கள்
3.	கம்பு	கோ 10, கோ (சியு) 9, தன்சக்தி, எம்.பி.யு 480
4.	கேழ்வரகு	கோ 13, கோ (ரா) 14, கோ 15, பையூர் (ரா) 2, ஜி.பி.யு 67, ஜி.பி.யு 28, எம்.எல்-365, கே.எம்.ஆர் 301 (கௌரி)
5.	வரகு	கோ 3, எபிகே 1, வம்பன் 1, டி.என்.ஏ.யூ 86
6.	சாமை	கோ (சா) 4, பையூர் 2, ஏ.டி.எல் 1
7.	தினை	கோ 6, கோ (தி) 7, ஏ.டி.எல் 1
8.	குதிரைவாலி	கோ 1, கே 1, கே 2, கோ (கேவி) 2, எம்டியூ 1

தமிழ்நாட்டில் சிறுதானியப் பயிர்கள் சராசரியாக 8.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் உற்பத்தி அளவானது 31.28 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். சிறுதானியப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் அதிகரித்துவரும் நிலையில் சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டதன் அடிப்படையில், 2018-2019 ஆம் ஆண்டில் 9.24 இலட்சம் எக்டர் பரப்பளவில் சிறுதானியங்கள் சாகுபடி செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் 2-வது முன்மதிப்பீட்டின்படி, 32.28 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டு சிறுதானியங்கள் 9.5 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடவும் 42 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1.3.2.1. புதிய சிறுதானிய இரகங்கள்:

புதிதாக வெளியிடப்பட்டுள்ள சிறுதானிய இரகங்களை பரவலாக்கம் செய்திட அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள உணவு மற்றும் தீவனப் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்ட சோளம் கோ 32 (Co 32) மற்றும் தினை அத்தியந்தல் 1 (ATL 1) இரகங்கள் மத்திய அரசின் அறிவிக்கைக்குப் பின்னர் விதை உற்பத்தி மேற்கொண்டு பரவலாக்கம் செய்யப்படும்.

[2020 மார்ச் 24

1.3.2.2. ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள்:

ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின்கீழ் ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள் திட்டம் கோயம்புத்தூர், திருப்பூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, ஈரோடு, கரூர், மதுரை, நாமக்கல், வேலூர், சேலம், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில், 2019-2020 ஆம் ஆண்டு உயரிய தொழில்நுட்பங்களுடன்கூடிய தொகுப்பு மாதிரி செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், சான்று விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம், வீரிய ஒட்டு இரக விதை விநியோகம் ஒருங்கிணைந்த உர நிருவாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிருவாகம், கைத்தெளிப்பான்கள் விநியோகம், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், விவசாயிகள் பயிற்சிகள் ஆகியவை ரூ.14.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.2.3. சிறுதானியம் (மக்காச்சோளம்):

மக்காச்சோளத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின்கீழ் சிறுதானியங்கள் (மக்காச்சோளம்) திட்டமானது சேலம், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர், திண்டுக்கல், தூத்துக்குடி, விழுப்புரம், விருதுநகர் மற்றும் கடலூர் ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.3.26 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொகுப்பு மாதிரி செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், மக்காச்சோள பயிரில் உளுந்து மற்றும் பாசிப் பயறு ஊடுபயிராக சாகுபடி செய்தல் மற்றும் வீரிய ஒட்டு இரக விதை விநியோகம் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டமானது தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.2.4. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்:-சிறுதானியங்கள்:

சிறுதானியங்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சான்று விதைகள் உற்பத்திக்கான ஊக்கத்தொகை

2020 மார்ச் 24]

மற்றும் விநியோக மானியம், நுண்ணூட்ட உரக்கலவை மற்றும் உயிர் உரங்கள் விநியோக மானியம் ஆகியவை ரூ.1.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2019-2020 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.2.5. மக்காச்சோளப் பயிரில் அமெரிக்கன் படைப்புழு மேலாண்மை

தமிழ்நாட்டில் மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை மேற்கொண்ட போதிலும், 2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 2,20,000 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மக்காச்சோளப் பயிரானது படைப்புழுவின் தாக்குதலுக்குள்ளானது. எனவே, படைப்புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோள விவசாயிகளின் நலனை பாதுகாக்கும்பொருட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரணத் தொகையாக ரூ.186.25 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. இதனால், தமிழ்நாடு முழுவதும் உள்ள 2,93,424 மக்காச்சோள விவசாயிகள் பயனடைந்தனர்.

2019-2020 ஆம் ஆண்டு, அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை எதிர்கொள்வதற்கு ஏதுவாக, மாநில அளவிலான பணிமனைகளும், மக்காச்சோளம் பயிரிடும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் மற்றும் இடுபொருட்கள் விற்பனையாளர்களுக்கு பிரச்சார கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் வாயிலாக அமெரிக்கன் படைப்புழு தாக்குதலை எதிர்கொள்வது குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

படைப்புழு தாக்குதலை விரைந்து கட்டுபடுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2019-2020 ஆம் ஆண்டு "ஒட்டுமொத்த முறையில் பூச்சிக்கொல்லி தெளித்தல்" என்னும் சிறப்பு திட்டமானது அறிவிக்கப்பட்டு, ரூபாய் 47.66 கோடி நிதியானது இத்திட்டத்திற்கென ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மக்காச்சோளம் விதைத்து 15 முதல் 20 ஆம் நாளில் அசாடிராக்டின் என்ற வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லியினை முதல்முறையாகவும், 40 முதல் 45 ஆம் நாளில் எதிர் உயிரி பூஞ்சாணக் கொல்லி அல்லது அனுமதிக்கப்பட்ட இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒன்றினை இரண்டாவது முறையாகவும் தெளித்திட 100 சதவீத

மானியமும் மற்றும் தெளிப்புக் கூலியாக எக்டருக்கு ரூ.1,000/- ஆக மொத்தம் எக்டர் ஒன்றுக்கு ரூ.5,500/- நிதி உதவி வழங்கப்பட்டது. பயிர் பாதுகாப்பு மருந்து தெளிப்புப் பணியானது உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் கிராமங்களில் மருந்து தெளிப்புப் பணி செய்துவரும் நபர்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினைக் குறித்த காலத்தில் விரைந்து செயல்படுத்தி 1,19,486 எக்டர் பரப்பளவிற்கு பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டன. குறித்த காலத்தில் இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்தியதால் மக்காச்சோள பயிரில் படைப்புழு தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டு விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும், படைப்புழு மேலாண்மைக்கான புதிய தொழில்நுட்ப உத்திகளை உருவாக்கவும் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசின் 2020-2021 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1.3.3. பயறு வகைப் பயிர்கள்

பயறு வகைப் பயிர்கள், மண்வளத்தைப் பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுவதுடன், மனிதர்களுக்குத் தேவையான புரதச்சத்தையும் வழங்குகிறது. துவரை, உளுந்து, பச்சைப் பயறு மற்றும் கொள்ளு ஆகியவை தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயறு வகை பயிர்களாகும். தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பயறு வகை பயிர்களின் இயல்பான பரப்பளவு 8.46 இலட்சம் எக்டராகவும், இயல்பான உற்பத்தி 5.59 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

அட்டவணை 1.16: தமிழ்நாடு-பயறு வகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம் 2018-2019

வ. எண்	பயிர்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)
1	உளுந்து	4.41	2.74	622
2	பச்சைப் பயறு	1.70	0.77	451

2020 மார்ச் 24]

வ. எண்	பயிர்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)
3	துவரை	0.41	0.52	1248
4	கொள்ளு	0.77	0.54	691
5	கொண்டைக்கடலை	0.06	0.05	926
6	இதர பயறு வகைகள்	1.15	0.89	780
	மொத்த பயறு வகைகள்	**8.50**	**5.51**	**648**

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு))

அட்டவணை 1.17: பயறு வகைகள் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் (10 முதன்மை மாவட்டங்கள்) 2018-2019

வ. எண்	மாவட்டங்கள்	பரப்பு (எக்டர்)	வ. எண்	மாவட்டங்கள்	உற்பத்தி (மெட்ரிக் டன்)
1	விழுப்புரம்	1,08,682	1	விழுப்புரம்	84,499
2	திருவாரூர்	84,465	2	தருமபுரி	43,553
3	நாகப்பட்டினம்	74,458	3	சேலம்	43,460
4	தூத்துக்குடி	66,094	4	கிருஷ்ணகிரி	42,212
5	கடலூர்	61,142	5	தூத்துக்குடி	38,118
6	திருவண்ணாமலை	54,597	6	கடலூர்	35,276
7	சேலம்	54,089	7	திருவண்ணாமலை	34,026
8	கிருஷ்ணகிரி	52,935	8	திருவாரூர்	29,134
9	தருமபுரி	49,394	9	வேலூர்	24,758
10	திருநெல்வேலி	37,692	10	நாகப்பட்டினம்	22,770

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

[2020 மார்ச் 24

அட்டவணை 1.18: பயறு வகைப் பயிர்களில் உயர் விளைச்சல் தரக்கூடிய இரகங்கள்

வ. எண்	பயிர்	இரகங்கள்
1.	துவரை	பி.ஆர்.ஜி 1, பி.ஆர்.ஜி 2, கோ 8, எல். ஆர்.ஜி 41, கோ (ஆர்.ஜி) 7, பி.ஆர்.ஜி 4, வம்பன் 3 & டிஜேடி 501
2.	உளுந்து	வம்பன் 3, வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 6, வம்பன் 7, வம்பன் 8, கோ 6, ஏடிடீ 3, எம்டியு 1, கேகேஎம் 1, ஏடிடீ 6, ஏடிடீ 5 & டியு 40 (பார்க்)
3.	பச்சைப் பயறு	வம்பன் 3, வம்பன் 4, கோ 8, கோ (ஜிஜி) 7, ஏடிடீ 3
4.	கொண்டைக்கடலை	ஜாக்கி 9218
5.	தட்டைப் பயறு	கோ (சிபி) 7 & வம்பன் 3
6.	கொள்ளு	பையூர் 2

1.3.3.1. பயறு வகைப் பயிர்களில் புதிய இரகங்கள்

தமிழ்நாடு அரசு 2019 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட உளுந்து இரகங்களான வம்பன் 9 (VBN 9) மற்றும் வம்பன் 10 (VBN 10) மற்றும் பச்சைப் பயறில் வம்பன் 4 (VBN 4) ஆகிய புதிய உயர் விளைச்சல் தரும் இரகங்களை விதைப்பெருக்கம் செய்து 2020-2021 ஆம் ஆண்டு விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2020-2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட வம்பன் 11 (VBN 11) உளுந்து இரகமானது உரிய அறிவிக்கை செய்யப்பட்ட பின் விதைப்பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

1.3.3.2. பயறு வகைப் பயிர்களுக்கான திட்டங்கள்

பயறு வகைப் பயிர்கள் குறுகிய காலத்தில் பலன் தருவதாகவும், குறைந்த அளவே பாசன நீர்த் தேவை கொண்ட பயிராகவும்

விளங்குவதால், ஆண்டு முழுவதும் சாகுபடி செய்ய ஏற்றவை. பயறு வகை உற்பத்தியில் தன்னிறைவு அடையவும், பயிரிடும் திறனை அதிகரித்து விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற வழிவகை செய்யவும், உயர் விளைச்சல் தரக்கூடிய புதிய இரகங்கள் பரவலாக்கம், டை அம்மோனியம் பாஸ்பேட் 2% கரைசல் இலைவழி தெளிப்பு, வரிசை விதைப்பு போன்ற பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இதன் காரணமாக, 2010-2011 ஆம் ஆண்டின் பயறு வகை பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் முறையே 6.37 இலட்சம் எக்டர், 2.45 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் எக்டருக்கு 385 கிலோவிலிருந்து, 2018-2019 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீட்டின்படி, பயறு வகை பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் முறையே 8.50 இலட்சம் எக்டர், 5.51 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் எக்டருக்கு 648 கிலோவாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (பயறு வகை) பயறு வகை உற்பத்தியில் தன்னிறைவை அடைய பெரும்பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின்மூலம் தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள், தரமான உயர் விளைச்சல் தரவல்ல பயறு வகை விதை உற்பத்திக்கான மானியம், உயர் விளைச்சல் பயறு வகை விநியோகத்திற்கான மானியம், பயிர் மற்றும் மண் வளத்தைப் பாதுகாத்திட நுண்ணூட்ட சத்துக்கள், உயிர் உரங்கள், ஜிப்சம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியன மானிய விலையில் வழங்கப்படுகின்றன. மேலும், உழவுப் பணிகளை மேற்கொள்ள சுழற்கலப்பைகள், விசைதெளிப்பான்கள், வயலுக்கு நீர் கொண்டுசெல்லும் குழாய்கள் மற்றும் அறுவடையான பயறு வகைகளை உலர வைக்கவும், அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கவும் ஏதுவாக தார் பாய்கள் ஆகியன மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத்திட்டம், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.40.12 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டிலும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (பயறு வகை) தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.3.3. நஞ்சைத் தரிசில் பயறு சாகுபடி

தமிழ்நாட்டில் சம்பா நெல் அறுவடைக்குப் பின் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் நிலத்தில் எஞ்சியுள்ள ஈரத் தன்மையினை

முழுமையாகப் பயன்படுத்திடும் நோக்கில், "நஞ்சைத் தரிசில் பயறு சாகுபடி" என்ற திட்டம் 2019-2020 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 11,200 எக்டர் பரப்பில் ரூ.3.20 கோடி செலவில், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (பயறு வகை) செயல்படுத்தப்படாத கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தில், தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், உயர் விளைச்சல் இரக விதைகள் மற்றும் முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்குதல் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள், நீர் மேலாண்மைக்காக நீர் ஆதாரங்களிலிருந்து வயலுக்கு நீர் எடுத்துச்செல்லும் குழாய்கள் ஆகியன விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.3.4. பயறு உற்பத்தியை அதிகரிக்க சிறப்புத் திட்டம்

பயறு உற்பத்தித் திறன் குறைவாக உள்ள மாவட்டங்களில் பயறு உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இத்திட்டத்திற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் இரக விதைகள் மானிய விலையில் வழங்குதல், விதை விதைப்புக் கருவிமூலம் விதைப்பதற்கு ஊக்கத்தொகை அளித்தல் ஆகியன இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும். இத்திட்டம், 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் 20,000 எக்டர் பரப்பில் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1.3.3.5. தமிழ்நாடு வேளாண் விற்பனைத் துறையின்மூலம் விலை ஆதரவுத் திட்டம்

பயறு வகைப் பயிர்களுக்கு உரிய இலாபகரமான விலை கிடைத்திடும்பொருட்டு, தமிழ்நாடு வேளாண் விற்பனைத் துறையின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விவசாயிகளிடமிருந்து பயறு வகைகளை நேரடியாகக் கொள்முதல் செய்து, விலை ஆதரவுத் திட்டத்தினை தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மூலம் 2017-2018 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

2020 மார்ச் 24]

அட்டவணை 1.19: 2019-2020 ஆம் ஆண்டில் விலை ஆதரவுத் திட்டத்தின்கீழ் பயறு வகைகள் கொள்முதல் செய்யப்பட்ட விவரம்

வ. எண்	பயறு வகை (காரீப்)	குறைந்தபட்ச ஆதரவு விலை (ரூ. கிலோவிற்கு)	மொத்த கொள்முதல் (மெட்ரிக் டன்) (இதுவரை)	மொத்த தொகை (இலட்சத்தில்) (இதுவரை)
1.	துவரை	58.00	268.30	155.61
2.	உளுந்து	57.00	6.85	3.90
3.	பச்சைப் பயறு	70.50	68.85	48.50
மொத்தம்			**344.00**	**208.01**

இத்திட்டம், ரபி பருவம் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.4. எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப்பனை

1.3.4.1. எண்ணெய்வித்துக்கள்

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துக்கள் சராசரியாக 3.83 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, 9 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு, எக்டருக்கு 2,350 கிலோ உற்பத்தித் திறன் என்ற அளவில் உள்ளது. தமிழ்நாட்டில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு போன்ற எண்ணெய்வித்துப் பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. எண்ணெய்வித்துக்களில் 10.382 இலட்சம் மெ.டன் உற்பத்தி அடைந்ததற்காக 2017-2018 ஆம் ஆண்டின் மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. தேசிய அளவில் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தித் திறனில் (எக்டருக்கு 2,729 கிலோ) முதலிடத்தை தமிழ்நாடு தக்க வைத்துள்ளது. இது அகில இந்திய சராசரி உற்பத்தித் திறனான 1,284 கிலோ என்ற அளவைவிட 113 சதவீதம் அதிகரித்துள்ளது.

அட்டவணை 1.20: தமிழ்நாடு- எண்ணெய்வித்துக்கள் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம்-2018-2019

வ. எண்	பயிர்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் (மெட்ரிக் டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்)
1.	நிலக்கடலை	3.355	9.112	2,716
2.	எள்	0.446	0.244	548
3.	சூரியகாந்தி	0.050	0.035	689
4.	ஆமணக்கு	0.048	0.015	312
5.	இதர எண்ணெய்வித்துக்கள்	0.003	0.001	232
	மொத்தம்	**3.902**	**9.407**	**2,411**

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு) (இறுதி மதிப்பீடு)

அட்டவணை 1.21: எண்ணெய்வித்துக்கள் பயிரிடப்படும் முதல் பத்து மாவட்டங்களின் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் 2018-2019

வ. எண்	மாவட்டம்	பரப்பு (இலட்சம் எக்டர்)	வ. எண்	மாவட்டம்	உற்பத்தி (இலட்சம் (மெட்ரிக் டன்)
1	திருவண்ணாமலை	0.754	1	திருவண்ணாமலை	2.007
2	விழுப்புரம்	0.455	2	விழுப்புரம்	1.204
3	நாமக்கல்	0.339	3	வேலூர்	0.843
4	வேலூர்	0.334	4	கடலூர்	0.614
5	ஈரோடு	0.246	5	காஞ்சிபுரம்	0.605

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	பரப்பு (இலட்சம் எக்டர்)	வ. எண்	மாவட்டம்	உற்பத்தி (இலட்சம் (மெட்ரிக் டன்)
6	சேலம்	0.218	6	நாமக்கல்	0.479
7	காஞ்சிபுரம்	0.157	7	ஈரோடு	0.411
8	கிருஷ்ணகிரி	0.137	8	கிருஷ்ணகிரி	0.394
9	கடலூர்	0.124	9	அரியலூர்	0.380
10	புதுக்கோட்டை	0.117	10	சேலம்	0.360

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

அட்டவணை 1.22: தமிழ்நாட்டில் பயிரிடப்படும் எண்ணெய்வித்து இரகங்கள்

வ. எண்	பயிர்	இரகங்கள்
1.	நிலக்கடலை	டி.எம்.வி 14, வி.ஆர்.ஐ 8, கோ 6, கோ 7, வி.ஆர்.ஐ 6, வி.ஆர்.ஐ 7, தரணி, டி.எம்.வி 7, டி.எம்.வி 13, ஐ.சி.ஜி.வி 00350, ஐ.சி.ஜி.வி 91114, ஜி.ப்பி.பி.டி 5, கதிரி 6, கதிரி 9, ஜி.ஜெ.ஜி 9, ஜி.ஜெ.ஜி 31, ஜி.ஜெ.ஜி 32
2.	எள்	டி.எம்.வி 7, வி.ஆர்.ஐ 3, டி.எம்.வி 3, டி.எம்.வி 5, வி.ஆர்.ஐ 1, வி.ஆர்.ஐ 2, எஸ்.வி.பி.ஆர் 1
3.	சூரியகாந்தி	கோ 1, கோ எச் 3, கோ 4, டி.என்.ஏ.யு எஸ்.எப் வீரிய ஒட்டு இரகம் 2, கோ 5, கே.பி.எஸ்.எச் 1, டி.ஆர்.எஸ்.எப் 108
4.	ஆமணக்கு	டி.எம்.வி 5, டி.எம்.வி 6, கோ 1, ஒய்.ஆர்.சி.எச் 1, ஒய்.ஆர்.சி.எச் 2

1.3.4.1.1. எண்ணெய்வித்துக்களில் புதிய இரகங்கள்:-

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட அதிக மகசூல் தரும் புதிய எண்ணெய்வித்து இரகங்களை பிரபலப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. நிலக்கடலை பயிரில் டிஎம்வி 14 (TMV 14), வி.ஆர்.ஐ 8 (VRI 8), பிஎஸ்ஆர் 2 (BSR 2), எள் பயிரில் விஆர்ஐ 3 (VRI 3), சூரியகாந்தி பயிரில் கோஎச் 3 (CoH 3) மற்றும் ஆமணக்கு பயிரில் ஒய்.ஆர்.சி.எச் 2 (YRCH 2) ஆகிய இரகங்களின் விதைகள் பெருக்கம் செய்யப்பட்டு, 2020-2021 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது.

1.3.4.1.2. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்-எண்ணெய்வித்துக்கள்

2019-2020 ஆம் ஆண்டில், தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்-எண்ணெய்வித்துக்கள் திட்டம் ரூ.16.42 கோடி நிதி ஒதுக்கீட்டில், கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, வல்லுநர் விதை உற்பத்தி, உரிய காலத்தில் சான்று விதைகளின் உற்பத்தி மற்றும் விநியோகம், புதிய சாகுபடி தொழில்நுட்பங்களைப் பெருமளவு விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் நிலக்கடலையில் செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், ஜிப்சம் இடுதல், உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லிகள் மற்றும் விசைத் தெளிப்பான்கள் வழங்குதல் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்-எண்ணெய்வித்துகள் திட்டம் 2020-2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.4.1.3. நஞ்சைத் தரிசில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி

தமிழ்நாட்டில் சம்பா நெல் அறுவடைக்குப் பின் நிலத்தில் எஞ்சியுள்ள ஈரத் தன்மையினை முழுமையாகப் பயன்படுத்திடும் நோக்கில், நஞ்சை தரிசில் எண்ணெய்வித்து வகைப் பயிர்களின் சாகுபடியை மேம்படுத்தும்பொருட்டு நஞ்சைத் தரிசில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி என்ற திட்டம் தஞ்சாவூர்,

2020 மார்ச் 24]

திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.48 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், நுண்ணூட்டக் கலவை, நிலக்கடலைக்கு ஜிப்சம் விநியோகம், உயிர் பூச்சிக்கொல்லிகள், நீர் ஆதாரத்திலிருந்து வயலுக்கு நீர் எடுத்துச்செல்லும் குழாய்கள் ஆகியன மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (எண்ணெய்வித்து) செயல்படுத்தப்படாத கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.4.2. எண்ணெய்ப்பனை

1.3.4.2.1. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (எண்ணெய்ப்பனை)

தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (எண்ணெய்ப்பனை) சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைவதற்காகவும், இறக்குமதியைக் குறைக்கும் குறிக்கோளோடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணெய்ப்பனை கன்றுகள் விநியோகம், எண்ணெய்ப்பனை வயல்களில் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் செய்தல், பம்புசெட், குழாய்க் கிணறு, எண்ணெய்ப்பனை அறுவடைக் கருவி, பழக்குலை அறுவடை இயந்திர விநியோகம் மற்றும் ஒரு எக்டருக்கு 8 மெட்ரிக் டன்னிற்கு மேல் எண்ணெய்ப்பனை குலைகள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி மானியம் வழங்குதல் போன்ற இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் ரூபாய் 4.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 24

அட்டவணை 1.23: தமிழ்நாட்டில் எண்ணெய்ப்பனை சாகுபடி பரப்பு மற்றும் பழக்குலை உற்பத்தி விவரம்-2019-2020 (முதல் 10 மாவட்டங்கள்)

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (எக்டர்)	வ. எண்	மாவட்டங்கள்	பழக்குலை உற்பத்தி (மெட்ரிக் டன்)
1	கடலூர்	761	1	தஞ்சாவூர்	1187.90
2	விழுப்புரம்	681	2	விழுப்புரம்	842.90
3	தஞ்சாவூர்	541	3	கடலூர்	768.30
4	திருவாரூர்	180	4	திருவாரூர்	200.80
5	நாகப்பட்டினம்	148	5	நாகப்பட்டினம்	110.80
6	திருவண்ணாமலை	142	6	தேனி	91.79
7	பெரம்பலூர்	122	7	அரியலூர்	89.10
8	திருச்சிராப்பள்ளி	121	8	திருச்சிராப்பள்ளி	51.30
9	அரியலூர்	117	9	பெரம்பலூர்	45.30
10	கரூர்	100	10	திருப்பூர்	36.18

(ஆதாரம்: அங்கீகரிக்கப்பட்ட எண்ணெய்ப்பனை நிறுவனங்கள்)

1.3.4.3. எண்ணெய்வித்து மரப் பயிர்கள்

1.3.4.3.1. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்- எண்ணெய்வித்து மரப் பயிர்கள்

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்து மரப் பயிர்களின்கீழ் சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும், பயன்பாடற்ற நிலங்களின் வளத்தினை புனரமைப்பதற்காகவும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (எண்ணெய்வித்து மரப் பயிர்) காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், புதுக்கோட்டை, மதுரை,

2020 மார்ச் 24]

தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேம்பு மற்றும் புங்கன் மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான நாற்றங்கால் அமைப்பதை ஊக்குவித்தல், தரிசு நிலங்களில் சாகுபடி செய்தல், ஏற்கெனவே பயிர் செய்யப்பட்டுள்ள வயல்களில் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல் போன்ற இனங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் ரூபாய் 0.99 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.5. தென்னை

நீண்டகால பயிரான தென்னை தமிழ்நாட்டில் 4.40 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 52,140 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு ஒரு எக்டர் பரப்பில் 11,560 தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னை வளர்ச்சி வாரிய திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் தென்னையில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர்த்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்னை அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்களும் அம்மாவட்டங்களில் உள்ள பரப்பு மற்றும் உற்பத்தி தொடர்பான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன. (10 முதன்மை மாவட்டங்கள்)

அட்டவணை 1.24: தென்னை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி 2018-2019 (10 முதன்மை மாவட்டங்கள்)

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (எக்டர்)	வ. எண்	மாவட்டங்கள்	உற்பத்தி (இலட்சம் காய்கள்)
1	கோயம்புத்தூர்	87,702	1	கோயம்புத்தூர்	12,506
2	திருப்பூர்	61,249	2	தஞ்சாவூர்	6,147
3	தஞ்சாவூர்	38,116	3	திருப்பூர்	5,018

வ. எண்	மாவட்டங்கள்	சாகுபடி பரப்பு (எக்டர்)	வ. எண்	மாவட்டங்கள்	உற்பத்தி (இலட்சம் காய்கள்)
4	திண்டுக்கல்	28,829	4	வேலூர்	2,769
5	கன்னியாகுமரி	24,574	5	கன்னியாகுமரி	2,759
6	தேனி	21,444	6	தேனி	2,126
7	வேலூர்	20,652	7	கிருஷ்ணகிரி	1,955
8	திருநெல்வேலி	16,534	8	திண்டுக்கல்	1,916
9	கிருஷ்ணகிரி	15,167	9	தருமபுரி	1,690
10	ஈரோடு	14,315	10	விருதுநகர்	1,595

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரியம் ரூ.14.50 கோடி நிதியுதவி அளித்துள்ளது. தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.5.1. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளைப் புதுப்பித்தல்

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளை புதுப்பிக்க இரு முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளுக்கான

(அ) வாழ்வாதார தொகுப்புத் திட்டம்-ரூ.81.015 கோடி

(ஆ) சிறப்பு தொகுப்புத் திட்டம் (தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதியுதவியுடன்)-ரூ.92 கோடி

(அ) கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளுக்கான வாழ்வாதார தொகுப்புத் திட்டம்:

1. தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்:

இவ்வினத்தின்கீழ், 35 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிடப்பட்டதில் இதுவரை 30.22 இலட்சம் தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4.78 இலட்சம் தென்னங்கன்றுகள் மாநில தோட்டக்கலைப் பண்ணைகளில் வளர்ச்சி நிலையில் உள்ளன. இவை விரைவில் வழங்கப்படும்.

2. தென்னையில் சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் ஊடுபயிர் சாகுபடி:

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விவசாயிகளுக்கு தென்னையில் ஊடுபயிர் செய்வதற்காக சிறுதானிய பயிர்களான மக்காச்சோளம், கேழ்வரகு மற்றும் குதிரைவாலி, பயறு வகைகளான உளுந்து மற்றும் பச்சைப் பயறு மற்றும் எண்ணெய்வித்துப் பயிரான எள் ஆகியவற்றின் விதைகள் மற்றும் அத்தியாவசிய இடுபொருட்களான நுண்ணூட்டக் கலவை, உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லி ஆகியவை 50,240 எக்டர் பரப்பிற்கு வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

3. நுண்ணீர்ப் பாசனம்:

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளில் 15,000 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனக் கருவிகளை அமைக்க திட்டமிடப்பட்டதில் இதுவரை, 7,781 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப் பாசன கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.


(ஆ) கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சிறப்பு தொகுப்புத் திட்டம்

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வெட்டி அப்புறப்படுத்தவும், மறுநடவு செய்யவும் மற்றும் சிறிய அளவிலான தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைக்கவும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதியுதவியுடன் ரூ.92 கோடி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.3.5.2. தென்னையில் நுண்ணீர்ப் பாசனம்:

தமிழ்நாட்டில் தென்னை 4.40 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டத்தின்கீழ் தென்னைக்கு சொட்டுநீர்ப் பாசன வசதி அளிக்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டு முதல் தென்னையில் 10,727 எக்டர் பரப்பில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு முயற்சிகளின் காரணமாக தென்னையில் நுண்ணீர்ப் பாசன பரப்பு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அதன் விவரம் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது:-

வருடம்	தென்னையில் நுண்ணீர்ப் பாசன பரப்பு (எக்டர்)
2017-2018	105
2018-2019	5,278
2019-2020	5,344
மொத்தம்	**10,727**



2020 மார்ச் 24]

பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.5.3. தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துதல்:

தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈக்களின் தாக்குதல், கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், கடலூர், ஈரோடு, சேலம், கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. ரூகோஸ் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தவும் மேலும் பரவாமல் தடுக்கவும் வேளாண்மைத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நன்மைதரும் பூச்சிகளை தோப்பில் விடுதல், மஞ்சள் ஒட்டு பொறி அமைத்தல், மஞ்சள் விளக்கு பொறி அமைத்தல் மற்றும் அதிக விசையுடன் தண்ணீர் அடித்தல் போன்ற நடவடிக்கைகளால் ரூகோஸ் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தவும் மேலும் பரவாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.3.6. கரும்பு

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் வணிகப் பயிர்களில் கரும்பு ஒரு முக்கிய வணிகப் பயிராகும். இப்பயிர், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் 2.14 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஒரு எக்டருக்கு சராசரியாக 99 மெட்ரிக் டன் உற்பத்தி திறனுடன் 211 இலட்சம் மெட்ரிக் டன் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக உற்பத்தி செய்யப்படுகிறது.

அட்டவணை 1.25: கரும்பு சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி (முதல் பத்து மாவட்டங்கள்)–2018-2019

வ. எண்	மாவட்டம்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)	மாவட்டம்	கரும்பு உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)
1.	விழுப்புரம்	0.480	விழுப்புரம்	48.748
2.	திருவண்ணாமலை	0.181	கடலூர்	19.975

வ. எண்	மாவட்டம்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)	மாவட்டம்	கரும்பு உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)
3.	கடலூர்	0.171	திருவண்ணாமலை	16.865
4.	ஈரோடு	0.122	ஈரோடு	15.808
5.	நாமக்கல்	0.108	நாமக்கல்	12.687
6.	வேலூர்	0.056	வேலூர்	5.597
7.	சேலம்	0.056	சேலம்	5.345
8.	திருவள்ளூர்	0.055	தஞ்சாவூர்	4.530
9.	தருமபுரி	0.049	திருவள்ளூர்	4.528
10.	தஞ்சாவூர்	0.048	தருமபுரி	4.481

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

தமிழ்நாட்டில் கரும்பில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு ஏற்ற உயர் விளைச்சல் கரும்பு இரகங்களான கோ 86032 மற்றும் புதிய உயர் விளைச்சல் கரும்பு இரகங்களான கோ 0212, கோ 09004, கோ 06030, கோஜி 06 மற்றும் கோ 11015 சாகுபடி செய்ய அரசு ஊக்கமளிக்கிறது. கோ-11015 கரும்பு இரகம் உயர்தர, குறுகிய கால (எட்டு மாதம்), அதிக மகசூல் உடைய கரும்பு இரகமாக விளங்குவதால் 2019-2020 ஆம் ஆண்டில் அரசின் சீரிய முயற்சியால் இதுவரை 1,050 எக்டர் பரப்பளவில் இந்த இரகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த இரகத்தை 2020-2021 ஆம் ஆண்டில் 7,000 எக்டர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.


தமிழ்நாடு அரசு கரும்பில் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி ஊக்கமளித்து வருகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் சர்க்கரை ஆலைகளால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கரும்பில் பயிர் சார்ந்த மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் 2019-2020 ஆம்

2020 மார்ச் 24]

நிதியாண்டில், ரூ.75.90 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கரும்பிற்கான தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு பயிர் அதிக நீர் தேவைப்படும் பயிர். ஆதலால் பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டம் மற்றும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டங்கள் வாயிலாக நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவ ஊக்கமளிக்கப்படுகிறது. கரும்பு விவசாயிகளின் சுமைகளைக் குறைத்து கரும்பில் சொட்டுநீர்ப் பாசனப் பரப்பை அதிகரிக்கவும், கரும்புப் பயிரில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கு பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்ட மானியத்துடன் மாநில அரசு கூடுதல் உபகரணங்களுக்கு மானியமாக 16,000 எக்டர் பரப்பளவிற்கு ரூ.68.35 கோடி நிதி வழங்கி கரும்பு சாகுபடிக்கு ஊக்கமளித்து வருகிறது.

கரும்பில் நுண்ணீர் பாசன பரப்பளவு (எக்டேர்)



தமிழ்நாடு அரசின் பல்வேறு முயற்சிகளால் 2018-2019 ஆம் ஆண்டு முதல் கரும்பில், நுண்ணீர்ப் பாசன பரப்பளவு உயர்ந்து கொண்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில் கரும்பிற்கான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், கரும்பு ஆலைகள் மூலமாகவும், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், வேளாண் துறை மூலமாகவும் செயல்படுத்தப்படும். சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கும் கரும்பு விவசாயிகளுக்கு பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்ட

[2020 மார்ச் 24

மானியத்துடன் மாநில அரசு 34,000 எக்டர் பரப்பளவிற்கு கூடுதல் உபகரணங்களுக்கு மானியமாக ரூ.150 கோடி நிதி ஒதுக்கி திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.3.7. பருத்தி

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் வணிக பயிர்களில் வெள்ளை தங்கம் என்று அழைக்கப்படும் பருத்தி பயிர் இயற்கை இழை தரக்கூடிய ஒரு முக்கிய வணிகப் பயிராகும். தேசிய அளவில் தமிழ்நாடு பருத்தி சாகுபடியில் தனித்துவம் பெற்ற மாநிலமாகத் திகழ்கிறது. ஜவுளி தொழிற்துறையை மேம்படுத்தி பருத்தி விவசாயிகளுக்கு நிலையான வருவாயை உறுதிப்படுத்த இப்பயிர் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் பருத்தி சராசரியாக 1.6 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 3.66 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தமிழ்நாடு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அட்டவணை 1.26: பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி (முதல் 10 மாவட்டங்கள்) 2018-2019

வ. எண்	மாவட்டம்	சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்)	மாவட்டம்	உற்பத்தி (இலட்சம் பொதிகள்)
1.	விருதுநகர்	0.194	விருதுநகர்	0.328
2.	பெரம்பலூர்	0.139	சேலம்	0.318
3.	சேலம்	0.094	திருவாரூர்	0.306
4.	அரியலூர்	0.093	பெரம்பலூர்	0.302
5.	மதுரை	0.093	தருமபுரி	0.230
6.	தருமபுரி	0.092	அரியலூர்	0.218
7.	திருச்சிராப்பள்ளி	0.089	திருச்சிராப்பள்ளி	0.211
8.	திருவாரூர்	0.067	மதுரை	0.171
9.	தூத்துக்குடி	0.062	திண்டுக்கல்	0.161
10.	கடலூர்	0.059	நாகப்பட்டினம்	0.124

(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி செய்யப்படாதது))

2020 மார்ச் 24]

1.3.7.1. தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம்

தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் 2014-2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. இத்திட்டம், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி பரப்பினை உயர்த்த செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பருத்திப் பயிர் ஜவுளி தொழிலுக்கு பருத்தி இழைகள் வழங்குவதோடு, பருத்தி விதைகள் புரதச்சத்து மற்றும் எண்ணெய் சத்தும் நிறைந்து உள்ளதால் கால்நடைத் தீவன உற்பத்தி மற்றும் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முக்கிய மூலப்பொருளாக விளங்குகிறது. பருத்தி சாகுபடியானது ஊரக மற்றும் கிராமப்புற வளர்ச்சியை மேம்படுத்துவதால் தேசியப் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, பருத்தி பயிர், இயற்கை இழை உற்பத்தி, கால்நடைத் தீவனம் மற்றும் எண்ணெய் உற்பத்திக்கு ஆதாரமாக விளங்குவதால் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் தமிழ்நாடு நீண்ட மற்றும் மிக நீண்ட இழைப் பருத்தி உற்பத்தி செய்வதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. விவசாயிகள் அதிக வருவாய் ஈட்ட உயர் விளைச்சல் மற்றும் உயர்தர பருத்தி இரகங்களான எஸ்.வி.பி.ஆர் 4 (SVPR 4), எஸ்.வி.பி.ஆர் 5 (SVPR 5), கோ 14 (Co 14), சுரபி, சூரஜ் இரகங்களை சாகுபடி செய்ய ஊக்கம் அளிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பருத்தி விவசாயிகளுக்காக நடப்பாண்டில் கோ 17 (Co 17) என்ற குறுகிய கால, அதிக காய்களுடைய மற்றும் ஒரே சமயத்தில் முதிர்ச்சி அடையக்கூடிய காய்களை உடைய புதிய பருத்தி இரகம் வெளியிட்டுள்ளதைத் தொடர்ந்து, மத்திய அரசின் அறிவிக்கை பெற்றவுடன் 2020-2021 ஆம் ஆண்டில் இந்தப் புதிய இரகத்தை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உயர்தர பருத்தி உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு அதிக கொள்முதல் விலை கிடைக்க செய்யவும், பருத்தி நூற்பாலைகளின் பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், 2020-2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் சிறப்புக் கவனம் செலுத்தி செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடியை மேம்படுத்த விழுப்புரம், சேலம், தருமபுரி, பெரம்பலூர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, மிக நீள இழைப் பருத்தி உற்பத்தி, பருத்தி பயிரில் ஊடுபயிர் சாகுபடி மற்றும் அடர் நடவுக்கான முன்மாதிரி செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல் போன்ற செயலாக்க இனங்கள் ரூ.68.79 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.4. தமிழ்நாடு அரசின் வேளாண்மை சிறப்புத் திட்டங்கள்

1.4.1. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் (MSDA) மானாவாரி சாகுபடி விவசாயிகளுக்கான ஒரு சிறப்பான முன்முயற்சி

தமிழ்நாடு அரசு, மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு ரூ.802.90 கோடி மதிப்பிலான "நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்" என்ற சிறப்புத் திட்டத்தினை 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்கான கூட்டத் தொடரில் அறிவித்து ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின் வாயிலாக 25 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் 2,500 ஏக்கர் அளவிலான 1,000 மானாவாரி தொகுப்புகளாக உருவாக்கி, 2016-2017 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகளில் மானாவாரி விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்தியும், பண்ணை இயந்திரங்களைப் பயன்படுத்தியும் மானாவாரி நிலத்தில் பயிரிடப்படும் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் மற்றும் பருத்தி பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதோடு விவசாய விளைபொருட்களை மதிப்புக் கூட்டுவதன்மூலம் அதிக விலை கிடைக்கச் செய்தும் கால்நடை பராமரிப்பு, பழ மரக்கன்றுகள், பயன்தரும் மரக்கன்றுகள் மற்றும் பனைமர சாகுபடி போன்ற

2020 மார்ச் 24]

சிறப்பு கூடுதல் வருமானம் ஈட்டும் அம்சங்களும் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ், வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளான வேளாண்மைப் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தோட்டக்கலைத் துறை வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளில் முதற்கட்டமாக 25 மாவட்டங்களில் 200 மானாவாரி தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, 5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் மேம்பாட்டுக்காக ரூ.139.46 கோடி நிதி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 2.15 இலட்சம் மானாவாரி விவசாயிகள் பயனடைந்தனர்.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட செயல்பாடுகள் 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் ரூ.240.26 கோடி நிதி ஒதுக்கீட்டில் 400 மானாவாரி தொகுப்புகள் கொண்ட 10 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்கள் மேம்படுத்தப்பட்டு, 3.59 இலட்சம் மானாவாரி விவசாயிகள் பயனடைந்தனர்.

மழைநீர் சேகரிக்கும் அமைப்புகளான தடுப்பணைகள், பண்ணைக் குட்டைகள், சமூகக் குளங்கள், கிராமக் குளங்கள் உருவாக்கப்பட்டதால் மழைநீர் பெருமளவு சேகரிக்கப்பட்டு மானாவாரி பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாத்திட உதவியது.

இத்திட்ட செயல்பாட்டினால், 2016-2017 ஆம் ஆண்டு மாநில பயிர் பரப்பளவை ஒப்பிடும்பொழுது சிறுதானியங்களின் பரப்பளவு 22 சதவீதமும், பயறு வகை பயிர்கள் 17 சதவீதமும் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் 17 சதவீதமும் 2017-2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது. மேலும், 2018-2019 ஆம் ஆண்டு 24 சதவீதம் குறைந்த மழைஅளவு பெறப்பட்ட நிலையிலும் திட்ட செயலாக்கத்தினால் 2016-2017 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் சிறுதானிய பயிர்கள் பரப்பளவு 25 சதவீதமும், பயறு வகை பயிர்கள் பரப்பளவு 19 சதவீதமும் அதிகரித்துள்ளது.

நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில், மேலும் 10 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் சாகுபடி மேற்கொள்ளும் 3.7 இலட்சம்

[2020 மார்ச் 24

மானாவாரி விவசாயிகளின் மேம்பாட்டுக்காக ரூ.264.96 கோடி நிதி செலவில் மேற்கண்ட அனைத்து நலத் திட்டங்களுடன் கூடுதலாக நடப்பாண்டில், மானாவாரி பகுதிகளில் பசுமையை உருவாக்கி விவசாயிகளின் வருமானத்தை மேலும் உயர்த்துவதற்காக 2 கோடி பனைமர விதைகள், தேக்கு, செம்மரம், வேங்கை, மகாகனி, புளி, சந்தனம், சவுக்கு போன்றவை உள்பட 20 இலட்சம் பயன்தரும் மரக்கன்றுகள் மற்றும் மா, பலா, நெல்லி, மாதுளை, நாவல் போன்றவை உட்பட 14.88 இலட்சம் பழ மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு நடவு செய்யப்பட்டுள்ளன. திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அட்டவணை 1.27: நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் மாவட்ட வாரியாக செயல்படுத்தப்பட்டுள்ள தொகுப்புகள் மற்றும் பயனடைந்த விவசாயிகள்

வ. எண்	மாவட்டங்கள்	முதல் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	இரண்டாம் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	மூன்றாம் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	மொத்த தொகுப்புகள் (எண்கள்)	பயன் பெறும் மொத்த விவசாயிகள்
1	திருவள்ளூர்	0	2	0	2	2,359
2	கடலூர்	10	15	10	35	28,398
3	விழுப்புரம்	15	32	32	79	76,865
4	வேலூர்	10	18	18	46	58,998
5	திருவண்ணாமலை	18	12	18	48	55,149
6	சேலம்	13	32	26	71	86,507
7	நாமக்கல்	10	25	24	59	46,640
8	தருமபுரி	10	28	28	66	81,420
9	கிருஷ்ணகிரி	15	30	32	77	61,734
10	கோயம்புத்தூர்	6	12	10	28	**25,946**
11	திருப்பூர்	5	12	18	35	22,109

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டங்கள்	முதல் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	இரண்டாம் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	மூன்றாம் கட்ட தொகுப்புகள் (எண்கள்)	மொத்த தொகுப்புகள் (எண்கள்)	பயன் பெறும் மொத்த விவசாயிகள்
12	ஈரோடு	6	13	13	32	30,794
13	திருச்சிராப்பள்ளி	5	12	16	33	35,113
14	பெரம்பலூர்	6	10	15	31	26,117
15	அரியலூர்	4	12	9	25	37,980
16	கரூர்	4	8	12	24	17,650
17	புதுக்கோட்டை	4	8	16	28	24,574
18	தஞ்சாவூர்	3	0	0	3	2,714
19	திருவாரூர்	4	0	0	4	4,178
20	மதுரை	5	15	13	33	24,101
21	தேனி		0	5	5	5,044
22	திண்டுக்கல்	10	24	14	48	42,903
23	இராமநாதபுரம்	5	14	5	24	25,540
24	சிவகங்கை	4	10	5	19	18,297
25	விருதுநகர்	8	16	19	43	33,526
26	திருநெல்வேலி	5	10	10	25	25,297
27	தூத்துக்குடி	15	30	32	77	49,928
	மொத்தம்	**200**	**400**	**400**	**1,000**	9,49,881

குறிப்பு: ஒரு தொகுப்பு = 2,500 ஏக்கர்

இத்திட்டத்தில், 2019-2020 ஆம் ஆண்டுவரை நிறைவேற்றப்பட்ட பணிகள்:

- பொதுவான மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக 977 தடுப்பணைகளும், 81 சமூகக் குளங்களும், 17 கிராமக் குளங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 219 கிராமக்

[2020 மார்ச் 24

குளங்கள் ஆழப்படுத்தப்பட்டன. நுழைவுகட்டப் பணிகளாக மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளுக்கு 50 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

- இதேபோன்று, 1,45,839 ஏக்கர் நிலப்பரப்பில் வயல் வரப்புகளும், 3,752 பண்ணைக் குட்டைகளும் விவசாயிகளின் வயல்களிலேயே அமைக்கப்பட்டன. மேலும், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலுள்ள 113 கிராமக் குளங்கள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளுக்காக ரூ.43.62 கோடி செலவிடப்பட்டுள்ளது.

- கோடை உழவு செய்வதற்காக ஏக்கருக்கு ரூ.500 வீதம், 15 இலட்சம் ஏக்கர் மானாவாரி பரப்பில் உழவுப் பணிகளுக்காக ரூ.75 கோடி பின்னேற்பு மானியம் வழங்கப்பட்டது.

- 15 இலட்சம் ஏக்கர் மானாவாரி பரப்பில், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்கள் சாகுபடி செய்ய 50 சதவீத மானியத்தில் விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு, 5.73 இலட்சம் மானாவாரி விவசாயிகளுக்கு ரூ.113.67 கோடி பின்னேற்பு மானியமாக வழங்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் இதேபோன்று மேலும் 10 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் மானாவாரி பயிர் சாகுபடிக்காக ரூ.100 கோடி பின்னேற்பு மானியமாக 3.7 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- 348 மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, இதுவரை 174 மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் (சிறுதானியங்கள் பதப்படுத்தும் சிறு இயந்திரங்கள், பயறு உடைக்கும் சிறு இயந்திரங்கள் மற்றும் எண்ணெய் பிழியும் சிறு இயந்திரங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக 35 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. மீதமுள்ள 174 மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

- இத்திட்டத்தில், படித்த வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகவும், மானாவாரி விவசாயிகளுக்கு வேலையாட்கள் பற்றாக்குறையைப்

போக்கி சாகுபடி பணிகளை உடனடியாக மேற்கொள்வதற்காகவும் 801 பண்ணை வாடகை இயந்திர மையங்கள் கிராம அளவில் உருவாக்கப்பட்டுள்ளன.

- மானாவாரி விவசாயிகளின் 9 இலட்சம் கால்நடைகளின் நலனுக்காக திட்டமிடப்பட்டு, இதுவரை ரூ.88.70 கோடி செலவில் 8,433 மெட்ரிக் டன் ஊட்டச்சத்துக் கலவை, தலா 97,300 எண்கள் வீதம் இனப்பெருக்க நலன் தொகுப்புகள் மற்றும் மடிவீக்க நோய் சிகிச்சை தொகுப்புகள், 6.35 இலட்சம் கால்நடைகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
- மானாவாரி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்க 17.4 இலட்சம் பழக்கன்றுகள் ரூ.4 கோடி செலவில் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 6.3 இலட்சம் பழக்கன்றுகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 1.3 இலட்சம் நாவல் பழக் கன்றுகளும், 95,590 நெல்லிக்கன்றுகளும், 94,520 எலுமிச்சைக் கன்றுகளும் 19,000 மாம்பழக் கன்றுகளும் அடங்கும். மீதமுள்ள 11 இலட்சம் பழக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்கள் வளர்ப்புக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு மானாவாரி பகுதிகளில் நிலத்தடிநீர் மட்டத்தினை அதிகரிப்பதற்காகவும் 2 கோடி பனைமர விதைகள் 8 கோடி ரூபாய் செலவில் இலவசமாக மானாவாரி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விதைக்கப்பட்டுள்ளன.
- மேலும், மானாவாரி பகுதிகளில் பசுமையினை ஏற்படுத்துவதற்கும் மானாவாரி விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கவும், தேக்கு, செம்மரம், வேங்கை, மகாகனி, புளி, சந்தனம், சவுக்கு போன்ற பயன்தரும் 20 இலட்சம் மரக்கன்றுகள் ரூ.4 கோடி செலவில் இலவசமாக விநியோகிக்கப்பட்டு நடவு செய்யப்பட்டுள்ளன.
- இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட திட்டப் பணிகளுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

[2020 மார்ச் 24


1.4.2. ஒருங்கிணைந்த பண்ணையம்

பயிர் சாகுபடியுடன் வேளாண் சார்ந்த தொழில்களை ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் மேற்கொள்வதன்மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பும், வருமானமும் கிடைப்பதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும். இதனைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு 2018-2019 ஆம் ஆண்டு முன்னோடித் திட்டமாக 2,490 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் ரூ.22.07 கோடி செலவில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்டது.

தொடர்ந்து 2019-2020 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, மேலும் 4,300 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் மானாவாரி பகுதி மேம்பாடு திட்டங்களின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுள் 3,300 மானாவாரி ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகளாகவும், 1,000 நஞ்சை மற்றும் தோட்டக்கால் ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகளாகவும் 27 மாவட்டங்களில் ரூபாய் 44.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயிர் சாகுபடியுடன் கறவை மாடுகள்/எருமை, ஆடுகள், நாட்டுக் கோழிகள், மண்புழு உரக்கூடம், வீட்டுத் தோட்டம், பழமரக் கன்றுகள், தேனீ வளர்ப்பு, தீவன பயிர்கள் மற்றும் வேளாண் காடுகள் ஆகிய இனங்களுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த பண்ணையம்-இனங்கள் வாரியான நிதி ஒதுக்கீடு 2019-2020 ஆம் ஆண்டு (ரூபாய் இலட்சத்தில்)



2020 மார்ச் 24]

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.4.3. பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (PKVY)

அங்கக பண்ணையத்தை ஊக்குவிக்க பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்மூலம் மூன்றாண்டு தொடர் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் குழு அணுகுமுறையின்மூலம் பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்பு முறையை அமல்படுத்தி அங்கக பண்ணையத்தை ஊக்குவிப்பது ஆகும்.


இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து திறன் மேம்பாடு, அங்கக இடுபொருட்களை கொள்முதல் செய்தல், அங்கக இடுபொருட்கள் உற்பத்தி மையம் அமைத்தல், உணவுப் பொருட்களில் தங்கும் நச்சுப் பொருளை அறிய பகுப்பாய்வு, சான்றளிப்பு கட்டணம், அங்கக உற்பத்தி பொருட்களைச் சிப்பமிடுதல், பெயர் அச்சிடுதல், தர அடையாளமிடுதல் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்/உழவர் உற்பத்தியாளர் குழுமூலம் மதிப்புக் கூட்டும் இயந்திர மையம் அமைத்தல் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் அங்கககப் பொருட்களுக்கு குழுக்களில் இருக்கும் சக முன்னோடி விவசாயியின் வயலாய்வு அறிக்கையின் அடிப்படையில் சான்றளிப்பு வழங்கப்படுகிறது.

இத்திட்டம், முதற்கட்டமாக 2015-2016 முதல் 11 மாவட்டங்களில், 50 தொகுப்புகள் உருவாக்கப்பட்டு 2,496 ஏக்கர் பரப்பளவில் அங்கக பண்ணையம் மேற்கொள்ள இதுவரை ரூ.6.81 கோடி நிதி செலவில் 2,272 விவசாயிகள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2018-2019 ஆம் ஆண்டு இரண்டாம் கட்டமாக 8 மாவட்டங்களில் 150 புதிய தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, முதலாமாண்டு நடவடிக்கைகள் ரூ.4.91 கோடி நிதி செலவில் செயல்படுத்தப்பட்டு 7,500 ஏக்கர் அங்கக பண்ணையத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் ஆண்டு செயல்பாடுகள் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.5.10 கோடி நிதி

ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு இதுவரை ரூ.3.89 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 4,943 விவசாயிகள் பயனடைந்து உள்ளனர்.

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட த்தின் கீழ் பல்வேறு செயல்பாடுகளில் நிதி ஒதுக்கீடு



2020-2021 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட 150 தொகுப்புகளில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளின் செயல்பாடுகளைத் தொடர்ந்து மூன்றாமாண்டு செயல்பாடுகள் செயல்படுத்தப்படும்.

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட தொகுப்புகளிலிருந்து பங்கேற்பு உத்தரவாத சான்றளிப்பு செய்யப்பட்ட சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் தமிழ்நாடு அங்கக பொருட்கள் (TOP) என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

2020 மார்ச் 24]


1.4.4. கூட்டுப் பண்ணையம்

தமிழ்நாட்டில் சிறு மற்றும் குறு விவசாயிகள் 93% உள்ளனர். அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும் திறனை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசு, தனித்துவமான "கூட்டுப் பண்ணையம்" என்னும் திட்டத்தை 2017-2018 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளை உழவர் ஆர்வலர் குழுக்களாகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களாகவும், உழவர் உற்பத்தியாளர் அமைப்பாகவும் ஒன்றிணைக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உழவர் ஆர்வலர் குழுவில் (FIG) 20 விவசாயிகளைக் கொண்டும், ஒவ்வோர் உழவர் உற்பத்தியாளர் குழுவில் (FPG) 5 உழவர் ஆர்வலர் குழுக்களின் உறுப்பினர்களான 100 விவசாயிகளைக் கொண்டும் அமைக்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்தில் உள்ள 7-10 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, உழவர் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) உருவாக்கப்படுகின்றது.

இதுவரை, 6 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன் அடையும் வகையில், 30,000 உழவர் ஆர்வலர் குழுக்களும் 6,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை, 110 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன மற்றும் 10 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கப்பட உள்ளன. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை தொழில் துவக்க மானியம் வழங்குகிறது.

ஒவ்வோர் உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கும் (Farmer Producer Group) கூட்டுப் பண்ணையத் திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்த பண்ணை இயந்திரங்கள் கொள்முதல் செய்ய மூலதன நிதியாக ரூபாய் 5 இலட்சம் வீதம் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.200.42 கோடி மதிப்பிலான 16,649 பண்ணை இயந்திரங்கள் 4,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்களால் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.



கூட்டுப் பண்ணையத் திட்டத்தில் கூட்டாக இடுபொருட்கள் மற்றும் பண்ணை இயந்திரங்களை கொள்முதல் செய்தல், கூட்டாக சாகுபடி செய்தல் மற்றும் கூட்டாக விளைபொருட்களை விற்பனை செய்தல் ஆகிய உத்திகள் பின்பற்றப்படுகின்றன.

அனைத்து உழவர் ஆர்வலர் குழுக்களும் குறைந்தது ரூ.10,000-க்கு கூட்டாக இடுபொருள் கொள்முதல் செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள். உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் தங்கள் மூலதன நிதியினை திரட்டி தங்களுக்கு தேவையான உயர் மதிப்புள்ள பண்ணை இயந்திரங்களை கொள்முதல் செய்ய வழிவகை செய்யப்பட்டு வருகிறது. ஒரே சமயத்தில் நெல், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் மற்றும் காய்கறிகள் முதலியவை விதைக்கப்பட்டு/நடப்பட்டு கூட்டாக சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக மேம்படுத்தப்படாத உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு கூடுதலான வருவாய் ஈட்டித்தரும் வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பல்வேறு வாழ்வாதார செயல்பாடுகளான பொதுப் பணித் துறையின் குடிமராமத்துப் பணிகள், ஆவின் பால் சேகரிப்பு நிலையங்கள், மாவட்ட தொழில் மையம்மூலம் உபரி பாகங்கள்/பண்ணை இயந்திரங்கள் கொள்முதல் செய்ய கடனுதவி, கால்நடை துறையின் மானியத் திட்டங்கள்,

2020 மார்ச் 24]

விதை, உரம், பூச்சிக்கொல்லி இடுபொருள் நிலையங்கள், நுண்ணீர்ப் பாசன விநியோக உரிமம், மதிப்புக் கூட்டு மையங்கள் அமைத்தல் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்படுகின்றன. வேளாண்மைத் துறை மற்றும் சகோதரத் துறையின் மானியத் திட்டங்கள் உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு கூடுதல் வருமானம் கிடைக்கவும் நீடித்துத் தொடரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை உழவர் உற்பத்தியாளர் குழுக்களால் 288 வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.100.58 கோடி தொகுப்பு நிதி, தமிழ்நாடு அரசால் 2 இலட்சம் குறு, சிறு விவசாயிகள் பயனடையும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.100.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேலும் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும், இக்குழுக்கள் நாளடைவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக மேம்படுத்தப்படும்.

அட்டவணை 1.28: அமைக்கப்பட்டுள்ள உழவர் ஆர்வலர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்

வ. எண்	மாவட்டம்	2017-2018		2018-2019		2019-2020		மொத்தம்	
		உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்
1	அரியலூர்	275	55	310	62	310	62	895	179
2	கோவை	130	26	135	27	135	27	400	80
3	கடலூர்	400	80	425	85	435	87	1260	252
4	தருமபுரி	335	67	435	87	445	89	1215	243
5	திண்டுக்கல்	345	69	405	81	405	81	1155	231
6	ஈரோடு	225	45	220	44	225	45	670	134

வ. எண்	மாவட்டம்	2017-2018		2018-2019		2019-2020		மொத்தம்	
		உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்
7	காஞ்சிபுரம்	280	56	250	50	250	50	780	156
8	கன்னியாகுமரி	455	91	280	56	280	56	1015	203
9	கரூர்	160	32	165	33	165	33	490	98
10	கிருஷ்ணகிரி	360	72	395	79	435	87	1190	238
11	மதுரை	375	75	410	82	410	82	1195	239
12	நாகப்பட்டினம்	215	43	280	56	280	56	775	155
13	நாமக்கல்	280	56	340	68	340	68	960	192
14	பெரம்பலூர்	175	35	200	40	200	40	575	115
15	புதுக்கோட்டை	485	97	360	72	310	62	1155	231
16	இராமநாதபுரம்	495	99	265	53	265	53	1025	205
17	சேலம்	400	80	520	104	520	104	1440	288
18	சிவகங்கை	345	69	315	63	315	63	975	195
19	தஞ்சாவூர்	365	73	525	105	525	105	1415	283
20	தேனி	155	31	170	34	170	34	495	99
21	திருவள்ளூர்	280	56	275	55	275	55	830	166
22	திருநெல்வேலி	365	73	330	66	340	68	1035	207
23	திருப்பூர்	160	32	145	29	145	29	450	90
24	திருவண்ணாமலை	570	114	535	107	525	105	1630	326
25	திருவாரூர்	180	36	185	37	185	37	550	110
26	தூத்துக்குடி	220	44	215	43	215	43	650	130
27	திருச்சிராப்பள்ளி	375	75	390	78	390	78	1155	231
28	வேலூர்	490	98	515	103	515	103	1520	304

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	2017-2018		2018-2019		2019-2020		மொத்தம்	
		உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்	உழவர் ஆர்வலர் குழுக்கள்	உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்
29	விழுப்புரம்	785	157	730	146	715	143	2230	446
30	விருதுநகர்	240	48	195	39	195	39	630	126
31	நீலகிரி	80	16	80	16	80	16	240	48
	மொத்தம்	10000	2000	10000	2000	10000	2000	30000	6000

1.5. பருவநிலை மாற்றங்களுக்கான மேலாண்மை நடவடிக்கைகள்:

வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் தமிழக வேளாண்மை பெரிதும் பாதிக்கப்படுகிறது. வேளாண்மையில் அதிக இலாபம் பெற விவசாயிகள், அரசு மற்றும் இதர பயனாளிகள் கூட்டு முயற்சி செய்தபோதிலும் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் இயற்கை இடர்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இச்சூழ்நிலைகளில், பயிர்ச்சேதம் ஏற்படும்போது மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இழப்பீட்டுத் தொகையை வழங்கியும், பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதை ஊக்குவித்தும், விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

1.5.1. 2018-ல் கஜா புயலினால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் 16-11-2018 அன்று கஜா புயல், வடகிழக்குக் கடலோரப் பகுதியைக் கடந்ததன் விளைவாக, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திண்டுக்கல், அரியலூர், மதுரை, சிவகங்கை, தேனி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய 12 மாவட்டங்களில் 78,584 எக்டர் பரப்பில் தென்னையிலும் மற்றும் 19,720 எக்டர் பரப்பில் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள்,

கரும்பு, பருத்தி மற்றும் எண்ணைப்பனை ஆகிய வேளாண் பயிர்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் வழிகாட்டுதலின்படி, தென்னை உள்ளிட்ட பல்லாண்டு பயிர்களுக்கு ஒரு எக்டருக்கு ரூ.18,000/- வீதம் இடுபொருள் நிவாரணமாக நிர்ணயிக்கப்பட்டபோதிலும், தமிழ்நாடு அரசு கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, எக்டர் ஒன்றுக்கு (175 தென்னை மரங்கள்) ரூ.2,64,600/- வீதம் நிவாரணமாக வழங்கியது. இத்தொகை மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் வழிகாட்டுதலின்படி, இடுபொருள் நிவாரணமாக (ரூ.18,000/-/எக்டர்) வழங்கப்படும் தொகையைவிட ரூ.2,46,600/- அதிகமாகும்.

தமிழ்நாடு அரசு கஜா புயலால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு ரூ.684.74 கோடியும் மற்றும் நெல், சிறுதானியங்கள் உள்ளிட்ட வேளாண் பயிர்களுக்கு ரூ.22.89 கோடியும் விடுவித்தது. அவ்வாறு விடுவிக்கப்பட்ட நிதியில் தென்னை மரங்களுக்கு ரூ.586.24 கோடியும், வேளாண் பயிர்களுக்கு ரூ.14.41 கோடியும், ஆக மொத்தம் ரூ.600.65 கோடி 1,37,805 விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

1.5.2. வடகிழக்குப் பருவமழையினால் (2019) ஏற்பட்ட பயிர்ச்சேதம் மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

2019 ஆம் ஆண்டில் பெய்த வடகிழக்குப் பருவமழையினால் பல மாவட்டங்களில் வேளாண் பயிர்கள் நீரில் மூழ்கின. இதன் தாக்கத்திலிருந்து பயிர்களைக் காத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, உடனடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பயிர் பாதுகாப்பு உத்திகளை கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இருப்பினும், 24 மாவட்டங்களில் நெல், மக்காச்சோளம், சோளம், பயறு, எண்ணெய்வித்துகள், பருத்தி மற்றும் கரும்பு உள்ளிட்ட வேளாண் பயிர்களில் 44,342 எக்டர் பரப்பில் 33 சதவீதத்திற்கும் மேலாக மகசூல் இழப்பு ஏற்பட்டது. மேலும், மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் விதிமுறைகளின்படி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரண நிதியுதவி வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

1.5.3. பயிர்க் காப்பீடு:

பல்வேறு வானிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ளம், வறட்சி, புயல், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் வேளாண்மையை மேற்கொள்வது பெரும் சவாலாகவே உள்ளது. அசாதாரண சீதோஷ்ண மாற்றங்கள் பயிர் இழப்புகளை அதிகரித்து வருவதால், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊரக வாழ்வாதாரம் பாதிப்படைகின்றன. சமீப காலத்தில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்கள், தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களில், புதிய பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு வழிவகுத்து, உணவு தானிய உற்பத்தியைப் பாதித்தன.

எனினும், விவசாயிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, பல்வேறு பாதுகாப்பு முறைகளை செயல்படுத்தி வருகிறது. பருவகால மாற்றங்களை எதிர்கொள்ளும் அணுகுமுறைகளின் ஒரு பகுதியாக பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. விவசாயிகளுக்கு ஆதரவளித்து அவர்கள் நலனை பாதுகாக்கும் உன்னத பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

1.5.3.1. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

"பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம்" காரீப் 2016 முதல் சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்பாராத நிகழ்வுகளால் பயிர்ச்சேதம் அல்லது இழப்பு ஏற்படும்பொழுது விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ் விதைப்பு பொய்த்தல், நடவு செய்ய இயலாத நிலை, அறுவடைக்குப் பின் இழப்பு (ஆலங்கட்டி மழை, புயல், புயலினால் ஏற்படும் மழை மற்றும் பருவம் தவறிய மழை), பகுதி சார்ந்த பல்வேறு இயற்கை இடர்பாடுகள் (ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, மழைநீரால் பயிர் மூழ்குதல், இடி, மின்னலுடன்கூடிய திடீர் மழை (Cloud burst) மற்றும் மின்னலால் ஏற்படும் இயற்கை தீ (Natural fire due to Lightening) மற்றும் பயிர் வளர்ச்சிக் காலத்தில் நிகழும் இடர்பாடுகளால் ஏற்படும் பல்வேறு வகையான இழப்புகளுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை சாகுபடி செய்யும் கடன்பெறும் விவசாயிகள் கட்டாயமாகவும் கடன்பெறா விவசாயிகள் விருப்பத்தின்பேரிலும் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படுவர்.

பயிர் வளர்ச்சியின்போது ஏற்படும் இழப்புகளுக்கு துரிதமாக இழப்பீடு வழங்குதல், கடன் பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்ய ஒரே மாதிரியான காலக்கெடு நிர்ணயம், உரிய காலத்தில் மிக துல்லியமான பயிர் இழப்பீட்டுத் தொகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குதல், பயிர் சாகுபடி செலவினத்திற்கு இணையான காப்பீட்டுத் தொகை நிர்ணயம் மற்றும் இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்குவதை உறுதி செய்ய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் முதலியன இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

வேளாண் பயிர்களான நெல், மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப் பயறு, நெல் தரிசில் உளுந்து, நெல் தரிசில் பச்சைப் பயறு, நிலக்கடலை, பருத்தி, நெல் தரிசில் பருத்தி மற்றும் கரும்பு போன்றவை வருவாய்க் கிராம அளவிலும் சோளம், கேழ்வரகு, கம்பு, தட்டைப் பயறு, எள், சூரியகாந்தி, கொண்டைக்கடலை, சாமை மற்றும் கொள்ளு போன்றவை குறுவட்ட அளவிலும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

மொத்த பயிர் காப்பீட்டுக் கட்டணத்தில், விவசாயிகளின் காப்பீட்டுக் கட்டணம் தவிர்த்து மீதமுள்ள காப்பீட்டுக் கட்டணம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாகப் பகிர்ந்து வழங்கப்படுகிறது. காப்பீடு செய்ய விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டண (பிரீமியத் தொகை) விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.29: விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டண விகிதம்

பயிர்கள்	பருவம்	விவசாயிகள் செலுத்த வேண்டிய அதிகபட்ச காப்பீட்டுக் கட்டண விகிதம்
அனைத்து உணவு தானிய பயிர்கள் (அனைத்து தானியங்கள், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள்) மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள்	காரீப்	காப்பீட்டுத் தொகையில் 2 சதவீதம் அல்லது காப்பீட்டு நிறுவனங்கள் நிர்ணயிக்கும் சரியான காப்பீட்டுக் கட்டணம்-இதில் எது குறைவோ
	ராபி	காப்பீட்டுத் தொகையில் 1.5 சதவீதம் அல்லது காப்பீட்டு நிறுவனங்கள் நிர்ணயிக்கும் சரியான காப்பீட்டுக் கட்டணம்-இதில் எது குறைவோ

2020 மார்ச் 24]

வருடாந்திர வணிகப் பயிர்கள்/வருடாந்திர தோட்டக்கலைப் பயிர்கள்/பல்லாண்டுப் பயிர்கள்	காரீப் மற்றும் ராபி	காப்பீட்டுத் தொகையில் 5 சதவீதம் அல்லது காப்பீட்டு நிறுவனங்கள் நிர்ணயிக்கும் சரியான காப்பீட்டுக் கட்டணம் -இதில் எது குறைவோ

1.5.3.1.1. சாதனைகள்

2016-2017 முதல் 2019-2020 வரை இத்திட்டத்தின்கீழ், 79.18 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு 135.08 இலட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டது. இதே காலக்கட்டத்தில் காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.1,994 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு இதுவரை 37.32 இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.7,702.46 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 2018-2019 முடிய பதிவு செய்யப்பட்ட விவசாயிகளில் சுமார் 64 சதவீதம் பயனடைந்துள்ளனர்.

அட்டவணை 1.30: காப்பீட்டுக் கட்டணம் மற்றும் இழப்பீட்டுத் தொகை விகித அடிப்படையில் அகில இந்திய அளவில் தமிழ்நாட்டின் நிலை

	2016-2017	2017-2018	2018-2019
அகில இந்திய அளவில்	1:0.75	1:0.87	1:0.80
தமிழ்நாடு	1:3.16	1:1.47	1:1.32
கேரளா	1:1.01	1:0.41	1:1.56
கர்நாடகா	1:1.46	1:0.38	1:1.68
ஆந்திரப்பிரதேசம்	1:0.65	1:0.76	1:1.56
தெலுங்கானா	1:0.52	1:0.68	1:0.55
குஜராத்	1:0.56	1:0.33	1:0.88
ராஜஸ்தான்	1:0.75	1:0.81	1:0.86
மகாராஷ்டிரா	1:0.50	1:0.77	1:0.89
உத்தரப்பிரதேசம்	1:0.47	1:0.27	1:0.31

2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை 21.23 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, 32.46 இலட்சம் ஏக்கர் சாகுபடி


பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2019 காரீப் பருவத்தில், இதுவரை 9,699 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.3.76 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

விளக்கப் படம் 1. அ : பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சாதனை




தமிழ்நாட்டில் இத்திட்டத்தினைச் சிறப்பாக செயல்படுத்தியதைப் பாராட்டி, சர்வதேச பொருளாதார தொடர்புக்கான இந்திய ஆராய்ச்சிக் கழகம் இந்தியாவில் பயிர்க் காப்பீடு; முக்கிய இடர்பாடுகள் மற்றும் முன்னேற்ற அணுகுமுறைகள், பிப்ரவரி 2018 அறிக்கையில் (எண் 352) "தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. காப்பீட்டு நிறுவனங்களுக்கு மகசூல் விவரங்கள் மற்றும் காப்பீட்டுக் கட்டண மானியத்தை வழங்குவதில் தமிழகம் பிற மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது" என தெரிவித்துள்ளது. பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஒப்பிடுகையில், 2016-2017 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியதில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது.

விளக்கப் படம் 1. ஆ : பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை



2016–2017 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கியதில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது (ரூ. 3,621 கோடி).

விளக்கப் படம் 1. இ : பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை



[2020 மார்ச் 24

2020-2021 ஆம் ஆண்டில் காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.724.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும். இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகத்தால் 20 மாவட்டங்கள் உள்ளடக்கிய 4 தொகுப்புகளிலும் (தொகுப்பு-1: திருவாரூர், கரூர், சேலம், கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி; தொகுப்பு-2: நாகப்பட்டினம், திருப்பூர், திண்டுக்கல், அரியலூர், காஞ்சிபுரம்; தொகுப்பு-3: தூத்துக்குடி, மதுரை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, மற்றும் தொகுப்பு-5 புதுக்கோட்டை, விழுப்புரம், விருதுநகர், நாமக்கல், பெரம்பலூர்); ஓரியண்டல் காப்பீட்டுக் கழகத்தால் மீதமுள்ள 11 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 தொகுப்புகளிலும் (தொகுப்பு-4: இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி மற்றும் தொகுப்பு-6: சிவகங்கை, திருநெல்வேலி, கடலூர், திருவள்ளூர், ஈரோடு, கோயம்புத்தூர்) இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு புதிய முயற்சியாக அதிக விவசாயிகள் சேர்ந்து பயனடையும் வகையில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களுக்கு மாவட்ட வாரியான காலக்கெடு நிர்ணயித்து, புதிய பயிர்கள் மற்றும் கூடுதல் பகுதிகளை அறிவிக்கை செய்ததோடு, மாநில மற்றும் மாவட்ட அளவில் விவசாயிகள் குறை தீர்வு மையமும் அமைத்துள்ளது.

1.5.3.2. தென்னை காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சாகுபடி செய்யப்பட்டுவரும் தென்னை, மாநில பொருளாதாரத்தை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பல்லாண்டு பயிராக சாகுபடி செய்யப்படும் தென்னை, வருடம் முழுவதும் விவசாயிகளுக்கு அதிக வருமானம் அளித்தாலும், குறைவான மழை, பூச்சி நோய் தாக்குதல் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படுகிறது. சில சமயங்களில், அப்பகுதியில் உள்ள தென்னந்தோப்புகள் முழுவதும் பாதிப்படைகின்றன. இச்சூழ்நிலையில், இயற்கை மற்றும் இதர இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு காப்பீடு செய்தல், வருவாய் இழப்பிற்கான நிவாரணத் தொகை வழங்குதல், இடர்பாடுகளிலிருந்து மீட்டு மறுநடவு செய்வதை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களுடன் தென்னை காப்பீட்டுத் திட்டம் சென்னை

2020 மார்ச் 24]

மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், அதிக அளவில் தென்னை பயிரைக் காப்பீடு செய்து தென்னை விவசாயிகளுக்கு ஆதரவளிக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், தனி மரமாகவோ அல்லது ஊடுபயிராகவோ, வரப்பு மற்றும் வீட்டுத் தோட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு உட்படாத அனைத்து இரக தென்னை மரங்கள் (4 முதல் 60 வயதுடைய குட்டை/ஒட்டு இரகங்கள் மற்றும் 7 முதல் 60 வயதுடைய நெட்டை இரகங்கள்) காப்பீடு செய்யப்படுகின்றன. தொடர்ச்சியான பரப்பில் குறைந்தபட்சம் 5 தென்னை மரங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்ய தகுதியுடையவராவர். இத்திட்டத்தின்கீழ், தென்னை வளர்ச்சி வாரியம் 50 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் காப்பீட்டுக் கட்டண மானியம் வழங்குகின்றன. மீதமுள்ள 25 சதவீத காப்பீட்டுக் கட்டணம் விவசாயிகளால் செலுத்தப்படுகிறது.

அட்டவணை 1.31: தென்னை காப்பீட்டுத் தொகை மற்றும் கட்டணம்

தென்னை மரங்களின் வயது (ஆண்டுகளில்)	காப்பீட்டுத் தொகை- மரம் ஒன்றிற்கு (ரூ.)	ஆண்டிற்கான காப்பீட்டுக் கட்டணம்- மரம் ஒன்றிற்கு (ரூ.)	ஆண்டிற்கான விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம்- மரம் ஒன்றிற்கு (ரூ.)
4 முதல் 15	900	9.00	2.25
16 முதல் 60	1,750	14.00	3.50

புயல், ஆலங்கட்டி மழை, சூறாவளி, கடும் மழை, வெள்ளம், மழை நீரால் பயிர் மூழ்குதல், பூச்சி நோய் தாக்குதல், தீயினால் ஏற்படும் பாதிப்பு (இயற்கை தீ மற்றும் மின்னலால் ஏற்படும் இழப்பு), நிலநடுக்கம், நிலச்சரிவு, ஆழிப்பேரலை மற்றும் வறட்சியால் ஏற்படும் இழப்புகளுக்கு காப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 24

1.6. தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

பயிர் சாகுபடிக்கு விதையே முக்கிய ஆதாரம் ஆகும். தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பெரும்பங்கு வேளாண்மைத் துறையைச் சார்ந்துள்ளது. இதற்காக தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ், சங்க அமைப்பாக 30-4-2015 முதல் செயல்பட்டு வருகிறது.

விதை மாற்று விகிதத்தின் அடிப்படையில் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பெறப்பட்டு, ஒவ்வொரு பயிரின் கருவிதைகள் ஆதார விதைகளாகவும், சான்று விதைகளாகவும் மாநில விதைப் பண்ணைகள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் நிலங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற மற்றும் அதிக விளைச்சல் தரும் இரகங்கள் தேர்வு செய்யப்பட்டு, பெருக்கம் செய்யப்பட்டு, மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.


தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நெல், சிறுதானியப் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், சாமை, குதிரைவாலி, வரகு மற்றும் தினை, பயறு வகைப் பயிர்களான துவரை, உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு, கொள்ளு மற்றும் கொண்டைக்கடலை, எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு மற்றும் பருத்தி போன்ற பயிர்களின் ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதை உற்பத்தி டான்சிடாமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வேளாண்மைத் துறையின்கீழ் இயங்கும் அரசு விதைப் பண்ணைகளிலும், முன்னோடி விவசாயிகளின் நிலங்களிலும் வல்லுநர் விதைகளில் இருந்து விதைப் பெருக்கமானது மேற்கொள்ளப்படுகிறது. ஆதாரநிலை மற்றும் சான்றுநிலை விதைப் பண்ணைகள், விதை சான்றளிப்புத் துறையில் பதிவு செய்யப்பட்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஆதாரநிலை மற்றும் சான்றுநிலை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட விதைகள், 126 விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகின்றன. இந்த சுத்திகரிக்கப்பட்ட விதைகள், விதை முளைப்புத் திறன், ஈரப்பதம், பிற இரகக் கலப்பு, இனத்தூய்மை ஆகிய ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆய்வில் தேர்ச்சி பெற்ற விதைகளுக்கு சான்றட்டை பொருத்தப்பட்டு, 880


2020 மார்ச் 24]

வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

வேளாண்மைத் துறை சான்று விதைகள் கொள்முதல்



வேளாண்மைத் துறை சான்று விதைகள் விநியோகம்



2020-2021 ஆம் ஆண்டுக்கான விதைக் கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம் பின்வருமாறு:-

[2020 மார்ச் 24


அட்டவணை 1.32: விதை கொள்முதல் மற்றும் விநியோக திட்டம்-2020-2021

பயிர்	விதை கொள்முதல் (மெட்ரிக் டன்)	விதை விநியோகம் (மெட்ரிக் டன்)
நெல்	18,800	18,800
சிறுதானியங்கள்	800	800
பயறு வகைகள்	4,968	4,966
எண்ணெய்வித்துகள்	5,242	5,242
பருத்தி	20	20
தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம் (இலட்சம் எண்கள்)	10	10

1.6.1. தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

'டான்சிடா'-வின்கீழ் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய 23 தென்னை நாற்றுப் பண்ணைகளும், தரமான ஒட்டு இரக தென்னை நெற்றுக்களை உற்பத்தி செய்ய 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்களும் இயங்கி வருகின்றன.

கஜா பாதிப்பு மாவட்டங்களுக்கு நெட்டை தென்னங்கன்றுகள் விநியோகம்



2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டில் பொது விநியோகம் மற்றும் கஜா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக 19.5 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டில் 10 இலட்சம் தென்னங்கன்றுகள் மாநில தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் மாநில அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு அரசுத் திட்டங்களின் வாயிலாகவும் பொது விநியோகத்தின் மூலமாகவும் வழங்கப்பட உள்ளது.

1.6.2 விதை விலைக் கொள்கை

டான்சிடா, 2015 ஆம் ஆண்டு வேளாண்மைப் பயிர்களின் விதைக் கொள்முதலுக்கும், விதை விநியோகத்திற்கும் மாநிலம் முழுவதும் ஒரே விதை விலைக் கொள்கையினைக் கடைப்பிடிக்க உருவாக்கப்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டில் டான்சிடா மூலமாக அரசு விதைப் பண்ணைகள் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சான்று விதைகளை உற்பத்தி செய்யத் தேவையான நிதியுதவியாக வேளாண் இடுபொருட்கள் கொள்முதல், விதைச் சான்று கட்டணங்கள் மற்றும் சான்று அட்டை கட்டணங்கள், ஒப்பந்தப் பணியாளர் செலவு மற்றும் கூலி, போக்குவரத்து செலவு ஆகியவற்றிற்காக ரூ.109.71 கோடி செலவிடப்பட்டுள்ளது.

1.6.3. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்

தரமான விதைகள் பயிர் சாகுபடிக்கு முக்கியமான இடுபொருளாகும். விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்குவதே விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளை தாங்களே உற்பத்தி செய்து, உயர் விளைச்சல் பெறும் வகையில், நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் சான்று விதைகள், மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், சான்று

விதை உற்பத்திக்குத் தேவையான பயறு மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களின் ஆதார விதைகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

மேலும், தரமான விதைகளை உற்பத்தி செய்யும்பொருட்டு, புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டம், நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.19.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.7. பயிர்ப் பாதுகாப்பு

பயிர்ப் பாதுகாப்பு என்பது சரியான கட்டுப்பாட்டு முறைகளை உரிய நேரத்தில் பயன்படுத்தி சாகுபடி செய்யப்படும் பயிர்களின் உற்பத்தியினைப் பாதிக்கும் பூச்சி, நோய் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை முறையாகும். பயிர்ப் பாதுகாப்பில், பூச்சி மற்றும் நோய் குறித்த முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முக்கிய பங்காற்றுகின்றன. பூச்சி, நோய்த் தாக்குதலை தடுக்க கோடை உழவு, பயிர் சுழற்சி, எதிர்ப்பு திறன் கொண்ட இரகங்கள், விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்துதல், பூச்சிகளைக் கவரும் பயிர்களை வரப்புப் பயிராக சாகுபடி செய்தல் உள்ளிட்ட குறைந்த செலவில் செயல்படுத்தக்கூடிய பல்வேறு புதிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்களைத் தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளையும், வயல்களிலேயே உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகளை குறைந்த செலவில் உற்பத்தி செய்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றுதல் குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர வேளாண்மைத் துறை அலுவலர்களைக் கொண்டு பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள் தீவிரமாக குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்காணிக்கப்பட்டு மாதந்தோறும் விவசாயிகளுக்கு பூச்சி மற்றும் நோய்கள் குறித்த முன்னறிவிப்பும் வழங்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

1.8. உரம்

பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க முதன்மை இடுபொருளாக இரசாயன உரங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 23 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்கப்படுத்துவதோடு, இரசாயன உரப் பயன்பாட்டினை குறைக்கவும், மண்வளத்தைப் பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசின், உரம் மற்றும் இரசாயனத் துறை ஆண்டுதோறும் காரீப் மற்றும் இரபி பருவத்திற்கு முன்கூட்டியே கூட்டங்கள் நடத்தி, மாநிலங்களுக்குத் தேவையான உரங்களை ஒதுக்கீடு செய்து விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், போதுமான உரங்கள் முன்கூட்டியே இருப்பு வைத்திடும் வகையில், மாநிலத்திற்குத் தேவையான உரத் தேவையினை மாதந்தோறும் ஒப்புதல் செய்து வழங்கி வருகிறது.


தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்ஃபெட்) வட்டியில்லாத கடனாக ரூ.135 கோடி வழங்கி உரிய நேரத்தில் போதிய அளவு தரமான உரங்கள் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 1.33: ஆண்டு வாரியாக உர விநியோக விவரங்கள் பின்வருமாறு

உரம்	உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்)			
	2016-2017	2017-2018	2018-2019	2019-2020 (இதுவரை)
யூரியா	7.93	8.18	9.07	8.19
டி.ஏ.பி	2.56	2.27	2.41	2.24
பொட்டாஷ்	2.81	2.74	2.75	2.28
காம்ப்ளக்ஸ்	**5.63**	**4.77**	**5.17**	**5.59**
மொத்தம்	**18.93**	**17.96**	**19.40**	**18.30**

[2020 மார்ச் 24

உர விநியோக விவரம் (இலட்சம் மெட்ரிக் டன்)



1.8.1. விற்பனை முனையக் கருவி வாயிலாக உரங்கள் விற்பனை

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 2018 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் இரசாயன உரங்கள் விற்பனை முனையக் கருவிகளின் வாயிலாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.8.1.1. முக்கிய அம்சங்கள்

- விவசாயிகளின் ஆதார் அடையாள அட்டை அல்லது கிசான் கடன் அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதாவது ஒன்றை ஆதாரமாக அளித்து இரசாயன உரங்கள் விற்பனை முனைய கருவிகள் வாயிலாக சில்லறை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

- உர உற்பத்தி நிறுவனங்கள்/உர இறக்குமதியாளர்களுக்கு விற்பனை முனைய கருவி வாயிலாக மானிய உரங்கள் விற்பனை செய்த பின்னர் மட்டுமே உர மானியத் தொகை உர உற்பத்தியாளர்/உர இறக்குமதியாளர்களுக்கு தற்சமயம் நடைமுறையில் வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

- அரசு அறிவித்துள்ள அதிகபட்ச சில்லறை விலையினை செலுத்தி மானிய இரசாயன உரங்களை விவசாயிகள் எவ்வித கூடுதல் செலவுமின்றி வாங்கி வருகின்றனர்.

1.8.1.2. மாநிலத்தில் விற்பனை முனையக் கருவிகளின் பயன்பாடு

மத்திய அரசு மாநில பயன்பாட்டிற்காக 12,219 விற்பனை முனைய கருவிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் 12,216 கருவிகள் பெறப்பட்டு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு உள்ளிட்ட விற்பனை மையங்களில் 11,690 விற்பனை முனைய கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. அனைத்து உர விற்பனை நிலையங்களிலும் மானிய உரங்கள் விற்பனை முனைய கருவிகளின் மூலமாக மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

1.8.2. தரமான உர விற்பனையை உறுதிப்படுத்துதல்

தமிழ்நாடு அரசு தரமான உர விற்பனையை உறுதி செய்திட அறிவிக்கை செய்யப்பட்ட 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களை நிறுவி, அதன் வாயிலாக உர மாதிரிகளின் தர பரிசோதனைகள் செய்யும் பணிகளை மேற்கொள்கிறது. ஒரு வருடத்தில் 19,600 உர மாதிரிகள் ஆய்வகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வு அறிக்கைகளின்படி தரக்குறைவான உர மாதிரிகளுக்கு, துறை ரீதியிலான மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளதுவரை 17,226 உர மாதிரிகள் ஆய்வு மேற்கொண்டதில், 689 உரமாதிரிகள் தரமற்றவையாக கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி, 601 துறை ரீதியிலான நடவடிக்கைகளும், 88 சட்ட ரீதியிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.9. மண்வளப் பாதுகாப்பு

பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மண் வளத்தைப் பாதுகாக்கும்பொருட்டும், மண்வள அட்டை திட்டம் 2015-2016 ஆம் ஆண்டு முதல் இருவருட சுழற்சி முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 385 கிராமங்களிலுள்ள அனைத்து விவசாயிகளின் நிலங்களிலும் 58,317 மண் மாதிரிகள்

சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட மண் வள அட்டை உரப் பரிந்துரை அடிப்படையில், 13,965 எக்டர் பரப்பளவில் செயல்விளக்கங்கள் அமைக்கப்பட்டது.

மேலும், மண்வள அட்டை திட்டத்தை மதிப்பீடு செய்திட 2.63 இலட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு கிராம அளவில் மண் வள வரைபடங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டில் வட்டாரத்திற்கு ஐந்து கிராமங்கள் வீதம் அனைத்து மாவட்டங்களிலும், 1,925 கிராமங்களில் மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்து, மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கிடவும், மண்வள அட்டை உரப் பரிந்துரை அடிப்படையில் செயல்விளக்கங்கள் அமைத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1.10. வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)

வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைமூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் பிற பயிற்சிகள், பயிர் உற்பத்தி மற்றும் பண்ணைசார்ந்த இதர தொழில்களில் விவசாயிகளை ஈடுபடுத்துவதற்கு வழங்கப்படுகிறது. மேலும், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு வேளாண் மற்றும் வேளாண்சார்ந்த புதிய தொழில்நுட்பங்கள் குறித்து வழங்கப்படும் பயிற்சிகள், விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களைக் கொண்டுசெல்லும் திறனை மேம்படுத்துகிறது.

1.10.1. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம்- மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம்-அட்மா


வேளாண் விரிவாக்கத் துணை இயக்கத் திட்டமானது, தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள், கால்நடைப் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளத் துறை, வனத் துறை, வேளாண் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் தமிழ்நாடு ஜெ. ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

இத்திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கு பயிற்சிகள், செயல்விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா, விருதுகள், வேளாண் செய்திகள் பரவலாக்கம், விவசாயிகள் மற்றும் அறிவியல் வல்லுநர்கள் கலந்துரையாடல், அறிவியல் வல்லுநர்கள் கலந்துரையாடல், அறிவியல் வல்லுநர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கூட்டு ஆய்வு, விவசாயிகள் கூட்டம், மாவட்ட அளவிலான பொருட்காட்சி, விவசாயிகள் திருவிழா, தொழில்நுட்ப அளவீடு மற்றும் மதிப்பீடு செய்தல், பண்ணைப் பள்ளிகள், நவீன செயல் திட்டங்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப பரவலாக்கம் ஆகிய இனங்கள் மாவட்டம், மாநிலம் மற்றும் வெளி மாநில அளவில் 2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை ரூ.61.32 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.10.1.1. அட்மா திட்ட செயல்பாடுகள் 2019-2020

2019-2020 ஆம் ஆண்டில் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை



[2020 மார்ச் 24

அட்டவணை 1.34: விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை

வ. எண்	இனம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை
1	வெளி மாநில பயிற்சி	101	2020
2	மாநிலங்களுக்குள்ளான பயிற்சி	270	10800
3	உள் மாவட்ட அளவிலான பயிற்சி	2086	83440
4	வெளி மாநில கண்டுணர் பயணம்	200	4000
5	மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம்	771	38550
6	உள் மாவட்ட அளவிலான கண்டுணர் பயணம்	1580	79000
7	செயல் விளக்கங்கள்	46594	46594
8	பண்ணைப் பள்ளிகள்	455	11375

1.10.1.2. அட்மா செயல்திட்டம் 2020-2021

2020-2021 ஆம் ஆண்டு அட்மா செயல் திட்டத்தில் வேளாண்மையில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு கண்டுணர் பயணங்கள், செயல்விளக்கத் திடல்கள் மூலம் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள், வேளாண்மைத் தொழில்நுட்பங்களை இயந்திரமயமாக்குதல், விவசாய விளைபொருட்களை மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்தும் முறைகள் போன்ற இனங்களைச் செயல்படுத்த இத்திட்டம் ரூ.124.14 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.10.2. உழவர் பயிற்சி மையங்கள்

தமிழ்நாடு அரசின்கீழ் செயல்படுத்தப்படும் 22 உழவர் பயிற்சி நிலையங்களின்மூலம் ஆண்டுதோறும் 28,820 விவசாயிகள், அமைப்பாளர்கள், மகளிர் விவசாயிகள் மற்றும்

2020 மார்ச் 24]

கிராமப்புற இளைஞர்களுக்கும் விவசாய மேலாண்மை மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.

அட்டவணை 1.35: உழவர் பயிற்சி நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	அமைவிடம்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2	விழுப்புரம்	திண்டிவனம்
3	வேலூர்	வேலூர்
4	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
5	சேலம்	சேலம்
6	நாமக்கல்	நாமக்கல்
7	தருமபுரி	தருமபுரி
8	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
9	ஈரோடு	ஈரோடு
10	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
11	பெரம்பலூர்	பெரம்பலூர்
12	கரூர்	கரூர்
13	புதுக்கோட்டை	குடுமியான்மலை
14	தஞ்சாவூர்	சாக்கோட்டை
15	தேனி	தேனி
16	திண்டுக்கல்	திண்டுக்கல்
17	இராமநாதபுரம்	பரமக்குடி
18	சிவகங்கை	சிவகங்கை
19	விருதுநகர்	விருதுநகர்
20	திருநெல்வேலி	பாளையங்கோட்டை
21	தூத்துக்குடி	தூத்துக்குடி
22	கன்னியாகுமரி	நாகர்கோவில்

பிரதான பயிற்சி நிலையமாக, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் செயல்பட்டுவரும் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் (STAMIN) மூலமாக விரிவாக்க

அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 1,100 விரிவாக்க அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்ட மாநில வேளாண் மேலாண்மை விரிவாக்க பயிற்சி நிலையமானது வேளாண் சார்ந்த திட்டமிடல், திட்ட வடிவங்கள் தயாரித்தல் மற்றும் திட்ட ஆலோசனை சேவைகள் போன்றவற்றை வழங்கி வருகிறது.

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் அரசு நீர் மேலாண்மை பயிற்சி மையத்தின் மூலமாக ஆண்டுதோறும் 900 விவசாயிகள் மற்றும் 180 விரிவாக்க அலுவலர்களுக்கு நீர்ப்பாசன தொழில்நுட்பங்கள் மற்றும் நீர்ப்பாசன திறன் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

1.10.3. உழவர்-அலுவலர் தொடர்புத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், 2020-2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "உழவர்-அலுவலர் தொடர்புத் திட்டத்தை" அறிவித்ததைத் தொடர்ந்து, துறை அதிகாரிகள் விவசாயிகளின் விளைநிலங்களுக்கே சென்று விவசாயிகளைச் சந்தித்து, களப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்குரிய ஆலோசனைகளை வழங்கவும், பல்வேறு திட்டங்கள் மற்றும் பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கவும் உழவர் -அலுவலர் தொடர்பு திட்டத்தை வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.11. தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் மண் பரிசோதனை நிலையங்கள்:

தமிழ்நாடு அரசு, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றின் தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், 3 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் மற்றும் குறியீடு மையங்கள், ஒரு மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆகியவற்றை ஏற்படுத்தி உள்ளது. மேலும், அங்கக உரங்களின் தரத்தை உறுதிப்படுத்த திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் அங்கக உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களும், உயிர் உரங்களின் தரத்தை உறுதி செய்யும்பொருட்டு திருச்சிராப்பள்ளியில் உயிர் உர தரக் கட்டுப்பாட்டு ஆய்வகமும் அமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தரத்தினை உறுதி செய்யும்பொருட்டு, உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985 மற்றும் பூச்சிக்கொல்லி சட்டம், 1968 மற்றும் விதிகள் 1971 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை உர ஆய்வாளர்கள் மற்றும் பூச்சிக்கொல்லி ஆய்வாளர்கள்மூலம் தமிழ்நாடு அரசு தீவிரமாக அமல்படுத்தி வருகின்றது.

1.11.1. உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

மாநிலத்தில் இயங்கிவரும் 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.36: உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

வ. எண்	மாவட்டம்	அமைவிடம்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2	விழுப்புரம்	விழுப்புரம்
3	சேலம்	சேலம்
4	தருமபுரி	தருமபுரி
5	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
6	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
7	தஞ்சாவூர்	கும்பகோணம்
8	திருவாரூர்	திருவாரூர்
9	மதுரை	மதுரை
10	திண்டுக்கல்	திண்டுக்கல்
11	இராமநாதபுரம்	பரமக்குடி
12	தூத்துக்குடி	கோவில்பட்டி
13	கன்னியாகுமரி	நாகர்கோவில்
14	நீலகிரி	ஊட்டி

2019-2020 ஆம் ஆண்டில் 17,948 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 761 மாதிரிகள் தரமற்றவை என்றும், 1,401 அங்கக உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 129 மாதிரிகள் தரமற்றவை

என்றும், 760 உயிர் உர மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, 1 மாதிரி தரமற்றவை என்றும் கண்டறியப்பட்டு உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-ன்படி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2020-2021 ஆம் ஆண்டில் 19,600 உர மாதிரிகளும், 1,440 அங்கக உர மாதிரிகளும், 1,040 உயிர் உர மாதிரிகளும் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1.11.2. பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 15 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.37: பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்

வ. எண்	மாவட்டம்	அமைவிடம்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2	வேலூர்	வேலூர்
3	சேலம்	சேலம்
4	தருமபுரி	தருமபுரி
5	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
6	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
7	தஞ்சாவூர்	ஆடுதுறை
8	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்
9	மதுரை	மதுரை
10	சிவகங்கை	சிவகங்கை
11	திருநெல்வேலி	திருநெல்வேலி
12	தூத்துக்குடி	கோவில்பட்டி
பூச்சிக்கொல்லி ஆய்வகம் மற்றும் குறியீடு மையங்கள்		
1	கடலூர்	கடலூர்
2	ஈரோடு	ஈரோடு
3	தேனி	வைகை அணை

காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இயங்கிவரும் பூச்சிக்கொல்லி ஆய்வகங்களுக்கு ஆய்வு மற்றும் அளவீட்டு ஆய்வகங்களுக்கான அங்கீகாரம் வழங்கும் தேசிய நிறுவனத்தின் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) தர அங்கீகாரம் பெற சிறப்புக் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டில், 20,018 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 215 மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2020-2021 ஆம் ஆண்டில் 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1.11.3. மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்

பயிர் மகசூலை இரட்டிப்பாக்கி, விவசாயிகளின் இலாபத்தை மும்மடங்காக்கிட மண் பரிசோதனை அடிப்படையிலான பயிருக்கேற்ற மண் வள மேம்பாடும், தேவைக்கேற்ற உர நிருவாகமும் இத்தருணத்தில் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில்கொண்டு, மண்ணில் உள்ள பேரூட்ட, நுண்ணூட்ட சத்துக்களை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்கிடும் வகையில், அனைத்து வசதிகளுடன் தரம் வாய்ந்த 31 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் வேளாண்மைத் துறையின்மூலம் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத் துறையில் இயங்கிவரும் மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.38: மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	மண் பரிசோதனை நிலையங்கள்		நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்	
1	காஞ்சிபுரம்	1	காஞ்சிபுரம்		
2	திருவள்ளூர்	2	திருவள்ளூர்	1	திருவள்ளூர்
3	கடலூர்	3	கடலூர்		
4	விழுப்புரம்	4	விழுப்புரம்	2	விழுப்புரம்
5	வேலூர்	5	மேலாலத்தூர்		
6	திருவண்ணாமலை	6	திருவண்ணாமலை	3	திருவண்ணாமலை

[2020 மார்ச் 24

வ. எண்	மாவட்டம்	மண் பரிசோதனை நிலையங்கள்		நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்	
7	சேலம்	7	சேலம்		
8	நாமக்கல்	8	நாமக்கல்	4	திருச்செங்கோடு
9	தருமபுரி	9	தருமபுரி		
10	கிருஷ்ணகிரி	10	கிருஷ்ணகிரி	5	கிருஷ்ணகிரி
11	கோயம்புத்தூர்	11	கோயம்புத்தூர்		
12	திருப்பூர்	12	திருப்பூர்	6	திருப்பூர்
13	ஈரோடு	13	ஈரோடு	7	ஈரோடு
14	திருச்சிராப்பள்ளி	14	திருச்சிராப்பள்ளி		
15	பெரம்பலூர்	15	பெரம்பலூர்	8	பெரம்பலூர்
16	அரியலூர்	16	அரியலூர்		
17	கரூர்	17	கரூர்	9	கரூர்
18	புதுக்கோட்டை	18	குடுமியான்மலை		
19	தஞ்சாவூர்	19	ஆடுதுறை		
20	நாகப்பட்டினம்	20	நாகப்பட்டினம்	10	நாகப்பட்டினம்
21	திருவாரூர்	21	திருவாரூர்	11	திருவாரூர்
22	மதுரை	22	மதுரை	12	மதுரை
23	தேனி	23	தேனி		
24	திண்டுக்கல்	24	திண்டுக்கல்		
25	இராமநாதபுரம்	25	பரமக்குடி	13	பரமக்குடி
26	சிவகங்கை	26	சிவகங்கை		
27	விருதுநகர்	27	விருதுநகர்	14	அருப்புக்கோட்டை
28	திருநெல்வேலி	28	திருநெல்வேலி		
29	தூத்துக்குடி	29	கோவில்பட்டி	15	கோவில்பட்டி
30	கன்னியாகுமரி	30	நாகர்கோவில்	16	நாகர்கோவில்
31	நீலகிரி	31	ஊட்டி		

2020 மார்ச் 24]

இந்த ஆய்வகங்கள் ஆண்டொன்றிற்கு 6.50 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை.

மேலும், மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாட்டு நிறுவனம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

1.11.4. மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (Central Control Laboratory):

மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகமானது, தமிழ்நாடு அரசால் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வகமானது, தமிழ்நாட்டின் ஏனைய ஆய்வகங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதோடு, அனைத்து ஆய்வகப் பணியாளர்களின் ஆய்வுத் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளித்து, ஆய்வக உபகரணங்களின் நம்பகத்தன்மையையும், ஆய்வு முடிவுகளின் துல்லியத்தையும் உறுதி செய்வதோடு, மண் பரிசோதனை அடிப்படையிலான உரப் பரிந்துரை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

1.12 முக்கிய வேளாண் இடுபொருட்களை உற்பத்தி செய்யும் மையங்கள்

பயிர்களின் விளைச்சலையும், விளைபொருட்களின் தரத்தினையும் நிர்ணயிக்கும் விதை, ஒரு முக்கிய அடிப்படையான இடுபொருளாகும். எனவே, குறித்த காலத்தே தரமான விதைகளை கொள்முதல் செய்யும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி தொகுப்பு நிதியுடன் "தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை" என்னும் சிறப்பு நோக்க அமைப்பினை ஏற்படுத்தியது.

1.12.1. அரசு விதைப் பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றுப் பண்ணைகள்

தரமான நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து விதைகள், மாநிலம் முழுவதும் உள்ள 40 மாநில அரசு விதைப் பண்ணைகளில் (அரசு விதைப் பண்ணைகள்–33 எண்கள், அரசு எண்ணெய்வித்துப் பண்ணைகள்–6 எண்கள்,

அரசு பயறு பெருக்குப் பண்ணை–1 எண்) உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.39: அரசு விதைப் பண்ணைகள்

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப் பண்ணை	பரப்பளவு (ஏக்கர்)
1	காஞ்சிபுரம்	பஞ்சுபேட்டை	58.76
2	திருவள்ளூர்	கொழுந்தலூர்	50.72
3	கடலூர்	மிராளூர்	43.98
4		வண்டுராயன்பட்டு	50.99
5	விழுப்புரம்	கா.குப்பம்	31.60
6		இருவேல்பட்டு	50.72
7		வடக்கனந்தல்	47.06
8		வானூர்	60.36
9	திருவண்ணாமலை	அத்தியேந்தல்	14.11
10		வாழவச்சனூர்	36.00
11	சேலம்	டேனிஷ்பேட்டை	96.40
12		மேட்டூர்	57.90
13	ஈரோடு	பவானி	73.61
14		சத்தியமங்கலம்	41.89
15	தருமபுரி	பாப்பாரப்பட்டி	14.87
16	திருப்பூர்	பாப்பான்குளம்	26.88
17	புதுக்கோட்டை	அண்ணா பண்ணை	601.95
18	திருச்சிராப்பள்ளி	புதூர்பாளையம்	75.97
19		நெய்குப்பைப்புதூர்	38.57
20	கரூர்	இனுங்கூர்	205.44
21	தஞ்சாவூர்	சாக்கோட்டை	83.00
22	நாகப்பட்டினம்	நாகமங்கலம்	63.91
23		திருக்கடையூர்	45.74
24	திருவாரூர்	கீரந்தி	55.70
25		காஞ்சிகுடிகாடு	53.02
26		தீவாம்பாள்பட்டினம்	92.72
27		நெடும்பலம்	63.73
28		மூங்கில்குடி	47.63

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப் பண்ணை	பரப்பளவு (ஏக்கர்)
29	மதுரை	விநாயகபுரம்	45.52
30	தேனி	கீழக்கூடலூர்	47.86
31	விருதுநகர்	தேவதானம்	52.07
32	திருநெல்வேலி	கரையிருப்பு	83.59
33	கன்னியாகுமரி	திருப்பதிசாரம்	37.20
	மொத்தம்		2,449.47

அட்டவணை 1.40: அரசு எண்ணெய்வித்துப் பண்ணைகள்

வ. எண்	மாவட்டம்	அரசு எண்ணெய் வித்துப் பண்ணைகள்	பரப்பளவு (ஏக்கர்)
34	காஞ்சிபுரம்	முசரவாக்கம்	154.95
35	கிருஷ்ணகிரி	அகசிப்பள்ளி	16.45
36	புதுக்கோட்டை	வெள்ளாளவிடுதி	657.35
37	வேலூர்	நவ்லாக்	66.16
38	ஈரோடு	பவானிசாகர்	28.39
39	கடலூர்	நெய்வேலி (டான்காப்)	301.01
	மொத்தம்		1,224.31

அட்டவணை 1.41: அரசு பயறு விதைப் பெருக்குப் பண்ணை

வ. எண்	மாவட்டம்	அரசு பயறு விதைப் பெருக்குப் பண்ணை	பரப்பளவு (ஏக்கர்)
40	புதுக்கோட்டை	வம்பன்	475.00
மொத்த பரப்பளவு (40 மா.வி.ப.)			4,148.78

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் 23 தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்கள்மூலம் தரமான நெட்டை, குட்டை மற்றும் ஒட்டு இரகத் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

அட்டவணை 1.42: அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்கள்

வ. எண்	மாவட்டம்	தென்னை நாற்றுப் பண்ணைகள்		தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்கள்	
1	காஞ்சிபுரம்	1	பிச்சிவாக்கம்		
2	திருவள்ளூர்	2	மாதவரம்	1	மாதவரம்
3	கடலூர்	3	நெய்வேலி		
4	விழுப்புரம்			2	மரக்காணம்
5	வேலூர்	4	நவ்லாக்	3	நவ்லாக்
6	திருவண்ணாமலை	5	வாழவச்சனூர்		
7	சேலம்	6	டேனிஷ்பேட்டை	4	சுக்கம்பட்டி
8	கிருஷ்ணகிரி	7	பி.ஜி.புதூர்	5	காவேரிப்பட்டினம்
9	கோயம்புத்தூர்	8	ஆழியார் நகர்	6	எஸ்.ஜி.பாளையம்
10	ஈரோடு	9	பவானிசாகர்	7	அய்யம்பாளையம்
11	திருச்சிராப்பள்ளி	10	திருவரங்கம்	8	திருவரங்கம்
12	புதுக்கோட்டை	11	வெள்ளாளவிடுதி		
13	தஞ்சாவூர்	12	பட்டுக்கோட்டை	9	பட்டுக்கோட்டை
14	நாகப்பட்டினம்	13	மல்லியம்		
15	தேனி	14	வைகை அணை	10	போடிநாயக்கனூர்
16	இராமநாதபுரம்	15	உச்சிப்புளி	11	உச்சிப்புளி
		16	தேவிபட்டினம்		
17	சிவகங்கை	17	சதுர்வேதிமங்கலம்	12	இலாடநேந்தல்
18	விருதுநகர்	18	தேவதானம்	13	தேவதானம்
19	திருநெல்வேலி	19	செங்கோட்டை	14	வடகரை
		20	வடகரை		
20	தூத்துக்குடி	21	கிள்ளிகுளம்	15	உடன்குடி
21	கன்னியாகுமரி	22	புத்தளம்	16	அகஸ்தீஸ்வரம்
22	திருவாரூர்	23	வடுவூர்		

1.12.2. விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்கி பயிர் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில், சேமிப்புக் கிடங்கு வசதியுடன்கூடிய 126 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு

2020 மார்ச் 24]

வருகின்றன. இந்நிலையங்கள் அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

அட்டவணை 1.43: விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை			மொத்த எண்ணிக்கை
		பெரியது	நடுத்தரம்	சிறியது	
1	காஞ்சிபுரம்	2	0	4	6
2	திருவள்ளூர்	3	0	4	7
3	கடலூர்	0	0	3	3
4	விழுப்புரம்	5	1	3	9
5	வேலூர்	1	0	3	4
6	திருவண்ணாமலை	3	0	6	9
7	சேலம்	2	1	0	3
8	நாமக்கல்	1	0	2	3
9	தருமபுரி	1	0	2	3
10	கிருஷ்ணகிரி	1	0	2	3
11	கோயம்புத்தூர்	1	0	1	2
12	திருப்பூர்	1	0	2	3
13	ஈரோடு	2	0	2	4
14	திருச்சிராப்பள்ளி	2	0	3	5
15	பெரம்பலூர்	0	0	1	1
16	அரியலூர்	2	0	1	3
17	கரூர்	2	0	0	2
18	புதுக்கோட்டை	2	0	3	5
19	தஞ்சாவூர்	6	0	1	7
20	நாகப்பட்டினம்	2	0	5	7
21	திருவாரூர்	3	2	2	7
22	மதுரை	4	2	0	4
23	தேனி	0	0	2	2
24	திண்டுக்கல்	1	0	0	1
25	இராமநாதபுரம்	2	1	0	3

வ. எண்	மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை			மொத்த எண்ணிக்கை
		பெரியது	நடுத்தரம்	சிறியது	
26	சிவகங்கை	1	0	2	3
27	விருதுநகர்	1	0	4	5
28	திருநெல்வேலி	1	0	4	5
29	தூத்துக்குடி	2	0	1	3
30	கன்னியாகுமரி	**1**	**0**	**1**	**2**
மொத்தம்		**55**	**7**	**64**	**126**

1.12.3. நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி மையம்

விவசாயிகளுக்கு தரமான நுண்ணூட்ட உரம் வழங்குவதற்காக, வேளாண்மைத் துறை, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலையில் நுண்ணூட்ட உர உற்பத்தி மையத்தை நிறுவி உள்ளது. இம்மையத்தில் பயிர்களுக்கு தேவையான 14 வகையான நுண்ணூட்ட உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 2,279 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில் 2,400 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரங்கள் உற்பத்தி செய்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

1.12.4. உயிர் உர உற்பத்தி மையங்கள்

மண் வளத்தை பாதுகாத்து செறிவூட்டக்கூடிய வகையில், அசோஸ்பைரில்லம்-நெல், அசோஸ்பைரில்லம்-இதர வகை, ரைசோபியம்-பயறு வகைகள், ரைசோபியம்-நிலக்கடலை மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகிய ஐந்து வகையான உயிர் உரங்கள் 22 உயிர் உர உற்பத்தி மையங்களின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதில், 5 உயிர் உர உற்பத்தி மையங்கள் திட மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்களாகும்.

2019-2020 ஆம் ஆண்டில் 2,731 மெட்ரிக் டன் திட உயிர் உரங்களும், 6.37 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்களும் உற்பத்தி செய்யப்பட்டு "அம்மா உயிர் உரங்கள்" என்ற பெயரில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2020 மார்ச் 24]

அட்டவணை 1.44: உயிர் உர மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்

வ. எண்	மாவட்டம்	திட உயிர் உர உற்பத்தி மையங்கள்		திட மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்	
1	காஞ்சிபுரம்	1	செங்கல்பட்டு		
2	கடலூர்	2	கடலூர்	1	கடலூர்
3	திருவண்ணாமலை	3	போளூர்		
4	சேலம்	4	சேலம்	2	சேலம்
5	தருமபுரி	5	பாலக்கோடு		
6	திருப்பூர்	6	அவினாசி		
7	ஈரோடு	7	பவானி		
8	திருச்சிராப்பள்ளி	8	திருச்சிராப்பள்ளி		
9	புதுக்கோட்டை	9	குடுமியான்மலை	3	குடுமியான்மலை
10	தஞ்சாவூர்	10	சாக்கோட்டை	4	சாக்கோட்டை
11	திருவாரூர்	11	நீடாமங்கலம்		
12	தேனி	12	உத்தமபாளையம்		
13	இராமநாதபுரம்	13	இராமநாதபுரம்	5	இராமநாதபுரம்
14	திருநெல்வேலி	14	தென்காசி		
15	தூத்துக்குடி	15	தூத்துக்குடி		
16	திருவள்ளூர்			1	புழல்
17	விழுப்புரம்			2	முகையூர்
18	வேலூர்			3	குடியாத்தம்
19	அரியலூர்			4	ஜெயங்கொண்டம்
20	மதுரை			5	திருமங்கலம்
21	திண்டுக்கல்			6	பழனி
22	சிவகங்கை			7	மானாமதுரை

1.12.5. உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாட்டில் அங்கக வேளாண்மையின் சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும், அங்ககப் பொருட்களின் தேவையைக் கருத்தில்கொண்டும் தமிழ்நாடு அரசு, 10 உயிரி கட்டுபாட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

காரணிகள் உற்பத்தி ஆய்வகங்களையும் 2 ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்களையும் அமைத்து செயல்படுத்தி வருகிறது. இம்மையங்களில் உற்பத்தி செய்யப்படும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள், வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.45: உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள்

வ. எண்	மாவட்டம்	உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மைங்கள்	ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள்
1.	விழுப்புரம்	விழுப்புரம்	-
2.	சேலம்	சீலநாயக்கன்பட்டி	-
3.	நாமக்கல்	நாமக்கல்	-
4.	தருமபுரி	பாப்பாரப்பட்டி	-
5.	கோவை	கோவை	-
6.	ஈரோடு	பவானி	-
7.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	-
8.	தஞ்சாவூர்	காட்டுத்தோட்டம்	-
9.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை	-
10.	காஞ்சிபுரம்	-	பஞ்சுப்பேட்டை
11.	மதுரை	விநாயகபுரம்	விநாயகபுரம்

அட்டவணை 1.46: 2019-2020 ஆம் ஆண்டில் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் விநியோகம்

வ. எண்	உயிரி கட்டுப்பாட்டு காரணிகள்	விநியோகம்
1.	டிரைகோடெர்மா விரிடி (கிலோ)	1,51,799
2.	சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ)	57,174

2020 மார்ச் 24]

3.	பவேரியா பேசியானா (கிலோ)	70,956
4.	டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி)	4,280
5.	மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ)	1,22,000

2020-2021 ஆம் ஆண்டில் அமெரிக்கன் படைப்புழு மற்றும் ரூகோஸ் வெள்ளை ஈ போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்திட சிறப்பு இனமாக பவேரியா பேசியானா 90,000 கிலோ மற்றும் மெட்டாரைசியம் அனிசோபிலியே 1,10,000 கிலோ உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் டிரைகோடெர்மா விரிடி 2,20,000 கிலோ, சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 60,000 கிலோ, முட்டை ஒட்டுண்ணிகள் டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் 30,000 சிசி, டிரைக்கோகிரம்மா பிரட்டியோசம் 62,000 சிசி ஆகியவற்றை உற்பத்தி செய்து விநியோகித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1.13. தொழில்நுட்பப் பரவலாக்கம் மற்றும் அத்தியாவசிய இடுபொருட்கள் விநியோகம்:

1.13.1. வேளாண்மை விரிவாக்க மையங்கள்:

வேளாண்மை விரிவாக்க மையங்கள் முக்கிய இடுபொருட்களான விதைகள், நுண்ணூட்ட உரக் கலவைகள், உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டு காரணிகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை இருப்பு வைத்து விநியோகம் செய்யும் விவசாய மையமாக செயல்படுகிறது. மேலும், வேளாண்மை சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தும் செயல் முனையங்களாகவும், விதைப்பது முதல் அறுவடை வரையிலான அனைத்து முக்கிய தொழில்நுட்பங்களையும் வழங்கும் ஆலோசனை மையங்களாகவும் செயல்படுகின்றன. 880 வேளாண் விரிவாக்க மையங்கள், விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த சேவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்குவதற்கென செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றில், வட்டார அளவில் 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களும், கிராம அளவில் 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் இயங்கி வருகின்றன.

இந்த 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில் 181 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாகவும், 10 மையங்கள் உழவர் மையங்களாகவும் தரம்

உயர்த்தப்பட்டுள்ளன. இந்த 191 மையங்களும் வட்டார அளவிலான வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை, விதைச் சான்று, வேளாண் பொறியியல் ஆகிய துறை அலுவலகங்களை உள்ளடக்கியதாகவும், கருத்தரங்கு மையம், காணொளிக்காட்சி மையம், கணினி மையம் ஆகிய வசதிகள் கொண்டவையாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் 160 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், 2017-2018 முதல் படிப்படியாக மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகளுடன் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.47: முதன்மை மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள்

மாவட்டம்	முதன்மை மையம் (வட்டார வேளாண்மை விரிவாக்க மையம்)	துணை மையம் (துணை வேளாண்மை விரிவாக்க மையம்)	மொத்தம்
காஞ்சிபுரம்	13	16	29
திருவள்ளூர்	14	21	35
கடலூர்	13	17	30
விழுப்புரம்	21	27	48
வேலூர்	20	23	43
திருவண்ணாமலை	17	24	41
சேலம்	20	11	31
நாமக்கல்	15	17	32
தருமபுரி	8	8	16
கிருஷ்ணகிரி	10	7	17
கோயம்புத்தூர்	12	14	26
திருப்பூர்	13	13	26
ஈரோடு	14	21	35
திருச்சிராப்பள்ளி	14	10	24
பெரம்பலூர்	4	3	7

மாவட்டம்	முதன்மை மையம் (வட்டார வேளாண்மை விரிவாக்க மையம்)	துணை மையம் (துணை வேளாண்மை விரிவாக்க மையம்)	மொத்தம்
அரியலூர்	6	3	9
கரூர்	8	4	12
புதுக்கோட்டை	13	20	33
தஞ்சாவூர்	14	47	61
நாகப்பட்டினம்	11	33	44
திருவாரூர்	10	32	42
மதுரை	13	19	32
தேனி	8	13	21
திண்டுக்கல்	13	15	28
இராமநாதபுரம்	11	6	17
சிவகங்கை	12	9	21
விருதுநகர்	11	5	16
திருநெல்வேலி	19	31	50
தூத்துக்குடி	12	16	28
கன்னியாகுமரி	10	11	21
நீலகிரி	4	1	5
மொத்தம்	**383**	**497**	**880**

1.14. தமிழ்நாடு நீர் வள நில வளத் திட்டம்-II (TNIAMP)

வேளாண்மைத் துறையால், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர் வள நில வளத் திட்டம்-II, நீர்ப்பாசன மேலாண்மை, காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப் பாசன வேளாண்மை ஆகியவற்றின்மூலம் பயிர் உற்பத்தி திறனைப் பெருக்குதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட 66 துணையாற்றுப் படுகைகளில் 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரூபாய் 86.55 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

2019-2020 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு நீர் வள நில வளத் திட்டம்-II, முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 18 துணையாற்றுப் படுகைகளில் ரூபாய் 6.18 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 16 துணையாற்றுப் படுகைகளில் ரூபாய் 8.28 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் மொத்தமாக ரூபாய் 14.46 கோடி நிதி ஒதுக்கீட்டில் கீழ்க்கண்ட இனங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1.14.1. பயிர் செயல்விளக்கங்கள்

மண் வளத்தைப் பெருக்கி மகசூலை அதிகரிப்பதற்காக பசுந்தாள் உரப் பயிர்கள்-திருந்திய நெல் சாகுபடி-நெல் தரிசில் பயறு வகை என்ற முப்பயிர் தொடர்ச்சி செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டன. மேலும், உயர் விளைச்சல் இரகங்களை பயிரிட்டு உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்வதோடு, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடும் வகையில் பசுந்தாள் உரப் பயிர்கள், திருந்திய நெல் சாகுபடி, நெல் தரிசில் பயறு வகைகள், மக்காச்சோளம், கேழ்வரகு, சிறுதானியங்கள், சோளம், பயறு வகைகள் மற்றும் நிலக்கடலைப் பயிர்களிலும் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1.14.2. இதர பயிர் சார்ந்த இனங்கள்

பண்ணைப் பள்ளிகள் வாயிலாக பயிர் சாகுபடி தொழில்நுட்பங்களும், சுற்றுப்புறச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை மாதிரி கிராமங்கள் வாயிலாக பண்ணை அளவில் உயிரியல் பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தியும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிருவாகம்மூலம் மண் வளத்தை மேம்படுத்தும் வகையில் மண்புழு உரத் தயாரிப்பு செயல்விளக்கங்களும், விதைக் கிராமங்களில் உழவர் ஆர்வலர் குழுக்கள்மூலம் துணையாற்றுப் படுகை விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1.14.3. இயந்திரக் களையெடுப்பு

திருந்திய நெல் சாகுபடி வயல்களில் விசைக் களையெடுக்கும் கருவியின்மூலம் களைகள் எடுப்பதற்கு பின்னேற்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

1.14.4. தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டு இனங்கள்

நீர் சேமிப்பு மற்றும் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம், 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

1.15. பயிர் விளைச்சல் போட்டி மற்றும் விவசாயிகளுக்கான சிறப்பு விருதுகள்

1.15.1. பயிர் விளைச்சல் போட்டி (Crop Yield Competition)

தமிழ்நாடு அரசு பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பல்வேறு விஞ்ஞான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதுடன் அவற்றை விவசாயிகள் பண்ணையளவில் நடைமுறைப்படுத்துவதையும் உறுதி செய்கிறது. பயிர் விளைச்சல் போட்டிகள் நவீன வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகள் முழு ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் விதமாக நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவில் மக்காச்சோளம் (இறவை), சோளம் (இறவை), கம்பு (இறவை), நிலக்கடலை (இறவை), துவரை, உளுந்து (இறவை), பச்சைப் பயறு (இறவை), பருத்தி மற்றும் கரும்பு பயிர்களில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதேபோன்று, மாவட்ட அளவில் நெல், நிலக்கடலை (இறவை), நிலக்கடலை (மானாவாரி), சோளம் (இறவை), கம்பு (இறவை), மக்காச்சோளம் (இறவை), உளுந்து (இறவை), பச்சைப் பயறு (இறவை), துவரை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மாநில மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகளில் பங்கு பெற்று அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

[2020 மார்ச் 24

அட்டவணை 1.48: மாநில மற்றும் மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுத் தொகைகள்

(ரூபாயில்)

வ. எண்	பயிர்கள்	முதல் பரிசு	இரண்டாம் பரிசு
1. மாநில அளவில்			
	நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி	25,000/-	15,000/-
	சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப் பயறு மற்றும் துவரை	15,000/-	10,000/-
2. மாவட்ட அளவில்			
	நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி	15,000/-	10,000/-
	சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப் பயறு மற்றும் துவரை	10,000/-	5,000/-

1.15.2. சிறப்பு விருது

1.15.2.1. திருந்திய நெல் சாகுபடி (SRI-Special Award)

நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடித்து மாநிலத்திலேயே அதிக மகசூல் பெறும் ஒரு விவசாயிக்கு குடியரசு தினத்தன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு பரிசுத் தொகை ரூ.5 இலட்சம் மற்றும் ரூ.5,000/- மதிப்புடைய பதக்கம் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடித்து எக்டருக்கு 16,750 கிலோ மகசூல் பெற்ற ஈரோடு மாவட்டத்தின், பசுவப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சு. யுவக்குமார் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26-1-2020 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2020 மார்ச் 24]

1.15.2.2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது:

பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்துப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக அதிக மகசூல் பெற்று மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விவசாயிகளுக்கு 2018-2019 ஆம் ஆண்டு முதல் "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது" ரொக்கப் பரிசாக முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் ஆத்தூர் கிச்சிலி சம்பா இரகம் சாகுபடி செய்து எக்டருக்கு 8,455 கிலோ அதிக மகசூல் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்ற திருநெல்வேலி மாவட்டத்தினைச் சார்ந்த திருமதி. சு. கிருஷ்ணம்மாள் அவர்களுக்கு "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும்" பரிசுத்தொகை ரூ.1 இலட்சமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பெற்று மாப்பிள்ளை சம்பா இரகம் சாகுபடி செய்து எக்டருக்கு 7,625 கிலோ மகசூல் பெற்ற அரியலூர் மாவட்டத்தினைச் சேர்ந்த திரு. ஐ. நாகராஜன் மற்றும் சீரக சம்பா இரகம் சாகுபடி செய்து எக்டருக்கு 7,200 கிலோ மகசூல் பெற்று மூன்றாமிடம் பெற்ற விருதுநகர் மாவட்டத்தினைச் சேர்ந்த திரு. ப. பிச்சைமுருகன் ஆகியோருக்கு "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும்" பரிசுத் தொகை முறையே ரூ.75 ஆயிரம் மற்றும் ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிலும் இவ்விருது தொடர்ந்து வழங்கப்படும்.

1.16. வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பம்

மின்னணு வேளாண்மையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. வேளாண்மைத் துறைமூலம் வகுக்கப்பட்ட சிறப்பான கொள்கைகள், ஒரு முன்மாதிரியான வேளாண் மேலாண்மை மற்றும் தகவல் முறை உருவாக வழிவகுத்துள்ளது.

விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், உணவுப் பாதுகாப்பினை ஊக்குவிப்பதற்கும், கிராமப்புற வறுமையைக் குறைப்பதற்கும் மின்னணு வேளாண்மையின் வளர்ச்சி பலம் பொருந்தியதாக உள்ளது. நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின்

வருவாயை உயர்த்துவதற்கும், தகவல் தொடர்பு பரிமாற்ற தொழில்நுட்பம் (ICT), ஒரு குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது; நேரத்தையும் பணிச்சுமையையும் குறைக்கிறது, விதைகள் மற்றும் உர விற்பனையாளர்களுடன் தொடர்புகளை மேம்படுத்துகிறது. இவை தவிர, உழவுத் தகவல் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு இசைவான அணுகுமுறையை வழங்குகிறது.

பல்வேறு தகவல் தொடர்பு பரிமாற்ற தொழில்நுட்பம்மூலம் வேளாண் சமூகத்திற்கு வேளாண் தகவல் சேவைகளை வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5-4-2018 அன்று "உழவன்" கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. உழவன் கைபேசி செயலி கீழ்க்கண்ட 16 சேவைகளை உள்ளடக்கியது. இச்சேவையை இதுவரை 6.22 இலட்சத்திற்கு அதிகமான விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

1. வேளாண்மைத் துறை மற்றும் சகோதர துறைகளில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் பற்றி அறிதல்
2. உயர் விலை மதிப்புள்ள வேளாண் இடுபொருட்களைப் பெறுவதற்கான முன்பதிவு
3. பயிர் காப்பீடு சேவையில் பயிர் வாரியாக கட்ட வேண்டிய பிரிமியம் தொகை, அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்கள், பதிவு செய்யத் தேவையான ஆவணங்கள் மற்றும் பயிர்க் காப்பீடு பாலிசி விவரம் அறிதல்
4. உரங்களின் இருப்பு நிகழ்நிலையில் (Real time) அறிதல்
5. விதைகளின் இருப்பு நிகழ்நிலையில் (Real time) அறிதல்
6. அரசு மற்றும் தனியார் வேளாண் இயந்திரம் வாடகை மையங்கள் (Custom Hiring centres) விவரம் மற்றும் விவசாயிகள் தங்களுக்குள் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் சேவை
7. வேளாண் விளைபொருட்களின் அன்றாட சந்தை விலை விவரம் அறிதல்
8. அடுத்த நான்கு நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு குறித்து அறிதல்

9. உதவி வேளாண்மை அலுவலர்/தோட்டக்கலை அலுவலர் வருகை தேதி மற்றும் சந்திக்கும் இடம் குறித்த விவரம் அறிதல்

10. தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலத்தின் முக்கிய பெரிய அணைகளின் நீர் இருப்பு விவரம் குறித்து அறிதல்

11. வேளாண்மைத் துறையினால் விவசாயிகளுக்குத் தெரிவிக்கக்கூடிய முக்கிய வேளாண் தகவல்கள் அறிதல்

12. விவசாயிகள் வேளாண் திட்டங்கள் தொடர்பான தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தல்

13. "என் பண்ணை வழிகாட்டி" என்ற சேவைமூலம் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரையிலான பல்வேறு சந்தேகங்களுக்கு உடனுக்குடன் தீர்வு அளித்தல்

14. பயிர் வாரியாக இயற்கை முறை விவசாயிகளின் தொடர்பு விவரம், இயற்கை வேளாண் பொருட்கள் விற்பனையாளர்கள் விவரம் மற்றும் இயற்கை விவசாயம் அங்கீகரிக்கும் முகமைகள் பற்றி அறிதல்

15. உழவர் உற்பத்தியாளர் குழுக்களால் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குள்ள பொருட்களின் விவரம் அறிதல்

புதிதாக சேர்க்கப்பட்ட சேவை

16. பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு சேவையில் விவசாயிகள் தங்கள் வயலில் பூச்சி மற்றும் நோய் தாக்கப்பட்ட பயிரின் படம் எடுத்து அனுப்பினால், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மென்பொருள் வாயிலாக அந்த தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து குறுஞ்செய்திகள் வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

1.17. பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்டம் (PM-KISAN)

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்டமானது 1-12-2018 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் முதலில் குறு/சிறு விவசாயிகளுக்கு மட்டும் என்று துவங்கி தற்போது அனைத்து விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயிர் சாகுபடிக்குத் தேவையான

வேளாண் இடுபொருட்களை கொள்முதல் செய்வதற்கான உதவித் தொகையாக விவசாய குடும்பங்களுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2,000/- வீதம் ஆண்டிற்கு ரூ.6,000/- மூன்று தவணைகளில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடி மாற்றம் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

திட்ட வழிகாட்டுதலின்படி, கீழ்க்கண்ட பிரிவைச் சார்ந்த விவசாயிகளைத் தவிர மற்ற அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள்:

1. உயர் வருவாய்ப் பிரிவினர்
2. நிறுவனத்தின் பெயரில் நிலம் உள்ளவர்கள்
3. கீழ்க்காணும் விவசாயக் குடும்ப உறுப்பினர்கள்:-

அ) முந்நாள் மற்றும் இந்நாள் அரசமைப்பு பதவி வகித்தவர்/வகிப்பவர்.

ஆ) முந்நாள் மற்றும் இந்நாள் மத்திய/மாநில அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர்கள் மற்றும் மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள்.

இ) மத்திய/மாநில அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், மத்திய/மாநில பொதுத் துறை நிறுவன ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அலுவலர்கள்.

ஈ) மாதத்திற்கு ரூ.10,000/- மேல் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள்.

உ) கடந்த வருடத்தில் வருமான வரி செலுத்தியவர்கள்.

ஊ) பதிவு செய்து பணியாற்றிவரும் மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், கட்டடக்கலை வல்லுநர்கள்.

தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் அறிக்கை 2012-2013-ன்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 32.44 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன. தற்போது உள்ள விவசாயக் குடும்பங்களையும் சேர்த்து 37.40 இலட்சம் தகுதிவாய்ந்த விவசாயக் குடும்பங்கள்

கணக்கிடப்பட்டு, மத்திய அரசின் பிரதம மந்திரி கிஸான் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுநாள் வரை 37.40 இலட்சம் விவசாயக் குடும்பங்களுள், 35.69 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு நிதி உதவியாக நான்கு தவணைகளில் மொத்தம் ரூ.2,469.75 கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடி மாற்றம் மூலமாக வரவு வைக்கப்பட்டுள்ளன.

விடுபட்ட விவசாயிகளை இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு அனைத்து வட்டாரங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டதன் விளைவாக 1.92 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் தாங்களாகவே பிரதம மந்திரி கிஸான் வலைதளத்தில் பதிவு செய்துள்ளனர். அவர்களில் தகுதி உள்ளவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுவதுடன், புதிய விவசாயிகள் பதிவு செய்வதற்கும் உழவன் செயலியில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1.18. பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் (PMKMY)

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் 9-8-2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது குறு/சிறு விவசாயிகளுக்கான தன்னார்வ விருப்ப பங்களிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் இணைவதற்கான வயது வரம்பு 18 முதல் 40 வரை ஆகும்.

இத்திட்ட பங்குதாரர் 60 வயதினை எட்டும்பொழுது மாதம் ரூ.3,000/- வீதம் ஓய்வூதியமாக வழங்கப்படும். பயனாளி விவசாயி மரணமடையும்பட்சத்தில் அவரது கணவர்/மனைவி ஓய்வூதிய நிதியில் 50 சதவீதம் தொகையினை குடும்ப ஓய்வூதியமாக பெறுவர்.

18 முதல் 40 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரர்கள் 60 வயதை அடையும் வரை மாதத்திற்கு ரூ.55 முதல் ரூ.200 வரை மாதாந்திர பங்களிப்பாக வழங்க வேண்டும். இதே அளவுத் தொகை மத்திய அரசின் பங்களிப்புடன் அந்தந்த நபரின் ஓய்வூதியக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

பயனாளி விவசாயி பங்களிப்புத் தொகை செலுத்தி வரும் காலத்தில் மரணம் அடையும்பட்சத்தில் அவருடைய கணவர்/ மனைவி தொடர்ந்து பங்குத் தொகை செலுத்தி இத்திட்டத்தில் உறுப்பினராக நீடிக்கலாம். பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்டத்தில் பயன் அடைந்துவரும் ஒரு குறு/சிறு விவசாயி தனது

ஓய்வுதியத் திட்டத்திற்கான மாதாந்திர பங்களிப்புத் தொகையினை கிஸான் சம்மான் நிதி திட்டத்தில் வழங்கப்படும் தொகையிலிருந்தும் செலுத்த விருப்பம் தெரிவிக்கலாம். மேலும், ஒரு பயனாளி விவசாயி தனது மாதாந்திர பங்களிப்புத் தொகையினை பொது சேவை மையங்களில் பதிவு செய்வதன்மூலம் செலுத்தலாம். தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் சேர இதுவரை 1.06 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர்.

1.19. விவசாயக் கடன் அட்டைத் திட்டம் (Kisan Credit Card Scheme)

விவசாயக் கடன் அட்டை (Kisan Credit Card) வழங்கும் திட்டம் விவசாயிகளின் நில உடைமைகளின் அடிப்படையில் அவ்விவசாயிகளுக்கு விவசாயக் கடன் அட்டை வழங்குவதற்காக வங்கிகளால் 1998-ல் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு ரூபாய் 1.60 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதன்மூலம் வேளாண் இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை வாங்கவும் மற்றும் உற்பத்திக்கு தேவையான நிதி உதவி பெறவும் முடியும். மேலும், இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு முதலீடு செய்ய கடன் பெறலாம். இத்திட்டத்தில் விவசாயிகள், குத்தகைதாரர்கள், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த விவசாயிகள் பயன் பெறலாம்.

இத்திட்டத்தில் இதுவரை கூட்டுறவு வங்கிகள்மூலம் 12.83 இலட்சம் விவசாயக் கடன் அட்டைகளும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் 7.04 இலட்சம் விவசாயக் கடன் அட்டைகளும் மற்றும் மண்டல கிராமப்புற வங்கிகள்மூலம் 0.33 இலட்சம் விவசாயக் கடன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 20.20 இலட்சம் விவசாயக் கடன் அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் விவசாயக் கடன் அட்டை வழங்குவதற்காக அனைத்து கிராமங்களிலும் வேளாண்மைத் துறை மற்றும் வங்கிகள் இணைந்து சிறப்பு முகாம்கள் நடத்த பெறப்பட்ட விண்ணப்பங்கள் வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களிடம் அளிக்கப்பட்டு விவசாயக் கடன் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

1.20. தானியங்கி வானிலை நிலையங்கள்:

தமிழ்நாட்டில் அனைத்து வட்டாரங்களிலும் தானியங்கி வானிலை நிலையங்களை வட்டாரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. மேலும், தானியங்கி வானிலை நிலையத்திலிருந்து பெறப்படும் காலநிலை தகவலினை பயன்படுத்தி வட்டாரத்திற்கான வேளாண் ஆலோசனை சேவைக்கான மென்பொருளையும் உருவாக்கியுள்ளது. தற்போது, இயங்கிவரும் 50 நிலையங்களிலிருந்து பெறப்படும் தகவல்கள் தினசரி வருவாய்த் துறைக்கும் பகிரப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு வேளாண் ஆலோசனை சேவையினை வழங்குவதற்காக 285 பழுதடைந்த நிலையங்களைப் புதுப்பிக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.21. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

வேளாண்மைத் துறை மொத்தம் 9,824 பணியாளர்களுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. இதில், 4,828 தொழில்நுட்ப அலுவலர்கள் 4,996 அமைச்சு மற்றும் இதர பணியாளர்களும் அடங்குவர்.

அட்டவணை 1.49: தொழில்நுட்ப அலுவலர்கள்

பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
வேளாண்மை கூடுதல் இயக்குநர்	4
வேளாண்மை இணை இயக்குநர்	31
வேளாண்மை துணை இயக்குநர்	123
உதவி வேளாண்மை இயக்குநர்	420
வேளாண்மை அலுவலர்	1,088
துணை வேளாண்மை அலுவலர்	337
உதவி விதை அலுவலர்	509
உதவி வேளாண்மை அலுவலர்	2,316
மொத்த தொழில்நுட்ப பணியாளர்கள்	4,828

அட்டவணை 1.50: அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்

பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
துணை இயக்குநர் (நிருவாகம்)	2
ஆட்சி அலுவலர்	33
கண்காணிப்பாளர்	183
உதவியாளர்	644
இளநிலை உதவியாளர்	387
தட்டச்சர்	360
கிடங்கு மேலாளர் (தரம்-1)	141
கிடங்கு மேலாளர் (தரம்-2)	249
கிடங்கு மேலாளர் (தரம்-3)	567
சுருக்குத் தட்டச்சர் (தரம்-1)	1
சுருக்குத் தட்டச்சர் (தரம்-2)	37
சுருக்குத் தட்டச்சர் (தரம்-3)	89
ஓட்டுநர்	289
ஆய்வக உதவியாளர்	143
பதிவறை எழுத்தர்	155
அலுவலக உதவியாளர்	584
காவலாள்	1,130
தொலைபேசி இயக்குபவர்	2
மொத்த தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்	**4,996**

வேளாண்மைத் துறை சிறப்புடன் செயல்படுவதற்கு ஏதுவாக, 2018-2019 ஆம் ஆண்டில் 643 தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் 901 அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் 195 தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் 240 அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட உள்ளனர்.

2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி வாழ்வாதாரப் பாதுகாப்பை வழங்குவதிலும், ஏற்றுமதிமூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும், ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. பரப்பு விரிவாக்கம், உற்பத்தி, மாற்றுப்பயிர் செய்வதற்கான வாய்ப்புகள், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களை மதிப்பு கூட்டு பொருளாக மாற்றுதல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவைமூலம் தோட்டக்கலைத் துறையின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பலவித வேளாண் காலநிலைகள் மற்றும் மரபணு வளங்களில் வளமான பன்முகத்தன்மை ஆகியவை தமிழகத்திற்கு ஆண்டு முழுவதும் பலவகையான தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்து பழங்கள் மற்றும் காய்கறிகள்மூலம் சீரான ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகை செய்கிறது.

அதிகரித்துவரும் மக்கள்தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை தொடர்ந்து அதிகரிக்க பல்வேறு திட்டங்களின் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.1. தேசிய அளவில் தோட்டக்கலை பயிர்களில் தமிழ்நாட்டின் நிலை

மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டிற்கான தோட்டக்கலை புள்ளிவிவரப்படி, தேசிய அளவில் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது. தேசிய அளவில் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியில் தமிழகம் 5.5 சதவீதமும், பரப்பளவில் 4.9 சதவீதமும் பங்களிக்கிறது. நாட்டின் பழங்கள் சாகுபடி பரப்பில் 4.4 சதவீதத்தினையும் காய்கறிகள் சாகுபடி பரப்பில் 2.3 சதவீதத்தினையும் தமிழகம் கொண்டுள்ளது.

தேசிய அளவிலான பழங்கள் உற்பத்தியில் 5.8 சதவீதமும், காய்கறிகள் உற்பத்தியில் 3.4 சதவீதமும் தமிழகம் பங்களிப்பு செய்கிறது. வளர்ந்துவரும் மக்கள்தொகையின் தேவையை பூர்த்தி செய்யும்வகையில், 7 இலட்சம் எக்டர் பரப்பில் பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழகம் உதிரிப்பூக்கள்

[2020 மார்ச் 24

உற்பத்தியில் தேசிய அளவில் முன்னிலை வகிப்பதுடன் நாட்டின் மொத்த உதிரிப்பூக்கள் உற்பத்தியில் 24.5 சதவீத பங்களிப்பினையும் கொண்டுள்ளது.

அட்டவணை 2.1. தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் (2018–2019 மற்றும் 2019–2020)

(பரப்பு: இலட்சம் எக்டர், உற்பத்தி: இலட்சம் மெட்ரிக் டன், உற்பத்தித் திறன்: மெட்ரிக் டன்/எக்டர்)

வ. எண்	பயிர்	2018–19 (மதிப்பீடு)			2019–20 (திட்டமிடப்பட்டது)		
		பரப்பு	உற்பத்தி	உற்பத்தித் திறன்	பரப்பு	உற்பத்தி	உற்பத்தித் திறன்
1	பழங்கள்	2.77	56.24	19.34	3.02	59.41	19.66
2	காய்கறிகள்	2.03	57.03	25.29	3.25	74.85	23.00
3	நறுமண மற்றும் சுவைதாளிதப் பயிர்கள்	1.10	3.89	3.55	1.04	3.38	3.24
4	மலைப்பயிர்கள்	6.76	48.69	7.18	6.71	46.73	7.18
5	மூலிகை, வாசனை திரவியப் பயிர்கள்	0.11	2.10	13.87	0.17	2.16	12.66
6	மலர்கள்	0.27	5.15	13.81	0.36	4.91	13.59
	மொத்தம்	13.04	173.10		14.56	191.43	

• 2019–2020 தோட்டக்கலை பரப்பு உற்பத்தி தகவல் அமைப்பு (HAPIS)

தமிழக அரசின் முக்கிய கொள்கையானது "உற்பத்தியை இருமடங்காக்கி, விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக பெருக்குவதே ஆகும்".

அரசின் கொள்கைகளைத் திறம்பட செயல்படுத்திட தோட்டக்கலை துறையானது தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கு தரமான சான்றளிக்கப்பட்ட இரகங்களின்

2020 மார்ச் 24]

வீரிய ரக விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகளைப் பயன்படுத்துதல், பாதுகாக்கப்பட்ட சூழலில் அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல், அடர் நடவு சாகுபடி, பாசன நீரின் உபயோகத் திறனை அதிகப்படுத்த நுண்ணீர்ப் பாசனம், தேனீ வளர்ப்பின்மூலம் மகரந்த சேர்க்கையை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரித்தல், கிளை மேலாண்மை, பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், மானாவாரி பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், பண்ணை இயந்திரமயமாக்கல், வலிமையான உட்கட்டமைப்பின்மூலம் மாநில தோட்டக்கலை பண்ணைகளில் தரமான பாரம்பரிய நடவுச் செடிகள் மற்றும் காய்கறி விதைகள் உற்பத்தி செய்தல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பூச்சி மேலாண்மை, மேம்படுத்தப்பட்ட அறுவடை பின்செய் நேர்த்தியைப் பின்பற்றுதல், இயற்கை முறையில் காய்கறி சாகுபடி முறையை ஊக்குவித்தல் போன்ற திட்டக்கூறுகளை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

2.2. தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் நிலைப்பாடு

தேசிய அளவில், நமது மாநிலத்தில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, தோட்டக்கலை பயிர் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

2.2.1. பழப்பயிர்கள்

2018–2019 ஆம் ஆண்டில் இறுதி மதிப்பீட்டின்படி, தமிழகத்தில், மா (52 சதவீதம்) மற்றும் வாழை (29 சதவீதம்) ஆகிய பயிர்களின் சாகுபடி பரப்பு மொத்த பழப் பயிர் சாகுபடி பரப்பில் 81 சதவீதமாக உள்ளது. ஆண்டு முழுவதும் திராட்சைப்பழ உற்பத்தி மற்றும் பருவமில்லா காலங்களிலும் மாம்பழ உற்பத்தி ஆகியவை தமிழகத்தின் தனித்தன்மையாகும்.

2018–2019 ஆம் ஆண்டு 172.11 இலட்சம் பழச் செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு பல்வேறு தோட்டக்கலை திட்டங்களின்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில் பழங்கள் பயிரிடுவதன்மூலம் கிடைக்கப்படும் சத்துக்கள் மற்றும் நன்மைகளைக் கருதி, பழப்பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஒரு

வருவாய் கிராமத்தில் குறைந்த அளவிலேனும் இரண்டு எக்டர் வரை பழப்பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வாழை (கோ–2) மற்றும் கொடுக்காப்புளி (எஸ்.பிடி–02) ஆகிய இரகங்களை வெளியிட்டுள்ளது. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் இப்புதிய இரகங்கள் நடவு செய்யப்பட்டு அவற்றின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, செயல்திறனை அடிப்படையாகக்கொண்டு இப்புது இரகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

2020–2021 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் போன்ற திட்டங்களின்மூலம் பழங்கள் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அட்டவணை 2.2. பழங்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
1	மா	1,50,945	1. கிருஷ்ணகிரி (33,679) 2. தருமபுரி (18,388) 3. திண்டுக்கல் (15,742) 4. வேலூர் (12,319) 5. திருவள்ளூர் (11,057)
2	வாழை	85,001	1. ஈரோடு (13,464) 2. தூத்துக்குடி (8,776) 3. திருநெல்வேலி (6,216) 4. திருச்சிராப்பள்ளி (6,010) 5. கோயம்புத்தூர் (5,743)
3	கொய்யா	10,214	1. திண்டுக்கல் (1,670) 2. மதுரை (1,386) 3. விருதுநகர் (1,069) 4. வேலூர் (917) 5. கடலூர் (883)

2020 மார்ச் 24]

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
4	எலுமிச்சை	9,459	1. திருநெல்வேலி (3,134) 2. திண்டுக்கல் (1,629) 3. தேனி (675) 4. திருச்சிராப்பள்ளி (670) 5. தூத்துக்குடி (623)
5	தர்பூசணி	7,530	1. காஞ்சிபுரம் (3,159) 2. விழுப்புரம் (1,257) 3. திருவள்ளூர் (834) 4. திருவண்ணாமலை (581) 5. ஈரோடு (311)
6	நெல்லி	6,709	1. திருநெல்வேலி (1,750) 2. திண்டுக்கல் (1,057) 3. திருப்பூர் (514) 4. தேனி (422) 5. சிவகங்கை (380)
7	சப்போட்டா	5,417	1. திண்டுக்கல் (1,172) 2. வேலூர் (534) 3. திருநெல்வேலி (485) 4. விருதுநகர் (436) 5. தேனி (428)
8	பலா	2,876	1. கடலூர் (714) 2. கன்னியாகுமரி (606) 3. திண்டுக்கல் (442) 4. புதுக்கோட்டை (250) 5. நாமக்கல் (230)
9	திராட்சை	2,058	1. தேனி (1,826) 2. திண்டுக்கல் (132) 3. கோயம்புத்தூர் (64)
10	ஆரஞ்சு	1,688	1. திண்டுக்கல் (1,513) 2. புதுக்கோட்டை (90) 3. தேனி (85)

2.2.2. காய்கறிகள்

தமிழ்நாட்டில் மொத்த தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியில் காய்கறிப் பயிர்கள் 33 சதவீதம் பங்களிக்கிறது. முக்கிய காய்கறிப் பயிர்களான மரவள்ளி, வெங்காயம், தக்காளி, கத்தரி மற்றும் வெண்டை சாகுபடி செய்யப்படுகின்றன. இவை மொத்த காய்கறிப் பயிர்களின் சாகுபடி பரப்பில் 70 சதவீதம் ஆகும்.

தோட்டக்கலை திட்டங்களின்மூலம் வீரிய ஒட்டுரக காய்கறிகள் பயிரிட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. வெங்காய பயிருக்கு சிறப்புக் கவனம் செலுத்தும்வகையில், தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் வெங்காய வளர்ச்சி இனத்தின்மூலம் வெங்காய பயிர் சாகுபடி மற்றும் வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

அரசு தோட்டக்கலை பண்ணைகளில் வீரிய ஒட்டுரக காய்கறிகள் தக்காளி, கத்தரி, மிளகாய் ஆகிய நாற்றுகளை குழித்தட்டுகளில் வளர்த்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதன்மூலம் காய்கறி உற்பத்தியினை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2018–2019 ஆம் ஆண்டு 1312.63 இலட்சம் காய்கறி குழித்தட்டு நாற்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்குப் பல்வேறு தோட்டக்கலை திட்டங்களின்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2019–2020 ஆம் ஆண்டில் காய்கறிகள் பயிரிடுவதன்மூலம் கிடைக்கப்படும் சத்துகள் மற்றும் நன்மைகளைக் கருதி, காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்சமேனும் ஒரு வருவாய் கிராமத்தில் 10 எக்டர் அளவிலேனும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தக்காளி (சி.டி.எச்.–1 வீரிய ஒட்டு இரகம்), சின்ன வெங்காயம் (கோ–6), மரவள்ளிக்கிழங்கு (ஒய்.டி.பி.–2) மற்றும் மணத்தக்காளி (கோ–1) ஆகிய இரகங்களை வெளியிட்டுள்ளது. அரசு தோட்டக்கலை பண்ணைகளில் இப்புதிய இரகங்கள் நடவு செய்யப்பட்டு அவற்றின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு இப்புது இரகங்கள் விவசாயிகளிடம் பிரபலப்படுத்தப்படும்.

2020 மார்ச் 24]

2019–2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரின் கிராமப்புற காய்கறி உற்பத்தித் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் 100 விதைத்தளைகள், 100 சதவீதம் மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காய்கறி விதைத்தளையிலும் 7 வகையான காய்கறி விதைகள் மற்றும் ஒரு கிலோ இயற்கை உரம் ஆகியவை அடங்கும். இத்திட்டத்தின்மூலம் 12 இலட்சம் விதைத்தளைகள் ரூ.3 கோடி செலவில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2020–2021 ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் போன்ற திட்டங்களின்மூலம் காய்கறி பயிர்களில் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அட்டவணை 2.3. காய்கறிப் பயிர்களை அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்த மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
1	மரவள்ளி	70,802	1. நாமக்கல் (16,150) 2. விழுப்புரம் (12,189) 3. சேலம் (9,449) 4. தருமபுரி (7,269) 5. ஈரோடு (7,101)
2	வெங்காயம்	32,044	1. பெரம்பலூர் (7,047) 2. திருச்சிராப்பள்ளி (3,913) 3. நாமக்கல் (3,451) 4. தூத்துக்குடி (3,314) 5. திண்டுக்கல் (2,350)
3	தக்காளி	27,058	1. கிருஷ்ணகிரி (7,954) 2. தருமபுரி (6,173) 3. சேலம் (3,324) 4. கோயம்புத்தூர் (1,684) 5. திண்டுக்கல் (1,568)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்த மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
4	கத்தரி	15,813	1. சேலம் (1,925) 2. தருமபுரி (1,815) 3. வேலூர் (1,426) 4. கிருஷ்ணகிரி (1,421) 5. விழுப்புரம் (1,335)
5	முருங்கை	14,495	1. திண்டுக்கல் (3,144) 2. தேனி (3,083) 3. கரூர் (2,125) 4. தூத்துக்குடி (1,540) 5. அரியலூர் (1,223)
6	வெண்டை	11,116	1. சேலம் (2,200) 2. தருமபுரி (1,664) 3. விழுப்புரம் (932) 4. திருவண்ணாமலை (854) 5. மதுரை (512)
7	பீன்ஸ்	8,068	1. கிருஷ்ணகிரி (2,745) 2. வேலூர் (1,888) 3. திண்டுக்கல் (1,287) 4. தருமபுரி (356) 5. ஈரோடு (334)
8	உருளைக்கிழங்கு	3,932	1. திண்டுக்கல் (2,601) 2. நீலகிரி (620) 3. ஈரோடு (543) 4. கிருஷ்ணகிரி (165)
9	கேரட்	3,671	1. கிருஷ்ணகிரி (1,682) 2. திண்டுக்கல் (1,166) 3. நீலகிரி (785)
10	கீரைவகைகள்	3,183	1. சேலம் (620) 2. கிருஷ்ணகிரி (607) 3. திருவள்ளூர் (478) 4. திருவாரூர் (265) 5. நாமக்கல் (213)

2020 மார்ச் 24]

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்த மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
11	பாகற்காய்	2,869	1. கோயம்புத்தூர் (427) 2. தருமபுரி (389) 3. சேலம் (275) 4. கிருஷ்ணகிரி (268) 5. திருவண்ணாமலை (178)

2.2.3. மலர்கள்

உதிரிப்பூக்கள் உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து முதன்மை மாநிலமாகத் திகழ்கின்றது. தருமபுரி, சேலம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் மலர்கள் சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

விழாக்களில் மலர் அலங்காரம் செய்வது தற்போதைய வழக்கமாகி வருகிறது. இதன்பொருட்டு கொய்மலர்களின் தேவை தமிழ்நாடு, வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. கொய்மலர் ஏற்றுமதி செய்வதன்மூலம் பெறப்படும் அதிக வருமானம் பல தொழில் முனைவோரையும் விவசாயிகளையும் கொய்மலர் சாகுபடி செய்ய ஊக்குவிக்கிறது.

கொய்மலர்களுக்கு உள்ளூர், வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் அதிக தேவை இருந்து வருகிறது. இதனைக் கருத்தில்கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் நம் இந்திய மற்றும் இஸ்ரேல் அரசின் கூட்டு முயற்சியின்மூலம் கொய் மலர்களுக்கான மகத்துவ மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில், விவசாயிகளுக்கு பசுமைக் குடில்கள், நிழல்வலைக் கூடங்கள் மற்றும் திறந்தவெளியில் கொய்மலர் சாகுபடி செய்யும் முறைகள் பற்றி பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மையத்தில் பாதுகாக்கப்பட்ட சூழலில் வளர்க்கப்படும் கொய்மலர்களான ரோஜா, கார்நேஷன், ஜெர்பெரா போன்றவை 7,200 சதுர மீட்டர் பரப்பிலும், பேர்டு ஆஃப் பாரடைஸ் ஹெலிகோனியா, சம்பங்கி, செவ்வந்தி போன்ற கொய்மலர்கள் 10 ஏக்கர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

2020–2021 ஆம் ஆண்டிலும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட சூழலில் மலர் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4. மலர்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
1	மல்லிகை	14,068	1. மதுரை (1,530) 2. ஈரோடு (1,330) 3. தருமபுரி (1,158) 4. திருவள்ளூர் (1,121) 5. திருவண்ணாமலை (1,100)
2	சம்பங்கி	6,324	1. தருமபுரி (2,634) 2. திருவண்ணாமலை (1,863) 3. ஈரோடு (346) 4. திருவள்ளூர் (195) 5. சேலம் (191)
3	செவ்வந்தி	5,452	1. கிருஷ்ணகிரி (1,813) 2. தருமபுரி (1,477) 3. சேலம் (1,143)
4	செண்டுமல்லி	2,954	1. கிருஷ்ணகிரி (1,739) 2. தருமபுரி (265) 3. திருவண்ணாமலை (200)
5	ரோஜா	2,788	1. கிருஷ்ணகிரி (1,310) 2. தருமபுரி (698) 3. திண்டுக்கல் (120) 4. சேலம் (113)

2.2.4. நறுமணப் பயிர்கள்

தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெப்ப நிலையானது மிளகாய், பூண்டு, இஞ்சி, ஏலக்காய், மிளகு, கிராம்பு, பட்டை, கறிவேப்பிலை,

2020 மார்ச் 24]

கொத்தமல்லி, மஞ்சள் மற்றும் ஜாதிக்காய் போன்ற சுவைதாளிதப் பயிர்கள் வளர ஏதுவாக உள்ளது. தமிழகத்தின் முக்கிய நறுமணப் பயிரான மஞ்சள் 23,164 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சிகப்பு மிளகாய் (41 சதவீதம்) மற்றும் மஞ்சள் (21 சதவீதம்) பயிர்களின் சாகுபடி பரப்பு மொத்த நறுமணப் பயிர்களின் சாகுபடி பரப்பில் 62 சதவீதமாக உள்ளது.

2020–2021 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் போன்ற திட்டங்களின்மூலம் நறுமணப் பயிர்கள் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5. நறுமணப் பயிர்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
1	மிளகாய்	45,124	1. இராமநாதபுரம் (16,740) 2. தூத்துக்குடி (11,288) 3. சிவகங்கை (5,696) 4. திருவண்ணாமலை (1,300) 5. திண்டுக்கல் (1,268)
2	மஞ்சள்	23,164	1. தருமபுரி (5,746) 2. ஈரோடு (5,650) 3. சேலம் (4,215) 4. விழுப்புரம் (2,237) 5. நாமக்கல் (2,125)
3	புளி	15,839	1. திண்டுக்கல் (3,679) 2. தேனி (1,950) 3. மதுரை (1,524) 4. தருமபுரி (1,469) 5. கிருஷ்ணகிரி (899)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
4	கொத்தமல்லி	6,408	1. தூத்துக்குடி (1,715) 2. இராமநாதபுரம் (1,533) 3. விருதுநகர் (1,420) 4. திருப்பூர் (750) 5. கோயம்புத்தூர் (276)
5	மிளகு	5,629	1. நாமக்கல் (1,741) 2. சேலம் (1,147) 3. நீலகிரி (972) 4. திண்டுக்கல் (960) 5. கன்னியாகுமரி (292)
6	ஏலக்காய்	3,813	1. தேனி (1,322) 2. நீலகிரி (900) 3. கோயம்புத்தூர் (807) 4. விருதுநகர் (326) 5. திண்டுக்கல் (241)
7	பூண்டு	1,660	1. திண்டுக்கல் (1,417) 2. நீலகிரி (243)

2.2.5. மலைப்பயிர்கள் மற்றும் தோட்டப் பயிர்கள்

முந்திரி பயிர் பரப்பு விரிவாக்கம் மற்றும் பழைய முந்திரி தோட்டங்களைப் புதுப்பித்தல் ஆகிய இனங்களுக்கு தோட்டக்கலை திட்டங்கள்மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அதிக பரப்பில் முந்திரி பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

அட்டவணை 2.6. மலைப்பயிர்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டர்)
1	முந்திரி	85,661	1. அரியலூர் (30,400) 2. கடலூர் (28,658) 3. புதுக்கோட்டை (6,207) 4. விழுப்புரம் (4,033) 5. தேனி (3,558)
2	தேயிலை	69,493	1. நீலகிரி (55,662) 2. கோயம்புத்தூர் (11,191) 3. தேனி (1,621) 4. திருநெல்வேலி (804) 5. கன்னியாகுமரி (221)
3	காப்பி	33,444	1. திண்டுக்கல் (10,805) 2. நீலகிரி (8,300) 3. சேலம் (6,991) 4. தேனி (3,200) 5. கோயம்புத்தூர் (2,248)
4	பாக்கு	6,887	1. கோயம்புத்தூர் (1,953) 2. சேலம் (1,924) 3. நாமக்கல் (766) 4. ஈரோடு (555) 5. தருமபுரி (492)
5	கோகோ	3,404	1. கோயம்புத்தூர் (1,584) 2. தருமபுரி (658) 3. சேலம் (339) 4. தஞ்சாவூர் (156)

[2020 மார்ச் 24

2.2.6. மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள்

தமிழ்நாட்டில் மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள் 15,162 எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய மருத்துவப் பயிர்கள் மருந்துகூர்க்கன் மற்றும் கண்வலிகிழங்கு. இப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பில் 47 சதவீதம் பங்களிக்கிறது.

அட்டவணை 2.7. மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள் அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் (2018–2019)

வ. எண்	பயிர்களின் விவரம்	மொத்த சாகுபடி பரப்பு (எக்டர்)	அதிகளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும்பரப்பு (எக்டர்)
1	மருந்துகூர்க்கன்	3,886	1. திருவண்ணாமலை (1,650) 2. விழுப்புரம் (1,103) 3. சேலம் (785)
2	கண்வலிகிழங்கு	3,343	1. திருப்பூர் (1,707) 2. திண்டுக்கல் (878) 3. கரூர் (538)
3	பால்மாரோசா	2,980	1. தருமபுரி (2,512) 2. திருவண்ணாமலை (396)

2.3. தோட்டக்கலைத் துறையின் செயல்பாடுகள்

2.3.1. பிரதம மந்திரி விவசாயிகளுக்கான நீர் பாசனத் திட்டம்—நுண்ணீர்ப் பாசனத் திட்டம்

தமிழ்நாட்டில் நுண்ணீர் பாசனத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. பிரதம மந்திரி விவசாயிகளுக்கான நீர் பாசனத் திட்டத்தின்கீழ் துளி நீரில் அதிக பயிர் என்ற உட்பிரிவில் ஒரு முதன்மை திட்டமாக 2015–2016 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மட்டுமே சிறு/குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் சிறு/குறு விவசாயிகள் தங்கள் நிலங்களில் சொட்டுநீர்ப் பாசனம் நிறுவ ஊக்குவிக்கப்படுகின்றனர்.

விவசாயிகளின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க நுண்ணீர்ப் பாசனக் கருவிகளின் மீதான 12 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியை தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்த தோட்டக்கலை, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் ஆகிய துறைகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. நுண்ணீர்ப் பாசனத்தின்மூலம் அதிக கரும்பு சாகுபடி பரப்பைக் கொண்டுவர சர்க்கரை துறையும், இத்திட்டத்துடன் செயல்படுத்த இணைக்கப்பட்டுள்ளது.

2.8. தேசிய அளவில் நுண்ணீர்ப் பாசனத்தின் நிலைப்பாடு (PMKSY இணையதளம்) 13–3–2020 வரை

வ. எண்	மாநிலம்	பரப்பு (எக்டர்)
1	தமிழ்நாடு	2,06,854
2	கர்நாடகா	1,38,250
3	குஜராத்	1,03,891
4	ஆந்திரபிரதேசம்	80,214
5	மகாராஷ்டிரம்	76,365
6	ராஜஸ்தான்	46,732
7	உத்தரப்பிரதேசம்	40,031
8	சத்தீஸ்கர்	23,020
9	ஒடிசா	8,498
10	உத்தரகாண்ட்	6,696

சொட்டுநீர்ப் பாசனத்தின் பங்களிப்பு

தமிழகத்தில், மொத்த சாகுபடி பரப்பான 48.19 இலட்சம் எக்டரில் 28.33 இலட்சம் எக்டர் (58%) இறவை பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 17.2 இலட்சம் எக்டர் (60%) கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் பாசனம் செய்யப்படுகிறது. கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள்மூலம் பாசனம் செய்யப்படும் பரப்பினை நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது. இதில் இதுவரை 6.07 இலட்சம் எக்டர்

(35%) நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் மட்டுமே தேயிலைத் தோட்டங்களுக்கும் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2.9. வருட வாரியாக நுண்ணீர்ப் பாசனம் அமைத்த விவரம்

வ. எண்	நிதியாண்டு	சாதனை (பரப்பு எக்டரில்)	சாதனை (ரூ. கோடியில்)
1	2007–2008	7,820	15.60
2	2008–2009	11,597	26.07
3	2009–2010	18,009	43.26
4	2010–2011	26,154	83.64
5	2011–2012	27,550	87.44
6	2012–2013	26,538	135.34
7	2013–2014	39,780	288.25
8	2014–2015	12,518	119.76
9	2015–2016	32,289	204.61
10	2016–2017	52,314	297.87
11	2017–2018	4,444	31.59
12	2018–2019	1,41,627	700.69
13	2019–2020	2,06,854	1030.59
	மொத்தம்	**6,07,494**	**3064.71**

2019–2020 ஆம் ஆண்டில் ரூ.1030.59 இலட்சம் செலவில் தோட்டக்கலை பயிர்களில் 93,773 எக்டர் பரப்பிலும், வேளாண்மைப் பயிர்களில் 1,13,081 எக்டர் பரப்பிலும் மொத்தமாக 2,06,854 எக்டர் பரப்பளவு நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. திட்டம் தொடங்கியது முதல் இதுவரையில் அதிகப்படியான பரப்பு 2019–2020 ஆம் ஆண்டில் நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும், கரும்பு சாகுபடியை ஊக்குவிக்க, நுண்ணீர்ப் பாசனம் அமைத்திட கூடுதல் மானியமாக ரூ.68.35 கோடியில் 16,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்துவதற்காக 2017–2018 ஆம் ஆண்டு முதல் நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு என்ற புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில் பதிவு செய்வதிலிருந்து மானியம் விடுவிக்கும் வரை செயல்முறைகளை எளிதாக்கி வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் அனைத்தும் 2019–2020 ஆம் ஆண்டில் அதிக பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க காரணமாக இருந்தது.

தரிசுநிலப் பகுதியை விவசாயப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், பாசன நீரைச் சிக்கனமாக செலவிடவும் துணை நீர் மேலாண்மை நடவடிக்கை (SWMA) 2018–2019 ஆம் ஆண்டு முதல் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் தரைநிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஆழ்துளைக் கிணறு, பாசன நீர் செல்ல குழாய்கள் நிறுவுதல், ஆயில் எஞ்சின் அல்லது மின் மோட்டார் அமைத்தல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு 2025 ஆம் ஆண்டிற்குள் அனைத்து கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறு பாசனப் பரப்பினை படிப்படியாக நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவர திட்டமிட்டுள்ளது. 2020–2021 ஆம் நிதியாண்டில் 3.00 இலட்சம் எக்டர் பரப்பில் ரூ.1637.47 கோடி நிதியில் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.150 கோடி செலவில் 34,000 எக்டர் கரும்பு சாகுபடி பரப்பினை நிலத்தடி நுண்ணீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

2.10. தோட்டக்கலை மற்றும் வேளாண்மைப் பயிர்களுக்கு நுண்ணீர்ப் பாசன மானிய விவரங்கள்

வ. எண்	பயிர்	பாசன வகை	பயிர் இடைவெளி	மானியம் (ரூ எக்டருக்கு)	மானியம் GST நீங்கலாக	
					சிறு/குறு விவசாயி (100%)	இதர விவசாயி (75%)
A.தோட்டக்கலைப் பயிர்கள்						
1	மலர்கள் மற்றும் மலை தோட்டப் பயிர்கள்	தெளிப்பு நீர் பாசனம்		18,630	18,630	13,973
		மழைத் தூவான்		27,230	27,230	20,423

[2020 மார்ச் 24

வ. எண்	பயிர்	பாசன வகை	பயிர் இடைவெளி	மானியம் (ரூ எக்டருக்கு)	மானியம் GST நீங்கலாக சிறு/குறு விவசாயி (100%)	மானியம் GST நீங்கலாக இதர விவசாயி (75%)
2	மா, புளி	சொட்டு நீர்ப் பாசனம்	10X10 மீ.	22,426	22,426	16,820
3	பலா		8X8 மீ.	24,795	24,795	18,596
4	முந்திரி		7X7 மீ.	27,185	27,185	20,389
5	கொய்யா, எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி		6X6 மீ.	29,257	29,257	21,943
6	கொய்யா, சீத்தாப்பழம், எலுமிச்சை, மா, நெல்லி		5X5 மீ.	33,074	33,074	24,805
7	பாக்கு, திராட்சை		3X3 மீ.	45,748	45,748	34,311
8	மாதுளை, முருங்கை		2.5X2.5 மீ.	53,183	53,183	39,887
9	பப்பாளி, வாழை		2X2 மீ.	64,828	64,828	48,621
10	வாழை		1.5X1.5 மீ.	75,755	75,755	56,816
			1.8X0.6 மீ.	72,442	72,442	54,331
11	இஞ்சி, காய்கறிகள், ரோஜா, கண்வலிக் கிழங்கு, கூர்க்கன் கிழங்கு, மல்லி		1.2X0.6 மீ.	1,01,012	1,01,012	75,759
B. வேளாண்மைப் பயிர்கள்						
1	பயிர் வகைகள் (உளுந்து, பாசிப்பயறு)	தெளிப்பான் – 63 mm.		18,630	18,630	13,973
		தெளிப்பான் – 75 mm.	30x10 செமீ.	20,780	20,780	15,585
		மழைத்தூவான் –63 mm.		27,230	27,230	20,423
		மழைத்தூவான் –75 mm.		32,300	32,300	24,225

வ. எண்	பயிர்	பாசன வகை	பயிர் இடைவெளி	மானியம் (ஒரு எக்டருக்கு)	மானியம் GST நீங்கலாக	
					சிறு/குறு விவசாயி (100%)	இதர விவசாயி (75%)
2	சோளம், பருத்தி, துவரை	சொட்டு நீர்ப் பாசனம்	1.2x0.6 மீ.	1,01,012	1,01,012	75,759
3	தென்னை		8x8 மீ.	24,795	24,795	18,596
4	எண்ணெய்பனை		9x9 மீ.	23,464	23,464	17,598
5	கரும்பு		1.2x0.6 மீ.	1,01,012	1,01,012	75,759
			1.5x0.6 மீ.	86,727	86,727	65,045

2.3.2. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் – தேசிய தோட்டக்கலை இயக்கம்

தோட்டக்கலைத் துறையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், அறுவடை பின்செய் நேர்த்தி கட்டமைப்புகள் மற்றும் மகத்துவ மையங்களை உருவாக்குவதற்கு தேசிய தோட்டக்கலை இயக்கம் வழிவகை செய்கிறது. 2014–2015 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணைத் திட்டமாக தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய தோட்டக்கலை இயக்கம் பழங்கள், காய்கறிகள், வேர் மற்றும் கிழங்கு பயிர்கள், காளான், வாசனைப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், பூக்கள், முந்திரி மற்றும் கோகோ போன்ற பயிர்களை உள்ளடக்கி தோட்டக்கலை துறையின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்க தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 விகிதத்தில் நிதி பங்களிப்புடன் மத்திய அரசு உதவிபெறும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.163.33 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பரப்பு விரிவாக்கம் ரூபாய் 23.47 கோடி நிதி ஒதுக்கீட்டில் 13,000 எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், பறவை தடுப்புவலை மற்றும் நிலப்போர்வை ஆகிய பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி இனத்தில் ரூபாய் 46.27

கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,345 எக்டர் சாதனை அடையப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த அறுவடைக்கு பின்செய் நேர்த்தி இனத்தின்கீழ் ரூ.25.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் 691 சிப்பம் கட்டும் அறைகள், 976 குறைந்த செலவிலான வெங்காய சேமிப்புக் கிடங்குகள் மற்றும் முன் குளிர்விப்பு அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2020–2021 ஆம் ஆண்டில் வீரிய ஒட்டு இரக காய்கறி சாகுபடி, நீர் சேமிப்பு ஆதாரங்களுடன் இணைந்த பசுமைக்குடில் சாகுபடி, அறுவடை பின்செய் நேர்த்தி மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு தொழில்நுட்ப மையங்கள் ஆகிய இனங்களை உள்ளடக்கி செயல்படுத்தப்படவுள்ளது.

2.3.2.1. மகத்துவ மையங்கள்

மகத்துவ மையங்களின் நோக்கம் உயர் தொழில்நுட்பங்களின்மூலம் அதிக உற்பத்தித்திறனை பெருக்குவதேயாகும். இஸ்ரேல் நாட்டு தொழில்நுட்ப உதவியுடன் கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் கொய்மலர்களுக்கான மகத்துவ மையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் காய்கறிப் பயிர்களுக்கான மகத்துவ மையமும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

மேலும், நீலகிரி மாவட்டம், நஞ்சநாட்டில் மலைக் காய்கறிகளுக்கான மகத்துவ மையமும், திருச்சி மாவட்டம், கஞ்சநாயக்கன்பட்டியில் மா, கொய்யா, எலுமிச்சை, சப்போட்டா, நெல்லி போன்ற வெப்ப மண்டல பழங்களுக்கான மகத்துவ மையமும், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் தேனீ வளர்ப்புக்கான மகத்துவ மையமும், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் மல்லிகை போன்ற பாரம்பரிய மலர் பயிர்களுக்கான மகத்துவ மையமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.3.3. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டமானது விவசாயத்தை இலாபகரமான தொழிலாகவும், விவசாயிகளின் முயற்சிகளை ஊக்கப்படுத்தும் விதமாக உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கவும் விவசாயிகளின் வருமானம் பெருக்குவதற்காக அதிக உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் கிடைக்க உதவுவதற்காகவும், வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறையின் முழுமையான

2020 மார்ச் 24]

வளர்ச்சிக்காகவும் 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டமானது 60:40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுடன், திட்டத்திற்கேற்றாற்போல் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.20.05 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக 6,557 எக்டர் பரப்பில் பழங்கள், வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள், மலர்கள், வாசனைப் பயிர்கள் மற்றும் மலைப்பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் ரூ.11.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளான பசுமைக் குடில்கள், நிழல்வலைக் கூடங்கள் மற்றும் மழை வலைக் கூடங்கள் போன்றவை 17.8 எக்டர் பரப்பில் ரூ.4.79 கோடி நிதியில் அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் கொடி வகை காய்கறிகளை பந்தல் முறையில் 150 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய ரூ.3 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் வீட்டிலேயே காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிப்பதற்காக 2 இலட்சம் காய்கறி விதைத்தளைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமான மாற்றுப்பயிர் சாகுபடி திட்டத்தின்கீழ், புகையிலை விவசாயிகள் பிற இலாபகரமான தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதற்காக 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.8.88 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மற்றுமொரு துணைத் திட்டமான முந்திரி பயிர் சாகுபடி திட்டத்தின்கீழ், கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் முந்திரி பயிர் சாகுபடி செய்ய 2018–2019 ஆம் ஆண்டு முதல் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர். 2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.2.40 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை, 1,000 எக்டர் பரப்பில் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் முந்திரி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

2020–2021 ஆம் ஆண்டில், வெங்காயப் பயிர் சாகுபடி, கீரைகள், தக்காளி, கத்தரி, வெண்டை, முட்டைகோஸ், மற்றும் காலிஃப்ளவர் போன்ற காய்கறிகள் இயற்கை முறையில் சாகுபடி செய்ய ஊக்குவித்தல், உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்தல்,

நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி செய்ய நிதியுதவி செய்தல் மற்றும் காய்கறி உற்பத்தியை தொடர் மேலாண்மை செய்தல் போன்ற இனங்களின்கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.3.4. நீடித்த நிலையான வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

நீடித்த நிலையான வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமானது, விவசாயிகளுக்கு மேம்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவும், பாதுகாப்பான உணவு முறையை உறுதி செய்யவும், பயிர் தோல்வி போன்ற அச்சுறுத்தலை குறைக்கவும் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் சாகுபடி செய்வதுமே ஆகும். இந்தத் திட்டமானது 60:40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மானாவாரி பகுதி மேம்பாடு மற்றும் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.3.4.1. மானாவாரி பகுதி மேம்பாடு

இத்திட்டத்தின் நோக்கமானது வேளாண்மையின் கூறுகளான வேளாண்மை, தோட்டக்கலை பயிர்கள், கால்நடை, மீன் வளர்ப்பு, வனவியல் சார்ந்த அதிக வருமானத்தைப் பெருக்கும் முறைகளையும் விளைபொருட்களை மதிப்பு கூட்டி ஒருங்கிணைப்பதுமேயாகும்.

2019–2020 ஆம் ஆண்டில், மானாவாரி பகுதி மேம்பாடு ரூ.19.25 கோடி நிதியில் கடலூர், தருமபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, நீலகிரி, சேலம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 13 மாவட்டங்களில் 1,300 ஒருங்கிணைந்த பண்ணைய அலகுகள் செயல்படுத்தப்படுகிறது. இதில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், நிரந்தர மண்புழு உரக்கூடம், தேனீ வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு ஆகியவைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணைய முறை 50 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பசுமைக் குடில்கள், நிழல்வலைக் கூடங்கள், அறுவடை பின்செய் கட்டமைப்புகள், மண்புழு உரப்படுக்கைகள், பயிற்சி மற்றும் செயல் விளக்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.11. பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி பரப்பு (2014–2015 முதல் 2019–2020 முடிய)

வ.எண்	மாவட்டம்	பரப்பு (சதுரமீட்டர்)
1	கிருஷ்ணகிரி	21,96,000
2	நீலகிரி	1,64,800
3	தேனி	1,44,100
4	திண்டுக்கல்	1,81,600
5	தருமபுரி	1,07,500
6	வேலூர்	62,000
7	கோயம்புத்தூர்	55,000
8	மதுரை	47,000
9	விருதுநகர்	40,000
10	புதுக்கோட்டை	37,000
11	திருச்சிராப்பள்ளி	37,000
12	தூத்துக்குடி	32,000
13	திருநெல்வேலி	30,000
14	கரூர்	28,000
15	சிவகங்கை	27,000
16	விழுப்புரம்	27,000
17	திருப்பூர்	24,700
18	காஞ்சிபுரம்	24,000
19	பெரம்பலூர்	24,000
20	சேலம்	23,500
21	திருவள்ளூர்	22,000

வ.எண்	மாவட்டம்	பரப்பு (சதுரமீட்டர்)
22	திருவண்ணாமலை	20,000
23	தஞ்சாவூர்	15,500
24	திருவாரூர்	12,000
25	நாமக்கல்	10,000
26	கடலூர்	8,000
27	அரியலூர்	6,000
28	ஈரோடு	6,000
29	கன்னியாகுமாி	3,500
30	நாகப்பட்டினம்	2,000
	மொத்தம்	34,17,200

2.3.4.2. பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கிராமங்கள் குழுக்களாக அமைக்கப்பட்டு இயற்கை வேளாண்மையில் சாகுபடி செய்ய ஊக்கமளிப்பதோடு பங்கேற்பு உத்தரவாத சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மூன்றாண்டு தொடர் திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ், ரூ.7.60 கோடி நிதியில் 1,020 எக்டர் பரப்பு இயற்கை வேளாண்மை முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் 220 எக்டர் பரப்பு ரூ.1.60 கோடி நிதியில் இயற்கை முறை சாகுபடியில் கொண்டுவரப்பட்டு வருகிறது.

2018–2019 ஆம் ஆண்டு முதல் கிருஷ்ணகிரியில் 1,000 எக்டர் பரப்பில் மா சாகுபடியை இயற்கை வேளாண்மை முறையில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.3.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.4. இயற்கை விவசாயம்

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இருக்கும் நிலையில் சுற்றுச்சூழலுக்கும், உடல் நலத்திற்கும் தீங்கு விளைவிக்காத சத்துள்ள

2020 மார்ச் 24]

உணவுகளை உற்பத்தி செய்து பொது மக்களுக்கு கிடைக்கச் செய்வதே தோட்டக்கலைத் துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

2.12. தமிழ்நாட்டில் காய்கறிகளில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் முன்னோடி மாவட்டங்கள்

வ. எண்	மாவட்டம்	பரப்பு (எக்டர்)
1.	நீலகிரி	1287
2.	கோயம்புத்தூர்	77
3.	திண்டுக்கல்	55
4.	நாமக்கல்	49
5.	திருப்பூர்	47
6.	தருமபுரி	40
7.	விழுப்புரம்	27
8.	மதுரை	22
9.	வேலூர்	20
10.	காஞ்சிபுரம்	18

ஆதாரம்: விதை சான்றளிப்புத் துறை

2.5. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டமானது தோட்டக்கலை பயிர்களின் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 100 சதவீதம் மாநில அரசின் நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019–2020 ஆம் ஆண்டில், ரூ.31.37 கோடி நிதியில் 24,963 எக்டர் பரப்பில் நடவு பொருட்கள் கரூர், காஞ்சிபுரம், நாமக்கல், நாகப்பட்டினம், திருவாரூர், திருவண்ணாமலை,

திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020–2021 ஆம் ஆண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி போன்றவை செயல்படுத்தப்படும்.

2.6. மருத்துவப் பயிர்களுக்கான தேசிய ஆயுஷ் இயக்கம்

தேசிய ஆயுஷ் இயக்கம் – மருத்துவப் பயிர்கள் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் வழியாக 60:40 விகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயிர்களுக்கு ஏற்றவாறு சாகுபடி செலவினத்தில் 30, 50 மற்றும் 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அனைத்து மாவட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறலாம்.

2018–2019 ஆம் ஆண்டு, இத்திட்டத்தில் ரூ.1.73 கோடி நிதியில் 765 எக்டர் பரப்பிலான மருத்துவப் பயிர்களுக்கு சாகுபடி மானியம் வழங்கப்பட்டது.

நடப்பு நிதி ஆண்டில் (2019–2020) இத்திட்டம் செயல்படுத்திட மத்திய அரசு ரூ.3.06 கோடி நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.7. தேசிய மூங்கில் இயக்கம்

மூங்கில் தோட்டங்களின் பரப்பளவை வனமற்ற அரசு நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் அதிகரிக்கவும் அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும் மூங்கில் பயிர் வளர்ப்பதற்கான திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வை அதிகப்படுத்தும் நோக்கங்களோடு 2018–2019 ஆம் ஆண்டு தேசிய மூங்கில் இயக்கம் சீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.2.36 கோடி நிதியில் 600 எக்டர் பரப்பில் மூங்கில் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2.8. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஓர் பல்நோக்குத் திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபநீர் வடிநிலப் பகுதிகளில் அதிக நீர்த் தேவைப்படும் பயிர்களில் இருந்து குறைந்த நீர்த் தேவைப்படும், அதிக வருவாய் தரக்கூடிய, தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியை, உயர் தொழில்நுட்பங்கள் மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தீவிரப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2018–2019 முதல் 2023–2024 ஆம் ஆண்டு வரை 41,916 எக்டர் பரப்பளவில் பழங்கள், வீரிய ஒட்டுரக காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் பூக்கள் ரூ.210 கோடி நிதியில் 66 உப வடிநீர் பகுதிகளின் 30 மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலாம் ஆண்டில் (2018–2019) 2,600 எக்டர் பரப்பில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி ரூ.17.62 கோடி நிதியில் 18 உப வடிநீர் பகுதிகளில் 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பயிர் செயல் விளக்கங்கள், நஞ்சற்ற காய்கறி சாகுபடி, நுண்ணீர்ப் பாசனத்தை ஊக்குவித்தல், பருவநிலை மாற்றத்திற்குகந்த பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி மற்றும் நிலப்போர்வை ஆகிய புதிய தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டன.

2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் முதற்கட்டமாக இரண்டாம் ஆண்டில் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உப வடிநீர் பகுதிகளில் 22 மாவட்டங்களில் ரூ.12.21 கோடி நிதியில் 2,238 எக்டர் பரப்பில் பயிர் செயல் விளக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் கட்டமாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 16 உப வடிநீர் பகுதிகளில் 17 மாவட்டங்களில் முதலாம் ஆண்டில் ரூ.26.73 கோடி நிதியில் 4,656 பயிர் செயல்விளக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ.50.48 கோடி நிதியில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.9. தோட்டக்கலை பயிர்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தை 2016 ஆம் ஆண்டு காரீஃப் பருவத்தில் இருந்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் அறிவிப்பு செய்யப்பட்ட வருவாய் கிராமங்களில், அறிவிப்பு செய்யப்பட்ட பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம்.

இதுவரையில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் காப்பீடு செய்த விவசாயிகளில், 97,525 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.160.87 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2016–2017 முதல் 2018–2019 வரை 2,15,592 விவசாயிகள் 1,12,690 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர்களில் பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

2019–2020 ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே அறிவிக்கை செய்யப்பட்ட வாழை, மரவள்ளி, மஞ்சள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பயிர்களுடன், ஓராண்டு பயிர்களான, வெண்டை, கத்தரி, முட்டைகோஸ், கேரட், இஞ்சி, பூண்டு, தக்காளி, கொத்தமல்லி ஆகிய பயிர்களுக்கும், பல்லாண்டு பயிர்களான கொய்யா, திராட்சை மற்றும் மா ஆகிய பயிர்களுக்கும், பயிர் காப்பீடு செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிக அளவிலான தோட்டக்கலை விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 2019–2020–ல், இதுவரையில் 1,29,114 விவசாயிகள் 46,738 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர்களில் பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

2.13 தோட்டக்கலை பயிர்களில், பயிர்வாரியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை விவரம்

வருடம்	இழப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்)						
	வெங்காயம்	மிளகாய்	உருளைக் கிழங்கு	வாழை	மரவள்ளி	மஞ்சள்	மொத்தம்
2016–2017	8.610	46.252	4.030	10.137	1.064	3.262	73.355
2017–2018	4.638	37.467	2.069	8.724	0.070	3.489	56.726
2018–2019	0.912	23.951	0.234	0.067	0.016	5.609	*30.789
மொத்தம்							160.870

* 2018–2019 ஆம் ஆண்டில் மீதமுள்ள இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.10. தோட்டக்கலை பயிர்களில் கூட்டுப் பண்ணையம்

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களை ஒருங்கிணைத்து, கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த கடன் வசதி பெறுதல், சிறந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுதல், முன் மற்றும் பின் சந்தை இணைப்பு தொடர்புகளை ஏற்படுத்துதல் முதலியவற்றை மேற்கொள்வதற்கான உன்னத திட்டத்தினை தமிழக அரசு 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது.

இத்திட்டத்தில் 2017–2018 மற்றும் 2018–2019 ஆம் ஆண்டுகளில் தோட்டக்கலை துறையின்கீழ் மட்டும் ரூ.50.61 கோடி நிதியில் 1,010 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு, சாகுபடிக்குத் தேவையான 4,445 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் தோட்டக்கலை துறைமூலம் ரூ.25.39 கோடி நிதியில் 505 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு சாகுபடிக்குத் தேவையான இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.11. அரசு தோட்டக்கலை பண்ணைகள்

இனத்தூய்மையான மற்றும் தரமான நடவுச் செடிகளை சரியான நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலை பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணையானது விவசாயிகளுக்கு சமீபத்திய தொழில்நுட்பங்கள், பண்ணை இயந்திரமயமாக்கல், நவீன நீர்ப்பாசன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய "மாதிரி செயல் விளக்கப் பண்ணையாக" திகழ்கிறது. அரசு தோட்டக்கலை பண்ணைகள் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றன. தமிழ்நாட்டில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின்கீழ், 69 அரசு தோட்டக்கலை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

ISO 9001 தரச்சான்றானது மகத்துவ மையங்கள், மாதவரம், பூஞ்சுத்தி, பர்லியார், கன்னியாகுமரி ஆகிய அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கும், அரசு தாவரவியல் பூங்கா, அரசு ரோஜா பூங்கா, சிம்ஸ் பூங்கா, சுற்றுச்சூழல் பூங்கா–கன்னியாகுமரி, பாரம்பரிய பூங்கா–அச்சடிபிரம்பு பூங்கா, தோட்டக்கலை பூங்கா மாதவரம் மற்றும் செம்மொழி பூங்கா ஆகிய பூங்காக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

2018–2019 ஆம் ஆண்டில் 14.36 கோடி நடவுச் செடிகள், அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதில் 13.12 கோடி குழித்தட்டு காய்கறி மற்றும் மலர் நாற்றுகளும் அடங்கும். 2019–2020 ஆம் ஆண்டில் 25.23 கோடி நடவுச் செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 25.16 கோடி நடவுச் செடிகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2.11.1 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் காய்கறி விதைகள் உற்பத்தி

2018–2019 ஆம் ஆண்டில், நடவுச் செடிகள் உற்பத்திப் பணிகளுடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட உயர் விளைச்சல் தரும் காய்கறி ரக விதைகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யும் பணி தொடங்கப்பட்டு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் வீட்டு காய்கறித் தோட்டம் அமைத்தல் இனத்தின்கீழ் முதற்கட்டமாக 450 கிலோ காய்கறி விதைகள் இரண்டு இலட்சம் சிறு தளைகளாக தயார் செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில், 675 கிலோ சான்றளிக்கப்பட்ட காய்கறி விதைகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கும், வீட்டு தோட்டம் அமைப்பதற்கும் வழங்கப்பட்டுள்ளன.

காய்கறி விதைகளுக்கு தனியார் நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் நிலையை மாற்றும் வகையில், 2020–2021 ஆம் ஆண்டில் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் 369 எக்டர் பரப்பில் சுமார் 325 மெ.டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை–2.14. தோட்டக்கலை பண்ணைகளில் விதைகள் உற்பத்தி – 2020–2021

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
1	ஆனைக்கட்டி	கீரை	2.00	300
		வெண்டை	2.00	2000
		அவரை	2.00	1400

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
2	ஆத்தூர்	கீரை	0.50	75
		தக்காளி	1.00	125
		கத்தரி	0.50	100
3	பகுதம்பாளையம்	பீர்க்கங்காய்	0.50	175
		சின்ன வெங்காயம்	1.00	850
4	பர்லியார்	பீன்ஸ்	0.05	23
		அவரை	0.05	35
5	கோல்கிரைன்	பீன்ஸ்	1.00	450
		பச்சைப் பட்டாணி	5.00	5000
		உருளை	2.00	30000
		கேரட்	2.00	900
6	தேவகோட்டை	கீரை	0.50	75
		வெண்டை	0.50	500
		முருங்கை	0.50	50
		சின்ன வெங்காயம்	0.50	425
		கத்தரி	0.50	100
7	தேவாலா	பாகற்காய்	1.00	200
		அவரை	1.00	700
		பீன்ஸ்	2.00	900
		தட்டைப்பயறு	1.00	700
8	மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை	கீரை	10.00	1500
		பீன்ஸ்	5.00	2250
		வெண்டை	4.00	4000
		பாகற்காய்	4.00	800
		கத்தரி	8.00	1600
		அவரை	8.00	5600
		பூசணி	3.00	1050
		புடலை	4.00	1200
		தக்காளி	8.00	1000
		சாம்பல்பூசணி	3.00	750
		சுரைக்காய்	3.00	1350
		பீர்க்கங்காய்	2.00	700
		தட்டைப்பயறு	5.00	3500

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
9	ஜீனூர்	கீரை	3.00	450
		சாம்பல்பூசணி	1.00	250
		வெண்டை	1.00	1000
		கொத்தவரை	1.50	600
		பீர்க்கங்காய்	1.50	525
		சுரைக்காய்	1.00	675
		பூசணி	1.00	350
		புடலை	1.00	300
		தக்காளி	1.00	125
10	கல்லார்	பீன்ஸ்	0.05	23
		அவரை	0.05	35
11	கண்ணம்பாளையம்	கீரை	2.00	300
		வெண்டை	2.00	2000
		கத்தரி	2.00	400
		தக்காளி	2.00	250
12	கன்னியாகுமாரி	வெண்டை	0.10	100
		கத்தரி	0.10	20
		தக்காளி	0.10	13
13	கீழப்பழுவூர்	வெண்டை	0.40	400
		சின்ன வெங்காயம்	0.40	340
14	கீழவல்லநாடு	அவரை	1.00	700
		தட்டைப்பயறு	1.00	700
		தக்காளி	1.00	125
15	கிளாதரி	வெண்டை	1.00	1, 000.00
		சின்ன வெங்காயம்	3.00	2550
		பீர்க்கங்காய்	1.00	350
16	கூடப்பட்டு	வெண்டை	0.10	100
		கத்தரி	0.10	20
		கீரை	0.10	15
		தக்காளி	0.10	13
17	குடுமியான்மலை	கீரை	2.50	375
		பீன்ஸ்	3.50	2100
		முருங்கை	2.00	200
		கத்தரி	1.00	200
		வெண்டை	1.00	1000

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
18	மணியார்குன்றம்	பீன்ஸ்	5.00	2250
		பாகற்காய்	3.00	600
		அவரை	3.00	2100
19	மருங்குளம்	வெண்டை	0.50	500
		கத்தரி	0.50	100
		கீரை	0.20	30
20	மேல்கதிர்பூர்	கீரை	1.00	150
		கத்தரி	2.00	400
		பீர்க்கங்காய்	2.00	700
		சின்ன வெங்காயம்	2.00	1700
		வெண்டை	1.00	1000
		புடலை	2.00	600
21	மேலொட்டிவாக்கம்	சுரைக்காய்	2.00	900
		கத்தரி	2.00	400
		முருங்கை	2.00	200
		தக்காளி	2.00	250
		கொத்தவரை	2.00	1200
22	மூவாநல்லூர்	வெண்டை	0.50	500
		பீர்க்கங்காய்	0.50	175
23	முதலைப்பட்டி	தக்காளி	2.50	313
		வெண்டை	2.00	2000
24	முள்ளுவாடி	கொத்தவரை	3.00	1800
		அவரை	2.00	1400
25	நஞ்சநாடு	பீன்ஸ்	2.00	900
		பச்சைப் பட்டாணி	8.00	8000
		உருளை	8.00	120000
		கேரட்	2.00	900
26	நாட்டுமங்கலம்	கீரை	1.00	150
		கத்தரி	2.00	400
		கொத்தவரை	2.00	1200
		முருங்கை	1.00	100
		தக்காளி	2.00	250
		புடலை	2.00	600
		வெண்டை	2.00	2000
		சுரைக்காய்	2.00	900
		பீர்க்கங்காய்	2.00	700

[2020 மார்ச் 24

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
27	நவ்லாக்	வெண்டை	1.00	1000
		கொத்தவரை	3.00	1800
		முருங்கை	1.00	100
		தட்டைப்பயறு	2.00	1400
28	நேமம்	கத்தரி	0.25	50
		தக்காளி	1.00	125
29	நெய்வேலி	வெண்டை	0.40	400
		கத்தரி	0.20	40
		பாகற்காய்	0.40	80
30	ஓரியூர்	பாகற்காய்	0.50	100
		பீர்க்கங்காய்	0.50	175
		சுரைக்காய்	0.50	225
		புடலை	0.50	150
31	படசோலை	பீன்ஸ்	2.00	900
		அவரை	2.00	1400
		தட்டைப்பயறு	1.00	700
32	பெரியகுளம்	சின்ன வெங்காயம்	0.50	425
		தக்காளி	0.20	25
		வெண்டை	0.20	200
33	பிச்சிவாக்கம்	கீரை	1.00	150
		கொத்தவரை	1.00	600
		பீர்க்கங்காய்	1.00	350
34	போலயம்பள்ளி	அவரை	0.05	35
		கீரை	0.05	8
35	பூவாணி	தக்காளி	0.10	13
		வெண்டை	0.10	100
36	புதூர்செக்கடி	வெண்டை	0.50	500
		பாகற்காய்	0.50	100
		கத்தரி	0.50	100
		கொத்தவரை	1.00	600
		அவரை	0.50	350
		சின்ன வெங்காயம்	2.00	1700
		கீரை	0.50	75
		புடலை	0.50	150
		தட்டைப்பயறு	1.00	700

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
37	சந்தையூர்	வெண்டை	2.00	2000
		கத்தரி	2.00	400
		முருங்கை	2.00	200
		தக்காளி	1.50	188
		தட்டைப்பயறு	1.00	700
		கீரை	1.00	150
		சுரைக்காய்	0.20	90
		புடலை	1.00	300
38	சங்கராமநல்லூர்	வெண்டை	2.00	2000
		பாகற்காய்	0.50	100
		கத்தரி	0.50	100
		கொத்தவரை	1.00	600
		அவரை	1.00	700
		சின்ன வெங்காயம்	2.00	1700
		புடலை	0.50	150
		கீரை	1.00	150
		சுரைக்காய்	0.50	225
		பீர்க்கங்காய்	0.50	175
		தட்டைப்பயறு	1.00	700
39	சாத்தனூர்	சாம்பல்பூசணி	0.40	100
		பாகற்காய்	0.20	40
		கத்தரி	0.40	80
		பீர்க்கங்காய்	0.20	70
		பூசணி	0.40	140
		புடலை	0.20	60
40	கருமந்துறை	கத்தரி	0.50	100
		வெண்டை	0.50	500
41	சிறுமலை (திண்டுக்கல்)	பீன்ஸ்	10.00	4500
		அவரை	15.00	10500
42	சிறுமலை (சேலம்)	பீன்ஸ்	2.00	900
		கத்தரி	1.00	200
		தக்காளி	2.00	250

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
43	ஸ்ரீவில்லிபுத்தூர்	கத்தரி	2.00	400
		முருங்கை	2.00	200
		புடலை	1.00	300
		தக்காளி	1.00	125
		கீரை	2.00	300
		வெண்டை	2.00	2000
		பீர்க்கங்காய்	1.00	350
44	தகரக்குப்பம்	பீன்ஸ்	2.00	900
		தட்டைப்பயறு	1.00	700
		அவரை	1.00	700
45	தாண்டிக்குடி	பீன்ஸ்	0.10	45
		அவரை	0.10	70
46	தொரக்குடி	கீரை	0.20	30
47	தும்மனட்டி	பீன்ஸ்	0.40	180
		உருளை	0.40	6000
48	வல்லத்திராக்கோட்டை	கீரை	5.00	750
		வெண்டை	5.00	5000
		பாகற்காய்	1.00	200
		கத்தரி	8.00	1600
		கொத்தவரை	7.00	4200
		அவரை	2.00	1400
		முருங்கை	2.00	200
		சின்ன வெங்காயம்	5.00	4250
		தட்டைப்பயறு	5.00	3500
		பீர்க்கங்காய்	2.00	700
		சாம்பல்பூசணி	2.00	500
		சுரைக்காய்	2.00	900
		புடலை	5.00	1500
		தக்காளி	4.00	500
49	வண்டுவாஞ்சேரி	கத்தரி	0.20	40
		வெண்டை	0.20	200
50	வன்னிக்கோனேந்தல்	கொத்தவரை	0.20	120
51	வெங்கலம்	கத்தரி	0.10	20
		தக்காளி	0.10	13
		சாம்பல்பூசணி	0.10	25
		வெண்டை	0.10	100

வ. எண்	அரசு தோட்டக்கலை பண்ணை	பயிர்	விதை உற்பத்தி பரப்பு (எக்டர்)	உற்பத்தி இலக்கு (கிலோ)
52	விச்சந்தாங்கல்	கத்தரி	1.00	200
		பூசணி	1.00	350
		சாம்பல்பூசணி	1.00	250
53	விருத்தாசலம்	கத்தரி	0.20	40
		முருங்கை	0.20	20
	மொத்தம்		369.45	325123

2.11.2. சுப நிகழ்ச்சிகள் மற்றும் பொது விழாக்களில் அன்பளிப்பு செடிகள் வழங்குதல்

தமிழ்நாட்டில் பிறந்தநாள் விழா, திருமண விழா, நிச்சயதார்த்தம், புதுமனை புகுவிழா, புதிய கடைகள் திறப்பு விழா போன்ற சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படுகின்றன. சுற்றுச்சூழலின் நலன் கருதி, பெருவாரியான மக்கள் சுப நிகழ்ச்சிகளில் மரச் செடிகள் மற்றும் தோட்டக்கலை செடிகளை அன்பளிப்பாக வழங்குவது, பொருட்களாக வழங்கப்படும் பரிசுகளை விட நீண்ட ஆயுட்காலம் உடையதாக கருதப்படுகிறது. இத்திட்டம், செடிகள் வழங்குபவர்களுக்கும், சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் விருந்தினர்களுக்கும் மன மகிழ்ச்சியையும் ஆத்ம திருப்தியையும் அளிக்கிறது.

2018–2019 ஆம் ஆண்டு முதல் சுப நிகழ்ச்சிகள் மற்றும் பொது விழாக்களுக்கு அரசு தோட்டக்கலை பண்ணைகளிலிருந்து தரமான பழச் செடிகள் மற்றும் இதர தோட்டக்கலை நடவுப் பொருட்கள் நியாயமான விலையில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,06,209 எண்கள் நடவுச் செடிகள் சுப நிகழ்ச்சிகளின்மூலம் வழங்கப்பட்டுள்ளன. 2019–2020 ஆம் ஆண்டில் 4,56,930 தோட்டக்கலை நடவுச் செடிகள் விழாக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.11.3. பண்ணை சுற்றுலா திட்டம்

நவீன தோட்டக்கலை தொழில்நுட்பங்களை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு கொண்டுசேர்க்கும் பொருட்டு மாநிலம் முழுவதும் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில்

"பண்ணை சுற்றுலா திட்டம்" ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் நகரங்களில் வாழும் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் நேரடியாக விவசாயத்தைப் பற்றிய அனுபவத்தை கற்றுத்தர உதவுகிறது. இத்திட்டத்தில் பார்வையாளர்கள் நேரடியாக பண்ணை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுவது போன்ற பல ஆர்வமுள்ள பகுதிகள் உள்ளன. அவர்களுக்கு இயற்கை சிற்றுண்டியும், பண்ணை சுற்றுலாவின் நினைவாக ஒரு செடியும் பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019 ஆம் ஆண்டில், 12,326 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு சுற்றுலா வந்துள்ளனர். 2019–2020 ஆம் ஆண்டில் 37,646 மாணவர்கள் பண்ணை சுற்றுலாவிற்காக அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு வருகை புரிந்துள்ளனர். வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.11.4. அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தென்னங்கன்றுகள் உற்பத்தி

கஜா புயலின் போது 12 மாவட்டங்களில் சுமார் 60 இலட்சம் தென்னை மரங்கள் சாய்ந்தன. எனவே, கஜா புயல் பாதித்த மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதற்கு 40 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் 20 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றுள் 15.21 இலட்சம் தென்னங்கன்றுகள் இதுவரை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. தென்னை சாகுபடியை ஊக்குவிப்பதற்கு அனைத்து அரசு தோட்டக்கலை பண்ணைகளிலும் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

2020–2021 ஆம் ஆண்டில் 20 இலட்சம் தென்னங்கன்றுகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

2.11.5. சாக்லேட் தயாரிப்பு மற்றும் செயல் விளக்கக் கூடம்

சென்னையிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை, மாதவரத்தில் புதிய ஒருங்கிணைந்த சாக்லேட் தயாரிப்புக் கூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூடத்தில் பால் சாக்லேட், டார்க் சாக்லேட் மற்றும் உலர் பருப்புகளுடன்கூடிய பால் சாக்லேட் போன்ற பலவிதமான சாக்லேட்கள் தரமான கோகோ விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டு தோட்டக்கலை வளர்ச்சி முகமை விற்பனை மையங்களின்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த சாக்லேட் தயாரிப்புக் கூடங்கள் பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு செயல்விளக்க மையமாக இயங்கி வருகிறது. மேலும், பெரியகுளம், கன்னியாகுமரி மற்றும் கண்ணம்பாளையம் ஆகிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சாக்லேட் தயாரிப்புக் கூடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.11.6. வாசனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான செயல்விளக்க மையங்கள்

விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பது பற்றி தெரிந்துகொள்ளும் வகையில், வாசனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான மாதிரி செயல் விளக்க மையங்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், திம்மாபுரம், கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம், திருவண்ணாமலை மாவட்டம், புதூர் செக்கடி, இராமநாதபுரம் மாவட்டம், ஓரியூர், ஈரோடு மாவட்டம், பகுதம்பாளையம், திண்டுக்கல் மாவட்டம், சந்தையூர், கொடைக்கானல்–சிறுமலை, நீலகிரி மாவட்டம், கோல்கிரைன் மற்றும் சேலம் மாவட்டம், சிறுமலை ஆகிய 10 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் செயல் விளக்க மையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.11.7. தோட்டக்கலை சுற்றுச்சூழல் சுற்றுலா

சுற்றுச்சூழலையும், அப்பகுதியின் கலாச்சாரத்தையும் பாதிக்காதவண்ணம் சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் மக்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டும் இடங்களான மலையடிவாரத்தின்கீழ் அமைந்திருக்கும் மாபெரும் பழப் பண்ணை கருமந்துறை–சேலம் மாவட்டம், கல்லார் மற்றும் தேவாலா–நீலகிரி மாவட்டம், கொடைக்கானல்–திண்டுக்கல் மாவட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா குற்றாலம்–தென்காசி மாவட்டம் ஆகிய 5 அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் தோட்டக்கலை சுற்றுச்சூழல் சுற்றுலா மையங்கள் அமைத்திட ரூ.2.50 கோடி செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.11.8. பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனிடும் தொழிற்கூடங்கள்

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும், விளைபொருட்களை மதிப்புக் கூட்டி ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ், ஊறுகாய், உலர்ந்த பழங்கள் போன்ற உணவுப் பொருட்களாக

பதப்படுத்தி விற்பதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதை அறிந்துகொள்ளும் வகையில், ஆத்தூர்–செங்கல்பட்டு மாவட்டம், வல்லத்திரக்கோட்டை–புதுக்கோட்டை மாவட்டம், ஜீனூர்–கிருஷ்ணகிரி மாவட்டம், கருமந்துறை–சேலம் மாவட்டம் மற்றும் பெரியகுளம்–தேனி மாவட்டம் ஆகிய 5 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனிடும் தொழிற்கூடங்கள் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.11.9. சூரிய ஒளித் தகடுகள்மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பயன்படுத்துதல்

கடலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, ராணிபேட்டை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் 15 அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் மின் செலவினைக் குறைத்து பண்ணைகளைத் தன்னிறைவு அடையச் செய்யும் வகையில், சூரிய சக்தியினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.3 கோடி மதிப்பீட்டில் சூரிய ஒளித் தகடுகளை நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.11.10 விதைப்பந்துகள் விநியோகம்

பசுமைப் போர்வைமூலம் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதிலும், புவி வெப்பமயமாதலைக் குறைக்கும் நோக்கத்தோடு மரங்கள் நடுவதை ஊக்குவிக்கும் வகையிலும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 5 இலட்சம் விதைப்பந்துகள் தயாரித்து விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2.11.11 பனங்கொட்டை விதைத்தல்

தமிழ்நாட்டின் தேசிய மரமான பனைமரம் அனைத்து விதமான மண் வகைகளிலும் செழித்து வளரக் கூடியது. சூறைக் காற்று மற்றும் புயல் வேகத்தைக் குறைக்கக்கூடிய தடுப்பானாக பனை மரம் திகழ்கிறது. பனை மரத்தின் அனைத்து பாகங்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளன.

இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பனை மரங்களைப் பாதுகாத்திட 2019–2020 ஆம் ஆண்டில் 50 இலட்சம் பனை விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு பொது இடங்களிலும் பண்ணை ஓரங்களிலும் நடப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

2.11.12. டான்ஹோடா விற்பனை மையங்கள்

அரசு தோட்டக்கலை பண்ணைகளில் கிடைக்கும் விளைபொருட்களான பழங்கள், காய்கறிகள், பூக்கள், நறுமணப் பொருட்கள், மலைப்பயிர்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்களான ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ், ஊறுகாய் போன்ற பொருட்கள் பண்ணை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக டான்ஹோடா விற்பனை மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

டான்ஹோடா விற்பனை மையத்தின்மூலம் தரமான உற்பத்திப் பொருட்கள் மட்டுமல்லாமல் மற்ற விவசாய இடுபொருட்களான பண்ணைக் கருவிகள், விதைகள், நறுமணப் பொருட்கள் பெட்டி, உலர் பழப்பெட்டிகள் மற்றும் உழவர் உற்பத்தி நிறுவனப்பொருட்கள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உழவர் உற்பத்திப் பொருட்கள்/உழவர் உற்பத்தி நிறுவனப் பொருட்கள் இடைத் தரகர் இல்லாமல் நேரடியாக மக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்ய டான்ஹோடா விற்பனை மையம் வழி வகுக்கிறது.

டான்ஹோடா விற்பனை மையம் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.3.20 கோடி செலவில் துவக்கப்பட்டுள்ளது. இதுவரை 2019–2020 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி மதிப்பிலான பொருட்கள் டான்ஹோடா விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2.11.13. உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையம்

தோட்டக்கலை பயிர்களில், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் 32 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையம் அமைக்க திட்டமிடப்பட்டு, 6 அரசு தோட்டக்கலை பண்ணைகளான கண்ணம்பாளையம், சந்தையூர், பகுதம்பாளையம், பூஞ்சுத்தி, பூவாணி மற்றும் படசோலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது. இதுவரை 1,988 கிலோ உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2.11.14. புதிய முயற்சிகள்

முதல் முயற்சியாக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின்மூலம் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு 920

விதை விநாயகரும், தீபாவளி அன்று மாசற்ற சுற்றுச்சூழலை பாதுகாப்பதைப் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 500 விதை வெடிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், கிறிஸ்துமஸ் தினத்தன்று, பசுமை சூழல் உருவாக்குவதை ஊக்கப்படுத்தும் வகையில், 1,500 கிறிஸ்துமஸ் மரங்கள் சென்னையில் வழங்கப்பட்டுள்ளன.

2020–2021 ஆம் ஆண்டில் பயிர் பாதுகாப்பு மையங்கள் மற்றும் சந்தை விலை நிலவரத்துடன்கூடிய பயிர் ஆலோசனை பிரிவு உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவானது சந்தை விலை, பயிர் பயிரிடும் பருவம் பற்றிய ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கும். மேலும் சந்தைகளின் விற்பனை நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து, விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் விளைபொருட்களைத் தேவைப்படும் இடங்களுக்குக் கொண்டுசெல்வதற்கு வழிவகை செய்வதோடு விளைச்சல் அதிகமாக உள்ள காலங்களில் அவ்விளைபொருட்களை மதிப்புக்கூட்டுப் பொருட்களாக மாற்றுவது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கும்.

2.11.15. முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேல்கதிர்பூர், கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், திண்டுக்கல் மாவட்டத்தில் சந்தையூர், நாமக்கல் மாவட்டத்தில் படசோலை, கரூர் மாவட்டத்தில் முதலைப்பட்டி, வேலூர் மாவட்டத்தில் நவ்லாக் ஆகிய 6 அரசு தோட்டக்கலை பண்ணைகளை ரூ.5.83 கோடி செலவினத்தில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு தோட்டக்கலை பண்ணைகளான பூவாணி (விருதுநகர் மாவட்டம்), முதலைப்பட்டி (கரூர் மாவட்டம்), வல்லத்திராக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் ஜீனூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) ஆகிய 5 இடங்களில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பயன்படுத்தப்படாமலிருக்கும் நிலத்தினைப் பயன்படுத்தும் பொருட்டு, ரூ.2.67 கோடி செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நபார்டு ஊரக வளர்ச்சித் திட்ட நிதியின்மூலம் 10 மாவட்டங்களில் உள்ள 19 அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ரூ.20.76 கோடி நிதியில் கூடுதல் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

சிவகங்கை மாவட்டத்தில் கிளாதரி, திருவள்ளூர் மாவட்டத்தில் ஈக்காடு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் புஷ்பவனம் ஆகிய இடங்களில் புதிய தோட்டக்கலை நாற்றங்கால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2.15. அரசு தோட்டக்கலை பண்ணைகள் விவரம்

வ. எண்	மாவட்டம்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு	பரப்பு (எக்டர்)
1	அரியலூர்	கீழப்பழுவூர்	2018	7.58
2	சென்னை	மாதவரம்	1980	4.38
3	கோயம்புத்தூர்	ஆனைக்கட்டி	1986	12.00
4		கண்ணம்பாளையம்	2001	11.20
5	கடலூர்	நெய்வேலி	1985	39.53
6		விருத்தாசலம்	1975	10.43
7	தருமபுரி	போலயம்பள்ளி	2013	2.73
8	திண்டுக்கல்	சந்தையூர்	2018	15.20
9		கொடைக்கானல்	1961	1.73
10		தாண்டிக்குடி	1985	5.45
11		சிறுமலை	1980	192.04
12		மகத்துவ மையம், ரெட்டியார்சத்திரம்	2012	5.30
13	ஈரோடு	பகுதம்பாளையம்	2018	10.00
14	செங்கல்பட்டு	ஆத்தூர்	1961	12.24
15	காஞ்சிபுரம்	விச்சந்தாங்கல்	1982	23.25
16		மேல்கதிர்பூர்	1982	42.63
17	காஞ்சிபுரம்	மேலொட்டிவாக்கம்	1982	20.60
18		பிச்சிவாக்கம்	1982	34.00
19	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	1922	12.64
20		பேச்சிப்பாறை	1967	6.00
21	கரூர்	முதலைப்பட்டி	1978	23.96

[2020 மார்ச் 24

வ. எண்	மாவட்டம்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு	பரப்பு (எக்டர்)
22	கிருஷ்ணகிரி	திம்மாபுரம்	1952	9.51
23		ஜீனூர்	1980	121.96
24		மகத்துவ மையம், தளி	2012	22.00
25	மதுரை	பூஞ்சுத்தி	2012	5.76
26		மகத்துவ மையம், திருப்பரங்குன்றம்	2019	2.25
27	நாகப்பட்டினம்	வண்டுவாஞ்சேரி	2018	6.54
28	நாமக்கல்	செம்மேடு	1974	11.60
29		படசோலை	1989	22.67
30	பெரம்பலூர்	வெங்கலம்	2018	4.72
31	புதுக்கோட்டை	குடுமியான்மலை	1974	118.68
32		வல்லத்திராக் கோட்டை	1977	521.20
33		நாட்டுமங்கலம்	1985	53.02
34	இராமநாதபுரம்	ஓரியூர்	2013	14.77
35	சேலம்	மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை	1981	409.77
36		மணியார்குன்றம்	1982	100.00
37		அ.தோ.ப., கருமந்துறை	1981	39.35
38		முள்ளுவாடி	1985	48.40
39		சிறுமலை	1987	8.00
40		ஏற்காடு	1975	10.26
41	சிவகங்கை	தேவக்கோட்டை	1985	81.19
42		நேமம்	1979	38.77
43		கிளாதரி	2019	12.81
44	தஞ்சாவூர்	ஆடுதுறை	1988	8.90
45		மருங்குளம்	1966	10.70

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	இடம்	நிறுவப்பட்ட ஆண்டு	பரப்பு (எக்டர்)
46	நீலகிரி	பர்லியார்	1871	6.25
47		கல்லார்	1900	5.40
48		பழப் பதனிடும் நிலையம் குன்னூர்	1965	4.05
49		பழவியல் நிலையம், குன்னூர்	1948	10.46
50		காட்டேரி	1974	16.96
51		தொட்டபெட்டா	1969	2.52
52		தும்மனட்டி	1956	9.80
53		நஞ்சநாடு	1917	64.00
54		தேவாலா	1978	68.00
55		கோல்கிரைன்	1989	20.40
56	தேனி	பெரியகுளம்	1950	9.32
57	தூத்துக்குடி	கீழவல்லநாடு	2018	3.82
58	திருவாரூர்	மூவாநல்லூர்	2018	8.87
59	திருப்பூர்	சங்கராமநல்லூர்	2018	10.12
60	திருநெல்வேலி	வன்னிக்கோனேந்தல்	2018	10.86
61	திருவண்ணாமலை	புதூர்செக்கடி	2018	12.76
62	திருச்சிராப்பள்ளி	தொரக்குடி	2013	4.05
63		மகத்துவ மையம், கஞ்சநாயக்கன்பட்டி	2019	8.00
64	திருப்பத்தூர்	தகரக்குப்பம்	1985	24.40
65		கூடப்பட்டு	1961	10.08
66	ராணிப்பேட்டை	நவ்லாக்	1981	84.42
67	கள்ளக்குறிச்சி	ஏ.சாத்தனூர்	2018	10.00
68	விருதுநகர்	பூவாணி	1967	9.46
69	விருதுநகர்	ஸ்ரீவில்லிப்புத்தூர்	1982	46.27
மொத்தம்				**2635.99**

2.12. பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

- தோட்டக்கலை துறை, 9 மாவட்டங்களில் 27 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்குப் பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்கின்றன. மேலும், இவை தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றன.

- உதகை அரசு தாவரவியல் பூங்காவில், ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திடும் வண்ணம், அழகிய கண்ணாடிக் கூடம், பெரணி கூடம், மலர் மாடங்கள் மற்றும் தற்போது அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகளை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில் ரூ.3.89 கோடி நிதி செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கொடைக்கானலில் உள்ள பிரயண்ட் பூங்காவில் ரூ.6.80 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கொடைக்கானலில் ரூ.11.05 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19–5–2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரியில் 15 ஏக்கர் பரப்பளவில், ரூ.4 கோடி செலவினத்தில் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் பூங்கா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 5–4–2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாதவரத்தில் அமைக்கப்பட்டுள்ள தோட்டக்கலை பூங்கா அப்பகுதியிலுள்ள பார்வையாளர்களுக்கும், நடைப் பயிற்சியாளர்களுக்கும் மகிழ்ச்சியளிப்பதாகவும், பயனுள்ளதாகவும் விளங்குகிறது.

- குற்றாலத்தில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் பூங்கா ரூ.1 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- 2019–2020 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் சட்டப் பேரவையில்

அறிவித்த அறிவிப்பின்படி ரூ.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் வண்ணாரப்பேட்டையில் தோட்டக்கலை பாரம்பரிய பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 2019–2020 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் உலகத் தரம் வாய்ந்த அரசு தாவரவியல் பூங்கா ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.
- தருமபுரி மாவட்டம், வத்தல்மலையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அரசு தாவரவியல் பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

2.16. பூங்காக்கள்/தோட்டங்களின் விவரம்

வ. எண்	மாவட்டம்	பூங்காக்கள் / தோட்டங்களின் பெயர்கள்	பரப்பளவு (எக்டர்)	2018–2019 பார்வையாளர்கள் விவரம்
1	சென்னை	செம்மொழி பூங்கா, சென்னை	3.17	4,62,536
2		தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம்	8.50	44,126
3	தருமபுரி	வத்தல்மலை	34.67	–
4	திண்டுக்கல்	பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல்	7.93	4,36,877
5		செட்டியார் பூங்கா, கொடைக்கானல்	2.02	99,783
6		ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல்	4.00	15,729
7		சுற்றுச்சூழல் பூங்கா, சிறுமலை	5.00	–
8		சுற்றுச்சூழல் பூங்கா, தாண்டிக்குடி	1.25	–
9	கன்னியாகுமரி	சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி	6.00	1,91,462

[2020 மார்ச் 24

வ. எண்	மாவட்டம்	பூங்காக்கள் / தோட்டங்களின் பெயர்கள்	பரப்பளவு (எக்டர்)	2018–2019 பார்வையாளர்கள் விவரம்
10	இராமநாதபுரம்	ஐந்திணை மரபணு பூங்கா, அச்சடிபிரம்பு	4.00	67,435
11	சேலம்	ரோஜா தோட்டம், ஏற்காடு	15.14	85,461
12		ஏரி பூங்கா, ஏற்காடு	1.27	47,972
13		ஐந்திணை மரபணு பூங்கா, ஏற்காடு	10.00	74,686
14		அரசு தாவரவியல் பூங்கா–1, ஏற்காடு	8.10	7,875
15		அரசு தாவரவியல் பூங்கா–2, ஏற்காடு	8.10	5,832
16		அண்ணா பூங்கா, ஏற்காடு	1.87	2,40,336
17		சுற்றுச்சூழல் பூங்கா, கருமந்துறை	10.00	–
18	நீலகிரி	அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி	22.00	28,91,417
19		அரசு ரோஜா பூங்கா, ஊட்டி	14.40	10,92,373
20		சிம்ஸ் பூங்கா, குன்னூர்	12.14	6,39,019
21		காட்டேரி பூங்கா	2.00	95,266
22		தேயிலை பூங்கா, தொட்டபெட்டா	1.70	87,877
23		மரவியல் பூங்கா, உதகை	1.58	30,300
24		சுற்றுச்சூழல் பூங்கா, கல்லார்	3.50	–
25		சுற்றுச்சூழல் பூங்கா, தேவாலா	12.00	–
26	தென்காசி	சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம்	14.89	25,294
27	திருப்பத்தூர்	சுற்றுச்சூழல் பூங்கா, தகரக்குப்பம்	10.00	–
	மொத்தம்		215.30	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2.13. திசு வளர்ப்புக் கூடம்

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள திசு வளர்ப்புக் கூடம் ரூ.30 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு திசு வளர்ப்பு முறையில் ஸ்ட்ராபெரி மற்றும் அழகுச் செடிகள் உற்பத்தி செய்யும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

சென்னை மாதவரத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் திசு வளர்ப்புக் கூடம் ரூ.1.25 கோடி மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. இக்கூடத்தில் வாழை, அலங்காரச் செடிகள் மற்றும் பூச்செடிகள் போன்றவை திசு வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

2.14. குளிர்பதன சேமிப்புக் கிடங்கு

500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன சேமிப்புக் கிடங்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் விநியோக சங்கிலி மேலாண்மைத் திட்டத்தின்கீழ் உதகை அரசு ரோஜா பூங்காவில் நிறுவப்பட்டு, தோட்டக்கலை விளைபொருட்களான விதை உருளைக்கிழங்கு மற்றும் இதர பொருட்களைச் சேமிக்க தோட்டக்கலை துறையினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

2.15. தோட்டக்கலை கண்காட்சிகள்

ஆண்டுதோறும் வசந்த மற்றும் கோடைக்காலங்களில் பூங்காக்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக பழம் மற்றும் மலர்க் கண்காட்சிகள் நடைபெறுகின்றன. உதகை, ஏற்காடு, கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மலர்க் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. சிம்ஸ் பூங்கா குன்னூரில் நடைபெறும் பழங்களுக்கான கண்காட்சி, கிருஷ்ணகிரியில் நடைபெறும் மா கண்காட்சி, கோத்தகிரியில் நடைபெறும் காய்கறி கண்காட்சி மற்றும் கூடலூரில் நடக்கும் வாசனைப் பொருட்களின் கண்காட்சி சுற்றுலாப் பயணிகளிடையே பிரபலமானது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் சாரல் விழா நடத்தப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

2.16. நில எழிலூட்டும் பிரிவு

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது, மாநிலம் முழுவதும் இத்துறையின் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு, அழகான நில எழில் அமைப்புடன்கூடிய 27 பூங்காக்களை உருவாக்கி பராமரித்து வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை போன்ற மாநகராட்சிகளில் உள்ள மக்கள் தங்கள் சுற்றுப்புறங்களில் பசுமையை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுவதால் நில எழிலூட்டுதல் மிகவும் பிரசித்தி பெற்று வருகிறது. தற்பொழுது எந்தவிதமான தொழில்நுட்ப பின்புலம் இல்லாத தனியார் நிறுவனங்கள் எழிலூட்டும் செயல்பாடுகளில் ஈடுபட்டு இலாபம் ஈட்டி வருகின்றன.

எனவே, மாநகரங்களில் வசிக்கும் மக்களின் நில எழிலூட்டும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, திட்ட வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்திற்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்டு நில எழிலூட்டும் பிரிவை உருவாக்கியுள்ளது. இப்பிரிவானது பொதுமக்கள், அரசுத் துறை அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் புதிய நில எழில் வடிவமைப்பை உருவாக்குவதிலும், ஏற்கெனவே உள்ள எழில் வடிவமைப்பை மேலும் அழகுபடுத்துவதிலும், மாடித் தோட்டம் போன்ற திட்டங்களை எடுத்து நியாயமான விலையில் அவர்களின் தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டு வருகிறது. தற்பொழுது சென்னை கிண்டியில் அமைக்கப்பட்டுவரும் அம்மா பசுமைப் பூங்காவில் நில எழிலூட்டும் பணிகளை தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் நில எழிலூட்டும் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

2.17. தோட்டக்கலை பயிற்சி மையங்கள்

சென்னையில் மாதவரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளி மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் ஆகிய இடங்களில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின்கீழ் நான்கு பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் முக்கிய நோக்கம், விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்த உயர் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்குவதே ஆகும்.

2020 மார்ச் 24]

2019–2020 ஆம் ஆண்டில் உயர் தொழில்நுட்ப பயிர் சாகுபடி குறித்த பயிற்சிகள் ரூ.7.50 இலட்சம் செலவில் 3,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிலும் 3,000 விவசாயிகளுக்கு பயிற்சிகள் ரூ.7.50 இலட்சம் நிதியில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2.17.1. தோட்டக்கலை பட்டயப் படிப்பு

சென்னை, மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் உள்ள காய்கறி மகத்துவ மையம் ஆகிய மூன்று இடங்களில் தோட்டக்கலையில் ஈராண்டு பட்டயப் படிப்பு, ஆண்டுதோறும் ஒவ்வொரு மையத்திலும் 50 மாணவ மாணவியர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

2.18. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது தமிழ்நாடு கூட்டுறவு பதிவுச் சட்டம், 1975–ன்கீழ் பதிவு செய்யப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு “சிறப்பு நோக்க அமைப்பாக” 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தோட்டக்கலை வளர்ச்சி முகமையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1) ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம்– தேசிய தோட்டக்கலை இயக்கம்.
2) பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நுண்ணீர்ப் பாசனத் திட்டம்
3) மருத்துவப் பயிர்களுக்கான தேசிய ஆயுஷ் இயக்கம்
4) தேசிய மூங்கில் இயக்கம்
5) தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்.
6) 69 அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் 27 பூங்காக்கள் தோட்டக்கலை வளர்ச்சி முகமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

2.19. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டான்ஹோப்), XN876/94

இக்கூட்டுறவு சங்கம், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 30–ன்கீழ் 21–10–1994 அன்று பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் 14 விவசாயிகளைக் கொண்ட நிருவாகக் குழு, தமிழ்நாடு தோட்டக்கலை பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் துணை விதிகளை பின்பற்றி செயல்பட்டு வருகிறது.

2.20. பணியாளர்கள் விவரம்

தோட்டக்கலை தொழில்நுட்பங்களையும், அரசின் திட்டங்களையும் விவசாயிகளுக்கு வழங்கவும், துறை செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், தோட்டக்கலை துறையின்கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தோட்டக்கலை துறையின் முன்னேற்றத்திற்காக 2018–2019 ஆம் ஆண்டில் 196 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 71 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் (267 அலுவலர்கள்) நேரடி நியமனமாகவும், 2019–2020 ஆம் ஆண்டில் 130 அலுவலர்கள் பதவி உயர்வு மூலமாக (100 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், 26 தோட்டக்கலை துணை இயக்குநர்கள் மற்றும் 4 தோட்டக்கலை இணை இயக்குநர்கள்) நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அட்டவணை 2.17. ஒப்பளிக்கப்பட்ட பணியிடம்

வ. எண்	பதவி விவரம்	மொத்த பணியிடம்
1.	தொழில்நுட்ப அலுவலர்கள்	2,610
2.	இதர அலுவலர்கள்	1,223
	மொத்தம்	3,833

அட்டவணை 2.18. அலுவலர்கள் விவரம்

வ. எண்	அலுவலர்கள் விவரம்	மொத்த பணியிடம்
1.	கூடுதல் தோட்டக்கலை இயக்குநர்	2
2.	தோட்டக்கலை இணை இயக்குநர்	6
3.	தோட்டக்கலை துணை இயக்குநர்	39
4	தோட்டக்கலை உதவி இயக்குநர்	398
5	தோட்டக்கலை அலுவலர்	404
6	தோட்டக்கலை துணை அலுவலர்	123
7	உதவி தோட்டக்கலை அலுவலர்	1,633
8	உதவி விதை அலுவலர்	5
9	இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிருவாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர அனைத்து பதவிகள்)	1,223
	மொத்தம்	3,833

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

3. வேளாண்மைப் பொறியியல்

3.1. முன்னுரை

வேளாண்மையில் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன்மூலம், நீடித்த நிலையான வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த பணிகளின் வளர்ச்சியில், குறிப்பாக வேளாண் சமுதாய மேம்பாட்டில் வேளாண்மைப் பொறியியல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் வேளாண்மைப் பொறியியல் துறையினை தனித்துறையாக அமைத்து, மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, வேளாண்மை இயந்திரமயமாக்குதல், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை, வேளாண்மையில் சூரியசக்தி பயன்பாடு மற்றும் பண்ணைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற முக்கிய வேளாண்மைப் பொறியியல் பணிகளை இத்துறை செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின் முக்கிய செயல்பாடுகள்மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, பண்ணை இயந்திர சக்தியின் அளவு அதிகரிப்பு மற்றும் பருவநிலை மாறுபாட்டிற்கேற்ற தொழில்நுட்பங்களைப் பிரபலமாக்குதல் ஆகியவற்றுடன் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி, மதிப்பு கூட்டுவதற்கான தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கற்றுக் கொடுப்பதால் விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் கிராமப்புற இளைஞர்கள் நகரங்களுக்கு இடம்பெயர்வது தவிர்க்கப்படுகிறது.

3.2. வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகள்

அ) வேளாண்மையில் சூரியசக்தி ஆற்றல்

ஆ) வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

இ) மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

ஈ) அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை

உ) நீர் மேலாண்மை

ஊ) உட்கட்டமைப்பு

2020 மார்ச் 24]

3.3. வேளாண்மையில் சூரியசக்தி ஆற்றல்

வேளாண்மையில் நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்கும் மற்றும் விவசாய விளைபொருட்களை உலர்த்துவதற்கும் சூரிய சக்தியை உபயோகித்தல் என்பது ஒரு பிரபலமான மாற்றுத் தொழில்நுட்பமாக விளங்குகிறது. விவசாயத்திற்கு சூரியசக்தியினைப் பயன்படுத்துதல் சுற்றுச்சூழலுக்குகந்த, குறைவான பராமரிப்பு மற்றும் தொடர் செலவினமில்லா தொழில்நுட்பமாகும். எனவே, விவசாயத்தில் சூரிய சக்தியினை பயன்படுத்துவதற்கான திட்டங்களுக்கு பெரிய அளவில் மானிய உதவிகளை விவசாயிகளுக்கு வழங்கி அரசு ஊக்குவித்து வருகிறது.

3.3.1. மின் கட்டமைப்பு சாராத தனித்தியங்கும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைத்தல்

பாசனத்திற்கான எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய விவசாயிகளுக்கு உதவுவதற்கான ஒரு சிறந்த தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், மாநில அரசு 2013-2014 ஆம் ஆண்டில் மானிய உதவியுடன் சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைக்க முன்முயற்சி எடுத்தது. கடந்த 2013-2014 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை ரூ.185.77 கோடி மானியத்தில் விவசாயிகளுக்கு மொத்தம் 4,826 சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை நிறுவப்பட்டுள்ள சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளின் மொத்த மின்சக்தியின் அளவு 27.33 மெகா வாட் ஆகும். மேலும், பெறப்பட்ட மின் ஆற்றலின் சேமிப்பு ஆண்டுக்கு சுமார் 3.65 கோடி யூனிட்டுகள் ஆகும்.

மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE), 2019-2020 ஆம் ஆண்டில் "பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தம் மஹாபியான்" (PM-KUSUM) என்ற சூரிய ஆற்றலை மேம்படுத்துவதற்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 முதல் 10 குதிரைத் திறன் வரை கொண்ட 17,500 சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை அமைக்க புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தமிழகத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த அனுமதி ஓராண்டு காலம் வரை செல்லத்தக்கதாகும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிறுவனங்கள் மற்றும்

பம்புகளுக்கான விலை ஒப்பந்தப்புள்ளி மத்திய அரசின் "புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்" மூலம் இறுதி செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 70 சதவீதம் மானிய உதவியுடன் முதற்கட்டமாக 2019-2020 ஆம் ஆண்டில், ரூ.107.31 கோடி மானியத்தில் 4,000 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவிடும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டாம் கட்டமாக 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.365.54 கோடி மானிய உதவியுடன் 13,500 சூரியசக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட உள்ளன.

3.3.2. சூரிய கூடார உலர்த்திகள்

வேளாண் விளைபொருட்களைப் பாரம்பரிய முறையில் திறந்த வெளியில் உலர்த்துவதை ஒப்பிடுகையில் சூரிய கூடார உலர்த்திகள்மூலம் உலர்த்துவதால், தூசி, பூச்சிகள் போன்றவற்றால் மாசு படாமல் சிறந்த முறையில் உலர வைத்து, தரத்தினை உறுதி செய்து, விளைபொருட்களின் இருப்பு காலத்தினை அதிகரித்து, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகள் குறைக்கப்படுகிறது. விளைபொருட்கள் சூரிய கூடார உலர்த்திமூலம் உலர்த்தப்படுவதால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைச் சேமித்து வைக்கவும், சிறந்த முறையில் விற்பனைக்கேற்ற பொருட்களாக மாற்றி, எல்லாக் காலங்களிலும் அதிக விலைக்கு விற்க முடிகிறது. இது விவசாயிகளின் விளைபொருட்களை அடுத்தக்கட்ட மதிப்புக் கூட்டுதலுக்கு எடுத்துச் செல்வதால், அவர்களின் பண்ணை வருமானத்தை அதிகரிக்க வழிவகை செய்கிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 400 முதல் 1,000 சதுர அடி வரை பரப்பு கொண்ட 249 சூரிய கூடார உலர்த்திகள், 2014-2015 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை ரூ.5.24 கோடி மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு வேளாண் விளைபொருட்களை முதல்நிலை பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. சூரிய கூடார உலர்த்திகளில் தேங்காய், மிளகாய், வாழைப்பழம், தக்காளி, முருங்கை இலை, கறிவேப்பிலை, மூலிகைச் செடி இலைகள், கிராம்பு, இஞ்சி, மக்காச்சோளம், எள் போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களை உலர்த்துவதற்கு விவசாயிகள் திறம்பட பயன்படுத்துகின்றனர்.

2020 மார்ச் 24]

நடப்பு 2019-2020 ஆம் நிதியாண்டில், ரூ.3 கோடி மானிய உதவியுடன் சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு அமைத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரை, 109 சூரிய கூடார உலர்த்திகள் ரூ.2.71 கோடி மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வரும் 2020-2021 ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி மானிய உதவியுடன் சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

3.4. வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

வேளாண்மையில் பண்ணை சக்தியின் அளவை அதிகரிப்பதில் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் முக்கிய பங்கு வகிக்கிறது. வேளாண்மை இயந்திரமயமாக்குதலால் வேளாண்மைக்கு ஆதாரமான வளங்களும், இடுபொருட்களும் முறையாக பயன்படுத்தப்பட்டு, வேளாண்மை உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், பண்ணையாட்களின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு, வேளாண் பணிகளுக்கான நேரமும் பெருமளவில் குறைகிறது. வேளாண்மை இயந்திரமயமாக்குதல்மூலம் விதைகள், இயற்கை உரங்கள், இரசாயன உரங்கள், களைக் கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியவை சரியான அளவில் பயன்படுத்தப்பட்டு, கடுமையான வேளாண் பணிகள் எளிதாக்கப்பட்டு விவசாயிகளின் நிகர வருமானம் அதிகரிக்கப்படுகிறது.

3.4.1. துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாட்டிற்கும், சிறு பாசன வசதிக்கும் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக உள்ள பல்வேறு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

3.4.1.1. நில மேம்பாட்டு இயந்திரங்கள்

வேளாண்மைப் பொறியியல் துறையில் நிலம் சமன்படுத்துதல் மற்றும் நிலம் சீரமைத்தலுக்காக 77 புல்டோசர்கள், உழவுப் பணிகள் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ள 162

[2020 மார்ச் 24

டிராக்டர்கள் மற்றும் 42 நெல் அறுவடை இயந்திரங்கள் உள்ளன. இவ்வியந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசால் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மாவட்ட வாரியாக விவசாயிகளுக்குக் குறைந்த வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படும் நில மேம்பாட்டு இயந்திரங்களின் இருப்பு விவரங்கள் அட்டவணை 3.1 (அ) மற்றும் 3.1 (ஆ)-ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1 (அ). மாவட்டம் வாரியாக இருப்பில் உள்ள நில மேம்பாட்டு இயந்திரங்கள்

வ. எண்	மாவட்டம்	புல்டோசர்	டிராக்டர்
1	காஞ்சிபுரம்	1	2
2	செங்கல்பட்டு	4	7
3	திருவள்ளூர்	4	5
4	கடலூர்	4	10
5	விழுப்புரம்	2	5
6	கள்ளக்குறிச்சி	2	4
7	வேலூர்	1	2
8	ராணிப்பேட்டை	1	2
9	திருப்பத்தூர்	-	2
10	திருவண்ணாமலை	2	3
11	தருமபுரி	2	3
12	கிருஷ்ணகிரி	3	3
13	சேலம்	2	5
14	நாமக்கல்	3	4
15	கோயம்புத்தூர்	3	3

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	புல்டோசர்	டிராக்டர்
16	ஈரோடு	2	6
17	திருப்பூர்	4	2
18	திருச்சிராப்பள்ளி	3	5
19	அரியலூர்	2	4
20	பெரம்பலூர்	1	2
21	கரூர்	2	3
22	புதுக்கோட்டை	2	4
23	திருவாரூர்	2	16
24	தஞ்சாவூர்	3	13
25	நாகப்பட்டினம்	-	14
26	திண்டுக்கல்	4	4
27	மதுரை	3	4
28	தேனி	2	4
29	சிவகங்கை	2	2
30	இராமநாதபுரம்	2	3
31	விருதுநகர்	2	4
32	தூத்துக்குடி	3	5
33	திருநெல்வேலி	2	4
34	தென்காசி	1	2
35	நீலகிரி	1	1
மொத்தம்		77	162

அட்டவணை 3.1 (ஆ) மாவட்டம் வாரியாக இருப்பில் உள்ள நெல் அறுவடை இயந்திரங்கள்

வ. எண்	மாவட்டம்	நெல் அறுவடை இயந்திரம்
1	செங்கல்பட்டு	2
2	திருவாரூர்	9
3	தஞ்சாவூர்	8
4	நாகப்பட்டினம்	9
5	மதுரை	4
6	திருநெல்வேலி	10
	மொத்தம்	42

3.4.1.2. நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள் வாங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில் வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம் மூலமாக பல்வேறு வேளாண் பணிகளுக்காக புதிய மற்றும் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டு தமிழக விவசாயிகளால் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத விவசாயிகளுக்கு உதவும்வகையில் நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.142 கோடி மதிப்பில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக அமைக்கப்பெற்ற நீர் சேகரிப்பு கட்டுமானங்களை ஆழப்படுத்தி பராமரித்திடவும், நீர்வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்திடவும், நீர்வடிப் பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.9.93 கோடி செலவில் 56 புதிய இயந்திரங்கள் வாங்கிடவும், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.78 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 814 புதிய

நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பாசனக் குளங்களைச் சீரமைப்பதற்காகவும், விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை வலுப்படுத்துவதற்காகவும் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.52.53 கோடி நிதிக்கு நிருவாக அனுமதி பெறப்பட்டு, புதிய நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நீர்நிலைகளைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும், கரைகளை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை அதிகரிக்கவும், மண் தள்ளும் இயந்திரங்கள், மண் அள்ளும் இயந்திரங்கள் மற்றும் நில அளவீடு செய்யும் கருவிகள் போன்ற இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் வாடகைத் திட்டங்களை வலுப்படுத்துவதற்காக உழுவை இயந்திரங்கள், உழுவை இயந்திரத்தினால் இயங்கக்கூடிய உளிக் கலப்பை, சுழற்கலப்பை, நிலக்கடலை தோண்டும் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்கள், கதிர் அறுவடை இயந்திரங்கள் போன்ற நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரும்பு சாகுபடி அதிகமாக உள்ள பகுதிகளில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக கரும்பு சோகை உரிக்கும் கருவிகள், கரும்பு அறுவடை இயந்திரம், கரும்பு கட்டை சீவும் கருவிகள் மற்றும் கரும்பு சோகை துகளாக்கும் கருவிகள் போன்றவற்றினை வேளாண்மைப் பொறியியல் துறையின் வாடகைக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன்பாட்டிற்கென வாங்கி, குறைந்த வாடகையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், இதுபோன்ற நவீன கருவிகளை தென்னை சாகுபடியில் அறிமுகம் செய்திடவும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

விவசாயிகளின் நிலங்களில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை ஏற்படுத்தி நீர் மேலாண்மை செய்திட, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.1.54 கோடி செலவில் பிவிசி (PVC) குழாய்களை பதிப்பதற்காக டிராக்டரால் இயங்கக்கூடிய பள்ளம் தோண்டும் கருவிகள் புதியதாக வாங்கி, வாடகைக்கு விடும் திட்டத்தினை வலுப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.4.1.3. சிறுபாசனத் திட்டக் கருவிகள்

விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக திருவள்ளூர், கடலூர், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள வண்டல் மண் பகுதிகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 25 சுழல் விசைத்துளைக் கருவிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கடின பாறைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வண்டல் மண் பகுதிகளுக்கு 4 பெர்குஷன் துளைக் கருவிகள் மற்றும் திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள குறைந்த ஆழமுள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 25 சிறு விசைத்துளைக் கருவிகள் ஆகியன வேளாண்மைப் பொறியியல் துறையால் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையில், குறைந்த ஆழமுடைய குழாய்க் கிணறுகள் அமைத்திட 28 கைத்துளைக் கருவிகள், திறந்தவெளி கிணறுகளை ஆழப்படுத்தவும், விவசாய நிலங்களில் உள்ள பாறைகளைத் தகர்த்து அப்புறப்படுத்துவதற்கும் 15 பாறை வெடிக்கருவிகள், குழாய்க் கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு ஏற்ற நிலத்தடி நீர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்திடும்பொருட்டு, 21 நவீன நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் மற்றும் நிலத்தின் மண் படிவங்களின் அமைப்பினைக் கண்டறிவதற்கு 2 மின்னியல் ஆய்வுக் கருவிகள் என பல்வேறு சிறுபாசனத் திட்டக் கருவிகள் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு உள்ளன.

3.4.1.4. பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

இயற்கைப் பேரழிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கின்போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 16 நீர் இறைக்கும் பம்புகள், 805 அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள், 61 டிரெய்லர்கள் மற்றும் டிராக்டரினால் இயங்கக்கூடிய 107

2020 மார்ச் 24]

துகளாக்கும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன. பேரிடர் மீட்பு பணிகளுக்காக புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் இவ்வியந்திரங்களும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

துறையில் உள்ள பேரிடர் மேலாண்மை இயந்திரங்களின் இருப்பு விவரம் அட்டவணை 3.2-ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2. மாவட்டம் வாரியாக இருப்பில் உள்ள பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

வ. எண்	மாவட்டம்	டிராக்டரினால் இயக்கப்படும் நீர் இறைக்கும் பம்புகள்	டிராக்டரினால் இயங்கக்கூடிய துகளாக்கும் கருவிகள்	அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள்	டிராக்டர் டிரெய்லர்கள்
1	காஞ்சிபுரம்	-	1	-	1
2	செங்கல்பட்டு	4	4	50	2
3	திருவள்ளூர்	3	4	50	-
4	கடலூர்	1	6	150	2
5	விழுப்புரம்	1	3	50	3
6	கள்ளக்குறிச்சி	-	4	-	1
7	வேலூர்	-	1	-	1
8	ராணிப்பேட்டை	-	1	-	2
9	திருப்பத்தூர்	-	-	-	2
10	திருவண்ணாமலை	-	2	-	1
11	தருமபுரி	-	1	-	-
12	கிருஷ்ணகிரி	-	1	-	2

வ. எண்	மாவட்டம்	டிராக்டரினால் இயக்கப்படும் நீர் இறைக்கும் பம்புகள்	டிராக்டரினால் இயங்கக்கூடிய துகளாக்கும் கருவிகள்	அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள்	டிராக்டர் டிரெய்லர்கள்
13	சேலம்	-	2	-	3
14	நாமக்கல்	-	2	-	-
15	கோயம்புத்தூர்	-	4	-	2
16	ஈரோடு	-	4	-	-
17	திருப்பூர்	-	2	-	-
18	திருச்சி	-	5	-	2
19	அரியலூர்	-	2	-	1
20	பெரம்பலூர்	-	1	-	1
21	கரூர்	-	2	-	2
22	புதுக்கோட்டை	-	2	100	2
23	திருவாரூர்	3	13	100	7
24	தஞ்சாவூர்	-	11	150	4
25	நாகப்பட்டினம்	4	9	155	4
26	திண்டுக்கல்	-	2	-	2
27	மதுரை	-	3	-	2
28	தேனி	-	3	-	2
29	சிவகங்கை	-	2	-	2
30	இராமநாதபுரம்	-	2	-	1
31	விருதுநகர்	-	2	-	2

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	டிராக்டரினால் இயக்கப்படும் நீர் இறைக்கும் பம்புகள்	டிராக்டரினால் இயங்கக்கூடிய துகளாக்கும் கருவிகள்	அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள்	டிராக்டர் டிரெய்லர்கள்
32	தூத்துக்குடி	-	3	-	3
33	திருநெல்வேலி	-	2	-	1
34	தென்காசி	-	1	-	-
35	நீலகிரி	-	-	-	**1**
	மொத்தம்	**16**	**107**	**805**	**61**

3.4.2. வேளாண் இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல்

தமிழக அரசு வேளாண்மையில் பண்ணை சக்தியின் அளவை அதிகரிக்க, விவசாயிகளிடையே வேளாண்மை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்து வருகிறது. வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்தல், வட்டார மற்றும் கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்தல் முதலான திட்டங்களுக்கு மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த <u>2018-2019 ஆம் ஆண்டு முதல் தனிப்பட்ட</u> விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டம், மத்திய அரசின் இணையதளமான <u>www.agrimachinery.nic.in-ன்</u> Direct Benefit Transfer (DBT) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் முகவர்கள் பதிவு செய்தல்; விவசாயி, முகவர் மற்றும் வேளாண் இயந்திரங்கள் அல்லது கருவிகளுடன்கூடிய புகைப்படம் பதிவேற்றம் செய்தல்; வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், விவசாயி மற்றும்

[2020 மார்ச் 24

துறை அலுவலர்களுடன்கூடிய சரிபார்ப்பு புகைப்படம் பதிவேற்றம் செய்தல்; மானியம் ஒப்புதல் வழங்குதல் முதலான பணிகள் இந்த இணையதளத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும், வேளாண்மைப் பொறியியல் துறையால் மத்திய அரசு ஒப்புதல் பெற்ற வேளாண் இயந்திரங்கள் பயிற்சி மற்றும் சோதனை நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு பட்டியலிட்ட நிறுவனங்கள் ஆகியவைமூலம் பெறப்படும் சோதனைச் சான்றிதழ் அடிப்படையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இணையதளத்தின்மூலம் அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் வழங்கப்படுகிறது. அவ்வாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளில், பயனாளிகள் தங்களுக்கு விருப்பமான மாதிரிகளை தேர்வு செய்து, தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், வாடகை மையங்கள் அமைத்தல் ஆகியவற்றிக்கு மானியத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.4.2.1. தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகள் டிராக்டர், பவர் டில்லர், சுழல் கலப்பை, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், டிராக்டர் மற்றும் பவர் டில்லரால் இயங்கும் பண்ணைக் கருவிகள், விசைக் களையெடுப்பான், தட்டை வெட்டும் கருவி, புதர் அகற்றும் கருவி, பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம், தென்னை ஓலைத் துகளாக்கும் கருவி, கரும்பு சோகை உரிக்கும் கருவி, கரும்பு சோகை துகளாக்கும் கருவி, அறுவடை இயந்திரம் போன்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்சத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 8,189 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வாங்கிட ரூ.160.89 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 7,375 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.138.70 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.201.41 கோடி மானியத்தில் 7,396 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3. வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு வழங்கப்படுகின்ற அதிகபட்ச மானியத் தொகை மற்றும் விவரங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
1	டிராக்டர் 2 வீல் டிரைவ் (8 முதல் 20 PTO குதிரைத் திறன் வரை)	2.00	50%	1.60	40%
2	டிராக்டர் 4 வீல் டிரைவ் (8 முதல் 20 PTO குதிரைத் திறன் வரை)	2.25	50%	1.80	40%
3	டிராக்டர் 2 வீல் டிரைவ் (20-க்குமேல் 40 PTO குதிரைத் திறன் வரை)	2.50	50%	2.00	40%

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
4	டிராக்டர் 4 வீல் டிரைவ் (20-க்கு மேல் 40 PTO குதிரைத் திறன் வரை)	3.00	50%	2.40	40%
5	டிராக்டர் 2 வீல் டிரைவ் (40-க்கு மேல் 70 PTO குதிரைத் திறன் வரை)	4.25	50%	3.40	40%
6	டிராக்டர் 4 வீல் டிரைவ் (40-க்கு மேல் 70 PTO குதிரைத் திறன் வரை)	5.00	50%	4.00	40%
7	பவர் டில்லர் (8 குதிரைத் திறன் மற்றும் அதற்கு மேல்)	0.85	50%	0.70	40%
8	தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (4 வரிசை)	1.50	50%	1.20	40%
9	தானியங்கி நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் (4 வரிசைக்குமேல் 8 வரிசை வரை)	5.00	50%	4.00	40%

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
10	குழி தோண்டும் கருவி (தானியங்கி)	0.75	50%	0.60	40%
11	விசை களையெடுக்கும் கருவி (2 குதிரை திறனுக்கும்கீழ் உள்ள என்ஜினால் இயங்கக் கூடியது)	0.25	50%	0.20	40%
12	புதர் அகற்றும் கருவி (3 குதிரைத் திறனுக்குகீழ் உள்ள என்ஜின்/மின் மோட்டாரினால் இயங்கக் கூடியது)	0.30	50%	0.25	40%
13	தட்டை வெட்டும் கருவி (3 குதிரைத் திறனுக்குகீழ் உள்ள என்ஜின்/மின் மோட்டார் மற்றும் 20 குதிரைத் திறனுக்குகீழ் உள்ள பவர் டில்லர் மற்றும் டிராக்டாரினால் இயங்கக் கூடியது)	0.20	50%	0.16	40%

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
14	விசை களையெடுக்கும் கருவி (2 குதிரைத் திறனுக்குமேல் உள்ள என்ஜினால் இயங்கக்கூடியது)	0.35	50%	0.30	40%
15	டிரெய்லர்/டிராலி (3 டன் வரை கொள்ளளவுள்ள)	0.60	50%	0.50	40%
16	தட்டைவெட்டும் கருவி (3 குதிரைத் திறனுக்குமேல் 5 குதிரைத் திறன் வரை உள்ள என்ஜின்/மின் மோட்டார், பவர் டில்லர் மற்றும் 35 குதிரைத் திறனுக்குகீழ் உள்ள டிராக்டரால் இயங்கக் கூடியது) (Chaff cutter)	0.28	50%	0.22	40%
	35 குதிரைத் திறனுக்குமேல் உள்ள டிராக்டரால் இயங்கக்கூடிய கருவிகள்				
17	வார்ப்பு இறகுக் கலப்பை (Mould Board Plough)	0.50	50%	0.40	40%

2020 மார்ச் 24]

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
18	சட்டிக் கலப்பை	0.50	50%	0.40	40%
19	கொத்துக் கலப்பை	0.50	50%	0.40	40%
20	சட்டிப் பலுகு (Disc Harrow)	0.50	50%	0.40	40%
21	திருப்பும் வசதி கொண்ட வார்ப்பு இறகுக் கலப்பை - 2 இறகு (Mechanical Reversible Plough)	0.40	50%	0.32	40%
22	திருப்பும் வசதி கொண்ட வார்ப்பு இறகுக் கலப்பை - 3 இறகு (Mechanical Reversible Plough)	0.50	50%	0.40	40%
23	லேசர் நிலம் சமன் செய்யும் கருவி	2.00	50%	1.60	40%
24	சுழல் கலப்பை 5 அடி (Rotavator)	0.42	50%	0.34	40%

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
25	சுழல் கலப்பை 6 அடி (Rotavator)	0.448	50%	0.358	40%
26	திருப்பும் வசதி கொண்ட ஹைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை - 2 இறகு (Reversible Hydraulic Mould Board Plough)	0.70	50%	0.56	40%
27	திருப்பும் வசதி கொண்ட ஹைட்ராலிக் வார்ப்பு இறகுக் கலப்பை - 3 இறகு (Reversible Hydraulic Mould Board Plough)	0.895	50%	0.716	40%
28	வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவி (Ridge Moulder/ Bund Former - PTO operated)	1.50	50%	1.20	40%
29	விதையுடன் உரமிடும் கருவி/ உழவின்றி விதையுடன் உரமிடும் கருவி (9 கொத்து)	0.213	50%	0.17	40%

2020 மார்ச் 24]

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
30	விதையுடன் உரமிடும் கருவி/ உழவின்றி விதையுடன் உரமிடும் கருவி (11 கொத்து)	0.241	50%	0.193	40%
31	டிராக்டரால் இயங்கக்கூடிய கதிரறுக்கும் கருவி	0.75	50%	0.60	40%
32	குழி தோண்டும் கருவி	0.75	50%	0.60	40%
33	நிலக்கடலை தோண்டும் கருவி	0.75	50%	0.60	40%
34	கதிரடிப்பான்/பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் (மணிக்கு 4 டன் வரை கதிரடிக்கும் திறன்)	1.00	50%	0.80	40%
35	இன்ஃபீல்டர்	0.63	50%	0.50	40%
36	அறுவடை இயந்திரம் (தானியங்கி - 14 அடி வரையிலான கட்டர் பார்)	8.00	50%	6.40	40%

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
37	அறுவடை இயந்திரம் (டிராக்-6 முதல் 8 அடி வரையுள்ள கட்டர் பார்)	11.00	50%	8.80	40%
38	அறுவடை இயந்திரம் (டிராக்-6 அடிகீழ் வரையுள்ள கட்டர் பார்)	7.00	50%	5.60	40%
39	கதிரடிப்பான்/பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் (மணிக்கு 4 டன்னுக்குமேல் கதிரடிக்கும் திறன்)	2.50	50%	2.00	40%
40	கரும்பு சோகை துகளாக்கும் கருவி	1.25	50%	1.00	40%
41	தென்னை ஓலை துகளாக்கும் கருவி	0.63	50%	0.50	40%
42	வைக்கோல் அள்ளும் கருவி (Hay Rake)	1.50	50%	1.20	40%
43	வைக்கோல் கட்டுகட்டும் இயந்திரம் (உருளை வடிவம்-கட்டுக்கு 14 முதல் 16 கிலோ வரை)	2.00	50%	1.60	40%

வ. எண்	வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பெயர்	சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண் விவசாயிகள்		இதர விவசாயிகள்	
		விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்	விவசாயிகளுக்கு ஒரு வேளாண் இயந்திரம் அல்லது கருவிக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியம்	மானிய விவரம்
44	வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (உருளை வடிவம் - கட்டுக்கு 16-க்குமேல் 25 கிலோ வரை)	5.50	50%	4.40	40%
45	வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம் (செவ்வக வடிவம் - கட்டுக்கு 18 முதல் 20 கிலோ வரை)	6.00	50%	4.80	40%
46	கரும்பு கட்டை சீவும் கருவி (Sugarcane stubble shaver)	0.80	50%	0.64	40%

3.4.3. வேளாண்மை இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்தல்

உயர் தொழில்நுட்பம் மற்றும் அதிக விலையுள்ள பண்ணை இயந்திரங்களை வாங்கி பராமரிக்க இயலாத நிலையில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவும்பொருட்டு, முன்னணி விவசாயிகள், விவசாயக் குழுக்கள், தொழில்முனைவோர் மற்றும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள்மூலம் வட்டார மற்றும் கிராம அளவில் வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்

மானியத்தில் அமைக்கப்படுகின்றன. இம்மையங்கள்மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது.

3.4.3.1. கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்

கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும்பொருட்டு, சர்க்கரை ஆலைகள் மற்றும் தொழில்முனைவோர்கள்மூலம் கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் ரூ.150 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது. இதில் 40 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.60 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இம்மையங்கள் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறைந்த வாடகையில் வழங்குகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை கரும்பு சாகுபடிக்கேற்ற 11 உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.5.76 கோடி மானியத்தில் கீழ்க்கண்ட விவரப்படி அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.4. கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் வாடகை மைய விவரங்கள்

வ. எண்	வருடம்	கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்	
		செயல் (எண்கள்)	மானியம் (ரூபாய் இலட்சத்தில்)
1	2015-2016	4	205.07
2	2016-2017	1	71.93
3	2017-2018	4	195.52
4	2018-2019	2	103.46
மொத்தம்		11	575.98

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.6 கோடி மானியத்தில் 10 கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 8 கரும்பு சாகுபடிக்கேற்ற உயர் தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.4.3.2. வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்

வட்டார அளவில் விவசாயிகளுக்கு, வேளாண் பணிகளுக்கு தேவைப்படும் பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களைக் குறைந்த வாடகையில் வழங்கிட வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு வாடகை மையம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது. இதில் 40 சதவீத மானியத்தின்படி அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 60 சதவீதத் தொகை பயனாளிகளின் பங்களிப்புத் தொகை ஆகும்.

மொத்த மானியத் தொகையில் பொதுப் பிரிவினருக்கு ரூ.5 இலட்சமும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு ரூ.3 இலட்சமும் பிடித்தம் செய்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "மானிய இருப்பு நிதிக் கணக்கில் (Subsidy Reserve Fund Account)" இரண்டு வருடங்களுக்கு இருப்பில் வைக்கப்படும். மீதித் தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

வங்கியில் மானிய இருப்பு நிதிக் கணக்கில் வைப்பதற்கு பதிலாக, பயனாளிகள் மொத்த மானியத் தொகையில் பொதுப் பிரிவினருக்கு ரூ.5 இலட்சமும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு ரூ.3 இலட்சமும் இரண்டு வருடத்திற்கு நிலையான வைப்பு நிதியாக எடுத்து, வேளாண்மைப் பொறியியல் துறையின் சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் பெயரில் பிணை வைப்பும் செய்யலாம். இரண்டு வருடங்களுக்குப்பின் பயனாளிக்கு வழங்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் சரிபார்த்த பிறகு மானிய இருப்புத் தொகை விடுவிக்கப்பட்டு பயனாளிக்கு திரும்ப வழங்கப்படும்.

[2020 மார்ச் 24

கடந்த 2014-2015 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் 1,510 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் கீழ்க்கண்ட விவரப்படி அமைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.5. வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மைய விவரங்கள்

வ. எண்	வருடம்	வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்	
		செயல் (எண்கள்)	மானியம் (ரூபாய் இலட்சத்தில்)
1	2014-2015	22	214.71
2	2015-2016	190	1884.17
3	2016-2017	420	4191.46
4	2017-2018	427	4267.81
5	2018-2019	451	4505.36
மொத்தம்		1,510	15,063.51

வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.30.40 கோடி மானியத்தில் 304 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, இதுவரை 294 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.10 கோடி மானியத்தில் 100 வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.4.3.3. கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்

பண்ணை சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பண்ணைப் பணிகளை மேற்கொண்டு தங்கள் வருவாயை அதிகரிக்கும்பொருட்டு, குறைந்தபட்சம் எட்டு விவசாயிகளைக் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்கீழ் உள்ள விவசாய தொகுப்புகள் அடங்கிய கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து மகளிர் குழுக்களும் இதுபோன்ற வாடகை மையங்கள் அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.10 இலட்சம் திட்ட மதிப்பில் அமைக்கப்படும். ஒரு மையத்திற்கு 80 சதவீதம் மானியத்தின்படி அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 20 சதவீதத் தொகையான ரூ.2 இலட்சத்தை பயனாளிகள் தம்முடைய பங்களிப்புத் தொகையாக வழங்க வேண்டும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து மகளிர் குழுக்களும் இதுபோன்ற வாடகை மையங்கள் அமைத்திட, 80 சதவீதம் மானியம் அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் வரை வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்படும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 15 சதவீத தொகையான ரூ.1.50 இலட்சத்தை வழங்கும். மீதமுள்ள 5 சதவீத தொகையான ரூ.0.50 இலட்சத்தினை குழுக்கள் தங்கள் பங்களிப்பாக செலுத்த வேண்டும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 738 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் மொத்தம் ரூ.59.01 கோடி மானியத்தில் கீழ்க்கண்ட விவரப்படி அமைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.6. கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மைய விவரங்கள்

வ. எண்	வருடம்	கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள்	
		செயல் (எண்கள்)	மானியம் (ரூபாய் இலட்சத்தில்)
1	2017-2018	307	2,454.98
2	2018-2019	431	3,446.95
மொத்தம்		**738**	**5,901.93**

வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.48.24 கோடி மானியத்தில் 603 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, இதுவரை 302 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.28 கோடி மானியத்தில் 350 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.5. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

மண் மற்றும் நீர் போன்ற முக்கிய இயற்கை வளங்கள் நாளுக்குநாள் மண் அரிமானம், வனங்களை அழித்தல் மற்றும் தவறான மேலாண்மை முறைகளின் காரணமாக குறைந்து வருகின்றன. நிலையான வேளாண்மைக்கு இந்த முக்கியமான இயற்கை வளங்களைப் பாதுகாப்பது அவசியமாகிறது.

3.5.1. நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்

மாநிலங்களுக்கிடையே உள்ள பல்நோக்கு நீர்த் தேக்கங்களில் வண்டல் மண் படிவதைக் குறைக்கும் வகையிலும், நீர்வடிப் பகுதிகளில் உள்ள நிலங்களின் தரம் மற்றும் ஈரப்பதத்தினை மேம்படுத்திடவும், தரத்திற்கேற்றவாறு நிலப் பயன்பாட்டினை மேற்கொள்ளவும், நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு

2020 மார்ச் 24]

வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம், தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2013-2014 ஆம் ஆண்டு முதல் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 சதவீதம் அரசின் நிதி உதவியுடனும், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் கற்சுவர் அமைக்கும் பணிகள் 50 சதவீதம் விவசாயிகள் பங்களிப்போடும் செயல்படுத்தப்படுகின்றன.

தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், 2013-2014 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 22,751 எக்டர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் மொத்தம் 2,802 கம்பிவலை தடுப்பணைகள், வண்டல் மண் சேகரிப்பு கட்டுமானங்கள், நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் போன்ற மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.37.40 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி செலவில் 28.60 எக்டர் நிலப் பரப்பில் மேம்பாட்டுப் பணிகளும், 122 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டுமானப் பணிகளும் கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில், ரூ.4.45 கோடி செலவில் 108 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டுமானப் பணிகளும், 28 எக்டர் பரப்பில் நில மேம்பாட்டுப் பணிகளும் கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

3.5.2. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள வனப் பகுதிகள் மற்றும் அருகே உள்ள கிராமங்களில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மையின்மூலம் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதும், நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதன்மூலம் சுற்றுச்சூழலைச் சீரமைப்பதும், பாதுகாப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியின விவசாயிகளுக்கு 90 சதவீதம் மானியத்துடனும், ஆதி திராவிட

விவசாயிகளுக்கு 80 சதவீதம் மானியத்துடனும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்துடனும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமுதாய நிலங்களில் 100 சதவீதம் மானியத்தில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும், நில மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ள ரூ.8.29 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டமானது 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.5.3. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்தின்மூலம் தெரிவு செய்யப்பட்ட அணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் பல்துறை ஒருங்கிணைப்புடன் பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதைத் தடுப்பதற்காக, மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்வடிப்பகுதி மேலாண்மைப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மைப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகளில் 809 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு கட்டுமானப் பணிகளும், 21,132 மீட்டர் நீளத்திற்கு ஓடை சீரமைப்புப் பணிகளும் ரூ.14.97 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்தினை 2020-2021 ஆம் ஆண்டு முதல் 2024-2025 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகளில் தேனி மாவட்டத்தில் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகள், திண்டுக்கல் மாவட்டத்தில் பரப்பலாறு, குடகனாறு மற்றும் நங்காஞ்சியாறு அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.23 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட உலக வங்கிக்கு பிரேரணை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

3.5.4. பயிர்களுக்கு உயிர்ப் பாசனம் வழங்க பண்ணைக் குட்டைகள்

பண்ணைக் குட்டைகளில் மழைநீரை சிறந்த முறையில் அறுவடை செய்து, வறட்சிக் காலங்களில் பயன்படுத்துதல் என்பது வறட்சி பாதிப்பினைக் குறைப்பதற்கு ஏற்ற தொழில்நுட்பமாகும். நிலத்தில் வழிந்தோடும் மழைநீரினைச் சேமிக்க விவசாயிகளின் நிலங்களில் தாழ்வான பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுகின்றன. சேமிக்கப்பட்ட மழைநீர், வறட்சிக் காலங்களில் பயிரின் முக்கிய வளர்ச்சிப் பருவத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்பொழுது, பயிர்களுக்கு உயிர்ப் பாசனம் வழங்க பயன்படுகிறது. பண்ணைக் குட்டைகள் விவசாயிகள் மீன் வளர்க்கவும், அதனால் கூடுதல் வருவாய் ஈட்டவும் வழிவகுக்கிறது.

3.5.4.1. நபார்டு வங்கி நிதி உதவியுடன் பண்ணைக் குட்டைகள் அமைத்தல்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு 10,000 பண்ணைக் குட்டைகள் 100 சதவீதம் மானியத்துடன் ரூ.100 கோடி செலவில், நபார்டு வங்கி நிதி உதவியுடன் 2018-2019 மற்றும் 2019-2020 ஆகிய இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்திட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் 1,938 பண்ணைக் குட்டைகள் ரூ.17.98 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் விவசாயிகளின் தேவைக்கேற்ப அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக) இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 8,202 பண்ணைக் குட்டைகள் ரூ.82.02 கோடி நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 6,761 பண்ணைக் குட்டைகள் ரூ.58.80 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒப்புதல் வழங்கப்பட்ட 10,000 பண்ணைக் குட்டைகளில், இதுவரை 8,699 பண்ணைக் குட்டைகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 24

3.5.4.2. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம்

பாசனப் பகுதிகளில் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் உலக வங்கி நிதி உதவியுடன், தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம் 2017-2018 ஆம் ஆண்டு முதல் 2023-2024 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டு திட்ட காலத்துடன் பல துறைகளின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 66 உப வடிநிலப் பகுதிகளில் ரூ.15.12 கோடி நிதி ஒதுக்கீட்டில், பயிர்களின் முக்கிய வளர்ச்சிக் காலங்களில் உயிர்ப் பாசனம் அளிப்பதற்கு பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம் முதற்கட்டமாக 14 உப வடிநிலங்களிலும், இரண்டாம் கட்டமாக 16 உப வடிநிலங்களிலும் மற்றும் மூன்றாம் கட்டமாக 10 உப வடிநிலங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்மூலம், முதற்கட்டமாக 14 உப வடிநிலப் பகுதிகளில் 521 பண்ணைக் குட்டைகள் ரூ.2.98 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 16 உப வடிநிலப் பகுதிகளில் 2019-2020 ஆம் ஆண்டில் 367 பண்ணைக் குட்டைகள் ரூ.2.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றாம் கட்டமாக 10 உப வடிநிலப் பகுதிகளில், 2020-2021 ஆம் ஆண்டில் 500 பண்ணைக் குட்டைகள் ரூ.3.75 கோடி ஒதுக்கீட்டில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.5.5. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்

மானாவாரி விவசாயத்தில் உற்பத்தியினை அதிகரிக்க அகில இந்திய அளவில் முதன்மைத் திட்டமாக தமிழக அரசினால் "நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்" 2016-2017 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் தலா 1,000 எக்டர் பரப்புள்ள 1,000 மானாவாரி தொகுப்புகளில் ரூ.802.90 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மானாவாரி தொகுப்புகளில் விளைகின்ற சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின்

நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் நுழைவுக் கட்டப் பணிகள், கோடை உழவுப் பணிகள், மழைநீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைத்தல், கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைத்தல், மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் ஏற்படுத்துதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.5.5.1. நுழைவுக் கட்டப் பணிகள்

விவசாயிகள் சங்கம் மற்றும் தொகுப்பு மேம்பாட்டுக் குழுக்களின் ஒப்புதலுடன் தெரிவு செய்யப்பட்ட தொகுப்புகளில், ஒரு தொகுப்பிற்கு ரூ.5 இலட்சம் வீதம் சமுதாய நிலங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைக்கப்படுகின்றன. இதுவரை, நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்மூலம் 1,000 தொகுப்புகளில் 978 தடுப்பணைகள், 83 சமுதாய குளங்கள், 19 கிராம குட்டைகள் மற்றும் 219 ஊரணிகளை ஆழப்படுத்தும் பணிகள் போன்ற 1,299 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3.5.5.2. கோடை உழவுப் பணிகள்

மானாவாரி தொகுப்பில் உள்ள விவசாயிகளுக்குக் கோடை உழவுப் பணிகளை மேற்கொள்ள ஒரு எக்டருக்கு ரூ.1,250/- பின்னேற்பு மானிய உதவி வழங்கப்படுகிறது. இத்தொகையில் 50 சதவீதம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழும் 50 சதவீதம் மாநில நிதி உதவியாகவும் வழங்கப்படுகின்றது. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்மூலம் 1,000 தொகுப்புகளில் மொத்தமுள்ள 10 இலட்சம் எக்டரிலும் கோடை உழவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.5.5.3. மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைத்தல்

ஒரு மானாவாரி தொகுப்பிற்கு ரூ.7.50 இலட்சம் செலவில் வயல் வரப்புகள் மற்றும் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுகின்றன. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்மூலம் 1,000 தொகுப்புகளில் 60,991 எக்டரில் வயல் வரப்புகள், 3,900 பண்ணைக் குட்டைகள் மற்றும் 116 ஊரணிகள் ஆழப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

3.5.5.4. கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைத்தல்

பண்ணை சக்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பண்ணைப் பணிகளை மேற்கொண்டு தங்கள் வருவாயை அதிகரிக்கும்பொருட்டு குறைந்தபட்சம் எட்டு விவசாயிகளைக் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை அமைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் ரூ.10 இலட்சம் திட்ட மதிப்பில் அமைக்கப்படுகின்றன. ஒரு மையத்திற்கு 80 சதவீத மானியத்தின்படி அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்கீழ் 879 கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3.5.5.5. மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் மானியத்துடன் ஏற்படுத்துதல்

மானாவாரி விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயறு வகைகள், சிறு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைத் தொகுப்பு அளவில் கூடுதல் இலாபம் ஈட்டிடும் வகையில் மதிப்புக் கூட்டி விற்பனை செய்திடும்பொருட்டு, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு மானாவாரி தொகுப்பில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு மதிப்புக் கூட்டுதலுக்கான இயந்திரங்களை வாங்கி மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்க திட்ட செலவில் 75 சதவீதமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்கீழ் 185 மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதை உறுதி செய்கின்றன.

3.6. அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை

அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை முறைகளைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்கள்

விளைபொருட்களைப் பண்ணை அளவிலேயே மதிப்புக் கூட்டி விற்பதன்மூலம் நிகர வருமானத்தை அதிகரிக்கலாம்.

3.6.1 அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் வழங்குதல்

விளைபொருட்களின் சேமிப்பு கால அளவினை அதிகரிக்கவும், விளைபொருட்கள் வீணாவதைக் குறைக்கவும், அவற்றினை மதிப்புக் கூட்டவும், விவசாயிகள், விவசாய குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், விவசாய பயன்பாட்டுக் குழுக்கள், கூட்டுறவுச் சங்க விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் ஆகியோருக்கு அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

நீடித்த மானாவாரி விவசாய இயக்கத்தின்கீழ் மானாவாரி விவசாயிகள் உற்பத்தி செய்யும் சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை மதிப்புக் கூட்டி கூடுதல் இலாபம் ஈட்டிடும்பொருட்டு, மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்கப்படுகின்றன.

மானாவாரி நிலத் தொகுப்புகளின் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கும் வேளாண் விளைபொருட்களைச் சுத்தப்படுத்துதலில் தொடங்கி, விற்பனைக்கேற்ற வகையில் பேக்கிங் செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கான மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வாங்கி, மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி, எண்ணெய் செக்குகள், எண்ணெய் பிழியும் கருவி மற்றும் எண்ணெய் பாட்டிலில் அடைக்கும் கருவி ஆகியவற்றை உள்ளடக்கிய எண்ணெய் உற்பத்தி மையங்கள்; சிறுதானியங்களில் கல் நீக்கித் தரம் பிரிக்கும் கருவி, சிறுதானியங்கள் சுத்தப்படுத்தும் கருவி, சிறுதானியத்தை மெருகேற்றும் கருவி, மாவரைக்கும் இயந்திரங்கள், வறுக்கும் இயந்திரங்கள் உள்ளடக்கிய சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள்; பருப்பு உடைக்கும் இயந்திரங்கள், கல் நீக்கித் தரம் பிரிக்கும் கருவிகள், நிறத்தை வைத்து தரம் பிரிக்கும் கருவிகள் உள்ளடக்கிய பயறு வகைகள் பதப்படுத்தும் மையங்கள்; சிறுதானிய மற்றும் பயறு வகை பதப்படுத்தும் மையங்களுக்கேற்ற சாக்குப்பை தைக்கும்

கருவிகள், மறு சுழற்சி செய்யக்கூடிய பாலிதீன் பை சீல் செய்யும் கருவிகள் மற்றும் தானியங்கி பேக்கிங் செய்யும் கருவிகள்; மாட்டுத் தீவனம் தயார் செய்து பேக்கிங் செய்யும் இயந்திரத் தொகுப்பு போன்றவைகளை உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளும், உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் தங்கள் பகுதிகளில் உள்ள மானாவாரி பயிர்களின் விளைபொருட்களுக்கேற்ற மதிப்புக்கூட்டும் இயந்திர மையங்களை அமைத்துக்கொள்ளலாம்.

3.7. நீர் மேலாண்மை

விவசாயத்தினை வெற்றிகரமாக செயல்படுத்திட நீர்ப் பாசனம் மிகவும் இன்றியமையாததாகும். நமது மாநில நீர்வள ஆதாரத்திலிருந்து பாசனத்திற்காக பெருமளவில் நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு இல்லாத காரணத்தினாலும், அதிக அளவில் நிலத்தடி நீர் பயன்பாட்டில் உள்ள காரணத்தினாலும் தற்சமயம் நீர் பயன்பாட்டுத் திறன் மற்றும் மேலாண்மை முக்கியத்துவம் பெறுகிறது.

ஒவ்வொரு துளி நீரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக நீர் மேலாண்மை செயல்பாடுகளான, பண்ணை மேம்பாட்டுப் பணிகளை பாசனப் பகுதிகளில் செயல்படுத்துவதன்மூலம் நீர் பயன்பாட்டுத் திறன் அதிகரிக்கப்பட்டு, அதனால் சேமிக்கப்படும் நீரின்மூலம் பாசனப் பரப்பினை அதிகரிக்கும் பணியில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு செயலாற்றி வருகிறது.

3.7.1. நுண்ணீர்ப் பாசனத் திட்டம் - பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தில், "துளி நீரில் அதிக பயிர்"

தமிழகத்தில் பண்ணையளவில் பாசன நீர் சேதாரத்தைக் குறைத்து, நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்திட நுண்ணீர்ப் பாசன திட்டமானது பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தில், "துளி நீரில் அதிக பயிர்" என்ற பிரிவின்கீழ் தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட, நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ள நிலத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை துறை மற்றும் சர்க்கரைத் துறை அலுவலர்களுடன் கூட்டாய்வு மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளும் பணிகள்

2020 மார்ச் 24]

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2018-2019 ஆம் நிதியாண்டில் 1,19,226 எக்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணீர்ப் பாசன அமைப்புகளின் கூட்டாய்வு மற்றும் அளவீடுகள் எடுக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது.

நடப்பு 2019-2020 ஆம் நிதியாண்டில் இதுவரை 1,67,034 எக்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணீர்ப் பாசன அமைப்புகளின் கூட்டாய்வு மற்றும் அளவீடுகள் எடுக்கும் பணி செய்து முடிக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3.7.2. வளம் குன்றிய நிலங்களைச் சீர்திருத்துதல்

நிலம் மற்றும் நீர் வள ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தியமையால் நிலப் பரப்பில் களர் மற்றும் உவர்தன்மை கொண்ட வளம் குன்றிய மண் உருவாகிறது. வளம் குன்றிய நிலப் பரப்பில் அதன் உற்பத்தித் திறனை மீட்கும் பொருட்டு, மத்திய அரசின் பங்களிப்புடன் "வளம் குன்றிய நிலங்களைச் சீர்திருத்துதல்" என்ற ஒரு முன்னோடித் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாக 2016-2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வளம் குன்றிய மண்ணின் தரத்திற்கேற்றவாறு மண்ணின் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான தகுந்த சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நடப்பு 2019-2020 ஆம் ஆண்டு இத்திட்டம் கடலூர் மாவட்டத்தில் உள்ள 540 எக்டர் உவர் நிலங்களில் ரூ.3.23 கோடி மதிப்பீட்டில் நில சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.8. உட்கட்டமைப்புகள்

3.8.1. மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம்

தமிழ்நாட்டில் வேளாண் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கவும், பண்ணையாட்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்தவும், மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம் அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரமயமாக்கலைப் பற்றி அறிந்துகொள்வதற்கான தகவல் மையமாகவும், பொதுமக்கள் வேளாண் இயந்திரமயமாக்குதல் பற்றிய வழிகாட்டுதலைப்

பெறுவதற்கான மையமாகவும் இம்மையம் செயல்படும். மேலும், இம்மையத்தில் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளின் விவரங்களை உள்ளடக்கிய தொடுதிரை வசதியுடன் நேரடி காட்சியகம், இயந்திர மாதிரிகள், புகைப்படக் காட்சியகம், இயந்திரங்களின் நவீன தொழில்நுட்பத்தின் நிலை மற்றும் பரிணாமங்கள், ஒளி மற்றும் ஒலி காட்சியமைப்புகள்மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்படும். அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்கள், விவசாயத்தில் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்தினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த, மதிப்பு கூட்டும் இயந்திரங்களின் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் மாதிரிகள், சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள், சூரிய கூடார உலர்த்திகள் மற்றும் சூரிய மின்வேலி அமைப்புகள் இம்மையத்தில் காட்சிப்படுத்தப்படும்.

இந்த மையம் கல்வி நிறுவனங்கள் வாயிலாக பண்ணை தொழில்நுட்ப சுற்றுலாவினை ஊக்குவித்து, மாணவர்களிடையே பல்வேறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் கிராமப்புற வேளாண் கருவிகள் உற்பத்தியாளர்களுக்கு தங்களின் பகுதிக்கு ஏற்றவாறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வடிவமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கும். மேலும், இந்த மையம் சுய வருவாயை ஈட்டி, நீடித்த நிலையான மாதிரியாக செயல்படும் விதத்தில், இந்தியாவிலேயே தனித்துவம் பெற்ற மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையமாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

3.8.2. வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையம்

விவசாயிகளிடையே நவீன வேளாண் இயந்திரங்களைப் பிரபலப்படுத்தவும், வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் வருவாய் கோட்ட அளவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2017-2018 ஆம் ஆண்டில் இருந்து, ஒரு வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையம் அமைக்க ரூ.75 இலட்சம் வீதம், 29 விரிவாக்க மையங்கள், ரூ.21.75 கோடி மதிப்பீட்டில் நபார்டு

2020 மார்ச் 24]

ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு 23-வது நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் அமைக்க, ரூ.7 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருச்சியில் உள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தினை வலுப்படுத்துவதற்காக, 2019-2020 ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.8.3. பண்ணை உட்கட்டமைப்பு மற்றும் விரிவாக்க மையங்களை வலுப்படுத்துதல்

தமிழக வேளாண்மை அமைச்சகத்தின்கீழ் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் பண்ணை உட்கட்டமைப்புப் பணிகள் மற்றும் வலுப்படுத்தும் பணிகள் செயல்படுத்துவதுடன் தேவையான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கி வருகின்றது.

3.8.3.1. ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம்

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறை அலுவலர்கள், வட்டார அளவில் ஒரே இடத்திலிருந்து விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களை வழங்கவும், வேளாண்மை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளவும், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் விவசாய நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைக்கப்படுகின்றன.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் 81 பணிகளும், நபார்டு வங்கி நிதி உதவிமூலம் 50 பணிகளும் ஆக மொத்தம் 131 பணிகளைச் செயல்படுத்த, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 105 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 26 மையங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.8.3.2. மண் பரிசோதனைக் கூடம், பூச்சிக் கொல்லி ஆய்வுக் கூடம் மற்றும் திரவ உயிர் உற்பத்திக் கூடம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டு வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வேளாண்மைத்

[2020 மார்ச் 24

துறையின்மூலம் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 3 மண் பரிசோதனைக் கூடங்கள், 2 பூச்சிக்கொல்லி ஆய்வுக்கூடங்கள் மற்றும் 1 திரவ உயிர் உற்பத்திக் கூடம் என ஆக மொத்தம் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன.

3.8.3.3. அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைத் துறையின் மாநில விதைப் பண்ணைகள் மற்றும் மாநில தென்னை நாற்றுப் பண்ணைகளை வலுப்படுத்தும் விதத்தில் உட்கட்டமைப்புப் பணிகள் உருவாக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.8.3.4. சேமிப்பிற்கான உட்கட்டமைப்பு மேம்பாடு

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறைக்காக வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் பரிவர்த்தனைக் கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.8.3.5. தோட்டக்கலை துறையின் உட்கட்டமைப்பு மேம்பாடு

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), பண்ணை வரவு கணக்கு (FRA), தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM), தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP) ஆகியவற்றின் நிதி உதவியுடன் தோட்டக்கலை துறையின் மாநில தோட்டக்கலை பண்ணைகள் உருவாக்குதல் மற்றும் பராமரித்தல், பூங்காக்கள், தோட்டங்கள், அலுவலகங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.8.3.6. விதை சான்றளிப்புத் துறைக்கு உட்கட்டமைப்பு மேம்பாடு

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டு வேளாண்மைப் பொறியியல் துறைக்கு விதை சான்றளிப்புத் துறையின்மூலம் ஒப்பளிக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த விதை சான்றளிப்பு மையம் ரூ.2.35 கோடி மதிப்பில் அமைக்கும் பணி தஞ்சாவூரில் நடைபெற்று வருகிறது.

2020 மார்ச் 24]

3.9. விழாக்கள், விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

பண்ணை அளவில் மழைநீர் சேகரிப்பின்மூலம் நிலத்தடி நீரை அதிகரித்தல் மற்றும் வளம் குன்றிய நிலங்களைச் சீர்திருத்துதல் போன்ற துறையின் சீரிய முயற்சிகளுக்கு புது தில்லியில் உள்ள SKOCH என்னும் நிறுவனத்தால் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு "SKOCH விருது" வழங்கப்பட்டது. மேலும், நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சி நிறுவனத்தால் தமிழக விவசாயிகளை ஊக்குவித்து, மேம்படுத்தியதற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கான "சிறந்த அரசு துறைக்கான உழவன் விருது" வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டம், தலைவாசலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 9-2-2020 முதல் 11-2-2020 வரை நடைபெற்ற ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், கால்நடைத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உழவர் பெருவிழாவில், வேளாண்மைப் பொறியியல் துறை கலந்துகொண்டு நடத்திய "நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்" கண்காட்சி விவசாயப் பெருமக்களிடையே அதிக பாராட்டுதல்களையும் அமோக வரவேற்பையும் பெற்றது.

இம்மாபெரும் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் "சிறந்த வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியவர்" விருது, கரும்பு சோகை நீக்கும் கருவி மற்றும் மரவள்ளிக் கிழங்கு அறுவடை செய்யும் கருவிகளை வடிவமைத்த இரண்டு சிறந்த விவசாயிகளுக்கு வழங்கினார்.

3.10. நிருவாக அமைப்பு

வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படும் பல்வேறு விவசாய நலத் திட்டங்களைச் செயல்படுத்திட தலைமையிடத்தில் ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)-நதிப் பள்ளத்தாக்கு திட்டம், மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இரண்டு செயற்பொறியாளர்கள் உள்ளனர்.

மண்டல அளவில் 11 கண்காணிப்புப் பொறியாளர்கள், மாவட்ட அளவில் 31 செயற்பொறியாளர்கள், சிறப்புத்

திட்டங்களுக்காக 5 செயற்பொறியாளர்கள், வருவாய் கோட்ட அளவிலும் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் 125 உதவி செயற்பொறியாளர்கள், 849 உதவிப் பொறியாளர்கள்/ இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் 2,987 கள மற்றும் நிருவாகப் பணியாளர்களும் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளனர்.

மண்டல அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை தொழில்நுட்பத்துடன் நிருவகிக்கும் பொறுப்பு கண்காணிப்புப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாவட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் அந்தந்த மாவட்ட செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், வருவாய் கோட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளைச் செயல்படுத்துவது உதவி செயற்பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில், 94 உதவிப் பொறியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அட்டவணை 3.7. பணியாளர்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	எண்கள்
1	தலைமைப் பொறியாளர் (வே.பொ.)	1
2	தலைமைப் பொறியாளர் (வே.பொ.), ந.ப.தி.	1
3	கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.)	14
4	செயற்பொறியாளர் (வே.பொ.)	38
5	உதவி செயற்பொறியாளர் (வே.பொ.)	125
6	உதவிப் பொறியாளர் (வே.பொ.)/ இளநிலைப் பொறியாளர் (வே.பொ.)	849
7	கள மற்றும் நிருவாகப் பணியாளர்கள்	2,987
மொத்தம்		**4,015**

2020 மார்ச் 24]

4. வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

4.1. முன்னுரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆக்கப்பூர்வமான வேளாண்மையை முக்கிய நோக்கமாகக் கொண்டு வேளாண்மை மேம்பாட்டிற்குத் தேவையான தரமான வேளாண்மைக் கல்வி, பயிர்களின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கான பயிர் மேம்பாடு, பயிர் உற்பத்தி மற்றும் பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களை ஆராய்ச்சிகளின் வாயிலாக செயல்படுத்தி வருகின்றது. மேலும், வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு தேவையான சர்வதேச தரத்திலான மனித வளத்தினை உருவாக்கவும் இக்காலத்திற்கு ஏற்ற கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. மாணவர்கள் சர்வதேச அளவில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தற்கால தேவைகளுக்கு ஏற்ப பாடத் திட்டங்கள் மாற்றி வடிவமைக்கப்படுகின்றன. சர்வதேச ஆராய்ச்சி இதழ்களையும் வலைதள தகவல்களைப் பெறவும் வைஃபை (Wifi) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் டிஜிட்டல் எண் முறை நூலகம் மாணவர்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளன. பருவமழை மாறுபாடுகளைக் கருத்தில்கொண்டு, குறுகிய கால, உயர் விளைச்சல் தரக்கூடிய நோய் எதிர்ப்பாற்றல் கொண்ட மற்றும் இயந்திரமயமாக்கலுக்கு உகந்த ரகங்களை உருவாக்குவதன்மூலம் வறட்சி, நீரில் மூழ்குதல் மற்றும் கூலி ஆட்கள் பற்றாக்குறைக்குத் தீர்வு காண பல்கலைக்கழகம் முனைந்துள்ளது.

தமிழ்நாடு அரசுடன் இணைந்து படைப்புழு (FAW) மற்றும் வெள்ளை ஈ (Spiralling Regose) உள்ளிட்ட பூச்சி நோய் மேலாண்மைக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. மேலும், முக்கிய முயற்சிகளாக கருதப்படுவது புதிய பயிர் ரகங்கள், தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், திருந்திய நெல் சாகுபடி முறை மற்றும் நீடித்த கரும்பு உற்பத்தி முறையினை ஊக்குவித்தல், பயறு மற்றும் எண்ணெய்வித்துப் பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள், நுண்ணுயிர் கட்டுப்பாடு இடுபொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம், பயிர் வளர்ச்சி ஊக்கிகள், துல்லியப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், நெல்லில் வறட்சியைத் தடுக்க பிபிஎப்எம் தெளிப்பு, பருத்தி உற்பத்தியை அதிகரிக்க சொட்டு நீர்ப் பாசனம், அறுவடை

பின்சார்ந்த தொழில்நுட்பங்கள், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல், இயந்திரமயமாக்கல், உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல், வானிலை முன்னறிவிப்பு சார்ந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள், பயிர் தேர்வு, விலை முன்னறிவிப்புக்கேற்ற பயிர்ப் பரப்பு அதிகரிப்பு மற்றும் சந்தைமயமாக்கும் முடிவுகள் எடுத்தல், மின் வேளாண்மை, சந்தைமய விரிவாக்கம் மற்றும் வேளாண் தொழில் முன்னேற்றம்மூலம் வருமானத்தை அதிகரித்தல் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய முயற்சிகளாகக் கருதப்படுகின்றன. ஆகவே, பண்ணை முதல் நுகர்வோர் தட்டு வரை உள்ள ஒரு முழுமையான நெறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநில மற்றும் தேசிய வேளாண் திட்டங்களுக்கு ஏற்றவாறு விவசாயிகளை முன்னேற்ற, வேளாண் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள்மூலம் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தொலைத்தொடர்புக் கல்விமூலம் விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களைச் சென்றடையச் செய்துள்ளது. வேளாண்மையில் நீடித்தத் தன்மையை ஏற்படுத்தவும், வேளாண் பெருமக்களை வலிமைப்படுத்தவும் வேளாண்மையை சந்தை சார்ந்த வியாபாரமாக மாற்றி இடையூறுகளைச் சமாளித்து வேளாண்மையை உன்னத தொழிலாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

4.2. புதிய முனைப்புகள்

4.2.1. புதிதாக நிறுவப்பட்ட பிரத்தியேக பிரிவுகள்

2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டினை மேம்படுத்த மூன்று புதிய தனிச் சிறப்பு பிரிவுகள் நிறுவப்பட்டன. தர உறுதிப்படுத்துதல் குறித்த பிரத்தியேகப் பிரிவு மற்றும் ஆசிரியர்கள் மேம்பாட்டுக்கான பிரத்தியேகப் பிரிவு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் நிறுவப்பட்டது. மேலும், தேர்வு கட்டுப்பாட்டு இயக்ககத்தில் தேசிய கல்வி பாதுகாப்பு களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது.

4.2.2. தாவரவியல் பூங்காவைப் புனரமைக்கும் பணி

2019-2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவைப் புனரமைக்க சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

4.2.3. புதிய சித்த மருத்துவமனை

பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முறையாக 3-6-2019 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் புதிய சித்த மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது.

4.2.4. புதிய யு டியூப் (you tube) ஒளி அலைவரிசை 'TNAU TV' தொடங்கப்பட்டுள்ளது

பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முறையாக, கல்வி ஊடக மையத்தில் தனிச் சிறப்பு யு டியூப் (you tube) ஒளி அலைவரிசை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொலைக்காட்சி தொடங்கப்பட்டு 56 வேளாண்மை சார்ந்த தொழில்நுட்பக் காணொலி காட்சிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.2.5. இந்தியாவில் கல்வி பயிலும் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவில் கல்வி பயிலும் திட்டத்தில் இணைந்து வெளிநாட்டு மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் கல்விச் சேர்க்கைக்கான ஆணையை வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் இலங்கையில் இருந்து ஒரு மாணவர் இளமறிவியல் வேளாண்மையில் சேர்ந்துள்ளார். ஐரோப்பா, இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சித் திட்டத்திற்கு 10 துறைகளிலிருந்து 30 குறுகிய கால பாடத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

4.2.6. புதிய வேளாண்மை அறிவியல் நிலையம் நிறுவுதல்

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் தாலுகாவில் புதிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 100 சதவிகித நிதியுதவியுடன் செயல்படும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.2.7. தேசிய வேளாண்மை உயர் கல்வித் திட்டம் (NAHEP)

மாணவர்களின் திறன் மேம்பாட்டை அதிகரித்து, தொழில்முனைவோர்களாக்கி வேளாண்மைக் கல்வியைச் சர்வதேச அளவில் கொண்டு செல்ல தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதன்படி 30 இளமறிவியல் மாணவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

4.3. உட்கட்டமைப்பு வசதிகள்

ரூ.28.057 கோடியில் புதியதாக கட்டப்பட்டு முடிவுற்ற ஏழு கட்டடங்கள் 2019-2020 ஆம் ஆண்டு திறப்பு விழா செய்யப்பட்டன. அவை;

1. தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நபார்டு நிதி உதவியுடன் ரூ.10.27 கோடியில் கட்டப்பட்ட கல்வி மற்றும் நிருவாகக் கட்டடம்.

2. திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நபார்டு நிதி உதவியுடன் ரூ.10.27 கோடியில் கட்டப்பட்ட கல்வி மற்றும் நிருவாகக் கட்டடம்.

3. தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மூன்றாம் தலைமுறை இளைஞர்களுக்கு தொன்மை வாய்ந்த வேளாண் தொழில்நுட்பங்களைப் பல்நோக்கு பண்ணையத்தின்மூலம் காட்சிப்படுத்துதலுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியில் ரூ.2.447 கோடியில் உருவாக்கப்பட்டன.

4. திருச்சிராப்பள்ளியில் அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உழவர் விடுதி அமைக்க தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியில் ரூ.2.57 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது.

5. கிருஷ்ணகிரி மாவட்டம், பையூரில் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மா ஆராய்ச்சி மையம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

6. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம்,

வன்னிக்கோனேந்தல் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்தில் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

7. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட நிதி உதவியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனேந்தல் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்தில் பண்ணை சேமிப்புக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் 22 கட்டடங்களை ரூ.70.478 கோடி மதிப்பீட்டில் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

4.4. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது 10 இளமறிவியல், 33 மூதறிவியல் மற்றும் 29 முனைவர் பட்டப் படிப்புகளை தனது உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூன்று உறுப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்புகளை வழங்கி வருகின்றன.

கடந்த 2019-2020 ஆம் ஆண்டில், பட்டயப் படிப்பில் 131 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதிதாக 319 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இளநிலைப் பட்டப் படிப்பில் 2,330 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதியதாக 4,492 மாணவர்கள் (உறுப்புக் கல்லூரிகளில் 1,443 மற்றும் சார்புக் கல்லூரிகளில் 3,049) சேர்க்கப்பட்டுள்ளனர். முதுநிலைப் பட்டப் படிப்பில் 456 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதியதாக 348 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். முனைவர் பட்டப் படிப்பில் 138 மாணவர்கள் கல்வியினை நிறைவு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். புதியதாக 174 மாணவர்கள் சேர்க்கப்பட்டு முதன்மைத் தரம் வாய்ந்த கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

இளநிலை பட்டப் படிப்பிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 2011-2012 ஆம் ஆண்டில் 9,652 ஆக இருந்து 2019-2020 ஆம் ஆண்டில் 41,750 ஆக பன்மடங்கு அதிகரித்துள்ளது.

அட்டவணை 4.1. மாவட்டம் வாரியாக உறுப்புக் கல்லூரிகள்

வ. எண்	மாவட்டம்	கல்லூரியின் பெயர்
1.	கோயம்புத்தூர்	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்
2.		தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்
3.		வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்
4.		வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்
5.	மதுரை	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை
6.		சமூகவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை
7.	திருச்சிராப்பள்ளி	அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர்குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி
8.		மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர்குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி
9.		வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், திருச்சிராப்பள்ளி
10.	தஞ்சாவூர்	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர்

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	கல்லூரியின் பெயர்
11.	புதுக்கோட்டை	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை, புதுக்கோட்டை
12.	திருவண்ணாமலை	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர், திருவண்ணாமலை
13.	தேனி	தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம், தேனி
14.	தூத்துக்குடி	வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி

அட்டவணை 4.2. மாவட்டம் வாரியாக உறுப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள்

வ. எண்	மாவட்டம்	கல்லூரியின் பெயர்
1.	திருச்சிராப்பள்ளி	வேளாண்மைக் கல்வி நிறுவனம் (ஆங்கில வழிக்கல்வி) வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், திருச்சிராப்பள்ளி
2.	புதுக்கோட்டை	வேளாண்மைக் கல்வி நிறுவனம் (தமிழ் வழிக்கல்வி), தேசிய பயறு ஆராய்ச்சி மையம், வம்பன், புதுக்கோட்டை
3.	கன்னியாகுமரி	தோட்டக்கலை கல்வி நிறுவனம் (ஆங்கில வழிக்கல்வி) தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை, கன்னியாகுமரி

[2020 மார்ச் 24

4.4.1. திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி பாடத் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி முறையில் 38 சான்றிதழ் பாடங்களை விவசாய சமுதாயம், ஊரக இளைஞர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் வழங்கி வருகின்றது. மேலும், இடுபொருள் விற்பனையாளர்களுக்கான பட்டயப் படிப்பும் வழங்கி வருகின்றது.

கடந்த 2019-2020 ஆம் ஆண்டு சான்றிதழ் பாடத் திட்டங்களில் 2,311 மாணவர்களும், வேளாண்மை இடுபொருள் பட்டயப் படிப்பில் 238 மாணவர்களும், முதுநிலை பட்டயப் படிப்பில் 102 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். பண்ணை அறிவியல் பட்டப் படிப்பில் 57 மாணவர்களும், முதுநிலை வணிக நிருவாகவியல் மற்றும் முதுநிலை அறிவியல் பட்டயப் படிப்பில் 36 மாணவர்களும், வேளாண்மை இடுபொருள் பட்டயப் படிப்பில் 372 மாணவர்களும், சான்றிதழ் பாடத் திட்டத்தில் 1,971 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

4.4.2. மாணவர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனை

மாணவர் நல இயக்கம்வாயிலாக 2019-2020 ஆம் ஆண்டு மொத்தம் 181 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவை; வேளாண் தொழில் நிறுவனங்கள் (92), உணவு நிறுவனங்கள் (12), அரசு சாரா மற்றும் அரசு அமைப்புகள் (10), வங்கிகள் (6), நிதி நிறுவனங்கள் (25) மற்றும் இதர நிறுவனங்கள் (36) ஆகும். அதிநவீன ஆய்வகம் மாணவர்களின் தனித்திறனையும் கருத்துப் பரிமாற்றத்திறனையும் மேம்படுத்தும் விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வியக்ககம்மூலம் மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள் மற்றும் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

4.5. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 14 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதிக்கேற்ற

2020 மார்ச் 24]

பயிர்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு அரசு நிதி மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்பு மற்றும் புதுமை நிதித் திட்டத்தின் வாயிலாக நிதி பெறப்படுகின்றது.

4.5.1. வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 2019-2020 ஆம் ஆண்டில் கீழ்வரும் 13 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது:

வ. எண்	பயிர் மற்றும் இரகத்தின் பெயர்	சிறப்பு இயல்புகள்
1.	நெல் கோ 53	குறுகிய கால இரகம் (115–120 நாட்கள்) கொண்டது. மானாவாரி பயிரில் அதிகபட்ச தானிய விளைச்சலாக எக்டருக்கு 3,718 கிலோவும், பகுதி மானாவாரியில் எக்டருக்கு 3,866 கிலோ தரவல்லது. வெண்முதுகு தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத் திறன், இலையுறை அழுகல், இலைப்புள்ளி நோய், நெல் துங்ரோ, இலை குலை நோய் மற்றும் கழுத்து குலை நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. தமிழ்நாட்டில் வறட்சி பாதிப்புக்குள்ளாகும் மாவட்டங்களான இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்குப் பயிரிட ஏற்றது.
2.	நெல் ஏடீடி 54	அதிக மகசூல் தரவல்லது (130-135 நாட்கள்) மத்தியகால இரகம். சராசரி மகசூல் எக்டருக்கு 6,307 கிலோ. இலைமடக்கு புழுவிற்கு எதிர்ப்பு திறன் கொண்டது. மேலும் குலைநோய் மற்றும் தண்டு துளைப்பானுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. வெள்ளை மத்திய சன்ன அரிசியை உடைய இரகம்.

வ. எண்	பயிர் மற்றும் இரகத்தின் பெயர்	சிறப்பு இயல்புகள்
3.	உளுந்து விபிஎன் 11	இந்த இரகமானது 70 முதல் 75 நாட்கள் வளரக்கூடிய குறுகியகால இரகம். இது எக்டருக்கு 899 கிலோ விளைச்சல் கொடுக்கவல்லது. ஆடி, புரட்டாசி, மார்கழி, தை மற்றும் சித்திரைப் பட்டங்களில் பயிரிடுவதற்கு ஏற்றது. மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத்திறனும் சாம்பல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறனும் கொண்டுள்ளது.
4.	சோளம் கோ 32	குறைந்த வயதுடையது (105-110 நாட்கள்). தானியம் மற்றும் தீவனத்திற்கேற்ற இரகம். எக்டருக்கு தானிய மகசூல் 2,445 கிலோவும், உலர்தட்டு மகசூல் 6,490 கிலோவும் தரவல்லது. குருத்து ஈ, தண்டு துளைப்பான், அடிச் சாம்பல் மற்றும் கதிர் பூசாண நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை கொண்டது. மஞ்சள் கலந்த வெள்ளை நிற தானியங்கள், மானாவாரி மற்றும் இறவையில் தமிழகமெங்கும் சாகுபடி செய்ய ஏற்ற இரகம்.
5.	வாழை கோ 2	வாழை கோ 2 இரகமானது நடவில் இருந்து 12–13 மாதங்கள் வளரக் கூடியது. நெய்பூவன் வாழை இரகத்தை ஒத்த தோற்றத்தைக் கொண்டது. வாழையைத் தாக்கும் நூற்புழுக்களின் தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. இந்த தேர்வின் மகசூல் திறன் எக்டருக்கு 32 டன்கள். அக்டோபர் முதல் ஜனவரி வரை நடவு செய்ய ஏற்றது. ஈட்டிக் கன்றுகள் நடவு செய்வதற்குச் சிறந்தவை. 1.8 மீ x 1.8 மீ இடைவெளியில் கன்றுகளை நடவு செய்ய வேண்டும். இந்த இரகமானது கோயம்புத்தூர், ஈரோடு, தேனி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சாகுபடி செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது.

வ. எண்	பயிர் மற்றும் இரகத்தின் பெயர்	சிறப்பு இயல்புகள்
6.	தினை ஏடிஎல் 1	இந்த இரகமானது 80–85 நாட்களில் அறுவடைக்கு வரும். இந்த இரகம் சராசரியாக 2,117 கிலோ/எக்டர் தானிய மகசூல் எக்டருக்கு 2,785 கிலோ தட்டை மகசூல் தந்துள்ளது. குருத்துப்பூச்சி, குலை நோய் மற்றும் துரு நோய்களைத் தாங்கி வளரக் கூடியது. மலை மற்றும் மானாவாரி விவசாயத்திற்கு மிகவும் ஏற்றதாகும். தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், சேலம், நாமக்கல், விழுப்புரம், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி போன்ற தினை விளையும் மாவட்டங்களாகும்.
7.	கரும்பு கோக 13339	இந்த இரகம் சராசரி கரும்பு மகசூல் எக்டருக்கு 141.81 டன்கள் தரவல்லது. இந்த இரகம் செவ்வழுகல் நோய், காிப்பூட்டை நோய் மற்றும் மஞ்சள் தேமல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டதாகும். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து கரும்பு பயிரிடும் பகுதிகளிலும் சாகுபடி செய்ய உகந்ததாகும்.
8.	பருத்தி கோ 17	பருத்தி கோ 17 இரகமானது அடக்கமான மற்றும் நேரான செடி, குறுகிய பயிர் முதிர்ச்சி (125–135 நாட்கள்), செடி கிளை இல்லாமல் இருத்தல் ஒரே சமயத்தில் காய் முதிர்வடைவதால் இரண்டு அறுவடையில் பருத்தி எடுப்புக்கு ஏற்றது. இது சராசரி மகசூல் எக்டருக்கு 2,504 கிலோ தந்துள்ளது. வேர் அழுகல் மற்றும் ஆல்டர்னோரியா இலைப்புள்ளி நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை கொண்டது. அடர் நடவு முறைக்கு ஏற்றது. தமிழகத்தின் நெல் தரிசு, குளிர்கால மானாவாரி மற்றும் கோடைகால நீர்ப் பாசன பகுதிகளுக்கு ஏற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

வ. எண்	பயிர் மற்றும் இரகத்தின் பெயர்	சிறப்பு இயல்புகள்
9.	கலப்பினத் தக்காளி கோ 4	நீண்ட நாட்களுக்கு மகசூல் தரவல்லதாகும். வயது 150 நாட்கள். எக்டருக்கு 92.3 டன் மகசூல் தரவல்லது. இந்த இரகமானது 60 x 45 செ.மீ இடைவெளியில் பயிரிட உகந்தது. தமிழகத்தில் தக்காளி பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது. ஜூன்-ஜூலை மற்றும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் பாசனப் பயிராக பயிர் செய்வதற்கு உகந்தது.
10.	மரவள்ளி ஒய்.டி.பி 2	வயது 270-300 நாட்கள் கொண்டது, மகசூல் 46.2 டன்/எக்டர் மரவள்ளி தேமல் நோயின் தாக்கம் காணப்படவில்லை. மரவள்ளி சாகுபடி செய்யும் அனைத்து மாவட்டங்களிலும் இறவையில் சாகுபடி செய்ய ஏற்ற இரகம். கல்வராயன் மற்றும் பச்சமலை பகுதிகளுக்கும் மானாவாரியில் சாகுபடி செய்ய ஏற்றது.
11.	சிறிய வெங்காயம் கோ 6	குமிழ் உற்பத்தி: (பருவம் மே–செப்டம்பர்; வயது 130 நாட்கள்) விதை உற்பத்தி: (பருவம் டிசம்பர்-ஏப்ரல்; வயது 140 நாட்கள்) வெங்காயம் தோல் உறிப்பதற்கு எளிதாக இருக்கும். மகசூல் 19.10 டன்/எக்டருக்கு விதை மகசூலில் 250-300 கிலோ/எக்டர் தரவல்லது. இந்த இரகமானது பெரம்பலூர், நாமக்கல், திருப்பூர், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இறவையில் பயிரிட உகந்தது.

TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	பயிர் மற்றும் இரகத்தின் பெயர்	சிறப்பு இயல்புகள்
12.	மணத்தக்காளி (கோ 1)	இதன் வயது 160-180 நாட்கள். பசுங்கீரை மகசூல் எக்டருக்கு 30-35 டன்கள். மொத்த மருந்துத்தன்மை 0.38% கொண்டுள்ளது. அஸ்கார்பிக் அமிலம் (21.66 மில்லி கிராம்/கிராம்) மற்றும் இரும்புச் சத்து (6.10 மில்லி கிராம்/100 கிராம்) நிறைந்து காணப்படுகின்றது. உள்ளூர் வகையை விட 19 சதவிகிதம் அதிக மகசூல் தரவல்லது.
13.	கொடுக்காப்புளி 02	கொடுக்காப்புளி 02 இரகமானது நடுத்தர குவிந்த கிளைகளுடன் சீராக வளரும் தன்மை உடையது. அதிக மகசூல் (90 கிலோ/மரம் ஒன்றிற்கு/வருடம் ஒன்றிற்கு (13.50 டன்/எக்டர்) கொண்டது. வணிக ரீதியாக நடவு செய்த ஐந்து ஆண்டுகளில் மகசூலுக்கு வரும். தமிழகத்தில் களர், உவர் நிலங்கள், தண்ணீர் தேங்கும் நிலங்கள் மற்றும் மானாவாரி சாகுபடிக்கு மிகவும் உகந்தது.

4.5.2. ஆராய்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு நிதி வழங்கும் நிறுவனங்கள் வாயிலாக பெறப்பட்ட நிதியினைக்கொண்டு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (2019-2020)

2019-2020 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதியில் சமூக ரீதியில் பின்தங்கியுள்ள மக்களுக்கு மருத்துவப் பயிர்கள் மதிப்புக் கூட்டுதல் குறித்த திட்டத்தினை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.60.65 இலட்சத்தில் செயல்படுத்த மாநில திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

[2020 மார்ச் 24

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம் (2019-2020)

2019-2020 ஆம் ஆண்டில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த ரூ.100 இலட்சத்திற்கு மாநில திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டம் செயல்பாட்டில் உள்ளது:

1. தேனி மாவட்டம், கடமலைக்குண்டு மற்றும் ஆண்டிப்பட்டி வட்டார மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தோட்டக்கலை திட்டத்திற்கு ரூ.55.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
2. பச்சமலைப் பகுதி மலையாளி ஆதிவாசி இன மக்களை மேம்படுத்த நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டத்திற்கு ரூ.35.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
3. தமிழ்நாடு, தருமபுரி மாவட்ட பழங்குடி விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் (2019-2020)

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் பின்வரும் இரண்டு திட்டங்களை ரூ.306.30 இலட்சம் மதிப்பீட்டில் அரசு வழங்கியுள்ளது.

1. மித தட்ப வெப்ப மண்டல பழங்களை (பேரிக்காய், பிளம்ஸ், பீச் மற்றும் கிவி) தமிழக மலை பிரதேசங்களில் பிரபலப்படுத்துதல் (ரூ.110.50 இலட்சம்).
2. அதிக பிரபலம் இல்லாத பழ வகைகளான அவக்கேடோ (வெண்ணைப் பழம்) மற்றும் லிட்ச்சி (litchi) பழங்களை கீழ்பழனிமலை பிரதேசத்திலும் நாவல் மற்றும் மணிலா புளி வகைகளை தமிழ்நாட்டின் வறண்ட நிலத்தில் சாகுபடி தொழில்நுட்பங்களை செயல் விளக்கம் செய்தல் (ரூ.195.80 இலட்சம்).

உலக வங்கி (TN- IAMP) திட்டம்

மாநிலத்தில் உள்ள 18 உபவடிப் பகுதிகளுக்கான சீரான காலநிலை மற்றும் சந்தை சார்ந்த வேளாண்மையை ஊக்குவிக்க

2020 மார்ச் 24]

உலக வங்கி, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கும் திட்டத்தினை (TN-IAMP) தமிழக அரசு மூலமாக 2017-2023 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்த ரூ.8538.63 இலட்சம் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

4.6. வேளாண் விரிவாக்கக் கல்வி

4.6.1. வேளாண்மை அறிவியில் நிலையங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (KVK) செயல்படுகின்றன. கடந்த 2019-2020 ஆம் ஆண்டில் 87 பண்ணை வழி ஆய்வுகள் 159 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் மற்றும் பயிற்சிகள், விவசாயிகள் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டன.

அட்டவணை 4.3. வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	இடம்
1.	கடலூர்	விருத்தாசலம்
2.	தருமபுரி	பாப்பாரப்பட்டி
3.	கன்னியாகுமரி	திருப்பதிசாரம்
4.	மதுரை	மதுரை
5.	புதுக்கோட்டை	வம்பன்
6.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்
7.	சேலம்	சந்தியூர்
8.	திருவள்ளூர்	திரூர்
9.	திருவாரூர்	நீடாமங்கலம்
10.	திருச்சிராப்பள்ளி	சிறுகமணி
11.	வேலூர்	விரிஞ்சிபுரம்
12.	விழுப்புரம்	திண்டிவனம்
13.	விருதுநகர்	அருப்புக்கோட்டை
14.	திருப்பூர்	பொங்கலூர்

4.6.2. கல்வி ஊடக மையம்

கல்வி ஊடக மையத்தின்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில், 85 காணொலி நிகழ்ச்சிகள் மற்றும் 93 காணொலி காட்சிகள் பொது மக்கள், உழவர்கள் காண்பதனால் நம்பிக்கை பெறும்வகையில் வடிவமைக்கப்பட்டு, பாடங்களாகத் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன.

4.6.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 11 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது.

4.6.4. வேளாண்மையில் ஆன்ட்ராய்டு செயலிகளின் பயன்பாடு

நெல், கரும்பு, கேழ்வரகு, தென்னை, வாழை ஆகிய பயிர்கள் மற்றும் கால்நடை தொழில் சார்ந்த பசு, எருமை, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 12 வகையான ஆன்ட்ராய்டு செயலிகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கூகுள் அங்காடியிலும் (Google Play Store) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

4.6.5. வேளாண் தொழில்நுட்ப தகவல் மையம்

வேளாண் தொழில்நுட்ப தகவல் மையத்தின் விற்பனை மையம் உழவர்களின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின்மூலம் காய்கறி விதைகள், கீரை வகைகள், பயிர் ஊக்குவிப்பான்கள், தென்னை டானிக், மரம் கொல்லி, பூஞ்சானக் கொல்லி மற்றும் வேளாண் தொழில்நுட்ப குறுந்தகடுகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. தொலைபேசி மூலமாக உழவர்களின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதில் வழங்கப்படுகின்றது.

4.6.6. உழவரின் வளரும் வேளாண்மை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 1975 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வரும் தமிழ் மாத இதழ் உழவரின் வளரும் வேளாண்மையில் கடந்த 2019-2020 ஆம் ஆண்டு வரை 10,766 சந்தாதாரர்கள், அதில் 2,955 ஆண்டு சந்தாதாரர்கள் மற்றும் 7,811 வாழ்நாள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

2020 மார்ச் 24]

4.6.7. உழவர் பெருவிழா/கருத்துக்காட்சிகள்

வேளாண்மை அறிவியல் நிலையங்கள்மூலம் பெரிய அளவிலான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. அவை பிரதான் மந்திரி கிஸான் சம்மன் நிதி யோஜனா, நீர் மேலாண்மை, மரம் நடும் விழா, தூய்மை சேவை மற்றும் மகாத்மா காந்தி 150-வது பிறந்த நாள் விழா. இந்த விழிப்புணர்வு முகாம்களில் 12,222 விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் நடந்த செயல் விளக்கங்கள் மற்றும் வேளாண்மை கருத்துக்காட்சி-2019 இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கலந்து கொண்டது. இதனை விவசாயிகள் உட்பட 45,000-க்கும் மேற்பட்டோர் பார்த்துப் பயனடைந்தனர்.

4.6.8. விவசாயிகள் அழைப்பு மையம்(கிஸான் கால் சென்டர்)

இம்மையத்தின்மூலம் விவசாயிகள் 1551 அல்லது 1800-180-1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7-00 மணி முதல் இரவு 10-00 மணி வரை செயல்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில், மொத்தம், 1,56,197 தொலைபேசி அழைப்புகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

4.6.9. சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விவசாயி சமுதாய வானொலி, பண்பலை 107.4 அலைவரிசையில் 2010 ஆம் ஆண்டு முதல் 10,000 உழவர் குடும்பங்கள், இளைஞர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து 10 கிலோ மீட்டர் சென்றடையும் வகையில் செயல்படுகிறது. திங்கள் முதல் வெள்ளி வரை 10-12 மணி வரை கோயம்புத்தூர் மாவட்ட உழவர்களுக்கான வேளாண் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இதுவரை 1,114 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

4.7. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தகவல் மற்றும் பயிற்சி மையம், சென்னை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், சென்னையில் வேளாண் அறிவியல் மற்றும்

வேளாண் சார்ந்த துறைகளில் பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்தி வருகிறது. கடந்த 2019-2020 ஆம் ஆண்டு இம்மையம் மாடித்தோட்டம், மண்புழு உரம் தயாரிப்பு, காளான் வளர்ப்பு, மூலிகைத் தோட்டம் அமைத்தல், போன்சாய் செடி வளர்ப்பு, அங்கக வேளாண்மை, நுண்ணுயிர் உரம் தயாரிப்பு, மட்கு உரம் தயாரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, தேனீ வளர்ப்பு, மூலிகைப் பயிர் சாகுபடி மற்றும் சந்தைப்படுத்துதல், மலர் அலங்காரம் மற்றும் பூங்கொத்து தயாரிப்பு, சாக்லேட் தயாரிப்பு, சிறுதானிய உணவுகள் தயாரிப்பு, சாட் வகைகள் தயாரிப்பு, மூலிகை சமையல், சைவ கிரேவி வகைகள் தயாரிப்பு, பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், சூப் மற்றும் சாலட் வகைகள் தயாரிப்பு, சிறுதானிய அடுமனை பொருட்கள் தயாரிப்பு, அலங்கார மெழுகுவர்த்தி தயாரிப்பு மற்றும் உடனடி உணவுகள் தயாரிப்பு போன்ற 61 பயிற்சிகளைப் பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நடத்தியுள்ளது. இதில் 1,520 பேர் பங்கேற்றனர். அதில் 872 மகளிர் அடங்குவர்.

4.8. தரமான விதைகள் உற்பத்தி

கடந்த, 2019-2020 ஆம் ஆண்டில், 129 டன் வல்லுநர் விதைகள், 428 டன் ஆதார விதைகள், 116 டன் சான்று விதைகள் மற்றும் 744 டன் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டன. மேலும், 22.8 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டு, 198 டன் வல்லுநர் விதைகள், 486 டன் ஆதார விதைகள், 308 டன் சான்று விதைகள் மற்றும் 486 டன் உண்மை நிலை விதைகள், 21 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4.9. வேளாண்மை காலநிலை ஆராய்ச்சி மையம்

வட்டார காலநிலை முன்னறிவிப்பின் துல்லியத்தை 80 சதவீதத்திற்கு மேல் அதிகரிக்க காலநிலை ஆராய்ச்சி மையம் மத்திய காலநிலை முன்னறிவிப்பினை 2011 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றது. நாட்டில் முதல் முறையாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் "TNAU–Agro Advisory Services" என்ற முழுமையான தானியங்கி இணையதளம் மற்றும் கைபேசி செயலிமூலம் 108 பயிர்கள், 6 பயிர் காலங்கள் மற்றும் 54 காலநிலை மாற்றங்களுக்கான காலநிலை வேளாண்மை சார்ந்த வேளாண்

2020 மார்ச் 24]

ஆலோசனைகளை உழவர்களின் கைபேசிக்கு குறுந்தகவலாக வழங்கியுள்ளது.

மேலும், காலநிலை ஆராய்ச்சி மையமானது, இந்திய வானிலைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உழவர்களுக்கான ஐந்து கிராமிய வேளாண் காலநிலை சேவை-வேளாண் காலநிலை வயல்வெளி மையங்கள் ஆகியவற்றுடன் இணைந்து நாளொன்றுக்கு 15 இலட்சம் கைபேசி குறுந்தகவல்களை ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வழங்கி வருகின்றது. மாவட்ட வாரியாக இடத்திற்கேற்றவாறு வேளாண் பயிர்கள், தோட்டக்கலை பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள், கால்நடை பராமரிப்பு மற்றும் எதிர்பாராத மோசமான வானிலை ஆகியவை பற்றி இதுவரை 104 காலநிலை சார்ந்த வேளாண் ஆலோசனைத் தகவல்கள் 5-6 ஆலோசனைகளுடன் வழங்கப்பட்டுள்ளன. மே மற்றும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழைக் காலங்களுக்கான பருவ காலநிலை முன்னறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

4.10. விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கிவரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் வாயிலாக தமிழ்நாடு பாசன நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் ஆற்றுப்படுகைகளில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு விலை முன்னறிவிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டமானது தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, பழங்கள், காய்கறிகள் மற்றும் நறுமணப் பயிர்கள் போன்ற 14 வகையான பயிர் வகைகளுக்கு விலை முன்னறிவிப்பு வழங்குகிறது. சந்தை ஆலோசனையானது விதைப்பிற்கு முன்பும் மற்றும் அறுவடைக்கு முன்பும் வழங்கப்படுவதால் விவசாயிகள் விதைப்பு, விற்பனை மற்றும் சேமித்தல் ஆகியவற்றின் மீதான தகவல் சார்ந்த முடிவுகளை எடுக்க வழிவகை செய்கிறது. இந்த ஆலோசனைத் தகவலானது அச்சு மற்றும் மின்னணு ஊடகம் வாயிலாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கப்படுகிறது.

4.11. வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிகக் காப்பகம், தொழில்நுட்பம், வீரிய ஒட்டு இரகம் மற்றும்

இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், துணிகர மூலதனத் திட்டம், மாணவர் தொழில்முனைவோர், நிருவாக மேம்பாட்டுத் திட்டம், நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உன்னத் பாரத் அபியான் 2.0 ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆறு வேளாண் வணிக காப்பகங்களில் 122 புதிய தொழில்முனைவோர் ஈர்க்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூரில் உள்ள டெக்னாலஜி பிசினஸ் இன்குபேட்டரில் மத்திய அமைச்சகத்தின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை நிதியுதவியுடன், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் R-ABI திட்டத்தை ரூ.233 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனியார் விதை கூட்டமைப்பில் இரண்டு நிறுவனங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. மக்காச்சோள வீரிய ஒட்டு இரகம் கோ.எச்.(எம்) 8 மற்றும் கோ.எச்.(எம்) 9 ஆகியவற்றிற்கு வணிக விதை உற்பத்திக்கு உரிமம் கொடுக்கப்பட்டன. மலை வேம்பு எம்.டி.பி. 2 (மெலியா டுபியா)-வும் வணிகமயமாக்கப்பட்டுள்ளது.

பவானி நதிப்படுகையில் நீர் தேவை மேலாண்மை தொடர்பான ஆலோசனை சேவைகள் மற்றும் மலேசியாவில் ஸ்மார்ட் வேளாண்மை தொடர்பான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்-InAgMA ஒருங்கிணைந்த வேளாண் திட்டம் ஆகியவை வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

“வேளாண் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி” குறித்த நான்கு பயிற்சிகள், “தேங்காய் விவசாயிகளுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு” பற்றிய ஒரு பயிற்சி மற்றும் “வேளாண் வணிக காப்பக மேலாண்மை” குறித்த ஒரு பயிற்சி நடத்தப்பட்டன.

மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் முதன்மை தேசிய திட்டமான உன்னத் பாரத் அபியான் 2.0 (UBA)/திட்டத்தினை கிராமப்புற இந்திய மக்களுடன் அபிவிருத்தி சவால்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும், பொருத்தமானவற்றை உருவாக்குவதற்கும் நிலையான வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கான தீர்வுகள் காண்பதற்கும் ஒரு பிராந்திய ஒருங்கிணைப்பு நிறுவனமாக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகம் செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

4.12. அறிவுசார் சொத்துக் காப்புரிமை (Intellectual Property Rights)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இதுவரை 11 காப்புரிமைகளைப் (Patent) பெற்றுள்ளது. மேலும், 64 கண்டுபிடிப்புகளை பதிவு செய்யவும் உதவியுள்ளது. பயிர் இரகங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர்கள் உரிமை பாதுகாப்புச் சட்டத்தில் நடைமுறையில் உள்ள 64 இரகங்களுக்கு காப்புரிமை பெற பதிவு செய்யப்பட்டுள்ளது.

4.13. நிலையான மேம்பாட்டிற்கான—செயலாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிலையான மேம்பாட்டிற்கான குறிக்கோள்களை அடையும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தொலைநோக்குப் பார்வையில் செயல்படுத்தி வருகின்றது.

1. பாரம்பரிய நெல் மற்றும் தானிய பயிர்களில் இரகங்களை பாதுகாக்கும் வகையில் இராமையா மரபணு வங்கியில் 27,724 இரகங்கள்-200 சென்டிகிரேடு வெப்பத்தில் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

2. மண்ணின் வளம் குன்றாது பாதுகாக்க நிலைப்புள்ள அங்கக வேளாண்மையில் 18 வகை அங்ககப் பொருட்களுக்கு தர நிர்ணயம் செய்யப்பட்டது.

3. மாறுபடும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப பல்வேறு பயன்கள் தரவல்ல வேளாண் காடுகள் மாதிரி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

4. தானியங்கி முறையில் தட்பவெப்ப நிலையை சீராக்கும் வகையில் பசுமைக் குடில்கள் (600 சதுர மீட்டர்) மற்றும் காற்றோட்டமிக்க பாலிகுடில்கள் (500 சதுர மீட்டர்) செயல்முறை விளக்கத்திற்காக நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மாணவர்கள் இதில் தக்காளி, குடைமிளகாய், வெள்ளரி போன்ற பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றனர்.

5. தற்போது நிலவிவரும் பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்கவும், பணியாளர்களின் வேலைப்பளுவைக் குறைக்கவும் நெல், கரும்பு, மக்காச்சோளம் மற்றும் பருத்தியில் இயந்திரங்களைக் கொண்டு நடவு முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்களைச் செய்வதற்கு இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு

[2020 மார்ச் 24

பயன்பாட்டில் உள்ளன. இவை அனைத்தும் வேளாண் அறிவியல் நிலையங்களின் வாயிலாக உழவர்களுக்கு வயலில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டன.

6. மண்ணில் அதிக இரசாயன உரங்களை இடுவதால் மண்வளம் நாளடைவில் கெட்டுவிடும். இதனைத் தவிர்க்க அசோலா, ரைசோபியம், பாஸ்போபேக்டீரியா, அஸோஸ்பைரில்லம், வேம்பு, அசட்டோபாக்டர் போன்ற நுண்ணுயிர்கள்கொண்டு அளிக்கப்படும்போது மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் உரத் தேவை குறையும். மேற்கண்ட உயிர் உரங்களை தொடர்ந்து இடுவதால் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் அதிகரிக்கப்பட்டு நிலையான மண் வளத்திற்கு வழிவகுக்கும்.

7. பயிர் வளர்ச்சிக்கு நுண்ணுயிர்களின் கூட்டு (Microbial consortium) உருவாக்கப்பட்டு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வேளாண்மை பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

8. பயறு வகைப் பயிர்களில் விதைகளின் செயல்திறனை அதிகரிக்க நானோ நார்கள் (Nano fibres) கொண்டு நேர்த்தி செய்வது பரிசோதிக்கப்பட்டது.

9. மா, கொய்யா, திராட்சை போன்ற பழப்பயிர்களில் (Enhanced Freshness Formulation-2%) ஈ.எப்.எப் 2 சதவிகித கரைசலை அறுவடைக்கு முன்பும் அறுவடை செய்த பின்பும் தெளிப்பதன்மூலம் பழங்கள் வாடாமல் அதிக நேரம் சேமிப்பில் வைக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. மரங்களிலேயே பழங்கள் அதிக நேரம் கெடாமல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

10. அதிக வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடிய பயிர் இரகங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

11. தமிழகத்தில் மத்திய கால, குறுகிய கால வானிலை குறித்த குறுந்தகவல்கள் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்துடன் (Indian Meterological Department) இணைந்து வெளியிடப்படுகின்றன. உழவர்கள் பயிரிடும் காலத்திலும் வளர்ச்சிப் பருவங்களிலும் அறுவடை நேரத்தில் நிலவும் தட்பவெப்ப நிலையறிந்து செயல்படப் பேருதவியாக இருக்கும். இவை தானியங்கி செயலிமூலம் பதிவு செய்துள்ள உழவர்கள் கைபேசிக்கு குறுந்தகவல்களாகச் சென்றடையும்.

5. சர்க்கரை

5.1. சர்க்கரை ஆலைகளின் நிலை

முக்கிய பணப் பயிர்களில் ஒன்றான கரும்பு, சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான மூலப்பொருளாக இருந்து வருகிறது. கிராமப்புற பொருளாதார மேம்பாட்டில் சர்க்கரை ஆலைகள் முக்கியப் பங்கு வகிப்பதுடன் கிராமப்புறங்களைச் சார்ந்த பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகின்றன.

சமீபகாலமாக, பருவ மழை பொய்த்தல், சீரற்ற மழைப் பொழிவு, நிலத்தடி நீர் குறைவு, தொழிலாளர் கூலி உயர்வு காரணமாக சாகுபடி செலவு அதிகரிப்பு மற்றும் கரும்பு அறுவடை தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.

2019-2020 அரவைப் பருவத்தில் மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள், 1-10-2019 முதல் 29-2-2020 வரை 8.48 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானத்துடன் 40.64 இலட்சம் மெ.டன்கள் கரும்பு அரவை செய்து 3.40 இலட்சம் மெ.டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன.

5.2. கரும்பு சாகுபடியை நிலைநிறுத்த அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

கரும்பு சாகுபடியை உயர்த்தவும், நிலை நிறுத்தவும் மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்திடவும், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டத்தை அமல்படுத்திடவும், கோ 86032 இரகத்தை புத்தாக்கம் செய்யவும் புதிய கரும்பு இரகங்களுக்கும் வல்லுனர் விதைக் கரும்பு மற்றும் திசு வளர்ப்பு நாற்றுக்கள் வழங்குதல், தோகை தூளாக்குதல், தரமான பருசீவல் நாற்றுகள் வழங்குதல், ஊடுபயிர் சாகுபடி, உயிரியல் முறையிலான கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் நுண்ணீர்ப் பாசனத் திட்டம் உள்ளிட்டவைகளை தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டம் மூலமாக செயல்படுத்தி, கரும்பு விவசாயிகளை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு மேற்கண்ட நடவடிக்கைகள் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 24

5.3. நுண்ணீர்ப் பாசனத் திட்டம்

கரும்பு சாகுபடி நிலைத்து இருப்பதற்கும், கரும்பு உற்பத்தித்திறன் மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதற்கும் ஏதுவாக, பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டத்தின்கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க வழங்கப்படுகிறது. கரும்பு சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டத்தில் சாராத கூடுதலாக தேவைப்படும் உபகரணங்களை விவசாயிகள் கொள்முதல் செய்வதற்கு 2019-2020 ஆம் நிதியாண்டில், மாநில அரசால், ரூ.68.35 கோடி சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிக கரும்பு சாகுபடி பரப்பை சொட்டு நீர்ப் பாசனத்தின்கீழ் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பு நிதி ஒதுக்கீடு விவசாயிகள் கூடுதல் செலவின்றி சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க உகந்ததாக இருக்கும்.

கடந்த 2018-2019 ஆம் நிதியாண்டில் 5,588 எக்டர் கரும்பு சாகுபடி பரப்பில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 19,744 எக்டர் பரப்பிற்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு, 9,442 எக்டர் பரப்பில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தைக் கரும்பு சாகுபடியில் செயல்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

5.4. கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்கல்

கரும்பு சாகுபடி செலவைக் குறைப்பதற்கு ஏதுவாக, கரும்பு சாகுபடியில், நிலம் தயாரித்தல் முதல் அறுவடைக்குப் பிந்தைய சாகுபடி முறைகள் வரை இயந்திரங்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, தோகை தூளாக்கும் கருவி மற்றும் கரும்பு அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரங்கள், வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியத்திலும் வழங்கப்பட்டு வருகின்றன. கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2020 மார்ச் 24]

5.5. கரும்பு இரக முன்னேற்றம்

கரும்பு மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை அதிகரிக்கும் நோக்குடன், ஒவ்வொரு சர்க்கரை ஆலைப் பகுதிக்கும் பொருத்தமான குறிப்பிட்ட கரும்பு இரகங்களை தேர்வு செய்யும்பொருட்டு, கரும்பு இனப்பெருக்கு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகியவற்றுடன் இணைந்து மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கரும்பு இரகங்களின் பரிசோதனை வயல்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்கு நிறுவனத்தின் இரக வாரியான பரிசோதனை ஆய்வுகள் முடிவுகளின்படி, கோ 11015 என்ற கரும்பு இரகம் தற்போது அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வரும் கோ 86032 இரக கரும்பைக் காட்டிலும், சர்க்கரை கட்டுமானம் மற்றும் கரும்பு மகசூல் ஆகிய இரண்டிலும் சிறந்த இரகமாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்த இரகமானது குறுகிய காலத்தில் (8 முதல் 10 மாதத்தில்) முதிர்ச்சியடைந்து கோ 86032 இரகத்தைவிட அதிக சர்க்கரை கட்டுமானம் தருகிறது. தற்போது கோ 11015 இரகம் 1,050 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோ 11015 இரகத்தை கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் விரிவுபடுத்தி சாகுபடி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள புதிய கரும்பு இரகமான கோ.கு. 6, வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களிலுள்ள களர் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீர் பகுதிகளுக்கு ஏற்ற இரகமாக இருப்பதன் காரணமாக, மேற்படி இரகத்தை மேற்கண்ட மாவட்டங்களில் அமைந்துள்ள சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சாகுபடி செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

5.6. கரும்பு அபிவிருத்திப் பணிகள்

அனைத்து கரும்பு விவசாயிகளுக்கும் தரமான விதைக் கரும்பு வழங்குவதை உறுதிசெய்யும் நோக்குடன், மூன்றடுக்கு நாற்றங்கால் திட்டம் 2017-2018 நடவுப் பருவம் முதல் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கரும்பு சாகுபடி செலவைக் குறைப்பதற்கும், இயந்திரமயமாக்குவதற்கும் ஏதுவாக, அகலப்பார் நடவு முறையில் சாகுபடி மேற்கொள்ள கரும்பு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அதிக மகசூல் பெறுவதற்கு

ஏதுவாக அனைத்து சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் நவீன சாகுபடி உத்திகளை உள்ளடக்கிய மாதிரி வயல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களின் செலவினத்தைக் குறைக்கும் நோக்குடனும், சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடனும், கரும்பு விவசாயிகள் உயிர் உரங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கோயம்புத்தூரில் உள்ள கரும்பு இனப்பெருக்கு நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் சோதனைக் கூடங்களில் பெருக்கம் செய்யப்படும் நோய் எதிர்ப்புத்திறன் மற்றும் அதிக வீரியம் உள்ள திசு வளர்ப்பு நாற்றுகளைக் கொள்முதல் செய்து எக்டர் ஒன்றுக்கு ரூ.56,250 மானியத்தில் கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் 44.11 எக்டர் மற்றும் நடப்பு 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை 20.60 எக்டர் பரப்பிற்கு திசு வளர்ப்பு நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த கரும்பு விவசாயிகளுக்கு தரமான திசுவளர்ப்பு நாற்றுககள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்குடன், கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் திசு வளர்ப்புக்கூடம் நிறுவப்பட்டு 2020-2021 ஆம் ஆண்டில் உற்பத்தி துவங்கப்பட உள்ளது.

5.7. கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகை

சர்க்கரை ஆலைகள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்குடனும், கரும்பு விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலையை உரிய நேரத்தில் பெறுவதை உறுதிசெய்யும் நோக்குடனும், தமிழ்நாடு அரசு, வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலை நிர்ணய முறையை 2017-2018 அரவைப் பருவம் முதல் அறிவித்தது. அதனடிப்படையில், தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலை முறைப்படுத்துதல்) சட்டம், 2018, நிறைவேற்றப்பட்டு 12-7-2018 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு கரும்பு விவசாயிகள் 2016-2017 ஆம் பருவத்தில் பெற்ற மாநில அரசு பரிந்துரை விலையான டன் ஒன்றுக்கு ரூ.2750/-க்குக் குறைவின்றி தொடர்ந்து பெறுவதை உறுதிசெய்யும் நோக்குடன், கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையைத் தமிழ்நாடு அரசு கரும்பு விவசாயிகளுக்கு 2017-2018 பருவம் முதல் வழங்கி வருகிறது. 2017-2018 அரவைப் பருவத்திற்கு நியாமான மற்றும் ஆதாய விலையான ரூ.2,550/- மற்றும் 2016-2017 அரவைப்

2020 மார்ச் 24]

பருவத்தின் மாநில அரசின் பரிந்துரை விலையான ரூ.2,750/- ஆகியவற்றிற்கு இடையேயான வித்தியாசத் தொகை டன் ஒன்றுக்கு ரூ.200/-ஐ கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக ரூ.136.43 கோடி 1,46,058 கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. 2018-2019 அரவைப் பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2612.50 மற்றும் 2016-2017 அரவைப் பருவத்தின் மாநில அரசின் பரிந்துரை விலையான ரூ.2,750/- ஆகியவற்றிற்கு இடையேயான வித்தியாசத் தொகை டன் ஒன்றுக்கு ரூ.137.50-ஐ கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக 29-2-2020 வரை ரூ.98.03 கோடி 1,00,918 கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகை 2019-2020 அரவை பருவத்திலும் தொடர்ந்து வழங்கும் நோக்கத்தோடு 2020-2021 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.165 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 2019-2020 அரவைப் பருவத்திற்கு அரவை செய்யப்படும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.100 வரை கரும்புப் போக்குவரத்து மானியமாக வழங்க 2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.110 கோடி முதல் முறையாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

6. விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு

வேளாண்மை முதன்மையானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான துறையாகும். இத்துறை, அதனைச் சார்ந்த அனைத்து இதர துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகை செய்கிறது. உயிர் வாழ்வதற்கும், வளர்ச்சிக்கும், உணவு மிக இன்றியமையாததும், அத்தியாவசிய தேவையாகும். வளர்ந்து வரும் மக்கள்தொகையின் தேவைக்கேற்ப, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய, தமிழ்நாடு அரசு, வேளாண்மைத் துறைக்கு முன்னுரிமை வழங்கி, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

வேளாண்மையில், விளைச்சலுக்கான முக்கிய காரணியாக விளங்குவது மட்டுமின்றி, தரமான மற்றும் சீரான உற்பத்திக்கு வழிவகுப்பதுடன், இறுதியாக சந்தை மதிப்பினை அதிகரிப்பதிலும் தரமான விதைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றது. சரியான விதை ஆதாரம் மற்றும் இரகத்தினை வேளாண் பெருமக்கள் தேர்வு செய்வது, முக்கியமான மேலாண்மை முடிவுகளில் ஒன்றாக கருதப்படுகின்றது. விதையின் தரம், மற்ற எந்த ஓர் இடுபொருளையும்விட பயிரின் மகசூலினை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும். எனவே, விவசாயிகளின் மொத்த வருமானம், தரமான சான்று விதைகளை உபயோகப்படுத்துவதனையே சார்ந்துள்ளது.

விவசாயிகளுக்குத் தரமான விதைகள் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்திடவும் அங்ககச் சான்று பெற ஊக்குவிக்கவும், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை கீழ்க்கண்ட பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது:

1. விதைச் சான்றளிப்பு
2. விதைத் தரக் கட்டுப்பாடு
3. விதைப் பரிசோதனை
4. அங்ககச் சான்றளிப்பு

6.1. விதைச் சான்றளிப்பு:

இவ்வியக்கக விதைச் சான்றளிப்புப் பிரிவானது, விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள் 1968-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சான்றளிப்புப் பணிகளை நெறிமுறைப்படுத்தி,

2020 மார்ச் 24]

அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில், இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களின் [Indian Minimum Seed Certification Standards (IMSCS)]அடிப்படையில், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை கொண்ட விதைகளைச் சான்றளிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்கிறது.

நெல் மற்றும் சிறுதானியங்களில் இத்துறை, சான்று விதை உற்பத்தி இலக்கினை முழுவதுமாக அடைந்துள்ளது. பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் காய்கறிகள் ஆகிய பயிர்களில் சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலையில், விதைச் சான்றளிப்பு நடைமுறைகள்மூலம் விதை உற்பத்தியை மேற்கொள்ள இத்துறை தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 55,457 எக்டர் பரப்பளவில் பல்வேறு பயிர்களில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு இதுவரை, 97,845 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்று வழங்கப்பட்டுள்ளது.


அட்டவணை 6.1: விதைச் சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு மற்றும் சான்றளிக்கப்பட்ட விதையளவு (2019-2020)

வ. எண்	தலைமையிடம்	பரப்பு (எக்டர்)	சான்றளிக்கப்பட்ட விதையளவு (மெட்ரிக் டன்)
1.	காஞ்சிபுரம்	1,164	1,721
2.	திருவள்ளூர்	943	840
3.	கடலூர்	2,088	1,661
4.	விழுப்புரம்	3,544	5,954
5.	வேலூர்	1,189	625
6.	திருவண்ணாமலை	1,897	1,424
7.	சேலம்	1,742	632
8.	நாமக்கல்	791	2,499
9.	தருமபுரி	864	332
10.	கிருஷ்ணகிரி	1,001	604
11.	கோயம்புத்தூர்	1,042	1,667
12.	ஈரோடு	2,420	2,133
13.	திருச்சி	1,510	755
14.	பெரம்பலூர்	882	1,292

[2020 மார்ச் 24

15.	கரூர்	512	235
16.	புதுக்கோட்டை	871	894
17.	தஞ்சாவூர்	8,042	2,375
18.	நாகப்பட்டினம்	2,465	1,819
19.	திருவாரூர்	4,920	2,620
20.	மதுரை	2,016	5,153
21.	தேனி	789	1,756
22.	திண்டுக்கல்	1,878	2,402
23.	இராமநாதபுரம்	665	360
24.	சிவகங்கை	431	387
25.	விருதுநகர்	1,037	536
26.	திருநெல்வேலி	2,438	4,068
27.	தூத்துக்குடி	1,339	940
28.	கன்னியாகுமரி	133	182
29.	திருப்பூர்	6,844	51,979
	மொத்தம்	**55,457**	**97,845**

6.1.1. சான்று விதை உற்பத்தியில் முதல் பத்து மாவட்டங்கள்



2020 மார்ச் 24]

2020-2021 ஆம் ஆண்டில் 57,000 எக்டர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யவும் மற்றும் சான்று விதை உற்பத்தியில் 1.10 இலட்சம் மெட்ரிக் டன் இலக்கினை அடைந்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.2. விதைத் தரக் கட்டுப்பாடு

விதைச்சான்று துறையின் விதைத் தரக் கட்டுப்பாடு பிரிவானது தற்பொழுது நடைமுறையில் உள்ள விதைச் சட்டங்களான விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983 மற்றும் சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம், 1986 ஆகியவற்றை அமல்படுத்தி மாநிலத்தில் விதை தரங்களைக் கண்காணித்து தரமான விதை விநியோகத்தினை முறைப்படுத்துகிறது. இத்துறையில் 10,744 விதை விற்பனை நிலையங்களுக்கு விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983-ன்படி, உரிமங்கள் வழங்கி, தரமான விதைகள் விநியோகத்தினைக் கண்காணித்து விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்க வழிவகை செய்கிறது.

இந்த விதை விற்பனை நிலையங்கள் விதை ஆய்வாளர்களால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையேனும் கட்டாயமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதைக் குவியல்களிலிருந்து தரப் பரிசோதனைக்கு விதை மாதிரிகள் எடுக்கப்படுகிறது. அவ்வாறு எடுக்கப்படும் விதை மாதிரிகள் அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன. பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் தரமற்ற விதைக் குவியல்களின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்துறையின் விதை ஆய்வாளர்களால் கண்டறியப்படும் தரமற்ற, விதைச் சட்டத்திற்கு புறம்பான செயல்களுக்கு நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 66,447 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைகளின் தரத்தை உறுதி செய்திட 69,482 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. 2,607 விதைக் குவியல்களிலிருந்து 1,316 மெட்ரிக் டன் அளவிலான தரமற்ற விதைகள் வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், விதை பகுப்பாய்வின்மூலம் கண்டறியப்பட்ட மொத்தமுள்ள 1,331 தரமற்ற விதை மாதிரிகளில் 1,079 விதை மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மூலமாகவும், 252 விதை மாதிரிகளுக்கு நீதிமன்றம் வாயிலாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

2020-2021 ஆம் ஆண்டில் 68,500 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளவும், 69,500 விதை மாதிரிகளில் தரப் பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.3. விதைப் பரிசோதனை

விதைத் தரம் என்பது விதை இரகத்தின் உண்மைத்தன்மை, முளைப்புத்திறன், விதையின் வீரியம், விதையில் பிற பயிர் விதைகள் கலப்பின்மை, களை விதைகள் கலப்பின்மை, நோய் தாக்குதல் இன்மை ஆகிய திறன்களை உள்ளடக்கியதாகும். ஒரு விதை, பரிந்துரைக்கப்பட்ட விதைத் தரங்களைப் பூர்த்தி செய்கிறதா என்பதை தீர்மானிக்கவும், அது நடவு செய்வதற்கான தகுதியுடையதா என்பதை அறிந்திடவும், தரமற்ற விதைகளால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்திடவும், விதை பரிசோதனை இன்றியமையாததாக உள்ளது. விதைகளின் ஈரப்பதம் மற்றும் சுத்திகரிப்பு விவரம் அறிந்து அதற்குரிய நடைமுறைகளை தீர்மானிக்கவும் விதைப் பரிசோதனை உதவுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் மாவட்ட அளவில் 29 விதைப் பரிசோதனை நிலையங்களும், ஒரு பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை, ஒரு டி.என்.ஏ. மரபணு ஆய்வகம், ஓர் ஒப்பீட்டு பரிசோதனை ஆய்வகம், ஒரு பி.டி. நஞ்சு பரிசோதனை ஆய்வகம் கோயம்புத்தூரில் உள்ள இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் 29 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று (IMSCS) தரங்களின் அடிப்படையில் ஈரப்பதம், புறத் தூய்மை மற்றும் முளைப்புத்திறன் போன்ற விதைத் தரங்களை உறுதி செய்கின்றன. மாவட்ட அளவில் அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் விதைச் சான்றளிப்புப் பிரிவிலிருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள் (Certified Seed Samples), விதைத் தரக் கட்டுப்பாடு பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வாளர் விதை மாதிரிகள் (Official Seed Samples), பெறப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. மேலும், இப்பரிசோதனை நிலையங்கள் விவசாயிகளிடம் இருந்து பணிவிதை மாதிரிகள் (Service Seed Samples) பெற்று, குறைந்தபட்ச கட்டணமாக ரூ.30/-ல் பரிசோதனை செய்து முடிவுகள் வழங்கி விவசாயிகளுக்கு சேவை செய்து வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 86,822 விதை

2020 மார்ச் 24]

மாதிரிகள் தரப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் 95,500 விதை மாதிரிகள் தரப் பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.3.1. பி.டி. நஞ்சு பரிசோதனை ஆய்வகம்

விதை ஆய்வாளர்களால் அனுப்பப்படும் பி.டி. பருத்தி விதை மாதிரிகளில் பி.டி. நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளும் பி.டி. பரிசோதனை ஆய்வகம் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. இதில், ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 2,000 விதை மாதிரிகளில் பி.டி. நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

6.3.2. ஒப்பீட்டு பரிசோதனை ஆய்வகம்

மாநில அளவில் செயல்பட்டு வரும் அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களின் பரிசோதனை முடிவுகள் துல்லியமாகவும் சீராகவும் உள்ளனவா என்பதைக் கண்காணிக்கவும் மற்றும் நெறிமுறைப்படுத்தவும், கோயம்புத்தூர் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்கக வளாகத்தில் ஒப்பீட்டு பரிசோதனை ஆய்வகம் செயல்பட்டு வருகிறது. இதில் ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 1,500 விதை மாதிரிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

6.3.3. பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமம் அங்கீகாரம் பெற்ற விதைப் பரிசோதனை நிலையம்

கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையம் 2007 ஆம் ஆண்டு முதல் சூரிச், சுவிட்சர்லாந்தை தலைமையிடமாகக் கொண்ட பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் உறுப்பினராக இருந்து வருகிறது. இப்பரிசோதனை நிலையம், 2014 ஆம் ஆண்டில் பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் (ISTA–International Seed Testing Association) பெற்றுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டு தணிக்கையில் மீண்டும் இவ்வங்கீகாரத்தை தக்கவைத்துள்ளது. கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை நிலையம் IN 16, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், பொதுத் துறை ஆய்வகங்களில் முதன்முதலாக பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெற்றது தனிச் சிறப்பாகும். பன்னாட்டுத் தரத்திற்கு இணையாக விதை மாதிரிகளை பரிசோதனை செய்திடும் வசதிகள்

மற்றும் தொழில்நுட்பத் திறன் கொண்ட இப்பரிசோதனை நிலையம் மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தால், இந்திய நாட்டின் மிகச் சிறந்த விதைப் பரிசோதனை நிலையத்திற்கான விருது பெற்றுள்ளது.

இப்பரிசோதனை நிலையம், தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறி பயிர்களில் விதை மாதிரிகள் எடுக்கவும், அவற்றின் முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பிற பயிர் இனங்களைக் கண்டறியும் பரிசோதனைக்காகவும் பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது. பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் (ISTA) அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் என்பதால், சர்வதேச தரத்திற்கு விதை மாதிரிகளை உறுதிசெய்யும் பொருட்டு ஏற்றுமதிக்கு தகுதியான ஆரஞ்சுநிற சான்றிதழ்கள் மற்றும் நீலநிற சான்றிதழ்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தகுதி பெற்றுள்ளது. இதுவரை, 79 எண்கள் பன்னாட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, அதன்மூலம் விதை ஏற்றுமதியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

சர்வதேச விதைச் சந்தையில் காய்கறி விதைகளின் தேவை அதிகரித்து கொண்டு வருகிறது. பன்னாட்டு விதை பரிசோதனை குழுமத்தின் (ISTA-International Seed Testing Association) அங்கீகாரத்தினைப் பெற்ற கோயம்புத்தூர் விதை பரிசோதனை ஆய்வகமானது சிறு தொழில்முனைவோர், ஏற்றுமதியாளராக மாறுவதற்கு ஒரு நுழைவாயிலாக அமைந்துள்ளது.

6.3.4. பயிர் வளர்ப்பு பரிசோதனைப் பண்ணை

பயிர் இரகங்கள்/வீரிய இரகங்களின் உண்மைத்தன்மை கண்டறிய, பயிர் வளர்ப்பு பரிசோதனை தொழில்நுட்பம்மூலம் பயிர் வளர்ப்பு பண்ணைகளில் பயிர்களில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. பயிர் வளர்ப்பு பரிசோதனைத் திடலில் பயிர் வளர்ச்சி, பூக்கும் பருவம் முதல் முதிர்ச்சிப் பருவம் வரை முக்கியத்துவம் கொடுத்து பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு பயிர் இரகங்களின் இனத்தூய்மை அறியப்படுகிறது. இத்துறையின் விதைச் சான்று மற்றும் விதை ஆய்வு அலுவலர்களால் விதையின் இனத்தூய்மையை மற்றும் உண்மை நிலையினை அறிந்திட, விதை மாதிரிகள் பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணைக்கு அனுப்பப்படுகிறது. இதில், ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 3,600 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

2020 மார்ச் 24]

6.3.5. டி.என்.ஏ. மரபணு ஆய்வகம்

பயிர் வளர்ப்பு முறையின்மூலம் இனத்தூய்மை பரிசோதனை முடிவை அறிவிக்க இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை ஆகும். டி.என்.ஏ. மரபணு ஆய்வக முறையில் விதைகளின் இனத்தூய்மை பரிசோதனை 3 முதல் 4 நாட்களில் கண்டறிய இயலும். எனவே, விவசாயிகளுக்கு தரமான விதைகளை விரைவாகவும் மற்றும் உரிய காலத்திலும் கிடைக்க வழிவகை செய்ய ஏதுவாக டி.என்.ஏ. மரபணு ஆய்வகமானது விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்ககத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்த ஆய்வகமானது நாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களுள் முதன்மையாக விளங்குவதோடு 2014 ஆம் ஆண்டில், தமிழக அரசால் "மாநில டி.என்.ஏ மரபணு ஆய்வகம்" என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வகம், தற்போது தமிழ்நாட்டில் பிரதானமாக பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 16 நெல் இரகங்களின் இனத்தூய்மை பரிசோதனை செய்யும்திறன் பெற்றதாக உள்ளது.

6.4. பயிற்சி

இத்துறை சார்ந்த களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் விதைச் சான்று, விதை ஆய்வு மற்றும் விதைப் பரிசோதனை பிரிவுகளில் சான்று விதை நடைமுறைகளான வயலாய்வு, விதை சுத்திகரிப்பு, விதை மாதிரிகள் எடுத்தல், விதைப் பரிசோதனை செய்தல் மற்றும் விதைச் சட்டங்கள் குறித்த இனங்களில் சிறப்பாக பணிபுரிய உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

6.4.1. அறிமுகப் பயிற்சி

இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச் சான்று நடைமுறைகள், வயலாய்வுகள், பயிர் இரகங்களைக் கண்டறிதல், சுத்திகரிப்புப் பணி, விதை மாதிரிகள் எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், விதைப் பரிசோதனை நடைமுறைகள் மற்றும் விதைத்தரக் கட்டுப்பாடு மற்றும் நிகழ்நிலை மூலமாக SPECS (விதை உற்பத்தியில், அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை) மென்பொருள் பயன்பாடுகள் குறித்த அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6.4.2. புத்தூட்டப் பயிற்சி

இத்துறையில் பணியில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதை உற்பத்தி, விதைப் பரிசோதனை மற்றும் விதை ஆய்வுப் பிரிவுகளில் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

6.4.3. விதை உற்பத்தியாளர் பயிற்சி

தரமான விதைகள் கிடைப்பதை அதிகரிக்கவும் மற்றும் தரமான விதை உற்பத்தியை மேம்படுத்தவும் வயல் மற்றும் விதைத் தரங்கள் குறித்த பயிற்சி விதை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

6.4.4. விதை விற்பனையாளர் பயிற்சி

இப்பயிற்சி விதை விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தரமான விதைகளை விற்பனை செய்வது, சேமித்து வைப்பது மற்றும் விதைச் சட்டங்கள் குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 47,320 விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிலும் 47,320 விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

6.5. அங்ககச் சான்றளிப்பு

தமிழக அரசு, அங்ககச் சான்றளிப்பு பணிக்கென புதிய துறையை 2007 ஆம் ஆண்டில் உருவாக்கி, அங்கக உற்பத்தி சாகுபடி முறையினை ஆய்வுகள் செய்து சான்றுப் பணி மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசால் 2000 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அக்டோபர் 2001 ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்ட பன்னாட்டு வர்த்தகம் (அபிவிருத்தி மற்றும் ஒழுங்குப்படுத்துதல்) சட்டம், 1992-ன்படி, தேசிய அங்கக உற்பத்தித் திட்டம் (National Programme for Organic Production) என்ற தரத்தின் அடிப்படையில் அங்ககச் சான்றளிப்பு தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை, மத்திய அரசின் வணிக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கும் புது டில்லியில் உள்ள வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்

பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA- Agricultural and Processed Food Products Export Development Authority) அங்கீகாரம் (மதிப்பேற்றல் எண் NPOP/NAB/0019) பெறப்பட்டுள்ளது.

துறையின் செயல்பாடுகள்:

1. பயிர் உற்பத்தி
2. அங்கக முறை உணவுப் பதப்படுத்துதல்
3. அங்கக இடுபொருள் உற்பத்தி
4. அங்கக விளைபொருள் வணிகம் மற்றும் ஏற்றுமதி

அங்ககச் சான்றளிப்பு துறையில் மேற்கொள்ளப்படும் தரங்களானது, ஐக்கிய ஐரோப்பிய கூட்டமைப்பின் தரத்திற்கு சமமான தரத்தில் ஆய்வு செய்து சான்று வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்பு துறையானது தனிநபர் பதிவில் வணிக மாற்று சான்றிதழ்கள் (Transaction Certificates) வழங்குதலில் இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது. புதியதாக பதிவு செய்த அங்கக விவசாயிகளுக்கு தேசிய அங்கக வேளாண்மை (NPOP) மற்றும் தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை பொதுத் தரங்கள் (TNOCD General Standards) பற்றிய பயிற்சி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையின்மூலம் தேசிய அங்ககச் சான்றளிப்புத் தரங்களின்கீழ் 1,549 விவசாயிகளுக்கு வாய்ப்புச் சான்றிதழ்கள் (Scope Certificates) வழங்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.95.68 இலட்சம் மதிப்புள்ள 224 மெட்ரிக் டன் அங்ககச் சான்று பொருட்களுக்கு ஏற்றுமதிக்காக வணிக மாற்றுச் சான்றிதழ்கள் (Transaction Certificates) வழங்கப்பட்டுள்ளன. அங்ககச் சான்றுபெற்ற விளைபொருட்களுக்கு சந்தை விலையைவிட 20 சதவீதம் வரை கூடுதல் விலை கிடைப்பது குறிப்பிடத்தக்கது. அங்ககப் பதனிடுவோருக்கான சான்றிதழ் இயற்கை தேங்காய் எண்ணெய்க்கு வழங்கப்பட்டுள்ளது. அங்ககப் பொருட்களுக்கான வணிக சான்றிதழ்களும் இத்துறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2019-2020 ஆம் ஆண்டில், இதுவரை 27,125.23 ஏக்கர் பரப்பு (வனப் பொருட்கள் சேகரிப்பு பரப்பு நீங்கலாக) இத்துறையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 6.2: அங்ககச்சான்று– விவசாயிகள் வாயிலாக பதிவு செய்யப்பட்ட பரப்பு 2019-2020

வ. எண்	அங்ககச் சான்று ஆய்வாளர்களின் தலைமையிடம்	அதிகார எல்லை (மாவட்டங்கள்)	பதிவு செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்)
1.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி	11,637.75
2.	திருச்சி	திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்	1,185.52
3.	மதுரை	மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி	7,420.45
4.	வேலூர்	வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர்	6,881.51
		மொத்தம்	**27,125.23**

6.5.1. அங்ககச் சான்றளிப்புத் துறையினை வலுப்படுத்துதல்:

தமிழ்நாட்டில் இயற்கை வேளாண்மையை மேம்படுத்துவதற்கு 2019-2020 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்பு துறையினை வலுப்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்ககச் சான்றளிப்பு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அங்கக உற்பத்தி சாகுபடி பரப்பினை அதிகரித்து, சாகுபடி முறையினை ஆய்வுகள் செய்து அங்ககச் சான்றுப் பணி மேற்கொள்வதை எளிதாக்கும் வகையில் விதைச்சான்று பணியுடன் அங்ககச் சான்று பணியினையும்

2020 மார்ச் 24]

மேற்கொள்ளும்பொருட்டு, தமிழ்நாட்டில் மாநில அளவில் உள்ள விதைச் சான்று இணை இயக்குநர் பணியிடம் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இணை இயக்குநர் (JDSC&OC) என்னும் பணியிடமாகவும், மாவட்ட அளவில் உள்ள 29 விதைச் சான்று உதவி இயக்குநர் பணியிடங்கள் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் (ADSC&OC) என்னும் பணியிடங்களாகவும், 26 மாவட்டங்களிலுள்ள விதைச்சான்று அலுவலர் பணியிடங்களானது, விதைச் சான்று அலுவலர் மற்றும் அங்ககச் சான்று ஆய்வாளர் (SCO&OCI) என்னும் பணியிடங்களாகவும் சீரமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் தற்போதுள்ள, 4 அங்ககச் சான்று ஆய்வாளர்களுடன் (OCI) கூடுதலாக 4 அங்ககச் சான்று ஆய்வாளர்கள் பணிப் பெயர்ச்சிமூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 1 தர மேலாளர், 1 மதிப்பீட்டாளர் (அங்ககச் சான்று) மற்றும் 2 அங்ககச் சான்று ஆய்வாளர் பணியிடங்களும் அங்ககச் சான்றளிப்பு பணியினை மேற்கொள்வதற்காக விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநரகத்தில் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் அங்கக வேளாண்மை மேம்பாட்டிற்காக முறையாக வகுக்கப்பட்ட இத்தகைய நெறிமுறைகளின்படி அங்ககச் சான்றளிப்பின்கீழ் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளைக் கொண்டு வந்து நஞ்சில்லா வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் நுகர்வோரின் நலன் காக்கப்படுவதுடன், ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து அங்கக விவசாயிகளின் வருமானம் உயர்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.6. விதைச் சான்றளிப்புத் துறையை கணினி (SPECS- விதை உற்பத்தியில், அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை) மயமாக்குதல்

வேளாண் இயக்ககத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவானது, விதைச் சான்றளிப்புத் துறையின் அனைத்து தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் கணினிமயமாக்கும் பொருட்டு பிரத்யேகமான SPECS (விதை உற்பத்தியில், அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை) எனும் மென்பொருளினை உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருள் விதைச் சான்றளிப்பை இணையதளத்தினமூலம் செயல்படுத்த ஏதுவாக இருப்பதுடன், சான்றளிப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிக்கவும், சான்றளிப்பு துறையின் அனைத்து பிரிவின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், முறையான கண்காணிப்பிற்கும், மேலும் வெளிப்படைத்தன்மையுடன்

இயங்கவும் உதவுகிறது. இந்தியாவில் உள்ள விதைச் சான்றளிப்பு முகமைகளில், முதன்முறையாக தமிழ்நாட்டில் SPECS மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது ஒரு சிறப்பம்சமாகும்.

அனைத்து விதைச் சான்றளிப்புப் பணிகளும் SPECS மென்பொருள்மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையானது அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து விதை உற்பத்தியாளர்களும் SPECS முறையில் நன்றாக கையாளக்கூடிய வகையில் உள்ளதால் இதன் பயனை விரைவாகவும் வெளிப்படைத் தன்மையுடனும், துல்லியமாகவும் பெறுகின்றனர்.

6.7. உட்கட்டமைப்பு மேம்பாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்கக வளாகத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.155.43 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கூட்ட அரங்கம் சனவரி 2020-இல் திறந்து வைக்கப்பட்டது. விதைச் சான்று நடைமுறைகளை சிறந்தமுறையில் செயல்படுத்தும் விதமாக வேளாண் பெருமக்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்தவும் மற்றும் துறை சார்ந்த கூட்டங்கள் நடத்தவும், இக்கூட்ட அரங்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தரமான விதை உற்பத்திமூலம் வேளாண் பெருமக்களுக்கு உதவிட தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத்தோட்டத்தில் 25 சென்ட் பரப்பளவில் ஒருங்கிணைந்த விதைச் சான்று வளாகம் கட்டுவதற்காக ரூ.35 இலட்சம் மதிப்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)-2019-20-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்நிலை சான்றளிப்பு முறையை ஸ்பெக்ஸ் மென்பொருளில் செயல்படுவதை வலுப்படுத்துவதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)- 2019-2020-ன்கீழ் ரூ.55 இலட்சம், மதிப்பில் 141 மடிக்கணினிகள் கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தரமான விதை பரிசோதனை மேற்கொள்ளவும் மற்றும் விதை பரிசோதனையில் துல்லியத்தன்மையினை நிலை நிறுத்தவும் மதுரை மற்றும் காஞ்சிபுரம் விதைப் பரிசோதனை நிலையங்களைப் புதுப்பிப்பதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)-

2019-2020-ன்கீழ் ரூ.30.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

6.8. பணிக் குழு

விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறையானது மொத்தம் 345 தொழில்நுட்பப் பணியாளர்களையும், 500 அமைச்சுப் பணியாளர்களையும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் சான்று செய்யப்படும் மொத்த விதை அளவில் திருப்பூர் மாவட்டமானது 53 சதவீதம் பங்களிப்பை வழங்கி வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசு திருப்பூர் மாவட்டத்திற்கென புதிய விதைச் சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தினை உருவாக்கி, இவ்வலுவலகம் 1-7-2019 முதல் செயல்பட்டு வருகிறது.

அட்டவணை 6.3: விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விவரம்

பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
அ. தொழில்நுட்ப அலுவலர்கள் விவரம்	**345**
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர்	1
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இணை இயக்குநர்	1
விதை ஆய்வு இணை இயக்குநர்	1
விதை ஆய்வு துணை இயக்குநர்	15
தர மேலாளர்	1
விதைச் சான்று உதவி இயக்குநர்	1
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர்	29

[2020 மார்ச் 24

மதிப்பீட்டாளர் (அங்ககச் சான்று)	1
விதைப் பாரிசோதனை அலுவலர்	7
விதைச் சான்று அலுவலர்	119
விதைச் சான்று அலுவலர் மற்றும் அங்ககச் சான்று ஆய்வாளர்	26
வேளாண்மை அலுவலர்	63
விதை ஆய்வாளர்	70
அங்ககச் சான்று ஆய்வாளர்	10
ஆ. அமைச்சுப் பணியாளர்கள்	**500**
மொத்தப் பணியாளர்கள்	**845**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

விவசாயிகளின் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்வதிலும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முக்கியப் பங்காற்றுகிறது. பெருகிவரும் மதிப்புக்கூட்டு உணவுப் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான தேவையை கருத்தில்கொண்டும் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதலில் உள்ள முன்னேற்றத்தினைக் கருத்தில்கொண்டும் விவசாயிகளைச் சந்தை சார்ந்த வேளாண்மைக்கு மாற்ற அரசு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

விவசாயிகளை சந்தை சார்ந்த வேளாண்மைக்கு ஊக்கப்படுத்த, அவர்களை வலுப்படுத்தி குழுக்களாக ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஏற்படுத்தி வேளாண் வணிக தொழில்முனைவோருக்கான பயிற்சிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி மதிப்புக் கூட்டுதல் மற்றும் அறுவடை பின்செய் நேர்த்தி போன்ற தொழில்களைத் தொடங்க உரிய உதவிகளை அரசு வழங்கி வருகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பாதுகாத்திட மின்னணு தேசிய வேளாண் சந்தை மற்றும் விலை ஆதார திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

உணவுப் பொருட்களின் தரம் பற்றி நுகர்வோரிடையே உள்ள விழிப்புணர்வின் காரணமாக விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்மூலம் அழுகும் பொருட்களான பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பாதுகாக்க அறுவடைக்குப் பின்னான உட்கட்டமைப்புகளை (ஒன்றுசேர்த்தல், தரம் பிரித்தல், சேமித்தல், போக்குவரத்து மற்றும் விநியோகம்) ஏற்படுத்த வழிவகை செய்கிறது.

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கு பெருகிவரும் தேவையைக் கருத்தில்கொண்டு அரசு தமிழ்நாட்டில் உணவுப் பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான பணிகளைத் துவங்கியுள்ளது. இத்திட்டமானது, விவசாயிகளின் விளைபொருட்களைப் பதப்படுத்துதலில் வாய்ப்புகளை ஏற்படுத்திடவும் மற்றும் விவசாயிகள் புதிய வேளாண் வணிகம் சார்ந்த தொழில்களை ஏற்படுத்திடவும் வாய்ப்புகளை வழங்குகிறது.

[2020 மார்ச் 24

சந்தை சார்ந்த வேளாண்மை என்ற இலக்கினை அடைய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் வகுக்கப்பட்டு, விவசாயிகள் சந்தைப்படுத்துதலிலும் பொருளாதார ரீதியாகவும் உயர்வினை அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பண்ணையச் சட்டம், உணவு பதப்படுத்தும் கொள்கை மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. வேளாண் ஏற்றுமதிக் கொள்கை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் முக்கியச் செயல்பாடுகள்

1. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள் மூலமாக விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்குதல்.

2. வேளாண் விளைபொருட்களுக்கு அறுவடை பின் செய் மேலாண்மை மற்றும் விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள், குளிர்பதனக் கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடங்கள் போன்றவற்றை உருவாக்குதல்.

3. மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின்கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வெளிப்படையான பரிவர்த்தனைக்காக மின்னணு வர்த்தக வசதிகளை உருவாக்குதல்.

4. விவசாயிகளுக்காக, எளிதில் அழுகக்கூடிய வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்க விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

5. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின்கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்தும் மற்றும் கூட்டுப் பண்ணையத் திட்டம் வாயிலாகவும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்கி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்தல்.

2020 மார்ச் 24]

6. வேளாண் விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதல் மற்றும் உணவு பதப்படுத்துதல்மூலம் வேளாண் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துதல்.

7. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க சந்தை விலை விவரம் மற்றும் விலை முன்னறிவிப்பு விவரங்களைப் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்குக் குறுஞ்செய்திமூலம் வழங்குதல்.

8. விலைவீழ்ச்சிக் காலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பாதுகாக்க தேசிய வேளாண் கூட்டமைப்புமூலம் பயறு வகைகள் மற்றும் கொப்பரையைக் கொள்முதல் செய்ய விலை ஆதரவுத் திட்டத்தினை ஊக்குவித்தல்.

9. தரமான உணவுப் பொருட்கள் நுகர்வோருக்கு கிடைக்க 'அக்மார்க்' தரச்சான்று அளித்தல்.

10. விவசாயிகள் மற்றும் அலுவலர்களின் திறனை மேம்படுத்த அறுவடை பின்செய் மேலாண்மை பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், தரம் பிரித்தல் போன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்.

11. இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் இடையே நேரடியான விற்பனையை உழவர் சந்தைகள்மூலம் ஊக்கப்படுத்தி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்தல்.

7.1 வேளாண்மை விற்பனை செயல்பாடுகள்

7.1.1. விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987 மற்றும் விதிகள் 1991-ன்படி அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில், அறிவிக்கை செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்களின் பரிவர்த்தனை மேற்கொள்ள விற்பனைக் குழு மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்களின் விற்பனையினை சிறந்த வகையில் முறைப்படுத்திட 26 விற்பனைக் குழுக்களின்கீழ் 282 ஒழுங்குமுறை

[2020 மார்ச் 24


விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விழுப்புரம் விற்பனைக் குழுவின்கீழ் மேல் சித்தாமூரில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், கடலூர் விற்பனைக் குழுவின்கீழ் வேப்பூரில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் என புதிதாக இரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பரிவர்த்தனை மேற்கொள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஒரு பாலமாக செயல்படுகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விவசாயிகளால் கொண்டு வரப்படும் வேளாண் விளைபொருட்கள், மறைமுக ஏலமுறையில் விற்பனை செய்யப்படுகின்றன. இச்சேவைக்காக விவசாயிகளிடம் எவ்விதமான கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. இவ்வாறாக விற்பனை செய்யப்படும் வேளாண் விளைபொருட்களின் மதிப்பில் ஒரு சதவீதம் மட்டும் சந்தைக் கட்டணமாக வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. மேலும், வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடம் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில் சுமார் 24.58 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு ரூ.111.84 கோடி சந்தைக் கட்டணமாக வரப்பெற்றுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனைக் கூடம், உலர்களம், விவசாயிகள் ஓய்வறை, வியாபாரிகள் கடை, குளிர்பதனக் கிடங்கு, குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


விவசாயிகளின் உடனடி பணத் தேவைக்காகவும், வரத்துக்காலங்களில் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்று பாதிப்படையாமல் பாதுகாத்திட, பொருளீட்டுக் கடனாக அதிகபட்சமாக விவசாயிகளுக்கு ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. இதில் விவசாயிகள் கடன் பெற்ற முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. 15 நாட்களுக்குப் பிறகு 5 சதவிகித வட்டி விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 1,456 விவசாயிகள் பொருளீட்டுக் கடனாக ரூ.33.43 கோடி பெற்றுள்ளனர்.

கிட்டங்கி பயன்பாட்டில் முதல் 20 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்



வியாபாரிகள் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை பொருளீட்டுக் கடன் பெறலாம். இதற்காக வியாபாரிகளிடம் 9 சதவிகித வட்டி வசூலிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 125 வியாபாரிகள் பொருளீட்டுக் கடனாக ரூ.2.20 கோடி பெற்றுள்ளனர்.

வேளாண் விற்பனை அமைப்பில் சந்தை தொடர்பான தகவல்கள் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவும் வேளாண் விளைபொருட்களின் விலை விவரம் முறையாக சேகரித்து உரிய நேரத்தில் தெரிவிக்க சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் இணைப்புத் திட்டத்தின் (MRIN)-கீழ் 184 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மத்திய அரசின் வலைதளத்துடன் (agmarknet.gov.in) இணைக்கப்பட்டுள்ளன.



அட்டவணை 7.1-மாவட்ட மற்றும் விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்		எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
1.	காஞ்சிபுரம்	1	காஞ்சிபுரம்	3	காஞ்சிபுரம், உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம்
		2	செங்கல்பட்டு	4	மதுராந்தகம், திருக்கழுக்குன்றம், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு
		3	திருவள்ளூர்	8	திருத்தணி, திருவள்ளூர், செங்குன்றம், பொன்னேரி, பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி, நசரத்பேட்டை

வ. எண்	விற்பனைக் குழு		மாவட்டம்	எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
2.	கடலூர்	4	கடலூர்	10	விருத்தாசலம், கடலூர், பண்ருட்டி, திட்டக்குடி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, சேத்தியாத்தோப்பு, ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி
3.	விழுப்புரம்	5	விழுப்புரம்	10	திண்டிவனம், திருக்கோவிலூர், விழுப்புரம், செஞ்சி, திருவெண்ணெய்நல்லூர், அவலூர்ப்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, அனந்தபுரம், வளத்தி
		6	கள்ளக்குறிச்சி	8	உளுந்தூர்பேட்டை, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம், மணலூர்பேட்டை, மூங்கில்துறைப்பட்டு, திருநாவலூர்
4.	வேலூர்	7	வேலூர்	3	வேலூர், குடியாத்தம், காட்பாடி
		8	திருப்பத்தூர்	3	திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர்
		9	ராணிப்பேட்டை	6	ஆற்காடு, காவேரிப்பாக்கம், கலவை, அம்மூர், திமிரி, அரக்கோணம்
5.	திருவண்ணாமலை	10	திருவண்ணாமலை	18	திருவண்ணாமலை, ஆரணி, வந்தவாசி, சேத்துப்பட்டு, செய்யாறு, போளூர், செங்கம், புதுப்பாளையம், வாணாபுரம், வேட்டவலம், தெள்ளார், மங்கலமாமண்டூர், தேசூர், பெரணமல்லூர், தூசி, கீழ்பெண்ணாத்தூர், ஆதமங்கலம்புதூர், நாயுடுமங்கலம்

வ. எண்	விற்பனைக் குழு		மாவட்டம்	எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
6.	சேலம்	11	சேலம்	14	சேலம், ஆத்தூர், சங்காி, கொங்கணாபுரம், கொளத்தூர், மேச்சோி, வாழப்பாடி, தம்மம்பட்டி, தலைவாசல், ஓமலூர், காடையாம்பட்டி, கெங்கவல்லி, கருமந்துறை, எடப்பாடி
7.	நாமக்கல்	12	நாமக்கல்	6	நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, பரமத்தி-வேலூர், நாமகிாிப்பேட்டை, சோளக்காடு
8.	தருமபுாி	13	தருமபுாி	7	தருமபுாி, பாலக்கோடு, பெண்ணாகரம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, கம்பைநல்லூர், பாப்பாரப்பட்டி
		14	கிருஷ்ணகிாி	9	கிருஷ்ணகிாி, ஓசூர், கெலமங்கலம், போச்சம்பள்ளி, காவோிப்பட்டினம், ஊத்தங்கரை, பர்கூர், ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை
9.	கோயம்புத்தூர்	15	கோயம்புத்துர்	10	அன்னூர், காரமடை, கோயம்புத்தூர், சூலூர், ஆனைமலை, பொள்ளாச்சி, மலையடிபாளையம், நெகமம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர்
10.	திருப்பூர்	16	திருப்பூர்	15	குன்னத்தூர், காங்கேயம், வெள்ளக்கோவில், தாராபுரம், மூலனூர், அலங்கியம், முத்தூர், திருப்பூர், அவினாசி, சேவூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, பொங்கலூர்

TAMIL NADU LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்		எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
11.	ஈரோடு	17	ஈரோடு	18	ஈரோடு, அவல்பூந்துறை, கொடுமுடி, சிவகிரி, சித்தோடு, பவானி, பூதப்பாடி, அந்தியூர், மயிலம்பாடி, கவுந்தப்பாடி, கோபிசெட்டிபாளையம், நம்பியூர், வெள்ளாங்கோவில், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, தாளவாடி, பெருந்துறை, எழுமாத்தூர்
12.	திருச்சிராப்பள்ளி	18	திருச்சிராப்பள்ளி	10	மணப்பாறை, துறையூர், லால்குடி, திருச்சிராப்பள்ளி, தொட்டியம், மண்ணச்சநல்லூர், துவரங்குறிச்சி, புள்ளம்பாடி, தாத்தையங்கார்பேட்டை, காட்டுப்புத்தூர்
		19	கரூர்	4	குளித்தலை, கரூர், இரும்பூதிப்பட்டி, சின்னதாராபுரம்
13.	பெரம்பலூர்	20	பெரம்பலூர்	2	பெரம்பலூர், பூலாம்பாடி
		21	அரியலூர்	4	அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மேலணிக்குழி
14.	புதுக்கோட்டை	22	புதுக்கோட்டை	10	ஆலங்குடி, அறந்தாங்கி, புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, ஆவுடையார்கோவில், கீரனூர், கீரமங்கலம், பொன்னமராவதி, இலுப்பூர், கறம்பக்குடி

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்		எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
15.	தஞ்சாவூர்	23	தஞ்சாவூர்	13	அதிராம்பட்டினம், அம்மாபேட்டை, பூதலூர், கும்பகோணம், மதுக்கூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பாபநாசம், பேராவூரணி, தஞ்சாவூர், வல்லம், திருப்பனந்தாள், பாப்பாநாடு
16.	திருவாரூர்	24	திருவாரூர்	8	கொரடாச்சேரி, குடவாசல், வலங்கைமான், திருத்துறைப்பூண்டி, பூந்தோட்டம், மன்னார்குடி, திருவாரூர், வடுவூர்
17.	நாகப்பட்டினம்	25	நாகப்பட்டினம்	8	கீவளூர், குத்தாலம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், செம்பனார்கோவில், சீர்காழி, வேதாரண்யம், திருப்பூண்டி
18.	மதுரை	26	மதுரை	6	திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர், மதுரை, டி.கல்லுப்பட்டி, வாடிப்பட்டி
19.	தேனி	27	தேனி	7	தேனி, கம்பம், போடிநாயக்கனூர், சின்னமனூர், ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், பெரியகுளம்
20.	திண்டுக்கல்	28	திண்டுக்கல்	8	திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நத்தம், வத்தலகுண்டு, கோபால்பட்டி, வடமதுரை, வேடசந்தூர்

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்		எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
21.	இராமநாதபுரம்	29	இராமநாதபுரம்	6	இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, திருவாடானை, இராசசிங்கமங்கலம், முதுகுளத்தூர்
22.	விருதுநகர்	30	விருதுநகர்	7	விருதுநகர், இராஜபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, வெம்பக்கோட்டை
23.	சிவகங்கை	31	சிவகங்கை	7	சிவகங்கை, திருப்புவனம், மானாமதுரை, சிங்கம்புணாி, காரைக்குடி, இளையான்குடி, தேவக்கோட்டை
24.	திருநெல்வேலி	32	திருநெல்வேலி	4	அம்பாசமுத்திரம், வள்ளியூர், திருநெல்வேலி, திசையன்விளை
		33	தென்காசி	7	தென்காசி, சங்கரன்கோவில், பாவூர்சத்திரம், திருவேங்கடம், சிவகிரி, ஆலங்குளம், கடையநல்லூர்
		34	தூத்துக்குடி	9	கோவில்பட்டி, தூத்துக்குடி, புதூர், கடம்பூர், கழுகுமலை, ஸ்ரீவைகுண்டம், விளாத்திகுளம், எட்டையபுரம், சாத்தான்குளம்

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்		எண்கள்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்
25.	நீலகிரி	35	நீலகிரி	4	உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
26.	கன்னியாகுமரி	36	கன்னியாகுமரி	6	ஈத்தாமொழி, வடசேரி, களியக்காவிளை, திங்கள்சந்தை, குலசேகரம், தொடுவட்டி
			மொத்தம்	282	

அட்டவணை 7.2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்புகள் (எண்கள்)

வ. எண்	விற்பனைக் குழு	ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை	சொந்த நிலத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்	கிடங்கு	பரிவர்த்தனைக் கூடம்	உலர்களம்	வணிகர் கடை
1.	காஞ்சிபுரம்	15	8	11	8	16	-
2.	வேலூர்	12	8	26	15	11	-
3.	திருவண்ணாமலை	18	14	26	45	12	10
4.	கடலூர்	10	7	11	23	15	10
5.	விழுப்புரம்	18	14	31	55	18	-
6.	சேலம்	14	10	15	16	16	-
7.	தருமபுரி	16	8	16	8	20	10
8.	கோயம்புத்தூர்	10	10	30	19	30	10
9.	ஈரோடு	18	15	38	33	34	10
10.	திருச்சிராப்பள்ளி	14	10	16	16	20	-

வ. எண்	விற்பனைக் குழு	ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை	சொந்த நிலத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்	கிடங்கு	பரிவர்த்தனைக் கூடம்	உலர்களம்	வணிகர் கடை
11.	தஞ்சாவூர்	13	7	21	20	5	-
12.	புதுக்கோட்டை	10	2	4	2	4	-
13.	மதுரை	6	4	9	4	7	-
14.	இராமநாதபுரம்	6	6	9	3	9	25
15.	திருநெல்வேலி	20	16	28	17	15	10
16.	கன்னியாகுமரி	6	5	11	3	4	-
17.	தேனி	7	5	12	4	7	-
18.	திண்டுக்கல்	8	6	9	6	8	-
19.	திருவாரூர்	8	7	13	9	8	-
20.	நாகப்பட்டினம்	8	5	16	6	5	-
21.	நீலகிரி	4	-	-	1	-	-
22.	திருப்பூர்	15	13	59	29	45	-
23.	பெரம்பலூர்	6	4	7	15	8	-
24.	நாமக்கல்	6	4	8	4	5	-
25.	விருதுநகர்	7	4	12	4	5	-
26.	சிவகங்கை	7	5	9	2	7	-
	மொத்தம்	282	197	447	367	334	85

7.1.2. மின்னணு தேசிய வேளாண் சந்தை

மத்திய அரசு மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM) என்னும் ஓர் அகில இந்திய மின்னணு வர்த்தகத் தளத்தை தொடங்கி விவசாயிகள், வியாபாரிகள், கொள்முதலாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பதப்படுத்துவோர் ஆகியோரை ஒருங்கிணைத்து தேசிய அளவில் ஒரே மாதிரியான தேசிய வேளாண் சந்தை உருவாக்க

வழிவகை செய்துள்ளது. மத்திய அரசால் தேசிய வேளாண் சந்தை 16 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் 585 சந்தைகளில் ஏப்ரல் 2016 முதல் 3 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987 இல் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு மின்னணு தேசிய வேளாண் சந்தை தமிழ்நாட்டில் அக்டோபர் 2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.1.2.1. மின்னணு தேசிய வேளாண் சந்தையின் பயன்கள்

1. வர்த்தகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தல்.
2. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தேசிய அளவில் பெரிய சந்தைகளை அணுகுதல்.
3. மொத்த வியாபாரிகள், பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களை உள்ளூர் சந்தைகளில் நேரடியாக பங்கேற்க ஊக்குவித்தல்.
4. மாநில அளவில் அனைத்து சந்தைகளிலும் வர்த்தகம் மேற்கொள்ள வியாபாரிகளுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் வழங்குதல்.
5. விரைவு ஏல முறை, விளைபொருட்களின் தரத்திற்கேற்ற விலை மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனைமூலம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்துதல்.
6. மாநிலங்களிடையே வர்த்தகத்தை மேம்படுத்த தரத்தினை உறுதிசெய்யும் தர ஆய்வக அமைப்புகள் ஏற்படுத்துதல்.

7.1.2.2 தமிழ்நாட்டில் மின்னணு தேசிய வேளாண் சந்தையின் தற்போதைய நிலை

மாநிலத்தில் உள்ள 282 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், கீழ்வரும் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் அக்டோபர் 2017 முதல் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

2020 மார்ச் 24]

அட்டவணை 7.3 மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்/மின்னணு தேசிய வேளாண் சந்தை
1.	வேலூர்	ராணிப்பேட்டை	அம்மூர்
2.			கலவை
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	அன்னூர்
4.			ஆனைமலை
5.	திண்டுக்கல்	திண்டுக்கல்	திண்டுக்கல்
6.	ஈரோடு	ஈரோடு	அந்தியூர்
7.			சத்தியமங்கலம்
8.			கோபிச்செட்டிபாளையம்
9.			பெருந்துறை
10.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	பரமக்குடி
11.	விழுப்புரம்	விழுப்புரம்	திருக்கோவிலூர்
12.			செஞ்சி
13.		கள்ளக்குறிச்சி	உளுந்தூர்பேட்டை
14.			கள்ளக்குறிச்சி
15.	திருப்பூர்	திருப்பூர்	திருப்பூர்
16.			உடுமலைப்பேட்டை
17.			பெதப்பம்பட்டி
18.			வெள்ளக்கோவில்
19.	தேனி	தேனி	கம்பம்
20.	கடலூர்	கடலூர்	விருத்தாச்சலம்
21.	நாமக்கல்	நாமக்கல்	பரமத்தி-வேலூர்
22.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	லால்குடி
23.	மதுரை	மதுரை	மதுரை

மேலும், கீழ்வரும் 40 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விரைவில் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் ஒருங்கிணைக்கப்பட உள்ளன.

[2020 மார்ச் 24

அட்டவணை 7.4 மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்கப்பட உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்	மின்னணு தேசிய வேளாண் சந்தை
1.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	செய்யாறு
2.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	ஆரணி
3.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	தேசூர்
4.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	வேட்டவலம்
5.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	போளூர்
6.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	சேத்துப்பட்டு
7.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	கீழ்பெண்ணாத்தூர்
8.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	வந்தவாசி
9.	விழுப்புரம்	விழுப்புரம்	திண்டிவனம்
10.	விழுப்புரம்	விழுப்புரம்	விக்கிரவாண்டி
11.	விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம்
12.	விழுப்புரம்	விழுப்புரம்	அவலூர்பேட்டை
13.	விழுப்புரம்	கள்ளக்குறிச்சி	சங்கராபுரம்
14.	விழுப்புரம்	கள்ளக்குறிச்சி	தியாகதுருகம்
15.	ஈரோடு	ஈரோடு	ஈரோடு
16.	கடலூர்	கடலூர்	பண்ருட்டி
17.	திண்டுக்கல்	திண்டுக்கல்	நத்தம்
18.	திண்டுக்கல்	திண்டுக்கல்	பழநி
19.	திண்டுக்கல்	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்
20.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	பொள்ளாச்சி
21.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	நெகமம்
22.	திருப்பூர்	திருப்பூர்	மூலனூர்
23.	வேலூர்	வேலூர்	வேலூர்
24.	வேலூர்	வேலூர்	குடியாத்தம்
25.	வேலூர்	திருப்பத்தூர்	திருப்பத்தூர்
26.	வேலூர்	திருப்பத்தூர்	வாணியம்பாடி
27.	மதுரை	மதுரை	உசிலம்பட்டி

வ. எண்	விற்பனைக் குழு	மாவட்டம்	மின்னணு தேசிய வேளாண் சந்தை
28.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்	குத்தாலம்
29.			மயிலாடுதுறை
30.			செம்பனார்கோவில்
31.			சீர்காழி
32.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
33.		செங்கல்பட்டு	மதுராந்தகம்
34.	தேனி	தேனி	தேனி
35.	விருதுநகர்	விருதுநகர்	இராஜபாளையம்
36.			விருதுநகர்
37.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	முதுகுளத்தூர்
38.			கமுதி
39.			இராஜசிங்கமங்கலம்
40.	தருமபுரி	தருமபுரி	அரூர்

7.1.2.3 மின்னணு வர்த்தகத்தின் நிதி விவரம்

தமிழக அரசு மின்னணு வர்த்தகத்தைச் செயல்படுத்திட தேசிய வேளாண் சந்தையில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் வேளாண் விளைபொருள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவற்றில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளான கிடங்குகள், மின்னணு ஏலக்கூடம், தரம் பிரிப்பு மற்றும் பகுப்பாய்வுக் கூடம், பரிவர்த்தனைக் கூடம், உலர்களம் ஆகியவற்றை வலுப்படுத்த ரூ.148 கோடி நிதி வழங்கியுள்ளது. இதற்கிடையில் மத்திய அரசும் 63 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ.28.10 கோடி நிதி வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

7.1.2.4 மின்னணு தேசிய வேளாண் சந்தைகளின் செயல்திறன்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு வர்த்தகத்தை ஊக்குவிப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதுவரை 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.500.57 கோடி மதிப்பிலான 27.87 இலட்சம் குவிண்டால் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 64,064 விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.184.36 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

27.87 இலட்சம் குவிண்டால் வர்த்தக அளவு
ரூ.500.57 கோடி வர்த்தக மதிப்பு

பயனாளிகள்
2.86 இலட்சம் விவசாயிகள்
2211 வியாபாரிகள்
91 விவசாய உற்பத்தி குழுக்கள்

23 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

அட்டவணை 7.5 மின்னணு தேசிய வேளாண் சந்தைகளின் செயல்திறன்

வ. எண்	மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்	ஒட்டுமொத்த வர்த்தகம் (இலட்சம் குவிண்டால்)	ஒட்டுமொத்த வர்த்தக மதிப்பு (ரூ. கோடியில்)	மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தில் மின்னணு பணப் பரிவர்த்தனை (ரூ.கோடியில்)
1.	ராணிப்பேட்டை	அம்மூர்	4.55	68.71	19.55
2.		கலவை	1.54	22.13	6.15
3.	கோயம்புத்தூர்	அன்னூர்	0.09	3.73	0.67
4.		ஆனைமலை	0.21	18.19	4.96
5.	திண்டுக்கல்	திண்டுக்கல்	0.40	13.55	2.96
6.	ஈரோடு	அந்தியூர்	0.17	9.13	4.66
7.		சத்தியமங்கலம்	0.25	8.92	2.26
8.		கோபிச்செட்டிபாளையம்	0.08	4.12	0.61
9.		பெருந்துறை	0.06	3.62	3.50
10.	இராமநாதபுரம்	பரமக்குடி	0.16	6.12	0.13
11.	விழுப்புரம்	திருக்கோவிலூர்	1.96	48.39	26.82
12.		செஞ்சி	7.91	143.37	47.64

வ. எண்	மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்	ஒட்டுமொத்த வர்த்தகம் (இலட்சம் குவிண்டால்)	ஒட்டுமொத்த வர்த்தக மதிப்பு (ரூ. கோடியில்)	மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தில் மின்னணு பணப் பரிவர்த்தனை (ரூ.கோடியில்)
13.	கள்ளக்குறிச்சி	உளுந்தூர்பேட்டை	1.54	28.05	24.17
14.		கள்ளக்குறிச்சி	0.64	13.53	6.73
15.	திருப்பூர்	திருப்பூர்	4.24	2.88	2.73
16.		உடுமலைப்பேட்டை	0.31	7.87	6.86
17.		பெதப்பம்பட்டி	0.14	2.63	2.44
18.		வெள்ளக்கோவில்	0.24	15.22	12.17
19.	தேனி	கம்பம்	0.14	2.86	0.76
20.	கடலூர்	விருத்தாசலம்	2.98	67.98	1.54
21.	நாமக்கல்	பரமத்தி-வேலூர்	0.07	6.00	5.15
22.	திருச்சிராப்பள்ளி	லால்குடி	0.01	0.05	0.02
23.	மதுரை	மதுரை	0.18	3.52	1.88
		மொத்தம்	27.87	500.57	184.36

வர்த்தக அளவு சதவிகிதம்



வர்த்தக மதிப்பின் சதவிகிதம்



[2020 மார்ச் 24

7.1.2.5 ஒன்றுபட்ட ஒற்றை உரிமம்

அரசு ஒன்றுபட்ட ஒற்றை உரிமத்தை அறிமுகப்படுத்தி மாநிலத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் வர்த்தகம் செய்ய வியாபாரிகளுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் வழங்கப்படுகிறது. இதுவரை 1,363 வர்த்தகர்களுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுரிமம் மாநிலத்தில் உள்ள அனைத்து சந்தைகள் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகத்திற்கும் வழிவகை செய்கிறது. அதன் பயனாக விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தேசிய அளவிலான சந்தைகளை அணுக ஏதுவாக அமைகிறது.

7.1.2.6 மின்னணு தேசிய வேளாண் சந்தை வாயிலாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம்

ஒன்றுபட்ட ஒற்றை உரிமம், வியாபாரிகளை பல சந்தைகளில் ஒரே நேரத்தில் மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வாயிலாக வர்த்தகம் செய்ய உதவுகிறது. ஆகஸ்டு 2019 முதல் 98 வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இடையிலான வர்த்தகத்தில் கலந்துகொண்டு உள்ளனர்.

மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம் மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வாயிலாக முதன்முறையாக 23-10-2019 அன்று தொடங்கப்பட்டு மதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள வியாபாரி ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கடப்பா ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துடன் வர்த்தகம் செய்துள்ளார். இது மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்திற்கு வழிவகை செய்து, விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்து விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்கிறது.

7.1.3 உட்கட்டமைப்பு வசதிகள்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பராமரிக்கவும் கீழ்க்கண்ட பல்வேறு நிதி ஆதாரங்கள்மூலம் இத்துறை பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

7.1.3.1 நபார்டு வங்கி-ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF)

மாநில அரசு மற்றும் மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களை விரைவாக முடித்திட நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு நிதியின்கீழ் கடனுதவி அளிக்கிறது.

2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை, இந்நிதியின்கீழ் சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.221.64 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் நிதியாண்டில் இந்நிதியின்கீழ் மொத்தம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் குளிர்பதனக் கிடங்கு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

7.1.3.2 நபார்டு வங்கி-கிடங்கு உட்கட்டமைப்பு நிதி(WIF)

நபார்டு வங்கி 2014-2015 ஆம் ஆண்டு முதல் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியின்கீழ் ஊரகப் பகுதிகளுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. பொது மற்றும் தனியார் துறைமூலம் கட்டப்படும் சேமிப்புக் கிடங்குகள், சேமிப்புக் கலன்கள், குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் இதர குளிர்பதன சங்கிலி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு இந்நிதியின்கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது.

2014-2015 ஆம் ஆண்டு முதல் 10 மாவட்டங்களில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு வர்த்தகம், சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் ரூ.777.60 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.320.39 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. 90 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.217.92 கோடி மதிப்பீட்டில் சந்தை உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

[2020 மார்ச் 24

2. பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தினை சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய 8 மாவட்டங்களில் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்துதல்.

7.1.3.3 நபார்டு வங்கி-வேளாண் சந்தை உட்கட்டமைப்பு நிதி (AMIF)

100 உழவர் சந்தைகளை ரூ.50.70 கோடி மதிப்பீட்டில் வலுப்படுத்தும் திட்டம் 2020-2021 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

7.2 வேளாண் வணிக செயல்பாடுகள்

7.2.1 தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்

இத்துறையின் முதன்மைத் திட்டங்களுள் ஒன்றான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விநியோகத் தொடரினை ஒருங்கிணைக்கவும் மேம்படுத்தவும் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

1. ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான விநியோகத் தொடர் மேலாண்மை உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

2. விவசாயிகளைப் பெருஞ்சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் சந்தை ஒருங்கிணைப்பு செய்ய உதவுதல்.

3. பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற அழுகும் விளைபொருட்களின் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்தல்.

4. விவசாயிகளுக்குரிய விலை கிடைக்கச் செய்தல்.

5. முதலீட்டாளர்களை விநியோகத் தொடரில் பங்கு பெறச்செய்தல்.

6. இத்திட்டத்தினை விவசாயப் பெருமக்களுக்கு விரிவுபடுத்தி நன்மை விளைவிக்கச் செய்தல்.

சிப்பம் கட்டும் அறை, குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்குகள், குறிப்பிட்ட அல்லது பல்வகை காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான தானியங்கி இயந்திரங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் 64 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்துதல், சிப்பம் கட்டுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி சந்தையில் விளைபொருட்களின் தரத்தினைப் பூர்த்தி செய்ய ஏதுவாக காமா கதிரியக்க பதப்படுத்தும் வசதிகள், துரித உறைநிலை வசதிகள் (IQF), நீராவி வெப்பபதப்படுத்தும் வசதிகள், வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமையின் (APEDA) அங்கீகாரம் பெற்ற சிப்பம் கட்டும் கூடம் ஆகிய வசதிகள் சில முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 7.6 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்	முதல்நிலை பதப்படுத்தும் இயந்திரங்கள்
1.	கிருஷ்ணகிரி (10)	ஒசூர்	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		காமன்தொட்டி	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		தேன்கனிக்கோட்டை	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		தட்டிகானப்பள்ளி	வேர்க்கிழங்குகள்
		இராயக்கோட்டை	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		ஆலப்பட்டி	சிப்பம் கட்டும் அறை
		குந்தாரப்பள்ளி	சிப்பம் கட்டும் அறை
		கிருஷ்ணகிரி	புளி
		காவேரிப்பட்டினம்	வேர்க்கிழங்குகள்
		போச்சம்பள்ளி	காய்கறிகள் மற்றும் பழங்கள்

வ. எண்	மாவட்டம்	முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்	முதல்நிலை பதப்படுத்தும் இயந்திரங்கள்
2.	தருமபுரி (5)	பெண்ணாகரம் (கூட்டுறவு விற்பனைச் சங்கம்)	குளிர்பதனக் கிடங்கு
		பாலக்கோடு	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		தருமபுரி	புளி
		அரூர்	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		பாப்பாரப்பட்டி	புளி
3.	கோயம்புத்தூர் (7)	சிக்கதாசம்பாளையம்	வாழை
		சூலூர்	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		வடக்கிப்பாளையம்	சிப்பம் கட்டும் அறை
		பூலுவப்பட்டி	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		பிச்சனூர்	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		ஆனைமலை	இளநீர் மற்றும் நீரா
		பொள்ளாச்சி	உறைநிலை தேங்காய் துருவல்
4.	நீலகிரி (9)	ஓசஹட்டி	வேர்க்கிழங்குகள்
		அணிக்கொரை	வேர்க்கிழங்குகள்
		தாவணை	வேர்க்கிழங்குகள்
		உதகை ரோஜா பூங்கா	குளிர்பதனக் கிடங்கு
		கோத்தகிரி (கூட்டுறவு விற்பனைச் சங்கம்)	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		புது அலஞ்சி	வேர்க்கிழங்குகள்
		சுள்ளிக்கூடு	வேர்க்கிழங்குகள்
		உப்பட்டி	வாழை
		அய்யங்கொல்லி	வாழை
5.	திருச்சிராப்பள்ளி (12)	லால்குடி	வாழை
		மண்ணச்சநல்லூர்-I	வெங்காயம்
		மண்ணச்சநல்லூர்-II	வாழை
		திருச்செந்துறை	சிப்பம் கட்டும் அறை
		பி.கே. அகரம்	வெங்காயம்
		அரசலூர்	வாழை
		பிடாரமங்கலம்	வாழை
		துறையூர் (கூட்டுறவு விற்பனைச் சங்கம்)	வெங்காயம்
		உப்பிலியாபுரம்	வெங்காயம்
		தாத்தையங்கார்பேட்டை	வெங்காயம்
		கள்ளிக்குடி	சிப்பம் கட்டும் அறை
		எம்.புத்தூர்	வாழை

வ. எண்	மாவட்டம்	முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்	முதல்நிலை பதப்படுத்தும் இயந்திரங்கள்
6.	திண்டுக்கல் (5)	பழனி	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		பழனி (கூட்டுறவு விற்பனைச் சங்கம்)	ஏலக்கூடம்
		கோபால்பட்டி	புளி
		கவுஞ்சி	வேர்க்கிழங்குகள்
		வேடசந்தூர்	முருங்கை
7.	தேனி (5)	தேனி	முருங்கை
		சின்னமனூர்	சிப்பம் கட்டும் அறை
		கம்பம்-I	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		கம்பம்-II	வாழை
		பெரியகுளம்	மாம்பழம்
8.	இராமநாதபுரம் (3)	பரமக்குடி	மிளகாய்
		முதுகுளத்தூர்	சிப்பம் கட்டும் அறை
		கமுதி (கூட்டுறவு விற்பனைச் சங்கம்)	சிப்பம் கட்டும் அறை
9.	தூத்துக்குடி (3)	ஸ்ரீவைகுண்டம்	சிப்பம் கட்டும் அறை
		புதூர்	சிப்பம் கட்டும் அறை
		விளாத்திக்குளம்	மிளகாய்
10.	திருநெல்வேலி (5)	இராமையன்பட்டி	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		வள்ளியூர்	காய்கறிகள் மற்றும் பழங்கள்
		பாவூர்சத்திரம்	வெங்காயம்
		சங்கரன்கோவில்	எலுமிச்சை
		கடையநல்லூர்	எலுமிச்சை

இத்திட்டத்தினைச் செயல்படுத்த விவசாயிகளின் பங்களிப்பை ஊக்குவிக்கும்பொருட்டு முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களைச் செயல்படுத்துவதற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. தற்போது 25 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் 13 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த நான்கு மாதங்களில் 719 மெ.டன் பழங்கள் மற்றும் காய்கறிகள் இந்த முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்மூலம் பதப்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் செயல்படுத்தப்படும் 5 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களைத் தவிர மீதமுள்ள முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

மேலும், மலர்கள் பயிரிடும் விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் மலர்களுக்கான முதன்மைப் பதப்படுத்தும் நிலையம் சர்வதேச மலர் ஏல மையமாக ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் அமைக்கப்படவுள்ளது.

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய 8 மாவட்டங்களில் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் விரிவுபடுத்தப்படவுள்ளது.

7.2.2 தமிழ்நாட்டில் உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

7.2.2.1 உணவுப் பதப்படுத்தும் கொள்கை

தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடவும், குறிப்பாக காய்கறிகள் மற்றும் பழங்களின் பதப்படுத்துதலின் தற்போதைய நிலையான 2 சதவீதத்தை 10 சதவீதமாக அதிகரித்திடவும் இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு உணவுப் பதப்படுத்தும் கொள்கை 2018 இல் நில ஒதுக்கீடு, நீர் வசதி, மின்சார வசதி, முத்திரைக் கட்டண விலக்கு, ஒற்றைச் சாளர வசதி போன்ற பல சலுகைகளும், மானியங்களும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளன. இக்கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறும், தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை 2018-2019 இல் அறிவிக்கப்பட்டுள்ளவாறும், தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் உணவுப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உணவுப் பதப்படுத்தும் கொள்கை மற்றும் உணவுப் பூங்காக்கள் திட்டங்களைச் செயல்படுத்திடும் பொருட்டு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முகமை நிறுவனமாக செயல்படும்.

2018-2019 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு, திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா ரூ.77.94 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், மதுரை மற்றும் விழுப்புரம் ஆகிய 8 மாவட்டங்களில்

2020 மார்ச் 24]

சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள்/வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன:

அட்டவணை 7.7-வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள்- திட்ட மதிப்பீடு

(அலகு: ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	வேளாண் பதப்படுத்தும் தொகுப்பு	மத்திய அரசின் நிதி உதவி	பங்குத் தொகை	வங்கிக் கடன் தொகை	இதர கடன் தொகை	மொத்த திட்ட மதிப்பீடு
1.	சேலம்	597.53	505.04	506.00	916.65	2525.22
2.	திண்டுக்கல்	673.57	580.36	581.00	1066.86	2901.79
3.	கிருஷ்ணகிரி	589.37	541.18	540.00	1012.07	2682.62
4.	கடலூர்	597.93	561.96	562.00	1020.13	2742.02
5.	தேனி	599.55	525.68	526.00	977.20	2628.43
6.	மதுரை	579.12	641.32	694.00	1292.17	3206.61
7.	திருவண்ணாமலை	574.87	512.13	510.00	953.62	2550.62
8.	விழுப்புரம்	599.01	511.29	515.00	931.17	2556.47
	மொத்தம்	4810.95	4378.96	4434.00	8169.87	21793.78

இப்பூங்காக்களில், அப்பகுதிக்கேற்ற முக்கிய பயிர்களின் சாகுபடிக்கேற்றவாறு தனியார் தொழில்முனைவோர்கள்மூலம் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க ஊக்குவிக்கப்படும்.

2020–2021 ஆம் ஆண்டில் அமைக்கப்படவுள்ள உணவுப் பூங்காக்கள்

2020–2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், தென்காசி, தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 7 மாவட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியுடன் சிறிய

அளவிலான உணவுப் பூங்காக்கள்/வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

7.2.3. நீரா

நீரா என்பது மலராத தென்னம்பாளையிலிருந்து வடியும் சுவையான, சத்து மிகுந்த பானமாகும். மேலும் நீராவிலிருந்து வெல்லம், சர்க்கரை, சிரப், சாக்லேட்டுகள், கேக், ஸ்குவாஷ் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் கூடுதல் வருவாய்க்கு வாய்ப்பு உள்ளது.

தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தென்னை மரத்திலிருந்து நீரா பானம் இறக்கிடும்பொருட்டு, தமிழ்நாடு நீரா விதிகள் 2017 இல் பிறப்பிக்கப்பட்டது. இதுவரை தென்னையிலிருந்து நீரா பானம் இறக்குவதற்கான உரிமம் 13 தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உரிமம் பெற்ற தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள்மூலம் இதுவரை சுமார் 9 இலட்சம் லிட்டர் நீரா உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், நீரா மற்றும் நீரா மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் சுமார் ரூ.13 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 7.8 நீரா மற்றும் அதன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை விவரம்

வ. எண்	தென்னை உற்பத்தியாளர் நிறுவனத்தின் (தெ.உ.நி) பெயர்	நீரா உற்பத்தி (லிட்டர்)	நீரா மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் (கிலோ)	மொத்த விற்பனை மதிப்பு (ரூ.இலட்சம்)
1.	விநாயகா தெ.உ.நி, கோயம்புத்தூர்	3,05,150	4,264	403
2.	ஆனைமலை தெ.உ.நி, கோயம்புத்தூர்	1,55,330	6,542	234
3.	கோயம்புத்தூர் தெ.உ.நி, கோயம்புத்தூர்	1,58,030	4,833	227
4.	ஈரோடு கோபி வேளாண் வணிகம் தெ.உ.நி., ஈரோடு	82,820	649	130

2020 மார்ச் 24]

வ. எண்	தென்னை உற்பத்தியாளர் நிறுவனத்தின் (தெ.உ.நி) பெயர்	நீரா உற்பத்தி (லிட்டர்)	நீரா மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் (கிலோ)	மொத்த விற்பனை மதிப்பு (ரூ.இலட்சம்)
5.	உடுமலைப்பேட்டை தெ.உ.நி, திருப்பூர்	44,990	406	57
6.	மடத்துக்குளம் தெ.உ.நி., திருப்பூர்	36,195	0	54
7.	திண்டுக்கல் தெ.உ.நி., திண்டுக்கல்	36,066	3	54
8.	ஈரோடு நீரா தெ.உ.நி., ஈரோடு	28,209	135	44
9.	புதுக்கோட்டை தெ.உ.நி., புதுக்கோட்டை	14,547	1,027	32
10.	தேனி தெ.உ.நி., தேனி	14,190	0	21
11.	கன்னியாகுமரி தெ.உ.நி., கன்னியாகுமரி	3,190	0	5
12.	பேராவூரணி தெ.உ.நி., தஞ்சாவூர்	12	0	0.02
	மொத்தம்	**8,78,729**	**17,859**	**1261**

7.2.4 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPO) ஊக்குவித்தல்

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (TNSFAC) பல்வேறு திட்ட நிதிகளைக் கொண்டு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனமாகும். இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் அடிப்படை தொகுதிகளாக உழவர் ஆர்வலர் குழுக்கள் (FIGs) உள்ளன. உழவர் வருமானத்தை உயர்த்துவதற்கான நோக்கத்துடன் பண்ணையிலிருந்து சந்தை வரை இணைப்பு மற்றும் பிற நடவடிக்கைகளை வலுப்படுத்தி விவசாயிகளை ஊக்குவித்து உதவுவதே இதன் நோக்கம் மற்றும் குறிக்கோள் ஆகும்.

உழவர் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) என்பது அதன் தொடர்புடைய சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் கூட்டமைப்பாகும். இந்திய கம்பெனி சட்டம், 1956 மற்றும் விதிகள் பகுதி IX A, தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975 ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்புகள், தமிழ்நாடு கூட்டுப் பண்ணைய திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (FPG), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் (FPC) கூட்டமைப்புகள் மற்றும் தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள்/கூட்டமைப்புகள் ஆகிய அனைத்தும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாகும்.

தமிழ்நாடு அரசு 2014-2015 ஆம் ஆண்டு முதல் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு உதவி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பினால் 175 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பல்வேறு திட்டங்களின்மூலம் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. நபார்டு போன்ற நிறுவனங்களும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (170) ஊக்குவிக்கின்றன. தமிழ்நாட்டில் தற்போது 538 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 167 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சுயமாக இயங்குபவையாகும்.

தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்கள்மூலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு அரசு, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான கொள்கையை 9-2-2020 அன்று வெளியிட்டுள்ளது. இதன்மூலம் அரசு மற்றும் அதன் துணை நிறுவனங்கள் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குவது மட்டுமல்லாது, மாநிலத்தில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் செழித்து வளர்வதை உறுதி செய்கிறது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அமைப்புகளாக உருவாக்குவதன்மூலம் அவற்றிலுள்ள விவசாய உறுப்பினர்கள் பயனடைவார்கள். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி நிறுவனங்கள்மூலம் செலுத்தத்தக்க மற்றும் சலுகையில் நிதியுதவி வழங்குவதற்கான விரிவான திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தேசிய அளவில் உழவர்

2020 மார்ச் 24]

உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிக்க விரிவான திட்டத்தை வழங்கியதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது. இத்திட்டம் பின்வரும் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது:

1. இடைநிலை (Mezzanine) மூலதன உதவி-உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் தொடங்கிய ஆரம்ப ஆண்டுகளில், அந்நிறுவனங்களில் உள்ள மூலதனப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு இடைநிலை மூலதனக் கடன் உதவித் தொகை வழங்கப்படும்.

2. கடன் உத்தரவாதம் (Credit Guarantee)-பொதுவாக உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் கடன் வேண்டி வங்கிகளை அணுகும்போது, அடமானம் கோருவதுடன், கடனிற்கான வட்டி விகிதமும் அதிகமாக இருக்கும். இதனால் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் வங்கிக் கடன் பெற முன்வருவதில்லை. இதனைக் கருத்தில்கொண்டு, ஒவ்வோர் உற்பத்தியாளர் நிறுவனமும் ரூ.1 கோடி வரை கடன் பெறுவதற்கு 50 சதவீத உத்தரவாதம் வழங்கப்படும்.

3. சுழல் நிதி (Revolving Fund)-தற்போது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும்போது, இதர வணிக நடவடிக்கைகளுக்கு இணையாக 12 முதல் 14 சதவீதம் வரை வட்டி வசூலிக்கிறது. இது ஏனைய வணிக நடவடிக்கைகளுக்கு இணையாக உள்ளது. அரசிடமிருந்து கட்டணமில்லா நிதி மற்றும் நாப்கிசான் நிறுவனத்திடமிருந்து சந்தைக்கடன் நிதியை இணைப்பதன்மூலம் இத்திட்டம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான வட்டி விகிதத்தை 8 முதல் 9 சதவீதமாக குறைக்கும்.

இத்திட்டங்களின்மூலம், சுமார் 1,000 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு, 10 இலட்சம் வேளாண் பெருமக்கள் 4 ஆண்டுகளில் பயன்பெறுவர்.

தற்போது பருப்பு அரவை இயந்திரம், சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையம் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற திட்டங்கள் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 25 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களை இயக்குவதற்கு சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

7.2.5. வேளாண் ஏற்றுமதி தொகுப்புகளை உருவாக்குதல்

தேசிய வேளாண் ஏற்றுமதிக் கொள்கையானது மத்திய அரசால் டிசம்பர் 2018 இல் வெளியிடப்பட்டது. வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை இரண்டு மடங்கு அதிகரிப்பதுடன், விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரிப்பது இக்கொள்கையின் மிக முக்கிய நோக்கமாகும். இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்திற்கான வேளாண் ஏற்றுமதிக் கொள்கையும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

ஏற்றுமதி சாத்தியக்கூறு அதிகம் உள்ள பயிர்களின் அடிப்படையில், அவை அதிகம் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் ஏற்றுமதி தொகுப்புகள் ஏற்படுத்தப்படும். இத்தொகுப்புகளில் உரிய ஏற்றுமதி தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் உட்கட்டமைப்புகளை உருவாக்கி அதன்மூலம் ஏற்றுமதியை அதிகரித்திடலாம். வேளாண் ஏற்றுமதி தொகுப்புகள் மத்திய மற்றும் மாநில அரசு உதவியுடன் ஊக்குவிக்கப்படும்.

விவசாய நிலங்களில் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்த இயலாத நிலை, பண்ணைப் பணியாட்கள் குறைவு மற்றும் மூலதனம்மூலம் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இயலாத நிலை போன்றவற்றை சிறு மற்றும் குறு விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, இதனை எதிர்கொள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து தொகுப்புகளாகச் செயல்படுவதால், தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்வதுடன் அவற்றை விளைபொருட்களாகவோ அல்லது மதிப்புக்கூட்டிய பொருட்களாகவோ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்து, கூடுதல் வருவாயைப் பெறுவதற்கு ஏதுவாகின்றது.

7.2.6 தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டம் 2019

அறுவடைக் காலங்களில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைப்பதில்லை. விதைப்புக் காலத்திற்கு முன்னரே சந்தையின் தேவை அறிந்து, விலையினை நிர்ணயம் செய்து, கொள்முதலாளருக்கு வழங்குவதால் விவசாயிகள் விலை

வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்திடலாம். இம்முறையே ஒப்பந்த சாகுபடி ஆகும்.

ஒப்பந்த சாகுபடி முறையானது விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களைப் பயிர் பருவத்திற்கு முன்னரே நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்வதாகும். தமிழகத்தில் ஒப்பந்த சாகுபடி முறையானது பல ஆண்டுகளாக கரும்பு, இறைச்சிக் கோழி, மூலிகைப் பயிர்கள் போன்றவற்றில் நடைபெற்று வருகின்றது.

ஒப்பந்த சாகுபடி முறை செயல்பட்டு வந்தபோதிலும் அதனை வரன்முறைப்படுத்த சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்த பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) சட்டம், 2019 உருவாக்கப்பட்டது.

இந்திய அளவில் ஒப்பந்த சாகுபடிக்கான சட்டம் தமிழ்நாட்டில் மட்டுமே இயற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

7.2.7 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மதிப்பு கூட்டு இயந்திரங்கள்

1. அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைக்கவும், தக்காளியைப் பண்ணை அளவில் மதிப்புக் கூட்டி விற்பனை செய்திடவும் 5 நடமாடும் தக்காளி கூழாக்கும் இயந்திரம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. மக்காச்சோளம் விளைவிக்கும் பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம், மங்களூரில் மக்காச்சோளம் மதிப்புக் கூட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் மக்காச்சோளத்திலிருந்து கால்நடைத் தீவனம் மற்றும் மாவு தயாரித்தல் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிப்பதற்காகத் தளவாடங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

3. தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் தென்னை மதிப்புக் கூட்டும் மையம்

[2020 மார்ச் 24

கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தினால் மண்டல அளவில் தென்னை மதிப்புக் கூட்டும் வசதிகள் உருவாக்கப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டிற்கு அளிக்கப்படும். இம்மையம் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சிறு தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன்மூலம் தென்னைப் பதப்படுத்தும் தொழிலை உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

7.2.8 குளிர்பதனக் கிடங்குகள்

பழங்கள் மற்றும் காய்கறிகள் எளிதில் அழுகுவதினால் ஏற்படும் இழப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. குறைந்த வெப்பநிலையில் வைப்பதனால் விளைபொருட்களை சந்தைப்படுத்தும் காலம் நீட்டிக்கப்படுவதால், விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்கும் நிலை தவிர்க்கப்படுகிறது. இக்குளிர்பதன வசதிகளை விவசாயிகள் பயன்படுத்துவதால் நியாயமான விலையில் விற்க ஏதுவாக அமைகிறது. இதுவரை 13,565 மெ.டன் கொள்ளளவு கொண்ட 111 குளிர்பதனக் கிடங்குகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, பகுதி-II திட்டம், வேளாண் விளைபொருள் ஏற்றுமதி முகமை மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 3,908 மெ.டன் கொள்ளளவு கொண்ட 56 குளிர்பதனக் கிடங்குகள் 2018-2019 ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதிகள் காய்கறி மற்றும் பழங்கள் விளைவிக்கும் மாவட்டங்களான கோவை, நீலகிரி, கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், தேனி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் குளிர்பதன சேமிப்புக் கிடங்கு தேவையினைப் பூர்த்தி செய்யும். இது தவிர, 27 உழவர் சந்தைகளில் 2 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழ்நாட்டில் 17,527 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன.

2020 மார்ச் 24]

அட்டவணை 7.9-தமிழ்நாட்டில் திட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள குளிர்பதனக் கிடங்குகள் விவரம்

வ. எண்	திட்டம்	குளிர்பதனக் கிடங்குகளின் எண்ணிக்கை	குளிர்பதனக் கிடங்குகளின் கொள்ளளவு (மெ.டன்)
1.	தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்	21	8,130
2.	ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி	80	5,165
3.	விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்	56	3,908
4.	பகுதி-II திட்டம்	4	200
5.	வேளாண் விளைபொருள் ஏற்றுமதி முகமை	6	70
6.	தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதி	27	54
	மொத்தம்	**194**	**17,527**

அட்டவணை 7.10-கொள்ளளவு அடிப்படையில் குளிர்பதனக் கிடங்குகளின் விவரம்

வ. எண்	கொள்ளளவு (மெ.டன்)	எண்ணிக்கை	மொத்த கொள்ளளவு (மெ.டன்)
1.	2000	2	4000
2.	1000	4	4000
3.	500	8	4000
4.	200	2	400
5.	175	1	175
6.	150	1	150
7.	110	3	330
8.	100	11	1100

9.	75	2	150
10.	50	10	500
11.	40	5	200
12.	25	86	2150
13.	15	6	90
14.	13	2	26
15.	10	16	160
16.	7	1	7
17.	5	7	35
18.	2	27	54
	மொத்தம்	194	17527

திருவள்ளூர், சேலம், கோவை, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் நவீன குளிர்பதன மையங்களும், 5 மெ.டன் கொள்ளளவு கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் 80 குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட உள்ளன. குளிர்பதன மையங்கள் பெரிய வணிக சந்தையின் தேவையினைப் பூர்த்தி செய்யும். 5 மெ.டன் குளிர்பதனக் கிடங்குகள் பண்ணை அளவில் விவசாயிகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும். இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டில் நபார்டு நிதி உதவியுடன் ரூ.100 கோடி செலவில் அமைக்கப்படும்.

இத்திட்டத்தினைச் செயலாக்குவதன்மூலம் தமிழ்நாட்டில் கூடுதலாக 20,900 மெ.டன் குளிர்பதனக் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

7.2.9 ஒருங்கிணைந்த உழவர் விற்பனை வளாகங்கள்

கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சி அடையும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த உழவர் விற்பனை வளாகங்கள் அமைக்கப்பட உள்ளன. விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு இந்த வளாகங்கள் உதவியாக அமையும். இந்த வளாகங்கள் முன்னோடியாக திருவண்ணாமலை, தருமபுரி, மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில்

2020 மார்ச் 24]

ரூபாய் 50 கோடி செலவில் நபார்டு வேளாண் சந்தைப்படுத்துதல் உட்கட்டமைப்பு நிதியின்கீழ் நிறுவப்படும். விவசாயிகளின் நேர விரயத்தை தவிர்த்திடும் வகையில் இவ்வளாகங்களில் தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள், பழங்கள், காய்கறிகள், மலர்கள் உள்ளிட்ட விவசாயிகளின் விளைபொருட்களை ஒரே இடத்தில் சந்தைப்படுத்துவதோடு விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களையும், இயந்திரங்களையும் வாங்கிக்கொள்ள வழிவகை செய்கிறது.

7.2.10 அக்மார்க் தரம் பிரிப்பு

தமிழ்நாட்டில், நுகர்வோருக்கு கலப்படமற்ற மற்றும் தரமான உணவுப்பொருட்கள் கிடைத்திட நிர்ணயித்த தரத்தினை உறுதிப்படுத்த இத்துறையின்மூலம் 30 மாநில அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகங்களும், 1 முதன்மை ஆய்வகமும் இயங்கி வருகின்றன. "அக்மார்க்" என்பது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களுக்கான தரச் சான்றாகும். வேளாண் விளைபொருட்கள் (தரம் பிரித்தலும் குறியிடுதலும்) சட்டம், 1937-ஐ (1986-ல் திருத்தியமைக்கப்பட்டது) அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசு விற்பனை மற்றும் ஆய்வு இயக்குநரகத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தில் 225 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன. இது ஒரு தன்னார்வத் திட்டமாகும்.

அக்மார்க் ஆய்வகங்களில் அரிசி, பருப்பு வகைகள், நெய், தேன், மசாலாப் பொடி வகைகள், முழு மசாலா வகைகள், ஜவ்வரிசி, உணவு எண்ணெய் வகைகள், கடலை மாவு, கூட்டுப்பெருங்காயம் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் தர ஆய்வு செய்யப்படுகின்றன. 2019-2020 ஆம் நிதியாண்டில் 23.98 இலட்சம் குவிண்டால் உணவுப்பொருட்கள் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் தரம் பிரிப்பு கட்டணமாக அரசுக்கு ரூ.77.92 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

7.2.11 உழவர் சந்தைகள்

தமிழ்நாட்டில், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி நியாயமான விலை பெறவும், நேரடியாக நுகர்வோருக்குப் பசுமையான காய்கறிகள் மற்றும் பழங்கள் சில்லரை விலையினைவிட குறைவான விலையில் கிடைத்திடவும்,

179 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வுழவர் சந்தைகளில் விவசாயிகளுக்குக் கடை வசதி, மின்னணு எடைத்தராசு, குடிநீர், சுகாதார வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. உழவர் சந்தைகளில் தினசரி விலை நிலவரம் அலைபேசி செயலிமூலம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றுக்கு ரூ.8.18 கோடி மதிப்பிலான 2,223 மெ.டன் காய்கறி மற்றும் பழங்கள் 8,210 விவசாயிகளால் உழவர் சந்தைகளில் விற்கப்பட்டு 4.07 இலட்சம் நுகர்வோர் பயனடைந்துள்ளனர். நபார்டு-வேளாண் சந்தை உட்கட்டமைப்பு நிதியின் (AMIF)-கீழ், 100 உழவர் சந்தைகளை வலுப்படுத்திட ரூ.50.70 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

7.2.12 தமிழ்நாடு நீர்ப் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு நீர்ப் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ரூ.125 கோடி மதிப்பீட்டில் 66 உபவடி நீர்ப் பகுதியில் 2017-2018 முதல் 2022-2023 வரை ஆறு வருடங்களுக்கு செயல்படுத்தப்பட உள்ளது.

திட்டத்தின் நோக்கம்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக மேம்பாடு, வேளாண் தொழில்முனைவோரை ஊக்குவித்தல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நவீனமயமாக்குதல் ஆகிய பலவகையான திட்டங்கள்மூலம் வேளாண் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

திட்டத்தின் செயலாக்கம்

1. புதிய 80 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல்.

2. தற்பொழுது சிறப்பாக செயல்படும் 40 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக மேம்பாட்டுக்கு உதவித் தொகை (75 சதவீதம் மானியம்:25 சதவீதம் விவசாயிகள் பங்களிப்பு) வழங்குதல் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு தொழில் விரிவாக்கம் குறித்த ஆலோசனை வழங்குதல்.

2020 மார்ச் 24]

3. ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி, சிவகிரி ஆகிய மூன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் மின்னணுமயமாக்குதல்.

4. வங்கிமூலம் கடன் வசதி பெற ஏதுவாக மின்னணு இரசீது முறையில் 4 சேமிப்புக் கிடங்குகள் பரிசோதனை முறையில் ஏற்படுத்துதல்.

5. மாநில மற்றும் மாவட்ட அளவிலான விவசாயிகள்-வியாபாரிகள் பணிமனைக் கூட்டம், கருத்தரங்கு, மாநாடு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வேளாண் தொழில்முனைவோருக்கு ஊக்குவிக்கும் பயிற்சி நடத்துதல்.

6. வேளாண் வணிக மேம்பாட்டு வசதி மையம் (Agri Business Promotion Facility) மூலமாக விவசாய தொழில்முனைவோருக்கான வணிகத் திட்டத்தினை மேம்படுத்துதல்

முதற்கட்டமாக, 18 உபவடி பகுதியில் மேற்கண்ட திட்டங்கள் 3 வருடங்களில் ரூ.51.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.10.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக, 16 உபவடி பகுதியில் மேற்கண்ட திட்டங்கள் 3 வருடங்களில் ரூ.26.38 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.3. மனிதவள மேம்பாடு

வேளாண் விற்பனை மற்றும் வணிகச் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தவும், வேளாண் தொழில்நுட்பம் மற்றும் சந்தை தகவல்களை விவசாயிகளிடம் களப் பணியாளர்கள்மூலம் கொண்டு சேர்த்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்திட 1,308 துறைப் பணியாளர்கள் மற்றும் 1,672 விற்பனைக் குழு பணியாளர்களுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

அட்டவணை 7.11-துறைப் பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	வேளாண்மைக் கூடுதல் இயக்குநர்	1
2.	வேளாண்மை இணை இயக்குநர்	3
3.	துணை வேளாண்மை இயக்குநர்	32
4.	உதவி வேளாண்மை இயக்குநர்	8
5.	வேளாண்மை அலுவலர்	170
6.	துணை வேளாண்மை அலுவலர்	47
7.	உதவி வேளாண்மை அலுவலர்	627
8.	ஆட்சி அலுவலர்	1
9.	உதவிக் கணக்கு அலுவலர்	1
10.	இதர பணியாளர்கள்	418
	மொத்தம்	1308

அட்டவணை 7.12-விற்பனைக் குழு பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	செயலாளர்/வேளாண்மை துணை இயக்குநர்	2
2.	முதுநிலைச் செயலாளர்	2
3.	செயலாளர்/உதவி வேளாண்மை இயக்குநர்	11
4.	செயலாளர்	11
5.	கண்காணிப்பாளர்	202
6.	பொறியியல் மேற்பார்வையாளர்	9
7.	மேற்பார்வையாளர்	345

2020 மார்ச் 24]

8.	இதர பணியாளர்கள்	1090
	மொத்தம்	1672

7.4. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. எனினும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987-ன்படி அமைந்த வாரியமாக திருத்தி அமைக்கப்பட்டது.

7.4.1. நிதி ஆதாரம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1987 பிரிவு 8(1) மற்றும் 24(1)-கீழ் விற்பனைக் குழுக்கள் பெறும் மொத்த வருவாயில், 15 சதவிகித பங்குத் தொகையாக செலுத்தப்படுகிறது. இவ்வாறாக பெறப்படும் மொத்தத் தொகையில் 50 சதவிகிதமானது, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்நிதி சந்தை மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. மீதமுள்ள 50 சதவிகித தொகையானது நிருவாக செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

7.4.2. தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தின் விளம்பரப் பிரிவு மறுசீரமைப்பு, சிறப்பு வேளாண் ஏற்றுமதி ஊக்குவித்தல் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் பிரிவுகள் உருவாக்கம்

2019-2020 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால் சிறப்பு வேளாண் ஏற்றுமதி ஊக்குவித்தல் பிரிவு உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய விளம்பரப் பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்டு சிறப்பு வேளாண் ஏற்றுமதி ஊக்குவித்தல் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் பிரிவுகள் விவசாயிகளின் நலனிற்காக உருவாக்கப்பட்டன.

[2020 மார்ச் 24

7.4.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

7.4.3.1. விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

சேலத்தில் செயல்படும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையமானது வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டுத் தேவைகளான தரம் பிரித்தல், உணவுப் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், தானிய சேமிப்பு, வேளாண் சந்தை விரிவாக்கம் மற்றும் கணினி சார்ந்த பயிற்சிகளை வழங்கி வருகின்றது. விவசாயிகளுக்கான மதிப்புக் கூட்டுதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்மூலம் விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மின்னணு சந்தை தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மேலும், விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரருக்கான சிறப்பு பயிற்சிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பின் வணிகத் திட்டம் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.9.80 இலட்சம் அளவில் 391 தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் தலைமைச் செயல் அலுவலர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் 16 பயிற்சிகள் நடத்தப்பட்டன.

2020-2021 ஆம் ஆண்டில் 402 அலுவலர்கள் மற்றும் 200 விவசாயிகள் பயனடையும் வகையில் 30 பயிற்சிகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

7.4.3.2. கட்டுமானப் பணிகள்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவானது விற்பனைக் குழு நிதி மற்றும் வாரிய வளர்ச்சி நிதியினைக் கொண்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலுள்ள கிடங்குகள், பரிவர்த்தனைக்கூடம், குளிர்பதனக்கிடங்கு போன்ற கட்டமைப்புகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நபார்டு வங்கி சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி, மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டம், மின்னணு வணிகத் திட்டம் மற்றும் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றில் நவீன சேமிப்புக் கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடங்கள், ஊரக வணிக மையங்கள், குளிர்சாதன வசதியுடன்கூடிய வணிக

வளாகங்கள் மற்றும் முதன்மைப் பதப்படுத்தும் மையங்கள் போன்ற உட்கட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றது. சென்னை, கிண்டியில் அம்மா பசுமைப் பூங்கா அமைத்தல் பணியினையும் மேற்கொண்டு வருகின்றது.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.423.84 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020-2021 ஆம் ஆண்டிலும் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

7.4.4. இதர திட்டங்கள்

7.4.4.1. விலை ஆதரவுத் திட்டம்-குறைந்தபட்ச ஆதரவு விலையில் பயறு மற்றும் கொப்பரை கொள்முதல் செய்தல்

அறுவடைக் காலங்களில் விவசாயிகளின் விளைபொருட்களை விலை வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்கும்பொருட்டு, விலை ஆதரவுத் திட்டம் 2017-2018 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திடும்பொருட்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமானது "மாநில அளவிலான முகமையாகும்". தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் (NAFED) மத்திய கொள்முதல் முகமையாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகளிடமிருந்து நேரடியாக விளைபொருட்களைக் கொள்முதல் செய்திடும் "முதன்மை கொள்முதல் நிலையங்களாக" செயல்பட்டு வருகின்றன. விளைபொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்குரிய குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளுக்கு மின்னணு பணப் பரிமாற்றம்மூலம் நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

7.4.4.1.1. பயறு வகைகள்

2017-2018 ஆம் நிதியாண்டில் 1,548 மெ.டன் உளுந்து, 1,307 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.8.36 கோடி ஆகும். ஒரு கிலோவிற்கு ரூ.52/- குறைந்தபட்ச ஆதரவு விலையாகவும் மற்றும் ஊக்கத் தொகையாக ரூ.2/-ம் வழங்கப்பட்டது.

2018-2019 ஆம் நிதியாண்டில் 5,689 மெ.டன் பச்சைப் பயறு, 400 மெ.டன் துவரை மற்றும் 3,154 மெ.டன் உளுந்து 8,289 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.59.61 கோடி ஆகும். குறைந்தபட்ச ஆதரவு விலையாக கிலோ

ஒன்றிற்கு, துவரைக்கு ரூ.56.75-ம், உளுந்திற்கு ரூ.56-ம் மற்றும் பச்சைப்பயறுக்கு ரூ.69.75-ம் வழங்கப்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் உளுந்து மற்றும் பச்சைப் பயறு ஆகியவை குறைந்தபட்ச ஆதரவு விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது, உளுந்திற்கு ரூ.57-ம் மற்றும் பச்சைப் பயறுக்கு ரூ.70.50-ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்பட்டது. மேலும், 5,000 மெ.டன் துவரை கொள்முதல் செய்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 408 மெ.டன், 377 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.2.37 கோடி ஆகும்.

மேலும், ராபி 2019-2020 பருவத்தில் 15,000 மெ.டன் உளுந்து மற்றும் 10,000 மெ.டன் பச்சைப் பயறு கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

7.4.4.1.2. கொப்பரை

2019-2020 ஆம் ஆண்டில் தென்னை அதிகம் சாகுபடி செய்யும் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளை விலை வீழ்ச்சியிலிருந்து பாதுகாத்திடும்பொருட்டு 311 மெ.டன் கொப்பரை ரூ.2.96 கோடி மதிப்பில் 1,314 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. ஒரு கிலோவிற்கு, பந்துக் கொப்பரைக்கு ரூ.99.20-ம் மற்றும் அரவைக் கொப்பரைக்கு ரூ.95.21-ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்படுகின்றது.

அரசின் விலை ஆதரவுத் திட்டத்தினால், விவசாயிகளின் விளைபொருட்கள் விலை வீழ்ச்சிகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. மேலும், வெளிச்சந்தை விலையும் சரிசம நிலையிலேயே இருந்து வருவது இத்திட்டத்தின் சிறப்பாகும்.

அட்டவணை-7.13 மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள்

வ. எண்	மாவட்டம்	எண்கள்	உழவர் சந்தைகள்
1	அரியலூர்	2	அரியலூர், ஜெயங்கொண்டம்.
2	கோயம்புத்தூர்	9	ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், குறிச்சி, சூலூர், வடவள்ளி, சுந்தராபுரம், பல்லடம்.

வ. எண்	மாவட்டம்	எண்கள்	உழவர் சந்தைகள்
3	கடலூர்	5	கடலூர், சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, வடலூர்.
4	தருமபுரி	5	தருமபுரி, பெண்ணாகரம், பாலக்கோடு, அரூர், ஏ. ஜெட்டிஹள்ளி.
5	திண்டுக்கல்	5	திண்டுக்கல், பழனி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல், வத்தலகுண்டு.
6	ஈரோடு	5	சம்பத் நகர், கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பெரியார் நகர், பெருந்துறை.
7	காஞ்சிபுரம்	4	காஞ்சிபுரம், படப்பை, சுங்குவார்சத்திரம், குன்றத்தூர்.
8.	செங்கல்பட்டு	10	பல்லாவரம், செங்கல்பட்டு, மேடவாக்கம், நங்கநல்லூர், மதுராந்தகம், கீழ்க்கட்டளை, ஜமீன்ராயப்பேட்டை, கூடுவாஞ்சேரி, திருக்கழுகுன்றம், கண்ணகி நகர்.
9	கன்னியாகுமாி	2	வடசேரி, மைலாடி.
10	கரூர்	5	கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், பள்ளப்பட்டி, வெங்கமேடு.
11	கிருஷ்ணகிரி	5	ஓசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை, ஆவலப்பள்ளி.
12.	மதுரை	7	அண்ணாநகர், சொக்கிகுளம், பழங்காநத்தம், உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர், ஆனையூர்.
13.	நாகப்பட்டினம்	3	மயிலாடுதுறை, நாகப்பட்டினம், சீர்காழி.
14.	நாமக்கல்	6	நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர்.
15.	நீலகிரி	4	உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர்.
16.	பெரம்பலூர்	2	பெரம்பலூர், வேப்பந்தட்டை.
17.	புதுக்கோட்டை	6	புதுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, விராலிமலை.
18.	இராமநாதபுரம்	3	இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி.

வ. எண்	மாவட்டம்	எண்கள்	உழவர் சந்தைகள்
19.	சேலம்	11	சூரமங்கலம், அம்மாப்பேட்டை, ஆத்தூர், தாதகாப்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, அஸ்தம்பட்டி, இளம்பிள்ளை, தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், எடப்பாடி.
20.	சிவகங்கை	4	சிவகங்கை, தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர்.
21.	தஞ்சாவூர்	5	தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம்.
22.	தேனி	7	தேனி, கம்பம், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேவாரம், ஆண்டிப்பட்டி, சின்னமனூர்.
23.	திருநெல்வேலி	4	பாளையங்கோட்டை, கண்டியப்பேரி, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம்.
24.	தென்காசி	2	தென்காசி, சங்கரன்கோவில்
25.	திருப்பூர்	5	உடுமலைப்பேட்டை, திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), தாராபுரம், காங்கேயம்.
26.	திருவள்ளூர்	6	திருத்தணி, திருவள்ளூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, நாரவாரிகுப்பம், பேரம்பாக்கம்.
27.	திருவண்ணாமலை	8	திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யாறு, செங்கம், வந்தவாசி, கீழ்பெண்ணாத்தூர், தாமரைநகர்.
28.	திருவாரூர்	7	திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி-1, திருவாரூர், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, மன்னார்குடி-2, வலங்கைமான்.
29.	திருச்சிராப்பள்ளி	7	அண்ணாநகர், கே.கே.நகர், துறையூர், மணப்பாறை, முசிறி, துவாக்குடி, லால்குடி.
30.	தூத்துக்குடி	2	தூத்துக்குடி, கோவில்பட்டி.
31.	வேலூர்	4	வேலூர், காட்பாடி, குடியாத்தம், காகிதப்பட்டறை.
32.	திருப்பத்தூர்	3	திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி, வாணியம்பாடி.
33.	ராணிப்பேட்டை	2	ராணிப்பேட்டை, ஆற்காடு
34.	விழுப்புரம்	3	திண்டிவனம், விழுப்புரம், செஞ்சி.
35.	கள்ளக்குறிச்சி	3	கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம்.

வ. எண்	மாவட்டம்	எண்கள்	உழவர் சந்தைகள்
36.	விருதுநகர்	8	அருப்புக்கோட்டை, இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், காரியாபட்டி, தளவாய்புரம்
	மொத்தம்	**179**	

அட்டவணை 7.14 மாவட்ட வாரியான குளிர்பதனக் கிடங்குகள்

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
1.	கோயம்புத்தூர் (18 எண்கள்)	பொள்ளாச்சி	25
2.		செஞ்சேரி	25
3.		ஆனைமலை	25
4.		தொண்டாமுத்தூர்	25
5.		அன்னூர்	25
6.		காரமடை	50
7.		சிக்கதாசம்பாளையம்	500
8.		கிணத்துக்கடவு	500
9.		வடக்கிபாளையம்	25
10.		சிங்காநல்லூர் உழவர் சந்தை	15
11.		சூலூர் முதன்மைப்பதப்படுத்தும் நிலையம்	150
12.			25
13.			100
14.			40
15.		ஆனைமலை முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	40
16.		பொள்ளாச்சி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	40
17.		வடக்கிபாளையம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	40
18.		சிக்கதாசம்பாளையம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	40

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
19.	கடலூர் (3 எண்கள்)	கடலூர்	25
20.		பண்ருட்டி	25
21.		விருத்தாசலம்	25
22.	தருமபுரி (7 எண்கள்)	தருமபுரி	1000
23.		அரூர்	25
24.		பெண்ணாகரம்	25
25.		பாலக்கோடு	50
26.			50
27.			50
28.		பெண்ணாகரம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	110
29.	திண்டுக்கல் (9 எண்கள்)	திண்டுக்கல்	25
30.		ஒட்டன்சத்திரம்	25
31.		ஒட்டன்சத்திரம்	5
32.		பழனி	25
33.		பழனி	5
34.		வத்தலகுண்டு	5
35.		கோபால்பட்டி	25
36.		பழனி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	500
37.		கோபால்பட்டி முதன்மை பதப்படுத்தும் நிலையம்	500
38.	ஈரோடு (7 எண்கள்)	அவல்பூந்துறை	25
39.		கொடுமுடி	25
40.		அந்தியூர்	25
41.		சத்தியமங்கலம்	25
42.		புஞ்சை புளியம்பட்டி	25
43.		சத்தியமங்கலம்	100
44.		கோபிசெட்டிபாளையம்	1000
45.	கன்னியாகுமரி (1 எண்)	திங்கள்சந்தை	25

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
46.	கரூர் (1 எண்)	கரூர் (இராயனூர்)	25
47.	கிருஷ்ணகிரி (20 எண்கள்)	கிருஷ்ணகிரி	50
48.		கிருஷ்ணகிரி	25
49.		போச்சம்பள்ளி	25
50.		ஊத்தங்கரை	25
51.		ஓசூர்	25
52.		ஓசூர்	50
53.		ஓசூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	175
54.			100
55.			75
56.			25
57.		ஆலப்பட்டி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
58.		கிருஷ்ணகிரி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
59.		காவேரிப்பட்டினம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
60.		இராயக்கோட்டை முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	110
61.			110
62.		காமன்தொட்டி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	50
63.		போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	75
64.			500
65.			25
66.		தேன்கனிக்கோட்டை முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
67.	மதுரை (1 எண்)	திருமங்கலம்	25

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
68.	நாமக்கல் (4 எண்கள்)	நாமகிரிப்பேட்டை	25
69.		பரமத்தி-வேலூர்	25
70.		திருச்செங்கோடு	25
71.		மோகனூர்	5
72.	நீலகிரி (9 எண்கள்)	ஓசஹட்டி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
73.		அணிக்கொரை முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
74.		தாவணை முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
75.		உதகை ரோஜா பூங்கா முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	500
76.		கோத்தகிரி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
77.		புது அலஞ்சி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
78.		சுள்ளிக்கூடு முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	7
79.		உப்பட்டி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
80.		அய்யங்கொல்லி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
81.	பெரம்பலூர் (2 எண்கள்)	செட்டிக்குளம்	50
82.		பெரம்பலூர்	25
83.	அரியலூர் (1 எண்)	அரியலூர்	25
84.	புதுக்கோட்டை (2 எண்கள்)	இலுப்பூர்	100
85.		ஆலங்குடி	25

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
86.	இராமநாதபுரம் (6 எண்கள்)	பரமக்குடி	100
87.		கமுதி	25
88.		எட்டிவயல்	2000
89.		பரமக்குடி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
90.		முதுகுளத்தூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
91.		கமுதி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
92.	சேலம் (7 எண்கள்)	சேலம்	25
93.		ஆத்தூர்	25
94.		வாழப்பாடி 1	25
95.		வாழப்பாடி 2	25
96.		கெங்கவல்லி	25
97.		மேச்சேரி 1	25
98.		மேச்சேரி 2	100
99.	சிவகங்கை (1 எண்)	சிங்கம்புணரி	25
100.	தஞ்சாவூர்(2 எண்கள்)	வளப்பக்குடி	100
101.		தஞ்சாவூர்	25
102.	தேனி (10 எண்கள்)	கம்பம்	25
103.		தேனி	25
104.		ஓடைப்பட்டி	50
105.		சின்னமனூர்	5
106.		கம்பம்	500
107.		தேனி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
108.		சின்னமனூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
109.			13
110.		கம்பம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	25
111.			25

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
112.	தூத்துக்குடி (10 எண்கள்)	கோவில்பட்டி	25
113.		தூத்துக்குடி	25
114.		புதூர்	25
115.		கழுகுமலை	25
116.		ஸ்ரீ வைகுண்டம்	5
117.		விளாத்திகுளம்	100
118.		எட்டையபுரம்	25
119.		சாத்தான்குளம்	25
120.		புதூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
121.		விளாத்திகுளம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
122.	திருநெல்வேலி (6 எண்கள்)	அம்பாசமுத்திரம்	25
123.		அம்பாசமுத்திரம்	200
124.		வள்ளியூர்	25
125.		திருநெல்வேலி	25
126.		இராமையன்பட்டி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
127.		வள்ளியூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
128.	தென்காசி (7 எண்கள்)	சங்கரன்கோவில்	500
129.		தென்காசி	25
130.		பாவூர்சத்திரம்	1000
131.		கடையநல்லூர்	200
132.		பாவூர்சத்திரம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
133.		சங்கரன்கோவில் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10
134.		கடையநல்லூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	10

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
135.	திருவண்ணாமலை (7 எண்கள்)	திருவண்ணாமலை	25
136.		வேட்டவலம்	25
137.		செங்கம்	25
138.		சேத்துப்பட்டு	25
139.		போளூர்	25
140.		வந்தவாசி	25
141.		செய்யாறு	25
142.	திருச்சிராப்பள்ளி (10 எண்கள்)	திருச்செந்துறை	1000
143.		துவரங்குறிச்சி	100
144.		துறையூர்	100
145.		அண்ணாநகர்	5
146.		கள்ளிக்குடி	2000
147.		எம்.புதூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	13
148.		லால்குடி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	15
149.		பிடாரமங்கலம் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	15
150.		அரசலூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	15
151.		மண்ணச்சநல்லூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையம்	15
152.	திருப்பூர் (5 எண்கள்)	வெள்ளக்கோவில்	25
153.		பல்லடம்	25
154.		அவிநாசி	25
155.		உடுமலைபேட்டை	25
156.		பொங்கலூர்	50
157.	வேலூர் (1 எண்)	வேலூர்	25

வ. எண்	மாவட்டம்	குளிர்பதனக் கிடங்கு அமைந்துள்ள இடம்	கொள்ளளவு (மெட்ரிக் டன்)
158.	திருப்பத்தூர் (3 எண்கள்)	வாணியம்பாடி	25
159.		திருப்பத்தூர்	25
160.		ஜோலார்பேட்டை	25
161.	விழுப்புரம் (2 எண்கள்)	விழுப்புரம்	25
162.		திண்டிவனம்	15
163.	கள்ளக்குறிச்சி (2 எண்கள்)	கள்ளக்குறிச்சி	25
164.		உளுந்தூர்பேட்டை	25
165.	விருதுநகர் (3 எண்கள்)	விருதுநகர்	100
166.		இராஜபாளையம்	25
167.		அருப்புக்கோட்டை	25
			17,473
உழவர்சந்தை (27 எண்கள் 2 மெட்ரிக் டன்)			54
ஆக மொத்தம்			17,527

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

8.1 முன்னுரை

நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை அறிவியல் முறைப்படி மேற்கொண்டு இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் அந்த வளங்களை பங்கேற்பு அணுகுமுறையின்மூலம் நீடித்த வகையில் மேம்படுத்துதல் ஆகியவற்றின்மூலம் நீர்வடிப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் ஆகிய நோக்கங்களை அடைவதுடன் பயிர் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் விதத்தில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஒரு தனி முகமையாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் நீர்வடிப்பகுதி திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மானாவாரி பகுதிக்கான தேசிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் ஆகியவை 26 மாவட்டங்களில் 24 மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின்மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது கீழ்க்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன:

1. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்- நீர்வடிப்பகுதி மேம்பாடு–மற்றும் இதர உள்ளீடுகள் (துளிநீர் அதிக பயிர்).
2. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (நபார்டு நிதி உதவியுடன்)
3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) அறிவிக்கப்பட்டு செயலாக்கத் துறைகள், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளை ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து செயல்படுகிறது:

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

[2020 மார்ச் 24

2. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA)

3. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)

8.2 தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மறுசீரமைப்பு

நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவது தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் அதன் தொடர்புடைய மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளின் முக்கியப் பணியாகும். எனவே, இம்முகமைகளின் செயல்பாடு மத்திய அரசால், மாநிலத்திற்கு அனுமதிக்கப்படும் திட்டங்களைப் பொறுத்தே அமைகிறது.

புதிய நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மத்திய அரசால் 2020–2021 ஆம் ஆண்டிற்கு மேல் அனுமதிக்கப்படாத காரணத்தினால் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மறுசீரமைக்கப்பட்டு, 24 மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள் கைவிடப்பட்டு, துணை இயக்குநர் (நடவுத் தொழில்நுட்ப வல்லுநர்) மற்றும் உதவி இயக்குநர்/விரிவாக்க அலுவலர் பதவிகள் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அவர்களிடம் இணைக்கப்பட்டு நுண்ணீர்ப் பாசனம், நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பருவநிலை பாதுகாப்புத் திட்டம், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி மற்றும் துளிநீரில் அதிக பயிர்-துணை நிலை நீர்மேலாண்மை பணிகள் திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மத்திய அரசு திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக விளங்குவதால், மாநில தலைமையிடத்தில் இயங்கும் மாநில அளவிலான இணைப்பு முகமை (SLNA), தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நீடித்த வேளாண்மைக்கான தேசிய இயக்கம் ஆகிய பிரிவுகளின் தற்போதைய அமைப்புகள் தொடர்ந்து இயங்கும்.

வரும் காலங்களில், மத்திய அரசினால் புதிய நீர்வடிப்பகுதி திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டால், அவற்றைச் செயல்படுத்த ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட அலுவலர்களைக் கொண்டு, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள் மீண்டும் உருவாக்கப்படும்.

2020 மார்ச் 24]

8.3 பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-நீர்வடிப்பகுதி மேம்பாடு (முந்தைய ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம்)

பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டம்-நீர்வடிப்பகுதி மேம்பாட்டின்கீழ் ஆரம்பக் கட்ட பணி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இயற்கை வள மேம்பாடு, பண்ணை உற்பத்தித் திட்டம் மற்றும் குறுந்தொழில்கள், சுய உதவிக் குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப் பணிகள் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முன்னதாக, இத்திட்டம் 26 மாவட்டங்களில் உள்ள 2,763 நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதில் 1,632 நீர்வடிப்பகுதிகளில் திட்டம் முடிவுற்று மீதமுள்ள 1,131 நீர்வடிப் பகுதிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதம மந்திரியின் விவசாயப் பாசனத் திட்டம்-(நீர் வடிப்பகுதி மேம்பாடு) பணிகள் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைமூலம் கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

அட்டவணை 8.1 நீர்வடிப் பகுதி செயல்பாடுகள் மற்றும் பணிகள்

வ. எண்	செயல்பாடு	மேற்கொள்ளப்படும் பணிகள்
i.	நீர்வள மேம்பாடு (இயற்கைவள மேம்பாடு)	புதிய குளங்கள்/ஊருணிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல்.
ii.	பொதுக் கட்டமைப்பு மேம்பாடு (இயற்கைவள மேம்பாடு)	தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய் சீர் அமைத்தல், ஊருணி தூர்வாருதல், ஏரி மற்றும் குளங்கள் தூர்வாருதல்.
iii.	பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள்	பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத தொழில்கள் துவங்க அதிகபட்சமாக ரூ.24000/- விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

வ. எண்	செயல்பாடு	மேற்கொள்ளப்படும் பணிகள்
iv.	தாவர நடவுப்பணி	பழமரக் கன்றுகள் நடுதல், சமூக வேளாண் காடுகள் அமைத்தல், தீவனப்பயிர் மேம்பாடு, பயிர் பற்றிய செயல் விளக்கம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்
v.	சுய உதவிக் குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப்பணிகள்	நீர்வடிப் பகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.24,000/-மும், மற்றும் தனிநபருக்கு மானியமும் வழங்கப்படுகிறது.

பிரதம மந்திரி விவசாயப் பாசனத் திட்டம்-நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் (PMKSY-WDC)-கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.90.98 கோடி நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் (60:40) ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2019-2020 ஆம் ஆண்டில் நிதி விடுவிக்கப்பட்டு அனைத்து மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளுக்கும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

அட்டவணை 8.2 பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்-(நீர்வடிப் பகுதி மேம்பாடு) மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு (2019-2020)

(ரூ. கோடியில்)

வ. எண்	மாவட்டம்	ஒதுக்கீடு
1.	கோயம்புத்தூர்	2.27
2.	கடலூர்	2.23
3.	தருமபுரி	0.72
4.	திண்டுக்கல்	0.22
5.	ஈரோடு	0.92
6.	காஞ்சிபுரம்	1.07

வ. எண்	மாவட்டம்	ஒதுக்கீடு
7.	கரூர்	0.35
8.	கிருஷ்ணகிரி	0.66
9.	மதுரை	0.36
10.	நாமக்கல்	1.54
11.	பெரம்பலூர் & அரியலூர்	2.86
12.	புதுக்கோட்டை	1.86
13.	இராமநாதபுரம்	0.74
14.	சேலம்	1.55
15.	சிவகங்கை	0.40
16.	தேனி	1.01
17.	தூத்துக்குடி	2.04
18.	திருநெல்வேலி	0.68
19.	திருவள்ளூர்	0.15
20.	திருவண்ணாமலை	0.32
21.	திருச்சி	4.66
22.	வேலூர்	1.25
23.	விழுப்புரம்	2.36
24.	விருதுநகர்	1.11
மொத்தம்		**31.32**

ரூ.31.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் பிரதம மந்திரி விவசாய பாசனத் திட்டத்தின்கீழ் (நீர்வடிப்பகுதி மேம்பாடு) செயல்படுத்தப்பட்ட பணிகளுக்கான சாதனை விவரம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

அட்டவணை 8.3 இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள் (2019-2020)

(எண்களில்)

வ. எண்	மாவட்டம்	பண்ணைக் குட்டை	தடுப்பணை	கசிவு நீர் மற்றும் கிராம குட்டை	குளம் புதுப்பித்தல்	நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு	மொத்தம்
1.	கோயம்புத்தூர்	-	1	-	-	-	1
2.	காஞ்சிபுரம்	-	2	1	-	-	3
3.	கிருஷ்ணகிரி	-	-	-	-	21	21
4.	நாமக்கல்	-	24	-	3	20	47
5.	பெரம்பலூர் & அரியலூர்	-	6	-	21	-	27
6	புதுக்கோட்டை	5	6	5	18	11	45
7.	இராமநாதபுரம்	-	-	-	3	-	3
8.	சேலம்	12	20	5	15	-	52
9.	சிவகங்கை	-	-	1	-	-	1
10.	திருச்சி	-	69	5	37	5	116
11.	விழுப்புரம்	1	3	-	1	13	18
மொத்தம்		**18**	**131**	**17**	**98**	**70**	**334**

2020 மார்ச் 24]

அட்டவணை 8.4 பண்ணை உற்பத்தித் திட்டம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு பணிகள் (2019-2020)

(எண்களில்)

வ. எண்	மாவட்டம்	தெளிப்பான்கள்	விவசாய உபகரணங்கள்	இதர பணிகள் (**)	சுய உதவிக் குழுக்கள்	தனிநபர் பயனாளிகள்	மொத்தம்
1	கோயம்புத்தூர்	-	-	-	171	140	311
2	கடலூர்	840	585	-	-	-	1,425
3	தருமபுரி	-	-	-	161	163	324
4	காஞ்சிபுரம்	-	-	-	237	178	415
5	கிருஷ்ணகிரி	-	-	-	149	155	304
6	இராமநாதபுரம்	-	-	-	175	-	175
7	சிவகங்கை	241	510	-	-	-	751
8	தேனி	-	-	-	100	92	192
9	தூத்துக்குடி	171	183	-	271	-	625
10	திருச்சி	-	-	-	375	357	732
11	திருநெல்வேலி	-	-	-	158	137	295
12	வேலூர்	-	-	-	30	-	30
13	விழுப்புரம்	123	194	-	-	-	317
14	விருதுநகர்	662	904	437	-	-	2,003
மொத்தம்		**2,037**	**2,376**	**437**	**1,827**	**1,222**	**7,899**

(**) வேளாண்காடுகள் வளர்ப்பு, தோட்டக்கலை பயிர் வளர்ப்பு

[2020 மார்ச் 24

2020-2021 ஆம் ஆண்டில், 270 திட்டங்களில், திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் திட்ட மதிப்பீட்டுப் பணிகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திட்ட ஒருங்கிணைப்புப் பணியின்கீழ் நீர்வடிப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளை பராமரிக்கவும் பண்ணை உற்பத்தியினை இயந்திரமயமாக்கல்மூலம் அதிகரிக்கவும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி, சுழல்நிதி மீட்டுத் தொகை மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு நிதி ஆகியவை தொகுக்கப்பட்டு ரூ.103 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன.

திட்ட கண்காணிப்பு மற்றும் திட்ட மதிப்பீடு பணிகளின்கீழ் காணொலி அமைப்புகள் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் அலுவலகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை துறை வேளாண் விற்பனை மற்றும் வணிகம், வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஆகியவற்றின் மாநில அளவிலான அலுவலகங்கள் மற்றும் வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலை துறையின் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் நிறுவப்படும்.

8.4 நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம்

நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம், நபார்டு நிதி உதவியுடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டமானது மாநில அரசு (50% கடன்) மற்றும் நபார்டு வங்கி (50% மானியம்) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

இதன்கீழ், மாநில அரசுடன் 50:50 பங்கீட்டு அடிப்படையில் நபார்டுமூலம் செயல்படுத்தப்படும் 147 திட்டங்களில், நபார்டு வங்கியின்மூலம் 102 திட்டங்கள் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 91 திட்டங்கள் முழுமையான செயலாக்க கட்டத்தின் (Full Implementation Phase) முதல் பகுதி முடிவுற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 11 திட்டங்களில் முழுமையான செயலாக்க கட்டத்தின் முதல் பகுதி தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம் அரசு சாரா நிறுவனங்களின்மூலம் செயல்படுத்தப்படுகிறது (NGOs).

அட்டவணை 8.5 நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின் முக்கிய இனங்கள்

வ. எண்	செயல்பாடு	மேற்கொள்ளப்படும் பணிகள்
1.	செயல்பரப்பு பணிகள்	நீர்வடிப் பகுதியில் வயல் வரப்பு, சமவெளி வரப்புத் தடுப்புகள், நீர்சேகரிப்புக் குழிகள், தோண்டப்பட்ட கிணறு, செறிவூட்டும் குழி, பண்ணைக் குட்டை, கசிவுநீர்க் குட்டை, அமிழ்வுநீர்க் குட்டை, வேளாண் காடுகள், பழமரக் கன்றுகள், கால்நடை வளர்ப்பு, புல்வெளி வளர்த்தல் ஆகிய பணிகள்
2.	வடிகால் அமைப்பு பணிகள்	கல்தடுப்பு அமைப்புகள், நீர்சேகரிப்பு அமைப்புகள் சீரமைத்தல், பண்ணைக் குட்டைகள், குளங்கள் தூர்வாருதல், வாய்க்கால்கள் சரிசெய்தல் ஆகிய பணிகள்
3.	நிலமற்றவர்கள் மற்றும் மகளிர்க்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்	சுய உதவிக் குழுக்கள், நிலமற்றவர்கள் மற்றும் மகளிர்க்கு வருமானத்தை ஏற்படுத்தித் தரும் பணிகள்
4.	பயிற்சி	நீர்வடிப்பகுதி பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது - ஊரக பங்கேற்பு முறையின் அடிப்படையில் தேவைக்கேற்ப நீர்வடிப்பகுதி திட்டமிடுவது குறித்து பயிற்சி

2018-2019 ஆம் ஆண்டில், 6 நீர்வடிப் பகுதிகளுக்கு ரூ.2.748 கோடி நிதி மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 மாவட்டங்களுக்கு நிதி கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன:

[2020 மார்ச் 24

அட்டவணை 8.6 நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு விவரம் (2018-19)

(ரூ.இலட்சத்தில்)

வ.எண்	மாவட்டம்	திட்டத்தின் பெயர்	தொண்டு நிறுவனத்தின் பெயர்	50% திட்ட நிதி	நிதி விடுவிப்பு 2019-20	செலவினம்
1.	புதுக்கோட்டை	ஒடுக்கூர்	ஜிசிஎப்	36.654	24.436	12.218
2.	புதுக்கோட்டை	மாம்பட்டி	ஜிஎஸ்எஸ்	49.253	39.246	16.418
3.	திருவள்ளூர்	கொப்பூர்	விஆர்டிஎஸ்	46.375	30.916	15.458
4.	திருச்சி	அய்யம்பாளையம்	ஸ்கோப்	44.938	29.958	14.245
5.	கடலூர்	காரைக்காடு	எச்ஜஎச்	53.797	17.932	13.141
6.	மதுரை	கேசம்பட்டி	ஜஎடிஎப்	43.804	29.202	14.601
		மொத்தம்		274.821	171.69	86.081

8.5 பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாட்டின் மானாவாரி பகுதிகளில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் காலநிலை விளைவுகளை மேம்படுத்துவதோடு சமூகங்களின் தகவமைப்பு திறன்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்போது, இத்திட்டம் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 20 நீர்வடிப் பகுதிகளில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி செலவில் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின்மூலம் 2019-2020 முதல் 2022-2023 வரையிலான நான்கு ஆண்டுகாலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியைத் திட்ட முகமையாகவும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை செயலாக்க நிறுவனமாகவும் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

2020 மார்ச் 24]

இத்திட்டத்தின்கீழ் விருதுநகர் மற்றும் சேலம் மாவட்டங்களில் நுழைவுக்கட்ட பணி, நீர் ஆதார மேம்பாட்டுப் பணிகள், மண்வள மேலாண்மைப் பணிகள், பயிர் மேலாண்மை, வாழ்வாதாரம் மற்றும் சிறு தொழில் மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள முதல் கட்டமாக ரூ.4.01 கோடி நபார்டு வங்கியின்மூலம் விடுவிக்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அட்டவணை 8.7 பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின்கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் நிதி ஒதுக்கீடு (2019-2020)

(ரூ. கோடியில்)

வ. எண்	திட்ட விவரம்	முதல் தவணை ஒதுக்கீடு					
		சேலம்		விருதுநகர்		கூடுதல் மொத்தம்	
		பொருள் இலக்கு	நிதி இலக்கு	பொருள் இலக்கு	நிதி இலக்கு	பொருள் இலக்கு	நிதி இலக்கு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
I	நுழைவு கட்டப் பணி (EPA)	18	0.180	18	0.180	36	0.360
II	நீர் சேமிப்பு மற்றும் மண்வளப் பாதுகாப்பு (NRM)	310	1.094	456	1.244	766	2.338
III	பயிர் மேலாண்மைத் திட்டம் (FPS)	244	0.223	272	0.142	516	0.365
IV	வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகள் (LSS)	70	0.246	46	0.164	116	0.410
V	பருவநிலை பாதுகாப்புப் பணிகள் (Add on Activities)	92	0.088	156	0.134	248	0.222
VI	விவசாயிகள் மற்றும் குழு பயிற்சிகள் (ICB)	48	0.117	32	0.085	80	0.202

VII	நிர்வாகச் செலவு 3%	-	0.058	-	0.060	-	0.118
VIII	நபார்டு வங்கி கண்காணிப்புச் செலவு 3%	-	0.000	-	0.000	-	0.000
	கூடுதல் மொத்தம்	**782**	**2.006**	**980**	**2.009**	**1,762**	**4.015**

9. கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

2020-2021 செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
மானியக் கோரிக்கை அனுமதித்தது	11,387,31,27	376,41,77	130,75,00	11,894,48,04
மொத்த தொகை சாட்டியது	15	...	...	15

நிகர செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

கணக்குத் தலைப்பு		2018-2019 கணக்குகள்	2019-2020 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2019-2020 திருத்த மதிப்பீடு	2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப் பணிகள்	2,58,50	2,66,75	2,68,00	2,70,75
2401	பயிர் வளர்ப்பு	7,793,01,69	8,695,74,64	9,065,39,77	9,649,08,97
2402	மண்வள, நீர்வளப் பாதுகாப்பு	141,90,40	91,96,37	175,36,31	401,89,27
2408	உணவு சேமிப்பு -கிடங்கு வசதி		100,00,00	51,61,85	243,31,39
2415	வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி	425,39,64	594,87,51	659,54,11	602,69,75

2020 மார்ச் 24]

கணக்குத் தலைப்பு		2018-2019 கணக்குகள்	2019-2020 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2019-2020 திருத்த மதிப்பீடு	2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
2435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	201,15,48	300,04,29	312,34,46	255,96,39
2501	ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள்	155,16,60	183,87,60	50,98,35	3
2551	மலைப் பகுதிகள்	88,01	93,24	1,05,15	1,08,97
2702	சிறுபாசனம்	7,88,57	8,39,86	9,48,16	9,54,05
2705	பாசனப் பகுதி மேம்பாடு	-1	34	8	9
2810	புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி	10,91,11	8,50,00	55,05,31	201,33,54
3451	தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள்	13,07,86	13,58,88	14,39,04	17,50,98
4401	பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு	79,46,94	83,13,02	89,24,48	123,88,18
4402	மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு	32,19,75	134,06,04	104,22,79	21,59,05
4435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	236,91,69	201,48,89	152,10,78	230,94,46

கணக்குத் தலைப்பு		2018-2019 கணக்குகள்	2019-2020 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	2019-2020 திருத்த மதிப்பீடு	2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
4705	பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு		8		8
6401	பயிர் வளர்ப்புக்கான கடன்கள்		130,00,00	130,00,00	130,00,00
7610	அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள்	58,50	75,00	75,00	75,00

கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

2020-2021 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

வ. எண்	துறைத் தலைவர்			வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	0501	தலைமைச் செயலகம்	அனுமதித்தது	17,50,98	...	75,00	18,25,98
2.	0502	வேளாண்மை இயக்ககம்	சாட்டியது	11	...	...	11
			அனுமதித்தது	7,100,87,98	104,51,12	130,00,00	7,335,39,10
3.	0503	வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம்	அனுமதித்தது	504,58,58	230,94,46	...	735,53,04
4.	0504	விதைச் சான்று இயக்ககம்	அனுமதித்தது	57,79,26	3	...	57,79,29
5.	0505	தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம்	சாட்டியது	2	...	...	2
			அனுமதித்தது	2,084,01,09	19,37,02	...	2,103,38,11
6.	0506	வேளாண்மைப் பொறியியல் துறை	சாட்டியது	2	...	...	2
			அனுமதித்தது	1,039,25,86	21,59,14	...	1,060,85,00
7.	0507	வேளாண் பொறியியல் பணிகள்	அனுமதித்தது	49,65	...	...	49,65

2020 மார்ச் 24]

வ. எண்	துறைத் தலைவர்			வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
8.	0508	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்	அனுமதித்தது	581,85,96	...	...	581,85,96
9.	0509	அங்ககச் சான்றளிப்பு இயக்ககம்	அனுமதித்தது	91,91	...	...	91,91
மொத்தம்			சாட்டியது	15	...	...	15
			அனுமதித்தது	11,387,31,27	376,41,77	130,75,00	11,894,48,04

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

நிறைவுரை

நீடித்த வேளாண்மை, சிறு விவசாயிகளை மேம்படுத்துதல், பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல், கிராமப்புற வறுமையை ஒழித்தல், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை உறுதி செய்தல் ஆகிய நோக்கங்களை அடையும் வகையில் பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டினை அடைதல் மற்றும் வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் போன்றவற்றை நீடித்த வளர்ச்சி இலக்குகளாக கொண்டுள்ளது.

வேளாண் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க பிரதம மந்திரி விவசாய பாசனத் திட்டத்தின்கீழ் துளிநீரில், அதிக பயிர் என்ற குறிக்கோளுடன் பாசன நீரின் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல், சிறு/குறு விவசாயிகளுக்குச் சொட்டுநீர்/ தெளிப்புப் பாசனம் நிறுவ 100 சதவீத மானியம் வழங்குதல் மற்றும் பிரதம மந்திரி விவசாயிகள் நிதி உதவித் திட்டம் போன்ற திட்டங்கள் விவசாயிகளின் வருமானத்திற்கு மேலும் ஊக்கமளிக்கின்றன. பிரதம மந்திரி விவசாயிகள் சம்பதா திட்டத்தின்கீழ், பெரிய அளவிலான உணவுப் பூங்காக்கள், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல், தொடர் குளிர் வசதிகள், மதிப்பு கூட்டல் உட்கட்டமைப்பு ஆகிய பணிகளுக்குத் தேவையான நிதியளித்தல், தீவிர நெல் சாகுபடி, நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, நீடித்த மானாவாரி வேளாண்மைக்கான இயக்கம், கூட்டுப் பண்ணையம், தேசிய தோட்டக்கலை இயக்கம்மூலம் மாற்றுப் பயிர் சாகுபடி மற்றும் நவீன சாகுபடி முறைகளை ஊக்குவித்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்துகிறது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் (SADP) வனங்கள் மற்றும் மலையடிவாரத்திலுள்ள கிராம விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்திற்கு வழிவகுக்கப்படுகிறது. விவசாயிகள் வேளாண் இயந்திரங்களை வாங்குவதற்கு வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்தின் (SMAM)-கீழ் மானிய உதவி வழங்கப்படுகிறது. நபார்டு வங்கியின் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், நிலமற்ற பெண்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

நிலைத்த உணவு உற்பத்தி முறைகளையும், திறன்மிக்க வேளாண் செயல்முறைகளையும் நடைமுறைப்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் திட்டங்களை வேளாண் துறை செயல்படுத்தி வருகிறது. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பயிர் இழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல், பயிர்க் கடன், மண்வள மேம்பாடு, இரசாயன பூச்சிக்கொல்லிகளை தேவைக்கேற்ப சரியான அளவில் பயன்படுத்துதல், பயிர் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளினால், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, மொத்த சிறுதானியங்கள், மலர் மற்றும் மலைப் பயிர்கள் உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

சூரியசக்தி பம்புசெட்டுகள் மற்றும் சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல், வேளாண்மையில் பசுமை ஆற்றல் பயன்பாடுகள் போன்றவற்றால் விவசாயத்திற்குக் குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நிலைத்த ஆற்றல் கிடைக்கிறது.

நிலையான வேளாண் உற்பத்திக்கு தேவையான நீர்வள மேலாண்மை, மண் மற்றும் நீர்வள மேம்பாடு மற்றும் துணை பாசனத்திற்காக பண்ணைக்குட்டைகள் அமைத்தல் ஆகியவை பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டத்தின்படி, மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், விவசாயத்திற்கு மற்றொரு வரமான சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்தின்மூலம் தண்ணீர் 25 முதல் 60 சதவீதம் சேமிக்கப்பட்டதால், உற்பத்தித்திறன் 10-60 சதவீதம் அதிகரித்துள்ளது.

பண்ணை இயந்திரமயமாக்கல் நடவடிக்கைகள், பசுமை ஆற்றல் பயன்பாடுகள், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. விரைவில் அழுகும் தன்மைகொண்ட பொருட்களுக்கான விநியோகத் தொடரினை ஒருங்கிணைக்கும் விதமாக, விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம், வேளாண்மைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகள் கூட்டாக

[2020 மார்ச் 24

இணைந்து, சந்தைப்படுத்துவது, மதிப்புக் கூட்டிய வேளாண் பொருட்கள் தயாரிப்பது, உணவுப் பதப்படுத்துவது மற்றும் ஏற்றுமதி போன்ற பல்வேறு முறைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் விவசாயிகள், சந்தை சார்ந்த வேளாண்மையை நோக்கிப் பயணிக்க ஏதுவாகிறது.

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடவும், விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாத்திடவும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. சந்தை சார்ந்த வேளாண்மை என்னும் நோக்கத்தில் செயல்படுவதால், விவசாயிகள் தொழில்முனைவோர் ஆகும் நிலையினை வரும் காலங்களில் காண்பது திண்ணம்.

பயிர்களின் மரபணுவின் பன்முகத்தன்மையை குறையாமல் பராமரிக்கும் விதமாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயிர் விதைகளை குறுகிய மற்றும் நீண்டகாலத்திற்கு பாதுகாக்கும் திறன்கொண்ட பயிர் விதைகளுக்கான ஒரு மரபணு வங்கி நிறுவப்பட்டுள்ளது. தற்போது, 46 பயிர் இனங்களின் 27,724 விதைகள் இந்த வங்கியில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நிலையான, பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டினை அடையும் வகையில் வேளாண் பயிர்களின் இரகங்களும் வளங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

உழவன் செயலிமூலம் விவசாயிகளுக்கு எனது பண்ணை வழிகாட்டி, தேசிய மின்ஆளுமைத் திட்டம்-வேளாண்மை, வேளாண்மை அறிவிக்கை முறை, கிசான் அழைப்பு மையம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டும் வகையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம், தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்கள் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

மாநில அரசானது, விவசாயிகளின் வள ஆதாரங்கள் மற்றும் பண்ணை அமைப்புகளை அறிந்துகொண்டு, வளமற்ற விவசாயிகளுக்கேற்றவாறு உரிய வேளாண் தொழில்நுட்பங்களை வடிவமைத்து உருவாக்குகின்றன. பண்ணை மகளிர்களுக்கு உரிய அதிகாரமளிப்பதைக் கவனத்தில்கொண்டு, மாநில அரசானது வருவாய் ஈட்டும் தொழில்நுட்பங்களையும் அவர்களுக்கேற்ற, வேளாண் உபகரணங்களைத் தக்க தொழில்நுட்பங்களுடன் உருவாக்கி வருகின்றது.

இச்சீரிய முயற்சிகள் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படுவதால், விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்படும் என்பதோடு பயிர் உற்பத்தித்திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XI

(45 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021

அத்தியாயம்-I

முன்னுரை

தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்தில் நாட்டின் மிகவும் முன்னேறிவரும் மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இன்று தகவல் தொழில்நுட்பம் உலகப் பொருளாதாரங்கள் மற்றும் வணிகங்களை இயக்குவதுடன், இம்மாநிலத்தையும் ஒரு நவீன பொருளாதாரமாக உருமாற்றிட பெரிதும் உதவியுள்ளது. தமிழ்நாடு தற்போது தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் துறையில் முன்னிலை வகிப்பதுடன், உலகளாவிய அளவில் முதன்மை மாநிலமாகவும் திகழ்கிறது.

தமிழ்நாடு நல் ஆளுமையில் நாட்டின் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. நல் ஆளுமை என்பது முடிவுகளை எடுப்பதற்கும், அவற்றை செயல்படுத்துவதற்கும், பொது மக்களுக்கான சேவைகளை விரைவாக, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படையான முறையில் வழங்கிடும் முறையாகும்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில் துவங்குவதற்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே உகந்த மாநிலமாகத் திகழ்கிறது. பொதுமக்கள் அரசுசார் தகவல்களை விரைந்து பெற்றிடவும், அரசின் சேவைகளைத் துரிதமாகவும், திறம்படவும் அவர்களுக்கு வழங்கிடும் வகையிலும் அமைந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை இம்மாநிலம் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களை உருவாக்குதல், மனித வளங்களை செவ்வனே பயன்படுத்துதல் ஆகியவற்றின்மூலம் மாநிலத்தை "புதுமைகளுக்கான மையம் மற்றும் அறிவுசார் தலைநகரம்" ஆக மாற்றியமைப்பதே தமிழ்நாடு தொலைநோக்கு ஆவணம் 2023-ன் நோக்கமாகும். இதனை எய்திடும் நோக்கில், உயர்ந்து

[2020 மார்ச் 24

வரும் தேவைக்கேற்ப தகவல் தொழில்நுட்பத் திறன் கொண்ட மனித வளத்தினை மாநிலம் திறம்பட மேம்படுத்தி வருகிறது.

மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறையை மேம்படுத்துவதற்கும், மின் ஆளுமையை ஊக்குவிப்பதற்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறை உருவாக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பவியல் துறையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- தகவல் மற்றும் பரிவர்த்தனை சார்ந்த அரசின் சேவைகளை பொதுமக்களுக்கு அவர்களின் இல்லத்திலேயே இணைய வழியாக வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்ப ஆளுமையில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக்குதல்.
- தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியினை கணிசமாக உயர்த்துதல்.
- தமிழ்நாட்டில் அனைத்து இல்லங்களுக்கும் கேபிள் டிவி இணைப்புகளை குறைந்த கட்டணத்தில் வழங்குதல்.
- நகர்ப்புற இல்லங்களைப் போலவே கிராமப்புற இல்லங்களிலும் கண்ணாடி இழை தொழில்நுட்பத்தின்மூலம் அதிவேக இணைய இணைப்பை வழங்குதல்.
- உலகெங்கும் வாழும் தமிழ் சமுதாயத்திற்காக இணைய வழியான தமிழ் கல்வி அளித்தல் மற்றும் கணித் தமிழை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லுதல்.
- தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின்மூலம் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே பிற அரசு துறைகள் அவர்தம் மின் ஆளுமைத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த உதவி வருவதுடன், அதற்கான மென்பொருள் பயன்பாடுகளை ஆலோசித்து உருவாக்கி, வடிவமைத்து மேம்படுத்துதல், வன்பொருள் அளவீடு மற்றும் கொள்முதல், தரவேற்றம், வலையமைப்பு மற்றும் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை, பயிற்சி, வெளிப்புற பணியாளர் தேர்வு மற்றும் தொடர்புடைய சேவைகள் ஆகியவற்றையும் வழங்கி வருகிறது. மேலும், வலையமைப்பு,

2020 மார்ச் 24]

தரவேற்றம் சார்ந்த சேவைகள், பேரிடர் மீட்பு மற்றும் தரவுப் பாதுகாப்புக்கான ஒரு உலகத் தரத்திலான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பையும் உருவாக்கியுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்காக இரண்டாம் நிலை நகரங்களில் எட்டு தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், சென்னை மற்றும் கோவையில் தொழில் முனைவோர் மையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. சேவைகளுக்கான நிறுவனங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக அமைவதற்காகவும் மற்றும் அதிக முதலீடுகளை பெறுவதற்காகவும் இரண்டாம் நிலை நகரங்களில் 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தொழில் முனைவோர் மையம் நிறுவப்பட்டுள்ளது. சென்னையில் நிதி தொழில்நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம், வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம் ஆகியன நிறுவப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்ப புரட்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில் அமைந்த ஒரு விரிவான மின்னாளுமைக் கொள்கை மற்றும் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. அரசுத் துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பிரத்யேக தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

காகிதப் பயன்பாடற்ற நிருவாக செயல்பாடுகளுக்காக, அரசுத் துறைகளில் மின் அலுவலகம் மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் முக்கிய மாநாடுகளை நடத்திடும் வகையில் – மத்திய அரசின் மின்னணு மற்றும் தொலைதொடர்புத் துறை, தேசிய தகவலியல் நிறுவனம், C-DAC, STPI, SETS, STQC, IIT-MRP போன்ற அரசுத் துறை நிறுவனங்களுடனும், NASSCOM, CII, FICCI, ELCINA, MAIT போன்ற தனியார் நிறுவனங்களுடன் பங்குதாரராக இம்மாநிலம் இணைந்துள்ளது.

மக்களுக்கான அரசின் சேவைகளை வழங்கும் முறையை புரட்சிகரமான வகையில் மாற்றி அமைத்திடும் "குறிப்பறிந்து அரசின் சேவைகள் வழங்கும் திட்டம்" செயல்படுத்தப்படும். இத்திட்டம் மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பினை உருவாக்கி மேம்படுத்துதல் மற்றும் மாநிலத்தில் உருவாக்கப்படவுள்ள

[2020 மார்ச் 24

நம்பிக்கை இணைய கட்டமைப்பின்மூலம் செயல்படுத்தப்படும். "மக்களைத் தேடி அரசு" எனும் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும் இத்திட்டம் மக்கள் அரசுத் துறைகளை நாடிச் சென்று அரசின் சேவைகளை பெறுவதை முற்றிலுமாகத் தவிர்த்திட உதவிடும். மாநிலத்தில் உள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துகளையும் குறைந்தபட்சம் 1 Gbps வேகத்துடனான இணைப்பின்மூலம் இணைத்திடும் 'பாரத்நெட்' மற்றும் 'தமிழ்நெட்' திட்டங்கள், ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை இம்மாநிலம் எய்திடப் பெரிதும் துணைபுரியும்.

அத்தியாயம்-II

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

1. முன்னுரை

இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ், 21-3-1977 அன்று, மாநிலத்தில் மின்னணுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் எல்காட் நிறுவனம் உருவாக்கப்பட்டது. எல்காட் நிறுவனம், நிறுவப்பட்டதிலிருந்து தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக பல்வேறு அரசுத் துறைகளின் முன்னேற்றத்திற்கு சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. இந்நிறுவனம் பல கூட்டு நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கும், மின்னணுத் தொழில் துறையின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து உதவி வருகிறது. தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலுக்குப் பிறகு தொழில் துறையின் நிலைக்கேற்ப மின்னணு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITeS) பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொள்முதல் முகமையாகவும் எல்காட் நிறுவனம் விளங்குகிறது.

எல்காட் நிறுவனம் தன்னுடைய செயல்பாடுகளை விரிவுபடுத்திடும் நோக்கில், சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (2), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் சுமார் 1321.61 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.664.88 கோடி முதலீட்டில், எட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி, சுமார் 94,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் (TNSDC), தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC), மேகக்கணினியம் (Cloud) முதலான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளையும் எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

2. செயல்பாடுகள்

2.1. கொள்முதல்

அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து தரமான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களைக் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள்

கொள்முதல் செய்து வழங்குகிற விருப்பக் கொள்முதல் முகமையாக எல்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

2.2. எல்காட் மின்னணுச் சந்தை (ELCOT-e-Market)

எல்காட் (https://emarket.elcot.in) என்ற மின்னணுச் சந்தை வாயிலாக அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மாநில தன்னாட்சி அமைப்புகள் தங்களுக்குத் தேவையான வன்பொருள் மற்றும் மென்பொருட்களைத் தரமானதாகவும், குறைந்த விலையிலும் கொள்முதல் செய்து அதற்கான தொகையை நிகழ்நிலை மூலமாக எல்காட்டிற்கு செலுத்தமுடியும். கொள்முதல் ஆணை வழங்குவது முதல் இறுதி விலைப்பட்டியல் தயாரிப்பது வரையிலான அனைத்து நிகழ்வுகளையும் இச்சந்தையின் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்க முடியும்.

இந்த மின்னணுச் சந்தை 2019-ல் நடைபெற்ற 'கனெக்ட்' கருத்தரங்கத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

2.3. தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் முக்கியக் காரணியாக விளங்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (IT/ITeS) துறை, உலக அளவில் இந்தியாவிற்கான ஒரு முக்கிய இடத்தை தக்க வைத்துள்ளது. இதன் வாயிலாக மாநிலத்திற்கான வளர்ச்சியை மேம்படுத்த தமிழக அரசு, எல்காட் நிறுவனம்மூலம் கீழ்க்கண்ட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

1. தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITeS) சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குதல்.

2. தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கு உகந்த இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிட, தேசிய மற்றும் பன்னாட்டளவில் மதிப்புமிக்க, தகவல் தொழில்நுட்பவியல் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் பங்கேற்றல் மற்றும் நடத்துதல்.

3. தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT-Park) மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் போன்ற உட்கட்டமைப்புகளை

ஊக்குவிப்பதற்காகத் தடையின்மைச் சான்றிதழ் (NOC) வழங்குதல்.

4. இளம் தொழில் முனைவோர்கள் தொடக்க நிலை நிறுவனங்களை நிறுவுவதை ஊக்குவிக்க தொழில்முனைவோர் மையங்களை நிறுவுதல்.

5. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (IT/ITeS) வழங்கிடும் நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து ஒப்புதல்களையும் பெற உதவுதல்.

6. சமீபத்தில் நிறைவடைந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019-ல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் (IT/ITeS) துறையில் சுமார் ரூ.11,974 கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

2.4. தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு வன்பொருள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சிகளான புதுதில்லி-இந்திய மற்றும் சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி (Indian International Trade Fair), பெங்களூரு டெக் சம்மிட் (Bengaluru Tech Summit), நாஸ்காம் டெக்னாலஜி லீடர்ஷிப் ஃபோரம் (Nasscom Technology Leadership Forum), ஜிடெக்ஸ்-துபாய் (GITEX-Dubai) போன்ற கருத்தரங்குகள், கண்காட்சிகளில் பங்கு பெறுதல் மற்றும் விளம்பரங்கள்மூலம் எல்காட் நிறுவனம் தனது வர்த்தகத்தை மேம்படுத்தி வருகிறது.

தமிழக அரசின் எல்காட் நிறுவனம் இந்திய தொழில் துறை கூட்டமைப்பு நிறுவனத்துடன் (CII) இணைந்து ஆண்டுதோறும் CONNECT என்னும் தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப நிகழ்ச்சியை கடந்த 18 ஆண்டுகளாக சென்னையில் நடத்தி வருகிறது. இந்த முதன்மையான நிகழ்வில் தொழில்நுட்ப வல்லுநர்கள், தொழில் தலைவர்கள், கல்வியாளர்கள், உட்கட்டமைப்பு வழங்குநர்கள் மற்றும் தொடக்க நிலை நிறுவனங்கள் பங்கேற்கின்றன. தகவல் தொழில்நுட்பத் துறையின் சமீபத்திய வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்கள் குறித்து அறியும் தளமாக இந்த நிகழ்ச்சி விளங்குகிறது. எலெக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (ELCINA)-வின் 'சோர்ஸ் இந்தியா' (SOURCE INDIA) நிகழ்ச்சியை நடத்த தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாக

[2020 மார்ச் 24

ஆதரவளித்து, பங்கேற்று வருகிறது. மின்னணுத் துறையில் பெரிய, சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பெரும் வாய்ப்பாக இந்த நிகழ்ச்சி அமைகிறது. தமிழகத்தில் மின்னணு நிறுவனங்கள் தொடங்குவதற்கு ஏதுவான உட்கட்டமைப்புச் சூழலை ஏற்படுத்த மின்னணு உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கான நில வங்கியை உருவாக்க எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கொண்ட குழுக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இக்குழுக்களில் எல்காட் நிறுவனமும் பங்கேற்று, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீடுகளை கொண்டுவரும் முயற்சியில் பெரும்பங்கு வகிக்கிறது.

2.5. எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs)

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான நிறுவனங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவலாக அமைவதற்கு ஏதுவாக, எட்டு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் எல்காட் நிறுவனம் உருவாக்கி உள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் (ELCOSEZs), உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தேவையான நிலங்கள் மற்றும் இடங்களை எல்காட் நிறுவனம் ஒதுக்கீடு செய்து வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டிற்கான இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (ELCOSEZs) மென்பொருள் ஏற்றுமதி ரூ.21,700 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்களின்மூலம் 94,000 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs), குறிப்பிடத்தக்க வகையில் ஏற்றுமதி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை மாநிலத்தில் உருவாக்கி உள்ளது.

2020 மார்ச் 24]

2.5.1. எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.198.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. எல்காட் இதில் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி 6,358 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக கட்டடத்தைக் கட்டி உள்ளது.

மேற்கண்ட வசதிகளை மேம்படுத்துவதற்காக, கூடுதல் உட்கட்டமைப்புப் பணிகள், ரூ.36.05 கோடி செலவில் 2019-2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த எல்கோசெஸ்ஸில் முதன்மை நிறுவனங்களான திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் (M/s. Wipro Ltd.,), எச்.சி.எல் (M/s. HCL), டெக் மகிந்திரா (M/s. Tech Mahindra), ஃபோர்டு மோட்டார் பிரைவேட் லிமிடெட் (M/s. Ford Motor Pvt. Ltd.), காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s.Cognizant Technologies Solutions Pvt. Ltd.) ஆகியவை 109.31 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து 68,600 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் பிரிவுகளான மென்பொருள் உருவாக்கம், பராமரிப்பு மற்றும் சோதனை (Software Development, Maintenance & Testing), ஆலோசனை (Consulting) மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2.33 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், ரூ.83.73 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இதைத் தவிர ரூ.10.62 கோடி முதலீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.5.2. எல்கோசெஸ் (ELCOSEZ)-விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.167.31 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார

மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி 3,524 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாகக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் (M/s. WIPRO) மற்றும் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் (M/s. TIDEL Park Coimbatore Limited (TPCL)) ஆகிய நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 14,300 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, எல்காட் நிறுவனம், 2.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிட்டுள்ளது.

2.5.3. எல்கோசெஸ் (ELCOSEZ)-இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம், இலந்தைக்குளத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34.41 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில் எல்காட் நிறுவனம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி 60,205 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் ஒன்றைக் கட்டி முடித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் திருவாளர்கள் கேலக்சி இன்ஃபோடெக் (M/s. Galaxy Infotech), ஏ.எம்.பி.சி. டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. AMBC Technologies Pvt. Ltd.,), எஸ்.பி.எல். நாலெட்ஜ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. SBL Knowledge Services Pvt. Ltd.,), நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Neeyamo Enterprises Solutions Private Ltd.) மற்றும் சிவியாக் கன்சல்டிங் (M/s. CVIAC Consulting) போன்ற நிறுவனங்களுக்கு இட வசதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் பிரிவுகளான ஆலோசனை, செயலி மேம்பாடு, வணிக வெளிப்பணி சேவைகள் (BPO) மற்றும் தகவல்கள் மின் உருவாக்கம் செய்யும் துறைகளில் 1600 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2020 மார்ச் 24]

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் (M/s. Honeywell Technologies Ltd.), எச்.சி.எல். இன்ஃபோ சிஸ்டம்ஸ் லிமிடெட் (M/s. HCL Info Systems Ltd.), செல்லா சாஃப்ட்வேர் (M/s. Chella Software) மற்றும் ரீபார் டிசைன் அன்டு டீடெய்ல் பிரைவேட் லிமிடெட் (M/s. Rebar Design & Detail Pvt. Ltd.) ஆகிய நிறுவனங்கள் 7.06 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடப் பணிகளை முடித்து, 4,300 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

2.5.4. எல்கோசெஸ்-வடபழஞ்சி, மதுரை

எல்காட் நிறுவனம் மதுரை மாவட்டம், வடபழஞ்சியில், 213 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.66.51 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எல்கோசெஸ்க்கு தேவைப்படுகின்ற இரயில்வே மேம்பாலத்தையும் உருவாக்கி, 70,139 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் திருவாளர்கள் நீயாமோ என்டர்பிரைஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Neeyamo Enterprise Solutions Pvt. Ltd.), டி.பி.ஐ. டிஜிடல் அண்டு இம்ப்ளிமென்டேசன் பிரைவேட் லிமிடெட் (M/s. DBI Digitalization and Implementation Pvt. Ltd.) மற்றும் செயின்-சிஸ் சாப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Chain-Sys. Software Exports Pvt. Ltd.) போன்ற நிறுவனங்களுக்கு இட வசதி வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் சார்ந்த நிறுவனங்களான திருவாளர்கள் எச்.சி.எல். (M/s. HCL), டெக் மகிந்த்ரா (M/s. Tech Mahindra), செயின்-சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் (பி) லிமிடெட் (M/s. Chain-Sys. Software Exports Pvt. Ltd.), சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் (M/s. Sutherland Global Services Ltd.), காலிபர் பாய்ண்ட் (M/s. Caliber Point), ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (M/s. Health Plan System (India) Pvt. Ltd.) மற்றும் எம்பயர் ஃபோட்டோ வோல்டிக் சிஸ்டம்ஸ் பி. லிமிடெட் (M/s. Empire Photovoltaic Systems Pvt. Ltd.) ஆகியவற்றிற்கு இந்த எல்கோசெஸ்ஸில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

2.5.5. எல்கோசெஸ் (ELCOSEZ)-நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

எல்காட் நிறுவனம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், நவல்பட்டில் 123.23 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.60.08 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 59,960 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இங்குள்ள எல்காட் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில், திருவாளர்கள் ஐ.லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. i Link Systems Pvt. Ltd.), சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனம் (M/s. Scientific Publishing Company), உரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Vuram Technology Solutions Pvt. Ltd.), விடார்ட் டெக்னாலஜிஸ் (M/s. Vdart Technologies), ஜிஐ டெக் கேமிங் கம்பெனி இண்டியா பிரைவேட் லிமிடெட் (M/s. GI Tech Gaming Co. India Pvt. Ltd.), மற்றும் விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. VR Della IT Services Pvt. Ltd.) ஆகிய நிறுவனங்கள் 1350 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் சார்ந்த பிரிவுகளான மின் வெளியீடு (e-Publishing), மென்பொருள் உருவாக்கம் (Software Development), வணிக செயல்முறை மேலாண்மை சேவைகள் மற்றும் தீர்வுகள் (Business Process Management Services & Solutions), விளையாட்டு மென்பொருள் உருவாக்கம் (Gaming Software Development) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் சார்ந்த நிறுவனங்களான திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் (M/s. Sutherland Global Services Ltd.), ஜைலாக் சிஸ்டம்ஸ் லிமிடெட் (M/s. Zylog Systems Ltd.,), அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s. Unlimited Innovations India Pvt. Ltd.), அசிஸ்ட் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s. Assyst International Pvt. Ltd.), ஐ.லிங்க் மல்டிடெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. i Link Multitech Solutions Pvt. Ltd.), விடார்ட் டெக்னாலஜிஸ் மற்றும் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (M/s. Vdart Technologies and M/s. Health Plan Systems (India)

2020 மார்ச் 24]

Pvt. Ltd.) ஆகியவற்றிற்கு இந்த எல்கோசெஸ்ஸில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, எல்காட் நிறுவனம், 1.16 இலட்சம் சதுர அடி பரப்பளவில், ரூ.48.10 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம் ஒன்றை அமைக்கவுள்ளது.

2.5.6. எல்கோசெஸ் (ELCOSEZ)-கங்கைகொண்டான், திருநெல்வேலி

எல்காட் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில், 290 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.55.88 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 56,720 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் திருவாளர்கள் நிலாஆப்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. NilaApps Private Limited) மற்றும் எஸ்.பி.எல். நாலேட்ஜ் சர்வீஸ் லிமிடெட் (M/s. SBL Knowledge Services Limited) போன்ற நிறுவனங்களுக்கு இட வசதி வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் நிறுவனங்களான திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s. Syntel International Pvt. Ltd.), சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் (M/s. Sutherland Global Services Ltd.), டெக்கான் ஐ சர்வீசஸ் மற்றும் ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் (M/s. Deccan I Services and M/s. A & D Cosmic Power) ஆகியவற்றிற்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s. Syntel International Pvt. Ltd.) 2.60 இலட்சம் சதுர அடி தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து 200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.

2.5.7. எல்கோசெஸ்-ஜாகீர் அம்மாபாளையம், சேலம்

எல்காட் நிறுவனம், சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.41.82 கோடி முதலீட்டில்

எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இதில் திருவாளர்கள் வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Vee Imaging Solutions Pvt. Ltd.,), நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Knowledge Lens Private Ltd.), டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி (M/s. Dilogy Solutions LLP,), ஸ்டின் சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. StinSoft Technologies Private Ltd.) மற்றும் இமுத்ரா லிமிடெட் (M/s. eMudhra Ltd.) போன்ற நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் துறைகளான மென்பொருள் உருவாக்கம் (Software Development), வன்பொருள் உருவாக்கத்திற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (Hardware Development R&D), பொருட்களின் இணையம் (IOT), செயற்கை நுண்ணறிவு (AI), தொழில் துறை தானியக்கம் (Industrial Automation), இயந்திர கற்றல் (Machine Learning), பெருந்தரவு (Big Data), கட்டட வடிவமைப்பு ஆலோசனை (Architect Consulting), தகவல் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் (IT Consultancy services), மின்னணுமுறை கையொப்பத் தீர்வுகள் (Digital Signature Support Solutions) போன்ற பிரிவுகளில் 220 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

திருவாளர்கள் ரீவேலி டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Reveille Technologies Pvt. Ltd.), நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Nuratech Consultancy Services Private Ltd) மற்றும் டி.பி.ஐ. டிஜிட்லைசேஷன் அண்டு இம்ப்ளிமென்டேசன் பிரைவேட் லிமிடெட் (M/s. DBI Digitalization and Implementation Pvt. Ltd) நிறுவனங்களுக்கும் இத்தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் நிறுவனங்களான திருவாளர்கள் மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Mahima Technologies Pvt. Ltd.), வீ. டெக்னாலஜிஸ் (M/s. Vee Technologies), இ-முத்ரா லிமிடெட் (M/s. eMudhra Ltd.,), அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Anmol Technologies Pvt. Ltd.) மற்றும் ஃபோகஸ் ஆர் கன்சல்டன்சி அண்டு டெக்னாலஜீஸ் பிரைவேட்

2020 மார்ச் 24]

லிமிடெட் (M/s. Focus R Consultancy and Technologies (P) Ltd) ஆகியவற்றிற்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.5.8. எல்கோசெஸ்-விஸ்வநாதபுரம், ஒசூர்

எல்காட் நிறுவனம், விஸ்வநாதபுரம் கிராமம், ஒசூரில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.41.75 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,100 சதுர அடி பரப்பளவில் நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது. மேலும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கூடுதல் உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.2.56 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவாளர்கள் யூ.எஸ்.டி. குளோபல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s. UST Global International Private Limited), சந்து சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Chandu Soft Technologies Pvt. Ltd.), எமினென்ட்லேப்ஸ் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் (M/s. Eminentlabs Software Private Limited), தென்றல் இன்ஃபோடெக் (M/s. Thendral Infotech) மற்றும் என்டாஸ் பாம்பிரெட் சிஸ்டெம் பிரைவேட் லிமிடெட் (M/s. Entoss Pomfret Systems Pvt Ltd.) நிறுவனங்களுக்கும் இத்தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவாளர்கள் யூ.எஸ்.டி. குளோபல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (M/s. UST Global International Private Limited) மற்றும் சந்து சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. Chandu Soft Technologies Pvt. Ltd.) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் துறைகளான குறைக்கடத்தி சோதனை (Semiconductor Testing) மற்றும் மென்பொருள் மேம்பாடு போன்றவற்றில் அவற்றின் செயல்பாட்டை நிறுவியுள்ளன.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களான திருவாளர்கள் ஓகாயா இன்ஃபோகாம் பிரைவேட் லிமிடெட் (M/s. Okaya Infocom Pvt. Ltd.), சி.ஆர்.எம். ஐ.டி.சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (M/s. CRM IT Solutions Pvt. Ltd.) மற்றும் சி.ஆர்.எம் இன்ஃபோடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s. CRM Infotech India Pvt. Ltd) ஆகியவற்றிற்கு எல்கோசெஸ்ஸில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.6. தொழில்முனைவோர் மையம், சென்னை மற்றும் கோயம்புத்தூர்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை அடுத்து இளைஞர்களின் தொழில் முனைவுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் எல்காட் நிறுவனம், 'நாஸ்காம்' நிறுவனத்தை அறிவுசார் பங்குதாரராகக் கொண்டு சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 6,860 சதுர அடியில் 90 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை ரூ.3.53 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது. இதில் 44 தொடக்க நிலை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக அடுத்த நிலையை அடைந்துள்ளன. தற்போது 17 நிறுவனங்கள் (Start-ups) இயங்கி வருகின்றன.

அதேபோன்று கோயம்புத்தூரில், 50 இருக்கை வசதி கொண்ட தொழில்முனைவோர் மையம் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் கட்டடத்தில் ரூ.2.07 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

2.7. நிதி தொழில்நுட்பச் சீர்மிகு மையம் (Centre of Excellence in FinTech)

நிதி தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில், தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில் (STPI) "ஃபின்ப்ளூ" ("FinBlue") என்ற நிதி தொழில்நுட்பச் சீர்மிகு மையம் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27-2-2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்திய அரசு மற்றும் தமிழக அரசு முறையே தலா ரூ.5.75 கோடியும் மற்றும் தனியார் துறைகள் ரூ.11.50 கோடியும் இம்மையத்தில் முதலீடு செய்துள்ளன.

இந்த மையத்தின் ஒரு பகுதியாக, இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில் தொடக்கநிலை (Incubation) வசதி அமைக்கப்பட்டுள்ளது. இதில், தற்போது 3 தொடக்க மையங்கள் உள்ளன. இந்த தொடக்க மையங்களுக்குத் தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

2.8. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

அரசின் மின்னாளுமை சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக அனைத்து வன்பொருள், மென்பொருள், வலையமைப்பு, செயலிகள், தரவுத்தளம் மற்றும் பதிவேற்றம் ஆகியவை ஒருங்கிணைந்த

கட்டமைப்பு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு சேவைகளை எல்காட் நிறுவனம் உருவாக்கி பராமரித்து வருகிறது.

2.8.1. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 1-12-2007 அன்று மத்திய மாநில அரசுகளின் பங்கேற்புடன் நிறுவப்பட்டு, தற்போது மாநில அரசின் நிதி பங்களிப்புடன் செயல்பட்டு வருகிறது. இவை அரசுத் துறைகளுக்குக் குரல், தரவு மற்றும் காணொலிச் சேவைகளை வழங்குவதன்மூலம், அரசுத் துறைகள் பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்க வழிவகை செய்து வருகின்றது.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்புமுனைகளுடன் (POP) தொடங்கப்பட்டு, தற்போது 828 இருப்புமுனைகளுடன் இயங்கி வருகின்றது. வலையமைப்பு இயக்க மையம் (Network Operations Centre-NOC) எல்காட், பெருங்குடியில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பில் வணிக வரித் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் பல அரசு துறைகளின் 3000-க்கும் மேற்பட்ட அலுவலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

2.8.2. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் (TNSWAN Phase-2 Extension)

தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் அரசின் அனுமதி பெற்று, ரூ.69.90 கோடி மதிப்பீட்டில் பிப்ரவரி 2019 முதல் மூன்றாண்டுகள் வரை, தற்போதைய வன்பொருள் கட்டமைப்புடன் இயங்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அலைக்கற்றைச் சேவைக்காக பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பை இயக்கிப் பராமரிப்பு செய்வதற்காக ஒருங்கிணைப்பு நிறுவனம் (System Integrator) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2.8.3. தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (NKN), நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களையும், கல்லூரிகளையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் நோக்கில், உருவாக்கப்பட்ட உலகத் தரம் வாய்ந்த ஜிகா-பிட் வலையமைப்பு ஆகும். தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் ஆகிய இரண்டும் 1 Gbps வேகம் கொண்ட NKN வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழக அரசுத் துறைகள் தேசிய அளவில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ள மென்பொருள் பயன்பாடுகளைத் தொடர்புகொள்ளலாம். தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்புமுனைகள் அனைத்தும் அதிகபட்சமாக 1 Gbps அளவிலான அதிவேக அலைக்கற்றையைப் பெற ஏதுவாக NKN வலையமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2.8.4. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பிற்கான பதிலி இணைப்பு (Redundant Connectivity)

வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட (Tier 2) இருப்புமுனைகளுக்கான, முதன்மை இணைப்பு (Primary Connectivity) BSNL நிறுவனம்மூலம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பின் பயனர்களுக்குத் தடையற்ற இணைப்பினை வழங்கும் வகையில் 210 இரண்டாம் கட்ட இருப்புமுனைகளில் பதிலி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.8.5. இதர இணைப்புச் சேவைகள்

அரசுத் துறைகளுக்கு தேவையின் அடிப்படையில் இணைய குத்தகை இணைப்பு (Internet Leased Line), Multi Protocol Label Switching (MPLS), VPNOBB போன்ற இணைப்புச் சேவைகள் எல்காட்மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

2.9. பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள்

தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் (NeGAP) கீழ் அரசின் மின்னாளுமைச் சேவைகளைப் பாதுகாப்பான முறையில் வழங்குவதற்கான மிக முக்கியமான கட்டமைப்பாகத் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் தங்களது பயன்பாட்டு மென்பொருட்களைப் பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்து எளிய ஒருங்கிணைப்புக்கும், சிறப்பான நடைமுறைபடுத்துவதற்கும் இத்தரவு மையம் உதவி புரிகிறது.

தற்போது பேரிடர் மீட்பு (Disaster Recovery), மேகக் கணினிய (Cloud computing) சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு ஆகிய சேவைகளையும் எல்காட் நிறுவனம் வழங்கி வருகின்றது.

2.9.1. தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-1 (TNSDC-1)

அதிநவீன தரத்தில் அமைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநில தரவு மையம், நாட்டிலேயே ISO சான்றிதழ் பெற்ற முதல் மாநிலத் தரவு மையம் ஆகும். இம்மையத்தின் செயற்பாடுகள் 1-8-2011 அன்று ரூ.138 கோடியில் தொடங்கப்பட்டு தற்போது 180-க்கும் மேற்பட்ட பயன்பாடுகள் மற்றும் சேவைகள் TNSDC-1-ல் இணை-இடம் மற்றும் இணை-பதிவேற்றம் மற்றும் மேகக் கணினியப் பதிவேற்றம் போன்ற முறைகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2.9.2. தமிழ்நாடு மாநிலத் தரவு மையம்-2 (TNSDC-2)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தின் முதல் பகுதி முற்றிலும் பயன்படுத்தப்பட்ட நிலையில், இரண்டாம் பகுதி ரூ.74.70 கோடி செலவினத்தில் நிறுவப்பட்டு தற்சமயம் புதிய தேவைகளைக் கையாளுவதற்குத் தயாராக உள்ளது.

2.10. தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC), எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளி.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் பணிகள் மற்றும் மின்னாளுமைப் பயன்பாடுகள், பேரிடர்களின்போதும் தடையின்றித் தொடர்ச்சியாக நடைபெற ஏதுவாக, மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்திலுள்ள எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளியில் பேரிடர் மீட்பு மையம் ரூ.59.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 9-2-2018 முதல் இயங்கி வருகின்றது.

[2020 மார்ச் 24

2.11. தமிழ்நாடு மேகக் கணினியச் சேவைகள்

மின்னாளுமைப் பயன்பாடுகளை விரைவில் செயல்படுத்தும் வகையில், எளிய மேலாண்மையுடன், பகிர்ந்து கட்டமைக்கக்கூடிய மேகக் கணினியச் சேவை தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் உட்கட்டமைப்பு (Infrastructure), இயங்குதளம் (Platform) மற்றும் பொதுநிலை மென்பொருள் (Open Source Software) ஆகிய சேவைகளைப் பெறலாம். இந்த மேகக் கணினியச் சேவை 1-3-2016-ல், ரூ.11.39 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 81 மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில், அரசுத் துறைகளின் வளர்ந்துவரும் தேவைக்கேற்ப சேவைகளை வழங்குவதற்காகவும், மேகக் கணினிய மென்பொருட்களின் பேரிடர் மீட்பு வசதிக்காகவும் ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் மேகக் கணினிய உட்கட்டமைப்பினை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மேகக் கணினியச் சேவை தனித்துவ அடையாளத்திற்காக "தமிழ் மேகம்" (Thamizh Megam) என்ற பெயரில் காப்புரிமை பெறும் வகையில் காப்புரிமை, வடிவமைப்பு மற்றும் முத்திரை கட்டுப்பாட்டு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

THAMIZH MEGAM™

2020 மார்ச் 24]

2.12. தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு

அனைத்து அரசுத் துறைகளின் மென்பொருட்கள் மற்றும் சேவைகளின் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்ட உயர்நிலைப் பாதுகாப்பு கட்டமைப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை வசதி (Security Information and Event Management-SIEM)
- நிகழ்நிலைப் பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை (Vulnerability Assessment & Penetration Testing- VAPT).

2.13. தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA-TN)

இணையப் பாதுகாப்பு, அரசுத் துறைகளின் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பிற்கும், மாநிலத்தின் மின்னாளுமை சேவைகளுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், 1-6-2018 அன்று அறிவித்தபடி, எல்காட் நிறுவனம், ரூ.21.39 கோடி செலவில் CDAC நிறுவனத்துடன் இணைந்து தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பினை (CSA-TN) உருவாக்கி வருகின்றது.

2.14. மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாநிலத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் 'தனக்கே உரிய மடிக்கணினி' எனும் கனவை நினைவாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் முன்னாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15-9-2011-ல் தொடங்கி வைக்கப்பட்டது. அரசின் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை சார்பாக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	கல்வி ஆண்டு	கொள்முதல் செய்யப்பட்ட மடிக்கணினிகள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட மடிக்கணினிகள் எண்ணிக்கை
1	2011-12	8,98,866	8,98,866
2	2012-13	7,56,000	7,56,000
3	2013-14	5,65,000	5,65,000
4	2014-15	4,96,999	4,96,999
5	2015-16	5,42,267	5,42,267
	2016-17	5,94,460	5,94,460
7	2017-18, 2018-19 மற்றும் 2019-20	15,66,022	15,66,022

இத்திட்டத்தின்படி 15-3-2020 வரை 54,19,614 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

2.15. மின் ஆளுமை

அரசுத் துறைகளின் சேவைகளை பொதுமக்களுக்கு திறம்பட வழங்குவதற்கும் துறைகளின் செயல்திறனை அதிகரிக்கும் வகையிலும், பல்வேறு மின்னாளுமைத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் எல்காட் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தற்பொழுது சுமார் 75-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளுக்கு இணையதளங்கள் மற்றும் மென்பொருள் செயலிகள் உருவாக்குதல், ஆலோசனை, மென்பொருள் பராமரிப்பு போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

2.15.1. தமிழ்நாடு அரசின் வெளிப்படை அரசுத் தரவுதளம்

அரசுத் துறைகள், தமிழக அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் தங்களது தரவுத் தொகுப்புகள், ஆவணங்கள்,

சேவைகள் மற்றும் மென்பொருள் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடும் வகையில் தமிழக அரசின் வெளிப்படை தரவுதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தரவுதளம் https://data.tn.gov.in/ என்னும் இணைய முகவரியில் இயங்கி வருகின்றது. தற்போது இத்தளத்தில் 59 தமிழக அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் தொடர்பான 17,039 தரவுத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

2.15.2. ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) பதிவாளராக அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின்கீழ் பதிவு முகமையாக எல்காட் நிறுவனம் 217 நிரந்தரப் பதிவு மையங்களை ஏற்படுத்தி, ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது.

இந்த மையங்கள் 3-10-2016 முதல் தொடங்கப்பட்டு, 31-1-2020 வரை இதன் வாயிலாக 50,23,586 ஆதார் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமக்ரா சிக்ஷா-சமமான கற்றல் மற்றும் கற்றலுக்கான சம வாய்ப்புகளை வழங்கி பள்ளி செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரந்த குறிக்கோளுடன் பள்ளி கல்வித் துறைக்காக உருவாக்கப்பட்ட ஒரு விரிவான திட்டமாகும்.

தற்பொழுது, சமக்ரா சிக்ஷா திட்டத்தின்கீழ் 385 கல்வித் தொகுதிகளிலும் 505 ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை நிறுவும் பணியில் எல்காட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

2.15.3. அம்மா அழைப்பு மையம் (ACC)

அம்மா அழைப்பு மையம் பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் பொருட்டு “1100” என்ற கட்டணமில்லாத் தொலைபேசி வசதியுடன் 19.1.2016 அன்று தொடங்கப்பட்டு www.ammacallcentre.tn.gov.in என்ற இணையதளத்தில் தொடர்ந்து இயங்கி வருகிறது. தீர்வு செய்யப்பட்ட விவரம், மனுதாரருக்கு குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படுகிறது.

[2020 மார்ச் 24

2.15.4. திறன் மேம்பாடு

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் துறைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கணினிச் சார்ந்த பயிற்சி வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பயிற்சி அளிப்பதற்கான போதுமான பயிற்சிக்கூட உட்கட்டமைப்பு வசதிகள் பெருங்குடி வளாகத்திலும், மாவட்ட ஆட்சியரகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

“பயிற்சியாளரைப் பயிற்றுவித்தல்” திட்டத்தின்கீழ் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள்மூலம் மின்னாளுமை திட்டங்கள் மற்றும் மென்பொருள் செயலிகளுக்கான பயிற்சிகள் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதுவரை 1,19,416 நபர்கள் இப்பயிற்சியினால் பயனடைந்துள்ளனர்.

2.16. காணொலிக் காட்சி

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் பல்வேறு துறைகளுக்கான அரசு நலத் திட்டங்களைத் துவக்கி வைப்பதற்கான சேவைகளை எல்காட் நிறுவனம் வழங்கி வருகின்றது.

- மிக முக்கிய பிரமுகர்களான மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு துணை குடியரசுத் தலைவர், மாண்புமிகு பிரதமர் மற்றும் அயல்நாட்டுத் தலைவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்பொழுது தேவைப்படும் தகவல் தொடர்பு உபகரணங்களை வழங்கி வருகின்றது.

- அரசுத் துறைகள் மற்றும் முகமைகளுக்கான காணொலிக் காட்சி உபகரணங்களையும் எல்காட் நிறுவனம் கொள்முதல் செய்து நிறுவி வருகின்றது.

- நீதிமன்ற வளாகங்களில் காணொலிக் காட்சி அமைப்பதற்கான உபகரணங்களை எல்காட் நிறுவனம் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

2.17. உள் சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு அமைப்பு

- அரசுத் துறைகள் மற்றும் முகமைகளுக்கான தேர்வுகளைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பு புகைப்படக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

- தலைமைச் செயலகத்தை முழு நேரமும் கண்காணிப்பதற்கு ஏதுவாக அங்குள்ள முதன்மைக் கட்டடம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகையில் கண்காணிப்பு புகைப்படக் கருவிகள் அமைக்கப்பட்டு, அதன் கட்டுப்பாட்டு அறை நாமக்கல் கவிஞர் மாளிகையில் நிறுவப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2.18. மின்னணு அறிவிப்பு பலகை

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை வளாகங்களில் மின்னணு முறை அறிவிப்புப் பலகை எல்காட் நிறுவனம்மூலம் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளன.

2.19. மின்னணு கடிகாரம்

தமிழகச் சட்டமன்றப் பேரவை மண்டபம் மற்றும் அதை சுற்றியுள்ள முக்கிய அறைகளுக்கு மின்னணு கடிகாரங்களை வழங்கி அவற்றில் இணைய வசதிமூலம் ஒரே நேரம் பராமரிக்கப்படுகிறது.

2.20. தலைமைச் செயலகத்தின் வலையமைப்பு பராமரிப்பு

தலைமைச் செயலகத்தில் வலையமைப்பு வசதி ஏற்படுத்தி முழு நேரமும் பராமரிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

அத்தியாயம்-III

மின்னாளுமை ஆணையரகம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை

1. முன்னுரை

தமிழ்நாடு மின்னாளுமை முகமை 2006 ஆம் ஆண்டில் தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் முன்னெடுத்து திறம்பட செயல்படுத்திடும் பொருட்டு உருவாக்கப்பட்டது. தேசிய மின்னாளுமைத் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு இந்நிறுவனம் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-ன்படி தன்னாட்சி சங்கமாக பதியப்பட்டு உருவாக்கப்பட்டது.

2. நோக்கம்

i. தொழில்நுட்பத்தில் புதுமையான நடைமுறைகளை உருவாக்க தமிழக அரசிற்கு உறுதுணையான நிறுவனமாக இருத்தல்.

ii. அரசு நிறுவனங்கள் மற்றும் அனைத்து அரசுத் துறைகளுக்குத் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குதல்.

iii. பல்வேறு மின் நிருவாக முயற்சிகளைக் கருத்திற்கொண்டு முன்முயற்சி செய்தல் மற்றும் இணக்கத்திற்கான தரங்களை வகுத்தல்.

iv. பல்வேறு அரசுத் துறைகளின் பொதுவான சேவைகள் தொடர்பான தேவைகளை மதிப்பீடு செய்து குறைந்த செலவில் திறமையான தீர்வை வழங்குதல்.

v. தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு நிறுவனத்தினையும் காகிதப் பயன்பாடற்ற, எளிமையான, வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும் நிறுவனங்களாக மாற்றுதல்.

vi. ஆளுமை தொடர்பான தேவைகளுக்குப் புதுமையான மற்றும் செயல்படுத்தக்கூடிய தீர்வுகளை அளித்திடும் வகையில், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொடக்கநிலை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் திறமையான தனிநபர்களைக் கொண்ட ஒரு ஆரோக்கியமான சூழலை செயல்படுத்தக்கூடிய தீர்வுகளை அளித்தல்.

vii. மாநிலத்தில் மிகச் சிறந்த நிருவாகத்திற்கான மென் உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கும், நிலவும் பொருளாதார போட்டி நிலையில் மாநிலத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கவும் உதவுதல்.

viii. நிருவாகத்தில் செயல்திறனை மேம்படுத்த, அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத்தில் அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குதல்.

ix. அரசுத் துறைகளுக்குப் பாதுகாப்பான இணையத்தை உருவாக்குதல்.

3. நிறுவன கட்டமைப்பு

3.1. வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கான சீர்மிகு மையம் (CEET)-Centre of Excellence for Emerging Technology

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரைக்கு அளித்த பதிலுரையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கான சீர்மிகு மையம் தமிழ்நாடு மின்னாளுமை முகமையில் உருவாக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த மையமானது, அரசுத் துறைகளில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் உயர் தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் தொழில்நுட்ப அறிவுசார் இடைவெளியை இணைக்கும் ஒரு பாலமாக நிறுவப்பட்டுள்ளது.

பல்வேறு அரசுத் துறைகளின் புதுமையான முயற்சிகளுக்கு உதவும் ஒரு தூண்டுகோலாக விளங்கும் இந்த மையம் தொழில்நுட்பவியல் துறையில் உள்ள பிற பங்குதாரர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு தளமாக விளங்குகிறது. இம்மையம் அரசுத் துறைகள், தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் மற்றும் அரசுக்கு இடையேயுள்ள இடைவெளியை இணைக்கும் பாலமாக விளங்குகிறது. இந்த மையத்தின் செயல்பாடுகள்:-

i. அரசுத் துறைகளுக்கு குறைந்த செலவில் விரிவான தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்குதல்.

[2020 மார்ச் 24

ii. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் செயல்படும் அரசுத் துறைகள், முகமைகள், தொழில் நிறுவனங்கள், தொழில் அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டாக செயல்படுதல்.

iii. சர்வதேச அளவில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள சிறந்த செயல்பாடுகளை வரையறுத்து, தரப்படுத்தி ஊக்குவித்தல்.

iv. அரசுத் துறைகளில் பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களின் திறன் மேம்பாட்டிற்கு பயிற்சி அளித்தல்.

v. உயர் தொழில்நுட்பம் மற்றும் அதற்கு நிகரான தொழில்நுட்பங்களை அளிக்கும் பிற நிறுவனங்களையும் தொடர்புகொள்ளுதல்.

vi. வளர்ச்சித் திட்டங்கள், பயிற்சித் திட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், சிறப்பு விரிவுரைகள் மற்றும் இதர நிகழ்வுகளை நடத்துதல்.

vii. புதுமையான யுக்திகளையுடைய திறமையாளர்களைக் கொண்டு, வளர்ந்துவரும் தொழில்நுட்பம் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துவதன்மூலம் புதிய கருத்துகளைப் பெறுதல் மற்றும் புதுமையான திறமைகளை வளர்த்தல்.

viii. ஆராய்ச்சி முடிவுகளைக் கட்டுரைகளாகவும், பத்திரிக்கை செய்திகளாகவும், கருத்தரங்க விளக்கக்காட்சி ஆவணங்களாகவும் மற்றும் இதர வடிவிலும் உருவாக்கி வழங்குதல்.

ix. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான முன்வடிவப் பணிகளை மேற்கொள்ளுதல்.

x. தொடர்பயன்பாட்டிற்குத் தேவையான யுக்திகளை உருவாக்குதல், அரசுத் துறைகளுக்கான பொருளடக்கப் பயன்பாட்டை மையப்படுத்துதல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல்.

3.2. மாநில மின்குறிக்கோள் குழு (State e-Mission Team)

மாநில மின்குறிக்கோள் குழு, மாநில அரசுகளின் மின்னாளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்

2020 மார்ச் 24]

மின்னாளுமைத் திட்டத்தின்கீழ், திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைதொடர்பு அமைச்சகம்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு மின்னாளுமை முகமையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

3.3. மாவட்ட மின்னாளுமைச் சங்கம் (District e-Governance Society)

மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட அளவிலான இச்சங்கங்கள் அனைத்து மின்னாளுமைத் திட்டங்கள் தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன.

3.4. தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு (IT Cadre)

அனைத்து அரசுத் துறைகளின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தகவல் தொழில்நுட்பப் பணியாளர் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதன்மூலம் ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான தகவல் தொழில்நுட்பச் சூழலில் மின்னாளுமைத் திட்டங்களை வழிநடத்தி, தரப்படுத்திச் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் தொகுப்பில் உதவிக் கணினிப் பகுப்பாய்வாளர்/உதவிக் கணினிப் பொறியாளர், கணினிப் பகுப்பாய்வாளர்/கணினிப் பொறியாளர், முதுநிலை கணினிப் பகுப்பாய்வாளர்/ முதுநிலை கணினிப் பொறியாளர் போன்ற பதவிகளை உள்ளடக்கியுள்ளது.

4. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (Memorandum of Understanding)

தொடர்ச்சியான புதிய தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமை பல்வேறு சிறந்த கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்விசாரா நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. கீழ்க்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நாளதுவரை கையொப்பமிடப்பட்டுள்ளன:

i. பகுப்பாய்வு மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களான, நம்பிக்கை இணையம், பொருட்களின் இணையம், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயற்கை மொழி செயலாக்கம்

போன்ற ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அண்ணா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

ii. நம்பிக்கை இணைய செயலாக்கப் பயிற்சித் திட்டங்களைக் கேரள பிளாக்செயின் அகாடமி வழியாக நடத்துவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

iii. ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்நுட்பவியல் வல்லுநர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியவர்களுடன் ஒன்றிணைந்து தொழில்நுட்பத் தீர்வு காண்பது தொடர்பாக இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை-IIT, Madras உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

iv. அரசுத் துறைகளில் பணியாற்றும் மூத்த செயல் அலுவலர்களுக்கு வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில் சான்றிதழுடன்கூடிய பயிற்சிகள் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM) திருச்சிராப்பள்ளியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

v. பல்வேறு அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களுடன் கூட்டாண்மை சமூக பொறுப்புகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து கற்பிப்பது தொடர்பாக கிரேட் லேக்ஸ் மேலாண்மை நிறுவனத்துடன் (Great lakes Institute of Management) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. நமது அரசு

பொதுமக்கள் அரசைத் தொடர்புகொள்வதற்கும் நல்ஆளுமையில் பங்குபெறுவதற்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கான புதுமையான தளமாக மாற்றுவதற்காக “நமது அரசு” திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

6. தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் நடவடிக்கைகள்

6.1. நம்பிக்கை இணையக் கட்டமைப்பு (Blockchain Backbone Infrastructure)

தமிழக அரசின் மின்னணுத் தரவுகள் மற்றும் மின்னணுப் பரிவர்த்தனைகளின் மேலாண்மையில் அவற்றின் நம்பகத்தன்மை

மற்றும் தன்னிச்சையான உறுதித் தன்மையை மூன்றாம் தரப்பின் உதவியின்றியும், ஊடுருவலற்ற இணையப் பாதுகாப்புடன் சரிபார்த்திட உதவிடும் வகையிலும் ஒரு முதுகெலும்பாகச் செயல்படும் வகையிலும் நம்பிக்கை இணையக் கட்டமைப்பு தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட உள்ளது.

இத்தளம் தமிழக அரசின் ஒரு நம்பகமான ஆதாரமாக இருப்பதுடன் திறன் மற்றும் நம்பகத்தன்மையோடும் அரசு சேவைகளை வழங்க இது உதவும். மேலும், தமிழகத்தின் அனைத்து பொதுமக்களுக்கும் நேரடியாக இது பயன் தரும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i. நாட்டிலேயே மிகப் பெரிய அளவிலான நம்பிக்கை இணைய கட்டமைப்பை உருவாக்குதல்.

ii. எங்கும், எந்நேரமும் தங்கு தடையின்றி அரசு சேவைகளை வழங்குதல்.

iii. பொதுமக்களுக்கு எளிதான நம்பிக்கை இணையக் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். (நேரடி ஆவண சரிபார்ப்புத் தேவையின்மை).

iv. பொதுமக்களுக்கு நம்பகமான, திறமையான மற்றும் விரைவான சேவைகளை வழங்குதல்.

வெளிப்படையான, திறமையான மற்றும் பாதுகாப்பான மக்களை மையமாகக் கொண்டு நிறுவனங்களுக்கு இடையேயான பணிப்பாய்வுகளை உருவாக்க நம்பிக்கை இணைய கட்டமைப்பு பயன்படுத்தப்படும்.

இந்த உட்கட்டமைப்பைப் பயன்படுத்தி அரசு நிறுவனங்களுக்கு இடையேயும் மற்றும் அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயும் சேவைகள் செயல்படுத்தப்படும்.

இது மாநிலத்தில் உள்ள அனைத்து துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான நம்பிக்கை இணையப் பயன்பாடுகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்ற தளமாகும்.

தமிழ்நாடு மின்னாளுமை முகமை இந்த தொழில்நுட்பத்தின் ஆற்றலை அறிந்து கொண்டு, அதன் நன்மைகள் மற்றும் பயன்பாடுகளைப் பல களங்களுக்கு செயல்படுத்துவதற்காக தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது.

மின்னணு தரவு, இயந்திரங்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்குப் பாதுகாப்பான, அளவிடக்கூடிய, மின்னணு கையொப்பம் அடிப்படையிலான அங்கீகாரத்தை நம்பிக்கை இணையம்மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.2. குறிப்பறிந்து அரசு சேவை வழங்கும் திட்டம் (Zero Knowledge Proof Based Predictive Government Service Delivery)

பொதுமக்கள் தங்களுக்குத் தேவைப்படும் சேவைகளைப் பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களுக்குச் சென்று படிவங்களில் விண்ணப்பித்துப் பெற்று வந்த நடைமுறையினை மாற்றி, தற்போது தமிழக அரசு இணையம் வழியாக விண்ணப்பிக்கும் வகையில் பொதுமக்களுக்குப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அரசின் சேவைகள் வழங்கும் நடைமுறையினை சீர்திருத்தம் செய்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள முன்னோடித் திட்டமே குறிப்பறிந்து "அரசு சேவை" வழங்கும் திட்டமாகும்.

இது பொதுமக்கள் அரசுத் துறைகளை அணுகி சேவைகளைப் பெறுவதற்குப் பதிலாக அவர்தம் இருப்பிடத்திலேயே அரசு தனது சேவைகளை வழங்கும் நிலையை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

6.3. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான முக அடையாள வருகைப் பதிவேடு-Face Recognition System (FRS)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முக அடையாளம் காணும் முறை மின்னாளுமையில் ஒரு மைல் கல் ஆகும்.

சென்னையில் உள்ள இரண்டு அரசுப் பள்ளிகள் மற்றும் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM-Trichy) திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் இம்மென்பொருள் முன்னோடித் திட்டமாக பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டம் படிப்படியாக மற்ற அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

6.4. செயற்கை நுண்ணறிவு கொண்டு விவசாய விளைபயிர்களின் பாதிப்பு மற்றும் பூச்சிகளை அடையாளம் கண்டு தீர்வு வழங்குதல் (Pest Identification System)

தமிழ்நாடு மின்னாளுமை முகமை, வேளாண்மைத் துறையினால் உருவாக்கப்பட்ட "உழவன்" செயலி வாயிலாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்குப் பயிரில் உள்ள பூச்சிகளைக் கண்டறியவும், பூச்சியால் தாக்கப்பட்ட பயிரை தங்கள் கைபேசியில் படம் பிடித்து இந்த செயலியில் பதிவேற்றம் செய்தால் அதற்கான தீர்வு குறுஞ்செய்திமூலம் அனுப்பப்படும். இச்சேவை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 'கனெக்ட்-2019' நிகழ்வில் துவக்கி வைக்கப்பட்டது.

6.5. தமிழ் இயற்கை மொழி செயலாக்கம் வழி திறன்மிகு உரையாடல் (Natural Language Processing Chatbot-Anil)

தமிழ்நாடு மின்னாளுமை முகமை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து அரசு இ-சேவைகள் குறித்த மக்களின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் "அணில்" எனப்படும் தானியங்கு மென்பொருளை உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருள் பொதுமக்களுடன் தமிழில் உரையாடி பிறப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் போன்ற அரசின் சேவைகளைப் பெற்றிட வழிகாட்டுகிறது. இந்தச் செயலி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "கனெக்ட் 2019" நிகழ்வின்போது முதற்கட்டமாக தமிழில் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தினை படிப்படியாக ஆங்கிலத்திலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.6. ஆளில்லா குறுவிமானங்களின் சேவை (Drones as a Service-Daas)

தமிழ்நாடு மின்னாளுமை முகமை புகைப்படக் கருவி பொருத்தப்பட்ட ஆளில்லா குறுவிமானச் சேவையை தற்போது பல்வேறு துறைகளில் செயல்படுத்தி வருகிறது. மனிதர்களால் எளிதில் செல்ல இயலாத இடங்களில் ஆளில்லா குறுவிமான சேவையைப் பயன்படுத்தி துறைச் சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம். உதாரணமாக, மின்கம்பி இணைப்புகள், துணை மின்நிலையங்கள், பாலங்கள், அணைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றின்

உட்கட்டமைப்பை ஆய்வு செய்வதற்கு இச்சேவையைப் பயன்படுத்தலாம்.

ஆளில்லா குறுவிமானங்கள்மூலம் கண்ணுக்குப் புலப்படாத தொலைதூர இடங்களில் உள்ள இயந்திரங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கலாம். மேலும், மக்கள் பெருமளவில் கூடும் நிகழ்வுகளை வான்வழியாக கண்காணித்து, அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும் ஒரு முக்கிய கருவியாகவும் இது பயன்படும்.

தமிழ்நாடு மின்னாளுமை முகமை, தொடக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்புகளுடன் இணைந்து மாதிரி திட்ட செயல் முறைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் மின்கம்பிகளைக் கண்காணிப்பதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட நீர்நிலைகளைக் கண்காணிப்பதற்கும் மாதிரி திட்ட செயல் முறைகளை நடத்தியுள்ளது. படிப்படியாக இத்திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்படும்.

6.7. தமிழ்நாடு மின்னாளுமை முகமையின்-“யூ-டியூப் காணொலி அலைவரிசை” (TNeGA-YouTube Channel)

அரசின் பல்வேறு சேவைகளைப் பொதுமக்கள் எளிதில் பெற்று பயன்பெறும் வகையில் தமிழ்நாடு மின்னாளுமை முகமை “யூ-டியூப் காணொலி அலைவரிசை” ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இது கடந்த 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற கனெக்ட்-2019 தகவல் தொழில்நுட்ப நிகழ்வில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த அலைவரிசையில், காணொலி வாயிலாக பல்வேறு அரசு சேவைகளான வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், முதல் பட்டதாரிச் சான்றிதழ், பட்டா, சிட்டா, புல வரைபடம், வேலையின்மைச் சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்களைப் பெறுவதற்கான விண்ணப்பிக்கும் வழிமுறைகள் தமிழ்மொழியில் விளக்கப்படுகின்றன.

6.8. மின்னணு தன்னார்வலர்கள் (Digi Volunteers)

தொழில்நுட்பத்தின்மீது மிகுந்த ஆர்வமும், மின்னணு ஆளுமைக்கான முன்னெடுப்பில் பங்களிக்க விருப்பமுள்ளோர்க்கென ஒரு தனித்துவமான முயற்சியே “மின்னாளுமை முகமையின் மின்னணு தன்னார்வலர்கள்”. மின்னணு தன்னார்வலர்கள் தளம், பொதுமக்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கிடையேயான

தமிழகத்தின் மின்னணு மாற்றத்திற்குத் தேவையான கருத்து பரிமாற்றத்திற்கான இணைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மின்னணு தன்னார்வலர்கள் குழு ‘தொழில்நுட்பத்தின் வாயிலாக மக்களுக்கு உதவுதல்’ என்பதன்மூலம் மின்னணு இடைவெளியை குறைக்கும் ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறது.

6.9. செயற்கை நுண்ணறிவுக்கான பாதுகாப்பு மற்றும் நெறிமுறை கொள்கை

ஆற்றல் மிக்க, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் சவால்களை எதிர்கொள்வதற்காக தமிழ்நாடு மின்னாளுமை முகமை “செயற்கை நுண்ணறிவுக்கான பாதுகாப்பு மற்றும் நெறிமுறை” கொள்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இக்கொள்கை, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அமைப்புகளை, வெளிப்படைத்தன்மை மற்றும் தணிக்கை, பொறுப்புடைமை மற்றும் சட்டச் சவால்கள், தவறான பயன்பாட்டிலிருந்து பாதுகாப்பு, மின்னணு இடைவெளி மற்றும் தரவு பற்றாக்குறை, நெறிமுறைகள், நேர்மை மற்றும் சமத்துவம் ஆகிய 6 காரணிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய பரிந்துரை செய்கிறது.

6.10. தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை (Tamil Nadu Block Chain Policy)

இக்கொள்கை, தமிழ்நாடு நம்பிக்கை இணையத்திற்கான உகந்த சூழலை உருவாக்கும் பொருட்டு, முக்கிய வல்லுநர்களை அடையாளம் கண்டு அதற்கான செயல்திட்டத்தைப் பரிந்துரைக்கும். இதன் பயன்பாடு மின்னாளுமையில் மிகப் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவும். இக்கொள்கையானது மாநில அளவில் தமிழ்நாடு நம்பிக்கை இணைய கட்டமைப்பிற்கான திட்டத்தை விரிவாக எடுத்துரைக்கும்.

6.11. அரசு இ-சேவை மையங்கள்

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அரசு இ-சேவை மையங்கள் வழியாக பொதுமக்களுக்கான இணையவழிச் சேவைகளை வழங்கி வருகின்றது. இச்சேவை மையங்கள் தமிழ்நாடு அரசு

[2020 மார்ச் 24

கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், மீன் வளத் துறை மற்றும் கிராமத் தொழில் முனைவோர் போன்ற சேவை மைய முகமைகள் வாயிலாக அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்திலேயே வழங்கப்பட்டு வருகின்றன. 29-2-2020 வரை தமிழகம் முழுவதும் மொத்தம் 12,831 இ-சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

அரசு இ-சேவை மைய விவரங்கள்			
வ. எண்	**சேவை மைய முகமைகள்**	**மையங்களின் எண்ணிக்கை**	**முகப்புகளின் எண்ணிக்கை**
1.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்	595	920
2.	தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள்	1,104	1,104
3.	தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள்	4,370	4,373
4.	கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்கள்	4,269	4,364
5.	சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் (PTSLP)	8	8
6.	கிராமப்புற தொழில் முனைவோர்	2,335	2,335
7.	மீன் வளத் துறை	150	150
	மொத்தம்	12,831	13,254

அரசு இ-சேவை மையங்கள்மூலம் வழங்கப்படும் சேவைகள்

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-38)	வருமானச் சான்றிதழ்
	பிறப்பிடச் சான்றிதழ்
	இருப்பிடச் சான்றிதழ்
	சாதிச் சான்றிதழ்
	குடும்பத்தில் முதல் பட்டதாரிச் சான்றிதழ்
	கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ்
	பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கான வருமானம் மற்றும் சொத்துச் சான்றிதழ்
	குடும்ப இடப்பெயர்வுச் சான்றிதழ்
	வேலையில்லாச் சான்றிதழ்
	விதவைச் சான்றிதழ்
	விவசாய வருமானச் சான்றிதழ்
	கல்வி ஆவணங்கள் பேரிடரின்போது தொலைந்தமைக்கான சான்றிதழ்
	ஆண் வாரிசின்மைச் சான்றிதழ்
	திருமணம் ஆகவில்லை என்பதற்கான சான்றிதழ்
	கலப்புத் திருமணச் சான்றிதழ்
	வாரிசு சான்றிதழ்
	சொத்து மதிப்புச் சான்றிதழ்

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	அடகு பிடிப்போர் உரிமம் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்குதல்
	வட்டிக்குப் பணம் கொடுப்போர் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்குதல்
	இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ்
	சிறு/குறு விவசாயி சான்றிதழ்
	இ-அடங்கல்
	தற்காலிக பட்டாசு விற்பனை உரிமம் வழங்குதல்
	சமணச் சிறுபான்மை மதச் சான்றிதழ் வழங்குதல்
	இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்
	இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்
	இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
	ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
	திருமணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்
	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்
	குறைதீர் நாள் மனு

2020 மார்ச் 24]

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	தமிழ்நிலம்-முழுநிலப் பட்டா மாறுதல்
	தமிழ்நிலம்-கூட்டுப் பட்டா மாறுதல்
	தமிழ்நிலம்–உட்பிரிவு
	தமிழ்நிலம்-'அ' பதிவேடு விவரம்
	தமிழ்நிலம்–சிட்டா விவரம்
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 7)	அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்
	முதலமைச்சாின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்-I
	முதலமைச்சாின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்-II
	டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்
	டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
	ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்
	மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்
காவல் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை- 8)	சமூக சேவைப் பதிவேடு நிலை
	முதல் தகவல் அறிக்கை நிலை
	இணையவழி புகார் பதிவு செய்தல்
	புகார் நிலை அறிதல்
	வாகன விவரம் அறிதல்

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	முதல் தகவல் அறிக்கை பார்வையிடுதல்
	சாலை விபத்து வழக்குகளில் ஆவணங்களை பதிவிறக்கம் செய்தல்
	தொலைந்த ஆவணங்களின் அறிக்கை
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)	தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மத்திய அரசின் கல்வி உதவித் திட்டம்
	பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மத்திய அரசின் கல்வி உதவித் திட்டம்.
	பள்ளி மேற்படிப்பிற்கான மாநில அரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம்.
	மேற்படிப்பிற்கான சிறப்புக் கல்வி உதவித் திட்டம்.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை (மொத்தசேவைகளின் எண்ணிக்கை -4)	பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் திட்டம்.
	தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உதவித் திட்டம்.
	பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்.
	பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்.

2020 மார்ச் 24]

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
தமிழ்நாடு வக்ஃபு வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)	உலமா ஓய்வூதியத் திட்டம்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)	மகப்பேறு முன்பதிவுத் திட்டம்
கொதிகலன் இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)	கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் பதிவுசெய்தல்
	கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் புதுப்பித்தல்
	உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் அனுமதி கோரி விண்ணப்பித்தல்
	உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் புதுப்பித்தல் கோரி விண்ணப்பித்தல்
	கொதிகலன்களுக்கான நீராவி சோதனை
நகராட்சி நிருவாக ஆணையரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)	வாியில்லா இதர கட்டணங்கள்
	தொழில் வாி வசூலித்தல்
	சொத்து வாி வசூலித்தல்
	பாதாள வடிகால் வாி வசூலித்தல்
	குடிநீர் வாி வசூலித்தல்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -1)	குடிநீர் மற்றும் கழிவுநீர் வாி

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
பெருநகர சென்னை மாநகராட்சி (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -6)	பிறப்புச் சான்றிதழ் அச்சிடுதல்
	இறப்புச் சான்றிதழ் அச்சிடுதல்
	வர்த்தக உரிமம் புதுப்பித்தல்
	நிறுவன வரி வசூலித்தல்
	தொழில் வரி வசூலித்தல்
	சொத்து வரி வசூலித்தல்
தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்ககம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -5)	பலமாடிக் கட்டடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி கோரும் தடையின்மைச் சான்றிதழ்
	பலமாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்
	பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடம் கட்டுவதற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்

2020 மார்ச் 24]

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -3)	மின் கட்டணம் செலுத்துதல்
	புதிய குறைந்த மின் அழுத்த இணைப்பு பதிவு செய்தல்
	புதிய குறைந்த மின் அழுத்த இணைப்புக்கான கட்டணம் செலுத்துதல்
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை -4)	பதிவு அடையாள அட்டை அச்சிடுதல்
	பதிவுப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்
	சுய விவரம் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம்
	பதிவு செய்ய விண்ணப்பித்தல்
மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை- 11)	அலோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம்/ புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்
	ஓமியோபதி மருந்துகளை வழங்குவதற்கான உரிமம்/ புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்
	அட்டவணைப்படுத்தப்பட்ட மருந்துகளை வழங்குவதற்கான உரிமம்
	மருந்துகளை வழங்குவதற்கான உரிமம்/ புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் (அட்டவணையில் குறிப்பிட்ட மருந்துகள்)

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	உரிமம் நகல் பெறுவதற்கான விண்ணப்பம்
	அலோபதி மருந்துகள் தயாரிப்பு அனுமதி மற்றும் புதுப்பித்தல்
	பயன்படுத்தப்படும் தயாரிப்புகளுக்கான கூடுதல் பிரிவுக்கான உரிமம் வழங்குதல்
	சோதனை உரிமம் வழங்குதல்
	விற்பனைக்கான மருந்துகளின் உற்பத்திக்கான கடன் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்- அலோபதி மருந்துகள்
	அலோபதி மருந்துகளுக்கான மறு தொகுப்பு உரிமம் வழங்குதல்/ புதுப்பித்தல்
	ஓமியோபதி மருந்துகள் தயாரிப்பு அனுமதி மற்றும் புதுப்பித்தல்
எரி சக்தித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-2)	வரைபட ஒப்புதல் சான்றிதழ் வழங்குதல்
	பாதுகாப்புச் சான்றிதழ் வழங்குதல்
பெருநகர சென்னை போக்குவரத்து காவல் (GCTP) (மொத்த சேவைகளின் எண்ணிக்கை–1)	இ-ரசீது செலுத்துதல்
மீன் வளத் துறை இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை - 4)	மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல்

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல்
	தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம்
	தேசிய கடல் மீனவர் மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணம்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-3)	கடன் உதவித் திட்டத்திற்கான விண்ணப்பம்
	திருமண உதவித் திட்டம்
	மாற்றுத் திறனாளிகள் பராமரிப்புப் படி
கைத்தறி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-6)	டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நல அறக்கட்டளையின்கீழ் உதவித் தொகை வழங்குதல்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்
	தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்
	மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா

துறை	வழங்கப்படும் சேவை பெயர்
	மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனாகீழ் சர்வ சிக்க்ஷா யோஜனா திட்டம்.
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-1)	தமிழ்நாடு அரசு நில உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒழுங்கு முறைச் சட்டம்
போக்குவரத்துத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-1)	இ-ரசீது செலுத்துதல்
வணிக வரி மற்றும் பதிவுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-2)	வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல்
	சான்றளிக்கப்பட்ட நகல் வழங்குதல்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை-3)	CRS-இறப்பு பதிவு செய்தல்
	பிறப்புச் சான்றிதழ்
	இறப்புச் சான்றிதழ்
மொத்தம்	126

6.12. நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

தமிழ்நாட்டில் ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை அமைத்து ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக மின்னாளுமை ஆணையரகம்/தமிழ்நாடு மின்னாளுமை முகமை, இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின்கீழ் ஆதார் பதிவு முகமைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதார் சேர்க்கைக்கான நிரந்தரப் பதிவு மையங்கள் தலைமைச் செயலகம், எழிலகம்,

2020 மார்ச் 24]

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் அரசு கேபிள் டிவி நிறுவனத்தாலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் தலைமையகங்களிலும் (சென்னை தவிர்த்து) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த சேவை பொதுமக்களுக்கு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

29-2-2020 வரையிலான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்

பதிவு முகமைகள்	**நிரந்தரப் பதிவு மையங்களின் எண்ணிக்கை**	**மொத்தப் பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)**	**UIDAI தரவின்மூலம் ஆதார் எண் உருவாக்கப்பட்ட எண்ணிக்கை (இலட்சத்தில்)**
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)	318	3.6	1.9
தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)	215	2.5	1.6
மொத்தம்	**533**	**6.1**	**3.5**

6.13. அரசின் சேவைகளை அறிந்து கொள்ள உதவும் செயலி (Know Your Government)

தமிழக அரசு குறித்த தகவல்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் பிற துறைகள் அறிந்து கொள்ள ஒற்றைச் சாளரமாக Know Your Government கைப்பேசி செயலி உதவுகிறது.

6.14. உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம்-(Tiny Uniform Resource Locator)

உள்ளங்கையில் சான்றிதழ் (Tiny URL) திட்டம், 23-5-2017 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் இ-சேவை மையத்தில் அளித்த விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதும், குறுஞ்செய்திமூலம் (Tiny Uniform Resource Locator) விண்ணப்பதாரரின் கைபேசி எண்ணுக்கு தகவல் அனுப்பப்படுகிறது. இணையதள உதவியுடன், விண்ணப்பதாரர்கள் இ-சேவை மையத்திற்கு செல்லாமலேயே தங்கள் சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

6.15. அரசுத் துறை இணைய தளங்களின் அணுகுதன்மை (Accessibility), தர நிர்ணயம் (Standardization)

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களின் அரசு இணையதளங்கள், S3WaaS (Secure, Scalable and Sugamya Website as a service) கட்டமைப்பின்படியும் இந்திய அரசின் இணையதளங்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளின்படியும் (GIGW) புதுப்பிக்கப்பட்டுள்ளன. S3WaaS சேவையானது இணையதள உருவாக்கம் மற்றும் இணையதளத்தை உருவாக்கி வெளியிட உதவும் தேசிய தகவலியல் மையத்தின் மென்பொருள் ஆகும். இணையப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இந்த சேவை தேசிய மேகக் கணினியத்தில் GIGW தரத்தில் பாதுகாப்பான இணையதளங்களை உருவாக்கிட உதவும். தமிழ்நாடு மின்னாளுமை முகமை, அரசுத் துறைகளின் இணையதளங்களை எளிதில் அணுகும் முறையில் தர நிர்ணயம் செய்யும் பணிகளைப் படிப்படியாக மேற்கொண்டு வருகிறது.

6.16. இ-தால் (e-Taal) (மின்னணு பரிவர்த்தனை ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வு)

இ-தால் என்பது இந்திய அரசின் (www.etaal.gov.in) வலைதளம் ஆகும். இது தேசிய மற்றும் மாநில அளவிலான மின்னாளுமைத் திட்டங்களின் மின் பரிவர்த்தனைப் புள்ளிவிவரங்களைக் கொண்டுள்ளது. இது இணைய வழிப் பயன்பாடுகளில் நடைபெறும் பரிவர்த்தனை குறித்த புள்ளிவிவரங்களை அவ்வப்போது நிகழ்நேர அடிப்படையில் பெறுவதுடன், பல்வேறு மின்னாளுமைத் திட்டங்களால் செய்யப்படும் பரிவர்த்தனைகளை விரைவாக

அளித்திடும் வகையில் அவற்றைப் பகுப்பாய்வுடன்கூடிய அட்டவணை மற்றும் வரைகலை வடிவத்தில் வழங்குகிறது. தமிழகத்தின் மொத்த மின் பரிவர்த்தனைகள் 29-2-2020 வரை 68.80 கோடியாக உள்ளது.

6.17. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (Tamil Nadu Geographical Information System-TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு இடம்சார் மற்றும் புவிசார் தரவுகளைக் கண்டறிந்து சேமிக்கவும், கையாளவும், பகுப்பாய்வு செய்யவும், நிருவகிக்கவும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு உட்கட்டமைப்பின் (TNSSDI) www.tngis.tn.gov.in என்ற வலைதளத்தில், புவிசார் தகவல் தொடர்பான அனைத்து தகவல்களையும் வெளியிட்டுள்ளது. இது தமிழகத்தின் புவிசார் தகவல்களை ஒருங்கே கொண்ட இணையதளமாக விளங்குகிறது.

இத்திட்டத்திற்காக இதுவரை 29 துறைகள் மற்றும் நிறுவனங்கள் தங்களது புவிசார் தகவல் அடுக்குகளைப் பகிர்ந்துள்ளன.

i. புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) உட்கட்டமைப்பில் தமிழ்நாட்டின் 358 தகவல் அடுக்குகள் பதிவேற்றப்பட்டுள்ளன.

ii. பல்வேறு அரசுத் துறைகளின் 504 அலுவலர்களுக்கு பயனர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

iii. இந்த வலைதளத்தில் 4837-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர்.

7. தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை (IT Security Audit)

அரசு துறைகளின் இணையதளப் பயன்பாட்டின் பாதுகாப்பை மதிப்பிடும் வகையில் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை செய்யப்பட்டுள்ளது. CERT-IN-ஆல் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்மூலம், அரசு இணையதளங்கள் மற்றும் பயன்பாடுகளின் பாதுகாப்பு, தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. 2019-2020-ல் 53 இணையதளங்கள் பாதுகாப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

8. இணையவழித் தேர்வுகளைச் சேவையாக வழங்குதல் (EaaS)

பல்வேறு அரசுத் துறைகள், தங்கள் காலிப் பணியிடங்களை குறுகிய காலத்தில் பாதுகாப்பான முறையில் நிரப்புவதற்கு, தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டு இணையவழித் தேர்வு முறையை பயன்படுத்தி வருகிறது. இதில் தேர்விற்கு முந்தைய நிலை, தேர்வு நிலை மற்றும் தேர்விற்குப் பிந்தைய நிலை செயல்பாடுகள் அடங்கும்.

இதுவரை வனத் துறை மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய 2 துறைகள் இந்த முறையை வெற்றிகரமாகப் பயன்படுத்தி 7,128 காலியிடங்களுக்கான ஆட்சேர்ப்புப் பணிகளை பாதுகாப்பான முறையில் முடித்துள்ளன. சுமார் 12.97 இலட்சம் விண்ணப்பதாரர்கள் இச்சேவையைப் பயன்படுத்தியுள்ளனர்.

9. தமிழ்நாடு பொறியியல் கல்வி சேர்க்கைக்கான கலந்தாய்வு (TNEA)

தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் (DOTE)கீழ் செயல்படும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப்படிப்புகளைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கு உயர் கல்வித் துறை இணையவழி கலந்தாய்வு நடத்தியது. தமிழ்நாடு மின்னாளுமை முகமை, இணையவழிக் கலந்தாய்விற்கான மென்பொருளை உருவாக்கி பயன்படுத்திடத் தேவையான அனைத்து தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது.

10. மின் அலுவலகம் (e-Office)

அரசு அலுவலகங்களில் கோப்புகளை சமர்ப்பித்தல், கண்காணித்தல் மற்றும் ஒப்புதல் வழங்குதல் ஆகியவற்றை மின்னணு முறையில் செயல்படுத்த மின் அலுவலகம் மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. இந்த மென்பொருள் மனிதவளத்தைத் திறம்படப் பயன்படுத்தி தாமதங்களைத் தவிர்த்து சிறந்த நிருவாகத்திற்கு வழிவகுக்கிறது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்து துறைகளின் அலுவலர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு படிப்படியாக மின் அலுவலக மென்பொருள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

11. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals-SDG)

நீடித்த வளர்ச்சி இலக்குகள் என்பது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய மூன்று பரிமாணங்களிலும் ஒரு சீரான மற்றும்

2020 மார்ச் 24]

ஒருங்கிணைந்த முறையில் நிலையான வளர்ச்சியை எட்டுவதாகும். நீடித்த வளர்ச்சி இலக்குகள், அரசுத் துறைகளுக்கிடையேயான 169 இலக்குகளுடன்கூடிய 17 முக்கிய குறிக்கோள்களையும், அளவிடக்கூடிய விளைவுகள் குறித்த குறியீடுகளையும் கொண்டுள்ளது.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த பரிமாணங்களில் ஏற்படும் வளர்ச்சி மற்றும் அனைத்து நிலைகளிலும், பரிமாணங்களிலும் வறுமையை ஒழித்திடும் வகையில் அமைந்த நீடித்த வளர்ச்சி குறிக்கோள்கள் மற்றும் அவைசார்ந்த இலக்குகள் குறித்த தகவல்களை அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெற்று பகுப்பாய்வு செய்திடும் வகையில் அமைந்த மென்பொருள் ஒன்றினை தமிழ்நாடு மின்னாளுமை முகமை உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமின்றி, திறமையான, பொறுப்புணர்வுள்ள மற்றும் வெளிப்படையான நிறுவனங்களை அனைத்து நிலைகளிலும் ஏற்படுத்திட, தகவல் தொழில்நுட்பவியல் துறையால் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பின்வரும் 4 குறியீடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	குறியீடுகள்	2019-2020
1	பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக வழங்கப்படும் அரசு சேவைகளின் எண்ணிக்கை	126
	பிற துறை சேவைகள்	64
2	கைபேசி ஆளுமைக்காக ஒன்றிணைக்கப்பட்ட துறை/ முகவர் எண்ணிக்கை	291
3	இ-தால் (e-Taal) வலைதளத்தில் மின் பரிமாற்றங்களின் எண்ணிக்கை	68.80 கோடி
4	செயல்பாட்டில் இருக்கும் பொதுசேவை மையங்களின் எண்ணிக்கை	12831

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

12. திறன் மேம்பாடு (Capacity Building)

திறன் மேம்பாடு என்பது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) கீழ் உள்ள தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் (NeGP) ஒரு குறிக்கோள் திட்டமாகும். அரசியல் மற்றும் கொள்கை அளவிலான முடிவெடுப்பவர்களுக்கு தொழில் முறையிலான உதவிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

திறன் மேம்பாடு திட்டத்தின்கீழ் திறந்த வெளி ஒன்றிணைப்புப் பயிலரங்குகள், மின் பெட்டக விழிப்புணர்வுத் திட்டம் மற்றும் மின் அலுவலக மென்பொருள் பயிற்சி போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

13. தொழில்நுட்பக் கருத்தரங்குகள் (Technology Seminars)

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான சீர்மிகு மையம் மூலமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்த கருத்தரங்குகள் 2019-2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன.

1. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப அடிப்படையில் சுகாதார பராமரிப்பு பரிசோதனை
2. நம்பிக்கை இணையம்–கொள்கை வகுத்தல் மற்றும் வரன் முறை.
3. நம்பிக்கை இணையம்–பரவலாக்கப்பட்ட சொத்து பரிமாற்றங்கள்.
4. நிகழ்கால சவால்கள் மற்றும் தொழில்நுட்ப பற்றாக்குறை–செயற்கை நுண்ணறிவு பயன்பாடு.
5. இயற்கை மொழி செயலாக்கம்/செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் “மெய்நிகர் தானியங்கு உதவி செயலி” உருவாக்குதல் மற்றும் பயன்பாடு.
6. அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கப்பட்ட நம்பிக்கை இணையத்தின் நிலை.
7. ஒருங்கிணைந்த உயர் உட்கட்டமைப்பு.
8. ‘மின்னணு’ எவ்வாறு புதுமையான யுக்திகளை உருவாக்குகிறது?

2020 மார்ச் 24]

9. இந்தியாவில் மெய்நிகர் மற்றும் முப்பரிமாண தொடுவுணர்வு தொழில்நுட்பங்களுக்கான பாதுகாப்புப் பயிற்சிகள்.

10. இந்திய விண்வெளித் திட்டத்தின் வெற்றி அனுபவம்.

11. தொழில் துறை புரட்சியின் சகாப்தத்தில் (4.0) தலைமைப் பண்பு

14. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் பல்வேறு துறைகளுக்கு உருவாக்கப்பட்ட மென்பொருட்கள்

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL)
1.	தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை	தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமைக்கு வலைதளம் உருவாக்குதல்	https://tnsdma.tn.gov.in/
2.	தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை	சட்ட அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு (Legal Metrology Complaint Tracking System)	https://tnlegalmetrology.in/
3.	தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை	தமிழ்நாடு மின் ஆவண காப்பக வலைதளம் (Digiarchives Web Portal)	https://digiarchives.tn.gov.in
4.	சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமம் (CMDA)	இணைய வழியில் ஒற்றை சாளர முறையில் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி வழங்குதல், நிறைவு சான்று வழங்குதல் மற்றும் வசித்தலுக்கான சான்று வழங்குதல் போன்ற சேவைகளை இணையம் வழியாக ஒற்றை சாளர முறையில் உருவாக்குதல்	https://onlineppacmda.tn.gov.in

[2020 மார்ச் 24

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL)
5.	சுற்றுச்சூழல் வனத் துறை	TNFUSRC-க்கு இணையவழி தேர்வுகள் நடத்த மென்பொருள் உருவாக்குதல்	https://www.forests.tn.gov.in/pages/view/tn-forest-news
6.	வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை	மெய்நிகர் கற்றல் இணைய தளம் மற்றும் இணைய வழி கற்றலுக்கான முகப்புப் பக்கம்.	https://tamilnaducareerservices.tn.gov.in/
7.	அனைத்து அரசுத் துறைகள்	மின்னணு பரிவர்த்தனை ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வு அடுக்கு (e-Taal)	https://etaal.gov.in
8.	நிலச் சீர்த்திருத்த ஆணையரகம்	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம்	https://oap.tn.gov.in/cmupt/
9.	மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்	ஆணையரக இணையதளம் (முழு அளவிலான கணினிமயமாக்குதல்)	https://crdpr.tn.gov.in
10.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB) மற்றும் தமிழ்நாடு அரசு வாடகை வீடு திட்டம் (TNGRHS)	https://tnhb.tn.gov.in/page/view/tngrhs
11.	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வாடகை மேலாண்மை திட்டம்	https://tnhb.tn.gov.in/
12.	பெரியார் பல்கலைக் கழகம்	தொலைதூர கல்வி பயிலும் மாணவர்களுக்கான இணைய வழி சேர்க்கை	http://pride.periyaruniversity.ac.in

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL)
13.	மாநில திட்டக் குழு	மாநில திட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான இணையவழி கண்காணிப்பு வலைதளம்	https://tnsdg.tn.gov.in
14.	தமிழ்நாடு தொழில் துறை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம்	வாடிக்கையாளர் குறைதீர் தளம்	https://www.bizbuddy.tn.gov.in/
15.	சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்	தொழில் நிறுவனங்களுக்கான புதிய குடிநீர் இணைப்பிற்கான இணையவழி விண்ணப்பம்	https://cmwssbindust.in/WaterNew/
16.	மாநில திட்ட ஆணையம்	மாநில திட்ட ஆணையத்தின் திட்டங்களுக்குக்கான கண்காணிப்பு தளம்	http://pndschemes.tn.gov.in
17.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	தொழிலாளர் துறை வலை தளம்	http://www.labour.tn.gov.in
18.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மேகக்கணினிய அடிப்படையிலான வள மேலாண்மை அமைப்பு (AMS)	https://ams.tnegov.in
19.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மின்-மாவட்டம் முதல் கட்டம்-1 இரண்டாம் கட்டம்-2	https://tnesevai.tn.gov.in/

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL)
20.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	இணைய வழி தேர்வு முறை-தேர்வுக்கு முந்தைய நிலை, தேர்வு நிலை, தேர்வுக்கு பிந்தைய நிலை	(i) ஆசிரியர் தேர்வு வாரியம்/ ஆசிரியர் தகுதி தேர்வு https://trbtet.onlineregistrationform.org/TNTRB/index.jsp (ii) முதுகலை கணினி பயிற்றுவிப்பாளர்கள் https://trbpgc.onlineregistrationform.org/TRBPGCI/ (iii) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் https://tnpcb.onlineregistrationform.org/TNPCB/LoginAction_loadIndex.action
21.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மாநில வலை தளம்	http://www.tn.gov.in/
22.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	மின் மாவட்டத் திட்டம்	https://edistricts.tn.gov.in:8443/certificates_csc/
23.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	நிரந்தர சேர்க்கை மையம் (5 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆதார் பதிவு செய்தல்)	https://uidai.gov.in/aadhaar dashboard/
24.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	குறுஞ்செய்தி வாயிலாக சேவை நிலை தெரிந்துக் கொள்ளும் வசதி	https://services.mgov.gov.in/
25.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	இணையவழி பட்டா மாற்றம்	https://tamilnilam.tn.gov.in/CSC https://tamilnilam.tn.gov.in/Revenue/login.html

வ. எண்	துறைகள்	திட்டத்தின் பெயர்	இணைய முகவரி (சீர்வள இருப்பிடம்) (URL)
26.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	உள்ளங்கையில் சான்றிதழ்	https://tnegov.in/login
27.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு	https://tngis.tn.gov.in
28.	தமிழ்நாடு மின்னாளுமை முகமை	பொதுப் பணித் துறைக்கான புவிசார் தகவல் அமைப்பு விவரங்களை அறிதல்	https://tngis.tn.gov.in/pwd

செயல்வடிவில் உள்ள திட்டங்கள்

வ. எண்	துறையின் பெயர்	திட்டத்தின் பெயர்
1	தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம்	முதலீட்டாளர் தளத்தை மறுவடிவமைத்தல்
2	தமிழ்நாடு கடல்சார் வாரியம்	இணையதளம் உருவாக்கம்
3	தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை	இணையதளம் உருவாக்கம்
4	தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்	மாணவர் மேலாண்மை அமைப்பு
5	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்	இணையதள உருவாக்கம்
6	பொதுத் துறை	சரக்கு மேலாண்மை வலைதளம் உருவாக்கம்
7	தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்	IEDP வலைதளம் உருவாக்கம்
8	பூம்புகார்	தரவு திரட்டு செயலி உருவாக்கம்

[2020 மார்ச் 24

வ. எண்	துறையின் பெயர்	திட்டத்தின் பெயர்
9	நிதித் துறை	நிதித் துறை நிறுவனங்கள் கண்காணிப்பு அமைப்பு உருவாக்கம்
10	சட்டத் துறை	நோட்டரி பதிவு மற்றும் புதுப்பித்தல் உருவாக்கம்
11	தமிழ்நாடு மின் ஆளுமை முகமை	டிஜிட்டல் வழி தயார் நிலை வலைதளம் உருவாக்கம்
12	தமிழ்நாடு மின் ஆளுமை முகமை	ஒற்றை உள் நுழைவு தளம்
13	தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்	முழு அளவிலான கணினி மயமாக்கல்
14	அரசுத் தேர்வுகள் இயக்குநரகம்	வலைதளம் உருவாக்கம்
15	வேலைவாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநரகம்	இணையவழி திறன் மதிப்பீட்டுத்தளம் உருவாக்கம்
16	பட்டுபுழு வளர்ச்சித் துறை	முழு அளவிலான கணினிமயமாக்கல்
17	நில நிருவாக ஆணையரகம்	நில நிருவாக வழி முறைகளை கணினிமயமாக்கல்
18	தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்
19	தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்
20	தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்
21	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	முழு அளவிலான கணினிமயமாக்கல்
22	தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை	முழு அளவிலான கணினிமயமாக்கல்
23	சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்
24	தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் வளர்ச்சிக் கழகம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்
25	அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம்	முழு அளவிலான கணினிமயமாக்கல்

வ. எண்	துறையின் பெயர்	திட்டத்தின் பெயர்
26	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	தமிழ்நாடு அரசின் வாடகை குடியிருப்புத் திட்டத்திற்கான வலைதள உருவாக்கம்
27	நகர் ஊரமைப்பு இயக்ககம், பேரூராட்சிகள் இயக்ககம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாக ஆணையரகம்	DDGC-க்கான மாநில அளவிலான ஒற்றை சாளர வலைதளம்
28	நகர் ஊரமைப்பு இயக்ககம்	இணையதளம் மறு சீரமைத்தல்
29	தமிழ்நாடு வக்ஃப் வாரியம்	முழு அளவிலான கணினி மயமாக்கல்
30	தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு	சமரச மையத்திற்கான இணையதள உருவாக்கம்
31	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	இணையதள உருவாக்கம்
32	சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை	தமிழ்நாடு குழந்தைகள் பாதுகாப்பிற்கான இணையதள உருவாக்கம்
33	சுற்றுச் சுழல் மற்றும் வனத் துறை	முழு அளவிலான கணினிமயமாக்கல்
34	உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாக ஆணையரகம்	இணையதள உருவாக்கம்
35	இந்திய மருந்துகளுக்கான மாநில உரிம அலுவலகம்	இணையதள உருவாக்கம்
36	தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்	இணையதள மற்றும் கைப்பேசி செயலி உருவாக்கம்
37	அரசு அருங்காட்சியகம்	நுழைவுச் சீட்டு முன்பதிவு தளம் உருவாக்கம்
38	சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை	இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி உருவாக்கம்
39	தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்	திறன் மேலாண்மை இணையதளம் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு

[2020 மார்ச் 24

15. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் மாணவர்களுக்கான மின்னாளுமை உயரிய விருது

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மின்னாளுமை ஆர்வலர்களிடையே மின்னாளுமை குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு, மாணவர்களுக்கான "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மின்னாளுமைக்கான உயரிய விருதை" அறிவித்துள்ளது. சென்னையில் நடைபெற்ற "கனெக்ட் 2019" (CONNECT 2019) நிகழ்வின்போது இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

16. எக்ஸைட்'19 (EczITe-2019)

தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை ஃபிக்கியுடன் (FICCI) எக்ஸைட்'19 என்ற மின்னாளுமை நிகழ்வை சென்னையில் நடத்தியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

அத்தியாயம்-IV

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

1. முன்னுரை

அரசு கேபிள் டிவி நிறுவனம் 4-10-2007 அன்று இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் துவங்கப்பட்டது. இந்நிறுவனம் தனது சேவையை துவங்குவதற்கு முன்னர், ஒரு சில தனியார் நிறுவனங்கள் கேபிள் தொழிலில் ஆதிக்கம் செலுத்தி வந்ததோடு கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவு கட்டணத்தை வசூலித்து வந்தன. மே 2011-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டும், குறைந்த கட்டணத்தில் நிறைந்த கேபிள் டிவி சேவையைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும் அரசு கேபிள் டிவி நிறுவனத்தைப் புனரமைத்து புத்துயிர் அளித்தார்கள். பின்பு, இந்நிறுவனம் "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேலும், அரசின் பல்வேறு சேவைகளை பொதுமக்களுக்கு வழங்க ஏதுவாக, அரசு இ-சேவை மையங்களை நிறுவி செயல்படுத்துவதோடு இணைய சேவைகளையும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கி வருகிறது.

2. அனலாக் கேபிள் சேவை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 30-8-2011 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70 என்கிற கட்டணத்தில் தனது கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள்மூலம் வழங்கும் எனவும், இதில், ரூ.20-ஐ உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், பொதுமக்களுக்கு ரூ.70/- என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் 100 அலைவரிசைகளுடன் தரமான அனலாக் கேபிள் டிவி சேவையை வழங்கி வந்தது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தனது சேவையை வழங்குவதற்கு சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி

மற்றும் வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் கட்டுப்பாட்டு அறைகளை நிறுவியது. மேலும், மாநிலம் முழுவதும் 77 இடங்களில் மாவட்டம் மற்றும் வட்ட கேபிள் ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைகளைக் குத்தகைக்கு எடுத்து 2-9-2011 முதல் சென்னையைத் தவிர தமிழகத்தின் பிற பகுதிகளிலும், 20-10-2012 முதல் சென்னை மாநகரத்திலும் அனலாக் கேபிள் சேவையை வழங்கி வந்தது.

இந்நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, 2-9-2011 அன்று 4.94 இலட்சமாக இருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 26,474 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களின் வாயிலாக கேபிள் இணைப்புகள் வழங்கப்பட்டு 70.52 இலட்சமாக உயர்ந்தது. இந்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அனலாக் கேபிள் சேவை செப்டம்பர் 2018 முதல் நிறுத்தப்பட்டது.

3. டிஜிட்டல் கேபிள் சேவை

இந்தியா முழுவதும் கேபிள் டிவி சேவைகளை நான்கு கட்டங்களில் டிஜிட்டல் மயமாக்க வேண்டும் என்றும், இறுதிக் கட்ட டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் 31-3-2017-க்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் அறிவுறுத்தியிருந்தது. அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், பன்முக கேபிள் ஆபரேட்டர் (MSO) என்ற அடிப்படையில், சென்னை மெட்ரோ பகுதிகளுக்கு டிஜிட்டல் மயமாக்கலுக்குத் தேவையான, டிஜிட்டல் ஒளிபரப்பு (DAS) உரிமம் வழங்கக் கோரி 5-7-2012 அன்றும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு 23-11-2012 அன்றும் விண்ணப்பித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து இந்நிறுவனத்திற்கு 17-4-2017 அன்று தற்காலிக டிஜிட்டல் ஒளிபரப்பு (DAS) உரிமம் வழங்கப்பட்டது. இந்தியாவிலேயே மாநில அரசின் நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் சேவையை வழங்குவதற்காக 36 இலட்சம் தரநிலை வரையறை செட்டாப் பாக்ஸ்களையும் (Standard Definition Set Top Boxes (SD STBs)), 40,000 உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்களையும் (High Definition Set Top Boxes (HD STBs)) உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்துள்ளது. டிஜிட்டல் கேபிள் சேவைக்காக சென்னையில்

உள்ள கட்டுப்பாட்டு அறை MPEG2 தொழில்நுட்பத்தில் இருந்து MPEG4 தொழில்நுட்பத்திற்கு தரம் உயர்த்தப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் MPEG4 தொழில்நுட்பத்தில் தரம் உயர்த்தப்பட்ட கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை 1-9-2017 அன்று துவக்கி வைத்து, விலையில்லா செட்டாப் பாக்ஸ் (STB) விநியோகத்தினையும் துவக்கி வைத்தார்கள்.

இதுவரை, 16,702 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக 36.40 இலட்சம் டிஜிட்டல் தரநிலை வரையறை மற்றும் உயர் வரையறை செட்டாப் பாக்ஸ்கள் (STB) சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் உயர் வரையறை கேபிள் டிவி சேவையை 2-7-2018 அன்று துவக்கி வைத்தார்கள்.

4. இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) புதிய கட்டண விதிமுறைகள்

இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய கட்டண விதிமுறைகளின்படி, 100 கட்டணமில்லா அலைவரிசைகளுக்கான நெட்வொர்க் கட்டமைப்புக் கட்டணம் அதிகபட்சமாக ரூ.130+GST என்றும், ஒவ்வொரு 25 கூடுதல் அலைவரிசைகளுக்கும் ரூ.20+GST என்றும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 142 கட்டணமில்லா அலைவரிசைகள் மற்றும் 49 கட்டண அலைவரிசைகளுக்கு ரூ.220+GST-ஐ மாத கட்டணமாக நிர்ணயம் செய்து 1-2-2019 அன்று அறிவித்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ரூ.220+GST ஆக இருந்த கட்டணத்தை 139 கட்டணமில்லா அலைவரிசைகள் மற்றும் 52 கட்டண அலைவரிசைகளுக்கு ரூ.130+GST ஆக குறைத்து கட்டணம் நிர்ணயம் செய்து 31-7-2019 அன்று அறிவித்தார்கள். அதன்படி, இப்புதிய கட்டணம் 10-8-2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய அளவில் உள்ள குறைந்த டிஜிட்டல் கேபிள் டிவி மாதக் கட்டணங்களில் இதுவும் ஒன்றாகும். ரூ.130+GST என்ற சந்தா கட்டணம், உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு ரூ.70+GST எனவும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு ரூ.60+GST எனவும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

5. அரசு இ-சேவை மையங்கள்

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 4-8-2014 அன்று அறிவித்தபடி, பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழகம் முழுவதும் அரசு இ-சேவை மையங்களை நிறுவியுள்ளது. தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 595 அரசு இ-சேவை மையங்களை நிருவகித்து வருகிறது. தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) மூலம் வழங்கப்படும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் சேவைகள் அரசு இ-சேவை மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்படும் நபர்களின் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யும் வசதியும், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள், தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் வசதியும், வாக்காளர் அடையாள அட்டை (Replacement EPIC Cards) அச்சிட்டு வழங்கும் வசதி உட்பட பல்வேறு சேவைகள் அரசு இ-சேவை மையங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் அரசு இ-சேவை மையங்கள் வாயிலாக 1,45,76,806 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசு கேபிள் டிவி இ-சேவை மையங்களின் பரிவர்த்தனை விவரங்கள்

வ. எண்	ஆண்டு	மின் மாவட்ட சேவைகள்	மின் கட்டணம் செலுத்தும் சேவைகள்	குடிநீர் கட்டணம் செலுத்தும் சேவைகள்	மத்திய அப்னா நிறுவன சேவைகள்	த.நா. பாடநூல் கழக சேவைகள்	வாக்காளர் அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவைகள்	சென்னை பெருநகர மாநகராட்சியின் வரி செலுத்தும் சேவைகள்	ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை அச்சிட்டு வழங்கும் சேவைகள்	மொத்தம்
1	2017-2018	506.28	42272	24409	737323	2277	1640575	176414	-	7639628
2	2018-2019	247689	24672	14457	-	10615	741703	205212	3848	3505746
3	2019-2020	2813924	5291	82	-	77039	398455	102292	34349	3431432
மொத்தம்		10301861	72235	38948	737323	89931	27979833	483918	72767	14576803

2020 மார்ச் 24]

6. வருவாய் பங்கீட்டு முறையில் அரசு இ-சேவை மையங்கள்

அரசு இ-சேவை மையங்களின் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக, விருப்பமுள்ள தனியார் இணைய மையங்களின் (Browsing Centre) உரிமையாளர்களை, இந்நிறுவனத்துடன் இணைந்து வருவாய் பங்கீட்டு முறையில் செயல்பட விருப்ப மனு அளிக்கக் கோரி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, 1,104 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்காக பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27-2-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

7. நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள்

தமிழகத்தில் புதிய ஆதார் சேர்க்கை மேற்கொள்ளும் பணிக்காக தமிழ்நாடு மின்னாளுமை முகமை மற்றும் மின்னாளுமை ஆணையரகத்தை பதிவாளராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. அதன்படி, ஆதார் சேர்க்கை பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்னாளுமை முகமை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களின் செயல்பாடுகளின் விவரம்				
வ. எண்	ஆண்டு	புதிய ஆதார் பதிவுகள்	ஆதார் திருத்தங்கள்	மொத்தம்
1	2017-2018	10,41,427	15,82,526	26,23,953
2	2018-2019	4,80,005	33,55,261	38,35,266
3	2019-2020	2,54,856	13,94,026	16,48,882
மொத்தம்		**17,76,288**	**63,31,813**	**81,08,101**

தற்பொழுது, அனைத்து மாவட்டங்களிலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் 318 ஆதார் சேர்க்கை மையங்கள் 510 முகப்புகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒரு நடமாடும் ஆதார் சேர்க்கை மையமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

8. இல்லந்தோறும் இணையம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், இணைய சேவை வழங்குவதற்காக ISP-Class B உரிமத்தினை 14-9-2015 அன்று மத்திய அரசின் தொலைதொடர்பு துறையிடமிருந்து பெற்றது. "இல்லந்தோறும் இணையம்" திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 1-3-2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இணையம் தொடர்பான சேவைகளைப் பொதுமக்களுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கி இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்துவதற்காக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், ஒரு துணை நிறுவனத்தைத் தொடங்குவதற்கு உத்தேசித்துள்ளது.

9. செட்டாப் பாக்ஸ் கொள்முதல்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், வருங்காலங்களில் மேலும் 10 இலட்சம் செட்டாப் பாக்ஸ்களை கொள்முதல் செய்து சந்தாதாரர்களின் எண்ணிக்கையை உயர்த்த உத்தேசித்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

அத்தியாயம்-V

தமிழ் இணையக் கல்விக் கழகம்

1. முன்னுரை

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதியிலிருந்து தமிழ் இணையக் கல்விக் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் முக்கியமான குறிக்கோள் இணையம் வழியாக வெளிநாடுவாழ் தமிழர்கட்கு தமிழ்க் கல்வி அளித்தல் மற்றும் அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரையில் தமிழை இணையத்தில் மேம்படுத்துவதாகும்.

2. நோக்கங்கள்

1. தமிழர் நாகரிகம் மற்றும் பண்பாடு போன்றவற்றை புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கும் இணையம் வழியாக அளித்தல்.
2. தமிழில், பட்டயம் மற்றும் பட்டப் படிப்புகளுக்கான சான்றிதழ்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாக அளித்தல்.
3. தமிழ் கற்றலுக்கான பாடங்களைத் தொகுத்தல்.
4. கணினித் தமிழை மேம்படுத்துதல்.

3. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ், மேற்பட்டயம், தமிழியலில் இளங்கலைப் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

3.1. மழலைக் கல்வி

பாடங்கள், படங்கள், பல்லூடகத் தன்மையில் காட்சிகள், படக் கதைகள், கவிதைகள், பாடல்கள் போன்றவைகளுடன் மழலைக் கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது.

3.2. சான்றிதழ்க் கல்வி

சான்றிதழ்க் கல்வி (1 முதல் 6 ஆம் வகுப்புகளுக்கு இணையானது) கீழ்க்கண்டவாறு மூன்று நிலைகளில் வழங்கப்படுகிறது.

- அடிப்படை நிலை (1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- இடை நிலை (3 மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- மேல் நிலை (5 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

3.3. மேற்சான்றிதழ்க் கல்வி

மேற்சான்றிதழ்க் கல்வி (7 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு இணையானது) கீழ்க்கண்டவாறு மூன்று நிலைகளில் வழங்கப்படுகிறது.

- நிலை 1 (7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 2 (9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 3 (11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

3.4. இளநிலைத் தமிழியியல் பட்டப் படிப்பு

இளநிலைத் தமிழியியல் பட்டப் படிப்பானது, பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் போன்ற நிலைகளை உள்ளடக்கியது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ள பல்வேறுபட்ட பாடத் திட்டங்களில் 19,463 மாணவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து பதிவு செய்துள்ளார்கள்.

மாணவர்களுக்கு மேற்கூறப்பட்ட கல்வித் திட்டங்கள், 21 நாடுகளிலுள்ள 101 தொடர்பு மையங்கள் வாயிலாக அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை மொத்தம் 11,601 மாணவர்கள் பல்வேறு நிலைகளில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். சான்றாக பிரான்ஸிலிருந்து 219 மாணவர்களும், இலங்கையிலிருந்து 2,294 மாணவர்களும், ஓமனிலிருந்து 2,378 மாணவர்களும், ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்து 2,949 மாணவர்களும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர்.

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் 101 தொடர்பு மையங்களின் விவரங்கள் www.tamilvu.org என்ற இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

4. இ-ஆசிரியர் திட்டம்

தமிழ் இணையக் கல்விக் கழகம், உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கு இணையம்மூலம் தமிழ்க் கல்வியை வழங்கி வருகிறது. இ-ஆசிரியர் என்னும் திட்டம்மூலம், உலகளாவிய முறையில் தமிழ் மொழி கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்த, ஒருங்கிணைந்த மாதிரி கற்றல் தளத்தை 3டி-அனிமேஷன்கள், மெய்நிகர் பலகை, மெய்நிகர் போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் இயந்திரக் கற்றல் (ML) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவற்றையும் பயன்படுத்தி வடிவமைக்கப்பட உள்ளது. இதன்மூலம் வெளிநாடுவாழ் தமிழர்கள் (குறிப்பாக குழந்தைகள்) தமிழை எளிதாக கற்க முடியும்.

5. கணினித் தமிழுக்கென தனிப் பிரிவு

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் பெரும்பாலான பணிகள் கணினி தொழில்நுட்பத்தோடு மேற்கொள்ளப்படுவதால் கணினித் தமிழ்ப் பிரிவு என்ற தனிப் பிரிவைத் தொடங்கவும், இப்பிரிவிற்கான தொடர் செலவினத்திற்கும் (ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம்) அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இக்கணினித் தமிழ்ப் பிரிவில் கீழே குறிப்பிடப்பட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. கணினித் தமிழ்ப் பரப்புரைப் பணிகள்
2. இமேஜ் பிராஸஸிங் மற்றும் ஓசிஆர் பணிகள்
3. தமிழ் மென்பொருட்கள் உருவாக்கம்
4. கணினி மொழியியல் பணிகள்

TRUTH ALONE TRIUMPHS

6. மின் நூலகம்

தமிழ் இணையக் கல்விக் கழகம் ரூ.1 கோடி செலவில் ஒரு மின் நூலகத்தை www.tamildigitallibrary.in என்ற இணையதள முகவரியில் உருவாக்கியுள்ளது. இம்மின் நூலகத்தில் அரிதான ஆவணங்கள், புத்தகங்கள், நாளிதழ்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மின் நூலகம், 11-10-2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தற்பொழுது இம்மின் நூலகத்தில் 27,860 நூல்கள் மற்றும் பருவ வெளியீடுகள் MARC21 வடிவமைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

7. ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் செய்து பட்டியலிடுதல்

டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள ஓலைச்சுவடிகளில், முற்கால தமிழக மக்களின் நிலம், கல்வி, மருத்துவம் மற்றும் கலாச்சாரம் பற்றிய தகவல்கள் உள்ளன. இந்த ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் செய்யவும் அட்டவணைப் பட்டியலிடும் பணிகள் மேற்கொள்ளவும் ரூ.1.05 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை 7,20,360 ஓலைச்சுவடிகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன.

8. தமிழர் தகவலாற்றுப்படை

“தகவலாற்றுப்படை” திட்டத்தின்கீழ், தொல் பழங்காலம், அகழாய்வுகள், வரலாற்று இடங்கள், கல்வெட்டுகள், வழிபாட்டுத் தலங்கள், சிற்பங்கள், நாணயங்கள், செப்பேடுகள், தொல்லியல் சின்னங்கள், ஓவியங்கள் ஆகியவற்றில் சேகரிக்கப்பட்ட மற்றும் எடுக்கப்பட்ட மொத்தம் 70,600 ஒளிப்படங்கள் விளக்கமான மீத்தரவுகளோடு (meta data) ஒருமித்த வடிவில் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் அவற்றை ஒளிப்படங்களோடு இணையத்தில் பதிவேற்றுதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

9. மாதாந்திரத் தொடர்ச் சொற்பொழிவு

தமிழர் நாகரிகம், பாரம்பரியம், கலை மற்றும் கலாச்சாரம் போன்றவற்றை உலகெங்கும் பறைசாற்றுவதற்காக தமிழ் இணையக் கல்விக் கழகம் பல்வேறு துறைகளில் புலமை பெற்ற அறிஞர்களைக் கொண்டு மாதாந்திரத் தொடர்ச் சொற்பொழிவுகளை நடத்தி வருகிறது. இச்சொற்பொழிவுகள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 56 சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

10. கணினித் தமிழ்

தமிழ் இணையக் கல்விக் கழகம் அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode Consortium) தமிழ்நாடு அரசின் நிறுவன உறுப்பினராக உள்ளது. மேலும், தமிழ் இணையக் கல்விக் கழகம்

2020 மார்ச் 24]

தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்தி, கணினித் தமிழில் ஆராய்ச்சியினை மேம்படுத்துகிறது. அடிப்படைத் தமிழ்த்தரவு, தமிழ்ச் சம்பந்தப்பட்ட மென்பொருள் கருவிகள், ஒருங்குறி எழுத்துருக்கள் இன்னும் பிறவற்றை உருவாக்கி வருகிறது. மேலும், தமிழ் இணையக் கல்விக் கழகம் பொதுமக்களால் உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருட்கள் மற்றும் அதன் கருவிகளைப் பரிசோதித்துச் சான்றிதழ் அளிக்கிறது.

11. தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருட்கள்

தமிழ் இணையக் கல்விக் கழகம் தமிழ் உரை மற்றும் பேச்சு இயக்க மென்பொருள்களை உருவாக்கி வருகிறது. இம்மென்பொருள்கள் இரு பிரிவுகளை கொண்டது. (i) இலக்கணச் சரிபார்ப்புக் கருவி: உரையாடலில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை வழங்கும். இந்த இலக்கணச் சரிபார்ப்புக் கருவி குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு இலக்கண விதிகளை அறிந்துகொள்ள உதவுகிறது. (ii) பேச்சு இயக்க மென்பொருள்: இம்மென்பொருள் பார்வைத் திறன் குறைபாடுள்ளோர் எளிதில் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

12. இயந்திர மொழிபெயர்ப்பிற்கான தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள்

தமிழ் இணையக் கல்விக் கழகம் தமிழ் மொழியின் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. அதன் முக்கிய நோக்கம், ஆங்கில மொழியில் சொற்றொடர் அமைப்பு மற்றும் விதிமுறைகள் கண்டறியப்பட்டது போன்று தமிழ் மொழியிலும் கண்டறிவதாகும்.

13. புதிய பாடத் திட்டங்கள் உருவாக்குதல்

வெளிநாடுவாழ் தமிழர்களின் கோரிக்கையின்படி தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

14. கணித்தமிழ்ப் பேரவை

கணித்தமிழ் வளர்ச்சியை மேம்படுத்தவும், அதன் முக்கியத்துவத்தை எதிர்காலத் தலைமுறையினர் உணர்ந்து

[2020 மார்ச் 24

செயல்படும் விதத்திலும், கணித்தமிழ்ப் பேரவைகள் உயர் கல்வி நிறுவனங்கள்தோறும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

15. தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம்

இணையவழித் தமிழ்ப் பொருளடக்கத்தினைச் சேகரித்து தமிழ்ப் பெருங்களஞ்சியத் திட்டம் என்ற ஒன்றினை தமிழ் இணையக் கல்விக் கழகம் இணையத்தில் உருவாக்கியுள்ளது. இதுவரை வேளாண்மை, மீன் வளம், வேதியியல், உயிரியல், இயற்பியல் மற்றும் பிற துறைகளிலிருந்து பெறப்பட்ட 84,000 தமிழ்க் கட்டுரைகள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

16. கான் கல்விக் கழகக் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல்

கான் கல்விக் கழகம் என்ற நிறுவனம் அமெரிக்காவில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனம் கணிதம், அறிவியல், கலை மற்றும் வரலாறு போன்ற பொருண்மைகளின் அடிப்படையில், சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணொலிகளை ஆங்கிலத்தில் உருவாக்கி உள்ளது.

மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேற்படி காணொலிகளை தமிழாக்கம் செய்வதற்கு ஏதுவாக தமிழ் இணையக் கல்விக் கழகம், கான் கல்விக் கழகம் மற்றும் வெற்றிவேல் அறக்கட்டளையுடன் ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. முதற்கட்டமாக 1,000 காணொலிகளுக்கு தமிழ்க் குரல் வழங்கும் பணிகள் ரூ.12 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

17. படைப்பாக்கப் பொதும முயற்சி

தமிழ் சார்ந்த நூல்கள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள் அனைத்தும் படைப்பாக்கப் பொதும உரிமத்தின்படி (as per Creative Commons) அனைவருக்கும் பகிரப்படும் என்ற அடிப்படையில் 27,860 நூல்கள் மற்றும் இதழ்கள் தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அத்தியாயம்-VI

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

1. முன்னுரை

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), பாரத்நெட் மற்றும் தமிழ்நெட் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தும் தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளும் கண்ணாடி இழை வடம்மூலம் இணைக்கப்பட்டு ஒவ்வொரு கிராமங்களுக்கும் குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான அதிவேக இணைய சேவை வழங்குவது பாரத்நெட் திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்தின் நகர்ப்புறங்கள் தமிழ்நெட்மூலம் இணைக்கப்படும்.

"பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" ஆகியவற்றினை ஒருங்கிணைத்து மாநிலத்தின் "ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு" (Integrated Digital Infrastructure) அமைக்கப்படும். இதன்மூலம் 12,524 கிராம பஞ்சாயத்துகள், 528 பேரூராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 15 மாநகராட்சிகளை இணைத்து அனைத்து குடிமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் அதிவேக மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றையுடன்கூடிய இணைய சேவை வழங்க இயலும்.

2. பாரத்நெட்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 14-9-2015 அன்று மத்திய அரசின் பாரத்நெட் திட்டம் தமிழ்நாட்டில் மாநில அரசே செயல்படுத்தும் என்றும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, "தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம்" (Tamil Nadu FibreNet Corporation Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் உருவாக்கப்படும் என்றும் தமிழ்நாடு சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள்.

இதனையடுத்து, நிறுவனங்கள் விதி, 2013-ன்படி தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் 8-6-2018 அன்று நிறுவப்பட்டது. இந்நிறுவனம் 12,524 கிராம பஞ்சாயத்துகளை இணைத்து குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான அலைக்கற்றை

வழங்கக்கூடிய பாரத்நெட் திட்டத்தினை உருவாக்குதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றை மேற்கொள்ளவுள்ளது.

இத்திட்டத்தினை Revised Linear Architecture முறையில் ரூ.1,815.31 கோடி ரூபாயில் செயல்படுத்துவதற்காக திருத்திய விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு 19-9-2019 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் மார்ச் 2021-க்குள் அமல்படுத்தப்படும்.

3. தமிழ்நெட்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 14-7-2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை இணைக்க மாநிலம் முழுவதும் கண்ணாடி இழை வலையமைப்பு அமைக்கப்பட்டு, அதிவேக அலைக்கற்றை வழங்கப்படும் என்றும், இத்திட்டம் தமிழ்நெட் என அழைக்கப்படும் என்றும் அறிவித்தார். இதன்மூலம் டிஜிட்டல் புரட்சியின் நன்மைகள் மற்றும் அரசு துறைகளின் சேவைகளை நகர்ப்புற மக்கள் அவரவர் இல்லத்திலிருந்தே பெறமுடியும்.

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக நிறுவனத்தின் கண்ணாடி இழை வலையமைப்பினைப் பயன்படுத்த தமிழ்நெட் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது மற்றும் இத்திட்டம், பாரத்நெட் திட்டத்துடன் இணைத்து மாநிலத்தின் "ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு" நிறுவப்படும்.

4. ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பிற்கான வலையமைப்பு

"ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு" (Integrated Digital Infrastructure), "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" ஆகியவற்றினை ஒருங்கிணைத்து அமைக்கப்படும். மாநில அளவிலான வலையமைப்பின்மூலம் நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள இல்லங்களுக்கு அதிவேக, மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்க இயலும்.

பல அடுக்குகளைக் கொண்ட இவ்வலையமைப்பானது, DWDM (Dense Wavelength Division Multiplexing), MPLS (Multiprotocol Label Switching) போன்ற தொழில்நுட்பங்களுடன்

2020 மார்ச் 24]

வடிவமைக்கப்பட்டு பாதுகாப்பு செயல்பாட்டு மையம் (SOC), செயல்பாட்டு ஆதரவு அமைப்பு (OSS) மற்றும் வணிக ஆதரவு அமைப்பு (BSS) ஆகியவற்றின் வாயிலாக கட்டுப்படுத்தப்பட்டு இயக்கப்படும்.

ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய மையப்படுத்தப்பட்ட வசதியானது, “தொலைநோக்கு பார்வையுடன் குடிமக்களை மையமாக கொண்ட ஆளுகையினை” (Citizen Centric Governance Vision) செயல்படுத்துவதை, இயல்பாக ஆதரிக்கும் திறன் கொண்டதாக அமையும்.

5. நிலையான வளர்ச்சி இலக்கு

பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய முப்பரிமாணங்களிலும் சீரான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி அடைவதே நிலையான வளர்ச்சி இலக்கு ஆகும். ஒருங்கிணைந்த அரசின் இலக்கை கொண்ட 17 குறிக்கோள்கள், குறிக்காட்டிகளின்மூலம் விவரிக்கப்பட்ட விளைவுகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் மாநிலத்தில் திட்டங்களை செயல்படுத்துகிறது மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப உள்கட்டமைப்பை உருவாக்குகிறது. இந்நிறுவனம், தமிழ்நெட் மற்றும் பாரத்நெட் திட்டங்கள்மூலம் வலுவான கட்டமைப்பினை வழங்கும். இவை சேவை வழங்குநர்களுக்கு மார்ச் 2021-க்குள் அனைவருக்கும் டிஜிட்டல் இணைப்பை வழங்க உதவும்.

TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம்-VII

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்

1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி தகவல் தொழில் நுட்பத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன்மூலம் மாணவர்களை தொழில் துறைக்கான தகுதி பெறச் செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து வெளிவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும், அதன்மூலம் அவர்களை தொழிற்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழுமூலம் நிருவகிக்கப்படுகிறது.

2. செயல்பாடுகள்

தமிழ்நாடு ஐசிடி அகாடமி பின்வரும் முக்கிய செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

2.1. ஆசிரியர் மேம்பாடு

- 91 உயர் கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு, அதன்மூலம் 2,387 உயர் கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- 835 உயர் கல்வித் துறை ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 8 டெக்னாலஜி கான்க்ளேவ்கள் நடத்தப்பட்டுள்ளன.

2.2. திறன் மேம்பாடு

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) வேலைவாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இறுதியாண்டு பயிலும் 2000 மாணவர்களுக்கு IT/ITes துறைசார் பயிற்சி மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (TNSDC) வேலைவாய்ப்புத் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசுக் கல்லூரிகளின் 750 மற்றும் 19 தன்னாட்சி கல்லூரிகளில் உள்ள இறுதியாண்டு மாணவர்களுக்கு BFSI, TELECOM, RETAIL மற்றும் IT/ITes துறைசார் பயிற்சி மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- சமூக நலத் துறையால் (Social Welfare and Nutritious Meal Programme Department) நடத்தப்படும் 4 சமூக நல விடுதிகளில் உள்ள 80 மாணவிகளுக்கு கணினி பயிற்சியுடன் ஆங்கில திறன் வளர்ப்பு மற்றும் அலுவலக நிருவாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) மற்றும் சுயநிதி கல்லூரிகள்மூலம் 7,000 இறுதியாண்டு மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

2.3. தொழில் முனைவு மேம்பாடு

- 42 கல்லூரிகளில், 13,357 கல்லூரி மாணவர்களுக்கு தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2.4. இளைஞர் மேம்பாடு

- ஐசிடி அகாடெமியின் ICTACT Youth Leadership Summit என்னும் இளைஞர்களுக்கான உச்சி மாநாடு கோயம்புத்தூரில் நடத்தப்பட்டு 2000-க்கும் மேற்பட்ட தமிழக மாணவர்கள் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

2.5. ஆய்விதழ்கள்

- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் பின்வரும் 5 ஆய்விதழ்களை வெளியிட்டு வருகிறது.
 - ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT)
 - ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP)
 - ஐசிடிஏசிடி (ICTACT) மென் கணினி ஆய்விதழ் (IJSC)
 - ஐசிடிஏசிடி (ICTACT) நுண் மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
 - ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மை ஆய்வுசார் ஆய்விதழ் (IJMS)

2.6. டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டம்


ஐசிடி அகாடெமி மத்திய அரசின் திட்டமான பிரதான் மந்திரி கிராமி டிஜிட்டல் சக்ஷத்ரா அபியான் (PMGDISHA) திட்டத்தின் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பங்குதாரராக உள்ள ஐசிடி அகாடெமி 13,29,200 நபர்களை பரிட்சித்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

2.7. பிரிட்ஜ்-தொழில் மற்றும் கல்வி நிறுவனத் தொடர்பு நிகழ்வு

ஐசிடி அகாடெமி நிறுவனத்தின் தலையாய மாநாடு "பிரிட்ஜ் (BRIDGE)" ஆகும். இதன்மூலம் இந்தியாவிற்கான அடுத்த தலைமுறையினரின் திறமையை மேம்படுத்த கல்வித் துறை தலைவர்கள், தொழில் துறை நிருவாகிகள் மற்றும் அரசின் கொள்கை வகுப்போர் ஆகியோருடன் கூடி ஆலோசித்து, விவாதித்து தீர்வு கண்டறியப்படும்.


தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சேவை சார்ந்த (IT / ITeS) நிறுவனங்களின் ஏற்றுமதி

(மதிப்பு ரூ. கோடியில்)



ஆதாரம் : இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா மற்றும் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம்


தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சேவை சார்ந்த (IT/1TeS) நிறுவனங்களின் வேலைவாய்ப்பு



ஆதாரம் : இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா மற்றும் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம்


[2020 மார்ச் 24

வரிசை எண்	வருடம்	மொத்த செயலிகள் எண்ணிக்கை	மொத்த கைபேசி செயலிகள் எண்ணிக்கை
1	2011	4	
2	2012	10	
3	2013	14	1
4	2014	30	2
5	2015	75	5
6	2016	98	16
8	2017	112	25
9	2018	147	49
10	2019	177	77
11	2020	181	81






CERT
CCMP
CSA
SOC
SAF
நிலை பதில் குழு
CERT- TN
மையம்
SOC- TN
மேலாண்மை திட்டம்
CCMP- TN


அரசு இ-சேவை மையம் மூலமாக
வழங்கப்படும் மாதவாரியான
பரிவர்த்தனை எண்ணிக்கை (2019 -2020)
பரிவர்த்தனை
1400000
1200000
1000000
800000
600000
400000
200000
0

[2020 மார்ச் 24

இணைப்பு XII

(45 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை

வருவாய்த் துறை மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குகிறது. அனைத்து நிருவாகத் துறைகளுக்கும் தாய்த் துறையாக வருவாய்த் துறை கருதப்படுகிறது. இத்துறை குடிமக்களின் அன்றாட வாழ்க்கையில் அனைத்து அம்சங்களிலும் இரண்டற கலந்து பயனளிக்கிறது. சீரான சமூக வளர்ச்சிக்கு இத்துறையின் பங்கு அளவிடற்கரியது. சாமானிய மனிதனின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வருவாய்த் துறையின் பங்களிப்பு இன்றியமையாததாகும். மாநிலத்தில் உள்ள நிருவாக அமைப்புகளில் வருவாய்த் துறை மிகவும் பழமையானதும் பெருமைக்குரியதும் ஆகும். வருவாய்த் துறை குக்கிராமத்திலும், கிராமத்திலும், மாநிலத்திலும் முழுமையான கட்டமைப்பினை கொண்டுள்ளதால் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை திறம்பட செயல்படுத்த முடிகிறது.

இத்துறை மாநிலம் முழுமைக்கும் நகரம் முதல் கிராமம் வரை நன்கு வரையறுக்கப்பட்ட நிருவாக அமைப்பினைக் கொண்டுள்ளது. ஆதலால் அரசின் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களும் இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. பெரும்பான்மையான துறைகள் வருவாய்த் துறையிலிருந்தே உருவாக்கப்பட்டதால் அவற்றின் செயல்பாடுகள் இத்துறையினைச் சார்ந்துள்ளது மட்டுமின்றி, மாவட்டத்தில் நிலம் மற்றும் இதர திட்டங்களை மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் அலுவலர்கள் மூலமும் செயல்படுத்துவதனால் வருவாய்த் துறை முக்கியமான துறையாக விளங்குகிறது.

2020 மார்ச் 24]

இத்துறை அரசின் உடைமைகளான நிலம், நீர்நிலை, கனிமம் மற்றும் புதையல் ஆகியவற்றிற்கு பாதுகாவலனாக இருந்து வருகிறது. விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஆதரவற்றோர்கள், முதியோர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்து பிரிவினரும் அரசின் உதவித் தொகையைப் பெறுவதற்கும், தொழில் முனைவோர் மற்றும் பொது/தனியார் தொழிற்சாலைகள் பயன்பெறும் வகையில் பல்வேறு விதமான சான்றிதழ்களை, குறிப்பாக சாதி, பிறப்பு, இறப்பு, வாரிசுச் சான்று, வருமான சான்று, பட்டா மாறுதல் சான்று மற்றும் பல்வேறு உரிமங்கள் ஆகியவற்றை இத்துறை வழங்கி வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் இந்திய மற்றும் மாநில தேர்தல் ஆணையங்கள் நடத்தும் தேர்தல்களிலும் வருவாய்த் துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது.

மேலும், வருவாய்த் துறை இயற்கை இடர்ப்பாடுகளின்போதும், மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின்போதும் அனைவரின் எதிர்பார்ப்பிற்கேற்ப முன்னின்று செயல்பட்டு வருகிறது. வறட்சி, வெள்ளம், புயல், சுனாமி, தீ விபத்துகள் போன்ற பேரிடர் காலங்களில் மக்களை எளிதில் சென்றடைவதிலும் மற்றும் நெருங்க முடியாத இடங்களில் இருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மற்றும் உரிய நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலும் முதன்மையான துறையாக செயல்பட்டு வருகிறது. பேரிடர்களின்போது பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து அவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், இதர அத்தியாவசியப் பொருட்கள் வழங்கியும் மற்றும் சேதமடைந்த மக்களது குடியிருப்புகளை மறு கட்டுமானம் செய்வதற்கு நிதியுதவி ஆகியவற்றையும் இத்துறை வழங்குகிறது.

1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் புதிதாக உருவாக்கப்பட்ட 3 ஆணையரகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. பின்னர் பன்முக செயல்பாடுகளின் அடிப்படையில் தற்போது 5 ஆணையரகங்களைக் கொண்டு இத்துறை செயல்பட்டு வருகின்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின்கீழ் தற்பொழுது வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், நில நிருவாக ஆணையரகம், நிலச் சீர்திருத்த ஆணையரகம், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் ஆகிய ஐந்து ஆணையரகங்கள்/ இயக்குநரகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்காணும் ஆணையரகங்களின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்க்காணுமாறு:-

அட்டவணை -1.1

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பணியாளர் விவரம்

ஆணையரக / இயக்குநரகத்தின் பெயர்	முதலாம் நிலை அலுவலர்	இரண்டாம் நிலை அலுவலர்	மூன்றாம் நிலை அலுவலர்	நான்காம் நிலை அலுவலர்	மொத்தம்
வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை	8	4591	25169	23333	53101
நில நிருவாகம்	6	25	98	20	149
நில சீர்திருத்தம்	2	38	123	51	214
நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்	13	314	6943	1513	8783
நகர்ப்புற நிலவரி	1	37	104	68	210
மொத்தம்	30	5005	32437	24985	62457

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு நிருவாகத்தில் உதவி புரிய மாவட்ட வருவாய் அலுவலர்கள், சார் ஆட்சியர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், நில அளவை உதவி இயக்குநர்கள், மண்டலத் துணை வட்டாட்சியர்கள், நில அளவை துணை ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு: கோரிக்கை எண் 41 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான வரவு செலவுத் திட்டம்

2020 மார்ச் 24]

2010-2011 ஆம் ஆண்டில் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 2739.62 கோடியிலிருந்து படிப்படியாக அதிகரித்து 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.7113.32 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 1.2

கோரிக்கை எண் 41 வருவாய்த் துறை					
(ரூபாய் கோடியில்)					
வ. எண்	ஆண்டு	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1.	2010-2011	2539.621	200.0046	0	2739.6256
2.	2011-2012	4193.6151	383.591	0	4577.2061
3.	2012-2013	5285.607	86.0246	0	5371.6316
4.	2013-2014	5751.3781	40.3413	0	5791.7194
5.	2014-2015	5809.833	102.062	0	5911.895
6.	2015-2016	5437.6445	132.4249	0.1845	5570.2539
7.	2016-2017	5361.4273	70.1019	0.6783	5432.2075
8.	2017-2018	5432.0441	163.5829	0.6303	5596.2573
9.	2018-2019	5612.4989	166.0015	0.581	5779.0814
10.	2019-2020	6481.4174	133.2602	0.4491	6615.1267
11.	2020-2021	6999.0673	114.0073	0.25	7113.3246
மொத்தம்		58904.1537	1591.4022	2.7732	60498.3291

2. வருவாய்த் துறையின் வளர்ச்சி

தொன்றுதொட்டே பொது நிருவாகம், வருவாய் வசூல், நில நிருவாகம் அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும், நிருவாகத்திற்கு அடிப்படையாகவும் இருந்து வருகிறது. இத்துறையின் தோற்றத்தினை வடஇந்தியாவில் மௌரியர் காலத்தில் தொடங்கி, அதனைத் தொடர்ந்து குப்தர் காலம், சுல்தான்கள், முகலாயர்கள் காலத்திலும், தென்னிந்தியாவில் சேர, சோழ,

[2020 மார்ச் 24

பாண்டிய மன்னர்களின் காலத்திலும் பின்னோக்கி பார்க்கலாம். ஒவ்வொருவரும் அவரவருக்கென தனித்தனி முறைகளைக் கொண்டு இத்துறை வளர்ச்சி பெற்றது. வருவாய் மற்றும் நில நிருவாகத் துறையின் தற்கால வரலாறு ஆங்கிலேயர் வருகையிலிருந்து தொடங்குகிறது.

2.1. வருவாய் நிருவாகத்தின் தற்கால வரலாற்றினை பின்வருமாறு பிரிக்கலாம்:

- 1803-க்கு முன்பு
- மெட்ராஸ் ஒழுங்குமுறைச் சட்டம், 1803
- வருவாய் வாரியம் - 1916 முதல் 1947 வரை
- வருவாய் வாரியம் 1947 முதல் 1980 வரை
- 1980-க்கு பின் வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு தனித்தனி ஆணையரகங்கள் தோன்றின.

2.2. 1803-க்கு முந்தைய காலம்

ஐரோப்பிய நாட்டினர் கி.பி. 15, 16-ம் நூற்றாண்டுகளில் வளர்ந்துவரும் அவர்களது தொழில் நிறுவனங்களுக்கு மூலப்பொருட்களுக்காகவும், அவர்களது தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும் பயணங்களின் வாயிலாக புதிய நிலப்பகுதிகளைக் கண்டடைந்தனர். இப்பயணங்களும் அவர்களது நவீன கடற்படையும் அவர்களது காலனி ஆதிக்கத்திற்கு வழிகோலியது. இங்கிலாந்து ராணி எலிசபெத்-I ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட ஒரு சாசனத்தின் வாயிலாக கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்டது. இது ஆங்கிலேயரின் இந்திய வருகைக்குக் காரணமாக அமைந்தது. ஒழுங்குமுறைச் சட்டம், 1773 வாயிலாக வங்காளம், பம்பாய் மற்றும் மெட்ராஸ் மாகாணங்கள் நிருவாக மேற்பார்வைக்கு உருவாக்கப்பட்டன. வருவாய் தொடர்பான பரிவர்த்தனைகளை கவர்னர் ஜெனரலும், அவரது சபையும் மேற்கொண்டு, அவர்கள் அனைத்து அதிகாரங்களையும் கொண்டு விளங்கினர். நில வருவாய் அரசிற்கு முக்கிய வருவாயாக விளங்கியது. கவர்னர் ஜெனரல் வருவாய் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும்போது அவரது சபை வாரியம் என்று அழைக்கப்பட்டது. அன்றைய அரசாங்கம் பொது மற்றும் இராணுவம் என இரு துறைகளைக் கொண்டு இருந்தது. வருவாய், பொதுத் துறையின்கீழ் நிருவகிக்கப்பட்டது.

2020 மார்ச் 24]

நிலம், நில அளவை, நில உரிமை, நில வருவாய் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே சென்ற நிலையில், 18 ஆகஸ்ட் 1974-ல் கவர்னர் ஜெனரலால் வருவாய் ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டது. கவர்னர், தலைமை தளபதி மற்றும் இரண்டு உறுப்பினர்கள் கொண்ட சபையால் வருவாய் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சபை வாரியம் என்றும் அழைக்கப்பட்டது. 20-6-1789 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தின் வருவாய் நிருவாகத்தினை மேற்கொள்ளும் தலைமை அமைப்பாக வருவாய் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் நில அளவை, நிலவரித் திட்டம் மற்றும் நில ஆவணப் பதிவேடுகளைப் பராமரிக்கும் முறைகளும் தோன்றின.

2.3. மெட்ராஸ் ஒழுங்குமுறைச் சட்டம் 1803

மெட்ராஸ் ஒழுங்குமுறைச் சட்டம் 1803, வருவாய் வாரியத்தின் அதிகாரங்களையும், கடமைகளையும் வரையறுத்ததனைத் தொடர்ந்து முத்திரை வரி, உப்பு, அப்காரி வருவாய் மற்றும் பல்வேறு வருவாய் தொடர்பான இனங்கள் வருவாய் வாரியம் என்ற ஒற்றை அமைப்பின்கீழ் வரப்பெற்றன. ஒழுங்குமுறைச் சட்டம் 1987 இயற்றியதன் வாயிலாக வருவாய் வாரியத்தின் அதிகார வரம்பு மேலும் விரிவடைந்து, சமய அறநிலையங்கள் மற்றும் அதன் சொத்துகளை நிருவகிக்கும் பொறுப்புகளைக் கொண்டு விளங்கியது. பின்னர் கடல் வணிகம், பொது வணிகம், வரி விதிப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், பாசனம், ஏரிகள் மற்றும் சாலைகள் ஆகியவற்றினை மேற்பார்வையிடும் பணிகளும் வாரியத்திற்கு வழங்கப்பட்டன. மேலும், மாவட்ட ஆட்சியர்களின் முடிவுகள்மீது மேல்முறையீட்டு அதிகாரமும் வாரியத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வாறாக பெரும்பான்மையான குடிமை நிருவாகத்தினைக் கண்காணிப்பதும் மற்றும் ஒழுங்குப்படுத்தும் அமைப்பாகவும் வருவாய் வாரியம் விளங்கியது. 1849-ல் குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கு கூடுதல் பொறுப்புகளும் வழங்கப்பட்டன. இதுவே வருவாய் வாரியம் மெட்ராஸ் மாகாண நிருவாகத்தின் அதிகாரமிக்க அமைப்பாக உருப்பெற்ற சகாப்த நிகழ்வாகும்.

2.4. வருவாய் வாரியம் 1916 முதல் 1947 வரை

நிருவாகத்தின் அதிகரிக்கும் தேவையைக் கருத்தில் கொண்டு, வருவாய் வாரியத்திலிருந்து தனித் தனித் துறைகள் உருவாக்கப்பட்டன. 1916-ல் விவசாயம், கால்நடை, கூட்டுறவு

துறைகள் உருவாக்கப்பட்டன. பின்னர், வருமான வரி, கலால், கடல் வணிகம், உப்புக்கென்று தனித் துறைகள் உருவாக்கப்பட்டன. வருவாய் வாரியம் நிலம் மற்றும் நில வருவாய்மீது தனிப்பெரும் அதிகாரம் கொண்டு விளங்கியது. இக்காலக்கட்டத்தில் வருவாய் நிலை ஆணைகள் வகுக்கப்பட்டு தற்கால வருவாய் நிருவாகத்திற்கு அடிகோலியது.

2.5. 1947 முதல் 1980 வரை வருவாய் வாரியம்

ஆங்கிலேய ஆட்சிக்குப் பிறகான சுதந்திர இந்தியாவின் நிருவாக அமைப்பிற்கு ஏற்றவாறு சமூக நலத் துறை தனித் துறையாகத் தோன்றியது. சுதந்திர இந்தியாவில் வருவாய் வாரியத்தின் சட்டங்களையும், பொறுப்புகளையும், கடமைகளையும், அதிகாரத்தையும் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது.

நிருவாகத்தினை செம்மைப்படுத்தும் நோக்குடன் 5-12-1980-ல் வருவாய் வாரியம் மறு சீரமைக்கப்பட்டு, வருவாய் நிருவாகம், நில நிருவாகம் மற்றும் நிலச் சீர்திருத்தம் என மூன்று துறைகள் உருவாக்கப்பட்டன.

வருவாய் வாரியத்திலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சமூகப் பாதுகாப்புத் திட்டம், வருவாய் நிருவாகம், மாவட்டங்களின் அன்றாட நிருவாகம், பேரிடர் தணிக்கை மற்றும் மேலாண்மை போன்ற பணிகளைக் கண்காணிக்கும் பன்முகத் தன்மை கொண்ட துறையாக உருவெடுத்தும் மாநிலத்தின் நிருவாகத்தில் நேரடி முக்கிய பங்கு வகித்தும் அனைத்து துறைகளுக்கும் தாய்த் துறையாகப் பார்க்கப்படுகிறது.

3. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

மாநிலத்தின், அடிப்படை வருவாய் நிருவாகத்தில் இத்துறை மிக முக்கிய மற்றும் இன்றிமையாதப் பங்கினை வகிக்கிறது. மாவட்ட அளவில் இத்துறை தனது நிருவாக இயந்திரத்தின்மூலம் இதர துறைகளுக்கும் முதுகெலும்பாக விளங்குகிறது. மக்களுக்கு உரிய நேரத்தில் சேவைகள் சென்றடைவதை உறுதி செய்வதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. வருவாய் நிருவாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையரின் தலைமையில் சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர், பேரிடர் மேலாண்மை இயக்குநர், இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) மற்றும் இதர அலுவலர்கள் இயங்குகின்றனர்.

இத்துறையின் பணிகளில் அடங்குபவை:-

1. பொது வருவாய் நிருவாகம்
2. நில வருவாய் வசூல்
3. சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்துதல்
4. குறைத் தீர்க்கும் வழிமுறைகள்
5. பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்
6. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு
7. கீழ்க்கண்ட சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம் செய்தல்

அ. வருவாய் வசூல் சட்டம், 1864

ஆ. புதைப்பொருள் சட்டம், 1878

இ. தமிழ்நாடு வெடிபொருள் சட்டம், 1884

ஈ. தமிழ்நாடு அடகு பிடிப்போர் சட்டம், 1943

உ. பொதுக் கட்டட உரிமம் சட்டம், 1965

ஊ. தமிழ்நாடு பிறப்பு /இறப்பு பதிவுச் சட்டம், 1969

எ. தமிழ்நாடு அதிக வட்டிக்கு கடன் கொடுப்பதைத் தடுத்தல் சட்டம், 2003

இத்துறை மாவட்ட நிலை முதல் கிராம நிலை வரை களப்பணியாளர்களைக் கொண்டுள்ளது.

3.1. மாவட்ட நிருவாகம்

தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களின் நிருவாகம் மாவட்ட ஆட்சியர்களின்கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட நடுவரின் மேற்பார்வையின்கீழ் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட அளவிலான பல துறைகளைச் சார்ந்த மாவட்ட நிலை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

3.2. வருவாய் கோட்ட நிருவாகம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிருவாகம் செம்மையாக செயல்பட கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, சார் ஆட்சியர்/கோட்டாட்சியரின்கீழ் இயங்கி வருகின்றன. வருவாய் நிருவாகம், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, நில நிருவாகம், வருவாய் கிராம நிருவாகம் போன்ற பொறுப்புகளை வருவாய்க் கோட்டாட்சியர்கள் நிருவகித்து கண்காணித்து வருகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 92 கோட்டங்கள் உள்ளன.

3.3. வருவாய் வட்ட நிருவாகம்

வட்ட நிருவாகம், வட்டாட்சியரின்கீழ் இயங்கி வருகிறது. பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மாணவ/மாணவியர்களுக்குத் தேவையான பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் சாதிச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று போன்ற பல்வேறு சான்றுகள் இணைய வழிமூலம் வழங்குவதற்கு துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவி புரிகின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 312 வருவாய் வட்டங்கள் உள்ளன.

3.4. குறுவட்ட நிருவாகம்

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள சில வருவாய் கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பிர்க்கா என்று அழைக்கப்படும் குறுவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளர் குறுவட்டத்தில் உள்ள நிருவாகப் பணிகளை மேற்கொள்வார். இவர் நிலவரி வசூல் பணியிலும், கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை மேற்பார்வையிடுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1199 குறுவட்டங்கள் உள்ளன.

3.5. வருவாய் கிராம நிருவாகம்

வருவாய் நிருவாகத்தின் அச்சாணியாகவும், முக்கிய அங்கமாகவும் வருவாய் கிராம நிருவாகம் உள்ளது. வருவாய் கிராமத்தினை நிருவகிக்கும் அலுவலர் கிராம நிருவாக அலுவலர் ஆவார். கிராம நிருவாக அலுவலர் கிராம கணக்குகளைப் பராமரித்தல், நிலவரி வசூல் செய்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை செயல்படுத்தும் அலுவலர் ஆவார். பொதுமக்களுக்கு பேரிடர் காலங்களில் தகவல் அளித்தல் மற்றும் அசம்பாவித நிகழ்வுகள்/சட்டம் ஒழுங்கு குறித்து உயர் அலுவலர்களுக்கு

தகவல் அளித்தல் ஆகிய பணிகளில் கிராம நிருவாக அலுவலர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். தமிழ்நாட்டில் 16,743 வருவாய் கிராமங்கள் உள்ளன.

3.6. வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பு

வருவாய் நிருவாகத் துறையில் துணை ஆட்சியர் பணிநிலை முதல் கிராம உதவியாளர் நிலை வரை தற்போது 52,722 பணியாளர்கள் உள்ளனர். பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது:

அட்டவணை- 3.1

வருவாய் நிருவாகத் துறையில் உள்ள பணியாளர்கள் விவரம்

வ. எண்	பணியிடத்தின் பெயர்	அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை
1	துணை ஆட்சியர்	497
2	வட்டாட்சியர்	1942
3	துணை வட்டாட்சியர், கண்காணிப்பாளர் /சுத்த நகல் கண்காணிப்பாளர்	2095
4	முதுநிலை (வருவாய் ஆய்வாளர்கள்)	7476
5	இளநிலை (வருவாய் ஆய்வாளர்கள்)	3182
6	தட்டச்சர் (சுருக்கெழுத்து தட்டச்சர்)	1612
7	ஓட்டுநர், பதிவுரு உதவியாளர்/பதிவுரு எழுத்தர்/நகல் எடுப்பவர்/காவலர்/ மசால்சி/ தோட்டக்காரர்/துப்புரவு பணியாளர்கள்	2817
8	அலுவலக உதவியாளர்	3850
9	கிராம நிருவாக அலுவலர்	12621
10	கிராம உதவியாளர்	16630
	மொத்தம்	52722

[2020 மார்ச் 24

3.7. ஆட்சி எல்லைகளை மறுசீரமைத்தல்/புதிய நிருவாக அலகுகளை உருவாக்குதல்

அரசின் சேவையினை எளிதாகவும் விரைவாகவும் மக்களின் இருப்பிடத்தில் இருந்தே பெறும் பொருட்டு பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், தொலைதூர பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை விரைந்து அளிக்கும் பொருட்டு, புதிய மாவட்டங்கள், புதிய வருவாய் கோட்டங்கள் மற்றும் புதிய வருவாய் வட்டங்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி உருவாக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையின் அடிப்படையில் புதிய வருவாய் வட்டங்களைப் பிரிப்பது தொடர்பாக அரசுக்கு பரிந்துரைக்க வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய 3 அலுவலர்களைக் கொண்ட குழுவை அமைத்து அரசு ஆணையிட்டது. 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரை மொத்தம் 5 மாவட்டங்கள், 16 வருவாய் கோட்டங்கள் மற்றும் 90 வருவாய் வட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

அட்டவணை - 3.2

மாவட்டவாரியாக உள்ள வருவாய் கோட்டங்கள், வருவாய் வட்டங்கள், குறு வட்டங்கள் மற்றும் வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை விவரங்கள்

வ. எண்	மாவட்டம்	வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை	குறுவட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை
1.	அரியலூர்	2	4	15	195
2.	சென்னை	3	16	49	122
3.	கோயம்புத்தூர்	3	11	38	295
4.	கடலூர்	3	10	32	899
5.	தருமபுரி	2	7	23	261

வ. எண்	மாவட்டம்	வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை	குறுவட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை
6.	திண்டுக்கல்	3	10	40	361
7.	ஈரோடு	2	10	35	375
8.	காஞ்சிபுரம்	2	5	25	479
9.	கன்னியாகுமரி	2	6	18	188
10.	கரூர்	2	7	20	203
11.	கிருஷ்ணகிரி	2	8	30	362
12.	மதுரை	4	11	51	665
13.	நாகப்பட்டினம்	2	8	35	523
14.	நாமக்கல்	2	8	32	363
15.	பெரம்பலூர்	1	4	11	152
16.	புதுக்கோட்டை	3	12	45	763
17.	இராமநாதபுரம்	2	9	38	400
18.	சேலம்	4	13	44	650
19.	சிவகங்கை	2	9	39	522
20.	தஞ்சாவூர்	3	9	50	956
21.	நீலகிரி	3	6	15	88
22.	தேனி	2	5	17	97
23.	தூத்துக்குடி	3	10	41	480
24.	திருச்சிராப்பள்ளி	4	11	43	507

[2020 மார்ச் 24

வ. எண்	மாவட்டம்	வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை	குறுவட்டங்களின் எண்ணிக்கை	வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை
25.	திருநெல்வேலி	2	8	30	370
26.	திருப்பூர்	3	9	33	350
27.	திருவள்ளூர்	3	9	48	663
28.	திருவண்ணாமலை	3	12	54	1067
29.	திருவாரூர்	2	8	28	573
30.	வேலூர்	2	6	20	317
31.	விழுப்புரம்	2	9	34	928
32.	விருதுநகர்	3	10	39	600
33	தென்காசி	2	8	30	246
34	கள்ளக்குறிச்சி	2	6	24	562
35	ராணிப்பேட்டை	2	6	18	330
36	திருப்பத்தூர்	2	4	15	195
37	செங்கல்பட்டு	3	8	40	636
	மொத்தம்	92	312	1199	16743

3.8. வருவாய் கட்டடங்கள்

பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ளும் வகையிலும் அலுவலக சூழலை மேம்படுத்தும் பொருட்டும், மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை உள்ள அனைத்து வருவாய்த் துறை அலுவலர்களுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதமாக அலுவலக மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

2020 மார்ச் 24]

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2019-2020 ஆம் நிதியாண்டில் தென்காசி, கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் செங்கல்பட்டு என புதியதாக உருவாக்கப்பட்ட 5 மாவட்டங்களுக்கு தற்காலிக மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அமைக்க ரூ.26.35 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழக அரசால் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி ஆகிய இரண்டு கோட்டங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.5 கோடியும், 14 வட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.45.02 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.9. நில வருவாய்

அரசாணை (நிலை) எண் 544, வருவாய்த் துறை (வ.நி.1(1)), நாள் 20-10-2010-ன்படி தமிழ்நாட்டில் உள்ள நிலங்களுக்கு அவற்றின் வகைப்பாட்டிற்கேற்ப கீழ்க்கண்டவாறு நில்வரித் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை - 3.3

வ. எண்	விவரம்	தொகை / ஏக்கர் (ரூபாயில்)
1.	புஞ்சை நிலத்திற்குத் தீர்வை	2/-
2.	நஞ்சை நிலத்திற்குத் தீர்வை	5/-
3.	ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்கிரமணத் தீர்வை	5/-
4.	பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை	1/-

வருவாய்த் தீர்வாய நிகழ்வின்போது ஒவ்வொரு கிராமத்தின் ஆண்டு வருவாய்க் கணக்குகள் இறுதி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜூலை 1-ம் தேதி முதல் ஜூன் 30-ம் தேதி வரை நிலவரி வசூலிக்கும் காலம் ஆகும்.

3.10. இ-அடங்கல்

ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் அடிப்படை நிலப்பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. மேலும் விவசாயிகளால் பருவ வாரியாக பயிர் செய்யப்படும் பயிர்களின் விவரம், விளைச்சல், நீர் ஆதாரம் போன்ற பல்வேறு புள்ளி விவரங்கள் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு இப்புள்ளிவிவரங்கள் ஜி-அறிக்கை (மொத்த சாகுபடி புள்ளிவிவர அறிக்கை) தயாரிக்க உதவுகிறது. வறட்சி, வெள்ளம் மற்றும் பூச்சி தாக்குதலினால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அடங்கல் முக்கிய ஆவணமாக விளங்குகிறது. 1428 ஆம் பசலி ஆண்டு வரை அடங்கல் பதிவேடானது கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதப்பட்டு வந்தது. இது பணிச்சுமை மிக்கதாகவும், காலம் பிடிக்கக்கூடிய பணியாகவும் இருந்தது. கிராம நிருவாக அலுவலர்களால் கையினால் எழுதி பராமரிக்கப்பட்டு வந்த முறையை எளிமைப்படுத்திடவும், சாகுபடி விவரங்களை துல்லியமாகப் பெற்றிடவும் அடங்கல் பதிவேட்டினை மின்னணு படிவிற்கு மாற்றம் செய்யும் இ-அடங்கல் திட்டத்தினை செயல்முறைபடுத்த அரசாணை எண் 258, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-8-2017-ன்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இணையதள இ-அடங்கல் செயலி 26-10-2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் இ-அடங்கல் கைப்பேசி செயலி 5-3-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. கிராம நிருவாக அலுவலர்களால் இதுவரை தயாரிக்கப்பட்டு வந்த அடங்கல் பதிவேட்டில் விவசாயிகள் தங்கள் சாகுபடி விவரங்களைப் பதிவு செய்யும் நடைமுறை இல்லை. எனவே, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தங்கள் சாகுபடி விவரத்தினை தாங்களே இ-அடங்கலில் பதிவிட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. கிராம நிருவாக அலுவலர் மற்றும் விவசாயிகளால் செய்யப்படும் சாகுபடி பதிவுகளுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பின், அப்பதிவு தானாகவே அடுத்த உயர்நிலை அலுவலருக்கு குறியீடு


2020 மார்ச் 24]

செய்யப்பட்டு, அவரது ஆய்வுக்குப்பின் திருத்தம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் புள்ளியியல் துறையைச் சேர்ந்த அலுவலர்களும் தங்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பயிர் சாகுபடி விவரங்களை இச்செயலியில் பதிவு செய்ய தனி சாளர வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இ-அடங்கல் முறையில் தானாகவே சாகுபடி பயிர்பரப்பு ஒத்திசைவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதால், பதிவேடு முறை ஒத்திசைவு களையப்படுகிறது. இ-அடங்கல் முறையில் விவசாயிகள் எவ்வித கட்டணமுமின்றி பதிவுகளை பார்வையிடவும், ரூ.100/- கட்டணம் செலுத்தி வீட்டிலோ (அல்லது) இ-சேவை மையத்திலோ மின்னணு அடங்கல் பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளவும் இயலும்.

3.11. சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த திருமணமாகாத ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது அனைத்து சமூக பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பான்மையான மக்களுக்கு, குறிப்பாக முதியோர்களுக்கும், மாற்றுத் திறனுடையவர்களுக்கும் சென்றடைய ஏதுவாக இத்திட்டத்திற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு மக்களின் தேவையைக் கருதி இதுவரை இல்லாத அளவிற்கு அதிக ஒதுக்கீடாக ரூ. 4,306.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5-2-2020 அன்று உள்ள பதிவுகளின்படி 31.63 இலட்சம் பயனாளிகள் கீழ்க்காணும் திட்டங்களின்மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

[2020 மார்ச் 24



அட்டவணை எண். 3.4

மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் பங்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர்	வயது	மத்திய அரசின் பங்கீடு ரூ.	மாநில அரசின் பங்கீடு ரூ.
1	இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்	60 வயது முதல் 79 வயது வரை	200/-	800/-
		80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது	500/-	500/-
2	இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	18 வயது முதல் 79 வயது வரை	300/-	700/-

வ. எண்	திட்டத்தின் பெயர்	வயது	மத்திய அரசின் பங்கீடு ரூ.	மாநில அரசின் பங்கீடு ரூ.
3	இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்	40 வயது முதல் 79 வயது வரை	300/-	700/-
4	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது		1000/-
5	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது		1000/-
6	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவயது		1000/-
7	ஆதரவற்ற/ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது		1000/-
8	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது		1000/-
9.	இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்	60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது		1000/-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3.12. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு அறிவிப்பு

தமிழ்நாடு அரசு உதவித் தொகை பெறத் தகுதியுடைய நபர்கள் பயன்பெற வேண்டுமென்ற உயரிய நோக்கில் அரசாணை எண் 408 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 1-11-2019-ல் 5 இலட்சம் தகுதியுள்ள புதிய பயனாளிகளை கூடுதலாக சேர்க்க ஆணையிடப்பட்டுள்ளது.

3.13. தகுதி வரம்பு

பயனாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு, தகுதியான ஆதரவற்ற ஏழைகள் அனைவரும் பயனடையும் வகையில், 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆதரவற்றோர் என்பதற்கு உண்டான அர்த்தத்தை அரசாணை எண் 26, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 17-4-2015-ல் விரிவுபடுத்தி மீண்டும் அரசாணை எண் 9, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 21-1-2020-ல் மேலும் மாற்றப்பட்டு தகுதியுள்ள அனைத்து பயனாளிகளையும் இத்திட்டத்தில் கொண்டுவர கீழ்க்கண்டவாறு விதிகளைத் தளர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது ஆதரவற்ற நபர் என்பது

- ➢ வருமானம் அல்லது வருமானத்திற்கு வழியில்லாதது
- ➢ ரூ.1,00,000-க்கு மேலாக அசையா சொத்து, 20 வயதுக்கு மேற்பட்ட உறவினர்கள் கீழ்காணும் வகையினர் இல்லாதது
 - ✓ மகன்
 - ✓ மகனுடைய மகன் மற்றும்
 - ✓ கணவர்/மனைவி அல்லது இதர உறவினர்கள், பொதுவாக ஒன்றாக வாழ்வோர்

மேல் குறிப்பிட்டுள்ள வகையில் ஒருவருக்கு உறவினர்கள் இல்லாவிடில் அவர் ஆதரவற்றோர் எனக் கருதப்படுவர், மேலும்

- ➢ அனுமதி வழங்கும் அலுவலர் சம்பந்தப்பட்ட நபர் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளார் என திருப்தி அடைந்தால்

அல்லது

- ➢ அனுமதி வழங்கும் அலுவலர் சம்பந்தப்பட்ட நபரின் உறவினர்கள் தொடர்ச்சியாக காணவில்லை என திருப்தி அடைந்தால்

2020 மார்ச் 24]

➢ இத்திட்டத்தின்படி ஏதேனும் இதர அரசு திட்டத்தின்மூலம் விலையில்லாமல் பெறப்பட்ட குடியிருப்பை தனியரது அசையா சொத்தாக கருதக் கூடாது.

மேலும் அரசாணை (நிலை) எண் 27, சமூகப் பாதுகாப்பு மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22-2-2016-ன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும் ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்தும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண் 41, சமூகப் பாதுகாப்பு மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28-5-2018-ன்படி தனி நபர் வருமானத்தை 3 இலட்சமாக உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

தேசிய சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அட்டவணை-3.5

வ. எண்	திட்டத்தின் பெயர்	நிபந்தனைகள்
1	இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி—ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வருமானம்-வறுமைக்கோட்டிற்குக்கீழ் வயது-60 மற்றும் அதற்கு மேல்
2	இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	வருமானம்-வறுமைக்கோட்டிற்குகீழ் வயது-18 வயது மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை-80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்.
3	இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி—ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வருமானம்-வறுமைக்கோட்டிற்குக்கீழ் வயது-40 மற்றும் அதற்கு மேல்

[2020 மார்ச் 24

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயன்பெற கீழ்க்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அட்டவணை-3.6

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள்
1	மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி-வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். வயது-18 மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை-40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்.
2	ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்	தகுதி-ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது-18 மற்றும் அதற்குமேல் அசையா சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/-த்திற்குள் இருத்தல் வேண்டும்.
3	முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்	தகுதி-ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது-60 மற்றும் அதற்கு மேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையா சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/-த்திற்குள் இருத்தல் வேண்டும்.

2020 மார்ச் 24]

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள்
4	ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்	தகுதி-ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது-30 மற்றும் அதற்கு மேல் சட்டப்பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/-த்திற்குள் இருத்தல் வேண்டும்
5	50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்	தகுதி-ஆதரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும். வயது-50 மற்றும் அதற்கு மேல் சொத்தின் மதிப்பு ரூ.1,00,000/-த்திற்குள் இருத்தல் வேண்டும்

80 வயதைக் கடந்து ஓய்வூதியம் பெற்று வரும் 2.19 இலட்சம் பயனாளிகளின் சிரமத்தினைப் போக்கும் வகையில், அப்பயனாளிகளின் வீட்டிற்கே சென்று இந்திய அஞ்சல் துறையின் மின் பண அஞ்சல் (eMO) மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, ஆண்டுக்கு ரூ.1.09 கோடி கூடுதலாக செலவிடப்படுகிறது.

3.14. ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் ஓய்வூதியம் பெறும் 31.63 இலட்சம் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

3.15. ஓய்வூதியதாரர்களுக்கு அரிசி வழங்கும் திட்டம்

இத்திட்டங்களின்கீழ் உள்ள பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா சன்ன ரக அரிசி வழங்கப்படுகிறது.

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்னரக அரிசி வழங்கப்படுகிறது.

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்னரக அரிசி வழங்கப்படுகிறது.

3.16. புரட்சித் தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து மற்றும் வாழ்நாள் காப்பீட்டுத் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பத்தில் உள்ள நபர்கள் இயற்கை மரணம் எய்தினால் ரூ.2 இலட்சமும், விபத்தினால் இறந்தால் ரூ.4 இலட்சமும் மற்றும் விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படுமாயின் ரூ.2 இலட்சமும் வழங்குவது விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் குறிக்கோளாகும். இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க திட்டமாகும்.

தகுதிகள்

- வயது 18 (பூர்த்தியடைந்திருக்க வேண்டும்) முதல் 55-க்குள் இருக்க வேண்டும்
- வறுமைக் கோட்டிற்குகீழ் இருக்க வேண்டும்.

அட்டவணை-3.7

திட்டங்களைப்பற்றி

தகுதிகள்	பிரதான் மந்திரி சுரக் ஷ பீம யோஜனா	பிரதான் மந்திரி ஜீவன்ஜோதி பீம யோஜனா
காப்பீட்டு விவரம்	விபத்து மரணம்/ உடல் ஊனம்/ விபத்தினால் காயம்	பிற காரணங்களினால் ஏற்படும் இறப்பு
வயது	வயது 18 - 70 வரை	வயது 18 – 50 வரை
பணப்பயன்	2,00,000/-	2,00,000/-

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தகுதிகள்	பிரதான் மந்திரி சுரக் ஷ பீம யோஜனா	பிரதான் மந்திரி ஜீவன்ஜோதி பீம யோஜனா
ஆண்டு சந்தா தொகை	ரூ.12/-	ரூ.330/-
காப்பீடு முடியும் வயது	வயது 70	வயது 55
இறப்பு ஏற்பட்டால் வழங்கப்படும் பணபயன்	---	2,00,000/-
விபத்து மரணம் ஏற்பட்டால் வழங்கப்படும் பணபயன்	2,00,000/-	2,00,000/-
இரண்டு கண் / இரண்டு கைகள் / இரண்டு கால்கள் ஊனமுற்றால் வழங்கப்படும் பண பயன்	2,00,000/-	--
ஒரு கண் / ஒரு கை ஊனமுற்றால் வழங்கப்படும் பணபயன்	1,00,000/-	--

நிருவகிக்கும் துறை (Nodal Department)

மாநில அளவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தாய்த் துறையாகவும், இயக்குநர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரியாகவும் செயல்படுவார்.

மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் அலுவலர் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரியாகவும் செயல்படுவார். தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வட்டாட்சியர்

[2020 மார்ச் 24

(சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மாவட்ட மற்றும் வட்ட அளவில் இத்திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பர்.

தலைமை முகமை (Nodal Agency)

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் இத்திட்டத்தின் தலைமை முகமையாக செயல்படும்.

உறுப்பினராவதற்கு தேவைப்படும் விவரங்கள்

குடும்பத் தலைவரின் பெயர், தந்தை/கணவரின் பெயர் (திருமணமான பெண் எனில்), பாலினம், பிறந்த தேதி, சாதி, வறுமைக்கோட்டு பட்டியல் எண், ஆதார் எண், ரேசன் அட்டை எண், வங்கி கணக்கு எண், குடும்பத் தலைவரின் தொழில், முழு முகவரி, செல்பேசி எண், நாமினி பெயர், உறுப்பினருக்கும் நாமினிக்கும் உள்ள உறவு, நாமினியின் ஆதார் எண், நாமினியின் முழு முகவரி.

உறுப்பினர் சேர்க்கும் முறை

- வறுமைக்கோட்டு பட்டியல் விவரங்கள் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் நிறுவனத்திடம் வழங்கப்படும்.
- தகுதியான உறுப்பினர்களின் விவரங்கள் மற்றும் காப்பீட்டுத் தொகை பெற்ற பின்பு காப்பீடு உறுதி செய்யப்படும்.
- PMJJBY (Pradhan Mantri Jeevan Jyoti Bima Yojana) திட்டம் அதன் தற்போதைய வயது வரம்பான 18-55–வரை செயல்படுத்தப்படும்.
- குடும்பத் தலைவரின் விவரங்களோடு நாமினியின் விவரங்களும் சேகரிக்கப்படும். குடும்பத் தலைவரின் இறப்பிற்குப் பின் நாமினிக்கு பணப் பயன்கள் வழங்கப்படும். நாமினி அடுத்த குடும்பத் தலைவராக இத்திட்டத்தின்கீழ் கருதப்படுவார்
- இணையதளம் வாயிலாக இத்திட்ட உறுப்பினர்களின் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் பராமரிக்கப்படும்.

பயன்களைப்பெற சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்:-

- இயற்கை மரணம் எய்தினால் இறப்பு சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

- விபத்து (அ) பிற காரணங்களினால் இறப்பு ஏற்பட்டால், இறப்பு சான்று, வாரிசு சான்று, முதல் தகவல் அறிக்கை, பிணக் கூராய்வு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் பயன்களை வழங்கும் நடைமுறை

காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் உள்ள காலத்தில் உறுப்பினர் இறந்துவிட்டால் அவரது வாரிசுதாரரோ/ பரிந்துரைக்கப்பட்டவரோ அனைத்து ஆவணங்களுடன் வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி விண்ணப்பத்தினை மூன்று உறுப்பினர்களைக் கொண்ட (இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், மகளிர் மேம்பாட்டுக் கழகம், வருவாய்த் துறை) மாவட்ட மையத்திற்கு வட்டாட்சியரால் அனுப்பி வைக்கப்படும்.

விபத்து மரணம் அடைந்தால் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி உரிய பணப்பயன்களை வழங்கும். பணப்பயன்கள் அனைத்தும் பயனாளியின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். இறப்பு ஏற்பட்ட 30 நாட்களுக்குள் பணப் பயன்கள் வழங்கப்படும்.

மாவட்ட அளவு அதிகாரமளிக்கப்பட்ட குழு

சேர்க்கை, நியமனம், இறப்புச் சான்றிதழ் , வாரிசுச் சான்றிதழ், வயது வரம்பு, வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளோர் அறிக்கை இவைகள் தொடர்பாக புகார்கள்/பிரச்சினை ஏதேனும் இருப்பின் மாவட்ட ஆட்சியரைத் தலைமையாகக்கொண்ட கீழ்க்காணும் உறுப்பினர்களைக்கொண்ட மாவட்ட அளவில் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவில் சமர்பிக்கப்படவேண்டும்.

அட்டவணை-3.8

1	மாவட்ட ஆட்சியர்	குழுத்தலைவர்
2	மாநகராட்சி ஆணையர்	உறுப்பினர்
3	மண்டல இயக்குநர், நகராட்சி நிருவாகம்	உறுப்பினர்
4	வருவாய் கோட்ட அலுவலர்	உறுப்பினர்

[2020 மார்ச் 24

5	மண்டல போக்குவரத்து அலுவலர்	உறுப்பினர்
6	உதவி இயக்குநர் (பஞ்சாயத்து)	உறுப்பினர்
7	உதவி இயக்குநர் (நகர பஞ்சாயத்து)	உறுப்பினர்
8	நகராட்சி ஆணையர் (உரிய நகராட்சி)	உறுப்பினர்
9	திட்ட இயக்குநர் (TNSLRM)	உறுப்பினர்
10	தொழிலாளர் நல அலுவலர்	உறுப்பினர்
11	மண்டல மேலாளர் (ஆயுள் காப்பீட்டுக் கழகம்)	உறுப்பினர்
12	வட்டாட்சியர்	உறுப்பினர்
13	தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)	உறுப்பினர்
14	தனி துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)	செயல் உறுப்பினர்

மாநில அளவு அதிகாரமளிக்கப்பட்ட குழு

இத்திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு நடைமுறைகளை காலத்திற்கு ஏற்றவாறு ஆய்வு செய்வதற்கு தலைமைச் செயலரின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவில் அதிகாரம் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-3.9

1	அரசு தலைமைச் செயலர்	குழு தலைவர்
2	முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்	உறுப்பினர் செயலர்
3	அரசு கூடுதல் தலைமைச் செயலர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை	உறுப்பினர்

2020 மார்ச் 24]

4	அரசு கூடுதல் தலைமைச் செயலர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	உறுப்பினர்
5	அரசு முதன்மைச் செயலர், நிதித் துறை	உறுப்பினர்
6	அரசு முதன்மைச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	உறுப்பினர்
7	அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	உறுப்பினர்
8	தலைமைச் செயல் அலுவலர் / ஆணையர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை	உறுப்பினர்
9	ஆணையர், நகராட்சி நிருவாகம்	உறுப்பினர்
10	ஆணையர், சென்னை மாநகராட்சி	உறுப்பினர்
11	ஆணையர், போக்குவரத்துத் துறை	உறுப்பினர்
12	இயக்குநர், ஊரக வளர்ச்சி	உறுப்பினர்
13	மேலாண்மை இயக்குநர் (TNCDW)	உறுப்பினர்
14	தொழிலாளர் நல ஆணையர்	உறுப்பினர்
15	இயக்குநர், கிராமப் பஞ்சாயத்து	உறுப்பினர்
16	இயக்குநர், (சமூக பாதுகாப்புத் திட்டம்)	செயல் உறுப்பினர்

திட்ட கண்காணிப்பு

- இத்திட்டத்தின் செயல்பாடுகள் மாநில அளவில் வருவாய் நிருவாக ஆணையரால் ஆய்வு செய்யப்படும்.
- இத்திட்டத்தின் செயல்பாடுகள் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரால் ஆய்வு செய்யப்படும்

காப்பீட்டுத் தொகை செலுத்தும் கால முறைகளும், அதிகாரங்களும்

PMJJBY(Pradhan Mantri Jeevan Jyoti Bima Yojana) (ம) PMSBY (Pradhan Mantri Suraksha Bima Yojana) காப்பீட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து இந்தப் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

- 50% காப்பீட்டுத் தொகை ரூ.171/- (165+6) - மத்திய அரசின் சமூக பாதுகாப்பு நிதியில் இருந்து வழங்கப்படும். மீதி 50% காப்பீட்டுத் தொகை மாநில அரசால் வழங்கப்படும்.
- ஜுன் 1 முதல் அடுத்த ஆண்டு மே 31 வரை காப்பீட்டு ஆண்டாகக் கருதப்படும். ஒவ்வொரு வருடமும் ஜுன் 1 ஆம் தேதி காப்பீட்டு புதுப்பிக்கப்பட வேண்டும்.
- ஆண்டு காப்பீட்டுத் தொகை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும்.

நிதி வழங்கும் முறை

- ஒவ்வொரு ஆண்டும் மேம்படுத்தப்பட்ட வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளோர் பட்டியலின் அடிப்படையில் காப்பீட்டுத் தொகை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு அரசால் செலுத்தப்படும்.
- அரசால் இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினை அவ்வப்போது ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.

3.17. விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் நிவாரணத் திட்டம்

மேற்படி புரட்சித் தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து மற்றும் வாழ்நாள் காப்பீட்டுத் திட்ட தகுதி வரம்பின்கீழ் வராத நபர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் நலிந்தோர் விபத்து திட்டத்தின்கீழ் ரூ.20,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

3.18. இணையதளம்மூலம் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் முறை

வெளிப்படையான நிருவாகத்தினை மேம்படுத்தும் பொருட்டு, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்க இணையதள சேவை தொடங்கப்பட்டுள்ளது.

3.19. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்:

நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து மிகுந்த துன்பங்களை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென தமிழ்நாடு அரசு பல நலத் திட்டங்களை முனைப்புடன்

நடைமுறைப்படுத்தி வருகிறது. சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டிற்கு சேவை செய்தவர்களின் தியாகத்தை கவுரவிக்கும் வகையில், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, விடுதலைப் போராட்டத் தியாகிகள் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வேலைவாய்ப்பு மற்றும் வீடுகள் ஒதுக்கீடு செய்வதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் போராட்ட வீரர்களின் தேசப்பற்று உணர்வை அங்கீகரிப்பதற்காக, அவர்களின் மேலான தியாகத்தைப் போற்றும் வகையில், தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்டத் தியாகிகள் ஓய்வூதியத் திட்டத்தை 1-10-1966 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களும், துப்பாக்கி சூட்டிலோ அல்லது விடுதலைப் போராட்டத்தின்போது காவலர் தடியடியிலோ இறந்தவர்களும் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். பின்னர், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. மேலும், விடுதலைப் போராட்டத்தின்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்டதைத் தவிர்ப்பதற்காகத் தலைமறைவாக இருந்து விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆதாரங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறுவர். 1-4-1980 முதல் ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதி, மூன்று வாரக் கால சிறைவாசம் என குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு 11-3-1983 அன்று முதல் நீக்கப்பட்டது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமானது அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தற்போது இவ்வோய்வூதியமானது ரூ.15,000/-லிருந்து ரூ.16,000/- ஆக 15-8-2019 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும், மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழ முடியாத அளவிற்கு மன வளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கும்பொருட்டு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி தற்போது 15-8-2019 முதல் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.7,500/-லிருந்து ரூ.8,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றி பெருமை பெற்றவர்களின் தியாகத்தைப் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில், அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்படி, மாமன்னர் மருதுபாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள், மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடி மற்றும் முதுநிலை வழிதோன்றல்கள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாமன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழிதோன்றல்கள் மற்றும் சுதந்திர போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் ஒருவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியமானது கடந்த 15-8-2019 முதல் ரூ.7,500/-லிருந்து ரூ. 8,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, மாமன்னர் மருதுபாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள் 86 நபர்களுக்கும், மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடி மற்றும் முதுநிலை வழிதோன்றல்கள் 4 நபர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாமன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழிதோன்றல் 56 நபர்களுக்கும் மற்றும் சுதந்திர போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார்

அவர்களின் வழிதோன்றல் ஒருவருக்கும் இந்த சிறப்பு ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிறப்பு ஓய்வூதியம் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

அ) மருத்துவ வசதிகள்

மத்திய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/ உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையானது மாதமொன்றிற்கு ரூ.100/-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தப்பட்டு 15-8-2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவ சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது ‘அ’ வகுப்பு வசதிகளுடன் கூடிய இலவச மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளில் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

ஆ) போக்குவரத்து வசதி மற்றும் வீட்டு வசதி

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் ஓய்வூதியம் பெற்று வரும் வாரிசுகளுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யவும் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி குடியிருப்புகளில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வீடுகள் ஒதுக்கப்படுகிறது.

இ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

ஈ) ஈமச்சடங்குச் செலவு

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச்சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.5,000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல்மீது மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

அட்டவணை-3.10

வ. எண்	ஓய்வூதிய வகைகள்	எண்ணிக்கை
1	மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.16,000/- மற்றும் ரூ.500/- மருத்துவப்படி)	181
2	மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.8,000/- மற்றும் ரூ.500/- மருத்துவப்படி)	994
3	மாமன்னர் மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.8,000/- வீதம்)	86
4	மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.8,000/- வீதம்)	4

2020 மார்ச் 24]

வ. எண்	ஓய்வூதிய வகைகள்	எண்ணிக்கை
5	மாமன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.8,000/- வீதம்)	56
6	சுதந்திர போரட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் (மாதமொன்றிற்கு ரூ.8,000/- வீதம்)	1

மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்

15-8-1972 முதல் மத்திய அரசும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் பென்சன்) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:-

அ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூ.26,000/- ஓய்வூதியத்துடன் அகவிலைப்படியும் சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மத்திய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 876 ஆகும்.

ஆ) மத்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/மத்திய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, மாதமொன்றிற்கு ரூபாய் 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.19,73,46,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 3.11

மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மற்றும் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

[2020 மார்ச் 24

வ. எண்	கால அளவு	ஓய்வூதியத் தொகை (ரூபாயில்)	குடும்ப ஓய்வூதியத் தொகை (ரூபாயில்)
1.	1-10-1966 முதல்	50/-	50/-
2.	15-8-1972 முதல்	75/-	75/-
3.	1-4-1979 முதல்	100/-	100/-
4.	25-1-1981 முதல்	150/-	150/-
5.	10-6-1986 முதல்	250/-	250/-
6.	1-8-1989 முதல்	350/-	350/-
7.	1-1-1991 முதல்	400/-	400/-
8.	1-8-1992 முதல்	1,000/-	500/-
9.	1-9-1995 முதல்	1,500/-	750/-
10.	15-8-1997 முதல்	3,000/-	1,500/-
11.	1-5-2007 முதல்	4,000/-	2,000/-
12.	1-9-2009 முதல்	5,000/-	2,500/-
13.	15-8-2012 முதல்	7,000/-	3,500/-
14.	1-8-2013 முதல்	9,000/-	4,500/-
15.	15-8-2014 முதல்	10,000/-	5,000/-
16.	15-8-2015 முதல்	11,000/-	5,500/-
17.	15-8-2016 முதல்	12,000/-	6,000/-
18.	15-8-2017 முதல்	13,000/-	6,500/-
19.	15-8-2018 முதல்	15,000/-	7,500/-
20.	15-8-2019 முதல்	16,000/-	8,000/-

2020 மார்ச் 24]

3.20. குறைத்தீர்க்கும் வழிமுறைகள்

தமிழ்நாடு அரசு, பொது மக்களின் குறைகளைத் தீர்ப்பதில் பல்வேறு நடைமுறைகளை செயல்படுத்தி வருகின்றது. பொதுமக்களின் குறைதீர்வு நடைமுறையை செம்மைப்படுத்த ஏதுவாக பல்வேறு கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையிலும் தமிழ்நாடு அரசு குறைதீர்வு நடைமுறைகளை முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகின்றது. மேலும், குறைதீர்வு மனுக்கள்மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பன்முனை யுக்திகளையும், அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதால், அரசின் சேவைகள் மிக எளிதாக விரைவில் மக்களைச் சென்றடைய வழிவகை செய்கிறது.

3.21. மக்கள் குறைதீர்க்கும் நாள்

ஒவ்வொரு திங்கட்கிழமையும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர்கள், தங்களின் தலைமை இடங்களில் இருந்து பொது மக்களிடம் மனுக்களைப் பெற்று, அவர்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் மனுக்கள் பெறப்பட்ட நாள், தீர்வு செய்யப்பட்ட விவரம் மற்றும் நிலுவையில் உள்ள மனுக்கள் விவரம் ஆகியவை இதற்கென உருவாக்கப்பட்ட ஒரு மென்பொருள்மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இதன்மூலம், மனுக்களின் தற்போதைய நிலைமையை இணையதளம்மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம்.

3.22. மக்கள் தொடர்பு முகாம்

பொதுமக்களின் குறைகள் உடனடியாக தீர்க்கப்படவேண்டும் என்ற குறிக்கோளுடன், மக்கள் தொடர்பு முகாம் திட்டம் 1969 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஒட்டுமொத்த மாவட்ட நிருவாகமும் ஒரு குழுவாக சென்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல், இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாக செயல்படுத்த, 1) தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), 2) வருவாய் கோட்ட அலுவலர், 3) மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெறுவதற்காக, மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அனுப்பி வைக்கப்படுகின்றனர். பெறப்பட்ட மனுக்கள் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் மற்றும் இதர அரசு நலத் திட்ட உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.

3.23. அம்மா திட்டம்

அம்மா திட்டம் அனைத்து கிராமங்களிலும், அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் உன்னதமான திட்டமாகும். இத்திட்டத்தில் வட்டாட்சியர் தலைமையிலான குழுவானது வாரந்தோறும் வெள்ளிக்கிழமையன்று குறிப்பிடப்பட்ட வருவாய் கிராமத்திற்குச் சென்று நேரடியாக பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, உடனடி தீர்வு காணும் மனுக்கள்மீது அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால், அரசின் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு, மக்களின் குறைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது. இது ஒரு நிருவாக புரட்சியாக அமைந்துள்ளது. மேலும், செப்டம்பர் 2016 முதல் இம்முகாம்களில் மக்கள் அரசின் அனைத்துத் துறைகளின் பயன்களைப் பெறும் வகையில் மருத்துவ முகாம்கள், கண் பரிசோதனை, பல் மருத்துவம், கால்நடை மருத்துவ முகாம்கள், பிரதம மந்திரியின் பசல்பீமா யோஜனா (பயிர் காப்பீடு) திட்டத்தின்கீழ் சேர்த்தல், ஆதார் பதிவுகள் மற்றும் தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் அம்மா திட்ட முகாம்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2012 முதல் 2020 வரை 64,079 முகாம்கள் நடத்தப்பட்டு 64,15,903 மனுக்கள் பெறப்பட்டு 64,09,217 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

3.24. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள்

அரசாணை (பல்வகை) எண் 300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, நாள் 21-8-2018-ன்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம், ஒவ்வொரு மாதமும் வருவாய்க்

2020 மார்ச் 24]

கோட்டாட்சியராலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வருவாய் நிருவாக ஆணையராலும் நடத்தப்பட்டு வருகிறது.

3.25 வட்ட அலுவலகங்களில் ஆன்லைன் மனு கண்காணிப்பு அமைப்பு (Taluk Online Petition Monitoring System (TOPMS)

அனைத்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் பொதுமக்களின் குறைதீர்வு மனுக்களின் நிலையினை அறியவும், அம்மனுக்களுக்கு தீர்வு காணவும், மாநில அளவில் வலைத்தளம் அடிப்படையிலான பயன்பாட்டு மென்பொருள் (Taluk Online Petition Monitoring System (TOPMS) அனைத்து வட்டங்களிலும் தொடங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நடைமுறை இணையதளம் மற்றும் குறுஞ்செய்திமூலம் வட்ட அலுவலங்களில் பெறப்படும் மனுக்களின் நிலை அறிய வழிவகை செய்கிறது.

3.26. வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான தனி இணையவழி மனு பரிசீலனை முகப்பு செயல்படுத்துதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழக அரசு பொதுமக்களுக்கான மனு பரிசீலனை முகப்பு என்ற இணையவழித் திட்டத்தை 2018 ஆம் ஆண்டு முதல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்மூலம் செயல்படுத்தி வருகிறது. இம்முறையில், பொது மக்கள் தங்கள் மனுக்களை/ குறைகளை இந்தியாவில் எந்த இடத்திலிருந்தும் இணையவழிமூலம் பதிவு செய்யலாம். மேலும், தங்களின் மனுக்களின் நிலையினை இணையவழிமூலம் அறிய இயலும். இந்த வசதியினை வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கும் நீட்டிக்கும் பொருட்டு, வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கென தனி இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் தங்களது மனுக்கள்/குறைகளை சேவைக் கட்டணம் இன்றி பதிவு செய்ய ஏதுவாக, அவர்களது மின்னஞ்சல் முகவரிக்கு கடவு எண் அனுப்பப்படுகிறது. வெளிநாடுவாழ் இந்தியர்கள் தங்களது கோரிக்கை குறித்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்புவதோடு அதன் நிலையையும் அறிந்து கொள்ள இயலும்.

[2020 மார்ச் 24

3.27. முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்

பல்வேறு மக்கள் குறைத்தீர்வு முறைகள் இருந்தாலும், பொதுமக்களின் குறைகள் நிலுவையில் இருப்பதை அறிந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த திட்டம் இதுவாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நேரடியாக இந்த சிறப்பு குறைதீர்க்கும் திட்டம் 19-8-2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினைப் பற்றி அனைத்து நகர்ப்புற வார்டுகளிலும், கிராமங்களிலும் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தி, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை / நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒரு குழுவாக பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்றனர். இவ்வாறு பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைக்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட துறையினரால் இம்மனுக்களின்மீது முன்னுரிமை அடிப்படையில் ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2019-ல் வட்ட அளவில் விழாக்கள் நடத்தப்பட்டு நலத் திட்ட பயன்கள் வழங்கப்பட்டன. மேலும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, தெரு விளக்கு, பொது சுகாதாரம், குடிநீர் தேவை ஆகியவற்றிற்கும் இச்சிறப்பு குறைத்தீர்க்கும் முகாம்களில் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த முகாம்களின் மூலமாக மொத்தம் 9,77,508 மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன. நிலம் சார்ந்து பெறப்பட்ட மொத்த 2,92,096 மனுக்களில் 1,87,992 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 3,98,352 மனுக்களில் 1,44,354 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. சமூக நலத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 22,678 மனுக்களில் 12,350 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. பொது விநியோகத் திட்டம் தொடர்பாக பெறப்பட்ட 24,183 மனுக்களில் 10,062 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலவாழ்வு தொடர்பாக பெறப்பட்ட 10,614 மனுக்களில் 7,747 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. ஊரக மற்றும் நகர்ப்புற உட்கட்டமைப்பு தொடர்பாக பெறப்பட்ட 62,145 மனுக்களில் 52,698 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் தொடர்பாக பெறப்பட்ட 16,305 மனுக்களில் 13,922

2020 மார்ச் 24]

மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. விவசாயம் மற்றும் கால்நடைகள் தொடர்பாக பெறப்பட்ட 10,600 மனுக்களில் 6,478 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. மற்றும் இதர பொருள் தொடர்பாக பெறப்பட்ட 85,057 மனுக்களில், 48,974 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஒரு வட்டத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் ரூ. 3.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது .

3.28. பொங்கல் பண்டிகைக்காக வழங்கப்படும் விலையில்லா வேட்டிகள் சேலைகள் வழங்கும் திட்டம்

தமிழக அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்காக விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் என இரண்டு பயன்களுக்கான திட்டத்தினை 1983 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி.ராமச்சந்திரன் அவர்களால் தொடங்கப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டு முதல் அரிசி அட்டைப் பெற்றுள்ள அனைவருக்கும் இலவச வேட்டி, சேலை வழங்க விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் பெயரான இலவச வேட்டி/சேலை வழங்கும் திட்டம் என்பதை மாற்றி, “விலையில்லா வேட்டி/சேலை வழங்கும் திட்டம்” என பெயரிடப்பட்டு தொடர்ந்து இத்திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு விலையில்லா வேட்டிகளும், சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.484.25 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1.67 கோடி விலையில்லா சேலைகளும், 1.67 கோடி விலையில்லா வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி

விலையில்லா வேட்டி/சேலை அனைத்து அரிசி அட்டைதாரர்கள், கிராம கைவினைஞர்கள், மீனவர்கள், நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயம் சார்ந்த கூலி வேலை செய்பவர்கள், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் அனைவருக்கும் இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது

[2020 மார்ச் 24

3.29. பள்ளிகள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்மூலம் மாணவர்களுக்கு தேவையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பள்ளிச் சேர்க்கை மற்றும் உதவித் தொகை பெறுவதற்குத் தேவையான சான்றிதழ்கள் வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் இணைய வழியில் பள்ளிகள் மூலமாக ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. 1-4-2016 முதல் 19-3-2020 வரை 6 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இணையதளம்மூலம் 1,94,00,872 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.30. மின்னணு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்

வருவாய்த் துறையினை நாடி வரும் பொதுமக்களுக்கு விரைவான சேவையினை அளித்திடும் வகையில், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியோடு அனைத்து மாவட்டங்களிலும் மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் 12,733 பொது சேவை மையங்கள் e-Distrct (Common Service Centres) வாயிலாக கீழ்க்காணும் 20 வகையான சான்றுகள் மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அரசாணை (நிலை) எண் 260, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (வ.நி 3(2)) துறை, நாள் 17-8-2017-ன்படி, கூடுதலாக கீழ்க்கண்ட 15 சேவைகள் மின்னாளுமைத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

1) சாதிச் சான்றுகள்

2) வருமானச் சான்றுகள்,

3) இருப்பிடச் சான்றுகள்,

2020 மார்ச் 24]

4) முதல் தலைமுறை பட்டதாரி சான்றுகள்

5) கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சான்றுகள்

6) விவசாய வருமான சான்றிதழ்

7) சிறு, குறு விவசாயி சான்றிதழ்

8) கலப்புத் திருமணச் சான்றிதழ்

9) விதவைச் சான்றிதழ்

10) வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்

11) குடிபெயர்வு சான்றிதழ்

12) இயற்கை இடர்ப்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதி செய்யும் சான்று

13) ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்

14) திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்

15) வாரிசு சான்றிதழ்

16) வசிப்பிடச் சான்றிதழ்

17) சொத்து மதிப்பு சான்றிதழ்

18) அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்

19) கடன் கொடுப்போர் உரிமம் மற்றும்

20) இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்

மேற்கண்ட சேவைகளோடு தற்காலிக பட்டாசு உரிமம், பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பிரிவுச் சான்றிதழ், ஜெயின் சிறுபான்மையினர் சான்றிதழ், வெளிநாடுவாழ் இந்தியர் இணையதளம், சமூக பாதுகாப்புத் திட்ட ஓய்வூதிய இணையவழி விண்ணப்பம் போன்ற சேவைகளும் தற்போது இணையவழியில் வழங்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

3.31. மக்கள் தொகை கணக்கெடுப்பு

இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872-ல் துவங்கப்பட்டு, 1881 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுக்கு ஒருமுறை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 15-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ல் நடைபெற்றது. 2021-ல் நடைபெற இருப்பது இந்தியாவின் 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பும் சுதந்திர இந்தியாவின் 8-வது மக்கள் தொகை கணக்கெடுப்பும் ஆகும். 2021 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மத்திய அரசு பல்வேறு அமைச்சகங்களுடன் கலந்தாலோசித்து இப்பணி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை முடித்துள்ளது. தமிழ்நாட்டில் இக்கணக்கெடுப்புப் பணி தொடர்பாக தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கு வருவாய் நிருவாக ஆணையரை தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரை வழங்கும் குழுவில் (Technical Advisory Committee) உறுப்பினராக சேர்த்து அரசாணை எண் 62, பொது (சட்ட அலுவலர்கள்) துறை, நாள் 18-1-2019-ல் ஆணைகள் வெளியிட்டுள்ளன.

4. பேரிடர் அபாய குறைப்பு, தணிப்பு மற்றும் மேலாண்மை

4.1. தமிழ்நாட்டின் பேரிடர் அபாய நிலைமை

தமிழ்நாடு 13 மில்லியன் எக்டேர் நிலப் பரப்பு மற்றும் 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்ட மாநிலமாகும். இம்மாநிலம், இயற்கை பேரிடர்களான சூறாவளி, புயல், வெள்ளப் பெருக்கு, வறட்சி ஆகியவற்றின் பாதிப்புகளுக்கு உள்ளாகும் பூகோள அமைப்பைக் கொண்டது. இந்த நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இயற்கை பேரழிவுகளால் தமிழ்நாடு தொடர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையால் பல உயிரிழப்புகளும் உட்கட்டமைப்புகளுக்கு சேதங்களும் ஏற்பட்டன. 2015-ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாகின. தானே (2011), நீலம் (2012), வார்தா (2016), ஒக்கி (2017), கஜா (2018) புயல்கள் காரணமாக பல மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள், 2016-2017 ஆம் ஆண்டில் நிலவிய கடும் வறட்சி ஆகியவை கடந்த இருபது ஆண்டுகளில் தமிழகத்தை பாதித்த முக்கியமான பேரிடர்கள் ஆகும். தமிழக அரசு முழுமையான


2020 மார்ச் 24]

அணுகுமுறையுடன் பேரிடர்கள், அபாயம் மற்றும் பாதிப்புகள் ஆகியவற்றைப் பதிவு செய்து, பாதிப்புகளைக் குறைக்க மேற்கொள்ள வேண்டிய தணிப்பு நடவடிக்கைகளையும் உறுதி செய்கிறது. மேலும், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. பேரிடர்களின்போது, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை உலக அளவிலும் இந்திய அளவிலும் பாராட்டப்பட்டுள்ளது.

4.1.2. பேரிடர் அபாய ஆளுமை:

பல்வேறு பேரிடர்களின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க உறுதியுடன் செயல்படும் தமிழக அரசு, பேரிடருக்கு முன், பேரிடரின்போது மற்றும் பேரிடருக்கு பின் என பல நிலைகளில் சிறப்பான சேவைகளை அளிக்கும் பொருட்டு அமைப்பு சார்ந்த வழிமுறைகளை வலுப்படுத்த சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த முப்பதாண்டு காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட முக்கிய பேரிடர்களின் விவரம்



[2020 மார்ச் 24

4.1.3. தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம், மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை சட்டம், 2005-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் தலைமை அமைப்பான இவ்வாணையம், கொள்கை உருவாக்கத்திற்கான வழிகாட்டுதல், நிதி உதவி அளித்தல், மாநிலத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்
- அரசு தலைமைச் செயலர்
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலர்
- நிதித் துறை செயலர்
- உள் துறை செயலர்
- உயர் கல்வித் துறை செயலர்
- பள்ளிக் கல்வித் துறை செயலர்
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
- இயக்குநர், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
- தலைவர், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்பக் கழகம், மெட்ராஸ்

4.1.4. மாநில செயலாக்கக் குழு

மாநில செயலாக்கக் குழு, தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், நிதித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் துறை ஆகியவற்றின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, குழுவின் கூட்டத்தில்

2020 மார்ச் 24]

மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களைச் செயல்படுத்துவதும், பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியை கையாள்வது குறித்து மாநில அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவதும், மாநில செயலாக்கக் குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இக்குழு, பேரிடர் காலங்களில் உடனடியாக நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்கும், திறன் மேம்பாடு மற்றும் மீட்புப் பணிகளுக்குத் தேவையான தேடுதல் மற்றும் மீட்பு உபகரணங்கள் பெற்றிடவும், நிதி வழங்கிட அதிகாரம் பெற்றுள்ளது.

4.1.5. மாநில ஆலோசனைக் குழு

மாநில ஆலோசனைக் குழு, வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான குழு, பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கியதாகும். இக்குழு, பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குகிறது.

4.1.6. பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு (IRS)

பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பானது பேரிடர் காலங்களில், செயல்திறனுடனும், முறையான அணுகுமுறையுடனும் அரசு, தனியார் துறை மற்றும் அரசுசாரா அமைப்புகள் என அனைத்து நிலைகளிலும் உள்ள அமைப்புகளை ஒருங்கிணைத்து தடையின்றி செயல்பட வழிவகுக்கிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பல்வேறு கட்டங்களில் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒட்டுமொத்த மேற்பார்வையின்கீழ் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பானது செயல்படுகிறது. இவ்வமைப்பின் தலைமை பொறுப்பாளராக தலைமைச் செயலாளரும், இன்சிடன்ட் கமாண்டராக வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரும் செயல்படுகிறார்கள். மாநில அளவில் இன்சிடன்ட் கமாண்டருக்கு உதவி புரிய துணை இன்சிடன்ட் கமாண்டராக, இயக்குநர், பேரிடர் மேலாண்மை செயல்படுகிறார்.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இன்சிடன்ட் கமாண்டராக செயல்படுகிறார்.

4.1.7. தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, அரசு ஆணை எண் 488, வருவாய்த் துறை, நாள் 28-11-2013-ன்படியும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைக் கொள்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்தும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்முகமை தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் 9-1-2014 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்முகமையின் ஆட்சிக் குழு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் தலைமையின்கீழ் நடத்தப்படுகின்றது. இம்முகமையில் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் செயலாக்கக் குழுவின் தலைவராகவும், பேரிடர் மேலாண்மை இயக்குநர், உறுப்பினர் செயலராகவும் செயல்பட்டு வருகின்றனர். வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் முழுக் கண்காணிப்பில் இயங்கும் இம்முகமையானது தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக செயல்படுகிறது.

4.1.8. மாவட்டப் பேரிடர் மேலாண்மை ஆணையம்

பேரிடர் மேலாண்மை சட்டம், 2005-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்டப் பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது மத்திய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

4.1.9. சென்டாய் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், சென்டாய் கூட்டமைப்பின் கருத்துக்களுடன் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தின் சுற்றுச்சூழலுக்கேற்ப முறையான அணுகுமுறை, ஒருங்கிணைந்த

2020 மார்ச் 24]

வளர்ச்சி மற்றும் பேரிடர் அபாயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்மூலம் மாநிலத்தின் வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டு பாதுகாப்பான, பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையிலான தமிழகத்தை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்தொலைநோக்குத் திட்டமானது சென்டாய் கூட்டமைப்பின் நான்கு முன்னுரிமை கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது.

1. பேரிடர் அபாயத்தைப் புரிந்துகொள்ளுதல்
2. பேரிடர் அபாய ஆளுமையினை மேம்படுத்துதல்
3. பேரிடர் அபாயக் குறைப்பிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும்
4. பேரிடருக்கான முன்னெச்சரிக்கை, பேரிடரின்போது சிறந்த மீட்புப் பணி, பேரிடருக்குப் பின்னர் சிறப்பான மறுசீரமைப்பு

சென்டாய் கூட்டமைப்பின் முன்னுரிமைக் கருத்துகளின் அடிப்படையில் பேரிடர் அபாயத்தைக் குறைக்கும் நோக்கில் அமைந்துள்ள தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்கிய மாநிலங்களுள் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாகும். நம் நாட்டில், பேரிடர்களின் அபாயத்தை எதிர்கொள்வது கடுமையான சவால் ஆகும். 2030-க்குள் சென்டாய் கூட்டமைப்பின் இலக்குகளை அடைவதற்கான முதல் நடவடிக்கையை எடுப்பதில் உலகின் மிகப் பெரிய ஜனநாயகமான இந்தியா தனது அர்ப்பணிப்பையும், தலைமைத்துவத்தையும் நிரூபித்துள்ளது என்பது சர்வதேச சமூகத்தின் கவனத்தைக் கவரக்கூடியதாகும். சென்டாய் கூட்டமைப்பின் நெறிமுறைகளை உள்ளடக்கிய தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்படும் நிலையில், புதிய வாய்ப்புகள் மற்றும் சிறந்த திட்டமிடல் ஆகியவற்றிலிருந்து தமிழ்நாடு சிறந்த பயனை அடையும். சென்டாய் கூட்டமைப்பின் கருத்துகளின் அடிப்படையிலான இந்தத் தொலைநோக்குத் திட்டம், பேரிடர் மேலாண்மையின் அனைத்து பங்குதாரர்களை உட்படுத்தி எதிர்காலத்தில் பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் மாநிலமாக உருவாக்க வழிவகை செய்கிறது. தமிழ்நாடு பேரிடர் மேலாண்மைத் தொலைநோக்குத் திட்டம், 2018-2030 ஆனது சென்டாய் கூட்டமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பேரிடர் அபாய குறைப்பு, நீடித்த நிலையான குறிக்கோள், பருவ மாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை மற்றும் பாரதப் பிரதமரின் 10 அம்ச திட்டத்தை

முதன்மையாகக் கொண்டுள்ளது. இத்திட்டமானது, பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 மற்றும் மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்திற்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டமானது, மாவட்டப் பேரிடர் மேலாண்மை ஆணையங்கள், அரசுத் துறைகள், சமூக அமைப்புகள் மற்றும் பல்வேறு பயனர்களிடம் பெறப்பட்ட விரிவான அறிக்கையின்படி உருவாக்கப்பட்டுள்ளது. நீர் பிடிப்பு பகுதிகள் அடிப்படையில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது, ஆற்று வடிநிலங்களின் விரிவான மேலாண்மை, சுற்றுசூழல் பாதிக்கப்பட்டுள்ள இடங்களையும், விவசாய வளங்களையும் நிலையான மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் பாதுகாப்பது, பேரிடர் குறைப்பு முறைகளை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைப்பது, சமூக பங்களிப்புடன் பேரிடர்களால் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவை இத்திட்டத்தின் முக்கியத்துவங்களாகும். தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நீண்ட கால தணிப்பு நடவடிக்கைக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

4.2. பேரிடர் ஆயத்த நிலை - பேரிடர் அபாய மதிப்பீடு மற்றும் பேரிடர் அபாயத் தகவல் தொடர்பு

4.2.1. கடைக்கோடி மக்களை எட்டும் வகையில் பேரிடர் அபாயத் தகவல் தொடர்பு:

பேரிடர் காலங்களில், பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு பேரிடர் அபாயம் குறித்தான தகவல்களை குறித்த நேரத்தில் தெரியப்படுத்தும் ஒரு அமைப்பு முறையினை உருவாக்குவது மிக முக்கியமானதாகும். இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம், இந்திய புவியியல் ஆய்வு மையம் போன்ற அமைப்புகளிடமிருந்து தகவல்களைப் பெற்று, மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தமிழகம் முழுவதும் உள்ள பொது மக்கள், மீனவர்கள், மாணவர்கள், விவசாயிகள், மாவட்ட நிருவாகம் மற்றும் ஊடகங்களுக்கு கன மழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கைத் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம், தகவல் தொடர்பு மையமாக 24 மணி நேரமும் செயல்படுகின்றது. இம்மையம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்

2020 மார்ச் 24]

துறை அமைச்சர், கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் இயங்குகிறது. பேரிடர் காலங்களில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோருடன் இணைந்து அரசு மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், மக்களின் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு குறித்தும் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பார்கள். மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட இதர முக்கிய துறைகளின் மூத்த அதிகாரிகளின் துணையோடு 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு மையமாக செயல்பட்டு, முன்னெச்சரிக்கைத் தகவல்களை மிகத் துரிதமாக அனுப்புகின்றது. பொது மக்கள் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசிமூலம் இம்மையத்தினைத் தொடர்பு கொள்ள முடியும்.

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம், மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின்கீழ் செயல்படுகின்றது. இம்மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் அவசர கால செய்திகள்/எச்சரிக்கைகளை உடனுக்குடன் பொது மக்களுக்கு தெரிவிக்கும் தகவல் மையங்களாக செயல்படுகின்றன. பேரிடர் காலங்களில், இம்மையத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுகிறது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிமூலம் பொது மக்கள் இம்மையங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

4.2.2. பேரிடர் மீட்பு

முன்னறிவிப்பு அடிப்படையில், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், பேரிடர் தாக்கும்பொழுது, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும் வகையிலும் தமிழக அரசு தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தி வருகின்றது. மேலும், மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில், அதற்கென தனியே தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை உருவாக்கியதோடு

மட்டுமல்லாமல், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக ரோபோடிக் எக்ஸ்கவேட்டர், நவீன களை எடுப்பான்கள், அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், பெயரத்தகு விளக்குகள் மற்றும் மிதவை படகுகள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

4.2.3. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11-7-2017 அன்று சட்டமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துவதற்காக, ரூ.15.00 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, திறன் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.2.4. உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் தமிழ்நாட்டில், பல்வகைப் பேரிடர்களின் தீவிர தாக்கத்தினை முன்னதாக அறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை முறைப்படுத்தும் திட்டம் (TN-SMART)

வானிலை முன்னறிவிப்பு தொடர்பான தகவல்களின் அடிப்படையில், பல்வேறு பேரிடர்களால் ஏற்படும் தாக்கத்தை அளவிட்டு அதனடிப்படையில் அவசரகால மீட்பு முன்னேற்பாடுகளை முறைப்படுத்தும் திட்டம் (TN-SMART) ஆப்பிரிக்க மற்றும் ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகைப் பேரிடர் முன்னறிவிப்பு அமைப்பின் (RIMES) மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. TN-SMART செயலியானது (Mobile App) மூன்று அடுக்கு முடிவு ஆதார அமைப்பினைக் கொண்டதாகும். இது, பேரிடர் மேலாண்மையின் அங்கங்களான முன்னேற்பாடு, மீட்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய 11 தொகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பேரிடரின் தாக்கம், பேரிடர் தொடர்பான ஆபத்துகளை செயலிமூலம் தெரிவித்தல், அபாய அழைப்புகளை பதிவு செய்து அதனை கண்காணித்தல், பேரிடர் அபாய குறைப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட பாதிப்புக்குள்ளாகும் இடங்களில், இந்திய வானிலை ஆராய்ச்சித் துறையின் மழை முன்னறிவிப்பைக்

கொண்டும், முந்தைய காலத்தில் பெய்த மழையளவு, நீர் நிலைகளில் உள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கொண்டு உத்தேசமான வெள்ள அபாயத்தினை இத்திட்டம் மதிப்பீடு செய்கிறது. மேலும், பேரிடர்களின் ஆபத்துகளைக் கணிக்கவும், அவை செயலிமூலம், களநிலை அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வெள்ள அபாயத்தினைக் குறைக்கவும் இச்செயலி உதவும். இந்தச் செயலி தனித் தன்மையான எச்சரிக்கை அமைப்பைக் கொண்டது. கைப்பேசி அமைதியான நிலையில் இருந்தாலும் எச்சரிக்கை அறிவிப்பு, ஒலி எழுப்பக்கூடிய வகையில் இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த எச்சரிக்கை அறிவிப்பு ஒலி பயனர் எச்சரிக்கைச் செய்தியினைக் காணும் வரை ஒலித்துக்கொண்டிருக்கும். உரிய நேரத்தில் அளிக்கப்படும் முன்னெச்சரிக்கையால், சுனாமி, புயல் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர்களால் ஏற்படும் உயிரிழப்புகள் தவிர்க்கப்படுவதை இந்த செயலி உறுதி செய்கிறது. இந்த செயலிமூலம் பொது மக்கள் பேரிடர் தொடர்பான புகார்களைப் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள் தொடர்புடைய அலுவலர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுவதையும், அனுப்பப்பட்ட புகார் மீதான நடவடிக்கை விவரத்தையும் கண்காணிக்கலாம். பேரிடர் அபாயக் குறைப்பினை உறுதி செய்திட, சென்டாய் கூட்டமைப்பு (Sendai Frame Work) மற்றும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் 2018-2030 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய முன்னுரிமை கருத்துகளைப் பின்பற்றி இத்திட்டத்தின் தொகுதிகள் (Modules), மாநிலத்தின் நீண்ட கால இலக்குகளை அடைவதை கண்காணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியை அதிக அளவில் பயனர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

4.2.5. சென்னை வெள்ள முன்னெச்சரிக்கை அமைப்பு (C-FLOWS)

கடலோரப் பகுதிகளுக்கு வெள்ள முன்னெச்சரிக்கை, நீரியல் மாற்றங்கள் சார்ந்த மாதிரியின் அடிப்படையில் தொழில்நுட்ப உதவி வழங்கவும், பல்வேறு பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு முன்னெச்சரிக்கை வழங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கடல் அலை உயரம், மாநகராட்சிக்கு நீர்வழங்கும் நீர்நிலைகள், அடையாறு மற்றும் கூவம்

ஆறுகள் ஆகியவற்றின் நீரின் அளவு போன்ற உள்ளீடுகளைக் கருத்தில் கொண்டு அதிகப்படியான மழையளவினை கண்காணித்து இவ்வமைப்பு முன்னெச்சரிக்கை வழங்கும். இதற்கென வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையரகமும் மற்றும் தேசிய கடலோர ஆராய்ச்சி மையமும் (NCCR) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கையொப்பமிட்டுள்ளது.

4.2.6. ஆளில்லா வானூர்திமூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV)

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 10-7-2017 அன்று சட்டப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஆளில்லா வானூர்திமூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV) மேற்கொள்ள அரசு, ரூ.694.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்படி, வான்வெளி ஆய்வு மையம், சென்னை தொழில்நுட்ப நிறுவனம், அண்ணா பல்கலைக்கழகம்மூலம் மாநிலத்தின் நீர்வழித்தடங்களின் புகைப்படங்கள் 5650.45 ச.கி.மீ. பரப்பளவில் கடலூர், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், விழுப்புரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், சேலம், திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் வான்வெளி அளவைப் பணிகள் முடிக்கப்பட்டு, இந்தத் தரவுகளின்படி டிஜிட்டல் எலிவேஷன் வரைபடங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

4.2.7. புவிசார் தகவல் மையம்

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையில் புவிசார் தகவல் மையம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புவிசார் தகவல் மையமானது, தேசிய அவசர மேலாண்மைத் தரவுகள் (NDEM) வழியில் மாநில அவசர மேலாண்மைத் தரவுகளை (SDEM) உருவாக்கிட வழிவகுக்கும். பேரிடர் மேலாண்மையில், முடிவுகளை எடுத்திட வழிவகுக்கும் அமைப்பினை (Decision Support System (DSS) ஏற்படுத்தவும், மாநில அவசர மேலாண்மைத் தரவுகளில் பேரிடர் தொடர்பான குறிப்பிட்ட தகவல்களை பதிவேற்றம் செய்யவும், புயல் சீற்றங்களின்போது ஏற்படும் அலைகள் மாதிரியினை ஒருங்கிணைக்கவும், பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம், தொலை உணர்வு மையம்,

2020 மார்ச் 24]

அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம், மெட்ராஸ் ஆகிய நிறுவனங்களுடன் தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை கூட்டு உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளது. ஐந்து வருட காலத்திற்கான இந்தக் கூட்டு ஒப்பந்தம் ரூ.350.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

4.2.8.தமிழகத்தின் நகர்ப்புறங்களில் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்துதல்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 17-7-2019 அன்று பிரிட்டிஷ் ஹை கமிஷனின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நிலையான நகர்ப்புற வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். இதன் அடிப்படையில் “தமிழகத்தின் நகர்ப்புறங்களில் பேரிடர் அபாய குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்துதல்” என்ற தலைப்பில் வேகமாக குறைந்து வரும் இயற்கை சார்ந்த வாழ்விடங்களைக் கொண்ட பெரிய கடலோர மற்றும் நகர்ப்புற நகரங்களான சென்னை, கடலூர், திருவள்ளூர், மற்றும் செங்கல்பட்டு ஆகியவற்றில் பேரிடர் அபாய குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ள அரசாணை எண் 247, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 19-7-2019-ன் படி ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 23-9-2019 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கான பணிமனையினை துவக்கி வைத்தார்கள். மேலும், 17-12-2019 அன்று பிரிட்டிஷ் துணை ஹை கமிஷனர் முன்னிலையில், முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் பல்துறைத் தலைவர்கள் கலந்து கொண்ட “தகவல் பரிமாற்ற பணிமனை” நடைபெற்றது. இக்கருத்தரங்குகளில் இங்கிலாந்து நாட்டிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் தணிப்பு ஆகியவற்றில் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டனர். இதனை அடுத்து, பேரிடர் அபாயங்களைக் குறைத்தல், இயற்கை சூழலைப் பாதுகாத்தல், கடல் நீர் உட்புகுவதைத் தடுத்தல், மழைநீர் சேகரிப்பை மேம்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய “தமிழகத்தின் நகர்ப்புறங்களில் பேரிடர் அபாய குறைப்பு மற்றும் தணிப்பினை வலுப்படுத்துதல்” தொடர்பான இறுதி அறிக்கை பிரிட்டிஷ் ஹை கமிஷனால் வழங்கப்படவுள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் திட்ட செயல்பாட்டு முன்மொழிவுகள் தயாரிக்கப்படும்.

[2020 மார்ச் 24

4.2.9. மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

பேரிடர் மேலாண்மை சட்டம் 2005-ன்படி வறட்சி தொடர்பான தொடர் கண்காணிப்பு நடவடிக்கையின் பொருட்டு, தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமைக்கு உதவும் வகையில் மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராக கொண்டு செயல்படும். இம்மையமானது இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் நிலவரங்கள் முன்கணிப்பு மையம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை வளர்ப்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் மின்சாரத் துறை ஆகியவற்றின் உதவியுடன் வறட்சி தொடர்பான திட்டங்களுக்கான உள்ளீடுகளை பெற்று அறிவியல் மதிப்பீடு மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளும்.

4.2.10. மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையமானது மாவட்டப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஓர் அங்கமாக செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, அவரது கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

4.2.11. திறன் மேம்பாடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், பேரிடர்களின்போது மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு ஆகிய செயல்களில் ஈடுபடும் பல்வேறு துறை அலுவலர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திட 16-11-2017 நாளிட்ட அரசாணையின்படி ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, மாதிரி ஒத்திகைகள், கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

4.2.12. ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஆசிய பேரிடர் ஆயத்த மையம் ஒரு சர்வதேச அரசாங்க அமைப்பாகும். (2005-ல் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது).

2020 மார்ச் 24]

இந்திய உள் துறை அமைச்சகம் உறுப்பினராக இடம்பெற்றுள்ள இம்மையத்தின் மண்டல ஆலோசனைக் குழுவில் 26 நாடுகள் இடம் பெற்றுள்ளன. இம்மையம், பல அரசுகள், வளர்ச்சிக்கான பங்குதாரர்கள், ஐ.நா.வின் முகமைகள், சமூக அமைப்புகள், கல்வி மையங்கள், தனியார் துறைகள் ஆகியவற்றுடன் இணைந்து ஆசிய-பசிபிக் பகுதியிலுள்ள நாடுகளுக்கு பேரிடர் தொடர்பாக உதவுவதுடன், நிலையான வளர்ச்சி இலக்கை அடைய, பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிதல், பேரிடர் குறைப்பு, பருவ மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிதல், குறைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுகின்றது. திறன் மேம்பாடு மற்றும் நீண்ட கால அளவில் தொழில்நுட்ப உதவிபெறும் பொருட்டு, தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை, ஆசிய பேரிடர் ஆயத்த மையத்துடன் இணைந்து, பயிற்சிகளை வழங்கி வருகிறது.

4.2.13. ஆப்தமித்ரா-சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சித் திட்டம்

ஆப்தமித்ரா திட்டத்தின்கீழ், சென்னை மாவட்டத்தில், 200 தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு குறித்த பயிற்சி ரூ.45.40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக 100 தன்னார்வலர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4.2.14. பேரிடர் தொடர்பான உதவி மற்றும் நிவாரண பயிற்சி (HADR) 2019

சூறாவளி மற்றும் நகர்ப்புற வெள்ளம் என்ற தலைப்பில் வருடாந்திர பேரிடர் தொடர்பான பயிற்சி அனைத்து கடலோர மாவட்டங்களில் (காஞ்சிபுரம் நீங்கலாக) முப்படைகளால் 2-8-2019 முதல் 4-8-2019 முடிய நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், கடலோர காவல் படை, தீயணைப்பு மற்றும் மீட்புப் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, காவல் துறை, மீன் வளத் துறை மற்றும் மாவட்ட நிருவாகங்கள் பங்கு பெற்றன. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளரும் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டனர். மாநில மற்றும் மாவட்ட

நிருவாகங்கள், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மாநில மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களை செயல்படுத்தி மற்றும் மாநில ஆதாரங்களை ஒன்று திரட்டி, இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டன. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் வெளிநாட்டினர் பார்வையாளர்களாக பங்கேற்றனர்.

4.2.15. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கான குறுகிய கால பயிற்சி

குடியிருப்புப் பகுதிகளில் நுழையும் பாம்புகளைப் பிடித்தல், கழிவுநீர் குழிகள் (அ) சாக்கடைகளில்/உறை கிணறுகளில் தவறி விழுந்த மனிதர்கள் மற்றும் விலங்குகளை மீட்பது போன்ற பல்வேறு மீட்பு நடவடிக்கைகளுக்கான குறுகிய கால பயிற்சியினை வடிவமைப்பதற்காகவும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினைச் சார்ந்த தீயணைப்பு வீரர்களுக்கு மேற்படி பயிற்சியினை வழங்குவதற்கும் மாநில பேரிடர் மீட்பு நிதியிலிருந்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு, ரூ.15.00 இலட்சம் சிறப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

4.2.16. பெருமளவிலான விழிப்புணர்வு கருத்தரங்குகள்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் தலைமையில் மனிதர்கள் மற்றும் இயற்கையினால் ஏற்படும் பேரிடர்களைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், குறிப்பாக நீர்நிலைகள் (ஆறுகள், காட்டாறுகள், நீர் அருவிகள், கால்வாய்கள், குளங்கள், ஏரிகள், வடிகால்கள், கைவிடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் முதலியவை) தொடர்பான விபத்துகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, பெருமளவிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மதுரை, திருச்சிராப்பள்ளி, சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் நடைபெற்றது. இதர 32 மாவட்டங்களில், ஒத்திகைப் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

4.2.17. "ஜல் சக்தி" நீர்நிலைகளில் ஏற்படும் பேரிடர் மேலாண்மை நடைமுறைகள் குறித்து ஜம்முவில் மாநாடு

மத்திய அரசின் சார்பில், ஜம்முவில் 30-11-2019 மற்றும் 1-12-2019 ஆகிய 2 நாட்கள் நடைபெற்ற "ஒரே இந்தியா சிறந்த இந்தியா" என்ற தலைப்பில் நீரியல்களால் ஏற்படும் பேரிடர் மேலாண்மை' நடைமுறைகள் குறித்த மாநாட்டில், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையிலான முன்னோடியான திட்டங்கள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றினார். தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சிறப்பான திட்டங்கள் மற்ற மாநிலங்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

4.2.18. விவசாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 17-7-2019 அன்று சட்டமன்றப் பேரவையில், விவாயிகள் மற்றும் களப் பணியாளர்களுக்கு வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்புத் துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கிரிஷி விக்யான் கேந்திரா மற்றும் கால்நடை பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களின் உதவியுடன் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, மேற்படி பயிற்சிகள் நடத்தப்படும்.

4.2.19. குறும்படங்கள்மூலம் இடி மற்றும் மின்னல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

இடி மற்றும் மின்னல் காரணமாக அதிகப்படியான உயிரிழப்புகள் நிகழ்வதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், பொது மக்களிடையே இடி மற்றும் மின்னல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படம் தயாரிக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, இடி மற்றும் மின்னல் தாக்கத்தின்போது பின்பற்றத்தக்கவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து விளக்கும் குறும்படம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்பட்டு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

4.3. பேரிடர் மீட்பை வலுப்படுத்துதல்

4.3.1 பல்வேறு வகையிலான தடையில்லா தகவல் தொடர்புகள்

பேரிடர் குறித்த தகவல்கள், மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம், TNSMART செயலி,

சமூக வலைதளம் மற்றும் அச்சு ஊடகங்கள்மூலம் பொது மக்களுக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. இது தவிர, பேரிடர் காலங்களில் தகவல் தொடர்பை மேம்படுத்தும் நோக்குடன், தமிழக அரசின் தலைமைச் செயலர் அலுவலகம், பொதுத் துறை அரசுச் செயலர், முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், காவல் துறை தலைவர், கூடுதல் காவல் துறை தலைவர் (செயல்பாடு), பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மற்றும் கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்கள் உள்ளிட்டோருக்கு 20 Satellite Phone-கள் வழங்கப்பட்டுள்ளன.

4.3.2. தேடுதல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள்

2019-2020 ஆம் ஆண்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, தேடுதல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் கொள்முதல் செய்திட ரூ.7.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ரூ.14.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.3.3. பேரிடர் காலங்களில் தகவல் தொடர்பினை பலப்படுத்த புதிய அதிவேக அதிர்வலை பெட்டகங்கள் மற்றும் பழைய அதிவேக அதிர்வலைப் பெட்டகங்கள் பராமரிப்பு

பேரிடர் காலங்களில் தகவல் தொடர்பு முறைகளை வலுப்படுத்துவதற்காக, புதிய அதிவேக அதிர்வலைப் பெட்டகங்கள் கொள்முதல் செய்திடவும், கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களில் உள்ள பழைய அதிவேக அதிர்வலைப் பெட்டகங்களைப் பராமரித்திடவும், ரூ.81.98 இலட்சம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

4.3.4. மீனவர்களுக்கு Satellite Phone, NavIC and NAVTEX

பேரிடர்கள் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்திலிருந்து பெறப்படுகின்ற எச்சரிக்கை தகவல்களை, ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, ரூ.3.10 கோடி செலவில் Satellite Phone, NavIC and NAVTEX உயர் தொழில்நுட்ப தொலைத் தொடர்பு கருவிகள் மீன்வளத் துறைமூலம் கொள்முதல் செய்யப்பட்டு, மீனவர்கள் மற்றும் கடலோர மாவட்ட நிருவாகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

4.3.5. குறுவட்ட அளவில் (Firka) டெலிமெட்ரிக் மழையளவு பதிவிடும் கருவிகள் அமைத்தல், மின்னல் குறித்த முன் அறிவிப்பு அமைப்புகளை நிறுவுதல்

குறுவட்ட (Firka) அளவில் டெலிமெட்ரிக் மழையளவு பதிவிடும் கருவிகள் ரூ.2.50 கோடி செலவில் அமைப்பதற்கும், ரூ.0.80 கோடி செலவில் மின்னல் குறித்த முன் அறிவிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.3.6. பேரிடர் மேலாண்மைக்கான பொதுவான எச்சரிக்கை நெறிமுறை (CAP)

பேரிடர் குறித்து பொது மக்களை எச்சரிப்பதற்கும், பேரிடரைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பேரிடர் தணிப்பு, பேரிடர் காலங்களில் ஆயத்த நிலை மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) மற்றும் டெலிமாடிக்ஸ் மேம்பாட்டு மையம் (C-DOT) ஆகியவற்றுடன் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை ஒருங்கிணைந்து பேரிடர் மேலாண்மைக்கான பொதுவான எச்சரிக்கை நெறிமுறையினை (CAP) உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஆரம்பகால எச்சரிக்கை தளத்தை மத்திய அரசின் நிதி ரூ.14.99 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய, மாநில, உள்ளூர் அளவில் தற்போதுள்ள எச்சரிக்கை அமைப்புகளை ஒருங்கிணைத்து பொது மக்கள் மற்றும் முதல் நிலை மீட்பாளர்களுக்கு ஒரே சமயத்தில் குறுஞ்செய்தி, ஐவிஆர் அமைப்பு, தொலைக்காட்சி, வானொலி, அபாய ஒலி, இரயில் நிலையங்கள்மூலம் அறிவிப்பு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக உள்ளூர் மொழியில் தெரியபடுத்துவது, ஒருங்கிணைந்த ஆரம்ப எச்சரிக்கை தளத்தின் முதன்மை நோக்கமாகும்.

இம்முன்னோடி திட்டத்திற்கு இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் மத்திய நீர்வள ஆணையம் ஆகிய அமைப்புகளிலிருந்து பெறப்படும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் பேரிடர் குறித்த ஆரம்ப கால எச்சரிக்கைகளைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொதுவான எச்சரிக்கை நெறிமுறைமூலம் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, மாநிலத்தில் செயல்படும் அனைத்து தொலை தொடர்பு சேவை நிறுவனங்கள் மூலமாக பொது மக்களுக்கு பேரிடர் தொடர்பான பிற எச்சரிக்கை தகவல்களை குறுஞ்செய்தி வாயிலாக தெரியபடுத்த இயலும்.

4.4. சமுதாயப் பங்களிப்பு

4.4.1. பேரிடர் உதவிப் படை

பேரிடர் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் பேரிடர் உதவிப் படை உருவாக்கப்பட்டுள்ளது.

4.4.2. முதல் நிலை மீட்பாளர்கள்/கால்நடை மீட்பாளர்கள்

அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில், சமுதாய பங்களிப்பினை உறுதி செய்திடும் வகையில், 43,409 முதல் நிலை மீட்பாளர்களும் (14,232 பெண்கள் உட்பட), பேரிடர்களின்போது கால்நடைகளை மீட்கும் பொருட்டு 8,871 கால்நடை மீட்பாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர். மேலும், பேரிடர்களின்போது வேரோடு சாய்ந்த மரங்களை வெட்டி அகற்றிடவும், பேரிடர் அல்லாத காலங்களில் மரம் நடுவதற்கும் 9,909 முதல் நிலை மீட்பாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

4.4.3. பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு

பேரிடர்களால், குறிப்பாக வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் ஏற்படும் எதிரிடையான தாக்கங்களைக் குறைக்கும் வகையில், அரசு, தடுப்பு மற்றும் தணிப்பு உத்தியின் ஒரு பகுதியாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டும், அதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்தும் வருகின்றது. நீண்ட கால பயனைக் கருத்தில்கொண்டு, சிறப்பான மறுசீரமைப்பு என்ற கொள்கையின் அடிப்படையில் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர் வடிநில மற்றும் நீர்வடிப்பகுதி குறித்த அணுகுமுறையின் அடிப்படையில், குறிப்பிடப்பட்ட அமைவிடங்களுக்கு ஏற்ப முழுமையான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

4.4.4. சிறப்பான மறுசீரமைப்பு

சிறப்பான மறுசீரமைப்பு என்பது பேரிடர் மறுவாழ்வு பணிகளுக்கு மட்டும் அல்லாது நீண்ட கால துயர் தணிக்கும் முயற்சிகளுக்கும் அரசின் மிக முக்கிய கொள்கையாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பேரிடர்களை எதிர்கொள்ளும் சமுதாயத்தின் மீள்திறனை மேம்படுத்தும் வகையிலும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பேரிடர் அபாயத்தினைக் குறைத்து

மனித உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட சிறப்பான மறுசீரமைப்பு கொள்கை அடங்கிய பேரிடர் நடவடிக்கைகள் பின்வருமாறு:-

அட்டவணை-4.1

வ. எண்.	பணிகள்	திட்டங்கள்	தொகை (ரூ. கோடியில்)
1.	பல்வேறு பேரிடர்களை தாங்கக்கூடிய வீடுகள்	உலக வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால மறுவாழ்வுத் திட்டம் (ETRP)	1,852
2.	வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல் பணிகள்	ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால உதவி திட்டம் (TEAP)	629
3.	வாழ்வாதாரம் தொடர்பான பணிகள்	சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதி (IFAD) உதவியுடன் சுனாமி பிந்தைய நிலையான வாழ்வாதார திட்டம் (PTSLP)	129
4.	பல்வேறு பேரிடர்களை தாங்கக்கூடிய வீடுகள், பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள், மீன்வள உட்கட்டமைப்புகள் மற்றும் நிலைத்த வாழ்வாதாரம் மற்றும் முன் எச்சரிக்கை கருவிகள்	உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர சமூக ஆபத்து குறைப்பு திட்டம் (VRCC)	1,959

4.4.5. கடலோர அபாயக் குறைப்பு திட்டம் (CDRRP)

தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உலக வங்கி நிதி உதவியுடன் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் ரூ.1560.19 கோடி திருத்திய மதிப்பீட்டின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.310 கோடி செலவில் 488 கடலோர கிராமங்களில் பேரிடரைத் தாங்கக்கூடிய 14,347 வீடுகள், 143 இடங்களில் அறிவிப்பு பலகைகளுடன்கூடிய முறையான இணைப்பு வழித்தடங்கள், ரூ.331.03 கோடி செலவில் கடலோர மாவட்டங்களில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நீடித்த மீன்வளத் திட்டத்தின்கீழ் ரூ.218.41 கோடி செலவில் மீன்பிடி துறைமுகங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் நவீனப்படுத்துதல், புதிய மீன் இறங்குதளம் அமைத்தல், குழாய் பனிக்கட்டி இயந்திர நிலையம் கட்டுதல் மற்றும் ஆற்று முகத்துவாரத்தை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, 17,539 எண்ணிக்கையிலான VHF கடல்சார் கையடக்க வானொலிகள் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதோடு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு மீன் வள மேலாண்மைத் திட்டங்கள் ரூ.107.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு, அரசு ரூ.10.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது.

இது தவிர, 7,337 குழுக்கள் அடங்கிய 4,10,261 நபர்களுக்கு சமுதாய அடிப்படையிலான பேரிடர் அபாய மேலாண்மை பயிற்சிகள் ரூ.15.00 கோடி செலவில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.1.26 கோடி செலவில், 6 முதல் 12 ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத் திட்டங்களிலும் பேரிடர் மேலாண்மை குறித்த பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளின் தேசிய மாணவர் படை, மாணவர்கள், மாணவியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மை திறன் மேம்பாட்டுப் பயிற்சியானது 1.23 கோடி ரூபாய் செலவில் வழங்க தமிழக அரசால் ஆணையிடப்பட்டு, 19-2-2020 அன்று சென்னையிலும், 3-3-2020 அன்று மதுரையிலும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் மேற்படி பயிற்சியானது துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திறன் மேம்பாட்டு பயிற்சிமூலம் பயிற்சி பெற்ற தேசிய மாணவர் படையினைச் சார்ந்த

மாணவ, மாணவியர், தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள் மற்றும் கிராமங்களுக்குச் சென்று, சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு பேரிடர் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்று வரும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் இப்பயிற்சியானது பொது மக்கள் மற்றும் ஊடகங்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

ரூ.7.50 கோடி செலவில் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரை பகுதிகள் குறித்த மேலாண்மைத் திட்டம் (ICZMP), பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் மற்றும் தமிழ்நாடு கடற்கரை பகுதி மக்களுக்கு பயிற்சித் திட்டம் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பேரிடர்களின்போது மின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் விதமாக, பூமிக்கு மேலுள்ள மின் இணைப்புகளை பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றும் பணி ரூ.406.83 கோடி செலவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேரிடர்கள் தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்களை கடற்கரையில் வாழும் சமூகத்தினருக்கு விரைவாக வழங்கும் பொருட்டு ரூ.50.00 கோடி செலவில் முன்னெச்சரிக்கை கருவிகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

மேலும், ரூ.11.5708 கோடி மதிப்பீட்டில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு Satellite Phone-கள், மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களுக்கு கணினிகள், இதர சாதனங்கள் கொள்முதல் செய்யவும், வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்குகள் மற்றும் காணொலி காட்சி அரங்குகளை மேம்படுத்தவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

4.4.6. நீண்ட கால வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள்

பொதுவாக, பேரிடர்கள் ஏற்படும்போது நிவாரணப் பணிகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின் பேரில், பேரிடர் தணிப்புப் பணிகளுக்கும்

முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளுக்கு ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் 8-2-2019 அன்று சட்டமன்றத்தில், 2019-2020 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையில் அறிவித்தவாறு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் நீண்ட கால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.238.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் புதிய அணுகுமுறை பிற மாநிலங்களுக்கு உன்னதமான வழிகாட்டியாகத் திகழ்கிறது. மேலும், ரூ.3,000 கோடி மதிப்பீட்டிலான விரிவான வெள்ளத் தணிப்புத் திட்டம் குறித்த முன்மொழிவானது உலக வங்கி மற்றும் சீனாவில் உள்ள ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதி உதவி பெறும் பொருட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4.4.7. கஜா புயல் – நவம்பர் 2018

கஜா புயலால் பாதிப்புக்குள்ளாகிய மாவட்டங்களில், நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்காக மாநில நிவாரண நிதி மற்றும் மாநில நிதியிலிருந்து ரூ. 2,415.52 கோடி (தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 900.31 கோடி உட்பட) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.4.8. கஜா புயல் மறுசீரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டம்

கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைக்கவும் விவசாயம், தோட்டக்கலை, மீன் வளம் போன்ற தொழில்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்திட தேவையான புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு கஜா புயல் மறுசீரமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின், மாநில திட்ட அலகு, மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நிலையில் திட்ட இயக்குநர் தலைமையின் கீழும் நாகப்பட்டினம் (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்) மற்றும் தஞ்சாவூரைத் (தஞ்சாவூர் மற்றும்

புதுக்கோட்டை மாவட்டங்கள்) தலைமையிடமாகக் கொண்டு இரு கள அலகுகள் (field units) இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நிலையில் கூடுதல் திட்ட இயக்குநர்கள் கீழும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட நான்கு மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு 1,25,340 பட்டா உத்தரவுகள் வழங்கப்பட்டு, தற்போது வரை, 13,270 பட்டாதாரர்களுக்கு வீடுகள் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகரப் பகுதிகளில், 10,549 பட்டா உத்தரவுகள் வழங்கப்பட்டு, தற்போது வரை, 3,330 பட்டாதாரர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்ட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மீனவர்களின் மாற்று வாழ்வாதாரத்திற்கு, மீன் வளத் துறைக்கு ரூ.31.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை இடர்களால் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளின் காரணமாக இயற்கை பேரிடர்களால் பாதிப்புக்குள்ளாகிய மக்களது வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 17-7-2019 அன்று அறிவித்தவாறு, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், செருகளத்தூர் கிராமத்தில் ரூ.5.00 கோடி செலவில் மரப்பூங்கா அமைக்க வனத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.5 பேரிடர் நிகழ்வுகள் மற்றும் மாநிலத்தின் மீட்பு நடவடிக்கைகள், 2019

4.5.1. நீரியல் வறட்சி

அரசாணை நிலை எண் 91. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 7-3-2019-ன்படி தமிழகத்தில்

24 மாவட்டங்கள் மற்றும் 7 மாவட்டங்களில் உள்ள 38 வட்டாரங்கள் நீரியல் வறட்சி பாதித்த மாவட்டங்கள்/வட்டாரங்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டு கோடைக்கால குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்ள ஏதுவாக ரூ.317.03 கோடி தொடர்புடைய துறைகளுக்கு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

அட்டவணை-4.2

வ. எண்	துறையின் பெயர்	வழங்கப்பட்ட தொகை (கோடியில்)
1.	சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்	219.66
2.	தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்	16.00
3.	நகராட்சி நிருவாகத் துறை	56.05
4.	பேரூராட்சிகள் துறை	25.32
	மொத்தம்	317.03

4.5.2. அமெரிக்கன் படைப்புழு தாக்கம்

2018-2019 ஆம் ஆண்டின் பின் பருவ காலத்தில் பயிரிடப்பட்ட மக்காச்சோளப் பயிர்கள் அமெரிக்கன் படைப்புழுவினால் தாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானது. இப்புழுவின் தாக்குதல் முதன் முதலாக கரூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்டு, இதே காலக்கட்டத்தில் அரியலூர், கடலூர், வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய பிற மாவட்டங்களிலும் இப்புழுவின் அதிவேகமாக பரவுகின்ற தன்மையாலும், சாதகமான தட்ப வெப்ப காரணிகளாலும் பரவியது. இப்புழுவினைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபொழுதிலும், தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் பயிரிடப்பட்ட மக்காச்சோளப்பயிர்கள் பாதிப்புக்குள்ளாயின. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் 4-7-2019 அன்று அறிவித்ததன் அடிப்படையில்,

2020 மார்ச் 24]

இப்படைப்புழுவினால் பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, அரசாணை எண் 214, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 4-7-2019-ன்படி, ரூ.186.25 கோடி இடுபொருள் மானியமாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இயற்கை பேரிடர்களால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு மட்டும் இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு வந்த நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அமெரிக்கன் படைப்புழுவினால் தாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளான மக்காச்சோளப் பயிர்களுக்கு இடுபொருள் மானியத் தொகை வழங்கியது விவசாயிகளின் துன்பத்தைப் போக்குவதாக அமைந்தது.

4.5.3. நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை

நீலகிரி மாவட்டத்தில், ஆகஸ்ட் 2019-ல் அதிகப்படியான மழைப் பொழிவு ஏற்பட்டது. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நீலகிரி மாவட்டத்திற்கான சராசரி மழைப்பொழிவு 707 மி.மீ., என்ற நிலையில், இம்மாவட்டத்தில், 6-8-2019 முதல் 9-8-2019 வரை 4 நாட்களில் சராசரியாக 642 மி.மீ. மழை பெய்துள்ளது. இது 647 விழுக்காடு கூடுதலாகும். மேலும், குந்தா வட்டத்தில், அவலான்ச்சி பகுதியில், இந்த 4 நாட்களில் முறையே 405 மி.மீ., 820 மி.மீ., 911 மி.மீ மற்றும் 350 மி.மீ மழை பெய்தது. இதில், 911 மி.மீ. மழையானது தமிழக வரலாற்றில் மிக அதிகப்படியான மழைப்பொழிவாகும். நீலகிரி மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத மழைப்பொழிவின் காரணமாக தொடர் நிலச்சரிவுகள் ஏற்பட்டு, உயிர் இழப்புகள் நிகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளில் உட்கட்டமைப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் கன மழை பெய்யத் தொடங்கியவுடன், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மாநில நிருவாகத்தால் விரைந்து செயல்படுத்தப்பட்டது. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் ஒருங்கிணைப்போடு, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தோட்டக்கலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட துறைகளைக் கொண்ட அலுவலர்கள் அடங்கிய 35 பல்துறை மண்டலக் குழுக்கள், வேரோடு சாய்ந்த மரங்களை அகற்றியதோடு, நிலச்சரிவு காரணமாக மஞ்சூர், கூடலூர் மற்றும் எமரால்டு அணைப் பகுதிகளில் ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பினையும் சீரமைத்தன. அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத்

[2020 மார்ச் 24

தடுக்கும்வண்ணம் 15,000-க்கும் மேற்பட்டோர் தங்கள் வீடுகளில் இருந்து அழைத்து வரப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். நீலகிரி மாவட்டத்தில் பெய்த கன மழையின் காரணமாக உதகமண்டலம், குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாயின. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு மின் நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மற்றும் நீலகிரி மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் மற்றும் இயக்குநர், பேரிடர் மேலாண்மை ஆகியோர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த நீலகிரி மாவட்டத்திற்கு உடனடியாக விரைந்தனர். மிக கன மழையின் காரணமாக மின் உட்கட்டமைப்புகளான, உயர்ந்த/தாழ்ந்த மின் தடங்கள் மற்றும் கம்பங்கள், மின் விநியோக மின்மாற்றிகள் ஆகியவை சேதமடைந்தன. மேலும், சாலைகள், மழை நீர் வடிகால்கள், தடுப்புச் சுவர்கள், தெரு விளக்குகள், சிறுபாலங்கள் மற்றும் நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் இதர உட்கட்டமைப்புகளும் சேதமடைந்தன. இதுவன்றி, மாவட்டத்தில், கன மழையின் காரணமாக பயிர்ச்சேதமும் ஏற்பட்டது. எனவே, கன மழையின் காரணமாக பாதிப்பிற்குள்ளான உட்கட்டமைப்புகளை சீரமைக்கவும் மற்றும் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாகவும் அரசு நிதி வழங்கி ஆணையிட்டுள்ளது.

4.5.4. வடகிழக்குப் பருவமழை

தமிழகத்தின் வருடாந்திர மழையளவில், 48 விழுக்காடு வடகிழக்குப் பருவமழை காலத்தில் தமிழகத்திற்கு கிடைக்கப் பெறுகிறது. வடகிழக்குப் பருவமழையின்போது, மாநிலத்தின் கடலோர மாவட்டங்களுக்கு, வருடாந்திர மழையளவில், 60 விழுக்காடும் மற்றும் இதர உள்மாவட்டங்களுக்கு, 40-50 விழுக்காடும், மழை கிடைக்கப் பெறுகிறது. 2019 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்ததன் காரணமாக, இயல்பான மழை அளவான 445.7 மி.மீ. என்ற நிலையில், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 453.5 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. 2019 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், கனமழை/சூறாவளி காரணமாக ஏற்படக்கூடிய சேதங்களைத் தவிர்க்கும்பொருட்டு, மாநில மற்றும்

2020 மார்ச் 24]

மாவட்ட நிருவாகத்தால் போதுமான ஆயத்த/முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23-9-2019, 22-10-2019 மற்றும் 2-12-2019 ஆகிய நாட்களில், வடகிழக்குப் பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, தொடர்புடைய அனைத்துத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கினார்கள். மேலும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் பல்வேறு மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இது தவிர, தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில், 24-9-2019 மற்றும் 4-10-2019 ஆகிய நாட்களில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாவட்டம்/பெருநகர சென்னை மாநகராட்சியின் கண்காணிப்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், கன மழை மற்றும் புயல் ஏற்படும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கைகள் அடங்கிய சுற்றறிக்கைத் தொகுப்பு ஒன்றும், பேரிடர் காலங்களில் தேவைப்படும் முக்கிய தொலைபேசி எண்கள் அடங்கிய கையேடு ஒன்றும் வெளியிடப்பட்டன.

காவல், தீயணைப்பு, ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் பிற துறை சார்ந்த அலுவலர்கள் அடங்கிய 639 பல்துறை மண்டல குழுக்கள் உருவாக்கப்பட்டு பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளை தீவிரமாகக் கண்காணிக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.


தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் 4,537 தீயணைப்பு வீரர்கள், பயிற்சி பெற்ற 1,400 தன்னார்வலர்கள், மாநில பேரிடர் மீட்புப் படையினரிடம் பயிற்சி பெற்ற 6,606 காவலர்கள் தயார் நிலையில் இருந்தனர்.

2019 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு, தயார் நிலையில்

இருந்தது. வடகிழக்குப் பருவ மழை காலத்தில் பெய்த மழையின் காரணமாகவும், அரசு மேற்கொண்ட குடிமராமத்து பணிகளின் காரணமாகவும், மழை நீர் பெருமளவில் சேகரிக்கப்பட்டுள்ளதோடு, மாநிலத்தில் நிலத்தடி நீரின் அளவும் உயர்ந்துள்ளது.

4.6. மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF)

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரையுள்ள காலக்கட்டங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகையின் விவரம்:



2015-2016 ஆம் ஆண்டில் மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ரூ.679 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், இது படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1360 கோடி, பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

2020 மார்ச் 24]

4.7. கோவிட் - 19 (கொரொனா வைரஸ்) நோய் தொற்றினைத் தடுப்பதற்கு தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள்

இந்திய நாடு உட்பட 136 நாடுகளில் பரவியுள்ள கோவிட்-19 என்கிற கொரோனா வைரஸ் நோய் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு தொற்று நோயாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்தியாவில் கொரோனா வைரஸ் நோய் பரவி வருவதையும், உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோயினை ஒரு தொற்று நோயாக அறிவித்துள்ளதையும் கருத்தில் கொண்டு, மத்திய அரசு கொரோனா வைரஸ் நோயின் தாக்கத்தை ஒரு பேரிடராக அறிவித்துள்ளது.

இந்நிலையில், தமிழக அரசு, அறிவிக்கை எண் 118, நாள் 14-3-2020 (அரசு ஆணை எண் 95, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 13-3-2020)-ன்படி, கொரோனா வைரஸ் நோயினை ஒரு தொற்று நோயாக அறிவித்துள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 9-3-2020, 13-3-2020, 16-3-2020 மற்றும் 19-3-2020 ஆகிய நாட்களில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோயின் தாக்கத்தைப் பற்றியும், இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டங்கள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, போக்குவரத்துத் துறை, சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட பல துறைகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.60.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்தார்கள்.

அட்டவணை- 4.3

வ. எண்.	துறை	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை (ரூ. கோடியில்)
1	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	30.00
2	போக்குவரத்துத் துறை	5.00

வ. எண்.	துறை	ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை (ரூ. கோடியில்)
3	பெருநகர சென்னை மாநகராட்சி	4.00
4	நகராட்சி நிருவாகம்	6.00
5	ஊரக வளர்ச்சித் துறை	5.00
6	பேரூராட்சி இயக்குநரகம்	2.00
7	இந்து சமய அறநிலையத் துறை	3.00
8	பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறை	2.00
9	அங்கன்வாடி மையங்கள்	0.50
10	மாவட்ட ஆட்சியர்கள்	2.50
	மொத்தம்	60.00

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16-3-2020 அன்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசுத் துறையின் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பல்வேறு அறிவுரைகள் வழங்கினார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்பேரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மற்றும் இதர துறைகளை ஒருங்கிணைத்து, கொரோனா வைரஸ் நோய் தடுப்பிற்கான அனைத்து வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைளையும் மேற்கொண்டு வருகிறது.

4.8.பேரிடர் மேலாண்மையில் தமிழக அரசின் சாதனைகள்

கஜா புயல் 16-11-2018 அன்று சுமார் 130-145 கி.மீ. வேகத்தில், நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் இடையே கரையைக் கடந்தபோது நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் குடிசைகள், ஓட்டு வீடுகள், கான்கிரீட்

2020 மார்ச் 24]

வீடுகள், விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள், கால்நடைகள், கோழிப் பண்ணைகள் மற்றும் மின்கட்டமைப்புகள் ஆகியவை பெருத்த சேதமடைந்தன. மாநில அரசு போதுமான அளவு ஆயத்த/ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக, உயிரிழப்புகள் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. மேலும், தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான துப்புரவு மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் காரணமாக தொற்றுநோய் பரவுவது முற்றிலுமாக தடுக்கப்பட்டது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், செப்டம்பர் 2019 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில், கஜா புயலின்போது தமிழக அரசு பின்பற்றிய இந்தச் சிறப்பான நடைமுறைகளைப் பாராட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகளின், ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம், செப்டம்பர் 2019-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2018 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழைக் காலத்தில், குறிப்பாக, கஜா புயலின்போது, TNSMART செயலியின் பயனர்கள், பேரிடரின் தாக்கத்தை அறிந்துகொள்ளவும், கள அளவிலான அலுவலர்களுக்கு பேரிடர் அபாயம் குறித்த தகவல்களைக் கொண்டு செல்லவும் TNSMART செயலி பெரிதும் உதவியதாகவும், பாதிப்பிற்குள்ளாகும் சமூகத்திற்கு அவர்தம் இருப்பிடத்திற்கு ஏற்றாற்போல் சேவைகள் வழங்கிட பேரிடர் மேலாண்மை அலுவலர்களுக்கு உதவியதாகவும், தக்க நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கையின் காரணமாக அதிகப்படியான உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாகவும் பாராட்டு தெரிவித்துள்ளது.

4.9. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

5-1-2030 ஆம் ஆண்டு நீடித்த வளர்ச்சிக்கான செயற்பணி நிரலில், உலக அளவில் இன்றும், எதிர்வரும் காலத்திலும் மக்களுக்கு கிடைக்கப் பெற வேண்டிய தகுதி, அமைதி, வளம் கிடைக்கப்பெறுவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை நெறிப்படுத்தி, எவர் ஒருவரும் விடுபடாமல் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற இலக்கை எய்திடும் வகையில் 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை உள்ளடக்கி நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. பேரிடர் அபாயக் குறைப்பிற்கான சென்டாய் கூட்டமைப்பு நெறிமுறைகள் 2015-2030-ன் அடிப்படையில், மாநில பேரிடர் மேலாண்மை

[2020 மார்ச் 24

தொலைநோக்குத் திட்டம் 2018-2030-ஐ தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

பேரிடர் அபாய குறைப்புத் திட்டங்கள்மூலம் பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் நோக்கத்தில் நான்கு முன்னுரிமைகளும், 7 இலக்குகளும் இந்தத் தொலைநோக்கு திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. வருவாய் நிருவாகம், நில நிருவாகம் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு ஆகியவற்றிற்கு நேரடி தொடர்புடைய பின்வரும் மூன்று நீடித்த வளர்ச்சி இலக்குகள் கண்டறியப்பட்டு மாநிலத்தின் குறிகாட்டிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

அட்டவணை-4.4

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்	**விரிவான குறிக்கோள்கள்**
1. அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல்	2030 ஆம் ஆண்டுக்குள் வறுமையில் உள்ளவர்கள், பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்கள், பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள், சமூக பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளானவர்கள் ஆகியோரது நெகிழ் திறனை மேம்படுத்துதல்.
11. அனைவரையும் உள்ளடக்கிய பாதுகாப்பான, நெகிழ்திறன் மிக்க மற்றும் நிலைத்தன்மை கொண்ட மாநகரங்களையும், குடியிருப்புகளையும் உருவாக்குதல்	2030-க்குள் இறப்புகளின் எண்ணிக்கையையும், பாதிப்பிற்குள்ளாகும் மக்களின் எண்ணிக்கையையும் கணிசமாக குறைத்து பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் உள்ள ஏழை, எளிய மக்களை பாதுகாக்கும் நோக்குடன், பேரிடர்கள் மற்றும் நீர் தொடர்பான பேரிடர்களால் ஏற்படும் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைபாடு காரணமாக ஏற்படும் நேரடி பொருளாதார இழப்புகளை கணிசமாகக் குறைத்தல்.

2020 மார்ச் 24]

13. பருவ நிலை மாறுபாட்டையும் அதன் தாக்கங்களையும் எதிர்கொள்ளக்கூடிய வகையிலான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்	இயற்கைப் பேரிடர் மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடரால் பாதிக்கப்படுவோரின் எதிர்கொள்ளும் நெகிழ் திறனை மேம்படுத்துதல்.

அனைத்து அரசு துறைகளும் பேரிடர் மேலாண்மை திட்டத்தினைத் தயாரித்து அதனை காலமுறைப்படி மேம்படுத்தி வருகின்றன. இந்த இலக்கை அடையும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பேரிடர் அபாய குறைப்பு, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களைத் தணித்தல் மற்றும் பேரிடர்களை எதிர்கொள்ளுதல் ஆகிய நோக்கங்களை அடைவதற்கு முன்னெச்சரிக்கை, கல்வி, விழிப்புணர்வு, மனித வளம் மற்றும் நிறுவன அமைப்புத் திறன் ஆகியவற்றில் உள்ள தொடர்புகளை வலுப்படுத்த தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

5.2 வருவாய் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் தொகை திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் பொது மக்களின் வறுமையைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

5.3 அதேபோன்று, போக்குவரத்துத் துறை, உள் துறை மற்றும் சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து விபத்துகள்மூலம் நிகழும் இறப்புகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு, தமிழக அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கிருமிகளால் எளிதில் பரவக்கூடிய தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க, கள அளவில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மற்ற துறைகளை ஒருங்கிணைத்து முனைப்புடன் செயல்படுத்துகிறது.

சென்டாய் கூட்டமைப்பின் கருத்துகளை உள்ளடக்கிய தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை தொலைநோக்குத் திட்டம் தமிழக

[2020 மார்ச் 24

அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொலைநோக்குத் திட்டம், பேரிடர் அபாய குறைப்பிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய வழிவகுப்பதோடு, பேரிடர் மேலாண்மையின் அனைத்து துறைகளையும் உட்படுத்தி எதிர் காலத்தில் நெகிழ் திறன் மிக்க மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வழிவகை செய்கிறது.

5. நில நிருவாகம்

முன்னாள் வருவாய் வாரியம் 1980 ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்டதில் நில நிருவாகம் தொடர்பான பணிகளை நிருவகிக்க நில நிருவாக ஆணையரகம் உருவாக்கப்பட்டது. நில நிருவாக ஆணையரகம், வருவாய்த் துறையின் முக்கியமான அங்கங்களில் ஒன்றாகும். மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்களை நிருவகிப்பதுடன், கீழ்க்காணும் பொருண்மைகளையும் கையாள்கிறது-

- விவசாய நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை,
- ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நில மாற்றம்,
- மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு நில மாற்றம்,
- மத்திய/மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம்,
- அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,
- ஆக்கிரமணங்களை அகற்றுதல்,
- எஸ்டேட் ஒழிப்புச் சட்டம்,
- பொது நோக்கங்களுக்காக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தல்,
- தமிழ்நாடு திரையரங்கு ஒழுங்குமுறைச் சட்டம், 1955-இன்கீழ் மேல்முறையீடு,
- இணைய வழி பட்டா மாற்றம்
- நத்தம் நிலவரித் திட்டம் மற்றும் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழான மேல்முறையீடு,
- பாசனம் மற்றும் தொழில் நோக்கங்களுக்காக, அரசு நிலங்களின் பாசன நீர் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்தும் பணி மற்றும்

2020 மார்ச் 24]

- சிறு பாசனப் புள்ளிவிவரப் பகுத்தாய்வு.
- அரசு நில விபரப் பதிவேட்டினை மேம்படுத்தி தமிழ் நிலம் செயலியுடன் இணைத்து பராமரித்தல்.

நில நிருவாக ஆணையரகத்தில், நில நிருவாக ஆணையரின்கீழ் மூன்று இணை ஆணையர்கள், ஒரு துணை இயக்குநர், ஒரு தலைமைக் கணக்கு அலுவலர் மற்றும் ஆறு உதவி ஆணையர்கள் ஆகியோர் மேற்காணும் பணிகளை நிறைவேற்ற துணை புரிகின்றனர்.

5.1. பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவையானது, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கண்காணித்து வருகிறது. மேலும், நில நிருவாக ஆணையர் அவர்களால் இணையதள வழியிலான பட்டா மாறுதல் குறித்த முன்னேற்றத்தை அவ்வப்போது நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநருடன் ஆய்வு செய்யப்படுகிறது.

5.1.1. இணையதள வழியிலான பட்டா மாறுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் 10-6-2011 நாளைய சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, கிராம நிருவாக அலுவலர்கள் பட்டா மாறுதல் விண்ணப்பங்களைப் பெறுவதற்கு ஏதுவாக, வருவாய் நிலை ஆணை எண் 31(8)-இல் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டது, பின்னர் பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்களை குறித்த காலத்தில் முறையாக பரிசீலனை செய்து விரைவாக முடிவு செய்ய ஏதுவாக விரைவு பட்டா மாறுதல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வந்தது.

மேலும், பட்டா மாறுதல் குறித்த சேவைகள் பொது மக்களை நேரடியாகச் சென்றடைவதற்கு ஏதுவாக பட்டா மாறுதல் முறைகளை மேலும் மேம்படுத்தி இணையதள வழியிலான பட்டா மாறுதல் முறை செயல்படுத்தப்பட்டது. இந்த முறையின்கீழ், மனுதாரர்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில், இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பித்துக் கொள்ளவும், அதன்மீது ஒப்புகைச் சீட்டு வழங்கப்பட்டு, உட்பிரிவு இல்லாத இனங்களுக்கு 15 நாட்களுக்குள்ளாகவும், உட்பிரிவு இனங்களுக்கு 30 நாட்களுக்குள்ளாகவும் பட்டா மாறுதல் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு, பட்டா மாறுதல் செய்யப்பட்ட

சிட்டா, 'அ' பதிவேடு முதலானவற்றை இணையதளம் வாயிலாக, "எந்த நேரத்திலும் எங்கிருந்து வேண்டுமாயினும்" (anytime anywhere) என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

1-4-2019 முதல் 31-12-2019 வரையிலான காலத்தில், இந்தத் திட்டத்தின்கீழ், அனைத்து மாவட்டங்களிலும், மொத்தம் 31,12,909 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 13,90,893 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது, "The best e-Governance Scheme" என்ற சான்றிதழை Confederation of Indian Industries - Connect event of 2017 என்ற அமைப்பிடமிருந்து பெற்றுள்ளது.

5.1.2. பத்திரப் பதிவுத் துறையுடன் பட்டா மாற்றம் குறித்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்:

நிலம் தொடர்பான அனைத்துப் பதிவுகளும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு, இணையதள வழியாக வருவாய்ப் பதிவுகளில் (Tamilnilam land records database) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி மீண்டும் மனு செய்வது தவிர்க்கப்படுகின்றது. மேலும், இணையவழி பட்டா மாறுதல் தொடர்பாக சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத்திற்குமான ஒருங்கிணைப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது, அரசு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணை எண் 84, நாள் 4-2-2020-இல், நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறையின் பரிந்துரையின் அடிப்படையில், இணையவழி தள உட்பிரிவு அல்லாத பட்டா மாற்ற நிகழ்வுகளில் தானாகவே நிலப் பதிவேடுகளில் பட்டா மாற்றம் செய்தல் பணி முறையினை உருவாக்கும் திட்டம் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

5.2. அரசு நில விவர வங்கி:

நில மாற்றம், நிலக் குத்தகை மற்றும் நில ஒப்படை ஆகியவற்றை சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு நிலங்கள் குறித்த ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பு, சென்னையிலுள்ள மாநிலத் தகவல் தொகுப்பு மையத்தில் உருவாக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல் தொகுப்பின் அடிப்படையில், அரசு நில விவரப் பதிவேடு

உருவாக்கப்பட்டு, தேசிய தகவல் மையம்மூலம் இத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டு வருகிறது. இப்பதிவேட்டில் பதியப்படும் விவரங்கள், மத்திய தகவல் தொகுப்பில் உள்ள அரசு நிலங்கள் குறித்த தற்போதைய தகவல்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைகிறது.

5.3 தொன்மையான நில ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்:

தொன்மையான நில ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும், எதிர்காலப் பயன்பாட்டிற்கும், கணினிமயமாக்கல் நடவடிக்கை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இத்திட்டமானது ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டுவரும், அசல் நிலவரித்திட்டப்பதிவேடுகள் (Original Settlement Registers) மற்றும் தொன்மைவாய்ந்த மதிப்பு மிக்க கோப்புகள், ஆவணங்கள் முதலியவை கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை மாவட்ட ஆட்சியரகத்தில் 3,56,244 பக்கங்களும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் 4,62,445 பக்கங்களும் மற்றும் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் 3,69,777 பக்கங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தின்கீழ் 1,01,361 பக்கங்கள் கொண்ட மறு நில அளவைப் பதிவேடுகள் (Re-Settlement Register (RSR)) கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி தொன்மையான ஆவணங்களைக் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.4. வீட்டுமனை ஒப்படை

வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதி பெறுவதற்காக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, வருவாய் நிலை ஆணை 21-ன்கீழ் கிராம நத்தமாக ஒதுக்கப்பட்ட நிலங்களிலிருந்து, தகுதியுடைய, வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன. நத்தம் வகைப்பாடு கொண்ட நிலங்கள் போதுமானதாக இல்லாத நேர்வுகளில், பிற ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களைத் தேர்வு செய்து வருவாய் நிலை ஆணை எண் 21(6)-ன்கீழ் வருவாய் கோட்டாட்சியர்/மாவட்ட ஆட்சித்

[2020 மார்ச் 24

தலைவர் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து, தகுதி வாய்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைகள் ஒப்படை செய்யப்படுகின்றன.

கிராமப் புறங்களில் இலவச வீட்டுமனை ஒப்படையைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ரூ.30,000/-க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களில் ரூ.50,000/-க்குக் குறைவாகவும் உள்ள வீடில்லா ஏழைக் குடும்பத்தினர் தகுதியுடையவராவர். பெண்கள் நலனை உறுதி செய்யும் வகையில் இலவச வீட்டுமனை ஒப்படை குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஊரகப் பகுதியில் மூன்று சென்ட் நிலமும், நகர்ப்புறப் பகுதியில் ஒன்றரை சென்ட் நிலமும், மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு சென்ட் நிலமும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படி வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது.

வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு, வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அரசாணை (நிலை) எண் 248, நாள் 28-7-2009-ன்கீழ் ஒப்படை செய்யப்படும் நில மதிப்பின் அடிப்படையில் நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

அட்டவணை-5.1

வீட்டுமனை ஒப்படைக்கான நிதி அதிகார உச்சவரம்பு

வ. எண்	அலுவலர்கள்	நிதி அதிகார உச்ச வரம்பு (நில மதிப்பு - ரூபாயில்)
1.	வட்டாட்சியர்	30,000/-
2.	கோட்டாட்சியர்	50,000/-
3.	மாவட்ட வருவாய் அலுவலர்	1,00,000/-
4.	மாவட்ட ஆட்சித் தலைவர்	4,00,000/-
5.	நில நிருவாக ஆணையர்	5,00,000/-
6.	அரசு	5,00,000/-க்கு மேல்

2020 மார்ச் 24]

வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து ஒவ்வொரு நிதியாண்டிலும், அதற்கான இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் 2011-2012 ஆம் நிதியாண்டு முதல் 2019-2020 ஆம் நிதியாண்டு வரையில், 23,50,000 இலவச வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும், இலக்கினை விஞ்சி மொத்தம் 24,74,167 இலவச வீட்டுமனைகள் ஒப்படை வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் தகுதியுள்ள நபர்களுக்கு கீழ்க்கண்டுள்ள விவரப்படி இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளது:

அட்டவணை-5.2

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம்

ஆண்டு	இலக்கு	வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்
2011-2012	1,00,000	1,21,804
2012-2013	1,00,000	1,31,299
2013-2014	2,00,000	2,17,723
2014-2015	3,00,000	3,81,708
2015-2016	3,50,000	4,05,111
2016-2017	3,50,000	3,54,745
2017-2018	3,50,000	3,88,386
2018-2019	3,00,000	3,00,146
2019-2020	3,00,000	* 2,13,035
மொத்தம்	23,50,000	25,13,957

(* பிப்ரவரி 2020 வரை)

[2020 மார்ச் 24

பொதுவாக ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து சட்டங்கள் மற்றும் விதிகள் இருப்பினும், உண்மையில் வீடில்லா ஏழை எளியவர்களின் வறிய சூழ்நிலையினைக் கருத்தில்கொண்டு, வான்புகழ் கொண்ட தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்களின் அமைச்சு என்ற அதிகாரத்தின் குறள் எண் 637- ல்

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல்"

என்ற வாக்கினை மரியாதையுடன் பின்பற்றும் பொருட்டு, நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்த போதிலும் உலகத்து இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு இவ்வரசானது ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள நீண்டகால குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை அகற்றி, அத்தகைய நிலங்களை முந்தைய நிலவியல் தன்மைக்கு உட்படுத்தும் பொருட்டு, நடவடிக்கை மேற்கொண்டாலும், வருவாய்த் துறையின்மூலம் ஆட்சேபகரமற்ற பிற புறம்போக்கு நிலத்தை மாற்றுப்புலமாக தேர்வு செய்து அல்லது தனியார் நிலங்களை கையகப்படுத்தி, ஆக்கிரமணதாரர்களை மறுகுடியமர்வு செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணை (நிலை) எண் 318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 30-8-2019-ன்படி குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துவதற்காக நெறிமுறைகளுடன்கூடிய ஒருங்கிணைந்த சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு ஆக்கிரமிப்பை வரன்முறை செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவும், ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை அகற்றி, அவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கு பயனாளிகளின் ஆண்டு குடும்ப வருமான வரம்பாக ரூபாய் மூன்று இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் 1,36,615 குடியிருப்பு ஆக்கிரமணங்கள் கண்டறியப்பட்டு, அத்தகைய ஆக்கிரமணங்கள் தகுதியின் அடிப்படையில் வரன்முறை செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

2020 மார்ச் 24]

வருகிறது. அதேபோன்று, ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் கண்டறியப்பட்ட 1,77,923 குடியிருப்பு ஆக்கிரமணங்களை அகற்றி, அவர்களுக்கு மாற்றுப்புலம் தேர்வு செய்து மறுகுடியமர்வு செய்ய ஏதுவாக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு, தற்போது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் தொடர்பாக தரவு தளம் (Data Base) உருவாக்கி, சிறப்பு வரன்முறைத் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் வகையில் அரசு நிலப் பதிவேடு (மென்பொருள்) செயலியை மேம்படுத்துவதற்கு தேசிய தகவல் மையத்துடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள நிலவியல் ஆக்கிரமண விவரங்களை அறிந்துகொள்ள ஏதுவாக அரசு நிலப் பதிவேடு செயலி, 'தமிழ்நிலம்' மற்றும் 'இ-அடங்கலுடன்' இணைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.5 நில மாற்றம்

வருவாய் நிலை ஆணை 23 மற்றும் 23ஏ-ன்கீழ், அரசு நிலங்கள் நில மாற்றம் செய்யப்படுகின்றன. வருவாய் நிலை ஆணை 23-ன்கீழ் மத்திய அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையத்தை வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை 23 ஏ-ன்கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக் கிரையமின்றியும் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

மத்திய/மாநில அரசுத் துறைகளுக்கு அரசு நிலங்கள் தேவைப்பட்டால் கேட்புத் துறையானது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் நிலத் திட்ட அட்டவணையுடன் விண்ணப்பிக்க வேண்டும். கேட்புத் துறையின் தேவை மற்றும் இருப்பிலுள்ள தகுதியுடைய அரசு நிலங்கள் ஆகியவற்றை புலத்தணிக்கை செய்தும், வருவாய் ஆவணங்களுடன் சரிப்பார்த்தும் மாவட்ட ஆட்சியர் உரிய முன்மொழிவினை நில நிருவாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்ப வேண்டும். நில நிருவாக ஆணையரின் பரிந்துரையின் பேரில், கேட்புத் துறைக்கு நில மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டு வருகிறது.

அத்தியாவசியத் தேவைக்காக ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களான நீர்நிலை, மயானம், பாதை போன்ற நிலங்களை தவிர்த்து குறைந்த அளவிலான புறம்போக்கு நிலங்களை அரசு துறைகளுக்கு நில மதிப்பு உச்சவரம்பின்றி நிலமாற்றம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசாணை (நிலை) எண் 503, வருவாய்த் துறை, நாள் 21-9-1999-ன்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மந்தைவெளி அல்லது மேய்க்கால் வகைப்பாடுடைய அரசு புறம்போக்கு நிலங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, அரசு அவ்வாறு மேய்க்கால் மந்தைவெளி நிலங்களை நிலமாற்றம் செய்யும்போது சமமான அளவுள்ள மாற்றுப்புலம் அளிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. மேலும், மேம்பாட்டுக் கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/- என்ற வீதத்தில் சம்பந்தப்பட்ட கேட்புத் துறையினரிடம் வசூலிக்கப்படுகிறது. மாற்று நிலம் உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்புவிக்கப்பட்டு, அவை கால்நடைகளில் மேய்ச்சல் பயன்பாட்டிற்கு மேம்படுத்தப்பட்டு இருந்தாலும், அதன் உரிமை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வசம் இருக்கும்.

பிற அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்து ஆணையிடப்பட்டாலும் அனைத்து அரசு நிலங்களுக்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையே பாதுகாவலராக உள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட துறை, நிலத்தைப் பயன்படுத்தாமல் இருந்தாலோ அல்லது நிபந்தனைகள் மீறப்பட்டாலோ மேற்படி நிலங்களை மீளப்பெற்று தகுதி மற்றும் தேவையுள்ள பிறிதொரு துறைக்கு நிலமாற்றம் செய்யும் உரிமையை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தக்க வைத்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் 31-12-2019 வரையில், 4,841 ஏக்கர் அரசு நிலங்கள் கல்வி, நீதி, போக்குவரத்து, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப் பணி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மீன் வளம், அணுசக்தி, எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் இராணுவம் போன்ற பல்வேறு மாநில/ மைய அரசுத் துறைகளுக்கு 587 இனங்களில் நிலமாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1-4-2019 முதல் 31-12-2019 வரையில் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது:

2020 மார்ச் 24]

முன்மொழிவுகளின் மொத்த எண்ணிக்கை	:	44
வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை	:	44
நில மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம்	:	445 ஏக்கர்

5.6 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்களை அரசுத் துறைகளுக்கு நிலமாற்றம் செய்வது போலவே அரசு நிலங்களை வருவாய் நிலை ஆணை 24-ன்கீழ் பொதுப் பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றமும் செய்யப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகள், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள்/கழகங்கள்/வாரியங்கள்/ பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு அவற்றின் திட்டங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. சில அரிய நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் நிலம் இருக்கும்பட்சத்தில் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. மேற்படி நிலங்கள் வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வ.நி.ஆ. 24(6)-ன்படி உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. இவ்வினங்களில் விதி மீறல் ஏதேனும் கண்டறியப்படின் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்கள் இழப்பீடுத் தொகை ஏதுமின்றி அரசுக்கு மீளப் பெறப்படுகின்றன.

பொது நலன் கருதி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. மேலும், பாதாள சாக்கடைத் திட்டம், கழிவுநீர் சுத்திகரித்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றிற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, அரசு நிலங்கள் நிலக் கிரையமின்றி, நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன, அதேபோல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு,

வீடற்ற ஏழை மக்களுக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத்த செயல்படுத்தப்படும் அடுக்குமாடி குடியிருப்புத் திட்டங்களுக்கும் நிலக் கிரயமின்றி அரசு நிலங்கள் நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது,

தலைமைச் செயலக அளவிலான குழு

நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் நிலக் குத்தகை தொடர்பான முன்மொழிவுகளின்மீது பிற துறைத் தலைவர்களின் கருத்திசைவினை விரைந்து பெற்று முடிவெடுப்பதற்கு ஏதுவாக தலைமைச் செயலக அளவிலான குழு அரசாணை (நிலை) எண் 426, வருவாய்த் (நி.மு.4) துறை, நாள் 29-9-2014-ன்படி அமைக்கப்பட்டது. இக்குழு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளரைத் தலைவராகவும், நில நிருவாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர்/உறுப்பினர் செயலாளராகவும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி, தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் இசைவு /தடையின்மை கோரப்படும் நேர்வுகளில் தொடர்புடைய முன்மொழிவு இக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, துறைத் தலைவர்களின் கருத்திசைவு அல்லது ஆட்சேபனை பெறப்படுகிறது. தலைமைச் செயலக அளவிலான இக்குழுவானது இதுவரை 34 முறை கூட்டப்பட்டு, 305 இனங்கள் தீர்வு காணப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 632, வருவாய்த் (நி.மு.5(1)) துறை, நாள் 7-11-2008-ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO)-விற்கு எவ்வித நிதி வரம்பின்றி ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் முன்நுழைவு அனுமதியினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அளவிலேயே வழங்க அதிகாரம் அளித்து அரசாணை (நிலை) எண் 344, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (நி.மு.5(1)) துறை, நாள் 19-9-2018 பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO)-விற்கு முன்நுழைவு அனுமதி கோரும் நேர்வுகளில் சம்பந்தப்பட்ட துறைகளின் ஆட்சேபனையின்மைச் சான்று பெறப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்/மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு நில உரிமை மாற்ற இறுதி ஆணையினை நிலுவையில் வைத்து முன் நுழைவு அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2011 ஆம் ஆண்டு முதல் 31-12-2019 வரையில், மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவைகளிடமிருந்து பெறப்பட்ட 487 இனங்களில் 6,167 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள், பொது நோக்கங்களுக்காக நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1-4-2019 முதல் 31-12-2019 வரையில் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது:

முன்மொழிவுகளின் மொத்த எண்ணிக்கை	:	46
வெளியிடப்பட்ட அரசாணைகளின் எண்ணிக்கை	:	46
நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம்	:	1,115 ஏக்கர்

5.7 நிலக் குத்தகை

வருவாய் நிலை ஆணை 24ஏ-ன்கீழ், அரசு புறம்போக்கு நிலங்கள்/கட்டடங்கள்/நிலத்துடன்கூடிய கட்டடங்கள் போன்றவை, வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பிற சங்கங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. குத்தகைக்கு வழங்கப்படும் அரசு புறம்போக்கு நிலங்கள் முறையாக பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன:

(அ) அரசு நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள்குத்தகைக்கோ, வாடகைக்கோ அல்லது குத்தகை உரிமையை கிரயம் செய்யவோ கூடாது.

(இ) குத்தகை நிபந்தனை மீறப்படின், குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம், எவ்வித இழப்பீடுமின்றி உரிய வழிமுறைகளின்படி அரசுவசம் மீள எடுத்துக்கொள்ளப்படும்.

தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகள் மற்றும் விதிமுறைகளின்படி அரசு நிலத்தின் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அதனடிப்படையில் வணிக நோக்கமின்றி செயல்படும் குத்தகை இனங்களில் ஆண்டுக் குத்தகைக் கட்டணம் நில மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்தில் செயல்படும் குத்தகை இனங்களில் 14 விழுக்காடும் நிர்ணயம் செய்யப்படுகிறது. சமூக சேவை மற்றும் பொது நல நோக்கில் செயல்படும் இனங்களில், சிறப்பு நேர்வாக பெயரளவு குத்தகைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. குத்தகைக் கட்டணம் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அப்போதைய நில மதிப்பின் அடிப்படையில் மறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த குத்தகை பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, பராமரிக்கப்படுகிறது.

வருவாய் நிலை ஆணை 24 A-ன்கீழ், தமிழகத்தில் சுமார் 956 இனங்களில் அரசு புறம்போக்கு நிலங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் நிதியாண்டில் குத்தகைத் தொகையாக ரூ.90,05,51,739/- வசூல் செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5.8. உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

வருவாய் நிலை ஆணை எண் 24A-ன்படி, கடலோர மாவட்டங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் (Salt Pan) உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உப்பு உற்பத்திக்காக வழங்கப்படும் நிலக் குத்தகை இனங்களில் குத்தகைக் கட்டணம் மற்றும் உரிமக் கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ஆண்டொன்றிற்கு ரூ.135/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

சிறு உப்பு உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், உப்பு தயாரித்தல் பணியை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழகத்தில் உப்பள நிலங்களுக்கு நியாயமான குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தமிழகத்தில் குத்தகைக் கட்டணம் குறைவாகவே உள்ளது.

5.9 அரசு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதிப்பதற்கு அனுமதி

அரசு புறம்போக்கு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதித்து, வணிகம் மற்றும் வணிகமற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு, தனி நபர், தனியார் அமைப்பு, நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 24A-ன்கீழ் தட வாடகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், விவசாயப் பயன்பாட்டிற்காக அரசு நிலங்களில் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லப்படும் இனங்களில் தடவாடகை அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

5.10 நில மாற்றம்/நில உரிமை மாற்றம்/குத்தகை– கண்காணிக்கும் முறை

இணைய வழியாக, நில மாற்றம், நில உரிமை மாற்றம், குத்தகை மற்றும் நில எடுப்பு தொடர்பான இனங்களில், மாநிலம் முழுவதிலும் அனைத்து நிலைகளிலும் உள்ள வருவாய் அலுவலர்களால் முன்மொழிவுகளைக் கையாள்வதற்கு மென்பொருள்/செயலி உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, மாவட்ட அலுவலர்களின் நடவடிக்கையினைத் துரிதப்படுத்துதல், நிலம் தொடர்பான முன்மொழிவுகளைத் துரிதமாக முடிவு செய்தல் மற்றும் திட்டப் பணிகளுக்கான அரசு நிலங்களை விரைவாக வழங்குவதற்கு வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.11. ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களை ஆக்கிரமிப்புகளின்றி பாதுகாப்பது அரசின் கொள்கையாகும். பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தொடர்ச்சியான நடவடிக்கைகளை அரசு முனைந்து எடுத்து வருகிறது. அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அவற்றினை அகற்ற சம்பந்தப்பட்ட துறையினருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பணிகளில் முக்கியமான ஒன்றாகும்.

அரசு நிலங்களைப் பாதுகாக்கவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற பின்வரும் சட்டங்களில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

i. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905,

ii. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920,

iii, தமிழ்நாடு பொது வளாகங்கள் (ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1975,

iv. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1994,

v. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 மற்றும்

vi. தமிழ்நாடு நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சட்டம், 2007.

நீர் நிலைகள் மற்றும் நீர்வழிகளை ஆக்கிரமிப்புகளின்றி பாதுகாக்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, நீர்நிலை ஆதாரங்களான குளங்கள், ஆறுகள், ஏரிகள், குட்டைகள் மற்றும் ஏனைய நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பொதுப் பணித் துறை/நீர்வள ஆதாரத் துறையுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 540, வருவாய்த் (நி.மு.6(2)) துறை, நாள் 4-12-2014-ன்படி பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களில் தெரிவிக்கப்படும் குறைகளைத் தீர்வு காண வட்ட, கோட்ட மற்றும் மாவட்ட நிலைகளில் மூன்று வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுப் பணித் துறை / நீர்வள ஆதாரத் துறை அலுவலர்களையும் மேற்படி மூன்று அடுக்குக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து, அரசாணை (நிலை) எண் 148, வருவாய்த் (நி.மு.6(2)) துறை, நாள் 24-3-2016-ல் வெளியிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும் மாதந்தோறும் நடத்தப்படும் மாவட்ட வருவாய் நிர்வாகக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் கண்காணிக்கப்படுகிறது.

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 இயற்றப்பட்டு 110 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிக்கலான தன்மையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்கள் கொண்டுவர பரிசீலனைகள் செய்வதற்காக அரசாணை (நிலை) எண் 269, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 23-8-2017-ல், அரசுச் செயலாளர்கள் நிலையான குழு ஒன்றை அமைக்க உத்தரவிடப்பட்டு, வருவாய்த் துறை செயலாளர்

2020 மார்ச் 24]

தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள், சட்டத் துறை செயலாளர்கள் உறுப்பினர்களாகவும், நில நிருவாக ஆணையர் அவர்கள் ஒருங்கிணைப்பாளர்கள்/உறுப்பினர் – செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவின் ஆய்வறிக்கையின்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பாக ஒரு புதிய சட்ட முன்வரைவு தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

5.12. நில எடுப்பு

பொது நோக்கத்திற்காக, மத்திய, மாநில அரசின் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு அவர்களின் வேண்டுகோளின்பேரில், தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. 31-12-2013 வரை, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894 (மத்தியச் சட்டம் 1/1894)-ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இச்சட்டத்தைத் தவிர, மாநில அரசு, சமூகத்தில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு வீட்டுமனை மற்றும் பிற தேவைகளுக்கு நிலம் வழங்கவும், மேலும் தொழிற்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலை உட்கட்டமைப்பிற்காகவும், பின்வரும் நில எடுப்புச் சட்டங்களை நிறைவேற்றியுள்ளது:-

i. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1999)

ii. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2002) மற்றும்

iii. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1978)

ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த, மத்திய நில எடுப்புச் சட்டம், 1894-ஐ இரத்து செய்து, புதிய நில எடுப்புச் சட்டமான “நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (மத்திய சட்டம் 30/2013“ (The Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013)-ஐ மத்திய அரசு இயற்றி உள்ளது. இச்சட்டம், 1-1-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, மறு வாழ்வு மற்றும் மறு குடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் (Process) ஒருங்கிணைந்த பகுதியாகியுள்ளது.

[2020 மார்ச் 24

மேற்கண்ட மாநில அரசின் மேற்குறிப்பிட்ட நில எடுப்புச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கையைத் தொடர்ந்திடும் வகையில், மாநில அரசு, புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம், 1/2015-ஐ நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின்கீழ், புதிய நில எடுப்புச் சட்டத்தில், 4-ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு பயன்கள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மேற்கண்ட மாநில அரசின் நில எடுப்புச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையில், பிரிவு 105-எ சேர்க்கப்பட்டு, அதன்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 5 ஆம் அட்டவணையில் இம்மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இத்திருத்த மசோதாவுக்கு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

தற்போது தமிழ்நாடு அரசு, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலினை 2-12-2019-ல் பெற்று Tamil Nadu Land Acquisition Laws (Revival of Operation, Amendment and Validation) Act, 2019 (Tamil Nadu Act 38 of 2019) திருத்தம் அளித்து மாநில நில எடுப்புச் சட்டங்களை 26-9-2013-லிருந்து புதுப்பித்து ஆணை வழங்கியும், இந்த விவரத்தை தமிழ்நாடு அரசிதழில் 5-12-2019-ல் பிரசுரம் செய்தும் ஆணையிட்டுள்ளது.

இதன்மூலம் மாநில நில எடுப்புச் சட்டங்களின் பேரில் எந்தவித தடையுமின்றியும், தாமதமின்றியும் தொடர்ந்து நில எடுப்புப் பணிகளை தொய்வின்றி தொடர அரசு வழிவகை செய்துள்ளது.

நிலம் கையகப்படுத்துவதில், நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டத்தினை (RFCTLARR Act, 2013) அமல்படுத்துவதற்கு ஏதுவாக, இச்சட்டத்திற்கான மாநில அரசின் விதிகள் இயற்றப்பட்டு, தமிழக அரசின் அரசாணை (நிலை) எண் 298, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20-9-2017-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய நில எடுப்புச் சட்டம், 2013, அட்டவணை 1-ல் குறிப்பிட்டுள்ளபடி, நில மதிப்பிற்கான பெருக்கல் காரணி (Multiplier Factor) நிர்ணயம் செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண் 300, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 20-9-2017-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தமிழ்நாடு மாநில விதிகள், 2017 மற்றும் பெருக்கல் காரணிகள் (Multiplier Factor) குறித்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழ் எண் 300, நாள் 21-9-2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

மேற்படி தமிழ்நாடு அரசு விதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பெருக்கல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசால், அரசாணை (நிலை) எண் 13, தொழில் [சிப்காட் (நி.எ.-1(1))] துறை, நாள் 21-2-2018 மற்றும் அரசாணை (நிலை) எண் 27, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 5-3-2018-ல் பிறப்பிக்கப்பட்டு, இடைக்கால சரியீடு வழங்கப்பட்ட இனங்களுக்கு, தற்பொழுது முழுமையான சரியீடு கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுக் காரியங்களுக்காக, தனியார் நிலங்களை நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் அரசு விரைவாகக் கையகம் செய்வதற்கு, ஏற்கெனவே இருந்த அரசாணை (நிலை) எண் 103, வருவாய்த் (நி.எ.1(1)) துறை, நாள் 28-2-2011-ல் நிர்ணயிக்கப்பட்ட நிதி வரம்பினை, புதிய நில எடுப்புச் சட்டத்தின்படியான சரியீட்டிற்கு ஈடாகப் பெறும்வகையில் உயர்த்தி, அரசாணை (நிலை) எண் 281, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.எ.1(1)) துறை, நாள் 7-9-2017-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நில எடுப்பு செய்யப்படும் நேர்வுகளில் சரியீடு வழங்கப்பட்டு வருகிறது.

நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைகளில் தற்போது உள்ள கால தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, அரசாணை எண் 23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 19-3-2018-ல், கீழ்க்கண்டவற்றை அரசு சிறப்பு முயற்சியாக அறிவித்துள்ளது.

"நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நிலப் பாராதீனம் நடைமுறைகளை நெறிப்படுத்துதல் (நடைமுறையில் உள்ள சட்டரீதியான தேவைகளை உள்ளடக்கி, தற்போது உள்ள கால அளவைக் குறைக்கும் பொருட்டு)" பணிக் குழு அமைக்கப்பட்டு, இப்பணிக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5.13. சிறுபாசனப் புள்ளிவிவரப் பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசனப் புள்ளிவிவரப் பகுத்தாய்வுத் திட்டமானது நூறு சதவிகித மத்திய அரசு நிதியுதவியுடன், ஜலசக்தி அமைச்சகத்தின்கீழ் நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்புத் துறையின்கீழ் சிறுபாசனத் திட்டங்கள் குறித்த விரிவான புள்ளிவிவரத் தொகுப்பினை உருவாக்கும் பொருட்டு, அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கமானது, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சிறுபாசனக் கணக்கெடுப்பினை நடத்தி அதன்மூலம் தெளிவான, தரவுகளைத் தொகுத்து அளிப்பதோடு, நிலத்தடி நீர் குறித்து ஆய்வு செய்தும், அவை கிடைக்கப்பெறும் தன்மையை மதிப்பீடு செய்தும், நீர்வள மேம்பாடு குறித்த திட்டமிடுதலுக்கு உதவியாக இருப்பதாகும்.

தமிழகத்தில், நில நிருவாக ஆணையர் அவர்கள் மாநில சிறுபாசனக் கணக்கெடுப்பு ஆணையராகச் செயல்படுகிறார். இதுவரையில் 5 சிறுபாசனக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு:

2013-2014-ன்படி, எடுக்கப்பட்ட 5-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு:

அட்டவணை-5.3

ஐந்தாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (மேற்கோள் ஆண்டு 2013-2014)

வ. எண்	திட்டத்தின் வகை		திட்டங்களின் எண்ணிக்கை	விழுக்காடு
1.	நிலத்தடி நீர்த் திட்டம்	தோண்டப்பட்ட கிணறு	15,82,718	76.37
		ஆழம் குறைவான குழாய் கிணறு	1,45,248	7.01
		நடுத்தர குழாய் கிணறு	73,622	3.55
		ஆழ்துளைக் குழாய் கிணறு	2,23,978	10.81
2.	மேற்பரப்பு நீர்ப் பாசனத் திட்டம்	மேற்பரப்பு நீர்ப் பாசனத் திட்டம்	44,772	2.16
		நீரேற்று பாசனத் திட்டம்	2,179	0.10
மொத்தம்			20,72,517	100 . 00

2020 மார்ச் 24]

ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2017-2018) மற்றும் நீர்நிலைகள் கணக்கெடுப்பு

மத்திய அரசு சிறுபாசனக் கணக்கெடுப்பின் நோக்கத்தினை மேலும் விரிவுபடுத்தி நீர்நிலைகள் குறித்த கணக்கெடுப்பும் நடத்த தீர்மானித்துள்ளது. இதன் நோக்கமானது, நீர்நிலைகள் குறித்த முக்கிய விவரங்களாகிய, நீர்நிலைகளின் எண்ணிக்கை, அளவு, அவற்றின் நிலை, வகை, பயன்பாடு, நீரைத் தேக்கி வைக்கும் திறன் போன்ற விவரங்களைச் சேகரிப்பதே ஆகும். இந்த கணக்கெடுப்பில், அனைத்து நீர்நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருந்தாலும், கணக்கெடுக்கப்படுகின்றன. இத்தகைய தெளிவான, விரிவான புள்ளியியல் தரவுகள், நீர்நிலைகள் குறித்த திட்டமிடலுக்கும், கொள்கை வகுத்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். நீர்நிலைகளின் புகைப்படங்கள் மற்றும் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை விவரங்கள் கைபேசிச் செயலிமூலம் எடுக்கப்பட்டு, அவை மத்திய அரசின் வலைசேவையகத்தில் (Server) பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

வருவாய் துறையின் முக்கிய அங்கமாக விளங்கும் நில நிருவாகத் துறை பொது மக்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குதல், பட்டா உரிமை மாற்றம் செய்தல், நிலம் கையகப்படுத்துதல், நில மாற்றம், நில உரிமை மாற்றம் முதலான பணிகளைச் செய்து வருகிறது. மேலும், அரசு நிலங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் ஆக்கிரமணங்களை அகற்றுதல் இவற்றுடன் திரைப்படச் சட்டம் மற்றும் சிறுபாசனப் புள்ளிவிவர பகுத்தாய்வு போன்றவற்றையும் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆணையரகம் பொதுமக்களின் சேவையினைக் கருத்தில்கொண்டு தொடர்ந்து மக்களுக்கும் அரசுக்கும் திறம்பட பணியாற்றி வருகிறது.

நிலச் சீர்திருத்தம்

அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும், ஏழை எளிய மக்களின் துயரங்களைக் களைந்து அவர்களை ஏற்றிவிடும்வகையில் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த் துறையின்கீழ் நிலச் சீர்திருத்தத் துறை செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வருவாய் வாரியம் நீக்கச் சட்டம் 1980 (தமிழ்நாடு சட்டம் 36/1980) பிரிவு 3-ன்கீழ் தமிழ்நாடு அரசிதழில் வெளியான அறிவிக்கையின்படி 01-12-1980 முதல் வருவாய் வாரியம்

கலைக்கப்பட்டதன்பேரில் நிலச் சீர்திருத்தம், நில நிருவாகம் மற்றும் வருவாய் நிருவாகம் ஆகிய துறைகள் வருவாய்த் துறையின்கீழ் உருவாக்கப்பட்டன.

சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

மேற்காணும் குறளுக்கு ஏற்ப ஒரு சமுதாய வளர்ச்சிக்கு விவசாய நில உடைமைகள் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. விவசாய நில உடைமைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிடும்வகையில், விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து, மிகை நிலங்களைக் கையகப்படுத்தி அதனை நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்து வழங்குதல் அவசியமாகின்றது.

இந்த நோக்கத்துடன் 1961 ஆம் ஆண்டில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 39-ன் உட்பிரிவு (b) மற்றும் (c)-ன்படி தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961) இயற்றப்பட்டது. இச்சட்டம், விவசாய நில உடைமைகளுக்கு உச்சவரம்பினை நிர்ணயிக்கவும் உச்சவரம்பிற்கு மேல் உள்ள நிலங்களை உபரி நிலமாக அறிவிக்கவும் அத்தகைய உபரி நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கும் அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடு அடையச் செய்து சமுதாயத்தில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்கும் வழிவகை செய்கிறது.

மேற்படி விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்பு சட்டம் தவிர இத்துறையால், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டம், பூமிதான சட்டம் மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான எஞ்சிய பணிகள் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாட்டிற்கே முன்னோடியாக விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் இத்துறைமூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டச் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

6.1. நீடித்த வளர்ச்சி இலக்கு 2030-நிலச் சீர்திருத்தத் துறையின் பங்கு.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இந்தியா உட்பட ஐ.நா. அவையில் உள்ள அனைத்து உறுப்பு நாடுகளாலும் நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030 ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திட்டம், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இவ்வுலக மக்களுக்கு அமைதியையும், செழிப்பையும் வழங்கத்தக்க வரைவொன்றை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் இதயமாக உள்ள 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளும் வளர்ச்சியடைந்த மற்றும் வளரும் நாடுகளுக்கான உலகளாவிய ஒத்துழைப்பிற்கும் செயற்பாட்டிற்கும் ஆன ஓர் அவசர அழைப்பாக உள்ளது. நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030, வறுமை ஒழிப்பையும், நலவாழ்வு மற்றும் கல்வியறிதலை மேம்படுத்துவதையும், சமமற்றத் தன்மையைக் களைவதையும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் மட்டுமல்லாது காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதையும், காடுகள் மற்றும் கடல்களைப் பாதுகாப்பதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டது.

நீடித்த வளர்ச்சி இலக்கு 1:	அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல்.
நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4:	2030 ஆம் ஆண்டிற்குள், குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாகும் மக்கள் உட்பட அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருளாதார வளங்கள், அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துதல், நிலத்தின் மீதான உரிமை, பாரம்பரியம், இயற்கை வளங்கள், உரிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறு முதலீடுகளை உள்ளடக்கிய நிதியுதவிகள் வழங்குவதை உறுதிசெய்தல்.

நிலச் சீர்திருத்தத் துறை, துறைசார்ந்த திட்டங்களின் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் வாயிலாக நிலமற்ற கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் வாயிலாக வேளாண் நில உரிமையின்பாலுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு ஏழை கிராம

மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது. மேலும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பூமிதான நிலங்கள் வினியோகத்தின் வாயிலாக வேளாண் வளர்ச்சியையும், வறுமை ஒழிப்பையும் அடைய ஆவன செய்கிறது.

இதுவே, மேற்காணும் நீடித்த வளர்ச்சி இலக்கு 1 மற்றும் நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4-ல் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைவதற்கான வழிவகையாகும்.

இந்த இலக்கு மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் இத்துறைமூலம் செயல்படுத்தப்படும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் வேளாண்மை சார்ந்த பல்வேறு பணிகளில் ஈடுபடும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பதன் வாயிலாக, ஏழைத் தொழிலாளர்களை பாதுகாத்து நியாயமான கூலியை வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் 1971 மற்றும் திருத்திய சட்டத்தின் வாயிலாக ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருந்த நிலத்தை உரிமையுள்ளதாக்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் நீடித்த வளர்ச்சி இலக்கு 1-ஐ அடைய இச்சட்டம் உதவுகிறது.

நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.3 :	2030 ஆம் ஆண்டிற்குள், தேசிய அளவில் பொருத்தமான சமூக பாதுகாப்பு முறைகளை அனைத்து நிலைகளிலும் குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாவோர் பெறும் வண்ணம் நடைமுறைப்படுத்துதல்.

இத்துறை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தினைச் செயல்படுத்துவதன் வாயிலாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரைப் பாதுகாக்கும் வகையில் நிதியுதவி அளிப்பதன்மூலம் சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது. மேலும், அக்குடும்பத்தைச் சார்ந்த முக்கிய உறுப்பினர் நோய்வாய்ப்பட்டு தற்காலிகமாக செயல்பட முடியாத வேளையில் அக்குடும்பத்திற்கு தேவையான நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பல்வேறு நிதி உதவிகளின் வாயிலாக மேற்காணும் குறிக்கோளை அடைய ஏதுவாகிறது.

2020 மார்ச் 24]

6.2. நிருவாகக் கட்டமைப்பு

நிலச் சீர்திருத்த ஆணையர், ஆணையரகத்தின் தலைவராகவும், அவருக்கு உதவியாக தலைமையிடத்தில், நிலச் சீர்திருத்த இயக்குநர், இணை இயக்குநர், உதவி ஆணையர்கள் மற்றும் நிதி ஆலோசகர்/ முதன்மை கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

நிலச் சீர்திருத்தத் துறை 2015-ல் தற்போதைய நடைமுறைக்கு ஏற்ப மறுசீரமைக்கப்பட்டு, "அதிகாரம் பெற்ற அலுவலர்" மற்றும் "ஒப்படை வழங்கும் அலுவலர்" ஆகிய அதிகாரங்கள், சார் ஆட்சியர்/ வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் மாவட்டங்களில் உள்ள நிலச் சீர்திருத்தப் பிரிவின் உதவியோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரால் நிருவாகரீதியில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், வேளாண்மை வருமான வரி சம்பந்தமான பணிகள் மற்றும் பூமிதான சட்டம் ஆகியவை மாவட்ட ஆட்சியரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதைத்தவிர மாநிலத்தில் தனித் துணை ஆட்சியர்கள் (துணை ஆட்சியர்) தலைமையில் 10 வருவாய் நீதிமன்றங்கள் குத்தகைச் சம்பந்தமான சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

நிலச் சீர்திருத்தத் துறைக்காக ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள் கீழ்க்கண்டவாறு :-

அட்டவணை—6.1

நிலச் சீர்திருத்தத் துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்கள்

வ. எண்	பணியிடங்கள் வகை	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிலச்சீர்திருத்த ஆணையர்	1
2.	நிலச் சீர்திருத்த இயக்குநர்	1
3.	இணை இயக்குநர்	1

வ. எண்	பணியிடங்கள் வகை	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
4.	நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்	1
5.	உதவி ஆணையர்கள்/துணை ஆட்சியர்கள்/தனித் துணை ஆட்சியர்கள் (வருவாய் நீதிமன்றம்) உட்பட	13
6.	கண்காணிப்பாளர்கள்/துணை வட்டாட்சியர்கள்	21
7.	நிரலர் (Programmer)	1
8.	உதவி நிரலர் (Assistant Programmer)	1
9.	உதவியாளர்கள், உதவியாளர் நிலை தனி வருவாய் ஆய்வாளர்கள்	43
10.	சுருக்கெழுத்து தட்டச்சர்கள்/ தட்டச்சர்கள்	35
11.	இளநிலை உதவியாளர்கள்	21
12	இதர பணியாளர்கள்	75
	மொத்தம்	214

6.3. நடைமுறையில் உள்ள உச்சவரம்பு

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம், 1961 மற்றும் திருத்தச் சட்டத்தின்படி 15-2-1970 முதல் நில உச்சவரம்பு கீழ்கண்டவாறு நடைமுறையில் உள்ளது.

- தனிநபர், நிறுவனம், சங்கம், தனியார் அறக்கட்டளை, கம்பெனி ஆகியவற்றுக்கு உச்சவரம்பு பரப்பு 15 தர ஏக்கர் அனுமதிக்கப்படுகிறது.

- 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 தர ஏக்கரும் ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் 5 தர ஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்பட்டு ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு 30 தர ஏக்கர் அனுமதிக்கப்படுகிறது,

- 15-2-1970 அன்று ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் அவர்களது பெயரில் நிலங்கள் இருந்தால், சீதனமாக 10 தர ஏக்கர் அனுமதிக்கப்படுகிறது.
- 1-3-1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளைகள் (Public Trust of Religious nature) இச்சட்டத்திற்குள் வராது.
- 1-3-1972 தேதியில் இருந்த தர்ம ஸ்தாபன பொது அறக்கட்டளைகளுக்கு (Public Trust of Charitable nature) 5 தர ஏக்கர் அனுமதிக்கப்படுகிறது.
- 1-3-1972 தேதிக்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகள் நிலங்கள் வைத்துக்கொள்ள இயலாது. எனினும் திருத்தப்பட்ட சட்டம் 29/87-ன்படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக் கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது.

6.3.1. தொழில்/வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

நிலச் சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A மற்றும் விதிகளின்படி, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், 15 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

இதற்கு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

திருத்திய சட்டம் 2018-ன்படி, ரூபாய் 20 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் புஞ்சை நிலம் மட்டும் வைத்திருக்கும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30 தர ஏக்கராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின் சக்தி, காற்றாலை மற்றும் பலவற்றுக்காக தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-A-ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

6.3.2. பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி

நிலச் சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37-B மற்றும் விதிகளின்படி, பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக்கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

2011 ஆம் ஆண்டு முதல் 29-2-2020 வரை மொத்தம் 45 பொது அறக்கட்டளைகளுக்கு கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6.4. வருவாய் நீதிமன்றங்கள்

நில உடைமையாளருக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை, குத்தகைச் சட்டங்களின்கீழ் முடிவு செய்வதற்காக, தற்போது மாநிலத்தில் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி, லால்குடி, நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய பத்து வருவாய் நீதிமன்றங்கள் நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித் துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

6.4.1. குத்தகைச் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)**

நில உடைமையாளர்கள், குத்தகைதாரர்களை குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

(ii) **தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் நில உரிமைதாரருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது

(iii) **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

இச்சட்டம் பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை வருவாய் நீதிமன்றங்கள்மூலம் தீர்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) **தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்து அவர்களின் உரிமையை பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(v) **தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு**

இச்சட்டத்தில், குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, 1-4-1990 தேதியில் அனுபவித்துவரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கும் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்கும் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது

[2020 மார்ச் 24

6.4.2. வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம் 1-6-2011 முதல் 29-2-2020 வரை

1.	31-5-2011 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள்	9,806
2.	1-6-2011 முதல் 29-2-2020 வரை வரப்பெற்ற வழக்குகள்	46,336
3.	முடிவு செய்யப்பட்டவை	53,833
4.	29-2-2020 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்	2,309

1-4-2018 முதல் 29-2-2020 வரை

1.	31-3-2019 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள்	1,988
2.	1-4-2019 முதல் 29-2-2020 வரை வரப்பெற்ற வழக்குகள்	2,816
3.	முடிவு செய்யப்பட்டவை	2,495
4.	29-2-2020 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள்	2,309

வருவாய் நீதிமன்றப் பணிகள், கணினிமயமாக்கப்பட்டு முன்னேற்ற அறிக்கைகள் இணையதளம்மூலம் பெறப்பட்டு தலைமையகத்திலிருந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

6.4.3. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும், (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

6.5. பூமிதான வாரியம்

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட பூமிதான இயக்கத்திற்கு நிலங்கள் தானமாகப் பெறப்பட்டன. அவ்வாறு தானமாகப் பெறப்பட்ட பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தின்மூலம் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு தானமாக பெறப்பட்ட 28,050 ஏக்கர் நிலங்கள் தமிழ்நாடு பூமிதான சட்டத்தின்படி விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், பூமிதான நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டும், வழிகாட்டி மதிப்பீடு '0' (பூஜ்யம்) ஆக மாற்றப்பட்டு பூமிதான நிலங்களின் விற்பனையைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதல்முறையாக இத்தகைய தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6.6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், 2011

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

மேற்காணும் குறளுக்கிணங்க, 2005 ஆம் ஆண்டு உழுதுண்டு வாழும் விவசாயத் தொழிலாளர்கள் குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு, வாழ்க்கையில் இன்னல் மற்றும் எதிர்பாரா இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம் 15-8-2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன்பின்னர் அத்திட்டத்தை மாற்றியமைக்கும் வகையில், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம், 2006 (தமிழ்நாடு சட்டம் 29/2006) இயற்றப்பட்டது.

[2020 மார்ச் 24

2006 ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தை நீக்கம் செய்து சட்டமன்றத்தில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம், 2011 (தமிழ்நாடு சட்டம் 13/2019) நிறைவேற்றப்பட்டது.

பின்னர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களது குடும்பத்தினர், வாழ்க்கையின் அனைத்து முக்கிய நிலையிலும் அதாவது பிறப்பு, கல்வி, திருமணம், முதுமை, விபத்து மற்றும் மரணம் முதலியவற்றில் துணை நிற்கும்வகையில் ஒரு விரிவான திட்டத்தைச் செயல்படுத்துவதன் அவசியம் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய சமூகப் பாதுகாப்பு திட்டத்தை அரசு செயல்படுத்தப்போவதாக சட்டமன்றத்தில் 10-9-2011 அன்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று அழைக்கப்படும் என்றும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டச் செயலாக்கம் பற்றிய முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

➢ விவசாயிகள் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 10-9-2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

➢ இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களை கணக்கெடுக்கும் பணி கிராம நிருவாக அலுவலர்களால் கிராம அளவில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு, கணக்கெடுப்பு பதிவேடுகள் கிராம நிருவாக அலுவலர்களால் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6.6.1. தகுதிகள் மற்றும் உறுப்பினர் பதிவு விவரம்

➢ விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்கள்.

- 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் குறு/சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள்.

- இத்திட்டத்தின்கீழ் 18 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்கள் மூல உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள்.

- மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள் சார்ந்து வாழும் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.

- இத்திட்டத்தின்கீழ் 29-2-2020 வரை பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை- 6.2

உறுப்பினர்களின் விவரம்

1.	மூல உறுப்பினர்கள்	1,46,97,851
2.	சார்ந்து வாழும் உறுப்பினர்கள்	1,35,75,906
	மொத்தம் உறுப்பினர்கள்	2,82,73,757

- இத்திட்டத்தின்கீழ் தகுதியின் அடிப்படையில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும், இறப்பு போன்ற காரணங்களுக்காக நீக்குதலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இரட்டைப் பதிவினைத் தவிர்க்கும் பொருட்டு, உறுப்பினர்களின் விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு, ஆதார் எண்களுடன் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

6.6.2 நிதி உதவி

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

[2020 மார்ச் 24

அட்டவணை – 6.3

மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளின் விவரம்

மூல உறுப்பினர்களுக்காக		உதவித் தொகை விவரம்
1.	திருமண உதவித்தொகை :	• ஆண்களுக்கு ரூ.8000/- • பெண்களுக்கு ரூ.10,000/-
2.	முதியோர் ஓய்வூதியம்	மாதம் ரூ.1000/-
3.	உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி	மாதம் ரூ.10,000/-
	i. காசநோய்	
	ii. புற்றுநோய்	
	iii. எச்.ஐ.வி / எய்ட்ஸ்	
	iv. இடைச்சவ்வூடுமூலம் பிரித்தல் (Dialysis)	
	v. கை, கால் முறிவு மற்றும் நிலைகுலைவு	
	vi. நரம்பு சம்பந்தமான நோய்	
	vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு	
	viii. இதய நோய்	மாதம் ரூ.1000/-
	ix. பார்வை இழத்தல்	
	x. கல்லீரல் நோய்	
	xi. சிறுநீரக நோய்	
	xii. மனநிலை பாதிப்பு	
	xiii. அரிவாள் செல் ரத்த சோகை	

2020 மார்ச் 24]

மூல உறுப்பினர்களுக்காக		உதவித் தொகை விவரம்
	xiv. ரத்த அழிவு சோகை	மாதம் ரூ.1000/-
	xv. ரத்த உறையா நோய்	
4.	விபத்து நிவாரணம்	• மரணம் ரூ.1,00,000/- • விபத்து காயங்களுக்கு ஏற்ப ரூ.20,000 முதல் ரூ.1,00,000/- வரை
5.	இயற்கை மரண உதவித்தொகை	ரூ.20,000/-
6.	ஈமச் சடங்கு செலவு	ரூ.2,500/-

சார்ந்து வாழும் உறுப்பினர்	உதவித் தொகை விவரம்
1. கல்வி உதவித் தொகை	தொழிற்பயிற்சி/ பல்தொழில்நுட்ப பயிற்சி முதல் முதுநிலை தொழிற்கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,250/- முதல் ரூ.6,750/- வரை வழங்கப்படுகிறது.
2. திருமண உதவித் தொகை	ஆண்களுக்கு ரூ.8,000/- பெண்களுக்கு ரூ.10,000/-
3. எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை	மாதம் ரூ.1,000/- வீதம் 18 வயது வரை வழங்கப்படுகிறது.
4. ஈமச்சடங்கு செலவு	ரூ.2,500/-

6.6.3. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- அரசின் வேறு எந்தத் திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை பெற்றிருந்தாலும், கல்விக்கான உதவித் தொகை இத்திட்டத்தின் கீழும் கூடுதலாகப் பெறலாம்.

- காசநோய், புற்றுநோய் முதலிய கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மூல உறுப்பினர்களுக்கு தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாத உதவித் தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.
- எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியடையும் வரை மாத உதவித் தொகை ரூ.1,000/- வழங்கப்படுகிறது.
- மூல உறுப்பினரின் இறப்புக்குப் பின்னரும் அவரைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான கல்வி மற்றும் திருமண உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- 24-4-2017 முதல் இயற்கை மரணத்திற்கான நிவாரணத் தொகை ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- உறுப்பினர் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர் இறப்பின், ஈமச் சடங்குக்கான உதவித் தொகை ரூ.2,500/- இறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வலியுறுத்தாமலேயே உடனடியாக வழங்கப்படுகிறது.

6.6.4. செயலாக்கம் (Performance)

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.1,893.10 கோடி, 27,45,103 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6.6.5. செலவு விவரம்

அ) மூல உறுப்பினர்களுக்காக

(1) திருமண உதவி

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதாவது 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.41.73 கோடி 49,467 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(2) தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித் தொகை

- 2012-2013 முதல் 29-2-2020 வரை ரூ.191.03 கோடி 40,591 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

(3) விபத்து நிவாரணம்

- 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.271.45 கோடி 27,502 பயனாளிகளுக்கு விபத்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

(4) இயற்கை மரணத்திற்கான உதவி

- 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.625.02 கோடி 4,30,878 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆ. சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்காக

1. கல்வி உதவி

- 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.437.49 கோடி 18,33,288 மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. திருமண உதவி

- 10-9-2011 முதல் 29-2-2020 வரை ரூ.315.41 கோடி 3,62,761 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. எச்.ஐ.வி.யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை

- 2013-2014 முதல் 29-2-2020 வரை ரூ.4.97 கோடி 616 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 6.4

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) வழங்கப்பட்ட உதவி விவரம்

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	கல்வி	25.98	1,03,828
2.	உறுப்பினர்களின் திருமணம்	3.28	3,906

[2020 மார்ச் 24

வ. எண்	உதவி விவரம்	தொகை (கோடியில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
3.	உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம்	15.94	18,726
4.	இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு	82.95	38,067
5.	விபத்து நிவாரணம்	16.90	1,677
6.	தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை	41.32	40,591
7.	எச்.ஐ.வி-யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை	0.70	616
	மொத்தம்	187.07	2,07,411

7. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி

இத்துறை 1963 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அப்பொழுதிலிருந்து இத்துறை வருவாய் வாரியத்தின் ஓர் உறுப்பினராக இருந்து வந்தது. வருவாய் வாரியம் 1980 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நகர்ப்புற நில வரிச் சட்டம் ஆகியவற்றின் சட்டக் கூறுகளைச் செயல்படுத்த வேண்டி முந்தைய வருவாய் வாரியத்திலிருந்து ஆணையரகம் (நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி) உருவாக்கப்பட்டது.

2020 மார்ச் 24]

7.1. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 இயற்றப்பட்டதன் நோக்கம்

- நகரக் கூட்டுப் பகுதிகளில் வெற்று நிலங்களின்மீது உச்சவரம்பு விதித்தல்.
- உச்சவரம்பிற்கு மிகையான அத்தகைய நிலங்களைக் கையகப்படுத்துதல்.
- மிகச் சில செல்வந்தர்கள் கைவசம் மட்டுமே நகர்ப்புற நிலம் குவிந்துக் கிடப்பதைத் தடுத்தல்.
- பொது மக்களின் நன்மைக்காக நகர்ப்புற நிலங்களை மீளவும் பங்கீடு செய்து கொடுத்தல்.

7.2. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், 1966 இயற்றப்பட்டதன் நோக்கம்

- வேளாண் நிலங்கள் அல்லாத நகர்ப்புற நிலங்களை வரி மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதன்மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டித் தருதல்.

7.3. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978/தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம், 1999. முதன்மைச் சட்டம் இயற்றம், நடைமுறைப்படுத்துதல் மற்றும் நீக்கறவு

நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம், 1976 ஆம் ஆண்டு இந்தியாவில் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு சட்டமாகும். அரசியலமைப்பின் சட்டக்கூறு 39-ன்கீழ் இனங்கள் (பி) மற்றும் (சி)-ல் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளை அடையும் பொருட்டும், மாநிலத்தின் கொள்கையை பயன் தருகிற வகையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டும் இச்சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்தால் 1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 20/1999-ன்படி இச்சட்டம் 16-6-1999 அன்று முதல் நீக்கறவுச் செய்யப்பட்டது. அரசுவசம் உடைமை உள்ள கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு நீக்கறவுச் சட்டப் பிரிவு 3(1)(அ)-ன்படி காப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 7.1

கையகப்படுத்திய நிலங்களின் நிலை

வ. எண்	விவரம்	பரப்பளவு சதுர மீட்டரில்
1.	சட்டத்தின்கீழ் கையகப்படுத்திய பரப்பு	1,89,79,446
2.	அரசுத் துறை/வாரியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பரப்பளவு	43,39,545
3.	நில உடைமைதாரர்கள்/அறியாமல் கிரயம் பெற்றவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்களின்கீழ் கவரப்படும் பரப்பளவு	34,66,650
4.	அறியாமல் கிரயம் பெற்றோர் திட்டத்தின்கீழ் வரன்முறை செய்யப்பட்ட பரப்பளவு	8,57,230
5.	நில உடைமைதாரர்கள்/மற்ற நபர்களால் ஆக்கிரமணம் செய்யப்பட்டுள்ள பரப்பளவு	95,95,446
6.	ஆக்கிரமணமில்லா பரப்பளவு	7,20,575

கையகப்படுத்தப்பட்ட நிலங்களுள் ஒரு கிரவுண்டு பரப்பிற்கும் குறைவான நிலங்களை வனத் துறைமூலம் 'சமூகக் காடுகள்' வளர்க்கும் நோக்கத்திற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெரிய பரப்புள்ள கையகப்படுத்தப்பட்ட நிலங்களை பல்வேறு அரசுத் துறைகள்/வாரியங்கள்/நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அலுவலகக் கட்டடம் கட்டும் நோக்கத்திற்குப் பயன்படுத்த சாத்தியக்கூறுகள் உள்ளனவா என ஆராயப்பட்டு வருகிறது.

7.4. அறியாமல் பெற்ற கிரயத்தை வரன்முறை செய்யும் திட்டம்

உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி அறியாமல் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை வாங்கிய நபர்களுக்கு தீர்வு வழங்கும் பொருட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்படி கிரயங்களை வரன்முறைச் செய்யும் பொருட்டு, 'அறியாமல் கிரயம் பெற்ற நபர்களின் கிரயத்தை வரன்முறை செய்யும் திட்டம்' 1998 ஆம் ஆண்டு

2020 மார்ச் 24]

அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாணை (நிலை) எண் 649, வருவாய்த் துறை, நாள் 29-7-1998-ன்படி குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் கிரயம் செய்யப்பட்ட 1½ மனைகளுக்கு மிகாத நிலங்களை மட்டும் உரிய நில மதிப்புத் தொகையை வசூலிப்பதின்பேரில் வரன்முறை செய்ய நெறிமுறைகள் வழங்கப்பட்டன.

அரசாணை (நிலை) எண் 649, பலதரப்பட்ட அறியாக் கிரயதாரர்களுக்கு பயனளிக்காத காரணத்தினால் அரசாணை நிலை எண் 565, வருவாய்த் துறை, நாள் 26-9-2008-ன்படி மாற்றியமைக்கப்பட்டது. இவ்வரசாணையில் 3-8-1976 முதல் 26-9-2008 வரை கிரய ஆவணங்களின்மூலம் மட்டுமே கிரயம் செய்யப்பட்ட நிலங்களை கிரயம் பெற்ற நோக்கத்தினை பொருட்படுத்தாமல் வரன்முறை செய்ய திருத்தப்பட்ட நெறிமுறைகள் வழங்கப்பட்டன. கிரயம் பெற்றுள்ள மொத்தப் பரப்பளவிற்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் ஒரு மடங்கு/இரு மடங்கு/மும்மடங்கு நில மதிப்புத் தொகையை நிர்ணயம் செய்து வரன்முறை செய்ய அரசு இசைவளிக்கிறது.

இத்திட்டத்தினை மேலும் பயனுள்ளதாக்கும் வகையில் பின்வரும் ஆணைகளில் சில தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- அரசாணை நிலை எண் 34, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நநிஉ.1(2) துறை, நாள் 4-2-2019-ன்படி நில உடைமைதாரர் குறித்து தொடர்பு ஆவணங்கள் இல்லாத இனங்கள் மற்றும் நீதிப்பேராணை மனுக்கள் நிலுவையில் உள்ள இனங்கள் ஆகியவற்றை வரன்முறை செய்வது குறித்து தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசாணை நிலை எண் 63, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நநிஉ.1(2) துறை, நாள் 27-1-2020-ன்படி ஏற்பாடு ஆவணம், பாகப்பிரிவினை ஆவணம், கொடை ஒப்பாவணம், விடுதலை ஆவணம் மற்றும் பரிமாற்ற ஒப்பாவணம் ஆகியவைமூலம் பெறப்பட்ட நிலங்களை வரன்முறை செய்ய சில தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1-4-2019 முதல் 31-1-2020 வரை 305 இனங்களில் கவரப்படும் மொத்தம் 71,452 சதுர மீட்டர் நிலங்கள் வரன்முறை செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அறியாக் கிரயதாரர்களால் அரசுக் கணக்கில் ரூ.4.12 கோடி நிலமதிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

7.5. தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் இயற்றம் – முதன்மைச் சட்டம்

நகர்ப்புற நில வரி விதிப்பிற்கு முன்னதாக சென்னை நகரத்தில் உள்ள நிலங்களுக்கு விடுவரி அல்லது தரை வாடகை அல்லது ஏதேனும் ஒரு நில வருவாய் வரி மதிப்பீடு செய்யப்பட்டு வந்தது. முதன் முறையாக சென்னை சட்டமன்றம், சென்னை நகர்ப்புற நில வரிச் சட்டம், 1963-னை இயற்றி 1-7-1963 முதல் நடைமுறைப்படுத்தியது. துணை மண்டலங்களில் அமைந்துள்ள நகர்ப்புற நிலங்களுக்கு சராசரியான சந்தை மதிப்பின் 0.4 விழுக்காடு நகர்ப்புற நில வரி விதிக்க இச்சட்டம் வழிவகை செய்தது. இம்மண்டல மதிப்பீட்டின் விளைவாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. எனவே நீதிமன்றம் இச்சட்டம் முழுமையையும் செல்லாததாகவும், நடைமுறைப்படுத்தத்தக்க இயலாததாகவும் தீர்ப்பளித்தது. இச்சட்டக் கூறுகளை நடைமுறையில் வைக்கும் பொருட்டு, 1966 ஆம் ஆண்டு மே மாதம் அரசு அவசரச் சட்டம் ஒன்றினை அறிவித்தது. பிற்பாடு இச்சட்டம், 1-7-1963 முதல் முன்மேவு பலன் அளித்து சென்னை நகரத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம் ,1966-ன்படி நீக்கப்பட்டது.

இச்சட்டம் நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்துடன் சமவெல்லையுடையதாக ஆக்கப்பட்டு அவ்வப்போது கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய பல்வேறு நகரக் கூட்டுப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

7.6. சட்டத்தில் மேற்கொண்டுச் செய்யப்பட்ட திருத்தங்கள்

இச்சட்டம் முதன்முறையாக 1971 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டு சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி நகராட்சிகளுக்கும் மற்றும் மதுரை மாநகரத்திற்கும் 1-7-1971 முதல் நீட்டிக்கப்பட்டது. இச்சட்டம் மீளவும் 1973 மற்றும் 1975 ஆம் ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டு, சென்னை நகரின் எல்லைப் பகுதிகளிலிருந்து 16 கி.மீட்டர் தொலைவு வரை உள்ள புறவெல்லைப் பகுதிகளுக்கு 1-7-1975 முதல் நீட்டிக்கப்பட்டது.

இச்சட்டம் 1-7-1981 முதல் திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதி மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி நகரக் கூட்டுப் பகுதிகளின் புறவெல்லைப் பகுதிகளுக்கு 1-7-1981 முதல் நீட்டிக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரியம்

2020 மார்ச் 24]

கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சட்டம், திருத்தச் சட்டம் 54/1986-ன்படி, சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் செயல்பட்டுவந்த அலுவலர்களின் பதவிப் பெயர்களை மாற்றீடு செய்ய முறைசார்ந்து திருத்தம் செய்யப்பட்டது. அண்மைக்காலத்தில் திருத்தச் சட்டம், 1991 அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம் 1992 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது.

7.7. சந்தை மதிப்பு நிர்ணயம்

வரி விதிப்பிற்குரியவர் செலுத்த வேண்டிய சரியான வரித் தொகையானது உதவி ஆணையர் அல்லது தீர்ப்பாயத்தால் நிர்ணயம் செய்யப்படும் சந்தை மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. முதன்மைச் சட்டம் மற்றும் திருத்தச் சட்டங்களின்படி சந்தை மதிப்பு நிர்ணயம் பின்வருமாறு:-

சட்டத்தின் பெயர்	**சந்தை மதிப்பு பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை நாள்**	**கவரப்படும் பகுதிகள்**
தமிழ்நாடு நகர்ப்புற நில வரி முதன்மைச் சட்டம், 1966	1-7-1963	சென்னை நகரம் பசலி 1384 வரை
தமிழ்நாடு நகர்ப்புற நில வரித் திருத்தச் சட்டம், 1975	1-7-1971	சென்னை, சென்னைப் புறநகர் பகுதி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை
தமிழ்நாடு நகர்ப்புற நில வரித் திருத்தச் சட்டம், 1991	1-7-1981	திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதி மற்றும் நடைமுறையிலுள்ள பகுதிகளின் புற வெல்லைப் பகுதிகள்

அரசாணை நிலை எண் 578, வருவாய், நாள் 20-5-1992-ன்படி 1991 ஆம் ஆண்டைய திருத்தச் சட்டத்தின்கீழ் திருத்திய வரிவிதிப்பு செய்யப்படும் இனங்களில் முந்தைய 1975 ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வரித் தொகையின் 5 மடங்கிற்கு மிகாமல் வரையறை செய்யப்படுகிறது.

[2020 மார்ச் 24

7.8. வரி வீதம்

அரசாணை நிலை எண் 2625, வருவாய்த் துறை, நாள் 27-12-1976-இன்படி குடியிருப்பு நோக்கம் மற்றும் குடியிருப்பு அல்லாத நோக்கங்களுக்காக பயன்பாட்டில் உள்ள நிலங்களுக்கிடையேயான வேறுபாடு நீக்கப்பட்டது. திருத்தப்பட்ட வரிவீதம் பின்வருமாறு:

அட்டவணை 7.2

வரி வீதம்

சென்னை புறநகர்ப் பகுதி தவிர ஏனைய நகர்ப்புற நிலங்கள்		**சென்னை புறநகர்ப் பகுதி நகர்ப்புற நிலங்கள் மட்டும்**	
நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு	வரி வீதம்	நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு	வரி வீதம்
முதல் 2 மனைகள் வரை	வரி இல்லை	முதல் 3 மனைகள் வரை	வரி இல்லை
மொத்தப் பரப்பளவு 2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்கு மிகாமல்	0.7%	மொத்தப் பரப்பளவு 3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்கு மிகாமல்	0.7%
மொத்தப் பரப்பளவு 5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்கு மிகாமல்	1%	மொத்தப் பரப்பளவு 7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்கு மிகாமல்	1%
மொத்தப் பரப்பளவு 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்கு மிகாமல்	1.5%	மொத்தப் பரப்பளவு 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்கு மிகாமல்	1.5%
மொத்தப் பரப்பளவு 20 மனைகளுக்கு மேல்	2%	மொத்தப் பரப்பளவு 20 மனைகளுக்கு மேல்	2%

2020 மார்ச் 24]

சட்டப்பிரிவு 29(எ)-ன்கீழ் தன்னியல்பு விலக்களிக்கப்படும் நிலங்கள் வரிவிதிப்பு கணக்கிட நிர்ணயம் செய்ய வேண்டிய வரி வீதத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

சட்டப்பிரிவு 29-ன் பல்வேறு துணைப் பிரிவுகளின்கீழ் சட்டமுறையான விலக்களிக்கப்படும் நிலங்கள் வரிவிதிப்பு கணக்கிட நிர்ணயம் செய்ய வேண்டிய வரி வீதத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

7.9. தமிழ்நாடு நகர்ப்புற நில வரித் திருத்தச் சட்டம், 1991-ன் அறிமுகம்

இச்சட்டம் 1-7-1991 முதல் சட்ட எண். 1/1992-ன்படி திருத்தம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் சட்டக்கூறுகள் மாநிலத்தின், ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம், கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம் மற்றும் நாமக்கல் ஆகிய 21 சிறப்பு நிலை/தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் கொடைக்கானல், மேட்டூர் ஆகிய 2 நகரியங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

7.10. நடப்பு பசலி ஆண்டு 1429-ல் நிர்ணயிக்கப்பட்ட கேட்பு

தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம், 1966, திருத்தச் சட்டம் 1991-ன்கீழ் மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலங்களாக அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் இதுவரை 1.9 இலட்சம் வரி விதிப்புதாரர்கள் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. நடப்புப் பசலி ஆண்டான 1429-ல் நகர்ப்புற நில வரி கேட்புத் தொகையாக ரூ.19.17 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது.

7.11. சட்டமுறை விலக்களிக்கப்பட்டுள்ள இனங்கள்

29(எ) மாநில / மத்திய அரசுக்குச் சொந்தமான நிலங்கள்.

29(பி) உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்கள்.

29(சி) பொதுமக்கள் வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள்.

29(டி) அரசு மருத்துவமனைகள் அமைந்துள்ள நிலங்கள் / மாநில அல்லது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறும் மருத்துவமனை அமைந்துள்ள நிலங்கள்.

29(இ) இடுகாடு / சுடுகாடு பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எஃப்) பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலைகள் அமைந்துள்ள நிலங்கள்.

29(ஜி) நிலத்தைப் பயன்படுத்துபவரிடமிருந்து வருவாய் ஈட்டாத பொது நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எச்) மாநில மற்றும் மத்திய அரசால் உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(ஐ) பொதுப் பூங்காக்கள், பொது நூலகங்கள் மற்றும் அரசு அருங்காட்சியகங்கள் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(ஜெ) ஆதரவற்றோருக்கு அடைக்கலமளிக்கும் நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(கே) அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட மதச்சார்பு/ அறக்கட்டளை/தொண்டு நிறுவனங்களின் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எல்) பழைமையான நினைவுச் சின்னங்களை பேணிக்காக்கும் நோக்கத்திற்காக பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

7.12. சலுகைகள் வழங்கப்பட்டுள்ள இனங்கள்

1. நில உரிமையாளர் குடியிருந்துவரும் கட்டடம் அமைந்துள்ள நகர்ப்புற நிலத்திற்கு 50% வரிச் சலுகை

2. அனைத்து இசை மற்றும் நாடக மன்றங்களுக்கு 50% வரிச் சலுகை

3. சிறிய திரையரங்குகளுக்கு 10% வரிச் சலுகை

4. நில உரிமையாளர் குடியிருந்துவரும் நகர்ப்புற நிலத்தில் உரிமையாளருக்குச் சொந்தமான தொழில் நிறுவனம் இயங்கி வந்தால், சிறு-தொழில் நிறுவனத்திற்கான உரியச் சான்று பெறப்பட்டிருப்பின் 25% வரிச்சலுகை மற்றத் தொழில் நிறுவனங்களுக்கு 10% வரிச்சலுகை,

5. சென்னை நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டப் பிரிவு 3(பி)-ன்கீழ் குடிசைப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு முழு வரிவிலக்கு

7.13. பிரிவு 27(1)-ன்கீழ் வரி விலக்களிக்க அரசு மற்றும் நிலச் சீர்த்திருத்த ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம்

(i) இப்பிரிவு இச்சட்டக் கூறுகளால் எந்தவொரு இனத்தைச் சேர்ந்த நபர்களுக்கோ அல்லது நிலங்களுக்கோ நகர்ப்புற நில வரியால் இடர்ப்பாடு ஏற்படுகிறது எனக் கருதினால் வரிவிலக்கு அளிக்கவோ அல்லது வரியைக் குறைக்கவோ அரசுக்கு செயல் அதிகாரம் வழங்குகிறது.

(ii) அறக்கட்டளையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட குழுமங்கள்/ மதச்சார்பு அமைப்புகள் / மனித நேயத்துடன் தொண்டு புரியும் அமைப்புகள் வருமான வரித் துறை 12 (A)(a)-ன்கீழ் விலக்கு பெற்றிருப்பின், நகர்ப்புற நில வரி செலுத்துவதில் இடர்ப்பாடு ஏதும் நேரிடின் பிரிவு 27(1)-ன்கீழ் விலக்களிப்பு கோரி விண்ணப்பிக்கலாம்.

(iii) அரசாணை நிலை எண் 461, வருவாய்த் துறை, நாள் 17-3-1983-ன்படி அரசால் வருவாய்த் துறை, சமய அறக்கட்டளைத் துறை, கல்வித் துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

[2020 மார்ச் 24

(iv) இக்குழுவின் முன் வைக்கப்படும் இனங்கள் அரசாணை நிலை எண் 1834, வருவாய், நாள் 29-10-1983-ன்படி வழங்கப்பட்ட உரிய சட்டவிதிகளின்படியும், நெறிமுறைகளின்படியும் ஆய்வு செய்யப்பட்டு, அரசின் பரிசீலனைக்குப் பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

(v) இந்த முன்மொழிவுகள் அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, பிரிவு 27(1)-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இறுதியாக அரசாணை பிறப்பிக்கப்படுகிறது.

(vi) நிலச்சீர்த்திருத்த ஆணையருக்கு பின்வரும் இனங்களுக்கு வரிவிலக்களிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை / ஆர்ச் டயோசிஸ் / தென்னிந்தியத் திருச்சபை மற்றும் வஃக்பு வாரியம் ஆகியவற்றிற்குச் சொந்தமான நிலங்கள்

ஆ) மாநில அரசு/இந்தியப் பல்கலைக்கழகம்/ மத்திய அரசு அல்லது மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், புதுடெல்லி ஆகியவற்றால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் சொந்தமான நிலங்கள்

7.14. பிரிவு 20-ன்கீழ் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் மேல்முறையீடு

இச்சட்டப் பிரிவு 10 மற்றும் 11-ன்கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகளின்மீது வரிவிதிப்புதாரர் மற்றும் வருவாய் அதிகாரிகள் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் மேல்முறையீடு செய்ய பிரிவு 20-ன்படி வழிவகை உள்ளது. திருத்தச் சட்டம் 1991-க்கு முன்னதாக, தொடர்புடைய அதிகாரவெல்லையின் சார்நிலை நீதிபதி தீர்ப்பாயத்தின் தலைவராகச் செயலாற்றி வந்தார். தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடர்புடைய மாவட்ட வருவாய் அலுவலரே தீர்ப்பாயத்தின் தலைவர் ஆவார்.

2020 மார்ச் 24]

7.15. பிரிவு 30-ன்கீழ் நிலச் சீர்த்திருத்த ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள சீராய்வு அதிகாரம்

தீர்ப்பாயத்தின்முன் நிலுவையில் அல்லாத எந்தவொரு நடவடிக்கையின்மீதும் செய்யப்படும் சீராய்வு மனுமீது ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் நிலச் சீர்த்திருத்த ஆணையர் வசம் உள்ளது. சீராய்வு அதிகாரத்தினை வருவாய்க்கு சாதகமாகவோ, எதிராகவோ செயல்படுத்தலாம். கூடுதல் தலைமைச் செயலர்/ நிலச் சீர்த்திருத்த ஆணையரே தற்போதைய சீராய்வு ஆணை பிறப்பிக்கும் அதிகாரி ஆவார். சீராய்வு அதிகாரியால் சீராய்வு மனுதாரரின் விண்ணப்பத்தின்மீது விசாரணை மேற்கொண்டு, ஆவணங்களைப் பரிசீலனை செய்து சீராய்வு மனுவின் மீதான ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

8. நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

8.1. நில அளவை வரலாறு

நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரகம், 1858 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 160 ஆண்டுகளைக் கடந்த தமிழக அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாக இருப்பதுடன், இத்துறை நிலம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் துல்லியமான தீர்வு காணும் துறையாகவும் விளங்குகிறது.

மரபுசார்ந்த நில அளவை செய்தல், நில ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அதன் பின்னர் ஏற்படும் மாற்றங்களை மேம்படுத்தி அவற்றினைப் பராமரித்தல் ஆகியவை இத்துறையின் முதன்மையான பணிகளாகும்.

1850 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கத்தில் சங்கிலிகள், நேர்கோணக் கட்டைகள் மற்றும் கோணமானி (Theodalite) ஆகிய கருவிகளைக்கொண்டு நில அளவைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

தொடக்கத்தில், பெருமுக்கோண நில அளவை முறை (Great Trigonometrical Survey) ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டது. குன்றுகளையும், கோவில்களின் கோபுரங்களையும் அடையாளப் புள்ளிகளாகக்கொண்டு, இந்திய சமவெளியில் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் மேற்கொள்ளப்பட்ட பெருமுக்கோண நில அளவைக்கு சென்னை

மாநகரமே தொடக்கப் புள்ளியாக இருந்தது. 1802 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பணிக்காக கோணமானியும், 100 அடி அளவுள்ள உலோக சங்கிலியும் உபயோகப்படுத்தப்பட்டன. பயிற்சி பெற்ற நில அளவர்களின் முதல் தொகுதியை நாட்டிற்கு அளித்ததும் தமிழ்நாடேயாகும். அவர்களில் பலர், இந்தியத் திருநாட்டின் வடிவத்தினை மனக்கண் முன் நிறுத்தும் வகையிலான வரைபடத்தை உருவாக்கும் பொருட்டு கரடுமுரடான நிலப்பரப்புகளையும், சதுப்பு நிலங்களையும், அடர்ந்த கானகங்களையும், மலைகளையும் கடந்து செல்லும் வேளைகளில் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். பெருமுக்கோண அளவையானது, புவியின் உண்மை வடிவமைப்பை ஆதாரபூர்வமாக உறுதி செய்ததுடன், மலைகள் மற்றும் சரிவுகளின் உயரங்களையும், தக்காணத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், பரப்பெல்லைகளையும், சமவெளிப் பகுதிகளையும், குறைபாடற்ற முறையில் அளவை செய்ய வழிவகுத்தது.

இவ்வாறான தொன்மையான பாரம்பரியத்தைத் தொடர்ந்து, இத்துறை முன்னாட்களில் மேற்கொள்ளப்பட்ட நில அளவை முறைகளுக்குப் பதிலாக தற்போது டிஜிட்டல் முறை நவீன கருவிகளான மின்னணு நில அளவைக் கருவி, வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் தொடர்ச்சியான இயக்கக் குறிப்பு நிலையங்கள் உள்ளிட்ட கருவிகளுடன் நில அளவைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போது மேற்கொள்ளப்பட்ட மற்றும் நடைபெற்றுவரும் நில அளவைப் பணிகள்:-

அட்டவணை-8.1

வ. எண்	நில அளவை வகை	ஆண்டு
1.	தொடக்க நில அளவை	1826
2.	ரயத்துவாரி முதல் நில அளவை	1858
3.	மலைக் கிராம நில அளவை	1883
4.	நகர நில அளவையில் பிளாக் வரைபடங்கள்	1891–1894
5.	மறு நில அளவை	1905-1926

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வ. எண்	நில அளவை வகை	ஆண்டு
6.	நில உடைமை மேம்பாட்டுத் திட்டம்	1979-1987
7.	நத்தம் நில அளவை	1989-1992
8.	துணை நகர நில அளவை	1989-1997
9.	நவீன நகர நில அளவை	2002 முதல் நாளதுவரை
10	நவீன மறு நில அளவை	2016 முதல் நாளதுவரை


8.2. துறையின் அமைப்பு நிலை

"நில அளவை இல்லத்தில்" இயங்கிவரும் இவ்வியக்ககம், நில அளவை மற்றும் நில வரித் திட்டம் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வியக்ககத்தின்மூலம், நில அளவை மற்றும் நில வரித் திட்டம் சார்ந்த அனைத்துத் திட்டங்கள் மற்றும் அவை தொடர்பான இதரப் பணிகள் வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தி மற்றும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய நில அளவை அலுவலகம் இவ்வியக்ககத்தின் தொழில்நுட்பப் பிரிவாக விளங்குவதுடன், இது வரைபடங்களைத் தயாரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் செய்கிறது. மாவட்ட அளவிலான நில அளவை நடவடிக்கைகள் உதவி இயக்குநர்களின் தலைமையில் அமையப்பெற்ற மாவட்ட அலுவலகங்கள்மூலம் நில அளவர்கள், வரைவாளர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் நிருவாகப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களில் நில அளவை துணை ஆய்வாளர்கள் தலைமையில் நில அளவைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. நிலப் பரிவர்த்தனையின்போது ஏற்படும் நில உரிமை குறித்த தேவையான மாற்றங்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் உள்ளிட்டவை நில அளவை துணை ஆய்வாளர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.

[2020 மார்ச் 24

இயக்ககத்தின் அமைப்பு விளக்கப்படம்



அட்டவணை 8.2

நில அளவைப் பிரிவிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை விவரம்:

வ. எண்	பிரிவின் பெயர்	பணியிடங்களின் எண்ணிக்கை
1.	புலப் பிரிவு	5,569
2.	தொழில்நுட்பப் பிரிவு	2,101
3.	அமைச்சுப் பிரிவு	1,079
4.	இதர வகை	19
	மொத்தம்	8,768

8.2.1. வட்ட அலுவலகங்களில் நில அளவைப் பராமரிப்புப் பணி

பட்டா மாறுதல்கள் கோரி, பொது மக்களிடமிருந்து மின்னணு சேவை மையங்கள் மூலமாகவும், பதிவுத் துறையின் மூலமாகவும் பெறப்படும் விண்ணப்பங்கள் வட்ட அலுவலக நில அளவைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு, தொடர்புடைய குறுவட்ட அளவர்களுக்கு இணையம் வழியாக (Firka Surveyor Dashboard) அனுப்பப்படுகின்றன. தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களின் மீதான புலத் தணிக்கைகளை முடித்து, குறுவட்ட அளவர்களால் உட்பிரிவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. பின்னர், அவற்றை வட்ட அலுவலக நில அளவை அலுவலர்கள் கூராய்வு செய்து, அவ்வறிக்கையை வட்டாட்சியர்களின் ஆணைகளுக்காக முன்வைக்கின்றனர். அவற்றின்மீது வட்டாட்சியரால் தக்கவாறு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

8.3. நில அளவைத் திட்டங்கள்

(1) நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம்

1979 ஆம் ஆண்டில் நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு, விவசாயம் சார்ந்த அனைத்துப் பகுதிகளிலும் ஏற்பட்டிருந்த நிலப் பரிவர்த்தனைகள் புலத் தணிக்கை செய்யப்பட்டு, வருவாய் ஆவணங்களில் மேம்படுத்தப்பட்டன.

(2) நத்தம் நில அளவை மற்றும் நில வரித் திட்டப் பணிகள்

பொதுமக்கள் தமது வாழ்விடங்களாகப் பயன்படுத்தி வந்த அரசு நிலங்கள் 'நத்தம்' என்று வகைப்பாடு செய்யப்பட்டு, இதற்காக 1989-ல் தொடங்கி நடைபெற்ற நத்தம் நில அளவைப் பணிகளின் முடிவில் தகுதிபெற்ற அனைவருக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

(3) மலைக்கிராம நில அளவைப் பணிகள்

அரசாணை (நிலை) எண் 1177, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 30-10-1987-ன்படி, வடஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 அப்போதைய ஒருங்கிணைந்த மாவட்டங்களில் 12 வட்டங்கள் சார்ந்த 81 மலைக்கிராமங்களில் நில அளவைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

8.3.1. நகர அளவை

மரபு சார்ந்த நில அளவை மற்றும் நகரளவை முறைகள் முறையே, கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நகரளவை முறையின்கீழ் தெருக்களுடன், ட்ராவர்ஸ் கோடுகளை ஒருங்கிணைத்து, பிளாக் வாரியாக நில அளவை செய்யப்படுவதுடன், அவை குறித்த விவரங்கள் வார்டு வரைபடம், பிளாக் வரைபடம், நகர நில அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா எனப் பராமரிக்கப்படுகின்றன. மேலும், புதிய பகுதிகள் நகராட்சிகளாகவும், மாநகராட்சிகளாகவும் அறிவிக்கப்படும்போது நகர அளவை முறைகளைக் கொண்டு, அப்பகுதிகள் புதிதாக அளவை செய்யப்படுகின்றன.

தற்போது, 2 மாநகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகளின் விரிவாக்கப் பகுதிகளில் நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு நகர நில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள மாநகராட்சிகளில் நவீன நில அளவை கருவிகள்மூலம் நகரளவைப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில், 93 நகராட்சிகளில் மரபு சார்ந்த முறைகளின்படி நகர நில அளவைப் பணிகள் முடிவுற்றன. 31 நகராட்சிகளில் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 3 நகராட்சிகள் உள்ளிட்ட 29 நகராட்சிகளில், நகரளவைப் பணி நவீன நில அளவைக் கருவிகள் மூலமாக தொடங்கப்படவுள்ளது. எஞ்சியுள்ள 2 நகராட்சிகளில் நீதிமன்ற வழக்குகள் முடிவுற்றதும் நகரளவைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

8.3.2. நவீன கருவிகளைக் கொண்டு மறுநில அளவைப் பணிகள்

நவீன மறுநில அளவை முறையை அறிமுகப்படுத்துவதானது, மில்லி மீட்டர் அளவிற்கு துல்லியமான நில ஆவணங்களை உருவாக்குவதை உறுதி செய்வதுடன், நிலங்கள் மற்றும் அவற்றின் வகைப்பாடுகள் குறித்த விவரங்களடங்கிய இலக்க முறை தரவுத் தளத்தை (Digital Data Base) உருவாக்கிட ஏதுவாகும். இதனால், மக்கள் தமது நிலங்களின் விவரங்களை கணினி வாயிலாகவே இணையதளம் (Internet) மூலம் முழுமையாக அறிந்து கொள்ள வகை செய்வதுடன், நிருவாக அலுவலர்கள் நிலங்களின் பயன்பாடுகளை எளிதாகத் திட்டமிடவும் பயனுள்ளதாக அமையும். மேலும், இலக்கமுறை தரவு தளத்தில் (Digital Data Base) ஆவணங்கள் பராமரிக்கப்படுவதால் முறைகேடான பரிவர்த்தனைகள் தடுக்கப்படுவதுடன், இணையவழியில் அரசு நிலங்கள் கண்காணித்து பாதுகாக்கப்படும்.

பூகோள நிலைக்கலன் (GPS) மற்றும் மின்னணு நில அளவைக் கருவி (ETS) ஆகியவற்றை உபயோகித்து, வேலூர் மாவட்டத்தில் வேலூர் மாநகராட்சி, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்தில், செம்மஞ்சேரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் வட்டம், நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி வட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்கள் ஆகியவற்றில் மறுநில அளவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நவீன நில அளவைப் பணிகளை விரைவாகவும், துல்லியமாகவும் மேற்கொள்ள ஏதுவாக, மாநிலம் முழுவதிலுமுள்ள நிலப்பகுதிகளை 74 முக்கோணங்களாகப் பிரித்து, அவற்றில் 70 இடங்களில் தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்கள் (Continuously Operating Reference Stations) அமைக்கப்பட்டு, நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 4 இடங்களில் இந்நிலையங்களை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு, நிறுவப்பட்டுள்ள தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையத்துடன் “வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி-Real Time Kinematic” முறையில் மேற்கொள்ளப்படும் நில அளவைப் பணி மிக விரைவானதாகவும், மில்லி மீட்டர் (மி.மீ.) அளவிலான துல்லியத்தன்மை கொண்டதாகவும் இருக்கும்.

8.3.3. டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் (Digital India Land Records Modernization Programme)

ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த இரண்டு மத்திய அரசுத் திட்டங்களான நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் மற்றும் வருவாய் நிருவாகத்தை வலிமைப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் (CLR, SRA and ULR திட்டங்கள்) ஆகியவற்றை ஒருங்கிணைத்து மத்திய அரசு, தேசிய நில ஆவணங்கள் நவீனமயமாக்கும் திட்டத்தினை (NLRMP) தொடங்கியது. தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம் 1-4-2016 முதல் “டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டம்” (DILRMP) என மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம், நில ஆவணங்களை நவீனப்படுத்தி பொதுமக்களுக்குக் கூடுதல் சேவைகளை வழங்குவதுடன், நிலம் சார்ந்த சொத்துகளில் ஏற்படும் தகராறுகளைக் குறைப்பது, நில ஆவணங்களைப் பராமரிப்பதில் வெளிப்படைத் தன்மைகளை கூடுதலாக்குவது, போன்றவற்றிற்கும் இலக்கமுறை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நில உரிமையின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்கும் சிறப்பான கண்காணிப்பை மேற்கொள்வதற்கும் பயன்படுகிறது.

8.4 தற்போது பராமரிக்கப்பட்டுவரும் நில ஆவணங்கள்

8.4.1. ஊரகப் பகுதிகள்

- ‘அ’ பதிவேடு
- சிட்டா
- புலப்பட புத்தகம் (FMB)
- இ-அடங்கல்
- கிராம வரைபடங்கள்

8.4.2. நகரப் பகுதிகள்

- நகர நில அளவைப் பதிவேடு (TSLR)
- பிளாக் வரைபடம்

2020 மார்ச் 24]

8.5. நில ஆவணங்களைக் கணினிமயமாக்கல்

நில அளவை ஆவணங்களை கணினிப்படுத்துவதற்கும் அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கவும், தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன் கீழ்க்கண்ட தேவையான மென்பொருள் செயலிகள் மற்றும் தரவு தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

- தமிழ்நிலம் (ஊரகம்)
- தமிழ்நிலம் (நகர்ப்புறம்)
- கொலாப்லேண்ட்

மாநிலத்திலுள்ள 312 வட்டங்களில் இதுவரையில் 296 ஊரக வட்டங்கள் மற்றும் 14 நகர்ப்புற வட்டங்கள் சார்ந்த நில ஆவணங்கள் தமிழ்நிலம் மென்பொருள்மூலம் இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 ஊரக வட்டங்களில் தற்போது நடைபெற்றுவரும் நில வரித் திட்டப் பணிகள் நிறைவடைந்ததும் இணையவழிக்குக் கொண்டு வரப்படும்.

8.5.1. நத்தம் நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 1.42 கோடி நத்தம் நில ஆவணங்களும் கணினிப்படுத்தப்பட்டு, ஒப்பிட்டுச் சரிபார்த்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாவணங்களைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8.5.2. நகர நில ஆவணங்கள்

மொத்தமுள்ள 37.87 இலட்சம் நகர நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. நாகர்கோவில் நீங்கலாக அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நில அளவைப் பணி முடிவுற்ற 92 நகராட்சிகள் மற்றும் அனைத்து நகர்ப்புற வட்டங்களின் நகர நில ஆவணங்களும் இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. நாகர்கோவில் மாநகராட்சியின் நில ஆவணங்களை இணையவழிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8.5.3. புலப்படங்கள்

மொத்தமுள்ள 55.25 இலட்சம் புலப்படங்களில், இதுவரையில் 54.90 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டு இணையவழிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவாறு நில ஆவணங்களைக் கணினிமயமாக்கி, அவற்றை இணையவழியில் வெளியிடுவதால், அவை பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதோடு, நில அளவையில் இது ஒரு மைல் கல்லாகவும், அரசின் அளப்பரிய சாதனையாகவும் திகழ்கிறது.

மேலும், நகரளவை பிளாக் வரைபடங்கள் கணினிப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. 25,840 பிளாக் வரைபடங்களில் இதுவரையில் 2,343 பிளாக் வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

8.5.4. நில ஆவண மேலாண்மை மையங்கள்

கையினால் வரைந்து தயாரிக்கப்பட்ட நில ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றைக் கணினிப்படுத்தி மின்நகலாக்கி (Digital) பாதுகாத்துப் பராமரிப்பதற்கும், அவற்றின் நகல்களைப் பொதுமக்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப வழங்குவதற்கும் ஏதுவாக, அனைத்து வட்டங்களிலும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் நில ஆவண மேலாண்மை மையங்கள்/நவீன பதிவறைகள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நடைமுறைப்படுத்திவரும் அனைத்துச் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கிட இம்மையங்கள் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், நில ஆவண மேலாண்மை மையம் ஒன்றிற்கு ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

8.6. தமிழில் வரைபடங்கள் தயாரித்தல் (கிராமம், வட்டம் மற்றும் மாவட்டம்)

அனைத்து மாவட்ட மற்றும் வட்ட வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. கிராம வரைபடங்களைக் கணினிப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மேலும், மாவட்ட, வட்ட மற்றும் கிராம வரைபடங்களை, தமிழில் தயாரிக்கும் பணி சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்ற பின்னர், கணினிமயமாக்கப்பட்ட மாவட்ட, வட்ட மற்றும் கிராம வரைபடங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கிடைக்க வசதிகள் செய்யப்படும். தமிழ் மொழியில் தயாரிக்கப்படும் இந்த வரைபடங்கள், கிராமப்புற மக்களுக்கு மிகப்

2020 மார்ச் 24]

பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும். அரசின் அனைத்துத் துறைகளும் இணையம் மூலமாக வரைபடங்களைப் பதிவிறக்கம் செய்து அவர்களுடைய தேவைகளுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

8.6.1. துறையின் உட்கட்டமைப்பு வளர்ச்சி

இத்துறை நவீனப்படுத்தப்பட்டபொழுது 1,601 அலுவலர்களுக்கு இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

314 உயர் அலுவலர்கள் மற்றும் குறுவட்ட அளவர்கள் ஆகியோருக்கு 3ஜி தரவு அட்டைகள் இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினைக் கண்காணிக்கவும், செயல்படுத்தவும் வழங்கப்பட்டது.

உதவி இயக்குநர், மண்டல துணை இயக்குநர், மத்திய நில அளவை அலுவலகம் மற்றும் நில அளவை மற்றும் நில வரித் திட்ட அலுவலகங்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக கணினிகள், யு.பி.எஸ். பிளாட்டர்ஸ் மற்றும் ஸ்கேனர்கள் 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.2.31 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

8.7. நில ஆவணங்களின் இணையவழி அமைப்பும் அதன் பயன்களும்

நில ஆவணங்கள் இணையவழியில் பராமரிக்கப்பட்டு வருவது பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களின் விவரங்களை அறிந்துகொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(அ) பொதுமக்களுக்கான பயன்கள்

வட்ட அலுவலகங்களுக்கு செல்வதற்கு பதிலாக பொதுமக்கள் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகில் அமைந்துள்ள பொதுச்சேவை மையத்தின் (Common Service Centre)மூலம் இணையவழியில் பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- கணினிமூலம் அச்சிடப்பட்ட ஒப்புகைச் சீட்டு விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்படுவதுடன், பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு விடுதல்கள் ஏதுமின்றி தீர்வு காணப்படுகிறது.

[2020 மார்ச் 24

- பெறப்படும் விண்ணப்பங்கள் தக்க நடவடிக்கைக்காக உடனுக்குடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு மாற்றப்படுவதுடன் பொதுமக்கள் அவை குறித்த தற்போதைய நிலையினை https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கையின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்திகளாக அனுப்பப்பட்டு வருகின்றன.
- டிஜிட்டல் கையொப்பமிடப்பட்ட பட்டாவை வட்ட அலுவலகங்களுக்கு செல்லாமலேயே பொதுமக்கள் இணையம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.
- இத்துறையின் முக்கிய அம்சமான கிராம/வட்ட/ மாவட்ட வரைபடங்களின் நகல்கள் மற்றும் இத்துறை சம்பந்தப்பட்ட அரசாணைகள், துறையின் நடவடிக்கைகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள நில அளவை மற்றும் நில வரித் திட்டத் துறைக்கென தனியே இணையதள வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) துறைக்கான பயன்கள்

- நில ஆவணங்களின் இணையவழி மேலாண்மை அறிமுகப்படுத்தப்பட்டதால் அலுவலர்களின் பணிப் பளு வெகுவாக குறைந்துள்ளது.
- அலுவலர்களின் வேறுபட்ட நிலையிலான பணித் திறன் உயர் அலுவலர்களால் இலகுவாக கண்காணிக்கப்படுவதால் புலத்தில் அவர்களுடைய பணியின் திறன் சிறப்பானதாக உள்ளது.
- இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்படுவதால் ஆவணங்கள் எவ்வித விடுதலுமின்றி சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது.

8.7.1. தமிழ்நிலம் மற்றும் பதிவுத் துறை தரவு தளத்தை இணைத்தல்

- நில ஆவணங்கள் கணினிமயப்படுத்தப்பட்ட இணையத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன பதிவுத் துறை அலுவலகங்களில் நடைபெறும் நிலப் பரிவர்த்தனைகளின்போது வலைத்தளத்தில்

கிடைக்கப்பெறுகிற நில உரிமை குறித்த தகவல்களை நில ஆவணங்களுடன் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே, நிலப் பரிவர்த்தனைகளை பதிவுத் துறை அலுவலர்கள் அனுமதிக்கின்றனர். இது தவறான நிலப் பரிவர்த்தனைகள் நடைபெறுவதைத் தவிர்க்க உதவுகிறது.

- சார்பதிவகங்களில் பத்திரப் பதிவு நடவடிக்கைகள் முடிவுற்றதும் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வெளியிட ஏதுவாக தமிழ்நிலம் தரவுதளத்துடன் பதிவுத் துறை தரவுதளம் இணைக்கப்பட்டுள்ளது. 12-2-2018 அன்று ஏற்படுத்தப்பட்ட, இவ்வசதியின்மூலம் புதிய விண்ணப்பங்கள் ஏதும் கோரப்படாமல் உடனடியாக பட்டா மாறுதல் ஆணைகளை வழங்கிட இயலும். மேலும், இணையவழிப்படுத்தப்பட்ட மாநகரங்கள் மற்றும் நகரங்களின் நகர நில அளவை ஆவணங்கள் பதிவுத் துறையின் (STAR 2.0) மென்பொருளுடன் 14-8-2019 முதல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

8.8 இயக்ககத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

8.8.1. தானியங்கி பட்டா மாறுதல் முறை

நிலப் பரிவர்த்தனையும், நில ஆவண பராமரிப்பும் இணையம் சார்ந்த மென்பொருள்மூலம் மேற்கொள்ளப்படுவதால், உட்பிரிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லாத நிலப் பரிவர்த்தனைக்களுக்கான நில உரிமை மாற்றங்களை தானியங்கியாக நில ஆவணங்களில் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 84 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நில அளவை மற்றும் நில வரித் திட்டப் பிரிவு [நி.அ-II(2)] நாள் 4-2-2020-ல் உத்தரவிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, தனியொரு நபரை உரிமையாளராகக் கொண்டுள்ள நிலங்கள் தொடர்புடைய நிலப் பரிவர்த்தனைகள் தானியங்கியான நில உரிமை மாற்றத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். பின்னர், இத்திட்டம் கூட்டுப் பட்டாக்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டத்தில் முன்னோடித் திட்டமாக இது நிறைவேற்றப்படும்.

நிலப் பரிவர்த்தனைகளை பதிவு செய்யும் செயல்முறைகள் ஏற்கெனவே STAR 2.0 என்னும் மென்பொருள்மூலம் கணினிப்படுத்தப்பட்டுள்ளதால், நிலப் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்யும்போது பதிவுத் துறைக்குக் கணினி வாயிலாக ஆம்/இல்லை என்ற பதிலளிக்கும் வகையில் வினாக்கள் எழுப்பப்பட்டு பதில் பெறப்படும்.

அவ்வாறு பெறப்படும் தகவலின் அடிப்படையில் நிலக் கிரயதாரருக்கு அதே கிராமத்தில் பட்டா ஏதும் இல்லை எனும் நிகழ்வில், இவ்விவரங்கள் அனைத்தும் தமிழ்நிலம் தரவு தளத்திற்கு இணையவழியில் அனுப்பிவைக்கப்பட்டு, அங்கு கிரயதாரருக்கு புதிய பட்டா எண் வழங்கப்பட்டு அவரது பெயரில் தானியங்கியாக (மானுட செயலாக்கம் ஏதுமின்றி) பட்டா மாற்றம் செய்யப்படும். நிலக் கிரயம் பெறுபவருக்கு அதே கிராமத்தில் ஏற்கெனவே பட்டா எண் இருப்பின், புதியதாக கிரயப் பதிவு செய்யப்பட்ட நிலம் அவருக்கு ஏற்கெனவே உள்ள பட்டாவில் சேர்க்கப்படும். மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளிலும் பட்டா மாறுதல் உத்தரவு மின்னஞ்சல் மூலமாக கிரயம் பெறுபவர் மற்றும் கிரயம் செய்பவர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படும். இவ்வுத்தரவை 'எங்கிருந்தும் எந்நேரத்திலும்' இணையவழி சேவை மூலமாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

8.8.2. பத்திரப் பதிவிற்கு முன்னர் உட்பிரிவுகளை அங்கீகரித்தல்

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி நிலம் தொடர்பான சொத்துகள் பத்திரப் பதிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, பத்திரப் பதிவிற்கு முன்னரே உட்பிரிவுகள் பரிசீலனை மற்றும் அங்கீகாரம் செய்யும் நடைமுறையை அறிமுகப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இந்நடைமுறையின் கீழ், தத்தமது நிலங்களை/சொத்துகளை விற்பனை செய்யவிரும்பும் நில உரிமையாளர்கள் வட்ட அலுவலகங்களுக்கு விண்ணப்பித்து தாம் விற்பனை செய்ய விரும்பும் நிலங்கள்/சொத்துகள் குறித்த புலப்படங்களின் சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற வேண்டும்.

அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்டதும், வட்ட அலுவலகங்களிலுள்ள நில அளவைப் பணியாளர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு, தொடர்புடைய நிலப் பரிவர்த்தனைக்காக தற்காலிக உட்பிரிவு ஆவணங்களைத் தயார் செய்வர். பட்டா மாறுதல் செய்யத்தக்க ஒப்புதலளிக்கப்பட்ட உட்பிரிவு ஆவணங்கள்,

2020 மார்ச் 24]

இணையவழியில் தொடர்புடைய சார்பதிவகம் மற்றும் நில உரிமையாளர் (விண்ணப்பதாரர்) ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும். இதன் பின்னர், நில உரிமையாளர், தனது நிலப் பரிவர்த்தனையை சார்பதிவகத்தின்மூலம் மேற்கொள்ள முடியும். தொடர்ந்து, இணையவழியிலான பட்டா மாறுதல் விவரங்கள், மீண்டும் புலத் தணிக்கை ஏதுமின்றி தொடர்புடைய ஆவணங்களில் பதிவு செய்யப்படும்.

8.8.3. உட்பிரிவுகளுடன்கூடிய இணைய வழி பட்டா மாறுதல் விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய கிராம நிருவாக அலுவலர்களை ஈடுபடுத்துதல்

பதிவுத் துறையின் மென்பொருளும் (STAR 2.0), இணையவழி தமிழ்நிலம் மென்பொருளும் (நில ஆவணங்களை இணையவழியில் பராமரிக்கும் மென்பொருள்) 12-2-2018 முதல் ஒருங்கிணைக்கப்பட்டு, நிலக் கிரயம் தொடர்பான பதிவு விவரங்கள் பதிவுத் துறையிலிருந்து இணையம் வழியே தமிழ்நிலம் மென்பொருளை வந்தடைந்து பட்டா மாறுதல் பணிகளைத் தொடங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பெறப்படும் விண்ணப்பங்களை விரைவாக பரிசீலனை செய்து முடிக்கும் பொருட்டு, புதிய முயற்சியாக கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஒரு வார காலம் நில அளவைப் பயிற்சி அளித்து அவர்களையும் (நில அளவர்களுடன்) இப்பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் முன்னோடி மாவட்டங்களாக தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

8.8.4. உரிமம் பெற்ற நில அளவர்கள்

- விரைவான நகர்ப்புறமயமாதல், தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றால் சமீப ஆண்டுகளாக நிலப் பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளன. அதன் காரணமாக நிலங்களை அளவை செய்ய வேண்டிய தேவையும் அதிகரித்துள்ளது. அதன்பொருட்டு, நில அளவர்களை நில அளவைப் பணியில் ஈடுபடுத்த வேண்டிய தேவையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்கெனவே பணியில் உள்ள நில அளவர்களின் பணிச் சுமையைக் குறைக்கும் வகையில், கட்டுமான பொறியியல் படிப்பில் பட்டயம் பெற்றுள்ள நபர்களுக்கு நில அளவைப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

➢ மேற்குறிப்பிட்டவாறு பட்டயம் பெற்றுள்ளவர்களுக்கென நில அளவைப் பயிற்சி ஒரத்தநாடு நில அளவை பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பணிகளின் தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் உரிமம் பெற்ற நில அளவர்கள், ஏற்கெனவே உள்ள நில அளவர்களுக்கு உதவியாக செயல்படும் வகையில், இணையதள பட்டா மாறுதல், அங்கீகரிக்கப்பட்ட மனைகளில் உட்பிரிவு செய்தல், பிற அரசுத் துறைகளான வனத் துறையின் காடுகளின் எல்லைகளை அளவை செய்தல், நெடுஞ்சாலைத் துறை மற்றும் மெட்ரோ இரயில் திட்ட நிலஎடுப்புப் பணிகள் உள்ளிட்ட நில அளவைப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

8.8.5 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்.

பொதுமக்களுக்கு எளிதாக சேவை புரியும்வண்ணம் 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ரூ.7.68 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து 60 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.9.30 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. அவற்றில், கட்டி முடிக்கப்பட்டிருந்த 11 குறுவட்ட அளவர் குடியிருப்புகள் 27-2-2019 அன்றும், 17 குறுவட்ட அளவர் குடியிருப்புகள் 14-8-2019 அன்றும், மேலும், 2 குறுவட்ட அளவர் குடியிருப்புகள் 26-11-2019 அன்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் 2018-2019 ஆம் நிதி ஆண்டில் ரூ.17.26 கோடி மதிப்பீட்டில் மேலும், 100 குறுவட்டங்களில் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்ட அரசாணை (நிலை) எண் 358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 26-9-2018-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 23 குறுவட்ட அளவர் குடியிருப்புகள் மிக விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளன. மேலும், 72 குறுவட்டங்களில் கட்டுமானப் பணி பொதுப் பணித் துறையின்மூலம் நடைபெற்று வருகிறது.

2020 மார்ச் 24]

8.8.6 AMMA கைப்பேசி செயலி

பொதுமக்கள் நில ஆவணங்கள் தொடர்பான சேவைகளை எளிதில் கையாளும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1-3-2018 அன்று 'AMMA கைப்பேசி செயலி' ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த சேவையின் வாயிலாக பொதுமக்கள் தங்களது கைப்பேசி திரையினை மென்மையாகத் தொடுவதின்மூலம் தேவையான விவரங்களைக் காண இயலும்.

8.8.7. காலிப் பணியிடங்களை நிரப்புதல்

இத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களான நில அளவர், வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை நியமனம் மூலமாக நிரப்பப்படுகின்றன.

இதனடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளில் பின்வரும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன:

வ. எண்	பதவியின் பெயர்	நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை	தேர்வுமுறை	
			த.நா.அ.ப. தேர்வாணையம்	கருணை அடிப்படை நியமனம்
1.	நில அளவர்	533	438	95
2.	வரைவாளர்	492	444	48
3.	இளநிலை உதவியாளர்	151	142	9
4.	தட்டச்சர்	29	29	--
5.	சுருக்கெழுத்து தட்டச்சர்	5	5	--
6.	அலுவலக உதவியாளர்	9	--	9
7.	புல உதவியாளர்	4	--	4
	மொத்தம்	1223	1058	165

8.8.8 தமிழ்நாடு நில அளவைப் பதிவேடுகள் துறை வரலாற்று கண்காட்சி அரங்கம்

நில அளவைப் பதிவேடுகள் துறை 160 ஆண்டுகள் கடந்த நிலையில், இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நில அளவைப் பணிகள் குறித்த வரலாற்றுத் தகவல்களை எடுத்துக்காட்டும் வகையில் புகைப்படக் கண்காட்சி 23-5-2018 அன்று நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரகத்தில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மற்றும் வருவாய்த் துறை செயலர் ஆகியோர் பங்கு பெற்றது சிறப்பம்சமாகும். இக்கண்காட்சியின்மூலம் நில அளவைத் துறையின் வரலாற்றையும், சேவையையும் பொதுமக்களால் எளிதில் அறிந்து கொள்ளமுடிந்தது.

இக்கண்காட்சியில், 1901-1920 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மறு நில வரித் திட்டப் பணிகள், 1930 முதல் 1940 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நகர நில அளவைப் பணிகள், 1948, 1964-ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி மேற்கொள்ளப்பட்ட நில அளவைப் பணிகள், 1979-1985 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம், 1988 ஆம் ஆண்டு நத்தம், நகர நில அளவைப் பணிகள் மற்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நவீன நில அளவை மற்றும் மறுநில அளவைப் பணி முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் மற்றும் நில அளவைக்கு பயன்படுத்திய கருவிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

8.9 நில வரித் திட்டம்

நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதி நில வரியாக முன்பு விதிக்கப்பட்டு, தற்போது இது அதன் பணமதிப்பீட்டில் வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. நில வரி மற்றும் நிலத்தின் உரிமையாளரை நிர்ணயம் செய்வதற்காக கடைப்பிடிக்கப்படும் முறை நில வருவாய் நில வரித் திட்டம் எனப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைப்பாடு செய்யப்படாமல் பாசன ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல் நில வரி வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த முறை ''நிலையான நில வரித் திட்டம்' என அழைக்கப்பட்டது. இந்த முறையை ரத்து செய்து பாய்ச்சல் ஆதாரம் மற்றும் மண் வகைப்பாடு ஆகியவைகளின் அடிப்படையில் நில வரி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நில வரித் திட்டம்' 1879-80 ஆம் ஆண்டிலிருந்து அசல் நில வரித் திட்டம் (Original Settlement) என அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில், நில வரி நிர்ணயிப்பதற்காக முதன் முதலாக அரசினால் நில அளவை செய்யப்பட்டு, புலவாரியாக வகைப்பாடுகள், மண்வயனம், பாசன ஆதார வகுப்புகள் நிர்ணயிக்கப்பட்டு தரம், தீர்வை நிர்ணயிக்கப்பட்டது. மேலும், புலங்களின் உரிமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பட்டா பதிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இம்முறை முப்பதாண்டுகள் வரை நீடிக்கத்தக்கது. எனவே, அசல் நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமங்களில் முப்பதாண்டுகளுக்குப் பின் மறு நில வரித் திட்டம் (Re-Settlement) அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், ஜமீன்தார்கள்/ இனாம்தார்கள் ஆகியோர்களிடமிருந்து நில உடமைகளில் இரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல், அவ்வுடமைகளில் நிலையான நில வரித் திட்டம் கடைபிடிக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்தின்போது ஜமீன் எஸ்டேட், இனாம் மற்றும் மைனர் இனாம் இதுபோன்ற சில பகுதிகளைத் தவிர தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இரயத்துவாரி நில வரித் திட்ட முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

சுதந்திரம் பெற்ற பின்பு ஜமீன்/இனாம் எஸ்டேட்/இது போன்ற பகுதிகளிலிருந்த விவசாயிகளின் நில வரிச் சுமையைக் குறைப்பதற்காகவும், நில உடமையாளர்கள் என்ற பிரிவினரை மொத்தமாக நீக்கி, அக்கிராமங்களை அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகவும், பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் பெரும்பாலான சட்டங்களின்கீழ் நில வரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், பின்வரும் சட்டங்களின்கீழ் சில கிராமங்களில் மட்டும் நில வரித் திட்டப் பணிகள் நிலுவையிலுள்ளன.

1. தமிழ்நாடு எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)

மொகலாய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நில வரி வசூல் செய்ய ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் முதலானோர் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு நில வரி வசூலிப்பதற்காக மேல்வார உரிமையும் இப்பகுதிகளில் விவசாயம் செய்பவர்களுக்கு குடிவார உரிமையும்

அளிக்கப்பட்டிருந்தது. இவர்களது ஆளுகைக்குட்பட்ட பகுதி/ கிராமங்கள் ஜமீன் எஸ்டேட் எனப்பட்டது. இச்சட்டத்தின்மூலம் ஜமீன் மற்றும் மேல்வார இனாம் எஸ்டேட்களில் ஜமீன்தார் மற்றும் இனாம்தாரர்களின் வரி வசூலிக்கும் மேல்வார உரிமை நீக்கப்பட்டு, அக்கிராமங்கள் அரசின் நேரடி ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டன. இச்சட்டத்தின்கீழ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து எஸ்டேட்களிலும் இரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. எனினும், பட்டா வழங்கியது மற்றும் வகைப்பாடு செய்தது குறித்து சில வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையிலிருந்து வருகின்றன.

2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

முன்னாள் இந்து மன்னர்கள் காலத்திலும், மொகலாய மன்னர்கள் காலத்திலும் 1802 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை படைவீரர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும், ஊழியர்களுக்கும், துறவிகளுக்கும் மற்றும் அறிவாளிகளுக்கும் நில வரி இல்லாமலோ அல்லது குறைந்த அளவிலான நில வரி நிர்ணயித்தோ ஊழியம் செய்வதற்காக சில கிராமங்கள் அல்லது கிராமத்தின் பகுதிகள் வழங்கப்பட்டிருந்தன. இவை “மான்யம் / இனாம்” என அழைக்கப்பட்டு வந்தது. இனாம் வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக உரிமை பட்டயங்களும் வழங்கப்பட்டிருந்தன. இந்த இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையை நீக்கி அவைகளை அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நில வரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்களில், நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட 6 (ஆறு) கிராமங்களைத் தவிர, இதர அனைத்து கிராமங்களிலும் நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

3. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

ஓர் இனாமுக்கான உரிமை பட்டயத்தில் கிராமத்தின் ஒரு பகுதியை பிராந்திய நில அளவுகளான காணி, ஏக்கர், சென்ட்

போன்ற நில அளவுகளிலோ அல்லது மத/தர்ம நிறுவனங்களுக்கு முழு கிராமங்களாகவோ அளிக்கப்பட்ட இனாம் கிராமங்களில், இனாம்தாரர்களின் உரிமையை நீக்கவும் அவற்றில் இரயத்துவாரி நில வரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில், நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட 7 (ஏழு) கிராமங்களைத் தவிர, இதர அனைத்து கிராமங்களிலும், நில வரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இனாம் உரிமையை அரசு எடுத்துக்கொண்டதை ஆட்சேபித்து இனாம்தாரர்களால் நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருந்த வழக்குகள் காரணமாக, அந்தக் கிராமங்களில் நில வரித் திட்டப் பணிகளை மேற்கொள்ள இயலாமல் இருந்து வந்தது. எனினும், பெரும்பாலான கிராமங்கள் தொடர்பான வழக்குகள் முடிவுற்ற நிலையில், நில அளவை மற்றும் நில வரித் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டத்திலுள்ள சென்னசந்திரம் முதலான 6 இனாம் கிராமங்களில் நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது நில வரித் திட்டப் பணிகள் மேற்கொள்ள தனி வட்டாட்சியர் தலைமையில் ஓர் அலகு தொடங்கப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் நில வரித் திட்ட ஆரம்பகட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், மூன்று கிராமங்களில் விசாரணை அறிவிப்பு வழங்கப்பட்டு விசாரணைப் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

4. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில், ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை நீக்கவும் இரயத்துவாரி நில வரித் திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. உயர் நீதிமன்றத்திலும் அதன் பின் உச்ச நீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகளால் இச்சட்டத்தை முழுமையாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9 ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. கடைசியாக இச்சட்டத்தினை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9 ஆம் அட்டவணையில் முழுமையாக

சேர்க்கப்பட்டதை ஏற்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், நில வரித் திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜென்மம் நிலங்களில் நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

வ. எண்	**விவரங்கள்**	**விஸ்தீரணம் (ஏக்கரில்)**
1	மொத்த ஜென்மம் நிலங்கள்	80,087.74
2	நில வரித் திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு	45,101.46
3	நில வரித் திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது	17,014.43
4	நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)-(2)]	34,986.28

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனச் செல்வங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண் 363, வருவாய்த் துறை, நாள் 28-11-2011 மற்றும் அரசாணை (நிலை) எண் 263, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 18-8-2017-ன்மூலம் 17,014.43 ஏக்கர் நிலம் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மேற்படி சட்டம் பிரிவு 8,9,10-களின்கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நில வரித் திட்ட அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலரை உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பெரும்பாலான மனுக்கள் நில வரித் திட்ட அலுவலரால் முடிவு செய்யப்பட்டுவிட்டன. முடிவு செய்யப்பட்ட இனங்களில் நில வரித் திட்ட அலுவலரின் உத்தரவுகளுக்கு எதிராக ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயம்/மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலத்தில் பல மேல்முறையீடு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கூடலூர், ஜென்மம் நிலங்களில் நில வரித் திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களைத் திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில்

2020 மார்ச் 24]

நில வரித் திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக அரசாணை எண் 73, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (F.R.14) துறை, நாள் 19-3-2018-ல் 3 நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசால் தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

8.9.1. திட்டங்கள்

(அ) நத்தம் நில வரித் திட்டம்

அசல் நில வரித் திட்டம் மற்றும் மறு நில வரித் திட்டப் பணிகளின்போது கிராமங்களிலுள்ள குடியிருப்பு பகுதி 'நத்தம்' என வகைப்பாடு செய்யப்பட்டிருந்தது. நத்தம் புலங்களில் வீட்டு மனைகள் உட்பிரிவு செய்யப்படாமல் மனைப் பட்டா வழங்கப்படாமல் இருந்து வந்தது. எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் இருந்த நத்தம் புலங்களிலுள்ள வீட்டு மனைகளிலும், விவசாயமில்லாத பிற பயன்பாட்டில் இருந்து வந்த விவசாய நிலங்களிலும், நத்தம் நில வரித் திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நில வரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்குட்பட்ட நத்தம் பகுதிகளில் நத்தம் நில வரித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) மலைக் கிராமங்களில் நில வரித் திட்டப் பணி

நத்தம் நில வரித் திட்டப் பணியோ அல்லது நில உடமை மேம்பாட்டு பணியோ மேற்கொள்ளப்படாத மலைக் கிராமங்களில், மறு நில அளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நில வரித் திட்டப் பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணி 6 கிராமங்களில் மட்டும் தற்போது நடைபெற்று வருகிறது.

(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நில வரித் திட்டப் பணி

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் வருவாய்ப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கவும் மாவட்ட வருவாய் நிருவாக பராமரிப்பிற்கென

நில ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும் நகர நில வரித் திட்டப் பணி தொடங்கப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர நில வரித் திட்டப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றுள் 24 நகராட்சிகளில் முழுவதுமாக இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நகர நில வரித் திட்டப் பணி 6 மாநகராட்சிகளிலும் 62 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்றுவரும் அலகுகளின் பணிகள் முடிக்கப்பட்டவுடன், அவ்வலகு, பணி தொடங்கவேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

நகர நில வரித் திட்டப் பணிகளில், 2011 முதல் டிசம்பர் 2019 வரை கீழ்க்கண்டவாறு 15,18,118 மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன:-

வ. எண்	வருடம்	வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை
1	2011-2012	23,402
2	2012-2013	23,291
3	2013-2014	1,69,749
4	2014-2015	2,26,903
5	2015-2016	2,72,168
6	2016-2017	1,85,955
7	2017-2018	2,42,604
8	2018-2019	2,81,246
9	2019-2020 (ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2019 வரை)	92,800
	மொத்தம்	15,18,118

2020 மார்ச் 24]

8.9.2 வக்ஃபு சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃபு சட்டம், 1995 பிரிவு 4-ன்படி, மாநிலம் முழுவதும் வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. வக்ஃபு சொத்து கணக்கெடுப்பு ஆணையாளராக நில அளவை மற்றும் நில வரித் திட்ட இயக்குநரும் அவரது கட்டுப்பாட்டில், வக்ஃபு கூடுதல் ஆணையர்களாக மாவட்ட வருவாய் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பணி இதுவரை 27 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

9. முடிவுரை

வருவாய்த் துறை தற்பொழுது மிகவும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன்சார்ந்த இவ்வரசாங்கத்தில் சீராக்கம் மட்டும் நோக்கமின்றி, செயலாக்கம் கொண்டதாகவும் தனது சேவையில் இத்துறை மேம்பட்டுள்ளது. திறமை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் நலன் ஆகியவற்றை கொள்கையாகக்கொண்டு இத்துறை செயல்பட்டுவருகிறது. நில மேலாண்மை நோக்குடன் தீவிர முயற்சியின் பலனாக இத்துறையில் இணையவழி பட்டா மாற்றம், இ-அடங்கல் மற்றும் நில ஆவணங்கள் கணினிமயமாக்கம் ஆகிய மகத்தான முன்னேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வருவாய் சான்றிதழ்கள், நில ஆவணங்கள் வழங்குதல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அறிவுறுத்தி பாதிக்கப்படக்கூடிய பகுதிகளிலிருந்து மக்களை மீட்டும், நிவாரணப் பணி மற்றும் மறுசீரமைப்பு பணிகளை அறிவியல் பூர்வமாகவும் மனிதநேயத்துடனும் அணுகுவதால் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மேலும், பயிற்சிகள், மாதிரி நிகழ்வுகள், தமிழ்நாடு ஸ்மார்ட் செயலி ஆகியவை இத்துறையின் சாதனைக்கு சான்றுகளாக விளங்குகின்றன.

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை, நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி, நில அளவை மற்றும் நில வரித் திட்டத்தினை திறமையுடன் செயல்படுத்தி சேவைமிக்கத் துறையாக வருவாய்த் துறை திகழ்கிறது.

இணைப்பு XIII

(47 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021

முன்னுரை

சுற்றுலா என்பது மனமகிழ்ச்சிக்காகவும், ஓய்வு எடுக்கவும், பயணம் மேற்கொள்ளுதல் ஆகும். "அன்றாட வாழ்க்கைச் சூழலிலிருந்து விலகி, ஆரவாரமற்ற சூழலில் ஓய்வு எடுக்கவும், வணிகம் அல்லது இதர நோக்கங்களுக்காக, தனது வசிப்பிடத்திற்குத் தொடர்பில்லா இடங்களுக்கு பயணித்து, அங்கு தொடர்ச்சியாக ஓராண்டிற்குக் குறைவாகத் தங்கி இருப்பவர்கள் சுற்றுலாப் பயணிகள்" என்று உலகச் சுற்றுலா அமைப்பு வரையறுத்துள்ளது.

வேலைவாய்ப்புகளை அதிகரித்து வறுமையை ஒழிப்பதன்மூலம், பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் அங்கமாகச் சுற்றுலாத் துறை திகழ்கின்றது. வேலைவாய்ப்பு, வருவாய், அந்நியச் செலாவணி ஈட்டுதல், மண்டல வாரியான வளர்ச்சி ஆகிய பொருளாதார மேம்பாடுகளுக்கு சுற்றுலாத் துறை வழிவகுப்பதால், அது ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உந்து சக்தியாகத் திகழ்கிறது.

சுற்றுலா தொழில் சார்ந்த சரக்குகள் மற்றும் சேவைகளில் பெரும் தொகை முதலீடு செய்யப்படுவதாலும், சுற்றுலாத் தொழில் சேவைகள்மூலம் வேலைவாய்ப்பு அதிகரிப்பதாலும் உலகின் பல நாடுகளுக்கும், குறிப்பாக தீவு தேசங்களுக்கு சுற்றுலா இன்றியமையாத துறையாகும்.

சுற்றுலாவின் விளைவுகளை பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்தவை என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். வணிகம், அரசு மற்றும் தொழில் நிறுவனங்கள் சேகரித்த விவரங்களைக் கொண்டு இந்தச் செயல்விளைவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

பொருளாதார தாராளமயமாக்கல், வெளிப்படையான விமானப் போக்குவரத்துக் கொள்கை, சொகுசுக் கப்பல்

2020 மார்ச் 24]

சேவைகள், மேம்படுத்தப்பட்ட சாலை வசதி, சுற்றுலா இரயில்கள், அதிகரித்துவரும் வணிக பயணங்கள், மின்னணு முன்பதிவு வசதிகள் ஆகியவற்றால் சுற்றுலாத் துறை மற்ற துறைகளுக்கு முன்மாதிரியாகத் திகழும் வகையில் உருவெடுத்துள்ளது. சாதாரண சேவைத் தொழில் துறையாக இருந்த சுற்றுலா, தற்போது மிகப் பெரிய அளவில் வருவாய் ஈட்டும் தொழில் துறையாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவில் சுற்றுலா

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஏராளமான அனுபவங்களை வழங்குகிற குறிப்பிடத்தக்க சுற்றுலாத் தலமாக இந்தியா விளங்குகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கைவினையால் படைக்கப்பட்ட பல்வேறு பாரம்பரிய வளங்களை இந்தியா காட்சிப்படுத்துகிறது. இங்குள்ள பரபரப்பான சந்தைகள் பார்வையாளர்களின் மனதில் அவர்கள் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவத்தை வழங்குகின்றன. இதன் பசுமையான இயற்கை வளங்கள் அன்றாட வாழ்வின் இறுக்கமான சூழலிலிருந்து விலக்கி மனதிற்குப் புத்துணர்வை வழங்குகின்றன. வன விலங்கு சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் சாகச விளையாட்டுகள் விடுமுறையைக் கழிப்பதில் பரவச அனுபவத்தைத் தருகின்றன.

பயணம் மற்றும் சுற்றுலா இந்தியாவில் மிகப் பெரிய சேவைத் துறைகளாகும். இத்துறை பாரம்பரியம், பண்பாடு, புனிதப் பயணம், நலவாழ்வு, வணிகம் மற்றும் விளையாட்டு சுற்றுலாக்களை வழங்குகின்றன. சுற்றுலாவை வளர்ப்பது, மேம்படுத்துவது, உலகளவில் போட்டியிடக்கூடிய பலராலும் விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக இந்தியாவை நிலைப்படுத்துவது, சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி விரிவுபடுத்துவது, வேலைவாய்ப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவது இத்துறையின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இந்திய சுற்றுலா அமைச்சகம், சுவதேஷ் தர்சன் மற்றும் பிரசாத் திட்டங்களின்கீழ் நாட்டில் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நிதியினை வழங்கி வருகிறது. "உன்னதமான இந்தியா" (Incredible India) என்கிற விளம்பர உத்தியினைக் கையாண்டு உலகளவில் இந்திய சுற்றுலாவை மத்திய சுற்றுலா அமைச்சகம் வளர்த்து வருகிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழ்நாடு-பண்பாடு மற்றும் ஆன்மிக பாரம்பரியம் சார்ந்த மாநிலமாகும். இதன் வரலாறும் அழகான சுற்றுலாத் தலங்களும்,

[2020 மார்ச் 24

இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரீகர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றன. தமிழ்நாடு புதுமையும், பழமையும் கலந்த பூங்கா. நமது கடந்தகால பண்பாட்டு பாரம்பரியத்தைத் தற்காலத்தின் அனைத்து நவீன வசதிகளுடன் மனதில் கவரும்விதத்தில் பயணம் செய்து அனுபவிக்கக்கூடிய ஒரு சிறந்த தலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியாவில், சுற்றுலாத் துறையில் தமிழ்நாடு முன்னணியில் தொடர்ந்து உள்ளது. பண்பாட்டு செல்வங்களின் பொக்கிஷப் பேழையாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

வங்காள விரிகுடா ஓரத்தில் அமைந்திருக்கும் தமிழ்நாட்டிற்கு தனி வரலாறு உள்ளது. இது சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் பல்லவர்கள் போன்ற பல பேரரசுகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. ஒவ்வொரு பேரரசும் அதன் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளால் தமிழ்நாட்டை வளப்படுத்தியுள்ளன. உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரம் நினைவுச் சின்னங்கள், அருள்மிகு மதுரை மீனாட்சி அம்மன் கோயில், இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில், தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீசுவரர் கோயில், இந்தியாவின் கடைக்கோடிமுனையான கன்னியாகுமரி மற்றும் அழகிய மலைவாழிடமான உதகமண்டலம் போன்ற இடங்களைக் கண்டு ரசிக்க உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்றனர். பண்டைய பேரரசுகளின் சிதிலமடைந்த கோட்டைகள் மற்றும் அரண்மனைகளைக் குறித்த விவரம் அறிய சுற்றுலாப் பயணிகளுக்குப் பேரார்வம் உள்ளது. மாமல்லபுரத்தின் கலை நுணுக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள், இந்திய நாகரிகத்தின் நுட்பமான கட்டடக் கலை குறித்த அற்புத நுண்ணறிவை உலகிற்குக் காட்டுகிறது.

சுற்றுலாவின் பிரிவுகள்

- பாரம்பரியச் சுற்றுலா
- ஆன்மீகச் சுற்றுலா
- கடற்கரைச் சுற்றுலா
- வணிகச் சுற்றுலா
- சாகசச் சுற்றுலா
- சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினச் சுற்றுலா

- கிராமியச் சுற்றுலா
- உடல்நலம் பேணும் சுற்றுலா

சுற்றுலாத் துறையின் குறிக்கோள்கள்

(அ) தேசிய மற்றும் உலகளவில் சிறப்பும் முன்னுரிமையும் பெற்ற ஒரு சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்துதல்.

(ஆ) தமிழ்நாட்டில் புதிய சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே உள்ள சுற்றுலா உட்கட்டமைப்பினைப் புனரமைத்தல்.

(இ) தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.

(ஈ) தொன்றுதொட்டு விளங்கும் வளமான மற்றும் பண்பாட்டு பாரம்பரியம், நினைவுச் சின்னங்களிலுள்ள கட்டடக் கலையின் சிறப்புகளைக் காட்சிப்படுத்தி பிரபலப்படுத்துதல்.

(உ) அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, சுற்றுலாவினை மேம்படுத்துதல்.

(ஊ) சுற்றுலாத் தொழில் துறையில், தொழில் வாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்புகளை விரிவாக உருவாக்குதல்.

(எ) நாட்டின் அந்நியச் செலாவணியினை அதிகரித்தல்.

உத்திகள்

(அ) வளமான சுற்றுலாச் சுற்றுக்களில் உட்கட்டமைப்பிற்கு முன்னுரிமை அளித்து ஒருங்கிணைந்த மேம்பாடு அடையச் செய்தல்.

(ஆ) தனியார் சுற்றுலாத் தொழில் துறையினரை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் மக்களைச் சுற்றுலா வளர்ச்சியில் பங்குகொள்ளச் செய்தல்.

(இ) உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடைபெறும் சுற்றுலாச் சந்தைகள், விளம்பர முகாம்கள் மற்றும் கண்காட்சிகளில் பங்குகொள்ளுதல்.

(ஈ) பல்வேறு முகமைகளுடன் சுமுகமான ஒத்துழைப்பைப் பேணுதல்.

[2020 மார்ச் 24

(உ) மேம்படுத்தப்பட்ட இணைப்புச் சாலை வசதிகள், சுற்றுலா வசதிகள் மற்றும் சிறப்பான சுற்றுலாச் சேவைகள் அளித்தல்.

(ஊ) கருத்தரங்குச் சுற்றுலா (MICE-Meetings, Incentives, Conventions, Exhibitions) மற்றும் தனித்துவம் வாய்ந்த சுற்றுலாக்களை (Niche Tourism) மேம்படுத்துதல்.

(எ) சுற்றுச்சூழல் மற்றும் வன உயிர்களை பாதிக்காத வகையிலான சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல்.


(ஏ) நிலைத்த சுற்றுலா மேம்பாட்டிற்காக, வேலைவாய்ப்பை உருவாக்குதல், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழல் மறு உருவாக்கம், மகளிர் மற்றும் நலிவுற்ற சமுதாய மேம்பாடு ஆகியவற்றின் மூலமாகவும், சுற்றுலாத் தல மேலாண்மைக்காகவும், திறன் வளர்ப்பு மற்றும் மனித வள மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல்.

தமிழ்நாட்டைப் பார்வையிட்ட சுற்றுலாப் பயணிகள்

உலகம் முழுவதிலுமிருந்து தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து, இலங்கை, கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, சீனா, ஜெர்மனி, ரஷ்யா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளிலிருந்து பெரும்பான்மையான சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்றனர்.

தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகளின் விவரம் பின்வருமாறு:

ஆண்டு	**உள்நாடு**	**வெளிநாடு**	**மொத்தம்**
	(இலட்சத்தில்)		
2016	3,438.10	47.20	3,485.30
2017	3,450.61	48.60	3,499.21
2018	3,859.09	60.73	3,919.82
2019	4,948.64	68.66	5,017.30



வருடம்

ஆதாரம்: இந்திய சுற்றுலா புள்ளிவிவரம், ஒரு பார்வை-2019, மத்திய சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு

2014, 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஐந்து ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்று வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற சுற்றுலாச் சந்தைகளில், சுற்றுலாத் தொழில்முனைவோருடன் பங்கு கொண்டதினாலும், இங்குள்ள பண்பாடு கலை மற்றும் ஆன்மிக வளங்கள், பல்வேறு சுற்றுலாத் தலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகை குறித்த புள்ளிவிவரங்களை சேகரித்ததினாலும் 2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை விவரம் கணிசமாக அதிகரித்துள்ளது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் மாமல்லபுரம் விஜயம்

மாமல்லபுரம் இந்தியாவின் மிகவும் சக்திவாய்ந்த பாரம்பரிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். இது தமிழ்நாட்டில் யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய தலங்களில் ஒன்றாகும். கடற்கரைக் கோயில், அர்ஜுனன் தவம், ஐந்து ரதங்கள், புலிக் குகை, குகைக்கோயில் ஆகியன மாமல்லபுரத்தின் பெருமைகளாகும்.

தமிழ்நாட்டின் கடலோரக் கோயில் நகரான மாமல்லபுரத்தில், 2019 அக்டோபர் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில், முறைசாரா உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியாவின் பிரதமர் மற்றும் சீனாவின் அதிபர் ஆகியோர் வருகை தந்தனர்.

[2020 மார்ச் 24

கண்காட்சிகள் மற்றும் விழாக்கள்

தமிழ்நாடு புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகும். இது நம் நாட்டிலிருந்தும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும் அவர்கள் தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை நீட்டிப்பதற்கும், ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பல கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் மாமல்லபுரத்தில் நடைபெறும் இந்திய நாட்டிய விழாவில், நாடு முழுவதிலும் இருந்து பல்வேறு நாட்டிய கலைஞர்கள் பங்கு பெறுகின்றனர். இவ்விழா இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய நாட்டிய விழாவினை, சுமார் 1,90,000 உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், 95,000 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் கண்டுகளித்தனர்.

தமிழ்நாட்டில், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி போன்ற மலைவாசஸ்தலங்களில் உள்ள இதமான தட்பவெப்பம், இயற்கை மற்றும் விழா நிகழ்வுகளை அனுபவித்து உணரவும் கோடைக் காலங்களில் மக்கள் இத்தலங்களுக்கு வருகைபுரிகின்றனர்.

தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினை சுற்றுலாப் பயணிகள் அறிந்து மகிழ்வுற பின்வரும் விழாக்கள் 2019-2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன:

விழாவின் பெயர்	மாதம்
பொங்கல் விழா	ஜனவரி
தியாகராஜர் ஆராதனை விழா, திருவையாறு	ஜனவரி
ஜல்லிக்கட்டு விழா, மதுரை	ஜனவரி
கோடை விழா, உதகமண்டலம்	மே-ஜூன்
கோடை விழா, நாகப்பட்டினம்	மே

2020 மார்ச் 24]

விழாவின் பெயர்	மாதம்
கோடை விழா, ஏற்காடு	மே
கோடை விழா, ஜவ்வாது மலை	ஜூன்
மாங்கனி விழா, கிருஷ்ணகிரி	ஜூன்
கோடை விழா, கல்வராயன் மலை	ஜூலை
ஐயனார் (ம) ஆடிப்பெருக்கு விழாக்கள், தட்சிணசித்ரா, சென்னை	ஜூலை—ஆகஸ்ட்
கோடை விழா, கொடைக்கானல்	ஜூலை—ஆகஸ்ட்
வல்வில் ஓரி விழா, கொல்லிமலை	ஜூலை—ஆகஸ்ட்
ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல்	ஆகஸ்ட்
சாரல் விழா, சுருளி அருவி, தேனி மாவட்டம்	ஆகஸ்ட்-செப்டம்பர்
பல்வேறு மாவட்டங்களில் உலகச் சுற்றுலா தினக் கொண்டாட்டங்கள்	செப்டம்பர்
உலகச் சுற்றுலா தினம்-மாநில அளவிலான கொண்டாட்டம், சேலம்	செப்டம்பர்
மாமன்னன் இராஜராஜ சோழன் சதய விழா, தஞ்சாவூர்	அக்டோபர்
வைகுண்ட ஏகாதசி விழா, திருவரங்கம், திருச்சிராப்பள்ளி	டிசம்பர்-ஜனவரி
இந்திய நாட்டிய விழா, மாமல்லபுரம்	டிசம்பர்-ஜனவரி

மதுரை, கோவில்பட்டி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், சேலம், நாமக்கல், விருதுநகர், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிகளில், சுற்றுலாத் துறை பங்கேற்று, தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களைச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களிடையே காட்சிப்படுத்தியது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்றல்

தமிழகத்தை மிகவும் விரும்பத்தக்க சுற்றுலாத் தலமாக தக்க வைத்துக்கொள்ளவும், தமிழகத்திற்குச் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்கிறது.

அ) உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்றல்

தமிழகத்தை உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக நிலைநிறுத்துதல், சுற்றுலாத் தொழில்புரிவோருடனான கலந்தாய்வுமூலம் உள்நாட்டு சுற்றுலாவில் கவனம் செலுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் உள்நாட்டு பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்கிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட, வணிகர்கள் இடையிலான சந்திப்புகள், வாங்குவோர்-விற்பனையாளர் சந்திப்புகள் என பல நல்வாய்ப்புகளை வழங்கும் தளமாக இச்சந்தைகள் உள்ளன.

மேலும், மாநிலத்தின் சுற்றுலா வளங்களைக் காட்சிப்படுத்திட, பிற மாநில சுற்றுலாத் துறைகள் மற்றும் புகழ்பெற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் உள்நாட்டுப் பயணச் சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில் பங்கேற்ற உள்நாட்டு பயணச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்

உள்நாட்டு பயணச் சந்தை/கண்காட்சி	மாதம்
கிரேட் இந்தியா பயணச் சந்தை (GITB), ஜெய்ப்பூர்	ஏப்ரல் 2019
பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), ஐதராபாத்	ஜூலை 2019
பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), கொல்கத்தா	ஜூலை 2019
சர்வதேச இந்திய பயணச் சந்தை (IITM), பெங்களூரு	ஆகஸ்ட் 2019

2020 மார்ச் 24]

உள்நாட்டு பயணச் சந்தை/கண்காட்சி	மாதம்
சர்வதேச இந்திய பயணச் சந்தை (IITM), சென்னை	ஆகஸ்ட் 2019
பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி (TTF), அகமதாபாத்	ஆகஸ்டு, செப்டம்பர் 2019
இந்திய பயண ஏற்பாட்டாளர்கள் சங்க (IATO) வருடாந்திர மாநாடு, விசாகப்பட்டினம்	செப்டம்பர் 2019
தமிழ்நாடு டிராவல் மார்ட், சென்னை வர்த்தக மையம்	செப்டம்பர் 2019
இந்திய பயணச் சந்தை (ITM), சாணக்கியபுரி, புது தில்லி	செப்டம்பர் 2019
பர்யாட்டன் பர்வ், புது தில்லி	அக்டோபர் 2019
இந்திய பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி (IITF), புது தில்லி	நவம்பர் 2019
மலையாள மனோரமா வாயேஜர்-பயணக் கண்காட்சி, கொச்சி	டிசம்பர் 2019
46-வது இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி, சென்னை	டிசம்பர் 2019-மார்ச் 2020
தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா பரிமாற்றம் (SATTE), கிரேட்டர் நொய்டா	ஜனவரி 2020
குடியரசு தினவிழாக் கொண்டாட்டம், செங்கோட்டை, புதுதில்லி	ஜனவரி 2020
ஓ.டி.எம்., (Outbound Traval Mart) மும்பை	பிப்ரவரி 2020
பயண மற்றும் சுற்றுலாச் சந்தை (TTB), கொல்கத்தா	பிப்ரவரி 2020

ஆ) சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்றல்

தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களை காட்சிப்படுத்தவும், தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தவும் சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்று வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தொழில்புரிவோர்களான விடுதியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள், நலவாழ்வு சுற்றுலா ஊக்குவிப்பாளர்கள் மற்றும் பயண முகவர்கள் ஆகியோர் இப்பயணச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கத்தில் ஆர்வமுடன் பங்கேற்கின்றனர். இதன் விளைவாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

வெளிமுகமைகள் உதவியோடு சுற்றுலா வணிகர்கள் இடையிலான சந்திப்புகள் அதிக அளவில் இப்பயணச் சந்தைகளில் நடைபெற முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன. நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஆறு மாதங்கள் முன்பே இதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட வேண்டும். பல்வேறு சுற்றுலா தொழில் சார்ந்தோர்கள், ஓட்டல் துறையினர், சுற்றுலாத் தல மேலாண்மை அமைப்புகள், இக்கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கில் தங்கள் வணிகச் சந்திப்புகளை நடத்துகின்றனர். இதன்பின், தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வாடிக்கையாளரை அவர்கள் எளிதில் சென்றடைய முடிகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்ற சர்வதேச பயணச் சந்தைகள்

மாதம் மற்றும் வருடம்	சர்வதேச பயணச் சந்தையின் பெயர்
செப்டம்பர் 2019	**PATA பசிபிக் ஆசிய சுற்றுலா சங்கத்தின் சுற்றுலா பயணச் சந்தை, அஸ்டானா, கஜகஸ்தான்**
அக்டோபர் 2019	**IFTM சர்வதேச ப்ரெஞ்ச் பயணச் சந்தை, பாரிஸ், பிரான்ஸ்**
அக்டோபர் 2019	**ITB Asia பன்னாட்டு சுற்றுலாச் சந்தை-ஆசியா, சிங்கப்பூர்**

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

மாதம் மற்றும் வருடம்	சர்வதேச பயணச் சந்தையின் பெயர்
அக்டோபர் 2019	JATA ஜப்பான் சுற்றுலா பயண முகவர்கள் சங்கத்தின் சுற்றுலா கண்காட்சி, ஒசாகா, ஜப்பான்
நவம்பர் 2019	WTM உலகச் சுற்றுலாச் சந்தை, லண்டன்
ஜனவரி 2020	FITUR பன்னாட்டு சுற்றுலா வர்த்தகச் சந்தை, மாட்ரிட், ஸ்பெயின்

PATA-பசிபிக் ஆசிய சுற்றுலா சங்கத்தின் சுற்றுலா பயணச் சந்தை, கஜகஸ்தான்

மிகப் பெரிய சர்வதேச பயணச் சந்தைகளில் ஒன்றான PATA பயணச் சந்தை ஒவ்வோர் ஆண்டும் பசிபிக் ஆசிய நாடுகளில் ஏதேனும் ஒன்றில் நடத்தப்படுகிறது. செப்டம்பர் 2019-ல் கஜகஸ்தானில் உள்ள அஸ்தானாவில் நடைபெற்ற PATA பயணச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாவின் அரங்கத்தில் தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த பயணச் சந்தையில் பங்கேற்றதன்மூலம், கஜகஸ்தான் மற்றும் அருகிலுள்ள நாடுகளிலிருந்துவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பதுடன், தமிழ்நாட்டில் அவர்கள் தங்கும் காலத்தையும் நீட்டிக்கும்.

IFTM-சர்வதேச ப்ரெஞ்ச் பயணச் சந்தை, பாரிஸ், பிரான்ஸ்

சர்வதேச ப்ரெஞ்ச் பயணச் சந்தை IFTM-ன் 41-வது நிகழ்வு 2019 அக்டோபர் 1 முதல் 4 வரை பிரான்ஸில் உள்ள பாரிஸ் நகரில் நடைபெற்றது. இது சொகுசுப் பயணம், வணிகப் பயணம் மற்றும் MICE பயணங்களுக்கான பிரெஞ்சு சந்தையை உள்ளடக்கிய மிகப் பெரிய வர்த்தக நிகழ்வாகும். இப்பயணச் சந்தையில் பங்கேற்றது, தமிழகத்தின் சுற்றுலாச் செல்வத்தை வெளிப்படுத்த ஒரு சிறந்த தளமாகத் திகழ்ந்துள்ளது. பிரெஞ்சு சுற்றுலாப் பயணிகள் புதிய இடங்களுக்கு பயணம் செல்வதில் ஆர்வமுடையோர்களாக அறியப்பட்டவர்கள் ஆவர். இந்த பயணச் சந்தையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு சுற்றுலா தொழில் சார்ந்தோர் இருவர் பங்கேற்றனர்.

ITB Asia-பன்னாட்டு சுற்றுலாச் சந்தை-ஆசியா, சிங்கப்பூர்

சிங்கப்பூரில் 2019 அக்டோபர் 16 முதல் 18 வரை மெரினா பே ஸாண்ட்ஸ் எக்ஸ்போ மற்றும் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற ITB Asia பன்னாட்டு சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. இந்த பன்னாட்டு சுற்றுலாச் சந்தை ஓய்வு மற்றும் வணிகப் பயணங்களை காட்சிப்படுத்தியது. இந்நிகழ்வில் ஆசியா, மத்திய கிழக்கு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த வணிகர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு சுற்றுலாவுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த எட்டு சுற்றுலாத் தொழில் சார்ந்தோரும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, தங்கள் சுற்றுலாக்களையும், சேவைகளையும் சந்தைப்படுத்தினர்.

JATA-ஜப்பான் சுற்றுலா பயண முகவர்கள் சங்கத்தின் சுற்றுலா கண்காட்சி, டோக்கியோ, ஜப்பான்

ஜாட்டா சுற்றுலா கண்காட்சி, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நிலைப்படுத்தப்பட்ட சுற்றுலா நிகழ்வாகும். இது சுற்றுலா, விருந்தோம்பல் தொழில் மற்றும் அரசு சுற்றுலாத் துறைகளுக்கு சுற்றுலாத் தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது. இந்தக் கண்காட்சி, அவர்களின் தயாரிப்புகள் மற்றும் சுற்றுலாச் சேவைகளை வணிகப்படுத்த உதவுகிறது.

ஜாட்டா சுற்றுலா கண்காட்சியில் தமிழகத்தைச் சேர்ந்த மூன்று சுற்றுலாத் தொழில்புரிவோர் பங்கேற்றனர். அவர்கள் தமது சுற்றுலா நடவடிக்கைகளை சந்தைப்படுத்துவதற்காக, தமிழ்நாடு சுற்றுலாவின் அரங்கத்தில் இணை காட்சிப்படுத்துவோராக பங்கேற்றனர். ஜப்பானில் இருந்து பல பயண முகவர்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், பயண எழுத்தாளர்கள், அச்சு மற்றும் மின்னணு ஊடகத்தைச் சேர்ந்தோர் பலர் தமிழ்நாடு சுற்றுலாவின் அரங்கிற்கு வருகை தந்தனர். தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் பற்றிய விவரங்கள் ஜப்பானிய மொழியில் அச்சிடப்பட்டு, அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் ஏராளமான சுற்றுலா வளங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கப்பட்டன.

WTM-உலகச் சுற்றுலாச் சந்தை, இலண்டன்

இலண்டனில் உள்ள எக்ஸெல் நகரில் 2019 நவம்பர் 4 முதல் 6 வரை நடைபெற்ற உலக சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றுள்ளது. பயணம் மற்றும் ஓட்டல்

துறைகளைச் சார்ந்த மூன்று சுற்றுலாத் தொழில்புரிவோர், தமிழ்நாடு சுற்றுலாவின் அரங்கில் பங்கேற்றனர். முன்னணி சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், தொழிலதிபர்கள், சொகுசு கப்பல், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், பயண எழுத்தாளர்கள், ஓட்டல் துறை சார்ந்தவர்கள் போன்றோர் மிகுந்த ஆர்வத்துடன் தமிழகத்தின் சுற்றுலாத் தொழில்புரிவோர்களுடன் கலந்துரையாடினர்.

FITUR-பன்னாட்டு சுற்றுலா வர்த்தகச் சந்தை, மாட்ரிட், ஸ்பெயின்

2020 ஜனவரி 22 முதல் 26 வரை ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் நகரில் நடைபெற்ற FITUR பன்னாட்டு சுற்றுலா வர்த்தகச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலா பங்கேற்றது. உலகின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த சுற்றுலா நுகர்வோர்களிடம் தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களைப் பரிமாற, மேற்கண்ட நிகழ்வில் பங்கேற்றது ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. உயர்மட்ட பயணப் பிரதிநிதிகளைச் சந்திக்கவும் இது சரியான தளமாக இருந்தது. தமிழக சுற்றுலாத் துறையுடன், தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு சுற்றுலா தொழில்புரிவோர் பங்கேற்றனர். இந்தப் பயணச் சந்தையில் பங்கேற்றதால், ஸ்பெயின் மற்றும் அண்டை நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வருகை நிச்சயமாக அதிகரிக்கும்.

உலகச் சுற்றுலா தினக் கொண்டாட்டங்கள்

சுற்றுலா மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், உலகச் சுற்றுலா தினம் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 27 ஆம் தேதி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு சேலத்தில் 17-9-2019 முதல் 27-9-2019 வரை 11 நாட்கள் மாநில அளவிலான உலகச் சுற்றுலா தின விழா நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தின்போது, சுற்றுலா விழிப்புணர்வு கலாச்சார நிகழ்ச்சி, தூய்மைப் பிரச்சாரம், கருத்தரங்குகள், தெருவோர கலாச்சார நிகழ்ச்சிகள், ஐந்து வெளி மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்ற சிறப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள் போன்றவை மாவட்டம் முழுவதிலுமுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் நடத்தப்பட்டன. உலகச் சுற்றுலா தினக் கொண்டாட்டத்தின்போது சேலம் மாவட்டம் குறித்த சிறு புத்தகம் வெளியிடப்பட்டது. இந்தச் சிறப்பான கொண்டாட்டங்களுக்காக அரசு ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளித்தது.

"உன்னத இந்தியா" சுற்றுலா சேவை புரிவோர்கள் சான்றிதழ் திட்டம்

சுற்றுலா வளர்ச்சியில், சுற்றுலா வழிகாட்டிகளின் பங்கு மகத்தானது. நம் மாநிலத்தின், நாட்டின் நற்பெயரை உலக அரங்கில் பேணுவதும், சரியான தகவல்களை அளிப்பதும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதும் மற்றும் அவர்கள் மனநிறைவோடு தங்கிச் செல்வதற்கு ஏற்பாடு செய்வதும், சுற்றுலா வழிகாட்டிகளின் கடமையாகும். சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத்தலங்களை சிரமமின்றிக் காண "உன்னத இந்தியா" சுற்றுலா சேவைபுரிவோர்கள் ஆன்லைன் சான்றிதழ் பயிற்சியினை புதிய வரவாக மைய அரசு சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்த 21-2-2020 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த ஆன்லைன் பயிற்சித் திட்டம் தமிழ்நாட்டில் சோதனைத் திட்டமாக தொடங்கப்பட்டது. இதில் 40 நபர்கள் (30 மாணவர்கள், 8 சுற்றுலாத் தொழில்புரிவோர்கள் மற்றும் 2 விடுதி பணியாளர்கள்) பதிவுசெய்து பயிற்சித் திட்டத்தில் சேர்ந்தனர்.

தமிழ்நாடு சுற்றுலாவின் வரலாற்றில் முதன்முறையாக, கடந்த டிசம்பர் 1 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை, 15 நாட்களுக்கு சென்னை பல்கலைக்கழகத்தின் வாயிலாக சுற்றுலா வழிகாட்டிகளுக்கு, வெளிநாட்டு மொழிகளையும் தெரிந்துகொள்ளும்வண்ணம் பிரெஞ்சு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டது.

சுற்றுலா விளம்பரம்

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களைச் சரியான வழியில், பிரபலப்படுத்த, சுற்றுலாத் துறையில் முன்னணி சுற்றுலா தொடர்பான பத்திரிகைகள் முக்கிய இதழ்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களில் வழங்கப்படும் பயண இதழ்கள் ஆகியவற்றில் ஆண்டு முழுவதும் விளம்பரங்களை வெளியிட்டு வருகிறது. விமான நிலையங்கள் மற்றும் இரயில் நிலையங்களில் விளம்பரங்கள் வெளியிடுவது சமீபத்திய விளம்பர நுட்பமாகும். தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது டிஜிடல் விளம்பரங்களை, நியூஸ் 18 மற்றும் இந்து தமிழ் டிஜிட்டல் ஊடகங்களில் விளம்பரங்கள் வெளியிட்டு சுற்றுலாவை வளர்ச்சியடைய செய்கிறது.

2020 மார்ச் 24]

சர்வதேச இதழ்கள் மற்றும் சர்வதேச விமானங்களில் வழங்கப்படும் பயண இதழ்களான காண்டி-நாஸ்ட் டிராவலர், டிராவல் அண்டு லிசர் (இந்தியா மற்றும் தெற்கு ஆசியா), இன்டஸ் (பிரன்ஞ்ச்), ஸ்பைஸ் ரூட் (ஸ்பைஸ் ஜெட் ஏர்வேஸ்) (உள்நாட்டு சர்வதேச இதழ்கள்), கல்ஃப் ஏர், டிஜிட்டல் சுற்றுலா இதழ்கள் (டிராவல் மற்றும் டூர் வோல்டு) போன்ற இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

உள்நாட்டு விமான இதழ்களான சுப யாத்ரா (ஏர் இந்தியா), அவுட்லுக், அவுட்லுக் (பிசினஸ்), அவுட்லுக் டிராவலர், விமன்ஸ் எரா (இந்தி), டிராவல் ஹைட்ஸ், சுவர் சரிதா, கிரிஹ சோபா, தி வீக், லோன்லி பிளானட், நேசனல் ஜாகிராபிக் டிராவலர் (இந்தியா), டிராவல் ஸ்கேஸ்ப் மற்றும் அபியான் (குஜராத்தி) போன்றவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

மின்னணு ஊடக வாயிலான விளம்பரங்கள், சுற்றுலா வளர்ச்சியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகப்படுத்த உறுதுணையாக உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது.

சுற்றுலா விளம்பரப் பொருள்களான "டிஸ்கவர் தமிழ்நாடு", "சுற்றுலா கடவுப் புத்தகம்", "தமிழ்நாடு சுற்றுலா வரைபடம்" தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் பதிப்பிக்கப்பட்டது. அவை, ஜப்பான், ஃப்ரெஞ்சு, ஜெர்மனி, ஸ்பானிஷ், ரஷ்ய மற்றும் சீன ஆகிய அயல்நாட்டு மொழிகளிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இந்த சுற்றுலாக் கையேடுகள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாத் தொழில்புரிவோர் ஆகியோருக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் விநியோகிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சுற்றுலா குறும்படங்கள் தகவல் பதிவியில் (Pen Drive) தயாரிக்கப்பட்டு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் பங்கு கொண்டவர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்நுட்பவியல் நிறுவனம் 1-10-1981 அன்று மைய அரசால் துவங்கப்பட்டது.

இந்த உணவுக் கலைக் கல்லூரி நிறுவனம் 15-12-1998 அன்று மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம் தரம் உயர்த்தப்பட்டது. இந்த நிறுவனத்தை, உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியலுக்கான நிறுவனங்களின் தேசியக் குழு (NIHMCT) ஓர் உறுப்பு நிறுவனமாக சேர்த்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம் குறித்த மூன்றாண்டு பட்டப் படிப்பும், உணவு தயாரிப்பு உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிட பராமரிப்பு, அடுமனைப் பொருட்கள் மற்றும் தின்பண்டங்கள் தயாரித்தல் ஆகியவற்றில் சான்றிதழ் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனம் இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு உதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. உத்தரப் பிரதேசம் நொய்டாவில் உள்ள உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியலுக்கான தேசிய கவுன்சிலின் அங்கீகாரம் பெற்று, பல்வேறு பாடத் திட்டங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் அவசியச் செலவினங்களான பராமரிப்பு, மின் கட்டணம், குடிநீர் கட்டணம் தொலைபேசிக் கட்டணம் போன்றவற்றிற்காக ஒவ்வோர் ஆண்டும் தொடர் மானியமாக ரூ.5.00 இலட்சம் நம் மாநில அரசால் இந்நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.5 கோடியில் கட்டப்பட்ட கூடுதல் கட்டடத்தை 19-2-2020 அன்று துவக்கி வைத்தார்.

சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு

சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு சுற்றுலாப் பயணிகளுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்கும்பொருட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு சுற்றுலாப் பயணிகளுக்கு, குறிப்பாக சுற்றுலாத் தலத்தை தேர்ந்தெடுப்பதில் பாதுகாப்பு முக்கிய காரணியாக கருதப்படுகிறது.

இந்த அமைப்பு தமிழ்நாட்டில் 2010 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு முறையே மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல்,

இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து சுற்றுலாத் தலங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவராக, முதன்மை சுற்றுலா பாதுகாவலர் ஒருவர் சென்னையிலிருந்து பணிபுரிந்து வருகிறார். இவரின்கீழ் மேற்குறிப்பிட்ட தலங்களில் முறையே ஒரு நிலைய சுற்றுலா பாதுகாவலரும், ஐந்து சுற்றுலா பாதுகாவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மொத்தம் 31 நபர்கள் இந்த அமைப்பில் உள்ளனர்.

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதன்மூலம் சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கையைப் பலப்படுத்தும்வகையில் தமிழ்நாட்டில் சுற்றுலா செயல்பட்டு வருகிறது.

இந்த அமைப்பின் நோக்கங்கள்:

- சுகமான பயணத்தினை உறுதி செய்தல்.
- சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரிந்தவுடன், அவர்களின் தாய் மொழியில் முடிந்தவரை சுற்றுலாப் பயணிகளுக்குத் தகவல் பரிமாறுதல்.
- சுற்றுலாத் தலங்களைச் சென்று காண்பதற்குத் தேவையான சுற்றுலா தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் வழங்குதல்.
- நெரிசல் மிக்க அல்லது புதிய இடத்தில் ஏற்படும் எதிர்பாராத தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

சுற்றுலா பாதுகாப்பு அமைப்பின் செயல்பாடு, உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின், பொதுமக்களிடையே பாராட்டைப் பெற்றுள்ளது.

சுற்றுலா உட்கட்டமைப்பு

i) மாநில அரசு நிதித் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஓய்வறைகள், கழிவறைகள், அணுகுசாலைகள், உடை மாற்றும் அறைகள், வாகன நிறுத்துமிடங்கள், குடிநீர், வழிகாட்டும் பலகைகள், மின்

விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கும், அணுகுசாலை அமைப்பதற்கும் பின்வரும் திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன:

அ) உட்கட்டமைப்பு வசதி திட்டங்கள்

2019-2020 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு வசதி திட்டங்கள் விவரம்:

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	மதுரை மாவட்டம், கோரிப்பாளையம், தர்கா பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்	180.21
2.	ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், கொடிவேரி அணை பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்	240.26
3.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம், புளியஞ்சோலை பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல்	24.31
4.	கரூர் மாவட்டம், ஐயர் மலை, அருள்மிகு இரத்தினகிரீஷ்வரர் கோயில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல்	16.10
5	தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அடிப்படை வசதிகள் செய்தல்	36.00
	மொத்தம்	496.88

ஆ) 2019-2020 ஆண்டிற்கான சாலை மேம்பாட்டுப் பணிகள் விவரம்:

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
1.	ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், கொடிவேரி அணை பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்	29.71
2.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம், புளியஞ்சோலை பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்.	8.51
3.	கரூர் மாவட்டம், ஐயர் மலை, அருள்மிகு இரத்தினகிரீஷ்வரர் கோயில் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல்.	105.60
	மொத்தம்	**143.82**

இதர திட்டங்கள்

மேற்கண்ட திட்டங்களைத் தவிர, 2019–2020 ஆம் நிதியாண்டில் சிதம்பரத்திலுள்ள சுற்றுலா அலுவலகத்திற்கு, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கும், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் ஆகிய சுற்றுலா அலுவலகங்களை ரூ.100 இலட்சம் செலவில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளவும் அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்

I) பிரசாத் திட்டம் (புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மீகப் பெருக்கத் திட்டம்)

அ) காஞ்சிபுரம் மேம்பாடு

"புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மிக பெருக்குதல்" திட்டத்தின்கீழ் மைய அரசு சுற்றுலா அமைச்சகம், காஞ்சிபுரம்

மேம்பாட்டிற்காக ரூ.16.48 கோடி ஒப்பளித்து, ரூ.3.30 கோடி முதல் தவணைத் தொகையாகவும், ரூ.4.94 கோடி இரண்டாவது தவணைத் தொகையாகவும் மற்றும் ரூ4.94 கோடி மூன்றாவது தவணைத் தொகையாகவும் விடுவித்துள்ளது (விடுவிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.13.18 கோடி). அனைத்துப் பணிகளும் முடிவுற்றன.

ஆ) வேளாங்கண்ணி மேம்பாடு

"புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மிகம் பெருக்குதல்" திட்டத்தின்கீழ் வேளாங்கண்ணி மேம்பாட்டிற்காக மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ரூ.5.60 கோடி ஒப்பளித்து, ரூ.1.12 கோடி முதல் தவணைத் தொகையாகவும், ரூ.1.47 கோடி இரண்டாவது தவணைத் தொகையாகவும் மற்றும் ரூ.1.89 கோடி மூன்றாவது தவணைத் தொகையாகவும் விடுவித்துள்ளது (விடுவிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.4.48 கோடி). அனைத்துத் திட்டப் பணிகளும் முடிவுற்றன.

II) "சுதேஷ் தர்ஷன்" திட்டம்

மைய அரசின் சுற்றுலா அமைச்சகம் "சுதேஷ் தர்ஷன்" திட்டத்தை அனைத்துத் தொழில்புரிவோரும் வளமான சுற்றுலா அனுபவத்தைப் பெறவும், வேலைவாய்ப்பை மேம்படுத்தவும், ஒரே கருத்து சார்ந்த சுற்றுலா சுற்றுக்களை மேம்படுத்தும் நோக்கத்தோடும் அறிமுகப்படுத்தியுள்ளது. சுதேஷ் தர்ஷன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கடற்கரை சுற்றுலாத் தலங்களான 1. சென்னை (அ. மெரினா கடற்கரை, ஆ.பெசன்ட் நகர் கடற்கரை), 2. மாமல்லபுரம் கடற்கரை, 3. இராமேஸ்வரம் கடற்கரை, 4. கன்னியாகுமரி மாவட்டத்தில் i) கன்னியாகுமரி கடற்கரை, ii) தெற்குறிச்சி மற்றும் iii) மணக்குடி ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுத்து ரூ.74.58 கோடி ஒப்பளித்து ரூ.53.42 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிலச் சீரமைப்பு, மின் விளக்கு வசதி அமைத்தல், பொதுக் கழிப்பிடங்கள், கண்காணிப்புக் கோபுரங்கள் அமைத்தல், நடைபாதை மேம்பாடு, கண்காணிப்புக் கேமரா பொருத்துதல், தகவல் பலகைகள், முதலுதவி வசதி ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 90 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன.

மணப்பாட்டிற்குப் பதிலாக குலசேகரப்பட்டினத்தை தெரிவு செய்து ரூ.465.21 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள திரிவேணி சங்கமம் கூடுதலாக சேர்க்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020 மார்ச் 24]

III) மாமல்லபுரம் மேம்பாடு

மைய அரசு சுற்றுலா அமைச்சகம் மாமல்லபுரத்தை சிறந்த சுற்றுலாத் தலமாக (Iconic site) தெரிவு செய்துள்ளது. இங்கு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த, ரூ.232 கோடி மதிப்பீட்டில், முதற்கட்ட திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீனா அதிபர் இருவரின் மாமல்லபுரம் வருகைக்குப் பிறகு, மாமல்லபுரத்தில் உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா வசதிகளை ஏற்படுத்த ரூ.331.50 கோடி முதற்கட்ட திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்விரு கருத்துருக்களும் பரிசீலனையிலுள்ளன.

IV) முன்னிலைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் மைய அரசின் நிதியுதவி வேண்டி, கீழ்க்காணும் திட்டப் பணிகளுக்கான முதற்கட்ட திட்ட அறிக்கை, மைய அரசு, சுற்றுலா அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது:

1) சுதேஷ் தர்சன் திட்டத்தின்கீழ் இராமாயண சுற்றுலாச் சுற்று மேம்பாட்டிற்காக ரூ.99.84 கோடி.

2) சுதேஷ் தர்சன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் அறுபடை வீடு சுற்றுலாச் சுற்று மேம்பாட்டிற்காக ரூ.99.31 கோடி.

3) புனித யாத்திரை புத்தாக்கம் மற்றும் ஆன்மிக பெருக்குதல் திட்டத்தின்கீழ் இராமேஸ்வரம் மேம்பாட்டிற்காக ரூ.62.31 கோடி.

சுவச்தா ஹி சேவா (தூய்மையே சேவை)

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலகச் சுற்றுலா தின விழா கொண்டாட்டத்தின்போது, மைய அரசின் சுவச்தா ஹி சேவா (தூய்மையே சேவை) முகாம், சுற்றுலாத் துறை சார்பில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

சுற்றுலா விருதுகள்

'சஃபாரி இந்தியா' சுற்றுலா மற்றும் பயணம் சார்ந்த இந்திய வட்டாரப் பத்திரிகை ஆகும். இப்பத்திரிகை நேபாளம், இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் தென்கிழக்கு ஆசிய வட்டத்தில்

உள்ள நாடுகளில் வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகை சுற்றுலா, வானூர்திகள், பயண முகவர்கள், விடுதியாளர்கள், கருத்தரங்கு கூடங்கள், வன விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன குறித்த விவரங்களை வழங்குகிறது. இந்தியாவிலிருந்து வெளியாகும் இப்பத்திரிகையில் மட்டுமே வட்டார மற்றும் பன்னாட்டு சுற்றுலா செய்திகள் அடங்கியுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் சஃபாரி இந்தியா குழுமம் "புனிதப் பயணக் கோயில்களுக்கான சிறந்த மாநிலம்" என்ற பிரிவில் தமிழ்நாட்டை தெரிவு செய்து விருது வழங்கியுள்ளது. இந்த விருது 30-8-2019 அன்று மாண்புமிகு மைய அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்டது.

நிலையான மேம்பாட்டு குறிக்கோள்கள் (SDG)

நீடித்த வளர்ச்சி இலக்குகள் என்பவை பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த வளர்ச்சியினை அடைவதை இலட்சியமாகக் கொண்ட இலக்குகளாகும். இவை 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை உள்ளடக்கியதாகும். நீடித்த வளர்ச்சியை அடைவதற்கான உலக மாற்றத்திற்கான திட்டம் 2030-ஐ கொண்டுள்ள இந்த இலக்குகள் ஐ.நா. அவையின் 193 உறுப்பு நாடுகளாலும், ஐ.நா. பொது அவையின் உச்சி மாநாட்டில் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 2016 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

செழுமையான பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டு பாரம்பரியத்தையும், அழகுமிக்க கட்டடக் கலைநுட்பங்களை உடைய நினைவுச் சின்னங்களையும் தன்னகத்தே கொண்ட இம்மாநிலத்தை, உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு செய்வதன் வாயிலாகவும், தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் முன்னணி சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் சுற்றுலாத் துறையானது செயல்பட்டு வருகிறது. இம்முயற்சிகள் சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்பையும், நாட்டிற்கான அந்நியச் செலாவணியை பெறுவதற்கான உத்திகளையும் உருவாக்கும் என்று இத்துறை கருதுகிறது.

மேற்கண்ட குறிக்கோளினை அடைவதற்கான உத்திகளாவன:

1. சுற்றுலாத் தலங்கள் செறிவாக உள்ள வழித்தடங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான சுற்றுலா உட்கட்டமைப்பை உருவாக்குதல்.

2020 மார்ச் 24]

2. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சந்தைப்படுத்துதலுக்கான கூட்டங்களிலும், விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சிகளிலும், பொருட்காட்சிகளிலும், சாலையோர காட்சிப்படுத்துதல்களிலும் சமுதாய மற்றும் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்.

3. கடலோர சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சியுறச் செய்தல்.

4. பல்வேறு முகமைகளின் மேம்பட்ட ஒத்துழைப்பு மற்றும் முயற்சி.

5. மேம்பட்ட இணைப்பு பயன்பாடுகள் மற்றும் சுற்றுலா சேவைகள் அளித்தல்.

6. சுற்றுப்புறச் சூழல் மற்றும் கலாச்சார ரீதியாக நிலையான மற்றும் சமூகம் உள்ளடக்கிய சுற்றுலாவை மேம்படுத்துதல். சுற்றுப்புறச் சூழலையும், வன விலங்குகளையும் பாதிக்காவண்ணம் சூழல்சார்ந்த சுற்றுலாவை முன்னெடுத்தல்.

7. நீடித்த சுற்றுலாவிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் மற்றும் மனித வளங்களை மேம்படுத்துதல்.

8. வேலைவாய்ப்பு உருவாக்கம், வறுமை ஒழிப்பு, சுற்றுச்சூழலில் மறு உருவாக்கம், பெண்கள் மற்றும் பின்தங்கியுள்ள சமூகக் குழுக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றின் வாயிலாக சுற்றுலாத்தலங்களை மேலாண்மை செய்தல்.

இந்த பன்முகத்தன்மை கொண்டு உத்திகள், வறுமை ஒழிப்பு (இலக்கு-1), பாலின சமத்துவமின்மை (இலக்கு-5), பருவநிலை மாற்றத்திற்கான நடவடிக்கை (இலக்கு-13) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு (இலக்கு-15) ஆகியவற்றை தொடர்புபடுத்துகிறது.

சுற்றுலாத் துறையால் முன்வைக்கப்பட்ட உத்திகள் இலக்கு-12-ன்கீழ் இலக்கை அடைவதில் நிச்சயமாக மாநிலத்தை முன்னெடுக்கும். (12.ஆ.1: நிலையான சுற்றுலா உத்திகள் மற்றும் கொள்கைகள் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கருவிகளுடன் செயல்படுத்தப்பட்ட செயல் திட்டங்கள்). மேலும், இந்தத் துறையானது கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுக்

கருவிகளை வெளிக்கொணரும்பொருட்டு சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் முகமைகளுடன் இணைந்து செயல்படும்.

ஆசிய வளர்ச்சி வங்கி-சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் (IDIPT)

தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு மூலதனத் திட்டம் (IDIPT-TN-T4) தொகுதி-4 திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொகுதி-4 திட்டத்தில் கட்டுமானம் மற்றும் பொருட்கள் கொள்முதல் ஆகியவை அடங்கிய ரூ.250 கோடியிலான 14 துணைத் திட்டப் பணிகள் அடங்கியுள்ளன.

மொத்த ஒதுக்கீட்டுத் தொகையில் 70 விழுக்காடு தொகையினை (ரூ.175 கோடி) ஆசிய வளர்ச்சி வங்கிமூலம் கடனுதவியாகவும், மீதமுள்ள 30 விழுக்காடு தொகை (ரூ.75 கோடி) தமிழக அரசு மூலமாகவும் வழங்கப்படுகிறது. செயல்பாட்டில் உள்ள தொகுதி-4 திட்டப் பணிகள் யாவும் தற்பொழுது முன்னேற்றத்தில் உள்ளன.

14 துணைத் திட்டப் பணிகள் அல்லாது, உள்ளூர் சமூக மக்களின் மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டினை, பாலின செயல் திட்டம்மூலம் (Gender Action Plan) எய்திட ஏதுவாக மாநில அரசின்கீழ் இயங்கிவரும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (Enterpreneurship Development Innovation Institute (EDII), Guindy) என்ற தன்னாட்சி நிறுவனத்தின்மூலம் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி தொகுதி-4 திட்டத்தில் செயல்பாட்டில் உள்ள துணைத் திட்டப் பணிகளில் அடங்கியுள்ள பெரிய திட்டப் பணிகள் பின்வருமாறு:

வ எண்	பணிகளின் விவரம்	ஒப்பந்தத் தொகை (ரூ. கோடியில்)
1.	தமிழ்நாட்டில், 18 மாவட்டங்களில் சுற்றுலாத் தலங்களில் ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைத்தல்	36.88

2020 மார்ச் 24]

வ எண்	பணிகளின் விவரம்	ஒப்பந்தத் தொகை (ரூ. கோடியில்)
2.	தமிழ்நாட்டில், 32 மாவட்டங்களில் சுற்றுலாத் தலங்களில் பிரதிபலிப்பு தகவல் பலகைகள் மற்றும் வழிகாட்டும் பலகைகள் அமைத்தல்	26.49
3.	அ) திருவாரூர் மாவட்டம், ஆலங்குடியில் சுற்றுலாப் பயணியர்களுக்கான 2 தங்கும் விடுதிகள் மற்றும் 2 குடில்கள், அலுவலகம் மற்றும் பயணியர் தகவல் மையம் மற்றும் உணவு விடுதி அமைத்தல்	8.57
	ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் அமைந்துள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் கோயிலுக்கு உணவு விடுதி, யாத்ரீகர்கள் ஓய்வு அறை, சாலை வசதி மற்றும் அடிப்படை வசதிகள் அமைத்தல்	
4.	தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல்லில் சுற்றுலா விருந்தினர் இல்லம் மற்றும் தகவல் மைய மேம்பாட்டுப் பணிகள், திருச்சி நகரில் சுற்றுலாப் பயணியர் தங்கும் விடுதி அமைத்தல், கன்னியாகுமரியில் உள்ள பாரம்பரிய சுற்றுலா மையத்தை புதுப்பித்தல்	6.72
5.	கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் சுற்றுலாப் பயணியர் ஓய்வு இல்லம் மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய பயணியர் தங்கும் அறை, பயணியர் வரவேற்பு மையம் அமைத்தல்	9.44

வ எண்	பணிகளின் விவரம்	ஒப்பந்தத் தொகை (ரூ. கோடியில்)
6.	காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் யாத்ரீகர்கள் தங்கும் அறை, சமையலறையுடன்கூடிய உணவருந்தும் அறை, அலுவலக அறை, சாலை வசதி மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளடக்கிய சுற்றுலாப் பயணியர் ஓய்வு இல்லம் அமைத்தல்	27.00
7.	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீராமானுஜர் பிறந்த இடமான ஸ்ரீபெரும்புதூரில் சுற்றுலாப் பயணியர் தகவல் மையம், கலாச்சார மையம், விடுதிக் கட்டடம், பயணியர் தங்கும் அறை, நூலகம் மற்றும் புத்தக விற்பனை மையம், சாலை வசதி மற்றும் பல அடிப்படை வசதிகளுடன் அமைத்தல்	7.81
8.	ஆறு மாவட்டங்களில் அமையப் பெற்றுள்ள திருச்சி, திருவெண்காடு, கீழ்பெரும்பள்ளம், கும்பகோணம், ஆலங்குடி, தஞ்சாவூர், அம்மாப்பேட்டை மற்றும் அழகர்கோவில் ஆகிய 8 கோயில்களில் பயணியர் ஓய்வு அறை, தண்ணீர் சேமிப்புத் தொட்டி, தரைத் தளம் மற்றும் கழிப்பறை அமைத்தல் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்	12.00
9.	தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு இரண்டு (2) பேருந்துகள் மற்றும் 129 படகுகள் வாங்குதல்	4.95

2020 மார்ச் 24]

வ எண்	பணிகளின் விவரம்	ஒப்பந்தத் தொகை (ரூ. கோடியில்)
10.	கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் பாறைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல இரண்டு படகுகள் (75 பேர் அமரக்கூடிய படகு ஒன்று மற்றும் 150 பேர் அமரக்கூடிய படகு ஒன்று) வாங்குதல்	8.24
11.	தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான தங்கும் விடுதிகளில் சூரிய சக்திமூலம் (Solar Panel) மின் அமைப்பு அமைத்தல்	3.15
12.	மாநில தொல்லியல் துறையில் பாரம்பரியமிக்க 12 நினைவுச் சின்னங்களைப் புனரமைத்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்	26.12
13.	சென்னை எழும்பூரில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல்	10.88
14.	தமிழக சுற்றுலா மேம்பாட்டினை உலகளவில் உயர்த்திடும் வகையில் தகவல் சேகரிப்பு, வடிவமைப்பு, வெளியிடுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள்	20.00

தொகுதி-4 திட்டப் பணிகளைக் கண்காணித்து விரைந்து செயல்படுத்திட திட்ட மேலாண்மை அலகு அலுவலகத்திற்கு கேரள மாநிலம், கொச்சியிலுள்ள கிட்கோ லிமிடெட் நிறுவனம் திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு ஆலோசகராக ரூ.10.49 கோடி மதிப்பீட்டில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கான கால அவகாசம் 27-9-2020 உடன் முடிவடைகிறது.

[2020 மார்ச் 24

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

நமது மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத் தலங்களிலும் ஓட்டல்கள் நிறுவுதல், பல்வேறு வகையான சுற்றுலாக்களை நடத்துதல், படகு குழாம்கள் நடத்துதல், இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்துதல் ஆகிய சுற்றுலாச் சேவைகளை வழங்கிடும் நோக்கத்துடன், 30-6-1971 அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின்கீழ், 53 தொடர் தங்கும் விடுதிகளும், 15 சொகுசு பேருந்துகளும் உள்ளன. இக்கழகம் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற மலைவாழ் சுற்றுலாத் தலங்களில், மாணவர்கள் மற்றும் குறைந்த வருவாய் உள்ள சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இளைஞர் தங்கும் விடுதிகளை நடத்துகிறது. சில ஓட்டல்கள் குத்தகை/உரிமத்திற்கு விடப்பட்டும், மற்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தாலும் நிருவகிக்கப்படுகின்றன.

ஓட்டல்கள் பிரிவு

சுற்றுலாப் பயணிகள்/விருந்தினர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிருவாகத்தின்கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சென்னை தரமணியிலுள்ள உணவக மேலாண்மை நிறுவனத்தின்மூலம் கடந்த 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் சமையலர் அனைவருக்கும் பல்வேறு வகையான உணவு தயாரிப்பு முறைகள் மற்றும் உணவு தரக் கட்டுப்பாடு குறித்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள இரண்டு உணவக மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சில நட்சத்திர ஓட்டல்களின் வாயிலாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களின் மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படகுக் குழாம்கள்

படகுக் குழாம்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத படகுச் சவாரி அனுபவத்தினை அளிக்கும்முகமாக,

2020 மார்ச் 24]

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம் மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள படகுக் குழாம்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதித் திட்டத்தின்கீழ் புதிய படகுகளை வாங்குவதற்கான பணி ஆணையினை வழங்கியுள்ளது. மேலும், மூன்று பிரிவுகளாக படகுகளை வாங்க முடிவு செய்துள்ளது.

- முதல் பிரிவு: 97 மிதி படகுகள் மற்றும் துடுப்புப் படகுகள்.
- இரண்டாம் பிரிவு: 19 இயந்திரப் படகுகள் மற்றும் விரைவுப் படகுகள்.
- மூன்றாம் பிரிவு: 9 வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் 4 வெளிப்புற மோட்டார் படகு.

படகு குழாம், முட்டுக்காடு

இப்படகு குழாமானது, கிழக்குக் கடற்கரை சாலையில் முட்டுக்காடு எனும் இடத்தில், சென்னையிலிருந்து 36 கி.மீ. தொலைவில் மாமல்லபுரம் செல்லும் சாலையில் வங்காள விரிகுடாவின் உப்பங்கழி பகுதியில் அமைந்துள்ளது. இங்கு இயந்திரப் படகு, துடுப்புப் படகு, விரைவுப் படகு மற்றும் வாட்டர் ஸ்கூட்டர்கள் போன்ற 37 வகையான படகுகள் உள்ளன. மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது, உணவகம் ஒன்றினையும் நடத்தி வருகிறது. இப்படகு குழாமிற்கு வார இறுதி நாட்களில் 4,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். சாகச சுற்றுலாவினை ஊக்குவிக்கும் வகையில் இரு ஜெட்ஸ்கை (Jetski) ஸ்கூட்டர்களும் சேர்க்கப்பட்டன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதித் திட்டத்தின்கீழ், 15 எண்ணிக்கையிலான படகுகளை வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், முதலியார்குப்பம்

முதலியார்குப்பம், படகுக் குழாமானது "மழைத்துளி படகு இல்லம்" என்றும் அழைக்கப்படுகிறது. இப்படகுக் குழாம், நீர்வழி விளையாட்டிற்கு வசதியாக கிழக்குக் கடற்கரை சாலையில் வங்காள விரிகுடாவின் உப்பங்கழியையொட்டி, மாமல்லபுரத்திலிருந்து 36 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து 92 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்படகுக் குழாமானது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் ஒடியூர் ஏரியின் உப்பங்கழியில்

அமைக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் பறவைகளின் சொர்க்கமாக இவ்விடம் நிகழ்கிறது. ஒடியூர் ஏரியில் அமைந்துள்ள கடற்கரைத் தீவிற்குத் சென்று திரும்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தீவில் சுற்றுலாப் பயணிகள் சிறிது நேரத்தினைச் செலவிட அனுமதிக்கப்படுகின்றனர். இங்கு உணவகம் ஒன்று சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இயக்கப்படுகிறது. இங்கு துடுப்புப் படகு, மிதி படகு, ஓரிருக்கைப் படகு, வாழைப்பழ வடிவிலான படகு, வாட்டர் ஸ்கூட்டர் மற்றும் விசைப் படகு போன்ற 34 படகுகள் உள்ளன. இரண்டு ஜெட்ஸ்கை (Jetski) வாட்டர் ஸ்கூட்டர்களும் புதியதாக வாங்கப்பட்டுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் நான்கு படகுகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், உதகமண்டலம்

ஊட்டி ஏரி 1823-1825 ஆம் ஆண்டுகளில், மனிதனால் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட ஏரியாகும். நகரின் நடுவே அமைந்துள்ள உதகமண்டலம் ஏரி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒரு முக்கிய படகுச் சவாரிக்கான சுற்றுலாத் தலமாகும். உதகமண்டலம் ஏரி சுமார் 85 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த ஏரியில் படகு சவாரி சுற்றுலாப் பயணிகளின் பிரதான ஈர்ப்பாக உள்ளது. இந்தப் படகுக் குழாமில் மிதி படகு, துடுப்புப் படகு, மற்றும் விசைப் படகு போன்ற 133 படகுகள் உள்ளன. மேலும், இங்கு பூங்கா மற்றும் சிறுவர் தொடர்வண்டி (Mini Train) ஒன்றும் உள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 47 படகுகளை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், பைக்காரா

பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்துள்ள பைக்காரா படகுக் குழாமானது பயணிகளைக் கவரும் கூடுதல் அம்சமாக அமைந்துள்ளது. உதகமண்டலம்-மைசூர் சாலையில், 21 கி.மீ. தொலைவில் எழில் கொஞ்சும் சூழலில் பைக்காரா ஏரி அமைந்துள்ளது. முக்குருத்தி மலை முகட்டிலிருந்து பைக்காரா ஆறு உற்பத்தியாகின்றது. சுற்றுலாப் பயணிகள் ரசித்து மகிழும் சுற்றுலா மையமாக இந்த ஏரி அமைந்துள்ளது. இங்கு 25 இயந்திரப் படகுகள், அதிவேக படகுகள் மற்றும் உணவகம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலுக்கு உகந்த உலர் கழிப்பறை வசதிகள் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 4 படகுகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

படகுக் குழாம், கொடைக்கானல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கொடைக்கானல் ஏரியில் இரண்டு படகுக் குழாம்களை நடத்தி வருகிறது. கொடைக்கானல் ஏரி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு மையமாக அமைந்துள்ளது. மனித முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ள இது, நட்சத்திர வடிவிலான ஏரியாகும். இது கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் 59 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. இங்கு துடுப்புப் படகுகள், மிதி படகுகள் மற்றும் சிக்காரா படகுகள் ஆக மொத்தம் 112 படகுகள் உள்ளன. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த இரண்டு உலர் கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதித் திட்டத்தின்கீழ் 40 படகுகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், ஏற்காடு

ஏற்காடு ஏரியானது, நகரப் பேருந்து நிலையத்தின் அருகில் சுற்றுலாப் பயணிகளை கவரும்வகையில் முக்கிய இடமாக அமைந்துள்ளது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் சேர்வராயன் மலைத் தொடரில் "தென்னகத்தின் அணிகலன்" என அழைக்கப்படும் ஏற்காடு அமைந்துள்ளது. இந்த ஏரி, சேலம் இரயில் நிலையத்தில் இருந்து 38 கி.மீ. தொலைவில் 28.40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு மிதி படகுகள், துடுப்புப் படகுகள் மற்றும் விசைப் படகுகள் ஆக மொத்தம் 55 படகுகள் உள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் 10 படகுகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், பிச்சாவரம்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகில் அமைந்துள்ள பிச்சாவரம், உலகிலேயே இரண்டாவது பெரிய சுரபுன்னைக் காடுகள் ஆகும். பிச்சாவரம் படகுக் குழாம் சுமார் 5.27 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பகுதி கடலிலிருந்து மணல் திட்டுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. சுரபுன்னைக் காடுகள் கொண்ட இவ்விடத்தில், எப்போதும் குறைந்த அளவில் நீர் இருந்து கொண்டே இருக்கும். இங்கு துடுப்புப் படகுகள், இயந்திரப் படகுகள் ஆக மொத்தம் 53 படகுகள் உள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் 5 படகுகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படகுக் குழாம், குற்றாலம்

"தென்னகத்தின் நீருற்று" என்று அழைக்கப்படும் குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் அழகுற அமைந்துள்ளது. குற்றாலம் படகுக் குழாமில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத பருவ காலத்தின்போது, சுற்றுலாப் பயணிகளுக்காக படகு சவாரிகள் செய்து தரப்படுகின்றன. இங்கு துடுப்புப் படகுகள் மிதி படகுகள் மற்றும் கயாக் படகுகள் ஆக மொத்தம் 28 படகுகள் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும்வகையில், அனைத்து படகு குழாம்களிலும் படகு சவாரியின்போது சுற்றுலாப் பயணிகள் உயிர் காக்கும் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொலைநோக்கி கருவி இல்லம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஊட்டியிலுள்ள தொட்டபெட்டாவிலும், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களிலும் தொலைநோக்கி இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லத்தில் ஒரு புதிய குளம்பியகம் அமைக்க வனத் துறைமூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துப் பிரிவு

சுற்றுலா என்பது ஓர் அழகான அனுபவம். அதனை அனுபவிக்கும்வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான பல்வேறு சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. முழு சுற்றுப்பயண நிகழ்வும் ஒரு நல்ல அனுபவத்தை பயணிகளுக்கு வழங்குவதற்காக, 15 உயர்தர சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு, 38 வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இந்த சுற்றுலாக்களில் ஒரு நாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்கு-மேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமானதாகும். இச்சுற்றுலாக்களைத் தவிர, குழுவாகச் செல்ல விரும்புகிற சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அவர்களுக்கேற்ற ஆயத்த சுற்றுலாக்களும், அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகை

2020 மார்ச் 24]

சுற்றுலாக்களுக்கும் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு, கல்விச் சுற்றுலாவும், மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்களுக்கு சிறப்புச் சுற்றுலாக்களுக்கும் ஏற்பாடு செய்கிறது. மேலும், மாமல்லபுரத்தில் ஹாப்ஆன்-ஹாப் ஆப் (எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்) சுற்றுலாவும், 2019-2020 ஆம் நிதியாண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக புதியதாக 13 பருவகால சுற்றுலாக்களையும் துவக்கி நடத்தி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 2015 ஜூன் திங்கள் முதல், திருமலை திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து நாள்தோறும் விரைவு தரிசனத்துக்கான 150 சிறப்பு நுழைவு தரிசன சீட்டுகளைப் பெற்று வாரத்தின் ஏழு நாட்களிலும் விரைவு தரிசன வசதிகளை செய்து தருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சந்தைப்படுத்தும் முயற்சிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாவைப் பிரபலப்படுத்தும் நோக்கில் "ஹாப் ஆன் ஹாப் ஆப்" முறையில் (எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்) சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி நகரில் சிறப்பு பண்டிகை நாட்களில், சலுகை கட்டணமாக ரூ.10/-க்கு பயணத்தை ஏற்பாடு செய்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் "விடுமுறை இல்ல வசதி" திட்டத்தின்கீழ் தங்குவதற்கு வசதிகள் செய்யப்படுகின்றன. இதன்மூலம், ஏர் இந்தியா நிறுவனத்துடன் கடன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏப்ரல் திங்கள் 2019 முதல் ஜனவரி திங்கள் 2020 வரை ரூ.10.65 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களில் "விடுமுறை இல்லம்" வசதிகள்மூலம் தங்குவதற்கு, "முன் வைப்புத் தொகை அறை ஒதுக்கும் திட்டத்தின்"மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு, மத்திய கலால் துறை, தொழிலாளர் மாநில ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகம் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு ஆகியவற்றின்மூலம் முன்வைப்பு தொகையாக ரூ.215 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

பிற மாநில சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் முதற்கட்டமாக மாநிலங்களுக்கிடையிலான சுற்றுலா புரிந்துணர்வு ஒப்பந்தக் கூட்டம் (MOU) 3-1-2020 அன்று மாமல்லபுரத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, கடற்கரை ஓய்வு இல்ல வளாகத்தில் நடத்தப்பட்டது.

பொருட்காட்சிப் பிரிவு

ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு, 2019 உலக சுற்றுலாத் தினத்தில் "சுற்றுலா மற்றும் வேலைவாய்ப்பு அனைவருக்கும் சிறந்த எதிர்காலம்" என்ற மையக் கருத்தினை அறிவித்தது. அதனடிப்படையில் சென்னை தீவுத் திடலில், 46-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்தது. இப்பொருட்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22-12-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இப்பொருட்காட்சியில் 43 அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு, மாநில அரசின் சாதனைகள் மற்றும் பல்வேறு நலத் திட்டங்களை தெரியப்படுத்தும்வகையில் பல்வேறு அரங்குகளை அமைத்தன. மேலும், பலதரப்பட்ட கண்கவர் செயல்முறை மாதிரிகள் மற்றும் எல்.ஈ.டி திரைகளின் (LED Screen) மூலம் விழிப்புணர்வு செய்திகள் வழங்கியதன்மூலம் இவ்வரங்குகள் அதிக அளவில் பார்வையாளர்களைக் கவர்ந்தன. நடப்பாண்டில், 9.91 இலட்சம் பார்வையாளர்கள் பொருட்காட்சியினைப் பார்வையிட்டனர். இதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமானது ரூ.6.73 கோடி வருவாயினை ஈட்டியுள்ளது.

நடப்பாண்டு பொருட்காட்சி சிறப்பம்சங்கள்

இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் அருள்மிகு அத்திவரதரின் நின்ற மற்றும் சயனக் கோல திருவுருவ மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டன. இது பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையினர், பொருட்காட்சிக்கு வரும் பார்வையாளர்களுக்கு ரூ.50/- (நபர் ஒருவருக்கு) கட்டணத்தில் உடல் பரிசோதனை செய்தனர்.

2020 மார்ச் 24]

சுற்றுலாத் துறை அரங்கில் தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களின் பின்னணியில் உடனடி புகைப்படம் எடுக்கும் வசதி செய்யப்பட்டது. இது பொதுமக்களின் வரவேற்பினைப் பெற்றது.

9-3-2020 அன்று பொருட்காட்சி நிறைவு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மின் ஆளுமை

தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்களை சுற்றுலாப் பயணிகளிடம் கொண்டு சேர்ப்பதும் மற்றும் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை ஆன்லைன்மூலம் பதிவு செய்வதும் கழகத்தின் மின் ஆளுமை சேவையின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களை உலகம் முழுவதும் உள்ள சுற்றுலாப் பயணிகள் அறியும்வகையில் முக்கிய சுற்றுலாத் தலங்களின் தகவல்கள், ஒலி மற்றும் ஒளி அமைப்புக் காட்சியுடன் தெரியும்வண்ணம் இணையதளம் (www.tamilnadutourism.org) உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா அம்சங்கள், முக்கிய விழாக்கள், தங்கும் இடங்கள், பயணவழி மற்றும் சுற்றுலா நிகழ்வுகள் ஆகியன இணையதளத்துடன் இணைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத் திட்டங்களை முன்கூட்டியே திட்டமிடும்வண்ணம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் "நிகழ்நேர முன்பதிவு" (Online Real Time Reservation system) முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் அனைத்து தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை எந்த இடத்திலும், எந்த சமயத்திலும் ஆன்லைன்மூலம் நிகழ்நேர முன்பதிவு (Real time Reservation System) செய்துகொள்ள வழிவகை செய்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தேவைப்பட்டால் சுற்றுலாப் பயணிகள் தங்களின் முன்பதிவுகளை இரத்து செய்துகொள்ளவோ, முன்பதிவுகளை முன்தேதிக்கு மாற்றம் செய்யவோ அல்லது பின்தேதிக்கு தள்ளிவைக்கவோ ஆன்லைன் முறையில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறை செயல்பாட்டிலும் டிஜிட்டல் தொழில்நுட்பமானது முக்கிய சேவையாக செயல்பட்டு வருவதால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திருமலை திருப்பதி

தேவஸ்தானத்துடன் இணைந்து பார்கோடு ஒன்றினை உருவாக்கும் புதிய மென்பொருள் திருப்பதி செல்லும் சுற்றுலாப் பயணிகளின் பிரத்யேக வசதிக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் திருப்பதி செல்லும் பயணிகள் வரிசையில் நிற்காமல் திருமலை திருப்பதி தேவஸ்தான மென்பொருள்மூலம் விரைவாக தரிசனம் மேற்கொள்ளும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருவாய் ஆன்லைன் வசதிமூலம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. இதன்மூலம் கடந்த ஆண்டு ரூ.14 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் ஆன்லைன் வசதிமூலம் ஈட்டிய வருவாய் ரூ.15.18 கோடி ஆகும். மேலும், இச்சேவைமூலம் சுமார் 135 நாடுகளிடமிருந்து குறிப்பாக ஸ்பெயின், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பின்லாந்து, கனடா, நார்வே, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர், சீனா, துபாய், மொரீசியஸ், மலேசியா, இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்ற அயல்நாடுகளிலிருந்து, சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களை முன்பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அனைத்து படகுக் குழாம்களின் 'மெய்நிகர் காட்சியை' பார்க்கவும் மற்றும் வழித்தடங்களை சுற்றுலாப் பயணிகள் கண்டறியும்வண்ணம் மெய்நிகர் சுற்றுலா (Virtual Tour) என்ற புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் இயங்கும் அனைத்து ஓட்டல்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிசெய்யும்வகையில் கண்காணிப்பு கேமரா வசதி செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை, புறப்பாடு மற்றும் இதர பயன்பாடுகள், அந்தந்த ஓட்டல்களில் கணக்கீடு செய்ய "ஓட்டல் மேலாண்மை மென்பொருள்" (Hotel Management System) நிறுவப்பட்டு தலைமை அலுவலகம்மூலம் கண்காணிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்கீழ் இயங்கும் படகு இல்லங்களான உதகமண்டலம், பிச்சாவரம், ஏற்காடு,

கொடைக்கானல்-I மற்றும் கொடைக்கானல்-II ஆகிய படகு இல்லங்களில் புதிய மென்பொருள், குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் தங்களின் படகு சவாரியின் கால அளவு, படகுகளின் இருப்பு அறியும்வண்ணம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், படகு சவாரி செய்ய வழங்கப்படும் பயணச் சீட்டுகளில் முறைகேடுகள் ஏதும் ஏற்படாமல் இருக்கவும், சுற்றுலாப் பயணிகள் படகுகளை காலதாமதமின்றி பயன்படுத்திக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் இயங்கும் 16 தமிழ்நாடு ஓட்டல்களில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக அருகலை (Wi-fi) வசதி அறிமுகப்படுத்தி இலவசமாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத் திடலில் நடத்திய 46 ஆம் ஆண்டு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் பார்வையாளர்களுக்கு நுழைவுச் சீட்டு மற்றும் சிறார் இரயில் பயணச் சீட்டுகளை ஆன்லைன்மூலம் பெறும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

தற்போதைய சுற்றுலாத் தகவல்கள் மற்றும் நிகழ்வுகளை சுற்றுலாப் பயணிகள் அறியும்வண்ணம், சமூக வலைதளங்களான Facebook, Twitter, Youtube and Instagram ஆகியவைமூலம் "டிஜிட்டல் சந்தைப்படுத்துதல்" (Digital Marketing) உருவாக்கப்பட்டது. 2019-2020 வருடத்தில் சுற்றுலா நிகழ்வுகள் Facebookமூலம் பிரச்சாரம் செய்யப்பட்டதில், 1.35 கோடி மக்களைச் சென்றடைந்துள்ளன.

பங்கு ஈவுத்தொகை

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2018-2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் 30 விழுக்காடு பங்கு ஈவுத் தொகையான ரூ.3.12 கோடிக்கான காசோலை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 8-11-2019 அன்று வழங்கப்பட்டது.


முடிவுரை

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுற்றுலாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு அளித்துவரும் பேராதரவால் இத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது.

தீவிரமான சுற்றுலா மேம்பாடு, சந்தைப்படுத்தும் பிரச்சாரங்களில் பங்கேற்றல், சுற்றுலாத் தலங்களில் சிறப்பான அடிப்படை வசதிகள், கட்டமைப்புகளின் விளைவாக தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அனைத்து பருவகாலங்களிலும், அனைத்துத் தரப்பு வருவாய்ப் பிரிவினர்களுக்கான சுற்றுலாத் தலமாக தமிழ்நாடு திகழ்கிறது.


இணைப்பு–1

சுற்றுலாத் துறை நிருவாக அமைப்பு



இணைப்பு–2

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிருவாக அமைப்பு



[2020 மார்ச் 24

இணைப்பு-3

சுற்றுலா அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. அரியலூர்
2. சென்னை
3. கோயம்புத்தூர்
4. சிதம்பரம்
5. தருமபுரி
6. ஈரோடு
7. காரைக்குடி
8. கன்னியாகுமரி
9. கொடைக்கானல்
10. கிருஷ்ணகிரி
11. கரூர்
12. மதுரை
13. மாமல்லபுரம்
14. நாமக்கல்
15. பூம்புகார்
16. புதுக்கோட்டை
17. பெரம்பலூர்
18. இராமேஸ்வரம்
19. சேலம்
20. திருச்சிராப்பள்ளி
21. திருநெல்வேலி
22. தஞ்சாவூர்
23. திருவண்ணாமலை
24. திருவள்ளூர்
25. திருவாரூர்
26. தேனி
27. தூத்துக்குடி
28. திருப்பூர்
29. உதகமண்டலம்
30. வேலூர்
31. விருதுநகர்
32. விழுப்புரம்

வெளிமாநிலங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள்

1. புது தில்லி
2. ஆக்ரா
3. ஜெய்ப்பூர்
4. கொல்கத்தா
5. மும்பை
6. பனாஜி (கோவா)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

இணைப்பு-4

சுற்றுலா தகவல் மையங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளவை

விமான நிலையத்தில் அமைந்துள்ளவை	இரயில் நிலையத்தில் அமைந்துள்ளவை
1. சென்னை (பன்னாட்டு முனையம்) 2. சென்னை (உள்நாட்டு முனையம்) 3. கோயம்புத்தூர் 4. மதுரை 5. திருச்சிராப்பள்ளி 6. தூத்துக்குடி 7. சேலம்	1. சென்னை எழும்பூர் 2. கோயம்புத்தூர் 3. மதுரை 4. திருச்சிராப்பள்ளி 5. திருநெல்வேலி
பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளவை	**பிற இடங்களில் அமைந்துள்ளவை**
1. சென்னை (கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம்)	1. கூடலூர் (நீலகிரி மாவட்டம்) 2. இராமேஸ்வரம் (கோயில் வளாகம்) 3. தஞ்சாவூர் (ஓட்டல் தமிழ்நாடு) 4. பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)

வெளிமாநிலங்களில் அமைந்துள்ளவை
1. பெங்களூரு இரயில் நிலையம் (கர்நாடக மாநிலம்)
2. ஐதராபாத் (தெலுங்கானா மாநிலம்)
3. திருவனந்தபுரம் (கேரள மாநிலம்)
4. அகமதாபாத் (குஜராத் மாநிலம்)
5. புவனேசுவரம் (ஒடிசா மாநிலம்)

[2020 மார்ச் 24

கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள், தொல்லியல் (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021

முன்னுரை

1. தமிழ்நாடு கலை மற்றும் பண்பாட்டில் பல்வேறு கலை வடிவங்களை உள்ளடக்கி முதன்மை மாநிலமாக திகழ்கின்றது. ஒவ்வொரு கலை வடிவமும் தனது தனித்தன்மையுடன் தகுதி வாய்ந்து விளங்குகின்றது. சமுதாயத்தின் வெவ்வேறு பரிணாமங்களின் முன்னேற்றத்தையும் வளர்ச்சிகளையும் எடுத்துரைப்பதாக கலை மற்றும் பண்பாடு அமைகின்றது. தேசிய பாரம்பரியத்தில் தமிழகத்தின் பங்கானது தன்னிகரற்றது. கலையும் பண்பாடும் நமது சமூகத்தின் சிறந்த தொன்மையினைப் பிரதிபலிக்கின்றது. ஓவியம், சிற்பம், இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகிய கலைகள் நமது சிறப்புமிக்க தமிழ் பண்பாட்டின் பெருமையைப் பிரதிபலிக்கின்றன.

கலை மற்றும் பண்பாட்டின் பாரம்பரியத்தை பேணிப் பாதுகாக்கவும், வளர்த்திடவும், நிகழ்ச்சிகள் வழங்கவும் கலை பண்பாட்டுத் துறை என்ற தனித் துறையானது மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களால் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு துறைகளின்கீழ் பிரிந்து செயல்பட்டு வந்த கலை மற்றும் பண்பாட்டு நிறுவனங்களை சிறப்பாக ஒருங்கிணைத்து முறைப்படுத்தி ஒரு குடையின்கீழ் கொண்டுவரும் பொருட்டு கலை பண்பாட்டு இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது.

பொதுத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மற்றும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், கல்வித் துறையின்கீழ் செயல்பட்டு வந்த அரசு இசைப் பயிற்சி மையங்கள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின்கீழ் செயல்பட்டு வந்த அரசு கைத்தொழிற்

கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய அமைப்புகள் கலை பண்பாட்டுத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன.

கலை பண்பாட்டுத் துறையின் பல்வேறு அரசு கலைப் பணித் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக கலை பண்பாட்டு ஆணையர்/இயக்குநரின் தலைமையின்கீழ் இணை இயக்குநர், மண்டல உதவி இயக்குநர்கள், கணக்கு அலுவலர், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மற்றும் பதிவாளர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு நிகழ்த்துக் கலைக் கல்லூரிகள் மற்றும் நுண்கலைக் கல்லூரிகளின் முதல்வர்கள், இசைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் உதவியாக செயல்பட்டு வருகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கலை பண்பாட்டுத் துறை

இயக்குநர் → இணை இயக்குநர்

இயக்ககம்

பதவி	எண்ணிக்கை
கணக்கு அலுவலர்	1
உதவி இயக்குநர் / செயல் அலுவலர் / நிதியாளர்	9
கண்காணிப்பாளர்	11
உதவியாளர்	26
சுருக்கெழுத்து தட்டச்சர்	4
இளநிலை உதவியாளர்	40
தட்டச்சர்	9
ஓட்டுநர்	9
பதிவுரு எழுத்தர்	7
அலுவலக உதவியாளர்	56
காவலர்	25
தோட்டக்காரர்	3
பெருக்குநர் / சுகாதார பணியாளர்	7
	207

கல்லூரிகள்
(இசை / கவின் / சிற்பம் & கட்டடக் கலை)

பதவி	எண்ணிக்கை
முதல்வர்	6
துறைத் தலைவர்	4
இணை பேராசிரியர்	3
முதுநிலை விரிவுரையாளர்	17
பேராசிரியர் (இசைக்கல்லூரி)	7
விரிவுரையாளர் / உதவி பேராசிரியர்	32
விரிவுரையாளர் (இசை கல்லூரி) (மாநில ஊதியம்)	47
போதகர் / ஆசிரியர்	11
தொழில் நுட்ப பணியாளர்	20
திறன் பெற்ற உதவியாளர்	18
திறன் பெறா உதவியாளர்	29
	194

இசைப்பள்ளிகள்

பதவி	எண்ணிக்கை
தலைமை ஆசிரியர்	17
இசை ஆசிரியர்கள் (குரலிசை / நாதஸ்வரம் / தவில் / தேவாரம் / பரதநாட்டியம் / வயலின் / மிருதங்கம்)	123
	140

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பதவி	எண்ணிக்கை
தலைவர்	1
உறுப்பினர் செயலாளர்	1
நிர்வாக அலுவலர்	1
உதவி செயலாளர்	1
கண்காணிப்பாளர்	1
உதவியாளர்	2
இளநிலை உதவியாளர்	2
தொழில் நுட்ப பணியாளர்	1
பதிவுரு எழுத்தர்	1
காவலர்/ பெருக்குநர் (தொகுப்பூதியம்)	2
	13

தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரியம்

பதவி	எண்ணிக்கை
உறுப்பினர் செயலாளர்	1
செயலாளர்	1
நிர்வாக அலுவலர்	1
கணக்கர்	1
சுருக்கெழுத்து தட்டச்சர்	1
இளநிலை உதவியாளர் (தினக்கூலி)	7
அலுவலக உதவியாளர்	1
	13

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை & கவின் கலை பல்கலைக் கழகம்

பதவி	எண்ணிக்கை
துணை வேந்தர்	1
பதிவாளர்	1
தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்	1
நிதி அலுவலர்	1
துணை பதிவாளர்	1
உதவி பேராசிரியர்	13
உதவி பதிவாளர்	1
கண்காணிப்பாளர்	3
உதவி நிரலாளர்	1
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III	3
இளநிலை உதவியாளர் / தரவு ஏற்றுபவர் / மின் வினைஞர்	7
பதிவுரு எழுத்தர்	1
அலுவலக உதவியாளர்	3
ஓட்டுநர்/தோட்டக்காரர் /காவலர்/பெருக்குநர்	7
	44

துறையின் குறிக்கோள்கள்

1.1 கலை பண்பாட்டுத் துறையின் முக்கியக் குறிக்கோள்களாவன:

- செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாத்து வளர்த்தல்;
- இசைக் கல்வியினையும், நுண்கலைக் கல்வியினையும், அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லுதல்;
- அனைத்து கலை வடிவங்களையும் கலை நிகழ்ச்சிகள்மூலம் மக்களிடையே கொண்டு சேர்த்தல்;
- செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களை ஊக்குவிக்கும்வண்ணம் கலை நிகழ்ச்சிகள் வழங்குதல்;
- கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்பளித்து அதன்மூலம் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துதல்;
- நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதன்மூலம் குறிப்பாக, தமிழக நாட்டுப்புறக் கலைகள் உள்ளிட்ட பல்வேறு கலைகள் மற்றும் அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களைப் பாதுகாத்தல்;
- அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்;
- செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மாநில/ மாவட்டக் கலை விருதுகள் வழங்கி கௌரவப்படுத்துதல்;
- திறமை வாய்ந்த இளம் சிற்பக் கலைஞர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களை ஊக்குவிக்கும்விதமாக கலைக் கண்காட்சிகள் நடத்தி விருதுகள் வழங்குதல்;
- கலைக் கல்வியில் திறனை மேம்படுத்திடும் பொருட்டு ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்;
- இசைக் கல்லூரிகளில் கணினிமூலம் இசையினை நவீன முறையில் கற்பித்தல் மற்றும் ஒலி-ஒளி நூலகத்தினை ஏற்படுத்துதல்;
- இசை, கட்டடக் கலை உள்ளிட்ட பிரிவுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வாய்ப்பளித்தல்.

[2020 மார்ச் 24

துறையின் செயல்பாடுகள்

1.2 இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள், ஓவியம் மற்றும் சிற்பம் முதலான கலைகளை இளம் தலைமுறையினருக்கு/ மாணாக்கர்களுக்கு கவின் கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிகழ்த்துக் கலை கல்வி நிறுவனங்கள் வாயிலாக பயிற்றுவித்தல், தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை போற்றி பேணிப் பாதுகாத்தல், வளர்த்தல், நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல் ஆகிய பணிகளையும் இத்துறை சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், கலைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல் மற்றும் தமிழகத்தின் பண்பாட்டுக் கலைகளை வெளிமாநிலத்தவரும், வெளிநாட்டினரும் அறிந்துகொள்ளும் வகையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற கலைப் பணித் திட்டங்களை இத்துறை மேற்கொண்டு வருகிறது. ஜவகர் சிறுவர் மன்றம் உள்ளிட்ட கலை நிறுவனங்களுக்கு தொடரும் செலவினம் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு மாநில அரசிடமிருந்து நல்கை பெற்று வழங்கும் ஒரு முகமையாக கலை பண்பாட்டுத் துறை திகழ்கின்றது.

இத்துறையின்கீழ் செயல்படும் ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைப் பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகியவற்றின்மூலம் இளைய தலைமுறையினருக்கு இசைக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. மாணாக்கர்களை மிகச் சிறந்த ஓவியர்களாகவும், சிற்பிகளாகவும் உருவாக்குவதற்கு ஏதுவாக இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் ஓர் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி நுண்கலைக் கல்வி மற்றும் பயிற்சிகள் வழங்கி வருகின்றன.

2020 மார்ச் 24]

ஐந்து வயது முதல் பதினாறு வயதிற்குட்பட்ட சிறார்களின் கலை ஈடுபாட்டினை வளர்க்கும்முகமாக தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் 40 ஜவகர் சிறுவர் மன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியரின் தலைமையில் செயல்படும் "மாவட்டக் கலை மன்றங்கள்"மூலம் மாவட்டக் கலை விருதுகள் வழங்கப்படுவதுடன், மாவட்டங்களில் கலை தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள ஓவியர்களையும், சிற்பிகளையும் ஊக்குவிப்பதற்காக மாநில அளவிலான கலைக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

பாரம்பரிய தமிழகக் கலைகளை வளர்ப்பதற்காகவும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காகவும், கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் நல்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 100 நாட்டுப்புறக் கலை வடிவங்களில் ஈடுபட்டுவரும் நாட்டுப்புறக் கலைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்மூலம் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

1.3 தமிழகக் கலைகள் மற்றும் அதன் சிறப்புமிக்க பண்பாடு குறித்த விழிப்புணர்வை தமிழக மக்களிடையே கொண்டு செல்லும்பொருட்டும், அரசின் கலைப் பணித் திட்டங்களை மாவட்டங்களில் ஒருங்கிணைக்கவும், நான்கு முதல் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மாவட்ட நிருவாகம், இதர அரசுத் துறைகள், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் கலை நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களில் அரசின் கலைப்பணித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம், தஞ்சாவூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஏழு இடங்களில் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டுவரும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கீழ்வருமாறு மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றன:

வ. எண்	மண்டலம்	மாவட்டங்கள்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்
2	சேலம்	சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல்
3	தஞ்சாவூர்	தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கள்ளக்குறிச்சி
4	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர்
5	மதுரை	மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி
6	திருநெல்வேலி	திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் தென்காசி
7	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர்

இம்மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக மாவட்டங்களில் கலை விழாக்கள், கலைப் போட்டிகள், கலைப் பயிற்சி முகாம்கள் ஆகியன நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், சிறந்த கலைஞர்களுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் ஜவகர் சிறுவர் மன்றங்கள் ஆகியவற்றின் நிருவாகம் மற்றும் திட்டப் பணிகளை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

ஒவ்வொரு மண்டலக் கலை பண்பாட்டு மையம்மூலம் அம்மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களில், அம்மாவட்டங்களின் முக்கியத்துவம் வாய்ந்த கலை விழாக்கள் நடத்தப்படுகின்றன.

வ. எண்	மண்டலம்	கலை விழாக்கள்
1	காஞ்சிபுரம்	1. கார்த்திகை தீபத் திருவிழா (திருவண்ணாமலை மாவட்டம்) 2. திருத்தணி ஆடிக்கிருத்திகை விழா (திருவள்ளூர் மாவட்டம்) 3. மகாசிவராத்திரி விழா (காஞ்சிபுரம் மாவட்டம்) 4. ஏலகிரி கோடை விழா (வேலூர் மாவட்டம்-தற்பொழுது திருப்பத்தூர் மாவட்டம்) 5. ஜவ்வாது மலை கோடை விழா (திருவண்ணாமலை மாவட்டம்)
2	சேலம்	1. ஏற்காடு கோடை விழா (சேலம் மாவட்டம்) 2. ஆடிப்பெருக்கு விழா (தருமபுரி மாவட்டம்) 3. மாங்கனி விழா (கிருஷ்ணகிரி மாவட்டம்) 4. வல்வில் ஓரி விழா (நாமக்கல் மாவட்டம்)
3	தஞ்சாவூர்	1. சீர்காழி தமிழிசை மூவர் விழா (நாகப்பட்டினம் மாவட்டம்) 2. இராஜராஜ சோழன் சதய விழா (தஞ்சாவூர் மாவட்டம்) 3. ஆழித்தேர் விழா (திருவாரூர் மாவட்டம்) 4. தமிழிசை விழா (தஞ்சாவூர் மாவட்டம்)
4	திருச்சிராபள்ளி	1. வைகுண்ட ஏகாதசி விழா (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) 2. அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா, திருமழப்பாடி (அரியலூர் மாவட்டம்) 3. மகா சிவராத்திரி விழா திருநெடுங்குடி (புதுக்கோட்டை மாவட்டம்)

5	மதுரை	1. கொடைக்கானல் கோடை விழா (திண்டுக்கல் மாவட்டம்) 2. சித்திரை திருவிழா (மதுரை மாவட்டம்)
6	திருநெல்வேலி	1. பாவை விழா (விருதுநகர் மாவட்டம்) 2. சாரல் விழா (திருநெல்வேலி மாவட்டம்-தற்பொழுது தென்காசி மாவட்டம்) 3. அருவித் திருவிழா மற்றும் குமாரித் திருவிழா (கன்னியாகுமாரி மாவட்டம்)
7	கோயம்புத்தூர்	1. உதகை கோடை விழா (நீலகிரி மாவட்டம்) 2. தீரன் சின்னமலை விழா (ஈரோடு மாவட்டம்) 3. வால்பாறை கோடை விழா (கோயம்புத்தூர் மாவட்டம்) 4. ஆடிப்பெருந்திருவிழா (திருப்பூர் மாவட்டம்)

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தனியாக மாவட்டங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தென்னகப் பண்பாட்டு மையம், சுற்றுலாத் துறை, மாவட்ட நிருவாகம் மற்றும் தனியார் கலை அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்தும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அயல்நாடுகளில் கலைப் பரிமாற்றத் திட்டத்தின்கீழ், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் தமிழகத்தின் பராம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு மலுமிச்சம்பட்டியில் ரூ.75 இலட்சம் செலவில் புதிய கட்டடம் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

மாவட்டக் கலை மன்றங்கள்

1.4 ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள அரிய கலைகளைப் பாதுகாத்தல் மற்றும் நமது பாரம்பரியக் கலை வடிவங்களைப் போற்றி வளர்த்தல், நிகழ்ச்சிகள் வழங்குதல் ஆகிய பணிகளையும் மாவட்டக் கலை மன்றங்கள் மேற்கொண்டு வருகின்றன. மாவட்டக் கலை மன்றங்கள்மூலம் சிறந்த கலைஞர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும்விதமாக மாவட்ட அளவிலான கலை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைத் துறையில் சிறந்து விளங்கும் 5 கலைஞர்களுக்கு அவர்களின் வயது மற்றும் திறமையின் அடிப்படையில் கலை விருதுகள் வழங்கும் திட்டம் 2002–2003 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டு முதல் கலை விருதுகளுக்குத் தேர்வு செய்யப்படும் கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகையானது இரட்டிப்பாக உயர்த்தப்பட்டு பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

வ. எண்	**வயது பிரிவு**	**விருது**	**விருதுத் தொகை**
1	18 அகவை மற்றும் அதற்குட்பட்ட அகவைப் பிரிவினர்	கலை இளமணி	ரூ.4,000/-
2	19 முதல் 35 வரை உள்ள அகவைப் பிரிவினர்	கலை வளர்மணி	ரூ.6,000/-
3	36 முதல் 50 வரை உள்ள அகவைப் பிரிவினர்	கலைச் சுடர்மணி	ரூ.10,000/-
4	51 முதல் 60 வரை உள்ள அகவைப் பிரிவினர்	கலை நன்மணி	ரூ.15,000/-
5	61 அகவை மற்றும் அதற்கு மேற்பட்ட அகவைப் பிரிவினர்	கலை முதுமணி	ரூ.20,000/-

இத்திட்டம் தொடங்கப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டு முதல் நமது மாநிலத்தில் இதுவரை 2,400 மாவட்டக் கலை விருதுகள் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையால் 2002-2003 ஆம் ஆண்டு முதல் மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக கலைஞர்களுக்கு "அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுதல், நிதி உதவி பெறுதல் மற்றும் பயணக் கட்டணச் சலுகை பெறுதல் ஆகியவற்றிற்கு இவ்வடையாள அட்டைகள் கலைஞர்களுக்கு பயனுள்ளதாக அமைகிறது. 31-12-2019 வரை 55,887 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

கலைக் கல்வி நிறுவனங்கள்:

1.5 இசைக் கல்வி பயிலகங்கள்

"ஆசைதரும் கோடி அதிசயங்கள் வைத்ததிலே
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ
காட்டு நெடுவானம் கடலெலலாம் விந்தையெனில்
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா"

என மகாகவி பாரதியார் இசையின் மகத்துவத்தை தெரிவித்துள்ளார். ஓசையின் இன்பத்திற்கு உவமையே இல்லை என்ற பாரதி, "பாட்டு ஒன்றே யாவினும் ஆச்சரியம்" என்கிறார்.

நமது தொன்மையான கலைகளான இசையும், நடனமும் நமது பாரம்பரிய பண்பாட்டினை இன்றளவும் பிரதிபலிக்கிறது.

இசையானது மன இறுக்கத்தினைப் போக்கி புத்துணர்ச்சி அளிப்பதுடன், மூளையைக் கூர்மையாக்குகிறது.

கலை பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் இசைக் கல்வி பயிலகங்கள் இசைக் கல்வியினை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதன்மூலம் இசையின் மகத்துவம் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. தொன்மையான தமிழிசை, கலை மற்றும் இசை போன்ற பல்வேறு பாடப் பிரிவுகளை தமிழகத்திலுள்ள இளைய சமுதாயத்தினருக்கு கற்பித்து பயிற்சி அளிப்பதன்மூலம் அவர்களை புகழ்மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்குவதற்காகவும், இளைய தலைமுறையினருக்கு பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்திடவும்,

2020 மார்ச் 24]

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்

1.6 நிகழ்த்துக் கலை, கவின் கலை, கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலை ஆகிய அனைத்து கலைக் கல்விப் பிரிவுகளிலும் தரமான கல்விப் பயிற்சி வழங்குவதற்கும், மேற்கண்ட துறைகளில் ஆராய்ச்சிக்கான வழிவகைகள், கல்வி மேம்பாடு மற்றும் அத்துறை தொடர்பான அறிவுசார் பரப்புரை செய்வதற்கும், பாரம்பரிய இந்திய இசை, நிகழ்த்துக் கலை மற்றும் கவின் கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றைப் பாதுகாத்து, வளர்த்து, பிரபலப்படுத்தி மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவும், மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி "தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்" தோற்றுவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 14-11-2013 அன்று தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகச் சட்டம், 2013 இயற்றப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே இசை, நுண்கலைகள், சிற்பக் கலை ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும் ஓர் ஒப்பற்ற பல்கலைக்கழகமாகும். தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஆவார். இப்பல்கலைக்கழகம் தற்காலிகமாக சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் சட்டம், 2013 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின்படி "தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்" என்ற பெயரானது "தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம்" என மாற்றம் செய்யப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய கலைப் பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தில் 2015-2016 ஆம் கல்வியாண்டு முதல் முனைவர் பட்ட ஆய்வு (Ph.D) பாடத் திட்டமும், 2016-2017 ஆம்

கல்வியாண்டு முதல் கூடுதலாக ஓவியம் மற்றும் காட்சிவழித் தொடர்புத் துறையில் வார இறுதி நாட்கள் பயிற்சியாக மூன்றாண்டு முதுகலை பட்டப் படிப்புகளும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பல்கலைக்கழகத்தில், 2018-2019 ஆம் கல்வியாண்டு முதல் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டப் படிப்பு தொடங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

கலை பண்பாட்டுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் செயல்படும் இரண்டு அரசு கவின்கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் செயல்படும் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் அரசு நிதியுதவிபெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகளும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், தமிழிசைக் கல்லூரி, இராஜா அண்ணாமலை மன்றம், சென்னை மற்றும் சத்குரு சங்கீத வித்யாலயம், மதுரை ஆகிய இரண்டு கல்லூரிகளும் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக (திருத்த) சட்டம், 2016-ன்படி, இப்பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகச் சட்டம் 2013-ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின்படி, சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனமானது பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இப்பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் பயிலகங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதை முறைப்படுத்திட புதிய திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு தற்போது 13 சுயநிதிக் கல்லூரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம் 2013 இல் தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 20-2-2020 அன்று முதன்முதலாக பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது வரலாற்று நிகழ்வாகும். இப்பட்டமளிப்பு விழாவில் இப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்) அவர்களால் மிருதங்க மேதை பத்மவிபூஷண் உமையாள்புரம் திரு. கே. சிவராமன்

அவர்களுக்கும், சிறந்த தெருக்கூத்துக் கலைஞரான கலைமாமணி திரு. பி.கே. சம்பந்தன் அவர்களுக்கும் கௌரவ டாக்டர் பட்டங்களும் 1,968 மாணாக்கர்களுக்கு பட்டங்களும் வழங்கப்பட்டன.

இப்பல்கலைக்கழகம் சிறப்புடன் செயல்படுவதற்கும், முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆட்சிமன்றக் குழு (சிண்டிகேட்), பாடத்திட்டக் குழு, கல்விக் குழு, நிதிக் குழு ஆகியவை அமைக்கப்பட்டு பல்கலைக்கழகத்தில் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்பட்டு, கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2.03 கோடி தொகை அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டிற்காக ரூ.1.00 கோடி நல்கையாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

அரசு இசைக் கல்லூரி, சென்னை

1.7 சென்னை அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

அரசு இசைக் கல்லூரி, மதுரை

1.8 மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. குரலிசை பாடப் பிரிவில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு ரூ.95.00 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் பொதுப் பணித் துறையின்மூலம் கட்டப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

1.9 கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், குரலிசை, வயலின், வீணை ஆகிய மூன்று பாடப் பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

1.10 திருவையாறு அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகளும், குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பு மற்றும் இரண்டாண்டு முதுகலை பட்ட மேற்படிப்பும், இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும், இசையில் முனைவர் பட்டம் பெறும்வகையில் ஆராய்ச்சிப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணக்கர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி ஊக்குவிக்கும்பொருட்டு, அரசால் மாதந்தோறும் ரூ.500/- வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு "படிப்புதவித் தொகை" வழங்கப்பட்டு வருகிறது.

மாலை நேர இசைக் கல்லூரி மையங்கள்

1.11 இசைக் கல்வியினை பணிக்கு செல்பவர்களும் கற்றுக்கொள்ளும் நோக்கில், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று கல்லூரி வளாகங்களில் "மாலைநேர இசைக் கல்லூரி மையங்கள்" தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. சென்னை, அரசு இசைக் கல்லூரி வளாக மையத்தில், குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகிய பிரிவுகளிலும், மதுரை இசைக் கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளிலும், கோயம்புத்தூர் இசைக் கல்லூரி வளாக மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகிய பிரிவுகளிலும் ஈராண்டு சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

மாவட்ட அரசு இசைப் பள்ளிகள்

1.12 இசையில் ஆர்வமிக்க இளவயதினரை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும், தமிழ் இசையினை மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு சேர்க்கும் பொருட்டும், 17 மாவட்டங்களில் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி, ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய 17 இடங்களில் அரசு இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின், மிருதங்கம் ஆகிய ஏழு கலைகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும்விதமாக, தமிழக அரசால் மாதந்தோறும் ரூ.400/- வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு "படிப்புதவித் தொகை" வழங்கப்பட்டு வருகிறது.

மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் உள்ள வயலின், நாதசுரம், தேவாரம், வாய்ப்பாட்டு, தவில் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பல்வேறு கலைப் பிரிவுகளில் 17 எண்ணிக்கையில் இசையாசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு ரூ.100.00 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையினரால் புதிதாக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

கவின்கலை மற்றும் கட்டடக் கலைக் கல்வி நிறுவனங்கள்

1.13 ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் கோயில் கட்டடங்கள் நமது தமிழகத்தின் தொன்மைமிக்க பண்பாட்டினை பிரதிபலிப்பதோடு, இளம் தலைமுறையினருக்கு அவற்றை எடுத்துரைக்கின்றன. அரசு கவின்கலைக் கல்லூரிகளும், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியும் புகழ்பெற்ற ஓவியர்களையும், தலைசிறந்த சிற்பிகளையும் உருவாக்கி உள்ளன.

அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை

1.14 சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியானது (தொடக்கத்தில் மெட்ராஸ் ஓவியப் பள்ளி என அழைக்கப்பட்டது)

[2020 மார்ச் 24

1850 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தியாவிலேயே பழமையான கல்லூரியாகும். அலெக்சாண்டர் ஹண்டர் என்பவரால் தொடங்கப்பட்ட இத்தனியார் பயிலகமானது, 1952 ஆம் ஆண்டு தொழிற்கலைப் பள்ளியாக அரசின் வசம் வந்தது. பின்னர் அரசு கவின்கலைக் கல்லூரியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில், சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சி வழித்தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக் கலை (Painting), சிற்பக் கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கவின்கலை பட்டப் படிப்புகளும், பதிப்போவியத் துறை நீங்கலாக, இதர பிரிவுகளில் இரண்டாண்டு முதுகவின்கலை பட்ட மேற்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அரசு கவின்கலைக் கல்லூரி, கும்பகோணம்

1.15 கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியானது 1857 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதென்பதுடன், இந்தியாவில் மிக பழமையான சிறந்த கலை பயிலகங்களில் இதுவும் ஒன்றாகும். கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் காட்சிவழித் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக் கலை (Painting) மற்றும் சிற்பக் கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு கால இளங்கவின்கலை பட்டப் படிப்புகளும், இரண்டாண்டு கால முதுகவின்கலை பட்ட மேற்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரி மாணவர்களால், தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு தஞ்சாவூரில் சுவர் ஓவியங்கள் வரையப்பட்டன என்பதுடன் இவற்றை அனைத்துத்தர மக்களும் பாராட்டினர். சுவர் ஓவியமானது சுவரிலோ அல்லது நேரடியாக மேற்கூரை அல்லது இதர நிரந்தரமான தளத்திலோ வரையப்படும் கலைப் பணியாகும்.

அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

1.16 கட்டடக் கலை, சிற்பக் கலை வரலாற்றில் முக்கிய இடமும், பல்லவர் காலத்துச் சிற்பங்களைப் பறைசாற்றும் சிற்ப நகரமாகவும் விளங்குகின்ற மாமல்லபுரத்தில் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில், மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Sculpture), கற்சிற்பம், சுதைச்சிற்பம், மரச்சிற்பம், உலோகச் சிற்பம், மரபு ஓவியம் மற்றும் வண்ணக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு இளங்கலை பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

1.17 திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியானது அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாக செயல்பட்டு வருகிறது. கலை பண்பாட்டுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இக்கல்லூரிக்கு கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பாடப் பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகளும், மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகளும், இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், ஆய்வாளர்களுக்கு ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வும், முனைவர் பட்ட ஆய்வும் இக்கல்லூரியில் மேற்கொள்ளப்படுகின்றன.

2017-2018 ஆம் கல்வியாண்டிலிருந்து இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும்விதமாக, அரசால் மாதந்தோறும் ரூ.500/- வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம்

1.18 ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் இந்திய கர்நாடக இசையினை (குரலிசை மற்றும் வாத்திய இசை) இளம் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பயிற்சி அளிப்பதற்காக மதுரையில் தொடங்கப்பட்டது. சங்கீத சிரோன்மணி எனும் நான்காண்டு பட்டயப் படிப்பு இவ்வித்யாலயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இசைக் கல்லூரியாக மேம்படுத்தப்பட்டது. அப்போதிலிருந்தே ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் என்ற பெயரில் முறைசாரா இசைக் கல்வியினை மாலைநேர வகுப்புகளிலும் இசைக் கல்வியினைப் பயிற்றுவிக்கும் முழுமையான கல்லூரியாகவும் அருகருகே நடத்தப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

இந்த இசைக் கல்லூரிக்கு 1966 ஆம் ஆண்டு முதல் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன் பின்னர், இப்பயிலகமானது 2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்று செயல்படுகிறது.

யுனெஸ்கோ அங்கீகாரம்

1.19 படைப்பாக்கம் மற்றும் இசைக்கான பங்களிப்பு ஆகியவற்றிற்கான படைப்பு நகரங்களுக்கான சிறப்புப் பட்டியலில் தற்போது உலகளவில் தேர்வு செய்யப்பட்ட நகரங்களில், சென்னை நகரையும் சேர்த்துக் கொண்டு "யுனெஸ்கோ" அமைப்பு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவ்வரிசையில் உலகம் முழுவதும் மொத்தம் 180 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. சென்னை படைப்பாக்க இசை நகரமாக அங்கீகாரம் பெற்றதை கொண்டாடும்விதமாக ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு சென்னையில் இசை விழாவானது அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தில் 21-6-2019 அன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சி நாளன்று காலையில் அரசு இசைக் கல்லூரி மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளி ஆசிரியர்களின் இசை நிகழ்ச்சிகளும், மாலையில் சிறந்த கர்நாடக இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும் தொடர்ந்து விமரிசையாக நடைபெற்றன. அதன் பின்னர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் இசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

உலக இசை தினத்தினை முன்னிட்டு பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளி மாணாக்கர்களுக்கு இசைப் போட்டிகளும், இசை வல்லுநர்களின் இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய நான்கு இசைக் கல்லூரிகளிலும் இசை நிகழ்ச்சிகள், இசைக் கருத்தரங்குகளும், இசை வினாடி-வினா நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

1.20 ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட பள்ளிக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்குதல், அவர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணர்தல், கலைக் கல்வி வழங்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு சென்னையில் ஜவகர் சிறுவர்

2020 மார்ச் 24]

மன்றம் தொடங்கப்பட்டு பின்னர் பல்வேறு காலக்கட்டங்களில் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டன. தற்போது தமிழ்நாடு முழுவதும் 30 மாவட்டங்களில், மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்கள் (24), விரிவாக்க மையங்கள் (14), ஊரக மையங்கள் (2) என்ற பெயர்களில் 40 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் ஜவகர் சிறுவர் மன்றங்கள் வாயிலாக 3,841 சிறார்கள் பயனடைந்துள்ளனர். ஜவகர் சிறுவர் மன்றங்கள் செயல்படும் விவரங்கள் கீழ்வருமாறு:

வ. எண்	மாவட்டம்	மாவட்ட சிறுவர் மன்றம்	விரிவாக்க மையம்	ஊரக மையம்
1	சென்னை	1	5	இல்லை
2	கோயம்புத்தூர்	1	இல்லை	இல்லை
3	கடலூர்	1	இல்லை	இல்லை
4	தருமபுரி	1	இல்லை	இல்லை
5	திண்டுக்கல்	1	இல்லை	இல்லை
6	ஈரோடு	1	இல்லை	இல்லை
7	காஞ்சிபுரம்	1	இல்லை	இல்லை
8	கன்னியாகுமரி	1	இல்லை	இல்லை
9	கரூர்	இல்லை	2	இல்லை
10	கிருஷ்ணகிரி	1	இல்லை	இல்லை
11	மதுரை	1	1	1
12	நாகப்பட்டினம்	இல்லை	1	இல்லை
13	நாமக்கல்	இல்லை	1	இல்லை
14	நீலகிரி	1	இல்லை	இல்லை
15	பெரம்பலூர்	இல்லை	1	இல்லை
16	புதுக்கோட்டை	1	இல்லை	1

வ. எண்	மாவட்டம்	மாவட்ட சிறுவர் மன்றம்	விரிவாக்க மையம்	ஊரக மையம்
17	இராமநாதபுரம்	1	இல்லை	இல்லை
18	சேலம்	1	இல்லை	இல்லை
19	சிவகங்கை	1	இல்லை	இல்லை
20	தஞ்சாவூர்	1	1	இல்லை
21	தேனி	1	இல்லை	இல்லை
22	தூத்துக்குடி	இல்லை	1	இல்லை
23	திருச்சிராப்பள்ளி	1	இல்லை	இல்லை
24	திருநெல்வேலி	1	இல்லை	இல்லை
25	திருவள்ளூர்	1	இல்லை	இல்லை
26	திருவண்ணாமலை	இல்லை	1	இல்லை
27	திருவாரூர்	1	இல்லை	இல்லை
28	வேலூர்	1	இல்லை	இல்லை
29	விழுப்புரம்	1	இல்லை	இல்லை
30	விருதுநகர்	1	இல்லை	இல்லை
		24	14	2

ஜவகர் சிறுவர் மன்றங்களின் பகுதி நேர பயிற்சிகள்

1.21 குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு(பேண்ட்), தையல், ஓவியம்-வண்ணம் தீட்டுதல், திரை அச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய 20 கலைகளில், சென்னையில் 16 வகையான கலைகளிலும், மற்ற மாவட்டங்களில் தேவைக்கேற்ப ஏதேனும் 4 வகையான கலைகளிலும் "பகுதி நேரக் கலைப் பயிற்சிகள்" சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

பயிற்சித் திட்டங்கள்

மாவட்ட அளவிலான கோடைக்கால கலைப் பயிற்சி முகாம்

1.22 மாணாக்கர்கள் கோடை விடுமுறையை பயன்தரும் வகையில் கழிக்க ஏதுவாக, சென்னை மற்றும் தமிழகத்தின் அரியலூர், திருப்பூர் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவில் கோடைக்கால கலைப் பயிற்சி முகாம்கள் 30 மாவட்டங்களில் 2019-2020 ஆம் ஆண்டில் 26-4-2019 முதல் 15-5-2019 வரையிலும் நடத்தப்பட்டன.

மாநில அளவிலான கோடைக்கால கலைப் பயிற்சி முகாம்

1.23 திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் அமைந்துள்ள விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக்குலேசன் பள்ளியில் 15-5-2019 முதல் 22-5-2019 வரை மாநில அளவிலான கோடைக்கால கலைப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் தமிழகத்தின் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 100 சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா, சிலம்பம் ஆகிய கலைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மாநில அளவிலான கைவினை கலைப் பயிற்சி முகாம்

1.24 மதுரை மண்டல கலை பண்பாட்டு மைய வளாகத்தில், 25-9-2019 முதல் 2-10-2019 வரை மாநில அளவிலான "கைவினை கலைப் பயிற்சி முகாம்" நடைபெற்றது. இம்முகாமில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளைச் சார்ந்த 100 மாணாக்கர்களுக்கு சுடுமண் சுதை சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், துணி அச்சு, கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் ஆகிய கலைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மாநில அளவிலான குளிர்கால கலைப் பயிற்சி முகாம்

1.25 தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின்மூலம் மாநில அளவிலான "குளிர்கால கலைப் பயிற்சி முகாம்", உண்டு உறைவிடப் பயிற்சியாக ஆண்டுதோறும் பள்ளி மாணாக்கர்களுக்கு அரையாண்டு விடுமுறையின்போது நடத்தப்படுகிறது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 சிறார்களுக்கு, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, சிலம்பம், யோகா ஆகிய கலைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

[2020 மார்ச் 24

மாவட்ட, மாநில அளவிலான கலைப் போட்டிகள்

1.26 மாணாக்கர்களிடையே கலை ஆர்வத்தை வளர்த்திடும் வகையில், குரலிசை, பரதநாட்டியம், கிராமிய நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவினர்களுக்கு மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்டக் கலைப் போட்டிகள் முடிவுற்றவுடன் அப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவு மாணாக்கர்களிடையே மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவ்வகையில் திருச்சிராப்பள்ளியில் உள்ள கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியில் 5-1-2020 அன்று மாநில அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணாக்கர்களுக்கு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பரிசுகளும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், இவ்விழாவில், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விலையில்லா இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

மாநில அளவிலான போட்டிகளில் முதல் பரிசாக 8 மாணாக்கர்களுக்கு ரூ.10,000/-, இரண்டாவது பரிசாக 8 மாணாக்கர்களுக்கு ரூ.7,500/- மற்றும் மூன்றாவது பரிசாக 8 மாணாக்கர்களுக்கு ரூ,5,000/- என மொத்தம் 24 மாணாக்கர்களுக்கு ரூ.1,80,000/-க்கு பரிசுத் தொகைகளும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும், மாநில அளவிலான கலைப் போட்டிகளில் பங்குபெற்ற 157 மாணாக்கர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு

1.27 பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடும் வகையில், 14-11-2019 முதல் 16-11-2019 வரை "புது தில்லி தேசிய சிறுவர் மன்றத்தில்" தேசிய ஒருமைப்பாடு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில்,

2020 மார்ச் 24]

தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் தமிழகத்தினைச் சேர்ந்த 21 ஜவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து 44 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, தமிழகத்தின் பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் வகையில், பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தி அனைவரின் பாராட்டுகளையும் பெற்றனர்.

தேசிய பாலஸ்ரீ விருது

1.28 புது தில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியான நபர்களை தெரிவு செய்ய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முறையே படைப்பாக்கச் செயல்திறன் (Creative Performance–Dance, Vocal Music, Percussion, Instrumental Music, Theatre Art, Puppetry), நுண்கலை படைப்பாற்றல் (Creative Art–Painting, Craft, Sculpture, Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள் (Creative Scientific Innovations–Scientific Model Making, Project Making, Problem Solving, Scientific Innovation) மற்றும் எழுத்துக் கலை படைப்பாற்றல் (Creative Writing–Story, Prose, Poem, Dialogue and Play) ஆகிய 4 வகையான முதன்மைக் கலைகளில், 16 வகை கலைப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதற்கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளும், அதனைத் தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளும் நடைபெறும். அதில் தெரிவு பெறுபவர்களிடையே தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு, தகுதியும், திறமையும் வாய்ந்த சிறார்களுக்கு தேசிய சிறுவர் மன்றத்தால் "தேசிய பாலஸ்ரீ விருது" வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் பெருமைமிக்க விருதாகும். மாவட்ட அளவிலான போட்டிகள் தமிழ்நாடு அரசின் நிதியுதவியிலும், மாநில அளவிலான போட்டிகள் புது தில்லி தேசிய சிறுவர் மன்றத்தின் நிதியுதவியிலும் நடத்தப்படுகின்றன. தேசிய அளவிலான போட்டிகள் புது தில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் நடத்தப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டுக்கான தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தேசிய சிறுவர் மன்றத்தால் தமிழகத்தைச் சேர்ந்த 6 சிறார்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். புது தில்லியில் உள்ள "தேசிய சிறுவர் மன்றத்தின்"மூலம் ஒவ்வொரு விருதாளர்களுக்கும் "தேசிய பாலஸ்ரீ" விருதும், ரூ.15,000/- மதிப்பிலான "கிசான்

விகாஸ்" பத்திரமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. மேலும், "தேசிய பாலஸ்ரீ" விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 6 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் சார்பாக இணையான நல்கைத் தொகையாக கூடுதல் பரிசு தலா ரூ.15,000/- விரைவில் வழங்கப்படவுள்ளன.

சென்னை, மயிலாப்பூர் லஸ் அவென்யூவில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்திற்கு சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட இடத்தில், பழைய பழுதடைந்த கட்டடங்களை இடித்துவிட்டு அவ்விடத்தில் சுமார் 628 ச.மீ. பரப்பளவில் புதிய கட்டடத்தை ரூ.1.75 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின்மூலம்கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், அதற்கான திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணை (நிலை) எண் 22, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் (பண் 1-2) துறை, நாள் 22-1-2020-ல் வெளியிடப்பட்டுள்ளது.

ஓவிய, சிற்பக் கலைஞர்களுக்கான நலத் திட்டங்கள்

1.29 தமிழர்களின் பாரம்பரிய காட்சிக் கலைகளான ஓவியக் கலை, சிற்பக் கலை, பதிப்போவியக் கலை ஆகியன நமது தொன்மையான தமிழ் பண்பாட்டினையும், பாரம்பரியத்தையும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல் உலகிற்கே எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளன. இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவித்து, அவர்களது திறமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகின்றது.

கலைச் செம்மல் விருது வழங்கும் திட்டம்

1.30 ஓவிய, சிற்பக் கலைகளில் மரபுவழி மற்றும் நவீன பாணி கலைப் பிரிவுகளில் சிறந்த சாதனைகள் புரிந்து விளங்கும் கலைஞர்களைப் பாராட்டும் வகையில் "கலைச் செம்மல் விருதுகள்" தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. கலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்களுக்கு விருதுத் தொகையாக ரூ.50,000/- உடன் செப்புப் பட்டயமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை கலைவாணர் அரங்கில் 20-1-2020 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் அரசு விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 5

மரபுவழிக் கலைஞர்களுக்கும், 5 நவீன பாணி கலைஞர்களுக்கும் கலைச் செம்மல் விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக நாட்டுப்புறக் கலைஞர்களின் வரவேற்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதுவரை மரபுவழி பிரிவில் 21 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும், நவீன பாணி பிரிவில் 52 ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநில அளவில் மரபுவழி, நவீன பாணிப் பிரிவுகளில் ஓவிய-சிற்பக் கலைக் காட்சி நடத்துதல் மற்றும் விருதுகள் வழங்கும் திட்டம்

1.31 ஓவிய, சிற்பக் கலைகளை ஊக்கப்படுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை மேம்படுத்தவும், மாநில அளவில் மரபுவழி மற்றும் நவீன பாணிப் பிரிவுகளில், "ஓவிய-சிற்பக் கலைக் காட்சி" நடத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவிய, சிற்ப கலைப் படைப்புகள் பெறப்பட்டு, அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் மிகச் சிறந்த கலைப் படைப்புகள் தெரிவு செய்யப்படுகின்றன. சிறந்த மரபுவழி, நவீன பாணி ஓவிய மற்றும் சிற்பக் கலைப் படைப்புகள் கலைக் காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டு, விருதுகள் வழங்கப்படுகின்றன. முதுநிலைப் பிரிவில் (30 வயதுக்கு மேற்பட்ட) 30 மூத்த கலைஞர்களுக்கு தலா ரூ.15,000/- வீதமும், இளநிலைப் பிரிவில் (30 வயதுக்குட்பட்ட) 30 இளங்கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/- வீதமும், என 60 கலைஞர்களுக்கு, ரூ.7.50 இலட்சத்திற்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

1.32 மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக் காட்சியானது, சென்னை கலைவாணர் அரங்கில் 1-11-2019 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கிய 60 கலைஞர்களுக்கு ரூ.7.50 இலட்சம் பரிசுத் தொகையும் அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும், இக்கண்காட்சியானது கலைவாணர் அரங்கில் 1-11-2019 முதல் 4-11-2019 வரை நடைபெற்றது.

[2020 மார்ச் 24

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் பதினைந்திற்கும் மேற்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழ்நாடு நாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டபோது, மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கண்காட்சியினைக் கண்டு ரசித்தனர். ஓவிய, சிற்பக் கண்காட்சியில் இடம்பெற்ற கலைப் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார். மேலும், இக்கண்காட்சியினை ஏராளமான பொது மக்களும், கலை ஆர்வலர்களும் கண்டுகளித்தனர்.

தனிநபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

1.33 2018-2019 ஆம் ஆண்டிலிருந்து தனிநபர் கலைக்காட்சிக்கு வழங்கப்படும் உதவித் தொகையினை ரூ.7500/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கிடவும், கூட்டுக் கலைக்காட்சிக்கு வழங்கப்படும் தொகையினை ஒரு குழுவிற்கு ரூ.15,000/-லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி 5 குழுக்களுக்கு வழங்கிடவும் ஆக மொத்தம் ரூ.5.00 இலட்சம் இத்திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், அவர்கள் தங்களது கலைப் படைப்புகளை காட்சிப்படுத்திடவும் இத்திட்டம் வழி வகுக்கும்.

கவின்கலை பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்

1.34 சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் ஒவ்வோர் ஆண்டும், இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் சிறந்த 10 மாணாக்கர்களுக்கு தலா ரூ.3,000/- வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் 4 சிறந்த மாணாக்கர்களுக்கு தலா ரூ.5,000/- வீதமும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல், கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் 10 சிறந்த மாணாக்கர்களுக்கு ரூ.3,000/- வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் 2 மாணாக்கர்களுக்கு ரூ.5,000/- வீதமும்

கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணாக்கர்கள் பயனடைகின்றனர். இதற்கென ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.90,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கல்லூரி முதல்வர்களின் பரிந்துரையின்படி கல்வி உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ், இரண்டு கல்லூரிகளிலும் இதுவரை, 668 இளங்கவின்கலை மாணாக்கர்களும், 108 முதுகவின்கலை மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

1.35 நாட்டுப்புறக் கலைகளின் பல்வேறு வடிவமைப்புகளின் மதிப்பினை உணரும் வகையில் இளைய தலைமுறையினரை ஊக்குவிப்பதற்காகவும், நாட்டுப்புறக் கலைகளை அழியாமல் பாதுகாப்பதற்கும், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை அளித்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காகவும், "தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்" தோற்றுவிக்கப்பட்டது. இதுவரை, வாரியத்தில் 35,385 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 7,710 கலைஞர்களுக்கு ரூ.139.41 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 132, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்-2) துறை, நாள் 17-9-2019 வாயிலாக பிற நல வாரியங்களில் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் போன்று தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கும் வழங்கி அவர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசால் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவரை சார்ந்தோருக்கும் கல்வி, திருமணம், பிரசவ செலவுகள், இறப்பு போன்றவற்றிற்கு கீழ்வரும் பட்டியல்படி நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:

[2020 மார்ச் 24

வ. எண்	நலத் திட்ட உதவிகள் விவரம்	நலத் திட்ட உதவித் தொகை
1	கல்வி உதவித் தொகை ஆண்டொன்றுக்கு (இரு வாரிசுகளுக்கு)	1,000
	பத்தாம் வகுப்பு பயிலும் மகள்	1,000
	பத்தாம் வகுப்பு தேர்ச்சி மகன்/மகள்	1,000
	பதினோராம் வகுப்பு பயிலும் மகள்	1,000
	பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மகள்	1,000
	பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி மகன்/ மகள்	1,500
	முறையான பட்டப் படிப்பு	1,500
	முறையான பட்டப் படிப்பு விடுதியில் தங்கிப் பயிலல்	1,750
	முறையான முதுகலை பட்டப் படிப்பு	4,000
	முறையான பட்டப் படிப்பு விடுதியில் தங்கிப் பயிலல்	5,000
	தொழில்நுட்பப் பட்டப் படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்)	4,000
	தொழிற்பட்டப் படிப்புகள் விடுதியில் தங்கிப் பயிலல்	6,000
	முதுகலை தொழிற்படிப்புகள்	6,000
	தொழிற்முதுகலை படிப்புகள் விடுதியில் தங்கிப் பயிலல்	8,000
	தொழிற்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்) தொழிற்பயிலகப் படிப்பு (ஐ.டி.ஐ)	1,000
	தொழிற்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்) தொழிற் பயிலகப் படிப்பு (ஐ.டி.ஐ), விடுதியில் தங்கிப் பயிலல்	1,200

2020 மார்ச் 24]

2	திருமண நிதியுதவி உறுப்பினர்/மகன்/மகள் (இரண்டு முறை மட்டும்)	5,000
3	மகப்பேறு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்)	
	அ) குழந்தை பிறப்பு	6,000
	ஆ) கருச்சிதைவு/கருக்கலைப்பு	3,000
4	கண்கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்)	1,500
5	இயற்கை மரணம் உதவித்தொகை	20,000
6	ஈமச் சடங்கு உதவித்தொகை	5,000
7	விபத்து மரண உதவித்தொகை	1,00,000

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்

1.36 மத்திய அரசின் அமைப்பான சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் செயல்படுத்துவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றி பேணிப் பாதுகாத்து வளர்க்கவும், "தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்" என்ற அமைப்பானது, 1955 ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. மேற்கண்ட சங்கமானது முத்தமிழான இயல், இசை, நாடகம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில், 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு வழங்கும் நல்கையினைக் கொண்டு கலைஞர்கள் பயனடையும் வகையில், பல்வேறு கலைப் பணித் திட்டங்களை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலைப் பணிகள்

1.37 மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல், திறமைமிக்க இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும்விதமாக அவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பு அளித்தல் ஆகியவை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் கலைப் பணிகள் ஆகும்.

கலைத் துறையில் மதிப்புமிகு சேவை புரிந்த கலைஞர்களுக்கு மாநில அளவில் 'கலைமாமணி' விருதுகள் மற்றும் இயல், இசை, நடனக் கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக சேவையாற்றியவர்களுக்கு அகில இந்திய அளவிலான "பாரதி", "எம்.எஸ். சுப்புலட்சுமி", "பாலசரசுவதி" ஆகியோர் பெயர்களில் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு ஆகியவை மன்றத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் பண்பாட்டினை சித்தரிக்கும் சிறந்த தமிழ் நாடகம் தயாரித்து மேடையேற்றம் செய்திட தொழில்முறை நாடகக் குழுக்களுக்கும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கும் நிதியுதவி வழங்குகின்றன.

கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல், அயல்நாடுகளில் தமிழகக் கலைகளை பரப்புதல், தொன்மைச் சிறப்புமிக்க அரிய கலை வடிவங்களை ஆவணமாக்குதல் ஆகிய கலைப் பணித் திட்டங்களையும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மேற்கொண்டு வருகிறது. மேலும், அரிய கலை நூல்களை வெளியிட நல்கை வழங்குதல், கலை மேதைகளைப் போற்றும்விதமாக விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குதல் ஆகிய கலைப் பணிகளையும் மன்றம் மேற்கொண்டு வருகிறது.

கலைமாமணி மற்றும் பிற விருதுகள் வழங்குதல்:-

1.38 இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், இசை நாடகம், கிராமியக் கலை, சின்னத்திரை மற்றும் தொடர்புடைய கலைகள் போன்ற துறைகளின் கலை மேம்பாட்டிற்காக சிறப்பான முறையில் சேவை செய்துவரும் புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும் வகையில் தமிழக அரசு கலைமாமணி விருதுகளை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் வாயிலாக வழங்கி வருகிறது.

கலைமாமணி விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் மூன்று சவரன் தங்கப் பதக்கமும், பொன்னாடையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், இதுவரை 1,795 கலைஞர்களுக்கு "கலைமாமணி விருதுகள்" வழங்கி சிறப்பித்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 13.8.2019 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற வண்ணமிகு

விழாவில் 201 கலைஞர்களுக்கு "கலைமாமணி" விருதுகளும், அகில இந்திய அளவில் இயல், இசை, நாட்டியம் ஆகிய பிரிவுகளில் சிறந்து விளங்கும் 9 கலைஞர்களுக்கு "பாரதி விருது", "எம்.எஸ். சுப்புலட்சுமி விருது" மற்றும் "பாலசரசுவதி விருது" ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டன.

மேலும், கலைமாமணி விருதுகள் வழங்கும் விழாவில் கலைமாமணி விருது பெற்று வறிய நிலையில் வாழும் 8 மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.25,000/- மதிப்பிலான பொற்கிழியும், 3 சிறந்த கலை நிறுவனங்களுக்கு கேடயமும், சிறந்த நாடகக் குழுவிற்கு ஒரு சுழற்கேடயமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

1.39 வாழ்நாள் முழுவதையும், கலைக்கு அர்ப்பணித்து, தற்போது நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.2,000/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

58 வயது நிறைவடைந்து, ரூ.72,000/-க்கும் குறைவான ஆண்டு வருமானம் உள்ள கலைஞர்கள் இத்திட்டத்தில் நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள். இதுவரை, இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 14,063 நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஒப்பளிக்கப்பட்டு தற்போது, 5,631 கலைஞர்கள் மற்றும் மறைந்த கலைஞர்களின் வாரிசுகள் திங்கள்தோறும் நிதியுதவி பெற்று வருகின்றனர்.

மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப பராமரிப்பு நல்கை வழங்குதல்

1.40 மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப பராமரிப்பு நிதியுதவியானது தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, மொத்தம் 466 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு ரூ.21.60 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்புத் தொகை 2019-2020 ஆம் ஆண்டு ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கிடையே கலை பரிமாற்றத் திட்டம்

1.41 தேசிய ஒருமைப்பாட்டுணர்வை மேம்படுத்தும் நோக்கிலும், தமிழ் பண்பாட்டின் கலைகளையும், கலாச்சாரத்தையும் பல்வேறு மாநில மக்களும் அறிந்துகொள்ளும் வகையிலும், மாநிலங்களுக்கிடையே கலைப் பரிமாற்றத் திட்டத்தை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை தமிழகத்தினைச் சார்ந்த 77 கலைக் குழுக்கள் வெளிமாநிலங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். அதேபோன்று, 3 வெளிமாநிலக் கலைக் குழுக்கள் தமிழகத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர். இத்திட்டத்தின் வாயிலாக தமிழகத்தினைச் சார்ந்த 1,370 கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

அயல்நாடுகளில் கலை நிகழ்ச்சிகள்

1.42 தமிழ்நாட்டின் கலை மற்றும் பண்பாட்டினை அயல்நாட்டு மக்கள் அறிந்துகொள்ளவும், அயல்நாடுகளில் உள்ள தமிழர்கள் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையிலும், அயல்நாடுகளுடன் நல்லுணர்வை மேம்படுத்தும் வகையிலும், அயல்நாடுகளில் நடைபெறும் கலாச்சார விழாக்களில் நமது பாரம்பரியக் கலைகளான பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக, ஓமன், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பல்வேறு கலைக் குழுக்களால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

1.43 தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக, தமிழகத்தின் பண்பாடு மற்றும் கலை வடிவங்களைப் போற்றி வளர்க்கும் தன்னார்வக் கலை அமைப்புகள் வாயிலாக, குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைகளில் திறமைமிக்க இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து மேடையேற்றம் செய்திட வாய்ப்புகள் வழங்கும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.5,000/- முதல் ரூ.10,000/- வரை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 1,993 இளங்கலைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

அதிக அளவில் இளங்கலைஞர்கள் பயன்பெறும்பொருட்டு, இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.1.00 இலட்சம் என ஒப்பளிப்பு

செய்யப்பட்ட தொகையானது 2017-2018 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.10.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், கலைக் குழுக்களுக்கும் இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

1.44 தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின்மூலம் நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், விலையில்லா இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25.00 இலட்சமும், கலைக் குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000/- வீதம் 100 கலைக் குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சமும் 2019-2020 ஆம் நிதியாண்டில் தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின்மூலம் நிதியுதவி வழங்கிட மன்றத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய நாடகங்கள், நாட்டிய-நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

1.45 நாடகக் கலையையும், அதில் ஈடுபட்டுள்ள கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ் பண்பாட்டினையும், தமிழ் இலக்கியக் காட்சிகளையும், தமிழர்களின் வீரத்தினையும் வெளிப்படுத்தும்விதமாக வரலாறு, புராண, சமூக நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திடவும், இயல், இசை, நாடக மன்றம் நிதியுதவி வழங்குகிறது. தமிழ் கலைகள், இலக்கியங்கள் மற்றும் பண்பாட்டை மையக் கருத்தாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாட்டிய-நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட கலைக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, 47 நாடகங்களும், 35 நாட்டிய நாடகங்களும் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன.

அரிய கலை நூல்கள் பதிப்பிப்பதற்கு மானியம் வழங்குதல்

1.46 அரிய கலை நூல்களைப் பதிப்பித்து, வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 114 புத்தகங்கள் பதிப்பித்திட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு

நூலுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம், இவ்வாண்டில் 5 அரிய கலை நூல்களைப் பதிப்பிப்பதற்கு நல்கை வழங்க தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலைஞர்களுக்கு பயணக் கட்டணச் சலுகை

1.47 நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்திட தொடர்வண்டி, அரசுப் பேருந்துகளில் வெளியூர்களுக்குச் சென்று வருவதற்காக பயணக் கட்டணச் சலுகை வழங்க மன்றத்தால் உரிய அலுவலகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில், தொடர்வண்டியில் பயணக் கட்டணச் சலுகையில் 2,596 கலைஞர்கள் அடங்கிய 255 கலைக் குழுக்களும், பேருந்து பயணச் சலுகையில் 45 கலைஞர்கள் அடங்கிய 2 கலைக் குழுக்களும் பயன்பெற்றுள்ளனர்.

தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

1.48 இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பாக தென்னக பண்பாட்டு மையம் கோயில் நகரமான தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் முழு ஒத்துழைப்புடன் நான்கு தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது. இம்மையமானது மேதகு தமிழ்நாடு ஆளுநரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நிகழ்ச்சிக் குழுவின் தலைவராக உள்ளார். கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்தும், தனித்தும் கலை நிகழ்ச்சிகளையும், நிகழ்வுகளையும் தென்னகப் பண்பாட்டு மையம் மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தின் தொன்மை மற்றும் பண்பாட்டு கலை வடிவங்களைக் கருத்தில்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டில் ரூ.2.50 கோடி செலவில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இம்மையம் செயல்பட்டுவரும் 25 ஏக்கர் நிலமும் நிருவாகப் பிரிவு கட்டடத்திற்கான நிதியும் மற்றும் மூல நிதியாக ரூ.2.00 கோடியும் தமிழக அரசால் வழங்கப்பட்டது.

2020 மார்ச் 24]

கலைக் கிராமம் அமைத்தல்

1.49 மத்திய அரசின் பண்பாட்டு அமைச்சகம் வருடாந்திர வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் தஞ்சாவூரில் தென்னக பண்பாட்டு மையத்தின் கீழுள்ள பகுதிகளில் கலைக் கிராமம் நிறுவுவதற்கான நல்கையை வழங்குகிறது. எனவே, மாமல்லபுரத்தில் இந்திய பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை வெளிநாடு மற்றும் உள்நாடு சுற்றுலா பயணிகளுக்கு எடுத்துரைக்கும் வகையில், கலை மற்றும் கைவினைப் பொருட்களின் கிராமமாக "கலைக் கிராமம்" அமைக்கப்படும்.

2019-2020 ஆம் ஆண்டில் முக்கிய சாதனைகள்

1.50 அறிவிப்புகள்-2019-2020

1. தஞ்சாவூர் மண்டல கலைப் பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.100.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

3. கலை பண்பாட்டுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களின் ஆண்டு பராமரிப்பு பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொகை ரூ.30.00 இலட்சத்திலிருந்து ரூ.80.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

4. இசை மற்றும் நாட்டியத் துறைகளில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கவும், தற்போதுள்ள நவீன கற்பித்தல் முறைகளை கையாளும் வகையில் புதுப்பித்துக்கொள்ளவும், சென்னை, மதுரை, திருவையாறு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு அரசு இசைக் கல்லூரிகளின் ஆசிரியர் பணியில் உள்ளவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. நுண்கலைத் துறைகளில் சிறந்த மாணாக்கர்களை உருவாக்கவும், தற்போதுள்ள நவீன கற்பித்தல் முறைகளைக் கையாளும் வகையில் புதுப்பித்துக்கொள்ளவும், அரசு கவின்கலைக் கல்லூரிகள் மற்றும் அரசினர் கட்டடக் கலை

மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிகளின் ஆசிரியர் பணியில் உள்ளவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குவதற்காக ரூ.15.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. வறிய நிலையிலுள்ள கலைமாமணி விருதாளர்களில் மூத்த கலைஞர்களுக்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின்மூலம் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் பொற்கிழியினை ரூ.25,000/-த்திலிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கவும் இதற்காக ஏற்படுத்தப்பட்ட மன்ற மூல நிதி ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக அரசால் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு, உயர்த்திய தொகை மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

7. மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் வாயிலாக ஒரு முறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.10,000/- லிருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தி வழங்கவும், இதற்காக ஏற்படுத்தப்பட்ட மன்ற மூல நிதியினை ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக அரசால் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மன்றத்திற்கு உயர்த்திய தொகை வழங்கப்பட்டுள்ளது.

8. தமிழகத்தின் தொன்மைமிக்க கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக் குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், விலையில்லா இசைக் கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/- வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25.00 இலட்சமும், கலைக் குழு ஒவ்வொன்றிற்கும் ரூ.10,000/- வீதம் 100 கலைக் குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.35.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மேற்காண் தொகை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் வாயிலாக இயல், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகள் குறித்த 18

அரிய நூல்களைப் புதுப்பிக்க ரூ.3.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்திற்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மேற்காணும் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

10 தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்குப் புதியதாக கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ.5.36 இலட்சம் மன்றத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுகலை/ முதுகவின்கலை பட்டப் படிப்பு மற்றும் பொதுப் பிரிவில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக அரசால் ரூ.32.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவற்காக பல்கலைக்கழகத்திற்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

1.51 முக்கிய நிகழ்வுகள்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14-8-2019 அன்று காணொளி காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு ரூ.85.00 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தினையும், மாமல்லபுரம் அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் ரூ.1.39 கோடி செலவில் கட்டப்பட்ட 7 அடி உயரத்தில் கருங்கல்லிலான சுற்றுச் சுவரையும், ரூ.1.16 கோடி செலவில் கட்டப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி மற்றும் இரண்டு தொழிற்பயிற்சிக் கூடங்களும் திறந்து வைக்கப்பட்டன.

2. மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன மக்கள் குடியரசு அதிபர் இந்தியா-சீனா நாடுகளுக்கிடையே மாமல்லபுரத்தில் நடைபெற்ற முறைசாரா உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வருகைபுரிந்தபொழுது தமிழக அரசின் சார்பாக கலை பண்பாட்டுத் துறை பொதுத் துறையுடன் இணைந்து தமிழ்

[2020 மார்ச் 24

கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு முறைப்படி அவர்களை வரவேற்கும்விதமாக 500 நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூாரியினைச் சேர்ந்த 100 பரதநாட்டிய மாணவிகளின் கண்கவர் வரவேற்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் மாண்புமிகு சீன அதிபர் அவர்களும் வெகுவாகப் பாராட்டினர். மேலும், மிக முக்கியப் பிரதிநிதிகள் கிண்டி முதல் மாமல்லபுரம் செல்லும் வழியெங்கும் 11-10-2019 மற்றும் 12-10-2019 ஆகிய நாட்களில் இசை வாசித்தும், நாட்டுப்புறக் கலை வடிவங்களின் நடனத்துடனும் பல்வேறு இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

3. 1-11-2019 அன்று நடைபெற்ற “தமிழ்நாடு நாள் விழா”வில் மாநில அளவிலான ஓவிய மற்றும் சிற்பக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கிய 60 கலைஞர்களுக்கு ரூ.7.50 இலட்சத்திற்கு பரிசுத் தொகையும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “தமிழ்நாடு நாள் விழா”வினை 1-11-2019 அன்று தொடங்கி வைத்து, அவ்வளாகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கண்காட்சியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பதினைந்துக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கலைஞர்களின் கலைப் படைப்புகளைப் பாராட்டினார். இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்களும், கலை ஆர்வலர்களும் வருகைதந்து கண்டுகளித்தனர்.

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 22-12-2019 அன்று சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 46-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியின் தொடக்க விழாவில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக சிறப்பாக

கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. ஏழு மண்டல கலை பண்பாட்டு மையங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கிராமியக் கலைஞர்களும், சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியினைச் சார்ந்த 35 மாணவிகளும் தொடக்க விழாவில் கலை நிகழ்ச்சிகள் வழங்கினர். இக்கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களும், பொதுமக்களும் கண்டுகளித்தனர்.

6. மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கலைக் காட்சியானது சென்னை கலைவாணர் அரங்கில் 1-11-2019 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, சிறந்த கலைப் படைப்புகளை உருவாக்கிய 60 கலைஞர்களுக்கு ரூ.7.50 இலட்சம் பரிசுத் தொகையும், அனைவருக்கும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும், இக்கண்காட்சியானது கலைவாணர் அரங்கில் 1-11-2019 முதல் 4-11-2019 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் பதினைந்திற்கும் மேற்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழ்நாடு நாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டபோது, மாநில அளவிலான ஓவிய, சிற்பக் கண்காட்சியினைக் கண்டு ரசித்தனர். ஓவிய, சிற்பக் கண்காட்சியில் இடம்பெற்ற கலைப் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களை மாண்புமிகு முதலமைச்சர் பாராட்டினார். மேலும், இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்களும், கலை ஆர்வலர்களும் கண்டுகளித்தனர்.

7. தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் கோயில் குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு, கலை பண்பாட்டுத் துறையின் சார்பாக மண்டல கலை பண்பாட்டு மையங்கள்மூலம் 1-2-2020 முதல் 5-2-2020 வரை ஐந்து நாட்கள், ஐந்து இடங்களில் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் ரூ.62.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் 1,400-க்கும் மேற்பட்ட கிராமியக் கலைஞர்கள் பங்குகொண்டு, பயன்பெற்றனர்.

8. சேலத்தில் 9-2-2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியின்

அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக ரூ.2.00 இலட்சம் செலவில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

1.52 மாவட்ட அளவிலான கலை விருதுகள்

1. பெரம்பலூர் மாவட்டத்தில் 12-7-2019 அன்று நடைபெற்ற மாவட்டக் கலை விருதுகள் வழங்கும் விழாவில், 2014-2015, 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆகிய ஆண்டுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

2. நாமக்கல் மாவட்டத்தில் 2-8-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2017-2018 ஆம் ஆண்டுக்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

3. விருதுநகர் மாவட்டத்தில் 15-8-2019 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் 15-8-2019 அன்று 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

5. தூத்துக்குடி மாவட்டத்தில் 15-8-2019 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

6. சிவகங்கை மாவட்டத்தில் 19-8-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

7. திண்டுக்கல் மாவட்டத்தில் 23-9-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

8. திருவாரூர் மாவட்டத்தில் 9-11-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

9, நாகப்பட்டினம் மாவட்டத்தில் 16-11-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

10. தஞ்சாவூர் மாவட்டத்தில் 16-11-2019 அன்று நடைபெற்ற விழாவில் 2018-2019 ஆம் ஆண்டிற்கு 5 கலைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கப்பட்டன.

11. கரூர் மாவட்டத்தில் 25-11-2019 அன்று நடைபெற்ற மாவட்டக் கலை விருதுகள் வழங்கும் விழாவில் 2014-2015, 2015-2016, 2016-2017, 2017-2018, 2018-2019 ஆகிய ஆண்டுகளுக்கு 25 கலைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் "மாவட்டக் கலை விருதுகள்" வழங்கினர்.

1.53 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
1.	மிஸ் கூவாகம் விழா	விழுப்புரம்	15.4.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.1.01 இலட்சம்
2	கோடை விழா (மண்ணின் கலை விழா)	ஜவ்வாதுமலை (திருவண்ணாமலை மாவட்டம்)	14.5.2019 15.5.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	ரூ.0.96 இலட்சம்
3	திருஅருட்பா விழா	வடலூர் (கடலூர் மாவட்டம்)	25.5.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	ரூ.0.50 இலட்சம்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
4	கோடை விழா	ஏற்காடு (சேலம் மாவட்டம்)	31.5.2019 முதல் 2.6.2019 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.	ரூ.2.00 இலட்சம்
5	அத்திவரதர் வைபவ தொடக்க விழா	வரதராஜ பெருமாள் ஆலயம் (காஞ்சிபுரம் மாவட்டம்)	1.7.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	ரூ.0.25 இலட்சம்
6	கிராமியக் கலை நிகழ்ச்சிகள்	கிருஷ்ணகான சபா (சென்னை)	2.7.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.0.30 இலட்சம்.
7	கோடை விழா (மண்ணின் கலை விழா)	கல்வராயன் மலை (விழுப்புரம் மாவட்டம்)	13.7.2019 14.7.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	ரூ.0.85 இலட்சம்
8	ஆடிக் கிருத்திகை திருவிழா (மண்ணின் கலை விழா)	திருத்தணி (திருவள்ளூர் மாவட்டம்)	26.7.2019 முதல் 28.7.2019 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	ரூ.1.00 இலட்சம்
9	மண்ணின் கலை விழா	வடலூர் (கடலூர் மாவட்டம்)	26.7.2019 முதல் 28.7.2019 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	ரூ.0.85 இலட்சம்
10	"வல்வில் ஓரி" விழா	கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்)	2.8.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.	ரூ.1.50 இலட்சம்
11	"தீரன் சின்னமலை" விழா	ஓடாநிலை (ஈரோடு மாவட்டம்)	3.8.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்.	ரூ.0.70 இலட்சம்
12	ஆடிப்பெருக்கு விழா	ஒகேனக்கல் (தருமபுரி மாவட்டம்)	05.08.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.	ரூ.1.00 இலட்சம்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
13	கிராமியக் கலை	வர்த்தக மையம் (சென்னை)	22.10.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.0.56 இலட்சம்
14	முத்தமிழ் பயிற்சி முகாம்	தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் (சென்னை)	22.10.2019 முதல் 24.10.2019 வரை	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.2.92 இலட்சம்
15	தமிழ் மகிழி கலை அமுதம்	46-வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி (சென்னை)	23.12.2019 முதல் 09.3.2020 வரை	கலை பண்பாட்டு இயக்ககம்	ரூ.30.00 இலட்சம்
16	மார்கழி இசை விழா	ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)	3.1.2020 முதல் 5.1.2020 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி.	
		புன்செய் புளியம்பட்டி (ஈரோடு மாவட்டம்)	9.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்.	
		கலை பண்பாட்டு வளாகம், (சேலம் மாவட்டம்)	10.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.	
		அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் (காஞ்சிபுரம் மாவட்டம்)	14.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
		அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர் மாவட்டம்)	14.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி.	
		அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயில் திருவையாறு, (தஞ்சாவூர் மாவட்டம்)	14.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர்.	ரூ.15.00 இலட்சம்
		அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் (மதுரை மாவட்டம்)	14.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை.	
17	வைகுண்ட ஏகாதசி கலை விழா	இந்துசமய அறநிலையத் துறையுடன இணைந்து மூன்று ஆலயங்களில் (சென்னை மாவட்டம்)	6.1.2020	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.1.00 இலட்சம்
18	தமிழிசை விழா	திருவையாறு (தஞ்சாவூர் மாவட்டம்)	15.1.2019 முதல் 17.1.2019 வரை	திருவையாறு தமிழிசை மன்றம்	ரூ.3.00 இலட்சம்

2020 மார்ச் 24]

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
19	திருவள்ளுவர் திருநாள் மற்றும் அரசு விருதுகள் வழங்கும் விழா	கலைவாணர் அரங்கம் (சென்னை)	20.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்.	ரூ.0.75 இலட்சம்
20	மெல்லிசை மற்றும் கிராமியக் கலை விழா	46-வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி (சென்னை மாவட்டம்)	17.1.2020 முதல் 19.1.2020 வரை	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.1.50 இலட்சம்
21	தஞ்சை பெருவுடையார் ஆலய குடமுழுக்கு விழா	தஞ்சாவூர் நகரில் ஐந்து இடங்களில் 1. ராஜராஜன் மணிமண்டபம் 2.தொல்காப்பியர் சதுக்கம் 3.திலகர் திடல் 4.மருத்துவக் கல்லூரி 5. கரந்தை தமிழ்ச் சங்கம் (தஞ்சாவூர் மாவட்டம்)	1.2.2020 முதல் 5.2.2020 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப் பள்ளி.	ரூ.62.00 இலட்சம்

1.54 2019-2020 ஆம் ஆண்டில் வெளிமாநிலங்களில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
1	கிராமியக் கலை விழா	தமிழ்ச் சங்கம், சண்டிகர் (பஞ்சாப்)	21.4.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.2.24 இலட்சம்

[2020 மார்ச் 24

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
2	திருக்குறள் இசை மற்றும் நடனம்	மூன்றாவது உலகத் திருக்குறள் மாநாடு (புதுடெல்லி)	16.8.2019	மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம்.	ரூ.3.00 இலட்சம்
3	கிராமியக் கலைவிழா	லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிருவாக அகாதமி முசௌரி (உத்திரகாண்ட்)	14.9.2019	கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை.	ரூ.5.45 இலட்சம்
4	மரபிசை, நாட்டிய விழா	தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம் (கேரளா)	21.9.2019 22.9.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.1.84 இலட்சம்
5	பர்யதன் பர்வ்	இந்தியாகேட் (புதுடெல்லி)	2.10.2019 மற்றும் 6.10.2019	கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை.	ரூ.5.19 இலட்சம்
6	பிரமோத்சவம்	திருமலை திருப்பதி தேவஸ்தானம் (ஆந்திரா)	3.10.2019 4.10.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.2.24 இலட்சம்
7	டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாள் விழா	தமிழ்ச் சங்கம் நவிமும்பை (மகாராஷ்டிரா)	13.10.2019	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ1.01 இலட்சம்

வ. எண்	நிகழ்வு	நிகழ்விடம்	நாள்	நிகழ்த்துனர்	செலவினத் தொகை
8	பொங்கல் கலை விழா	தமிழ்நாடு இல்லம் (புதுடெல்லி)	12.1.2020 முதல் 15.1.2020 வரை	மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி.	ரூ.5.00 இலட்சம்
9	மரபிசை மற்றும் கிராமியக் கலை விழா	தமிழ்ச் சங்கம் போபால் (மத்திய பிரதேசம்)	19.1.2020	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.1.90 இலட்சம்
10	பாரத் பர்வ்	செங்கோட்டை (புதுடெல்லி)	28.1.2020	மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை.	ரூ.3.20 இலட்சம்
11	பட்டிமன்றம், கிராமியக் கலை விழா	தமிழ்சங்கம், திருவனந்தபுரம் (கேரளா)	8.2.2020 9.2.2020	தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்	ரூ.2.53 இலட்சம்

முடிவுரை

1.55 தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டினையும், தமிழக பாரம்பரிய கலை வடிவங்களையும் போற்றி பாதுகாப்பதையும், வளர்ப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையானது இளைய தலைமுறையினருக்கு இசை, நடனம், நாடகம் ஆகிய நிகழ்த்துக் கலைகளிலும், ஓவியம், சிற்பம், கட்டடக் கலை ஆகிய நுண்கலைகளிலும் பயிற்சிகள் வழங்கி வருகின்றன. அரிய கலை வடிவங்களை ஆவணமாக்கம் செய்தல், பல்வேறு கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்குதல் மற்றும் திறமைமிக்க கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு திங்கள்தோறும் நிதியுதவி வழங்கியும், நாட்டுப்புறக் கலைஞர்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது.

[2020 மார்ச் 24

அருங்காட்சியகங்கள் துறை

முன்னுரை

2. மனித இனம், சுற்றுச்சூழல் மற்றும் அதன் நிலையான அடிப்படை ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும் விளக்குவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிரந்தர அமைப்பாகவும், அறிவுசார் கருவூலமாகவும் அருங்காட்சியகம் திகழ்கிறது. அறிவு, கல்வி மற்றும் கேளிக்கை ஆகிய நோக்கங்களுக்காக அருங்காட்சியகம் நமது பாரம்பரியம் சார்ந்த பழம் பொருட்களையும் கலைச் செல்வங்களையும் பெற்று, பாதுகாத்து, ஆராய்ச்சி செய்து, காட்சிப்படுத்தி, மக்களிடம் கொண்டு சேர்க்கிறது. சமூகத்தில் அருங்காட்சியகங்களின் பங்கு சமீபத்திய ஆண்டுகளில் பெருமளவில் வளர்ந்துள்ளது.

அண்மைக் காலங்களில், சமுதாயத்தில் அருங்காட்சியகங்களின் கருதப்பட்ட பங்கு அதீத வளர்ச்சியடைந்துள்ளது. அருங்காட்சியகங்கள் வெறும் பொருட்களின் களஞ்சியங்களாக மட்டுமன்றி அதைவிட பெரும் நோக்கம் கொண்டவை. பலதரப்பு மக்களும் கருத்துகளும் சந்திக்கும் இடங்களாக அவை உள்ளன. சமூக மற்றும் பண்பாட்டு மாற்றங்களின் அளவுகோலாக அருங்காட்சியகங்கள் உள்ளன. அருங்காட்சியகங்கள் தொடர்ந்து நீடிப்பதற்கும், செழித்து வளர்வதற்கும், பார்வையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்றவாறு அவற்றை தகவமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

துறையின் குறிக்கோள்கள்

2.1 சேகரிப்பு, பாதுகாப்பு, சம்பந்தப்படுத்துதல், கணக்கீடு மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை துறையின் முதன்மை நோக்கங்கள் ஆகும். சேகரிப்பைத் தேர்ந்தெடுத்தல், வரும் சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை நிருவகித்து பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்துதல் ஆகியன கண்காட்சிகளை நிருவகித்து, கற்பிப்பதற்கு, இன்றியமையாதவையாகும்.

பல்வேறு முறைகள் வாயிலாக முனைப்பான தகவல் தொடர்பு வழியே பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் முக்கியக் குறிக்கோளாகும். அருங்காட்சியகத்திற்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கையை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதிகரித்தலின் வழியே தேசிய மற்றும் பன்னாட்டுத் தளங்களில் பண்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றொரு முக்கிய குறிக்கோளாகும்.

அருங்காட்சியகங்களின் இன்றைய சவால்கள்

2.2 உலகமயமாக்கப்படும் கலாச்சாரமும் சமூக ஊடகங்கள் மற்றும் மின்னணு தகவல் தொடர்புகளின் உடனடித்தன்மையும் அருங்காட்சியகங்கள், தங்கள் பார்வையாளர்களுக்கு அரும்பொருட்களின் பொருண்மையை முன்வைக்கும் முறையை கணிசமான அளவிற்கு மேம்படுத்தியுள்ளன. மிகுதியான தகவல்களும் ஊடகங்களும் பரவலாக கிடைப்பதால், அதிநவீன அனுபவங்களையும் கருத்துகளையும் விரும்பும் அருங்காட்சியக பார்வையாளர்களின் ஒரு தலைமுறையை உருவாக்கியுள்ளது. பார்வையாளர்களின் பிற ஓய்வுநேர கேளிக்கைகளுடன் போட்டியிடும் அளவிற்கு, போதுமான பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டுள்ளபோதிலும், அறிவார்ந்த மற்றும் உறுதியான தொழில்முறை தரங்களை பராமரிப்பதற்கான சவாலை எதிர்கொள்வதற்காக, அருங்காட்சியகங்களின் துறையானது, புதுமையான மற்றும் வளர்ந்துவரும் கண்காட்சித் தொழில்நுட்பங்களை பின்பற்றுகிறது. மெய்நிகர் மற்றும் மேம்படுத்தப்பட்ட காட்சித் தொழில்நுட்பங்கள், (virtual and Augmented Realities) பயனாளரைச் சுற்றி அல்லது சூழும் வகையில் ஏற்படுத்தப்படும் முப்பரிமாண உருவங்களைக் காணும் அனுபவத்தை உருவாக்கும் வீடியோ சுவர்கள், சமூக ஊடகத் தொடர்புகள் போன்று ஈடுபாட்டினை அதிகரிக்கும் வகையில் உள்ள விளக்கங்களுக்கான புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான தீர்வுகள், பார்வையாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக, சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

நிருவாக அமைப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு

2.3 அருங்காட்சியகங்களின் துறையானது, சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 21 மாவட்ட அருங்காட்சியகங்களை, ஆணையர் அவர்களின் தலைமையிலும், அவருக்கு உதவியாக இரண்டு உதவி இயக்குநர்கள், காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

[2020 மார்ச் 24

2019-2020 ஆம் ஆண்டில் இத்துறைக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்த மதிப்பீட்டில் ரூ.14.65 கோடி பெறப்பட்டது. மேலும், மத்திய, மாநில அரசுகள் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடாக ரூ.9.92 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மட்டும் ரூ.16.85 கோடி ஆகும்.

அருங்காட்சியகங்கள் துறை
எழும்பூர், சென்னை—8.

ஆணையர் (1)

↓

உதவி இயக்குநர்கள் (2)

↓

முதன்மைக் கணக்கு அலுவலர் (1)

↓

காப்பாட்சியர்கள் (31)

↓

உதவிக் காப்பாட்சியர்கள்/
காட்சிக்கூட விளக்குநர்கள் (10)

↓

நிருவாக ஊழியர்கள் (37)

↓

தொழில்நுட்ப ஊழியர்கள் (57)

↓

காட்சிக்கூடக் காவலர்கள்/காவலர்கள் (196)

↓

மொத்தம் (335)

2020 மார்ச் 24]

சென்னை அரசு அருங்காட்சியகம்

2.4 கி.பி. 1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னை அரசு அருங்காட்சியகமானது இந்தியாவின் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகும். இது 16.25 ஏக்கர் நிலப்பரப்பில் ஆறு தனித் தனி கட்டடங்களுடன் (மூன்று பாரம்பரிய கட்டடங்கள் மற்றும் மூன்று நவீன கட்டடங்கள்) சென்னை நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் காட்சிக்கூடங்களின் மொத்த பரப்பளவு சுமார் 1,20,000 சதுர அடியாகும். ஓவியக் கலை, தொல்லியல், நாணயவியல், மானிடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல் முதலிய துறைகளைச் சார்ந்த சுமார் 11,000 தனித்துவமான அரும்பொருட்கள், 57 காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் காட்சிக் கூடங்களுக்கு கல்வி, வடிவமைப்பு மற்றும் காட்சியமைத்தல் மற்றும் வேதியியல் பாதுகாப்பு ஆகிய பிரிவுகள் துணைபுரிகின்றன.

உலகப் புகழ் பெற்ற சோழர்கால ஐம்பொன் சிலைகள், அமராவதி சுண்ணாம்பு சிற்பங்கள், ராபர்ட் புரூஸ் ஃபூட்டின், வரலாற்றுக்கு முந்தைய கால சேகரிப்புகள், ஆதிச்சநல்லூர் நாகரிக அரும்பொருட்களின் சேகரிப்புகள், பல்வேறு மன்னராட்சிகளின் நாணயங்கள், ஒரு நீலத் திமிங்கலத்தின் 60 அடி எலும்புக்கூடு, ராஜா ரவிவர்மா ஓவியங்கள் முதலியன சென்னை அரசு அருங்காட்சியகத்தின் குறிப்பிடத்தக்க அரும்பொருட்களாகும். மாநிலம் முழுவதிலுமுள்ள பள்ளிகளை அருங்காட்சியகம் சென்றடைய ஒரு நடமாடும் அருங்காட்சியகமாகச் செயல்படும் 'அருங்காட்சியகக் காட்சி உலா பேருந்து' ஒன்று உள்ளது.

மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்

2.5 சென்னையின் பிரதான அரசு அருங்காட்சியகத்தை தவிர, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி, நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர் மற்றும் அரியலூர் ஆகிய 21 மாவட்டங்களில் உள்ள அருங்காட்சியகங்கள் தமிழக அரசு அருங்காட்சியகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் உதகமண்டலம் அரசு அருங்காட்சியகங்கள் அரசுக்குச் சொந்தமான பாரம்பரியக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

2.6 அறிவிப்புகள் 2019-2020

- தற்போதுள்ள இரண்டு சிற்பப் பூங்காக்கள், 70 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு 200 கற்சிற்பங்களும் கல்வெட்டுகளும் நவீன முறையில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

- ரூபாய் 100 இலட்சம் செலவில், மெய்நிகர் உண்மை, மேம்படுத்தப்பட்ட காட்சி தொழில்நுட்பங்கள் தொடுகை மற்றும் சைகை அடிப்படையிலான தொழில்நுட்ப தீர்வுகள் என சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பார்வையாளர்களுக்கு தொழில்நுட்ப ஆர்வமூட்டும் சூழல் ஏற்படுத்த பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தின் காட்சிக் கூடங்களில் ரூபாய் 100 இலட்சம் செலவில் அதன் இயற்கை சூழல் குறித்த கூடுதல் தகவல்களை காட்சிப்படுத்துவதற்கு, வீடியோ சுவர் அமைக்க பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கண்காணிப்பு காமிரா ஏற்பாட்டு முறை, பாதுகாப்பு ஏற்பாட்டு முறை, தீ எச்சரிக்கை ஏற்பாட்டு முறை, பொது தொடர்பு ஏற்பாட்டு முறை, கட்டுப்பாட்டு அறை உட்கட்டமைப்பு உள்ளிட்ட இருபத்தி நான்கு மணி நேரமும் கண்காணிக்கின்ற பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு ஏற்பாட்டுமுறை ரூபாய் 250 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் எல்காட் மூலம் செயல்படுத்தும் பணிகள் திருவாளர்கள் எல்காட் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான செலவினத் தொகை ELCOT நிறுவனத்திற்கு மாற்றப்பட உள்ளது.

- மாவட்ட அரசு அருங்காட்சியகங்களை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் குறைந்தளவு உட்கட்டமைப்பு வசதிகளுக்கு வகை செய்வதன் வாயிலாக ஓர் அருங்காட்சியகத்திற்கு தலா ரூபாய் 3 இலட்சம் என மொத்தம் ரூபாய் 60 இலட்சம் வழங்கப்பட்டு கொள்முதல் முடிக்கப்பட்டது.

- சென்னை அரசு அருங்காட்சியக படிமக்கூடத்தில் உள்ள பழைய குளிர்சாதன சாதனங்களுக்குப் பதிலாக

தேவைப்படும் துணை பாகங்கள் மற்றும் மின்பாகங்களும் மற்றும் இணைப்பு நிலைகளும்கூடிய 8.5 டன்கள் மாறும் குளிர் பதன பருமனளவு உடைய ஆறு எண்ணிக்கையிலான குளிர்சாதன கருவிகள் பொருத்துவதற்கான பணிகள் ரூபாய் 70 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன.

வெளியீடுகள்

2.7 சென்னை அரசு அருங்காட்சியகம் அது தொடங்கப்பட்ட 1851 முதல் வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றது. மேலும், அருங்காட்சியகப் பதிப்புகள் உலகளவில் நன்கு அறியப்பட்டவை. அருங்காட்சியக வெளியீடுகள் உலகளவில் ஆய்வாளர்களுக்கு குறிப்புதவி நூல்களாக கருதப்படுகின்றன.

விலங்கியல், தாவரவியல், மானுடவியல், படிமங்கள் மற்றும் நாணயவியல் உள்ளிட்ட பல தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தென்னிந்திய படிமங்கள் மற்றும் படிமங்கள் மேனுவல் ஆகிய இரண்டு நூல்களும், படிமங்கள் உருவாக்கு தொழில்நுட்பத்தினையும், சோழர்கால படிமங்கள் பற்றிய பரந்த ஆய்விற்கும் சிறந்த நூல்களாக கருதப்படுகின்றன.

வேதியியப் பாதுகாப்பு குறித்த நூல்கள் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிய விவரம் தருகின்றன. இதுவரை, 247 தலைப்புகளில் சென்னை அரசு அருங்காட்சியகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

அருங்காட்சியகங்கள் துறை பன்னாட்டளவில் புகழ்பெற்ற அருங்காட்சியங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்விதமாக நியூயார்க், மெட்ரோபாலிடன் கலை அருங்காட்சியகம், வாஷிங்டன், ஸ்மித்ஸ்சோனியன் நிறுவனம் மற்றும் பாரிஸில் உள்ள லூவர் அருங்காட்சியகம் உள்ளிட்ட அருங்காட்சியகங்களுடன் தொழில்நுட்பம் மற்றும் அறிவாற்றலைப் பகிர்ந்துகொள்ளுதல் அரும்பொருட்களை காப்பமைத்தல் மற்றும் இணைந்து கண்காட்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகள் மேற்கொள்வதால் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் தரமும் மற்றும் பார்வையாளர் அனுபவமும் மேம்படும்.

[2020 மார்ச் 24

1959 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரையில் உள்ள இராணி மங்கம்மாள் அரண்மனையில் அமைந்துள்ளது. இது இந்தியாவில் உள்ள 5 காந்தி நினைவு அருங்காட்சியகங்களுள் ஒன்று. இந்த அருங்காட்சியகம் காந்தி நினைவு வைப்புத் தொகை நிதி மற்றும் இதர சுய நிதி ஆதாரங்கள் மூலமாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வருங்காட்சியகத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 7 இலட்சம் ஊதியம் மானியமாக வழங்கி வருகின்றது.

2.8 தொல்பழமைவாய்ந்த அரும்பொருட்களைப் புதிதாகச் சேர்த்தல்

2019-2020 ஆம் ஆண்டில், அருங்காட்சியகத் துறை, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெண்கலம் மற்றும் கற்சிற்பங்கள் உட்பட பல்வேறு வகையிலான அரும்பொருட்களை சேகரித்துள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு:-

கோனேரி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து ராமர் மற்றும் அனுமன் வெண்கல சிற்பங்கள் சென்னை அரசு அருங்காட்சியக தொல்பொருள் பிரிவில் பெறப்பட்டன.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் கீழ்வேளூர் வட்டத்திலிருந்து 1,647 இராஜராஜன் காலத்தைச் சேர்ந்த செப்புக் காசுகள் நாணயவியல் பிரிவில் பெறப்பட்டன.

நந்தி, கருடன், குபேரன், சிவலிங்கம், லஷ்மி, வராஹி மற்றும் பாம்பு வடிவக் கற்கள் உள்ளிட்ட 18 கற்சிற்பங்கள், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டியிலிருந்து புதை பொருட்களாகப் பெறப்பட்டு, காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் சேர்க்கப்பட்டன. ஜகதேவி, பேட்டத்தலப்பள்ளி மற்றும் சின்ன ஓரப்பத்திலிருந்து 16 ஆம் நூற்றாண்டின் மூன்று வீர நடுகற்களும், தீர்த்தத்திலிருந்து 13 ஆம் நூற்றாண்டின் ஒரு விஷ்ணு கற்சிற்பமும் கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் பெறப்பட்டன. மூன்று அடி உயரமுள்ள 15 ஆம் நூற்றாண்டின் வீர நடுகல் ஒன்றை புதை பொருளாகவும், 20 முதல் நாள் அஞ்சல் உறைகள், முத்திரைகள் மற்றும் கோப்புறைகள், 2 சமகால ஓவியங்கள், ஒரு பழைய இரும்பு

விளக்கு, உலோக சீப்பு, 40 மருத்துவ தாவரங்கள் மற்றும் தாவர மாதிரிகள் ஆகியவற்றை பொதுமக்களிடமிருந்து அன்பளிப்பாகவும் விருதுநகர் அரசு அருங்காட்சியகம் பெற்றுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தின் மங்கள நாட்டிலிருந்து ஒரு கற்கோடாரி, ஈமப் பேழை மற்றும் சில ஈமப் பானைகளைத் தவிர, மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து 16 கற்சிற்பங்களையும் 71 பீரங்கி குண்டுகளையும், புதுக்கோட்டை அருங்காட்சியகம் சேகரித்துள்ளது. சமகால வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் மற்ற மாவட்ட அருங்காட்சியகங்களால் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் கூடுதலாக 1,836 அரும்பொருட்கள் இத்துறையின் இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

2.9 தற்போது நடைபெற்றுவரும் திட்டப் பணிகள்

- அரசு அருங்காட்சியக வளாகத்தின் மேம்பட்டுப் பணிகள் ரூ.11.7 கோடி ரூபாய் செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி-சுற்றுலாவிற்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டு திட்டம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பணிகள் 2020 மே மாதத்தில் நிறைவடையும்.

- புதுக்கோட்டை, திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகங்களின் முழுமையான மேம்பாடு தொடர்பான முதல் கட்டப் பணிகள் ரூ.5 கோடி செலவில் நடந்தேறி வருகிறது. இத்திட்டப் பணிகள் 2020 செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவடையும்.

2019-2020-ல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கல்விப் பணிகள்

2.10 அருங்காட்சியகங்களின் முக்கிய செயல்பாடாக, கல்வி இருப்பதால் தனது சேகரிப்புகளில் ஆர்வத்தை அதிகரிப்பதன்மூலம் பார்வையாளர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதே முதன்மை நோக்கமாகும். கண்காட்சிகள் மற்றும் திரைப்பட விழாமூலம் பயிற்சி மற்றும் சூழல்சார் தகவல் அளித்திட பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பட்டன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு வகையான கற்றல்சார் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

[2020 மார்ச் 24

சென்னை அரசு அருங்காட்சியகத்தில்

- பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, உள்விளக்கப் பயிற்சியானது, வரலாறு, தொல்பொருள் மற்றும் இயற்கை அறிவியல் துறைகளில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையின் 16 கல்லூரிகளைச் சேர்ந்த 407 மாணவர்கள் உள்விளக்கப் பயிற்சி பெற்றுள்ளனர்.

- “கோயில் தேர் மரச் சிற்பங்கள்”–சென்னை அரசு அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் உள்ள மரச் சிற்பங்களின் சிறப்புக் கண்காட்சி, 19-9-2019 அன்று, தற்கால ஓவியக் கலைக் கட்டடத்தில் புதிதாக கட்டப்பட்ட சிறப்புக் கண்காட்சிக் கூடத்தில், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியில், சுண்ணாம்பில் செதுக்குதல், களிமண் உருவங்கள் அமைத்தல், இணையொட்டுப் படம் உருவாக்குதல், ஓவியம் வரைதல், கவிதை எழுதுதல், காட்சிக்கூட விளக்கங்கள் மற்றும் பிரபல அறிஞர்களின் கோயில் கட்டடக் கலை தொடர்பான சிறப்பு சொற்பொழிவுகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் பல இடைவிடாது நடத்தப்பட்டன.

- அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு முக்கிய அரும்பொருளை சிறப்பிக்கும் வகையில், 54 சிறப்பு ‘வாரக் கண்காட்சிகள்’ முதன்மைக் கட்டடத்தில் நடத்தப்பட்டன. இதற்கு பொதுமக்களிடமிருந்து பெருமளவில் பாராட்டு கிடைக்கப்பெற்றது.

- 2019 ஆம் ஆண்டின் ‘சிறுவர் தின’ கொண்டாட்டங்களை முன்னிட்டு வெவ்வேறு வயது வரம்பைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கான ஓவியம் வரைதல் மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதற்கு, இவ்வாண்டு பெரும் வரவேற்பு கிடைத்தது. சென்னை மாநகரம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 88 பள்ளிகளிலிருந்து 1,778 மாணவர்கள் ஓவியப் போட்டியிலும், 963 மாணவர்கள் பேச்சுப் போட்டியிலும் பங்கேற்றனர். வெற்றியாளர்களுக்கு 2019 நவம்பர் 14 அன்று மொத்தம் 52 பரிசுகள் வழங்கப்பட்டன.

- இந்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு பிரிவான இந்திய, சிறுவர்கள் திரைப்பட சங்கத்துடன் இணைந்து சிறுவர்களுக்கான மூன்று நாள் திரைப்பட விழா, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 2019, நவம்பர் 14 முதல் 16 வரை நடத்தப்பட்டது. திரையிடப்பட்ட பத்து படங்களை சுமார் ஆயிரத்து ஐநூற்றிற்கும் மேற்பட்ட குழந்தைகள் கண்டுகளித்தனர்.

- மூன்று நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருதாணி இடுதல், பச்சைக் குத்துதல், பலூனில் சிற்பம் செய்தல், முக ஓவியம், பல சிறிய வேடிக்கை விளையாட்டுகள், சிற்றுண்டி மையங்கள், ஆகியவற்றை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர். அருங்காட்சியகங்கள் அறிவின் நிலையான சேமிப்பறைகள் மட்டுமன்றி, அவை கல்வியும், கேளிக்கையும் ஒன்றிணைந்த பிரகாசமான மையங்களாக செயல்பட முடியும் என்பதை இந்த நிகழ்வு மீண்டும் மெய்ப்பித்தது.

மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில்

2.11 உலக அருங்காட்சியக தினம், சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், குடியரசு தினம், சுற்றுச்சூழல் தினம், அறிவியல் தினம், சிறுவர் தினம், அஞ்சல் தலை தினம் போன்ற சிறப்பு நினைவு நாட்கள் மாவட்ட அருங்காட்சியகங்களில் கொண்டாடப்பட்டன. போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடைகள், விழிப்புணர்வுப் பேரணிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கோடைக்கால முகாம்கள் ஆகிய பல நிகழ்வுகள் பார்வையாளர்களையும், மாணவர்களையும் ஈர்க்கும் வகையில் நடத்தப்பட்டன.

2019-2020 முக்கிய சாதனைகள்

2.12 பார்வையாளர்களின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் மாநிலம் முழுவதுமுள்ள அருங்காட்சியகங்களை மேம்படுத்துவதில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக 2018-2019–ல் (ஏப்ரல்’18–பிப்ரவரி’19) 6,50,409 ஆக இருந்த பார்வையாளர் எண்ணிக்கை இவ்வாண்டு (ஏப்ரல் 2019-பிப்ரவரி 2020 வரை)

[2020 மார்ச் 24

7,61,531 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். விலையின்றி கணினி வழியாக மின் இதழ் வெளியீட்டிற்கான விலைவாசல் http://www.ebooks-chennaimuseum.tn.gov.in பயன்பாட்டை இத்துறை பெருமளவில் ஊக்குவிக்கின்றது. இதில், 264 புத்தகங்கள் பி.டி.எப். (pdf) வடிவில் உள்ளன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள அருங்காட்சியகக் கலையரங்கில் பல்வேறு கலை மற்றும் பண்பாடு தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்த குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த, 2018-2019 ஆம் ஆண்டு வாடகை வருவாயாக ரூ.29,09,900/- லிருந்து (11% அதிகரித்து) 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.32,00,760/- ஆக உயர்ந்துள்ளது. (மார்ச் 1, 2020 அன்றைய கணக்கின்படி)

2.13 வருங்காலத் திட்டங்கள்

வெவ்வேறு வயது வரம்பு, திறன், பின்னணி, முதலியவற்றைச் சேர்ந்த அனைவரும், தொழில்நுட்பத்தில் அதிக உந்துதலுடன், தற்போதுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட, வழிவகை செய்யும் மாற்றத்திற்கான ஒரு கருவியாக அருங்காட்சியகங்கள் துறை செயல்படும். வரலாறு மற்றும் பாரம்பரியம் குறித்த பொதுமக்களுக்கு சிறப்பு நிகழ்வுகள், சொற்பொழிவுகள், படக் காட்சிகள், வினாடி வினா போன்றவைமூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இணையதளம் வழியும், நேரடியாகவும், அவர்களுடனான தொடர்புகளை மென்மேலும் அதிகரிக்கவும் இத்துறை திட்டமிட்டுள்ளது.

அருங்காட்சியகத் துறை தனது சேகரிப்புகளை அதிகரித்தும், கருப்பொருள் சிறப்புக் கண்காட்சிகள்மூலம் காட்சிப்படுத்த சில சேகரிப்புகளை மேம்படுத்தியும், சிறப்புத் திறமைகளை பொதுமக்கள் உயரளவில் பயனடையும் வகையில் பகிர்ந்து வருவதையும் தொடர்ந்து மேற்கொள்ளும். பிற பொது பயன்பாடுகளைப் போன்றே பார்வையாளர்களிடம் அறிவைப் பகிர்வதை உறுதி செய்வதற்கும், நமது செழிந்த பண்பாட்டினைப் பற்றிய தெளிவையும், விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

தொல்லியல் துறை

முன்னுரை

3. உலகத்தைப் பற்றிய நமது புரிதலை மிகவும் பொருளுள்ளதாகவும், வளமுள்ளதாகவும் நன்கு அறிய மனிதனின் கடந்த காலத்தைப் பற்றி ஆராய்வதே தொல்லியலின் அடிப்படை. மனிதனின் கடந்த கால ஆய்வு என்பது அந்தந்த சமூக-அரசியல்-பண்பாட்டுச் சூழல்களுக்குள் காலம் மற்றும் இடத்திற்கு ஏற்றாற்போல் மனித இயல்பு மற்றும் அறிவாற்றல் அமைப்புகளை ஆய்வு செய்வதாகும்.

தொல்லியல் என்பது பண்டைய மனிதன் விட்டுச்சென்ற பொருட்களைக் கொண்டு ஆய்வு செய்யும் ஓர் அறிவியலாகும். மனித இயல்பு மற்றும் அறிவாற்றல் அமைப்புகளை முழுமையாக அறிந்துகொள்வதற்கு முறையாகவும் நுணுக்கமாகவும் இது ஆராய்கிறது. Archaeology என்ற கிரேக்கச் சொல்லில், Archaeos என்பதற்கு பண்டைய எனவும், logos என்பதற்கு கலந்துரையாடல், காரணம் அல்லது அறிவியல் எனவும் பொருள் கூறலாம்.

துறையின் நோக்கங்கள்

3.1 மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

- பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மைவாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.
- மாநிலம் முழுவதும் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் நடத்துதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்து பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

நிருவாக அமைப்பு

3.2 தொல்லியல் துறையானது தொல்லியல் துறை ஆணையரின் தலைமையின்கீழ், துணை இயக்குநர், தொல்லியல்

[2020 மார்ச் 24

துணை கண்காணிப்பாளர், உதவி செயற்பொறியாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள் மற்றும் தொல்லியல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள்

3.3 மாநில தொல்லியல் துறை அளித்த பரிந்துரையின்பேரில் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியத்தால், (CABA) 2017-2018, 2018-2019 மற்றும் 2019-2020 ஆகிய ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழாய்வுகள் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கீழடி அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்கள் இதுவரை தமிழக வரலாற்றில் கடைபிடிக்கப்பட்டு வந்த கருதுகோள்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அல்லது மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழலை ஏற்படுத்தி உள்ளன என்றால் மிகையாகாது.

பொதுவாக ‘சங்க காலம்’ என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், கீழடியில் கிடைத்த காலக்கணிப்புகள் தமிழகத்தின் எழுத்தறிவை கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு எடுத்துச்செல்வதால் சங்க காலத்தின் காலவரையறையை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. கொடுமணல், பொருந்தல் ஆகிய இடங்களில் கிடைத்த தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற மட்பாண்டங்களின் காலம் கி.மு. 5 ஆம் நூற்றாண்டு வரை இட்டுச் செல்கிறது. ஆனால், கீழடியில் கிடைத்த அறிவியல் சார்ந்த காலக்கணிப்புகள் இதன் காலத்தை மேலும் ஒரு நூற்றாண்டுப் பழமையானதாக அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நிலை நிறுத்தியுள்ளதே கீழடி ஆய்வுகளின் சிறப்பு அம்சமாகும்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருப்பதால் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தொடக்க வரலாற்றுக் காலம் (Historical Phase) தொடங்கிவிடுவதால் கீழடியில் கிடைக்கப்பெற்றுள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தொடக்க வரலாற்றுக் காலத்தை எடுத்துச்செல்லப்பட்டதை இங்கு நினைவில்கொள்ள வேண்டும்.

2020 மார்ச் 24]

இந்தியாவில் கங்கைச் சமவெளிப் பகுதியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவி வந்தது. ஆனால், கீழடி அகழாய்வு கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

3.4 தமிழ்நாட்டில் கோயில்கள், கோட்டைகள், அரண்மனைகள் மற்றும் நினைவு கட்டடங்கள் போன்றவை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளன. இவை இயற்கைப் பேரழிவுகள், வழக்கத்திற்கு மாறான நிகழ்வுகள் போன்ற பல்வேறு காரணங்களினால் பாழடைந்துள்ளன. இந்த வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தினை மனதில் கொண்டு, தமிழ்நாடு அரசு 1966 ஆம் ஆண்டு "தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு விதிகளை இயற்றியுள்ளது."

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி, வரலாற்றுச் சின்னம் என்பது நூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்று, தொல்லியல் அல்லது கலை மதிப்புகளை உள்ளடக்கிய எந்தவொரு கட்டுமானம் அல்லது சின்னம், மண்மேடு அல்லது ஈமக்காடு, குகை மற்றும் பாறைச் சிற்பங்கள், கல்வெட்டுகள் அல்லது ஒற்றைக்கல் நினைவுச் சின்னம் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

தமிழ்நாடு அரசு இதுவரையில், மொத்தம் 92 பண்டைய மற்றும் வரலாற்றுச் சின்னங்களை "பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக" அறிவித்துள்ளது. இந்திய தொல்லியல் துறை (ASI) இதுவரை 251 சின்னங்கள் மற்றும் 160 தொல்லியல் இடங்களில் ஆக மொத்தம் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களைத் தமிழ்நாட்டில் பாதுகாத்து வருகின்றது.

மேற்கண்ட 92 வரலாற்றுச் சின்னங்களில் முக்கியத்துவமிக்க சுற்றுலா ஆர்வமுள்ள இடங்களாக மதுரை மாவட்டத்திலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமலிங்க விலாச அரண்மனை, நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், சரபேந்திரராஜபட்டினத்திலுள்ள மனோரா நினைவுத் தூண் ஆகியவை திகழ்கின்றன.

அண்மையில், 2019-2020 ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியிலுள்ள கவர்னர் மாளிகை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலில் புதிதாக இடம் பெற்றது. இவை தவிர, பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படுவதற்காக மேலும் 52 வரலாற்றுச் சின்னங்கள் தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான நிதி

3.5 2018-2019 ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கு தொடரும் நிதியாக ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. பாதுகாக்கப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்களில் முக்கிய பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள மேற்படி ஒதுக்கப்பட்ட ரூ.1 கோடியினை ரூ.5 கோடி அளவிற்கு 2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

3.6 ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒரு துணைத் திட்டமான தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாடு முதலீட்டுத் திட்டம் (IDIPT-TN) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

தொல்லியல் துறையின் 12 பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளுக்கான துணைத் திட்டம் ஐஏ-ன்கீழ், ரூ.24 கோடி வழங்குவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்காணும் விவரங்களின்படி ஒப்புதல் அளித்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	வரலாற்றுச் சின்னத்தின் விவரம்	திட்ட மதிப்பீடு
1	மலைக்கோட்டை, தியாகதுர்கம் கிராமம், விழுப்புரம் மாவட்டம்.	213.17

2020 மார்ச் 24]

வ. எண்	வரலாற்றுச் சின்னத்தின் விவரம்	திட்ட மதிப்பீடு
2	பூண்டி அருகர்கோயில், இரும்பேடு கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.	35.36
3	கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.	195.55
4	தடாகபுரீஸ்வரர் கோயில், மடம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.	176.61
5	சின்னையன்குளம், சின்னையன் பேட்டை கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.	29.95
6	ஆலம்பறைக் கோட்டை, ஆலம்பறை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம்.	768.00
7	உதயகிரி கோட்டை, புலியூர்குறிச்சி கிராமம், கன்னியாகுமரி மாவட்டம்.	235.40
8	திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை மாவட்டம்.	334.58
9	மருது பாண்டியர் கோட்டை, அரண்மனை சிறுவயல் கிராமம், சிவகங்கை மாவட்டம்.	67.05
10	மனோரா கோட்டை, சரபேந்திரராஜபட்டினம் கிராமம், தஞ்சாவூர் மாவட்டம்.	221.72
11	டச்சுக் கல்லறை, நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம்.	27.67
12	கட்டபொம்மன்கோட்டை,பாஞ்சாலங்குறிச்சி கிராமம், தூத்துக்குடி மாவட்டம்.	94.48
	மொத்தம்	**2,399.54**

இப்பணிகள் ஜூன் 2020-க்குள் நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளன.

திறன் மேம்பாடு

3.7 பொது தொல்லியல் என்பது வளர்ந்துவரும் பகுதி. இதில், பொதுமக்களுக்கு அவர்களின் கடந்த காலத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உரிய கல்வி கற்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்டைய மனிதனின் கடந்த காலத்தைப் பற்றிய தகவல்கள், அறிவு மற்றும் நுண்ணறிவை வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்த முயற்சியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு "தொல்லியல் ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னை, தருமபுரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ளது. அந்நிகழ்வு, அனைத்து தரப்பட்ட மக்களிடையும் பெரும் ஆதரவு பெற்றது. மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து கிடைத்த பெரும் வரவேற்பைக் கருத்தில் கொண்டு, விருப்பம் தெரிவித்த 7,500 பேரில் முதற்கட்டமாக சென்னையில் 200 பங்கேற்பாளர்கள் கலந்துகொள்ளும் வகையில், ஜனவரி 2020-ல் ஐந்து நாள் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. தொல்லியல் துறையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞர்கள் அழைக்கப்பட்டு, தொல்லியல் சார்ந்த அனைத்து இனங்களிலும் கருத்துரை வழங்கினர். இதேபோன்ற நிகழ்வுகள் மாநிலத்தின் பிற மண்டலங்களிலும் இவ்வருடம் வெற்றிகரமாக முடிக்கப்படும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அகழாய்வு

3.8 தொல்லியல் அகழாய்வு என்பது அறிவியல் நெறிமுறைகளின்படி, வெளிக்கொணரப்பட மற்றும் மீட்கப்பட வேண்டிய கலைப்பொருட்கள், சுற்றுச்சூழல் குறித்த சான்றுகள் மற்றும் நிலையான விவரங்களைப் பண்பாட்டு அடுக்குகள் வாயிலாக கண்டறிதலாகும். இதன்படி, மண் அடுக்குகளை ஒவ்வொன்றாக மேலிருந்து கீழாக அகற்றுவதின்மூலம் ஒவ்வொரு பண்பாட்டு நிலைகளையும் படிப்படியாக வெளிப்படுத்தி இந்த இடத்தின் வரலாற்றினை அறிய முடியும். இந்த ஆய்வு முறையாகவும், நுணுக்கமாகவும் நடத்தப்பட வேண்டும். இதன்மூலம் கண்டறியப்படும் சான்றுகள் அனைத்தும் அதன் சூழலின் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

2020 மார்ச் 24]

பல்கலைக்கழகங்கள், தொல்லியலில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள்/முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான செயற்குறிப்புகளை மாநில அரசின் பரிந்துரையுடன், மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக்கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்படுகிறது.

இணைப்பு 1-ன்படி, இதுவரை தொல்லியல் துறை மட்டும் 42 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 37 இடங்களின் அகழாய்வு அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இதைத் தவிர, இந்திய தொல்லியல் துறை (ASI) இதுவரை 50-க்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

கீழடி அகழாய்வுகள்

3.9 சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டத்தில் கீழடி கிராமத்தில் அமைந்துள்ள தென்னந்தோப்பில் 110 ஏக்கருக்கும் அதிகமான அளவில், விரிந்த நிலப்பரப்பில் பண்பாட்டுக் குவியல்களைக் கொண்ட மண்மேடு அமைந்துள்ளது.

முன்னதாக, இந்திய தொல்லியல் துறையின் பெங்களூரு அகழாய்வுப் பிரிவின் வாயிலாக 2014-2015, 2015-2016 மற்றும் 2016-2017 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, மாநில தொல்லியல் துறையானது அகழாய்வுப் பணியினை 2017-2018, 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்டு வருகின்றது.

கீழடி அகழாய்வு-முக்கிய கண்டுபிடிப்புகள்

3.10 நான்காம் கட்ட அகழாய்வில் அரிய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட ஏராளமான கட்டுமானப் பொருட்கள் (செங்கல் கட்டுமானம், சுடுமண்ணாலான உறை கிணறுகள் மற்றும் விரல்களால் மிக அழுத்தி உருவாக்கப்பட்ட பள்ளங்கள் வழியாக மழைநீர் செல்லும் வகையில் தயாரிக்கப்பட்ட கூரை ஓடுகள் விழுந்த நிலையில்) உள்ளிட்ட 5,820 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

மேலும், தங்கத்தினாலான சில ஆபரண பாகங்கள், செம்பினாலான தொல்பொருட்கள், இரும்புக் கருவிகள்,

[2020 மார்ச் 24

சுடுமண்ணாலான விளையாட்டுப் பொருட்கள், வட்டச் சில்லுகள், காதணிகள், தக்களிகள், மனிதன் மற்றும் விலங்குகளின் உடைந்த மற்றும் முழு பொம்மை உருவங்கள் மற்றும் சுடுமண் மணிகள், கண்ணாடி மணிகள், மதிப்பு குறைவான கல் மணிகள் [இரத்தினக் கல் மணிகள் (Agate), சூது பவள மணிகள் (கார்னீலியன்), படிக மணிகள்] கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், தொன்மைவாய்ந்த மட்பாண்ட வகைகளின் எச்சங்களான கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், கருப்பு நிறப் பானை ஓடுகள், மெருகூட்டப்பட்ட கருப்பு பானை ஓடுகள், சிவப்பு நிறப் பானை ஓடுகள், ரோமானிய முத்திரையிட்ட பானை ஓடுகள், அரிட்டேன் பானை ஓட்டுத் துண்டுகள் ஆகியவையும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பானைகளைச் சுடுவதற்கு முன்னரும் மற்றும் சுட்டப் பின்னரும் வரையப்பட்ட கீறல் குறியீடுகளைக் கொண்ட பானை ஓடுகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் கண்டெடுக்கப்பட்டன. மேலும், தமிழ் பிராமி எழுத்து பொறிப்பு கொண்ட பானை ஓடுகள் நிறைய எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

இது கோயில் நகரமான மதுரைக்கு மிக அருகிலுள்ள பகுதியாகும். இங்கு வரலாற்றுத் தொன்மை கொண்ட பொருட்கள் கிடைக்கப்பெற்றதன்மூலம், பண்டைய தமிழர் நாகரிகத்தின் பண்பாட்டு வளம் சுட்டிக்காட்டப்படுவதால் கீழடியில் மறைந்துள்ள பண்பாட்டு மதிப்புறுப் பொருட்களைத் தேடும் பணிகளை எதிர்காலத்தில் தொடர்வதும், பண்டைய சமூகத்தின் பண்பாட்டு வளங்களை வெளிப்படுத்துவதும் காலத்தின் அவசியத் தேவையாகிறது.

கீழடியில் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாம் கட்ட அகழாய்வு ஜூன்–அக்டோபர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுமொத்தமாக 51 அகழாய்வு கால் பகுதிகள் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ 900 தொல்பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலும், அரிய பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட ஏராளமான கட்டுமானப் பொருட்கள் (செங்கல் கட்டுமானம், சுடு மண்ணாலான உறை கிணறுகள்) மற்றும் சுடு மண்ணாலான உருவங்கள், இன்டாக்லியோ (கார்னீலியன்), வெள்ளி மற்றும் செப்பு காசுகள், பொம்மை பாத்திரங்கள் போன்றவை முக்கிய கண்டுபிடிப்புகளாகும்.

2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்

3.11 2019-2020 ஆம் ஆண்டு, தமிழகத்தில் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ஏதுவாக ரூ.2 கோடி தொடரும் செலவினமாக தமிழ்நாடு அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல் ஆகிய நான்கு இடங்களில் முறையான தொல்லியல் அகழாய்வுகளும் புதிய கற்கால இடங்களைக் கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு மற்றும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அண்மையில், சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய இடங்களில் கீழடியின் ஆறாம் கட்ட அகழாய்வுப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் 19.2.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை, 50-க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டறியப்பட்டு, அகழாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதர தொல்லியல் அகழாய்வுகளும் கள ஆய்வுகளும் மார்ச், 2020 இல் துவங்கப்படவுள்ளன.

அறிவியல் கால அளவீடு

3.12 தொல்லியல் பொருட்களின் கால வரிசையை முறையாக மறு கட்டமைப்பு செய்திடவில்லையெனில் தொல்லியல் ஆய்வுகள் பொருளற்றதாகிவிடும்.

வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக் காலம் வரையிலான பண்பாட்டினைக் கூறும் உலக

வரைபடத்தில் தமிழ்நாட்டின் இடத்தினை நிலைநிறுத்துவதற்கு அகழ்வாய்வுகள்மூலம் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களை அவ்வப்போது அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வு செய்து காலக் கணக்கீடுகள் செய்திடல் அவசியம். இதனையொட்டி, தொல்லியல் துறை அகழாய்வுகள்மூலம் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள புளோரிடா மாகாணம், மியாமி நகரத்திலுள்ள, 'பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகம்' (Beta Analytic Testing Laboratory) என்ற ஆய்வுக் கூடத்தில் கால அளவீடு செய்து அறிக்கை பெற்று வருகிறது.

அகழாய்வில் தொழில்நுட்பப் பயன்பாடு

3.13 அகழாய்வுகளை மேற்கொள்வதற்கு கண்டறிதல் முதல் பொருள் விளக்கம் அறிதல் வரை பல்வேறு தொழில்நுட்பத் திறன்கள் தேவையாக விளங்குகின்றன. கடந்தகாலம் குறித்த சிந்தனைகளில் புதுமை வழிகளை ஆராய்வதும், தகவல்களைச் சேகரிப்பதும் அறிவை அதிகரிப்பதும், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதும் அறிவின் அடித்தளத்தை விரிவாக்கி பண்டையக்காலம் பற்றிய புரிதலை மேம்படுத்தி ஒவ்வொருவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தன் வசப்படுத்தும்.

இப்பெரு முயற்சியில், மும்பையிலுள்ள இந்திய புவிகாந்தவியல் நிறுவனம், பெங்களூருவிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனம், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வுத் துறை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு நிறுவனம் மற்றும் மும்பையிலுள்ள இந்திய புவிகாந்தவியல் நிறுவனம் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), காந்த அளவி மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி வாகன மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற பல்வகையான தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அவற்றின்மூலம் தொல்லியல் இடத்தை அடையாளம் காண்பது மற்றும் முறையான தொல்லியல் தளங்கள் மற்றும் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்வது என சீரிய நடவடிக்கைகளில் தொல்லியல் துறை ஈடுபட்டுள்ளது.

தொல்லியல் அகழ்வைப்பகங்கள்

3.14 கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின்கீழ் செயல்படும்

2020 மார்ச் 24]

14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வ. எண்	அகழ்வைப்பகங்கள்	இடம்/மாவட்டம்
1)	டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம்	தரங்கம்பாடி/ நாகப்பட்டினம்
2)	ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம்	பூம்புகார்/நாகப்பட்டினம்
3)	கங்கைகொண்டசோழபுரம் அகழ்வைப்பகம்	கங்கைகொண்ட சோழபுரம்/அரியலூர்
4)	இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம்	இராமநாதபுரம்/ இராமநாதபுரம்
5)	ஆற்காடு அகழ்வைப்பகம்	ஆற்காடு/வேலூர்
6)	வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம்	பூண்டி/திருவள்ளூர்
7)	திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம்	மதுரை/ மதுரை
8)	இராசராசன் அகழ்வைப்பகம்	தஞ்சாவூர்/தஞ்சாவூர்
9)	மராத்தியர் அகழ்வைப்பகம்	தஞ்சாவூர்/தஞ்சாவூர்
10)	கரூர் அகழ்வைப்பகம்	கரூர்/கரூர்
11)	கோயம்புத்தூர் அகழ்வைப்பகம்	கோயம்புத்தூர்/ கோயம்புத்தூர்
12)	குற்றாலம் அகழ்வைப்பகம்	குற்றாலம்/திருநெல்வேலி
13)	திருக்கோவிலூர் அகழ்வைப்பகம்	திருக்கோவிலூர்/ விழுப்புரம்
14)	தருமபுரி அகழ்வைப்பகம்	தருமபுரி/தருமபுரி

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2020 மார்ச் 24

கீழடி தொல்பொருட்களை காட்சிப்படுத்திட புதிய அகழ்வைப்பகம் ஏற்படுத்துதல்

3.15 2019-2020 ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1-11-2019 அன்று சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல்பொருட்களைக் காட்சிப்படுத்திட உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட ரூ.12.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு, நிருவாக ஒப்புதல் 1-11-2019 அன்றும் நிதி ஒப்புதல் 3-2-2020 அன்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது. புதிய அகழ்வைப்பகத்திற்கான கட்டுமானப் பணிகள் ஏப்ரல் 2020 இல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்திட நிதி

3.16 2018-2019 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளின்கீழ், உலக மரபு நாள் (ஏப்ரல் 18) மற்றும் உலக மரபு வாரம் (நவம்பர் 19–25) ஆகிய விழாக்களை கொண்டாடவும், தொல்லியல் மற்றும் கல்வெட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், போட்டிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் போன்ற நிகழ்ச்சிகளை அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவ சமுதாயம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடத்திட ஆண்டுதோறும் ரூ.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

இது தொடர்பாக மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் அமைக்கப்பட்ட கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1-11-2019 அன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியினை இதுவரை 60,000 பேர் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கீழடி அகழாய்வு பற்றிய தேசிய கருத்தரங்கு 19-12-2019 மற்றும் 20-12-2019 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் கூட்டரங்கில் நடத்தப்பட்டது. இந்தியாவில் பல பகுதிகளிலிருந்து 22 தொல்லியல் வல்லுநர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். அறிவுப்பூர்வமான விவாதங்களுடன் இக்கருத்தரங்கம் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

2020 மார்ச் 24]

கல்வெட்டியல்

3.17 கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வு கல்வெட்டியல் எனப்படுகிறது. இப்பதிவு உள்ளத்தை வியக்க வைப்பதாகவும், தகவல் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாக கல்வெட்டியல் விளங்குகின்றது. நீதி இயல், சமுதாய பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டுகளுக்கென்று தனிப் பிரிவு 1996-ல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய பணி தமிழகத்தில் கோயிற்சுவர்களிலும், கற்றூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத்தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

தற்போது, மொத்தம் உள்ள 37 மாவட்டங்களில் 34 மாவட்டங்களில் உள்ள 25,027 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு அவற்றின் பிரதிகள் இத்துறையிடம் உள்ளன. ஏனைய மாவட்டங்களான புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், 14,200 கல்வெட்டுகள், துறை கல்வெட்டாய்வாளர்களால் பொருள் கண்டுணர்ந்து படிக்கப்பட்டுள்ளன. அவற்றில், 7,320 கல்வெட்டு பொறிப்புகள் 50 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

தொல்லியல் துறையின் தலைமையகத்தில், 1974 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் `கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்' என்னும் ஓராண்டு முதுநிலைப் பட்டய படிப்பை நடத்தி வருகிறது. இங்கு ஒவ்வோர் ஆண்டும், முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 256 மாணவர்கள் இப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர். 2018-2019 ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் வகுப்பறையினை திறன்மிகு வகுப்பறையாக (Smart Class) மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளை படியெடுத்து, படிக்க முனைப்புத் திட்டம்

3.18 2019-2020 ஆம் ஆண்டில் கல்வெட்டுகளை படியெடுத்தல், படித்து பொருள் விளக்கம் செய்து நூல் வடிவில் வெளியிடுவதில் உள்ள இடர்பாடுகளையும் புதிய அலுவலர்களை பயிற்றுவிக்கும் நோக்கத்தையும் கருத்தில்கொண்டு ஐந்து ஆண்டுக் காலம் செயல்படும் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தினைச் செயல்டுத்திட திட்டமிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் வீதம் ஒட்டுமொத்தமாக ரூ.2 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்

3.19 ஓலைச்சுவடி என்பது காகிதம், பட்டை, துணி, உலோகம், பனை ஓலை அல்லது அறிவியல், வரலாற்று அல்லது அழகியல் மதிப்பு மிக்க பொருட்களில் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கியவை. ஓலைச்சுவடிகள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு மொழிகளிலும் வரிவடிவங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்று நிகழ்வுகள் அல்லது செயல்முறைகள் குறித்த நேரடி தகவல்களை வழங்கும் பாறைகள், நிறுவனங்கள், வருவாய் பதிவுகள் போன்ற வரலாற்று பதிவுகளிலிருந்து ஓலைச்சுவடிகள் வேறுபடுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் உருவாக்கம் 1861 முதல் ஒரு தனித்துவமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் கர்னல் கொலின் மெக்கன்சி, சி.பி. பிரவுன் மற்றும் பேராசிரியர்

பிக்போர்டு ஆகியோரின் சேகரிப்புப் படைப்புகளாகவும், பின்னர், ஓலைச்சுவடிகளை கூடுதலாக சேகரிப்பதற்காகவும் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் கணிதம், வான் அறிவியல், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக் கலை, இசை, கவின் கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில் 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச்சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை, 2400 ஓலைச்சுவடி கட்டுகளின் 3,00,000 மின்னணுமயமாக்கப்பட்ட பக்கங்கள் www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. வலைதளத்தில் உள்ள இத்தகவல்கள் உலகில் உள்ள அனைத்து ஆய்வறிஞர்கள் மற்றும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

மாநில சுவடிக் குழுமம்

3.20 2019-2020 ஆம் ஆண்டுக்கான மாண்புமிகு அமைச்சரின் அறிவிப்புகளின்படி, மாநிலத்தில் உள்ள ஓலைச்சுவடிகளை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் அவற்றை முறையாக மின் பதிப்பாக்கம் செய்திட மாநில சுவடிக் குழுமம் ஏற்படுத்தி இத்திட்டத்திற்கு தொடரும் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ஒரு தனித்துவமான சுவடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடம் உள்ள ஏராளமான ஓலைச்சுவடிகள் அடையாளம் காணப்படும். மேலும், இதன்மூலம் இச்சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு மின் பதிப்பாக்கம் செய்து எதிர்கால தலைமுறையினரின் நலனுக்காக ஆவணப்படுத்தப்படும்.

ஐந்து மண்டலங்களின்மூலம் மாநில சுவடிக் குழுமத்தினைச் செயல்படுத்திட முதற்கட்டப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநில சுவடிக் குழுமத்தின்மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சர்வதேச தரத்துடன்கூடிய தரக் குறியீட்டுடன் அட்டவணைப்படுத்தப்பட்டு, இறுதியாக அறிஞர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளன.

சுவடிகள் வள ஆதார மையம் (Manuscripts Resource Centre)

3.21 புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச்சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அவற்றினை குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதார மையமாக (MRC) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை, 66,110 சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு, புதுதில்லியிலுள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த செய்முறையில் பண்டைய தமிழர்களின் பண்பாடு மற்றும் வான் அறிவியல் போன்ற விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றன.

சுவடிகள் பாதுகாப்பு மையம் (Manuscripts Conservation Centre)

3.22 புதுதில்லியிலுள்ள மத்திய பண்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் சுவடிகள் பாதுகாப்பு மையம் (Manuscripts Conservation Centre) தொடங்கிட அனுமதி வழங்கியுள்ளது. இதன் தொடர்பாக, 1.4.2018 முதல் 31.3.2020

2020 மார்ச் 24]

வரையிலான இரண்டு ஆண்டுக் காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, இதுவரை 437 கட்டுகள், 39,945 பக்கங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

3.23 முக்கியச் செயல்பாடுகள்-2019-2020

- கீழடி நான்காம் கட்ட அகழாய்வு அறிக்கை 19.9.2019 அன்று வெளியிடப்பட்டது. இந்நூலின் தமிழ் மற்றும் ஆங்கில அறிக்கைகள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து வெளியிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1.11.2019 அன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் அமைக்கப்பட்ட கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், மாதிரிகள், கீழடி அகழாய்வுக் குழிகளின் வான்வெளிப் பார்வை மாதிரி, முப்பரிமாண தொல்பொருட்கள் அடங்கிய மெய்நிகர் காட்சியகம் (Virtual Reality) மற்றும் Floor Projection Mapping ஆகிய பிரிவுகளில் காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.
- அதேபோன்று, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பெரு நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) செயல்பாடுகள் திட்டத்தின் நிதி உதவியின்கீழ், 9.1.2020 முதல் 21.1.2020 வரை நடைபெற்ற 43-வது சென்னை புத்தகத் திருவிழாவில் ஒரு தனித்துவமான அரங்கு 3,000 சதுர அடியில் அமைக்கப்பட்டது. இந்த அரங்கத்தில் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள், மாதிரிகள், கீழடி அகழாய்வுக் குழிகளின் வான்வெளிப் பார்வை மாதிரி, முப்பரிமாண தொல்பொருட்கள் அடங்கிய மெய்நிகர் காட்சியகம் (Virtual Reality) ஆகியவைமூலம் கீழடி அகழாய்வு இடத்தினை நேரில் சென்று காணும் அனுபவத்தினை ஏற்படுத்தும் வகையில் பொது மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது. இக்கண்காட்சி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 9-1-2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், கீழடி நான்காம் கட்ட

அகழாய்வு அறிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலம் மட்டுமன்றி தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, அஸ்ஸாமி, ஹிந்தி, வங்காளி, சமஸ்கிருதம், குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன், அரபி, ருஷ்யன், ஜப்பானியம், கொரியன், இத்தாலி, போர்ச்சுகீஷியம், சைனீஸ், உருது என 24 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு அந்நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சி வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

❖ கீழடி கண்காட்சியானது திருப்பூர் புத்தகக் கண்காட்சி (30-1-2020-9-2-2020), திருநெல்வேலி புத்தகக் கண்காட்சி (1-2-2020-10-2-2020) மற்றும் புதுக்கோட்டை புத்தக கண்காட்சி (14-2-2020-23-2-2020) ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டது. இந்நிகழ்வில், 3,649 பிரதிகள் கீழடி அகழாய்வு அறிக்கை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விற்பனை செய்யப்பட்டது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அண்மையில் புதியதாக தொடங்கி வைக்கப்பட்ட இராணிப்பேட்டை (28-11-2019), திருப்பத்தூர் (28-11-2019) மற்றும் செங்கல்பட்டு (29-11-2019) ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட அரங்குகளில் கீழடி அகழாய்வு குறித்த ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

❖ 2019-2020 ஆம் ஆண்டில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட சின்னங்களில் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனடிப்படையில், தைத் திருநாளின்போது மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, டேனிஷ் கோட்டை போன்ற முக்கிய பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் வளாகங்களில் தமிழ் மரபுசார் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

❖ 2019 ஆம் ஆண்டுக்கான உலக மரபு வார விழா நவம்பர் 19 முதல் 25 வரை கொண்டாடப்பட்டது. அனைத்து அகழ்வைப்பகங்களிலும் கோயில்களின் பாதுகாப்பு மற்றும்

தொல்லியல் சின்னங்களை பராமரித்தல் குறித்து பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

❖ தொல்லியல் துறை, "நவீன இந்தியாவின் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இராபர்ட் புரூஸ்புட்டின் தொடர்பு", "பல்லாவரத்தில் அண்மையில் கிடைத்த முக்கிய கண்டுப்பிடிப்புகள்", "சென்னையைச் சுற்றியுள்ள வரலாற்றுக் கோயில்கள்", "பண்டைய தமிழகக் காசுகள்", "தமிழக கோயில் கட்டட அமைப்பு", "வரலாறு காட்டும் நீர் மேலாண்மை", "கல்வெட்டுகளும் தொல்காப்பியமும்", "பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளில் வரலாற்று மொழியியல் மற்றும் தொல் திராவிடத்தின் மொழியியல் கூறுகளை மீளாய்வு செய்தல்", "சங்க இலக்கியங்களும் அகழாய்வுகளும்", "பாறை ஓவியங்களைப் பற்றிய புரிதல்", "வட ஆப்பிரிக்காவின் தொடக்க கால பழங்கற்காலம்: Ain Hanech மற்றும் Tighennif, Algeria-வில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள்" ஆகிய பல்வேறு தலைப்புகளில் மாதாந்திர சொற்பொழிவுகளை நடத்தியது. இச்சொற்பொழிவுகளில் வரலாற்றுத் துறை சார்ந்த அறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மரபுசார் ஆர்வலர்கள் குறிப்பிடத்தக்க வகையில் கலந்துகொண்டார்கள்.

❖ "தொல்லியல் களமும் பழந்தமிழர் மரபும்" எனும் தலைப்பில் 26-7-2019 அன்று ஒரு நாள் கருந்தரங்கு சென்னை, விருகம்பாக்கம், ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியுடன் இணைந்து நடத்தப்பட்டது.

❖ 2019-2020 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள கோயில்கள், மலைகள் ஆகிய இடங்களில் 256 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

பன்முக அணுகுமுறை

3.24 தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், தொல்-தாவரவியல்,

[2020 மார்ச் 24

மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து ஒத்துழைத்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

3.25 தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும் அக்கறை கொள்ளவும் நமது பன்முகம் கொண்ட வளமையான பாரம்பரியத்தை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும், அதன்மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம் சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலைநிறுத்தும் என்றும் கூறலாம்.

தற்போது, நடைபெற்றுவரும் களப் பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப் பராமரித்தல், தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வுப் பணிகள் மேம்பாடு, சுவடிகள் பாதுகாப்பு, கல்வெட்டுகளைப் படியெடுத்தல் போன்ற ஆய்வுப் பணிகளில் உலகத்தரம் வாய்ந்த நடைமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதை தமிழகத் தொல்லியல் துறை உணர்ந்துள்ளது. நன்கு வடிவமைக்கப்பட்ட பன்முக அணுகுமுறைகளின் வழியாக தமிழ்நாட்டில் மரபுசார் மேலாண்மையினை மேம்படுத்த முடியும் என எதிர்நோக்குகிறோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]


இணைப்பு

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு மேற் கொள்ளப் பட்ட ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
1.	கொற்கை	தூத்துக்குடி	1968-1969	வரலாற்றுத் தொடக்கக் காலம்
2.	பாஞ்சாலங் குறிச்சி	தூத்துக்குடி	1968-1969	நவீன காலம்
3.	வசவ சமுத்திரம்	காஞ்சிபுரம்	1969-1970	வரலாற்றுத் தொடக்கக் காலம்
4.	ஆனைமலை	கோயம்புத்தூர்	1969-1970	பெருங்கற்காலம்
5.	பல்லவமேடு	காஞ்சிபுரம்	1970-1971	இடைக் காலம்
6.	கரூர்	கரூர்	1973-1974 1994-1995	வரலாற்றுத் தொடக்க காலம்
7.	பனையகுளம்	தருமபுரி	1979-1980	வரலாற்றுத் தொடக்கக் காலம்
8.	போளுவாம் பட்டி	கோயம்புத்தூர்	1979-1980 1980-1981	இடைக் காலம்
9.	கோவலன் பொட்டல்	மதுரை	1980-1981	பெருங்கற்காலம்
10.	தொண்டி	இராமநாதபுரம்	1980-1981	வரலாற்றுத் தொடக்கக் காலம்
11.	கங்கை கொண்ட சோழபுரம்	அரியலூர்	1980-1981 1986-1987 2008-2009	இடைக் காலம்
12.	கண்ணனூர்	திருச்சி	1982-1983	இடைக் காலம்
13.	குறும்பன் கோடு	தஞ்சாவூர்	1984-1985	இடைக் காலம்
14.	பழையாறை	தஞ்சாவூர்	1984-1985	இடைக் காலம்

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு மேற் கொள்ளப் பட்ட ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
15.	அழகன்குளம்	இராமநாதபுரம்	1986-1987 1990-1991 1992-1993 1994-1995 1996-1997 2014-2015 2016-2017	வரலாற்றுத் தொடக்கக் காலம்
16.	திருக்கோவிலூர்	விழுப்புரம்	1992-1993	வரலாற்றுத் தொடக்கக் காலம்
17.	கொடுமணல்	ஈரோடு	1992-1993 1996-1997	பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்கக் காலம்
18.	சேந்தமங்கலம்	விழுப்புரம்	1992-1993 1994-1995	இடைக் காலம்
19.	படவேடு	திருவண்ணாமலை	1992-1993	இடைக் காலம்
20.	திருத்தங்கல்	விருதுநகர்	1994-1995	நுண்கற்காலம்
21.	பூம்புகார்	நாகப்பட்டினம்	1994-1995 1997-1998	வரலாற்றுத் தொடக்கக் காலம்
22.	மாளிகைமேடு	கடலூர்	1999-2000	வரலாற்றுத் தொடக்கக் காலம்
23.	தேரிருவேலி	இராமநாதபுரம்	1999-2000	வரலாற்றுத் தொடக்கக் காலம்
24.	மாங்குடி	திருநெல்வேலி	2001-2002	நுண்கற்காலம்
25.	பேரூர்	கோயம்புத்தூர்	2001-2002	வரலாற்றுத் தொடக்கக் காலம்
26.	ஆண்டிப்பட்டி	திருவண்ணாமலை	2004-2005	வரலாற்றுத் தொடக்கக் காலம்
27.	மோதூர்	தருமபுரி	2004-2005	புதிய கற்காலம்
28.	மரக்காணம்	விழுப்புரம்	2005-2006	இடைக் காலம்

வ. எண்	இடம்	மாவட்டம்	அகழாய்வு மேற் கொள்ளப் பட்ட ஆண்டு	இடத்தின் வகைப்பாடு
29.	பாரிக்குளம்	திருவள்ளூர்	2005-2006	பழைய கற்காலம்
30.	நெடுங்கூர்	கரூர்	2006-2007	பெருங்கற்காலம்
31.	மாங்குளம்	மதுரை	2006-2007	வரலாற்றுத் தொடக்கக் காலம்
32.	செம்பியன் கண்டியூர்	நாகப்பட்டினம்	2007-2008	பெருங்கற்காலம்
33.	தரங்கம்பாடி	நாகப்பட்டினம்	2008-2009	நவீன காலம்
34.	இராஜாக்கள்மங்கலம்	திருநெல்வேலி	2009-2010	இடைக் காலம்
35.	தலைச்சங்காடு	நாகப்பட்டினம்	2010-2011	இடைக் காலம்
36.	ஆலம்பரை	காஞ்சிபுரம்	2011-2012	நவீன காலம்
37.	ஸ்ரீரங்கம்	திருச்சி	2013-2014 2014-2015	இடைக் காலம்
38.	உக்கிரன்கோட்டை	திருநெல்வேலி	2014-2015	இடைக் காலம்
39.	பட்டறைபெரும்புதூர்	திருவள்ளூர்	2015-2016 2017-2018	கடைக் கற்காலம்
40.	கீழடி	சிவகங்கை	2017-2018	வரலாற்றுத் தொடக்கக் காலம்
41.	ஆதிச்சநல்லூர்	தூத்துக்குடி	2019-2020	இரும்புக் காலம்
42.	சிவகலை	தூத்துக்குடி	2019-2020	இரும்புக் காலம்

[2020 மார்ச் 24



தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள்

இணைப்பு XIV

(47 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

வணிக வரித் துறை, மாநில சொந்த வரி வருவாயில் 80 விழுக்காட்டிற்கு மேல் தன் பங்காக அளித்து தமிழ்நாடு அரசின் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களுக்கு முக்கிய பங்காற்றி வருகிறது. இத்துறை, அரசிற்கு சேரவேண்டிய வருவாயினை வசூலிக்கும் பணியை முறைபடுத்தியும், நிருவாகத் திறமையை மேம்படுத்தியும், தொய்வில்லாமல் செயலாற்றி வருகிறது. 'ஒரே தேசம், ஒரே வரி' என்ற நோக்கத்தின் அடிப்படையில், ஒரு மைல்கல் முயற்சியாக 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் சரக்குகள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டின் மீதும் எளிய, வெளிப்படையான மற்றும் விரிவான முறையில் வரி விதிப்பதற்கு வழிவகுக்கிறது.

2. துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

வணிக வரித் துறை கீழ்க்காணும் சட்டங்களை நிருவகிக்கிறது:-

1. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017
2. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 (அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண் 54 இல் உள்ளடக்கப்பட்ட 6 சரக்குகள் மட்டும்)

வணிக வரித் துறையால் 30-06-2017 வரையில் பின்பற்றப்பட்ட கீழ்க்கண்ட சட்டங்கள் தொடர்பான பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:-

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970

4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983
10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

3. வருவாய் வசூலின் போக்கு

இத்துறையால் கடந்த ஆறாண்டுகளில் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

வருடம்	**வரி வருவாய்**
2014-2015	60,314.61
2015-2016	61,709.58
2016-2017	67,576.77
2017-2018	73,148.28
2018-2019	87,905.26
2019-2020 (29.2.2020 வரை)	86,363.51

வணிக வரித் துறை 2019-2020 ஆம் நிதியாண்டில் (29-2-2020 வரை) ரூ.86,363.51 கோடி வருவாயினை (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இழப்பீடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வுத் தொகையையும் உள்ளடக்கியது) வசூலித்துள்ளது. 2018-2019 ஆம் ஆண்டு இதே காலக்கட்டத்தில் வசூலிக்கப்பட்ட தொகையான ரூ.78,214.85

2020 மார்ச் 24]

கோடியுடன் ஒப்பிடுகையில், ரூ.8,148.66 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டு, 10.42% வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சி விகிதம் நிலையற்ற பொருளாதார சூழ்நிலையிலும் கூட சாத்தியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

4. நிருவாகச் செலவினம்

சிக்கன செலவில் அதிக வருவாயினை ஈட்டும் வரி நிருவாகத்தில் வணிக வரித் துறை முதன்மை பெற்று வருகிறது. இத்துறையின் வரி வசூலின் நிருவாக செலவினமானது, மொத்த வரி வருவாயில் ஒரு விழுக்காட்டைக்கூட எந்த ஒரு வருடத்திலும் கடந்ததில்லை. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் ஆகியவற்றை நிருவகிக்கும்போதும் இருந்த நிலையே தொடர்கிறது.

5. கடந்த ஆண்டுகளில் சட்டங்கள்வாரியான வரி வருவாய்

கடந்த ஆண்டுகளில் பல்வேறு சட்டங்கள்வாரியான வரி வருவாய் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

வ. எண்	சட்டம்	2014-2015	2015-2016	2016-2017
1	தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (TNVAT Act)	53,930.47	54,804.54	59,262.00
2	மத்திய விற்பனை வரிச் சட்டம் (CST Act)	3,811.17	4,037.76	5,125.20
3	தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (TNGST Act)	195.21	211.12	188.65
4	தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் (TNET Act)	82.97	106.29	85.81

வ. எண்	சட்டம்	2014-2015	2015-2016	2016-2017
5	பந்தய வரிச் சட்டம் (Betting Tax Act)	5.60	5.65	7.86
6	ஆடம்பரங்கள் வரிச் சட்டம் (Luxury Tax Act)	319.26	357.03	379.01
7	நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் சரக்குகள்) [Entry Tax Act (Vehicles and Goods)]	1,969.93	2,187.19	2,258.24
	மொத்தம்	60,314.61	61,709.58	67,576.77

2017-2018 ஆம் ஆண்டுக்கான வரி வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)

	மொத்தம்	மதிப்புக் கூட்டு வரி / சரக்குகள் மற்றும் சேவை * வரி அல்லாதவை	மதிப்புக் கூட்டு வரி / மற்றவை	மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி	ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு	முன்கூட்டியே அளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு	இழப்பீடு
ஜிஎஸ்டி-க்கு முன்	15,535.66	7,592.28	7,943.38	0	0	0	0
ஜிஎஸ்டி-க்கு பின்	57,612.62	28,554.90	3,518.80	16,199.93	7,402.99	1,304.00	632.00
மொத்தம்	**73,148.28**	**36,147.18**	**11,462.18**	**16,199.93**	**7,402.99**	**1,304.00**	**632.00**

2018-2019 மற்றும் 2019-2020 (29-02-2020 வரை) ஆம் ஆண்டுக்கான வரி வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)

	மொத்தம்	சரக்குகள் மற்றும் சேவை *வரி அல்லாதவை	மதிப்புக் கூட்டுவரி / மற்றவை	மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி	ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு	தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு	இழப்பீடு
2018-19	87905.26	42414.96	593.98	24476.56	12425.94	4842.82	3151.00
2019-20 (29.02.2020 வரை)	86363.51	38296.89	613.04	24894.19	12902.29	105.07	8922.03

* 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் மனித நுகர்வுக்கான மதுபானம் மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் மூலமான ஜி.எஸ்.டி. அல்லாத வருவாயைக் குறிப்பது

குறிப்பு - பெட்ரோலிய தயாரிப்புகளில், பெட்ரோல், டீசல், வானூர்திக்கான எரிபொருள், இயற்கை எரிவாயு, கச்சா பெட்ரோலியம் ஆகியவை அடங்கும்.

6. நிருவாக அமைப்பு

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை திறமையான நன்கு கட்டமைக்கப்பட்ட அமைப்பின் உதவியுடன் நிருவகிப்பதே இத்துறையின் முக்கிய பணியாகும். சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, நிருவாகத் தலைவராகச் செயல்படும் வணிக வரி ஆணையருக்கு உதவியாக ஆறு கூடுதல் ஆணையர்கள், ஓர் இணை ஆணையர் (நிருவாகம்) மற்றும் பிற அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்தின் பரிந்துரையின்படி வணிகர்களால் தாக்கல் செய்யப்படும்

படிவங்களின் கடைசி தேதியை நீட்டிப்பு செய்தல், வரி ஏய்ப்பவர்களை கைது செய்யும் அதிகாரம், சட்டத்தை சீராக நடைமுறைப்படுத்த தேவையான அறிவுறுத்தல்கள் வழங்குதல் போன்ற குறிப்பிட்ட அதிகாரங்களை வணிக வரி ஆணையர் கொண்டுள்ளார்.

பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) மாநிலத்தில் பெருமளவில் வரி செலுத்துவோரின் வசதிக்கென செயல்பட்டு வருகிறது. சுமார் 100 பெருமளவு வரி செலுத்துவோர் மட்டுமே இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களுக்கான சேவைகள் எளிதில் விரைவாக வழங்கப்படுகின்றன.

செயல்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் வரி செலுத்துவோருக்கு திறம்பட சேவையை வழங்குவதற்கும் இத்துறையின் நிருவாகம் 01-06-2019 முதல் மறுசீரமைக்கப்பட்டது.

மறுசீரமைப்பின் சில முக்கிய அம்சங்கள் கீழ்க்கண்டவாறு:

- கோயம்புத்தூர் வணிக வரிக் கோட்டத்தைச் சார்ந்த திருப்பூர் வணிக வரி மாவட்டம், சேலம் வணிக வரிக் கோட்டத்தைச் சார்ந்த ஈரோடு வணிக வரி மாவட்டம் மற்றும் திருச்சி வணிக வரிக் கோட்டத்தைச் சார்ந்த கரூர் வணிக வரி மாவட்டத்தின்கீழ் இயங்கி வந்த நான்கு வரிவிதிப்பு வட்டங்களை உள்ளடக்கி, தற்போது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் உள்ள பணியாளர்களை மறுபரவலமர்த்தல்மூலம் பணியமர்த்தி, ஈரோட்டினைத் தலைமையகமாகக் கொண்ட ஒரு புதிய வணிக வரி நிருவாகக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- புதிய ஈரோடு நிருவாகக் கோட்டத்தின் எல்லைக்குட்பட்டு தற்போது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் உள்ள பணியாளர்களை மறுபரவலமர்த்தல்மூலம் பணியமர்த்தி ஈரோட்டில் புதிய நுண்ணறிவுக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- சென்னையில் இயங்கும் வணிக வரிக் கோட்டங்களில் பணிப் பளுவினை சம அளவில் பகிர்ந்தளிக்கும் பொருட்டு சென்னை (தெற்கு) கோட்டத்தின்கீழ் இயங்கி வந்த ஆவடி, சூரப்பட்டு மற்றும் திருமுல்லைவாயல் ஆகிய வரி விதிப்பு வட்டங்கள் சென்னை (வடக்கு)

கோட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதேபோல், இராமாபுரம் மற்றும் சாலிகிராமம் வரிவிதிப்பு வட்டங்கள் சென்னை (தெற்கு) கோட்டத்திலிருந்து, சென்னை (மத்திய) கோட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

- அமைவிட தொடர்ச்சியினை கருத்தில் கொண்டு கோட்டத்திற்குள்ளேயே ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத்தின்கீழ், சுமார் 1500 முதல் 2000 வரை கொண்ட வரி செலுத்துவோரை உள்ளடக்கிய வரி விதிப்பு வட்டங்களாக மாற்றம் செய்யப்பட்டன.

- முன்னர் இயங்கி வந்த 329 வரிவிதிப்பு வட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு 338 வரிவிதிப்பு வட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

- சரக அளவில் வரி நிலுவை மீட்புக் குழுக்கள் தனியாக உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துறை வரிவிதிப்புப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு மற்றும் நுண்ணறிவுப் பிரிவு ஆகிய மூன்று நிருவாகப் பிரிவுகளை உள்ளடக்கியது. இப்பிரிவுகளின் செயல்பாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:-

6.1. வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் உள்ள 338 வரிவிதிப்பு வட்டங்கள், உரிய அலுவலர்களான உதவி ஆணையர்கள்/வணிக வரி அலுவலர்கள் தலைமையில் செயல்படுகின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்களில், இத்துறையின் முக்கியப் பணிகளான பதிவுச் சான்று வழங்குதல், படிவங்களை தாக்கல் செய்வதை கண்காணித்தல், படிவங்களை சரி பார்த்தல், வரி விதிப்பு/வழக்குத் தீர்ப்பு, வரிவிதித்தல் மற்றும் வரி நிலுவை வசூலித்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆணை உறுதி ஆவணங்களைப் பெறுவது/ வழங்குவது போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்கள், மாவட்ட/மண்டல அளவில் 42 துணை ஆணையர்களாலும், கோட்ட அளவில் 11 இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன. இணை ஆணையர்கள், தங்களின்

கீழ்நிலையில் உள்ள அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் வரி விதிப்பு ஆணைகளுக்கு எதிராக மறு வரிவிதிப்பு/மேல்முறையீடு செய்திட சட்ட ரீதியான அதிகாரத்தை பெற்றுள்ளனர்.

6.1.1. மறு ஆய்வு மற்றும் மேல்முறையீடு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 இன்கீழ், உரிய அலுவலரின் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு, வரி செலுத்துபவர் அல்லது துறையால் மேற்கொள்ளப்படலாம். இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் புதிய வழி முறையாகும். எனவே, இத்துறையில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் கொண்டவர்களால் பிறப்பிக்கப்படும் அனைத்து ஆணைகளும் மறு ஆய்வு செய்யப்படுகின்றன.

முன்னர், உதவி ஆணையர் தலைமையில் இயங்கி வந்த உள்ளீட்டுத் தணிக்கைப் பிரிவு தற்போது மறு ஆய்வு மற்றும் மேல் முறையீட்டு பணியை மேற்கொள்கின்றது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் அனைத்து படிவங்களும் சுய வரி விதிப்புக்குள்ளானதாக உள்ளதால், இவற்றின்மீது உரிய அலுவலரால் வரி விதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்படுவதில்லை. மறு ஆய்வு மற்றும் மேல் முறையீட்டுப் பணிகள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் வரி ஏய்ப்பினை தடுப்பதற்கென கணினி மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மறு ஆய்வு மற்றும் மேல்முறையீட்டுப் பணிகளை உதவி ஆணையர்கள் மேற்கொள்கின்றனர்.

6.1.2. மாநிலக் கணக்காயரின் தணிக்கை

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களின்கீழ் வரிவிதிப்பு வட்டங்களில், மாநிலக் கணக்காயரால் குறிப்பிட்ட கால அளவில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், துறையின் அவ்வப்போதான செயல்திறன் தணிக்கை தவிர பல்வேறு கருப்பொருள் சார்ந்த ஆய்வும் மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக்

குறிப்புகள், துறைக்கான தணிக்கை குழுவின் கூட்டுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, சரிசெய்யப்படுகின்றன.

6.2. மேல்முறையீட்டுப் பிரிவு

6.2.1. மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையரிடமும், துணை ஆணையரின் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு இணை ஆணையரிடமும் உள்ளது. மாநிலத்தில் மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், மேல்முறையீட்டு இணை ஆணையர்களும், தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின்கீழ் இயங்கி வருகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் சார்பாக வாதங்களை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படுகிறார். தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017இன்கீழ் மேல்முறையீடு செய்வது முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு, மேல்முறையீட்டு தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் என்ற வரிசை கிரமமாக அமையப்பெற்றுள்ளது. இதன்படி, முதல் மேல்முறையீடு செய்வதற்கான அதிகார அமைப்புகள் 01-06-2019 முதல் செயல்படுகின்றன.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ், துணை ஆணையர் (ஜி.எஸ்.டி-மேல்முறையீடு) தலைமையில், முதல் மேல்முறையீட்டு அமைப்புகள் சென்னை-I, சென்னை-II, திருச்சி, மதுரை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ், உதவி ஆணையர் மற்றும் அவரின் கீழ்நிலையிலுள்ள உரிய அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள்/முடிவுகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகளை அந்தந்த அதிகார எல்லைக்குட்பட்ட துணை ஆணையர் பரிசீலனை செய்கின்றார். சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் பெருமளவு வரி செலுத்துவோர் பிரிவின் துணை

[2020 மார்ச் 24

ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகள்/முடிவுகளுக்கு எதிரான மேல் முறையீடுகள், சென்னையில் உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மேல்முறையீட்டு இணை ஆணையரால் பரிசீலிக்கப்படுகின்றன. உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள ஒருவர் ஒவ்வொரு மேல்முறையீட்டு மன்றத்திலும் துறையின் பிரதிநிதியாக செயல்படுகிறார்.

6.2.2. தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகியவற்றின்கீழ் முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் அல்லது இணை ஆணையர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 இல் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி பணி நிலையில் உள்ளவரைத் தலைவராகக் கொண்டும், மேலும் இரண்டு உறுப்பினர்களுடனும் செயல்படுகிறது.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் இரண்டு உறுப்பினர்களில், ஒருவர் கூடுதல் ஆணையர் பணி நிலையில் மாநில அரசின் வணிக வரித் துறையின் உறுப்பினராக இருப்பார்.

மற்றொரு உறுப்பினர்,

(அ) இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியில் உள்ள அலுவலர்; அல்லது

(ஆ) வருமான வரித் துறையில் இணை ஆணையர் தரத்திற்கு குறையாத அலுவலர்; அல்லது

(இ) மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு

கணக்குகள் துறையில் மேற்காணும் பணி நிலையிலுள்ள அலுவலர்; அல்லது

(ஈ) வெளிநபராக இருக்கும் பட்சத்தில்,

(i) இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும், ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவம் மிக்கவராகவும், அல்லது

(ii) இந்திய செலவு மற்றும் பணி கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராகவும், ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவம் மிக்க கணக்காளராகவும் – இருத்தல் வேண்டும்.

விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் ஒவ்வொரு கூடுதல் அமர்வும், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித் துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் மாநில அரசின் பிரதிநிதிகளாக உள்ளனர்.

மேற்கூறிய மேல்முறையீட்டு அமைப்பே முந்தைய வரிவிதிப்புகளின்கீழ் எழும் வழக்குகள், தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள பொருட்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்திட தொடர்ந்து இயங்கிவருகிறது.

6.2.3. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் தேசிய தீர்ப்பாயம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 இன்கீழ் முதல் மேல் முறையீட்டு அலுவலர், அதாவது மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது இணை ஆணையர் அல்லது மறுஆய்வு அதிகாரம் பெற்றவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு உட்பட்டது. சரக்குகள்

மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில், தேசிய தீர்ப்பாயம் மற்றும் மாநில தீர்ப்பாயம் என இரண்டு தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட உள்ளன.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால், தீர்ப்பாயத்தின் தேசிய அமர்வு புதுதில்லியிலும், வட்டார அமர்வினை சென்னையிலும் உருவாக்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பாயத்தின் வட்டார அமர்வில், வழங்கல் இடம் தவிர்த்த மேல்முறையீட்டு அலுவலர் அல்லது மறுஆய்வு அதிகாரம் பெற்றவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகள் விசாரிக்கப்படுகின்றன. அமையவிருக்கும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் மாநில அமர்வு, ஒரு நீதித் துறை உறுப்பினர், மத்திய மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் தலா ஒரு தொழில்நுட்ப உறுப்பினரைக் கொண்டதாகும். மாநிலத்தின் நீதித் துறையின் மூத்த உறுப்பினர் ஒருவரை மாநிலத் தலைவராக மாநில அரசு நியமிக்கலாம்.

6.3. நுண்ணறிவுப் பிரிவு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின்கீழ் அலுவலர்களின் மாறுபட்ட பங்களிப்பினை பிரதிபலிக்கும் வகையிலும் மற்றும் வரி செலுத்துவோரை இன்னலுக்கு ஆளாக்காமலும், எதிர்நோக்கும் இலக்கினை அடையும் வகையில் துறையின் செயலாக்கப் பிரிவானது நுண்ணறிவுப் பிரிவு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நுண்ணறிவுக் கோட்டம் இணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுகிறது. மாநிலம் முழுவதும் ஒன்பது நுண்ணறிவு கோட்டங்கள் உள்ளன. அவை சென்னையில் இரண்டும், வேலூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக செயல்படுகின்றன. தரவுகளை சேகரிக்க சிறப்பு தகுதிகள் பெற்ற குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சந்தை கணக்கெடுப்புமூலம் பெறப்படும் உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டு புலனாய்வு கோப்புகள் தயார் செய்யப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சீரற்ற முறையில் ஆய்வு செய்வதற்கு பதிலாக நுண்ணறிவு அடிப்படையிலான ஆய்வு நடத்த உத்தேசிக்கப்படுகிறது. ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திலும் ஒரு நிலையான சுற்றும் படை உள்ளது. இதர அலுவலர்கள் புலனாய்வுக் குழு, ஆய்வுக் குழு, மறு ஆய்வுக் குழு, கேட்பு வசூலிக்கும் குழு, வழக்கு தீர்வு மற்றும்

சட்டக் குழு, சிறப்பு சுற்றும் படை, தரவுக் குழு, கணக்கெடுப்புக் குழு, தொழில்நுட்பக் குழு மற்றும் சேகரிப்பு குழு ஆகிய குழுக்களாக செயல்படுவர்.

6.3.1. மத்திய நுண்ணறிவுப் பிரிவு

சென்னை தலைமையகத்தில் ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டில் கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் உதவியுடன் இயங்கும் இப்பிரிவு, இணை ஆணையர் (புலனாய்வு) தலைமையிலான புலனாய்வுக் குழு மற்றும் துணை ஆணையர் (நுண்ணறிவு) தலைமையிலான ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றை உள்ளடக்கியது.

(i) இப்புலனாய்வுக் குழு, தரவுக் குழுவிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் வரி ஏய்ப்பு செய்யும் நோக்கம் மற்றும் முறையை ஆய்வு செய்கிறது. தரவுக் குழு, துறையின் உள்ளிருந்து பெறப்படும் தகவல்களை சேகரிக்கும் பிரிவையும் மற்றும் துறைக்கு வெளியேயிருந்து பெறப்படும் தரவுகளை சேகரிக்கும் பிரிவையும் உள்ளடக்கியதாகும். சரக்குகள் மற்றும் சேவைகளின் சந்தை விலையை பகுப்பாய்வு செய்யவும் மற்றும் சந்தை நிலைமையை கணக்கெடுப்பு செய்யவும் கணக்கெடுப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மறைக்கப்பட்ட/நீக்கப்பட்ட/ தொடர்பு கொள்ள இயலாத பகுதிகளிலுள்ள தரவுகளை மீட்டெடுக்க போதுமான தொழில்நுட்பத்துடன்கூடிய தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு புலனாய்வுக் குழுவிற்கு தொழில்நுட்ப அடிப்படையிலான உள்ளீடுகளை அளிக்க உதவி புரியும்.

(ii) துணை ஆணையர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையில் செயல்படும் ஒருங்கிணைப்புக் குழு நுண்ணறிவுப் பிரிவிலிருந்து பெறப்படும் புலனாய்வுக் கோப்புகளை பரிசீலித்து மேல்நடவடிக்கை தொடர்கிறது. இக்குழு ஆய்வுகள் குறித்த அறிக்கைகள் மற்றும் புள்ளி விவரங்களை தயார் செய்யும் பொறுப்பினை வகிக்கின்றது.

7. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

மாநில தலைமையிடத்தில் புள்ளியியல் துறையின் இணை இயக்குநர் தலைமையில் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு இயங்கி வருகிறது. ஒவ்வொரு வணிக வரிக் கோட்டம்/ மாவட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை

ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையருக்கு உதவியாக ஒவ்வொரு சரக/வணிக வரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும், புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு கீழ்க்கண்ட காலமுறை அறிக்கைகளை வெளியிடுகிறது:-

- நிருவாக கோட்ட அளவிலான மாதாந்திர முன்னேற்ற அறிக்கை.
- நுண்ணறிவு கோட்ட அளவிலான மாதாந்திர முன்னேற்ற அறிக்கை
- அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த மாதாந்திர பகுப்பாய்வு அறிக்கை
- எதிர்மறை வருவாய் வளர்ச்சி காட்டும் பொருட்களின் பட்டியல் குறித்த மாதாந்திர பகுப்பாய்வு அறிக்கை
- பெரு வணிகர்களின் வருவாய் பற்றிய மாதாந்திர பகுப்பாய்வு அறிக்கை
- எதிர்மறை வருவாய் வளர்ச்சி காட்டும் வணிகர்களின் பட்டியல் குறித்த மாதாந்திர அறிக்கை
- நிருவாகம்/நுண்ணறிவு கோட்ட அலுவலகங்களின் செயல்திறனை சமச்சீர் மதிப்பீடு செய்து மாதாந்திர அறிக்கை தயாரித்தல்
- வணிக வரித் துறை—வருடாந்திர நிருவாக அறிக்கை
- வணிக வரித் துறை—வருடாந்திர காலத் தொடர் பகுப்பாய்வு அறிக்கை—புள்ளி விவரத் தொகுப்பு

8. வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையங்கள்

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு முதல் சென்னையில் இயங்கி வருகிறது. இணை ஆணையர் நிலையில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையில் இயங்கிவரும் இப்பயிற்சி நிலையத்தில், வணிக வரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி'

2020 மார்ச் 24]

மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிக்கப்படுகிறது. வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்ட தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் மற்றும் இதர கோட்ட பயிற்சி நிலையங்கள் வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பிற்காக கூடுதல் ஆணையர் (மதிப்புக் கூட்டு வரி மற்றும் தணிக்கை) அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டு இத்துறையைச் சார்ந்த கூடுதல் ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், மாநில வரி அலுவலர், துணை மாநில வரி அலுவலர் ஆகிய நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சிக்கு ரூ.96.72 இலட்சம் செலவு செய்யப்பட்டு 2,083 அலுவலர்களுக்கு வெவ்வேறு புத்தாக்க பயிற்சி, பணியிடைப் பயிற்சி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான மேம்படுத்தப்பட்ட பயிற்சி, காலாவதி மற்றும் திவால் சட்டக் குறியீட்டு பயிற்சி, மின்னணு தடயவியல் பயிற்சி மற்றும் Tally மற்றும் மேம்படுத்தப்பட்ட Excel data ஆய்வு செய்தல் பயிற்சி, தரவுகள் மீட்பு பயிற்சி, ஆய்வுப் பயிற்சி மற்றும் தொடக்க பயிற்சி போன்றவை சென்னையிலுள்ள இப்பயிற்சி நிலையம் மற்றும் மாநிலத்திலுள்ள இதர பயிற்சி நிலையங்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கமான பயிற்சிகளைத் தவிர, உதவி ஆணையர்களுக்கு, மாமல்லபுரத்தில் தங்கும் வசதியுடன்கூடிய மேலாண்மை பயிற்சி மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கு தங்கும் வசதியுடன்கூடிய சிறப்புப் பயிற்சி ஆகியவை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டன. மேலும், மன அழுத்த மேலாண்மை, தனிப்பட்ட திறமையில் மேம்படுவதற்கான பயிற்சி மற்றும் 'ஓய்வு பெறவுள்ளவர்களுக்கான முன் ஆலோசனை வழங்கும்' பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

வணிக வரித் துறை பயிற்சி நிலையத்தில் உள்ள நூலகத்தில் இருப்பிலுள்ள புத்தகங்களோடு, 2019-2020 நிதியாண்டில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான புத்தகங்கள் ரூ.1 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டன. வணிக வரித் துறை பணியாளர் பயிற்சி மையம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய வட்டார பயிற்சி நிலையங்களுக்கும் லேசர் ப்ரொஜெக்டர் வாங்குவதற்காக ரூ.26.11 இலட்சம் நிதியுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

9. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி

9.1. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி முறைக்கு மாற்றம்

01-07-2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகர்கள் இச்சட்டத்திற்கு மாற்றம் பெறுவதற்கு வணிக வரித் துறை தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது. அதன் பயனாக இந்த மாற்றம் எளிதாகவும் சரியானதாகவும் அமைந்தது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் புதிய வரி செலுத்துவோரின் பதிவு ஜி.எஸ்.டி.என் வலைதளம்மூலம் இணையதள அடிப்படையிலேயே செய்யப்படுவதால் பயனாளிகளுக்கு எளிதாக அமைந்துள்ளது. 29-02-2020 அன்றுள்ளவாறு, 10.40 இலட்சம் வரி செலுத்துவோர் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதள முகப்பில் (GSTN) பதிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் உள்ள சில குறைகளை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் களைவதற்கான கோரிக்கைகள் வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்பட்டன. இவ்வகையான குறைகளைக் களைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-க்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது போன்றே சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரைகளின்படி தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளிலும் வரி செலுத்துவோர்க்கு நடைமுறைச் சிக்கல்கள் களைந்து எளிமையாக்கும் பொருட்டு உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9.2. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு (GSTN) ஒரு இலாப நோக்கற்ற அரசு நிறுவனமாகும். சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பானது அனைத்து தகவல் தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய முக்கிய தரவு தளமாகச் செயல்படுகிறது. இவ்விணைய முகப்பு வரி செலுத்துவோரால் அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு வணிக பரிவர்த்தனையினை கண்காணிக்கவும் மற்றும் பதிவு செய்தல், படிவங்களை தாக்கல் செய்தல் மற்றும் வரி தொடர்பான அனைத்து விவரங்களையும் பராமரித்தல் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும்

வழங்க அரசால் பயன்படுத்தப்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு, வரி செலுத்துவோருக்கு ஒற்றை இடைமுகமாகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே பகிரும் பொதுவான தளமாகவும் விளங்க நிறுவப்பட்டுள்ளது. வரிசெலுத்துவோர்களது தகவல்கள் ரகசியமாகவும் பாதுகாப்பானதாகவும் பராமரிப்பது அவசியமாக உள்ளதால் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணைய முகப்பு அரசின் கட்டுப்பாட்டில் இயக்கப்படுகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் இவ்விணைய முகப்பின்மூலம் புதிதாக பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது. வரி செலுத்துவோர் அலுவலகத்திற்கு நேரடியாக செல்லாமலேயே இவ்விணைய முகப்பின்மூலம் பதிவு செய்து பதிவுச்சான்று பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதளத்தில், வணிகர்கள் பயன்படுத்திட உதவி மையம் எண் 0120-4888999 மற்றும் பதிவு/குறைகளைத் தீர்ப்பதை கண்காணிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

9.3. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதங்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தியுள்ளது:-

- 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு வரி விகிதங்கள்.
- தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினம் ஆகியவை 3% மற்றும் பட்டை தீட்டப்படாத மற்றும் பட்டை தீட்டப்பட்ட விலையுயர்ந்த கற்கள் 0.25% என்கிற சிறப்பு வரி விகிதத்திலும் வைக்கப்பட்டுள்ளன.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பைச் சரிகட்ட ஆடம்பர சரக்குகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் சரக்குகள்மீது பல்வேறு விகிதங்களில் இழப்பீட்டு வரி கூடுதலாக விதிக்கப்படுகிறது.

- ரூ.1.5 கோடி வரை விற்றுமுதல் தொகை உள்ள உற்பத்தியாளர்கள் (Manufacturers) மற்றும் வணிகர்கள் (traders) 1% இணக்க வரியாக தேர்ந்தெடுத்து வரி செலுத்தலாம்.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான சரக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பான வழங்கல்கள், ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப்படுகிறது.

வணிக மற்றும் தொழில் கூட்டமைப்புகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை பரிசீலித்து, அவர்களின் விண்ணப்பங்களை செயலாக்குவதற்கு சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்திற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றத்தின் பரிந்துரையின் பேரிலேயே சரக்குகள் மற்றும் சேவைகளின் வரி விகிதத்தில் மாநில மற்றும் மத்திய அரசால் எந்த ஒரு மாற்றத்தினையும் செய்ய முடியும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் 39 கூட்டங்களை நாளதுவரை நடத்தியுள்ளது. இக்கூட்டங்களின் வாயிலாக பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகள்மீது விதிக்கப்படும் வரி விகிதம் குறைக்கப்படுவதற்கும் மற்றும் வரி விதிப்பதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுவதற்கும் பரிந்துரை செய்ததால் பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக வணிகர்களுக்கும் பேருதவியாக அமைந்தது.

9.4. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்

அரசியலமைப்பு சட்டம் பிரிவு 279A இன்படி மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு மன்றமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் அமைக்கப்பட்டது. இம்மன்றம் நாட்டில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம்/விதிகள் முறையாக நடைமுறைபடுத்துவதைக் கண்காணிக்கிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தினை நிருவகிப்பதோடு, மன்ற கூட்டங்களை நடத்தி பரிந்துரைகள் வழங்குதலும் அதன் முக்கிய செயல்பாடாக உள்ளது. இம்மன்றம், நாடு முழுவதும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு ஒரே மாதிரியான வரி விகிதம் விதிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் இம்மன்றத்தின் தமிழ்நாடு உறுப்பினராக செயல்படுகிறார்.

2020 மார்ச் 24]

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம், வரி செலுத்துவோர் நலன் கருதி கீழ்க்காணும் முக்கியமான சிக்கல்களுக்கு தீர்வு கண்டுள்ளது:-

- இடைக்கால மாற்றம் தொடர்பான டிரான்-01 படிவம் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தொழில்நுட்ப குறைபாடுகளை சரி செய்திட தகவல் தொழில்நுட்பக் குறைகள் நிவர்த்தி செய்யும் குழு (ITGRC) அமைக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு ஒரே சீராக வரி விதித்தல்.
- பொது இணையதளத்தின்மூலம் சட்டப்பூர்வமான படிவங்களை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவினை நீட்டித்தல்
- வரி செலுத்துவோருக்கு அறிக்கைகளை தாக்கல் செய்திட வாய்ப்பளிக்கும் விதமாக தாமதமாக தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளுக்கு விதிக்கப்படும் தாமதக் கட்டணங்களிலிருந்து விலக்களித்தல்
- தொழில்நுட்பக் கோளாறு சாராத குறைபாடுகளை நிவர்த்தி செய்து இடைக்கால மாற்றத்தின்மூலம் பெறப்படவேண்டிய வரியினை பெற வழி வகை செய்தல்
- வரி செலுத்துவோர்க்கு நிவாரணம் வழங்கும் விதமாக பின்னடைவுக் கட்டண முறையினை நீட்டித்தல்

நாளது தேதி வரை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு:-

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கும் உச்சவரம்பு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டது.
- முந்தைய நிதியாண்டில் ரூ.50 இலட்சம் வரை ஆண்டு விற்றுமுதல் தொகை கொண்ட சேவை வழங்குவோருக்கு 6% வரி செலுத்தும் புதிய இணக்க முறை வரித் திட்டம் அறிவிக்கப்பட்டது.
- முந்தைய ஆண்டின் விற்றுமுதல் அடிப்படையில், சரக்குகளுக்கான இணக்க முறை வரி விதிப்பு திட்டத்திற்கு

மாறுவதற்கான உச்சவரம்பு ரூ.1.5 கோடியாக உயர்த்தப்பட்டது.

- மலிவு விலை வீடுகள் (affordable housing) மற்றும் மலிவு விலை அல்லாத வீடுகளுக்கான (non-affordable housing) வரி, முந்தைய 8% மற்றும் 12%-லிருந்து, உள்ளீட்டு வரி வரவின்றி, முறையே 1% மற்றும் 5% ஆக குறைக்கப்பட்டது.
- பன்னோக்கு திரையரங்குகளுக்கு மின்னணு நுழைவுச் சீட்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது
- வணிகர்களுக்கிடையேயான (B2B) வர்த்தகங்களுக்கு படிப்படியான மின்னணு பட்டி திட்டம்
- புதிய படிவத் திட்டம் படிப்படியாக அறிமுகப்படுத்துதல்
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் பதிவு செய்பவர்கள் ஆதார்மூலம் சரிபார்ப்பு
- மின்சார வாகனங்களுக்கு வரி விகிதம் 12%-லிருந்து 5% ஆகக் குறைப்பு
- மின்சார வாகனங்களுக்கான சார்ஜர் அல்லது சார்ஜிங் நிலையங்களுக்கான வரி 18%-லிருந்து 5% ஆகக் குறைப்பு
- உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தும் மின்சார பேருந்துகள் (12 பயணிகளுக்கு மேல் அமரும் வசதி கொண்டவை) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.
- உரை கல்லினால் தயாரிக்கப்பட்ட வெட் கிரைண்டர்களுக்கான வரி 12%-லிருந்து 5% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- ஜிப்பர் பாகங்களுக்கான வரி 18%-லிருந்து 12% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- பனை மரம், தென்னை மரம், பேரிச்சை மரம், பாக்கு மரம், மந்தாரை மரம், ஆல மரம் மற்றும் வாழை மர இலைகளினால் தயாரிக்கப்பட்ட கப்புகள், பாய்கள், குடங்கள், தொன்னை

மற்றும் தட்டுகள் ஆகியவற்றிற்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

- உலர்ந்த புளிக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.
- 1-7-2017 முதல் 30-9-2019 வரையிலான காலத்திற்கு மீன்களுக்கான உணவுகளுக்கு வரி விலக்களிக்கப்பட்டது.
- ரயில் பெட்டிகளுக்கான வரி விகிதத்தை சீரமைத்தல்
- பொறியியல் பாகங்கள் உற்பத்தி தொடர்பான சில்லரை சேவைகளுக்கான வரி 18%-லிருந்து 12% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- மாநிலங்கள் மற்றும் மாநில அங்கீகாரத்துடன் நடத்தப்படும் லாட்டரிகளுக்கு 01-3-2020 முதல் ஒரே சீரான 28% வரி விதித்தல்.
- நெய்யப்பட்ட மற்றும் நெய்யப்படாத பாலியெதிலின் பைகள் மற்றும் சாக்குப் பைகளுக்கு, ஒரே சீராக 18% வரி விகிதம்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 39-வது கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:-

- அனைத்து வகையான தீப்பெட்டிகள் மீதான வரியினை சீர்செய்து அவற்றின்மீது 12% வரி விதித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தீப்பெட்டிகளின் மீதான வரி 18%-லிருந்து 12% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
- 1-7-2017 முதற்கொண்டு தாமதமாக வரி செலுத்தும் நேர்வில் வட்டியானது நிகர வரித் தொகைக்கு மட்டுமே விதிக்கப்படும்
- 14-3-2020 வரையில் ரத்து செய்யப்பட்டுள்ள பதிவுச் சான்றுகளை புதுப்பிக்கத் தேவையான விண்ணப்பத்தினை வணிகர்கள் 30-6-2020 வரை தாக்கல் செய்யலாம்.

மாநில அளவிலான குறைகள் தீர்க்கும் குழு ஒன்று மாநில வரி ஆணையர் மற்றும் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் ஆகியோரை தலைவர்களாக கொண்ட வர்த்தக மற்றும் தொழில்

துறையைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படும்.

வணிகர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை பரிசீலித்து பல்வேறு சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரி விகிதங்களை குறைக்கவும்/விலக்களிக்கவும் சரக்குகள் மற்றும் சேவைகள் மன்றக் கூட்டங்களில் தமிழக அரசு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது.

9.5. மிகை இலாபத் தடுப்பிற்கான பிரித்தறி தேர்வுக் குழு (Screening Committee on Anti-Profiteering)

தமிழ்நாட்டில் மாநில அளவிலான மிகை இலாபத் தடுப்பிற்கான பிரித்தறி தேர்வுக் குழு (Screening Committee on Anti-Profiteering) அமைக்கப்பட்டுள்ளது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி காலத்தில் சரக்குகளின் மீதோ அல்லது சேவைகளின் மீதோ அல்லது இவை இரண்டின் மீதோ வரி விகிதங்கள் குறைக்கப்படும்போது அதன் பயனை வணிக நிறுவனங்கள் நுகர்வோருக்கு வழங்குவதனை இக்குழு உறுதி செய்கிறது.

மாநில மிகை இலாபத் தடுப்பிற்கான இக்குழு இணை ஆணையர் (மாநில வரி) நுண்ணறிவு-1, சென்னை மற்றும் ஆணையர், சென்னை (வடக்கு) ஆணையரகம், (மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி) ஆகியோரைக் கொண்டு இணை ஆணையர் (மாநில வரி), நுண்ணறிவு-1, இரண்டாம் தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-600 006 என்ற அலுவலகத்தில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தை தொலைபேசி எண் 044-28291717, நிகரி எண் 044-28291717, மின்னஞ்சல் முகவரி, jcenf.chn1@ctd.tn.gov.in மூலம் தொடர்பு கொள்ளலாம்.

9.6. முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு (Authority and Appellate Authority for Advance Ruling)

வரி செலுத்துவோரின் வரி விதிப்பு குறித்து தெளிவுரை அளிக்க முன்னதாகத் தீர்மானிக்கும் அதிகார அமைப்பு இணை ஆணையர் (மாநில வரி) மற்றும் இணை ஆணையர் (மத்திய வரி) ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம், அறை எண் 503, 5-வது தளம், ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக வளாகம், யானைக்கவுனி பாலம் சாலை, பூங்கா நகர், சென்னை-600 003 என்ற

முகவரியில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தினை jc.adv.rul@ctd.tn.gov.in என்கிற மின்னஞ்சல்மூலம் தொடர்பு கொள்ளலாம்.

முன்னதாகத் தீர்மானிக்கும் அதிகார அமைப்பின் தமிழ்நாடு மேல்முறையீட்டு அலுவலகமானது மாநில வரி ஆணையர் மற்றும் முதன்மை தலைமை ஆணையர், சென்னை ஜி.எஸ்.டி மற்றும் சி.எக்ஸ் மண்டலம் ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம், இரண்டாம் தளம், எழிலகம் வளாகம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரியில் செயல்படுகிறது. இவ்வலுவலகத்தினை தொலைபேசி எண் 044-28521744 மற்றும் cct@ctd.tn.gov.in என்கிற மின்னஞ்சல்மூலம் தொடர்பு கொள்ளலாம்.

9.7. மின்னணு வழிப் பட்டி (e-way Bill)

தமிழகத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின்கீழ் மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்திற்கு 01-04-2018 முதலும் மாநிலத்திற்குள்ளேயான சரக்கு போக்குவரத்திற்கு 02-6-2018 முதலும் மின்னணு வழிப்பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. மாநிலத்திற்குள் கொண்டு செல்லப்படும் சரக்குகளின் மதிப்பு ரூ.1,00,000/-க்கும் குறைவாக இருப்பின், மின்னணு வழிப் பட்டி கொண்டு செல்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியாக வலைதளம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் (ewaybill.nic.in/ewaybillgst.gov.in) 3.04 இலட்சம் வரி செலுத்துவோர் பதிவு செய்யப்பட்டு, 29-02-2020 வரை 3.89 கோடி மின்னணு வழி பட்டிகள் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்திற்காகவும் 6.43 கோடி மின்னணு வழி பட்டிகள் மாநிலத்திற்குள்ளான போக்குவரத்திற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. மின்னணு வழி பட்டி விவரங்களை அறிந்து கொள்ள வணிக வரித் துறை அலுவலர்களுக்கு, 378 உள்நுழைவு குறியீடுகள் (login id) உருவாக்கப்பட்டுள்ளன. மின்னணு வழி பட்டிகள் அதிகப்படியாக உருவாக்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017 இன்படி, 100 விதமான சரக்குகளை மின்னணு வழிப்பட்டி முறையில் மாநிலத்திற்குள் எடுத்துச் செல்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. சிறு குறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் தங்களின் சரக்குகளை

மின்னணு வழிப்பட்டியின்றி உரிய வரி பட்டியுடன் (tax invoice) மட்டும், மாநிலத்திற்குள் தடையில்லாமல் எடுத்துச்செல்ல முடிகிறது.

10. வணிகர் நல வாரியம்

வணிகர்களின் நலனுக்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு நலத் திட்டங்கள், உதாரணமாக குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, தீ விபத்து நிவாரணம் மற்றும் அதிக மதிப்பெண் பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கான கல்வி உதவி போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாரியத்தின் ரூ.5 கோடி தொகுப்பு நிதியானது ரூ.10 கோடியாக 25-1-2017 அன்று உயர்த்தப்பட்டது. 46,979 வணிகர்கள் வாரியத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு ரூ.132.86 இலட்சம் அளவில் நலத்திட்ட உதவிகள் 29-2-2020 வரை 563 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர். வாரியத்தில் உறுப்பினர்களாக தொடர்ந்து இருக்க வருடாந்திர உறுப்பினர் புதுப்பித்தலிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின்கீழ் பதிவு பெறாத சிறு வணிகர்களுக்கு, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில், இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11. கணினிமயமாக்கல்

11.1. முழுமையான கணினிமயமாக்கல் திட்டம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகளுக்கும் பொருந்தும் வகையில் வணிக வரித் துறையின் முழுமையான தீர்வுகளுக்கான திட்டம் ரூ.248.08 கோடி மதிப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் முதன்மையான குறிக்கோள்கள் –

- வணிகர்களுக்கான சேவையை மேம்படுத்துதல்

அ) எங்கிருந்தும் எந்நேரத்திலும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும் வசதி

ஆ) குறைந்த நேரத்தில் சேவைகள் மற்றும் துறையின் அலுவலர்களுடனான நேரடி தொடர்பு குறைக்கப்படுகிறது

இ) கூடுதலான வழிகளில் சேவைகள் வழங்குதல்

ஈ) சேவைகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை

- துறையின் மேம்படுத்தப்பட்ட வரி வருவாய் ஈட்டுவதற்குண்டான குறிக்கோளை அடைய உதவும் வழிமுறைகள்

 அ) வரி நிருவாகத்தை மேம்படுத்த கணினி சார்ந்த முடிவெடுக்கும் அமைப்பு

 ஆ) பிற வரி வசூல் செய்யும் துறைகளின் ஒத்துழைப்புடன் வரி வருவாயினை மேம்படுத்துதல்

 இ) சிக்கலான மற்றும் துறையின் நேரத்தை விரையம் செய்யக்கூடிய மதிப்பு கூடுதல் இல்லாத நடவடிக்கைகளை குறைப்பதன்மூலம் துறை அலுவலர்களை அதிக வரி வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் முழுக் கவனம் செலுத்த வகை செய்தல்

 ஈ) சிறந்த அமைப்பு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மேலாண்மை அறிக்கைகளை கணினி உதவியுடன் உருவாக்கும் திறன்

2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், இச்சட்டத்தின் நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட ஆறு பொருட்களை கையாண்டு வரும் பதிவுபெற்ற வணிகர்களுக்கு https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

- மாதாந்திர படிவங்கள் சமர்ப்பித்தல்
- மின்னணு முறையில் வரி செலுத்துதல் (இணைய வழி மற்றும் இணைய வழி அல்லாத வழிமுறைகள்மூலம்)
- இணைய வழியில் ஜெஜெ, கேகே, எல்எல் மற்றும் எம்எம் படிவங்கள் உருவாக்குதல்
- வரிவிதிப்பு மற்றும் வரி நிலுவை வசூலித்தல்
- வரி திருப்புகைக்கான படிவம் டபிள்யூ சமர்ப்பித்தல்
- இணைய வழியில் சி மற்றும் எஃப் போன்ற சட்டமுறையான படிவங்கள் உருவாக்குதல்

[2020 மார்ச் 24

தற்பொழுது வணிகர்கள், 31 வங்கிகள் வழியாக இணைய வழியில் வரி செலுத்த முடியும். இவற்றில், 11 வங்கிகளில் இணைய வழி அல்லாமலும் (செலுத்துகைச் சீட்டு வாயிலாக) வரி செலுத்த முடியும்.

11.2 பிற இணையவழிச் சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக https://ctd.tn.gov.in என்ற வலைதளத்தில் கீழ்க்கண்ட வசதிகள்/சேவைகள் செய்து தரப்பட்டுள்ளன:-

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அவ்வப்போது வழங்கப்படும் அறிவிக்கைகள் ஆகியவற்றை பார்வையிடவும், தரவிறக்கம் செய்யும் வசதிகள்
- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்கள் அடங்கிய வணிகர் பேரேட்டினை கணினியில் உள் நுழைந்து அறியும் வசதி
- கணினி வாயிலாக பொருட்களின் குறியீடு மற்றும் வரிவிகிதம் அறிந்து கொள்ளும் வசதி
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர்மூலம் வணிகர்களின் விவரங்களை கணினி வாயிலாக அறிந்து கொள்ளும் வசதி.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் அனைத்து வணிகர்களும் பயனடைய, மேம்படுத்தப்பட்ட தனிச் சின்னங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

11.3 துறைக்கு வழங்கப்பட்டுள்ள அக இணைய வழி வசதிகள்

- வரிவிதிப்பு அலுவலகங்களில் வணிகர்கள் சம்மந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் கணினி ஒருங்கிணைப்பாளர் உருவாக்கிய வர்த்தக மென்பொருள் பின்தள அமைப்பின் அடிப்படையில் முறையாக தடையின்றி நடைபெறுகின்றன.
- வணிகர்களுக்கான பதிவெண் சான்றிதழ் மற்றும் பிற பணிகளுக்கு கையொப்பமிட துணை வணிக வரி அலுவலர் மற்றும் அதற்கு மேல் பதவியில் உள்ள அனைத்து

அலுவலர்களுக்கும் மின் சமிக்ஞை கையொப்பச் சான்றிதழ் (Digital Signature Certificate) வழங்கப்படுகின்றன.

- கணினிமூலம் வரிவிதிப்பு முழுமையாக மேற்கொள்ளப்படுகின்றது.
- புள்ளியியல் அறிக்கைகள் இணைய வழியில் உருவாக்கப்படுகின்றன.
- இணையவழி மற்றும் வங்கிக் கிளைகளில் செலுத்தப்படும் வரி விவரங்கள் கொண்ட வரி வருவாய் அறிவிக்கைகளும் இணைய வழிமூலம் உருவாக்கப்படுகின்றன.
- வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை இனம் காணும் பொருட்டு கணினி உதவியுடனான தரவு பகுப்பாய்வு மென்பொருளுடன் (SAS) கூடிய வர்த்தக நுண்ணறிவுக் கருவி பயன்படுத்தப்படுகிறது. TRAN-01 படிவம்மூலம் வணிகர்கள் உள்ளீட்டு வரிகளை தவறுதலாகப் பயன்படுத்துவதை பகுப்பாய்வு செய்ய இம்மென்பொருள்மூலம் கண்காணிக்கப்படுகிறது.
- முழுமையான தீர்வுத் திட்டத்திலுள்ள பின்தள விவரங்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமுறையிலுள்ள பதிவுச் சான்று ஒப்பளிப்பு, திருப்புத் தொகை ஒப்பளிப்பு, பதிவுச் சான்றினை ரத்து செய்தல் மற்றும் ரத்து செய்த பதிவுச் சான்றினை உயிர்ப்பித்தல் போன்ற பல்வேறு வசதிகள் அக இணையவழிமூலம் வணிக வரித் துறையிலுள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்றன.

11.4. தரவுகளை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம்

வணிக நிறுவனங்களில் தணிக்கையின்போது, வணிகர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் மின்னணு சேமிப்பு உபகரணங்களிலிருந்து மீளப்பெறும் தரவுகள், அவர்கள் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொண்டுள்ள வரி ஏய்ப்பினையும் மற்றும் அதிநவீன தவறுகளையும் கண்டுபிடிக்க உதவும் வகையில் இத்துறையில் தரவுகளை மீளப் பெறுவதற்கான ஆய்வுக் கூடம் ஒன்று இயங்கி வருகின்றது.

வணிகர்களின் நிறுவனங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலைவட்டு (Hard Disk) போன்ற மின்னணு சேமிப்பு உபகரணங்களில்

உள்ள விவரங்கள் ஆய்வுக் கூடத்தில் மீளப் பெறப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. துறை அலுவலர்களுக்கு தரவுகளை மீளப் பெறுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.


12. வணிக வரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பணியாளர்களுக்கு பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதும், வருகை புரியும் வணிகர்களுக்கு போதுமான வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்பதும் அரசின் கொள்கை முடிவாகும். எனவே, தனியார் கட்டடங்களில் இயங்கும் வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, பல்வேறு இடங்களில் இயங்கும் வணிக வரித் துறை அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட முடிவு எடுக்கப்பட்டது.

தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கும் வணிக வரி அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு, 2014-2015 முதல் 2019-2020 வரையிலான காலத்தில் ரூ.149.47 கோடி மதிப்பீட்டில், 16 வணிக வரி அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதனில், 9 வணிக வரி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, புதிய சொந்த கட்டடங்களில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், மீதமுள்ள 7 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

13. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

வணிகப் பெருமக்களுடன் பெருமளவில் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிக வரித் துறை தனது செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படை தன்மையுடனும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன்கீழ், பொது மக்கள் மற்றும் வணிகப் பெருமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய காலக்கெடுவிற்குள் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் உரிய தகவல்களை அளித்து வருகிறது. 2019 ஆம் ஆண்டில் 718 மனுக்கள் இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்டு தகவல்கள் அளிக்கப்பட்டன. இதன்மூலம் ரூ.9,615/- கட்டணம் பெறப்பட்டுள்ளது.




(ரூபாய் கோடியில்)

ஆண்டு	வருவாய் வசூல்
2014–2015	60,314.61
2015–2016	61,709.58
2016–2017	67,576.77
2017–2018	73,148.28
2018–2019	87,905.26
2019–2020 (29.02.2020 வரையில்)	86,363.51

சட்டங்கள் வாரியான வருவாய் – 2019–2020 (29.02.2020 வரை)

(ரூபாய் கோடியில்)



மதிப்புக் கூட்டு வரி/ சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத (பெட்ரோல் (ம) மதுபானம்)	38, 926.89
மதிப்புக் கூட்டு வரி/ வரி நிலுவைகள்	613.04
மாநில சரக்குகள் மற்றும் சேவைகள்வரி	24,894.19
ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு	12,902.29
ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு முன்பணம்	105.07
ஜிஎஸ்டி இழப்பீடு	8,922.03
மொத்தம்	**86,363.51**

இணைப்பு XV

(48 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

பதிவுத் துறையின் செயல்பாடுகள் 1864 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு கடந்த 156 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை அளித்து வருகிறது. பதிவுத் துறை துவக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் 1865-66 ஆம் ஆண்டு 1,26,373 ஆவணப் பதிவுகளை மேற்கொண்டு ரூ.1.43 இலட்சம் வருவாயை ஈட்டியது.

இத்துறையில் 2019-2020 நிதி ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) 23,72,861 ஆவணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.10,122.04 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 25 இலட்சம் ஆவணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டும் 25 இலட்சம் வில்லங்கச் சான்றிதழ்கள் பதிவுத் துறையால் வழங்கப்பட்டும் வருகிறது. ஆண்டுதோறும் சராசரியாக 1.5 கோடி மக்கள் பதிவுத் துறையின் அலுவலகங்களுக்கு வருகை புரிகின்றனர். இத்துறை மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டக்கூடிய மூன்று முக்கிய துறைகளில் ஒன்றாக விளங்குவதுடன் அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் செயல்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றது.

பதிவுத் துறையானது வலை அடிப்படையிலான மென்பொருள் (STAR 2.0) மற்றும் பதிவேடுகளை மின்னணுமயமாக்கல் ஆகியவற்றின்மூலம் புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதில் முன்னோடி துறையாகத் திகழ்கிறது. குடிமக்களுக்கு தடையில்லாத உடனடி ஆவணப் பதிவு சேவைகளை தினந்தோறும் அளிப்பதில் இத்துறை தன்னை மேம்படுத்திக் கொண்டுள்ளது. சொத்து பரிவர்த்தனையானது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் பதிவுத் துறையானது இத்தகைய பரிவர்த்தனைகளுக்கு சட்டபூர்வ பாதுகாப்பளிப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கிறது.

[2020 மார்ச் 24

சொத்து பரிமாற்ற ஆவணங்கள், திருமணப் பதிவுகள், பிறப்பு மற்றும் இறப்பு குறித்த பதிவுகளின் பாதுகாவலனாக பதிவுத் துறை முக்கிய பங்காற்றுகிறது. பதிவுத் துறையில் ஒளிவருடல் செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிடப்பட்ட நகல்கள் சான்றாவணமாக நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதன் காரணமாக போலி ஆவணங்கள்மூலம் சொத்து மோசடி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. பதிவுத் துறை கணினிமயமாக்கல், மின்னணுமயமாக்கல் ஆகியவற்றின்மூலம் நவீனமயமாக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு சேவைகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. எளிமையான மற்றும் வெளிப்படையான சொத்து பரிமாற்றம் குறித்த சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கவும், சொத்தின் உரிமையாளர் உலகில் எங்கிருந்தும் தன்னுடைய சொத்தின் நிலையினை அறிந்து கொள்ளவும் பயன்படுத்துவோருக்கான இலகுவான வழிமுறைகள் இத்துறையின் இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

2. துறையின் அமைப்பு

துறையின் தலைவராக சென்னையிலுள்ள பதிவுத் துறைத் தலைவருக்கு உதவியாக நான்கு இரண்டாம் நிலை அலுவலர்கள் உள்ளனர். இந்த அலுவலர்களால் கவனிக்கப்படும் பொருண்மைகளின் விவரம் பின்வருமாறு:-

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)– இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் தொடர்பான பொருண்மைகள் மற்றும் கணினிமயமாக்கல்.
- கூடுதல் சீட்டுப் பதிவாளர்-சீட்டுகள், சங்கங்கள் மற்றும் துறையின் உள்கட்டமைப்பு.
- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)– திருமணப்பதிவு தொடர்பான இனங்கள், தணிக்கை தொடர்பான இனங்கள், புகார்கள் தொடர்பான விசாரணை மற்றும் கட்டடக் களப் பணி.
- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி) – வழிகாட்டி மதிப்பைத் திருத்தியமைத்தல், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47A(5) மற்றும் 47A(6) தொடர்பான செயல்பாடுகள் மற்றும் பிரிவு 56(2) தொடர்பான நேர்வுகள்.

2020 மார்ச் 24]

2.1 பதிவு மண்டலங்கள்

பொதுமக்கள் எளிதாக அணுக முடிவதை உறுதி செய்யும் பொருட்டு, இத்துறையில் பல்வேறு பதிவு மண்டலங்களின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கள அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின்கீழ் இயங்குகிறது. மண்டலத்தின் ஒட்டுமொத்த நிருவாகத்திற்கு இவரே பொறுப்பாவார். ஐம்பது பதிவு மாவட்டங்களை உள்ளடக்கிய கீழ்க்கண்ட ஒன்பது பதிவு மண்டலங்கள் உள்ளன:-

எண்	பதிவு மண்டலம்	பதிவு மண்டலத்தின் வரம்பிற்குள் உள்ள பதிவு மாவட்டங்கள்
1.	சென்னை	சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), மத்திய சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம்.
2.	வேலூர்	வேலூர், செய்யார், அரக்கோணம் மற்றும் திருவண்ணாமலை
3.	கடலூர்	கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், திண்டிவனம் மற்றும் விருத்தாச்சலம்
4.	சேலம்	சேலம் (கிழக்கு), சேலம் (மேற்கு), கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தருமபுரி
5.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை
6.	தஞ்சாவூர்	தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை மற்றும் கும்பகோணம்
7.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர், உதகமண்டலம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம்

எண்	பதிவு மண்டலம்	பதிவு மண்டலத்தின் வரம்பிற்குள் உள்ள பதிவு மாவட்டங்கள்
8.	மதுரை	மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), திண்டுக்கல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் காரைக்குடி
9.	திருநெல்வேலி	திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேரன்மகாதேவி மற்றும் மார்த்தாண்டம்

2.2 உதவி பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள்

சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டல அலுவலகங்களில் துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கு உதவியாக, உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர்.

2.3 பதிவு மாவட்டங்கள்

மாநிலம் முழுவதும் 50 பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் (நிருவாகம்) தலைமையில் இயங்குகின்றன. இவற்றில், அதிக பணிச்சுமை உள்ள 16 மாவட்டங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலர்களால் நிருவகிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 34 பதிவு மாவட்டங்கள் மாவட்டப் பதிவாளர்களின் தலைமையில் செயல்படுகின்றன. இந்த உதவி பதிவுத் துறைத் தலைவர்கள்/மாவட்டப் பதிவாளர்கள் தங்களது ஆட்சி எல்லைக்குள் சங்கங்களின் பதிவாளராகவும், துணை சீட்டுப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராகவும் செயல்படுகின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு உரிமங்களும் வழங்குகின்றனர்.

2.4 தணிக்கை அலகுகள்

பதிவுத் துறை போன்ற மிக முக்கியமான ஒரு துறைக்கு வலுவான உள் தணிக்கைப் பிரிவு செயல்படுவது மிக

2020 மார்ச் 24]

முக்கியமானதாகும். துறையின் தணிக்கைப் பிரிவு 45 அலகுகளைக் கொண்டு ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையில் இயங்குகின்றது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இத்தணிக்கை அலகுகளால் நூறு சதவிகிதம் தணிக்கை செய்யப்பட்டு, குறைகள் மற்றும் வருவாய் இழப்புகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டி வருவாய் இழப்பு நேர்வுகளில் அந்த இழப்புத் தொகைகளை வசூலிக்க நடவடிக்கை எடுப்பதில் தணிக்கை பிரிவு முக்கிய கவனம் செலுத்துகிறது. தணிக்கை மாவட்டப் பதிவாளர்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது ஒவ்வொரு மண்டலத்தின் துணைப் பதிவுத் துறைத் தலைவரின் பொறுப்பாகும்.

2.5 சார்பதிவாளர் அலுவலகங்கள்

பரப்பளவு மற்றும் மக்கள்தொகை அதிகமாகக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதிலும் உள்ள 575 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் மூன்று முகாம் அலுவலகங்கள் (மேட்டூர் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள குளத்தூர், சேந்தமங்கலம் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள கொல்லிமலை மற்றும் கொம்மடிக்கோட்டை சார்பதிவகத்துடன் இணைந்துள்ள படுக்கப்பத்து) பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கு ஏதுவாக உள்ளன. செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் முகாம் அலுவலகங்களுக்கு வருகை புரியும் தொடர்புடைய சார்பதிவாளர்கள் பிற நாட்களில் தங்களது முதன்மை அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.

ஆவணங்களின் பதிவு, பல்வேறு திருமணச் சட்டங்களின்கீழ் திருமணங்கள் பதிவு ஆகியவை ஒரு சார்பதிவாளரின் முக்கியமான கடமைகளாகும். மேலும், அவர் ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கான பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளின் பாதுகாவலராக உள்ளார். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் உதவி பதிவாளராகவும் செயல்படுகிறார்.

2.6 புலனாய்வுப் பிரிவு

அசையா சொத்து தொடர்பான ஆவணம் எழுதப்படும்போது அவற்றில் உள்ள கட்டடம் தொடர்பான விவரமும் தெரிவிக்கப்பட

வேண்டும். கட்டடப் பகுதிக்கும் சேர்த்து முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். கட்டட மதிப்பிற்கு ஏற்றவாறு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்திட புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவு, கட்டடங்களை சரியான மதிப்பீடு செய்யும்பொருட்டு இரண்டு உதவி செயற்பொறியாளர்களுடன் கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் (புலனாய்வு) தலைமையில் இயங்கி வருகிறது.

2.7 பதிவுத் துறை பயிற்சி மையம்

துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறிவுத் திறனை மேம்படுத்த அவர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்க வேண்டியதன் அவசியம் கருதி, 1996 ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறை பயிற்சி மையம் சென்னையில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. துணைப் பதிவுத் துறைத் தலைவரின்கீழ் இம்மையம் செயல்படுகின்றது. மாநிலம் முழுவதிலுமிருந்து பயிற்சியாளர்கள் வருவதால், அவர்களுக்கு விடுதி வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும், ரூ.30 இலட்சம் தொடர் செலவினமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறை நான்கு சட்டங்களை முழுமையாகவும், ஒன்பது சட்டங்களை பகுதியாகவும் நிருவகிக்கின்றது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

அ) முழுமையாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

1. இந்திய முத்திரைச் சட்டம், 1899 (மத்திய சட்டம் 2/1899)
2. பதிவுச் சட்டம், 1908 (மத்திய சட்டம் 16/1908)
3. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 (தமிழ்நாடு சட்டம் 27/1975)
4. சீட்டு நிதிகள் சட்டம், 1982 (மத்திய சட்டம் 40/1982)

ஆ) பகுதியாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

1. இந்திய கிறித்துவ திருமணச் சட்டம், 1872 (மத்திய சட்டம் 15/1872)
2. பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், 1886 (மத்திய சட்டம் 6/1886)

2020 மார்ச் 24]

3. பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம், 1932 (மத்திய சட்டம் 2/1932)

4. இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932 (மத்திய சட்டம் 9/1932)

5. சிறப்பு திருமணச் சட்டம், 1954 (மத்திய சட்டம் 43/1954)

6. இந்து திருமணச் சட்டம், 1955 (மத்திய சட்டம் 25/1955)

7. வரதட்சணைத் தடுப்புச் சட்டம், 1961 (மத்திய சட்டம் 28/1961)

8. பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம், 1969 (மத்திய சட்டம் 18/1969)

9. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009 (தமிழ்நாடு சட்டம் 21/2009)

4. ஆவணப் பதிவு மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்

உரிமை மாற்றம், பரிவர்த்தனை, தானம், சுவாதீனத்துடன் கூடிய அடமானம் மற்றும் குத்தகை போன்ற ஆவணங்கள் இத்துறையால் பதிவு செய்யப்படுவதுடன் அவற்றின்மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றன. இவற்றுடன் கூடுதலாக மிகுவரியும் வசூலிக்கப்படுகிறது. திருமணங்கள், சீட்டுகள், கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் மற்றும் சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் வில்லங்கச் சான்றுகள், பிறப்பு இறப்புச் சான்றுகள் ஆகியவற்றை வழங்குதல் மூலமாகவும் வருவாய் ஈட்டப்படுகிறது.

2009-2010 நிதியாண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு:-

ஆண்டு	ஆவணங்களின் எண்ணிக்கை	வளர்ச்சி சதவீதம் %	வருவாய் (ரூ. கோடியில்)	வளர்ச்சி வீதம் %
2009-10	27,31,026	-3.59	3,818.25	-6.86
2010-11	32,80,503	20.12	5,020.50	31.49
2011-12	35,18,435	7.25	6,619.98	31.86

ஆண்டு	ஆவணங்களின் எண்ணிக்கை	வளர்ச்சி சதவீதம் %	வருவாய் (ரூ. கோடியில்)	வளர்ச்சி வீதம் %
2012-13	26,90,351	-23.54	7,455.41	12.62
2013-14	26,53,291	-1.38	8,055.74	8.05
2014-15	25,73,931	-2.99	8,279.64	2.78
2015-16	25,28,561	-1.76	8,562.38	3.41
2016-17	20,27,916	-19.80	7,007.74	-18.16
2017-18	22,10,595	9.01	9,121.53	30.16
2018-19	25,73,478	16.42	11,071.02	21.37
2019-20 (பிப்ரவரி 2020 முடிய)	23,72,861	2.70	10,122.04	2.19

4.1 சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதில் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் பணி

உரிமை மாற்றம், பரிவர்த்தனை, தானம், ஏற்பாடு போன்ற ஆவணங்களில் சரியான சந்தை மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்தால் ஆவணங்களைப் பதிவு செய்து ஆவணதாரர்களுக்கு உடனடியாக திரும்ப அளிக்கப்பட்டுவிடும். மேற்கூறப்பட்ட வகையான ஆவணங்களில் சரியான சந்தை மதிப்பு கடைபிடிக்கப்படவில்லை என பதிவு அலுவலர் கருதும் நேர்வுகளில், அவ்வாறான ஆவணங்களைப் பதிவு செய்தவுடன், இந்திய முத்திரைச் சட்டம், 1899 இன் பிரிவு 47A(1) இன்படி சரியான சந்தை மதிப்பு நிர்ணயிக்க அந்த ஆவணத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோர் தமிழ்நாடு முத்திரை (ஆவணங்களின் மதிப்பு குறைவை தடுத்தல்) விதிகள் 1968 இன்கீழ் தெரிவிக்கப்பட்டவாறு

2020 மார்ச் 24]

செயல்பட்டு சரியான சந்தை மதிப்பு நிர்ணயிக்க வேண்டும். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் நிர்ணயிக்கப்படும் மதிப்பின் அடிப்படையில் குறைவு முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியிருப்பின் அதனை வசூலித்த பின் ஆவணதாரருக்கு ஆவணம் திரும்ப வழங்கப்படும். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் ஆணையை எதிர்த்து பதிவுத் துறைத் தலைவரிடம் மேல்முறையீடும் அவரின் ஆணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடும் செய்யலாம்.

தாமதமாகச் செலுத்தப்படும் குறைவு முத்திரைத் தீர்வைக்கு மாதமொன்றிற்கு 1 சதவிகிதம் வட்டி செலுத்தப்பட வேண்டும். குறைவு முத்திரைத் தீர்வை செலுத்தப்படாத நேர்வுகளில் வருவாய் வசூலிப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அரசு வருவாய்க்கு குந்தகம் விளைவிப்பதாக இருப்பின் பதிவுத் துறைத் தலைவர் தன்னிச்சையாக சீராய்வு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

2019-2020 நிதியாண்டில் பிப்ரவரி 2020 முடிய அனுப்பப்பட்ட மற்றும் தீர்வு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரம் பின்வருமாறு:-

ஆண்டின் துவக்கத்தில் நிலுவையிலிருந்த ஆவணங்களின் எண்ணிக்கை	6,067
மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை)க்கு நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி 2020 வரை அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	7,783
மொத்த ஆவணங்களின் எண்ணிக்கை	13,850
இறுதியாணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	9,096
வசூலிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	8,002
வசூலிக்கப்பட்ட தொகை	ரூ.50.05 கோடி

4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி

பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மதிப்பீட்டு துணைக் குழுக்களால் சந்தை மதிப்பு வழிகாட்டி நிர்ணயிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், மதிப்பீட்டுத் துணைக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட மாநிலம் முழுமைக்குமான சந்தை மதிப்பு வழிகாட்டி 1-4-2012 முதல் அமல்படுத்தப்பட்டது.

பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், 1-4-2012 முதல் அமல்படுத்தப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 9-6-2017 முதல் 33% குறைக்கப்பட்டது.

கிராமங்களைப் பொறுத்து சர்வே எண்களுக்கும் நகரங்களைப் பொறுத்து தெருக்களுக்கும் சந்தை மதிப்பு வழிகாட்டி தயாரிக்கப்படுகிறது. சந்தை மதிப்பு வழிகாட்டி பதிவுத் துறை இணையதள முகவரி https://tnreginet.gov.in இல் வெளியிடப்பட்டுள்ளது.

5. உள்ளாட்சி அமைப்புகளுக்கு முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரியை பகிர்ந்தளித்தல்

முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் (டிசம்பர் 2019 வரை) வசூலிக்கப்பட்ட மிகுவரி ரூ.728,61,29,916 ஆகும். இதில் ரூ.21,85,83,909 (3%) வசூல் கட்டணமாக பதிவுத் துறையால் இருத்திக் கொள்ளப்பட்டு, எஞ்சிய ரூ.706,75,46,006 (97%) உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் பங்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

6. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் மற்றும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் ஆகியவற்றிற்கு செய்யப்பட்ட முக்கிய மாற்றங்கள்

6.1 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் 22-A என்ற புதிய பிரிவு அறிமுகம்

1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் புதியதாக பிரிவு 22A உட்புகுத்தப்பட்டு 20-10-2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பதிவினை மறுக்க சார்பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது:-

1. அரசு, உள்ளாட்சி அமைப்புகள், இந்து சமய அறநிலையத் துறை, பூதான் மற்றும் வக்ஃபு வாரியம் ஆகியவற்றுக்கு சொந்தமான நிலங்கள்.

2. அங்கீகாரம் பெறாமல் வீட்டு மனைகளாக மாற்றம் செய்யப்பட்ட விவசாய நிலங்கள், வீட்டுமனைகள் அங்கீகாரம் பெறப்படாதிருப்பினும், அவை ஏற்கெனவே வீட்டுமனைகளாக பதிவு செய்யப்பட்டதாக இருப்பின், மேற்படி வீட்டுமனைகள் பதிவு செய்யப்படலாம்.

3. வாங்கியவரின் ஒப்புதல் இன்றி இரத்து செய்யப்படும் கிரைய ஆவணம்.

6.2 பெரும் கடன் பத்திர ஆவணங்களுக்கான (Debenture) முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண உச்ச வரம்பு நிர்ணயித்தல்

அரசின் வருவாயைப் பெருக்கும் நோக்குடன் பெரும் கடன் பத்திர ஆவணங்களுக்கான (Debenture) முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றிற்கு உச்சவரம்பாக முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.3 குடியிருப்புகளுக்கான வாடகை ஒப்பந்தங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைத்தல்

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில உடைமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் உரிமைகளை முறைப்படுத்துதல் சட்டத்தின்படி அனைத்து வாடகை ஒப்பந்தங்களும் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும். இந்த புதிய வாடகை ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்வதன் முழு பயன்களைப் பெறுவதற்கு நில உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் இருவரும் தாமாகவே முன்வந்து பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், ஐந்தாண்டிற்கு உட்பட்ட குடியிருப்புக்கான வாடகை ஒப்பந்தங்களுக்கான முத்திரைத் தீர்வை தற்போது நடைமுறையிலுள்ள 1 சதவிகிதத்திலிருந்து 0.25 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான பதிவுக் கட்டணம் 1 சதவிகிதத்திலிருந்து 0.25 சதவிகிதமாகவும் இதற்கு உச்சவரம்பாக ரூ.5,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.4 நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் சொத்துப் பரிமாற்றங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைத்தல்

நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் நிறுவனங்களுக்கு இடையே நடைபெறும் சொத்துப் பரிமாற்றங்களுக்கான முத்திரைத் தீர்வை, பரிமாற்றம் செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பில் 2 சதவிகிதம் அல்லது பரிமாற்றம் செய்யப்படும் பங்குகளின் மதிப்பில் 0.6 சதவிகிதம் இவற்றில் எது அதிகமோ அதனைச் செலுத்தலாம் என்ற வகையில் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தகைய பரிமாற்றங்களுக்கான ஆவணங்களைப் பதிவு செய்யும் போது பதிவுக் கட்டணம் ரூ.30,000/- என 1-3-2019 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 1-3-2019-க்கு முன்புள்ள நேர்வுகளுக்கும் பொருந்தும் விதமாக முத்திரைத் தீர்வை சலுகை முன் தேதியிட்டு வழங்கப்பட்டுள்ளது. சொத்தின் சந்தை மதிப்பைக் கணக்கிடும் போது நீதிமன்றத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளில் நிலவிய மதிப்பின் அடிப்படையிலேயே கணக்கிடலாம்.

7. துணைமைப் பணிகள்

7.1 சங்கங்கள்

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 இன்படி சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. பயனுள்ள மற்றும் ஒரே மாதிரியான குறிக்கோள்களைக் கொண்டு ஒரு குழுவாக செயல்படும் உறுப்பினர்களால் ஒரு சங்கம் உருவாக்கப்பட்டு இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகிறது.

மாநிலத்தில் இலக்கிய, விஞ்ஞான, சமய, தொண்டு, விளையாட்டு மற்றும் பிற பிரிவுகளிலுள்ள அமைப்புகளை சங்கங்களாக பதிவு செய்ய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975 வழிவகுக்கிறது. சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளரிடம் சங்கத்தினை பதிவு செய்திட வேண்டும். சங்கத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் சங்க ஆவணங்களைக் கோர்வை செய்யலாம். ஒரு நிதி ஆண்டில் குறைந்தது ஒரு முறையாவது ஒவ்வொரு சங்கமும் பொதுக் குழுக் கூட்டம் நடத்தி தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை மாவட்டப் பதிவாளரிடம் கோர்வை செய்ய வேண்டும்.

10-12-2018 முதல் STAR 2.0 நடைமுறைப்படுத்தப்பட்டு சங்கப் பதிவு, சட்டப்பூர்வ ஆவணங்களின் கோர்வை மற்றும் அவற்றின் சான்றிட்ட நகல்கள் பெறுவது ஆகியவை இணையதளத்தின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் செயல்பாடுகளில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டால், அதன் செயல்பாடுகளை நிருவகிக்க தனி அலுவலரை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு உள்ளது.

29-02-2020 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,06,593 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) ரூ.1,21,71,475/- வசூலிக்கப்பட்டுள்ளது.

7.2 சீட்டுகள்

மாநிலத்தில் செயல்படும் சீட்டுகளின் செயல்பாட்டினை சீட்டு நிதிகள் சட்டம், 1982 நிருவகிக்கிறது. சீட்டு நிதிகள் சட்ட விதிகளின்படி பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராக உள்ளார். மாநில அளவில் சீட்டுகள் தொடர்பான வேலைகள் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் உள்ள கூடுதல் சீட்டுப் பதிவாளரால் கண்காணிக்கப்படுகின்றன. சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் இணைச் சீட்டுப் பதிவாளர்களாகவும், மாவட்டப் பதிவாளர்கள் துணைச் சீட்டுப் பதிவாளர்களாகவும் மற்றும் சார்பதிவாளர் (சீட்டு மற்றும் சங்கம்) உதவி சீட்டுப் பதிவாளர்களாகவும் செயல்படுகிறார்கள்.

சீட்டு நிறுவனங்களில் பணம் செலுத்திய பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே, சீட்டு நிதிகள் சட்டம், 1982 மற்றும் அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சீட்டு நிதி விதிகள், 1984 ஆகியவை இயற்றப்பட்டன.

பொதுமக்கள் சீட்டு நிறுவனங்களில் செலுத்தும் தொகைக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன், சீட்டு நிறுவனங்களிடமிருந்து சீட்டுத் தொகைக்கு சமமான தொகையை பிணைய வைப்புத் தொகையாக பெற்ற பின்னரே சீட்டு துவங்க முன் ஒப்பளிப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

29-02-2020 அன்றுள்ளபடி மாநிலம் முழுவதிலும் 2,984 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் உள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) ரூ.11,44,29,650/-வசூலிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

7.2.1 சீட்டு நடுவம்

சீட்டுக்கள் நடத்தப்படுவதை கண்காணிப்பது மட்டுமின்றி, முன்பன் (Foreman) மற்றும் சந்தாதாரர்கள் (Subscribers) தொடர்பான சச்சரவுகளைத் தீர்க்க அனைத்து மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலும், சீட்டு நடுவர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சீட்டுகள் மற்றும் சீட்டுக் குழுக்களின் நடைமுறைகள் தொடர்பாக எழும் சர்ச்சைகளை விசாரித்து உரிய ஆணைகளை வெளியிட வட (ம) தென்சென்னை, மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சீட்டு நடுவர்கள் (மாவட்டப் பதிவாளர் நிலையில்) உள்ளனர். பிற பகுதிகளில் சீட்டு நடுவராக மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) செயல்படுகின்றார். சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.

சீட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்த மத்திய அரசால் சீட்டு நிதிகள் சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் 1-1-2020 முதல் நமது மாநிலத்தில் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

7.3 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932 இன்கீழ் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) அனைவரும் நிறுவனப் பதிவாளர்கள் ஆவர். ஒரு பங்காண்மை நிறுவனம் இச்சட்டத்தின்கீழ் படிவம் I இல் பதிவு செய்திட இணையதளம்மூலம் மனு அளிக்கலாம். அந்நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை உரிய பரிசீலனைக்குப் பின்னர் நிறுவனப் பதிவேட்டில் குறிப்புகள் மேற்கொள்ளப்பட்டபின் பதிவாளர் கோர்வை செய்து சான்றினை வழங்குவார்.

பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படும் எவ்வித மாற்றமும் கூட்டுப் பங்காண்மை நிறுவனப் பதிவாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து, ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் உறுதிமொழியை கட்டாயம் கோர்வை செய்திட வேண்டும்.

2020 மார்ச் 24]

இந்நிறுவனங்களின் வருடாந்திர அறிவிப்பை கோர்வை செய்தல், முகவரி மாற்றம், நிறுவனத்தின் அமைப்பு மாற்றம், கூட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றை கோர்வை செய்ய கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

29-2-2020 அன்றுள்ளவாறு 7,08,710 பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2020 வரை ரூ.65,92,471/- வசூலிக்கப்பட்டுள்ளது.

7.4 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

பொதுமக்களின் வசதியினைக் கருத்தில்கொண்டு 10,000 மக்கள் தொகைக்கு ஒரு விற்பனையாளர் என்ற விகிதாச்சாரத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். மாநிலத்தில் மொத்தம் 2,701 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு முத்திரை விதிகளில் வகுத்தளிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கருத்தில் கொண்டு தொடர்புடைய மாவட்டப் பதிவாளரால் முத்திரைத் தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

போலி முத்திரைத் தாள்களின் புழக்கத்தை அகற்றிட, முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் கணக்குகள் கருவூலத் துறையின் கணக்குடன் மாதம் ஒரு முறை மாவட்டப் பதிவாளர்களாலும் மற்றும் வாரம் ஒரு முறை சார்பதிவாளர்களாலும் ஒப்பிட்டு நேர்செய்யப்படுகிறது.

7.5 ஆவண எழுத்தர்கள்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி சார்பதிவாளர் நிலையில் பணிபுரிந்த துறையின் அலுவலர்களுக்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஆவண எழுத்தர் சான்று பெற்றவர்களுக்கும் ஆவண எழுத்தர் உரிமம் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆவண எழுத்தர் உரிமம் குறித்து அரசு நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கும் உரிமம் வழங்கப்படுகின்றது. வழக்கறிஞர்களால் எழுதித் தரப்படும் ஆவணங்களும் பதிவிற்கு ஏற்கப்படுகிறது.

ஆவண எழுத்தர்களுக்கான தேர்வு முதலில் 1990 ஆம் ஆண்டும், அதன் பின்னர் 1992 மற்றும் 1997 ஆகிய ஆண்டுகளிலும் நடத்தப்பட்டது. பதிவுத் துறைத் தலைவரால் வழங்கப்படும் மாநில அளவிலான உரிமம் (A உரிமம்), மாவட்டப் பதிவாளர்களால் வழங்கப்படும் மாவட்ட அளவிலான உரிமம் (B உரிமம்) மற்றும் உப மாவட்ட அளவிலான உரிமம் (C உரிமம்) என மூன்று விதமான உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

29-2-2020 அன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தமுள்ள ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	2,809
மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	2,079
சார்பதிவக உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	364
மொத்த உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்	5,252

பொதுமக்கள் தாங்களாகவே ஆவணங்களைத் தயாரித்திட பதிவுத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆவண மாதிரிப் படிவங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

7.6 திருமணப் பதிவு

2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டமானது மாநிலத்தில் நடத்தப்படும் அனைத்துத் திருமணங்களும், மணப்பெண்ணோ அல்லது மணமகனோ சார்ந்துள்ள மத, இன பாகுபாடு ஏதுமின்றி பதிவு செய்வதை கட்டாயமாக்கியுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் (29-2-2020 வரை) பல்வேறு திருமணச் சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	திருமணச் சட்டம்	பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை
1	2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம்	62,424

2020 மார்ச் 24]

வ. எண்	**திருமணச் சட்டம்**	**பதிவு செய்யப்பட்ட திருமணங்களின் எண்ணிக்கை**
2	1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்	48,083
3	1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்	4,780
4	1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவத் திருமணச் சட்டம்	6,838

மேற்கண்டவாறு திருமணங்களைப் பதிவு செய்ததன்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.2.14 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8. துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

8.1 ஸ்டார் 2.0

பதிவுத் துறையின் நடவடிக்கைகளை முற்றிலும் கணினிமயமாக்கும் நோக்குடன் ஒருங்கிணைந்த வலைதள அடிப்படையிலான STAR 2.0 - Simplified Transparent Administration of Registration மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, ஆவணப் பதிவுகள் தொடர்பான நடைமுறைகள் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு 12-2-2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து திருமணங்கள், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவு தொடர்பான பணிகளை கணினிமயமாக்கும் நடவடிக்கைகள் 10-12-2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

ஸ்டார் 2.0 நடைமுறைப்படுத்தப்பட்ட பின் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்பட்டதுடன், விரைவான மற்றும் தங்கு தடையற்ற சேவையும் வழங்கப்படுவது, பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றுள்ளது. வரிசைக் கிரமமான ஆவணப் பதிவினை மேற்கொள்ளவும், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை அன்றே திரும்ப வழங்கவும் இத்திட்டம் வழி வகுத்துள்ளது.

இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திட தங்குதடையற்ற இணையதள இணைப்பு அத்தியாவசியமாகும். BSNL நிறுவனம்மூலம்

வழங்கப்படும் MPLS VPN இணைப்பு, ஏர்டெல் இணைப்பு மற்றும் துறையால் வழங்கப்படும் அகண்டவரிசை இணைப்பு ஆகியவைமூலம் இது உறுதி செய்யப்படுகிறது.

மேலும், இத்திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டிற்கான 'நல் ஆளுமை விருது' 15-8-2018 அன்று சுதந்திர தின விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

8.2 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள்

சார்பதிவாளர் அலுவலகங்களின் நடவடிக்கைகளை தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களிலிருந்து கண்காணித்திட ஏதுவாக ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திலும் தலா மூன்று இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆவணப் பதிவு நடைமுறையின்போது ஒளிப்பதிவு செய்யப்படும் காட்சிகள் ஆவணதாரர்களுக்கு அத்தாட்சியாக குறுந்தகடு மூலமாக வழங்கப்படுகிறது.

8.3 இணைய வழியாக வங்கிகளில் கட்டணம் செலுத்திடும் முறை

முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் பதிவுத் துறைக்கு செலுத்தப்பட வேண்டிய இதர கட்டணங்கள் அனைத்தும் இணையதளம்மூலம் செலுத்தலாம். கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள்மூலம் கட்டணங்களை வசூலிக்க அனைத்து அலுவலகங்களுக்கும் Point of Sale (PoS) இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியாண்டில், பிப்ரவரி 2020 வரை மேற்கண்ட முறைமூலம் ரூ.6,420.06 கோடி (e-payment–ரூ.6,400.93 கோடி, PoS–ரூ.19.13கோடி) வசூலிக்கப்பட்டுள்ளது.

8.4 எவ்விதக் கட்டணமுமின்றி வில்லங்க விவரங்களைப் பார்வையிடும் வசதி

பொதுமக்கள் தங்களது சொத்து தொடர்பான வில்லங்க விவரங்களை இணையதளம்மூலம் எவ்வித கட்டணமுமின்றி பார்வையிடுவதுடன் அவற்றினைப் பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம். தற்போது 1975 முதல் நாளது தேதி வரை பதிவு செய்யப்பட்ட ஆவண விவரங்கள் அனைத்தும் மின்னணுமயமாக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு சராசரியாக 20,000 நபர்கள் இவ்வசதியை பயன்படுத்துகின்றனர்.

2020 மார்ச் 24]

29-2-2020 வரை 4.79 கோடி வில்லங்க விவரங்கள் எவ்வித கட்டணமுமின்றி பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

8.5 மின்னணு முத்திரையிடும் முறை

திருவாளர்கள் SHCIL (Stock Holding Corporation of India Limited) மூலம் செயல்படுத்தப்படும் மின்னணு முத்திரையிடும் முறை, முத்திரைத் தீர்வையை செலுத்துவதற்கு ஒரு மாற்று வழியாகும். நீதிசாரா முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக மின்னணு முத்திரைத்தாள்களைப் பயன்படுத்தலாம். போலிகளைத் தடுக்க இதில் பல பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. சென்னை மண்டலத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு முத்திரையிடும் முறை அமலில் உள்ளது.

மின்னணு முத்திரையிடும் முறையில் வசூல் விபரம்:-

ஆண்டு	வழங்கப்பட்ட மின்னணு முத்திரைச் சான்றுகள்	தொகை (ரூ. கோடியில்)
2010-11	1,206	24.11
2011-12	6,478	113.74
2012-13	11,924	180.90
2013-14	32,121	253.90
2014-15	67,062	236.94
2015-16	82,384	347.78
2016-17	1,00,587	246.02
2017-18	1,32,757	220.46
2018-19	94,478	245.70
2019-20 (29.02.2020 முடிய)	88,398	248.00

8.6 வலை நிழலி (web camera) மற்றும் மின்னணு ரேகை கருவிகளின் பயன்பாடு

575 சார்பதிவாளர் அலுவலகங்களிலும் ஆவணதாரர்களை புகைப்படமெடுக்க 2 வலை நிழலிகளும் அவர்களின் விரல் ரேகைப் பதிவுகளை எடுக்க 2 மின்னணு ரேகைப் பதிவு இயந்திரங்களும் நிறுவப்பட்டுள்ளன. ஆதார் செயல்படுத்தத்தக்க UIDAI பதிவு பெற்ற மின்னணு ரேகைப் பதிவு கருவிகள் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

8.7 மின்னணு கையொப்பம்

துறையால் வழங்கப்படும் சான்றிதழ்களை அலுவலர்கள் அத்தாட்சி செய்ய ஆதார் அடிப்படையிலான மின்னணு கையொப்பம் ரூ.28.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

8.8 CUG இணைப்புகள் (Closed User Group)

பதிவுத் துறையின் அலுவலர்கள் உடனுக்குடன் பாதுகாப்பான முறையில் அவ்வப்போது தகவல்களைப் பரிமாறிக் கொள்ள CUG இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

8.9 சார்பதிவாளர் அலுவலகங்களிலுள்ள ஆவணத் தொகுதிகளை மின்னணுமயமாக்கல்

சார்பதிவாளர் அலுவலகங்களில் பராமரிக்கப்படும் ஆவணங்களை மின்னணுமயமாக்கும் பொருட்டு ரூ.89.17 கோடி செலவில் அவற்றை ஒளிவருடல் செய்து மின்னணுமயமாக்கும் பணி அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது.

8.10 விழித்திரை ஒளிவருடல் (Iris Scanner)

ஆவணதாரர்களின் ஆதார் மெய்த்தன்மையை தவறின்றி உறுதி செய்ய, மாற்று முறையாக, அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் ரூ.1.50 கோடி செலவில் விழித்திரை ஒளிவருடல் (Iris scanner) செய்யும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]


9. கட்டடங்கள் கட்டுதல்

வாடகைக் கட்டடங்களில் செயல்படும் பதிவுத் துறை அலுவலகங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அதனைச் செயல்படுத்தும் விதமாக கடந்த 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 234 கட்டடங்கள் கட்ட ரூ.179.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவற்றில், இதுவரை 192 கட்டடங்கள் கட்டி முடித்து திறந்து வைக்கப்பட்டு அலுவலகங்கள் புதிய கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 42 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.


10. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005


பொதுமக்களால் அதிகம் அணுகப்படும் துறையான பதிவுத் துறை, தனது செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. 2019 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் 16,441 மனுக்கள் தகவல் கோரி வரப்பெற்று, அனைத்திற்கும் உரிய தகவல்கள் வழங்கப்பட்டன. இதன்மூலம் ரூ.2,03,876/- வசூலிக்கப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



வருவாய்
நிதி ஆண்டு
2009-10
3818.25
2010-11
5020.50
2011-12
6619.98
2012-13
7455.21
2013-14
8055.74
2014-15
8279.64
2015-16
8562.38
2016-17
7007.74
2017-18
9121.53
2018-19
11071.02
10122.04
0
2000
4000
6000
8000
10000
12000

வசூலிக்கப்பட்ட வருவாய்




ஆவணப்பதிவு
ஆவணங்களின் எண்ணிக்கை
நிதி ஆண்டு
0
500000
1000000
1500000
2000000
2500000
3000000
3500000
4000000
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20(பிப்ரவரி முடிய)
2731026
3280503
3518435
2690351
2653291
2573931
2528561
2027916
2210595
2573478
2372861

ஆவணப் பதிவு விவரங்கள்



இணைப்பு XVI

(48 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை

பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமப்புற குடும்பங்களுக்கு பால் தொழில் ஒரு முக்கியமான இரண்டாம் நிலை வருமான ஆதாரமாக மாறியுள்ளதுடன், வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தை ஈட்டுவதற்கான ஒரு முக்கிய ஆதாரமாக உள்ளது. கிராமங்களில் பால் தொழில், நாடு முழுவதும் பரவலாக உள்ள வீட்டிற்கான பால் தேவைகளைப் பூர்த்தி செய்யும் குடிசைத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பால் உற்பத்தி பொதுவாக கலப்பு விவசாய முறையின் ஒரு பகுதியாக, முக்கியமாக, குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்றவர்கள் 1-2 பால் கறவை மாடுகளை பராமரித்துவரும் விவசாயிகளின் களமாக உள்ளது. பசி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு எதிராக மனித உயிர் வாழ்வதற்கு பசுமைப் புரட்சி ஒரு புதிய விடியலைக் கொண்டு வந்த பகுதிகளில் விவசாயத் துறை ஒரு வகையான தேக்கநிலை அல்லது வளர்ச்சி விகிதத்தில் சரிவைக் கண்டுவரும் நிலையில், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், பால் வள மேம்பாட்டுத் துறை ஒரு சிறந்த வாக்குறுதியை அளித்து வருகிறது. வளர்ந்து வரும் நகரமயமாக்கல், வருமானம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரங்களில் முன்னேற்றம் ஆகியவற்றுடன் பால் பொருட்களுக்கான தேவை சீராக அதிகரித்து வருகிறது.

1.1. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு அமைப்புகள்

அதிக அளவில் கிராமப்புறங்களைக் கொண்ட தமிழகம், ஏழை விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியை நோக்கி செயல்பட்டு வருகிறது. பால் வள மேம்பாட்டுத் துறை தமிழ்நாட்டில் இரண்டாவது வெண்மைப் புரட்சியின்மூலம் தமிழ்நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. வயது மற்றும் மதத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து பொது மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு பால் ஆகும்.

2020 மார்ச் 24]

தமிழ்நாட்டில், "இந்திய பால் நாயகன்" டாக்டர் வர்கீஸ் குரியன் முன்னோடியாக அறிமுகப்படுத்திய "ஆனந்த்" முறையில், 3 அடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் சங்கங்கள் வெவ்வேறு மட்டங்களில் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்படும் பால் “ஆவின்” என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

தூய பால் உற்பத்தி மற்றும் நுகர்வோருக்கு சுகாதாரமான, பாதுகாப்பான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஆவின் நிறுவனம் கிராம அளவிலான பால் கொள்முதல், பதப்படுத்துதல், பால் பொருட்கள் உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரித்தல் மற்றும் நுகர்வோருக்கு வழங்கும் விளிம்பு நிலை வரை அனைத்து நிலைகளிலும் பல்வேறு நவீன மற்றும் அறிவியல் பூர்வமான நடவடிக்கைகளை உறுதியுடன் செயல்படுத்தி வருகிறது. தூய பாலுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில் உணவுப் பாதுகாப்புத் தரத்தையும் ஆவின் முனைப்புடன் கடைப்பிடிக்கிறது.

தூய பால் உற்பத்தி மற்றும் தரமான பால் விற்பனைமூலம் கிராம பால் உற்பத்தியாளர்களுக்கு நிரந்தர வருமானத்தை உறுதி செய்வதற்காக, பால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் பால் வளத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், இது பால் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அடையப்படுகிறது.

நாளொன்றுக்கு 223 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியைக் கொண்டு தமிழகம், நாட்டின் பால் உற்பத்தியில் முதல் பத்து மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இதில், நாளொன்றுக்கு சுமார் 38 இலட்சம் லிட்டர் பால் வீட்டு நுகர்வுக்காக தக்கவைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 32% அதாவது, 71 இலட்சம் லிட்டர் பால் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளான கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. மாநிலத்தின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு சுமார் 16%, அதாவது, 37 இலட்சம் லிட்டர் ஆகும். பால் உற்பத்தியில் மாநில கூட்டுறவு அமைப்புகளில் தேசிய அளவில் நான்காம் இடத்தில் இருந்த தமிழ்நாடு தற்போது மூன்றாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கிராம அளவில் 20.21 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 9,988 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. பால்

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விடுமுறையின்றி வருடத்தில் 365 நாட்களும் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் பால் ஊற்றும் உறுப்பினர்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்து வருகின்றன. மேலும் பால் ஊற்றும் உறுப்பினர்களுடன் நேரடி தொடர்பு கொண்டுள்ளதால் அவர்களின் பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைக்க சங்கங்கள் உதவுகின்றன.

அதேபோல், பால் விற்பனையில் தனியார் பால் நிறுவனங்களின் பங்களிப்பு 46 சதவிகிதமாக இருந்தபோதிலும், கூட்டுறவு அமைப்புகளின் பங்களிப்பு 47 சதவிகிதமாக உள்ளது. அமைப்புசாரா நிறுவனங்களின்மூலம் 7 சதவிகிதம் விற்பனை செய்யப்படுகிறது. பால் கூட்டுறவு அமைப்புகளின் விற்பனை பங்களிப்பை இந்த நிதியாண்டின் இறுதிக்குள் 50 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1.2. பால் வளத் துறை செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் 1958 ஆம் ஆண்டில் பால் வளத் துறை துவக்கப்பட்டது முதல் பால் பண்ணைத் தொழிலின் வியத்தகு வளர்ச்சி போற்றத்தக்கது. கூட்டுறவுத் துறையில் இருந்து வந்த அனைத்து பால் கூட்டுறவுச் சங்கங்களின் மீதான சட்டப்பூர்வ மற்றும் நிருவாகக் கட்டுப்பாடுகள், 1-8-1965 அன்று இத்துறைக்கு மாற்றப்பட்டது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், துறையின் தலைவர் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பதிவாளர் ஆவார். பின்னர், 1972 ஆம் ஆண்டில் வணிக நடவடிக்கைகள் அனைத்தும் கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு பால் வள நிறுவனமாக மாற்றப்பட்டன. மேலும், 1981 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ‘ஆனந்த்’ பாணியில் பால் கூட்டுறவுகளில் மூன்றடுக்கு முறை உருவாக்கப்பட்டபோது அதன் வணிக நடவடிக்கைகள் யாவும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டன. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மேலாண்மை இயக்குநராகவும் செயல்படுகிறார்.

2020 மார்ச் 24]

1.2.1. குறிக்கோள்கள்

1. கட்டமைப்புக்குள் இல்லாத பால் பண்ணைத் தொழிலை கட்டமைப்புக்குள் கொண்டு வருதல்.
2. பால் உற்பத்தியை அதிகரிக்க, கறவை மாடுகளுக்கு இடுபொருட்கள் மற்றும் கால்நடை மருத்துவ சேவை வழங்குவதை உறுதி செய்தல்.
3. பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு நியாயமான விலை வழங்குவதை உறுதி செய்தல்.
4. திரவ பால் இருப்பு இருப்பதையும், நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பாதுகாப்பு வழிகாட்டுதலின்படியிலான சுகாதாரமான, தூய்மையான பதப்படுத்தப்பட்ட பால் வழங்குவதையும் உறுதி செய்தல்.
5. சட்டப்பூர்வ வரையறையின்படி பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தை உறுதி செய்தல்.
6. பால் கூட்டுறவு கட்டமைப்பின்மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதை நிருவாக வெளிப்படைத் தன்மைமூலம் உறுதி செய்தல்.
7. இதர தொழில் துறை வளர்ச்சிக்கு ஈடாக பால் பண்ணைத் துறையிலும் சீரான வளர்ச்சியை உறுதி செய்தல்.
8. கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து மற்றும் தீவனம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்ய போதிய முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
9. பல்வேறு பால் பண்ணை நடவடிக்கைகளில் சமீபத்திய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்.

1.2.2. உத்திகள்

பால் வளத் துறையின் குறிக்கோள்களை நிறைவேற்ற பின்வரும் உத்திகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

1. அதிக எண்ணிக்கையில் பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவருதல், அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கி பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களை செயல்படும் சங்கங்களாக மறுமலர்ச்சி செய்தல்.

[2020 மார்ச் 24

2. அனைத்து பால் கூட்டுறவுகளிலும் ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்.

3. அனைத்து பால் கூட்டுறவுகளிலும் தூய பால் உற்பத்தியினை நடைமுறைப்படுத்துதல்.

4. அதிக எண்ணிக்கையிலான சங்கங்களில் தானியங்கி பால் சேகரிப்பு நிலையங்கள் நிறுவுதல் மற்றும் பல்வேறு கொள்ளளவுகளில் மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைத்து பாலின் வெப்பநிலையினை அனைத்து நிலைகளிலும் முறையாக பராமரிப்பதன்மூலம் பாலின் ஆரம்பநிலை தரத்தினை உறுதிப்படுத்துதல்.

5. அதிகரித்துள்ள பால் உற்பத்தியை எதிர்கொள்ள ஏதுவாக அனைத்து பால் பண்ணைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

6. பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு பால் தொழிலில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

7. பால் உற்பத்தியை அதிகரித்திட மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களையும், மத்திய மாநில அரசுகளின் பங்களிப்பு மற்றும் நிதி உதவியுடன் கூடிய திட்டங்களையும் செயல்படுத்துதல்.

8. விற்பனையை மேம்படுத்திட புதிய பால் பொருட்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் புதிய விற்பனை உத்திகளை மேம்படுத்துதல்.

9. பால் அட்டை விற்பனையை அதிகரித்தல் மற்றும் 24 மணி நேரமும் இயங்கும் நுகர்வோர் குறைதீர்வு மையங்கள்மூலம் பெறப்படும் நுகர்வோர் குறைகளைத் தீர்வு செய்வதன்மூலம் நுகர்வோர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துதல்.

10. உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2006 மற்றும் விதிகள் 2011-ன் வழிகாட்டுதல்களை அனைத்து பால் கூட்டுறவுகளிலும் செயல்படுத்துதல்.

1.2.3. நிருவாக அமைப்பு

பால் கூட்டுறவுகளின் பதிவாளர் என்ற முறையில் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்

மற்றும் விதிகள் 1988-ன்கீழான சட்டப்பூர்வ நடவடிக்கைகளான, புதிய பால் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல், செயலிழந்த சங்கங்களைப் புதுப்பித்தல், பால் கூட்டுறவுச் சங்கங்களை ஆய்வு செய்தல், தகராறுகளைத் தீர்த்தல், சங்கங்களின் நிருவாகத்திற்கு நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்துதல், பொது மக்கள் நலன் கருதி உரிய அறிவுரைகள் வழங்குதல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி வருகிறார்.


பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்களுக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் ஒரு கூடுதல் பால் ஆணையர் (இப்பதவி தற்போது புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது), துணை பால் ஆணையர் (கூட்டுறவு), ஒருவரும் சட்டப் பணிகள் மற்றும் நிருவாகப் பணிகளுக்கு முறையே ஒரு துணைப் பதிவாளர் (பால் வளம்) ஆகியோரும் மாவட்ட அளவில் சரகங்களில் 29 துணைப் பதிவாளர்களும் (பால் வளம்) பணியாற்றி வருகின்றனர். மேலும் உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006 மற்றும் விதிகள்,2011-ன்படி நுகர்வோருக்கு தரமான பால் வழங்கப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்யும் மாநில கண்காணிப்புக் குழுவின் உறுப்பினராகவும், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் செயல்பட்டு வருகிறார். இத்துறை, களப் பணியாளர்கள் உட்பட 805 பணியாளர்கள் பணியிடங்களை பணிநிலை திறனாகக் கொண்டுள்ளது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள் தமிழ் நாட்டில் உள்ள பால் கூட்டுறவுகளில் தேர்தல் நடத்தும் மாநில தேர்தல் அலுவலராகவும் செயல்படுகிறார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் செயல்பட்டு வந்த துணைப் பதிவாளர் (பால் வளம் அலுவலகம் சில நிருவாகக் காரணங்களுக்காக 1-11-2019 முதல் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அம்மாவட்டத்தில் செயல்பட்டு வந்த பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ நிருவாக அதிகாரங்கள் துணைப் பதிவாளர் (பால் வளம்), திருநெல்வேலி அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டுவந்த பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ மற்றும் நிருவாக அதிகாரங்கள் துணைப் பதிவாளர் (பால் வளம்), திருச்சி அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து துணைப் பதிவாளர் (பால் வளம்) புதுக்கோட்டை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவந்த நிலையில், அடிக்கடி இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை இருந்ததைக் கருதி, தற்போது செயல்பட்டுவரும் 29 துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களில், 10 துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களுக்கு அரசின் நிதி உதவியுடன் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு அதில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களுக்குச் சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அனைத்து துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகங்களிலும் கண்காணிப்பு கேமரா மற்றும் பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால் வளத் துறையின் நிருவாக அமைப்பு



2020 மார்ச் 24]

1.2.4. துணைப் பதிவாளர்களின் (பால் வளம்) செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

மாவட்ட தலைமை அலுவலக நிதி மற்றும் நிருவாகம் சார்ந்த அதிகாரங்களுடன் மாவட்ட அளவிலான அலுவலர் என்ற முறையில் துணைப் பதிவாளர் (பால் வளம்) செயல்பட்டு வருகிறார். தனது கட்டுப்பாட்டில் பணிபுரியும் ஊதியம் பெற்று வழங்கும் அலுவலராகவும், அவர்களுக்கு வருடாந்திர ஊதியம், விடுப்பு ஒப்பளிப்பு அனுமதி அளித்தல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளில் பதிவாளருக்கான சட்டப்பூர்வ அதிகாரங்கள் சிலவற்றை அரசாணை (பல்வகை) எண் 369, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 22-8-1989 மற்றும் அரசாணை (பல்வகை) எண் 370, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 22-8-1989 ஆகியவற்றின்படி செயல்படுத்த துணைப் பதிவாளர் (பால் வளம்) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதித் துறை சார்புடைய அலுவலர் என்ற முறையில் நீதித் துறைக்கு ஒப்பான சில அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள நிதியிழப்பை பொறுப்பாக்கப்பட்ட நபர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறார்.

துணைப் பதிவாளர் (பால் வளம்) அவர் பணிபுரியும் மாவட்டத்தின் பால் கூட்டுறவுகளுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர் என்ற முறையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழு பதவிக் காலமான 5 ஆண்டுகள் முடிவுறும்போது, புதிய நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கவும், இடைக்கால நிருவாகக் குழு பதவிக் காலம் முடிவுறும்போது புதிய நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கவும் தேர்தல் நடத்துகிறார்.

உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006-ன்கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட கண்காணிப்புக் குழுவின் ஒரு உறுப்பினராகவும் துணைப் பதிவாளர் (பால் வளம்) செயல்பட்டு வருகிறார்.

மாவட்ட அளவில் செயல்படும் பால் கூட்டுறவு அமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் பொறுத்து, நிருவாக அலுவலர் என்ற

முறையில் துணைப் பதிவாளர் (பால் வளம்) மாவட்டத்தில் உள்ள அனைத்து வகையான பால் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நிருவாக அதிகாரியாக, தனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் புதிய பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்யக்கோரி பெறப்படும் விண்ணப்பங்களை, களப் பணியாளர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஆராய்ந்து பின்னர், பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்கிறார். பதிவு செய்யப்பட்ட சங்கங்களிலிருந்து பாலைக் கொள்முதல் செய்து அந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைக் கலந்தாலோசித்து, உரிய பால் வழித்தடங்கள்மூலம் அப்பாலை ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கிறார். உற்பத்தியாளர்களுக்கு உரிய நேரத்தில் பால் பணப் பட்டுவாடா வழங்க ஏற்பாடு செய்வதுடன், அவ்வப்போது சங்கங்களை ஆய்வு செய்வதன்மூலம் சுத்தமான பால் உற்பத்தி மற்றும் தரமான பால் உற்பத்தியை உறுதி செய்கிறார். துணைப் பதிவாளர் (பால் வளம்) பல்வேறு திட்டங்களின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாட்டுக் கடன்களை வங்கிகளுடன் இணைத்து பெற்றுத் தர உரிய நடவடிக்கை எடுக்கிறார்.

பால் சங்கங்களின் வளர்ச்சிக்கும், உறுப்பினர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து சேகரிக்கும் பால் பரிசோதனை செய்யப்படுவதற்கும் துணைப் பதிவாளர் (பால் வளம்) பொறுப்பாவார். பால் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் வழங்கிய பாலின் தரத்திற்கு ஏற்ப பால் பணப் பட்டுவாடா நிலுவையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வார். சங்கங்கள் தங்களது வியாபார நடவடிக்கை குறித்த கணக்குகளை உடனுக்குடன் எழுதுவதை உறுதி செய்யவும் சங்கங்களுக்கு நிதியிழப்பு ஏற்படா வண்ணம் தவிர்ப்பதை உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி சங்கங்கள் செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, விதி மீறல்கள் ஏற்படின் அதனைத் தீர்க்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சங்கங்களின் கணக்குகள் காலவரையறைக்குள் தணிக்கை செய்யப்படுவதை உறுதி செய்து, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றின்படி, பால் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கப்பெறும் இலாபம், ஊக்கத் தொகை, கூடுதல் கொள்முதல் விலை, ஈவுத் தொகை போன்ற இனங்களில் உறுப்பினர்களிடையே இலாபப் பகிர்வு செய்து தருவதை உறுதி செய்ய வேண்டும்.

2020 மார்ச் 24]

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து விவசாயிகளுக்கு கால்நடை தீவனம், தாது உப்புக் கலவை, பசுந்தீவனம் மற்றும் இதர உள்ளீடுகளைப் பெற்று வழங்கவும் துணைப் பதிவாளர் (பால் வளம்) ஏற்பாடு செய்கிறார்.

துணைப் பதிவாளர் (பால் வளம்) அவர்கள் செயலற்ற சங்கங்களைப் புதுப்பிக்கவும், கலைக்கப்பட்ட சங்கங்களை புத்துயிரூட்டவும் நடவடிக்கை மேற்கொள்கிறார். இந்த நடவடிக்கைகளுக்காக அவர் மற்ற கள அலுவலர்களுடன் தவறாமல் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, அதன்படி அவர்களுக்கு இலக்குகளை நிர்ணயித்து வருகிறார். அவர் பால் கொள்முதல் செய்யும் நேரத்தில் சங்க உறுப்பினர்களுடன் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி, அவர்களின் கோரிக்கையை நிவர்த்தி செய்து தருவதுடன், சங்க அளவிலேயே பால் சேகரிப்பின்போது பால் பரிசோதிக்கப்படுவதை உறுதி செய்கிறார்.

2. மாநிலத்தின் கூட்டுறவுச் சங்கங்களின் மேலாண்மை

“ஆனந்த் பாணி” என்று பிரபலமாக அறியப்படும் 3 அடுக்கு முறையின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பால் கூட்டுறவு அமைப்புகள் செயல்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

அடுக்கு-1-கிராமப்புற அளவில்

கிராம அளவில் செயல்படும் தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் அடித்தளமாக செயல்படுகின்றன. இந்த கூட்டுறவு அமைப்புகள் உற்பத்தியாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. உறுப்பினர் உற்பத்தியாளர்களிடமிருந்து பாலைக் கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்காக ஒரு பகுதியை விற்பனை செய்த பிறகு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கி வருகிறது.

அடுக்கு-2-மாவட்ட அளவில்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களானது மாவட்ட அளவில் நடுத்தர அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.


அந்த சங்கங்களிலிருந்து உபரி பாலை வாங்கி, பதப்படுத்தி நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறார்கள். மேலும், உபரியாக உள்ள பால், பால் பவுடராகவும், பால் உபபொருட்களாகவும் உருமாற்றம் செய்யப்படுகின்றன.

அடுக்கு-3-மாநில அளவில்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்பது மாநில அளவிலான தலைமை கூட்டுறவுச் சங்கமாகும். இதில் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இணையமானது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பாலைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி சென்னை பெருநகர பால் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் பால் மற்றும் பால் உபபொருட்களை 'ஆவின்' என்ற வணிக அடையாளத்தில் இணையம் விற்பனை செய்து வருகிறது.

பிற கூட்டுறவு அமைப்புகள் போன்றே 3 அடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளும் 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள் 1988-ன்படி நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

மூன்று அடுக்கு பால் கூட்டுறவு அமைப்பு



2020 மார்ச் 24]

3. தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்கள்

மக்களுக்குத் தேவைப்படும் முதன்மையான உணவுப் பொருளாக பால் கருதப்படுகிறது. முதல்தர புரதச் சத்துக்கள் நிறைந்த முக்கிய ஆதாரமான பால் அனைத்து வயதினராலும் நுகரப்பட்டு வருகிறது. நகரமயமானதால் நகரங்களில் பாலின் தேவை அதிகரித்துள்ளது. இதனால், பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை அறிவியல் பூர்வமான முறையில் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இது பால் பண்ணை நடவடிக்கைகளை கட்டமைப்பதுடன், கறவை மாடுகள் வளர்ப்பு மற்றும் அது தொடர்புடைய வேளாண் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

3.1 தொடக்கப் பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்கள்

அ. கட்டமைப்பு அம்சம்

மூன்று அடுக்கு 'ஆனந்த் பாணி' முறையில் அடித்தள அமைப்பாக, தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைகின்றன. இவை கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டு, கிராம அளவில் பால் உற்பத்தி செய்யப்படும் உறுப்பினர்களிடமிருந்து பாலை சேகரித்து, அதில் சிறிய பகுதியை உள்ளூரில் விற்பனை செய்து எஞ்சிய பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தொகுப்பு பால் குளிர்விப்பான்/பால் குளிரூட்டும் நிலையம்மூலம் பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. அரசின் கொள்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்களை இறுதி பயனாளிகளான பால் உற்பத்தியாளர்களுக்குக் கொண்டு செல்வதில் தொடக்கப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பாலமாக விளங்குகின்றன. சங்கத்தின் செயல்பாட்டு பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆவதற்குத் தகுதியுடையவர்கள். பிரத்தியேகமாக மகளிர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களும் சாத்தியமான இடங்களில் பதிவு செய்யப்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின்மூலம் விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்படும்போது அப்பகுதியில் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

பால் உற்பத்தியாளர்கள் பால் தொழிலுக்கு முதுகெலும்பாக அமைகின்றனர். உள்ளீட்டு வசதிகள், கால்நடைத் தீவனம் வழங்குதல் போன்ற விரிவாக்க நடவடிக்கைகள் மற்றும் பாலுக்கு நியாயமான விலையை வழங்குதல் ஆகியன பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவிகரமாக உள்ளன.

ஆ. செயல்பாட்டு அம்சம்

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை கொள்முதல் செய்து அதற்கு நியாயமான விலை பெற்றுத் தருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. சங்கத்தில் பால் உற்பத்தி செய்யும் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு, மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்வதோடு, கால்நடைத் தீவனம் மற்றும் பிற உள்ளீடுகளையும் பெற்று வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

கிராம அளவில் 9,988 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில், 1,692 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் உள்ளன. தொடக்கப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 3.2 இலட்சம் லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுகிறது. நாளொன்றுக்கு சுமார் 33.8 இலட்சம் லிட்டர் பால், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மற்றும் பெருநகர் பால் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வாரம் ஒரு முறை/ பத்து நாட்களுக்கு ஒரு முறை/பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை/ மாதாந்திர அடிப்படையில் பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் தரத்தின் அடிப்படையில் பால் பணம் பட்டுவாடா வழங்கப்பட்டு வருகிறது. 19-8-2019 முதல் பசும்பால் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.4/- உயர்த்தப்பட்டு ரூ.25/-லிருந்து ரூ.32/- எனவும், எருமைப் பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6/- உயர்த்தப்பட்டு, ரூ.35/-லிருந்து ரூ.41/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் தாங்கள் ஈட்டிய இலாபத்தை பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை, கூடுதல் கொள்முதல் விலை, ஈவுத்தொகை வழங்குவதன்மூலம் பகிர்ந்து கொள்கின்றன.

இ) புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைத்தல்

புதிய பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வதற்காக, பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட கிராமத்தில் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்க்க தகுதிவாய்ந்த குறிப்பிட்ட கிராமத்தில் வசிக்கும் குறைந்தபட்சம் 25 குடிமக்கள், பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்யக் கோரி, சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப் பதிவாளர் (பால் வளம்)-க்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். கள ஆய்வை முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் விரிவாக்க அதிகாரிகள் மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் திறன், நம்பகத்தன்மை, பால் வழித்தடம் கிடைக்கும் தன்மை, இலாபம், பாலின் தரம் ஆகியன குறித்து ஆய்வு செய்வார்கள். மேலும், முன்மொழியப்பட்ட சங்கத்தின் பரப்பளவு மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் ஒன்றுடன் ஒன்று சேர்க்கக் கூடாது. இருப்பினும், மகளிர் அல்லது ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தப் பகுதியில் செயல்படும்போது பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாடுகளைப் பாதிக்காமல் முடிந்தவரை ஒரே பகுதியில் பதிவு செய்யப்படுகின்றன. சங்கம் பதிவு செய்வதற்கான செயல்முறையைத் தொடங்க முதன்மை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். மேலும், குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட முழு வடிவத்திலும் முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய முன்மொழிவு கிடைத்ததும், முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் சங்கத்தை துணைப் பதிவாளர் (பால் வளம்) பதிவு செய்வார். எந்தவொரு குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி முன்மொழிவு திருப்பித் தரப்படாவிட்டால், அது 120 நாட்கள் கால எல்லைக்குள் பதிவு செய்யப்படவில்லை என்றால், துணைப் பதிவாளர் (பால் வளம்) கால வரம்பின் கடைசி தேதியில் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும். கடந்த ஒன்பது மாதங்களில் 225 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

3.2. செயலிழந்த சங்கங்களை மறுமலர்ச்சி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1,086 செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 2 ஆண்டுகளுக்குள் செயலிழந்த நிலையில் இருக்கும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களைப் புதுப்பிக்கவும், தற்போதுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 2 ஆண்டுகளுக்கும் மேலாக செயலற்ற நிலையில் உள்ள பகுதிகளில் புதிய சங்கங்களைப் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த ஒன்பது மாதங்களில், 71 செயலற்ற சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

புதிய சங்கங்களைப் பதிவு செய்யும்போது, பால் கொள்முதல் செய்வதற்கும், வழங்குவதற்கும் ச ங்கத்தின் செயல்பாட்டை எளிதாக்கும் பொருட்டும், சம்பந்தப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாள ர்கள் ஒன்றியத்தால் ஒவ்வொரு சங்கத்திற்கும் 2 பால் கேன்களை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பால் உற்பத்தியாளர்கள் வங்கிகளுடன் இணைந்து பால் கறவை மாட்டுக் கடன்களை வழங்க ஏற்பாடு செய்வதற்கும், பால் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (டி.இ.டி.எஸ்) மற்றும் பிற அரசுத் திட்டங்களின்கீழ் மானியத்துடன் கட ன்களை வழங்குவதற்கும் அதன்மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிக பால் உற்பத்தியாளர்களைக் கூட்டுறவுச் சங்க நடவ டிக்கைக்குள் கொண்டுவருவதற்காக, இப்போது பால் தர த்தை அடிப்படையாகக் கொண்டு பால் கொள்முதல் விலையை உடனடியாக வழங்குவதை உறுதி செய்வதன்மூலம், இப்போது தனி யார் நிறுவனங்களுக்கு பால் வழங்கிக்கொண்டிருக்கும் பால் உற்பத்தியாளர்களை ஈர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின்மூலம், அனைத்து செயலற்ற பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களையும் கட்டம் கட்டமாகப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்மூலம் பால் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

ஒன்றியம் வாரியாக சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் விவரங்கள்

வ.எண்	மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பெயர்	சங்கங்களின் எண்ணிக்கை	செயல்படும் சங்கங்களின் எண்ணிக்கை	செயலற்ற சங்கங்களின் எண்ணிக்கை	பால் உறுப்பினர்களின் எண்ணிக்கை	கூட்டுறவில் கன்றுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
1	காஞ்சிபுரம் — திருவள்ளூர்	581	453	128	17,072	0.65
2	விழுப்புரம்	633	539	94	33,984	1.55
3	கடலூர்	213	177	36	6,584	0.22
4	வேலூர்	376	317	59	19,408	1.22
5	திருவண்ணாமலை	655	551	104	40,937	1.78
6	கிருஷ்ணகிரி	295	234	61	8,373	0.33
7	தருமபுரி	286	261	25	13,032	0.53
8	சேலம்	749	733	16	41,771	1.65
9	நாமக்கல்	521	504	17	16,934	0.55
10	ஈரோடு	518	510	8	30,441	0.62
11	திருப்பூர்	472	451	21	16,304	0.55
12	கோயம்புத்தூர்	362	346	16	8,244	0.91
13	நீலகிரி	94	93	1	2,544	0.09
14	மதுரை	796	768	28	16,313	0.50
15	தேனி	541	480	61	8,876	0.35
16	திண்டுக்கல்	192	175	17	5,635	0.29
17	திருச்சி	683	609	74	54,252	1.76
18	கரூர்	161	145	16	4,877	0.45
19	தஞ்சாவூர்	343	282	61	19,591	1.11
20	புதுக்கோட்டை	389	321	68	9,441	0.24
21	சிவகங்கை	462	417	45	11,190	0.27
22	விருதுநகர்	154	110	44	3,187	0.16
23	திருநெல்வேலி	219	204	15	6,408	0.32
24	தூத்துக்குடி	240	169	71	3,233	0.18
25	கன்னியாகுமரி	53	53	0	4,544	0.12
	மொத்தம்	9,988	8,902	1,086	4,03,175	16.39

[2020 மார்ச் 24

3.3 தொடக்க பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்

பால் நுகர்வோரின் நலனைப் பாதுகாப்பதற்காகப் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுகின்றன. பால் நுகர்வோரின் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களில் மட்டுமல்லாது, பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சென்னை பெருநகரத்திலும் பால் நுகர்வோருக்கு பால் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. முந்தைய நாட்களில், தொடக்கப் பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அவை கிராமங்களில் உபரிப் பாலை வாங்கி மற்ற கிராமங்களில் விற்பனை செய்தன. இப்போது, பால் விநியோக கூட்டுறவுச் சங்கங்கள், கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாகவும், சென்னை பெருநகரப் பகுதிகளில் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், இணையம்/மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பால் பாக்கெட்டுகள் மற்றும் பால் பொருட்களைப் பெற்று நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன. இந்த பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிப்பு விலை, தரகு போன்ற சலுகைகளுக்காக மொத்த விற்பனையாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

மாநிலம் முழுவதும் சுமார் 59 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், 49 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் உள்ள பால் நுகர்வோருக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 3.28 இலட்சம் லிட்டர் பாலை பால் அட்டைகள்மூலம் ஆவின் விற்பனை செய்கிறது. இது தவிர, சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பால் நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோருக்கு மாதத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பால் உபபொருட்களை விற்பனை செய்ய இணையத்திற்கு உதவுகின்றன.

இந்த பால் நுகர்வோரின் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகமும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளதுபோல், இந்த நுகர்வோர் சங்கங்களிலும், நிருவாகக் குழுவிற்கு தேர்தலில் போட்டியிடவோ அல்லது வாக்களிக்கவோ குறிப்பிட்ட நிபந்தனையேதும் இல்லை.

4. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது குஜராத் மாநில 'ஆனந்த்' போன்ற மூன்றடுக்கு முறையில் இயங்கும் நடுத்தர அளவிலான ஒரு கூட்டுறவு அமைப்பாகும். மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள். கிராம அளவிலான பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட துணைப் பதிவாளர் (பால் வளம்) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுடன் கலந்தாலோசித்து அமைக்கப்படுகின்றன.

தற்போது தேனி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, கரூர், கடலூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் அமைக்கப்பட்டதன்மூலம், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித் தனியாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்கப்பட்டு தற்போது 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய ஒன்றியங்கள் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர, அனைத்து வருவாய் மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக உள்ளன. அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களையும் போலவே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிருவகிக்கப்படுகின்றன. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர், நிருவாகத்தின் செயல் தலைவராக உள்ளார்.

4.1. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் செயல்பாடுகள்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பாலைப் பெறுவதற்கு பால் வழித்தடங்களை அமைத்தும், வாகனங்களை ஏற்பாடு செய்தும், பாலை அருகிலுள்ள மொத்த பால் குளிர்விப்பான்/ குளிரூட்டும் நிலையம்/பால் பண்ணைக்குக் கொண்டுசென்று பதப்படுத்தி நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றன.

மொத்த பால் குளிர்விப்பான்களைப் பொறுத்தவரை, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது ஒன்றிய பால்

பண்ணை/சென்னை பெருநகர பால் பண்ணைகளுக்கு பாலைக் கொண்டு செல்ல பால் டேங்கர்களை ஏற்பாடு செய்கிறது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் பால் செலவினங்களை அதாவது, தீவன செலவு மற்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட பிற உள்ளீடுகளைக் கழித்த பின்னர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அவர்கள் வழங்கிய பாலின் தரத்தின் அடிப்படையில் வழங்குகின்றன.

திரவ பால் விற்பனை மற்றும் பால்பொருட்கள் தயாரிப்பு உற்பத்திக்கான தங்கள் சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்த பின்னர், ஒன்றியங்கள், உபரிப் பாலை பதப்படுத்துவதற்காகவும் மற்றும் விற்பனை செய்வதற்காகவும், சென்னையில் உள்ள இணைய பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. மேலும், உபரிப் பாலின் ஒரு பகுதி வெண்ணை மற்றும் பால் பவுடராக மாற்றப்படுவதற்காக மதுரை, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி போன்ற சமன்படுத்தும் பால் பண்ணைகள் மற்றும் திருவண்ணாமலை இணைய பால் பண்ணை ஆகியவற்றுக்கு அனுப்பப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் அல்லது செயல்படுத்தும் முகமையாகச் செயல்படுவதிலும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தனது ஊழியர்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு தூய பால் உற்பத்தி மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் போன்றவற்றில் பயிற்சியும் அளிக்கிறது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தாங்கள் ஈட்டிய இலாபத்தை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களால் வழங்கப்பட்ட பாலின் அளவிற்கு ஏற்ப ஊக்கத்தொகையாக வழங்கி பெருமைப்படுத்துகிறது.

4.2. பணிநிலைத் திறன்

25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள மொத்த அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணிநிலைத் திறன் எண்ணிக்கை பின்வருமாறு:

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணிநிலைத் திறன் எண்ணிக்கை

வ. எண்	பதவியின் பெயர்	அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை
1	பொது மேலாளர்	23
2	துணை பொது மேலாளர்	23
3	உதவி பொது மேலாளர்	88
4	மேலாளர்	453
5	துணை மேலாளர்	382
6	விரிவாக்க அலுவலர்	356
7	அலுவலக ஊழியர்	629
8	ஓட்டுநர்	291
9	தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள்	2,423
	மொத்தம்	4,668

புதியதாக அமைக்கப்பட்ட மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. செயலாக்கத்திற்காக தங்கள் சொந்த பால் பண்ணைகள் உருவாகும் வரை, மேற்கண்ட புதிய மாவட்ட ஒன்றியங்கள், அவற்றின் தேவைக்காகவும், பொதுமக்களுக்கு தடையின்றி பால் வழங்குவதற்காகவும், தங்களது அண்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துகின்றன. புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட ஒன்றியங்களுக்கான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் பணிநிலைத்திறன் அங்கீகரிப்பதுடன், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் ஒரு பகுதியை சம்பந்தப்பட்ட, பிரிக்கப்பட்ட மாவட்ட ஒன்றியங்களிலிருந்து மாற்றி அனுப்பும் முறையும் செயல்பாட்டில் உள்ளது.

[2020 மார்ச் 24

5. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், 3 அடுக்கு ஆனந்த் வடிவத்தின் மாநில அளவிலான உயர்மட்ட உச்ச அமைப்பாகும். இதில், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், அப்போதைய தமிழ்நாடு பால் வள வாரியத்தினால் கையாளப்பட்ட பால் கொள்முதல், பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு வழங்கி பதப்படுத்துதல், சிப்பங்கட்டுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளையும் கையகப்படுத்தி, 1-2-1981 அன்று தொடங்கப்பட்டது. புதிய கூட்டாண்மை அலுவலகம் கட்டப்பட்ட பின்னர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் நிருவாக அலுவலகம் தற்போது 20-6-2018 முதல் சென்னையில் நந்தனம் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது.

இணையத்தின் ஒட்டுமொத்த நிருவாகம், இணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழு உறுப்பினர்களிடம் உள்ளது. இருப்பினும், சில நீதிமன்ற வழக்குகள் காரணமாக, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் நிருவாகக் குழுவிற்கு தேர்தலை திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை. இப்போது நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்துள்ளதால், இதுதொடர்பாக, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இணையத்தின் அன்றாட நிருவாகத்தை மேலாண்மை இயக்குநர் கவனித்து வருகிறார்.

5.1. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் செயல்பாடுகள்

இணையம் பல்வேறு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து பாலைப் பெற்று, சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள நுகர்வோருக்குப் பாக்கெட் பால் மற்றும் பல்வேறு பால் உபபொருட்களை விற்பனை செய்கிறது. இதுதவிர, இது மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தயாரிக்கப்படும் 'ஆவின்' என்ற வணிக பெயரில் ஐஸ்கிரீம் உள்ளிட்ட பால் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் இணையம் முக்கிய பங்கு வகிக்கிறது.

கொள்முதல், சந்தைப்படுத்துதல், பால் கையாளுதல், உட்கட்டமைப்பு உருவாக்கம், தரக் கட்டுப்பாடு மற்றும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் இணையம் கண்காணித்து வழிகாட்டுகிறது.

சென்னை பெருநகர நுகர்வோருக்குத் தேவையான பாலைப் பதப்படுத்தவும், சிப்பங்கட்டவும், விநியோகிக்கவும் சென்னை பெருநகரத்தில், மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் மூன்று பால் பண்ணைகள் இணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இந்த பால் பண்ணைகள் தவிர, அம்பத்தூரில் ஒரு பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், திருவண்ணாமலையில் ஒரு பால் மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, உதகமண்டலத்தில் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணை, ஈரோட்டில் எருமையின உறை விந்து நிலையம் மற்றும் பால் கறவையின் மேம்பாட்டு திட்ட அலுவலகம் ஆகியன இணையத்தின் அலகுகளாகச் செயல்படுகின்றன.

இணையம் அதன் சொந்தப் போக்குவரத்துப் பிரிவைக் கொண்டுள்ளது. இதில் பல்வேறு கொள்ளளவு கொண்ட மேம்படுத்தப்பட்ட பால் டேங்கர்கள் பராமரிக்கப்படுகின்றன. இணையம் மாவட்ட சங்கங்களிலிருந்து தினசரி பால் சேகரிப்பதற்காக வாடகை வாகனங்களையும் இயக்குகிறது. ஜி.பி.எஸ். பொருத்தப்பட்டிருப்பதால் அனைத்து வாகனங்களின் இயக்கமும் கண்காணிக்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்களை வழங்க, இணையம் தனது சொந்த பாலி யுரேதேன் நுரை (PUF) காப்பிடப்பட்ட கொள்கலன் வாகனங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட PUF காப்பிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகிறது.

5.2. பணிநிலைத் திறன்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணிநிலைத்திறன் கீழ்க்கண்டவாறு உள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிருவாகம் மற்றும் பணிநிலைத் திறன்

வ. எண்	பதவியின் பெயர்	பணிநிலைத் திறன்
1	மேலாண்மை இயக்குநர்	1
2	இணை மேலாண்மை இயக்குநர்	1
3	தலைமை விழிப்புப்பணிஅலுவலர்	1
4	பொது மேலாளர்	10
5	துணை பொது மேலாளர்	24
6	உதவி பொது மேலாளர்	65
7	மேலாளர்	108
8	துணை மேலாளர்	173
9	தனிச்செயலர் நிலை 1, 2 மற்றும் 3	24
10	செயல் அலுவலர்	165
11	இளநிலை செயல் அலுவலர் (அலுவலகம்)/தட்டச்சு	155
12	ஓட்டுநர்	240
13	தொழில்நுட்பப் பணியாளர் மற்றும் உதவியாளர்	1,135
	மொத்தம்	2,102

5.3. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் நடத்தப்படும் பால் பண்ணைகள்

5.3.1. மாதவரம் பால் பண்ணை

மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள மாதவரம் பால் பண்ணை பழமையான பால் பண்ணையாகும். இது ஆவின் குடும்பத்தில் முதன்முதலில் 1962 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையாக நியூசிலாந்து அரசாங்க நிதி உதவியுடன் நிறுவப்பட்டது. பின்னர் கடந்த 58 ஆண்டுகளில் பல உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது தினசரி 5.00 இலட்சம் லிட்டர்

2020 மார்ச் 24]

பாலை கையாளும் திறனுடையதாக உள்ளது. தரமான பால் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக சமீபத்திய ஆண்டுகளில் சிப்பங்கட்டுதல் மற்றும் குளிர்ப்பதன வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இதன்விளைவாக, மாதவரம் பால் பண்ணையில் சுமார் 3.75 லிட்டர் பால் பாக்கெட்டுகள் கையாளப்படுகின்றன.

மாதவரம் பால் பண்ணை தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தைக் கொண்டுள்ளது. அங்கு பல்வேறு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய டேங்கர்கள்மூலம் பெறப்பட்ட பால் தரசோதனை செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்ட பின்னர், அது பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு, வட சென்னை பகுதியின் நுகர்வோருக்கு 53 வாடகை பால் வழித்தட வாகனங்கள், 30 தனியார் முகவர் வாகனங்கள் மற்றும் 3 இணைய பால் வழித்தட வாகனங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன.

இந்த பால் ஐஎஸ்/ஐஎஸ்ஓ 9001:2015, ஐஎஸ் 15000:2013 (எச்ஏசிசிபி) மற்றும் ஐஎஸ்/ஐஎஸ்ஓ 14001:2015 (இஎம்எஸ்), ஐஎஸ்ஓ 22000-2005 (எஃப்எஸ்எஸ்சி 22000) ஆகியவற்றுடன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

குளிர்ப்பதன அறை விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்பட உள்ளது. பால் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் நிதி உதவியுடன் மாதவரத்தில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் பாலை (15 இலட்சம் லிட்டர் வரை விரிவாக்கக்கூடிய) கையாளக்கூடிய, புதிய தானியங்கி பால் பண்ணை ஒன்று நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.3.2. அம்பத்தூர் பால் பண்ணை

அம்பத்தூர் பால் பண்ணை 1976 ஆம் ஆண்டில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிறுவப்பட்டது. மொத்த பால் விற்பனையை டேங்கர்கள்மூலம் அனுப்புவதற்கான ஏற்பாடுகளுடன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணை, தேசிய பால் வள வாரியம்மூலம் நிறுவப்பட்டது. இந்த பால் பண்ணை பின்னர், 1986-ல் பால் பைகள்மூலம் பால் விற்பனை செய்வதற்கான மாற்றப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலைக் கையாளும் திறன் கொண்ட பால் பண்ணையாக

விரிவுபடுத்தப்பட்டது. மேலும், பால் சிப்பங்கட்டும் வசதிகள் மற்றும் பாக்கெட் பாலை சேமித்து வைக்க குளிர்வு அறைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. மேலும், ஒரு முழுமையான தானியங்கி இரட்டை சர்க்யூட் புதிய தானியங்கி சுத்திகரிப்பு இயந்திரம் (கிளீனிங் இன் பிளேஸ்) அமைப்பு, சிப்பங்கட்டுதல் மற்றும் குளிர்ப்பதன வசதிகளை வலுப்படுத்துதல், கொதிகலனுக்கான தேவையான நீரை சூரியஒளிமூலம் வெப்பப்படுத்துவதற்குத் தேவையான கருவிகள் பொருத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய சென்னை நுகர்வோருக்கு 45 வாடகை வழித்தட வாகனங்கள், 33 தனியார் முகவர் வாகனங்கள், 5 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்க பால் வழித்தடங்கள் மற்றும் 7 இணைய பால் வழித்தடங்கள்மூலம் அம்பத்தூர் பால் பண்ணை பால் வழங்குகிறது. இந்த பால் IS/ISO 9001:2015, IS/ISO15000:2013 (HACCP) மற்றும் IS/ISO 14001: 2015 (EMS) ஆகிய சான்றிதழ்களுடன் செயல்பட்டு வருகிறது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டரிலிருந்து 7 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

20-6-2018 முதல் இந்தப் பால் பண்ணை நுழைவாயிலில் ஒரு அதிநவீன பாலகமும் செயல்பட்டு வருகிறது.

5.3.3. சோழிங்கநல்லூர் பால் பண்ணை

சோழிங்கநல்லூர் பால் பண்ணை (III-வது பால் பண்ணை) 1996-ல் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டு தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்ட தென்னிந்தியாவின் முதன்முதலான தானியங்கி பால் பண்ணை ஆகும். ஆரம்பத்தில் 3.5 இலட்சம் லிட்டர் வரை பால் டேங்கர்களில் மொத்த பால் விற்பனை மையங்களுக்காக அனுப்புவதற்காகவும், 50,000 லிட்டர் பாக்கெட் பாலாக விற்பனைக்காக அனுப்புவதற்காகவும் வடிவமைக்கப்பட்டது. பின்னர், மாறிவரும் சந்தையின் சூழ்நிலை மற்றும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மொத்தமாக அனுப்புவது, படிப்படியாக பால் பாக்கெட்டில் விற்பனைக்கு அனுப்பும் முறையாக மாற்றப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில், தென் சென்னை மற்றும் அதன் புறநகர் நுகர்வோரின் அதிகரித்த தேவையை பூர்த்தி செய்ய ரூ.10 கோடி செலவில் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதன்மூலம்,

இந்த பால் பண்ணையின் கையாளுதல் திறன் நாளொன்றுக்கு 6 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், சோழிங்கநல்லூர் பால் பண்ணை தென் சென்னை நுகர்வோருக்கு, 40 வாடகை பால் வழித்தட வாகனங்கள், 43 தனியார் வாகனங்கள், 4 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்க பால் வழித்தடங்கள் மற்றும் 5 இணைய பால் வழித்தடங்கள்மூலம் பால் விநியோகம் செய்கிறது.

2018 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட யுஏஎஸ்பி டைஜெஸ்டருடன் ஒரு புதிய கழிவுப்பொருள் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டது. மேலும், நாளொன்றுக்கு 1,000-1,100 கிலோ நீராவியை உற்பத்தி செய்வதற்காக ரூ.100 இலட்சம் செலவில் செறிவூட்டப்பட்ட சூரிய வெப்ப அமைப்பு நிறுவப்பட்டுள்ளதால் உலை எண்ணெய் பயன்பாட்டில் நாளொன்றுக்கு 100 - 110 லிட்டர் வரை குறைந்து ஆண்டொன்றுக்கு ரூ.12 இலட்சம் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

20-6-2018 முதல் இந்தப் பால் பண்ணை நுழைவாயிலில் ஒரு அதிநவீன பாலகம் செயல்பட்டு வருகிறது.

இந்த பால் பண்ணை ஐஎஸ்/ஐஎஸ்ஓ 9001:2015, ஐஎஸ் 15000:2013 (எச்ஏசிசிபி) மற்றும் ஐஎஸ்/ஐஎஸ்ஓ 14001:2015 (இஎம்எஸ்) ஆகிய சான்றிதழ்களுடன் செயல்பட்டு வருகிறது.

5.3.4. திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை (DCPP)

2012-2013 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு இணைய பால் பண்ணை பிரிவு நிறுவப்படும் என அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், 'நபார்டு' நிதி உதவியுடன் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கையாளக்கூடிய திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று ரூ.72.60 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் 2014 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மேலும், அந்த ஆலையின் நீர் தேவையை எதிர்கொள்ள சாத்தனூர் அணையில் இருந்து நாளொன்றுக்கு 5.50 இலட்சம் லிட்டர் தண்ணீரை வழங்குவதற்கான நீர் வழங்கல் திட்டம், தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டது.

இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால், பால் பொருட்களின் தரத்திற்கான காலக்கெடுவை மேம்படுத்துவதற்காக உபரிப் பாலை வெண்ணெய் மற்றும் பால் பவுடராக மாற்றுவதாகும்.

இந்த ஆலை 500 மெட்ரிக் டன் வெண்ணெய்யையும், 1,500 மெட்ரிக் டன் பால் பவுடரையும் சேமிக்கும் திறன் கொண்டது. மேலும், ஒரு நாளைக்கு 3 மெட்ரிக் டன் நெய்யை சில்லறை விற்பனைக்கான சிப்பங்கட்டும் உற்பத்தி வசதியையும் இந்த பால் பவுடர் தொழிற்சாலை கொண்டுள்ளது.

இந்த பால் தொழிற்சாலைக்கு ஐஎஸ்ஓ 22000:2005 (எஃப்எஸ்எம்எஸ்) சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டில், வெண்ணெய் உற்பத்தி 1,647 மெட்ரிக் டன்னாகவும், பால் பவுடர் உற்பத்தி 2,672 மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

5.3.5. அம்பத்தூர் பால் பொருட்கள் தொழிற்சாலை

இணையத்தின் ஒரு தனி பிரிவாக, 1976 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பால் தயாரிப்புப் பிரிவு சென்னை அயனாவரத்தில் நிறுவப்பட்டது. பின்னர், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், பால் பண்ணை மற்றும் இயந்திரங்கள் உள்ளிட்ட பழைய கட்டடத்தின் நிலைமைகளையும் கருத்திற்கொண்டு, பால் பொருட்கள் தயாரிப்பு பால் பண்ணை 2003 ஆம் ஆண்டில் அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் அமைந்த விசாலமான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

பால்கோவா, மைசூர்பா மற்றும் பால் பேடா போன்ற பால் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்காக இந்த உப பொருட்கள் தயாரிப்புப் பண்ணை நிறுவப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 15,000 லிட்டர் ஐஸ்கிரீம்களை உற்பத்தி செய்யும் நோக்கில் இந்த பால் பண்ணை விரிவாக்கப்பட்டது. புளித்த பால் பொருட்களான லஸ்ஸி, பனீர், மோர், தயிர் மற்றும் புரோபயோடிக் தயிர் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நோக்கில் வசதிகள் உருவாக்கப்பட்டன. இனிப்பு கோவா, பால் பேடா, குலாப்ஜாமுன், ரசகுல்லா, மைசூர்பா, தயிர், பிரீமியம் தயிர், லஸ்ஸி, பனீர், புரோபயாடிக் தயிர், புரோபயாடிக் லஸ்ஸி மற்றும் சாக்லேட் ஆகியவை இந்தப் பால் உபபொருட்கள் ஆலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், ஐஸ்கிரீம் வகைகளான கிரேப் டூயட், மாங்கோ டூயட், கோன், ஸ்ட்ராபெரி கூம்பு,

டு இன் ஒன் பார் ஐஸ்கிரீம்கள் மற்றும் குல்பி ஆகியவை இப்போது இங்கே தயாரிக்கப்படுகின்றன. பெருநகர நுகர்வோரின் தேவைகளையும் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் தேவைகளையும் இந்த பால் பண்ணை பூர்த்தி செய்கிறது.

இந்தப் பால் பொருட்கள் தொழிற்சாலை தீங்கினைக் குறைப்பதற்கான நுண்ணிய கட்டுப்பாட்டு அளவீடுகள் (HACCP) உடன் ஒருங்கிணைந்த தர மேலாண்மை அமைப்புமூலம் தயாரிப்புகள் குறித்த சான்றிதழ் பெற்றது, IS/ISO 9001:2015 & IS 15000:1998, FSSAI (இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம்) மற்றும் உறுதிப்படுத்த உணவுப் பாதுகாப்பு மற்றும் அடுத்த நிலைக்கு FSSC 22000 சான்றிதழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு பணியக வெரிட்டாஸ் சான்றிதழ் அமைப்பிலிருந்து FSSC சான்றிதழுக்காகக் காத்திருக்கிறது.

தற்போது, 146 வகைகளில் 84 எண்ணிக்கையிலான பால்உபபொருட்கள் அம்பத்தூர் பால் உபபொருட்கள் தயாரிப்புகள் உற்பத்தி பிரிவில் தயாரிக்கப்பட்டு, சில்லறை விற்பனைக்கு 36 ஒப்பந்த வாகனங்கள் மற்றும் 5 குளிரூட்டப்பட்ட வாகனங்கள்மூலம் வழங்க ப்படுகின்றன. ஐஸ்கிரீம் மற்றும் சில பால் பொருட்கள் 3 கு ளிரூட்டப்பட்ட வாகனங்கள்மூலம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

பாட்டில்களில் மோர், 5 சுவைகளில் தயிர், சர்க்கரை இல்லாத தயிர், 10 வெவ்வேறு சுவைகளில் குல்பி மற்றும் 3 வகைகளில் சர்க்கரை இல்லாத குல்பி மற்றும் மோர் பானங்கள் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பதற்கும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் புதிய சாக்லேட் வகைகள், குக்கீசுகள், ரசகுல்லா மற்றும் குலாப்ஜாமுனின் டின் பேக்கிங் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது, தீவிர சந்தைப்படுத்தல் முயற்சிகளின் விளைவாக, சராசரியாக நாளொன்றுக்கு 6,000 லிட்டர் என்ற அளவிலிருந்து 10,000 லி ட்டர் ஐஸ்கிரீம் விற்பனை என்ற இலக்கினை அடைய இணையத்திற்கு உதவியுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி 2020 வரை) சுமார் 13,86,194 லிட்டர் ஐஸ்கிரீம்கள் விற்கப்பட்டன, அதே நேரத்தில் 2018-2019 ஆம் ஆண்டில் 16,40,750 லிட்டர் ஐஸ்கிரீம்கள் விற்பனை செய்யப்பட்டன.

[2020 மார்ச் 24

ஆவின் பால் பொருட்களின் வகைகள்

இனிப்புகள்	ஐஸ்கிரீம் வகைகள்	நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள்	கூழ்மப் பொருட்கள் மற்றும் பிற
• இனிப்பு கோவா • பேரிச்சைகோவா • மைசூர்பா • நீண்டநாள்கெடா குலோப் ஜாமுன் • பால்பேடா • ரசகுல்லா	• கப் ஐஸ்கிரீம் • குடும்ப சிப்பம் • கசட்டா • பந்து ஐஸ்கிரீம் • சாக்கோபார் • மாங்கோ டியட் • பைனாப்பிள் டியட் • திராட்சை டியட் • 2 இன் 1 பார் ஸ்ட்ராபெர்ரி கோன் • மாங்கோ கோன் • சாக்கோ பீஸ்ட் • சாக்லேட் பீஸ்ட் • வெனிலா கோன் • குல்ஃபி பார் • சுவையூட்டப்பட்ட குல்ஃபி பார் (10 சுவைகள்) • இனிப்பில்லாத குல்ஃபி பார் • பிரிமியம் வகை கப் ஐஸ்கிரீம் • பிரிமியம் வகை ஸ்கூப் ஐஸ்கிரீம் (6 வகைகள்)	• சுவையூட்டப்பட்ட யோகர்ட் (5 சுவைகள்) • இனிப்பில்லாத யோகர்ட் • தயிர் • லஸ்சி • பாக்கெட் மோர் • பிரிமியம் தயிர் கப்புகள் • பாட்டில்களில் அடைக்கப்பட்ட மோர் • புரோபயாட்டிக் தயிர் • புரோபயாட்டிக் லஸ்சி	பனீர் **பிற பொருட்கள்** • இனிப்பு இல்லா கோவா • பால் சாக்லேட் • நட்டி சாக்லேட் • வேபானம் (3 சுவைகள்)

5.4. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் நடத்தப்படும் சேவை நிறுவனங்கள்

5.4.1. கால்நடை தீவன ஆலை - ஈரோடு

பால் கறவை மாடுகளின் வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறனில் கால்நடை தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது, ஏனெனில், இது வளரும் கன்றுகள், வளர்ந்த கிடாரிகள் மற்றும் கறவைகள் சினைமாடுகளுக்கு ஊட்டச்சத்து சிறந்த ஆதாரமாக உள்ளது.

2020 மார்ச் 24]

1982 ஆம் ஆண்டில் ஈரோடில் நிறுவப்பட்ட 100 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன ஆலை பின்னர் ரூ.20.36 கோடி செலவில் நாளொன்றுக்கு 150 மெட்ரிக் கால்நடை தீவனத்தை உற்பத்தி செய்ய ஏதுவாக விரிவாக்கப்பட்டது. விரிவாக்கப்பட்ட அலகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18-3-2017 அன்று திறக்கப்பட்டது. ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தால் உற்பத்தி செய்யப்படும் கால்நடை தீவனத்திற்கு பால் உற்பத்தியாளர்களிடையே அதிக வரவேற்பு உள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் ஈரோடு கால்நடை தீவன ஆலையில் கால்நடை தீவனத்தின் உற்பத்தி 40,383 மெட்ரிக் டன் ஆகும். 2019-2020 (பிப்ரவரி 2020 வரை) கால்நடை தீவன உற்பத்தி 38,311 மெட்ரிக் டன்னுடன் ஒப்பிடுகையில் இது 5% அதிகமாகும். ஈரோடு கால்நடை தீவனத்திற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, விரைவில் உற்பத்தித் திறனை ஒரு நாளைக்கு 300 மெட்ரிக் டன் ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில், ஈரோடு கால்நடை தீவன விற்பனை 20 மடங்காக உயர்ந்துள்ளது. அதாவது 2010-2011 ஆம் ஆண்டில் 4,612 மெட்ரிக் டன் ஆக இருந்த கால்நடை தீவன விற்பனை 2018-2019 ஆம் ஆண்டில் 38,345 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஈரோடு கால்நடை தீவன ஆலைக்கு கூடுதலாக, நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட புதிய கால்நடை தீவன ஆலை விருதுநகரில் நிறுவுவது தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பால் கறவை மாடுகளுக்கு தினமும் கால்நடை தீவனத்தைக் கொடுக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வதற்கும், பால் உற்பத்தியாளர்களின்வசம் கால்நடை தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், இதன்மூலம் கால்நடை தீவனத்தின் விற்பனையை அதிகரிப்பதற்கும், ஆவின் பிற நிறுவனங்களிலிருந்து கால்நடை தீவனத்தை வாங்கி பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குகிறது. இதன்மூலம், வரும் ஆண்டுகளில் கால்நடை தீவன விற்பனையை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் கால்நடை தீவன விற்பனையின் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடை தீவனம் விற்பனை விவரங்கள் (மெட்ரிக் டன்னில்)

வருடம்	மொத்தம் (மெட்ரிக் டன்னில்)
2010-2011	4,612
2011-2012	15,046
2012-2013	31,093
2013-2014	53,292
2014-2015	51,702
2015-2016	58,652
2016-2017	60,770
2017-2018	81,531
2018-2019	91,691
2019-2020 (பிப்ரவரி 2020 வரை)	87,741

5.4.2. தாது உப்புக் கலவை ஆலை

உறிஞ்சப்பட்ட ஊட்டச்சத்துக்களை சிறப்பாகப் பயன்படுத்துவதில் தாது உப்புக் கலவை முக்கிய பங்கு வகிக்கிறது மற்றும் பால் உற்பத்தி, இனப்பெருக்க திறன் மற்றும் கறவை மாடுகளின் நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றை அதிகரிக்கிறது. இப்போது விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் மொத்தம் நான்கு தாது உப்புக்கலவை ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் தாது உப்புக் கலவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமல்லாது, கால்நடை பராமரிப்பு துறைக்கும் வழங்கப்படுகிறது. கடந்த 9 ஆண்டுகளில் தாது உப்புக்கலவை விற்பனையின் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தாது உப்புக் கலவை வழங்கிய விவரங்கள்
(மெட்ரிக் டன்னில்)

வருடம்	மொத்தம் (மெட்ரிக் டன்னில்)
2011-2012	171.60
2012-2013	131.10
2013-2014	390.67
2014-2015	244.42
2015-2016	966.08
2016-2017	1,314.73
2017-2018	1,843.79
2018-2019	2,872.33
2019-2020 (பிப்ரவரி 2020 வரை)	3,565.00

தற்போது, ஒரு 12 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவை ஆலை நிறுவுவது தொடர்பாக கிருஷ்ணகிரியில் பணிகள் நடந்து வருகின்றன.

தாது உப்புக் கலவையின் விற்பனையை 2020-2021 ஆம் ஆண்டில் 4,000 மெட்ரிக் டன் அளவுக்கு அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.4.3. கருவூலக ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணை, உதகமண்டலம்

கருவூலக ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணை 1973-ல் நிறுவப்பட்டன. செயற்கை கருவூட்டலுக்கான உறை விந்து குச்சிகள் கருவூலக ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணையில் தயாரிக்கப்படுகின்றன. பொலிக்காளைப் பண்ணையானது பொலிக்காளை தாய் பண்ணை மற்றும் பொலிக்காளை பண்ணை என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பொலிக்காளைப்

பண்ணை வனத் துறையிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட 37.725 ஏக்கர் நிலப்பரப்பிலும், பொலிக்காளை தாய் பண்ணை கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட 46.33 ஏக்கர் பரப்பளவிலும் இயங்கி வருகின்றன. உறை விந்து உற்பத்திக்காக ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் ஆகியவற்றின் காளைகளை இது பராமரிக்கிறது. இந்தப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் உறை விந்து குச்சிகள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு விற்கப்படுகின்றன.

அ) பொலிக்காளை தாய் பண்ணை

தரமான உறை விந்து உற்பத்திக்காக மரபணு ரீதியாக உயர்ந்த ஜெர்சி இனப்பெருக்கம் செய்யும் காளைகளை உற்பத்தி செய்வதற்காக பொலிக்காளை தாய்ப் பண்ணையில் ஜெர்சி இனத்தின் உயர் வம்சாவளி மாடுகள் பராமரிக்கப்படுகின்றன.

ஓட்ஸ், மக்காச்சோளம் மற்றும் கிகுயு புல் ஆகியவை பொலிக்காளைப் பண்ணை வளாகத்திலும், பொலிக்காளை தாய்ப் பண்ணை வளாகத்திலும் (காக்காத்தோப்பு தீவனப் பண்ணை) பயிரிடப்படுகின்றன.

ஆ) பொலிக்காளைப் பண்ணை

உறை விந்து உற்பத்திக்காக தூய ஜெர்சி, கலப்பின ஜெர்சி, தூய ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் மற்றும் கலப்பின ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் காளைகள் பொலிக்காளை பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. உறை விந்து மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் சேமிப்பதற்கும் பிறகு வழங்குவதற்கும் ஈரோடு எருமையின உறை விந்து நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

தற்போது, பொலிக்காளைப் பண்ணையில் சுமார் 111 காளைகள் உள்ளன. அவற்றில் 92 காளைகள் உறை விந்து சேகரிப்பின்கீழ் உள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட நான்கு தூய ஜெர்சி காளைகளும் பண்ணையில் பராமரிக்கப்படுகின்றன. இந்தப் பண்ணை ஆண்டுக்கு சராசரியாக 16.00 இலட்சம் அளவு உறை விந்து குச்சிகள் உற்பத்தி செய்கிறது. 2020-2021-ல் சுமார் 19.00 இலட்சம் அளவு உறை விந்து குச்சிகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது.

2020 மார்ச் 24]

இக்கருவூலக பண்ணை மற்றும் பொலிக்காளைப் பண்ணை ஒரு ஐஎஸ்ஓ 9001: 2015 சான்றளிக்கப்பட்ட மற்றும் 'பி'தரப்படுத்தப்பட்ட விந்து நிலையம் ஆகும்.

உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கையாக, நபார்டு நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ.1.31 கோடி செலவில் கருவூல ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணை ஊட்டி வளாகத்தில் சங்கிலி இணைப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

5.4.4 எருமையின உறை விந்து நிலையம் (BFSS), ஈரோடு.

எருமையின உறை விந்து நிலையம் நவம்பர் 1983-ல் ஈரோட்டில் நிறுவப்பட்டது. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு உறை விந்து குச்சிகள் விநியோகித்தல் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் காளைகளை வளர்ப்பது ஆகிய நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவு அனைத்து பால் ஒன்றியங்களுக்கும் அவற்றின் தேவைகளின் அடிப்படையில் உறைவிந்து குச்சிகளை விநியோகிக்கிறது. தவிர, கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து வாங்கப்பட்ட எருமை உறை விந்து குச்சிகளையும் இந்த அலகு விநியோகிக்கிறது.

இந்த அலகு ஒவ்வொரு மாதமும் சுமார் 1.50 இலட்சம் கால்நடை உறை விந்துகுச்சிகளையும், 6,000 எண்ணிக்கையிலான எருமை உறைவிந்து குச்சிகளையும் விநியோகிக்கிறது.

காளைக் கன்றுகளை வளர்ப்பதற்கான தனிமைப்படுத்தப்பட்ட நிலையமும் இந்தப் பிரிவில் உள்ளது. ஆத்தூரில் உள்ள முன் தனிமைப்படுத்தும் நிலையம், ஈரோட்டில் உள்ள தனிமைப்படுத்தும் நிலையம் மற்றும் புதுக்குடியில் உள்ள காளைக் கன்று வளர்ப்பு நிலையம் மற்றும் புல் பண்ணை ஆகியனவும் இந்தப் பிரிவின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

5.4.5. பால் கறவையின மேம்பாட்டு திட்ட செயல்பாடுகள் (டிஐபிஏ), ஈரோடு

இந்த அலகு கலப்பின ஜெர்சி மற்றும் காங்கேயம் இனம் உள்ளிட்ட உள்நாட்டு இனத்திற்கான கள செயல்திறன் பதிவு திட்டத்தை (எஃப்.பி.ஆர்.பி) இந்திய அரசின் நிதி உதவியுடன்

காளை இனப்பெருக்கத்திற்கான தேசிய திட்டத்தின்கீழ் (என்.பி.பி.பி) தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு நிறுவனம்மூலம் (டி.என்.எல்.டி.ஏ) செயல்படுத்துகிறது. களவெளி செயல்திறன் பதிவு திட்டமானது (FPRP), நிரூபிக்கப்பட்ட காளைகளின் விந்தினை உயர் ரக மாடுகளில் பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்ட இனச்சேர்க்கை மூலம் சிறந்த கலப்பின வளர்ப்பு காளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது. தொடர்ச்சியான பால் பதிவின் அடிப்படையில் சிறந்த மாடுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் காளைக் கன்றுகள் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் விந்து நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

கள செயல்திறன் பதிவுத் திட்டத்தை சேலம், தருமபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 8 மாவட்ட ஒன்றியங்களில் இணையம் செயல்படுத்துகிறது.

கலப்பின ஜெர்சிக்கான கள செயல்திறன் பதிவுத் திட்டத்தின்கீழ், இதுவரை 388-க்கும் மேற்பட்ட காளைக் கன்றுகள் உறை விந்து உற்பத்திக்கு கூட்டுறவுத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் உறை விந்து நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பூர்வீக காங்கேயம் இனத்திற்கான கள செயல்திறன் பதிவுத் திட்டம் (எஃப்.பி.ஆர்.பி), ஈரோடு மற்றும் திருச்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டு இனங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் உறை விந்து குச்சிகளை உற்பத்தி செய்வதற்காக 57 காளைக் கன்றுகள் கால்நடை பராமரிப்புத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

6. கால்நடை வளங்கள்

தமிழ்நாட்டில் சுமார் 16.00 இலட்சம் கால்நடைகள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ளன. அவற்றில் 15.60 இலட்சம் பசுக்களும், 0.40 இலட்சம் எருமைகளும் உள்ளன. இனப்பெருக்கம் செய்யக்கூடியவை (பசுக்கள்-9.78 இலட்சம் மற்றும் எருமைகள்-0.22 இலட்சம்). பெரும்பாலும் கூட்டுறவு அமைப்பில் கலப்பின ஜெர்சி இன பசுக்களே பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றன. ஏனெனில் தமிழகம் வெப்பமண்டல பகுதியில் அமைந்துள்ளதால், கலப்பின

ஜெர்சி இன பசுக்களே இந்த தட்பவெப்ப நிலையை ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக உள்ளன. கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, கரூர் மற்றும் நீலகிரி போன்ற மாவட்டங்களில் ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் இனமும் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இனவாரியான உறை விந்து குச்சிகளுக்கான தேவை, நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின், கருவூல ஜெர்சி மற்றும் பொலிக்காளைப் பண்ணைமூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 12.92 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள்மூலம் டிசம்பர் 2019 வரை 4.41 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன.


உயர் ரக மரபணு கலப்பின ஜெர்சி காளைக் கன்றுகளை உற்பத்தி செய்யவும், உறைவிந்து நிலையங்களுக்கு தேவைப்படும் காளைக் கன்றுகளை உற்பத்தி செய்யவும், எட்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் வம்சாவழி சோதனை திட்டம் (Progeny Testing Programme) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், நாட்டிலுள்ள உறை விந்து நிலையங்களுக்குத் தேவைப்படும் காளைக் கன்றுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய தேசிய மாட்டின இயக்கத்தின்கீழ் வம்சாவளி சோதனை திட்டம் மூன்று மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

7. பால் கொள்முதல்

தொடக்கப் பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பால் அப்பகுதியில் செயல்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் சேகரிக்கப்படுகின்றன. தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் பெறப்படும் பாலை தனித்தனியே பரிசோதனை செய்து உள்ளூர் தேவைக்கு சிறு அளவு பாலை விற்பனை செய்தது போக எஞ்சிய பாலை 40 லிட்டர் கொள்ளளவு கொண்ட துருவுறா பால் கேன்கள்மூலம் அருகிலுள்ள தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களுக்கோ அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அல்லது பால் பண்ணைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. இதன்பொருட்டு, மாவட்ட ஒன்றியங்கள் போக்குவரத்து வசதிகள் செய்து தருகின்றன. தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களில் அல்லது பால் குளிரூட்டும் நிலையத்தில் இப்பால் குளிரூட்டப்படுகிறது. பின்

ஒன்றிய பால் பண்ணைகளுக்கோ அல்லது சென்னை பெருநகர பால் பண்ணைகளுக்கோ பதப்படுத்துவதற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

பால் வழித்தடத் வரைபடம்



2010-2011 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 20.67 இலட்சம் லிட்டராக இருந்த மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் சராசரி கொள்முதல் 2019-2020 ஆம் ஆண்டில் (டிசம்பர் 2019 வரை) 33.84 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. இது கடந்த ஒன்பது ஆண்டுகளில் 61 சதவிகித வளர்ச்சியாகும். 2018-2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2019-2020 ஆம் ஆண்டில் (டிசம்பர் 2019 வரை) பால் கொள்முதல் 61,000 லிட்டர் அதிகரித்துள்ளது. மாவட்ட கூட்டுறவு பால் ஒன்றியங்களின் பால் கொள்முதல் உயர்ந்த அளவாக 29-10-2018 அன்று 37.03 இலட்சம் லிட்டரை எட்டியுள்ளது. 2010-2011 முதல் 2019-2020 வரை (டிசம்பர் 2019 வரை) சராசரி பால் கொள்முதல் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

பால் கொள்முதல்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் சராசரி பால் கொள்முதல்

வ. எண்	வருடம்	நாளொன்றுக்கு சராசரி பால் கொள்முதல் (இலட்சம் லிட்டரில்)
1	2010-2011	20.67
2	2011-2012	21.40
3	2012-2013	24.36
4	2013-2014	23.22
5	2014-2015	23.68
6	2015-2016	28.97
7	2016-2017	28.50
8	2017-2018	29.46
9	2018-2019	33.23
10	2019-2020 (டிசம்பர் 2019 வரை)	33.84

கூட்டுறவு அமைப்புக்குள் வராத சாத்தியமான பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான சங்கங்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்மூலம் அதிக எண்ணிக்கையிலான பால் உற்பத்தியாளர்களை கூட்டுறவு வரம்பிற்குள் கொண்டு வருவதன்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் சராசரி பால் கொள்முதல் 34.50 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தப்பட உள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் (டிசம்பர் 2019 வரை) மொத்த பால் உற்பத்தியில், சமன்படுத்தப்பட்ட பால் பண்ணைகள்மூலம் 13,910 மெட்ரிக் டன் பால் பவுடரும், 6,929 மெட்ரிக் டன் வெண்ணெய்யும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஒன்றியம் வாரியாக பால் கொள்முதல்
(நாளொன்றுக்கு சராசரி லிட்டர்)

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	2016-17	2017-18	2018-19	2019-2020 (டிசம்பர் 2019 வரை)
1	காஞ்சிபுரம்-திருவள்ளூர்	97,812	1,11,775	1,26,937	1,38,187
2	விழுப்புரம்				2,10,645
3	கடலூர்	2,09,878	2,16,913	2,48,527	38,041
4	வேலூர்				1,36,878
5	திருவண்ணாமலை	3,05,089	3,21,662	3,82,780	2,68,658
6	தருமபுரி				1,31,247
7	கிருஷ்ணகிரி	1,78,698	1,90,177	2,29,381	1,01,929
8	சேலம்			4,59,039	4,73,693
9	நாமக்கல்	4,97,708	5,29,493	1,59,521	1,56,029
10	ஈரோடு	2,99,428	2,91,956	2,03,084	2,08,603
11	திருப்பூர்			2,24,127	2,33,749
12	கோயம்புத்தூர்	2,62,369	2,44,319	1,61,029	1,54,664
13	நீலகிரி	14,223	12,861	12,430	13,425
14	மதுரை				1,67,944
15	தேனி	2,59,329	2,76,340	2,87,159	1,15,426
16	திண்டுக்கல்	63,575	59,693	69,902	71,864
17	திருச்சி				4,43,139
18	கரூர்	4,11,508	4,34,652	5,07,556	64,031
19	தஞ்சாவூர்	52,466	56,868	47,334	52,217
20	புதுக்கோட்டை	42,810	48,639	56,708	56,403

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	2016-17	2017-18	2018-19	2019-2020 (டிசம்பர் 2019 வரை)
21	சிவகங்கை	61,435	57,513	58,929	54,240
22	விருதுநகர்	16,663	17,547	16,190	15,221
23	திருநெல்வேலி				38,428
24	தூத்துக்குடி	69,193	69,456	66,173	31,167
25	கன்னியாகுமாி	7,570	5,738	5,984	8,207
	மொத்தம்	28,49,754	29,45,602	33,22,790	33,84,033

ஒன்றியம் வாரியாக பால் கையாளும் திறன் (நாளொன்றுக்கு சராசரி இலட்சம் லிட்டரில்)

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன்		குளிரூட்டும் திறன்				
		எண்	கையாளும் அளவு	குளிர்விப்பு மையம்		மொத்த பால் குளிர்விப்பான்		மொத்தம்
				எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	
1	காஞ்சிபுரம்-திருவள்ளூர்	1	1,00,000	2	60,000	12	48,000	1,08,000
2	விழுப்புரம்	1	1,00,000	1	1,00,000	15	58,000	1,58.000
3	கடலூர்	0	0	1	10,000	6	26,000	36,000
4	வேலூர்	1	1,50,000	2	80,000	12	60,000	1,40,000
5	திருவண்ணா மலை	0	0	2	1,50,000	34	1,52,000	2,97,000
6	கிருஷ்ணகிரி	0	0	1	50,000	17	73,000	1,23,000
7	தருமபுரி	1	2,00,000	1	10,000	4	20,000	30,000
8	சேலம்	1	5,00,000	1	1,30,000	52	2,22,000	3,14,000

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன்		குளிரூட்டும் திறன்				
		எண்	கையாளும் அளவு	குளிர்விப்பு மையம்		மொத்த பால் குளிர்விப்பான்		மொத்தம்
				எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	
9	நாமக்கல்	0	0	2	1,00,000	12	45,000	1,45,000
10	ஈரோடு	1	3,00,000	2	35,000	48	2,34,000	2,69,000
11	கோயம்புத்தூர்	1	5,00,000	3	1,20,000	14	67,000	1,87,000
12	திருப்பூர்	0	0	2	1,10,000	35	1,72,000	2,82,000
13	நீலகிரி	1	50,000	1	10,000	6	11,000	21,000
14	மதுரை	1	5,00,000	0	0	16	74,000	74,000
15	தேனி	0	0	1	1,00,000	2	7,000	1,07,000
16	திண்டுக்கல்	1	30,000	2	40,000	12	52,000	92,000
17	திருச்சி	1	1,50,000	2	1,50,000	38	1,80,000	3,30,000
	பாடலூர்	1	1,00,000	0	0	0	0	0
18	கரூர்	0	0	1	50,000	4	20,000	70,000
19	தஞ்சாவூர்	1	26,000	1	10,000	13	51,000	61,000
20	புதுக்கோட்டை	1	35,000	0	0	0	0	0
21	சிவகங்கை	1	50,000	1	10,000	12	52,000	62,000
22	விருதுநகர்	1	50,000	1	10,000	1	5,000	15,000
23	திருநெல்வேலி	1	1,00,000	2	70,000	3	15,000	85,000
24	தூத்துக்குடி	0	0	2	20,000	9	43,000	63,000
25	கன்னியாகுமரி	1	30,000	0	0	0	0	0
	மொத்தம்	18	29,71,000	34	14,25,000	377	16,87,000	30,69,000

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	பால் பண்ணைகளில் பால் பதப்படுத்தும் திறன்		குளிரூட்டும் திறன்				
				குளிர்விப்பு மையம்		மொத்த பால் குளிர்விப்பான்		
		எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	எண்	கையாளும் அளவு	மொத்தம்
	பெருநகர பால் பண்ணை							
அ	மாதவரம் பால் பண்ணை	1	5,00,000	-	-	-	-	5,00,000
ஆ	அம்பத்தூர் பால் பண்ணை	1	5,00,000	-	-	-	-	5,00,000
இ	சோழிங்கநல்லூர் பால் பண்ணை	1	6,00,000	-	-	-	-	6,00,000
ஈ	பால் பொருட்கள் பண்ணை	1	65,000	-	-	-	-	65,000
உ	திருவண்ணா மலை பால் பண்ணையுடன் கூடிய பால் பவுடர் தொழிற்சாலை	1	2,00,000	-	-	-	-	2,00,000
	மொத்தம்	5	18,65,000	-	-	-	-	18,65,000
	ஆகமொத்தம்	23	48,36,000	34	14,25,000	377	16,87,000	48,36,000

8. பால் விற்பனை

பால் மற்றும் பால் உபபொருட்களுக்கான சந்தையில் விற்பனை வாய்ப்பு அதிகமாக உள்ளது. விற்பனையை அதிகரிக்க விற்பனைப் பிரிவு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஆவின், மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை தவிர) 50 சதவிகித பால் விற்பனையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

விற்பனை வருவாயை அதிகரிக்க, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில், உரிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு மதிப்புக் கூட்டப்பட்ட பால் உபபொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு பேரிச்சை கோவா, சர்க்கரை இல்லாத கோவா, பாதாம்-பிஸ்தா மிக்ஸ் பவுடர், உலர் விதையுடன் பால் கேக், அல்வா, குல்ஃபி, சோன்பப்டி, முந்திரி கேக், உலர் விதை கலவை, குலாப்ஜாமுன் கலவை, பாதாம் வால்நட் கலவை மற்றும் பாதாம் அல்வா போன்ற பல்வேறு புதிய தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பால் உபபொருட்கள்

வ. எண்	ஒன்றியம்	பால் உபபொருட்கள்
1	காஞ்சிபுரம் -திருவள்ளூர்	பாதாம் மிக்ஸ் பவுடர்
2	விழுப்புரம்	குல்ஃபி
3	வேலூர்	குல்ஃபி, பாதாம் மிக்ஸ் பவுடர், தயிர், நறுமண பால்
4	கிருஷ்ணகிரி	குல்ஃபி, பாதாம் மிக்ஸ் பவுடர்
5	சேலம்	தயிர், உயர் வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பால், நறுமண பால்
6	ஈரோடு	பாதாம் மிக்ஸ் பவுடர், குலோப் ஜாமுன் மிக்ஸ், தயிர், குல்ஃபி, சிறப்பு தரத்திலான நெய்
7	கோயம்புத்தூர்	மேங்கோ லஸ்ஸி, தயிர்
8	திண்டுக்கல்	பனீர்
9	மதுரை	சாக்லேட், தயிர், பனீர்
10	விருதுநகர்	பாதாம் மிக்ஸ் பவுடர்
11	திருநெல்வேலி	உலர் விதைகள் மிக்ஸ் பவுடர்
12	கன்னியாகுமரி	பாதாம் மிக்ஸ் பவுடர், குல்ஃபி, சாக்லேட்

2020 மார்ச் 24]

மாவட்ட விற்பனைப் பிரிவு பின்வரும் வகையான பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையைக் கண்காணித்து வருகிறது.

- நிலைப்படுத்தப்பட்ட பால்
- சமன்படுத்தப்பட்ட பால்
- நிறை கொழுப்புப் பால்
- இருமுறை நிலைப்படுத்தப்பட்ட பால்
- பசும்பால்

ஆவினால் தயார் செய்யப்படும் பால் உப பொருட்கள் நெய், வெண்ணெய், மோர், தயிர், லஸ்ஸி, குலாப்ஜாமுன், ரசகுல்லா, பால் கோவா, பல்வகை நறுமணப் பால் மற்றும் ஐஸ்கிரீம்.

8.1. நுகர்வோர் பால் அட்டைகள்

வாடிக்கையாளர்களிடம் முன்கூட்டியே தொகை பெற்றுக் கொண்டு, மாதாந்திர பால் அட்டைகள் விற்பனை செய்து, தினமும் பால் வழங்கி வரும் விற்பனை முறை வேறு எந்த பால் கூட்டுறவு அமைப்பிலும் இல்லாத தனி அம்சமாகும். இது போன்ற பால் அட்டைகளை முன்கூட்டியே வழங்குவது மற்ற எந்த பால் நிறுவனங்களிலும் கிடையாது. இந்த பால் அட்டை முறைமூலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தினமும் சுமார் 83,070 லிட்டர் 1,66,139 நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வரப்படுகிறது.

8.2. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனை

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் தொடக்கப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பால் பதப்படுத்தப்பட்டு பின் சமநிலைப்படுத்தப்பட்டு, பால் பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்ட (200 மிலி, 500 மிலி, 1000 மிலி) பால் உள்ளூர் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை), மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 10.71 இலட்சம் லிட்டர் பால் விற்பனை

செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சராசரி விற்பனையான நாளொன்றுக்கு 10.43 இலட்சம் லிட்டர் பால் அளவானது 3.06% வளர்ச்சியாகும்.

விற்பனையை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, வழக்கமான சந்தைப்படுத்தல் விரிவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பால் விற்பனையை நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டராக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஒன்றிய வாரியான பால் விற்பனை ஒப்பீடு

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	சராசரியாக பால் விற்பனை (நாளொன்றுக்கு லிட்டரில்)	
		2018-2019	2019-2020 (பிப்ரவரி 2020 வரை)
1	காஞ்சிபுரம்-திருவள்ளூர்	23,777	33,405
2	விழுப்புரம்	20,876	5,574
3	கடலூர்		15,529
4	வேலூர்	71,564	60,560
5	திருவண்ணாமலை		8,318
6	தருமபுரி	27,336	6,565
7	கிருஷ்ணகிரி		19,724
8	சேலம்	1,50,241	1,54,891
9	நாமக்கல்	50,023	59,283
10	ஈரோடு	64,312	64,210
11	கோயம்புத்தூர்	1,46,734	1,47,464
12	திருப்பூர்	14,582	13,301

வ. எண்	ஒன்றியத்தின் பெயர்	சராசரியாக பால் விற்பனை (நாளொன்றுக்கு லிட்டரில்)	
		2018-2019	2019-2020 (பிப்ரவரி 2020 வரை)
13	நீலகிரி	16,578	16,611
14	மதுரை	1,67,259	1,57,959
15	தேனி		5,956
16	திண்டுக்கல்	15,981	16,544
17	திருச்சி	1,19,896	1,10,584
18	கரூர்		5,650
19	தஞ்சாவூர்	29,795	32,403
20	புதுக்கோட்டை	14,568	15,798
21	சிவகங்கை	37,800	43,245
22	விருதுநகர்	5,978	7,015
23	திருநெல்வேலி	42,860	28,879
24	தூத்துக்குடி		21,588
25	கன்னியாகுமரி	16,004	16,645
	மொத்தம்	10,42,164	10,74,696

8.3. சென்னை பெருநகர பால் விற்பனை

சென்னை பெருநகர் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்வது தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் பொறுப்பாகும். சென்னை பெருநகரங்களில் அதிகளவில் விற்பனையாவது ஆவின் பால் ஆகும். 2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி-2020 வரை) சென்னை பெருநகரில் நாளொன்றுக்கு சராசரியாக 12.05 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர பால் விற்பனையை 13.00 இலட்சம் லிட்டர் ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

சென்னை பெருநகர விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)

வ. எண்	விவரம்	2017-2018	2018-2019	2019-2020 (பிப்ரவரி 2020 வரை)
1	பெருநகர பால் விற்பனை	11.91	12.09	12.05

சென்னை பெருநகரில் விற்பனை செய்யப்படும் ஆவின் திரவ பால் மொத்த விற்பனையில், சுமார் 6.57 இலட்சம் லிட்டர் பால், பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இணையத்தின்மூலம் விற்பனை செய்யப்படுகிறது. அதே நேரத்தில் 4.60 இலட்சம் லிட்டர் பால் மொத்த விற்பனை முகவர்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மொத்த விற்பனையில், 6.07 இலட்சம் லிட்டர் பால் அட்டைகள் விற்பனை மூலமும், மீதம் ரொக்க அடிப்படையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

8.4. பால் விற்பனை விலை

பால் கொள்முதல் விலை ஏற்றத்தினை தொடர்ந்து, ஆவின் பாலின் விற்பனை விலையும் 19-8-2019 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பாலின் வகை	பால் பை நிறம்	விவரம்		500 மில்லி லிட்டருக்கான விலை (ரூ)	
			கொழுப்பு சத்து %	கொழுப்பு அல்லாத இதர சத்து %	அட்டை தாரர்களுக்கு	அதிகபட்ச சில்லரை விற்பனை விலை
1	இருநிலை சமன்படுத்திய பால்	மெஜந்தா	1.5	9.0	19.50	20.00
2	சமன்படுத்திய பால்	நீலம்	3.0	8.5	20.00	21.50
3	நிலைப்படுத்திய பால்	பச்சை	4.5	8.5	22.50	23.50
4	கொழுப்புச் சத்து நிறைந்த பால்	ஆரஞ்சு	6.0	9.0	24.50	25.50

2020 மார்ச் 24]

8.5 சென்னை பெருநகரங்களில் பால் உபபொருட்கள் விற்பனை

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் உபபொருட்களைச் சென்னை பெருநகர மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் விற்பனை செய்ய இணையம் ஏற்பாடு செய்து வருகிறது. சென்னை பெருநகரங்களில் ஆவின் பால் வகைகள் அதிக அளவில் விற்பனையாகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.19.50 கோடி மதிப்பிற்கு சென்னை பெருநகரங்களில் விற்பனை செய்யப்பட்ட பால் பொருட்கள், தற்போது ரூ.2 கோடி உயர்ந்து பால்பொருட்கள் மாத விற்பனை சராசரி ரூ.21.41 கோடியாக உயர்ந்துள்ளது. அக்டோபர் 2019-ல், ரூ.30.80 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனைக் கடைகளில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் கிடைப்பது மற்றும் விற்பனை செய்வது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, கவர்ச்சிகரமான வண்ணங்களில் பெயர் பலகைகள், அறிவிப்புப் பலகைகள், தொங்கவிடும் விளம்பர அட்டைகள் ஆகியன சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள முக்கிய விற்பனைக் கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் ஆவின் பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக பிக் பஜார், ரிலையன்ஸ் ஃப்ரெஷ், ரிலையன்ஸ் சில்லறை விற்பனை போன்ற பெரிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாலகங்களைப் பொலிவடைய செய்ய, நெரிசலான சிறிய பகுதியில் செயல்படும் பழைய பாலகங்கள், வாடிக்கையாளர் கார் பார்க்கிங் வசதி, குழந்தைகள் விளையாடும் பகுதி போன்ற வசதிகளுடன் கூடிய, அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில், அதிநவீன பாலகங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வண்ணம் இந்தப் பாலகங்களில் ஆவின் தயாரிப்புகளுடன் சாட்வகை உணவுப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

8.6. சென்னை பெருநகர விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

ஆவின் வகை பால்பொருட்கள் தயாரிப்புகள் சென்னை பெருநகர நுகர்வோர் மத்தியில் தொடர்ந்து பிரபலமாக உள்ளன. அதன் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்காக, இணையம், ஒவ்வொரு வீட்டிற்கும் பால் மற்றும் பால் பொருட்களை வழங்குவதற்காக நன்கு பிணைக்கப்பட்ட வலையமைப்பை உருவாக்கியுள்ளது.

விற்பனை உட்கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	உட்கட்டமைப்பு விவரம்	2013-2014	2014-2015	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020
1	விநியோக வழித்தடங்கள்	113	117	119	132	148	157	157
2	வட்டார அலுவலகங்கள்	16	16	16	16	27	27	27
3	பால் வழங்கும் நிலையங்கள்	470	470	433	437	441	493	493
4	விநியோகிக்கும் இடங்கள்	311	311	361	376	485	512	530
5	பாலகங்கள்	93	93	114	147	221	227	218
6	மொத்த பால் விநியோகிப்பாளர்கள்	47	71	71	83	84	84	76
7	பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்	49	49	49	49	49	49	49
8	ஆவின் உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள்	184	202	451	556	594	649	651
9	பால் பொருட்கள் விநியோக வழித் தடங்கள்	14	16	25	33	33	36	35

8.7. விற்பனையகங்கள்

பால் மற்றும் பால் பொருட்கள் நுகர்வோர் மற்றும் பொது மக்களை எளிதில் சென்றடைய ஏதுவாக உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

1. அனைத்து மாவட்டங்களிலும் தினமும் பால் விநியோகம் செய்ய பால் டிப்போக்கள் மற்றும் பால் விநியோக மையங்கள் விற்பனை நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

2. ஆவின் பால் பொருட்களுக்காக பிரத்தியேகமாக விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அ)	ஆவின் பாலகங்கள் (இணையம் மற்றும் ஒன்றியங்கள்)	-	58
ஆ)	தனியார் பாலகங்கள்	-	1549
இ)	மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் நடத்தப்படும் அதிநவீன பாலகங்கள்	-	37
ஈ)	மொத்த விற்பனையாளர்கள்	-	321

இந்தப் பாலகங்களில், பால் பொருட்கள் தவிர, பாலும் ரொக்கத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வரப்படுகிறது.

பால் மற்றும் பால் உபபொருட்களை விற்பனை செய்ய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் அதிக எண்ணிக்கையில் விற்பனையாளர்களை நியமனம் செய்து வருகிறது. இதனால் முன்பு பால் அட்டை வைத்துள்ள நுகர்வோர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே பால் கிடைத்து வந்த நிலை மாறியுள்ளது.

மேலும் பின்வரும் வழிகளிலும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1) தொழில் நிறுவனங்கள், கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், விடுதிகள் அகதிகள் முகாம்கள் ஆகியவற்றிற்கும், அவற்றின் தேவை அடிப்படையில் நிறுவன விநியோக அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

2) திருமணம் மற்றும் பிற விழாக்களுக்கு முன்கூட்டியே சிறப்பு ஆர்டர்களை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களின் வீட்டிற்கே சென்று ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

3) ஆவின் பார்லர்களிலும், உரிமம் பெற்ற முகவர்களால் நடத்தப்படும் சில்லரை விற்பனைக் கடைகளிலும், அனைத்து சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு பால் பொருட்களை மொத்தமாக வழங்கவும், ஒவ்வொரு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களிலும் பால் பொருட்களுக்கான மொத்த விநியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8.8. விற்பனை ஒப்பீடு

விற்பனை பிரிவின் அயராத நடவடிக்கைகள் காரணமாக, 2016-2017 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 9.52 இலட்சம் லிட்டராக இருந்த மாவட்ட ஒன்றியங்களின் சராசரி பால் விற்பனை 2019-2020 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10.71 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதேபோல், 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.9.62 கோடியாக இருந்த மாவட்ட ஒன்றியங்களின் பால் உபபொருட்களின் மாத சராசரி விற்பனை, 2019-2020 ஆம் ஆண்டில் 14.81 கோடி ரூபாயாக உயர்ந்து, அக்டோபர் 2019-ல் 21 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

8.9. சிறப்பு விற்பனை முகாம்கள்

கடந்த ஆண்டு தீபாவளியின்போது விற்பனைக்காக இணையம் 5 வகையான ஆவின் சிறப்பு இனிப்புகளை அறிமுகப்படுத்தியது. அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைத்து நகரங்களிலும் தற்காலிக பாலகங்களை அமைத்து அதன்மூலம் பொதுமக்களுக்கு இந்த சிறப்பு இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டன. இதேபோல், கோடையிலும் தற்காலிக பாலகங்கள் அமைக்கப்பட்டு, தயிர், மோர், லஸ்ஸி, யோகர்ட் போன்ற தாகம் தணிக்கும் பானங்கள் விற்பனை செய்யப்பட்டன. இந்த நடவடிக்கை பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

9. தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

பால் உற்பத்தியாளர்களுக்கு நிலையான ஊதியம் தரும் பால் விலையை உறுதி செய்வதற்கும், பாலின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு, தரமான பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கும் பால் மேம்பாட்டுத்

துறை செயல்படுகிறது. உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006-ன்படி நுகர்வோரின் திருப்திக்கு அனைத்து தரத் தரங்களையும் உறுதி செய்வதற்காக, பால் உற்பத்தியாளர்களிடமிருந்து பால் கொள்முதல் ஆரம்ப கட்டத்திலிருந்து தரமான பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதனால் பால் மற்றும் பால் பொருட்கள் திறம்பட செயலாக்கப்படுவதை உறுதிசெய்கிறது.

கலப்படம் மற்றும் பாதுகாப்பு இரசாயனங்கள் மற்றும் நியூட்ரலைசர் இல்லாத பால் கொள்முதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கான இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியியல் முறைகள்மூலம் மேலும் மேம்பட்ட தரக் கட்டுப்பாட்டு சோதனைகள் மொத்த பால் குளிர்விப்பான்/குளிரூட்டும் நிலையம்/மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள்/சென்னை பெருநகர பால் பண்ணை தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் நடத்தப்படுகின்றன.

பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள், மாவட்ட தொழிற்சங்கம் மற்றும் கூட்டமைப்பு போன்ற அனைத்து மட்டங்களிலும் போதுமான பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேசமயம் தரப்படுத்தப்பட்ட நடைமுறையின்படி, பாலை பரிசோதிப்பதால் பாலின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இந்த தரமான பரிசோதனைகளை எளிதாக்க, மில்க் ஓ டெஸ்டர், பால் பகுப்பாய்வுக் கருவி போன்ற சோதனை உபகரணங்கள் சங்கங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. மேலும் தர அளவுருக்களின் அடிப்படையில் மட்டுமே பாலுக்கான விலை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களில் தூய்மை மற்றும் சுகாதாரமான பால் சேகரிப்பை உறுதி செய்வதற்காக பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உணவுத் தர கையுறைகள் மற்றும் தலைக்கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஓ.-9001, எஃப்.எஸ்.எஸ்.ஏ.ஐ, எஃப்.எஸ்.எம்.எஸ்-22000, பி.ஐ.எஸ், அக்மார்க், எச்.ஏ.சி.சி.பி மற்றும் இ.எம்.எஸ் போன்ற சர்வதேச தரமான சான்றிதழ்களை தயாரிப்பு பால் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய பால் பண்ணைகள் மற்றும் இணைய பெருநகர பால் பண்ணைகள் பெற்றுள்ளன. இதனால் பால் மற்றும் பால் பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரத்தை உறுதி செய்கிறது. ஈரோடு, சேலம் ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலையில் உள்ள பால் பவுடர் ஆலை ஆகியவை நெய், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் உயர் வெப்பநிலை பால் ஆகியவற்றை

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்றுமதி உரிமத்தையும் பெற்றுள்ளன.

இதேபோல், நுகர்வோர் சுகாதாரமான மற்றும் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வதற்காக நவீனமயமாக்கப்பட்ட சோதனை உபகரணங்களைப் பயன்படுத்தி இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்கள் பல்வேறு மட்டங்களில் தரமான சோதனைகளை நடத்தி வருகின்றன.

நுகர்வோருக்குத் தரமான பால் மற்றும் பால் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், மேம்பட்ட ஆய்வக சோதனை உபகரணங்களை நிறுவுவதன்மூலம் மேம்படுத்தப்படுகின்றன.

பால் உற்பத்தியாளர்கள், பால் நுகர்வோர் மற்றும் பால் மேம்பாட்டுத் துறை அதிகாரிகள், ஆவின் அதிகாரிகள், சுகாதாரத் துறை அதிகாரிகள், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட உள்ளூர் மக்களுடன் தொடர்புக் கூட்டத்தை நடத்துவதன்மூலம் பால் கலப்படம் குறித்த விழிப்புணர்வும், அத்தகைய கலப்படத்தின் விளைவுகள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் அதிகாரிகளால் பால் மற்றும் பால் பொருட்களின் தரம் குறித்து அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டு அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

15-6-2017 தேதியிட்ட GO (D) 1293, பொது, சுகாதார (எம் 1)த் துறையின்படி அமைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான மாவட்ட அளவிலான வழி நடத்தும் குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியர்கள் உள்ளனர். பால் வள மேம்பாட்டிலும், தனியார் துறையிலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

உணவுப் பாதுகாப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு பாலில் அஃப்லாடாக்சின்-எம் 1 குறைந்தபட்ச அளவு 0.5 எம்ஜிஎம் வரை கிடைப்பதை உறுதி செய்வதற்காக மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணைய பால் பண்ணைகளில் பல்வேறு சோதனைகள் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் நுகர்வோருக்கு தரமான மற்றும் பாதுகாப்பான பால் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

10. மாநில / மத்திய அரசு நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும் பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்கள்

10.1. தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டம்

தீவிர பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டம், பால் கூட்டுறவுகளுக்கு உதவுதல், தரமான மற்றும் தூய பால் உற்பத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் ஒன்றியங்களைப் புனரமைத்தல் ஆகிய திட்டங்கள் தனித்தனியாகச் செயல்படுத்தப்பட்டு வந்தன. இவை மறுசீரமைப்பு செய்யப்பட்டு தேசிய பால் வள மேம்பாட்டுத் திட்டமாக 2014-2015 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இது ஒரு மத்திய அரசின் திட்டமாகும். இத்திட்டமானது பால் பண்ணை மேம்பாட்டிற்கான நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை வழங்கி அடிப்படை நிலையிலேயே உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டது. பால் உற்பத்தி, கொள்முதல், இணையம் மற்றும் ஒன்றியங்களில் பால் பதப்படுத்துதல், விற்பனை செய்தல் தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் உள்ளிட்ட விரிவாக்க நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதே தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டம் 2014-2015 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 வரை இத்திட்டத்தின்கீழ் ரூ.107.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால் கொள்முதல், பால் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தவும், பால் விற்பனை தொடர்பான உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், மத்திய அரசின் பங்களிப்பான ரூ.74.53 கோடியில், இதுவரை மொத்தம் ரூ.50.14 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பெரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டதில் பாடலூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் கொண்ட புதிய பால் பண்ணை பதப்படுத்தும் ஆலை மற்றும் மதுரை பால் பண்ணையில், நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் செறிவூட்டும் திறன் கொண்ட இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. தரமான பால் உற்பத்தி வசதிகளை வலுப்படுத்தவும், கிராம அளவில் குளிரூட்டும் வசதிகளை மேம்படுத்தவும், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள்

கூட்டுறவு ஒன்றியங்களில் மொத்த பால் குளிர்விப்பான்கள், பால் சேகரிப்பு புள்ளிவிவரக் கருவிகள் மற்றும் தானியங்கி பால் சேகரிப்புக் கருவிகள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் தரமான பால் கொள்முதல் செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்கு ரூ.25.85 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

10.2. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்புகள்

இத்திட்டம் 2007-2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது கால்நடை சுகாதாரத்தை மேம்படுத்துவதுடன், பால் கொள்முதல், குளிரூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான உட்கட்டமைப்பு ஏற்படுத்துதல் போன்ற பரந்த அளவிலான செயல்பாடுகளையும் உள்ளடக்கியது.

கால்நடை சுகாதாரம், பால் கொள்முதல், குளிரூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளுக்காக, இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூ.247 கோடி நிதி உதவி பெறப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் ஈரோடு, திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மாநில அரசால் ரூ.8.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10.3. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி -கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதியால் மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்புகள்

மாநில அரசானது, கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில், பால் கூட்டுறவு உற்பத்தி தொழில் உட்கட்டமைப்பினை மேம்படுத்த, ஆவினுக்கு உதவும் பொருட்டு நபார்டு கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு மானிய நிதிமூலம் நிதி உதவி வழங்கி உள்ளது. கடந்த 2014-2015 முதல் 2018-2019 வரை ரூ.220.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் விருதுநகரில் பால் உபபொருட்கள் தொழிற்சாலை, விழுப்புரத்தில் பால் உற்பத்தி வசதியை ஏற்படுத்துதல் மற்றும் கிருஷ்ணகிரி பால் பண்ணையில் நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவதும் அடங்கும்.

10.4. பால் பண்ணை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

இந்த மத்திய அரசின் திட்டமானது பால் பதப்படுத்தும் ஆலைகளை நவீனப்படுத்தவும், மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க ஏதுவாக இயந்திரங்களை நவீனப்படுத்தி நுகர்வோருக்கு தரமான பால் வழங்குவதற்கும், பால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு நல்ல விலை பெறவும் வழிவகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

கீழே குறிப்பிட்டுள்ள நான்கு திட்டங்களுக்கு ரூ.379.29 கோடி மொத்த நிதிச்செலவில் ஒப்பளிக்கப்பட்டது. இதில் நபார்டு வங்கியிடமிருந்து 6.5 சதவிகிதம் ஆண்டு வட்டிக்கு ரூ.303.42 கோடி கடனாக முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது:

1. தஞ்சாவூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பால் பண்ணை.
2. திருச்சியில் நாளொன்றுக்கு 6 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஐஸ்கிரீம் ஆலை மற்றும் பால் பொருட்கள் ஆலை.
3. சேலத்தில் நாளொன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பால் பண்ணை மற்றும் நாளொன்றுக்கு 30 மெட்ரிக் டன் தயாரிக்கும் திறன் கொண்ட பால் பவுடர் ஆலை.
4. சென்னை மாதவரத்தில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை (நாளொன்றுக்கு 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவாக விரிவாக்கக்கூடிய) பால் பண்ணை நிறுவப்படும்.

10.5. தேசிய பால் வளத் திட்டம்-1

கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், அதன் வாயிலாக தீவிரமாக வளர்ந்துவரும் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கவும், மேலும் அமைப்புசார் பால் பதப்படுத்தும் பிரிவை அதிக அளவில் கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் தொடர்பு கொள்வதற்கு வழிவகை செய்யும் நோக்கங்களுடன் இந்தியா முழுவதிலும் தேசிய பால் வளத் திட்டம் (முதற்கட்டம்) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேசிய பால் வளத் திட்டம் நான்கு முக்கிய கூறுகளுக்காக செயல்படுத்தப்பட்டுள்ளது.

10.5.1. வம்சாவழி சோதனைத் திட்டம்

தேசிய பால்வளத் திட்டத்தின்கீழ், கலப்பின ஜெர்சி பசுக்களுக்கு வம்சாவழி சோதனைத் திட்டம் ரூ.34.69 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வேலூர், விழுப்புரம், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு அதிக பால் உற்பத்தி மரபுத் திறன் உள்ள 271 பொலிக்காளைகள் வழங்கப்பட்டுள்ளன. கறவைகளின் பால் உற்பத்தித் திறன் அளவுகளான பால் உற்பத்தி அளவு, பாலின் தரம், பால் உற்பத்தி மரபுத் திறன் அடிப்படையின்மூலம், பிறந்த கிடாரி கன்றுகளின் செயல்பாடுகளைக் கொண்டு காளைகளின் தரம் வரிசைப்படுத்தப்பட்டு, அதிக பால் உற்பத்திக்கான மரபுத் திறன் கொண்ட உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

10.5.2. உதகமண்டலம் ஜெர்சி கருவூலக பொலிக்காளை பண்ணை உறை விந்து நிலையத்தை மேம்படுத்துதல்

உதகமண்டலத்தில் உள்ள ஜெர்சி கருவூலக மற்றும் பொலிக்காளை பண்ணை உறை விந்து நிலையமானது ரூ.1,349.61 இலட்சம் ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், ஈரோட்டில் தனிமைப்படுத்தும் நிலையத்திற்கும், புதுக்குடியில் கால்நடை வளர்ப்பு நிலையத்தின் கட்டுமானத்திற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருந்தது மற்றும் ஆத்தூரில் முன் தனிமைப்படுத்தும் நிலைய சுற்றுச்சுவரும் உதகமண்டலத்தில் ஜெர்சி கருவூலக மற்றும் பொலிக்காளை பண்ணையை வலுப்படுத்துவதற்கான கட்டுமானப் பணிகள் போன்றவற்றிற்கும் இத்திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு ஆய்வகப் பொருட்கள், பண்ணை உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டமானது, ரூ.13.47 கோடி பயன்படுத்தப்பட்டு 31-3-2019 அன்று நிறைவடைந்தது.

10.5.3. கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம்

தேசிய பால் வள திட்டத்தின்கீழ், கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம், 2014-2015 ஆம் ஆண்டு முதல் 2018-2019 வரை சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, வேலூர், திருச்சி மற்றும் காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஆகிய ஆறு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் ரூ.26.18 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

இத்திட்டத்தின்கீழ், சங்கப் பணியாளர்கள், சங்க நிருவாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு 71 மொத்த பால் குளிர்விப்பான்கள், 559 தானியங்கி பால் சேகரிக்கும் கருவிகள் மற்றும் 1,789 பால் கேன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், கறந்த பாலின் தரத்தை உயர்வாக வைப்பது மட்டுமல்லாமல் தூய பால் உற்பத்தியை அடைவதற்கும் வசதி செய்துள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் தூய பால் உற்பத்திக்கு கூடுதலாக கறந்த பாலின் தரமும் அதிகரித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.21.47 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் கிராமிய அளவில் பால் நிலை-1 கொள்முதல் திட்டம் முதற்கட்டம் 31-3-2019 அன்று நிறைவடைந்தது. 30-9-2019 அன்று கிராமிய அளவில் பால் கொள்முதல் திட்டம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் நிறைவடைந்துள்ளது.

10.5.4. சமச்சீர் கால்நடை தீவனத் திட்டம்

சமச்சீர் கால்நடை தீவனத் திட்ட முதல் கட்டத்தின் தொடக்கத்தில் சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும், அதன் பிறகு இரண்டாம் கட்டத்தில் திண்டுக்கல், தருமபுரி, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம்-திருவள்ளூர் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் ரூ.1,957 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால் உள்ளூரில் கிடைக்கும் தீவனப் பொருட்களைப் பயன்படுத்தி குறைந்தபட்ச செலவு உத்திகளை உட்படுத்துவதன்மூலம் உற்பத்தி செலவு குறைக்கப்பட்டுள்ளது.

10.5.5. இராஷ்டிரிய கோகுல் மிஷன்-வம்சாவழி சோதனைத் திட்டம்

இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ், வேலூர், ஈரோடு, சேலம் ஆகிய 3 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூ.2,087.51 இலட்சம் நிதி முதலீட்டில் வம்சாவழி சோதனைத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் 2023-2024-க்குள் 180 உயர் மரபணு தகுதியான பொலிக்காளைகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சந்ததி பசுக்களின் செயல்பாடுகளை, பால் சுரப்பு, பாலின் தரம், பாலூட்டும் காலம்

போன்ற பல்வேறு வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு, காளைகளின் தரம் வரிசைப்படுத்தப்படுகிறது மற்றும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக காளைகள், விந்து உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

10.5.6. தேசிய கால்நடை இயக்கம்

தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின்கீழ், பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை காப்பீட்டுப் பாதுகாப்பானது, கட்டணத் தொகையில் 50 சதவிகித மானியத்துடன் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையின்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமையால் 1.70 இலட்சம் கறவை மாடுகள், 2019-2020 ஆம் ஆண்டிற்காக தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வரம்பிற்குள் உட்படுத்தப்படாத அனைத்து கால்நடைகளையும் காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

10.5.7. தேசிய மாட்டின உற்பத்தி பெருக்க இயக்கம்-பசு-சஞ்சீவினி

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு கால்நடை உற்பத்தித்திறன் குறித்த தேசிய பணியைத் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு கூறு பசு-சஞ்சீவினி ஆகும். இது தனிப்பட்ட அடையாளங்களுடன் கூடிய கால்நடை சுகாதார அட்டைகளை வழங்குவதையும் மற்றும் அவற்றை தேசிய தரவு தளத்தில் பதிவேற்றுவதும் உள்ளடக்கிய ஒரு கால்நடை ஆரோக்கியத்திற்கான திட்டமாகும் (நகுல் ஸ்வஸ்ய பத்ரா). இச்செயல்முறை திட்டம் அனைத்து மாவட்ட பால் ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

10.04 இலட்சம் கால்நடைகள் என்ற இலக்கில், இதுவரை 9.12 இலட்சம் கால்நடைகள் இத்திட்டத்தின்கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

10.5.8. தேசிய செயற்கைமுறை கருவூட்டல் திட்டம்

கிருஷி கல்யாண் அபியான் திட்டத்தின்கீழ், அதிக உற்பத்தி தரக்கூடிய உள்நாட்டு இனங்களின் விந்துவுடன் செயற்கை கருவூட்டல்மூலம் உள்நாட்டு கறவை இனங்களின் உற்பத்தித் திறனை

2020 மார்ச் 24]

மேம்படுத்துவதற்காக (செயற்கை கருவூட்டல் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில்) 113 மாவட்டங்கள் உட்பட நாட்டின் 617 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், செயற்கை கருவூட்டல் 50 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, உதகமண்டலம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 13 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும், 20,000 கால்நடைகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட வேண்டியதில் 15,000 கால்நடைகள் கால்நடை பராமரிப்புத் துறையாலும் மற்றும் 5,000 கால்நடைகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தினாலும் கொண்டு வரப்பட்டுள்ளன. இராஷ்டிரிய கோகுல் மிஷன் திட்டத்தின்கீழ் இந்திய அரசிடமிருந்து 100 சதவிகித மானியத்தில் நிதியளிக்கப்படுகின்றது. தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை மாநிலத்தில் இத்திட்டத்தை அமலாக்கும் நிறுவனம் ஆகும். மாநில கால்நடை பராமரிப்புத் துறை மாநில பால் இணையம் ஆகியன அமலாக்கப் பணிகளை நிறைவேற்றும் நிறுவனங்களாகும்.

10.6. பசுந்தீவன சாகுபடி

கால்நடைகளைப் பராமரிக்க கால்நடை தீவனத்துடன் பசுந்தீவனம் வழங்குவது அவசியமாகும். நிலமற்ற பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந்தீவனம் வழங்குவதற்காக, முறையே 65.32 ஏக்கர் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் 20.00 ஏக்கர் புதுக்குடி (தஞ்சாவூர் ஒன்றியம்) ஆகியவற்றில் தீவன சாகுபடி செய்யப்படுகிறது.

புதுக்குடி மற்றும் கருவூல ஜெர்சி மற்றும் உறைவிந்து பண்ணை உதகமண்டலம் மற்றும் அருகிலுள்ள திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட பால் ஒன்றியங்களில் உள்ள கால்நடைகளின் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் பசுந்தீவனங்களை வழங்குவதற்கும், தஞ்சாவூர் மாவட்டத்தின் புதுக்குடியில் 90 ஏக்கர் நிலத்தில் தீவன சாகுபடி செய்ய இணையம் திட்டமிட்டுள்ளது.

மொத்தம் 500 எண்ணிக்கை அசோலா, கோடைகாலத்தில் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, கூட்டுறவு சங்க பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, 40 ஹைட்ரோ போனிக்ஸ் அலகுகள் மாவட்ட ஒன்றியங்களில் பயிற்சி முறை அலகுகளாக நிறுவப்பட்டுள்ளன. மேலும், அசோலா மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் பிரிவுகளால் உற்பத்தி செய்யப்படும் 14,161 கிலோ பசுந்தீவனம் பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

சேலம் மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களில் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்யவும், நியாயமான விலையில் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காக மாநில தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் (2019-2020)கீழ் ரூ.1.645 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு வரம்பில் உள்ள பால் கறவை மாடுகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அந்த கறவை மாடுகளுக்கு பசுந்தாள் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்த ஆண்டு 25,000 ஏக்கர் நிலத்தில் தீவனம் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, விவசாயிகளுக்குச் சொந்தமான 10,000 ஏக்கர் நிலத்தை தீவனங்களைப் பயிரிடுவதற்காக அவர்களுக்கு இலவசமாக விதைகள் வழங்குவதன் மூலமும், மற்ற பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்காக அவர்களிடமிருந்து தீவனம் வாங்குவதற்கும் பயிரிடப்படும் நிலம் இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

11. முக்கிய உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பங்களைச் சார்ந்த திட்டங்கள்

11.1. சோழிங்கநல்லூர் பால் பண்ணை உயர் வெப்ப நிலையில் பால் பதப்படுத்தும் ஆலை

உயர் வெப்ப நிலையில் 135 டிகிரி செல்சியஸ்க்கு மேல் வெப்பப்படுத்தப்பட்ட பால் நுண்ணுயிரிகளை சூழ்நிலையில் சிப்பம் கட்டப்படும். இதை சாதாரண அறை வெப்பநிலையில் 90 நாட்கள் வரை இருப்பு வைத்திருக்கலாம். ரூ.35.98 கோடி செலவில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தவும், சிப்பங்கட்டவும், நுண்ணுயிர்களற்ற அழிக்கப்பெற்ற ஒரு புதிய யு.எச்.டி. பால் ஆலை நிறைவு செய்யப்பட்டு 16-7-2018 அன்று மாண்புமிகு முதலமைச்சரால் திறக்கப்பட்டது. இந்தத் திட்டம் உயர்நிலை நுகர்வோரை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது

மட்டுமின்றி, ஏற்றுமதி தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. இதன்மூலம் ஆவின் சந்தைப்பங்கை விரிவுபடுத்துகிறது.

11.2. அதிநவீன பாலகங்கள்

ஆவினின் அடையாளத்தையும், விளம்பரத்தையும் மேம்படுத்துவதற்காக, குழந்தைகள் விளையாடும் பகுதி, பார்க்கிங் பகுதி மற்றும் குளிரூட்டப்பட்ட இருக்கை ஏற்பாடுகள் போன்ற வசதிகளுடன் கூடிய அதிநவீன பாலகங்கள் சென்னை பெருநகரிலும் மாவட்ட தலைநகரங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. சென்னை பெருநகரில் ரூ.10 கோடி செலவில் 21 அதிநவீன பாலகங்களும், மாவட்டங்களில் 36 அதிநவீன பாலகங்களும் ரூ.11.63 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

11.3. பால் பண்ணைகளில் மரபு சாரா எரிபொருள் பயன்பாடு

தற்போது, நாளொன்றுக்கு 1.11 இலட்சம் லிட்டர் சூடான நீரை (80°C) உற்பத்தி செய்ய 8 பால் பண்ணைகள், 4 குளிர்விக்கும் மையங்கள் மற்றும் 100 மொத்த பால் குளிரூட்டிகள், சூரிய வெப்ப கொதிகலன் வழங்கப்பட்டுள்ளன. பசுமை முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக, ஆவின் பால் வள உள்கட்டமைப்பில் மரபுசாரா ஆற்றலை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், எரி எண்ணெய் செலவினை சேமிக்க சோழிங்கநல்லூர் மற்றும் சேலம் பால் பண்ணைகளில் செறிவூட்டிய சூரிய வெப்ப அமைப்பை நிறுவியுள்ளது. பகல் நேரங்களில் பால் பண்ணை இயக்கிட ஒரு சூரிய வெப்ப அமைப்பு திட்டம் மதுரை பால் பண்ணையில் ரூ.2.00 கோடி செலவில் நிறுவப்படுகிறது.

11.4. ஒருங்கிணைந்த பால் பண்ணை மேலாண்மை திட்டம் (IDMS)

டிஜிட்டல் இந்தியாவின் பார்வை நாட்டை டிஜிட்டல் முறையில் வலுப்பெற்ற சமூகமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இயல்பான பரிவர்த்தனை மட்டுமின்றி அரசாங்க சேவைகள் குடிமக்களுக்கு மின்னணு முறையில் கிடைப்பதையும் உறுதி செய்கிறது.

பால் கூட்டுறவுத் துறை டிஜிட்டல் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்க உதவும் பொருட்டு, தமிழக அரசு “ஐ.டி.எம். எஸ்.” திட்டம் என்று அழைக்கப்படும் ஒரு முக்கிய-ஆளுமை திட்ட முயற்சியை மேற்கொண்டுள்ளது. ஐ.டி.எம்.எஸ். திட்டம் கிராம

அளவிலான பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளையும் கணினிமயமாக்கல் மற்றும் தானியங்கிமயமாக்க உதவுகிறது. முதல் கட்டமாக, இந்த "ஐ.டி.எம்.எஸ்." திட்டம் 300 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், 4 சமன்படுத்தப்பட்ட பால் பண்ணைகள் மற்றும் இணையம் ஆகியவற்றை ரூ.46.55 கோடி செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இது 2019 டிசம்பரில் முடிக்கப்பட்டு அனைத்து அலகுகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். 100% மானிய உதவியாக இந்திய அரசு ரூ.18.34 கோடியை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் மார்ச் 2020-க்குள் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டு 1-4-2020 முதல் நடைமுறைக்கு முழுமையான பயன்பாட்டிற்கு தயாராக இருக்கும்.

2020-2021 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 7,700 தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 15 மாவட்ட ஒன்றியங்கள், 200-க்கும் மேற்பட்ட மொத்த பால் குளிர்விப்பான்களுக்கு இந்தத் திட்டத்தை ரூ.200 கோடி அதிகரித்த செலவினம்/மதிப்பிடப்பட்ட செலவில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.இணையம் மொபைல் தளத்தின்மூலம் மேலும் இத்திட்டத்தின் நன்மைகளை அனைத்து விவசாயிகள், சமூக செயலாளர்கள், நுகர்வோர், விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு விரிவுபடுத்தப்பட உள்ளது. இது டிஜிட்டல் உலகம் பற்றி நிறுவனத்திற்கு அதிக பயன் அளிப்பதுடன் இறுதியில் இணைய விற்பனையை 2025-க்குள் 10,000 கோடி ரூபாயாக உயர்த்தவும் ஏதுவாக அமையும்.

11.5. மொத்த பால் குளிர்விப்பான் நிறுவுதல்

குளிரூட்டல் வசதியுடன்கூடிய சிறிய வெப்ப காப்புத் தொட்டிகளாக இருக்கும் மொத்த பால் குளிர்விப்பான்கள் பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களில் நிறுவப்பட்டு, பாலின் ஆரம்ப தரத்தை தக்க வைத்திருக்க பாலைக் குளிர்விக்க உதவுகின்றன. குளிரூட்டும் மையங்கள் மாற்றி அமைக்கப்பட இருப்பதால் மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

பல்வேறு திட்டங்களின்கீழ் 2,000, 3,000 மற்றும் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள், 5 முதல் 10 கி.மீ. சுற்றளவில் செயல்படும் சங்கத்தின் (அல்லது) கிளை சங்கங்களின் சராசரி மொத்த பால் கொள்முதல் அளவு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு நிறுவப்படுகின்றன.

இதுவரை, நாளொன்றுக்கு 16.87 இலட்சம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட 377 மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன. அதிக எண்ணிக்கையிலான மொத்த பால் குளிர்விப்பான்களை நிறுவுவதன்மூலம் குளிர்விக்கும் திறனை நாளொன்றுக்கு 16.87 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து 20.33 இலட்சம் லிட்டர் ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12. விற்பனை

12.1. உள்நாட்டு விற்பனை

இந்திய நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நெய், வெண்ணெய் மற்றும் பால் பவுடர் ஆகியன பெருமளவில் பயன்படுத்தப்படுவதால் இணையம் தனது கிளைகளை இயக்கி ஆவினால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பால் உபபொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் என மொத்த விற்பனையாளர்களை நியமிக்க இணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது ராஜஸ்தான், டெல்லி, வட கிழக்கு மாநிலங்கள் (அஸ்ஸாம், அருணாச்சலபிரதேசம், மணிப்பூர், மிஸோரம், சிக்கிம், நாகலாந்து, திரிபுரா, மேகாலயா), பீகார், மத்தியப்பிரதேசம், குஜராத், உத்திரகாண்ட், ஹரியானா, அந்தமான் நிகோபார், ஒடிசா, உத்திரப்பிரதேசம், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய பல்வேறு மாநிலங்களில் மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதர அனைத்து மாநிலங்களிலும் மொத்த விற்பனையாளர்களை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொல்கத்தா பகுதியில் சமீப காலத்தில் கொழுப்பு பால் பவுடர் பாக்கெட்டுகள் (ஒரு கிலோ பாக்கெட்டுகள்) விற்பனை துவக்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட விற்பனை விரைவில் இதர மாநிலங்களிலும் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கிந்திய சந்தைகளில் டெய்ரி ஒய்ட்னர் மற்றும் கொழுப்பு நீக்கப்படாத முழுமையான பால் பவுடர் ஆகியவற்றிற்கு போதிய வரவேற்பு உள்ளதைக் கருத்தில்கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிப்பதற்கும் மேற்கண்ட மாநிலங்களில் அவற்றை சந்தைப்படுத்துவதற்கும் இவை தயாரிக்கப்படுகின்றன.

12.2. ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்தல்

2015 ஆம் ஆண்டில் சராசரி பால் கொள்முதல், பால் விற்பனையை விட அதிகரித்து இருந்தது. சுமார் 6-8 இலட்சம் லிட்டர் பால் பொருட்களாக கூறுமாற்றம் செய்யப்பட்டது. தமிழக அரசின் பரிந்துரையின்படி, ஆவின் பொருட்களை வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் சேலம் ஒன்றியம் UHT பால் மற்றும் நறுமண பால் டெட்ரா பாக்கெட்டுகளுக்கு ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது. மேலும் ஈரோடு ஒன்றியம் நெய் ஏற்றுமதிக்கான உரிமம் பெற்றுள்ளது. திருவண்ணாமலை தொழிற்சாலையானது கொழுப்பு நீக்கப்பட்ட பால் பொருட்கள் மற்றும் நெய்யிற்கான ஏற்றுமதி உரிமம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அதிக வெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால் (UHT) மற்றும் நெய் ஆகியவற்றை தற்போது சேலம் மற்றும் ஈரோடு ஒன்றியங்கள்மூலம் அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகிறது. வெண்ணெய், தயிர், யோகர்ட் இனிப்புகள் (கோவா, மைசூர்பா, குளோப்ஜாமுன் மற்றும் ரசகுல்லா) பாதாம் பவுடர், செறிந்த பால் மற்றும் பால் பவுடர் போன்றவற்றை அயல்நாடுகளில் ஏற்றுமதி செய்ய தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் திட்டமிட்டுள்ளது. மேலும், ஏற்றுமதி சான்றிதழில் மேற்கண்ட பொருட்களை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை சிங்கப்பூருக்கு ரூ.139 இலட்சம் மதிப்பிலான 2,89,692 லிட்டர் பால் மற்றும் ரூ.13.53 இலட்சம் மதிப்பிலான நெய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மற்றொரு முகவர் மூலமாக இதுவரை ரூ.35.85 இலட்சம் மதிப்பிலான 74,200 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, ஹாங்காங்கிற்கு ரூ.13.47 இலட்சம் மதிப்பிலான 28,080 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும்,

கத்தாருக்கு ரூ.7.5 இலட்சம் மதிப்பிலான 15,600 லிட்டர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது மற்றும் ரூ.28.76 இலட்சம் மதிப்பிலான 6,919 லிட்டர் நெய் துபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆவின் பால்பொருட்கள் சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

12.3. ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள்

ஆவினின் ஏற்றுமதி முகவர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நாடுகளுக்கான ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளனர். ஆவின் பால் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் விதமாக பக்ரைன், குவைத், ஓமன், சவுதி அரேபியா, கம்போடியா, இந்தோனேஷியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம், சீனா, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், லண்டன் மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் ஏற்றுமதி முகவர்களை நியமிப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆவின் பால் பொருட்கள் ஸ்ரீலங்காவிற்கு ஏற்றுமதி செய்ய நிருவாக இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் தலைவர், கூட்டுறவு இளைஞர் மேம்பாட்டு சங்கம் லிமிடெட், (Co-operative Youth Empowerment Society Ltd., (COOPYES) கொழும்பு-ஸ்ரீலங்கா உடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலேசியாவிலும் ஆவின் பால் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக, தலைமை நிருவாக அதிகாரி, கால்நடை அறிவியல், மலேசியா அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12.4. நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம்

கட்டணமில்லா தொலைபேசியுடன் (எண் 1800-425-3300) கூடிய 24x7 மணி நேர நுகர்வோர் சேவை மற்றும் ஆதரவு மையம் ஒன்று சென்னை நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் அலுவலகத்தில் இயங்கி வருகிறது. நுகர்வோர், இம்மையத்தை அணுகி தங்களது கருத்துக்களை பதிவு செய்யவும், குறைகளை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ளவும் இயலும். கடந்த 2019-2020-ல் மொத்தம் 805 புகார்கள் பெறப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டுள்ளது.

13. சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் நிதி செயல்பாடு

13.1. பால் கூட்டுறவுச் சங்கங்களின் இலாப-நட்ட விவரம்

2018-2019-ன் 6,665 பால் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன மற்றும் 2,237 பால் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு காரணங்களால் நட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.

13.2. மாவட்ட ஒன்றியங்களில் இலாப-நட்ட விவரம்

2018-2019-ல் தணிக்கையின்படி, 9 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இலாபத்திலும், மீதமுள்ள 8 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களான சேலம், கிருஷ்ணகிரி, விழுப்புரம்,வேலூர், திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகியன நட்டத்திலும் செயல்பட்டு வருகின்றன.மேலும், நட்டத்தில் இயங்கி வந்த 8 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களான சேலம், கிருஷ்ணகிரி, விழுப்புரம், வேலூர், திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு புனரமைப்புத் திட்ட செயல்பாடுகளாலும், மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் மற்றும் பாலின் விற்பனையை மாற்றி அமைத்ததாலும், நிருவாக செயல்பாடுகளில் செயல்திறனை திறம்பட கண்காணித்து உற்பத்தி செலவினத்தை சுருக்கியதாலும் நடப்பு நிதியாண்டில் இலாபம் அடையும் நிலைக்குத் திரும்பியுள்ளன.

13.3. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய இலாபம் மற்றும் நட்ட விவரம்

2015-2016 ஆம் ஆண்டிலிருந்து 2018-2019 ஆம் ஆண்டுவரை தணிக்கையின்படி இணையம் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், தொடர்ந்து இலாபத்தில் செயல்பட பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க புதிய பாலகங்கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13.4. சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையத்தின் விற்பனை வருவாய்

13.4.1. தொடக்கப் பால் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை வருவாய்

தொடக்கப் பால் கூட்டுறவு சங்கங்களின்மூலம் நாளொன்றுக்கு 37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன்மூலம்

2020 மார்ச் 24]

கிராமப் பொருளாதாரத்தில் நாள்தோறும் ரூ.11.40 கோடி வருவாய் ஈட்டப்படுகிறது.

13.4.2. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் விற்பனை வருவாய்

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.1,533.39 கோடியாக இருந்த விற்பனை வருவாய் 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.3,976.14 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, 259 சதவிகிதம் உயர்வு அடைந்துள்ளது. கடந்த 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.3,618.34 கோடி விற்பனை வருவாயை ஒப்பிடும்போது 2018-2019 ஆம் ஆண்டிற்கான விற்பனை வருவாய் ரூ.3,976.14 கோடி ஆகும். இது 10 சதவிகித வளர்ச்சியாகும். 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி 2020 வரை) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் விற்பனை வருவாய் ரூ.3,974.44 கோடியாகும்.

13.4.3. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் விற்பனை வருவாய்

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.835.28 கோடியாக இருந்த விற்பனை வருவாய் 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.2,017.86 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது, 241 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த 2017-2018 ஆண்டில் ரூ.1,859.66 கோடி விற்பனை வருவாயுடன் ஒப்பிடும்போது, 2018-2019 ஆம் ஆண்டிற்கான விற்பனை வருவாய் ரூ.2,017.86 கோடி ஆனது 9 சதவிகித வளர்ச்சியாகும். 2019-2020 (ஜனவரி 2020 வரை) இணையத்தின் விற்பனை வருவாய் ரூ.1,795.56 கோடியாகும்.

14. பல்வேறு அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு

பால் வளத் துறையானது வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

[2020 மார்ச் 24

15. பணியாளர் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

1. 2019 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய பணியாளர்கள் 70 நபர்களுக்கும், பால் உற்பத்தியாளர் இணையப் பணியாளர்கள் 25 நபர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதோடு, பிப்ரவரி 2020 ஆம் ஆண்டில் 134 இணையப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

2. பால் வளத் துறையில் புதிதாக 24 பணியாளர்களும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 85 பணியாளர்களும், இணையத்தில் 80 பணியாளர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

 இதனைத் தவிர கருணை அடிப்படையில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 26 பணியாளர்களும், இணையத்தில் 3 பணியாளர்களும் பணியமர்த்தம் செய்யப்பட்டு உள்ளனர்.

3. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் 1,453 பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக ரூ.44.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இணையத்தின் 3,202 பணியாளர்களுக்கு 2020 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

4. அதேபோன்று, இணையத்தின் 2,205 பணியாளர்களுக்கும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 1,822 பணியாளர்களுக்கும் 2019 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி கருணைத் தொகையாக ரூ.705.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5. 2019 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையையொட்டி இணையத்தின் 4,619 பணியாளர்களுக்கு ரூ.29.15 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும், அதேபோல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் 4,881 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ரூ.10.25 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் தீபாவளி பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

6. 2020 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி இணையத்தின் 4,960 பணியாளர்களுக்கு ரூ.3,199 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் 5,084 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ.12.96 இலட்சம் மதிப்பிலான பால் உபபொருட்களும் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

7. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் பணியாளர்களுக்கும், இணையத்தின் பணியாளர்களுக்கும், மேலும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மற்றும் இணையத்தின் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் தினந்தோறும் அரை லிட்டர் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

8. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மற்றும் இணையத்தில் பணிபுரிந்து இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை ஓய்வூதியத் தொகை ரூ.4,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதோடு கருணை குடும்ப ஓய்வூதியமாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

9. பணியாளர்கள் பயன்பெறும்பொருட்டு, 2019-2020 ஆம் ஆண்டில், பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவை முறையே, பெங்களூருவில் செயல்பட்டு வரும் தேசிய பால் வள நிறுவனத்திலும், ஊரக வளர்ச்சி மேலாண்மை நிலையம், ஆனந்திலும், நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னையிலும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சிகள் 345 பணியாளர்களுக்கு 2 முதல் 5 நாட்கள் கால அளவில் வழங்கப்பட்டுள்ளது.

16. பால் கூட்டுறவுகளால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

16.1. பால் கொள்முதல் விலை உயர்வு

பசும்பால் மற்றும் எருமைப் பாலுக்கு 1-11-2014 அன்று கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. அதன் பிறகு, பால் உற்பத்தியாளர்களால் பால் கொள்முதல் விலையை உயர்த்த நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கப்பட்டது. மேற்படி கோரிக்கைகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, பசும்பால் கொள்முதல் விலையினை

லிட்டர் ஒன்றுக்கு ரூ.4 உயர்த்தப்பட்டும், எருமைப் பால் கொள்முதல் விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6 உயர்த்தப்பட்டும், பசும்பால் கொள்முதல் விலை ரூ.28-லிருந்து ரூ.32 ஆகவும், எருமைப்பால் கொள்முதல் விலை ரூ.35-லிருந்து ரூ.41 ஆகவும் உயர்த்தி 19-8-2019-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

16.2. திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நலநிதி

பால் வளத் துறையில் பால் உற்பத்தியாளர்களின் விசுவாசத்தினை ஊக்குவிக்கும் வண்ணமாகவும், மதிப்பளிக்கும் வண்ணமாகவும், திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நலநிதி உருவாக்கப்பட்டு அதில் மாதந்தோறும் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக ஒரு ரூபாயும், தொடர்புடைய சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் பங்களிப்பாக தலா 50 பைசாவும் பெறப்படுகிறது. விபத்தினால் இறந்த பால் உற்பத்தியாளரின் வாரிசுதாரர்களுக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது அரசானது விபத்தில் இறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவியை ரூ.1.75 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தியும், கல்வி உதவித் தொகையினை ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தியும், திருமண உதவித் தொகையினை ரூ.10,000/-லிருந்து ரூ.30,000/- ஆக உயர்த்தியும் ஆணை வழங்கியுள்ளது. மேலும், விபத்தினால் மரணமடைந்த பால் உற்பத்தியாளரின் ஈமச் சடங்கிற்கு ரூ.5,000/- வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. எனினும், இத்திட்டத்தின் பங்களிப்பாக சந்தாதாரர்கள், பால் உற்பத்தியாளர் சங்கம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து பெறப்படும் பங்களிப்புத் தொகைகள் ஏதும் உயர்த்தப்படவில்லை. மேற்படி உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைகள் 12-11-2019 முதல் நடைமுறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

16.3. மானியத்துடன் கூடிய கால்நடை தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை வழங்குதல்

பால் உற்பத்தியாளர்கள் அதிக கால்நடை தீவனத்தினை குறிப்பாக ஆவின் கால்நடை தீவனத்தினைக் கொள்முதல்

செய்வதை ஊக்குவிக்கவும், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களானது, பால் உற்பத்தியாளர்களுக்கு, கால்நடை தீவனத்திற்கு ரூ.2 முதல் ரூ.7 வரை மானியம் வழங்கியும், தாது உப்புக் கலவைக்கு ரூ.20/- முதல் ரூ.25/- வரை மானியமாகவும் வழங்கி வருகிறது. மேற்படி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் வழங்கப்படும் மானியமானது ஒன்றியத்தின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2019-2020 ஆம் வருடத்தில் பிப்ரவரி-2020 வரை 87,741 மெட்ரிக் டன் கால்நடை தீவனமும், 198.74 மெட்ரிக் டன் தாது உப்புக் கலவையும் முறையே ரூ.2,720 இலட்சம் மற்றும் ரூ.47.76 இலட்சம் மானியத்தில் தொடர்புடைய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

16.4. பால் உற்பத்தியாளர்களுக்கு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மூலமாக ஊக்கத் தொகை வழங்குதல்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்றே, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களால் ஈட்டப்பட்ட இலாபத் தொகையில் ஒரு பகுதியானது பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, அந்த பால் ஊற்றும் உறுப்பினர்களின் வியாபார பங்களிப்பின் அடிப்படையில் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.291.79 இலட்சம் ஊக்கத் தொகையானது கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் மூலமாக, 1,317 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 30,268 பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

16.5. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியாளர்களுக்கு போனஸ் வழங்குதல்

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் இலாபத்தினை சங்க உறுப்பினர்களுடன் பங்கீடு செய்யும் அளவீடாக 50 சதவிகித இலாபத் தொகையானது பால் உற்பத்தியாளர்களுக்கு பங்குத் தொகை மற்றும் பங்கு ஈவுத் தொகை, ஆதரவு தள்ளுபடி விலை மற்றும் போனசாக பால் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலின் அளவிற்குத் தக்கவாறு வழங்கப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் (டிசம்பர்-2019 வரை) ரூ.571.40 இலட்சம் போனசாகவும், ரூ.5.79 இலட்சம் பங்கு ஈவுத் தொகையாகவும், ரூ.1,126.97 இலட்சம் ஆதரவு தள்ளுபடி விலையாகவும், 2.12 இலட்சம் எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

16.6. பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை உள்ளீட்டு சேவைகள்

தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் 16 இலட்சம் கால்நடைகள் உள்ளன. அவற்றில் பெரும்பான்மையாக கலப்பின கலப்பீட்டு ஜெர்சி கறவை மாடுகள் நாள்தோறும் சராசரியாக 6.69 லிட்டர் பால் வழங்கி வருகின்றன. தற்போது பால் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு, உயர் மரபணு காளைகளிடமிருந்து பெறப்படும் விந்தணுக்கள் செயற்கை கருவூட்டல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பால் வளத் துறையானது கீழ்க்காணும் உள்ளீட்டுச் சேவைகளை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி வருகிறது:

அ. இல்லம் தேடி வரும் கால்நடை சிகிச்சை

ஆ. இல்லம் தேடி வரும் அவசர கால சிகிச்சை

இ. செயற்கை கருவூட்டல் சேவைகள்

ஈ. மலட்டு நீக்க முகாம்

உ. காப்பீட்டு பாதுகாப்பு

ஊ. விரிவாக்க மற்றும் நேரில் அணுகும் நடவடிக்கைகள்

எ. கோடைக்கால மேலாண்மை

16.7. பால் உற்பத்தியாளர்களின் திறன் மேம்பாடு

பால் உற்பத்தியாளர்கள், கறவை மாடுகளின் வளர்ப்பு மேலாண்மை, சுத்தமான பால் உற்பத்தி மற்றும் தீவன வளங்களை திறம்பட பயன்படுத்துவது பற்றிய அறிவை சமச்சீர் தீவனம் வழங்கும் திட்டத்தின்மூலம் பெற்றுள்ளனர். பல்வேறு பயிற்சித் திட்டங்கள்மூலம் பெறப்பட்ட அனுபவங்கள் மற்றும் அறிவியல் சார்ந்த முறையில் கறவை மாடுகளைப் பராமரிப்பது ஆகியவை பால்

2020 மார்ச் 24]

உற்பத்தியாளர்களுக்குத் தினசரி சராசரி பால் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. இதன்மூலம், குறைவான அளவு தீவனத்தினைப் பயன்படுத்தி அதிக பால் உற்பத்தி செய்யப்படுவதன்மூலம் தினசரி நிகர வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.

16.8. ஒன்றிய பயிற்சி நிலையங்கள்

இந்திய அரசாங்கக் கட்டுப்பாட்டில் CMU-AITI நிறுவனங்களின்கீழ் செயல்படும் மண்டல பயிற்சி நிலையங்களானது பால் உற்பத்தியாளர்களுக்கும், சங்கச் செயலாளர்களுக்கும், கிராம நிலை ஊழியர்களுக்கும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சி வகுப்புகளானது தங்குமிடம், உணவு வசதிகள், கற்றல் சார்ந்த ஆதாரங்கள், கற்பித்தல், காணொளி மற்றும் ஒலி வடிவ செய்தி உபகரணங்களைக் கொண்டது. மேலும், கால்நடைகளைக் கொண்ட களப்பயிற்சி வகுப்புகளையும் கொண்டுள்ளது.

பயிற்சிகளை வழங்குவதன்மூலம் விவசாயிகள், கால்நடை மேலாண்மை நடைமுறைகள், தூய பால் உற்பத்தி செயல்முறைகள் மற்றும் தீவன அபிவிருத்தி நடைமுறைகளைப்பற்றி சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

16.9. தீவனக் கொள்கை

பசுந்தீவனமானது கறவை மாடுகளின் பால் உற்பத்திப் பெருக்கத்திலும், கன்று ஈனுதலிலும் முக்கிய பங்காற்றுகிறது. இவை கறவை மாடுகளின் கன்று ஈனுதலுக்குத் தேவையான முக்கிய ஆதாரமான வைட்டமின் ஏ-சத்துகளைக் கொண்டுள்ளது. தற்போது கறவை மாடுகளின் எண்ணிக்கையானது குறைவான தீவனப் பயிரிடுதல் காரணமாகவும் வைக்கோல் மற்றும் புல் கரணைகள் பற்றாக்குறையாலும் கறவை மாடுகளின் எண்ணிக்கை குறைகிறது. கறவை மாடுகளுக்கு வைக்கோல் போன்ற பயிர் பொருள்களின்மூலம் தீவனம் அளிக்கப்படுகின்றது. அனைத்து கறவை மாடுகளுக்கும் தேவையான பசுந்தீவனத்தை இருப்பில் வைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை அடையும்பொருட்டு, கீழ்க்கண்ட உத்திகள் பரிசீலிக்கப்படுகின்றன:

1. தீவனப் பயிரிடுதலில் ஆர்வத்தை அதிகரித்தல்.
2. பற்றாக்குறை, பஞ்சகாலம் மற்றும் கோடைக்காலங்களில் தீவனத் தேவையினை சமாளிக்க ஏதுவாக, சமூக தீவன

வங்கிகளை உருவாக்கி தீவனத்தை ஊறுகாய்புல் முறையில் பராமரித்தல்.

3. தீவனத்தின் உயிர் சத்துக்களை அதிகப்படுத்துவதன்மூலம் தீவனத்தின் ஊட்டச்சத்தினை அதிகரித்து கறவை மாடுகளின் கன்று ஈனுதல் திறனை அதிகரிப்பதோடு, கறவை மாடுகளின் உடல் நலத்தினைப் பாதுகாத்தல்.

17. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அமைப்பு

களஅளவில் கால்நடை மருத்துவர்களைக் கொண்டு, கால்நடை பராமரிப்பு மற்றும் இனவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் பதிவுகளை சங்கத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் பதிவு செய்துகொள்ள ஏதுவாக, ஒரு புதிய கால்நடை மென்பொருள் செயலி செயல்படுத்தப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவர்கள் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மற்றும் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே தொடர்பாளர்களாக இருந்து சிறந்த கால்நடை மேலாண்மை நடைமுறைகள் மற்றும் உறுப்பினர்களின் கால்நடை நலனை உறுதி செய்கின்றனர்.

ஒருங்கிணைந்த கால்நடை தேவைகளை விரிவான மென்பொருள் தளத்தின்மூலம் வழங்க கால்நடை மென்பொருள் செயலி திட்டம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு அதன்மூலம் முதன்மையாக கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள ஒரு இலட்சம் கறவை மாடுகள் மற்றும் எருமை மாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்செயலியானது சிறந்த கால்நடை நலன் கண்காணிப்பிற்காகவும் இனவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் கால்நடை மருத்துவர்களால் செயல்படுத்தப்படுகிறது.

கால்நடை மென்பொருள் செயலி திட்டமானது கள மருத்துவர்களின் இருப்பிடத்தை அறியவும், கால்நடை சிகிச்சைகள், பால் உற்பத்தியாளர்களிடம் சென்றடைதலை உறுதி செய்யவும் மட்டுமின்றி, இது தொடர்பான தகவல்களை நிகழ்நேரத்தில் பதிவேற்றம் செய்யவும் பயன்படுகிறது. இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் கால்நடைகளில் இதுவரை 88,875 கால்நடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

18. அப்லோடாக்சின் பூஞ்சை வகை நச்சு மற்றும் அது குறித்த விழிப்புணர்வு

தரமான பால் மற்றும் பால் பொருட்கள் மற்றும் அப்லோடாக்சின் பூஞ்சை வகை நச்சு விழிப்புணர்வு தொடர்பான கூட்டம் 28-8-2019 அன்று சென்னையில் நடைபெற்றது. மேலும், அப்லோடாக்சின் பூஞ்சை வகை நச்சுக்களை பாலில் கட்டுப்படுத்துதல் தொடர்பான கருத்தரங்கு 30-10-2017 அன்றும், பின்னர் 29-11-2019 அன்றும் சென்னையில் நடைபெற்றது. அதில் தமிழகம் முழுவதும் உள்ள கால்நடை மருத்துவர்கள், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், பால்பத வல்லுநர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தலைவாசலில் துவக்கி வைக்கப்பட்டு 9-2-2020 முதல் 11-2-2020-ல் நடைபெற்ற பெரு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பால் மற்றும் பால் பொருட்களில் அப்லோடாக்சின் பூஞ்சை நச்சு மற்றும் தடுப்பு முறைகள் குறித்து துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

19. இனவிருத்தி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள்

கறவை மாடுகள் இனவிருத்திக்கான மேம்பாட்டு நடவடிக்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. மரபணு தெரிவுமூலம் சிறந்த முதல்தரமான, ஆரோக்கியமான வளமான சந்ததிகளை உருவாக்கி பால் உற்பத்தியினைப் பெருக்குவது முக்கிய சவாலாகும். முதல்தர சந்ததியானது நீண்ட ஆயுள், பால் உற்பத்தியில் நிலைத்தன்மை மற்றும் அதிக வருமானம் ஈட்டுதல் ஆகிய வகைகளில் உற்பத்தியினை எளிதாக்கி பால் உற்பத்தியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

19.1. கால்நடை இனவிருத்தி

அறிவியல் முறையைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்தர மரபணு கொண்ட காளைகளைப் பயன்படுத்தியும், செயற்கை முறை கருவூட்டல்மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட கால்நடைகளைக் கொண்டும், அதிக அளவிலான கறவைத் திறன் கொண்ட பசுக்களை உற்பத்தி செய்ய முடியும்.

19.2. கால்நடை ஊட்டச்சத்து

உள்ளூரில் கிடைக்கும் தீவன வளங்கள் மற்றும் தாது உப்பு கலவையைப் பயன்படுத்தி ஊட்டச்சத்து சமன்பாடு குறித்த ஆலோசனை சேவையை உற்பத்தியாளர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்க எடுக்கும் நடவடிக்கைமூலம் கால்நடைகளின்

பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவுகிறது. இருக்கும் நில ஆதாரங்களிலிருந்து பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் நிலத்திற்கான உயிர் உரம் கிடைப்பதை உறுதி செய்யவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

20. பால்வளத் துறையின் எதிர்காலத் திட்டங்கள்

1. பால் விற்பனையில் 6.6 சதவிகிதம் வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டு, விற்பனை செய்யப்படும் பால் விற்பனையை நாளொன்றுக்கு 24.00 இலட்சம் லிட்டராக உயர்த்துவது.

2. ஆவினின் சந்தைப் பங்கை தற்போதுள்ள 30 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக அதிகரித்தல்.

3. உள்ளூர் சந்தையில், பால் உபபொருட்கள் விற்பனையில் 25 சதவிகிதம் வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டு தற்போதுள்ள பால் உபபொருட்கள் விற்பனை அளவான ரூ.32 கோடியிலிருந்து ரூ.40 கோடியாக உயர்த்துவது.

4. மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் வளர்ச்சி விகிதத்தை 3 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாக அதிகரிப்பதன்மூலம் பாலை பால் பவுடர் மற்றும் வெண்ணெய் ஆக உருமாற்றம் செய்வதன்மூலம் ஏற்படும் இழப்பு குறைக்கப்படும்.

5. பால் மற்றும் பால் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதன்மூலம் இரண்டு ஆண்டுகளில் படிப்படியாக ரூ.20 கோடி வருமானம் அடைய முடியும்.

6. இந்நிதியாண்டின் இறுதிக்குள் 500 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் மற்றும் 500 எண்ணிக்கையிலான செயல்படாத/செயலற்ற சங்கங்களை ஒரு வருடத்திற்குள் செயல்படும் சங்கங்களாக மாற்றுதல்.

7. நட்டத்தில் இயங்கும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் நட்டத்தைக் குறைத்து, அவற்றை இலாபம் ஈட்டும் ஒன்றியங்களாக மாற்றுதல்.

2020 மார்ச் 24]

8. அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஒரு கறவை மாட்டின கறவைத் திறன் நாளொன்றுக்கு தற்போதுள்ள 6.69 லிட்டரிலிருந்து 7.02 லிட்டராக உயர்த்துவது.

9. பால் போக்குவரத்தால் ஏற்படும் இழப்புகள் மற்றும் மோசடிகள் மற்றும் கலப்படங்களைத் தவிர்த்தல்மூலம் மிகுந்த இலாபத்தினை உறுதி செய்தல்.

10. கறவை மாடுகளுக்கான தீவனம் மற்றும் பிற அத்தியாவசிய உள்ளீடுகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

11. செயற்கைக் கருவூட்டல்மூலம் கருத்தரித்தல் விகிதத்தை 48.50 சதவிகிதமாக உயர்த்துதல்.

12. கால்நடை நலனை, துறையின் முக்கிய நோக்கமாகக் கொண்டு கால்நடைகளை 100 சதவிகிதம் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

13. சூரிய ஆற்றல் சக்தி மற்றும் மேகக் கணினி சார்ந்த தொலைநிலை கண்காணிப்பு அமைப்பு போன்ற புதுமையான அணுகுமுறைகளைக் கொண்டு அமைப்பை வலுப்பெறச் செய்தல்.

நிலையான அபிவிருத்திக்கான நோக்கங்கள் மற்றும் பால் வளத் துறையின் நடவடிக்கைகள்

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக்கொண்ட நிலையான அபிவிருத்திக்கான பன்னாட்டு வளர்ச்சியை எட்ட வேண்டிய இலக்குகள் பற்றிய முன்மொழிவுகள், இப்போதும் மற்றும் எதிர் காலத்திலும், மக்களுக்கும் பூமியில் அமைதி மற்றும் செழிப்புக்கான பகிரப்பட்ட வரைபடத்தை வழங்குகிறது. இது நிலையான வளர்ச்சிக்கான 17 குறிக்கோள்களைக் கொண்டு, இது வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளை உலகளாவிய கூட்டுறவுக்கு அனைத்து நாடுகளும் நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுக்கிறது.

பால் வளத் துறையானது, வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள் எண் 2.0 பசியின்மை, பசியை ஒழித்தல், பட்டினியை விரட்டுதல், உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை எய்துதல் மற்றும் நிலையான வளங்குன்றா வேளாண்மையை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். மேலும்,

இத்துறையானது, இலக்கு எண் 2.3 மற்றும் 2.அ அடைவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிக்கோள் 2.3, 2030 ஆம் ஆண்டிற்குள் சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்தித் திறனை மற்றும் வருமானத்தை இரட்டிப்பாக்குதல், குறிப்பாக பெண்கள், பழங்குடி மக்கள், குடும்ப விவசாயிகள், ஆயர், நிலம், பிற உற்பத்தி வளங்கள் மற்றும் உள்ளீட்டு அறிவு, நிதிச் சேவைகள், சந்தைகள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பான மற்றும் சமமான அணுகல் உட்பட மதிப்புக் கூட்டல் மற்றும் பண்ணை அல்லாத வேலைவாய்ப்புகளை ஊக்குவித்தல்.

குறிக்கோள் 2.அ-வளரும் நாடுகளில் மற்றும் குறிப்பாக குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக, கிராமப்புற உட்கட்டமைப்பு, விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலை மற்றும் கால்நடை மரபணு வங்கிகளில் மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்புமூலம் முதலீட்டை அதிகரித்தல்.

இலக்குகளை அடைவதற்கான வருடாந்திர செயல்திட்டம்

- கூட்டுறவு அமைப்பின்கீழ் அதிக அளவிலான பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு வருதல்.
- அடுத்த 5 ஆண்டுகளில், தற்போது கறவை மாடுகளிடமிருந்து நாளொன்றுக்குப் பெறப்படும் பாலின் அளவினை 6.69 லிட்டரிலிருந்து 7.02 லிட்டராக உயர்த்துவது.
- ஒரு வருடத்திற்கு ஒரு கன்று என்ற இலக்கை அடைவது.
- சமச்சீர் தீவன முறையை நடைமுறைப்படுத்துதல்.
- கறவை மாட்டுக் கடன் வழங்குவதன்மூலம் அதிக அளவிலான கறவை மாடுகளை அதிகரிக்கச் செய்தல்.
- கறவை மாடுகளுக்கான காப்பீட்டை விரிவடையச் செய்தல்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.
- செயலிழந்த சங்கங்களைப் புத்துயிரூட்டி செயல்படும் சங்கங்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளுதல்

2020 மார்ச் 24]

- புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்.
- அனைத்து பால் பண்ணைகளிலும் தூய பால் உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலும் தானியங்கி பால் சேகரிப்பு மையங்கள் மற்றும் வெவ்வேறு கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிர்விப்பான்களை அதிக எண்ணிக்கையிலான சங்கங்களில் நிறுவுதல்
- அனைத்து நிலைகளிலும் பாலின் வெப்பநிலையைப் பராமரித்து பாலின் ஆரம்ப தரத்தை உறுதி செய்தல்.
- அதிகரித்துவரும் பால் உற்பத்தியை எதிர்கொள்ள அனைத்து பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.
- மாநில அரசு, மத்திய அரசு மற்றும் மத்திய-மாநில அரசாங்கங்களிடமிருந்து பெறப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குதல்.
- புதிய பால் பொருட்கள் அறிமுகம் மற்றும் வியாபாரத்தில் புதிய உத்திகளைக் கையாளுதல்மூலம் விற்பனையை மேம்படுத்துதல்.

இத்துறையானது, அரசாணை (நிலை) எண் 184, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 26-12-2019-ன்படி வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்துவதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறை, மாநில மற்றும் மாவட்ட களப் பணியாளர்கள் மற்றும் இதர வளங்குன்றா வளர்ச்சித் திட்ட குழுக்களுடன் இணைந்து செயல்படும். இவ்வாறாக பல்வேறு திட்டங்கள்மூலம் பால் வளத் துறையானது, வளங்குன்றா வளர்ச்சித் திட்டங்களை எய்த திட்டமிட்டுள்ளது.

21. பால் கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்

பால் கூட்டுறவுகளின் மூன்றடுக்கு அமைப்பு அந்த சங்கங்களின் உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகள்

1988-ல் தெரிவித்துள்ள வழிவகைகளின்படி, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.

பால் கூட்டுறவு சங்க நிருவாகக் குழு உறுப்பினருக்கான தேர்தலில் பால் ஊற்றும் உறுப்பினர்கள் மட்டுமே போட்டியிடவும், வாக்களிக்கவும் முடியுமென்பதால், மற்ற கூட்டுறவுகளிலிருந்து பால் கூட்டுறவு தனித்துவத்துடன் உள்ளது.

ஏப்ரல் 2018 உடன் முந்தைய நிருவாகக் குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்ததால், புதிய நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு, முதல்நிலையில் 6,539 தொடக்கப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 4 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. 6,290 புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவானது, அந்தந்தச் சங்கங்களின் நிருவாகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டது. மீதமுள்ள 249 சங்கங்களில் நீதித் துறை தலையீடு காரணமாகவும், தகுதியற்ற வாக்காளர்கள்/வேட்பு மனு பெறப்படாத காரணத்தினாலும், தேர்தல் செயல் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் கட்டத்தில், 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள் துவக்கப்பட்டு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவானது, 23 மாவட்ட ஒன்றியங்களுக்கான நிருவாகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டது. மதுரை மற்றும் தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கான தேர்தல் நீதிமன்ற வழக்குகள் காரணமாக நடத்தி முடிக்க இயலவில்லை. இந்நிலையில், நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வரும்போது தமிழ்நாடு கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மூன்றாம் நிலையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கான நிருவாகக் குழு தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பணிகள் ஜனவரி 2019-லேயே துவங்கப்பட்டபோதிலும், நீதிமன்ற உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், நீதிமன்ற வழக்கு முடிவடைந்த நிலையில் இதர இரு மாவட்ட ஒன்றியங்களுக்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையத்திடம் கலந்தாலோசித்து தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2020 மார்ச் 24]

இதுதவிர, இடைக்கால நிருவாகக் குழுவின் பதவிக் காலம் காலாவதியாகும் மற்றும் முந்தைய அட்டவணையில் நியமனம்/ தகுதியான வாக்காளர்கள் இல்லாத புதிதாக உருவாக்கப்பட்ட/ புதுப்பிக்கப்பட்ட சங்கங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு வருகின்றன.

22. முன்னேற்ற பாதை

- பசுந்தீவனம், கால்நடை தீவனம், தாது உப்புக்கலவை போன்ற உள்ளீடுகளை மானிய விலையில் வழங்கி, கால்நடை பராமரிப்பு செலவினத்தைக் குறைப்பதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலினை முழுவதுமாக கொள்முதல் செய்ய பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

- நிருவாக செலவுகள் மற்றும் நடைமுறை செலவுகளைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதுள்ள இயந்திரங்களை நவீனமயமாக்கி, அதன் செயல்திறனை அதிகரிப்பதன் மூலமும், பால் பண்ணைகளின் கையாளும் திறனை முழுவதும் பயன்படுத்துவதன் மூலமும் செலவினங்கள் குறைக்கப்படும்.

- இலாபத்தை அதிகரிக்கும் நோக்கில், அதிக மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டிற்கான இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கான விற்பனை வருவாய் ரூ.6,856 கோடி அளவாக எதிர்பார்க்கப்படுகிறது.

- பால் பொருட்களின் ஆயுளை அதிகரிக்க நவீன தொழில்நுட்ப முறை செயல்படுத்தப்படும்.

- பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சாத்தியக்கூறுகள் உள்ள பகுதிகளில் புதிதாக தொடக்கப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதிக பால் உற்பத்தியாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

- வெளி நாடுகளில் ஆவினின் டெட்ரா பால் மற்றும் பால் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

- பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பேருந்து நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை அதிகரிக்க கவர்ந்திழுக்கும் கருத்திற்கினிய விளம்பரங்கள் செய்யவும், ஆவின் பார்லர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பால் உற்பத்தியாளர்களுக்கு கலப்படமற்ற சுத்தமான பால் உற்பத்தி செய்வது குறித்தான விழிப்புணர்வுப் பயிற்சிகள் அளிப்பதன்மூலம் கிராம அளவிலேயே தரமான பால் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான தீவனங்களை வறட்சி காலங்களில் பயன்படுத்துவதற்காக சேமித்து வைக்க தீவன வங்கிகள் உருவாக்கப்படும். இதற்காக, விவசாயிகளின் நிலத்தில் தீவனம் பயிரிட தீவன விதைகள், நீர்ப்பாசன வசதிகள் வழங்க ஏற்பாடு செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

23. நிதி ஒதுக்கீடு

பால் வளத் துறைக்கான 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுக் கணக்கில் ரூ.31.11 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில், ரூ.31.11 கோடி வருவாய் செலவினமாகும். ரூ.2,000 மூலதன செலவினமாகும்.

பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தணிக்கைத் துறை நேரடியாக நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு செல்லப்பட்டதால், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மேற்கண்ட தணிக்கைத் துறைக்கான நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு இந்த கோரிக்கையின்கீழ் வழங்கப்படவில்லை.

எனவே, இந்த ஆண்டு நிதிஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் குறைவு காணப்படுகிறது.

2020 மார்ச் 24]

2011-2012 முதல் 2020-2021 வரையிலான நிதி ஒதுக்கீடு

ஆண்டு	நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
2011-2012	65.72
2012-2013	51.25
2013-2014	35.97
2014-2015	81.91
2015-2016	98.18
2016-2017	101.21
2017-2018	118.63
2018-2019	118.02
2019-2020	246.84
2020-2021	31.11

24. முடிவுரை

பால் வளத் துறை, பால் உற்பத்தியாளர்கள்/விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக உயர்த்தும் நோக்கத்தை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதனைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்கள் மற்றும் உத்திகள் செயல்படுத்துவதற்கான நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

பால் கூட்டுறவுகள் குறித்த ஒரு பார்வை

வ. எண்	பொருள்	எண்ணிக்கை
1	பால் கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை (31-12-2019)	9,988
2	2019-2020 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் (எண்ணில்)	225
3	2019-2020 ஆம் ஆண்டில் புத்துயிரூட்டப்பட்ட நலிவடைந்த சங்கங்கள் (எண்ணில்)	71


வ. எண்	பொருள்	எண்ணிக்கை
4	தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	20.21
5	பால் வழங்கும் உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	4.03
6	சங்கங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	37
7	மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை	25
8	மாநில அளவிலான இணையம்	1
9	ஒன்றியங்களில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	33.8
10	சென்னை மாநகரில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	12.05
11	மாவட்ட ஒன்றியங்களில் பால் விற்பனை (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	10.75
12	ஒன்றிய பால் பண்ணைகளின் எண்ணிக்கை	18
13	இணையத்தின் பால் பண்ணைகள் எண்ணிக்கை	5
14	ஒன்றியங்களின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	29.71
15	இணையத்தின் பால் பண்ணைகள் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	18.65
16	பால் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை	34

2020 மார்ச் 24]


வ. எண்	பொருள்	எண்ணிக்கை
17	குளிரூட்டும் நிலையங்களின் கையாளும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	14.25
18	மொத்த பால் குளிர்விப்பான்கள் எண்ணிக்கை	377
19	மொத்த பால் குளிர்விப்பான்கள் குளிர்விக்கும் திறன் (நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)	16.87
20	மாவட்ட ஒன்றிய அளவிலான பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை	304
21	சென்னை மாநகர பால் விநியோக வழித்தடங்கள் எண்ணிக்கை	157
22	பால் பவுடர் பண்ணைகளின் எண்ணிக்கை (ஈரோடு, சேலம், மதுரை, தருமபுரி மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் இணையம்)	5
23	பால்பவுடர் உற்பத்தித்திறன் (மெ.டன்/நாள்)	90
24	வெண்ணெய் சேமிக்கும் திறன் (மெ.டன்)	4,509
25	பால் பவுடர் சேமிக்கும் திறன் (மெ.டன்)	6,950

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாட்டில் பால் உற்பத்தி




சராசரி பால் கொள்முதல்
(நாளொன்றுக்கு இலட்சம் லிட்டரில்)




கூட்டுறவு பால் பண்ணைகளின் குளிரூட்டும் மற்றும் பதப்படுத்தும் கொள்திறன் விவரங்கள் (இலட்சம் லிட்டரில்)




கால்நடை தீவன விற்பனை அளவு
(மெட்ரிக் டன்னில்)



கால்நடை தீவன விற்பனை மதிப்பு
(ரூபாய் கோடியில்)




தாது உப்பு கலவை விற்பனை அளவு (மெட்ரிக் டன்னில்)




[2020 மார்ச் 24]


தாது உப்பு கலவை விற்பனை மதிப்பு
(ரூபாய் கோடியில்)



மாவட்ட ஒன்றியங்களின் விற்பனை வருவாய்
(ரூபாய் கோடியில்)



இணைய விற்பனை வருவாய்
(ரூபாய் கோடியில்)



இணைப்பு XVII

(50 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முகவுரை

கடந்த எழுபதாண்டுகளில் மாறிவரும் இந்திய பொருளாதாரத்தை வேகமாகவும், துடிப்புடனும் முன்னெடுத்து செல்வதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முன்னிலை வகிக்கிறது. மேலும், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவும் வகையில் குறைந்த முதலீட்டில் தொழில்முனைவோர்களை உருவாக்குவதிலும் அதிக அளவில் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதிலும் இத்துறை வேளாண் துறைக்கு அடுத்தபடியாக விளங்குகிறது. கனரக தொழில்களுக்கு குறிப்பிடத்தக்க வகையில் துணையாக இருப்பதோடல்லாமல் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், சீரான வட்டார வளர்ச்சிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்களிக்கின்றன. உலகளாவிய உயர்மதிப்பு தொடரமைப்பின் பகுதியாக விளங்குவதன்மூலம் நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விரைவான வளர்ச்சியை எய்தவுள்ளன.

1.1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வகைப்பாடு

2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பீட்டின் (நிலம் மற்றும் கட்டடங்கள் நீங்கலாக) அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வகைப்பாடு

வகைப்பாடு	உற்பத்தி நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு	சேவை நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு
குறு நிறுவனங்கள்	ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல்	ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல்
சிறு நிறுவனங்கள்	ரூ.25 இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.5 கோடிக்கு மிகாமல்	ரூ.10 இலட்சத்திற்கு மேல் மற்றும் ரூ.2 கோடிக்கு மிகாமல்
நடுத்தர நிறுவனங்கள்	ரூ.5 கோடிக்கு மேல் மற்றும் ரூ.10 கோடிக்கு மிகாமல்	ரூ.2 கோடிக்கு மேல் மற்றும் ரூ.5 கோடிக்கு மிகாமல்

1.2. இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை விளங்குகிறது. பதிவு செய்யப்படாத வேளாண்மை சாராத உற்பத்தி, வர்த்தகம் மற்றும் இதர சேவைத் துறை மீதான 73-வது தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, 11.10 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் 633.88 இலட்சம் நிறுவனங்கள் வாயிலாக, நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சுமார் 51% அளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ளன. மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 29.70 விழுக்காடும், இந்திய ஏற்றுமதியில் 49.66 விழுக்காடும் பங்களிப்பு செய்து சுமார் 8,000 வகையான மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், இப்பிரிவு, குறு நிறுவனங்கள் முதல் நடுத்தர நிறுவனங்கள் வரை பல்வேறு நிலைகளில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களாக செயல்படுகின்றன.

1.3. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தமிழ்நாடு அரசின் உயிர்ப்புள்ள தொலைநோக்குப் பார்வையிலான கொள்கைகளும் தொழில்முனைவோராக உருவாக

2020 மார்ச் 24]

வேண்டும் என்ற மக்களின் வெல்வதற்குரிய முனைப்பும், ஆர்வமும் இணைந்து, தமிழ்நாட்டை, இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் முதல் மூன்று சிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழச் செய்துள்ளன. இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் 2018-2019 ஆம் ஆண்டறிக்கையின்படி, தமிழ்நாடு 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்டு நாட்டில் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில், 18-3-2020 வரை, சுமார் 22.65 இலட்சம் நிறுவனங்கள், சிறு தொழில் சான்று/தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி-II/உத்யோக் ஆதார் பதிவறிக்கையில் பதிவு செய்யப்பட்டு ரூ.2,56,488.37 கோடி முதலீட்டில் சுமார் 1.448 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளன. அதுமட்டுமன்றி, உத்யோக் ஆதார் பதிவறிக்கை பதிவு செய்யப்படுவதில் இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாமிடம் வகிப்பதுடன், ஜவுளி, ஆயத்த ஆடைகள், பொறியியல் பொருட்கள், தானியங்கி வாகன உதிரி பாகங்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களின் உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. (இணைப்பு-1)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏப்ரல் 2019 முதல் செப்டம்பர் 2019 வரை வழங்கப்பட்ட ரூ.33,031.78 கோடி கடன் தொகையில் ரூ.15,926.60 கோடி (48.22%) குறுந்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1.4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் முக்கிய அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன:

அ) தொழில் வணிக ஆணையரகம் [Commissionerate of Industries and Commerce]

ஆ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் [Tamil Nadu Small Industries Development Corporation Ltd. (TANSIDCO)]

இ) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் [Tamil Nadu Small Industries Corporation Ltd. (TANSI)]

ஈ) தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் [Entrepreneurship Development and Innovation Institute – Tamil Nadu (EDII-TN)]

உ) தாய்கோ வங்கி/இன்கோசர்வ் மற்றும் சேகோசர்வ் [TAICO Bank/INDCOSERVE/SAGOSERVE] போன்ற கூட்டுறவு நிறுவனங்கள்

ஊ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு [MSME Trade and Investment Promotion Bureau (M-TIPB)]

1.5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கான சிறந்த மாநில விருது

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு பங்காற்றி வரும் சிறந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ஆண்டுதோறும் தேசிய விருது வழங்கி வருகிறது. இப்பிரிவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு மிகச் சிறப்பாக பங்காற்றியதற்காக தமிழ்நாடு அரசு தேசிய அளவில் 3-வது சிறந்த மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதனைப் பாராட்டி, மைய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் தேசிய விருது 26-2-2020 அன்று இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம் பொதுவாக மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த தலைமையகமாக விளங்குவதுடன் பொறுப்பான்மையுடன் கீழ்க்காணும் பணிகளையும் செயல்படுத்தி வருகிறது:

- மாநிலத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்குதல்.
- வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்தல்.
- மாநிலம் முழுமைக்குமான சமச்சீரான தொழில் வளர்ச்சியை உறுதி செய்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நீடித்த வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.
- பயிற்சித் திட்டங்கள்மூலம் தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான வர வேண்டிய நிலுவைத் தொகையினை, கால தாமதமின்றி பெற்றுத்தர, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன வசதியாக்க குழுக்கள்மூலம் தீர்வு காணுதல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அரசுக்கு முன்வைத்தல்.
- தொழில் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி நிருவகித்தல்.
- மாநிலத்தில் பல்வேறு துறைகளுக்கு இடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்தல்.

- மாநில அரசின்கீழ் இயங்கும் பல்வேறு பொதுத் துறை நிறுவனங்களுக்கு நிதி பெற்று வழங்குதல் மற்றும் திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

2.1. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புத்துயிரூட்டுவதற்கான புதிய முயற்சிகள்

2.1.1. 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம்/ விதிகள்

இந்தியாவின் மிக முதன்மையான தொழில் முதலீட்டுக்களமாக தமிழ்நாட்டை மாற்றும் உயரிய நோக்கத்திற்கு துணைசெய்யும் விதமாக தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம், முதலீட்டாளர்கள், தேவையான விவரங்களைப் பெறவும் அதன் அடிப்படையில் தெளிவான தொழில் முதலீட்டு முடிவுகளை மேற்கொள்வதற்கும், தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும் அல்லது ஏற்கெனவே உள்ள தொழில்களை விரிவாக்குவதற்கும் தேவையான உரிமங்கள், அனுமதிகள் மற்றும் தொழில் நடத்தும்போது புதுப்பிக்கப்பட வேண்டிய அனுமதிகள் ஆகியவற்றை, குறிப்பிட்ட கால அளவிற்குள் பெறுவதற்கு ஏதுவான வகையில், விண்ணப்பங்கள் ஒரே முனையில் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், இச்சட்டம் திறன்மிக்க குறைதீர்க்கும் நடைமுறையை உருவாக்கி உள்ளதோடு, நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அளவிற்குள் செயல்படத் தவறும் அலுவலர்களுக்கு தண்டனை விதிப்பதையும் உறுதி செய்கிறது.

இச்சட்டத்தின்கீழ், தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்குத் தேவையான முன் அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் புதுப்பித்தல், ஊக்கத் தொகைகள் உள்ளிட்ட 54 வகையான ஒப்புதல்கள் மற்றும் மானியங்கள் ஆகியவை கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த ஒற்றைச் சாளர அமைப்பினைச் செயல்படுத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மாவட்ட தொழில் மையங்களும், பெருந்தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பும் வழிகாட்டு முகமைகளாக நியமிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டம், ஒற்றைச் சாளர அமைப்பு முறையை சிறப்பாக செயல்படுத்துவதற்காக கீழ்க்காணும் 3 அடுக்கு முறை உருவாக்கியுள்ளது:

1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாவட்ட அளவிலான ஒற்றைச் சாளர குழு
2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாநில அளவிலான ஒற்றைச் சாளர குழு
3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான முதலீடு, மேம்பாடு மற்றும் கண்காணிப்பு வாரியம்

2.1.2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன அனுமதிகளுக்கான ஒற்றைச் சாளர முறை

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வரும் தொழில்முனைவோர்களுக்குத் தேவையான தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை பல்வேறு துறைகளிடமிருந்து பெறுவதற்கு ஏற்ப ஒற்றைச் சாளர தீர்வகம் வாயிலாக விரைந்து பெற்று அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் வணிக நடவடிக்கைகளை எளிதாக்கும் பணிகளை மேம்படுத்திட உறுதிபூண்டுள்ளது. இதனைச் செயலாக்கும் பொருட்டும் தொழில்முனைவோர் நட்புறவுச் சூழலை உருவாக்கும் பொருட்டும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய வர்த்தக சமூகத்தினருக்கு உகந்த சூழலை உருவாக்கியுள்ளது. இதற்காக அரசு, இணையத் தொழில்நுட்பம் வாயிலாக ஒற்றைச் சாளரத் தகவினை அறிமுகம் செய்து, தேவையான சேவையை, உரிய காலத்திற்குள் வெளிப்படை தன்மையுடன் பெற்றிட வழிவகை செய்துள்ளது. இந்த ஒற்றைச் சாளரத் தீர்வகம் வழியாக, நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு துறை, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககம் போன்ற 15 அரசுத் துறைகளின்மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான 39 வகையான உரிமங்களை வழங்குதல் மற்றும் அனுமதிகளைப் புதுப்பித்தல் ஆகிய சேவைகளைப் பெற இயலும். மாநில அளவில் 29-2-2020 வரை, 1,027 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றில் 93.67 விழுக்காடு அளவுக்கு 962 விண்ணப்பங்கள்மீது தீர்வு எட்டப்பட்டுள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான இணையதள வழி ஒற்றைச் சாளர தகவுமூலம் பயன் பெற "https://www.easybusiness.tn.gov.in/msme" என்ற இணைய முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

2.1.3. இணையவழி திட்ட செயலாக்கம்

தொழில் வணிக ஆணையரகத்தால் நிருவகிக்கப்படும் அனைத்துத் திட்டங்களுக்குமான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை இணையம் வழியாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மின்னணுவியல் கட்டமைப்பு, மனிதர்களின் எவ்விதத் தலையீடுமின்றி உரிய நேரத்தில், பயனாளிகளே நேரடியாக தங்களின் விண்ணப்பத்தோடு தேவையான ஆவணங்களைப் பதிவிறக்கம்/பதிவேற்றம் செய்யவும், விண்ணப்பத்தின் நிலையை அவ்வப்போது அறிந்துகொள்ளவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழில்முனைவோருக்கான கடன் மற்றும் மானியங்கள் உரிய காலத்திற்குள் வழங்கப்படுவதை முறையாக கண்காணிப்பதற்கு, இயக்குநரகத்திற்கும், சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும் ஒரு சிறந்த கருவியாகத் திகழ்கிறது.

பல்வேறு திட்டங்களுக்கான விண்ணப்பங்களை https://msmeonline.tn.gov.in என்ற இணைய முகவரியில் பதிவிடலாம்.

2.2. மாவட்ட தொழில் மையங்கள்

தொழில் ஆணையரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ், 32 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. மாவட்ட தொழில் மையங்கள், தொழில்முனைவோருக்கு உகந்த திட்டங்களை அடையாளம் காட்டுவது, திட்ட அறிக்கைகள் தயாரிப்பது மற்றும் நிறுவனங்களுக்கு பல்வேறு அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்கு தேவையான உதவிகளை அளிக்கும் பொறுப்போடு, தொழில் திட்டங்களுக்கு, அரசின் திட்டங்களின்கீழ் நிதி உதவி மற்றும் மானியம் வழங்கும் பொறுப்பையும் கொண்டுள்ளன.

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், செங்கல்பட்டு மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கான மாவட்ட தொழில் மையங்கள் தொடங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.3. உத்யோக் ஆதார் பதிவு அறிக்கை

தொழில் நடத்துவதை எளிதாக்கும்பொருட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில், இலக்கை எளிதில் அடைய EM பகுதி I மற்றும் II என இரு கட்டங்களாகத் தாக்கல் செய்வதற்குப்

2020 மார்ச் 24]

பதிலாக, ஒரே கட்டத்தில் தாக்கல் செய்யும் வகையில் உத்யோக் ஆதார் பதிவு முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையால் பராமரிக்கப்படும் http://udyogaadhaar.gov.in எனும் வலைதளத்தில் கட்டணம் ஏதுமின்றி உத்யோக் ஆதார் பதிவைப் பதிவேற்றம் செய்ய இயலும். இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய இயலாத சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் மையங்கள் விவரங்களைப் பெற்று தொழில்முனைவோர் சார்பாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம். உருவாக்கப்பட்ட உத்யோக் ஆதார் எண், சம்பந்தப்பட்ட தொழில்முனைவோருக்கு மின் அஞ்சல்மூலம் அனுப்பப்படும். இதற்காக எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

2006 ஆம் ஆண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சட்டத்தின்படி, EM பகுதி-II பதிவு பெற்றவர்கள் அல்லது சிறு தொழில்முனைவோராக பதிவுச் சான்றை பெற்றுள்ளவர்கள் இந்த உத்யோக் ஆதார் எண்ணைப் பெற வேண்டிய அவசியமில்லை. எனினும், விருப்பத்தின்பேரில் அவர்களும் இதனைப் பதிவேற்றம் செய்யலாம். உத்யோக் ஆதார் பதிவறிக்கையின் பல்வேறு பிரிவுகள் பின்வருமாறு:

உத்யோக் ஆதார் பதிவறிக்கையின் வகைகள்

நிறுவனங்கள்	உத்யோக் ஆதார் வகை	பிரிவு	இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மீதான முதலீட்டு அளவு
குறு நிறுவனங்கள்	A	உற்பத்தி	ரூ.25 இலட்சம் மிகாமல்
	D	சேவை	ரூ.10 இலட்சம் மிகாமல்
சிறு நிறுவனங்கள்	B	உற்பத்தி	ரூ.25 இலட்சத்திற்கு மேல் எனினும் ரூ.5 கோடிக்கு மிகாமல்
	E	சேவை	ரூ.10 இலட்சத்திற்கு மேல் எனினும் ரூ.2 கோடிக்கு மிகாமல்

நிறுவனங்கள்	உத்யோக் ஆதார் வகை	பிரிவு	இயந்திரம் மற்றும் தளவாடங்கள் மீதான முதலீட்டு அளவு
நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்	C	உற்பத்தி	ரூ.5 கோடிக்கு மேல் எனினும் ரூ.10 கோடிக்கு மிகாமல்
	F	சேவை	ரூ.2 கோடிக்கு மேல் எனினும் ரூ.5 கோடிக்கு மிகாமல்

2.4. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியங்கள் பின்வருமாறு:

2.4.1. முதலீட்டு மானியம்

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை

- மகளிர், ஆதி திராவிடர்/பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தொழில்முனைவோராக உள்ள நேர்வுகளில் தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சான்றின் பேரில் அந்நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திரத் தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.3.00 இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியமாக வழங்கப்படும்.

- தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம், வேலைவாய்ப்பு உற்பத்தி மானியம் வழங்கப்படும்.

2020 மார்ச் 24]

அடிப்படைத் தகுதிகள்

மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்

தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்கண்ட 14 சிறப்பு வகை சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் (கூடுதல் முதலீட்டு மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் நீங்கலாக):

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல்பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்
4. மருந்து மற்றும் மருத்துவப் பொருட்கள்
5. சூரிய சக்திப் பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள்
8. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள்
9. சிக்கன அடக்கவிலை கட்டுமானப் பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள்
11. உணவு பதப்படுத்துதல்
12. நெகிழி (ஒரு முறை மட்டும் பயன்படுத்தி எறியப்படும் நெகிழி நீங்கலாக)
13. இரப்பர் உற்பத்தி நிறுவனங்கள்
14. 'ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கு' பதிலான மாற்று பொருட்கள்

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 251 வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்

- மேற்கண்ட வகைகளைச் சார்ந்த, தற்போது இயங்கி வரும் நிறுவனங்களின் விரிவாக்கம் மற்றும் நடப்புத் தொழில்களில் மாற்றங்கள்.

2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 14,842 நிறுவனங்களுக்கு ரூ.930.00 கோடி மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 2,056 நிறுவனங்களுக்கு ரூ.148.27 கோடி மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது (இணைப்பு-2.1).

2.4.2. குறைந்தழுத்த மின் மானியம்

20% குறைந்தழுத்த மின் மானியம், தொழில் நிறுவனங்கள், வணிக ரீதியாக உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள், இவற்றில் எது பிந்தியதோ, அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு, பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்படும்:

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 251 வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார், சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்
- மேற்கண்ட வகைகளைச் சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்களின் விரிவாக்கம் மற்றும் நடப்புத் தொழில்களில் மாற்றங்கள்.

2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 8,164 நிறுவனங்களுக்கு ரூ.49.64 கோடி குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 802 நிறுவனங்களுக்கு ரூ.5.65 கோடி குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு-2.2)

2.4.3. மின்னாக்கி மானியம்

இம்மானியத் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்

2020 மார்ச் 24]

வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் 25 சதவிகிதம் (320 KVA வரை), அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மின்னாக்கி மானியம் வழங்கப்படும்.

2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 8,759 நிறுவனங்களுக்கு ரூ.101.48 கோடி மின்னாக்கி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 169 நிறுவனங்களுக்கு ரூ.0.96 கோடி மின்னாக்கி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு -2.3)

2.4.4. பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல், பணிகளுக்காக உத்தரவாத நிதி ஆதாரத் திட்டத்தின்கீழ் பெறக்கூடிய ரூ.1.00 கோடி வரையிலான கடன்களின்மீது 5 ஆண்டுகளுக்கு, கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு என்ற அளவில், அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை, பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

(அ) 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 612 நிறுவனங்களுக்கு ரூ.5.18 கோடி, தொழில்நுட்ப மேம்பாடு, நவீனமயமாக்கல்-பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 81 நிறுவனங்களுக்கு ரூ.0.27 கோடி தொழில்நுட்ப மேம்பாடு, நவீனமயமாக்கல்-பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. [இணைப்பு-2.4 (அ)]

(ஆ) 2011-2012 முதல் 2018-2019 ஆண்டு வரை 503 நிறுவனங்களுக்கு ரூ.1.19 கோடி, கடன் உத்தரவாத நிதி ஆதார திட்ட பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 136 நிறுவனங்களுக்கு ரூ.0.25 கோடி, கடன் உத்தரவாத நிதி ஆதார திட்ட பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. [இணைப்பு 2.4 (ஆ)]

மேற்கண்ட தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் ஆகிய கடன் திட்டங்களுக்கான பின்முனை மானிய வட்டி விகிதத்தை 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

[2020 மார்ச் 24

2.4.5. ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தும் ஆற்றலை தணிக்கை செய்து, ஆற்றலை சேமித்து, உற்பத்தி செலவைக் குறைத்து, நிறுவனத்தின் இலாபத்தை அதிகப்படுத்த ஏதுவான மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடும் வகையிலான 'ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம்' என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை செலவில் 50%, அதிகபட்சம் ரூ.75,000/- வரையும், ஆற்றல் சேமிப்பிற்காகப் பெறப்படும் தொழில்நுட்பம், நிறுவப்படும் எந்திரங்களுக்கான மதிப்பில் 25%, அதிகபட்சம் ரூ.2,00,000/- வரையும் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

2.4.6. தரச் சான்றிதழ் பெறுவதற்கான மானியத் திட்டம்

தமிழ்நாடு அரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தரமான செயல்முறை மற்றும் பொருட்களை உருவாக்குவதற்கான தரச் சான்றிதழ்களான சர்வதேச தரச் சான்றிதழ் ISO 9000/ISO 14001/ISO22000, ஆபத்து பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாட்டு (HACCP), நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ் (GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ் (GMP), இந்திய தரச் சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED) மற்றும் இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பன்னாட்டு தரச் சான்றிதழ் பெறுவதை ஊக்கப்படுத்துவதற்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, தரச் சான்றிதழ் பெறுவதற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செலுத்திய கட்டணம், அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை திரும்ப வழங்கப்படும்.

2.5 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

தமிழ்நாடு அரசால், சமுதாயத்தில் பின்தங்கியுள்ளவர்களை முன்னேற்றவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உற்பத்தி நிறுவனங்கள் தொடங்கிட, அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரையிலும், சேவை மற்றும் வியாபார நிறுவனங்கள் தொடங்கிட அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரையிலும் வங்கிகள்மூலம் கடன் வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 25%, அதிகபட்சம் ரூ.1,25,000/- வரை அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற, விண்ணப்பதாரர்கள் https://www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

தகுதிகள்:

குறைந்தபட்ச வயது வரம்பு	18 வயது
அதிக பட்ச வயது வரம்பு	35 வயது (பொது பிரிவினர்)
சிறப்புப் பிரிவினர்	45 வயது (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பெண்கள்/மாற்றுத் திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர் / திருநங்கைகள்)
கல்வித் தகுதி	8 ஆம் வகுப்பு தேர்ச்சி.

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 2011-2012 முதல் 2018-2019 வரை, 37,880 நிறுவனங்களுக்கு ரூ.186.98 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 2,679 நிறுவனங்களுக்கு ரூ.20.03 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 2.5)

மேலும், இத்திட்டத்திற்கான திட்ட உச்சவரம்பு ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.15.00 இலட்சமாக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியத் தொகை ரூ.1.25 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

[2020 மார்ச் 24

2.6. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

"புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்"-ஆனது படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோராக மாற்றுவதற்கான தமிழ்நாடு அரசின் மிக முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் 2012-2013 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

பயனாளிகள், பொதுப் பிரிவினர் 21 வயதுக்கு மேல் 35 வயது வரை, சிறப்புப் பிரிவினர் மற்றும் பெண்கள் 21 வயது முதல் 45 வயது வரை என்ற வரம்புகளுக்கும், ஏதாவதொரு பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி மையம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ், நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டின்படி, ஒவ்வோர் ஆண்டும் 1,000 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால், தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மொத்த பயனாளிகளில், 50 விழுக்காடு மகளிருக்கு என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஆதரவற்ற பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பயனாளிகள் உற்பத்தி மற்றும் சேவைத் தொழில் நிறுவனங்களைத் தொடங்க, திட்ட அறிக்கை தயாரிக்கவும், வங்கிகள்/தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றிடமிருந்து காலக்கடன் பெறுவதற்கும் என அனைத்து விதமான உதவிகளும் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகளில் காலி மனைகள்/தொழிற்கூடங்கள் இருக்கும் நிலையில், அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படும்.

திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25 விழுக்காடு தனிநபர் முதலீட்டு மானியமாகவும், (ரூ.30.00 இலட்சத்திற்கு மிகாமல்) வங்கிக் கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு பின்முனை மானியமாக கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் முழுவதும் வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் ரூ.10.00 இலட்சத்திற்கு மேலும், அதிகபட்சம் ரூ.5.00 கோடியாகவும் உள்ளது.

2020 மார்ச் 24]

திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பாக பொதுப் பிரிவினருக்கு 10 விழுக்காடும், சிறப்புப் பிரிவினருக்கு 5 விழுக்காடும் இருத்தல் அவசியம்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 29-2-2020 வரை 5,053 நபர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு, ரூ.468.61 கோடி அரசு மானியம் பெறத்தக்க ரூ.1,874.44 கோடி திட்ட மதிப்பீட்டிலான 4,172 திட்டங்களுக்கு இறுதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, தனிநபர் முதலீட்டு மானியமாக ரூ.359.63 கோடியும், 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியமாக ரூ.32.10 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு-2.7)

இத்திட்டத்திற்கான அதிகபட்ச முதலீட்டு மானியத் தொகை ரூ.30.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.7. தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்க்காணும் திட்டங்கள் வாயிலாக அரசு உதவி வழங்கி வருகிறது:

- காப்புரிமை (கண்டறிதல் உரிமை) பதிவிற்கான விண்ணப்பத் தொகையில், ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.
- வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/- இதில் எது குறைவானதோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும்.
- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின்மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் அமைப்பதற்கு, அவற்றின் திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக, ரூ.1.00 கோடி வரை மானிய உதவி வழங்கப்படும்.
- தூய்மையான/ஆற்றல் திறன்மிக்க/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்நுட்பங்களை உருவாக்க, ‘தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி‘ தொடங்கப்படும்.

- நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடுகளை மேற்கொள்வதற்கான திறன்மிகு மற்றும் தொழில்நுட்பங்களுக்கான மையங்கள், வணிக சேவை வளர்ப்பகங்களை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு வணிக சேவை வளர்ப்பகம்/நேர்த்திமிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை மானிய உதவி வழங்கப்படும்.

2.8. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

மத்திய அரசு, புதிய குறுந்தொழில்களை உருவாக்க, 'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)' எனும் திட்டத்தை 2008-2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சமாக ரூ.25 இலட்சமும், சேவை தொழில்களுக்கு ரூ.10 இலட்சமும் திட்ட மதிப்பீடாக இருக்க வேண்டும்.

பொதுப் பிரிவினர் தங்களுடைய பங்களிப்பாக, திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடும், சிறப்புப் பிரிவினர் (ஆதி திராவிடர்/ பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்கு பகுதியினர், மலை மற்றும் எல்லை பகுதியினர்) 5 விழுக்காடும் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகை, காலக் கடனாக வங்கிகள்மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயனடைய விரும்பும் பயனாளிகள் www.kviconline.gov.in என்ற இணையதளம்மூலம் விண்ணப்பிக்கலாம்.

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 2011-2012 முதல் 2018-2019 வரை, 12,320 பயனாளிகளுக்கு ரூ.266.78 கோடி விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) 2,150 பயனாளிகளுக்கு ரூ.49.61 கோடி விளிம்புத்தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு-2.6)

மத்திய அரசு, பயனாளிகளுக்கு, கீழ்க்காணும் சதவிகிதத்தில் மானியங்களை வழங்குகிறது:

2020 மார்ச் 24]

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்-மானிய விழுக்காடு

பிரிவு	மானிய விழுக்காடு	
	நகர்ப்புறம்	**கிராமப்புறம்**
பொதுப் பிரிவு	**திட்ட மதிப்பீட்டில் 15%**	**திட்ட மதிப்பீட்டில் 25%**
சிறப்புப் பிரிவு (ஆதி திராவிடர்/ பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்குப் பகுதியினர், மலை மற்றும் எல்லை பகுதியினர்)	திட்ட மதிப்பீட்டில் 25%	திட்ட மதிப்பீட்டில் 35%

2.9. அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டம், திறன்வாய்ந்த நபர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சி அளிப்பதன்மூலம் உற்பத்தித் துறையில் திறமையான மனித வளத்தை உருவாக்க வேண்டும் என்ற நீண்ட கால தேவையை நிறைவு செய்யும் நோக்கில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சி, அதிகபட்சமாக 6 மாத காலத்திற்கு அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் ரூ.5,000/- வீதம் பயனாளிகளுக்கு வழங்கும். இதில், நபர் ஒருவருக்கு, மாதம் ரூ.2,000/- வீதம், அதிகபட்சமாக ரூ.12,000/- வரை, அரசு மானியமாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்

ஆண்டு	பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை	பயன்பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
2016-2017	20,150	1,025
2017-2018	13,365	460
2018-2019	25,246	558
2019-2020 (29-2-2020 வரை)	25,257	487

2.10. சந்தைப்படுத்துவதற்கான உதவிகள்

அரசு, குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு, கீழ்க்காணும் சந்தை வாய்ப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன:

- ஒப்பந்தப் புள்ளிகளில் கலந்துகொள்வதற்கு செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் இம்மாநிலத்திலும், வெளி மாநிலங்களிலும், நடத்தும் கண்காட்சிகளுக்கான அரங்க வாடகையில், 50 விழுக்காடு, மானியமாகத் திருப்பித் தரப்படும் அடிப்படையிலான மானியமாக வழங்குதல்.
- சந்தைப்படுத்தலில் பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்.
- அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், தங்களது பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்முதலில், குறைந்தபட்சம், 25 விழுக்காடு அளவிற்கு, உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும்.

2020 மார்ச் 24]

2.11. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

2006 ஆம் ஆண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின்படி, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் விற்பனை செய்த பொருள்களுக்கான தொகையைப் பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகளை சீர்படுத்துவதற்கான நோக்கத்துடன் அரசு, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் 2019-2020 (29-2-2020 வரை) வசதியாக்கக் குழுக்களின் 33 கூட்டங்கள் நடத்தப்பட்டு, 219 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.19.60 கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

வருடம்	குறு, சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்களின் அமர்வுகள்	தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	பெறப்பட்ட நிலுவைத் தொகை (ரூபாய் கோடியில்)
2011-2012	15	38	2.34
2012-2013	35	115	3.97
2013-2014	18	62	5.57
2014-2015	27	45	2.34
2015-2016	9	12	0.79
2016-2017	28	99	19.24
2017-2018	24	83	8.30
2018-2019	38	104	12.19
2019-2020 (29-2-2020 வரை)	33	219	19.60
மொத்தம்	227	777	74.34

[2020 மார்ச் 24

2.12. சமூக ஊடக வலைத்தளங்கள்

இன்றைய தகவல் தொழில்நுட்பவியல் நவீன உலகில், இத்துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உண்மையான தொழில் ஆர்வம் கொண்டவர்கள் பயன்பெறத்தக்க வகையிலும், முகநூல், கீச்சகம், வலையொளி போன்ற சமூக ஊடக வலைத்தளங்களில் இயக்குனரகம் பங்கு எடுக்க வேண்டியது அவசியமாகிறது. இதன்மூலம், இத்துறையின் திட்டங்கள் குறித்து மக்களின் கருத்துகளைக் கேட்டறியவும், இயக்குனரகம் குறைதீர் அமைப்பாகச் செயல்படவும், துறையின் திட்ட செயலாக்கத்தை மேம்படுத்தவும் இயலும். சமூக ஊடக வலைத்தளப் பக்கங்களின் விவரங்கள் பின்வருமாறு:

முகநூல்	**https://www.facebook.com/MSME-Department-Commissionerate-of-Industries-Comm-Govt-of-Tamil-Nadu-145263646201395**
கீச்சகம்	**https://twitter.com/icdic_tn**
வலையொளி	**https://www.youtube.com/channel/UCIzILJTFWfs6lb1-ReWek4g**

2.13. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள்

நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியமானது, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகிய பரிமாணங்களைக் கொண்ட 169 இலக்குகளுடன் ஒருங்கிணைந்த ஒன்றோடொன்று இணைந்த 17 இலட்சியங்களைக் கொண்டதாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நீடித்த வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பொது சரக்குகள் மற்றும் சேவைகள் அளித்தல் மட்டுமல்லாமல் வறுமையை ஒழிப்பதிலும், சமத்துவத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியம் 8-ல் கூறப்பட்டுள்ள நீடித்த பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான பணி ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், இலட்சியம் 9-ல் கூறப்பட்டுள்ள நீடித்த தொழில்மயமாக்குதல் மற்றும் புத்தாக்கத்தை வளர்த்தல் ஆகியவற்றை

மேம்படுத்துவதிலும் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும். இதற்கான இலக்குகள் பின்வருமாறு:

- 8.3-உற்பத்தி நடவடிக்கைகள், கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தொழில் முனைவு, உருவாக்கம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ஊக்கப்படுத்துதல்; மற்றும் எளிதான நிதிச் சேவைகள் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றின்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியைத் தூண்டுதல்.

- 9.1-அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த நிலையான தொழில்மயமாக்கலை மேம்படுத்துதல்; வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் துறையின் பங்களிப்பினை குறிப்பிடத்தக்க விகிதாச்சாரத்திற்கு உயர்த்துதல்.

- 9.3-குறுந்தொழில் மற்றும் பிற நிறுவனங்களுக்கு குறைந்த செலவிலான கடன்கள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் சேவைகளை கிடைக்கச் செய்தல்; மற்றும் மதிப்புமிக்க தொடரமைப்புகள், சந்தைகளுடன் அவற்றை இணைத்தல்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், விளிம்புநிலை மக்கள் உள்ளிட்ட பெருவாரியான மக்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் வருமானத்தை உருவாக்கித் தரக்கூடியவையாக விளங்குகின்றன. 'தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கையானது' மாநிலத்தில் நீடிக்கத்தக்க புத்தாக்க சூழலை உருவாக்குவதற்காக வெளியிடப்பட்டுள்ளது.

2019 உலக முதலீட்டாளர்கள் இரண்டாவது மாநாட்டின்போது, 12,360 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ரூ.32,205.75 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. தொழில் நிறுவனங்களை அமைப்பதற்கெனவும், மேற்படி நீடித்த நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான குறிக்கோள்களை அடைவதற்கான முதலீடுகளை ஈர்ப்பதற்கும், தொழில்முனைவோர்களுக்கு, நிதியுதவிகள், சட்டப்பூர்வமான அனுமதிகள் மற்றும் தகுதியான மானியங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் மற்றும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் போன்ற திட்டங்கள், படித்த இளைஞர்களை, முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 'எவரையும் பின்தங்க விடுவதில்லை' என்ற சிறப்புக் கவனத்துடன் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், ஆதி திராவிடர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் போன்ற விளிம்புநிலை மக்களுக்கு சுயவேலைவாய்ப்புகளை உருவாக்க உதவுகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நீடித்த வளர்ச்சிக்காக, தொழில் முனைவு மற்றும் நிலையான வேலை உருவாக்கத்தினை மையப்படுத்தி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், குழும வளர்ச்சித் திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம், வேலை பயிற்சி ஆகியவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்மூலம் வேலையில்லா மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இது அவர்களின் தொழில் திறனை மேம்படுத்தி, நிலையான வேலைவாய்ப்பு பெற உதவுகின்றது.

தொழில்முனைவோர் மற்றும் தொழில் தொடங்க முனையும் இளைஞர்களுக்கு, தொழில் திறனையும் தொழில்நுட்பத் தொடக்கங்களையும், நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளின் ஒரு பகுதியாக திகழும் புத்தாக்கமும், தொழில் முனைவுத் திறனையும் மேம்படுத்திட, தமிழ்நாடு வணிகக் காப்பகக் கூட்டமைப்பு உருவாக்கும் திட்டம் செயல்படுகிறது.

2030 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள, குறிப்பாக இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சிறந்த கருவியாக இருக்கும். தமிழ்நாடு உற்பத்தி தொழிற்காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டத்தில் 2030 ஆம் ஆண்டுகளில் இலக்கு நிர்ணயித்தலில் உள்ள சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதற்காக இத்துறை நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கண்காணித்து, வரும் சிக்கல்களை எதிர்கொண்டு வெற்றிகாண மாநில அளவில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2.14. சோதனை சேவைகள்

தயாரிப்புகள் மற்றும் மூலப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தவும், சான்றிதழ் தேவைகள் மற்றும் பல்வேறு கொள்முதல் முகமைகளால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிகளின் தரங்களைச் சான்றளித்தல் ஆகியவற்றுக்காக பல்வேறு சோதனை சேவைகளை குறைந்த கட்டணத்தில் நிறுவனங்களுக்கு வழங்க, பின்வரும் ஆய்வகங்களை அரசு அமைத்துள்ளது:

- ➢ மத்திய மின்பொருள் சோதனைக் கூடம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்.
- ➢ இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி.
- ➢ மண்டல சோதனை ஆய்வுக்கூடங்கள், மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்காகவும், மின் சாதன பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர்க்கு பரிசோதனை வசதிகள் அளிக்கவும் மாநில அரசால் திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில், 1973 ஆம் ஆண்டு மத்திய மின்பொருள் சோதனைக் கூடம் அமைக்கப்பட்டது. இந்த சோதனைக் கூடத்தில் மின் உதிரி பாகங்கள் மற்றும் மின் சாதனங்கள் உள்ளிட்ட 160 வகையான கருவிகள் இந்திய தரக்குறிப்பேட்டின்படி சோதனை செய்யப்படுகின்றன.

காக்களூரில் அமைந்துள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடம், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, சோதனைக் கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (என்.ஏ.பி.எல்) மற்றும் இந்திய தர நிர்ணய அமைவனம் (பி.ஐ.எஸ்), மத்திய நுகர்வோர் அமைச்சகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடத்தின் சோதனையைத் தொடர்ந்திடவும், மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையிலும், ஆய்வுக்கூடமானது தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மைய அதிகாரிகளால், சந்தையில் சேகரிக்கப்படும் மின் பொருட்களும், இந்திய தர நிர்ணய நிறுவனம்மூலம் சோதனைக்காக எடுக்கப்படும் மின் பொருட்களும் இந்த ஆய்வுக்கூடத்தில் சோதனை செய்யப்படுகின்றன.

[2020 மார்ச் 24

தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு மின் கொள்முதல் பற்றிய ஆலோசனைகள் வழங்கும் அங்கீகாரம் பெற்ற நிலையமாகவும் இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது.

2.15. பயிற்சி நிலையங்கள்

அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமத்தின் ஒப்புதல் பெற்று தொழில்நுட்பப் பயிற்சிக்கான பட்டயப் பயிற்சியினை கீழ்க்கண்ட நிறுவனங்களில் வழங்கப்பட்டு வருகிறது:

- அரசினர் தொழில்நுட்ப பயிலகம், கிண்டி, சென்னை

கிண்டி, அரசினர் தொழில்நுட்ப பயிலகம் 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்று ஆண்டு பட்டயப் படிப்புகளை கீழ்க்காணும் துறைகளில் வழங்கி வருகிறது:

1. கருவி மற்றும் அச்சு பொறியியல்
2. குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல்

- கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்

திண்டுக்கல் கருவி பொறியியல் பயிலகம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பயிலகம், பொறியியல் பட்டயப் படிப்பில், 3 ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப் படிப்பை அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக் கழகத்தின் அங்கீகாரத்துடன் வழங்கி வருகிறது.

- பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாசலம்

இப்பயிற்சி நிலையம் பீங்கான் தொழில்நுட்பவியல் 3½ ஆண்டு கால பட்டப் பயிற்சியினை வழங்கி வருகிறது.

- அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கண்ணாடி கருவிகள் தயாரிப்பதில் ஓராண்டு செய்முறை மற்றும் 2 மாத திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளித்து வருகிறது.

2.16. அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் கோயம்புத்தூரில் 1972 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த நிறுவனம் வேளாண்மைத் துறை, தடய அறிவியல் துறை மற்றும் சுகாதாரத் துறை ஆய்வகங்களுக்குத் தேவையான ஆய்வக கண்ணாடி பொருட்களைத் தயாரித்து வருகிறது.

2.17 தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழ்நாடு அரசு, சிறந்த தொழில்முனைவோர்களுக்கான விருதுகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு கீழ்க்காணும் பிரிவுகளில் விருதுகளை வழங்கி ஊக்குவித்து வருகிறது:

தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

வ. எண்	விருதுகளின் விவரம்	பரிசு
1	சிறந்த தொழில்முனைவோருக்கான மாநில விருது	ரூ.50,000/- ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு
2	சிறந்த தொழில்முனைவோருக்கான வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கான மாநில விருது	ரூ.50,000/- ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு
3	சிறந்த தொழில்முனைவோருக்கான உற்பத்திப் பொருளின் தரம் மற்றும் ஏற்றுமதிக்கான மாநில விருது	ரூ.50,000/- ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு
4	சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான மாநில விருது	ரூ.50,000/- ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு
5	சிறந்த தொழில்முனைவோருக்கான மாவட்ட அளவிலான விருது	நினைவுப் பரிசு
6	வங்கிகளுக்கான முதலமைச்சர் விருது 1. முதல் பரிசு 2. இரண்டாம் பரிசு 3. மூன்றாம் பரிசு	நினைவுப் பரிசு

2.18. உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 12,360 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்மூலம் ரூ.32,205.75 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தொழில்முனைவோர்களுக்கு, தமிழ்நாடு அரசுமூலம் கடனுதவி பெறவும், அரசு துறை மூலமாக சட்டபூர்வமான அனுமதி பெறவும், தகுதியான மானியங்கள், ஊக்கத்தொகை பெற்றுத் தரவும் உறுதி வழங்கப்பட்டது.

இதன்படி, அரசு, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

29-2-2020 வரை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 5,370 நிறுவனங்கள் ரூ.8,779.22 கோடி முதலீட்டில் உற்பத்தியைத் தொடங்கி 96,597 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன.

2.19. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டு, கிராமப்புற கைவினைஞர்கள், வேலையாட்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவு மக்களை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி இலாபகரமான வேலைவாய்ப்பினை நல்கி அவர்களின் நலன் காக்கிறது. இச்சங்கங்கள், சிறு தேயிலை விவசாயிகள், மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், ஏழை தொழில்முனைவோர்கள், கூட்டுறவு தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்கும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. இத்தகைய கூட்டுறவு தொழிற்பேட்டைகள், ஏழைத் தொழில்முனைவோர் தொழில் நிறுவனங்களைத் துவக்க, மேம்படுத்தப்பட்ட மனைகள், கட்டப்பட்ட தொழில் கூடங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை அளிப்பதன்மூலம் இசைவான சூழலை ஏற்படுத்தித் தருகின்றன. தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, வங்கி, பாலித்தீன்,

கைவினைப் பொருட்கள், தையல், ஒப்பந்தத் தொழிலாளர் சேவை, அச்சு, ஆட்டோ சேவை, பொறியியல், உலோகம், பூட்டு தயாரிப்பு, சரக்கு போக்குவரத்து முதலான பிரிவுகளிலும் இவ்வகையான தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களை விளக்கும் விதமாக இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ளது. இச்சங்கமானது பாம்பின் விஷம் வாயிலாக உயிர் காக்கும் நச்சு முறிவு மருந்து தயாரித்து இந்திய அளவில் விநியோகம் செய்யும் முதன்மை சங்கமாகத் திகழ்கிறது. இச்சங்கமானது இருளர்களின் பாரம்பரிய தொழில்திறனை அடிப்படையாகக் கொண்டு அம்மக்களின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் மற்றும் உயிர்காக்கும் மருந்து தயாரிப்பதன் வாயிலாக பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காக்கும் பணியினையும் ஒருங்கிணைத்து மேற்கொண்டு வருகிறது. மேலும், இச்சங்கமானது பாம்புகளின் இருப்பிடத்தைக் கண்டறிவதிலும் மற்றும் அதனைப் பிடிப்பதில் கைத்தேர்ந்தவர்களான இருளர் மக்களிடமிருந்து பாம்புகளைப் பெறுகிறது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அதிகமுள்ள இச்சங்க உறுப்பினர்கள் வனத் துறையின் முன் அனுமதி பெற்று பாம்புகளைப் பிடிக்கின்றனர். உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பாம்புகள் அதற்குரிய கூண்டில் ஒரு மாதம் அடைத்து வைக்கப்பட்டிருக்கும். இக்காலத்தில் வாரம் ஒரு முறை பாம்பிலிருந்து விஷமானது தனியே பிரித்தெடுக்கப்படும். ஒரு மாத காலத்திற்குப் பிறகு மீண்டும் இப்பாம்புகள் பிடிக்கப்பட்ட வனப் பகுதியிலேயே விடப்படுவதால் சுற்றுச்சூழல் பாதிப்படையாமல் பாதுகாக்கப்பட்டு பாம்பின் விஷமானது பிரித்தெடுக்கப்படுகிறது.

மேலும், இச்சங்கத்தின் ஆய்வுக்கூடமானது TANII திட்டத்தின்மூலம் பெறப்பட்ட நிதியுதவியின் மூலமாக நவீனமயமாக்கி மேம்படுத்தப்பட்டுள்ளது.

2.20. இண்ட்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நோக்கில், ‘இண்ட்கோசர்வ்’ என பரவலாக அழைக்கப்படும் ‘தமிழ்நாடு சிறுதேயிலை விவசாயிகளின் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம்’ 1965 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இச்சங்கத்தின் முக்கிய குறிக்கோள், உறுப்பினர் தொழிற்சாலைகள்

உற்பத்தி செய்யும் தேயிலைத்தூளை சந்தைப்படுத்தி, அதன்மூலம் அதிக விலை பெற்றுத் தருவதே ஆகும். மேலும், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்குத் தேவையான இடுபொருள்களை கொள்முதல் செய்து வழங்குவதோடு குன்னூர், கோயம்புத்தூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகிறது. இண்ட்கோசர்வ், "ஊட்டி டீ" தேயிலைத்தூளை விற்பனை செய்வதோடு, "புளூ மோண்ட்" (Blue Mont) மற்றும் "மவுண்ட்டன் ரோஸ்" (Mountain Rose) ஆகிய சொந்த வணிக அடையாளங்களில் தேயிலைத்தூளை பாக்கெட்டுகளில் விற்பனை செய்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், தற்பொழுது, 16 தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் 26,331 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆண்டொன்றுக்கு மொத்தம் 200 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் உற்பத்தி செய்யும் திறன்கொண்டவை.

தேயிலை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் 1950 முதல் 1980 வரை தொடங்கப்பட்டவையாகும். இத்தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகள் அவசியமாகும். நஞ்சநாடு பகுதியில் ஒரு புதிய தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை 2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது.

2.21. டீசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் தேயிலைத் தொழிலினைச் சார்ந்தே உள்ளது. மின்னணு தேயிலை ஏல மையம் அமைக்கப்படுவதற்கு முன்னர், தேயிலை விற்பனை, பாரம்பரிய ஏல முறையில் நடைபெற்று வந்தது. இந்த ஏல விற்பனை முறை, உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு விதங்களில் அனுகூலமாக இல்லாமல் இருந்து வந்ததால், தேயிலை ஏல மையம் அமைக்கப்பட வேண்டுமென சிறுதேயிலை விவசாயிகள் அரசிற்குக் கோரிக்கை விடுத்தனர். அதற்கிணங்க, அரசானது, குன்னூரில், 'டீசர்வ்' என அழைக்கப்படும் 'தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை கூட்டுறவுச் சங்கம்' என்ற பெயரில் மின்னணு ஏல மையத்தை 1-10-2003 அன்று துவக்கியது. இந்த ஏல மையத்தின் முக்கியக் குறிக்கோளானது குறைந்த விற்பனை கால அளவு மற்றும் செலவில், தேயிலை விற்பனையில் நல்ல விலை கிடைக்கத்தக்க

2020 மார்ச் 24]

வகையில் பாரபட்சமற்ற, வெளிப்படைத்தன்மை கொண்ட முறையை ஏற்படுத்துவதாகும்.

2.22. சேகோசர்வ்

'சேகோசர்வ்' என பொதுவாக அழைக்கப்படும் 'சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம்', 1981 ஆம் ஆண்டு சேலத்தில், சவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் வியாபாரத்திலுள்ள இடைத்தரகர்களை நீக்கி மரவள்ளிக்கிழங்கிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க சந்தை வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டது.

இச்சங்கம் துவங்கப்படுத்துவதற்கு முன்பு, சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்கள், குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்கள், அமைப்பு சார்ந்த சந்தை வாய்ப்புகள் இல்லாத நிலையில், வியாபார இடைத்தரகர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இத்தகைய இடர்பாடுகளைக் களைந்திடவும் அவர்களது உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் சேகோசர்வ் சங்கம் தொடங்கப்பட்டது.

இச்சங்கமானது தனது பரிசோதனைக்கூட வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின் நிதியுதவியுடன், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 'சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவுக் குழுமம்' என்ற பெயரில், பகுப்பாய்வு கூடம் ஒன்றை, பொது வசதி மையமாக ஏற்படுத்தியுள்ளது. மேலும், சந்தை வாய்ப்புகளை மேம்படுத்திடவும், வெளிப்படைத்தன்மையை உட்புகுத்தவும் சேகோசர்வ் சங்கத்தில் மின்னணு ஏலமுறைக்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மின்னணு ஏல மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12-12-2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மின்னணு ஏல மையம் தொடங்கப்பட்ட பின்னர், சேகோசர்வ் அதன் வரலாற்றில் இதுவரை இல்லாத அதிகபட்ச விற்பனையை எட்டியுள்ளது.

2.23. தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதில் ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் இடர்பாடுகளை நீக்கும் பொருட்டும், அச்சங்கங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்திக்

கொடுக்கும் நோக்கத்தோடும், தாய்கோ வங்கி என பெருமையுடன் அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கியானது தொழிற்கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு 1961 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வங்கியின் முக்கிய குறிக்கோள், இத்துறையின்கீழ் செயல்படும் தொழிற்கூட்டுறவு சங்கங்களின் நிதித் தேவைகளை நிறைவு செய்வதே ஆகும். இருப்பினும், தற்பொழுது இவ்வங்கி அனைத்து விதமான கடன் வசதிகளை தனிநபர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில்முனைவோர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கும் வழங்கி தனது வியாபார சேவையை விரிவுபடுத்தியுள்ளது. இச்சேவைகளுடன் இவ்வங்கி பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும் அவர்களுக்கென சேமிப்பு மற்றும் வியாபார கணக்கு வசதிகளை வழங்கியும் வருகிறது. மேலும், இவ்வங்கியானது, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO), தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) ஆகியவற்றின் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

2.24. கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில், கயிறு தொழிலானது கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பினை வழங்குகிறது. கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் கயிறு பின்னுதல், பாய் மற்றும் பாய் சார்ந்த பொருட்கள் மற்றும் இரப்பர் கலந்த மெத்தைகளை உருவாக்குவதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளன. தற்பொழுது, மாநிலத்தில் 65 கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் 10,896 உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இதில் 80% மகளிராவர். மேற்காணும் கயிறு சங்கங்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்த, மாநில அளவில், "டான்கோபெட்" என அழைக்கப்படும் தமிழ்நாடு கூட்டுறவு கயிறு விற்பனை இணையம், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மத்திய கயிறு வாரியமானது, தங்களது தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சட்டப்பூர்வமான பிற பயன்களை வழங்கக்கூடிய கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிக்கும் கயிறு மற்றும் கயிறு பொருட்களின் விற்பனையை மேம்படுத்தி,

2020 மார்ச் 24]

அதன்மூலம் நீடித்த நிலையான உற்பத்தி மற்றும் அதிக வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் 'சந்தை மேம்பாட்டு நிதி உதவி' திட்டத்தை 2000-2001 ஆம் ஆண்டில் துவக்கியது. தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் முந்தைய 3 ஆண்டு கால சராசரி விற்பனையில், 10 விழுக்காடு என்றளவில் சந்தை மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியானது, மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து வழங்கப்படுகிறது. கயிறு வாரியம், 2017-2018 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சந்தை மேம்பாட்டு நிதியுதவியை வழங்காத நிலையில், மாநில அரசால் 64 கயிறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.2.33 கோடியளவில் ஆதார விலை வழங்குவதென அறிவிக்கப்பட்டு, தற்போது இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

2.25. கயிறு குழுமங்கள்

2.25.1. பாரம்பரிய தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டும் நிதியுதவி திட்டம் (SFURTI)

கயிறு தொழில் உட்பட பாரம்பரிய மிக்க தொழில்களின் உற்பத்தித் திறனையும், அதன் சந்தை வாய்ப்பினையும் அதிகரித்து இதர தொழில்களுடன் போட்டியிடும் செயல்பாட்டினை ஊக்குவித்து அதன்மூலம் அவ்வகையான தொழில்களை வளர்ச்சி அடைய செய்யும்பொருட்டு, மத்திய அரசானது பாரம்பரிய தொழில்களுக்குப் புத்துயிரூட்டும் நிதியுதவித் திட்டத்தினை (ஸ்பூருட்டி) உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் புதிய உபகரணங்களை வழங்குதல், பொது வசதி மையங்கள் அமைத்தல், திறன் வளர்த்தல், வடிவமைத்தல், சிப்பமிடுதல், சந்தை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 12-வது ஐந்தாண்டு திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் ஸ்பூருட்டி திட்டத்தின்கீழ் 9 கயிறு குழுமங்கள் தருமபுரி, மதுரை, திருப்பூர் (காங்கேயம் மற்றும் பல்லடம்), கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ரூ.37.79 கோடி மதிப்பீட்டில் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்து கயிறு குழுமங்களும் செயல்பாட்டில் உள்ளன. மேலும், ரூ.3.76 கோடி மதிப்பீட்டில், 10-வது கயிறு குழுமமாக கிருஷ்ணகிரி கயிறு குழுமத்திற்கு கயிறு வாரியத்தால் 29-5-2018 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2.25.2. மாநில அரசின் கயிறு குழுமங்கள்

தமிழ்நாடு அரசு, மதிப்புக் கூட்டப்பட்ட கயிறு பொருட்கள் தயாரிப்பை ஊக்கப்படுத்த, "கயிறு குழுமங்களை மேம்படுத்துதல்" திட்டத்தின்கீழ், ரூ.22.00 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 3 கயிறு குழுமங்களை அமைத்திட ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

3.1. சிட்கோ—கடமைகள்

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்காக தமிழ்நாடு அரசால் 1970 ஆம் வருடம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் போன்றவற்றை நிறைவேற்றுவதில் சிட்கோ முக்கியப் பங்கு வகிக்கிறது.

சிட்கோ நிறுவனம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு தரமான உட்கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக தொழிற்பேட்டைகளை அமைத்தல், தனியார் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு உதவுதல், மூலப்பொருட்கள் வழங்குதல், குழும வளர்ச்சி திட்டத்தின்கீழ் பொது வசதி மையம் அமைத்திட உதவுதல், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்த உதவுதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிருவாக வழிகாட்டுதல் பணிகள் போன்றவற்றை செய்து வருகிறது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.45.00 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.25.14 கோடியாகும். 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.2.18 கோடி இலாபம் ஈட்டப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

3.2. தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு

தொழிற்பேட்டைகளை உருவாக்குவதன்மூலம் தொழில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவது சிட்கோவின் மிக முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். சிட்கோ நிறுவனம் உருவாக்கிய 78 தொழிற்பேட்டைகள் உள்ளிட்ட 9,004 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 4,822 மேம்படுத்தப்பட்ட தொழில் கூடங்களை உள்ளடக்கிய 119 தொழிற்பேட்டைகளைப் பராமரித்து வருகிறது. இவற்றில், குறிப்பிட்ட பொருட்களைத் தயாரிக்கும் 5 தொழிற்பேட்டைகள், 109 பல்வகை பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்பேட்டைகள் மற்றும் 5 மகளிர் தொழிற்பேட்டைகள் உள்ளன. 119 தொழிற்பேட்டைகளின் விவரங்கள் பின் இணைப்பு 3.1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

1970 ஆம் ஆண்டில் சிட்கோ நிறுவனம் உருவாக்கப்பட்ட பின்னர், அப்போது இயங்கி வந்த 41 அரசு தொழிற்பேட்டைகளை மேலும் மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் சிட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் 1958-ல் 404.08 ஏக்கர் நிலப்பரப்பில் முதல் தொழிற்பேட்டை கிண்டியில் நிறுவப்பட்டது. இதனையடுத்து, 1963 ஆம் ஆண்டு 1167 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டை அம்பத்தூரில் நிறுவப்பட்டது. சிட்கோ நிறுவனம் தொடங்கப்படுவதற்கு முன்னர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டைகளை அரசே உருவாக்கியது. 41 அரசு தொழிற்பேட்டைகளின் விவரங்கள் பின் இணைப்பு 3.2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, சிட்கோ தொழிற்பேட்டைகள் அனைத்தும் சாலை வசதி, குடிநீர் வசதி, மழைநீர் வடிகால், கழிவுநீர் சுத்திகரிப்பு வசதி, தெருவிளக்குகள், பசுமை பகுதி, கால்வாய்கள், பூங்கா மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதியுடன் உருவாக்கப்படுகின்றன.

2011–2020 வரை வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி 24 புதிய தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன. 24 புதிய தொழிற்பேட்டைகளின் விவரம் இணைப்பு-3.3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.3. மத்திய அரசின் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின்கீழ் (MSE-CDP) உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

3.3.1. உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன: (i) புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் (ii) தற்போது உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு, மத்திய அரசின் MSE-CDP திட்டத்தின்கீழ் வசதிகளை மேம்படுத்துதல். இதில், திட்ட செலவில் (அதிகபட்சம் ரூ.10 கோடி), 60 விழுக்காடு அதிகபட்சம் ரூ.6 கோடி முறையே புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் மானியமாக வழங்கப்படுகிறது. புதிய தொழிற்பேட்டைகளை

உருவாக்குவதற்கும், இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு சிட்கோவால் மானியம் பெறப்படுகிறது.

3.3.2. புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

இத்திட்டத்தின்கீழ் ரூ.72.12 கோடி மொத்த திட்ட செலவில் சிட்கோ நிறுவனம், 18 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது.மேலும், 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.13.46 கோடி மதிப்பீட்டிலான 2 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் ரூ.10.43 கோடி திட்ட செலவில் மேலும் 2 திட்டங்களுக்கு மத்திய அரசு கொள்கை ரீதியாக ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.8.62 கோடி திட்ட செலவிலான மற்றுமொரு திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. விவரங்கள் பின்வருமாறு:

மத்திய அரசின் MSE-CDP திட்டத்தின்கீழ், புதிய தொழிற்பேட்டைகளின் நிலை

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பு	மத்திய அரசின் மானியம்	சிட்கோவின் பங்களிப்பு
			(ரூபாய் இலட்சங்களில்)		
1.	மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டவை	18	7,212.01	3,269.00	3,943.01
2.	மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்பாட்டில் உள்ளவை (அ) ஊத்தங்கரை தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம் (ஆ) மாரிகுண்டு, தேனி மாவட்டம்	2	1,346.00	627.60	718.40
3	மத்திய அரசின் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டு இறுதி ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளவை. (அ) குருக்கள்பட்டி, தென்காசி மாவட்டம் (ஆ) பெருந்துறை, ஈரோடு மாவட்டம்	2	1,043.00	625.80	417.20

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பு	மத்திய அரசின் மானியம்	சிட்கோவின் பங்களிப்பு
			(ரூபாய் இலட்சங்களில்)		
4	மத்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. பெரியகோளாப்பாடி, திருவண்ணாமலை மாவட்டம்	1	862.00	689.60	172.40
	மொத்தம்	23	10,463.01	5,212.00	5,251.01

3.3.3. தற்போதுள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் MSE-CDP திட்டத்தின்கீழ், ரூ.25.86 கோடி மதிப்பீட்டிலான 13 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ள ரூ.31.73 கோடி மதிப்பீட்டிலான 7 திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. அவற்றின் விவரங்கள்:

மத்திய அரசின் MSE-CDP திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுவரும் 7 பணிகளின் தற்போதைய நிலை

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பு	பங்களிப்பு: மத்திய அரசின் மானியம்	பங்களிப்பு: தமிழக அரசின் மானியம்	பங்களிப்பு: பயனாளிகளின் பங்களிப்பு	பெறப்பட்ட மானியம்: மத்திய அரசு	பெறப்பட்ட மானியம்: தமிழக அரசு
		(ரூபாய் இலட்சங்களில்)					
1	திருவெறும்பூர் தொழிற்பேட்டை, திருச்சி மாவட்டம்	378.50	227.10	113.60	37.80	125.30	113.60
2	சிட்கோ தொழிற்பேட்டை, கே. புதூர், மதுரை	520.00	219.60	248.40	52.00	36.55	80.00
3	சிட்கோ தொழிற்பேட்டை, நாஞ்சிக்கோட்டை தஞ்சாவூர் மாவட்டம்	285.00	105.00	151.50	28.50	23.33	57.00
4	சிட்கோ தொழிற்பேட்டை ராணிப்பேட்டை, ராணிப்பேட்டை மாவட்டம்	955.00	342.60	516.90	95.50	33.56	110.00

வ. எண்	திட்டத்தின் பெயர்	திட்ட மதிப்பு	பங்களிப்பு			பெறப்பட்ட மானியம்	
			மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	பயனாளி களின் பங்களிப்பு	மத்திய அரசு	தமிழக அரசு
			(ரூபாய் இலட்சங்களில்)				
5	திண்டுக்கல் தொழிற்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம்	405.00	192.00	172.50	40.50	36.05	72.78
6	சிட்கோ தொழிற்பேட்டை, நஞ்சை ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம்	230.00	94.20	112.80	23.00	34.68	60.00
7	சிட்கோ தொழிற்பேட்டை, ஓசூர் (புதியது) கிருஷ்ணகிரி மாவட்டம்	400.00	139.20	220.80	40.00	32.02	100.00
மொத்தம்		**3,173.50**	**1,319.70**	**1,536.50**	**317.30**	**321.49**	**593.38**

மேற்கண்ட திட்டங்களைத் தவிர, ரூ.14.90 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

MSE-CDP திட்டத்தின்கீழ் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலின் தற்போதைய நிலை

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	பயனாளி களின் பங்களிப்பு
			(ரூபாய் இலட்சங்களில்)			
1.	மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு முடிக்கப்பட்டவை	13	2,586.15	1,430.33	831.56	324.27
2.	மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளவை	7	3,173.50	1,319.70	1,536.50	317.30

வ. எண்	நிலை	எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	பயனாளி களின் பங்களிப்பு
			(ரூபாய் இலட்சங்களில்)			
3.	மாநில நிலைக் குழு ஒப்புதல் பெறப்பட்டவை/ மத்திய அரசின் ஒப்புதல் எதிர் நோக்கப்படுபவை	3	1,490.00	894.00	447.00	149.00
	மொத்தம்	23	7,249.65	3,644.03	2,815.06	790.57

3.4 ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் TNIPP 2-வது கட்டத்தின்கீழ் ஒரே வகைப்பொருள் உற்பத்தி சார்ந்த தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்பு திட்டம் இரண்டாம் கட்டத்தின்கீழ், 2017-2018 ஆம் ஆண்டு மொத்தம் ரூ.88.00 கோடி திட்ட மதிப்பீட்டில் 4 ஒரே வகைப்பொருள் உற்பத்திக் குழுமங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. அதாவது, காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் தலா ஒரு ஜவுளி உற்பத்திக் குழுமம், தருமபுரி மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் தயாரிப்புக் குழுமம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில், கடல்சார் உணவுக் குழுமம் பின்வரும் விவரங்களின்படி அமைக்கப்பட்டு வருகின்றன:

வ. எண்	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு (JICA) உதவி திட்டத்தின் பெயர்	JICA நிதி	தமிழக அரசு நிதி	சிட்கோ நிதி	மொத் தம்	மேம்படுத்தப் பட்ட மனைகளின் எண்ணிக்கை
		(ரூபாய் கோடியில்)				
1	ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளி தொழிற்பூங்கா, தண்டரை, காஞ்சிபுரம் மாவட்டம்	13.00	2.00	10.00	25.00	80
2.	ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளி/ ஆடை தொழிற்பூங்கா, புஞ்சைக்காலகுறிச்சி, கரூர் மாவட்டம்	14.00	2.00	5.00	21.00	83

வ. எண்	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு (JICA) உதவி திட்டத்தின் பெயர்	JICA நிதி	தமிழக அரசு நிதி	சிட்கோ நிதி	மொத் தம்	மேம்படுத்தப் பட்ட மனைகளின் எண்ணிக்கை
		(ரூபாய் கோடியில்)				
3.	ஒருங்கிணைந்த தொழில்நுட்ப உணவு தொழிற்பூங்கா, ஈச்சம்பாடி, தருமபுரி மாவட்டம்	15.00	2.00	3.00	20.00	110
4.	ஒருங்கிணைந்த தொழில்நுட்ப கடல் உணவு தொழிற்பூங்கா, சக்கரக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்	16.00	2.00	4.00	22.00	29
	மொத்தம்	**58.00**	**8.00**	**22.00**	**88.00**	**302**

மேற்கண்ட 4 இடங்களிலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் செயல்பாட்டில் உள்ளன. மொத்தமுள்ள 302 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளில் 51 தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

3.5. தனியார் தொழிற்பேட்டை உருவாக்குதல்

தொழிற்பேட்டைகள் அமைக்க அரசு புறம்போக்கு நிலங்களைக் கண்டறிவது மற்றும் தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் களையும் நோக்கிலும், நகரங்கள்/மாநகரங்களுக்கு வெளியே புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு தனியார் தொழில்முனைவோர் அமைப்புகளை ஊக்கப்படுத்துவதற்காகவும், அவ்வாறான புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க முன்வரும் நிலையில், அவ்வமைப்புகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.10 கோடி வரையில் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.37.97 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் 2 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா தொழிற்பூங்கா ரூ.24.32 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.13.65 கோடி திட்ட மதிப்பீட்டிலான மதுரை பொறியியல் குழுமப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3.5.1. கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் தொழிற்பேட்டைகள் அமைத்தல்

சிட்கோ நிறுவனம் கூட்டு முயற்சி அடிப்படையில், தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கு குறைந்தபட்சம் 11% அளவிலான தனது மூலதன பங்கினை உள்ளடக்கிய புதிய திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

3.6. குடியிருப்புப் பகுதிகளில் இயங்கிவரும் தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தல்

நகர்ப்புற குடியிருப்புப் பகுதிகளில் இயங்கிவரும் தொழிற்கூடங்களால் அப்பகுதிகளில் ஏற்படும் பல்வேறு மாசுகளைத் தடுக்கவும், போதிய இடவசதியின்மை காரணமாக இயங்கிவரும் தொழிற்கூடங்களை விரிவுபடுத்த இயலாத சூழ்நிலையில், அத்தகைய தொழில் நிறுவனங்களை நகர்ப்புறங்களுக்கு வெளியே மாற்றி தனியார் தொழிற்பேட்டைகளை அமைக்க அரசு மானியம் 75 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக 15 கோடி ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.31.85 கோடி மொத்த மதிப்பீட்டில் 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் நாமக்கல் கனரக வாகன கட்டமைப்பு குழும திட்டம், ரூ.13.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ரூ.18.17 கோடி மதிப்பீட்டிலான தேயிலை குழுமம், மேட்டுப்பாளையம் மற்றும் தென் மாவட்ட ஜவுளி செயல்முறைப்படுத்தும் குழுமம், விருதுநகர் ஆகிய 2 திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3.7. ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட உள்ள தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்களின் விவரங்கள் செய்தித்தாள்கள் மற்றும் வலைதளங்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, வெளிப்படையான முறையில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேர்வுக் குழுவால் தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்காணல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். காலியாக உள்ள தொழில் மனைகள்/தொழிற்கூடங்களின் எண்ணிக்கையானது,

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ள நிலையில், குலுக்கல் முறையில் தொழில் மனைகள்/ தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

சிட்கோ நிறுவனம், 5 சென்ட் முதல் 100 சென்ட் வரையிலான அளவுகளைக் கொண்ட தொழில் மனைகளை உருவாக்கி, உற்பத்தி அலகுகளின் தேவைகளுக்கேற்ப, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது.

சிட்கோ நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதிச் சுமையைக் குறைப்பதற்காக, தொழில்முனைவோர்களின் விருப்பத்தின் அடிப்படையில், குத்தகை அல்லது முழுக்கிரைய அடிப்படையில் தொழில் மனைகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. குத்தகை அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறையில், ஒதுக்கீடுதாரர், நிலமதிப்பில் 60% மட்டுமே முன்பணமாக செலுத்த வேண்டும். மீதமுள்ள 40% நிலமதிப்பினை 9% வட்டியுடன் 30 வருடாந்திர தவணைகளில் செலுத்தலாம். 30 ஆண்டுகள் முடிவில் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.

3.7.1. ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த தொழில்முனைவோர்க்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது:

- குறுந்தொழில் நிறுவனங்கள் - 30%
- மகளிர் தொழில்முனைவோர் - 30%
- முன்னாள் இராணுவத்தினர் - 10%
- ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் - 20%
- ஒதுக்கீடு செய்வதற்கான தொழில் மனைகள்/ தொழிற்கூடங்கள் இருக்கும் நிலையில், நீட்ஸ் (NEEDS) திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற முதல் தலைமுறை மற்றும் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

[2020 மார்ச் 24

3.8. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள்—குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP)கீழ் பொது வசதி மையம் அமைத்தல் (CFCs)

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தியினைப் பெருக்குவதற்கும், போட்டித் திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் அவற்றின் திறன் மேம்பாட்டிற்கும், குழும வளர்ச்சி அணுகுமுறையானது ஒரு முக்கிய உத்தியாகும். மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை பின்வரும் நோக்கங்களுக்காக குழும வளர்ச்சி அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறது:

i. தொழில்நுட்ப மேம்பாடு, திறன் மற்றும் தரம், சந்தைப்படுத்துதல் மற்றும் மூலதனத் தேவைகள் போன்ற பொதுப் பிரச்சினைகளைக் களைவதன்மூலம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு உதவுதல்.

ii. சுய உதவிக் குழு மற்றும் தொழில் கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி, அவற்றின்மூலம் பொதுவான நடவடிக்கைகளுக்காக குறு மற்றும் சிறு நிறுவனங்களின் திறனை மேம்படுத்துதல்.

iii. புதிய மற்றும் இயங்கிவரும் தொழிற்பேட்டைகள்/குறு மற்றும் சிறு தொழில் நிறுவனக் குழுமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்/மேம்படுத்துதல்.

iv. பரிசோதனை, பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி உதவி முறைகள் ஆகியவற்றிற்காக பொது வசதி மையங்களை அமைத்தல்.

இத்திட்டத்தின்கீழ், கண்டறியப்பட்ட 44 பணிகளில், மாநில அரசின் ரூ.34.61 கோடி மானியத்துடன்கூடிய ரூ.339.48 கோடி மதிப்பீட்டிலான 42 பணிகளுக்கு மத்திய அரசு, ரூ.228.53 கோடி தனது மானியத்துடன்கூடிய இறுதி ஒப்புதலை வழங்கியுள்ளது. இவற்றில் ரூ.128.46 கோடி மதிப்பீட்டிலான 24 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ரூ.15.07 கோடி மதிப்பீட்டிலான ஒரு திட்டத்திற்கு மத்திய அரசு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளது. மற்றும் ரூ.14.66 கோடி மதிப்பீட்டிலான ஒரு

2020 மார்ச் 24]

திட்டத்திற்கு மத்திய அரசின் தொழில்நுட்ப குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் ரூ.189.58 கோடி மதிப்பிலான 16 புதிய திட்டங்கள் கண்டறியப்பட்டு பல்வேறு ஆரம்பக் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. (இணைப்பு- 3.4)

3.9. குறுந்தொழில் குழுமங்கள்

குறுந்தொழில் குழுமங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், "பொது உற்பத்தி உட்கட்டமைப்பு," எனப்படும் மூலப்பொருள் வங்கி மற்றும் விற்பனை வசதி உட்கட்டமைப்பு ஆகியவற்றை அமைப்பதற்கான புதிய திட்டம் 2013-2014 ஆம் நிதியாண்டு தொடங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாநில அரசின் ரூ.13.21 கோடி மானியத்துடன்கூடிய ரூ.25.16 கோடி மதிப்பீட்டிலான 6 குழுமப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

3.10. மூலப்பொருட்கள் விநியோகம்

சிட்கோ நிறுவனம் பாரஃபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் (நேரடி மற்றும் முகமை) ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும் கிண்டி, ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் விநியோகம் செய்து வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை, முறையே ரூ.13.22 கோடி மற்றும் ரூ.1.67 கோடி மதிப்பிலான 1,867.975 மெட்ரிக் டன் பாரஃபின் மெழுகு மற்றும் 208.542 மெட்ரிக் டன் தமிழ்நாடு காகித நிறுவனத்தின் காகிதமும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

3.11. விற்பனை உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சிட்கோ நிறுவனத்திடம் பதிவு செய்துகொண்டுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக, சிட்கோ நிறுவனம், மாநில அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை அணுகி, பணி ஆணைகளைப் பெற்று, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதோடு, பணிகளை குறித்த காலத்திற்குள்

நிறைவேற்றுவதை உறுதி செய்கிறது. இதற்காக 3% சேவைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், சிட்கோ நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் 29-2-2020 வரை, ரூ.1.16 கோடி மதிப்பிலான பணி ஆணைகளை குறு மற்றும் சிறு நிறுவனங்கள்மூலம் நிறைவேற்றி உள்ளது.

3.12. மின்னணு ஆளுகை

அரசின் மின்னணு முயற்சிகளுக்கேற்பவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சேவை வழங்குவதில் தகவல் தொழில்நுட்பவியலின் முழுத்திறனை பயன்படுத்துவதற்காகவும், தொடக்கம் முதல் இறுதி வரையிலான தனது பணிகளுக்கான தகவல் தொழில்நுட்ப முறையை செயல்படுத்துவதற்காகவும், திறமையான மற்றும் வெளிப்படையான செயல்பாடுகளுக்கென வணிக முறைகளின் முழுச்சுழற்சியை உள்ளடக்குவதற்காகவும், தொழில்முனைவோர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இணையம் வழியாக சேவைகளை வழங்குவதன்மூலம் வணிக எளிதாக்குதலை அதிகரிக்கவும் மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டுச் சூழலை மேம்படுத்தவும், சிட்கோ நிறுவனம் தனது செயல்பாடுகளை கணினிமயமாக்கியுள்ளது. இந்த மென்பொருள் மே 2019 முதல் தொடர்புடைய அனைவருக்குமான பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சிட்கோவின் அனைத்து முக்கிய நடைமுறை செயல்பாடுகளை வெவ்வேறு பிரிவுகளின்கீழ் மென்பொருள்மூலம் நேரடியாக செயல்படுத்தி வருகிறது. மேலும், இந்த சேவைகளை https://www.tansidco.in வலைதளம்மூலம் பெறலாம்.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டத்தின்படியான, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை குறித்த பல்வேறு சீர்திருத்த அம்சங்கள் அடங்கிய மென்பொருளை சிட்கோ உருவாக்கி உள்ளது. இந்த மின்னணு ஆளுகை திட்டமானது, தொழில் மனைகள்/தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்வது மற்றும் அதன் தொடர்புடைய நடவடிக்கைகள் போன்ற சிட்கோ நிறுவனத்தின் அனைத்து வணிக நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளையும் புவியியல் தகவல் முறைமூலம் கண்காணிப்பதை உள்ளடக்கியதாகும். தொழில் முனைவோர்கள் சிட்கோ தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள தொழில் மனைகள்/

தொழிற்கூடங்கள்/அடுக்குமாடி தொழிற்கூடங்களின் விவரங்களை நேரடியாக தெரிந்துகொள்ளலாம்.

சிட்கோ நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கென புவியியல் தகவல் முறையிலான சேவைகளுக்கான இணைப்பினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஒற்றைச் சாளர தகவில் (https://www.easybusiness.tn.gov.in/msme) வழங்கியுள்ளது சிட்கோ நிறுவனத்தின் தற்போதைய வலைதளத்தை (www.sidco.tn.nic.in) மறுசீரமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3.13. பாதுகாப்புத் தொழில் தடம்

மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், இந்தியாவில் உத்தரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய 2 மாநிலங்களில் இராணுவத் தளவாட தொழிற்தடங்கள் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய 5 இராணுவ தளவாட முனையங்களைக் கொண்டுள்ளன. இந்த முனையங்களிலும், இவற்றைச் சுற்றியும் இராணுவம் மற்றும் விண்வெளித் துறை தயாரிப்புகளுக்கு பங்களிப்பு செய்யக்கூடிய வலுவான கட்டமைப்புகள் அமைந்துள்ளதன் அடிப்படையில், இந்நகரங்கள் முனையங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாகவும் மற்றும் அதிக வணிகத் திறன் கொண்ட தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதுகாப்புத் துறையில் மிகப்பெரிய வணிகம் மேற்கொள்ளுவதற்கு ஏதுவான வகையிலும், சிட்கோ நிறுவனம் பின்வரும் பணிகளைத் துவக்கியுள்ளது:

1. தமிழ்நாட்டின் 5 முனையங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2. பாதுகாப்புத் துறையில் உற்பத்திக்கான வாய்ப்புகள் மற்றும் கொள்முதல் நடைமுறைகள் பற்றிய புரிதல் தொடர்பான பயிற்சி கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தகக் கண்காட்சி வளாகத்தில் நடத்தப்பட்டது.

3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோருடன் ஒருங்கமைக்கப்பட்ட தொழில்நுட்ப மையக் கருத்தரங்கம்,

சென்னை, ஆவடி, விமானப்படை தளத்தில் உள்ள அடிப்படை பழுதுபார்க்கும் பணிமனையில் நடத்தப்பட்டது.

4. உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 2020 பிப்ரவரி, 5 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை நடைபெற்ற 11-வது இராணுவ தளவாட கண்காட்சியில் (DefExpo 2020), தமிழ்நாடு கண்காட்சி கூடம் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியில், தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் திறனை எடுத்துக்காட்டும் விதமாக 38 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்று, தங்களது தயாரிப்புப் பொருட்கள், பிரசுரங்கள், கையேடுகள் மற்றும் சாதனங்களைக் காட்சிப்படுத்தின. தமிழ்நாடு கண்காட்சிக் கூடத்திற்கு பாதுகாப்புப் படைகளின் தலைமைப் படைத் தலைவர் (CDS), மத்திய பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள், உலகளாவிய பாதுகாப்பு சாதன உற்பத்தியாளர்கள்/வாங்குபவர்கள்/பிரதிநிதிகள் வருகை தந்து பார்வையிட்டனர்.

மேலும், இதனடிப்படையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்புத் தளவாடங்கள் துறையில் வணிகம் பெறுவதை உறுதி செய்வதற்கான ஆழ்ந்த கவனம் கொண்ட அணுகுமுறையோடு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிப்புகளுக்கு நிலையான கொள்முதல் ஆணைகள் கிடைப்பதற்கு ஏதுவான பல்வேறு நடவடிக்கைகளை சிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கிடையேயான நம்பிக்கையை வளர்ப்பதற்கும், வணிகத்தை மேம்படுத்தும் வகையிலும், சீரான கால இடைவெளிகளில் கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள் போன்றவற்றை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

4.1. அறிமுகம் மற்றும் உருவாக்கம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965 ஆம் வருடம் தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 64 சிறுதொழில் கூடங்களை ஏற்றுக்கொண்டு நிறுமச் சட்டம் 1956-ன்படி பதிவு செய்து 1-12-1965 முதல் உற்பத்தியைத் தொடங்கியது.

அலகுகளின் எண்ணிக்கை

சந்தையின் தேவைக்கேற்ப டான்சி தன்னுடைய நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி அலகுகளை மறு சீரமைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது டான்சிக்கு 18 தொழிற்கூடங்கள் மற்றும் திருச்சியில் 1 காட்சியகமும் உள்ளது.

➢ பொறியியல் தொழிற்கூடங்கள்	-	4
➢ மர அறைகலன் தொழிற்கூடங்கள்	-	11
➢ சிறப்பு வகை தொழிற்கூடங்கள்	-	3
மொத்தம்	-	18

4.2. நடவடிக்கைகள்

டான்சி மின் வாரியத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள் தயாரித்தல், மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், கட்டுமான வேலைகள், கைப்பம்புகள் உற்பத்தி செய்தல், சாராவியைப் பயன்படுத்திக் தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற பொருட்களையும், வர்ணம், குழந்தைகள் எடை போடும் கருவி மற்றும் கட்டுமானத்தில் அறைகள் பிரித்தல் போன்ற உள்வேலைப்பாடுகள் முதலியவற்றை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. மேற்கூறிய பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனி முத்திரையைப் பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும் டான்சி, 'சர்வ சிக்ஷா அபியான்' திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட அறைகலன்களையும், உயர் கல்வித் துறையின்கீழ் உள்ள கல்லூரிகளுக்குத் தேவையான அறைகலன்கள், அரசு மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான ஸ்டீல் கட்டில்கள், மின் பகிர்மான கழகத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள், மருத்துவ சேவை துறைக்குத் தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட் மற்றும்

பஞ்சாயத்து மற்றும் மாவட்ட ஆட்சியகங்களுக்கு குடிநீர் வழங்க தேவையான கைப்பம்புகளையும் அதன் உதிரி பாகங்களையும் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் நிருவாகத் திறன் ஆகியவற்றைப் பயன்படுத்தி டான்சி சிறந்த உற்பத்தித் திறனை நோக்கி முன்னேறி வருகிறது. கீழ்க்காணும் டான்சியின் அலகுகள் ஐ.எஸ்.ஓ-9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுள்ளன:

- டான்சி கைப்பம்பு தொழிற்கூடம், அம்பத்தூர்
- டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்கூடம், திருச்சி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், பழனி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், வேலூர்
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், இராஜபாளையம்
- தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம், அம்பத்தூர்
- டான்சி தலைமை அலுவலகம், கிண்டி
- டான்சி மர அறைகலன் தொழிற்கூடம், கிண்டி
- டான்சி திட்டப்பிரிவு (டெக்), கிண்டி
- டான்சி திட்டப்பிரிவு (நபார்டு), கிண்டி

4.3. டான்சியின் தொழிற்கூடங்களின் வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள் விவரங்கள்

தொழிற்கூட வகைகள்	உற்பத்தி பொருட்கள்
(அ) கட்டுமானம் மற்றும் பொறியியல்	தொழிற்சாலை கட்டடங்கள், பாலங்கள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் பலவகை மென் கட்டுமானங்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்குத் தேவையான மின் கடத்தி பொருட்கள், நிலைப்பெட்டிகள், கிரில்கள், உலோகத் தகடுகளாலான பொருட்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொழிற்கூட வகைகள்	உற்பத்தி பொருட்கள்
(ஆ) அறைகலன்கள்	மர அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள், அறைகலன்கள், வீடு, அலுவலகம், கல்லூரி விடுதி மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான எஃகு அறைகலன்கள்.
(இ) சிறப்பு வகைத் தயாரிப்புகள்	ஆழ்துளை குழாய் கைப்பம்புகள், பெரும் ஆழத்திற்கான ஆழ்துளை குழாய் கைப்பம்புகள், பம்புகளின் உதிரி பாகங்கள், ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்ட மருத்துவ பொருட்களான சர்ஜிகல் ஸ்பிரிட், டி-நேச்சர்ட் ஸ்பிரிட், டிஞ்சர் செட்ரிமைடு, பொவிடோன் அயோடின், ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரெஞ்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசிகளான லைசால், பெனாயில்.

4.4. 2019-2020 ஆம் ஆண்டு ரூ.1.00 கோடிக்கும் அதிகமாக உற்பத்தி செய்து வழங்கப்பட்ட பணி ஆணைகள் கீழ்க்கண்டவாறு:

- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.3.36 கோடி.
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.1.86 கோடி.
- கால்நடை பராமரிப்பு மற்றும் சேவைகள் இயக்ககத்திற்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்கள் ரூ.1.01 கோடி.

4.5. தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக வர்ணங்கள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களைத் தயாரித்து வழங்க துவக்கப்பட்டது. இந்நிறுவனம் 18-11-1985 முதல்

[2020 மார்ச் 24

அம்பத்தூரில் அதன் பதிவுபெற்ற தலைமையிடத்தைக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தமிழக அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருவதாகும்.

5. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN)

5.1 முகவுரை

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) ஒரு துடிப்பான தொழில்முனைவுச் சூழல் அமைப்பை ஏற்படுத்துவதிலும், அதனை வளர்த்தெடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் நிறுவனம் ஆகும். தமிழ்நாடு அரசால் 2001 ஆம் ஆண்டில் இலாப நோக்கமில்லா நிறுவனமாகத் தொடங்கப்பட்டு, மாநிலத்தில் புத்தாக்கச்சூழல் ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்படுகிறது. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல், நாளது வரை 2.77 இலட்சம் தொழில்முனைவோருக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சி அளித்துள்ளது. இந்நிறுவனம், மாணவர்கள், ஆர்வமிக்க தொழில்முனைவோர்கள் மற்றும் புத்தொழில்முனைவோர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் தனது சேவைகளை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சி அளித்தல், கூட்டாண்மையை உருவாக்குதல், பங்குதாரர்களின் இணைப்புகளை மேம்படுத்துதல், புத்தாக்கம் மற்றும் வணிகத்தை ஊக்குவித்தல் போன்றவற்றை தனது செயல்பாடுகளாகக் கொண்டுள்ளது. இது தவிர, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களின் மேம்பாட்டிற்காகவும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் ஆதரவு அளிக்கிறது.

தொலைநோக்கு

தொழில்முனைவு மற்றும் புதிய வர்த்தக வாய்ப்புகள், கண்டுபிடிப்புகள் சார்ந்த கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் செயல்பாடு போன்ற பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டின் வள ஆதார மையமாகச் செயல்பட்டு தமிழ்நாடு முழுவதும், தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் உள்ளடக்கிய தொழில்முனைவு கலாச்சாரத்தை ஏற்படுத்தி, வளர்ச்சி காண தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முனையும்.

[2020 மார்ச் 24

குறிக்கோள்

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வேகமான, நீடித்த நிலையான தன்மையினை உள்ளடக்கிய வளர்ச்சிக்காக, தாக்கமிகு சிறந்த தொழில்முனைவு திறமைகளை ஏற்படுத்துதல், வர்த்தகப் பிணைப்புகளை உருவாக்குதல் மற்றும் பங்குதாரர்களைக் கொண்ட வர்த்தக அமைப்பை ஏற்படுத்துதல், உரிய ஆலோசனைகள் வழங்குதல், பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், புத்தாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் வர்த்தக சேவைகளை வழங்கி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வழிவகுக்கும்.

முக்கிய பண்புகள்

தொழில்முனைவு, நேர்மை, பாரபட்சமின்மை, காலந்தவறாமை, கூட்டுமுயற்சி, மகத்தான சேவை, தலைமைப் பண்பு, புத்தாக்கம், தர உணர்வு ஆகிய முக்கிய பண்புகளை தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வளர்த்து வேரூன்றச் செய்யும்.

கொள்கைகள்

(அ) புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு கலாச்சாரத்தை தமிழ்நாடு முழுவதும் பரப்புதல்.

(ஆ) ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினர்களிடையே தொழில்முனைவுத் திறனை கட்டமைத்தல்.

(இ) தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழிலை உள்ளடக்கிய தொழில்முனைவோருக்கான தொழில் சூழலை விரிவாக்குதல்.

(ஈ) தொழில்கள் மற்றும் புத்தாக்க செயலாக்கத்தில் ஏற்படும் தோல்விகளைக் குறைத்தல்.

(உ) முறைசார் பாடத்திட்டத்தில் தொழில்முனைவு கல்வியினை உட்புகுத்துதல்.

(ஊ) தொழில்முனைதல் மற்றும் புத்தாக்கம் குறித்த ஆராய்ச்சி, கணக்கெடுப்புகள் மற்றும் வெளியீடுகள்.

(எ) தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்கிடும் வகையில் இத்துறையில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசு அமைப்புகள் இடையே வலுவான கூட்டுப் பங்காண்மை ஏற்படுத்துதல்.

(ஏ) தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் குறித்த கொள்கை பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

நிருவாகம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனமாக அரசு முதன்மை செயலாளர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையின்கீழ் செயல்படுகிறது. இந்நிறுவனம் அரசின் பல்வேறு முக்கியத் துறை செயலாளர்கள் மற்றும் தொழில் துறை உறுப்பினர்களை உள்ளடக்கிய ஆளுகைக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் நிருவாகம் மற்றும் கணக்குப் பிரிவுகளுடன் கீழ்க்காணும் ஐந்து பயிற்சி திட்டப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன:

(அ) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

(ஆ) ஒருங்கிணைப்பு மற்றும் திட்டங்கள் மேற்பார்வை.

(இ) மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டங்கள்.

(ஈ) புத்தாக்கம் மற்றும் தொழில் அடைகாப்பகங்கள்.

(உ) தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு.

முக்கிய நடவடிக்கைகள்

இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

(அ) தொழில்முனைவோர் மேம்பாடு

1. தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்
2. குழும தொழில் மேம்பாட்டுத் திட்டம்
3. அலுவலகப் பணியாளர்கள் பயிற்சி

(ஆ) புத்தாக்க வசதிகள்

1. புத்தாக்க பற்றுச் சீட்டுத் திட்டம்
2. தமிழ்நாடு உற்பத்தி, வணிக அடைகாப்பு உட்கட்டமைப்புத் திட்டம்.
3. ஆராய்ச்சி ஆய்வுகள்
4. திறன் கட்டமைப்புத் திட்டம்
5. புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்

(இ) தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம்

(ஈ) சிறப்புத் திட்டங்கள்

(உ) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம்

(ஊ) நிதி

5.2 2019–2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள்

5.2.1 தொழில்முனைவோர் மேம்பாடு

விரிவான மேலாண்மை செயலாக்கத் திட்டம் 2016-2021-ன் ஒரு பகுதியாக ‘தொழில் வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த’ பயிற்சி அணுகுமுறையைக் கொண்டு, தொழில்முனைவோர்களின் விருப்பம் மற்றும் தேவைகளுக்கேற்ப பயிற்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வழங்கி வருகிறது. தொழில்முனைவோருக்குப் பயிற்சி, பட்டறைகள் மற்றும் நிகழ்வுகள், வசதி மற்றும் வழிகாட்டுதல் சேவைகள், தொழில் தொடர்பான சந்திப்புகளுக்கான வாய்ப்புகள், வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் மற்றும் மாநிலத்திலும் மற்றும் வெளி மாநிலங்களிலும் கற்றுத் தெரிதலுக்கான வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டின் செயல்திறனை திடமானச் செயல்பாடுகள்மூலம் தெரியப்படுத்துகிறது.

(i) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

விரிவான மேலாண்மை செயலாக்கத் திட்டம் 2016-2021-ல் 'தொழில் வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த' பயிற்சித் திட்டங்களுக்கு ஊக்கத்தை அளித்து, ஒரு நிறுவனத்தைத் தொடங்குவதற்கான வாழ்க்கைச் சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தொழில்முனைவோரின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் 24,035 நபர்களுக்கு நான்கு கட்டங்களாக பல்வேறு பயிற்சித் திட்டங்கள்மூலம் பயனடைந்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

முதல் கட்டம் (கருத்துரு நிலை)—இக்கட்டமானது, ஒரு நாள் 'தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்களை' உள்ளடக்கியதாகும். இதில், தொழிலை எவ்வாறு தொடங்குவது, தொழில்முனைவோர் திறன்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு பயனளிக்கும் அரசின் பல்வேறு திட்டங்கள் போன்றவை எடுத்துரைக்கப்படுகின்றன. இம்முகாம்கள் மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்கள் மற்றும் மாவட்ட தொழில் மையத்துடன் இணைந்து நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வியாழக்கிழமையும் சென்னையில் இந்நிறுவன வளாகத்திலும் மற்றும் மாவட்டங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்களில் இயங்கும் தொழில் வழிகாட்டி மையம்மூலம் தொழில் ஊக்குவிப்பு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மையங்களில் தொழில் தொடங்க ஆர்வமுள்ள மற்றும் தற்போதைய தொழில்முனைவோர்களுக்கு வழிகாட்டுதல்கள் சேவை வழங்கப்படுகிறது.

- மாநிலம் முழுவதும் 82 இடங்களில் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு இதில் 6,074 தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்றனர்.

- தொழில் ஊக்குவிப்பு சேவைகள் திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 9 மாவட்டங்களில் 4,120 தொழில்முனைவோர் தங்கள் தொழில் திட்டங்கள் மற்றும் தொழில் விரிவாக்கத் திட்டங்கள் குறித்து தொழில் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

இரண்டாவது கட்டம் (தொழில் திட்டமிடல் நிலை)— இக்கட்டமானது தொழில் வணிக மாதிரி வடிவம் மற்றும் திட்ட

தயாரிப்பு குறித்த 5 நாள் பயிற்சியினை உள்ளடக்கியதாகும். பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு அவர்களின் வணிக மாதிரியை உருவாக்குவது, வணிகத் திட்டங்களை சரி செய்வது மற்றும் அரசுத் திட்டங்களின்கீழ் பல்வேறு தொழில் கடன்களுக்கான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வதற்கான வழிமுறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

- 13 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு இதில் 298 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

மூன்றாவது கட்டம் (தொழில் தொடங்கும் நிலை)-இந்த கட்டத்தின்கீழ் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு அரசு திட்டங்களின்கீழ் தொழிற்கடன் அனுமதி பெற்றவர்களை உள்ளடக்கிய நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது. இது தவிர, எந்தத் திட்டத்திலும் பங்கேற்காத பொதுவான தொழில்முனைவோர்களுக்கு 15 நாட்களுக்கான தொழில்முனைவு மேம்பாட்டுப் பயிற்சி சோதனை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியானது, வணிகத்தைத் தொடங்குவதற்கான குறிப்பிட்ட உள்ளீடுகள், சந்தைகளைப் புரிந்துகொள்வது, சட்டரீதியான வணிக இணக்கங்கள் மற்றும் செயல்பாட்டு மேலாண்மை போன்றவற்றை உள்ளடக்கியது.

- புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 678 நபர்கள் 15 நாட்களுக்கு பயிற்சி பெற்றனர்.

- வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 4,052 நபர்களுக்கு 7 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது.

- 107 நபர்கள் 15 நாட்கள் தொழில்முனைவு மேம்பாட்டுப் பயிற்சியினைப் பெற்றனர்.

நான்காம் கட்டம் (நடப்பு தொழில்முனைவோருக்கானது)-இந்தக் கட்டத்தில் அன்றாட முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள், அன்றாட நடவடிக்கைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சமகால தலைப்புகளின்கீழ் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி கால அட்டவணை

அரை நாள் முதல் 3 நாட்கள் வரை மாறுபடும். இக்கட்டத்தில், இவ்வாண்டில், கீழ்க்காணும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன:

- சரக்குகள் மற்றும் சேவை வரி/மின் வழி பட்டியல்
- நிதி மற்றும் நடைமுறை மூலதன மேலாண்மை
- சிறு தொழில்முனைவோருக்கான வரி திட்டமிடல்
- மின்னணு முறையில் சந்தைப்படுத்துதல்
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் வியாபார யுக்திகள்
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி குறித்த செயல்முறைகள் மற்றும் ஆவணப்படுத்துதல்
- காப்பீடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பல

(ii) குழுமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சீரிய வளர்ச்சி மற்றும் நிலைத்த தன்மைக்கு குழுமத் தொழில் மேம்பாடு ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. ஒரு குழுமம் என்பது ஒரு துறையில் குறிப்பிட்ட புவியியல் செறிவுடன் உள்ள நிறுவனங்கள் ஒரே மாதிரியான அல்லது ஒத்த பொருட்களை உற்பத்தி செய்து, பொதுவான வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் நிறுவனங்கள் ஆகும். குழுமத் தொழில் முன்னேற்றத்திற்காக விழிப்புணர்வு முகாம்கள், கருத்துப்பட்டறைகள், நடப்புத் தலைப்பில் நிகழ்வுகள், குழும வெளிப்பாட்டுப் பயணங்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகையில் செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

- குறு மற்றும் பாரம்பரிய குழுமத் தொழில்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டன. குறிப்பாக கைத்தறி மற்றும் விசைத்தறி குழுமம், அருப்புக்கோட்டை, பனைவெல்லம் குழுமம், சாயல்குடி, அச்சுத்தொழில் குழுமம், இராணிப்பேட்டை, ஆயத்த ஆடை குழுமம், புதியம்புத்தூர், செங்கல் தொழில் குழுமம், கிருஷ்ணாபுரம், நகை, தச்சு, கற்சிற்பங்கள் குழுமம், துறையூர், பொறியியல் தொழில் குழுமம், ஓசூர்,

[2020 மார்ச் 24

செயற்கை நார் தொழில் குழுமம், பல்லடம், உணவு பதப்படுத்துதல் குழுமம், ஒட்டன்சத்திரம் ஆகிய ஒன்பது தொழில் குழுமங்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் 797 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

- தொழில் குழுமங்களுக்கான "வடிவமைப்பு அம்சங்கள் மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்கான" ஒரு நாள் கருத்துப்பட்டறை நான்கு இடங்களில் நடத்தப்பட்டன. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கான சந்தையின் தேவைகளுக்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில், காஞ்சிபுரத்தில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டதில் 85 தொழில்முனைவோர் பங்கு பெற்று பயனடைந்தனர்.
- சிறப்பாக நடைபெறும் பல்வேறு தொழில் குழுமங்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப லீன் உற்பத்தி, 5S, மின்னணு சந்தைப்படுத்துதல், வடிவமைப்பில் சமீபத்திய போக்குகள், தரக்குறியீடு மற்றும் தரநிலைகள், நம்பிக்கை கட்டமைப்பு, சந்தைப்படுத்துவதற்கான உத்திகள் போன்ற நடப்புத் தலைப்புகளில் 9 கருத்துப்பட்டறைகள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டன. இதில் 567 தொழில் குழும உறுப்பினர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

(iii) பணியாளர்களுக்குப் பயிற்சி

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவித்து சிறப்பாக செயல்பட அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் இண்ட்கோசர்வ் பணியாளர்களுக்கான 3 நாட்கள் புத்துணர்வு பயிற்சியில், பணியாளர்களை தகவமைப்படுத்தும் விதத்தில் ஊக்கமூட்டி சிறப்பான அளவில் பணிபுரிய ஏதுவான சூழல் உருவாக்கப்பட்டது.

- 594 தொழில் மற்றும் வணிகத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்தனர்.

2020 மார்ச் 24]

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் பணிபுரியும் 48 பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.
- 20 இண்ட்கோசர்வ் பணியாளர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

5.2.2 புத்தாக்கங்களுக்கான செயல்பாடுகள்

(i) புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டம்

இத்திட்டம், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மிக முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிலை புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கும் ஒரு உன்னதத் திட்டமாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் புதிய முன்மாதிரிகள் தயாரிக்க ஏதுவாக, அவர்களின் புதிய கண்டுபிடிப்பு நோக்கங்களுக்கு பற்றுச்சீட்டு A-ன்கீழ் அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் வரையிலும், பற்றுச்சீட்டு B-ன்கீழ் அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் வரையிலும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதுவரை 27 திட்டங்களுக்கு ரூ.72.90 இலட்சம் வழங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ii) தமிழ்நாடு உற்பத்தி வணிக அடைகாப்பு உட்கட்டமைப்பு திட்டம்

தொழில்நுட்பங்கள் சார்ந்த தொழில்முனைதலுக்கு உத்வேகம் அளிப்பது தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும். தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் உற்பத்தி வணிக அடைகாப்பகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்புகள் ஏற்படுத்த, மூன்று வருட காலத்திற்கு ஒவ்வொரு காப்பகத்திற்கும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ், அதிகபட்சமாக ரூ.2.5 கோடி நிதியுதவியுடன் ஒன்பது அடைகாப்பகங்கள் நிறுவப்பட்டுள்ளன. நாட்டிலேயே முதன்முறையாக கால்நடை உயிரியல் மற்றும் வேளாண் வனவியல் துறைகளில் வணிக அடைகாப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, தோட்டக்கலை, வேளாண்மை, மீன் வளம், மருந்தியல் மற்றும் உணவு ஊட்டச்சத்து துறைகளில் வணிக அடைகாப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிதியுதவி அளிப்பதுடன் அடைகாப்பகங்களை நிருவகிக்கத் தேவையான, சிறப்புத் திறன்களை

[2020 மார்ச் 24

மேம்படுத்திக்கொள்ளும் வகையில் அடைகாப்பக மேலாளர்களுக்கு சிறந்த அடைகாப்பக செயல்பாடுகள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- 39 அடைகாப்பக மேலாளர்கள் இத்தகைய பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
- ஒன்பது அடைகாப்பகங்களிலும் 130 அடைகாப்போர் பதிவு செய்துள்ளனர்.
- 176 தொழில்நுட்ப கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு 10,466 நபர்கள் பங்கு பெற்று பயனடைந்துள்ளனர்.
- 3 ஹேக்கத்தான் நடத்தப்பட்டு அதில் 143 பேர் பங்கு பெற்றனர்.

(iii) ஆராய்ச்சி ஆய்வுகள்

தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்தில் முக்கிய முடிவுகளை மேற்கொள்ளவும், பிரச்சினைகளைக் களையவும், தேவையான தகவல்கள் மற்றும் அறிவாற்றல்களைப் பெறுவதற்காக ஆராய்ச்சி மேற்கொள்வது தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் முதன்மையான பணிகளில் ஒன்றாகும். ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தொலைநோக்கைக் கொண்ட தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது, தேவைகளின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்படும் பொருட்கள் குறித்து முன்னோடி ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்கிறது. முன்னேற்றத்தில் உள்ள ஆராய்ச்சிப் பணிகள் பின்வருமாறு:

- "மாணவிகள் தொழில்முனைதலில் ஈடுபடுதலை நிர்ணயிக்கும் காரணிகளை, இனங்காணுதலும், கணக்கிடுதலும்" என்ற ஆய்வு சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்களை நிர்மாணித்து நிருவகிப்பதில் மகளிரைப் பாதிக்கும் உட்புற மற்றும் வெளிப்புற சூழ்நிலைக் காரணிகளை இனங்காணுதல் இவ்வாய்வின் மிக முக்கிய நோக்கமாகும்.

2020 மார்ச் 24]

- மாநிலத்தில் நிலவும் தொழில் வளர்ச்சி குறித்து விரிவான நிலவரம் பற்றியும் மேலும், அதன் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கை முடிவுகளை அரசு மேற்கொள்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் "வருடாந்திர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அறிக்கை-2019" தயாரிக்கும் பணி, IFMR-LEAD என்ற நிறுவனத்துடன் இணைந்து நடைபெற்று வருகிறது.

- புத்தொழில் சூழல்முறையைப் புரிந்துகொள்ளவும், சூழலில் நிலவும் குறைபாடுகளைக் களைந்து மேலும் சிறப்பான வகையில் செயல்பட ஏதுவாகவும் IFMR-LEAD என்ற நிறுவனத்துடன் இணைந்து "புத்தொழில் சூழல்முறை ஆய்வு" நடத்தப்பட்டு வருகிறது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் குழுமங்களில் நிலவும் நடைமுறைப் பிரச்சினைகளையும், சவால்களையும் ஆராய்ந்தறிந்து, அவற்றைக் களைந்து புதிய கொள்கை முடிவுகளை மேற்கொள்ள ஏதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் குழுமங்கள் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர் பகுதியிலுள்ள மோட்டார் மற்றும் பம்ப் குழுமம், சிவகாசி பகுதியிலுள்ள பட்டாசுத் தொழில் குழுமம் ஆகியவற்றில் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுப் பணிகள் முன்னணி தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iv) திறன் கட்டமைப்புத் திட்டங்கள்

- மாணவிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கான வடிவமைப்புத் திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைப்பு குறித்த "மகளிர் தொழில்முனைவோருக்கான சேன்ட் பாக்ஸ் பயிற்சிகள்" இரண்டு காஞ்சிபுரத்திலுள்ள இந்திய தகவல் தொழில்நுட்பம் வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்து மூன்று வாரங்கள் நடத்தப்பட்டன. இதில் 42 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

- "தரமதிப்பீட்டில் HPLC-ன் பங்களிப்பும், முக்கியத்துவமும்" குறித்த 5 நாட்கள் பயிற்சி மகளிருக்கான பொன்விழா

உயிரி தொழில்நுட்பப் பூங்கா நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. பயிற்சியில் 33 நபர்கள் கலந்து கொண்டனர்.

- "இனக்கலப்பு புரத உற்பத்தி" குறித்த 5 நாள் பயிற்சி, சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து இந்திய தொழில்நுட்ப கழக ஆராய்ச்சிப் பூங்காவில் நடத்தப்பட்டதில் 20 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

(v) புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சித் திட்டம் (IEDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையங்களுக்காக விரிவான திட்டத்தினை 2016-2017 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இந்த முயற்சி மாநிலம் முழுவதும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களிலும், அதைச்சுற்றியும் நடைமுறை சாத்தியமுள்ளதும் மற்றும் ஆற்றல் மிக்க தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை உருவாக்குவதும் ஆகும். இம்முயற்சியின்கீழ், பயிற்சி நடத்துநர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்காக பல வகையான திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

'முனையம்' மற்றும் 'உறுப்பு நிறுவனங்கள்' மாதிரியின்கீழ் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் செயல்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

- மாநிலத்தில் 12 மண்டல மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மையங்கள் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, காரைக்குடி, நாகர்கோவில் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- 600 கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் இணைந்துள்ளன.
- உறுப்பினர் நிறுவனங்களில் மாணவர் தொழில்முனைவோர் மையங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதுவரை 330 நிறுவனங்கள் மாணவர் தொழில்முனைவோர் மையங்களை (E-cells) உருவாக்கியுள்ளன.

2020 மார்ச் 24]

- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் தொடங்கப்பட்ட தொழில்முனைவோர் குறித்த சான்றிதழ் படிப்பு, புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

- மாணவர் தொழில்முனைவோர் மையங்களை (E-cells) நடைமுறைப்படுத்தவும், தொழில்முனைவு சார்ந்த செயல்பாடுகளை கல்லூரி வளாகத்திற்குள் செயல்படுத்தவும் இணைய வழி பாடம் நடத்தவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் வாத்வானி– அறக்கட்டளை தேசிய தொழில்முனைவு வலையத்தால் (Wadwani Foundation-National Entrepreneurship Network) உருவாக்கப்பட்ட இணையதள வழி பாடத்திட்டத்தின் மூலமும், உறுப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த 1,520 பயிற்றுநர்களுக்கும், 2,552 மாணவர் தொழில்முனைவோர் மையங்களின் தலைவர்களுக்கும் (E-Leaders) பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கம் முதல் இதுவரை 29,186 மாணவர்கள் இந்த இணையதள பாடத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 6,859 நபர்கள், முதல் நிலை பாடத்திட்டத்தினை நிறைவு செய்துள்ளனர். பாடத்திட்டம் தேசிய தொழில்முனைவோர் வலையத்தால் (NEN) சீரமைக்கப்பட்டு, “மாணவர்களுக்கு நேரடியாக” (D2S) என்ற முறையில், நடப்பாண்டில் மாதிரி அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. 12 நிறுவனங்கள் “மாணவர்களுக்கு நேரடியாக” (D2S) முறையில் இப்படிப்பை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

- 7 எண்ணிக்கையிலான பல்கலைக்கழகம்-தொழிற்சாலை கூட்டாண்மைப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

- கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி நடத்துநர்களுக்காக உயிரி தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் காப்புரிமை குறித்த 14 பயிற்சிப் பட்டறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

- தொழிற்பயிற்சி மையங்களை (ITI) சார்ந்த 282 பயிற்சி நடத்துநர்கள் மற்றும் 637 மாணவர்களுக்கு தொழில்முனைவுக்கான வாய்ப்புகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- இதுவரை 695 பள்ளி மாணவர்களுக்கு தொழில்முனைவுக்கான திறமைகளை மேம்படுத்தும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

5.2.3 தகவல் தொழில்நுட்பப் பிரிவு

நீடித்த, நிலையான மற்றும் விரைவான வளர்ச்சியைக் கொண்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சூழலை கட்டமைப்பது தொடர்பான, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தீவிர சேவைகள் மற்றும் உள்ளார்ந்த நடவடிக்கைகள் குறித்த தகவல்கள், முழுமையாக வரையறுக்கப்பட்ட தகவல் பரவலாக்க திட்டத்தின்மூலம் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இத்திட்டம் வெகுஜன பெருந்திரள், கொண்டாட்டங்கள், களவெளிப்பாட்டு பயணங்கள், தொழில் கண்காட்சிகளில் பங்குபெறுதல், சுவரொட்டிகள், கையேடுகள், விளம்பரங்கள் போன்றவற்றின்மூலம் படித்த வேலையில்லாத இளைஞர்கள், புத்தொழில்முனைவோர், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் போன்றவர்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பிரத்யேக அடையாளத்தை நிலைநிறுத்தும் பொருட்டு கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன:

- முழுமையான தகவல்களைக் கொண்ட தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இணையதளம் (www.editn.in), இந்நிறுவனம் மற்றும் அதன் செயல்பாடுகளை அறிந்துகொள்ள முற்படுவோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

- சமூக ஊடகங்களான முகநூல், டிவிட்டர் மற்றும் யூடியூப் மூலமாக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் திட்டங்கள், பொதுத் தகவல்கள், வழிகாட்டுதல் போன்றவற்றை பரவலாக விளம்பரப்படுத்தப்படுகின்றன.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சித் திட்டங்களுக்கான பதிவுகள் மற்றும் மின் சான்றிதழுக்கு இணையதளம்மூலம் பதிவு செய்யப்படுகிறது. இதனை இணையதளம் மூலமாகவே சரிபார்க்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- அகில இந்திய வானொலியின் ரெயின்போ பண்பலையில் 'தொழிலும் வாழ்வும்' எனும் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன்கிழமை தோறும் மாலை 4.45 முதல் 5.00 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் இதுவரை 29 ஒலிபரப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

- ஐக்கிய நாடுகளின் பொதுசபை அறிவித்தவாறு, ஜூன் மாதம் 27 ஆம் நாள் சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நாளாகக் கொண்டாடப்பட்டது.

- மூன்று கள வெளிப்பாட்டுப் பயணங்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. முதலாவது, வாசனை மற்றும் நறுமணத் தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் உத்தரபிரதேச மாநிலம், கன்னாஜில் உள்ள வாசனை மற்றும் நறுமண மேம்பாட்டு மையத்துடன் இணைந்து மாவட்டத் தொழில் மையம் மற்றும் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த 34 அதிகாரிகளுக்கு களப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டாவதாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஒரு விவசாய குழுவிற்கு நறுமண பயிர்கள் பயிரிடுதல், வடித்தல், தர நிர்ணயம் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கள வெளிப்பாட்டுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்றாவதாக, பல்லடம் கைத்தறி குழும நிறுவனத்தின் நிர்வாகிகளுக்காக மஹாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு குழும கள வெளிப்பாட்டுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் ஒன்பது குழும நிர்வாகிகள் கலந்துகொண்டு நவீன இயந்திரங்கள், தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல் ஆகியவை குறித்து பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

- இரண்டு புத்தொழில் உலாக்கள், ஆர்வமுள்ள மற்றும் ஆரம்பநிலை புத்தாக்க எண்ணங்களை உடைய புத்தொழில்முனைவோருக்காக நடத்தப்பட்டன. இதில் 39 நபர்கள் பங்கேற்று பல்வேறு புத்தொழில் நிறுவனங்களின் தலைமை நிருவாக அலுவலர்களைச் சந்தித்து அவர்களின் அனுபவங்களை அறிந்து பயனடைந்தனர்.

- தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெற்ற 9 தொழில் கண்காட்சிகளில் தொழில்முனைவோர் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 38 தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில்முனைவோர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இம்முயற்சி, அவர்களின் புத்தாக்க பொருட்களை/தொழில்நுட்பங்களை சந்தைப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப செயல்விளக்கத்திற்கும் ஏதுவாக அமைந்தது. இந்நிறுவனம் பங்குபெற்ற ஒன்பது தொழில் கண்காட்சிகளின் விவரம் பின்வருமாறு:

- o இண்டெக் 2019 (INTEC-2019)
- o அக்ரிஇண்டெக்ஸ் 2019 (AgriINTEX-2019)
- o சிஐஐ கனெக்ட் 2019 (CII CONNECT-2019)
- o டை குளோபல் 2019 (TiE Global-2019)
- o ஈரோகனெக்ட்-2019 (ERO CONNECT-2019)
- o எலெக்ட்ரோடெக் 2019 (ELECTROTEC-2019)
- o டைகான் 2019 (TiECON-2019)
- o இட்ர சுகந்தி மேளா 2019 (Itra Suganthi-2019)
- o டெஃப்எக்ஸ்போ 2020 (DefExpo-2020)

- மாநிலத்தில், பெண்கள் மத்தியில் ஆர்வமுள்ள தொழில்முனைவு கலாச்சாரத்தை உருவாக்கும் பொருட்டு, பெண்களுக்கான பிரத்யேக மகளிர் தொழில்முனைவோர் மாநாடு கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது. இதில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் முன்னணி புத்தொழில் நிறுவனங்களின் தலைமை நிருவாக அலுவலர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். இந்நிகழ்வில், மாநிலம் முழுவதிலும் இருந்து 110 பெண் தொழில்முனைவோர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

- இரண்டு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் உத்தரபிரதேசம் கன்னாஜில் உள்ள வாசனை மற்றும் நறுமண மேம்பாட்டு மையத்துடன் இணைந்து நறுமண எண்ணெய்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் நறுமண சிகிச்சைக்கான ஒரு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. 40 பேர் பங்குபெற்ற இந்தக் கருத்தரங்கில், இத்தொழிலுக்கான வாய்ப்புகள், உலகளாவிய சூழ்நிலை, நறுமண சிகிச்சையின் அடிப்படைகள் மற்றும் மூலப்பொருட்களுக்கான ஆதாரங்கள் போன்றவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. இரண்டாவதாக, தென்னை சார்ந்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களுக்கு வட்டார அளவிலான பயிற்சிப் பட்டறை தென்னை மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சிப்

பட்டறையில், தென்னையில் மதிப்புக் கூட்டலுக்கான வாய்ப்புகள், தேவையான தொழில்நுட்பங்கள், உள்நாட்டு மற்றும் பன்னாட்டளவில் சந்தைப்படுத்துதல் போன்ற தகவல்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் 110 தென்னை விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கலந்துகொண்டனர்.

- மின்னணு மற்றும் அச்சு வடிவிலான ஆவணப்படுத்துதல் முறையில் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகியவற்றின்கீழ், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் பயிற்சி பெற்ற வெற்றிகரமான 45 தொழில்முனைவோர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளனர்.
- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மாதாந்திர மின்னணு செய்தி மடல் வெளியிடப்பட்டது. இச்செய்தி மடல், பயிற்சி பெற்றோர், பங்குதாரர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்கள், தொழில்சார் துறைகள் ஆகியோருக்கு அனுப்பப்படுகிறது.
- இந்நிறுவனத்தின் பல்வேறு பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள், விழிப்புணர்வு முகாம்கள் போன்ற நிகழ்வுகளைத் தொகுத்து 2019-2020 ஆம் ஆண்டிற்கான அச்சு வடிவிலான பயிற்சிக் குறிப்பேடாக வெளியிடப்பட்டது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு தலைப்புகளில் 39 மின்கற்றல் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டு இந்நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

5.2.4 தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)

மாநிலத்திலுள்ள புத்தொழில்களை வளர்ச்சியடைய செய்யவும் மற்றும் புத்தாக்க சூழலை மேம்படுத்தவும், "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை (2018-2023)" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19-1-2019 அன்று வெளியிடப்பட்டது. இக்கொள்கையை செயல்படுத்த, தமிழ்நாடு தொழில்முனைவோர்

மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டின் முக்கிய செயல்பாடுகள் கீழ்வருமாறு:

(i) புத்தாக்க சவால்கள்/போட்டிகள்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII) செயல்படுத்தும் விரிவான செயலாக்கத் திட்டத்தின் (Strategic Plan) ஒரு பகுதியாக, மாணவர்களுக்கு, தமிழ்நாடு மாணவர் கண்டுபிடிப்பாளர்கள் திட்டமும் (TNSI), வல்லுநர்களுக்கு தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டிகளும் (TNIGC) நடத்தப்பட்டன. இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறை மற்றும் கல்வி மற்றும் தொழில் துறையிலுள்ள புத்தொழில்முனைவோர்களுடன் இணைந்து, தமிழ்நாடு மாணவர் இளம் புத்தாக்க சவால் போட்டி (TNIIC) எனும் தலைப்பில் 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கென புத்தாக்கப் போட்டி மாதிரி அடிப்படையில் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் 494 பள்ளிகளைச் சேர்ந்த 1,471 மாணவர்கள் பங்கேற்றனர்.

- இதுவரை சுமார் 100 அணிகளுக்கு அவர்கள் வடிவமைத்த முன்மாதிரிகளை (Prototype) மேம்படுத்துவதற்கு 1 கோடி ரூபாய் வரை ஊக்க மானியம் மற்றும் ரொக்கப் பரிசாக ரூ.10,000/- முதல் ரூ.5 இலட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது.
- நடப்பாண்டில் தமிழ்நாடு புத்தாக்க பெரும் சவால் போட்டிகள்-2019 (TNIGC-2019) நடத்தப்பட்டு வருகிறது. இதில் வெற்றி பெறும் ஐந்து அணிகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

(ii) புத்தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள்

- உலகளவில் நடைமுறையில் உள்ள சிறந்த உத்திகளை அறியும்பொருட்டு டப்ளின் (Dublin), அயர்லாந்தில் நடைபெற்ற மென்பொருள் சேவைக்கான சர்வதேச மாநாட்டில் பங்கேற்கவும் மற்றும் லண்டன் புத்தொழில் சூழல் அமைப்பைக் காண்பதற்கும், 8 SaaS நிறுவனர்கள் மற்றும் புத்தொழில் சுற்றுச்சூழல் அமைப்பாளர் குழுவிற்கு தமிழ்நாடு தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனம் ஆதரவளித்தது. மேலும், "கிளைமேட் லாஞ்ச் பேட்" (Climate Launch Pad) போட்டியில் இந்திய அளவில் வெற்றி

பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு புத்தொழில் நிறுவனங்கள், 2019 ஆம் ஆண்டு நவம்பர் 14-15 ஆம் தேதிகளில் ஆம்ஸ்டர்டாம் நகரில் நடைபெற்ற சர்வதேச அளவிலான இறுதிப் போட்டிகளில் பங்கேற்கவும் ஆதரவு அளிக்கப்பட்டது.

- உயிரி தொழில்நுட்பத் துறை (DBT) மற்றும் உயிரி தொழில்நுட்பத் தொழிற்கூடங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கான உதவிக் குழு (BIRAC) ஏற்பாடு செய்த உலகளாவிய பயோ இந்தியா 2019 ("Bio India-2019") நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனம் பங்கேற்றது. மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 பயோடெக் புத்தொழில் நிறுவனங்கள் இந்நிகழ்வில் தங்களின் தயாரிப்புகள்/முன் மாதிரிகளைக் காட்சிப்படுத்த ஆதரவு அளிக்கப்பட்டது.

- தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதி உதவியுடன் "மின்னணு உச்சி மாநாடு 2020" (E-Summit 2020) நிகழ்வு, சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIT-M) மாணவர் தொழில்முனைவோர் பிரிவால் (E-21) 2020, ஜனவரி 17-19-ல் நடத்தப்பட்டது.

- சென்னை மற்றும் அடுக்கு-2 மற்றும் அடுக்கு-3 நகரங்களில், இந்திய தொழில் துறை கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்த புத்தொழில் நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்த ஆதரவு அளிக்கப்பட்டது.

- ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரியின் தொழில்நுட்ப வணிகக் காப்பகம்மூலம் நடத்தப்பட்ட "ஸ்டார்டப் மேனியா" போட்டியில் வெற்றி பெற்ற 5 மாணவர் அணிகள் மற்றும் தொழில் துறை ரீதியான புத்தொழில்களுக்கு தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் ஊக்க மானியமாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டது.

- "விழுதுகள் ஆயிரம்" என்ற பெயரில் "நேட்டிவ் லீட்" (Native Lead) அறக்கட்டளைமூலம் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தொழில் விழிப்புணர்வு (தேடல்) மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்த ஆதரவு அளிக்கப்பட்டது.

- பருவநிலை மாற்றம் குறித்த "Climate Launch Pad"-ன் தேசிய அளவிலான இறுதிப் போட்டி, 21-9-2019 அன்று சென்னையில் நடத்தப்பட்டது.

- "பைகான்" (Pycon) மற்றும் "சாஸ் உள்ளூர்" (SaaS local) மாநாடுகள் சென்னையில் நடைபெற ஆதரவு அளிக்கப்பட்டது.

- "டெக்ஸ்ட்டத்தான்" (Textathon) எனும் ஜவுளி புத்தொழில்களுக்கான ஹேக்கத்தான் (Hackathon) NIFT-TEA என்ற நிறுவனத்துடன் இணைந்து 2019, டிசம்பர் 23-24 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

- சென்னை அண்ணா பல்கலைக்கழகத் தொழில்முனைவு மையத்தின் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த "ENANTRA" என்ற மாணவர் முன்னணி புத்தொழில் நிகழ்வை, 2020, பிப்ரவரி 20-23 ஆகிய நாட்களில் நடத்த ஆதரவு அளிக்கப்பட்டது.

5.2.5 சிறப்புத் திட்டங்கள்

கிராமப்புற பொது வாழ்வாதார குழுக்கள் மற்றும் பொது வாழ்வாதார கூட்டமைப்பில் தொழில்முனைவைக் கட்டமைக்கவும் வணிக மேம்பாட்டுச் சேவைகளை அளிக்கவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூ.50 இலட்சம் நிதியுதவி அளித்தது. இத்திட்டம் மாதிரி ஆய்வுத் திட்டமாக வேலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கிராம இளைஞர்கள் மற்றும் பெண்கள் அவர்களது தொழில்முனைவு வளர்ச்சியில் தொழில்நுட்ப வசதி பெறவும் தொழில்நுட்ப வழிகாட்டிகள்மூலம் அறிவுரை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறையின் அரசாணை எண் 107, நாள் 8-8-2019-ன்படி (அ) உள்ளூர் மக்களை சுற்றுலா சார்ந்த வாழ்வாதார செயல்பாடுகளில் பெருமளவில் பங்கேற்கச் செய்யவும், (ஆ) உள்ளூர் மக்கள் மற்றும் நிறுவனங்கள் சுற்றுலா சார்ந்த திறன்களை வலுப்படுத்தும் நோக்கில் ரூ.4 கோடி அளவிலான பயிற்சித் திட்டங்களையும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், பல்வேறு பங்குதாரர்கள், அலுவலர்கள் மற்றும்

2020 மார்ச் 24]

குறு வியாபாரிகளுக்கு திறன் கட்டமைப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

5.3 தேசிய தொழில்முனைவோர் விருது

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் 'தேசிய தொழில்முனைவோர் விருது 2019, தொழில் சூழல் கட்டமைப்பாளர் பிரிவின் பதக்கம்' மற்றும் ரூ.10 இலட்சம் பரிசுத்தொகையை மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைதல் அமைச்சகத்திடம் இருந்து பெற்றுள்ளது. இவ்விருது 9-11-2019 அன்று மத்திய அரசின் மாண்புமிகு திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைதல் அமைச்சர் அவர்களால் புது தில்லியில் வழங்கப்பட்டது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நாட்டிலேயே இவ்விருதை வாங்கிய ஒரே அரசு சார்ந்த நிறுவனம் ஆகும்.

5.4 நிதி சாதனை

தமிழ்நாடு அரசு 2019-2020 ஆம் நிதியாண்டில், பல்வேறு பயிற்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கு, ரூ.11.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M-TIPB)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 13-6-2018 அன்று விதி எண் 110-ன்கீழ், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்: "தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கிடவும், வெளிநாட்டு வர்த்தகர்களின் ஒத்துழைப்பைப் பெற்றிடவும், முதலீட்டை ஈர்ப்பதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு எனும் தன்னாட்சி அமைப்பு அமைக்கப்படும். ஒற்றைச் சாளர முறையை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும், விரைவான மற்றும் குறித்த காலத்தில் ஒப்புதல்களை வழங்கவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான முதலீடுகளை மேம்படுத்தவும், வணிக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் வணிகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒத்துழைப்பை உருவாக்கவும், தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் இவ்வமைப்பு செயல்படும்."

மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19-9-2019 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பைத் துவக்கி வைத்தார்கள். இந்த நிறுவனமானது சென்னை கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ தலைமையகக் கட்டடத்தில் முதலாவது தளத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இவ்வமைப்பானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கான ஏற்றுமதிகள், வணிகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவதை மட்டுமே முதன்மைப் பணிகளாகக் கொண்டு செயல்படும் நாட்டிலேயே இவ்வகையான முதல் அமைப்பாகும்.

தமிழ்நாடு அரசானது இவ்வமைப்பின் நிருவாகச் செலவிற்காக ரூ.38.23 இலட்சத்தை முதல் தவணையாகவும், நிறுவனத்தின் பணிகளை செயல்படுத்த ரூ.4.00 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

2020 மார்ச் 24]

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிக மற்றும் முதலீட்டு அமைப்பானது 2019-2020 ஆம் நிதியாண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வணிக வாய்ப்புகளை மேம்படுத்த, கீழ்க்காணும் 12 நிகழ்வுகளில் பங்கேற்றதோடு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்பதற்கான உதவிகளையும் வழங்கியுள்ளது:

வ. எண்	நாள்	நிகழ்ச்சி விவரம்
1.	5-9-2019	விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் குறித்த "கோட்ரா" உதவி மையம் துவக்க விழா, சென்னை
2.	3-10-2019 முதல் 05-10-2019 வரை	22-வது சர்வதேச இராணுவ மற்றும் பாதுகாப்பு கண்காட்சி, புதுடெல்லி
3.	1-12-2019 முதல் 2-12-2019 வரை	52-வது பன்னாட்டு வாகன கண்காட்சி 2019, ஈஷான், ஜெர்மனி
4.	3-12-2019	33-வது உணவு மற்றும் குளிர்பானங்கள் இடுபொருட்கள் கண்காட்சி, பாரீஸ், பிரான்ஸ்
5.	4-12-2019 முதல் 5-12-2019 வரை	முதலாவது விண்வெளி சேர்க்கை உற்பத்தி உச்சி மாநாடு, டுலோஸ், பிரான்ஸ்
6.	6-12-2019 முதல் 7-12-2019 வரை	24-வது ஆர்ட்டிஜியானோ கைவினைக் கண்காட்சி, மிலன்-இத்தாலி.

வ. எண்	நாள்	நிகழ்ச்சி விவரம்
7.	2-12-2019 முதல் 4-12-2019 வரை	5-வது கேப் இந்தியா கண்காட்சி 2019, மும்பை
8.	11-12-2019	இந்திய பொறியியல் மேம்பாட்டு நிறுவனம் நடத்திய பொறியியல் மற்றும் உற்பத்தி துறை குறித்த இந்திய-ஆப்பிரிக்க கூட்டு உரையாடல் அமர்வு, புதுடெல்லி
9.	12-12-2019	2-வது லாஜிக்ஸ் இந்தியா சர்வதேச B-S கண்காட்சி, புதுடெல்லி
10.	5-2-2020 முதல் 9-2-2020 வரை	10-வது இராணுவத் தளவாடங்கள் கண்காட்சி, 2020, லக்னோ.
11.	11-2-2020	ஜெம் சாம்வாத்-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒரு நாள் தொழிற்பயிற்சி, சென்னை
12.	4-3-2020 முதல் 6-3-2020	இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (EEPC) நடத்திய 9-வது சர்வதேச பொறியியல் கண்காட்சி (IESS) கோயம்புத்தூர்.

6.1 அரசின் இணைய மின்னணு சந்தை (GeM Portal)

மத்திய, மாநில அரசு துறைகளுக்கும், பொதுத் துறை நிறுவனங்களுக்கும், தன்னாட்சி அமைப்புகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேவையான பொருட்களை தேசிய அளவில், பொதுக் கொள்முதல் செய்திட அரசு மின்னணு சந்தை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பயன்பாடுகள் குறித்து, மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த வாங்குவோர்

மற்றும் விற்போர் இடையிலான ஒரு நாள் கலந்துரையாடல் நிகழ்ச்சி, சென்னையில் நடத்தப்பட்டது. இதில் அரசு மின்னணு சந்தையின் இணையப் பயன்பாடுகள் குறித்து பெரிய அளவில் விளக்கப்பட்டது. இவ்விணைய வசதி மின்னணு சந்தையில், 10-3-2020 ஆம் நாளைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 3,694 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இதில் பதிவு செய்துள்ளன.

மேலும், மாநிலத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன பொருட்களை, தேசிய அளவில் சந்தைப்படுத்திட ஊக்குவிக்கும் பொருட்டு இவ்விணைய மின்னணு சந்தையில் தங்களையும் பதிவு செய்திட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6.2 கோயம்புத்தூரில் நடைபெற்ற சர்வதேச பொறியியல் கண்காட்சி

தமிழ்நாடு, பொறியியல் துறையில் ஒரு வலுவான தளத்தைக் கொண்டுள்ளது. அதிகளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயந்திரக் கருவிகள், விசையியக்கக் குழாய்கள், உலகளாவிய பாதுகாப்புக்குத் தேவையான பாகங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டின் உலகளாவிய போட்டித் திறனையும், பொறியியல் ஏற்றுமதியையும் மேம்படுத்திட, இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தால் (EEPC) 2020, மார்ச் 4 ஆம் தேதி முதல் 6 ஆம் தேதி வரை கோயம்புத்தூரில் ஏற்பாடு செய்யப்பட்ட 9-வது சர்வதேச பொறியியல் கண்காட்சியை நடத்துவதற்கான மாநில அமைப்பாளராக தொடர்ந்து 4-வது முறையாக, தமிழ்நாடு அரசு இணைந்து கொண்டது. இக்கண்காட்சியில், 40 நாடுகளைச் சேர்ந்த 350 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்கேற்றனர். பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த 350 கண்காட்சியாளர்கள் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தினர். இந்நிகழ்வு தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தை முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களுடனான ரூ.100 கோடி மதிப்பிலான வணிகத் தொடர்புகளை உருவாக்கியுள்ளது. மேலும், நாட்டிலேயே சிறந்த ஆட்சி மற்றும் வணிக எளிதாக்குதலுக்கான ஒற்றைச் சாளர தகவு ஆகியவற்றின்மூலம் தமிழ்நாடு முதலீடுகளைச் செய்வதற்கான மிகச் சிறந்த மாநிலம் என்பதை வெளிப்படுத்தவும் இக்கண்காட்சி உதவியுள்ளது. இந்த சர்வதேச கண்காட்சியில் குறு, சிறு மற்றும்

[2020 மார்ச் 24

நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு நிறுவனம், 120 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்க உதவியதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் மத்திய பொதுத் துறை நிறுவனங்களுடனான நேரடியாக தொடர்பையும் ஏற்படுத்தி தந்துள்ளது.

இக்கண்காட்சியில், தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு கண்காட்சிக் கூடத்தில் 120 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 2,000 சதுர மீட்டர் காட்சிப்பரப்பு, மானியக் கட்டணத்தில் பிரித்து எடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசால் காட்சிக்கூடங்களுக்கான கட்டணத்தில் குறு மற்றும் மகளிர் நிறுவனங்களுக்கு 90% மானியமும், சிறு நிறுவனங்களுக்கு 75% மானியமும், நடுத்தர நிறுவனங்களுக்கு 50% மானியமும் வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 1

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பதிவு விவரங்கள்

ஆண்டு	நிறுவனங்களின் எண்ணிக்கை	முதலீட்டு அளவு (ரூபாய் கோடியில்)	உற்பத்தி அளவு (ரூபாய் கோடியில்)	வேலைவாய்ப்பு (எண்ணிக்கை)
2007-2008	27,209	2,547.14	8,739.95	2,42,855
2008-2009	32,049	3,557.89	13,354.86	2,94,255
2009-2010	41,799	3,214.22	10,880.01	1,51,743
2010-2011	57,902	5,872.37	12,500.86	4,05,233
2011-2012	70,758	7,429.59	15,496.00	5,02,381
2012-2013	83,348	8,751.54	17,503.08	5,83,436
2013-2014	1,16,393	18,939.87	16,832.25	4,94,990
2014-2015	1,43,104	24,349.65	59,789.70	6,51,180
2015-2016 (21-1-2016 வரை)	1,42,136	34,411.90	59,332.19	8,15,315
* உத்யோக் ஆதார் (31-3-2016 வரை)	41,656	6,218.69	-	2,96,687
2016-2017**	2,67,310	36,221.78	-	18,97,619
2017-2018	2,17,981	25,373.12	-	13,78,544
2018-2019	2,33,954	30,078.85	-	15,33,804
2019-2020 (18-3-2020 வரை)	2,51,186	32,704.62	-	15,88,473

* இந்திய அரசின் உத்யோக் ஆதார் பதிவறிக்கை இணையதளத்தின்படி உள்ள பதிவு விவரங்கள்.

** 21-1-2016 முதல் உத்யோக் ஆதார் பதிவறிக்கை அமல்படுத்தப்பட்டதன் விளைவாக ஏற்கெனவே தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி 2 பதிவு செய்த நிறுவனங்களும், உத்யோக் ஆதார் பதிவறிக்கையைப் பதிவு செய்ததால், 2016-2017 ஆம் ஆண்டின் உத்யோக் ஆதார் பதிவறிக்கை கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

2011-2012 முதல் 2019-2020 வரை வழங்கப்பட்ட பல்வேறு மானிய திட்டங்களின் விவரம் (29-2-2020 முடிய)

இணைப்பு-2.1

முதலீட்டு மானியம்

வருடம்	நிதி ஒதுக்கீடு	செலவு செய்யப்பட்டது	நிறுவனங்களின் எண்ணிக்கை
	(ரூபாய் கோடியில்)		
2011-2012	50.00	50.00	1,316
2012-2013	60.00	60.00	1,613
2013-2014	70.00	70.00	1,541
2014-2015	70.00	70.00	1,460
2015-2016	80.00	80.00	1,265
2016-2017	80.00	80.00	1,207
2017-2018	160.00	160.00	2,102
2018-2019	360.00	360.00	4,338
2019-2020 (29-2-2020 வரை)	210.00	148.27	2,056
மொத்தம்	**1,140.00**	**1,078.27**	**16,898**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2.2

குறைந்தழுத்த மின் மானியம்

வருடம்	நிதி ஒதுக்கீடு	செலவு செய்யப்பட்டது	நிறுவனங்களின் எண்ணிக்கை
	(ரூபாய் கோடியில்)		
2011-2012	6.00	6.00	1,371
2012-2013	6.00	6.00	1,130
2013-2014	6.00	6.00	1,169
2014-2015	6.00	6.00	1,106
2015-2016	6.00	6.00	1,004
2016-2017	6.64	6.64	857
2017-2018	6.00	6.00	671
2018-2019	7.00	7.00	856
2019-2020 (29-2-2020 வரை)	10.00	5.65	802
மொத்தம்	**59.64**	**55.29**	**8,966**

[2020 மார்ச் 24

இணைப்பு-2.3

மின்னாக்கி மானியம்

வருடம்	நிதி ஒதுக்கீடு	செலவு செய்யப்பட்டது	நிறுவனங்களின் எண்ணிக்கை
	(ரூபாய் கோடியில்)		
2011-2012	8.00	8.00	852
2012-2013	23.48	23.48	1,958
2013-2014	8.00	8.00	666
2014-2015	8.00	8.00	734
2015-2016	42.00	42.00	3,625
2016-2017	8.00	8.00	587
2017-2018	2.00	2.00	161
2018-2019	2.00	2.00	176
2019-2020 (29-2-2020 வரை)	1.00	0.96	169
மொத்தம்	**102.48**	**102.44**	**8,928**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 2.4

பின்முனை வட்டி மானியம்

(அ) தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல்

வருடம்	நிதி ஒதுக்கீடு	செலவு செய்யப்பட்டது	நிறுவனங்களின் எண்ணிக்கை
	(ரூபாய் கோடியில்)		
2011-2012	3.04	3.04	172
2012-2013	0.25	0.25	89
2013-2014	0.30	0.30	25
2014-2015	0.30	0.30	60
2015-2016	0.30	0.30	37
2016-2017	0.30	0.30	43
2017-2018	0.30	0.30	73
2018-2019	0.40	0.40	113
2019-2020 (29-2-2020 வரை)	0.30	0.27	81
மொத்தம்	**5.49**	**5.46**	**693**

[2020 மார்ச் 24

(ஆ) கடன் உத்தரவாத நிதிக் குழும திட்டம்

வருடம்	நிதி ஒதுக்கீடு	செலவு செய்யப்பட்டது	நிறுவனங்களின் எண்ணிக்கை
	(ரூபாய் கோடியில்)		
2011-2012	0.05	0.05	9
2012-2013	0.10	0.10	22
2013-2014	0.10	0.10	27
2014-2015	0.10	0.10	53
2015-2016	0.10	0.10	51
2016-2017	0.10	0.10	44
2017-2018	0.25	0.25	101
2018-2019	0.40	0.40	196
2019-2020 (29-2-2020 வரை)	0.30	0.25	136
மொத்தம்	**1.50**	**1.45**	**639**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2.5

வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

வருடம்	எண்ணிக்கை	வழங்கப்பட்ட மானியம் (ரூபாய் கோடியில்)
2011-2012	4,759	13.20
2012-2013	4,804	14.66
2013-2014	4,657	15.00
2014-2015	3,465	18.18
2015-2016	5,822	34.63
2016-2017	5,368	33.75
2017-2018	4,707	30.00
2018-2019	4,298	27.57
2019-2020 (29-2-2020 வரை)	2,679	20.03
மொத்தம்	**40,559**	**207.02**

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2.6

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

நிதியாண்டு	எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை (ரூபாய் கோடியில்)
2011-2012	1,560	29.09
2012-2013	1,316	22.58
2013-2014	1,036	23.67
2014-2015	1,256	28.28
2015-2016	1,090	22.53
2016-2017	1,395	34.26
2017-2018	2,039	46.10
2018-2019	2,628	60.28
2019-2020 (29-2-2020 வரை)	2,150	49.61
மொத்தம்	**14,470**	**316.40**

இணைப்பு – 2.7

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் ஆண்டுவாரியான பயனாளிகளின் விவரங்கள்

(ரூபாய் கோடியில்)

பொருள்	2012–13		2013–14		2014–15		2015–16		2016–17		2017–18		2018–19		2019–20 (29.2.2020 வரை)		மொத்தம்	
	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்	எண்	மானியம்
பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள்	559	65.31	1247	123.81	1397	117.20	1263	131.77	1264	125.60	1274	140.46	1468	173.53	1361	173.38	9833	1051.07
தற்காலிக கடன் ஒப்பளிப்பு	305	39.03	744	78.47	859	76.82	856	97.65	765	85.26	823	99.16	888	116.96	881	130.80	6121	724.15
தொழில் முனைவோர் பயிற்சி பெற்றோர்	284	-	645	-	789	-	822	-	602	-	610	-	772	-	529	-	5053	-
இறுதி கடன் ஒப்பளிப்பு பெறப்பட்டவை	224	25.05	482	49.52	555	51.57	466	46.00	536	57.65	605	70.25	691	81.72	613	86.84	4172	468.61
மானியம்	218	23.86	456	43.36	172	9.95	585	42.81	501	70.73	480	55.92	555	58.87	635	54.14	3602	359.63

[2020 மார்ச் 24

இணைப்பு 3.1

சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் 119 தொழிற்பேட்டைகள்

வ. எண்	மாவட்டம்	வ. எண்	அமைவிடம்	அரசு/ சிட்கோ	துவங்கப் பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
1	சென்னை	1	கிண்டி	அரசு	1958	404.08
		2	அரும்பாக்கம்	சிட்கோ	1979	3.92
		3	வில்லிவாக்கம்	சிட்கோ	1979	2.04
		4	கொடுங்கையூர்	சிட்கோ	1979	7.88
		5	பெருங்குடி	அரசு	1974	112.55
		6	திருவான்மியூர்	அரசு	1967	28.91
2	திருவள்ளூர்	7	அம்பத்தூர்	அரசு	1963	1167.00
		8	காக்களூர்	அரசு	1988	328.13
		9	திருமழிசை	சிட்கோ	1988	160.85
		10	கும்மிடிபூண்டி	சிட்கோ	1988	25.24
		11	ஆர்.கே.பேட்டை	சிட்கோ	1996	8.15
		12	விச்சூர்	சிட்கோ	1994	59.16
		13	திருமுல்லைவாயல் (ம.தொ.பூ.)	சிட்கோ	2001	246.07
		14	செங்கரை	சிட்கோ	2017	36.25
3	செங்கல்பட்டு	15	மறைமலைநகர்	சிட்கோ	1981	39.50
		16	ஆலத்தூர்	சிட்கோ	1984	150.00
		17	தண்டரை	சிட்கோ	2017	44.30
4	காஞ்சிபுரம்	18	காஞ்சிபுரம்	அரசு	1968	37.95
		19	திருமுடிவாக்கம் (முதன்மை)	சிட்கோ	1993	201.11
		20	திருமுடிவாக்கம் (குறு)	சிட்கோ	2013	5.262
		21	திருமுடிவாக்கம் (ம.தொ.பூ.)	சிட்கோ	2002	11.48
		22	திருமுடிவாக்கம் பகுதி-2	சிட்கோ	2017	22.44
5	இராணிப்பேட்டை	23	அரக்கோணம்	அரசு	1968	51.74
		24	இராணிப்பேட்டை	சிட்கோ	1972	113.44
		25	முகுந்தராயபுரம்	சிட்கோ	1980	86.19
6	திருப்பத்தூர்	26	வாணியம்பாடி	சிட்கோ	2013	7.08

வ. எண்	மாவட்டம்	வ. எண்	அமைவிடம்	அரசு/ சிட்கோ	துவங்கப் பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
7	வேலூர்	27	காட்பாடி	அரசு	1968	19.48
		28	வன்னிவேடு	சிட்கோ	1987	16.44
		29	விண்ணமங்கலம்	சிட்கோ	2009	10.49
		30	மின்னூர்	சிட்கோ	2014	9.75
8	திருவண்ணாமலை	31	திருவண்ணாமலை	அரசு	1968	15.56
9	கிருஷ்ணகிரி	32	கிருஷ்ணகிரி	அரசு	1965	41.86
		33	ஊத்தங்கரை	சிட்கோ	1995	41.28
		34	ஓசூர்	அரசு	1974	12.34
		35	ஓசூர் (சிப்காட்)	சிட்கோ	1976	95.15
		36	ஓசூர் (புதியது)	சிட்கோ	1999	18.80
		37	பர்கூர்	சிட்கோ	1995	31.64
		38	போலுப்பள்ளி	சிட்கோ	2009	60.96
10	தருமபுரி	39	தருமபுரி	அரசு	1965	20.28
		40	கடகத்தூர்	சிட்கோ	2009	7.02
		41	பர்வதனஹள்ளி	சிட்கோ	2014	29.89
		42	ஈச்சம்பாடி	சிட்கோ	2017	50.46
11	சேலம்	43	சேலம்	அரசு	1967	19.55
		44	மேட்டூர்	அரசு	1967	184.38
		45	கருப்பூர் (ம.தொ.பூ.)	சிட்கோ	2004	51.24
		46	வீரபாண்டி	சிட்கோ	1993	9.79
		47	கோரணம்பட்டி	சிட்கோ	2017	16.61
		48	சூரமங்கலம்	அரசு	1986	27.5
12	நாமக்கல்	49	நாமக்கல்	சிட்கோ	1977	10.09
		50	திருச்செங்கோடு	சிட்கோ	1980	9.18
		51	வேட்டம்பாடி	சிட்கோ	2014	15.34
13	ஈரோடு	52	ஈரோடு	அரசு	1959	25.13
		53	நஞ்சை ஊத்துக் குளி	சிட்கோ	1995	13.05
		54	பெருந்துறை	சிட்கோ	2017	49.47
14	கோயம்புத்தூர்	55	குறிச்சி	அரசு	1972	88.43
		56	மலுமிச்சம்பட்டி	சிட்கோ	1994	36.14
		57	காளப்பட்டி	அரசு	1972	13.46
15	திருப்பூர்	58	கணபதிபாளையம்	சிட்கோ	1993	17.10
		59	திருப்பூர்	சிட்கோ	1978	10.14
		60	குடிமங்கலம்	சிட்கோ	1992	6.74
		61	ராசாத்தவலசு	சிட்கோ	2011	51.80

வ. எண்	மாவட்டம்	வ. எண்	அமைவிடம்	அரசு/ சிட்கோ	துவங்கப் பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
16	நீலகிரி	62	ஊட்டி	சிட்கோ	1981	10.65
17	கடலூர்	63	கடலூர்	அரசு	1971	15.60
		64	வடலூர்	அரசு	1972	26.22
		65	பெரியநெசலூர்	சிட்கோ	2015	90.80
		66	விருத்தாசலம்	அரசு	1961	41.53
18	விழுப்புரம்	67	பட்டணம்	சிட்கோ	2014	60.55
		68	ஆசனூர் பகுதி – I & II	சிட்கோ	2009 &2015	212.83
		69	வெண்மணி ஆத்தூர்	சிட்கோ	2011	36.82
19	கள்ளக்குறிச்சி	70	காட்டுவன்னஞ்சூர்	சிட்கோ	2014	42.00
20	பெரம்பலூர்	71	எலம்பலூர்	சிட்கோ	2009	44.48
21	தஞ்சாவூர்	72	தஞ்சாவூர்	அரசு	1968	21.94
		73	கும்பகோணம்	அரசு	1968	32.30
		74	பிள்ளையார்பட்டி	சிட்கோ	1974	10.96
		75	நாஞ்சிக்கோட்டை	சிட்கோ	1996	26.30
		76	பாளையபட்டி	சிட்கோ	2012	104.37
22	நாகப்பட்டினம்	77	நாகப்பட்டினம்	அரசு	1966	20.97
		78	மயிலாடுதுறை	சிட்கோ	2009	12.56
23	திருச்சி	79	துவாக்குடி	அரசு	1974	478.38
		80	திருவெறும்பூர்	அரசு	1974	74.50
		81	அரியமங்கலம்	அரசு	1974	17.64
		82	கும்பக்குடி	சிட்கோ	2009	24.46
		83	வாழவந்தான் கோட்டை (ம.தொ.பூ.)	சிட்கோ	2003	51.70
		84	வாழவந்தான் கோட்டை	சிட்கோ	2008	179.02
24	கரூர்	85	கரூர் (வெள்ளாளப்பட்டி)	அரசு	1974	26.63
		86	கரூர் (ஆத்தூர்)	சிட்கோ	1993	36.29
		87	புஞ்சைகாலகுறிச்சி	சிட்கோ	2016	52.076
25	புதுக்கோட்டை	88	புதுக்கோட்டை	அரசு	1974	23.18
		89	புதுக்கோட்டை சிப்காட்	சிட்கோ	1988	51.45
		90	மாத்தூர்	சிட்கோ	1975	26.00
		91	மாத்தூர் (புதியது)	சிட்கோ	2013	19.92

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	வ. எண்	அமைவிடம்	அரசு/ சிட்கோ	துவங்கப் பட்ட ஆண்டு	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
26	தேனி	92	தேனி	அரசு	1963	26.59
		93	ஆண்டிபட்டி	சிட்கோ	1994	22.34
		94	மாிக்குண்டு	சிட்கோ	2017	79.40
27	திண்டுக்கல்	95	திண்டுக்கல்	அரசு	1965	39.90
		96	வத்தலகுண்டு	அரசு	1965	16.26
28	மதுரை	97	கே.புதூர்	அரசு	1960	56.05
		98	கப்பலூர்	அரசு	1966	534.64
		99	கப்பலூர் (ம.தொ.பூ)	சிட்கோ	2008	35.37
29	இராமநாதபுரம்	100	பரமக்குடி	சிட்கோ	1976	10.00
		101	கீழநாகாச்சி	சிட்கோ	1993	10.00
		102	உரப்புளி	சிட்கோ	1993	12.14
		103	சக்கரக்கோட்டை	சிட்கோ	2017	100.00
30	சிவகங்கை	104	காரைக்குடி	அரசு	1966	180.19
		105	சிவகங்கை	அரசு	1966	70.61
		106	கிருங்காக் கோட்டை	சிட்கோ	1993	21.85
31	விருதுநகர்	107	விருதுநகர்	அரசு	1958	45.65
		108	இராஜபாளையம்	சிட்கோ	1995	41.13
		109	விருதுநகர் (நகர்ப்புறம்)	சிட்கோ	2013	37.54
32	தென்காசி	110	கடையநல்லூர்	சிட்கோ	1992	10.00
33	திருநெல்வேலி	111	பேட்டை	அரசு	1959	50.55
		112	வள்ளியூர்	சிட்கோ	2005	39.91
34	தூத்துக்குடி	113	கோவில்பட்டி	அரசு	1962	85.54
		114	தூத்துக்குடிபகுதி 1	சிட்கோ	1988	9.72
		115	தூத்துக்குடிபகுதி 2	சிட்கோ	2003	14.46
		116	பிடாநேரி	சிட்கோ	2016	108.23
35	கன்னியாகுமாி	117	கோணம்	அரசு	1964	20.70
		118	மார்த்தாண்டம்	அரசு	1964	7.50
36	அாியலூர்	119	மல்லூர்	சிட்கோ	2014	25.34
			மொத்தம்			**8,080.998**

[2020 மார்ச் 24

இணைப்பு-3.2

சிட்கோ நிறுவனம் நிருவகித்து வரும் அரசு தொழிற்பேட்டைகளின் விவரங்கள்

வ. எண்	மாவட்டம்	தொழிற்பேட்டையின் பெயர்	ஆரம்பிக்கப் பட்ட வருடம்	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
1	சென்னை	1. கிண்டி	1958	404.08
		2. பெருங்குடி	1974	112.55
		3. திருவான்மியூர்	1967	28.91
2	திருவள்ளூர்	4. அம்பத்தூர்	1963	1167.00
		5. காக்களூர்	1988	328.13
3	காஞ்சிபுரம்	6. காஞ்சிபுரம்	1968	37.95
4	வேலூர்	7. காட்பாடி	1968	19.48
		8. அரக்கோணம்	1968	51.74
5	திருவண்ணாமலை	9. திருவண்ணாமலை	1968	15.56
6	கிருஷ்ணகிரி	10. கிருஷ்ணகிரி	1965	41.86
		11. ஓசூர்	1974	12.34
7	தருமபுரி	12. தருமபுரி	1965	20.28
8	சேலம்	13. சேலம்	1967	19.55
		14. மேட்டூர்	1967	184.38
		15. சூரமங்களம்	1986	27.50
9	ஈரோடு	16. ஈரோடு	1959	25.13
10	கோயம்புத்தூர்	17. குறிச்சி	1972	88.43
		18. காளப்பட்டி	1972	13.46
11	கடலூர்	19. கடலூர்	1971	15.60
		20. வடலூர்	1972	26.22

வ. எண்	மாவட்டம்	தொழிற்பேட்டையின் பெயர்	ஆரம்பிக்கப் பட்ட வருடம்	மொத்த பரப்பளவு (ஏக்கரில்)
		21. விருத்தாசலம்	1961	41.53
12	தஞ்சாவூர்	22. தஞ்சாவூர்	1968	21.94
		23. கும்பகோணம்	1968	32.30
13	நாகப்பட்டினம்	24. நாகப்பட்டினம்	1966	20.97
14	திருச்சிராப்பள்ளி	25. துவாக்குடி	1974	478.38
		26. திருவெறும்பூர்	1974	74.50
		27. அரியமங்கலம்	1974	17.64
15	கரூர்	28. கரூர் (வெள்ளாளப்பட்டி)	1974	26.63
16	புதுக்கோட்டை	29. புதுக்கோட்டை	1974	23.18
17	தேனி	30. தேனி	1963	26.59
18	திண்டுக்கல்	31. திண்டுக்கல்	1965	39.90
		32. வத்தலகுண்டு	1965	16.26
19	மதுரை	33. கே.புதூர்	1960	56.05
		34. கப்பலூர்	1966	534.64
20	சிவகங்கை	35. சிவகங்கை	1966	70.61
		36. காரைக்குடி	1966	180.19
21	விருதுநகர்	37. விருதுநகர்	1958	45.65
22	திருநெல்வேலி	38. பேட்டை	1959	50.55
23	தூத்துக்குடி	39. கோவில்பட்டி	1962	85.54
24	கன்னியாகுமரி	40. கோணம்	1964	20.70
		41. மார்த்தாண்டம்	1964	7.50
மொத்தம்				**4,511.40**

[2020 மார்ச் 24

இணைப்பு-3.3

2011 – 2020 வரை வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி 24 புதிய தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன

வ. எண்	தொழிற்பேட்டையின் பெயர்	துவங்கப்பட்ட வருடம்	பரப்பளவு (ஏக்கரில்)
1	இராசாத்தவலசு (திருப்பூர் மாவட்டம்)	2011	51.80
2	மாத்தூர் (புதியது) (புதுக்கோட்டை மாவட்டம்)	2013	19.92
3	வாணியம்பாடி (திருப்பத்தூர் மாவட்டம்)	2013	7.08
4	வெண்மணியாத்தூர் (விழுப்புரம் மாவட்டம்)	2011	36.82
5	விருதுநகர் (நகர்ப்புறம்) (விருதுநகர் மாவட்டம்)	2013	37.54
6	பாளையப்பட்டி (தஞ்சாவூர் மாவட்டம்)	2012	104.37
7	பிடாநேரி (தூத்துக்குடி மாவட்டம்)	2016	108.23
8	பட்டணம் (விழுப்புரம் மாவட்டம்)	2014	60.55
9	மின்னூர் (வேலூர் மாவட்டம்)	2014	9.75
10	காட்டுவன்னஞ்சூர் (கள்ளக்குறிச்சி மாவட்டம்)	2014	42.00
11	மல்லூர் (அரியலூர் மாவட்டம்)	2014	25.34
12	பர்வதனஹள்ளி (தருமபுரி மாவட்டம்)	2014	29.89
13	வேட்டம்பாடி (நாமக்கல் மாவட்டம்)	2014	15.34
14	ஆசனூர் பகுதி-2 (விழுப்புரம் மாவட்டம்)	2015	105.55

வ. எண்	தொழிற்பேட்டையின் பெயர்	துவங்கப்பட்ட வருடம்	பரப்பளவு (ஏக்கரில்)
15	பெரியநெசலூர் (கடலூர் மாவட்டம்)	2015	90.80
16	புஞ்சைகாலக்குறிச்சி (கரூர் மாவட்டம்)	2016	52.076
17	செங்கரை (திருவள்ளூர் மாவட்டம்)	2017	36.25
18	கோரணம்பட்டி (சேலம் மாவட்டம்)	2017	16.61
19	தண்டரை (காஞ்சிபுரம் மாவட்டம்)	2017	44.30
20	ஈச்சம்பாடி (தருமபுரி மாவட்டம்)	2017	50.46
21	சக்கரக்கோட்டை (இராமநாதபுரம் மாவட்டம்)	2017	100.00
22	மாிக்குண்டு (தேனி மாவட்டம்)	2017	79.40
23	முள்ளுவாடி மற்றும் நாகலோி (இராணிப்பேட்டை மாவட்டம்)	2018	20.00
24	குருக்கள்பட்டி (தென்காசி மாவட்டம்)	2019	68.80
மொத்தம்			**1,212.88**

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

இணைப்பு – 3.4

குறு, சிறு நிறுவனங்கள்-குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்) மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் முடிவுற்றவை மற்றும் நடைமுறையில் உள்ளவை (44)

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
1	சவ்வாரிசி குழுமம், சேலம்.	92.06	73.31	0.00	18.75	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
2	தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம்	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
3	தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர்	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
4	தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர்.	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
5	தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர்	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
6	தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
7	தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி	156.00	85.54	10.73	25.00	34.73	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
8	அச்சு குழுமம், கிருஷ்ணகிரி	1,172.52	964.14	100.00	108.38	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன.

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
9	தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர்.	690.94	439.89	70.75	105.30	75.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
10	மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்-புத்தூர்.	288.20	99.00	16.52	172.68	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
11	பீங்கான் குழுமம், விருத்தாசலம்.	82.67	43.86	9.57	18.45	10.79	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
12	கயிறு குழுமம், சிவகங்கை.	658.90	500.01	65.89	93.00	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
13	அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர்.	690.58	466.03	69.05	145.50	10.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
14	அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம்	787.00	550.25	78.91	83.75	74.09	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
15	அச்சுக் குழுமம், சிவகாசி	1,314.75	767.81	90.66	180.28	276.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
16	அரிசி ஆலைக் குழுமம், தஞ்சாவூர்	212.06	100.23	40.43	21.40	50.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
17	ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரி கேஷன்ஸ், சேலம்	1,632.74	1,277.71	100.00	253.03	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
18	பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம்	1,485.12	1,026.96	100.00	258.16	100.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
19	பொறியியல் குழுமம், பரமக்குடி	498.89	373.80	23.34	53.75	48.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
20	ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம்	104.24	74.28	9.36	20.60	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
21	தங்க நகை குழுமம், மதுரை	356.46	255.80	29.14	39.92	31.60	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
22	ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பகோணம்	126.30	98.83	7.90	19.57	0.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
23	கயிறு குழுமம், ஈரோடு	592.51	404.44	48.65	60.00	79.42	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
24	பொறியியல் குழுமம், அம்பத்தூர்	1,124.42	805.33	54.44	114.65	150.00	திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன
25	செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி	227.28	122.72	22.72	29.55	52.27	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
26	பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை	927.08	616.39	97.21	109.35	104.13	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
27	கேட் & கிரில் குழுமம், திருமுல்லை வாயில்	284.87	197.93	29.69	57.25	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
28	தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம்.	1,333.96	886.45	98.78	162.18	186.55	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
29	தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப் பட்டி	346.89	204.64	36.00	42.50	63.75	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
30	தங்கநகை குழுமம், திருச்சி	360.03	288.24	36.03	36.03	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
31	வடிவமைப்புக் குழுமம், திருப்பூர்	1,533.93	833.93	300.00	400.00	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
32	மரக்கலன்கள் குழுமம், சேலம்	1,446.33	1,067.37	189.48	189.48	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
33	அச்சுக் குழுமம் சேலம்	1,346.50	1,076.44	135.03	135.03	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
34	கனரக வாகன கட்டுமானக் குழுமம், நாமக்கல்	1,653.00	1,281.54	185.73	185.73	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
35	தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், இராசிபுரம்	2,009.30	1,198.94	251.06	559.30	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
36	ஆடை குழுமம், திருப்பூர்	1,625.00	856.94	300.00	468.06	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
37	வடிவமைப்பு குழுமம், திருப்பூர்	1,479.64	987.78	147.96	343.90	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
38	தானியங்கி தறி குழுமம், பல்லடம்	1,762.23	1,173.78	176.22	412.23	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
39	கம்பளி குழுமம் (பெண்கள்), குன்னூர்	283.98	227.18	28.40	5.00	23.40	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
40	அச்சு மற்றும் அட்டை பெட்டி குழுமம், ஓசூர்	1,395.22	1,103.70	139.52	152.00	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
41	நூலாடை முறுக்குதல் மற்றும் குறுக்குதல் குழுமம், ஈரோடு	1,868.08	963.20	186.80	718.08	0.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது

வ. எண்	குழுமத்தின் பெயர்	திட்ட மதிப்பீடு (CFC)	மத்திய அரசின் மானியம்	தமிழக அரசின் மானியம்	சிறப்பு நோக்க ஊர்தி பங்கு	வங்கிக் கடன்	தற்போதைய நிலை
		(ரூபாய் இலட்சத்தில்)					
42	விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், பெரம்பலூர்	1,218.68	931.19	121.86	125.63	40.00	திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது
	மொத்தம்	**33,948.62**	**22,853.28**	**3,461.48**	**6,050.47**	**1,583.39**	
	மத்திய அரசின் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள்						
43	வீட்டு உபயோக பொருட்கள் குழுமம், கரூர்	1,507.20	1,178.99	150.70	177.53	0.00	மத்திய அரசு 12-11-2018-ல் நடைபெற்ற 48-வது குழுமக் கூட்டத்தில் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.
44	ஆடை அச்சு குழுமம், திருப்பூர்	1,466.86	1,184.80	100.00	182.06	0.00	மத்திய அரசின் தொழில்நுட்ப குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
	மொத்தம்	**2,974.06**	**2,363.79**	**250.70**	**359.59**	**0.00**	

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை

வரவு-செலவு திட்ட மதிப்பீடு

கோரிக்கை எண் 44

(ரூபாய் ஆயிரத்தில்)

கணக்கு தலைப்பு	2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு	2019-2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு	2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு
2425-கூட்டுறவு	1	2,52,92	1,63,37
2851-கிராம தொழில்களும் சிறு தொழில்களும்	388,63,11	448,26,61	548,74,38
2852-தொழில்கள்	12,57,35	18,31,16	18,86,26
2885-கனிமங்கள் மற்றும் தொழில்களுக்கான இதர செலவு	0	1	0
3451-தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள்	4,05,70	6,10,53	6,47,91
4059-பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	0	10,50	1,65,00
4851-கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	71,00,00	49,87,50	30,00,04
7610-அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்	1	1	25,00
மொத்தம்	**476,26,18**	**525,19,24**	**607,61,96**

இணைப்பு XVIII

(52 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. தொழிலாளர் துறை

தமிழ்நாடு, தொழிற்மயமாக்கப்பட்ட மற்றும் முதலீட்டுக்கு உகந்த தொழிற் சூழலை ஏற்படுத்தும் வகையில் சுமுகமான மற்றும் இணக்கமான தொழில் உறவுகளை பேணுவதற்கு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசு அனைத்துத் தரப்பினருக்கும் உரிய துரிதமான பொருளாதார வளர்ச்சியுடன் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்களில் காணப்படும் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் பாதுகாப்பான மற்றும் இணக்கமான பணிச்சூழலை உருவாக்கிட தொழிலாளர் துறையானது உறுதி பூண்டுள்ளது. நீடித்த தொழில் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்கும், தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், விரிவான ஒருங்கிணைந்த திட்டங்களை தொழிலாளர் துறை செயல்படுத்தி வருகிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டெடுத்து மறுவாழ்வு அளிக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வகையான தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, துறையின் சீரிய முயற்சிகள் மூலமும், பிற துறையினரின் ஒன்றுபட்ட செயல்பாடுகள் மூலமும், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களை சமூகத்துடன் மீண்டும் இணைக்கும் முயற்சியில் தொழிலாளர் துறை முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

தொழிலாளர் துறை சட்டமுறை எடையளவு சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்துவதன்மூலம் நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தொழிலாளர் நலன் தொடர்புடைய பெரும்பாலான இனங்கள் பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், மத்திய அரசு மற்றும் மாநில அரசிற்கு அவற்றின்மீது அதிகாரம் உள்ளது. பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர்புடைய விவரங்கள் பின்வருமாறு:-

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகக் காப்பீடு; வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்பு நிதி, நிருவாகத்தின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33-A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்.

தொழிலாளர் தொடர்புடைய இனங்கள் பொதுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், பெரும்பாலான தொழிலாளர் சட்டங்கள் மத்திய அரசின் சட்டங்களாக உள்ளன.

1.1. செயல்பாடுகள்

தொழிலாளர் துறை முறைப்படுத்துதல் மற்றும் நலத் திட்டப் பணிகளைக் கொண்டுள்ளது.

முறைப்படுத்தும் பணிகள் பின்வருமாறு:-

1. பல்வேறு மத்திய மற்றும் மாநில தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்தல்.

2. தொழிலாளர் உரிமைகள் காத்திட நீதிசார் பணிகளை மேற்கொள்ளுதல்.

3. நுகர்வோர் நலன் காத்திட சட்டமுறை எடையளவு சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011 அமலாக்கம் செய்தல்.

4. தொழிற்தகராறுகளில் சமரசப் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்து வைத்தல்.

5. குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் அமலாக்கம் செய்தல்.

6. கொத்தடிமைத் தொழிலாளர் முறையை அகற்றி மறு வாழ்வு அளித்தல்.

7. குழந்தைத் தொழிலாளர் முறையினை அனைத்துப் பணிகளிலும் நீக்குதல், அபாயகரமான பணிகளில் வளரிளம் பருவத்தினரைப் பணியமர்த்துவதைத் தடுப்பதற்கான செயல்பாடுகள்.

8. ஒப்பந்தத் தொழிலாளர்கள்/மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்.

நலத் திட்ட பணிகள்:-

1. நல வாரியங்கள்மூலம் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு பயன்கள் வழங்குதல்.

2. பணியின்போது ஏற்படும் விபத்தின் காரணமாக மரணமடைந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு/ ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்க ஆணையிடுதல்.

3. நடமாடும் மருத்துவமனைகள், அங்கன்வாடி நிலையங்கள் மற்றும் தங்கும் இடங்கள் போன்ற சிறப்பு சேவைகள் வழங்குதல்.

4. பல்வேறு தொழிலாளர் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

1.2. நிருவாக அமைப்பு

தொழிலாளர் துறை 1920 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் துவக்கப்பட்டது. இதன் தலைமையிடம் சென்னை, தேனாம்பேட்டை

டி.எம்.எஸ். வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் ஆணையர் தலைமையில், 4 மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் (சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்), 10 வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர்கள் (சென்னை – 1, சென்னை – 2, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கோயம்புத்தூர், குன்னூர், மதுரை மற்றும் திருநெல்வேலி) பணிபுரிந்து வருகின்றனர்.

இத்துறையில் 12 கூடுதல் ஆணையர்கள், 16 இணை ஆணையர்கள், 24 துணை ஆணையர்கள், 103 உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்), ஒரு கணக்கு அலுவலர், ஒரு மக்கள் தொடர்பு அலுவலர், 70 துணை ஆய்வர்கள், 220 உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,345 பணியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 1,897 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

1.3. தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள்

தொழிலாளர் துறையில் அமலாக்கம் செய்யப்படும் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் விவரம் பின்வருமாறு:-

1.3.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

வேலையளிப்போர், தொழிலாளர்கள், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரிடையே நல்லுறவினை ஏற்படுத்துதல், கூட்டு பேரம், தொழிற்தாவாக்களைத் தீர்த்து வைத்தல், தொழிலாளர்களின் பணி நிலைமைகள் குறித்த விவரங்கள் தொழில் உறவுகள் ஆகியவை தொடர்புடைய சட்டங்கள் ஆகும்.

1.3.1.1. தொழிற்தகராறுகள் சட்டம், 1947

இச்சட்டத்தில் தொழிற்தகராறுகளைத் தீர்த்து வைக்கும் முறைகளும், சமரச ஒப்பந்தங்கள் மற்றும் தீர்வங்களை மீறுவதற்கு தண்டனை அளிப்பது குறித்தும் விளக்கப்பட்டுள்ளதோடு தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், சட்ட விரோத வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பைத் தடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ், சமரச பணிகள் மேற்கொள்ள தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டில் சமரச அலுவலர்களின் தலையீட்டின்மூலம், 669 தொழிற்தாவாக்களில் சுமுக முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. பல்வேறு தொழில் நிறுவனங்களில் 8 வேலை நிறுத்தங்களும் மற்றும் 2 கதவடைப்புகளும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

(அ) 2019-2020 ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள்

- ❖ காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, வல்லம் மற்றும் ஒரகடம் பகுதியில் செயல்பட்டு வரும் ராயல் என்ஃபீல்டு லிமிடெட் நிருவாகம், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகள் குறித்து தொழிலாளர் தரப்பு பிரதிநிதி மற்றும் நிருவாகத் தரப்பு பிரதிநிதிகளுடன் 4-6-2019 அன்று 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ், ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொப்பந்தம் 1-4-2019 முதல் 31-3-2022 வரை 3 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். இவ்வொப்பந்தத்தின்மூலம் 1,180 தொழிலாளர்கள் பயன்பெற்றனர்.
- ❖ மதர்சன் ஆட்டோமோடிவ் டெக்னாலஜி அண்டு இன்ஜினியரிங் லிமிடெட் நிறுவனத்தின் 300 தொழிலாளர்களால், 4 மாதங்களுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டு வந்த வேலைநிறுத்தம் சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையரின் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தைகளின்மூலம் முடிவிற்கு வந்தது.

(ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்

தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், தொழில் நல்லுறவினை மேம்படுத்துவதற்கும், தொழிற்தாவாவின் தொடர்புடைய பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு காணப்படாத அனைத்து தாவாக்களும் தொழிற்தகராறுகள் சட்டம், பிரிவு 10-ன்கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் அல்லது தொழில் தீர்ப்பாயத்திற்கு தீர்வம் வழங்குவதற்காக அனுப்பப்படுகின்றன.

[2020 மார்ச் 24

1947 ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டத்தின் அட்டவணை இரண்டில் குறிப்பிட்டுள்ள இனங்கள்மீது தொழிலாளர் நீதிமன்றங்கள் தீர்வங்கள் வழங்கும் மன்றமாக செயல்படுகின்றன. சமரச பேச்சுவார்த்தைகளில் சுமுக தீர்வு காண இயலாத தொழிற்தகராறுகளில் தீர்வம் வழங்க தமிழ்நாட்டில் 17 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னையில் 4 தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூர், கோவை மற்றும் மதுரையில் தலா 2 தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் ஓசூரில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் 3,045 வழக்குகளை முடித்துள்ளன.

1947 ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம், அட்டவணை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்வு காணும் மன்றமாக தொழிற்தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது. சென்னையில் இயங்கி வரும் இத்தீர்ப்பாயம் 2019 ஆம் ஆண்டில் 30 வழக்குகளில் தீர்வு கண்டுள்ளது.

1.3.1.2.தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழிலாளர்களின் பணி நிலைமைகளை வரையறுக்க சான்றளிக்கப்பட்ட நிலையாணைகளை வேலையளிப்போர் பெறுவதை இச்சட்டம் அவசியமாக்குகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 328 தொழில் நிறுவனங்களுக்கு நிலையாணைகள் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

1.3.1.3. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்களைப் பதிவு செய்திடவும் மற்றும் தொழிற்சங்க பதிவு குறித்த நடைமுறையினை வகுத்திடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 143 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.3.2. ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள்

இச்சட்டங்கள் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்தல், உரிய காலத்தில் சம்பளம் மற்றும் மிகை ஊதியம் வழங்குதல், பெண் தொழிலாளர்களுக்கு ஆண்களுக்கு இணையான சம ஊதியம் வழங்குவதனை உறுதி செய்கிறது.

2020 மார்ச் 24]

1.3.2.1. சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

இச்சட்டம் பணியாளர்களுக்கு உரிய காலத்தில் சம்பளம் வழங்கப்படுவதையும், ஊதியத்தில் சட்ட விரோத பிடித்தத்தை தடுக்கவும், கேட்பு மனுக்களை விரைந்து முடிக்கவும் வழிவகை செய்கிறது.

சம்பள பட்டுவாடா சட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 20,774 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இக்காலகட்டத்தில் நீதிமன்றங்கள்மூலம் 23 வழக்குகள் முடிக்கப்பட்டு, பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவர்களுக்கு ரூ.23,450/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது; 238 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.28.01 கோடி தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

1.3.2.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948

1948 ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கமானது இச்சட்டத்தின் அட்டவணையில் உள்ள தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதாகும். இச்சட்டம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதோடு, தொழிலாளர்களின் திறனையும் பாதுகாக்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் முதன்முறையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன:-

1. சமையல் தொழில்.
2. கை எம்ப்ராய்டரி மற்றும் ஜரி தொழில்
3. கெமிக்கல் இண்டஸ்ட்ரீ தொழில்

கீழ்க்கண்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன:-

1. உணவுப் பதப்படுத்தும் தொழில்
2. பாய் நெசவு மற்றும் கூடை முடைதல் தொழில்
3. பதநீர் இறக்கும் தொழில்
4. பாதுகாவலர் தொழில்
5. புகையிலை தயாரிப்பு (மூக்குப்பொடி) தொழில்

6. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்

7. எண்ணெய் ஆலைத் தொழில்

8. சலனப்பட தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட)

9. அங்காடிகள், சந்தைகள் (பொருட்காட்சிகள் மற்றும் அங்காடி நடைபெறும் இடங்கள்) மற்றும் இதுபோன்ற ஏனைய இடங்களில் சுமைகளை ஏற்றி, இறக்கி வைக்கும் தொழில்.

10. கைத்தறி நெசவு தொழில்

11. கைத்தறி பட்டு நெசவு தொழில்

12. விலைக்கு வாங்கும் தேயிலை தொழிற்சாலைகள் தொழில்

2019-2020 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், அமலாக்க அலுவலர்களால் 56,109 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு முரண்பாடுகளுக்காக வேலையளிப்பவருக்கு எதிராக நீதிமன்றத்தில் 42 வழக்குகளில் ரூ.30,500/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது; 687 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.4.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1.3.2.3. போனஸ் வழங்கல் சட்டம், 1965

இச்சட்டம் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலாபம் அல்லது உற்பத்தி அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் போனஸ் வழங்கிட வழிவகுக்கிறது.

1.3.2.4. சம ஊதியச் சட்டம், 1976

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது இச்சட்டத்தில் உறுதி செய்யப்பட்டு, பாலின அடிப்படையிலான வேற்றுமை தடை செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் மேற்கண்ட சட்டத்தின்கீழ், அமலாக்க அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களில் 11,310 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

2020 மார்ச் 24]

1.3.3. சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

அமைப்புசார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் நலத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை இச்சட்டங்கள்மூலம் நிருவகிக்கப்படுகிறது. இச்சட்டங்கள் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கும், பிழைப்பூதியம் வழங்குவதற்கும், நிரந்தரத் தகுதி வழங்குவதற்கும், பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால சலுகைகள் வழங்குதல் மற்றும் விபத்தின் காரணமாக பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் வழிவகை செய்கின்றன.

1.3.3.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியின்போது ஏற்படும் விபத்தின் காரணமாக நிகழும் மரணம் மற்றும் ஊனத்தினால் ஏற்படும் ஊதியம் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டு, வழக்கினை விசாரித்து உத்தரவு பிறப்பிக்கின்றார்கள்.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர்கள்மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 2,470 வழக்குகள் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.48.40 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

1.3.3.2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

தொழிலாளருக்கு வயது முதிர்வு/பணி ஓய்வு/பணியிலிருந்து விலகுதல்/மரணம் அல்லது விபத்து மற்றும் நோயின் காரணமாக இயலாமை ஏற்படுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடை வழங்கப்படுகிறது. 5 வருடத்திற்குக் குறைவில்லாத தொடர் பணி முடித்த தொழிலாளர்கள் பணிக்கொடை பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்கள், இச்சட்டத்தின்கீழ், கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2019-2020 ஆம் ஆண்டில், 2,062 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.21.33 கோடி பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 426 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு, உத்தரவிடப்பட்டுள்ளது.

1.3.3.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ், கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், வட்டார இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2019-2020 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ், 133 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.49.79 இலட்சம் பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 19 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு, முடிக்கப்பட்டன.

1.3.3.4. மகப்பேறு நலச் சட்டம், 1961

பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி, ஊதியம் உள்ளிட்ட சில மகப்பேறு உதவிகள் வழங்கப்படுவதை இச்சட்டம் முறைப்படுத்தி உறுதி செய்கிறது.

இச்சட்டம் மகப்பேறு காலங்களில் குழந்தைப்பேற்றிற்காக 26 வாரங்கள் ஊதியத்துடன்கூடிய விடுப்பு (அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் 8 வாரங்களும், குழந்தை பிறந்த பிறகு 18 வாரங்களும்) வழங்கிட வழிவகுக்கிறது.

2019-2020 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ், 10,302 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 9 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.9,000/- அபராதம் விதிக்கப்பட்டது.

2020 மார்ச் 24]

1.3.3.5. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கல்) சட்டம், 1981

இச்சட்டம், ஒரு தொழில் நிறுவனத்தில் 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர் பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்கப்படுவதை வலியுறுத்துகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ், 424 மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு, உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

1.3.3.6. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982

இச்சட்டம் சில வகையான தொழில்களில் ஈடுபடும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும், பணிப் பாதுகாப்பினை உறுதி செய்யவும் வழிவகை செய்கிறது.

1.3.3.7. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972

இச்சட்டத்தின்கீழ், அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தவும், தொடர்புடைய நலத் திட்டங்களுக்காகவும், நிதி உருவாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1.3.4. வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், பத்திரிகை நிறுவனங்கள், ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகள், தொழிலாளர்கள் பணிபுரிவதற்கேற்ற சுமுகமான சூழலை ஏற்படுத்தவும் இச்சட்டங்கள் வழிவகை செய்கின்றன.

1.3.4.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 1,07,462 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 12,684 முரண்பாடுகள்

[2020 மார்ச் 24

கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.35.72 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், 20 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.14,150/- வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

1.3.4.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிச் சூழல், பணி நிலைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.1.13 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் 17,680 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 5,895 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.15.43 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 11 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.10,200/- வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

1.3.4.3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து நிறுவன தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி நிலைகளைப் பாதுகாக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 109 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.1,63,765/- பதிவுக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டில், 3,417 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 753 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.3.30 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

1.3.4.4. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்டத் தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பணி நிலைகளை முறைப்படுத்த தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951 மற்றும் விதிகள் வழிவகை செய்கிறது. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் 15 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் தேயிலை, காபி, இரப்பர், ஏலக்காய் மற்றும் சின்கோனா பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

2020 மார்ச் 24]

இச்சட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தைக் காப்பகம், கல்வி வசதி, குளிர்கால பாதுகாப்பு உடை, குடிநீர் ஆகியன வேலையளிப்பவரால் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள், தலைமை தோட்ட நிறுவன ஆய்வாளர் மற்றும் உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலக்குண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்ட நிறுவனங்கள்), உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 2 இடங்களில் உள்ள உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்) ஆகியோரால் தமிழ்நாடு முழுவதிலும் அமல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த 2,229 தோட்ட நிறுவனங்களின் மொத்தப் பரப்பளவு 62,134 ஹெக்டேர் ஆகும். இதில் 687 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 54,483 ஹெக்டேர் மற்றும் 1,542 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 7,651 ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 56,794 மொத்த தொழிலாளர்களில் 34,388 பெண்களும், 22,406 ஆண்களும் உள்ளனர்.

2019-2020 ஆம் ஆண்டில் சட்ட அமலாக்க அலுவலர்களால், தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் அதன் விதிகளின்கீழ், 2,172 ஆய்வுகள் உட்பட, 27,274 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 32 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.1,40,000/- வேலையளிப்பவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

1.3.4.5. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

பீடி மற்றும் சுருட்டுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலன்களைப் பேணவும், பணி நிலைகளை ஒழுங்குபடுத்தவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 1,559 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதிமன்றங்கள்மூலம் 89 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.22,830/- வேலையளிப்பவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

1.3.4.6. பணியாற்றும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955

பணியாற்றும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேலும், இச்சட்டம் பணியாற்றும் பத்திரிகையாளர்கள், நாளிதழ்கள் மற்றும் செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர் அல்லாத பிற பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்ய ஊதிய குழுக்களை அமைக்கவும் வழிவகை செய்கிறது. 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகள் 11-11-2011 முதல் நடைமுறையில் உள்ளன.

1.3.4.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் சம்பளத்துடன்கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 48,509 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில், 6,870 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வாக ரூ.32.88 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது; 22 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.11,700/- வேலையளிப்பவருக்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டன.

1.3.4.8. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

இச்சட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிலையினை குறிப்பிட்ட சில நிறுவனங்களில் ஒழுங்குபடுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில்

2020 மார்ச் 24]

145 பதிவுச் சான்றிதழ்கள் முதன்மை வேலை அளிப்போருக்கும், 234 உரிமங்கள் ஒப்பந்ததாரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

1.3.4.9. மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979

சொந்த மாநிலங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்று பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்து, அவர்களின் பணி நிலைகளை முறைப்படுத்திட இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 10 பதிவுச் சான்றிதழ்கள் முதன்மை வேலையளிப்போருக்கும், 8 உரிமங்கள் ஒப்பந்ததாரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

1.3.4.10. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986

ஒரு நாட்டின் மதிப்புமிக்க, அதேசமயம் பாதிப்புக்குள்ளாகக்கூடிய செல்வங்களாக குழந்தைகள் உள்ளனர். ஒரு சிறந்த சமுதாயம் உருவாகிட குழந்தைகளுக்கு முறையான கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை வழங்க வேண்டும். அரசானது பன்முகப்படுத்தப்பட்ட உத்திகளான கடுமையான சட்டங்கள் மற்றும் திட்டம் சார்ந்த அணுகுமுறை ஆகியவற்றின்மூலம் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை குழந்தைத் தொழிலாளர் என்ற அச்சுறுத்தலுக்கு எதிராக மேற்கொண்டுள்ளது.

குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில செயல் திட்டம் அரசால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டமானது, அமலாக்க அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய துறைகளின் செயல்பாடு மற்றும் பங்களிப்புக்கு வழிகாட்டுதலை வழங்குகிறது. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986-ஐ, சிறப்பாக அமல்படுத்தும்பொருட்டு நிலையான இயக்க நடைமுறைகள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

(அ) சட்ட அமலாக்கம்

சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும்பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குழந்தைகளைப் பணியமர்த்துவதைத் தடை செய்திட குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தொடர்புடைய சட்டங்கள் மாநில அளவில் தொழிலாளர் துறை ஆணையரகம், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மாநில அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒருங்கிணைப்பு அலுவலராக தொழிலாளர் உதவி ஆணையரை (அமலாக்கம்) அறிவிக்கை செய்துள்ளது. 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதை முற்றிலுமாக தடை செய்யும்பொருட்டு, இந்திய அரசால் சிறந்த அமலாக்க யுக்தியாக 'பென்சில்' (PENCIL–PLATFORM FOR EFFECTIVE ENFORCEMENT OF NO CHILD LABOUR) என்ற ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் மாவட்ட தடுப்புப் படை குழுக்களின்மூலம், 97,048 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 137 நிறுவனங்களில் முரண்பாடுகள் காணப்பட்டு, 170 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட்டது. 31 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.6,43,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு வருடமும் ஜூன் 12 ஆம் தேதி "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக" அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் உறுதிமொழி ஏற்பு, பேரணிகள், மனித சங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாநில அளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின செய்தி பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் வெளியிடப்பட்டது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று, முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப் பரிசும், சிறப்பாகப் பணிபுரிந்த சிறப்புப் பயிற்சி மைய ஆசிரியர்களுக்கு கேடயங்களும் வழங்கப்பட்டன.

2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டில், சென்னை மாநகராட்சி, அம்மா அரங்கத்தில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் 12-6-2019 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் ஆணையர் மற்றும் திரைப்பட நடிகர் திரு. விஜய் ஆண்டனி ஆகியோர் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த சிறப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, பள்ளிக் குழந்தைகளுடன் மெட்ரோ இரயிலில் பயணம் மேற்கொண்டனர்.

(இ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம், 15 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின்கீழ், இயங்கி வரும் 258 சிறப்பு பயிற்சி மையங்களில் 4,999 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 2019-2020 ஆம் ஆண்டில் 2,996 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட உதவியுடன் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.400/- உதவித் தொகை, இலவச கல்வி உபகரணங்கள், சீருடை மற்றும் மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைத் தொழிலாளராக இருந்து மீட்கப்பட்டு, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று, உயர் கல்வியினைத் தொடரும் மாணவ, மாணவியருக்கு மாநில அரசு மாதந்தோறும் ரூ.500/- உதவித் தொகையாக வழங்கி வருகிறது. நடப்பு கல்வியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.38.46 இலட்சம் வழங்கப்பட்டு, 641 மாணவ/மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

1.3.4.11. கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், 1976

மத்திய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் 2016, மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக மறுவாழ்வினை வழங்கி, அவர்களின் திறன்களை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டதாகும். மேற்படி சட்டத்தை சிறப்பாக அமல்படுத்தும் நோக்கில், கொத்தடிமைத்

தொழிலாளர்களை மீட்டெடுத்தல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினர்களுடன் இணைந்து செயல்படவும், வழிகாட்டவும் ஏதுவாக, மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

1976 ஆம் வருட கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தை அமல்படுத்த அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும்பொருட்டு, உடனடி நிவாரணத் தொகையாக ரூ.20,000/- வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல், மருத்துவ வசதிகள் ஆகிய பயன்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு, திட்டப் பயன்கள் வழங்கப்படுகின்றன.

கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கென அனைத்து மாவட்டங்களுக்குமான நிரந்தர மூலதன நிதியாக (Permanent Corpus Fund) ரூ.121 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மீட்கப்படும் கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக, 2019-2020 ஆம் நிதியாண்டிற்கு ரூ.125 இலட்சம் மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் 523 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.60.40 இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து தொடர்புடைய துறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களுக்கான பங்களிப்பு மற்றும் கடமைகளைத் தெளிவுப்படுத்தும் வகையில், 2019 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் மண்டல அளவிலான பயிற்சியும் மற்றும் மாநில அளவிலான கருத்தரங்கம், சென்னையில் 21-8-2019 அன்றும் நடத்தப்பட்டன. மேலும், அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின்மூலம் தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் கோட்டாட்சியர்களுக்கு கொத்தடிமைத்

2020 மார்ச் 24]

தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்துதல் குறித்த பயிற்சி 6-1-2020 முதல் 9-1-2020 வரை நடத்தப்பட்டது.

1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்

கூடுதல் தொழிலாளர் ஆணையர் (ஆய்வுகள்), சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். மாவட்ட அளவில் 30 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (துணை சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்), 67 தொழிலாளர் துணை ஆய்வர்கள் (உதவி சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகள்), 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் (சட்டமுறை எடையளவு அலுவலர்கள்) சட்டமுறை எடையளவு சட்டத்தின்படி, சட்டமுறை எடையளவு அலுவலர்களாக சட்டமுறை எடையளவுச் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

1.3.5.1. சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

இச்சட்டத்தின் வழியாக நிர்ணயம் செய்யப்பட்ட எடையளவுகளின் தரத்தை உறுதி செய்யவும், நுகர்வோர் நலன் கருதி எடை, அளவு அல்லது எண்ணிக்கை முறையில் மேற்கொள்ளப்படும் வணிகம் மற்றும் வியாபார பரிவர்த்தனைகளை முறைப்படுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின்கீழ், 1,61,159 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 9,912 முரண்பாடுகள் காணப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ.88.41 இலட்சமும், முத்திரைக் கட்டணமாக ரூ.44.43 கோடியும் மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.12.53 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளன.

1.3.5.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

இவ்விதிகளின்படி, பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின் நிகர எடை, அதிகபட்ச சில்லறை விற்பனை விலை, தயாரிக்கும் இடத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்களை பொட்டலத்தின்மீது அல்லது பொட்டலமிடப்பட்ட பொருட்களின் முகப்புச் சீட்டுக்களின்மீது அறிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு, அவர்கள் இவ்விதிகளின்கீழ் பதிவுச் சான்று பெற வேண்டும். அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு அதிகமாக விற்கப்படுவதிலிருந்து

நுகர்வோரைப் பாதுகாப்பதும், நுகர்வோர் நலன்கள் குறித்த இதர தகவல்களைத் தருவதும் இதன் நோக்கமாகும்.

2019-2020 ஆம் ஆண்டில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின்கீழ், 55,413 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,223 முரண்பாடுகள் காணப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ.92.39 இலட்சம் மற்றும் பதிவுக் கட்டணமாக ரூ.2.29 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளன.

1.4. நல வாரியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

1.4.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், அமைப்புசார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சில அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் அளிப்பதை உறுதி செய்ய 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

ஆண்டொன்றுக்கு தொழிலாளியின் பங்களிப்பாக ரூ.10/-ம், வேலையளிப்பவர் பங்களிப்பாக ரூ.20-ம், அரசின் பங்களிப்பாக ரூ.10/- என்ற வீதத்தில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொழிலாளர் நல நிதி செலுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர்கள்மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் விதிக்கப்படும் இணக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நல நிதியில் சேர்க்கப்படுகிறது.

கீழ்க்கண்ட நலத் திட்டங்களுக்காக தொழிலாளர் நல நிதி செலவிடப்படுகிறது:-

- ❖ தொழிலாளர்களின் சார்ந்தோர்களுக்கான தையற் பயிற்சி வகுப்புகள்.
- ❖ தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்.
- ❖ கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத் தொகை மற்றும் பாடநூல் உதவித் தொகை வழங்குதல்.
- ❖ அடிப்படை கணினிப் பயிற்சிக்கான உதவித் தொகை.
- ❖ திருமண உதவித் தொகை

- ❖ மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி, செயற்கை உறுப்புகள் மற்றும் மூன்று சக்கர வாகன உதவித் தொகை.
- ❖ இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை.
- ❖ விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை.

தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் குறைந்த வாடகையில் தங்கி ஓய்வெடுக்க மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு வசதியாக "ஜீவா இல்லம்" தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திற்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் படித்து பயன்பெறும் வகையில், முக்கிய நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் பல்வேறு நலத் திட்டங்கள்மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் தொகை விவரம்

வ. எண்	திட்டங்கள்	பயனாளிகள்	தொகை ரூ.
1.	குழந்தைகளுக்கு வழங்கப்படும் பால்	248	1,49,450
2.	குழந்தைகளுக்கான மதிய உணவு		64,897
3.	குழந்தைகளுக்கு வழங்கப்படும் முட்டை		67,516
4.	குழந்தைகளுக்கு வழங்கப்படும் பழம்		19,776

வ. எண்	திட்டங்கள்	பயனாளிகள்	தொகை ரூ.
5.	தையற்பயிற்சி மாணவிகளுக்கு உதவித் தொகை	818	5,17,603
6.	தையற்பயிற்சி நிலையம் தொடர்பான இதர செலவுகள்		2,12,81,547
7.	கல்வி உதவித் தொகை	37	2,93,000
8.	பாடநூல் உதவித் தொகை	45	72,835
9.	திருமண உதவித் தொகை	88	8,80,000
10.	மூக்குக் கண்ணாடி உதவித் தொகை	288	2,47,233
11.	இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை	83	24,75,000
12.	விபத்து மரண உதவித் தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை	40	41,91,000
13.	உழைப்பவர் உலகம் பத்திரிகைச் செலவினம்	4,396	4,82,795
14.	ஓய்வில்லங்களின் செலவினம்	6,414	44,51,754
மொத்தம்		**12,457**	**3,51,94,406**

1.4.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

தமிழ்நாடு, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் (கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்) போன்ற சமூகப் பாதுகாப்பு அளிக்க சட்டமியற்றுவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

2020 மார்ச் 24]

தமிழக அரசால் இயற்றப்பட்ட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 மற்றும் நலத் திட்டங்களின், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 60 (உடலுழைப்பு) மற்றும் 53 (கட்டுமானம்) தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

அரசு, கீழ்க்கண்ட 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை அமைத்துள்ளது:-

வ. எண்	வாரியங்களின் பெயர்
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்
2.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்
3.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்
4.	தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம்
5.	தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்
6.	தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்
7.	தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்
8.	தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம்
9.	தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம்
10.	தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்
11.	தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்
12.	தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம்
13.	தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம்
14.	தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம்

வ. எண்	வாரியங்களின் பெயர்
15.	தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம்
16.	தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம்
17.	தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம்

1.4.2.1. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்

பதிவு, புதுப்பித்தல், நலத் திட்ட உதவிகளை ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல் போன்ற பணிகள், சென்னையில் உள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ், மாவட்ட அளவில் தொழிலாளர் உதவி ஆணையர்களால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் கேட்பு மனுக்கள்மீது விரைந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் புகைப்படம் மற்றும் சுய விவரங்கள் அடங்கிய அடையாள அட்டை புத்தக வடிவில் வழங்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட கண்காணிப்புக் குழு, தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் உரிய நேரத்தில் சென்றடைவதைக் கண்காணிக்கிறது. அனைத்து நலத் திட்ட உதவித் தொகைகளும் வெளிப்படைத் தன்மையுடன் அமைப்புசாரா தொழிலாளர்கள்/பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு பாரத ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிமாற்றம் (Reserve Bank of India Electronic Clearing System (**RECS**)) மூலம் நேரடியாக செலுத்தப்படுகிறது.

2020 மார்ச் 24]

1.4.2.2. நலத் திட்ட உதவிகள் விவரம்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள் விவரம்:-

வ. எண்	உதவித் தொகைகள்		தொகை ரூ.
1.	விபத்து நிவாரணத் திட்டம்		
	அ)	விபத்து மரணம்	1,00,000/-
	ஆ)	விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப)	1,00,000/- வரை
	இ)	செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி	மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை
	ஈ)	பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் பதிவு செய்யாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கும்)	5,00,000/-
2.	இயற்கை மரண உதவித் தொகை		20,000/-
3.	ஈமச்சடங்கு உதவித் தொகை		5,000/-
4.	கல்வி உதவித் தொகை		
	அ)	10-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,000/-
	ஆ)	10-ம் வகுப்பு தேர்ச்சி	1,000/-
	இ)	11-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,000/-

வ. எண்	உதவித் தொகைகள்		தொகை ரூ.
	ஈ)	12-ம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்)	1,500/-
	உ)	12-ம் வகுப்பு தேர்ச்சி	1,500/-
	ஊ)	முறையான பட்டப்படிப்பு	
		வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்	1,500/-
		விடுதியில் தங்கிப் படிப்பவர்	1,750/-
	எ)	முறையான பட்டமேற்படிப்பு	
		வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்	4,000/-
		விடுதியில் தங்கிப் படிப்பவர்	5,000/-
	ஏ)	முறையான தொழில்நுட்பப் பட்டப்படிப்பு	
		வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்	4,000/-
		விடுதியில் தங்கிப் படிப்பவர்	6,000/-
	ஐ)	முறையான தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு	
		வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்	6,000/-
		விடுதியில் தங்கிப் படிப்பவர்	8,000/-
	ஒ)	ITI அல்லது பாலிடெக்னிக் படிப்பு	
		வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்பவர்	1,000/-
		விடுதியில் தங்கிப் படிப்பவர்	1,200/-

வ. எண்	உதவித் தொகைகள்		தொகை ரூ.
5.	திருமண உதவித் தொகை		
	அ)	ஆண்	3,000/-
	ஆ)	பெண்	5,000/-
6.	மகப்பேறு உதவித் தொகை		
	மருத்துவரீதியிலான		6,000/-
	கருக்கலைப்பு/கருச்சிதைவு		3,000/-
7.	கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை		500/- வரை
8.	ஓய்வூதியம்		1,000/- பிரதி மாதம்
9.	குடும்ப ஓய்வூதியம் (கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்)		500/- பிரதி மாதம்

நிதி ஆதாரங்கள்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் ஒரு சதவிகிதத்தை பங்களிப்பு மேல் வரியாக (Cess) பெறுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.522.53 கோடி பெறப்பட்டுள்ளது.

1974 ஆம் வருடத்திய தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்படி, வசூலிக்கப்படும் மோட்டார் வாகன வரியில் கூடுதலாக 1% வசூலிக்கப்பட்டு, பெறப்படும் நிதியிலிருந்து தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.5,52,42,885/- கூடுதல் வரியாகப் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களின் நலத் திட்ட உதவிகள் தமிழக அரசின் மானியம் மூலமாக வழங்கப்படுகின்றன. 2019-2020 நிதியாண்டிற்கு தமிழக அரசு ரூ.144,11,20,500/- நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2020 மார்ச் 24

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் சாதனைகள்

வாரியம் துவங்கப்பட்டது முதல் பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவித் தொகை விவரம்

வ. எண்	வாரியங்களின் பெயர்	பதிவு (இலட்சத்தில்)	பயனாளிகள் (இலட்சத்தில்)	தொகை (ரூபாய் கோடிகளில்)
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	31.17	18.36	734.05
2.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்	2.24	1.33	42.76
3.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்கள்	41.89	32.37	914.30
மொத்தம்		**75.30**	**52.06**	**1,691.11**

2019-2020 ஆம் ஆண்டில் பதிவு மற்றும் நலத் திட்ட உதவித் தொகை வழங்கப்பட்ட விவரம்

வ. எண்	வாரியங்களின் பெயர்	பதிவு (இலட்சத்தில்)	பயனாளிகள் (இலட்சத்தில்)	தொகை (ரூபாய் கோடிகளில்)
1.	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்	1.42	1.78	118.73

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	வாரியங்களின் பெயர்	பதிவு (இலட்சத்தில்)	பயனாளிகள் (இலட்சத்தில்)	தொகை (ரூபாய் கோடிகளில்)
2.	தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்	0.06	0.12	6.79
3.	தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்கள்	0.77	2.66	134.96
மொத்தம்		**2.25**	**4.56**	**260.48**

1.5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், கல்வி மற்றும் பயிற்சி நிலையமாகத் துவக்கப்பட்டு, சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988 முதல் சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலைய நிருவாக செலவுகளுக்காக ஆண்டுதோறும் ரூ.2,17,21,000/- மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இக்கல்வி நிலையம் முறையான கல்வி முறையில் இளங்கலை பட்டப்படிப்பு பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), பிஎச்.டி. ஆராய்ச்சி, பகுதிநேர தொழிலாளர் நிருவாகத்தின் முதுகலை பட்டயப்படிப்பு, "தொழிலாளர் சட்டங்களும் நிருவாகவியல் சட்டமும்" என்ற வார இறுதி நாட்கள் பட்டயப்படிப்பு ஆகியவற்றை தொழிலாளர் மேலாண்மை மற்றும் மனித வள மேலாண்மையில்

பணிபுரிவோர்களின் தேவைக்கேற்ப நடத்தி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் இக்கல்வி நிலையம் நடத்திய 8 கருத்தரங்குகள்/ பயிற்சி வகுப்புகள் வாயிலாக 624 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தற்போது, இக்கல்வி நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கல்வி நிலையத்திற்கான சொந்தக் கட்டடம் அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. புதிய கட்டடத்திற்கு இணைப்புச் சாலை அமைத்தல், கழிவு நீர் மற்றும் வடிகால் வசதிகள் அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3,74,00,000/- அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிருவாகக் கட்டடம் மற்றும் விடுதி கட்டடத்திற்குத் தேவையான அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்பொருட்டு, ரூ.1,60,77,946/- அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது செயல்பாட்டில் உள்ள இப்பணிகள் அனைத்தும் 30-4-2020-க்குள் நிறைவடையும் என எதிர்நோக்கப்படுகிறது.

1.6. தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், அறிவு மற்றும் ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தும்பொருட்டு "தமிழ்நாடு கட்டுமானக் கழகம்" என்ற பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானக் கழக அலுவலகம் டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரியக் கட்டடத்தின் தரைத் தளத்தில் 4-1-2013 முதல் இயங்கி வருகிறது. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு Modular Employable Skill பயிற்சித் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் ஒப்புதல் பெற்ற தொழிற்பயிற்சி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள்மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டு, வெற்றிகரமாக இப்பயிற்சியை முடித்த பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழில்நெறிக் கல்விப் பயிற்சி (National Council of Vocational Training) சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்துடன் இணைந்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்க ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்து, இதுவரை 43,000 தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து ரூ.186.20 இலட்சம் செலவில் 5,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் பரிசோதனை (Recognition of Prior Learning) (RPL) மூலம் சான்றிதழ் வழங்கும்பொருட்டு, மூன்று நாட்கள் திறன் இடைவெளி இணைப்புப் பயிற்சி (Bridge Course) வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், கட்டுமானத் தொழில் வளர்ச்சி குழுமம் ஆகியவற்றுடன் இணைந்து, தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தால் இப்பயிற்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.7. சிறப்புச் சாதனைகள்

❖ வெளி மாநில தொழிலாளர்கள் 24,274 நபர்கள் 29-2-2020 வரை பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

❖ பணியில் ஈடுபட்டு இருக்கும்போது விபத்து ஏற்பட்டு பணியிடங்களில் அல்லது மருத்துவமனைகளில் இறக்கும் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு விபத்து மரண நிதி உதவி ரூபாய் 1 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. விபத்து மரண நிதி உதவித் தொகையாக 29-2-2020 வரை 108 பயனாளிகளுக்கு ரூ.5.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.

❖ கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே மருத்துவ வசதி வழங்கும்பொருட்டு, நகரும் மருத்துவமனைகள் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 29-2-2020 வரையில் 92,976 கட்டுமானத் தொழிலாளர்கள் மருத்துவ வசதி பெற்றுள்ளனர்.

❖ கட்டுமானப் பணியிடங்களில் தங்கி பணிபுரியும் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் முறையான/

அனைவருக்கும் கல்வி திட்டப் பள்ளிகளில் பயில, போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் கல்வியாண்டில் 536 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

❖ கட்டுமானத் தொழிலாளர்கள் கட்டுமான பணியிடங்களுக்கு அருகாமையில் தற்காலிகமாக தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய தங்கும் இடங்கள் எழுச்சூர் மற்றும் தையூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முறையே 4-3-2017 மற்றும் 5-4-2018 ஆகிய தேதிகளில் துவக்கி வைக்கப்பட்டன.

❖ கட்டுமானத் தொழிலாளர்களது குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்தினை வழங்கிடும் வகையில், அங்கன்வாடி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,036 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

❖ 2019-2020 ஆம் ஆண்டில் 97,048 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், 137 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, 170 குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளன. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் பயின்று வந்த 2,996 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ குழந்தைத் தொழிலாளர்களை அனைத்து வகையான பணிகளிலும், வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களிலும் ஈடுபடுத்துவதை அகற்றும்பொருட்டு, பிப்ரவரி 2020 மாதம் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் செயல் மாதமாக அறிவிக்கப்பட்டு, தொழிலாளர் துறை அலுவலர்கள், பச்பன் பச்சாவோ அந்தோலன் (Bachpan Bachao Andolan) தொண்டு நிறுவனத்தினர், சைல்டு லைன் அமைப்பினர், காவல் துறையினர் மற்றும் சிறப்பு சிறார் காவல் அமைப்பினருடன் இணைந்து 96 நிறுவனங்களில் கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 56 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். பணிக்கமர்த்திய நிறுவன உரிமையாளர்கள்மீது வழக்கு தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

❖ 2019-2020 ஆம் ஆண்டு 523 கொத்தடிமைத் தொழிலாளர்கள், கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.60.40 இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

❖ கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த முக்கியமான மீட்பு நடவடிக்கைகள்:-

1. தஞ்சாவூர் மாவட்டம்-17-5-2019 அன்று 43 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.7.80 இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.
2. சென்னை மாவட்டம்-7-9-2019 அன்று 68 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.13.60 இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.
3. திருவள்ளூர் மாவட்டம்-18-2-2020 அன்று 197 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.39.40 இலட்சம் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்படவுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகை வழங்கும்பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களின் உடனடி பயன்பாட்டிற்கென நிரந்தர நிதி மூலதனம் அரசினால் ஏற்படுத்தப்பட்டு, அரசாணை (நிலை) எண் 108, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 9-7-2019 மூலம் ரூ.121 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ மாநிலத்தில் கொத்தடிமை முறையினை அகற்றும் பொருட்டு, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக, அரசாணை (நிலை) எண் 29, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 13-2-2020-ன்மூலம் ரூ.10.00 இலட்சம் அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கொத்தடிமைத் தொழிலாளர்கள் அதிகம் காணப்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை,

வேலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் கணக்கெடுப்பு நடத்தும்பொருட்டு, அரசாணை (1டி) எண் 134, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 21-2-2020 மூலம் ரூ.49.50 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தமிழக அரசு கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்ப ஒய்வூதியத்தினை மாதம் ரூ.400/-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தியுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.6,29,300/- குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ சென்னை மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அம்மா உணவகங்களில் இலவசமாக உணவு வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 63,569 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

❖ காலணிகள், தலைக்கவசம், பிரதிபலிப்பு மேலாடை, கையுறை மற்றும் பாதுகாப்புக் கண்ணாடி ஆகியவை அடங்கிய பாதுகாப்புப் பெட்டகம் ரூ.5.44 கோடி செலவில் 25,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ புதுக்கோட்டை, வேலூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் துறையின் அலுவலகக் கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2019-2020 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டன.

❖ பதிவில் உள்ள 99.36% (27,19,963) பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் ஆதார் எண்கள், சிறப்பு முகாம், தினசரிகளில் செய்தி வெளியிடுதல் மற்றும் களப் பணியாளர்களைக்கொண்டு வீடு வீடாகச் சென்று சேகரித்தல் மூலமாக இணைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

1.8. மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரை தலைவராகக் கொண்ட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளில், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களை பாதிப்பு ஏற்படுத்தும் இனங்கள் குறித்து ஆலோசனை வழங்குகிறது. இவ்வாரியம் 27-12-2018 அன்று திருத்தியமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட இவ்வாரியத்தின் 68-வது கூட்டம் 4-9-2019 அன்று நடைபெற்றது.

1.9. கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு)- உயர் மட்டக் கண்காணிப்புக் குழு

கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பாக உயர் மட்டக் கண்காணிப்புக் குழு அரசினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டம் அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் 11-11-2019 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொத்தடிமை முறையிலிருந்து கண்டறியப்பட்டு, மீட்கப்பட்டு, விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் மறுவாழ்வினை மேம்படுத்தும்பொருட்டு, பல முக்கியமான பிரச்சினைகள், தொடர்புடைய பிற துறையினருடன் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

1.10. தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு

தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு அரசாணை (2டி) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 31-7-2019-ன்படி, மறு அமைப்பு செய்யப்பட்டது. இக்குழுவின் 50-வது கூட்டம் 14-2-2020 அன்று உதகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன:-

- தோட்டத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு உடை மற்றும் உபகரணங்கள் (காலணி மற்றும் சீருடை) வழங்குவதற்கான நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்திட தோட்டக் கலைத் துறை, தொழிலாளர் துறை மற்றும் வேலையளிப்போர் சங்க பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு துணைக் குழு அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

[2020 மார்ச் 24

- வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசித்து ரக் (Rug) வழங்குவதற்குப் பதிலாக, அதற்கான தொகையை ரூ.210/-லிருந்து ரூ.375/- ஆக உயர்த்தி வழங்க முடிவெடுக்கப்பட்டது.

1.11. தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை

தொழிலாளர் துறை, சட்டப்படியான நடைமுறைகளை மறுசீரமைப்பு செய்வதற்கும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழான செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழங்கப்படும் சேவைகளை எளிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் துவங்குவதில் எளிய நடைமுறைக்கு ஏதுவாக, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ், கட்டணம் மின்னணு முறையில் செலுத்தும் வசதியுடன்கூடிய பதிவு, உரிமம், புதுப்பித்தல் மற்றும் ஆய்வுத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய இணையதளம் உருவாக்கப்பட்டு, https://labour.tn.gov.in என்ற முகவரியில் 7-6-2019 முதல் செயல்பட்டு வருகிறது.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ், உரிமம் பதிவு செய்தல்/பெறுதல் மற்றும் புதுப்பித்தல் செய்வதற்கான விண்ணப்பங்கள் இணையவழியாகப் பெறப்பட்டு அலுவலரால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. மின்னணு கையொப்பத்துடன்கூடிய சான்றிதழ் இணையவழிமூலம் விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ், ஆண்டறிக்கைகள் தனித்தனியாக தாக்கல் செய்யும் முறையை மாற்றி ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையை இணையம் வழியாக தாக்கல் செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தொழில் நிறுவனங்களின் வருடாந்திர அறிக்கையைத் தாக்கல் செய்வது எளிமையாக்கப்பட்டுள்ளது.

1-9-2019 முதல் குறிப்பற்ற முறையில் மாதாந்திர ஆய்விற்குரிய நிறுவனங்கள் இணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமலாக்க அலுவலர்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 15,389 நிறுவனங்கள் ஆய்வு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1.12. இணையவழி வழக்கு மேலாண்மை

பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ், வழக்கு விசாரணை, சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தல், வாதங்கள் மேற்கொள்ளுதல், ஆணைகள் பிறப்பித்தல் போன்ற சமரச பணி மற்றும் நீதிசார் பணிகள் ஆகியவை இத்துறையைச் சேர்ந்த உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வழக்குகளின் நிலையினைக் கண்டறிய இதற்கென தனியாக மென்பொருள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இம்மென்பொருள் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

1.13. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள், சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய வளர்ச்சியின் முப்பரிமாண இலட்சிய இலக்குகளாகும். தொழிலாளர் துறை தொடர்பான இலக்குகள் விவரம் பின்வருமாறு:-

i. இலக்கு எண்.4.1-அனைத்து சிறுவர்களும், சிறுமிகளும் சிறந்த, பொருத்தமான கற்றல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இலவசமான, சமச்சீரான, தரமான ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியினைப் பெறுவதை உறுதிபடுத்துதல்.

தொழிலாளர் துறையால் தமிழ்நாடு அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியங்களின்மூலம் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், பணியிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அக்குழந்தைகள் மேற்படிப்பு பயிலும்பட்சத்தில் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

ii. இலக்கு எண்.5.1-அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு எதிரான பாலினப் பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.

நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு சம ஊதியம் வழங்க வகை செய்யவும், வேலைவாய்ப்பில் பெண் பணியாளர்களுக்கு பாலின

அடிப்படையிலான பாகுபாட்டினை தடுக்கும்பொருட்டும் சம ஊதியச் சட்டம், 1976 தொழிலாளர் துறையால் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

iii. இலக்கு எண்.8.5-2030 ஆம் ஆண்டிற்குள் முழுமையான, திறன்மிக்க வேலைவாய்ப்பை உருவாக்குவதன் வாயிலாக, இளைஞர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருக்கும் தகுந்த வேலைவாய்ப்பை அளித்தல் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதிய அளவை நிர்ணயித்துள்ளது. திட்டமிடப்பட்ட வேலையமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணியின் தன்மைக்கு ஏற்ப குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

iv. இலக்கு எண்.8.7-கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழிக்கும் வகையிலான, உடனடியான, திறன்மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், புதிய முறையிலான அடிமைத்தனத்தையும், கடத்தலையும் முடிவுக்குக் கொண்டு வருதல், குழந்தைகளை இராணுவத்தில் பணியமர்த்துவது மற்றும் பயன்படுத்துவது உள்ளிட்ட மிகவும் சீர்கெட்ட வகையிலான குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் மற்றும் தடை செய்தல்; 2025 ஆம் ஆண்டிற்குள் அனைத்து நிலையிலான குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை (தடுத்தல்) சட்டம், 1976 மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் ஆகியவை மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக மறுவாழ்வு மற்றும் திறன் மேம்பாட்டு வளர்ச்சியும் அளிக்கிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும்பொருட்டு, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 தொழிலாளர் துறையால் சீரிய முறையில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் துறை கணினி வாயிலான ஆய்வு முறையினையும் கொண்டுள்ளது. அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் குறைகளை குறிப்பிட்ட காலத்தில் களைவதற்கு கணினி வாயிலான ஆய்வுத்

திட்டம் ஏதுவாக அமையும். குழந்தைத் தொழிலாளர் முறை மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் உள்ள கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த தொழிலாளர் துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இத்துறையால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்வதாக அமைகிறது.

2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாடு, சிறந்த நிருவாகத் திறனில் இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்வதோடு, பல பன்னாட்டுத் தொழிற்சாலைகள் அமையப் பெற்று இந்திய மாநிலங்களில் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளில் முன்னிலை வகிக்கிறது. இம்மாநிலம் மின்னணு, தோல் மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது. அதிக எண்ணிக்கையில் தகுதி மற்றும் திறன் வாய்ந்த மனித வளம் மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் அரசின் நேர்மறையான அணுகுமுறை கொண்ட இம்மாநிலத்தில் 21,65,489 தொழிலாளர்களுடன் 45,382 தொழிற்சாலைகள் இயங்கி வருவதால் முதலீட்டாளர்களுக்கு இணக்கமான தொழில் சூழல்மிக்க மாநிலம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிற்சாலை மற்றும் கட்டுமான இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காகவும், மேம்பாட்டுக்காகவும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அவற்றில், சம்பள பட்டுவாடா சட்டம், குறைந்தபட்ச ஊதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டம், குழந்தை மற்றும் வளரிளம் தொழிலாளர் சட்டம், சம ஊதிய சட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க சில சட்டங்கள் ஆகும். இவ்வியக்ககம் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதோடு, பதிவு செய்யப்பட்ட அனைத்துத் தொழிற்சாலைகளிலும், விபத்துகளைக் குறைத்து பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

2.1. நிருவாக அமைப்பு

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சென்னையை தலைமை இடமாகக் கொண்டுள்ளது. இயக்குநர் அவர்கள்

இவ்வியக்ககத்திற்கு தலைவராகவும் அவருக்கு தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவில் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநரும், கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவில் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநரும் நிருவாக பணியில் உதவி வருகின்றனர்.

தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய ஐந்து இடங்களில் கூடுதல் இயக்குநர் தலைமையில் மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆய்வு எல்லைகள் வரையறுக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் 25 இணை இயக்குநர்கள் உள்ளனர்.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவில் சென்னை மற்றும் மதுரையில் இணை இயக்குநர் தலைமையில் மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களை ஆய்வு எல்லையாகக் கொண்டு 8 துணை இயக்குநர்கள் உள்ளனர்.

2.2. தொழிற்சாலைகள் சட்டம், 1948

தொழிற்சாலைகள் மற்றும் தொழிலக வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழும் தொழிலாளர்களைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளை இவ்வியக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்வதன்மூலம் சாத்தியமாகிறது.

2.3. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996

இவ்வியக்ககம் முறைசார்ந்த தொழிலாளர்களது பாதுகாப்பு, நலம் மற்றும் உடல் நலத்தினைக் காப்பதோடு, கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் பணிபுரியும் முறைசாரா தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் அனைத்து வழிமுறைகளையும் மேற்கொண்டு வருகிறது. இவ்வியக்ககம், கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளை சீரிய முறையில் அமலாக்கம் செய்து வருகிறது.

2.4. சிறப்புத் திட்டங்கள்

2.4.1. சுய சான்று வசதியுடன்கூடிய எளிதாக்கப்பட்ட ஆய்வு திட்டம்

தொழிற்சாலை நிருவாகம் உற்பத்தித் திறனை முறைப்படுத்தும் வகையில், காலமுறை ஆய்வு முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தொழிற்சாலைகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உற்பத்தி செயல்முறை மற்றும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் உயர், நடுத்தர மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், அபாயகரமான செயல்முறை தொழிற்சாலைகளில் அதிக கவனம் செலுத்த வழிவகை செய்யப்படுகிறது.

கட்டுமானத்தின் தன்மையின் அடிப்படையிலும், அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், கட்டுமானப் பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1.1. அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் (தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல்), 100 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறு விளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 2(cb)-ன் அட்டவணை I-ல் பட்டியலிடப்பட்டவை) அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1.2. நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்

நூறு தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகளும் (தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ், வகைபடுத்தப்பட்டவை), ஊறு விளைவிக்கும் செயல்முறை

கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 2 (cb)-ன் அட்டவணை I-ல் பட்டியலிடப்பட்டவை) மற்றும் 250 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் ஊறு விளைவிக்கும் செயல்முறை அல்லாத தொழிற்சாலைகள் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1.3. குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்

இதர அனைத்துத் தொழிற்சாலைகளும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1.4. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்

கட்டுமானப் பணியிடங்களில் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமானப் பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்துக் கட்டுமானங்களும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல், அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

2.4.1.5. நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

இரண்டு முதல் ஐந்து தளங்கள் வரை கொண்ட கட்டுமானங்கள் மற்றும் 50 முதல் 500 தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் இவ்வகைப்பாட்டிற்குள் வரும்.

2.4.1.6. குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர, மற்ற அனைத்துக் கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில் தொடங்கும் நடைமுறையை எளிமையாக்கவும், ஆய்வுகளில் அதிக வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவதற்கும், கணினிமயமாக்கப்பட்ட இடர் மதிப்பீட்டு அடிப்படையிலான ஆய்வுகள் மற்றும் ஆய்வு அதிகாரிகளுக்கு சீரற்ற முறையில்

தொழிற்சாலைகளை ஒதுக்கீடு செய்யும் ஆய்வு முறை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்படி, அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்/கட்டுமான நிறுவனங்கள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்/கட்டுமான நிறுவனங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்/கட்டுமான நிறுவனங்கள் முறையே ஐந்து/மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் சீரற்ற முறையில் ஆய்வு செய்யப்படும்.

எளிதாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறையை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆய்வு முறையில் கீழ்க்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன:-

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை/கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ், ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஓர் அலுவலர், ஒரு தொழிற்சாலை/கட்டுமான நிறுவனத்தை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை, ஆய்வு முடிந்த 24 மணி நேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை/கட்டுமான நிறுவனத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்/ கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களுக்கு கள ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்/ கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்கள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்கள்/மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

முதலீட்டாளர்கள், இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து தங்கள் தொழிலினை மேம்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக இவ்வியக்கக

அலுவலர்களால் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சுய சான்றிதழ் திட்டத்தில் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் இவ்வியக்கக வலைதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்யும்பொருட்டு, 2019-2020 ஆம் ஆண்டில், தொழிற்சாலைகளில் 29-2-2020 அன்றைய நிலையில் 18,305 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று கட்டுமான நிறுவனங்களில் 1,333 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.4.2. இணைய வலைதளம்

முதலீட்டாளர்களுக்கு தொழில் தொடங்கும் திட்டங்களை எளிதாக்குவதற்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென பிரத்யேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வலைதளம்மூலம் பொதுமக்கள் இவ்வியக்கக சேவைகளை எளிதாகப் பெறவும், தங்கள் தேவைகளுக்காக நேரிடையாக அணுகுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் பல்வேறு சேவைகள்/ஒப்புதல்களை இவ்வலைதளத்தின் வழியாகப் பெற இயலும். இவ்வலைதளம் (URL:https://dish.tn.gov.in) மூலம் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன:-

- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் உரிமம் வழங்குதல்.
- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் உரிமம் புதுப்பித்தல்.
- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996-ன்கீழ் கட்டுமான நிறுவனங்களுக்கு பதிவு சான்று வழங்குதல்.
- ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் பதிவுச்சான்று மற்றும் உரிமம் வழங்குதல்.

2020 மார்ச் 24]

- மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் பதிவுச்சான்று மற்றும் உரிமம் வழங்குதல்.
- ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.

2.4.3. எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்

எளிமைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை அறிமுகப்படுத்துவதற்கு முன், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனத்தினர் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ், பல படிவங்களில் ஆண்டறிக்கைகளை பல்வேறு காலங்களில் சமர்ப்பித்து வந்தனர். இந்நிறுவனங்களின் சுமையைக் குறைக்கவும், ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதை எளிதாக்கவும், தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 100-ல் படிவம் எண் 22/தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதி 242 அட்டவணை XIII-ல் படிவம் XXV-ல் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையாக தொழிற்சாலைகள்/ கட்டுமான நிறுவனங்கள் வலைதளம் வழியாக சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.4.4. பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின்கீழ் பராமரிக்கப்பட வேண்டிய எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள்

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் சட்டங்களின்படி, தொழிற்சாலை நிருவாகங்கள் பல பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியுள்ளதோடு அல்லாமல், அவை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய பணி என்பதாலும் உற்பத்தி நேரத்தின் பெரும்பகுதி வீணடிக்கப்படுகின்றன. இதன் விளைவாக நிருவாக செலவுகள் அதிகரிக்க நேரிடும். அதனால், தற்போது பராமரிக்கப்பட வேண்டிய 27 பதிவேடுகளுக்கு மாற்றாக 4 பதிவேடுகள் மட்டுமே பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2.4.5. நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம்

வளர்ந்து வரும் தொழிற்துறைகளில், தொழிற்சாலைகளில் புதிய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால், அவற்றிலிருந்து வெளிப்படும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின்

அடர்த்தியைக் கண்காணிப்பது அவசியமாகிறது. இதற்கென தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஓர் இணைய கண்காணிப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தி, நிகழ்நேர மதிப்பீட்டின்படி இணையதளம்மூலம் இக்கண்காணிப்பு மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. இக்கண்காணிப்பு மையத்துடன் ஊறு விளைவிக்கும் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு, அத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் நிகழ்நேர மதிப்பீட்டின்படி கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

2.4.6. கையடக்க பல்வகை வாயு பகுப்பாய்விகள்

அதிக நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்களின் அடர்த்தி அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக (Threshold Limit Value) வெளிப்படும் அபாயம் நிறைந்த, ஊறு விளைவிக்கும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய, இவ்வியக்கக அலுவலர்கள் தொழிற்சாலை ஆய்வுகளின்போது நச்சுத்தன்மை வாய்ந்த வாயுக்களின் அடர்த்தியை கையடக்க பல்வகை வாயு பகுப்பாய்விகள்மூலம் அளவிடுகின்றனர்.

2.5. இதர செயல்பாடுகள்

2.5.1. பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகளில் முன்மாதிரி ஒத்திகைகள்

ஊறு விளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989, அட்டவணை 3-ல் குறிப்பிட்டுள்ள இரசாயனங்களை அதிகபட்ச அளவுக்கு மேல் சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 29-2-2020 வரை 165 தொழிற்சாலைகள் பெருவிபத்து இடர்தரு தொழிற்சாலைகள் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

ஊறு விளைவிக்கும் இரசாயனங்களை உற்பத்தி செய்தல், சேமித்தல் மற்றும் உபயோகப்படுத்துதல், தொழிற்சாலை மற்றும் அதன் அருகில் உள்ள பொது மக்கள் மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவிக்க ஏதுவாகும் எளிதில் தீப்பற்றக்கூடிய, வெடிக்கும் தன்மை வாய்ந்த மற்றும் நச்சுத் தன்மையுடைய இரசாயனங்கள் எதிர்பாராமல்

வெளியேறும்போது அவசர நிலையினை உருவாக்குகிறது. அவ்வாறு வெளியேறும் இரசாயனங்களின் தன்மை மற்றும் அதன் அளவினைப் பொறுத்து, தொழிற்சாலையின் வளாகத்திற்குள் கட்டுப்படுத்தும் அவசர நிலை, உள்வளாக அவசர நிலை எனப்படும். அவ்வாறு கட்டுப்பாடின்றி தொழிற்சாலை வளாகத்தினை விட்டு வெளியேறி அதன் அருகிலுள்ள பொது மக்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் அவசர நிலை வெளிவளாக அவசர நிலை எனப்படும்.

அவசர காலகட்டத்தில் ஏற்படக்கூடிய நடைமுறை இடர்பாடுகளை சரியாக அளவீடு செய்யும்பொருட்டு, உள்வளாக அவசர நிலை முன்மாதிரி ஒத்திகைகள் 6 மாத காலத்திற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. வெளிவளாக அவசர நிலை முன்மாதிரி ஒத்திகைகள், மாவட்ட அவசர நிலை அலுவலரான மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 139 உள்வளாக மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

2.5.2. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் அதிக வெடிக்கும் தன்மை வாய்ந்தவையாக உள்ளதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வழிமுறைகளை மேலும் தீவிரமாக அமல்படுத்த தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் அதிகம் நிகழும் அபாயம் உள்ளதால், பிற ஆய்வு எல்லையில் உள்ள இணை இயக்குநர்களைக் கொண்டு சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது 218 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் முரண்பாடுகள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிருவாகத்தினர்மீது 421 வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.79,11,500/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ரூ.18.00 இலட்சம் செலவில் மூன்று பாதுகாப்பு குறும்படங்கள்

தயாரிக்கப்பட்டு, பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின்போது நடமாடும் பரப்புரை வாகனத்தில் திரையிட்டுக் காட்டப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் கூடுதல் முனைப்புடன் பாதுகாப்பு வழிமுறைகளை அமல்படுத்தவும், பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிப்படுத்தவும், விருதுநகர் மாவட்டத்தில் கூடுதல் இயக்குநர் தலைமையில் பிரத்யேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்புக் குழு பட்டாசு தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. இக்குழு, தொழிலாளர்களது பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு, அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிருவாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கிறது. இக்குழுவால், 2019-2020 ஆம் ஆண்டில் 110 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட நிருவாகத்தினர்மீது 10 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.6,26,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

2.5.3. பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்/ மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிவகாசியில் ஒரு பாதுகாப்புப் பயிற்சி மையம் 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் இரசாயனங்களை பாதுகாப்பாகக் கையாளுவது குறித்தும், பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பான செயல்முறைகள் குறித்தும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் இதுவரை 41 குழுக்களுக்கு ஒரு மாத கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 1,021 ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர். 2019–2020 ஆம் ஆண்டில் 85 ஒருநாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 4,630 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2.5.4. தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு பயன்களை மேலும்

2020 மார்ச் 24]

நீட்டிக்கும்பொருட்டு, தமிழக அரசால் தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.50,000/- வழங்கப்படுகிறது. இந்த நிவாரணமானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (E.S.I. Scheme) அல்லது பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரணங்களுடன் கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

ஒவ்வோராண்டிற்கும் தவணைத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு, தொழிலாளியின் சார்பாக அத்தொகையினை செலுத்த வேண்டியது நிருவாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது, தி நியூ இந்தியா அஷூரன்ஸ் நிறுவனம், திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான காப்பீடு புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2.5.5. உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் செயல்பாடுகள் ஒன்றோடொன்று சார்ந்ததாகும். அபாயகரமான பணி மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களது உடல்நலத்தினைக் கண்காணிக்க ஒரு மருத்துவப் பிரிவு இவ்வியக்ககத்தில் செயல்படுகிறது. இம்மருத்துவப் பிரிவு, காலமுறைப்படி தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறது. நிமோகோனியாசிஸ் நோயைத் தடுப்பதற்கென நடத்தப்படும் குழு சிந்திப்பு நிகழ்ச்சிகளில் சிலிக்கோசிஸ் தடுப்பு முறைகளுக்கு பிரத்யேக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, ஒவ்வொரு மருத்துவ அலுவலருக்கும் வழங்கப்பட்டுள்ள PFT இயந்திரத்தின் உதவியுடன் சிலிக்கா துகள்களால் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும் தொழிலாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு நிமோகோனியாசிஸ் பாதிப்பு உள்ளதா என அறியப்படுகிறது. மருத்துவப் பரிசோதனையின்மூலம் நிமோகோனியாசிஸ் பாதிப்பு அறிகுறிகளுடன் அசாதாரண அறிகுறிகள் காணப்பட்டால், அவர்களை அவ்விடத்தில் தொடர்ச்சியாக பணியில் ஈடுபடுத்தாமல், சுழற்சி முறையில் பணி வழங்கி தூசுகளின் தொடர் பாதிப்பிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

மேலும், இரைச்சல் அதிகமுள்ள பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களது காது கேட்கும் திறனைப் பாதுகாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் பணியில் சேர்வதற்கு முன்னரும் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையிலும் அவர்களது காது கேட்கும் திறன் வருடத்திற்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 64,776 தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் 8,027 தொழிலாளர்களுக்கும் மருத்துவச் சான்றிதழ்கள் மருத்துவ அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 27,116 வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

2.5.6. தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

இவ்வியக்ககத்தின் முக்கிய பணிகளான பாதுகாப்பு மேம்பாட்டுச் செயல்பாடுகளின்கீழ், பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் மற்றும் பாதுகாப்பு ஒத்திகை ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 90 பாதுகாப்புப் பிரச்சார வகுப்புகள் நடத்தப்பட்டு, 4,518 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 496 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 25,945 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பினை மேம்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு, பாதுகாப்புக் கருத்தரங்குகளை நடத்தி வரும் தேசிய பாதுகாப்பு குழுமம், தேசிய உற்பத்தி குழுமம் போன்ற பிற அரசுசாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் தொழிற்சாலை நிருவாகத்தினர் மற்றும் அனைத்துத் தரப்பு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 4 கருத்தரங்குகளால் 1,385 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2.5.7. தொழிலக பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தொழிலக பாதுகாப்புச் சட்டங்களை கடுமையாக அமல்படுத்துவதோடு, தொழிற்சாலைகள் தொகுப்பாக உள்ள இடங்களில், அத்தொழிற்சாலைகளின் உற்பத்தி முறைகளில் உள்ள அபாயங்களுக்கு ஏற்றவாறு, பொருத்தமான பாதுகாப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை நடத்தி வருகிறது. அத்துடன் தொழிற்சாலைகளில் பணியிட பாதுகாப்பினை மேம்படுத்த பாதுகாப்பு செயல்முறை விளக்கம், குழு கலந்துரையாடல், விபத்து நிகழ்வு குறித்த கலந்துரையாடல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு மண்டலத்திலும் கருத்தரங்குகளை நடத்துவதன்மூலம் தொழிலக பாதுகாப்பில் மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் அறிவுத்திறன்களை தொழிற்சாலைகளுக்கிடையே பகிர்மாற்றம் செய்வதை மேம்படுத்துகிறது. இத்தகைய முன்னோடியான பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வின் துவக்கமாக 19-2-2020 அன்று ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் தொழிற்சாலையில் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் தொழிலக பாதுகாப்பு குறித்த பிரத்யேக கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் பல்வேறு உற்பத்திப் பணிகள் மற்றும் இதர உற்பத்தி சாராத பணிகள் அனைத்திலும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளும் அதன் தொடர்பான தொழிற்சாலைகள் சட்டம் 1948-ல் உள்ள சட்ட ஷரத்துகளும் எடுத்துரைக்கப்பட்டன. இந்தக் கருத்தரங்கில் தொழிலக விபத்து நிகழ்வு அறிக்கைகள் மூலமாக விபத்துகளுக்கான காரணங்களை எடுத்துரைத்ததும், தொழிற்சாலை நிருவாகத்தினரால் கடைபிடிக்கப்படும் மிகச்சிறந்த நடைமுறைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டதும் சிறப்பம்சமாக இருந்தது.

இக்கருத்தரங்கில் பல்வேறு பணிகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் அதன் தொடர்பான சட்ட வரையறைகளையும் கொண்ட ஒரு பாதுகாப்புக் கையேடு வெளியிடப்பட்டது. இக்கருத்தரங்கில் நிருவாக இயக்குநர்கள், மேலாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட சுமார் 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் 75 தொழிற்சாலைகளிலிருந்து கலந்துகொண்டு பயனடைந்தனர்.

[2020 மார்ச் 24

2.5.8. கட்டுமான பணியிடங்களில் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

பிரதான கட்டுமான பணியிடங்களிலேயே ஒவ்வொரு மாதமும் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. பெரும்பாலான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாதவர்களாகவும் இருப்பதால், அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு குறும்படங்கள், முன்மாதிரி வடிவங்கள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் ரூ.15.00 இலட்சம் செலவில் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் தயாரிக்கப்பட்டு, கட்டுமானத் தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பிற்கு உதவும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 25,000 தொழிலாளர்களுக்கு ரூ.5.44 கோடி செலவில் பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு தலைக்கவசம், பிரதிபலிப்பு அங்கி, கையுறைகள், பாதுகாப்பு கண்ணாடி ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 45 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 2,836 கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

2.5.9. கட்டுமான பணியிடங்களில் பணிச் சூழலை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கட்டுமான பணியிட ஆய்வின்போது கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர்களுக்கான அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறைகள் மற்றும் தங்குமிடம் ஆகியவை அளிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

மழைக் காலங்களில் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கவும், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சுகாதாரமான தங்குமிடங்களை உறுதி செய்யவும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப் பிரிவில் சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இச்சிறப்பு ஆய்வுக் குழுக்கள் கட்டுமான பணியிடங்களில் ஆய்வு

மேற்கொண்டு அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதாரமான தங்குமிடங்களை மேம்படுத்த தடையாணைகள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 162 கட்டுமான பணியிடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 7 தடையாணைகள் மற்றும் கட்டுமான நிறுவன உரிமையாளர்கள்மீது 47 காரணம் கோரும் அறிக்கைகள் வழங்கப்பட்டன.

2.5.10. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

அழுத்தக்கலன்கள் வளிமண்டல அழுத்தத்திற்கு மேல் குறிப்பிட்ட அழுத்தம் மற்றும் வெப்பநிலையில் பாதுகாப்பாக இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அழுத்தக்கலன்களில் கசிவு அல்லது பிளவு ஏற்படும் நேர்வில் உண்டாகும் அபாயகரமான விளைவுகளால் தொழிலாளர்கள், சுற்றுச்சூழல் மற்றும் உடைமைகள் ஆகியவை பாதிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு இந்திய கொதிகலன்கள் சட்டத்தின்கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர, வளிமண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனைக்கும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனைக்கும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனைக்கும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனைக்கும் இவ்வியக்கக அலுவலர்களால் உட்படுத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 1,09,397 வெளிப்புற, 1,485 உட்புற, 15,109 நீர் அழுத்த மற்றும் 5,620 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.5.11. மாநில பாதுகாப்பு விருதுகள்

தொழிற்சாலை நிருவாகத்தினரிடையே பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்துவதில் போட்டி மனப்பான்மையை ஊக்கப்படுத்தவும் தனித்துவமான பாதுகாப்பு செயல்திறன் கொண்ட நிருவாகத்தினரை அங்கீகரிக்கவும் மாநில அளவிலான பாதுகாப்பு விருதுகள் ஒவ்வோர் ஆண்டும் தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பிரிவுகளின்கீழ், விபத்துக் குறைப்பில் திறம்பட செயல்பட்ட

தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு வெள்ளிக் கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 20-9-2019 அன்று விருதுகள் வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவில் 268 தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு 332 மாநில பாதுகாப்பு விருதுகள் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

2.5.12. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

நிரூபிக்கப்பட்ட புதுமையான முயற்சிகள் மூலமாக உற்பத்தித் திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதில் தனித்துவமான பங்களிப்பினை வழங்கிய தொழிலாளர்களை அங்கீகரிக்கும் விதமாக, "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பங்குபெற ஏதுவாக விருதுகளின் எண்ணிக்கை 24-லிருந்து 43 ஆக 2012 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 20-9-2019 அன்று விருதுகள் வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவில் 235 தொழிலாளர்களுக்கு உயர்ந்த உழைப்பாளர் விருதுகள், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

வேலைவாய்ப்புப் பிரிவு


மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற பெயருடன் இதுவரை செயல்பட்டு வந்த அலுவலகங்கள் 30-7-2019-ல் வெளியிடப்பட்ட அரசாணை வாயிலாக மறுசீரமைக்கப்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றம் பெற்று செயல்பட்டு வருகின்றன. தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கி வேலைநாடுநர்களின் வேலைபெறும் திறன்களை மேம்படுத்துதல், வேலைவாய்ப்புப் பிரிவின் முக்கிய குறிக்கோள் ஆகும். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அரசுத் துறைகளால் தெரிவிக்கப்படும் பணிக் காலியிடங்களுக்கு பதிவு செய்ய வசதி ஏற்படுத்தித் தரும் மையமாக செயல்படுகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்களை இணைக்கும் ஒரு பொதுவான பாலமாக செயல்பட்டு, மாவட்ட

நிருவாகம் மற்றும் இதர தொடர்புடைய துறைகளுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி தனியார் துறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன. இவ்வேலைவாய்ப்பு முகாம்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படும் பல்வேறு திறன் பயிற்சிகளுக்கு உரிய நபர்களை சேர்க்கும் இடைமுகமாகவும் திகழ்கின்றன.

3.1. வேலைவாய்ப்புப் பிரிவின் நிருவாக கட்டமைப்பு

இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநரகத்தில் அவருக்கு உதவ இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மற்றும் இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்) என இரு இணை இயக்குநர்கள், நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

வேலைவாய்ப்புப் பிரிவின் அனைத்து சார்நிலை அலுவலகங்களும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மண்டலங்கள்மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மண்டலத்துக்குட்பட்ட சார்நிலை அலுவலகங்களின் செயல்பாடுகளை மண்டல இணை இயக்குநர்கள் (வேலைவாய்ப்பு) கண்காணிக்கின்றனர். வேலைவாய்ப்புப் பிரிவு 32 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், 2 தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், ஒரு மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், ஐந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மற்றும் ஒரு பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் என மொத்தம் 41 சார்நிலை அலுவலகங்களை உள்ளடக்கியதாகும். சென்னையில் நிறுவப்பட்டுள்ள மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமானது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி 1 மற்றும் தொகுதி 2 ஆகிய தேர்வுகள் மற்றும் இதர உயர் பதவிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சியளிக்கும் பணிகளை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நிருவாக அமைப்பு பின்வருமாறு:



3.2. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்

- வேலைநாடுநர்களைப் பதிவு செய்தலுடன் புதுப்பித்தல் மற்றும் முழுமைப்படுத்துதல்
- அரசுத் துறைகளால் அறிவிக்கப்படும் பணி காலியிடங்களுக்கு வேலைநாடுநர்களைப் பரிந்துரைத்தல்
- தொழில்நெறி வழிகாட்டுதல்
- மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மற்றும் இதர மையங்களில் போட்டித் தேர்வுகளுக்காக கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- நூலகத்துடன்கூடிய தன்னார்வ பயிலும் வட்டங்களைப் பராமரித்தல்
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்

2020 மார்ச் 24]

- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்குப் பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்
- திறன் பயிற்சிக்கு ஆள்சேர்ப்பு மற்றும் பதிவு மேற்கொள்ளுதல்
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறி விழிப்புணர்வு உரைகள் நிகழ்த்துதல்
- உரிய கால இடைவெளிகளில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்
- மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவின்மூலம் வேலைநாடுநர்களுக்கு தனியார் துறை வேலைவாய்ப்பு பெற வழிவகுத்தல்
- வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை திட்டத்தைச் செயல்படுத்துதல்
- வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களைச் சேகரித்தல் மற்றும் தொகுத்தல்
- மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் (Virtual Learning System Portal) பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு மின்-பொருளடக்கம் மற்றும் மென்பாட குறிப்புகள் அளித்தல்
- மாநில தொழில்நெறி வழிகாட்டும் மைய செயல்பாடுகளைக் கண்காணித்தல்

3.3. வேலைவாய்ப்பு இணையதளம் (www.tnvelaivaaippu.gov.in)

மாணவர்கள் பள்ளி வளாகங்களிலேயே துறையின் வலைதளத்தைப் பயன்படுத்தி மேல்நிலைக் கல்வித் தகுதி மற்றும் உயர்நிலைக் கல்விச் சான்றிதழ்களை வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்துகொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதி ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து துறையின் இணையதளம் வாயிலாக 1,03,10,512 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

[2020 மார்ச் 24

உயிர் பதிவேடு விவரங்கள்

விவரங்கள்	பதிவுதாரர்கள்
29-2-2020-ல் உயிர் பதிவேட்டின்படி மொத்த எண்ணிக்கை	68,56,336
18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்கள்	16,51,250
18 முதல் 23 வயதிற்குட்பட்ட உயர் கல்வி மேற்கொள்ளும் மாணவர்கள்	14,77,343
24 முதல் 35 வயதிற்குட்பட்ட பதிவுதாரர்கள்	25,88,038
36 முதல் 58 வயதிற்குட்பட்ட பதிவுதாரர்கள்	11,31,830
58 வயதினை கடந்தவர்கள்	7,875

3.4. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகள்

தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கும் செயல்பாடுகளானது, கல்வி நிறுவனங்களில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள், நலிந்த பிரிவினருக்கான சிறப்பு ஆலோசனைகள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து திறன் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் கருத்தரங்குகளுடன்கூடிய கண்காட்சிகள் நடத்துவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் நிதி ஆண்டில் 32 தொழில்நெறி கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

3.5. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்கள்

அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தேவையான புத்தகங்கள், தினசரிகள், பாடக்குறிப்புகள் மற்றும் முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நூலகங்களுடன்கூடிய

தன்னார்வ பயிலும் வட்டங்கள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு போட்டித் தேர்வுகளை எழுத விரும்பும் இளைஞர்களை போட்டித் தேர்வுகளுக்குத் தயார்படுத்துவதற்கு தன்னார்வ பயிலும் வட்டங்கள் உதவுகின்றன.

தன்னார்வ பயிலும் வட்டங்களில் பயின்று வெற்றி பெற்றவர்களை அழைத்து போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்யும் இளைஞர்கள் மத்தியில் ஊக்கமூட்டும் உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. தேர்வர்கள், குறிப்பாக கிராமப்புறத் தேர்வர்கள் பயன்பெறும் வகையில், பணியில் இருக்கும் அலுவலர்கள் மற்றும் அனுபவமிக்க வல்லுநர்களைக் கொண்டு மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

மத்திய மற்றும் மாநில அரசுகளால் 2019-2020 ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி பெற பதிவு செய்த 23,220 தேர்வர்களில் 971 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

3.6. கல்லூரிகளில் இலவச பயிற்சி வகுப்புகள்

பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு 10 பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பெற்ற கல்லூரிகளில் இலவச பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக அரசால் ஆண்டுதோறும் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் ஆகியவற்றால் 2019-2020 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட போட்டித் தேர்வுகளுக்காக நடத்தப்பட்ட 253 பயிற்சி வகுப்புகளில் 22,116 மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

3.7. மெய்நிகர் கற்றல் இணையதளம்

‘https://tamilnaducareerservices.tn.gov.in’

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், மெய்நிகர் கற்றல் இணையதளமானது, மாநிலத்திலுள்ள தொலைதூர கிராமங்களில் வசிக்கும் அனைத்து போட்டித் தேர்வர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் 22-2-2019 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மத்திய பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற தேர்வாணையங்களின் முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கான மின்-பாடக்குறிப்புகள் இவ்விணையதளத்தில்

பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்விணையதளத்தில் 55,920 பதிவுதாரர்கள் பதிவு செய்து பயனடைந்துள்ளனர். வரவிருக்கும் தேர்வுகள் குறித்த விவரங்கள், தேர்வுகளுக்கான பாடத்திட்டம், பொதுத் துறை நிறுவனங்களால் அறிவிப்பு செய்யப்படும் பல்வேறு காலிப் பணியிடங்கள் உள்ளிட்ட விவரங்கள் தேர்வர்கள் பயன்பெறும் வகையில் இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

3.8. திறன் மற்றும் தொழில்நெறி விழிப்புணர்வு வாரம்

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 2-வது வாரம் தொழில்நெறி மற்றும் திறன் விழிப்புணர்வு வாரமாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து அனுசரிக்கப்படுகிறது. தொழில்நெறி ஆலோசனைகள் மற்றும் உரைகள், தொழில்நெறி கண்காட்சிகள், நடமாடும் ஊர்திகள்மூலம் தொழில்நெறி விழிப்புணர்வு, ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சி, தொழில்நெறி மற்றும் திறன் பயிற்சி தொடர்பான புத்தகங்கள் மற்றும் சிற்றேடுகள் விநியோகித்தல், தொழில் மற்றும் திறன் விழிப்புணர்வு கருத்தரங்குகள் போன்ற பல்வேறு வகையான செயல்பாடுகள் இவ்வாரத்தில் நிகழ்த்தப்படுகின்றன. மாணவர்களுக்கான பல்வேறு திறன் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

3.9. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல்

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களின் நலனுக்காக பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் ஒத்துழைப்புடன் சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் விடுதி வளாகத்திலேயே நடத்தப்படுகின்றன. இந்த வழிகாட்டல் நிகழ்ச்சியின்போது பல்வேறு வகையான படிப்புகள், திறன்கள், போட்டித் தேர்வுகள் குறித்து விடுதி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

பிப்ரவரி 2020 வரை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் நடத்தப்பட்ட 96 நிகழ்ச்சிகளில் 22,144 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

2020 மார்ச் 24]

3.10. திறன் தமிழகம் இதழ்

துறையின் செயல்பாடுகளை முன்னிறுத்தியும் மற்றும் பல்வேறு தொழில்நெறி வாய்ப்புகள் குறித்த தகவல்களையும் கொண்ட 'திறன் தமிழகம்' என்னும் காலாண்டு இதழினை துறையின் வேலைவாய்ப்புப் பிரிவு வெளியிட்டு வருகிறது.

- 10 ஆம் வகுப்புக்குப் பிறகு?
- 12 ஆம் வகுப்புக்குப் பிறகு?
- ஐ.டி.ஐ-க்குப் பிறகு?
- பட்டயப் படிப்பிற்குப் பிறகு?
- முதல்தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்டப் படிப்புகள் மற்றும் முதுநிலை பட்டயப் படிப்புகள் – ஒரு பார்வை!

என்ற தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடப்பட்டு, அவை துறையின் வலைதளத்தில் (www.tnvelaivaaippu.gov.in) மின்-புத்தகங்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

'மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு வழிகாட்டி' மற்றும் 'பட்டப் படிப்பிற்குப் பின்?' ஆகிய இரு புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு விரைவில் வெளியிடப்படவுள்ளன.

3.11. மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்

சென்னை, கிண்டியிலுள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் 2017-2018 ஆம் ஆண்டின் வரவு-செலவு கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டவாறு மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் 18 மாவட்டங்களில், 3-12-2018 முதல் உருவாக்கப்பட்டன. தற்போது 32 மாவட்டங்களிலும் செயல்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் மாற்றுத் திறனாளிகள் வேலை பெறும்வகையில் சேவைகள் மற்றும் சிறப்பு உதவிகள் வழங்கும் குறிக்கோளுடன் இயங்கி வருகின்றன. ஏப்ரல் 2019 முதல் 194 நபர்கள் பொதுத் துறையிலும், 1,446 நபர்கள் தனியார் துறையிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

3.12. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குறிப்பிடத்தக்க அளவில் உள்ள கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்குத் தேவையான தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற சேவைகளை அளித்து வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதலுடன், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

இம்மையங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உரிய திறமைகளை மேம்படுத்தும் வகையில் பயிற்சிகள் வழங்குவதுடன் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்கவும், சுய வேலைவாய்ப்பில் ஈடுபட ஊக்குவிக்கவும் வழிவகை செய்கின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஐந்து தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கும் அரசால் ஆண்டொன்றுக்கு ரூ.20.46 இலட்சம் வழங்கப்படுகிறது.

3.13. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

பழங்குடியினரிடையே பல்வேறு வாழ்க்கைத் தொழில்கள், உயர் கல்வி வாய்ப்புகள், போட்டித் தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு போன்றவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது உதகமண்டலத்தில் செயல்பட்டு வருகின்றது.

3.14. வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருக்கும் வேலைநாடுநர்கள் வேலைவாய்ப்பு பெற உதவும் நோக்கில் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகைத் திட்டம் தொடங்கப்பட்டது.

2020 மார்ச் 24]

வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை மூன்று ஆண்டுகளுக்கு, வயது வரம்பு மற்றும் வருமானம் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.72,000/- மற்றும் அதிகபட்ச வயது வரம்பு 40 ஆகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு வயது வரம்பு 45 ஆகும். 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200/-, 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300/-, 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400/- மற்றும் பட்டதாரிகளுக்கு ரூ.600/- என்ற வீதத்தில் மாதந்தோறும் உதவித் தொகை மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிலும் வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

3.15. மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்

உயிர்ப் பதிவேட்டில் ஓராண்டிற்குமேல் காத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு, வயது வரம்பு மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமில்லை. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையானது 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. படிப்பறிவற்றவர்கள் முதல் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை ரூ.600/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/- மற்றும் பட்டதாரிகளுக்கு ரூ.1000/- என்ற வீதத்தில் மாதந்தோறும் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் பத்தாண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ், பயனடைந்த பயனாளிகள்

வ. எண்.	பிரிவினர்	செலவிடப்பட்ட தொகை	பயனாளிகள்
1.	பொது-பதிவுதாரர்கள்	ரூ.22.80 கோடி	55,695
2.	மாற்றுத் திறனாளி-பதிவுதாரர்கள்	ரூ. 15.04 கோடி	21,144

3.16. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

மத்திய அரசின் தேசிய தொழில்நெறி பணிகளின்கீழ், அமைந்த பணிப்பயன் முறை திட்டத்தின் (Mission Mode Project) நிதி உதவிமூலம் 2014 ஆம் ஆண்டு தமிழகத்தில் வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் மற்றும் இதர வேலைநாடுநர்களுக்கும் அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்குதல் மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் நோக்கத்தோடு இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன், தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் பயிற்சியின் வாயிலாக, பயனுள்ள தொழில்நெறி வழிகாட்டும் சேவைகளை வெளிப்படைத் தன்மையுடன் வழங்குகின்றன.

சேலம், திருநெல்வேலி, திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய ஆறு இடங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் தலா ரூ.49.50 இலட்சம் நிதி உதவியுடன் ஏற்படுத்த மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக 60 சதவீதத் தொகையானது வழங்கப்பட்டு மேற்கண்ட ஆறு மாவட்டங்களில் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

3.17. தேசிய தொழில்நெறி பணி வலைதளம்

தேசிய தொழில்நெறி பணியின்கீழ், அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும் தேசிய தொழில்நெறி பணி வலைதளத்துடன் (https://www.ncs.gov.in) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. வேலைநாடுநர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் திறன் பயிற்சியளிப்பவர்கள் இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ளதால், வேலைநாடுநர்கள் தேசிய அளவிலான பணி வாய்ப்புகளைப் பெற உதவுகிறது. இந்த வலைதளமானது, அரசு, வேலைநாடுநர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் திறன் பயிற்சியளிப்பவர்களுக்கு இடையில் உள்ள வேலைவாய்ப்பு இடைவெளியைக் குறைக்கும் வகையில் பாலமாக செயல்பட்டு வருகிறது.

3.18. தனியார் துறை பணியமர்த்தல்

32 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் தனியார் துறை பணி நியமனங்களை அதிகரிப்பது மற்றும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வேலைநாடுநர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யும் பணிகளைப் புரிவதோடு, இருவரும் அவர்களின் தேவைகளை திருப்திகரமாக நிறைவு செய்துகொள்ள ஒரு தளத்தினை உருவாக்கித் தருகிறது. இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அலுவலக வளாகங்களிலேயே நடத்தப்படுகின்றன. வாராந்திர வேலைவாய்ப்பு முகாம்களோடு பல்வேறு இடங்களில் சிறிய மற்றும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வேலையளிப்பவர்கள் வேலைநாடுநர்களைச் சந்தித்து தகுதியான நபர்களை தேர்வு செய்ய உதவுகிறது. இந்த வேலைவாய்ப்பு முகாம்கள், வேலையளிப்பவர்கள் சிறந்த தகுதி பெற்றவர்களைத் தேர்வு செய்துகொள்வதிலும், வேலைநாடுநர்கள் தங்களுக்குத் தகுந்த வேலையைப் பெறுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் தேர்வு செய்யப்படாத மனுதாரர்களின் திறன் இடைவெளியைக் கண்டறிந்து தேவையான திறன் பயிற்சியின்மூலம் வேலைபெறும் திறனை அதிகரிக்க உதவி புரிகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையானது இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்களில் அதிகளவிலான வேலையளிப்பவர்கள் பங்கேற்கச் செய்வதுடன் பல்வேறு கல்வித் தகுதிகள் கொண்ட வேலைநாடுநர்களுக்கு தனியார் துறைகளில் பணி நியமனம் பெறும் வகையில், ஒருங்கிணைப்புச் சேவையை முக்கிய பணியாக மேற்கொண்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டு முதல் "ஒரு நாள் – ஒரு செயல்பாடு" என்ற தனித்துவ முயற்சியின்கீழ், வெள்ளிக்கிழமைதோறும் "வேலைவாய்ப்பு வெள்ளி" என பெயரிடப்பட்டு வேலைநாடுநர்கள் தனியார் துறைகளில் பணி நியமனம் பெறுவதற்கான நாளாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதற்காக ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ.1.00 இலட்சம் வீதம் ஆண்டிற்கு 1.28 கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் இத்தகைய சிறிய மற்றும் பெரிய வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் வேலைவாய்ப்பு வெள்ளி மூலமாக 1,16,450 வேலைநாடுநர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை	1,440
கலந்துகொண்ட வேலையளிக்கும் நிறுவனங்கள்	14,835
கலந்துகொண்ட வேலைநாடுநர்களின் எண்ணிக்கை	3,42,805
பணிநியமனம் பெற்ற வேலைநாடுநர்களின் எண்ணிக்கை	1,16,450
பணிநியமனம் பெற்ற மாற்றுத் திறனாளி வேலைநாடுநர்களின் எண்ணிக்கை	1,446
திறன் பயிற்சிக்கு பதிவு செய்த மனுதாரர்களின் எண்ணிக்கை	26,408

3.19. சிறப்பு முயற்சிகள்

3.19.1. மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 அன்று, தனித்துவமிக்க முதல் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் துவக்கி வைக்கப்பட்டது. இம்மையம், மாநிலத்தில் முதன்மை முகமையாகவும், வேலைவாய்ப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் மெய்நிகர் கற்றல் வகுப்பறை மற்றும் மேலான ஆலோசனைகள் வழங்கும் வசதிகளுடன் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் முக்கிய நோக்கங்கள்:

- ❖ உளவியல் சோதனைக் கருவிகளை உருவாக்குதல்.
- ❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 1, தொகுதி 2 மற்றும் இதர உயர் பதவிகளுக்கான தேர்வுகளுக்கு பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரித் தேர்வுகள் நடத்துதல்.
- ❖ தொடர்ச்சியாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்.
- ❖ திறன் மதிப்பீடு மற்றும் பணிகளில் பொருத்துதல்.

தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி 1 மற்றும் தொகுதி 2 தேர்வுகளுக்காக 100 தேர்வர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

3.19.2. போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள்

ஒரு சிறப்பு முயற்சியாக, மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் 15-2-2020 முதல் செவிப்புலன் இழந்தவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்பைத் தொடங்கியுள்ளது. சைகை மொழி மொழிபெயர்ப்பாளரைக் கொண்டு வார இறுதி நாட்களில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டங்களும், பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்ற விரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மேலும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் விழிப்புலன் இழந்த தேர்வர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றன.

3.19.3. ஏர்மேன் தேர்வுக்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

இத்துறையின் வேலைவாய்ப்புப் பிரிவு, இந்திய விமானப் படையுடன் இணைந்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்மூலம் இந்திய விமானப் படையில் சேர மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 12 மாவட்டங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தியது. இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும், இந்திய விமானப் படையின் மூத்த அதிகாரிகள் பங்கேற்று 1,820 பங்கேற்பாளர்களுக்கு விமானப் படையிலுள்ள பிற வேலைவாய்ப்புகள், பயிற்சி மற்றும் விமானப் படை தேர்வு நடைமுறைகள் மற்றும் இந்திய விமானப் படையில் உள்ள பிற தேர்வுகள் குறித்து எடுத்துரைத்தனர். மேலும், விமானப் படை பணியாளர்களுடன் இணைந்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் விழிப்புணர்வுப் பேரணிகளும் நடத்தப்பட்டதில், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

3.19.4. 'ஒரு நாள்-ஒரு செயல்பாடு' முயற்சி

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் செயல்பாடுகளில் சிறப்பு விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் '**ஒரு நாள்-ஒரு செயல்பாடு**' என்ற தனித்துவ முயற்சியாக வாரத்தின் ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்பு செயல்பாட்டிற்கான நாளாக ஒதுக்கீடு செய்யப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சிகளின்மூலம் பயன் அடைந்தோர் விவரங்கள் வருமாறு:

நாளுக்கான செயல்முறை	**செயல்பாடுகள்**	**நிகழ்ச்சிகள்/ பயனாளிகள் (ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை)**
திறன்மிகு திங்கள் (திங்கள்)	திறன் முகாம், திறன் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு	திறன் பயிற்சிக்காக 37,892 நபர்கள் பதிவு செய்துள்ளனர்

நாளுக்கான செயல்முறை	**செயல்பாடுகள்**	**நிகழ்ச்சிகள்/ பயனாளிகள் (ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை)**
சேவை செவ்வாய் (செவ்வாய்)	தொழில்நெறி வழிகாட்டல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள், ஆசிரியர்களுக்கான முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சி	வேலைவாய்ப்பு அலுவலர்களால் 1,585 தொழில்நெறி உரைகள் நிகழ்த்தப்பட்டதில் 1,72,985 நபர்கள் பயனடைந்துள்ளனர்
போட்டித் தேர்வு புதன் (புதன்)	போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள்	1,901 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 98,919 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
விழிப்புணர்வு வியாழன் (வியாழன்)	குழு கலந்துரையாடல், தனிநபர் வழிகாட்டல், உளவியல் ஆய்வு	42,891 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பதிவின்போது வழிகாட்டல் வழங்கப்பட்டது.
வேலைவாய்ப்பு வெள்ளி (வெள்ளி)	அனைத்து பதிவுதாரர்களுக்கும் வேலைவாய்ப்பு முகாம்கள், வேலைநாடுநர்கள், வேலையளிப்போர், பணி காலியிட விவரங்கள் மற்றும் புதிய வேலைவாய்ப்பு குறித்த விவரங்கள் புதுப்பித்தல்	ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மற்றும் இதர நாட்களில் நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 1,16,450 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

3.20. நீடித்த வளர்ச்சி இலக்கு

நீடித்த வளர்ச்சி இலக்கு 8-ன்படி ஆக்க வளம் மிக்க வேலைவாய்ப்பினை உறுதி செய்தல் மற்றும் வேலைபெறும் திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள், தொழில்முனைவோராக ஊக்குவிப்பு/ தனியார் துறை பணிநியமனங்கள்/திறன் இடைவெளியை உரிய பயிற்சிகள் மூலமாக நிரப்புதல் ஆகியவைமூலம் வேலைநாடுநர்களை அவர்களுக்கு உகந்த வேலைவாய்ப்புகளில் பணியமர்த்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

வேலைவாய்ப்புப் பிரிவானது வேலைவாய்ப்பின்மையைக் குறைக்க அதிகபட்ச அளவில் விரிவான மற்றும் ஆக்கபூர்வமான வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பயிற்சிப் பிரிவு

மனிதவளத்தை மேம்படுத்துவது ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மேலும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறத்தக்கவர்களாக உருவாவதற்கு தொழிற்கல்வி மிகவும் அவசியமானதாகும். வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு இணங்க, தொழிற்சாலைகளின் தேவைக்கேற்றவாறு தொழிலாளர்களை உருவாக்கிட திறன்மேம்பாட்டில் முதலீடு செய்ய வேண்டியது கட்டாயமாகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டினை நிருவகிப்பதோடு இளைஞர்களின் நீண்ட கால தொழிற்பயிற்சித் தேவைகளிலும் கவனம் செலுத்துகிறது.

3.21. நிருவாக அமைப்பு

இயக்குநரகம் கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் துறைத் தலைவர் ஆவார். மாநில தலைமையகத்தில் ஒரு கூடுதல் இயக்குநரும், மூன்று இணை இயக்குநர்களும், இயக்குநரின் பணிகளைச் செயல்படுத்துவதில் உதவி வருகின்றனர்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மண்டலங்களில்

உள்ள மண்டல இணை இயக்குநர்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சி, தொழிற்பழகுநர் பயிற்சி, தொழிற்பள்ளிகள் மற்றும் பல்வேறு திறன்மேம்பாடு பயிற்சி திட்டங்கள் ஆகியவற்றை கண்காணிக்கின்றனர். மாநிலத்தில் 89 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், உதவி இயக்குநர்/துணை இயக்குநர் நிலையில் உள்ள முதல்வர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, பல்வேறு குறுகிய கால திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் தொழிற்பழகுநர் பயிற்சியும் 26 மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள்மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பிரதான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் பின்வருமாறு:

1. கைவினைஞர் பயிற்சித் திட்டம்
2. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்
3. தொழிற்பள்ளிகள்
4. பொது மற்றும் தனியார் பங்களிப்பின்கீழ், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல்
5. தொழில் துறை மதிப்பு விரிவாக்கத்திற்காக திறன்கள் வலுப்படுத்துதல் (STRIVE)

3.22. கைவினைஞர் பயிற்சித் திட்டம்

திறன் பெற்ற தொழிலாளர்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களின் வாயிலாக திறன் பயிற்சி அளித்து கைவினைஞர்களை உருவாக்கும் இத்திட்டம் தொழிற்பயிற்சி வழங்குவதில் ஒரு மிக முக்கியமான திட்டமாகும்.

3.22.1. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

1. எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பத் திறன் பெற வைத்தல்.
2. தொழிற்சாலைகளின் பல்வேறு துறைகளின் தேவைக்கேற்றவாறு திறன் பெற்ற தொழிலாளர்களை வழங்குவதை உறுதி செய்தல்.

[2020 மார்ச் 24

3. வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் தேவைக்கேற்ப திறன் பயிற்சிகளை அறிமுகப்படுத்தல்.

4. தேசிய திறன் தகுதி கட்டமைப்பு தரங்களுக்கு (NSQF) ஏற்ப தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி வழங்குதல்.

3.22.2. தேசிய திறன் தகுதி கட்டமைப்பு தரங்கள் (NSQF)

தேசிய திறன் தகுதி கட்டமைப்பு என்பது அறிவு, திறன் மற்றும் சூட்சுமம் ஆகியவற்றின் அளவுகளுக்கு ஏற்ப அனைத்து கல்வித் தகுதிகளையும் வரிசைப்படுத்தும் தகுதி அடிப்படையிலானதொரு நெறிமுறையாகும். இந்த நிலைகள் ஒன்று முதல் பத்து வரை வகைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களும் தேசிய திறன் தகுதி கட்டமைப்பு நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

3.22.3. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

நிதி ஆயோக் அமைப்பின் தொலைநோக்குப் பார்வையில் உருவான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக, 61 பொறியியல் மற்றும் 28 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் 41,245 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுடன் ஆண் மற்றும் பெண் பயிற்சியாளர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கிட 89 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்படுகின்றன.

பயிற்சிக் காலம் தொழிற்பிரிவிற்கு ஏற்றவாறு ஓராண்டு முதல் ஈராண்டு வரை உள்ளது. 14 வயது முதல் 40 வயது வரையிலான மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படுகின்றனர். அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் சேர்க்கப்படும் மகளிருக்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை. ஒவ்வொரு வருடமும் ஜூலை/ஆகஸ்டு மாதத்தில் நடைமுறையில் உள்ள இனவாரியான இட ஒதுக்கீடுகள் பின்பற்றப்பட்டு, கல்வித் தகுதியின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 34,574 பயிற்சியாளர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

3.23. பாதிக்கப்படும் பிரிவினர்களை பலப்படுத்துதல்

“2030-க்குள் கல்வியில் பாலின பாகுபாட்டினை நீக்குவதும், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர், பாதிக்கப்படும் நிலையில் உள்ள குழந்தைகள் உட்பட பாதிக்கப்படும் பிரிவினர் அனைவருக்கும்

2020 மார்ச் 24]

அனைத்து நிலை கல்வியிலும், தொழில்நுட்பப் பயிற்சியிலும் சம வாய்ப்பு அளிக்கப்படுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்" – நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5

பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தினைச் சார்ந்த இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரித்திடவும், சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திடவும் அவர்களுக்கு பல்வேறு தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது.

3.23.1. பட்டியலின மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகள்
1	கடலூர்	சிதம்பரம்	250
2	திருவள்ளூர்	வடகரை	250

2019-2020 ஆம் ஆண்டில், 463 பயிற்சியாளர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

3.23.2. பழங்குடியின மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள்

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகள்
1	கள்ளக்குறிச்சி	சங்கராபுரம்	273
2	கோயம்புத்தூர்	ஆனைக்கட்டி	208
3	சேலம்	கருமந்துறை	210
4	திருவண்ணாமலை	ஜமுனாமரத்தூர்	215
5	நாமக்கல்	கொல்லிமலை	210
6	நீலகிரி	கூடலூர்	215

[2020 மார்ச் 24

2019-2020 ஆம் ஆண்டில், 1,065 பயிற்சியாளர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

3.23.3. மாற்றுத் திறனாளிகள்

அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்ட மொத்த இருக்கைகளில் 5% இடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் கிண்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் காதுகேளாத மற்றும் வாய்பேச இயலாத இளைஞர்களுக்கு பிரத்யேகமாக பொருத்துநர் (Fitter) தொழிற்பிரிவில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

3.24. திறன் பயிற்சிமூலம் மகளிரை பலப்படுத்துதல்

“பாலின சமத்துவத்தை அடைதலும், அனைத்து மகளிர், மாணவியர்களை பலப்படுத்தலும்” – நீடித்த வளர்ச்சி இலக்கு 5

பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மாநிலம் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதற்கிணங்க கிண்டி, அம்பத்தூர், ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், மதுரை, கோயம்புத்தூர், சேலம், நாகர்கோவில், கடலூர் மற்றும் புள்ளம்பாடி ஆகிய 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ், பெண்களுக்காக பிரத்யேகமாக திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், 2,339 பெண் பயிற்சியாளர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மகளிருக்கென தனிப்பிரிவுகள் தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் ஓசூர் ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 274 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மொத்த இருக்கைகளில் 30 சதவிகிதம் மகளிருக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3.25. பயிற்சியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

“2030-க்குள் வேலைவாய்ப்பு, கௌரவமான வேலை, சிறு தொழில் துவங்குதல் தொடர்புடைய தொழில்நுட்பம் மற்றும் தொழில் திறன்கள் உட்பட அனைத்துத் திறன்களும் கொண்டுள்ள இளைஞர்கள் மற்றும் வளர் இளம் பருவத்தினரின் எண்ணிக்கையினை கணிசமான அளவிற்கு அதிகரித்தல்” – நீடித்த வளர்ச்சி இலக்கு 4.4

கடந்த 8 ஆண்டுகளில் தமிழகத்தில் போடி, வேப்பலோடை, அருப்புக்கோட்டை, ராதாபுரம், திருவையாறு, கருமந்துறை, ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, மணிகண்டம், சின்னசேலம், காட்டுமன்னார்கோவில், கடையநல்லூர், உடுமலைப்பேட்டை, ஒரத்தநாடு, விராலிமலை, திண்டிவனம், ஆலத்தூர், சாத்தூர், ஆர்.கே.நகர், திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலை, வாணியம்பாடி, கோட்டூர், கோபிச்செட்டிபாளையம், பெரும்பாக்கம் மற்றும் செம்போடை ஆகிய 28 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களைத் துவங்கியதன்மூலம் கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறத்தக்க திறன் பயிற்சியைப் பெறும்பொருட்டு 6,070 இருக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 53 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ், ஆபரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல்ஸ், டூல் & டை மேக்கர், தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மேலாண்மை போன்ற 50 நவீன தொழிற்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளதால் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கூடுதலாக 2,510 இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

3.26. இணையதளம் வாயிலாக மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை

பயிற்சியில் சேர விரும்புபவர்கள் தகுதி மற்றும் இன ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட (NODAL) அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் இணையதளம் வழியாக தேர்வு செய்யப்படுகிறார்கள். பயிற்சி பெற விரும்புவோர் தாங்கள் விரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையத்தினை விரும்பியபடி தேர்வு செய்ததன் அடிப்படையில் சேர்க்கை ஆணை உடனுக்குடன் வழங்கப்படுகிறது. மாணவர்கள் சேர்க்கை ஆணை கிடைக்கப்பெற்ற உடன் சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை/ஆகஸ்டு மாதத்தில் சேர்ந்து, பயிற்சியானது NCVT/SCVT பாடத்திட்டத்தின்படி வழங்கப்படுகிறது.

3.27. பயிற்சியாளர்களை ஊக்குவித்தல்

ஏழை மற்றும் அடித்தட்டு இளைஞர்களுக்கு உதவிடும்பொருட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் பயிற்சிக் கட்டணம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களை ஊக்கப்படுத்திட

[2020 மார்ச் 24

கீழ்க்கண்ட கூடுதல் பயன்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது:-

1. பயிற்சியாளர்கள் வீட்டிலிருந்து பயிற்சி நிலையம் வரை சென்று வருவதற்கு பேருந்து பயணச் சலுகை
2. வருடத்திற்கு இரண்டு இணை சீருடைகள்
3. வருடத்திற்கு ஒரு இணை காலணி
4. மிதிவண்டி
5. அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் இன வேறுபாடு மற்றும் வருமானம் ஆகியவற்றைக் கணக்கில்கொள்ளாது மாதாந்திர உதவித் தொகை ரூ.500/- வீதம்
6. மடிக்கணினி
7. பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்
8. அடையாள அட்டை
9. பயிற்சிக்குத் தேவையான நுகர்பொருட்கள்.

3.28. அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

திறன்பெற்ற மனிதவளத்தின் அதிகரிக்கும் தேவையினைப் பூர்த்தி செய்திட தமிழகத்தில் 76,702 இருக்கைகளுடன் 488 அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழிற்பயிற்சி அளித்து வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 36,752 பயிற்சியாளர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சேர்க்கைக்கு 50 சதவிகித இருக்கைகளை ஒப்புவிப்பு செய்திடும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக் கட்டணத்தை ஒரு பயிற்சியாளருக்கு ஓராண்டிற்கு, ரூ.10,000/- (கிராமப்புறம்) என்ற வீதத்திலும் ஒரு பயிற்சியாளருக்கு ஓராண்டிற்கு ரூ.12,000/- (நகர்ப்புறம்) என்ற வீதத்திலும் மாநில அரசு திரும்ப வழங்குகிறது. இந்த இருக்கைகள் இணையதள கலந்தாய்வுமூலம் நிரப்பப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில்,

2020 மார்ச் 24]

ரூ.7.43 கோடி பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்பட்டதன்மூலம் 9,098 பயிற்சியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

3.29. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

தொழிற்பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சி மட்டுமே தேவையான திறன்களைப் பெறுவதற்கு போதுமானதாக இல்லாததால் இப்பற்றாக்குறையை ஈடுசெய்யும்பொருட்டு தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநர் தொழிற்பழகுநர் பயிற்சி சட்டம், 1961-ன்படி மாநில தொழிற்பழகுநர் ஆலோசகராக இருப்பதால், மாநில அரசு நிறுவனங்கள், மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் இச்சட்ட அமலாக்கத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பு இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தின் உதவி இயக்குநர்கள் மாவட்ட அளவில் இச்சட்டத்தினைச் செயல்படுத்தும் அதிகாரிகளாகவும், மண்டல இணை இயக்குநர்கள் இணை தொழிற்பழகுநர் ஆலோசகர்களாகவும் செயல்படுகிறார்கள். 2019-2020 ஆம் ஆண்டில், 12,291 பயிற்சியாளர்கள் மாநிலத்தில் உள்ள 3,594 நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக பயிற்சிபெற்று வருகின்றனர்.

மத்திய அரசின் சமீபத்திய வழிகாட்டுதலின்படி என்.சி.வி.டி./எஸ்.சி.வி.டி. சான்றிதழ் பெற்றவர்களுக்கு தொழிற்பழகுநர் பயிற்சியின்போது வழங்கப்பட வேண்டிய உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.7,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பழகுநர் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்தவர்கள் ஆண்டுக்கு இருமுறை ஏப்ரல்/மே மற்றும் அக்டோபர்/நவம்பர் ஆகிய மாதங்களில் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் நடத்தப்படும் அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வில் கலந்துகொள்கிறார்கள். இத்தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தொழிற்பழகுநர் பயிற்சியினை ஊக்குவிப்பதும் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிப்பதும் தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டத்தின் (NAPS) முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ்,

தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் ஆகியவை பின்வருமாறு மத்திய அரசால் ஊக்கப்படுத்தப்படுகின்றன:-

(i) தொழிற்பழகுநர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையில் 25 சதவிகிதம் ரூ.1,500/-க்கு மிகாத வகையில் ஒவ்வொரு மாதமும் பங்கீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

(ii) அடிப்படைப் பயிற்சிக்கான கட்டணம் ரூ.7,500/-க்கு மிகாமல் அதிகபட்சமாக 500 மணி நேரம்/3 மாத பயிற்சிக்காக அடிப்படை பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு பங்கீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது.

3.30. மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு குழுமம்

மாநில அரசிற்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே தொழிற்பழகுநர் பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், சீரிய முறையில் கண்காணிக்கவும், மாநில தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்புக் குழுமம் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுமத்தில் மாநில திட்ட இயக்குநர், ஒரு இணை இயக்குநர், மூன்று ஆலோசகர்கள் மற்றும் சார்நிலை ஊழியர்களும் உள்ளனர்.

3.31. தொழிற்பள்ளிகள்

மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின்கீழ், தமிழகத்தில் 287 சுய நிதி தனியார் தொழிற்பள்ளிகள் இயங்கி வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில், 12,449 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒரு வருடம் முதல் இரண்டு வருடங்கள் வரை மாறுபட்ட பயிற்சிக் காலமுடைய உணவு சமைத்தல், தையல், கணினி மென்பொருள், அழகுக் கலை, ஆபீஸ் ஆட்டோமேஷன் போன்ற 57 தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 8 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு பிரிவுகளில் சேர்க்கை செய்யப்படுகின்றனர். 11 தொழிற்பள்ளிகளில் தொழில்நுட்பப் பயிற்றுநர் பயிற்சிக்கான சான்றிதழ் பயிற்சி வழங்கப்படுகிறது. தேர்வுகள் மாநில தொழிற்பயிற்சி தேர்வு வாரியத்தின்மூலம் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு, மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும், 10 தொழிற்பள்ளிகளும் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

3.32. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின்கீழ், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளில் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்திட, இத்திட்டம் 2007 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. தமிழ்நாட்டில் 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தின்மூலம் தரம் உயர்த்தப்பட்டன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்திட மத்திய அரசு ரூ.2.50 கோடி வட்டியில்லாக் கடனாக நிலைய மேலாண்மைக் குழுவிற்கு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் நிலைய மேலாண்மைக் குழு உருவாக்கப்பட்டு, சங்கங்கள் பதிவு சட்டம், 1860-ன்கீழ் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நிலைய மேலாண்மைக் குழுவால் தயாரிக்கப்பட்ட நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் 2,108 இருக்கைகளுடன் 56 புதிய தொழிற்பிரிவுகள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.33. அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல்

அரசு தொழிற்பயிற்சி நிலையம், கோயம்புத்தூர் மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டு, செலவினங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையே 70:30 என்ற விகிதத்தில் பங்கிடப்பட்டுள்ளது.

இத்தொழிற்பயிற்சி நிலையத்தின் நிலைய மேலாண்மைக் குழுவின் செயல்பாட்டுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதுபோல் புதிய கட்டடம் கட்டுவதற்கும், கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கும், சிறு பணிகள் மற்றும் ஏனைய தொடரும் செலவினங்களுக்காகவும் ரூ.250.00 இலட்சம் (ரூ.175.00 இலட்சம் மத்திய அரசின் பங்கு-முதல் தவணை மற்றும் ரூ.75.00 இலட்சம் மாநில அரசின் பங்கு) அரசு வழங்கியுள்ளது.

3.34. தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்கள் வலுப்படுத்துதல் (STRIVE)

தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்கள் வலுப்படுத்தும் திட்டமானது தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிமூலம் வழங்கப்படும் திறன் பயிற்சியினை

தொழிற்சாலைகளுக்கு தொடர்புடையதாகவும், திறன் மிக்கதாகவும் மேம்படுத்திடும் நோக்கத்திற்காக உலக வங்கியின் உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடி முயற்சியாகும்.

இத்திட்டம் கீழ்க்கண்ட பலன்களை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பலன் 1 : தொழிற்பயிற்சி நிலையங்களில் செயல்திறனை அதிகரித்தல்

பலன் 2 : தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிக்கென மாநில அரசின் திறன்களை பலப்படுத்தல்.

பலன் 3 : கற்றல் மற்றும் கற்பித்தலை மேம்படுத்துதல்

பலன் 4 : மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட தொழிற் பழகுநர் பயிற்சி

2019-2020 ஆம் ஆண்டில், அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 13 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் 3 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தின்கீழ், மேம்படுத்திட தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசு, மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை பலப்படுத்துவதற்கு ரூ.1.27 கோடி வழங்கியுள்ளது.

மேலும் தொழிற்சாலைகளின் கூட்டமைப்புமூலம் தொழிற்பழகுநர் பயிற்சியினை அதிகரித்திடும்பொருட்டு தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பிற்காக மத்திய அரசு ரூ.40 இலட்சம் வழங்கியுள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (AIEMA) மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் (CODISSIA) ஆகிய தொழில் கூட்டமைப்புகள் மாநிலத்தில் இந்த முனைப்பினைச் செயல்படுத்திட தெரிவு செய்யப்பட்டுள்ளன.

3.35. மாநில மற்றும் அகில இந்திய திறன் போட்டிகள்

பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக 18 தொழிற்பிரிவுகளில்

மாநில திறன் போட்டிகள் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ரூ.25,000/- ரொக்கமும், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. பல்வேறு மாநில தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியினை ஏற்படுத்தும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் அகில இந்திய அளவில் 14 வெவ்வேறு தொழிற்பிரிவுகளில் திறன் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தொழிற்பிரிவிலும் வெற்றி பெற்ற பயிற்சியாளருக்கு ரூ.50,000/- ரொக்கமும், தகுதிச் சான்றிதழும் இந்திய அரசால் வழங்கப்படுகிறது.

தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டதன் காரணமாக 23 முறை சிறந்த மாநிலத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு சிறந்த மாநிலத்திற்கான விருதினைப் பெற்றுள்ளது. இந்த சாதனைகள் தமிழக தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சியின் தரத்தினை எடுத்துரைக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

3.36. பயிற்றுநர்களின் சிறந்த செயல்பாட்டிற்கான விருது

தரமான திறன் பயிற்சியை வழங்குவதில் சிறப்பாக செயல்படும் முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறப்பாக செயல்படும் 12 அலுவலர்களுக்கு (முதல்வர்–2, பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4 மற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்-4) ஊக்குவித்து கௌரவிக்கும் வகையில் ஒவ்வொருவருக்கும் பாராட்டுச் சான்றிதழுடன் ரூ.10,000/- கிசான் விகாஸ் பத்திர வடிவில் வழங்கப்படுகிறது.

3.37. சிறப்பு முனைப்புகள்

- நாகப்பட்டினம் மாவட்டம், செம்போடை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் பவர்கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புடன் தலா ரூ.13.00 கோடி செலவில் இரண்டு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 2019 ஆம்

[2020 மார்ச் 24

ஆண்டு முதல் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் எலக்ட்ரீசியன், மெக்கானிக் மோட்டார் வண்டி, பிட்டர், மெக்கானிக் ரெப்ரிஜிரேசன் மற்றும் ஏர் கண்டிஷனிங், டர்னர், வயர்மேன், வெல்டர், ஷீட் மெட்டல் வொர்க்கர், மெக்கானிக் டீசல், தையல் பயிற்சி, தச்சர், பிளம்பர், கம்மியர் மின்னணுவியல் மற்றும் கட்டட படவரைவாளர் ஆகிய 14 சுய வேலைவாய்ப்பளிக்கும் தொழிற்பிரிவுகளில் வெற்றிகரமாக பயிற்சி முடித்துச் செல்லும் பயிற்சியாளர்களுக்கு ரூ.7.50 கோடி செலவில் கருவித் தொகுப்பு (Tools kit) வழங்கப்படவுள்ளது.

- தொலைதூர கிராமப்புறங்களிலிருந்து பயிற்சி பெற வரும் பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உணவு வசதியுடன்கூடிய தங்கும் விடுதிகள் ரூ.43.71 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

- அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் சேர்க்கை அதிகரிக்கவும், இடைநிற்றலைத் தவிர்க்கவும் ரூ.17.80 கோடி செலவில் தொழிற்பிரிவுகள் சீரமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது.

- அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பாதுகாப்பான சூழலில் பயிற்சி பெறும்பொருட்டு தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- நாட்டிலேயே முதல் முறையாக மெக்கானிக் மோட்டார் வாகன தொழிற்பிரிவு பயிற்சியாளர்களுக்கு மின்சார வாகனங்களைப் பராமரிக்கும் பயிற்சி ரூ.5.98 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

- தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒட்டுமொத்த சூழலை மேம்படுத்தும் நோக்கில் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இது தவிரவும், தொழிற்பயிற்சி நிலைய முன்னாள் பயிற்சியாளர்களின் தொடர்பினை, தொடர்ந்து

பராமரித்திட முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இந்த வருடம் பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்களில் முன்னாள் பயிற்சியாளர்கள் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3.38. திறன் பலப்படுத்தும் முனைப்புகள்

- தொழிற்சாலைகளின் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உடனடி வேலைவாய்ப்புக்குத் தேவையான திறன்களை வழங்குவதற்கும் அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில், மாநிலத்தில் உள்ள 591 தொழிற்சாலைகள் 5,492 அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு நேரடி பயிற்சி வழங்கியுள்ளன.
- இந்திய தொழில்நுட்பக் கழகம், மெட்ராஸ் (IIT, MADRAS) உடன் இணைந்து 53 அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு மின்சார வாகன பராமரிப்பு குறித்த சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- பயிற்சியாளர்களிடையே வடிவமைப்பு படைப்பாற்றலினை வளர்க்கும் நோக்கில், கிண்டி, அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பணிமனையில் உள்ள உபயோகமற்ற கழிவுகளிலிருந்து உலோக சிற்பங்கள் உருவாக்கி அவை சென்னையில் நடைபெறும் 46-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் துறை வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

3.39. தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அதன் பயிற்றுநர்கள்/ பயிற்சியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தொழிற்சாலைகளுடன் இணைந்து பல முனைப்புகளைச் செயல்படுத்துகிறது.

- M/s. SAMSUNG ELECTRONICS லிமிடெட், முறையே ரூ.80.00 இலட்சம் மற்றும் ரூ.40.00 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் மற்றும் கடலூர் ஆகிய இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மின்னணு பழுது நீக்கும் பணிமனைகளை நிறுவியுள்ளது.

- M/s. ASHOK LEYLAND நிறுவனம், அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆட்டோமொபைல் திறன் மேம்பாட்டு மையத்தை நிறுவியுள்ளது.
- M/s. MAHINDRA PRIDE SCHOOL நிறுவனமும், M/s. QUEST ALLIANCE நிறுவனமும் பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சி அலுவலர்களுக்கு நன்னடத்தை மற்றும் தகவல் தொடர்புத் திறன்களைக் கற்றுத் தருகின்றன.
- TNSDC–SIEMENS Centre of Excellence-MIT, குரோம்பேட்டை மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு மேம்பட்ட தொழில்நுட்பங்களில் திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

மேற்கண்ட முனைப்பு நடவடிக்கைகளால், நீடித்த வளர்ச்சி இலக்குகளை சரியான நேரத்தில் அடைவது மட்டுமல்லாமல், தமிழகம், நாட்டின் திறன் மற்றும் திறமை தலைமையகமாக எழுச்சிபெற்று வருகிறது.

4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தை நாட்டின் திறன் தலைநகரமாக உருவாக்கும் நோக்கம் மற்றும் வளர்ந்து வரும் திறன் பெற்ற பணியாளர்களின் தேவை ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய கம்பெனி சட்டம், 2013, பிரிவு 8-ன்படி இலாப நோக்கமற்ற அமைப்பாக உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது மாநிலத்தின் திறன் பயிற்சிகளின் ஒருங்கிணைப்பு முகமையாகவும் (Nodal Agency) மற்றும் மாநிலத்தின் திறன் மேம்பாட்டுச் சூழலின் கிரியாவூக்கியாகவும் செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசு நிறுவனங்கள், சிறந்த தனியார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தொழில் நிறுவனங்கள் சார்ந்த மற்றும் வேலைவாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சியினை வழங்குகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், துவங்கபட்டதிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களின்மூலம் பல்வேறு துறைகளில் நமது மாநிலத்தின் 7,42,966 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளது.

2020 மார்ச் 24]

4.1. தேசிய திறன் கட்டமைப்பு தரநிலை (NSQF)

தேசிய திறன் கட்டமைப்பு என்பது அறிவு, திறன் மற்றும் புத்திக்கூர்மை ஆகிய அனைத்துத் தகுதிகளையும் வரிசையான படிநிலைகளைக் கொண்ட தகுதி அடிப்படையிலான கட்டமைப்பாகும். கீழ்க்கண்டவற்றுள் நாடு முழுவதும் பொதுவான நெறிமுறைகளைக் கொண்டிருக்கும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது தேசிய திறன் கட்டமைப்பால் (NSQF) அங்கீகரிக்கப்பட்ட குறுகிய காலப் பயிற்சிகளை வழங்குகிறது.

1. தேசிய திறன் கட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட குறுகிய கால திறன் பயிற்சிகள்
2. துறை திறன் குழுமம் (SSC) மற்றும் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் (SCVT) மூலம் தரமான மதிப்பீடு
3. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட பொதுவான விதிமுறைகளின்படி பயிற்சிக் கட்டணம் விடுவித்தல்
4. தேசிய திறன் மேம்பாட்டு முகமையால் (NSDA) அறிவிக்கப்பட்ட தகுதித் தொகுப்புகள்

பாடத்திட்டங்கள் நமது மாநிலத்தில் மட்டுமல்லாது தேசிய அளவிலான அங்கீகாரத்துடன் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் நோக்கிலும் மேற்கண்ட திறன் பயிற்சி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

4.2. பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்

ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, பயிற்சி வழங்கப்பட வேண்டிய நபர்களின் எண்ணிக்கை மற்றும் தொழிற்பிரிவுகளுக்கேற்ப, திறன் பயிற்சி வழங்க முன்வரும் நிறுவனங்களிடமிருந்து விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் (Expression of Interest) பெறப்பட்டு, அந்நிறுவனங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இணை இயக்குநர்களால் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நிறுவனங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளின்படி இருப்பது உறுதி செய்யப்படுகிறது. தேசிய திறன் கட்டமைப்பின் அளவீடுகளின்படி குறுகிய கால திறன் பயிற்சிகளை வழங்க ஏதுவாக மத்திய, மாநில

அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட 764 பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

4.3. பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள்

ஒவ்வொரு மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் பல்வேறு துறைகளில் குறுகிய கால திறன் பயிற்சிகள் 2019-2020-ல் வழங்கப்பட்டுள்ளன.

அ. திறன் பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள் (மாவட்ட வாரியாக)

வ. எண்	மாவட்டம்	பயிற்சி பெற்றோர்
1	அரியலூர்	1430
2	சென்னை	23793
3	கோயம்புத்தூர்	5552
4	கடலூர்	2987
5	தருமபுரி	2927
6	திண்டுக்கல்	6359
7	ஈரோடு	4225
8	காஞ்சிபுரம்	10682
9	கன்னியாகுமரி	1576
10	கரூர்	2635
11	கிருஷ்ணகிரி	1737
12	மதுரை	3712
13	நாகப்பட்டினம்	4175
14	நாமக்கல்	3403
15	நீலகிரி	617

2020 மார்ச் 24]

வ. எண்	மாவட்டம்	பயிற்சி பெற்றோர்
16	பெரம்பலூர்	1019
17	புதுக்கோட்டை	1044
18	இராமநாதபுரம்	2391
19	சேலம்	5033
20	சிவகங்கை	748
21	தஞ்சாவூர்	2430
22	தேனி	1253
23	தூத்துக்குடி	1857
24	திருச்சிராப்பள்ளி	3237
25	திருநெல்வேலி	1644
26	திருப்பூர்	6043
27	திருவள்ளூர்	5327
28	திருவண்ணாமலை	1744
29	திருவாரூர்	515
30	வேலூர்	6876
31	விழுப்புரம்	4161
32	விருதுநகர்	2649
மொத்தம்		**123781**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆ. திறன் பயிற்சியளிக்கப்பட்டோர் விவரம் (துறை வாரியாக)

வ. எண்.	துறையின் பெயர்	பயிற்சி பெற்றோர்
1.	விவசாயம்	3429
2.	ஆயத்த ஆடை	34338
3.	தானியங்கி	11042
4.	அழகுக் கலை	2305
5.	வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு	684
6.	மூலதனப் பொருட்கள்	8802
7.	கட்டுமானம்	5591
8.	மின்னணுவியல் மற்றும் வன்பொருள்	7261
9.	உணவு பதப்படுத்தல்	129
10.	அறையணிகள் மற்றும் பொருத்துதல்	149
11.	நகை வடிவமைத்தல்	2080
12.	பசுமை பணிகள்	175
13.	கைவினைத் தொழில்கள்	198
14.	சுகாதாரம்	2629
15.	தகவல் தொழில்நுட்பம்	9220
16.	உள்கட்டமைப்பு கருவிகள்	60
17.	கருவியாக்கம் மற்றும் தானியங்குமயம்	978
18.	தோல் மற்றும் தோல் பொருட்கள்	4435
19.	வாழ்க்கை அறிவியல்	255
20.	சரக்கு நகர்வு மேலாண்மை	2987
21.	ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு	1046

வ. எண்.	துறையின் பெயர்	பயிற்சி பெற்றோர்
22.	வண்ணப்பூச்சுகள்	13044
23.	நெகிழி பொறியியல்	1355
24.	குழாய் பொருத்துதல்	93
25.	மின்னாற்றல்	233
26.	சில்லறை வர்த்தகம்	1550
27.	பாதுகாப்பு	175
28.	தொலைத் தொடர்பு	4927
29.	ஜவுளி மற்றும் கைத்தறி	1502
30.	சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்	3109
	மொத்தம்	**123781**

4.4. மூன்றாம் நபர் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்களின்மூலம் பயிற்சியினை வழங்குகிறது. பயிற்சியின் தரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும்பொருட்டு அனைத்து திறன் பயிற்சிகளும், மாநில தொழிற்பயிற்சிக் குழுமம் (State Council for Vocational Training) மற்றும் துறை திறன் குழுமம் (Sector Skill Council) வாயிலாக மூன்றாம் நபர் (Third Party) மதிப்பீடு செய்து சான்றளிக்கப்படுகிறது.

4.5. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமானது (www.tnskill.tn.gov.in) திறன் பயிற்சி தொடர்புடைய அனைவரையும் ஒருங்கிணைக்கும் பன்மொழி திறனாய்வுத் தளமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளமானது திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் முக்கிய வேலையளிக்கும்

நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட திறன் பதிவு தொகுதியாகச் செயல்படும்.

4.6. திறன் இடைவெளி குறித்த ஆய்வு மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

தொழில் நிறுவனங்களுக்கான திறன்மிக்க பணியாளர்களின் தேவை மற்றும் தற்பொழுது இருப்பிலுள்ள திறன் சார்ந்த கட்டமைப்புகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் விரிவான திறன் இடைவெளி குறித்த ஆய்வு ரூ.1.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது எதிர்கால திட்டமிடுதல் மற்றும் செயல்பாடுகளுக்கு முக்கிய ஆவணமாகும்.

இத்துடன் 32 மாவட்டத்திற்கான மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30-11-2019 அன்று நடைபெற்ற முதலீடு மற்றும் திறன் மேம்பாட்டு கருத்தரங்கு 2019-ல் வெளியிடப்பட்டன. மாவட்ட நிருவாகம் திறன் மேம்பாட்டு தொடர்புடைய சிறப்புத் திட்டங்களை உள்ளூர் தேவைக்கேற்ப உருவாக்கி பரிந்துரை செய்யும்பொருட்டு மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களுடன் பகிரப்பட்டுள்ளது.

4.7. மாநில அளவிலான திறன் மாநாடு மற்றும் மாவட்ட திறன் போட்டிகள்

திறன் போட்டிகள் திறன்களைக் காட்சிப்படுத்துவதுடன் திறன்களை மேம்படுத்த ஊக்கமளிக்கிறது. இந்திய திறன்கள் எனப்படும் தேசிய அளவிலான திறன் போட்டிகள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. மாநில அளவிலான திறன் போட்டியில் வெற்றி பெறுபவர்கள் மண்டல அளவிலும் அதனைத் தொடர்ந்து தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.

அடுத்த உலக திறன் போட்டி சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் 2021-ல் நடைபெறவுள்ளது. உலக திறன் போட்டி 2021-ல் தமிழக இளைஞர்கள் சிறந்து விளங்க தயார் செய்யும்பொருட்டு 47 விதமான திறன்களில் மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் ஜனவரி 2020-ல் நடத்தப்பட்டு 360 இளைஞர்கள் மாநில அளவிலான திறன் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

2020 மார்ச் 24]

4.8. உயர் திறன் பயிற்சி

தானியங்கி மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலக அளவில் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் உடன் இணைந்து பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக (PPP) ரூ.546.84 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் ஐந்து தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் (t-SDIs) அமைக்கப்பட்டு பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரிகளுக்கு உயர் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ், ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) சென்னை குரோம்பேட்டை, எம்.ஐ.டி. வளாகத்திலும் மற்ற ஐந்து இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்கள் (t-SDIs) பின்வரும் இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன:

1) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, காஞ்சிபுரம்
2) அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, விழுப்புரம்
3) தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர்
4) மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி
5) முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி (அரசு உதவிபெறும்), ஆவடி

மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிப்பதற்காக உயர் தொழில்நுட்ப திறன் பயிற்சிகளை வழங்க எம்.ஐ.டி. முக்கிய மையமாக செயல்படுவதுடன் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியைச் சார்ந்த பயிற்றுநர்களுக்கு திறன் மேம்படுத்தும் பயிற்சி வழங்கும் நிறுவனமாகவும் செயல்படுகிறது. இம்மையங்களின்மூலம் 2019-2020 ஆம் ஆண்டில் மொத்தம் 11,705 மாணவர்களுக்கும் 48 பயிற்றுநர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

4.9. சிறப்பு திட்டங்கள்

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தரமான பணியாளர்களை வழங்கும் வகையில் அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ.2000/- வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 25,257 நபர்களுக்கு தமிழ்நாடு திறன்

மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இரு சக்கர வாகன தயாரிப்பில் முன்னணியில் உள்ளது. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களின்மூலம் வருடந்தோறும் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் அம்மா இரு சக்கர வாகன பழுதுபார்த்தல் பயிற்சித் திட்டத்தின்கீழ், 700 நபர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

4.10. அனுபவத்தின்மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்தல்—திறன் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் (Recognition of Prior Learning-RPL)

அனுபவத்தின்மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது ஒரு நபரிடம் காணப்படும் திறன்கள், அறிவு மற்றும் முறையான/ முறைசாரா கற்றலின் வழி அவர் பெற்ற அனுபவம் ஆகியவற்றை சோதித்து சான்றளிப்பதாகும். இத்திட்டத்தின்மூலம் பின்வரும் துறைகளில் 58,969 தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

1. கட்டுமானம்
2. ஆடை வடிவமைத்தல்
3. வண்ணம் மற்றும் வண்ணப்பூச்சு
4. தோல் மற்றும் தோல்பொருட்கள்
5. சரக்கு நகர்வு மேலாண்மை
6. தானியங்கி
7. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
8. வீடு சார்ந்த பணிகள்

மேலும் பொதுப் பணித் துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் கட்டுமான ஒப்பந்தப் பணிகளில் பணியின் தரம் மற்றும் பணியிடங்களில் விபத்துகளைக் குறைக்கும்பொருட்டு, அனுபவத்தின்மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணி அமர்த்திட வேண்டுமென மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

4.10.1. அனுபவத்தின்மூலம் பெற்ற திறமையை அங்கீகரிக்கும் திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பயிற்சி

கட்டுமானத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் தொழில் சார்ந்த சுகாதாரம், தரநிலை, உற்பத்தித் திறன் மேம்பாடு ஆகியவற்றினை மேம்படுத்தவும் தற்போதைய தொழில்நுட்பங்களின் சிறந்த நடைமுறை குறித்த விழிப்புணர்வு பெறும்பொருட்டும், 5,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் அனுபவத்தின்மூலம் பெற்ற திறமையை அங்கீகரிக்கும் வகையில் கட்டுமான தொழில் வளர்ச்சிக் குழுமம் மூலமாக 3 நாட்கள் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி பின்வரும் பொருண்மைகளில் வழங்கப்படுகிறது:

1. பாதுகாப்பு மற்றும் தொழில்சார்ந்த சுகாதார தரம்
2. தர நிலைகள்
3. உற்பத்தித் திறன் மேம்பாடு
4. தற்போதைய தொழில்நுட்பங்களின் சிறந்த நடைமுறைகள்

கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய நிதியின்கீழ் வழங்கப்படும் இப்பயிற்சி 8-11-2019 அன்று துவக்கப்பட்டது.

4.11. பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0 (2016-2020)

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா 2.0 திட்டமானது, இந்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் (NSDC) செயல்படுத்தப்படும் முதன்மையான திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம் இந்திய இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன் பயிற்சி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை பெறச் செய்வதாகும். இத்திட்டமானது மத்திய அரசின் ஆதரவுடன் மத்திய அரசால் நிருவகிக்கப்படும் (Centrally Sponsored Centrally Managed) மற்றும் மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிருவகிக்கப்படும் (Centrally Sponsored State Managed) திட்டமாகவும் இரு கூறுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிருவகிக்கப்படும் பிரிவின்கீழ், ஒதுக்கப்பட்ட ரூ.34,43,10,720/- நிதி செலவினத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 45,051 நபர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

[2020 மார்ச் 24

4.12. சங்கல்ப் (SANKALP)-உலக வங்கி நிதி உதவி திட்டம்

வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவுக்கான விழிப்புணர்வு திட்டமானது (Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion) தேசிய திறன் மேம்பாட்டு அமைப்பின் மைய நோக்கத்தோடு மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் முக்கிய துணை அமைப்புகளின் வழி இத்திட்டம் துவக்கப்பட்டது. உலக வங்கி உதவியுடன் தேசிய திறன் மேம்பாடு திட்டத்தின் அனைத்து நோக்கங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டம் விரைவு திட்டமாக நிறைவேற்றப்பட உள்ளது. தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்துவது, தரமான பயிற்றுநர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை உருவாக்குவது, மாநில அளவில் செயல்படுத்தப்படும் அனைத்து திறன் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைப்பது, பயிற்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைகளை வலுப்படுத்துவது மற்றும் சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு சிறப்பான பயிற்சி கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

உலக வங்கியின் நிதி உதவியோடு மத்திய மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கான நிதி, அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் சேர்க்கை மானியம் என இரு கூறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.	அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் (System Strengthening Grants)	மாநில திறன் மேம்பாட்டு அமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் அனைத்து திறன் பயிற்சி செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக வலுவான முறையை உருவாக்கவும் இம்மானியம் பயன்படுத்தப்படும்.

2020 மார்ச் 24]

2.	சேர்க்கை மானியம் (Inclusion Grants)	விளிம்பு நிலையில் உள்ள பெண்கள், பட்டியல் இனத்தார், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் இடையே திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை அதிகாிக்கச் செய்ய பயன்படுத்தப்படும்.

திறன் சவால்களை எதிர்கொள்ளும்பொருட்டு சங்கல்ப் திட்டத்தின்கீழ், வளர்ந்துவரும் மாவட்டங்களான விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்திற்கு ரூ.33.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், ரூ.20.30 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு அமைப்பு முறையினை வலுப்படுத்துதல் மற்றும் சேர்க்கை செய்தல் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளன.

4.13. உயர் திறன் மேம்பாட்டு மையங்கள்

வளர்ந்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை எதிர்கொள்ளும்பொருட்டு, தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம், நிலை-II (TNIPP Phase-II)-ன் ஒரு பகுதியாக ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) உதவியுடன் பின்வரும் துறைகளில் உயர் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்கு உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் அமைத்திட, அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது:-

1. தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகள்
2. கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு
3. மருத்துவம் மற்றும் சுகாதார நலன்
4. சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து
5. வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு

ஒவ்வோர் உயர் திறன் மேம்பாட்டு மையமும், துறைக்கான திறன்மிகு மையமாகச் செயல்படும். கம்பெனி சட்டம் 2013, பிரிவு

8-ன்கீழ், இம்மையங்களில் நிறுவப்படும் சிறப்பு நோக்க அலகு (SPV) தினசரி அலுவல்களை நிருவகிக்கும்.

30-11-2019 அன்று நடைபெற்ற முதலீடு மற்றும் திறன் மேம்பாட்டுக் கருத்தரங்கு 2019-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகள், மருத்துவம் மற்றும் சுகாதார நலன், சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து ஆகிய மூன்று துறைகளுக்கான முன்னணி செயல் பங்குதாரர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று துறைகளுக்கான சிறப்பு நோக்க அலகு குழுமம் அமைக்கப்பட்டு, கம்பெனிச் சட்டம், 2013 பிரிவு 8-ன்கீழ், சிறப்பு நோக்க அலகானது (Special Purpose Vehicle) நிறுவனமாகப் பதிவு செய்யப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.14. திறன் மேம்பாடு குறித்த நீடித்த வளர்ச்சி இலக்கு

நீடித்த வளர்ச்சி இலக்கு எண் 4-ன்படி அனைத்து மகளிர் மற்றும் ஆடவர்க்கும் எளிதில் தரமான தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி கிடைக்கும்பொருட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் குறுகிய கால திறன் பயிற்சி, அனுபவத்தின்மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல், அம்மா திறன் பயிற்சி, சீமென்ஸ் திறன் மிகு மையம் மற்றும் 5 தொழில் திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பல்வேறு முயற்சிகளின்மூலம் தொடர்ச்சியாக இளைஞர்களுக்கு திறன், உயர்திறன், மறுதிறன் ஆகியவற்றை வழங்கி வருவது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியுடன் வேலைவாய்ப்புத் திறனை ஒத்திசைவு செய்வதாக அமைகிறது.

5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956-ன்படி 30-11-1978 அன்று தொடங்கப்பட்ட ஒரு தமிழ்நாடு அரசு பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு

2020 மார்ச் 24]

வருகிறது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.15.00 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50.00 இலட்சம் ஆகும்.

5.1. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை நேர்காணலில் கலந்துகொள்ளச் செய்து தேர்ச்சி பெற வைத்தல்.
- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் மொழிப் பயிற்சி அளித்தல்.
- வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் நபர்களுக்குத் தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் மற்றும் வெளிநாடுகளில் தேவையான உதவிகள் செய்தல்.
- வெளிநாட்டு வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவிபுரிதல்.
- பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசு பொதுத் துறை நிறுவனங்களுக்கு பணியாளர்களை வெளிமுகமை முறையில் பணியமர்த்தல்.

5.2. பணியமர்த்தல்

5.2.1. வெளிநாடு

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10,170 நபர்களை வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் 2019-2020 ஆம் நிதியாண்டில் 29-2-2020 அன்றமைந்தவாறு 120 நபர்களை சவுதி அரேபியா, ஓமன் மற்றும் இதர நாடுகளில் செவிலியர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர் பிரிவுகளில் பணியமர்த்தியுள்ளது.

5.2.2. உள்நாடு

இந்நிறுவனம் 2019-2020 ஆம் நிதியாண்டில் 380 நபர்களை பல்வேறு பிரிவுகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வெளிமுகமை முறையில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியுள்ளது.

5.3. வருவாய்

2018-2019 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.1.66 கோடி மற்றும் நிகர இலாபம் ரூ.39.57 இலட்சமாகும்.

5.4. ஈவுத் தொகை

இந்நிறுவனம் 2018-2019 ஆம் நிதியாண்டிற்கான ஈவுத் தொகையாக ரூ.11.87 இலட்சத்தினை அரசுக்கு செலுத்தியுள்ளது.

5.5. புதிய முயற்சிகள்

1. வெளிநாடுகளில் பெருமளவில் பணியாளர்களை பணியமர்த்தும் நோக்கத்துடன் இந்நிறுவனம் இங்கிலாந்து நாட்டில் உள்ள இங்கிலாந்து சுகாதார கல்வி (Health Education England) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இங்கிலாந்து நாட்டின் தேசிய சுகாதாரப் பணியில் (National Health Service) செவிலியர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

2. இதன் தொடர்பாக, National Health Service இங்கிலாந்து, அயர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் பணிபுரிய விருப்பமுள்ள செவிலியர்களுக்கு சர்வதேச ஆங்கில மொழித் தேர்வு முறை (International English Language Testing System) பயிற்சியினை சலுகைக் கட்டணத்தில் அளிப்பதற்கு, சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இந்நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சிக்கான கட்டணம் முழுவதும் இந்நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. இந்நிறுவனம் குவைத் நாட்டில் வீட்டுப் பணிகளில் பணியாளர்களைப் பணியமர்த்தும்பொருட்டு அல் டூரா மேன்பவர் (M/s. AL DURRA MANPOWER) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

4. இந்நிறுவனம் ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள ஷார்ஜா, இந்திய வர்த்தகம் மற்றும் கண்காட்சி மையத்தில் பணியமர்த்தல் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கு ஷார்ஜா, இந்திய வர்த்தகம் மற்றும் கண்காட்சி மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் இந்திய வர்த்தகம் மற்றும் கண்காட்சி மையத்தின் உறுப்பு நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மனிதவளத் தேவைகளுக்கான பணிக் காலியிடங்களைப் பெற்று தகுதியான நபர்களை பணியமர்த்திட இந்நிறுவனம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

6. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்

(தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஓர் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டம் 1948 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பால் நிருவகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், பதிவு செய்துள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வியக்ககம்மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

இத்திட்டம் நோய்கள், மகப்பேறு, தொழில்சார் காரணமாக ஏற்படும் இயலாமை, மரணம் போன்ற நிகழ்வுகளில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகளை அளிக்கிறது. பத்து மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் பொருந்தும். இத்திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு முழு இலவச மருத்துவ வசதிகள் மட்டுமின்றி காப்பீட்டாளருக்கு உழைக்க இயலாதநிலை அல்லது ஊதிய இழப்பு ஏற்படும்போது பணப் பயன்களையும் அளிக்கிறது.

6.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

மாத ஊதியம் ரூ.21,000/- வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ், இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவர் ஆகிறார்கள். மேலும், மாத ஊதியம் ரூ.25,000/- வரை பெறும் ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் பல்வகை குறைபாடுகளுடைய தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

6.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

இத்திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் நிர்ணயிக்கப்பட்ட பங்காக முறையே ஊதியத்தின் 0.75 சதவிகிதமும் மற்றும் 3.25 சதவிகிதமும் மாதாந்திர பங்களிப்பாக செலுத்துகின்றனர். மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் திரும்ப வழங்கி வந்தது. தற்பொழுது தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் 2019-2020 முதல், 100 சதவீதம் மொத்த செலவினத்தையும் மூன்று ஆண்டுகளுக்கு ஏற்றுக் கொள்கிறது.

6.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

மாநிலத்தில் கீழ்க்கண்ட 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன:-

- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈ.தி.) கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் சென்னை-அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்.

- மருத்துவக் கல்வி இயக்குநர் கட்டுபாட்டின்கீழ் செயல்படும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

- தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழகம், புதுதில்லியின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் சென்னை (கே.கே. நகர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழக மருத்துவமனைகள்.

மேலும், 220 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் உள்ளன.

- 213 நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்
- ஐந்து நடமாடும் மருந்தகங்கள்
- இரண்டு பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நேர்வுகளில் உயர் சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலமாக கூடுதல் மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

6.4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது.

- ஆயுர்வேதப் பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்படுகின்றன.

- யோகாசனப் பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்படுகின்றன.

- யுனானி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி

மருத்துவமனைகளிலும் மற்றும் ஆம்பூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திலும் செயல்படுகின்றன.

- சித்த மருத்துவப் பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக சித்த மருத்துவப் பிரிவுகள் தாம்பரம், திருவொற்றியூர், ஸ்ரீபெரும்புதூர், தூத்துக்குடி, ராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிபாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர்-1, திருப்பூர்-1, ஆம்பூர், ராணிப்பேட்டை ஆகிய 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் செயல்படுகின்றன.
- ஹோமியோபதி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்படுகின்றன.

6.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மருத்துவ உதவி மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொ.அ.ஈ.) இயக்ககத்தினாலும், இதர பயன்கள் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நிருவகிக்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் நிதியானது, மருத்துவத் தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளர்களுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் கீழ்க்காணும் பல்வேறு சமூகப் பாதுகாப்புப் பயன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

(1) மருத்துவ உதவி

தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தால் வழங்கப்படும் மிகப் பெரிய பயன்களில் ஒன்று மருத்துவ நலனாகும். இம்மருத்துவ உதவியானது காப்பீட்டாளர் காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் காப்பீட்டாளர் மற்றும் அவரது

2020 மார்ச் 24]

குடும்பத்தினருக்கு "நியாயமான மருத்துவ பராமரிப்பு" (ஆரம்ப கால புறநோயாளி சிகிச்சை, இரண்டாம் நிலை உள்நோயாளி சிகிச்சையிலிருந்து உயர் சிறப்பு சிகிச்சை வரை) காப்புறுதி வசதியுள்ள வேலையில் இருக்கும் வரை வழங்கப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்மூலம் ஆரம்பகால சிகிச்சையும், சிறப்பு சிகிச்சை, உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை பரவலாக அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் வாயிலாகவும் அளிக்கப்படுகின்றன.

(2) பேறுகால உதவி

பேறுகால உதவித் தொகை 26 வாரங்களுக்கும், கருச்சிதைவு காலத்தில் 6 வாரங்களுக்கும், சராசரி தின ஊதிய விகிதத்தில் 100 சதவிகிதம் பேறுகால உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பயன் மகப்பேறு மற்றும் கருச்சிதைவு தொடர்பான நோய்களுக்கு மருத்துவ அறிவுரையின் பேரில் கூடுதலாக ஒரு மாதத்திற்கு நீட்டிக்கத்தக்கது.

6 மாதத்தில் 70 நாட்களுக்கு குறைவில்லாமல் காப்பீட்டுத் தொகை செலுத்தியுள்ள காப்பீட்டு நபர், உடல் நலமின்மைக்கான உதவி, நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி, உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மைக்கான உதவி போன்ற நலத் திட்ட பணப் பயன்களைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

(3) சார்ந்துள்ளோருக்கான உதவி

சார்ந்துள்ளோருக்கான உதவி, காப்பீட்டாளர் பணியின்போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழில்சார் நோயினால் காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், அவரின் சம்பளத்தில் 90 சதவிகிதம் வரை அவரைச் சார்ந்தவர்களுக்கு நிலையான மதிப்பீட்டு விகிதத்தில் மாதாந்திர ஓய்வு ஊதியமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

(4) உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மைக்கான உதவி பணமாக வழங்கப்படுகிறது.

(5) நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர்களுக்கு நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகையான நோய்களுக்கு, மருத்துவரால் சான்றளிக்கப்படும் சிகிச்சை காலம் வரை நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவியும் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு மருத்துவர் ஆலோசனையின் பேரில் பணிக்கு செல்ல இயலாத காலத்தில் வழங்கப்படுகின்றது.

(6) உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மைக்கான உதவி

தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு 7 நாட்கள் வரை வாசக்டமி/14 நாட்கள் வரை ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்துகொள்ளும்போது உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி, சராசரி தின ஊதியத்தில் 100 சதவிகிதம் வழங்கப்படுகிறது.

(7) இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர்கள் பணிபுரியும்போது ஏற்படும் விபத்து மற்றும் தொழில்சார் நோய்களினால் ஏற்படும் உடல் நலக்குறைபாடுகளுக்கும் இயலாமைக்கான உதவி வழங்கப்படுகிறது.

(அ) தற்காலிக இயலாமைக்கான உதவி

தற்காலிக இயலாமை ஏற்படும்போது காப்பீட்டாளருக்கு முதல் பயன் துய்க்கும் காலம் தொடங்குவதற்கு முன்பே தற்காலிக இயலாமை ஏற்பட்டால் ஊதியத்தில் 90 விழுக்காடும், பங்களிப்பு காலத்திற்குப் பின் வரும் பயன் துய்க்கும் காலத்தில் தற்காலிக இயலாமை ஏற்பட்டால் நிலையான நன்மை விகிதத்தில் 90 விழுக்காடும் அக்காப்பீட்டாளர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் அவருடைய தற்காலிக இயலாமை தொடரும் வரை பணமாக வழங்கப்படுகிறது.

(ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி

பணியின்போது நிரந்தர இயலாமை ஏற்படின் காப்பீட்டாளருக்கு நிரந்தர இயலாமைக்கான உதவி அவர்தம் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுறுதி பெறத்தக்க பணியில் சேர்ந்த நாள் முதலே இந்த உதவி பெற தகுதியுடையவராகிறார்.

(8) ஈமச்சடங்கு உதவி

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவர் ஈட்டுறுதி பெறத்தக்க பணியில் சேர்ந்த நாள் முதலே அவரின் ஈமச்சடங்கிற்கு ரூ.15,000/- அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்படுகிறது.

(9) வேலையின்மைக்கான உதவி

(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா

இந்தத் திட்டம் 1-4-2005 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் காப்பீடு செய்த காப்பீட்டு நபர்கள், நிரந்தர இயலாமை, ஆட்குறைப்பு மற்றும் தொழிற்சாலை மற்றும் நிறுவனங்கள் மூடுதல் காரணமாக வேலை இழப்பு போன்ற காரணங்களினால் உண்டாகும் வேலையின்மைக்கு 50% ஊதியம் இரண்டு ஆண்டு காலத்திற்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா

தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகமானது 1-7-2018 முதல், இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்த மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்குக் குறைவில்லாமல் பணிபுரிந்த காப்பீட்டாளர்களுக்கு, 90 நாட்கள் வரையிலான இழப்பீட்டுத் தொகையினை பணப் பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்குகிறது.

இந்தப் பயன் ஒரு நாளின் சராசரி வருவாயில் 25 சதவிகிதத்திற்கு மிகாமலும், பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

6.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள்

1. வயது மூப்பு காரணமாக பணி ஓய்வுபெற்ற பின்னர் வருடத்திற்கு ரூ.120/- செலுத்துவதன்மூலம் காப்பீட்டாளருக்கும் அவரது வாழ்க்கைத்துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

2. ஊன்றுகோல், சக்கர நாற்காலி, பல்செட், மூக்குக் கண்ணாடி மற்றும் காது கேளாதோருக்கான செவித்துணை கருவி போன்ற சாதனங்கள் இத்திட்டத்தின்கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. நோய்த் தடுப்பு சேவைகளான தடுப்பூசிகள், எச்.ஐ.வி./ எய்ட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன.

4. குடும்ப நலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தேசிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

5. காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளரது பிரசவம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதிகள் இல்லாத இடத்தில் நடைபெற நேர்ந்தால் ரூ.5,000/- படியாக அளிக்கப்படுகிறது.

6.7. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

தொழிலாளர் காப்புறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பழுதுபார்க்கவும் அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் மருத்துவமனை மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனை மேம்பாட்டுக் குழு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறது. தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின், மாநில மருத்துவ ஆணையர்/அலுவலர், மருத்துவமனை மேம்பாட்டு நிதியை நேரடியாக வழங்குகிறார்.

6.8. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்து கொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்குதல்

6.8.1. செறிவுத் திட்டம் (Package deal) (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக 159 சிறப்பு மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளுடன் செறிவுத் திட்டத்தின்கீழ், (Central Government Health Scheme (CGHS)) ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் மருத்துவமனை கண்காணிப்பாளர் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவ அலுவலர் பரிந்துரைகளின்பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படுவதோடு, செறிவுத் திட்டத்தின்கீழ் உள்ள ஒப்பந்தத்தின்படி மருத்துவமனை செலவின பட்டியல்கள் நேரிடையாக நேர் செய்யப்படுகின்றன.

6.8.2. காப்பீட்டு பயனாளிகள் செய்து கொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்குதல்

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களால் தனியார் மருத்துவமனைகளில் (புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படாத) ஏற்றுக்கொள்ளப்பட்ட சூழ்நிலையில் பெற்ற மருத்துவ சிகிச்சைக்கான செலவினங்களை நிபந்தனைகளுக்குட்பட்டு (Central Government Health Scheme (CGHS)) விகிதத்தில் 10% கழித்து திரும்ப வழங்கப்படுகிறது.

6.9. 2019-2020-ல் துவக்கப்பட்ட புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

1. 32,863 காப்பீட்டு நபர்கள் பயனடையும்பொருட்டு ஆம்பூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் 16-8-2019 அன்று புதிய யுனானி பிரிவு தொடங்கப்பட்டது.

2. 26,000 காப்பீட்டு நபர்கள் பயனடையும்பொருட்டு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 26-6-2019 அன்று திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூரில் தொடங்கப்பட்டது.

3. 8,000 காப்பீட்டு நபர்கள் பயனடையும்பொருட்டு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 2-7-2019 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் தொடங்கப்பட்டது.

4. 5,391 காப்பீட்டு நபர்கள் பயனடையும்பொருட்டு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 21-11-2019 அன்று திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் தொடங்கப்பட்டது.

5. 5,000 காப்பீட்டு நபர்கள் பயனடையும்பொருட்டு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 29-2-2020 அன்று திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளியில் தொடங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XIX

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

I. முன்னுரை

இந்தியாவில், சாலைப் போக்குவரத்து முக்கிய பங்கு வகிப்பதுடன், மாநிலத்தின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீடித்த பொருளாதார வளர்ச்சி மற்றும் சாலை வலையமைப்பின் விரிவாக்கம் ஆகியவை மாநிலத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையை விரைவாக அதிகரிக்க வழி வகுக்கின்றது. பொதுமக்களின் அன்றாட வாழ்வில் முறையான அலுவல்களை மேற்கொள்வதற்கு மோட்டார் வாகனங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவது அவசியமாகிறது. இதனை அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, போக்குவரத்து ஆணையர் அலுவலகம் மூலமாக செயல்படுத்துகிறது.

வாகனங்களின் பெருக்கம், சாலை விபத்துகளுக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாகும். பெரும்பாலான விபத்துகள், காயங்கள் அல்லது இறப்பினை ஏற்படுத்துகின்றன. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். சாலையை பயன்படுத்துவோர் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவதும் சாலை விபத்துக்கான காரணங்களில் ஒன்றாகும். சிறந்த சாலை வடிவமைப்பு, மேம்பட்ட வாகனத் தரம் மற்றும் சிறந்த அவசர சிகிச்சை ஆகியவற்றுடன் நன்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சாலைப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் கோடிக்கணக்கான உயிரிழப்புகளையும் மற்றும் காயங்களையும் தடுக்க முடியும் என்பதை இத்துறை உணர்ந்து செயல்படுகிறது. இத்துறை, விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைப்பதற்கு, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை செயல்படுத்துவது மற்றும் சாலைப் பாதுகாப்பு தொடர்பாக உச்ச நீதிமன்றக் குழுவின் வழிகாட்டுதலின்படி சாலை விதி மீறல்களுக்காக ஓட்டுநர் உரிமங்களை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக இரத்துச் செய்வது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

[2020 மார்ச் 24

2. போக்குவரத்துத் துறையின் பங்கு மற்றும் பணிகள்

உள் (போக்குவரத்து)த் துறையின் முக்கிய பணிகள் பின்வருமாறு:-

(i) ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்கள் வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் மேற்குறிப்பு செய்தல்

(ii) ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்தல்

(iii) வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் அது தொடர்பான பணிகள்

(iv) வாகனங்களை ஆய்வு செய்து, தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்

(v) போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்குதல்

(vi) மோட்டார் வாகனங்கள் மீதான வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்தல்

(vii) விபத்துக்குள்ளாகும் வாகனங்களை ஆய்வு செய்தல்

(viii) மோட்டார் வாகனச் சட்டங்கள் மற்றும் அவற்றின்கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளின்படி சாலையில் வாகனங்களை ஆய்வு செய்து செயலாக்கப் பணி மேற்கொள்ளுதல்

(ix) சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் வாகனங்கள் வெளியேற்றும் புகையின் அளவைக் கட்டுப்படுத்துதல்

(x) புகை பரிசோதனை நிலையங்கள் அமைப்பதற்கான உரிமம் வழங்குதல்

இத்துறை, மேற்கண்ட பணிகளை 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம், 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள், 1974 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டம் மற்றும் விதிகளின்படி செயல்படுத்துகிறது. மோட்டார் வாகனச் சட்டங்கள் மற்றும் விதிகள் வாகனங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும்.

3. நிருவாக அமைப்பு

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை நிருவாகத்தின்கீழ் செயல்படும் போக்குவரத்துத் துறைக்கு போக்குவரத்து ஆணையர் தலைவராக செயல்படுவதுடன், மாநில போக்குவரத்து அதிகாரியாகவும், சாலைப் பாதுகாப்பு ஆணையராகவும் செயல்படுகிறார். அவருக்கு உதவியாக ஒரு கூடுதல் போக்குவரத்து ஆணையர், மூன்று இணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் இரண்டு துணைப் போக்குவரத்து ஆணையர்கள் தலைமையிடத்திலும், இரண்டு இணைப் போக்குவரத்து ஆணையர்கள் சென்னை சரகத்திலும், இரண்டு இணைப் போக்குவரத்து ஆணையர்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளனர். இதுதவிர, செயலாக்கப் பணிகளை மேம்படுத்த ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு இரண்டு இணைப் போக்குவரத்து ஆணையர்களும் (செயலாக்கம்) உள்ளனர்.

மாநிலப் போக்குவரத்து அதிகாரியின் பணிகளும் அதிகாரங்களும் பின்வருமாறு:-

1) வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கும் மற்றும் இதர தர்க்கங்களுக்கும் தீர்வு காணல்;

2) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி இல்லாத இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக செயல்படுதல்;

3) மாநிலத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் செயல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்;

4) மேலே கூறப்பட்டுள்ள பணிகள் தவிர குறிப்பிடப்பட்ட இதர பணிகளை செயல்படுத்துதல்.

போக்குவரத்துத் துறை, 12 சரக அலுவலகங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சரகமும் இணைப் போக்குவரத்து ஆணையர் அல்லது துணைப் போக்குவரத்து ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு சரக அலுவலகங்கள் இணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி,

சேலம், விழுப்புரம், விருதுநகர் மற்றும் வேலூர் ஆகிய எட்டு சரக அலுவலகங்கள் துணைப் போக்குவரத்து ஆணையர்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 58 பகுதி அலுவலகங்கள் மற்றும் 21 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. இது பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாக செயல்பட்டு வருகின்றனர். ஆனால், சென்னை நகரத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களைப் பொறுத்தமட்டில், சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) இணைப் போக்குவரத்து ஆணையர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாக செயல்படுகின்றனர். இவர்கள் போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல் மற்றும் அவற்றை முறைப்படுத்துதல் போன்ற பணிகளை போக்குவரத்து ஆணையர் அவர்களின் ஆணைக்குட்பட்டு மேற்கொண்டு வருகின்றனர். அந்தந்த மாவட்டத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 89 மற்றும் 90-ன்கீழ் மாநில போக்குவரத்து அதிகாரி மற்றும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளின்மீது மேல்முறையீடுகள் மற்றும் மறு ஆய்வு மனுக்கள் தாக்கல் செய்து அவற்றின்மீது ஆணைகள் வழங்க சென்னையில் உள்ள மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பணி நிலையில் உள்ள அதிகாரிகள் செயலர், மாநில போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் துறைப் பிரதிநிதி என்ற பதவிகளின் பெயரில், மாநில போக்குவரத்து மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு உதவிபுரிந்து வருகின்றனர். இவர்கள் அரசின் சார்பில் வழக்குகளுக்கு வாதாடுவார்கள்.

பொது மக்களுக்கு வெளிப்படையான மற்றும் துரிதமான சேவையினை வழங்கும்பொருட்டு, இத்துறையில் பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறு நிலைகளில் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறையில் 31-1-2020 வரை ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்கள் பிற்சேர்க்கை-II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

இத்துறையில் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக நேரடி நியமனமாகவும் மற்றும் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019-2020 ஆம் ஆண்டில் 4 இணைப் போக்குவரத்து ஆணையர்கள் மற்றும் 23 வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் பதவி உயர்வின்மூலம் நியமனம் செய்யப்பட்டனர்.

4. வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

தமிழ்நாட்டில் பல்வேறு வகை வாகனங்கள் சாலையில் ஓடுகின்றன. அவற்றின் வளர்ச்சி விரைவாகவும் கணிசமாகவும் உள்ளது. பல ஆண்டுகளாக மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மோட்டார் வாகனங்கள் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆட்டோ ரிக்ஷா, சுற்றுலாச் சீருந்து, மேக்ஸிகேப், நிலைப் பேருந்து, சரக்கு வாகனம், ஆம்னி பேருந்து, பள்ளிப் பேருந்து, தனியார் சேவை வாகனம் போன்ற வாடகை மற்றும் வெகுமதிக்காகவும் சரக்குகள் மற்றும் பயணிகளின் போக்குவரத்திற்காகவும் பயன்படுத்தப்படும் வாகனங்கள் போக்குவரத்து வாகனங்களாகும். இவ்வாகனங்களை அனுமதிச்சீட்டு இருந்தால் மட்டுமே சாலையில் ஓட்ட இயலும். சொந்தப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனங்கள் (மோட்டார் சைக்கிள் / ஸ்கூட்டர்), இலகுரக வாகனங்கள் (சீருந்து / மூன்று சக்கர வாகனங்கள்) மாற்றுத் திறனாளிகள் இயக்கும் வாகனங்கள் போன்றவை போக்குவரத்து அல்லாத வாகனங்கள் ஆகும். போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகன வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெருக்கம் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை-III முதல் VI வரை கொடுக்கப்பட்டுள்ளன.

31-1-2020 நிலவரப்படி, மாநிலத்தில் 12.92 இலட்சம் போக்குவரத்து வாகனங்கள், 278.83 இலட்சம் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என மொத்தம் 291.75 இலட்சம் வாகனங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில், போக்குவரத்து வாகனங்கள் 4.43 விழுக்காடும், போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 95.57 விழுக்காடும் ஆகும். இரண்டு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை 246.30 இலட்சம். இது மொத்த வாகனங்களின் எண்ணிக்கையில் 84.42 விழுக்காடு ஆகும்.

31-1-2020 அன்றைய நிலவரப்படி வாகனங்களின் எண்ணிக்கை

வாகன வகை	வாகனங்களின் எண்ணிக்கை	விழுக்காடு
ஆம்புலன்ஸ்	13276	0.05
சரக்கு வாகனங்கள்	603402	2.07
பயணிப் பேருந்துகள்	597212	2.05
உழுவை மற்றும் இழுவை	413031	1.42
இருசக்கர வாகனங்கள்	24629526	84.42
ஆழ்துளை கிணறு இயந்திர வாகனங்கள், கட்டமைப்பு இயந்திர வாகனங்கள், மின்னாக்கி பொருத்தப்பட்ட வாகனங்கள்	2773500	9.51
மோட்டார் கார் மற்றும் ஈப்புகள்	144863	0.50
மொத்தம்	29174810	100

4(i) வாகனங்களை பதிவு செய்தல்

மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப்பிரிவு 39-ன்கீழ் ஒவ்வொரு மோட்டார் வாகனமும் எந்தவொரு பொதுச் சாலையிலும் பயன்படுத்துவதற்கு முன்பு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பதிவு செய்யப்பட வேண்டும். வாகனங்களைப் பதிவு செய்வதற்காக வாகன விற்பனையாளர்களுக்கு “வாகன்" மென்பொருளின் உள்நுழைவு மற்றும் கடவுச் சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. வாகனத்தின் உரிமையாளர் சார்பாக வாகன விற்பனையாளர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பிப்பார்கள். போக்குவரத்து வாகனங்களுக்கு நிரந்தர பதிவு எண் பலகை மஞ்சள் நிறத்திலும், போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு நிரந்தர பதிவு எண் பலகை வெள்ளை நிறத்திலும், மின்சார வாகனங்களுக்கு நிரந்தர பதிவு எண் பலகை பச்சை நிறத்திலும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் வழங்கப்பட்ட மொத்த பதிவுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 15.68 இலட்சங்களாகும்.

4(ii) தகுதிச் சான்றிதழ் வழங்குதல்

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை கட்டுப்பாட்டில் உள்ளதா எனவும் விபத்துகளைத் தவிர்ப்பதற்காக வாகனங்கள் பொதுச் சாலையில் இயக்குவதற்கு சரியான நிலையில் பராமரிக்கப்படுகிறதா என்பதையும் அறிய வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இச்சான்றிதழ்கள் செல்லத்தக்கதாக இருந்தால் மட்டுமே அவ்வாகனங்களின் பதிவுச்சான்று நடப்பில் உள்ளதாகக் கருதப்படும். மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப்பிரிவு 56-ன்படி வாகனங்கள் பதிவு செய்யும் அதிகாரிகள்மூலம் நேரடியாக சோதனை செய்யப்படும். இதற்கான விண்ணப்பத்தினை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும், அதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்ய வேண்டும். போக்குவரத்து அல்லாத வாகனங்களைப் பொறுத்தமட்டில், அவற்றின் பதிவுச் சான்றிதழ் பதிவு செய்த நாளிலிருந்து 15 வருடங்களுக்கு செல்லத்தக்கதாகும். அதன்பின்னர், 5 வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

போக்குவரத்து வாகனங்களைப் பொறுத்தமட்டில், எட்டு வருடங்கள் வரை 2 வருடங்களுக்கொரு முறையும், எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 7.67 இலட்சமாகும்.

4(iii) உயர் பாதுகாப்பு பதிவெண் பலகை

மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை, மத்திய மோட்டார் வாகன விதி, 1989-ல் திருத்தம் கொண்டுவந்து அறிவிக்கை எண் GSR1162 (E), நாள் 4-12-2018-ல் வெளியிடப்பட்டது. இந்தத் திருத்தம் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989-ல் (16-வது திருத்தம்)-ன்படி, மத்திய மோட்டார் வாகன விதி 126-ன்படி 1-4-2019 முதல் நடைமுறைக்கு வந்தது. வாகனங்களைப் பதிவுசெய்து வாகன உரிமையாளரிடம் வழங்குவதற்கு முன்பாக வாகன உற்பத்தியாளர்கள், மத்திய அரசின் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை நிறுவனத்தினரிடமிருந்து ஒப்புதல் சான்றிதழ் பெற்ற உயர்பாதுகாப்பு பதிவெண் பலகையை விற்பனை செய்யும் விற்பனையாளரைத் தேர்வு செய்வார்கள். வாகனங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு பதிவு எண் பலகையை, வாகன விற்பனையாளர்கள் பொருத்துவார்கள்.

5. ஓட்டுநர் உரிமம் வழங்குதல்

ஓட்டுநர் உரிமம் பெற விரும்பும் விண்ணப்பதாரர் முதலில் பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற வேண்டும். 18 வயது நிரம்பியவர்கள் பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு https://parivahan.gov.in இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் அதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்து உரிய கட்டணத்தை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். பிறகு விண்ணப்பதாரர் அலுவலகம் வரும் நேரத்தை ஆன்லைன்மூலம் 30 நாட்களுக்குள் விருப்பமான தேதி மற்றும் நேரத்தைப் பதிவு செய்துகொள்ளலாம். விண்ணப்பதாரர்களின் திறனை சோதிக்கும்பொருட்டு சாலை விதிகள், சமிக்ஞைகள் மற்றும் சாலைக் குறியீடுகள் பற்றிய தேர்வுகள் கணினிமூலம் நடத்தப்பட்டு வருகின்றன. விண்ணப்பதாரர் இணையதளத்திலிருந்து கணினிமயமாக்கப்பட்ட பழகுநர் உரிமத்தை அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே நகல் எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு பெறப்பட்ட பழகுநர் உரிமம் ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும். 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் வழங்கப்பட்ட பழகுநர் உரிமங்களின் எண்ணிக்கை 12.12 இலட்சமாகும்.

பழகுநர் உரிமம் பெற்ற நபர்கள், 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகளில், விதி 31-ன்கீழ் பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்டங்களின்படி வழக்கத்திலுள்ள ஓட்டுநர் தேர்வுத் தளங்களில் ஓட்டுநர் தேர்வில் கலந்துகொள்ள, பழகுநர் உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பின்னர் மற்றும் ஆறு மாத காலத்திற்குள் நிரந்தர ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம். 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் வழங்கப்பட்ட புதிய ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 7.67 இலட்சமாகும். 31-1-2020 வரை வழங்கப்பட்டுள்ள மொத்த ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 1.95 கோடியாகும்.

6. வருவாய் ஈட்டுதல்

வாகனங்களைப் பதிவு செய்தல், புதுப்பித்தல், மறு பதிவு செய்தல், வாகன உரிமை மாற்றம், முகவரி மாற்றம் போன்ற பணிகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல், வாகன வரி வசூலித்தல், அனுமதிச்சீட்டு சம்பந்தமான பணிகள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விதிமீறல்களுக்கான இணக்கக் கட்டணம் வசூலித்தல் போன்ற

பணிகளின்மூலம் இத்துறை வருவாய் ஈட்டுகிறது. மாநில அரசின் முக்கிய வருவாய் ஈட்டும் துறைகளில் போக்குவரத்துத் துறையும் ஒன்றாகும். 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் இத்துறையினால் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.4,715.79 கோடி ஆகும். வரிகள், கட்டணங்கள் மற்றும் இணக்கக் கட்டணங்கள் வசூலித்தல்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் இத்துறை ஈட்டிய மொத்த வருவாய் பிற்சேர்க்கை-VI முதல் VIII வரை கொடுக்கப்பட்டுள்ளன.

7. உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் திறன் மேம்படுத்துதல்

(அ) அலுவலக உள்கட்டமைப்பு (நிலம் மற்றும் கட்டடம்)

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அலுவலகத்திற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு போதுமான வசதிகள் வழங்குவதே இதன் குறிக்கோள் ஆகும். இந்தக் கட்டடங்களில் ஓட்டுநர் உரிமம் பெற வரும் விண்ணப்பதாரர்களுக்கு வகுப்பறை, காத்திருப்போர் அறை, கழிப்பறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் 2 இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்) அலுவலகங்கள், 12 சரக அலுவலகங்கள், 87 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 58 பகுதி அலுவலகங்கள் மற்றும் 21 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 12 சரக அலுவலகங்கள், 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 21 பகுதி அலுவலகங்கள் மற்றும் 14 சோதனைச் சாவடிகள் (4 சொந்தக் கட்டடங்கள் மற்றும் வணிகவரித் துறையிடமிருந்து பெறப்பட்ட 10 கட்டடங்கள்) சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 34 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 37 பகுதி அலுவலகங்கள் மற்றும் 7 சோதனைச் சாவடிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 2 பகுதி அலுவலகங்களுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது. அடுத்த ஐந்தாண்டுகளில் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களும் சொந்தக்

கட்டடங்களில் இயங்குவதற்கு நிலம் கையகப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில், சட்டப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் சொந்தக் கட்டடங்கள் மற்றும் ஓட்டுநர் தேர்வுதளங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள்/பகுதி அலுவலகங்களில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி

ஒருங்கிணைந்த நவீனமயமாக்கப்பட்ட சோதனைச் சாவடி ஒன்றினை ரூ.131.75 கோடி செலவில் திருவள்ளூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 5-ல் உள்ள பெத்திக்குப்பத்தில் (உள்வருகை மற்றும் வெளி செல்லுகை) அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. இச்சோதனைச் சாவடியில், இதர துறைகளான உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வருவாய்த் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் காவல் துறை, செயல்படுகின்றன. இச்சோதனைச் சாவடி 20-6-2018 முதல் பயன்பாட்டில் உள்ளது.

இச்சோதனைச் சாவடியில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தவும், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில், ஆந்திரப்பிரதேசம் வழியாக தமிழ்நாட்டிற்குள் வரும் வாகனங்களுக்காக 10 வழிப்பாதைகளும், வெளியே செல்லும் வாகனங்களுக்காக 6 வழிப்பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைப்பதன்மூலம் அனைத்து வாகனங்களும் பல்வேறு துறைகள்மூலம் வெவ்வேறு இடங்களில் நிறுத்தி சோதனை செய்வதற்குப் பதிலாக ஒரே இடத்தில் நிறுத்தி காலவிரயமின்றி சோதனையிட இயலும். இதன்மூலம் அரசுக்கு வரி ஏய்ப்பை ஏற்படுத்தும் வாகனங்களையும், அளவுக்கதிகமான சுமை வாகனத்திற்கு வெளியே நீட்டுதல் மற்றும் அதிக பாரம் ஏற்றிச் செல்லும் வாகனங்களையும், சாலை விதிகளை மீறும் வாகனங்களையும் விரைவாக கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த நவீனமயமாக்கப்பட்ட சோதனைச் சாவடியில் செயலாக்கப் பணிகளான சோதனை அறிக்கைகள் வழங்குதல், அதிக பாரம் ஏற்றிச் செல்லும் வாகனங்கள்மீது சோதனை அறிக்கை பதிவு செய்தல், இணக்கக்கட்டணம் மற்றும் வரி வசூலித்தல் ஆகியவை அதிகரித்துள்ளது. பெத்திக்குப்பத்தில் உள்ள சோதனைச் சாவடியில்

2020 மார்ச் 24]

வழங்கப்பட்ட சோதனை அறிக்கைகள் மற்றும் இணக்கக்கட்டணம் வசூலித்தல் போன்றவை கீழ்க்கண்ட அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள்	2018-2019 (20-6-2018 முதல் 31-3-2019 வரை)	2019-2020 (1-4-2019 முதல் 1-1-2020 வரை)
சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டவை	*10671*	*11456*
அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள்	*125*	*126*
வருவாய் வசூலிக்கப்பட்டவை	(ரூபாய் இலட்சத்தில்)	
வரி	2143.22	3794.78
பசுமை வரி	40.16	16.70
கட்டணம்	85.16	88.08
இணக்கக் கட்டணம்	253.62	215.92
சேவை வரி	35.87	36.05
மொத்தம்	2558.03	4151.53

(இ) ஓட்டுநர் தேர்வுதளங்கள்

ஓட்டுநர் தேர்வுதளங்களில் சோதனைகளை மேற்கொள்வதன்மூலம் ஓட்டுநர்களின் திறனை அடையாளம் காண போக்குவரத்துத் துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சொந்த ஓட்டுநர் தேர்வுதளங்கள் உள்ள 39 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 7 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களில் வாகன ஓட்டும் திறன் சோதனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஓட்டுநர் தேர்வு தளங்களின் அருகாமையில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர்

[2020 மார்ச் 24

தேர்வுதளங்களை கணினிமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்குதலின் ஒரு பகுதியாக, 14 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளங்களை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளம் கரூர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. மீதமுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வுதளங்களை படிப்படியாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஈ) செயலாக்கப் பிரிவு

வாகனங்களின் சோதனை மேற்கொண்டு, அதிக சரக்குகள் ஏற்றிச் செல்லுதல், கண்கூசும் முகப்பு விளக்குகளைப் பொருத்தியிருத்தல், முறையற்ற பதிவெண் பலகை பொருத்துதல் போன்ற குற்றங்களைக் கண்டுபிடித்தல், பதிவுச்சான்றிதழ், ஓட்டுநர் உரிமம், அனுமதிச் சீட்டு, காப்பீட்டுச் சான்றிதழ், மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ் போன்ற சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை அறிதல், வரி செலுத்தாமல் இருக்கும் வாகனங்களுக்கு வரி மற்றும் அபராதத் தொகையை வசூலித்து வரி ஏய்ப்பு நடப்பதைத் தடுத்தல் போன்றவை செயலாக்கப் பிரிவின் முக்கிய பணிகள் ஆகும். 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன்கீழ் வகுக்கப்பட்ட விதிகளைச் செயலாக்கம் செய்வது இத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். போக்குவரத்துத் துறையில் 13 செயலாக்கப் பிரிவுகள், மண்டல அலுவலகங்களுடன்கூடிய 11 செயலாக்கப் பிரிவுகள், ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை ஆகிய இரண்டு இடங்களில் உள்ள இணைப் போக்குவரத்து ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் இயங்கி வருகிறது. மண்டல அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள ஒவ்வொரு செயலாக்கப் பிரிவிலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் அவரின்கீழ் இயக்கூர்தி ஆய்வாளர் நிலை-I, இயக்கூர்தி ஆய்வாளர் நிலை-II ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். மேலும், 2016 ஆம் ஆண்டு ஒரு இயக்கூர்தி ஆய்வாளர் நிலை-I மற்றும் இரண்டு இயக்கூர்தி ஆய்வாளர்கள் நிலை-II அடங்கிய 15 செயலாக்கப் பிரிவுகள், 15 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் செயலாக்கப் பணிகளை வலுப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் 11.01 இலட்சம் வாகனங்கள் செயலாக்கப் பணியாளர்கள் மூலமாக தணிக்கை செய்யப்பட்டு அவற்றில் 1.92 இலட்சம் வாகனங்களுக்கு

2020 மார்ச் 24]

சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வரியாக ரூ.14.14 கோடியும், இணக்கக் கட்டணமாக ரூ.72.27 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது. இத்தணிக்கைமூலம் கண்டறியப்பட்ட பலவிதமான குற்றங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	குற்றங்களின் விவரம்	கண்டறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை
1.	தகுதிச் சான்றிதழ் தற்காலிக இரத்து அறிக்கைகள்	8570
2.	சிறைப்பிடிக்கப்பட்ட வாகனங்கள்	23663
3.	அதிக நபர்கள் ஏற்றிச் செல்லுதல்	845567
4.	அதிக சரக்குகளை ஏற்றிச் செல்லுதல்	18523
5.	அனுமதிச்சீட்டு இல்லாமல் இயக்குதல்	3822
6.	தகுதிச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல்	10416
7.	காப்பீட்டுச் சான்றிதழ் இல்லாமல் இயக்குதல்	28122
8.	வரி செலுத்தாமல் இயக்குதல்	4750
9.	சிவப்பு பிரதிபலிப்பான்கள் இல்லாமல் இயக்குதல்	27007
10.	பின்புறம் சிகப்பு விளக்குகள் பொருத்தாமல் இயக்குதல்	14141
11.	வாகன ஆவணங்களின் நடப்பு விவரங்கள் வாகனத்தின் இடதுபுறத்தில் எழுதப்படாதது	20777
12.	ஓட்டுநர் உரிமங்கள் இல்லாமல் இயக்குதல்	34669
13.	நடைசீட்டு பராமரிக்கப்படாமல் இயக்குதல்	22573

வ. எண்	குற்றங்களின் விவரம்	கண்டறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை
14.	அனுமதிக்கப்பட்ட உயரத்திற்கு மேல் பொருட்களை ஏற்றிச் செல்லுதல்	5660
15.	பின்புறம் அதிகமாக பாரம் நீட்டி இருத்தல்	3659
16.	பக்கவாட்டில் பாரம் அதிகமாக நீட்டி இருத்தல்	2050
17.	ஆட்டோ ரிக்ஷா கட்டணமானி பழுதடைந்த நிலையில் வாகனத்தை இயக்குதல்	958
18.	அனுமதிச் சீட்டினை தவறான முறையில் பயன்படுத்துதல்	6592
19.	அதிக வேகமாக வாகனத்தை இயக்குதல்	7315
20.	ஆட்டோ ரிக்ஷாக்களில் அதிக கட்டணம் வசூலித்தல்	1008
21.	காற்று ஒலிப்பான்களைப் பயன்படுத்தியது	18856
22.	அங்கீகாரிக்கப்படாத தடங்களில் வாகனத்தை இயக்குதல்	1730
23.	தார்பாயால் மூடப்படாத மணல் லாரிகள்	3481
24.	கண்கூசும் முகப்பு விளக்குகளைப் பொருத்தியிருத்தல்	18666
25.	புகைக் கட்டுப்பாட்டு சான்றிதழ் நடப்பில் இல்லாமல் இயக்குதல்	36004
26.	மது அருந்திவிட்டு வாகனங்களை இயக்குதல்	1288

2020 மார்ச் 24]

வ. எண்	குற்றங்களின் விவரம்	கண்டறியப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை
27.	அனுமதி பெறாமல் திரவ எரிவாயு கிட் பொருத்தியிருத்தல்	208
28.	பள்ளிப் பேருந்துகளில் அதிக குழந்தைகளை ஏற்றிச் செல்லுதல்	1081

(i) பண்டிகை காலங்களில் சிறப்பு சோதனை

பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு விழாக்காலங்கள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளின்போது ஆம்னிப் பேருந்துகளில் காலமுறை தணிக்கைகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் நடைபெற்ற சிறப்புத் தணிக்கையில் 45779 ஆம்னி பேருந்துகள் சோதனை செய்யப்பட்டு 8884 சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் சோதனை செய்யப்பட்ட இடத்திலேயே வசூலிக்கப்பட்ட வருவாய் ரூ.30.26 கோடியாகும்.

(ii) இ-சலான் செயலி

இ-சலான் என்பது போக்குவரத்து செயலாக்க பணியாளர்களால் வாகனங்களை சோதனை செய்யும்பொழுது உபயோகப்படுத்துவதற்காக புது தில்லியில் உள்ள சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினரால் உருவாக்கப்பட்ட ஆன்டிராய்டு செயல்பாட்டில் உள்ள கைபேசி மற்றும் இணையதள அடிப்படையில் இயங்கும் ஒரு செயலியாகும். இச்செயல்பாடு “வாகன்” மற்றும் "சாரதி" மென்பொருள்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயலாக்கப் பணிகளை மேற்கொள்ளும்போது பல பயனுள்ள பலன்களை வழங்குகிறது. இச்செயலியை எந்த இடத்திலிருந்தும் எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம். இச்செயலி தரவு ஒருமைப்பாடு, நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும். இணக்கக் கட்டணம் நிலுவையில் இருக்கும் எந்த ஒரு வாகனமும் எவ்விதமான பரிவர்த்தனையும் செய்ய முடியாமல் தடுக்கப்படுகிறது. பொதுமக்கள் எந்நேரத்திலும் எங்கிருந்தும் நிலுவைத் தொகையை செலுத்தலாம். இத்துறையின் செயலாக்கப் பணியாளர்களுக்கு 244

[2020 மார்ச் 24

இ-சலான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 19-8-2019 அன்று திருச்சி (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இது அனைத்து அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

8. மின் ஆளுமை நடவடிக்கைகள்

(அ) மின் ஆளுமை

பொதுமக்கள் தொடர்பான அனைத்துச் செயல்பாடுகளும், அதாவது வரிகள் செலுத்துதல், அனுமதிச் சீட்டுகள், தகுதிச் சான்றிதழ்கள், ஓட்டுநர் உரிமங்கள், பதிவுச் சான்றிதழ்கள் ஆகிய பணிகள் அனைத்தும் தேசிய தகவல் மையத்தினரால் "வாகன்" மற்றும் "சாரதி" எனும் மென்பொருட்கள்மூலம் கணினி வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வாகன உரிமையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் விரைவான, வெளிப்படையான மற்றும் திறமையான சேவை முறையை மேம்படுத்தியுள்ளது.

வாகனங்கள் தொடர்பான வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலித்தல், பதிவுச் சான்றிதழ், தகுதிச் சான்றிதழ், தவணைக் கொள்முதல், முகவரி மாற்றம் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு "வாகன்" மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் அதன் தொடர்பான பணிகளைச் செய்வதற்கு "சாரதி" மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. "வாகன்" மற்றும் "சாரதி" (பெயர்ப்பு-4) பயன்பாட்டினால் பலவிதமான பயன்களை அளிக்கும் சூழலுடன் பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடர்பான சேவைகளை (பணம் உட்பட) வீட்டில் இருந்தே செலுத்தலாம். இதன்மூலம் தற்போது குடிமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அடிப்படை சேவைகளைப் பெறுவதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வரிசையில் காத்திருத்தல் ஆகியவற்றைத் தவிர்க்கப் பயன்படுகிறது. மேலும், காகிதப் பயன்பாடு குறைக்கப்பட்டு விரைவான சேவையை வழங்குகிறது. எனவே, இத்துறை இதன்மூலம் பொது மக்களுக்கு வசதியான, திறமையான மற்றும் வெளிப்படையான சேவைகளை வழங்கி வருகிறது.

(ஆ) தேசிய பதிவேடு

"வாகன்" மற்றும் "சாரதி" (பெயர்ப்பு - 4) மென்பொருள் நடைமுறைபடுத்துவதற்கு முன்னர் அனைத்து சேவைகளும் கிளையன்ட்-சர்வர் அடிப்படையில் செயல்பட்டன. மத்திய அரசின் தேசிய தகவல் மையம் வாகனப் பதிவுகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் அடங்கிய மாநிலப் பதிவேட்டினை உருவாக்கியது. அதிலுள்ள தரவுகள் அனைத்தும் புது தில்லியில் உள்ள தேசிய பதிவேட்டிற்கு தரவு ஏற்றம் செய்யப்பட்டது.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை கேட்டுக் கொண்டதனடிப்படையில், வலைதளம் வாயிலான "வாகன்" மற்றும் "சாரதி" (பெயர்ப்பு - 4) மென்பொருள்கள் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. "வாகன்" (பெயர்ப்பு - 4) மென்பொருள் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனால் வாகனப் பதிவுகள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் அடங்கிய தரவுகள் அனைத்தும் நேரடியாக புது தில்லியில் உள்ள மத்திய கிளையன்ட்-சர்வரில் பெறப்படுவதால் தேவையான நகல் பதிவுகள் பெறுவது தவிர்க்கப்படுவதுடன் இதர மாநிலங்களின் விவரங்களையும் அறிய முடிகிறது.

(இ) வலைதள அடிப்படையிலான ஓட்டுநர் உரிமங்கள்/ பதிவுச் சான்றிதழ்கள் நடைமுறைப்படுத்துதல், விரைவூக்க அட்டைமூலம் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்குதல்

வலைதள அடிப்படையிலான "சாரதி" மற்றும் "வாகன்" (பெயர்ப்பு-4) மென்பொருள்கள் அனைத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. விரைவூக்க அட்டைமூலம் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கும் திட்டம் கடந்த 22-1-2019 முதல் ஒவ்வொரு கட்டமாக அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, இத்திட்டத்தினால் விண்ணப்பதாரர்களால் கொடுக்கப்பட்ட விவரங்களுடன் ஓட்டுநர் திறனை ஆய்வு செய்து முடித்த ஒருமணி நேரத்தில் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஓட்டுநர்

உரிமம் உள்ளவர்களது கைபேசி எண் “சாரதி” மென்பொருளில் இருக்கும்பட்சத்தில் அவர்களது உரிமம் காலாவதியாவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் அவர்களது கைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருகிறது.

(ஈ) இணையதளம் வாயிலாக வரி மற்றும் கட்டணம் செலுத்துதல்

இணையதளம் வாயிலாக வரி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கும் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 19-6-2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, பரோடா வங்கி, கனரா வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் மற்றும் ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் வங்கிகளுக்கிடையேயும் போக்குவரத்து ஆணையருக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வரி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டன. இதே மாதிரியான வசதிகள் போக்குவரத்து வாகனங்களுக்கும் 25-10-2013 முதல் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இணையதளம் வாயிலாக வரி மற்றும் கட்டணம் செலுத்துவதன்மூலம் அலுவலகங்களில் தேவையற்ற நெரிசல் குறைவதுடன், போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அலுவலகத்திற்கு வருவது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் தங்கள் நேரத்தை சேமிக்க முடிகிறது.

பாரத ஸ்டேட் வங்கியின் இ-சேவை நுழைவு வாயிலின்மூலம் வரி மற்றும் கட்டணங்களை வசூலிப்பதற்கு ஒருங்கிணைப்பாளராக பாரத ஸ்டேட் வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு 1-10-2018 முதல் "வாகன்" மற்றும் "சாரதி"-யில் அனைத்துப் பணிகளின் கட்டணம் பரிவாகன் https://parivahan.gov.in/sarathi/ இணையதளம் வாயிலாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

2013-2014 ஆம் ஆண்டில் இணையதளம் வாயிலாக வசூலிக்கப்பட்ட வரி மற்றும் கட்டணங்கள் ரூ.1397.30 கோடி ஆகும். இது 2019-2020 ஆம் (ஜனவரி முடிய) நிதியாண்டில் ரூ.4341.58 கோடியாக உயர்ந்துள்ளது. இது மொத்த வருவாயில், அதாவது ரூ.4715.79 கோடியில் 92.06 சதவீதம் ஆகும்.

வரிசை எண்	ஆண்டு	ஓட்டுநர் உரிமங்கள் மூலமாக கட்டணம்	வாகனப் பதிவின் மூலம் (வரி மற்றும் கட்டணம்)	மோட்டார் வாகன வரி மூலம்	மொத்தம்
			(ரூபாய் கோடியில்)		
1.	2013-2014	-	1386.52	10.78	1397.30
2.	2014-2015	-	1524.26	40.35	1564.61
3.	2015-2016	-	1766.30	318.29	2084.59
4.	2016-2017	-	2115.48	465.15	2580.63
5.	2017-2018	-	2300.15	545.27	2845.42
6.	2018-2019	94.13	1989.42	932.96	3016.51
7.	2019-2020 (ஜனவரி முடிய)	288.61	3111.51	941.46	4341.58
	மொத்தம்	382.74	14193.64	3254.26	17830.64

(உ) தகுதிச் சான்றிதழ் மென்பொருள் செயலி

தேசிய தகவல் மையத்தினரால் உருவாக்கப்பட்ட தகுதிச் சான்றிதழ் பயன்பாட்டு மென்பொருள் 22-11-2019 அன்று ஆத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டது. இதன் முக்கிய அம்சமானது மோட்டார் வாகன ஆய்வாளர்கள் வாகனத்தை ஆய்வு செய்து வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தில் அந்த வாகனத்தின் 5 புகைப்படங்களை எடுத்து கைபேசியில் பதிவேற்றம் செய்வார்கள். அதன் பிறகு அந்த வாகனத்திற்கு தகுதிச் சான்றிதழ் பெறலாம்.

இந்த செயலியினால் ஏற்படும் நன்மைகள் பின்வருமாறு:-

1. வாகனங்களை ஆய்விற்கு கட்டாயமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

2. வாகனத்தின் நிலைமை குறித்த புகைப்படங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு சேமிக்கப்படுகிறது.

3. வாகன உரிமையாளரது காத்திருப்பு நேரம் குறைக்கப்படுகிறது.

9. போக்குவரத்து வசதியை மேம்படுத்துதல்

மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்

அண்டை மாநிலங்களுக்கிடையே பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்து சீரான தடையற்ற முறையில் நடைபெற்ற ஒருமுனை வரி அல்லது வரிச் சலுகைகள் தொடர்பாக பரிமாற்ற அடிப்படையில் மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இவ்வொப்பந்தம் மாநிலங்களுக்கிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவில் சரக்குப் போக்குவரத்து வாகனங்கள், ஒப்பந்த போக்குவரத்து வாகனங்கள், நிலைப் பேருந்துகள் தடையில்லாமல் சென்று வர வகை செய்கிறது. தமிழ்நாடு ஏற்கெனவே, அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுடன் மாநில அளவிலான ஒப்பந்தங்கள் செய்துள்ளது. மேலும், கூடுதல் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த மேற்கண்ட அண்டை மாநிலங்களுடன் துணை ஒப்பந்தங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்துணை ஒப்பந்தங்கள்மூலம் முக்கிய வியாபார மையங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல போக்குவரத்து சேவை வழங்கப்படுகிறது. இந்த அரசு, கேரள அரசுடன் 6-வது துணை ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் 54 பேருந்துகள் ஓட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக, தமிழக அரசு ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுடன் போக்குவரத்து ஒப்பந்தங்கள் கீழ்க்கண்டவாறு செய்துள்ளது:

2020 மார்ச் 24]

வ. எண்	அண்டை மாநிலங்களுக் கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்கள்	முதன்மை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு	துணை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு
1.	கர்நாடகம்	1973	1973, 1975, 2005, 2008
2.	கேரளா	1976	1979, 1984, 1995, 1999, 2008, 2019
3.	ஆந்திரப் பிரதேசம்	1975	1976, 1993, 1994
4.	புதுச்சேரி	1985	2011

மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து ஒப்பந்தங்களின்படி இயங்கும் மோட்டார் வாகனங்கள்

வ. எண்	மாநிலங்களிடையே இயங்கும்	நிலைப்பேருந்துகள்		ஒப்பந்த ஊர்திகள்	சரக்கு வாகனங்கள்
		தடங்கள்	பேருந்துகள்		
1.	தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவிற்கு	108	392	200	10000
2.	ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு	123	467	200	10000
3.	தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகாவிற்கு	219	544	328/5000	15000
4.	கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு	227	530	599/5000	15000
5.	தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்கு	144	273	300	5000
6.	கேரளாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு	197	225	300	5000

வ. எண்	மாநிலங்களிடையே இயங்கும்	நிலைப்பேருந்துகள்		ஒப்பந்த ஊர்திகள்	சரக்கு வாகனங்கள்
		தடங்கள்	பேருந்துகள்		
7.	தமிழ்நாட்டிலிருந்து புதுச்சேரிக்கு	207	428	வரம்பு இல்லை	8000
8.	புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு	140	171	வரம்பு இல்லை	800

10. பள்ளிப் பேருந்துகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துதல்

பள்ளிப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யும்பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (பள்ளிப் பேருந்துகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்) சிறப்பு விதிகள், 2012, தமிழக அரசால் வடிவமைக்கப்பட்டது. இவ்விதிமுறைகள் 1-10-2012 முதல் நடைமுறைக்கு வந்தன.

பள்ளிப் பேருந்துகளுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்க ஆய்வு செய்வற்கான தனிப்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சிறப்புப் பிரிவு, பள்ளிப் பேருந்துகளை ஆய்வு செய்து, பள்ளிப் பேருந்துகளின் தகுதிச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ், அனுமதிச்சீட்டு மற்றும் சாலைத் தகுதிச் சான்றிதழ் போன்றவற்றை உறுதிசெய்த பின்னர் பள்ளிப் பேருந்துகளில் மாணவ, மாணவியர்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்குகிறது.

இந்தச் சிறப்பு பிரிவு கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டுள்ளது:

1) தொடர்புடைய பகுதி வட்டாரப் போக்குவரத்து அலுவலர்

2) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (செயலாக்கப் பிரிவு)/ செயலாக்கப் பிரிவைச் சார்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1/மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2

3) தொடர்புடைய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினைச் சார்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1

4) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2

2020 மார்ச் 24]

பள்ளி மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பான பயணம் குறித்து விவாதிப்பதற்காக பிரத்யேக பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பள்ளி மாணவ, மாணவியர்கள் பயணிக்கும்போது உதவுவதற்காக நடத்துநர் உரிமம் பெற்ற ஓர் உதவியாளரை நியமிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பள்ளி அளவிலான போக்குவரத்துக் குழுக்கள் மற்றும் மாவட்ட அளவிலான துறைகளுக்கிடையேயான குழுக்கள் அமைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கூறிய விதிகளை முழு கவனத்துடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளி மாணவ, மாணவியர் பள்ளிப் பேருந்துகளில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதை உறுதிசெய்யும்பொருட்டு, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களும் மற்றும் சரக அலுவலர்களும் மேற்கூறிய விதிகளை நடைமுறைப்படுத்துவதை மாநிலப் போக்குவரத்து அதிகாரி அவர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 32,200 பள்ளிப் பேருந்துகள் இந்த துறையிடைக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டு தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

11. சாலைப் பாதுகாப்பு

சாலைப் பாதுகாப்பு என்பது வாகன ஓட்டுநர், பயணிகள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எல்லா காலங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய முக்கியமான ஒன்றாகும். சாலைப் போக்குவரத்தில் ஏற்படும் விபத்துகள் 18 முதல் 40 வயதிற்குட்பட்டவர்களிடையே உயிரிழப்பினை ஏற்படுத்தி வரும் முக்கிய காரணமாகும். சாலை விபத்துகளால் ஏற்படும் துயரங்களைத் தடுப்பது நிருவாகத்தின் முக்கிய நோக்கமாகும். ஏனெனில், இது உயிரிழப்புகளையும் காயங்களையும் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தனிப்பட்ட இழப்புகளை ஏற்படுத்துவதோடு அரசாங்கத்திற்கு சமூக இழப்பை ஏற்படுத்துகிறது. நாட்டிலேயே சாலைப் பாதுகாப்புக் கொள்கையை வெளியிட்ட முதல் மாநிலம் தமிழகமேயாகும். பங்களிப்புத் துறைகளுடன் சேர்ந்து சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் இந்த கொள்கை அரசாங்கத்தால் கொண்டு வரப்படுகிறது. காவல், போக்குவரத்து, கல்வி, நெடுஞ்சாலை மற்றும் மருத்துவம் போன்ற துறைகள் நிறுவனக் கட்டமைப்பு பொறிகள்மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு, மாநிலத்தின் உயர்மட்டத்திலிருந்து மாநிலம் முழுவதும் உள்ள பிரச்சினைகளுக்கு பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து தீர்வு காண வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

(அ) மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையின்கீழ் பல்வேறு துறைகளைச் சார்ந்த 20 உறுப்பினர்களைக் கொண்ட மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம் என்ற உயர்மட்ட அமைப்பு 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 215(2)-ன்படி இயங்கி வருகிறது. இம்மன்றமானது, சாலைப் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கொள்கைகள் மற்றும் செயல்முறை திட்டங்கள் போன்றவற்றை மறு ஆய்வு செய்து அவற்றைச் செயல்படுத்துவது குறித்த அறிவுரைகளை அரசுக்கு வழங்கி வருகிறது. மாநில சாலைப் பாதுகாப்பு மன்றம் 27-8-2019 அன்று கூட்டப்பட்டது. 27-8-2019 அன்று நடந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

(i) மாவட்ட ஆட்சியர்களுக்கு சாலை விதி மீறுபவர்களின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு இலக்கு நிர்ணயித்தல்,

(ii) வாகன எண் பலகை கண்டறியும் தானியங்கி கேமராக்களைப் பொருத்துதல்,

(iii) வயது குறைந்தவர்கள் வாகனம் ஓட்டுவதைத் தடுத்தல்,

(iv) வாகனங்கள் இருக்கும் இடத்தினைக் கண்டுபிடிக்கும் கண்காணிப்பு சாதனத்தைப் பொருத்துதல்,

(v) அனைத்து அவசர கால ஊர்திகளை ஒருங்கிணைத்தல்,

(vi) அவசரகால சிகிச்சை மையங்கள்,

(vii) பொது தகவல் உதவி எண்,

(viii) சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி அவசர சிகிச்சை அளித்தல்,

(ix) பெரும் நிதியை (Corpus fund) உருவாக்குதல்,

(x) ஓட்டுநர் உரிமம் நடைமுறைகளை மேம்படுத்துதல்,

(xi) நெடுஞ்சாலைகளில் (மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை, நகர்ப்புற மற்றும் கிராமப்புற சாலைகள்) பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

(ஆ) சாலைப் பாதுகாப்பு ஆணையர்

சாலைப் பாதுகாப்பு கொள்கைகள் தொடர்பாக அரசுக்கு அறிவுரை செய்யவும், சாலைப் பாதுகாப்பு தொடர்பான பணிகளைக் கண்காணிக்கவும் போக்குவரத்து ஆணையரை சாலைப் பாதுகாப்பு ஆணையராக அரசு நியமனம் செய்துள்ளது. சாலைப் பாதுகாப்பு ஆணையர் கள அளவிலான நடவடிக்கைகளைக் கண்காணித்து, சாலைப் பாதுகாப்பு குறித்து உருவாக்கப்பட வேண்டிய கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவார். சாலைப் பாதுகாப்பு ஆணையரின் முக்கிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் பின்வருமாறு:-

1. மாநிலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சாலைப் பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல் மற்றும் மாநில சாலைப் பாதுகாப்புக் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்.

2. மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகளை மேலாய்வு செய்தல் மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து முக்கிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காக உரிய ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் செய்தல்.

3. ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளித்து சோதனை செய்தல், சாலைப் பாதுகாப்பை கற்பித்தல் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

4. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளை ஒருங்கிணைத்து வாகன மாசு கட்டுப்படுத்துதல் மற்றும் அதன் தீய விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு ஏற்படுத்துதல்.

5. போக்குவரத்து ஆணையர்/சாலைப் பாதுகாப்பு ஆணையர் நடத்தும் மாதாந்திர கூட்டத்தில் மாதாந்திர சாதனைகளை காவல், நெடுஞ்சாலை, போக்குவரத்து கழகங்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரிகள் தவிர அரசு துறை சாராத அதிகாரிகள் மற்றும் இத்துறையில் பிற சிறந்த வல்லுநர்களுடன் ஆய்வு செய்தல்.

6. பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நேரத்தில் மற்றும் நியாயமான முறையில் உதவக்கூடிய வகையில் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் விபத்து நடந்த பிறகு தீர்வு நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்.

(இ) மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு

தங்கள் மாவட்டங்களில் எழும் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்ய அரசு மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவை அமைத்துள்ளது. இந்த மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவானது 13 உறுப்பினர்களுடன் காவல் துறைக் கண்காணிப்பாளரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு மாவட்ட ஆட்சியர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. சென்னை பெருநகரைப் பொறுத்தமட்டில் மாநகரக் காவல் ஆணையாளர் தலைமையின்கீழ் பல்வேறு துறை சார்ந்த 18 உறுப்பினர்களைக் கொண்டு மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு இயங்கி வருகிறது. இக்குழு சென்னை நகரில் சாலைப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் ஒவ்வொரு மாதமும் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுவைக் கூட்டி, விபத்து ஏற்படக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிதல் (blackspots) பற்றி விரிவாக விவாதம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்த முக்கியமான முடிவுகள் போக்குவரத்து ஆணையரால் தொடர்ந்து பகுப்பாய்வு/மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான பரிந்துரைகள் விவாதிக்கப்படுகின்றன. மேலும், இந்தப் பணிகளுக்குத் தேவையான நிதி மாவட்ட ஆட்சியர்களுக்கு எங்கு அவசியம் ஏற்படுகிறதோ அந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையின்கீழ் 144 மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும், அக்கூட்டத்தில் விபத்துகளைக் குறைப்பதற்கான தீர்வு நடவடிக்கைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

போக்குவரத்து ஆணையர்/சாலைப் பாதுகாப்பு ஆணையர் அவர்களின் மாதாந்திர கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர்களின்

மாதாந்திர இலக்குகள் மற்றும் சாதனைகள் தவறாமல் ஆய்வு செய்யப்படுகின்றன. இத்தகைய தொடர் கண்காணிப்பின் காரணமாக 2016 ஆம் ஆண்டில் 17,218 ஆக இருந்த சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகள், 2019 ஆம் ஆண்டில் 10,525 ஆகக் குறைந்து, இதனால் 38.87 சதவீதம் குறைந்துள்ளது.

(ஈ) சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமை

சாலைப் பாதுகாப்பு ஆணையருக்கு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உதவும்பொருட்டு, ஒரு சாலைப் பாதுகாப்புப் பிரிவு அரசாணை நிலை எண் 705 உள் (போ.வ.5)த் துறை, நாள் 13-7-2011-ன்படி ஏற்படுத்தப்பட்டது. தற்போது, உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவின் வழிகாட்டுதலின் பேரில், சாலைப் பாதுகாப்புப் பிரிவு மறுசீரமைத்து சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமையானது இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப் பாதுகாப்பு), சென்னை-5 அவர்கள் தலைமையின்கீழ் கீழ்க்கண்ட அலுவலர்களுடன் இயங்கி வருகிறது:

1) சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலிருந்து ஒரு துணை இயக்குநர்

2) கல்வித் துறையிலிருந்து ஓர் உதவி இயக்குநர்

3) நெடுஞ்சாலைத் துறையிலிருந்து ஓர் உதவிப் பொறியாளர் அல்லது உதவி இயக்குநர்

4) காவல் துறையிலிருந்து ஒரு காவல் ஆய்வாளர்

5) மருத்துவ துறையிலிருந்து ஓர் அலுவலகக் கண்காணிப்பாளர்.

சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமையின் முக்கியப் பணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகின்றன:

(i) மாநில சாலைப் பாதுகாப்புக் குழுவினுடன் சேர்ந்து கூட்டம் கூட்டுவது, கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்கள் தயாரித்தல், கூட்டக் குறிப்புகள் சம்பந்தப்பட்ட பயன்பாட்டுத் துறைகளுக்கு அனுப்பி வைத்தல், எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளை அனுப்பி வைத்து அதன் செயல்பாடுகளைக் கண்காணித்தல்;

(ii) சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து, அவ்வப்போது அரசு வெளியிடும் ஆணைகளை அனுப்பி வைத்து

[2020 மார்ச் 24

அதன் செயல்பாடுகளைக் கண்காணித்து, பயன்பாட்டு அறிக்கைகளைப் பெற்று அரசுக்கு சமர்ப்பித்தல்;

(iii) இதுசம்பந்தமாக மத்திய அரசு அவ்வப்போது வெளியிடும் ஆணைகளையும், அறிவுரைகளையும் சீராக நடைமுறைபடுத்துதல்;

(iv) சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புக்களைக் குறைக்கும்பொருட்டு ஆண்டு செயல்திட்டம் ஒன்றினைத் தயாரித்து, நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்காகவும், அதன் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் உரிய செயல் திட்டங்களைத் தயாரித்தல்;

(v) சாலை விபத்துகள் குறித்த தகவல்களை முறையாக சேகரித்து அதிக விபத்து நடக்கும் பகுதிகளைக் கண்டறிந்து அதன்மீது அதிக கவனம் செலுத்துதல்;

(vi) சாலைப் பாதுகாப்பு நிதியினை நிர்வகித்தல் மற்றும் அந்நிதி உரிய முறையில் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்;

(vii) சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து மாவட்டங்களுக்கு ஒதுக்கிய திட்டங்களைக் கண்காணித்தல்;

(viii) சாலைப் பாதுகாப்பு நிதி பயன்பாட்டினை மதிப்பீடு செய்து, அதனை உரிய முறையில் பயன்படுத்த வழிமுறைகளைக் கண்டறிதல்;

(ix) பயன்பாட்டுத் துறைகளுக்கு சாலைப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றிட உரிய வழிமுறைகள் வழங்குதல்.

(உ) மாண்புமிகு உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு

நீதிப் பேராணை மனு (சிவில்) எண் 295-ல் வழங்கப்பட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஒரு தலைவர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் அடங்கிய மாண்புமிகு உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவினை அமைத்துள்ளது. அதன்படி மாண்புமிகு உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழு மாநிலங்களில் சாலைப்

2020 மார்ச் 24]

பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது:

- சாலை விபத்துகள் மற்றும் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான செயல்பாடு திட்டம் தயாரித்தல்;
- சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான வருடாந்திர இலக்கு நிர்ணயித்தல்;
- மாநிலத்தில் அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து அதனை பொறியியல் ரீதியாக மேம்படுத்திட ஒரு கால அட்டவணை அடிப்படையில் நெறிமுறைகளை உருவாக்குதல்;
- மூன்றாம் தரப்பு சாலைப் பாதுகாப்பு தணிக்கை;
- சாலைப் பாதுகாப்பு கொள்கை தயாரிப்பது;
- மாநில சாலைப் பாதுகாப்புக் குழு மற்றும் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு நடத்தும் கூட்டங்களைக் கண்காணித்தல்;
- சாலைப் பாதுகாப்பு நிதியை நிதியாண்டில் காலாவதியாகாத நிதியாக மாற்றி அமைத்தல் (Non-lapsable fund);
- சாலைப் பாதுகாப்பு தணிக்கை மற்றும் வடிவமைப்புகளை மேற்கொள்ளுதல்;
- சாலைக் கட்டுமானம் மற்றும் இயக்கம்;
- அதிவேகத்தினால் விபத்து ஏற்படும் இடங்களில் போக்குவரத்தினைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை எடுத்தல்;
- அவசர கால ஊர்தியில் பயிற்றுவிக்கப்பட்ட உதவியாளருடன்கூடிய உபகரணங்கள் இருப்பதை உறுதி செய்தல்;
- வருடாந்திர தரவுகளை வெளியிடுதல்;
- சாலை நற்பண்பாளர்களுக்கான வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல்;

- சாலை விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களை நிறுவுதல்;
- பொதுவான தகவல் உதவி எண்;
- சாலை விற்பனையாளர் சட்டத்தை அமல்படுத்துதல்.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின்படி, இந்த அரசு, சிகப்பு விளக்கினைத் தாண்டுதல், அதிக வேகம், சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றிச் செல்லுதல், சரக்கு வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், வாகனம் ஓட்டும்போது செல்லிடைப்பேசியை பயன்படுத்துதல் ஆகிய செயல்களில் ஈடுபடுபவர்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த காலாண்டு அறிக்கையினை குழுவிற்கு அனுப்பி வைக்கிறது. மேற்கண்ட குற்றங்களுக்கு ஓட்டுநர் உரிமங்களை மூன்று மாதங்களுக்கு குறையாமல் தற்காலிக நீக்கம் செய்து அதன் விவரங்களையும் இந்த அரசு காலாண்டு அறிக்கையாக அனுப்பி வைக்கிறது. வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணியாமலும் மற்றும் இருக்கைப்பட்டை அணியாமலும் இருத்தல் குறித்த குற்றங்களுக்கு போக்குவரத்து மற்றும் காவல் துறை மூலமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

(ஊ) சாலைப் பாதுகாப்புக் குழுவின் வழிகாட்டுதலின்படி ஓட்டுநர்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்

மது அருந்திவிட்டு வாகனம் இயக்கும் ஓட்டுநர்களின் ஓட்டுநர் உரிமங்களை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவல் துறைமூலம் வழக்குகள் பெறப்பட்டவுடன், அவற்றின்மீது 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டப் பிரிவு 19-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஓட்டுநர் உரிமங்கள் 6 மாத காலத்திற்கு தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டும், தொடர் குற்றங்களுக்கு நிரந்தரமாக இரத்து செய்யப்பட்டும் வருகின்றன.

உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவானது, அதிவேகமாக வாகனம் ஓட்டுதல், வாகனங்களில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்லுதல், சரக்கு வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், சிகப்பு விளக்கினைத் தாண்டிச்செல்லுதல், வாகனம் ஓட்டும்போது செல்லிடைப்பேசியில்

2020 மார்ச் 24]

பேசுதல் போன்ற போக்குவரத்து விதிகளை மீறும் ஓட்டுநர்களின் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்ய பரிந்துரைத்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் 1,13,533 ஓட்டுநர் உரிமங்கள் மேற்கூறிய விதிகளை மீறுதலுக்காக தற்காலிக இரத்து செய்யப்பட்டன.

அதேபோன்று, உயிரிழப்பு ஏற்படுத்திய வாகன ஓட்டுநர்களைப் பொறுத்தமட்டில், மேலே சொல்லப்பட்ட சட்டப் பிரிவுகளின்கீழ் அவர்களுடைய ஓட்டுநர் உரிமம் அதிகபட்சமாக 6 மாத காலத்திற்கு தற்காலிக இரத்து செய்யப்பட்டு மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2019 ஆம் ஆண்டில் 6,827 ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக இரத்து செய்யப்பட்டன.

(எ) முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி

சாலை விபத்துகளில் இறந்தவர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் மற்றும் அவ்விபத்துகளில் படுகாயம்/சிறுகாயம் அடைபவர்களுக்கு, நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இக்காரணங்களுக்காக 1978 ஆம் ஆண்டு அரசு "முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி" ஒன்றினை உருவாக்கியது. மேற்கூறிய நிவாரண நிதியின் அளவானது அவ்வப்போது உயர்த்தப்பட்டு, தற்போது பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

வ. எண்	விபத்தின் தன்மை	24-2-2014 முதல் உயர்த்தப்பட்ட நிதியுதவி (ரூ.)
1.	இறப்பு	1,00,000
2.	நிரந்தர செயலிழப்பு	50,000
3.	கொடுங்காயம்	50,000
4.	ஒரு கண் அல்லது ஓர் உறுப்பு, அதாவது ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	30,000
5.	இதர சிறுகாயங்கள்	10,000

2019-2020 ஆம் நிதியாண்டில், முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி திட்டத்தின்கீழ் ரூ.100.00 கோடி அந்தந்த மாவட்ட

ஆட்சியர்களின் தேவைக்கேற்ப, 32 மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம் (Road Accident Data Management System)

சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம் (RADMS) என்பதனை உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு திட்ட நிறுவனம் (Tamil Nadu Road Sector Project) 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் சாலை விபத்துகளின் காரணங்கள் குறித்து பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்திட தகுந்த தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இயலும். இத்திட்டத்தில் காவல் துறையானது சாலை விபத்து அறிக்கை படிவத்தில் தங்கள் துறை தொடர்பான விவரங்களைப் பதிவேற்றம் செய்து பின்னர் பிற துறைகள் அவரவர்களின் தகவல்களைப் பதிவு செய்யும்பொருட்டு போக்குவரத்துத் துறைக்கு அனுப்பி வைக்கிறது. போக்குவரத்துத் துறை மோட்டார் வாகனங்கள் குறித்த விவரங்களைப் பதிவேற்றம் செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு அத்துறை குறித்த தகவல்களை பதிவேற்றம் செய்யும்பொருட்டு அனுப்பி வைக்கிறது. இப்பணிகள் முடிந்த பின்னர் சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம் (RADMS) மூலம் பல்வேறு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே வருமாறு:

(1) செயற்கைக்கோள்மூலம் இயங்கும் புவியியல் தகவல் முறை திட்டம் (GIS)

(2) இணையதள அடிப்படையில் தகவல் பரிமாற்றம்.

இத்திட்டம் காவல், நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத் துறை அலுவலர்கள் அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து அதற்குரிய தீர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு உதவிபுரிகிறது. விபத்துகள் நடந்த பின்னர் சாலை விபத்து அறிக்கை படிவத்தில் தங்கள் துறை தொடர்பான விவரங்களை உடனடியாகப் பதிவு செய்கின்றன. சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைக்கும்பொருட்டு இம்முகமைகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

(ஐ) சிறந்த மாநிலத்திற்கான அகில இந்திய சாலைப் பாதுகாப்பு விருது

2016 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டில் சாலை விபத்து மற்றும் உயிரிழப்புகளைக் குறைத்தமைக்காக சிறந்த மாநிலத்திற்கான அகில இந்திய சாலைப் பாதுகாப்பு விருதினை மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை (MoRTH) வழங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 17,218 உயிரிழப்புகள் 2018 ஆம் ஆண்டில் 12,216 உயிரிழப்புகளாகக் குறைந்துள்ளன. அதாவது, 29 சதவீதம் சாலை விபத்து உயிரிழப்புகள் குறைக்கப்பட்டுள்ளன.

(ஒ) சாலைப் பாதுகாப்பு நிதி

தமிழகத்தில் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் மற்றும் உடனடி அபராதம்மூலம் பெறப்படும் தொகையிலிருந்து ஒவ்வோர் ஆண்டும், சாலைப் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை நிறைவேற்றிட, சாலைப் பாதுகாப்பு நிதியை அரசு ஏற்படுத்தியுள்ளது.

சாலைப் பாதுகாப்பு குறித்த திட்டங்களை நிறைவேற்றிட உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையின்கீழ் இயங்கும் இதர பங்களிப்புத் துறைகளிலிருந்து 8 உறுப்பினர்களைக் கொண்ட துறையிடைக் குழு இச்சாலைப் பாதுகாப்பு நிதியை மாவட்ட ஆட்சியர், காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு பகிர்ந்தளிக்கிறது.

அரசாணை (நிலை) எண் 198, உள் (போ.வ.5)த் துறை நாள் 13-3-2018-ன்படி சாலைப் பாதுகாப்பு நிதியை அரசு காலாவதியாகாத சாலைப் பாதுகாப்பு நிதியாக உருவாக்கியுள்ளது. இந்நிதி இணக்கக் கட்டணம் மற்றும் உடனடி அபராதங்கள் ஆகியவற்றின்கீழ் வசூலிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதம் ஆகும். மேலும், இந்நிதியை அரசின் பொது கணக்கின்கீழ் போக்குவரத்து ஆணையர் நிருவகிக்கிறார்.

2019-2020 ஆம் நிதியாண்டில் சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் கீழ்க்காணும் கருத்துருக்கள் (ரூ.65.00 கோடியில்) ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

விவரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
3-10-2019 அன்று நடைபெற்ற 46-வது துறையிடைக் குழுவில் ஒப்பளிக்கப்பட்ட தொகை	37.88
10-1-2020 அன்று நடைபெற்ற 47-வது துறையிடைக் குழுவில் ஒப்பளிக்கப்பட்ட தொகை	23.12
ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை	61.00
மீதமுள்ள தொகை	4.00

(ஓ) சாலைப் பாதுகாப்பு வாரம்

சாலையைப் பயன்படுத்துபவரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு, 31-வது சாலைப் பாதுகாப்பு வாரம் 20-1-2020 முதல் 27-1-2020 (26-1-2020 தவிர) வரை கொண்டாடப்பட்டது.

சாலையைப் பயன்படுத்துவோரிடையே ஆண்டு முழுவதும் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் தலா ரூ.5.00 இலட்சமும் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையருக்கு ரூ.5.00 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.160.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சாலையைப் பயன்படுத்துவோரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை ஆண்டு முழுவதும் ஏற்படுத்தும்பொருட்டு, அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.86.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில், 295 சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்துதல், ஓலா, ஊபர் ஈட்ஸ், மேக்ஸிகேப் வாகன ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தலைக்கவச பேரணி, தலைக்கவசம் மற்றும் இருக்கைப்பட்டை

2020 மார்ச் 24]

அணிவதன் அவசியத்திற்கான பிரச்சாரம், சாலைப் பாதுகாப்பு விதிகளை சாலையை பயன்படுத்துபவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஔ) அவசர கால ஊர்தி 108 சேவைமூலம் துரித விபத்து நிவாரண சிகிச்சை

சாலை விபத்துகளில் சிக்கிய விலை மதிப்பில்லாத உயிர்களைப் காப்பாற்றும்பொருட்டு 2002 ஆம் ஆண்டில் அவசர விபத்து நிவாரண சிகிச்சை மையங்கள் என்ற திட்டம் துவக்கப்பட்டது. இம்மையங்கள், ஒவ்வொரு 50 கி.மீ. தூர இடைவெளியில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இம்மையம் அமைக்கப்பட்டதன் நோக்கமானது, சாலை விபத்துகளில் பாதிப்புக்குள்ளான விலைமதிப்பற்ற உயிர்களை “பொன்னான நேரத்தில்" (Golden Hour) காப்பாற்றி, பின் அவர்களின் விருப்பப்படி அருகிலுள்ள மருத்துவமனைகளில் மேல்சிகிச்சைக்காக அனுப்புவதாகும். இம்மையங்களில் உயிர் பாதுகாக்கும் முக்கிய மருந்துகளுடன்கூடிய ஓர் அவசர சிகிச்சை ஊர்தியுடன், பாராமெடிக்கல் பணியாளர் மற்றும் அவசர சிகிச்சை ஊர்தி ஓட்டுநர் அடங்கிய குழுவினர் 24 மணி நேரமும் பணியாற்றி சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி முதலுதவி சிகிச்சை அளித்து வருகின்றனர். இம்மையங்களுக்கு பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் மூலம் கட்டணமில்லா தொலைபேசி எண் 1073 வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இதுபோன்று 18 மையங்கள் இயங்கி வருகின்றன.

தற்போது, சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர கால ஊர்தி 108-ன்மூலம் சேவை செய்யப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் மொத்தம் 938 அவசர கால ஊர்திகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 735 அடிப்படை உயிர் பாதுகாப்பு அவசர கால ஊர்திகளும், 62 மேம்படுத்தப்பட்ட உயிர் பாதுகாப்பு அவசர கால ஊர்திகளும், 65 பச்சிளம் குழந்தைகள் உயிர் பாதுகாப்பு அவசர கால ஊர்திகளும் மற்றும் 76 அவசர கால ஊர்திகளும் அடங்கும். மேலும், நெரிசல் அதிகமான முக்கிய நகரங்களில் 41 இருசக்கர அவசர கால வாகனங்களும் இயங்குகின்றன. இதைத்தவிர, மாநிலம் முழுவதும் 10,000 தனியார் அவசர கால ஊர்திகள் இயங்கி வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் இந்த

வசதிமூலம் 6,85,317 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இவற்றில் சாலைப் போக்குவரத்தில் விபத்துக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1,19,964. மாதத்தில் சராசரியாக சாலைப் போக்குவரத்து விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களை 108 அவசர கால ஊர்திமூலம் கொண்டுசெல்லும் வழியில் இறப்பவர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 115 ஆக இருந்தது 2019 ஆம் ஆண்டில் 38 ஆகக் குறைந்துள்ளது. விபத்துக்குள்ளானவர்களை எடுத்துச் செல்ல 108 அவசர கால ஊர்தி வரும் நேரம் சராசரியாக 2017-ல் 15 நிமிடங்கள் 2 நொடிகளாக இருந்தது, 2019-ல் 13 நிமிடங்கள் 31 நொடிகளாகக் குறைந்துள்ளது.

வாகனப் பெருக்கத்திற்கு இடையேயும், 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாலை விபத்துகளினால் ஏற்பட்ட 13,746 உயிரிழப்புகள் 2019 ஆம் ஆண்டில் 10,525 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை மற்றும் காவல் துறையினரின் சாலைப் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் செயலாக்க நடவடிக்கை மூலமாக இவ்விலக்கினை அடைய முடிந்தது. சாலை விபத்துகள் மற்றும் சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது முறையே 10.47 சதவீதம் மற்றும் 13.84 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. விபத்துகள் மற்றும் விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகள் விவரங்கள் பிற்சேர்க்கை X-லிருந்து XIII வரை கொடுக்கப்பட்டுள்ளன.

(அஅ) பள்ளிப் பாட அட்டவணையில் சாலைப் பாதுகாப்பு பற்றிய பாடத்திட்டம்

குழந்தைகள் மற்றும் நடுத்தர வயதினருக்கு ஏற்படும் உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணமாக சாலை விபத்துக் காயங்கள் அமைந்துள்ளன. சாலை விபத்துகளைக் குறைப்பதற்காக 14 வயதிற்கும்கீழ் உள்ள மாணவ, மாணவியர்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக அவசியமெனக் கருதி 1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள பள்ளிப் பாடத்திட்டங்களில், சாலைப் பாதுகாப்பு தொடர்பான பாடங்கள் சேர்க்கப்பட்டு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு 2018-2019 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பாடப் புத்தகங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு, கீழ்க்கண்ட கால அட்டவணைப்படி பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது:

வ.எண்	வகுப்பு	கல்வி ஆண்டு
1.	*I,VI,IX மற்றும் XI*	*2018-2019*
2.	*II,VII,X மற்றும் XII*	*2019-2020*
3.	*III,IV,V மற்றும் VIII*	*2020-2021*

நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க போக்குவரத்து ஆணையரின் அறிவுரைகளின்படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளி வாகனங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

(அஆ) பள்ளிகளில் சாலைப் பாதுகாப்பு மன்றம் உருவாக்குதல்

இளம்பருவத்திலேயே மாணவர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதால், அவர்கள் சாலைப் பாதுகாப்பு விதிகள் குறித்து அறிந்துகொள்வது மட்டுமல்லாமல் இதர மற்றவர்களுக்கும் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த செய்திகளைப் பரப்புவார்கள். விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கும்பொருட்டு, அனைத்து பள்ளி மாணவர்களிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த செய்திகளைப் பரப்பும்பொருட்டு அனைத்து பள்ளிகளிலும் சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்த மன்றம் மாணவர்களிடையே முதலுதவி பயிற்சி மற்றும் பாதுகாப்பான வாகன இயக்கம் குறித்த மனநிலை மாற்றம் குறித்து முக்கிய கவனம் செலுத்துகிறது. இம்மன்றத்தின் முக்கிய நோக்கம் மாணவர்களிடையே சாலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவது மற்றும் அவர்களது அறிவினை மேம்படுத்தி திறமையை ஊக்கப்படுத்தி விபத்துகளைக் குறைப்பதாகும். ஒவ்வொரு மாணவருக்கும் இச்செய்தி சென்றடைந்து அதனால் சாலை விபத்தில் எவரும் உயிரிழக்கா வண்ணம் செயல்பட வைப்பதாகும். மாணவர்கள் எதிர்காலம் குறித்து, “கற்பித்தல், தெளிவடைதல் மற்றும் அதிகாரம் அளித்தல்" போன்ற செய்திகள் அவர்களுக்கு சென்றடையச் செய்ய வேண்டும்.

கல்வி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் அவர்களின் தலைமையின்கீழ் சென்னையில் கடந்த ஆண்டு சாலைப் பாதுகாப்பு மன்றங்கள் துவக்கி வைக்கப்பட்டன. இது தமிழகத்தில் ஏறத்தாழ 7,000 அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும்

மேல்நிலைப் பள்ளிகளில் நிறுவப்பட்டு, அதனால் கிட்டத்தட்ட 7 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

(அஇ) வாகன எண் பலகை கண்டறியும் தானியங்கி கேமராக்கள் (ANPR)

செங்கல்பட்டு முதல் திருச்சி வரையுள்ள தேசிய நெடுஞ்சாலையில் தானியங்கும் கேமராக்களைக் கொண்ட போக்குவரத்து செயலாக்க அமைப்பு மற்றும் அதன் கட்டுப்பாட்டு அறை அமைக்கும்பொருட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி கட்டுப்பாட்டு அறையிலிருந்து சாலைப் பாதுகாப்பு விதிகளை மீறுபவர்கள் தானியங்கி கேமராக்கள்மூலம் கண்காணிக்கப்பட்டு, அபராதத் தொகை மின்னணு செலுத்துச் சீட்டு, தபால், மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி வாயிலாக விதி மீறுபவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். இந்த அபராதத் தொகையை இணையதளம் அல்லது வங்கி மூலமாக செலுத்தலாம்.

12. வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசினை கட்டுப்படுத்துதல்

எதிர்வரும் 1-4-2020 முதல் இருசக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், இலகு ரக, நடுத்தர மற்றும் கனரக வாகனங்கள் பாரத் நிலை–VI தரத்தின்படி புகை வெளியீட்டு அளவு உடைய வாகனங்கள் மட்டுமே தமிழகம் முழுவதும் வாகனப் பதிவுகள் செய்யப்படும். உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, உழுவை வாகனங்கள் மற்றும் கட்டுமான வாகனங்களுக்கு 1989 ஆம் ஆண்டின் மத்திய மோட்டார் வாகன விதிகளில், விதி 115A-ன்கீழ் குறிப்பிட்டுள்ள புகை வெளியீட்டு அளவு பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் வாகனப் பதிவுகள் மேற்கொள்ளப்படும். மேலும், மாசில்லாத சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கும்பொருட்டு தமிழ்நாட்டில் மின்சார வாகனங்கள் (மின்கலம் மூலமாக இயங்கும் வாகனங்கள்) பதிவு செய்யப்படுகின்றன. புகைக் கட்டுப்பாடு சான்று வழங்கும் புகை பரிசோதனை நிலையங்கள் “வாகன்” (பெயர்ப்பு-4) தரவுதளம்மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

சென்னை பெருநகரம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், டீசலினால் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. சென்னை பெருநகரில் திரவ எரிவாயு/பெட்ரோல்மூலம் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மட்டும் புதிய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு

வருகிறது. தற்போது, சென்னை பெருநகரில் பெட்ரோல்மூலம் இயங்கிவரும் ஆட்டோ ரிக்ஷாக்களை திரவ எரிவாயுமூலம் இயங்கும் ஆட்டோ ரிக்ஷாக்களாக மாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால், பொதுமக்களுக்கு காற்று மாசுபடுதல் ஒரு முக்கிய அச்சுறுத்தலாகத் திகழ்கிறது. நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனோ ஆக்ஸைடு மற்றும் இதர விஷ மாசுபடுத்திகள் பொதுமக்களின் உடல்நலத்திற்குக் கேடு விளைவிக்கும். புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிவு செய்த நாளிலிருந்து ஓராண்டு வரை புகைக் கட்டுப்பாடு சான்று பெற விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் இச்சான்றிதழ் பெறப்பட வேண்டும். இதுவரை, 367 தனியார் புகை பரிசோதனை மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சரகவாரியான தனியார் புகை பரிசோதனை மையங்கள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

13. அதிவேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவி மற்றும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் செயல்பாடு

போக்குவரத்து வாகனங்களில் அதிவேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளைப் பொருத்துவதால் சாலை விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் குறையும். வாகனத்தை ஆய்வு செய்யும் அலுவலர்கள் வாகனத்திற்கு தகுதிச் சான்றிதழ் அளிக்கும்போது, அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி வேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவி செயல்படுவதையும், அதே கருவி மற்றொரு வாகனத்தில் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக அதிவேகத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளைப் பொருத்துவது “வாகன்” மென்பொருளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

14. மாண்புமிகு முதலைமைச்சர் விருது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 5-3-2018 முதல் 7-3-2018 வரை நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில், சாலை விபத்துகள் மற்றும் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்கும் மூன்று மாவட்டங்களுக்கும் மற்றும் ஒரு காவல் ஆணையருக்கும் முதலமைச்சர் விருது வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி அரசாணை (நிலை) எண் 1810, உள் (போ.வ.5)த் துறை,

[2020 மார்ச் 24

நாள் 8-10-2018-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு முதல் மூன்று மாவட்டங்களுக்கு கேடயத்துடன்கூடிய பரிசுத் தொகையாக தலா ரூ.25.00 இலட்சம், ரூ.13.00 இலட்சம், ரூ.10.00 இலட்சம் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மாவட்டங்களுக்குக் கொடுக்கவும், ஒரு காவல் ஆணையருக்கு ரூ.15.00 இலட்சத்துடன் கேடயமும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்விருதுத் தொகையை மாவட்ட ஆட்சியரும், காவல் ஆணையரும் சாலைப் பாதுகாப்பு சம்பந்தமான பணிகளுக்குப் பயன்படுத்துவார்கள்.

15. 2020 ஆம் ஆண்டின் சாலைப் பாதுகாப்பு இலக்கு

இந்தியா உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் 2015 செப்டம்பர் 25 அன்று நடைபெற்ற நீடித்த நிலையான வளர்ச்சி உச்சி மாநாட்டில், வறுமையை முடிவிற்குக் கொண்டுவருவதற்கும், சமத்துவமின்மை மற்றும் அநீதிக்கு எதிரான போராட்டம் மற்றும் 2030-க்குள் கால நிலை மாற்றத்தை சமாளிப்பதற்கும் 2030 நிகழ்ச்சி நிரலினை ஏற்றுக் கொண்டன. 2030-க்கான நிகழ்ச்சி நிரலில் 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள், 169 இலக்குகள் மற்றும் 300-க்கும் மேற்பட்ட குறிகாட்டிகள்.

தமிழக அரசு சாலைப் பாதுகாப்பில் நிலையான வளர்ச்சி இலக்கினை அடைவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இலக்கு 3: ஆரோக்கியமான வாழ்விற்கான உடல்நலம் பேணுதல் மற்றும் அனைத்து வயதினருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல்

இலக்கு 3.6: சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களை பாதியாகக் குறைத்தல்

சாலை விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்கைக் குறைப்பதற்கு பொறியியல், கல்வி, அவசர சிகிச்சை மற்றும் செயலாக்க நடவடிக்கைகளை உள்ளடக்கிய விரிவான நடைமுறையைப் பின்பற்றுவதன்மூலம் இவ்வரசு ஏற்கெனவே சாலைப் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்தியுள்ளது. சாலைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைபடுத்த பின்வரும் நிறுவன ஏற்பாடுகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுகின்றன:

2020 மார்ச் 24]

- மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு
- மாநில சாலைப் பாதுகாப்புக் குழு
- மாண்புமிகு உச்ச நீதிமன்ற சாலைப் பாதுகாப்புக் குழுவின் முன்னணி நிறுவனம்
- சாலை விபத்து தகவல் மேலாண்மைத் திட்டம்
- சாலைப் பாதுகாப்பு நிதி
- 108 அவசர கால ஊர்தி சேவைமூலம் அவசர விபத்து நிவாரண சிகிச்சை

மேலும், பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வைக் கொண்டு செல்வதற்கு சாலைப் பாதுகாப்பு வாரம் 20-1-2020 முதல் 27-1-2020 (26-1-2020 தவிர) வரை கடைப்பிடிக்கப்பட்டது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் போக்குவரத்துத் துறை இத்தகைய திட்டங்கள்/விழிப்புணர்வு நடவடிக்கைகளால் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களை பாதியாகக் குறைக்க முடியும் என இலக்கோடு செயல்படுகிறது.

16. முடிவுரை

இம்மாநிலம் சாலைப் பாதுகாப்பில், பாதுகாப்பான அணுகுமுறையைப் பின்பற்றுவதற்காக, பாதுக்காப்பான சாலைகள், பாதுகாப்பாக வாகனங்களை இயக்குதல், பாதுகாப்பான வாகனங்கள் போன்றவற்றையும் மற்றும் 5E மாதிரி, அதாவது இயந்திரம் (போக்குவரத்து), பொறியியல் (சாலைகள்), செயலாக்கம் (காவல்), அவசர சிகிச்சை (அவசர சிகிச்சை மையங்கள் மற்றும் அவசர கால ஊர்தி) மற்றும் கல்வி (விழிப்புணர்வு) ஆகியவற்றைப் பின்பற்றுகிறது. ஒரு வலுவான தொழில்நுட்பத்துடன்கூடிய கட்டமைப்பும் பல்வேறு அரசுத் துறைகளின் முயற்சிகளை ஒருங்கிணைத்தும், தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடனும், சமூக ஆர்வலர்களின் ஈடுபாட்டுடனும், ஓட்டுநர்கள் மற்றும் பாதசாரிகளின் அணுகுமுறைகளை மாற்றும் முயற்சியின் மூலமும் "2020-ல் சாலைப் போக்குவரத்து விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களை பாதியாகக் குறைக்கவும்" என்ற இலக்கினை அடைய முடியும்.

பிற்சேர்க்கை-I

போக்குவரத்துத் துறையின்கீழ் செயல்படும் அலுவலகங்களின் விவரம்

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
1.	சென்னை (வடக்கு) வ.போ. அ.-9 வ.போ.அ (செ)-1 ப.அ.-2 சோ.சா-4	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. சென்னை (கிழக்கு)		
			2. சென்னை (மையம்)		
			3. சென்னை (வடக்கு)		
			4. சென்னை (வடமேற்கு)		
			5. சென்னை (வடகிழக்கு)		
			6. திருவள்ளூர்	திருத்தணி	திருத்தணி பாலவாக்கம்
			7. செங்குன்றம்	கும்மிடிப்பூண்டி	பெத்திக் குப்பம்
			8. பூந்தமல்லி		பூந்தமல்லி
			9. அம்பத்தூர்		
			10.வ.போ.அ (செ)		
2.	சென்னை (தெற்கு) வ.போ. அ-11 வ.போ.அ (செ)-1 ப.அ.-2		1. சென்னை (தெற்கு)		

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
			2. சென்னை (மேற்கு)		
			3. சென்னை (தென்மேற்கு)		
			4. சென்னை (தென்கிழக்கு)		
			5. மீனம்பாக்கம்		
			6. குன்றத்தூர்		
			7. தாம்பரம்		
			8. காஞ்சிபுரம்		
			9. செங்கல்பட்டு	மதுராந்தகம் திருக்கழுக்குன்றம்	
			10. சோழிங்கநல்லூர்		
			11. ஸ்ரீபெரும்புதூர்		
			12.வ.போ.அ.(செ)		
3.	விழுப்புரம் வ.போ. அ.-7, வ.போ.அ. (செ)-1 ப.அ.-6 சோ.சா-1		1. விழுப்புரம்		
			2. உளுந்தூர்பேட்டை	கள்ளக்குறிச்சி	
			3. திண்டிவனம்	செஞ்சி	திருச்சிற்றம்பலம்
			4. கடலூர்	பண்ருட்டி நெய்வேலி	
			5. திருவண்ணா மலை		
			6. சிதம்பரம்	விருத்தாசலம்	
			7. ஆரணி	செய்யாறு	
			7. வ.போ.அ.(செ)		
4.	வேலூர் வ.போ. அ-5 வ.போ.அ (செ)-1 ப.அ.- 4 சோ.சா.-6	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), சென்னை	1. வேலூர்	குடியாத்தம்	சேர்க்காடு காட்பாடி
			2.வாணியம்பாடி	ஆம்பூர் திருப்பத்தூர்	
			3. ராணிப் பேட்டை	அரக்கோணம்	

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
			4. கிருஷ்ணகிரி		காளிக்கோயில்
			5. ஓசூர்		ஓசூர் (உள் வருகை) ஓசூர் (வெளிச் செல்லுதல்) பாகலூர்
			6.வ.போ.அ. (செ)		
5.	சேலம் வ.போ.அ. -7, வ.போ.அ. (செ)-1 ப.அ.- 4		1. சேலம் (கிழக்கு)		
			2. சேலம் (மேற்கு)	ஓமலூர்	
			3. ஆத்தூர்	வாழப்பாடி	
			4. சேலம் (தெற்கு)		
			5. சங்கரி		
			6. தருமபுரி	அரூர் பாலக்கோடு	
			7. மேட்டூர்		
			8.வ.போ.அ.(செ)		
6.	ஈரோடு வ.போ.அ. -7, வ.போ. அ. (செ)-1 ப.அ.-5 சோ.சா.-1		1. ஈரோடு (கிழக்கு)		
			2. ஈரோடு (மேற்கு)		
			3. பெருந்துறை		
			4. கோபிச் செட்டிபாளையம்	பவானி சத்தியமங்கலம்	பண்ணாரி
			5. நாமக்கல் (வடக்கு)	ராசிபுரம்	
			6. நாமக்கல் (தெற்கு)	பரமத்தி வேலூர்	
			7. திருச்செங்கோடு	குமாரபாளையம்	
			8.வ.போ.அ. (செ)		

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
7.	கோயம்புத்தூர் வ.போ.அ. -10 வ.போ.அ. (செ)-1 ப.அ.-6 சோ.சா.-6		1.கோயம்புத்தூர் (தெற்கு)	சூலூர்	கே.ஜி. சாவடி (உள் வருகை) கே.ஜி. சாவடி (வெளிச் செல்லுதல்)
			2.கோயம்புத்தூர் (வடக்கு)		
			3.கோயம்புத்தூர் (மையம்)		
			4.கோயம்புத்தூர் (மேற்கு)		
			5. திருப்பூர் (வடக்கு)	அவினாசி	
			6. திருப்பூர் (தெற்கு)	காங்கேயம்	
			7. தாராபுரம்	உடுமலைப் பேட்டை	
			8. பொள்ளாச்சி	வால்பாறை	கோபாலபுரம் வலந்தயாமரம்
			9. மேட்டுப்பாளையம்		
			10. ஊட்டி	கூடலூர்	தலைகுந்தா கூடலூர்
			11.வ.போ.அ.(செ)		
8.	தஞ்சாவூர் வ.போ.அ. -6, வ.போ.அ. (செ)-1 ப.அ. - 7	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்), ஸ்ரீரங்கம்	1. தஞ்சாவூர்	பட்டுக்கோட்டை	
			2. கும்பகோணம்		
			3. திருவாரூர்	மன்னார்குடி திருத்துறைப்பூண்டி	
			4. நாகப்பட்டினம்		
			5.மயிலாடுதுறை	சீர்காழி	
			6.புதுக்கோட்டை	அறந்தாங்கி இலுப்பூர் ஆலங்குடி	
			7.வ.போ.அ. (செ)		

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
9.	திருச்சி வ.போ.அ.-6, வ.போ.அ. (செ)-1 ப.அ.-8		1. திருச்சி (மேற்கு)	மணப்பாறை	
			2. திருச்சி (கிழக்கு)	திருவெறும்பூர்	
			3. திருவரங்கம்	துறையூர் முசிறி லால்குடி	
			4. கரூர்	குளித்தலை, மண்மங்கலம் அரவக்குறிச்சி	
			5. பெரம்பலூர்		
			6. அரியலூர்		
			7. வ.போ.அ. (செ)		
10.	மதுரை வ.போ.அ. -6,வ.போ.அ (செ)-1 ப.அ.-9 சோ.சா.-1		1. மதுரை (வடக்கு)	மேலூர் வாடிப்பட்டி	
			2. மதுரை (தெற்கு)	திருமங்கலம், உசிலம்பட்டி	
			3. மதுரை (மையம்)		
			4. பெரியகுளம்	உத்தமபாளையம்	லோயர் கேம்ப்
			5. திண்டுக்கல்	வேடசந்தூர் வத்தலகுண்டு நத்தம்	
			6. பழநி	ஒட்டன்சத்திரம்	
			7. வ.போ.அ.(செ)		
11.	விருதுநகர் வ.போ.அ.-5, வ.போ.அ. (செ)-1 ப.அ. -3		1. விருதுநகர்	அருப்புக்கோட்டை	
			2. சிவகங்கை	காரைக்குடி	
			3. ஸ்ரீவில்லிபுத்தூர்		
			4. ராமநாதபுரம்	பரமக்குடி	
			5. சிவகாசி		
			6. வ.போ.அ (செ)		
12.	திருநெல்வேலி வ.போ.அ.-8, ப.அ.-2 சோ.சா.-2		1.திருநெல்வேலி	வள்ளியூர்	

வ. எண்	சரக அலுவலகம்	செயலாக்கம்	வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்	பகுதி அலுவலகம்	சோதனைச் சாவடி
			2. தென்காசி	அம்பாசமுத்திரம்	புளியரை
			3. சங்கரன் கோவில்		
			4. தூத்துக்குடி		
			5. மார்த்தாண்டம்		களியக்கா-விளை
			6. நாகர்கோவில்		
			7. திருச்செந்தூர்		
			8. கோவில்பட்டி		
மொத்தம்	12	2	87	58	21

பிற்சேர்க்கை—II

31-1-2020 வரை போக்குவரத்துத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை
1.	போக்குவரத்து ஆணையர்	1
2.	கூடுதல் போக்குவரத்து ஆணையர்	1
3.	இணைப் போக்குவரத்து ஆணையர்	6
4.	இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலைப் பாதுகாப்பு)	1
5.	இணைப் போக்குவரத்து ஆணையர் (செயலாக்கம்)	2
6.	துணைப் போக்குவரத்து ஆணையர்	11
7.	தலைமை கணக்கு அலுவலர்	1
8.	கணக்கு அலுவலர்	105
9.	உதவி கணக்கு அலுவலர்	1
10.	உதவி இயக்குநர் (புள்ளியியல்)	12
11.	சட்ட அலுவலர்	1
12.	உதவி இயக்குநர் (உள் தணிக்கை)	1

13.	வட்டாரப் போக்குவரத்து அலுவலர்	1
14.	சாலைப் பாதுகாப்பு வழிகாட்டு முகமை (துணை இயக்குநர் (போக்குவரத்து) **உதவி பொறியாளர்/உதவி** பொறியாளர்/உதவி இயக்குநர்/காவல் ஆய்வாளர்/கண்காணிப்பாளர்)	5
15.	இயக்கூர்தி ஆய்வாளர்-நிலை-I	233
16.	இயக்கூர்தி ஆய்வாளர்-நிலை-II	181
17.	நேர்முக உதவியாளர்	116
18.	மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத)	77
19.	கண்காணிப்பாளர்	243
20.	புள்ளியியல் ஆய்வாளர்	2
21.	உதவியாளர்	620
22.	சுருக்கெழுத்து தட்டச்சர்	25
23.	இளநிலை உதவியாளர்	418
24.	தட்டச்சர்	182
25.	பரிசோதகர்	1
26.	வாசிப்பாளர் (Reader)	1
27.	காசாளர்	14
28.	பதிவுரு எழுத்தர்	148
29.	ஓட்டுநர்	124
30.	அலுவலக உதவியாளர்	348
31.	இரவுக் காவலர்	158
32.	துப்புரவுப் பணியாளர்	19
33.	ஓவியர்	1
	மொத்தம்	3060


பிற்சேர்க்கை-III

வாகனங்களின் விவரம்

நிதியாண்டு	போக்குவரத்து வாகனங்கள்	போக்குவரத்து அல்லாத வாகனங்கள்		மொத்த வாகனங்கள்	வாகனங்களின் எண்ணிக்கை அதிகாிப்பு (சதவீதத்தில்)
		இரு சக்கர வாகனங்கள்	பிற வாகனங்கள்		
2006-07	6,08,325	75,03,426	9,91,869	91,03,620	10.73
2007-08	7,06,869	82,60,019	11,02,122	1,00,69,010	10.60
2008-09	7,84,714	90,36,783	12,18,872	1,10,40,369	09.65
2009-10	8,33,948	99,69,598	13,53,415	1,21,56,961	10.11
2010-11	9,28,553	1,12,07,338	15,24,840	1,36,60,731	12.37
2011-12	10,01,025	1,26,59,928	17,07,672	1,53,68,625	12.50
2012-13	10,42,642	1,41,50,373	18,98,753	1,70,91,768	11.21
2013-14	11,34,446	1,55,95,140	20,77,919	1,88,07,505	10.04
2014-15	11,82,700	1,69,91,527	22,44,961	2,04,19,188	08.56
2015-16	12,13,007	1,84,00,635	24,20,138	2,20,33,780	07.91
2016-17	12,34,360	1,99,87,302	26,23,402	2,38,45,064	08.22
2017-18	12,28,259	2,15,86,210	28,47,087	2,56,61,556	07.62
2018-19	12,64,623	2,33,46,216	30,77,346	2,76,88,185	07.90
2019-20 (31.1.2020-ன்படி)	12,91,903	2,46,29,526	32,53,381	2,81,74,810	05.37


பிற்சேர்க்கை—IV

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



பிற்சேர்க்கை—V

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



பிற்சேர்க்கை—VI

31-1-2020-ன்படி தமிழ்நாட்டில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை

போக்குவரத்து வாகனங்கள்		**போக்குவரத்து அல்லாத வாகனங்கள்**	
பயணிப் பேருந்துகள்		**இரு சக்கர வாகனங்கள்**	
மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்து	20,944	மோட்டார் சைக்கிள்	1,55,23,032
தனியாரால் இயக்கப்படும் பயணிப் பேருந்து	7,590	ஸ்கூட்டர்	36,48,801
		மொபெட்	54,57,693
மொத்தம்	**28,534**		
சிற்றுந்து	**4,056**	**மொத்தம்**	2,46,29,526
ஒப்பந்த வாகனங்கள்		மோட்டார் கார்	27,09,731
ஆட்டோ ரிக்ஷா	2,93,700		
வாடகை சீருந்து	4,369	ஈப்பு	46,232
சுற்றுலா சீருந்து (மாநில அனுமதி)	1,13,538	டிராக்டர்	3,35,018
சுற்றுலா சீருந்து (தேசிய அனுமதி)	14,865	மூன்று சக்கர ஆட்டோ	4,358

போக்குவரத்து வாகனங்கள்		**போக்குவரத்து அல்லாத வாகனங்கள்**	
பயணிப் பேருந்துகள்		**இரு சக்கர வாகனங்கள்**	
மேக்ஸி கேப் (மாநில அனுமதி)	84,016	மூன்று சக்கர வாகனம்	62,942
மேக்ஸி கேப் (தேசிய அனுமதி)	6,311	நான்கு சக்கர வாகனம்	17,537
ஆம்னி பேருந்து (மாநில அனுமதி)	764		
ஆம்னி பேருந்து (தேசிய அனுமதி)	115	ரோடு ரோலர்	2,514
மொத்தம்	2,93,700		
பிற இனங்கள்			
தனியார் சேவை வாகனம்	12,753		
கல்வி நிறுவன பேருந்து	34,191	இதர வாகனங்கள் முதலியன	75,049
அவசர கால ஊர்திகள்	11,582		

போக்குவரத்து வாகனங்கள்		**போக்குவரத்து அல்லாத வாகனங்கள்**	
பயணிப் பேருந்துகள்		**இரு சக்கர வாகனங்கள்**	
தீயணைப்பு வாகனம்	1,694		
மொத்தம்	**60,220**		
சரக்கு வாகனங்கள்			
சுமையுந்து (மாநில அனுமதி)	2,68,239		
சுமையுந்து (தேசிய அனுமதி)	98,956		
உழுவை, இழுவை வண்டி	78,013		
இலகு ரக வாகனம்	2,20,410		
தொடர் வண்டி	15,797		
மொத்தம்	**6,81,415**		
போக்குவரத்து வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	**12,91,903**	போக்குவரத்து அல்லாத வாகனங்களின் மொத்த எண்ணிக்கை	**2,78,85,907**
வாகனங்களின் மொத்த எண்ணிக்கை			**2,91,74,810**

பிற்சேர்க்கை—VII


வருவாய் வளர்ச்சி (ரூபாய் கோடியில்)

வருவாய் ஆண்டு	ஆண்டு இலக்கு	மோட்டார் வாகன வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூல் செய்தது	வசூல் சதவிகிதம்	வளர்ச்சி விகிதம்
2006-07	1254.16	1272.69	101.47	12.61
2007-08	1441.00	1494.58	103.71	17.43
2008-09	1726.34	1718.81	99.56	15.05
2009-10	1995.00	2034.24	101.97	18.35
2010-11	2397.68	2666.94	111.41	31.10
2011-12	3235.25	3108.95	96.10	16.57
2012-13	4191.43	3876.99	92.50	24.70
2013-14	4583.02	3677.52	80.24	-5.14
2014-15	4279.53	3847.15	89.90	4.61
2015-16	4384.99	4234.24	96.56	10.06
2016-17	4733.07	4855.14	102.58	14.66
2017-18	5635.22	5362.91	95.17	10.46
2018-19	5918.82	5572.77	94.15	3.91
2019-20 (ஜனவரி முடிய)	6018.22	4715.79	87.48	3.26

பிற்சேர்க்கை—VIII

வருவாய் வளர்ச்சி

□ வருவாய் (ரூபாய் கோடியில்)



பிற்சேர்க்கை—IX

2019-2020 ஆம் (ஜனவரி முடிய) ஆண்டின் தலைப்பு வாரியாக வருவாய் வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)



பிற்சேர்க்கை — X


தமிழகத்தில் விபத்துகள் விவரம்

ஆண்டு	மொத்த வாகனங்களின் எண்ணிக்கை	மொத்த விபத்துகள்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள்	உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை	உயிரிழந்தவர்களின் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு சதவீதம்
2006	8851672	55145	10055	11009	12.80
2007	9807155	59140	11034	12036	9.33
2008	10789970	60409	11813	12784	6.21
2009	11820613	60794	12727	13746	7.53
2010	13220752	64996	14241	15409	12.10
2011	14861695	65873	14359	15422	0.08
2012	16625653	67757	15072	16175	4.88
2013	18286774	66238	14504	15563	-3.78
2014	19995382	67250	14165	15190	-2.40
2015	21558272	69059	14524	15642	2.98
2016	23354026	71431	16092	17218	10.08
2017	25147056	65562	15061	16157	-6.16
2018	25661847	16371	3047	3271	-21.14
2019	29012556	57228	9813	10525	-13.84
2020 (ஜனவரி முடிய)	29174810	4675	711	771	-22.36

பிற்சேர்க்கை—XI

(பத்தி 11.28-ஐ பார்க்கவும்)

மொத்த விபத்துகளுடன் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள் குறித்த ஒப்பீட்டு அட்டவணை



பிற்சேர்க்கை—XII

விபத்துகளை வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீட்டு அட்டவணை

ஆண்டு	தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் விவரம்			மொத்த வாகனங்களின் எண்ணிக்கை (31 டிசம்பர் அன்று நிலவரப்படி)	வாகனங்களுடன் ஒப்பீட்டு விபத்துகள் சதவீதம்	வாகனங்களுடன் ஒப்பீட்டு உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள் சதவீதம்	10,000 வாகனங்களுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை
	மொத்த விபத்துகள்	உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள்	உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை				
2004	52508	8733	9507	7205847	0.729	0.121	13
2005	53878	8844	9760	7966200	0.676	0.111	12
2006	55145	10055	11009	8851672	0.623	0.114	12
2007	59140	11034	12036	9807155	0.603	0.113	12
2008	60409	11813	12784	10789970	0.560	0.109	12
2009	60794	12727	13746	11820613	0.514	0.108	12
2010	64996	14241	15409	13220752	0.492	0.108	12
2011	65873	14359	15422	14861695	0.443	0.097	10
2012	67757	15072	16175	16625653	0.408	0.091	10
2013	66238	14504	15563	18286774	0.362	0.079	9
2014	67250	14165	15190	19995382	0.34	0.07	8
2015	69059	14524	15642	21558272	0.32	0.067	7
2016	71431	16092	17218	23354026	0.31	0.07	7
2017	65562	15061	16157	25147056	0.26	0.06	6
2018	63920	11375	12216	27141431	0.23	0.04	5
2019	57228	9813	10525	29012556	0.20	0.03	4

(i) 10000 வாகனங்களுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை	**(உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை * 10000) / வாகனங்களின் எண்ணிக்கை**
(ii) வாகனங்களுடன் ஒப்பீட்டு உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள் சதவீதம்	**(உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்துகள்* 100) / வாகனங்களின் எண்ணிக்கை**
(iii) வாகனங்களுடன் ஒப்பீட்டு விபத்துகள் சதவீதம்	**(மொத்த விபத்துகள்* 100) / வாகனங்களின் எண்ணிக்கை**

பிற்சேர்க்கை—XIII

31-1-2020 அன்றைய நிலவரப்படி சரகவாரியாக தனியார் வாகன புகை பரிசோதனை மையங்கள்

வ.எண்	சரகம்	வாகன புகை பரிசோதனை மையங்களின் எண்ணிக்கை
1.	சென்னை (வடக்கு)	36
2.	சென்னை (தெற்கு)	32
3.	விழுப்புரம்	25
4.	வேலூர்	20
5.	சேலம்	20
6.	தஞ்சாவூர்	19
7.	திருச்சி	25
8.	ஈரோடு	28
9.	கோயம்புத்தூர்	79
10.	மதுரை	32
11.	விருதுநகர்	17
12.	திருநெல்வேலி	34
	மொத்தம்	**367**

இணைப்பு XX

(55 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

அத்தியாயம்-1

முன்னுரை

1. மனித வாழ்க்கைக்கு உணவும் உறைவிடமும் போன்று போக்குவரத்தும் அடிப்படையானது. எனவே மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பல்வேறு வகையான போக்குவரத்து வசதிகளை விரும்புகின்றனர். உயர்ந்த மற்றும் சமத்துவமான சமூகங்கள், திறமையான மற்றும் குறைந்த கட்டணங்களைக் கொண்ட போக்குவரத்து அமைப்புகளைக் கொண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சி மற்றும் இணக்கமான சமூக தொடர்புகளுக்கு நன்கு ஒருங்கிணைந்த மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து அமைப்புகள் அவசியமாகும்.

மாநிலத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கும், நிதி முன்னேற்றத்திற்கும் முதுகெலும்பாகத் திகழ்வது சிறந்த போக்குவரத்து முறையே ஆகும். இது மக்கள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கு மட்டுமல்ல சமுதாயத்தின் உயர்வுக்கும் பொறுப்பாகும். இவ்வகையில், தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, திறமையான, குறைந்த கட்டணங்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதுப் போக்குவரத்து அமைப்பின்மூலம் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தினை மேம்படுத்திட பாடுபட்டு வருகின்றது. இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தமிழகம், குறைந்த கட்டணத்தில், மிகவும் சிறந்த முறையில் செயல்படும் பொதுப் போக்குவரத்து முறைமூலம் மாநிலம் முழுவதையும் இணைக்கும் வகையில் ஒரு முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் பேருந்து சேவை கிடைப்பதை உறுதி செய்துள்ளது.

1.2 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்துத் துறையின் நிலை

இந்தியாவில் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களுள் தமிழக அரசின் போக்குவரத்துத் துறை முதன்மையானதாகும். அரசு

[2020 மார்ச் 24

போக்குவரத்துக் கழகங்களின்மூலம் தினமும் சுமார் 1.7 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். இந்திய நகரங்களில் இயக்கப்படும் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் 60% மேல் தென்னிந்தியாவிலும் அதில் கணிசமான பங்கு தமிழ்நாட்டில் இயக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக அளவில் பயன்பாட்டில் உள்ள போக்குவரத்து மற்றும் இணைவமைப்புடன்கூடிய குறைந்த கட்டணங்களைக் கொண்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான பேருந்துகளை இயக்கி வருகின்றன. இத்துடன், அதிக எண்ணிக்கையிலான இரயில் வழித்தடம் மற்றும் விமான நிலையங்களுடன் சேர்த்து உலகின் மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புப் பகுதியாக தமிழ்நாடு விளங்குகின்றது.

1.3 தனிநபர் போக்குவரத்துப் பெருக்கத்தால் ஏற்பட்டுள்ள சவால்

மனித மேம்பாட்டு குறியீட்டு அட்டவணைகளில், பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு முதன்மையாக விளங்குகின்றது. மேலும், தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் பிற மாநிலங்களைவிட அதிகமாகும். இந்த உயர் தனிநபர் வருமானம், தனியார் கார் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் 5 மாநிலங்களில் ஒன்றாகவும், அதிக எண்ணிக்கையிலான இரு சக்கர வாகனங்கள் கொண்ட மாநிலமாகவும் மாறுவதற்கு வழி வகுத்துள்ளது. இந்தப் பொருளாதார வளர்ச்சி, பொதுப் போக்குவரத்தில் இருந்து தனியார் வாகனங்களுக்கு அதிக அளவில் இடம்பெயர்தலின் விளைவாக நகரங்களில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. சென்னையில் 2008 முதல் 2018 வரை மொத்த மோட்டார் வாகன எண்ணிக்கை 1,00,69,010-லிருந்து 2,56,61,847 ஆக அதிகரித்துள்ளது. அதே காலகட்டத்தில் பேருந்து பயணிகளின் பங்கானது 26% முதல் 22.6% வரை குறைந்துள்ளது.

1.4 நோக்கங்கள்

மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நம்பகமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய போக்குவரத்து முறையை ஏற்படுத்த போக்குவரத்துத் துறை உறுதிபூண்டுள்ளது. தமிழக அரசின் தொலைநோக்கு 2023 திட்டத்தில் வரையறுக்கப்பட்ட, பொதுப் போக்குவரத்தின் இலக்கினை அடைய இத்துறை முயற்சி மேற்கொண்டுள்ளது.

2020 மார்ச் 24]

இவ்வகையில், போக்குவரத்துத் துறை கொள்கைகளையும், திட்டங்களையும் மற்றும் பிற துறைகளுக்கான ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. மேலும், போக்குவரத்துத் துறை, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து, புதிய யுத்திகளை வகுத்து செயல்பட்டு வருகிறது. இதனால் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமின்றி, ஒட்டுமொத்த பொதுப் போக்குவரத்தின் பயண அனுபவத்தையும் மேம்படுத்தலாம்.

போக்குவரத்துத் துறை கீழ்க்கண்ட பரந்த நோக்கங்களைக் கொண்டு செயல்படுகின்றது:


1. தொலைநோக்குப் பார்வையை செயல்படுத்துவதே போக்குவரத்துத் துறையின் கொள்கையாகும்.
2. பேருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கு நிதி உதவியளித்தல் மற்றும் அவற்றை இயக்க தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், இதன்மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த, நம்பகமான மற்றும் திறமையான போக்குவரத்து வசதியை ஏற்படுத்துதல்.
3. பல்வேறு வகையான போக்குவரத்துகளின் இணைப்பினை மேம்படுத்துதல்.
4. நம்பகத்தன்மை, பாதுகாப்பு, பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் பயணிகளின் தகவல் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் போக்குவரத்துச் செயல்பாட்டினை மேம்படுத்துதல்.

1.5 போக்குவரத்துத் துறையின் நிறுவன அமைப்பு

போக்குவரத்துத் துறை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் முதன்மைச் செயலர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இத்துறையில் ஒரு இணைச் செயலாளர், ஒரு துணைச் செயலாளர், 4 சார்புச் செயலாளர்கள் என 79 நிருவாகப் பணியாளர்கள் உள்ளனர். மேலும் தலைவர் அலுவலகத்தில் ஓர் அலுவலர் மற்றும் 6 பணியாளர்கள் உள்ளனர்.

போக்குவரத்துத் துறை கீழ்க்கண்ட அமைப்புகளை நிருவகித்து வருகின்றது.

[2020 மார்ச் 24



போக்குவரத்துத் துறையின் முதன்மைச் செயலாளர், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலுவல் வழித் தலைவராகவும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநராகவும் செயல்படுகிறார்.

அத்தியாயம்-2

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு பார்வை

2.1 திறமையான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தை வழங்குவது போக்குவரத்துத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய குறிக்கோளாகும். 8 அரசு போக்குவரத்துக் கழகங்கள் மாநகர, நகர, புறநகர், விரைவு மற்றும் மலைப் பகுதி போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் ரயில்வே மற்றும் விமான நிலைய திட்டங்கள் தொடர்பாக மாநில அரசின் ஒருங்கிணைப்பு முகமையாக போக்குவரத்துத் துறை உள்ளது.

2.2 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக வரலாறு

பொதுப் போக்குவரத்துத் துறையின் நிலையினை ஆராய்வதற்கு ஆங்கிலேய அரசால் 1944 ஆம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பொதுப் போக்குவரத்துத் துறையானது தனியார்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் சேவை நோக்கமின்றி, இலாப நோக்கில் இயங்கியதால் போக்குவரத்தினை தேசியமயமாக்க மேற்படி குழு பரிந்துரைத்தது. அதனடிப்படையில், சென்னை மாகாணத்தில் இயக்கப்பட்ட 239 தனியார் பேருந்துகள் 24-03-1947 அன்று தேசியமயமாக்கப்பட்டன. மாநிலங்கள் சீரமைக்கப்பட்டதை அடுத்து, "அரசு பேருந்து சேவை" என்பது "மாநில போக்குவரத்துத் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தன்னாட்சி அமைப்பாக செயல்பட்டு, திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஏதுவாக அரசு போக்குவரத்துத் துறை, பொதுத் துறை நிறுவனமாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில், சென்னை மற்றும் செங்கல்பட்டில் இயங்கி வந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிருவாகம், கம்பெனிகள் சட்டம் 1956-இன்கீழ் கொண்டுவரப்பட்டு, பல்லவன் போக்குவரத்துக் கழகம் என பெயரிடப்பட்டது. இதுவே பிற போக்குவரத்துக் கழகங்கள் உருவாக வழி வகுத்தது.

2.3 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நோக்கங்கள்

பயனாளிகளுக்கு ஏதுவான, குறைந்த கட்டணம், திறமையான, சமநிலைப்புத் தன்மையுடைய, பொருளாதார சாத்தியமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்து போக்குவரத்தினை உருவாக்கிட தமிழக அரசின் போக்குவரத்துத் துறை முன்மொழிந்துள்ளது.

பயணிகளின் இருப்பிடம், வேலை செய்யும் இடம் மற்றும் வர்த்தக அமைப்பு ஆகியவற்றிற்கு பேருந்து சேவைகள் சென்றடைவதற்கு இத்துறை முயன்று வருகின்றது.

2.4 ஒரு நீடித்த பொதுப் போக்குவரத்து முறைக்கான தேவையான கொள்கைகள்

சுயச்சார்புடைய பேருந்து போக்குவரத்தினை ஏற்படுத்துவதன் வாயிலாக பயணிகள் அனைத்து பகுதிகளுக்கும் செல்வதற்கு தடையற்ற இணைப்பு மற்றும் சிறந்த பயண அனுபவத்தைத் தருவதே அரசின் நோக்கங்களாகும். பேருந்துகள் சரியான நேரத்தில் இயக்குவதன்மூலம் பயண நேரங்களைக் குறைத்தல், அதிகப்படியான பகுதிகளுக்கு பேருந்து சேவைகளை வழங்குதல் மற்றும் கடைக்கோடி பகுதிகளுக்கும் பேருந்து சேவை அளித்தல் ஆகியவை பொதுப் போக்குவரத்துத் துறையிலுள்ள சவால்களாகும். அதிக போக்குவரத்து இணைப்பு மற்றும் பல்வகை போக்குவரத்தினை வழங்குதல், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்குவதின்மூலம் அதிக பாதுகாப்பு மற்றும் சிறந்த பயண வசதிகளை ஏற்படுத்தித் தருதல், தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினை மேம்படுத்துவதன்மூலம் மேற்கண்ட நோக்கங்களை அடைந்திட முடியும். தற்போதுள்ள, வழித் தடங்களைக் கணக்கிடுதல் மற்றும் கடைக்கோடி வரையுள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தருவதும் அரசின் நோக்கங்களில் ஒன்றாகும். மோட்டார் வாகன போக்குவரத்து அல்லாத போக்குவரத்தை ஊக்குவித்தலும், தனிநபர் போக்குவரத்தினைக் குறைத்தலும், நகரங்களில் பொதுப் போக்குவரத்தின் பங்கினை உயர்த்துவதும் அரசின் நோக்கங்களாகும். பொதுப் போக்குவரத்தில் குறிப்பாக பேருந்து சேவைகளில் நம்பகத்தன்மை மற்றும் வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் இவற்றினை அடைய அரசு உத்தேசித்துள்ளது. கடைக்கோடியிலுள்ள பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்துதல், பயனாளிகளுக்கு ஏதுவான தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்மூலம் பேருந்து சேவைகளை உயர்த்திடவும், சிறந்த பயண அனுபவத்தைப் பெற்றிடவும் முடியும். பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்பில் அதிக அளவிலான முதலீட்டின் தேவையினை அரசு உணர்ந்துள்ளதால் சாலைகளை மேம்படுத்துதல், சிறந்த பேருந்துகளைக் கொள்முதல் செய்தல், உருவாக்குதல், நடைபாதை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் கணிசமான அளவு முதலீடுகள் செய்துள்ளது.

2020 மார்ச் 24]

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்திடவும் அதற்கான நிதியினைப் பெற்றிடவும் உலக வங்கி, ஜப்பான் சர்வதேச ஒருங்கிணைப்பு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் நிதி நிறுவனம் (KfW) போன்ற பன்னாட்டு முகமைகளுடன் அரசு இணைந்து செயல்படுகிறது. சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் குறைக்கவும், பருவநிலை மாற்றத்திற்கு எதிராக பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேட்டினைக் குறைத்திடவும், மின்சாரப் பேருந்துகளை அறிமுகம் செய்தல் போன்ற பசுமை முயற்சிகள் அரசின் முன்னுரிமையாகவும் உள்ளது.

2.5 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள்

தமிழக அரசின் போக்குவரத்துத் துறை, பொதுப் போக்குவரத்தில் முன்னணித் துறையாக விளங்குகின்றது. தமிழ்நாடு அரசின் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள், மாநிலத்தின் ஒவ்வொரு கிராமங்களுக்கு போக்குவரத்து வசதியும், நகர்ப்புறங்களிலுள்ள அனைத்து பகுதிகளையும் இணைத்து, அண்டை மாநிலங்களுக்கும் மற்றும் மாவட்டங்களுக்கிடையேயும் அதிகப்படியான இணைப்புகளை வழங்குகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களில் நாளொன்றுக்கு 1.64 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். இந்தியாவிலேயே அதிக அளவில் பேருந்து பயன்பாடு மற்றும் மிகச் சிறந்த சேவையுடன்கூடிய குறைந்த கட்டணங்களை தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கொண்டுள்ளன.

அரசு போக்குவரத்துக் கழகங்களின்மூலம் 31-01-2020 அன்றுள்ளவாறு 1,448 உபரி பேருந்துகள் உள்பட 20,944 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 31-01-2020 அன்றுள்ளவாறு வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகளின் எண்ணிக்கை 19,496 ஆகும். அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களும் நாளொன்றுக்கு சராசரியாக 84.07 இலட்சம் கி.மீ. தூரத்திற்கு பேருந்துகளை இயக்குகின்றன. 31-01-2020 அன்றுள்ளவாறு, பதிலி பணியாளர்களையும் சேர்த்து மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1,26,089 ஆகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால், செயல்பாட்டுத்திறன் குறியீடுகள் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளன. மார்ச் 2011-ல், ஒரு லிட்டருக்கு 5.25 கிலோ மீட்டராக இருந்த எரிபொருள் இயக்கத் திறன், ஜனவரி 2020 இல், ஒரு லிட்டருக்கு 5.33 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஒன்றுக்கு ஓடிய தூரம் மார்ச்

2011 இல் 1.65 இலட்சம் கிலோ மீட்டராக இருந்த அளவுகோல், ஜனவரி 2020 இல் 2.53 இலட்சம் கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது.

2.6 போக்குவரத்துத் துறையின் சமீபத்திய முயற்சிகள்

தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின்கீழ் இயங்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள் கடந்த சில காலாண்டுகளில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

அ) புதிய பேருந்துகள்

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில், 5,000 பேருந்துகள் ரூபாய் 1,502 கோடி செலவில் அரசால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதனால் அரசு பேருந்துகளின் சராசரி வயது 6.1 ஆண்டாகக் குறைந்துள்ளது. மேற்படி பேருந்துகள் அனைத்தும் AIS 052 வடிவமைப்பினைக் கொண்டது. இப்பேருந்துகள் பொதுமக்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

ஆ) பயணிகள் தகவல் அமைப்பு (LAMB)

பயணிகள் தகவல் அமைப்பினை அனைத்து அரசு பேருந்துகளிலும் செயல்படுத்திட போக்குவரத்துத் துறை முடிவெடுத்துள்ளது. இதற்காக "Locate and Access my Bus" எனும் செல்லிடப் பேசி மற்றும் இணையதள செயலிமூலம் பேருந்துகள் செல்லுமிடம் மற்றும் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வரும் நேரங்களை அறிந்துக்கொள்ளலாம்.

இ) குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 48 குளிர்சாதனப் பேருந்துகளையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் மண்டலத்தில் 2 குளிர்சாதனப் பேருந்துகளையும் குறிப்பிட்ட வழித்தடங்களில் அறிமுகப்படுத்தியுள்ளன. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் அண்டை மாநிலங்களுக்கிடையே 240 குளிர்சாதனப் பேருந்துகளில் 34 படுக்கை வசதியுடன்கூடிய பேருந்துகளை இயக்குகின்றன. பிற அரசு போக்குவரத்துக் கழகங்களும் 100 குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குகின்றன. குளிர்சாதனப் பேருந்துகள் கூடுதலாக போக்குவரத்துக் கழகங்களில் இணைக்கப்படும்.

2020 மார்ச் 24]

ஈ) சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

விபத்தில்லா பேருந்து இயக்கத்தை அடைய போக்குவரத்துத் துறை உறுதிபூண்டுள்ளது. இதனைச் செயல்படுத்திட அரசு பேருந்துகளில் தானியங்கி கதவுகள் பொருத்துதல், கூடுதல் கண்ணாடிகளைப் பொருத்துதல், மறைவு பகுதிகளை (Blind Spots) தொடர்பான பிரச்சினைகளை சரிசெய்தல், தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மை கருவிமூலம் ஓட்டுநர் பயிற்சி அளித்தல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அரசு பேருந்துகளால் உண்டாகும் விபத்துகள் கணிசமாகக் குறைந்துள்ளன. இந்த முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து போக்குவரத்துத் துறை செயல்பட்டு வருகின்றது.

உ) மாநில நிலையான நகர்ப்புறப் போக்குவரத்துக் கொள்கை

நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்து ஆணையரகம், இரயில்வே, சென்னை மாநகராட்சி மற்றும் இதர தொடர்புடைய துறைகளுடன் இணைந்து மாநில நிலையான நகர்ப்புறப் போக்குவரத்துக் கொள்கையினை உருவாக்கிட போக்குவரத்துத் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. இந்த கொள்கையானது, கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து விரிவாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கான கட்டமைப்பை ஏற்படுத்திட வழிவகுக்கும். இக்கொள்கையானது, இலக்குகளை குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அடைய வேண்டும் என்பதை உறுதியாக வலியுறுத்துகிறது. இக்கொள்கை, தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு செய்வதன் வழியாக பொதுப் போக்குவரத்தின் பயன்பாட்டை விரிவுபடுத்தி அதன் நோக்கத்தை அடைவதற்கு தேவையான அழுத்தத்தினை அளிக்கும்.

2.7 பருவநிலை நட்பு முயற்சிகளுக்கு அர்ப்பணிப்பு

C40 தூய்மையான பேருந்து அறிவிப்பில் போக்குவரத்துத் துறை ஏற்கெனவே கையெழுத்திட்டுள்ளது. தூய்மையான மற்றும் பசுமையான எரிபொருட்களுக்கு இடம்பெயரும் உறுதியான உறுதிப்பாட்டை குறிக்கும் வகையில் இந்த உலகளாவிய பிரகடனத்தில் 2018 ஆம் ஆண்டு கையெழுத்திட்டதன்மூலம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன்மூலம், அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலிருந்து

வெளியேற்றப்படும் புகையைக் குறைக்க உலக அளவில் ஒரு அறிவார்ந்த நகரங்களுடன் தமிழக அரசு தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை, மின்சாரப் பேருந்துகளை சென்னையில் அறிமுகப்படுத்தும்பொருட்டு, வலுவான கட்டமைப்பு மற்றும் விரிவான திட்டத்தினை உருவாக்குதல் மற்றும் இதர நகரங்களில் இயங்கும் மின்சாரப் பேருந்துகளில் சிறந்த நடைமுறைகளை அறிந்திட C40 பருவநிலை குழுவுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் உத்தேசிக்கப்பட்டுள்ள சுமார் 12,000 புதிய பேருந்துகளில் ஏறத்தாழ 2,000 மின்சாரப் பேருந்துகள் அடங்கும். இதன்மூலம் சீனாவிற்கு வெளியே மிக அதிக அளவிலான மின்சார பேருந்துகளை இயக்கும் மாநிலமாக தமிழ்நாடு உருவாக வழிவகுக்கும். நடுவண் அரசின் கனரக தொழில் அமைச்சகத்தின் ஃபேம் இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 525 மின்சாரப் பேருந்துகளைக் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த முயற்சிகள், மாநிலத்தில் உள்ள கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் அரசின் முயற்சியில் ஒரு பகுதியாகும்.

2.8 போக்குவரத்துத் துறை எதிர்கொள்ளும் சவால்கள்

உலகில் வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள பொதுப் போக்குவரத்துத் துறையானது, தனியார் போக்குவரத்து வருகை, போக்குவரத்து நெரிசல், அனைத்து இடங்களுக்கும் போக்குவரத்து வழங்குவதிலுள்ள சிக்கல் மற்றும் மரபு வழி எரிபொருள்களின் பயன்பாடு போன்ற பல்வேறு காரணிகளால் கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. எனவே, பின்வரும் சவால்களை தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் எதிர்கொண்டுள்ளன.

அ) பேருந்துகளின் அதிகப்படியான இயக்கச் செலவு

தனியார் போக்குவரத்து துறையினரால் ஏற்படும் போட்டி மற்றும் அவர்களின் மேம்பட்ட உள்கட்டமைப்பு, குறைந்த நிறுவனச் செலவுகள் மற்றும் குறைந்த விதிமுறை கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் பொதுப் போக்குவரத்தின் வருவாய் குறைந்து அதன் சுய நிலைப்புத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், பல்வேறு அரசு அமைப்புகளின் போட்டித் தேவையின் காரணமாக, அரசின் போக்குவரத்து உள்கட்டமைப்புகளுக்கு நிதி ஒதுக்குவதற்கு வரையறைகள் உள்ளன.

2020 மார்ச் 24]

ஆ) நிறுவன ஒருங்கிணைப்பு

மிகவும் பரவலாகக் காணப்படும் சூழலமைப்பில் போக்குவரத்து இயங்கி வருகிறது. தொடர்பு துறைகளின் ஈடுபாடு போக்குவரத்துத் துறையின் திறமையை வலுவாக மேம்படுத்தும். தென்னக இரயில்வே, இந்திய விமான நிலையங்கள் ஆணையம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து பொதுமக்களுக்கான கடைக்கோடி பகுதிகளுக்கும் பேருந்து சேவையினை அளித்திட போக்குவரத்துத் துறை முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

இ) திறன்

கடந்த சில ஆண்டுகளில் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் கணிசமாக உயர்ந்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தகுதியை மேம்படுத்தவும், போட்டித் திறனை வளர்த்துக்கொள்ளவும் பணியாளர்களின் திறன் மேம்பாடு அதிகரிக்கப்பட வேண்டும். இதனால், போக்குவரத்துத் துறை தனது பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

உ) உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகள் (பணிமனைகளைத் தரம் உயர்த்துதல்)

மக்கள்தொகை உயர்வால், பேருந்துகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தனிநபர் வாகனப் பெருக்கத்தால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் நகரங்களில் போதிய இடவசதி இல்லாததால் அரசு பேருந்துகள் மற்றும் பணிமனைகளின் கூடுதல் கொள்ளளவினை உயர்த்துதலில் தடை ஏற்படுகின்றன. அதன்மூலம் ஏற்படும் நடைகளின் எண்ணிக்கையினைக் குறைக்க வழிவகுக்கும். தற்போதுள்ள பணிமனைகளின் கொள்ளளவினை உயர்த்துவதற்கு மூலதன முதலீடு மற்றும் கூடுதல் தரைப்பரப்பு குறியீடு (FSI) தேவைப்படுகின்றன. இவ்வகையில், கீழ்க்காணும் பணிமனைகளை நவீனமயமாக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் (TNIDB) உதவியுடன் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் நடைபெற்று வருகின்றது.

அ. அடையாறு

ஆ. பெரும்பாக்கம்

இ. மத்திய பணிமனை

ட. அண்ணா நகர்

உ. பூவிருந்தவல்லி

ஜெர்மனி நிதி நிறுவன (KfW) நிதியுதவியின்கீழ் முதற்கட்டமாக மின்சாரப் பேருந்துகளை பயன்படுத்துவதற்கு ஒரு பகுதியாக இப்பணிமனைகள் செயல்படும்.

ஊ) போக்குவரத்து நெரிசல்

தனிநபர் போக்குவரத்தின் வருகை மற்றும் பிற முறைசாரா போக்குவரத்துகளான ஷேர் ஆட்டோக்கள், மினி வேன்கள் ஆகியவற்றின் பயன்பாடு அதிகரிப்பின் காரணமாக வாகன நெரிசல் ஏற்படுகின்றது. மேலும், குறைவான வாகன நிறுத்துமிட வசதி மற்றும் தனியார் வாகன பயன்பாடுகளின் அதிகரிப்பின் விளைவாக சாலைகளில் நெரிசல் ஏற்படுகின்றது, இதன் காரணமாக அரசு பேருந்துகளின் செயல்திறன் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் நடைகளின் இயக்க தூரம் மற்றும் எரிபொருள் செலவு அதிகரிக்கின்றன.

2.9 முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள்

அ) அரசுப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய அரசுப் பேருந்துகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம், நிர்பயா நிதியத்தின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்படி, சென்னையில் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்படும் 2,000 மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தலா 4 கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. மேலும் பல்வேறு முனையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இத்திட்டம், செயல்பாட்டினைப் பொறுத்து அதிகப் பேருந்துகளுக்கு விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 75.02 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

ஆ) பொதுப் பயண அட்டை மற்றும் மின்னணுப் பயணச்சீட்டு இயந்திரம்

மாநகர் போக்குவரத்துக் கழகம் பொது பயண அட்டை திட்டத்தினை செயல்படுத்திட நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயணிகள் தங்களின் பொதுப் பயண அட்டையினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொதுப் போக்குவரத்து அமைப்பிலும் பயன்படுத்த இயலும். இத்திட்டம் தனியார் மற்றும் அரசு பங்களிப்பு முறையில் செயல்படுத்தப்படும்.

இ) சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

விபத்தில்லா பேருந்து இயக்கத்தை அடைய போக்குவரத்துத் துறை உறுதிபூண்டுள்ளது. இதற்காக, அரசு போக்குவரத்துக் கழகங்களில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சாலைப் பாதுகாப்பு முயற்சிகளை விரிவுபடுத்தும் வகையில் போக்குவரத்துத் துறை, போக்குவரத்து ஆணையரகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. இது தொடர்பாக கீழ்க்காணும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன:

1. அருகாமையில் உள்ள வாகனங்களை அறியும் கருவி (Proximity buzzers)
2. அதிக விபத்து வழித்தடங்களில் இயங்கும் பேருந்துகளுக்கான பாதுகாப்பினை உறுதி செய்தல்.
3. விபத்துகளைக் குறைக்க வண்ணங்கள் குறியிடப்பட்ட முனையங்களை அமைத்தல்.
4. தானியங்கி கதவுகள்.
5. பயணங்களின்போது பேருந்து இயக்கம் தொடர்பான அறிவிப்புகள்.
6. மறைவுப் பகுதிகளை (Blind Spots) காட்டும் கூடுதல் கண்ணாடிகளைப் பொறுத்துதல்.
7. விபத்துக்களின் அறிவியல் பகுப்பாய்வு செய்தல்.
8. தகவல் தொடர்பு ஆலோசகரைப் பணியமர்த்துதல்.
9. ஓட்டுநர் பயிற்சி.
10. ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்குக்கான வசதிகளை மேம்படுத்துதல்.

ஈ) மாநில போக்குவரத்து சிறப்புப் பணிப் பிரிவு: மாநில போக்குவரத்து சிறப்புப் பணிப் பிரிவு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது. இப்பிரிவு, ஒரு நிலையான நகரப் போக்குவரத்துக் கொள்கையினை வடிவமைப்பதற்கு அரசிற்கு உதவி செய்யும். தமிழ்நாட்டிற்கு போக்குவரத்துக் கொள்கையினை உருவாக்குவதே இப்பணிப்பிரிவின் நோக்கமாகும்.

உ) ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

1. குறைந்த புகை வெளியேற்றும் பேருந்து கொள்முதல்

ரூபாய் 1,580 கோடி செலவில், ஜெர்மனி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் 2,213 BS VI பேருந்துகளைக் கொள்முதல் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இது அரசுப் பேருந்துகளிலிருந்து வெளியேற்றப்படும் புகை அளவினையும் நச்சினையும் குறைக்கும். 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.960 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மின்சாரப் பேருந்துகள் கொள்முதல்

மாசு வெளியேற்றத்தை குறைக்கும்பொருட்டு, 500 மின்சாரப் பேருந்துகளை ஜெர்மனி நிதி நிறுவன நிதியுதவியுடன் கொள்முதல் செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு, அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் மின்சாரப் பேருந்துகளாக மாற்றம் செய்யப்படும்.

3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்

இன்றைய உலகில் தகவல் தொழில்நுட்ப செயல்பாடுகள் பிரிக்க முடியாத பகுதியாக உருவெடுத்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், கைமுறை தரவுகளை மின்னணு தரவுகளாக மாற்றிடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

4. திட்ட செயலாக்க அலகு (PIU)

போக்குவரத்துத் துறை, ஜெர்மனி நிதி நிறுவன நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்கும்பொருட்டு, திட்ட செயலாக்க அலகு (PIU) ஒன்றை

போக்குவரத்துத் துறை ஏற்படுத்தியுள்ளது. அரசு அலுவலர்கள், போக்குவரத்து வல்லுநர்கள் மற்றும் முன்னணி கல்வியாளர்கள் இவ்வலகில் இடம் பெற்றுள்ளனர். இத்திட்டங்களுக்கான செயலாக்கம் மற்றும் அதன் தொடர்பானவற்றையும் மதிப்பீடு செய்ய இவ்வலகு உதவும்.

2.10 அரசு போக்குவரத்துக் கழகங்களின் அலகுகள்

அரசு போக்குவரத்துக் கழகத்தில் கீழ்க்கண்ட அலகுகள் உள்ளன:-

பணிமனைகள் (கிராமம் மற்றும் நகர்ப்புறம்)	இயந்திர மறுசீரமைப்பு பிரிவு மற்றும் தொழிற்கூடங்கள்	பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள்	உருளிப்பட்டை (Tyre) புதுப்பிக்கும் தொழிற்கூடங்கள்	பேருந்து தரச்சான்று அளிக்கும் பிரிவுகள்
322	20	23	18	51

2.11 அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்து சேவைகள்

31-01-2020 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பல்வேறு பேருந்துச் சேவைகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

சென்னை—மாநகர் பேருந்துகள்	3,439
நகர் பேருந்துகள் (மாவட்டங்களில்)	6,636
புறநகர் பேருந்துகள்	7,842
மலைப்பகுதி பேருந்துகள்	497
விரைவுப் பேருந்துகள்	
மாநிலத்திற்குள்	615
வெளிமாநிலங்களுக்கு	467

மொத்த இயக்கப் பேருந்துகளின் எண்ணிக்கை	19,496
மொத்த இயக்கப் பேருந்துகளுக்கான உபரிப் பேருந்துகள்	1,448
மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை	20,944

2.12 இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகள்

2011-2012 முதல் 2019-2020 (ஜனவரி 2020 வரை) வரையிலான ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கச் செயல்பாட்டு திறன் குறியீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

பொருள்	2011-2012	2012-2013	2013-2014	2014-2015	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020 (ஜனவரி 2020 வரை)
பேருந்துகளின் எண்ணிக்கை	21,207	22,053	22,501	22,474	23,078	22,533	21,744	21,542	20,944
அட்டவணைப் படுத்தப்பட்ட சேவைகள்	19,507	20,500	20,684	20,684	20,839	20,776	19,490	19,489	19,496
ஒரு நாளைக்கு இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ)	88.44	89.78	91.20	90.21	94.02	92.55	87.22	85.23	84.07
பழுதுபடுதல் (10,000 கிலோ மீட்டருக்கு)	0.01	0.01	0.01	0.004	0.004	0.004	0.003	0.002	0.002

பொருள்	2011-2012	2012-2013	2013-2014	2014-2015	2015-2016	2016-2017	2017-2018	2018-2019	2019-2020 (ஜனவரி 2020 வரை)
விபத்துகள் (1,00,000 கிலோ மீட்டருக்கு)	0.22	0.20	0.20	0.18	0.18	0.16	0.15	0.14	0.12
உயிரிழப்பு விபத்துகள்	1,237	1,233	1,187	1,165	1,258	1,209	1,085	1033	739
விபத்துகளில் இறந்தவர்களின் எண்ணிக்கை	1,397	1,382	1,318	1,331	1,460	1,373	1,247	1159	834
எரிபொருள் செயல் திறன் (கி.மீ/ லிட்டருக்கு) சராசரியாக	5.25	5.27	5.26	5.30	5.29	5.33	5.33	5.33	5.33
கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (இலட்சம் கிலோ மீட்டர்)	1.65	1.80	1.82	1.92	2.01	2.08	2.22	2.37	2.53
ஆள் ஒன்றுக்கு பேருந்து	6.40	6.31	6.43	6.48	6.52	6.51	6.82	6.53	6.39

[2020 மார்ச் 24

2.13 இயக்கச் செலவினம்

2019-2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் விவரம் சதவிகிதத்தில் கீழ்வருமாறு:

வ. எண்	இயக்கச் செலவு வகைகள்	சதவிகிதத்தில்
1.	சம்பளம்	54.33
2.	டீசல்	27.02
3.	பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு	2.15
4.	தேய்மானம்	3.21
5.	வட்டி	9.25
6.	வரிகள்	1.38
7.	மற்றவை (மின்கட்டணம், எழுதுபொருள் இதர)	2.66
	மொத்தம்	100.00

2.14 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருவாய்

டீசல் விலை அடிக்கடி உயர்ந்து வருவதாலும், உதிரி பாகங்களின் விலை உயர்வாலும், ஊதிய ஒப்பந்தத்தாலும் மற்றும் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்குவதாலும் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பிரதான தலைப்பின்கீழ் கடந்த ஏழு ஆண்டுகளில் ஈட்டிய மொத்த வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்/நாள் ஒன்றுக்கு)

ஆண்டு	நாளொன்றுக்குப் பேருந்துக் கட்டண வசூல்	இதர வருவாய்	மொத்த வருவாய்
2012-13	19.87	3.01	22.88
2013-14	20.12	4.59	24.71
2014-15	20.50	4.41	24.91
2015-16	20.76	2.77	23.53
2016-17	20.76	4.91	25.67
2017-18	21.41	5.27	26.68
2018-19	24.17	5.20	29.37
2019-20 (ஜனவரி 2020 வரை) (தணிக்கைக்கு முன்)	24.04	4.96	29.00

2.15. அரசு வழங்கிய நிதியுதவி விவரங்கள்

2011-2012 முதல் 2019–2020 வரை, (ஜனவரி 2020 வரை) பங்கு மூலதன உதவி (Share Capital Assistance), கடன் (Loan), வழிவகை முன்பணம் (Ways & Means Advance), உதவித்தொகை (Grant), மாணவர் கட்டணச் சலுகையை ஈடு செய்தல் (Reimbursement of Student Concession Subsidy) ஆகிய வகைகளில் ரூ.18,092.17 கோடிகளை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அரசு வழங்கியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

[2020 மார்ச் 24

i. பங்கு மூலதன உதவி

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	பங்கு மூலதனம் (புதிய பேருந்துகள்)		மாநில புது முயற்சிகள் நிதி	மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள்	புத்தகக் கணக்குகளில் நிலுவைத் தொகையைக் குறைக்க நடைமுறை மூலதனமாக / மூலதனச் செலவினத்தைச் சரிசெய்தல்	மொத்தம்
	த.போ.வ. நி.நி	அ.போ.க				
2011-12	-	155.26	-	7.03	-	162.29
2012-13	-	150.00	-	24.63	-	174.63
2013-14	-	-	-	-	350.00	350.00
2014-15	-	125.00	-	-	228.00	353.00
2015-16	-	-	-	-	150.00	150.00
2016-17	-	150.00	-	-	-	150.00
2017-18	-	-	-	-	-	-
2018-19	712.54	-	-	-	-	712.54
2019-20 (ஜனவரி 2020 வரை)	302.06	140.00	0.50	0	-	442.56
மொத்தம்	1014.60	720.26	0.50	31.66	728.00	2495.02

அண்மையில், நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம் மற்றும் அதன் வட்டி ரூ.3001.4717 கோடியினை மூலதனப் பங்காக அரசால் மாற்றப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

ii. கடன்கள் மற்றும் வழிவகை முன்பணங்கள்

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	புதிய பேருந்துகள்	பேருந்துகளைப் புதுப்பித்தல்	மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை	டீசல்	ஊதிய ஒப்பந்தம்/ ஊக்கத் தொகை/ அகவிலைப் படி நிலுவை	ஓய்வு பெற்றவர்களின் பணப் பலன்	மொத்தம்
2011-12	137.50	24.40	25.00	81.03	178.14	-	446.07
2012-13	-	-	13.91	-	-	-	13.91
2013-14	-	24.40	-	-	-	-	24.40
2014-15	81.61	-	39.73	-	-	-	121.34
2015-16	125.00	-	-	-	360.00	116.00	601.00
2016-17	57.34	-	-	-	198.45	-	255.79
2017-18	-	-	385.23	-	261.63	2247.39	2894.25
2018-19	125.00	-	-	-	325.47	487.55	938.02
2019-20 (ஜனவரி 2020 வரை)	-	-	-	-	206.52	1093.00	1299.52
மொத்தம்	526.45	48.80	463.87	81.03	1530.21	3943.94	6594.30

iii. உதவித் தொகை

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	மோட்டார் வாகன விபத்து வழக்குத் தொகை	டீசல்	விபத்தின்றிப் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு முதலமைச்சரின் விருது	மொத்தம்
2011-12	20.00	-	2.78	22.78
2012-13	20.00	200.00	2.78	222.78
2013-14	20.00	500.00	1.60	521.60
2014-15	20.00	600.00	2.78	622.78
2015-16	30.00	256.72	2.78	289.50
2016-17	30.00	617.17	5.88	653.05
2017-18	30.00	816.12	3.86	849.98
2018-19	30.00	333.08	3.00	366.08
2019-20 (ஜனவரி 2020 வரை)	30.00	237.55	-	267.55
மொத்தம்	230.00	3560.64	25.46	3816.10

iv. மாணவர் பயணச் சலுகைக்கான கட்டணங்களை ஈடுசெய்தல்

2011-2012 முதல் 2019-2020 (ஜனவரி 2020 வரை) வரையிலான ஆண்டுகளில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு (அரசு

2020 மார்ச் 24]

விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மாணவர் பயணக் கட்டணச் சலுகையை ஈடுசெய்வதற்காக ரூ.5,094.35 கோடிகளை அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

v. மூத்த குடிமக்கள் மற்றும் இதர பயணச் சலுகைகள்

மூத்த குடிமக்களுக்கான பயணச் சலுகையை ஈடுசெய்வதற்காக மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ.92.40 கோடியும் மற்றும் இதர பயணச் சலுகைகள் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

2.16 உயர்வேக டீசல் (HSD) ஈடுசெய்தல்

உயர்வேக டீசல் விலை உயர்வை ஈடு செய்யும் வகையில், 2012-2013 முதல் 2017-2018 வரையிலான ஆண்டுகளில் அரசு கீழ்க்கண்டவாறு ஈடு செய்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

வ.எண்.	ஆண்டு	தொகை
1.	2012-2013	200.00
2.	2013-2014	500.00
3.	2014-2015	600.00
4.	2015-2016	256.72
5.	2016-2017	617.17
6.	2017-2018	816.12

தற்போது, 20-01-2018-லிருந்து (பேருந்து கட்டணம் திருத்தம்) டீசலுக்கான அடிப்படை விலையை அரசே நிர்ணயித்தும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் அடிப்படை விலைக்கு மேல் ஆகக்கூடிய கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய அனுமதியும் அளித்துள்ளது. அதனடிப்படையில், 2018-2019 ஆம் ஆண்டிற்காக

ரூ.333.0766 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், 2019-2020 (ஜனவரி 2020 வரை) ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.237.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-3

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

3.1 தமிழ்நாடு நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகத் திகழ்வதால் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை சாலையில் இயக்கிக்கொண்டு இருக்கிறது. மேலும் சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துகளைக் குறைப்பதற்கு போக்குவரத்துக் கழகங்கள்மூலம் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறது. மேலும், விபத்துகளுக்கான காரணங்களை ஆய்வு செய்து அதனைக் குறைக்கும்பொருட்டு நிலையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பேருந்து ஏறும்/இறங்கும் இடத்தில் ஏற்படக்கூடிய விபத்து, குறிப்பிட்ட மாதம்/குறிப்பிட்ட நாளில்/குறிப்பிட்ட நேரத்தில் அடிக்கடி ஏற்படக்கூடிய விபத்து, சாலையின் தன்மை, பலவகையான பயனாளிகள் குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது.

3.2 சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்

சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு மாநில அரசு போக்குவரத்துக் கழகங்கள் கீழ்க்காணும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன:

i. தொடர் பயிற்சி, பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு மற்றும் சம்பந்தப்பட்டவர்களை ஊக்குவித்தல்.

ii. விபத்துகள் அதிகமாக நடைபெறும் இடங்களைக் கண்டறிதல்.

iii. வாகனம் ஓட்டும்பொழுது கைபேசி உபயோகித்தல் மற்றும் மது அருந்துதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

iv. போக்குவரத்துத் துறை மற்றும் மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களின் பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனைக் கருவிகளைக் கொண்டு, பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும் காவல் துறையின் மூலமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

TRUTH ALONE TRIUMPHS

v. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

vi. அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து நெடுஞ்சாலைத் துறை மற்றும் காவல் துறை உதவியுடன் சாலைகளை மேம்படுத்துதல், போக்குவரத்து தொடர்பான எச்சரிக்கை பலகைகள் வைப்பது மற்றும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடங்களில் அறிவிப்புப் பலகைகளை நிறுவுதல் ஆகியவற்றின்மூலம் விபத்து ஏற்படுவதைத் தடுத்தல்.

vii. விபத்தின்றிப் பணிபுரியும் அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சரின் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுக்காக, 2011-2019 ஆம் ஆண்டுகளில் ரூ.25.46 கோடி கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	தொகை
2011-2012	2.78
2012-2013	2.78
2013-2014	1.60
2014-2015	2.78
2015-2016	2.78
2016-2017	5.88
2017-2018	3.86
2018-2019	3.00
மொத்தம்	25.46

கடந்த ஏழு ஆண்டுகளில் உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	இயக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்பு ஏற்படுத்திய விபத்துகளின் எண்ணிக்கை	உயிரிழப்புகளின் எண்ணிக்கை
2013-14	20,684	1,187	1,318
2014-15	20,684	1,165	1,331
2015-16	20,839	1,258	1,460
2016-17	20,776	1,209	1,373
2017-18	19,490	1,085	1,247
2018-19	19,489	1,033	1,159
2019-20 (ஜனவரி 2020 வரை)	19,496	739	834

2015-2016 முதல் விபத்துகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வந்துள்ளது. இதற்கான முயற்சி இனியும் தொடரும்.

3.3 விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம்

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், நீதிமன்றத்தை நாடாமல் விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும்பொருட்டு விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் (Corpus Fund) ஒன்று 2010-2011 ஆம் ஆண்டு

உருவாக்கப்பட்டது. அதன்படி, 2010-2011 முதல் 2014-2015 வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ஆண்டொன்றுக்கு ரூ.20 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியையும் சேர்த்து ஆகமொத்தம் ரூ.40 கோடியில் விபத்து இழப்பீட்டுத் தொகை நிதியம் ஏற்படுத்தப்பட்டது. இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை நிதி 2015-2016 ஆம் ஆண்டு முதல் ரூ.40 கோடியிலிருந்து ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியும் வழங்கப்படுகிறது. மேற்படி நிதியம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிருவகிக்கப்படுகிறது. 20-01-2018 முதல் பேருந்து பயணிகளிடம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வசூல் செய்து அதனைக்கொண்டு விபத்து இழப்பீடு, விபத்துத் தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ரூபாயில்)

வ.எண்	**பயண கட்டண வரம்பு**	**நகர்**	**புறநகர்**
		பயணிகளிடமிருந்து தீர்வை	**பயணிகளிடமிருந்து தீர்வை**
1.	ரூ.25 வரை	1	1
2.	ரூ.26 முதல் ரூ.50 வரை	-	2
3.	ரூ.51 முதல் ரூ.75 வரை	-	3
4.	ரூ.76 முதல் ரூ.100 வரை	-	4
5.	ரூ.101 முதல் ரூ.200 வரை	-	5

வ.எண்	பயண கட்டண வரம்பு	நகர்	புறநகர்
		பயணிகளிடமிருந்து தீர்வை	பயணிகளிடமிருந்து தீர்வை
6.	ரூ.201 முதல் ரூ.300 வரை	-	6
7.	ரூ.301 முதல் ரூ.400 வரை	-	7
8.	ரூ.401 முதல் ரூ.500 வரை	-	8
9.	ரூ.501-க்கு மேல்	-	10

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளின்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் (consent) கீழே குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படும்:

i. உயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை

(ரூபாய் இலட்சத்தில்)

வயது வரம்பு	தொகை
1 – 15	2.5
16 – 60	5.0
60 வயதுக்கு மேல்	2.5

ii. காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை

(ரூபாயில்)

1)	சிறுகாயம் – I சிறுகாயம் – II மருத்துவமனையில் சிகிச்சை (2 நாட்கள்)	10,000 25,000
2)	தலை காயம் மற்றும் நிரந்தர உறுப்பு இழப்பு	5,00,000
3)	கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவு - மருத்துவமனை தீவிர சிகிச்சை (7 நாட்கள்) எலும்பு முறிவு - மருத்துவமனை தீவிர சிகிச்சை (4 நாட்கள்)	2,00,000 1,00,000

விபத்து இழப்பீட்டினை விரைவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு வழங்கும்பொருட்டு ஒரு குழுவும் மற்றும் இழப்பீடு தொகை வழங்குவதற்கான வழிமுறையும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 31-01-2020 வரை அரசு போக்குவரத்துக் கழகங்களால் இத்திட்டத்தின்மூலம் 37 வழக்குகளுக்கு ரூ.82.69 இலட்சம் நேரிடையாக வழங்கப்பட்டுள்ளது.

3.4 தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம்

விபத்து இழப்பீட்டு வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்காக வசூலிக்கப்படும் சுங்கவரி கட்டணங்களை நிருவகிக்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டண நிதி அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது.

3.5 மக்கள் நீதிமன்றத்தின்மூலம் தீர்வு செய்யப்பட்ட வழக்குகள்

மக்கள் நீதிமன்றத்தின்மூலம் தீர்வு செய்யப்பட்ட விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு அனைத்து அரசுப் போக்குவரத்துக்

[2020 மார்ச் 24

கழகங்களும் தொகுப்பு நிதியிலிருந்து இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி, கடந்த எட்டு ஆண்டுகளில், தீர்வு செய்யப்பட்ட வழக்குகளுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களினால் வழங்கப்பட்ட தொகையின் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	**வழக்குகளின் எண்ணிக்கை**	**மக்கள் நீதிமன்றம் மூலமாகத் தீர்வு செய்யப்பட்ட தொகை**
2011-2012	884	997.21
2012-2013	1,867	3,466.29
2013-2014	1,160	569.22
2014-2015	897	1,028.14
2015-2016	479	1,222.62
2016-2017	404	1,241.25
2017-2018	1,187	4,883.14
2018-2019	2,832	15,964.20
2019-2020 (ஜனவரி 2020 வரை)	882	2,780.48
மொத்தம்	10,592	32,152.55

2020 மார்ச் 24]

அத்தியாயம்-4

பொதுமக்களின் சேவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

4.1 பேருந்துகளின் இயக்கம்

31-1-2020 அன்றுள்ளவாறு, தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 19,496 ஆகும். ஒரே வழித்தடத்தில் இயங்கும் அரசுப் பேருந்துகளுக்கு இடையேயான ஆரோக்கியமற்ற போட்டியைக் குறைப்பதற்கும், குறைந்த பயணிகளைக்கொண்டு இயங்கும் வழித்தடங்களைக் கண்டறிவதற்கும் இணையொத்த வழித்தடங்களை இணைப்பதற்கும் வழித்தட சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயணிகள் தகவல் அமைப்பு (LAMB) மற்றும் மின்னணுப் பயணச்சீட்டுக் கருவிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளைக் கொண்டு எதிர்காலத்தில் வழித்தடங்களைச் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையினால் பேருந்துகளின் இயக்கத் திறன் அதிகரிப்பது மட்டுமின்றி, பேருந்து சேவையில்லாத பகுதிகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவை அளிக்கப்படும்.

4.2 புதிய பேருந்துகள் அறிமுகம்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பயன்படுத்தப்பட இயலாத நிலையிலிருக்கும் மிகவும் பழமையான பேருந்துகளுக்குப் பதிலாக 14,153 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், 2011-2012 முதல் 2019-2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டுகளில், மலை சார்ந்த பகுதிகளுக்கு 208 பேருந்துகளும், 300 சிற்றுந்துகளும் வாங்குவதற்கு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	பேருந்துகளின் எண்ணிக்கை	மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை	சிற்றுந்துகளின் எண்ணிக்கை
2011-12	3,000	-	-
2012-13	2,953	-	100
2013-14	-	208	-
2014-15	1,200	-	100
2016-17	2,000	-	100

ஆண்டு	பேருந்துகளின் எண்ணிக்கை	மலைப் பகுதிப் பேருந்துகளின் எண்ணிக்கை	சிற்றுந்துகளின் எண்ணிக்கை
2018-19	3,000	-	-
2019-20	2,000	-	-
மொத்தம்	14,153	208	300

4.3 புதிய பணிமனைகள்

31-01-2020 அன்றுள்ளவாறு, அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளின் எண்ணிக்கை 322 ஆகும். 74 புதிய பணிமனைகள் அமைக்கப்படும் நடவடிக்கையில், 44 பணிமனைகள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. மேலும், 4 பணிமனைகளின் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

4.4 சென்னையில் சிற்றுந்துகள் அறிமுகம்

பேருந்து வசதிகள் இல்லாத பகுதிகளை பிரதானச் சாலைகளுடன் இணைப்பதற்கு வசதியாக சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில், 69 வழித்தடங்களில் 150 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள், மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

4.5 மகளிர் சிறப்புப் பேருந்துகள்

சென்னையில் பரபரப்பான நேரங்களில் மகளிர் மற்றும் சிறுவர்கள் பயன்பெறும் வகையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் 56 வழித்தடங்களில் 210 மகளிர் மற்றும் சிறுவர்கள் சிறப்புப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

4.6 மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துகள்

மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக 13 நட்புப் பேருந்துகள் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டு மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

4.7 மலைப் பகுதிகளில் சிற்றுந்துகள்

மலைப் பகுதிகளில் குறுகலான பாதைகளினால் போக்குவரத்து வசதியில்லாத இடங்களில் ரூ.35 கோடி செலவில் மலைப்

2020 மார்ச் 24]

பகுதிகளுக்காக 208 சிற்றுந்துகளை வாங்குவதற்கு இவ்வரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில், 79 சிற்றுந்து சேவைகள் அப்பகுதிகளில் இயக்கப்பட்டு வருகின்றன.

4.8 கழிவறை வசதியுடன்கூடிய பேருந்து

கழிவறை வசதிகளுடன்கூடிய 60 பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

4.9 விழாக்காலச் சிறப்புப் பேருந்துகள்

தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் இயக்கப்படும் பேருந்துகளின்மூலம் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் குறிப்பிடத்தக்க வருவாயை ஈட்டியுள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில் இயக்கப்பட்ட சிறப்புப் நடைகள் மற்றும் அவற்றின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	பண்டிகை	இயக்கப்பட்ட சிறப்பு நடைகளின் எண்ணிக்கை	ஈட்டிய மொத்த வருவாய்
2012-2013	தீபாவளி பொங்கல்	7,958 7,135	87.37 89.70
2013-2014	தீபாவளி பொங்கல்	10,484 9,546	86.93 93.41
2014-2015	தீபாவளி பொங்கல்	10,499 8,548	83.96 81.86
2015-2016	தீபாவளி பொங்கல்	15,540 7,160	83.92 90.51
2016-2017	தீபாவளி பொங்கல்	15,033 13,337	85.75 95.05
2017-2018	தீபாவளி பொங்கல்	14,113 13,407	89.36 75.80

ஆண்டு	பண்டிகை	இயக்கப்பட்ட சிறப்பு நடைகளின் எண்ணிக்கை	ஈட்டிய மொத்த வருவாய்
2018-2019	தீபாவளி பொங்கல்	11,503 11,914	101.24 109.53
2019-2020	தீபாவளி பொங்கல்	11,288 12,981	98.28 129.37

4.10 தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்யும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 16,888 போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் இரத்த தானம் செய்வதற்குத் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

4.11 பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை

பயணம் செய்யும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவிடும்பொருட்டு, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தனி அறை அமைக்குமாறு அரசு ஆணையிட்டது. அதன்படி, பேருந்து நிலையங்களில் பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

4.12 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 3 x 2 இருக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 240 குளிர்சாதனப் பேருந்துகள், மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 48 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் அரசு போக்குவரத்துக் (கும்பகோணம்) கழகத்தால் இயக்கப்படும் இரண்டு குளிர்சாதன நகர் பேருந்துகள் ஆகியவற்றைத் தவிர, அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 3 x 2 இருக்கை வசதியுடன்கூடிய 100 குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

4.13 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் படுக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் அறிமுகம்

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் படுக்கை வசதியுடன்கூடிய 34 குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் 106 குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதிகளுடன்கூடிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தியாயம்-5

பயணக் கட்டணச் சலுகை

5.1 பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயனாளிகளின் வகைகள் பின்வருமாறு:

i. நாடாளுமன்ற/சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.

ii. அரசால் அங்கீகாரிக்கப்பட்ட பத்திரிகை நிருபர்கள்/ஊடக நபர்கள்.

iii. மத்திய/மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், வாரிசுதாரர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

iv. புற்று நோயாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் (காதுகேளாதோர், வாய்பேசாதோர், பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் வலிப்பு நோயாளிகள்).

v. நாடகக் கலைஞர்கள்

vi. எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகள்

vii. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை- 21-02-2016 முதல் குளிர்சாதன பேருந்துகளைத் தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

5.2 மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் கட்டணமில்லாப் பயணச் சலுகை அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகைக்கானத் தொகையினை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

(i) அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை.

(ii) தேசிய குழந்தை மற்றும் தொழிலாளர் திட்ட நலப் பள்ளி.

(iii) அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.

(iv) அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

(v) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.

மேற்கண்ட சலுகை 2013-2014 ஆம் ஆண்டு முதல் பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இச்சலுகைக்கானத் தொகையை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசால் ஈடு செய்யப்படுகிறது.

(i) சமுதாயக் கல்லூரிகள்.

(ii) அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

(iii) இசைக் கல்லூரிகள்.

(iv) சென்னை மாநகராட்சித் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

5.3 50% பயணக் கட்டணச் சலுகை

(i)	தனியார் கல்லூரிகள்	அரசு அங்கீகாரம் பெற்றவை
(ii)	தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்	
(iii)	தனியார் பொறியியல் கல்லூரிகள்	

2020 மார்ச் 24]

5.4 மாற்று அனுமதிச் சீட்டுகள்

சென்னை மாநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் கல்லூரி மாணவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து நூலகம் சென்று வர 60 மாற்று அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

5.5 மாணவர்களுக்கு பேருந்து பயணச் சலுகைக்கான செலவினத்தை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்தல்

2011–2012 முதல் 2019–2020 வரை பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கூடங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பேருந்துப் பயணக் கட்டணச் சலுகை அட்டைகள் வழங்கியதால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும் வகையில் அரசால் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	தொகை
1.	2011-2012	438.97
2.	2012-2013	452.52
3.	2013-2014	452.96
4.	2014-2015	448.00
5.	2015-2016	480.00
6.	2016-2017	505.35
7.	2017-2018	541.78
8.	2018-2019	764.72
9.	2019-2020 (ஜனவரி 2020 வரை)	1010.05
	மொத்தம்	5094.35

5.6 இணையவழி முன்பதிவு

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொலைதூரப் பயணம் செய்யும் பயணிகளுக்கு உதவும் வகையில் இணையவழிமூலம் பயணச்சீட்டு முன்பதிவு செய்யும் முறை 03-10-2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் (ஜனவரி 2020 வரை) மொத்த முன்பதிவில் இணையவழி முன்பதிவு 69.17 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

5.7 விருப்பம்போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச் சீட்டுகள்

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலுள்ள அரசு நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் மாதாந்திரப் பயணச் சீட்டானது, ஒரு சீட்டுக்கு ரூ.1,000/- கட்டண விகிதத்தில் விருப்பம்போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள் சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

5.8 மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை

மாநகர் மற்றும் நகரப் பகுதிகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகையானது, 2013-2014 ஆம் ஆண்டு முதல் புறநகர் பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் புறநகர் பேருந்துகளில் தினந்தோறும் பயணம் செய்யும் பயணிகளிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

5.9 குழுப் பயணச் சீட்டு சலுகை

2013-2014 ஆம் ஆண்டு முதல் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகள் குழுவாக முன்பதிவு செய்யும்போது பயணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் கட்டணக் கழிவுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகையின்மூலம் 30,477 குழுப் பயணச் சீட்டுகள் இதுவரையில் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. 31-01-2020 அன்றுள்ளவாறு, 3,94,264 பயணிகள் ரூ.130.89 இலட்சத்திற்கு சலுகை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

2020 மார்ச் 24]

5.10 மின்னணுப் பயணச் சீட்டு வழங்கும் கருவிகள்

போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் இயக்கச் செயல்பாட்டுத் திறனை வளர்த்துக்கொள்ளவும், கணக்கீட்டை உறுதி செய்யும்பொருட்டு அரசு பேருந்துகளில் புவி இருப்பிட முறைமையை (GPS) அடிப்படையாகக்கொண்ட தொழில்நுட்ப மின்னணுப் பயணச் சீட்டுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் உதவியாக உள்ளதோடு, நடத்துநர்கள் பயணச் சீட்டு வழங்குவதற்கும், கணக்கிடுவதற்கும் எளிதாக உள்ளது. இதற்காக ரூ.31.66 கோடி அரசால் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 16,282 மின்னணு பயணச் சீட்டு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

5.11 புற்று நோயாளிகளுக்கான பயணக் கட்டணச் சலுகை

மிகவும் ஏழ்மையான மற்றும் கிராமப்புறங்களிலிருந்து சிகிச்சைக்காக புற்றுநோய் மருத்துவமனைக்கு வரும் புற்று நோயாளிகளின் நிதி நெருக்கடியைக் குறைப்பதற்காக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு உதவி வருகின்ற ஒரு நபருக்கும் அரசு பயணச் சலுகை வழங்கி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், புற்று நோயாளிகளுக்கு வழங்கிவரும் பயணச் சலுகைத் தொகையை அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்து வருகின்றது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	தொகை
2014-15	0.1800
2015-16	0.1800
2016-17	1.0218
2017-18	0.5857
2018-19	0.6775
2019-20	0.8626
2020-21	0.8626

அத்தியாயம்-6

வருவாய் மேம்பாட்டு நடவடிக்கைகள்

6.1 கழிவு செய்யப்பட்ட பேருந்துகளை மின்னணுத் தொழில்நுட்ப முறையில் ஏலமிடுதல்

கழிவு செய்யப்பட்ட அரசு பேருந்துகளுக்கு சிறந்த விலை கிடைக்கும்பொருட்டு, அவற்றை மின்னணு தொழில்நுட்ப முறையில் ஏலமிட மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) சேவை நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பயனாக, கடந்த ஒன்பது ஆண்டுகளில் (2011-2020) (ஜனவரி 2020 வரை) 8,410 வாகனங்களை கழிவு செய்ததில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.108.85 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

6.2 விளம்பரங்கள்மூலம் வருவாய்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளில் விளம்பரத்திற்கான பலகைகள் வைக்கப்பட்டு அதன் மூலமாக ரூ.136.68 கோடியை வருவாயாக ஈட்டியுள்ளன.

6.3 பயண வழி உணவகங்கள்

தொலைதூர வழித்தடங்களில் பயணிகளுக்கு சிறப்பான வசதி அளிக்கும்பொருட்டு, தமிழகம் முழுவதும் 22 இடங்களில் பேருந்துகளை நிறுத்த கூடுதல் இட வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, நவீன சமையல் கூடம், உணவு அருந்தும் இடம், தரமான உணவு மற்றும் சுகாதாரமான கழிப்பிட வசதி போன்றவை உள்ள பயண வழி உணவகங்கள் மூலமாக உணவு மற்றும் சிற்றுண்டி நியாயமான விலையில் வழங்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த ஒன்பது ஆண்டுகளில் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் ரூ.29.56 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

6.4 சிப்பஞ்சல் மற்றும் விரைவுத் தூதஞ்சல் சேவை

அரசுப் பேருந்துகளில் சிப்பஞ்சல் (Parcel services) மற்றும் விரைவுத் தூதஞ்சல் (Courier services) சேவைகள் மூலமாக கடந்த ஒன்பது ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ.4.93 கோடி வருவாய் ஈட்டியுள்ளன.

2020 மார்ச் 24]

6.5 அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்கம் மற்றும் நிதித் திறன்களை அதிகரித்தல், மூலதனங்களை சிறப்பாகப் பயன்படுத்துதல், சொத்துக்களை உகந்த வழியில் பயன்படுத்துதல் மற்றும் செலவினங்களைக் குறைக்கும்பொருட்டு மாற்று ஏற்பாடுகள் கண்டறிதல், சீரமைப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதனடிப்படையில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் செலவுகளைக் குறைக்கவும் மற்றும் வருவாய் திறன்களை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்தியாயம்-7

பணியாளர்களின் நலன்களுக்கான நடவடிக்கைகள்

7.1 அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் மொத்தம் 1,26,089 பணியாளர்களைக் கொண்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

வ.எண்	பிரிவு	பணியாளர்களின் எண்ணிக்கை
1.	மேலாண்மை அலுவலர்கள்	522
2.	அலுவலக மேற்பார்வையாளர்கள்	641
3.	நிருவாகப் பணியாளர்கள்	4,333
4.	தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள்	1,652
5.	தொழில்நுட்பப் பணியாளர்கள்	15,584
6.	போக்குவரத்து மேற்பார்வையாளர்கள்	1,555
7.	ஓட்டுநர்கள்	52,022
8.	நடத்துநர்கள்	49,780
	மொத்தம்	1,26,089

7.2 காலிப் பணியிடங்களை நிரப்புதல்

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலும் 2011-2012 முதல் 2019-2020 வரை கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன:

ஆண்டு	சேம ஓட்டுநர்	சேம நடத்துநர்	தொழில் நுட்பம்	கருணை அடிப்படை-யிலான பணி நியமனம்	மொத்தப் பணி நியமனம்
2011-2020 (ஜனவரி 2020 வரை)	15,588	15,200	4,781	2,354	37,923

7.3 அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் பணி வரன்முறை செய்தல்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில், தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த ஓட்டுநர், நடத்துநர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:

ஓட்டுநர்	நடத்துநர்	தொழில்நுட்பம்	மொத்தம்
20,718	21,556	5,241	47,515

7.4 முழு உடற்பரிசோதனை

ஊழியர்களின் உடல் நலம் மற்றும் நல்வாழ்விற்கு இத்துறை மிகவும் முக்கியத்துவம் வழங்கி வருகிறது. இந்த நோக்கத்திற்காக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடற்பரிசோதனைத் திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம், 2013-2014 ஆம் ஆண்டில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

7.5 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு பணப் பலன்கள்

2011 ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதியாக ரூ.1,652.97 கோடியும் மற்றும் ஓய்வு கால பணப் பலன்களாகிய பணிக்கொடை மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்திற்கு ரூ.3,326.31 கோடியும், ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	பணிக்கொடை		விடுப்பு ஒப்படைப்பு ஊதியம்	மொத்தம்	சேமநல நிதி	
	பணியாளர் களின் எண்ணிக்கை	தொகை			பணியாளர் களின் எண்ணிக்கை	தொகை
2011-12	1,609	42.60	9.61	52.21	1,995	148.27
2012-13	2,292	82.10	17.17	99.27	3,229	61.90
2013-14	5,652	194.35	14.51	208.86	4,065	97.91
2014-15	1,664	68.76	2.16	70.92	4,490	129.59
2015-16	3,108	137.00	11.31	148.31	4,240	135.82
2016-17	2,491	182.90	61.83	244.73	3,810	138.18
2017-18	27,845	1,211.07	393.24	1,604.31	12,420	557.25
2018-19	3,527	204.91	102.54	307.45	5,147	101.08
2019-20	6,283	457.00	133.25	590.25	4,599	282.97
மொத்தம்	54,471	2,580.69	745.62	3,326.31	43,995	1,652.97

7.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி

போக்குவரத்துப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தினைச் செயல்படுத்த, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின்

ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியானது ஒருங்கிணைப்பு முகமையாக உள்ளது. போக்குவரத்துப் பணியாளருக்கு ஓய்வூதியத் திட்டம் அரசால் 01-09-1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 31-03-2003 அன்றும் அதற்கு முன்பும் பணியில் சேர்ந்த பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் வருவர். தற்போது, இத்திட்டத்தின்கீழ் 1.28 இலட்சம் பணியாளர்கள் உள்ளனர்.

7.7 ஓய்வூதியம் வழங்குதல்

கடந்த ஒன்பது ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி வழங்கிய ஓய்வூதியங்கள் விவரம் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

வ. எண்	ஆண்டு	ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட ஓய்வூதியம்
1.	2011-12	39,928	274.60
2.	2012-13	44,811	382.33
3.	2013-14	50,103	525.48
4.	2014-15	55,300	596.67
5.	2015-16	60,729	800.76
6.	2016-17	65,855	865.83
7.	2017-18	70,907	963.42
8.	2018-19	76,663	1086.83
9.	2019-20 (ஜனவரி 2020 வரை)	81,738	1,100.13

2020 மார்ச் 24]

ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை ஓய்வு பெற்ற போக்குவரத்துப் பணியாளர்களுக்கு சட்டரீதியான பணப் பலன்களை வழங்க அரசால் 2019-2020 ஆம் நிதியாண்டில் கீழ்க்கண்ட நிதியினை வழங்கியுள்ளது:

(ரூபாய் கோடியில்)

வ. எண்	சட்டரீதியான பணப்பலன்கள்	தொகை
1.	சேமநல நிதி	282.97
2.	பணிக்கொடை	457.00
3.	விடுப்பு ஒப்படைப்பு ஊதியம்	133.25
4.	ஓய்வூதிய ஒப்படைப்பு	207.08
5.	பங்களிப்புடன்கூடிய ஓய்வூதிய திட்டம் (C.P.S)	12.70
	மொத்தம்	1,093.00

7.8 நலத் திட்டங்கள்

போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் கருதி, பின்வரும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

i.	பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய உயர்வு/ ஆய்வுப் பலன்கள்.
ii.	விடுப்புப் பலன்கள்
iii.	திருப்பான் படி (Steering Allowance)
iv.	கல்வி உதவித் தொகை.
v.	சலுகைக் கட்டண உணவக வசதி.

vi.	இலவசச் சீருடைகள் மற்றும் சலவைப்படி.
vii.	திருமணக் கடன்.
viii.	வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
ix.	இறுதிச் சடங்குச் செலவுகள்.
x.	மாணவர்களுக்கு பள்ளி மற்றும் கல்லூாிகளுக்குச் சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச் சீட்டு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு ஆண்டிற்கு 5,500 கி.மீட்டர்.
xi	குடும்பநல நிதி.
xii.	கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமாியில் விடுமுறை விடுதிகள்.
xiii.	புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் (தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பயன்படுத்துவதுபோல).
xiv.	பண்டிகை முன்பணம் ரூபாய் 10,000/-.

7.9 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்

(அ) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க, தரமான அடிப்படை வசதிகளுடன்கூடிய ஓய்வறைகள் ரூ.7.38 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளில் கான்கிரீட் தளம், பேருந்துகளின் பழுதுநீக்கம் மற்றும் பராமாிப்புக் கூடம் ஆகியவை ரூ..38.43 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

7.10 ஓட்டுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்

ஓட்டுநர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள தொடர்ச்சியான புத்தாக்கப் பயிற்சி அளிப்பதன்மூலம் விபத்தில்லா

பயணம் என்ற இலக்கை அடையலாம். எனவே, இத்துறை கீழ்க்கண்ட சீரிய நடவடிக்கைககளை மேற்கொண்டு வருகிறது:-

1. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும்பொருட்டு நவீனமுறைக் கற்பித்தல் மற்றும் பயிற்சி வசதிகளுடன்கூடிய மேம்பட்ட ஒரு கனரக வாகன ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் ரூ.15 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2. மன அழுத்தத்தைக் குறைக்கவும், விபத்தில்லா பயணத்தை உறுதி செய்ய ஓட்டுநர்களுக்கு தொடர் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.

3. சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிமூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

4. தமிழ்நாட்டில் 7 இடங்களில் 16 ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்மூலம் ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.

அத்தியாயம் 8

துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு

விமான மற்றும் இரயில் இணைப்பு

8.1 போக்குவரத்துத் துறை, தென்னக இரயில்வே மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இரயில் மற்றும் விமான நிலையங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கு முகமைத் துறையாகச் செயல்படுகிறது. இத்துறையானது தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் இரயில்வே மற்றும் விமான நிலையங்களின் திட்டத்திற்காகத் தேவைப்படும் நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் நில நிர்வாக ஆணையரின் ஒத்துழைப்புடன் கையகம் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

8.2 விமான நிலைய விரிவாக்கத் திட்டங்களுக்கான நில எடுப்புப் பணிகள்

சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்குவதற்கும் மற்றும் பெருநகர் அல்லாத விமான

நிலையங்களான (Non-Metro Airports) மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகிய விமான நிலையங்களை விரிவாக்கம் செய்ய நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்காகத் தேவைப்படும் நிலங்கள், விமான நிலையங்கள் ஆணையத்திற்கு எந்தவித வில்லங்கமும் இன்றி இலவசமாக வழங்கப்படுகிறது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	நில எடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை
i.	சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம்	இத்திட்டத்திற்காக தமிழக அரசு 129.82 ஏக்கர் நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு ஏற்கெனவே வழங்கியுள்ளது. மேலும், சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டம் தொடர்பாக பல்வேறு வசதிகள் ஏற்படுத்துவதற்காக 100.61 ஏக்கர் நிலங்கள் கூடுதலாக தேவைப்படுவதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் தெரிவித்துள்ளது. மேற்கண்ட நில எடுப்புப் பணிகள் இறுதிகட்டத்தை அடைந்துள்ளன. விரைவில் அந்நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும். மேலும், 8.50 ஏக்கர் இராணுவ நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றுவது தொடர்பாக பாதுகாப்பு துறை அமைச்சகத்திடம் கலந்து ஆலோசித்து அதற்கான நடவடிக்கைகள் தனியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வ. எண்	திட்டத்தின் பெயர்	நில எடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை
ii	மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டம்	மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக 466.43 ஏக்கர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவும் 149.49 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் ஆக மொத்தம் 615.92 ஏக்கர் நிலங்களை நில எடுப்பு செய்ய நிருவாக அனுமதி தமிழக அரசு வழங்கியுள்ளது. நில எடுப்புக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நில மதிப்பு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நில உரிமையாளர்களுக்கு இடைக்கால இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.166.69 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மதுரை விமான நிலைய விரிவாக்கம் தொடர்பாக மாற்று சுற்றுச் சாலை அமைப்பதற்குத் தேவையான 160.32 ஏக்கர் நிலங்களை கையகம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்வதற்கும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது.

வ. எண்	திட்டத்தின் பெயர்	நில எடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை
iii.	கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கத் திட்டம்	இத்திட்டத்திற்காக தமிழக அரசு 490.27 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை கையகம்/நில உரிமை மாற்றம் செய்யவும் மற்றும் 134.58 ஏக்கர் இராணுவ நிலங்களை நிலமாற்றம் செய்யவும் நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நேரடி பேச்சுவார்த்தையின்மூலம் நிலங்கள் நில எடுப்பு செய்யப்பட்டு, நிலங்களின் மதிப்பு மாநிலங்கள் அளவிலான நேரடி பேச்சுவார்த்தை குழுவின்மூலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக இதுவரையில் ரூ.269.18 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.
iv.	திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத் திட்டம்	இத்திட்டத்திற்காக தமிழக அரசு 345.62 ஏக்கர் நிலங்களை நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்ய நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நில எடுப்புப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. மேலும், திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்குத் தேவைப்படும் 164.68 ஏக்கர் இராணுவ நிலங்களை நில மாற்றம் செய்திட தனியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வ. எண்	திட்டத்தின் பெயர்	நில எடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை
v.	சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டம்	சேலம் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக தமிழக அரசு 535.10 ஏக்கர் பட்டா நிலங்களை நில எடுப்பு செய்யவும், 32.33 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் ஆக மொத்தம் 567.43 ஏக்கர் நிலங்களுக்கு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. நில எடுப்புப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. மேலும் மண்டலங்களுக்குள் இடையேயான விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் சேலம் விமான நிலையத்திலிருந்து 25-03-2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.
vi.	தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத் திட்டம்	இத்திட்டத்திற்காக தமிழக அரசு 605.77 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தவும்/நில உரிமை மாற்றம் செய்யவும் நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்கண்ட நில எடுப்புப் பணிகள் முடிவுற்று நிலங்கள் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு ரூ.16.91 கோடி தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்காக தெறி சாலையை மாற்றியமைப்பதற்கு கூடுதலாக 96.79 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுவதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

[2020 மார்ச் 24

8.3 மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டம்

குறைந்த விலையில் விமான பயணத்தை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகம், மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை (உதான்) அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைந்த பயன்பாட்டில் உள்ள 13 விமான நிலையங்கள் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழக அரசு, மத்திய அரசின் விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் 08-06-2017 அன்று மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்காக, புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பின்வரும் சலுகைகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.

- இத்திட்டத்தின்கீழ் இயங்கும் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களுக்கு வழங்கப்படும் விமான எரிபொருளுக்கான (Air Turbine Fuel) மதிப்பு கூட்டு வரி ஒரு சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின்கீழ் உள்ள விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு சேவைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

- 20 சதவிகித சாத்தியகூறு இடைவெளி நிதி (Viability Gap Fund) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின்மூலம் விமான இயக்கும் நிறுவனத்திற்கு (Airline Operators) வழங்கப்பட்டு வருகிறது.

- உதான் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்கு வரும் ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் 50% இருக்கைகளேனும் ரூ.2,500/-க்கு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு நிபந்தனையுடன்கூடிய உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

(அ) சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலையத்திலிருந்து 25-03-2018 முதல் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது பயணிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

(ஆ) நெய்வேலி விமான நிலையம்

நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்களை இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயாராக உள்ளன. விமான போக்குவரத்து இயக்குனரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையத்திலிருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும்.

(இ) ஓசூர் விமான நிலையம்

மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் ஓசூர் விமான நிலையத்தை மேம்படுத்த தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(ஈ) வேலூர் விமான நிலையம்

இரண்டாம் உலகப்போரின்போது இருந்த வேலூர் விமான நிலையத்தினை தற்போது விரிவுபடுத்திட 62.61 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை கையகம்/நில உரிமை மாற்றம் செய்திட அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் மற்றும் மாநில நெடுஞ்சாலையை மாற்றியமைக்கும் பணிகள் தற்பொழுது நடைப்பெற்று வருகின்றன.

உ) இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் விமான நிலையங்களை விமான போக்குவரத்து அமைச்சகத்தின் மண்டலங்களுக்குள் விமான போக்குவரத்து இணைப்புத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.4 தமிழ்நாட்டில் உள்ள இரயில்வே திட்டங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் பாலக்காடு இரயில்வே கோட்டத்தின் சில பகுதிகள் தென்னக இரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ளன. தமிழக அரசின் போக்குவத்துத் துறை தென்னக இரயில்வே திட்டங்களான புதிய வழித்தடங்கள், இரட்டை இரயில் பாதை திட்டங்கள் மற்றும் அகலப்பாதை திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்களை கையகம் செய்து தருகிறது.

தற்பொழுது நடைபெற்றுவரும் புதிய வழித்தடங்கள் மற்றும் இரட்டை இரயில் பாதை திட்டங்களுக்கான நில எடுப்புப் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	இரயில்வே திட்டங்கள்	நிலஎடுப்பு விவரங்கள்
i.	மீளவிட்டான் - மேலமருதூர் (மதுரை – தூத்துக்குடி (வழி) அருப்பு க்கோட்டை) புதிய அகல இரயில் பாதைத் திட்டம்	• இப்புதிய இரயில் பாதை இப்பகுதியிலுள்ள துறைமுகங்கள் மற்றும் புதியதாக செயல்படுத்தப்பட உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு முக்கிய இணைப்புத் தடமாக இருக்கும். • தூத்துக்குடி மாவட்டத்தில் 15 கிராமங்களில் உள்ள 71.08.67 ஹெக்டேர் நிலங்கள் கையகம் செய்யப்பட்டு இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இருப்புப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
ii.	விழுப்புரம் - திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை மற்றும் மின்மயமாக்கல் திட்டம்	• இத்திட்டம் தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை இணைக்கும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டம் அதிக பயணிகளின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் திட்டமாகும். • இத்திட்டத்திற்காக அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். • நில எடுப்புப் பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன. நிலங்கள் விரைவில் இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்படும்.

வ. எண்	இரயில்வே திட்டங்கள்	நிலஎடுப்பு விவரங்கள்
iii.	ஓமலூர் - மேட்டூர் அணை இரட்டை அகல இரயில் பாதை திட்டம்	• இத்திட்டத்திற்காக சேலம் மாவட்டத்தின் 15 கிராமங்களிலுள்ள 29.20.0 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் முடிவுற்று நிலங்கள் இரயில்வே துறையிடம் வழங்கப்பட்டுள்ளது.
iv.	சின்ன சேலம் - கள்ளக்குறிச்சி அகல இரயில் பாதை திட்டம்	• இத்திட்டத்திற்காக விழுப்புரம் மாவட்டத்தின் 11 கிராமங்களிலுள்ள 48.04.00 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. நிலங்கள் விரைவில் தென்னக இரயில்வேயிடம் வழங்கப்படும்.
v.	திண்டிவனம் - நகரி புதிய அகல இரயில் பாதை திட்டம்	• இத்திட்டத்திற்காக, திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களில் 682.71.41 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நில எடுப்புப் பணிகள் விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலங்கள் விரைவில் தென்னக இரயில்வேயிடம் வழங்கப்படும்.

வ. எண்	இரயில்வே திட்டங்கள்	நிலஎடுப்பு விவரங்கள்
vi.	திண்டிவனம் - திருவண்ணாமலை புதிய அகல இரயில் பாதை திட்டம்	• இத்திட்டத்தில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 2 மாவட்டங்கள் கவரப்படுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 31.36.04 ஹெக்டேர் நிலங்கள் நிலஎடுப்பு செய்யப்பட்டு இரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 43.26.5 ஹெக்டேர் நிலங்களுக்கான நில எடுப்புப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன. • விழுப்புரம் மாவட்டத்தில் 183.44.5 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் நடவடிக்கையில் உள்ளன.
vii.	சென்னை கடற்கரை – கொருக்குபேட்டை மற்றும் கொருக்குபேட்டை - எண்ணூர் இடையே 3-வது மற்றும் 4-வது இரயில் பாதை அமைக்கும் திட்டம்	• இவ்வழித்தடம் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் வழியாக செல்கிறது. இந்த இரயில் பாதை சென்னை கடற்கரை – கும்மிடிப்பூண்டி பிரிவில் புறநகர்ப் போக்குவரத்தை அதிகரிக்க உதவுகிறது. • சென்னை மாவட்டத்தில் மூன்று கிராமங்களில் உள்ள 15890.5 சதுர மீட்டர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்புப் பணிகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	இரயில்வே திட்டங்கள்	நிலஎடுப்பு விவரங்கள்
viii.	மதுரை - தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம்	• இவ்வழித்தடம் மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியாக செல்கிறது. • மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 89.47.43 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. • இத்திட்டத்திற்காக நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். • நில எடுப்புப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
ix.	கன்னியாகுமாி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம்	• கன்னியாகுமாி மாவட்டத்தில் 4.37.75 ஹெக்டேர் நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.
x.	மணியாச்சி – நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டம்	• இத்திட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமாி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 100.33.67 ஹெக்டேர் நிலங்களைக் கையகம் செய்யவும் மற்றும் நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியாளர்களை நியமனம் செய்யவும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. • நில எடுப்புப் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

அத்தியாயம்-9

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்

9.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழகம் தனியுரிமை பெற்று சென்னை நகரில் பேருந்துகளை இயக்கும் நிறுவனமாகும். மாநகர் போக்குவரத்துக் கழகம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமையகம் பல்லவன் சாலையில் உள்ள பல்லவன் இல்லத்தில் அமைந்துள்ளது. இக்கழகம் சென்னை பெருநகர் மற்றும் அதனை ஒட்டியுள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- இப்போக்குவரத்துக் கழகம் 33 பணிமனைகளையும், 3,614 பேருந்துகளைக் கொண்டு 3,439 சேவைகளை 582 வழித்தடங்களில் இயக்கி வருகின்றது. இதன் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 22,277 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து, குளிர்சாதன பேருந்து ஆகியவைற்றை இயக்கி வருகின்றது. இக்கழகத்தின் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.
- மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள், பேருந்துகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பணிமனைகளை உயர்த்த ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க அறிவிக்கப்பட்ட 12 புதிய பணிமனைகளில், பாடியநல்லூர், கண்ணகி நகர், மகாகவி பாரதி நகர், பெசன்ட் நகர், ஆதம்பாக்கம், குரோம்பேட்டை-2, குன்றத்தூர், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் 8 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மேலும், வேளச்சேரி, தையூர், கும்மிடிப்பூண்டி மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய 4 புதிய பணிமனைகளுக்குத் தேவையான நிலங்களைக் கண்டறிந்து நில ஒதுக்கீடு உரிமை பெற விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- இப்போக்குவரத்துக் கழகத்தால் 48 குளிர்சாதன பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட வழித்தடத்தில் 10-01-2020 முதல் இயக்கப்படுகின்றது.

- சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இயக்கப்படும் மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் வாகன நகர்வு இயக்கத்தைக் கண்காணிக்க ஏதுவாக கண்காணிப்பு கேமரா மற்றும் இதனுடன் அவசர கால பொத்தான்கள் பொருத்துவதற்கும் நடுவண் அரசின் 60% நிதி பங்களிப்பும் மற்றும் மாநில அரசு 40% நிதி பங்களிப்புடன் நிர்பையா நிதியின்மூலம் இத்திட்டத்தினை நிறைவேற்ற இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

- இக்கழகம், நிர்பையா நிதியின்மூலம் ஆயிரம் மகளிருக்கு இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி மற்றும் 500 மகளிருக்கு கனரக வாகனப் பயிற்சி அளிப்பதற்கு உத்தேசித்துள்ளது. மகளிர் பாதுகாப்பு தொடர்பாக ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு பயிற்சி வழங்குவது, பொது தொலைபேசி எண் வழங்குவது மற்றும் பேருந்து முனையங்களில் தொடுதிரையைப் பயன்படுத்தி குறைகளைத் தெரிவிக்கும் வசதி ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.8.92 கோடியாகும்.

- மின்னணுப் பயணச் சீட்டுக் கருவியின்மூலம் பொதுப் போக்குவரத்து பயண அட்டையை அனைத்து பேருந்துகளிலும் பயன்படுத்தி பணமில்லா பரிவர்த்தனை இக்கழகத்தால் ரூ.76.12 கோடி மதிப்பீட்டில் அறிமுகம் செய்யப்படும். இத்திட்டம், நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் பொதுப் போக்குவரத்தில் நுண்ணறிவினை (Intelligent Public Transport System) பெருக்குவதற்கானத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும். இத்திட்ட மதிப்பீட்டில் 50% மாநில அரசின் பங்கும் 50% மத்திய அரசின் பங்குமாகும்.

- தற்போது உள்ள அலுவலகச் செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமயமாக்க (E-Goverance) இக்கழகம் திட்டமிட்டுள்ளது. இதனைச் செயல்படுத்தும்பொருட்டு, நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் பொதுப் போக்குவரத்தில் நுண்ணறிவினை (Intelligent Public Transport System) பெருக்குவதற்கானத் திட்டத்தின்கீழ்

விவரத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடான ரூபாய் 22.72 கோடியில் 50% மாநில அரசும், 50% நடுவண் அரசும் வழங்கும்.

- இக்கழகத்தால், ஏற்கெனவே 75 பேருந்துகளில் விளம்பரத்துடன்கூடிய பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மாதத்திற்கு ஒரு பேருந்துக்கு ரூ.1,200/- வருவாய் ஈட்டப்படுகிறது. மேலும் இந்த வசதி அனைத்து பேருந்துகளிலும் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.
- இதர வருவாயினைப் பெருக்கிட முதற்கட்டமாக 10 பேருந்து நிலையங்களின் உள்ளே விளம்பரம் செய்யவும், மேலும் 400 பேருந்துகளில் பேருந்து முழுவதும் விளம்பரம் செய்யவும் இக்கழகத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.
- பயணிகள் பேருந்து பற்றிய தகவல் பெறும்வகையில் இணைய தளம் மற்றும் கைபேசி பயன்பாடு (GPS மூலமாக) வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வசதியின்மூலம் வழித்தடங்களில் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பேருந்துகளின் இருப்பிடம், பேருந்துகளின் வேகம் மற்றும் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்திற்கு வரும் நேரம் ஆகியவற்றினை பொதுமக்கள் தங்கள் கைபேசி செயலிமூலம் அறியலாம்.

பயணிகளுக்காக இக்கழகம் வழங்கும் கூடுதல் வசதிகள்

பணமில்லா பரிவர்த்தனைத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், இக்கழகம் சலுகைப் பயணச் சீட்டு விற்பனை மையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Point of sale கருவிகள் மூலமாக பொதுமக்கள் சலுகைப் பயணச் சீட்டுகளைப் பெறலாம்.

மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான 210 சிறப்புப் பேருந்துகள் சென்னை நகர் முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் பேருந்துகளில் இலவசப் பயண வசதி 24-02-2016 அன்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன. சராசரியாக ஒரு நாளைக்கு 38,358 மூத்த குடிமக்கள் பேருந்துகளில் பயணிக்கின்றார்கள்.

9.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் சென்னை

இக்கழகம் மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கு இடையேயும், பேருந்துகளை இயக்குகின்றது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள பல்லவன் சாலையில் அமைந்துள்ளது. இக்கழகம் 1,231 பேருந்துகளை 22 பணிமனைகள்மூலம் இயக்குகின்றது. அவற்றில் அதிநவீன மிதவைப் பேருந்து, குளிர்சாதனப் பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து மற்றும் கழிப்பறை வசதி மற்றும் உணவகப் பேருந்து போன்ற பேருந்துகள் அடங்கும். இந்நிறுவனத்தில் மொத்தம் 5,183 பணியாளர்கள் உள்ளனர்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 251 வழித்தடங்களை இயக்கி வருகின்றது அவற்றில் தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 139 வழிதடங்களும் ஆந்திரம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களுக்கு 112 வழித்தடங்களும் இக்கழகத்தால் இயக்கப்படுகின்றன.

இந்திய ரயில்வே துறை மற்றும் விமான துறை ஆகியவற்றைப் போலவே இணைய தளம் (Online Reservation) மூலமாக முன்பதிவு செய்யும் வசதி பயணிகளுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் எந்தத் தடத்திற்கும் தமிழக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் அனைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் பயணம் செய்ய உடனடி வழித்தட பதிவு திட்டம் மூலமாக பயணச் சீட்டு முன்பதிவு செய்யப்பட்டு வருகின்றது. 76 இடங்களில் 82 முன்பதிவு மையங்களின் மூலமாக முன்பதிவு செய்யப்படுகின்றன. முன்பதிவு செய்யப்பட்டப் பயணிகளுக்கு பேருந்து நடத்துனரின் பெயர் மற்றும் கைபேசி எண், குறுஞ்செய்தியாகப் பயணம் தொடங்க 30 நிமிடங்களுக்கு முன் அனுப்பப்படுகின்றது. இதன்மூலம் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் இடம் முதலியவற்றை பயணிகள் தெரிந்துக்கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் வயதானோர், மகளிர் மற்றும் நீரழிவு நோயாளிகளின் வசதிக்காக "கிளாசிக்" பேருந்து உணவகம் மற்றும் கழிப்பறை

வசதியுடன் 20-06-2013 அன்று சென்னையிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின் தற்பொழுது சென்னை-திண்டுக்கல், சென்னை-திருச்சிராப்பள்ளி, சென்னை-தஞ்சாவூர், சென்னை-மதுரை, சென்னை-சேலம், சென்னை-புதுச்சேரி, சென்னை-கோயம்புத்தூர், சென்னை-வேளாங்கண்ணி, சென்னை-கும்பகோணம் ஆகிய வழித்தடங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம், இக்கழகத்தால் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் 2.47 ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்பட்டு குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு ஒரு லிட்டர் குடிநீர் பாட்டில்கள் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட இடங்களில் 306 விற்பனை நிலையங்களின் மூலமாக ரூபாய் 10/-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தலைமையகத்திலுள்ள அலுவலர்கள், பேருந்து இயக்கம் தொடர்பாக பிற பணிமனையிலுள்ள கிளை மேலாளர்கள் மற்றும் பிற அலுவலர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும்பொருட்டு "ஸ்கைப்" (SKYPE) வசதி செய்யப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம், பேருந்து நிலையம் போன்ற முக்கிய இடங்களைக் கண்காணிக்கவும் பயணிகள் போக்குவரத்தைக் கண்காணிக்கவும் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

முக்கிய இடங்களுக்கு BRAND பெயர்களுடன் 50 "பிரீமியம் சர்வீஸ்கள்" (PREMIUM SERVICES) இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக, கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கியமான நகரங்களில் குறிப்பிட்ட இடங்களில் ஏறும் வசதி (PICK UP POINTS) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகள் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் 2019 தீபாவளி திருநாளின்போதும் 2020 பொங்கல் பண்டிகையின்போதும் சிறப்புப் பேருந்துகள் தற்காலிக பேருந்து முனையங்களிலிருந்து பிரித்து இயக்கப்பட்டன.

2020 மார்ச் 24]

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் ஆணையின்படி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் பேருந்து நிலையங்களில் தாய்மார்கள் பாலூட்டும் அறைகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் சிறப்பம்சங்கள் கொண்ட பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் விபத்தில்லா இயக்கம், இயக்கத்திறன் அதிகப்படுத்துதல் புதிய தொழில்நுட்ப மேம்பாடு, பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் மன அழுத்த மேம்பாடு ஆகியவற்றில் பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுனர்களைக் கொண்டு ஓட்டுனர், நடத்துனர் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

இக்கழகம் 2019-2020 ஆம் நிதியாண்டில் 31-01-2020 வரை 582 புதிய பேருந்துகளை அறிமுகம் செய்துள்ளது. அவற்றில் 269 அதிநவீன மிதவைப் பேருந்துகளும், 50 குளிர்சாதனப் பேருந்துகளும், 113 குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகளும், 100 குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகளும் மற்றும் 50 கிளாசிக் பேருந்துகளும் அடங்கும்.

9.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம், நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் போக்குவரத்துச் சேவையைக் கண்காணித்து மேம்படுத்த விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இக்கழகத்திற்குச் சொந்தமான பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,376 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 21,511 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் சொகுசு போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் மூன்று புதுப்பித்தல் பிரிவும், மூன்று டயர் புதுப்பித்தல் பிரிவும்,

மூன்று பேருந்து கூண்டு கட்டும் பிரிவும், பத்து தகுதிச் சான்று பிரிவும், ஆறு ஓட்டுநர் பயிற்சி பள்ளியும், மூன்று ஏலப் பிரிவும் மற்றும் ஐந்து பயிற்சி மையமும் உள்ளன.

நெய்வேலி, ஓரிக்கை-1, ஓரிக்கை-2, சேத்துபட்டு, சின்னசேலம், பேரணாம்பட்டு, சோளிங்கர், திருக்கழுக்குன்றம், செங்கம், காட்டுமன்னார்கோவில் மற்றும் ஏலாத்தூர் ஆகிய 11 இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததில், நெய்வேலி, ஓரிக்கை-1, சேத்துப்பட்டு, காட்டுமன்னார்கோவில், சின்னசேலம், பேர்ணாம்பட்டு, ஓரிக்கை-2 மற்றும் சோளிங்கர் ஆகிய இடங்களில் புதிய பணிமனைகளை பிப்ரவரி 2014 முதல் மார்ச் 2016 வரை பல்வேறு நாட்களில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. செங்கம் பணிமனை 04-03-2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஏலாத்தூர் பணிமனை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. திருக்கழுக்குன்றத்தில் பணிமனை அமைக்க 5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2018-2019 ஆம் நிதியாண்டில் மொத்தம் 519 புதியப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் நிதியாண்டில் 399 புதியப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கூடுதல் வருவாய் ஈட்டும்பொருட்டு, இக்கழகம் அரசு எண்ணெய் நிறுவனங்களுடன் சேர்ந்து எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்காக 8 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் தீர்ப்பாயம்

வழக்குகளைக் குறைக்கும்பொருட்டு, இக்கழகம் 109 மோட்டார் விபத்து வழக்குகளுக்கு ரூ.1,702.06 இலட்சங்களை மக்கள் தீர்ப்பாயம்மூலம் வழங்கியுள்ளது.

தனியார் ஓட்டுநருக்கான புத்தாக்கப் பயிற்சி

அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு பயிற்சி மையம்மூலம் புத்தாக்கப் பயிற்சி அளிப்பதைப் போன்று தனியார் ஓட்டுநர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகின்றன:-

2020 மார்ச் 24]

- 2019 ஏப்ரல் முதல் 2020 ஜனவாி வரை 114 தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு 1 நாள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஏப்ரல் முதல் 2020 ஜனவாி வரை 272 உயிர்ச்சேத விபத்து ஏற்படுத்திய தனியார் கனரக வாகன ஓட்டுநர்களுக்கு 2 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு பேருந்துகள் இயக்கம்

இக்கழக இயக்கப் பகுதிகளுக்குட்பட்ட அனைத்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காகவும், வழக்கமாகவும் பிரதி அமாவாசை மற்றும் பௌர்ணமி போன்ற நாட்களுடன் ஆடி கிருத்திகை, தைப்பூசம், கூவாகம், தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் நடப்பு நிதியாண்டில் ஜனவாி 2020 வரை (காஞ்சிபுரத்திற்கு இயக்கப்பட்ட அத்திவரதர் வைபவ திருவிழா உட்பட) 9,098 பேருந்துகளைக்கொண்டு 5.165 இலட்சம் கி.மீ. இயக்கி வருவாயாக ரூ.1,888.25 இலட்சங்கள் (கி.மீ. 1-க்கு ரூ.36.56) ஈட்டப்பட்டுள்ளன.

மலை வழித்தடப் பேருந்துகள்

மலைவாழ் மக்கள் மற்றும் மலைப்பாங்கான தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக 29 மலை வழித்தடப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் விழுப்புரம் மண்டலத்தில் 10 பேருந்துகள் கல்வராயன், சேராப்பட்டு மற்றும் வெள்ளிமலை மலைப் பகுதியிலும், திருவண்ணாமலை மண்டலத்தில் 3 பேருந்துகள் ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியிலும், வேலூர் மண்டலத்தில் 16 பேருந்துகள் புதூர்நாடு, ஏலகிரி, வெலத்திகாமணிபென்டா, அரவட்லா, ஜமுனாமரத்தூர், பாலமதி, செங்காநத்தம் மலைப் பகுதிகளுக்கும் இயக்கப்பட்டு வருகின்றன.

பயணிகளுக்கு வழங்கும் கூடுதல் வசதிகள்

சாதாரண, விரைவு, சொகுசு, நடத்துனர் இல்லாத இடைநில்லாப் பேருந்துகளுடன், பயணிகளுக்குச் சிறந்த பயண அனுபவத்தை வழங்கும்பொருட்டு 3x2 இருக்கை வசதிகளுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்துகள் இக்கழகத்தால் முதன்முறையாக

[2020 மார்ச் 24

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் தேவையின் அடிப்படையில் அதிக குளிர்சாதனப் பேருந்துகள் இக்கழகத்தில் சேர்க்கப்படும்.

நைட்ரஜன் காற்று நிரப்பும் வசதி

உருளிப்பட்டை உழைப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் விழுப்புரம், கொணவட்டம் மற்றும் சிதம்பரம் வளாகங்களில் நைட்ரஜன் வாயு நிரப்பும் மையம் நிறுவப்பட்டுள்ளது. இதன் விளைவாக 60% உருளிப்பட்டை பஞ்சர்கள் குறைக்கப்பட்டு உள்ளது.

பயோ மெட்ரிக் வருகைப்பதிவு முறை

இப்போக்குவரத்துக் கழகத்தில் பயோ மெட்ரிக் வருகைப்பதிவு முறை விழுப்புரம் மற்றும் வேலூரில் உள்ள தலைமையகம் மற்றும் பணிமனைகளில் நிறுவப்பட்டுள்ளது. இதுபோன்று இதர இடங்களிலும் பயோ மெட்ரிக் வருகைப்பதிவு முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

ஓட்டுநர் பயிற்சி மையங்கள்

நடுவண் அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், புதுடெல்லி, நிதியுதவியுடன் விழுப்புரம், கடலூர், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மண்டலங்களில் பயிற்சி மையத்தை மேம்படுத்தவும் மற்றும் விழுப்புரம் மற்றும் வேலூரில் வாகன ஓட்டுநர் பயிற்சி தளங்களை நிறுவவும் ரூ.6.00 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9.4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

இப்போக்குவரத்துக் கழகம், சேலம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றது. சேலம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளுக்கு போக்குவரத்து சேவைகளை இக்கழகம் வழங்கி வருகின்றது. இக்கழகம், சாதாரண மற்றும் விரைவுப் பேருந்துகளை இயக்குகின்றது.

இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 32 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,222 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,900 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தில் பணியாளர்களின் எண்ணிக்கை 12,698 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் இரு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு நாமக்கல் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் சராசரியாக மாதத்திற்கு 10 பேருந்துகள் கூண்டு கட்டும் கொள்ளளவை முறையே கொண்டு செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2019-2020 ஆம் ஆண்டில், 273 குளிர்சாதனமில்லாப் புதிய பேருந்துகள் மற்றும் 10 குளிர்சாதன பேருந்துகள் பொதுமக்களின் வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கழகம் 2019-2020 ஆம் ஆண்டில் சிப்ப அனுப்புகைச் சேவை (Parcel service) மூலமாக 43.02 இலட்சங்களை கூடுதல் வருவாயாக ஈட்டியுள்ளது. மேலும், வழித்தடங்களில் சுகாதாரமான உணவகங்களில் பயணிகளின் வசதிக்காக பேருந்துகளை நிறுத்தியதன்மூலம் கூடுதல் வருவாயாக 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.38.35 இலட்சங்களும், 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.14.91 இலட்சங்களும் கூடுதல் வருவாயாக இக்கழகம் ஈட்டியுள்ளது.

இப்போக்குவரத்துக் கழகம் பேருந்துகளில் வணிக விளம்பரங்கள் மூலமாக கூடுதல் வருவாயாக 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.130.87 இலட்சங்கள் மற்றும் 2019-2020 ஆம் நிதியாண்டில் 133.72 இலட்சங்களும் மேலும் கிளை சுவர் விளம்பரம்மூலம் ரூ.4.40 இலட்சங்களும் கூடுதல் வருவாயாக ஈட்டியுள்ளது.

இக்கழகம், பயணிகளுக்கு 3-ல் 1 பங்கு மாதாந்திரக் கட்டணச் சலுகை வழங்கியதன்மூலம் 2018-2019 ஆம் நிதியாண்டில் புறநகர் பேருந்துகளில் 19,628 நபர்களுக்கும், நகர் பேருந்துகளில் 56,021 நபர்களுக்கும் பயன் அளித்துள்ளது. 2019-2020 ஆம் நிதியாண்டில் புறநகர் பேருந்துகளில் 11,824 நபர்களுக்கும், நகர் பேருந்துகளில் 41,311 நபர்களுக்கும் பயன் அளித்துள்ளது.

இக்கழகம் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளைக் கொண்டு தட நீட்டிப்பின் மூலமாக 2018-2019 ஆம் நிதியாண்டில் 38 கிராமங்களுக்கு புதிதாக பேருந்து வசதி அளித்ததன்மூலம்

11,900 மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டும், 2019-2020 ஆம் நிதியாண்டில் 23 கிராமங்களுக்கு புதிதாக பேருந்து வசதி அளித்து 9,000 மக்களுக்கு பயண வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகளை பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குச் செய்து வருகின்றது:-

(i) வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் கீழ்க்காணும் சுற்றுலாத் தலங்களுக்கு சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்படுத்தி வருகிறது. ஏற்காடுமலை, கொல்லிமலை, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.

(ii) பண்டிகை மற்றும் முக்கிய நாட்களில் கீழ்க்காணும் ஆலயங்களுக்கு சிறப்பு பேருந்து வசதி ஏற்படுத்தி வருகிறது. மாதேஸ்வரன் மலை, சிவன் கோயில் அமைந்துள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் ஆறகலூர் பகுதிகளுக்கும், முருகன் கோயில் அமைந்துள்ள காளிப்பட்டி மற்றும் கபிலர்மலை பகுதிகளுக்கும், நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிப்பாட்டுத் தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகின்றது.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் புதிய பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும் தலா ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் பணிகள் நடைபெற்று வருகின்றன. வகுப்பறைகள் புதுபித்தல், மேஜை, நற்காலி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் பொதுமக்கள் நலுனுக்காக கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி தளம் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அடங்கும்.

இக்கழகம், 27 நடத்துனர் இல்லா பேருந்துகளை சேலம்-கோவை மற்றும் சேலம்-பெங்களூரு வழித்தடத்தில் இயக்கி வருகின்றது. மேலும் சேலத்திலிருந்து கோவை, பெங்களூரு, மதுரை, கரூர் மற்றும் திருச்சி ஆகிய முக்கிய நகரங்களுக்கு 10 குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

2020 மார்ச் 24]

இக்கழகம், ஏற்காடு மலை, கொல்லிமலை, கல்ராயன்மலை (வெள்ளிமலை) மற்றும் நல்லமதிமலை (பச்சமலை) ஆகிய பகுதிகளுக்கு 25 சேவைகளை மலைவாழ் மக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இயக்கி வருகின்றது.

இக்கழகத்தால் "அம்மா குடிநீர்" 38 விற்பனை நிலைங்களின் மூலம் முக்கியப் பேருந்து நிலையங்களிலும், பயணிகள் அதிகம் செல்லும் இடங்களிலும் விற்கப்படுகின்றது.

பணியாளர்களின் மன அழுத்தத்தினைக் குறைப்பதற்கும், வாழ்க்கை–வேலை சமநிலையினை மேம்படுத்துவதற்கும் 3,384 பணியாளர்களுக்கு 2019-2020 ஆம் நிதியாண்டில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

9.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

இக்கழகம், கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேலாண் இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றது. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன. இக்கழகம் 44 கிளைகளையும், 8 கோட்ட அலுவலகங்களையும் கொண்டுள்ளது. இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 2,940 மற்றும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 17,780 ஆகும்.

இக்கழகத்தில் பணிபுரியும் நடத்துநர், ஓட்டுநர், பணிமனைத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்து வேலைத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1978 இல் பொள்ளாச்சியில் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பவானிசாகரிலும் பயிற்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஓட்டுநர்களுக்கும், நிரந்தர ஓட்டுநர்களுக்கும் தங்களது பேருந்து ஓட்டும் திறனை மேம்படுத்திக்கொள்ள ஓட்டுதல் ஒத்த தன்மைக் கருவிக் கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதுவரை 7,523 ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர்களின் திறனை மேம்படுத்தும்பொருட்டு, சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்மூலம் பவானிசாகர் பயிற்சி மையத்தில் ஒரு ஓட்டுதல் ஒத்த கருவி தற்போது நிறுவப்பட்டுள்ளது.

இக்கழகம் பயணிகள் போக்குவரத்துடன் பொதுமக்களுக்கு பின்வரும் சேவைகளையும் செய்து வருகிறது:

- இக்கழகம் வால்பாறை, மருதமலை, உதகமண்டலம் மற்றும் கூடலூரில் பேருந்து நிலையங்களை அமைத்து பராமரித்து வருகின்றது.

- பயணிகளின் வசதிக்காக இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் சாலையோர சிற்றுண்டி விடுதிகளைப் பராமரித்து வருகின்றது.

9.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

இக்கழகம், கும்பகோணத்தைத் தலைமையிடமாகக்கொண்டு மேலாண் இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரத்துச் சேவையைக் கண்காணிக்க கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, காரைக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 61 ஆகும். இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 3,457 மேலும், 3,335 வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 21,480 ஆகும். இக்கழகம், நகர், புறநகர் மற்றும் சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இப்போக்குவரத்துக் கழகத்தின் கூண்டு கட்டும் பிரிவுகள் பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், உதிரி பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவுகள் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இயங்கி வருகின்றன.

மணச்சநல்லூரில் புதிய பணிமனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29-01-2020 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. விராலிமலை, கரூர், திருமயம், சாயல்குடி, பாளையம் மற்றும் கீரனூர் ஆகிய இடங்களில் புதிய கிளைகளைக் கட்டும் பணி விரைவில் தொடங்கப்படும்.

2020 மார்ச் 24]

கும்பகோணம், ஸ்ரீரங்கம், பிராட்டியூர் மற்றும் மணல்மேல்குடி ஆகிய இடங்களில் புதிய கிளைகளைத் துவங்குவதற்கு நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், கும்பகோணம் நகர்-II, கரூர் மற்றும் பொறையார் ஆகிய இடங்களில் புதிய ஓய்வு அறை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கரூர், அரியலூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் பயிற்சி ஓடுதளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

9.7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

இக்கழகம், மேலாண் இயக்குநரின் தலைமையில் மதுரை மாநகரைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் பேருந்து சேவையை வழங்கி வருகின்றது.

இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 39 ஆகும். இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,342 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,166 ஆகும். இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 14,337 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில், 1,207 புதிய பேருந்துகளும், 91 புதிய வழித்தடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை திட்டத்தின்கீழ் 6,103 தொழிலாளர்கள் முழு உடல் பரிசோதனை செய்து பயனடைந்துள்ளார்கள்.

பழகுநர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஓட்டுதல் ஒத்த கருவிமூலம் ஓட்டுநர் பயிற்சியினை இக்கழகம் வழங்கி வருகின்றது. 2019-2020 ஆம் ஆண்டில், மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மண்டலங்களில் 400 ஓட்டுநர்கள் பயனடைந்துள்ளனர்.

பயணிகளுக்கான இதர வசதிகள்

- இக்கழகத்தில் பயணிகளின் வசதிக்கேற்ப நகர மற்றும் புறநகர் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக மாதாந்திர சலுகைக் கட்டண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.
- போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் உள்ள 20 பேருந்து நிலையங்களில் அம்மா குடிநீர் திட்டத்தின்கீழ் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- 30 இரவு நகரப் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன.
- பேருந்து நிறுத்தத்தின் பெயரை முன்னரே அறிவிப்பு செய்யும் முறை மதுரை நகரில் இயக்கப்படும் 50 பேருந்துகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- திருவிழாக்களை முன்னிட்டு கீழ்க்கண்ட இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. (1) வீரபாண்டி (2) இருக்கன்குடி (3) வேளாங்கண்ணி (4) பழனி (5) ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் கோயில் (6) அழகர்கோவில் (7) திருச்செந்தூர் கோயில் (8) மாசாணியம்மன் கோயில் (9) திருவண்ணாமலை கிரி வலம் மற்றும் திருப்பரங்குன்றம் கோவில்.
- வெளி மாநிலங்களிலிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- மதுரை, அதிகமான சுற்றுலா இடங்களைக்கொண்ட ஒரு பண்டைய நகரம் என்பதால், மதுரையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கும், சுமார் 23 கி.மீ தொலைவில் உள்ள கள்ளழகர் திருக்கோயிலுக்கும் பொதுமக்களின் தேவைகளின் அடிப்படையில் சுற்றுலாப் பேருந்துகளை இக்கழகம் இயக்கி வருகின்றது.

9.8 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

- இக்கழகம், மேலாண் இயக்குநர் தலைமையின்கீழ், திருநெல்வேலி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. போக்குவரத்து சேவையை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

- இக்கழகத்தின் பணிமனைகளின் எண்ணிக்கை 30 ஆகும். இப்போக்குவரத்துக் கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,762 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 10,823 ஆகும். இக்கழகம், சாதாரண, விரைவு, அதிநவீன, மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் இக்கழகத்திற்குச் சொந்தமாக உள்ளன.

- பேருந்துகளின் எண்ணிக்கைக்கேற்ப, புதிய பணிமனைகளின் எண்ணிக்கையினை உயர்த்திட அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, சேரன்மாதேவி, ஆலங்குளம் மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் 3 புதிய பணிமனைகள் தொடங்க அறிவிப்பு செய்யப்பட்டது. சேரன்மாதேவி மற்றும் சாத்தான்குளத்தில் புதிய பணிமனைகள் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும், ஆலங்குளத்தில் பணிமனை கட்டுவதற்கான இடத்தினைத் தேர்வு செய்யும்பொருட்டு, இக்கழகம் வருவாய்த் துறையுடன் ஆலோசித்து வருகின்றது.

- 16-5-2011 முதல் 31-1-2020 வரை 10 குளிர்சாதனப் பேருந்துகள் உள்பட 867 புதியப் பேருந்துகளும், 73 புதிய வழித்தடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- முழு உடல் பாரிசோதனைத் திட்டத்தின்கீழ் 4,857 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

- இக்கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதியினைச் செய்து வருகிறது:-

- இப்போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூர், சங்கரன்கோவில், திருவில்லிபுத்தூர், உவாி, கன்னியாகுமாி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

- “அம்மா குடிநீர்” திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமாியிலுள்ள பேருந்து நிலையங்களில் 18 விற்பனை நிலையங்களின் மூலமாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்படி இக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கன்னியாகுமாி பேருந்து நிலையத்தில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்கு தனி அறை அமைக்கப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.

- இக்கழகத்தால் இரண்டு இரவுப் பேருந்துகள் திருநெல்வேலி நகரத்திலும் மற்றும் ஓர் இரவுப் பேருந்து நாகர்கோவில் நகரத்திலும் இயக்கப்பட்டு வருகின்றன.

- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் மண்டலத்தின் 24 வழித்தடங்களின்மூலம் 53 தனி நடைகள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கென இயக்கப்பட்டு வருகின்றன.

- இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக, 18 நடத்துனர் இல்லா பேருந்துகளை திருநெல்வேலி-நாகர்கோவில் வழித்தடத்திலும், 5 நடத்துனர் இல்லா பேருந்துகளை திருநெல்வேலி-தூத்துக்குடி வழித்தடத்திலும் இயக்கி வருகின்றது.

அத்தியாயம்-10

10.1 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை

பொதுமக்கள், அரசு துறைகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து வைப்பீடுகள் பெற்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை மூலதன நிதியுதவியைப் பூர்த்தி செய்வதே தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனமானது, தமிழக அரசிற்குச் சொந்தமான வங்கி இல்லாத நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கியல்லாத நிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு, 25-3-1975 அன்று தொடங்கப்பட்டது.

10.2 நிதிச் செயல்பாடு

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட 1975 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக ஈட்டிய இலாபம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சங்களில்)

ஆண்டு	வட்டி தள்ளுபடிக்கு முந்தைய இலாபம்	வட்டி தள்ளுபடி செய்தது	வட்டி தள்ளுபடிக்கு பின்பும் ஆனால் வருமான வரிக்கு முன்பும் இலாபம்	வருமான வரி	வருமான வரிக்குப் பிந்தைய இலாபம்
2014-2015	3294.25	2509.00	785.25	269.69	530.48
2015-2016	5283.29	4648.68	634.61	212.95	423.36
2016-2017	7322.42	6469.00	853.42	282.17	571.25
2017-2018	7996.71	6964.50	1032.21	357.23	674.98

2018-2019	9885.93	8684.16	1201.77	419.95	781.82
2019-2020 (செலவு திட்ட மதிப்பீடு	11247.85	9800.00	1447.85	505.94	941.91

10.3 வைப்பீடுகள்

இந்நிறுவனம் பொதுமக்களிடம் முதலீட்டிற்கு ஏற்ற நிறுவனம் என்ற நம்பகத்தன்மையைத் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. 31-1-2020 அன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் செய்துள்ள மொத்த வைப்புத்தொகை ரூபாய் 5,920.44 கோடியாகும்.

10.4 வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள்

வைப்பீடுகளுக்கான வட்டி வீதம் சந்தை நிலவரத்திற்கேற்பவும், போக்குவரத்துக் கழகங்களின் நிதித் தேவை மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் தன்மைக்கேற்ப வழங்கப்படுகின்றது. தற்போதைய வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

காலம்	வைப்பீடுகளுக்கான வட்டி வீதங்கள் (கூட்டு வட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது) 16-5-2018 முதல்	
	பொதுமக்கள்	மூத்த குடிமக்கள்
12 மாதங்கள்	7.50%	7.75%
24 மாதங்கள்	7.75%	8.00%
36-லிருந்து 60 மாதங்கள்	8.25%	8.75%

2020 மார்ச் 24]

10.5 வைப்பீட்டுத் திட்டங்கள்

தற்போது கீழ்க்கண்ட இரு வைப்பீட்டுத் திட்டங்கள் உள்ளன:-

	திட்டம் 1	திட்டம் 2
	குறித்த காலம்தோறும் வட்டி வழங்கும் திட்டம்	பணப்பெருக்குத் திட்டம்
குறைந்தபட்ச வைப்பீடு	ரூ.25,000/- *	ரூ.25,000/- *
காலம் (மாதங்களில்)	24, 36, 48 மற்றும் 60	12, 24, 36, 48 மற்றும் 60
வழங்கும் வட்டி வீதம்	24 மாதங்கள்– காலாண்டு, 36–60 மாதங்கள்–மாதம், காலாண்டு மற்றும் ஆண்டு வட்டி.	முதிர்வுறும்போது (கூட்டுவட்டி மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது)

*1-1-2020 நடைப்பெற்ற குழுமக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் குறைந்தபட்ச வைப்பீட்டுத் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/-மாக மாற்றியமைக்கப்பட்டது.

10.6 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட வைப்பீடுகள்

இத்திட்டம் தமிழக அரசால் சமூக நலத் துறையின்மூலம் வழங்கப்படும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமாகும். 31-1-2020 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தின்கீழ் 88,964 வைப்பீடுதாரர்களின்மூலம் பெறப்பட்ட வைப்பீடு ரூ.13.47 கோடியாகும்.

[2020 மார்ச் 24

10.7 நிறுவனத்தின் நிதிநிலை

31-1-2020 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மொத்த நிதி ஆதாரங்கள் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

பங்கு மூலதனம் அ) அரசு பங்குத் தொகை ஆ) அரசு போக்குவரத்து கழகங்களின் பங்குத் தொகை	1,057.63 18.71 -------	1076.34
மிகுதித் தொகை மற்றும் ஒதுக்கீடு		133.89
வைப்பீடுகள்		5920.44
மொத்தம்		7,130.67

10.8 கடன்கள்

2019-2020 (ஜனவரி 2020 வரை) ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களுக்கு அளிக்கப்பட்ட கடன் உதவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(ரூபாய் கோடியில்)

1.	தவணைக் கொள்முதல் கடன்கள்	916.62
2.	குறுகிய கால கடன் மோட்டார் வாகன அரையாண்டு வரி செலுத்துவதற்காக மற்றும் இதர கடன்களுக்காகக் கொடுக்கப்பட்டது.	777.51
3.	பருவக்கடன்கள் நடைமுறை மூலதனத்திற்காக வழங்கியது.	2,858.24
	மொத்தம்	4,552.37

இந்நிறுவனத்தின் குறுகிய கால கடன் உதவியினால் அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் அரையாண்டிற்கான மோட்டார் வாகன வரியை மொத்தமாக செலுத்தியதால் வாகன வரியில் நான்கு சதவிகிதம் தள்ளுபடி பெற்று போக்குவரத்துக் கழகங்களின் செலவினைக் குறைக்க உதவியது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அளித்த கடனுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	நிதியுதவிகள்
2014-2015	2,151.24
2015-2016	2,776.33
2016-2017	3,574.32
2017-2018	3,757.58
2018-2019	3,618.45
2019-2020 (ஜனவரி 2020 வரை)	4,552.37

10.9 புதிய கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டி வீதம்

இந்நிறுவனம் அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்கிய புதிய கடன்களுக்கான வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

	வட்டி வீதம்	நாளன்றுள்ளவாறு
தவணைக் கொள்முதல் கடன்கள்	9.75%	1-1-2018
ரூ.600 கோடி தவணைக் கொள்முதல் கடன் அரசாணை நிலை எண் 26, போக்குவரத்து (எ) துறை, நாள்: 28-2-2019	2.00%	28-2-2019
ரூ.302.06 கோடி தவணைக் கொள்முதல் கடன் அரசாணை நிலை எண் 117, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 10.7.2019	12.60%	10-7-2019
குறித்த காலக் கடன்கள்	10.00%	1-4-2017
குறுகிய காலக் கடன்கள் (சம்பளம்)	10.25%	

10.10 போக்குவரத்துக் கழகங்களின் மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் "வங்கிகளுடனான தற்போதுள்ள மூலதன ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வட்டி வீதத்தைக் குறைத்தல்", அறிவிப்பிற்கிணங்க இந்நிறுவனம் அரசு ஆணை எண் 113, போக்குவரத்து (ட்டி1) துறை, நாள்: 4-7-2019 மூலம் பாரத ஸ்டேட் வங்கியிடம் இருந்து ரூ.900/- கோடி ரொக்கக் கடன் பெற்று அதை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் போக்குவரத்துக் கழகங்கள் ஆண்டுக்கு ரூ.65/- கோடி வரை வட்டி ஆதாயம் கிடைத்துள்ளது.

10.11 பங்கு மூலதன உதவி

2019-2020 ஆம் ஆண்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ரூ.150 கோடியினை தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு பங்கு மூலதன உதவியாக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-11

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழு

11.1 சாலைப் போக்குவரத்துத் தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய அடிப்படை நோக்கமாகும். இந்நிறுவனம் தொடங்கிய காலத்தில் இருந்து தன்செயல்பாடுகளை பல்வேறு துறைகளுக்கும் விரிவுபடுத்தி தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் தயாரிப்பு, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், போக்குவரத்துப் பணி, அறிவார்ந்த போக்குவரத்து முறைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தனது ஆலோசனை சேவைகளை அளித்துள்ளது. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவானது, 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.50 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன், ரூ.10 இலட்சம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் தொடங்கப்பட்டது.

11.2 இந்நிறுவனம் ஈடுபட்டுள்ள திட்டங்கள்

1. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்காக, சென்னை-பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பு (பி.ஆர்.டி.எஸ்.)-க்கான விரிவான திட்ட அறிக்கை (டி.பி.ஆர்.) தயாரித்தல், 2. அரசு போக்குவரத்துக் கழகங்களில் நிகழ்நிலை மின்னணு பயணச் சீட்டு இயந்திரங்கள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்புகளைச் செயல்படுத்துதல், 3. நிகழ்நிலை இணையதள முன்பதிவு வசதியைக் கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மேற்கொள்ளுதல், 4. கோயம்புத்தூரில் உள்ள எல் அண்ட் ட்டி புறவழிச் சாலையில் போக்குவரத்துக் கணக்கெடுப்புப் பணி, 5. தென்னிந்திய தானியங்கி வாகனச் சங்கத்திற்கு மென்பொருள் உருவாக்குதல் மற்றும் 6. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைக்கான பழைய ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல் ஆகிய திட்டங்களில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

11.3 எதிர்கால வாய்ப்புகள்

இந்திய அரசின் FAME-II திட்டத்தின்கீழ், புதிய தொழில்நுட்பத் திட்டமான, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் மின்சாரப் பேருந்துகளை (இ-பஸ்) இயக்கும் திட்டத்தைப் பெறுவதற்கு, இக்கழகம் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும்,

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய மின்னணு பயணச் சீட்டு இயந்திரங்களைச் செயல்படுத்தும் திட்டத்திலும், தென்னிந்திய தானியங்கி வாகனச் சங்கத்தின், வணிகச் செயல்பாட்டினை நவீன மயமாக்குதல், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறைக்கான நூலக தகவல் அமைப்பின் வருடாந்திர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் திட்டங்களுக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளது.

அத்தியாயம்-12

சாலைப் போக்குவரத்து நிறுவனம்

12.1 சாலைப் போக்குவரத்து நிறுவனமானது சாலைப் போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டுப் பணிகள், சாலை விபத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை, அரசு போக்குவரத்துக் கழகங்களால் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்களின் தரத்தினைப் பரிசோதித்தல் மற்றும் போக்குவரத்துக் கழக அலுவலர்கள்/பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் 1860 ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

12.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி

சாலைப் போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிபூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது. 17 பயிற்சி மையங்களில் 2019-20 ஆம் ஆண்டு வரை மொத்தம் 62,282 நபர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை போக்குவரத்து நிறுவனம் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிகளை, சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் அளித்து வருகின்றது.

12.3 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனம்

மற்றும் அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்களிலும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2019-2020 வரை நடைபெற்ற 1,937 பயிற்சிகளின்மூலம் மொத்தம் 40,921 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

12.4 உபகரணங்கள் பரிசோதனைக் கூடம்

சாலைப் போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 மோட்டார் வாகன உதிரிபாகங்கள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசோதனைக் கூடத்தில் 5,907 மாதிரிக் கூறுகள் (samples) இதுவரை பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

12.5 சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை 526 ஆராய்ச்சி அறிக்கைகள், 30 ஆலோசனை அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. மேலும், விபத்து ஆராய்ச்சி கையேடு மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கான வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்பெறும் வகையில் தொழில்நுட்பக் கையேட்டினை வெளியிட்டுள்ளது.

12.6 கொள்முதலில் ஒருங்கிணைப்பு முகமை

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான முக்கிய பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச் சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படைப் பொருட்கள், மசகு எண்ணெய் (லூப்ரிகன்ட்ஸ்) மற்றும் அம்மா குடிநீர் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் ஆகியவற்றை வாங்குவதில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

12.7 கல்வி நிறுவனங்கள்

போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகன ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுதாரர்களின் நலனுக்காகவும், 1984 ஆம் ஆண்டில் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி இந்நிறுவனத்தால் ஈரோடு மாவட்டம், சித்தோட்டில் துவக்கப்பட்டது. இக்கல்லூரியில், இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பில் ஆண்டுதோறும் 468 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இக்கல்லூரியில் இதுவரை 9,704 மாணவர்கள் இளநிலை பொறியியலிலும் (பி.இ.), 220 மாணாக்கர்கள் முதுகலை (கட்டடவியல்) பொறியியலிலும் (எம்.இ.), 32 மாணாக்கர்கள் முதுகலை (கணினி) அறிவியலிலும் பட்டங்கள் பெற்றுள்ளனர். இப்பொறியியல் கல்லூரி, மாநிலத்திலுள்ள முதல்தர கல்லூரிகளில் ஒன்றாகும்.

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்கீழ் மூன்று தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள், குரோம்பேட்டை (சென்னை), பர்கூர் (கிருஷ்ணகிரி) மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1992-1993 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. தற்போது, இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் மொத்தம் 700 மாணவர்கள் பட்டய பொறியாளர் படிப்பில் அனுமதிக்கப்படுகிறார்கள். இம்மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சேர்ந்து 2019 வரை 10,107 மாணவர்கள் பட்டயங்கள் பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தால் நடத்தப்படும் கல்லூரிகளில் அரசு மற்றும் நிருவாக ஒதுக்கீட்டின்கீழ் தற்போது நிரப்பப்படும் இடங்களின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	பிரிவுகள்	மொத்த இடங்கள்	நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை	
			அரசு ஒதுக்கீட்டு இடங்கள்	நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள்
1.	பொறியியல் கல்லூரி			
(அ)	இளங்கலை பொறியியல் பட்டப் பிரிவு	420	273 (65%)	147 (35%)

வ. எண்	பிரிவுகள்	மொத்த இடங்கள்	நிரப்பப்படும் இடங்களின் எண்ணிக்கை	
			அரசு ஒதுக்கீட்டு இடங்கள்	நிருவாக ஒதுக்கீட்டு இடங்கள்
(ஆ)	முதுகலைப் பட்டம் கட்டடவியல்	24	17 (72%)	7 (28%)
(இ)	கணினி பொறியியல்	24	17 (72%)	7 (28%)
2.	தொழில்நுட்ப பயிலகங்கள்	700	350 (50%)	350 (50%)

தொடக்கத்தில் சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களுக்கான மூலதனச் செலவினங்களை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக்கொண்டன. சாலைப் போக்குவரத்து நிறுவனம் சென்னை மற்றும் கும்மிடிபூண்டி பயிற்சி மையங்களுக்கான அன்றாட செலவினங்களை 2013 ஆம் ஆண்டு முதல் அரசாணை எண் 6, போக்குவரத்து (அ) துறை, நாள் 8-1-2013-ன்படி போக்குவரத்துக் கழகங்களுக்குக் கொள்முதல் செய்யப்படும் பொருட்களை வழங்குபவர்களிடமிருந்து சிறப்பு நிருவாக தள்ளுபடி வசூல் மற்றும் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தொழிலாளரிடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் தொகை வைப்பு நிதியிலிருந்து வரும் வட்டி வருமானம், கல்விக் கட்டணம் ஆகியவற்றின்மூலம் ஈடு செய்யப்படுகிறது.

செயல்பாட்டுக் காரணங்களுக்காக, சாலைப் போக்குவரத்து நிறுவன பெருந்துறை மருத்துவக் கல்லூரி அரசு ஆணைப்படி சுகாதார மற்றும் குடும்ப நலத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கல்வி நிறுவனங்களில் இவ்வாண்டில் 277 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

அத்தியாயம்-13

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு

13.1 சாலைப் போக்குவரத்து இதழ்

சாலைப் போக்குவரத்து நிறுவனம் சாலை போக்குவரத்து, சாலை பாதுகாப்பு, விபத்து ஆய்வு மற்றும் மின்னணு பயணச் சீட்டு முறை போன்ற தகவல்களை உள்ளடக்கிய "Journal of Road Transport" என்கிற காலாண்டு இதழை வெளியிடுகின்றது.

13.2 உதிரி பாகங்கள் பரிசோதனை மற்றும் தரம் கண்காணித்தல்

அகில இந்திய சாலைப் போக்குவரத்துக் கழகம் (ASRTU) மற்றும் இந்திய தரக்காப்பீட்டு நிறுவனம் (BIS) நிர்ணயித்த குறியீடுகளின்படி பேருந்தில் பயன்படுத்தப்படும் 54 வகையான உதிரி பாகங்களைப் பரிசோதனை செய்வதற்கான உபகரணங்கள் இந்நிறுவனத்தில் உள்ள பரிசோதனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில் 2018-2019 வரை 5,881 மாதிரிக் கூறுகள் (samples) பரிசோதனைச் செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் 26 உதிரி பாகங்களின் மாதிரிக் கூறுகள் போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து பெறப்பட்டு அதன் விவரம் அகில இந்திய சாலைப் போக்குவரத்துக் கழக விதிகளின்படி போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

13.3 போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பதவி உயர்வுக்கான தேர்வு

அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு அளிப்பதற்காக மேலாளர்கள் தேர்வு மற்றும் இதர பிரிவினர்களுக்கான தேர்வு 2-6-2019-ல் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளில் கலந்துகொண்டோர் மற்றும் தேர்ச்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	தேர்வு விவரம்	தேர்வில் பங்கேற்றவர்	தேர்ச்சியடைந்தோர்	தேர்ச்சி விகிதம்
1.	மேலாளர்கள் பதவிக்கான தேர்வு	79	52	66

2020 மார்ச் 24]

வ. எண்	தேர்வு விவரம்	தேர்வில் பங்கேற்றவர்	தேர்ச்சியடைந்தோர்	தேர்ச்சி விகிதம்
2.	கண்காணிப்பாளர்/ மேற்பார்வையாளர் பதவிகளுக்கான தேர்வு	416	302	73
	மொத்தம்	495	354	72

மேலாளர்கள் மற்றும் இதர பிரிவினருக்கான துணைத் தேர்வு 18-8-2019 அன்று நடைப்பெற்றது அதன் விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

வ. எண்	தேர்வு விவரம்	தேர்வில் பங்கேற்றவர்	தேர்ச்சி யடைந்தோர்	தேர்ச்சி விகிதம்
1.	மேலாளர்கள் பதவிக்கான தேர்வு	25	21	84
2.	கண்காணிப்பாளர்/ மேற்பார்வையாளர் பதவிகளுக்கான தேர்வு	207	161	78
	மொத்தம்	232	182	78

13.4 போக்குவரத்து மைய கொள்முதல் பிரிவு

அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான முக்கியப் பொருட்களாகிய பேருந்து அடிச்சட்டங்கள் (Chassis), பேருந்து கூண்டு கட்டுதல் (Bus Body Building), முழுவதுமாகக் கட்டப்பட்ட பேருந்துகள் (Fully Built Buses), உருளிப்பட்டைகள் (Tyres), பயணச் சீட்டு அச்சிடல் (Printing of Tickets), உருளிப்பட்டை புதுப்பிக்கும் பொருட்கள் (R.T. Materials), மசகு

எண்ணெய் (Lubricants) மற்றும் அம்மா குடிநீர் பாட்டில்கள் தயாரிப்பு மூலப்பொருட்கள் ஆகியவற்றின் விலை மற்றும் ஒப்பந்த விதிகளை முடிவு செய்ய, சாலைப் போக்குவரத்து நிறுவனம் முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், ஏற்கெனவே செயல்பட்டு வந்த உயர்மட்டக் குழுவிற்குப் பதிலாக ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழுவினையும் அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

மாணவர் பேருந்து பயண அட்டை உருளிப்பட்டை மறுசுழற்சிக்கான மூலப்பொருட்கள், பேருந்து அடிச்சட்டம், பேருந்து கூண்டு கட்டுதல் மற்றும் LAMB திட்டத்திற்கான விலை நிர்ணயம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் குழு 2019-2020 ஆம் ஆண்டில் 6 முறை கூட்டப்பட்டுள்ளது.

அத்தியாயம்-14

14.1 பயிற்சிப் பிரிவு

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கென பல்வேறு பயிற்சிகள் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகங்கள் மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி ஆகிய இடங்களில் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிகளை சிறந்த முறையில் நடத்திட ஆண்டுதோறும் கால அட்டவணை தயாரித்து போக்குவரத்துக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டு அதன்படி பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை			கலந்துகொண்டோர் நபர்களின் எண்ணிக்கை		
		2018-2019 வரை	2019-2020	மொத்தம்	2018-2019 வரை	2019-2020	மொத்தம்
1.	சாலைப் போக்குவரத்து நிறுவனம், தரமணி மற்றும் கிளை நிறுவனங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள்	999	30	1,029	17,903	455	18,358

வ. எண்	விவரம்	பயிற்சி வகுப்புகள் எண்ணிக்கை			கலந்துகொண்டோர் நபர்களின் எண்ணிக்கை		
		2018-2019 வரை	2019-2020	மொத்தம்	2018-2019 வரை	2019-2020	மொத்தம்
2.	கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இதர பயிற்சிகள்	495	1	496	10,034	31	10,065
	மொத்தம்	1,494	31	1,525	27,937	486	28,423

தற்பொழுது 29 ஊழியர்கள் 5 போக்குவரத்துக் கழக அயற்பணி அலுவலர்கள் உட்பட தரமணி தலைமை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

14.2 ஓட்டுநர் பயிற்சி மையம்

கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையம், கும்மிடிபூண்டி: கும்மிடிபூண்டி ஓட்டுநர் பயிற்சி மையத்தில் 12 வார கால கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி விஞ்ஞான முறைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சியில் சேருவதற்கான குறைந்தபட்சத் தகுதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1.	குறைந்தபட்ச கல்வி தகுதி	:	பொருந்தாது
2.	ஓட்டுநர் உரிமம் மற்றும் பயணிகள் வாகன ஓட்டுநர் வில்லை	:	இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம்
3.	முன் அனுபவம் இலகுரக வாகனம் இயக்கியிருத்தல்	:	குறைந்தபட்சம் ஒரு வருடம்
4.	வயது	:	20 வயதுக்குக் குறையாமல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

5.	உயரம்	:	குறைந்தபட்சம் 159.5 செ.மீ.
6.	எடை	:	குறைந்தபட்சம் 50 கி.கி.

கும்மிடிப்பூண்டி ஓட்டுநர் பயிற்சிப் பிரிவில் காலாண்டிற்கு 150 மாணவர்கள் வீதம் ஆண்டுதோறும் சுமார் 600 மாணவர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்குத் தேவையான மாணவர்களைத் தேர்ந்தெடுக்க செய்தித் தாள்களின் விளம்பரம்மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மேற்கண்ட தகுதிகளுடைய விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைமூலம் பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

12 வார கால பயிற்சிக் காலத்தில் பயிற்சி மாணவர்களுக்கு வாகனம் ஓட்டுதலில் பயிற்சி, பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு ஓட்டுநர் கல்வி, வாகனவியல், போக்குவரத்து கல்வி, நடத்துநர் கல்வி மற்றும் பொதுமக்கள் தொடர்பு ஆகிய பாடங்களில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெறுவோர் சென்னை, ரெட்ஹில்சில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற அறிவுறுத்தப்படுவர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தேர்ச்சி சான்றிதழும் வழங்கப்படுகிறது.

மேலும், இந்நிறுவனம் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், பொதுத் துறை நிறுவனம் மற்றும் தனியார் துறை நிறுவன ஓட்டுநர்கள் பயன்பெறும் வகையில் தற்காப்பாக வாகனம் ஓட்டுதல் பயிற்சி, ஆபத்தான பொருட்களை ஏற்றிச் செல்லும் ஓட்டுநர்களுக்கான சிறப்புப் பயிற்சி, சாலைப் பாதுகாப்பு விதிகள், எரிபொருள் சிக்கனம், விபத்துக்குள்ளான ஓட்டுநர்களுக்கான சிறப்புப் பாதுகாப்பு ஓட்டுநர் பயிற்சி போன்ற பல்வேறு புத்தாக்க மற்றும் புனர்பயிற்சிகள் ஒரு மாதம், 15 நாட்கள், 5 நாட்கள், 3 நாட்கள், 2 நாட்கள் மற்றும் ஒரு நாள் என்ற அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, கும்மிடிபூண்டி மற்றும் திருச்சிராப்பள்ளி தவிர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து மதுரை, நாகர்கோவில், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், சேலம், தருமபுரி, ஈரோடு, பொள்ளாச்சி, விழுப்புரம், வேலூர், கும்பகோணம், காரைக்குடி, திருச்சிராப்பள்ளி (விரைவு) மற்றும் புதுக்கோட்டை ஆகிய 15 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புனர் பயிற்சி பெற்றோர் விவரம் பின்வருமாறு:

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2018-2019 வரை	2019-2020 நடப்பாண்டில் (ஜனவரி 2020 வரை)	மொத்தம்
1	கும்மிடிப்பூண்டி	22,635	880	23,515
2	திருச்சி	2,410	109	2,519
3	இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பயிற்சி மையங்களில்	35,316	932	36,248
	மொத்தம்	60,361	1,921	62,282
4	புனர் பயிற்சிகள் (கும்மிடிப்பூண்டியில் மட்டும்)	61,504	2,507	64,011

14.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

1997-1998 ஆம் ஆண்டு முதல் இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகின்றன. தற்பொழுது ஈரோட்டில் உள்ள சாலை மற்றும் பொறியியல் கல்லூரியிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் இதுவரை இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரம் வருமாறு:-

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2018-2019	2019-2020 (ஜனவரி 2020 வரை)	மொத்தம்
1.	தரமணி, சென்னை	2,529	288	2,817
2.	திருச்சி	1,008	61	1,069
3.	ஈரோடு	321	29	350
மொத்தம்		3,858	378	4,236

மேலும் அரசு ஆணைப்படி கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயனடைந்தோர் விவரம் வருமாறு:-

வ. எண்	விவரம்	பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை		
		2018-2019	2019-2020	மொத்தம்
1.	தரமணி, சென்னை	6,594	153	6,747
2.	கும்மிடிப்பூண்டி	3,387	33	3,420
3.	திருச்சி	24,436	818	25,254
மொத்தம்		34,417	1,004	35,421

சாலைப் போக்குவரத்து நிறுவன தரமணி ஓட்டுநர் பயிற்சித் தளத்தை 1,660 நபர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

தற்போது கும்மிடிப்பூண்டி பயிற்சிப் பிரிவில் மொத்தம் 16 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 8 நபர்கள் போக்குவரத்துக் கழகங்களிலிருந்து அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், திருச்சி பயிற்சிப் பிரிவில் ஒரு அலுவலர்

2020 மார்ச் 24]

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட்டிலிருந்து அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றார்.

14.4 பணியாளர் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மற்றும் அதன் கிளை நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	அலுவலர்களின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை
1.	சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை	*29	-
2.	ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு, கும்மிடிபூண்டி	*16	-
3.	ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு, திருச்சி	*1	-
4.	சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு	140	1448
5.	சாலைப் போக்குவரத்து நிறுவன தொழில்நுட்பக் கல்லூரி, குரோம்பேட்டை	28	606
6.	சாலைப் போக்குவரத்து நிறுவன தொழில்நுட்பக் கல்லூரி, பர்கூர்	27	572
7.	சாலைப் போக்குவரத்து நிறுவன தொழில்நுட்பக் கல்லூரி, திருநெல்வேலி	36	571
மொத்தம்		277	3197

* அலுவலர்களின் எண்ணிக்கை அயற்பணி அலுவலர்களையும் உள்ளடக்கியது.

[2020 மார்ச் 24

அத்தியாயம்-15

தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை

15.1 தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் 20 அரசு தானியங்கி பணிமனைகளையும், அவற்றின் செயல்பாடுகளை முறையாகக் கண்காணித்து, நடைமுறைப்படுத்த மூன்று மண்டல துணை இயக்ககங்களையும் உள்ளடக்கி, இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயங்கி வருகிறது.

15.2 அரசு மத்திய தானியங்கிப் பணிமனை

பொது மேலாளர் அலுவலகம், அரசு மத்திய தானியங்கிப் பணிமனை, சென்னை பொது மேலாளர் அவர்களின் மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது. இப்பணிமனையில் மாண்புமிகு தமிழக முதல்வர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு வாகனங்கள் உடனுக்குடன் பழுது நிவர்த்தி மற்றும் சென்னை மாநகரத்தில் இயங்கி வரும் நவீன ரக வாகனங்களைப் பழுது நீக்க/பராமரிக்க நவீனமயமாக்கப்பட்ட புதிய இயந்திரங்களைக்கொண்டு வாகனங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய தொழில்நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு அரசுத் துறைக்கு புதிய தலைமுறை வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. அவ்வாகனங்கள் அரசு மத்திய தானியங்கி பணிமனையில் பராமரிப்பு செய்யப்படுகின்றன.

15.3 மாவட்டங்களில் உள்ள அரசு பணிமனைகள்

திருச்சி, மதுரை மற்றும் சேலத்தில் மண்டல துணை இயக்குநரின் கட்டுப்பாட்டில் மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன. மற்ற சார்நிலை அலுவலகங்கள் கோவை, வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம்,

காஞ்சிபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் தானியங்கி பொறியாளர் கட்டுப்பாட்டிலும், தூத்துக்குடி, விழுப்புரம், உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகள் பொது முதலாள்/தொழில்நுட்ப உதவியாளரின் கட்டுபாட்டின் கீழும் இயங்கி வருகின்றன.

15.4 வாகனங்கள் பராமரித்தல்

சுமார் 22687 அரசுத் துறை வாகனங்களை இத்துறை பராமரித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசுச் செயலர்களின் வாகனங்களுக்கான சிறு, சிறு பழுதுகளை நீக்க சுத்திகரிப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக, சென்னையில் தலைமைச் செயலகத்தின் அருகில் சுத்திகரிப்பு பணி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அரசுத் துறை ஊர்திகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக இத்துறையின் பல்வேறு பணிமனைகளில் மொத்தம் 10 எரிபொருள் கிடங்குகளும் இயக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் நிதியாண்டில் (31-1-2020 வரை), இத்துறையின்மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 23,504 ஆகும்.

15.5 இத்துறையின் பிற நடவடிக்கைகள்

அரசுத் துறை ஊர்திகளுக்கான தரமான பராமரிப்புப் பணிகளை சிக்கனமான செலவில் திறம்பட அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். கழிவு செய்யப்பட்ட அரசு துறைகளுக்குச் சொந்தமான வாகனங்களை மின்னணு தொழில்நுட்ப முறையில் திருவாளர்கள் எம்.எஸ்.டி.சி (M/s. MSTC) நிறுவனத்தின்மூலம் ஏலமிட அரசால் 2019 ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டுள்ளது. நீதித் துறை, வனத் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய அரசு துறைகளால் பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி ஆய்வு, மதிப்பீடு மற்றும் கழிவு செய்யப்படுகின்றன.

15.6 அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை 2016-2017 ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் திருச்சி, சேலம் மற்றும் மதுரை ஆகிய அரசு தானியங்கிப் பணிமனைகளில் அரசுத் துறை ஓட்டுநர்களின் பணித் திறமையை மேம்படுத்தவும் மற்றும் அனைத்து அரசுத் துறைகளில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும் புத்துணர்ச்சி பயிற்சி, அவ்வப்போது அளிக்கும்பொருட்டு "அம்மா ஓட்டுநர் பயிற்சி நிறுவனம்" தொடங்கி சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

15.7 அம்மா அரசு நடமாடும் பணிமனை

அரசு தானியங்கி பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசு துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கிப் பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்கான எரிபொருள் செலவினைத் தவிர்க்கும்பொருட்டும், கால விரயத்தினைத் தவிர்க்கும்பொருட்டும் தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அம்மா அரசு நடமாடும் பணிமனை முன்னோட்ட அடிப்படையில் திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் ஏற்படுத்திட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 3-7-2018 அன்று அறிவிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 29-1-2020 அன்று துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

15.8 கணினிமயமாக்குதல்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 16-7-2019 அன்று மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநரக செயல்பாடுகள் மற்றும் அரசு தானியங்கி பணிமனைகளை அரசு மின்னணு நிருவாக முகமையின்மூலம் கணினிமயமாக்குதல் தொடர்பாக ரூபாய் 2 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு, ரூபாய் 1.4643 கோடியினை அரசு வழங்கியுள்ளது. மேலும், கணினிமயமாக்குவதற்கு மென்பொருள் தேவைகளை மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை அரசு மின்னணு நிருவாக

முகமை நிறை செய்துள்ளது. மென்பொருள் உருவாக்குவதற்கும், வன்பொருள் மற்றும் இணைய தள சேவையினைப் பெறுவதற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும்.

15.9 பழுதுகள் கண்டறியும் கருவிகள் (Diagnostic Tools)

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 16-7-2019 அன்று மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் புதிய நவீனரக வாகனங்களுக்கான பழுதுகள் கண்டறியும் கருவிகளை (Diagnostic Tools) சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலத்திலுள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு ரூபாய் 15 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும் என அறிவித்துள்ளார். இத்திட்டத்திற்கு, ரூ.16.87 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

15.10 பயிற்சி

2019-2020 ஆம் ஆண்டில் (31-1-2020 வரை), 52 தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	பயிற்சி வழங்கிய நிறுவனத்தின் விவரம்	கால அளவு	பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை
1.	போர்ஸ் மோட்டார்ஸ், கோயம்புத்தூர்	26-9-2019 முதல் 28-9-2019 வரை	12
2.	டாடா மோட்டார்ஸ், சென்னை	3-10-2019 முதல் 4-10-2019 வரை	20
3	லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்., சென்னை	21-11-2019 முதல் 23-11-2019 வரை	6

வ. எண்	பயிற்சி வழங்கிய நிறுவனத்தின் விவரம்	கால அளவு	பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை
4	மஹேந்திரா & மஹேந்திரா, சென்னை	26-12-2019 முதல் 28-12-2019 வரை	14
மொத்தம்			52

15.11 2019-2020-ம் ஆண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை

வருடம்	கனரக மோட்டார் வாகனங்கள்	கார்	ஈப்பு	வேன்	மோட்டார் சைக்கிள்	மொத்தம்
2019-2020 (31-1-2020 வரை)	71	151	265	51	223	761

அத்தியாயம் - 16

முடிவுரை

பேருந்து, இரயில் மற்றும் விமானம் போன்ற பல்வேறு போக்குவரத்து முறைகள்மூலம் பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்தினை வழங்குவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. பேருந்து சேவையின் தரத்தை உயர்த்தும்பொருட்டு, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்குவதற்கு இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், BS VI பேருந்துகளை வாங்குவதற்கு உத்தேசித்துள்ளது. இதன்மூலம் மாசு குறைவதுடன், எரிபொருள் சார்பினை அகற்றவும் முடியும். அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கும், அரசு பேருந்துச் சேவையினை பயனாளிகளுக்கு ஏதுவாக மாற்றுவதற்கு

தகவல் தொழில்நுட்பத்தை விரிவாகப் பயன்படுத்திட இத்துறை முடிவெடுத்துள்ளது. தடையற்ற பயணம் மேற்கொள்ளவும், முதல் மற்றும் கடைசி பகுதி வரை போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திடும்பொருட்டு பல்வேறு போக்குவரத்து முறைகளை இணைப்பதற்கு இத்துறை செயல்பட்டு வருகின்றது. பணிமனைகளைக் கட்டுதல், புதுபித்தல் மற்றும் நவீனமாக்குதல், புதிய தலைமுறை பேருந்துகளை வாங்குதல் போன்ற பேருந்துப் போக்குவரத்தினை அதிகரிக்கும் நடவடிக்கைகளானது ஒரு தொடர் முயற்சியாகும். பொதுப் போக்குவரத்தின் செயல்திறன், அவற்றின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல் போன்றவற்றின்மூலம் பொதுப் போக்குவரத்தினை வளர்ச்சியடையச் செய்யவும், அவற்றின் பங்களிப்பினை உயர்த்திடவும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. இதற்கு அதிகப்படியான மற்றும் தொடர்ச்சியான நிதி உதவியும், பல்வேறு பிரிவினருக்கு பயணச் சலுகை வழங்குவதன்மூலம் அவர்களின் பயணம் எளிதாகும். எனவே, பொதுப் போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளில் அதிக முதலீடுகளைச் செய்து பேருந்துப் போக்குவரத்தினை உலகத் தரத்திற்கு உயர்த்திட தமிழக அரசு முனைந்துள்ளது.

இணைப்பு

மானியக் கோரிக்கை எண் 48

போக்குவரத்துத் துறை

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2020-2021

(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்	துறை தலைமையகம்	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
1	தலைமைச் செயலகம்	1,690,62,59	192,00,07	768,10,00	2,650,72,66
2	மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை	65,53,36	-	-	65,53,36
	மொத்தம்	1,756,15,95	192,00,07	768,10,00	2,716,26,02

[2020 மார்ச் 24

இணைப்பு XXI

(56 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை:-

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.21 கோடியில், ஆதி திராவிடர் இன மக்கள் 1.44 கோடியும் (20.01%), பழங்குடியின மக்கள் 7.95 இலட்சமும் (1.10%) இருக்கின்றனர்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவினை மேம்படுத்தவும், அவர்களது சமூக–பொருளாதார நிலையினை உயர்த்தும் பொருட்டும், பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி இவ்வரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.4109.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள்-2030 இன் செயல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள “எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி” எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இத்துறையின் முக்கிய கொள்கையான “சமூக நீதி” அனைத்து நீடித்த வளர்ச்சி இலக்குகளிலும்-2030 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP) ஆகியவற்றின்கீழ் அனைத்துத் துறைகளாலும் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள், ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல் என்ற இலக்கு 10 இன் குறிக்கோள் 10.4-ஐ நேரடியாக அடையும் நோக்கில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளில்

2020 மார்ச் 24]

ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP) ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் 10.4.1) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் 10.4.2) ஆகிய குறிக்காட்டிகள் அடங்கியுள்ளன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு அரசு ஆணை (நிலை) எண் 14, நாள் 31-1-2020-இன் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இத்துறையால் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், கல்வி உதவித் தொகை திட்டங்கள், இலவசப் புத்தகங்கள், மிதி வண்டி வழங்கும் திட்டம், மாணவ, மாணவியருக்கான விடுதிகள் ஆகிய திட்டங்கள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு 10 (ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- பெண் கல்வி ஊக்கத் தொகை திட்டம் இலக்கு 5-ஐ (பாலின சமத்துவம்) அடையும் நோக்கில் உள்ளது.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மற்றும் தாட்கோவின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 8 (வேலைவாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும்),இலக்கு 10 (ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்) மற்றும் இலக்கு 11 (நகர்ப்புற மேம்பாடு) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- தொழில்நெறி வழிகாட்டும் மையம், தாட்கோவால் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி), இலக்கு 8 (வேலைவாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும்), இலக்கு 10 (ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் யாவும் அனைத்து நீடித்த வளர்ச்சி இலக்குகளையும் உள்ளடக்குவதாக உள்ளன.

[2020 மார்ச் 24

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளை மையப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார அதிகாரமளித்தலை ஏதுவாக்க, இத்துறை கூரிய நோக்குடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

I. ஆதி திராவிடர் நலன்

பிற மாநிலங்களில் பட்டியல் இனத்தவர் என்றும், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் என்றும் அழைக்கப்படும் மக்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அனைத்து வகையான விலக்கல், ஒதுக்குதல், தீண்டாமை மற்றும் பாகுபாடு போன்றவற்றை களையவும், சமூக சமத்துவத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தவும், இவ்வரசு பல கொள்கைகள், திட்டங்கள், வரவு-செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிடர் மக்களின் கல்வி தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கூடுதலாக, நவீன தமிழகத்தில் கிராமப்புறங்களில் வசிக்கும் ஆதி திராவிடர்களின் பெருகி வரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள மானியத்துடன்கூடிய வேறுபட்ட அளவிலான கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.

1. கல்வி

ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்த குழந்தைகள், படித்த அறிவார்ந்த குழந்தைகளாக வளர்வதை உறுதி செய்திடும் பொருட்டு, இத்துறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு தரமான கல்வியினை வழங்கிட சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.4109.53 கோடி நிதியில், கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூ.3457.56 கோடி (84.14 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.1. பள்ளிகள்

இவ்வரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துவதுடன், பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகையினை

வழங்கி வருகிறது. இந்த அரசின் தொடர் முயற்சிகள் ஆதி திராவிடர் மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது. எனினும் அவர்களை சமூகத்தின் இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்திடும் பொருட்டு இப்பணி தொடர்ந்து நடைபெறும்.

ஆதி திராவிடர் மக்களை கல்வியில் நிலையான முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு, ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1,135 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் விவரம்

விவரம்	பள்ளி	மாணாக்கர் எண்ணிக்கை
தொடக்கப் பள்ளிகள்	836	34,892
நடுநிலைப் பள்ளிகள்	96	8,650
உயர்நிலைப் பள்ளிகள்	116	13,209
மேல்நிலைப் பள்ளிகள்	87	30,791
மொத்தம்	1,135	87,542

மேலும், தொடர்ந்து பெருகி வரும் உயர் கல்விக்கான தேவையினை ஈடு செய்யும் பொருட்டு இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் அடுத்தடுத்த உயர் நிலைகளுக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மாநில நிதியின் கீழும், நபார்டு வங்கியின் நிதியுதவித் திட்டங்களின் கீழும் ஏற்படுத்தப்படுகின்றன.

1.2 கல்வி உதவித் தொகைகள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் இன மக்களை கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுடன் கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

(அ) மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும்

ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப்படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

பராமரிப்புப் படிகள்

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
I	மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் நவீன ஆடை வடிவமைப்பு, தொழில்நுட்பம் (Fashion Technology) வேளாண்மை கால்நடை மற்றும் அதைச்சார்ந்த அறிவியல் படிப்புகளில் பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம், பட்டயக் கணக்கர் மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப் படிப்பு CA/CWA/CS/ICFA etc., M.Phil, Ph.D., & Post Doctoral programmes	1200/-	550/-

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
II	12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட தொழில் கல்வியில் பட்டப் படிப்பு, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பில் மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற படிப்புகள் மற்றும் தொகுதி I-ல் சாராத முதுநிலைப் பட்டப் படிப்புகள் (B.Sc., (Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc.,	820/-	530/-
III	தொகுதி I மற்றும் II-ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் (எ.கா. B.A.,/ B.Sc.,/B.Com.,/M.A.,/M.Sc.,/ M.Com., etc.,)	570/-	300/-

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
IV	10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட பல் தொழில்நுட்பப் பட்டயப் படிப்புக்கள், சான்றிதழ் படிப்புக்கள், மேல்நிலை கல்வி படிப்புக்கள் மற்றும் தொழிற்பயிற்சிப் படிப்புக்கள். (எ.கா. XI, XII, ITI, தொழில் பயிற்சிக் கல்வி etc.,)	380/-	230/-

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதி தொழிற்படிப்புக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்காக, அரசு/அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளிலுள்ள அரசு ஒதுக்கீடு அல்லாத இடங்களில் சேர்ந்து கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டாயமான திருப்பி அளிக்கப்படாத கட்டணங்கள், கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு மத்திய அரசு விதித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நேர்வுகளில் வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

(i) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய/கட்டண வரன்முறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப் பிரிவிற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) விளம்பரம் செய்து விண்ணப்பங்களை வரவேற்றல், விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒளிவு மறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.1,788.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

மைய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாத ஆதி திராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

பராமரிப்புப் படிகள்

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

தொகுதி	படிப்புகள்	ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படி (ரூபாயில்)	
		விடுதி மாணாக்கர் (*Hosteller*)	மாணாக்கர் (*Day Scholar*)
I	பொறியியல், மருத்துவம்	350/-	175/-
II	கலை, அறிவியல் முதுகலை பட்டப் படிப்பு	225/-	140/-
III	கலை, அறிவியல் இளங்கலை பட்டப் படிப்பு	175/-	100/-
IV	ஐ.டி.ஐ./+1, +2	175/-	100/-

மேற்காணும் பராமரிப்புப் படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. மைய அரசு திட்டத்தில் வழங்குவது போன்றே கல்விக் கட்டணங்களும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.86.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மைய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

(i) தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும், துப்புரவுப் பணியாளர், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரிப்பவர் ஆகிய தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கு இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் பராமரிப்புப் படியும் தனிமானியமும் உதவித் தொகையாக கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன:-

2020 மார்ச் 24]

	விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.700/-	ரூ.225/-
தனி மானியம் (ஒரு வருடத்திற்கு)	ரூ.1000/-	ரூ.750/-

இந்தத் திட்டத்திற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.13.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய /மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் முழு நேர கல்வி பயிலும் ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் முறையே ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் உதவித் தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:-

	விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.525/-	ரூ.225/-
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	ரூ.1000/-	ரூ.750/-

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.84.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் கட்டண விடுதிகளில் தங்கி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர்

மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், சிறப்பு உதவித் தொகை கீழே அட்டவணை இட்டுள்ளவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டயப் படிப்புகள்	ரூ.7,500/- ஆண்டிற்கு
முதுகலை, அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் பொறியியல், மருத்துவம், வேளாண்மை மற்றும் பிற இளங்கலை/ முதுகலை தொழிற்படிப்புகள்.	ரூ.8,000/- ஆண்டிற்கு

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.18.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) வெளிநாட்டில் முதுகலைப் பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

வெளிநாடுகளில் பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பை படிக்க விரும்பும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.30.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகை

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும்

2020 மார்ச் 24]

1,200 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், ஆண்டுதோறும் ரூ.50,000/- வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.3. கல்வி கட்டணச் சலுகைகள்

(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடுசெய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.7.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் மாணாக்கர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) முதுகலை பயிலும் மாணவியருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இன மாணவியர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் மாணவியர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்புக் கட்டணச் சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கரும் சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.1.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இதர கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு விலக்களிக்கப்பட்டு உள்ளது.

2020 மார்ச் 24]

இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.2.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.4. பெண் கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடை நிற்றலை (Drop out) குறைப்பதற்காகவும், இத்திட்டத்தின்கீழ் அரசால் வழங்கப்படும் ஊக்கத் தொகை விவரம் பின்வருமாறு:-

வகுப்பு	தொகை (ஆண்டொன்றுக்கு)	2020-21 நிதி ஒதுக்கீடு
3 முதல் 5 வரை	ரூ.500/-	ரூ.11.47 கோடி
6	ரூ.1000/-	ரூ.34.37 கோடி
7 மற்றும் 8	ரூ.1500/-	

1.5. பரிசுத் தொகைத் திட்டம்

இளங்கலை பட்டப் படிப்பு, முதுகலை பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1,000 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கருக்கு பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:-

படிப்பு	தொகை (ஒருவருக்கு)	2020-2021 நிதி ஒதுக்கீடு
இளங்கலை	ரூ.3,000/-	ரூ.42.00 இலட்சம்
முதுகலை	ரூ.5,000/-	
தொழில்நுட்பப் படிப்பு	ரூ.6,000/-	

1.6. பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

இத்துறையைச் சார்ந்த பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.1.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.7. சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:-

வ. எண்.	வகுப்பு	வழங்கும் துறை
1.	1 முதல் 8 வரை	சமூக நலத் துறை
2.	9 முதல் 12 வரை	தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்
3.	விடுதி மாணாக்கர்	தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.8. பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் உயர் நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப் பணி தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்கு தயாராகவும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:-

2020 மார்ச் 24]

வ. எண்	பள்ளிகள்/ விடுதிகள்	நூலக புத்தகங்கள்	பருவ இதழ்கள்
		(ஆண்டு ஒன்றுக்கு)	
1.	உயர் நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்	ரூ.1000/-	ரூ.450/-
2.	பள்ளி விடுதிகள்	--	ரூ.450/-
3.	கல்லூரி விடுதிகள்	--	ரூ.3100/-

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.13.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.9. மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கும், 11 ஆம் வகுப்பில் மிதிவண்டிகள் வழங்காமல் விடுபட்டு, 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.69.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.10. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

ஆதி திராவிடர் நல, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கருக்கு

அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் உதவியுடன் தனித் தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினம் முழுவதும் அரசால் ஏற்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.11. நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயின்று 10 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியின மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டுதோறும் ஒரு மாணாக்கருக்கு ரூ.28,000/- வீதம் செலவிடுகிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும், தமிழ்நாடு முழுவதும் 320 மாணாக்கர் பயன் பெறுகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.12. விடுதிகள்

கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் கல்வித் திறனை ஊக்குவித்து முன்னேற்றவும், இடைநிற்றலை தவிர்க்கவும், அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகாமையில் தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் 1,324 விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின்கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:-

ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம்

வ. எண்	விடுதிகளின் விவரம்	எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட மாணாக்கர் எண்ணிக்கை
1.	பள்ளி விடுதிகள்	1,143	82,766
2.	கல்லூரி விடுதிகள்	143	13,050
3.	ஐ.டி.ஐ. விடுதிகள்	17	1,372
4.	பாலிடெக்னிக் விடுதிகள்	5	288
5.	முதுகலை பட்டதாரி கல்லூரி விடுதிகள்	15	1,008
6.	சட்டக் கல்லூரி விடுதி	1	55
	மொத்தம்	1,324	98,539

- கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:-

i. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. 582 மாணவியர் விடுதிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளிகள் (Napkin burners) வழங்கப்பட்டுள்ளன.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

iv. 76 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

v. சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட 380 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 160 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு நீராவி கொதிகலன்கள் வழங்கப்பட்டுள்ளன.

vi. அனைத்து விடுதிகளுக்கும் மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

vii. அனைத்து விடுதிகளிலும் நூலக வசதி செய்து தரப்பட்டுள்ளது.

viii. சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ix. அனைத்து விடுதிகளுக்கும் செய்தித் தாள்கள் வழங்கப்படுகின்றன.

x. மாணாக்கருக்கு பாய், போர்வை மற்றும் உறையுடன்கூடிய தலையணைகள் வழங்கப்படுகின்றன.

xi. மாணாக்கர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்பட்டுள்ளது.

xii. கல்லூரி விடுதி மாணவர்கள் பயன்பெறும் வகையில் “இந்தியா ஆண்டுப் புத்தகம், மற்றும் “திட்டம்” மாத இதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

2020 மார்ச் 24]

ஆ. உணவுக் கட்டணம்

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லரைச் செலவினமும் கீழ்க்கண்ட வீதத்தில் வழங்கப்பட்டு வருகின்றன:-

கட்டணங்களின் வகைகள்	பள்ளி மாணாக்கர்	கல்லூரி மாணாக்கர்
உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு)	ரூ.900/-	ரூ.1000/-
சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு)	ரூ.50/-	ரூ.75/-
சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்)	ரூ.20/-	ரூ.40/-

பள்ளி விடுதி - வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, இஞ்சி ரசம், பொரியல், முட்டை(1)
செவ்வாய்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1)

[2020 மார்ச் 24

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
புதன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், மட்டன் (80 கிராம்)/ சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, ரசம்
வியாழன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
வெள்ளி	பொங்கல், சட்னி	சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
சனி	இட்லி, சட்னி	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், கூட்டு, முட்டை (1)
ஞாயிறு	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளிசூப், பொரியல், ரசம்

கல்லூரி விடுதி-வாராந்திர உணவுப் பட்டியல்

கிழமை	காலை சிற்றுண்டி	நண்பகல் உணவு	மாலை	இரவு உணவு
திங்கள்	பொங்கல், சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
செவ்வாய்	இட்லி, சாம்பார்	சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், முட்டை (1), பொரியல், ரசம்
புதன்	ரவை கிச்சடி, சட்னி	சாதம், மட்டன் (80 கிராம்)/ சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், தக்காளி சூப், பொரியல், ரசம்
வியாழன்	எலுமிச்சை சாதம், துவையல்	சாதம், குழம்பு, கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், காரக்குழம்பு, பொரியல், ரசம், முட்டை (1)
வெள்ளி	ரவை கிச்சடி, சட்னி	சாதம், சாம்பார், பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், ரசம், பொரியல், மோர், முட்டை (1)
சனி	இட்லி, சாம்பார்	சாதம், சாம்பார், கூட்டு, மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	சாதம், சாம்பார், ரசம், மோர், முட்டை (1)
ஞாயிறு	பொங்கல், சட்னி	சாதம், காய்கறி, குருமா, பொரியல், மோர்	சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர்	இட்லி, சாம்பார்.

இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

(i) விடுதிகள்:-

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 30 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4,943 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறைமூலம் வழங்கப்படுகிறது.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளியில், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மொத்தம் 4,320 மாணாக்கர் கடந்த 2019-2020 ஆம் ஆண்டு கல்வி பயின்றனர். தற்போது இப்பள்ளியில் பணிபுரியும் 127 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.10.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறக்கட்டளை நடத்தும் இரு விடுதிகளில் (மாணவர்-1, மாணவியர்-1) 3,500 மாணாக்கர் தங்கி உள்ளனர். 2014-2015 ஆம் ஆண்டு முதல் காப்பாளர், சமையலர், காவலர் மற்றும் துப்புரவாளர் என 32 பணியாளர்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தைமூலம் வாங்கப்பட்டு அல்லது நில எடுப்பு சட்டத்தின்படி கையகப்படுத்தப்பட்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பகுதி	வழங்கப்படும் இடத்தின் அளவு	பயனாளியின் வருட வருமான வரம்பு
கிராமப்புறம்	3 சென்ட்	ரூ.72,000/-
நகராட்சி	1½ சென்ட்	
மாநகராட்சி	1 சென்ட்	

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மேலும், இந்நோக்கத்திற்காக நிலத்தை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. ஈமச் சடங்கு உதவித் தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இறப்பு நேரத்தில் ஈமச் சடங்கினை மேற்கொள்ள உதவியாக ரூ.2,500/- நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.4.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

ஆதி திராவிடர் மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-1981 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகைக்கு (20.01%) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத்

துறையாக (Nodal Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 45 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2020-2021 ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம்-Welfare Expenditure of State) ரூ.64,255.97 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதிதிராவிடர் நலத்திட்ட செலவினம்-Expenditure on Scheduled Castes Welfare)-கீழ் ரூ.13,680.14 கோடி (21.29 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01%) விட அதிகமானதாகும்.

6. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உதவுவதற்காகவும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு அடையச் செய்யவும், உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும், மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் மைய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது.

இந்த நிதியில் 80 விழுக்காடு, ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோமூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை

2020 மார்ச் 24]

உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கிடும் பொருட்டு ஆதி திராவிடர் நல ஆணையருக்கு விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென, 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.135.00 கோடி நிதி மைய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. சாதிச் சான்றிதழ்கள்

(i) சாதிச் சான்று வழங்குதல்

ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச் சான்று வழங்க மறுக்கும்பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார் ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சியரை அணுகலாம்.

(ii) சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:-

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்	ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226-இன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136-இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடுசெய்யலாம்.
2.	மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நல அலுவலர்	உறுப்பினர் செயலர்	
3.	மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

[2020 மார்ச் 24

8. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

(அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 போன்றவை மைய அரசால் இயற்றப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள், 2016 ஆகியவை முறையே 1-1-2016 மற்றும் 14-4-2016 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துவதற்கென கூடுதல் காவல் துறைத் தலைவர் தலைமையின்கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின்கீழ் (i) வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்கு தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

(ஆ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது செயல்பட்டு வரும் தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் பின்வருமாறு:-

மாவட்டத்தின் பெயர்	குறிப்பு
1. திருச்சிராப்பள்ளி 2. தஞ்சாவூர் 3. மதுரை 4. திருநெல்வேலி	அரசாணை (நிலை) எண் 2686, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 13-11-1981-இன்படி செயல்படுகிறது.
5. விழுப்புரம் 6. சிவகங்கை	அரசாணை (நிலை) எண் 793, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 7-10-2013-இன்படி செயல்படுகிறது.
7. திண்டுக்கல் 8. இராமநாதபுரம் 9. விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்) 10. புதுக்கோட்டை	அரசாணை (நிலை) எண் 334, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 5-4-2017-இல் 16 மாவட்டங்களில் 16 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் 2016-2017 முதல் 2020-2021 வரையில் 4 கட்டங்களில் உருவாக்குவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 4 மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 14-8-2018 முதல் செயல்பட்டு வருகிறது.
11. கடலூர் 12. நாமக்கல் 13. தேனி 14. திருவண்ணாமலை	அரசாணை (நிலை) எண் 1704, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 3-10-2018-இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 4 நீதிமன்றங்கள் 3-4-2019 முதல் செயல்பட்டு வருகிறது.

15. பெரம்பலூர் 16. வேலூர் 17. தூத்துக்குடி 18. கன்னியாகுமாரி (நாகர்கோவில்)	அரசாணை (நிலை) எண் 502, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 24-9-2019-இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் விரைவில் செயல்பட உள்ளது.
19. காஞ்சிபுரம் 20. திருப்பூர் 21. திருவாரூர் 22. கோயம்புத்தூர்	நிதி ஒப்பளிப்பு செய்வதற்கான ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரிக்க விசாரணை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி ஆணையர்கள் மேற்பார்வையில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

1995 ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு விதிகளில் விதி எண் 17(1)-இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சனைகளை அறிந்த மற்றும் நல்ல நோக்கம் கொண்டவர்களை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்தும், இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும். மேலும், இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்

மாநில அளவில் ஒரு விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகளில், விதி எண் 17(A)-இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, மாவட்டங்களிலுள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு அரசாணை (நிலை) எண் 6, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 20-1-2015-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி அனைத்து மாவட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மனிதநேய வாரவிழா அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டங்களில் உள்ள விதிகளைப் பற்றி தெளிவுபடுத்துவதற்காக வருவாய் துறை அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் வழியாக சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அவர்தம் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறித்து அறியச் செய்வதற்காக வன்கொடுமை

தடுப்புச் சட்டம் விதி 10-இன்படி தனி அலுவலர்களாகிய மாவட்ட ஆட்சியர்கள் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு மையங்களை நடத்துகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.83.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

இத்திட்டத்தின்கீழ், சென்னை நீங்கலாக தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை வழங்கிட ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில், ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் இன கலைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், அரசு நிதியுதவி வழங்குகிறது. இதற்காக ரூ.50.00 இலட்சம் மூலதன நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அத்தொகைக்காகப் பெறப்படும் வட்டித் தொகை, தெரிவு செய்யப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்ட 10 ஆதி திராவிடர் எழுத்தாளர்கள் மற்றும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.40,000/- பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

II. பழங்குடியினர் நலன்

முன்னுரை

தமிழ்நாட்டில் 36 வகையான பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை

2020 மார்ச் 24]

கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.10 சதவீதத்தை உள்ளடக்கிய 7,94,697 பழங்குடியின மக்கள் இருக்கின்றனர். இவர்களுள் பெரும்பான்மையானோர் மலைப் பகுதிகளிலும், பிற தனிமைப்படுத்தப்பட்ட இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை மாநில சராசரியை விட குறைவாக உள்ளது. பழங்குடியினருக்கும் சமூகத்தின் இதர பிரிவினருக்கும் இடையே உள்ள சமூக பொருளாதார இடைவெளியினைக் குறைத்து அவர்களையும் சமூக நீரோட்டத்தில் இணையச் செய்வது இவ்வரசின் கடமையாகும். எனவே, பழங்குடியினர் நலனுக்கென தனியாக ஓர் இயக்குநரகம் 2000 ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிருவாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடுகூடிய தனி பொறுப்புடன் பழங்குடியினர் நல இயக்குநரகம் 1-4-2018 முதல் செயல்பட்டு வருகிறது. இத்துறையானது பல புதுமையான திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வித் தரத்தினை உயர்த்தி வருகிறது. தமிழகத்தில் பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தருமபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக அரசு மிகுந்த முனைப்புடன் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

குறைந்த கல்வி அறிவு, ஊட்டச்சத்து குறைபாடுகள், குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல், பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை போன்ற பழங்குடியின மக்கள் சந்தித்து வரும் இன்னல்களை களைவதே அரசின் பணியாகும்.

பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் முழுமையான மேம்பாடு அடையச் செய்வதும், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள் மற்றும் வீடுகள் கட்டித்தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அனைத்திலும் வளர்ச்சி அடையச் செய்வதும் அரசின் முதன்மையான குறிக்கோளாகும். பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்துவதன்மூலம் பழங்குடியின மக்களுக்கும் பொது மக்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி

(அ) பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை தரமான கல்வியால் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்

விவரம்	பள்ளிகள் எண்ணிக்கை	மாணாக்கர் எண்ணிக்கை
தொடக்கப் பள்ளிகள்	209	8,574
நடுநிலைப் பள்ளிகள்	52	4,371
உயர்நிலைப் பள்ளிகள்	33	4,834
மேல்நிலைப் பள்ளிகள்	18	6,634
ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள்	*8*	*2,163*
மொத்தம்	320	26,576

1.1 கல்வி உதவித் தொகை

(i) மைய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை

பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருட வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பின், இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஆதி திராவிட மாணாக்கருக்கு வழங்கப்படுவது போன்று பராமரிப்புப் படிகளும் கல்விக் கட்டணங்களும் இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

இத்திட்டத்தின்கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு, கல்வி நிறுவனத்திற்கு மாணாக்கர் செலுத்த வேண்டிய திரும்ப அளிக்கப்படாத கட்டணங்கள் பராமரிப்புப் படியுடன் உதவித் தொகையாக, மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதி தொழிற்படிப்புக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு/அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன. பராமரிப்புப்படிகள் மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.46.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) மைய அரசின், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் முழு நேர கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:-

	விடுதி மாணாக்கர் (Hosteller)	மாணாக்கர் (Day Scholar)
பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு)	ரூ.350/-	ரூ.150/-
தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு)	ரூ.1000/-	ரூ.750-

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.4.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) மாநில அரசு திட்டங்கள்

ஆதி திராவிடர் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, கீழ் குறிப்பிட்டுள்ள மாநில அரசு கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி கட்டணச் சலுகைத் திட்டங்கள் பழங்குடியின மாணாக்கருக்கும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டங்களின் விவரம் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு அட்டவணையிடப்பட்டுள்ளது.

திட்டம்	*2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)*
மாநில அரசு சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வித் தொகை.	1.00
உயர் கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை.	26.46
கற்பிப்புக் கட்டணச் சலுகை.	8.51
இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.	4.00
முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.	2.50
பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை.	3.04
இதர கட்டணச் சலுகைகள்	7.50
பெண் கல்வி ஊக்கத் தொகை. *(3 முதல் 5 ஆம் வகுப்பு வரை)*	90.22
பெண் கல்வி ஊக்கத் தொகை. *(6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு)*	285.00

(அ) விடுதிகள்

பழங்குடியினர் மாணாக்கர் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக, இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன. மாணாக்கர் நன்கு கல்வி பயில விடுதிகளில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம்

வ. எண்	விடுதிகளின் வகைப்பாடு	விடுதிகளின் எண்ணிக்கை	மாணாக்கர் எண்ணிக்கை
1.	பள்ளி விடுதிகள்	40	1,988
2.	தொழிற்பயிற்சி நிலைய விடுதி	1	83
3.	கல்லூரி விடுதிகள்	2	131
	மொத்தம்	43	2,202

ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் கூடுதலாக, சூரிய விளக்கு, குளிர் மற்றும் மழையிலிருந்து பாதுகாக்க ஸ்வெட்டர் மற்றும் ரெயின்கோட் ஆகியவை இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி:

(i) விடுதிகள்:

தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 6 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 532 பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவதுபோல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கும் பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

(ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

திருப்பத்தூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் கிராம வளர்ச்சி நிறுவனம் (Society for Rural Development) எனும் தொண்டு நிறுவனம் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 2,560 பழங்குடியின மாணாக்கருக்காக பள்ளி மற்றும் விடுதிகளை நிறுவி நடத்தி வருகிறது. 2005 ஆம் ஆண்டு முதல் இப்பள்ளிக்கு ஊதியம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு ஊதியம் வழங்கிட ஏதுவாக ரூ.3.22 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவன விடுதியில் தங்கி பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இவ்வரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

(iii) பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் மாநில சாராசரியை விட குறைவாக உள்ளதால், பழங்குடியினர் வசிக்கும் தொலைதூரப் பகுதிகளில், பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கிடும் புதிய திட்டத்தினை இவ்வரசு 2019-2020 ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மைய அரசின் திட்டங்கள்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மைய அரசின் நிதி உதவியுடன் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

(அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSS)

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவியினை மைய அரசு ஒவ்வோர் ஆண்டும் விடுவித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் நிதியில், 60 விழுக்காடு

பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள் வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல், பெட்டிக் கடைகள் வைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்வதற்காகவும், 30 விழுக்காடு நிதி பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு, கழிவறைக் கூடங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. எஞ்சிய 10 விழுக்காடு நிதி பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.6.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)-இன்கீழ், மைய அரசால் வழங்கப்படும் நிதியுதவியிலிருந்து, விழுப்புரம் மாவட்டம்-வெள்ளிமலை, சேலம் மாவட்டம்-அபிநவம் மற்றும் ஏற்காடு, திருவண்ணாமலை மாவட்டம்-அத்திப்பட்டு, நீலகிரி மாவட்டம்-கோடப்பமந்து, வேலூர் மாவட்டம்-அத்தனாவூர், நாமக்கல் மாவட்டம்-செங்கரை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம்-பட்டிப்புலம் ஆகிய 8 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும் பள்ளிகளைப் பராமரிப்பதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.17.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

சில பழங்குடி இனங்களின் மக்கள் தொகை குறைந்து கொண்டோ அல்லது பெருகாமலோ உள்ளது. அவர்களது கல்வியறிவு மற்றும் பொருளாதார நிலை குறைவாக உள்ளது. இவ்வகையினர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத்தரம், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வியறிவு ஆகிய குறியீடுகளில் அவர்களை மேம்படுத்திடும் பொருட்டு, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், பாசன தடுப்பணை மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்தல், ஆரம்ப சுகாதார மையம், சாலை வசதி மற்றும் தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தேனீ வளர்ப்பு, மீன்பிடி வலை வழங்குதல், இருசக்கர வாகனம் வழங்குதல், செங்கல் சூளை அமைத்தல் போன்ற பொருளாதார மேம்பாட்டுப் பணிகளும், அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பும் (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) சிறுவன உற்பத்தி பொருட்களுக்கு குறைந்தபட்ச விலை திட்டம்

“சிறுவன உற்பத்தி பொருட்களுக்கு குறைந்தபட்ச விலை திட்டம்” என்ற திட்டம் இந்திய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்புமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட பழங்குடியினர் நலத் துறை மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும் (State Nodal Agency) மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை பதிவாளரின்கீழ் உள்ள 22 கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) செயல்படுத்தும் நிறுவனமாகவும் (Implementing Agency) நியமிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 30 சிறுவன பொருட்கள் சேகரிப்போரை உறுப்பினராகக் கொண்ட 10 சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கி ஒரு வனவள மேம்பாட்டு மையம் அமைக்கப்படுகிறது. இச்சுய உதவி குழுக்கள் முதல் நிலை சிறுவன பொருட்களை சேகரித்தல், மதிப்புக் கூட்டுதல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

2020 மார்ச் 24]

தமிழகத்தில் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடுமலையில் 7 வன்தன் விகாஸ் கேந்திரா எனப்படும் வனவள மேம்பாட்டு மையங்களை அமைத்திட ரூ.1.05 கோடி மைய அரசிடமிருந்து நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

(உ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006-ஐ செயல்படுத்துதல்

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006, இந்திய அரசால் இயற்றப்பட்டு, 29-12-2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13-12-2005 ஆம் நாளுக்கு முன்பே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், 13-12-2005 ஆம் தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக, அதாவது 75 ஆண்டுகளாக பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும் இச்சட்டத்தின்கீழ் வன உரிமைகள் பெறுவதற்கு தகுதி உடையவர்களாகிறார்கள்.

இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது:-

i) அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு.

ii) மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு.

iii) வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு.

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போருக்கான வன உரிமைகளை பாதுகாக்கவும், அங்கீகரிக்கவும் 17 மாவட்டங்களில் பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வன உரிமைகள் சட்டம் 2006-இன்படி தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவற்றை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

இச்சட்டத்தின்கீழ் இதுவரை 7,473 தனி நபர் உரிமைகளும் 447 சமூக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

(ஊ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், மைய அரசின் நிதியுதவியுடன் 1983 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்தில் “பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்” அமைக்கப்பட்டது. இம்மையம், மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படும் வேளையில், இம்மையத்தின் நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் மைய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் குறித்த நூல்களை பதிப்பித்தல் நாட்டுப் புறப்பாடல்கள், கதைகள் சேகரித்தல் மற்றும் அழிந்து வரும் நிலையில் உள்ள பண்டைய பழங்குடியினரின் மொழிகளையும், கலாச்சாரத்தையும் பதிவு செய்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய பணிகளை பழங்குடியினர் ஆய்வு மையம் மேற்கொண்டு வருகிறது.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் வளர்ச்சி திட்டங்களை மதிப்பீடு செய்தல், பழங்குடியினரின் வளர்ச்சிக்கான பிரச்சினைகள் குறித்த கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல், பழங்குடியினரின் கலாச்சாரம் மற்றும் வளர்ச்சியை கருத்தில்கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்கான நோக்கு நிலை பயிற்சி வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் பழங்குடியினர் ஆய்வு மையத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

1996 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் அருங்காட்சியகம் பழங்குடியினர் ஆய்வு மையத்தின் வளாகத்தில் அமைந்துள்ளது. இம்மையத்தில் பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு சூரிய மின்சார வசதியுடன்கூடிய ஒரு திறந்த வெளி அருங்காட்சியகத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

2020-2021 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக ரூ.63.10 இலட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.1.33 கோடி மதிப்பிலான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு நிதி விடுவிப்புக்காக மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3. மாநிலத் திட்டங்கள்

(அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கென ரூ.50 கோடி நிதியினை 2012-2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. அதைப்போலவே இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கும் ரூ.50.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் நில மேம்பாடு, கூரை வீடுகளைச் சீரமைப்பு செய்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் ஆகிய பணிகள் தாட்கோமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(அ) தருமபுரி, நாமக்கல், திருவண்ணாமலை, சேலம், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள 20 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புதிய கழிப்பறைக் கூடங்கள் கட்டுதல்.

(ஆ) நாமக்கல், திருவண்ணாமலை, ஈரோடு மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு ரூ.2.43 கோடி செலவில் சாலை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள், நியாய விலைக் கடைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல்.

(இ) பழங்குடியினருக்கான மானியத்துடன்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி செலவில் தாட்கோமூலம் செயல்படுத்துதல்.

(ஈ) 308 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு ரூ.99.96 இலட்சம் செலவில் நீள் இருக்கைகள், சாய்வு மேசைகள், கட்டில்கள், கரும்பலகைகள், எழுதுகோலுடன் கூடிய வெண் பலகைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

(உ) 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.35.00 இலட்சம் செலவில் குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் அமைத்தல்.

(ஊ) ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படும் 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அனைத்து வசதிகளுடன்கூடிய நூலகங்கள் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.

(எ) சேலம் மாவட்டம், சிறுவாச்சூர் முதல் பாச்சோரி வரை ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 2.6 கி.மீ நீளமுள்ள தார்ச்சாலை அமைத்தல்.

(ஏ) 10 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு, ஒரு பள்ளிக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல்.

(ஐ) 10 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்ய ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல்.

(ஒ) 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 100 பழங்குடியின மாணாக்கருக்கு இலவச கல்வியியல் பட்டயப் படிப்பு மற்றும் ஆசிரியர் தகுதி தேர்வினை எதிர்கொள்ள தேவையான பயிற்சியினை ரூ.35.00 இலட்சம் செலவில் வழங்குதல்.

(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (ITDP)

பழங்குடியின மக்கள் குவிந்து/அதிகம் வாழும் பகுதியில் கவனம் செலுத்திடும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 மாவட்டங்களில், அப்பகுதியின் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன:-

2020 மார்ச் 24]

1. சேலம்	- ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை
2. நாமக்கல்	– கொல்லிமலை
3. விழுப்புரம்	- கல்ராயன்மலை
4. திருவண்ணாமலை	- ஜவ்வாதுமலை
5. திருச்சிராப்பள்ளி	- பச்சமலை
6. தருமபுரி	- சித்தேரிமலை
7. வேலூர்	- ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத் திட்டப் பணிகளை செயல்படுத்திட, மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் 7 திட்ட அலுவலகங்கள் அரசாணை (நிலை) எண் 34 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந1) துறை, நாள் 25-4-2017-இன்படி தோற்றுவிக்கப்பட்டு, திட்ட அலுவலர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.2.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தொழில்நெறி வழிகாட்டும் மையம் (Vocational Guidance Centre)

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலை மற்றும் தொழிலினை தேர்ந்தெடுத்திட அவர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு ஒரு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டுக்காக ரூ.32.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)

பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துறை, நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

2020-2021 ஆம் நிதியாண்டில் இந்த 6 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி மேம்படுத்துதல்:

பழங்குடியினர் குடியிருப்புகளில் வீடு கட்டித் தருதல், குடிநீர் வசதி ஏற்படுத்தி தருதல், இணைப்பு சாலை மற்றும் பாதைகள் அமைத்தல், தெரு விளக்கு/சூரிய மின் விளக்கு அமைத்து தருதல் போன்ற அடிப்படை வசதிகளை ரூ.50.00 கோடி செலவில் மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்புத் திட்டம் 2019-2020 ஆம் நிதியாண்டில் இவ்வரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து பழங்குடியினர் குடியிருப்புகளில் அனைத்து கால நிலைகளுக்குமான வீடுகள், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சூரிய மின் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகளை வழங்கிடுவதை உறுதி செய்திடும் ஒரு சிறப்புத் திட்டத்தினை துவங்கிட இவ்வரசு முடிவு செய்துள்ளது. 8,803 பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.265.00 கோடி மதிப்பீட்டில் வீட்டு வசதி ரூ.395.00 கோடி மதிப்பீட்டில் இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், சூரிய மின் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகளை எதிர் வரும் மூன்று ஆண்டுகளில் வழங்கிடும் வகையில் விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.210.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

பழங்குடியினருக்கு வழங்கப்படும் சாதிச் சான்றிதழின் மெய்த்தன்மையினை சரிபார்த்து வழங்குவது இத்துறையின் ஒரு முக்கிய பணியாகும்.

(i) பழங்குடியினருக்கான சாதி சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

(ii) அவர்கள் சான்று வழங்க மறுக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின் மாநில கூர்ந்தாய்வு குழுவினையும் (SLSC) அணுகலாம்.

(iii) பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் கூர்நோக்குக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில கூர்நோக்குக் குழுவில் அதிக அளவில் கோரிக்கைகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண் 40, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-7-2018-இன்படி அரசு கூடுதல்/இணைச் செயலாளர்கள் தலைமையில் கூடுதலாக 2 மாநில அளவிலான கூர்நோக்குக் குழுக்களை அரசு தோற்றுவித்துள்ளது.

இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

மாநில அளவிலான கூர்நோக்கு குழு

1	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை/ அரசு கூடுதல்/ இணைச் செயலாளர்கள்.	தலைவர்	பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226-இன்படி உயர் நீதிமன்றத்திலும், கூறு 136-இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.
2	இயக்குநர், பழங்குடியினர் நலம்/ துணை வனப் பாதுகாவலர் /	உறுப்பினர் செயலர்	
3	இயக்குநர் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்	உறுப்பினர்	

கண்காணிப்புப் பிரிவுகள்

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத்தன்மையை அறிந்திட, கள ஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கண்காணிப்புப் பிரிவும் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது:-

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை
1.	முதுநிலை காவல் துணை கண்காணிப்பாளர்	1
2.	காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர்	1
3.	தலைமைக் காவலர்	1

பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத்தன்மை அறியும் பொருட்டு பல கோப்புகள் நிலுவையில் உள்ளதால், அரசாணை (நிலை) எண் 50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 28-7-2017-இன்படி நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கி வரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், கண்காணிப்புப் பணியாளர்களுக்கு உதவி புரியும் வகையில் அரசாணை (ப) எண் 263, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 26-10-2017-இன்படி 10 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பழங்குடியினரின் சாதிச் சான்றிதழின் உண்மைத்தன்மையை அறிய மத்திய/மாநில அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அனுப்பப்படும் கோரிக்கைகளை பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக உரிய காவல் துணை கண்காணிப்பாளருக்கு சாதி நிலை குறித்து கள ஆய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு மாநில கூர்நோக்குக் குழு பரிந்துரை செய்யும்.

2020 மார்ச் 24]

6. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மாநிலத்தில் உள்ள பழங்குடியின மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்ய வழி வகுக்கும் பழங்குடியினர் துணைத் திட்டம் 1976-1977 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான (மாநில நலத் திட்ட செலவினம்-Welfare Expenditure of State) ரூ.64,255.97 கோடியில், பழங்குடியினர் துணைத் திட்டத்தின் (பழங்குடியினர் நலத் திட்ட செலவினம்-Expenditure on Scheduled Tribes Welfare) கீழ் ரூ.1,299.47 கோடி (2.02 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் இத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்துணைத் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்பு அலுவலர் துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து ஒதுக்கீட்டின் மீதான செலவினப் போக்கினை கண்காணித்து வருகிறார்.

42 துறைகளை உள்ளடக்கிய 17 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

III. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

முன்னுரை

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு

தீப்பிடிக்காத இலவச வீடுகள் கட்டுவதற்காக ஒரு கட்டுமான நிறுவனமாக இந்திய நிறுவனச் சட்டம், 1956-இன்கீழ் ரூ.1.00 கோடி பங்கு மூலதனத்துடன் துவங்கப்பட்டது. பின்னர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை சமூகத்தின் இதர பிரிவினருக்கு சமமாக முன்னேற்றும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளன.

1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.200 கோடி மற்றும் ரூ.143.53 கோடி ஆகும். 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன.

2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு
3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

2.1 பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

தாட்கோவின் மேம்பாட்டுப் பிரிவு ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சம் வரை ஆண்டு வருமானம் பெறும், சமூகத்தின் வறிய நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தேவையின் அடிப்படையிலான பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. மூலதனச் சொத்துக்களை உருவாக்க வங்கிகளிடம் நிதி உதவி பெற்றிட இவ்வரசு திட்டச் செலவினத்தில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் மானியமாக வழங்குகிறது. இது அவர்களின் சமூகப் பொருளாதார நிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 10,916 பயனாளிகளுக்கு, ரூ.90.95 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அ. மானியத்துடன்கூடிய கடன் திட்டங்கள்

(i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவுகோல் என்பதால், ஆதி திராவிடர் மகளிரின் நில உடைமையினை அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே நிலம் வாங்கிட வழிவகுக்கும் சிறப்புத் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்த ஆண் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

➢ நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.

➢ இத்திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புக்குட்பட்ட நிலத்திற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது.

➢ ஆதி திராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

(ii) நில மேம்பாட்டுத் திட்டம்

நிலப் பயன்பாட்டை அதிகரிப்பதோடு, ஆழ்துளைக் கிணறு அமைத்தல்/திறந்தவெளிக் கிணறுகள், விசைக் கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கிமூலம் மானியத்துடன்கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் வருமானம் ஈட்ட வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(iii) கிணறு தோண்டுவதற்கான நிதியுதவி

ஆதி திராவிட நில உரிமையாளர்கள் கிணறு அமைத்தலின்மூலம் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தி நில பயன்பாடு மற்றும் வருவாய் பெருக்குதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

(iv) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிட மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன்பெறும் வகையில்

அவர்களது கல்வித் தகுதியை கருத்தில் கொள்ளாமல் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

(v) தொழில்முனைவோர் சிறப்புத் திட்டம்-பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012-2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதி திராவிட மக்கள், எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே 'அ' மற்றும் 'ஆ' வகைப்பாட்டில் (A & B Category) பெட்ரோல் /டீசல்/எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத் தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (working capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும்பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(vi) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆததிராவிடர் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த/விருப்பமான சுய தொழில் செய்ய நிதி உதவி, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

(vii) இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS), இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம்/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மருத்துவம்சார் தொழிற்கல்வி பயின்ற முடநீக்கு வல்லுனர், மருந்தாளுனர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சொந்தமாக மருத்துவ மையம்/கண் கண்ணாடி கடை/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் (concerned council) பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(viii) சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை மேம்படுத்திடும்பொருட்டு, அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இருமுறை தரநிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக போதுமான மற்றும் சரியான நேரத்தில், நியாயமான வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

ஆ. முழு மானிய உதவித் திட்டங்கள்

வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், குடிமைப்பணி தேர்வு எழுதுவோர் மற்றும் தங்களது தொழிலை ஏற்படுத்த ஆர்வமுள்ள ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாத மற்றும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானிய உதவியினை தாட்கோ வழங்குகிறது.

(i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிடர் இளைஞர்கள் முதன்மைத் தேர்விற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள (Main Examinations) ரூ.50,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது.

(ii) மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் மாநில குடிமைப் பணிகள் தொகுதி-1 தேர்வில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

(iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத் திட்டத்தில் பயின்ற, 23 முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் அல்லது மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற ஆதி திராவிடர் சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின்கீழ் ஒரு முறை நிதியுதவியாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

(iv) பட்டயக் கணக்கர்/செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் புரிய நிதி உதவி

பட்டயக் கணக்கர்/செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

(v) விருப்புரிமை நிதி

(அ) தாட்கோ தலைவரின் விருப்புரிமை நிதி

2016-2017-இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாட்கோ தலைவர் விருப்புரிமை திட்டத்தின்கீழ், ரூ.40,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

(ஆ) தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் விருப்புரிமை நிதி

2012-2013-இல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டத்தின்கீழ் ரூ.30,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

விதவைகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோர்/ பாதுகாவலர் இல்லாத குழந்தைகள், நலிந்த கலைஞர்கள், மருத்துவம் செய்ய இயலாத நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், திறன் மேம்பாட்டுப் படிப்பு, தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், சாதிக் கலவரம்/தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

(இ) மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதி

மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், 30 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர்/பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ஒருவருக்கு ரூ.20,000/- வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

(vi) துரித மின் இணைப்புத் திட்டம்

ஆதி திராவிடர் விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட மின்வாரிய வைப்பு தொகை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 2016-2017 ஆம் ஆண்டு முதல் ரூ.10,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இ. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

பழங்குடியினருக்காக பின்வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோவால் 2012-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) நில மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த நீராதாரங்களை உருவாக்குதல், பாசன வசதிகள் மற்றும் பாசனத்திற்காக மின்சார இணைப்புகள் அமைத்தல் உள்ளிட்ட நில மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. அதிகபட்ச நிதியுதவியாக 50 விழுக்காடு மானியத்துடன் ரூ.7.50 இலட்சம் வழங்கப்படுகிறது.

(ii) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது சமூக, பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ளும் வகையில் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்ச திட்டத் தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் வரை மானியமாக நபர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

(iii) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு பயணியர் வாகனம்/ ஈப்பு வாங்குவதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.4.00 இலட்சம் வரை மானியமும், கனரக வாகனம் வாங்கிட ரூ.5.50 இலட்சம் மானியமும் வழங்கப்படுகிறது.

(iv) பழங்குடியின இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS), இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம்/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் மருத்துவம் சார்ந்த தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண் கண்ணாடி வினைஞர் மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சொந்தமாக மருத்துவ மையம்/கண் கண்ணாடி கடை/ஆய்வகம்/மருந்தகம் அமைப்பதற்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் (concerned council) பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(v) பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூஞ்செடிகள் வளர்த்தல், சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி மற்றும் பிற கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சார்ந்த தொழில்கள்

செய்ய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

(vi) இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

குடிமைப் பணிகளில் நாட்டம் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி-1 முதன்மைத் தேர்வு மற்றும் இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு (Main Exam) எழுதுவோருக்கு உதவுவதன் தேவையை உணர்ந்து பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.50,000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது.

(vii) பழங்குடியினருக்கான துரித மின் இணைப்பு திட்டம்

பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற மின் வாரிய வைப்புத் தொகை செலுத்திட நபர் ஒருவருக்கு ரூ.75,000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது.

2.2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தகுதியான வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு/சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திடும் இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

தாட்கோமூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்

- மல்டிமீடியா & அனிமேஷன் (Multimedia & Animation)
- கட்டடக் கலை மற்றும் ஆட்டோ கேட் உடன் இணைந்த கட்டட 2D வரைகலை (Architectural & Civil 2D Drafting with Auto CAD)

[2020 மார்ச் 24

- நவீன ஆடை தொழில்நுட்பம் (Fashion Technology)
- ஆடை வடிவமைப்பு (Apparel Pattern Making)
- அழகுக் கலை பயிற்சி (Beautician)
- முடி ஒப்பனையாளர் பயிற்சி (Hair Stylist)
- குளிர்சாதனப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு (Repair & Maintenance of Airconditioner)
- மின் வினைஞர் (Electrician)
- துணி வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (Cutting & Tailoring)
- கணினி வன்பொருள் மற்றும் இணைவமைவு (Computer Hardware & Networking)
- சில்லறை விற்பனை மேலாண்மை(Retail Management)
- தொலைத் தொடர்பு மேலாண்மை (Telecom management)
- சூரிய மின் நிறுவி மற்றும் சேவை அளிப்பவர் (Solar Electric installer & Service Provider)
- சுற்றுலா ஏஜென்ட் மற்றும் போக்குவரத்து பயண நடத்துனர் பயிற்சி (Tour Agent & Travel operator)
- கணக்காளர் (Accountant)
- பயணச்சீட்டு முன்பதிவு (Ticket Reservation)
- கை எம்ப்ராய்டரி (Hand Embroidery)
- பிளாஸ்டிக் செயல்முறை (Plastic Processing)
- இயந்திரம் இயக்குபவர் பயிற்சி (Machine Operator)

2013-2014 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை ரூ.42.21 கோடி செலவில் 123 நிறுவனங்கள்மூலம் 28,521 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

3. கட்டுமானப் பிரிவு

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நவீன சமுதாயக் கூடங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

(i) மைய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டம்மூலம் விடுதிக் கட்டடங்கள், பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் வன்பந்து கல்யான் யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள், ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், கல்லூரி மாணவர் விடுதிகள், பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள், சுற்றுச்சுவர், நவீன சமுதாயக் கூடங்கள், கழிப்பறைகள் கட்டுதல், பழங்குடியினர் நல விடுதிகள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்குதல் போன்ற பணிகள் மாநில அரசுத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டப் பணிகள் (நபார்டு)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச் சுவர், தண்ணீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல்

மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டங்களின்கீழ் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

தாட்கோ கட்டுமானப் பிரிவுமூலம் தற்போது பல்வேறு திட்டங்களின்கீழ் ரூ.402.07 கோடி மதிப்பிலான 607 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 2020-2021 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

வ. எண்	அலுவலகங்கள்	வருவாய்	மூலதனம்	மொத்தம்
1.	தலைமைச் செயலகம்	10.52	0	10.52
2.	ஆதி திராவிடர் நலத் துறை	3378.64	153.63	3532.27
3.	பழங்குடியினர் நலத் துறை	366.83	199.91	566.74
மொத்தம்		**3755.99**	**353.54**	**4109.53**

2020 மார்ச் 24]

இணைப்பு XXII

(57 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

அறிமுகம்:

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்!"

என்று தண்டியலங்கார ஆசிரியர் தமிழ்மொழியின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

புற இருளை விலக்குவது கதிரவன் என்றால், அக இருளை விலக்குவது அருந்தமிழ்தான் என்கிறார்.

அந்தத் தமிழ்தான், தமிழரின் தாய்மொழி.

"உலக முதல் நிலம் குமரிக்கண்டம்!
உலக முதல் மாந்தன் தமிழன்!
உலக முதல் மொழி தமிழ்!
அந்தத் தமிழ் இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்!
உலக மொழிகளுக்கெல்லாம் வேர்!"

என்றார் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.

தொல்காப்பியத்தில் தமிழ் மொழியைச் செந்தமிழ் என்று மூன்று இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது. செந்தமிழ் என்றால், செம்மையான தமிழ் என்று பொருள். தொல்காப்பியர் காலம் கி.மு. 5320 என்கிறார் க. வெள்ளைவாரணனார். அதற்கு முன்னமே நம் தமிழ் செம்மையுள்ளது என்பது வெளிப்படை.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன்
பிறந்தோம் நாங்கள்"

என்று பெரு முழக்கமிடுகின்றார் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ் மொழியின் சிறப்பினை நாம் கூறுவதனைவிட இங்கு வருகை தந்த வெளிநாட்டறிஞர்கள் வியந்து கூறியுள்ளனர்.

"எந்தவித ஐயத்திற்கும் இடமில்லை. உலகின் மிகப்பழைமையான மொழி தமிழ். மிகச் செறிவேறிய மொழி தமிழ். அளவுக்கு மீறிய கட்டுக்கோப்புடைய மொழி தமிழ். மொழிகளுள் மூத்த முதன்மொழி தமிழ்!" என்று வெளிநாட்டில் பிறந்து, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராமல் இங்கு வந்து தமிழ் கற்று, தமிழுடன் பல மொழிகளை ஒப்பிட்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் மிகச் சிறந்த ஆய்வு நூலினை இயற்றிய இராபர்ட்டு கால்டுவெல் கூறியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாகப் புறப்பொருள் வெண்பாமாலையில் ஐயனாரிதனார்

"பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி"

என்று தமிழ்க்குடியின் தொன்மையினையும் தமிழ் மொழியின் தொன்மையினையும் தெளிவுறவே எடுத்துரைத்துள்ளார்.

பல மொழிகளை அறிந்த மகாகவி பாரதியார் எல்லா மொழிச் சொற்களை விடவும் தமிழ்ச் சொற்களைச் சிறப்பு மிக்கதாகக் கருதினார். அதனை உய்த்துணர்ந்து அவர் பாடிய வரிகள்தாம்

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"

என்பவையாகும். தமிழ்நாட்டின் தெருக்களெங்கும் தமிழ்ச் சொற்களைப் பேசும் ஓசை இடையறாது கேட்க வேண்டும். அதுவே தமிழர்க்கு நன்மையும் நலமும் தருகிறது. இதனை,

"சேமமுற வேண்டு மெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்ற பாடலடிகளில் மொழிப் பொறுப்புடன் பாரதியார் பாடியிருக்கக் காண்கிறோம்.

2020 மார்ச் 24]

"தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்"

என்ற வரிகள் வாயிலாகத் தமிழர்களின் வானளாவிய பெருமைக்குத் தமிழ் மொழியே காரணம் என்றும் தமிழர்களின் அயர்வைப் போக்கிப் புத்துணர்ச்சி தரும் தேனாகவும் தமிழ் மொழி திகழ்கிறது என்றும் பாவேந்தர் உரைத்துள்ளார்.

பல்வேறு இலக்கிய, இலக்கணச் செழுமை கண்டு, காலத்தை வென்று, இனிமை குறையாமல் கற்போரின் கருத்தைக் கவர்ந்து மகிழ்ச்சிக்கு எப்பொழுதும் வழிகோலும் மொழி, நம் தமிழ் மொழியாகும்.

தனிப்பெரும் குணம்கொண்ட தமிழினத்திற்குத் தமிழ் மொழியே அமுதமாகும். இதை,

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்"

என்ற 'பா' வரிகளால் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் அவர்கள் முரசறைகிறார்.

நீரின்றி அமைவதால் நிலைபெற்ற உலகத்தில் உயிர்கள் தோன்றி மனித குலம் பயணப்படத் தொடங்கிய காலம் தொட்டே அவர்களின் நாவில் இயல்மொழியாக முதலில் தோன்றிய மொழி தமிழ் மொழியாகும். கழை மூங்கிலைப் புல்லாங்குழலாக்கி இசையோடு இயற்றமிழும், இசைத் தமிழும், நாடகத் தமிழும் மலர்ந்தன. இசைத் தமிழைப் பழந்தமிழர்கள் வளர்த்தனர். அத்தகைய தமிழ் மொழி என்றென்றும் வியப்புக்கு உரியது. இதனை

"பழந்தமிழ் மக்கள் வந்தார்
பறவைகள், விலங்கு, வண்டு
தழை மூங்கில் இசைத்த தைத்தாம்
தழுவியே இசைத்த தாலே
ஏழிசைத் தமிழே! இன்பம்
எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே என் வியப்பின் வைப்பே!"

[2020 மார்ச் 24

என்ற அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பாவேந்தர் முன் வைக்கிறார். தமிழ்க் குலத்தின் அடையாளமாகத் திகழும் தமிழ்மொழி கலைகளின் களஞ்சியமாகத் திகழ்கிறது. இசை நுட்பம், எண் நுட்பம், சிற்பக் கலை, ஆடற்கலை, பாடற்கலை, ஆடலும் பாடலும் கூடிக் கலந்த கூத்துக் கலை, ஓவியக் கலை, மூலிகை மருத்துவம் பற்றியுரைக்கும் மருத்துவக் கலை ஆகிய இவை யாவும் கொண்ட தமிழ் மொழியின் சிறப்பை

"இசையினைக் காணு கின்றேன்
எண்நுட்பம் காணு கின்றேன்
அசைகொணாக் கல்தச் சர்கள்
ஆக்கிய பொருள்காண் கின்றேன்
பசைபொருட் பாடல் ஆடல்
பார்க்கின்றேன் ஓவி யங்கள்
நசையுள்ள மருத்து வன்மை
பலப்பல நான்காண் கின்றேன்"

எனுமாறு பாவேந்தர் பாடிப் பரவசப்படுவதை தமிழ்நாடு அரசு அவர்தம் கருத்தமைவுகளை இக்காலத்தில் உள்ளவரும் வருங்காலத் தலைமுறையினரும் கண்டு தெளிவுபடவைக்கும் வகையில் சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக் கூடத்தில் பழந்தமிழர்களின் வணிகம், வீரம், ஆட்சியியல், போர், நீர் மேலாண்மை, சுற்றுச் சூழலியல் ஆகியவற்றை தெளிதின் உரைக்கும் வண்ணம் கற்சிற்பங்களாகவும் சுதைச் சிற்பங்களாகவும் மரச் சிற்பங்களாகவும் படிமங்களாகவும் திரைக் காட்சிகளாகவும் மிகச் சிறந்த முறையில் அணியமாக்கப்பட்டு உலகத் தரம் வாய்ந்த காட்சிக் கூடமாக உருவாக்கப்பட்டுள்ளது. இப்பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்தை நாள்தோறும் அயல்நாட்டினரும் உள் நாட்டினரும் கண்டு வியந்து பழந்தமிழர்களின் பெருமைகளை உணர்ந்து செல்கின்றனர்.

தன்னேரிலாத தமிழ்-எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பதினெண்கீழ்க்கணக்கும் மேலும் அளவிலாத இலக்கியச் செல்வங்களையும் அளவற்ற அறநூல்களையும் கொண்டு விளங்குகின்றது.

2020 மார்ச் 24]

தொன்மையும் சிறப்பும்கொண்டு விளங்குகின்ற தமிழ் மொழியின் பெருமையினைப் பீடுபெறச் செய்வது நமது கடமையாக இருக்கின்றது.

உலக முதன் மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட நாம் தமிழில் பெயர் சூட்டிக்கொள்ளுதல் வேண்டும்; தமிழைப் பிறமொழிக் கலப்பின்றிப் பேசுதல் வேண்டும்; தமிழிலேயே எழுதுதல் வேண்டும் என்னும் உறுதியினை ஏற்றுச் செயற்பட்டால், தமிழ்மொழி எங்கும் எதிலும் என்றும் செழித்தோங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்னும் குறிக்கோளை நோக்கித் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு விதமான தமிழ் வளர்ச்சிக்கான திட்டப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது; சொல்வளம் மிக்கது. ஆயினும் அச்சொல் ஒருங்கே திரட்டப் பெறாமல் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை ஒன்று திரட்டிச் சொற்களஞ்சியம் ஒன்றனை உருவாக்கும் வகையில் "சொற்குவை" என்னும் திட்டத்தினால் தமிழுக்கு ஒரு பொற்குவை உருவாக்கப்பெற்றுள்ளது.

ஆங்கில மொழியில் நாள்தோறும் சொல்வளம் பெருகிக்கொண்டே வருகின்றது. அதனைப் போன்று அருந்தமிழ் மொழியிலும் சொல்வளம் பெருகுதல் வேண்டும்; ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கும் பெரும் பணியினைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககத்தின் வாயிலாகத் தமிழ்க் கலைச் சொல்லாக்கக் குழு முயன்று வருகிறது.

மேலே கண்டுள்ள வகையில், தமிழ் மொழியினை உலகெங்கும் கொண்டுசெல்லும் நோக்கிலும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து தமிழ் வளர்ச்சித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் வாயிலாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின்-தமிழ் வளர்ச்சிப் பணிக்குத் தமிழ் நெஞ்சங்களும் துணை நின்றால் விரைவில் இலக்கினை அடையலாம்; இன்பத் தமிழ் இனிதே பரவும்; நெடிது வாழும்.

இயல்-1

தமிழ் வளர்ச்சித் துறை

1.1 ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

1.1.1 ஆய்வு

தமிழ் மாநிலம் 1-11-1956 இல் உருவானது. அதனையடுத்து, ஆட்சிமொழிச் சட்டம் 27-12-1956 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகத் தமிழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை அனைத்து அரசு அலுவலகங்களிலும் அலுவல் மொழியாகப் பயன்படுத்துதல் வேண்டும் என்ற நோக்கில் தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தின்படி அனைத்து அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளிலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றிலும் இத்திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள்/மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள்/ மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களில் இவ் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

1.1.2 ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

அலுவலகக் குறிப்புகள், வரைவுகளில் பிழை நீக்கி எழுதுதல், ஆட்சிமொழி வரலாறு, சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்க அரசாணைகள் மற்றும் ஆட்சிமொழித் திட்டச் செயற்பாட்டில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைதல், கணினியில் தமிழ் ஒருங்குறிப் பயன்பாடு என அனைத்துப் பொருண்மைகளிலும் மின்காட்சியுரை உதவியுடன் இப்பயிலரங்கில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி

2020 மார்ச் 24]

வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இப்பயிலரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.50,000/- வீதம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1.1.3 ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

அரசுத் துறைகள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் இதில் பங்குபெற்றுப் பயன்பெறுகின்றனர். தமிழ் இலக்கண, இலக்கியங்களில் புலமை வாய்ந்தவர்களைக் கொண்டும் துறை அலுவலர்களைக் கொண்டும், ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன. பொதுமக்களுக்கும் அரசிற்கும் ஒளிவு மறைவின்றி நிருவாக அலுவல்கள் தமிழில் சிறப்புற நடைபெற இக்கருத்தரங்கம் பெரிதும் உதவுகிறது. இக்கருத்தரங்கம் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.20,000/- வீதம் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1.1.4 ஆட்சிமொழிச் சட்ட வாரம்

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27-12-1956 ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் ஒருவாரக் காலத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் கடைப்பிடிக்க வேண்டும் என 2019-2020 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பினைச் செயற்படுத்திடும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் ஒருவார காலத்திற்கு பின்வரும் நிகழ்வுகள் நடத்தப்பெற்று ஆட்சிமொழிச் சட்ட வாரம் கடைபிடிக்கப்பட்டது.

- அரசு அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்குக் கணினித் தமிழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்
- அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மற்றும் ஒருங்குறி பயன்பாடு குறித்த பயிற்சி
- ஆட்சிமொழி மின்காட்சியுரை விளக்கப் பயிற்சி
- ஆட்சிமொழிப் பட்டிமன்றம்

[2020 மார்ச் 24

- ❖ தமிழில் வரைவுகள், குறிப்புகள் பிழையின்றியும் பிறமொழிக் கலப்பின்றியும் எழுதிடப் பயிற்சி

- ❖ வணிக நிறுவனங்கள்/கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் வணிக அமைப்பு நிருவாகிகளுடன் பெயர்ப் பலகைகள் தமிழில் வைக்கப்படுதல் குறித்து கலந்துரையாடல் கூட்டம்

- ❖ வணிக நிறுவனங்கள்/கடைகளின் பெயர்ப் பலகைகள் தமிழில் வைக்கப்பட வலியுறுத்தி தமிழ்நாடெங்கும் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் தமிழறிஞர்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட சுமார் 50,000-க்கும் மேற்பட்டோர் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்!" எனும் இலட்சியப் பதாகையை ஏந்தி பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

- ❖ ஒன்றியம், வட்டம், மாவட்டம் அளவிலான ஆட்சிமொழித் திட்ட விளக்கக் கூட்டங்கள் பல துறைப் பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் சிறப்பாக நடத்தப்பட்டன.

1.1.5 சிறந்த குறிப்புகள், வரைவுகளுக்குப் பரிசுகள்

தமிழில் குறிப்புகள், வரைவுகள் சிறந்த முறையிலும் எளிய நடையிலும் எழுதும் அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் மாவட்ட நிலை, உள்ளாட்சி நிலை, தன்னாட்சி நிலை, சார்நிலை ஆகிய 4 நிலைகளிலும் சிறந்த முறையில் குறிப்புகள், வரைவுகள் எழுதும் பணியாளர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000/-, இரண்டாம் பரிசாக ரூ.2000/-, மூன்றாம் பரிசாக ரூ.1000/- எனப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

1.1.6 அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தின் முழக்கமான 'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' எனும் இலக்கை எய்திய அரசு அலுவலகங்களைப் பாராட்டும் வகையில் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. தலைமைச் செயலக அலுவலகம், அரசுத் துறை, வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நிலை அலுவலகங்கள் என்ற வகைப்பாட்டின் அடிப்படையில் ஆட்சிமொழித்

2020 மார்ச் 24]

திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்திவரும் அலுவலகங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு நிலைக்கும் கேடயங்கள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

1.1.7 தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப்பெயர்களைத் தமிழ் எழுத்துகளின் ஒலிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் உரிய எழுத்துகள் அமைத்து ஒலிக்கப்படச் செய்தல்

தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்களை தமிழ் உச்சரிப்பு போன்றே ஆங்கிலத்தில் அமைத்து செயற்படுத்தப்படும் என 2018-2019 மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பினைச் செயற்படுத்தும்பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் அமையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக்கொண்டு உயர்நிலைக் குழு அமைக்கப்பெற்றது.

மாவட்ட நிலை உயர்நிலைக் குழுவில் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்படும் ஊர்ப் பெயர்களை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளிக்கும்பொருட்டு மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர் அவர்களை உறுப்பினராகவும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களை உறுப்பினர்/செயலர் ஆகவும், வருவாய்த் துறை செயலாளர், வருவாய் நிருவாகத் துறை முதன்மை ஆணையர், நில அளவைப் பதிவேடுகள் துறை இயக்குநர், நகராட்சி நிருவாக இயக்கக இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்கக இயக்குநர், பேரூராட்சிகள் இயக்கக இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு ஆலோசனைக் குழு அமைக்கப்பெற்றது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 4-2-2019, 11-2-2019 ஆகிய நாள்களில் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடத்தப்பெற்றது. கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரை செய்யப்பெற்ற மாற்றம் செய்யப் பெற வேண்டிய ஊர்ப் பெயர்கள் குறித்து விவாதம் நடைபெற்றது.

[2020 மார்ச் 24

ஆலோசனைக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் 1018 ஊர்ப் பெயர்கள் தமிழ் எழுத்துகளின் ஒலிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் அமைத்து அரசாணை வெளியிடப்பெற்றுள்ளது [அரசாணை (நிலை) எண் 36, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1-1) துறை, நாள் 27-2-2020]

1.1.8 சென்னை மாவட்ட ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி

சென்னை மாவட்டத்தில் அரசுத் துறை, வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் அமைந்துள்ளன. இவர்களுக்கு ஆட்சிமொழிச் சட்டம்/வரலாறு, ஆட்சிமொழிச் செயலாக்கமும் அரசாணைகளும், கலைச்சொல்லாக்கமும் மொழிபெயர்ப்பும், மொழிப்பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், ஆட்சிமொழி ஆய்வும் குறை களைவு நடவடிக்கைகளும் என விரிவான முறையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு 4 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்றன.

1.1.9 அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர்

அம்மா மென்தமிழ்ச் சொல்லாளர் மென்பொருள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 16-5-2017 அன்று வெளியிடப்பட்டது. 2016-2017 மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க ரூபாய் 30.00 இலட்சம் செலவில் 10,000 தமிழ் மென்பொருள் அடங்கிய குறுந்தகடுகள் உரிய நிறுவனத்திடமிருந்து தமிழ் வளர்ச்சித் துறையால் விலைக்கு வாங்கப்பட்டுத் தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகளுக்கும் விலையின்றி வழங்கப்பட்டுள்ளன. கணினியுகத்திற்கேற்பக் கணினியில் தமிழ் மொழி பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில் ஆங்கிலத்தில் பிழைத் திருத்தி, சொல் திருத்தி வசதிகள் இருப்பதைப்போல், தமிழில் ஒற்றுப்பிழை, சந்தி, மயங்கொலி உள்ளிட்ட இலக்கணப் பிழைகளைத் தானே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளும் வகையிலும் இம்மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மென்பொருளில் தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சிச்சொல் அகராதியும் தேடுதல் வசதியுடன் சேர்க்கப்பெற்றுள்ளன. ஆட்சிமொழிப் பயிலரங்கங்களில் இம்மென்பொருள் பயன்பாடு குறித்துத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

1.1.10 'தமிழ்ச்சாலை' செயலி

தமிழ் வளர்ச்சித் துறைக்கெனத் தனியாகத் 'தமிழ்ச்சாலை' என்ற பெயரில் ஒரு செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி வாயிலாகத் தமிழ் வளர்ச்சித் துறையால் செயற்படுத்தப்படும் திட்டப்பணிகளான அரசுப் பணியாளர்களுக்கான ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி, ஆட்சிமொழிக் கருத்தரங்கம், ஆட்சிமொழிச் சட்டவாரம், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை, தமிழ்நாடு நாள் விழா, உலகத் தாய்மொழி நாள்விழா, திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா போன்ற நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்பாக ஒளிபரப்பப்பட்டுத் தமிழ் வளர்ச்சித் துறையின் செயற்பாடுகள் அனைத்தும் உடனுக்குடன் தமிழறிஞர்கள், பொதுமக்கள் அறியும் வகையில் செயலாற்றப்பட்டு வருகிறது.

1.1.11 அகராதிகள்

தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சிச்சொல் அகராதி, அயற்சொல் அகராதி, இணைச்சொல் எதிர்ச்சொல் அகராதி ஆகியன இலவசமாகப் பதிவிறக்கம் செய்து அரசுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்படுத்தும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வகராதிகள் கணினியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தும் வகையிலும், நேரடியாக இணையத்தின் வாயிலாக அறிந்துகொள்ளும் வகையிலும் தேடுதல் வசதியுடன் வெளியிடப்பட்டுள்ளன.

1.2 விழாக்கள்/விருதுகள்

தமிழ்மொழியின் வளத்தையும் பண்பாடு மற்றும் நாகரிகத்தையும் அனைவரும் அறிந்திடும்வகையில் தமிழ் வளர்ச்சித் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தும்வகையில் பல்வேறு தமிழறிஞர்களின் பெயரில் விருதுகள் வழங்கியும் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழ்களும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

1.2.1 திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவரின் பெருமையினைப் பறைசாற்றும் வகையில் தைத் திங்கள் 2 ஆம் நாளில் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள்

வழங்கும் விழாவாகச் செய்தி மக்கள் தொடர்புத் துறையுடன் இணைந்து நடத்தி வருகிறது. இவ்விழாவில் தமிழறிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்று வருகிறது.

1.2.1.1 திருவள்ளுவர் விருது (1986 முதல்)

உலகப் பொதுமறையாம் திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருக்குறளில் அறிவுறுத்தப்பட்டுள்ள அறநெறிகளைப் போற்றிடும் வகையில் திருவள்ளுவர் திருநாள் அன்று திருவள்ளுவர் விருது வழங்கப்பெற்று வருகிறது. விருதுக்கான தகுதியுரையுடன் விருது பெறுபவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்படுகிறது. 2020 ஆம் ஆண்டுவரை 35 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.1.2 மகாகவி பாரதியார் விருது (1997 முதல்)

பாரதியாரின் படைப்புகள் அனைத்தையும் முழுமையாகப் பயின்று ஆய்வு மேற்கொண்டு பாரதியாரைப் பற்றிய கவிதைகள் மற்றும் பாரதியின் புகழ் பரப்பும் வகையில் கவிதை, உரைநடை நூல்களைப் படைத்தவருக்கும் பிற வகையில் தமிழ்த் தொண்டுபுரிவோருக்கும் மகாகவி பாரதியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதுக்கான தகுதியுரையும் விருதாளருக்கு வழங்கப் பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டுவரை 22 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.1.3 பாவேந்தர் பாரதிதாசன் விருது (1978 முதல்)

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை நினைவுகூரும் வகையில், சிறந்த கவிதைகளைப் படைத்துவரும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. விருதுக்கான தகுதியுரையுடன் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கப்பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டுவரை 84 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.1.4 தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது (1979 முதல்)

தமிழில் தொடர்ந்து சிறந்த நூல்களைப் படைத்துவரும் தமிழ் எழுத்தாளர் ஒருவருக்குத் 'தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதுக்கான தகுதியுரையும்

வழங்கப்பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டுவரை, 41 பேருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

1.2.1.5 முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது (2000 முதல்)

தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் சிறந்த தமிழ் அறிஞர் ஒருவருக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. விருதுக்கான தகுதியுரையுடன் ஒரு சவரன் தங்கப் பதக்கத்துடன் ரூபாய் ஒரு இலட்சம் விருதுத் தொகையும் விருது பெறுவோருக்கு வழங்கப்பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 18 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.1.6 பெருந்தலைவர் காமராசர் விருது (2006 முதல்)

தமிழ்நாடெங்கும் பள்ளிகள் திறந்து கல்வியையும், மதிய உணவையும் இலவசமாக வழங்கித் தமிழ்நாட்டு மக்கள் தமிழ்ச் சமுதாயம் கல்வியில் முன்னேற வழிவகுத்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வழியில் தமிழக மக்களுக்குத் தொண்டாற்றிவரும் ஒருவருக்கு ஆண்டுதோறும், இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதுக்கான தகுதியுரையும் விருதாளருக்கு வழங்கப்பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 14 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.1.7 பேரறிஞர் அண்ணா விருது (2006 முதல்)

தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு ஆண்டுதோறும், இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுக்கான தகுதியுரையுடன் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதுக்கான தொகை ரூபாய் ஒரு இலட்சமும் விருதாளருக்கு வழங்கப் பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 14 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2 சித்திரை-தமிழ்ப் புத்தாண்டு விருதுகள்

தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் வாழ்ந்துவரும் தமிழர்கள் மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிக் காத்திட தமிழ் அமைப்புகளை உருவாக்கித் தொண்டாற்றி

வருகின்ற தமிழ் அமைப்புகளுக்கும் மற்றும் தமிழுக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிவரும் தமிழ் அறிஞர்களுக்கும், சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு நாளில், பின்வரும் 65 விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. மேலும், புதியதாக தோற்றுவிக்கப்பட்ட 7 விருதுகள் வரும் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளன.

1.2.2.1 தமிழ்த்தாய் விருது (2012 முதல்)

தமிழகம், பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் வாழும் தமிழர்கள், தங்களது பண்பாட்டு வேர்களை காப்பதற்காகப் பல்வேறு அமைப்புகளை உருவாக்கி மொழி இலக்கியம், கலை ஆகிய பணிகளை மேற்கொண்டுவரும் சிறந்த அமைப்பை தெரிவு செய்து தமிழ்த் தாய் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுபெறும் அமைப்பிற்கு ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன், தகுதியுரை மற்றும் பாராட்டுக் கேடயம் வழங்கப் பெறுகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 8 அமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

1.2.2.2 கபிலர் விருது (2012 முதல்)

பழந்தமிழர், தொன்மை, வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலியன புலப்படும் வகையிலும் தமிழுக்கு அணிசேர்க்கும் வகையிலும் மரபுச் செய்யுள்/கவிதைப் படைப்புகளைப் புனைந்து அளிக்கும் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 8 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.3 உ.வே.சா. விருது (2012 முதல்)

கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச்சுவடிகள் கிடைத்தற்கரிய கையெழுத்துப்படிகள் முதலியவற்றை அரும்பெரும் முயற்சியால் காணக்கிடைத்து வெளிக்கொணர்ந்தும், தமிழுக்கு வளம்சேர்க்கும் வகையில் பதிப்புப் பணிகளை மேற்கொண்டுவரும் தமிழ் அறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 8 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

2020 மார்ச் 24]

1.2.2.4 கம்பர் விருது (2013 முதல்)

தமிழ் இலக்கிய உலகில் சிறந்து விளங்கிய கம்பரைப் பற்றி திறனாய்வு செய்வோர், கம்பர் படைப்புகளை ஆய்வு செய்வோர், கவிபாடும் ஆற்றல், கதை நிகழ்ச்சி, பாத்திரப் படைப்பு மற்றும் அவரது புகழ் பரப்பும் வகையில் கவிதை நூல்களை படைப்போர் மற்றும் பிற வகையில் தமிழ்த் தொண்டு செய்துவரும் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 7 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.5 சொல்லின் செல்வர் விருது (2013 முதல்)

சிறந்த இலக்கியப் பேச்சாளராகவும், தமிழர் நாகரிகம் பண்பாட்டை மக்கள் மனதில் சொற்பொழிவு வழி விதைப்பவராகவும் பிற வகையில் தமிழ்த் தொண்டாற்றி வரும் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 7 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.6 உமறுப்புலவர் விருது (2014 முதல்)

இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான சீறாப்புராணத்தை இயற்றிய உமறுப்புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டைப் போற்றும் வகையில், தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. கடந்த 2019 ஆம் ஆண்டு வரை 6 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.7 ஜி.யு.போப் விருது (2014 முதல்)

அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு வரை 6 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

[2020 மார்ச் 24

1.2.2.8 இளங்கோவடிகள் விருது (2015 முதல்)

இளங்கோவடிகளின் நடையையொட்டிப் புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்பி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு வரை 5 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.9 முதலமைச்சர் கணினித் தமிழ் விருது (2013 முதல்)

கணினியுகத்திற்கேற்பத் தமிழ்மொழியைக் கணினியில் கோலோச்சச் செய்யும் வகையில் சிறந்த தமிழ் மென்பொருள் தயாரித்த நிறுவனம்/தயாரித்த ஒருவருக்கு 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருது' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு வரை 6 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.10 அம்மா இலக்கிய விருது (2016 முதல்)

மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றிவரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் அம்மா இலக்கிய விருது வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு வரை 4 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.11 சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது (2016 முதல்)

பிறமொழிப் படைப்புகளைத் தமிழில் சிறந்த முறையில் மொழிபெயர்ப்புச் செய்யும் மொழிபெயர்ப்பாளர்களைத் தெரிவு செய்து 'சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது' வழங்கப்படுகிறது. அவ்வகையில், ஆண்டுதோறும் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு இவ்விருது வழங்கப் பெறுகிறது. விருதுக்கான தகுதியுரைடன் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப் பெறுகிறது. 2019 ஆம் ஆண்டு வரை 40 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

2020 மார்ச் 24]

1.2.2.12 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலர் விருது (2018 முதல்)

தமிழில் அறிவியல் கருத்துகளை நூலாக எழுதுபவராகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவக் கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடும் ஒருவருக்குச் சிங்காரவேலர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு வரை 2 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.

1.2.2.13 தமிழ்ச்செம்மல் விருது (2015 முதல்)

தமிழ் வளர்ச்சிக்காகத் தனி ஆளாகத் தொண்டு செய்தும் தமிழ் அமைப்பு வைத்துத் தமிழ் மொழிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களை மாவட்டந்தோறும் கண்டறிந்து, அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில், 'தமிழ்ச் செம்மல் விருது', ஆண்டுதோறும், ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் என்றவாறு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுபவருக்கு ரூபாய் 25,000/- பரிசுத் தொகையும், தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறது. 2018 ஆம் ஆண்டு வரை, 128 பேர் விருது பெற்றுள்ளனர்.

1.2.2.14 மறைமலையடிகளார் விருது (2019 முதல்)

தனித் தமிழில் படைப்புகளைப் படைத்தும், தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டாற்றிவரும் தமிழறிஞர்களில் சிறந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் மறைமலையடிகளார் விருது வழங்கிட ஆணையிடப்பட்டு, முதன்முறையாக 2019 ஆம் ஆண்டில் இவ்விருது புலவர் ப. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்கு வழங்கப் பெற்றது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

1.2.2.15 அயோத்திதாசப் பண்டிதர் விருது (2019 முதல்)

தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் இலட்சிய நோக்கோடு சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகியவற்றில் தனிமுத்திரை பதித்துத் தமிழ் இலக்கிய ஆளுமையுடன் தமிழ்த் தொண்டாற்றி வரும் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் அயோத்திதாசப் பண்டிதர் விருது வழங்கப்பட ஆணையிடப்பட்டு முதன்முதலாக 2019 ஆம் ஆண்டில் இவ்விருது புலவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. விருதுத்

தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

1.2.2.16 அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது (2020 முதல்)

சமரச நெறிகளால் ஆன்மிகத் தொண்டாற்றும் ஒருவருக்கு 'அருட்பெருஞ்சோதி வள்ளலார்' அவர்களின் பெயரில் விருது வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்படும். இவ்விருது 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

1.2.2.17 காரைக்கால் அம்மையார் விருது (2020 முதல்)

காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு வழங்குவதற்கெனக் 'காரைக்கால் அம்மையார் விருது' என்னும் பெயரில் புதிய விருது வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிச் சிறப்பிக்கப்படும். இவ்விருது 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

1.2.2.18 தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் சிற்றிதழ் விருதுகள் (2020 முதல்)

தமிழ் மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டுவரும் நாளிதழ், வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொரு வகைப்பாட்டில் ஒரு இதழ் என மூன்று இதழ்களைத் தெரிவு செய்து 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது', 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது', 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது' என்ற பெயரில் விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் பாராட்டுச் சான்றும் வழங்கப்படும். இவ்விருதுகள் 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

1.2.2.19 கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழ்நாடு அரசின் விருது பெற்ற விருதாளர்கள் அனைவரும் தமிழ்ப் பணியைத் தொய்வின்றிச்

2020 மார்ச் 24]

செயலாற்றும் நோக்கில் அவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

1.2.2.20 சாகித்ய அகாதமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களும் 2019 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது பெற்ற சூல் எனும் நாவலை எழுதிய தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியைச் சேர்ந்த திரு. சோ. தர்மன் மற்றும் 2020 ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது பெற்ற மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த நிலம் பூத்து மலர்ந்த நாள் எனும் நூலை எழுதிய திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி கே.வி. ஜெயஸ்ரீ ஆகியோரைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்கள்.

1.3 உலகத் தாய்மொழி நாள்

ஐக்கிய நாட்டுக் கல்வி மற்றும் கலைப் பண்பாட்டு அவையால் (யுனஸ்கோ நிறுவனம்) 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் நாளை உலகத் தாய்மொழி நாள் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் உலகின் மூத்த மொழியாகிய நம் தமிழ் மொழியைப் போற்றிடும் வகையில் உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21 ஆம் நாளன்று தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டும் என மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாடப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்கத் தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது.

1.4 தமிழ்க் கவிஞர் நாள்

> இனிமைத் தமிழ்மொழி எமது-எமக்கு
> இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!

என்று இனிமையின் எல்லை எனக் கருதப்படும் அமுதத்தையே தமிழ் இன்பத்திற்கு இணையாகக் கூறிய புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளைத் தமிழ்க் கவிஞர் நாளாகத் தமிழ்நாடு அரசின் சார்பாக ஆண்டுதோறும் ஏப்ரல் 29 ஆம் நாள்

அன்று கொண்டாடப்படும் என 2015-2016 ஆம் ஆண்டு மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாளில் பாவேந்தரைப் போற்றும் வண்ணம் நூலைப்படி என்ற தலைப்பில் கவியரங்கம் தமிழியக்கம் என்ற தலைப்பில் இளந்தமிழர் அரங்கம் குடும்ப விளக்கு என்ற தலைப்பில் உரை அரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. இந்நிகழ்ச்சியில் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

1.5 திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் பின்வரும் சிலைகளுக்கு மலர் தூவிப் போற்றிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவர், தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், ஔவையார், கவிச் சக்கரவர்த்தி கம்பர், இளங்கோவடிகள், தமிழறிஞர் கால்டுவெல், தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள் மற்றும் தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், அவர்தம் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது. தற்போது, 2020 ஆம் ஆண்டு முதல் சித்திரை முழுமதி நாளன்று தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்துச் சிறப்புச் செய்ய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

1.5.1 திருவள்ளுவர்

வான்புகழ் கொண்டு விளங்கும் திருவள்ளுவரின் புகழ் பரவும் வகையில் திருவள்ளுவர் திருநாள் ஒவ்வோர் ஆண்டும் தைத் திங்கள் 2 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றே சென்னைக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர் தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. 2020 ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலை மாலை அணிவிப்பு நிகழ்ச்சிக்கென ரூ.10,000/-மும் பிற ஏற்பாடுகளுக்குப் பொதுப் பணித் துறைக்கு ரூ.20,000/-மும் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

1.5.2 தமிழ்த் தாத்தா உ.வே.சா.

தமிழிலக்கியச் சுவடிகளைத் தேடிச் சேகரித்துப் பிழைகளைத் திருத்தி, உரைக்குறிப்பு அளித்து, அச்சிட்டு நூலாக்கம் செய்து தமிழுக்கு வளமும், சங்ககாலத் தமிழரின் பன்முக ஆற்றலை உலகிற்கு உணர்த்தியவர் 'தமிழ்த்தாத்தா' உ.வே.சா. அவர்கள். அவருடைய தமிழ்ப் பணி இவ்வுலகில் என்றென்றும் நிலைத்து நிற்பதாகும். அவரது தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில், அவரது பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் நாளன்று, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு, 1993 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மாலை அணிவித்தும் தமிழ்த் தாத்தா உ.வே.சா அவர்களின் திருவுருவப் படம் வைத்து மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.3 ஔவையார்

ஆத்திச்சூடி, நன்னெறி, மூதுரை உள்ளிட்ட தமிழ் நீதி நூல்களைப் படைத்துத் தமிழின் பெருமையையும் தமிழர்களின் அறிவுத் திறனையும் உலகத்திற்கு எடுத்து இயம்பியவர் தமிழ் மூதாட்டி ஔவையார். அவரது சீர்மிகு தொண்டினைப் போற்றும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் 'உலக மகளிர் நாளான' மார்ச் 8 ஆம் நாளன்று அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தும் அவரது திருவுருவப் படத்துக்கு மலர் தூவியும் போற்றப்பட்டு வருகிறது.

1.5.4 கம்பர்

மார்ச் திங்கள் 24 ஆம் நாளை, 'கம்பர் திருநாள்' என்று வரையறுத்து, அந்த நாளில் சென்னை, காமராசர் சாலை, அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தும் அவர்தம் திருவுருவப் படத்திற்கு மலர்த்தூவியும் சிறப்பு செய்யப்பட ஆணையிடப்பட்டு 24-3-2018 ஆம் நாள் முதல் ஆண்டுதோறும் சிறப்பு செய்யும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

1.5.5 இளங்கோவடிகள்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைத் தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்த இளங்கோவடிகளின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி நினைவுகூரும் வகையில் சென்னை, அண்ணா சதுக்கத்தில் அமைந்துள்ள இளங்கோவடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு

ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாளன்று மலர் மாலை அணிவித்தும் திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.6 தமிழறிஞர் கால்டுவெல்

தமிழ்மொழி நூல் ஆய்வுக்கு முன்னோடியாக இருந்த தமிழறிஞர் திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்பட்ட அயல்நாட்டுத் தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களைப் பெருமைப்படுத்தும் நோக்கில், ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான மே 7 ஆம் நாளன்று அவருடைய திருவுருவச் சிலைக்குச் சிறப்புச் செய்ய 2014 ஆம் ஆண்டு அரசால் ஆணையிடப்பட்டது. அதன்படி, அவரின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்தும் திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.7 தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள்

‘தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான சூலை 15 ஆம் நாளன்று காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரத்தில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.8 தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார்

தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்கள் பிறந்த ஊரான சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம் செட்டியாரகரம் அருகில் உள்ள துண்டலத்தில், திரு.வி.க நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் அவரின் பிறந்த நாளான ஆகத்துத் திங்கள் 26 ஆம் நாளன்று மலர் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.9 தமிழ்த்தாய் சிலை

மதுரைத் தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள தமிழ்த் தாய் சிலைக்கு நாள்தோறும் மலர்மாலை அணிவித்தும் 15 நாள்களுக்கு ஒருமுறை புதிய நூல் புடைவை அணிவித்தும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.5.10 தொல்காப்பியர் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10-3-2019 அன்று சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான ‘மெரினா வளாகத்தில்’ திறந்து வைக்கப்பட்ட வெண்கலத்தாலான தொல்காப்பியர் திருவுருவச் சிலைக்கும் கன்னியாகுமரி மாவட்டம் காப்பியக்காட்டில் அமைந்துள்ள தொல்காப்பியர் சிலைக்கும் 2020 ஆம் ஆண்டு முதல் சித்திரை முழுமதி நாளன்று மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்புச் செய்யப்படவுள்ளது.

1.6 சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்குச் சிறப்புச் செய்தல்

தமிழ்நாடு அரசால், சங்ககாலப் புலவர்களை நினைவுகூரும் விதமாக நிறுவப்பட்ட ஒக்கூர் மாசாத்தியார், நல்லூர் நத்தத்தனார், மாங்குடி மருதனார் மற்றும் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர் ஆகிய சங்ககாலப் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு ஆண்டுதோறும் ஏப்ரல் 29 ஆம் நாளான தமிழ்க் கவிஞர் நாளில் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் சிறப்புச் செய்யப்பட்டு வருகிறது.

1.6.1 சங்கப் புலவர்களின் நினைவுத் தூண்-புதிதாக நிறுவுதல்

தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தொழில்நுட்ப அறிவுத் திறன் ஆகியவற்றைத் தங்கள் பாடல்கள்மூலம் உலகிற்குப் பறைசாற்றிய சங்கப் புலவர்களை நினைவுகூரும் விதமாக, சிவகங்கை மாவட்டத்தில் மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனார் அவர்களுக்கும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் கபிலருக்கும், தூத்துக்குடி மாவட்டம் கொற்கையில் மாறோக்கத்து நம்பலத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர் காவிதியார் மகன் புல்லங்காடனார், வெறிபாடிய காமக்கண்ணியார், முன்றுரையறையனார் ஆகிய 5 புலவர்களுக்கும் சேர்த்து ஒரு நினைவுத் தூண் என மொத்தம் 3 நினைவுத் தூண்கள் புதியதாக நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.

1.7 சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 1947 இல் தோற்றுவிக்கப்பட்டது. நூல் வகைப்பாடுகளின் எண்ணிக்கைப் பொருண்மைக்கு ஏற்றவாறு உயர்த்தப்பட்டுத் தற்பொழுது 33 வகைப்பாடுகளின்கீழ் போட்டிக்கு நூல்கள் பெறப்படுகின்றன.

வகைப்பாடுகள் விவரம்:

1. மரபுக் கவிதை
2. புதுக்கவிதை
3. புதினம்
4. சிறுகதை
5. நாடகம் (உரைநடை, கவிதை)
6. சிறுவர் இலக்கியம்
7. திறனாய்வு
8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்
9. பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்
10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)
11. அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்
12. பயண இலக்கியம்
13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு
14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும்
15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்
16. பொறியியல், தொழில்நுட்பவியல்
17. மானுடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்
18. சட்டவியல், அரசியல்
19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்
20. மருந்தியல், உடலியல், நலவியல்
21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்த மருத்துவம், ஆயுர்வேதம்)
22. சமயம், ஆன்மிகம், அளவையியல்

2020 மார்ச் 24]

23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம்

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிற சிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

இப்போட்டிக்காக வரப்பெறும் நூல்களைப் பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூலைத் தெரிவு செய்து அந்நூலை எழுதிய நூலாசிரியருக்கு ரூபாய் 30,000/-மும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. மேலும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூபாய் 10,000/-மும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றன.

1.8 தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம் (சிறந்த நூல்கள்/அரிய நூல்கள்/மொழிபெயர்ப்பு நூல்கள்)

சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1966 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின்கீழ் அரிய தமிழ் நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும் அதேபோன்று பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும், ஆய்வு நூல்களுக்கும் என நூலின் தரத்தைப் பொறுத்து வல்லுநர் குழுவால் பரிந்துரைக்கப்பெறும் நூல்களை அச்சிட்டு வெளியிட நிதியுதவி வழங்கப்பெறுகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது பெருமளவாக இருந்த நிதியுதவித் தொகை ரூபாய் 25,000/- 2012 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 50,000/- ஆக உயர்த்தப்பட்டது.

தற்பொழுது, 2017 ஆம் ஆண்டு முதல், ஆண்டு வருவாய் மற்றும் வயதைக் கணக்கில் கொள்ளாமல் நிதியுதவி வழங்கலாம் எனவும் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையால் அளிக்கப்படும் மதிப்பீட்டுத் தொகை 60% லிருந்து 100% ஆக உயர்த்தியும், உச்சவரம்புத் தொகை ரூபாய் 50,000/- வரை வழங்கப்பட்டு வருகிறது.

1.9 குறள் பரிசு

உலகப் பொதுமறையான திருக்குறளில் மொழியப்பட்டுள்ள அறநெறிக் கருத்துகளின் சாரத்தை உணர்ந்து 1330 குறட்பாக்களையும் முழுமையாக முற்றோதல் செய்யும் மாணவர்/ மாணவியரின் திறமையினை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில், 1330 திருக்குறளையும் ஒப்பிக்கும் பள்ளி/கல்லூரி மாணவருக்குப் பரிசுத் தொகையாக ரூபாய் 10,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் 70 பேருக்குப் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

1.10 தமிழ் மன்றப் போட்டிகள் - பரிசு ரூபாய் 44.46 இலட்சம் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மாணவப் பருவத்திலேயே தமிழில் பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் கவிதை எழுதும் திறனையும் வளர்த்துக்கொள்ள தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கில் 2003-2004 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

உயர்த்தப்பட்ட வீதத்தில் வழங்கப்பட்டுவரும் பரிசுத் தொகை விவரம் (2016-2017 ஆம் ஆண்டு முதல்)

வகைப்பாடு	பரிசு விவரங்கள்	தொகை (ரூபாயில்)
மாவட்ட அளவில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	10,000
	இரண்டாம் பரிசு	7,000
	மூன்றாம் பரிசு	5,000
மாநில அளவில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை	முதல் பரிசு	15,000
	இரண்டாம் பரிசு	12,000
	மூன்றாம் பரிசு	10,000

1.11 இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

இளைய தலைமுறையினரிடையே தமிழ் இலக்கியப் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2012-2013 ஆம் ஆண்டு முதல் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

மாவட்ட அளவில் தமிழ் வளர்ச்சித் துறை தமிழ் மன்றத்தால் நடத்தப்பெற்ற கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 100 மாணவர்களைக் கொண்டு 2012-2013 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கத்தில் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களைக்கொண்டு முதல் இலக்கியப் பயிற்சிப் பட்டறை ஒரு வாரம் நடத்தப்பெற்றது.

பெற்றோர்களிடத்தும் மாணவர்களிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்ற இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில், 100 லிருந்து 200 மாணவர்களாகச் சேர்க்கப்பட்டு ரூபாய் 20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை எட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பெற்று 1500 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் துறை சார்ந்த வல்லுநர்களால் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன.

[2020 மார்ச் 24

இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் பயிற்சி அளிக்கப்பட்ட தலைப்புகள்

1.	தமிழ்-உலகத்தின் அடையாளம்
2.	செய்தி வாசிப்பு மற்றும் தொகுப்புக் கலை
3.	பாவேந்தர் கண்ட விளக்கு
4.	உணவே மருந்து
5.	வெள்ளித் திரை
6.	தமிழின் சிறப்பு
7.	கம்பரசம்
8.	பாரதிதாசன் பைந்தமிழ் நேசன்
9.	சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரை
10.	அறிவியலின் முன்னோடி தமிழர்
11.	தமிழ் வாழ்க்கைப் பணி
12.	மொழியும் இலக்கியமும்
13.	பழந்தமிழர் மருத்துவம்
14.	தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைச் சிந்தனைகள்
15.	திரைக்காவிய நாயகர் புரட்சித் தலைவர்
16.	திரைப்பாடல் இலக்கியம்
17.	மொழியியல் ஓர் அறிமுகம்
18.	அகழாய்வு-இனத்தின் தொன்மை
19.	இதிகாசங்களில் இன்பத்தமிழ்
20.	ஆளுமைத் திறன்
21.	உரிமை மீட்புகளில் ஊடகங்கள்
22.	பேரறிஞர் அண்ணாவின் மொழிநடை
23.	மொழிப் பண்பாட்டு மீள உருவாக்கத்தில் கல்வெட்டின் பங்கு
24.	புரட்சித் தலைவரின் தமிழ்ப் பணிகள்
25.	புலம்பெயர்ந்த தமிழர்கள்
26.	தமிழ்மொழி மீட்சி
27.	இசுலாமும் இன்பத்தமிழும்

28.	நவிலும் நாவல் நாகரிகம்
29.	பழந்தமிழிசையே பறையிசை
30.	சங்க கால நாகரிகம்
31.	ஆட்சித் தமிழ்
32.	பாரதி 'பா' வின் சாரதி
33.	நாட்டுப்புறக் கலை இலக்கியம்
34.	கணினித் தமிழ் கலையரங்கம்
35.	சங்கத் தமிழ் கலையரங்கம்
36.	கலைப் பண்பாட்டுப் பயணம்
37.	உலக மொழிகளின் வரலாறு
38.	இடுக்கண் வருங்கால் நகுக
39.	தமிழர் பண்பாடு
40.	சொற்சுவை ஓர் அறிமுகம்
41.	படைப்பதனால் என் பெயர் இறைவன்
42.	உன்னையே நீ அறிவாய்
43.	தமிழர் உணர்வுகள்
44.	ஊடகங்களில் உன்னதத் தமிழ்
45.	உலக நாகரிகத்தின் முன்னோடி தமிழர் நாகரிகம்
46.	இலக்கிய வினாடி-வினா நிகழ்ச்சி
47.	தன்னம்பிக்கையே படைப்பிலக்கியம்
48.	காலந்தோறும் கணினித் தமிழ்
49.	ஆதியிசையே அருந்தமிழிசை
50.	நவீன வாசிப்பில் திருக்குறள்
51.	ஐம்பெரும் காப்பியங்கள்
52.	மூளை நரம்பியலும், மொழி வளர்ச்சியும்
53.	மொழிப் பயிற்சி
54.	சட்டத் தமிழ்
55.	தமிழாய் பேசுவோம்
56.	முத்தமிழ்

57.	மரபுக் கவிதையின் மாட்சிமை
58.	பழந்தமிழர் வாழ்வியல் சடங்குகள் நிகழ்த்துதல், சமரச சன்மார்க்க செம்புருட்டுணிவு ஆய்விருக்கை
59.	இணையத் தமிழ் வளர்ச்சி
60.	தொல்காப்பியம் ஒரு பார்வை
61.	இளந்தமிழர்கள் கலந்துரையாடல்
62.	இளந்தமிழர்களின் பல்சுவை நிகழ்வு

இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தற்பொழுது, மாவட்டங்களில் இளந்தமிழர் இலக்கியப் பேரவை போன்ற இலக்கிய அமைப்புகளைத் தொடங்கிச் செயலாற்றி வருகின்றனர். மேலும், இவர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாகவும், திரைப்படப் பாடலாசிரியர்களாகவும், பட்டிமன்றப் பேச்சாளர்களாகவும், கவியரங்கு நடுவர்களாகவும் கவிஞர்களாகவும் திகழ்ந்து தமிழ்நாடு அரசிற்கும், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறைக்கும் புகழ் சேர்த்து வருகின்றனர்.

1.11.1 இலக்கியத்தில் வினாடி-வினா

தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் நடத்தப்பெறும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களிடையே தமிழ் இலக்கிய வினாடி-வினா நடத்திப் பரிசுகள் வழங்கப்பட 2018-2019 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்று ரூபாய் 30 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் இவ்வினாடி வினாவில் வெற்றி பெற்ற குழுக்களுக்கு கீழ்க்காணும் பரிசுகள் வழங்கப்பட்டது. முதன் முறையாக மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் இலக்கிய வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது:

பரிசு விவரம்

முதலிடம் பெற்ற குழு	ரூபாய் 5,000 x3 பேர்	ரூபாய் 15,000
இரண்டாமிடம் பெற்ற குழு	ரூபாய் 3000x 3 பேர்	ரூபாய் 9,000
மூன்றாமிடம் பெற்ற குழு	ரூபாய் 2,000x 3 பேர்	ரூபாய் 6,000
மொத்தம்		ரூபாய் 30,000

2020 மார்ச் 24]

1.12 குறள் வினாடி-வினா

திருக்குறளைப் படித்தறியும் நோக்கு, வளரும் இளந்தலைமுறையினரிடையே பல்கிப் பெருக வேண்டுமென்பதால் குறள் வாசிக்கும் பழக்கத்தை வளர்க்கும் நோக்கில் காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் குறள் வினாடி-வினா நிகழ்ச்சி ஆண்டுதோறும் மாணவர்களுக்கு நடத்திப் பரிசுகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கோயம்புத்தூரில் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.13 தமிழால் முடியும் என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி

2019-2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ் இலக்கியம் மற்றும் பிற பாடங்களைத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் "தமிழால் முடியும்" என்ற வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சி மையம் சென்னை, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் தொடங்கி 37 மாவட்டங்களிலிருந்து 200 மாணவர்கள் ஆண்டுதோறும் அழைக்கப்பட்டு அவர்களுக்கு 3 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி சுழற்சி அடிப்படையில் ஆண்டுக்கொரு மாவட்டம் என்ற முறையில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

1.14 நூல்கள் நாட்டுடைமை

தமிழின் கருத்துக் கருவூலங்களாகத் திகழும் தமிழறிஞர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டு மக்களிடையே சென்றடைய வேண்டும் எனும் நோக்கில் மறைந்த தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு வரை 149 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு ரூபாய் 11.17 கோடி பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு தமிழறிஞர்கள் உளுந்தூர்பேட்டை திரு. சண்முகம், கவிஞர் நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம. கோபால கிருட்டிணன் மற்றும் பாபநாசம் குறள்பித்தன் ஆகிய 7 பேரின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு ரூபாய் 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 35 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

1.14.1 நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடும் திட்டம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும், இதற்காக ரூபாய் 20 இலட்சம் நிதி ஒப்பளிப்புச் செய்யப்படுகிறது. இதுவரை 130 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 50 நூல்கள் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது.

1.15 தமிழுக்குத் தொண்டு செய்தோர்க்கு உதவித் தொகை

1.15.1 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உறுதுணையாகத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் அவர்தம் அகவை முதிர்ந்த காலத்தில் வறுமையில் வாடாதிருக்க மாதம் தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

தற்போது இத்திட்டத்தின்கீழ் திங்கள்தோறும் உதவித் தொகையாக ரூபாய் 2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை அவரின் மறைவிற்குப் பின் அவரின் மரபுரிமையர்க்கும் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது.

இதுவரை, 1039 பேருக்கு உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1.15.2 எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை

தமிழ்நாடு மாநில எல்லையைப் பேணிக்காத்திடத் தொண்டாற்றியவர்களுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை கீழ்க்காணும் வீதத்தில் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வருகிறது:

எல்லைக்காவலர் உதவித் தொகை (திங்கள்தோறும்)	ரூ.4,500/-
மருத்துவப்படி (திங்கள்தோறும்)	ரூ.500/-

1.15.3 எல்லைக் காவலரின் மரபுரிமையர்

எல்லைக் காவலரின் மறைவிற்குப்பின் அவருடைய மரபுரிமையர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை கீழ்க்காணும் வீதத்தில் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வருகிறது:

2020 மார்ச் 24]

எல்லைக் காவலரின் மரபுரிமையர் உதவித் தொகை (திங்கள்தோறும்)	ரூ.2,500/-
மருத்துவப்படி (திங்கள்தோறும்)	ரூ.500/-

இவர்களுக்குத் தற்போது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தமிழ்நாடு முழுவதும் பயணிக்கக் கட்டணமில்லாப் பயண அட்டையும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் எல்லைக் காவலர்கள் 402 பேருக்கும், எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 239 பேருக்கும் உதவித் தொகை ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

1.15.4 தமிழறிஞர்கள்

தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் தொண்டும், தியாகமும் புரிந்தவர்களைப் போற்றும் வகையில் அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகை கீழ்க்காணும் வீதத்தில் திங்கள்தோறும் வழங்கப்படுகிறது:

தமிழறிஞர் உதவித் தொகை (திங்கள்தோறும்)	ரூ.3,500/-
மருத்துவப்படி (திங்கள்தோறும்)	ரூ.500/-

1.15.5 தமிழறிஞர்களின் மரபுரிமையர்

தமிழறிஞர் மறைவுக்குப் பின்னர் அவர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித் தொகை கீழ்க்காணும் வீதத்தில் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வருகிறது:

தமிழறிஞரின் மரபுரிமையர் உதவித்தொகை (திங்கள்தோறும்)	ரூ.2,000/-
மருத்துவப்படி (திங்கள்தோறும்)	ரூ.500/-

இவர்களுக்குத் தற்போது அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தமிழ்நாடு முழுவதும் பயணித்துத் தமிழ்ப் பணியாற்றிடும் பொருட்டுக் கட்டணமில்லாப் பயண அட்டையும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ்த் தமிழறிஞர்கள் 1098 பேருக்கும், தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 885 பேருக்கும் உதவித் தொகை ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

1.15.6 தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்களுக்கு ஈமச் சடங்கு நிதியுதவி

தமிழறிஞர்கள்/எல்லைக் காவலர்கள் இறக்கும் நேர்வில் அன்றைய நாளிலேயே ஈமச் சடங்குத் தொகையாக அவரின் குடும்பத்தாருக்கு ரூபாய் 5,000/- வழங்கப்பட்டு வருகிறது.

1.16 தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்படும் நல்கைகள்

1.16.1 தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச்சங்கம் மதுரை, திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி ஆகியவை மேற்கொண்டுவரும் பல்வேறு தமிழ்ப் பணிகளில் சீரிய கவனம் செலுத்தும்வகையில் மேற்கண்ட நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு அரசு நிதியளித்து வருகின்றது.

1.16.2 பிற மாநிலம்/அயல் நாடுகளில் தமிழ்க் கல்விக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசு, இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் அமையப்பெற்றுள்ள பல்கலைக்கழகங்களில், தமிழ் இருக்கை ஏற்படுத்தி, தமிழைத் தழைத்தோங்கச் செய்திடும் எண்ணத்தில் நல்கை வழங்கி வருகிறது. அவ்வகையில், தில்லி சவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ரூபாய் 50 இலட்சமும், ஒடிசா உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை நிறுவிட ரூபாய் 10 இலட்சமும், எம்.ஜி.ஆர் ஆய்விருக்கை, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவிட ரூபாய் 1 கோடியும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை நிறுவிட ரூபாய் 1 கோடியும் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசால் உத்திரப்பிரதேசம், கர்நாடகம், ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவிட நல்கைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வைப்புத் தொகையின் வாயிலாகச் செயற்பட்டுவரும் தமிழ் இருக்கைகள் விவரம்:

2020 மார்ச் 24]

வ. எண்	நிறுவனம்	வைப்புத் தொகை (ரூபாய்)
1.	சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி	50 இலட்சம்
2.	உத்கல் பண்பாட்டுப் பல்கலைக்கழகம், ஒடிசா	10 இலட்சம்
3.	இந்து பல்கலைக்கழகம், வாரணாசி	3 இலட்சம்
4.	மகாத்மா காந்தி நிறுவனம், மொரிசியசு	1 கோடி
5.	தொல்காப்பியர் ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	50 இலட்சம்
6.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	1 கோடி
7.	ஆர்வர்டு பல்கலைக்கழகம்	10 கோடி
8.	ஹூஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா	1 கோடி
9.	இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	1 கோடி

இந்திய மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியால் தமிழ் தொடர்பான பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1.16.3 திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்.

ஆந்திர மாநிலம் குப்பத்தில் திராவிடப் பல்கலைக்கழகம் நிறுவப்பட தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 50 இலட்சம் 1996 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. மேலும், அப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து கட்டடங்கள் கட்டவும், திட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசு நல்கைகளை வழங்கி வருகிறது. மேலும், 2008 ஆம் ஆண்டில் திராவிடப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையை உருவாக்குவதற்காக

ஒரு பேராசிரியர், ஒரு இணைப் பேராசிரியர், இரண்டு உதவிப் பேராசிரியர்கள் ஆகிய பணியிடங்கள் தமிழ்நாடு அரசின் நல்கையில் ஏற்படுத்தப்பட்டன. 2010 ஆம் ஆண்டு முதல் நியமனம் செய்யப்பட்ட 2 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஊதியத்திற்கு ரூ.1,17,40,589/- வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்த் துறையில் பயிலும் தகுதியுள்ள, பொருளாதாரத்தில் பின்தங்கிய முதுகலை, ஆய்வு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பத் தமிழ் வளர்ச்சித் துறைமூலம், ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2008 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபாய் 31,74,500/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1.16.4 மொரீசியசு நாட்டில் தமிழ் இருக்கை

மொரீசியசில் வாழும் தமிழர்கள் பயன்பெறும் வகையில் மகாத்மா காந்தி நிறுவனத்தில் பேரறிஞர் அண்ணாவின் பெயரில் பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஒரு கோடி ரூபாய் வைப்புத் தொகை வைத்துத் தமிழ் இருக்கை தொடங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அங்கு வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைக் கற்று அறிந்திடும் வகையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.16.5 குவகாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி

இந்தியாவில் உள்ள பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத மாணவர்கள் தமிழ் மொழியை ஒரு பாடமாகப் பயின்று வருகின்றனர். அவர்கள் பயில்வதை ஊக்குவிக்கும் வகையிலும் தொடர்ந்து மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கும் நோக்கிலும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2016-2017 ஆம் ஆண்டில் ஒப்பிலக்கியத்தில் தமிழை விருப்பப் பாடமாகப் பயிலும் முதுகலை முதலாமாண்டு மாணவர்கள் 6 பேருக்கு கல்வி உதவித் தொகையாக ரூபாய் 1,39,000/- மற்றும் தமிழ் மொழி மற்றும் இலக்கியம் பயிலும் மாணவர்கள் 8 பேருக்குக் கல்வி உதவித் தொகையாக ரூபாய் 96,000/- வழங்கப்பட்டது. மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, ஆண்டுதோறும், இக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குக் கணினி, நூல்கள் வைக்க நிலைப் பேழை மற்றும் நூலகத்திற்குத்

தமிழ் நூல்கள் வாங்கிடவும் தமிழ் நூலகம் அமைத்திடவும் 2017-2018 ஆம் நிதியாண்டில் ரூபாய் 2,89,222 வழங்கப்பட்டு தற்போது கணினியில் தமிழ் பயன்பாடும், தமிழ் நூலகமும் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

1.16.5.1 குவகாத்தி பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 20-07-2019 ஆம் நாளன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110 இன்கீழ் அறிவிக்கப்பட்டவாறு, குவகாத்திப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப்பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் ஊதியத்திற்கான மானியமாக ரூ.1,42,488/- வழங்கப்பட்டுள்ளது.

1.16.6 வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 20-07-2019 ஆம் நாளன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110 இன்கீழ் அறிவிக்கப்பட்டவாறு, வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் ஊதியத்திற்கான மானியமாக ரூ.1,55,360/- வழங்கப்பட்டுள்ளது.

1.16.6.1 வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக் கூடம் மற்றும் தமிழ் கற்கும் மாணவர்களுக்குக் கல்வி நிதியுதவி

அயல் மொழியினருக்கு எளிதாகவும், விரைவாகவும் தமிழ் கற்பிக்கும் வகையில் 2019-2020 ஆம் ஆண்டில் வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்குவதற்கு ரூ.8,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்பு மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுதோறும் நிதியுதவி

வழங்கப்படும். அவ்வகையில் 2019-2020 ஆம் ஆண்டில் 10 மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணமாக ரூ.92,500/- வழங்கப்பட்டுள்ளது.

1.16.7 பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள்/சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழ்ந்துவரும் தமிழர்கள் தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழர் நாகரிகத்தைப் பேணிக் காத்து போற்றும் வகையில் செயற்பட்டுவரும் தமிழ்ச் சங்கங்கள் மற்றும் தமிழ் அமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூரு தமிழ்ச் சங்கம், நவிமும்பை தமிழ்ச் சங்கம், புவனேசுவர் தமிழ்ச் சங்கம், புதுதில்லி தமிழ்ச் சங்கம் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி வழங்கியுள்ளது. 2019-2020 ஆம் நிதியாண்டில் நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் கட்டட விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.25,00,000/- வழங்கப்பட்டுள்ளது.

1.16.7 பிற மாநிலங்கள்/அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை தோற்றுவித்தல்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அமெரிக்காவில் புகழ்பெற்ற ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில், உயர் தமிழாய்வை உலகெங்கும் கொண்டுசெல்லும் வகையில், தமிழ் இருக்கை தொடங்கப்படும் என அறிவித்தார். இவ்வறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 10 கோடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

அயலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுவதன் வாயிலாகத் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேம்படும். அயலக நூலகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும். மேலும், அங்குள்ள அரிய நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

“தமிழ் இருக்கை இங்க்” (Tamil Chair Incorporation) என்று அமெரிக்க நாட்டில் செயற்படும் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு, அதனடிப்படையில், உலகெங்கும் மொழி, இனம், கலை, பண்பாடு குறித்தான ஆய்வுகள் பரவும் வகையில் செயற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 24]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23-12-2019 ஆம் நாளன்று அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டது.

1.16.8 மாநாடுகளுக்கு நிதியுதவி

1.16.8.1 பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சிகாகோ தமிழ்ச் சங்கம் மற்றும் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை ஆகியவை இணைந்து அமெரிக்காவில் சிகாகோ மாநகரில் 10 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை 4-7-2019 முதல் 7-7-2019 வரை நடத்தின. தமிழ்நாடு அரசின் சார்பில் இம்மாநாட்டிற்கு நிதியுதவியாக ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டது. மேலும், இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் மேனாள் மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்கள் உட்பட தமிழ் பற்றாளர்கள் 10 பேர் மற்றும் அரசு அலுவலர்கள் 10 பேர் என மொத்தம் 20 பேர் பங்கேற்க ஆணையிடப்பட்டு, போக்குவரத்துச் செலவினங்களுக்கென ரூபாய் 60.09 இலட்சம் வழங்கப்பட்டது.

1.16.8.2 ஐரோப்பியத் தமிழ் ஆய்வு மாநாடு

பிரான்சு நாட்டின் பாரீசில் செயற்பட்டுவரும் பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடத்தப்பெற்ற 3 ஆவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வு மாநாட்டிற்குத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூபாய் 16.50 இலட்சம் வழங்கப்பட்டது. அதேபோன்று, 2019 ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்களில் நடத்தப்பெற்ற 4 ஆவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வு மாநாட்டிற்குத் தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூபாய் 16.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் 3 பேரும் அரசு அலுவலகர்கள் இரண்டு பேரும் என மொத்தம் 5 பேர் பங்கேற்க ஆணையிடப்பட்டு, போக்குவரத்துச் செலவினங்களுக்கென ரூபாய் 20.25 இலட்சம் வழங்கப்பட்டது.

1.16.8.3 தமிழ் இணைய மாநாடு

உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) என்ற அமைப்பு மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இணைந்து 20-9-2019

முதல் 22-9-2019 வரையிலான நாட்களில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் மொழியில் ரோபாட்டிக்ஸ் மற்றும் மொழிச் செயலாக்கம் என்ற தலைப்பில் 18 ஆவது இணைய மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாடு அரங்கமைப்பு, உள்ளூர்ப் போக்குவரத்து மற்றும் தங்கும் வசதி, மாநாட்டுக் கட்டுரைகளின் வெளியீட்டிற்கான செலவு மற்றும் இதர உள்ளூர்ச் செலவினங்களுக்காக ரூபாய் 5,00,000/- வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசால் 2019-2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நல்கைகளின் விவரம்

1. உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

வ.எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	நல்கைத் தொகை	74,14,000
2.	உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடப் பராமரிப்பு	10,00,000
3.	அயலகத் தமிழ் இதழ்கள், மின்னிதழ்கள் ஆவணப்படுத்துதல்	1,50,000
4.	கருத்தரங்கம் மற்றும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்திட	25,00,000
5.	தமிழ்க்கூடல் நடத்துதல்	4,25,000
6.	உலகத் தமிழ் அமைப்புகள் தொகுதி-2 நூல் வெளியிட	3,00,000
7.	2019ஆம் ஆண்டிற்கான உலகத் தமிழ்ச் சங்க விருதுத் தொகை	8,25,000
8.	உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு நடத்திட	**2,50,00,000**
9.	கணினிகள் மற்றும் அச்சுக் கருவிகள் வாங்கிட	2,97,201
10.	கண்காணிப்புப் படக் கருவிகள் வாங்கிட	8,99,999
	மொத்தம்	**3,88,11,200**

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

வ. எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	நல்கைத் தொகை	2,96,69,000
2.	ஓய்வூதிய நல்கை	1,13,56,000
3.	கணினி இடுபொருள்	5,000
4.	உலக மரபு நாள், மொழிபெயர்ப்பு நாள், நூலக நாள் கொண்டாடிட	80,000
5.	நான்கு கல்விப் புலங்களிலும் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் தேசியக் கருத்தரங்கம் நடத்திட	10,00,000
6.	பேரறிஞர் அண்ணா பிறந்த நாளினை நிறுவனர் நாளாகக் கொண்டாடிட	50,000
7.	அண்ணா கருத்தரங்கக் கூடத்தின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட	10,00,000
8.	திருக்குறள் ஓவியப் போட்டிகள்	10,00,000
9.	தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத்திட்டம்	40,00,000
10.	சிறப்பு மொழிப் பயிற்சி வகுப்புகள் நடத்திட	2,50,000
11.	உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அளிக்கும் தமிழ் ஆய்வேடுகளைத் தமிழாய்வு வலைத்தளத்தில் தொகுத்திட	57,30,000
12.	தமிழாசிரியர்களுக்கு மொழியியல் நுணுக்கப் பயிற்சி அளித்திட	2,95,000
13.	சுவடிப் பாதுகாப்பு மையம்	3,02,560
14.	கல்விப் புலங்கள் வழியே பயிற்சிப் பட்டறை	4,95,750
15.	திருக்குறளை யுனெஸ்கோ அங்கீகாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழில் உள்ள உன்னதப் படைப்புகளை யுனெஸ்கோ நடைமுறைக்கேற்ப உலக மொழிகளில் வெளியிடவும்	20,00,000
16.	முனைவர் பட்ட மாணவர்களுக்கு உதவித் தொகை	4,80,000
17.	முதுகலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை	4,80,000
	மொத்தம்	5,81,93,310

[2020 மார்ச் 24

3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

வ. எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	நல்கைத் தொகை	14,36,58,000
2.	2015-2016 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் ஊதியச் செலவினம்	7,55,66,709
3.	2016-2017 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் ஊதியச் செலவினம்	7,38,76,836
4.	தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் பெயரில் ஆய்விருக்கை நிறுவிட	1,00,00,000
5.	அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள் ஆசிரியர்களுக்கான இலக்கிய-இலக்கணப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம்	30,00,000
6.	மின் அமைப்புகளைச் சிறப்புச் சீர்காப்புச் செய்திட	29,64,052
7.	புலங்களுக்கு வருகைதரு பேராசிரியர்கள் மற்றும் இலக்கிய ஆளுமையாளர்களை அழைத்து அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்	36,00,000
8,	முதுநிலை இலக்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை	12,54,000
	மொத்தம்	31,39,19,597

4. குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்

வ. எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	2017-2018 ஆம் ஆண்டுக்கான கல்வி உதவித் தொகை	6,52,250
2.	2010 ஆம் ஆண்டு முதல் நியமனம் செய்யப்பட்ட 2 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு 2010 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையிலான ஊதியம்	1,17,40,589
	மொத்தம்	1,23,92,839

2020 மார்ச் 24]

5. குவகாத்தி பல்கலைக்கழகம், அசாம்

வ. எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	2019-2020 ஆம் ஆண்டு குவகாத்திப் பல்கலைக்கழகத்தின் தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல்	1,42,488

6. இந்து பல்கலைக்கழகம், வாரணாசி

வ. எண்	விவரங்கள்	தொகை (ரூபாய்)
1.	2019-2020 ஆம் ஆண்டில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்க நிதியுதவி	8,00,000
2.	2019-2020 ஆம் ஆண்டு இந்துப் பல்கலைக்கழகத்தின் தென்னிந்திய மொழிகள் துறையின் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல்	1,55,360
3.	2019-2020 ஆம் ஆண்டில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கான உதவித் தொகை	92,500
	மொத்தம்	10,47,860

இயல்-2

மொழிபெயர்ப்புத் துறை

2.1 அறிமுகம்

மொழிபெயர்ப்பு என்பது வழுக்குத் தரையில் எண்ணெய்ப் பூசிய கால்களோடு வளைய நடனமாடுவது போன்றது என்பர். மொழிபெயர்ப்பாளர் தடுமாறிக் கீழே விழாமல் விரைந்தும் ஆட வேண்டும் என்ற நோக்கம், மொழிபெயர்ப்பாளர்களின் நுட்பமான பணித்தன்மையைப் பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது.

[2020 மார்ச் 24

உலகில் 7017 மொழிகள் பேசுவதாக 'எத்தனோலாகு' என்னும் நிறுவனம் சொல்கின்றது. இவற்றில் சரிபாதிக்கும் மேலான மக்களால் பேசப்படும் 23 பெரு மொழிகளில் தமிழ் 19-வது இடத்தில் உள்ளது.

இவ்வுலகில் உள்ள அனைவராலும் அனைத்து மொழிகளிலும் தத்தம் தொடர்பாடல்களை மேற்கொள்ளவியலாத சூழலில்தான் மொழிபெயர்ப்பு முதன்மை பெறுகிறது. "மொழிபெயர்ப்பின்றி யாதொரு அலுவலகப் பணிகளும் நடைபெறாது" என்பதுதான் நடைமுறை உண்மையாகும்.

2.2. பொருண்மைகள்

- தலைமைச் செயலகத்திலுள்ள 37 துறைகளிலிருந்து வரப்பெறும் கோப்புகள், நேர்விற்கேற்ப, தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. பல்வேறு துறைகளிலிருந்து வரப்பெறுகிற அறிவிக்கைகள் தமிழ்நாடு அரசிதழிலும், தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டிலும் வெளியிடப்படுவதற்காகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

- தலைமைக் கணக்காளரிடமிருந்து, பொது நிறுவனக் குழுவிற்கும், பொதுக் கணக்கு குழுவிற்கும் வரப்பெறுகிற தணிக்கை அறிக்கைகள் தமிழாக்கம் செய்யப்படுகின்றன. 1-4-2019 முதல் நாளது வரையில் பல்வேறு துறைகள் மீதான தணிக்கை அறிக்கைகள் 1486 பக்கங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

- பொதுத் (தேர்தல்) துறையிடமிருந்து வரப்பெறும் தேர்தல் வழிகாட்டிக் கையேடுகள் தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. 1-4-2019 முதல் நாளது வரையில் இரண்டு வழிகாட்டிக் கையேடுகள் உட்பட மொத்தம் 423 பக்கங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

- மாநில மனித உரிமை ஆணையம், தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம், விழிப்புப்பணி ஆணையம் ஆகிய அமைப்புகளிடமிருந்து வரப்பெறும் ஆண்டறிக்கைகள் மற்றும் பொதுத் துறையிடமிருந்து வரப்பெறும் கமுக்க அறிக்கைகள் தமிழாக்கம் செய்யப்படுகின்றன. 1-4-2019 முதல் நாளது வரையில் 2747 பக்கங்கள் கொண்ட ஆண்டறிக்கைகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

- தமிழ்நாடு அரசின் முகநூல் பக்கத்தில் வெளியிடப்படுவதற்காக, செய்தித் துறையிடமிருந்து வரப்பெறும் அரசின் அன்றாட நிகழ்வு, மாண்புமிகு முதலமைச்சரின் சந்திப்பு, மக்கள் நலத் திட்டச் செயலாக்கம் குறித்த செய்திக் கீற்றுகள் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. 1-4-2019 முதல் நாளது வரையில் 1454 செய்திக் கீற்றுகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

- தலைமைச் செயலகத்தின் கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிலிருந்து வரப்பெறும் அறிவிக்கைகள், மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு கன்னியாகுமரி, சேலம் மற்றும் நீலகிரி மாவட்ட அரசிதழில் வெளியிடப்படுகின்றன.

- மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மேதகு தமிழ்நாடு ஆளுநர் ஆகியோரின் அலுவலகங்களிலிருந்தும், மத்திய அமைச்சகங்கள் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வரப்பெறும் இந்தி மொழியில் அமைந்த கோப்புகள், இத்துறையால், தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. 1-4-2019 முதல் நாளது வரையில் 637 பக்கங்கள் இந்தியிலிருந்து தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

- 1-4-2019 முதல் நாளது வரையில் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட கோப்புகளில் 10,496-க்கும் அதிகமான பக்கங்கள், நேர்விற்கேற்ப தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2.3. மொழிபெயர்ப்புத் துறையின் சாதனைகள்

2.3.1. நிதிநிலை அறிக்கை மொழியாக்கம்

மொழிபெயர்ப்புத் துறையைச் சேர்ந்த மொழிபெயர்ப்பு அலுவலர்கள், 2019 ஆம் ஆண்டு திசம்பர் மற்றும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதங்களில், நிதித் துறையுடன் இணைந்து

தங்கள் நல்லுழைப்பை நல்கியதன் பலனாக உருவான, 128 பக்கங்கள் கொண்ட, 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது, 14-2-2020 ஆம் நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்/நிதியமைச்சர் அவர்களால் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையில் தொடர்ந்து மூன்று மணி நேரங்கள் படிக்கப்பட்டது.

2.3.2. 'உலகத் தமிழ்'-மின்னிதழ்

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தால் மூன்று திங்களுக்கு ஒருமுறை வெளியிடப்பட்டு வந்த 'உலகத் தமிழ்' இதழை மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் அவர்களின் ஒருங்கிணைப்பில், 'உலகத்தமிழ்' மின்னிதழ் வாரந்தோறும் வெளியிடப்பட வேண்டும் என்று அரசால் அறிவுறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, மகாகவி பாரதியாரின் பிறந்த நாளான 11-12-2019 ஆம் நாளன்று, முதல் 'உலகத்தமிழ்' மின்னிதழ் வெளியிடப்பட்டு, வாரந்தோறும் வெளிவந்து கொண்டிருக்கிறது. பல்வேறு தமிழறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், ஆசிரியர் உரை, மாண்புமிகு அமைச்சரின் உரை, ஏழு மொழிகளில் ஆத்திசூடி, வேதிமச் சொற்களின் சீர்தர ஒலிபெயர்ப்பு, கலைச் சொல் அகராதி போன்ற பல்வேறு முதன்மையான பகுதிகளைத் தாங்கிவரும் இம்மின்னிதழானது தமிழன்பர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் கட்செவி வாயிலாக வாரந்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. உலகெங்கிலும் வாழும் தமிழார்வலர்களும், தமிழறிஞர்களும் போற்றுதலுக்குரிய இம்முயற்சியைப் பாராட்டியுள்ளனர்.

2.3.3. உரை பெயர்ப்பு

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவர் அவர்கள், 16-1-2020 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தையும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தையும் நேரில் பார்வையிட்டபோது, நிறுவனங்களின் செயற்பாடுகளை மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

2.3.4. 2030 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டத்தின் குழுத் தலைவர்

ஐக்கிய நாடுகள் சபையின் வாயிலாக இறுதி செய்யப்பட்ட, உலகளாவிய நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகளில், இலக்கு எண் 4 (தரமான கல்வி)க்கான ஆய்வு வரம்புகள், இலக்குகளை

நிர்ணயித்தல், அவற்றை எய்துதல், 2030 ஆம் ஆண்டுக்கான தொலைநோக்குத் திட்ட ஆவணத்தை இறுதிசெய்தல் போன்ற பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைக்கான குழுத் தலைவராக மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் அவர்கள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2.4. வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடும் மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனங்களால் அறிவிக்கப்படும் மொழிபெயர்ப்புப் பெருந்திட்டங்கள் அனைத்தும், கடந்த பத்தாண்டுகளாக தலைமைச் செயலக மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் ஒருங்கிணைப்பில் நிறைவேறின.

இலக்கியம்–சட்டம்–மருத்துவம் முதலிய பொருண்மை பற்றிய மொழியாக்கம் அந்தந்த துறைப் பேராசிரியர்களால், ஆர்வலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. சான்றாக,

- திருக்குறள்–சீனம், அரபு, கொரிய மொழியாக்கம்,
- பாரதியார், பாரதிதாசன் பாடல்கள்–சீனம், அரபு மொழியாக்கம்,
- ஆத்திசூடி–சீனம், அரபு, இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கில மொழியாக்கம்,
- பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் (திருக்குறள் நீங்கலாக) இந்தி, மலையாளம், தெலுங்கு, பிரெஞ்சு, செருமானிய மொழியாக்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அண்மையில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வாயிலாக கீழடி ஆய்வறிக்கையை 24 மொழிகளில் மொழியாக்கம் செய்தபோது, மொழிபெயர்ப்பாளர்களுக்கான கட்டணத்தை நிர்ணயிக்கும் குழுவில் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் இடம்பெற்று தனது பரிந்துரையைப் பதிவு செய்துள்ளார்.

தலைமைச் செயலகத்திலுள்ள மொழிபெயர்ப்புத் துறையைச் சேர்ந்த மொழிபெயர்ப்பு அலுவலர்கள் அனைவரும் கணினி வழியில்தான் நடைமுறை விரைவோட்ட மொழியாக்கம் செய்கின்றனர்.

[2020 மார்ச் 24

இவையாவும், வருங்காலங்களில், நடுவண் அரசின் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களிலுள்ள கணினித் துறைகள், தமிழ் இணையக் கல்விக் கழகம் போன்றோரை ஒருங்கிணைத்து, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த, 'மொழிபெயர்ப்புத் துணைவன்' என்னும் இணையவழி மொழியாக்க மேலாண்மை மென்பொருள் வாயிலாக மொழியாக்கப் பணிகளை விரைந்து மேற்கொள்ளும் முயற்சிக்கான முன்னெடுப்புகளாகும்.

மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையை உணர்ந்தும், மொழிபெயர்ப்பின் நுணுக்கங்களை அறிந்தும், அவசர மொழிபெயர்ப்பிற்கான இலக்கணம் மாறாமலும், தொழில்நுட்ப வளர்ச்சியோடு இணைந்தும் இத்துறை தொடர்ந்து செயலாற்றுகிறது.

இயல்-3

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

3.1 தோற்றம்:

மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கை முறை, மரபு, பண்பாடு, நாகரிகம், அயலக வணிகத் தொடர்பு உள்ளிட்ட வரலாறுகளை உள்ளடக்கியுள்ளன. எனவே சொற்களைப் பாதுகாப்பதன் வழியே மொழியையும், மொழியின் வழியே மக்களின் வரலாறுகளையும் பாதுகாக்க முடியும். மொழிப் பாதுகாப்பே மொழி வளர்ச்சிக்கான முதல் நிலை. மொழியை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுக்க சொற்களைப் பாதுகாக்க வேண்டும். சொற்களைப் பதிவுசெய்து, பாதுகாத்து மக்களிடையே புழக்கத்திற்குக் கொண்டுசென்று சொல்வளத்தை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதற்கு அகராதிகள் படைக்கப்பட வேண்டும். அகராதிகள் தான் மொழி வளர்ச்சிக்கான ஆணிவேர்.

அகராதி உருவாக்கம் என்னும் நுட்பமான அறிவுப் பணியை மேற்கொள்வதற்கென்றே தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தைத் துறைத்தலைமை அலுவலகமாகத் தோற்றுவித்தது.

3.2 நோக்கம்:

மொழியானது காலந்தோறும் மாற்றத்திற்குட்படும் இயல்புடையது. சொற்கள் வழக்கொழிவதும் புதிய சொற்கள் இணைவதும் மொழிக்கான பொது இயல்பு. இது தமிழ் மொழிக்கும் பொருந்தும். தொன்மை மிகுந்த தமிழ்மொழியானது சொல்வளம் நிறைந்த மொழியாகும். கற்காலம் தொடங்கி கணினிக் காலம் வரையிலான நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழ்மொழியில் உள்ள சொல்லின் பொருள்களை ஐயந்திரிபறத் தெரிந்து கொள்வதற்கு அகராதியின் துணை தேவையாகும். எனவே, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழிலுள்ள சொற்களைத் தொகுத்து, அகரவரிசைப்படுத்தி, சொற்களின் இலக்கண வகைப்பாடு கூறி, சொற்களுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் பொருள் விளக்கம் கூறி, சொற்கள் உருவாகக் காரணமாக இருந்த வேர்ச்சொற்களையும் மொழி, உறவைக் குறிக்கும் வகையில் இனச் சொற்களையும் கூறி, தேவையான இடங்களில் விளக்கப் படங்களை இணைத்துச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியை உருவாக்கி, நூல்களாக வெளியிட்டுள்ளது. இவை (www.sorkuvai.com) என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

3.3 இயக்ககத்தின் செயற்பாடுகள்:

3.3.1 தமிழ்க் கலைக்கழகம்:

இன்றைய அறிவியல் தொழில்நுட்பக் காலத்தில் நாள்தோறும் புதுப்புதுத் துறைகள் உருவாகிவருவதால், அத்துறைகள் சார்ந்த சொற்களும் நாள்தோறும் புதுவரவாகப் பெருகி வருகின்றன. அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் தக்க வகையில் தமிழ்க் கலைச்சொல்லாக்கம் செய்து வழங்கும் நோக்கில், தமிழக அரசால் ‘தமிழ்க் கலைக்கழகம்’ அமைக்கப்பட்டுள்ளது. மக்களின் பேச்சுவழக்கிலும், ஊடகங்களிலும் காணப்படும் பிறமொழிக் கலைச்சொற்கள் இவ்வியக்ககப் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர் மற்றும் தொகுப்பாளர்களால் தொகுக்கப்பட்டு, அவற்றிற்கிணையான தமிழ்க் கலைச்சொற்கள் வடிவமைக்கப்படுகின்றன.

21-11-2016 ஆம் நாள் முதல் 30-12-2018 ஆம் நாள் வரை மாதம் ஒரு முறை நடைபெற்ற தமிழ்க் கலைக்கழகக் கூட்டம் 2018-2019 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புக்குப் பின் 1-1-2019 ஆம் நாள் முதல் மாதம் இருமுறை கூடுகிறது. 5-3-2020

[2020 மார்ச் 24

வரை 58 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதுவரை தொகுக்கப்பட்ட சொற்கள் 32,240 அவற்றுள் தமிழ்க் கலைக்கழகத்தினரால் ஏற்பளிக்கப்பட்ட சொற்கள் 16,805. இவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட சொற்கள் அரசின் ஒப்புதலுடன் (sorkuvai.com) என்ற வலைதளத்தின் வாயிலாக இணையப் பொதுவெளியில் மக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

3.3.2 சொற்குவை:

அறிவியல் உலகத்தில் எந்த ஒரு மொழியும் வளர்ந்துவரும் கணினித் தொழில்நுட்பங்களுக்குள் கொண்டு செல்லப்பட்டால் மட்டுமே அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும். அந்தவகையில், தொன்மையும் சொல்வளமும் நிறைந்த தமிழிலுள்ள அனைத்துச் சொற்களையும் ஒருங்கு திரட்டி ஒரே தளத்தின்கீழ் நிரல்படுத்தி இணையப் பொதுவெளியில் உலக மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் உயரிய இலக்கோடு தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட நட்சத்திர திட்டமே 'சொற்குவை'த் திட்டமாகும். 28-6-2018 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண் 110 இன்கீழ் அறிவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் தொடர் செலவினத்தில் செயற்படுத்தப்படும் சொற்குவையின் மூலமாகத் தமிழிலுள்ள சொற்கள் அனைத்தையும் தொகுத்து நிரல்படுத்துதல், சொற்களின் இலக்கண வகைப்பாடுகளைப் பதிவு செய்தல், நிகரான சொற்களைப் பதிவு செய்தல், சொற்களின் தொடராக்கப் பரிமாணங்களைப் பதிவு செய்தல், சொற்களுக்கான பொருள் விளக்கத்தைத் தேடும் வசதியை அமைத்துக் கொடுத்தல், அடிக்கடி தேடப்படும் சொற்களுக்கு வண்ண அடையாளம் கொடுத்தல், வந்த சொல்லே மீளவும் வராமல் தடுத்தல் மற்றும் புதிய சொற்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் உருவாக்கப்பட்டு, அவை இணையதளப் பொதுவெளியில் உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வெளியிடப்படுகின்றன.

3.3.2.1 சொற்குவையின் நோக்கம்:

- தமிழ்மொழியின் சொல் வளத்தைப் பாதுகாப்பது
- தமிழின் சொல்வளத்தைப் பெருக்குவது
- அதன்மூலம் யுனெஸ்கோ வெளியிட்டுள்ள உலகின் மதிப்பு வாய்ந்த மொழிகளின் பட்டியலில் தமிழ்மொழியை முதல் வரிசைக்கு உயர்த்துவது

- இளம் தலைமுறையினரிடம் தமிழின் சொல்வளத்தைக் கொண்டு சேர்ப்பது
- தமிழ்ச் சொற்களை இணையப் பொதுவெளிக்குத் கொண்டு வருவதன்மூலம் தமிழை நிலைத்திருக்கச் செய்வது
- பிறமொழிக் கலப்பில்லாத தமிழ்ச் சொற்களை அடையாளம் காட்டுவது
- கலப்பில்லாத தமிழில் பேசவும் எழுதவும் மக்களை ஊக்கப்படுத்துவது
- நாள்தோறும் பெருகிவரும் பல்துறை சார்ந்த பிறமொழிக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை மாணவரும் மற்றவரும் உருவாக்குவதற்குத் தூண்டுகோலாய்த் துணைநிற்பது
- தமிழின் சொல்வளத்தையும் தனித்தியங்கும் தன்மையையும் உலகறியச் செய்வது.

3.3.2.2 சொற்குவை வலைதளம்:

தமிழ் மொழியின் மேன்மைக்கான புதுமைத் திட்டமாகவும், பொதுமைத் திட்டமாகவும் விளங்கும் சொற்குவைக்கென்று அமைக்கப்பெற்ற தனி வலைதளம் (sorkuvai.com) 5-7-2019 ஆம் நாளன்று சிகாகோவில் நடைபெற்ற 10 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த வலைதளத்தில் 14-2-2020 ஆம் நாள்வரை 3,80,186 தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களில் பங்கேற்கும் மாணவ-மாணவியர் வழங்கும் கலைச் சொற்கள் தமிழ்க் கலைக்கழகத்தின் வல்லுநர் குழு ஏற்புக்குப் பின் "சொற்குவை" வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்த வலைதளத்தை இதுவரை 12,206 க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுப் பயன்பெற்றுள்ளனர்.

3.3.2.3 சொற்குவை உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம்:

சொற்குவையைத் திறம்படச் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் குறித்து 14-2-2019, 20-9-2019 ஆகிய நாள்களில் 'உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டங்கள்' நடத்தப்பட்டன.

3.3.2.4 சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம்:

சொற்குவையின் செயற்பாடுகளைப் பொதுமக்களிடம் கொண்டுசேர்க்கும் வகையில் 25-2-2019 ஆம் நாள், சென்னைக் கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'சொற்குவை' வல்லுநர் குழுவின் முதல் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் பல்வேறு துறைசார்ந்த 30 அறிஞர்கள் கலந்துகொண்டு சொற்குவையின் இலக்கு வெற்றியடைவதற்கான கருத்துகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க 25-3-2019 ஆம் நாளன்று, சென்னை கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தப்பெற்றது. அதில் மருத்துவத் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 30 மருத்துவ அறிஞர்களும், 5 தமிழறிஞர்களும் கலந்துகொண்டு 1000-த்திற்கும் மேற்பட்ட மருத்துவத் தமிழ்க் கலைச் சொற்களை வழங்கினார்கள்.

3.3.2.5 அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம்:

சொற்குவைத் திட்டத்தின்கீழ் இவ்வியக்ககம் இதுவரை 5 மாவட்டங்களைச் சேர்ந்த கீழ்க்காணும் 13 கல்லூரிகளில் அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களை நடத்தியுள்ளது.

1. இலயோலாக் கல்லூரி, சென்னை
2. மாநிலக் கல்லூரி, சென்னை
3. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
4. குரு ஸ்ரீ சாந்திவிஜய் செயின் மகளிர் கல்லூரி, சென்னை
5. செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை
6. இசுலாமியக் கல்லூரி, வாணியம்பாடி
7. எத்திராசு மகளிர் கல்லூரி, சென்னை

8. அ.வ.அ. (A.V.C) கல்லூரி (தன்னாட்சி), மயிலாடுதுறை
9. தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), மயிலாடுதுறை
10. பலதுறை தொழில்நுட்பக் கல்லூரி, வலங்கைமான், திருவாரூர்
11. அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்
12. மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்
13. விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சென்னை

இக்கருத்தரங்குகளில், கல்லூரி மாணவர்களுக்குக் கலைச் சொற்களை உருவாக்குவது தொடர்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், 'சொல் உண்டியல்' மூலமாக மாணவர்களிடமிருந்து 26,076 கலைச் சொற்கள் பெறப்பட்டு, சிறந்த தமிழ்க் கலைச் சொற்களை வழங்கும் மாணவ-மாணவியரை ஊக்கப்படுத்தும் வகையில் இயக்ககத்தின் சார்பில் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. கருத்தரங்கம் நடைபெறும் கல்லூரிகள்தோறும் வெண்பதாகை வைக்கப்பட்டு மாணவர்கள் தமிழில் கையொப்பமிட ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாணவர்கள் தமிழில் கையொப்பமிட்ட சட்டகமொன்று அகரமுதலி இயக்ககத்திற்கு நினைவுப்பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன.

3.3.2.6 சொற்குவை-கட்டணமில்லா அழைமையம்:

'சொற்குவைத்' திட்டத்தின் ஒரு பகுதியாக, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திலேயே முதற்கட்டமாக காலை 10.00 மணி முதல் மாலை 5-30 மணி வரை இயங்கும் வகையில் 'கட்டணமில்லா அழை மையம்' (Toll Free Call Centre) செயற்பட்டு வருகிறது. அழைப்பாளர்களின் கேள்விகளுக்கு அகரமுதலி இயக்ககப் பணியாளர்களே உரிய விளக்கம் அளித்து வருகின்றனர்.

14469 மற்றும் 1800-599-14469 என்ற எண்ணில் தொடர்புகொண்டு தமிழ்ச் சொற்கள் குறித்த ஐயங்களைச் சொல்லி விளக்கம் பெற முடியும். மேலும், தமிழ்ச் சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும், ஆங்கிலச் சொற்களுக்கிணையான தமிழ்ச் சொற்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். கட்டணமில்லா அழைமையத்தின் செயற்பாட்டை விரிவு செய்யும்வகையில்,

[2020 மார்ச் 24

வருங்காலத்தில் உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் இணையத்தின் வழியாக 24 மணி நேரமும் தொடர்புகொண்டு விளக்கம் பெறும் வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.3.3 தமிழ் அகராதியியல் நாள் விழா:

தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கிடும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8 ஆம் நாளைத் 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடுவதுடன், அதன்பொருட்டு இரண்டு நாட்கள் பன்னாட்டுக் கருத்தரங்கமும் நடத்த அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க, கடந்த 8-11-2019 ஆம் நாளன்று சென்னை, எத்திராசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் அகராதியியல் நாள் தொடக்க விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மாணவர்கள் உட்பட 1600-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அந்த விழாவில் தமிழ்க் கலைக் கழகத்தால் வடிவமைக்கப்பட்ட 9000 தமிழ்க் கலைச் சொற்களடங்கிய குறுந்தகடு அரசாணைக்காக வெளியிடப்பட்டது.

3.3.4 'தமிழ் அகராதியியல் நாள் நிறைவு விழா'

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக அரங்கில் 11-3-2020 புதன்கிழமையன்று தமிழ் அகராதியியல் நாள் நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில், நடைமுறை வாழ்க்கையிலும் தூயதமிழிலேயே பேசுகின்ற

1. திரு. சி. மணிகண்டன் (கோவை)
2. திரு. இரா. அரிதாசு (திருவாரூர்)
3. திரு. த. ஆரோக்கிய ஆலிவர் இராசா (திருச்சி)

ஆகிய மூவருக்கும் மாண்புமிகு அமைச்சர்களால் தூய தமிழ்ப்பற்றாளர் சான்றிதழும் தலா ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன. சொற்குவை மாணவத் தூதுவர்களுக்கான நியமன மடல்கள் முதல்கட்டமாக 6 கல்லூரிகளைச் சேர்ந்த 67 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

2020 மார்ச் 24]

விழாவில் 65 ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய 'அகராதி ஆய்வு மலர்' வெளியிடப்பட்டதோடு, அரசாணை பெறுவதற்காக 4385 தமிழ்க் கலைச்சொற்கள் அடங்கிய குறுந்தகடும் வெளியிடப்பட்டது. பன்னாட்டுக் கருத்தரங்கத்தைத் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் மருத்துவர் சுதாசேஷையன் அவர்கள் தொடங்கி வைக்க, முனைவர் தி.மு. அப்துல்காதர், முனைவர் மு. முத்துவேலு, முனைவர் மேரிசொர்ணாம்பாள், முனைவர் மதன் கார்க்கி, யாழ்ப்பாணம் தேவநாயகம் தேவானந்த், திரு. மானா பாஸ்கரன் ஆகியோர் கருப்பொருளுரை வழங்கினார்கள்.

பிற்பகலில் கனடா நாட்டைச் சேர்ந்த திருமதி மேரி இளங்கோவன் குழுவினரின் தமிழிசை நாட்டிய நிகழ்ச்சியும் கல்லூரி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவ்விழாவில் அகராதியியல் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், தமிழாய்வாளர்கள், கல்வியியல் மற்றும் மருத்துவத் துறை மாணவ மாணவியர், பேராசிரியர்கள், ஊடகத் துறையினர் உட்பட 1,500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தமிழ் அகராதியியல் நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/-மும் வழங்கப்பட்டன.

சொல்லாக்கப் போட்டி

1. செல்வன் கி. ராகுல் கண்ணா-முதல் பரிசு (தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதி மாதிரி பள்ளி)

2. செல்வி ர. மஞ்சு ஸ்ரீ-இரண்டாம் பரிசு (திருச்சி புனித பிலோமினா பெண்கள் மேல்நிலைப் பள்ளி)

ஓவியப் போட்டி

1. செல்வி நா. விஷ்ணுப்பிரியா-முதல் பரிசு (தேனி மாவட்டம், இராயன்பட்டி, புனித ஆக்னஸ் மேல்நிலைப் பள்ளி)

2. செல்வன் மு. பாலாஜி பிரசாந்த்-இரண்டாம் பரிசு (சேலம் மாவட்டம், சின்னப்பம் பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளி)

[2020 மார்ச் 24

3.3.5 தேவநேயப் பாவாணர், வீரமாமுனிவர் பெயரில் விருதுகள் வழங்குதல்

'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் மற்றும் அகராதியியலின் தந்தை எனப் போற்றப்படும் வீரமாமுனிவர் ஆகியோரின் பெயர்களில் அமைந்த விருதுகள் இவ்வியக்ககத்தின் சார்பில் இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்படவுள்ளன. தகுதிவாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்குத் தேவநேயப் பாவாணர் விருதும், தமிழைத் தாய்மொழியாக கொண்டிராத வெளிநாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு வீரமாமுனிவர் விருதும் வழங்கப்படவுள்ளன. விருதுத் தொகையாக ரூ.1 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படும்.

3.3.6 'சொல் வயல்' மாத இதழ் வெளியிடுதல்'

சொல்லாய்வுகள், சொல்லாக்கங்கள். ஆய்வுக் கட்டுரைகள், அகராதியியல் கருத்தரங்குகள், வல்லுநர் குழுக்கூட்டங்கள், தமிழ்க் கலைக்கழகம் உள்ளிட்டவை தொடர்பான செய்திகளை ஆவணப்படுத்தி, பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் 'சொல்வயல்' என்ற பெயரில் மாத இதழ் வண்ணப்படங்களுடன் மின்னிதழாக விரைவில் வெளியிடப் பெறவுள்ளது.

3.3.7 மாணவர் இலக்கிய அகரமுதலி

தமிழ் இலக்கியங்கள் மீது மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படவேண்டுமென்றால் இலக்கியங்களில் உள்ள சொற்களுக்கான பொருள்களை அவர்கள் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அதற்குத் துணை செய்யும் வகையில் தமிழிலக்கியங்களில் உள்ள இன்றியமையாத சொற்களைத் தொகுத்து மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி எனும் நூலாக அச்சிட்டு வெளியிடுவதற்கான மெய்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

3.3.8 அன்றாட வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அகராதி

மொழிக்கலப்பே மொழிச்சிதைவுக்குக் காரணம். எனவே, தமிழில் பிறமொழிக்கலப்பைத் தவிர்த்து, தூயதமிழ்ப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அன்றாட வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தொகுத்து நூலாக அச்சிட்டு வெளியிடுவதற்கான மெய்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

2020 மார்ச் 24]

3.3.9 நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி

காலந்தோறும் நடைமுறை வாழ்க்கைக்கேற்ற புதிய புதிய சொற்கள் உருவாவது வழக்கம். அந்தவகையில், இக்கால நடைமுறைக்கேற்ற சொற்களைத் தொகுத்து, நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி எனும் நூலாக அச்சிட்டு வெளியிடுவதற்கான மெய்ப்புப் பணி நடைபெற்று வருகிறது.

3.3.10 தமிழ் மரபுத் தொடர் அகராதி

தொழில்முறைத் தொடர்பாகவும் பேச்சுவழக்குத் தொடர்பாகவும் தமிழ் மொழியில் வழங்கும் மரபுத் தொடர்களைத் தொகுத்து, ‘தமிழ் மரபுத்தொடர் அகராதி’ எனும் நூலாக வெளியிடுவதற்குச் சொல் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.3.11 மயங்கொலிச் சொல்லகராதி

தமிழ்மொழியில் உள்ள மாற்றொலியன் எழுத்துகள் (ண, ந, ன, ர, ற, ல, ள, ழ) தவறான பயன்பாட்டில் பொருள் மாற்றம் பெற்றுவிடுகின்றன. எனவே அவற்றைத் தெளிவிக்கும் வகையில், தமிழிலுள்ள மயங்கொலிச் சொற்களைத் தொகுத்து, ‘மயங்கொலிச் சொல்லகராதி’ எனும் நூலாக வெளியிடுவதற்குச் சொல் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.3.12 பையடக்க அகராதி

மாணவர்களும், பேராசிரியர்களும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான பொருள்கள், இலக்கணக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள் உள்ளிட்ட குறிப்புகளைத் தொகுத்து ‘பையடக்க அகராதி’யாக வெளியிடுவதற்குச் சொல் தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.3.13 திருந்திய பதிப்பு

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடுகளான 31 தொகுதிகளையும், ஒரே சீராக 8050 பக்கங்கள் கொண்ட திருந்திய பதிப்பாக வெளியிடுவதற்கான பணிகள் இவ்வியக்கக நிலையில் நிறைவடைந்துவிட்டன. திருந்திய பதிப்புகளை நுண்ணாய்வு செய்வதற்கு அரசால் அமைக்கப்பட்டுள்ள நுண்ணாய்வுக் குழுவின் மீள்கூர்ந்தாய்வு நிறைவு பெற்றதும் விரைவில் வெளியிடப்படும்.

[2020 மார்ச் 24

இயல்-4

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4.1 தோற்றம்

1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் "தமிழிற்கு உயர் மைய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்க வேண்டும். பிரான்சு நாட்டிலுள்ள பிரெஞ்சு மொழி கலைக் கழகத்தைப் போன்ற நிலையில் நாம் அதனை உருவாக்க வேண்டும்" என்று அறிவித்ததற்கிணங்க சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 21-10-1970 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

4.2 நோக்கம்

- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது;
- தேவை கருதி ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது;
- தமிழாய்வில் தோய்ந்த பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் நெருங்கிய தொடர்பினை மேற்கொண்டு இத்துறைகளில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்;
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயற்படுவது.
- தரமான உயராய்வு நூலகத்தைப் பேணுதல்.

4.3 ஆளுகைக் குழு

தலைவர்-மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்

2020 மார்ச் 24]

துணைத் தலைவர்கள்-அரசுத் துறைச் செயலாளர், சென்னை, மதுரை, அண்ணாமலை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்.

உறுப்பினர்கள்-நிதித் துறைச் செயலாளர், டாக்டர் எப். க்ரோ அவர்கள், மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர் - செயலராக இந்நிறுவன இயக்குநர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 51 ஆவது ஆளுகைக் குழுக் கூட்டம் 20-9-2019 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

4.4 செயற்படும் புலங்கள்

இந்நிறுவனத்தில் 1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம், 2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம், 3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம், 4. அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய நான்கு ஆய்வுப் புலங்கள் செயற்பட்டுவருகின்றன.

4.5 உயர் தமிழாய்வுப் பணிகள்

- தமிழ்மொழி இலக்கணம், சமுதாய மொழி இலக்கணம், மொழி கற்பித்தல், கணினி மொழியியல், கலைச் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு ஆகிய மொழியியல் களங்களை ஆய்வு செய்தல்
- பதிப்பிக்கப்படாத நிறுவனத்திலுள்ள சுவடிகள் மற்றும் களப் பணிகள் வாயிலாக திரட்டப்படும் சுவடிகளை மின்எண்மம் செய்வது மற்றும் பதிப்புகளாக வெளியிடுதல்
- பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளோடு இணைந்து தமிழியல் தொடர்பான பன்னாட்டுக் கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறை நடத்தி தமிழாய்வினை வளப்படுத்துதல்
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுவதும் அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் பற்றிய தகவல்கள் ஆளுமைத் தரவுத் தளத்தை உருவாக்குவதும் தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல்

4.6 கற்பித்தல் பணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வுப் பணிகளோடு கற்பித்தல் பணிகளும் ஒருங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் முதுகலைப் பட்ட வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

4.7 நவீனமயமாக்கப்பட்ட மொழிப் பயிற்சி ஆய்வுக்கூடம்

தமிழ் மொழியின் வளத்தைப் பிற மாநிலத்தவரும் பிற நாட்டவரும் அறிந்துகொள்ளும்வகையில் தமிழ் மொழி கற்பிக்கும் பணி நிறுவனத்தில் உள்ள கணினி மயமாக்கப்பட்ட மொழிப் பயிற்சி ஆய்வுக்கூடத்தின் வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 615 பேர் நிறுவனத்தின் வழி தமிழ் மொழி பயின்றுள்ளனர். இக்கல்வியாண்டில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இருவரும், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்த மூவரும் தமிழ்மொழி பயின்றனர்.

4.8 அறநெறி கூறும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்

தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் 2013 ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் அமைக்கப்பட்டது. இக்காட்சிக் கூடத்தில் 150 ஓவியங்கள், 1500-க்கும் மேற்பட்ட திருக்குறள் தொடர்பான மூல நூல்கள், உரை, திறனாய்வு மற்றும் மொழி பெயர்ப்பு நூல்கள் இடம் பெற்றுள்ளன. அதிகாரத்திற்கு ஓர் ஓவியம் என 133 ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இக்காட்சிக் கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டினர் ஆகியோர் கண்டுகளித்து வருகின்றனர். இதுவரை 6500 பார்வையாளர்கள் இக்காட்சிக் கூடத்தினை கண்டு பயனடைந்துள்ளனர். இவ்வாண்டில் இதுவரை 850 பார்வையாளர்கள் காட்சிக் கூடத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

4.8.1 ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியப் போட்டி

திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக ஆண்டுதோறும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படும் என 2019-2020 ஆம்

ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் திருக்குறள் நெறிப்படி ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு துறை அமைச்சர் அவர்களால் 24-2-2020 ஆம் நாளன்று தெரிவு செய்யப்பட்ட 15 படைப்புகளுக்கு தலா ரூபாய் 40 ஆயிரமும் சான்றிதழ் பட்டயமும், பங்கேற்புச் சான்றும் வழங்கப்பட்டன.

மேலும், திருக்குறள் முற்றோதல் பயிற்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் பயிற்சி ஆகியன தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

4.9 உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

உலகமெங்கும் வாழ்ந்துகொண்டிருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் அவரது சந்ததியினர் தமிழ்-தமிழர்கள் குறித்த தகவல்களை ஒருங்கே கிடைக்கும் வண்ணம் 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்" தோற்றுவிக்கப்பட்டது.

இம்மையத்தின் வழியாக ஆண்டுதோறும் பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டுத் தமிழறிஞர்களைக்கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மையத்தின் வாயிலாக, இவ்வாண்டு தமிழிசை வரலாற்றை மீட்டெடுக்கும் வகையிலும், தமிழிசையினை உலகெங்கும் கொண்டுசெல்லும் நோக்கிலும், தமிழிசை இயக்கத் தந்தை ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் 2019 திசம்பர் 14, 15 ஆகிய நாள்களில் முதலாவது உலகத் தமிழிசை மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டில் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து பல்வேறு தமிழறிஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டில் 250-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் தங்களது படைப்பினைக் கட்டுரையாக வழங்கினர். கட்டுரைத் தொகுப்புகள் "உலகத் தமிழிசை ஆய்வு" எனும் தலைப்பில் 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

இம்மையத்தின் வாயிலாக இதுவரை 8 கருத்தரங்குகள், 18 சிறப்புச் சொற்பொழிவுகள், 3 பயிலரங்குகள், 2 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், 2017-2018 ஆம் ஆண்டில் ஆய்வு மாணவர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் நிறுவன ஆய்வு மாணவர்கள் மலேசிய நாட்டிற்கும், மலேசிய நாட்டு தமிழாய்வு மாணவர்கள் நிறுவனத்திற்கும் வருகை புரிந்து தமிழாய்வினை மேற்கொண்டனர். இதுவரை இம்மையத்தின் வாயிலாக 10 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4.10 ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓலைச்சுவடிகள் மற்றும் கையெழுத்துப் படிகளை நவீனக் கட்டமைப்புடன் பாதுகாத்துப் பேணிட 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிதிநல்கையில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிக் கட்டுகளும் நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள அனைத்துச் சுவடிக் கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் பிற இடங்களிலும் உள்ள பாதுகாக்கப்படாத சுவடிகளை அடையாளங்கண்டு அவற்றைத் தூய்மை செய்து முறையாகப் பாதுகாத்து விளக்க அட்டவணை உருவாக்கும் பணி நடைபெற்றுவருகின்றன.

கடந்த ஆண்டு கோவிலூர் மடாலயத்தில் உள்ள சுமார் 250 ஓலைச்சுவடிக் கட்டுகளை மின்எண்மம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. இவ்வாண்டு மேல் சித்தாமூர் சமண மடாலயத்தில் உள்ள சுவடிகள் இனங்காணப்பட்டு 250 சுவடிக் கட்டுகள் தூய்மைப்படுத்தப்பட்டு மின்எண்மத்திற்குத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

4.11 உலகத் தரத்தில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம்

தமிழ்நாடு அரசின் நிதிநல்கையோடு பண்டைய காலத் தமிழ் மக்களின் ஆற்றலையும் அறிவியல் தொழில்நுட்பத்தையும் மருத்துவம் மற்றும் பண்பாட்டுப் பதிவுகளைப் பல்வேறு காட்சி முறைகளைக்கொண்டு காண்போர் வியக்கும் வண்ணம் சிலை,

சிற்பங்கள், மாதிரிகள், புடைப்பு ஓவியங்கள், ஓவியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நவீன உட்கட்டமைப்புடன் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த் தாய் ஊடக அரங்கில் பார்வையாளர்களைக் கவரும்வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட குறும்படங்களான பழந்தமிழர் வாழ்வியல், தமிழ் மருத்துவம், நீர்மேலாண்மை, போரியல், ஆட்சித்திறன் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு நிதிநல்கையில் 1. பழந்தமிழர் நெசவுத் தொழில்நுட்பம், 2. பழந்தமிழர் கட்டடக்கலை நுட்பம், 3. பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், 4. பழந்தமிழர் வேளாண்மை, 5. தமிழர் மரபுக் கலைகள் ஆகிய ஐந்து தலைப்புகளில் குறும்படங்கள் தயாரிக்கும் பணிகள் தொடங்கி முடிவடையும் நிலையில் உள்ளன. இக்குறும்படங்கள் நவீன தொழிநுட்பத்துடனும் மிகத்துல்லிய காட்சியமைப்புகளோடு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

4.11.1 தமிழர் வரலாறு தனித்துவமிக்கது-மேதகு துணைக் குடியரசுத் தலைவர் பாராட்டு

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்தைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, மொரீசியசு, கனடா, பிரான்சு, ஆஸ்திரேலியா, ஜெர்மன், தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் ஆய்வாளர்கள், அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்கள் எனப் பலரும் பார்வையிட்டு செல்கின்றனர். இதுவரை இக்காட்சிக் கூடத்தை 11,500 நபர்கள் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 3,000 பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் மேதகு வெங்கையா நாயுடு அவர்கள் 19-1-2020 அன்று பார்வையிட்டு

“இந்தியாவின் தொன்மையான இனங்கள் யாவும் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்தைப்போல தங்கள் வேர்களை ஆராய்ந்து வெளிக்கொணர்ந்து, வரும் தலைமுறைக்குக் காட்சிப்படுத்தி வழங்க வேண்டும். தமிழர்களின் வரலாற்றை நன்கு அறிந்துகொள்ள இந்தத் தனித்துவமான நிறுவனத்திற்குப் பயணம் செய்ய நான் பரிந்துரை செய்கிறேன். இங்கு வரும் ஒவ்வொரு

[2020 மார்ச் 24

பார்வையாளரும் மனநிறைவோடு திருப்தியடைவார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன்."

என்று கூறியுள்ளார்.

4.12 **ஆய்வு இருக்கைகள்**

உயர் தமிழாய்வுக்காகத் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலட்சியத்தை எய்துவதற்காகக் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் சார்பிலும் தனியாரின் கொடையாலும் 12 ஆய்வு இருக்கைகள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் மூன்று ஆய்விருக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

2013

1. தொல்காப்பியர் ஆய்விருக்கை (தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன்)

2016

2. திருமூலர் ஆய்விருக்கை
3. வைணவ ஆய்விருக்கை
4. பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கை

2017

5. சன்மார்க்கச் செம்பொருட்டுணிவு ஆய்விருக்கை
6. தமிழ் (இயற்கை) மருத்துவ ஆய்விருக்கை
7. அகத்தியர் மருத்துவ ஆய்விருக்கை
8. பழந்தமிழர் வாழ்வியல் ஆய்விருக்கை

2018

9. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை (தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன்)

2019

10. ஞானத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி இருக்கை
11. தமிழ்ப் பரம்பரை சித்த மருத்துவப் பயிற்சி ஆய்விருக்கை

2020 மார்ச் 24]

12. பரதநாட்டிய இசைக்கலை வளர் இருக்கை

மேற்கண்ட ஆய்விருக்கைகள்மூலம் பட்டய வகுப்புகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் ஆகியவை நடத்தப்பட்டும் நூல்கள் வெளியிடப்பட்டும் வருகின்றன.

4.13 **தொல்காப்பியர் ஆய்விருக்கை**

தொல்காப்பியத்தில் விளக்கப்பெற்றுள்ள தமிழ் மொழியின் சிறப்பையும் இலக்கண வளத்தையும் அன்றைய தமிழ் மக்களின் அறிவுக்கூர்மையையும் ஆய்வுக்கு உட்படுத்தி இன்றைய மொழி வளர்ச்சிக்கு அக்கூறுகளை அடிப்படையாகக்கொண்டு மேலும் தமிழை வளர்க்கும் நோக்கில், தமிழ்நாடு அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சம் நல்கையின்மூலம் 2013 ஆம் ஆண்டு தொல்காப்பியர் பெயரில் ஆய்விருக்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டது, இவ்வாய்வு இருக்கையின்மூலம் சிறப்புச் சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள், பயிலரங்குகள், பன்னாட்டுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டும் நூல்கள் பலவும் வெளியிடப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இதுவரை 12 சிறப்புச் சொற்பொழிவுகள், 3 தேசியக் கருத்தரங்குகள், 3 தேசியப் பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 3 திட்டப் பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன. 10 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. 5 நூல்கள் அச்சுக்கு அணியமாக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு "தொல்காப்பியமும் தமிழ் அகராதியியல் மரபும்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

தொன்மைத் தமிழ் எழுத்துகள், நெல்லை இலக்கியங்கள் ஆகிய தலைப்புகளில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.

4.14 **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை**

மக்கள் திலகம் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் கலைத் தொண்டு, தமிழ் உணர்வு, தமிழ் மக்கள் மேல் அவர் கொண்டிருந்த அக்கறை மட்டுமின்றிக் கலைத் துறையின் வாயிலாக அவர் ஆற்றிய அளப்பரிய சாதனையும், சமுதாய அக்கறையினையும் உலகறியச் செய்யும் வகையில், அன்னாரது நூற்றாண்டைப்

போற்றும் வகையிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் இதுவரை தனிநபரோ அல்லது அமைப்புகளோ இருக்கைகள் ஏற்படுத்தாத நிலையில், தமிழ்நாடு அரசால் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் இருக்கை ஏற்படுத்துவதென்பது அன்னாருக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமையும் என்ற வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110 இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை ரூபாய் 1 கோடி வைப்புத் தொகையில் தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாய்விருக்கை வழி 2019 பிப்ரவரித் திங்கள் 23 அன்று “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தமிழ்த் தொண்டு” எனும் தலைப்பில் நூல் வெளியிடப்பட்டது. இதே பொருண்மையில் ஆங்கில நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

10 நிமிட அளவில் ஓடக்கூடிய “எம்.ஜி.ஆர். ஓர் ஆவணம்” எனும் தலைப்பில் அமைந்த ஆவணப் படம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், அதே பொருண்மையில் சிறப்புச் சொற்பொழிவும் 23-2-2019 அன்று நிகழ்த்தப்பட்டது.

மேலும் 2019 சூன் 13, 14 ஆகிய இரு நாள்கள் “கலை, பண்பாடு, மொழி, சமூகம் ஆகியவற்றில் எம்.ஜி.ஆரின் பங்களிப்பு” எனும் பொருண்மையில் அமைந்த தேசியக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றுக் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் செய்யப்பட்டு 19-2-2020 அன்று வெளியிடப்பட்டது.

4.15 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்றான நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயல்படுவது என்ற நிலையில் தனிமனிதக் கொடை அல்லது பலரது முயற்சி ஆகியவற்றின்மூலம் தமிழாய்வின் வளர்ச்சிக்காக நிறுவனத்தில் அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோர் அறக்கட்டளையின் சார்பிலும் துறைசார் அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றுப் பொழிவின்போதே நிறுவன நூலாக வெளியிடுதல் இதன் சிறப்பாகும்.

2020 மார்ச் 24]

தமிழார்வலர்களின் நிதியுதவியோடு தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் இதுவரை 50 அறக்கட்டளைகள் நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மட்டும் இரண்டு புதிய அறக்கட்டளைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளைகள்மூலம் இதுவரை 505 சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவ்வாண்டில் 41 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

4.16 நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது இதன் வெளியீடுகள் ஆகும். நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப்பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரியநூல்கள் மறுபதிப்பு, பிற தமிழறிஞர்களின் படைப்புகள் என்ற பிரிவுகளில் நூல்களை வெளியிட்டுத் தமிழாய்வுப் பணிகளைச் சீரியவகையில் நிறுவனம் செய்து வருகிறது. நிறுவனத்தால் வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழிபெயர்ப்பு, தமிழ் மருத்துவம், காலக் கணிதம் ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ளன. இந்நூல்கள் தமிழாய்வில் ஈடுபடும் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்திய ஆட்சிப்பணிக்கான தமிழ் கருவி நூல்கள் நிறுவனத்தால் வெளியிடப்படுவது கூடுதல் சிறப்பாகும்.

இதுவரை ஏறத்தாழ 1200-க்கும் மேற்பட்ட தரமான ஆய்வு நூல்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் மட்டும் 72 அரிய நூல்கள் 138 ஆய்வு மற்றும் அறக்கட்டளை நூல்கள் என மொத்தம் 210 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

4.17 தமிழியல்-ஆய்விதழ்

தமிழை உலகறியச் செய்ய சேவியர் தனிநாயகம் அடிகளார் மேற்கொண்ட முயற்சியில் உருவானது Journal of Tamil Studies (JOTS) எனும் ஆங்கிலத்தில் அமைந்த இதழ். அவர் வழங்கிய கொடைதான் இன்று “தமிழியல்” எனும் பெயரில் ஆங்கிலம் மற்றும் தமிழ் எனும் இருமொழியில் காலாண்டு இதழாக வெளிவருகிறது. தமிழியல் இதழ் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து

வெளிவந்து நூறாவது இதழையும் கடந்து, 105 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

நிறுவன தமிழியல் வரலாற்றில் ஆசிரியர் குழுவில் எம். ஆன்ட்ரனோவ் (யு.எஸ்.எஸ்.ஆர். அறிவியல் அக்காதமி), ஆர்.இ. ஆஷர் (எடின்பரோ பல்கலைக்கழகம்), ஆல்பர்ட். பி. பிராங்க்ளின் (கன்சாஸ் மாநிலப் பல்கலைக்கழகம்), கே.எல். யானர்ட் (கோலோன் பல்கலைக்கழகம்), முனைவர் கமில்சுவலபில் (சார்லஸ் பல்கலைக்கழகம்), சேவியர் தனிநாயகம் (மலாய் பல்கலைக்கழகம்), வ.அய். சுப்பிரமணியம் (கேரளப் பல்கலைக்கழகம்), எ. சுப்பையா (உலகத் தமிழ் ஆய்வு மன்ற உறுப்பினர்) மற்றும் பதிப்பாசிரியர் குழுவில் இடம் பெற்ற பேராசிரியர் மு. வரதராசன், ஆர்.இ. ஆஷர், ச. அகத்தியலிங்கம், கா. மீனாட்சி சுந்தரம், முனைவர் எப். குரோ, முனைவர் கமில் சுவலபில், முனைவர் ஜி.எல். ஹார்ட், முனைவர் எ. வேலுப்பிள்ளை, முனைவர் எஸ்.என். கந்தசாமி, முனைவர் பொன். கோதண்டராமன் ஆகியோர் இடம்பெற்று சிறப்பித்தனர்.

4.18 ஆய்வுப் பட்ட வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வும் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்புகளும் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 127 மாணவர்கள் முனைவர் பட்டமும், 310 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் 20 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் வகுப்பிலும் 95 மாணவர்கள் முனைவர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு வருகின்றனர்.

4.19 முதுகலைப் பட்டப்படிப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் முதுகலை வகுப்பு சென்ற கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் இவ்வாண்டு முதலாமாண்டில் 13 மாணவர்களும், இரண்டாமாண்டில் 15 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

சென்ற ஆண்டு முதல் ஒருங்கிணைந்த முதுகலை 5 ஆண்டுப் படிப்பினைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

4.20 பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டுவரும் முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகளுடன் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல், திருமந்திரமும் வாழ்வியலும், திருவாசகமும் வாழ்வியலும், செம்பொருட்டுணிவு ஆகியப் பட்டய வகுப்புகளும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கல்வியாண்டில் சுவடியியல் மற்றும் பதிப்பியலில் 16 மாணவர்களும், திருமந்திரமும் வாழ்வியலும் வகுப்பில் 30 மாணவர்களும், செம்பொருட்டுணிவில் 82 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

சென்ற ஆண்டு முதல் திருக்குறள் ஓவியக்காட்சிக் கூடம் நெறியாள்கையில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஓர் ஆண்டுப் பட்டயப் படிப்புத் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டில் 142 மாணவர்கள் பயின்றனர். இவ்வாண்டில் 140 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

4.21 விரிவுரையாளர்/ஆராய்ச்சிக்கான தகுதித்தேர்வுகள் பயிற்சி

பல்கலைக்கழக நல்கைக்குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர்/ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கட்டணமின்றி ஆண்டுதோறும் நடத்தப் பெற்று வருகின்றது. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமின்றி பிற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 450 மாணவர்கள் இவ்வகுப்பின்மூலம் பயனடைந்துள்ளனர். சென்ற ஆண்டு 40 மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றனர்.

4.22 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு 2019-2020 ஆம் நிதியாண்டிற்குச் சட்டமன்றப் பேரவை மானியக் கோரிக்கையில் ஒன்பது அறிவிப்புகள் வெளியிடப்பெற்றன:

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளை நிறுவனர் நாளாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுவதற்கு தொடர் செலவின வகைப்பாட்டில் ரூபாய் 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 100, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 12-9-2019) - **இவ்வாண்டிற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

[2020 மார்ச் 24

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 50 தமிழாசிரியர்களுக்கு 20 நாள்கள் 'மொழியியல் நுணுக்கப் பயிற்சி' எனும் பொருண்மையில் புத்தாக்கப் பயிற்சி அளிக்க ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 13, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 27-1-2020)-**இவ்வாண்டிற்கான திட்டம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அண்ணா கருத்தரங்கக் கூடத்தின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திட ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 119, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ. 1.2) துறை, நாள் 22-10-2019)-**திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆண்டுதோறும் கல்வெட்டியல் மற்றும் சுவடியியல் தொடர்பான கோடைக் காலப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 144, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ. 1.2) துறை, நாள் 12-11-2019)

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்கள் பிற மொழிகளைக் கற்றுக்கொள்ள ஆண்டுதோறும் சிறப்பு மொழிப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 150, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ. 1.2) துறை, நாள் 19-11-2019) - **திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

6. தமிழில் உள்ள உன்னத இலக்கியப் படைப்புகள் ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் (யுனெஸ்கோ) நடைமுறைக்கேற்ப உலக மொழிகளில் வெளியிட ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 20, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 31-1-2020)-**இவ்வாண்டிற்கான திட்டம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

7. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வழியே ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க ரூபாய் 4,95,750 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 153, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 21-11-2019) - **இந்த ஆண்டிற்கான திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

8. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கல்விப் புலங்களின் வழியே ஆண்டுதோறும் துறை சார்ந்த பயிற்சிப் பட்டறைகள் நடத்துவதற்கு ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 29, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 19-2-2020)-**இவ்வாண்டிற்கான திட்டம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

9. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு தற்பொழுது அரசு வழங்கும் தொகையான ரூபாய் 9 இலட்சத்திலிருந்து ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 154, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (த.வ.1.2) துறை, நாள் 21-11-2019) - **இவ்வாண்டிற்கான திட்டம் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

4.23 தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விழுமிய எண்ணமான கல்லாதோர் இல்லாத மாநிலம் தமிழகம் என்னும் குறிக்கோளை அடையும்வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளை தமிழ்நாடெங்கிலும் உள்ள அனைத்து மக்களும் வாங்கிப் படிக்கும் வகையில் நூல்களை விற்பனை செய்யும்பொருட்டும் இவையன்றி தமிழகத்தின் பெருநகரங்கள் மற்றும் மண்டல நிலைகளில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிகளுக்கு நிறுவன நூல்களைக் கொண்டு செல்லவும் நகரின் பிறபகுதியில் செல்கையில் இவ்வூர்தி தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் உயராய்வுக்கான ஒரு விளம்பர ஊர்தியாகவும் செயல்படும் வகையிலும் தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி ரூபாய் 9 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டது (அரசாணை (நிலை) எண் 213, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ.1.2.)த் துறை, நாள் 28-09-2018).

[2020 மார்ச் 24

இதனைத் தொடர்ந்து சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் அரசு நிறுவனங்களில் நேரடி நூல் விற்பனை மூலமும் மதுரை, கோவை, ஈரோடு போன்ற மாவட்டங்களில் நடத்தப்பெற்ற நூல் கண்காட்சிகள் வாயிலாக இதுவரை ரூ.3,01,955/- வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

4.24 பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

"பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவு செய்யப்பட்ட நூல்கள், உலக மொழிகளான பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும், இந்திய மொழிகளான இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்க ஆணை வெளியிடப்பட்டது"

இதனை அடுத்து நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய நூல்கள் இந்திய மொழிகளான இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19-02-2019 அன்று நூல்கள் வெளியிடப்பெற்றன. பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளுக்கான மொழிபெயர்ப்புப் பணிகள் முடிக்கப்பட்டு நூல் வெளியீட்டிற்கு அணியமாக உள்ளன.

4.25 நல்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்களுக்குத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. 2019-2020 ஆம் நிதியாண்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நல்கை விவரம் பின்வருமாறு:

வாலாய நல்கை	ரூ.296.69 இலட்சம்
ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பணப்பலன்கள்	ரூ.113.56 இலட்சம்

2020 மார்ச் 24]

4.26 தமிழ்த்தாய் 72-தமிழாய்வுப் பெருவிழா

மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் திங்களான பிப்ரவரித் திங்கள் முழுவதும் தமிழ்த்தாய் - தமிழாய்வுப் பெருவிழாவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இந்த ஆண்டு தமிழ்த்தாய் 72-தமிழாய்வுப் பெருவிழா 2020 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முழுமையும் ஆய்வரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், பயிலரங்கம், அரிய நூல் வெளியீடு, சிறப்புச் சொற்பொழிவுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இளம் ஆய்வாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் நிறுவனத்தால் நடத்தப்பட்டன.

இதில் 41 அறக்கட்டளைப்பொழிவுகள், 10 சிறப்புச் சொற்பொழிவுகள், 2 பன்னாட்டுக் கருத்தரங்கம், 72 கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கம், 72 அரிய நூல்கள் வெளியீடு, 138 ஆய்வு நூல்கள் வெளியீடு மற்றும் 72 அரிய வகை மூலிகைச் செடிகள் மற்றும் பலன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

- தமிழ்த்தாய் 72 தமிழாய்வுப் பெருவிழாவில் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதி நல்கையில் மேம்படுத்தப்பட்ட பேரறிஞர் அண்ணா கருத்தரங்கு கூடத்தினை மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- தமிழ்த்தாய் 72 தமிழாய்வுப் பெருவிழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமான திரு. க. பாண்டியராஜன் அவர்களால் தமிழ்நாடு அரசு நிதிநல்கையில் நடத்தப்பெற்ற திருக்குறள் ஓவியப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற 15 படைப்பாளர்களுக்கு தலா ரூ. 40 ஆயிரம் காசோலையும் பாராட்டுப் பட்டயமும் வழங்கப்பட்டது.

- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சமூகவியல் மற்றும் கலை மேம்பாட்டு ஆய்விருக்கை சார்பில் “புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் சமூகத் தொண்டு, “புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் கலை, சமூகவியல் பங்களிப்பு - தேசியக்

கருத்தரங்க ஆய்வுக்கோவை" எனும் தலைப்பில் அமைந்த நூல்கள் வெளியிடப்பட்டன.

- 2013 முதல் 2020 வரை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் திங்களை முன்னிட்டு நிறுவனத்தால் நடத்தப்பெற்ற "தமிழ்த்தாய் தமிழாய்வுப் பெருவிழா"வின் நிகழ்வுகளின் தொகுப்பு

❖ அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்	-	154
❖ சிறப்புச் சொற்பொழிவுகள்	-	44
❖ பன்னாட்டுக் கருத்தரங்கம்	-	2
❖ தேசியக் கருத்தரங்கம்	-	6
❖ அரிய நூல்கள் வெளியீடு	-	282
❖ ஆய்வு நூல்கள் வெளியீடு	-	505
❖ பயிலரங்கம்	-	10
❖ கவியரங்கம்	-	7
❖ குறள் முற்றோதல்	-	6
❖ திருக்குறள் ஓவியப் போட்டி	-	2
❖ பலன் தரும் மரக்கன்றுகள்	-	208

4.27 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அறக்கட்டளைகள்

1983

1. கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளை
2. தாமரைத்திரு கழகம் சுப்பையாபிள்ளை அறக்கட்டளை
3. வள்ளல் சீதக்காதி அறக்கட்டளை
4. திருமிகு ஏ.வி.எம். ஜபாருதீன் நூர்ஜஹான் அறக்கட்டளை

5. டாக்டர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அறக்கட்டளை
6. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி அறக்கட்டளை
7. மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அறக்கட்டளை
8. டாக்டர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளை
9. டாக்டர் சிலம்புச்செல்வர் ம.பொ.சி அறக்கட்டளை
10. தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளார் அறக்கட்டளை
11. டாக்டர் மு. வரதராசனார் அறக்கட்டளை

1984

12. தசாவதானி செய்குத்தம்பி பாவலர் அறக்கட்டளை
13. இதழாளர் ஆதித்தனார் அறக்கட்டளை
14. பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை

1987

15. கலாநிலையம் டி.என். சேஷாசலம் அறக்கட்டளை

1992

16. தவத்திரு தனிநாயக அடிகளார் அறக்கட்டளை

1994

17. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அறக்கட்டளை

1995

18. தினமலர் இராம சுப்பையர் அறக்கட்டளை

1996

19. பதிப்புச்செம்மல் பேராசிரியர் மெய்யப்பன் அறக்கட்டளை
20. பல்கலைச் செம்மல் டாக்டர் தெ.பொ.மீ. அறக்கட்டளை

1998

21. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அறக்கட்டளை

1999

22. டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை

2002

23. தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளை

2003

24. பெரியார் நாகம்மை அறக்கட்டளை

25. பெரியார் மணியம்மை அறக்கட்டளை

26. திருமிகு இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளை

27. தமிழாகரர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அறக்கட்டளை

28. அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா.அப்புசாமி அறக்கட்டளை

2004

29. முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை

2005

30. பேரறிஞர் அண்ணா தமிழ் மேம்பாடு அறக்கட்டளை

31. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளை

2009

32. பேராசிரியர் வ.செ. குழந்தைசாமி அறக்கட்டளை

2010

33. பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் அறக்கட்டளை

2011

34. திரு. சி.மா. துரையரசு அறக்கட்டளை

2012

35. தனித் தமிழ்க் காவலர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை

2013

36. பெருந்தலைவர் காமராசரின் மக்கள் பணியும் ஆளுமையும் அறக்கட்டளை

37. டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அறக்கட்டளை

2014

38. தத்துவ வித்தகர் த.கு. முருகேசனார் (முருகு) அறக்கட்டளை

2015

39. சு. அறிவுக்கரசு இரஞ்சிதம் அறக்கட்டளை

2016

40. அம்மாவின் ஆட்சியில் அருந்தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை

41. தினமணி அறக்கட்டளை

2017

42. திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் அறக்கட்டளை

43. புதுமைப்பித்தன் அறக்கட்டளை

44. பேராறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளை

45. திருக்குறளும் உலக அமைதியும் அறக்கட்டளை

46. பத்மஸ்ரீ முனைவர் அவ்வை நடராசன் அறக்கட்டளை

2018

47. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு அறக்கட்டளை

48. சீர்காழி நாகலிங்கம் மரகதம் நினைவு அறக்கட்டளை

2019

49. அக்பர் கவுசர் யுனானி தமிழ் மருத்துவ (ம்) அறக்கட்டளை

50. ஆய்வு மாணவர் க. அறிவுக்கரசு நினைவு அறக்கட்டளை

4.28 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் பிற நிறுவனங்கள் இணைந்து நடத்திய நிகழ்ச்சிகள்

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மற்றும் எட்யுரைட் அறக்கட்டளை தமிழாசிரியர் மதியுரையகம் மாறி வரும்

உலகச் சூழலில் தமிழ் கற்றல் - கற்பித்தல்: சவால்களும் தீர்வுகளும் தமிழாசிரியர்களுக்கான பன்னாட்டுப் பயிலரங்கம் 26-09-2019, 27-09-2019 ஆகிய நாள்களில் நடைபெற்றது.

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மற்றும் தமிழாய்வு மன்றம், தமிழ் அநிதம் (அமெரிக்கா) தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டுக் கழகம் (ஆஸ்திரேலியா) ஆகியன இணைந்து நிகழ்த்தும் தமிழியல் ஆய்வுகள் மரபும் புதுமையும் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் கன்னித் தமிழும் கணினித் தமிழும் நூல் வெளியீட்டு விழா 30-09-2019 அன்று நடைபெற்றது.

3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலமும் குருநானக் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த் துறையும் இணைந்து 'ஆசியப் பண்பாட்டிற்குத் தமிழ்ச் சமய இலக்கியங்களின் பங்களிப்பு' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் 11-10-2019, 12-10-2019 ஆகிய நாள்களில் நடைபெற்றது.

4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் அம்பேத்கர் இலக்கியச் சங்கமும் இணைந்து கீழடி கருத்தரங்கம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 28-11-2019 அன்று நடைபெற்றது.

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மதுரைத் தமிழ்ச்சங்கமும் இணைந்து 14-12-2019, 15-12-2019 ஆகிய நாள்களில் "முதலாவது உலகத் தமிழிசை மாநாடு" 2019 நடத்தப்பெற்றது.

4.29 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய நிகழ்ச்சிகள்

- தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கையின் சார்பில் 129 ஆவது பிறந்த நாள் மற்றும் 55ஆவது நினைவு நாள் தேசியக் கருத்தரங்கு, பொருண்மை: பாரதிதாசன்-தமிழின் பன்மைவெளி 10-4-2019 அன்று நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நூலக நாள் விழா 23-4-2019 அன்று நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் பன்னாட்டுக் கருத்தரங்கம், 'தொல்லியல் சான்றும் தமிழர் பண்பாடும்' என்ற பொருண்மையில் 27-4-2019 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்வு இருக்கை நடத்தும் அகில இந்தியக் கருத்தரங்கம் 13-6-2019, 14-6-2019 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை, கர்நாடகத் தமிழ் அறக்கட்டளை சார்பில் "தமிழ் மொழியே" காட்சித்திரை 09-8-2019 அன்று திரையிடப்பட்டது.
- பேரறிஞர் அண்ணா அவர்களின் 111 ஆவது பிறந்த நாள் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நிறுவனர் நாள் விழா "அண்ணா ஒரு வரலாறு" என்ற தலைப்பில் 15-9-2019 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உலக மொழிபெயர்ப்பு நாள் இணைப்பிய நுண் மொழியாக்கம் 30-9-2019 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நாள் (21-10-2019) 22-10-2019 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழ் இலக்கியங்களில் சமுதாய மொழியியல் அணுகுமுறை" என்ற பொருண்மையில் தேசியக் கருத்தரங்கம் 22-11-2019 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "புத்திலக்கியங்களில் தமிழ்ச் சமூக விழுமியங்கள்" என்ற பொருண்மையில் தேசியக் கருத்தரங்கம் 18-12-2019 அன்று நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் “கலைத் தமிழ் ஆய்வுக் களங்கள்'' என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 23-12-2019, 24-12-2019 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் “தமிழர் பெருவிழா சித்த மருத்துவத் திருவிழா” 10-1-2020 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்த்தாய் 72-தமிழாய்வுப் பெருவிழா- தொடக்கவிழா 01-2-2020 அன்று நடைபெற்றது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 02-2-2020 அன்று வைணவ ஆய்விருக்கை சார்பில் “செந்திறத்துத் தமிழோசை” என்ற தலைப்பில் அமைந்த சிறப்புச் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 03-2-2020 அன்று மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அறக்கட்டளை சார்பில், “தமிழில் அசை அமைப்பு” என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவும் நூல்வெளியீடும், பிற்பகல் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அறக்கட்டளை சார்பில் “தமிழில் வேற்றுமைக் கோட்பாடு” என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவும் நூல் வெளியீடும் நடைபெற்றன.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 04-2-2020 அன்று டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் அறக்கட்டளை சார்பில் “வ.அய்.சு.வின் ஆய்வுத்தடம்” என்ற தலைப்பிலும், நண்பகல் ஈ.வெ.ரா. பெரியார் அறக்கட்டளை சார்பில் “நிகழ்த்துகலை வடிவங்களில் புராணக் கூறுகள்” என்ற தலைப்பிலும், பிற்பகல் அம்மாவின் ஆட்சியில் அருந்தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் “சைவ சித்தாந்தத்தில் மாயை” என்ற தலைப்பிலும், ஜெ ஜெயலலிதா அறக்கட்டளை சார்பில் “தமிழிலக்கியத்தில் அச்சம்” என்ற தலைப்பிலும் சொற்பொழிவும், நூல் வெளியீடும் நடைபெற்றன.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 05-2-2020, 06-2-2020 ஆகிய இரு நாட்களில் “புதிய அணுகுமுறைகளின் வழி தமிழ்மொழி கற்பித்தல் முறைகளும் கருத்துப் புலப்பாடும்” என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 07-2-2020 அன்று இதழாளர் ஆதித்தனார் அறக்கட்டளை சார்பில் “சூரசம்மாரக் கூத்து” என்ற தலைப்பிலும் நண்பகல் சு. அறிவுக்கரசு இரஞ்சிதம் அறக்கட்டளை சார்பில் “புதுக்கவிதையில் பெரியாரியம்” என்ற தலைப்பிலும், பிற்பகல் தெ.பொ.மீ. அறக்கட்டளை சார்பில் “தற்காலத் தமிழ் உருபன்கள்” என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகளும் நூல்வெளியீடுகளும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 08-2-2020 அன்று சன்மார்க்கச் செம்பொருட்டுணிவு உயராய்வு இருக்கை சார்பாக சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 09-2-2020 அன்று முற்பகல் அகத்தியர் ஆய்விருக்கை சார்பாக சித்தர்கள் மருத்துவக் கருத்தரங்கம் நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 10-2-2020 அன்று “உலகமயச்சூழலில் கற்றல் கற்பித்தலும் கலைச் சொல்லாக்கச் சிக்கல்களும்” என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 11-2-2020 அன்று தினமணி அறக்கட்டளை சார்பில் “சி.ஆர். இரவீந்திரன் புதினங்களில் உத்திகள்” என்ற தலைப்பிலும், நண்பகல் பெருந்தலைவர் காமராசரின் மக்கள் பணியும் ஆளுமையும் அறக்கட்டளை சார்பில் “காமராசரின் ஆளுமைத் திறன்” என்ற தலைப்பிலும், பிற்பகல் கலாநிலையம் டி.என். சேசாசலம் அறக்கட்டளை சார்பில் “எடுத்துரைப்பியல் நோக்கில் கபிலரின் அகநானூற்றுப் பாடல்கள்” என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 12-2-2020 அன்று பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை அறக்கட்டளை சார்பில் “இணையமும் தமிழும்” என்ற தலைப்பிலும் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை சார்பில் “சின்ன சேலம் வட்டார வழக்காறுகள்” என்ற தலைப்பிலும், பெரியார் மணியம்மை அறக்கட்டளை சார்பில் “ஐங்குறுநூறு உரிப்பொருள்” என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

[2020 மார்ச் 24

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 13-2-2020 அன்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு அறக்கட்டளை சார்பில் "ஆய்வு அணுகுமுறைகள்" என்ற தலைப்பிலும், நண்பகல் ஏ.வி.எம். ஜபார்தீன் அறக்கட்டளை சார்பில் "இசுலாமிய இலக்கியத்தில் சமயச் சமூக நல்லிணக்கம்" என்ற தலைப்பிலும், பிற்பகல் ச.வே.சு. அறக்கட்டளை சார்பில் "குழந்தைகளின் மொழி வளர்ச்சியும் மொழியியல் நோக்கும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 14-2-2020 அன்று டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அறக்கட்டளை சார்பில் "அறநூல்கள் வலியுறுத்தும் வாழ்வியல் விழுமியங்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன. பிற்பகல் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் சார்பில் ஸ்ரீபோகர் ஆய்விருக்கை தொடக்க விழாவும் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 15-2-2020 அன்று பரதநாட்டிய இசைக்கலை வளர் இருக்கை சார்பாகத் "திருக்குறள் சொற்பொழிவு தமிழ்ப் பாடல்களுக்குப் பரதநாட்டியம்" நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 16-2-2020 அன்று தமிழ் இயற்கை மருத்துவ ஆய்விருக்கை சார்பாகத் "தமிழ் மருத்துவத்தின் (இயற்கை) வரலாறும் இன்றைய நிலையும்" மற்றும் "தமிழ் மருத்துவ உணவு ஆலோசகர் பயிற்சியின் பயன்கள்" என்ற தலைப்புகளில் அமைந்த சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. பிற்பகல் அறிவியல் தமிழறிஞர் பெ.நா.அப்புசாமி அறக்கட்டளை சார்பில் "குடந்தைக் கீழ்க்கோட்டம் நாகேசுவரர் திருக்கோயில் வரலாறு" என்ற தலைப்பில் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 17-2-2020 அன்று தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளை சார்பில்

"வேதாத்திரிய அறிவியல்" என்ற தலைப்பிலும், பிற்பகல் இராமலிங்க அபிராமி அறக்கட்டளை சார்பில் "தன்னிகர் இல்லாத்தலைவன் சிவபெருமான்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 18-2-2020 அன்று திருக்குறள் செம்மல் ந. மணி மொழியனார் அறக்கட்டளை சார்பில் "தொன்ம மறுவாசிப்புகளின் ஆழமும் விரிவும்" என்ற தலைப்பிலும், பிற்பகல் தனித்தமிழ்க் காவலர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அறக்கட்டளை சார்பில் "கம்பரில் கலைகள்" என்ற தலைப்பிலும், சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 19-2-2020 அன்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சமூகவியல் மற்றும் கலை மேம்பாட்டு ஆய்விருக்கை சார்பில் சிறப்புச் சொற்பொழிவும் ஆய்வுக் கோவை நூல்கள் வெளியீடும் நடைபெற்றது. பிற்பகல் திருக்குறளும் உலக அமைதியும் அறக்கட்டளை சார்பில் "தமிழண்ணலின் வாழ்வும் அவர்தம் ஒப்பிலக்கியப் பணியும்" என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 20-2-2020 அன்று தவத்திரு தனிநாயக அடிகளார் அறக்கட்டளை சார்பில் "தில்லிவாழ் தமிழர்களின் மொழியும் கலாச்சாரமும்" என்ற தலைப்பிலும், பிற்பகல் ம.பொ.சி. அறக்கட்டளை சார்பில் "திருநெறிய தமிழ்" என்ற தலைப்பிலும் அமைந்த சொற்பொழிவுகளும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 21-2-2020 அன்று கழகம் வ.சுப்பையாபிள்ளை அறக்கட்டளை சார்பில் "பள்ளு இலக்கியங்களில் வேளாண்மை மரபுகள்" என்ற தலைப்பிலும், பிற்பகல் தினமலர் இராம சுப்பையர் அறக்கட்டளை சார்பில் "தமிழில் சொற்பொருள் மயக்க நீக்கத்திற்கான வழிமுறைகள்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 22-2-2020 அன்று பழந்தமிழர் வாழ்வியல் ஆய்விருக்கை சார்பில் "திருக்குறளில் மருத்துவம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

[2020 மார்ச் 24

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 23-2-2020 அன்று திருமூலர் ஆய்விருக்கை சார்பில் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 24-2-2020 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 72 அரிய நூல்களும் 138 ஆய்வு நூல்களும் வெளியிடப்பட்டன. 72 பயன்தரும் மரக்கன்றுகள் மற்றும் மூலிகைச் செடிகள் நடப்பட்டன. இதுவரை தமிழாய்வுப் பெருவிழா மூலமாக 208 மரக்கன்றுகள் மற்றும் மூலிகைச் செடிகள் நடப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகம் பசுமைச் சோலையாகக் காட்சியளிக்கின்றது.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 25-2-2020 அன்று மறைமலை அடிகளார் அறக்கட்டளை சார்பில் "தனித்தமிழ்: மாட்சியும் நீட்சியும்" என்ற தலைப்பிலும், நண்பகல் பேரறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளையின் சார்பில் "ஔவையும் புலமையும்" என்ற தலைப்பிலும், பிற்பகல் பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை சார்பில் "பண்பாட்டு எழுத்து: தமிழ் நாவல்கள்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 26-2-2020 அன்று பதிப்புச்செம்மல் பேரா.ச.மெய்யப்பன் அறக்கட்டளை சார்பில், "திருவிடைமருதூர் வட்டாரக் கோயில்கள்" என்ற தலைப்பிலும், நண்பகல் பத்மஸ்ரீ முனைவர் அவ்வை நடராசன் அறக்கட்டளை சார்பில் "மேடை மின்னல்கள் (ஔவையின் அருந்தமிழ்ப் பொழிவுகள்)", "தமிழில் கோட்பாட்டாய்வுகள்" ஆகிய தலைப்புகளிலும், பிற்பகல் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை சார்பில் "பிரம்ம ஞானமும், பிரம்ம ஞான சங்கமும்" என்ற தலைப்பில் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 27-2-2020 அன்று டாக்டர் செ. அரங்கநாயகம் அறக்கட்டளை சார்பில் "தமிழ்ச்சுவடி வரலாற்றில் எண் கணிதம்" என்ற தலைப்பில் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 28-2-2020 அன்று தொல்காப்பியர் ஆய்விருக்கை சார்பில் "தமிழில் வேற்றுமைக் கோட்பாடுகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. பிற்பகல் 'கிறித்தவமும் தமிழும்' அறக்கட்டளை சார்பில் "தமிழக ஓவியங்களிலும் சுடுமண் உருவங்களிலும் ஆடைகள்" என்ற தலைப்பிலும், வ.உ. சிதம்பரனார் அறக்கட்டளை சார்பில் "தமிழிசைக்கலை ஆய்வுக்களங்கள்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 29-2-2020 அன்று டாக்டர் மு.வ. அறக்கட்டளை சார்பில் "இருளர் பழங்குடி இலக்கியங்கள்" என்ற தலைப்பிலும், பிற்பகல் உ.வே.சா. அறக்கட்டளை சார்பில் "சங்க இலக்கியங்களில் குடிகளும் வழிபாடுகளும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவும் நூல்வெளியீடும் நடைபெற்றன.

இயல்-5

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

5.1. தோரணவாயில்

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே-வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே!
தமிழென்னில் எம்முயிர்ப் பொருளாம்- இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்!
தமிழுண்டு தமிழ் மக்களுண்டு-இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு! நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு!

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாக்கிற்கு ஏற்ப உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒரே பல்கலைக்கழகமாகப் புகழ் பூத்து நிற்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழை உலக அளவில் கொண்டுசேர்க்கும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது.

[2020 மார்ச் 24

5.2. தொடக்கம்

நெற்களஞ்சியமான தஞ்சாவூரில் சொற்களஞ்சியமான தமிழ்ப் பல்கலைக்கழகத்தை 1981 செப்டம்பர் 15 இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிறுவியபொழுது, "தமிழைப் பற்றி பேசுவதற்கும் தமிழில் எழுதுவதற்கும் தமிழிலேயே சிந்திப்பதற்கும் முடிவு கிடையாது", என்று கூறிவிட்டு இந்தத் 'தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் நான் கனவு கண்டு கொண்டிருப்பது பல்வேறு கலைகளெல்லாம் அதற்குள் இணைந்து அதை ஒன்றுபடுத்தி உலகெங்கும் சொல்லிக்கொடுக்கும் வகையில் அந்தப் பணியைச் செய்யக்கூடியத் திறமையைத் தமிழர்களுக்குக் கொடுக்க இந்தத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உதவ வேண்டும் என்பதே எனது பேராசை' என்று குறிப்பிட்டுள்ளார்.

17-9-1981 இல் தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டடத் திறப்பு விழாவில், மேனாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், "சாதி, மதம், அரசியல் என்ற எண்ணமே இங்கு வரக்கூடாது. வந்தால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியும் கெட்டுப்போகும். தமிழர்களின் வாழ்வும் பாழ்பட்டுப்போகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றையும் உள்ளே நுழைய விடாதீர்கள். மதம் வந்தால் ஜாதி வந்துவிடும். இரண்டும் வந்தால் அரசியல் தானாக வந்துவிடும். ஆனால், இதைப்போன்ற புனிதமான தமிழ்க் கோயில் என்று சொல்லக்கூடிய பல்கலைக்கழகத்தில் எதையுமே நுழைய விடாதீர்கள்" என்ற உயரிய நோக்கத்தை வெளியிட்டார்கள். அவர்கள் கூறியதற்கிணங்க தமிழ்மொழியின் பழமை மரபையும் புதுமைச் செல்நெறிகளையும் ஒருங்கே இணைத்து உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனமாக (Higher Level Research Institute) தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையை உலக மக்களிடம் கொண்டுசெல்லக்கூடிய மாபெரும் பணியை மட்டுமே கடமையாகக் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பொன்மனச்செம்மல் அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது. பல்வேறு துறைகள் வழியே நடைபெற்றுவந்த தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கற்பித்தல் பணிகளை மேலும் கூர்மைப்படுத்துவதற்குத் தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர் மையம் ஆகியன தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின்வழி தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையையும் இலக்கியச் செழுமையையும் உலகத்

தமிழர்கள் பெறுகின்ற வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பணியைச் செவ்வனே செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்வாதாரத்திற்காகவும், வணிகத்திற்காகவும் வாழச்சென்றார்களோ அங்கெல்லாம் தமிழரின் வேர்களையும் பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதற்கும் அவர்கள் தமிழை அனைத்து நிலைகளிலும் பயன்படுத்துவதற்கும் இம்மையங்கள் பயிற்சிகளை அளித்து வருகின்றன.

கீழடி நாகரீகம் தமிழுக்கும் தமிழருக்கும் உலக மக்களிடம் மிகப்பெரிய அங்கீகாரத்தை ஏற்படுத்தியுள்ளது. கீழடி குறித்த ஆய்வறிக்கை 2019 ஆம் ஆண்டில் வெளிவந்தபின்னர் தமிழரின் வரலாறு புதிதாக எழுதப்படவேண்டிய தேவையை உணர்த்தியுள்ளது. தமிழின் வரலாற்று வேர் மென்மேலும் பழமைகொண்டிருக்கும் சூழலில் தமிழ்ப் பல்கலைக்கழகச் செயல்பாடுகளும் ஆய்வுகளும் மேலும் தீவிரத்தன்மை கொண்டதாக மாற்றம் பெற்றுவருகிறது. தமிழ், தமிழரின் பெருமைகளை உலகம் முழுவதும் வெளிப்படுத்துவதற்குத் தொடர்ந்து ஆராய்ச்சிப் பணிகளில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

5.3. நோக்கங்கள்

- ❖ தமிழரின் பண்டைய வரலாற்றுச் சிறப்பினை எடுத்துக்காட்டும் தரவுகளாகத் தமிழின் பண்டைய இலக்கிய இலக்கணங்கள் திகழ்கின்றன என்பதை அறிவியல் வழிப்பட்ட ஆய்வுகளின் வாயிலாக நிறுவுவது;
- ❖ தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பொதிந்து கிடக்கும் மரபுசார் அறிவியல் அறிவையும் தொழில்நுட்பங்களையும் ஆய்வுகளின் வழியே மீட்டுருவாக்கம் செய்திடவும் இன்றைய காலத்திற்கு ஏற்ப உருமாற்றிப் பயன்படுத்திடவும் உரிய ஆய்வுகளை மேற்கொள்வது;
- ❖ தமிழ் மொழி இலக்கிய அறிவுக் கருவூலங்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து வழங்குவதிலும் பிற மொழிகளின் சிறந்த கலை இலக்கியங்களைத் தமிழ் மொழிக்கு மொழியாக்கம் செய்வது;
- ❖ இலக்கியம், இலக்கணம், மொழியியல், இசையியல், அறிவியல், மெய்யியல், ஒப்பாய்வியல், நாட்டுப்புறவியல், தொல்லறிவியல் முதலிய துறைகளில் களஞ்சியங்களை உருவாக்கித் தமிழ்மொழியை உலக அரங்கில் பரவச் செய்வது;

- ❖ கருத்துப் பெட்டகங்களாகக் கிடைக்கும் ஓலைச் சுவடிகளையும் அரிய கையெழுத்துச்சுவடிகளையும் மரபுசார் முறைகளில் பாதுகாத்து அவற்றைச் செம்மையான முறைகளில் பதிப்பித்து வெளியிடுவது;

- ❖ தாய்த் தமிழகத்துடன் நெடுங்காலப் பண்பாட்டு உறவுகளை வைத்துள்ள அயலகத் தமிழர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதிசெய்வது;

என்பது தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தலையாய நோக்கங்களாகும்.

5.4. புலங்கள்—துறைகள்

பன்முக நோக்கில் தமிழின் பெருமைகளை உயராய்வுகளாகக் கொண்டு செலுத்தும் உட்கட்டமைப்பில் கலைப் புலம், சுவடிப் புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப் புலம், அறிவியல் புலம் ஆகிய ஐந்து புலங்களில் 26 துறைகள் உள்ளன.

தமிழ் வளர் மையம், தமிழ்ப் பண்பாட்டு மையம் போன்ற மையங்களின் வாயிலாகத் தமிழ் மொழி, பண்பாட்டுப் பரவலாக்கப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

நூலகம், அருங்காட்சியகம், பதிப்புத் துறை/அச்சகம் எனத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தனது பணிகளைச் செவ்வனே செய்வதற்கான நிறைவான கட்டமைப்பு வசதிகளுடன் திகழ்கிறது.

5.5. கல்விப் பணி

5.5.1. மாணவர் சேர்க்கை முறை

அரசு விதிகளுக்கிணங்க மாணவர்களின் சேர்க்கை நடைபெறுவதற்கு ஏதுவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சேர்க்கைப்பிரிவு செயல்பட்டு வருகிறது. முதுநிலையில் கலை, அறிவியல் இளங்கல்வியியல், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலை, கல்வியல் நிறைஞர், ஆய்வியல் நிறைஞர், முனைவர்பட்ட ஆய்வுப் படிப்புகளுடன் பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளிலும் மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

2019-2020 ஆம் கல்வியாண்டில் முதுகலையில் 78 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப்படிப்பில் 43 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் படிப்பில் 99 மாணவர்களும்

2020 மார்ச் 24]

முனைவர் பட்ட ஆய்வில் 2 மாணவர்களும், இளங்கல்வியியல் படிப்பில் 200 மாணவர்களும் பயின்று வருகின்றனர். முனைவர் பட்ட மாணவர்களுக்கான சேர்க்கை நடைமுறைகள் விரைவில் தொடங்க இருக்கின்றன. ஏற்கனவே 325 முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

5.5.2. உதவித் தொகை

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2019-2020 ஆம் ஆண்டில் பயிலக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை, பிற்படுத்தப்பட்டோர் கல்வி உதவித் தொகை ஆகியன தமிழக அரசின் வெவ்வேறு துறைகள்மூலம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயில்கின்ற மாணவர்களுக்கு ரூ.62.51 இலட்சம் அளவில் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

வ.எண்	**கல்வி உதவித் தொகை விவரம்**	**வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.**
1.	பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணவர்கள்-புதியது	5,21,632
2.	பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மாணவர்கள்-புதுப்பித்தல்	4,14,180
3.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள்-புதுப்பித்தல்	18,00,005
4.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் புதியது	13,00003
5.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள்-உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை	3,28,000
6.	பாரதியார் மற்றும் ஏ.டி. பன்னீர்செல்வம் அறக்கட்டளை உதவித் தொகை	5,98,720
7.	புலவர் பா. குருசாமி அறக்கட்டளை	8,500
8.	செல்வி தங்கமணி அறக்கட்டளை	4,200

9.	வாங்கலாம்பாளையம் செல்லப்பன் அறக்கட்டளை	22,000
10.	முதுகலைத் தமிழ் இலக்கியம், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் மாணவர்களுக்கான உதவித்தொகை திங்கள் தோறும் ரூ.2000/- வீதம் 41 மாணவர்களுக்கு	12,54,000
	கூடுதல்	62,51,240

5.6. ஆய்வுப் பணிகளும் திட்டங்களும்

❖ தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் தமிழக அரசு நல்கை, பல்கலைக்கழக மானியக் குழு நல்கை (UGC), தமிழ்ப் பல்கலைக்கழக நல்கை மற்றும் மைய அரசின் நிறுவனங்களான இந்தியத் தொல்பொருள் ஆய்வு நிறுவனம், இந்திய மொழிகளுக்கிடையிலான இயந்திர மொழி பெயர்ப்புத் திட்டம், இந்திய மொழிகளின் தரவுத் திட்டம் முதலியவற்றில் நிதியுதவிப் பெற்று பல்வேறு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

❖ தமிழக அரசு நிதியில் 40 கல்வியாளர்களுக்குக் குறுகியகால ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டு, நுண்ணாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நுண்ணாய்வுக்குப் பிறகு பதிப்புத் துறையின் விதிகளுக்கு உட்பட்டு நூலாக்கம் செய்யப்படும்.

❖ தமிழ்நாடு அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொகுப்பு நல்கையை ரூ.2491.96 இலட்சமாக உயர்த்தி வழங்கியதன்மூலம் ஊதியத்திற்கு மட்டுமின்றி 25 துறைகளுக்கு ரூ.10,000/- வீதம் கருத்தரங்கம் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 75 கல்வியாளர்களுக்குத் தலா ரூ.15,000/- வீதம் குறுகிய கால ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளதோடு 26 சிறப்பு நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் ரூ.10,000/- இல் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த ஒதுக்கீடு ஒவ்வோர் ஆண்டுக்குமானது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதன் வழியாக உயராய்வு நிறுவனமான தமிழ்ப் பல்கலைக்கழகம் தொய்வின்றி ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5.7. திட்டங்களும் செயல்பாடுகளும்

- ❖ பல்கலைக்கழக நல்கை குழு (UGC) வழங்கிய நிதியுதவியின்கீழ் சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட பெருந்திட்டப் பணி நிறைவுபெற்றுள்ளது.

- ❖ பல்கலைக்கழக நல்கை குழு (UGC) வழங்கிய நிதியுதவியின்கீழ் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையில் Scheme for Trans-Disciplinary Research for India's Developing Economy (STRIDE) எனும் UGC திட்ட நல்கையில் "Archaeological Heritage Management and Tourism Development in India: Development of Museum of the Chola History and Heritage Park at Gangai Kondacholapuram" எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ.2,50,000/- தொகை வரப்பெற்றுள்ளது.

- ❖ தமிழ்ப் பல்கலைக்கழகக் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையில் Indian National Science Academy (INSA) நிறுவன நல்கையில் Volume and Weight Measurements in the Metrological Traditions of South India எனும் ஆய்வுத்திட்டம் நடைபெற்று வருகிறது.

- ❖ கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையின் சார்பில் நடுவண் அரசின் தொல்லியல் துறை நிதியுதவியின்கீழ் **பானை மரபுகளும் பானைத் தொழிலும்** என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ள ரூ.12.00 இலட்சம் நல்கை பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள திருநாங்கூரில் இந்திய அரசு தொல்லியல் துறை அனுமதியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சங்ககாலம் முதல் நவீன காலம் வரையிலான கருப்பு, சிவப்பு பானை வகைகள், மீன் உருவம், மாட்டு வண்டி உள்ள பனையோட்டுக் கீறல் குறியீடுகள் கிடைத்துள்ளன. இரும்புப் பொருள்கள், கூரை ஓடுகள், செங்கற்கள், சுடுமண் பொம்மைகள், கண்ணாடி மணிகள், கல்மணிகள் கிடைத்துள்ளன. மேலும் வாழ்விடச் சான்றுகள் நான்கு மீட்டர் ஆழத்திற்குமேல் கிடைத்துள்ளன. இத்திட்டத்தின் ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2020 மார்ச் 24

❖ பல்கலைக்கழக நல்கை குழு 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொது வளர்ச்சி (General Development) நல்கைக்கு ரூ.8.12 கோடியும் இணைத்தல் திட்டத்திற்கு (Merged Schmes) ரூ.62.40 இலட்சமும் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டக் காலம் 31-3-2020 வரை நீட்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொது வளர்ச்சி நல்கையில் அனுமதிக்கப்பட்ட 20 தலைப்புகளிலும் இணைத்தல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 3 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

❖ மகாராஷ்டிர அரசு வழங்கிய நல்கையின்கீழ் அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் மோடி ஆவண மின்னாக்கத் திட்டம் 2013 முதல் நடைபெற்று வருகிறது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.14,93,156/- பெறப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ தமிழ்ப் பல்கலைகழக ஓலைச்சுவடித் துறையில் 5000 கட்டுகளில் 8000-க்கும் மேற்பட்ட தமிழ் ஓலைச்சுவடி நூல்களும் 1000-க்கும் மேற்பட்ட பிறமொழிக் கட்டுகளில் 1500-க்கும் மேற்பட்ட பிறமொழி நூல்களும், 1000-க்கும் மேற்பட்ட ஆவணச் சுருணைகளும் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. தற்போது இச்சுவடிகளை மின்னுருவாக்கம் செய்வதற்காக பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து நிதி பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் புது தில்லி தேசியச் சுவடிகள் இயக்ககத்தின் (NMM) சுவடிகள் பாதுகாப்பு மையம் (MCC) உருவாக்கப்பெற்றுள்ளது. இம்மையத்தை 17-10-2018 இல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கான ஒப்புதல் 1-4-2017 முதல் 31-3-2020 வரையிலான மூன்றாண்டு காலத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி பணிகள் நடைபெற்று வருகின்றன. அனுமதிக்கப்பட்ட ரூ.7.00 இலட்சத்தில் ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மேலும், பிறமொழிச் சுவடிகளை மின்மயமாக்கும் திட்டத்திற்கு NMM, New Delhi ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்விரு திட்டங்களின்படி சுவடிகள் மின்னாக்கப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

- தமிழகமெங்கும் உள்ள கோயில் நிருவாக அலுவலர்களுக்கு ஓலைச் சுவடிகள் பாதுகாத்தல் மற்றும் படிப்பதற்கானப் பயிற்சி அளிப்பதற்கு புதுதில்லி தேசிய சுவடிகள் இயக்ககம் (NMM) ரூ.10,00,000/- நிதி நல்கையில் இரண்டு பயிற்சிகள் நடத்துவதற்கு ஒப்புதல் வழங்கி முதல் தவணை ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

- இலண்டன் பிரிட்டிஷ் நூலகம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ் ஓலைச் சுவடிகளை மின்னுருவாக்கம் செய்ய இரண்டாண்டு காலத்திற்கு 51,040 பவுண்ட் (ஏறத்தாழ ரூ.49.00 இலட்சம்) நிதியினைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. முதல் தவணைத் தொகை 20,391 பவுண்ட் வரப்பெற்றுள்ளது. இந்திய மதிப்பு ரூ.18,41,850.20/- (£1= INR 90.32) ஆகும். இப்பணி தொடங்கப்பெற்றுள்ளது.

- தமிழ்நாடு அரசின் மின்னூல் திட்டத்திற்காக ஆயிரம் தமிழ்ச் சுவடிகளை மின்மயமாக்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டங்களில் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பயிலும் மாணவர்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பு வழங்கப்பெற்றுள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தொழில் மற்றும் நில அறிவியல் துறைக்குப் புது டெல்லியில் உள்ள இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பக்கழகம் (DST) அனுமதித்துள்ள நல்கை ரூ.39.52 இலட்சத்தில் "Digital-Poompuhar" Network Project on Digital Reconstruction of Underwater Heritage site-Poompuhar என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பல்கலைக்கழக நடுவண் அரசின் நிதியுதவியின்கீழ் நிலவுப்பாறைகள் புவியின் பாறைகள் குறித்த ஒப்பீட்டாய்வு (Spectral Study of Analog Regolith and Chandrayaan-1 Hyperspectral Satellite Image: Discriminating Lithology of Mood Highland Region) எனும் புத்தாக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடர்பாக பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் ஆய்வு நிறுவனத்திற்கு அனார்தசைப் பாறை மாதிரிகள் வேதியியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டு முடிவுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

[2020 மார்ச் 24

- தமிழ்ப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் மூலிகைச் செடிகளிலிருந்து சோரியாசிஸ் நோய்க்கு மருந்து கண்டறிய பல்கலைக்கழக ஆணைய புத்தாக்கத் திட்ட நல்கை ரூ.3.50 இலட்சத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கணிப்பொறி அறிவியல் துறையில் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் புத்தாக்கத் திட்ட நல்கை ரூ.2.00 இலட்சத்தில் மின்னணு ஊடகம் எங்கும் கற்றல் சூழலை வடிவமைத்து உருவாக்குதல் (Design and Development of Ubiquitous Learning Environment with Context Aware Services) என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5.8. கருத்தரங்குகள்/மாநாடுகள்

- அமெரிக்க நாட்டின் சிகாகோ மாநகரில் 4-7-2019 முதல் 7-7-2019 வரை நடைபெற்ற பத்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் நான்கு ஆசிரியர்கள் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தனர்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறைக்கும் 2019-2020 ஆம் நிதியாண்டிற்குக் கருத்தரங்கு நடத்துவதற்கு ரூ.25,000/-மும் சிறப்பு நிகழ்வு நடத்துவதற்கு ரூ.10,000/-மும் அனுமதிக்கப்பட்டு 25 துறைகளிலும் கருத்தரங்குகளும் சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 78 அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. அறக்கட்டளைகளின் வழியாகக் கிடைக்கும் வட்டித் தொகைமூலம் ஒவ்வொரு ஆண்டும் கருத்தரங்குகளும் சொற்பொழிவுகளும் நடத்தப் பெற்று வருகின்றன; ஆய்வுகளும் நடந்து வருகின்றன. மேலும், மாணவர்களுக்கு ஆய்வு உதவித் தொகை வழங்குவதற்கு நிறுவப்பட்டுள்ள 6 அறக்கட்டளைகள் மூலம் மாணவர்களுக்கு ஆய்வு உதவித் தொகை வழங்கப் பெற்று வருகிறது.

- தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித் துறையும் பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 2019-2020 கல்வியாண்டில் 2019 செப்டம்பர் 13-16 ஆகிய நாட்களில் சுவடிப் பயிலரங்கு பொள்ளாச்சியில் நடத்தப்பெற்றது.

- ❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தென்னகப் பண்பாட்டு மைய உதவி நல்கையுடன் நாடகத் துறையினால் ஆறு நாட்களுக்கு (2019-ல்) நாடகத் திருவிழா நடைபெற்றது. தமிழகமெங்கும் செயல்பட்டுவரும் பத்து குழுக்களின் நாடகங்கள் நடைபெற்றன. நாடகச் செயற்பாட்டிற்கு இந்நிகழ்வு உந்துசக்தியாக அமைந்தது.
- ❖ தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் ஏழுபேர் ஆஸ்திரேலியா, மலேசியா, ஐக்கிய அமெரிக்கா, இலங்கை, தைவான் ஆகிய நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.
- ❖ தமிழ்ப் பல்கலைக்கழக நிறுவன நாள் 16-9-2019 அன்று சிறப்புற நடைபெற்றது. 'நிறுவன நாள் சிறப்புச் சொற்பொழிவு' என்ற நிகழ்வு இந்த ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ கோபேயமட்ட ஜப்பான் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மரபு மேலாட்சி மற்றும் சுற்றுலா வளர்ச்சி குறித்த கருத்தரங்கு கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை சார்பில் ரூ.2.00 இலட்சம் நல்கையில் நடத்தப்பெற்று நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

5.9. 2019 ஆம் ஆண்டு தமிழக அரசு அனுமதித்த-திட்டங்கள்-செயற்பாடுகள்

5.9.1 மியான்மர், தென்னாப்பிரிக்க நாடுகளில் தமிழ்ப் பயிற்சி அளிக்க வழங்கப்பட்ட நல்கை ரூ.22.00 இலட்சம்

புலம் பெயர்ந்து வாழும் அயலகத் தமிழர்களிடையே தமிழ் மொழியை மங்காமல் தழைத்தோங்கச் செய்யும் வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல செயல் திட்டங்கள் மாண்புமிகு மேனாள் முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறையின்மூலம் தொடங்கி வைக்கப்பட்டன. மொரிசியசு தமிழாசிரியர்களுக்கு இலக்கிய-இலக்கணப் பயிற்சி வழங்கும் செம்மையான திட்டத்தினை 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்த சாதனைச் சரித்திரம், வாழையடி வாழையெனத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மியன்மார் என இன்றைக்கு அழைக்கப்படும் பர்மா நாட்டுத் தமிழாசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில், புகழ்மிக்க யாங்கோன் நகரத்தில் நிகழ்த்தப்பட்டன. 147 தமிழாசிரியர்களுக்கு இலக்கிய-

இலக்கணப் பயிலரங்கமும் 100 இளந்தமிழ் மாணவர்களுக்குத் தமிழ்ப் பண்பாடு மற்றும் கலைப் பயிற்சிகள் மிகச்சிறப்பாக வழங்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் 125 தமிழ் ஆசிரியர்களுக்கு இலக்கிய-இலக்கணப் பயிற்சி, 85 இளந்தமிழ் மாணவர்களுக்குத் தமிழ்ப் பண்பாடு மற்றும் பேச்சுத் தமிழ்ப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தென்னாப்பிரிக்காவில் தமிழ்க் கல்வி அளிப்பது நிறுத்தப்பட்டு ஏறத்தாழ 30 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், அந்நாட்டுத் தமிழார்வலர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையின்மூலம் எழுவர்கொண்ட பல்துறை கல்வியாளர்கள்/ வல்லுநர்களைக்கொண்டு நடத்தப்பட்ட பயிற்சிப் பயிலரங்குகள் தென்னாப்பிரிக்கா நாட்டுத் தமிழர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றதோடு, இழந்த நம்பிக்கையை மீண்டும் பெறும் நல்வாய்ப்பையும் தோற்றுவித்துள்ளது.

5.9.2. சிற்பக்கலைப் பயிற்சித் திட்டம் ரூ.50.00 இலட்சம்

❖ மூன்றாண்டுகள் பட்டய வகுப்பு, ஓராண்டு சான்றிதழ் படிப்புக்கானப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு கருவிகள் வாங்கப்பட்டன. தளவாடங்கள் வாங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிற்பப் பயிற்சிக் கூடம் கட்டும் பணி நிறைவுற்றுள்ளது. பயிற்றுநர்கள் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர். பட்டயம் மற்றும் சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

5.9.3. கரிகாற்சோழன் கலையரங்கம் மேம்பாட்டுப்பணி ரூ.330.05 இலட்சம்

❖ தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின்வழி பணிகள் நடைபெற்று வருகின்றன. தண்வளி அமைப்பதற்கான பணி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன. தளவாடங்கள் டான்சி நிறுவனம் வழி வாங்கப்பட்டுள்ளன.

5.9.4. 25 ஆண்டுகள் பழமையான கட்டடங்கள் சீர்காப்பு ரூ.349.60 இலட்சம்

❖ தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின்வழி பணிகள் நடைபெற்று வருகின்றன. புலவிருந்தகம்

மற்றும் ஆட்சிமன்ற கூடத்திற்கான அறைகலன்கள் டான்சி நிறுவனம் வழி வாங்கப்பெற்றுள்ளன.

5.9.5. முதற்கட்ட வளாகச் சுற்றுச்சுவர் கட்டும்பணி ரூ.159.00 இலட்சம்

❖ தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின்வழி பணிகள் நடைபெற்று வருகின்றன. 95 விழுக்காடு பணிகள் நிறைவுற்றுள்ளன.

5.9.6. நூலகம்-மின்னணு நூலகமாக மாற்றியமைத்தல் ரூ.50.00 இலட்சம்

❖ நூல்களைப் பாதுகாக்க மின்னணு அதிர்வெண்கொண்டு அடையாளம் காணும் (RFID- Radio Frequency Identifiicatiion Tag) அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நூல்களுக்கு வில்லைகள் ஒட்டும்பணி நிறைவுற்று பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட உள்ளன.

5.9.7. நூலகப் பனுவல் அரங்கம் மேம்பாடு-ரூ.40.00 இலட்சம்

❖ தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின்வழி பணிகள் நடைபெற்று வருகின்றன. அறைகலன்கள் டான்சி நிறுவனம் வழி வாங்கப்பட்டுள்ளன.

5.9.8. நூல்கள் மறுபதிப்பு ரூ.200.00 இலட்சம்

❖ தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடான 216 நூல்கள் மறுபதிப்புக்குத் தமிழக அரசின் அச்சகத்திற்கு அனுப்பப்பட்டு அச்சாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

5.9.9. யோகா மையம் ரு.10.00 இலட்சம்

❖ யோகா பயிற்றுநர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளி மாணவர்களுக்கும் செவித்திறன் குன்றிய மாணவர்கள் மற்றும் பார்வையற்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. பொது மக்களுக்கான யோகா பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

5.9.10. அரிய நூல்கள் மின்னாக்கம் ரூ.10.00 இலட்சம்

❖ உரிய கருவிகள் வாங்கப்பட்டு 250 அரிய நூல்கள் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 24

5.10. ஒருங்கிணைந்த உயர் கல்வி மேம்பாட்டுத்திட்டம் -RUSA 2019-2020 ரூ.20.00 கோடி

❖ ஒருங்கிணைந்த உயர் கல்வித் திட்டத்தின்கீழ் (ரூசா-RUSA) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு முதன்முறையாக இந்திய நடுவண் அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை ரூ.12.00 கோடி–தமிழக அரசு ரூ.8.00 கோடி ஆகக்கூடுதல் ரூ.20.00 கோடி 2019-2020 இல் அனுமதிக்கப்பட்டு ரூ.10.00 கோடி நல்கை பெறப்பட்டுள்ளது.

❖ மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் விவரம் வருமாறு

1. புதிய வசதிகளை உருவாக்குதல்–ரூ.10.00 கோடி
2. சீர்காப்பு மற்றும் மேம்பாட்டு வசதிகள்–ரூ.6.00 கோடி
3. புதிய கருவிகள் மற்றும் ஏனைய வசதிகள்–ரூ.4.00 கோடி

கட்டடப் பணிகள் அனைத்தும் தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டுவரும் தொழில்நுட்பக் கல்வி வட்டத்தின்வழி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.10.1. புதிய வசதிகளை உருவாக்குதல் ரூ.10.00 கோடி

❖ மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 821.91 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் யோகா மையம் கட்டப்பட்டு வருகின்றது. மன வளத்தையும் உடல் நலத்தையும் பேணிக்காக்க வழிவகுக்கும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும், தஞ்சாவூர் வாழ் பொதுமக்களுக்கும் இந்த யோகா மையம் இணைப்பிடமாக செயல்படும்.

❖ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் திறம்படப் பங்கேற்பதற்கு ஏதுவாக ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் உள் விளையாட்டரங்கம் (779.00 சதுர மீட்டர் பரப்பளவில்) மற்றும் பார்வையாளர் மாடம் ஆகியன (102.87 சதுர மீட்டர் பரப்பளவில்) கட்டப்பட்டு வருகின்றன.

❖ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் அறிவியல் புலம் (1045.71 சதுர

மீட்டர் பரப்பளவில்) மற்றும் வளர்தமிழ்ப் புலம் (1045.09 சதுர மீட்டர் பரப்பளவில்) ஆகிய கட்டடங்களின் மேல்தளம் ரூ.4.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் சோதனைக்கூடமும் வகுப்பறைகளும் அடங்கும்.

❖ தமிழ்ப் பல்கலைக்கழக கரிகாற்சோழன் கலையரங்க வளாகத்தில் (372.41 சதுர மீட்டர் பரப்பளவில்) ரூ.94.55 இலட்சம் மதிப்பீட்டில், பன்னோக்குக்கூடம் (Multi purpose Hall) கட்டப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகத்தில் நடைபெறக்கூடிய நிகழ்வுகளுக்கும், பட்டமளிப்பு விழா, பட்டமேற்பு அரங்காகவும், தொலைநிலைக் கல்வி தொடர் வகுப்புகள் நடத்துவதற்கும் இந்த அரங்கம் ஆண்டு முழுவதும் பயன்படும். தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகப் பகுதியில் 156.18 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.48.30 இலட்சம் மதிப்பீட்டில் பதிப்புத்துறை/அச்சக விரிவாக்கக் கட்டடப் பணி தொடங்கப்பட உள்ளது.

5.10.2. சீர்காப்பு மற்றும் மேம்பாட்டு வசதிகள்-ரூ.6.00 கோடி

மொழிப்புலக் கட்டடம் (ரூ.47.00 இலட்சம்), நூலகக் கட்டடம் (ரூ.23.50 இலட்சம்), அலுவலகக் கட்டடம் (ரூ.35.00 இலட்சம்), புலவிருந்தகக் கட்டடம் (ரூ.27.50 இலட்சம்), குடில்கள் சீர்காப்பு-சுற்றுச்சுவர் கட்டுதல் (ரூ.180.00 இலட்சம்) உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. புதிதாக இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் (ரூ.18 இலட்சம்), நடைபாதை மற்றும் அணுகுச் சாலைகள் ரூ.165.00 இலட்சம், பசுமை கவின்பரப்புப் பணிகள் ரூ.14.00 இலட்சம் மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் மின் அமைப்புகளைப் புதுப்பிக்கவும், புதிதாக இயங்கேணி ஒன்றை அலுவலகக் கட்டடத்தில் அமைக்கவும், நூலகப் பனுவல் அரங்கில் தண்வளி அமைப்பு ஏற்படுத்தவும், தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் தொழில்நுட்பக் கல்விவட்டத்தின்வழி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.10.3. புதிய கருவிகள் மற்றும் ஏனைய வசதிகள் ரூ.4.00 கோடி

❖ தமிழ்ப் பல்கலைக்கழகப் பொருள் வாங்கும் குழு வழியாகத் தமிழ்நாடு அரசின் ஒப்பந்தப்புள்ளி வழிகாட்டுதல்களின்படி விளம்பரப்படுத்தப்பட்டு, தளவாடங்கள் மற்றும் கருவிகள் வாங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ரூ.73.00 இலட்சம் மதிப்பீட்டில் 8 பொலிவுறு வகுப்பறைகளுக்குத் (Smart Classrooms) தேவையான தளவாடங்களை நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழக சித்த மருத்துவ ஆய்வுக்கூடத்திற்குத் தேவையான மூலிகைகளில் உள்ள வேதிமங்களை நுணுக்கமாகக் கண்டறிவதற்கு ரூ.75.00 இலட்சம் செலவில் GC-MS என்ற கருவி வாங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள நில அறிவியல், தொல்லறிவியல், சுற்றுச்சூழல், அரிய கையெழுத்துச் சுவடி, ஓலைச் சுவடி, கடல்சார் வரலாறு, உளவியல், கணினி அறிவியல் போன்ற துறைகளிலுள்ள ஆய்வுக்கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்காக ரூ.86.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகப் பண்பலை வானொலி நிலையச் சேவையைப் புதுப்பிக்கும் வகையிலும் நீண்ட அலைவரிசை கொண்ட இணையவழிப் பண்பலை வானொலி நிலையமாக உருவாக்குவதற்கும் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன்வழி உடல் நலம், விவசாயம், கல்வி, சுற்றுச்சூழல் போன்ற விழிப்புணர்வு நிகழ்வுகளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்ந்த செய்திகளும் பொது மக்களுக்குச் சென்றடைவது மட்டுமின்றி, தமிழ் வளர் மையத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டு மையத்திற்கும் உலக அளவில் தொடர்புகளை ஏற்படுத்த முத்தாய்ப்பாகவும், இணையவழி கல்விக்கு உறுதுணையாகவும் அமையும்.

- தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்திற்கான பாதுகாப்பு வசதியை மேம்படுத்தும் வகையில் ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்பு ஒளிப்படக்கருவி(CCTV) அமைப்பிற்கு முதற்கட்டமாக ஒப்பந்தப்புள்ளி ரூ.27.00 இலட்சத்திற்கு இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இரண்டாம்

கட்டமாக அருங்காட்சியகம், பதிப்புத் துறை அச்சகம், கரிகாற்சோழன் கலையரங்கப்பகுதி உள்ளிட்டப் பகுதிகளுக்கு அமைக்கப்பட உள்ளன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள ஆய்வுக்கூடங்கள், ஆவணப் பாதுகாப்பு அறைகள், நூலகங்கள் போன்ற இடங்களுக்கு ரூ.14.30 இலட்சம் மதிப்பீட்டில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏனைய கருவிகள் தளவாடங்கள் வாங்கும்பணி நடைபெற்று வருகின்றன.

5.11. 2020 ஆம் ஆண்டு தமிழக அரசு அனுமதித்த-திட்டங்கள்-செயற்பாடுகள்

5.11.1. அயல்நாட்டுத் தமிழ் மாணவர்கள்-ஆசிரியர்களுக்கான இலக்கிய-இலக்கண-பண்பாட்டுப் பயிற்சித் திட்டம்-ரூ.30.00 இலட்சம்

தமிழ் மொழியைக் கற்பித்தல், இலக்கிய-இலக்கணப் பாடங்களின் வழி பேச்சு-எழுத்துத் தமிழை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் பிஜி மற்றும் கயானா (பிரிட்டிஷ் கயானா) நாட்டில் வாழும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்குத் தொடராச் செலவினமாக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 மே திங்களில் இப்பயிற்சி நடைபெற உள்ளது.

5.11.2. இராபர்ட் கால்டுவெல் ஆய்வு இருக்கை ரூ.100.00 இலட்சம்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட ஐரோப்பிய தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் சீரிய தமிழ்ப் பணியினைப் போற்றி சிறப்பிக்கும் வகையில் அன்னாரின் நெறியில் ஒப்பிலக்கண ஆய்வில் தமிழறிஞர்களையும் மாணவர்களையும் நெறிப்படுத்தவும் திராவிட மொழிகளை ஒப்பிட்டு தொடர்ச்சியாகப் பல்வேறு வகையான ஆய்வுகள் மேற்கொள்ளவும், “தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல்” பெயரில் தமிழ் ஆய்விருக்கை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு வைப்புத் தொகையாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆய்வுத் தகைஞர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு ஆய்வுப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

5.11.3. தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளை சிறப்புச் சீர்காப்பு செய்தல் ரூ.29.64 இலட்சம்

தமிழ்ப் பல்கலைக்கழக உயரழுத்த மின் நிலையப் பகுதிக்கும் நூலகக் கட்டடத்திற்கும் இடையில் 36 ஆண்டுகள் பழமையான பழுதுற்ற புதை மின்வடத்தை மாற்றி புதிய மின்வடம் அமைக்கவும் மின் அமைப்புகளைப் புதுப்பிக்கவும் தொடராச் செலவினமாக ரூ.29,64,052/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நல்கை பெறப்பட்டுள்ளது. பணிக்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு தொழில்நுட்பக் கல்வி வட்டம்வழி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

5.11.4 வருகைதரு பேராசிரியர்கள் ரூ.36.00 இலட்சம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர்களின் அனுபவம் மற்றும் அறிவாற்றலை, ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக 10 வருகைதரு பேராசிரியர்களையும் 5 இலக்கிய ஆளுமைகளையும் அழைத்தல். இவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.20,000/- வீதம் மதிப்பூதியமாக அளிப்பதற்குத் தொடர் செலவினமாக ரூ.36.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

5.11.5 முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை-திட்டம்

தமிழ் மொழிக் கல்வி தமிழிலக்கியக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழிலக்கியம் 20 மாணவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கியம் பயிலும் 25 மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.2000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

5.12. தமிழ் வளர் மையத்தின் பணிகள் 2020

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நெறிகாட்டுதலின்கீழ், இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் தமிழ் வளர் மையங்கள் தொடங்கப்பட்டு மாணவர்கள் தமிழ் பயிலும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் தமிழ் வளர் மையம் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் பிற மாநிலங்களில் உள்ள தமிழ் அமைப்புகள், ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் உள்ள "ஜெர்மனி தமிழ் ஒன்றியப்பள்ளி, தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள மியர்பேங்க் தமிழ்ப்பள்ளி" உள்ளிட்ட நாடுகளின் தமிழ் அமைப்புகள் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள உள்ளன.

புதுதில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் செயல்பட்டுவரும் தமிழ்மொழி வகுப்புகளின்மூலம் மாணவர்கள் சிறப்பாகத் தமிழைக் கற்றுத் தேர்ச்சி பெற்று வருகின்றனர். அசாம் மாநிலத்தில் உள்ள கவுகாத்தி பல்கலைக்கழகத்திலும் தமிழ் வளர் மைய வகுப்புகள் கடந்த 4 மாதங்களாக நடைபெற்று வருகின்றன. கவுகாத்தி பல்கலைக்கழகத்தின் நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய பயில் (தமிழ் மொழி) துறையின் அஸ்ஸாம் மொழி மற்றும் தமிழ் மொழி தெரிந்த ஆசிரியர் ஒருவரை ரூ.30,000/- மாதத் தொகுப்பூதியத்தில் ஓராண்டுக்கு நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு தமிழ்மொழிப் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர் மையத்தின் வழி தமிழ் மொழி பயிற்றுவித்தல் 8 படிநிலை (8 Grade Level) சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒருபடிநிலை ஆறு திங்களைக் கொண்டதாகும்.

கீழ்க்காணும் மையங்களின்வழி மாணவர் சேர்க்கை, வகுப்பு நடத்துதல் மற்றும் தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ள நிறுவனங்களின் விவரம்

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	நாடு/ மாநிலம்	முகவரி	புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப்பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்ய பட்ட நாள்
1	Bhasha Sangam	Allahabad.	67/40 Tularam Bagh, Allahabad 211006 (U.P)	01.08.2018	------
2	Tamil Education and Research Centre	United Kingdom.	1, Jacklin Drive, Coventry CV3 6QG, West Midlands, UK	28-12-2017	------
3	Success Academy Centre.	Malaysia.	No.64, B Jalan Murni 25/61 Section 25, Taman Sri Muda 40000 Shah Alam, Malaysia	15-6-2018	------

[2020 மார்ச் 24

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	நாடு/ மாநிலம்	முகவரி	புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப்பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்ய பட்ட நாள்
4	House of Tamil Culture –Library, Tamil Nadu House.	New Delhi.	No.9, Tikendrajit Marg, Chanakyapuri, New Delhi.	18-7-2018	7-3-2020
5	Institute International DES Etudes Superieures (IIES)	Paris	75 rue Philippe de Girary 75018, Paris	5-7-2018	9-9-2019
6	Eduright Foundation	USA.	10408 Jackson Hole Ln, McKinney, Texas – 75072	24-1-2020	24-1-2020

5.12.1 பாட நூல் உருவாக்கம்

அயல்நாடுகளில் பேச்சுத்தமிழ் மற்றும் எழுத்துத் தமிழ்ப் பயிற்சியைப் பயிலும் மாணவர்களுக்காக, சிறந்த கல்வியாளர்களைக்கொண்டு பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் வல்லுநர்களைக்கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு விரைவில் முழுவடிவில் நூலாக்கம் பெறவுள்ளன. தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் பேச்சுத் தமிழை வளர்க்கும் நோக்கில் இப்பாட நூலாக்கங்கள் வடிவமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

5.13. தமிழ்ப் பண்பாட்டு மையம்

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின்வழி இசை (குரலிசை மற்றும் வாத்திய இசை), நாட்டியப் பாடங்களில் எட்டு படிநிலை வகுப்புகள் (Grade Level) நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு படிநிலை ஆறு திங்களைக் கொண்டதாக அமையும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 26 உள்நாட்டு/வெளிநாட்டு

அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நடவடிக்கையில் உள்ளன.

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் வழி இசை, (குரலிசை, வாத்திய இசை) மற்றும் பரதநாட்டியப் பாடங்களுக்கான 8 படிநிலை (8 Grade Level) சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. ஒருபடிநிலை ஆறு திங்களைக் கொண்டதாகும்.

கீழ்க்காணும் மையங்களின்வழி மாணவர் சேர்க்கை, வகுப்பு நடத்துதல் மற்றும் தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன:

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களின் விவரம்

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	வெளிநாடு/ மாநிலம்	முகவரி	புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப் பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்
1	Institute International DES Etudes Superieures (IIES)	Paris.	75 RUE Philippe, De Girard 75018, Paris.	5-7-2018	9-9-2019
2	Thiruk koneshwarar Nadanalayam	Switzerland	Glattwiesen Strasse 37, 8152 Opfiken, Switzerland.	19-2-2018	-----
3	Tamil Education and Research Centre.	United Kingdom	1, Jacklin Drive, Coventry CV3 6QG, West Midlands, UK	28-12-2017	-----
4	Bridge Academy	Sri Lanka	32, 3/3 Madangahawatta Lane, Colombo 06, Sri Lanka	15-6-2018	-----
5	Sree Bharathalaya Academy	United Kingdom	134, Station Street West, Foleshill, Coventry, CV65ND, United Kingdom.	25-6-2018	-----

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	வெளிநாடு/ மாநிலம்	முகவரி	புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்யப் பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்
6	Anantara Music & Dance Institution	Dubai	P.o.Box, 241614, DUBAI, U.A.E.	30-5-2019	30-5-2019
7	Institute of Tamil performing Arts	USA.	807 Walfield CT Saint Louis USA.	15-8-2019	15-8-2019
8	Naatiya Samarpanam Academy of Dance	USA.	New Jersey, USA	29-1-2020	29-1-2020

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள உள்நாட்டு நிறுவனங்களின் விவரம்

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	வெளிநாடு/ மாநிலம்	முகவரி	ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்
1	K Ram Foundation	New Delhi.	118C, Pocket – F, Phase -2, Mayur Vihar Delhi - 100091	28-12-2017	-----
2	Bhaaratha Kala Mandhir	Coimbatore	No.9, Nethaji Nagar 5th Cross Extn, Bharathi Street, Nanjundapuram Road, Coimbatore –641036.	1-8-2018	Feb 2019
3	Kalashrishti Institute of Fine Arts, 3/2B Garcha 1st Lane, Kolkata.	Kolkata	3/2B Garcha 1st Lane, Kolkata – 700 019.	16-7-2018	20-12-2019
4	Natannam School of Classical Arts, Thamaraserry, Kozhikode, Kerala.	Kerala	P.o.Box. 673573, Kozhikode, Kerala	15-7-2018	Feb 2019
5	Natannam School of Classical Arts, Ernakkulam, Kerala.	Kerala	P.o.Box. 682503, Ernakulam(Cochin), Kerala	15-7-2018	Feb 2019

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	வெளிநாடு/ மாநிலம்	முகவரி	ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்
6	Sakthi Kavin Kalai Academy	Melmaru vathur.	No.1, GST Road, Adhavan Plaza, Melmaruvathur.	27-7-2018	-----
7	House of Tamil Culture – Library, Tamilnadu House.	New Delhi.	No.9, Tikendrajit Marg, Chanakyapuri, New Delhi.	18-7-2018	7-3-2020
8	Bhasha Sangam	Allahabad (U.P)	67/40 Tularam Bagh, Allahabad 21106.	1-8-2018	-----
9	Velammal Bodhi Campus	Thanjavur	Thanjavur – 613005.	7-6-2019	7-6-2019
10	Thiruchirappalli Diocesan Educational Society.	Thiruchi rappalli	Amalorpavi Office Complex, No.4, Dindigul Road, Tiruchirappalli P.o.Box, 620001,	22-8-2019	22-8-2019
11	Muththamizh Isai Kalai Koodam	Thiru verkadu, Chennai	36, Mettu Street, Maadhiravedu, Thiruverkadu, Chennai – 600 077	13-9-2019	13-9-2019
12	Shivasakthi Kalashetram	Thiruvanantha puram	Sree venkatisam, Karoor, Pothencode, Thiuvananthapuram, Pincode - 695584,	25-11-2019	25-11-2019
13	Shiva Mallari, Kolkata	West Bengal.	Radhalaya, Purba Golapbag, P.O. Sheoraphuli, Hooghly, West Bengal -712223	2-12-2019	2-12-2019
14	Kairalai Nritha Kalalayam	Pammal, Chennai	G-3, Sruthilaya Sapthagiri Apartments, No.18, L.I.C. Colony III Street, Pammal, Chennai – 600 075,	23-12-2019	23-12-2019

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள உள்நாட்டு நிறுவனங்களின் விவரம்

வ. எண்	புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர்	வெளிநாடு/ மாநிலம்	முகவரி	ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்	கூடுதல் ஒப்பந்தம் செய்யப் பட்ட நாள்
15	Chinna Nadar Kesari Memorial Tust	Marthandam, Kaniya kumari	Gnaram Vilai, Pacode(PO), K.K. Dist – 629 168.	3-1-2020	3-1-2020
16	Gurupriya Laya Vidhyalaya Music Academy	Kaniya kumari.	17/150 Vijaya complex, Monday Market, Neyoor(PO), Kanyakumari(D) – 629 802,	22-1-2020	22-1-2020
17	Sri Vadi vudaiamman Natiyalaya	Thiruvettriyur, Chennai.	G1, 18/3, Kanakkar Street, Raj Emerald Flats, Tiruvottiyur, Chennai – 600 019	28-1-2020	28-1-2020
18	Adalvallan Naatiyalaya	Kumbakonam.	No.5/155 Vandikkara Street, Saakottai, Kumbakonam - 612401	13-3-2020	13-3-2020

ஏற்கெனவே சேர்க்கப்பட்ட இலங்கைவாழ் தமிழ் மாணவர்களின் நலன் கருதி இலங்கை, யாழ்ப்பாணத்தில் 150 மாணவர்களுக்குத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்தப் பட்டங்கள் பெறுவதன் மூலம் அந்த மாணவர்கள் இலங்கையில் விரைந்து வேலைவாய்ப்பினைப் பெற வழிவகை கிட்டியுள்ளது. வரும் ஆண்டில் பண்பாட்டு மையத்திற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பெரும் வரவேற்பு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

5.14. மாணவர் கலை, பண்பாட்டு விழாக்கள்

- ❖ மாணவர்களுக்கான கலை விழா, பல்கலைக்கழக நிறுவன நாள், ஆசிரியர் நாள், உலக மகளிர் நாள், உலகச் சுற்றுச்சூழல் நாள், யோகா நாள், உலகத் தாய்மொழி நாள் மற்றும் பொங்கல் விழா போன்றவையும் நடத்தப்பட்டு வருகின்றன.
- ❖ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் கலை ஈடுபாட்டை மேம்படுத்த பல்வேறு நாட்டுப்புற இசைக்

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள உள்நாட்டு நிறுவனங்களின் விவரம்

கருவிகளான பறை, உறுமி, கொம்பு, துடும்பு போன்ற கருவிகள் வாங்கப்பட்டு 35 மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் பொங்கல் விழாவில் நடத்தப்பட்டன.

- ❖ தமிழ்ப் பல்கலைக்கழக மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகக் கபடி அணியினர் நவம்பர் 2019 இல் மங்களூரில் நடைபெற்ற தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டியில் கலந்துகொண்டனர். செப்டம்பர் 2019 இல் தஞ்சாவூரில் மாநில அளவில் நடைபெற்ற கபடி போட்டியில் முதலிடம் பெற்றனர். சனவரி 2020 இல் தஞ்சாவூர், பெரியார் மணியம்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கபடிப் போட்டியில் கலந்துகொண்டனர்.
- ❖ பல்கலைக்கழகக் கைப்பந்து அணியினர் விஜயவாடாவில் நவம்பர் 2019 இல் தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டனர்.
- ❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செந்திணை நண்பர்கள் என்ற அமைப்பு சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்களிடம் உருவாக்குவதற்காக 15-8-2019 அன்று தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றது.
- ❖ தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுநலப்பணித் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவிகளுக்கு உளவியல் விழிப்புணர்வு முகாம் நீலகிரி கிராமத்தில் டிசம்பர் 2019 இல் நடைபெற்றது. 12000 பனை விதைகள் தமிழ்ப் பல்கலைக்கழக வளாக எல்லையோரங்களில் முழுவதும் போடப்பட்டுள்ளன.

5.15. நூல் வெளியீடு மற்றும் விற்பனை

பதிப்பில் இல்லாத நூல்களை வெளியிட தமிழக அரசின் நல்கையில் தொடர்ந்து நான்காண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் இரண்டு கோடி வீதம் ரூபாய் எட்டு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பெற்றது. அதில் முதற்கட்டமாக

ரூபாய் இரண்டு கோடி செலவில் 216 அரிய நூல்களை மறுபதிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக விற்பனைப் பிரிவிலும், ஒவ்வோர் ஆண்டும் ஈரோடு மற்றும் சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிகளிலும் நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் ரூபாய் 9,49,379/- மதிப்பில் நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான பல்கலைக்கழக நிறுவன நாள் விழாவின்போதும் தமிழ்ப் புத்தாண்டு நாளின்போதும் ஆய்வாளர்களும், அறிஞர்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும், பொது மக்களும் பயன்பெறும் வகையில் 50 விழுக்காடு கழிவு விலையில் நூல்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், பணியாளர்கள், ஆய்வாளர்கள் ஒருமுறை அனைத்து நூல்களையும் 50 விழுக்காடு கழிவில் பெற்றுக்கொள்ளும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அச்சகத்தின் வழியாகத் தொலைநிலைக் கல்விப் பாட நூல்கள் தொடர்ந்து அச்சிடப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகச் செய்தி மலர் புத்துயிர்ப்போடு பல்கலைக்கழக ஆராய்ச்சிச் செயன்மையை, உலகுக்கு உரக்க அறிவிக்க 'தமிழி' எனும் அடையாளப்பெயருடன் காலாண்டு இதழாக செப்டம்பர் 2019-லிருந்து வந்து கொண்டிருக்கிறது.

5.16. முது முனைவர் வ.அய். சுப்பிரமணியம் நூலகம்

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,83,512 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள், பொது மக்கள் பயன்படுத்திவருகின்றனர்.

1-1-2019 முதல் 31-12-2019 ஆம் நாள் முடிய நூல் சேர்க்கைப் பிரிவில் கல்வியாளர்களின் திட்டம் மற்றும் களஞ்சிய மையம் வழியாகத் தமிழில் 1704 நூல்களும் ஆங்கிலத்தில் 674 நூல்களும், அன்பளிப்பாக 633 நூல்களும் பெறப்பட்டு மொத்தம் 3011 நூல்கள் புதிதாக நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

5.17. தொலைநிலைக் கல்வி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2006-2007 ஆம் கல்வியாண்டில் தொலைநிலைக் கல்வி இயக்ககம் தொடங்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியக்குழுவின் அனுமதியின் அடிப்படையில், 2020 நாட்காட்டி ஆண்டுக்கான 15 முதுநிலை பட்டப் படிப்புகளும், இளங்கல்வியியல் படிப்புகளுக்கான சேர்க்கை நடைபெற்று வருகின்றன. 6 முதுநிலைப் பட்டயப் (Post Graduate Diploma) படிப்புகளும், 26 பட்டயப் (Diploma) படிப்புகளும், 13 சான்றிதழ் (Certificate courses)படிப்புகளும், அடிப்படைக்கல்வியாக அறிமுகநிலைப் படிப்பு என 56 பாடப்பிரிவுகளில் சேர்க்கை நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட படிப்புகளில் 3000 மாணவ, மாணவியர்கள் சேர்க்கை பெற்று பயின்று வருகின்றனர்.

2020-2021 கல்வியாண்டு முதல், துறைகள் சார்ந்த பாடங்கள் மட்டும் நடத்த முடிவு செய்யப்பட்டு, 19 பாடங்களுக்கு அங்கீகாரம் கோரி பல்கலைக்கழக நல்கை குழுவிற்குக் கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது.

5.18. 2019-2020 ஆம் ஆண்டில் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்ட நல்கை

2019-2020 ஆம் ஆண்டில் தமிழக அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குப் பின்வரும் விவரப்படி நல்கை வழங்கியுள்ளது:

வ. எண்	தலைப்பு	ரூ. இலட்சத்தில்
1	தொகுப்பு நல்கை முதல் மற்றும் இரண்டாம் தவணை	190.60
2	மூன்றாவது தவணை மற்றும் நான்காம் தவணை	1245.98
3	2015-2016 கூடுதல் ஊதியச் செலவினம்	755.67
4	2016-2017 கூடுதல் ஊதியச் செலவினம்	738.77
கூடுதல்		2931.02

மேலும் 2019-2020 ஆம் ஆண்டில் தமிழகச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பின்வரும் திட்ட நல்கைகளும் பெறப்பட்டுள்ளன:

வ. எண்	தலைப்பு	ரூ.
1	தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஆய்விருக்கை நிறுவுவதற்கு வைப்புத் தொகை	1,00,00,000
2	அயல்நாட்டு தமிழ் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான இலக்கிய இலக்கண பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் தொடராச் செலவு	30,00,000
3	தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளை சிறப்பு சீர்காப்பு செய்திட தொடராச் செலவு	29,64,052
4	வருகை தரும் பேராசிரியர்களையும் இலக்கிய ஆளுமைகளையும் அழைத்தல் தொடர் செலவினம்	36,00,000
5	முதுகலை இலக்கிய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை	12,54,000
	கூடுதல்	2,08,18,052

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையிலிருந்து RUSA (Rashtriya Uchchatav Shiksha) திட்டத்தின்கீழ் பின்வரும் விவரப்படி ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்தவணையாக ரூ.10.00 கோடி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வ. எண்	தலைப்பு	ஒதுக்கீட்டு தொகை ரூ.
1.	புதிய கட்டடம்	ரூ.10.00 கோடி
2.	உட்கட்டமைப்பு வசதி	ரூ.6.00 கோடி
3.	ஆய்வுக் கருவிகள் மற்றும் உபகரணங்கள்	ரூ.4.00 கோடி
	மொத்தம்	ரூ.20.00 கோடி

மேலும், 2019-2020 நிதியாண்டில் பிறநிறுவன நல்கைகள் பின்வரும் விவரப்படி பெறப்பட்டுள்ளன:

வ. எண்	விவரம்	ரூ.
1.	INSA–(Indian National Science Academy) முனைவர் வீ. செல்வகுமார்	1,50,000
2.	EAP–(Endangered Archives Programmes) முனைவர் மோ.கோ. கோவைமணி	18,41,850
3.	ICPR–(Indian council of Philiosophical Research) முனைவர் பி. பாலச்சந்திரன்	30,000
4.	RMVS-(Rajya Marathi Vikas Sanstha) முனைவர் த. கண்ணன் மற்றும் முனைவர் த. ஆதித்தன்	1,49,356
5.	NHRC-(National Human Rights Commission) முனைவர் ஞா. பழனிவேலு	33,750
6.	UGC–STRIDE (University Grants Commission- Scheme for Trans Disciplinary Research for India's Developing Economy) முனைவர் வீ. செல்வக்குமார்	2,00,000
7.	NMM- (National Mission for Manuscripts) முனைவர் மோ. கோ. கோவைமணி	7,50,000
	கூடுதல்	31,54,956

பல்கலைக்கழக மானியக்குழு 12-வது ஐந்தாண்டுத் திட்ட காலம் 31-3-2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஒதுக்கீட்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ.324.80 இலட்சம் பயன்பாட்டுச் சான்றிதழ் அளிக்கப்பட்டதும் பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்து மீளப் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2018-2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தமிழக அரசின் அரசாணைகளின்படி புதியதாக நிறுவப்பட்டுள்ள யோகா மையம், சிற்பக்கலைக் கூடம், தமிழ் வளர் மையம் மற்றும் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஆகியவற்றிற்கான தொடர் நல்கைகள் பெறப்படவுள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள 81 அறக்கட்டளைகளிலிருந்து ஈட்டப்பெறும் வட்டியிலிருந்து சிறப்புச் சொற்பொழிவுகளும், பரிசுப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அறக்கட்டளைகள் விவரம் வருமாறு:

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட அறக்கட்டளைகள்

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
1.	தமிழக இந்து சமய ஆலயங்களின் அறக்கட்டளைகள்	இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை	2178388
2.	மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா அறக்கட்டளை	செய்தி மற்றும் தகவல்தொடர்புத் துறை, தமிழக அரசு	254000
3.	பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா ஆய்வு இருக்கை	தமிழக அரசு	193575
4.	திரு. ஏ.டி. பன்னீர்செல்வம் அறக்கட்டளை	தமிழக அரசு	3802498
5.	பாரதியார் அறக்கட்டளை	தமிழக அரசு	3836592
6.	திருமதி வசுமதிபாரதி, டாக்டர் நாவலர் சோமசுந்தரபாரதி அறக்கட்டளை	திருமதி மீனாட்சி, மரு. லலிதா காமேசுவரன், சென்னை	24566
7.	நீதிபதி மகராசன் நினைவு அறக்கட்டளை	டி.கே.சி. வட்டத்தொட்டி, சென்னை	20019
8.	திரு. சரவண முதலியார், முதல்வர், சரவண ஆறுமுக முதலியார் சைவ சித்தாந்த சொற்பொழிவு	பேரா. எஸ். ஆறுமுக முதலியார், சென்னை	37703

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
9.	பன்னிருதிருமுறை அறக்கட்டளை	திருமதி ருக்குமணி கிருட்டிணசாமி, சென்னை	227569
10.	தொல்காப்பியம் அறக்கட்டளை	தமிழ்ப் பல்கலைக்க ழகம், தஞ்சாவூர்	1476171
11.	தமிழ்ப் பண்ணிசை பாதுகாத்தல்	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	1063540
12.	மெலட்டூர் ஞானாம்பாள் சுவாமிநாதன் நாடகத் தமிழ் அறக்கட்டளை	பேரா. மேலூர் அ. கிருட்டிணமூர்த்தி, தஞ்சாவூர்	20799
13.	கிறித்துவ இருக்கை	பேரருள் தந்தை வி.எஸ். செல்வநாதர், பாண்டிச்சேரி	158252
14.	சேதுராமன் கிருட்டிணசாமி அறக்கட்டளை	திரு. கிருட்டிண சுவாமிப்பிள்ளை கைலாஷ், சென்னை	30794
15.	கோட்டூர் அரங்கசாமி முதலியார் எஸ்டேட், மன்னார்குடி	கோட்டூர் அரங்கசாமி முதலியார் எஸ்டேட், மன்னார்குடி	535636
16.	முனைவர் ச. மெய்யப்பன் அறக்கட்டளை	முனைவர் ச. மெய்யப்பன், அண்ணாமலை நகர்	52000
17.	டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளை	ஏ. சபாபதி, சிதம்பரம்	60000
18.	தெலுங்கு இருக்கை	தெலுங்கு பல்கலைக்கழகம், ஐதராபாத்	350000

[2020 மார்ச் 24

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவனர்	2019-2020 மதிப்பு
19.	பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளை	பேரா மது.ச. விமலானந்தம், தஞ்சாவூர்	22992
20.	திரு. யு. சுப்பிரமணியன் அறக்கட்டளை	யு. சுப்பிரமணியன், தஞ்சாவூர்	133701
21.	திரு. ஏ.வி. மெய்யப்பர், திரு. ம.பொ. சிவஞானம், திரு. நெ.து. சுந்தரவடிவேலு அறக்கட்டளை	பேரா. ந. சஞ்சீவி, சென்னை	44200
22.	தென்னாப்பிரிக்கா ரெங்கசாமிப்பிள்ளை பரிசு அறக்கட்டளை	திரு. ர. சுப்பிரமணியப். பக்கிரிப் பிள்ளை, தென்னாப்பிரிக்கா	23145
23.	தென்னாப்பிரிக்கா ரெங்கசாமிப்பிள்ளை சொற்பொழிவு அறக்கட்டளை	திரு. ர சுப்பிரமணியப் பக்கிரிப்பிள்ளை, தென்னாப்பிரிக்கா	16145
24.	தஞ்சாவூர் திரு. எஸ். என்.எம். உபயதுல்லா அறக்கட்டளை	தஞ்சாவூர் எஸ்.என்.எம். உபயதுல்லா, தஞ்சாவூர்	50265
25.	அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் நினைவு அறக்கட்டளை	டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, சென்னை	247264
26.	முனைவர் சி. ஏசுதாசன் நினைவு அறக்கட்டளை	எஸ். பீனாராய் ஏசுதாசன்	12508
27.	திரு. ஆபிரகாம் பண்டிதர் நினைவு தமிழிசைப்போட்டி அறக்கட்டளை	டாக்டர் ஏ.ஜே. முத்தையா பாண்டியன்	49345

2020 மார்ச் 24]

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
28.	திரு. ஆபிரகாம் பண்டிதர் நினைவு சொற்பொழிவு அறக்கட்டளை	டாக்டர் ஏ.ஜே. முத்தையா பாண்டியன்	43113
29.	திரு. எம். பக்தவத்சலனார் நினைவு அறக்கட்டளை	திரு. சித்தரஞ்சன் பக்தவத்சலம்	55685
30.	மூலிகைமணி திரு. கண்ணப்பர் அறக்கட்டளை	திரு.கே.வெங்கடேசன், நாமக்கல்	17400
31.	திரு. நீலம் யக்னநாராயணன் நினைவு சொற்பொழிவு அறக்கட்டளை	திரு என். அரிநாராயணா, சென்னை	13100
32.	பாரதி சங்கீத வித்யாலயா, கல்லுக்குழி, திருச்சி அறக்கட்டளை	பாரதி சங்கீத வித்யாலயா, கல்லுக்குழி, திருச்சி	19000
33.	திவான்பகதூர் தி.மு. நாராயணசாமிப் பிள்ளை பிறந்தநாள் நூற்றாண்டுவிழா	திரு டி.என். இராமசாமி, திருச்சி	17500
34.	திரு. சி.ஆர்.வி. சுப்பன் நினைவு அறக்கட்டளை	குருமுருகநிதி கவுடா, நீலகிரி	64464
35.	அத்திக்கடை திருவாளர் வி.எம். சையதுகனி நினைவு இசுலாமிய இலக்கிய பண்பாட்டு இருக்கை	திரு வி.எம். சையதுகனி, மலேசியா	1054000
36.	மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பெயரிலான தமிழிசைப் போட்டி அறக்கட்டளை	டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, சென்னை	288605

[2020 மார்ச் 24

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
37.	ஔவை தமிழ் அறக்கட்டளை	முனைவர் து. ஔவை நடராசன்	16200
38.	திருமதி ஹாசியா அசீனா நயினார் அறக்கட்டளை	முனைவர் சி. நயினார் முகமது, திருச்சி	30042
39.	திருமுருக கிருபானந்தவாரியார் அறக்கட்டளை	திரு. ஏ.ஆர். செயக்குமார், சாத்தூர்	19000
40.	டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் அறக்கட்டளை சொற்பொழிவு	முனைவர் சு. சக்திவேல்	29016
41.	காசி. குமரகுருபரர் மாநாட்டு நினைவு அறக்கட்டளை	காசி. குமரகுருபரர் மடம்	63066
42.	பதிப்பகச் செம்மல் அமரர் ச. கணபதி நினைவு அறக்கட்டளை	திரு. ஆர். ராஜமோகன், சென்னை	52013
43.	பேரா. சுந்தரசண்முகனார் அறக்கட்டளை சொற்பொழிவு	பேரா. சுந்தரசண்முகனார்	25010
44.	திருமதி அன்னபூரணி இராமநாதன் நினைவு அறிவியல் தமிழ் அறக்கட்டளை	முனைவர் இராம. சுந்தரம், மதுரை	31047
45.	முனைவர் மேஜர் மகாதேவன் ஒப்பிலக்கிய அறக்கட்டளை	முனைவர் கதிர்மகாதேவன்	32795

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
46.	பெருமள்ளர் திரு. மா. அருணாசலம் பழனியாயி அறக்கட்டளைச் சொற்பொழிவு	முனைவர் அருணா இராசகோபால், கோவை	34900
47.	திரு. இரா. சுப்பராயலு மேலாண்மையியல் அறக்கட்டளை	திரு. இரா. சுப்பராயலு, தஞ்சாவூர்	20173
48.	புலவர் ப. குருசாமி கல்வி அறக்கட்டளை	புலவர் ப. குருசாமி, தூத்துக்குடி	127988
49.	திரு. க. பொ. இரத்தினம் அறக்கட்டளைச் சொற்பொழிவு	முனைவர் க. பொ. இரத்தினம், சென்னை	10000
50.	பேரா. முனைவர் செல்வி க. தங்கமணி நினைவு ஆய்வு நிதியுதவி அறக்கட்டளை	முனைவர் க. வசந்தா ஆறுமுகம், தஞ்சாவூர்	64050
51.	முனைவர் ம. நடராசன் அறக்கட்டளை	முனைவர் ம. நடராசன்	577196
52.	திருமதி செண்பகம் சுப்பையா நினைவு அறக்கட்டளை	முனைவர் சு. இராசாராம், நாகர்கோயில்	27328
53.	திரு. கிருஷ்ணசாமி இராசம்மாள் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு	முனைவர் கி. அரங்கன், தஞ்சாவூர்	21000
54.	பேரா. முனைவர் கணபதிஐயர் திருமதி இராஜம் கணபதிஐயர் அவர்கள் நினைவு அறக்கட்டளை	முனைவர் க. சாந்திசோமசுந்தரம்	40047

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
55.	வேதாத்திரி மகாிஷி நினைவு அறக்கட்டளை தத்துவ சிந்தனைகள் நூற் படைப்புகள்	திரு எஸ்.கே.எம். மயிலானந்தன், ஈரோடு	200000
56.	தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அறக்கட்டளை	டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், சென்னை	629716
57.	திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அறக்கட்டளை	பொ. சம்பந்தம், தஞ்சாவூர்	50488
58.	சிங்கப்பூர் தமிழவேள் கோ. சாரங்கபாணி ஆய்வு இருக்கை	எம். ஏ. முஸ்தபா, சிங்கப்பூர் பங்குகள்	47000
59.	எழுத்தாளர் த. ஜெயகாந்தன் அறக்கட்டளை	முனைவர் கே.எஸ்.சுப்பிரமணியன்	107700
60.	பாரதரத்னா சி. சுப்பிரமணியம்	முனைவர் கே.எஸ். சுப்பிரமணியன்	100000
61.	தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்க அறக்கட்டளை	த.ப.க. முன்னாள் மாணவர்கள்	107500
62.	தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்க கருத்தரங்கு அறக்கட்டளை	த.ப.க. முன்னாள் மாணவர்கள்	100000
63.	முது முனைவர் வ.அய். சுப்பிரமணியம் நினைவு அறக்கட்டளை	தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள்	260328

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
64.	முது முனைவர் தி.நா. இராமச்சந்திரன் சைவசமய அறக்கட்டளை	திரு தி.ந. இராமச்சந்திரன்	100000
65.	வாங்கலாம்பாளையம் செல்லப்பன் குழந்தைசாமி (குலோத்துங்கன்) அறக்கட்டளை புலமைத் தொகை	டாக்டர் இரா. பழனிசாமி, சென்னை	326750
66.	தந்தை பெரியார் அறக்கட்டளை	முனைவர் பெ. இராமலிங்கம், தஞ்சாவூர்	50000
67.	பேரா.தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அறக்கட்டளை	முனைவர் இரா. குழந்தைவேலு, லால்குடி	150000
68.	பேரா.முனைவர் ச. அகத்தியலிங்கனார் நினைவு அறக்கட்டளை	முனைவர் ச. அகத்தியலிங்கனார் அறக்கட்டளைக்குழு	150000
69.	பேரா முனைவர் செ. வை. சண்முகனார்	முனைவர் ச. அகத்தியலிங்கனார் அறக்கட்டளைக் குழு	40000
70.	தஞ்சை பெரியகோவில் அறக்கட்டளை	திரு ராஜூ குணசேகரன், சிங்கப்பூர்	105800
71.	உமறுப்புலவர் அறக்கட்டளை	இசுலாமிய பண்பாடு அறக்கட்டளை	109500
72.	அறிவுலக மாமேதை அண்ணல் அம்பேத்கர் நினைவு அறக்கட்டளை	நிருவாக இயக்குநர், நவசக்தி டவுன்ஷிப் டெவலப்பர் பிரைவேட் லிட்	100000

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
73.	பேராசிரியர் எ. சுப்பராயலு, பேராசிரியர் செ. இராசு அறக்கட்டளை (கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்)	அறக்கட்டளை ஏற்பாட்டுக் குழு, நீரகழாய்வு மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம்	100000
74.	பேராசிரியர் எ. சுப்பராயலு, பேராசிரியர் செ. இராசு அறக்கட்டளை (கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல்)	அறக்கட்டளை ஏற்பாட்டுக்குழு, நீரகழாய்வுமையம், தமிழ்ப் பல்கலைக்கழகம்	100000
75.	பத்மஸ்ரீ டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் நினைவு அறக்கட்டளை	சென்னை ஆதித்தனார் கல்வி நிறுவனம்	1025158
76.	முனைவர் யூஷி அறக்கட்டளை	முனைவர் யூஷி	629146
77.	மத்திய செம்மொழி தமிழாய்வு மையம் - தொல்காப்பியம் இருக்கை	சிஐசிடி-யிடமிருந்து பெறப்படும் தொகையிலிருந்து	-
78.	டாக்டர் சரோஜாபாண்டியன் நினைவு அறக்கட்டளை	மதுரை புகழேந்தி பாண்டியன் அவர்கள்	928778
79.	பேராசிரியர் முகிலை இராசபாண்டியன் அறக்கட்டளை	சென்னை முகிலையார் தமிழ்ச்சோலை செயலாளர் க.மணிமேகலை கந்தசாமி	100000
80.	கவியோகி நாச்சிக்குளத்தார் கல்வி அறக்கட்டளை	ஹாஜி மு. முகமது யூசுப்	100000

வ. எண்	அறக்கட்டளை பெயர்	நிறுவுனர்	2019-2020 மதிப்பு
81.	பேராசிரியர் ந. அதியமான் கல்வி அறக்கட்டளை	முனைவர் சு. இராசவேலு, சென்னை, ஒருங்கிணைப்பாளர்	125000
		கூடுதல்	2,35,11,269

2020-2021 ஆம் நிதியாண்டில் பின்வரும் நல்கைகள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வ. எண்	தலைப்பு	நல்கைத் தொகை ரூ. இலட்சத்தில்
1.	தொகுப்பு நல்கை	2,491.96
2.	2017-2018 கூடுதல் ஊதியச் செலவினம்	975.68
3.	கல்வி நிலை 7 வது ஊதியக் குழு நிலுவை	213.65
4.	ஓய்வூதியச் செலவு மீளப்பெறல்	1,246.18
	கூடுதல்	4,927.47

5.19. எதிர்காலத் திட்டங்கள்

❖ இந்திய நடுவண் அரசின் ஒருங்கிணைந்த உயர்கல்வி வளர்ச்சித் திட்டம் (RUSA- Rastriya Uchatar Shiksha Abhiyan) மூலமாக ஒதுக்கீடு பெற்றுள்ள ரூ.20.00 கோடிக்கான திட்டங்களை நிறைவேற்றி அடுத்த ஆண்டில் பெருந்திட்ட ஆய்வுகள், பன்னாட்டுக் கருத்தரங்குகள், ஆய்வரங்கங்கள் ஆய்வுத் திட்டப் பணிகள் ஆகியவற்றிற்கு நிதிநல்கை பெற உரிய முன்மொழிவுகள் அளிக்கப்பட்டு ஆய்வுகள் விரிவுபடுத்தப்படும்.

❖ தமிழ்ப் பல்கலைக்கழக 'குன்றம்' வளாகம், தஞ்சாவூர் மாநகரின் நுழைவுப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்ட காவல்

துறை அலுவலகத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. அரண்மனை வளாகத்தில் தற்போது செயற்பட்டுவரும் அருங்காட்சியகத்திற்குப் பார்வையாளர்களின் வருகை ஒருவழிப் பாதை அமைப்பினால் மிகவும் குறைந்துள்ளது. மேலும் அக்கட்டடம் மிகவும் சிதிலமடைந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் குன்றம் பகுதியில் அருங்காட்சியகத்தை மாற்றிடவும், கீழடி ஆய்வுக் காட்சி அரங்கத்தைத் தமிழக அரசின் தொல்லியல் துறையின் உதவியுடன் நிரந்தரமாக அமைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

❖ பசுமை வளாகம் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் நடப்பட்ட தைல மரங்கள் தற்பொழுது 15 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் வழியாக மூன்றாம் கட்ட வெட்டும்பணி நடைபெற்று வருகிறது. தைல மரங்களின் ஆயுள் நிறைவடைந்துள்ளதால் வேருடன் அகற்றவும் தமிழக அரசின் வனத் துறை உதவியுடன் ஏறத்தாழ 500 ஏக்கர் அளவிற்கு புதிதாக மரங்கள் நடுவதற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாநகரத்தின் சுவாசப்பையாகத் திகழும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பசுமை வளாகம் மேலும் மேம்படுத்தப்படும்.

மதிப்புறு முனைவர் பட்டம்

❖ மொரிசீயஸ் நாட்டின் மேனாள் அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்களுக்கும், நாட்டார் வழக்காற்றியல் புலத்தின் முன்னோடி ஆய்வாளர்களில் ஒருவரான திரு. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும், சிறுகதை எழுத்தாளர்-கவிஞர் திரு. தி. கல்யாணசுந்தரம் என்கிற வண்ணதாசன் அவர்களுக்கும் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. மூவருக்கும் வழங்கப்பட்ட இந்த மதிப்புறு முனைவர் பட்டம் குறித்து தமிழ்கூறும் நல்லுலகில் பெருமிதமும் பாராட்டும் கிட்டியுள்ளது. வருங்காலங்களில் இதுபோன்று தகுதியுடையோருக்கு மதிப்புறு முனைவர் பட்டங்கள் வழங்கப்படும்.

கதிரொளி மின் திட்டம் (Solar Energy)

❖ தமிழக அரசின் மின்சக்தி மேம்பாட்டு முகமை (TEDA) வழியாக 71 கிலோ வாட் அளவிற்குத் தாழ்வழுத்த

மின்வழங்கல் இணைப்புகளான மகளிர் விடுதிகள் மற்றும் மூலிகைப் பண்ணை ஆகியவற்றின் கதிரொளித் திட்டத்தினை 25 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசின் மின் துறை வழிகாட்டுதலின்படி உயரழுத்த மின் நிலையப் பகுதிக்குக் கதிரொளித் திட்டம் வழங்க இடர்பாடுகள் உள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழக உயர்அழுத்த மின்நிலையப் பகுதியில் நிருவாக மற்றும் துறைக் கட்டடங்கள் அமைந்துள்ளன. ஆண்டொன்றுக்கு ரூ.36.00 இலட்சம் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. உயரழுத்த மின்நிலைய வளாகத்தில் சிறப்பினமாகக் கதிரொளித் திட்டத்தை அமைக்கும்படி தமிழக அரசின் மின்சக்தி மேம்பாட்டு முகமைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி பெறப்படாத நிலையில் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் போன்ற பொதுத் துறை நிறுவனங்கள்வழி வரும் ஆண்டில் கதிரொளித் திட்டம் செயற்படுத்தப்படும்.

❖ தமிழ்ப் பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாக உள்ள நிலையில் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம், கல்வியியல் பட்டப் படிப்பு ஆகிய படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ் வழியில் இளங்கலை தமிழ், இளங்கலை வரலாறு, இளங்கலை மானிடவியல், இளங்கலை இதழியல் மற்றும் ஊடகவியல் ஆகிய படிப்புகளை நடத்திட பல்கலைக்கழகக் கல்லூரி (University College) ஒன்று தொடங்கப்பட உள்ளது. இதன்மூலம் மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்தவுடன் இளம்பருவத்திலேயே ஆய்வுகளுக்கு மாணவர்களை ஆற்றுப்படுத்த முடியும். மேலும் தமிழக அரசு தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு 20% வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வகை செய்திருக்கும் நிலையில் இக்கல்லூரி அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். கல்வி நிறுவனங்களுக்கான தரவாிசை நிர்ணய அமைப்பில்-(NIRF-National Institutional Ranking Framework) தமிழ்ப் பல்கலைக்கழகம் இணைவதற்கும் வழிவகை ஏற்படும்.

❖ வருகின்ற செப்டம்பர் 15, 2020 இல் 40 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இந்திய அளவில் ஒருவர், பன்னாட்டு அளவில் ஒருவரென

'துறைபோகிய அறிஞர்களின் ஆய்வுப்பேருரைத் தொடர்' நிகழ்ச்சி தொடங்கப்படவுள்ளது.

இயல்-6

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

6.1 தோற்றம்

கன்னல் தமிழைக் கார்முகிலென உயர்த்த உலகத் தமிழர்களையும் உலகத் தமிழ் அமைப்புகளையும் ஒன்றிணைத்து ஒரு குடையின்கீழ் கொண்டுவரும் சீரிய நோக்கத்தினைக்கொண்டு சங்கங்கள் முகிழ்த்துத் தமிழ் வளர்த்த மாநகர் மதுரையில் 1981 ஆம் ஆண்டில் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் பாரதரத்னா எம். ஜி.ஆர் அவர்களால் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது; 1986 இல் தொடங்கப்பெற்றது. மேனாள் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2012 ஆம் ஆண்டு எழில் பெற்றது உலகத் தமிழ்ச் சங்கம். உலகத் தமிழ்ச் சங்க வானளாவிய கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு கடந்த 2016 மார்ச் 1 ஆம் நாளன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் உயர்ந்தோங்கும் மதுரையின் மணிமகுடமாகிய உலகத் தமிழ்ச் சங்கக் கட்டடம் ரூபாய் 25 கோடி மதிப்பில் கட்டப்பட்டு ரூபாய் 12.25 கோடி மதிப்பில் கட்டடத்தினை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளாகத்தில் இரண்டு கூட்ட அரங்குகள், நிருவாகப் பிரிவு, ஆய்வுப் பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, நிருவாகக் குழு மற்றும் பொதுக் குழுக் கூட்ட அரங்கம், 400 பேர் அமரக்கூடிய வகையில் கலையரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்திற்கு அரண் போன்று விளங்கும் சுற்றுச்சுவரில் திருக்குறள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழறிஞர்களும் ஆய்வு மாணவர்களும் பயன்பெறும்வகையில் 20,000-க்கும் மேற்பட்ட நூல்களுடன் நூலகம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பொது நூலகத் துறையின் நூலகம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் விரைவில் அமையப் பெறவுள்ளது. 14.15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகம் இயற்கை வளம்

பெருகும்வகையில் மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய பொலிவுமிகு வளாகத்தைப் பார்வையிடுவதற்காகவும் இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகவும் அயல்நாட்டுத் தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்தோடு வருகைபுரிந்து வருகின்றனர்.

மதுரையின் தலைசிறந்த அடையாளங்களில் ஒன்றாகவும் தமிழுக்கான தனித்த இடமாகவும் மாறியுள்ள உலகத் தமிழ்ச் சங்கம் இன்பத் தமிழின் பெருமையைத் தரணிக்கு உணர்த்தும் வகையில் தன்முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

6.2 சங்க அமைப்பு நோக்கம்

- தமிழ் வளர்ச்சியில் பங்களித்து வரும் நிறுவனங்கள், தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சங்கங்கள், ஆய்வு மையங்கள் ஆகியவற்றின் விவரங்களைத் தொகுத்தல் மற்றும் பதிவு செய்தல்.
- தமிழ் வளர்க்கும் உயரிய நோக்கத்துடன் கூட்டமைப்பினை உருவாக்கிட உலகத் தமிழ் அமைப்புகளை ஒரு குடையின்கீழ் கொண்டு வருதல்.
- உலக நாடுகளுக்கெல்லாம் தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, தமிழ் மொழி பற்றிய செய்திகளைக் கொண்டு செல்லுதல்.
- உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறை, இலக்கியப் பணி ஆகியவற்றைத் தொகுத்து வழங்குதல்.
- அயலகத் தமிழர் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.
- பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, பிரெஞ்சு கயானா, அமெரிக்கா, பிரான்சு, ஆசுதிரேலியா, நியூசிலாந்து, குவைத் ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.

[2020 மார்ச் 24

- ❖ அயலகத் தமிழர்கள் தமிழ் இலக்கியங்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- ❖ உலகத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக உலக நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள், தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம் அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
- ❖ ஆண்டுதோறும் தமிழர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டினைத் தெரிவு செய்து அந்நாடுகளுக்குச் சென்று ஆய்வரங்கங்கள், கருத்தரங்கங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்தல்.
- ❖ தமிழகத்தின் தனிச் சிறப்புமிக்க கலைகளான சிற்பக் கலை, ஓவியக் கலை, நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அறிந்து தெளிய வாய்ப்புகளை உருவாக்குதல்.

6.3 பணியாளர் அமைப்பு

ஆன்றோர் தமிழ் வளர்த்த பெருமைமிகு மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் நிருவாகப் பணிகளும், திட்டப் பணிகளும் விரைவாகவும் சரியாகவும் செயல்படுவதற்கு ஏதுவாக இயக்குநர், நிதி அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு நிருவாகப் பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும், ஆய்வுப் பணிகளும் திட்டப் பணிகளும் உரிய வழியில் சீருடன் நடைபெற ஆய்வறிஞர், ஆய்வு வளமையர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு ஆய்வுப் பணிகளும் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நூலகர், தட்டச்சர், மின்னிதழ் உருவாக்குநர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. தூய்மைப் பணிக்கென துப்புரவாளர் பணியிடமும் நிரப்பப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர வெளிமுகமை வாயிலாக 6 துப்புரவாளர்கள், 6 காவலர்கள், 2 தோட்டப் பணியாளர்கள், 1 மின் கம்பியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.4 சங்கத் தமிழரின் பெருமையைக் கண்முன் நிறுத்தும்காட்சிக்கூடம்

பழந்தமிழரின் வீரம், கொடை, நாகரிகச் சிறப்பினை உலகிற்கு உரக்கச் சொல்வன சங்க இலக்கியங்கள். சங்கத் தமிழரின்

காதல், வீரம், போர் முறைகள், அறம் என வாழ்க்கை முறைகளை எடுத்துரைத்துத் தமிழ்ச் சமூகத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. இதனை இன்றைய தலைமுறையினரும் உலகினரும் அறிந்து தெளியும் வண்ணம் 2016 ஆம் ஆண்டு தூங்கா நகரமான மாமதுரையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத் தமிழரின் மனிதநேயம், கொடை, நட்பு, இறைச்சிந்தனை, இயற்கையைப் பேணுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், தன்மான உணர்வு, நீதி வழுவாமை உள்ளிட்ட பண்பாட்டு அடையாளங்களை உணர்ந்துகொள்ளும் வகையில் ஓவியங்கள், சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய கல்வெட்டுகள், புகைப்படங்கள் என கலைப்பொருள்களைத் தன்னகத்தேகொண்டு சங்கத் தமிழ்ச் காட்சிக்கூடம் அமையப் பெற்றுள்ளது. ஏராளமான அயலகத் தமிழறிஞர், பிறமாநிலத்தவர், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் இக்காட்சிக்கூடத்தைப் பார்த்து தமிழரின் பெருமை கண்டு புளகாங்கிதம் அடைகின்றனர்.

இக்காட்சிக்கூடம் செம்மையாகச் செயல்பட காட்சிக்கூட விளக்குநர், அனுமதிச் சீட்டு வழங்குபவர், காவலர், துப்புரவாளர் ஆகிய பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

6.5 அயலகத் தமிழறிஞருக்கு மகுடம் சூட்டும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டிற்கான உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் 20-1-2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மலேசியாவைச் சேர்ந்த திரு. பெ. இராஜேந்திரன் அவர்களுக்கு இலக்கிய விருதும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த திருமதி முத்துகஸ்தூரிபாய் அவர்களுக்கு இலக்கண விருதும் இலங்கையைச் சேர்ந்த திருமதி சுபதினிரமேசு அவர்களுக்கு மொழியியல் விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

6.6 உலகத் தமிழ்ச் சங்கம் பதித்த முத்திரைகள்

6.6.1 வாரந்தோறும் தமிழுக்கு வளம் சேர்க்கும் தமிழ்க்கூடல்

'தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை' என்று சிறுபாணாற்றுப்படை உரைப்பதன் வழி மதுரை தமிழோடு தொடர்புடையதாக விளங்குவதனையும் அறிய முடிகிறது. முதல்,

[2020 மார்ச் 24

இடை, கடை என்ற மூன்று தமிழ்ச் சங்கங்களோடு பாண்டித்துரைத் தேவரால் உருவாக்கப்பட்ட நான்காம் தமிழ்ச் சங்கமும் செயற்படும் தமிழாய்ந்த தண்கூடல் பதியாகவும் மாமதுரை பொலிகிறது. அம்மரபினைத் தொடர்ந்து மதுரையின் ஐந்தாவது சங்கமாக அமைந்து தமிழ்ப் பணியாற்றிவரும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் சங்ககால இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை தமிழாய்ந்து பேசும் அறிஞர்கள் ஒன்று கூடும் நிகழ்வு வாரந்தோறும் 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. ஆகத்துத் திங்கள் 2019 இலிருந்து 29 தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. மொத்தம் 58 தமிழ்க்கூடல் நிகழ்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
1.	தமிழ்க்கூடல்-1	முனைவர் கு. சேதுராமன் மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	மதுரையின் புனித புவியியல்	28-11-2018
		பேராசிரியர் ம. திருமலை, மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	இலக்கியத்தில் உலகப் பார்வை	
2	தமிழ்க்கூடல்-2	பேராசிரியர் கோ.ஜெகநாதன், யாதவர் கல்லூரி மேனாள் பேராசிரியர், மதுரை	காலந்தோறும் தமிழ் வாழ்த்து	7-12-2018
3.	தமிழ்க்கூடல்-3	பேராசிரியர் மா.பா. குருசாமி, செயலர், காந்தி அருங்காட்சியகம், மதுரை	வள்ளுவப் பொருளியல்	13-12-2018
		பேராசிரியர் இரா. மோகன், மேனாள் பேராசிரியர், மதுரை	மு.வ. என்றொரு முன்னேற்ற வரலாறு	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
4.	தமிழ்க்கூடல்-4	முனைவர் சோ.கி. கல்யாணி, துறைத் தலைவர், இணைப் பேராசிரியர், மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, மதுரை	பாவை விழா	21-12-2018
		திரு.அ. ஆறுமுகம், தலைவர், சைவ சித்தாந்த சபை, மதுரை	திருமந்திரம்	
5.	தமிழ்க்கூடல்-5	புலவர் துரை. தில்லான், தமிழாசிரியர் (ப.நி) திண்டுக்கல்	தமிழில் பிழையின்றி எழுதுதல்	28-12-2018
		திரு. க. குயிலன், தமிழாசிரியர் (ப.நி) திண்டுக்கல்	இன்று நாம் எங்கே செல்கிறோம்?	
6.	தமிழ்க்கூடல்-6	முனைவர் நிர்மலா மோகன், மேனாள் பேராசிரியர், காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம், காந்தி கிராமம்	இலக்கியமும் அறிவியலும்	4-1-2019
		கவிஞர் இரா. இரவி, உதவிச் சுற்றுலா அலுவலர், மதுரை	தமிழ் வளர்ச்சிக்குத் துளிப்பாக்களின் பங்களிப்பு	
7.	தமிழ்க்கூடல்-7	திரு. பழ. பாஸ்கரன், தமிழாசிரியர், காரைக்குடி	வையை வளர்த்த வண்டமிழ்	10-1-2019
8.	தமிழ்க்கூடல்-8	முனைவர் சாகுல்ஹமீது வக்பு வாரியக் கல்லூரி, மதுரை	மதுரை சங்க இலக்கியத்தில் மனித உறவுகள்	18-1-2019
		திரு. மு. மகேந்திரபாபு, ஆசிரியர், இளமனூர்	அருந்தமிழுக்கோர் ஔவை	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
9.	தமிழ்க்கூடல்-9	முனைவர் பெ.பழனிராஜன், உதவிப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி	ஆனந்த யாழை மீட்டியவன்	24-1-2019
		முனைவர் சி. சரவணஜோதி உதவிப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை	பெண்மொழியும் வெளியும்	
10.	தமிழ்க்கூடல்-10	முனைவர் ஆ.மணிவண்ணன் காவல் உதவிஆணையர், மதுரை	இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள்	31-1-2019
		திரு. மை. இராஜாக்ளைமாக்ஸ், தலைவர், சி.இ.ஓ.ஏ பள்ளிகள், கல்லூரி, மதுரை	இனிக்கும் இலக்கணம்	
11.	தமிழ்க்கூடல்-11	முனைவர் செ.ஞானேசுவரன் உதவிப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, அருப்புக்கோட்டை	அரசு போட்டித் தேர்வுகள் குறித்த இலக்கணம்	8-2-2019
		திரு. சி.க. சாமி தமிழறிஞர், தென்காசி	எண்ணமே வாழ்வு	
12.	தமிழ்க்கூடல்-12	முனைவர் கா.மு. சேகர், மேனாள் இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை	தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்	15-2-2019
13.	தமிழ்க்கூடல்-13	திரு.சி.செந்தில்குமார், உதவிப் பேராசிரியர் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை	அன்றும் இன்றும் தமிழ்	21-2-2019
		திரு.சை.நவ்சாத், செய்தியாளர், மதுரை	தமிழர் பண்பாட்டில் மொழி உணர்வு	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
14.	தமிழ்க்கூடல்-14	முனைவர் யாழ் சு. சந்திரா, இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, மதுரை	தமிழில் காந்திய இலக்கியம்	1-3-2019
		முனைவர் பெரி. கபிலன், மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, மதுரை	கணினித் தமிழும் சமூக ஊடகங்களும்	
15.	தமிழ்க்கூடல்-15	முனைவர் ஞா. செல்வராக்கு, உதவிப் பேராசிரியர் தியாகராசர் கலைக் கல்லூரி, மதுரை	பெண்மையைப் போற்றுவோம்!	8-3-2019
		முனைவர் அ. ரோகிணி, மேனாள் தமிழ்த் துறைத் தலைவர், ஆர்.வி.எஸ். குமரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்	புரட்சிப் பெண்ணே! புறப்படு புயலாய்!	
16.	தமிழ்க்கூடல்-16	திருமதி தா. லலிதா, தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், சென்னை	இலக்கியத்தில் பாடுபொருள்	15-3-2019
17.	தமிழ்க்கூடல்-17	முனைவர் மாரியஜோசப் சேவியர், மேனாள் ஆங்கிலத் துறைத் தலைவர், சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை	தமிழ்மொழியைக் காப்போம்!	22-3-2019
		முனைவர் சா.வினோலியா சாலொமி சந்திரகாந்தம், உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, மதுரை	தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்பும்	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
18.	தமிழ்க்கூடல்-18	முனைவர் சு. முத்துஇலக்குமி, மதிப்புறு முதல்வர், காந்திய சிந்தனைக் கல்லூரி	வள்ளுவரும் மகாத்மாவின் மகாவிரதங்களும்	26-3-2019
		திரு. சுப்பிரமணியகாந்தி, மதுரை	இலக்கியத்தில் வள்ளன்மை	
19.	தமிழ்க்கூடல்-19	முனைவர் வீரா. அழகிரிசாமி, தலைவர், காந்தியியல் இராமலிங்கத் தத்துவத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	வள்ளலாரின் மெய்யியல்	9-4-2019
		முனைவர் உ.அனார்கலி, மதுரை	முக்கூடற்பள்ளும் பெண்களின் மனவுணர்வுகளும்	
20.	தமிழ்க்கூடல்-20	முனைவர் ந. முருகேசபாண்டியன், இலக்கியத் திறனாய்வாளர், மதுரை	இலக்கிய வாசிப்பு	16-4-2019
		திரு. குரு. ஜெயச்சந்திரன், இதழியலாளர், மதுரை	தமிழ்மொழியில் அறிவியலும் கணிதமும்	
21.	தமிழ்க்கூடல்-21	புலவர் செந்தலை நா. கவுதமன், சூலூர் பாவேந்தர் பேரவை, கோயம்புத்தூர்	அழகின் சிரிப்பில் பாரதிதாசன்	23-4-2019

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
22.	தமிழ்க்கூடல்-22	முனைவர் இராம. இலக்குவன் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர், சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை	சிலம்பில் பரல்கள்	2-5-2019
		முனைவர் சு. இராமர், முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்புலம், இக்கால இலக்கியத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	திணைப் பண்பாடும் நாகரிக உருவாக்கமும்	
23.	தமிழ்க்கூடல்-23	முனைவர் கோ. செழியன் மேனாள் துணை இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை	சங்க இலக்கியத்தில் தொழில்நுட்பம்	7-5-2019
		திரு. ந. பாண்டுரங்கன், எழுத்தாளர், மதுரை	எனது படைப்புலகம்	
24.	தமிழ்க்கூடல்-24	திரு. பேனா மனோகரன், கவிஞர், மதுரை	பாரதி பாடல்களில் இயற்கை	14-5-2019
		முனைவர் க. மணிவாசகம், முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், மதுரை	மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்	
25.	தமிழ்க்கூடல்-25	திரு. வி. ஜீவகுமாரன், எழுத்தாளர், டென்மார்க்	புலம்பெயர் இலக்கியங்கள்	21-5-2019
26.	தமிழ்க்கூடல்-26	திரு. ந. நன்மாறன், மதுரை	இன்றைய வாழ்வில் பட்டுக் கோட்டையார்	31-5-2019
		பேரா. மு. அருணகிரி, மேனாள் முதல்வர், தியாகராசர் கலைக் கல்லூரி, மதுரை	பக்தி இலக்கியங்களின் தேவை?	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
27.	தமிழ்க்கூடல்-27	திரு. கர்ணன், எழுத்தாளர், மதுரை.	எனது படைப்புலகம்	4-6-2019
		திரு. அ. கணேசன், முனைவர் பட்ட ஆய்வாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	தமிழ் இலக்கியம் சங்க காலம் முதல் தற்காலம் வரை	
28.	தமிழ்க்கூடல்-28	முனைவர் இரா. இளவரசு, உதவிப்பேராசிரியர், அய்யநாடார் ஜானகியம்மாள் கல்லூரி, சிவகாசி	தொல் காப்பியத்தில் பண்பாட்டுப் பதிவுகள்	13-6-2019
29.	தமிழ்க்கூடல்-29	முனைவர் மு. மணிவேல், மேனாள் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை	இலக்கியத்தில் காட்சியும் கருத்துகளும்	16-8-2019
		முனைவர் வே.கவிதா, உதவிப் பேராசிரியர், யாதவர் மகளிர் கல்லூரி	பக்தி இலக்கியத்தில் காதல்	
30.	தமிழ்க்கூடல்-30	முனைவர் வி. திருவள்ளுவன், பேராசிரியர், புல முதன்மையர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்	மொழியியல் ஓர் அறிமுகம்	22-8-2019
		முனைவர் அரங்க பாரி, பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்	எங்கெங்குக் காணினும் கவிதையடா	
31.	தமிழ்க்கூடல்-31	திரு. சோழ. நாகராஜன், துணை ஆசிரியர், செம்மலர்	கலைவாணரும் உடுமலையாரும்	29-8-2019

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
32.	தமிழ்க்கூடல்-32	முனைவர் சரோஜினி புதியவன், திண்டுக்கல்	சங்க இலக்கியத்தில் பெண்குரல்	6-9-2019
		கெ. செல்லத்தாய், இணைப் பேராசிரியர், எஸ்.பி.கே கல்லூரி, அருப்புக்கோட்டை	பக்தி இலக்கியத்தில் பெண்கள்	
33.	தமிழ்க்கூடல்-33	முனைவர் வை. சங்கரலிங்கம் உதவித் தலைமையாசிரியர், மதுரை	கம்பனில் நல்லோர்	13-9-2019
		முனைவர் பா. சத்யாதேவி, உதவிப் பேராசிரியர், தியாகராசர் கலைக் கல்லூரி	கருத்தியல்ரீதியில் சிற்றிலக்கியச் சமூகம்	
34.	தமிழ்க்கூடல்-34	திரு.சேரை ப. பாலகிருஷ்ணன் செயலர், திருவள்ளுவர் மன்றம்	இலக்கியத்தில் எண்சுவை	17-9-2019
		முனைவர் பொன். கதிரேசன், உதவிப் பேராசிரியர், கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி	இலக்கியமே வாழ்க்கை	
35.	தமிழ்க்கூடல்-35	முனைவர் க. சுபாஷிணி, தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை, ஜெர்மனி	இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் வரலாறும் வாழ்வும்	24-9-2019
36.	தமிழ்க்கூடல்-36	முனைவர் த. தங்கமணி நிறுவனத் தலைவர், திருக்குறள் அறிவியல் நிறுவனம், ஓமான்	ஓமானில் தமிழ் வளர்ச்சிக்குத் தமிழர்களின் பங்களிப்பு	1-10-2019

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
37.	தமிழ்க்கூடல்-37	முனைவர் சௌந்தர மகாதேவன், தமிழ்த் துறைத் தலைவர், சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி	தற்கால நவீனக் கவிதைகள்	9-10-2019
		முனைவர் முத்துசந்தானம், பேராசிரியர், மதுரை	நாலடியாரில் அணிநலன்	
38	தமிழ்க்கூடல்-38	மரு. வள்ளிக்கண்ணன், கனடா தமிழ்ச் சங்கம், கனடா	வட அமெரிக்காவில் தமிழ்மொழியும் பண்பாடும்	18-10-2019
39.	தமிழ்க்கூடல்-39	கவிஞர் மு. செல்லா, மதுரை	நானும் எனது கவிதைகளும்	22-10-2019
		திரு. தமிழ்ப்பெரியசாமி, திண்டுக்கல்	உலகைத் திருத்த வந்த உத்தமர் -வள்ளலார்	
40.	தமிழ்க்கூடல்-40	முனைவர் பெ. இரவிச்சந்திரன், துறைத் தலைவர், சிதம்பரம்	படைப்புகளின் வாழ்விடம் நூலகம்	29-10-2019
41.	தமிழ்க்கூடல்-41	முனைவர் து. ஜானகி, உதவிப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை	சொற்பொருள் நோக்கில் வள்ளுவர் கூறும் ஆராய்ச்சி	5-11-2019
42.	தமிழ்க்கூடல்-42	திரு. கு. சாமிதுரை, வழக்கறிஞர், உயர் நீதிமன்றம், மதுரை	பன்னாட்டுப் புலவன் பாரதி	12-11-2019
		திரு. இரா. சந்தானகிருஷ்ணன், வழக்கறிஞர், மாவட்ட நீதிமன்றம், மதுரை	இலக்கியமும் சட்டமும்	

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
43.	தமிழ்க்கூடல் -43	திரு. இல. பழனியப்பன், மன அழுத்த மேலாண்மைப் பயிற்சியாளர், சிவகங்கை	திருக்குறள்-மன அழுத்தம் போக்கும் மாமருந்து	21-11-2019
		திரு. பாரதிசுகுமாரன், தலைவர், தமிழர் கலை இலக்கிய மையம், சென்னை	நானும் எனது கவிதைகளும்	
44.	தமிழ்க்கூடல்-44	புலவர் வெற்றியழகன், சென்னை	தமிழுக்கு வேலி தொல்காப்பியம்	29-11-2019
45.	தமிழ்க்கூடல்-45	சிந்தனைக் கவிஞர் கவிதாசன், கோவை	இலக்கியத்தில் தன்னம்பிக்கை	06-12-2019
46.	தமிழ்க்கூடல்-46	முனைவர் க.ச. முத்துப்பாண்டியன், சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை	திருக்குறளில் நிதிமேலாண்மை	13-12-2019
		திரு. அ.ரா.தி. நாகராஜன், பொருளாளர், வெற்றித் தமிழர் பேரவை, மதுரை	இலக்கியத்தில் பெண்ணியம்	
47.	தமிழ்க்கூடல்-47	முனைவர் கி. பார்த்திபராசா, தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்	தற்காலத் தமிழ் நாடகங்கள்	20-12-2019
48.	தமிழ்க்கூடல்-48	திருமதி வே. பூங்குழலி பெருமாள், தமிழ் விரிவுரையாளர், புதுச்சேரி	வாரியார் படைப்புகளில் வாழ்வியல் நெறிகள்	23-12-2019
49.	தமிழ்க்கூடல்-49	திரு. வி.ரி. இளங்கோவன், எழுத்தாளர், இலங்கை	ஈழத்து இலக்கிய வளர்ச்சி	2-1-2020
50.	தமிழ்க்கூடல்-50	கவிஞர் சக்திஜோதி, திண்டுக்கல்	புறநானூறு காட்டும் மானுடநெறிகள்	9-1-2020

வ. எண்	நிகழ்வு விபரங்கள்	கட்டுரையாளர் விவரம்	தலைப்பு	நாள்
51.	தமிழ்க்கூடல்-51	புலவர் பொ. வேலுச்சாமி நாமக்கல்	'செந்தமிழ்' இதழ் நவீனத் தமிழ் ஆராய்ச்சியின் ஊற்றுக்கண்	23-1-2020
52.	தமிழ்க்கூடல்-52	பேரா. மோசஸ் மைக்கேல் பாரடே, சென்னை	சித்தர் பாடல்கள் ஒரு நிகழ்காலப் பார்வை	31-1-2020
53.	தமிழ்க்கூடல்-53	முனைவர் மு. செந்தில்குமார், உதவிப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி	தமிழ் துளிப்பாக்கள்	4-2-2020
54.	தமிழ்க்கூடல்-54	முனைவர் சு. தங்கமாரி, செந்திக்குமார நாடார்கல்லூரி, விருதுநகர்	நவீனப் படைப்புகளில் மாய எதார்த்தவாதம்	11-2-2020
55.	தமிழ்க்கூடல்-55	முனைவர் சோ.கி. கல்யாணி, முதல்வர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆண்டிப்பட்டி	வாலியின் கவிதைகளில் சமகாலச் சிந்தனைகள்	18-2-2020
56.	தமிழ்க்கூடல்-56	பேராசிரியர் இ.கி. இராமசாமி, மதுரை	சங்க இலக்கியங்களில் பூ உதிர் காட்சிகள்	26-2-2020
57.	தமிழ்க்கூடல்-57	முனைவர் நிர்மலாதேவி, இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம், டோக்பெருமாட்டிக் கல்லூரி, மதுரை	சு.சமுத்திரத்தின் புதினங்களில் பெண்கள்	6-3-2020
58.	தமிழ்க்கூடல்-58	முனைவர் கா. ஸ்ரீதர், தமிழ்த் துறைத் தலைவர், திரு. வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்	இரட்டைக் காப்பியம் - அதிகாரம், அரசியல், அரசு	11-3-2020

6.7 படைப்புகளைப் பெருமைப்படுத்தும் நூல் அரங்கேற்றம்

மூவேந்தரில் பாண்டிய மாமன்னர்கள் தமிழ் வளர்த்த மதுரையில் எண்ணற்ற தமிழ் நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 24]

தமிழர்களின் பெருமையை உலகறியச் செய்த திருக்குறள் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட பெருமைக்குரியது மதுரை மாநகரம். அத்தகு சீர்மிகு மதுரையம்பதியில் விளங்கும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் படைப்பாளர்களின் தரமான, சிறந்த படைப்புகளை வெளிக்கொணரும் பொருட்டு தமிழில் வெளிவரும் தரம் வாய்ந்த படைப்புகளைத் தெரிவு செய்து அவற்றை அனைத்துத் தமிழறிஞர்களும் உணரும் முகமாக நூல் அரங்கேற்றம் திங்கள்தோறும் செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை 2019 மே திங்களில் இருந்து ஒன்பது நூல் அரங்கேற்றங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 89 நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன.

6.8 மேற்கொண்டு வரும் திட்டங்கள்

தமிழறிஞர்களுடனும் தமிழ் ஆர்வலர்களுடனும் ஒரு தமிழ் சார்ந்த நல்லுறவை உருவாக்கும் வண்ணம் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்கள் நாள்தோறும் சேர்க்கப்பட்டு வருகின்றனர். உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் இதுநாள் வரை 1890-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

6.9 அறக்கட்டளைச் சொற்பொழிவு

உலகத் தமிழ்ச் சங்கத்தில் யூசி திருக்குறள் அறக்கட்டளைச் சொற்பொழிவு, முனைவர் த. தங்கமணி அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைப் பொழிவு நடைபெற்று வருகிறது. புதிய அறக்கட்டளை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன்பயனாக தற்பொழுது சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களால் நூற்பதிப்புச் செம்மல் எஸ். வைரவன் அறக்கட்டளை தொடங்கப்பட்டுள்ளது. முனைவர் த. தங்கமணி அறக்கட்டளையின் முதல் பொழிவு 24-12-2019 அன்று உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஓமன் வாழ் தமிழறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்க நடத்தப்பெற்றது.

6.10 அயலகத் தமிழர் பங்குபெறும் சிறப்புச் சொற்பொழிவு

புலம்பெயர் தமிழரின் தமிழ்ப் பங்களிப்பினை முன்னெடுக்கும் வகையில் 'தமிழரும் தமிழ்க் கல்வியும்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு வக்பு வாரியக்கல்லூரியுடன் இணைந்து 10-2-2020 அன்று நடத்தப்பெற்றது. இதில் கனடாவைச் சேர்ந்த கல்வியாளர் திரு. இராசரத்தினம் அவர்கள் கலந்துகொண்டு பொழிவுரையாற்றினார். மதுரை செந்தமிழ் கலை மற்றும்

கீழ்த்திசைக் கல்லூரியுடன் இணைந்து ஆசுதிரேலியாவைச் சேர்ந்த மருத்துவர் வாசுகி சித்திரசேனன் பங்குபெற்ற 'ஆசுதிரேலியத் தமிழர்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு 10-03-2020 அன்று நடைபெற்றது. மேலும், 2 சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்கு முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.11 அயலகத் தமிழ்ப் படைப்புகளை ஆவணப்படுத்துதல்

அயலகத்தில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகளை தமிழகத் தமிழறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் கற்றுப் பயன்பெறுமாறும் அவர்களது ஆய்வுகளுக்கு உறுதுணையாகவும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் படைப்புகளைப் புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் நாடகங்கள் எனப் பிரித்துத் தொகுத்துக் களஞ்சியமாக வெளியிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 1024 நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அயலகத் தமிழர்கள் மற்றும் பதிப்பகத்தாரிடமிருந்து வாங்கப்படும் நூல்கள் உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் அயலகத் தமிழ்ப் படைப்புகளுக்கென தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இது அயலகப் படைப்புகள் குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்குப் பயன்தரும்வகையில் அமையும்.

6.12 அயலகத் தமிழ் இதழ்கள், மின்னிதழ்களை ஆவணப்படுத்துதல்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அந்நிலப்பரப்பில் வாழும் தமிழ் மக்களோடு தொடர்புகொள்ள, படைப்புத்திறனை வெளிப்படுத்த, கருத்துப் பரிமாற்றத்திற்காக அறிதல், அறிவுறுத்தல், அறிவித்தல் முதலியவற்றிற்காக இதழ்களைத் தோற்றுவித்துக் கொள்கின்றனர். தமிழர்கள் குடியேறி வாழ்ந்துவரும் நாடுகளில் வெளியாகும் இதழ்கள், மின்னிதழ்களைக் கண்டறிந்து வரிசைப்படுத்தி ஆவணப்படுத்தும் பணிகள் உலகத் தமிழ்ச் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 350-க்கும் மேற்பட்ட இதழ்கள் பெறப்பட்டு அயலகத் தமிழ் இதழ்களுக்கென உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் தனிப்பிரிவு ஏற்படுத்தி அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அயலகத் தமிழ் இதழ்கள், மின்னிதழ்கள் குறித்த தரவுகளைக் கால வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி களஞ்சியமாக வெளியிடுதல், உலகத் தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் மின்னேற்றம் செய்தல் என மூன்றாண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

2020 மார்ச் 24]

6.13 அயலகத் தமிழ் நூல்களுக்குப் பரிசு

தமிழகம் மட்டுமல்லாது உலகளாவிய அளவில் தமிழ்ப் படைப்பாளர்கள் பரவிக்கிடக்கின்றனர். தற்போது இயந்திரமயமான உலக வாழ்க்கையின் காரணமாக முழுநேர எழுத்தாளர்களாக விளங்குபவர்கள் மிகக் குறைவே. தமிழ் எழுத்தாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய சிறு அளவிலான முயற்சியாகவும் இளம் தலைமுறையினரிடமிருந்து தரமான படைப்புகளை வெளிக்கொணரும் வகையிலும் அவர்களின் படைப்புகளுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கச் செய்யும் நோக்கிலும் சிறந்த நூலினைத் தெரிவு செய்து பரிசு வழங்கி ஊக்குவிப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். சிறந்த தமிழறிஞர்களைக் கொண்டு ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பியா, ஆசுதிரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களிலுள்ள நாடுகளில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில், கவிதை, சிறுகதை, புதினம், ஆய்வு நூல் எனத் தமிழ் இலக்கிய வகைகளில் வெளிவரும் தரமான படைப்புகளில் வல்லுநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட சிறந்த 4 நூல்களுக்கு 28-2-2020 அன்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. கவிதைப் பிரிவில் சிங்கப்பூர் கவிஞர் இன்பா அவர்களின் 'மழைவாசம்' என்னும் கவிதை நூலும் சிறுகதைப் பிரிவில் ஆசுதிரேலியா முனைவர் ஆசி. கந்தராஜா அவர்களின் 'கள்ளக்கணக்கு' என்னும் சிறுகதை நூலும் புதினத்திற்கு ஆசுதிரேலியா திரு. மாத்தளை சோமு அவர்களின் 'கண்டிச்சீமை' என்னும் புதினமும் ஆய்வு நூல் பிரிவில் ஜெர்மனி முனைவர் க. சுபாஷிணி அவர்களின் 'ஜெர்மன் தமிழியல்' என்னும் ஆய்வு நூலும் பரிசுகள் பெற்றன. நூலாசிரியர்களுக்கு ரூபாய் 50,000/- பரிசுத் தொகையும் பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10,000/- பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன.

6.14 தமிழமைப்புகளின் பணி போற்றும் உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு

உலக நாடுகள் மற்றும் இந்திய மாநிலங்களில் வாழும் புலம்பெயர் தமிழர்கள், தாய்மொழியையும் கலையையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் அங்குள்ள தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைப்பது, அவர்கள் மேற்கொண்டுவரும் தமிழாய்வுகள், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், மொழிபெயர்ப்புகள் முதலிய தமிழ் இலக்கியப் பணிகளை ஒன்றிணைக்கும் வகையில் ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், கவியரங்குகள், சொற்பொழிவு,

பட்டிமன்றம், இலக்கியச் சுற்றுலா, உலகத் தமிழர் கலைத் திருவிழா உள்ளிட்ட நிகழ்வுகளை உள்ளடக்கிய உலகத் தமிழ் அமைப்புகள் மாநாடு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான முன்னேற்பாட்டுப் பணியாக உலகத் தமிழ் அமைப்புகளை உறுப்பினராக இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதனுடன் மாநாட்டில் பங்கேற்பதற்கான இசைவும் பெறப்பட்டு வருகிறது. இதுநாள் வரை, 100 அயலகத் தமிழ் அமைப்புகளும் 22 வெளி மாநிலத் தமிழ் அமைப்புகளும் 102 தமிழகத் தமிழ் அமைப்புகளும் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பு அமைப்புகளாக இணைந்துள்ளன.

6.15 உலகத் தமிழ் அமைப்புகள் தொகுதி-2

உலகத் தமிழ் அமைப்புகள் பற்றிய விவரங்களைத் தொகுத்து அவர்கள் செய்த பணிகள், அவை இருக்கும் இடம் முதலிய தரவுகளைத் திரட்டி நூலாக்கம் செய்ய இந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின்படி உலகத் தமிழ் அமைப்புகள் தொகுதி-2 வெளியிட பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.16 சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தை மறுசீரமைத்தல்

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின்கீழ் செயல்பட்டுவரும் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடத்தில் உள்ள ஓவியங்கள், சிலைகள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிலைகள் உள்ளிட்ட கலைப்பொருள்களைப் புனரமைத்தல், அலுவலகக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்களும் சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்லும்வகையில் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் தொடர்பான அறிவிப்புப் பலகையினை மதுரை இரயில் நிலையம், மன்னர் திருமலை நாயக்கர் மகால், மீனாட்சி அம்மன் கோவில், எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் ஆகிய நான்கு இடங்களில் வைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.17 கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்துதல்

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தேசியக் கருத்தரங்கம், பன்னாட்டுக் கருத்தரங்கம், இலக்கிய, இலக்கண வகுப்புகள், தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தேசியக் கருத்தரங்குகள், அயலகத் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து இலக்கிய நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அவ்வகையில் 19-2-2020 அன்று 'சங்க இலக்கியத்தில் திணைக் கோட்பாடுகள்'

2020 மார்ச் 24]

என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியுடன் இணைந்து நடத்தப்பட்டது.

மதுரை ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றத்துடன் இணைந்து 'வள்ளுவரை அறிவோம்! வள்ளுவர் வழங்கிய முப்பாலை அறிவோம்' என்னும் உரையாடல் கருத்தரங்கம் 29-2-2020 அன்று நடத்தப்பட்டது.

உலகத் தமிழ்ச் சங்கப் பயன்பாட்டிற்கென 5 கணினிகள் வாங்குவதற்கும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தவும் இந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டது. அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6.18 பன்னாட்டுக் கருத்தரங்கும் பயிலரங்கும்

27-2-2020, 28-2-2020 ஆகிய இரண்டு நாள்கள் 'பன்முக நோக்கில் அயலகத் தமிழ்ப் படைப்புகள்' என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு கருத்தரங்க நூலினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார். இக்கருத்தரங்கில் ஆசுதிரேலியா, சிங்கப்பூர், இலங்கை, பிரான்சு உள்ளிட்ட நாடுகளிலிருந்து கருத்தாளர்கள் பங்குபெற்றுச் சிறப்பித்தார்கள்.

அமெரிக்கா தமிழ் அறிதம் அமைப்புடன் இணைந்து 'தமிழ்த் தரவகத் தொழில்நுட்பப் பன்னாட்டுப் பயிலரங்கம்' 20-2-2020 அன்று நடத்தப்பட்டது.

6.19 நூல் விற்பனை

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் கட்டுரைகள் தொகுத்து நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன. அதில் 19 நூல்கள் தற்போது விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு வருகைதருபவர்கள் நூல்களை வாங்குவதற்கு ஏதுவாக தகவல் மையத்தில் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

6.20 உலகத் தமிழமைப்புகளையும் தமிழையும் முன்னெடுத்தல்

நான்மாடக்கூடல் என்று புகழப்பட்ட மதுரையம்பதியில் உலகத் தமிழ்ச் சங்கம் தமிழின் சிறப்பினைப் பகரும் வகையில் தொடர்ந்து

[2020 மார்ச் 24

நிகழ்வுகளும் அயலகத் தமிழரும் தமிழ் அமைப்புகளும் பங்குபெறும் கருத்தரங்குகளும் உலக அளவில் தமிழையும் தமிழரையும் கொண்டு செலுத்தும் என்றால் அது மிகையன்று.

"நன்று தமிழ் வளர்க! தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க- கலை
யாவும் தமிழ்மொழியால் விளைந்தோங்குக"

என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் எண்ணத்தினைச் செயல்படுத்தும் வண்ணம், தமிழும் தமிழ் சார்ந்த கலைகளும் பல்கிப் பெருகவேண்டும் அதை உலகமெல்லாம் பரப்பிடும் வகையில் மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் தன் பங்களிப்பினைச் செலுத்தி வருகிறது.

இயல்-7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறுவனத் தலைவராகவும் ஆட்சிக்குழுத் தலைவராகவும் பதவி வகிக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழின் தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில்கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோள்களாக கொண்டுள்ளது. அவை,

- பலநிலை ஆய்வு நோக்கில் செம்மொழித் தமிழைக் கற்கவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.
- பல்கலைக்கழகங்களிடமிருந்தும் மொழி ஆய்வு நிறுவனங்களிடமிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாகப் பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு உதவி அளித்தல்.
- தேசிய, பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகள், பயிலரங்குகள், ஆய்வு நூல் பதிப்பித்தல் மற்றும் பழந்தமிழ் நூல்களை பிறமொழிகளில் மொழிபெயர்த்தல் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஆய்வு மாணவர்களுக்கு உதவித் தொகை, செம்மொழித் தமிழாய்வில் சிறந்து விளங்கும் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

2020 மார்ச் 24]

- இந்தியா மற்றும் அயல்நாடுகளில் செம்மொழித் தமிழாய்வுகளைக் கொண்டு செல்லுதல்.
- மேற்கண்ட நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

இயல்-8

ஆசியவியல் நிறுவனம், சென்னை

மாண்புமிகு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு தமிழர்களின் வரலாறு, பண்பாடு, மொழி இலக்கியம் ஆகியவற்றை ஆய்வு செய்தல் மற்றும் பிற நாடுகளோடு கொண்ட தமிழர்தம் வாணிக, பண்பாட்டு உறவுகளை ஆய்வு செய்தல் போன்ற பணிகளுக்கென விண்ணப்பிக்கும் நேர்வில் அரசால் கருதிப் பார்த்து நல்கை வழங்கப்பட்டு வருகிறது.

அரிய நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் பாதுகாத்து வைத்துள்ள நூலகத்தைக் கொண்டுள்ள இந்நிறுவனம் இந்திய நாட்டில் மட்டுமன்றி அமெரிக்கா உள்ளிட்ட அயல்நாடுகளிலும் தமிழியல் மற்றும் தமிழ்ப் பண்பாடு தொடர்பான மாநாடு மற்றும் கருத்தரங்குகள் நடத்தி வருகிறது. அவ்வகையில் கடந்த ஆண்டு 2019 செப்டம்பர் திங்கள் 23, 24 ஆகிய நாள்களில் புதுதில்லியில் உள்ள யுனெஸ்கோ அரங்கில் திருக்குறள் பன்னாட்டு மாநாடு நடத்தப்பெற்றது.

இயல்-9

பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி, திருவனந்தபுரம்

திராவிட மக்களின் தொன்மங்களை ஆய்வு செய்தல், திராவிட மொழி மற்றும் பண்பாடு குறித்து ஆய்வு செய்தல் ஆகிய பணிகளை முதன்மையாகக் கொண்டு பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம், திரு. ஆர்.சி. ஹைர்மேத் மற்றும் திரு. மகாதேவ சாஸ்திரி ஆகியோரால் உருவாக்கப்பட்டு 1971 இல் பேராசிரியர் சுனிதி குமார் சட்டர்ஜி அவர்களைத் தலைவராகக் கொண்டு பன்னாட்டு திராவிட மொழியியற்பள்ளி தொடங்கி செயற்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 24

பன்னாட்டு திராவிடர் மொழியியற்பள்ளியில் பேச்சு மொழியியல் மற்றும் உருவாக்க ஆய்வுத் துறை மற்றும் புலம் பெயர்ந்த திராவிடர் குறித்த துறை மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளியில் மொழியியல், மானுடவியல், வரலாறு மற்றும் கலைக்களஞ்சியம் உள்ளிட்ட பொருண்மைகளில் நூல்களும், இதழ்களும் கொண்ட மின்எண்ம நூலகம் செயல்பட்டு வருகிறது. இவை தவிர கணினி மையம், வங்காள அருங்காட்சியகம், பழங்குடியினர் அருங்காட்சியகம், பேச்சுத்திறன் ஆய்வகம், மொழி ஆய்வகம் ஆகியவையும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டு அரசின் ஆய்வுக்குட்பட்டு பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு நல்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்

ஐக்கிய நாடுகள் பொது அவையிலுள்ள 193 நாடுகள் செப்டம்பர் 25, 2015 அன்று "நமது உலகத்தை உருமாற்றுதல்" (Transforming our world) என்ற தலைப்பிலான 2030 வளர்ச்சி செயல்நிரலுக்கு ஏற்பளித்தன.

தமிழ் வளர்ச்சித் துறையின் முதன்மைப் பணியான ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை அனைத்து அரசு அலுவலகங்களிலும் கொண்டுசெல்லும் நோக்கில் ஆட்சிமொழிப் பயிலரங்கம், ஆட்சிமொழிக் கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள்மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கை அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஆட்சிமொழிச் சட்ட வாரம் வாயிலாக வாணிக நிறுவனங்களில் பெயர்ப் பலகைகள் தமிழில் அமைந்திடவும் பொது மக்களிடையே ஆட்சிமொழி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பேரணி மற்றும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழ்மொழியின் இலக்கண இலக்கிய வளங்களைச் சிதையாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல பல்வேறு வகையில் தங்களை ஈடுபடுத்திவரும் எண்ணற்ற தமிழறிஞர்களைப் பெருமைப்படுத்திடும் வகையில் தொடர்ந்து பல்வேறு விருதுகள் தோற்றுவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 24]

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. பழந்தமிழர் பண்பாடு, நாகரிகம் மற்றும் கலாச்சாரம் குறித்து மாணவர்கள் ஆய்வு மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சொற்குவை எனும் திட்டம் வாயிலாக தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பாதுகாத்திடவும், பெருக்கிடவும் இளம் தலைமுறையினரிடம் தமிழின் சொல்வளத்தைக்கொண்டு சேர்த்திடவும் தமிழ்ச் சொற்களை இணையம் வாயிலாக நிலைநிறுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அயல்நாடுகளிலும் தமிழின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் அங்குள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்ப் பண்பாட்டு மையம் மற்றும் தமிழ் வளர் மையம் தொடங்கப்பட்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மற்றும் பிற மொழியினர் தமிழ் கற்கவும் தமிழ் கலாச்சாரம் குறித்து அறிந்துகொள்ளவும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழியாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாக உலகத் தமிழ் அமைப்புகளை ஒரு குடையின்கீழ் கொண்டுவரும் உயரிய நோக்கத்தில் அயலகங்களில் தமிழ் வளர்ச்சியில் பங்களித்துவரும் தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சங்கங்கள், ஆய்வு மையங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விவரங்களைத் தொகுத்து அவர்களின் வாயிலாக தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, தமிழ்மொழி பற்றிய செய்திகளைக் கொண்டு செல்வதுடன் தமிழகத்தின் தனிச் சிறப்புமிக்கக் கலைகளான சிற்பக் கலை, ஓவியக் கலை மற்றும் நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுவருகின்றன.

நிறைவுரை

"தமிழ்நாடு என்றால் தமிழ் மாநிலத்தை மட்டும் குறிக்கவில்லை; தமிழை நாடு என்னும் பொருளும் அதற்குண்டு" என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிட்டுள்ளார்.

தமிழன் முதலில் தோன்றினான்; பிறகுதான் மொழி தோன்றியது. ஆனாலும், தமிழ்தான் முதன்மையாக விளங்குகின்றது. தமிழ் மாந்தர், தமிழ்நாடு, தமிழ்மொழி என்று தமிழ்மொழிதான் நம் அடையாளமாக விளங்குகின்றது.

தாய்மொழியாக நம் தமிழ்மொழிக்கும் தமிழினத்துக்கும் பெரும்பாடுபட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வெற்றிநடைபோட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி திரு. கே. பழனிசாமி அவர்கள் தமிழ் மொழியைக் காக்கவும் தமிழ் அறிஞர்களைப் போற்றி, அவர்தம் மொழி உணர்வை ஊக்குவிக்கவும் அளவற்ற அரிய பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றார். இவ்வகையில் தமிழ்நாடு அரசு தமிழ் மொழியை உலகெலாம் பரவச் செய்யும் பெருமுயற்சியினை மேற்கொண்டு இடைவிடாமல் பாடுபட்டு வருகின்றது.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

2020-2021

வ. எண்	துறை	2019-2020 திருத்திய மதிப்பீடு	2020-2021 வரவு-செலவு மதிப்பீடு
		ரூபாய் ஆயிரங்களில்	
1.	தமிழ் வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம்	9,56,48	10,51,69
2.	தமிழ் வளர்ச்சி இயக்ககம்	26,05,30	21,90,81
3.	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்	1,15,47	1,16,87
4.	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை	5,79,54	5,59,29
5.	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்	31,15,70	28,52,99
6.	உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை	8,84,52	6,36,35
	மொத்தம்	82,57,01	74,08,00

தமிழ் வளர்ச்சித் துறை

சாதனைகள்

(1-4-2019 முதல் 23-3-2020 முடிய)

தமிழ் வளர்ச்சித் துறை

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 129 ஆவது பிறந்த நாளைப் போற்றும் வண்ணம் ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் தமிழ்க் கவிஞர் நாள் ரூபாய் 3 இலட்சம் செலவில் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்க் கவிஞர் நாளில் பாவேந்தரைப் போற்றும் வண்ணம் நூலைப்படி என்ற தலைப்பில் கவியரங்கம் தமிழியக்கம் என்ற தலைப்பில் இளந்தமிழர் அரங்கம் குடும்ப விளக்கு என்ற தலைப்பில் உரை அரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

இளங்கோவடிகள் (24-4-19), தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் (7-5-19), மறைமலையடிகள் (15-7-19), திரு. வி. கலியாணசுந்தரனார் (26-8-19), திருவள்ளுவர் (16-1-20), உ.வே.சா (19-2-20), ஔவையார் (8-3-20), சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டன.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தி முடிக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை 18-8-2019 முதல் 24-8-2019 முடிய இலக்கணம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ரூபாய் 20 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

உலகத் தாய் மொழி நாள் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாள் ரூபாய் 3 இலட்சம் செலவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 20-1-2020 ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக 2019 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது 2018 ஆம் ஆண்டுக்கான பாரதியார்,

பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், பாரதிதாசன், திரு. வி.க., கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்ட 7 விருதுகளும் 2018 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது, 2019 ஆம் ஆண்டுக்கான சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள் (22 பேருக்கு) மற்றும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் (3 பேருக்கு) என 33 விருதுகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு ‘குறள் பரிசு’ திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 70 மாணவர்களுக்கு ரூபாய் 10,000/- வீதம் பரிசுத் தொகை வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் 100 பேருக்கு நிதியுதவி வழங்கிட ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டது.

2019 ஆம் ஆண்டு அருட்பெருஞ்சோதி வள்ளலார், வீரமாமுனிவர், காரைக்கால் அம்மையார் மற்றும் தேவநேயப் பாவாணர் ஆகியோரின் பெயரில் புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களின் பெயரில் 3 புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 20-1-2020 ஆம் நாளன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழறிஞர்கள் உளுந்தூர்பேட்டை திரு. சண்முகம், கவிஞர் நா. காமராசு, முனைவர் இரா. இளவரசு, தமிழறிஞர் அடிகளாசிரியர், புலவர் இறைக்குருவனார், பண்டித ம. கோபால கிருட்டிணன் மற்றும் பாபநாசம் குறள்பித்தன் ஆகிய 7 பேரின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு ரூபாய் 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 35 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் சிகாகோ மாநகரில் 2019 ஜூலைத் திங்கள் 4 முதல் 7 வரை 10 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு நிதியுதவியாக தமிழ்நாடு அரசால் ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டது. மேலும் இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு அலுவலர்கள் 10 பேர், தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் பற்றாளர்கள் 10 பேர் என மொத்தம் 20 பேர் பங்கேற்க ஆணையிடப்பட்டும் போக்குவரத்துச் செலவினங்களுக்கென ரூபாய் 60.09 இலட்சம் வழங்கப்பட்டது.

தனித்துவ தமிழ்நாடு உருவாக்கப்பட்ட 1-11-1956 ஆம் நாளினைப் பெருமைபடுத்திடும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 1 ஆம் நாளை ‘தமிழ்நாடு நாள்’ என்ற பெயரில் சென்னையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக மாநில அளவில் மொழி, இன, பண்பாட்டு விழாக்களோடு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் என 2019-2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110 இன்கீழ் அறிவிக்கப்பட்டது. அதன்படி 1-11-2019 ஆம் நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் ‘தமிழ்நாடு நாள்’ விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பிரான்சு நாட்டின் பாரிசு நகரில் 28-9-2019 முதல் 29-9-2019 வரை நடைபெற்ற 4 ஆவது ஐரோப்பிய தமிழ் ஆய்வியல் மாநாட்டிற்கு அரசின் நிதியுதவியாக ரூபாய் 16,50,000/- வழங்கப்பட்டது.

நவி மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு கட்டட நிதியுதவியாக ரூபாய் 25 இலட்சம் வழங்கப்பட்டது.

உத்தமம் நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இணைந்து 20-9-2019 முதல் 22-9-2019 வரை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பெற்ற தமிழ் இணைய மாநாட்டிற்கு ரூபாய் 5 இலட்சம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23-12-2019 ஆம் நாளன்று அமெரிக்க நாட்டின் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள ஊசுடன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாக ரூபாய் 1 கோடி வழங்கப்பட்டது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் மொழி ஆய்வுக்கூடம் தொடங்கிட ரூபாய் 8 இலட்சம் வழங்கப்பட்டது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. இதற்கென 2019-2020 ஆம் ஆண்டில் ரூபாய் 1,55,360/- வழங்கப்பட்டது.

வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் இளநிலை, முதுநிலைப் பட்டயப் படிப்புப் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகையாக 2019-2020 ஆம் ஆண்டில் ரூபாய் 92,500/- வழங்கப்பட்டது.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்ட 27-12-1956 ஆம் நாளை நினைவுகூரும் வகையில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட ரூபாய் 32 இலட்சம் வழங்கப்பட்டது.

தமிழ் வளர்ச்சித் துறை, காட்சி ஊடகங்களுடன் இணைந்து தமிழ்நாடு அளவில் மாணவர்களுக்கு குறள் வினாடி-வினா நிகழ்ச்சி நடத்திப் பரிசுகள் வழங்கிட ரூபாய் 9.80 இலட்சம் வழங்கப்பட்டது.

உலக அற இலக்கியமான திருக்குறளின் பெருமையை உலகெங்கும் பரவச் செய்யும் வகையில் 2019-2020 ஆம் ஆண்டு இந்திய மொழிகளான அசாமி மற்றும் சிந்தி மொழிகளிலும், உலகமொழியான ஈப்ரு மொழியிலும் மொழிபெயர்ப்பு செய்திட ரூபாய் 50,01,000/- வழங்கப்பட்டது.

திருக்குறளை உலக நூலாக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின்மூலம் (யுனெஸ்கோ) அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டும், தமிழில் உள்ள உன்னத இலக்கியப் படைப்புகளை ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் நடைமுறைக்கேற்ப உலக மொழிகளில் வெளியிடவும் ரூபாய் 20 இலட்சம் வழங்கப்பட்டது.

சிவகங்கை, விழுப்புரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் சங்கப் புலவர்களுக்கு 3 நினைவுத் தூண்கள் அமைப்பதற்கு ரூபாய் 39,94,000/- வழங்கப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அயலாருக்கும் தமிழ் அறியாத பிற மாநிலத்தவருக்கும் தமிழ் மொழியினைக் கற்பிக்கும்பொருட்டு கணினிமயமாக்கப்பட்ட மொழிப்பயிற்சி ஆய்வுக்கூடத்தின் வழியே கடந்த ஆண்டு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இருவரும், இந்தியாவின் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் தமிழ் மொழிப் பயின்றனர்.

மேலும், சென்னை மாநகராட்சிப் பள்ளி தமிழ் ஆசிரியர்களுக்கு இணையவழி தமிழ் கற்பித்தல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம் வழியாக திருக்குறள் அகராதி பணி நடைபெற்று வருகிறது.

2020 மார்ச் 24]

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு திருக்குறள் முற்றோதல் பயிற்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் பயிற்சி ஆகியன ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு தமிழ்நாடு அரசு நிதிநல்கையுடன் திருக்குறள் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெற்ற 15 நபர்களுக்கு தலா ரூ.40 ஆயிரம் பரிசும், பட்டயச் சான்றும் வழங்கப்பட்டது.

உலகமெங்கும் பரவிக்கிடக்கும் தமிழ்ப் பண்பாட்டை ஆய்ந்தறியவும் உலகமெலாம் வாழ்ந்துவரும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செயல்பட்டுவரும் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம் வாயிலாக இவ்வாண்டு 4 சிறப்புச் சொற்பொழிவு, 1 கருத்தரங்கம் மற்றும் மதுரை உலகத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து “உலகத் தமிழிசை மாநாடு” 2019 திசம்பர்த் திங்கள் 14, 15 ஆம் நாள்களில் சிறப்புடன் நடத்தப்பெற்றது. 3 நூல்கள் வெளியிடப்பட்டன.

ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் சுமார் 700 அரிய சுவடிக்கட்டுகள் முழுமையாகச் செப்பனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வழியாக நிறுவனத்தின் 650 ஓலைச் சுவடிக்கட்டுகள் மின் எண்மம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு மேல் சித்தாமூர் சமண மடாலயத்தில் உள்ள சுவடிகள் இனங்காணப்பட்டு 250 சுவடிக்கட்டுகள் தூய்மைப்படுத்தப்பட்டு மின் எண்மத்திற்கு தயார்படுத்தப்பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கடந்த ஆண்டு ஞானத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி ஆய்விருக்கை, தமிழ்ப் பரம்பரைச் சித்த மருத்துவப் பயிற்சி ஆய்விருக்கை மற்றும் பரதநாட்டிய இசைக் கலை வளர் இருக்கை ஆகிய மூன்று ஆய்விருக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழார்வலர்களின் நிதியுதவியோடு தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் கடந்த ஆண்டு அக்பர் கவுசர் யுனானி தமிழ் மருத்துவ(ம்) அறக்கட்டளை மற்றும் ஆய்வு மாணவர் க. அறிவுக்கரசு நினைவு அறக்கட்டளை ஆகிய இரண்டு புதிய அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 24

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் முனைவர் பட்ட மற்றும் ஆய்வியல் நிறைஞர் வகுப்புகளும், சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் முனைவர் பட்ட வகுப்பும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 95 முனைவர் பட்ட மாணவர்களும், 20 ஆய்வியல் நிறைஞர் மாணவர்களும், 13 முதுகலை முதல் ஆண்டு மற்றும் 15 இரண்டாம் ஆண்டு மாணவர்களும், 4 ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் சுவடியில் மற்றும் பதிப்பியல், திருமந்திரமும் வாழ்வியல், திருவாசகமும் வாழ்வியலும், செம்பொருட்டுணிவு, தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் ஆகிய பட்டய வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சுவடியில் மற்றும் பதிப்பியலில் 16 மாணவர்களும், திருமந்திரமும் வாழ்வியலும் 30 மாணவர்களும், செம்பொருட்டுணிவில் 82 மாணவர்களும், தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் 140 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

கடந்த ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 72 அரிய நூல்கள் 138 ஆய்வு மற்றும் அறக்கட்டளை நூல்கள் என மொத்தம் 210 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

“பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தெரிவுச் செய்யப்பட்ட நூல்கள், இந்திய மொழிகளான இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு நூல் வெளியிடப்பட்டநிலையில் இந்த ஆண்டு பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளுக்கான மொழிபெயர்ப்புப் பணிகள் முடிக்கப்பட்டு நூல் வெளியீட்டிற்கு அணியமாக உள்ளன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம்

நற்றமிழ் அறிவோம்: 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன் கூடிய ‘தூயதமிழகராதி’ 50,000 படிகள் அச்சிட்டு, பள்ளிக் கல்வித் துறை வாயிலாக அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒன்று வீதம் வழங்கப்பட்டுள்ளன.

வேர்ச்சொல் சுவடி: புதிய கலைச் சொற்களை உருவாக்க விழைவோர்க்கும், அரசுத் தேர்வாணையம் நடத்தும் போட்டித்

தேர்வுகளின் தமிழ்ப் பாடத் தேர்வர்களுக்கும், பள்ளி மாணாக்கர்களுக்கும் பயன்படும் வகையிலும் தமிழ்ச் சொற்களின் வேர்ச் சொற்களைத் தொகுத்து வேர்ச்சொல் சுவடி எனும் நூல் 5000 படிகள் அச்சிட்டு, பள்ளிக்கல்வித் துறை வாயிலாக அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒன்று வீதம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கலைக்கழகம்: 21-11-2016 ஆம் நாள் தமிழ்க் கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டு சட்டப் பேரவை அறிவிப்பிற்கிணங்க, தமிழ்க் கலைக்கழகம் புதுப்பிக்கப்பட்டு, மதிப்புறு உறுப்பினர்கள் 30 பேர், அலுவல்சார் உறுப்பினர்கள் 4 பேர், அலுவல்சாரா உறுப்பினர்கள் 5 பேர் என மொத்தம் 39 பேர் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

2018 டிசம்பர் முடிய மாதத்திற்கு ஒரு கூட்டம் என்ற வகையில் 28 கூட்டங்களும், 2019 சனவரி மாதத்திலிருந்து மாதத்திற்கு 2 கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. தமிழ்க் கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது முதல் 2020 மார்ச்சு 5 ஆம் நாள் வரை 58 கூட்டங்கள் முடிவடைந்துள்ளன.

தமிழ்க் கலைக்கழகக் குழுவால் 16,385 கலைச்சொற்களுக்கு ஏற்பளிக்கப்பட்டு, 3000 சொற்களுக்கு அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. 9,000 கலைச்சொற்களுக்கான அரசாணை எதிர்நோக்கப் பெறுகிறது. எஞ்சியதில் 4,385 கலைச்சொற்களுக்கு அரசாணை வெளியிடுவதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

தமிழ்க் கலைக்கழகத்தால் வடிவமைக்கப்படும் கலைச்சொற்கள் தேவையான இடங்களில் படங்களுடன் இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைதளத்தின் வழியாகவும், முகநூல், கட்செவி, கட்டுரை, படவரி, நாளிதழ், மாத இதழ்கள் வாயிலாகவும் பொது மக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 24

மாணவர் இலக்கிய அகரமுதலி (சட்டமன்றப் பேரவை அறிவிப்பு 2018-2019)

சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள், உரைநடைகள் வெளியீடுகளிலுள்ள சொற்களைப் பிறர் உதவியின்றி பள்ளி, கல்லூரி மாணவர்கள் தனித்துப் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி நூலினை 1/8 தெம்மி அளவில் 400 பக்கங்களில் அச்சுக்கு அணியமாக்கப்பட்டு வருகிறது.

அன்றாட வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அகராதி (சட்டமன்றப் பேரவை அறிவிப்பு 2018-2019) (தொடராச் செலவினம்)

அன்றாட வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தொகுத்து, 1/8 தெம்மி அளவில் 400 பக்கங்களில் அச்சுக்கு அணியமாக்கப்பட்டு வருகிறது.

நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி (சட்டமன்றப் பேரவை அறிவிப்பு 2018-2019)

தமிழ் மக்களின் இல்லங்கள், அலுவலகம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், சிறுகதை, புதினம், இலக்கியம் மற்றும் புதுப்பாடல்களில் பயன்படுத்தப்பெறும் நடைமுறைச் சொற்களைத் தொகுத்து, 1/8 தெம்மி அளவில் 400 பக்கங்களில் அச்சுக்கு அணியமாக்கப்பட்டு வருகிறது.

திருந்திய பதிப்பு

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வெளியீடுகளான 31 தொகுதிகளையும், ஒரே சீராக 8050 பக்கங்கள் கொண்ட திருந்திய பதிப்பாக வெளியிடுவதற்கான பணிகள் நிறைவடைந்துவிட்டன. நுண்ணாய்வுக் குழுவின் மீள் கூர்ந்தாய்வு நிறைவடைந்ததும் விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும்.

சொற்குவை (சட்டமன்றப் பேரவை விதி-110-ன்கீழ் அறிவிப்பு 2018-2019)

தமிழின் சொல்வளத்தைப் பாதுகாத்துப் பெருகச் செய்யும் உயரிய இலக்கை நோக்கிச் செயற்படுத்தப்படும் சொற்குவைக்கென்று ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும் என்று 28-6-2018 ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி-110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது.

சிகாகோவில் 5-7-2019 ஆம் நாளன்று நடைபெற்ற பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது சொற்குவை என்ற வலைதளம் தொடங்கி வைக்கப்பட்டது.

சொற்குவை வலைதளத்தில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, தமிழ்க் கலைக்கழகம் வெளியிடும் கலைச்சொற்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் கலைச்சொல் பேரகராதி, தமிழ்வளர்ச்சி இயக்ககத்தின் ஆட்சிச் சொல்லகராதி ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள 3,80,186 சொற்கள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன.

"சொற்குவைத்" திட்டத்தின்கீழ் இவ்வியக்ககம் இதுவரை 5 மாவட்டங்களைச் சேர்ந்த 13 கல்லூரிகளில் அகராதியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கங்களை நடத்தியுள்ளது. இக்கருத்தரங்குகளில், கல்லூரி மாணவர்களுக்குக் கலைச்சொற்களை உருவாக்குவது தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும், 'சொல் உண்டியல்' மூலமாக மாணவர்களிடமிருந்து 26,076 கலைச்சொற்கள் பெறப்பட்டு, சிறந்த தமிழ்க் கலைச்சொற்களை வழங்கும் மாணவ-மாணவியரை ஊக்கப்படுத்தும் வகையில் இயக்ககத்தின் சார்பில் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

கருத்தரங்கம் நடைபெறும் கல்லூரிகள்தோறும் வெண்பதாகை வைக்கப்பட்டு மாணவர்கள் தமிழில் கையொப்பமிட ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாணவர்கள் தமிழில் கையொப்பமிட்ட சட்டகமொன்று அகரமுதலி இயக்ககத்திற்கு நினைவுப்பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவ-மாணவியர் வழங்கியவற்றில் குறிப்பிட்ட சில கலைச்சொற்கள் தமிழ்க் கலைக் கழகத்தின் வல்லுநர் குழு ஏற்புக்குப் பின் ''சொற்குவை" வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

சொற்குவையின் செயற்பாடுகளைப் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் 25-2-2019 ஆம் நாள், சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'சொற்குவை' வல்லுநர் குழுவின் முதல் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் பல்வேறு துறைசார்ந்த 30 தமிழறிஞர்கள் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்துகொண்டு சொற்குவையின் இலக்கு வெற்றியடைவதற்கான கருத்துகளை வழங்கினார்கள்.

[2020 மார்ச் 24

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க 25-3-2019 ஆம் நாளன்று, கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ வல்லுநர் குழுக் கூட்டம் நடத்தப்பெற்றது. அதில் மருத்துவத்துறையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 30 மருத்துவ அறிஞர்கள் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் கலந்துகொண்டு 1000-த்திற்கும் மேற்பட்ட மருத்துவத் தமிழ்க் கலைச்சொற்களை வழங்கினார்கள்.

சொற்குவையின் ஒரு பகுதியாக, இவ்வியக்ககத்திலேயே 'சொற்குவை' கட்டணமில்லா அழை மையம் செயற்பட்டு வருகிறது. இந்தியா முழுவதிலுமிருந்து இந்த அழை மையத்தின் 14469 என்ற எண்ணில் தொடர்புகொண்டு 'தமிழ்ச் சொற்கள்' குறித்த ஐயங்களையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச் சொற்களையும், தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களையும் கேட்டுத் தெளிவு பெற இயலும்.

முதற்கட்டமாக முன்னோட்ட முறையில் இந்த அழை மையம் இவ்வியக்ககப் பணியாளர்களைக்கொண்டு காலை 10 மணி முதல் மாலை 5-30 மணிவரை செயற்பட்டு வருகிறது. கூடிய விரைவில் அழைமையம் 24 மணி நேரமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சொற்குவை வலைதளத்தினை 12,206 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். மேலும், கல்லூரி மாணவர்கள், தமிழறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் புதிய சொற்களை வழங்கவும், சொற்களைப் பார்வையிடுவதற்கும் இந்த வலைதளத்தில் உறுப்பினராகப் பதிவு மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

'தமிழ் அகராதியியல் நாள் கொண்டாடுதல்' (சட்டமன்றப் பேரவை அறிவிப்பு 2019-2020)

"தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கியவரும் 'தமிழ் அகராதியியலின் தந்தை' எனப் போற்றப்படுபவருமான 'வீரமாமுனிவரின்' பிறந்த நாளான நவம்பர் 8 ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாள்' என ஆண்டுதோறும் கொண்டாடப்படும். இந்நிகழ்ச்சியல் அயல்நாட்டுத் தமிழறிஞர் ஒருவரை அழைத்து பன்னாட்டு கருத்தரங்கம் நடத்துதல் உட்பட ஆகும் செலவினங்களுக்கு ஆண்டுதோறும் ரூபாய் பத்து இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்" என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

2019 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் சென்னை, எத்திராசு மகளிர் கல்லூரிக் கலையரங்கில் காலை 9-30 மணியளவில் 'தமிழ் அகராதியியல் நாள்' துவக்க விழா நடைபெற்றது.

முன்னதாக, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள வீரமாமுனிவரின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றறது. இந்நிகழ்வில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், தமிழறிஞர்களும் கலந்துகொண்டனர்.

விழாவில் அகரமுதலி இயக்ககத்தில் நடைபெறும் தமிழ்க் கலைக்கழகம் உருவாக்கிய 9000 கலைச்சொற்கள் கொண்ட குறுந்தகடு அரசு சார்பில் வெளியிடப்பட்டது.

பன்னாட்டுக் கருத்தரங்கத்தை மேனாள் கல்வி அமைச்சர் முனைவர் வைகைச் செல்வன் அவர்கள் தொடங்கி வைக்க, பேராசிரியர் வ. செயதேவன், பேராசிரியை அரங்க. மல்லிகா, திரு. க. செயகிருட்டிணன், முனைவர் மதன் கார்க்கி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

மருத்துவக் கல்லூரி, கல்வியியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், தமிழறிஞர்கள் உட்பட 1600-க்கும் மேற்பட்டோர் விழாவில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

'தமிழ் அகராதியியல் நாள் நிறைவு விழா'

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், கிண்டியிலுள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக அரங்கில் 11-3-2020 புதன்கிழமையன்று தமிழ் அகராதியியல்நாள் நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், நடைமுறை வாழ்க்கையிலும் தூய தமிழிலேயே பேசுகின்ற

திரு. சி. மணிகண்டன் (கோவை)

திரு. இரா. அரிதாசு (திருவாரூர்)

திரு. த. ஆரோக்கிய ஆலிவர் இராசா (திருச்சி)

ஆகிய மூவருக்கும் மாண்புமிகு அமைச்சர்களால் தூயதமிழ்ப்பற்றாளர் சான்றிதழும் தலா ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன.

சொற்குவை மாணவத் தூதுவர்களுக்கான நியமன மடல்கள் முதல் கட்டமாக 6 கல்லூரிகளைச் சேர்ந்த 67 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. விழாவில் 65 ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய

[2020 மார்ச் 24

'அகராதி ஆய்வு மலர்' வெளியிடப்பட்டதோடு, அரசாணை பெறுவதற்காக 4385 தமிழ்க் கலைச்சொற்கள் அடங்கிய குறுந்தகடும் வெளியிடப்பட்டது.

பன்னாட்டுக் கருத்தரங்கத்தைத் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் மருத்துவர் சுதா சேஷையன் அவர்கள் தொடங்கி வைக்க, முனைவர் தி.மு. அப்துல்காதர், முனைவர் மு. முத்துவேலு, முனைவர் மேரிசொர்ணாம்பாள், முனைவர் மதன் கார்க்கி, யாழ்ப்பாணம் தேவநாயகம் தேவானந்த், திரு. மானா பாஸ்கரன் ஆகியோர் கருப்பொருளுரை வழங்கினார்கள்.

பிற்பகலில் கனடா நாட்டைச் சேர்ந்த திருமதி மேரி இளங்கோவன் குழுவினரின் தமிழிசை நாட்டிய நிகழ்ச்சியும் கல்லூரி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவில் அகராதியியல் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், தமிழாய்வாளர்கள், கல்வியியல் மற்றும் மருத்துவத் துறை மாணவ மாணவியர், பேராசிரியர்கள், ஊடகத் துறையினர் உட்பட 1,500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

தமிழ் அகராதியியல் நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/-மும் வழங்கப்பட்டன.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

நடுவண் அரசின் தேசிய உயர் கல்வி மன்றம் மற்றும் தமிழக அரசும் இணைந்து தமிழ்ப் பல்கலைக்கழக உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்கு ரூ.20.00 கோடி நல்கை வழங்க அனுமதித்து ஆணை பெறப்பட்டுள்ளது. இதில் நடுவண் அரசு ரூ.12.00 கோடியும், தமிழக அரசு ரூ.8.00 கோடியும் ஆகும். முதற்கட்டமாக ரூ.10.00 கோடி, விடுவிக்கப்பட்டுள்ளது. அதில் நடுவண் அரசு ரூ. 6.00 கோடி, தமிழக அரசு ரூ.4.00 கோடி நல்கை வழங்கியுள்ளது.

மொரிசீயஸ் நாட்டின் மேனாள் அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்களுக்கும், நாட்டார் வழக்காற்றியல் புலத்தின் முன்னோடி ஆய்வாளர்களில் ஒருவரான திரு. ஆ. சிவசுப்பிரமணியன்

அவர்களுக்கும், சிறுகதை எழுத்தாளர்-கவிஞர் திரு. தி. கல்யாணசுந்தரம் என்கிற வண்ணதாசன் அவர்களுக்கும் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. மூவருக்கும் வழங்கப்பட்ட இந்த மதிப்புறு முனைவர் பட்டம் குறித்து தமிழ்கூறும் நல்லுலகில் பெருமிதமும் பாராட்டும் கிட்டியுள்ளது. வருங்காலங்களில் இதுபோன்று தகுதியுடையோருக்கு மதிப்புறு முனைவர் பட்டங்கள் வழங்கப்படும்.

முதுகலை மற்றும் ஒருங்கிணைந்த முதுகலை தமிழ் பயிலும் மாணவர்களுக்கான உதவித்தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ.2,000/- வீதம் வழங்குவதற்கு ரூ.12,54,000/-க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. (முதுகலை முதலாமாண்டு 20 பேர்+இரண்டாமாண்டு 13 பேர்+ஒருங்கிணைந்த முதலாமாண்டு 24 பேர் என மொத்தம் 57 மாணவர்கள்) 41 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டுத்தமிழ் மாணவர்கள்-ஆசிரியர்களுக்கான இலக்கிய-இலக்கண-பண்பாட்டுப் பயிற்சித் திட்டம்-ரூ.30.00 இலட்சம்

தமிழ் மொழியைக் கற்பித்தல், இலக்கிய-இலக்கணப் பாடங்களின் வழி பேச்சு எழுத்துத் தமிழை மேம்படுத்துதல் என்னும் அடிப்படையில் பிஜி மற்றும் கயானா (பிரிட்டிஷ் கயானா) நாட்டில் வாழும் தமிழ்க் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்குத் தொடராச் செலவினமாக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020 மே திங்களில் இப்பயிற்சி நடைபெற உள்ளது.

இராபர்ட் கால்டுவெல் ஆய்வு இருக்கை ரூ.100.00 இலட்சம்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட ஐரோப்பியத் தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் சீரிய தமிழ்ப் பணியினைப் போற்றி சிறப்பிக்கும் வகையில் அன்னாரின் நெறியில் ஒப்பிலக்கண ஆய்வில் தமிழறிஞர்களையும் மாணவர்களையும் நெறிப்படுத்தவும் திராவிட மொழிகளை ஒப்பிட்டு தொடர்ச்சியாகப் பல்வேறு வகையான ஆய்வுகள் மேற்கொள்ளவும், "தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல்" பெயரில் தமிழ் ஆய்விருக்கை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு வைப்புத் தொகையாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், ஆய்வுத் தகைஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

[2020 மார்ச் 24

தமிழ்ப் பல்கலைக்கழக மின் அமைப்புகளை சிறப்புச் சீர்காப்பு செய்தல்-ரூ.29.64 இலட்சம்

தமிழ்ப் பல்கலைக்கழக உயரழுத்த மின் நிலையப் பகுதிக்கும் நூலகக் கட்டடத்திற்கும் இடையில் 36 ஆண்டுகள் பழமையான பழுதுற்ற புதை மின்வடத்தை மாற்றி புதிய மின்வடம் அமைக்கவும் மின் அமைப்புகளைப் புதுப்பிக்கவும் தொடராச் செலவினமாக ரூ.29,64,052/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வருகை தரு பேராசிரியர்கள்-ரூ. 36.00 இலட்சம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர்களின் அனுபவம் மற்றும் அறிவாற்றலை, ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக 10 வருகைதரு பேராசிரியர்களையும் 5 இலக்கிய ஆளுமைகளையும் அழைத்தல். இவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.20,000/- வீதம் மதிப்பூதியமாக அளிப்பதற்குத் தொடர் செலவினமாக ரூ.36.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

முதுகலைத் தமிழ் இலக்கியம் மற்றும் ஒருங்கிணைந்த முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை-திட்டம்.

2020-2021 ஆண்டு முதல் இரண்டாண்டு முதுகலை படிக்கும் மாணவர்களுக்கும் (ஆண்டிற்கு 20 மாணவர்கள் வீதம்-2 ஆண்டிற்கு 40 மாணவர்கள்) மற்றும் ஒருங்கிணைந்த முதுகலை 5 ஆண்டுகள் படிக்கும் மாணவர்களுக்கும் (ஆண்டிற்கு 25 மாணவர்கள் வீதம் - 5 ஆண்டிற்கு 125 மாணவர்கள்) ஆக மொத்தம் 165 மாணவர்களுக்கு ரூ.2000/- வீதம் ஒவ்வொரு கல்வியாண்டின் 11 மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை ரூ.36,30,000/- நிதி ஒதுக்டுகீடு செய்யப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

2019-2020 ஆம் ஆண்டு அரிய நூல்கள் வெளியீடு

1.	சிவகீதை	த. கைலாசபிள்ளையால்	
2.	சிவாலயப் பிரதஷிண நமஸ்கார விதி	சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்	1940

2020 மார்ச் 24]

3.	பதி பசு பாசத் தொகையும் திருவருட்பயன் உதாரணக் கலித்துறையும்	ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்	1940
4.	நித்திய கன்ம நெறி	இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்	1927
5.	சிவஞானசித்தியார் ஆராய்ச்சி	ந. சிவகுருநாத பிள்ளை	1949
6.	கம்பர் காவியம் (அதன் நிலை விளக்கம்)	சொ. முருகப்பன்	1953
7.	ஸ்ரீ பவபூதியின் உத்தர ராம சரிதம் (வடமொழியிலிருந்து)	க. சந்தானம்	
8.	ஸ்ரீமஹாபராதக் கீர்த்தனை என்று வழங்கானின்ற ஸ்ரீ மஹாபாரத நாடகம்	தி. இராஜுமுதலியார்	
9.	வில்லிபாரத வசனம்	திரு. சு.அ. இராமசாமிப் புலவர்	1951
10.	ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி தூது	சூ. முனிசாமி முதலியார்	1887
11.	ஸ்ரீபக்தலீலாமிர்தம்	ஸ்ரீ மாதுசாமிசூரியவம்சியவர்	1888
12.	மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் உபதேச ரத்நம்	நவீனகதா புத்தகசாலையார்	1916
13.	ஸ்ரீ கோபிகா கீதம் (தமிழுரையுடன்)	பண்டித நடேச சாஸ்திரிகள்	1923
14.	ஏசுநாதர் போதனை	ஜே.ஸி. குமரப்பா	1948
15.	நாலாயிர திவ்யப்ரபந்தம்	மயிலை மாதவதாஸன்	1950
16.	பரத சேனாபதீயம் (மூலமும் உரையும்)	ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரையார்	1944
17.	முத்துத்தாண்டவர் தமிழிசைப் பாடல்கள்	திரு. டி.என். சுவாமிநாதப் பிள்ளையவர்	1943
18.	இசைத் தமிழ்	நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை	1943
19.	புது ரக துவாலைகள்	புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் சி. ராஜகோபாலாச்சாரியார் சி.என். அண்ணாத்துரை	1976

[2020 மார்ச் 24

20.	கீதத் தமிழ் (தமிழ்க் கீர்த்தனங்கள்)	கே.எம். பாலசுப்பிரமணியம்	1899
21.	ஹரி கீர்த்தனம்	யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்	1948
22.	கீர்த்தனாஞ்ஜலி (556 இன்னிசைப் பாடல்கள்)	யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்	1947
23.	கீர்த்தன மாலை	பாபநாசம் சிவன்	1949
24.	நந்தனார் சாித்திரக் கீர்த்தனை	கன்னியப்பமுதலியார்	1895
25.	பாணர் கைவழி யாழ் நூல்	டாக்டர் ஆ.அ. வரகுணபாண்டியன்	1950
26.	தமிழகம் ஊரும் பேரும்	ரா.பி. சேதுப்பிள்ளை	1946
27.	பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ்	ஸ்ரீமதி டி. பதுமாவதியம்மாள்	1895
28.	மங்கையரின் மாண்பு (இலக்கிய ஆராய்ச்சி)	பண்டிதை திரு. எஸ். கிருஷ்ணவேணி அம்மாள்	
29.	தமிழர் பண்பாடு	எஸ். வையாபுரிப் பிள்ளை	1949
30.	செடி கொடிச் சித்தர் லூதர் பர்பாங்க்	காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை	1935
31,	தளவாய்த் தாத்தா (அரிய நாயக முதலியார்)	எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர்	1944
32.	புரட்சிக் கவிஞர் (தொகுப்பு நூல்)	ப. முத்தையா	1946
33.	வாஸ்கோடகாமா	திரு. எஸ்.எஸ்.தேவர் அவர்கள்	1946
34.	கப்பலோட்டிய தமிழன்	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை	1948
35.	தளவாய் அரியநாதர் (அரியநாத முதலியார்)	கா. அப்பாத்துரை	1946
36.	தென்னிந்திய தொழில் விஞ்ஞானி ஜி.டி. நாயுடு (வரலாறு)	டி.எம். முத்து	1949
37.	மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர்	கே. சுந்தரராகவன், பி.ஏ.,	
38.	ஹெலன் கெல்லர் என் கதை	க.நா. சுப்ரமண்யம்	1955

39.	வையாபுரிப்பிள்ளை வாழ்க்கைக் குறிப்புகள்	வை. சரோஜினி	1957
40.	தமிழ்க்கலைக் கட்டுரைகள்	வித்துவான் அ.மு. பரமசிவானந்தம்	
41.	VASAKA THIRATTU	M.S. Purnalingam pillai, B.A.,	1896
42.	ஞானியாரடிகள் கந்தர்சட்டிச் சொற்பொழிவுகள்	திரு. மு.இராசாக்கண்ணு முதலியார்	1941
43.	தமிழ் வியாசங்கள்	வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்	1922
44.	கலைபயில் கட்டுரைகள்	செந்தமிழ்ச் செல்வி	1934
45.	தமிழ் வியாசங்கள்	சி. செல்வகேசவ முதலியார்	1919
46.	காவியமும் ஓவியமும்	கி.வா. ஜகந்நாதன்	1944
47.	கடவுளும் கோயிலும்	சொ. முருகப்பா	1933
48.	தமிழ் விருந்து	ரா.பி. சேதுப்பிள்ளை	1945
49.	இக்பால் கவி அமுதம்	ஆர்.பி.எம். கனி, பி.ஏ.பி.எல்.,	1947
50.	சைவத் திறவு	திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	1929
51.	கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி		1943
52.	ஆயிரத்தெட்டு சிவஷேத்திரமாலை	இ.ராம. குருசாமிக்கோணார்	1976
53.	ஸ்ரீ சென்னமல்லையர் இயற்றிய சிவ சிவ வெண்பா மூலமும் உரையும்	டாக்டர் உ.வே. சாமிநாதையர்	1938
54.	மாயாப் பிரலாபம்	காழிக் கண்ணுடைய வள்ளலார்	1934
55.	திருவாரூர்த் தியாகராசலீலை	ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்	1905
56.	கடோபநிஷதம் அல்லது யமன் பேசுகிறார் மூலமும் உரையும்	எம்.ஆர். ஜம்புநாதன்	1932
57.	இராமாயணச் சிந்து	பால் எதல்பட் கோனாரவர்	1932

[2020 மார்ச் 24

58.	ஸ்தோத்ர - ராமாயண வரகவி	திரு. அ. சுப்ரமண்யபாரதி	1934
59.	ஸ்ரீவான்மீகராமாயண சருக்கார்த்த சங்கிரகம்	சா.கி. இரங்கநாதச் செட்டியார்	1911
60.	சித்தாந்தரத்நாகரம்	சோமசுந்தர நாயகர் சனவரி	1906
61.	சித்தாந்தரத்நாகரம்	சோமசுந்தர நாயகர் டிசம்பர்	1906
62.	சித்தாந்தரத்நாகரம்	சோமசுந்தர நாயகர்	1907
63.	மெய்கண்டசிவ தூஷண நிக்ரஹம் மெய்கண்ட சிவஸ்தவம்	தி. முனிசாமி முதலியார்	1900
64.	சிறுவர்க்கான செந்தமிழ்	மறைமலையடிகள்	1934
65.	கோகிலாம்பாள் கடிதங்கள் சுவாமி	சுவாமி வேதாசலம்	1931
66.	காளிதாசர் இயற்றிய சாகுந்தல நாடகத் தமிழ் மொழிபெயர்ப்பு	மறைமலையடிகள்	1933
67.	பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை	ஸ்ரீஸ்ரீசுவாமி வேதாசலம்	1919
68.	பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்	மறைமலையடிகள்	1930
69.	ஸ்ரீசாரதா தேவியார் சரித்திரம்	(ஸ்ரீசாரதா மாதர் மந்திரம்)	1934
70	தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்	மறைமலையடிகள்	1931
71.	காஞ்சிப் புராணம்	சிவஞான சுவாமிகள்	1937
72.	நன்னூல் மூலமும் காண்டிகையுரையும்	திரு. விசாகப் பெருமாளையர்	1904

ஆராய்ச்சி (ம) ஆய்வு நூல்கள்

73.	ஆசியாவின் புவியியல் II	கொ.சேஷ.நரசிம்மன்	
74.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு III	ஏ. உஸ்மான் ஷெரீப்	
75.	ஆக்ஸ்ஃ போர்டின் இந்திய வரலாறு IV	டி.ஆர். இராமசந்திரன்	

2020 மார்ச் 24]

76.	ஆக்ஸ்ஃ போர்டின் இந்திய வரலாறு -1	தி.வெ. குப்புசாமி	
77.	ஹர்ஷவர்த்தனர்	அ. கணேசன்	
78.	அரசியல் அமைப்புகள்	ஜே. இராமசந்திரன்	
79.	அபிதான கோசம்	ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை	1902
80.	அசோகரும் அவருடைய காலமும்	எம்.எஸ். கோவிந்தசாமி	
81.	ஹர்ஷர் காலத்து வட இந்தியா	ந.க. மங்கள முருகேசன்	
82.	இரட்டையாட்சி	எஸ். சிங்கராசன்	
83.	இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்	திரு.வி.க.	
84.	இங்கிலாந்து வரலாறு II 1918 வரை	பா. மாணிக்கவேலு	
85.	இங்கிலாந்தின் அரசில் வரலாறு	ந. சுதர்சன் பாபு	
86.	இங்கிலாந்தின் வரலாறு III	எம்.எக்ஸ். மிராண்டா	
87.	இங்கிலாந்து வரலாறு IV	என்.ஜே. இராஜகோபால்	
88.	இங்கிலாந்து வரலாறு கி.பி. 1603 வரை	கே.கே. பிள்ளை	
89.	இங்கிலாந்து வரலாறு 1	க.த. திருநாவுக்கரசு	
90.	இந்தியாவின் முதல் விடுதலைப் போர் 1857	க. மோகன்ராம்	
91.	இந்தியாவின் சிறப்பு வரலாறு I	டாக்டர் தி.வெ. குப்புசாமி	
92.	இந்தியாவின் சிறப்பு வரலாறு III	கி. பாண்டுரங்கன்	

93.	இந்தியாவின் சிறப்பு வரலாறு II	அ. உஸ்மான் ஷெரீப்	
94.	இந்தியக் கல்வியில் சிறப்புப் பிரச்சினைகள்	கொ.ஆ. செல்லையா	
95.	இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு 1707 வரை	ந.க. மங்கள முருகேசன்	
96.	இந்திய வரலாறு இரண்டாம் பகுதி	கி.ந. அனுமந்தன்	
97.	இந்திய வரலாறு முதல் கி.பி. 1206	இ. ஆலாலசுந்தரம்	
98.	இந்திய வரலாறு II (கி.பி. 1206 முதல் 1773 வரை)	உஸ்மான் ஷெரீப்	
99.	இந்திய வரலாறு கி.பி. 1526 முதல்	இரா. வேலாயுதம்	
100.	இந்திய வரலாறு கி.பி. 1000 - 1707	டாக்டர் ந. சுப்ரமண்யன்	
101.	இந்திய வரலாறு (கி.பி. 1201-1773)	எ. உஸ்மான் ஷெரீப்	
102.	இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு	பா. மாணிக்கவேலு	
103.	ரஷ்ய வரலாறு	ம. இராசசேகர தங்கமணி, சு. முத்துராஜ்	
104.	வடஇந்திய வரலாறு (கி.பி. 1206)	இ. ஆலாலசுந்தரம்	
105.	முதலாம் இராசேந்திர சோழன்	ம. இராசசேகர தங்கமணி	1973
106.	முகலாயப் பேரரசு II	எம்எக்ஸ், மிராண்டா	

107.	மத்தியக் கிழக்கின் சிறப்பு வரலாறு (கி.பி. 570 முதல் 1258 வரை)	அ. உஸ்மான் ஷெரீப்	
108.	விஜயநகரப் பேரரசின் வரலாறு	டாக்டர் அ. கிருஷ்ணசாமி	
109.	விசயநகரப் பேரரசு கிருட்டிண தேவராயர்	பு.ச. அரங்கநாதன்	
110.	வின்ஸ்டன் சர்ச்சில்	எம்.எக்ஸ், மிராண்டா	
111.	தற்கால அரசில் அமைப்புகள்	மோ. வள்ளுவன கிளாரன்சு	
112.	தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் - வாழ்வியல்	தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு	
113.	தக்காண வரலாறு (கி.பி. 600 முதல் 973 வரை)	டி.என். வாசுதேவராவ்	
114.	பிரிட்டனின் அரசாங்கமும் அரசியலும் (கி.பி. 1485-க்குப்பின்)	வீ. கண்ணையா	
115.	பிரிட்டன் வரலாறு கி.பி. 1485 வரை	இரா. அண்ணாமலை	
116.	பிரிட்டன் வரலாறு (கி.பி. 1714-1837)	டாக்டர் கி.ர. அனுமந்தன்	
117.	முருகன் அல்லது அழகு	திரு.வி.க.	
118.	கல்வி வரலாறு (இந்தியக் கல்வி வரலாறு)	எஸ். சந்தானம்	
119.	சமூகவியல்	இரா. கல்பகம்	
120.	சமூக உளவியல்	திரு. ழி. வேதமணி மனுவேல்	
121.	சங்க கால வரலாறு	டாக்டர் இராமசந்திரன்	
122.	பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்	மறைமலையடிகள்	

[2020 மார்ச் 24

123.	பண்பாட்டுக் கோலங்கள்	கி.பூ. சுப்பிரமணியன்	
124.	பாண்டியர் வரலாறு முதல் பாகம்	ம. இராசசேகர தங்கமணி	
125.	மெய்ப்பொருளியல் ஓர் அறிமுகம் 1	இராமலிங்கம், சி	
126.	தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்	மு.ரா. பெருமாள் முதலியார்	
127.	தென்னிந்திய வரலாறு II	மு.ரா. பெருமாள்	
128.	தென்கண்டங்கள் - ஆஸ்திரேலியா	பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள்	
129.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	
130.	தென்மேற்கு ஆசியா	செல்வி இரா. அலமேலு	
131.	தென் அமெரிக்கா	எம்.என். பத்மநாபன்	
132.	ஐரோப்பிய வரலாறு கி.பி. 476-1453	தி.வை. சொக்கப்பா	
133.	ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1500 முதல்)	என்.ஜே. இராஜகோபால்	
134.	ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1453 முதல் 1815)	டி.என். வாசுதேவராவ்	
135.	ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1450 முதல் 1970)	டாகடர் மு. ஆரோக்கியசாமி	
136.	ஐரோப்பிய வரலாறு(கி.பி. 1870 முதல் 1919)	டி. பாலசுப்பிரமணியன்	
137.	ஐரோப்பாவின் வரலாறு - 1815 முதல்	அ. திலகவதி ஜகதீசன்	
138.	ஐரோப்பிய வரலாறு	திரு. வை. விருத்திகிரீசன்	
139.	கிரேக்க நாட்டு வரலாறு III	இராமாநுஜம் தேவதாஸ்	

2020 மார்ச் 24]

140.	ரோமாபுரி வரலாறு (கி.பி. 1476 வரை)	இரா. ஆலாலசுந்தரம்	
141.	சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு பாகம் 1	மா. பாலசுப்ரமணியன்	
142	சோழர் வரலாறு	கே.கே. பிள்ளை	
143.	தொல்காப்பிய பொருளதிகார மேற்கொள் விளக்க அகராதி	ம.ஆ. நாகமணி	
144.	ஞானசம்பந்தர் காலச் சமுதாயம்	சிவக்குடில் தம்பி	
145.	தமிழர் பண்பாட்டில் கோவில்	சிவபுரம் தூண்டிய சோதி சரவண சுந்தர்	
146.	திருவாசக அறிவியல்	சிவபுரம் கோல மார்பன் முத்துக்குமார்	
147.	திருவாசகம் இன்பநெறி	சிவபுரம் சிவபோகமித்ரா	
148.	திருவாசகத் திருநடனம்	சிவபுரம் சிவத்தென்றல் அஜந்தா, சிவபுரம் சிவனொளி சீர்கவி, சிவபுரம் விக்கிரம துரியா	
149.	காலக்கணிதம் ஆய்வு வழிகாட்டி	சிவபுரம் ஐயா தம்பிரான், தோழர் கபிலனார்	
150.	திருவாசகம் மாணவர் வழிகாட்டி	சிவபுரம் ஐயா தம்பிரான், தோழர் கபிலனார்	
151.	சாதக அலங்காரச் சிறப்புப் பலன்கள்	முனைவர் தி. மகாலட்சுமி	
152.	சோதிடவியலில் யோகம்	முனைவர் தி. மகாலட்சுமி	
153.	சோதிடவியலின் மேன்மையும் மேல் நிலை ஆய்வும்	முனைவர் தி. மகாலட்சுமி	

154.	திருமுருகாற்றுப்படையில் முருகன்	முனைவர் தி. மகாலட்சுமி	
155.	திருமூலரின் மூச்சுப்பயிற்சி	முனைவர் தி. மகாலட்சுமி	
156.	காலக்கணிதத் தோற்றமும் வளர்ச்சியும்	ஜி. மாடசாமி சோதிடர்	
157.	திருமந்திரமும் திறன்மேம்பாடும்	இ. ராஜரெத்தினம்	
158.	உடல் பராமரிப்பிற்கு மூலிகை மருத்துவம்	திருமதி ஜெயந்தி கோபால்	
159.	மஹாமகரிஷியின் மருத்துவ மஹயோக விஞ்ஞானம்	டாக்டர் கே.பி. தயாநிதி	
160.	Lectures on Theosophy	Mohansundarpandian	
161.	நீர்வேலி	செ.ப. தமிழரசன்	
162.	சங்க இலக்கியங்களில் ஓர் ஆய்வு	குமார்	
163.	ஏடக அறிவியல்	முனைவர் கோதண்டராம் முனைவர் பி. கவிதா	
164.	சங்க இலக்கியத்தில் விழுமியங்கள்	முனைவர் கு. நாகம்மாள்	
165.	சங்க இலக்கியத்தில் தூது	முனைவர் பாக்கியராஜ்	
166.	கர்ணமோட்சம் தெருக்கூத்து (எழுத்துப் பனுவலாக்கம்)	முனைவர் கா. காமராஜ்	
167.	பரம்பரை மருத்துவம்	பாலகுமார்	
168.	கங்கை கொண்டானுக்கு கங்கை நீராட்டு	ஆ. மனோகரன்	
169.	புனிதம் தேடும் புனிதம்	கௌதம் நீல்ராஜ்	

2020 மார்ச் 24]

170.	டாக்டர் ஜெ ஜெயலலிதா பிள்ளைத்தமிழ்	ஏழுமலை	
171.	நெய்தல் நூறு	முனைவர் கே.ஏ. கருணாநிதி	
172.	சங்க இலக்கிய அமிழ்தம்	முனைவர் கே.ஏ. கருணாநிதி	
173.	கடலார் (நெய்தற் காட்சியும் கருத்தும்)	முனைவர் கே.ஏ. கருணாநிதி	
174.	பழந்தமிழ் நூல்களில் உயிரினங்கள்	மலரடியான்	
175.	மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்	முனைவர் கரு. நாகராசன்	
176.	பாட்டி மருத்துவம் (நாடகம்)	ஆணைவாரி ஆனந்தன்	
177.	வானொலியில் ஆணைவாரி	ஆனந்தன்	
178.	கலைத்தமிழ் ஆய்வுக்களங்கள்	முனைவர் கோ.விசயராகவன், முனைவர் பா. இராசா	
179.	புத்தி இலக்கியத்தில் தமிழ் சமூகம் (கவிதை)	முனைவர் கோ.விசயராகவன், முனைவர் ஆ.மணவழகன்	
180.	புத்தி இலக்கியத்தில் தமிழ் சமூகம் (புதினம்)	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் ஆ. மணவழகன்	
181.	மறைந்துபோன இதழ்கள்	ராஜசேகர்	
182.	பாவலர் பெருஞ்சித்தனார் எனும் சொல்	மதிவேந்தன்	
183.	தமிழ் இலக்கியங்களில் சமுதாய மொழியியல் அணுகுமுறை	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் ந. சுலோசனா	

184.	தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழிசை பரவலும் பங்களிப்பும்	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்	
185.	மொழியியல் வகைமைகளும் கோட்பாடுகளும்	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் ந. சுலோசனா	
186.	கன்னித் தமிழ், கணினி தமிழ்	முனைவர் ர. பன்னிருகை வடிவேல்	
187.	வள்ளலாரின் வாழ்வும் படைப்பும்	முனைவர் தி. மகாலட்சுமி	
188.	வள்ளலாரின் மருத்துவம்-யோகமும்	முனைவர் தி. மகாலட்சுமி	
189.	வள்ளலாரின் சாகாக் கல்வி	முனைவர் தி. மகாலட்சுமி	
190.	வள்ளலாரின் ஆன்மிக வாழ்வியல் நெறி	முனைவர் தி. மகாலட்சுமி	
191.	வள்ளலாரின் பன்முகத்திறன்	முனைவர் தி. மகாலட்சுமி	
192.	திருவள்ளுவர் திருமுகம்	டாக்டர் வி.ஜி. சந்தோஷம்	
193.	நற்றமிழ் வல்ல நால்வர்	சு. சபாரத்தின குருக்கள்	
194.	காரைக்கால் அம்மையார் வரலாறும் பதிகங்களும்	சு. சபாரத்தின குருக்கள்	
195.	தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் பாகம் - 1	முனைவர் அ. சதீஷ்	
196.	தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் பாகம் - 2	முனைவர் அ. சதீஷ்	
197.	சங்கமும் சமையலும்	ந. செல்லம்	
198.	நாட்டர் வழக்காற்றியல் ஆய்வு: ஒக்கநாடு மேலையூர் - தஞ்சாவூர்	சா.பு. அபிகாயில்	

2020 மார்ச் 24]

199.	தொல்லியல் நோக்கில் ஓய்மாநாட்டு கிடங்கில்	ஏ. ஜீவா	
200.	புதுக்கவிதைகளில் பெரியார்	முனைவர் வி. கலாவதி	
201.	தற்காலத் தமிழ் உருபன்கள்	முனைவர் ந. சங்கரநாராயணன்	
202.	சூரசம்மாரக் கூத்து	முனைவர் முருகு தயாநிதி	
203.	பன்முக நோக்கில் திருமூலர் மூச்சப்பயிற்சி	முனைவர் தி. மகாலட்சுமி	
204.	தமிழில் சொற்பொருள் மயக்க நீக்கத்திற்கான வழிமுறைகள்	முனைவர் த. யோகா	
205.	பள்ளு இலக்கியங்களில் வேளாண்மை மரபுகள்	முனைவர் சே. கரும்பாயிரம்	
206.	கலைத்தமிழ் ஆய்வுக்களங்கள்	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் பா. இராசா	
207.	உலகத் தமிழிசை ஆய்வுகள் 1	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்	
208.	உலகத் தமிழிசை ஆய்வுகள் 2	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்	
209.	உலகத் தமிழிசை ஆய்வுகள் 3	முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்	
210.	பண்படுத்தும் பாட்டும் பயன் விளைக்கும் கூத்தும்	முனைவர் வேட்டவராயன்	
211.	Billingual Dictonaries Problem and Principles of Preparation	Dr. N. Murugayan	

212.	Purachi Thalaivar MGR's contrbution to Tamil	Dr. M.J. Rabising	
213.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தமிழ்த்தொண்டு	முனைவர் பேரா.ம.செ. இரபிசிங்	
214.	ஆன்மாவின் குரல்	தா. மார்டின் செல்லதுரை	
215.	திருமந்திரமும் அரும்புகளின் ஆன்மீகமும்	நா. உமாபரமேஸ்வரி	
216.	போகர் அருளிய திருமந்திர ஞானம்	போகர் ர. பாட்லீஸ் கண்ணன்	
217.	திருமந்திரத்தில் காலக்கணிதம்	போகர் ர. பாட்லீஸ் கண்ணன்	
218.	மாணவர்களுக்கான தமிழ்க்குளியல்	போகர் ர. பாட்லீஸ் கண்ணன்	
219.	பழந்தமிழர் வெற்றிலை மகத்துவம்	போகர் ர. பாட்லீஸ் கண்ணன்	
220.	இயற்றமிழ் அறிவியல்		
221.	தூது இலக்கிய ஆய்வுத் துளிகள்	வ. பாக்கியராஜ்	
222.	கல்வியும் வினாவும்	பி. அனிதா	
223.	புறநானூறும் புறப்பொருள் வெண்பா மாலையும் (திணை, துறைப் பகுப்பு ஒப்பாய்வு)	க. கருப்பசாமி	
224.	நுளாம்பூர் கிராமத்தில் காது மூக்கு தொண்டை பற்றிய நாட்டுப்புற மருத்துவம்	முனைவர் இர. மணிமேகலை	
225.	கல்வராயன் மலை மலையாள இனப் பழங்குடிகள்	ச. ஆசைக்கண்ணு	

2020 மார்ச் 24]

226.	தமிழில் ஆய்வு (அறியப்படாத வரலாறு)	ப. ராஜசேகர்	
227.	அனிச்சம் (தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள்)	ஜெ. மதிவேந்தன்	
228.	மொழிபெயர்ப்பு - சில நுட்பங்கள்	முனைவர் ஆனைவாரி ஆனந்தன்	
229.	மருத்துவ சோதிடம்	முனைவர் தி. மகாலட்சுமி	
209.	சமுதாயப் பயன்பாட்டிற்குச் சோதிடவியல் ஆய்வு	முனைவர் தி. மகாலட்சுமி	
231.	The Enlighting Nectar of Honey of Thirumandram	Krishnaa Raj	
232.	திருமூலரும் மூலிகை விருட்சக்காலக் கணிதமும் மருத்துவமும்	சிவ. முனியசமி	
233.	சட்ட மன்றத்தில் சங்கநாதம்	முனைவர் கு. அல்லி	
234.	ஆண்டாள் அருளிச்செயல்	முனைவர் ச. வளவன்	
235.	பண்படுத்தும் பாட்டும் பயன் விளைக்கும் கூத்தும்	முனைவர் ப. வேட்டவராயன்	
236.	பாவாணர் கோட்டமும் பாசறையும்	முனைவர் நா. சுலோசனா	
237.	சுவடி இயல்	முனைவர் பூ. சுப்பிரமணியன்	
238.	திருவாசக விழுமியங்கள்	சி.க. ரேணுகா	
239.	முப்பருவம்	எஸ்.ஏ. வேணிற்செல்வன்	
240.	தமிழ் இலக்கியங்களில் வரலாற்றுப் பின்புலம் பண்பாட்டுப்பதிவுகளும் - தொகுதி - 1	முனைவர் கோ. விசயராகவன்	

241.	தமிழ் இலக்கியங்களில் வரலாற்றுப் பின்புலம் பண்பாட்டுப்பதிவுகளும் - தொகுதி - 2	முனைவர் கோ. விசயராகவன்	
242.	தமிழ்ச் சமுதாயத்தில் மொழிக்கொள்கையும் வளர்ச்சியும் (ஆய்வுக்கோவை)	முனைவர் கோ. விசயராகவன்	
243.	திருவாசகத்தில் பன்முகத் திறன்	முனைவர் தி. மகாலட்சுமி	
244.	திருவாசகத்தில் ஆன்மிக வாழ்வியல் நெறிகள்	முனைவர் தி. மகாலட்சுமி	
245.	மாணிக்கவாசகர் வரலாறும் பதிக உரை விளக்கமும்	முனைவர் தி. மகாலட்சுமி	
246.	சொல் புணர்ச்சி விதிகளும் தொல்காப்பிய மரபும்	மனோன்மணி தேவி	
247.	திருமந்திர வினா விடை	முனைவர் தி. மகாலட்சுமி	
248.	பன்னிரு ஆழ்வார்கள்	முனைவர் நா. ஜெயலட்சுமி	
249.	சங்க இலக்கியத்தில் நகர உருவாக்கமும் வளர்ச்சி நிலைகளும்	முனைவர் ஜெயசங்கர்	
250.	சங்க இலக்கியத்தில் காந்தள்	செல்வி பொலிகையூர் ரேகா	
251.	பெண்களும் சட்ட உரிமைகளும்	முனைவர் த. ராஜலட்சுமி	
252.	வேதாத்திரி மகரிஷி கவிதைகள் சமூக வியல் நோக்கு	முனைவர் ஜே.ஆர். லட்சுமி	
253.	கணினி வழி தமிழ் வளர்ச்சி	முனைவர் இரா. பிரபாகரன்	
254.	இந்திய அரசியலில் பெருந்தலைவர் காமராசரின் பங்கு	திரு. பழ. நெடுமாறன்	

255.	கவிஞர் மு. மேத்தாவின் படைப்புகளில் சமூதாயப் பார்வை	முனைவர் பீ. லிடியா பிரியதர்சினி	
256.	கவிஞர் நா. முத்துக்குமார் படைப்புகளில் மானுடம்	முனைவர் செ. ரவிசங்கர்	
257.	சோதிடவியலின் மெய்மைத் தன்மை	ம. சிவக்குமார்	
258.	தருமபுரி மாவட்ட நாட்டுப்புற மருத்துவம்	முனைவர் ஆ. சந்திரசேகரன்	
259.	மாணவருக்கான வள்ளலாரின் சீவகாருண்யம்	சி. பரமதயாளன்	
260.	சிறுவர்களுக்கான வானவியல் காலக் கணிதம்	இரா. வெங்கடேஸ்வரன்	
261.	தர்ஷிணியின் நாவல்கள்	தர்ஷிணி மாயா	
262.	உடல் நலம்	எஸ். வேதபுரி	
263.	வளமுடன் வாழும் வழியும் அறுசுவை அமிர்தமும்	எஸ். வேதபுரி	
264.	அமிர்த துளசி	பாரதி சுகுமாறன்	
265.	சிறுவர்களுக்கான வள்ளலாரின் வாழ்வியல் நன்னெறி	சி. பரமதயாளன்	
266.	சிறுவர்களுக்கான மென்திறன் மேம்பாடு	அ. ராஜரெத்தினம்	
267.	சித்தர் அருளிய உணவு முறைகள்	டாக்டர் எஸ்.கண்ணன்	
268.	காலக்கணிதமும் மருத்துவமும் (உச்சி முதல் பாதம் வரை)	கடகம் இராமசாமி	
269.	நான்காம் தமிழ்ச் சங்கம்	வள்ளல் பாண்டித்துரைத் தேவர்	

270.	செந்தமிழ் அறக்கட்டளை	கவிஞர் சுரா	
271.	பாம்பன் சுவாமிகள்	முனைவர் சசிரேகா	
272.	புறத்திணை இலக்கண நோக்கில் புறநானூற்றுத் திணை துறை	முனைவர் ப. சர்மிளா	
273.	மலேசியத் தமிழ்க் கல்வி வரலாறு	முனைவர் சுவாமிக்கண்ணு ஜெபமணி	
274.	முருகன் அந்தாதி	இர. கலையரசி	
275.	தமிழ் இலக்கியத்தில் "காசரோகம்"	மருத்துவர் ஆ. சிவகுமார்	
276.	காமன் பண்டிகை	முனைவர் க. ரமேஷ்	
277.	சமையாத்தத் திருப்புகழ்	கு. நாகம்மாள்	
278.	திருக்குறள் காட்டும் வாழ்வியல் நன்னெறி	தேவி, மூ	
279.	தமிழ் மருத்துவ மூலிகைகளின் பயன்பாடும் விற்பனை வாய்ப்புகளும்	மரு.க.ஆ. ரவி	
280.	இந்துத்துவம்	நா. கிருஷ்ண மகராஜா	
281.	திருமந்திரம் ஒரு வரி	முனைவர் தி. மகாலட்சுமி	
282.	திருமூலரின் வளமுடன் வாழ யோகப் பயிற்சி		
283.	ஞானஒளி	மரு.சு. வேலுமணி	
284.	நலம் தரும் நாட்டு மருத்துவம் 400	பாக்கம் தமிழன்	
285.	காடரின் கதையும் அறமும்	முனைவர் குணசுந்தரி	
286.	வானியலும் காலக்கணிதமும்	இரா. அருள்வேல்	

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள ஆய்விருக்கைகளின் வைப்புத்தொகை மற்றும் வட்டி விவரம்

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித்தொகை
1	தொல்காப்பியர் ஆய்விருக்கை (2015) (15-7-2017 -15-7-2020 = 3 ஆண்டுகள்)	50,00,000.00	50,00,000.00	13,26,000.00	63,26,000.00
2	திருமூலர் இருக்கை (2016) (11-11-2019 – 11-11-2022 = 3 ஆண்டுகள்)	99,000.00	99,000.00	25,452.90	1,24,452.90
3	பாரதிதாசன் இருக்கை (2016) (16-10-2017– 16-10-2020 = 3 ஆண்டுகள்)	5,00,000.00	5,00,000.00	132600.00	6,32,600.00
4	வைணவ இருக்கை (2016) (16-10-2017– 16-10-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
5	தமிழ் இயற்கை மருத்துவ இருக்கை (2017) (16-10-2017– 16-10-2020 = 3 ஆண்டுகள்)	3,00,000.00	3,00,000.00	79,560.00	3,79,560.00
6	சன்மார்க்க செம் பொருட்டுணிவு உயராய்வு இருக்கை (2017) (16-10-2017– 16-10-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித்தொகை
7	அகத்தியர் மருத்துவ இருக்கை (2017)(2-11-2017–2-11-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,519.95	1,26,519.95
8	பழந்தமிழர் வாழ்வியல் ஆய்விருக்கை (2019) (25-4-2018–25-4-2021 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
9	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கலை மற்றும் சமூகவியல் மேம்பாட்டு ஆய்விருக்கை (2019) (27-2-2019–27-2-2022 = 3 ஆண்டுகள்)	1,00,00,000.00	1,00,00,000.00	25,71,000.00	1,25,71,000.00
10	ஞானத்தமிழ் இலக்கிய ஆராய்ச்சி ஆய்விருக்கை (19-12-2019–19-12-2022 = 3 ஆண்டுகள்) (2019)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00
11	தமிழ்ப் பரம்பரை சித்த மருத்துவப் பயிற்சி ஆய்விருக்கை (2019) (19-12-2019–19-12-2022 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித்தொகை
12	பரதநாட்டிய இசை கலைவளர் இருக்கை (2019) (20-12-2019–20-12-2022 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளைகளின் வைப்புத்தொகை மற்றும் வட்டி விவரம்

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
1	கிறித்தவமும் தமிழும் (1983) (6-7-2019–6-7-2020 = 1 ஆண்டு)	20,000.00	70,000.00	5,954.00	75,954.00
2	கழகம் சுப்பையா பிள்ளை (1983) (12-4-2019–12-4-2020 = 1 ஆண்டு)	15,000.00	50,000.00	3,984.00	53,984.00
3	சீதக்காதி இசுலாமியத் தமிழ் (1983) (7-6-2019 –7-6-2022 = 3 ஆண்டுகள்)	12,000.00	51,000.00	13112.10	64,112.10
4	ஏ.வி.எம்.ஜபார்தீன் நூர்ஜஹான் (1983) (6-7-2019 –6-7-2020 = 1 ஆண்டு)	12,000.00	70,000.00	5,954.00	75,954.00
5	உ.வே.சா (1983) (6-7-2019 –6-7-2020 = 1 ஆண்டு)	30,000.00	70,000.00	5,954.00	75,954.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
6	வ.உ.சி (1983) (6-7-2019 –6-7-2020 = 1 ஆண்டு)	20,000.00	42,000.00	3,572.00	45,572.00
7	தேவ நேயப்பாவாணர் (1983) (24-10-2019– 24-10-2022 = 3 ஆண்டுகள்)	20,000.00	75,000.00	14,121.00	89,121.00
8	செ. அரங்கநாயகம் (1983) (6-7-2019– 6-7-2020 = 1 ஆண்டு)	28,000.00	50,000.00	4,253.00	54,253.00
9	ம.பொ.சி. (1983) (9-1-2018– 9-1-2021 = 3 ஆண்டுகள்)	40,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
10	மறைமலை அடிகளார் (1983) (24.10.2019 – 24.10.2022 = 3 ஆண்டுகள்)	25,000.00	65,000.00	16,711.50	81,711.50
11	மு.வரதராசனார் (1983) (24-10-2019– 24-10-2022 = 3 ஆண்டுகள்)	25,000.00	55,000.00	14,140.45	69,140.45
12	தசாவதானி செய்குத்தம்பி பாவலர் (1984) (24-10-2019 –24-10-2022 = 3 ஆண்டுகள்)	25,000.00	80,000.00	20,568.00	1,00,568.00
13	இதழாளர் ஆதித்தனார் (1984)(24-10-2019 – 24-10-2022 = 3 ஆண்டுகள்)	20,000.00	50,000.00	12,855.00	62,855.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
14	பெருந்தலைவர் காமராசர் (1984) (24-10-2019 – 24-10-2022 = 3 ஆண்டுகள்)	30,000.00	80,000.00	20,568.00	1,00,568.00
15	கலாநிலையம் டி.என். சேசாசலம் (1987) (24-10-2019– 24-10-2022 = 3 ஆண்டுகள்)	15,000.00	28,000.00	7,198.80	35,198.80
16	தவத்திரு தனிநாயக அடிகளார் (1992) (6-7-2019–6-7-2020 = 1 ஆண்டு)	10,000.00	32,000.00	2,722.00	34,722.00
17	ஜெ ஜெயலலிதா (1994) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	12,000.00	27,000.00	1,836.00	28,836.00
18	டி.வி.இராம. சுப்பையா (1995) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	25,000.00	52,000.00	3,536.00	55,536.00
19	பதிப்புசெம்மல் பேராசிரியர் ச.மெய்யப்பன் (1996) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	20,000.00	44,000.00	2,992.00	46,992.00
20	டாக்டர்.தெ.பொ.மீ (1996) (10-1-2019– 10-1-2020 = 1 ஆண்டு)	15,000.00	60,000.00	4,080.00	64,080.00
21	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை (1998) (6-7-2019–6-7-2020 = 1 ஆண்டு)	20,000.00	32,000.00	2,722.00	34,722.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
22	டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் (1999) (9-1-2018–9-1-2021 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	3,35,000.00	88,842.00	4,23,842.00
23	ஈ.வெ.ரா. (2002) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	20,000.00	29,000.00	1,231.00	30,231.00
24	பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை (2003) (12-4-2019– 12-4-2020 = 1 ஆண்டு)	20,000.00	28,000.00	2,231.00	30,231.00
25	பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை (2003) (12-4-2019– 12-4-2020 = 1 ஆண்டு)	20,000.00	28,000.00	2,231.00	30,231.00
26	இராமலிங்கம் அபிராமி (2003) (27-6-2019– 27-6-2020 = 1 ஆண்டு)	50,000.00	80,000.00	6,365.00	86,365.00
27	முனைவர் ச.வே. சுப்பிரமணியம் (2003) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	20,000.00	32,000.00	236.00	32,236.00
28	பெ.நா. அப்புசாமி (2003) (27-7-2019 – 27-7-2022 = 3 ஆண்டுகள்)	50,000.00	80,000.00	20,568.00	1,00,568.00
29	முனைவர் மு. தமிழ்க்குடிமகன் (2004) (6-7-2019 –6-7-2020 = 1 ஆண்டு)	20,000.00	28,000.00	2,382.00	30,382.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
30	பேரறிஞர் அண்ணா (2005) (22-11-2019– 22-11-2022 = 3 ஆண்டுகள்)	10,00,000.00	16,00,000.00	4,22,294.95	20,22,294.95
31	தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி (2005) (26-3-2018– 26-3-2021 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,20,000.00	31,864.00	1,51,864.00
32	டாக்டர் வ.செ. குழந்தைசாமி (2009) (5-11-2018 5-11-2021 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00
33	டாக்டர் வ.அய். சுப்பிரமணியன் (2009) (27-6-2019 – 27-6-2020 = 1 ஆண்டு)	20,000.00	20,000.00	1,591.00	21,591.00
34	திரு. சி.மா. துரையரசு (2010) (29-9-2019– 29-9-2022 = 3 ஆண்டுகள்)	50,000.00	50,000.00	12,855.00	2,14,679.00
	திரு.சி.மா. துரையரசு (2010) (8-8-2017– 8-8-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,20,000.00	31,824.00	
35	தனி தமிழ்க்காவலர் முனைவர் மு. தமிழ்குடிமகன் அறக்கட்டளை–2 (2013)(31-5-2019 – 31-5-2022 = 3 ஆண்டுகள்)	90,000.00 26,000.00	1,16,000.00	23139.00 6684.60	1,45,823.60

[2020 மார்ச் 24

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
36	பெருந்தலைவர் காமராஜாின் மக்கள் பணியும் ஆளுமையும் (2013) (24-10-2019–24-10-2022 = 3 ஆண்டுகள்)	90,000.00	90,000.00	23138.95	1,13,138.95
37	டாக்டர் புரட்சித் தலைவி அம்மா (2014) (12-4-2017 – 12-4-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
38	தத்துவ வித்தகர் த.கு. முருகேசனார் (2014) (9-11-2017 –9-11-2020 = 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
39	சு. அறிவுக்கரசு இரஞ்சிதம் (2015) (10-1-2020– 10-1-2021 = 1 ஆண்டு)	1,00,000.00	1,00,000.00	736.00	1,00,736.00
40	அம்மாவின் ஆட்சியில் அருந்தமிழ் வளர்ச்சி (2016) (11-4-2019– 11-4-2022= 3ஆண்டுகள்)	6,00,000.00	6,00,000.00	1,54,260.00	7,54,260.00
41	தினமணி அறக்கட்டளை (2016) (11-4-2019– 11-4-2022=3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00

2020 மார்ச் 24]

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
42	திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனார் (2017) (9-6-2017–9-6-2020= 3 ஆண்டுகள்)	1,50,000.00	1,50,000.00	39,780.00	1,89,780.00
43	புதுமைபித்தன் அறக்கட்டளை (2017) (9-6-2017–9-6-2020=3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,519.95	1,26,519.95
44	பேரறிஞர் ஔவை துரைசாமி (2017) (9-6-2017– 9-6-2020= 3 ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,519.95	1,26,519.95
45	திருக்குறளும் உலக அமைதியும் (2017) (26-7-2017– 26-7-2020= 3ஆண்டுகள்)	4,00,000.00	4,00,000.00	1,06,080.00	5,06,080.00
46	பத்மஸ்ரீ டாக்டர் அவ்வை நடராசன் (2017) (28-9-2017– 28-9-2020= 3ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00
47	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு (2018) (21-3-2018– 21-3-2021= 3ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	26,520.00	1,26,520.00

வ. எண்	பெயர்	துவக்க வைப்புத் தொகை	தற்போதய வைப்புத் தொகை	வட்டித் தொகை	வைப்புத் தொகை மற்றும் வட்டித் தொகை
48	சீர்காழி நாகலிங்கம் மரகதம் நினைவு (2018) (26-7-2018– 26-7-2021= 3ஆண்டுகள்)	3,00,000.00	3,00,000.00	77,129.95	3,77,129.95
49.	அக்பர் கவுசர் யுனானி தமிழ் மருத்துவ(ம்) (2019) (8-4-2019– 8-4-2022= 3 ஆண்டுகள்)	3,00,000.00	3,00,000.00	77,130.00	3,77,130.00
50.	ஆய்வு மாணவர் க. அறிவுக்கரசு நினைவு (2019) (16-8-2019– 16-8-2022= 3ஆண்டுகள்)	1,00,000.00	1,00,000.00	25,710.00	1,25,710.00

தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட நல்கை விவரம்

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
	பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்			
1.	பெங்களூர் தமிழ்ச் சங்கம்	அரசாணை எண் 924, பொதுத் துறை, நாள் 26-4-1966	கட்டடம் கட்ட நிதியுதவி	50,000
2.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்,	அரசாணை எண் 268/கல்வி, நாள் 25-2-1972	கூரியர் இதழைத் தமிழில் வெளியிட	24,500

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
3.	பெங்களூர் தமிழ்ச் சங்கம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 90/ 14-3-1988	தமிழில் வகுப்புகள் நடத்த	10,000
4.	பெங்களூர் தமிழ்ச் சங்கம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 45/ 5-3-1991	காமராசர் உயர் நிலைப்பள்ளி கட்டடம் கட்ட	10,000
5.	பெங்களூர் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி). எண் 61/ 20-7-1998	காமராசர் உயர் நிலைப்பள்ளிக்கு மானியம்	10,000
6.	பெங்களூர் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி). எண் 196 நாள்.30.07.2009	திருவள்ளுவர் சிலை திறப்பு விழா	10,00,000
	கர்நாடகத் தமிழ் உயர் நிலைப்பள்ளி, ஹுப்ளி			
1.	கர்நாடகத் தமிழ் உயர் நிலைப்பள்ளி, ஹுப்ளி	அ.ஆ.(நி).எண் 87 நாள் 25-4-1997	ஆய்வகக் கருவிகள் விளையாட்டுக் கருவிகள் மற்றும் பார்வை நூல்கள் வாங்கிட	80,000
	தில்லி தமிழ்ச் சங்கம், புது டில்லி			
1.	தில்லி தமிழ்ச் சங்கம்	அரசாணை எண் 925, நாள் 26-4-1966	கட்டடம் கட்ட நிதியுதவி	1,00,000
2.	தில்லி தமிழ்ச் சங்கம்	அரசாணை எண் 702, பொதுத் துறை, நாள் 26-3-1970	நிதியுதவி	50,000
3.	தில்லி தமிழ்ச் சங்கம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 9/ 28-1-1987	கட்டடம் கட்ட	5,00,000
4.	தில்லித் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி).எண் 315 நாள் 26-12-2013	தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு தோரணவாயில் அமைக்க	25,00,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
	சண்டிகார் தமிழ் மன்றம்			
1.	சண்டிகார் தமிழ் மன்றம், சண்டிகார்	அரசாணை எண் 492, கல்வி, நாள் 22-2-1972	கட்டிடம் கட்டுவதற்கு	25,000
	கல்கத்தா பாரதித் தமிழ்ச் சங்கம்			
1.	கல்கத்தா பாரதித் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி).எண் 87 நாள் 14-1-1980	தமிழ்ச் சங்கக் கட்டடம் கட்ட	50,000
	மதுரைத் தமிழ்ச் சங்கம்			
1.	மதுரைத் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி).எண் 225 நாள் 2-9-1997	சங்கக்கட்டடம் புதுப்பிக்க – 30.00 இலட்சம் நூலகம்–5.00 இலட்சம் தமிழ் கற்றோருக்கு வேலை வாய்ப்பு பயிற்சி–10.00 இலட்சம்	45,00,000
	மும்பைத் தமிழ்ச் சங்கம், மும்பை			
1.	மும்பைத் தமிழ்ச் சங்கம், மும்பை	அ.ஆ.(நி).எண் 399/ 3-9-1998	தமிழ்ச் சங்கக் கட்டடத்தை புதுப்பிக்க	1,00,000
2.	நவிமும்பை தமிழ்ச் சங்கம், நவிமும்பை.	அ.ஆ.(நி).எண் 95 நாள் 30-8-2019	நவிமும்பை தமிழ்ச் சங்கத்தின் கட்டட விரிவாக்கம் (ம) மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதியுதவி	25,00,000
	புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம்			
1.	புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி).எண் 134 நாள் 11-6-2009	புவனேஸ்வர் தமிழ்ச் சங்கம் கட்டடம் கட்ட	15,00,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
	திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்			
1.	திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்	அ.ஆ.(நி).எண் 1414 நாள் 1-7-1982	கட்டடம் கட்ட	50,000
	கர்நாடகப் பல்கலைக்கழகம்			
1.	கர்நாடகப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டெல்லி			
1.	சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுடெல்லி	அ.ஆ.(2ப).எண் 137 நாள் 9-6-2000 அ.ஆ.(2ப).எண் 15 நாள் 4-7-2003	தமிழிருக்கை நிறுவுவதற்காக	50.00.000
	உசுமானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்			
1.	உசுமானியா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 2578, பொதுத் துறை, நாள் 11-11-1970	தமிழிருக்கை நிறுவ (ம) தமிழில் பட்டய வகுப்பு நடத்த	25,000
2.	உசுமானியா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 2579, பொதுத் துறை, நாள் 11-11-1970	தமிழிருக்கை நிறுவ (ம) தமிழில் பட்டய வகுப்பு நடத்த	25.000
3.	உசுமானியா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 2327, கல்வி, நாள் 23-10-1981	தமிழிருக்கை (ம) பட்டய வகுப்பு நடத்த	1,00,000
4.	உசுமானியா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 2578/பொது (தவ 11), நாள் 11-11-1970	தமிழ்ப் பேராசிரியர் பதவி நிறுவ	25,000
5.	உசுமானியா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 84, நாள் 22-1-1975	தமிழ்ப் பேராசிரியர் பதவி நிறுவ	25,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
6.	உசுமானியா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
7.	உசுமானியா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 1744 நாள் 14-9-1979	தமிழிருக்கை நிறுவ	25,000
8.	உசுமானியா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 2327 நாள் 23-10-1981	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	1,00,000
9.	உசுமானியா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 623 நாள் 5-4-1982	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி, ஆந்திரா			
1.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 1942/கல்வி	தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்த	10,000
2.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 1619பொது (தவ 11) நாள் 14-7-1970	தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்த	10,000
3.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 567/கல்வி, நாள் 7-4-1973	தமிழ்மொழி இலக்கிய பட்ட மேற்படிப்பு தொடங்க	10,000
4.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 601, கல்வி, நாள் 16-4-1975	தமிழ்மொழி இலக்கிய பட்ட மேற்படிப்பு தொடங்க	15,000
5.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 601/ கல்வி, நாள் 16-4-1975	தமிழ்மொழி இலக்கிய பட்ட மேற்படிப்பு தொடங்க	10,000
6.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 619, கல்வி, நாள் 2-4-1976	தமிழ் இருக்கைக்கு	15,000
7.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 1956, கல்வி, நாள் 20-8-1976	தமிழ்ப்பட்டய வகுப்பு நடத்த	15,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
8.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 1470 நாள் 3-8-1985	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
9.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 257/ 28-7-1986	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	21,172
10	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 241/ நாள் 19-11-1990	தமிழ் இருக்கை தோற்றுவித்தல்	49,640
11.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 66 நாள் 1-4-1992	தமிழிருக்கை நிறுவ	75,000
12.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 216 நாள் 7-12-1993	தமிழிருக்கை நிறுவ	75,000
13.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 142 நாள் 5-7-1994	1993-1994ஆம் ஆண்டு மானியம்	66,830
14.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 87 நாள் 31-3-1995	1994-1995ஆம் ஆண்டு மானியம்	1,00,000
15.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 83 நாள்.23-10-2001	தமிழிருக்கை 1995–1996 முதல் 1998–1999(4 ஆண்டு)	3,51,297
16.	திருவேங்கடவன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 281 நாள் 27-11-2013	தமிழ்த் துறையில் 3 உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்திட	2,46,240
	ஆக்ரா பல்கலைக்கழகம், ஆக்ரா			
1.	ஆக்ரா பல்கலைக்கழகம்	அரசாணை எண் 676/கல்வி, நாள் 17-5-1972 அரசாணை எண் 17218/தவ 72/ நாள் 20-4-1972	தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்த	5,000 374
2.	ஆக்ரா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
3.	ஆக்ரா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 255 நாள். 14-2-1980	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	கேரளப் பல்கலைக்கழகம்			
1.	கேரளப் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 1183/கல்வி, நாள் 19-5-1972	தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்த	4,000
2.	திராவிட மொழிகள் சங்கம்	அரசாணை எண் 1217/கல்வி நாள் 2-8-1972	தமிழாய்வு பட்ட மேற்படிப்பு கருத்தரங்கு	40,000
3.	திராவிட மொழிகள் சங்கம்	அரசாணை எண் 1723/கல்வி, நாள் 16-4-1973	தமிழாய்வு பட்ட மேற்படிப்பிற்கான கருத்தரங்கு	30,000
4.	கேரளப் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 282, கல்வி, நாள் 25-2-1975	தமிழ்ப்பட்டய வகுப்பு நடத்துவதற்கு	4,000
5.	கேரளப் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 1411/ நாள் 5-7-1976	தமிழ்மொழி வளர்ச்சி	4,000
	விசுவபாரதி பல்கலைக்கழகம், மேற்கு வங்காளம்			
1.	விசுவபாரதி பல்கலைக்கழகம்,	அரசாணை எண் 681/ கல்வி, நாள் 18-5-1972	தமிழ்ப் பட்டய வகுப்பு நடத்த	5,000
2.	விசுவபாரதி பல்கலைக்கழகம்,	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	கல்கத்தா பல்கலைக்கழகம்			
	கல்கத்தா பல்கலைக்கழகம், கல்கத்தா	அரசாணை எண் 1400/கல்வி, நாள் 1-9-1972	தமிழிருக்கை நிறுவ	10,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி, திருவனந்தபுரம்			
1.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அரசாணை எண் 1217/கல்வி, நாள் 2-8-1972	ஆய்வுப் பணிகளுக்கு	40,000
2.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அரசாணை எண் 1723/கல்வி, நாள் 9-10-1973	தமிழாய்வு பணிகளுக்கு	30,000
3.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அரசாணை எண் 1904/கல்வி, நாள் 15-11-1973	தமிழாய்வுப் பணிகளுக்கு கூடுதல் மானியம்	10,000
4.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அரசாணை எண் 557, கல்வி, நாள் 9-4-1975	தமிழாய்வுப் பணிகளுக்கு	40,000
5.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அரசாணை எண் 627/கல்வித் துறை, நாள் 3-4-1976	தமிழ் ஆய்வு பட்ட மேற் படிப்பிற்கான கருத்தரங்குகள் நடத்த	40,000
6.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 1124 நாள் 15-8-1981	தமிழில் ஆராய்ச்சிப் படிப்புக்காக	1,36,000
7.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 582 நாள் 25-3-1982	தமிழில் ஆராய்ச்சிப் படிப்புக்காக	1,36,000
8.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 823 நாள் 2-5-1983	தமிழாராய்ச்சிப் படிப்புக்காக	1,36,000
9.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி). எண். 173 நாள்.13.06.1985	தொல்காப்பியர் பெயரில் கட்டடம் கட்ட நிதியுதவி	1,00,000
10.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 296/ 22-8-1986	கட்டடம் கட்ட	1,00,000
11.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 63/ 23-3-1990	தமிழாய்வுப் பணிக்காக	3,00,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
12.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 235	திட்டப் பணிகளுக்காக	3,00,000
13.	பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளி	அ.ஆ.(நி).எண் 104 நாள் 5-7-1993	1992-1993 ஆம் ஆண்டு திட்டங்களுக்கு	2,32,237
14.	பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளி	அ.ஆ.(நி).எண் 61 நாள் 28-3-1994	தொடர் மானியம் 1993-1994	3,00,000
15.	பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளி	அ.ஆ.(நி).எண் 62 நாள் 28-3-1994	கூடுதல் மானியம்	67,763
16.	பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளி	அ.ஆ.(நி).எண் 98 நாள் 10-4-1995	துறைத் தமிழாய்வு தொடர்பான ஆண்டு மானியம்	5,00,000
17.	பன்னாட்டு திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 35 நாள் 31-1-1996	1995-1996 ஆம் ஆண்டு மானியம்	5,00,000
18.	பன்னாட்டு திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 237 நாள் 15-7-1997	1997-1998 ஆம் ஆண்டு மானியம்	10,00,000
19.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 52/ 24-6-1998	பேரா.சுந்தரனார் நினைவாக நூலகக் கட்டடம் கட்ட	10,00,000
20.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(2டி).எண் 46 நாள் 29-2-2000	பேரா. மனோன்மணிய சுந்தரனார் நினைவு நூலகக் கட்டட நிதியுதவி	10,00,000
21.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(1டி).எண் 165 நாள் 18-10-2001	தமிழியல் திட்டப் பணிகளுக்கு	10.00.000
22.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 466 நாள் 30-8-2005	2005-2006 ஆம் ஆண்டிற்கான நல்கை	5,00,000

வ. எண்	பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்	அரசாணை எண் மற்றும் நாள்	பொருளடக்கம்	தொகை ரூ.
23.	பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 259 நாள் 14-8-2006	திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு 2006–2007 ஆம் நிதியாண்டிற்கு நல்கை	10,00,000
24.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 27 நாள் 1-2-2008	திருவனந்தபுரம் பன்னாட்டு மொழியியற் பள்ளிக்கு 2000 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான செலவி னங்களுக்கு வைப்பு நிதியை அடைமானம் பெற்ற கடன் தொகையைச் செலுத்துவதற்கு நிதியுதவி	10,00,000
25.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(ப).எண் 329 நாள் 22-5-2009	2007–2008 ஆம் ஆண்டுக்கான நல்கை	10,00,000
26.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(2ப).எண் 8 நாள் 11-4-2012	2010–2011 ஆம் ஆண்டிற்கான நல்கை	5,00,000
27.	பன்னாட்டுத் திராவிட மொழியியற்பள்ளி	அ.ஆ.(நி).எண் 235 நாள் 24-10-2018	நல்கைத் தொகை	5,00,000

	தென்மொழிகள் புத்தக நிறுவனம், சென்னை			
1.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 477/ கல்வி, நாள் 28-3-1974	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	24,500

2.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 172, கல்வி,நாள் 31-1-1976	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
3.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண்.594, நாள் 25.03.1976	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	24,500
4.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 1465, நாள் 9-7-1976	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	25,000
5.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 1772/ கல்வி, நாள் 11-9-1976	நிருவாகச் செலவுகளுக்கு	25,000
6.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 844, கல்வி,நாள் 16-4-1977	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
7.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 342, கல்வி, 1978	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
8.	தென் இந்திய மொழிகள் நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
9.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அரசாணை எண் 238, நாள் 13-2-1979	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	25,000
10.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 564 நாள் 30-3-1979	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
11.	தென்னிந்திய மொழிகள் நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 2570 நாள் 22-8-1979	தமிழில் பட்டய வகுப்பு	15,000
12.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1059 நாள் 12-6-1980	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500

13.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1043 நாள் 30-8-1980	பயனுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற	25,000
14.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1777 நாள். 14-8-1981	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
15.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 785 நாள். 11-5-1981	பயனுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற	25,000
16.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1070 நாள் 31-5-1982	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
17.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1025 நாள் 31-5-1983	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
18.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 59/ 29-2-1988	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
19.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 228/ 21-7-1988	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
20.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.த.வ.ப.து.நிலை ஆணை எண் 229	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	49,500
21.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	1989-1990	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	80,000
22.	தென்மொழிகள் புத்தக நிறுவனம் சென்னை	அ.த.வ.ப.து.112/ 15-6-1990	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	80,000
23.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 13 நாள் 27-1-1993	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	80,000
24.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 182 நாள் 7-10-1993	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	80,000

25.	தென்மொழிகள் புத்தக நிறுவனம், சென்னை	அ.ஆ.(நி).எண் 154 நாள் 29-7-1994	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	80,000
26.	தென்மொழிகள் புத்தக நிறுவனம், சென்னை	அ.ஆ.(நி).எண் 235 நாள் 22-9-1995	1995-1996 ஆம் ஆண்டு மானியம்	80,000
27.	தென்மொழிகள் புத்தக நிறுவனம், சென்னை	அ.ஆ.(நி).எண் 176 நாள்.30-8-1996	1996-1997 ஆம் ஆண்டு மானியம்	80,000
28.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 64 நாள் 3-5-1999	1998-1999 ஆம் ஆண்டு மானியம்	1,00,000
29.	தென்மொழிகள் புத்தக நிறுவனம்	அ.ஆ.(நி). எண். 177 நாள்.15.12.1999	1999-2000ஆம் ஆண்டு மானியம்	1,00,000
30.	தென்மொழி புத்தக நிறுவனம்	அ.ஆ.(1டி).எண் 123 நாள் 25-7-2001	யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழைத் தமிழில் வெளியிட	1,00,000
	பஞ்சாப் பல்கலைக்கழகம், பஞ்சாப்			
1.	பஞ்சாப் பல்கலைக்கழகம்	அரசாணை எண் 623/ கல்வி, நாள் 2-4-1976	மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க	6,730
2.	பஞ்சாப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 675 நாள். 10-9-1980	நூலகம் கல்வி உதவி	6,730
	இந்து பல்கலைக்கழகம், பனாரசு			
1.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 2233 நாள் 7-10-1972	கூடுதல் நிதியுதவி	1,00,000
2.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 2085 நாள் 3-2-1977	தமிழ் இருக்கை	2,00,000
3.	இந்து பல்கலைக்கழகம்	அரசாணை எண் 209, கல்வித் துறை, நாள் 3-2-1979	தமிழிருக்கை நிறுவன	2,00,000

4.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 255 நாள் 14-2-1980	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
5.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 435 நாள் 22-12-2008	பாரதியாரின் 125 ஆவது பிறந்த நாளையொட்டி கருத்தரங்கம்	50,000
6.	வாரணாசி சம்பூர்னாண்டு சமஸ்கிருத வித்யாலயம்	அ.ஆ.(நி).எண் 1101 நாள் 11-6-1981	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
7.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 149 நாள் 15-11-2019	மொழி ஆய்வுக்கூடம் தொடங்க நிதியுதவி	8,00,000
8.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 193 நாள் 23-12-2019	தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல் (2019-20ஆம் ஆண்டிற்கு)	1,55,360
9.	இந்து பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 170 நாள் 10-12-2019	மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை (2019-20ஆம் ஆண்டிற்கு)	92,500

	தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை			
1.	தமிழ் வளர்ச்சிக் கழகம்	அரசாணை எண் 768, கல்வி நாள் 4-4-1977	கலைக்களஞ்சியம் வெளியிட	2,00,000
2.	தமிழ் வளர்ச்சிக் கழகம்	அ.ஆ.(நி).எண் 189 நாள் 21-7-2009	அறிவியல் தொழில்நுட்ப வரிசை வெளியிட நிதியுதவி	15,00,000

3.	அகில இந்திய தமிழாசிரியர் மன்றம்	அ.ஆ.(நி).எண் 1131 நாள் 21-8-1979	மொழியியல் இதழ் வெளியிட	10,000
	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றம், அண்ணாமலை நகர்			
1.	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றம், அண்ணாமலை நகர்	அரசாணை எண் 753, நாள் 11-2-1977	ஆய்வுக்கோவை வெளியிட	5,000
2.	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றம், அண்ணாமலை நகர்	அரசாணை எண் 949, நாள் 14-6-1979	ஆய்வுக்கோவை வெளியிட	5,000
3.	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றம், அண்ணாமலை நகர்	அரசாணை எண் 1131, நாள் 21-8-1979	ஆய்வுக்கோவை வெளியிட	10,000
4.	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் அண்ணாமலை நகர்	அ.ஆ.(நி).எண் 1919 நாள் 16-9-1980	மொழியியல் இதழ் வெளியிட	10,000
5.	அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் அண்ணாமலை நகர்	அ.ஆ.(நி).எண் 2321 நாள் 29-10-1980	ஆய்வுக்கோவை வெளியிட	5,000
6.	அனைத்திந்திய தமிழாசிரியர் மன்றம்	அ.ஆ.(நி).எண் 435 நாள் 21-3-1983	ஆய்வுக்கோவை வெளியிட	5,000
7.	அனைத்திந்திய தமிழாசிரியர் மன்றம்	-	ஆய்வுக்கோவை நூல் வெளியிட	5,000
8.	அனைத்திந்திய தமிழாசிரியர் மன்றம்	அ.ஆ.(நி).எண் 951 நாள் 1-4-1987	ஆய்வுக்கோவை நூல் வெளியிட	3,000

9.	இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 95/ 1-4-1987	ஆய்வுக்கோவை நூலை வெளியிட	3,000
10.	இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 126/ 28-4-1987	ஆய்வுக்கோவை நூலை வெளியிட	10,000
	உத்கல் பல்கலைக்கழகம்			
1.	உத்கல் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 255 நாள் 14-2-1980	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
2.	உத்கல் பண்பாட்டு பல்கலைக் கழகம்	அ.ஆ.(2டி).எண் 24 நாள் 21-5-1999	தமிழிருக்கை நிறுவுதல்	10,00,000
	கிருஷ்ண தேவராயர் பல்கலைக்கழகம்			
1.	கிருஷ்ண தேவராயர் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 186 நாள் 5-7-1985	பட்டய வகுப்பு நடத்த	10,000
2.	கிருஷ்ண தேவராயர் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 265/30-7-1986	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	10,000
3.	கிருஷ்ண தேவராயர் பல்கலைக்கழகம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 428/21-12-1987	பகுதி நேர பட்டய வகுப்பு	10,000
	சென்னை பல்கலைக்கழகம்			
1.	சென்னை பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 401 நாள் 14-9-2007	தமிழ் பேரகராதியைக் கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும் பெருக்கியமைக்கு	10,00,000
2.	சென்னைப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண். 223 நாள் 4-8-2009	தமிழ் நிகண்டு சொற்களஞ்சியம் உருவாக்கிட நிதியுதவி	7,50,000

	மாநில மொழிகள் நிறுவனம், கேரளா			
1.	மாநில மொழிகள் நிறுவனம், கேரளா	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
2.	மாநில மொழிகள் நிறுவனம், கேரளா	அ.ஆ.(நி).எண் 1373 நாள் 4-7-1981	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்			
1.	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்	அ.ஆ.(நி).எண் 177 நாள் 22-1-1981	தமிழில் பட்டய வகுப்பு நடத்துதல்	15,000
2.	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்	அ.ஆ.(நி).எண் 1152 நாள் 22-6-1983	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
3.	இந்திய மொழிகளுக்கான மைய நிறுவனம், மைசூர்	அ.ஆ.(நி).எண் 194 நாள் 11-12-1984	தமிழ் பட்டய வகுப்பு நடத்த	15,000
4.	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்.	அ.ஆ.(நி).எண் 71 நாள் 20-3-1995	1994-1995 ஆம் ஆண்டு மானியம்	15,000
5.	இந்திய மொழிகள் மைய நிறுவனம், மைசூர்	அ.ஆ.(நி).எண் 9/ 5-2-1998	தமிழில் சான்றிதழ் வகுப்பு நடத்துதல்	15,000
	தமிழ், சமஸ்கிருத இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம்			
1.	தமிழ், சமஸ்கிருதம் பிற மொழிகள் கழகம், சென்னை	அ.ஆ.(நி).எண் 126 நாள் 20-1-1979	தமிழ்ப் பிரிவுச் செலவுகளுக்கு	25,000
2.	தமிழ், சமஸ்கிருத இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1716 நாள் 10-6-1981	தமிழில் ஆராய்ச்சிப் படிப்புக்காக	25,000
	இந்திய மொழிகள் மைய நிறுவனம்			
1.	இந்திய மொழிகள் மைய நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000

2.	இந்திய மொழிகள் நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1570 நாள் 22-8-1979	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
	மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியசு			
1.	மகாத்மா காந்தி நிறுவனம், மொரீசியசு	அ.ஆ.(நி).எண் 458 நாள் 3-12-2010	பேரறிஞர் அண்ணா பெயரில் மொரீசியசு நாட்டில் தமிழ் இருக்கை நிறுவ	1,00,00,000
	குசராத் வித்யாபீடம், அகமதாபாத்			
1.	குசராத் வித்யாபீடம், அகமதாபாத்	அறக்கட்டளை தொகை	தமிழிருக்கை நிறுவ	5,00,000
	மாநாடு			
1.	தமிழ் இணைய மாநாடு	அ.ஆ.(ப).எண் 111 நாள் 20-9-2019	உத்தம் நிறுவனம் (ம) அண்ணாப் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய இணைய மாநாட்டிற்கு நிதியுதவி	5,00,000
2.	3-வது ஐரோப்பியத் தமிழாய்வியல் மாநாடு, பாரிசு	அ.ஆ.(நி).எண் 203 நாள் 24-9-2018	பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் நடத்திய நான்காவது ஐரோப்பியத் தமிழாய்வியல் மாநாடு, பாரிசு	16,50,000
3.	நான்காவது ஐரோப்பியத் தமிழாய்வியல் மாநாடு, பாரிசு	அ.ஆ.(நி).எண் 107 நாள் 27-9-2019	பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம் நடத்திய நான்காவது ஐரோப்பியத் தமிழாய்வியல் மாநாடு, பாரிசு	16,50,000
4.	சௌராட்டிரா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5.	மிதிலா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
6.	குருசேத்திரம் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
7.	சர்தார் பட்டேல் பல்கல்லைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
8.	கல்விக் கோட்டைப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 820 நாள் 3-5-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
9.	குவஹாத்திப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 1491 நாள் 19-8-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
10.	ஜாகவபூர் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 1491 நாள் 19-8-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
11.	ஜம்மு பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 1491 நாள் 19-8-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
12.	கம்தா பிரசாத் குருபாஷா பாரதி சங்கம்	அ.ஆ.(நி).எண் 1468 நாள் 7-8-1978	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	5,000
13.	மாரத்வாடா பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 255 நாள் 14-2-1980	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
14.	மாநில மொழிகள் நிறுவனம்	அ.ஆ.(நி).எண் 1570 நாள் 22-8-1979	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	15,000
15.	சம்தாபிரசாத் குரு பாஷா பாரதி சங்கம்	அ.ஆ.(நி).எண் 2264 நாள் 22-10-1980	தமிழில் பட்டய வகுப்பு நடத்த	5,000
16.	சர்தார் பட்டேல் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 109 நாள் 9-10-1984	தமிழ் பட்டய வகுப்பு நடத்த	2,500

17.	அரித்துவார் குருகுலம் வித்யாலயா	அ.ஆ.(நி).எண் 135 நாள் 27-4-1985		20,000
18.	அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 107/ 11-9-1986	சங்க செலவு	3,600
19.	காசிவித்யா பீடம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 350/ 14-10-1986	காசிவித்யா பீடம் நடத்த	15,000
20.	செமினி சர்கஸ்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 150/ 14-5-1987	நிருவாக செலவுகளுக்கு	10,000
21.	பாஷா சங்கம் அலகாபாத், உத்திரபிரதேசம்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 101/ 31-5-1990	பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கொண்டாட	10,000
22.	விவேகானந்தர் ஆசிரமம், கோலாம்பூர்	அ.த.வ.ப.து. நிலை ஆணை எண் 114/ 10-5-1991	ஆசிரம நூலகப் பயன்பாட்டிற்காக	10,000
23.	மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம்	அ.ஆ.(நி).எண்.8/ 5-6-1998	தமிழ் மையம் ஏற்படுத்துதல்	12,00,000
24.	ந.மு. வேங்கடசாமி நாடார் திருவருள் கல்லூரி, தஞ்சாவூர்	அ.ஆ.(2ப).எண் 131 நாள் 6-6-2000	வகுப்பறை வசதிக்காக	15,00,000
25.	திருக்குறள் மதுர கீர்த்தனை (தே.கு. இராமநாதன்)	அ.ஆ.(1டி).எண் 19, நாள் 1-2-2001	நூல் வெளியீடு, ஒலிநாடா, ஒளித்தகடு, ஒலி/ஒளித்தகடு இணையத்தில் வெளிக்கொணர்	5,00,000

	தமிழ் இணையக் கல்விக் கழகம்			
1.	தமிழ் இணையக் கல்விக் கழகம்	அ.ஆ.(நி).எண் 93 நாள் 3-4-2012	கணினி வழி தமிழ் வளர்ச்சி (ம) ஆராய்ச்சி	12,00,000
	ஹார்வர்டு பல்கலைக்கழகம், அமெரிக்கா			
1.	ஹார்வர்டு பல்கலைக் கழகம், அமெரிக்கா	அ.ஆ.(நி).எண் 204 நாள் 7-11-2017	தமிழ் இருக்கை	10,00,00,000
	ஹுஸ்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா			
1.	அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 186 நாள் 17-12-2019	தமிழ் இருக்கை நிறுவிட ரூ.1 கோடி	1,00,00,000
	குவஹாத்தி பல்கலைக்கழகம், அஸ்சாம் மாநிலம்			
1.	குவஹாத்தி பல்கலைக்கழகம், அஸ்சாம் மாநிலம்	அ.ஆ.(நி).எண் 153/ 27-10-2016	2016-2017 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	1,39,000
2.	குவஹாத்தி பல்கலைக்கழகம், அஸ்சாம் மாநிலம்	அ.ஆ.(நி).எண் 213 நாள் 15-11-2017	தமிழ் பயிலும் மாணவர்களுக்கு இணைய தமிழைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுப்பதற்கு 3 கணினிகள் (ம) உபகரணங்கள் வாங்கவும் தமிழ் நூலகம் அமைத்திடவும்	2,89,222
3.	குவஹாத்தி பல்கலைக் கழகம், அஸ்சாம் மாநிலம்	அ.ஆ.(நி).எண் 289 நாள் 27-12-2018	2016-2017 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	96,000

4.	குவஹாத்தி பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி). எண்193 நாள் 23-12-2019	தென்னிந்திய மொழிகள் துறையில் ஒரு தமிழ் உதவிப் பேராசிரியர் பணியிடம் தோற்றுவித்தல் (2019-20 ஆம் ஆண்டிற்கு)	1,42,488
	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம் ஆந்திரா மாநிலம்			
1.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி). எண்130, நாள் 30-6-1996	திராவிடப் பல்கலைக்கழகம் நிறுவ முதல் தவணை பங்குத் தொகை	50,00,000
2.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி). எண்283 நாள் 28-8-2000	திராவிடப் பல்கலைக்கழகம் நிறுவ இரண்டாம் தவணை பங்குத் தொகை	25,00,000
3.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 377 நாள் 30-8-2007	ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கு	10,00,000
4.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 158 நாள் 7-5-2008	உதவித் தொகை	1,85,150
5.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 321 நாள் 6-8-2010	உதவித் தொகை	54,600
6.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி). எண் 321 நாள் 6-8-2010	முனைவர் பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை	54,600
7.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 120 நாள் 6-5-2011	கல்வி உதவித் தொகை	1,67,000

8.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(2ப).எண் 16 நாள் 18-5-2012	கல்வி உதவித் தொகை	1,78,250
9.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 76 நாள் 12-3-2013	கல்வி உதவித் தொகை	1,89,100
10.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(நி).எண் 280 நாள் 26-11-2013	கல்வி உதவித் தொகை	1,20,250
11.	குப்பம், திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(ப).எண் 83 நாள் 10-7-2014	கல்வி உதவித் தொகை	38,500
12.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(ப).எண். 65/ நாள் 01.06.2016	2014-2015 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	1,59,600
13.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்,	அ.ஆ.(ப).எண் 95/ நாள் 24-7-2017	2015-2016 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	5,53,300
14.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(ப).எண் 96/ நாள் 24-7-2017	2016-2017 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	8,76,500
15.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(ப).எண் 9 நாள் 9-1-2019	2017-2018 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை	6,52,250
16.	குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்	அ.ஆ.(ப).எண் 71 நாள் 17-6-2019	2010 ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 2 உதவிப் பேராசிரியர் ஊதியச் செலவினம்	1,17,40,589

இணைப்பு XXIII

(59 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

பட்டு வளர்ச்சித் துறை

பட்டு வளர்ப்பு என்பது அறிவியல்பூர்வமாக பட்டு நூல் உற்பத்தி செய்யும் கலை ஆகும். இது ஒரு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட, ஊரகப் பகுதிகளிலுள்ள மக்கள் குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பினையும், வருமானத்தையும் சீரான இடைவெளிகளில் பெற்றுத்தரக் கூடிய ஒரு குடிசைத் தொழிலாகும்.

பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் 25–27 நாட்களுக்குள் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்வதன்மூலம் அவர்களுக்கு மாதாந்திர வருமானத்தை அது பெற்றுத் தருகிறது.

பட்டு வளர்ப்பில் ஒரு கிலோ கிராம் கச்சாப் பட்டு உற்பத்தி செய்வதன்மூலம் பட்டுத் தொழில் 11 மனித நாட்கள் வேலைவாய்ப்பினை (பண்ணை மற்றும் பண்ணைசாரா செயல்பாடுகள்மூலம்) ஏற்படுத்தித் தருகிறது. மேலும், ஓர் ஏக்கர் மல்பெரி பயிரிடுவதன்மூலம் பட்டுத் தொழிலில் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும் நேரடி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாக கணக்கிடப்பட்ட அளவானது மல்பெரி நடவு செய்யும் நிலையிலிருந்து பட்டு ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும் நிலை வரையிலான காலம் ஆகும்.

பட்டு வளர்ப்பு என்பது பட்டுப் புழுவின் உணவான, மல்பெரி, ஆமணக்கு மற்றும் இதர தாவரங்களை சாகுபடி செய்தல், பட்டுப் புழுக்களை வளர்த்தல், பட்டு நூல் உற்பத்தி செய்தல் மற்றும் இதர செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

'ஆடைகளின் அரசி' என்று பட்டு அழைக்கப்படுகிறது. மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா என நான்கு வகையான பட்டுகள்

வர்த்தகரீதியிலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உலகிலேயே நான்கு வகை பட்டுகளையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடு இந்தியாவாகும். மல்பெரி பட்டுப் புழுக்கள், மல்பெரி இலைகளையும், ஈரி பட்டுப் புழுக்கள் ஆமணக்கு மற்றும் மரவள்ளி இலைகளையும் உணவாக உட்கொள்ளும். டசார் மற்றும் மூகா பட்டுப் புழுக்கள் வன வகையை சார்ந்தவை. அவை இந்தியாவின் வடகிழக்கு மலைப்பகுதிகளில் பரவலாக காணப்படுகின்றன. இவற்றுள், மூகா பட்டு மதிப்பு மிக்கதாகும். இது, இந்தியாவின் அசாம் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

உலக பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்து இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது. மல்பெரி பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் நான்காம் இடம் வகிக்கிறது. சமீபகாலமாக, ஈரி பட்டுப் புழுக்களை வளர்த்து, ஈரி பட்டு உற்பத்தி செய்வது புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

பட்டுப் புழுக்களின் வாழ்க்கைச் சுழற்சியானது முட்டை, புழு, கூட்டுப்புழு மற்றும் பூச்சி என நான்கு நிலைகளைக் கொண்டது. ஐந்தாம் பருவத்தில் உள்ள முதிர்ந்த பட்டுப் புழுக்கள் பட்டுக் கூடுகளை பின்னுகின்றன. பட்டுப் புழுக்களின் உமிழ்நீர்ச் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் ஃபைப்ராயின் என்ற புரதமும் செரிசின் என்ற பசையும் கலந்து தொடர்ச்சியான இழையாக பட்டு நூல் வெளிவருகிறது. இந்த செரிசின் பசையானது பட்டு இழைகளை நன்றாக பிணைக்கச் செய்கிறது. பட்டுக் கூடுகளை சுடுநீரில் மூழ்க வைக்கும்பொழுது, செரிசின் பசை நீக்கப்பட்டு, பட்டு இழைகள் இலகுவாகி பட்டு நூற்பு எளிதாகிறது. இச்செயல்முறை 'பசை நீக்கம்' எனப்படும். பட்டுக் கூடுகளை சுடுநீரில் மூழ்க வைப்பதால், பட்டுக்கூட்டினுள் உள்ள கூட்டுப்புழுக்கள் இறந்து விடுகின்றன. பட்டு நூற்பு இயந்திரம்மூலம் பட்டுக்கூட்டில் இருந்து பட்டு நூல் பிரித்தெடுக்கப்படுகிறது. இவை பின்னர் உலர்த்தப்பட்டு அடுத்த நிலைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

சேலைகள், வேட்டிகள், ஆடைத் துணிகள், கழுத்து/தோளணித் துண்டுகள், ஆயத்த ஆடைகள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், அறை அலங்காரத் துணிகள் போன்ற பல்வேறு பட்டுத் துணி வகைகள் பட்டு நூலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு நூலை மற்ற நூல்களுடன் கலந்து கலப்புத் துணி வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2020 மார்ச் 24]

கி.மு. 2700 இல் பட்டு கண்டுபிடிக்கப்பட்டு இருந்தாலும், தொல்லியல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறு பட்டு உற்பத்தியானது கி.மு. 5000 முதல் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. கி.பி. 140 ஆம் ஆண்டில் 'பட்டுப்பாதை' வழியாக பட்டு உற்பத்தி இந்தியாவிற்குள் உருவெடுத்தது. கனிஷ்கர் பேரரசு காலத்தில் இந்தியாவிற்கும் ரோமானிய/கிரேக்க நாடுகளுக்கும் இடையே மிகவும் செழிப்பான பட்டு வர்த்தகம் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியங்களான கலித்தொகை, பரிபாடல் (எட்டுத்தொகை) மற்றும் திருமுருகாற்றுப்படை (பத்துப்பாட்டு) ஆகியவற்றின்மூலம் பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் பட்டு ஆடைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

தமிழ்நாட்டில் புவிசார் குறியீடுகள் வழங்கப்பெற்றுள்ள 7 வகை ஜவுளிகளில், 4 வகைகள் பட்டுத்துணிகளாகும். அவை காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் பட்டு சேலைகள் மற்றும் சேலம் வெண்பட்டு வேட்டிகள் ஆகும்.

2. இந்தியாவில் பட்டுத் தொழில்

உலக நாடுகளில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா ஆகிய நான்கு வகை பட்டுகளையும் உற்பத்தி செய்யும் சிறப்பு வாய்ந்த தனித்துவத்தை இந்தியா பெற்றிருக்கிறது. உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் இந்தியா உள்ளது. கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 35,261 மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில், மல்பெரி பட்டு 71.50 சதவீதமும் (25,213 மெட்ரிக் டன்), டசார் பட்டு 8.4 சதவீதமும் (2,977 மெட்ரிக் டன்), ஈரி பட்டு 19.4 சதவீதமும் (6,839 மெட்ரிக் டன்) மற்றும் மூகா பட்டு 0.66 சதவீதமும் (232 மெட்ரிக் டன்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் ஜார்க்கண்டு ஆகிய ஐந்து மாநிலங்களில் மல்பெரி பட்டுத் தொழில் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியா உலக அளவில் பட்டுத் துணிகளை அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடாக திகழ்கிறது. கச்சாப் பட்டு உற்பத்தியை விட கச்சாப் பட்டுத் தேவை அதிகமாக உள்ளது. தற்போது இந்தியாவின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப் பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 40,000 மெட்ரிக் டன் ஆகும். இதில் 36,000 மெட்ரிக் டன் கச்சாப்

பட்டு நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள கச்சாப் பட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்ய சீனாவிலிருந்து கச்சாப் பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே, நாட்டில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டு நூல் தேவையைப் பூர்த்தி செய்து, பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஜவுளித் துறை அமைச்சகம், மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ச்சித் துறை ஆகியன பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

2018-2019 ஆம் ஆண்டில் இந்தியா 1,850.00 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு ஜவுளிகளை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

3. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

தமிழ்நாடு பாரம்பரியமாக பட்டுத் தொழில் மேற்கொண்டுவரும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இங்கு பெரும்பாலான விவசாயிகள் பரவலாக மல்பெரி சாகுபடி செய்து வருகின்றனர். 57,472 ஏக்கர் பரப்பளவில் 29,172 விவசாயிகளால் மல்பெரி பயிர் சாகுபடி செய்யப்பட்டு, பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

2018–2019 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் 2,100 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டு, தேசிய அளவில் நான்காம் இடமும், இறக்குமதி செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக 1,950 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. நடப்பாண்டில், 2,200 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றில், இறக்குமதிக்கு மாற்றான வெண்பட்டு நூல் உற்பத்தி 2,050 மெட்ரிக் டன் ஆகும். மாநிலத்தின் மொத்த கச்சாப் பட்டு தேவை 3,000 மெட்ரிக் டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளதால், கச்சாப் பட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் பட்டு நூற்பு செயல்பாடுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் அறியப்பட்டு, புதிய பட்டு நூற்பு தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் தற்போது, மேம்படுத்தப்பட்ட பட்டு நூற்பு இயந்திரங்கள் கொண்ட 25 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும், இறக்குமதி செய்யப்பட்ட நவீன பட்டு நூற்பு இயந்திரங்களை

கொண்ட 4 தானியங்கி பட்டு நூற்பு அலகுகளும் நிறுவப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் நிறைவடையும்போது, மாநிலத்தின் பட்டு நூற்பு உற்பத்தித் திறன் தற்போதுள்ள 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக அதிகரிக்கும்.

மேலும், தமிழகம் பட்டு நூற்பு உப பொருட்களை பல்வகைகளில் திறம்பட பயன்படுத்தி இலாபம் ஈட்டும் வகையில் நிரந்தரமான சந்தை வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டு வருகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பட்டின் தேவையை உணர்ந்து தமிழ்நாட்டில் 'ஈரி பட்டு வளர்ப்பு' (ஈரி பட்டுப் புழுக்களுக்கு ஆமணக்கு/மரவள்ளி இலைகளை உணவளித்து ஈரி பட்டு நூல் உற்பத்தி செய்வது) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு மல்பெரி சாராத பட்டு வளர்ப்பு வகை ஆகும். [வன்யா (வனம்): காடு] உள்நாட்டின் பூர்வ குடிமக்களால் மலைப்பாங்கான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது, தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கணிசமான வேலைவாய்ப்பினை உருவாக்குகிறது. ஆமணக்கு மற்றும் மரவள்ளி பயிரிடும் விவசாயிகள், விதை மற்றும் கிழங்கின் உற்பத்தி அளவு மற்றும் தரம் பாதிக்காமல், அப்பயிர்களின் 20 சதவீத இலைகளை மட்டுமே பயன்படுத்தி ஈரி பட்டுப் புழு வளர்ப்பு மேற்கொள்வதால் கூடுதல் வருமானம் ஈட்டுகின்றனர். பட்டுச் சந்தையில் ஈரி பட்டுக்கு நல்ல தேவை உள்ளது.

4. பட்டு வளர்ச்சித் துறை

தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த பட்டு வளர்ச்சிப் பிரிவினை, 'பட்டு வளர்ச்சித் துறை' என்ற தனித் துறையாக சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும்வகையில் மேம்படுத்தியது. பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்; தமிழ்நாட்டை வெண்பட்டு மாநிலமாக உருவாக்குதல்; தற்போதைய புதிய தொழில்நுட்பங்கள்மூலம் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரது பொருளாதார நிலை முன்னேற உதவுதல்; கிராமப்புற/சிறுநகர பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன பட்டு வளர்ச்சித் துறையின் குறிக்கோள்களாகும். தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்து, பட்டு வளர்ச்சித் துறை இயக்ககம் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களது ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்படி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சென்னை கட்டுப்பாட்டின்கீழ் பட்டு வளர்ச்சித் துறை இயங்கி வருகிறது.

5. நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகளின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 தொடர் இலக்குகளை உள்ளடக்கிய 'உலக மாற்றத்திற்கான நிலையான நீடித்த வளர்ச்சி 2016-2030-க்கான நிகழ்ச்சிநிரல்' செப்டம்பர் 2015 இல் இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இலக்குகள் சமுதாயத்தின் நலனுக்கான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நல்வாழ்வின் அம்சங்களை தழுவியுள்ளது.

தமிழகத்தை இந்தியாவிலேயே வறுமையிலிருந்து விடுபட்ட மிக வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக ஆக்குவதுடன், அதன் மக்கள் ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அடைந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கையை உலகத்தின் பிற பகுதிகளுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதே தமிழ்நாட்டிற்கான தொலைநோக்கு திட்டம் 2023 ஆகும்.

பட்டுத் தொழில் வேளாண் சார்ந்த கிராமப்புற தொழில் ஆகும். இது கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மற்றும் பெண்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி தருகிறது. விவசாயிகளுக்கு மல்பெரி நடவு, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் செயல்களுக்கு பட்டு வளர்ச்சித் துறை பல்வேறு மானிய உதவிகளை வழங்கி வருகின்றது.

பட்டு வளர்ச்சித் துறைக்கான நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்வருமாறு:

இலக்கு [1]: வறுமையின்மை

(1.1) அனைத்து மக்களிடத்திலும் தீவிர வறுமை ஒழிப்பு

பட்டுத் தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் மல்பெரி அறுவடை செய்தல் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பின்மூலம் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர். அதுபோல, பட்டு விவசாயிகள்

2020 மார்ச் 24]

தங்களது மல்பெரி தோட்டப் பராமரிப்பிற்கும், பட்டுப் புழு வளர்ப்பிற்கும் ஊரக வேலையாட்களைப் பயன்படுத்துவதன்மூலம் வேலைவாய்ப்பினை வழங்க முடிகிறது. ஓர் ஏக்கர் மல்பெரி பயிரிடுவதன்மூலம் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலக்கு [8]: கண்ணியமான வேலை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்

(8.5) அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் ஆக்கவளமுள்ள வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்குதல்

பெரும்பாலான பண்ணைத் தொழிலாளர்கள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் பெண்கள் ஆவர். பட்டு வளர்ப்புமூலம் கண்ணியமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

இலக்கு [9]: தொழில், புதிய கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு

(9.3) சிறு தொழில்கள் மற்றும் பிற தொழில் நிறுவனங்களுடன் அணுகுவதை அதிகரித்தல்

பட்டுக் கூடுகளின் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல், சாயமேற்றுதல், நெசவு மற்றும் பிற செயல்பாட்டு அலகுகள் போன்ற சிறுதொழில்கள் அதிகரிக்கும். பட்டு உபபொருட்களை பயன்படுத்துதல், பட்டு நூல் உற்பத்தி, பட்டுக் கூடு மற்றும் பட்டு நூலில் செய்யப்பட்ட கைவினைப்பொருட்கள் மற்றும் துணிசாரா பயன்பாடுகளுக்கு பயன்படுத்தும் பட்டுத் தொழில்கள் ஆகியனவும் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

6. பட்டு வளர்ச்சித் துறை பணியமைப்பு

பட்டு வளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களைக் கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

வ. எண்	பதவியின் பெயர்	அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை
1	இயக்குநர்	1
2	இணை இயக்குநர்	3
3	துணை இயக்குநர்	10
4	உதவி இயக்குநர்	27
5	பட்டு ஆய்வாளர்	67
6	உதவி பட்டு ஆய்வாளர்	179
7	இளநிலை பட்டு ஆய்வாளர்	824
8	அமைச்சுப் பணியாளர், மற்றோர்	316
	மொத்தம்	1,427

பட்டுக் கூடுகளுக்கு முந்தைய நிலை மற்றும் பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ள போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை பட்டு வளர்ச்சித் துறை பெற்றுள்ளது.

7. பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்த பட்டு வளர்ச்சித் துறையானது கீழ்க்காணும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப் புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு குறித்து பயிற்சி அளித்தல்.
- மல்பெரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட பட்டுப் புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், தனி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் அமைத்தல் மற்றும் இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்தல் ஆகியவற்றிற்கு மானிய உதவியளித்தல்.

- தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைகள் வழங்குதல்.
- தொழில்நுட்பப் பரிமாற்றத்தின்மூலம் பட்டுக் கூடு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டுக் கூடு மற்றும் பட்டு நூலுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் மேம்பட்ட பட்டு நூற்பு/பட்டு முறுக்கேற்றும் அலகுகள் அமைக்க மானிய உதவியளித்தல்.

8. தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு

தமிழ்நாட்டில் 57,472 ஏக்கர் பரப்பில் 29,172 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக, பிற மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டு வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உயர் விளைச்சல் தரும் வி1, எஸ் வரிசை, எம்.ஆர்.2 மற்றும் ஜி.4 ஆகிய மல்பெரி இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. மல்பெரி செடிகளை செழிப்பாக வளரச் செய்வதற்காக இணை வரிசை நடவு முறை விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. பட்டுப் புழு வளர்ப்பில் வேலையாட்கள் பயன்பாட்டினைக் குறைப்பதற்காக, தற்போது தண்டு அறுவடை முறை பின்பற்றப்படுகிறது. தண்டு அறுவடை முறையில் மல்பெரித் தோட்டம் ஒவ்வொரு புழு வளர்ப்புக்குப் பின்னரும் கவாத்து செய்யப்பட்டு, இடைநிலை சீர்திருத்தங்களும் உரமிடுவதும் மேற்கொள்ளப்படுகிறது.

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஏக்கருக்கு ரூ.10,500/-ஐ பட்டு வளர்ச்சித் துறை வழங்குகிறது. பட்டு வளர்ச்சித் துறையானது

மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.33,600/- வீதம் நிதியுதவி வழங்குகிறது. மல்பெரி நடவு செய்வதிலிருந்து, பட்டுக் கூடுகளை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து நிலைகளிலும் விரிவாக்கப் பணியாளர்கள் எல்லா வகையான உதவிகளையும் விவசாயிகளுக்கு அளித்து வருகின்றனர்.

மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு

வ. எண்	மாவட்டம்	1-3-2020-ல் மல்பெரி பரப்பு			
		ஏக்கரில்			விவசாயிகள்
		இறவை	மானாவாரி	மொத்தம்	
1	கிருஷ்ணகிரி	9,465.95		9,465.95	5,044
2	தருமபுரி	4,839.10		4,839.10	2,941
3	சேலம்	3,605.15		3,605.15	2,231
4	ஈரோடு	4,970.06		4,970.06	2,361
5	கோயம்புத்தூர்	3,388.50		3,388.50	1,416
6	திருப்பூர்	6,536.64		6,536.64	3,172
7	நீலகிரி	100.00		100.00	75
8	வேலூர்	910.75		910.75	376
9	திருப்பத்தூர்	1,907.75	198.60	2,106.35	1,214
10	இராணிப்பேட்டை	753.50		753.50	368
11	காஞ்சிபுரம்	16.50		16.50	13
12	செங்கல்பட்டு	30.00		30.00	21
13	திருவள்ளூர்	12.00		12.00	6
14	திருவண்ணாமலை	1,305.45	177.00	1,482.45	847
15	நாமக்கல்	2,608.85	62.40	2,671.25	1,371
16	கரூர்	460.00		460.00	250

வ. எண்	மாவட்டம்	1-3-2020-ல் மல்பெரி பரப்பு			
		ஏக்கரில்			விவசாயிகள்
		இறவை	மானாவாரி	மொத்தம்	
17	திருச்சி	1,241.55		1,241.55	669
18	பெரம்பலூர்	219.50		219.50	94
19	அரியலூர்	179.00		179.00	82
20	புதுக்கோட்டை	776.00		776.00	395
21	திருவாரூர்	269.50		269.50	110
22	தஞ்சாவூர்	504.00		504.00	246
23	நாகப்பட்டினம்	99.50		99.50	48
24	விழுப்புரம்	891.00		891.00	446
25	கள்ளக்குறிச்சி	425.50		425.50	258
26	கடலூர்	554.25		554.25	253
27	மதுரை	614.00		614.00	266
28	தேனி	2,309.50		2,309.50	1,055
29	விருதுநகர்	669.00		669.00	258
30	இராமநாதபுரம்	206.50		206.50	102
31	சிவகங்கை	376.40		376.40	181
32	திண்டுக்கல்	3,957.35		3,957.35	1,776
33	திருநெல்வேலி	1,952.75		1,952.75	815
34	தென்காசி	293.00		293.00	128
35	தூத்துக்குடி	264.85		264.85	110
36	கன்னியாகுமரி	320.50		320.50	174
	மொத்தம்	57,033.85	438.00	57,471.85	29,172

2020-2021 ஆம் ஆண்டில் கூடுதலாக 5,000 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

9. பட்டு வளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

ஈரோடு, தருமபுரி, வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து மண்டல அலுவலகங்கள்மூலமாக பட்டு வளர்ச்சி செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள 19 உதவி இயக்குநர்களால் மல்பெரி விரிவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பட்டு விதை ஒருங்கிணைப்புப் பணியினை, ஓசூரிலுள்ள துணை இயக்குநர் அலுவலகம், 5 உதவி இயக்குநர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்கிறது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை வர்த்தகம் செய்யும் பணியை, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் மற்றும் அதன் சேலம் கிளை மேற்கொள்கிறது. மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று, துணை இயக்குநர் தலைமையில் ஓசூரில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம், பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் பயிற்சியினை வழங்கி வருகிறது.

மாநிலத்தில் பட்டுத் தொழிலின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக இதர உட்கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன.

9.1 ஆதார பட்டுப் புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டு வளர்ச்சித் துறையில் உள்ள ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைக் கூடுகளை பயன்படுத்தி, வர்த்தகரீதியிலான முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மூன்றடுக்கு முறையில் பட்டுப் புழுக்களின் இனப் பண்புகளை பராமரித்து, பட்டு விவசாயிகளுக்கு தேவையான வர்த்தகரீதியிலான பட்டுப் புழு முட்டைகளை உற்பத்தி செய்வதற்கான ஆதார விதைக் கூடுகளை உற்பத்தி செய்து வழங்க 19 விதைப் பண்ணைகள் இத்துறையில் உள்ளன.

விதைப் பண்ணைகள்

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ.எண்	விதைப் பண்ணையின் பெயர்	நிலை	மொத்த பரப்பு (ஏக்கர்)
கிருஷ்ண-கிரி	ஆவலப்பள்ளி	1	பேரிகை	பி3	3.67
		2	ஆவலப்பள்ளி	பி3	11.38
		3	ஓசூர்	பி2	44.72
	கல்கொண்டப் பள்ளி	4	கல்கொண்டப் பள்ளி	பி3	5.65
		5	தளி	பி3	3.50
	உத்தனப்பள்ளி	6	உத்தனப்பள்ளி	பி2	26.24
		7	உளிமங்கலம்	பி2	9.80
		8	மேலகிரி	பி2	10.20
	கோலட்டி	9	கோலட்டி	பி1	868.55
சேலம்	சேலம்	10	ஏற்காடு	பி2	5.96
ஈரோடு	தாளவாடி	11	ஆசனூர்	பி2	9.00
	மாதஹள்ளி	12	மாதஹள்ளி	பி1	785.29
திருப்பத்-தூர்	திருவண்ணா-மலை	13	அத்தனாவூர்	பி1	5.73
நாமக்கல்	நாமக்கல்	14	கொல்லிமலை	பி1	13.10
தேனி	தேனி	15	மயிலாடும்பாறை	பி2	10.00
தென்காசி	தென்காசி	16	செங்கோட்டை	பி1	42.24
நீலகிரி	குன்னூர்	17	குன்னூர்	பி3	22.25
		18	மசினகுடி	பி2	8.35
		19	மசக்கல்	பி2	18.95
			மொத்தம்		**1,904.58**

[2020 மார்ச் 24

9.2 வித்தகங்கள்

வித்தகங்கள் என்றழைக்கப்படும் பட்டுப் புழு விதை உற்பத்தி மையங்கள், பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கு ஒரு முக்கியப் பங்கினை ஆற்றுகின்றன. பின்வரும் 11 மாநில அரசு வித்தகங்கள் மற்றும் 2 மத்திய பட்டு வாரியத்தால் இயக்கப்படும் தேசிய பட்டுப் புழு விதைக் கழகத்தின் (NSSO) வித்தகங்கள்மூலம் நோயற்ற பட்டு முட்டைகள் தயாரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

வித்தகங்கள்

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	வித்தகத்தின் பெயர்	மாநில அரசு/ * மத்திய பட்டு வாரியம்	உற்பத்தித் திறன் (இலட்சத்தில்)
கிருஷ்ண-கிரி	ஓசூர் (வித்தகம்)	1	ஓசூர் (கலப்பினம்)	மாநில அரசு	4.00
			ஓசூர் (இரு சுழற்சி)	மாநில அரசு	10.00
		*	ஓசூர்	மத்திய பட்டு வாரியம்	28.00
	கிருஷ்ண-கிரி (வித்தகம்)	2	கிருஷ்ண-கிரி	மாநில அரசு	32.00
தருமபுரி	தருமபுரி	3	சோகத்தூர்	மாநில அரசு	3.00
		*	தருமபுரி	மத்திய பட்டு வாரியம்	20.00

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	வித்தகத்தின் பெயர்	மாநில அரசு/ * மத்திய பட்டு வாரியம்	உற்பத்தித் திறன் (இலட்-சத்தில்)
	பெண்ணா-கரம்	4	பெண்ணா-கரம்	மாநில அரசு	5.00
கோயம்-புத்தூர்	கோயம்-புத்தூர்	5	கோயம்-புத்தூர்	மாநில அரசு	10.00
ஈரோடு	ஈரோடு	6	ஈரோடு	மாநில அரசு	10.00
	தாளவாடி	7	தாளவாடி	மாநில அரசு	5.00
திருப்பத்-தூர்	வாணியம்-பாடி	8	வாணியம்-பாடி	மாநில அரசு	9.00
திருச்சி	திருச்சி	9	திருச்சி	மாநில அரசு	4.00
திண்டுக்கல்	திண்டுக்கல்	10	திண்டுக்கல்	மாநில அரசு	3.00
தென்காசி	தென்காசி	11	குற்றாலம்	மாநில அரசு	4.00
				மொத்தம்	**147.00**

9.3 பல்நிலை குளிர்பதன அலகுகள்

ஓர் ஆண்டில் ஒரு தலைமுறை, இரண்டு தலைமுறை மற்றும் பல தலைமுறைகளை உருவாக்கும் பட்டுப் பூச்சிகள் முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரணமாக, பல சுழற்சி இனங்களில் பட்டு முட்டைகள் முட்டையிடப்பட்ட 10-11 நாட்களிலும், இரு சுழற்சி இனங்கள் மற்றும் ஒரு சுழற்சி இனங்களில் 6-10 மாதங்களிலும் பொரிக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள பட்டு விவசாயிகளால் வெண் பட்டுப் புழு வளர்ப்பு அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இரு சுழற்சியின பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர். இரு சுழற்சியின பட்டுப் பூச்சி ஓர் ஆண்டில் இரு தலைமுறைகளை உருவாக்குகிறது. பட்டு முட்டைகளின் விதை உறக்கத்தினைப் போக்கி அவற்றை நான்கு, ஆறு மற்றும் பத்து மாதங்களுக்குப்பின் பொரிக்கும் வகையில், விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக இரு சுழற்சியின பட்டு முட்டைகள் 2.5°C முதல் 25°C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் 120 முதல் 300 நாட்கள் என முன்னதாக நிர்ணயம் செய்யப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதன அலகில் பதனம் செய்யப்படுகின்றன. விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக் கூடு அறுவடை பெற, பட்டு முட்டைகளைப் பதனப்படுத்திட அதிகபட்ச கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். இரு சுழற்சியின பட்டு முட்டைகளை ஆண்டு முழுவதும் பதனப்படுத்தி விநியோகம் செய்வதற்காக 40.00 இலட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும் ஓசூரிலும் செயல்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் இவ்விரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகளில் 36.57 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டன.

கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, ஓசூர், கிருஷ்ணகிரி, பெண்ணாகரம், தருமபுரி மற்றும் வாணியம்பாடி ஆகிய பட்டு முட்டை வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பல்நிலை குளிர்பதன நிலையங்களில் நான்கு, ஆறு, பத்து மாத பதன அட்டவணைப்படி மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பதனப்படுத்தப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

9.4 தொழில்நுட்ப சேவை மையங்கள்

பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குவதற்காக, மாநிலத்தில் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தொழில்நுட்ப சேவை மையத்திலும் ஓர் உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் தலைமையில் 5-6 இளநிலை ஆய்வாளர்கள் பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

தொழில்நுட்ப சேவை மையங்கள்

மண்டலம்	மாவட்டங்கள்	வ. எண்	உதவி இயக்குநர்	தொழில்நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை
தருமபுரி	கிருஷ்ணகிரி	1	ஓசூர்	7
		2	தேன்கனிக்கோட்டை	6
		3	கிருஷ்ணகிரி	4
	தருமபுரி	4	தருமபுரி	4
		5	பெண்ணாகரம்	6
ஈரோடு	சேலம்	6	சேலம்	7
	கோயம்புத்தூர் திருப்பூர் ஈரோடு	7	கோயம்புத்தூர்	4
		8	உடுமலைப்பேட்டை	5
		9	ஈரோடு	7
		10	தாளவாடி	3
	நீலகிரி	11	குன்னூர்	1
வேலூர்	வேலூர் திருப்பத்தூர் இராணிப்பேட்டை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு	12	வாணியம்பாடி	8
	திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள்	13	திருவண்ணாமலை	6

[2020 மார்ச் 24

மண்டலம்	மாவட்டங்கள்	வ. எண்	உதவி இயக்குநர்	தொழில்நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை
	விழுப்புரம் கள்ளக்குறிச்சி கடலூர்	14	விழுப்புரம்	4
திருச்சி	திருச்சி புதுக்கோட்டை அரியலூர் திருவாரூர் தஞ்சாவூர் பெரம்பலூர் நாகப்பட்டினம்	15	திருச்சி	8
	நாமக்கல் கரூர்	16	நாமக்கல்	7
மதுரை	திண்டுக்கல் சிவகங்கை	17	திண்டுக்கல்	6
	தேனி மதுரை இராமநாதபுரம்	18	தேனி	5
	தென்காசி திருநெல்வேலி விருதுநகர் தூத்துக்குடி கன்னியாகுமரி	19	தென்காசி	7
			மொத்தம்	**105**

9.5 அரசு பட்டுப் பண்ணைகள்

பட்டு வளர்ச்சித் துறையின்கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவை, 6 செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள், 7 அரசு கலப்பின பட்டுப் பண்ணைகள், 5 மாதிரி மல்பெரி பட்டுப்

பண்ணைகள், 10 விவசாயிகள் பயிற்சி மையங்கள் மற்றும் 4 இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆகும். இவை செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையங்களாக செயல்பட்டு வருவதுடன், தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம்புழுக்களை தேவைப்படும் பட்டு விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன.

அரசு பட்டுப் பண்ணைகள்

மாவட்டம்	**உதவி இயக்குநர்**	**வ. எண்**	**அரசு பட்டுப் பண்ணையின் பெயர்**		**மொத்தப் பரப்பு (ஏக்கர்)**
கிருஷ்ணகிரி	தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்	1	ஓசூர்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	2.18
	கிருஷ்ணகிரி	2	ஊத்தங்கரை	கலப்பின பட்டுப் பண்ணை	3.72
தருமபுரி	தருமபுரி	3	சித்தோரி	கலப்பின பட்டுப் பண்ணை	5.79
		4	சோகத்தூர்	விவசாயிகள் பயிற்சி மையம்	5.84
	பெண்ணாகரம்	5	பாப்பாரப்பட்டி	இளம்புழு வளர்ப்புப் பண்ணை	1.81
சேலம்	சேலம்	6	நத்தக்கரை	விவசாயிகள் பயிற்சி மையம்	14.50

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்		மொத்தப் பரப்பு (ஏக்கர்)
		7	மணியார்-குண்டம்	கலப்பின பட்டுப் பண்ணை	2.50
		8	புதூர்	கலப்பின பட்டுப் பண்ணை	6.04
கள்ளக் குறிச்சி		9	வெள்ளி-மலை	கலப்பின பட்டுப் பண்ணை	6.56
ஈரோடு	தாளவாடி	10	தாளவாடி	விவசாயி கள் பயிற்சி மையம்	18.01
		11	இராமா-புரம்	இளம்புழு வளர்ப்புப் பண்ணை	3.58
		12	கீர்மாளம்	கலப்பின பட்டுப் பண்ணை	32.82
திருப்பூர்	உடுமலைப்-பேட்டை	13	மைவாடி	விவசாயி கள் பயிற்சி மையம்	20.10
காஞ்சிபுரம்	வாணியம்பாடி	14	விச்சந்-தாங்கல்	விவசாயி கள் பயிற்சி மையம்	8.05
திருப்பத்தூர்	வாணியம்பாடி	15	மின்னூர்	விவ-சாயிகள் பயிற்சி மையம்	18.70

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்		மொத்தப் பரப்பு (ஏக்கர்)
திருவண்ணா-மலை	திருவண்ணா-மலை	16	நாடானூர்	இளம்புழு வளர்ப்புப் பண்ணை	1.88
திருப்பத்தூர்		17	புலியூர்	இளம்புழு வளர்ப்புப் பண்ணை	7.99
கடலூர்	விழுப்புரம்	18	நெய்வேலி	விவ சாயிகள் பயிற்சி மையம்	20.00
திருச்சி	திருச்சி	19	உப்பி-லியாபுரம்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	2.60
		20	கலிங்கப்-பட்டி	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை	5.00
		21	கருக்க-மடை	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை	2.11
		22	பச்சை-மலை	கலப்பின பட்டுப் பண்ணை	8.45
		23	மணி-கண்டம்	விவ சாயிகள் பயிற்சி மையம்	10.00

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்		மொத்தப் பரப்பு (ஏக்கர்)
தஞ்சாவூர்		24	நாஞ்சிக்-கோட்டை	விவசா-யிகள் பயிற்சி மையம்	4.65
திண்டுக்கல்	திண்டுக்கல்	25	சி.கே. புதூர்	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை	4.93
சிவகங்கை		26	குன்றக்குடி	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை	6.20
		27	ஓ.புதூர்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	10.00
இராமநாத-புரம்	தேனி	28	பாண்டியூர்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	4.36
திருநெல்-வேலி	தென்காசி	29	திருநெல்-வேலி (இருப்பு) வி.எம். சத்திரம்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	1.88

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	அரசு பட்டுப் பண்ணையின் பெயர்		மொத்தப் பரப்பு (ஏக்கர்)
விருதுநகர்	தென்காசி	30	திரு வில்லி-புத்தூர்	விவசா-யிகள் பயிற்சி மையம்	10.15
		31	செவலூர்	மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை	12.00
கன்னியா-குமரி		32	நாகர்-கோவில்/ கோணம்	செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம்	3.10
				மொத்தம்	265.50

9.6 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்து, இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழு வளர்ப்பு, 'இளம்புழு வளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது. இளம்புழு வளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு வழங்கும் மையங்கள் 'இளம்புழு வளர்ப்பு மையங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்பவெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும் மற்றும் தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழு வளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. பிரத்யேக உரப் பரிந்துரை மற்றும் கவாத்து அட்டவணை அடிப்படையில் மல்பெரித் தோட்டம் மற்றும் தனி புழு வளர்ப்பு மனை பராமரிக்கப்பட்டு, புழு வளர்ப்புக் காலத்தில் இளம்புழு வளர்ப்பு மையங்களில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது. மாநிலத்தில் வெற்றிகரமான இரு சுழற்சியின பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழு வளர்ப்புக் கொள்கை திகழ்கிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 82 சதவீத பட்டு முட்டைகள் இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழு வளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்பட உதவுவதுடன், பட்டுக் கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்கப்படுகிறது.

பட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான இளம்புழுக்களை விநியோகம் செய்திட பிரத்யேகமாக நான்கு அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

இதுதவிர, 142 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆண்டொன்றிற்கு 93.60 இலட்சம் பட்டு முட்டைகளை இளம்புழுக்களாக வளர்ப்பு செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

9.7 அரசு விதைக் கூடு அங்காடிகள்

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விதைக் கூடுகள் அரசு விதைக் கூடு அங்காடிகளில் வர்த்தகம் செய்யப்பட்டு, தரமான விதை உற்பத்திக்காக வித்தகங்களுக்கு வழங்கப்படுகின்றன. விதைக் கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக் கூடு அங்காடிகள் ஓசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றன.

அரசு விதைக் கூடு அங்காடிகள்

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ. எண்	அரசு பட்டுக் கூடு அங்காடியின் பெயர்	
கிருஷ்ணகிரி	ஆவலப்பள்ளி	1	ஓசூர்	விதை
	தேன்கனிக்-கோட்டை	2	தேன்கனிக்-கோட்டை	விதை
கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	3	கோயம்புத்தூர்	விதை

பட்டுக் கூடுகளின் விற்பனை மதிப்பில் 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

9.8 அரசு பட்டுக் கூடு அங்காடிகள்

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுக் கூடுகளை வர்த்தகம் செய்ய ஏதுவாக, துறையின் சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 20 பட்டுக் கூடு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டுக் கூடு வாங்குவோர் (நூற்பாளர்கள்) மற்றும் பட்டுக் கூடு விற்போர் (விவசாயிகள்) அடங்கிய ஒரு குழு பட்டுக் கூடுகளுக்கான நியாயமான விலையினை தினசரி நிர்ணயம் செய்ய உதவுகிறது. வெளிப்படையான பட்டுக் கூடு ஏல நடவடிக்கைகளில் பட்டு நூற்பாளர்கள் பங்கேற்று பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்பட அங்காடிப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

அரசு பட்டுக் கூடு அங்காடிகள்

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ.எண்	அரசு பட்டுக் கூடு அங்காடியின் பெயர்
கிருஷ்ணகிரி	ஓசூர்	1	ஓசூர்
	கிருஷ்ணகிரி	2	கிருஷ்ணகிரி
தருமபுரி	பெண்ணாகரம்	3	பெண்ணாகரம், பாலக்கோடு
	தருமபுரி	4	தருமபுரி
சேலம்	சேலம்	5	சேலம்
கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	6	கோயம்புத்தூர்
ஈரோடு	தாளவாடி	7	தாளவாடி
	ஈரோடு	8	ஈரோடு
திருப்பூர்	உடுமலைப்-பேட்டை	9	உடுமலைப்பேட்டை
திருப்பத்தூர்	வாணியம்பாடி	10	வாணியம்பாடி
திருவண்ணாமலை	திருவண்ணா-மலை	11	திருவண்ணாமலை
திருச்சி	திருச்சி	12	திருச்சி
புதுக்கோட்டை		13	புதுக்கோட்டை

மாவட்டம்	உதவி இயக்குநர்	வ.எண்	அரசு பட்டுக் கூடு அங்காடியின் பெயர்
திண்டுக்கல்	திண்டுக்கல்	14	திண்டுக்கல்
		15	பழனி (இருப்பு) சி.கே. புதூர்
சிவகங்கை		16	சிவகங்கை
தேனி	தேனி	17	தேனி
தென்காசி	தென்காசி	18	நன்னகரம்
விருதுநகர்		19	திருவில்லிபுத்தூர்
கன்னியாகுமரி		20	நாகர்கோவில்

பட்டுக் கூடுகளின் விற்பனை மதிப்பில் 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

இந்த 20 பட்டுக் கூடு அங்காடிகளில் புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று அரசு பட்டுக் கூடு அங்காடிகள், பட்டு நூற்பு அலகுகளுடன் செயல்பட்டு வருகின்றன. இப்பட்டுக் கூடு அங்காடிகளில் தனியார் பட்டு நூற்பாளர்களின் பங்கேற்பு இல்லாத நாட்களில், பட்டு விவசாயிகளின் நன்மையை கருத்தில்கொண்டு, அரசு பட்டு நூற்பகங்களுக்கு பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

9.9 அரசு பட்டு நூற்பு/முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கியப் பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணைபுரிவதற்காக, எட்டு அரசு பலமுனை பட்டு நூற்பு அலகுகள் பட்டு நூற்புத் தொழில்முனைவோருக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. அரசு பட்டு நூற்பகங்கள், பட்டுக் கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக் கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன. இந்த அரசு பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 24 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

அரசு பட்டு நூற்பு அலகுகள்

வ.எண்	மாவட்டம்	இடம்
1	கிருஷ்ணகிரி	ஓசூர்
2	சேலம்	சேலம்
3	ஈரோடு	தாளவாடி
4	திருப்பத்தூர்	வாணியம்பாடி
5	தென்காசி	நன்னகரம்
6	கன்னியாகுமாி	கோணம்
7	சிவகங்கை	சிவகங்கை
8	புதுக்கோட்டை	புதுக்கோட்டை

மேற்கண்ட 8 பட்டு நூற்பு அலகுகளில் ஓசூர், சேலம், தாளவாடி மற்றும் நன்னகரம் ஆகிய இடங்களில் உள்ள பட்டு நூற்பு அலகுகள் பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு கச்சாப் பட்டு நூல் முறுக்கேற்றிய பட்டு நூலாக மாற்றப்படுகிறது.

9.10 தனியார் பட்டு நூற்பகங்கள்

அரசு பட்டு நூற்பகங்கள் தவிர, 92 காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள், 52 பலமுனை பட்டு நூற்பு அலகுகள், 27 சர்க்கா நூற்பு அலகுகள் மற்றும் 4 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் ஆகியன தனியார் பட்டு நூற்புத் தொழில்முனைவோரால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த தனியார் பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 586 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். தனியார் பட்டு நூற்புப் பிரிவிற்கு இத்துறையால் பலவகை ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பட்டு விவசாயிகள் நியாயமான விலை பெற்றிடும் வகையில், உள்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட, அதிக எண்ணிக்கையிலான பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட, தொழில்முனைவோர் முன்வரும் வகையில் பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

400 முனைகள் கொண்ட மூன்று தானியங்கி பட்டு நூற்பு இயந்திர அலகுகளும், 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகும், 25 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும் 2019-2020 ஆம் ஆண்டில் நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இவற்றுள் இதுவரை 20 பலமுனை பட்டு நூற்பு அலகுகளில் பட்டு நூல் உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பட்டு நூற்பு அலகுகளுக்கு இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 141 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். இந்த பட்டு நூற்பு அலகுகள் நிறுவப்பட்ட பின்னர் மாநிலத்தின் பட்டு நூற்பு உற்பத்தித் திறன் 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைபாடுள்ள கூடுகளை மாநிலத்திலேயே பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஒரு தானியிங்கி டூபியான் பட்டு நூற்பு இயந்திரம் கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் தனியார் நூற்புப் பிரிவுக்கு பல்வேறு உதவிகளை துறை வழங்கி வருகிறது. உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை முழுமையாக மாநிலத்திற்குள்ளாகவே பயன்படுத்துவதன்மூலம், பட்டு விவசாயிகள் நிறைந்த வருவாய் பெற்றிட இயலும்.

9.11 தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டு வளர்ச்சித் துறையின் களப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக பட்டு வளர்ச்சித் துறை ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன்கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினைக் கொண்டுள்ளது.

'பட்டு மலர்' எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம்மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/- என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டு வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணை புரிகிறது.

9.12 அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில், மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி

2020 மார்ச் 24]

செய்யப்படும் கச்சாப் பட்டு நூல் வர்த்தகம் செய்யப்படுகிறது. இப்பட்டுப் பரிமாற்றகம் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பட்டு பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டு நூல் காஞ்சிபுரம், மண்டல பட்டுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்தால் பரிசோதனை செய்யப்படுகிறது. சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பட்டு நூற்பாளர்கள் மற்றும் முறுக்கேற்றுவோரின் வசதிக்காக அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தின் கிளை சேலத்தில் ஆகஸ்ட் 2018 முதல் செயல்பட்டு வருகிறது. இங்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டு நூல் சேலம், பட்டு பரிசோதனை சேவை மையத்தில் பரிசோதனை செய்யப்படுகிறது.

பட்டின் தரம் மற்றும் கச்சாப் பட்டு நூலுக்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கச்சாப் பட்டு நூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் 'டான்சில்க்' போன்றோர் வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டு நூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டு நூலுக்கான விற்பனைத் தொகை பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக மின்னணு தீர்வுச் சேவைமூலம் வழங்கப்படுகிறது.

9.13 கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டு வளர்ச்சித் துறையின்கீழ், 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. 'தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்' (டான்சில்க்) தலைமைக் கூட்டுறவு இணையமாக செயல்படுகிறது.

9.13.1 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக்கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதுமூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, பொருளாதார நிலையை மேம்படுத்தச் செய்வது இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

[2020 மார்ச் 24

9.13.2 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக 1978 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது. இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இணையம் பெருமளவு பட்டினை கொள்முதல் செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் 'டான்சில்க்' இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையகங்கள் மற்றும் தனியார் விற்பனை அங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

10. கச்சாப் பட்டு உற்பத்தி

தமிழகத்தில் பட்டு நூல் இரு சுழற்சியின (வெண்பட்டு) மற்றும் பலசுழற்சி கலப்பின (மஞ்சள்) பட்டுக் கூடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இருசுழற்சி (வெண்பட்டு) பட்டுக் கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 1,000 முதல் 1,200 மீட்டர் ஆகும். எனினும், பலசுழற்சி கலப்பின (மஞ்சள்) பட்டுக் கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 700-800 மீட்டர் மட்டுமே. மஞ்சள் பட்டு நூலை விட வெண் பட்டு நூல் அதிக உறுதியுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

2020 மார்ச் 24]

2019-2020 ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தியான 1,970 மெட்ரிக் டன் பட்டில், வெண்பட்டு 1,862 மெட்ரிக் டன் ஆகும். வெண்பட்டு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில், தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது. பட்டு நூலின் சராசரி விலை ரூ.3,515/- என்ற அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூலின் மதிப்பு 693.00 கோடி ரூபாய் ஆகும்.

11. பயிர்க் காப்பீடு

பட்டுக் கூடு மகசூலில் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டு வரை பயிர் காப்பீட்டுப் பிரீமியத் தொகையில் 90 சதவீதம் அரசால் இத்திட்டத்தின்கீழ் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டு முதல் 100 சதவீத பயிர் காப்பீட்டு பிரீமியத் தொகையும் அரசால் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 29 நவம்பர், 2019 முதல் 28 நவம்பர், 2020 வரையிலான காப்பீட்டுக் காலத்திற்கு பட்டு விவசாயிகளின் புழு வளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடு அடங்கிய இத்திட்டத்தின்மூலம் 25,237 விவசாயிகள் பயனடையும் வகையில், 100 முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.174.34 வீதம் பயிர்க் காப்பீட்டிற்கான பிரீமியத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப் புழு பாதிக்கப்பட்ட பருவத்தின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம்மூலம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

12. 2019-2020 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

12.1 மாநிலத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் ஜவுளி அமைச்சகம் ‘கிரியா ஊக்கித் திட்டத்தின்’கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கான நிதியுதவியை 2015-2016 ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில், முக்கிய திட்டங்களை செயல்படுத்திட மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டிற்கு

[2020 மார்ச் 24

18.36 கோடி ரூபாய் நிதி மாநிலத் திட்டத்தின்கீழ் பின்வருமாறு ஒப்பளிப்பு செய்துள்ளது:

மாநிலத் திட்டம், 2019-2020

வ. எண்	திட்டத்தின் பெயர்	இயல்பு (ஏக்கர்/ எண்)	அலகு மதிப்பீடு (ரூபாய்)	நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
				மாநில பங்கு	பயனாளி பங்கு	மொத்தத் தொகை
1	உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	3,500.00	14,000	367.500	122.500	490.000
2	மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்	1,000.00	33,600	250.000	0	250.000
3	நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்	1,000	70,000	525.000	175.000	700.000
4	தனி பட்டுப் புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல்					
அ	பட்டுப் புழு வளர்ப்பு குடில் கட்ட உதவி யளித்தல் நிலை-I (15,00 ச.அடி மேல்)	50	2,75,000	41.250	96.250	137.500

வ. எண்	திட்டத்தின் பெயர்	இயல்பு (ஏக்கர்/ எண்)	அலகு மதிப்பீடு (ரூபாய்)	நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்)		
				மாநில பங்கு	பயனாளி பங்கு	மொத்தத் தொகை
ஆ	பட்டுப் புழு வளர்ப்பு குடில் கட்ட உதவி யளித்தல் நிலை-II (1,000- 1,500 ச.அடி)	550	1,75,000	481.250	481.250	962.500
இ	பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவி யளித்தல் நிலை-III (700- 1,000 ச.அடி)	200	90,000	126.000	54.000	180.000
5	சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பாிசுத் தொகை வழங்குதல்	96	-	20.850	0	20.850
6	அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவி யளித்தல்	5	5,00,000	25.000	0	25.000
மொத்தம்				**1,836.850**	**929.000**	**2,765.850**

12.2 பரிசுகளும் வெகுமதிகளும்

சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கிட, 2019-2020 ஆம் ஆண்டில் அரசால் ரூ.20.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மாவட்ட அளவில் சென்னை நீங்கலாக, 31 மாவட்டங்களில் தலா மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கிட தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/-ம் 19 பிப்ரவரி, 2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

12.3 பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2019-2020 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ், ரூ.344.759 இலட்சம் துறையின் கீழ்க்கண்டுள்ள வளர்ச்சிப் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

வ. எண்	பணிகள்	மொத்த ஒப்பளிப்பு (ரூ. இலட்சத்தில்)
1	வெண்பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல் (பலமுனை பட்டு நூற்பக பட்டு நூல்)	63.000
2	'பட்டு மலர்' மாத இதழ் 2019-2020 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்குதல்	14.760
3	பயிர்க் காப்பீட்டுத் திட்டம்	44.000
4	கைப்பேசி வாடகை கட்டணத்திற்கு ஒதுக்கீடு @ பட்டுக் கூடு அங்காடிகள்	1.370
5	கணினி, அச்சு இயந்திரம், யூபிஎஸ் மற்றும் ஸ்கேனர் & இதர துணைக் கருவிகள் கொள்முதல் செய்தல்	9.320
6	மின்னாக்கிகள் கொள்முதல் செய்தல்	3.000
7	கிருஷ்ணகிரி மற்றும் ஆவலப்பள்ளிக்கு ஒளி நகல் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்	1.350
8	பட்டு நூலினை சிட்டமாக்கும் இயந்திரம் கொள்முதல் செய்தல்	5.760

வ. எண்	பணிகள்	மொத்த ஒப்பளிப்பு (ரூ. இலட்சத்தில்)
9	கொதிகலன் கொள்முதல் செய்தல் (100 கிலோ திறன்)	24.500
10	உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்	14.396
11	அரசுக் கட்டடங்கள் புனரமைத்தல் (கட்டடப் பணிகள்)	
அ	தொழில்நுட்ப சேவை மையக் கட்டடங்கள்	9.000
ஆ	அரசு வித்தகக் கட்டடங்கள்	17.750
இ	அரசு பட்டுக் கூடு அங்காடிக் கட்டடம்	20.000
ஈ	அரசு விதைப் பண்ணைகள் கட்டடங்கள்	7.500
உ	அரசு பட்டுப் பண்ணை கட்டடங்கள்	40.900
ஊ	ஆழ்துளைக் கிணறு தோண்டுதல்	7.300
12	புதிய பட்டுக் கூடு அங்காடி துவங்குதல், உடுமலைப்பேட்டை @ மைவாடி	28.231
13	இயந்திரம் கொள்முதல் செய்தல்	2.616
14	அரசு பட்டுப் பண்ணைகளில் மர மல்பெரி நடவு மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்	27.756
15	நாகம்பட்டி அரசு பட்டுப் பண்ணையில் மர மல்பெரி நடவு மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்	2.250
	மொத்தம்	344.759

12.4 மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா'

கிரியா ஊக்கித் திட்ட மறுசீரமைப்புக்குப் பின், மத்திய பட்டு வாரியம், ஒரு சில உட்கூறு இனங்களுக்கு மட்டும் நிதியுதவி

அங்கீகரித்து, 2019-2020 ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ளவாறு ரூ.1152.815 இலட்சம் மத்திய பகுதி திட்டமான 'சில்க் சமக்ரா' திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்துள்ளது.

மத்திய பகுதித் திட்டம்-2019-2020

முதல் நிலை நிதி விடுவிப்பு

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
அ	பொது (2018-19)						
	தமிழ்நாடு பின்னிணைப்பு 2018-2019						
1	தரமான விதைக் கூடு உற்பத்தியினை மேம்படுத்த விதைக் கூடு வளர்க்கும் விவசாயிகளை வலுப்படுத்த உதவி-யளித்தல்	60	1.000	30.000	15.000	15.000	60.000
2	தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (400 முனைகள்)	2	122.072	122.072	61.036	61.036	244.144
3	நிறுவப்பட்ட காட்டேஜ் பேசின்/ உள்நாட்டு கொப்பரை அலகுகளை மேம்படுத்த உதவியளித்தல்	10	1.990	9.950	4.975	4.975	19.900
	கூடுதல்			**162.022**	**81.011**	**81.011**	**324.044**

2020 மார்ச் 24]

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
	தமிழ்நாடு வழக்கமான கேட்புகள் 2019-2020						
4	பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் நிறுவுதல்	5	1.750	4.375	2.188	2.188	8.750
5	தரமான பட்டுக் கூடு உற்பத்திக்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவியளித்தல்	2,000	0.050	50.000	25.000	25.000	100.000
6	ஈரி பட்டுக்கான ஆமணக்கு செடி நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	160.00	0.050	4.000	2.000	2.000	8.000
7	ஈரி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் (500 சதுர அடி)	160	1.000	80.000	40.000	40.000	160.000
8	விதை செயல்பாட்டில் திறன் மேம்பாடு குறித்து துறை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்	5	0.100	0.500	0	0	0.500
	கூடுதல்			**138.875**	**69.188**	**69.188**	**277.250**
ஆ	**தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான துணைத் திட்டம்**						
9	உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	20.00	0.500	6.500	2.500	1.000	10.000

[2020 மார்ச் 24

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
10	மல்பொரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்	10.00	0.336	2.184	1.176	0	3.360
11	நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்	10	0.750	4.875	1.875	0.750	7.500
12	தனி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்	10	2.500	16.250	6.250	2.500	25.000
13	ஈரி பட்டுக்கான ஆமணக்கு செடி நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் (0.50 ஏக்கர் அலகு)	100.00	0.050	3.250	1.250	0.500	5.000
14	ஈரி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்	100	1.000	65.000	25.000	10.000	100.000
15	ஈரி பட்டுப் புழு வளர்ப்புக்கான புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைத்தல், இளம்புழு வளர்ப்புத் தட்டுகள் மற்றும் நெட்ரிக்கா போன்றவை வாங்க உதவியளித்தல்	100	0.200	13.000	5.000	2.000	20.000

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
16	முற்போக்கு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா	50	0.070	3.500	0	0	3.500
17	தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு		ரொக்கமாக	1.150	0	0	1.150
	கூடுதல்			**115.709**	**43.051**	**16.750**	**175.510**
இ	**பழங்குடி வகுப்பினருக்கான துணைத் திட்டம்**						
	பட்டுக் கூட்டிற்கு முந்தைய நிலை (குழு செயல்பாடுகளின்மூலம் செயல்படுத்துதல்)						
18	உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	12.00	0.500	3.900	1.500	0.600	6.000
19	மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்	12.00	0.336	2.621	1.411	0	4.032
20	நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்	12	0.750	5.850	2.250	0.900	9.000
21	தனி பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்	12	2.500	19.500	7.500	3.000	30.000

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
22	நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவியளித்தல்	12	0.030	0.234	0.090	0.036	0.360
	கூடுதல்			**32.105**	**12.751**	**4.536**	**49.392**
	பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை (குழு செயல்பாடுகளின்மூலம் செயல்படுத்துதல்)						
23	பலமுனை பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (சுய உதவிக் குழுக்கள்)	1	17.090	17.090	0	0	17.090
24	பலமுனை பட்டு நூற்பு அலகு நிறுவுவதற்கான மனை அமைத்தல் (சுய உதவிக் குழுக்கள்)	1	8.000	8.000	0	0	8.000
25	பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவுதலுக்கு உதவியளித்தல் (சுய உதவிக் குழுக்கள்)	1	10.040	10.040	0	0	10.040
26	பட்டு முறுக்கேற்றும் அலகிற்கான மனை கட்ட உதவியளித்தல் (சுய உதவிக் குழுக்கள்)	1	8.000	8.000	0	0	8.000
	கூடுதல்			**43.130**	**0**	**0**	**43.130**
	ஆதரவுத் திட்டங்கள் (Support Service)						

வ. எண்	திட்டத்தின் பெயர்/ உட்கூறு	இயல்பு (எண்/ ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
27	முற்போக்கு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா	12	0.070	0.840	0	0	0.840
28	முற்போக்கு பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு பயனாளிகளுக்கு பயிற்சி வழங்குதல்	12	0.070	0.840	0	0	0.840
29	விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க அரசு பட்டுப் பண்ணைகளை வலுப்படுத்துதல்	10	0.500	5.000	0	0	5.000
30	தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு		ரொக்கமாக	0.820	0	0	0.820
	கூடுதல்			**7.500**	**0**	**0**	**7.500**
	நிகர மொத்தம் (அ+ஆ+இ)			**499.341**	**206.001**	**171.485**	**876.826**
	உள்ளபடியாக நிதி பெறப்பட்டது			**499.341**	**215.475**		**215.475**
	தானியங்கி பட்டு நூற்பு அலகின் அலகு தொகை திருத்தி அமைக்கப்பட்டதால் மீதமான தொகை			**0**	**9.474**		**9.474**

[2020 மார்ச் 24

இரண்டாம் நிலை நிதி விடுவிப்பு

வ. எண்	திட்டத்தின் பெயர்/உட்கூறு	இயல்பு (எண்ணம் / ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
அ	பொது						
1	தரமான விதைக் கூடு உற்பத்தியினை மேம்படுத்த விதைக் கூடு வளர்க்கும் விவசாயிகளை வலுப்படுத்த உதவுதல்	50	1.000	25.000	12.500	12.500	50.000
2	பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் – மாதிரி 1 (600 ச.அடி)	50	4.000	100.000	50.000	50.000	200.000
3	தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (200 முனை)	1	76.832	38.416	19.208	19.208	76.832
4	தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (400 முனை)	2	122.072	122.072	61.036	61.036	244.144
5	பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவுதலுக்கு உதவியளித்தல் (480 கதிர்கள்)	3	10.040	15.060	7.530	7.530	30.120
6	பட்டு நூற்பு உப பொருட்களை திறம்பட பயன்படுத்தல்-கூட்டுப் புழு பதப்படுத்துதல் அலகுகள் நிறுவ உதவியளித்தல்	2	20.820	20.820	10.410	10.410	41.640
7	பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்	2,000	0.070	140.000	0	0	140.000

வ. எண்	திட்டத்தின் பெயர்/உட்கூறு	இயல்பு (எண்ணம் / ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்ச த்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
8	முடிவுக்கு முடிவு துறை செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்		**ரொக்கமாக**	10.000	0	0	10.000
9	மல்பொரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல்	143.00	0.336	24.024	0	0	24.024
	கூடுதல்			**495.392**	**160.684**	**160.684**	**816.760**
ஆ	**தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான துணைத் திட்டம்**						
10	கிசான் மல்பொரி நாற்றுகள் உற்பத்திக்கு உதவியளித்தல்	5.00	1.500	4.875	1.875	0.750	7.500
11	உயர் விளைச்சல் தரும் மல்பொரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்	25.00	0.500	8.125	3.125	1.250	12.500
12	மல்பொரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல்	25.00	0.336	5.460	2.940	0	8.400
13	நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்	25	0.750	12.188	4.688	1.875	18.750
14	பட்டுப் புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்- மாதிரி-2 600 ச.அடி	25	3.000	48.750	18.750	7.500	75.000

வ. எண்	திட்டத்தின் பெயர்/உட்கூறு	இயல்பு (எண்ணம் / ஏக்கர்)	அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)			
				மத்திய பட்டு வாரியம்	மாநில அரசு	பயனாளி பங்கு	மொத்தம்
15	பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையம் நிறுவிட உதவியளித்தல்	2	12.000	15.600	6.000	2.400	24.000
16	பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் நிறுவுதல்	1	1.750	1.137	0.438	0.175	1.750
17	பட்டு முறுக்கேற்றும் அலகு நிறுவுதலுக்கு உதவியளித்தல் (480 கதிர்கள்)	1	10.040	6.526	2.510	1.004	10.040
18	தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (200 முனை)	1	76.832	49.941	19.208	7.683	76.832
	கூடுதல்			**152.602**	**59.534**	**22.637**	**234.772**
இ	**பழங்குடி வகுப்பினருக்கான துணைத் திட்டம்**						
	பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை						
19	பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்	24	0.070	1.680	0	0	1.680
20	திறமையான மனித சக்தி வளர்ச்சிக்காக பயிற்சி வழங்குதல் மற்றும் கண்டுணர்வு சுற்றுலா	24	0.075	1.800	0	0	1.800
21	தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு		ரொக்கமாக	2.000	0	0	2.000
	கூடுதல்			**5.480**	**0**	**0**	**5.480**
	நிகர மொத்தம் (அ+ஆ+இ)			**653.474**	**220.217**	**183.321**	**1,057.012**
	நிகர மொத்தம் (முதல் & இரண்டாம் நிலை நிதி விடுவிப்பு)			**1,152.815**	**215.475**		**1,368.290**

2020 மார்ச் 24]

13. பட்டுச் சுற்றுலா

ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் பட்டுச் சுற்றுலாத்தலம் அமைத்திட தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின்கீழ், 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.250.00 இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டை குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகளிடையே அறிவியல் அறிவைப் பயிற்றுவிக்கும் குறிக்கோளினையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.

இப்பட்டுச் சுற்றுலா மையத்திற்கு 'பட்டு உலகம்' என பெயரிடப்பட்டுள்ளது. இம்மையத்தைப் பார்வையிட மே 2018 முதல் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.


ஏற்காட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இப்பட்டுச் சுற்றுலா மையம் சுற்றுலா பயணிகளுக்கு பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஒரு நல்ல பொழுதுபோக்கு இடமாகவும் பயன்படுகிறது.

இப்பட்டுச் சுற்றுலா மையம் பட்டுத் தொழில் மேற்கொள்ள விவசாயிகளுக்கும் பண்ணை சாரா செயல்பாடுகளான பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு போன்ற தொழில்களில் ஈடுபட இளைய தலைமுறையினருக்கும் போதுமான தொழில்நுட்ப தகவல்களையும் பரப்புகிறது. இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் உபகரணங்கள் மாணவ சமுதாயத்தால் வெகுவாக கண்டு மகிழப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் பட்டுத் தொழில் குறித்த அறிவை கற்பிப்பதால், இம்மையம் அருகில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு ஒரு கவரும் இடமாக உள்ளது.

14. பட்டு வளர்ச்சித் துறையின் சாதனைகள்

கீழ்க்கண்ட இனங்களில் சாதனை கடந்த ஆண்டுகளைவிட மேம்பட்டு தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

- 2019-2020 ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான தேசிய சராசரி பட்டுக் கூடு உற்பத்தித் திறன் 60.240 கிலோ கிராமாக உள்ள நிலையில், மாநில சராசரி பட்டுக் கூடு உற்பத்தித் திறன் 79.000 கிலோ கிராமாக உள்ளது.



2019-2020 ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக் கூடு அறுவடை

- 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த பட்டு உற்பத்தியில், வெண்பட்டு உற்பத்தி 94 சதவீதம் ஆகும். 2018-2019 ஆம் ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 93 சதவீதத்தைவிட இது கூடுதலாகும்.

வெண்பட்டுக் கூடு உற்பத்தியினை அதிகரித்திட, 28 கிராமங்களில் தொகுப்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் தொகுப்பு அபிவிருத்தி திட்டப் பகுதிகளில் 100 நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு பட்டுக் கூடு உற்பத்தித் திறன் 80.000 கிலோ கிராம் ஆகும்.

15. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்

15.1 பட்டுக் கூடுகளுக்கு முந்தைய நிலை

- சிறு, குறு விவசாயிகளுக்கு உதவியளித்தல்.
- தீவிர மல்பெரி சாகுபடியினை ஊக்குவித்தல்.

2020 மார்ச் 24]

- பட்டு வளர்ச்சியில் விரிவாக்க அணுகுமுறை.
- அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி அளித்தல்.
- பட்டுத் தொழில் விரிவாக்க அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- நோயற்ற முட்டைத் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்.
- வருவாயினை பெருக்குவதற்காக பட்டு உபபொருட்களை (உலர்ந்த கூட்டுப்புழு) கோழி மற்றும் மீன் தீவனமாக பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- வித்தகங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தரச்சான்று பெறுதல்.
- தொழில்நுட்ப மேம்பாடு.
- மாநிலத்தில் ஈரி பட்டுப் புழு வளர்ப்பை ஊக்கப்படுத்துதல்.

15.2 பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய நிலை

- இறக்குமதி பட்டுக்கு ஈடான தரம் வாய்ந்த வெண்பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- அதிக அளவில் தானியங்கி பட்டு நூற்பு அலகுகளையும், பலமுனை பட்டு நூற்பு அலகுகளையும் ஏற்படுத்துதல்.
- கூட்டுப்புழுக்களை பதப்படுத்தும் இரண்டு அலகுகளை தோற்றுவித்தல்.
- தரம், உற்பத்தித் திறன், உற்பத்திச் செலவினக் குறைப்பு மற்றும் பட்டுக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொழில்முனைவோர்க்கு திறன் பயிற்சி அளித்தல்.

[2020 மார்ச் 24

- அதிக அளவில் பட்டு நூற்பு தொழிலாளர்களுக்கும், தொழில்முனைவோர்களுக்கும் பட்டு நூற்புப் பயிற்சி அளித்தல்.

16. 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டு வளர்ச்சித் துறைக்கான 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம்சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	திட்டத்தின் பெயர்		2020-2021 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
1	**திட்டப் பணிகள்**		
அ	1. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின்கீழ் வளர்ச்சித் திட்டங்கள்	**100.00**	245.01
	2. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்)	**145.01**	
ஆ	புதிய திட்டங்கள்		1,126.86
இ	மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம்		0.01
ஈ	மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்		0.01
	திட்டப் பணிகள் மொத்தம்		**1,371.89**
2	**திட்டம்சாரா பணிகள்**		
	அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித் தொகைகள் முதலியன		5,783.29
	ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம்சாரா பணிகள்)		**7,155.18**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பொதுத் துறை நிறுவனமாக 26-7-1973 அன்று தொடங்கப்பட்டது. **"பூம்புகார்"** என்ற வர்த்தகப் பெயரால் அனைவராலும் அறியப்பட்ட இந்நிறுவனம் 1-8-1973 அன்று முதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக கைவினைஞர்களின் திறமை மற்றும் கடுமையான உழைப்பினால் உருவாக்கப்பட்ட பித்தளை, பஞ்சலோகம், மரம், கல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட தனித்தன்மை வாய்ந்த கைவினைப் பொருட்களை சந்தையில் நுகர்வோருக்கும் மற்றும் கலை ஆர்வலர்களுக்கும் வெளிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

- தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்.
- கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.
- உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்தல்.
- கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் குறைத்தல்/ நீக்குதல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.
- கைவினைஞர்களுக்கு சமூக, பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.

- கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கலைப்படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்.

2. விற்பனை நிலையங்கள்

இந்நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை, மாமல்லபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை விமான நிலையம், கேவாடியா (குஜராத்), புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள தனது 16 விற்பனை நிலையங்கள்மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து, சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இந்த விற்பனை நிலையங்களில் CCTV கண்காணிப்புக் கேமரா மற்றும் விற்பனை நடவடிக்கைகளை கணினிமயமாக்கல் (Computerised Billing) போன்ற நவீன அம்சங்கள் உள்ளன. மேலும், வாடிக்கையார்களுக்கு இனிமையான விற்பனை அனுபவத்தைப் பெற தகுந்த சூழலைக் கொண்டுள்ளது.

3. நிலையான வளர்ச்சி இலட்சியங்கள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்கு என்பது ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும், நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக செயல்பட ஒப்புக்கொண்ட 17 வழிகாட்டி இலக்குகளின் தொகுப்பாகும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் குறுகிய மற்றும் நீண்ட கால நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளானது கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சிமூலம் நவீன தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளின் துணை கொண்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் ஆகும். இந்நிறுவனம், முக்கிய நகரங்களில் அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள நகரங்களில் கண்காட்சிகள் நடத்துவதன்மூலம் கைவினைப்

2020 மார்ச் 24]
பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்து வருவதால் கைவினைஞர்களின் வருமானத்திற்கு வழிவகை செய்கிறது.

நிலையான வளர்ச்சியின் முக்கியமான பின்வரும் குறிக்கோள்களை பூம்புகார் நிறுவனம் இலக்குகளாக கொண்டுள்ளது:

இலக்கு எண் 1—வறுமையின்மை

1.1 அனைத்து மக்களின் வறுமையை ஒழித்தல்

கைவினைஞர்கள் புதிய வடிவமைப்புகளைத் தயாரிக்கவும் மற்றும் தற்கால சூழ்நிலைக்கேற்ற தொழில்நுட்பத் திறனை வளர்க்கவும் இந்நிறுவனம் வடிவமைப்புத் துறையில் மிகப்பிரபலமாக விளங்கும் National Institute of Fashion Technology, National Center for Design and Product Development மற்றும் பிற நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகளை கைவினைஞர்களுக்கு அவ்வப்போது வழங்கி வருகிறது. இதன்மூலம், பெண் கைவினைஞர்கள் உள்ளிட்ட 1,000-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் புதிய உற்பத்தி தொழில்நுட்பத்தினை அறியும் வகையில், நவீன பயிற்சி அளித்து, அதன்மூலம் வருவாயை பெருக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்புகளைக் கொண்டு, கைவினைப்பொருட்களை தயாரிப்பதற்கு மாநிலம் முழுவதும் உள்ள கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 7,000 உபகரணங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. மேலும், எதிர்காலத்தில் இது கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முத்ரா கடன் (Mudra Loans) போன்ற மானியக் கடன்கள் கைவினைஞர்கள் சொந்த உற்பத்தி மையங்களை அமைப்பதற்கும், பெருமளவில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் வழங்கப்படுகிறது.

இத்துறையை சார்ந்த கைவினைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுகிறது.

இலக்கு 8—மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல்

8.5 ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் அனைவரும் உற்பத்தி திறனையும், வேலைவாய்ப்பையும் முழுமையாக அடைதல்

இந்நிறுவனம் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக தமிழகம் முழுவதும் கைவினை குழுமங்களுக்கு (Craft Clusters) பொது வசதி மையங்களை அமைத்து வருகிறது. மேலும், நலிந்த கைத்திறத் தொழில்களை மீட்டெடுக்கவும் பொது வசதி மையங்களை அமைத்து வருகிறது. நீண்ட கால பயன்பாடு கருதி, இந்த பொது வசதி மையங்கள் கைவினைஞர்களின் நலனுக்காக நிறுவப்பட்டது. இங்கு நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதை கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்தி அவர்களின் வருவாயை பெருக்கிக்கொள்ளலாம். இதன்மூலம் சுமார் 10,000 கைவினைஞர்கள் பயனடைவார்கள். மாநிலத்தில் கைத்திறத் தொழிலின் நீடித்த வளர்ச்சியை எய்தும்பொருட்டு, கைத்திறத் தொழிலின் பாரம்பரியத்தினையும், பண்பாட்டினையும் பாதுகாக்கும் நோக்குடன், இக்கலையினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலக்கு 9—தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு

9.3 சிறுதொழில் துறை மற்றும் பிற நிறுவனங்களின் அணுகுமுறையை அதிகரித்தல்

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நவீன வடிவமைப்புகளை உருவாக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தை பூம்புகார் அமைத்துள்ளது. மாபெரும் விற்பனை வளாகங்கள் மற்றும் விமான நிலையங்களில் மெய் நிகர் தோற்ற விற்பனை நிலையங்களை (Virtual Reality showrooms) பூம்புகார் நிறுவனம் அமைக்க உள்ளது. புதுமையான மற்றும் கலை ஆர்வலர்களின் தேவைக்கேற்ப வடிவமைப்புகளை தயாரிக்க இது ஒரு நீண்டகால யுக்தியாகும். புதிய மென்பொருள் தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்தி இந்த வடிவமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இதன்மூலம் உற்பத்தித் திறன் மேம்பாடும், கிராமப்புற கைவினைஞர்களின் வருவாய் அதிகரிப்பும் ஏற்படும்.

2020 மார்ச் 24]

4. கண்காட்சிகள்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களிலும், தமிழகத்திலுள்ள நகரங்களிலும் விற்பனையுடன்கூடிய கைத்திறக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. காந்தி சில்ப் பஜார் மற்றும் கிராப்ட் பஜார் போன்ற கண்காட்சிகளை இந்நிறுவனம் நடத்தும்பொழுது இவற்றில் பங்குகொள்ள, நாடெங்கிலுமுள்ள கைவினைஞர்கள் அழைக்கப்படுவார்கள். இக்கண்காட்சிகளின் முக்கிய நோக்கம் கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் வாடிக்கையாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் பயனடையும் வகையில் சந்தைப்படுத்துவதாகும்.

2019-2020 ஆம் ஆண்டில் கண்காட்சிமூலம் பெறப்பட்ட விற்பனை விவரம்

விற்பனை நிலையங்கள் மற்றும் வெளியூர் கண்காட்சிகள்	மொத்தம் நடத்தப்பட்ட கண்காட்சிகள்	மொத்த விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) (ஏப்ரல் 2019 முதல்- பிப்ரவரி 2020)
விற்பனை நிலைய கண்காட்சிகள்	75	276.08
வெளியூர் கண்காட்சிகள்	18	181.69
மொத்தம்	**93**	**457.77**

பல்வேறு இடங்களில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்கள்மூலம் புதுச்சேரி, பாலக்காடு, திருப்பூர், ஜாம்நகர், அகமதாபாத், இந்தோர், நவ்சாரி, அமராவதி, ஓசூர், நெய்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, சென்னை மற்றும் பிற இடங்களில் வெளியூர் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

4.1 பன்னாட்டு கைவினைக் கண்காட்சி (Handifest)

இந்நிறுவனம், தமிழக கைவினைஞர்கள் தங்களின் நேர்த்தியான கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும்,

உள்ளூர், வெளிமாநிலங்கள் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்கள் கைவினைப் பொருட்களை வாங்குவதற்கும் ஒரு தளத்தை ஏற்படுத்த வருடந்தோறும் பன்னாட்டு கைவினைக் கண்காட்சி விழா (Handifest) நடத்துகிறது. இது கைவினைஞர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவற்கு மட்டுமல்லாமல், அதிக விற்பனைக்கான ஒரு வாய்ப்பையும் வழங்குகிறது. இதன்மூலம் கைவினைஞர்கள் தங்களது உற்பத்தி மற்றும் விற்பனையை நீண்ட காலத்திற்கு மேம்படுத்த வழிவகுக்கும். இக்கண்காட்சிக்காக தமிழக அரசு ரூ.200.00 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.

4.2 கிராப்ட் பஜார் கண்காட்சிகள்

வாடிக்கையாளர்களை பெருமளவில் கவரும்விதமாக, தமிழக கைவினைஞர்களால் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்த, பூம்புகார் நிறுவனம், 2019-2020 ஆம் ஆண்டில் 14 கிராப்ட் பஜார் (Craft Bazaar) கண்காட்சிகளை தேசிய அளவில் முக்கிய நகரங்களில் நடத்தியது. அதற்காக, தமிழக அரசு ரூ.75.00 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. இக்கண்காட்சியில் சுமார் 700 கைவினைஞர்கள் கலந்து கொண்டு, தங்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து மிகவும் பயனடைந்துள்ளனர்.

5. உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் நாச்சியார்கோவில் பாரம்பரிய வெண்கலம் மற்றும் பித்தளை விளக்குகள், மதுரையில் பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள், வாகைகுளத்தில் பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள், சுவாமிமலையில் பஞ்சலோக சிற்பங்கள், தஞ்சாவூரில் தஞ்சாவூர் கலைத்தட்டுகள், கள்ளக்குறிச்சியில் மரச்சிற்பங்கள் மற்றும் மாமல்லபுரத்தில் கற்சிற்பங்கள் ஆகிய 7 இடங்களில் சொந்தமாக உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகிறது. இந்த உற்பத்தி நிலையங்களில் நிரந்தர கைவினைஞர்களும், துண்டுக்கூலி பணியாளர்களும் (கைவினைஞர்கள்) பணியாற்றி வருகின்றனர்.

2019-2020 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிட்டுள்ள உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.302.81 இலட்சம் ஆகும். 2020-2021 ஆம் ஆண்டு ரூ.550.00 இலட்சம் உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6. விற்பனை அளவு

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் விற்பனை மதிப்பு ரூ.41.38 கோடி அடைந்தது. பூம்புகார் நிறுவனம் 2020-2021 ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கினை ரூ.45.00 கோடியாக நிர்ணயம் செய்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

வருடம்	விற்பனை (ரூ. இலட்சத்தில்)
2014-2015	3,393.89
2015-2016	3,450.10
2016-2017	4,006.71
2017-2018	3,519.04
2018-2019	4,138.22
2019-2020	3,290.90 (பிப்ரவரி வரை)

7. விலைக் கொள்கை

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனையாகும் கைவினைப் பொருட்களுக்கு தனித்துவமான விலைக் கொள்கை பின்பற்றப்படுகிறது. பொருட்களின் தரம் மற்றும் பணித் திறனை சமரசம் செய்யாமல், தனியார் மற்றும் மொத்த சந்தைக்கு நிகராக இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த திருத்தப்பட்ட விலைக் கொள்கைமூலம் விரைவாக விற்பனையாகும் தரமான கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையங்களிலும் மற்றும் இணையதளத்தின் மூலமாகவும் விற்பனை செய்யப்படும். இது, பூம்புகார் நிறுவனத்தின்மீது வாடிக்கையாளர்களுக்கு மேலும் அதிக நம்பிக்கையை உருவாக்கும்.

8. புதிய நிருவாகம், சந்தை, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முயற்சிகள்

பூம்புகார் சந்தை மற்றும் நுகர்வோர் தேவையினை மேம்படுத்த மேலும் குறைந்தபட்ச/நிகரான விலையில் உற்பத்தி செய்யும் திறனை அதிகரிக்க, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவனத்தின் நிருவாகம் (ICT), சந்தைப்படுத்துதல், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஆகிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து புதிய தொழில்நுட்ப முறையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி, கீழ்க்கண்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

கைவினைஞர்கள்: கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்கியதன்மூலம், அவர்களின் விவரங்கள், பணித் திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றை பார்த்து, கைவினைஞர்களை நேரடியாக தொடர்புகொள்ள வழிவகுக்கப்படும். மேலும், சமூக பாதுகாப்பு நலத் திட்டங்கள் சரியான முறையில் பெண் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கும் சென்றடைய இதன்மூலம் முன்னுரிமை வழங்கப்படும். புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களை புகுத்தி மேம்படுத்த வழிவகை செய்யும்.

வாடிக்கையாளர்கள்/வாங்குவோர்: குறைந்தபட்ச வர்த்தக பரிவர்த்தனை நேரம், நம்பிக்கை மற்றும் நுட்பமான அணுகுமுறை போன்றவற்றின்மூலம் வாடிக்கையாளர்கள்/வாங்குவோரின் ஏற்புத்தன்மை மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

நிறுவனம்: மின் ஆளுமை (Digital Governance) மூலம் வர்த்தகரீதியில் நிலைத் தன்மையோடு பாரம்பரிய தொழிலை மேம்படுத்தி, கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுடன் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட்டு வருகின்றது.

பூம்புகார் ஏற்கனவே தனது குறிக்கோளில் வெற்றி பெற்று, அதன் பயனை அடையத் தொடங்கிவிட்டது. இம்மாற்றத்தின் விரிவான விவரங்கள் கீழ்வருமாறு:

8.1 நிருவாகச் சீர்திருத்தங்கள்

மின் தளம்: பூம்புகார் தனக்கென உருவாக்கியுள்ள பல்நோக்கு இணையதளம் www.tnhdcltd.com வாயிலாக பூம்புகார் மற்றும்

தொடர்புடைய பிரிவுகளின் வளர்ச்சியினை தொழில்முனைவோர் அறிந்து கொள்ளலாம்.

மின் தொகுப்புக் களஞ்சியம்: தமிழக அரசு, மாநில புதுமை நிதித் திட்டத்தின்கீழ், கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு www.tnartisaan.com ஏற்படுத்த ரூ.100.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது, தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன் ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின் தொகுப்பில் நலிவுற்ற கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். தற்போது இந்நிறுவனம் 18,533 கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள், அவர்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை வகைகள்வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைதளம்மூலம் காண இயலும். இதன்மூலம் வாடிக்கையாளர்கள், கைவினைஞர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக கணினிமூலம் பெறவும், கைவினைப் பொருட்களை வாங்கவும் முடியும்.

மின் வருகைப் பதிவு: இந்நிறுவனத்தின் அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலும் பயோ மெட்ரிக் வருகைப் பதிவு பயன்படுத்தப்படுகிறது.

மின் தொடர்பு: வாடிக்கையாளர்கள் மற்றும் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் நிறுவன வள திட்டத்தின் உபயோகம் (ERP) மற்றும் வை-பை (wi-fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

மின் கண்காணிப்பு: 16 விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி நிலையங்கள், நகர்புறத்திடல் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் 138 கண்காணிப்புக் கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் அனைத்து இடங்களும் சரியான முறையில் தலைமை அலுவலகத்தால் கண்காணிப்படுகின்றன.

8.2 சந்தை வாய்ப்பில் சீர்திருத்தங்கள்

மின் வணிகம்: பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு

[2020 மார்ச் 24

www.poompuhar.org என்ற பெயரில் சொந்த மின் வணிக இணையதளத்தினை அமைத்துள்ளது. கைபேசி செயலியுடன் இணைந்த வேன்/மோட்டார் சைக்கிள்மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. இந்நிறுவனம் மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளூஸ் மற்றும் இன்டியா மார்ட் போன்ற நிறுவனங்கள்மூலம் பூம்புகார் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேற்கண்ட அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின் வலைதள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Virtual Reality Poompuhar Showroom): தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது தலைமை அலுவலகத்தில் உள்ள வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையக் குழுவினரால் பூம்புகார் படைப்புகள் மெய்நிகர் தொழில்நுட்பம்மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கப்பட்டு, முப்பரிமாண அச்சு இயந்திரம்மூலம் அச்சடிக்கப்பட்டு, பின் அவை பஞ்சலோக சிற்பங்களாக பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் தயாரிக்கப்படுகின்றன. அந்த பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக் குழு தயாரித்து அதனை மெய்நிகர் தோற்றம் இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன்மூலம் வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாணப் பொருட்களை தங்களது மெய் நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்களை மின் வணிக வர்த்தகம்மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி அமைத்துக் கொடுக்கப்படும். பூம்புகார் விற்பனை நிலையங்களை மெய்நிகர் தோற்றத் தொழில்நுட்பம்மூலம் உருவாக்கும்பொருட்டு, தமிழக அரசு புதுமை நிதியின்கீழ் ரூ.217.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மின் ஊடகங்கள்: பூம்புகார் முகநூல், லிங்க்டுஇன், டுவிட்டர், குவாரா, பின்டிரஸ்ட், யூடியுப் (Youtube) மற்றும் கூகுள் போன்ற பிரம்மாண்ட இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக சந்தை வாய்ப்பை உலகளவில் பெற பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இதற்கான செலவு, செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடப்படும் விளம்பரத்திற்காகும் நடைமுறை விளம்பரச் செலவில் ஒரு சிறுபகுதியே ஆகும்.

2020 மார்ச் 24]

மின் குறியீடு: அனைத்து 16 விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலைக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்நிறுவனம் விற்பனை புள்ளிவிவரங்களை பரிசீலித்து, சந்தையில் வேகமாக விற்பனையாகும் வாய்ப்புள்ள பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் உற்பத்தி செய்திட திட்டமிட முடிகிறது.

மின் விலைச் சீட்டு: பூம்புகார் மின் விலைச் சீட்டு இயந்திரத்தை பயன்படுத்துவதன்மூலம் 16 விற்பனை நிலையங்களிலும் பரவலாக்கப்பட்ட மின் விலைச் சீட்டினை சுலபமாகவும், வேகமாகவும் தயாரிக்க இயலுவதுடன், வர்த்தக பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

மின் தகவல் வழங்கல்: அனைத்து 21 மேலாளர்களுக்கும் சந்தைப்படுத்தும் கருவியாக ஐ-பேட் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மேலாளர்கள் சாத்தியமான வாடிக்கையாளரை சந்திக்கும்போது, கைவினைப் பொருட்களின் உயர்தர புகைப்படங்களை அவர்களுக்கு காண்பிப்பதுடன், அவர்களுடன் பேஸ்டைம் (face time) மூலம் கலந்துரையாடலாம். இதன்மூலம் நிறுவனத்தின் அறிமுக உரையும் நிகழ்த்தலாம்.

8.3 வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் சீர்திருத்தங்கள் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெகிழி அச்சுமூலம் பஞ்சலோக சிலைகளை தயாரிக்க, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க தமிழக அரசு ரூ.1.68 கோடி நிதி வழங்கியுள்ளது. பொது மற்றும் தனியார் பங்களிப்புமூலம் செயல்படும் இந்த வடிவமைப்பு நிலையம் இக்காலத்திற்கு ஏற்ப புதிய வடிவமைப்புகளை முப்பரிமாண மென்பொருட்களை உபயோகப்படுத்தி, தயார் செய்கிறது. இதன்மூலம் பூம்புகாரின் புதிய வடிவமைப்புகளை சந்தைப்படுத்தும் திறன் பெருமளவு அதிகரிக்கும். தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது தலைமை அலுவலகத்திலேயே வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க இட வசதி மற்றும் தொழில்நுட்பக் கட்டமைப்புகளை அளித்துள்ளது. இந்த பொது மற்றும் தனியார் பங்களிப்புடன்கூடிய அமைப்பின்மூலம் (PPP) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகப் பொருட்களை சந்தைப்படுத்தவும், விற்பனை செய்யவும், தேவையான மின்னணுக்

கருவிகளை அமைத்தும் மற்றும் அதை பராமரிக்கத் தேவையான வசதிகள் செய்தும் தரப்படும்.

வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம், வடிவமைப்பாளர்கள், கைவினைஞர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆர்வலர்கள் ஆகியோரின் விவரத் தகவல்களை பராமரித்து இவர்களிடையே தகவல் தொடர்பு வசதியை எளிதாக்கும். மேலும், இந்நிலையம் பல்வேறு பங்களிப்பாளர்களை புதிய உற்பத்தி முயற்சிக்கு கொண்டு வருவதுடன் வெளிநாடு மற்றும் உள்நாட்டிலுள்ள வடிவமைப்பு நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தி வருகிறது.

8.4 உற்பத்தியில் சீர்திருத்தங்கள்

ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு வளர்ச்சித் திட்டத்தின் (IDPH) மூலம் ரூ.660.00 இலட்சம் நிதி ஒப்பளிப்புடன் 11 பொது வசதி மையங்கள், அதற்குத் தேவையான உற்பத்தி இயந்திரங்கள், குறிப்பாக CNC இயந்திரம், முப்பரிமாண அச்சு இயந்திரம், நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக இடையூறுகள் நீங்கி புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்தி செய்யப்படும்.

9. தகவல் தொழில்நுட்பம்சாரா முயற்சிகள்

மேற்கூறப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவது மட்டுமல்லாமல், பின்வரும் தகவல் தொழில்நுட்பம்சாரா அம்சங்களாலும் இந்நிறுவனம் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டுள்ளது:

- அரசுத் துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 பிரிவு 16(f)-ன்கீழ் ஒரு "விருப்பக் கொள்முதல் முகமை" (Optional Procurement Agency) என அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.
- பூம்புகார் விற்பனை நிலையம், உற்பத்தி நிலையம் மற்றும் நிறுவன அலுவலகத்திற்கு பொதுவான பெயர் பலகை உருவாக்குதல்.

- தற்போதைய பூம்புகாரின் இலச்சினை (logo) மறு வடிவமைத்து, வர்த்தகக் குறியீட்டுக்கான பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- இந்திய தபால் துறையுடன் கைவினைப் பொருள் விநியோகத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- நட்சத்திர ஓட்டல்களுடன் வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தேசிய சணல் மேம்பாட்டு கழகத்துடன் (National Jute Development Corporation) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

- ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரிலுள்ள கீரின் டிரென்ட்ஸ் (Green trends) நிறுவனத்துடன் ஒரு வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

- மத்திய அரசு நிறுவனமான Tribal Co-operative Marketing Development Federation of India Limited (TRIFED) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

- விற்பனை நிலைய பணியாளர்களுக்கு சீருடை வழங்குதல்.

- அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் வாடிக்கையாளர்கள் கருத்து கோரும் பின்னூட்ட படிவம் வடிவமைத்து அறிமுகப்படுத்துதல்.

- வாடிக்கையாளர்கள் வாங்கிய கைவினைப் பொருட்களை எடுத்துச் செல்ல புதிய காகித விளம்பர பை வடிவமைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இதர நிலையங்களில் சந்தை பிரச்சாரத்தை மேம்படுத்த நடமாடும் கூடாரம் (KIOSK) வடிவமைத்தல்.

- சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வீடுகளுக்கு சென்று விநியோகம் செய்தல்.

10. புதிய வருவாய் முறைகள்

பூம்புகார் புதிய வருவாயினை ஏற்படுத்திட மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன. அதனடிப்படையில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து அழகுபடுத்தும் பணிகளை பூம்புகார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

2019-2020-ல் பெறப்பட்ட சிறப்பு ஆணைகள்

வரிசை எண்	நிறுவனம்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1	சென்னை விமான நிலையம் அழகுபடுத்தும் பணி-வரவேற்பு வளாகம்	30.56
2	□□□□□–கேடயங்கள் வழங்குதல்	13.73
3	ஆவடி நகராட்சி அழகுபடுத்தும் பணி	34.00
	மொத்தம்	**78.29**

11. ஏற்றுமதி

பூம்புகார் நிறுவனம் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோக சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப் பொருட்களாகும். இந்நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.70.01 இலட்சம் மதிப்பிலான கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

12. கைவினைஞர்களுக்கான நலன்

12.1 விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் சிறந்த திறமை கொண்ட கைவினைஞர்களை அங்கீகரிக்கும்பொருட்டு கீழ்க்கண்ட விருதுகளை வழங்குகின்றது.

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப்பொருட்கள் விருது
5. கைவினைப்பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப் போட்டி விருது

போன்ற விருதுகள் கைத்திறத் தொழிலில் சிறந்த திறமை கொண்ட கைவினைஞர்களுக்கு வழங்கி, அங்கீகரிக்கப்படுகிறது.

விருதுகளின் விவரங்கள்

வ. எண்	**விருதுகளின் பெயர்கள்**	**விருதுகளின் விவரம்**	**விருதுகளின் எண்ணிக்கை**
1	வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது	ரூ.1.00 இலட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்	10
2	பூம்புகார் மாநில விருது	ரூ.50,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்	10
3	பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது	ரூ.10,000/- ரொக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்	85

4	கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது	ரூ.40,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்	1
5	குழு உற்பத்தி விருது	ரூ.40,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்	3 குழுக்கள்
6	பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது	ரூ.40,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்	3
7	அடுத்த தலைமுறை கைவினைஞர் களுக்கான கைத்திறப் போட்டி	ரூ.2,000/- ரொக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்	150
	மொத்தம்		**262**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2019-2020 ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது மற்றும் பூம்புகார் மாநில விருதினை தேர்வு பெற்ற கைவினைஞர்களுக்கு 19-2-2020 அன்று வழங்கி சிறப்பித்தார்கள்.

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவமிக்க மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

12.2 கைவினைஞர்கள் தினம்

பொது மக்களிடையே கைத்திறப் பொருட்களை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் மற்றும் கைவினைஞர்கள்

பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதை அங்கீகரிக்கவும் தமிழ்நாடு அரசு, ஒவ்வொரு ஆண்டும் "மார்ச் 5 ஆம் நாள் கைவினைஞர்கள் தினம்" என அறிவித்தது. இந்த தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதற்காக தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.35.00 இலட்சம் வழங்குகிறது. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருதுகள், குழு உற்பத்தி விருதுகள், பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருதுகள் மற்றும் அடுத்த தலைமுறையினருக்கான கைத்திறப் போட்டி ஆகிய விருதுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

13. பயிற்சித் திட்டங்கள்

மத்திய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Development and Promotion of Handicrafts) கீழ், 40 கைவினைஞர்களுக்கு ரூ.14.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்) மற்றும் சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்) கைத்திறத் தொழிலில் 3 மாத கால பயிற்சித் திட்டம் பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் நடந்து முடிந்தது. தம்மம்பட்டியில் மரச்சிற்ப பொருட்களுக்கு 3 மாத கால பயிற்சித் திட்டம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரை இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 200 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு பயிற்சிகள் தலா ரூ.4.60 இலட்சம் செலவில் தமிழ்நாடு முழுவதும் இதுவரையில் 27 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 810 கைவினைஞர்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

14. நகர்ப்புற கண்காட்சித் திடல்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள்/சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர

சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புற கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல்மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடல், உணவு மற்றும் விற்பனைக் கூடம், உள்நாடு/ சர்வதேச சுற்றுலா பயணிகள்/நுகர்வோர்க்கு ஏற்ப கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

14.1 கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித் திடல்

பூம்புகார், கன்னியாகுமரியில் ரூ.245.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நகர்ப்புற கண்காட்சித் திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில், மத்திய அரசின் பங்கு ரூ.140.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.45.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித் திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்ப்புற கண்காட்சித் திடல்மூலம் மாதந்தோறும் சராசரியாக 50 கைவினைஞர்கள் பங்கு பெறுகின்றனர். மேலும், ரூ.30.00 இலட்சம் செலவில் 14 விற்பனைக் கடைகள் கட்டப்பட்டுள்ளன. இக்கண்காட்சித் திடல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 8-3-2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

14.2 மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித் திடல்

இதேபோன்று மற்றுமொரு நகர்ப்புற கண்காட்சித் திடல் சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.500.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசின் பங்கு ரூ.210.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.190.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித் திடல், விற்பனை செய்வதற்கு ஏற்ப 36 விற்பனை அரங்குகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாகும். இக்கண்காட்சி திடல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 8-3-2018 அன்று கைவினைஞர் தின விழாவின்போது துவக்கி வைக்கப்பட்டது.

15. விற்பனை நிலைய விரிவாக்கப் பணிகள்

15.1 சென்னை விற்பனை நிலையம்

சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் அதிக தேவைப்பாடு உள்ள பயன்பாட்டுப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டாவது தளம் அமைக்க நிதியுதவி வழங்கியுள்ளது.

15.2 சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூர் விற்பனை நிலையங்களை புதுப்பித்தல்

கண்கவர் வாணிப யுக்திகளைக் கொண்டு இன்றைய விற்பனை நிலையங்கள் செயல்படுகின்றன. இந்த புதிய யுக்திகளின்மூலம் வாடிக்கையாளர்களை கவர்வது மட்டுமல்லாமல், ஒரு புதிய சூழலை உருவாக்கி வாடிக்கையாளர்கள் புது அனுபவம் பெற வழிவகுக்கிறது. எனவே, பூம்புகார் நிறுவனம், சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய விற்பனை நிலையங்களை தமிழக அரசின் நிதியுதவி ரூ.150.00 இலட்சம் மதிப்பில் புதுப்பொலிவுடன் அழகுபடுத்தப்படுத்த உள்ளது.

15.3 கடலூர் விற்பனை நிலையம் புதுப்பித்தல்

பூம்புகார், கடலூர் நகரத்தின் மையப் பகுதியில் தனது சொந்த விற்பனை நிலையத்தை வைத்துள்ளது. இந்த விற்பனை நிலையம் 50 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் பழமையானதாகும். இவ்விற்பனை நிலையம் தற்போது பழுதடைந்த நிலைமையில் இருப்பதினால் செயல்படாமல் உள்ளது. இந்த விற்பனை நிலையம் கடலூரில் முக்கிய வர்த்தக மையங்கள் அமைந்திருக்கும் பகுதியில் அமைந்திருப்பதால், நல்ல வருவாய் ஈட்டும் தன்மையுடையது. இவ்விற்பனை நிலையம், தமிழக அரசின் நிதியுதவி ரூ.100.00 இலட்சம் செலவில் உள் அலங்காரத்துடன்கூடிய புது கட்டுமானம் கட்டப்படவுள்ளது.

15.4 சேலத்தில் புதிய விற்பனை நிலையம் அமைத்தல்

பூம்புகார் விற்பனை நிலையம், சேலம் கிளை வாடகை கட்டடத்தில் மிகவும் சிறிய இடத்தில், விற்பனைக்கு உகந்ததாக இல்லாத இடத்தில் இயங்கி வருகிறது. எனவே, சேலம் நகரத்தில் சொந்த இடத்தில் புதிய விற்பனை நிலையம், தமிழக அரசின் நிதியுதவி ரூ.200.00 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளது.

16. ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.2,038.00 இலட்சத்தினை பூம்புகாருக்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் தமிழக அரசின் பங்கு ரூ.324.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச் சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல் ஆகியவையாகும்.

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி-முன்னேற்றம்

வ. எண்	ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டம்	ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	பொது வசதி மையம்	11	**540.00**
2	கண்காட்சி	22	**312.72**
3	கிராப்ட் பஜார்	12	
4	வடிவமைப்பு கருத்தரங்கு	27	**122.60**
5	ஒருங்கிணைந்த பயிற்சி	5	**67.85**
6	உபகரணப் பொருட்கள்	7,000	**269.00**
7	உற்பத்தியாளர்/ நுகர்வோர் கூட்டம்	1	11.29
	மொத்தம்		**1,323.46**

16.1 பொது வசதி மையம்

பொது வசதி மையங்களில் பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள் ஒன்றுகூடி, இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள

2020 மார்ச் 24]

உட்கட்டமைப்பு வசதியை பயன்படுத்தி, இங்குள்ள உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் கருவிகள்மூலம் இவர்கள் செய்யும் கைவினைப்பொருட்களை தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை மற்றும் வாகைக்குளம் ஆகிய 5 இடங்களில் ரூ.300.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8-3-2018 கைவினைஞர்கள் தின விழாவன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், 6 பொது வசதி மையங்கள் தலா ரூ.60.00 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, தம்மம்பட்டி, அரும்பாவூர் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மையங்களின்மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

16.2 நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு பொது வசதி மையம் அமைத்தல்

தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத் தொழில்களான சுடு களிமண் விக்கிரவாண்டியிலும், பனை ஓலைப் பொருட்கள் இராமநாதபுரத்திலும், கோரைப்புல் பத்தமடையிலும் மற்றும் களிமண் கைவினைப் பொருள் குனியூரிலும் புத்துயிர் அளிக்கும்பொருட்டு, 4 பொது வசதி மையங்கள் அமைக்க தமிழக அரசு ரூ.188.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. பொது வசதி மையக் கட்டடங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

17. இலவச உபகரணங்கள் வழங்குதல்

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்நிறுவனம் ரூ.5,000/- மதிப்பிலான கைத்திறத் தொழிலின் மேம்படுத்தப்பட்ட உபகரணங்களை இலவசமாக வழங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள 7,000 கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் மார்ச் மாதம் 2020-க்குள்ளாக விநியோகிக்கப்படும். இதுவரை 5,000 இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

18. மாமல்லபுரம்-உலக கற்சிற்ப நகரம்

பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியால், மாமல்லபுரத்தை "உலக கற்சிற்ப நகரம்" என்று உலக கைத்திறக் குழுமம் (World Crafts

Council) அங்கீகரித்துள்ளது. இது, மாமல்லபுர கற்சிற்பக் கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

19. மாமல்லபுர கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு

பூம்புகார் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில், மத்திய அரசின் புவிசார் குறியீடு பதிவகம், மாமல்லபுரத்தில் உள்ள கற்சிற்பக் கலைகளுக்கு "புவிசார் குறியீடு" சான்றிதழினை 15-11-2017 அன்று வழங்கியது.

கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்), புதுதில்லி மற்றும் இதர கைவினைஞர்களால் ஏற்கனவே புவிசார் குறியீடு பெறப்பட்டுவிட்டது:

(1) சுவாமிமலை பஞ்சலோக சிலைகள்

(2) வடசேரி கோயில் நகைகள்

(3) தஞ்சாவூர் ஓவியங்கள்

(4) தஞ்சாவூர் கலைத்தட்டுகள்

(5) தஞ்சாவூர் பொம்மைகள்

பூம்புகார் நிறுவன நடவடிக்கையால் கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுவிட்டது:

(1) நாச்சியார்கோவில் பித்தளை விளக்குகள்

(2) பத்தமடை பாய்கள்

(3) தோடா சித்திரத் தையல்

(4) மாமல்லபுரம் கற்சிற்பங்கள்

மேலும், ஒன்பது கைத்திறத் தொழிலுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பித்துள்ளது.

20. தொலைநோக்குப் பார்வை

கடந்த மூன்று ஆண்டுகளில் பூம்புகாரின்மூலம் கைவினைஞர்களுக்கு நன்மை பயக்கும் வகையில், எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் புதுமைத் திட்டங்கள் மூலமாக, பூம்புகாரின் விற்பனை வரும் காலங்களில் கணிசமான அளவு அதிகரிக்கும் என பூம்புகார் நம்புகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

கிராம சூரிய மண்டலத்திற்கு கதரே சூரியன். பல்வேறு தொழில்களான கிரகங்கள், கதராகிய சூரியனிடமிருந்து பெறும் வெப்பத்திற்கும், வாழ்வாதாரத்திற்கும் ஈடாக கதருக்கு ஆதரவளிக்கின்றன. கதரல்லாமல் மற்ற தொழில்கள் வளர்ச்சி காண இயலாது. ஆனால், மற்ற தொழில்கள் புத்துயிர் பெறாவிட்டால், கதர் மேற்கொண்டு முன்னேற இயலாது என்பதை என் முந்தைய சுற்றுப்பயணத்தின்போது கண்டறிந்தேன். கிராமத்தினர் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை இலாபகரமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், கிராமமானது அனைத்து நிலைகளிலும் தொடர்பில் இருந்தாக வேண்டும்.

-மகாத்மா காந்தியடிகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், ஏப்ரல் 1960-ல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959-ன்படி உருவாக்கப்பட்டது. கிராமப்புறப் பகுதிகளில், கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து, அவற்றை மேம்படுத்துவதோடு ஒருங்கிணைந்து கைவினைஞர்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினர்களின் வாழ்க்கைத் தரத்தையும், தற்சார்பு நம்பிக்கை மற்றும் பொருளாதார நிலையினையும் உயர்த்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

நோக்கங்கள்

- கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி, தற்சார்பு நம்பிக்கையினை வளர்த்தல்.

- ➢ கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத்திறனை மேம்படுத்துதல்.
- ➢ கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

நிருவாகம்

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்படும் கீழ்க்காணும் அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சட்டரீதியான அமைப்பாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இயங்கி வருகிறது:

(i) அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

(ii) அரசு துணைச் செயலாளர், நிதித் துறை.

(iii) தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

(iv) தொழில் துறை ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர்.

(v) நிதி நிலை ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

முக்கிய கொள்கை முடிவுகள் வாரியம் மூலமாக எடுக்கப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகள் தலைமைச் செயல் அலுவலர் அவர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது.

வாரியத்தின் செயல்பாடுகள், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியது.

3. நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபையின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் அதனைச் சார்ந்த 169 தொடர் இலக்குகளை உள்ளடக்கிய நிலையான நீடித்த வளர்ச்சி 2016-2030-க்கான நிகழ்ச்சி நிரல் அதாவது "நமது உலகத்தை உருமாற்றுதல்: 2030-க்கான நிலையான வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்" செப்டம்பர் 2015-ல்

2020 மார்ச் 24]

இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இலக்குகள் சமுதாயத்தின் நலனுக்கான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நல்வாழ்வின் அம்சங்களை தழுவியுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959-ல் இயற்றப்பட்டதின் நோக்கமானது, கிராமப்புற ஏழை கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பு நம்பிக்கையினை வளர்த்தல், கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத்தினை மேம்படுத்துதல் ஆகும்.

வாரியமானது இலக்கு 8-ஐ அடையும்பொருட்டு, கிராமப்புற பெண்களுக்கு உகந்த வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

4. கதர்

கதர், இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறைகளை நிலைநிறுத்துவதோடு கிராமப்புற பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. கதர் துணியானது கையினால் நூற்கப்பட்ட நூலினால் நெய்யப்படுகிறது. கதர் துணி இந்திய நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப இயற்கையானது மற்றும் நீடித்து உழைக்கக்கூடியது. இந்தியர்களிடையே கதரானது தேச பக்தி, அமைதி மற்றும் எளிமையினை குறிக்கும் சின்னமாக உள்ளது.

சந்தையில் பாலியஸ்டர் வந்த பின்பு பாலியஸ்டர் நூலில் பாலியஸ்டர் இழை மற்றும் பருத்தி இழை 33:67 என்ற விகிதத்தில் இணைக்கப்படுகிறது.

4.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றாக கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் கதர் பெரும் பங்கு வகிக்கிறது. கதரானது நூல் நூற்றல், நெசவு நெய்தல், அச்சிடுதல், சலவை போன்ற மற்ற செயல்பாடுகளை உள்ளடக்கியது.

இப்பிரிவில் செய்யப்படும் உற்பத்தி செயல்கள் அனைத்தும் கையினால் செய்யப்படுவதால், கிராமப்புறத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு கிடைக்க

வழிவகை செய்கிறது. நூல் நூற்றல் மற்றும் நெசவு செயல்பாடுகள் பெரும்பாலும் கிராமப்புற பெண்களால் செய்யப்படுகின்றன.

தற்போது கதர் வாரியத்தில் கீழ்க்குறிப்பிட்ட கதர் அலகுகள் செயல்பட்டு வருகின்றன:

வ.எண்	அலகுகள்	எண்ணிக்கை
1	கிராமிய நூற்பு நிலையம்	107
2	கதர் உப கிளை	40
3	நேபாளி தறி அலகு	9
4	கதர் பட்டு உப கிளை	16

நடப்பாண்டில் கதர் உற்பத்தி அலகுகளில் 1,367 நூற்பாளர்கள் மற்றும் 311 நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இவ்வலகுகளின்மூலம் உற்பத்தி செய்யப்படுபவை 51 கதரங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

2017-2018 முதல் 2019-2020 வரையிலான கதராணைக் குழு மற்றும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட நூற்பு கூலி மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட நெசவுக் கூலி ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

வருடம்	2017-2018	2018-2019	2019-2020 29-2-2020 வரை
கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு (கிலோ)	1,24,908	1,29,493	54,727
மதிப்பு (ரூ. இலட்சத்தில்)	213.06	237.70	101.24

2020 மார்ச் 24]

வருடம்	2017-2018	2018-2019	2019-2020 29-2-2020 வரை
உற்பத்தி செய்யப்பட்ட துணி மதிப்பு (ரூ. இலட்சத்தில்)	980.66	923.33	457.85
நூற்பாளர்களின் எண்ணிக்கை	1,539	2,304	1,367
நூற்பு கூலி (ரூ. இலட்சத்தில்)	209.21	247.25	105.12
நெசவாளர்களின் எண்ணிக்கை	356	407	311
நெசவுக் கூலி (ரூ. இலட்சத்தில்)	166.71	172.16	62.23

கதர் வாரிய அலகுகளில் கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ்கண்டவாறு:

வ. எண்	வருடம்	உற்பத்தி	விற்பனை
		(ரூ. இலட்சத்தில்)	
1	2017-2018	980.66	1,157.16
2	2018-2019	923.33	1,044.55
3	2019-2020 29-2-2020 வரை	457.85	913.47

4.2 கதர் பட்டு

வாரியத்திலுள்ள 16 கதர் பட்டு உற்பத்தி அலகுகள்மூலம் பாரம்பரியம் வாய்ந்த தூய வெள்ளி சரிகை மற்றும் வேலைப்பாடுகளுடன்கூடிய பட்டுப் புடவைகள் குறைந்தபட்சம் ரூ.5,000 முதல் அதிகபட்சம் ரூ.35,000 மதிப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை கதரங்காடிகள் மூலமும், ஆட்சியர்

அலுவலகங்கள் மற்றும் இதர பொது இடங்களில் அமைக்கப்படும் தற்காலிக விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

கதர் பட்டு உற்பத்தி அலகுகளில் 303 பட்டு நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு மத்திய பட்டு வாரியத்தால், “தரம் வாய்ந்த பட்டு” என்பதற்கு சான்றாக “சில்க் மார்க்” முத்திரை வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கதர் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் கீழ்கண்டவாறு:

வ. எண்	வருடம்	உற்பத்தி	விற்பனை
		(ரூ.இலட்சத்தில்)	
1	2017-2018	503.75	659.30
2	2018-2019	601.13	409.93
3	2019-2020 29-2-2020 வரை	971.40	506.97

2019-2020 ஆம் ஆண்டில் பட்டு உற்பத்தியினை அதிகப்படுத்தும் வகையில், புதிய நெசவாளர்களை சேர்க்கும்போது கும்பகோணம் மற்றும் சேலம் பகுதி பட்டு நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுது ரூ.12.00 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளன.

4.3. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத் திட்டங்கள்

4.3.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் 66 சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, அரசினால் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, அரசு, 2010-2011 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளுக்கு தலா ரூ.50.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:

வ. எண்		உதவிகளின் தன்மை	தொகை (ரூபாயில்)
1		விபத்து ஈட்டுறுதி திட்டத்தின்கீழ்	
	அ	விபத்தினால் மரணம் ஏற்பட்டால்	1,00,000
	ஆ	விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப	10,000 முதல் 1,00,000 வரை
2		இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை	15,000
3		ஈமச்சடங்கு செலவு	2,000
4		கல்வி உதவித் தொகை	
	அ	10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஆ	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000
	இ	11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,000
	ஈ	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	1,500
	உ	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,500
	ஊ	முறையான பட்டப்படிப்புக்கு	1,500
		மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு	1,750
	எ	முறையான பட்ட மேற்படிப்புக்கு	2,000
		மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு	3,000
	ஏ	தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு	2,000
		மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு	4,000

வ. எண்		உதவிகளின் தன்மை	தொகை (ரூபாயில்)
		தொழில் கல்வி பட்ட மேற்படிப்புக்கு	4,000
	ஐ	மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டமேற்படிப்புக்கு	6,000
		ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு	1,000
	ஒ	மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு	1,200
5		திருமண உதவித் தொகை	2,000
6		மகப்பேறு உதவித் தொகை	
	அ	மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் (மகப்பேறுக்குமுன் 3 மாதங்கள் மகப்பேறுக்குப்பின் 3 மாதங்கள்)	6,000
	ஆ	கருக்கலைப்பு/கருச்சிதைவு	3,000
7		மூக்குக்கண்ணாடி செல்வுத் தொகையை ஈடு செய்தல்	500 வரை
8		முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)	1,000

இந்த நலத் திட்டத்தின்கீழ், இதுவரை 9,042 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். இதன்மூலம் 1,209 பயனாளிகளுக்கு ரூ.60.52 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

4.3.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதில் கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித் தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பதோடு, வாரியமும் அதற்கு ஈடான தொகையினை பங்களிக்கிறது. கைவினைஞர்களின் கணக்கில் இருக்கும் கையிருப்பு தொகையின் அடிப்படையில், நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினரின் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும்

திரும்ப வழங்கப்படுகிறது. வாரிய நல நிதியிலிருந்து நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித் தொகை தவிர, அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2019-2020 ஆம் ஆண்டில் 722 கைவினைஞர்களுக்கு ரூ.36.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

4.4 வணிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு, 2018–2019 ஆம் ஆண்டு திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கதரங்காடிகளில் ரூ.50.95 இலட்சம் செலவில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசு நிதி ஒப்படைக்கப்பட்டு, அதன்படி இக்கதரங்காடிகளில் புனரமைப்பு பணிகள் நிறைவுபெற்றன.

மேலும், வணிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தின்கீழ், கதராணைக் குழுவால் கீழ்க்குறிப்பிட்ட கதரங்காடிகளுக்கு வாரிய பங்கு தொகையாக 15 விழுக்காடு மற்றும் மீதமுள்ள 85 விழுக்காடு கதராணைக் குழு பங்கு தொகையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வ எண்	**கதரங்காடியின் பெயர்**	**மொத்த நிதி ஒதுக்கீடு**	**கதராணைக் குழுவின் பங்கு 85%**	**வாரிய பங்கு 15%**
		(ரூபாய் இலட்சத்தில்)		
1	கதரங்காடி, திருநெல்வேலி	14.00	11.90	2.10
2	கதரங்காடி, கடலூர்	23.82	17.00	6.82
3	கதரங்காடி, நாமக்கல்	13.37	11.36	2.01
மொத்தம்		**51.19**	**40.26**	**10.93**

[2020 மார்ச் 24

4.5. வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில், கதராணைக் குழுவால் 2010-2011-ம் ஆண்டு "வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்" (MDA) அறிமுகப்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டு முதல் வணிக அபிவிருத்தித் திட்டம் என்பதை திருத்திய வணிக அபிவிருத்தித் திட்டம் (MMDA) என மாற்றம் செய்து, கதர் உற்பத்தி செய்யும் ஆரம்ப விலைக்கு 30% நிதியுதவி கணக்கிடப்பட்டு, கீழ்க்கண்டவாறு காலாண்டுவாரியாக பிரித்து வழங்கப்படுகிறது:

1	நூற்போர்/நெசவாளர்களுக்கான ஊக்கத் தொகை	30%
2	கைவினைஞர்களுக்கான ஊக்கத் தொகை	10%
3	உற்பத்திக்கான உட்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக (உற்பத்தி நிறுவனங்கள்)	20%
4	விற்பனைக் கூடங்களை கணினிமயமாக்குதல் (உற்பத்தி நிறுவனங்கள்)	20%
5	வணிகம் மற்றும் விற்பனை மேம்படுத்துதல் (விற்பனை நிறுவனங்கள்)	20%

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் 66 சர்வோதய சங்கங்களில் பதிவு செய்துள்ள நூற்பாளர்/நெசவாளர்களுக்கு 30% ஊக்கத் தொகையும், கைவினைஞர்களுக்கு 10% ஊக்கத் தொகையும் கதராணையம் மூலமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் தனியரின் வங்கி கணக்கிற்கு நேரடியாக மின்னணு தீர்வைமூலம் அனுப்பப்பட்டு வருகிறது. வழங்கப்பட்ட விவரம் கதராணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 60% (வ.எண் 3, 4 மற்றும் 5 ஒவ்வொன்றிற்கும் 20%) சர்வோதய சங்கம் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரிய கணக்கில் உற்பத்தி உட்கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாடு, விற்பனை உட்கட்டமைப்பு மற்றும் வணிகம், விற்பனை மேம்பாட்டிற்காக வரவு வைக்கப்படுகிறது.

2020 மார்ச் 24]

கதராணையத்தால் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கப்பட்ட 60% விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

வ.எண்	வருடம்	கதராணையத்திலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)
1	2016-2017	290.44
2	2017-2018	325.66
3	2018-2019	210.43
4	2019-2020 (1-4-2019 முதல் 29-2-2020 வரை)	112.21

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான நெறிமுறைகள் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவால் அளிக்கப்படுகிறது.

மேலும், மாநில அரசு, கதர் உற்பத்தி செலவின மதிப்பின்மீது 20% வணிக அபிவிருத்தி நிதியுதவியாக அனைத்து சர்வோதய சங்கங்களுக்கும் மற்றும் வாரியத்திற்கும் வழங்கி வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு, சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.15.00 கோடியிலிருந்து ரூ.30.00 கோடியாகவும், கதர் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.4.00 கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

5. கிராமத் தொழில்கள்

கிராமப்புற கைவினைஞர்களின் உள்ளார்ந்த மற்றும் பாரம்பரிய திறமைகளை பயன்படுத்தி, உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, மனித ஆற்றல் பயன்பாட்டின் அடிப்படையில், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே கிராமத் தொழில்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து கிராமத் தொழில்கள், தொழிலாளர் சார்ந்த உள்ளூர் கிராமப்புற மக்களின் மனித ஆற்றலை பயனுள்ள பணிகளுக்கு பயன்படுத்தும் வகையில் மனித உழைப்பினை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கிராமத் தொழில்கள் ஊரகப் பகுதிகளில் வறுமையினை ஒழித்திட உதவுவதோடு மட்டுமல்லாமல், கைவினைஞர்களின் சுயசார்பு நம்பிக்கையினை மேம்படுத்தவும், அவர்களது பாரம்பரிய தொழில்களை தொடர்ந்து மேற்கொள்ளும் மனத்திட்பத்தினை வளர்க்கவும் உதவுகின்றன. கிராமத் தொழில்களின்கீழ் 41 உற்பத்தி அலகுகள் வாரியத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

5.1 சோப்பு அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் செயல்படுத்தப்படும் கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் மொத்த வருமானத்தில் முதன்மை இடத்தை வகிக்கிறது. வாரிய கட்டுப்பாட்டில் 12 சோப்பு அலகுகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ்வலகுகளில் மூலிகா, 'குமரி' (கற்றாழை), வேம்பு, சந்தனம், கார்பாலிக், கிளிசரின் போன்ற பிரசித்தி பெற்ற குளியல் சோப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கற்றாழையை மூலப்பொருளாக பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் குமரி குளியல் சோப்பு சந்தையில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. டிடர்ஜென்ட் சோப்பு வகைகள் மற்றும் சலவை சோப்புத் தூள் வகைகள் சில அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 'கோபுரம்' எனும் பெயருடைய பிரபல டிடர்ஜென்ட் சோப்பு வகையானது மாநில பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலை அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வாரிய சோப்புகள் தரமாகவும், விலை மலிவாகவும் உள்ளமையால் வாடிக்கையாளர்கள் இவைகளை விரும்பி வாங்கி பயன்படுத்துகின்றனர். சோப்பு வகைகள் வாரிய கதரங்காடிகளின்மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் இணையதளம் மற்றும் பல்பொருள் அங்காடிகளின் மூலமாகவும் விற்பனை செய்திட வாரியம் அனைத்து வகைகளிலும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

உற்பத்தி மற்றும் விற்பனைத் திறனை அதிகரிக்கும் நோக்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரம் சோப்பு அலகில் உற்பத்தி செய்யப்படும் சோப்புகளை விரைவாகவும், நேர்த்தியாகவும் மடிக்கும் வகையில் ரூ.10.00 இலட்சம் செலவில் தானியங்கி சோப்பு மடிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்திட வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் இயங்கி வரும் புதிய உற்பத்தி அலகில், குளியல் திரவம், கைகழுவும் திரவம்

மற்றும் ஷாம்பூ ஆகியன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வலகில் ரூ.3.00 இலட்சம் செலவில் 5 முதல் 10 மில்லி லிட்டர் அளவு பாக்கெட்டுகளில் நிரப்பி விற்பனை செய்திட ஏதுவாக, ஷாம்பூ நிரப்பும் இயந்திரம் (Shampoo Pouch Machine) நிறுவிட வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சோப்பு அலகில் உற்பத்தியாகும் சோப்புகளை நேர்த்தியாக அச்சு முத்திரை பதிக்கும் விதமாக, ரூ.4.00 இலட்சம் செலவில் தானியங்கி சோப்பு முத்திரை பதிக்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

வாரிய அலகுகளில் உற்பத்தியாகும் சோப்பு வகைகள் 2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை முறையே, ரூ.936.66 இலட்சம் மற்றும் ரூ.934.94 இலட்சம் மதிப்பிற்கு எய்தப்பட்டுள்ளது.

5.2 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தொன்மை வாய்ந்த கிராமத் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் கிராம கைவினைஞர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பினை அளிக்கிறது. தற்பொழுது 6 தச்சு மற்றும் கருமார அலகுகள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

1. திருவள்ளூர் மாவட்டத்தில் வீரராகவபுரம்,
2. இராணிப்பேட்டை மாவட்டத்தில் அரக்கோணம்,
3. வேலூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா,
4. மதுரை மாவட்டத்தில் நாகமலை–புதுக்கோட்டை,
5. திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை,
6. திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர்.

மேற்காண் அலகுகளின்மூலம் உற்பத்தி செய்யப்படும் மரம் மற்றும் இரும்பிலான தளவாடங்கள் அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக்கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, பள்ளி கல்லூரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மாறுபட்ட வேகத்துடன்கூடிய சீலாவீல் மின் சக்கரம் அரக்கோணம் மற்றும் பள்ளிகொண்டா தச்சுக் கொல்லு அலகுகளில் உற்பத்தி மேற்கொண்டு கிராமப்புறங்களில் உள்ள பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) ரூ.243.60 இலட்சம் மதிப்பிலான தச்சு மற்றும் கருமாரத் தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.159.42 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

5.3 காலணி அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் மிகவும் பழமை வாய்ந்த அலகுகளில் காலணி அலகும் ஒன்றாகும். இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் தற்பொழுது 11 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. காவல் துறை மற்றும் இதர சேவைத் துறைகளுக்கு தேவையான அம்யூனிஷன் பூட்ஸ், ஷூ, பெல்ட், துப்பாக்கி உறை, கிரவுண்டு சீட் போன்ற பொருட்களும், போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நடத்துநர் பணப்பைகள், கையுறை, காலணிகள், கோப்புப் பெட்டிகள் மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான இரப்பர் நார் மெத்தைகள் போன்றவைகளும் வாரிய கட்டுப்பாட்டில் உள்ள காலணி உற்பத்தி அலகுகள்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

வாரியமானது, அம்பத்தூர் காலணி அலகில் ரூ.24.59 இலட்சம் மதிப்பில் 2019-2020 ஆம் ஆண்டில் நவீன Sole Stitching Machine and Trimming and Champering Machine-ஐ நிறுவியுள்ளது. இதன்மூலம் தரமான முறையில் தைக்கப்பெற்று உற்பத்தித் திறன் அதிகரித்தும் உள்ளது. தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு நவீன வடிவமைப்புடன்கூடிய ஷூக்கள் உற்பத்தி செய்ய, பிவிசியினால் ஆன ஷூ அச்சுக்கள் 500 இணைகள் ரூ.5.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து அம்பத்தூர் காலணி அலகில் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வாரியமானது இன்றைய தேவைக்கு ஏற்ப நவநாகரிக முறையில் தோலினால் ஆன பெல்ட் உற்பத்தி செய்ய தேவையான இயந்திரங்களை ரூ.15.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) வாரியமானது ரூ.102.88 இலட்சத்திற்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்து ரூ.130.72 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

2020 மார்ச் 24]

5.4 தேனீ வளர்ப்பு

வாரிய கிராமத் தொழில்களில், தேனீ வளர்ப்புத் தொழிலும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தோராயமாக 10,000 தேனீ விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தேனீ விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேன், அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, தரத்தினை 'அக்மார்க்' தரச் சான்றிதழுடன் உறுதி செய்தபின் வாரிய கதரங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை பிரதான கதரங்காடியில், வாடிக்கையாளர்களுக்கு தானியங்கி முறையில் தேனை விற்பனை செய்வதற்கு ஏதுவாக, ரூ.6.00 இலட்சம் செலவில் தானியங்கி தேன் விற்பனை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், அம்சி தேன் பதப்படுத்தி நிரப்பும் நிலையத்தில் பச்சைத் தேன் மற்றும் பதப்படுத்தப்பட்ட தேனை பாதுகாப்பாக இருப்பு வைத்திடும்பொருட்டு, ரூ.7.00 இலட்சம் செலவில் 50 எவர்சில்வர் கொள்கலன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 முடிய) தேன் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.107.51 இலட்சம் மற்றும் ரூ.124.75 இலட்சம் எய்தப்பட்டுள்ளது.

5.5 கைமுறை காகித அலகுகள்

தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் பிடாகம், ஈரோடு மாவட்டத்தில் செண்பகபுதூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோவனூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி ஆகிய இடங்களில் கைமுறை காகித அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட நான்கு அலகுகளைத் தவிர, அரசு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடை செய்துள்ளதால் காகிதப் பொருட்களுக்கான தேவையினை பூர்த்தி செய்யும்பொருட்டு, கடலூர் மாவட்டம் வடலூரில் ரூ.95.00 இலட்சம் செலவில் ஒரு புதிய கைமுறை காகித அலகு துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள், மெல்லிய உறைகள், தடித்த தாள்கள், அலுவலக உறைகள், மேலுறைகள், அட்டைப் பெட்டிகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அரசு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடை செய்துள்ளதால், பல்வேறு அரசுத்

துறைகளிடமிருந்து கோப்பு அட்டைகள் மற்றும் இதர பொருட்கள் விநியோகம் செய்ய போதுமான அளவிற்கு தேவை நமூனா வாரியத்திற்கு கிடைக்கப்பெறுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 வரை) உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.45.72 இலட்சம் மற்றும் ரூ.31.41 இலட்சம் எய்தப்பட்டுள்ளது.

5.6 மண்பாண்டத் தொழில்

கிராமத் தொழில்களில் மண்பாண்டத் தொழிலும் ஒரு ஊக்குவிக்கும் தொழிலாக விளங்குவதோடு, கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு இத்தொழில்மூலம் ஒரு நிலையான வருமானம் கிடைக்க வழிவகை செய்கிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 34 மண்பாண்ட கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 3,500 உறுப்பினர்கள் உள்ளனர். மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் கருத்தில் கொண்டு, 2017-2018 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000/- மழைக்கால நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 12,052 மண்பாண்டத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

2018-2019 ஆம் ஆண்டில் முதல்கட்டமாக 23 மாவட்டங்களில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள கிராமப்புற பயனாளிகளுக்கு மின்சாரத்தால் இயங்கும் 2,000 சீலா வீல் சக்கரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 2,000 சீலா வீல் மின் சக்கரங்கள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5.7 இதர கிராமத் தொழில் அலகுகள்

திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டியில் ஜவ்வாது உற்பத்தி அலகு செயல்பட்டு வருகிறது. இவ்வலகில் ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சாம்பிராணி, சந்தன மாலைகள், மூலிகை பல்பொடி, மெழுகுவர்த்திகள், கற்பூரம், பன்னீர் மற்றும் இதர பூஜைப் பொருட்கள் ரூ.60.00 இலட்சம் மதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வலகில், 2019-2020 ஆம் ஆண்டில் சந்தன மாலைகளை உற்பத்தி செய்திட 5 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் இவ்வலகில் மூலப்பொருட்களை அரவை செய்திட ரூ.1.00 இலட்சம் செலவில் பல்பொடி அரவை இயந்திரம்

நிறுவப்பட்டு, தமிழகத்தில் உள்ள பல்வேறு சிறைகளுக்கும் மூலிகைப் பல்பொடி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டம், உதகையில் நீலகிரி தைல பதப்படுத்தும் அலகு ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வலகில் பச்சைத் தைலத்தினை கொள்முதல் செய்து, பதப்படுத்தி நீலகிரி தைலம் உற்பத்தி செய்வதோடு, நீலகிரி தைலம், மென்தால், கற்பூரம் மற்றும் இதர மூலப்பொருட்களை கொண்டு “சுகப்பிரியா” என்ற பெயரில் வலி நிவாரணி தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பொருட்கள் வருடத்திற்கு சுமார் ரூ.20.00 இலட்சம் மதிப்பிற்கு கதரங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வலகில் மூலிகையினை மூலப்பொருளாக கொண்ட இதர பொருட்கள் உற்பத்தி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6. விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை பெரிய அளவில் சந்தைப்படுத்திட ஏதுவாக, 'கதர் கிராப்ட்' சென்னை குறளக கட்டடத்திலும் மற்றும் பிற மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தவிர, சுய உதவிக் குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களும் இந்த கதரங்காடிகள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 51 கதரங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

கண்காட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் சிறப்பு முகாம்கள் நடத்துவதன்மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி பொருட்களின் விற்பனையினை மக்களிடையே பிரபலப்படுத்திட சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. தசரா பண்டிகை காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர நவராத்திரி பொம்மை கொலு விற்பனை கண்காட்சி பிரசித்தி பெற்றதாகும். இக்கண்காட்சி, மண்பாண்ட கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால கலைநயமிக்க காகிதக் கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்திடுவதற்கு உகந்த தளமாகத் திகழ்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ்கண்டவாறு:

வ. எண்	வருடம்	உற்பத்தி	விற்பனை
		(ரூ.இலட்சத்தில்)	
1	2017-2018	2,345.40	2,278.12
2	2018-2019	2,445.92	2,481.26
3	2019-2020	1,486.18 (பிப்ரவரி 2020 வரை)	1,424.85 (பிப்ரவரி 2020 வரை)

மேலும், 2019-2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின்கீழ், ரூ.20.00 இலட்சம் செலவில் அனைத்து கிராமப் பொருட்களை தானியங்கி இயந்திரம்மூலம் விற்பனை செய்திட வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சகத்தால் "பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்" 2008-2009 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு தொழில்கள் மற்றும் வணிகத் துறை மற்றும் மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஆகியவற்றின்மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, 1-7-2016 முதல் முழுமையாக இணையதளம் (Online) வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டிலிருந்து மத்திய கயிறு வாரியமும் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

7.1 திட்ட விளக்கம்

இத்திட்டத்தின்கீழ் உற்பத்தியில் ஈடுபடும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டின்படி அதிகபட்சம் ரூ.25.00 இலட்சமும், சேவைப் பிரிவில் ஈடுபடும் பயனாளிகளுக்கு அதிகபட்சம் ரூ.10.00 இலட்சமும் வங்கியில் கடன் அளிக்கப்படுகிறது. உற்பத்திப் பிரிவின்கீழ்

வரும் பயனாளிகள் 10.00 இலட்சம் ரூபாய்க்குமேல் பெறும் வங்கி கடன்களுக்கும், சேவைப் பிரிவின்கீழ் வரும் பயனாளிகள் 5.00 இலட்சம் ரூபாய்க்குமேல் பெறும் வங்கி கடன்களுக்கும் கல்வி தகுதியாக குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மானியம்

பிரிவு	மானியத்தின் வரம்பு	
இடம்	நகர்ப்புறம்	கிராமப்புறம்
பொதுப் பிரிவு	15%	25%
சிறப்புப் பிரிவினர் (தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர்/ இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு மலை எல்லைப்புற பகுதியினர்)	25%	35%

சொந்த முதலீடு

பிரிவு	சொந்த முதலீடு
பொதுப் பிரிவு	10%
சிறப்பு பிரிவினர் (தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர்/முன்னாள் இராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள்/ வடகிழக்கு மலை எல்லைப்புற பகுதியினர்)	5%

2018-2019 ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே மானியம் பெற்று திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் அலகுகளுக்கு “இரண்டாம் முறை பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட கடன் தொகை” என்ற திட்டத்தை இந்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென பிரத்யேகமாக e-Portal வலைதளத்தில் தனியாக இணையதள பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.1.00 கோடி வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் வரையிலும் கடன் தொகை அளிக்கப்படும். மேலும், அனைத்துப் பிரிவினருக்கும், திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் சொந்த முதலீடு 10% ஆகவும், வங்கிக் கடன் 90% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு, மொத்த திட்ட மதிப்பீட்டில், அனைத்து பிரிவினருக்கும் மானியத் தொகையாக 15% வழங்கப்பட்டு வருகிறது.

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்மூலம் வழங்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

ஆண்டு	இலக்கு			சாதனை		
	அலகுகள்	விளிம்பு மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்)	உருவாக்கப்பட வேண்டிய வேலை வாய்ப்புகள்	அலகுகள்	விளிம்பு மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்)	உருவாக்கப்பட வேண்டிய வேலை வாய்ப்புகள்
2015-2016	765	1,530.24	6,120	686	1,605.56	6,021
2016-2017	1,261	2,521.50	10,088	745	2,166.48	8,384
2017-2018	1,810	3,570.00	14,480	882	1,680.74	6,723
2018-2019	822	2,400.94	6,576	1,078	2,236.49	6,106
2019-2020 (29-2-2020 வரை)	627	1,882.38	5,016	758	1,292.98	3,878

8. வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்களைப் புனரமைத்தல்

மதுரை மேலமாசி வீதியிலுள்ள காதி கிராப்ட் கட்டடம் அதன் பழமை மாறாமல் ரூ.80.00 இலட்சம் செலவில் புதிய பொலிவுடன் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கட்டடத்தில் அண்ணல் காந்தியடிகள் 1921 ஆம்

ஆண்டு வறுமையில் வாடித் தவிக்கும் பாமர மக்களில் தானும் ஒருவர் என்பதை உணர்த்தும் வகையில் முழந்தாள் வரை ஆடை உடுத்தும் விரதத்தைக் கடைபிடித்தார். 1988 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வேலூர் மற்றும் கரூர் கதர் கிராமத் தொழில்கள் அலுவலக கட்டடங்கள் தலா ரூ.18.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. சேலத்தில் ஐந்து தளங்களைக் கொண்ட சேலம் அண்ணா பட்டு மாளிகை வணிக வளாக கட்டடத்தினை ரூ.66.56 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோட்டில் இயங்கி வரும் இரண்டு தளங்களைக் கொண்ட கட்டடத்தில் கதர் மற்றும் பட்டு இரகங்களின் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு ரூ.14.30 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன.

9. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2019-2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	தொழில்களின் பெயர்	2019-2020 ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (29-2-2020 வரை) (ரூ.இலட்சத்தில்)	
		உற்பத்தி	விற்பனை
1.	கதர்	1,429.25	1,420.44
2.	கிராமத் தொழில்கள்		
	அ. சோப்பு	936.66	934.94
	ஆ. தச்சு மற்றும் கருமாரத் தொழில்	243.60	159.42
	இ. தோல்	102.88	130.72
	ஈ. கைமுறைக் காகிதம்	45.72	31.41

வ. எண்	தொழில்களின் பெயர்	2019-2020 ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (29-2-2020 வரை) (ரூ.இலட்சத்தில்)	
		உற்பத்தி	விற்பனை
	உ. தேனீ வளர்ப்பு	107.51	124.75
	ஊ. இதர தொழில்கள்	49.81	43.61
	கூடுதல்	1,486.18	1,424.85
	மொத்த கூடுதல்	**2,915.43**	**2,845.29**

10. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட "நிகர ஈட்டு மானியமும்", கதர் பொருட்களுக்கு "வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும்" மாநில அரசு ஒப்பளித்து வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவைகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	விவரங்கள்		தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	நிகர ஈட்டு மானியம்		9,384.36
2.	தள்ளுபடி	கதர் வாரியம்	400.00
		சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள்	3,000.00
3.	தணிக்கை கட்டணம்		524.15
4.	கிராமத் தொழில் மேம்பாட்டிற்கு உதவி		0.01
5.	தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்		0.01
6.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை		602.60
7.	கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்		0.01
8.	மண்பாண்ட தொழிலாளர்களுக்கு சீலா மின் சக்கரங்கள் வழங்குதல்		408.00
	மொத்தம்		**14,319.14**

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்

1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியச் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 15, 1994)-ன்கீழ், சென்னையை தலைமை இடமாகக் கொண்டு 1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில், பனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவனரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள்மூலம் பனைத் தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல் போன்றவை பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

2. பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள்

720 ஆரம்ப பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், எட்டு மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் நேரடியாக பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

3. பனைப் பொருட்கள்

'பதநீர்' பனைப் பொருட்களில் முதன்மையானதாகும். பதநீரை மூலப் பொருளாகக் கொண்டே பனை வெல்லம், (வட்டார வழக்கில் கருப்பட்டி என அழைக்கப்படும்) பனங்கற்கண்டு (கற்கண்டு), பனஞ்சீனி, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, பனை சாக்லேட் மற்றும் பனம் பழக்கூழ் போன்ற பல்வேறு உண்ணத்தக்க பனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பனை மரங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், பருவகாலத்தில் பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் மிகவும் விரும்பி அருந்தக்கூடிய ஒரு பிரபலமான பானமாகும்.

பனந்தும்பு தூரிகைகள், விசிறிகள், பாய்கள், பனை ஓலையினாலான பல்வேறு வகை கூடைகள், பனை நார் பொருட்கள், பொம்மைகள் மற்றும் பல்வேறு வகையான இயற்கையான மற்றும் வண்ணம்பூசப்பட்ட கைவினைப் பொருட்கள் பனையிலிருந்து உண்ணா பொருட்களாக பனைத் தொழில் கைவினைஞர்களால் வடிவமைக்கப்படுகின்றன.

4. பதநீர் இறக்குவதற்கான உரிமம்

பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும்நோக்கில், பதநீர் இறக்கவும், அதனை விற்பனை செய்யவும் உரிமம் பெற அரசாணை வழங்கப்பட்டுள்ளது. அவ்வரசாணையின்படி, ஒவ்வொரு நிதி ஆண்டிலும் தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தினால் இதற்கான உரிமம் புதுப்பித்து வழங்கப்படுகிறது.

2019–2020 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2020 முடிய) கதர் வாரியத்தின் உதவி இயக்குநர்கள் மூலமாக 9,798 பனைத் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

5. நிருவாகம்

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனியே வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ஏதுமில்லை. தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்) உட்பட தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர் அனைவரும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே "செயற்பதிவாளர்" ஆவார்.

6. உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான உதவிகள்

பனைத் தொழிலை மேம்படுத்திட பனை வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட உடனடி சுக்கு காபி பவுடர் (Palm Jaggery

Mixed Instant Sukku Coffee Powder) நவீன முறையில் வண்ண லேபிள் கொண்ட அழகிய 100 கிராம் அளவு கொண்ட பைகளில் அடைப்பதற்காக தானியங்கி இயந்திரம் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பனை வெல்லத்தை அதிக காலம் பயன்படுத்திட ஏதுவாக, ரூ.3.50 இலட்சம் செலவில் பனை வெல்லம் உலர வைக்கும் நவீன தானியங்கி இயந்திரம் ஒன்று தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின்மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

7. பனைப் பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை

பொது மக்களிடம் தற்போது ஆரோக்கியம் மற்றும் இயற்கை பானங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் "பனை வெல்லம் கலந்த சுக்கு காபி" சென்னையில் பல்வேறு பிரதான இடங்களான சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகம், குறளகம் மெட்ரோ இரயில் நிலையம் அருகில், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், தீவுத்திடல் போன்ற பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், சேலம், ஏற்காடு, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை, திருநெல்வேலியில் உள்ள பாளையங்கோட்டை, ஊட்டி, இராமநாதபுரத்தில் உள்ள டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் நினைவிடம் மற்றும் திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலப் பாதையில் சுக்கு காபி, கதர் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனைப் பொருட்களின் விற்பனையை மேற்கொள்ள பிரத்யேகமான ஒரு பனைப் பொருள் விற்பனை அங்காடி சென்னை குறளகம் வளாகத்திற்குள் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்திற்கு ரூ.11.00 இலட்சம் செலவில் இரண்டு நடமாடும் ஊர்திகளை வாங்கிட அரசு அனுமதி அளித்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

8. பனைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2019–2020 ஆம் நிதியாண்டில் (பிப்ரவரி 2020 முடிய) ரூ.1,552.18 இலட்சம் மதிப்பிலான பனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.1,670.44 இலட்சத்திற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை

ஆண்டு	உற்பத்தி (ரூ.இலட்சத்தில்)	விற்பனை (ரூ.இலட்சத்தில்)
2015-2016	1,337.03	1,462.09
2016-2017	1,344.97	1,484.30
2017-2018	1,463.12	1,629.23
2018-2019	1,516.95	1,658.96
2019-2020 (பிப்ரவரி 2020 முடிய)	1,552.18	1,670.44

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XXIV

(60 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முகவுரை

தமிழ்கூறும் இந்நல்லுலகை ஆண்ட பேரரசர்கள் இம்மண்ணின் சமயம், கலை மற்றும் கட்டடக் கலையை பாதுகாக்கும் புரவலர்களாகவே இருந்து வந்துள்ளனர். நம்மண்ணின் மன்னர்கள் சமய உணர்வு கொண்டோராகவும், செறிவான பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினைக் காப்போராகவும் இருந்து வந்துள்ளனர்.

அத்தகு மன்னர் பெருமக்களால் கட்டி எழுப்பப்பட்டுள்ள திருக்கோயில்கள் யாவும், அவர்களது அறம் சார்ந்த நெறிகளுக்குச் சான்றாகவும், அவர்கள் கலை மற்றும் கட்டடக் கலையின் புரவலர்களாக வெளிப்படுத்திய பேரார்வத்திற்குச் சான்றாகவும் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தொன்மையான நம் பண்பாட்டின் சாட்சிகளாகும்.

ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன என மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள்.

திருக்கோயில்களின் தனித்துவமான கட்டடக் கலை அம்சங்கள்

சங்ககால கட்டடக் கலை

2. முற்காலச் சோழ, சேர மற்றும் பாண்டிய மன்னர்களின் அரசாட்சிகளின்போது கார்த்திகேயன், சிவன், அம்மன் மற்றும் விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்கு செங்கற்களால் ஆன கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் பல சமீப காலத்தில் ஆதிச்சநல்லூர், காவிரிபூம்பட்டினம் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து கண்டறியப்பட்டுள்ளன. முன்னிடைக்கால பேரரசுகள், இச்செங்கற்கட்டுமானக் கோயில்களில் பல்வேறு கூடுதல்

2020 மார்ச் 24]

கட்டுமானங்களைச் சேர்த்துள்ளனர். மேலும், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் ஆகியவற்றின் கலைச் சிற்பங்கள் மற்றும் தெய்வத் திருமேனிகள் சங்க காலத்துடன் தொடர்புடையவை எனக் கண்டறியப்பட்டுள்ளன.

பல்லவர் கால கட்டடக் கலை

3. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் கற்கள் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்ட கோயில்கள் முந்தைய காலத்தில், செங்கல் மற்றும் மரம் கொண்டு கட்டப்பட்ட கோயில்களின் கட்டுமானத்தை முன்னோடியாகக் கொண்டு கட்டப்பட்டவையாகும். பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கோயில் கட்டுமானக் கலையில் குடைவரைக் கோயில்கள் என்கிற பாணியிலிருந்து கல் கட்டுமானக் கோயில்கள் என்கிற பரிணாம வளர்ச்சி ஏற்பட்டது. பல்லவர் காலக் கட்டுமானக் கலையின் பெருஞ்சாதனையான குடைவரைக் கோயில்கள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலும், கல் கட்டுமானக் கோயில்கள் கி.பி. 8 மற்றும் 9 ஆம் நூற்றாண்டிலும் ஏற்பட்டன. பல்லவர்கள் காலத்துச் சிற்பிகளின் திறனுக்குச் சான்று காலத்தால் அழியாத பஞ்ச ரதம் மற்றும் மண்டபம் வடிவிலான ஒற்றைக்கல் கோயில்களே. ஒற்றைக்கல் கோயில்கள் மாமல்லபுரத்து கடற்கரைக் கோயில் போன்ற கல் கட்டுமானக் கோயில்களுக்கு வழிகோலின. இந்த வகைக் கோயில்கள் வெட்டிச் செதுக்கப்பட்ட தூண்கள்மீது நிற்கும் அறைகளையும், இயற்கையான கல்லால் அமைந்த, வெளிப்படையாகத் தெரியாத வகையிலான கூரைகளையும் கொண்டிருந்தன. அதேநேரம், ஒற்றைக்கல் கோயில்களில் இயற்கையாக உருவான பாறைகளின் பகுதிகள், குடைந்து வெட்டி எடுக்கப்பட்டு கூரை அமைப்புடன் உருவாக்கப்பட்டன. பல்லவர் காலச் சிற்பிகள், தொடர்ந்து வந்த காலத்தில், பிடிமானம் இல்லாத தூண்களின்மீது கட்டுமானக் கோயில்களை கட்டுமளவிற்கு வளர்ச்சியுற்றனர். அக்கட்டுமானங்களே பிற்கால சோழர்களின் கோயில் கட்டுமானத்திற்கு உந்து சக்தியாய் அமைந்தன. பல்லவர் கால கலை மற்றும் கட்டடக் கலைக்கு மிகச் சிறந்த உதாரணங்களாக இன்றளவும் திகழ்பவை, காஞ்சிபுரம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில் மற்றும் பஞ்ச ரதங்களாகும். பல்லவர்கள் காலத்தில் "அக்ஷரா" என்பவர் தலைசிறந்த சிற்பியாய் விளங்கினார்.

பாண்டியர் கால கட்டடக் கலை

4. குடைவரை மற்றும் கல் கட்டுமானக் கோயில்கள், பாண்டியர் காலத்து கட்டுமானக் கலையின் குறிப்பிடத் தகுந்த அம்சங்களாகும். விமானங்களும், மண்டபங்களும் முற்கால பாண்டியர்களின் கோயில் கட்டுமானத்தில் குறிப்பிடத் தகுந்த அம்சங்களாய் இருந்தன. இத்தகைய கோயில்கள் திருச்சி மாவட்டத்தில் காணப்படுகின்றன. பாண்டியர்களின் பிற்கால ஆட்சியில் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட சிலைகள், கோபுரங்கள் மற்றும் விமானங்கள் என கோயில் கட்டுமானக் கலை வளர்ச்சியடைந்தது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருநெல்வேலி, அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில் ஆகியவை பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்களாகும்.

சோழர் கால கட்டடக் கலை

5. சோழப் பேரரசர்கள் புரவலர்களாயிருந்து, அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களை சோழப் பேரரசெங்கும் கட்டுவித்தனர். சோழ மன்னர்களில் முக்கியமானவர்களான முதலாம் இராஜராஜ சோழன் மற்றும் அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரால் தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், கங்கைகொண்ட சோழபுரம், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆகியவை கட்டப்பட்டன. மேலும், சோழர்கள் காலத்தில் தாராசுரம், அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருபுவனம், அருள்மிகு கம்பஹரேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை கட்டப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு திருக்கோயில்களில் முதல் மூன்று திருக்கோயில்கள், ஐக்கியநாடுகள் சபையின் அங்கமான யுனெஸ்கோவால் “Great Living Chola Temples” என அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

6. சோழ மன்னர்கள் முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், சுந்தரசோழன், இராஜராஜ சோழன் மற்றும் அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோர் பெற்ற வெற்றிகளால் சோழர் கால கோயில்கள் கட்டுமானக் கலை உத்வேகம் பெற்றது. முதலாம் இராஜராஜ சோழன் தஞ்சாவூரில் கட்டிய பெரிய கோயிலுக்கு இராஜராஜேஸ்வரம் என்று பெயரிட்டார். சோழர் கால கட்டுமானக் கலையின் முதிர்ச்சி மற்றும் கம்பீரம் ஆகியவை தஞ்சாவூர் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள இத்திருக்கோயில்களின் வாயிலாக வெளிப்படுகின்றன.

2020 மார்ச் 24]

7. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் (நடராஜர்) திருக்கோயில் ஆகியவை சோழர்களால் ஆதரிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட இரண்டு மிக முக்கியத் திருக்கோயில்களாகும்.

8. சோழப் பேரரசர்களின் காலத்தில் திருக்கோயில்களின் திருமதில்கள் மிகப் பிரமாண்டமாக கட்டி எழுப்பப்பட்டன. சோழப் பேரரசர்கள் வானளாவிய கோபுரங்களுடன் கோயில்களைக் கட்டி எழுப்புவதில் பேரார்வம் காட்டினர். மேலும், கட்டுமானக் கலையில் பல்வேறு முறைகளையும் கையாண்டனர்.

சேரர் கால கட்டடக் கலை

9. சேரர்கள் பருவ நிலையினைக் கருத்தில் கொண்டு, சரிவான கூரைகளுடன்கூடிய கட்டுமானக் கலையினை திருக்கோயில்களில் பின்பற்றியுள்ளனர். இவ்வகைத் திருக்கோயில்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணப்படுகின்றன.

விஜயநகரம் மற்றும் நாயக்கர் கால கட்டடக் கலை

10. வேலூரில் கோட்டையின் உள்ளே அமைந்துள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் விஜயநகர கட்டடக் கலைக்கு சிறந்த உதாரணமாகும். இத்திருக்கோயில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கோபுரம், பிரம்மாண்டமாய் செதுக்கப்பட்ட கற்தூண்கள், பெரிய மரக்கதவுகள் மற்றும் பிரமிக்கத்தக்க கற்சிற்பங்கள் ஆகியவற்றுடன் மிளிர்கிறது. இந்த விஜயநகர சிற்பங்கள் திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு, அருள்மிகு சௌந்தரராஜப் பெருமாள் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடாஜலபதிசுவாமி திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் மற்றும் மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் அமைந்துள்ள சிற்பங்களை ஒத்திருக்கின்றன.

11. மதுரை மற்றும் தஞ்சாவூரை ஆண்ட நாயக்கர்கள் திருக்கோயில் கட்டுமானக் கலைக்கு பெரும்பங்களித்தனர். நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்கள், சுதை சிற்பங்களுடன்கூடிய உயர் கோபுரங்கள் மற்றும் நீளமான தாழ்வாரங்களுடன்கூடிய திருக்கோயில் கட்டுமானம் இவர்களது கட்டடக் கலைப் பாணியாகும்.

இந்தப் பாணியில் அமைந்த முக்கியத் திருக்கோயில்களாவன:-

1. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.
2. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்.
3. தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சன்னதி.
4. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

கல்வெட்டுகள்

12. தமிழ்நாட்டை ஆண்ட பேரரசர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் மட்டுமல்லாது, குடிமக்களும் பெருமளவு சொத்துகளை திருக்கோயில்களின் பராமரிப்பிற்காகவும், இதர சேவைகளுக்காகவும் கொடையாக வழங்கியுள்ளனர். இவ்விவரங்கள் பல்வேறு திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

I-சட்டமும், நிருவாக அமைப்பும்

தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959

13. தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு தற்போதுள்ள 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் (சட்டம் 22/1959) உருவாக்கப்பட்டது. இந்து சமய திருக்கோயில்கள், திருமடங்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிருவாக மேலாண்மை மற்றும் சீரான நிதிநிலைமை ஆகியவற்றை கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், இந்து சமய அறநிலைக் கொடை நிறுவனங்களை நிருவகிப்பது குறித்தும், முந்தைய சட்டங்களில் உரிய திருத்தங்களை மேற்கொண்டு அரசால் இயற்றப்பட்ட சட்டமாகும்.

14. இச்சட்டம், ஏற்கெனவே இயற்றப்பட்ட பல்வேறு முந்தைய சட்டங்களின் தொடர்ச்சியாகும். முதலில் மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் எண் VII/1817 உருவாக்கப்பட்டது. இச்சட்டம், சட்டம் XX/1863 மூலம் நீக்கப்பட்டது. பின்னர், மதராஸ் இந்து

2020 மார்ச் 24]

சமய அறக்கொடை சட்டம், 1926 (சட்டம் II/1927), இச்சட்டத்திற்கு மாற்றாக நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, மதராஸ் இந்து சமய அறநிலைய வாரியம் உருவாக்கப்பட்டது. 1951-ல் சட்டம் XIX-ன்படி வாரியம் இரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகளின் நிருவாகம் ஆணையரைத் தலைவராகக் கொண்டு பல நிலைகளில் அலுவலர்களுக்கு அதிகார வரம்புகள் வரையறுக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டு சட்டம் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 (சட்டம் 22/1959) இயற்றப்பட்டு, அதில் ஆணையரின் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புக் கொண்டதாக இந்து சமய அறநிலையத் துறை நிருவாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

15. இந்து சமய நிறுவனங்களை நிருவகித்திட பல்வேறு வழிவகைகளையும், அவற்றைச் செயல்படுத்திட தேவையான அதிகாரங்களையும், கடமைகளையும் இந்து சமய அறநிலையத் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு இச்சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளில் வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டம் இந்து சமய அறநிறுவனங்களின் நிதிநிலைமையினைச் சீராக மேம்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இச்சட்டத்தின் காப்புரைகள் சமண சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்து சமய நிறுவனங்கள்

16. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் 38,655 இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

1.	திருக்கோயில்கள்	36,615
2.	திருமடங்கள்	56
3.	திருமடத்துடன் இணைந்த திருக்கோயில்கள்	57
4.	குறிப்பிட்ட அறக்கட்டளைகள்	1,721
5.	அறக்கட்டளைகள்	189
6.	சமணத் திருக்கோயில்கள்	17
	கூடுதல்	**38,655**

2019-2020 ஆம் ஆண்டில் புதிதாக 3 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இத்துறை இணையதளத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் 44,121 சமய அறநிறுவனங்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள அற நிறவனங்களுடன், உபதிருக்கோயில்கள், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின்கீழ் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள், புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்கள் என 5,466 திருக்கோயில்களின் எண்ணிக்கையினையும் உள்ளடக்கியதாகும்.

இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு

17. இந்து சமய நிறுவனங்கள் அதன் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில், பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சாராத நிறுவனங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	சமய நிறுவனங்கள் வகைப்பாடு	நிறுவனத்தின் ஆண்டு வருமானம்	நிறுவனங்கள் எண்ணிக்கை மற்றும் சதவீதம்
1.	பட்டியலைச் சாராத நிறுவனங்கள் சட்டப் பிரிவு-49(1)	ரூ.10,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	34,102 88.22%
2.	பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப் பிரிவு-46(i)	ரூ.10,000/-லிருந்து ரூ.2,00,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	3,550 9.18%
3.	சட்டப் பிரிவு-46(ii)	ரூ.2,00,000/-லிருந்து ரூ.10,00,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவை	672 1.74%

வ. எண்	சமய நிறுவனங்கள் வகைப்பாடு	நிறுவனத்தின் ஆண்டு வருமானம்	நிறுவனங்கள் எண்ணிக்கை மற்றும் சதவீதம்
4.	சட்டப் பிரிவு-46(iii)	ரூ.10,00,000/-மும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் உள்ளவை	**331** **0.86%**
		கூடுதல்	**38,655**

நிருவாக அமைப்பு

18. இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை முறைப்படுத்தவும் மற்றும் மேற்பார்வையிடவும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக தலைமைப் பொறுப்பில் ஆணையர் செயல்படுகிறார்.

19. இந்து சமய அறநிலையத் துறையின் பொது நிருவாகம், பணியாளரமைப்பு, சமய நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மேலாண்மை, திருப்பணி, வழக்குகள், தணிக்கை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	பதவி	பணியிடம்
1.	கூடுதல் ஆணையர் (பொது)	1
2.	கூடுதல் ஆணையர் (விசாரணை)	1
3.	கூடுதல் ஆணையர் (திருப்பணி)	1
4.	இணை ஆணையர் (தலைமையிடம்)	1
5.	இணை ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
6.	இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)	1
7.	இணை ஆணையர் (சாிபார்ப்பு-தலைமையிடம்)	1
8.	உதவி ஆணையர் (சட்டச்சேர்மம்)	1
9.	உதவி ஆணையர் (கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்)	1
10	ஆசிரியர் (திருக்கோயில் திங்களிதழ்)	1

தலைமையிடத்தில் பணிபுரியும் மாற்றுத் துறை அலுவலர்கள் விவரம் பின்வருமாறு :-

வ. எண்	பதவி	பணியிடம்	தாய்த் துறை
1.	தனி அலுவலர் (திருக்கோயில் நிலங்கள்) (மாவட்ட வருவாய் அலுவலர் நிலை)	2	வருவாய்த் துறை
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
3.	செயற்பொறியாளர்	1	பொதுப் பணித் துறை/நெடுஞ்சாலைத் துறை
4.	உதவிக் கோட்டப் பொறியாளர்	1	பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலைத் துறை
5.	உதவிப் பொறியாளர்/ தொழில்நுட்ப உதவியாளர்	1	தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம்
6.	உதவிப் பொறியாளர் (கட்டுமானம்)	1	பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலைத் துறை
7.	உதவிப் பொறியாளர் (மின்)	1	மின் துறை
8.	முதுநிலை வரைதொழில் அலுவலர்	1	பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலைத் துறை

வ. எண்	பதவி	பணியிடம்	தாய்த் துறை
9.	வரைதொழில் அலுவலர்	2	பொதுப் பணித் துறை/ நெடுஞ்சாலைத் துறை
10	இளநிலை வரைதொழில் அலுவலர்	2	தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம்
11.	முதுநிலை கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
12.	உதவி கணக்கு அலுவலர்	1	கருவூலக் கணக்குத் துறை
13	தலைமைத் தணிக்கை அலுவலர் (அரசு துணைச் செயலாளர் நிலை)	1	நிதித் துறை
14	இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர்	1	செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை

மண்டல மற்றும் கோட்ட நிருவாகம்

20. இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகம் மாநில அளவில் 11 மண்டலங்களையும், 28 கோட்டங்களையும் உள்ளடக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஓர் இணை ஆணையரும், ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி ஆணையரும் நியமிக்கப்பட்டு நிருவாகம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்களின் வட்டார ஆளுகை எல்லை குறித்த விவரங்கள் பின்வருமாறு :-

[2020 மார்ச் 24

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
1.	இணை ஆணையர், சென்னை	உதவி ஆணையர், சென்னை	சென்னை மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்லாவரம் மற்றும் தாம்பரம் வட்டங்கள்
2.	இணை ஆணையர், வேலூர்	உதவி ஆணையர், திருவள்ளூர்	திருவள்ளூர் மாவட்டம்
		உதவி ஆணையர், காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் (பல்லாவரம் மற்றும் தாம்பரம் வட்டங்கள் நீங்கலாக)
		உதவி ஆணையர், வேலூர்	வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்கள்
3.	இணை ஆணையர், சேலம்	உதவி ஆணையர், தருமபுரி	தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்
		உதவி ஆணையர், சேலம்	சேலம் மாவட்டம்
		உதவி ஆணையர், நாமக்கல்	நாமக்கல் மாவட்டம்
4.	இணை ஆணையர், கோயம்புத்தூர்	உதவி ஆணையர், கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்
		உதவி ஆணையர், ஈரோடு	ஈரோடு மாவட்டம்
		உதவி ஆணையர், திருப்பூர்	திருப்பூர் மாவட்டம்

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
5.	இணை ஆணையர், தஞ்சாவூர்	உதவி ஆணையர், தஞ்சாவூர்	தஞ்சாவூர் மாவட்டம் (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் நீங்கலாக)
		உதவி ஆணையர், நாகப்பட்டினம்	நாகப்பட்டினம் மாவட்டம் (மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் நீங்கலாக)
		உதவி ஆணையர், திருவாரூர்	திருவாரூர் மாவட்டம்
6.	இணை ஆணையர், மயிலாடுதுறை	உதவி ஆணையர், கும்பகோணம்	தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, குத்தாலம் மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள்
7.	இணை ஆணையர், விழுப்புரம்	உதவி ஆணையர், கடலூர்	கடலூர் மாவட்டம்
		உதவி ஆணையர், விழுப்புரம்	விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்
		உதவி ஆணையர், திருவண்ணாமலை	திருவண்ணாமலை மாவட்டம்

வ. எண்	மண்டலம்	கோட்டம்	ஆளுகை எல்லை
8.	இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி	உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி மாவட்டம்
		உதவி ஆணையர், அரியலூர்	பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள்
		உதவி ஆணையர், புதுக்கோட்டை	புதுக்கோட்டை மாவட்டம்
		உதவி ஆணையர், கரூர்	கரூர் மாவட்டம்
9.	இணை ஆணையர், மதுரை	உதவி ஆணையர், மதுரை	மதுரை மாவட்டம்
		உதவி ஆணையர், திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்
10.	இணை ஆணையர், சிவகங்கை	உதவி ஆணையர், விருதுநகர்	விருதுநகர் மாவட்டம்
		உதவி ஆணையர், பரமக்குடி	சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்
11.	இணை ஆணையர், திருநெல்வேலி	உதவி ஆணையர், திருநெல்வேலி	திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்கள்
		உதவி ஆணையர், தூத்துக்குடி	தூத்துக்குடி மாவட்டம்
		உதவி ஆணையர், நாகர்கோவில்	கன்னியாகுமரி மாவட்டம்

இந்து சமய அறநிலையத் துறையில் இணை ஆணையரின் பணிகள்

21. இந்து சமய அறநிலையத் துறையில் இணை ஆணையர், ஒரு மண்டல அலுவலராவார். சட்டப் பிரிவு 46-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட இந்து சமய அறநிறுவனங்கள் இணை ஆணையரின் ஆளுகையின்

கீழ் உள்ளன. சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவும், சமய நிறுவனங்களின் வரவு-செலவுத் திட்டத்தினை அங்கீகரிக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுள்ளது. சட்டப் பிரிவு 63-ன்கீழ் மனுக்களை விசாரித்து முடிவு எடுக்கவும், சட்டப் பிரிவு 64-ன்கீழ் எந்தவொரு சமய நிறுவனத்திற்கும் நிருவாகத் திட்டம் வகுக்கவும் இணை ஆணையருக்கு அதிகாரமுண்டு. சட்டப் பிரிவு 21A-ன்கீழ் உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை சீராய்வு செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் பிரசுரம் செய்யப்பட்ட சமய நிறுவனங்களில் தவறிழைக்கும் அறங்காவலர்களை சட்டப் பிரிவு 53-ன்கீழ் தற்காலிக பணிநீக்கம், பணிநீக்கம்/பணியறவு செய்ய இணை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. மேலும், சட்டப் பிரிவு 54-ன்கீழ் பரம்பரை அறங்காவலர் பதவியில் ஏற்படும் காலியிடங்களை நிரப்பவும் அதிகாரம் உள்ளது. சமய நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், கட்டடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகளை சட்டப் பிரிவு 78-ன்கீழ் விசாரித்து வெளியேற்றுவதற்கு உத்தரவிடும் அதிகாரம் இணை ஆணையருக்கு உள்ளது. பொதுவான மற்றும் சிறப்பு உத்தரவுகளின்மூலம் ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறையில் உதவி ஆணையரின் பணிகள்

22. இந்து சமய அறநிலையத் துறையில் உதவி ஆணையர் ஒரு மாவட்ட நிலை அலுவலராவார். சட்டப் பிரிவு 46-ன்கீழ் பிரசுரம் செய்யப்படாத இந்து சமய நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் உதவி ஆணையருக்கு உள்ளது. தனது ஆளுகையின் கீழுள்ள பட்டியலைச் சேராத சமய நிறுவனங்களுக்கு பரம்பரை அறங்காவலர் நியமனம் மற்றும் வரவு-செலவுத் திட்டம் அங்கீகாரம் குறித்து ஆணை பிறப்பிக்கலாம். சமய நிறுவனங்கள் தொடர்பாக புகார்கள் வரப்பெற்றால் விசாரணை மேற்கொண்டு துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர முதனிலை அறிக்கை உதவி ஆணையரால் அளிக்கப்பட வேண்டும். சட்டப் பிரிவு 92-ன்கீழ் உதவித்தொகை நிர்ணயம் மற்றும் தணிக்கை கட்டணம் நிர்ணயம் செய்வதற்குரிய அறிக்கையினை தயாரித்து ஆணையரிடம் அனுப்ப வேண்டும். சட்டப் பிரிவு 92-ன்கீழ் நிர்ணயிக்கப்படும் உதவித்தொகை மற்றும் தணிக்கை கட்டணம் மற்றும் சட்டப் பிரிவு 93-ன்கீழ் வழக்கு செலவுக்கான கட்டணம் ஆகியவற்றை உதவி ஆணையர் சமய

நிறுவனங்களிடமிருந்து வசூலித்து இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும். பொதுவான மற்றும் சிறப்பு உத்தரவுகளின்மூலம் ஆணையரால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறையில் ஆய்வாளர்களின் பணிகள்

23. இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் மண்டல இணை ஆணையர்கள் மற்றும் கோட்ட உதவி ஆணையர்கள் ஆகியோருக்கு உதவிபுரிய வட்ட அளவில் 168 ஆய்வர் பணியிடங்கள், துறை சார்ந்த வழக்குகளைக் கையாள 18 வழக்கு ஆய்வர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

24. திருக்கோயில்களின் முறையான பராமரிப்பை உறுதி செய்வதற்கும், அவற்றின் சேவைகளை மேம்படுத்துவதற்கும் ஆய்வாளர்கள் திருக்கோயில்களை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், திருக்கோயில்களிலிருந்து சகாயத் தொகை மற்றும் தணிக்கை கட்டணங்கள், நீதிமன்றங்களால் விதிக்கப்படும் செலவுத் தொகைகள் மற்றும் பரிசீலனைக் கட்டணங்கள் ஆகியவற்றை அவர்கள் வசூலிக்க வேண்டும்.

25. ஆய்வாளர்கள் அறநிறுவனங்களின் சொத்துப் பதிவேடு, திட்டப் பதிவேடு மற்றும் மரப் பதிவேட்டினைப் பெற்று சரிபார்த்து அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களிடமிருந்து வரப்பெறும் அனைத்து மனுக்கள் மற்றும் குறிப்புகளின்மீது விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்க வேண்டும். அறங்காவலர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்களை விசாரித்து சரிபார்த்து அறிக்கை அனுப்ப வேண்டும். ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பு, உண்டியல் திறப்பு போன்றவற்றை மேற்பார்வையிட வேண்டும். துறை சார்ந்த வழக்குகளுக்காக நீதிமன்றங்கள் மற்றும் அரசு வழக்குரைஞர்களின் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும். துறை ஆளுகையின்கீழ் உள்ள சமய நிறுவனங்களுக்கு உதவித்தொகை நிர்ணயம் செய்வதற்காக அவற்றின் வரவு-செலவுப் பட்டியல்களைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். உயர் அதிகாரிகளால் ஒதுக்கப்படும் பிற பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சரிபார்ப்பு அலுவலர்கள்

26. சமய நிறுவனங்களின் விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக

தலைமையிடத்தில் இணை ஆணையர் நிலையில் ஒரு சரிபார்ப்பு அலுவலரும், ஏழு இணை ஆணையர் மண்டலங்களுக்குத் துணை ஆணையர் நிலையில் ஆறு சரிபார்ப்பு அலுவலர்களும், நான்கு இணை ஆணையர் மண்டலங்களுக்கு உதவி ஆணையர் நிலையில் நான்கு சரிபார்ப்பு அலுவலர்களும் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு சரிபார்ப்பு அலுவலருக்கும் உதவியாக ஒரு நகை மதிப்பீட்டு வல்லுநர் வீதம் 11 நகை மதிப்பீட்டு வல்லுநர்களும், ஓர் இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் வீதம் 11 இளநிலை தொழில்நுட்ப உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். 2016 ஆம் ஆண்டில் நகை மதிப்பீட்டு வல்லுநர் பதவிக்கும், இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கும் பெண்களை நியமனம் செய்யும் வகையில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொறியாளர்கள் மற்றும் ஸ்தபதிகள் பிரிவு

27. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளான, புதுப்பித்தல், பழைமை மாறாமல் புனரமைத்தல், கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீடுகளை கூர்ந்தாய்வு செய்தல், பணிகளை மேற்பார்வையிடல், அளவீடு செய்தல் போன்ற பணிகளை பொறியாளர்கள் மற்றும் வரைதொழில் அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் ஆணையிட்டவாறு இந்து சமய அறநிலையத் துறையில் கீழ்க்காணும் 175 பணியிடங்கள் கொண்ட திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பாதுகாத்தல் பணிக்கான பணித் தொகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வ. எண்	பதவி	பணியிடங்களின் எண்ணிக்கை
1.	தலைமைப் பொறியாளர்	1
2.	கண்காணிப்புப் பொறியாளர்	1
3.	செயற்பொறியாளர்	8
4.	உதவி செயற்பொறியாளர் (கட்டுமானம்)	13
5.	உதவி செயற்பொறியாளர் (மின்)	7

வ. எண்	பதவி	பணியிடங்களின் எண்ணிக்கை
6.	உதவி பொறியாளர் (கட்டுமானம்)	32
7.	உதவி பொறியாளர் (மின்)	13
8.	தலைமை வரைதொழில் அலுவலர்	2
9.	வரைதொழில் அலுவலர்	13
10.	இளநிலை வரைதொழில் அலுவலர்	32
11.	தலைமை ஸ்தபதி (செயற்பொறியாளர் நிலையில்)	1
12.	மண்டல ஸ்தபதி (உதவி செயற்பொறியாளர் நிலையில்)	12
13.	உதவி ஸ்தபதி (உதவி பொறியாளர் நிலையில்)	30
14.	தட்டச்சர்	6
15.	ஓட்டுநர்	2
16.	அலுவலக உதவியாளர்	2
	கூடுதல்	**175**

வரைபடங்கள் மேலொப்பம் செய்தல் மற்றும் திருப்பணி மேற்கொள்ள கருத்து வழங்கும் ஆலோசனைக் குழு

28. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தேவைப்படும் இனங்களில் வரைபடங்கள், இராஜகோபுரம், திருத்தேர்கள் வரைபடங்கள் போன்றவை மேலொப்பம் செய்தல் மற்றும் திருப்பணிகள் மேற்கொள்ள கருத்து வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு மாமல்லபுரம், அரசினர் கட்டட மற்றும் சிற்ப கலைக் கல்லூரி முதல்வரை தலைவராகவும், திருக்கோயில் திருப்பணிகளின் தன்மைக்கேற்றபடி அரசினர் கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரி வல்லுநர்/ பேராசிரியர்/உதவிப் பேராசிரியரை உறுப்பினராகவும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறையில் பணிபுரியும் மண்டல ஸ்தபதியை உறுப்பினராகவும் கொண்ட ஆலோசனைக் குழுவினை கடந்த

2-7-2018 அன்று அமைத்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி திருக்கோயில்களுக்குள் ஏற்படுத்தப்படும் புதிய கட்டுமானங்கள் மற்றும் புதிய திருத்தேர்களுக்கு தயாரிக்கப்படும் வரைபடங்களை இக்குழு சரிபார்த்து மேலொப்பம் வழங்கி வருகிறது.

மண்டல ஸ்தபதிகள்

29. திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளையும், அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதிகளால் செய்யப்படும் மதிப்பீடுகளை மேலாய்வு செய்யவும், வரைபடங்களைச் சரிபார்க்கவும் மாநில அளவில் ஐந்து மண்டல ஸ்தபதிகள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளில் ஏற்பட்ட தொய்வினைக் கண்ணுற்று, திருப்பணிகளை விரைந்து முடித்திட ஏதுவாக, 2012-2013 ஆம் நிதியாண்டில் ஆறு மண்டல ஸ்தபதிகள் பணியிடங்களை புதியதாக ஏற்படுத்தினார். 11 மண்டல ஸ்தபதிகளுக்கும் மாத தொகுப்பூதியம் ரூ.4,000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்வு செய்யப்பட்டது. அவ்வாறு ரூ.15,000/- ஆக உயர்த்தப்பட்ட தொகுப்பூதியம் திருக்கோயில்களின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக ஒவ்வோர் இணை ஆணையர் மண்டலத்திற்கும் ஒரு ஸ்தபதி என்ற நிலை ஏற்பட்டு திருக்கோயில் திருப்பணிகள் பழைமை மாறாது மேற்கொள்ளப்படுகின்றன.

திருக்கோயில் நிருவாகம்

30. ஒவ்வொரு திருக்கோயில் நிருவாகமும் அதன் நிருவாக அடிப்படையில் தனித்தன்மை கொண்டதாக விளங்குவதோடு அதற்கான பணியாளர்களை அந்நிருவாகமே நியமித்துக்கொள்ளும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. எனினும், இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 45(1)-ன்படி செயல் அலுவலரை நியமிக்கும் அதிகாரம் ஆணையரைச் சார்ந்ததாகும்.

செயல் அலுவலர்கள்

31. திருக்கோயில்களின் வருமானம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், அவற்றின் முக்கியத்துவம், பணிச்சுமை மற்றும் இதரப் பணிகளைக் கருத்திற்கொண்டு திருக்கோயில்களின் நிருவாகத்தைச் செம்மையுடன் நிருவகிக்க செயல் அலுவலர் பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	செயல் அலுவலர் நிலை	பணியிடங்கள்
1.	இந்திய ஆட்சிப் பணி	2
2.	இணை ஆணையர்	9
3.	துணை ஆணையர்	9
4.	உதவி ஆணையர்	27
5.	செயல் அலுவலர் நிலை 1	66
6.	செயல் அலுவலர் நிலை 2	111
7.	செயல் அலுவலர் நிலை 3	250
8.	செயல் அலுவலர் நிலை 4	154
	கூடுதல்	**628**

செயல் அலுவலர் நிலை-3 மற்றும் 4-க்கான காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையம்மூலம் தேர்ச்சி பெற்ற முறையே 101 மற்றும் 78 நபர்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

32. திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் ரூ.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருப்பின், அதன் நிருவாகத்தினை கவனித்திட இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையிலான செயல் அலுவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். அந்த வகையில், 47 முதுநிலைத் திருக்கோயில்கள் தற்போது நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

நேர்முக உதவியாளர்கள்

33. பழநி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் மற்றும் திருத்தணி ஆகிய இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் பணிபுரியும் திருக்கோயில்களில் உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர்கள் பணிபுரிகின்றனர்.

துணை ஆணையர், பழநி

34. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் கல்வி நிறுவனங்களை நிருவகிப்பதில் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக துணை ஆணையர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

முதுநிலை கணக்கு அலுவலர்கள்

35. இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் உள்ள கீழ்க்காணும் எட்டு திருக்கோயில்களில் அவர்களுக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அலுவலர்கள் நிலையில் முதுநிலை கணக்கு அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்:-

1. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு
2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி
3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்
5. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி
6. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
7. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்
8. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்

திருக்கோயில்களில் பொறியியல் பிரிவு

36. அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் அத்திருக்கோயில்களுக்கென பொறியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு, திருக்கோயில்களை புதுப்பித்தல் மற்றும் இதர புதிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருமடங்களின் நிருவாகம்

37. இந்து சமய அறநிலையத் துறையின் மேற்பார்வையில் தற்போது 56 திருமடங்கள் உள்ளன. இத்திருமடங்களின் நிருவாகத்தைக் கண்காணிக்க ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், ஒரு கண்காணிப்பாளர், இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு தணிக்கை ஆய்வாளர்கள், இரண்டு உதவியாளர்கள், இரண்டு இளநிலை உதவியாளர்கள் மற்றும் ஒரு தட்டச்சர் கொண்ட ஒரு பிரிவு ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் செயல்படுகிறது.

திருமடங்கள்—ஒரு பார்வை

38. இந்து சமயத்தையும், தமிழையும் நிலைநிறுத்துவதில் திருக்கோயில்களும், திருமடங்களும் முதன்மைப் பங்காற்றி வருகின்றன. இவற்றில் திருமடங்கள் அறவழியையும், இறைச்சிந்தனையையும், குருவின்வழி சீடர்கள் என்ற பரம்பரைப் பழக்கவழக்கத்தையும், கல்வித் தொண்டினையும், சைவ-வைணவ நெறிகளையும் வாழையடி வாழையாக வளர்த்து வருகின்றன.

திருமடங்கள் தொன்றுதொட்டு இறைப் பணியுடன் அறப்பணியையும் ஆற்றி வருகின்றன. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் 56 திருமடங்களும், திருமடங்களின் நிருவாகத்திற்குட்பட்ட 57 திருக்கோயில்களுடன் இணைந்த 19 கட்டளைகளும் நடைபெற்று வருகின்றன.

39. திருமடங்களுள் சைவ நெறியை மதுரை ஆதீனம் என்றழைக்கப்படும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் மடம், திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் ஆகியவையும் வைணவ நெறியை அகோபில மடம், வானமாமலை மடம் ஆகியவையும், காஞ்சிபுரத்திலுள்ள சங்கராச்சாரியார் மடம் சக்திபீட வழிபாட்டு நெறியை வளர்க்கும் பணியில் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி வருகின்றன.

40. மொழிகளுள் பக்திமொழி என வழங்கப்படும் தமிழ் மொழியின் வளர்ச்சியில் திருமடங்களின் பங்கு அளப்பரியதாகும். சங்ககால இலக்கியங்களை இன்று நாம் படிப்பதற்கும், படித்து இன்புறுவதற்கும் காரணம் திருமடங்களாகும். ஓலைச் சுவடிகளாய் இருந்த பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து இன்றைய தலைமுறையினரும் தமிழின், தமிழரின் தொன்மையை உணர்வதற்கு திருமடங்கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

41. தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும்போது, அரச குருவாக இருப்பவர் செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து ஆட்சி மாற்றம் செய்வதை மரபாகப் பின்பற்றியுள்ளனர். விடுதலை இந்தியாவின் தலைமை ஆளுநரான (கவர்னர் ஜெனரல்) மௌன்ட்பேட்டன் பிரபு இந்தியாவிற்கு விடுதலை வழங்கும்போது எவ்வகையில் வழங்குவது என அப்போதைய பேராயக் (காங்கிரஸ்) கட்சியின் தலைவரான திரு. ஜவஹர்லால் நேருவிடம் கேட்டுள்ளார். இதனை மூதறிஞர் இராஜாஜியிடம் திரு. ஜவஹர்லால் நேரு வினவ, இராஜாஜி தமிழகத்தில் பின்பற்றப்படும் மேற்குறிப்பிட்ட மரபைக் கூறியுள்ளார்.

2020 மார்ச் 24]

42. அதன் அடிப்படையில், ஆட்சி மாற்றத்தை எடுத்துக்காட்டும் நிகழ்வாகச் செங்கோலைத் தலைமை ஆளுநரிடமிருந்து திருவாவடுதுறை ஆதீன தம்பிரான் வழியாக ஜவஹர்லால் நேரு பெறுவதென முடிவெடுக்கப்பட்டது. திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் ஓதுவார்கள், தேவாரத்திலிருந்து கோளறு பதிகம் பாடல்களைப் பாடும்போது அதில் பதினோராவது பாடலின் கடைசி வரியான "...அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே..." என்ற வரியைப் பாடி முடிக்கும்போது தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிச் செங்கோலைச் சுவாமிகள் நேருவிடம் கொடுத்தார். அந்நாள் 15-8-1947 நம் நாட்டின் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

43. நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தருமபுர ஆதீனத்தின் 26-வது குரு மகா சன்னிதானமாக செயலாற்றி வந்த ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமசாரியார் சுவாமிகள் 4-12-2019 அன்று பரிபூர்ணம் அடைந்ததைத் தொடர்ந்து, ஸ்ரீ மௌன குருசாமி தம்பிரான் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் என்ற நாமகர்ணத்தில் குருமகா சந்நிதானமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

44. 'கல்வியிலான் கண்ணிலான் என்க' என்பதை உணர்ந்த அறநிறுவனமான திருமடங்கள் கல்விப் பணிகளையும் சீரிய முறையில் ஆற்றி வருகின்றன.

தொடக்கப் பள்ளிகள்

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி என்ற பெயரிலும், தருமபுர ஆதீனம், தருமபுரத்தில் குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி என்ற பெயரிலும் பள்ளிகளை நடத்தி வருகின்றன.

நடுநிலைப் பள்ளிகள்

திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகள் நாகப்பட்டினம் மாவட்டம், திருவாவடுதுறையில் இயங்கி வருகின்றன.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி

நாகப்பட்டினம் மாவட்டம், தருமபுரத்தில் குருஞானசம்பந்தர் மடம் உயர்நிலைப் பள்ளியையும், விழுப்புரம் மாவட்டம், மயிலத்தில், சிவப்பிரகாச சுவாமிகள் மடம் மேல்நிலைப் பள்ளியையும் அறவுணர்வோடு கல்விப் பணியைச் செயல்படுத்தி வருகின்றன.

மேற்கண்ட திருமடங்கள் மக்களுக்கு இறைத் தொண்டினை ஆற்றி வருகின்றன.

இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை

45. இந்து சமய அறநிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்திட ஆணையரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின்கீழ் தலைமைத் தணிக்கை அலுவலர் தலைமையில் தணிக்கைப் பிரிவு இயங்கி வருகிறது.

46. தமிழகம் முழுவதுமுள்ள சமய நிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள தணிக்கைப் பிரிவானது 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு 2 துணை தலைமைத் தணிக்கை அலுவலர்களும், 17 மண்டலத் தணிக்கை அலுவலர்களும், இவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இதனைத் தவிர்த்து ஒரு மண்டலத் தணிக்கை அலுவலரும் (நடமாடும் தணிக்கைக் குழு), ஓர் உதவி தணிக்கை அலுவலரும் தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

47. முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்திட கீழ்க்காணுமாறு மூன்று நிலைகளிலான உயர்மட்ட தணிக்கைக் குழுக்கள் உள்ளன:-

I. முதல் நிலை தணிக்கைக் குழு (இணை ஆணையர்/செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

1.	ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை	தலைவர்
2.	இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை	உறுப்பினர்
3.	தலைமைத் தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத் துறை	உறுப்பினர் செயலாளர்

II. இரண்டாம் நிலை தணிக்கைக் குழு (துணை ஆணையர்/ செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

1.	கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை	தலைவர்
2.	இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை	உறுப்பினர்
3.	தலைமைத் தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத் துறை	உறுப்பினர் செயலாளர்

2020 மார்ச் 24]

III. மூன்றாம் நிலை தணிக்கைக் குழு (உதவி ஆணையர்/செயல் அலுவலர் நிலை திருக்கோயில்கள்)

1.	மண்டல இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை	தலைவர்
2.	துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்/ மண்டல தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிலையத் துறை	உறுப்பினர் செயலாளர்

ஆலோசனைக் குழு

48. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தில் இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைவராகவும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர் அலுவல்சார் உறுப்பினராகவும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவல்சார் உறுப்பினர் செயலராகவும் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மாவட்டக் குழுக்கள் அமைத்தல்

49. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருவாய் மாவட்ட எல்லைக்குட்பட்ட இந்து சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரிக்க மூன்றுக்குக் குறையாத ஐந்துக்கு மிகாத அலுவல்சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டக் குழு அரசால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழு பத்து இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களைத் தவிர, பிற அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் நியமனம் செய்ய தகுதியுள்ளோர் பட்டியல் தயாரித்து அளிக்க வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும். பெரும்பாலான வருவாய் மாவட்டங்களில் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அறங்காவலர்கள் நியமனம்

50. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்கீழ் இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை மேலாண்மை செய்வதற்காக பரம்பரை நிருவாகத்தில் இல்லாத ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வோர் அறங்காவலர் குழுவிலும் மூன்று அறங்காவலர்களுக்கு குறையாமலும், ஐந்து அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். இக்குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரும், பட்டியல் இனத்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும். இக்குழுவின் பதவிக்காலம் இரண்டாண்டுகள் ஆகும்.

அறங்காவலர் நியமனத் தகுதிகள்

51. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அறிவுரையின்படி, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப்பிரிவு 25A-ன்கீழ் இந்து சமய அறநிறுவனங்களில் அறங்காவலராக நியமனம் பெறுவதற்கு கீழ்க்காணும் தகுதி வரையறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:-

அ.	கடவுள் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்;
ஆ.	சமய நிறுவனம் அமைந்துள்ள பகுதியில் நன்னடத்தை, நற்பெயர் மற்றும் மாியாதைக்குாியவராக இருத்தல் வேண்டும்;
இ.	திருக்கோயில் அறங்காவலர் பணியினைச் செய்வதற்குத் தேவையான நேரத்தையும், ஆர்வத்தையும் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்; மற்றும்
ஈ.	இதுபோன்ற குறிப்பிட்ட பிற சிறப்புத் தகுதிகளைக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

அறங்காவலர்களை நியமனம் செய்ய அதிகார வரம்பு

அரசு

52. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் உள்ள, ரூபாய் பத்து இலட்சம் மற்றும் அதற்கு மேல்

ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு ஐந்து பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

ஆணையர்

53. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் உள்ள, ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணையரால் நியமிக்கப்படுவர்.

இணை ஆணையர்

54. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் உள்ள, ரூபாய் பத்தாயிரத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சத்திற்குள் ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்தந்த மண்டல இணை ஆணையரால் நியமிக்கப்படுவர்.

உதவி ஆணையர்

55. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 49(1)-ன்கீழ் உள்ள ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் இந்து சமய அறநிறுவனங்களுக்கு மூன்று பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் மாவட்ட குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் அந்தந்த கோட்ட உதவி ஆணையரால் நியமிக்கப்படுவர்.

56. ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரால் பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமிக்கப்படும்போது, இந்து சமய அறநிறுவனங்களில் கூடுதலாக இரண்டு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில், அரசு நியமனம் (Nomination) செய்யலாம்.

தக்கார் நியமனம்

57. அறங்காவலர் குழுவின் பதவிக்காலம் முடிந்த பின்னர் அல்லது தற்காலிகமாக காலியிடம் ஏற்படும்பொழுது அடுத்த

TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 24

அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படும் வரை, திருக்கோயிலின் அறங்காவலருக்குரிய கடமைகளை செய்திட இடைக்கால ஏற்பாடாக தகுதியான ஒருவர் தக்காராக நியமனம் செய்யப்படுவார்.

II-இந்து சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துகள் நிருவாகம்

நிலங்களின் விவரம்

58. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமாக 4,78,272.34 ஏக்கர் பரப்பளவுடைய நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி உள்ளன:-

நிலத்தின் வகைப்பாடு	திருக்கோயில் நிலங்கள்	திருமடம் நிலங்கள்	மொத்த நிலங்கள்
	(ஏக்கர் இலட்சத்தில்)		
நன்செய்	1.83	0.21	2.04
புன்செய்	2.18	0.35	2.53
மானாவாரி	0.21	இல்லை	0.21
கூடுதல்	**4.22**	**0.56**	**4.78**

59. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான 22,600 கட்டடங்களும், 33,665 மனைகளும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் 1,23,729 நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அசையாச் சொத்துக்களிலிருந்து கடந்த ஒன்பது ஆண்டுகளில் ரூ.1,219.65 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ.135.06 கோடி வருமானம் வரப்பெற்றுள்ளது.

நியாய வாடகை நிர்ணயம்

60. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 34A-ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி, மண்டல இணை ஆணையர், திருக்கோயில் செயல் அலுவலர் அல்லது அறங்காவலர் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர்,

2020 மார்ச் 24]

பதிவுத் துறையின் மாவட்டப் பதிவாளர் ஆகியோர் கொண்ட நியாய வாடகை நிர்ணயக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய வாடகை நிர்ணயக் குழுவின் மூலமாக வணிகம், குடியிருப்பு போன்ற பயன்பாடுகள் உள்ள மனைகள் மற்றும் கட்டடங்களுக்கு உரிய நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வருவாய் நீதிமன்றங்கள்

61. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்கு வர வேண்டிய குத்தகை நிலுவைத் தொகைகளை வசூல் செய்யவும், விவசாய நிலங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவும், குத்தகை செலுத்த மறுக்கும் குத்தகைதாரர்களை வெளியேற்றவும், தமிழ்நாடு பொது பொறுப்புரிமை (விவசாய நிலங்கள் ஒழுங்குபடுத்தும் மற்றும் மேலாண்மை) சட்டம், 1961 [Tamil Nadu Public Trusts (Regulation and Administration of Agricultural Lands) Act, 1961]-ன்கீழ் இந்து சமய அறநிறுவனங்களால் தனி துணை ஆட்சியர் தலைமையிலான வருவாய் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவை தீர்வு செய்யப்படுகின்றன.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை, லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 இடங்களில் வருவாய் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

கும்பகோணம், சேலம் மற்றும் தென்காசி ஆகிய இடங்களில் முகாம் வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

62. மேற்கண்ட வருவாய் நீதிமன்றங்களில் லால்குடி, மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 இடங்களில் உள்ள வருவாய் நீதிமன்றங்கள் 2012-2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் வாயிலாக வருவாய் நீதிமன்றங்களில் இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள 9,317 வழக்குகளில், 2019-2020 ஆம் நிதி ஆண்டில் மட்டும் 2,936 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டு, ரூ.1,060.14 இலட்சம் குத்தகை நிலுவைத் தொகை வசூலிக்க உத்தரவு பெறப்பட்டு, ரூ.331.09 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் ரூ.1,875.20 இலட்சம் குத்தகை நிலுவை வசூலிக்கப்பட்டுள்ளது. குத்தகை நிலுவையை முழுமையாக வசூலித்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலங்களை மீட்டல்

63. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான சில நிலங்கள் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்ட (Updating Registry Scheme) செயலாக்கத்தின்போது தனிப்பட்ட நபர்களின் பெயரில் தவறாக பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையை மாற்றி, மீண்டும் அந்தந்த திருக்கோயில்களின் பெயரிலேயே பட்டா பெறுவதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

64. கடந்த ஒன்பது ஆண்டுகளில் தனியார் பெயரில் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்ட 1,199 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 8,031.19 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் மட்டும் 194 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,448.38 ஏக்கர் நிலங்கள் மீண்டும் திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

65. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 173 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 778.29 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய நிலங்களின் பதிவுகள் கணினி சிட்டாவில் தவறாக தனியார் பெயரில் இருந்ததை மீண்டும் திருக்கோயில் பெயரில் பதிவு செய்யப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் 17 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 103.89 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் தனியார் பெயரிலிருந்து திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

66. மேலே குறிப்பிட்டவாறு திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டவைகளையும், கணினி சிட்டாவில் தனிநபர் பெயரில் பதிவு செய்யப்பட்டவைகளையும், மாநிலம் முழுவதும் கண்டறிந்து திருக்கோயில்களின் பெயருக்கு மாற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் நில அளவையர்கள் நியமனம்

67. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல்

2020 மார்ச் 24]

செய்யப்பட்டிருந்ததை கண்டறிந்து மீண்டும் திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்திட மற்றும் திருக்கோயில் நிருவாகம் மற்றும் வருவாய்த் துறையினரிடையே ஒருங்கிணைந்து செயல்பட, தொகுப்பூதிய அடிப்படையில் 9 ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள், 21 ஓய்வுபெற்ற வட்டாட்சியர்கள், 17 ஓய்வுபெற்ற நில அளவையர்கள், 3 ஓய்வுபெற்ற வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் 10 ஓய்வுபெற்ற கிராம நிருவாக அலுவலர்கள் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

68. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான, ஆக்கிரமிப்பில் இருந்த 3,156.63 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், 604.1969 கிரவுண்டு பரப்பளவுள்ள மனைகளும், 280.1397 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்களும் திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் ரூ.3,365.64 கோடியாகும். இவற்றில் 2019-2020 ஆம் ஆண்டில் மட்டும் 301.27 ஏக்கர் விளைநிலங்கள் 47.1324 கிரவுண்டு மனை மற்றும் 29.1884 கிரவுண்டு பரப்பளவுள்ள கட்டடங்கள் சுவாதீனம் பெறப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.157.22 கோடி ஆகும்.

கூட்டு ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல்

69. இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான காலி மனைகளைக் குடியிருப்புக்காக கூட்டாக ஆக்கிரமித்து 30 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது:-

i) 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் நிலம் பயன்படுத்தியிருக்க வேண்டும்;

ii) அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய வாடகையை ஏற்றுக்கொள்ள வேண்டும்;

iii) நியாய வாடகை நிர்ணயம் 1-7-1998 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட வேண்டும்;

iv) வாடகை நிலுவைத் தொகை 12 மாதங்களில் சம தவணைகளில் செலுத்திட வேண்டும்;

v) 10 மாத வாடகை நன்கொடையாக வழங்கிட வேண்டும்.

இதன்படி, பல்வேறு இடங்களில் 300.06 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த 6,159 ஆக்கிரமிப்பாளர்கள் வாடகைதாரர்களாக வரன்முறை செய்யப்பட்டுள்ளனர். அவர்களது குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி, மின் இணைப்பு வசதி போன்றவற்றிற்கு தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டன.

III-சிறப்புத் திட்டங்கள்

அன்னதானத் திட்டம்

70. 'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்'

என்ற திருவள்ளுவரின் வரிகளுக்கு ஏற்ப திருக்கோயிலுக்கு வரும் இறையன்பர்களுக்கு அருளுடன் பசியாற்றிட, 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், திட்டங்களில் மிகவும் உன்னத திட்டமான அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இறையன்பர்களுக்கு இறையருளோடு அன்னமும் வழங்கும் உன்னதத் திட்டம் படிப்படியாக 360 திருக்கோயில்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2006-2007 முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரை இரண்டு திருக்கோயில்களுக்கு மட்டுமே இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

71. 2011-2012 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2012-2013 ஆம் ஆண்டில் 50 திருக்கோயில்களுக்கும், 2013-2014 ஆம் ஆண்டில் 100 திருக்கோயில்களுக்கும், 2014-2015 ஆம் ஆண்டில் 106 திருக்கோயில்களுக்கும், 2016-2017 ஆம் ஆண்டில் 30 திருக்கோயில்களுக்கும் பக்தர்களின் வருகையையும், தேவையையும் கருத்திற்கொண்டு இந்த அற்புதத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

72. இத்திட்டத்தின்மூலம் 754 திருக்கோயில்களில் நாளொன்றுக்கு சுமார் 65,925 பக்தர்கள் பயன்பெறுகின்றனர். இதற்கென நாளொன்றுக்கு ரூ.16.48 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

அன்னதான பற்றாக்குறை நிதி:

73. அன்னதானத் திட்டத்தில் நிதி பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்கு, உபரி நிதி வசதி உள்ள

திருக்கோயில்களிலிருந்து அறநிலைய சட்டப் பிரிவு 36-ன்கீழ் நிதிமாற்றம்மூலம் மைய நிதி ரூ.20 கோடி உருவாக்கப்பட்டு, அம்மைய நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு பற்றாக்குறை உள்ள அன்னதானத் திட்ட திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கி ஈடு செய்யப்படுகிறது.

பற்றாக்குறை நிதியுதவி வழங்கப்பட்ட விவரம்

நிதியாண்டு	திருக்கோயில்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை ரூ.
2016-2017	63	2,32,25,641.00
2017-2018	73	2,82,00,476.23
2018-2019	38	1,76,67,788.00
2019-2020 (பிப்ரவரி மாதம் வரை)	54	4,38,85,435.00

நாள் முழுவதும் அன்னதானம்

74. கடந்த 13-9-2012 அன்று ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அன்றே, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு மொத்தம் 8,390 பக்தர்கள் பயன்பெறுகின்றனர் மற்றும் இதற்கென நாளொன்றுக்கு இவ்விரண்டு திருக்கோயில்களால் சுமார் ரூ.2.07 இலட்சம் செலவிடப்படுகின்றது. பக்தர்கள் காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை எப்பொழுது வேண்டுமானாலும் உணவு அருந்தலாம். இத்திட்டம் பக்தர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

ஆன்மிகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள்

75. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விருப்பப்படி பண்டைய தமிழ் இலக்கியங்களில் உள்ள நற்பண்புகள், நீதிநெறி கருத்துகளைக் கதைகள் வாயிலாக

குழந்தைகளின் மனதில் ஆழப்பதிந்திட, சனிக்கிழமைதோறும் ஆன்மீக மற்றும் நீதிநெறி வகுப்புகள் முக்கிய திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகுப்புகளில் கலந்துகொள்ளும் மாணவ மாணவியருக்கு இனிப்பு, கார வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆன்மீக ஒழுக்கநெறி வகுப்புகள் 2019-2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, 334 திருக்கோயில்களில் நடத்தப்பட்டதில் 16,684 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

76. ஆண்டுதோறும் முக்கிய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள், பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்து சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வின்றி பங்கு பெறும் வகையில், சிறப்பு வழிபாடும், பொது விருந்தும் நடத்தப்படுகின்றன. சிறப்பு வழிபாடும், பொது விருந்தும் 2019-2020 ஆம் ஆண்டு சுதந்திரத் திருநாளில் 444 திருக்கோயில்களிலும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் 317 திருக்கோயில்களிலும் சிறப்புடன் நடத்தப்பட்டன.

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்

77. "மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய இரக்கத்திற்கும் அன்புக்கும் உரியவைதான்" என்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது உயரிய எண்ணத்தின்படி, யானைகளின் உடல் நலமும், மன நலமும் பேண அவற்றின் உடல் நலனுக்கேற்ற குளிர்ந்த இயற்கைச் சூழ்நிலையில் "யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்" நடத்தப்பட்டு வருகிறது. 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பேணப்பட்ட யானைகளுக்கு குளிர்ந்த இயற்கை சூழ்நிலையில் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் நடத்தப்பட்டது. 2006-2007 முதல் 2010-2011 வரை கைவிடப்பட்ட இம்முகாம், 2011-2012 ஆம் நிதியாண்டில் மீண்டும் 14-12-2011 முதல் 48 நாட்கள் முதுமலை, தெப்பக்காடு பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

78. 2012-2013 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன்

திருக்கோயில் அருகில் பவானி ஆற்றங்கரையில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 34 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத் திருக்கோயிலைச் சார்ந்த ஒரு யானையும் பங்கேற்று பயனடைந்துள்ளன. அது முதல் சராசரியாக 31 யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் கலந்துகொண்டு வருகின்றன.

79. 2018-2019 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 27 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. 2019-2020 ஆம் ஆண்டு நடந்த முகாமில் தமிழகத் திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களைச் சார்ந்த 26 யானைகளும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த திருக்கோயில்களின் 2 யானைகளும் பங்கேற்று பயனடைந்துள்ளன. இம்முகாமில் பங்கேற்க இயலாத திருக்கோயில் மற்றும் திருமடங்களைச் சார்ந்த யானைகளுக்கு முகாமில் வழங்கப்பட்டது போலவே ஊட்டச்சத்து உணவுகளும், மருந்துகளும் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு, அவற்றின் மன நலமும் உடல் நலமும் பேணப்பட்டன. இம்முகாமில், யானைகளின் நலவாழ்விற்கான முறையான உடற்பயிற்சிகள், உணவு மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. மேலும், யானைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பான பல்வேறு பயிற்சிகள் யானைப் பாகன்கள்/உதவி பாகன்களுக்கு அளிக்கப்பட்டது மட்டுமன்றி, அவர்கள் தமது உடல் நலம் பேணவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இம்முகாமிற்கு அரசு மானியமாக ரூ.1.41 கோடி வழங்கப்பட்டது.

ஏழை எளியோர்களுக்கான திருமணத் திட்டம்

80. 1981 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை, எளிய மக்களுக்கு நிதி வசதிமிக்க திருக்கோயில் உபரி நிதியிலிருந்து திருமணம் செய்து வைக்க இத்திருமணத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் ஆதி திராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பயன்பெற்றனர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையேற்று 2002 ஆம் ஆண்டு 1,008 இணைகளுக்கும், 2003 ஆம் ஆண்டு 1,053 இணைகளுக்கும் திருமணங்கள் திருவேற்காட்டில் நடத்தி வைத்தார்கள். மேலும், 489 இணைகளுக்குச்

சில திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம், 2006-2007 முதல் 2010-2011 வரை கைவிடப்பட்டது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி, 2012-2013 ஆம் ஆண்டில் ஓர் இணைக்கு நான்கு கிராம் தங்க திருமாங்கல்யம் மற்றும் ரூபாய் பத்தாயிரம் செலவில் சீர்வரிசைப் பொருட்கள் என்ற விகிதத்தில் 1,006 இணைகளுக்கு 18-6-2012 அன்று திருவேற்காடு திருக்கோயில் அருகில் திருமணம் சிறப்பாக நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக ரூ.1.51 கோடி செலவிடப்பட்டது.

கம்பிவட ஊர்திகள்

81. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்காக முதல் முறையாக நான்கு கோடி ரூபாய் செலவில் கம்பிவட ஊர்தி அமைத்திட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூன்றாம் நாள் கம்பிவட ஊர்தி சேவை தொடங்கப்பட்டது. இந்தக் கம்பிவட ஊர்தி பக்தர்களின் வரவேற்பு பெற்றதையடுத்து, வேலூர் மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் மற்றும் கரூர் மாவட்டம், அய்யர்மலை, அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகியவற்றுக்குப் புதிதாக கம்பிவட ஊர்தி அமைத்திட ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் உலகத் தரத்தில் கூடுதல் பயணியர் இருக்கை வசதியுடன்கூடிய இரண்டாவது கம்பிவட ஊர்தி ரூ.70 கோடி மதிப்பீட்டில் அமைத்திட ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்கல மகிழுந்துகள்

82. ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறு இருக்கைகள் கொண்ட மின்கல மகிழுந்து ஒன்றினை மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள். இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பின்வரும் பதினொன்று திருக்கோயில்களில் மின்கல மகிழுந்துகள் பயன்பாட்டில் உள்ளன:-

வ. எண்	திருக்கோயில் பெயர்	மகிழுந்து எண்ணிக்கை
1.	ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்	3
2.	பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்	3
3.	திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	3
4.	திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்	1
5.	திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
6.	திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்	1
7.	திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்	1
8.	திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்	1
9.	மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்	2
10.	இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில்	3
11.	மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில்	2
	கூடுதல்	**21**

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களுக்கான அரசு மானியம்

83. கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 490 திருக்கோயில்கள், ஒரு மகளிர் கல்லூரி,

[2020 மார்ச் 24

ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை நிருவகிக்க போதுமான நிதி வசதி இல்லை என்பதை அறிந்து, செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்ததை 2013-2014 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாயாக உயர்வு செய்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, உயர்த்தப்பட்ட அரசு மானியத் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு கால பூஜைத் திட்டம்

84. நிதி வசதியற்று, ஒரு கால பூஜைகூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் வகையில், இத்திட்டம் 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சிறப்புமிகு திட்டத்தில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில், 1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2,500/- வழங்க முன்வந்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/-ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம், ஆக மொத்தம் ரூ.25,000/- அந்தந்த திருக்கோயில் பெயரில் முதலீடு செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டி வருவாயைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

85. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பின், ரூ.25,000/- முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகை போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில்கொண்டு நிரந்தர முதலீட்டுத் தொகையை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.1 இலட்சமாக உயர்த்தினார்கள். இத்திட்டத்தின்கீழ், 11,931 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதற்கு ஒருமுறை வழங்கும் அரசு மானியமாக ரூ.59.48 கோடி வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை ரூ.30 கோடி நிதி வசதிமிக்க திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், 2014-2015 ஆம் ஆண்டில் மேலும் 68 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 11,999 திருக்கோயில்களில் செயல்பாட்டில் உள்ளன.

2020 மார்ச் 24]

86. 2015-2016 ஆம் ஆண்டு மேலும் 505 திருக்கோயில்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2016-2017 ஆம் ஆண்டில் மேலும் 241 திருக்கோயில்களுக்கு, திருக்கோயிலுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில், 12,745 திருக்கோயில்களில் ரூ.127.45 கோடி வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டு, ஒரு கால பூஜைத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

87. இத்திட்டத்தின்கீழ் ஒரு கால பூஜைக்கு திருக்கோயிலுக்கு ரூ.10,000/- நன்கொடை எவரேனும் அளித்தால், பல்வேறு நிதிகளிலிருந்து ரூ.90,000/- நிதி அளித்து ஆக மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் அத்திருக்கோயில் பெயரில் வைப்பு நிதி உருவாக்கி ஒரு கால பூஜை நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

சிறு திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்குதல்

88. 10,000 சிறு திருக்கோயில்களுக்குச் சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும் விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.44 கோடி செலவில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, 15-9-2015 அன்று திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் மேலும் 10,000 சிறு திருக்கோயில்களுக்கு ரூ.2.50 கோடி செலவில் பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 8-5-2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

பழமையான திருக்கோயில்களின் கால பூஜைகளுக்கு புத்துயிரூட்டல்

89. நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பழம்பெரும் திருக்கோயில்களில் கால பூஜைகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டதைக் களைவதற்கு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான கால பூஜைகளைச் செய்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. இதன் பயனாக 19 நிதி வசதிமிக்க

திருக்கோயில்களிலிருந்து 50 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு 2001-2002 முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரை நிதியுதவி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 89 திருக்கோயில்களுக்கு பொது நல நிதியிலிருந்து ரூ.1,19,70,000/- நிதியுதவி வழங்கப்பட்டது.

IV-திருப்பணி

திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்)

90. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த திருக்கோயில்கள், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் போற்றிப் பாடப்பட்ட திருக்கோயில்கள், பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள், கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு திருக்கோயில்கள் ஆகியவற்றை திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்து பேணிப் பாதுகாத்திட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருப்பணி மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான நிதி ஆதாரங்கள்

91. பின்வரும் பல்வேறு நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

- திருக்கோயில்மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி
- திருக்கோயில் நிதி
- பிற திருக்கோயில்களின் உபரி நிதி மாற்றம்.
- அரசு மானியம்
- இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி
- பொது நல நிதி
- ஆலய மேம்பாட்டு நிதி
- கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

- பக்தர்கள்மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி
- நிதி ஆணைய மானியம்
- சுற்றுலாத் துறை நிதி
- ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாக பெறப்படும் நிதி

92. நன்கொடையாளர்கள் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு முன்வரும் நிகழ்வுகளில், அவர்களால் வழங்கப்படும் நிதியாதாரத்தில் குறைவு ஏற்படும் சூழ்நிலை ஏற்படும்போது துறை மூலமாகவும் கூடுதல் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்மூலம் பணி மேற்கொள்ள நன்கொடை நிதி

93. இறை நம்பிக்கை, ஆன்மீகம் மற்றும் சமய ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மனமுவந்து அளிக்கும் நன்கொடையைக் கொண்டும், திருப்பணிகள் (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) நடைபெறுகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 589 திருக்கோயில்களில் ரூ.37.73 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நன்கொடைமூலம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை 4 திருக்கோயில்களில், 4 திருப்பணிகளுக்கு ரூ.51.64 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டன.

திருக்கோயில் நிதி

94. நிதி மிகுந்த திருக்கோயில்களின் திருப்பணி (பாதுகாத்தல்/ மரபுமாறாமல் புதுப்பித்தல்/புத்தாக்கம்) அவற்றின் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 1,759 திருக்கோயில்களில் ரூ.509.18 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் திருக்கோயில் நிதிமூலம் செய்ய ஒப்பளிக்கப்பட்டது. இதில், 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை 269 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.73.74 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

பிற திருக்கோயில்களின் உபரி நிதிமாற்றம்

95. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி தேவைப்படும் திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளை மேற்கொள்ள, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் 36-வது பிரிவின்கீழ் நிதிமாற்றம் மூலமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 211 திருக்கோயில்களில் ரூ.40.16 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்ய இசைவளிக்கப்பட்டன. இதில் 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை 17 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு ரூ.4.26 கோடி நிதிமாற்றம் மூலமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அரசு மானியம்

96. அரசு மானியமாக ஆண்டுதோறும் திருக்கோயில்களின் திருப்பணிக்கென (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.3 கோடி வழங்கப்பட்டு வந்தது. 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் 96 திருக்கோயில்களில் புனரமைப்பு/ புத்தாக்கத்திற்கென ரூ.6 கோடி வழங்கப்பட்டது. ஆண்டுதோறும் வழங்கப்படும் ரூ.3 கோடி அரசு மானியம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013-2014 ஆம் நிதியாண்டு முதல் ரூ.6 கோடியாக உயர்த்தப்பட்டது. 2011-2012, 2012-2013, 2013-2014 மற்றும் 2015-2016 ஆகிய ஆண்டுகளில் 196 திருக்கோயில்களின் சீரமைப்புப் பணிக்கு மொத்தம் ரூ.18 கோடி நிதி வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 32 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ.6 கோடி நிதி வழங்கப்பட்டது.

இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதி

97. தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம், 1959, பிரிவு 96-ன்படி "இந்து சமய அறக்கட்டளைகள் நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அறநிலைய சட்டப் பிரிவு 92(1) மற்றும் 92(2)-ன்படி சகாயத் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் ஆகியன திருக்கோயில்களிலிருந்து வசூலிக்கப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சரக உதவி ஆணையர்கள்மூலம் கருவூலத்தில் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, இந்நிதியில் வரவு வைக்கப்படுகிறது.

உதவித்தொகை மற்றும் தணிக்கைத் தொகை விகிதங்கள்

உதவித் தொகை (பிரிவு 92(1)):-

வ. எண்	சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய்	உதவித் தொகை விகிதம் (விழுக்காடு)
1.	ஆண்டு வருவாய் ரூ.5,000/-க்கு மிகாமலிருந்தால்	இல்லை
2.	ஆண்டு வருவாய் ரூ.5,000/-க்கு மேற்பட்டு ஆனால் ரூ.20,000/-க்கு மிகாமலிருந்தால்	4%
3.	ஆண்டு வருவாய் ரூ.20,000/-க்கு மேற்பட்டு ஆனால் ரூ.60,000/-க்கு மிகாமலிருந்தால்	5%
4.	ஆண்டு வருவாய் ரூ.60,000/-க்கு மேற்பட்டு ஆனால் ரூ.2,00,000/-க்கு மிகாமலிருந்தால்	6%
5.	ஆண்டு வருவாய் ரூ.2,00,000/-க்கு மேற்பட்டு ஆனால் ரூ.5,00,000/-க்கு மிகாமலிருந்தால்	7%
6.	ஆண்டு வருவாய் ரூ.5,00,000/-க்கு மேற்பட்டு இருந்தால்	12%

(2) தணிக்கைத் தொகை (பிரிவு 92(2)):-

வ. எண்	சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய்	தணிக்கைத் தொகை விகிதம் (விழுக்காடு)
1.	ஆண்டு வருவாய் ரூ.5,000/-க்கு மிகாமலிருந்தால்	இல்லை
2.	ஆண்டு வருவாய் ரூ.5,000/-க்கு மேற்பட்டு ஆனால் ரூ.5,00,000/-க்கு மிகாமலிருந்தால்	1.5%
3.	ஆண்டு வருவாய் ரூ.5,00,000/-க்கு மேற்பட்டு இருந்தால்	4%

சட்டப் பிரிவு 96(2)-ன்படி, இத்துறையின் நிருவாகச் செலவினங்கள், ஓய்வூதியமும் சேர்த்து, மாநில கணக்காயரால் மேற்படி அறக்கட்டளைகள் நிதியில் பற்று வைக்கப்படுகின்றன.

இந்நிதியின் வரவு செலவினங்கள் இந்து சமய அறநிலையத் துறையால் ஒத்திசைவு செய்யப்பட்டு, சென்னை முதன்மை மாநிலக் கணக்காயரால் மேற்பார்வையிடப்படுகின்றன. மாநிலக் கணக்காயரின் அறிக்கையின்படி, 31-3-2019 அன்றுள்ளவாறு மேற்படி நிதியில் ரூ.4,681.06 இலட்சங்கள் இருப்பில் (உபரியாக) உள்ளது.

பொது நல நிதி

98. "பொது நல நிதி" என்ற நிதியம் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடை மற்றும் இந்து சமய அறநிறுவனங்களின் பங்களிப்புத் தொகை ஆகியவற்றைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 1,284 திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) ரூ.96.28 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 138 திருக்கோயில்களுக்கு ரூ.13.96 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது.

மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை பொது நல நிதியிலிருந்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.9.65 கோடியும், கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.5.00 கோடியும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆலய மேம்பாட்டு நிதி

99. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காக ரூ.8 கோடி பெற்று மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து தொன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 63 திருக்கோயில்களுக்கு ரூ.7.64 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 2 திருக்கோயில்களுக்கு ரூ.16.80 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

100. 2016-2017 ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.4,800/- வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.11.56 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி

101. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சிறு கிராமப்புறத் திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதியுதவி வழங்கிட "கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டம்" என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி நிதி மாற்றம் செய்து மூலதன நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் வழங்கப்பட்டதை 2012-2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- என உயர்த்தப்பட்டும், 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவர்களின் ஆணைப்படி, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டு, அதன்படி 2011-2012 முதல் 2019-2020 வரை 5,919 திருக்கோயில்களுக்கு ரூ.42.83 கோடி வழங்கப்பட்டது. 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை, இத்திட்டத்தின்கீழ் 532 கிராமப்புறத் திருக்கோயில்கள் அங்கீகரிக்கப்பட்டு ரூ.5.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

102. "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியம் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஐந்தாம் நாள் உருவாக்கப்பட்டது. இந்நிதி அமைப்புக்கு தமது சொந்த பணத்திலிருந்து ரூ.1,00,008/-ஐ நன்கொடையாக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்தார்கள். இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்டோர், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதியமைப்பு "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என்று தற்போது அழைக்கப்படுகிறது. 2011-2012 முதல் 2015-2016 வரை 17 திருக்கோயில்களுக்கு ரூ.1.59 கோடி

நிதியுதவி வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில் ஒரு கால பூஜை வைப்பு நிதித் திட்டத்திற்கு இந்நிதியிலிருந்து பங்குத் தொகையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.5,200/- வீதம் 241 திருக்கோயில்களுக்கு ரூ.12.53 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசால் நேரடியாக நிருவகிக்கப்பட்டு வருகிறது.

பக்தர்கள்மூலம் நேரடியாக மேற்கொள்ளப்படும் உபயத் திருப்பணிகள்

103. பக்தர்கள் தாமே முன்வந்து தமது சொந்த செலவிலும், துறை மேற்பார்வையிலும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி (பாதுகாத்தல், மரபுமாறாமல் புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கம்) செய்வது வழக்கத்திலுள்ளது. இவர்களது உபயத் திருப்பணி, துறையின் கண்காணிப்புடன் ஊக்குவிக்கப்படுகிறது. 2011-2012 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 1,076 திருக்கோயில்களில் ரூ.175.32 கோடி மதிப்பீட்டில் உபயத் திருப்பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 252 திருக்கோயில்களில், 281 உபயத் திருப்பணிகளுக்கு ரூ.36.68 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்கள் திருப்பணி நிதி

104. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி பெறப்பட்டு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி அளிக்கப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்தொகை போதுமானதாக இல்லை என்பதையறிந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இத்தொகை ஒரு திருக்கோயிலுக்கு ரூ.50,000/- என உயர்வு செய்யப்பட்டும், 2016-2017 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டு, 2011-2012 முதல் 2019-2020 வரை 7,159 திருக்கோயில்களுக்கு ரூ.53.39 கோடி விடுவிக்கப்பட்டது. 2019–2020 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,000 திருக்கோயில்கள் அங்கீகரிக்கப்பட்டு, ரூ.10 கோடி தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை நிதி

105. தமிழகத் திருக்கோயில்கள் பெரும் சுற்றுலா ஈர்ப்புத் தலங்களாகத் திகழ்கின்றன. திருக்கோயில்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பக்தர்களின் நலன் கருதி கழிப்பறைகள், குளியலறைகள், குடிநீர் வசதி, தங்கும் கூடங்கள், தகவல் மையங்கள், அணுகு சாலைகள், உயர் கோபுர மின்விளக்குகள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் புல்வெளி அமைப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சுற்றுலாத் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன. இதனடிப்படையில், கடந்த ஒன்பது ஆண்டுகளில் 19 திருக்கோயில்களுக்கு ரூ.10.22 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

106. ஒளிரூட்டுதல் மற்றும் திருக்கோயில் திருக்குளங்களைச் சீரமைத்தல் போன்ற பணிகளுக்காக மத்திய அரசின் “பிரசாத்” (PRASAD-Pilgrimage Rejuvenation And Spiritual Augmentation Drive) திட்டத்தின்கீழ் ரூ.8.87 கோடி செலவில் பின்வரும் திருக்கோயில்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
2.	அருள்மிகு அஷ்டபுஜப்பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்.
3.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.
4.	அருள்மிகு ஜுரகரேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
5.	அருள்மிகு கட்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
6.	அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
7.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி (குமரகோட்டம்) திருக்கோயில், காஞ்சிபுரம்.
8.	அருள்மிகு வைகுண்டப் பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்.
9.	அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம்.
10.	அருள்மிகு உலகளந்த பெருமாள் திருக்கோயில், காஞ்சிபுரம்.

[2020 மார்ச் 24

ஆசிய வளர்ச்சி வங்கி மூலமாகப் பெறப்படும் நிதி

107. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவிமூலம் யாத்ரி நிவாஸ், சுற்றுலா தகவல் மையம், சுற்றுலா வரவேற்பு மையம் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள் போன்றவைகளுக்காக சுற்றுலாத் துறைமூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

108. 2017-2018 ஆம் ஆண்டில் 11 திருக்கோயில்களுக்கு ரூ.52.83 கோடி நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

பழமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்தல், பழைமை மாறாது புதுப்பித்தல் மற்றும் புத்தாக்கத் திருப்பணி:—

109. திருக்கோயில்களின் பழைமையினை பாதுகாப்பது குறித்து பாதுகாத்தல் முறை கையேடு (Conservation Manual) ஒன்றினை யுனெஸ்கோ நிறுவனத்துடன் கலந்து தயார் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம், தன்னிச்சை நீதிப்பேராணை மனு எண் 574/2015-ல் இத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படியான கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாத்தல் பணி செய்வதற்கு உகந்த வழிமுறைகள் வகுக்கும் வரையில் இன்றியமையாத பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக ஆலோசனைகள் வழங்கிட 7 நபர்கள் கொண்ட ஒரு வல்லுநர் குழுவினை 7-11-2016 தேதிய உத்தரவின்படி உயர் நீதிமன்றம் அமைத்துள்ளது.

110. அதன் பின்பு மத்திய மற்றும் மாநில தொல்லியல் துறைகளிலிருந்து 22 வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருப்பணி கருத்துருக்கள் பெறப்பட்டு வருகின்றன. குழு வல்லுநர்களின் அறிவுரைப்படி, தொன்மைமிக்க திருக்கோயில்களை பாதுகாத்தல், மரபு மாறாது புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொல்லியல் வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறப்பட்ட பின்னர், அரசால் அமைக்கப்பட்டுள்ள மண்டல மற்றும் மாநில அளவிலான பரிசீலனைக் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. அதன் பின்னர் முன்மொழிவுகள் உயர் நீதிமன்றக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அக்குழுவின் அறிவுரைப்படி திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 24]

சுவரோவியங்களை புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தல்

111. சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 50 திருக்கோயில்களின் பழைமையான சுவரோவியங்களை பழைமை மாறாது புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ள ஆலோசனை மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

112. இக்குழுவின் அறிவுரையின்படி, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் ரூ.81 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டு உள்ளன. இதேபோல், திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர், அருள்மிகு நாறும்பூநாதசுவாமி திருக்கோயில் இராஜகோபுர சுவரோவியங்கள் புனரமைக்கும் பணி ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இவை தவிர ரூ.64.10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம், அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலின் வெளிப்பிரகார சுவரில் 433 சதுர மீட்டரில் வரையப்பட்டுள்ள மூலிகை ஓவியங்களை பழைமை மாறாது புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது.

113. கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு, அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் சுற்றுச் சுவரில் உள்ள பழைமையான ஓவியங்களைப் பழைமை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளுக்கு ரூ.97.20 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

114. முதன்முதலாக சிமெண்ட் பூச்சின்கீழ் நாயக்கர் காலத்து சுவரோவியம் சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் புனரமைப்புப் பணியின்போது மே 2015-ல் கண்டறியப்பட்டுள்ளது.

திருக்குளங்களைச் சீரமைத்தல் மற்றும் மழைநீர் சேகரித்தல்

115. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள மொத்த திருக்கோயில்களில் 1,586 திருக்கோயில்களுக்கு 2,359 திருக்குளங்கள் உள்ளன. இவற்றில் 1,068 திருக்குளங்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் இருந்தன. 2011-2012 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 867 திருக்குளங்கள் ரூ.5.30 கோடி செலவில்

புனரமைப்பு செய்யப்பட்டன. எஞ்சிய திருக்குளங்களைச் சீரமைக்கும் திருப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் 20 திருக்குளங்கள் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டன மற்றும் 30 திருக்குளங்கள் ரூ.7.24 கோடி மதிப்பீட்டில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

116. மழைநீர் சேகரிப்பு செயலாக்கத் திட்டத்தின்கீழ், 2014 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் 5,400 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் 1,004 திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

117. திருக்குளங்களைப் பேணிப் பாதுகாத்திட பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

- திருக்குளங்களின் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
- திருக்குளங்களைச் சுற்றி சுவர் அமைத்தல்.
- தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.
- திருக்குளங்களில் உள்ள படிகளைச் சீரமைத்தல்.
- திருக்குளங்களுக்கு மழைநீர் வருவதற்கும் உபரிநீர் வெளியேறுவதற்கும் வழி ஏற்படுத்துதல்.

மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு வைகை ஆற்றிலிருந்து நீர் கொணர பழைய நீர்வரத்து வாய்க்காலைப் புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி

118. மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 1 இலட்சம் சதுர அடி பரப்பளவும், 538 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட அருள்மிகு மாரியம்மன் தெப்பக்குளத்தில் ஒவ்வொரு வருடமும் தை பூசத்தன்று அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் தெப்பத் திருவிழா நடைபெறும். சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் மன்னர் காலத்திலிருந்து வைகை நதியில் இருந்து பனையூர் கால்வாய்மூலம் நீர் வரப்பெற்று, தெப்பக்குளத்தின் அருகில் உள்ள வண்டல் மண் தேங்கும் தொட்டிகளில் தூய்மையாக்கப்பட்டு, நீர் தெப்பக்குளத்தில் நிரம்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

119. காலப்போக்கில் பனையூர் வாய்க்காலில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளால் தெப்பக்குளத்திற்கு வரும் தண்ணீர் வரத்து முற்றிலும் நின்று போய்விட்டது. இடைப்பட்ட காலத்தில் தெப்பத் திருவிழாவிற்கான தண்ணீர் அருகில் உள்ள வைகை நதியில் இருந்து மின் மோட்டார்மூலம் நிரப்பப்பட்டு தெப்பத் திருவிழா நடைபெற்று வந்தது.

திருக்கோயில் நிருவாகத்தின் தொடர் முயற்சியால், மாவட்ட நிருவாகம் மற்றும் பொதுப் பணித் துறையின் ஒத்துழைப்புடன் பனையூர் வாய்க்காலில் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி, வாய்க்கால் தூர்வாரி செப்பனிட்டு, வைகையாற்றில் தடுப்பணை கட்டி, சுமார் 40 ஆண்டுகளுக்கு பிறகு பனையூர் கால்வாயின் வழியே தண்ணீர் வரச்செய்து தெப்பக்குளத்தில் சுமார் 14 அடிக்கு மேல் தண்ணீர் நிரப்பி இந்த ஆண்டின் தெப்பத் திருவிழா 8-2-2020 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதன்மூலம் 400 ஆண்டு வழக்கத்திற்கு புத்துயிர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பட்டயப் பொறியாளர்களைப் பட்டியலிடுதல்

120. திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 13 பட்டயப் பொறியாளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூலமாக திருக்கோயில்களைச் சீரமைப்பதற்குரிய கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடங்கள், மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஸ்தபதிகளைப் பட்டியலிடுதல்

121. சிற்ப சாஸ்திர மற்றும் ஆகம சாஸ்திர விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், தம் முன்னோர்மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்தோர், சிற்ப சாஸ்திரக் கலையில் பட்டம் அல்லது பட்டயம் பெற்றுள்ளோர் ஆகியோர் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அவ்வப்போது ஸ்தபதிகளாகவும், சிற்பிகளாகவும் பட்டியலிடப்பட்டு வருகின்றனர்.

2011-2012 முதல் 2015-2016 வரை 539 ஸ்தபதி/சிற்பிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குடமுழுக்கு (கும்பாபிஷேகம்/சம்ப்ரோக்ஷணம்)

122. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் ஆகம விதிப்படி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். இதனடிப்படையில், திருக்கோயில்கள் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்படுகின்றன:-

- ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடல்பெற்ற பழைமை வாய்ந்த திருக்கோயில்கள்.
- வரலாற்றுப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- பிரார்த்தனை முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.
- கிராமப்புறங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள்.

123. 2011-2012 முதல் 2019-2020 வரை 11,448 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை 373 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா

124. தஞ்சாவூர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மாமன்னன் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற அற்புதத் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் இத்துறை சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் அறிவிப்பு செய்யப்பட்ட அரண்மனை தேவஸ்தானத்துடன் இணைந்த முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இந்திய தொல்லியல் துறையாலும், திருக்கோயில் நிருவாகம் இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயில் உலக பாரம்பரிய மரபு சின்னமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

125. இத்திருக்கோயிலில் கடந்த 1010, 1729, 1843, 1980 மற்றும் 1997 ஆண்டுகளில் திருக்குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. தற்போது கடந்த 5-2-2020-ல் திருக்குடமுழுக்கு விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது.

126. இத்திருக்கோயிலில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கும் பணிகளும், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் இரசாயனப் பூச்சால் சுத்தம் செய்திடல் பணிகளும் மத்திய தொல்லியல் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இத்திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறுவதற்கு திருக்கோயில் நிதி ரூ.71 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 39 உபயதாரர்கள்மூலம் சுமார் ரூ.264.50 இலட்சம் திருக்குடமுழுக்கு விழாவிற்கு செலவிடப்பட்டுள்ளது.

சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா

127. சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 22-8-2004 திருக்குடமுழுக்கு விழா சிறப்புற நடத்தப்பட்டுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், இத்திருக்கோயில் கோபுரங்கள் மற்றும் அனைத்து சன்னதிகளுக்கும் திருப்பணி மேற்கொள்ளும் வகையில் இறையுணர்வும், கொடை உள்ளமும் கொண்ட பேரன்பர்களின் ஆதரவோடு உபயதாரர்கள்மூலம் தொல்பொருள் துறை மற்றும் அறநிலையத் துறையின் அனுமதி பெற்று, கடந்த 6-6-2019 அன்று சன்னதி விமானங்கள் மற்றும் கோபுரங்களுக்கு பாலாலயம் செய்விக்கப்பட்டு, கிழக்கு ஏழுநிலை இராஜகோபுரம், ஐந்துநிலை கிழக்கு ரிஷிகோபுரம், ஐந்து நிலை மேற்குக் கோபுரம் ஆகிய கோபுரங்களில் பராமரிப்புத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. மேலும், அருள்மிகு விஜயகணபதி, சுப்பிரமணியர், அருள்மிகு மருந்தீசுவரர், திரிபுரசுந்தரி, தியாகராஜர், நடராஜர் முதலான சன்னதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து சன்னதி விமானங்களுக்கும் வண்ணம் தீட்டப்பட்டு, திருப்பணிகள் அனைத்தும் உபயத் திருப்பணியாக ரூ.75 இலட்சம் மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. திருப்பணிகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து 5-2-2020 அன்று குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

மரத் திருத்தேர்

128. இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்களில் 809 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 989 மரத் திருத்தேர்கள் உள்ளன. 2006 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதிமூலம் திருத்தேர்கள் திருப்பணிக்காக (பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்) ரூ.10.50 கோடி நிதி ஏற்படுத்தப்பட்டது. 2011-2012 முதல் 2019-2020 முடிய 204 திருத்தேர்கள் ரூ.27.40 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் நிதி ஆண்டில் 10 திருத்தேர்கள் ரூ.2.47 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு, 15 புதிய திருத்தேர்கள் ரூ.4.57 கோடி மதிப்பீட்டில் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

129. பொது நல நிதியிலிருந்து திருத்தேர் திருப்பணிக்கு 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.1.18 கோடியும், 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.83.85 இலட்சமும், 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.49.68 இலட்சமும், 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ.159.76 இலட்சமும் விடுவிக்கப்பட்டுள்ளது.

தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் உள்ள திருக்கோயில்கள்

130. திருக்கோயில்களில் பக்தர்கள் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற உற்சவமூர்த்தியை தங்க ரதத்திலோ, வெள்ளிரதத்திலோ எழுந்தருளச் செய்து ரதம் இழுப்பது நீண்டகால வழக்கத்தில் உள்ளது.

தற்போது, கீழ்க்காணும் 65 திருக்கோயில்களில் தங்கரதமும், 49 திருக்கோயில்களில் வெள்ளிரதமும் பயன்பாட்டில் உள்ளன:-

தங்க ரதம் உள்ள திருக்கோயில்கள்

வ. எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி.
2.	அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை.
3.	அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை.

வ. எண்	திருக்கோயில் பெயர்
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
5.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
6.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.
7.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோவில்.
8.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சநாரி, கோயம்புத்தூர்.
9.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
10.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
11.	அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில்.
12.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
13.	அருள்மிகு வானமாமலைப் பெருமாள் திருக்கோயில், நாங்குநேரி (சப்பரம்).
14.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.
15.	அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், இரத்தினகிரி.
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை.
17.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்.
18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு
19.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.
20.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்.
21.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை.

வ. எண்	திருக்கோயில் பெயர்
22.	அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.
23.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
24.	அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை.
25.	அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு.
26.	அருள்மிகு அனந்தபத்மநாபசுவாமி திருக்கோயில், அடையாறு, சென்னை.
27.	அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், சிவகாசி.
28.	அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.
29.	அருள்மிகு வேங்கடாஜலபதி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில், கும்பகோணம்.
30.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.
31.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்.
32.	அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோயம்புத்தூர்.
33.	அருள்மிகு சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர்.
34.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல்.
35.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், நாமக்கல்.
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை, கோபிசெட்டிபாளையம்.

வ. எண்	திருக்கோயில் பெயர்
37.	அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி.
38.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி.
39.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை, சிவகங்கை.
40.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்.
41.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி.
42.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்.
43.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், சேலம்.
44.	அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர் கோயில், மதுரை.
45.	அருள்மிகு இலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர், வேலூர்.
46.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.
47.	அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.
48.	அருள்மிகு அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், மேல்மலையனூர், விழுப்புரம்.
49.	அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில், பாரியூர், ஈரோடு.
50.	அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில், திருப்போரூர், காஞ்சிபுரம்.
51.	அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, கோயம்புத்தூர்.

வ. எண்	திருக்கோயில் பெயர்
52.	அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழி, திருநெல்வேலி.
53.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர்.
54.	அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில், மடப்புரம், சிவகங்கை.
55.	அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோயில், பேளூர், சேலம்.
56.	அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், சுக்கிரவாரபேட்டை, கோயம்புத்தூர்.
57.	அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், சிவகாசி, விருதுநகர்.
58.	அருள்மிகு ஆமருவிப்பெருமாள் திருக்கோயில், தேரழந்தூர், நாகப்பட்டினம்.
59.	அருள்மிகு பூங்கா முருகன் திருக்கோயில், தல்லாக்குளம், மதுரை.
60.	அருள்மிகு வாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், விருதுநகர்.
61.	அருள்மிகு சண்முகநாதசுவாமி திருக்கோயில், குன்றக்குடி (கேடகம்/சப்பரம்).
62.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், திருவப்பூர், புதுக்கோட்டை.
63.	அருள்மிகு செளந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்.
64.	அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி.
65	அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், கல்வடங்கம், சங்ககிரி வட்டம், சேலம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வெள்ளி ரதம் உள்ள திருக்கோயில்கள்

வ.எண்	திருக்கோயில் பெயர்
1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
3.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
4.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
5.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
7.	அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.
8.	அருள்மிகு ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில், கும்பகோணம்.
9.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர்.
10.	அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோவில்.
11.	அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயில், சீர்காழி.
12.	அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை.
13.	அருள்மிகு மாரியம்மன், அங்காளம்மன் திருக்கோயில், பொள்ளாச்சி.
14.	அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில், உடுமலைப்பேட்டை.
15.	அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
16.	அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர்.
17.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்.

18.	அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.
19.	அருள்மிகு முத்துகுமாரசுவாமி திருக்கோயில், பூங்கா நகர், சென்னை.
20.	அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயில், அரியக்குடி.
21.	அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில், குன்றக்குடி.
22.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், கீழச்செவல்பட்டி.
23.	அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயில், நாட்டரசன்கோட்டை.
24.	அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் திருக்கோயில், காரைக்குடி.
25.	அருள்மிகு நகரசிவன் என்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், தேவகோட்டை.
26.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர், திருமயம்.
27.	அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு.
28.	அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி.
29.	அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், பவானி.
30.	அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆய்க்குடி, திருநெல்வேலி.
31.	அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், தொட்டியம், திருச்சிராப்பள்ளி.
32.	அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நெய்வேலி.
33.	அருள்மிகு வெயிலுக்கு உகந்த விநாயகர் திருக்கோயில், உப்பூர், இராமநாதபுரம்.
34.	அருள்மிகு சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்.
35.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குமரக்கோட்டம், காஞ்சிபுரம்.
36.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம்.

37.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், செட்டிக்குளம், பெரம்பலூர்.
38.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காரைக்குடி, சிவகங்கை.
39.	அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், தங்கசாலை, சென்னை.
40.	அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
41.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், விராலிமலை, புதுக்கோட்டை.
42.	அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், திருவண்ணாமலை.
43.	அருள்மிகு சேவுகப் பெருமாள் திருக்கோயில், சிங்கம்புணாரி, சிவகங்கை.
44.	அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயில், பாலாற்றங்கரை, வேலூர்.
45.	அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம்.
46.	அருள்மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் திருக்கோயில், சென்னை.
47.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை.
48.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை.
49.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயில்கந்தன்குடி, திருவாரூர்.

V-பக்தர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள்

அடிப்படை வசதிகள்

குடிநீர் வசதி

131. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு போதுமான அளவு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும்,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 4.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தெக்களூர் கிராமத்திலிருந்து ரூ.1.78 கோடி செலவில் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலுக்கு 9.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிசாகர் அருகிலுள்ள கொத்தமங்கலம் கிராமத்திலிருந்து ரூ.2.09 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

132. திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் மற்றும் மதுரை மாவட்டம், அழகர் கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர் வசதி மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

133. திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பாலாற்றில் தடுப்பணை கட்டியும், உள் எடுப்பு கிணறு அமைத்தும் 2.31 MLD (million litres per day) தண்ணீரை எடுத்து இத்திருக்கோயிலுக்கு பயன்படுத்தும் திட்டம் ரூ.22.72 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் வைப்பு பணியாக நடைபெற்று வருகிறது.

134. மதுரை மாவட்டம், அழகர் கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கள்ளந்திரி கிராமத்தில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் வைப்பு பணியாக நடைபெற்று வருகிறது.

நவீன கழிப்பிட வசதிகள்

135. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 2011-2012 முதல் 2019-2020 வரை, 163 திருக்கோயில்களில் ரூ.28.16 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 15 திருக்கோயில்களில் ரூ.2.94 கோடி மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தங்கும் வசதிகள்

136. திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக முக்கிய திருக்கோயில்களில் குடில்கள், தங்கும் அறைகள், துயில் கூடங்கள், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை 33 திருக்கோயில்களில் ரூ.65.89 கோடி மதிப்பீட்டில் தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை, 7 திருக்கோயில்களில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் தங்கும் கூடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

137. இது தவிர, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நிதி பங்களிப்புடன் ரூ.47.09 கோடி மதிப்பீட்டில் ஒரே நேரத்தில் சுமார் 1,000 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக குடில்கள், அறைகள், துயில் கூடங்கள், உணவகம் போன்ற வசதிகளுடன் கூடிய "யாத்ரி நிவாஸ்" ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 30-6-2014 அன்று திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.28 கோடி மதிப்பீட்டில் வைப்புப்பணியாக பொதுப் பணித் துறைமூலம் "யாத்ரி நிவாஸ்" கட்டப்பட்டு வருகிறது. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் 500 பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக ரூ.30.92 கோடி திருத்திய மதிப்பீட்டில் "யாத்ரி நிவாஸ்" வைப்புப் பணியாக பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்டு வருகிறது. ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் வசதிக்கென 2 ஓய்வுக் கூடங்கள், 2 குடில்கள், அலுவலகம், தகவல் மையம், உணவருந்தும் கூடம் ஆகியன ரூ.6.71 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளின் வசதிக்கென "யாத்ரி நிவாஸ்" ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன.

138. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பக்தர்கள் வசதிக்காக 476 பக்தர்கள் தங்கும் வகையில் ரூ.29.16 கோடி மதிப்பீட்டில் "யாத்ரி

நிவாஸ்" கட்டும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அன்னதானக் கூடம்

139. அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்களில் சேவார்த்திகளின் பயன்பாட்டிற்கென புதிய அன்னதானக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2011-2012 முதல் 2019-2020 வரை 101 திருக்கோயில்களில் 101 அன்னதானக் கூடங்கள் ரூ.33.77 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 13 திருக்கோயில்களில் 13 அன்னதானக் கூடங்கள் ரூ.7.38 கோடி மதிப்பீட்டில் கட்ட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் வழிகாட்டி/தகவல் பலகைகள்

140. திருக்கோயில்களை எளிதில் சென்றடைவதற்கு ஏதுவாக முக்கிய சாலைகளில் திருக்கோயில் பெயருடன்கூடிய வழிகாட்டி பலகைகளும், அந்தந்த பகுதியில் அமைந்துள்ள அனைத்து திருக்கோயில்கள் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள ஏதுவாக தொடர்வண்டி மற்றும் பேருந்து நிலையங்களில் தகவல் பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு உயர்தர திருநீறு மற்றும் குங்குமம் வழங்குதல்

141. பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் அபிஷேக விபூதி தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, ரூ.1 கோடி மதிப்பீட்டில் நவீன இயந்திரங்கள்மூலம் தரமான குங்குமம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம்

142. தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இதன் அவசியத்தை கருத்தில் கொண்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள், சீனாவில் உள்ள மானசரோவர் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒருமுறை, ஒரு யாத்ரீகருக்கு ரூ.40,000/- வீதம் நிதியுதவியும், அதுபோன்று நேபாளத்திலுள்ள முக்திநாத் புனித யாத்திரை பயணம் முடித்து வருவோருக்கு வாழ்நாளில் ஒரு முறை, ஒரு யாத்ரீகருக்கு ரூ.10,000/- வீதம் நிதியுதவியும் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டில் வசிக்கும் தலா 250 இந்து யாத்ரீகர்களுக்கு வழங்க ஆணையிட்டார்கள்.

மானசரோவர் மற்றும் முக்திநாத் யாத்திரை பயனாளிகளின் ஆண்டுவாரியான பட்டியல்

ஆண்டு	மானசரோவர்		முக்திநாத்		பயனாளிகள் எண்ணிக்கை கூடுதல் (2 + 4)	செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) கூடுதல் (3 + 5)
	பயனாளிகள் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)	பயனாளிகள் எண்ணிக்கை	செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
2012-2013	146	58.40	10	1.00	156	59.40
2013-2014	209	83.60	11	1.10	220	84.70
2014-2015	240	96.00	163	16.30	403	112.30
2015-2016	51	20.40	72	7.20	123	27.60
2016-2017	249	99.60	136	13.60	385	113.20
2017-2018	326	130.40	178	17.80	504	148.20

143. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2017-2018 முதல் மேற்படி யாத்திரைகள் மேற்கொள்ளும் பயனாளிகளின் எண்ணிக்கை தலா 250-லிருந்து 500 ஆகவும், மொத்த நிதியுதவி ரூ.1.25 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

144. 2018-2019 ஆம் ஆண்டில் மானசரோவர் பயணம் முடித்து வந்த 367 யாத்ரீகர்களுக்கு ரூ.1.47 கோடி மற்றும் முக்திநாத் பயணம் முடித்து வந்த 264 யாத்ரீகர்களுக்கு ரூ.26.40 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1.73 கோடி விரைவில் வழங்கப்படவுள்ளது.

புடவை மற்றும் வேட்டிகள் வழங்குதல்

145. முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைத் தாய்மார்களுக்கு சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் முக்கியத் திருக்கோயில்களில் காணிக்கையாகப் பெறப்படும் பருத்திநூல் புடவை மற்றும் வேட்டிகள் வழங்கப்படுகின்றன. 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 1,78,786 நபர்கள் பயனடைந்துள்ளனர். 2019-2020 ஆம் ஆண்டில் 45,732 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

பக்தர்களுக்கு இலவச லட்டு பிரசாதம் வழங்கும் திட்டம்

146. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மிக பிரபலமான இந்து வழிபாட்டு தலங்களில் ஒன்றாகும். தமிழகத்தில் சைவ சமயத்தின் மிகப்பெரிய வழிபாட்டுத் தலமாகவும், உலகம் முழுவதிலும் இருந்து பயணிகள் வருகின்ற சுற்றுலாத் தலமாகவும் இருந்து வருவதாலும், இத்திருக்கோயிலுக்கு நாள்தோறும் உள்ளூரில் இருந்தும், வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் சேவார்த்திகளாகவும், வெளிநாட்டில் இருந்து சுற்றுலாப் பயணிகளாகவும் வருகை புரிகின்றனர்.

147. திருக்கோயில்மூலம் நேரடி தயாரிப்பில் லட்டு, அப்பம், தேன்குழல், வடை, புட்டமுது, புளியோதரை மற்றும் சர்க்கரை பொங்கல் தயார் செய்யப்பட்டு, பக்தர்களுக்கு ரூ.10/- என்ற சலுகை விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

148. இத்திருக்கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு 13,000-லிருந்து 15,000 பக்தர்கள் அம்மன்/சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஒரு லட்டு 30 கிராம் எடையில் நாள் முழுவதும் ஆண்டு முழுவதும் இலவச லட்டு வழங்கும் திட்டம் 8-11-2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சிமூலம் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கிய 8-11-2019 முதல் பிப்ரவரி 2020 முடிய 22,16,640 பக்தர்கள் இலவச லட்டு பிரசாதம் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான உத்தேச ஆண்டு செலவினம் ரூ.202.68 இலட்சம் ஆகும்.

VI-திருக்கோயில்கள் தூய்மையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

உழவாரப் பணி

149. பாரம்பரியமிக்க வரலாற்றுச் சின்னங்களாக விளங்கும் தமிழகத்தின் தொன்மைமிகு திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களையும், அழகிய விமானங்களையும், மண்டபங்களையும், பெரிய மதிற்சுவர்களையும் உள்ளடக்கி உள்ளன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும். இக்கட்டுமானங்களில் முளைத்துள்ள செடி, கொடி மற்றும் மரங்கள் கட்டுமானங்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கின்றன.

150. சமயக் குரவர்களில் ஒருவரான அப்பரடிகள் தொடங்கிச் செய்த உழவாரப் பணிக்கு புத்துயிர் அளித்திடும் வகையில், 2011-2012 ஆம் ஆண்டில் உழவாரப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு, கடந்த ஒன்பது ஆண்டுகளில் 3,948 திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வெளிமுகமைமூலம் தூய்மை பராமரிப்பு

151. திருக்கோயில்களைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் கருதி வெளிமுகமைமூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிமுகமை மூலமாக 110 பெரிய திருக்கோயில்கள் சிறந்த முறையில் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இதர திருக்கோயில்களிலும் இந்த முறையை விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில் வளாகத்தில் நெகிழி (Plastic) பயன்பாட்டினை தடை செய்தல்

152. திருக்கோயில்களில் ஆரோக்கியமும் தூய்மையும் மிக்க சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் நெகிழி பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள அங்காடிகளில் அபிஷேக அர்ச்சனைப் பொருள்கள் மற்றும் பிரசாதப் பொருள்கள் ஆகியவை துணிப் பைகள், காகிதப் பைகள், மூங்கில் தட்டுகள், பாக்குமட்டை தட்டுகளில் வழங்கப்படுகின்றன.

மாற்று மின் திட்டம்

153. திருக்கோயில்களில் மின் செலவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும், சூரிய சக்தி மூலம் மாற்று மின் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2012-2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், சுசீந்திரம், அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளன. சூரிய ஒளி உபகரணங்கள் நிறுவிய பின்னர் மின் கட்டணப் பட்டியலில் ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/- வரை சேமிப்பு ஏற்படுகிறது.

VII-பாதுகாப்பு நடவடிக்கைகள்

திருக்கோயில்கள் பாதுகாப்பு

154. திருக்கோயில் வளாகங்களில் மின்னணு பாதுகாப்பு உபகரணங்களான கள்வர் எச்சரிக்கை மணி, மெட்டல் டிடெக்டர், நவீன ஒளிப்பதிவு (டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர்), CCTV கேமராக்கள் மற்றும் உறுதியான இரும்புக் கதவுகள் போன்றவை பொருத்தப்பட்டுள்ளன. வெளிமுகமைமூலம் பெரும்பாலான திருக்கோயில்களில் பகல் மற்றும் இரவுக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவைகள் பாதுகாப்பு

155. திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலையுயர்ந்தவைகளைப் பாதுகாத்திட உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்கள், பாதுகாப்பு அறைகள், களவு எச்சரிக்கை மணி பொருத்துதல், தொட்டிப் பூட்டு அமைப்பு ஏற்படுத்துதல், இரும்பு வாயிற்கதவுகள் பொருத்துதல், கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் ஆகியன பொருத்துதல், பகல் மற்றும் இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் நியமனம் ஆகியன செய்யப்பட்டுள்ளன. மேலும், சிலைகள்/உலோகத் திருமேனிகள் பதிவு செய்வதற்கு ஏதுவாக ஆவணப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையால் 31,273 திருக்கோயில்களிலுள்ள 3,37,151 சிலைகள்/உலோக திருமேனிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அறைகள்

156. 11,512 திருக்கோயில்களில் உலோகச் சிலை பாதுகாப்பு அறைகள் உள்ளன. பாதுகாப்பு அறைகள் தேவைப்படும் திருக்கோயில்கள் விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு அறைகளில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி, இரும்பு கிரில் கதவுகள், தொட்டி பூட்டு முறை மற்றும் பாதுகாப்பு காவலர்கள் ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

157. இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள திருக்கோயில்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக களவு எச்சரிக்கை மணி மற்றும் கண்காணிப்பு கேமராவுடன்கூடிய உயர் பாதுகாப்பு அறைகள் கட்டும் பணிக்கு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாக நிதியிலிருந்து ரூ.308.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு அறை கட்டப்பட்டுள்ளது. அதேபோன்று, 103 திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வரும் காலங்களில் தேவையின் அடிப்படையில் திருக்கோயில்களில் பாதுகாப்பு அறை கட்டப்படும்.

களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம்

158. களவு எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்து களவு எச்சரிக்கை மணி பொருத்துவதற்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 75 விழுக்காடு இந்து சமய அறநிலையத் துறையின் மூலமும், எஞ்சிய 25 விழுக்காடு நன்கொடையாளர் பங்களிப்பு அல்லது திருக்கோயில் நிதி மூலமும் நிதியுதவி செய்திட இத்திட்டத்தின்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான திருக்கோயில்கள் கிராமப்புறங்களில் உள்ள நிதி வசதியற்ற திருக்கோயில்கள் என்பதையும், இத்திருக்கோயில்களில் விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதாலும் அவற்றைப் பாதுகாப்பது தலையாய கடமை என்பதையும் உணர்ந்து நிதி வசதியற்ற திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி பொருத்திட ஆகும் செலவினத் தொகை

முழுவதையும் மேற்கண்ட மைய நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை மொத்தம் 849 திருக்கோயில்களுக்கு ரூ.101.81 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. 2019-2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 19 திருக்கோயில்களுக்கு ரூ.2,32,750/- நிதியுதவி வழங்கப்பட்டது.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள்

159. திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும்பொருட்டு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச்சென்று விழா முடிந்ததும் மீண்டும் இம்மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள அனைத்து உலோகத் திருமேனிகளுக்கும் பூஜைகள் செய்யப்படுகின்றன.

160. பாதுகாப்பு அறைகள் கட்டுவதற்கு போதிய வருவாய் இல்லாத திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்பற்ற உலோகத் திருமேனிகளைப் பாதுகாப்பாக வைத்திட உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் கீழ்க்காணும் 19 மையங்களில் 8,370 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பு மையங்களில் CCTV, கள்வர் எச்சரிக்கை மணி மற்றும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1.	திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்).
2.	அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3.	அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில், திருநெல்வேலி.
4.	அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்.

5.	அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், காந்திநகர், வேலூர்.
6.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.
7.	அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம்.
8.	அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிபுலியூர், கடலூர்.
9.	அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், கும்பகோணம்.
10.	அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயில், பேரூர், கோயம்புத்தூர்.
11.	அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில், திருகோகர்ணம், புதுக்கோட்டை.
12.	அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை.
13.	அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில், சிவகங்கை.
14.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர் (கூடுதல் மையம்).
15.	அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர்.
16.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.
17.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அதியமான் கோட்டை, தருமபுரி.
18.	அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், விழுப்புரம்.
19.	அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்.

161. மேலும், கீழ்க்கண்ட 15 மையங்களில் உலோகத் திருமேனிகளை பாதுகாக்கும்பொருட்டு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி,

[2020 மார்ச் 24

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, இந்த உலோகத் திருமேனி மையங்களில் 335 சிலைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

1.	அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மலைக்காவலர் திருக்கோயில், திருச்செங்கோடு, நாமக்கல்.
2.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்.
3.	அருள்மிகு மதனகோபாலசுவாமி மற்றும் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், பெரம்பலூர்.
4.	அருள்மிகு நாகராஜா திருக்கோயில், நாகர்கோவில், கன்னியாகுமாி.
5.	இணை ஆணையர் அலுவலக வளாகம், இந்து சமய அறநிலையத் துறை, தஞ்சாவூர்.
6.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை, திருப்பூர்.
7.	அருள்மிகு சோழீஸ்வரர் பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில், பெருந்துறை, ஈரோடு.
8.	அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி.
9.	அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர்.
10.	அருள்மிகு ஆலந்துறையார் (ம) கோதண்டராமசுவாமி திருக்கோயில், அரியலூர்.
11.	அருள்மிகு காயாரோகணசுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், நாகப்பட்டினம்.
12.	அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயில், திண்டுக்கல்.

13.	திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை.
14.	அருள்மிகு பரிமளரெங்கநாதர் திருக்கோயில், திருஇந்தளூர், மயிலாடுதுறை
15.	அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில், திருவலஞ்சுழி, கும்பகோணம்

திருக்கோயில் பாதுகாப்புப் படை

162. திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்புக்காக "திருக்கோயில் பாதுகாப்புப் படை" என்ற ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதில், 1,000 இரண்டாம் நிலைக் காவலர்கள், 3,000 முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்தது. திருக்கோயில் பாதுகாப்புப் படையில் உள்ள முன்னாள் இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டுவந்த மாத தொகுப்பூதியம் 9-1-2012 முதல் ரூ.1,500/-லிருந்து ரூ.5,000/-ஆக அரசு உயர்த்தியுள்ளது.

திருக்கோயில்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

163. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 12-2-2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் திருக்கோயில்களில் தீ விபத்து தடுப்பு மற்றும் இதர பேரிடர்களைத் தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன. அவ்வறிவுரைகளின்படி, முதற்கட்டமாக 47 முதுநிலைத் திருக்கோயில்களில் தீ தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி, கீழ்க்காணும் நடவடிக்கைகள் திருக்கோயில்களில் கால முறைப்படி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

- தீ தடுப்பு தணிக்கை மற்றும் தீ தடுப்பு ஒத்திகை.
- தேவையான எண்ணிக்கைகளில் தீயணைப்பு கருவிகள், மணல்/தண்ணீர் வாளிகள், மின்தடை கருவிகள் போன்ற தீ தடுப்பு சாதனங்கள் நிறுவுதல்.

[2020 மார்ச் 24

- தல விருட்சங்கள் மற்றும் திருக்கோயில் திருத்தேர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள்.
- திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி.
- தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து மின் தகுதிக்கான சான்று.
- அகல் விளக்குகள் ஏற்றுவதை தவிர்த்து அணையா விளக்கு நிறுவுதல்.

164. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, சேவார்த்திகளின் பாதுகாப்பிற்குத் தேவையான முன்னேற்பாடுகள் மேற்கொள்வதற்கும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களை காலமுறைப்படி ஆய்வு செய்வதற்கும், அனைத்து கட்டடங்களின் பராமரிப்புக்கான அட்டவணையை முறையாகப் பேணி பின்பற்ற இத்துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களின் உறுதித் தன்மை மற்றும் திருக்கோயில்களில் உள்ள மின் உபயோக உபகரணங்களின் தரம் ஆகியவற்றை சரிபார்த்து அதற்கான சான்றுகளைப் பெற்று வைத்திட இத்துறையின் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

VIII—கல்வி மற்றும் அறப் பணிகள்

கல்வி நிறுவனங்கள்

165. இறைப் பணியோடு ஆன்மீக நெறிகளையும், பண்பாடு மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் நோக்கோடு சமயம் மற்றும் பொதுக்கல்வி பயிற்றுவிக்க பின்வரும் பள்ளிகளையும், கல்லூரிகளையும், பாடசாலைகளையும் திருக்கோயில் நிருவாகங்கள் பேணி வருகின்றன:-

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்	5
2.	பல் தொழில்நுட்பக் கல்லூரி	1

வ. எண்	கல்வி நிறுவனங்கள்	எண்ணிக்கை
3.	மேல்நிலைப் பள்ளிகள்	15
4.	உயர்நிலைப் பள்ளிகள்	8
5.	நடுநிலைப் பள்ளிகள்	2
6.	தொடக்கப் பள்ளிகள்	9
7.	மெட்ரிகுலேஷன் பள்ளி	1
8.	சி.பி.எஸ்.இ. பள்ளி	1
9.	நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சி பள்ளிகள்	2
10.	வேத ஆகமப் பாடசாலைகள்	5
11.	ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்	2
12.	தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்	2
13.	காது கேளாதோர்-பேச இயலாதோர் பள்ளி	1
	கூடுதல்	**54**

கல்வி நிறுவனங்கள் விவரப் பட்டியல்
கலை, பண்பாடு மற்றும் அறிவியல் கல்லூரிகள்

1.	அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.
2.	அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.
3.	ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், திருநெல்வேலி.
4.	ஸ்ரீதேவி குமாரி மகளிர் கல்லூரி, குழித்துறை, கன்னியாகுமரி.
5.	பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம்.

பல் தொழில்நுட்பக் கல்லூரி

அருள்மிகு பழநியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, பழநி, திண்டுக்கல்.

மேல்நிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவிலூர், முத்துப்பேட்டை, திருவாரூர்.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, மருதமலை, வடவள்ளி, கோயம்புத்தூர்.
3.	அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம், சாமளாபுரம், சோமனூர், திருப்பூர்.
4.	அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப் பள்ளி, பேரூர், கோயம்புத்தூர்.
5.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை.
6.	அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பரங்குன்றம், மதுரை.
7.	அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி.
8.	தேவஸ்தான மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி.
9.	ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.
10.	டி.வேணுகோபால் செட்டி மேல்நிலைப் பள்ளி, சென்னை.
11.	இந்து மேல்நிலைப் பள்ளி, சென்னை.
12.	அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம், இராமநாதபுரம்.

13.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
14.	ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மேல்நிலைப் பள்ளி, மயிலம், திண்டிவனம், விழுப்புரம்.
15.	அருள்மிகு பராசக்தி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, குற்றாலம், திருநெல்வேலி.

உயர்நிலைப் பள்ளிகள்

1.	அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், திருவாரூர்.
2.	அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர்.
3.	அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
4.	அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப் பள்ளி, அழகர்கோயில், மதுரை.
5.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, திற்பரப்பு, கன்னியாகுமாி.
6.	ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம்.
7.	அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப் பள்ளி, சென்னை.
8.	தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, குழித்துறை, கன்னியாகுமாி.

நடுநிலைப் பள்ளிகள்

1.	திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம்.
2.	திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை, நாகப்பட்டினம்.

[2020 மார்ச் 24

தொடக்கப் பள்ளிகள்

1.	சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப் பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
2.	சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி.
3.	ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப் பள்ளி, திருவெண்காடு, நாகப்பட்டினம்.
4.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உதவி பெறும் தொடக்கப் பள்ளி, பழநி, திண்டுக்கல்.
5.	திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி, திருவிடைமருதூர், தஞ்சாவூர்.
6.	திருஞான சம்பந்தர் தொடக்கப் பள்ளி, தருமபுரம், நாகப்பட்டினம்.
7.	அருள்மிகு சுந்தரராஜா தொடக்கப் பள்ளி, அழகர்கோயில், மதுரை.
8.	அஞ்சுகம் தொடக்கப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை.
9.	பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப் பள்ளி, ஓட்டேரி, சென்னை.

மெட்ரிகுலேஷன் பள்ளி

பழநி ஆண்டவர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பழநி, திண்டுக்கல்.

சி.பி.எஸ்.இ. பள்ளி

பராசக்தி வித்யாலயா, குற்றாலம், திருநெல்வேலி

நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சிப் பள்ளிகள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்.
2.	அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம், தஞ்சாவூர்.

2020 மார்ச் 24]

வேத ஆகமப் பாடசாலைகள்

1.	அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்.
2.	அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி.
3.	அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.
4.	அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.
5.	அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி.

ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள்

1.	அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
2.	அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

தேவாரப் பயிற்சிப் பள்ளிகள்

1.	தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம்.
2.	மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோயம்புத்தூர்.

காது கேளாதோர்-பேச இயலாதோர் பள்ளி

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழநி, திண்டுக்கல்.

வேத ஆகம பாடசாலைகள்

166. திருக்கோயில்களின் பூஜை முறைகள், மந்திரங்கள் ஓதுதல், ஆகமங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவைகளை பயில விரும்புவோருக்கு வேத ஆகம பாடசாலை 1958 ஆம் ஆண்டு முதல்

திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலும், 1959 ஆம் ஆண்டு முதல் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலிலும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து 2015-2016 ஆம் ஆண்டு முதல் "மயிலையே கயிலை" என போற்றப்படும் சென்னை, மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் வேத ஆகம பாடசாலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

வைணவ ஆகமங்களுக்கு, "பூலோக வைகுண்டம்" என போற்றப்படும் திருச்சி, ஸ்ரீரங்கத்தில் உள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலிலும், சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலிலும் வேத ஆகம பாடசாலைகள் 2015-2016 ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது.

ஓதுவார் பயிற்சி பள்ளிகள்

167. 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவு கூட்டத் தொடரின்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட "மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்படும்" என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து 15-7-2013 அன்று மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலிலும், 18-8-2014 அன்று திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலிலும் ஓதுவார் பயிற்சி பள்ளிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

168. இப்பயிற்சி பள்ளியில் சேரும் மாணவர்கள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 13 வயது நிரம்பி இருத்தல் வேண்டும். அதிகபட்சம் 20 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்ற தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்பட்டுள்ளனர். பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/-வீதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

169. திருக்கோயில்களின்மூலம் நடத்தப்படும் ஓதுவார் பயிற்சி பள்ளியில் சேர்ந்து முறையாக தேர்ச்சி பெற்று சான்றிதழ் பெறும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ்

2020 மார்ச் 24]

உள்ள திருக்கோயில்களில் ஓதுவார் பணியிடங்களுக்குரிய காலியிடங்களில் அந்தந்த திருக்கோயில்களுக்குரிய காலமுறை ஊதிய விகிதம் அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்களுக்கு தரச் சான்று

170. பல்கலைக்கழக மானியக் குழுவின் தன்னாட்சி அமைப்பான தேசிய தர மதிப்பீட்டு குழு (NAAC), இந்து சமய அறநிலையத் துறையால் மேலாண்மை செய்யப்படும் கீழ்க்காணும் இரண்டு கல்லூரிகளுக்கு ஒட்டுமொத்த சாதனைகள் மற்றும் சிறந்த செயல்பாடுகளுக்காக 'A' தரச் சான்று வழங்கியுள்ளது.

1) பழநி, அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரி (17-3-2016 முதல் 16-3-2021 வரை)

2) குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (5-11-2016 முதல் 4-11-2021 வரை)

குற்றாலம், ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி நாட்டின் தூய்மையான உயர் கல்வி நிறுவனங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்திய அரசின் மாண்புமிகு மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் 1-10-2018 அன்று சான்றிதழ் வழங்கப்பட்டது.

சமூக நல நிறுவனங்கள்

171. திருக்கோயில்கள், வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது சமூக நோக்கத்தோடு அறநிலையங்களாகவும் செயல்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவமனைகள், மனநலக் காப்பகங்கள், கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியன திருக்கோயில்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	சமூக நல நிறுவனங்கள்	எண்ணிக்கை
1.	கருணை இல்லங்கள்	**32**
2.	மனநலக் காப்பகம்	1

வ. எண்	சமூக நல நிறுவனங்கள்	எண்ணிக்கை
3.	முதியோர் இல்லங்கள்	2
4.	சித்த வைத்தியசாலைகள்	6
5.	ஆங்கில முறை மருத்துவமனைகள்	2
	கூடுதல்	**43**

கருணை இல்லங்கள்

172. இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஆதரவற்ற சிறுவர் மற்றும் சிறுமியருக்கு உணவு, இருப்பிடம், கல்வி ஆகிய உதவிகள் அளிக்கும் நோக்கத்துடன் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 30 திருக்கோயில்களில் 32 கருணை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சிறுவர் காப்பகங்கள் 21 மற்றும் சிறுமியர் காப்பகங்கள் 11 உள்ளன. கருணை இல்லங்களில் பயின்று பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து மேற்படிப்பு தொடரும் மாணவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்களில் முழுமையான கல்விக் கட்டண விலக்கும், இதர கல்வி நிறுவனங்களில் 50 சதவிகிதம் கல்விக் கட்டணம் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கவும் அரசால் 2012-2013-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி, 2012-2013 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை 159 மாணவ, மாணவிகளுக்கு ரூ.8,30,382/- வழங்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டிற்கு 36 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,40,385/- நிதியுதவி வழங்கப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டிற்கு 31 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,29,511/- நிதியுதவி வழங்கப்பட்டது.

173. 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை கருணை இல்லங்களில் சிறுவர், சிறுமியருக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ரூ.4.12 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2016-2017 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 38 பணிகள் ரூ.69.60 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 11 பணிகள் ரூ.16.82 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

2020 மார்ச் 24]

பள்ளி, கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள்

174. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும், கல்லூரிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு ரூ.5 கோடியும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம்மூலம் பெறப்பட்டு இரு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மூலதன நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குத் தேவையான கட்டடங்கள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், கணினிகள், குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகளைச் செய்திட நிதியுதவி வழங்கப்படுகிறது.

175. 2011-2012 முதல் 2018-2019 வரை பள்ளி கல்வி நிறுவனங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு 328 பணிகள் ரூ.57.97 கோடி மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 14 பணிகள் ரூ.54.73 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன.

கோசாலைகள்

176. திருக்கோயில்களுக்கு காணிக்கையாக வரப்பெறும் கால்நடைகளைப் பராமரிக்க ஒருங்கிணைந்த கோசாலைகள் பழநி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ளன.

177. திருக்கோயில்களுக்கு உபயமாக பெறப்படும் உபரி கால்நடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் விலையின்றி வழங்கப்படுகிறது. திருக்கோயில்களில் இருக்கும் கோசாலைகளை நல்ல முறையில் பேணுவதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

IX-திருக்கோயில்களும் தமிழும்

"போற்றி" நூல்கள்

178. ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் முனிவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் இறைவனை செந்தமிழால் போற்றி பாடி வணங்கியுள்ளனர். அவர்களால் பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ், நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகியவை

தலங்களின் மேன்மையை விவரிப்பதோடு தமிழ் மொழி மேன்மைக்கும் முக்கிய பங்காற்றியுள்ளன. அதனால் தல வரலாற்றோடு பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும், சேவார்த்திகள் விருப்பப்படி தமிழில் பூஜை செய்வதை ஊக்குவிக்கவும், முறைப்படுத்தவும், தமிழில் "போற்றி" நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் புத்தாண்டு தின விழா

179. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தால் நெடுங்காலமாக தமிழ் மக்களின் நம்பிக்கை மரபுவழி வந்த முறைகளை மதித்து, சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ் புத்தாண்டு கொண்டாடும் வழக்கம் 13-4-2012 அன்று திரும்பக் கொண்டுவரப்பட்டது. இதை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடினர்.

180. தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி, ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் முதல் நாள் அன்று அனைத்து முக்கிய திருக்கோயில்களிலும் சிறப்பு பூஜை வழிபாடுகளும், சிறப்பு அன்னதானமும், சமயச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அன்றைய தினம் திருக்கோயில்கள் வாழை, மாவிலைத் தோரணங்களுடன் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் புத்தாண்டையொட்டி திருக்கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. பெருவாரியான பக்தர்கள் இப்புத்தாண்டு தினத்தில் திருக்கோயில்களுக்கு வருகைபுரிந்து கொண்டாடி வருகின்றனர்.

பாவை விழா

181. ஆண்டுதோறும் மார்கழி திங்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டிகள் திருக்கோயில்களில் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, பாவை விழா மாவட்ட அளவில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. திருப்பாவை, திருவெம்பாவை, பண்ணோடு பாடும் போட்டி, கட்டுரைப் போட்டி என நான்கு தலைப்புகளில், ஐந்தாம் வகுப்பு வரை, ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மற்றும் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை என மூன்று பிரிவுகளில் தனித்தனியாக போட்டிகள் நடத்தப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டு மாவட்ட அளவில் 37 மாவட்டங்களில் 8,383 மாணவ,

2020 மார்ச் 24]

மாணவியர் பங்கேற்புடன், 1,452 மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாவை விழா வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது.

2019-2020 ஆம் ஆண்டு முதன்முறையாக மாநில அளவில் போட்டிகள் 13-1-2020 அன்று சென்னையில் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற 322 மாணவர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 36 மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக ரூ.10,000, இரண்டாம் பரிசாக ரூ.5,000, மூன்றாம் பரிசாக ரூ.2,500 என மொத்தம் ரூ.2.10 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பாராட்டினார்கள். மேலும், மாநில போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இசைவாணர்கள் நியமனம்

182. திருக்கோயில்களில் திருவிழாக்களின்போது மங்கள இசை இசைக்கப்படுவது வழக்கம். இவ்வழக்கம் திருக்கோயில்களின் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் குறைந்து வருவதைக் கருத்தில்கொண்டு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களிலும், நாயன்மார்களால் பாடல்பெற்ற புகழ்வாய்ந்த தொன்மையான திருக்கோயில்களிலும், நாதஸ்வரம், தவில், தாள இசைவாணர்களை நியமனம் செய்து அவர்களுக்கு முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.1 கோடி முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகைமூலம் அவர்களுக்கு இவ்வூதியம் வழங்கப்படுகிறது.

X-அருளாளர்கள் விழா

சேக்கிழார் விழா

183. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் தெய்வச் சேக்கிழார் பிறந்த இடமான சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் திருநட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் சேக்கிழார் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவிற்கு இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலிலும் ஆகஸ்டு திங்கள்தோறும் 12 நாட்களுக்கு பன்னிரு திருமுறை விழாவும், சேக்கிழார் விழாவும் கொண்டாடப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் இசை விழா

184. சிறந்த சமய அருளாளரான திருஞானசம்பந்தரைப் போற்றும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் திருஞானசம்பந்தர் இசை விழா ஆண்டுதோறும் வைகாசி மாதம் மூல நட்சத்திர தினத்தன்று கொண்டாடப்படுகிறது. இதற்கான செலவு பொது நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

ஔவையார் விழா

185. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு விசுவநாதசுவாமி திருக்கோயில் வளாகத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஔவையார் விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் துளசியாப்பட்டினத்தில் நடைபெறும் இந்த விழாவிற்கு இதற்கான மூலதன நிதி வட்டியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

தாயுமானவர் விழா

186. தமிழ் ஞானப் பாடல்களை உலகிற்கு அருளிய தாயுமானவ அடிகளைப் போற்றும் வகையில், தாயுமானவர் விழா திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

திருவள்ளுவர் திருநாள்

187. ஒவ்வோர் ஆண்டும் தைத் திங்கள் இரண்டாம் நாளன்று சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, கட்டுரைப் போட்டி நடத்தப் பெற்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், கருத்தரங்கங்களும், பட்டிமன்றங்களும் நடத்தப்படுகின்றன.

அருணகிரிநாதர் விழா

188. அருளாளர் அருணகிரிநாதருக்கு திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆவணி மாதம்,

"கேட்டை" நட்சத்திரத்தன்று "முக்திப்பேறு விழா" ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும், திருவண்ணாமலையில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் அருணகிரிநாதர் மணிமண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

கோச்செங்கட்சோழ நாயனார் விழா

189. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அருட்திரு கோச்செங்கட்சோழ நாயனார் அவதரித்த திருநாளான மாசி மாதத்தில், சதய நட்சத்திரத்தன்று ஆண்டுதோறும் "கோச்செங்கட்சோழ நாயனார் விழா" திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

ஆழ்வார்கள் விழா

190. ஆண்டுதோறும் பன்னிரு ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநட்சத்திர நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் "ஆழ்வார்கள் விழா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

XI-வெளியீடுகள்

தல வரலாறு மற்றும் தல புராணம்

191. திருக்கோயில்களின் தொன்மை, புராணங்கள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் (வரலாறு, முக்கியத்துவம்) ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் தல வரலாற்று நூல்கள் வெளியிடப்படுகின்றன. சிறு திருக்கோயில்களுக்கு அவற்றின் வழிபாட்டுச் சிறப்புகளை அறிந்துகொள்ள ஏதுவாக தகவல் அட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

பயணியர் மாவட்ட கையேடுகள்

192. பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்கள் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள ஏதுவாக, முக்கியமான நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் தனித்தனியே பயணியர் கையேடுகள்

வெளியிடப்பட்டுள்ளன. இத்தகைய கையேடுகள் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிகாட்டி என்பதைக் கருத்தில்கொண்டு இவை இந்து சமய அறநிலையத் துறை வலைதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

"திருக்கோயில்"-திங்களிதழ்

193. இந்து சமய அறநிலையத் துறையால் 1958 ஆம் ஆண்டு முதல் "திருக்கோயில்" என்ற பெயரில் திங்களிதழ் வெளியிடப்படுகிறது. இந்த மாத இதழ் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள், துணுக்கு செய்திகள் மற்றும் ஆன்மிக வினா, விடைகள் என எழில்மிகு வண்ணங்களுடன் வெளியிடப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டு முதல் இவ்விதழில் பக்கங்கள் கூடுதலாக்கப்பட்டு இணையதள இயங்கலையிலும் (Online) பார்த்து படித்து பயனடையும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விதழைப் இயங்கலையிலேயே (Online) சந்தா செலுத்தி பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சமய நூல்கள் விற்பனை

194. தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம், 6-1-2017 முதல் 19-1-2017 வரை சென்னையில் புத்தகக் கண்காட்சி நடத்தியது. இதில் இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் முதன்முறையாக துறைக்கென ஒரு புத்தக விற்பனை அரங்கு அமைக்கப்பட்டு துறை வெளியீடுகளான மாவட்டக் கையேடுகள், இந்து மத இணைப்பு விளக்கம், சைவமும் வைணவமும், சைவ சமயக் களஞ்சியங்கள், திருக்கோயில் நாள்காட்டிகள், திருக்கோயில் தல வரலாறுகள் மற்றும் 'திருக்கோயில்' மாத இதழ்கள் ஆகியன விற்பனைக்கு வைக்கப்பட்டன. இத்திட்டம், ஆன்மீக அன்பர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து இணையதள இயங்கலை (Online) மூலமாக உரிய தொகையினைச் செலுத்தி ஆன்மீக அன்பர்கள் துறை மூலமாக வெளியிடப்படும் சமயநூல்களை எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆகம நூல்கள் மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்

195. வடமொழி ஆகம சாஸ்திர நூல்களும், சிற்ப சாஸ்திர நூல்களும் தமிழர்கள் அறிந்துகொள்ளும் வகையில் தமிழில்

2020 மார்ச் 24]

மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில், “உத்ரகாமிக ஆகமம்" மற்றும் "குமார தந்திரம்" ஆகிய நூல்கள் தமிழில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. மேலும், "இந்து மத இணைப்பு விளக்கம்", "சைவமும் வைணவமும்" மற்றும் "ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்ப நூல்" ஆகிய தமிழ் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

XII-பயிற்சித் திட்டங்கள்

புத்தொளிப் பயிற்சி

196. திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்பட செய்திட ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டது. 2006-2007 முதல் 2010-2011 ஆம் ஆண்டு வரை இப்பயிற்சி அளிக்கப்படவில்லை. இப்பயிற்சியின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் பயன்பெறும் வகையில் ஆறு வார கால புத்தொளிப் பயிற்சி மீண்டும் தொடங்கப்பெற்று, 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை 8,436 ஊழியர்கள் பயனடைந்தனர். 2016-2017 ஆம் ஆண்டில் 1,524 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. 2017-2018 ஆம் ஆண்டில் 2,090 பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டில் 2,144 பணியாளர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில், 3-2-2020 முதல் 21-3-2020 முடிய 6 வார கால பயிற்சி நடைபெற்று வருகிறது. இப்பயிற்சியில் 29-2-2020 வரை 1,011 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இத்துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் 26-3-2020 முதல் 12-5-2020 வரையிலான 6 வார காலத்திற்கு புத்தொளி பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொறியாளர்களுக்கு "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்னும் குறுகிய கால பயிற்சி

197. நாட்டில் முதல் முறையாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச்

சின்னங்கள் புனரமைப்பு" என்ற தலைப்பில் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் திருக்கோயில்களைச் சேர்ந்த பொறியாளர்களுக்கு ஆறு வார குறுகிய காலப் பயிற்சியாக, முதற்கட்ட பயிற்சி 22 பொறியாளர்களுக்கு 3-12-2014 முதல் 13-1-2015 வரையும், இரண்டாம் கட்டமாக 22 பொறியாளர்களுக்கு 19-3-2015 முதல் 29-4-2015 வரையும் நடத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக 8-9-2016 முதல் 19-10-2016 வரை பொறியாளர்கள், ஸ்தபதிகள் மற்றும் திருக்கோயிலில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களையும் சேர்த்து மொத்தம் 40 நபர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கு "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்னும் குறுகிய கால பயிற்சி

198. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் "பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் புராதன நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு" என்ற இரு வார குறுகிய கால பயிற்சி திருக்கோயிலில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு 3 கட்டங்களாக நடத்தப்பட்டன. முதற்கட்டமாக 8-9-2016 முதல் 19-10-2016 முடிய ஓர் அணிக்கு 25 செயல் அலுவலர்கள் வீதம் 3 அணிகளாக மொத்தம் 75 செயல் அலுவலர்களுக்கும், இரண்டாவது கட்டமாக 28-8-2017 முதல் 9-10-2017 முடிய ஓர் அணிக்கு 25 செயல் அலுவலர்கள் வீதம் 3 அணிகளாக மொத்தம் 75 செயல் அலுவலர்களுக்கும், மூன்றாவது கட்டமாக 12-11-2018 முதல் 7-1-2019 முடிய ஓர் அணிக்கு 41 செயல் அலுவலர்கள் வீதம் 4 அணிகளாக மொத்தம் 164 செயல் அலுவலர்களுக்கும் பயிற்சி நடத்தப்பட்டது.

மனிதநேயப் பயிற்சி

199. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் இறையுணர்வை மதித்து வழிபாட்டு முறைகளைக் கனிவோடு செய்திட திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டு கடந்த ஒன்பது ஆண்டுகளில் 29,172 ஊழியர்களுக்கு மனிதநேயப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் 3,029 திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஊழியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சுயம்பாகிகள் (மடப்பள்ளி சமையற்காரர்கள்), அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கான பயிற்சி

200. திருக்கோயில்களில் வழங்கப்படும் பிரசாதங்கள், அன்னதான உணவுகள் ஆகியவற்றை தரமானதாகவும், சுகாதாரமாகவும் சேவார்த்திகளுக்கு வழங்கும் எண்ணத்தோடு மத்திய அரசு நிறுவனமான இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் (FSSAI) மூலம் சென்னை நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள திருக்கோயில்கள் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், மாங்காடு, அருள்மிகு காமாட்சி அம்மன் மற்றும் வைகுண்டப் பெருமாள் திருக்கோயில் மற்றும் வடபழநி, அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பணியாற்றிவரும் சுயம்பாகிகள், அன்னதான சமையற்காரர்கள் மற்றும் பிரசாதக் கடை ஒப்பந்ததாரர்களுக்கு சென்னை, வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இதில், 80 திருக்கோயில்களில் பணியாற்றிவரும் 142 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

201. இதேபோன்று 1-9-2017 மற்றும் 2-9-2017 ஆகிய இரு நாட்களில் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், 10 பெரிய திருக்கோயில்கள் மற்றும் திருச்சிராப்பள்ளியைச் சுற்றியுள்ள பல்வேறு திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், பரிச்சாரகர்கள், பிரசாத கடை ஒப்பந்ததாரர்கள், பண்டக எழுத்தர்கள் உட்பட 150 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

202. மேலும், கடந்த 11-1-2018 அன்று புதுதில்லியில் “இறை வழிபாட்டுத் தலங்களில் உணவு பாதுகாப்பு முறைகள்" (Blissful Hygienic Offering to God-BHOG) என்ற தலைப்பில் நடைபெற்ற பயிலரங்கில் இத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

203. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தால் (FSSAI) 14-12-2018 முதல் 16-12-2018 முடிய புதுதில்லி, இந்திரா காந்தி தேசிய மையத்தில் நடத்தப்பட்ட National Eat Right Mela-ல் இந்திய திருக்கோயில்களின் உணவுகள் (Temple Foods of India) எனும் தலைப்பின்கீழ் அமைக்கப்பட்ட அரங்கில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் மற்றும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்களில் தயாரிக்கப்பட்ட பிரசாதங்கள் இத்துறையின் சார்பாக காட்சிப்படுத்தப்பட்டது.

204. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையத்தின் (FSSAI) தர நிர்ணயப்படி, சுகாதாரமான முறையில் இறைவனுக்கு பிரசாதம் படைத்த வகைக்கு பாராட்டி, 26-1-2020 அன்று குடியரசு தின விழாவில் **Blissful Hygienic Offering to God** (BHOG) நற்சான்றிதழ் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலுக்கும் மற்றும் திருநெல்வேலி நகர், அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோயிலுக்கும் வழங்கப்பட்டது.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

205. தமிழகத் திருக்கோயில்கள் மனித வாழ்வின் எல்லா செயல்பாடுகளுக்குமான மையமாக தொன்று தொட்டு இருந்து வந்துள்ளன. திருக்கோயில்களுக்கும் பக்தர்களுக்கும் சேவையை வழங்குவோர் பலவகையினர் உள்ளனர். அவர்கள் உலோகச் சிற்பிகள், கைவினைஞர்கள், கட்டட வல்லுநர்கள், நெசவாளர்கள், பொற்கொல்லர்கள், அர்ச்சகர்கள், கிராமக்கோயில் பூசாரிகள், இசைவாணர்கள், நடனக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், பூஜைப்பொருள் விற்பனையாளர்கள், பூமாலை கட்டுவோர், நந்தவனக் காப்பாளர்கள், பரிச்சாரகர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், சமயச் சொற்பொழிவாளர்கள் ஆவர். காலப்போக்கில் போதிய அளவு ஆதரவு இல்லாமல் போனதால் இவர்களில் பலரும் நலிவடைந்து அவர்களிடமிருந்த மதிப்புமிக்க திறன்களும் மறைந்து போகும் நிலையில் உள்ளன. இவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

206. அதன்படி, 2016-2017 ஆம் ஆண்டில் 2,094 கிராமக்கோயில் பூசாரிகளுக்கு 11 இணை ஆணையர் மண்டலங்களில் ஒருவார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியில் கலந்துகொண்ட ஒவ்வொரு பூசாரிக்கும் ஊக்கத் தொகையாக தலா ரூ.1,000/- வழங்கப்பட்டது.

207. தவில், நாதஸ்வர கலைஞர்களுக்கு ஒருமாத கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும்பொருட்டு, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பயிற்சி வகுப்புகள் 5 கட்டங்களாக நடைபெற்றன. இப்பயிற்சியில் கலந்துகொண்ட 310 கலைஞர்களுக்கு தலா ரூ.5,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

208. தமிழகத் திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி 13-2-2017 முதல் 10-3-2017 முடிய நான்கு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 1,524 அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் கலந்துகொண்டுள்ளனர். இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு தலா ரூ.2,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. திருக்கோயில்களில் நந்தவனக் காப்பாளர், மாலைக்கட்டி ஆகிய பணிகளில் பணியாற்றும் 351 நபர்களுக்கு 20-3-2017 முதல் 24-3-2017 வரை மற்றும் 2-5-2017 முதல் 16-5-2017 வரை திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

209. திருக்கோயில்களில் பிரசாதம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடும் பரிச்சாரகர், சுயம்பாகி ஆகிய 221 நபர்களுக்கு, 6-3-2017 முதல் 10-3-2017 வரை ஒருவார கால திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.1,000/- வழங்கப்பட்டது.

210. 2017-2018 ஆம் ஆண்டில் 4 இணை ஆணையர் மண்டலங்களில், கைவினைஞர்கள் உலோக சிற்பிகள் மற்றும் பூஜை பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கு, 3 மாத கால திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் உரிய பயிற்சியாளர்கள்மூலம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு தலா ரூ.5,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

211. 4-5-2018 முதல் 20-6-2018 வரை சென்னை, இணை ஆணையர் மண்டலத்தில், நெசவாளர்களுக்கு ஒரு மாத கால பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு தலா ரூ.5,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

XIII-திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்

நலத் திட்ட விவரங்கள்

212. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள் பல்வேறு வகையினத்தில் பணிபுரிகின்றனர். இவர்களது நலன் காத்திட ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:-

வ. எண்	நலத்திட்ட விவரங்கள்
1.	குடும்ப நல நிதித் திட்டம்
2.	சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்
3.	மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
4.	ஆலய ஊழியர்கள் நல நிதித் திட்டம்
5.	கருணை அடிப்படையில் பணி நியமனம்
6.	அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக்கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்
7.	திருக்கோயிலில் பணிபுரியும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்
8.	திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

குடும்ப நல நிதித் திட்டம்

213. பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்காக "குடும்ப நல நிதித் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இதற்கென ரூ.15 கோடி மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 473 வாரிசுதாரர்களுக்கு ரூ.4.66 கோடி வழங்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 33 வாரிசுதாரர்களுக்கு ரூ.36.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

214. அரசாணை (நிலை) எண் 47, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி. 4-1) துறை, நாள் 20-5-2019 இல், இத்தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

215. ரூ.1 இலட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில்களின் பணியாளர்களின் நலனுக்காக "சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்" ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.50 இலட்சத்தைக் கொண்டு மைய நிதி ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வு பெறும்போது அவரது பணி நாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன், இத்திட்டத்தின்மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ரூபாய் 1,000/- வழங்கப்பட்டு வந்தது. இத்தொகை டிசம்பர் 2008 முதல் ரூபாய் 5,000/-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை 791 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ரூ.36.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 67 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ரூ.3.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

216. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்களில் ரூ.72,000/-க்கும் (ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறுவோர்) அதிகமாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012-ன்கீழ் பயன்பெற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 3,705 திருக்கோயில் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதன்மூலம் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

217. 2013 ஆம் ஆண்டில் ரூ.72,000/- மற்றும் அதற்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற மாண்புமிகு

முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 10,391 திருக்கோயில் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதன்மூலம் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் பயன்பெறுகின்றனர்.

ஆலய ஊழியர்கள் நல நிதி

218. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெறப்பட்டு "ஆலய ஊழியர்கள் நல நிதி" என்ற ஒரு மைய நிதி உருவாக்கப்பட்டு 1992 முதல் செயல்படுகிறது. ஆண்டு வருவாய் ரூ.1 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.750/-க்கும் குறைவாக மாத ஊதியம் பெறுகின்றவர்களின் ஊதிய நிலுவைத் தொகை மேற்கண்ட மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையினைக் கொண்டு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2011-2012 முதல் 2018-2019 வரை 10,963 திருக்கோயில்களில் பணிபுரியும் 14,009 (2009 முதல் 2015 வரையிலான ஊதிய நிலுவை) பணியாளர்களுக்கு ரூ.8.54 கோடி ஊதிய நிலுவை வழங்கப்பட்டது. 2019-2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 5,869 திருக்கோயில்களில் பணிபுரியும் 7,670 (2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஊதிய நிலுவை) பணியாளர்களுக்கு ரூ.6.04 கோடி ஊதிய நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் பணி நியமனம்

219. திருக்கோயில்களில் பணியாற்றும்போது, இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு "கருணை அடிப்படையில் பணி நியமனம்" செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் 181 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டன. 2019-2020 ஆம் ஆண்டில் 25 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

220. திருக்கோயில்களில் தற்காலிகமாக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில், 31-7-2014 தேதியில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பணியாற்றி வந்த 2217 பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 24]

அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், அரையர், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்

221. திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்யப்பிரபந்தம் பாடுவோர், இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு அரசு நிதியிலிருந்து இந்து சமய அறநிலையத்துறைமூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.750/- ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

222. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.750/- மாத ஓய்வூதியத்தை ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்மூலம் மொத்தம் 364 ஓய்வுபெற்ற பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

திருக்கோயிலில் பணிபுரியும் இதரப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

223. திருக்கோயில் பணியாளர்களுக்கென இருவகை ஓய்வூதியத் திட்டங்கள் 2006 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(i) பணியாளர் சேமநல நிதித் திட்டம்

நிதி வசதிமிக்க திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். திருக்கோயில் பணியாளர்களில் ஓய்வுபெற பத்து ஆண்டிற்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு, பணியாளர் சேமநல நிதித் திட்டத்தின்கீழ் 1-3-2006 முதல் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ii) துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்

நிதி வசதி குறைவாக உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டம் கொண்டு வரப்பட்ட நாளில் (1-3-2006) ஓய்வுபெற பத்து ஆண்டிற்குக்கீழ் பணிக்காலம் உள்ளவர்களுக்கும், பணியாளர் சேமநல நிதித் திட்டத்தில் சேரும் அளவு நிதி வசதியில்லாத திருக்கோயில்களில் பணியாற்றுபவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியம் பெறும் திட்டம் 2006 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

[2020 மார்ச் 24

224. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 1996 ஆம் ஆண்டிற்கு முன்னர் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 67 ஓய்வுபெற்ற பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

225. இந்தத் துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் அளிப்பதற்கு ஏதுவாக, நிதி வசதிமிக்க திருக்கோயில்களிலிருந்து ரூ.50 கோடி உபரிநிதியினைப்பெற்று மூலதன நிதி உருவாக்கப்பட்டது. அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வுபெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.1,000/- வழங்கப்பட்டது. பின்னர், ஓய்வூதியம் ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/- ஆக 1-10-2016 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, மேலும் ரூ.15 கோடி உபரி நிதி முதுநிலை திருக்கோயில்களிலிருந்து பெறப்பட்டு மூலதன நிதி உயர்த்தப்பட்டுள்ளது.

226. 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை கூடுதலாக 79 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 4,729 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குடும்ப ஓய்வூதியம்

அரசாணை (நிலை) எண் 285, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 4-1) துறை, நாள் 14-12-2015-ன்படி, துறை நிலையிலான ஓய்வூதிய திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற்றுவரும் ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால், அவரின் நேரடி வாரிசான கணவன்/ மனைவிக்கு மட்டும், அவர்தம் வாழ்நாள் முழுவதும் கடைசியாக பெற்ற மாத ஓய்வூதியத்தில் 50% தொகை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வரை இத்திட்டத்தின்கீழ் 67 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

திருக்கோயில் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு படிப்புதவித் திட்டம்

227. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில்சார்ந்த பட்டப் படிப்பு பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக்

கட்டணத்தில் 25 சதவீதத் தொகை நிதியுதவியாக வழங்க இத்திட்டம் வழிவகை செய்கிறது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணயம்

228. அரசாணை (நிலை) எண் 91, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி 4-1) துறை, நாள் 28-6-2019-ல் திருக்கோயில் பணியாளர்களுக்கு திருத்திய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

XIV-கிராமக்கோயில் பூசாரிகள் நலத் திட்டங்கள்

கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்

229. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராம திருக்கோயில்களில் பூஜை செய்யும் பூசாரிகளுக்கு "கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்" உருவாக்கப்பட்டு அதன் மூலமாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

கிராமக் கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்

230. இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத்தை 22-11-2013 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.750/-லிருந்து ரூ.1,000/- ஆக உயர்வு செய்து வழங்க மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3,281 கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெற்றுள்ளனர்.

XV-துறை மற்றும் திருக்கோயில்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்குதல்

231. திருக்கோயில் சேவார்த்திகள் வசதிக்காக சேவைகள் தொடர்பான விவரங்கள் மற்றும் திருக்கோயில் நிருவாகம் மேம்படுத்தவும், ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வலை முகப்பு (Intergrated Temple Management System) தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தொன்மையான திருக்கோயில்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வடிவமைக்கப்பட்ட விலை மதிப்பற்ற உலோக விக்கிரகங்கள், கற்சிலைகள் மற்றும் நிலம், கட்டடம்

போன்ற அசையா சொத்துக்கள் பற்றிய அனைத்து விவரங்களும் கணினிமயமாக்கப்பட்டு திருக்கோயில்களுக்கான தகவல் தொகுப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் திருக்கோயில் சொத்துக்களின் அமைவிடங்கள் புவியியல் தகவல் முறைமை (Geographic Information System) மூலம் எளிதாக அறியும் வகையில் வரைபடங்களில் குறிப்பிடுதல், புவியிடங்காட்டி (Global Positioning System) மூலம் திருக்கோயில் சொத்துக்கள் முறையாக அளவை செய்து ஆவணப்படுத்துதல், திருக்கோயில்களில் இணையதள சேவைமூலம் அறை ஒதுக்கீடு, தங்கத்தேர், அன்னதான நன்கொடை போன்ற சேவைகள் ஆகியன வலைதளம் மூலமாகவும், கைபேசி குறுஞ்செயலி மூலமாகவும் பெறுவதற்கு வசதியாக மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மின் ஆளுமை குறித்து அனைத்து சார்நிலை அலுவலகங்கள்/ இத்துறை மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, இணை ஆணையர்/துணை ஆணையர்/உதவி ஆணையர்/செயல் அலுவலர்கள் நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்களுக்கு பல கட்டங்களாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

232. தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலம் உருவாக்கப்பட்டுவரும் ITMS-ல் முதல்கட்டமாக 1) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், 2) அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, 3) அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, 4) அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி 5) அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர் ஆகிய 5 முதுநிலை திருக்கோயில்களின் இணையதளம், முழுமையாக வடிவமைக்கப்பட்டு, 24-12-2018 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அடுத்த கட்ட ITMS வடிவமைப்பு பணிகள் தேசிய தகவல் மையத்தின் (NIC) மூலம் உருவாக்கப்பட்டு, 47 முதுநிலை திருக்கோயில்களுக்கான இணையதளம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 1,174 பட்டியலைச் சார்ந்த திருக்கோயில்களுக்கான இணையதளம் வடிவமைக்கப்பட்டு அவற்றில் திருக்கோயில் பற்றிய பொதுவான விபரங்கள் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

233. இத்துறை அலுவலகங்களை கணினிமயமாக்குதலின் ஒரு பகுதியாகவும், காகித பயன்பாட்டினை குறைக்கும் நோக்கிலும், ஆணையர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும்

பணியாளர்கள், மண்டல இணை ஆணையர்கள் மற்றும் சரக உதவி ஆணையர்கள் ஆகியோர்களுக்கு @tn.gov.in மின்னஞ்சல் முகவரி உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

XVI—விருதுகள்

234. 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் நோக்கங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு துறை செயல்பட்டு வருகிறது. இதில் முதன்மையாக திருக்கோயில்களின் பாதுகாப்பு, பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய திருப்பணி, அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் சேவார்த்திகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது. இதற்கும் மேலாக, ஒவ்வொரு திருக்கோயில் தொடர்புடைய சமயம் மற்றும் கலாச்சார வழக்கங்களை பாதுகாத்தும் வருகிறது. இதனை அங்கீகரித்து கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:-

- சிறந்த நிருவாகத்தை உறுதிப்படுத்தும் தரமான சேவை மேம்பாட்டுக்கான "சிறந்த நடைமுறைகள் விருது" (Best Practices Award), மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 15-8-2015 அன்று திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டது.

- தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை "தூய்மையான புனித தலமாக" தேர்வு செய்து, 'தூய்மை இந்தியா' (Swachh Bharath) விருது இந்திய அரசால் 2-10-2017 அன்று வழங்கப்பட்டது.

- ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் பழைமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்காக 2017 UNESCO Asia-Pacific Heritage Award of Merit for Conservation விருது யுனெஸ்கோ அமைப்பால் 1-11-2017 அன்று வழங்கப்பட்டது.

- இணையதள வழி வருடாந்திர வாக்களிப்பு செயல்முறைகளின் அடிப்படையில், சிறந்த தொன்மையான தலம் பிரிவில், இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு விருது-2019-ன் இரண்டாம் பரிசு, ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 24

- தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறைமூலம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்படும் அறநிலையத் துறை அரங்கிற்கு ஆண்டுதோறும் முதல் இடம்/சிறப்பு அந்தஸ்திற்கான விருது வழங்கப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 44-வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் சிறந்த அரங்கிற்கான விருதும், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற 45-வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் மாநில அரசுத் துறை பிரிவில் முதல் பரிசும், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற 46-வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியில் சிறந்த அரங்கிற்கான விருதும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிறைவுரை

திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாப்பது மற்றும் பக்தர்களின் தேவைகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்ட திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கு இந்து சமய அறநிலையத் துறை அயராது பாடுபட்டு வருகிறது.

பக்தர்களின் நலன் கருதி திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் செயல்படும் அதே வேளையில், திருக்கோயில்களின் வருவாயினை பெருக்குவதிலும் துறை அக்கறை செலுத்துகிறது. திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகள் ஆகமத்தின்படியும், திருக்கோயில் பழக்க வழக்கங்களின்படியும் நடைபெறுவதையும் கண்காணிக்கிறது. மேலும், திருக்கோயில்களின் நிருவாகத்தை மேற்பார்வையிடும் அதே வேளையில் நமது மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடையாளமாக திருக்கோயில்களை நிலைநிறுத்துவதில் துறை ஆழ்ந்த அக்கறை செலுத்துகிறது.

இணைப்பு XXV

(457 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

அனுமதிக்கப்பெற்ற வினாக்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

வ. எண்	உறுப்பினர் பெயர்	கட்சி	வினாக்களின் எண்ணிக்கை
1.	திரு. கே.எஸ். மஸ்தான்	தி.மு.க.	4491
2.	முனைவர் கோவி. செழியன்	தி.மு.க.	4087
3.	திரு. க. அன்பழகன்	தி.மு.க.	3242
4.	திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி	தி.மு.க.	1438
5.	திரு. அ. பிரபு	அ.இ.அ.தி.மு.க.	974

இணைப்பு XXVI

(457 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

எட்டாவது கூட்டத் தொடரில் அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

வரிசை எண்	உறுப்பினர் பெயர்	வினாக்களின் எண்ணிக்கை
1.	திரு. க. அன்பழகன் திரு. எஸ். ஈஸ்வரன் திரு. ஆர். கணேஷ் திரு. P. கந்தசாமி திரு. சே. கருணாஸ் திரு. V.T. கலைச்செல்வன் திருமதி V. கஸ்தூரி வாசு திரு. ஆ. கிருஷ்ணசாமி திரு. எ.பி. சக்திவேல் திருமதி ப. சத்யா திருமதி மு. சந்திரபிரபா டாக்டர் பா. சரவணன் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி திரு. ஒ.கே. சின்னராஜ் திரு. எஸ். சுதர்சனம் திரு. S. செல்வமோகன்தாஸ்பாண்டியன் முனைவர் கோவி. செழியன் திரு. C.V. சேகர் திரு. கே.எஸ். தென்னரசு திரு. அ. நடராஜன் திரு. பி.எம். நரசிம்மன் திரு. எஸ். நாகராஜன் டாக்டர் V.P.B. பரமசிவம் திரு. வி. பன்னீர்செல்வம் திரு. பி.வி. பாரதி திரு. அ. பிரபு திரு. அ. மருதமுத்து	தலா 2

2020 மார்ச் 24]

வரிசை எண்	உறுப்பினர் பெயர்	வினாக்களின் எண்ணிக்கை
	திரு. கி. மாணிக்கம் திரு. என். முருகுமாறன் திரு. கே.எஸ். மூர்த்தி திரு. சிவ.வீ. மெய்யநாதன் திரு. சு. ரவி திரு. வி. ராதாகிருஷ்ணன் திரு. க.நா. விஜயகுமார் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்	
2.	திரு. எஸ். அம்பேத்குமார் டாக்டர் ஆர்.டி. அரசு திரு. ச. அரவிந்த் ரமேஷ் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் திரு. ப. ஆடலரசன் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் திரு. பா. ஆறுமுகம் திரு. எஸ். ஆஸ்டின் திரு. L. இதயவர்மன் திரு. ஏ. இரத்தினசபாபதி திரு. R.T. இராமச்சந்திரன் திரு. M. இராமச்சந்திரன் திரு. எஸ்.ஆர். இராஜா திரு. C.V. இராஜேந்திரன் திரு. ஐ.எஸ். இன்பதுரை திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் திரு. வெ. கணேசன் திரு. இ. கருணாநிதி திரு. K. பூண்டி கலைவாணன் திரு. நா. கார்த்திக் திரு. க. கார்த்திகேயன் திரு. மு.பெ. கிரி திருமதி ம. கீதா திருமதி பி. கீதா ஜீவன் திரு. இரா. குமரகுரு	தலா 1

வரிசை எண்	உறுப்பினர் பெயர்	வினாக்களின் எண்ணிக்கை
	திரு. ஆ. கோவிந்தசாமி திரு. செ. சண்முகையா திரு. S.A. சத்யா திரு. சி. சந்திரசேகரன் திரு. சபா. ராசேந்திரன் திரு. வெ. சம்பத்குமார் திரு. க.சு. சரவணக்குமார் திரு. எஸ்.எஸ். சரவணன் திரு. துரை கி. சரவணன் திரு. சிவகுமார் (எ) தாயகம் கவி திரு. ஆர்.எம். சின்னதம்பி திரு. P. சின்னப்பன் திரு. பெ. சீத்தாபதி திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் திரு. மா. சுப்பிரமணியன் திரு. பெ. சுப்ரமணி திரு. டி. செங்குட்டுவன் திரு. ஐ.பி. செந்தில்குமார் திரு. S. செம்மலை திரு. M. செல்வராசு திரு. அ. சௌந்தரபாண்டியன் திரு. R.D. சேகர் திரு. பி.கே. சேகர் பாபு திரு. கே.வி. சேகரன் திரு. சௌ. தங்கப்பாண்டியன் திரு. M. தமிமுன் அன்சாரி திரு. துரை சந்திரசேகரன் திருமதி எஸ். தேன்மொழி திரு. அ. நல்லதம்பி திரு. வெ. நாராயணன் திரு. பா. நீதிபதி திருமதி மு. பரமேஸ்வரி திரு. ப. பலராமன் திரு. எஸ். பவுன்ராஜ் திரு. கு. பழனி	

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 24]

வரிசை எண்	உறுப்பினர் பெயர்	வினாக்களின் எண்ணிக்கை
	திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் திரு. K.A. பாண்டியன் திரு. கே.பி.பி. பாஸ்கர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் திரு. சு. புகழேந்தி டாக்டர் (திருமதி) பூங்கோதை ஆலடி அருணா திரு. பெரியண்ணன் அரசு திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம் திருமதி பொன். சரஸ்வதி முனைவர் க. பொன்முடி திரு. த. மனோ தங்கராஜ் திருமதி நா. மனோரஞ்சிதம் திருமதி ப. மனோன்மணி திரு. கே.எஸ். மஸ்தான் டாக்டர் இரா. மாசிலாமணி திரு. P. முருகன் திரு. பி. மூர்த்தி	
	திரு. டி.பி.எம். மைதீன்கான் திரு. எஸ். ரகுபதி திரு. எ. ராமர் திரு. J.K.N. ராமஜெயலிங்கம் திரு. டி.ஆர்.பி. ராஜா திரு. சு. ராஜேந்திரன் திரு. வி.ஜி. ராஜேந்திரன் திரு. செ. ராஜேஷ் குமார் திரு. கோ. லோகநாதன் திருமதி ம. வரலட்சுமி திருமதி எஸ். விஜயதரணி திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் திரு. செ. ஸ்டாலின் குமார்	

இணைப்பு XXVII

(457 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

விதி 110-ன்கீழ் அறிக்கை

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(1) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், பெண் குழந்தைகளுக்காக ஆற்றிய உயர்ந்த சேவையினை நினைவுகூரத்தக்க வகையில், அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் தேதியை, மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக அனுசரித்தல்;

அரசு இல்லங்களில் வாழும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், சமுதாயத்தில் தங்கள் வாழ்க்கையை நிறைவாக அமைத்துக்கொள்ளும் வகையில், அவர்கள் 21 வயதை நிறைவு செய்யும்போது, அவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது பெயரில் வங்கியில் செலுத்துதல்;

பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத பெண் குழந்தைகள், 18 வயது முடிந்து, அரசு குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியே சென்ற பின்னர், அவர்களின் சமூக பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய, மேற்கல்வி பயிலுதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வேலைவாய்ப்பு, சுயதொழில் செய்தல் போன்றவை உள்ளிட்ட சிறப்பு உதவித் தொகுப்பு, அப்பெண்களுக்கு 50 வயது நிறைவடையும் வரை வழங்குதல்;

ஆதரவற்ற மற்றும் முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தைகளை நல்ல குடும்ப சூழ்நிலையில் வளர்க்கும் வளர்ப்புப் பெற்றோர்களுக்கு மாதம் வழங்கப்படும் தொகையை, 4,000 ரூபாயாக உயர்த்தி, 5 ஆண்டுகளுக்கு வழங்குதல்;

தமிழ்நாட்டில், குழந்தைகள் பாலின விகிதம், சராசரி பாலின விகிதத்தைக் காட்டிலும் குறைவாக உள்ளதால், அந்த விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாகச் செயலாற்றும் மூன்று மாவட்ட நிருவாகங்களுக்கு, முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் வழங்குதல்;

அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் உள்ள, முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்கும் சமூக நலத் துறை, சமூகப் பாதுகாப்புத் துறை மற்றும் ஒருங்கிணைந்த

குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத சி மற்றும் டி பிரிவு பணியிடங்களில் வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுதல்; சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும் தகுதிக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுதல் உள்ளிட்ட சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த அறிவிப்புகளை 19-2-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(2) வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்று, வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகிய உலமாக்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை 1,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்;

ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயணிகள், தங்களுடைய பயணத்திற்கு முன்பு தங்கி, கடவுச்சீட்டு, பயண உடமைகள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளைச் சிரமமின்றி மேற்கொள்ள, தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னையில் ஒதுக்கீடு செய்யும் நிலத்தில், 15 கோடி ரூபாய் செலவில் புதிய ஹஜ் இல்லம் கட்டுதல்;

வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்குப் புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க 25,000 ரூபாய் அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவிகிதம், இதில் எது குறைவோ அந்தத் தொகையை மானியமாக வழங்குதல் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த அறிவிப்புகளை 19-2-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

வனத் துறை

(3) 22 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை வேளச்சேரியில் புதிதாகக் கட்டப்படுகின்ற வனத் துறை தலைமை அலுவலகக் கட்டடங்களுக்கு மின் சாதனங்கள், மேசை நாற்காலி, கண்காணிப்பு கேமரா அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்;

11 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன உயிரினங்களை மிக அருகில் சென்று காணும் வகையில், விலங்குகள் உலாவிட உலகம் அமைத்தல்;

10 கோடி ரூபாய் செலவில், 40 ஹெக்டேர் பரப்பளவில், திண்டுக்கல், சிறுமலை காப்புக் காட்டில், அழிந்துவரும் தேவாங்கு இனத்தைப் பாதுகாக்கவும், காட்டுமாடு, கடமான், சாம்பல்நிறக் கரடி, ஆசிய புனுகுப் பூனை, காட்டுப்பூனை ஆகியவற்றுடன் வங்கப்புலி, புள்ளிமான், சதுப்பு நில முதலை, மயில், வெளிமான், நெருப்புக் கோழி, இந்திய மலைப்பாம்பு, சாரைப் பாம்பு, நல்ல பாம்பு, மலேசிய மலைப் பாம்பு, குள்ளநரி, வங்க நரி ஆகியவை கொண்டுவரப்பட்டு, அவ்விலங்குகளுக்கு இருப்பிடங்கள், மருத்துவ வசதிகள், உணவு வழங்கும் இடம், தீவனத் தோட்டம், பூங்கா மற்றும் பார்வையாளர் வசதி ஆகியவை கொண்ட சிறு வன உயிரினப் பூங்கா உருவாக்குதல்;

சேலம் குரும்பப்பட்டியில் உள்ள சிறு வன உயிரினப் பூங்காவை நடுத்தர வன உயிரினப் பூங்காவாகத் தரம் உயர்த்தி, கூடுதல் வன உயிரினங்கள் கொண்டுவரப்பட்டு, அவற்றிற்கான இருப்பிடங்கள், மருத்துவ வசதிகள், உணவு சேமிப்பு அறை, கருத்து விளக்க மையம் மற்றும் நடைபாதை போன்ற அத்தியாவசிய வசதிகள் 8 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுதல்;

வனங்களில் ஏற்படும் தீ விபத்துகளைத் தடுத்து, வன விலங்குகள் வனத்திலிருந்து வெளிவரா வண்ணம் பாதுகாக்கும்பொருட்டு, 23 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சிறப்பு வனக் காவல் பணியமைப்பு மற்றும் தீத்தடுப்பு அதிரடிப் படை உருவாக்கி, அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்;

யானைகள் காடுகளை விட்டு வெளியேறுவதால் மனித உயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும்பொருட்டு, தருமபுரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் 21 கோடி ரூபாய் செலவில் எஃகு கம்பிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் தூண்களை நிறுவி, 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு 5 அடுக்கு கம்பி வேலிகள் அமைத்தல் உள்ளிட்ட வனத் துறை சார்ந்த அறிவிப்புகளை 13-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2020 மார்ச் 24]

சுற்றுச்சூழல் துறை

(4) நாமக்கல், இராமநாதபுரம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்;

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், மொடச்சூர் ஊராட்சி, இந்திரா நகரில் உள்ள செங்குட்டை ஏரியிலும், குள்ளம்பாக்கம் ஊராட்சியில் உள்ள வண்ணான்குட்டை ஏரியிலும் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுவருடன் கூடிய நடைபாதை, படகு இல்லம், மின் விளக்குகள், சிறுவர் பூங்கா மற்றும் காட்சிக் கோபுரம் அமைத்தல்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகராட்சியில் 7 ஏக்கர் 76 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள சூரியகுளத்தில், சுமார் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, தனியாக ஒரு கழிவுநீர் கால்வாய் ஏற்படுத்துதல், குளத்தினைத் தூர்வாரி நீர் கொள்ளளவினை அதிகரித்தல், கரையினைப் பலப்படுத்தி பாதுகாப்பு வேலி மற்றும் மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுச்சூழல் துறை சார்ந்த அறிவிப்புகளை 13-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பள்ளிக் கல்வித் துறை

(5) வரும் கல்வியாண்டில் 5 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் 25 புதிய அரசு தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 10 அரசு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் மற்றும் அப்பள்ளிகளுக்குத் தேவைப்படும் 3 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்;

வரும் கல்வியாண்டில் 15 அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல், 26 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அப்பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்தல், 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் அப்பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல்;

30 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல், 55 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில்

அப்பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருதல், 21 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் அப்பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல்;

வரும் கல்வியாண்டில் 4,282 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 48 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்புக் கேமரா வசதி செய்து தருதல்;

அரசுப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அலுவலகங்களைப் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத் தொகையை 2020-2021 ஆண்டிலிருந்து 100 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்குதல் உள்ளிட்ட பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அறிவிப்புகளை 13-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(6) திருப்பூர் மாவட்டத்தில் தடகளம், கூடைப்பந்து, கையுந்து பந்து மற்றும் இதர விளையாட்டுகளுக்கான வசதிகளும், பாவையாளர் மாடத்துடன் கூடிய ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கொண்ட புதிய மாவட்ட விளையாட்டு வளாகம், 18 கோடி ரூபாய் செலவில் அமைத்தல்;

திறமையான விளையாட்டு வீரர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தி, அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பதக்கங்களை வெல்வதற்கு ஏதுவாக, தடகளம், கையுந்து பந்து, கால்பந்து மற்றும் கூடைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கிலும், வளைகோல் பந்து விளையாட்டுக்கு மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கிலும், நீச்சல் விளையாட்டுக்கு வேளச்சேரி நீச்சல் குள வளாகத்திலும் ஆறு உயர் செயல்திறன் அகாடமிகள் 3.89 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்துதல்;

உள்ளரங்க விளையாட்டுகளில் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், கேரம் டேக்வாண்டோ, ஜூடோ, வாள் சண்டை, பிரிட்ஜ் மற்றும் இதர உள்ளரங்க விளையாட்டுகளுக்கு மாநில அளவிலான பயிற்சி மையம், 12.30 கோடி ரூபாய் செலவில் 5 தளங்களைக் கொண்ட விளையாட்டு வளாகம், சென்னை ஜவஹர்லால் நேரு

2020 மார்ச் 24]

விளையாட்டு அரங்கில் அமைத்தல் உள்ளிட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்ந்த அறிவிப்புகளை 13-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

உயர் கல்வித் துறை

(7) தமிழ்நாட்டில் உள்ள 10 அரசு பொறியியல் கல்லூரி மற்றும் 45 அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகளில் உள்ள கட்டடங்களை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் முதற்கட்டமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தல்;

பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்யப்படும் 10,000 மாணாக்கர்கள், தொழிலகங்களில் கள அனுபவம் பெற்று தங்கள் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திக்கொள்ள, ஒரு மாணாக்கருக்கு 16,600 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்க, 16 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தல்;

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், உயர் மின் அழுத்தப் பகிர்மான அமைப்பை சிறப்பான முறையில் இயக்கிப் பராமரிக்க, 6.33 கோடி ரூபாய் தொடர் செலவினத்தில் 61 புதிய பணியிடங்கள் உருவாக்குதல்;

ஆசியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பட்ட பெருமைக்குரிய, சென்னை சைதாப்பேட்டை கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தொன்மையான கட்டடத்தில் இயங்கி வருவதால், அப்புராதனக் கட்டடத்தினை, அதன் தொன்மை மாறாமல் புனரமைக்க, 10.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளுதல்;

சென்னை மாநிலக் கல்லூரியின் பழமை வாய்ந்த பல கட்டடங்களையும், கல்லூரி முதல்வர் குடியிருப்பையும், அதன் தொன்மை மற்றும் அழகு மாறாமல், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்துப் பாதுகாத்தல்;

பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணாக்கர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் வகையில், மின் வாகனங்கள், தொழில்நுட்ப ஆராய்ச்சிக்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கும், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ஆராய்ச்சிக்காக அண்ணாமலைப்

பல்கலைக்கழகத்திற்கும், சுகாதாரம் மற்றும் ஆற்றல் தொடர்பான ஆராய்ச்சிக்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கும், புற்றுநோய் ஆராய்ச்சிக்காக பாரதியார் பல்கலைக்கழகத்திற்கும், உயிர் மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிக்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கும், உயிர் மருத்துவ பயன்பாடுகள் குறித்த ஆராய்ச்சிக்காக சென்னை பல்கலைக்கழகத்திற்கும் தலா 35 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 210 கோடி ரூபாய் நிதி வழங்குதல்;

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டவும், கணினி மற்றும் உபகரணங்கள் மற்றும் மர தளவாடங்கள் வாங்கவும் 150 கோடி ரூபாய் வழங்குதல் உள்ளிட்ட உயர் கல்வித் துறை சார்ந்த அறிவிப்புகளை 13-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

எரிசக்தித் துறை

(8) சென்னை மாநகரத்தில் உள்ள சுமார் 42 இலட்சம் மின் நுகர்வோர்களுக்கு, 4 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில், வினைத்திறன் மிகு மின் அளவிகள் (Smart Meters) பொருத்துதல்; மதுரை மாவட்டம், அழகர்கோவில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகவும், கோயம்புத்தூர் மாவட்டம், இருகூர் மற்றும் மதுரை மாவட்டம், திருப்பாலையில் உள்ள 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களை 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களாகவும் தரம் உயர்த்துதல்; சிவகங்கை மாவட்டம், அரசனூரில் புதிதாக 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்தல்; பல்வேறு மாவட்டங்களில், 998 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 22 எண்ணிக்கையிலான 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைத்தல்;

திருவள்ளூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில், 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின் பாதைகளில், சுமார் 200 கிலோ மீட்டர் நீளப் பாதை, 300 கோடி ரூபாய் செலவில் புதைவடங்களாக மாற்றியமைத்தல்;

187 கோடி ரூபாய் செலவில், 23 இடங்களில் புதிதாக 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைத்தல், செயல்பாட்டில் இருக்கும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில் உள்ள

2020 மார்ச் 24]

13 மின்மாற்றிகளை, கூடுதலாகவோ அல்லது திறன் உயர்த்தியோ அமைத்தல் உள்ளிட்ட எரிசக்தித் துறை சார்ந்த அறிவிப்புகளை 19-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(9) ஊரகப் பகுதிகளில், 350 கிலோ மீட்டர் நீளத்திற்கு, சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும், 200 கிலோ மீட்டர் நீளத்திற்கு பேவர்பிளாக் சாலைகளும் 213 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல், 850 குறு பாலங்களும், 350 சிறு பாலங்களும் என 1,200 சிறு, குறு பாலங்கள் 170 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்;

ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி, இணைப்புச் சாலை வசதி, சிமெண்ட்/பேவர்பிளாக் சாலை வசதி, தெருவிளக்குகள், வடிகால் வசதி, மயான மேம்பாடு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை 2,500 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்துதல்;

ஊரகப் பகுதிகளில், பிரதான மற்றும் இணைப்புச் சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு, 1,044 கிலோ மீட்டர் நீளமுள்ள 299 ஊரகச் சாலைகள், 553.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துதல்;

ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்திட, 1,150 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓரடுக்கு கப்பிச்சாலைகள் 246 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்;

ஊரகப் பகுதிகளிலுள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே 10 ஆயிரம் சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணைகள் 460 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்;

ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளிக் கட்டடங்களுக்கு 650 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 440 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல்;

ஊரகப் பகுதிகளில் கால்நடைகளைப் பாதுகாத்திட, 9 ஆயிரம் மாட்டுக்கொட்டகைகளும், 6 ஆயிரம் ஆட்டுக்கொட்டகைகளும், என 15 ஆயிரம் கொட்டகைகள், 258.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தருதல்;

[2020 மார்ச் 24

விவசாய நிலங்களில், விளைநிலங்களின் பரப்பினை அதிகரிக்க, 500 தனிநபர் கிணறுகள், தலா 7 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், 500 சமுதாயக் கிணறுகள், தலா 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் ஆயிரம் கிணறுகள் 98 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்;

500 ஊராட்சி மன்ற அலுவலகங்களுக்கு, தலா 22 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டித் தருதல்;

நடப்பாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 14 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயம் செய்தல்;

ஊரகப் பகுதிகளில், சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் முதியோர் பயன்பெறும் வகையில், 5 முதல் 10 உறுப்பினர்களைக் கொண்ட 12 ஆயிரத்து 525 "முதியோர் சுய உதவிக் குழுக்கள்" ஊராட்சிக்கு ஒன்று என்ற அளவில் ஏற்படுத்தப்பட்டு, ஆதார நிதியாக குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம், 18 கோடியே 79 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்குதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த அறிவிப்புகளை 19-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(10) பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் பழுதடைந்துள்ள சாலைகள், நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்தல்;

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான துடியலூர், வடவள்ளி, கவுண்டம்பாளையம் மற்றும் வீரகேரளம் பகுதிகளை உள்ளடக்கிய 14 வார்டுகளில், 610 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளுதல்;

மதுரை மாநகராட்சில் மூன்றாம் கட்டமாக, 57 வார்டுகளில், 310 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகக் குழாய் பதித்து, வீட்டு இணைப்புகள் வழங்குதல்;

2020 மார்ச் 24]

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரத்தில் போக்குவரத்து மேலாண்மை, போக்குவரத்து தகவல் மையத் திட்டம் போன்றவற்றை கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களுடன் ஒருங்கிணைத்து, போக்குவரத்து நெரிசல் குறைய வழிவகை செய்யும்வகையில், திறன்மிகு போக்குவரத்து முறையை செயல்படுத்திட ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

சென்னையில் சிறு தொழில்முனைவோர் மற்றும் மாணவர்களின் கண்டுபிடிப்புகளைச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி விளக்கும் பாலமாக “புது முறைக் காணல் மையம்” ஏற்படுத்துதல்;

மாநிலத்தில் பசுமைச் சூழலை அதிகரிக்கும் வகையில், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் பயன்பாடின்றி உள்ள திறந்தவெளி நிலங்களில் "மியாவாக்கி" முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நடுதல்;

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம் மற்றும் யோகா மையம் அமைத்தல்;

தேனி மாவட்டத்திலுள்ள போடிநாயக்கனூர் நகராட்சியிலுள்ள பேருந்து நிலையத்திற்குப் புதிய ஓடுதளமும், வாரச் சந்தை உள்பட பல உட்கட்டமைப்புகளும் அமைத்தல், பூங்காக்கள் மேம்படுத்துதல் திட்டத்திற்காக சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் ஒதுக்குதல்;

பல்வேறு துறைகளில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்களின் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையிலும், அனைத்து துப்புரவுப் பணியாளர்களையும், இனி “தூய்மைப் பணியாளர்கள்” என்று அழைப்பது உள்ளிட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த அறிவிப்புகளை 19-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

கூட்டுறவுத் துறை

(11) மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, 3,501 அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் 9.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்குதல்;

95 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 6 மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள், ஒரு நகரக் கூட்டுறவு வங்கி, ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஒரு தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் ஒரு பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கம், என மொத்தம் 105 கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு 27.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டித் தருதல்;

வணிக வங்கிகளுக்கு இணையாக புதிய வசதிகளுடன்கூடிய நவீன வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிட ஏதுவாக, 74 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 10 மத்திய கூட்டுறவு வங்கிகள், 3 நகரக் கூட்டுறவு வங்கிகள், 7 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் ஒரு தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, என மொத்தம் 95 கூட்டுறவு நிறுவனங்களை 14.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்குதல்;

புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய தலைமை அலுவலகக் கட்டடங்களும், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகத்தில் நவீன வசதிகளுடன்கூடிய கூடுதல் கட்டடமும் 17.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்;

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மஞ்சக்குட்டை ஊராட்சி, செம்மடுவு கிராமத்தில் 15.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவிலான புதிய கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைத்தல்;

காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சென்னை, தண்டையார்பேட்டையில் 5.65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் நகரிலுள்ள மற்றோர் இடத்தில் 4.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் 2 திருமண மண்டபங்கள் கட்டுதல்;

அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மக்களின் வரவேற்பினைப் பெரிய அளவில் பெற்றுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் 189 அங்காடிகள் கூடுதலாகத் தொடங்குதல் உள்ளிட்ட கூட்டுறவுத் துறை சார்ந்த அறிவிப்புகளை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

(12) நெல் உலர்களம் வசதியுடனும், நவீன நெல் சேமிப்பு கொள்கலனுடனும் கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் 50 இடங்களில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்;

30 வருடங்களுக்கு மேலான, எதிர்காலத்தில் பயன்படுத்த இயலாத அளவிற்கு சேதமடைந்த கிடங்குகளை முற்றிலும் அகற்றி, சென்னை IIT-யின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்பத்துடன், ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய நவீன சேமிப்புக் கிடங்குகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்;

வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில், வேளாண் பெருமக்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை பதப்படுத்தி சேமித்து வைத்திடும் வகையில், 75 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்துடன்கூடிய நெல் சேமிப்பு கொள்கலன்கள் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்;

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு வளாகங்களில் அமைந்துள்ள சேதமடைந்த சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகளை 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமென்ட் கான்கிரீட் சாலைகளாக அமைத்தல் உள்ளிட்ட உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்ந்த அறிவிப்புகளை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மீன் வளத் துறை

(13) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் முதல் கட்டமாக கூடுதல் கட்டமைப்பு வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்துதல்;

கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் நகர், ராஜாக்கமங்கலம் மற்றும் கொட்டில்பாடு ஆகிய கிராமங்களில் 39.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்;

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரம் இயற்கை காரணங்களினால் மூடாதவாறு இருக்க 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளுதல்;

தூத்துக்குடி மாவட்ட மீன்பிடித் துறைமுகத்தின் படகு அணையும் தளத்தினை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீட்டித்தல்;

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம்-வடக்கு மற்றும் மண்டபம்-தெற்கு கிராமங்களில் 20 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்;

கடலூர் மாவட்டம், அன்னன்கோயில் மற்றும் புதுக்குப்பம் கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்களை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிகள் ஏற்படுத்தி புனரமைத்தல்; முடசலோடை கிராமத்தில் உள்ள மீன் இறங்குதளத்தை கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு ஏதுவாக 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நீட்டித்தல்;

காஞ்சிபுரம் மாவட்டம், புது குப்பம் மற்றும் உய்யாலி குப்பம் கிராமங்களில் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைத்தல் உள்ளிட்ட மீன் வளத் துறை சார்ந்த அறிவிப்புகளை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறை

(14) புதிதாக 40 கால்நடைக் கிளை நிலையங்கள் 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவித்தல்; 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகவும்; 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாகவும்; 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் கால்நடை மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் முதல்தர சேவைகள் வழங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகவும் தரம் உயர்த்துதல்;

கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பை வணிகரீதியில் மேற்கொள்ளும்வகையில், 14.73 கோடி ரூபாய் செலவில், 1,925 பயனாளிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தலா 1,000 கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்திற்கான கோழித் தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைத்துக் கொடுத்தல்;

90.35 இலட்சம் கால்நடைகளுக்கு 22.03 கோடி ரூபாய் செலவில் கோமாரி நோய் தடுப்பூசி போடுதல்;

ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்திப் பிரிவை 18.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP) தரத்திற்கு தரம் உயர்த்துதல்;

தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்தல் உள்ளிட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்ந்த அறிவிப்புகளை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறை

(15) உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்தை மேலும் உயர்த்தவும், கிராமப்புற மாணவர்கள் பயன் பெறவும், உயர் கல்வித் துறைமூலம் ஏழு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைப்பது குறித்த உயர் கல்வித் துறை சார்ந்த அறிவிப்பினை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 15 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கு பதிலாக, 50 அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேலும் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு பதிலாக 50 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் வரும் கல்வியாண்டில் தரம் உயர்த்துதல் குறித்த பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அறிவிப்பினை 20-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

(16) அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் ஆகிய பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று நீட் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பிரத்யேகமாக ஓர் உள் ஒதுக்கீடு கொடுக்க வகை செய்யும் சிறப்புச் சட்டம் ஒன்றை இயற்ற அரசு பரிசீலித்து வருவது குறித்தும், இச்சட்டத்தை இயற்றுவதற்கு வகை செய்ய ஏதுவாக, தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களையும் தொகுத்து உரிய பரிந்துரைகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்க, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில், பள்ளிக் கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, சட்டம் ஆகிய துறைகளின் அரசு செயலாளர்களையும், பள்ளிக் கல்வித் துறையினால் நியமிக்கப்படும் 2 கல்வியாளர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட, மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களை உறுப்பினர்-செயலராகக் கொண்ட ஓர் ஆணையம் அமைப்பது குறித்த அறிவிப்பு ஒன்றினை 21-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சட்டத் துறை

(17) மதுரை அரசு சட்டக் கல்லூரியின் பழைய கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கட்டடம் கட்டிக் கொடுத்தல் குறித்த சட்டத் துறை சார்ந்த அறிவிப்பினை 23-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

உள் (நீதிமன்றங்கள்) துறை

(18) குற்ற வழக்கு தொடர்வுத் துறை மற்றும் சட்டக் கல்வி இயக்குநரகங்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த சொந்தக் கட்டடம், 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுதல் குறித்த நீதித் துறை சார்ந்த அறிவிப்பினை 23-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

(19) 41 ஆயிரத்து 133 அங்கன்வாடி மையங்களில் சிறிய கட்டடப் பராமரிப்புப் பணிகள், தச்சு வேலை, மின் மற்றும் பிளம்பிங் பணிகளை மேற்கொள்ள, ஒரு மையத்திற்கு தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 12 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்குதல்;

10,888 அங்கன்வாடி மையங்களுக்கு, 10 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் மேசை, நாற்காலி, இரும்பு அலமாரி போன்ற தளவாடச் சாமான்கள் வழங்குதல்;

அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு முதல் கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், மதுரை, புதுக்கோட்டை, கடலூர், திருவள்ளூர், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய 8 மாவட்டங்களில், 8 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3.23 இலட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் திட்டத்தினை விரிவுபடுத்துதல்;

சென்னை, மைலாப்பூரில் 9 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமூக நல ஆணையரகத்திற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டுதல்;

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் "அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் காப்பகத்திற்கு" அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடமும், குழந்தைகளைப் பராமரிக்கும்

பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கு குடியிருப்பும், 10 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல் உள்ளிட்ட சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை சார்ந்த அறிவிப்பினை 23-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(20) மன வளர்ச்சி குறைபாடு, மூளை முடக்குவாதம், தசைச் சிதைவு நோய், பல்வகைக் குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுடைய ஆயிரம் பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தனியே 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து சிகிச்சை அளித்தல்;

சேலம் மாவட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக்கு, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் 1.31 ஏக்கர் நிலம் வழங்கி, 6.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விடுதி வசதியுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டித் தருதல்;

பாலியல் வன்கொடுமை மற்றும் இதர குற்றங்களால் பாதிக்கப்பட்டு, வாழ்ந்துவரும் மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு, விரைந்து இழப்பீடு வழங்கிட ஏதுவாக, "மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இழப்பீடு திட்டம்-2020"-க்கான நிதியம், 5 கோடி ரூபாய் வைப்பீட்டுடன் உருவாக்குதல் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்ந்த அறிவிப்புகளை 23-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

(21) சிறுபான்மையினர் அதிகமாக வாழும் கூடலூர், மணமேல்குடி, திருவாடனை மற்றும் மண்டபம் ஆகிய 4 வட்டாரங்களிலும், வேலூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பள்ளப்பட்டி, நாகப்பட்டினம், கீழக்கரை, தூத்துக்குடி, காயல்பட்டினம், கடையநல்லூர், தென்காசி, திருநெல்வேலி, கொல்லங்கோடு, நாகர்கோவில், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய 18 பகுதிகளிலும், சமுதாயக் கூடம் அமைத்தல், நவீன வசதிகளுடன்கூடிய வகுப்பறை கட்டுதல், புதிய அரசு மேல்நிலைப் பள்ளிகள் கட்டுதல், தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல், வேலைக்குச் செல்லும் மகளிருக்கான விடுதிகள்

கட்டுதல், மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்கூடிய கணினிகள் வழங்குதல் போன்ற சிறுபான்மையினருக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்புத் திட்டங்கள் 24.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துதல்;

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக இயங்கிவரும் 1,301 விடுதிகளுக்கு DTH இணைப்புடன் LED தொலைக்காட்சிப் பெட்டிகள், 5 கோடியே 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்குதல்;

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் இயங்கிவரும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குதல்; பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் சிறப்பு உணவுக் கட்டணமாக தற்போது பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கு 40 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குதல்;

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பிறமலைக் கள்ளர் பள்ளிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் 5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுதல்;

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் 1,290 விடுதிகளில் 9 கோடி ரூபாய் செலவில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்;

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழுள்ள 11 பள்ளி விடுதிகளை ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்துதல் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்ந்த அறிவிப்புகளை 23-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

செய்தித் துறை

(22) தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் அவர்களின் மணிமண்டபத்தில், முழுவுருவ வெண்கலச் சிலை அமைத்தல்;

2020 மார்ச் 24]

பத்திரிகையாளர்கள் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்தில் இருந்து வழங்கப்படும் மருத்துவ நிதி உதவியை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்குதல்;

தூத்துக்குடி மக்களால் "மக்களின் தந்தை" என போற்றப்படுபவரான ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 15 ஆம் நாளை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடுதல் உள்ளிட்ட செய்தித் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தொழில் துறை

(23) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொழிற்பூங்காவில், முதற்கட்டமாக சுமார் 650 ஏக்கர் நிலப் பரப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை, மூலப்பொருட்கள் சேகரிப்பு நிலையம், உலர் மற்றும் குளிரூட்டு நிலையம், நவீன ஆய்வக வசதிகள், கிடங்குகள், அவசரகால நடவடிக்கை மையம் உட்பட அனைத்து வசதிகளுடன்கூடிய மருந்தியல் தொழிற்பூங்கா, சிப்காட் நிறுவனத்தால் 770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைத்தல்;

சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பூந்தோட்டத்துடனான இயற்கைப் பூங்கா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்; கெலவரப்பள்ளி அணைக்கட்டு நீரை சுத்திகரித்து ஓசூர் சிப்காட் தொழிற்பூங்கா தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்க நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையத்தை 110 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவுதல்;

சிப்காட் மாநல்லூர் தொழிற்பூங்காவில் அனைத்து அடிப்படை வசதி, தொழில்நுட்ப ஆய்வு மையம், சோதனை மையம், கிடங்கு வசதி மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் மின்சார வாகனப் பூங்கா ஒன்று 148 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்குதல்;

சிப்காட் நிறுவனம் புதிதாக அமைக்கவுள்ள மாநல்லூர், செய்யாறு, மணப்பாறை, தேனி, மணக்குடி மற்றும் சக்கரக்கோட்டை ஆகிய தொழிற்பூங்காக்களில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி நிதி உதவியுடன்

2,934 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நவீன உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்;

ஸ்ரீபெரும்புதூர் வட்டம், நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் 500 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தரவு மையப் பூங்கா ஒன்றினை டிட்கோ உருவாக்குதல் உள்ளிட்ட தொழில் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

(24) சென்னையில் 350 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வணிகச் சூழலுடன்கூடிய ஒரு புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம் அமைத்தல்; கோயம்புத்தூர், சூளூர் வட்டம், கல்லப்பாளையம் கிராமத்தில் 116.24 ஏக்கர் பரப்பளவில் 20.96 கோடி ரூபாய் மதிப்பில் 10 கோடி ரூபாய் அரசு மானியத்துடன், கொடிசியாமூலம் ஒரு புதிய தனியார் தொழிற்பூங்கா அமைத்தல்;

தமிழ்நாட்டில் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் மற்றும் மின்சாரம் ஏற்றும் கட்டமைப்புக்கு தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்ய தொடங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் வரை 25 சதவீதம் சிறப்பு மூலதன மானியமும், அதிகபட்சமாக 10 இலட்சம் ரூபாய் வரை தகுதி வாய்ந்த இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 20 சதவீதம் வரை கூடுதல் சிறப்பு மூலதன மானியமும் வழங்குதல் உள்ளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பால் வளத் துறை

(25) கிடாரிகளின் வம்சாவழி சோதனைத் திட்டத்தின்மூலம் 20.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 180 உயர்ரக பொலி காளைகள் உற்பத்தி செய்தல், 25 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு விவசாயிகளின் பட்டா நிலங்கள் கண்டறியப்பட்டு, அதில் பசுந்தீவன புல் பயிரிட 37.50 கோடி ரூபாய் மானியத்தில் வேளாண் உள்ளீடுகள் வழங்குதல்; மேலும், அந்நிலங்களில் 50 கோடி ரூபாய் மானியத்தில் 'பிரதம மந்திரி கிரிஷி சின்ஜாயி யோஜனா' திட்டத்தின்கீழ் நுண்ணீர் பாசன வசதிகள் செய்தல்;

தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டங்களில் முறையே 50 ஆயிரம் லிட்டர் மற்றும் ஒரு இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன்கூடிய புதிய பால் பண்ணைகள் 40 கோடி ரூபாய் மற்றும் 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுதல்;

திருவண்ணாமலை, மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணைகளில் பால் உபபொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை மேம்படுத்த 119.26 கோடி ரூபாயில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பால் வளத் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

(26) கொரோனா வைரஸ் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல், சார்ஸ் போன்ற தொற்று நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் மாநில அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனையாக, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையும், மூன்று மண்டல அளவிலான தனிமைப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையும், கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் உள்ள மகாத்மா காந்தி நினைவு காசநோய் சானடோரியம் ஆகிய மருத்துவமனைகளும், சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலுள்ள ஆய்வகத்தை Bio Safety Level-III நிலைக்கு மேம்படுத்துவதற்கும் 110 கோடி ரூபாய் செலவிடுதல்;

500 புதிய அவசர கால ஊர்திகள் 125 கோடி ரூபாய் செலவில் வாங்குதல்; நகர்ப்புறத்தில் பயிலும் பள்ளி மாணவியர்களுக்கும் மாதவிடாய் கால தன்சுகாதாரத் திட்டத்தை 37.47 கோடி ரூபாயில் விரிவுபடுத்துதல் மற்றும் அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறும் பெண்களுக்கும் சானிடரி நாப்கின்கள் வழங்குதல்;

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில்

நவீன Robotic அறுவை சிகிச்சை மையம் 34.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுதல்; வான்வழி அவசர கால சேவை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்குதல்; இராணிப்பேட்டை வருவாய் மாவட்டத்திற்கு புதிய சுகாதார மாவட்டம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்துதல் உள்ளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை

(27) தொன்மை வாய்ந்த 55 திருக்கோயில்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளுதல்; திருக்கோயில்களுக்கு சொந்தமான 100 திருக்குளங்களில் 26.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரி, படித்துறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டி, திருப்பணிகள் மேற்கொள்ளுதல்;

நிதி வசதி மிக்க 50 திருக்கோயில்களில் 4 கோடி ரூபாய் செலவில் ஏழை, எளிய மற்றும் நலிவடைந்த 10,000 இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்துதல்; 8.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘திருக்கோயில்’ என்ற பெயரில் தொலைக்காட்சி தொடங்குதல்;

இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல்; இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள 1,000 கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்குதல்;

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மலைப்பாதை, மருதமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்தூக்கி, திருவிடந்தை அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மண்டல அலுவலகங்கள் கட்டுதல்; 214 திருக்கோயில்களுக்கு 2.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கால பூஜை திட்டத்தை விரிவுபடுத்துதல்;

2020 மார்ச் 24]

31-7-2019 வரை 5 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து பணி நிறைவு செய்த சுமார் 2,000 தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை தகுதியின் அடிப்படையிலும் காலிப் பணியிடங்களை கணக்கில் கொண்டும் காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்தல்; திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் துறை நிலையிலான ஓய்வூதியத்தை 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்;

9 முதுநிலை திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு 16.43 கோடி ரூபாய் செலவில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்குதல்;

அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் இராமேஸ்வரம் இராமநாத சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக 176.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற்கட்டமாக 80.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன்கூடிய பெருந்திட்டம் தயாரித்தல்;

புதியதாக 9.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 இணை ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 19 பணியிடங்களும், புதியதாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, 17 பணியிடங்களும் தோற்றுவித்தல்; திருக்கோயில்களில் 3.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நகை சரிபார்ப்பு பிரிவில் 50 கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தி, மேலும், 4 பணியிடங்களை நிலை உயர்த்துதல்; திருக்கோயில்களில் புதியதாக 117 ஆய்வர் பணியிடங்கள் மற்றும் 117 அலுவலக உதவியாளர் பணியிடங்களை 12.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவித்தல்; திருக்கோயில்களின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் 14.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் ஆணையர் முதல் செயல் அலுவலர் நிலை-4 வரை 205 பணியிடங்கள் ஏற்படுத்துதல்;

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதை கடந்து ஓய்வு பெற்ற கிராம கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்; மேலும், ஓய்வூதியம் பெறுவதற்கான உச்ச வரம்பை 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்துதல்;

[2020 மார்ச் 24

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் ஆண்டு வருமானம் 10 இலட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள 331 திருக்கோயில்களில் தூய்மையை மேம்படுத்த முதற்கட்டமாக நடப்பாண்டில் 100 திருக்கோயில்களில் தூய்மை குறித்தான நிலையான இயக்க நடைமுறையை (Standard Operating Procedure) பின்பற்றி திட்டம் தயாரித்தல்; மேலும், அந்த 331 திருக்கோயில்களில் முதற்கட்டமாக 100 திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்வதற்கு வசதிகள் செய்து தர நிலையான இயக்க நடைமுறையை பின்பற்றி திட்டம் தயாரித்தல் உள்ளிட்ட இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

வேளாண்மைத் துறை

(28) தமிழ்நாட்டில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களில் வறட்சி தாங்கி வளரும் பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் வழங்க 10.40 கோடி ரூபாய் வழங்குதல்; காவேரி டெல்டா மாவட்டங்களில் 44-ம், மற்ற மாவட்டங்களில் 81-ம், என மொத்தம் 125 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டுதல்;

காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தருமபுரி, திருப்பூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள திட உயிர் உர உற்பத்தி மையங்களை 12.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்கி, திரவ உயிர் உர உற்பத்தி மையங்களாக மாற்றுதல்;

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் உள்ள கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் நிதியில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள 2 விதை சுத்திகரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்தி நவீனப்படுத்துதல்;

திரு. நெல் ஜெயராமன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்" அமைத்தல்; தமிழ்நாட்டில் 250 வட்டாரங்களில், நடப்பாண்டில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாற்றங்கால் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்;

2020 மார்ச் 24]

தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளை ஊக்குவிக்க நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் நிதியில் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்; நவீன தோட்டக்கலை தொழில்நுட்பங்களைக் கொண்டு காவேரி டெல்டா மாவட்டங்களில் 7,500 ஏக்கர் பரப்பளவில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்துதல்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் வெற்றிலை பயிருக்கான சிறப்பு மையம் உருவாக்குதல்; இயற்கைப் பண்ணைய முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி ஊக்குவிக்க 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தல்; திருவாரூர் மாவட்டம், மூங்கில்குடி கிராமத்தில் நன்னிலம் அரசு விதைப் பண்ணையில் 10 ஏக்கர் பரப்பளவில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரிசி சார்ந்த உணவுப் பதப்படுத்தும் தொகுப்பு அமைத்தல்;

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சிதம்பரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வேளாண் வணிக மாதிரி அங்காடிகள் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்தல்; 50 கோடி ரூபாய் செலவில் 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், மின்னணு வர்த்தக தளம் உருவாக்குதல்; 2020-2021 ஆம் ஆண்டில் மேலும் 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல்;

தூத்துக்குடி மாவட்டம், புதூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில், சிவப்பு மிளகாய் அரவை செய்து சிப்பம் கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் இயந்திரம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, நீலகிரி மாவட்டம், அனிக்கோரை மற்றும் சுள்ளிக்கூடு ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் காய்கறிகளுக்கு மதிப்புக் கூட்டும் இயந்திரம், கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கிப்பாளையம் மற்றும் பிச்சனூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில், பல்வகை காய்கறி மற்றும் பழங்களை ஆழ்நிலை உறைய வைத்தல் மற்றும் உலர்வித்தல் இயந்திரங்கள், திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி மற்றும் தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் புளிக்கூழ் மற்றும் புளி விதைப் பசை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் வெங்காயம் பதப்படுத்தும் இயந்திரம் போன்ற இரண்டாம் நிலைப் பதப்படுத்தும் இயந்திரங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவுதல்;

[2020 மார்ச் 24

காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தேவையான அதிக சக்தி கொண்ட 20 டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 10 நிலம் சமன் செய்யும் கருவிகள், 10 ரோட்டா பட்லர் என்ற சேறு கலக்கும் கருவிகள், 51 வைக்கோல் கூட்டும் கருவிகள், 5 நெல் தானிய உலர்த்திகள் மற்றும் 10 ஹேரேக் நெல் அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றை 7 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்குதல்;

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் 20 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை அமைத்திட 2 கோடி ரூபாயும், கரும்பு அறுவடைக்கேற்ற 2 இயந்திர வாடகை மையங்கள் அமைத்திட ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயும், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களை விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை பண்ணை அளவிலேயே மதிப்புக்கூட்டும் வகையில், 50 இயந்திரங்களுக்கு 75 இலட்சம் ரூபாயும், பாசனத்திற்கான மின் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் சூரிய சக்தியால் இயங்கும் 1,000 பம்பு செட்டுகளை விவசாயிகளின் நிலங்களில் நிறுவிட 23 கோடியே 70 இலட்சம் ரூபாயும் என, மொத்தம் 35 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் பொறியியல் சேவைகளை காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குதல்;

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 50-வது ஆண்டு நிறைவடைந்த சிறப்பைப் போற்றிடும் வகையில், பழமையான கட்டடங்களைப் புதுப்பிக்கவும், நினைவு மண்டபம் கட்டவும், விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் கருத்துக் காட்சிகளும், கருத்தரங்குகளும் நடத்தவும் 29 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்குதல்;

வெளிநாடுகளில் பின்பற்றப்படும் தொழில்நுட்பங்களைக் கண்டு, கடைப்பிடிக்க, நமது விவசாயிகளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லுதல்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வடுவாஞ்சேரி கிராமத்தில் புதிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று 200 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்கீழ் உருவாக்க நடப்பாண்டில் 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்குதல்

உள்ளிட்ட வேளாண்மைத் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை

(29) 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் 4 இடங்களில் மின்னணு உற்பத்தித் தொகுப்பு மண்டலங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் அமைத்தல்; பொது மக்கள் இணைய வழியில் பாதுகாப்பான பணப் பரிமாற்றம் செய்யவும், பல்வேறு தரப்பிலிருந்து தொடுக்கப்படும் இணையவழி தாக்குதல்களை எதிர்கொள்ளவும், பொது மற்றும் தனியார் தரவு உட்கட்டமைப்புகளை பாதுகாத்திடவும் வழிவகை செய்யும் “இணைய பாதுகாப்புக் கொள்கை” வெளியிடுதல் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(30) நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38-வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்குதல்; சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள ‘எழிலகம்' வளாகத்தில் பழைய கட்டடத்திற்குப் பதில், அதே இடத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுதல்;

கடந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சங்கரன்கோவில், குடியாத்தம், ஸ்ரீபெரும்புதூர், வாணியம்பாடி மற்றும் அரக்கோணம் ஆகிய 5 கோட்டங்களுக்கு 16.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்; திருவெண்ணைநல்லூர், கல்வராயன்மலை, கலவை, கே.வி.குப்பம், குன்றத்தூர், வண்டலூர் மற்றும் சோளிங்கர் ஆகிய 7 வட்டங்களுக்கு 28.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுதல்;

சென்னை வடக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, செங்கல்பட்டு மற்றும் சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டுதல்; கள்ளக்குறிச்சி, ஆற்காடு, வாலாஜா, விளாத்திகுளம், திருச்செந்தூர், சாத்தான்குளம், பொன்னேரி, நன்னிலம், மன்னார்குடி மற்றும் குடியாத்தம் ஆகிய 10 வட்டாட்சியர் அலுவலகங்கள் 37.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல்; கறம்பக்குடி, பொன்னமராவதி,

இராமேஸ்வரம், முதுகுளத்தூர், வாலாஜா, மேட்டூர், சேலம் (மேற்கு), தூத்துக்குடி, ஆம்பூர், திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி, திருவெறும்பூர் மற்றும் மணப்பாறை ஆகிய 14 வருவாய் வட்டாட்சியர்களுக்கு 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டுதல்; இது தவிர, 180 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் 39.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டுதல்;

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்த உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களைக் கொள்முதல் செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்குதல்; இணைய வழியாக நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் கிடைக்க வகை செய்ய "தமிழ் நிலம்" என்ற ஒரு மென்பொருள் உருவாக்கி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நில ஆவணங்களைப் புதுப்பித்தல் மற்றும் இணைய வழியாக சொத்து தொடர்பான வில்லங்க விவரங்கள் அறிந்துகொள்ள வழிவகை செய்தல்;

நவீன நில அளவைக் கருவிகளான பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவை கருவிகள் கொண்டு நில அளவைப் பணிகளை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த, முதற்கட்டமாக 40.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீன நில அளவைக் கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

(31) ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி, கல்விப் பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குதல்;

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனைக் கருத்தில்கொண்டு, 6 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 48.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்துதல்;

2020 மார்ச் 24]

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு, தொழில்முனைவோர், நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுய உதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாட்கோமூலம் செயல்படுத்துதல்;

10 ஆண்டுகளுக்கு மேலான, 80 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து மேம்படுத்த தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தல்;

ஆதி திராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்டுவரும் நிதியுதவியை 2,500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்; ஆதி திராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் வகையில் அனைத்து வசதிகளுடன்கூடிய 24 சமுதாயக்கூடங்கள் 14.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுதல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்ந்த அறிவிப்புகளை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ் வளர்ச்சித் துறை

(32) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எஞ்சிய 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் நிதி வழங்குதல் குறித்த தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த அறிவிப்பினை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

உயர் கல்வித் துறை

(33) தமிழ்நாடு உயர் கல்வி மன்ற வளாகத்திற்கு டாக்டர் ஜெ. ஜெயலலிதா வளாகம் என்று பெயரிட்டு, அவ்வளாகத்தில் மாண்புமிகு அம்மாவின் திருவுருவச் சிலை அமைத்தல் குறித்த உயர் கல்வித் துறை சார்ந்த அறிவிப்பினை 24-3-2020 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.